உ

ஸ்ரீராமஜெயம்.

இதிகாசமாகிய ஸ்ரீமத்திராவிட

ஸ்ரீமஹாபாரதம்

வசனகாவியம்.

ஆரண்யபர்வம், விராடபர்வம், உத்தியோகபர்வம்.

இரண்டாம் புத்தகம்.

இவை

நிலைபெற்ற சைவ வைணவ ஸ்மார்த்த மாத்வ சமயிகளுக்கு உபயோகமாகும்படி

பாரதப்பிரசங்கியாகிய

த. சண்முகக்கவிராயரவர்களால்

வசனரூபமாகச் செய்யப்பட்ட பிரதிக்கிணங்க சுத்தப்பிரதியாகப் பரிசோதித்து,

பிரங்கிமாநகரம்

வே. நமசிவாயமுதலியாரவர்களது

சென்னை - சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

1925.

ஸ்ரீகணேசாயநம:

இரண்டாம்புத்தகத்தின் சருக்க அட்டவணை.

ஆரண்ய பர்வம்.

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
பாண்டவர் வனம்புகுசருக்கம்	௨
சூரியபகவான் தருமராஜனுக்கு அக்ஷயபாத்திரமளித்தல்	௨
பகாசுரன் தம்பியாகிய கிம்மீரனன் வதை	௪
பாண்டவர்களைப் பந்துக்கள்வந்து காணுதல்	௫
பாண்டவர்களிடத்தில் விதுரன் வரவு	௮
துரியோதனன் அயித்திரியமுனிவரால் சாபம் பெறுதல்.	௧௧
அருச்சுனன் தவநிலைச்சருக்கம்	௧௩
வேதவியாசர் பாண்டவரைத்தேற்றி அருச்சுனனுக்கு மந்திரோபதேசஞ் செய்து தவஞ்செய்ய விடுத்தல்	௧௩
அருச்சுனன் தவக்கோலங்கொண்டு கைலைக்குச் செல்லுதல்	௧௪
கைலாசகிரிச் சிறப்போடு அருச்சுனன் தவநிலைச் சிறப்பு	௧௫
இந்திரன் அருச்சுனனுடைய தவநிலையறிதல்	௧௭
அருச்சுனன் செயலை நாரதமுனிவராலறிந்த துரியோதனன் மூகாசுரனை ஏவுதல்	௨0
கைலாசபதி அருச்சுனனிடத்தில் வேடுவனாக வருதல்	௨௨
மூகாசுரன் வதை	௨௩
கைலாசபதிக்கும் அருச்சுனனுக்கும் வாது	௨௪
கைலாசபதிக்கு அருச்சுனன் தனது குலமுறை கிளத்தல்	௨௫
கைலாசபதி அருச்சுனனை இழிவுகூறிப் பகைகொள்ளுதல்	௨௬
அருச்சுனனுக்கும் கைலாசபதிக்கும் வில்யுத்தம்	௨௬
அருச்சுனனாற் கைலாசபதி வில்லடிபொறுத்தல்	௨௮
கைலாசபதிக்கும் அருச்சுனனுக்கும் மல்யுத்தம்	௨௯
கைலாசபதி தரிசனங் கொடுக்க அருச்சுனன் துதித்தல்	௨௯
கைலாசபதி அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திர முதலியவை கொடுத்தல்	௩௧
அருச்சுனன் இந்திரனாற் பொன்னுலகத்திற் கொண்டுபோகப்பட்டு அவனோடுகொலுவீற்றுண்டிருத்தல்	௩௧
அருச்சுனனுக்கு ஊர்வசியாற் பேடி ரூபம் நேருதல்.	௩௨
நிவாதகவசர்வதைச்சருக்கம்	௩௪
தேவேந்திரன் அருச்சுனனுக்கு இளவரசு பட்டாபிஷேகஞ் செய்தல்	௩௪
இந்திரன் அருச்சுனனுக்கு நிவாத கவசர் கொடுமை யுரைத்தல்	௩௫
அருச்சுனன் தோயமாபுரஞ் சென்று தூது அனுப்புதல்	௩௬
அருச்சுனனுக்கும் நிவாதகவசர்களுக்கும்யுத்தம்	௩௯
அருச்சுனன் அசரீரியால் நிவாதகவசர் நிலைமையுணர்ந்து பாசுபதாஸ்திரப்பிரயோகஞ்செய்தல்.	௪௫
காலகேயர்வதைச்சருக்கம்	௪௬
அருச்சுனன் காண்டீபக்குணத்தொனிகாட்டக் காலகேயர் யுத்தசன்னுத்தராய்வருதல்	௪௭
காண்டீபனுக்கும் காலகேயர்க்கும் யுத்தம்	௪௮
அருச்சுனன் பாசுபதாஸ்திரப் பிரயோகஞ் செய்தல்.	௫0
அருச்சுனன் தேவேந்திரபோகச் சருக்கம்	௫௧
அருச்சுனனை அலட்சியஞ் செய்த யக்ஷன் பின்பு அடங்கித் துதிசெய்தல்	௫௨
அருச்சுனன் பரதசாத்திரம் பயிறல்.	௫௩

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
உரோமசமுனிச்சருக்கம்	ருச
நளச்சக்கிரவர்த்தி கதை	ருசு
நாரதமுனிவரால் தருமராஜன் தீர்த்தமகத்துவங்கேட்டுத் தீர்த்தயாத்திரை செல்லல்	அக
அகஸ்தியமுனிவர் சரித்திரம்	அங
வில்வலன் வாதாபி சரித்திரம்	அரு
தேவேந்திரன் சரித்திரம்	அசு
சகரச்சக்கிரவர்த்தி சரித்திரம்	அகூ
விந்தபருவத சரித்திரம்	கூக
கலைக்கோட்டுமுனிவர் சரித்திரம்	கூஉ
பரசுராமர் சரித்திரம்	கூங
சவுநகமுனி சரித்திரம்	கூசு
அஸ்வமஹாராஜன் சரித்திரம்	கூசு
சோமமஹாராஜன் சரித்திரம்	கூஎ
சிபிச்சக்கிரவர்த்தி சரித்திரம்	கூஅ
அஷ்டகோணமகாரிஷியின் சரித்திரம்	கூகூ
துல்யவக்கிரன் சரித்திரம்	க0உ
பிருகுத்துய்மராஜன் சரித்திரம்.	க0ங
வீமன் மந்தாரபுஷ்ப யாத்திரைச் சருக்கம்	க0ச
வீமசேனன் அனுமானோடு வாதித்துப் பின்பு சினேகித்து விஸ்வரூபங் தரிசித்தல்	க0சு
புண்டரீகன் வதை	க0அ
குபேரன் புஷபவனக்காவலாளர் வதை	க0அ
குபேரனாலனுப்பப்பட்ட சங்கோடணன் வீமனால் அபஜயப்பட்டோடி முறையிடுதல்	க0கூ
குபேரன் தன்குமாரனாகிய உருத்திரசேனனால் வீமனைச் சமாதானப்படுத்துதல்	கக0
தருமராஜன் கடோற்கஜனோடு சென்று வீமசேனனைக் கண்டழைத்து வருதல்.	கக0
சடாசுரன்வதைச்சருக்கம்	ககக
வீமன் பாரிசாதபுஷ்பயாத்திரைச் சருக்கம்	ககங
குபேரன் சேனாபதிகள் வதை	ககச
மணிமாலன் வதை	ககசு
தருமராஜன் வீமனைத்தேடி விசனப்படுதல்	ககஅ
தருமராஜன் உரோமசன்மராற்றேறி, நகுல சகாதேவர் திரௌபதி இவர்களோடு கடோற்கஜன் தேரேறிச்சென்று வீமனைக் காணுதல்	கககூ
தருமராஜன் வீமசேனனுக்குப் புத்திகூறுதல்	கககூ
சேனாதிபதிகள் மாண்டதைக் கேட்டகுபேரன் யுத்த சன்னத்தனாக, அவனை அவன் பிள்ளையாகிய உருத்திரசேனனடக்குதல்	கஉ0
குபேரன் தருமனாதியரை யழைத்துப்போய் விருந்தருளித்துபசரித்தல்	கஉஉ
குபேரன் தன் பரிசனத்தோடுவந்து பாண்டவரை வழிவிடுதல்.	கஉங
அருச்சுனன் வனமீட்சிச்சருக்கம்	கஉச
இந்திரன் தருமனாதியரைக் கண்டு குலாவி, உரோமசன்மரை யழைத்துக்கொண்டு போதல்	கஉரு
அருச்சுனன் தான்போய்வந்த சேதியைத் தருமனாதியர்க் குரைத்தல்.	கஉரு
நகுஷன் சாபவிமோசனச் சருக்கம்	கஉஎ
நாகம் வீமன் வரலாற்றைக் கேட்டறிந்து பாண்டவருக்குந் தனக்குமுள்ள பகை காட்டிப் பயமுறுத்துதல்	கஉஎ
வீமனைக்காணாமல் வருந்தித்தேடிய தருமன் அவனுக்குண்டான ஆபத்தைக் கண்டு நாகத்தைத் துதித்தல்	கஉஅ
நாகந் தருமசந்தேகங்கேட்கத் தருமன் விடைதரல்	கஉகூ
நாகன் வீமனை விடுத்துத் தருமனையு மவனையும் வாழ்த்தி விடைபெற்றுச் சொர்க்கலோகமடைதல்.	கங0
மார்க்கண்டேயமுனிச்சருக்கம்	கஙக
பாண்டவரைக்காண கண்ணனும் மார்க்கண்டேய முனிவரும் வருதல்	கஙஉ
நாரதமுனிவர் வருதல்	கஙங
மார்க்கண்டேயரைத் தருமராஜன் வருணமுறைகேட்க அதற்கவர் சொல்லுதல்	கஙங
அயராஜன் சரித்திரம்	கஙச
அத்திரிமகாரிஷி சரித்திரம்	கஙரு
தர்க்கமுனிவர் சரித்திரம்	கஙஎ
மனுராஜன் சரித்திரம்	கஙஅ
பிரபஞ்சலயோற்பவம்	கஙகூ
கலிகாலமுறைமை	கசக
பரிச்சித்துராஜன் சரித்திரம்	கசஉ
ஜலன் நலன் என்னு மிவர்கள் சரித்திரம்	கசச
இந்திரதுய்மராஜன் சரித்திரம்	கசசு

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
துந்துமாரமகாராஜன் சரித்திரம்	௧௪௮
கௌசிகன் சரித்திரம்	௧௫0
ஸ்ரீகுமாரசுவாமி சரித்திரம்	௧௫௫
ஸ்ரீகிருஷ்ணதேவர் சத்தியபாமையோடு துவாரகைக்கு எழுந்தருளல்	௧௬0
ஸ்ரீராமமூர்த்தி சரித்திரம்.	௧௬௨
சித்திரசேனன் சருக்கம்	௧௬௩
விதுரனாற் பாண்டவர் வலிமைகேட்டுப்பயந்த திரிதராஷ்டிரனைத் துரியோதனன் தன் வலிமைகூறித் தேற்றுதல்	௧௬௪
பாண்டவர்களை அவமானப்படுத்தவேண்டித் துரியோதனாதியர் ஆலோசித்தல்	௧௬௫
துரியோதனாதியர் திரிதராஷ்டிரனிடஞ்சென்று வேட்டைக்குப்போக உத்தரம்பெற்றுப் பிரயாணமாதல்	௧௬௬
துரியோதனன் அங்கு ஜலக்கிரீடைக்கு வந்த கந்தருவராஜன் படைகளோடு தன் தம்பியர் முதலியோரை விடுத்து வம்புப்போர் விளைத்தல்	௧௬௭
சகுனியுங் கர்னனுங் கந்தருவராஜனாற் கலங்கித் துரியோதனனைத் தனியேவிட்டோடிப்போதல்	௧௬௮
சித்திர சேனன் துரியோதனாதியர்களையும் ஸ்திரீகளையும் தாமணிப்பிணையலாய்க் கட்டிக்கொண்டுபோக, தப்பியசிலர் ஓடிவந்து தருமராஜனிடத்தில் முறையிடல்	௨00
தருமராஜன் துரியோதனாதியரை மீட்கும்படி வீமனுக்குரைக்க, அவன் தடுக்க, தான் சமாதானங்கூறியனுப்புதல்	௨00
அருச்சுனன் வீம நகுல சகாதேவர்களோடு சென்று கந்தருவப் படைகளை வளைத்துச் சரக்கூடங் கட்டுதல்	௨0௧
சித்திரசேனன அருச்சுனன் வரவறிந்து சமாதானஞ் செய்துகொள்ளுதல்	௨0௨
சித்திரசேனன் அருச்சுனன் சொல்லுக்கிசைந்துசென்று தருமராஜனைக் கண்டு சன்மானித்துத் துரியோதனாதிகளை ஒப்புவித்துச் செல்லுதல்	௨0௨
தருமராஜன் தம்பிமார்களால் துரியோதனாதியர் கட்டவிழ்ப்பித்துப் பரிதாபப்படுதல்	௨0௩
தருமராஜன் சகுனியை வெறுத்துக்கொண்டறிவுறுத்தி துரியோதனாதியரை உடன் கூட்டியனுப்புவித்தல்	௨0௪
துரியோதனன் தயித்தியவனஞ்சேர்ந்து தருமராஜன்செய்த நன்றியைச்சகியாது மனநோதலைச் சகுனி தேற்றுதல்	௨0௫
கர்னன் துரியோதனனிடம் வந்து மீட்டும் போருக்கு விடை கேட்க, ஊருக்குப் போக விடை தந்து தான் தனியே உள்ளறையிற் சென்றிருத்தல்	௨0௬
துரியோதனனைப் பாதலத்தரக்கர் அழைத்துப்போய்ச் சில பரிவுகள்கூறி மிர்த்யுசஞ்சீவி மந்திரம் உபதேசித்தனுப்புதல்	௨0௬
துரியோதனனவரோடு மத்தினபுரஞ் செல்ல, வீஷ்மாதியர் விளைந்ததுசொல்லி விவேகங்கூற, அதுகேட்டு வருந்துதல்	௨0௭
துரியோதனன் இராஜசூயத்தால் இந்திரனை அவமானஞ் செய்யக்கருத, வீஷ்மாதியர்மாற்றி வேறுவிதத்தால் நடப்பித்தல்	௨0௮
தருமராஜன் துர்ச்சொப்பனங் கண்டிடம் பெயர்க்க, வியாசர்வந்து மௌற்கல்ய மகாரிஷி சரிதங்கூறித் தேற்றிச் செல்லுதல்.	௨0௯
சயிந்தவன் சருக்கம்	௨௧௧
பாண்டவர்கள் வேட்டைக்குப்போய் திரௌபதி தனித்திருக்கும்போது சிந்துராஜன் கண்டுவந்து வசனித்தல்	௨௧௧
சிந்துராஜன் திரௌபதியோடு அடாத வார்த்தையாடித் துராத்காரமாய்த் தனது தேர்மேற் கொண்டுபோதல்	௨௧௨
திரௌபதி தன்னைப் பாண்டவர் தேடிவருவதைக்கண்டு சிந்தை களித்தல்	௨௧௩
பாண்டவர்கள் சிந்துதேச ராஜனோடு அரசர்களையெல்லா முறியவடித்தோட்டுதல்	௨௧௩
சிந்துராஜன் பாண்டவர்களோடு போராட முடியாமல் திரௌபதியை நிலத்தி லிறக்கிவிட்டுத் தேரை விரைவிற் செலுத்திக்கொண்டோடுதல்	௨௧௪
தருமராஜன் பாஞ்சாலியைத்தேற்றி வீமார்ச்சுனராற் சயிந்தவனை உயிரோடு பிடித்துவரச்செய்தல்	௨௧௫

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
வீமார்ச்சுனர் சயிந்தவனைப் பிடித்துத் தேரிற் கட்டிக்கொண்டு வருதல்	௨௧௫
தருமராசன் சயிந்தவன் கட்டவிழ்ப்பித்து வீமசேனனைச் சிலவினவ, அதற்கவன் விடைதரல்	௨௧௭
சயிந்தவனுக்குத் தருமராஜன் சில தருமங் கூறி விடுக்க, அவன் கைலாசபதியை வேண்டித் தவஞ்செய்து பாண்டவரை வெல்ல வரம்பெறுதல்	௨௧௭
திரௌபதிக்கு நேர்ந்த சம்பவத்தைக் கருதி வருந்திய தருமனை மார்க்கண்டேயமுனிவர் வந்து தேற்றிச் சாவித்திரி சரித்திரமுரைத்தல்	௨௧௮
துருவாசமுனிச்சருக்கம்	௨௨௭
தருமனாதியர் வருந்துவதையுணர்ந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அங்ஙன மெழுந்தருளுதல்	௨௨௭
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி துர்வாசமுனிவர் முதலியோர்க்கு அமுத விருந்தளித்தல்	௨௨௮
துருவாசர் தான்வந்தவிதங்கூறி ஆசீர்வதித்துச் செல்ல, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியுந் துவாரகைக் கெழுந்தருளல்.	௨௨௯
இந்திரன் கர்னன் கவசகுண்டலங் கவர்ந்த சருக்கம்	௨௨௯
இந்திரனுக்குக் கண்ணன் கர்னன் வரலாறு கூறிக் கவசகுண்டலங் கவர அனுப்புதல்	௨௩0
சூரியபகவான் இந்திரன் வருங் காரியத்தைக் கர்னனுக்கு முன்னதாய்ச்சென்றுரைத்தும் பயன்படாதுபோதல்	௨௩0
இந்திரன் அந்தண ரூபியாய்க் கர்னனிடம் வந்து கவசகுண்டலம் வாங்கி ஓர் சத்திவேலை அவனுக்குத்தந்து செல்லுதல்.	௨௩௧
பழம் பொருந்து சருக்கம்	௨௩௨
அருச்சுனன் ஆமலகக்கனி வரலாறுணர்ந்து தருமனிடஞ்சென்று முறையிட அவருந் தவித்தல்	௨௩௩
பாண்டவர் கிருஷ்ணமூர்த்தியைத் தியானிக்க அவரெழுந்தருளி அவர்களை ஆதரித்தல்	௨௩௩
தருமனந்தனனுரைத்த மனோநிச்சயம்	௨௩௪
வீமசேனனுரைத்த மனோநிச்சயம்	௨௩௪
விஜயனுரைத்த மனோநிச்சயம்	௨௩௪
நகுலனுரைத்த மனோநிச்சயம்	௨௩௫
சகாதேவனுரைத்த மனோநிச்சயம்	௨௩௫
திரௌபதியுரைத்த மனோநிச்சயம்	௨௩௫
பாண்டவர்கள் தங்களிருக்கை வந்து சேர்ந்த பின்பு, கிருஷ்ணமூர்த்தி துவாரகைக்கு எழுந்தருளல்.	௨௩௬
நச்சுப்பொய்கைச் சருக்கம்	௨௩௬
துரியோதனாதிகள் காளமாமுனியைக்கொண்டு பாண்டவர்பொருட்டு மாரணயாகஞ்செய்வித்தல்	௨௩௭
யமதருமராஜன் பிரமசாரியுமானுமாகச்சென்று பாண்டவரைக் கடும் பாலை வனத்திற் கொண்டுபோய் விடுத்தல்	௨௩௮
யமனாலுண்டான நச்சுப்பொய்கையால் வீமனாதியர் நால்வரு மிறக்க, தருமனுயிர் சோர்தல்	௨௩௮
மாரண யாகத்துண்டான பூதம் பாண்டவரிறந்ததைநோக்கி காளமாமுனியைவதைத்தல்	௨௩௯
தருமராஜன் சகோதர ரிறந்தது நோக்கித் தானுமிறக்கத் துணிந்தபோது யமன் அசரீரியாய்த் தடுத்தல்	௨௪0
உதிஷ்டிரனால் அசரீரிதருமசந்தேகம்வினவிச் சுயரூபங் காட்டி, இறந்தவருக்கு உயிர் தந்து இயன்றதுரைத்தேகுதல்	௨௪0
பாண்டவரைவீஷ்மராதியர்வந்துகண்டுபோதல்.	௨௪௧

விராட பர்வம்.

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
பாண்டவர் கரந்துறைசருக்கம்	க
தருமராஜன் சோகமுறத் தௌமியாசாரியருந் தம்பியருந் தேற்றுதல்	உ
தருமராஜன் தம்பியரோ டாலோசிக்க அதற் கவர்கள் கூறுதல்	ங
பாண்டவரும்-பாஞ்சாலியும், பாங்கர்பாங்கியரோடுந் தௌமியாசாரியாரோடும் விராடபுரம் போதல்	ச
தருமராஜன் தன்கொள்கையைக் கூறுதல்	ச
வீமராஜன் தன்கொள்கையைக் கூறுதல்	ரு
அருச்சுனராஜன் தன் கொள்கையைக் கூறுதல்	சு
நகுலராஜன் தன் கொள்கையைக் கூறுதல்	எ
சகாதேவராஜன் தன் கொள்கையைக் கூறுதல்	எ
திரௌபதாதேவி தன் கொள்கையைக் கூறுதல்	அ
திரௌபதாதேவிக்குத் தருமநந்தனர் சில தருமங் கூறுதல்	கூ
தௌமியாசாரியர் பாண்டவர்கட்குச் சில நீதி கூறி, ஔபாசாக்கினி பெற்றுத் தவத்திற் கேகுதல்	கூ
பாண்டவர்கள் வில்முதலியபடைகளை வன்னி விருட்சத்தடியிற் பதனஞ்செய்துவைத்தல்	கஉ
பாண்டவரும் பாஞ்சாலியும் வேற்றுரு வமைதல்	கங
தருமராஜன் கங்கபட்டரென்னு மந்தணசிரேஷ்டராய் விராடனுக்காசாரியத்தன்மை பூண்டிருத்தல்	கச
வீமார்ச்சுனர் பலாயனனும்பிரகனளையுமாய் அட்டிற் றொழிலும் அருநடச்செயலு மேற்றிருத்தல்	கரு
நகுலசகாதேவர் தாமக்கிரந்தியுந் தந்திரபாலனுமாய்க் குதிரைகளையும் பசுக்களையும் பாதுகாத்து வருதல்	கசு
திரௌபதாதேவி விரதசாரணியாய் விராடன் மனைவியை யடுத்தல்.	கசு
மற்போர்ச்சருக்கம்	கஅ
வெளியூர்மல்லனுக்கும் விராடனூர் மல்லருக்கும் யுத்தம்	கஅ
விராடன் தன்மல்லர்பட்டதை யெண்ணிவருந்த, கங்கபட்டர் பலாயனன் திறங்கூறி மகிழ்வித்தல்	ககூ
வாசவனோடு பலாயனன் மற்போராடி வதைத்தல்.	உ0
கீசகன் வதைச் சருக்கம்	உக
கீசகன் விரதசாரணியைக்கண்டு மோகித்தல்	உக
கீசகனுக்கு விரதசாரணி புத்திகூறிக் கடிதல்	உஉ
கீசகன் விரதசாரணிக்குத் தன் பராக்கிரமங் கூறிப் பிரதாபித்தல்	உங
கீசகனுக்கு விரதசாரணி சிலநீதியுந் தன்னால் நேரு முபாதியுங்கூறி நிந்தித்தல்	உச
விரதசாரணி சுதர்க்கணையிடஞ்சென்று கீசகன் செயல்கூற, அவள் சமாதானஞ் செய்ய, அங்குமவன் வந்து பிடித்தல்	உரு
சுதர்க்கணை கீசகனைச்சினந்து கண்டிக்க, அவனவட்குச் சில நயபயங்காட்டிக் கெஞ்சுதல்	உசு
கீசகன் சுதர்க்கணையாற் கடிந்து துறத்தப்பட்டுத் தன்மாளிகை சென்று விரகநோயாற் றவிக்க, தாதிய ருபசரித்தல்	உஎ
கீசகன் மரணமூர்ச்சை யடையக்கண்ட தாதியர் சுதர்க்கணைபால் முறையிட்டு விரதசாரணியை யனுப்பும்படி பலாத்காரஞ்செய்தல்	உஅ
விரதசாரணியைக் கீசகனைக் கண்டுவரும்படி சுதர்க்கணை வருந்திப் பணிந்து கேட்டுக் கொள்ளுதல்	உகூ
விரதசாரணி கீசகனிடஞ்செல்ல, அவன்தொடக்கிட்டலுமோடி விராடன் சபையிலபயம்புகுதல்	ங0
விராடன்சபையி லடைக்கலம்புகுந்த திரௌபதியையும் அவளைப்பிடிக்கநேர்ந்த கீசகனையுங்கண்டாக்ரமித்த வீமனைத் தருமரடக்குதல்	ஙங
திரௌபதி இராஜசபையிலுள்ள விராடனோடும் பெரியோர்களோடுஞ் சிலதருமங்கள் கூறி முறையிட, அவர்கள் தேற்றுதல்	ஙச
திரௌபதியைத் தருமராஜன்கடிய, அக்குறிப்பறிந்து சபையை நீங்கிச் சுதர்க்கணையிடஞ்சென்று கூற, அவளுமற்றையருங்கேட் டவலித்தல்	ஙசு
தருமநந்தனர் சிலகுறைபாடுகளைக் கூறி விராடனைக்கடிய, அவன் சபை கலைவித்து அந்தப்புரஞ் செல்லுதல்	ஙஎ

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
கீசகன் வரலாறு	௩௮
திரௌபதி வீமசேனனை மடைப்பள்ளியிற் சென்றுகண்டு தன்குறைகூறி வெறுத் துக்கொள்ளுதல்	௩௯
வீமன் திரௌபதியைத்தேற்றிக் கீசகனைக் கொல்வதற்கான ஓர் சூழ்ச்சியைச்சொல் லியனுப்புதல்	௪0
பாஞ்சாலிவழக்கப்படி நந்தன வனத்திற்குச் செல்ல, அங்கேமீட்டுங் கீசகன்வந்து வேண்ட, அவனை வீமன்குறித்த விடத் திற்குவரச்சொல்லி மீளுதல்	௪௨
திரௌபதி வீமசேனனைக்கண்டு நடந்தவிதங் கூற, அவனவட்குச் சிலதிட்டங்கூறி யனுப்புதல்	௪௪
திரௌபதியும் வீமசேனனுங் கீசகனுக்குக் குறித்தயிடஞ்சென்று, அவன் வரவுக் கெதிர்பார்த்திருத்தல்	௪௫
கீசகன் விரதசாரணி வேடம்பூண்டிருந்தவீம னைக் கலவிக்குக் கெஞ்சுதல்	௪௬
வீமசேனனுக்குங்கீசகனுக்கும் யுத்தம்	௪௭
வீமன் கீசகனுடலைப் பேப்பதிபோற் சிங்கா ரித்துத் திரௌபதிக்குக் காட்டிப் பின் பிருவரும் பட்டினம்போதல்	௪௯
உபகீசகாளிரவிலடவிச்சந்தடிகேட்டையுற்று வந்து, தமபனுக்கு நேர்ந்தசம்பவங்கண் டலறுதல்	௫0
உபகீசகாள் சுதர்க்கணையிடஞ் சென்று தம யன் செயல்கூற, அவளதுகேட்டுநடத்த வேண்டுவ துணர்த்தியனுப்புதல்	௫௧
உபகீசகாள் தமபனைத் தகனஞ்செய்ய வரும் வழியில் விரதசாரணியைக் கண்டையுற் றுமுடுக்க, அவளலறிக் கூவுதல்	௫௧
வீமசேனன் திரௌபதி கூச்சல்கேட்டோடி வந்து உபகீசகாள் நூற்றுமூ வரையும் வதைத்தல்	௫௨
வீமசேனன் திரௌபதிக்கு ஜயை சரிதங் கூறித்தேற்றி, இருவருந் தமதிருக்கை யை யடைதல்	௫௩
விராடனுஞ் சுதர்க்கணையுங் கீசகர்க்குரிய கடன்களை முடித்து, திரௌபதியைத் தெய்வம்போற் போற்றிவருதல்	௫௪
விராடராஜன் கீசகனிறந்ததற்கு வியசனப்பட, தருமபுத்திரர்தேற்றி ஆதரணைகூறுதல்.	௫௫

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
தக்ஷணநிரைமீட்சிச்சருக்கம்	௫௫
துரியோதனன் பாண்டவ ரிருக்கை யறியத் தூதரையேவ, அவர்கள்சென்றுய்ந் தவ லித்துவருதல்	௫௬
கர்னன்பாண்டவரிருக்கை இவ்வாறிருக்குமெ னக் கூறுதல்	௫௭
துச்சாதனன் கர்னனுரையைமறுத்து, பாண் டவர் தமக்குட் பகைத்திறந்தனரெனல்	௫௭
துரோணாசாரியர் பாண்டவர் நிலைமைகூறித் துச்சாதனனுரையைக்கடிதல்	௫௮
கிருபாசாரியர் பாண்டவர் பராக்கிரமங்கூறித் துரியோதனநியர்க் கறிவுறுத்தல்	௫௯
வீஷ்மாசாரியர் பாண்டவருள்ள நகரிவ்வித வியல்பை யுளதாமென வறிவித்தல்	௬0
கிருபாசாரியர் துரியோதனனைச் சொற்சோர் வுபட லாகாதெனக் கடிதல்	௬௧
தூதர்கள் துரியோதனனுக்கு மச்சநாட்டுவள மும் அந்நாட்டில் நடந்த விதமுங் கூறுதல்	௬௧
துரியோதனன் தூதுவர்சொல்லைச்சன்மானித் துச் சபையாரை வினுதல்	௬௨
கர்னன் மச்சநாட்டிற் பாண்டவரைக் காணற் கேதுகூற, திரிகர்த்தன் தன்பூர்வ பகை நாடி யங்குசெல்ல, துரியோதனன்யுத்த சன்னத்த னுதல்	௬௨
திரிகர்த்தன் பசுநிரைகளைமடக்குவதைக்கண் டகோபால ரவனோ டெதிர்த் திளைத் தோடி விராடனுக் கறிவித்தல்	௬௪
விராடராஜன் தன்தம்பிகளோடுந்தனயரோடும் போர்க்கோலங்கொண்டு பிரயாணமாதல்	௬௫
கங்கபட்டர் விராடனுக்குப் பலாயனனாதிய மூவர்திறங்கூறித் தாங்களுமு யுத்தகோ லங்கொண்டுடன்செல்ல, உடனேயுதத மூளுதல்.	௬௬
திரிகர்த்தனால்விராடன்கட்டுபட, அதுகண்ட தனையராதியர் கங்கபட்டரிட முறை யிட, அவர் தம்பியரைச் செலுத்தித் தித் தானுமேகல்	௬௯
பலாயனன் திரிகர்த்தனைவென்று தன் தேரிற் கட்டி,விராடராஜனையும் பசுநிரைகளையு மீட்குதல்	௭0
கங்கபட்டர் திரிகர்த்தனைக் கட்டவிழ்ப்பித்து விடுதல்.	௭௧

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
உத்தரநிரைமீட்சிச்சருக்கம்	௭௨
கோபாலர் முறையிடக் கேட்டுத் தாயோடு வருநதிய உத்தரன்கருத்தை விரதசாரணி பிரகநளைக்கறிவித்தல்	௭௩
விரதசாரணிபேடியை உத்தரனுக்குச் சாரதியா யமைவித்தல்	௭௪
உத்தரகுமாரன்யுத்தகோலங்கொண்டு ரதமேறிச்சென்று உத்தரதிசையடைதல்	௭௬
குருசேனையைக்கண் டஞ்சிய உத்தரகுமாரனுக்கும் பிரகநளைக்கும்வாது	௭௭
உத்தரகுமாரன் தேர் விட்டிழிந் தோடக்கண்ட கௌரவாதிய ராலோசித்தல்	௮௧
உத்தரகுமாரன் தன்னை விட்டுவிடும்படி பிரகநளையை வேண்டுதல்	௮௨
பிரகநளை உத்தரகுமாரனை வலவனாக விசைப்பித்து, வன்னித்தருவருகிற்றேர்செலுப்பித்தல்	௮௩
ஒற்றைத்தேருந் துற்சகுனமுங்கண்ட துரோணரும் வீஷ்மரும் வருபவன் அருச்சுனனென்றறிந்துசுயோதனனுக்கறிவித்தல்	௮௪
கர்னன் துரோணர் கூறியவற்றைக் கடியதுரியோதன னவனைத் தணித்தல்	௮௫
பிரகநளை உத்தரகுமாரனை வன்னிமரத்தேறி ஆயுதமெடுவென, அவனங்கோரரவுகண்டஞ்ச, பின்பவனைத்தேற்றி இசைவித்தல்	௮௬
உத்தரகுமாரன் பிரகநளையின்சொற்படி ஆயுதங்கண் டதன்வரலாறுகேட்க, அதற்கவள் விடைதரல்	௮௭
உத்தரகுமாரன் பாண்டவர்க்கு நேர்ந்த சம்பவங்கேட் டவரெங்குள்ளாரோவென்று வருந்த, பிரகநளை உள்ளவாறை வெளிப்படுத்துதல்	௮௭
உத்தரகுமாரன் அருச்சுனன்பெயர்களுமவற்றின் வரலாறுங்கேட்டையந்தீர்ந்து ஆயுதமெடுத்துத் தரல்	௮௯
அருச்சுனன் சுயரூபங்கொண்டு, இந்திராதியரா லணிமணிக்கலனொ டனுமக்கொடி படைத்துப் படைமுகம் போகுதல்	௯௦
அர்ச்சுனன் வரவைக்கண்ட துரோணர் துரியோதனனுக் குணர்த்தி யறிவுறுத்தல்	௯௨
துரியோதனன் துரோணர் கூறியதைக்கேட்டு வெறுத்துக்கொண்டு மற்றையரை யுத்தத்திற் காயத்தப்படுத்துதல்	௯௩
அஸ்வத்தாமன் தன்தந்தையை நிந்தித்த துரியோதனனைக் கடிந்து தூறுதல்	௯௫
கர்னன் துரோணரும் அஸ்மத்தாமனுங் கூறியவற்றைக்கேட்டு மறுத்துத் தன் பராக்கிரமங் கூறல்	௯௬
கிருபாசாரியர் கர்னன் கருத்தைக் கண்டித்து உல்லங்கனஞ்செய்ய, அதற்கவ னிந்தித்தல்	௯௭
வீஷ்மர் ஆசாரிய நிந்தைசெய்த துரியோதனனையுங் கர்னனையுங் கோபித்து, அவர்கள் பெருமையைக் கூறுதல்	௯௯
வீஷ்மர் ஆசாரியர் மூவரையும் அபராத மன்னிப்பு கேட்டு வணங்க, அதற்கவர்களிணங்கி இனியாகவேண்டுவ துரைத்தல்	௧௦௧
அஞ்ஞாதவாசத்தவணையி லையுற்ற துரியோதனனை வீஷ்மர் தேற்றி யறிவுறுத்த, அவனதற் கொவ்வாது தன் கொள்கை கூறுதல்	௧௦௨
துரியோதனன் கருத்துணர்ந்த துரோணர் அவனைப் பசுமந்தைகளோடு பாதிசேனையுங் கூட்டிப் பட்டணமனுப்பி, தாங்களிங்ஙன் படைவகுத்திருத்தல்	௧௦௩
துரியோதனன் செல்கையுந் துரோணாதியர் செய்கையுங்கண்ட அருச்சுனன் பெரியோர்க்கு வந்தனக்கணையேவ, அவர்களவனை வியந்து பயந்திருத்தல்	௧௦௪
அருச்சுனன் அத்தினபுரிக்குச் செல்லுந் துரியோதனனைச் சேனையோடு மடக்கி, பசுநிரைகளைமீட்டுச் சரக்கூடிட்டு விராடநகரனுப்புதல்	௧௦௬
மடக்கியநிரைகள் மச்ச நாடு செல்வதைக் கண்டையுற்ற வீஷ்மராதியர் துரியோதனனுக்குத் துணைபடுமுன், அருச்சுனனவனைக்கண் டிழித்துரைத்தல்.	௧௦௯
கர்னனுக்குங் காண்டீபனுக்கும் யுத்தம்	௧௧௨
அருச்சுனனுக் கிளைத்துப் புறங் காட்டிப் போகுங் கர்னனை அஸ்வத்தாமன் கண்டேசுதல்	௧௨௦
அருச்சுனன் தன்னெதிர் நிற்கும் படைக்கணுள்ள சத்துருமித்துருக்களை உத்திரனுக்குணர்த்தி யறிவுறுத்தல்	௧௨௧
துரோணாச்சாரியருக்கும் அருச்சுனனுக்கும் உயுத்தம்	௧௨௩
அஸ்வத்தாமனுக்கும் அருச்சுனனுக்கும்யுத்தம்	௧௨௭

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
கிருபாசாரியருக்கும் அருச்சுனனுக்குமுயுத்தம்	கஉஅ
வீஷ்மருக்கும் அருச்சுனனுக்கும் உயுத்தம்	கஉகூ
அருச்சுனன்செய்த யுத்தபராக்கிரமச்சிறப்பு	கஙக
துரியோதனனாதியர் மீட்டு மருச்சுனனோடுபொருது, அவனது மோகனாஸ்திரத்தால் மயங்கிச் சாய்ந்துபோதல்	கஙச
அருச்சுன னேவலா லுத்தர குமாரன் தன் தங்கைக்குத் தரணிபர் தலையாடை பறித்து வருதல்	கஙரு
மன்னர்யாரு மயக்கமாறி வீஷ்ம ராற்றலை யாடைபோன தறிந்து, உடனே அத்தினபுரிக்குப் பிரயாணமாதல்.	கஙஎ
அத்தினபுரிக்குச் செல்லுந் துரியோதனனை அருச்சுனன் அவமானஞ்செய்தனுப்புதல்	கஙஅ
அருச்சுன னத்தினபுரிக்கேகு மாசாரியர்க் கச்சந்திர வந்தன விடைபெற்று மீண்டு, தானுத்தரனோடு வசனித்திருத்தல்	கஙகூ
தக்ஷணநிரைமீட்டுவந்த விராடன் உத்தரகுமாரன்சேதிகேட்டுவருந்தி, பின் கங்கபட்டாரனுங் காண்டீபன் தூதரானுந்தேறி, அமைச்சராதியரை யழைத்துவிடுத்தல்	கசக
விராடன் தன்குமாரன் வருமளவுங் கங்கபட்டரோடு வட்டாடலிற்புக, அதனாலிருவர்க்கும் வாதாடல்மிக, விரதசாரணி தன்றலைவனுதலில் வடுவாடல் கண்டு வருந்தல்	கசஉ
உத்தரகுமாரன் பட்டின மீண்டு கங்கபட்டருக்குநேர்ந்த கடுமையைக்கண்டு வருந்துதல்	கசச
உத்தரகுமாரன் தன் தாய் தந்தையரோடு கங்கபட்டராதியர் கரவை வெளிப்படுத்துதல்.	கசரு
பாண்டவர் வெளிப்பாட்டுச் சருக்கம்	கசஎ
தருமநந்தனர் நெற்றியிற் றழும்புகண்டுடன்றதம்பியரைச் சில தரும வாய்மை கூறித் தணிவித்தல்	கசஎ
பாண்டவ ராயுத பாணியராய்ப் பழைய கோலங்கொண்டு கொலுக்கூடம் வர, விராடன் வரிசைவைத்துவணங்க, தருமரவனைச் சன்மானித்தல்	கசஅ
உத்தரன் வேண்டுகோளின்படி உத்தரையை அபிமன்னுவுக்காகச் சம்மதித்த பாண்டவர் கருத்தறிந்த விராடன் பந்துக்களாதியர்க் கோலைவிடுத்தல்	கசகூ
ஸ்ரீகிருஷ்ணபகவான் பந்துக்களோடு அபிமன்னனையும் சுவேதனையு மழைத்து வருதல்	கசகூ
பாஞ்சாலர்-குந்திபோசர் இவர்கள் முதலாயினோரும், தௌமியாசாரிய ராதியரும் வருதல்	கருக
விராடன் தௌமியரால் முகூர்த்தநாள்கோரி, பாண்டவரை உபலாவியத் திருத்தி, மணவினைக்குரிய தொழில்யாவு முடித்தல்	கருஉ
அபிமன்னன் உபலாவியத்தி லிருந்து விராடபுரத்திற்கு மணக்கோலம் போதல்	கருங
திருக்கலியாணச் சிறப்பு	கருச
ஸ்ரீதனச்சிறப்பு.	கருரு

உத்தியோக பர்வம்.

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
உலூகன் தூதுச்சருக்கம்	௧
பாண்டவர் தூது நிச்சயித்தனுப்புதல் †	௨
துரியோதனனும் அருச்சுனனும் கண்ணனைப் படைத்துணைக்கு அழைத்தல் †‡	௩
துரியோதனன் சல்லியனைப் படைத்துணைக் கழைத்துக்கொள்ளுதல் ‡	௬
தருமன் சல்லியனைச் சில வரங்கேட்க, அவனவ்வாறே தந்து இந்திரன் கதைகூறித் தேற்றுதல்	௮
தூதுவரக்கண்ட துரியோதனாதியர் சம்பாஷணை ‡	௧௫
கர்னன் வீஷ்மரைக் கடிந்து கூறிய வியாக்கிர யுத்தி கதை.	௧௭
சஞ்சயன் தூதுச்சருக்கம்	௧௯
தூதுவரக்கண்ட தருமன் முதலாயினோர் சம்பாஷணை †	௨0
திரிதராஷ்டிரனுக்கும் விதுரனுக்கு மிராச் சம்பாஷணை †	௨௭
சஞ்சயன்கூறுந் தருமனாதியர் செருக்கை வீஷ்மர் சன்மானித்தல் ‡	௩0
வீஷ்மர் திரிதராஷ்டிரனாதியர்க்குக் கூறிய தேவ ரகசிய வாக்கியம்	௩௪
கர்னனுக்கும் வீஷ்மருக்கும் வாது ‡	௩௫
சஞ்சயன் பாண்டவர் பலங்கூறுதல் †	௩௭
துரியோதனன் தன் பலங்கூறி இறுமாத்தல் †	௩௯
திரிதராஷ்டிரன் புத்தியைக் கர்னனுந் துரியோதனனுங் கலைத்தல் †	௪௨
திரிதராஷ்டிரன் பாண்டவர் சபதங்கேட்டு வருந்தல் †	௪௫
திரிதராஷ்டின் அந்தப்புரஞ் சென்று வியாசரைத் தரிசித்தல் ‡	௪௭
கிருஷ்ணன் தூதுச்சருக்கம்	௫0
கண்ணன் தருமன் கருத்தறிதல் †	௫௧
கண்ணன் வீமன் கருத்தறிதல் †	௫௩
கண்ணன் அருச்சுனன் கருத்தறிதல் ‡	௫௪
கண்ணன் நகுலன் கருத்தறிதல் ‡	௫௫
கண்ணன் சகாதேவன் கருத்தறிதல் ‡	௫௫
கண்ணன் திரௌபதி கருத்தறிதல் †	௫௭
கண்ணன் அத்தினபுரிக் கெழுந்தருளல்	௫௮
விதுரன் கண்ணனுக்கு விருந்திடல்	௬௪
கண்ணன் துரியோதனன் சபைக்கெழுந்தருளல்	௬௮
ஜமதக்கினிமுனிவர் நரநாராயணர் சரித்திர முரைத்தல்	௭௫
கண்ணுவமுனிவர் கருடன் சரித்திர முரைத்தல்	௭௬
நாரதமுனிவர் காலவமுனி சரித்திர முரைத்தல்	௭௮
கிருஷ்ணன் கையேந்திநின்று இரத்தல்	௮௧
விதுரன் தன் வில்லை யொடித்தல்	௮௪
கண்ணன் குந்திதேவியிடஞ் செல்லுதல்	௮௮
துரியோதனன் கண்ணனுககுப் படுகுழி சமைத்தல்	௯0
கண்ணன் விஸ்வரூபங் கொள்ளுதல்	௯௨
கண்ணன கர்னனோடு சம்பாஷித்தல்	௯௫
கண்ணன் அஸ்வத்தாமனோடு சம்பாஷித்தல்	௯௬
குந்திதேவி கர்னனிடஞ் செல்லுதல்	௯௭
கண்ணன் உபலாவியத்திற்கு எழுந்தருளல் ‡	௧0௨
அணிவகுப்புச்சருக்கம்	௧0௩
பாண்டவர்க்கு வந்த படைத்துணைகளின் விபரம்	௧0௫
கௌரவர்க்கு வந்த படைத்துணைகளின் விபரம்	௧0௭
துரியோதனன் சகாதேவனால் உயுத்தத்திற்கு நாள்வைத்துக்கொள்ளுதல்	௧0௮

† ‡ இவ்விருவகைக்குறியுள்ள உட்பிரிவுகள் அங்ஙனம் விடுபட்டமையால் அவ்வப்பக்க முதற்பாக மிரண்டாம்பாகங்களில் முறையே யமைத்துக்கொள்ளுக.

சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்	சருக்கங்களும் அவற்றினுட்பிரிவுகளும்	பக்கம்
துரியோதனன் இராவானைக் களப்பலிக்கு உடம்படுத்திக்கொள்ளுதல்	௧௦௯	பாண்டவர் குருக்ஷேத்திரஞ்சென்று வீரமாகாளியைப் பூசித்தல்	௧௧௬
சகாதேவன் துரியோதனனுக்கு நாள் வைத்துக்கொடுத்ததைக் கண்ணன் வெளிப்படுத்துதல்	௧௧௦	வீஷ்மருக்குங் கர்னனுக்கும் வாது	௧௧௮
இராவான் களப்பலிக்குடன்பட்டதைக் கண்ணன் வெளிப்படுத்துதல்	௧௧௩	கௌரவர் குருக்ஷேத்திரமடைதல்	௧௧௯
கண்ணன் களப்பலி விதியுரைத்தல்	௧௧௪	பலராமரும்விதுரனும் தீர்த்தயாத்திரைபோதல்	௧௨௧
கண்ணன் திதியைப் புரட்டல்	௧௧௫	துரியோதனன் பாண்டவர்களுக்குத் தூது அனுப்புதல்	௧௨௨
		ஸ்ரீகிருஷ்ணர் துரியோதனனுக்குச் சொல்லியனுப்புதல்.	௧௨௪

இரண்டாம்புத்தகத்தின் சருக்க அட்டவணை

முற்றிற்று.



ஸ்ரீருக்மணீ சத்தியபாமா சமேத



ஸ்ரீ
வேணு கோபால



பரப்பிரம்மணே
நம:



ஸ்ரீமகாபாரதம்

மூன்றாவது

ஆரண்யபர்வம்.

கண்ணன் துதி

ஒருதலத்திடை யவதரித்தணி பொதுவர்சிற்குடி லுறைவதோர்
மரகதப்புய றனையெடுத்தொரு மகவெனத்தன திறுதியா
லரிதுபற்றிய வலகைசெற்றிட வணிமுலைப்பய நுகர்வுரு
மருதிடைத்தவழ் பொருவில்வித்தகன் மலரடிக்கண் வழுத்துவாம்.

சூதபுராணிகர் வாக்கியம்

[ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு ஆதிபஞ்சகத்தின் இரண்டாம்பாகமாகிய சபாபர்வத்தைக் கூறிய வைசம்பாயனமுனிவரை ஜெனமேஜெயமகாராஜன் பணிந்தெழுந்து, சுவாமீ! காண்டவவன தகனத்தினின்றுந் தப்பிவந்த மயனென்னுஞ் சிற்பியால் இந்திரப்பிரஸ்தத்திற் சமைத்துத்தந்த சபாமண்டபத்தில், நமன் சபையுளிருக்குந் தந்தையின் கருத்தை நாரதமுனிவராலுணர்ந்த உதிஷ்டிரன், கண்ணன் விரோதிகளாகிய ஜராசந்தனையுஞ் சிசுபாலனையுஞ் சங்கரித்துத், தம்பியர் நால்வர் திக்குவிஜயத்தாற் கொணர்ந்தவந்த பொருள்களைக் கைக்கொண்டு, வியாசராதியர் முன்னிலையில் இராஜசூயமுடித்துச் சம்ராட்டாகிப், பெரிய தந்தையின் கருத்தைப் பரிபாலனஞ்செய்யவேண்டி அத்தினபுரஞ்சென்று சூதாடி அத்தோடந்திரத் துரோணாசாரியரால் நியமித்த பன்னிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடமஞ்ஞாதவாசமும் உள்ளக்களிப்போடு வகித்து, உடனே தம்பியர் நால்வரும் பாஞ்சாலியுஞ் சூழப் புறப்பட்டு வரப்பெற்ற சரித்திரங்களனைத்துஞ் சாங்கோபாங்கமாகக்கேட்டு, ஒருபாற்சந்தோடமும் மற்றொருபாற் றீரா விபசனமுமாயினேன். இப்பால் மூன்றாம்பாகமாகிய ஆரண்யபர்வத்தை அவ்வியசனந்தீர வனுக்கிரகிக்க வேண்டுமென்று கேட்க, வைசம்பாயனமுனிவர் சொல்லத்தொடங்கினர்.]

தாயாய் மகவாய் தனியாய் பலவாய், நீயா யானுய் நிற்கு மொருவன்
மாயா மயனுய் மாய்கைக் கணுக, வாயா தவனென் மனநீங் கிலனே.

முதலாவது

பாண்டவர் வனம்புகு சருக்கம்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! ஐவர்களில் வீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் பின்னும் பாஞ்சாலி இவர்கள்கூறிய கடுஞ்சபதத்தைக் கேட்ட திரிதராஷ்டிரன் மெய்நடுங்கிப், பாஞ்சாலியை வணங்கிக் கோபந்தணிய நல்வசனங்கூறி, உன் பத்தாக்களாகிய பாண்டவர்கள் அகமகிழ்ச்சியாகச் சூதில்தோற்ற நாடு நகரங்கள் முதலிய எல்லாவற்றையுந் தந்தேன் தந்தேன் என்று கூறி அவளைச் சமாதானப்படுத்திப், பின்புபாண்டவர்களையும் அழைப்பித்து நீங்கள் ஐவருஞ் சீக்கிரம்யெழுந்து மாதர் சிரோமணியான பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு உங்கள் நகரத்துக்குச் செல்லுங்களென்று சொல்ல, அதையறிந்த சகுனி துரியோதனனுக்குத் தெரிவித்துச் சிலதுற்போதனையைச்செய்ய, அதனால் துரியோதனன் பிதாவாக்கின்படி உங்கள் நாடுநகரத்தைக் கொடுத்தோமேயல்லது அடிமைத்தனத்தை மாத்திரம் விடுவிக்கோமென்று துர்ச்சாதனனைக்கொண்டு சொல்லுவிக்க, அதுகேட்ட திரிதராஷ்டிரன் மனவருத்தங்கொண்டு வில்லாசிரியரைப் பார்த்துத் தன்கருத்தையும் பிள்ளைகளின் கருத்தையும் எடுத்துக்காட்டி இதற்கொரு தீர்ப்பு கொடுமென்றுகேட்க, வில்லாசிரியராகிய துரோணாசாரியர் ஸ்ரீராமன் கதையையெடுத்துக்கூறிப் பஞ்சவர்க்கு அதிக நலமுண்டாகவுந் துரியோதனனுக்கு மகிழ்வுண்டாகவும் யோசித்துப் பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து ஒருவருஷம் அஞ்ஞாத வாசமாயிருந்து வருகின்றது நன்மையென்றும் அப்படிச் செய்து வந்தபின்பு நீர் கொடுத்த வாக்குத் தத்தத்தின்படி முன்போலவே பஞ்சவர் நாடுநகர முதலியவற்றைப் பெறுதல் தகுதியென் றுரைக்க, துரியோதனன் கிஞ்சித் தாலோசித்துத் தீர்மானித்த இப்பதின்மூன்று வருஷத்துக்குள் அஞ்ஞாதவாசமாகிய ஒரு வருஷத்தில் இவர்களை எவ்விதத்திலாவது கண்டுபிடித்து முன்போலவே வனவாசஞ் செய்ய அனுப்பிவிட்டோமென்று எண்ணி மகிழ்ந்து அவ்வெண்ணத்துக் கொத்துக்கொள்ள, பாஞ்சாலி அரசருள் அடிமையில்லையாதலால் அடிமை மீட்டுக்கொள்ள ஒரு ஆட்டம் சூதாடக்கட்டளையிடவேண்டுமென்று பெரியோர்களைக் கேட்டுக்கொண்டு தருமராஜனை நோக்கி நானே நீராக இருந்து ஓர் ஆட்டஞ் சூதாடுமென்று கூற, தருமராஜன் அக்கருத்தைக் கிணங்கிச் சான்றோர்கள் முன்னிலையில் தான் செய்த தருமத்தை மந்திரமாகவைத்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் தியானித்துச் சகுனியுடன் ஓர் ஆட்டம் சூதாடி வெற்றியடைந்து அடிமைத்தனத்தை மீட்டுக்கொண்டு பெரியோர்கள் முதலானவர்களிடத்தில் விடைபெற்றுச் சபையைவிட்டுத் தானுந் தன் சகோதரரும் பாஞ்சாலியோடுபுறப்பட்டு நகரத்தைக் கடந்துவர, அப்போது தங்களைக்கண்டு விசனப்படுங் குடிகளுக்குத் தருமபுத்திரரானவர் இனியவார்த்தை கூறிப் பன்னிரண்டாட்டஞ் சூதாடிப் பலவாபரணங்களையும்-ரதங்களையும்-கஜங்களையும் - துரகங்களையும் - பதாதிகளையும்-நாட்டையும்-நகரத்தையும்-அரசுரிமையையும்-சித்திராங்கதன் கொடுத்த அசுவங்களையும் - போகஸ்திரீகளையும் - மற்றுமுள்ள எல்லாச் செல்வங்களையும்-பாஞ்சாலிமுதலிய எங்களையும் ஒவ்வொரு ஆட்டத்திற்குப் பந்தயமாகவைத்துத் தோற்றபடியாற் பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து அந்தப்பாவத்தைப்போக்கி அடிமையை நீக்கிக்கொள்ள ஆடின ஓர் ஆட்டத்திற்கு ஓர்வருஷம் ஒருவருக்குந் தெரியாமல் அஞ்ஞாதவாசமிருந்து பதின்மூன்று வருஷத்தையும் பதின்மூன்று நாளாக நினைத்துக் கழித்துவருகிறேனென்று திடஞ்சொல்லித் தானுந் தன்சகோதரர்களும் பாஞ்சாலியுமாக வனத்தை நோக்கி வெளிப்பட்டார்களன்றோ? அதுவே பிரயாணமாகவந்து சவுநகமுனிவருடைய வனத்தில்வந்து சேர்ந்தார்கள்.

சூரியபகவான் தருமராஜனுக்கு அக்ஷய பாத்திரமளித்தல்.

சேளும் ஜெனமேஜெய மகாராஜனே! இப்பால் தருமராஜன் முதலிய ஐவரும் பாஞ்சாலியும் வனத்துக்கேகின செய்தியைப் பாண்டவர்களுடைய சேனைகட்குத் தெரியவந்தது, அனலிலிட்ட மெழுகைப்போல மனம் உருகி, ஐ ஐ யோ!! தெய்வமே! தெய்வமே! தருமஸ்வரூபியாகிய நம்முடைய அரசனுக்கு இப்படிக்கொத்த வருத்தம் நேரிடுகிறதானால், இனி என்னயிருக்கின்றது? தன்பிராணனைப்போல மற்றப் பிராணிகளையுங் காப்பாற்றுவதில் அன்புகொண்டிருக்கின்ற தம்பிமார்களையுடைய அரசனே வனவாசஞ் செய்யப்போனாரென்கிற சொல்லைக்கேட்டு, இன்னும் நமதாவியிருக்கின்றதே, என்று வெகுவாய்த் துக்கித்துப்புலப்பி, சேனைத்தலைவர்-அணித்தலைவர்-வியூகத்தலைவர்-அர்த்தரதாள்-சமரதாள் - பட்டவர்த்தனாள் மகுடவர்த்தனாள் - இவர்களெல்லாருஞ் சவுனகமுனிவனத்துக்குவந்து, அங்கிருக்குந் தங்களரசனாகிய தருமராஜனைக்கண்டு வேறற்றமரம்போல விழுந்து புலம்பித் துக்கித்தார்கள். ஆனால் தருமராஜன் துன்பமுண்டானபோதும் இன்பமுண்டானபோதும் ஒரே சிந்தையையுடையவராயிருந்தபோதிலும் பிரசைகளினுடைய கோஷ்டத்தைக் கேட்டமாத்திரத்தில் மனவருத்தமுற்று, வந்தவர்களுக்கெல்லாம் இனிய வசனஞ் சொல்லி, யாவரையுஞ் சந்தோஷிக்கும்படி சில சாஸ்திரங்களைச் சொன்னார். அதற்கு யாவருந் தருமராஜனை வணங்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ ஸ்வாமி! பொறை - வீரம் - நீதி - இவையில்லாத அரசனிடத்திலிருந்து அஷ்ட ஐஸ்வரியத்தைப் பெற்று வாழ்கிறதைப் பார்க்கிலும், அப்பொறை-வீரம் - நீதி - இவைகளையுடைய அரசனிடத்திலிருந்து அஷ்டதரித்திரத்தை யடைந்து வாழ்வதே மேலாகும். ஆதலால் தங்களைப்பிரிந்து நாங்களிருக்கமாட்டோமென்று சொல்ல; தருமராஜன் புன்சிரிப்புகொண்டு சொல்லுகிறார் ஓ சற்சனர்களே! நீங்களேன் வருத்தப்படுகிறீர்கள்? செல்வம் நிலையல்ல. யானை





[2] கைலாசகிரியில் அர்ச்சுனன் தபசு.

யின் பிடரியில் இந்திரனைப்போலப் பொருந்திப் பூரணசந்திரப் பிரகாசம்போன்ற தவளசுஷத்ர நீழலிற் செல்லுவோ ராயினும், பொல்லாதகாலம் நேரிட்டாற் பிராணநாயகியையுமிழந்து அலைவரென் றமறைகள்முறை யிடுகின்றன வாதலால்; நாங்கள் ஒருகாரணநிமித்தம் பெரியோர்களுடைய வாக்கின்படி பன்னிரண்டு வருஷம்வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமுஞ் செய்ய வேண்டும். இந்தப் பதின்மூன்று வருஷத்தையும் பதின்மூன்று நாளாக நினைத்துக் கழித்துவருகிறோம். அதுகாறும் எங்கள் தாயாரும்-எங்கள் பிள்ளைகளும்-இங்குதானே யிருக்கிறார்கள். நீங்களெல்லாம் அவர்களை எங்களைப்போலப் பாவித்து, அவர்களிடத்தே நீங்கள் சகல சம்பிரமத்தோடு மிருகங்களென்றுரைத்தார். அதுகேட்ட யாவருந் தங்களரசன் கட்டளைக்கிசைந்து, அவரையும் மற்றையரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு அப்பாண்டவர்களுடைய புத்திராளிடம் வந்து சகல சம்பிரமத்தோடுங் கூடிவாழ்ந்துகொண் டிருந்தார்கள்.

இப்பால் அத்தருமராஜனை இடைவிடாம லிருந்த பன்னீராயிரம் வேதியர்கள் தருமராஜன் வனத்துக்குச் சென்றதைக் கேள்விப்பட்டுக் கனவருத்தமுற்று, ஓ! ஓ! நமது அரசன் சேஷ்டபிதாவின் சமுகங்கண்டு வருவாரென்றல்லவோ யெண்ணி யிருந்தோம். இப்போது மின்னுமல் இடி இடித்ததுபோல நமக்குத் தெரியாமல் அரசன் வனத்துக்கு யேகின காரணம் என்னவென்று ஏக்கங்கொண்டு, தவமியருடன் யாவரும் பிரயாணப்பட்டுச் சவுநகமுனிவர் வனத்துக்குவந்து தருமராஜனைக் கண்டார்கள். தருமராஜன் தம்பியருடன் அவர்களை எதிர்சென்று வணங்கி அழைத்துவந்து இருக்கச்சொல்லி, பிதாவின் சமுகங் காணப்போனதுமுதல் வனத்துக்கு வந்த வரைக்கும் நடந்த காரியத்தைக் கூறினர். வேதியர்கள் தருமராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். ஓ மகாராஜனே ! எந்தெந்தக்காலத்தில் எதை எதை அனுபவிக்கவேண்டுமோ ? அந்தக்காலத்தில் அதை அதை அனுபவிக்கத்தான்வேண்டும். ஆனுல் நாங்கள் உம்மைவிட்டுப் பிரிந்திருக்க எங்களுக்கு மனமில்லை. நாங்களோ? நீருண்டானபோது ஏரியை இடைவிடாமலிருந்து, நீரில்லாக்காலத்தில் ஏரியை விட்டுவிடும் பறவைகளை யொத்தவர்களல்ல. ஆனுல் அவ்வேரியில் நீருற்றபோது செழித்திருந்து, நீரற்றபோதும் ஒட்டி வளர்ந்திருக்கின்ற கொட்டியையும் - ஆம்பலையும்-ஒத்திருக்கின்றவர்கள் நாங்களாதலால், எங்களைக் கைவிடாதிருக்க உம்மை வேண்டுகிறோமென்றுகூற, தருமராஜன் அந்த வாக்கியத்தை மறுப்பதற்கு அவ்வவ் வேதியர்களின் நடக்கையே தடை செய்தமையால், அக்கருத்துக்கிசைந்து யாவரையுந் தன்னிடத்தி லிருக்கும்படி உத்தரவுகொடுத்தார். வேதியர்கள் யாவரும் மனமகிழ்ச்சியோடு தருமராஜனை அகலாதிருந்தனர்.

பின்பு தருமராஜன் பெரியதந்தையின் வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணவேண்டிச் சூதாடியவற் யடுத்திருக்கும் பன்னீராயிரம் வேதியர்கள் பசிப்பிணியையும், அக்கால் தனது தம்பிமார் தன் வாக்கின்படி அடங்கிப் பூனைபோலிருந்ததையும், பாஞ்சாலி பலவிதத்தால் அவகோலப்பட்டதையும் எண்ணி எண்ணிக் கனவருத்த முற்றவராய், மீட்டும் அதற்கு அதிகவருத்தமுறுமல் மனதைத் தேற்றிக்கொண்டு, தன்னைக்குள்ளாகி வருத்தப்படுவார்களே யென்கிற ஏக்கத்தை மனதில் வகித்து, கொடிய வெய்யலி லகப்பட்ட பாம்புபோல மனம்பதைத் திருந்தனர். அத்தருணத்தில் அவ்வனத்துக்கு அதிபதியாகிய சவுநகர் பஞ்சவர் காட்டில் வந்ததையுணர்ந்து, ஓ! ஓ! மகாபுண்ணியவானுகிய தருமராஜன் ஏதோ சில சிந்தையினுல்நமது வனத்துக்கு வந்திருக்கிறபடியால், நாம்போய்க் கண்டு மனந் தளர்ந்திருக்கும் அத்தருமனுக்குத் தேறுதல் சொல்லவேண்டுமென்று எண்ணித்தக்ஷணமெழுந்து, அவர் வந்திறங்கியிருக்கிற திக்குநோக்கி வருவதாயினர். அப்போது காவிகாம்பர தண்டு கமண்டலசடாதாரியாகிய அச்சவுநகர் வரவை நெடுந்தூரத்திலிருக்கிற தருமராஜன்கண்டு, ஓ! ஓ! இந்தவனம் முனிவர்களது ஆச்சிரமமா யிருக்கின்றது அதோ வொரு மகா பெரியவர் வருகிறார். ஆனதால் அவரை நாம் முன்னதாகச்சென்று எதிர்கொள்ளவேண்டுமென்று கருதி, தட்சணந்தானுந் தன் சகோதரர்களும் எழுந்து எதிர்கொண்டுபோய் அவரைக்கண்டு வணங்கி அழைத்து வந்து, அங்கொரு தருப்பாசனமிட்டு இருக்கச்செய்து, பலவாறு புகழ்ந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து நின்றனர். சவுநகர் தருமராஜனுடைய நல்லொழுக்கத்தைக் கண்டு உள்ளம் பூரித்துச் சொல்லுகிறார்.

ஓ தருமநந்தன! உன்னுடைய பெயரையும்-உன்னுடைய நல்லொழுக்கத்தையும் - பலமுனிவர்களாற் கேட்டு, ஸ்ரீமந்நாராயணனது திருநாமத்தை நினைத்தவுடன் எவ்வாறு மகிழ்வுண்டாகுமோ ? அதுபோல் உனது பெயரை நினைத்து நினைத்து மகிழ்வடைந்திருந்தேன். தற்காலத்திற் சூரியனைக்கண்ட தாமரையைப்போலவும் - மேகத்தைக்கண்டு மகிழு மயிலைப் போலவும்-இன்று உன்னைக்கண்டு மகிழ்ந்தேனென்று பல ஆசிகள் கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார். ஓ தருமநந்தன! நல்லொழுக்கத்தை யுடையவ னெவனோ? அவனுக்கு நாட்டைவிடக் காடு மகாசிறந்தது. ஏனென்றுல்-நல்லொழுக்கத்துக்கு இருப்பிடமானதுவனம். ஆதலாற் பெரியோர்கள் வனவாசஞ்செய்து, க்ஷேத்திர விசேஷத்தாலும்-தீர்த்த விசேஷத்தாலும்-மூர்த்திகள் விசேஷத்தாலும்-ஒழுக்கஞ்சிறந்து, மறுமைப் பயனை அதிகமாக அடைவர், ஆதலால் நீ வனத்துக்கு வந்தது எனக்கு மாத்திரமல்ல, உனக்கும் நலமாகத்தா னிருக்கின்றது. அப்படிப்பட்ட கருத்து உனக்கிருந்தும், அக்கருத்தை ஏதோ வொருதுன்பம் நேரிட்டு வாதிக்கின்றது. அது உன் முகக்குறியிற் றெரிகின்றதென்று திவ்யக்கியானியாகிய சவுநகர் கூற, தருமராஜன் மறுபடியும் வணங்கிச் சொல்லுகிறார். ஓ ஸ்வாமி! உலகிலுள்ள உயிர்களனைத்துக்கும் ஆதாரமான ஸ்ரீமந்நாராயணன் தலைமையாக இருந்தபோதிலும், ஒருவர்மூலமாகப்பலபெயர்களுக்கும்-பலபெபர்

மூலமாக ஒருவருக்கும் - ஜீவனம் நடந்து வருகிறது. என்னொருவனால் என்சகோதரரும் நெருப்பிற்பிறந்த பாஞ்சாலியுஞ் சுகமிழந்தனர். ஆகினும் அது எனக்குப் பெரிதான வருத்தத்தைக் கொடுக்கவில்லை. இப்போது என்னை யடுத்திருக்கின்ற பன்னீராயிரம் வேதியர்கள் பசிப்பிணிக்குள்ளாகி வருந்துகிறார்கள். அவர்கள் கொண்டிருக்கிற வருத்தம் என்னை வருத்துகின்றது அதற்கு யாதொரு வகையுமறியாமல் மயங்கி வருந்துகிற தமியேனுக்கு வாடும் பயிருக்கு மழை வந்ததுபோற் றாங்கள் வந்தீர்கள். ஆதலால் என் மனவருத்தம் நீங்கத் தேவரீர் அடியேனுக்கு ஒருவழி காட்ட வேண்டுமென்று வினவச், சவுநக முனிவர் சொல்லுகிறார்.

ஓ தருமநந்தனா! கெட்டவர்களுக்கு அணுவளவு துன்பம் வந்தபோதிலும் உதவி செய்பவர்க ளில்லாவிட்டால், அத்துன்பம் மலைபோலாகும். நல்லவர்களுக்கு வருந் துன்பம் மலைபோலிருந்தாலும், அது தெய்வ கடாக்ஷத்தினாற் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். ஆதலால உனக்குநேரிட்ட துன்பம் நீடித்திராமல் விரைவிற்கெட நானொரு மந்திரத்தை உபதேசிக்கிறேன். அந்த மந்திரத்தை யுச்சரித்து ஆதித்தனை நோக்கி மூன்றேமுக்கால்நாழிகை தவத்திலிருந்தால், உன்மனங் களிப்புறச் சூரியபகவான் வருவார். அவரிடத்துனது குறையைச் சொல். அவரக்குறையை அகற்றுவார் என்று கூறித் தருமராஜனை ஸ்நானஞ் செய்து வரச்சொல்லி, ஒருமந்திரத்தை உபதேசித்து தருமராஜனிடத்து விடைபெற்றுத் தமதிருப்பிடத்திற்குச் சென்றார். பின்பு தருமராஜன் அம்முனிவர் கூறிய மந்திரத்தை யுச்சரித்து, ஒரு முகூர்த்தம் ஆதித்தனை நோக்கித் தவத்திலிருந்தார். ஆதித்தன் தருமராஜன் செய்யுந் தவத்திற்கு மகிழ்ந்து, ஒரு வேதிய னுருவந்தரித்துத் தருமன் கண்ணுக்குத் தோன்றினன். தருமராஜன் அவ்வேதியனுக்குச் சோடசோபசாரஞ்செய்து வணங்கித் துதித்தார். வேதியனாகிய சூரியபகவான் தருமராஜனைவாழ்த்தி, ஓ தருமநந்தனா! உனக்குவேண்டியது யாதென்று வினவ, தருமராஜன்-ஓ ஸ்வாமி! அடியேனை யடுத்திருக்கிற பன்னீராயிரம் வேதியர்களும் பசிவேதனை யடையாதிருக்கக் கிருபைபுரியவேண்டுமென்றுகூற, அந்தச் சூரியன் மகிழ்ந்து, அவரவர்க ளெண்ணப்படி அதிக மாதுரிய பதார்த்தத்தோடு உண்டியை யுதவுகின்ற ஒரு அக்ஷயபாத்திரத்தைத் தருமன் கையிற் கொடுத்துச் சொல்லுகிறான். ஓ தருமநந்தனா! இந்தப்பாத்திரம் நினைத்தபடி உணவு கொடுக்கும். நீங்கள் வனத்திலிருக்கிற பரியந்தம் வைத்திருந்து, நகரத்திற்குச் செல்லும் போது என்னிடத்திற் கொடுத்து விடுங்களென்று கூறிப்போயினன்.

தருமராஜன் அந்தப்பாத்திரத்தைப்பெற்றுமன மகிழ்ச்சியோடு வேதியர் கூட்டத்துக்கு வந்து வணங்கிப், பாத்திரத்தை அவர்கள் கையிற் கொடுத்துச் சொல்லுகிறார். ஓ ஸ்வாமிகளே! உங்கள் கருத்தின்படி இந்தப்பாத்திரஞ் சகல உண்டிகளையுமுதவும். இதனை நீங்கள் வைத்துக்கொண்டு யாதொரு குறைவுமின்றிச் ஜீவனஞ்செய்து வாருங்களென்று சொல்லினார். அவ்வேதியர் அந்தப் பாத்திரத்தால் தங்கள் தங்கள் கருத்தின்படிக்குச் சந்தோஷமாய்ச் ஜீவனஞ்செய்து வந்தார்கள். பின்பு தருமராஜன் முதலான ஐவரும் பாஞ்சாலியுங் காட்டிலுள்ள கந்தமூல பலாதிகளை யுண்டு பசிதணிந்து, அன்றையதினம் அங்கிருந்து மறுநாள் உதயத்திற்கு எழுந்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, வேதவேதியர்களோடு பிரயாணப்பட்டுச் சவுநகமுனி வனத்தைவிட்டுக், காடுமலைமுதலிய வனாந்திரத்திற் சஞ்சரித்து, மத்தியானப்பொழுதில் ஒரு வனத்தில் இளைப்பாறி, மறுபடியும் பிரயாணப்பட்டுக் காட்டுவழியாக வருகிறபோது சூரியன் பாண்டுமக்களின் வருத்தத்தைக்காண மனங்கூசிப் போனவன் போலத் தன் கிரணங்களையெல்லா மொடுக்கிக் கொண்டுபோய் மேற்றிசைக் கடலி லாழ்ந்தான்.

பகாசுரன் தம்பியாகிய கிம்மீரணன் வதை.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! சூரியன் அஸ்தமான மானவுடன் பன்னீராயிரம் வேதியர்களோடு ஐவரும் ஒருகாட்டிற் புகுந்தனர். அக்காடு பகாசுரன் தம்பியாகிய கிம்மீரணனுக்கு வாசஸ்தலமாக இருப்பது. அவனோ மகாபராக்கிரமசாலி. பகாசுரனுக்கிளையவனென்று வயதாற் பேர்பெற்றாலும், வல்லமையிற் மகாசுரனுக்கு இளையவனல்ல. அவனைத் தேவர்கள் கண்டால் யமதெரிசனை செய்தவர்களைப் போலாவார்கள். என்றால்-அவனாற்றலை நீரே அளவிட்டுக்கொள்ளும். மேலுந் தன் தமையனிறந்தசேதி தனக்குத் தெரிந்தகாலத்திற்றானே என் தமயனைக் கொன்றவனை நானே கொல்லுகிறேனென்று வஞ்சங்கொண்டு, தீரவிசாரிக்கு மிடத்திற் பாண்டு புத்திரரில் ஜேஷ்டனுக் கிளையோனாகிய வீமனென்று தெரிந்து காலம் பார்த்துக்கொண் டிருக்கிறவனாதலால், தன் வனத்தில் மனித ரரவமுண்டானதைக் கண்டு ஓடோடியும் வந்து பார்க்கும்போது, ஐந்து வண்ணமாகிய ஐவரைக்கண்டு, ஓ! ஓ! இந்த ஐவரும் பாண்டுபுத்திரர்களாக இருக்கின்றனர். இவர்களில் கறுத்துயர்ந்திருக்கின்றவன்தான் நமது தமயனுக்கு யமனாக விருந்தவன். இவனைக்கொல்ல நெடுநாள்வஞ்சம் வைத்திருந்தோம். இன்று அந்தவஞ்சம் நிறைவேறுங்காலம் நேரிட்டது. என்று கருதி வெளிப்பட்டவன் பாஞ்சாலியைக் கண்ணுற்று, ஆ! ஆ! இந்த மாது மகாரூபவதியா யிருக்கின்றாள். நாம் எண்ணியபடி வீமனோ டெதிர்ப்போமாகில் ஜயாபஜயம் ஒருவர் பங்கல்ல. நமது தமயனைக் கொன்றவன் ஒருவேளைநம்மையுங்கொன்றுவிடுவான். சாகாமுன்னம் இந்த மாதின் நலத்தை அனுபவிக்க வேண்டுமென்றுகருதி, இருளாயிருப்பதோடு பின்னும் அதிக இருளுண்டாக ஒருமாயைசெய்து, அந்த

இருளில் ஒருபாச்சல்பாய்ந்து, பஞ்சவர்க்கும் வேதியர்க்கும் மத்தியிற் கனவருத்தத்தோடு நடந்துவருகிற பாஞ்சாலியைத் தூக்கிக்கொண்டு, மின்னலோடு மேகங் கெற்சித்து வானத்திற் செல்வதுபோலக் கிம்மீரணன் அந்தரதத்திற் றாவினான்.

பாஞ்சாலிகிம்மீரணன் கையி லகப்பட்டுக்கொண்டு பெருமூச்செறிந்து, பஞ்சவரைக்கூவி ஓ வென்றாற்றினாள். அந்தச்சத்தஞ் செவ்வையாய்க் கேட்குமுன்னமே வீமன் அதிகசினங்கொண்டு, கதாயுதத்தைப் பூமியிலூன்றி ஒரு பாய்ச்சல்பாய்ந்து, அந்தரத்திற் செல்லுங் கிம்மீரணன் மார்பிலுதைத்துக்காலைப்பற்றிப் பூமியிலிழுத்தான். ஆற்றலையுடைய வீமனுதைத்த உதையினாற் கிம்மீரணன்சாம்பவமூர்த்தியின் காலுதைபட்ட யமனைப்போல மனவருத்தமுற்று, எடுத்துப்போன பாஞ்சாலியை எறிந்துவிட்டுப் பூமியிற்குதித்தான். பாஞ்சாலி பூமியில்விழுமுன் அர்ச்சுனன் தாவிப்பிடித்துத், தேகவருத்த மில்லாமற் பூமியிலிறக்கினான். கிம்மீரணன் பூமியில்வந்து நின்று, அண்டகடாகமனைத்தும் வெடித்திடும்படியாகக் கடுகடுத்த ஓர்கர்ச்சனைகொண்டு, இடியேற்றைப்போலச் சென்றுவீமனை யொருகுத்துக் குத்தினான். வீமன் அக்குத்தைத்தட்டித், தன் னிரண்டு கைகளாலும் அவன் முகத்திலறைந்தான். அந்த அறைபட்டமாத்திரத்திற் பொறிகலங்கினவனாக இருந்தபோதிலும், அதிகபராக்கிரம சாலியாகையால் ஒரு மலையைப்பிடுங்கி வீமன்மே லெறிந்தான். வீமன் தன்கதையினால் அம்மலையைப் பொடிப்பொடியாக்கி, அவன்தோளிரண்டும் முறிபடஒரு உதை உதைத்தான். கிம்மீரணன் அந்த உதைக்கஞ்சாமல்வந்து மேல்விழுந்து இறுகப்பிடித்தான். வீமன் அவனைநன்றாக இறுகப்பிடித்துவாரித்தூக்கிப் பூமியிலறைந்தான். அதனால் அக்கிம்மீரணன் உடல்பிளந்துசின்னபின்னமாயும், அவன்மனஞ்சற்றுங்கலங்காமல் இடையிலிருந்தஉடைவாளையுருவி வெட்டினான். வீமன் அந்தவெட்டைக் கதையினால் தட்டி, அவ்வாளை அனந்ததுண்டங்களாக வொடித்துப் பொடிப்பொடியாக்கினான், உடனே கிம்மீரணனும் ஓர்கதையைக்கையிலேந்தி அட்டகாசஞ்செய்து கொக்கரித்து, ஓடோடியும்வந்து ஓர் மோதுமோதி அடித்தான். வீமன் அந்த அடியைத்தன் கதையினால்தட்டி, அவன் கதையையும் ஆயிரஞ்சுக்கலாய்ப் போகும்படி பொடியாக்கினான்.

அக்கால் கிம்மீரணன் தனதுவாளாயுதமுங்கதாயுதமும்போய் நிராயுதனாகியும் அஞ்சாமல், மல்யுத்தஞ்செய்ய யத்தனித்துத் தோள்தட்டி யார்த்தான். வீமன் தன்கதையை அரையிலிருக்குங்கச்சையிற்பூட்டிவிட்டுத், தானும் மல்லயுத்தத்துக்கு ஆரம்பித்தான் உடனே இருவரும் எதிர்த்து ஒருவர்க்கொருவர்வெற்றியடைய வேண்டுமென்று வீராவேசங் கொண்டு, இரண்டுசிங்கங்கள் எதிர்த்தனபோ லெதிர்த்து. ஒரு முகூர்த்தகால பரியந்தம் போர்செய்தார்கள். அப்போது வீமன் கடுஞ்சினமடைந்து, இந்த அசுரனோடிவ்வளவுநேரம் போராடுகிறதா வென்று அவனைப் பிடித்தெடுத்து அந்தரத்தி லெறிந்தான், அப்படியெறிந்த வேகத்தாற் கிம்மீரணன்சப்தமண்டலங்கட்குமப்பாற் சென்றுமீண்டுபூமியில்விழுந்து, அவயவங்களெல்லாஞ் சிதைந்தவனா யிருந்தும் இராப்பொழுதாகையால் வலிமைகுறையாமல் மறுபடியும்வந்தெதிர்த்தான். உடனே வீமன் மகாவுக்ராகாரத்தோடு அக்கிம்மீரணனைச் சேர்த்துப்பிடித்துப், பகாசுரனுடைய தலையைத்திரிகி யெறிந்ததுபோல் அவன்தலையைத்திரிகி யெறிந்து, அவனுடலை இருபிளவாகக்கிழித்துத் தலைமாற வெறிந்துவிட்டுத், தமயனாகிய தருமராஜனைவந்து வணங்கினான். தருமராஜன் முதலான நால்வரும் - பாஞ்சாலியும் - வேதவேதியர்களும்-தவமியமுனியும் - சொல்லத் தரமில்லாத மகிழ்வடைந்து வீமனைப்பலவாறு புகழ்ந்தார்கள்.

அப்பால் அன்றிரவி லோரிடத்திலுந் தங்காமல் நடந்து பரிதிவனத்துக்கு வந்தார்கள். ஐவர் அப்பரிதிவனத்துக்குவரவே சூரியன் யெதிர்வந் தழைப்பதுபோல உதயமாயினான் அந்தப் பரிதிவனத்தின் விநோதங்களைப் பார்வை இட்டுக்கொண்டு அவ்வனத்தைக்கடந்து; தைதவனத்துக்கு வந்து, அங்குநீர்வளமிகுந்திருக்கின்றமையால் தங்கிக் காலைக்கடனைமுடித்துக்கொண்டு சற்றிளைப்பாறி, மறுபடியும் பிரயாணப்பட்டுங் காடுமலைகளிற்போய்ச் சஞ்சரித்து, மேகங்கள் கெர்ச்சித்துக்கொண் டிருக்கும் நெருங்கிய சோலைகளையுடைய காமியவனத்துக்கு வந்து, அங்கும் நீர்வள மிகுந்திருக்கின்றமையால் அந்தவனத்தின் செழிப்பைக்கண்டு மனமகிழ்ந்து, அந்தவனத்தில் ஐவரும்-பாஞ்சாலியும் - தங்கி ஸ்நானஞ்செய்து, பூசைமுதலிய நித்தியானுஷ்டான விதிகளை முடித்துக் கந்தமூலபலாதிகளை யருந்திச் சுகித்திருந்தனர். பன்னீராயிரம் வேதியரும் - தவமிய முனிவரும் - ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து, அக்ஷயபாத்திரத்தி லுண்டான அறுசுவையோடு கூடிய உண்டியைப் புசித்துத், தருமராஜனிடத்து வந்து சத்கால க்ஷேபஞ் செய்துகொண்டிருந்தனர்.

பாண்டவர்களை பந்துக்கள்வந்து காணுதல்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே ! அக்காமியவனமானது நைமிசாரணயத்திற்கும் - கந்தமாதனத்திற்கும் - ஒப்பாயிருக்கின்றது மன்றிச், சுவர்க்கமத்திய பாதலமென்னும் முப்புவனத்தி லிருப்பவர்களும் இச்சிக்குந் தன்மையைப் பொருந்திச், சந்தனம் - பாரிசாதம் - கோங்கு - பலா - பாதிரி - மந்தாரை சண்பகம் - அசோகு - மல்லிகை - முல்லை - இருவாட்சி

புன்னை - கமுகு - தேமா - வாழை - முதலியவற்
றைப்பெற்று, வெங்கதிரைத் தண்கதிராகச் செய்யுங்
குளிர்ச்சியை யுடையது, அப்படிக்கொத்த வனத்தில்
ஐவருஞ்சென்ற மாத்திரத்தில், மேற்சொன்ன விரு
க்ஷாதி புஷ்பச்செடிகள் அதிகமாகப் புஷ்பித்தும்-
காய்த்தும் - பழுத்தும் - மிகுந்தனவன்றி, அவ்வன
த்திலுள்ள - சிங்கம் - யானை - புலி - மான் - பாம்பு-
கீரி-முதலிய மிருகஜெந்துக்களும் ஒன்றோடொன்று
விரோதமின்றிச் சிநேகித்து விளையாடிக்கொண்டிருந்
தன. ஐவரும் அவ்வனத்தின்விநோதங்களையும் மிருக
ஒற்றுமையையுங் கண்டு மகிழ்ந்திருந்தார்கள். அப்
போது ஐவர் வனவாசஞ் செய்யச்சென்ற சேதி உல
கெங்கும் பரவினதோடு, தூதுவர்களுந் தங்கள் தங்
கள் அரசர்களுக்கு அறிவித்தார்கள். உலகிலுள்ள
அரசர்கள் அதுகேள்விப்பட்டு மனவருத்தமுற்றுத்,
தங்கள்தங்கள் பரிசனத்தோடு காமியவனத்துக்கு வந்
தார்கள். பாஞ்சாலன் பஞ்சவர் காடுறைந்ததைத்தூது
வராலுணர்ந்ததுவுமன்றித், தன்குமாரத்தியைத் துர்
ச்சாதனன் சபைக்கிழுத்து வந்ததையுங் கேள்விப்ப
ட்டு, நெருப்பில் நெய்யைவிட்டாற்போல் கோபத்தீ
சுவாலிக்க எழுந்து போர்க்கோலங்கொண்டு ரதாரூட
னாயினன். திருஷ்டத்தூய்மன்-மந்திரிமார்-பட்டவர்த்
தனர்-மகுடவர்த்தனர் - அணித்தலைவர் - வியூகத்தலை
வர் - படைத்தலைவர் - இவர்கள்யாவரும் ரதகஜதுரக
பதாதிகளோடுவந்து அரசனைக் கலந்தார்கள் பாஞ்
சாலன் மஹா உக்கிரத்தோடு பிரயாணப்பட்டு, மரு
மக்கள்மார் எந்தவனத்தி லிருக்கிறார்கள் பார்த்துவா
ருங்களென்று தூதுவர்களை நாற்றிசையினு மனுப்பி
னான், உடனே தூதுவர்கள் சென்று ஐவரிருக்கின்ற
வனத்தைக்கண்டு அரசனுக்குத் தெரிவித்தார்கள்.
அரசன் சகலபரிசனங்களோடும் ஐவரிருக்கிற காமிய
வனத்தை நோக்கிவந்தான்.

இப்பால் சித்திரவாகன பூபாலபாண்டியன் ஐவர்
வனவாசஞ் செய்யச்சென்றதை ஆதியோடந்தமாகத்
தூதுவரா லறிந்து, அவனுந் தனது ரதகஜதுரகபதா
தியோடு ஐவரிருக்கும் வனத்தை நாடி வந்தான். விரா
டன் - சல்லியன் - மகாதபதி - முதலான அரசரும்,
பஞ்சவர்களின் சொந்த ஜனமாகிய சுபத்திரை-குந்தி
தேவி - அபிமன்னன் - இளம்பஞ்ச பாண்டவர்-
இவர்கள் முதலான உள்ளிட்டாரும் ஆற்றமாட்டாத
வர்களாய், அனலிலிட்ட மெழுகுபோல மனமது உரு
கிக் காமியவனத்தைநாடி வந்தார்கள். சில தூதுவர்
கள் மதுராபுரிக்குச்சென்று, ஐவர்வனவாசஞ் சென்ற
தையும், அப்படி செல்வதற்குண்டான காரணத்தை
யும், தெரிந்துந் தெரியாதவர்போ லிருக்கின்ற ஸ்ரீகி
ருஷ்ணமூர்த்திக்கும் அறிவித்தார்கள். அதுகேட்ட
ஸ்ரீகிருஷ்ணன் அப்போதுதான் தேள்கொட்டினவர்
போலத்துடிதுடித்தெழுந்து; ஓ! ஓ! கள்ளங்கபடறி
யாத தருமராஜனைத் துரியோதனாதிகள் ஏமாத்தின
ர்களே இனி யென்னசெய்கிறது? நாம்சென்று ஐவரு
க்குத் தேறுதலை சொல்லாவிட்டால் நலமல்லவென்று
வாயாற் சொல்லிக்கொண்டு, தன்பரிசனத்தை யெல்
லாம் வரும்படி கட்டளையிட்டு, அப்பரிசனத்தோடு
தானும் ஒரு அரசனைப்போலக் காமியவனத்தைத்
தேடிவருகிறார். அங்கவங்க கலிங்க காஸ்மீர காந்தார
தேசத்திலுள்ள அரசர்களெல்லாம் பஞ்சவரைக்கா
ணக் காமியவனத்துக்கு வந்தார்கள். இவர்களையெல்
லாந் தருமராஜன் தன்தம்பியரோடும் வந்தெதிர்கொ
ண்டு, வந்த அரசர்களுக்கெல்லாந் தகுந்த உபசாரஞ்
சொல்லிக், குந்திதேவிக்கு வந்தனைசெய்து, சுபத்தி
ரை-அபிமன்னன் - இளம்பஞ்சபாண்டவர் முதலான
வர்களை அன்போடாதரித்திருக்கச்செய்து, ஸ்ரீகிருஷ்
ணமூர்த்தி வரவைக்கண்டு எதிர்கொண்டார். ஸ்ரீகிரு
ஷ்ணமூர்த்தி தருமராஜனுக்கு நமஸ்காரஞ்செய்து,
மற்றை நால்வரையும் பாஞ்சாலியையும் ஆதரித்தார்.
தருமராஜன் அவருக்கு எதிர் நமஸ்காரஞ்செய்து
அழைத்துவந்து இருக்கச்சொல்லித், தானுந் தன்
தம்பியருமாக அருகிலிருந்து, இந்திரப் பிரஸ்தம்
விட்டு அத்தினபுரிக்குச்சென்று வனமடைந்தமட்டும்
நடந்ததை ஆதியோடந்தமாக எடுத்துரைத்தனர்.

அதனைக்கேட்ட பாஞ்சாலன்-பாண்டியன் விரா
டன் - முதலான அரசர்கள் கடுஞ்சின மடைந்துசொ
ல்லுகிறார்கள். ஓ தருமபூபதி ! உலகிலுள்ள அரசர்
கள் தங்கள் பகைஞரை வெற்றியடையக் கருதுவார்க
ளாகில், நால்வகைச் சேனையோடு சென்று நியாயமா
கப்போர்செய்து வெற்றியடைதல்நலம். போர்செய்து
வெற்றியடைதற்கு வல்லமை இல்லாதவர்கள், சில
ருதவியைப்பெற்றுப்பகையை முடித்துக்கொள்ளுவர்.
உதவியாலும் வெற்றியடையாத காலத்து, நஞ்சிடுதல்
படுகுழிபாய்ச்சல் - சூதாடல் - முதலிய கொடியபா
தகச் செய்கையால்வெற்றியடைவர். இவிடத்தில்துரி
யோதனன் உங்களைச் சூதில் வெற்றியடைந்தான்.
அது ஒருபட்சத்துக் கொத்துக்கொண்டோம். ஆயி
னும்மாதுசிரோமணியாகிய திரௌபதியைச் சபையி
லிழுத்துவர நியாயமுண்டா? நீங்கள் எவ்வாறு பார்த்
திருந்தீர்கள் ? அந்தமாதுசிரோமணியைப் பிடித்து
இழுத்துவந்த துச்சாதனனையும். படுபாவியாகிய துரி
யோதனனையும், துரியோதனன் சொல்லுக்குமாறுப
டாமல் உதவியாகப் பேசிவருகிற துன்மார்க்கனாகிய
கர்னனையும், சூதாட்டத்தில் உங்களைவெற்றியடைந்த
துராத்துமாவாகிய சகுனியையும் இந்நிமிடத்தில் யம
தண்டனைக்குள்ளாக்கும்படி; இதோ எங்கள்கையிலி
ருக்குங் கார்முகத்திலிருந்துண்டாகும் பாணத்திற்குக்
கட்டளையிடுகிறோம். தாங்கள் இந்தவேளை தடைகூறா
மலிருக்கவேண்டுமென்றுசொல்ல, சிலர் ஆர்ப்பரித்தெ
ழுந்தனர். சிலர்தங்கள்தங்கள்கையிலுள்ளவில்லை அங்
குதானேவளைத்து டங்காரவோசையெழுப்பி, ஒருகணை
யை வில்லிற்பூட்டி, இந்தக் கணையினாலேயே கவுர

வர்களை யமலோகத்துக் கனுப்பிவிடுகிறோமென்று கூறினர். இவ்வாறு அரசர்களெல்லாருந் தங்கள் தங்கள் சேனைகளைப் யெச்சரித்துப் போர்க்கெழுந்தார்கள். வீமன் - அர்ச்சுனன்-நகுலசகாதேவர்-இவர்கள் நால்வரும் போர்க்கெழுங்கருத்திற் கிஞ்சித்து விருப்பமுற்றார்கள். அரசர்கள் போர்க் கெழுந்ததையும்-வீமன்முதலான நால்வரின் கருத்தையும்-ஸ்ரீகிருஷ்ணமூர்த்திகண்டு, தாமுங் கோபங் கொண்டவர்போலபினயித்து அரசர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓ அரசர்களே ! உங்கள் கருத்து எவ்வாறிருக்கின்றதோ ? அவ்வாறே என்கருத்து மிருக்கின்றது. ஆனால் போர்க்கெழுவதற்கு ஒருசங்கடமிருக்கின்றது அஃதென்னெனில்-தருமராஜன் ஒன்றுந் தெரியாதவரல்ல. வீமன்-அர்ச்சுனன்-நகுலன்-சகாதேவன்-நால்வரும் அற்பமானவர்களல்ல. மேலும் அளக்கரிய ஆற்றலைப் பெற்றவர்கள். அவர்கள் தமயன் வாக்குக்கு மாறுபடாமலடங்கிக் கலகஞ்செய்யாமல் வந்துவிட்டார்கள் தருமராஜனோ ? நீதிக்கு விரோதப்படார். வில்லாசிரியராகிய துரோணாச்சாரியின் தீர்ப்பின்படி பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து, ஒருவருஷம் அக்ஞாதவாசஞ்செய்து வந்தபின்பு, வில்லாசிரியர் முதலான பெரியோர்களின் கட்டளைப்படியே துரியோதனன் நாடுநகர முதலியவற்றைக் கொடுத்தால் ; கலகமில்லாமல் முன்போ விருப்போம். துரியோதனன் பெரியோர்களின் கட்டளையைமீறி நாடுநகர முதலியவற்றைக் கொடுக்காமல் மாறுபடுவானாகில், அக்காலத்தில் தற்காலத்திற்கொண்ட கோபத்தைக் காட்டிப் பஞ்சவர்க் குதவிசெய்யுங்களென்று அரசர்களின் சினத்தைத் தணித்துத், தருமனைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓ தருமநந்தனா ! நீங்கள் மனவருத்தமுறாமல் வில்லாசிரியர் கொடுத்த தீர்ப்பின்படி பதின்மூன்று வருஷத்தையும் பதின்மூன்று நாளாகப் பாவித்துக் கழித்து நகரம்வந்து சேருங்கள். துரியோதனன் பெரியோர்களின் கட்டளைப்படி நாடுநகரமுதலியவற்றைக் கொடுக்காமற்போனால், அக்காலத்தில் இந்த அரசர்களினுதவியைப் பெற்று உங்கள் பகையை முடித்துக்கொள்வீர்கள். அதுவரைக்கும் உங்கள் சுயஜனத்தில் இளம்பஞ்சபாண்டவரைப் பாஞ்சாலனிடத்தும், உமதுதாயை விதுரராஜனிடத்தும் அபிமன்னனையும் - சுபத்திரையையும் - பலராமரிடத்தும், சித்திராங்கதையைப் பாண்டியனிடத்தும் அனுப்பிவித்து, நீங்கள் வனவாசஞ் செய்யுங்களென்று கூற ; தருமன் அக்கருத்துக்கிசைந்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் கட்டளைப்படி தங்கள் தங்கள் புத்திரர் முதலானவர்களை அவ்வண்ணமே சென்றிருக்கும்படி ஆதரித்துரைத்து, அன்னையை ஐவரும் வணங்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ எங்கள் மாதாவே ! நாங்கள் தேவரீர் வயற்றிலுதித்தநாள்முதலிதுவரைக்குந் தங்களைவிட்டுப் பிரிந்தறியோம். அப்படியிருந்த எங்களுக்கு உங்களைப்பிரியும்படி காலகதிநேரிட்டது. நீங்கள் அதைக் குறித்து வருத்தமுறாமல், பதின்மூன்று வருஷத்தையும் பதின்மூன்று நாளாகப்பாவித்து, எங்கள் சிறிய பிதாவாகிய விதுரராஜன் அரண்மனையி லிருங்களென்று கண்ணீர்தளும்ப நின்றுரைக்க, அம்மக்களின் வார்த்தையைக் குந்திதேவி கேட்ட மாத்திரத்தில் மனம் வெதும்பி, ஓ மைந்தர்களே ! உங்களைவிட்டு இமைப்பொழுதும் பிரியாமலிருந்த என்மனம் என்னமாயிருக்கும் ? ஐஐயோ !! உங்களையும், அனிச்சம்பூவைமிதிக்கக் குழையும் பாதத்தையுடைய திரௌபதியாகிய இக்குலவிளக்கையும், எவ்வாறுவிட்டு என்னுயிர் தரித்திருப்பேன்? காலகதியைநோக்கித் துணிவுகொண்டாலும், உங்கள்மீதுவைத்த அன்புடைமை என்னை யுருக்கிவிடுகிறதே. என்று மக்களையும் மருமகளையுங் கண்ணீரால் ஸ்நானஞ் செய்வித்து விசாரப்பட்டாள். அப்போது பாஞ்சாலி கண்ணீர் தளும்ப நின்று சொல்லுகிறாள். ஓமாமீ! எல்லாந் தெரிந்தவர்களே கண்ணீர்விட்டால், ஒன்றுமறியாத பேதையாகவும் இளந்தையாகவு மிருக்கும் என்மனமென்ன கல்லா ? என்னம்மணீ ! தங்கள் புத்திரர்கள் வாக்கின்படி அத்தினபுரத்துக்குச் சென்று, என் அம்மான் மகனாகிய விதுரராஜன் அரண்மனையிற் சிறிதுநாள் மனம் பொறுத்திருங்களென்று கூறினள். அவையனைத்துங்கேட்ட குந்திதேவி காலகதியைநோக்கி, இனி நாம் வருத்தப்படுவதிற் பயனில்லையென்று கருதிப், புத்திரர் கருத்திற்கிசைந்து விதுரனரண்மனைக்குச் சென்றாள்.

அப்பால் சித்திராங்கதை-சுபத்திரை-முதலான தேவிகளும், இளம்பஞ்ச பாண்டவர் முதலிய புத்திரர்களும் வந்து வணங்கித், தேகமெல்லா நனையும்படியாகக் கண்ணீரொழுக்கி நின்றனர். ஐவரும் பாஞ்சாலியும் அதிக ஆராமையோடு மக்கள் முதலானவரைத்தழுவி, இனியவசனங்கள்கூறி, யார்யாரை எங்கெந்த விடங்களிலிருக்க எம்பெருமான் நியமித்தனரோ ? அவரவர் அந்தந்த இடத்தி லிருங்களென்று கட்டளையிட்டு அனுப்பிவித்தனர். வந்த அரசர்கள் தருமராஜன் முதலானவரை வணங்கி விடைபெற்றுத், தங்கள் நகரம்போய்ச் சேர்ந்தார்கள். பாஞ்சாலன் இளம்பஞ்சபாண்டவர்களோடு தன்னகரம்வந்து சேர்ந்தான். பாண்டியன் சித்திராங்கதையை அழைத்துக்கொண்டு தன்னகரத்திற்குச் சென்றான். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சுபத்திரையை அழைத்துக்கொண்டு தன்னகரத்திற்குச் சென்றார். பஞ்சவர் சேனைகள் இளம்பஞ்சவரிடத்தும், அபிமன்னனிடத்தும், பிரிவற்றிருந்தார்கள். தருமன் முதலான ஐவரும் பாஞ்சாலியுங் காட்டையே நகரமாக எண்ணிக் காமியவனத்தி லிருந்தனர். கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இனி இரண்டு கண்ணில்லாதவன் தன்சகோதரனாகிய விதுரராஜனோடுயோசித்ததையும், அதற்கு

விதுரன் கூறியவற்றையும், அப்போது துரியோதனன் செய்கையையும் எடுத்துக் கூறுகிறேன் கேளும்.

பாண்டவர்களிடத்தில் விதுரன் வரவு.

ஓ மஹாராஜனே ! பஞ்சவர் மனத்திற் சென்ற மாத்திரத்தில் துரியோதனன் மேல்வருங் கெடுதியை நினைக்காமல் அதிக மகிழ்வையுற்றுச், சபாமண்டபத்துக்கு வந்து சிங்காசனத்திலிருந்து, வீஷ்மர்-துரோணர் - கிருபர்-விதுரர்-முதலான பெரியோர்களையும், மற்றுமுண்டான மந்திரிமார் முதலானவர்களையும் அழைப்பித்துச் சொல்லுகின்றான். ஓ பெரியோர்களே ! என்கருத்தின்படி பஞ்சவர் பஞ்சையாகிக் காட்டிற் சென்றனர். இனி யவர்களின் நாட்டை நாம் ஆளவேண்டும். இந்திரப்பிரஸ்தம் அரசுக்கு யோக்கியமாகவிருப்பதன்றி, மயன் புதுக்கியசபை மகாவினோதமாக விருக்கின்றமையால், என்னரசை அங்கிருந்து செலுத்தக் கருதியிருக்கின்றேன் ஆதலால் தங்கள் கருத்தென்னவென்று வினவ, விதுரன் சற்றாலோசித்து, அடடா!! இவன் ராக்ஷத அம்சம். ஐவர் தேவரம்சம். இவனுக்கு இந்திரப்பிரஸ்தம் தகாது இவனோ இந்திரப்பிரஸ்தம் செல்லக்கருதியிருக்கின்றான். இக்கருத்தை ஒருவிதமாக மறுக்கவேண்டுமென்று கருதிச்சொல்லுகிறான். ஓ துரியோதனா! இந்த அத்தினபுரமுண்டானநாள்முதல், இதுவரைக்கும் அநேகம் அரசர்கள் இந்நகரத்திலேயே யிருந்து அரசாக்ஷி செய்துவந்தார்கள். நீ இந்த சமஸ்தானத்தை விட்டு மற்றொருவிடத்திலிருந்து அரசுசெய்வது தகுதியல்ல. மஹாமண்டலேஸ்வரருக்கு எக்காலும் இருப்பிடமாகிய இந்தச் சமஸ்தானத்திற்குத் தற்காலத்தில் நீயே மஹாமண்டலேஸ்வரனாகியபடியால், நீ இந்தச் சமஸ்தானத்தில் தானேயிருந்து அரசுசெய்து, வில்லாசிரியராகிய துரோணாச்சாரியரை இந்திரப்பிரஸ்தத்துக்கு அனுப்பிவித்து, அவ்விடத்தில் நடக்கவேண்டியவற்றை அவரால் நடப்பித்துக் கொள்ளென்று மஹாபரிவுடன் சொல்பவனைப்போற் கூறினான்.

துரியோதனன் அக்கருத்துக்கிசைந்து, வில்லாசிரியரைநோக்கி நமஸ்கரித்துச் சொல்லுகிறான். ஓ ஸ்வாமி! தாங்கள் இந்திரப்பிரஸ்தஞ்சேர்ந்து அங்கு நடக்கவேண்டியவற்றைக் கிரமப்படி நடத்திவாருங்களென்று கூறினன். வில்லாசிரியர் அக்கருத்துக்கிசைந்து, தன்பரிசனத்தோடு இந்திரப்பிரஸ்தஞ் சென்று, அங்கிருந்துகொண்டே தனக்குந் துரியோதனனுக்கும் ஆகவேண்டிய ராஜகாரியங்களை நடத்தி, ஒவ்வொருவேளை துரியோதனனையும் திரிதராஷ்டிர மஹாராஜனையும் வந்து கண்டுகொண்டு இந்திரப்பிரஸ்தத்தி லிருந்தார். தருமராஜனைக் காணப்பெறாத நாடுநகரங்களெல்லாஞ் சூரியனைக்காணாதநாள் போலாயின நீர்வளம் நிலவளமுதலியவைகளு மழிந்தன.

துரியோதனன் மனக்கவலையற்தவனாக எங்குந் தன்னரசுசெலுத்திப், பஞ்சவர்களின் சொத்துக்களெல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டு மகிழ்வாகிய கடலிலாழ்ந்து சுகித்திருந்தான். திரிதராட்டிரன் பஞ்சவர்கள் பஞ்சையாகி வனத்திற் சென்றதையும், அவர்கள் கூறியசபதத்தையும் மனதில் நினைத்து, தன் புத்திரர்களின் கடினசித்தத்தையும்-சொற்பபலத்தையும்-ஐவர்களின் தருமசிந்தையையும்-அளக்கரிய ஆற்றலையும்-சீர்தூக்கி, நமது புத்திரர்கள் கெடுவதற்கு ஐயமில்லையென்று தீர்மானித்து, இதற்கென்ன செய்யலாமென்று தனக்குள் ஆலோசித்து ஒன்றுந்தோன்றாமல், நமதுசகோதரனாகிய விதுரனால் நமது கவலையை மாற்றவேண்டுமென்றுகருதி, அருகிலிருந்த தூதுவர்களை நோக்கி விதுரராஜனை அழைத்து வாருங்களென்று கட்டளையிட்டான். தூதுவர்கள் விதுரராஜன் அரண்மனைக்கு வந்து விதுரனைக்கண்டு வணங்கி, அரசன் வரும்படி கட்டளையிட்டதை எடுத்துரைத்தார்கள்.

விதுரன் தக்ஷணம் தமயனிருக்கு மிடத்துக்கு வந்து சாஷ்டாங்கமாகவணங்கிஎழுந்து, தன்பெயரையெடுத்தோதினன். திரிதராஷ்டிரன் தம்பியைத் தழுவிப் பல ஆசிகள் கூறி, அருகிலிருக்கும்படி சொல்லிச் சொல்லுகிறான் தம்பிவிதுரா ! என் சகோதரனாகிய பாண்டுவின் புத்திரர்கள் நெடியகடல்சூழ்ந்த பெரும்புவி யாசையைக் கைவிட்டுக், கொடிய வெம்பரற் காடடைந்தனர். அவர்கள் வில்லாசிரியராகிய துரோணாசாரியர்கூறிய தீர்ப்பின்படி, பதின்மூன்றுவருஷத்தையுந் தொலைத்துவருவார்களா ? அல்லது நரகத்தில் அதிகசவுக்கியத்தை யடைந்தவர்கள், வனத்திற் சென்று பசிப்பிணிமுதலிய தேகவுபாதியையடைந்து இறந்துவிடுவார்களா ? ஒருவேளை நாட்டிலிருப்பதிற் பயனென்ன ? மறுமைலாபத்துக் கேதுவானது துறவறமாயிற்றே. அத்துறவறத்தை அநுசரித்துக் காட்டில்தானே யிருப்போமென்று கருதி, அக்காட்டில் தானே இருந்துவிடுவார்களா ? இதனைச் சீர்தூக்கிச் சொல்லென்று திரிதராஷ்டிரன்கூற, விதுரன் குறுநகைகொண்டுசொல்லுகிறான். ஓ மகாராஜாவே! அந்த ஐவர் துரோணர் விதித்த கட்டளைப்படி பதின்மூன்றுவருஷத்தையும், பதின்மூன்று நாளாக எண்ணிக் கழித்துவருவார்கள். செல்வத்தி லிருந்தவர்கள் வெம்பரற் காட்டிற்சென்றால், தேகஞ்சுட்கிப் பலஹீனப்பட்டு விபாதிக்குள்ளாகி வருந்தி இறந்து விடுவரென்பதை மறந்துவிடும். ஏனென்றால் - தருமசிந்தையும் தெய்வபக்தியு முடையவர் கிடையூறுவராது. மேலுந் தருமராஜன் வடவைத்தீயைப்போல வெப்பத்தைக் கொடுக்குங் கொடிய வெம்பரற்காட்டிற் பாதத்தை வைப்பானாகில், அக்காடு குபேரனுடைய சிங்கார வனம்போற் குளிர்ச்சிபெற்றுப், பூக்காதெல்லாம் பூத்துக், காய்க்காதெல்லாங் காய்த்துப் பழுக்கும்.

என்றால் - ஐவருக்குத் தேகமெலிவு எந்தவிதத்தால் வரக்கூடும் ? ஒருக்காலத்தும்வராது.

என்று விதுரராஜன் சொல்லியதைக் கேட்ட திரிதராஷ்டிரன் மனவருத்தமுற்றுச் சொல்லுகிறான் தம்பீ விதுரா ! தருமராஜன் தருமசிந்தையை யுடையவனென்பதற்கும், தெய்வபக்தி யுடையவ னென்பதற்கும் ஐயமில்லை. ஐவர் வனவாசஞ்செய்ய இந்நகரத்தைவிட்டுப் போகும்போது, துரியோதனன் முதலானவர்கள்மேல் வஞ்சம் வைத்துச் சென்றார்களா? அல்லது நமது தலையிலுள்ள விதிவசமென்று கருதிச்சென்றார்களா? இதனை நீ யறிந்திருந்தால் ஒளிக்காமல் எனக்குரையென்று வினவினன். அதற்குவிதுரன் சொல்லுகிறான் ஓ மகாராஜாவே ! ஐவருள் தருமராஜன் தவிர, மற்ற வீமன் - அர்ச்சுனன் - நகுலன்- சகாதேவன் - பாஞ்சாலி - இவர்கள் முன்னஞ் சபையிலுள்ளவர்கள் திடுக்கிட்டேங்கச் சபதஞ்செய்தபோதே, மனதில் வஞ்சம்வைத்துவிட்டார்களென்று விளங்குகின்றது. மற்றத்தருமராஜன் வாயினா லொன்றுங் கூறாமல் மேலுங்குச் சாந்தமுள்ளவன்போ லிருந்தாலும், அவன் உமது புத்திரர்மேற் கொண்ட கோபத்துக்கு அளவில்லை. ஆனால் அந்தக் கோபக்குறியை அறியவேண்டிய கருத்திருந்தால், அந்தத் தருமராஜன் முதுகிற் பிடி எள்ளைப் போட்டால், பளபளவென்று உடனே பொரிந்துபோகும். இதற்கு அவ்வெள்ளளவுங்கூடச் சந்தேகமில்லை. ஓ மகாராஜனே! இனிப்பலபலவாக சிந்திப்பதிலும், வருந்தப்படுவதிலும்பயனில்லை. ஐவரையும் அழைப்பித்து முன்போல் அவர்கள்நாடுநகர முதலியவற்றைக்கொடுத்து விடுவீராகில், உமது புத்திரர்க்குக் கெடுதிவராதிருப்பதோடு நம்மையொத்த அரசரெல்லாம் மதித்துப் புகழுவார்கள். இந்த யோசனைக்கு மேலான யோசனை வேறில்லையென்று கூறத், திரிதராஷ்டிரன் சொல்லுகிறான். தம்பிவிதுரா! இந்த யோசனையை ஆதியிலேயேநான் நினைத்துச்சபையில் அவ்வைவரை அழைத்து, அவர்கள் தோற்ற நாடு நகரமுதலியவற்றை மீட்டுங் கொடுத்ததற்குப் பாவியாகிய என்புத்திரன் தங்தைவாக்கியமென்று மதிக்காமல் மறுத்துவிட்டது உன்கருத்தறிந்ததுதானே ஆதலால் அதைக்குறித்துப் பேசுவதிற் பயனில்லை மேல்நடக்கவேண்டியதற்குத்தகுந்த யோசனை கூறென்று வினவ, அதற்கு விதுரன் சொல்லுகிறான்.

ஓ மகாராஜனே! தற்காலத்தில் துரியோதனன் கடினசித்தத்தைப் பெற்றிருந்தாலும், பஞ்சவர்கள் அப்பதின்மூன்று வருடமும்வனவாசஞ்செய் திவிடம் வந்து, முன்கூறிய தீர்ப்பின்படி வனவாசஞ்செய்து வந்தோமாதலால் எங்கள் நாடுநகர முதலியவற்றைக் கொடுத்துவிடென்று கேட்பார்கள். அக்காலத்திலும் இக்கொடும்பாவியாகிய துரியோதனன் நாடுநகர முதலியவற்றைக் கொடுக்கான். நாமெல்லோருங் கூடி சொன்னபோதிலும் நமது வார்த்தையையுங்கேளான். அதன்மேல் ஐவர்மீறிச் சபையிற்கூறிய சபதப்படி வீமன் துரியோதனன் முதலான நூற்றுவரையும், அர்ச்சுனன் கர்னனையும், நகுலன் சவுபலனையும சகாதேவன் சகுனியையுங் கொன்று; திரௌபதியின் கூந்தலை முடிப்பித்து, தங்கள் வெற்றிமுரசை அறைவித்து, இருளைச்சிதற வடித்து உலகத்திற் பிரகாசிக்குஞ் சூரியனைப்போலத் தருமராஜன் நமது புத்திர பௌத்திராதிகளென்னும் பொருளனைத்தையும் அதமாக்கி உலகத்திற் பிரகாசிப்பான். என்றுகூறிய இவ்வாக்கியத்தைக் கேட்டதிரிதராஷ்டிரன் நாவுலர்ந்து, நெஞ்சந்தளர்ந்து, மெய்நடுங்கி, வாய்குழறி, நெடுமூச்செறிந்து, அப்பா விதுரா ! நீ சொல்லும்போதே என்மனம் நிலைதளர்வுற்று அதிக துன்பத்தை அடைகின்றதே: ஐவர்மீறி என்மக்களை யதமாக்குங்காலத்தில் என்னுயிர் உடலில் தரிக்குமோ ? தரித்திருக்காதே ஆகையால் அவ்வகையான கெடுதி நேரிடாதிருக்க ஒரு தந்திரஞ் சொல்லென்றுகூற, விதுரன்சொல்லுகிறான்.

ஓ மகாராஜனே ! இனி ஒரு தந்திரந்தானிருக்கின்றது. அதைவிட வேறொரு தந்திரமில்லை அதென்னவெனில் - உமது புத்திரர்கள் நூறுபேர் பாண்டுபுத்திரர்கள் ஐந்துபேர். ஆக நூற்றைந்து பேர்களில் உமது சிரேஷ்ட புத்திரனாகிய துரியோதனன்தான் குலபாதகன். அவனொருவ னில்லாவிட்டாற் குருகுலம் வாழையடி வாழையாக விளங்கிவரும் அவனிருந்தாற் குருகுலம் நாசமாகும். ஆதலால் உடலில் ஒரு புரைக்குழல் தோன்றினும் அதனைக் கத்தியாலறுத்து விடுகிறோம் உன்புத்திரன் குலநாசஞ்செய்ய இருக்கிறான். அவனைக் கொன்றுவிட்டாற் குலநாசமாகாதிருப்பதுவுமன்றி, நூற்றினுவ புத்திரரைக் கண்ணாற்காணுவிட்டாலும் அவர்களின்வசனங்களைக் காதினால்கேட்டு மகிழ்ந்திருப்பாய். ஆதலால் துரியோதனனைக் கொன்றுவிடுகிறதே நலமென்றுகூற. இந்த வாக்கியத்தைக் கேட்ட திரிதராஷ்டிரன் இரண்டுகரத்தையுஞ் செவியில் வைத்து, ஐஐயோ!! தெய்வமே! தெய்வமே ! என்று ஓவென்றலறிப் பூமியில் விழுந்து சாவுக்குச்சரியான மூர்ச்சை யடைந்து, மீட்டு மவ்விதுரனு லுபசரிக்கப்பட்டு மூர்ச்சைதெளிந்து எழுந்து உட்கார்ந்து, வடவாக்கினிபோலக் கோபத்தீ சொலிக்கவும் - வாயினின்றும் புகையெழவும் - விதுரனை நோக்கிச் சொல்லுகின்றான் அடா விதுரா ! என்ன வாக்கியத்தை வழங்கினை ? ஐஐயோ !! பெற்றபிள்ளையைக்கொன்ற அரசர்களும் உலகத்திலிருக்கிறார்களா ? இதுவரைக்கும் உன்னைப் புத்தியுக்தியிற் சிறந்தவனென்று ஆப்தமான மந்திரியாக வைத்துக்கொண்டதற்கு, நல்லயுக்தி சொன்னாய். உன்னைப்போலச் சிலமந்திரிக ளிந்தச் சமஸ்தானத்தி லிருப்பார்களாகில், இந்தச்சமஸ்தானங்கெடுவதற்குஐயமில்லை. அடா

பாவி! பெற்றபிள்ளையைக் கொல்லவாயின்றச் சொன்னையே உன்முகத்தில் விழிக்கலாமோ? சீ! சீ! இனி நீ என் சமுகத்துக்கு வரவேண்டியதில்லை. தக்ஷணம் நீங்கென்றுகூறி முகத்தைத்திருப்பினன்.

உடனே விதுரன் கடுஞ்சினமடைந்து சொல்லுகிறான்: ஓமகாராஜனே! மேல்விளைவதைக்கண்டு நலம்பெற நடுவுநிலைமையான வாக்கியத்தை எடுத்துரைத்தேன். அதுவுமக்குப் பொல்லாத சொல்லாக இருக்கின்றமையால், மேல் வருங் கெடுதியை நீரே யனுபவத்திற் கண்டுகொள்ளுமென்று கூறித், தமயனைவிட்டு நீங்கி, இனி அரைமாத்திரைப்போதாவது இந்தச் சமஸ்தானத்தி லிருக்கொணுதென்று மனவெறுப்பற்றுத் தனதிருப்பிடத்துக்குவந்து, தனது சுயபரிசனஞ் சூழ்ந்துவர இரதமேறிப்பஞ்சவ ரிருக்குங் காமியவனத்தைத் தேடிக்கண்டு, ஐவரிருக்கும் இடத்திற்சென்றான். விதுரமகாராஜன் வரவைக்கண்ட மாத்திரத்தில் ஐவரும் எழுந்து எதிர்சென் றுவணங்கி அழைத்துவந்து, ஒருஆசனத்திலிருக்கச்சொல்லிச்சோடசோபசாரமுஞ்செய்துநின்றனர். விதுரன்ஐவருக்கும்பாஞ்சாலிக்கும் பல ஆசிகள்கூறி, வேதவேதியர்களை நமஸ்கரித்து, அவர்கள்கூறிய ஆசியையேற்றுப், பஞ்சவரைநோக்கித் தனக்குந் திரிதராஷ்டிர மகாராஜனுக்கும் நடந்த விருத்தாந்தத்தைக்கூறி, இனி நான் நகரத்திலிருந்து உயிர்வாழ்வதைவிடக் காட்டிற்சென்று மறுமை லாபத்தை யடைய நற்றவம்புரிதலே நலமென்றுகருதி வனவாசஞ்செய்ய வெளிப்பட்டேன். உங்களைக்கண்டு போகலாமென்று வந்தேன். என்று கூறியதைக்கேட்ட தருமராஜன் சிறிய பிதாவாகிய விதுரனுக்கு மகிழ்வுண்டாகவும், பெரிய பிதாவின்மேற்கொண்ட கோபந்தணியவும், சில இனிய வசனங்கூறிக்கொண்டு; அவ்விதுரனேடு ஐவரும் அக்காமியவனத்தி லிருந்தார்கள்.

இங்கே திரிதராஷ்டிரன் தனதுதம்பியாகியவிதுரன்கூறிய கடுஞ்சொல்லைக் கேட்டுக் கனவருத்தமுற்று, மேல்விளையும் விபரீதத்தையு மறிந்துகொண்டு, விதுரன்மேற் கொண்ட கோபந்தணிந்து, மீட்டுந்தன் னருகிலிருக்கிற தூதுவரை அழைத்து, என்சகோதரனுகிய விதுரராஜனை அழைத்துவாருங்களென்றான். உடனே அத்தூதுவர்கள் ஓடோடியும்வந்து விதுரனரண்மனை சென்று அங்கிருக்குங் காவலாளிகளை விசாரிக்க, அக்காவலாளிகள் விதுரராஜன் காமியவனத்திற் சென்றிருத்தலைக்கூற, தூதுவர்வந்து திரிதராஷ்டிரனை வணங்கிச் சொல்லுகிறார்கள் ஓ சுவாமி! தங்களிடத்திற்குவந்து அரண்மனைக்குச் சென்றவுடனே விதுரராஜன் தன்பரிசனத்தோடு ஐவரிருக்குங் காமியவனத்துக்குச் சென்றதாகக் காவலாளிகள் கூறினரென்று சொல்லினர். இந்தவார்த்தையைக் கேட்ட திரிதராஷ்டிரன் இடிவிழுந்த மாம்போல்ஏங்கி மனந்தளர்ந்து; ஓ! ஓ! உண்மையான கருத்தை எடுத்துரைத்தவிதுரனை நீதியின்றிப் புத்திரவாஞ்சையால்வெறுத்துக்கொண்டோம். அதுகண்டு விதுரன் நம்முடையபேரில் வெறுப்படைந்து ஐவரிடத்திற்குச் சென்றனன். ஐயையோ!! ஓதெய்வமே! ஐவர்களோசத்தியசொரூபிகள். அதிக வல்லமை யுடையவர்கள். அவர்களுக்குப் பலராமரின்சகோதரனுகிய கபடநாடகசூஸ்திராவதாரியாகும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி உதவியாயிருக்கிறார் அந்த உதவியோடு திரிலோகத்தையும் ஒரு முகூர்த்தத்தில் வெற்றிபெறும் பராக்கிரம வியாக்கிரமமாகிய விதுரனுஞ் சேர்ந்துகொண்டால், காற்றும் நெருப்பும்வேறே வேண்டுவதில்லை, இனிசொற்பவல்லமையைப்பெற்றிருக்கிற நமதுமக்கள் எவ்வாறு உயிரோடிருப்பர்? ஆதலால் அரைமாத்திரைப்போதாவது விதுரராஜனை ஐவரிடத்தி லிருக்கவொட்டாமல் நமதிடத்தி லிருக்கும்படி செய்துகொள்ளவேண்டுமென்றுகருதித், தக்ஷணந் தூதுவரைநோக்கிச் சஞ்சயனை அழைத்துவரக் கட்டளையிட்டான்.

அத்தூதுவர் சஞ்சயனுக்கு அரசன் கருத்தைத் தெரிவித்தனர். சஞ்சயன் தக்ஷணந் திரிதராஷ்டிரனிடத்து வந்தனன், திரிதராஷ்டிரன்சஞ்சயனுக்கு உபசாரவார்த்தை சொல்லி, விதுரனுக்குந் தனக்கும் நடந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்துத், தற்காலத்தில் ஐவரிடத்திலிருக்கிற விதுரனைச் சமாதானஞ்செய்து இவிடம் அழைக்துவாவென் றனுப்பினன். சஞ்சயன் அரசன்கட்டளைப்படி காமியவனத்துக்குவந்தான். தருமராஜன் முதலான ஐவருஞ் சஞ்சயன் வரவையுணர்ந்து, உடனே எழுந்தெதிர்சென் றழைத்துவந்து இருக்கவைத்து உபசாரஞ் செய்தனர். சஞ்சயன் தருமராஜனையும் விதுரனையும் நோக்கிச் சொல்லுகிறான் ஓ அரசர்களே! உங்களுக்குத் தெரியாத நியாயமொன்றில்லை. இந்த விதுரமகாராஜன் சந்திரகுலத்தரசனுகிய திரிதராஷ்டிரமகாராஜனுக்கு முதன் மந்திரி. அரசன் ஒருவேளை வெறுத்துக்கொண்டால் அதனை நிபமாகவைத்துக்கொண்டு வெறுத்துவந்துவிடுகிறது தகுதியா? நீங்களே யோசியுங்கள். தற்காலத்தில் மகாராஜா விதுரராஜன்வரவுக் கெதிர்பார்த்திருக்கிறார். அவர்கருத்து மகிழ்வெய்தும் வகையை நாடுங்களென்றுகூறத், தருமாஜன் விதுரராஜனுக்குச் சிலஇனியவசனங்களைக்கூறி, மகாராஜனிடத்திற்குச்செல்லுங்களென்றனர். விதுரன் தான்கொண்ட கோபந்தணிந்து, தன்பரிசனஞ் சூழ்ந்துவரச் சஞ்சயனேடு அஸ்தினபுரத்துக்குவந்து, தன்தமயனுகிய திரிதராஷ்டிர மஹாராஜனை வணங்கித் தன் பெயரையெடுத்தோதினன். திரிதராஷ்டிரன் விதுரனை அழைத்துவந்த சஞ்சயனுக்கு அதிக உபசாரவார்த்தைகளைச் சொல்லி விடைகொடுத்து விட்டுத், தம்பியை மார்புறத்தழுவி அதிக ஆற்றுமையோடு சொல்லுகிறான்:

ஓ தம்பி விதுரா! கடல்சூழ்ந்த நெடிய வுலகத்தையாளும் அரசர்களுக்கு உயிர்த்துணையாகவிருப்ப

வர்கள் மந்திரிகள். அந்த மந்திரிகள் அரசனுங்கொரு இக்கட்டுவந்த காலத்து, அரசன் வெயர்வை சிந்தின விடத்துத் தம்முதிரத்தைச் சிந்தச் செய்வதோடு, சமயம்வந்தபோது நல்ல நீதிகளை எடுத்தோதி, அரசனை நல்வழியிற் றிருப்பவேண்டும். அரசன் மந்திரிகள் சொல்லை மீறிக் கடுஞ்சின மடைவானாகில், மந்திரிகள் அக்கோபத்துக் குள்ளாகித் தங்கள் உயிரை அவ்வரசனுக்குத் தத்தஞ்செய்வார்களேயன்றி, அரசனை விட்டு வெளியிற் செல்லார்கள். நீ இந்தச் சமஸ்தானத்தி லிருக்கும் எல்லா மந்திரிகளுக்குந் தலைமையான மந்திரியாக இருக்கிறதுமன்றி, இந்தச் சமஸ்தானத்திற்குத் தலைமையாகவிருக்கும் எனக்குச் சகோதரனாகவுமிருக்கிற நீ நான் கடுஞ்சினமடைந்து தெரிந்துந் தெரியாமையுமாக உன்னை இகழ்ந்தால், அதற்கு மனவருத்தமுற்று என்னை வெறுத்ததுவுமன்றி, இந்த நகரத்தையும் வெறுத்து ஐவரிடத்துச் சென்றனையே. இதுதகுதியா? எல்லாந்தெரிந்த உனக்கு நான் சொல்லவேண்டிய தென்ன இருக்கின்றது? மேலும் அறிவுடையோர்களுடைய லக்ஷணம், அறிவிலாருடைய சோர்வைப் பொறுத்தல்தானென்று பலபல இனியவசனங் கூறினன். விதுரன் தமயனிடத் துண்டாகிய கோபத்தைநீக்கி, அன்றுமுதல் தமயனைவிட்டகலாம லிருந்தான். மேல்நடந்த விருத்தாந்தத்தையுஞ் சொல்லுகிறேன் கேளும்.

துரியோதனன் அயித்திரிய முனிவராற் சாபம் பெறுதல்.

ஓ மஹாராஜனே! விதுரன் திரிதராஷ்டிரனை வெறுத்துக் காமியவனத்துக்குச் சென்றுபின்பு சஞ்சயனால் மறுபடியுந் திரிதராஷ்டிர னிடத்துவந்து சேர்ந்ததைத் தூதுவரால் துரியோதனன் கேள்வியுற்றுக் கடுஞ்சினமடைந்து, அன்றைதினம்போக மறுநாளுதயத்தில் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு போஜனஞ்செய்து, மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கண மகுடமுதலியவற்றையணிந்து, நல்ல பீதாம்பரம் உடுத்தி, தாம்பூலாதிகள்தரித்து, தன்சகோதரர்களோடு கொலுமண்டபத்துக்கு வந்தான். மற்ற மந்திரிமார் - பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர் - அணித்தலைவர் - வியூகத்தலைவர் - வேதவேதியர்-கிருபாசாரி-வீஷ்மாசாரி - துரோணாசாரி-அஸ்வத்தாமா-கர்னன்-சகுனி-முதலானவர்களும் வந்தார்கள். துரியோதனன் யார்யார்க்கு எந்தெந்தவிதமாக மரியாதை செய்யவேண்டியதோ? அந்தந்தவிதமாக மரியாதையைத் தாழ்வின்றிச்செய்து, யாவரையுந் தகுந்த சிங்காதனத்திலிருக்கச்சொல்லிச் சொல்லுகிறான். ஓ சபையாரே! நான் சொல்லுஞ் சொல்லுக்கு யாவருங் கிஞ்சித்துச் செவிகொடுத்துக் கேட்டு ஒரு தீர்ப்புச்சொலலவேண்டும். அதாவது - இந்தச் சமஸ்தானத்தில் நடந்து நடந்து வருகிற கெடுதியைப்போல எந்தச் சமஸ்தானத்திலும் நடந்ததில்லை. பஞ்சவரில் வீமார்ச்சுனன் இருவருங் கெட்டவர்கள். அவர்களைக்கொல்லப் பலபல தந்திரஞ்செய்தும், இந்தச் சமஸ்தானத்திலிருக்கிற பெரியோர்களால் அந்தத் தந்திரம் நிறைவேறாமல், முடிவில் என் குலகுருவாகிய சகுனிமாமாவின் கிருபா கடாக்ஷத்தால் ஐவரையும் இலேசாகவெற்றியடைந்தேன். இப்போது ஐவரும் என்னபிப்பிராயப்படி காட்டிற் சென்றனர்.

இஃதிப்படி யிருக்க உள்ளநாளுள்ளளவும் இந்தச் சமஸ்தானத்தின் பொருளைச் சொந்தமா யனுபவித்துத், தனக்கு வழிபடுவோர்க் குதவாமல் அயல்வீட்டுக் காரர்க் குதவிசெய்யும் முடத் தென்னமரம்போற் பகைவராகிய ஐவர் பக்ஷமிருக்கின்ற விதுரன் அவ்வைவர்க்காக இதுவரையில் நீதியுணர்ந்தவன்போற்பக்ஷமாகப் பேசிவந்ததுமல்லாமல், அவர்கள் காட்டிற்சென்றபின்பும் என்பிதாவுக்குச் சில துர்நியாயங்களை எடுத்துக்கூறி, அத்துர்நியாயத்தை என்தந்தை கடிந்துகொண்டதின்மேல் ஐவரிடத்திற் சென்றானை என் பிதா மறுபடியுஞ் சஞ்சயனால் அழைப்பித்துக் கொண்டாராம். இதென்ன அநியாயம்? சமஸ்தான மந்திரிகளுக்குத் தலைவனாகவும், என் பிதாவுக்குச் சகோதரனாகவு மிருக்கிற விதுரனுக்கு இது தகுதியாவென்று கூறினன். இவ்வாறு துரியோதனன் வழங்கிய சொற்களைக் கேட்ட சபையாரனைவரும் மனவருத்தமுற்று, ஒருத்திரவு மின்றித் தேனில் விழுந்த ஈயைப்போல மயங்கி யிருந்தார்கள். அப்படியிருக்கிற தருணத்தில் நாலுவேதம் - ஆறுசாஸ்திரம் அறுபத்து நான்கு கலைக்கியான முதலியவற்றை யெல்லாம் ஐயமின்றி யுணர்ந்து, நல்லநெறியினின்று, பிரமத்தினிச்சயத்தையறிந்து, தபோசிரேஷ்டர்களெல்லா மதித்துத் துதிக்கத்தகுந்த சிறப்பினைவகித்த அயித்திரிய முனிவர் காவிகாம்பர தண்டு கமண்டலதாரியாய்த் தீர்த்தயாத்திரைசெய்து வருகிறபோது, ஐவர் வனவாசஞ் சென்றதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்து, பஞ்சவர் பஞ்சையானதற்குக் காரணந் துரியோதனன்தானாதலால் அத்துரியோதனனைச் சமாதானஞ்செய்து முன்போலப் பாண்டவர்களையும் கவுரவர்களையும் நேசஞ்செய்விக்கக்கருதி, அஸ்தினபுரி யடைந்து துரியோதனனுடைய கொலுமண்டபத்துக்கு வந்தார்.

அதுகண்ட துரியோதனன் உடனே எழுந்தெதிர்கொண்டுபோ யழைத்துவந்து, பொற்பீடமளித்திருக்கச்சொல்லி உபசாரஞ்செய்து, ஓ சுவாமிகளே! அடியேனிடத் தன்புவைத்து இங்குவந்தகாரணமென்னவென்று வினவ, அயித்திரியமுனி துரியோதனனுக்குப் பலஆசிகள்கூறி, அவனைச் சிங்காதனத்திலிருக்கச்சொல்லி இதனைச்சொல்லுகிறார் ஓ துரியோதன மகாராஜனே! நான் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்யக்கருதி வெளிப்பட்டுப் புண்ணியக்ஷேத்ரங்

களிலிருக்கிற திவ்விய தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து வருகிறபோது, காமியவனத்தில் உன்சிறியபிதாவின் புத்திரர்களாகிய பஞ்சவர் பஞ்சைபோல வனவாசஞ் செய்கிறதையறிந்து தீரவிசாரித்தேன். ஐவர்வனவாசஞ் சென்றதற்குக்காரணம் நீயாக என்புத்திக்குப்பட்டது. அதுநோக்கி உன்னைச் சமாதானப்படுத்த இங்குவந்தேன். நான்சொல்லுவதை நன்றாகக்கேள். உலகமேநிலையல்ல. அப்படிக்கிருக்க அவ்வுலகிலுள்ளவை நிலையாக இருக்குமோ? அதிலுங்காயம் நீர்மேலெழுத்து. இளமையோ நீர்மேற்குமிழி, செல்வங் கடலினலையைப்போல் மாறிமாறிவரும். ஆதலால் உலகத்தில் மானிடதேகமெடுத்தவர் புகழுடம்பைச் சம்பாதிக்கவேண்டும். நீ தருமராஜனுக்கு விரோதியல்ல. சகோதரமேதான் அப்படிக்கிருக்க உனக்கு அவர்கள்மேற் பகையென்ன? அந்தப்பாண்டவர்களை பகைப்பவர்கள் ஒருவருமில்லை. ஒருக்கால் யாராவது பகைப்பார்களாகில் அவர்களின்நன்னடத்தையே அப்பகையைவெல்லும் என்றால் அவர்களதுவல்லமையை ஒருவர் வாயாலுரைக்கக் கூடுமோ? மேலும் ஐவர்கள் மானிடரோடு மானிடராகயிருந்தாலும், தேவரேயன்றிமானிடரல்லர். அவர்களுக்குமிகுந்தபராக்கிரமமிருந்துஞ் சத்தியத்துக்குமாறுபடாமல், பெரியோர்களின் கட்டப்படி அடங்கிக்காட்டுக்குச்சென்றனர். இந்த ஒருசெய்கையே ஐவர்கள் சத்தியவான்களென்று பரிஷ்காரமாக விளங்குகின்றது. ஆதலால் இனி நீ ஐவர்மேல் வஞ்சம்வைக்காமல் அவர்களை அழைப்பித்து, அவர்களது அரசுரிமை முதலியவற்றைக் கொடுத்துவிட்டு, உனக்குரிய பூமியில் நீயிருநது செங்கோல் செலுத்தென்று பலபல நியாயங்களை எல்லாமிகவுங் கனிவோடு எடுத்தோதினர்.

இந்த வாக்கியங்களைக்கேட்ட துரியோதனன் சபையைப்பார்த்துச் சிரித்துக் கடுஞ்சின மடைந்து சொல்லுகிறான ஓ சபையார்களே! இந்த முனியைப் பார்த்தீர்களோ ? இவர் மொழிந்த சொற்களை நன்றாகக் கேட்டீர்களோ ? முழுதுந்துறந்த பெரியோராக இருக்கிறவர்க்கு உலகினுள்ளவர்கள் எக்கேடுகெட்டாலென்ன ? இந்த மகாமுனி தான்கருதியபடி தீர்த்தயாத்திரை செய்யாமல், ஐவரையு மென்னையுஞ் சம்மதிக்கச் செய்யவேண்டியதென்ன ? அப்படிதான் நாங்களிருவருஞ் சம்மதித்தால், அதனா லிவரடையும் பயனென்ன ? ஒன்றுமில்லை இவர் வழங்கிய சொற்களை நன்றாக உய்த்து நோக்கினால், விதுரன் பஞ்சவரிடத்துச் சென்றிருந்தபோது இதொருகுடில யுக்தி செய்துவைத்துவந்தான். ஐவர் விதுரன் வாக்கியத்தை நம்பி இந்தச்சுவாமியைத் தூதாக அனுப்பிவித்தார்கள். ஐயையோ !! பஞ்சவர் புத்தியை என்னென்றுமதிக்கிறது ? வில்லாசிரியரையும் என் பிதாவையும் விட இந்த முனி சிறந்தவரோ ? இவர் மொழியைக் கேட்டு மகிழ்ந்து நான் சம்மதிக்கிறவனோ? ஆ! ஆ! இது நன்றாயிருக்கின்றதென்று முனிவரைப் பார்த்துச்சொல்லுகிறான். ஓ முனியே! நீ காவிகாம்பர தண்டுகமண்டல தாரியாக வந்தமையால் அந்தவேடத்துக்காக உனக்கு உபசாரஞ் செய்தேன். ஐவர் விடுத்த தூதுவனென்று கிஞ்சித்து முன்னந் தெரிந்திருக்குமாகில், உன்னை இந்தக் கொலுமண்டபத்தி லிருக்கச் செய்யேன். முன்ன மெழுந்து இச்சபையைவிட் டகலுமென்று கடுஞ்சினத்தோடு கூறினன். துரியோதனன் வழங்கிய மரியாதைத் தாழ்வான வார்த்தையை அயித்திரியமுனிவர் கேட்டமாத்திரத்திற் கடுஞ்சின மடைந்து சொல்லுகிறார்.

அடாபாவி துரியோதனா! பொருட்செல்வம்-கல்விச்செல்வம்-வீரச்செல்வம்-இவைகளை யுடையோர்கள் முக்கியமாக அடக்கமுடைமையை வகிக்காவிட்டால்; முதற்கூறிய மூவகைச்செல்வ மிருந்தும் பயன்படாமற்கெடும். நீ மூவகைச்செல்வத்தையும் பெற்றிருக்கிறோமென்று மமதைகொண்டிருக்கிறாய். அந்த மமதை உன்னுயிர்க்கு வாளாக இருக்கின்றது. அதிலும் நீ அடக்கமுடைமையி லிலக்கணத்தை யறியாதவனாதலால், என்னையொரு துரும்பாகப் பாவித்திகழ்ந்தனை. (துறவிக்கு வேந்தன் துரும்பு.) என்கிற பழமொழிகேட்டறிகிலையா ? நியாயத்தை எடுத்துரைத்த என்னை நீ அவமதித்தல் செய்தாய். மேல்விளையுஞ் சமர்க்களத்தின்முடிவில் வீமனால் உனக்குத் தொடை முறியப்பட்டுப் பூமியில்விழுந்து நீ சாகக்கடவையென்று சபித்துவிட்டுத், தக்ஷணஞ் சபையைவிட்டுத் தனக்கிஷ்டமான விடத்துக்குச் சென்றனர். துரியோதனன் முனிவர்கொடுத்த சாபத்துக்கு அஞ்சாத நெஞ்சனாகிச் சபையை நோக்கிச்சொல்லுகிறான். ஓ சபையார்களே! பஞ்சவர்பஞ்சையாகி வனத்திற்சென்றும், இன்னும் அவர்கள் குறும்பு நீங்கவில்லை. முனிவனையனுப்பி என்னைச் சாபத்துக் குள்ளாக்கினர். இனி அரைமாத்திரைப்போதாவது ஐவரையும் உயிரோ டிருக்கச்செய்யேன். இந்தவேளை பெரியோர்களா இருக்கிறவர்கள என்னைத் தடுக்காதிருக்கவேண்டுமென்றாகூறி, அருகிலிருக்குந் துர்ச்சாதனன் கர்னன்-சகுனி-இவர்கள் முகத்தைநோக்க; அவர்கள் அரசன் முகக்குறியை அறிந்து நால்வகைச் சேனைகளுக்கும் போர்க்கோலங்கொண்டு வரும்படி கட்டளையிட்டுத், தாங்களும் அளவற்ற ஆயுதங்கள் முதலான சின்னங்களைச் சன்னாகப்படுத்திப் போர்க்கோலங் கொண்டார்கள்.

பாண்டவர் வனம்புகு சருக்கம்

முற்றிற்று.

இரண்டாவது

அருச்சுனன் தவநிலைச் சருக்கம்.

கண்ணன் துதி.

மேவரு ஞானனந்த வெள்ளமாய் விதித்தோனுதி
மூவரு மாகியந்த மூவர்க்கு முதல்வனுகி
யாவரும் யாவுமாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப்பற்ப
றேவரு மாகிநின்ற செங்கண்மா லெங்கள்கோவே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! துரியோதனன் போர்க்கோலங்கொண்டு அந்நால்வகைச் சேனையோடு கலந்து, துர்ச்சாதனன் சகுனி கர்னன் இவர்கள் தன்னைச் சூழ்ந்துவரத் தேரேறி நடந்தான். நால்வகைச் சேனைகளுஞ் சேனைத்தலைவர்களும், முரசு டங்கா பேரி காளம் எக்காளம் துத்தாரி சின்னம் இவை முதலிய வாத்தியங்கள் அஷ்டதிக்கு மொலிக்க வீராவேசத்தோடு சென்றனர். பதாதிகளினொலியும் யானையின் கர்ச்சனையும் குதிரைகளின் கனைப்பும் தேரோசையும் கடலொலிக்கொப்பாக இருந்தன. அப்போது சேனைகளின் ஆரபாரத்தை ஒருவராற் சொல்லத் தக்கதல்ல. அவ்வளவு வீராவேசத்தோடு துரியோதனன் சேனைகளை நடத்திக் காமியவனத்தை நோக்கிச் செல்லுகிறபோது, பெரியோர்களாக இருக்கிற வீஷ்மர் துரோணர் கிருபர் விதுரர் அஸ்வத்தாமர் இவர்கள் மனவருத்தமுற்றவர்களாகி, இனி நம்மாலாகும் பயனென்றுமில்லை. இத்துரியோதனன் தற்காலங்கொண்ட எண்ணத்தை விட்டுத் திரும்பாமற் காமியவனத்திற்குச் செல்வானுகில், அவ்வனமே அவனுக்குத் தகனஞ்செய்யும் வனமாகுமென் றெண்ணியிருந்தார்கள். சிலர் ஐயையோ! யாதொரு உதவியுமின்றிப் பஞ்சைகள்போலக் காட்டிலிருக்கிற ஐவர் மீது பகைகொண்டு படையெடுத்தான். இது தகுதியாவென்றுமனநொந்திருந்தனர். இப்படி நகரிலுள்ளவர்கள் சஞ்சலப்படச் சேனையை நடத்திச்செல்கின்ற துரியோதனன் கண்ணுக்கு வேதவியாசர் காவிகாம்பர தண்டு கமண்டலதாரியாக வந்து தோன்றினர். அவரைத் துரியோதனன் கண்டமாத்திரத்தில்தேரை விட்டிழிந்து வணங்கிநின்றனன். வேதவியாசர் துரியோதனனுக்குப் பல ஆசிகள் கூறிச்சொல்லுகிறார்.

அப்பா துரியோதனு! நீ சகலகலை வல்லவனுக இருந்தும், மூடரைப்போற் சினங்கொண்டு காலமல்லாத காலத்திற் பஞ்சவர்மேற் பகைகொண்டுபோருக்கெழுந்தாய் உனக்குத் தெரியாத தருமசாஸ்திரம் ஒன்றிருக்கின்றதா? எல்லாந் தெரிந்துந் தெரியாதவர் போலச் சினங்கொண்டாற் பகுதிகட்டும் அரசர்கள் உன்னை வணங்குவார்களா? நிதானி நிதானி போர்க்கெழாதே. துரோணுச்சாரியின் தீர்ப்பின்படி பதின்மூன்று வருஷத்தையுந் தலைத்துவரட்டும். அதன் பின்பு உன் கருத்திற்கிசைந்தபடி செய்யென்று தடுத்தனர். வமிச பரிபாலனராகியுங் குருவாகியும் விளங்கும் வியாசர்கூறிய வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் அயித்திரியமுனியாற் சாபமேற்ற துரியோதனன் அவ்வாக்கை மறுப்பதற்கு அஞ்சவணங்கித், தன்தேரிலேறித் தேரை அஸ்தினபுரத்துக்குத் திருப்பினன். மற்றச் சேனைகளுஞ் சேனைத்தலைவர்களும், கர்னன் சகுனி துர்ச்சாதனனுதியர்களுமுடனே திரும்பினர் துரியோதனன் அஸ்தினபுரத்துக்கு வந்து சேர்ந்து, முனிவரிட்ட சாபத்தைநினைத்து மனவருத்த முற்றவனுகிப், பஞ்சவர்மீது தணியாக் கோபம் வகித்துத் தன்னரசு செய்திருந்தான். கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! மேல்நடந்தனவற்றைக் கூறுகிறேன் கேளும்.

வேதவியாசர் பாண்டவரைத்தேற்றி அருச்சுனனுக்கு மந்திரோபதேசஞ்செய்து தவஞ்செய்ய விடுத்தல்.

கேளும் மகாராஜனே! எனது குருவாகிய வேதவியாசர் துரியோதனன் கண்ணுக்குத்தோன்றி, அவன் கொண்ட தணியாக் கோபத்தைத் தணித்து, அவனை அஸ்தினபுரத்துக்கு அனுப்பிவிட்டு; ஐவரிருக்குங் காமியவனத்துக்குச் சென்றார். ஐவரும் பாஞ்சாலியும் வேதவியாசரின் வரவைக்கண்டு, சந்திரனைக் கண்ட சமுத்திரம் பொங்குவதுபோல் உள்ளம் பூரித்து, எதிர்சென் றழைத்துவந்து தருப்பாசனத்திலிருத்திச், சோடசோபசாரமுஞ்செய்து வணங்கித்துதித்துநின்றனர். அவர்களை வேதவியாசர் பல ஆசிகள் கூறி யிருக்கக் கட்டளையிட்டனர். தருமராஜன் வியாசரைநோக்கி, ஓ எங்கள் ஆண்டவரே! இந்திரப்பிரஸ்தத்திலிருந்த எங்களை அஸ்தினபுரத்துக்கு வரவழைத்துச் சகுனியோடு சூதாடும்படி வேண்டிய முயற்சி செய்து முடிவில் வனம்போகச் செலவு கொடுத்தார்கள். நாங்களும் பெரியோர் வாக்கியத்தைத் தடுக்காமல் வனத்துக்கு வந்துவிட்டோம். என்னொருவனல் என்னுடைய சகோதரரும் பாஞ்சாலியுங் கனவருத்தமடைந்து வருகின்றார்கள் என்று இந்திரப்பிரஸ்தத்திலிருந்து அஸ்தினபுரத்துக்கு வந்து சூதாடி வனஞ்சேர்ந்தவரையில் நடந்த விருத்தாந்தத்தை விவா

மாக எடுத்தோதவும், வியாசர் சொல்லுகிறார் ஓ தருமநந்தனா! நடந்துவிட்டதை நினைத்து வருத்தப்படுகிறவனும்-இனி வரப்போகிறதைக் கருதி மகிழ்கிறவனும்-மனிதருள் பதரென்றும், தற்காலத்தில் அனுபவிப்பது சஞ்சலத்துக் கிடமாக இருந்தபோதிலும் அதனை நன்மையாகப் பாவித்திருக்கிறவன்தான் புருஷோத்தமனென்றும், மனிதருள் தேவனென்று மதிக்கப்படும். ஆதலால்-உனக்குத் தெரியாத நியாயமொன்றில்லை. சூதில் நாடு-நகர்-முதலியவற்றை யிழந்து, பஞ்சைகள்போல வனத்துக்கு வந்துவிட்டோமென்று வருத்தப்படாதே. முன்பு தன்நன்னெறியினாற் சக்கரத்தை நடத்திச் சக்கிரவர்த்திகளோடு தானுமொருவனாக விருந்த நளச்சக்கரவர்த்தியென்பவன், புஷ்கரராஜனென்பவனோடு சூதாடித் தனது நாடு நகர முதலியவற்றைத் தோற்றுக் காட்டிற்சென்ற அக்கதையை நீ கேட்டிருக்க வில்லையோ? என்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார்.

ஓ தருமநந்தனா! யயாதிமுதல் உங்கள் தலைமுறைவரைக்கும் இந்தச் சந்திரவமிசத்திலிருந்த அரசர்கள், கொலை-களவு-கள்-காமம்-சூது-வாது-அக்கிரமமென்பனவற்றைக் கனவிலும் நினைக்காமல அரசாட்சியை நடத்திவந்தார்கள். துரியோதனன் காலத்தில் முற்கூறிய பாபங்கள் சூரியனைப்போலப் பிரகாசித்து வருகின்றன. ஆதலால் இனிநடக்கும் விபரீதத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் சுகப்படுகிறவர்களாக இருப்பீர்களாகில் நான் சொல்லும் வாக்கியத்தின்படி நடந்து, உங்கள் பகையை முடித்து, முன்போலச் சுகித்திருங்களென்று கூறத், தருமராஜன் வணங்கிச் சொல்லுகிறார். ஓ சுவாமி! எங்களுக்கு வயதில் முதிர்ந்தவர்கள் யாவரேயாயினும் அவர்கள் சொல்லும் வாக்கை, இதுவரையிலும் நாங்கள் தடுத்தறியோம். உங்கள் வாக்கியத்தையா நாங்கள் தடுக்கப்போகிறோம். ஓ பரமதயாளுவே! தற்காலத்தில் தெய்வாதீனத்திலிருக்கிற நாங்கள் எங்கள் குலதெய்வமாகிய தேவரீரை மீறுவோமா? தாங்கள் கிருபைகூர்ந்து மேல் நடக்கப் போகின்றதையும், அதற்கு நாங்கள் முன் சாக்கிரதைப் படவேண்டியதையும், திருவுளங்கனிந்து கூறவேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொள்ள, வியாசர் சொல்லுகிறார். ஓ தருமநந்தனா! துரியோதனன் அசத்தியன். துரோணாச்சாரி கொடுத்த தீர்ப்பின்படி நீங்கள் பதின்மூன்று வருஷத்தைக்கழித்து வந்தும், அக்கொடும்பாவி உங்கள் நாடுநகரத்தைக் கேட்டாற் கொடுக்கான். பிர்மா - விஷ்ணு-உருத்திரன்-என்கிற மூவரைக்கொண்டு சொல்லுவித்தாலும், அவன்மனமிதங்கிச்சிறிதுங் கொடான். அவ்வளவுகெடுதியையுடையவன். மேலும் சுவயபலமுண்டாயிருப்பதோடு, துணைவர்கள் பலமுமுள்ளவன். அவனை இலேசாக எண்ணக்கூடாது. ஆதலால் நீங்கள் அந்தத் துரியோதனனை வெற்றிபெறக் கருத்திருந்தாற், சாம்பவமூர்த்தியைநோக்கித் தவம்புரிந்து, அந்தச் சாம்பவமூர்த்தியின் கரத்திலிருக்கும் பாசுபதாஸ்திரத்தைப் பெறவேண்டும். அந்த அஸ்திரத்தைப் பெற்றால் துரியோதனனை இலேசாக வெற்றியடையலாம். அந்த அஸ்திரத்தைப் பெறத்தக்கவன் உங்களிலொருவனாகிய அர்ச்சுனனே. அவன்தான் தவத்துக்குச் செல்லவேண்டுமென்று கூறினார்.

அருச்சுனன் தவக்கோலங்கொண்டு கைலைக்குச் செல்லுதல்.

அதனை யருகிலிருந்து கேட்டிருந்த அருச்சுனன் உடனே எழுந்து வியாசரைவணங்கிச் சொல்லுகிறான் ஓ சுவாமி! தங்கள் திருவாக்கினால் என்னைத்தவத்துக்கு யோக்கியனென்று சொல்லப்பெற்ற பூஜாபலமேபலம் தங்கள் திருவாக்கின்படி சாம்பவமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்றுவரப்பூரணகடாக்ஷம்வைத்து விடைகொடுங்களென்று கூற, வியாசர் அர்ச்சுனனை ஸ்நானஞ்செய்து வரச்சொல்லி, அவன்காதில் ஒருமந்திரத்தையுபதேசித்து. இதை யுச்சரித்துத் தவஞ்செய்து சாம்பவமூர்த்தியைக்கண்டு பாசுபதாஸ்திரம் பெற்றுவரக்கடவையென்று ஆசிகூறித், தருமராஜனை நோக்கிச் சொல்லுகிறார் ஓ தருமநந்தனா! உன்சகோதரனாகிய அர்ச்சுனன் சிவனைநோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்றுவருவான். நீ சஞ்சலப்படவேண்டாம். உலகிலுள்ள அரசர்கள் தமக்கொரு பொல்லாத கெடுதியை வேறொருவர் செய்தால், அதை மனதில் வைத்துக்கொண்டிருந்து, நல்லசமயம் பார்த்துத்தன் கோபத்தை வெளிப்படுத்தித், தமக்கு இடையூறு செய்தவரைத் தக்ஷணங் கெடுப்பர். நீ அதனைக் கைவிட்டு, யார்வருகிறார்களோ? அவர்களிடத்தெல்லாம் உன்குறையைச் சொல்லிச்சொல்லிமுறையிடுகிறாய். அது அரசர்க்குத் தகுதியல்ல. அதிலும் நீ அரசருட் சிறந்த அரசனாதலால், மனவருத்தமுறாமலிருவென்றுகூறித், தமது கருத்துக் கிசைந்தவிடத்துக்குச் சென்றார். இப்பால் தருமராஜன் முதலான நால்வரும் அர்ச்சுனனைப்பார்த்து, ஓ பார்த்திபா! சாக்ஷாத் விஷ்ணு சொரூபமாகிய வேதவியாசரால் தவத்துக்குச் சிலாக்கியனென்று மதிக்கப்பெற்றாய். உன்பாக்கியமே பாக்கியம். அவர் கட்டளைப்படி தவம்புரிந்து பரமனைக்கண்டு பாசுபதாஸ்திரம்பெற்று வாருமையா வென்று கூறினர்.

அம்மாத்திரத்திற் றவமென்றாற் றரணியேழும் பெற்றவனைப்போற்களிக்கும் அர்ச்சுனனுடையமனம் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோலாகி, நவரத்தினமுடியை நீக்கிச் சடைமுடிதரித்து, வெண்பட்டாடைகளை விலக்கி மரவுரியுடுத்து, மரகதம்போற் பிரகாசிக்குந் தன்தேகத்தைக் கோமேதகம்போற் பிர





[7] அர்ச்சுனனபாசுபதாஸ்திரமபெறல.

காசிக்கத் திருநீறணிந்து, அக்கினிபகவானாற் கொடுக்கப்பட்ட காண்டீபமென்று பெயர்வகித்தவில்லைக் கரத்திலேந்தி, அம்புப்புட்டிலை முதுகிற்றூங்கி, எல்லாப் புண்ணியங்களுக்கும் இருப்பிடமாகிய தசரதமகாராஜன் மைந்தனாகும் ஸ்ரீராமமூர்த்தியைப்போல விளங்கி, இரண்டு தமயன்மார்களையும் வணங்கி, அவர்கள்கூறிய ஆசியையேற்று, மற்ற இரண்டு தம்பிமாருக்கும் பாஞ்சாலிக்கும் இனியவசனங்கள்கூறி, நல்ல சுபமுகூர்த்தத்தில் விடைபெற்றுக் காமிய வனத்தை விட்டு, இருபறமும் ஊசிநுழைவதற்கிடமில்லாமல்நெருங்கி யிருக்குங் கொடியகடம்பாரற்கானில் நுழைந்து, அங்குத்தோற்றுங் கொடிவழியைப் பற்றிக்கொண்டே காடு-மலை-வனம் - வனாந்திரங்களிற் சென்று, அங்கங்கிருக்கும் விநோதங்களையும் அங்கங்கு சஞ்சரிக்கும் பூதபசாசங்களையும் மற்றுமுள்ள எழ்வகைப் பிராணிகளையுங் கண்டு வியந்து, பரமன் திருவடியிற் கருத்தைச் செலுத்தி வடதிசையிற் சென்று, அப்சரஸ்திரீகள் மனமகிழ்ச்சியோடு விளையாடித்திரியும் இமவத்பர்வதச்சாரலுக்குவந்து, அதின் வளப்பத்தையும் அங்கங்கிருக்கும் மிருகஜெந்துக்களின் நன்னடக்கையையும் பார்த்து மகிழ்ந்து, அங்குதவஞ்செய்யு முனிவர்களைக் கண்டு வணங்கி அவர்களுடைய கிருபைபெற்றுத், தேவர் - கருடர் - காந்தருவர் - சித்தர் - வித்தியாதரர் முதலாகிய அந்தர வாசிகளும், வேதவிதி பிசகாமல் தவத்திலிருக்கும் பெரியோர்களும், மற்றுமுண்டான தேவஜீவ வுயிர்கள் நெருங்கியிருக்குமவ்விமயமலையைக் கடந்து, இரவென்றும் பகலென்றுங் குறிக்கக்கூடாத வனாந்தரங்களி லெல்லாஞ் சென்று, யானைகளும் யானைகளும் போர்செய்ய அந்த ஓசையைக்கேட்டுச் சிங்கம் பாய்ச்சல் கொள்வதையும்- புலியும் புலியும் போர்செய்ய அந்த அரவத்தைக்கேட்டுச்செந்நாய்கள் பாய்ச்சல்கொள்வதையும் பன்றியும்பன்றியும் பாய்ச்சல்கொண்டிருக்க அதனைக்கண்டு வேடர்கள் பதுங்கி வில்லைவளைத்துப் பாணங்களைத் தொடுக்கிறதையும் இன்னுமிப்பேர்ப்பட்ட அளவிறந்த விநோதங்களையெலலாங்கண்டு, பின்னுங்காட்டேறி முதலாகிய துர்ப்பிசா சாதிகள் ஆரவாரித் தலைகின்ற சப்தத்தையுங்கேட்டு வியந்து, அவ்வாரவாரிப்பைக் கேட்டதோஷந்தீரப் பஞ்சாக்ஷரத்தை மனனஞ்செய்துகொண்டு, பிரம்மா விஷ்ணுவுக் கிருப்பிடமாகிய மகாமேருவையும் வைகுந்தத்தையுங் கண்டு துதித்து, அப்பால் எவ்வுயிர்க்குந் தலைவனாக விளங்கும் பரமசிவன் இமயமலையளித்த பார்வதியோடு வீற்றிருக்கும் புண்ணிப சொரூபமாகிய கயிலாசகிரியைச் சேர்ந்து, அக்கைலாசகிரிக்கு நாற்றிசையு மிருக்கின்ற கணித்தற்கரிய அற்புதங்களை யெல்லாங் கண்களிக்கப்பார்த்து, சாம்பவமூர்த்தியினது திருவுருவத்தைம் பாவனைசெய்து மனதாரத்துதித்து, அங்கு தவஞ்செய்யு மகாமுனிவர்களிருக்கின்ற வனத்திற்புகுந்தான்.

அங்கு சிலர் நீரினின்றும், சிலர் ஒருபாதத்தினின்றும், சிலர் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், சிலர் பதுமாசனத்தி லிருந்தும், சிலர் தலைகீழாக இருந்தும் சிலர் இரண்டு முழந்தாளையும் இரண்டு கரத்தையும் பூமியிலூன்றித் தலையெடுத் தாகாயத்தைநோக்கியிருந்தும், சிலர் திகம்பரியாக இருந்தும், இவ்வாறு அளவற்ற கோலாகலங்களோடு ஆதிமத்தியாந்த ரகிதராகிய சாம்பசிவமூர்த்தியைத் தியானித்துத் தவஞ்செய்தலைக்கண்டு வியந்து, அங்குள்ள யாவர்களையும் வணங்கி, வனத்தின் பெருமையையுங்கயிலாசகிரியின் பெருமையையுங்கண்டு மனவருத்தம் நீங்கித், தானுந்தவஞ்செய்ய விருப்பங்கொண்டான். ஓ ஜெனமே ஜெய மகாராஜனே ! அந்தக் கயிலாசகிரியின் பெருமையை யாவரா லளவிடக்கூடும்? சொற்கமத்தியபாதாளமென்னும் முப்புவனங்களுக்குந் தலைமையாகிய கடவுளுக்கு அகுது இருப்பிடமாக இருக்குமாகில், அதனது மாட்சிமையை யெடுத்துரைப்பவர் யார்? ஆகிலும் என்னாற் கூடியமட்டுங் கிஞ்சித் தெடுத்துரைக்கிறேன் கேளும்.

கைலாசகிரிச்சிறப்போடு அருச்சுனன் தவநிலைச்சிறப்பு.

ஓ அரசனே ! அந்தக்கயிலையங்கிரியானது - வேதாகமவிதி பிசகாமற் பொருளைச் சம்பாதித்துப், பிரமசாரி - வானப்பிரஸ்தன் - சன்னாசி - ஆதாரமானவராலே துறக்கப்பட்டவன் - தன்னிடத்தில் வந்திருந்தவன் - இரப்போர் - தென்புலத்தோர் - தேவர்கள் விருந்தினர் - சுற்றத்தார் - என்னும் பதின்மருக்குமப்பொருளைப் பகுத்துக்கொடுத்துத், தானுமொருபங்கேற்றுப், பொறாமை - பேராசை - கடுஞ்சொல்- கோபம் - என்பனவற்றை விலக்கித், தருமஞ் செய்தோருடைய புகழைப்போல் வெளுத்தும் காலையிலுமாலையிலும் வேதாகம புராணங்களைச் சிந்தித்துக், கயிலாசபதியாகிய சாம்பவமூர்த்தியின் சன்னிதானத்தில் நின்று. அவரது துஷ்டஜன நிக்கிரகஞ் சிஷ்டஜனபரிபாலன மென்னும் அறக்கருணை மறக்கருணைகளைப் புகழ்ந்துரைத்து, இவ்வாறு மனங்களிந்து தொழும் அடியார்களின் கண்களில் நின்றிழியும் ஆனந்த பாஷ்பம்போல் அருவிசொரிந்தும், பஞ்சாக்ஷரசொரூபியாகிய பரமசிவன் தன்னை அடைந்தவரைத் தன்மயமாக்கிக் கொள்வதுபோலத், தன்னை யடைந்தவரைத்தன்னைப்போலவெண்ணிறமாக்கியும், முப்பத்துமுக்கோடி தேவர் - நாற்பத்தெண்ணாயிர முனிவர்- கருடர் - காந்தருவர் - சித்தர் - வித்தியாதரர் - சிவகணங்கள் - பிரம்மா - விஷ்ணு - இவர்கள் முதலான அளவற்ற அந்தரவாசிகள் வலஞ்செய்து வணங்கித் துதித்து வழிபட, சிவனடியார்களுக்குஞ் சிவனடியாரைப்பூசித்தவர்களுக்குங் காணியாட்சியாக விளங்கி

யும், வெள்ளியங்கிரி யென்று பெயர்வகித்து யாவரா லுந்துதிக்கப்பட்டு விளங்குகின்றது.

அக்கயிலைமலையின் தென்பக்கத்தில் அர்ச்சுனன் தவநிலை யொன்றியபற்றி, அங்குள்ள திவ்யநதியில் ஸ்நானஞ்செய்து, குற்றமற்ற வேதவிதிக்கு எள்ளள வேனுங் குறைவுபடாமல், சகலவினையையுந் தகிக்குந் திருநீற்றையெடுத்து, உச்சி - நெற்றி-மார்பு - உந்தி- இருமுழந்தாள்-இருதோள் - இருமுழங்கை - இருக ணுக்கை - இருசெவி - கண்டம் - ஆகிய இவ்விடங்க ளில் அவ்வவ்விடத்துக்குரியமந்திரங்களை உச்சரித்து அணிந்து, பஞ்சாக்கினியை வளர்த்தி, மத்தியில் ஒரு தாளைப் பூமியில்வைத்து, மற்றொருதாளை ஊன்றிய தொடையில்மடித்துக், கமலங்களானவை சூரியனைத் தாவுவதுபோல் தன்னிரண்டு கரங்களையும் ஆகாயத் திலேந்தி நின்று. இரண்டுவிழிகளையும் ஆதித்தனைப் பருகுவதுபோல் விழித்துநோக்கிப். பவளக்கொடிக ள்போலப் பிரகாசிக்குஞ் சடைகள் நாற்றிசையும்புர ளக், காண்டீபமும் - அம்புப்புட்டிலும் - தோளிற்பிர காசிக்க, கயிலாசபதியை இதயகமலத்தில் நிறுத்தி, ஓ உம்பர்கள்பரவிய உயர்கயிலாசா! அம்புஜபாதா அடியவர்நேசா! நம்பினவென்மன வாலயவாசா ! சம் போசம்போசகலலோகேசா! சர்வஜீவ உத்தாரா! சன காதியர்மகிழ் சீரா! ஹரஹர சிவசிவசம்போசங்கர, பரிபுர வுபய பதம்போகந்தர, ஒருசாண்முயலகன் மேலினும்மற்றொரு, உயர்சரணும்பர்கள் தம்புவிபா னும், தூக்கிநிர்த்தமிடுகர்த்தசுத்தாத்வித, வாக்கியசிற் சொரூப நித்யவித்தியாஸ்பத, பரமபரம பரமார்த்த மலரகித, தருமதரும உயர்மோக்ஷ சுகசகித, தற்பர- விற்பன சற்குண-ருக்கருள்-சுவாமீ! சுவாமீ! என்றோ லமிட்டுத் துதித்துச், சித்திரப் பிரதிமெய்போலச் சற்றுமசைவில்லாமல் நின்றனன்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே ! அர்ச்சு னன் தவஞ்செய்தானென்று வாயினாற்சொல்லுவது மாத்திரமேயன்றித், தவத்தினது அருமையும்-அவன் சிந்தை பொருமித் திருந்ததையும் - என்னால் மாத் திரமல்ல, ஆயிரம் பணாமுடியை யுடைய ஆதிசேட னாலுஞ் சொல்லத்தக்கதன்று. அவனைச் சூழ்ந்திருக் கும் பஞ்சாக்கினியானவை துலைவிலிருக்கும் மரமுத லியவற்றைக் கருக்கிச் சாம்பராக்கி வருகின்றனவென் றால்-மத்தியிலிருக்கும் அர்ச்சுனன் எவ்வாறிருக்கவே ண்டும்? அதனை நீரேமதித்துக்கொள்ளும். அவ்வகை யானதீயின்மத்தியிற் பஞ்சாக்ஷரமூர்த்தியின்கிருபை யினாலேயோ ? அல்லது அர்ச்சுனனாற் பசிதணியக் காண்டவவனத்தைப்புசித்த அக்கினிபகவான் நன்றி யறிந்ததன்மையினாலேயோ? அர்ச்சுனன் அந்தப்பஞ் சாக்கினிக்கு வருத்தப்படாமற் சலக்கோட்டையி லிரு ப்பவர்போ லிருந்தான். அங்குள்ள மாதவசிரேஷ்ட சிகாமணிகள் யாவரும் வந்து வந்து, பவளக்காட்டை போற் பிரகாசிக்கும் பஞ்சாக்கினிக்குள், முத்தை ப்போற் பிரகாசிக்குந் திருநீற்றை, மரகதம்போற் பிர காசிக்குந் தேகத்திற்பூசிச், செம்மணிபோற் பிரகாசிக் குஞ் சடைகளைவிரித்து, வச்சிரக்கட்டடனே பிரகாசி க்குங் காண்டீபத்தைத் தோளிலணிந்து, பஞ்சாத்தி னக்குன்றுபோற்பிரகாசிக்கும் அவ்வர்ச்சுனன், வெள் ளிபக்கிரியின் பிரகாசத்தால் தாவள்ளியநிறமாகிப்பிர காசித்துநிற்கின்றதை அவ்வவர்கள்கண்டு பிரமித்து சிலர் மரகதக்குன்றென்பர். சிலர் பவளமலையென்பர். சிலர் காட்டுத்தீயென்பர். சிலர் கலாக்கினியே யென் பர். சிலர் உய்த்துநோக்கி ஒருபால்வெண்ணிறம் ஒரு பால் மரகதநிறமாகிய அவயவ லக்ஷணத்தாற், பர்வத ராஜன் மனைவியாகிய மேனையளித்த பச்சைநிறப் பார் வதி சமேதனாகியபால்வண்ணச் சாம்பவமூர்த்தியென் பர். இவ்வாறு அங்குள்ள சகல முனிவர்களுந்தயங்கி மயங்கி வியந்து நயந்துதைக்கத் தவஞ் செய்தனன் விஜயகாண்டீபமென்னும் வில்லைக்கையிலேந்திய விஜய மகாராஜன்.

ஓ அரசனே! ஒருகாலத்தில் எனது குருவாகிய வேதவியாசர் இவன்செய்த தவத்தைப்பற்றிச் சொல் லிவரும்போது சூரியகுலத்தரசரிற் பகீரதன் முத லான அரசர்களினும், சந்திரகுலத்தரசரில் யயாதிமுத லான அரசர்களினும், இந்த அர்ச்சுனனைப்போலத் தவம்புரிந்தவ ரொவருமில்லை என்றும், மற்ற மனவுறு தியையுடைய அரசருள்ளும், தேவர்களுள்ளும், மனு க்களுள்ளும், இந்த அர்ச்சுனனைப்போல் மனவுறுதி கொண்டவர்களில்லை என்றுங் கூறி யிருக்கின்றனர். ஆகையால் அத்தவத்தின் மாட்சிமையை நீரே மதித் துக்கொள்ளும். இப்படியாக அர்ச்சுனன்பரமசிவனது உபய சரணாரவிந்தங்களை இதயகமலத்தி லிருத்தி, அப்பரமசிவனது ஆற்றலையுங் குணாதிசயங்களையும் பலவா றெடுத்தோதி, இரண்டு விழியினும் ஆனந்தநீர் பெருகி அருவிபோலச் சொரிய என்புருகிப் புளகாங் கிதனாகி, நெடுங்காலந் தவநிலையுற்றனன். இந்த அர்ச் சுனனைப் பெரிய கல்லென்று கருதி, யானைகளும் யா னைப்பேடுகளும் யானைக்கன்றுகளும் உடலினுண்டா கிய தினவுக்கு உராய்ந்துகொள்ளும். செவிகளைப் புற் றின் வாயென்று நாகங் கருதிப்போய்க் குடியிருக்கும் சடைகளைக் கொடியென்றும், அர்ச்சுனனைக் கொடி யோடு கூடிய மரமென்றுங் கருதி, பறவைகள் வந்து கூடுகட்டிவாழும் வெய்யிலுக்கு மெலியாமலும், ம ழைக்குச் சலியாமலும், கானலுக் கஞ்சாமலும், பனி க்குப்பரிவுறாமலும், இராப்பகலென்பதையறியாமலும் நெடுங்காலமாக அர்ச்சுனன் இப்படிப்பட்ட அகோர மானதவத்திலிருந்தான். இவனிப்படிப்பட்ட அகோர தவஞ்செய்ய இவனுக்குநேரிட்ட துன்பமென்னமோ வென்றால், இவனுக்குஒருகுற்றமுநேரிடவில்லை. வேத வியாசரின் கருத்தின்படி தவம்புரியவேண்டுமென்று நினைத்தநினைப்பென்று என்புத்திக்குத்தோன்றுகிறது சந்திரகுலந் தரசர்க்குச்சிறந்த அர்ச்சுனன் தவம்புரி

தலைக்கண்ட சூரியனானவன் இவன் பெருமையை எண்ணிமகிழ்ந்து, இவனளவில் தன்மையுடைய சந்திரனைப்போலாயினானென்றால், அர்ச்சுனன்செய்கிற தவத்துக்கு வேறொரு திருஷ்டாந்தம் வேண்டுவதில்லை அக்கினியால் அக்கினியைத் தகித்து, அதனாலுண்டாகும் வருத்தத்தை வாயுவால்நீக்கி, துவாதசாந்தத்தலத்துதிக்கும் அமுதத்தாற் குளிர்ச்சியடைந்தவனாகி, இதமாக நாளுக்குநாள் மனதையடக்கித், தற்பரசுவானுபவாள் சித்தம்போற் றழைத்து நின்றான் அர்ச்சுனராஜன். இவ்வாறு தற்பர நிச்சநிலையுற்றோரைப் போல் சித்தஞ்சலிக்கா திருந்தவனாயிருந்தாலும், பரமசிவனது பெருமைபொருந்திய அஷ்டலக்ஷணத்தைக் குறித்து மாறாமலறிவாற் புகழ்ந்துரைத்து மகிழ்ந்து, இரவும் பகலும் ஒழிவில்லாத பத்தியோடுங் குழைந்து, கடினமான வைராக்கிய சிந்தையோடு சற்றுமசைவில்லாமல் நின்று, தன் பகைவரை யதமாக்கும் பாசுபதாஸ்திரத்தை விரும்பி, அக்கணையைத் தரல்வேண்டுமென்று இருகரங்களை யேந்தித் துதித்திருந்தனன் அவ்விஜய காண்டீப தரனென்னும் அர்ச்சுன மகாராஜன்.

இந்திரன் அருச்சுனனுடைய தவநிலையறிதல்.

கேளும் மகாராஜனே! குருகுலாதிபனாகிய அர்ச்சுனன் தவஞ்செய்கிறதை அந்தரவாசிகளாகிய சாரணர்களறிந்து, முப்பத்துமுக்கோடி தேவர்கள்-நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள்-அஷ்டவசுக்கள்-கருடகாந்தருவ சித்தவித்தியாதரர்-முதலிய சகலரும் இருபுறமு நெருங்கியிருக்க, சாம்பவமூர்த்திக் கொப்பாகிய வியாழபகவான் வலப்பக்கத்திலிருந்து பல ஆசிகள்கூற, இடப்பக்கத்தில் அயிராணியிருந்து புளகமுற, கற்பகச்சோலையின் மத்தியிலிழைத்திருக்கும் நவரத்தினமயமாகிய சிங்காதனத்தில் வீற்றிருந்து, அரம்பை திலோர்த்தமைபாட, மேனகை யூர்வசி ஆட, அதைக் கண்ணுற்றிருக்கும் இந்திரனைக்கண்டு வணங்கி, அர்ச்சுனன் தவஞ்செய்யுந் திறத்தை யெடுத்தோதினர். இந்திரன் அர்ச்சுனன்செய்யுந் திறத்தை யெடுத்தோதினர். இந்திரன் அர்ச்சுனன்செய்யுந் தவத்தின் சிறப்பைமதித்து உள்ளம்பூரித்து, அருகிலிருக்குங் குலகுருவாகிய வியாழபகவானைப்பார்த்து அஞ்சலி வந்தனஞ்செய்து சொல்லுகிறான். ஓசுவாமி! ஆணவம்-மாயை-காமியம்-என்று சொல்லப்படுகின்ற மலங்கள் மூன்றில் ஒன்று ஒருவனிடத்திருக்கின், மற்ற இரண்டுந் தன்னோடு விர்த்தியாவதற்கிடஞ் செய்யும், இப்போது சாரணர்வந்துகூறிய அர்ச்சுனனோ? அரசர்குலம் அரசர்குலத்திலுஞ் சந்திரகுலத்தரசன். மேலும் எனது அமிசையாயிருக்கிறவன். குணம்-கல்வி-ஒழுக்கம்-தைரியம்-வீரம்-சத்தியம்-இதை யெல்லார்க்குமே யிரா. இவற்றுள் எவர்க்குஞ் சிற்சிலவே யுண்டாயிருக்கும். அவர்கள் மும்மலத்திற் சிக்கிப்பயனடையாமல் நானென்று கர்வித்து வருத்தமுற்றழிவர். இந்த அர்ச்சுனனோ? அவையனைத்தையு முற்று, மண்டலாதிபர்களையெல்லாம் வெற்றிபெற்றதுவுமன்றி, என்னையும் புறங்கண்டான். அவ்வளவு ஆற்றலைப் பெற்ற மஹானுபாவன், இப்போது ஆணவம்-மாயை-காமியம்-என்னு மிவைகளைப் பகைத்து வெற்றிகொண்டு தவஞ்செய்யுந் திறத்தை, யான் சோதித்தறிய விருப்பங்கொண்டிருக்கிறேன். ஆதலால் இதுவிஷயத்தைப்பற்றித் தங்கள் கருத்தென்னவென்று வினவ, வியாழபகவான் குறுநகைகொண்டு சொல்லுகிறார்.

ஓ தேவராஜனே! அர்ச்சுனனை மானிடனென்றும்-தேவனென்றும்-உனது அமிசையேற்றவனென்றுஞ் சொல்வது சொல்மாத்திரமே யல்லாமல், அவன் தேவனுமல்லன். மானிடனுமல்லன். மற்றயெதுவுமல்லன். உத்திராமிசையே ஒருருவமாகி வந்தவனென்றும், தேவபக்தி விசுவாசமென்பதே உயிராக வகித்தவனென்றுஞ் சொல்லவேண்டும். அவன் தவம் உன்னாலும், உன்கட்டளைக் குட்பட்டவர்களாலும் அழியத்தக்கதல்ல. ஆதலால் உன்கருத்துக் கெப்படி இசைவோ? அப்படி சோதியென்றுகூற, இந்திரன் மகிழ்வடைந்து, தன் சபையிலிருக்கும் மேனகை-ஊர்வசி-அரம்பை-திலோர்த்தமை-என்கிற நால்வரையு மழைத்து, ஓ மாதவர்களே! நீங்கள் இதுவரைக்கும் அனேகதவசிரேஷ்டர்களைமயக்கி, அவர்கள் தவநிலையை அழித்து, யாவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டீர்கள். தற்காலத்திற் சந்திரகுலத்தரசனாகிய பாண்டுபுத்திரர்களைவரில் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனன், வெள்ளியங்கிரியிற் றென்றிசையில் தவஞ்செய்கிறான். அத்தவத்தை அழித்துவருவீர்களாகில் அதுதான் உங்களுக்கு மேலான சிறப்பென்று கூறினன். அதை அந்நான்கு ஸ்திரீகளுங் கேட்டுக் குறுநகையோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, இந்திரனை நோக்கிச் சொல்லுகிறார்கள். ஓஸ்வாமி! இளமையிலேயே துறவறத்தைப்பூண்டு, யவ்வனத்தசைக் குரிய குற்றங்களி லழுந்தாமல், மனதையடக்கித் தவஞ்செய்து சிறப்புற்று, சாபானுக்கிரக சாமர்த்தியம் விளங்கும் மகாமுனிவர்களையெல்லா மெங்களில் ஒவ்வொருத்தி மயக்கியிட்டனளென்றால், காமோபாதையுட் சிக்கி, அக்காமன்வசமாகி, சித்திராங்கதை சுபத்திரை முதலான காந்தையரைக்கண்டுகாமமுற்று, அவர்களையெல்லாங்கலவிற்புணர்ந்து, பின்பு மணமும்புரிந்த ஓர் மனிதனை நாங்கள் மயக்குவது எங்களுக்குப்பெருமையோ? எங்களிலொருத்தியே அர்ச்சுனன் தவத்தை அழிக்கப்போதும். ஆனால் மகாராஜாவாக்கியம் பழுதுறாமல் நாங்கள் நால்வருஞ் சென்று, தங்கள்கருத்து மகிழ்வடைவதையே எங்களுக்குச் சிறப்பாகக்கொண்டு, இப்போதே அவ்வர்ச்சுனன் தவத்தை அழித்துவருகிறோமென்று கூறினர்.

அதுகேட்ட இந்திரன் மகிழ்ந்து விடைகொடுக்க, அவ்விடையையேற்ற நான்குமாதர்களுந் தங்களா

ண்மலைக்குவந்து, ஆகாயநதியில் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்து, நல்லவஸ்திர முடுத்தி, சைவலத்தையும் நீர் கொண்ட மேகத்தையும் வென்ற நெருங்கிய கரியகூந்தலை வாரிமுடித்து, பரிமளமிகுந்த நறுமலர் மாலைகளையும் பாரிசாத புஷ்பங்களையும் புனைந்து, நெற்றியிற்றிலதமிட்டு,கண்ணுக்குமையெழுதி, சந்தனப்-புனுகு-கஸ்தூரி கர்ப்பூரம்-சவ்வாது-குங்குமம் இவை முதலிய வணிந்து, வட்டமிட்ட பயோதரமென்னுஞ் சக்கிரவாகப் பக்ஷியானது பறந்துபோகா வண்ணம் நவரத்தின மாலைகளாகிய வலையை மார்பாகிய இடத்திற்பரப்பி, நாகரத்தினங்கள் பதித்த கைக்கடகங்களையணிந்து, இருவர்களி லொருவரைக்கண்ட மாதவ முனிவர்கள் காமவெறிகொண்டு ஓலமிடுவதுபோல் ஒலிக்கும் நூபுரங்களைக் காலிற்புனைந்து, பூலோகத்திலுள்ளவர்களெல்லாங் காமவெறிகொள்ள வெளிப்பட்டு, தங்களுக்குச் சகாயபுருஷனாகிய மதவேளை யெச்சரித்துக் கைலையைச் சார்ந்தார்கள். அம்மதவேளுந் தன்னை அழகில்வென்ற அர்ச்சுனனை வெற்றிபெறுங் காலமிதுதானென்று கருதி வெளிப்பட்டான். வசந்தகாலமு மொத்துக்கொண்டது. மரங்களெல்லாந்தளிர்த்தும் - தழைத்தும்-அரும்பியும்-மலர்ந்தும்-காய்த்தும்-பழுத்தன. மலர் வர்க்கமெல்லாம் வண்டினங்களிக்க மதுவைச்சொரிந்தன. தடாகத்திலிருக்குந் தாமரைகள் மலர்ந்து அன்னங்களுக்குப் பஞ்சணைகளாயின. வண்டுகள் யாழொலிபோலொலிக்க, குயில்களுங், கிளிகளும்பாட, மயில்களாடின. எத்திசை நோக்கினும் மல்லிகை - முல்லை-இருவாட்சி-சண்பகம்-கோங்கு-மந்தாரை - முதலிய மலர்களின் வாசனையாக விருந்தன. நற்குண நற்செய்கையை யுற்று, இராஜவமிச பரம்பரையிற்றோன்றி, வாழ்வுமிகுத்து, இளவயதுடைத்தாகி, கருப்பவதியாகிய ஓரிராஜகன்னிகை பத்துமாதத்தில் நடக்கும் நடைபோல, சாம்பவமூர்த்திசன்னிதானத்திற் றமிழோதிய குப்பமுனிக் கிருப்பிடமாகிய பொதிமலையிலிருக்குந் தென்றலானது சந்தனவனத்திற் சஞ்சரித்து, மலர்களிற்படிந்து, அச்சாம்பவமூர்த்தியின் சடாபாரத்தி லிருக்குங் கங்கையும்-வெள்ளியங்கிரியில் நின்றிழியும் அருவியும் - சந்தன வாசனையுற்று மணக்க மெல்லென நடந்துவந்தது.

அப்போது மாரனானவன் முன்னமொருதரங் கைலைக்கு வந்து உருவழிந்ததை எண்ணிக் கண்ணிய மனத்தனாக இருந்தபோதிலும், இமயமலையிற் பிறந்த இமையாக் குயிலுக்கினமாகிய கோகிலங்கள் தனக்குத் துணையாகிக இருக்கின்றதென்கிறகருத்தினாலும், தவஞ்செய்கிறவன் மானிடன்றானேயென்கிற அலக்ஷியத்தினாலுங் கிஞ்சித்துத் தைரியங்கொண்டு, கைலையைச் சார்ந்து, மகாமேருவை வில்லாகப்படைத்த சாம்பவமூர்த்தியை வெற்றிபெற்ற தன் கருப்புவில்லை யெடுத்து நிறுத்தி வளைத்துப் பிடித்து, வண்டாகிய நாணியையேற்றி, வனங்களெங்கும் மலர்க்கணை மாரியாய்த் தயங்கும்படி சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம் மோகம் மரணம் என்னுமவத்தைகளைத் தாத்தக்க, உன்மத்தம் மதனம் சம்மோகம் சந்தாபம் வசீகரணம் என்னும் பெயர்களையுடைய வனசம் சூதம் அசோகு முல்லை நீலம் என்கிற மலர்ப்பகழிகளை அமோகமாகத் தூவி, அங்குள்ள உயிர்களனைத்துஞ் சொல்லும் நினைவும் வெய்துயிர்த்திரங்கலும் வெதுப்புந் தெவிட்டலும் அழுங்கலும் பிதற்றலும் அயர்ப்பும் மயக்கமும் ஆகிய செயல்களையடையத் தன்னரசு செய்துகொண்டு வருகிறான். அப்போது முன்பு கைலையைச் சார்ந்த மேனகை ஊர்வசி அரம்பை திலோத்தமை என்னும் நால்வருமக் கைலயங்கிரிக்குத் தென்பக்கத்தை நோக்கி அர்ச்சுனன் தவஞ்செய்யும் வனத்துக்குவந்து தங்கள் மேனியிலணிந்த வாசனை யோசனை தூரம் நாற்றிசையினும் வீச நான்கு சந்தனமரத்தடியில்நின்றனர். மாரனும் அந்த வேளைவந் தொத்துக்கொண்டான்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! மனுநெறி முறைப்படி செங்கோல் நடாத்தும் வீர தீர உதார காம்பீர சூரியகுல சிரேஷ்டராகிக் கௌசிக மகாராஜனென்றியற்பெயரை வகித்த விஸ்வாமித்திரரானவர் ஒரு திவ்வியதினத்தில் மிருகவேட்டை யாடும்பொருட்டுத் தனது சேனாசமூகங்களோடு குரூரவனாந்திரத்துட்பிரவேசித்துக் கோர மிருகங்களைக் கண்டதுண்டஞ்செய்து வரும்வழியில் ஜலம் நலம் மடம் தடம் சாலை சோலை இவையில்லாத உக்ரதீக்ஷண்யாரண்யத்துளகப்பட்டு, அந்த க்ஷேத்திர தீக்ஷண்யத்தினால் தானுந் தன்னுடைய வீரசைனியங்களும் மிகுந்த இளைப்புங் களைப்பும் பொருந்தி அன்னபான பலாதிகள் யாதொன்றுங் கிடையாமல் மிகுந்த கிலேசசாகரத்திலாழ்ந்தி தவித்துத் தள்ளாடி மெய்சோர்ந்து மயங்குங்காலையில், பிறவிக் குருடனுக்குத் தெய்வங் கண்கொடுத்ததுபோல் அநேக தபோ முனிவர்கள் புடைசூழ்ந்து ஆத்மக்கியான வாசிகளாக மலரடி லணங்க திரிபுண்டர குண்டல திரிதண்டு கமண்டல காவிகாம்பரமானது பசுபதியைப்போலிலங்க சத்வ விசாரணா கோஷமானது முழங்க ஒரு பர்னகாசிரமத்திலே வீற்றிருக்கும் பிரம்மக்கியானியாகிய வசிஷ்ட மகாமுனிவரைக்கண்டு தீர்க்கதெண்டஞ் சமர்ப்பிக்க, அவர் வணங்கிநின்ற அரசனையும் அவனுடைய சேனைகளையுங் கண்டமாத்திரத்தில் தமது கியான நேத்திரத்தினால் இவர்களனைவரும் இன்னாரென்றும் இவர்கள்வந்தவேது வின்னதென்றுங் கண்டுணர்ந்து கொண்டு உடனே காமதேனுவென்னுந் தெய்வப்பசுவை வரும்படி நினைக்க, அது வந்து வசிஷ்டரை வணங்கி அவரது ஆக்ஞாபனைப்படி அந்தக் கௌசிகமகாராஜனுக்கும் அவன்சைனியங்களுக்கும் விடுதிமுதலிய சவுக்கியங்களையும் உபசாரமிகப்பெற்றதிவ்யபோசனங்களையுமீய்ந்து களை தவிர்த்துப் புளகிதமுறச்செய்ய, இப்படிசெய்த

அவ்வற்புதத் தெய்வப் பசுவைக்கண்ட கௌசிகராஜனும் படைகளுங் களிகூர்ந்து இப்பசுவைப் பிடித்துக்கொண்டு போகாமல் ராச்சியபாரத்தை நாம் பாரிப்பதில் நமக்கென்ன லாபமென்று கருதி வசிஷ்டர்பாற் சென்று வணங்கி ஓய்தவசிரேஷ்டரே இந்தப்பசுவை எமக்களிக்கவேண்டுமென்றுகூற, வசிஷ்டர் அது எனக்குச் சொந்தமல்ல தேவர்களின் பொதுவென்றுரைக்க, அம்மொழியை மறுத்து அரசன் அப்பசுவை துராக்கிரதமாய் பலவந்தத்திற் பிடிக்க வெத்தனிக்க, அப்போது அப்பசுவானது ராஜ சைநியங்களை யதாகதஞ்செய்து தெய்வலோகம் போய்விட, அக்காரணமறியாத கௌசிகராஜன் தனது படை அதமானதற்குக்காரணம் வசிஷ்டரேயென்று கருதி அவருடனே ஆயுதவர்க்கங்களாற் கொடும் போர்புரிய அதுகண்டு வசிஷ்டமுனிவர் தமது யோகதண்டத்தைத் தமக்கெதிரே நாட்டிவைத்துவிட்டுத் தமது தபோநிஷ்டையிலிருக்க, அரசன் தான்விடுத்த ஆயுதங்களையெல்லாம் அந்தத் தண்டங் கவளீகரித்துக்கொள்ளுவதால் அம்முனிவரை மேற்கொள்ளச் சக்தி யில்லாமைகண்டு அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வமென்பதையுந் துறவிக்குவேந்தன் துரும்பென்பதையுங்கருதி தனது ராச்சியத்தை வெறுத்தப் படைகளை நகருக்கனுப்பி வசிஷ்டர் வாயினால் பிரமரிஷியாக வேண்டுமென்று மிகுந்த பக்தி முக்தி வைராக்கியத்தினால் யாவருந் துதிக்கத் தவம்புரிந்து பிரமசிருஷ்டிக்குப் பதிற் சிருஷ்டிசெய்து சாபானுக்கிரக சாமர்த்தியமும் பெற்ற அவரையும் மேனகையென்பவள் தன்னுடலிற் பூசிய பரிமள வாடையிற் சொக்கச்செய்து தவத்தையழித்தனள்.

ஒருவரா லளவிடத்தக்கதல்லாத சுந்தரமுடைய திலோத்தமையென்பவளோ? சுந்தோபசுந்தாளென்று பெயர்வகித்து மூன்று லோகத்தையுந் தங்கள் வசமாக்கிக்கொண்டு சக்கிரவர்த்திகள்போலிருந்தவர்களை மயக்கிவிட்டதுமன்றி, அவர்களுக்கவர்களே விரோதித்து ஒருவர்கையில் ஒருவரை மடியுப்படி செய்துவிட்டனள். பெருமைக்கு அளவில்லாத ஊர்வசியென்பவளோ? தன் அவயவக்குறியாற் சதானந்தரை மயக்கிவிட்டவள். அரம்பையோ? பாரத்துவாசரை மயக்கிவிட்டவள். இந்த நால்வர்க்குஞ் சகாயமான மாரனோ? அளக்கரிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது மன்றிக் கலங்கா நெறியையுடைய சாம்பமூர்த்தியின் யோகத்தை அழித்தவன். மகா பராக்கிரமசாலி. அவனுந் தனது பஞ்சபாணங்களில் முல்லை முதலாய் நான்கு பாணம் வரைக்கும் எய்து, அதற்குதவியாக மற்ற மலர்வாளிகளையும் பிரயோகித்தான். மேருவில்லியாகிய பரமசிவனதுயோகத்தைநீக்கிய மலர்வாளிகளானவை அர்ச்சுனனளவிலொரு பயனுமடையாமல் முகமலர்ந்து கண்ணீர்சிந்தி வாடிப்போயின. இவ்வளவு ஆரபாரத்திற்கும் விழித்தகண் விழித்தபடியிருக்கும் அர்ச்சுனன் சிந்தையானது எள்ளளவேனுங் கலங்கவில்லை. மேனகைமுதலாகிய நான்குஸ்திரீகளும் அர்ச்சுனன் தவத்தின்திறத்தைநோக்கி, நாம் துலைவிலிருப்பதிற் பயனில்லையென்று கருதி, விழித்த கண்ணுடனிருக்கும் அர்ச்சுனன்முகத்துக் கெதிரிற் றோன்றுஞ் சுனையருகில்வந்து ஸ்நானஞ்செய்பவர்கள்போல் அபிநயித்தும், உடுத்தியிருக்கும்வஸ்திரங்களை அவிழ்த்து அவயவங்தோன்றநின்றும், நிருவாணிகளாக வஸ்திரங்களைக் கரத்திற்பிடித்து உலர்த்துந்தன்மையாய்ச் சற்றுநேர முலாவினர்கள். அதிலும் அர்ச்சுனன் சித்தங் கலங்கவில்லை. அதுபார்த்துப் பின்னும் நெருங்கி அர்ச்சுனன்முன் பந்தடித்தும், பூமாலைகளையும் புஷ்பங்களையும் அவன்மீது எறிந்தும், புருஷன் எதிரிலிருக்கிறானென்று எள்ளளவேனும் நாணங் கொள்ளாமல் தங்கள் வஸ்திரங்களை அவிழ்த்துவிடுகிறவர்கள்போல் அல்குலாதிகள் தோன்ற எதிரில்நின்றும், இன்னுமிவ்வாறான பற்பல மாயாமோகன மதனமிர்த ஜாலவினோதவித்தைகளை யெல்லாஞ் செய்து வந்தார்கள். இத்தனைக் கோலத்திற்கும் அர்ச்சுனன்கண்விழித்திருந்தும் அவர்கள் செய்கையை யறிந்தவனும் அவர்கள் உருவத்தைக் கண்டவனும் அவர்கள் அரவத்தைக் கேட்டவனு மல்லன்.

அதனால் நான்குமாதரும் ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து ஓ! ஓ! மோசம்வந்தது. இதுவரைக்கும் நாம் ஒற்றையாய் அநேக முனிவர்களை மயக்கிப்பெரிதான சிறப்புற்றிருந்தோம். நாம் நால்வரும் ஏககாலத்தில் ஒரு நரனை மயக்கவந்து, நாமே இந்தத் தென்றலாலுந் தவஞ்செய்வோனது தேக சவுந்தரியத்தாலுங் காமமீறி மனவருத்தமுறலாயிற்று. இனிநமக்கென்ன சிறப்பிருக்கின்றது? தேவப் பிர்மரிஷிகளை வென்ற நாம் ஒரு மானிட ராஜரிஷியைவெல்லாமல் தேவராஜனிடத்திற் செல்வோமாகில், நமக்கென்ன பெருமை கிடைக்கும்? பின்பு நம்மை யார்தான் மதிப்பார்கள். என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு முடிவில் எதற்கு முருகாதவன் இசைக்குருகுவான் என்கிற பழமொழியை நினைத்து, இசையால் இந்த ராஜரிஷியை நமது மனதுங் கிசைவிப்போமென்று கருதி, அரம்பை திலோர்த்தமை இருவரும் மகரயாழ்களை எடுத்து ஏழிசை நரம்புகளை ஏழிசைக்குஞ் சரியாக இறுக்கி இசைகூட்டி பாடினர். மேனகையுமூர்வசியும் அவ்விசைக் குறைவுபடாமல் திவ்விய அபிநய ரசத்தோடுநிர்த்தனஞ்செய்தனர். இந்தஇசையைக்கேட்ட மிருகங்களும் பறவைகளும் பரவசமாகிநின்றனவென்றால், அந்த இசையினது பெருமை என்னானுரைக்க வல்லதோ! இவ்வாறு நான்கு மாதர்களுந் தங்கள் தங்கள் சாதுரிய சமர்த்தாற் பலபல விநோதங்களைச் செய்தும், அவற்றுள் ஒன்றும் பயன்படாமற் காட்டிற் காய்ந்த நிலவைப்போலவே மனந் தளர்வுற்றுக் காம வெறியுற்றனர். பஞ்சாக்கினி இல்லாவிடில் அவர்கள் கொண்ட காமவெறி அர்ச்சுனன்மேல் தாங்காமல்

விடாது. அவ்வளவு காமவெறிகொண்டவர்களாகியும் அர்ச்சுனனை நெருங்குவதற்குப்பயந்து சில ஜால வித்தைகள் செய்தார்கள். அதற்குத்தக்கபடி மாரனும் மலர்வாளிகளைத் தனது கருப்புவில்லிற் றொடுத்தெய்யச் சாவகாசமில்லாமற் கொண்டது கொண்டமட்டிற் கையோயாமல் வாரிவாரியுந் தூவினான். அதனாலும் அவன் கலங்காமற்போகவே அந்நான்கு மாதர்களுஞ் சக்தியற்றவர்களாகி இனி நம்மால் அர்ச்சுனன் மயங்கானென்று கருதி மனவருத்தமுற்று வந்த வழியை நோக்கி இந்திரலோகஞ்சென்று தங்கள் நாயகனாகிய இந்திரனை வணங்கிப் புஷ்பித்த மரம்போலிருந்தாரேயன்றி, ஒருமொழியுங் கூறினவரல்லர். அதனை இந்திரன்கண்டு, ஒ மாதர்களே! நினைத்துப்போன கருமம் நிறைவேறிற்றோவென்று வினவினன். அதற்கவர்கள் மனவருத்தத்தோடு தலைவளைத்து, மிகுந்த நாணத்தோடு இல்லையென்றுகூறி விடைபெற்றுத் தங்கள் தங்க ளிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

அர்ச்சுனன்மேலெதிர்த்த மாரன் தன் கார்முகமாகிய கருப்புவில்லில் திவ்விய மலர்வாளிகளைத் தொடுத்தும், கைக்கொண்டமட்டும் வாரிவாரி யெறிந்தும், யாதொரு பயனுமடையாமல் மனங்கலங்கி ஒ ஒ சாம்பவமூர்த்தியை யெதிர்த்தகாலத்து அவரால் நமது தேகமொழிந்தாலும் நாம் நினைத்துப்போன கருத்தை நிறைவேற்றிக் கொண்டோம். தற்காலத்தில் இந்த மானிடன்மேலெதிர்த்தும் அவனது தவம் அழியவில்லை. இனி நாம் நிற்போமாகில் இந்த மகாத்துமாவால் நமக்கென்ன கெடுதி நேரிடுமோ வென்று கருதி, சாம்பவமூர்த்தியின் யோகநிலையை யழிக்கவந்து தன் தேகத்தையிழந்த அம்மாரனானவன் அவர்பத்தர் நிலையையழிக்கப் புகுந்தால் தனது சீவனும் போய்விடுமென்றுகருதிச் சூடுண்டபூனை யோடுவதுபோல் தன்னிருப்பிடத்திற்சென்று துன்பசாகரத்திலழுந்தினான். அவனைப்போலவே சூரியனுந் தனக்குள்ள சுபாவகாந்தி இவனுடைய தபாக்கினிக்காந்தியாலழிவுறுமென கருதிப்பயந்து மேற்றிசைக்கடலி லாழ்ந்தான். இப்பால் இந்திரன் தன் புத்திரனாகிய அர்ச்சுனன் தவவுறுதியைக்கண்டு மகிழ்வடைந்து நாமே உருமாறிச் சென்று அர்ச்சுனன் மனவுறுதியை அறியலாமென்று கருதி, தக்ஷணங் கயிலைக்குவந்து தன்னுருவை மாற்றிப் பிராமண சன்னாசி வேடந்தரித்து காவிகாம்பர தண்டு கமண்டலதாரியாகி, மான்தோல் புலித்தோல் தோளிற் பிரகாசிக்க அர்ச்சுனன் தவநிலைசேர்ந்து, அவன் செய்யுந்தவத்தின் திறத்தையுந் திடச்சித்தத்தையுங் கண்டு வியந்து, அத்தவநிலை யருகிற் சென்றான். அர்ச்சுனன் தவஸ்வரூபிராகிய வேதியரைக் கண்டு சித்தத்தைச் சிவனிடத்திற் செலுத்தி வந்த தவசிக்கு மனமகிழ வந்தனைசெய்தான். அப்போது வேதியனாகிய இந்திரன் சொல்லுகிறான். ஒ தவசீ! நெடுநாளாக இந்தவிடத்தில் தவஞ்செய்கிறாய். நீ கருதிய கருத்தென்னவென்று வினவினன். அர்ச்சுனன் சொல்லுகிறான். ஒ சுவாமி! இந்தக் கைலாசபதியை என் கண்ணாற்காணத் தவம்புரிகிறேனென்றான். அதற்கு இந்திரனாகிய பிராமணத்தவசி நகைத்துச் சொல்லுகிறான்.

ஒ தவசீ! நீ இந்த வனத்துக்கு வந்த நாள்முதலிதுவரைக்கும் நீ தவஞ்செய்ததைப் பார்த்துவருகிறேன். ஐந்துவருடகாலமாயிற்று, உன் மனக்கருத்து நிறைவேறவில்லை. கிட்டாதாயின்வெட்டெனமற என்கிறவேதவாக்கியத்தை நீகருதாமற்கிட்டாப்பொருளை கருதித் தவநிலைசேர்ந்தவனாக என் கருத்துக்குத்தோற்றப்படுகிறது. ஐயையோ! கிட்டாப்பொருள் கிட்டுமோ? இதென்னபுத்தி? உன் வடிவத்தைப்பார்த்தால் இராஜவடிவமாக இருக்கிறது. தவசிரேஷ்ட சிலாக்கியர்களாகிய முழுதுந் துறந்த பெரியோர்களுக்குங் காணவொண்ணாப் பரமனை அரசனாகிய நீ காண்குவையோ? பிர்மா விஷ்ணுவுக்கும் அருமையானவர் உனக்கு எளிதில் தரிசனங் கொடுப்பரோ? என்று கூறினன். சிவனிடத்திற் கருததைச் செலுத்திய அர்ச்சுனன் எதிரில்நின்று கேலிபண்ணுந் தவசியைப்பார்த்துச் சொல்லுகிறான். ஒ சுவாமீ! எண்ணிய வெண்ணம் பயன்படுமென்று வேதம் முறையிடுகின்றமையால், நான் நினைத்தகருமம் நிறைவேறுகிற பரியந்தம் இத்தவநிலையை விட்டகலேன். காயம் அநித்தியமென் பீராகில், காலம்வந்து காயமழிந்து விடுகிறபரியந்தம் இந்தத்தவத்தை விடேனென்றுகூற, இந்திரன் மகிழ்ந்து மாறுருபத்தை மாற்றித் தன் சுயரூபத்தைக் காட்டி, மைந்தனைப் பலவாறுபுகழ்ந்து, அப்பா அர்ச்சுனா! நீ சாம்பவமூர்த்தியைக்கண்டு தரிசித்துக் கருதியபடி பாசுபதாஸ்திரத்தைப் பெறக்கடவாய் என்று பல ஆசிகள்கூறித் தன்னிருப்பிடத்துக்குக்குச் சென்றான். அர்ச்சுனன் கங்கையு மூன்றாம்பிறையையுந்தரித்த முடியையும், மதனையெரித்த விழியையும், புரத்தைக்கொளுத்தி நகைத்த முறுவலையும், விஷத்தையடக்கிய கண்டத்தையும், மேருவை வில்லாகவளைத்த புஜங்களையும், யானையையுரித்த கரங்களையும், புலித்தோலை வரிந்துகட்டிய இடையையும், பார்வதி கலந்த திருவுருவத்தையும், யமனை யுதைத்த பாதத்தையுங் கருத்திற் பாவனைசெய்து துதித்துக், கற்சிலைபோல ஐந்துவருஷகாலந் தவத்திலிருந்தான்.

அருச்சுனன் செயலை நாரதமுனிவராலறிந்த துரியோதனன் மூகாசுரனை ஏவுதல்.

ஒ ஜெனமேஜெய மகாராஜனே! கைலையங்கிரியில் அர்ச்சுனன் செயல் இவ்வாறிருக்க அஸ்தினாபுரியிற் கவுரவகுலதிலகனான துரியோதனன் ஆறுலக்ஷத்தறுபத்தினாலாயிரம் பட்டவர்த்தனரும் மூன்றுலக்ஷத்து முப்பத்தீராயிரம் மகுடவர்த்தனரும், பௌரோகிதர் பண்டிதர் மந்திரிமார் தண்டத்தலை

வர்-வியூகத்தலைவர் - அணித்தலைவர்-படைத்தலைவர் - சேனைத்தலைவர்-வேதவேதியர்-வீஷ்மர்-கிருபர்-துரோணர்-அஸ்வத்தாமா-விதுரன்-கர்னன்-துர்ச்சாதனன்-முதலானவர்களும், இன்னுமுள்ள பரிவாரஜனங்களுந் தன்னைப் புடைசூழ்ந்திருக்கச் சபாமண்டபத்திலிருக்கும் நவரத்தின சிங்காதனத்தில் பூலோகதேவேந்திரனைப்போல இனிது வீற்றிருக்கிற தருணத்தில்; இசையில் வல்லவராகிய நாரதமகாமுனிவர் வந்தார். நாரதர் வரவைக்கண்ட துரியோதனன் எழுந்தெதிர்சென்று அழைத்துவந்து பொற்பீடத்தி லிருத்திச், சோடசோபசாரமுஞ்செய்து வணங்கினான். நாரதர் வணங்கிய துரியோதனனுக்குப் பல ஆசிகள்கூறிச், சிங்காசனத்திலிருக்கக் கட்டளையிட்டார். அவ்வாறே துரியோதனன் சிங்காசனத்திலிருந்து, பஞ்சவரைப் பஞ்சைகளாக்கிக் காட்டில் துரத்திவிட்டு மிகுந்த மமதை கொண்டிருக்கிறவனாதலால் பஞ்சவர்க்குத் தரிசனந்தரவந்த நாரதரைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ ஸ்வாமி! தங்களைப்போன்ற மகா முனிவர்களுக்கெல்லாம் பூஷணமாகி யிருந்த பாண்டுபுத்திரர்கள் இந்திரப்பிரஸ்தத்தைவிட் டிங்குவந்து, எங்கள் நல்லம்மானாகிய சகுனிராஜனோடு வலியச் சூதாடி நாடு நகரமுதலியவற்றைத் தோற்றுப், பெரியோர்களுடைய கிருபையை அதிகமாகப் பெற்றிருந்தும் அப்பஞ்சவர் பஞ்சைகளாகி வனத்துக்குச் சென்றார்கள். அவர்கள் சேதி யேதாவது தெரிந்திருந்தால் அடியேனுக்குத் தெரிவிக்க விரும்புகிறேனென்று வினவ, திரிலோகசஞ்சாரியாகி யாவருடைய மனதையுங்கண்டு தெளிந்திருக்கிற மகாத்துமாவாகிய நாரதமுனிவர் சற்றுலோசித்து, அடடா!! இவன் கொடிய துர்மார்க்கன். நம்மை இழிவுபடுத்தாததுபோல் இழிவுபடுத்தத் தங்களைப்போன்ற பெரியோர்களுக்குப் பூஷணமாகிய பஞ்சவரென்று ஐவரைச் சிறப்பித்துப், பின்பு பஞ்சவர் பஞ்சையாயினரென்று குறித்தான். இப்படி குறித்ததினால் பெரியோர்களுக்கு இழிவு வந்ததென்று தமது கருத்தில் மதித்து, இத்தருணத்தில் உண்மையை வெளிப்படுத்தினால் இறுமாப்படைந்த இவனுக்குக் கிஞ்சித்து அஞ்சிக்கையுண்டாவதோடு, தேவாகண்டகனான மூகாசுரனும் நாசமடைவா னென்று கருதி; துரியோதனனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

அப்பா துரியோதனா! பஞ்சவருள் தருமன்-வீமன்-நகுலன்-சகாதேவன்-பாஞ்சாலி-இவர்கள் சேதி எனக்குத் தெரியாது அவருள் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனன் கயிலாசகிரிக்குச்சென்று, தன்பகைவரை முடிக்கப் பாசுபதாஸ்திரம் வேண்டிப் பரமசிவனை நோக்கித் தவத்திலிருக்கிறான். இந்தச் சேதி மாத்திரம் எனக்குத்தெரியும். இதனைக்குறித்து நீ முன் சாக்கிரதைப்படுவாயென்று உனக்குச் சொல்லவந்தேனென்றுகூறித், தமது கருத்துக்கிசைந்த விடத்துக்குச் சென்றார். இப்பால் துரியோதனன் நாரதர் வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் இடியைக் கேட்ட நாகம்போல் நடுக்கமுற்றும், மனவருத்த முறுதலைப்போ லபிநயித்துக் கொலுகலைந்து, அரண்மனைக்குச்சென்று, மனோவியாதிபிடித்து, இதற்கென்னசெய்கிறதென்று பலவாறுயோசித்து, பூர்வசென்மத்தில் இவன் அசுரராஜனானமையால் தன்னினமான மூகாசுரனென்கிற அசுரனை நினைத்தான். தக்ஷணந் துரியோதனன் எவனுங்கெதிர்பார்த்திருக்கும் அசுரர்களிலொருவனாகிய அம் மூகாசுரன் அவன் கண்ணுக்குத்தோன்றி வணங்கிநின்றான். அவனைத் துரியோதனன்கண்டாலிங்கனஞ்செய்து பலவாறு புகழ்ந்தான். மூகாசுரன் வணங்கிய சிரத்தனாகிச் சொல்லுகிறான். ஓ மகாராஜனே! என்னை நினைத்தகருமம் என்ன? அதனைத் திருவுளங்கனிந்து கூறல்வேண்டுமென் றுரைத்தான். அதற்குத்துரியோதனன் சொல்லுகிறான். ஓ எனது அன்பிற்சிறந்த நண்பனே! எனக்குப் பகைவனாகிய அர்ச்சுனன் என்னைக்கொல்லப் பாசுபதாஸ்திரம்விரும்பிச்சாம்பவமூர்த்தியைநோக்கித்தவஞ்செய்கிறானாம். நீ ஒருபன்றிரூபமெடுத்துக் கைலைக்குச்சென்று, தவஞ்செய்துகொண்டிருக்கு மவ்வர்ச்சுனனைக்கொன்றுபோடவேண்டுமென்றான். தன்னுயிர்க்குக் கெடுதிவருவதையறியாத மூகாசுரன் அக்கருத்துக் கிசைந்து விடைபெற்று. அத்தினபுரத்தைக் கடந்து, தன்னுருவத்தைமாற்றிப் பன்றிரூபமெடுத்தான். அப்பன்றியினது பெருமையை என்னாலுரைப்பதற் கருமையாயினுங்கூடியமட்டு மெடுத்துச் சொல்லுகிறேன்கேளும்.

ஓ மகாராஜனே! அப்பன்றியின் தேகம்-சொர்ணநிறம் நகங்கள் - வெள்ளி நிறம். கண்டம் - உயர்ந்த புஷ்பராகம் கால்கள் - பவளநிறம். கண்கள் - செம்மணிகள். முகம் - பச்சை. செவிகள் - நீலம். பற்களுங் கொம்புகளும் - வச்சிரம். காத்திரம் - பர்வதாகாரம். அது நடக்கும்போது அஷ்டகுலபர்வதங்களும் அஷ்டகஜங்களும் அசையும். சுவாசம்விட்டுவாங்கும்போது அளவில்லாத மிருகஜெந்துக்கள் மடியும். வயிற்றினாற் கடல்சூழ்ந்த நெடியவுலகத்தைமறைக்கும். இப்படிப்பட்ட பன்றி எவற்றைப்போ லிருந்ததென்றால் முன்னொருபோது ஒருகொம்பினால் ஈரேழு லோகத்தையுந் தூக்கிய திருமால்கொண்ட வராகம்போலும், அரிச்சந்திரனை வெற்றிபெற விஸ்வாமித்திரன் தவத்தால் சிருஷ்டித்த வராகம்போலுமிருந்தது. மேலும்-பாசக்கயிறுகொண்டு உலகிலுள்ள உயிர்களைக்கொள்ளைகொள்ளும் யமனும், இப்பன்றியின் சுவாசத்தைத் தன்னுயிர்க்குக் கெடுதிவிளைக்கும் பாசக்கயிறென்று கருதி அஞ்சி யொதுங்கிப்போவானெனில்: அதனது பெருமையை யாவராலுரைக்கக்கூடும். இப்பன்றியானது இடியைப்போலுறுமிக், காற்றைப்போல்நடந்து, காடு-மலை - முதலிய பல வனாந்திரங்களைக் கடந்து, வெள்ளியங்கிரியைச் சேர்ந்து, நடந்துவந்த இளைப்பாற ஒரு பெரும்புதரி லிருந்தது.

கைலாசபதி அருச்சுனனிடத்தில் வேடுவனாக வருதல்.

இங்கே அர்ச்சுனன் -மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-இவற்றின் வழியாகிய ஐம்புலன்களையு மடக்கிப் பரமசிவனைத் தியானித்துப் பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம்புரிகிறான், சகலலோக கர்த்தனாகி யாவருள்ளத்து மிருக்கின்ற சாம்பவமூர்த்தி அர்ச்சுனனுடைய தவத்தின் திறத்தையும் - மனவுறுதியையும் - அறிந்து உள்ளம்பூரித்து, யாதுமுணராதவர்போ லிருந்தனர். அத்தருணத்திற் பார்வதியாரின் பணிப் பெண்கள் ஏதோ ஒரு காரியார்த்தமாக அர்ச்சுனன் தவஞ்செய்யுந் திசைக்குவந்து, அவன் நிலையைக்கண்டு ஆச்சரியமடைந்து, தங்கள் யஜமானியாகிய பார்வதியாரிடத்துவந்து வணங்கி, அர்ச்சுனன் தவத்தின் திறத்தை யோதினர். பார்வதி தேவியார் கேட்டு, உடனேகியான திரிஷ்டியாற் பார்த்து மகிழ்ந்து, தமது கணவனாகிய பரமசிவ னிடத்துவந்து வணங்கி நின்று சொல்லுகிறார். ஓ ஸ்வாமீ! எப்புவனங்களினு முள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் பிதாவைப்போல விளங்கி, யாவர்கருத்தையும் ஒருகணத்தி லளந்தறிகின்றவராயும், சகல தேவர்களுள்ளுஞ்சிறந்து மஹாதேவனென்னும் பெயருடைமையைப் பெற்றவராகியு மிருக்கிற தாங்கள், ஏதுமறியாதவர்கள்போல வெள்ளியங்கிரியைவிட் டகலாமலும், அடுத்தவரையாதரியாமலு மிருக்கின்றது தகுதியா? சந்திரகுல திலகனாகிய அர்ச்சுனன்தவத்தின் பெருமையைத் தங்கள் சித்த மறியாதா கிருபைகூர்ந்து அர்ச்சுனன் மகிழும்படி தரிசனங்கொடுத்தருளுமென்று வேண்ட, சாம்பவமூர்த்தி குறுநகைகொண்டு சொல்லுகின்றனர்.

ஓ பெண்கள் சிகாமணியே! அர்ச்சுனன் தவஞ்செய்தலை நீ இன்றுணர்ந்தாய். நான் முன்னமே தெரிந்துகொண்டேன். அவன் தவஞ்செய்ய ஆரம்பித்து மானிடவருஷத்தில் ஐந்துவருஷகாலமாயிற்று. இதில் தேவேந்திரன் தன் கட்டளைக்குக் கீழ்ப்பட்ட மேனகை - அரம்பை - ஊர்வசி - திலோர்த்தமை - என்னும் நான்குமாதரை விடுத்து, அர்ச்சுனன்தவத்தை அழித்துவரக் கட்டளையிட்டான். அந்த நான்கு மாதர் தங்களாற் கூடியமட்டுஞ் சாலவித்தை செய்தும் அச்சாலமொன்றும் பயன்படாமல் நாணமுற்றுப்போயினர்பின்பு தேவேந்திரனே மாறுவேடங் கொண்டு அர்ச்சுனன் சிந்தைகலங்கச்சிலமொழி கூறினன். அதற்கும் மனந்தளரவில்லை. அதுகண்ட இந்திரன் சந்தோஷச் சித்தனாய் வாழ்த்திப்போயினன். நாரதன் அர்ச்சுனன் தவஞ்செய்கிறதைத் துரியோதனனுக்குத் தெரிவிக்க, துரியோதனன் இந்த அர்ச்சுனனைக் கொல்ல மூகாசுரனையழைத்துப்பன்றியாகச்செல்லென்று ஆக்கியாபித்தான், மூகாசுரன் பர்வதாகாரமாகப் பன்றிருபங்கொண்டு நமது மலைச்சாரலில்வந்து, நடந்துவந்த இளைப்பையாற்றிக்கொண்டிருக்கிறான். இளைப்பாறினவுடனே அர்ச்சுனனைக்கொல்ல வரப்போகிறான். இனி நாம் சும்மாயிருக்கலாகாது. அந்த மூகாசுரன் அதிக பராக்கிரமசாலி. மிஞ்சி அர்ச்சுனனை நெருங்கினால் மோசம் வருதலோடு, நமக்கும் பழிவந்தடையும். அந்த மூகாசுரன் முந்தா முன்னம் நாம் வேடுவரூபந் தரித்துக்கொண்டு பன்றியைத் தேடிச்சென்று கண்டு, அதனைக்கொன்று அர்ச்சுனனை மகிழச்செய்வோம். நீ வேடுவச்சிறுமியாகுக. என்று கட்டளையிட்டுத் தமது கயிலைக்காவலாளராகிய நந்தியெம்பெருமானை நினைத்தருளினர்.

உடனே நந்திதேவர்வந்து வணங்கிநிற்க, சாம்பவமூர்த்தி சொல்லுகிறார்: ஓ நந்தீ! நாம் வேடுவவுருவந்தரித்துப் பன்றிவேட்டையாடிப் பாண்டு புத்திரனாகிய பார்த்தீபனுக்குத் தரிசனங்கொடுக்க விருப்பங்கொண்டோம். நமது சிவகணங்களை வேடுவராக வரச்செய்வதோடு, நான்குவேதத்தையும் நாயாக்கி, வேடுவச் செய்கைக்குத்தக்க வலைமுதலியவற்றைச் சேகரித்துக்கொண்டு சாக்கிரதையாக இருவென்று ஆக்கியாபித்தார். நந்தி எம்பெருமான் அக்கருத்துக் கிசைந்து வணங்கித் தன்னிருப்பிடத்துக்குவந்து, சிவகணங்களெல்லா மிங்கு வரக்கடவதென்று தன் கருத்தில் நினைத்தார் உடனே சிவகணங்களெல்லாம் நந்தியெம்பெருமானைக் கண்டு வணங்கித் துதித்து நிற்க, நந்தியெம்பெருமான் யாவரையும் பார்த்துச் சொல்லுகிறார்: ஓ சிவகணங்களே! நமதாண்டவன் வேடுவவுருவந்தரித்து வருகிறபடியால், யாவரும் வேடர்களாகுங்களென்று கூறித், தானும் வேடுவரூவந்தரித்து, நான்கு வேதங்களையும் நாய்களாக்கி, ஆறுசாஸ்திரங்களைச் சங்கிலிகளாக்கி, அச்சங்கிலியை அவற்றின் கழுத்திலணிந்து கரத்திற்பிடித்து யஜமான் வரவுக்கெதிர்பார்த்திருந்தனர். சிவகணங்கள் யாவும் வேடுவரூபந் தரித்து, வலை-வில்-வாள்-கதை-முதலிய ஆயுதங்களையேந்தி, தத்ஜாதி வேடரைப்போல் நந்தியெம்பெருமானைச் சூழ்ந்திருந்தனர்.

கேளும் மஹாராஜனே! பரிமளமிகுந்த கொன்றைமாலையைப் புனைந்த ஜடாமகுடத்தையுடைய பரமசிவன் தமது சடைகளைப் பின்னலாக்கிப் புறத்திற்றொங்கவிட்டு, மயிலிறகினாலும் - பலபல நிறத்தையுடைய பறவைகளி னிறகினாலும்-செய்யப்பட்டுப் பலகரைகளையும் - வக்கா மணிகளையும் - புனைந்திருக்கிற வேடர் மகுடத்தை நேத்திரத்தையுடைய நெற்றி மறையச் சிரத்தில்முடித்து, குழைகளையுடைய செவிகளில் திவ்யமலர்களைச்சொருகி, நீலம்போலப் பிரகாசிக்குங் காளகண்டம் முத்தைப்போலப் பிரகாசிக்கப் பலகரைக் கோர்வைகளை அதிகமாகப் புனைந்து, மார்பினில் தந்தங்களாற் செய்யப்பட்ட சிறியமணிகளைக் கோத்திருக்கின்ற மாலைகளைத்தரித்து, இரண்டு புயாசலத்திலும் வச்சிர ஒளிபோற் பிரகாசிக்கும் பக்ஷி

றெக்கைகளின் படிவமுள்ள இப்பியினத்தா லாகிய வாகுவலயங்களைப் புனைந்து, ஒளிதங்கிய தந்தக்கங்கணங்களை முன்கையிலிட்டு, இடையிற் புலித்தோற் சல்லடமிட்டிறுக்கிப், புலித்தோற் கச்சையாலதை வரிந்துகட்டிக், கடலிற்பிறந்த பலகரைக் கோர்வைகளை இரண்டு தொடைகளிற் புரளப்புனைந்து, மண்டியிடும்போது முழங்கால் வருந்தாதிருக்கத் தோலணிந்து, உடைவாளை அரைக்கச்சையில்தரித்து, பாதத்திற்குச் செருப்பணிந்து, வீரகண்டாமணி காலிற்புனைந்து, வில்லைக் கரத்திலேந்தி, அம்புப்புட்டிலை முதுகிற்றூங்கி, படிகம்போல் வெண்ணிறமான தமது திருவுருவத்தைக் கருநிறமுகில்போலாக்கி வெளிப்பட்டார்.

உமாதேவியார் கறுத்த அளகத்தை வாரிப்பின்னி, குறிஞ்சிநிலத்துக்குரிய கோட்டுப்பூக்களை முடித்துத், தந்தத்தாற்செய்த குழைகளைக் காதிலணிந்து, பலகரைமாலைகளைக் கழுத்திற்புனைந்து, தந்தக்கடகத்தை முன்கையிலணிந்து-அத்தந்தங்களாற் செய்யப்பட்ட வளையங்களைக்காலிலணிந்து, இடையிற்பலகரைமாலைகளைப்புனைந்து, வாசனையுள்ள தழைகளையும் மலர்களையுங்காதிலுங்கழுத்திலுமணிந்து, இரண்டுபயோதரங்களிலும்பால்சுரந்துவிம்மச் சூரபத்மன்முதலான அசுரர்குலத்தை நாசஞ்செய்யும் வேலாயுதக்கடவுளை இளங்குழந்தையாக்கிக் கரத்திலேந்திச், சாம்பவமூர்த்தியின் பின்றொடர்ந்தார். சாம்பவமூர்த்தி நந்தியெம்பெருமானோடு கலந்து, பன்றிவந்திருக்குந் திசையைக் குறித்துக்காட்டி அத்திசையிற் செல்லும்படி கட்டளையிட்டார். நந்தியெம்பெருமான் பூதகணங்களாகிய வேடுவர்களை யெச்சரித்துத், தாம்முன்னதாக நடந்தார். வேடர்கள் ஆடல்பாடல்களோடுகைகொட்டி ஆவலித்து, காளம் - எக்காளம்-துடி-தம்பட்டம்-சின்னம் - துத்தாரி-முதலிய வாத்தியங்களொலிக்க வலைகளைக்கட்டி, நாற்றிசையிலுமிருக்கும் மிருகங்களெல்லாம் மனங்கலங்கித் திகைத்து எல்லாம் ஒரு திக்கில் வந்துசேர ஆர்ப்பரித்துச் சென்றனர். சாம்பவமூர்த்தியாகிய வேடுவர் தன்கையிலிருக்கும் வில்லையெடுத்து நிறுத்திவளைத்துக் குணத்தொனி செய்து, தமக்கெதிர்ப்படு மிருகங்களைக் கடுங்கொலை புரிபவர்போ லபிநயித்துக் கணைதொடுத்துக் கொண்டு, திருமாலானவர் பன்றி யுருவமாகித் தேடியுங் காணொணா திருவடிகள்வருந்த மூகனென்னும் அசுரனாகிய பன்றியைநாடி, வேடுவர் கூட்டத்தின் மத்தியில் விரைவாகச்சென்றனர்.

இப்பால் பார்வதிதேவியாராகிய வேடுவச்சிறுமி இளங்குழந்தையைக் கரத்திலேந்தி, அன்னமில்லாது அருந்தவர் நடக்கும் நன்னடைக்கு மகிழ்ந்து தரிசனங்கொடுக்க அன்னம்போல் நடந்துவரும் என்தாய் அவ்வன்ன நடையைமறந்து, ஆள்நடைக்கிசைய அவர் பின்நடந்தாள். மூகனென்னும் அசுரன் பரமசிவன்பாணத்தினாலன்றி மற்றொருவர்பாணத்தினாலிறக்கிறவனலன். அவ்வளவு பராக்கிரமம் பெற்ற அரசன் பன்றியாகி அர்ச்சுனனைக் கொல்லவந்திருக்கின்றமையால், எங்கே மிஞ்சி அர்ச்சுனனைக் கொன்றுவிடுகிறானோவென்னுமனத்தராகி, அன்பர்க் கெளியனாகிய பரமசிவன் அப்பன்றியின் அடிச்சுவடுகளைக் கண்டு அவ்வழியேசென்று அதிக வேகமாகத் தொடர்ந்து தேடிவருகிறபோது, அளக்கரிய வேதங்களினுருவாகிய சுவானங்கள் நாற்றிசையெங்கும் மேகம் உறுமுவதுபோல உறுமிக்கொண்டு, சிறுபுதல் பெரும்புதல் மலையடிவாரம் குகை கானாறு பள்ளம் மேடு இவைமுதலிய விடங்களிற் றேடிக்கொண்டு வருகின்றன. பூதகணங்களாகிய வேடுவர்கள் வலைகளைவிசறி, யெங்கெங்கும் நெருங்கிக் கைகொட்டிப் பார்த்து அப்பன்றியைத் தேடிக் கொண்டுவந்தனர். இவர்களைக்கண்ட அந்தரவாசிகள் ஓ ஓ இனி இந்தப் பூவுலகம் ஆதிசேஷனாற் சுமக்கப்படுவதரிதாகுமென்று ஏங்கித் தளர்வெய்தினர். சாம்பவமூர்த்தியானவர் பன்றியை நாடி, அஃதிருக்கும் இடத்துச்குச் சமீபத்து வந்தனர். வேடர்களு மப்பன்றியை நெருங்கினர். நாய்கள் யாவருக்கு முன்னமே கண்டுகொண்டு, அப்பன்றியிருக்கும்புதலைச் சூழ்ந்துகொண்டன.

மூகாசுரன் வதை.

அப்போது பன்றியாகிய மூகன் தானிருக்குமிடத்தை நாய்கள் சூழ்ந்ததையும் வேடுவத்தலைவன் வளைத்தவில்லுந் தொடுத்தபாணமுமாக வருதலையுங்கண்டு மனநடுக்கமாகி, உடல்தளரக் கனவருத்தமுற்று ஓ ஓ நாம் துரியோதனன் மகிழ அர்ச்சுனனைக் கொன்றுவருகிறேனென்று சொல்லிவந்து வேடுவராலும் நாய்களாலு மடிவோமாகில், அரசனாகிய துரியோதனன் வருத்தமுறுவதுமன்றி, நம்மினத்தாராகிய அசுரரெல்லாம் வேடுவரால் மடிந்தானென்று இழிவு கூறுவர். இனி அரைமாத்திரையில் அர்ச்சுனனைவதைக்கிறதே பெரும்பயன். அர்ச்சுனன் நம்மாலிறந்தபின்பு நாமிறந்துவிட்டாலும் இழிவில்லை யென்று கருதினவனாய்த் தக்ஷணம் அண்ட கடாகமு மிடிந்திடக் கடுகடுத்த கொண்டிடிக்குமிடிபோல் உறுமி எதிரேறிப் பாய்ந்து, வேடரும் நாய்களும் கலங்கிப் பிரமித்து விலங்கச் சக்கிராகாரமாகச் சுழன்றுகொண்டு வாயுவேகத்துக்கும் அதிகமாகவேகடந்து, அர்ச்சுனன் தவஞ்செய்யுமிடத்து நெருங்கி, மேகங்களும் அஷ்டகஜங்களுந் தத்தளிக்க உறுமிப் பாய்ச்சல்கொண்டு தாவிநின்றது. அதைப் பராக்கிரம வியாக்கிரமாகிய அர்ச்சுனன் கண்டு தவத்துக்கு இடையூறு வருமென்றஞ்சியவன் தனது திடசித்தத்தால் தவநிலை விடாமலே நின்று நோக்கி, தன் காண்டீபத்தை விரைவிலெடுத்து நிறுத்திவளைத்து வச்சிராயுதத்துக் கொப்பாகிய ஒருகணையை எடுத்து தொடுத்துவிடுத்தான், அக்கால்பத்தரை ரக்ஷிக்கும் பரமசிவனானவர் தமது வேடர்கூட்டமும்

நாய்களும் பின்செல்ல மனோவேகத்தோடு தாம் முன்சென்று, வாயுவேகத்தோடு முன்செல்லும் பன்றியின் முகம்பிளக்கத்தமது அழகியகார்முகத்தில் ஒருதிவ்வியக்கணையை யெடுத்துத் தொடுத்துவிடுத்தார்.

இவ்விருவருடைய பாணங்களில் அர்ச்சுனன் விட்டபாணம் நெற்றியிற்றைத்துப் பின்புறத்துருவிற்று. சாம்பவமூர்த்திதொட்டபாணம் பன்றியின்பின்புறத்திற்பட்டு முகத்தைப் பிளந்தெறிந்தது. பன்றி அண்டம்பிளக்க ஓலமிட்டுப் பூமியில் விழுந்திறந்தது. அர்ச்சுனன் வன்கணையினா லிறந்ததென்று கருதி முன்போல்தவநிலையுற்றனன். சாம்பவமூர்த்தியாகிய வேடுவப்பெருமானைச் சூழ்ந்துவருகின்ற வேடுவர்கள் கைகொட்டி ஆவலித்து, தவஞ்செய்யும் அர்ச்சுனனைச்சூழ்ந்து, ஆர்காணுந்தவசீ! எங்கள் தலைவன்குறிவைத்தெய்யும் பன்றியை நீஎப்படி எய்தாய்? வில்லாளிகளானவர் ஏதாவதொன்றைக்குறிவைத்துஎய்யும்போது, அதனைத்தாமுமெய்தவர் உலகிலுண்டோ? தபசியாக இருக்கிற உனக்கு இது தகுதியல்லவென்று கூறி நாற்றிசையிலு நின்றேசினர். அர்ச்சுனன் கேட்டுச்சினங்கொண்டு சொல்லுகிறான்: ஓ வேடரே! அப்பன்றியானது என்தவலையில்வந்து உறுமி ஆரபாரஞ்செய்தது. தவத்துக்கு இடையூறுவராமலிருக்க என்கணையைவிட்டு அதனைக்கொன்றேன். நீங்களஃதுணராமல் எங்கள் தலைவனெய்த பன்றியை நீயெய்வது தகுதியாவென்று தாறுமாறாக உளறுகிறீர்கள். உங்கள் தலைவனெய்தது உண்மையாக இருக்குமாகிற் பாணம்பட்ட இடத்தில் தானேவிழாதா? போம்போம் பயித்தியம்பிடித்த வேடரே: உங்களையார்கண்டார்? உங்கள் தலைவனை யார்கண்டார்? என்று கூறலும் பழமையாக இருக்கின்ற வேதாகம புராணாதிகளின் ஸ்வரூபனாகிவிளங்குஞ் சாம்பவமூர்த்தியாகிய வேடன், விராதன் முதலாகிய அசுரரை வெற்றிகொண்ட ஸ்ரீராமமூர்த்திபோல்விளங்கும் விஜயகாண்டீபதரனாகிய அர்ச்சுனனை நெருங்கிச் சொல்லுகிறார்.

கைலாசபதிக்கும் அருச்சுனனுக்கும்வாது.

ஓ தவசி! இந்தப்பன்றியை நானெடுந்தூரத்திற் கண்டு துரத்திக்கொண்டுவந்து, இங்கு அந்தப்பன்றியின்மேல் என்கணையைவிட்டேன். அக்கணை பின்புறத்திற்பட்டு முகப்புறத்தி லுருவிப்போயிற்று. நீ வில்லாளிபோல் ஒருபாணத்தை விட்டனை அக்கணை பன்றியின் சிரகிற்பட்டுப் பின்புறத்தி லுருவிற்று. இதோ உன்பாணக்குறி. இதோ என்பாணக்குறி. திருஷ்டாந்தமாகக் குறிகளிருக்க வேடுவர் அதைக்குறித்து வினவினால் நீ முன்பின் யோசிக்காமல், ஆணவமாயைகாமியமென்பனவற்றைநீக்கித் தவசியாகஇருக்கிற நீ, நானென்கிறகர்வத்தினாலேயோ? அல்லது அப்பன்றியை நாமெய்தோமென்கிற வில்லாண்மைபற்றியோ? சிறிது மதிக்காமல் வசனிக்கிறாய். என்றுகூறக்கேட்ட அர்ச்சுனன் ஓ! ஓ! வேடுத்தலைவா! சபாசு! நன்றாகச் சொன்னாய். கிராதனென்கிற சொல்லே இரக்கமில்லாதவரென்று பொருள்கொடுக்கும். இரக்கமில்லாதவனுக்கு விவேகமில்லை. நீ கிராதருக்கெல்லாந் தலைவனாக யிருக்கிறவன். உனக்கு விவேகமிருக்குமா? இப்பன்றியை நெடுந்தூரத்திற்கண்டு துரத்திக்கொண்டு வந்தேனென்கிறாய். இதனால் நீ வில்லாளியல்லவென்று விளங்குகின்றது. வில்லாளியாக இருக்கிறவன் தனக்கு லக்ஷியப்பட்டது மிஞ்சிச்செல்லுமாகில், அது பத்து யோசனைதூரஞ் சென்றாலும் இருந்த இடத்திலிருந்து அப்பாலதைச் செல்லாதிருக்கும்படி செய்யவல்லசாக்கூடிட்டு நெருங்கி லக்ஷியப்பட்ட அவ்வுயிரைக் கொல்லுவான்.

அல்லதப்பத்துயோசனையுஞ் செல்லாதபடி நின்றவிடத்தில்தானேநின்று அதனைவெல்லுவான். இந்த இரண்டுவிதத்தில் ஒருவிதமுஞ்செய்யாமற் பன்றியுடனே பின்சென்றோடிவந்து, பாணந்தொட்டேனென்று நாணமில்லாமல் என்னுடன் சொன்னதுமன்றிப், பன்றியின்மேல் என்பாணம் பட்டதென்று வழக்கிட்டு என்னை இழிவு கூறினை. நான்தவநிலையிலிருந்தமையால் இந்தவசனஞ்சொல்லி இன்னமுமுயிரோடிருந்தனை. தவநிலையுற்றிராமலிருந்தாற் பன்றி யடைந்த கதியை உன்சேனையடைவதுமன்றி, உன்னுயிர்க்குஞ் சேதம்வரும். இனி அரைப்போதாவது இந்தவிடத்தில் நிற்காமல், தெய்வங் கூட்டிவைத்ததென்றுகருதி இறந்தபன்றியைச் சுமந்துகொண்டு துலைவிற்சென்று நீயும் உன்னினத்தவருங் கூடிப்புசியுங்கள். தபசியானவர்கள் சருகருந்துவரென்று சொல்லுவார். நான் அந்தச் சருகையுநீக்கி யிருக்கிறவனாதலால் இப்பன்றியுணவெனக்குதவாது. ஆதலால் நீயேயெடுத்துச்செல்லென்றுகூற, சாம்பவமூர்த்தியாகிய வேடுவர் கைகொட்டிச் சொல்லுகிறார்: ஓ தபசீ! சபாசு! சபாசு! உன் தயிரியமும்-உன்வீரியமும்-நன்றாக இருக்கின்றன. வில்லாளியென்பவன் நீதான். உருத்திராக்ஷப்பூனையின் கதையொன்றுண்டு. அக்கதை உன்னளவில் திருஷ்டாந்தமாயிற்று.

அஃதெவ்வாறெனில் - நாட்டிலிருந்து சீவனஞ் செய்யச் சக்தியில்லாமற் காட்டில்வந்து சுவரூபத்தோடு சஞ்சரித்தால், எங்களையொத்த வேடுவரால் இடையூறுவருமென்றஞ்சிக், தவரூபங்கொண்டு பஞ்சாக்கினி மத்தியில் தவஞ்செய்கிறதுபோல் அபிநயித்து, எங்கள் காட்டிலுள்ள மாதுரியமான சதைகளையுடைய மிருகங்களைவதைத்துச் சீவனஞ்செய்கிற நீ; எங்களைப் பார்த்தவுடனே அச்சமுற்று எதுவோ ஒரு சாக்குச்சொல்லிச், சுத்தவீரர்களாகியும்வில்லாளிகளாகியுமிருக்கிற எங்களுக்குச் சிலகுற்றமுங்கற்பித்து, முடிவிற்சருகும் புசிக்காத எனக்குப்பன்றியுதவுமாவென்றுகூறிப், பன்றியை யெடுத்துக்கொண்டு துலைவிற்செல்லென்றுங்கூறினை. இது உனக்குநன்றாக இருக்கின்

றதா? பலநாள்திருடன் ஒருநாளிலகப்பட்டுக் கொள்ளுவானென்கிறபழமொழிபோல், நீ இன்றெங்கள்கையிலகப்பட்டுக் கொண்டனை. நீ உண்மையான தபசியாக இருந்தால், உன்மனம் நீநாடிய கடவுளின்கண் சென்றிருக்கவேண்டும். உனக்கொரு அழிவுவராமல் அக்கடவுள் காக்கவேண்டும். நீ கபடசன்னாசி. ஆகையால் கடவுள்பாற் கருத்தைச் செலுத்தாமல், எங்கே நல்லமிருகம் வருமோவென்று கண்விழித்துப் பார்த்துக்கொண்டு, எங்களுக்குப் பயந்தோடி இந்தவழியாகவருமிருகங்களைக் கொன்றுதின்கிறாய். இனிஉன்னைவிடுகிறதில்லையென்று கடுகடுத்துக் கூறினர்.

இவ்வாறு மகாதேவர்கூறிய வசனங்களை அர்ச்சுனன்கேட்டுச், சித்தத்தைச் சிவனிடத்திற் செலுத்தினவனாக இருந்தாலும் வேடுவத்தலைவன் கூறியவாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்திற் கலகலவென்று நகைத்து, அடா வேடுவத்தலைவா! நான் இங்குள்ள வேடுவர்க்குப் பயந்து சன்னாசி வேடங்கொண்டு உங்களுக்குப் பயந்தோடிவரு மிருகஜெந்துக்களைக் கொன்று சீவனஞ்செய்கிறவனென்றும், கபடசன்னாசியென்றும் உரைத்தனை. அப்படி உரைத்தவாயி னுதிரங் கக்கும்படி உன்னுயிரைவாங்குவேன். நான் உண்மையான தபசியாதலால் மனம்பொறுத்தேன். இப்போதும் நீ இந்தப்பன்றியைச் சுமந்துகொண்டு யாதொன்றும் வசனியாமல் உன்சேனையோடு விரைவிற்செல்லாமல் முன்போல் ஏதாவது இன்னும் வசனிக்க வருவையாகில், உன்றன்சேனைகளின் தலைகளைச்செடிக்கொன்றுகச்சிதறக் கணைதொடுப்பதுவுமன்றி, உன்னுயிர்க்குங்கெடுதிவர வயிரவாளிகளை விடுவேன். பத்திரம். இங்கிமிடத்தில் இங்குநிற்காமற் செல்லென்று கூறினன். அதுகேட்ட வேடர்பெருமான் புன்சிரிப்புகொண்டு சொல்லுகிறார்:

கைலாசபதிக்கு அருச்சுனன் தனது குலமுறை கிளத்தல்.

அடாதவசீ! உன்பேச்சும் உன்வீச்சுங் கண்டால் நீ வில்லாளியல்லவென்று கண்ணாடியிற் றோற்றும் பொருள்போல்தோன்றுகின்றது. நல்லதுன்மனதின்படி என்னையும் என்சேனையையும் வெற்றிபெறுவாய், அந்த லக்ஷணத்தைச் சிறிது பார்க்கலாமென்றால், நான் உன்னுடன் எதிர்த்து போர்செய்வதற்குக் கிஞ்சித்துச் சந்தேகம்நேரிட்டிருக்கின்றது. உன்குலத்தையும் வரன்முறையையு மறிந்த பின்பு என்கைத்திறத்தைக் காட்டவேண்டும். ஆதலால் நீமறையவனோ? க்ஷத்திரியனோ? வைசியனோ? சூத்திரனோ? அல்லது தேவாசுராள்முதலியோர்களுடைய வமிசத்திலோர் சார்பினனோ? அதனைச் சொல்லென்றுகூற, அர்ச்சுனன் அதுகேட்டு மகிழ்வடைந்து, இத்தருணத்தில் நமது குலத்தையும் பெயரையும் எடுத்துரைத்தால் மாட்சிமைபெற்ற நமதுதிறமும் வெளிப்படும். வேடுவன் அச்சமுற்று அடங்கிச் செல்லுவானென்று மனதில் மதித்துச் சொல்லுகிறான். ஓ வேடுவராஜனே! என்குலத்தையும் வரன்முறையையுங் கூறுகிறேன். உன்கருத்தை மற்றொருவிடத்திற்செலுத்தாமல் உய்த்துக்கேள். ஆதியில் திருமாலுந் தேவருங்கூடித் திருப்பாற்கடல் கடைகிறபோது மந்திரகிரியாகிய மத்துச் சுழலத் தான்தறியாகி, விஷந்தோன்றினபோது அவ்விஷத்தின் சுவாலையடங்க அமுதத்திற்றோன்றி, உலகங்குளிர்ச்சிபெறத் தனது சோடசகலைகளைவீசி எங்கும்பிரகாசித்துப், பரமன்சடாடவியி லினிதுவீற்றிருந்து மிகவுஞ்சிறப்புற்றோங்கிய சந்திரனுண்டே; அவனுடையகுலம் நான். ஆதியிற் சந்திரனுக்குப் புதன் பிறந்தான். புதனுக்குப் புரூரவன்பிறந்தான். புரூரவனுக்கு ஆயுபிறந்தான் ஆயுவுக்கு நகுஷன்பிறந்தான். நகுஷனுக்கு யயாதிபிறந்தான். யயாதிக்குப் புரூவன் பிறந்தான். புரூவனுக்கு ஜெனமேஜெயன் பிறந்தான். ஜெனமேஜெயனுக்குப் பிராசீனன்பிறந்தான். பிராசீனனுக்குச் சையாதிபிறந்தான். சையாதிக்குச் சார்வபூமன்பிறந்தான். சார்வபூமனுக்கு ஜபசேனன்பிறந்தான். ஜபசேனனுக்கு நயுதன்பிறந்தான். நயுதனுக்கு குரோதன்பிறந்தான். குரோதனுக்குத் தேவாபிபிறந்தான். தேவாபிக்கு உரிச்சகன்பிறந்தான். உரிசகனுக்கு அரிசகன்பிறந்தான். அரிசகனுக்கு மதிவான்பிறந்தான். மதிவாகனுக்குத் திடன்பிறந்தான். திடனுக்கு நீலன்பிறந்தான். நீலனுக்குத் துஷ்டியந்தன்பிறந்தான் துஷ்டியந்தனுக்குப் பரதன்பிறந்தான். பரதனுக்குப் பவுமன்பிறந்தான். பவுமனுக்குச் சுகோத்திரன் பிறந்தான். சுகோத்திரனுக்கு அஸ்தன்பிறந்தான். அஸ்தனுக்கு நிகும்பன்பிறந்தான். நிகும்பனுக்கு அரசர்மீளி பிறந்தான். அரசர்மீளிக்குச் சவ்வருணன்பிறந்தான். சவ்வருணனுக்குக் குருபிறந்தான். குருவுக்குப் பரிச்சித்துபிறந்தான். பரிசித்துக்குப் பிரத்தீபன் பிறந்தான். பிறத்தீபனுக்குச் சந்தனுபிறந்தான். சந்தனுக்குச் சித்திரசேனன் - விசித்திரவீரியன் - என்றிரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இவர்களில் விசித்திரவீரியன் காசிராஜா குமாரத்திகளில் அம்பிகை - அம்பாலிகை - என்கிற இரண்டுகன்னிகைகளை மணந்திருந்தான், அந்த அம்பிகை அம்மாலிகைஇருவரும்வேதவியாசர் அநுக்கிரகத்தினால், அம்பிகை திரிதராஷ்டிரமகாராஜனையும்-அம்பாலிகை பாண்டுமகாராஜனையும்-பெற்றார்கள். திரிதராஷ்டிரன் காந்தாரியை மணந்து துரியோதனன் முதலான நூற்றுவரைப் பெற்றான். பாண்டுமகாராஜன் குந்திதேவி - மத்திராதேவி - என்கிற இரண்டுகன்னிகைகளை மணந்து, குந்திதேவியிடமாகத் தருமராஜனையும்-வீமராஜனையும் - என்னையும் பெற்றான். மத்திராதேவியினிடமாக என்சகோதரர்களாகிய நகுலசகாதேவர்களைப் பெற்றான். என்பெயர் அர்ச்சுனனென்றுசொல்லுவார்கள். என்றுதன்மரபை

எடுத்துக்கூறச் சாம்பவமூர்த்தியாகிய வேடுவர்பிரான் கைகொட்டிச் சிரித்துச் சொல்லுகிறார்.


கைலாசபதி அர்ச்சுனனையிழிவுகூறிப் பகைகொள்ளுதல்.

ஓ அர்ச்சுனா! நீ பாண்டுபுத்திரனா? ஆ! ஆ! சபாசு! சபாசு! இதுவரைக்கும் நீ வழங்கியவாக்கியங்களை வைராக்கியவாக்கியமென்றும், வாக்கியத்திற்குச் சரியாகச் செய்கையிலு மொத்திருப்பையென்றும்நினைத்திருந்தேன். உன்மரபையும் பெயரையுங் கேட்டமாத்திரத்தில் உன் பண்டவாளம் வெளிப்பட்டது. வில்லினது திறமையைக் கிஞ்சித்தேனு மறிந்தவனல்ல. அதுவெதப்படி விளங்குகிறதென்றால் - துரியோதனன் தன்தம்பியாகிய துச்சாதனனைவிட்டு உங்களைவர்க்கும் பெண்டாகிய துரோபதியை இழுத்துவந்துசபையில் மானபங்கஞ்செய்யும்போது, நீவில்லாளியாக இருப்பையாகில் அந்தத்துரியோதனனையும் மற்றுமுள்ள துராத்துமாக்களையும் நீ செய்ததென்ன? வில்லாளிகளல்லாத சில எளிய அரசரைவெற்றிபெற்று இறுமாப்படைந்து விஜயமென்று பெயர்வகித்துக் கொண்டதாய்த் தோன்றுகிறது. இல்லாவிட்டாற் பஞ்சாக்கினியினின்றெழுந்த பாஞ்சாலி உங்கட்குத்தவப்பேறாகக் கிடைக்கப்பெற்றும், அவளை அரசர்சபையிற்றூற்று அவமானஞ் செய்விப்பையோ? அப்போது அவளே நினைத்தால் அவ்வஸ்தினாபுரியனைத்தும் அன்னிமிடத்திற்சாம்பராகுமே பார்த்தாக்களாகிய நீங்கள் பக்கத்திற்றானே இருக்கின்றீர்களென் றல்லவோ சும்மாவிருந்தாள். அந்த அவக்கேடு அப்படி யிருக்கட்டும். உன் குலத்தின் திறத்தை நோக்குங்கால் எனக்கதிக நகைப்புக்கிடங்கொடுக்கின்றது. ஏனென்றால் - உன்பிதாமனைவியைச் சேர்ந்தால் தலைபிளந்திறக்கக்கடவதென்று ஒருமுனிசாபமிட்டிருந்தான் அந்தச்சாபத்தை நினைத்து அரசுரிமையை நீக்கித். தன்னிரண்டு மனைவியரும்பணிவிடைசெய்யத் தபசியாகி, எங்களுக்குரியகாட்டிற் சஞ்சரித்திருந்தனன். அவனுக்கு ஐந்து புத்திரர் பிறந்தாரென்று சொல்வது அபத்தம். நீங்களைவருந் தருமசந்தான புத்திரர்களேயொழிய அவனுக்குச்சுயபுத்திரரல்லர். அதுவுமிருக்கட்டும். ஒருவன் பலமாதரைப் புணரலாம். நீங்களைவரும் ஒருமாதினைப் புணர்ந்து வருகிறீர்கள். உங்கள் குலமும் உங்கள் நடக்கையும் உங்களுக்கே சரியல்லாமல், காட்டில் திரிகிறஎங்களையொத்த வேடருக்குஞ் சரிப்படாது. இழிவான குலமும் இழிவான நடத்தையுமுள்ள உன்னைஎதிர்த்துக்கொல்வது தகுதியல்லாததாக இருந்தாலும், உன்னைக் கொல்லவேண்டுமென்று நெடுநாளாக நினைத்திருந்தேன். அதற்குக் காரணமென்னவென்றுற் சொல்லுகிறேன் கேள்.

முன்னொருபோது தன்னைப் பங்கப்படுத்தின பாஞ்சாலனைக்கட்டித் தன்சமுகத்துக்குக் கொண்டுவரக்கருதிய துரோணர் உனக்கும் உன்சகோதரர்களுக்கும் வில்வித்தை கற்றுக்கொடுக்கிற காலத்தில், எங்கள் குலத்துக்கோர் திலகனான ஏகலைவனென்கிற வேடன் துரோணரையடுத்து வில்வித்தையைக் கற்பிக்கச்சொல்லி வேண்டிக்கொள்ளும்போது, துரோணர் தனக்கு ஒழிவில்லை யென்றுசொல்ல, அதனைக் கேட்டஏகலைவன் தன்னிருப் பிடத்துக்குச்சென்றுதுரோணரைப்போ லொருதிருவுருவு சமைத்து, அந்த உருவின்மூலமாக வில்வித்தை யனைத்தையுங் கற்றுக்கொண்டான். அக்காலத்தில் நீவேட்டைக்குச் சென்றாய். உன்னுடன்வந்த நாய் ஏகலைவன் செய்துவைத்திருக்கிற துரோணர் திருவுருவத்தின் மேடையில் நீர்விட்டது. அதுகண்டு ஏகலைவன் தன்வில்லில் ஒருபாணத்தைத் தொடுத்தான். அதுவோர் விநோதத்தால் நானுபாணமாய் நாயின்நெற்றியில் நாற்புறத்துந் தைத்துருவிற்று. அதோடு அந்நாயோலமிட்டு உன்னிடத்தில் வர, அதுகண்ட நீவியந்து அந்நாயால் அந்த ஏகலைவன் சிலம்பக்கூடத்தைக் கண்டு அங்குசெல்ல, அப்போது ஏகலைவன்வந்து வணங்கி உனக்குபசாரஞ்செய்தலும் நீயவனைப்பார்த்து, ஓ ஏகலைவா! இந்தநாயை எய்தவன் யாரென்று வினவினை. நான்தானென்று ஏகலைவன் கூறினன். உனக்கு வில்லாசிரியன் யாரென்று நீ வினவினை. எனக்கு வில்லாசிரியன் துரோணரென்று ஏகலைவன்கூறினன். அதனைக்கேட்ட நீஉடனே அத்துரோணரை அழைத்துவந்து, அந்த ஏகலைவன் வில்திறத்தை யறிந்துகொண்டு வில்லாளியென்றுமதித்து. அவன்வில்வித்தைகள் பயன்படாதிருக்க மனதிற்பலவாறு யோசித்தனை. அப்போது திவ்யக்கியானியாகிய துரோணர் ஏகலைவனை யழைத்து, நமக்குத் தக்ஷணையாக உன்கைப்பெருவிரலைக்கொடுவென்று வினவினர். ஏகலைவன் கைப்பெருவிரலை அறுத்துக் கொடுத்துவிட்டுச் சிலநாளிலிறந்தான். எங்கள்குலதிலகனான ஏகலைவ னிறந்ததற்குக் காரணம் நீதான். இதன்றி ஒருபிராமணனுக்காக அநேகம் வேடர்களைக் கொன்றனை. காண்டவவனத்தைத் தகனஞ்செய்தபோது அவ்வனத்திலிருந்த வேடர்களைக் குஞ்சுகுட்டிகளோடுநாசஞ்செய்தாய். ஆகையால் நீ யெனக்குச் சென்மப்பகையாளி. உன்னைவிடேன். என்றுகூறத் தமது கையிலிருக்கும் வில்லைவளைத்து நாணேற்றி டங்காரவோசை யெழுப்பித், திவ்யகணைகளி லொன்றை நாணியிற் சேர்த்துக்கொண்டு, பின்னும் அன்பனாகிய அர்ச்சுனராஜனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

அருச்சுனனுக்கும் கைலாசபதிக்கும் வில்யுத்தம்.

அடா அர்ச்சுனா. குருதக்ஷணைக்காக அக்கினிவைசியரிடத்தில் வில்வித்தைகற்ற பராக்கிரம வியாக்







[10] நகுஷஊசாபவிமாசனம.

கிரமாகிய பாஞ்சாலனைப் பிடித்துத் தேர்க்காலிற் கட்டியவன் நீயேயானாலுமாகுக. அக்கினிபகவானிடத்தில் அழியாததேரும் ஒடியாதவில்லும் அறாதநாணியும் பெற்றவன் நீயேயானாலுமாகுக. எதோ என்னிடத்தில் உன்வீரத் தன்மையைக் காட்டுபார்ப்போமென்று சொல்லினார். இச்சொற்களைக் கேட்ட அர்ச்சுனன் அனலிலிடு மெழுகுபோல் மனமது உருகிக்கடுஞ்சினமடைந்தாலும் சித்தத்தைச் சிவன்பால்நிறுத்தி எதிர் நின்று வழக்கிடும் வேடுவனோடு மெதிர்த்து, அடாவேடா! சற்றுநில் ஓடிப்போகாதே. அரைமாத்திரையில் உன்னைக் கொல்லுகிறேனென்று கூறித், தன் வில்லை எடுத்துநிறுத்தி வளைத்து டங்கார ஓசையெழுப்பி, வச்சிராயுதத்துக் கொப்பாகிய ஒரு திவ்ய கணையைத் தொடுத்து, வேடராஜன் மார்புக் கிலக்காகவிடுத்தான். வேடராஜன் அக்கணைவருகிறநேர்ப்பைகண்டு, தன் கைக்கணையிலொன்றைவிடுத்து, வரும் பாணத்தை நடுவது பாதியிலறுத்துவிட்டு, உடனே இரண்டு கணைகளைத் தொடுத்து விட்டார். அக்கணையிரண்டும் அர்ச்சுனன் மார்பிற் பட்டுப் பின்புறத்திலுருவிப்போயின. அப்போதும் அர்ச்சுனன் சிந்தை கலங்காமற் சித்தத்தைச் சிவன்பால்நிறுத்தி, மார்பிற் பட்ட சாயகத்திற்குக் கிஞ்சித்தேனுமஞ்சாமல், அர்த்தசந்திரபாணத்தில் மூன்று பாணத்தை யெடுத்து நாணியில்வைத்து, வேடராசன் தோளுக்கும் மார்புக்கும் பீலிமுடிக்கும் இலக்காக எய்தான். வேடர்பிரான் அந்த மூன்று பாணங்களையும் பதின்மூன்றுபாணங்களாற் கண்டித்து, பின்னுஞ்சில கணைகளைத் தூண்டி, அர்ச்சுனனை நோகச்செய்தார். அர்ச்சுனன் மறுபடியுங் கணைகளைத் தொடுத்துவிட்டான். மறவரேறாகிய மகாதேவன் அக்கணைகளைக் கண்டித்துவந்தார். அர்ச்சுனன் கடுஞ்சினமடைந்து ஓ ஓ இந்த வேடன் வில்லிற் கிஞ்சித்துத் திறமுடையவன். நாமிலக்குவைத்து எய்கிற கணைகளைக் கண்டிக்கிறான். இவனை ஏமாத்தி நாம் நினைத்த லக்ஷியத்தைச் சாதிக்கவேண்டுமென்று கருதி, இரண்டிரண்டு மும்மூன்றாக அடுக்கடுக்காய்ப் பாணந்தொடுப்பவன்போலச் சில பாணத்தைத்தொடுத்து, அவற்றின் சந்தில் தன் விநோத வித்தையால் வேறு மூன்றுபாணத்தைத்தொடுத்துவிட்டான். பித்தனென்று பெயர்படைத்த கயிலைக்கரசனாகிய வேடன் அவற்றை அலக்ஷியமாக எண்ணி, முன்னம் விட்ட கணைகளை மாத்திரங் கண்டித்துவிட்டு, வேறு பாணத்தை யெடுத்து வில்லில் மாட்டி விடுவதற்கு முன்னே விநோத வித்தையால் அர்ச்சுனன் விட்ட மூன்று பாணத்தில் இரண்டு பாணம் மார்பிலுந் தோளிலும்பட்டு, மற்றொருபாணம் பீலிமுடியைப் பிளந்தெறிந்துவிட்டது. அதுகண்ட கைலைவேடர் ஆச்சரியமாயினர்.

கேளும்மகாராஜனே! இவ்வாறு ஆச்சரியப்பட்ட சாம்பவமூர்த்தியாகிய வேடர் ஓ ஓ நாம் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே பாணம் வந்தது தோன்றாமற் போய்விட்டது. இவன் வில்வினோதத்திற்சிறந்தவனாகையால் நம்மை ஏமாத்தினானென்று உள்ளம் பூரித்து, வெளியில் அதிகசினங் கொள்பவர்போற் கோபங்கொண்டு, வில்லிற் சிலகணைகளைத் தொடுக்கக் கருத்துகொண்டார். பீலிமுடி பிளக்கவே அங்குள்ள கங்கையும் மதியு நடுக்கமுற்றன. வேலாயுதக் கடவுளை இளங்குழந்தையாகக் கரத்திலேந்தி நிற்கும் பார்வதியார் திடுக்கிட்டனர். பக்கங்களிற் சூழ்ந்திருக்கும் வேடுவர்கள் தங்கள் தலைவன் பீலிமுடி யறுபட்டதைக் கண்டமாத்திரத்தில், யுகாந்தகாலத்து மேகங்களைப் போலக் கர்ச்சித்து, அர்ச்சுனன்மீது கவிந்து, அடா தபசீ! அடாதபசீ! இதோ உன்னைத் தென்றிசைக் கனுப்புகிறோமென்று கூறித்தோள்தட்டியார்த்து வந்தார்கள். பார்வதியார் தமதுகணவனாகிய வேடரிறையைப்பார்த்துச் சினங்கொள்ளாதீர் என்று சைகை செய்தனர். அதுகண்ட ஐயன் அர்ச்சுனன்மேற்செல்லும் வேடர்களை அகட்டி நிறுத்தித், தாம் முன்னம் வில்லில் தொடுத்திருக்கிற கணைகளை ஒன்றன்பின்னொன்றாகச் செல்லும்படி வம்புக்கு விட்டார். அர்ச்சுனன் அக்கணைகளனைத்தையுங் கண்டதுண்டமாக்கித், தன் வில்லினுஞ் சிலகணைகளைத் தொடுத்துவிட்டான். வேடராஜன் அக்கணைகளையெல்லாம்வெட்டிச், சிலவேறு கணைகளைத்தொடுத்து அர்ச்சுனனை நோகச்செய்தார். அர்ச்சுனன் அதற்குங் கலங்காமல்-க-ம-ர-து-மத-ரத-கோடி-சங்கம்-இப்படியாக வளருந் திவ்யகணைகளைத் தொடுத்துவிட்டான். அக்கணைகளொன்றோடொன்றுராய்ந்துகொண்டு அக்கினிச்சுவாலையாக வந்தன. வேடர்கள் கண்டு நடுக்கமுற்றனர். சரமாரியால் அருகிலிருக்கிற பார்வதியார் தமது கணவராகிய வேடுவராஜனைக் காண்கிலராகிக் கிஞ்சித்து வருத்தமுற்றனர். வேடுவராஜன் சரமாரியைநோக்கி, அவன் விற்றிறத்தை மதித்து மகிழ்ந்தும் மேல்வருங் கணைகளின்மேல் திருக்கண்வைத்தனர். திருக்கண்வைத்தமாத்திரத்தில அர்ச்சுனன் விட்ட கணைகளெல்லாந் தம்மேற் படாமற் சுத்தி வேலியிட்டதுபோல் விழுந்தன. அதை அர்ச்சுனன் கண்டு, ஓ! ஓ! இந்தவேடன் சில ஜாலவித்தை கற்றவனாக இருக்கிறானென்றுணர்ந்து, பர்வதங்களைப் பொடியாக்குந் திவ்யகணைகளை மாரிபோற் சொரிந்தான். இவைகளுங் கிட்டநெருங்காமல்வேலியிட்டதுபோலாயின பின்புவேடர்பிரான் சிலபாணங்களைத் தொடுத்து அர்ச்சுனனை நோகச்செய்தார். அர்ச்சுனன் அதிக சினங்கொண்டு, ஒருதிவ்வியக்கணையை எடுத்துத் தன்வில்லிற் றொடுத்தான். தொடுத்தகணை அவன் வில்லிலிருந் தெழும்பி வெளிப்படுமுன் தமது கணையால் அதனை உடனே வெட்டி எறிந்தனர். அதுகண்ட அர்ச்சுனன் காலாக்கினி உருத்திரனைப்போலச்சீறி, ஓரிலைவேல் முகக்கணை - ஈரிலை வேல்முகக்கணை-மூவிலைவேல் முகக்கணை-பிறைமுகக் கணை முதலியவற்றை மணலைவாரி இறைத்தாற்போ

லச் சொரிந்து வேடுவனைக் கைகா லாடவொட்டாமற்
செய்தான்.

அருச்சுனனாற் கைலாசபதி வில்லடி பொறுத்தல்.

கேளும் மகாராஜனே! வேடுவனாக இருக்கிறவர்
சாம்பவமூர்த்தியானமையால், அர்ச்சுனன் கணைகள் வழ
க்கோரஞ் சொல்வர் வாழ்வைப்போல நாசமுற்றன.
மற்றொருவராக இருப்பாராகில் ஒருகணைக்கு நிர்வகிக்
கமாட்டார்கள். அந்தவேளையிற் சாம்பவமூர்த்தியா
கிய வேடுவர் இனிச் சும்மாயிருப்போமாகில் வரவரவி
பரீதப்போருண்டாகுமென்றுகருதி; இதுவரையினுஞ்
செய்தபோரால் அர்ச்சுனன் சிறிது மனங்கலங்காமல்
நம்மிடத்திற் கருத்தைச் செலுத்திவருகிறான். உறுதி
யாக அடித்தால் அப்போதிவன்கருத் தெவ்வாறிருக்
குமோ அறியவேண்டுமென்று சில திவ்யகணைகளை
எடுத்துத்தொடுத்துவிடுத்தார். அக்கணைகள் அர்ச்சு
னனுடைய தோளினும் மார்பினும் நெற்றியினும்பட்
டுருவிப்போயின அப்போது கலங்காச்சிந்தையை யு
டைய அர்ச்சுனன்கலங்கிக், தன் சித்தத்திலிருக்குஞ்
சிவனிடத்தில் முறையமிட்டு, ஓ சுவாமி! ஒருவேடுவ
னால் நான் அவமானமடைகிறதா இருக்கின்றதே:
என்று அறிவாற்புலம்பி, இருதொடையும் நடுக்கமுற்
று, மடித்தகாலைப்பூமியில்வைத்து, தவநிலை இடத்தை
விட்டு மற்றொருவிடத்தில் வந்துநின்று துன்பசாகரத்
தி லழுந்திப் பிரமித்து நின்றனன். பார்வதிதேவியார்
அதுகண்டு, ஓ சுவாமீ! கலங்கா மனத்தையுடைய அர்
ச்சுனன் மனங்கலங்கியும் நம்மை மறக்கவில்லை. ஆத
லால் அவனுக்கு விரைவிற் கிருபைபுரியுமென்று கூறி
னர். உடனே சாம்பவமூர்த்தி அர்ச்சுனனுக்கு வீர
முந் தைரியமுமுண்டாகக் கிருபாநோக்கம் வைத்து,
அதிக சினங்கொள்பவர்போல் வெகுண்டு அர்ச்சுனன்
மேற் சென்றார். அர்ச்சுனன் தானடைந்த வருத்தத்
தைநீங்கி, யானையைக்கண்ட சிங்கஞ் சீறுவதுபோலச்
சீறி, வில்லில் அநேகந்திவ்யகணைகளைத் தொடுத்தான்.
வேடர்பெருமான் தமதுவில்லிற் சரமாரிபொழிந்தார்.
இவ்விருவர் சரங்களுங் கயிலாசகிரி முழுமையுநிறைந்
தன. தேவர்களினும் மண்டலத்தரசர்களினும் - இவ்
விருவர் போர்செய்ததுபோ லொருவருஞ் செய்த
தில்லை. இவ்வாறு ஒரு முகூர்த்தகாலஞ் சரவருஷம்
ஓயாமற் பொழிந்தனர். அதுகண்டதேவர்கள் மகிழ்ந்
தனர். வேடர்கள் தியங்கினர். தபசிகள் மயங்கினர்.
பார்வதிதேவியார் அர்ச்சுனன் கரவேக சரவேகத்துக்
கு மகிழ்ந்தனர். இவ்வாறவ்விருவருங் கையோயாமற்
சரவருஷம் பொழிந்து, முடிவில் வேடர்பிரான் அர்ச்
சுனனைப்பார்த்து, அடா தபசி! அருதநாணியை
யுடைய வில்லைப் பெற்றமையால் என்னுடன் இது
வரைக்கும் போர்செய்தாய். இதோ அந்நாணியை
அறக்கிறேன் பாரென்று ஒரு கணையில் நாணியை
அறுத்துவிட்டார். ஆக்கல்-காத்தல்-அழித்தல்-என்
னு முத்தொழிற்கும் வல்லவர் சொன்னவாக்குப் பழு
தாகாமல் வில்நாணி அறவே, வில் நிமிர்ந்தது. அதை
அர்ச்சுனன்கண்டு, ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்?
தேவர்களாலும் மற்ற அசுரர்களாலும் அறுதநாணி
ஒருவேடுவனால் அறுந்ததே: இனி யோசிப்பதிற் பய
னில்லையென்று கருதி வீராவேசங்கொண்டு, நிமிர்ந்த
வில்லைக் கரத்திற்பற்றிக் கதாயுதத்தைச் சுற்றுவது
போற் சுற்றிக்கொண்டு ஓடோடியும்வந்து, தன் வலி
கொண்டமட்டும் ஓங்கி வேடுவராஜன் முடியிற் புடை
த்தனன். அந்த அடியைப்பட்ட சாம்பவமூர்த்தியா
கிய வேடன் ஐம்புலன்களை யொடுக்கிய சனகர் சனற்
குமாரர் முதலான நால்வர்க்கும் நிச்சயப் பொருளை
யறிவிக்க யோகத்தில்நின்ற பான்மைபோலச், சித்தி
ரப் பிரதிமைபொத்துச் சற்று மசைவில்லாமல், விழி
த்தகண் விழித்தபடி நின்றனர். அப்போது முடியிலி
ருந்த கங்கை வாய்விட்டலறி அங்கரத்தி லுற்றனள்.
சடைமுடியிலிருந்த மூன்றாம்பிறையும் புலம்பி மேற்
றிசையில் விழுந்தது. நாகாபரணங்கள் நாற்றிசையி
லுஞ் சிதறிப் போயின பார்வதிதேவியாரும் அச்ச
முற்று நின்றனர்.

கேளும் மகாராஜனே! சர்வஞ்ஞத்துவம் - சர்
வேச்சுரத்துவம் - சர்வநியந் திருத்துவம்-சர்வாந்தியா
மித்துவம் - சர்வகற்பி தத்துவம் - சருவ சத்தித்து
வம் - முதலியவைகளோடு, வரம்பில்ஞானம்-வரம்பிற்
காட்சி- வரம்பிலின்பம்-வரம்பிலாற்றல்-நாமமின்மை-
கோத்திர மின்மை-ஆயுவின்மை-இடையூறின்மை-கர்
த்தத்துவம்-அகர்த்தத்துவம் - அன்னியதா கர்த்தத்
துவம்-என்னு மளவற்ற பிரபுத்துவ சாமார்த்திய
குணங்களையும் வகித்த சாம்பவமூர்த்தியின் முடியில்
வில்லடிப்பட்டதென்று நான் இலேசாய்ச் சொல்வதிற்
பயனில்லை. ஏனென்றால் "விண்ணினுறைவா னவரி
லாரடிபடாதவர் விரிஞ்சனரியே முதலினோர், மண்ணி
னுறைமானவரிலாரடிபடாதவர் மனுக்கண்முதலோர்க
ளதலக், கண்ணினுறைநாகர்களி லாரடிபடாதவர்கள்
கட்செவிமகிபன் முதலோர், எண்ணில் பலயோனி
யினு மாரடிபடாதன விருந்துழி யிருந்துழியரோ.
வேதமடி யுண்டன விரிந்தபலவாகம விதங்களடியுண்
டனவொரைம், பூதமடியுண்டன விசாழிகை முதற்
புகல்செய்பொழுதொடு சலிப்பில் பொருளின், பேத
மடியுண்டன பிறப்பிலியிறபபிலிபிறங்கலரசன்றன்மக
ளார், நாதனமலன்சமரவேட வடிவங்கொடு நரன்கை
யடியுண்டபொழுதே," என்றால்-அந்த அடிசொற்க
மத்தியபாதாளமென்னு முப்புனங்களி லுள்ளவர்க்கு
ம், பிர்மா-விஷ்ணு-இந்திரன் - முதலானவர்களுக்கும்
பட்டதுமன்றி,விலங்குகள்பறவைகள்-ஊர்வன-நீர்வா
ழ்வன-தாபரமென்பவற்றிற்கெல்லாம்பட்டன வேதா
கம புராணகலைகளு மடிபட்டன. பூதவேதாளகணநா
தரு மடிபட்டனர். அர்ச்சுனன் தைரியத்தையுப்-புஜ

பலத்தையும்-யாவராலளவிடக்கூடும். அன்பர்க்கெளியனாகிய சாம்பவமூர்த்தியின் பேரருளுடைமையின் அதிலக்ஷணமே லக்ஷணம்.

கைலாசபதிக்கும் அருச்சுனனுக்கும் மல்யுத்தம்.

இப்பால் வேடுவச்செம்மல் வில்லடியுண்டு வெகுள்பவர்போல வெகுண்டு, அடா தபசி யென்று கூவி, உன்னை யின்னிமிடத்தி லதமாக்குகிறேன் பாரென்று உக்கிரங்கொண்டவர்போற் பராக்கிரமங்கொண்டனர் அப்போது அருகிலிருக்கிற பார்வதிதேவியார் சுவாமிக்குக் கிருடை பெருகும்படி இனிய வசனங்கூறினர். சாம்பவமூர்த்தியாகியவேடன் அர்ச்சுனனைப்பார்த்து, ஓ தவசி! நாணியிருக்கிறபரியந்தம் விற்போரிட்டாய் அந்நாணியற்றவுடன் வில்லையே கதையாகக்கொண்டு என்தலையில் மோதியடித்தனை. இவ்வளவுக்கும் நானஞ்சவில்லை. இனி உன்னுடன் விற்போர்புரிவது தருமமல்ல. நீயும்நானும் மல்லுயுத்தம்புரிவோம் வாவென்றழைத்தார். கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே அந்தச் சுத்த சாட்குண்யமூர்த்தியாகிய கைலாசபதிக்கு அவ்வருச்சுனனிடத்தி லுண்டாகிய கிருபையின் பெருக்கை என்னென்று சொல்லுவேன்? முன்னமளவற்ற தேவாசுரர்கள் தம்மைநோக்கித் தவஞ்செய்தடைந்த வரச்செருக்கினால் அக்கிரமித்த போதெல்லாம் அவர்களையோர்பொருள்படுத்தி எதிர்த்து அவர்கள் பராக்கிரமமனைத்தும் யாவருமறிய வெளிப்பட்டொழியும் வரையிற் போராடி, முடிவி லவர்க்குமுத்திப்பயனு முதவும்படியான துஷ்டசன நிக்கிரகமென்னு மறக்கருணையை வகித்த மகாதேவ மூர்த்திக்கு அச்செருக்கொன்று மின்றி அன்பே உருவாவமைந்து, உட்கரணங்களனைத்தையும் அவ்வுடையானிடஞ் செலுத்திப், புறக்கரணங்களாற் புங்கவருங் கொண்டாடப்போர்புரியும் விஜயனிடத்திற் சிஷ்டஜன பரிபாலனமென்னும் அறக்கருணையை வகித்தல் அருமையோ? அதனாற்றான் அவனெத்தனை தர முறியவடிக்கினும், தந்தையாயினோன் தனதருமைச்சிறுவர் ஊடிச் செய்யுஞ் சிறுகுறும்புகளைப் புத்திரவாஞ்சையாற்சகித்துப் புளகாங்கிதனாதல்போற் றானும் வாஞ்சையாற் சகித்து, முன்செய்த ஆயுதச்சமரை வெறுத்து, அவனோடு ஆலிங்கனச் சமர்செய்யத் தமக்குள் ஆவலித்து மீட்டுமீட்டு மழைக்கலாயினர்.

இவ்வாறு அழைத்தலும் அர்ச்சுனன் அக்கருத்துக்கிசைந்து, புலித்தோல்-தட்டி-சல்லடம் - இவைகளை இருக்கிக்கட்டித் தோள்தட்டி யார்த்தான். வேடர்பெருமானும் புலித்தோல்-தட்டி-சல்லடம்-இவற்றைஇறுக்கிக்கட்டித் தோள்தட்டி யார்த்தார். இருவரும் ஓரடி-ஈரடி-மூன்றடி - நான்கடி - என்னுங் கணக்கிற் பாய்ந்து, முன்னிடி - பின்னிடி - மேலிடி-கீழிடி என்னும்விதிமுறைப்படி எதிரெதிர்ப்போந்து, எட்டிக்கரங்களைப் பற்றிப்பிசைந் ததிகஉக்கிரத்தோடு, தட்டிப்புஜங்களைக் கட்டிப் புரண்டு மிகவிக்கிரமித்தாடுமிவ்விருவரும், ஒருவராலொருவர்படுங் குத்துக்களத்தனையும் பூச்செண்டுகளாற்படும் மொத்துக்களாகப் பொறுத்துப் போராடுங்காலையில், மத்தகஜத்தை யுரித்தவனைப் பேச்சின்றி விடாய்கொண்டு தத்தளிக்க அர்ச்சுனன்மிகப்பொத்தினன் அத்தனைக்கும் உத்தமன்மகிழ்வுற்றனன், மீட்டும் ஒருவரையொருவர் வாரித்தூக்கி எறிவார். ஒருவரையொருவர் மோதிப் போக்கியறைவார். அவருக்கவர்கள் பின்னலிட்டுக் கொண்டுவரிசையிலுருளுவர். அதிலென்னையன் தன்னிடத்துப்பெண் தியங்க மறுபடிவருகுவர். ஓடி ஓடி காட்டில்மரங்களைப்பிடுங்குவர் சாடிசாடிமேட்டிற்கெழும்படித் தொடங்குவர். இப்படி ஒருமுகூர்த்தம் இருவருஞ் சளையாமல் போர்புரிந்தனர். அதை இவ்விதமென்றெப்படி விவரித்துரைப்பேன்? வேடர்களும் பார்வதிதேவியும் இவ்விருவர்செய்யும் பெரும்போரைக்கண்டு ஒருவேளை மகிழ்வடைவர். ஒருவேளை வருத்தமுறுவர். இந்திரன்முதலான தேவர்கள்கண்டு ஆனந்தக்கண்ணீர் ததும்ப இரண்டுகரங்களைச்சிரமேற்குவித்து, ஓ பக்தரக்ஷகா ஓபரமதயாளா! ஓ சாம்பவமூர்த்தீ! உன் திருவிளையாடலை யாவரா லறியக்கூடுமென்று பலவாறு துதித்தனர். அத்துதிகளைக் கேட்டும் இன்னுமவ் வர்ச்சுனனோடு போராட வேண்டுமென்னுமாவலுடையவராய், அவனை இவநறைய இவரை அவனறைய ஒருவர்க்கொருவர் கட்டிக்கொண்டு, தலையோடுதலையும்-நெற்றியோடு நெற்றியும் - கண்ணோடு கண்ணும் - மூக்கோடு மூக்கும் - வாயோடுவாயும்- மார்போடு மார்பும் - தோளோடு தோளும் - தாளோடுதாளுந் தாக்கி, அஷ்டகுலபர்வதங்கள் - அஷ்டதிக்குக்கஜங்கள்-அஷ்டமா நாகங்கள்-அஷ்டதிசைப்பாலகர்கள்-தத்தளிக்க, ஆதிசேஷன் முடிமாத்த, அம்புவிமாது அயர்ந்தேத்த, இருவரும் ஒருவரை யொருவர் விடாது உருண்டு சுருண்டு புரண்டு யுத்தஞ்செய்து முடிவிற் சாம்பவமூர்த்தியாகிய வேடன் தன்காற்பெருவிரலால் அர்ச்சுனனை மேலேதூக்கி எத்தினர். அர்ச்சுனன் அந்த எத்தினவிசையினால் வாயுமண்டலம் மேகமண்டலங்கடந்து சூரியமண்டலம் நெருங்கச் சென்று, மறுபடியும் பூமியைநோக்கி வருகிறான்.

கைலாசபதிதரிசனங்கொடுக்க அருச்சுனன் துதித்தல்.

அப்போது இந்த அர்ச்சுனன் தன்முதுகு சத்துருவுக்குத் தெரியாமலிருக்கவேண்டுமென்று கருதி முதுகைமறைத்துப் பரமசிவனிடத்துக் கருத்தைச் செலுத்தி வேடன்மேல் ஆராதகோபங் கொண்டு அந்தரத்திலிருந்து வரும்போது, அவ்வர்ச்சுனன்பூமியில்

விழுமுன் பார்வதிதேவியார் தமது கணவனைநோக்கி, ஓ சுவாமி! அடியனுகிய அர்ச்சுனனைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினர். உடனே சாம்பவமூர்த்தியாகிய வேடன் திருவுளங்கனிந்து, யாதொருவருத்தமும் அர்ச்சுனனுக்கு நேரிடாமலிருக்கக் கிருபைபுரிந்தனர். அர்ச்சுனன் ஒருவருத்தமு மடையாமற் பூமியிற்குதித்து, மறுபடியு மற்போர்செய்ய யத்தனித்துத் தோளையுந் தொடையையுந்தட்டி நிமிர்ந்துவேடனைநோக்கினன். எதிரில்நின்ற வேடனும், பாலசுப்பிரமண்யரைக் கரத்திலேந்தியிருந்த வேடுவச் சிறுமியும், பக்கங்களிற் சூழ்ந்திருந்த வேடர்களும் மாயமாகமறைந்தனர். அப்போது அர்ச்சுனன் திகைத்து நாற்றிசையிலுஞ்சுற்றிப்பார்த்துப் படைத்து நிற்கும் போது, அந்தரத்தில் தேவதுந்துமி முழங்க, மந்தார பாரிசாதமலர் சொரிய, அப்சரஸ்திரீகளுந் தேவர்களும் ஜெயாவிஜெ பவாவென்று வாழ்த்திப் பல ஆசிகள்கூற, அம்சவாகனத்திற் பிரமனும், கருடவாகனத்தில் திருமாலும், அயிராவதத்தில் இந்திரனும், மற்ற அக்கினி - இயமன் - நிருதி - வருணன் - வாயு குபேரன் - ஈசானன் - அஷ்டவசுக்கள் - உருத்திரகணங்கள் - கணபதி - மயில்வாகனக்கடவுள் - நந்தியெம்பெருமான் - பூதவேதாளமாதி சிவகணங்கள் - மற்றுமுள்ள முப்பத்துமுக்கோடி தேவர்கள் - நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் - கருடகாந்தருவர்-சித்தவித்தியாதரர் முதலான அந்தரவாசிகளும் புடைசூழ, வேடுவனுகையிருந்த சாம்பவமூர்த்தி மழவிடைமேற் பார்வதிசமேதராக எழுந்தருளி அர்ச்சுனன் கண்ணுக்குத் தோன்றினர்.

அப்போது அர்ச்சுனன் அகமுகத்தாற் கண்டிருந்த காக்ஷிபோற் பகிர்முகத்தும் புலப்பட்ட கடவுளைக் கண்டமாத்திரத்தில் இரண்டுகண்ணிலும் ஆனந்தநீர்சொரிந்து, இரண்டுகரங்களையுஞ் சிரமேற்குவித்துத், தேகமுழுதும் புளகாங்கிதமுற நின்று, தொழுவான். அழுவான். எழுந்திருப்பான், விழுந்திருப்பான். பாடுவான். ஆடுவான். பணிவான்பரதவிப்பான் தன்னை மறந்து நிற்பான். உள்ளம் பெருகுவான். உருகுவான். மயங்குவான். தியங்குவான். பதைப்பான். குதிப்பான். தான் போர்புரிந்ததை எண்ணியெண்ணி நடுங்கி ஒடுங்கிக் கனிந்த சிந்தையுடையவனுகி, ஓசுவாமி! இருவினைப்பந்தங்களினற் கட்டுண்டு மெய்சோர்ந்து பிறவிக்கடலிலழுந்தி வருந்துகிற நாய்க்குங் கடையனுன எளியேனைப் பாதுகாக்கக் கருதி மிகுந்த பிரகாசத்தையுடைய மாணிக்கங்களை உச்சியிற் பெற்றிராநின்ற சர்ப்பாபரணதிகளையுங் கங்கையையுந்தரித்த சடாமகுடத்தை மறைத்துவந்த தென்ன நியாயமோ? இதோர் மாயமோ? ஓ என்னையனே! என்று சொல்லித் துதிப்பதாயினன். "சம்போ சங்கர கௌரீசா சாம்பசதாசிவ கயிலாசா, தந்திர மந்திர யெந்திரபாதா. சங்கர சங்கர சங்கர நாதா, சகலகலாண்ட சராசரகாரண-சகுணசிவாண்ட பராபரி பூரண, அந்தண அங்கண அம்பரபோகா - அண்டர்கள் சூழ்தரு மம்பிகை பாகா, அரிபிரமாதியர் தேடியநாதா - அரகர சிவசிவ அருடரு பாதா, சதபரி சதவுப சதமத விதபவ - சிதபரி கதபத சிவ சிவ சிவ சிவ, அரகர வரசுப கர கா பவ பவ - சிரபுர சுரபர சிவ சிவ சிவ சிவ, அங்க சங்க மங்கை பங்க ஆதி ஆதி ஆதியே - துங்க புங்க வங்க லிங்க ஜோதி ஜோதி ஜோதியே, அத்த முத்த பத்தர் சித்த ஆதி ஆதி ஆதியே - சுத்த சித்த சப்த நிர்த்த ஜோதி ஜோதி ஜோதியே, பாசநாச பாபநாச பாசதேச வீசனே-வாச வாச தாசர்நேச வாசநாசபேசனே, அகில புவனவுயிர்கள் தழைய வபயமுதவு மமலனே-அயனுமரியு மரனுமகிழ அருளுநடன விமலனே, சபாசிவா மகாசிவா சகாசிவா சிகாசிவா - சதாசிவா சதாசிவா சதாசிவா சதாசிவா, வாசிவாசதாசிவா மகாசிவா தயாசிவா-வாசிவாசி வாசிவாசி வாசிவாசி வாசிவா; அருட்பிரகாசா பரப்பிர காசா அகப்பிர காசாசிவப்பிர காசா-நடப்பிர காசா தவப்பிர காசா நவப்பிர காசா சிவப்பிர காசா, சங்கர சிவ சிவ மாதேவா-எங்களை யாட்கொளவா வா வா, அரகர சிவசிவ மாதேவா-அருளமுதந்தர வா வா வா, சம்போ சங்கர கௌரீசா-சாம்பசதாசிவ கயிலாசா" என்று துதிசுது, ஸ்ரீஜெயஞ் ஜெயா விஜெபவா! தேவ தேவ பிர்மாண்ட திவ்ய சர்வபர்வோன்னதா! சிருஷ்டிதிதி சம்மார திரௌபவானுக்கிரகா! அண்டரண்ட பகிரண்ட உத்தண்ட காலப்பிரசண்ட சீர்கொண்ட கண்டகண்டகா! அந்தகாசுர சம்ஹாரா! திரிபுராந்தகா! இந்திராதிபர்க்காநள் பத்மவிலோசனு! திவ்ய மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கணதரா! சங்கரா! தற்பரா! அகண்டிதா லங்கிரத கிருபாசமுத்திர நேத்ரசூத்ர சாத்ரகோத்ர பூசிதா! அங்கதங்க துங்க லிங்க மஹேஸ்வரா! பிராணேஸ்வரா! பரமேஸ்வரா! சர்வேஸ்வரா! தேவா! ஆவா! காவா! மகானுபாவா! என்னை யாதரி! மாதரி! வீரி! மாகேஸ்வரி! அரியபரமேஸ்வரி! அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகி! காலபயிரவி! அகோரபயிரவி! அகோரவீரேஸ்வரி! வீரபத்திரி! ஆயி! மகம்மாயி! தேவி! அமுதகாதலி! ஆதிசத்தி! ஆனந்தத்தாண்டவி! அகோரத்திரிசூலி! கபாலி! சுடர்மழுவேந்தி! என்று ஆனந்தக்கூத்தாடி. "ஆதியேயண்டமு மனைத்து மாயொளிர், சோதியே கொன்றையந் தொங்கன் மௌலியாய், வாதியே மரகத வல்லி யாளொரு, பாதியே பவளமாம் பரமரூபியே. பையரா வணிமணிப் பவள மேனியாய், செய்யவாய் மரகதச் செல்வி பாகனே, யையனே சேவடி யடைந்தவர்க் கெலா, மெய்யனே மெய்குமாய் விளங்குஞ் சோதியே, முக்கணு நிலவெழ முகிழ்த்த மூரலுஞ், சக்கர வதனமுந் தயங்கு வேணியு, மைங்கயன் மரகத வல்லி வாழ்வுற, செக்கர் மெய் வடிவமுஞ் சிறந்து வாழியே. விழுந்தரு வினையினின் மெலிந்து நாயினு,

மழுந்திய பிறவியி னயருவேன் முனஞ், செழுஞ்சுடர் மணிப்பணித் திங்கள் மௌலியா, யெழுந்தருளிய விதென்னமாயமோ. அன்பறு தருமனுக் கநுசனு யினே, னன்பாம் பொருளுக்கு நண்பு மாயினேன், பொன்புரை மேனியாய்ப்போற்றி னேனுனை, யென் பெருந் தவப்பயன் யார்பெற்றூர்களே'' என்று மீட் டுந் துதித்துக், கைலாசபதியோடு வந்திருக்கின்ற கண பதி - வேலாயுதக்கடவுள் - நந்தியெம்பெருமான் - திரு மால் - பிரமன் - இந்திரன் - முதலான சகல தேவர்களை யுந் துதித்து வணங்கினன்.

கைலாசபதி அருச்சுனனுக்குப் பாசு பதாஸ்திர முதலியவை கொடுத்தல்.

இவ்வாறு மனம்-வாக்கு-காயம்-என்னுந் திரிகர ணங்களாலுஞ் சாம்பவமூர்த்தியை வணங்கிய அர்ச்சு னனைவாரித் தமது திருமேனியிலழுந்தப்புல்லினர். சா ம்பவமூர்த்தியின் திருமேனியில் தன்தேகம்பட்டமா த்திரத்தில் அர்ச்சுனனுக்குண்டாகிய - பசி - தாகம்- சோகம்-மெய்வருத்தம-யாவும் நீங்கிப் பரமானந்தத் தை அடைந்தான். அப்போது சாம்பவமூர்த்தி சொ ல்லுகிறூர். அர்ச்சுனு! முன்னம் நாம் வேடுவவுருவந் தரித்து உன்னுடன் போர் செய்தனம் அப்படி வந்த தற்குக் காரணம் என்னவென்றூல்-உன் பெரிய பிதா வின் புத்திரனுகிய துரியோதனன் உங்களைவர்களின் நாடுநகர முதலியவற்றைச் சூதினூற் பறித்துக்கொண் டதுமன்றி, உங்களைக் காட்டிற் றுரத்திவிட்டனன் நீங்களைவரும் பெரியோர்கள் வாக்கின்படி வனத்துக் குவர, நீ தனித்துத் தவஞ்செய்யக் கயிலைக்குவந்ததை நீ கயிலைக்குவந்து தவஞ்செய்தலை நாரதர் துரியோ தனனுக்குக்கூற, துரியோதனன் மூகனென்னும் அசு ரனை அழைத்து உன்னைக்கொல்லப் பன்றியாக அனு ப்ப, அப்பன்றி உன்னைச் சேதஞ்செய்ய வந்ததால் நாம் வேடுவனுகி அப்பன்றியைக் கொன்று உன்னோடு விளையாட்டாகப் போர்புரிந்தனம். அதினுலும் உன் மனம் நம்மைவிட்டகலவில்லை. ஆதலால் உனதுபத்தி நிலைமைக்கு யாம் மகிழ்வுற்றுத் தரிசனமாயினோம். உன்னைப்போல் திடச்சித்தன் உலகிலில்லை. இனி உனக்கு வேண்டிய வரத்தைக் கொடுப்போம் நீ கரு திய பொருளைக் கேட்டுக்கொள்ளென்று கூறினர். இந்த வசனங்களைக்கேட்ட அர்ச்சுனன் சாம்பவமூர் த்தியோடு போர்புரிந்தோமே என்கிற அபசாரத்தை மனதிற்கருதி ஏக்கமுற்றுச்சோர்ந்து, உடல் நடுக்க முறவும்-வாய்-குழறவும்-சொல்தடுமாறவுங் கலங்கிச் சொல்லுகிறூன். ஓ சுவாமி! அடியேன் வேடனென்று அலக்ஷியமாக எண்ணிப் பலவாறு தூஷித்ததுமன்றி, என்பாணத்தினூற் பீலிமுடியைப் பிளந்தேன். வில் லாற் சிரசில் மோதினேன். மல்லு யுத்தத்தில் அடித் தேன். உதைத்தேன். இடித்தேன். பொல்லாத

அபசாரம் புரிந்தனன் இனி என் காயத்தை வைத் திருக்கேன். என்று பலவாறு புலம்புகிற போது சாம் பவமூர்த்தி அர்ச்சுனனை ஆதரித்துச் சொல்லுகிறூர். அப்பா அர்ச்சுனு! நீ வழங்கிய தூர்ப்பாஷைகளெல் லாம் நமக்குச் சாமவேதம். நீ விட்ட பாணங்களோ மலர்வாளி. உன் வில்லடி வில்வமாலை ஆதலால் அது பற்றி நீ கவலைப்படவேண்டாமென்று கூற, அர்ச்சு னன் சொல்லுகிறூன்.

ஓ ஸ்வாமி! தரும சொரூபியாகிய தருமராஜனு க்குத் தம்பியாகினேன். மகாதேஜோ மயத்தோடுங் கூடிய சொர்னநிறமுள்ள தேவரீர் திருமேனியினழகை என்கண்ணூரக்கண்டு துதித்தனன். தவசிரேஷ்ட சி லாக்கியருக்கு மருமையான இன்பத்தை யடைந்தன ன். என் தவப்பயனே பயனென்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறூன். ஓ ஸ்வாமீ! உமது திருவிளையாடலைப் பிரமாதிதேவரா லளவிடத்தக்க தல்லவென்றூல், எளி யவனு னுரைக்கத் தக்கதோ? உமது உபயசரணூர வி ந்தத்தைக் கண்ணூரக் கண்டவர் மற்றொரு பொருளை யும் இச்சிப்பாரோ? ஓ என்னுண்டவனே! எளியேன் என்பகைவரை நாசஞ்செய்ய உமது திருநாமத்தோடு விளங்கும் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தருள வே ண்டுமென்று இரந்தனன். அதற்குச் சாம்பவமூர்த்தி உளமகிழ்ந்து, உமையவளு மற்றவர்களுங் களிப்புற அதிக வலிமையையும்-ஓடியாதவில்லும்-அருதநாணி யும்-மாளாத அம்புப்புட்டிலும்-அழியாதகவசமும்- ஒழியாத வச்சிரமுடியுந் தாமேதிருவுளங் கனிந்து கொடுத்ததன்றி, அவன் கேட்டுக்கொண்ட பாசுபதா ஸ்திரமுங் கொடுத்து மந்திரோபதேசமுஞ் செய்த னர். அப்போது - உமையவள்-கணபதி-முருகக் கட வுள்-திருமால்-பிரமன்-இந்திரன்-தேவர்கள்-முதலான வர்கள் தங்கள் தங்கள் நாமதேயத்தால் விளங்கும் அ ஸ்திரங்களைக் கொடுத்து மந்திரோபதேசஞ் செய்த னர்கள். சாம்பவமூர்த்தி அர்ச்சுனனை நோக்கிச்சொல் லுகிறூர். அப்பா தனஞ்சயா! இந்த பாசுபதாஸ்திரத் தைக் கொஞ்சம் பலததையுடைய மானிடர்பேரில் விடாதே. தேவர்கள்மீதும் அசுரர்கள்மீதும் விடுவா யென்றுகூறி வாழ்த்தித், தமது பரிசனத்தோடு கயி லைக் கெழுந்தருளினர். அர்ச்சுனன் ஆராவின்பக்கடலி லாழ்ந்து மகிழ்வுற்றனன். கேட்டீரோ ஜெனமேஜெய மஹாராஜனே! மேல்நடந்தனவற்றையுங் கூறுகிறேன் கேளும்.

அருச்சுனன் இந்திரனூற்பொன்னுலகத் திற் கொண்டுபோகப்பட்டு அவனோடு கொலுவீற்றிருந்திருத்தல்.

ஓ மஹாராஜனே! சாம்பவமூர்த்தி தன்பரிசன த்தோடு கயிலைக்கெழுந்தருளினபின்பு, திருமாலும் பிரமனுந் தமதிருப்பிடஞ் சென்றூர்கள். இந்திரன்

தன்பரிசனத்தோடு துந்துமி முழங்கப் பூகலத்தில் தங்கிய தன்மைந்தனுகிய அர்ச்சுனனை நெருங்க, அர்ச்சுனன் பிதாவாகிய இந்திரனுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்ய, அப்படிவணங்கிய மைந்தனை வாரித்தழுவிப் பலஆசிகள் கூறிச் சொல்லுகிறான் அப்பாபுத்திர சிகாமணியே! சாம்பவமூர்த்தியோடெதிர்த்து வில்லுயுத்தம் மல்லுயுத்தஞ் செய்த விஜயப்பிரதாபா ! நீ அருமையாகச் செய்ததவம்நாளுக்குநாளழிவின்றி வளரக்கடவது, நீபெற்ற வில் - அம்புப்புட்டில் - முதலானவைகளோடு, அரன் கொடுத்த பாசுபதாஸ்திரமுதலாய் விர்த்தியாகி வாழக்கடவன. பரமசிவன் திருமேனியி லழுந்த மல்லுயுத்தம்புரிந்த உன் துய்யதிருமேனி நீடூழிகாலம் வாழக்கடவது. என்று பலவாறுபுகழ்ந் துரைத்து, புத்திரனை யெடுத்துத் தன்னுடைய ரதத்தின்மேல் வைத்துக்கொண்டு மாதலியை யெச்சரித்தான். அவன் தேரைவிண்ணுலகத்துக்காகத் திருப்பிநடத்தி, அந்தரலோகங்களை யெல்லாங்கடந்து சொர்க்கலோகத்துக் கருகிற்சென்ருன். தேவசாரதியாகிய மாதலிசெலுத்தும் பெரிய ஒரு இரத்தில் இரண்டுமரகதமலை இருந்தனபோல் இந்திரனும் அர்ச்சுனனுமிருந்து, அங்கிருக்கும் அந்தரலோகத்தின் மாட்சிமைகளை இந்திரன்கூற, அவற்றை அர்ச்சுனன்கேட்டுக் கண்ணூரக்கண்டு மகிழ்ந்தனன். இரதமும் பொன்னுலகத் தோரண வாசலையடைந்தது. முற்காலத்தில் திருமாலானவர் வாமனரூபங் கொண்டு மாவலியினிடத்தில் மூன்றடி யிடங்கேட்டு ஓரடியாற் பூமியை அளந்துவிட்டு மற்றொரு அடியால் அந்த லோகத்தை அளக்கநீட்டிய பாதத்துக்குச் சரியாகத்தோன்றிய அந்தரலோக மானது விண்ணவரையும் முனிவரையும் பெற்றுப் பொன்னிறமாகி ஆகாயஞ் சேர்ந்திருத்தலால், அர்ச்சுனன் கண்ணுக்குச் சாம்பவமூர்த்தியின் திருமேனிபோல்தோன்றிற்று. இவ்வளவு சிலாக்கியம் பெற்ற பொன்னுலகில் இந்திரனும் அர்ச்சுனனும் வந்து, முப்பந்து முக்கோடிதேவர்கள்-நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்கள்-கின்னர்-கிம்புருடர்-கருடர்-காந்தருவர்-சித்தர் - வித்தியாதரர்-மேனகை-அரம்பை ஊர்வசி-திலோர்த்தமை-தேவமாதர்கள்முதலிய யாவருமகிழ, ஒளியிற்சிறந்தபெரியமுத்துக்களைப்பெற்றசங்கநிதி-பதுமநிதி-சிந்தாமணி கற்பகவிருக்ஷம் காமதேனு முதலியவைகள் விளங்கியிருக்கின்றகொலுமண்டபத்தில் ஒளிமிகுந்தநவரத்தினசிங்காதனத்தில் இருவரும் இனிது வீற்றிருந்தனர்.

அதுகண்ட தேவதூதுவர் உடனே அரண்மனைக்குச் சென்று, இந்திரன் மனைவியாகிய புலோமிசையை வணங்கி, ஒ அம்மணி ! தங்களுடைய நாயகன் கயிலையங்கிரிக்குச் சென்று வருகிறபோது, ஒரு மானிடனைத்தமது தேரிலெடுத்து வைத்துக்கொண்டு நமது நகரத்துக்குவந்து, தமது சிங்காதனத்திலவனைச்சமமாகவைத்துத் தாமுமவனோடுகலைவீற்றிருக்கின்றார். அவன் உருவத்தில் மானிடனாகி இருந்தபோதிலுந் தேவாமிசை யேற்றவனுகி, நமதரசனைப்போலவேதிருவுருவலக்ஷணம் பொருந்தியிருக்கிறான். மேலும் அவன்பெருமையைக் கேள்விப்பட்டால் திருமாலவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் சகோதரியாகிய சுபத்திரைக்கு மணவாளனுகியும், அந்த விஷ்ணுவுக்கு மைத்துனனுகியும், திரிபுவனங்களை ஒருகொடியி லழிக்கும் பராக்கிரம வியாக்கிரமாகியும், நமதுமன்னவனுக்குப் புத்திரனுகியு மிருக்கிறவனென்று சொல்லுகிறார்களென்றுகூற, அதனைப் புலோமிசை கேட்டு மகிழ்வடைந்து, அந்தப் புத்திரனைப் பார்க்க வேண்டுமென்று அந்தப் புரத்தைவிட்டுத், தாதிமார் புடைசூழ முத்துச்சிவிகையிலேறிக்கொலுமண்டபத்தில் வந்திறங்கினள் கரும்பிற்கும் அமுதத்திற்குமினிமையூட்டுஞ் சொல்லையும் மீன்போலொளிரு மிடையையுமுடைய புலோமிசையின் வரவைக்கண்ட அர்ச்சுனன் தன்னன்னை யென்றுகருதி, கனிந்த மனத்தனுகிச் சிங்காதனத்தை விட்டிழிந்துவந்து, தாயின் உபயசாரவிந்தத்தில் தன்முகாரவிந்தத்தை வைத்துவணங்கினன். புலோமிசை வணங்கிய மைந்தனை வாரித்தழுவிப்பலஆசிகள்கூறிச் சொல்லுகிறாள். அப்பா என் புத்திரசிகாமணியே ! விஜயப்பிரதாபனுகி உன்பிதாவின் செல்வத்துக் குரியவனுகுவையென்று வாழ்த்தி, இந்திரனுயிர்க்குயிராகிய புலோமிசை அந்தப்புரத்துக்குச் சென்றாள். அர்ச்சுனன் முன்போல் பிதாவுடன் கொலுவிருந்தான். ஒருபக்கம் அந்தரதுந்துமியொலி-ஒருபக்கம் வேதாமலொலி-ஒருபக்கமவீணையொலி-ஒருபக்கம் உச்சைசிரவங்களி னொலி-ஒருபக்கம் ஐராவணங்களினொலி - ஒருபக்கம் மேகவொலி, ஒருபக்கம் தும்புருநாரத ரிசையொலி, ஒருபக்கம் மந்தாரமலர்களின் தேனைக் குடித்துலவும் வண்டுகளினொலி, ஒருபக்கம் காவிகாம்பர தண்டுகமண்டலதாரிகளாகிய அகத்தியர் - புலத்தியர் - வசிஷ்டர் - முதலான சப்தரிஷிகள்கூறும் பலஆசிகளொலி, ஒருபக்கம் அஷ்டவசுக்கள் - உருத்திரகணங்கள் முதலான தேவர்குழாம் வாழ்த்தெடுக்குமொலி, ஒருபக்கம் மேனகை-ஊர்வசி-திலோர்த்தமை - அரம்பை - என்னும் நான்குமாதர்களில் இருவர்நடிக்க இருவர்பாடுமொலி, இப்படி பார்ப்பதற்கு அருமையாகிய விநோதங்களையுடைய தேவராஜன் சபையை அர்ச்சுனன்பார்த்து மிகுந்த மகிழ்வடைந்திருந்தான்.

அருச்சுனனுக்கு ஊர்வசியாற் பேடிரூபம் நேருதல்.

கேளும் மகாராஜனே ! இவ்வாறு மகிழ்ச்சிகொண்ட நரேந்திரனுந் தேவேந்திரனுங் கோடிசூரியப் பிரகாசமாகிய நவரத்தின சிங்காதனத்தில் நீலகிரிகளிரண்டு கொலுவிருந்தனபோல விருந்தார்கள். இரு

மருங்கும் உபயசாமரை இரட்ட, சந்திரனை நாணச்செய்யும் வெண்பட்டுக் குடைகள்கவிய, மந்தாரமலரில் வண்டுகள் ரீங்காரஓசையுடன்வந்து விழுந்து தேனைக்குடித்து முகத்தில்வந்துசூழ, வேதகோஷ்டம் அதிகரிக்க, தேவர்கள்புடைதாவ, வியாசபகவான் வலப்பக்கத்திலிருந்து சுரர்வீர்த்தி அசுரர்நாஸ்தியென்று முக்காலுங்கூற, மேனகை-அரம்பை-ஊர்வசி-திலோத்தமை- யென்கிற நான்கு மாதருள், திருமால் தொடையி லுற்பத்தியாகி ஊர்வசியென்று காரணப்பெயர் கொண்டு தெய்வலோகக் கணிகைமாதர்க் கெல்லாந் தலைமையா யிருக்கின்றவள், தனது பரதசமர்த்தைத் தெரிவிக்க முந்திவந்து சபையில்நின்று, மற்றமூன்று கணிகைமாதரும் இசைபாடத் தான் நடனஞ் செய்தனள். அந்த ஊர்வசி செய்த நடனத்தின் திறத்தை என்னொரு நாவால் சொல்லத் தக்கதல்ல இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷன்தான் சொல்லவேண்டும். அர்ச்சுனன் அவள் செய்துவரும் நடனத்திலுள்ள பாவங்கள்-அராகங்கள்-தாளங்கள்-முதலிய பலவற்றுள்ளும் இரசமான இடங்களிற் சிரக்கம்பஞ் செய்து, அபிநயரசத்தை யுண்டு மகிழ்ந்து, இவளைப்போல் நடிப்பவரும் - அஸ்தம்பிடிப்பவரும் - இரண்டிற்குஞ் சரியாகப் பாடுவோரும் ஒருவருமில்லை யென்று மனதிற்குள் மதித்திருந்தான் இந்திரன் தன் மைந்தனைப்பார்த்து இந்நாடகச்சீர்எப்படியிருக்கின்றதென்று வினவ, அர்ச்சுனன் பணிவுடையவனாகி, ஓ ஐயா! இந்நாடகம் புதிதாக இருப்பதுவு மன்றி, அதிக ரசமாக இருக்கின்றதென்று புகழ்ந்துரைத்தான். இந்திரன் கேட்டு மகிழ்ந்தனன். ஊர்வசி அர்ச்சுனன் கல்வித்திறத்தைக்கண்டு களிப்புற்று, அவ்வர்ச்சுனன்மீது தன்னுள்ளே நீங்காத காதல்கொண்டனள். இந்திரன் கணிகைமாதருக்கு நல்ல பரிசுகொடுத்தனுப்பித், தேவர் முதலானவரைத் தம்மிருப்பிடத்துக்குச் செல்லும்படி கட்டளையிட்டுக் கொலுகலைந்து தானுந் தன் புத்திரனும் அரண்மனைக்குச் சென்று, வானநதியில் ஸ்நானஞ்செய்து பூசை முடித்துப், போசனச்சாலைக்குவந்து புசித்துத் தாம்பூலந்தரித்து, பரிமளக்கலவைச் சாந்துகள் பூசி, மலர்மாலைகள் புனைந்து இனி திருந்தனன். சூரியனும் மேற்றிசைக்கடலிலாழ்ந்தான். உடனே சந்திரனுதய மாயினன்.

அப்போது இந்திரன் சில ஏவலாளிகளை அழைத்து, நமதரண்மனையி லிருக்கும் பள்ளியறைகளிலொன்றை நன்று யலங்காரஞ்செய்து எனது புத்திரனாகிய அர்ச்சுனனை அப்பள்ளியறைக்கு அழைத்துப் போங்களென்று கட்டளையிட, அவர்கள் ஒரு பள்ளியறையைத்திறந்து நன்றுபலங்காரஞ் செய்து திருவிளக்கேற்றி, அர்ச்சுனனை அழைத்துப்போய் அவ்வறையிற் சேர்த்தனர். அர்ச்சுனன் அதிற்சயனித்திருந்தனன். அர்ச்சுனன்மீது காதல்கொண்ட ஊர்வசி நடுச்சாமத்தி லெழுந்து, ஆடையாபரண லங்கிருதமாகிப், பரிமளகந்தங்களை யணிந்து, தனது காதற்றோழியைத் துணையாகக்கொண்டு. அர்ச்சுனன் படுத்திருக்கும் பள்ளியறைக்குள் வந்தாள். அவள் வரவைக்கண்ட அர்ச்சுனன் திடுக்கிட்டெழுந்து எதிர்சென்று சாஷ்டாங்கமாக வணங்கி, ஓ அம்மணி! எங்கள்மூதாதையாகிய ஆயுவென்பவர்க்குமனைவியாகி உயிர்க்குயிராக இருந்த என் தாயாகிய நீர், இந்நேரத்தில் இங்கு வந்தகாரணமென்னவென்று வினவினன். அர்ச்சுனன் வழங்கிய சொற்களைக்கேட்ட ஊர்வசி தன் எண்ணம் வீணாயினதை நோக்கி, அனலிலிடு மெழுகுபோல் மனமிகவுருகி, ஒரு நாழிகைபரியந்தம் ஒன்றுந்தோன்றாமல் மயங்கியிருந்து, பின்பு தெளிந்து கடுஞ்சினமடைந்து சொல்லுகிறாள் : ஓ அர்ச்சுனா! நானின்று பகல் இந்திரசபையில் நடனஞ்செய்தபோது உன்வடிவத்தைக்கண்டு காதல்கொண்டு, பகற்பொழுது எப்போது நீங்குமென்று வருத்தமுற்றிருந்து, இராப்பொழுதடைந்த உடனே வராமல் ஒருவரறியாமலிருக்கவேண்டுமென்று கருதி நடுச்சாமத்தி லெழுந்து உன்பள்ளியறைக்குவந்தால்; நீ என் மனமகிழப் புல்லாமல், மூதாதையின் மனைவியாயிருந்த என் தாயென்று தாய்முறை கொண்டு என்னாசையை நிராசையாக்கினை. மேலுந் தாசிகளுக்கு முறையில்லை. நான் விரும்பி வலியவந்தால் நீ அணையவேண்டும். தருமசாஸ்திரத்தில் தாயானவளுங் காமமுற்று வலியவந்தால் தழுவச்சொல்லி விதியிருக்கின்றது. இதனை நீயுணர்ந்திருந்துஞ் சுத்தமூடனைப்போல் என்னைப் பங்கப்படுத்தினை. இப்படிச் செயகது உன் தவச்செருக்கா? பராக்கிரமத்தின் கருக்கா? அல்லது நமதழகுக்கு இவளொப்பானவ ளன்றென்று அவமதித்தல் செய்தனையா? நல்லது: எந்தவிதத்தினாலேயோ என்னை நீ பங்கப்படுத்தினை. உன்னை நான் பங்கப்படுத்தாமல் விடேன். இதோ உன்னைச் சபிக்கிறேன் பாரென்று கூறி, நீ இன்றுமுதல் பேடியுருவமாகக் கடவையென்று சபித்துவிட்டுத் தன்னிருப்பிடத்துக்குச் சென்றாள். அர்ச்சுனன் பள்ளியறை சேர்ந்தான். உடனே ஊர்வசியிட்ட சாபம்வந்து பற்றிக்கொண்டது. அதனால் தன்னுடைய திருவுருவமாறிப் பேடிரூபமேற, அந்த உருவத்தைக்கண்ட அர்ச்சுனன் ஐஐயோ!! தெய்வமே! எனக்கு இவ்வுரு வருமென்றறியேனே. இவ்வுருவத்தைப்பெற் றெப்படி உயிர்தரிப்பேன்? என்று பலவாறு புலம்பிப், பிறரறியாம லிருக்கத் தன்னுடல் முழுவதையும் வஸ்திரத்தால் மூடிவருத்தமுற்றிருந்தான். அர்ச்சுனன் வருத்தமுறுதலை மனம்பொறாமல் அவ்வருத்தத்தைத்தீர்க்க இந்திரன் வருதல்போற் சூரியன் கீழ்த்திசையிற் றோன்றினான். கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! மேல்நடந்தனவற்றையுங் கூறுகிறேன் கவனமாய்க் கேளும்.

அருச்சுனன் தவநிலைச் சருக்கம் முற்றிற்று.

மூன்ருவது,

நிவாதகவசர் வதைச்சருக்கம்.

கண்ணன் துதி.

வேதன்சகலவி ளேதன்கோபியர் நாதனருள்பிரக் கியாதனேம்
பூதனின்மல போதன்றத்துவ நீதன்பங்கப பாதன்றேர்ச்
சூதன்கமலேச மேதன்மெய்க்கும தீதன்றற்சனர் பேதன்சங்
கீதன்பஞ்சவர் தூதன்சரண்மலர்த் தாதென்நெஞ்சக லாதன்றே.

இப்பால் சூரியோதயமானவன் இந்திரன் எழுந்து காலைக்கடனை முடித்து ஸ்நானஞ்செய்து பூசையைநிறைவேற்றி, ஆடையாபரணலங்கிர்தனுகித், தன் பரிசனத்தோடு கொலுமண்டபத்துக்குவந்து, எதிரிலிருக்கும் யக்ஷகதூதனை யழைத்து, என் புத்திரனுகிய அர்ச்சுனனை அழைத்துவாவென் றனுப்பினன். யக்ஷகதூதன் அர்ச்சுனனிருக்கும் பள்ளியறைக்குட்சென்று அழைக்க, அர்ச்சுனன் தனக்குற்ற சாபத்தைக்கூற, தூதுவன்கேட்டு ஓடோடியும்வந்து இந்திரனை வணங்கி, ஊர்வசியால் அர்ச்சுனனுக்குச் சாபநேரிட்டிருக்கின்றதைக் கூறினன். அதுகேட்ட இந்திரன் சோகமுற்று, ஆயிரங்கண்களிலும் நீர்ததும்பப் புலம்பி, அங்குள்ள தேவர்களோடுங்கூடி அர்ச்சுனன் பள்ளியறைக்குட் சென்று, அவனைக்கண்டு தழுவிக் கனவருத்தமுற்று, அவனுக்குச் சில தேறுதலைச்சொல்லி, உடனே தூதுவரை அழைத்து ஊர்வசியை அழைத்துவரக்கட்டளையிட்டான். தூதுவர் ஊர்வசியைக்கண்டு அரசன் வரும்படி கட்டளையிட்டதைத் தெரிவித்தார்கள். ஊர்வசி தனக்குள்தானே அதிக அச்சமடைந்தவளாகி, இந்திரன் சமூகத்துக்கு அதிகவிரைவுடன் வந்தாள். இந்திரன் தேவர்கள் முகத்தைநோக்க, அக்குறிப்பறிந்த தேவர்கள் ஊர்வசியைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். ஓ கணிகையர்சிகாமணீ! நீகொண்ட காதலுக்குக் கெடுதி நேரிட்டதென்று பூலோக இந்திரனுகிய அர்ச்சுனனைச் சபித்துவிட்டாய் அர்ச்சுனன் தன்மூதாதையின் மனைவியென்று மதித்து மறுத்தான். ஸ்திரீரீகள் வலியவிச்சித்தால் அந்த ஸ்திரீ யாராயிருந்தபோதிலும் புணர விதியிருக்கின்றது. அர்ச்சுனன் அதனையுணர்ந்தவனுக இருந்தும் உன்னளவில் அந்த விதியைமறந்து அவிதியடைந்தான். நமது அரசனுல் அர்ச்சுனன் இந்த சொற்கலோகத்துக்கு வந்தான். அவனுக்குக் கெடுதிநேரிட்டால் நமதரசனுக்கு இழிவுவரும். நாமே அரசனுக்கு இழிவுவரச்செய்வது தகுதியல்ல. ஆதலால் நீ அவன்மீதுகொண்ட கோபத்தையாற்றி. அந்தப் பேடிவடிவம் நினைத்தபோது வரும்படி மறுசாபங் கொடுவென்று வேண்டினுர்கள். அதுகேட்ட ஊர்வசிமகிழ்ந்து, அந்தப்படியே அவன் நினைத்தபோது அச்சாபம் வரக்கடவது. மற்றவேளை வராதிருக்கக் கடவதென்று பிரதிசாபங் கொடுத்தாள். அர்ச்சுனன் பேடியுருவம்நீங்கி முன்னுருவந்தரித்து, மாசற்றமணியைப்போலப் பிரகாசித்தான் இந்திரன் மகிழ்ந்து ஊர்வசியைப் பலவாறுபுகழ்ந்துரைத்து, விரைவிற் கொலுமண்டபத்துக்கு வரும்படிகட்டளையிட்டு, அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு தேவருடன் கொலுமண்டபம்வந்து சேர்ந்தான்.

தேவேந்திரன் அருச்சுனனுக்கு இளவரசு பட்டாபிஷேகஞ் செய்தல்.

கேளும் மகாராஜனே! பேடிரூபந் தரித்த அர்ச்சுனனானவன் அந்த ரூபம் நினைத்தபோது வரும்படி வரங்கொடுத்த ஊர்வசியாகிய அன்னையைப்பணிந்து, பிதாவாகிய இந்திரனோடு கோடிசூரியப்பிரகாசமாகிய சிங்காதனத்தி லினிதுவீற்றிருந்தான். அப்போது இந்திரன் தன்பட்டத்தைப் பிள்ளையாகிய அர்ச்சுனனுக்குக் கட்டவும், தனக்குப் பிரமன் கொடுத்த மகுடத்தை அவனுக்குத் தரிக்கவும் எண்ணங்கொண்டு; அக்காரிய மாகவேண்டியதற்காகத் தேவர் முதலான யாவரையுஞ் சம்மதிக்கச் செய்யவேண்டியாதலால், அதற்கு அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தையும் அவனுல் நமக்குவரும் நன்மையும் எடுத்தோதினுற் சம்மதிப்பார்களென்றுகருதி, தேவர்களை நோக்கிச் சொல்லுகிறான். ஓ தேவர்களே! ஓ முனிவர்களே! இதோ என்னருகிலிருக்கிற அர்ச்சுனன் நரனுக இருந்தாலும், இவன் நரனல்ல. தேவமிசையைப்பெற்றவன். நமக்கிடையூறு விளைத்துப் போர்முகத்திலிளைத்து வீறிட்டோடச்செய்யும் அசுரரை வெற்றிகொள்ளும் பராக்கிரமசாலி. நாமெல்லாம்பார்த்திருக்கச் சாம்பவமூர்த்தியோடு வில்யுத்தம் மல்யுத்தம் புரிந்தவன். இவன் வல்லமையை ஆதிசேஷனுலுஞ் சொல்லத்தக்கதல்ல. பசிநோய்கொண்ட அக்கினிபகவானுடைய பசிதணிய நமது காண்டவ வனத்தைத் தகனஞ்செய்ய அவனுக்கு உத்தரவுகொடுத்து, அழியாததேரும் - ஒடியாத வில்லும் - அறுத நாணியும் - அக்ஷயத்தூணீரமும் பெற்று, நம்முடனுமெதிர்த்து, நம்மையும் நம்மாலேவப்பட்ட மேகத்தையுங் கர்வபங்கஞ்செய்து, நம்மையெல்லாம் வீறிட்டோடும்படி போரிட்ட பராக்கிரமசாலி. ஆதலால் நான் பிரமன்கையிற் பெற்ற மகு

டத்தை இவனுக்குச் சூட்டி என்பட்டத்துக் கிளவரசாக வைக்கவேண்டுமென்று கருதியிருக்கிறேன். அதற்கு உங்கள் கருத்தென்னவென்று வினவினன். இந்திரன் வழங்கிய சொற்களைக்கேட்ட தேவருமுனிவரும் வியப்படைந்து, அர்ச்சுனனைத் தங்கள் கண்களாகிய மலர்களினால் அர்ச்சனை செய்பவர்போல் அவனிடத்தில் திருக்கண்ணோக்கம் வைத்துத் தேவேந்திரன் கேட்கச் சொல்லுகிறார்கள்.

ஓ மகாராஜனே! தாங்கள் வழங்கிய சொற்களும் இந்த மகானுபாவன் செய்கையும் ஒத்திருக்கின்றமையால், உங்கள் கருத்துக்கு நாங்களும் இசைந்தோமென்றார்கள். அதுகேட்ட இந்திரன்மகிழ்ந்து, தக்ஷணந் தம்மிடத்திலிருக்கும் பெரியோர்களால் வானநதி கொண்டுவரக் கட்டளையிட்டு, அந்நதியால் அர்ச்சுனனுக்கு ஸ்நானஞ்செய்வித்து, வேதவிதிப்படி சிங்காதனத்திலிருத்தி, ஆடையாபரணாலங்கிரதஞ்செய்து, சந்தனம் - புனுகு-சவ்வாது-கஸ்தூரி-கற்பூரம்-குங்குமம் - முதலானவைகளையணிந்து, பரிமளமிகுந்த நறுமலர் மாலைகளைப் புனைந்து, மகரகுண்டல ஆரகேயூர கடககங்கண முதலாகிய இராஜபூஷணங்களைத் தரித்து, தேவரும் - முனிவரும் - மற்றமுள்ள யாவரும் ஜெயாவிஜைபவாவென்று பல ஆசிகள்கூறிக் கற்பகப் பூமாரிதூவ, அந்தரத் துந்துமி முழங்க, எக்காளம் - சின்னம்- துத்தாரி முதலியவைகள் பூரிக்க, மற்றவாத்திய ஓசை எந்தெந்தலோகத்திலுங்கேட்க, இந்திரன் பிரமனாற்பெற்ற கோடிசூரியப் பிரகாசமாகிய மகுடத்தை எடுத்து அர்ச்சுனன் சிரசில்தரித்து, கிரீடிகிரீடி கிரீடி யென்று மூன்றுதரந் தன்வாயாற் சொல்லிப் பலவாறு வாழ்த்தினான். மற்றத்தேவர்களு முனிவர்களும் பலவாறுவாழ்த்தி, இந்திரனுக்குச்செய்யத்தகு மரியாதைகள் எத்தன்மையவோ? அத்தன்மைய மரியாதைகளையெல்லாம் அர்ச்சுனனுக்குச் செய்து மகிழ்ந்தார்கள். மற்ற அரம்பாஸ்திரீகளும், யக்ஷர்-கருடர்-காந்தருவர்-சித்தர்-வித்தியாதரர் முதலான யாவரும், இந்திரனுக்குச் செய்யத்தகு மரியாதைசெய்து மகிழ்ந்தார்கள். இந்திரன் அர்ச்சுனனுக்கு மந்திரவாள் தேவாஸ்திர முதலியவைகொடுத்து, யாவர்க்கும் விருந்தளித்துத், தானுந் தன் புத்திரனாகிய அர்ச்சுனனும் ஒரு கலத்திலுண்டார்கள். அந்தவேளையில் அயிராணி கண்டு மனம்பொறாதவளாகி, ஓ! ஓ! நமதரசனென்ன புத்திமயங்கி யிருக்கிறார்? நரனுடன் தானும் ஒருகலத்திலமுதுண்கின்றாரேயென்று சினங்கொண்டு, தன் கணவனைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஓ மகாராஜனே! நீரோ? விண்ணுலகாதிபதி. உம்முடன் புசிப்பவனோ? மண்ணுலகாதிபதி. இருவரும் ஒருகலத்திலமுதுண்டால் யார்தான் நகையாரென்றுரைக்க, அதை இந்திரன்கேட்டுக் குறுநகைகொண்டுசொல்லுகிறான்.

ஓ மாதுசிரோன்மணி! இந்த அர்ச்சுனன் நரனாக இருந்தாலும், அவன் உருவத்தால் நரனேயன்றிச் செய்கையால் நரனல்ல. நமக்குச் செய்கைசிறந்ததேயன்றிக் குலஞ்சிறப்பல்ல. மேலுமிந்த அர்ச்சுனன் திருமாலுக்கு மைத்துனன். கைலாசபதியோடு போர்புரிந்தவன் எனக்குப் புத்திரன். வேதவிதிக்கும் பிசகாத நன்னெறியையுடையவன் பராக்கிரமசாலி. ஆதலால் அவனோடுநான் ஒருகலத்திலுண்ண யாதொரு விரோதமுமில்லை. என்று கூறியதைக் கேட்ட அருகிருந்த தேவர்கள் அயிராணியை நோக்கிச்சொல்லுகிறார்கள். ஓ அம்மணீ! திருமாலுக்கு மைத்துனனென்றபோதே வேறொரு உறுதி வேண்டுவதில்லை. அந்தத் திருமால் நமதுலகிலுள்ள கற்பகவிருக்ஷங்களைப் பூலோகத்தில் நாட்டினவர். அவரே இந்த மஹானுபாவர்க்கு மைத்துனனானால், நமதரசன் இவரோடு ஒருகலத்திலுண்பதற்கு நாம் வேறு நினைக்கக்கூடுமோ? ஆனால் இந்தப் புருஷோத்தமன் இங்குவந்ததற்கும் ஒருகாரணமிருக்குமென்றுகூற, புலோமிசை மனமகிழ்ந்தாள். புலோமிசை கூறியவற்றையுந் தேவர்கள் கூறியவற்றையுங் கேட்ட அர்ச்சுனன் இந்திரனைப் பணிந்து சொல்லுகிறான். ஓ ஐயா! தாங்களோ? தேவராஜசிகாமணி. நானோ? நரன். நாமிருவரும் ஒரு ஆசனத்திலிருப்பதும், ஒருகலத்திலுண்பதுந் தகுமாவென்றனன் இந்திரன் புத்திரனைத் தழுவிச் சொல்லுகிறான். அப்பா கிரீடி! சொற்கமத்திய பாதாலமென்னும் முப்புவனங்களிலுன்னைவிட பராக்கிரமசாலிகளுண்டோ? காண்பதற்கு அருமையான சாம்பவமூர்த்தியோடு நாங்களெல்லாம் பார்க்க விற்போர் மற்போர்புரிந்தனை. அழியாததேர் - ஒடியாதவில்- அக்ஷயதூணீரம்-முதலானவைகளோடு, திருமால்-பிரமன்-பார்வதி-குமரவேள்-முதலான கடவுளருடைய கிருபையையும் பெற்றிருக்கின்றனை. மேலும் நீ கிடைத்தற்கரிய பாசுபதமுதலிய திவ்யாஸ்திரங்களைப் பெற்ற மகானுபாவன். உன்னுடன் நான் சிங்காதனத்திலிருப்பதும் ஒருகலத்திற் புசிப்பதும் அருமையோ? என்று சொல்லிப் புத்திரனை மகிழ்செய்தனன். அர்ச்சுனன் மனமகிழ்ந்து, இந்திரனோடு புசித்துத் தாம்பூலம் தரித்துக் கொலுமண்டபத்திலிருக்குஞ் சிங்காதனத்திலினிது வீற்றிருந்தான்.

இந்திரன் அருச்சுனனுக்கு நிவாதகவசர் கொடுமையுரைத்தல்.

கேளும் மஹாராஜனே! இவ்வாறு சிலநாள் கழிந்தபின் இந்திரன் தனக்கு ஜன்மப்பகையாகிய நிவாதகவசரை அர்ச்சுனனால் அதமாகக்கருதி, அவனைப் பார்த்துச் சொல்லுகிறான். அப்பா என் புத்திரசிகாமணீ! நான்குவேதம் - ஆறுசாஸ்திரம் - அறுபத்துநான்கு கலைக்கியான முதலியவற்றைக் கற்றுணர்ந்து

யாவர்க்குங் கற்பிக்கவல்ல பெரியோர்களாயினோர், தங்களுரியோர்களுக்கு உன்னைப்போல் பராக்கிரமசாலிகளாற் பெருஞ்செல்வமடையவேண்டு மென்று கூறுவார்கள். நான் உனக்குப் பிதாவாகவுங் குருவாகவுமிருந்தாலும், உன்னால் நான் இன்னும் பெருஞ் செல்வமடையவேண்டுமென்றுகருதி யிருக்கின்றேனாதலால், என்மீது நீ மனமகிழ்ந்து எனக்கொரு வரங்கொடுக்கவேண்டுமென்றுகூற, பிதாவழங்கிய சொல்லைக்கேட்ட அர்ச்சுனன் வணங்கிச் சொல்லுகிறான் ஓ ஐயா! தாங்களோ? சொர்க்க மத்திய பாதாளலோகமென்னு முப்புவனங்களுக்கும் அரசுரிமைபூண்டவர். நானோ? நரன். என்னால் தங்களுக்குவரும் பெருஞ்செல்வமென்ன இருக்கின்றது? அப்படி என்னாற் செல்வம் வருகிறதாக இருந்தால் திருவுளங்கனிந் துரைக்கவேண்டுமென்று கூற, இந்திரன் சொல்லுகிறான். அப்பா அர்ச்சுனா! இதற்கு மேற்றிசையில் நிவாதகவசரென்று சொல்லப்பட்ட பொல்லாத பாவிகளாகிய மூன்றுகோடி அசுரர்களுண்டு. அவர்கள் திருப்பாற்கடலில் அஷ்டலட்சுமி சமேதனாகப் பன்னகசயனத்தின்மேல் அறிதுயிலி லிருப்பவனாகிய திருமாலும் - பிரமனும் - உருத்திரனும்-ஒன்றாகூடி வந்தெதிர்த்தாலும் அழியாத நெறியையுடைய மேலானவர்கள். இம்மூவருமழிந்தாலுந் தாங்களழியாதவராகி, மூன்றுலோகத்திலுள்ள யாவரையும் போர்முகத்தில் விறிட்டோட அமர்செய்யுந்திறத்தி லுயர்ந்தவர்கள். கோழிக்கொடியோனாகிய சுப்பிரமணியர்க்கும் பின்னிடையாத பராக்கிரசாலிகள். கெடாத கவசத்தையுடையவர்கள். அதிக தவப்பலத்தை யுற்றவர்கள். வில்லில் வல்லவர்கள். தங்களுடைய மூச்சினால் திரிலோகத்தையுந் தத்தளிக்கச் செய்பவர்கள். எக்காலமும் விகண்டவாதம் புரிபவர்கள். எந்நேரமுங் கடுஞ்சினமடைந்திருக்கிறவர்கள். கிருபையை அறியாதவர்கள். எப்போதும் நீங்காமற் கவசத்தை யணிந்திருக்கிற காரணத்தினால்நிவாதகவசரென்று நாமம் படைத்தவர்கள். பொல்லாத பாவிகள். அவர்களுக்கும் எனக்கும் ஜன்மப்பகை. அவர்கள் என்னை ஒரு துரும்பாகப் பார்த்திருக்கிறவர்கள். எவ்வகைப்பட்டவர்க்கும் வெற்றிபெறுதற்கு அசாத்திய மானவர்கள். மாயையில் வல்லவர்கள். அவர்கள் உன்பாணத்தினாலன்றி மற்றவர் பாணத்தினால் மடியார்கள். ஆகலால் என்னிடத்தி லன்புவைத்து, நான் பெருஞ்செல்வமடைய அம்மூன்றுகோடி யசுரரைக் கொல்லுகிறேனென்று வாக்குக்கொடென்று வினவப், போரென்றாற் பூரிக்கும் புயாசலங்களையுடைய அர்ச்சுனன் உடனே அககமலமும் முககமல மும்மலர்ந்து, உடல்புளகம்போர்ப்ப இந்திரனை வணங்கிச் சொல்லுகிறான்.

ஓ ஐயா! தங்கள் கிருபாகடாட்சம்பெற்ற என்னை அந்நிவாதகவசர்மேல் மாத்திரமல்ல, இன்னும் யார்பேரிற் போருக்கு அனுப்பினாலும் அவர்களை ஒரு மாத்திரையில் வெற்றிபெறுவேனாதலால்; தங்கள் கருத்துக்கிசைந்தேன். இனிதாமசஞ்செய்யாமல் தங்களுக்கு ஜன்மப்பகைவர்களாகிய நிவாதகவசர்மேற் போருக்கு அனுப்பிவையுமென்றுகூற, இந்திரன் மகிழ்ந்து, தட்க்ஷணந் தன்னருகிலிருக்கிற மாதலியைநோக்கிச் சொல்லுகிறான். ஓ சாரதி! நமக்கு ஜன்மப்பகைவராகிய முக்கோடி யவுனரையும் வெற்றிபெறும் இந்த விஜயப்பிரதாபனுக்கு நீரதசாரத்தியஞ் செய்யவேண்டியிருப்பதால், இதுவரையில் இரதத்துக்குப் பூட்டிவந்த குதிரைகளைப் பூட்டவேண்டாம், வாயுவேகமாகச்செல்லும் வேகத்தை யுடைத்தாகிக், கோபத்தீ ஜொலிக்கும் நயனத்தைப்பெற்று விளங்கி நல்லஜாதியாக இருக்கிற குதிரைகளைப்பூட்டு அவைமேற்றிசையெவ்வளவோ? அவ்வளவுஞ்சென்றுவருவதோடு, மேகமும்-யமனும்-நடுங்குறச் சஞ்சரிக்குமென்று கூற; இந்திரன் சொற்படி மாதலி அர்ச்சுனனுக்கு ரதசாரத்தியஞ்செய்ய ஒத்துக்கொண்டு, இந்திரன் கூறிய குறிக்கொத்திருக்கிற குதிரைகளிற் பதினாயிரங் குதிரைகளை இந்திரனேறுந் தேரிற்பூட்டி, அத்தேரை முருக்கம்பூ நிறம்போல் அலங்கிரதஞ்செய்துகொண்டு வந்தான். உடனே அர்ச்சுனன் போர்க்கோலங்கொண்டு, தந்தையாகிய இந்திரனைவணங்கி விடைகேட்டனன். இந்திரன் மகிழ்ந்து, அழியாத கவசமளித்து வாழ்த்தி விடைகொடுத்தான். அர்ச்சுனன் இரதத்தினருகிற்சென்று தேரைவலம்வந்து ஏறி, ஆயிரந்தட்டுக்குமே லிருக்குங் கோடிசூரியப்பிரகாசமாகிய நவரத்தின சிங்காதனத்திலிருந்து, மாதலியைநோக்கி, ஓ மாதலி! எனது பிதாவாகிய தேவராஜனுக்கு நாடோறுமிடையூறு செய்துவருகிற பாவிகளாகிய நிவாதகவசர்களிருக்கிற அந்தத்திசைக்காக இரதத்தைநடத்தென்றுகூற, மாதலி சொல்லுகிறான்.

அருச்சுனன் தோயமாபுரஞ் சென்று தூதனுப்புதல்.

ஓ ஐயா! நிவாதகவசர்களுடைய பராக்கிரமத்தை என்னொரு நாவாற் சொல்லத்தக்கதல்ல. மகா பராக்கிரமசாலிகள். அவர்களிருக்கிறது மேற்றிசை. அம்மேற்றிசைக் கடலருகில் தோயமாபுரமென்றொரு நகரமிருக்கின்றது. அந்நகரத்தி லவர்கள் தங்கள் பராக்கிரமத்தைச் செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். நாம் தன்னந்தனியே செல்லுகிறோம். நாம் போர்க்கு வந்தசேதி அவர்க்குத் தெரிகிறதெப்படி? சித்திரசேனனையாவதுகூட அழைத்துச் சென்றோமாகில் நாம்வந்த சேதியைத் தெரிவிப்பானென்றுகூற, அர்ச்சுனன் அக்கருத்துக்கிசைந்து, சித்திரசேனனை அழைத்துத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு இரதத்தை நடத்த மாதலியை எச்சரிக்க, அவன் தேரை நடத்திவருகிறான். தேவமாதர்களிற் சிலர் மாதலியை

யும். மாதலிவிடும் இரதத்திலிருக்கும் அர்ச்சுனனையும் பார்த்து, ஓ! ஓ! முப்பத்துமுக்கோடி தேவர்கள்–அஷ்டவசுக்கள் – திக்குப்பாலகர் – உருத்திரகணங்கள் முதலான தேவவீரர்களாலே வெற்றிபெறக்கூடாத நிவாதகவசத்தாரை இந்தமானிடனோ வெல்பவனென்று நகைத்தார்கள். சிலர் ஜெயாபஜெயம் ஒருவர்பங்கல்ல. இந்நரனை நோக்கும்போது நமது நாட்டுக்கு அரசனாகிய இந்திரனைப்போல் இருக்கின்றது. இந்த மகானுபாவன் முகமலர்ச்சியோடு செல்கிறதினால்வெற்றிபெறுவானென்று நினைக்கவேண்டியதாக இருக்கின்றதென்றனர். அங்கங்கிருக்குந் தேவர்கள் இரதத்தைக்கண்டு இந்திரன் வருகிறானென்று கருதி அரசனைக் காணவந்தார்கள். அருகில் வந்தமாத்திரத்தில் இந்திரனல்லாமையா யிருக்கிறதைக்கண்டு மாதலியை நோக்கி, ஓ தேவசாரதீ! நமது அரசனுக்குரிய இந்த இரதத்தின்மேலொருவரு மேறக்கூடாதே அந்தரதத்தின்மேல் யாரோ ஒருமகானுபாவ ரிருக்கின்றார். அவர்யாரென்றுவினவ மாதலிசொல்லுகிறான்.

ஓ தேவர்களே! இந்த மகானுபாவர் பூலோகாதிபதி மகா பராக்கிரமசாலி. சாம்பவமூர்த்தியோடு விற்போர் மற்போர் புரிந்தவர். தவசிலாக்கிய சிகாமணி பரமசிவனிடத்து யாவராலும் பெறுதற்கரிய பாசுபதாஸ்திரத்தைப் பெற்றிருக்கிறவர். நமது அரசனுக்குப் புத்திரன் நம்மையாளுமவ்வரசனுக்குப் பிரமன் கொடுத்த மணிமகுடத்தைத்தாங்கியிருக்கிறவர். இவரை நமதரசன் நிவாதகவசர்மேல் போருக்கனுப்பிவித்தார். ஆதலால்நாங்கள்போருக்குச்செல்கிறோமென்று கூறினன். இந்தவாக்கியத்தைக்கேட்ட தேவர்களனைவரும் மகிழ்வுற்றுப் பலஆசிகள்கூறி, வெற்றிபெற்றுவரக்கடவதென்று வாழ்த்தி, அர்ச்சுனனைப்பார்த்துச் சொல்லுகிறார்கள் ஓமகானு பாவா! முற்காலத்தில் இராவணன்கும்பகர்னனென்று இரண்டிராக்கதருண்டாகி உலகங்களை நாசப்படுத்தினதுமன்றி, சொர்க்கலோகத்திலும்வந்து உமது பிதாவாகிய இந்திரனைப் புறங்கண்டார்கள். இப்படி யாவராலும் அபஜயப்படாதிருந்த அவ்விராவண கும்பகர்ணாதிகள், தசரதராஜபுத்திரனாகிய ஸ்ரீராமமூர்த்திபால் நாசமடைந்தார்கள். அதுபோல் உம்மால் நிவாதகவசர் நாசமடைவார்கள். இதற்குச் சந்தேகமில்லை, என்று கூறித்தாங்கள் பெற்றிருக்கிற வேதத்தையளித்துப் போயினர். பராக்கிரமசாலியாகிய அர்ச்சுனன் மனமகிழ்ந்துவந்த தேவர்களுக்கெல்லாம் வந்தனைசெய்து மாதலியைப் பார்த்துச் சொல்லுகிறான் ஓதேவசாரதீ! என்பிதாவாகிய இந்திரனுக்குத் தேரை எவ்வாறு நடத்துவையோ? அவ்வாறு நடத்தென்றுகூற, மாதலி மகாப் பிரசாதமென்று புரவிகளை எச்சரித்து, அந்தரத்தில் தேரைநடத்துவதிற் சிலநேரங் குலாலன் சக்கரம்போலவும் சிலநேரஞ் சலவேகம்போலவும் சிலநேரம் பாம்பூர்வதுபோலவும் நடத்தினான். அர்ச்சுனன் அதைக்கண்டு, வெகுசந்தோஷத்துடன் மாதலியை மெச்சிக்கொண்டவனானான். மாதலியானவன் தேரைநடத்தி அந்தரலோகத்தைக்கடந்து, மேற்றிசைக் கடலருகிற் கொண்டுவந்தான். அப்போது அர்ச்சுனன் மாதலியைப் பார்த்துச் சொல்லுகிறான்

ஓ மாதலீ! கடல்மத்தியிற் கோடிசூரியப் பிரகாசமாக மாடமாளிகை கூடகோபுரங்களோடு ஒரு நகரமிருக்கின்றதாகக் காண்கிறதே அதிலிருப்பவர்களுடைய இயல்பை எடுத்துச்சொல்லென்றுகூற மாதலிசொல்லுகிறான். ஓ மண்டலாதிபதீ! இந்நகரந்தான தோயமாபுரமென்பது. இதிற்றான் அந்த நிவாதகவசர்களிருக்கிறார்கள், இந்த நிவாத கவசத்தாருடையபெருமையையும் பராக்கிரமத்தையும் மும்மூர்த்திகளாலேயுஞ் சொல்லுதற் கருமையென்றால், என்னால் அவர்களுடைய பெருமையைச் சொல்லத் தக்கதோ? மண்டலாதிபதியாக இருந்துதேவராஜனுக்குப் புத்திரனாகிய தாங்கள் வினவியபடியால், என்னாற்கூடியமட்டும் இந்த அசுரர்களுடைய பெருமையைச்சொல்லுகிறேன் கேளும் மகாராஜனே! இந்நகரத்தில் மூன்றுகோடி அசுரர்களுண்டு. இவர்கள் யமனை நினைத்து அநேககற்பகாலம் அருமையான தவஞ்செய்து, யாவராலும் பெறக்கூடாத அருமையான வரத்தைப் பெற்றுக்கொண்டு, தங்களுக்குப் பகைவராகியதேவர்கள்பேரி லெதிர்த்து, அவர்களைத் தங்கள் பாணாக்கினியால் தகிக்கிறது இவர்கள் தொழில். இது கண்டு தேவராஜன் வந்தெதிர்த்தால், அந்தத்தேவராஜனை முதுகிட்டோடும்படி அடிக்கிறது, அப்படியே தேவராஜன் அநேகந்தரம் முதுகுகாட்டினன். அதனாலிந்த மூன்றுகோடி அசுரரும் இறுமாப்படைந்து, தங்களுக்கெதிரில்லையென்றும், எதிரியாகயாவராவது வந்தெதிர்த்துப் பாணங்களைப்பிரயோகித்தாலும் அந்தப்பாணந் தாங்களணிந்திருக்கிற கவசத்தைப் பேதிக்காதென்றுங் கருதி எவ்வளவேனு மதிப்பில்லாமல் தன்னரசாக இருக்கிறார்கள். இனியசொல்லைக் கனவிலும் வசனியாமல் எப்போதுங் கடுஞ்சொல்லையே கலனாகக்கொண்டு வசனிக்கின்றவர்கள். அன்றியும் வடவாக்கினியு நடுங்கிப் பதுங்கிப்போகத் தக்கதாகத் தங்கள் கண்களிற் கோபாக்கினியை யுகுக்கிறவர்கள். உகாந்த மேகங்களைவிட அதிகமாகக் கறுத்த தேகத்தை யுடையவர்கள் பர்வதங் கால்கொண்டு நடந்தாற்போல் நடக்கு மாட்சியை யுடையவர்கள். பிலத்துவாரங்களைப் பழிக்கும் வாயையுடையவர்கள்.

இதன்றியும், பிரிதிவு–அப்பு–தேயு–வாயு – ஆகாயமென்னும் பஞ்சபூதங்களையும் ஒருநொடியில் வெற்றிபெறுபவர்கள். இருளையும் எண்ணெயையும் கலந்துஉருட்டி ஒரு உருவு செய்ததுபோன்ற வடிவத்தை யுடையவர்கள். உயர்ந்தபர்வதங்களுக்கொப்பாக இருக்கின்ற புஜங்களினாலும் – பூமியைவிட அகன்ற

மார்பினாலும்-ஆதிசேஷன் முடியால்வருந்திச் சுமக்கப்
பட்ட பூலோகத்தை இவர்கள் வருத்தமில்லாமற்சுமக்
கத் தக்கவர்கள். கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரம
னையும்-திருப்பாற்கடலிற் கண்வளருந் திருமாலையும்-
வெள்ளியங்கிரியில் வீற்றிருக்குஞ் சிவனையும்பார்த்து
அற்பவாழ்வை யுடையவரென்று எளனஞ்செய்பவர்
கள். சுவாசத்தினால் ஊழிக்காற்றின் வல்லமையை யட
க்குபவர்கள் வாயுபந்தனஞ்செய்து அநேக ஊழிக்கா
லம் அருமையான தவத்தைச் செய்யுங் கலங்காச்சிந்
தையை யுடையவர்கள். இந்தக்கடலைக் காலா லாழம்
பார்ப்பவர்கள் வில்-வாள்-கதை-சக்கரம்-தோமரம்-
பிண்டிபாலம்-ஈட்டி முதலிய ஆயுதங்களை எப்போதுங்
கைவிடாதவர்கள். இந்த ஏழுசமுத்திரந்திரண்டு வரு
வதுபோற் சேனாசமுத்திரத்தோடு ருபவரையெல்
லாங் கடலைக்குடித்த அகத்தியர்போல் அரைநொடி
யில் நாசப்படுத்திச் சத்துருக்களையும் புறங்காண்பவர்
கள். அவர்கள் ஒருசொற்சொல்லுவராகில் அந்தவோ
சை உயிரைக் கொள்ளைகொள்ளும். இயமனும் ஆர
பாரமென்றங் கோடைகாலத் திடியென்றம் நினைப்
பன். எப்போதுந் தேவர்களைப் பகைத்து அதிகமாக
வருத்தப்படுத்துகிறவர்கள. எந்தக்காலத்திலும் போர்
முகத்திற் பின்னிடாமல் இந்திரனைப் புறங்கண்டு வரு
கிறவர். சப்தமேகங்களிலொன்றசிறி வெளிப்பட்டா
லே அதற்கஞ்சி உலகம் நடுங்கும். ஊழிமேகங்கள் வெ
ளிப்பட்டால் யார்தா னஞ்சார்கள்? அதுபோல இவர்
கள் வெளிப்பட்டால் மூன்றுகோடி ஊழிமேகங்கள்
வெளிப்பட்டனபோ லிருக்கும். என்றால் சொற்கமத்
திய பாதாளமென் னுமுப்புவனங்கள் என்னபாடுபடும்
அதனை நீரே யோசித்துக்கொள்ளும். அவ்வளவுபராக்
கிரமத்தையுடைய இவர்களை வெற்றிபெறுவது அசா
த்தியமென்றுகூற, அர்ச்சுனன் கேட்டுக் குறுநகை
கொண்டு சித்திரசேனனைப் பார்த்துச்சொல்லுகிறான்.

ஓ சித்திரசேனா! நாம் நிவாதகவசத்தார் பேரிற்
போருக்குவந்தோம். நாம் வந்தசேதி அவர்களுக்குத்
தெரியாது. நீ போய் நான் வந்திருக்கிறதைத் தெரி
வித்துப் போருக்குவரும்படிசெய். உன்னையவர்கள்
வளைத்துக்கொண்டு கொல்லாதிருக்க நீ போகும்போ
தே தூதன் தூதனென்று சொல்லிக்கொண்டு செல்
லென்றுகூறி அச்சித்திரசேனனை அனுப்பிவித்தான்.
சித்திரசேனன் மாடமாளிகை கூடகோபுரங்களோடு
கூடிக் கோடிசூரியப்பிரகாசம்போற் பிரகாசியாநின்ற
தோயமாபுரத்தைநோக்கி வருகின்றனன் அர்ச்சுனன்
அந்தரத்தில் வருகின்ற ரதத்தைப் பூமியில்தாழ்த்
தித், தோயமாபுரத் தருகுவந்து, தான்வந்தசேதி நிவா
தகவசருக்குத் தெரியத் தன்கையி லிருக்கும் ஆயிரங்
கலப் பாரமுள்ள காண்டீபமாகிய வில்லை எடுத்து நிறு
த்தி வளைத்து நாணேற்றி, அஷ்டதிக்குஞ் செவிடுபடு
ம்படியாக டங்கார வோசை செய்தான். இந்த ஓசை
தோயமாபுரத்திலிருக்கும் அவுணர்களின் செவியிற்
பட்டுச் சிலர் திடுக்கிட்டனர். சிலர் தாமரையிலைச்சலம்
போல் தத்தளித்தனர். சிலர் உள்ளந்தடுமாறி ஒருநா
ளும் கேட்டறியாத குணத்தொனி இன்றுகேட்கவந்த
காரணமென்னவென்று மயங்கினர். சிலர்மரணமூர்ச்
சை யடைந்தனர். நகரமெல்லாம் அவகோலமாயிற்று.
மூன்றுகோடி அவுணரும் இந்த ஓசையைக் கேட்டு
ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து, இந்த வில்லினு
னொலி ஏது? இந்திரன் பயந்தடங்கிப் போய்விட்ட
னன். பிரமன்முதலான மூவர்க்கும் நமக்கும் விரோ
தமில்லை. மற்றுயார் நமதுநகரத்துக்கு வருவாரென்று
ஐயமுற்று நிற்கிறதருணத்தில், தூதாகச்சென்ற சித்
திரசேனன் அந்தமூன்றுகோடி அசுரர்க்கு முன்பாக
ச்சென்று சொல்லுகிறான்.

ஓ நிவாதகவசர்களே! நான் பூலோகமண்டலாதி
பதிகளுக்கெல்லாஞ் சிறந்த குருகுலாதிபதியாகிய அர்
சுனமகாராஜனுடைய தூதுவன். என்பேர் சித்திர
சேனன். நான்வந்தகாரண மென்னவெனில் - திக்கு
விஜயஞ்செய்து யாவராலும் நிறைவேற்றக் கூடாத
இராஜசூயயாகத்தை நிறைவேற்றித், தேவராஜனுக்
குயிர்க்குயிராகிய காண்டவவனத்தை அக்கினிபகவா
னுக்கு தத்தஞ்செய்து தகிக்க விடைகொடுத்து, அவ்
வக்கினிபகவானுக்கு இடையூறுவராமல் தேவர்களைப்
புறங்கண்டு, சப்தமுகிலையுந் தன் பாணக்கினியாற்
கருக்கி, யாவராலுங் காணக்கூடாத கயிலாசபதியோடு
போரிட்டுத் தவசிரேஷ்ட சிலாக்கியனாகி, ஒருவரா
லும் பெறக்கூடாத பாசுபதாஸ்திர முதலான சகல
அஸ்திரங்களையும்பெற்றுத், தன்னோடொப்பாரு மிக்
காருமில்லாமல் ஏகச்சக்கிராதிபதியாக விளங்குவோர்
அர்ச்சுனமகாராஜன். அவர்நீங்கள்தேவர்களைவருத்து
கிறதைக்கேள்வியுற்று, உங்களை யமதண்டனைக்காளா
க்கத்தன்கணைகளாகிய காவலாளிகள்கையி லொப்புவி
த்துத்தென்றிசைக்கனுப்பக்கருதி, உங்களிடத்திலவர்
உயுக்தப்பிட்சை கேட்கவந்திருக்கின்றார். அந்தச்சே
தியையுங்களுக்குத்தெரிவிக்கஎன்னை அனுப்பிவித்தார்.
என்று சித்திரசேனன் கூறிய இவ்வாக்கியத்தைக்
கேட்ட நிவாதகவசர்கள் காலாக்கினி உருத்திரனைப்
போலச்சீறி, இரண்டுகண்களிலுந் தீப்பொறி பறக்க
வார்ப்பரித்துக் கைகொட்டி, அண்டம்பிளக்க நகைத்
துச் சொல்லுகிறார்கள். ஓ சித்திரசேனா! ஒருசிறிய
பூனையானது அளவிடக்கூடாத பராக்கிரமத்தையு
டைய புலிக்கூட்டத்திற்பிரவேசித்து யாவையும்வெல்
லுவேனென்று சொல்லிக்கொண்டுவந்ததுபோலநானா
கிய ஒருவனே தேவர்களாலும்மற்றையாவர்களாலும்
வெல்லக்கூடாத எங்களை வெற்றிபெறுகிறேனென்று
வந்தான். ஐயையோ! இதென்ன அநியாயம் மஹா
பராக்கிரமசாலியாகிச் சாபானுக்கிரக சாமர்த்திய
முள்ள மகாமுனிவர்களுக்கெல்லாந் தலைவனாக விளங்
கும் இந்திரனே எங்களுடன் வந்தெதிர்த்துப் போரி

ட்டு அனேகந்தரம் முதுகுகாட்டினன். தற்காலத்து ஓர்நரன்போருக்கு வந்தானென்றால்-இது எங்களுக்கு அதிக நகையாக இருக்கின்றதென்றகூறிப், பின்னுஞ் சொல்லுகிறார்கள்.

ஓசித்திரசேனா! கைலாசபதியாகிய சாம்பவமூர்த்தியாலும், கமலாசனக் கடவுளாகிய பிரமனாலும், திருப்பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமாலாலும் வெல்லக்கூடாத எங்களை; உலகங்களிற் றாழ்ந்த மண்ணுலகாதிபதியான ஒரு நரன் வெல்லுவனோ? தனுசரென்று நாங்கள் பெயர்கொண்டிருக்கப் போர்க்கஞ்சுவோமா? ஒரு மனிதன் எங்களிலொருவனுடைய சேனாபதி எதிரில் அரைமாத்திரையிருந்து போர்புரிவனோ? நல்லது வந்தவன் வில்லாளியா? அப்படி வில்லாளியாக இருப்பானாகில் தன் பெரிய பிதாவின் மகனும் நாகக்கொடிக்குத் தலைவனுமாகிய துரியோதனனுக்கு நீதியின்றித் தனது நாடு நகரமுதலியவற்றை விடுத்ததல்லாமல், தன் மனைவியைச் சபையிலிழுத்துப் பங்கப்படுத்தும்போது பார்த்திருந்த வீரனா எங்களோடு யுத்தஞ்செய்பவன்? சபாசு! சபாசு! நன்றாயிருக்கின்றது. இந்த அர்ச்சுனன் இந்திரனாலேவப்பட்டவனாதலால் இவனைக் கொன்றவிட்டு, இனி எப்போதும் இந்திரன் தலையெடுக்காதிருக்க நன்றாயடித்து, அவன் வாழ்வனைத்தும் பறித்துக்கொண்டு, அவனையு முன்போல் விட்டுவிடாமல் அகலாச் சிறையிலடைக்கிவைக்கிறோமென்று சபதங்கூறிப், பல்லை நெறநெற வென்று கடித்துக், கோபச்சிரிப்பு சிரித்து, அடா சித்திரசேனா! நீ தூதுவனாதலால் உன்னை உயிரோடு விட்டோம். நீ அரைமாத்திரைப்போதாவது இவிடம் நிற்காமல் நரனிடத்திற்சென்று, மூன்று கோடி அவுணரும் போர்க்கோலங்கொண்டு வருகிறார்களென்றுசொல். என்று கூறிவிட்டுத் தங்கள் தங்கள் சேனாபதிகளின் முகத்தை நோக்கினார்கள். உடனே சித்திரசேனன் அர்ச்சுனனிடத்துக்குவந்து, அவுணர் கூறியவற்றைக் கூறித் தேரிலொருபக்கத்திலிருந்தனன்.

அவ்வசுரர் சேனாபதிகள் தங்கள் யஜமான்களின் முகக்குறியைக்கண்டு, தக்ஷணமெழுந்திருந்து தங்கள் தங்கள் கட்டளைக் குட்பட்டிருக்கிற நால்வகைச் சேனைகளையும் போர்க்கோலங்களுடன் வரும்படி கட்டளையிட்டுத், தாங்களும் போர்க்கோலங்கொண்டு வாகனாரூடராகி, அளவிறந்த சேனைகளோடு நகர்ப்புறத்து வந்திருந்தனர். அப்பால் இராஜாக்களாகிய முக்கோடி அவுணர்களுந் தங்கள்தங்கள் அந்தப்புரத்துக்குச்சென்று ஸ்நானஞ்செய்து பூசைமுடித்துப், பலவகைமாமிசம் மதுமுதலானவைகளை உண்டு தாம்பூலந் தரித்துப், பரிமள கதம்பங்கள்பூசி, உடலிலிருக்குங் கவசத்தோடு வச்சிர கவசத்தையுந் தரித்து, மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கண மகுட முதலியவைகளையணிந்து, மலர்மாலைபுனைந்து, அம்புப்புட்டிலை முதுகிற்றாங்கி, பதினாயிரக்கல பாரமுள்ள வில்லைக்கரத்திலேந்தி, உடைவாள்-கதை-சூலம்-சக்கிரம்-மழு-தோமரம்-முதலிய ஆயுதங்களைத்தாங்கி, வீரலட்சுமிசமேதராகி, போருக்கழைத்த நரனெங்கின்றானென்று ஆர்ப்பரித்து, ஆயிரந்தட்டுகளோடு அண்டமுகட்டைப் பரிசிக்குங் குடைகள்கூடிய சிகரத்தையுடைய உன்னதரதாரூடராகி, நகர்ப்புறத்திருக்கும் நால்வகைச் சேனையோடு வந்துகலந்து சேனாதிபதிகளை எச்சரித்தனர். சேனாதிபதிகள் பிரயாணமாகும்படி கட்டளையிட்டனர். இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும் அண்டம்பிளக்கக் கைகொட்டி ஆரவாரித்து, மகா உக்கிரத்தோடு பிரயாணமாயினர். பேரிகை-டங்கா-டமாரம்-தம்பட்டம்-துடி-உடுக்கை-காளம்-எக்காளம்-பேய்க்காளம்-சின்னம்-துத்தாரிமுதலிய வாத்தியவொலிமுழங்க, யானைவீரர் யானைகளை யெச்சரித்து; குதிரைவீரர் குதிரைகளை எச்சரித்து, காலாள்கள் கடுகிவர நடத்திக்கொண்டு பிரயாண மாயினார்கள்.

அருச்சுனனுக்கும் நிவாதகவசர்களுக்கும் உயுத்தம்.

கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! நால்வகைச் சேனைகளின் அளவையும் பிரமனாலும் ஆதிசேடனாலுஞ் சொல்வதற் கருமையென்றால், நான் எப்படி சொல்லுவேன்? காலாள்கள் பூமியில் நடப்பவராயிருந்தாலும் அவர்கள் சிரமுங்கரமும் அண்டமுகட்டைத் தடவிவரும். அவர்கள் இரண்டுகரத்தையும் விரிப்பார்களாகில் நாற்றிசையளவுஞ் சரியாகவிருக்கும். அவர்கள் தேகம் பர்வதத்துக் கொப்பாக இருக்குமென்று உவமை சொல்லுவதல்லாமற், பர்வதங்களும் அவர்கள் தேககாத்திரத்திற் கொப்பாகாது. அவர்கள் பாதம் எடுத்துவைக்கும்போதெல்லாம் ஆதிசேடன் கனவருத்த மடைவான். அவர்கள் குதிரைகளோ? இமைதட்டுமுன் அஷ்டதிக்குப் பதினாறுகோணமாகிய புவனத்தை வலம்வரும் அந்தரத்திற்றாவும். மலையிற்றாவும். மறுபடியும் முன்னிருந்தவிடத்தில்வந்து நிற்கிறது போலிருக்கும். பின்னும் அந்தர லோகத்தையெல்லாஞ் சுற்றிவரும். அவர்கள் யானைகளோ? நீர்கொண்ட மேகங்கள் கர்ச்சனையிட்டு மழையைச் சொரிந்துகொண்டு பூமியிற்செல்வதுபோற் செல்லும். கால்களையெடுத்து வைக்குமிடமெல்லாம் பிலத்துவாரம்போலிடிவிழுந்துபோம். அவர்கள் ஏறி நடத்துந் தேர்களோ? அண்டமுகடுபட வளர்ந்து அஷ்டதிசைகளினிடத்தையு மடைக்குங் காத்திரமாக இருக்கும். தேருருளையினால் உண்டாகும் பள்ளம் பெரிய மடுப்போலாகும். என்றால்-அந்த அவுணர் சேனைகளினளவை யாவராலுரைக்கக்கூடும். ஆதலால் அவர்களின்

திறத்தை நீரேமதித்துக் கொள்ளும். இப்படியாக நால்வகைச் சேனைகளோடு மூன்றுகோடி அசுரருங் குன்றுபோலொற்றைத் தேருடனிருக்கிற அர்ச்சுனனிடத்துக்குவந்து, அவ்வர்ச்சுனனைப் பார்த்து அண்டம் பிளக்கச்சிரித்து, மீசைமுறுக்கிப், புஜங்தட்டி, அடடா !! இந்த நரனா நம்மைப் போருக்கழைக்கிறதென்று கஞ்சினமடைந்து, முக்கோடி அசுரருந் தங்கள் தங்கள் சேனாபதிகளையுஞ் சேனைகளையும் பார்த்துச் சொல்லுகிறார்கள்.

ஓ சேனாபதிகளே ! ஓ நால்வகைச் சேனைகளே ! நம்முடன் போர்புரியவந்தவன் பூலோகாதிபதி. ஏதோ கிஞ்சித்துத் தவப்பலத்தால் இந்திரலோகம் வந்தான். வந்தவிடத்தில், (ஊமைக்குளர்வாயன் உற்பாதபிண்டம்.) என்கிற பழமொழிபோல் நமக்கு முதுகுகாட்டி ஓடிப்போன இந்திரன் இவனைப் பலசாலி என்று கருதி, இவனுக்குப் பூஜிதைசெய்து பெருமைப்படுத்தினனாதலால் இவன் மகிழ்ந்துவிட்டான் அந்த மகிழ்ச்சியில் நம்மை அலட்சியமாக எண்ணிப், (பொரிமாவை மெச்சினான் பொக்கைவாயன்.) என்பதுபோல் தன்னைமெச்ச இந்திரன் கூறியபடி நம்மேற் போருக்கு வந்தான். இவன் அனுப்பிய அத்தூதவனுடையசொல்லாற் பிரமித்து நல்லயுத்தம் நேரிட்டதென்றுஆசைகொண்டு இரண்டொருத்தராய்வாராமல், நாமெல்லாம் ஏககாலத்திற் கூடிப் போருக்கு வந்துவிட்டோம். இவன் நரனாதலாற் பயந்தோடிப் போவான். அவனோடிப்போகாதிருக்க அவனைச்சுற்றிலும் வளைத்துச் சக்கிரவியூகம் வகுத்துக்கொண்டு, உங்கள் கருத்தின்படி யுத்தஞ் செய்யுங்கள். நாங்கள் நாற்றிசையிலும் வளைந்து போர்புரிகிறோமென்றுகூறி, முன்னதாய் முக்கோடி அசுரரும் நாற்றிசையிலுஞ் சுற்றிக்கொண்டு நின்றனர். சேனாதிபதிகள் நால்வகைச்சேனைகளை எச்சரித்து, ஒரு சண்பகப்பூங்கொத்தை அநேகம் வண்டுகள் சூழ்ந்து வளைந்துகொண்டாலெப்படியோ? அதுபோலும், முன்னொருபோது பெரும்போர்செய்த பிரமனையு மாலையும் பின்னிடச்செய்ய மத்தியில் தோன்றிய அக்கினிமலையைத்தணிக்க மேகங்கள் தோன்றினாலெப்படியோ ? அதுபோலும், ஒரு சொர்ணரதத்திலிருக்கிற அர்ச்சுனனைச் சூழ்ந்து வளைத்துச் சக்கிரவியூகங்கட்டி, அவரவர்கள் தங்கள் தங்கள் கையிலிருக்கும் ஆயுதங்களையெடுத்து அதிர்த்து, அஷ்டதிக்குந் தத்தளிக்க அட்டகாசஞ்செய்து, சூலம் சக்கரம்-வேல்-வாள்-ஈட்டி-கட்டாரி-குடோரி இவைகளை எடுத்தெரிந்தனர். வில்லாளிகளானவர் தங்கள் தங்கள் கையிலிருக்கும் வில்லைவளைத்து நாணேறிட்டுக், கூரம்பு - முள்ளம்பு-முதலியவைகளை யெடுத்து மழைபோற் சொரிந்தனர். குதிரைவீரர் குதிரைகளை எச்சரித்து நீண்ட ஈட்டிகளைக்கரத்திலேந்திக் கடலிற்றிரைதாவிவருதல்போல் வந்தனர். யானைவீரர் யானைகளை எச்சரித்துச் சூலமுதலிய ஆயுதங்களையெறிந்து ஆர்ப்பரித்தனர். முக்கோடி யவுணரு நாற்றிசையிலும் பரவிநின்று மணலைவாரி யிறைத்தாற்போற் சரமாரி பொழிந்தனர்

அக்காலையில் தேவசாரதியாகிய மாதலிவிடும்ரதத்திலிருக்கின்ற அர்ச்சுனனானவன் தன்னை எதிர்க்க வந்த அவுணர் சேனைகளனைத்துந் திடுக்கிட்டுப்புத்திமயங்கும்படியாக வில்லைவளைத்து நாணேறிட்டுக் துணத்தொனிசெய்து, முக்கோடி அவுணர்களுஞ் சேனைகளும் விட்டபாணங்களும் - பலவித ஆயுதங்களும்-பொடிப்பொடியாகி யுதிரச் சில கணைகளைத் தொடுத்து, அம்முக்கோடி யவுணர்களையும் பார்த்து; ஓ அவுணர்களே! நானோ? ஒருவன். அதிலும் நரன். என்னொருவன்மேல் அளவற்ற சேனையோடு கவிந்துபோர் செய்யவந்தீர்கள். ஆகிலும் நீங்களல்ல இன்னுமிந்தவுலகத்திலும் அண்டப்புறத்திலு மிருக்கிற அசுரர்களல்ல இப்படி எத்தனைபேர் வந்தெதிர்த்தபோதிலும் அவர்களை யெல்லாம் அரைமாத்திரையில் வெற்றிபெறுவேன். நீங்கள் மாத்திரம் ஓடிப்போகாமல் வந்து சற்றுநின்று போர்செய்யுங்களென்று கூறிக், தன் அம்புப்புட்டிலிற் கரத்தைவைத்துச் சிலபாணங்களை எடுத்து மந்திரோபதேசஞ் செய்துவிட்டான். அக்கணைகள் வில்லில் தொடுக்கும்போதுசொற்பதொகையாயிருந்தாலும், நல்லோர்க்குச்செய்த சொற்ப உதவி உலகமெல்லாம் பரவுகிறதுபோல் ஒன்றுபலகோடிகளாகவளர்ந்து, அளவிறந்த ஆகாயமுழுவதும்பரந்து, அவுணர் சேனையிற் புகுந்து, ஒருகணப்போதில் அளவற்றபேர்களைச் சின்னபின்னங்களாகத்துளைத்து நாசப்படுத்தினமையால் ; வந்தசேனைகளில் பதினாறிலொருபங்கு நாசமடைந்தன. அதையவ்வவுணசேனாபதிகளுஞ் சேனைகளுங்கண்டு மனம்பொங்கி, எழுகடலு மார்ப்பரித்தெழுந்தனபோற் சீறியெதிர்த்து, இடியைப்போல் ஆர்த்து, சேனாபதிகளுஞ் சேனைகளும் அளவிறந்த கணைகளை யேவினார்கள். அவுணராஜர்கள் அர்ச்சுனன் கூறிய வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் நெருப்பில் நெய்யைவிட்டாற்போலக் கோபத்தீ சொலிக்க ஆரவாரித்து, தங்கள் தங்கள் கைவில்லில் அநேகங் கணைகளைத் தொடுத்துக், கோவர்த்தனகிரிமேற் சொரிந்த சோனை மாரியைப்போற் சொரிந்தார்கள்.

அர்ச்சுனன் தன் வில்லிற் சில திவ்வியக்கணைகளைத்தொடுத்து மந்திரோபதேசஞ் செய்து விடுத்தான். அக்கணைகள் ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்-கோடி -கோடா கோடிகளாகி, அவுணர்கள்விட்ட பாணங்களையுஞ் சேனாதிபதிகள்விட்ட பாணங்களையுங் கண்டதுண்டங்களாக நடுவதுபாதியிற் கண்டித்து, அவ்வவ்வவுணர்களையுங் கால்வேறு-தலைவேறு-குடல்வேறு-நிணம்வேறு-என்று சொல்லும்படிக்காக்கின. ஒரு தேர்வீரனாகிய அர்ச்சுனன்விட்ட கணைகளால் ரதகஜதுரகபதாதிகள் கால்வேறுதலைவேறாக அற்றுவிழுகின்

றவையைக் கண்ட சேனாதிபதிகள், ஆ! ஆ! நாமிப்பா
ரிலேற்பட்டு இன்னாள்வரையும் விண்ணுலகத்தி லுள்
ளவரையெல்லாம் ஒவ்வொருகணத்தில் முதுகுகாட்டி
யோடும்படிசெய்தோம் இதுவரைக்கும் நமது சேனை
கள்கணைகள்பட்டறியாது. அப்படியாகப் பாதுகாத்து
வந்த நமதுசேனை ஓருநராற் கலங்கித்தாமரையிலைச்
சலம்போலத் ததளிக்கின்றது. இனிநாம் சும்மாயிரு
ப்பதிற் பயனில்லையென்று சேனாபதிக ளனைவருந் தங்
கள் தங்கள் இரதங்களை முடுக்கி நாற்றிசையிலும்
வந்து வளைத்துக்கொண்டு, தங்கள் தங்கள் கார்முகத்
தைக் குனித்து, ஒவ்வொருவனும் மணலைவாரி இறை
த்ததுபோற் சரமாரிகளை அபரிமிதமாகப் பெய்தார்
கள். சேனாபதிகள் முனைந்து போர்செய்வதைக்கண்ட
சேனைகளிற், காயம்பட்டவையும் மரணமடைந்தவை
யும்போக மற்றச்சேனைகளெல்லாந் திரண்டு, மதுரா
புரியை அழிக்கக் கடல்புரண்டு வந்ததைப்போலச்சிக
ரங்களோடுகூடியதேவரதத்திலிருக்கிற அர்ச்சுனனொ
ருவனை வளைத்துக்கொண்டு, தங்கள்தங்கள் கையிலி
ருக்கிற ஆயுதங்களை எறிந்தார்கள். ஏககாலத்திற் சே
னைகள்திரண்டு தன்மே லெதிர்த்ததைக்கண்ட அர்ச்
சுனன் குஞ்சிரிப்புகொண்டு, தன்காண்டீபத்தில் - இந்
திரன்-அக்கினி-யமன்-நிருதி-வருணன் - வாயு - குபே
ரன்-ஈசானன் - அஷ்டவசுக்கள் - பதினொருருத்திரர்-
என்று சொல்லும்படியான தேவர்களாற் கொடுத்த
திவ்யாஸ்திரங்களை யெடுத்து நாணியிற்பூட்டி அபிமந்
திரித்து தூபதீப முதலியவைகளால் மானதபூசை
செய்து அந்நாணியைக் காதளவும்வாங்கி, வீராவேச
த்தோடு நாற்றிசையிலும்விட்டு மாதலியைப்பார்த்து,
ஓ மாதலீ ! இந்த அவுணச்சேனைகள்படும் அவஸ்தை
யைச் சற்றுக்கண்ணாற்காணென்றுகூறினன். மாதலியு
மவ்வஸ்திரங்கள் செல்கிற விநோதங்களைப் பார்வை
யிட்டுக்கொண்டு ரதசாரத்தியஞ் செய்துவந்தான்.

கேளும்மகாராஜனே ! முன்னமே இவ்வவுண
ரோடு இந்திரன்முதலான அஷ்டதிக்குப் பாலகரும்-
அஷ்டவசுக்களும் பதினொ ருருத்திரகணங்களும் நே
ராகநின்று போரிட்டிளைத்தார்களே, அவர்கள்பெயர்
கொண்ட அஸ்திரங்கள் அவுணரையென்னசெய்யுமெ
ன்று இலேசாகநினைக்காதேயும். க்ஷேத்திரபலத்தால்
முளை நன்றாயுருவிச் செழிப்பதுபோல, கிருஷ்ணமூர்
த்தியின் கருணையைப்பெற்ற அர்ச்சுனனாலே வரப்
பட்டதாகையால் அந்தந்த அஸ்திரங்களுக்கு அதிக
வல்லமையுண்டாகி, அந்தரத்திலெழும்பி, வடவாக்கி
னிபோலத் தீயைக்கக்கி, ஒருபக்கங் காற்று-ஒருபக்கம்
மழை-ஒருபக்கம் மின்னல்-ஒருபக்கம் இடி - இப்படி
யாகவுண்டாகி, எல்லாப்பக்கமுஞ் சூரியகாந்தியைப்
போ லொளிவீசி அவுணர்சேனையிற் பாய்ந்து; சேனா
திபதிகளின் வில்லை முறித்துக், கவசத்தைப் பொடி
யாக்கி, மகுடத்தை உடைத்து, சாரதிகளை அதஞ்
செய்து, தேர்களைக் குத்துக்கால்-கொடுங்கை-கொடு
மரம் - குடைமுதலிய சின்னங்களோடு தவிடுபொடி
யாக்கி, யானைகளைப்பிளந்து, குதிரைகளை வெட்டி,
காலாள்களைக் கால்வேறுதலைவேறாக்கி, அவுணர் சே
னைகளாகிய இருளை அரைநொடிப்போதில் ஓடச்செ
ய்து, முன்போல் அவ்வஸ்திரங்க ளெல்லாம் அர்ச்சு
னனுடைய அம்புப்புட்டிலில வந்திருந்தன. இதனைப்
பார்த்திருந்த மாதலி உள்ளமகிழ்ந்து, இவ்வளவுபரா
க்கிரமத்தையுடைய மஹானுபாவனை இலேசாகநினைத்
தது அறியாமையென்று மிகவும் மனவருத்தமுற்று,
அதுமுதல் அர்ச்சுனனைத் தேவராஜனிலு மேலாகப்
பாவித்து அடங்கி, மஹா எச்சரிக்கையாக சாரத்தி
யஞ் செய்துவந்தான். மூன்றுகோடி அவுணர்கள் தங்
கள் சேனைகளுஞ் சேனாதிபதிகளும் நாசமானதைக்
கண்டு காலாக்கினி உருத்திரரைப்போலச் சீறி, அண்
டம்பிளக்க ஆரவாரித்து, ஓ ! ஓ ! நமது சேனைகளனை
த்தும் நமதுகண்முன்னே நாசமாயின. இவன் நரனெ
ன்று லேசாக நினைத்து முந்தியோசனை செய்யாமற்
சேனைகளை அனுப்பினோம். காயம்பட்டறியாத சேனா
திபதிகளுஞ் சேனைகளும் நாசமடைந்து விட்டனர்.
இனி ஏககாலத்தில் யாமெல்லாம் ஒன்றாகத் திரண்டு
வளைத்து நமது பாணத்துக்கு நரனைப் பலிகொடுப்ப
தே காரியமென்று கருதினவராகித், தங்கள் தங்கள்
சாரதிகளை எச்சரித்து, தங்கள் தங்கள் ரதத்தை அர்
ச்சுனன்தேரை நெருங்கச் செலுத்தி, அடா நரனே!
எங்கள் சேனைகளை யதமாக்கினோமென்று மமதை
கொள்ளாதே. இதோ அரைமாத்திரையில் உன்னை
வென்று உன்னைத் போருக்கனுப்பிவைத்த இந்திர
னைப்பிடித்துச் சிறைச்சாலையில் வைக்கிறோம்பாரென்
றுகூறிச், சக்கிரவாளகிரி வளைந்ததுபோல் அர்ச்சு
னனை வளைந்துகொண்டு, தங்கள் தங்கள் வில்லைவளை
த்து நாணியேறிட்டு டங்காரவோசை யெழுப்பி, ஒவ்
வொருவரும் ஏககாலத்தில் அளவற்ற கணைகளைத்
தொடுத்துவிட்டார்கள்.

அப்போது அர்ச்சுனன் மாதலியை நோக்கிச்
சொல்லுகிறான் ஓ மாதலீ ஒரு முகமாக வந்தெதிர்க்
காமல் வலையிட்டதுபோல் வந்துவளைந்து போர்செ
ய்கிற அசுரர்களை நானிப்போது ஓரேமுகமாகவந்து
போர்செய்யச் செய்கிறேன். நீ இதுவரைக்குந் தேர்
நடத்தினதுபோல் நடத்தாதே. குலாலன் சக்கிரம்
போல் ரதத்தை நடத்து. வந்தெதிர்த்த அவுணர்திற
த்தையுந் திடச்சித்தத்தையும் ஒரு மாத்திரைப்போ
திற் பறக்க அடிக்கிறேன் பாரென்று கூறித், தன்
காண்டீபத்தில் க-ம-ா-ரு-மத-லக்ஷம்-கோடி - சங்க
மாகக் கணைகளைத் தொடுத்து, வில்விநோதவித்தை
யால் அந்தப்பாணங்களை ஒவ்வொன்று கோடியாகப்
பரவிச்சென்று தைக்கும்படி மந்திரோபதேசஞ் செ
ய்துவிட்டான். மாதலியுந் தேரைக் குலாலன் சக்கரம்
போலச்சுழல நடத்தினான். தேர்சுழலவே அர்ச்சுனன்

விடுத்தபாணங்கள் யார்யார் எந்தெந்தப்பக்கத்தில் எந்
தெந்தத் திக்கில்நின்று பாணங்கள்தொடுத்தார்களோ
அவரவர்கள் தொடுத்த பாணத்தையெல்லாங் கண்ட
துண்டங்களாகக் கண்டித்து, அவரவர்கள்தேரிற்கட்
டிய சிங்கங்களையுஞ் சாரதிகளையும் நோகச்செய்து,
அவுணர்களையும் பிரமிக்கச்செய்தது. அதைஅவுணர்
கள்கண்டு, ஓ ஓ ஏதோமோசம் வந்திருக்கிறது. இல்
லாவிட்டால் நம்மிலொருவன்-அல்லது இருவர் - அல்
லது மூவர்மிஞ்சிப்போ யெதிர்த்துப் போர்செய்தால்
இந்திராதிமுதலிய தேவர்களும் - உருத்திர கணங்க
ளும் மற்றுமுள்ளவர்களும் நமதுகரசரவேகத்துக்குத்
தத்திக்கெட்டுத் தடுமாறித் திப்பிரமைகொண்டு, சித்
திரப் பிரதிமைபோலக் கைகாலசைவின்றி இறந்த
வர்போலாவார். இந்தநரன் ஒருவனாக யிருந்தாலும்,
அவன்தொடுக்கிற பாணம் நாம்விடும் பாணங்களையெ
ல்லாம் அதமாக்கினதன்றி நம்முடைய சாரதிகளையும்
ரதத்திற்பூட்டிய சிங்கங்களையும் நோகச்செய்ததைப்
பார்த்தால்; இவன் வில்வித்தையிற் கிஞ்சித்து வல்லவ
னாக இருக்கிறான். அதனாற்றான் இந்திரன் இந்தநரனை
நம்மேற் போருக்குவிடுத்தான். ஆகிலும இவன் நரன்.
நாம் அவுணர். இவன்கைக் கிளைக்கிறது கனவிலுமி
ல்லை. ஒருகொடியில் இவனுடைய தேரையும் - சாரதி
யையும் குதிரைகளையும் அதமாக்கி, இவனணிந்திருக்
கிற கவசத்தைப் பிளந்து உயிரைக்கொள்ளைகொள்
ளுவோமென்றுகருதி மகா உக்கிரங்கொண்டு, ஒவ்
வொருவரும் கோடிகோடியாகப் பாணங்களைத் தொ
டுத்துச் சிங்கநாத அட்டகாசங்களைச்செய்து, பின்
னும் ஓரிலைவேல் முகக்கணை-ஈரிலைவேல் முகக்கணை-
மூவிலைவேல் முகக்கணை-கமலமுகக்கணை-முள்ளம்பு-
இவைஎடுத்துத் தொடுத்து, சத்தி-சூலம்-கதை-முத
லியவைகளையு மெடுத்தெறிந் தார்ப்பரித்தார்கள்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! இந்த
அவுணராஜரில் ஒவ்வொருவரும் உகாந்தகால உருத்
திரனுக் கொப்பானவரா யிருப்பதன்றி, இவர்கள் விடு
க்கும் பாணங்களும் மூன்றுலோகத்தையு மதமாக்கு
மென்றால்; ஓர்சிறிய ஒற்றைத்தேரி லிருக்கிற அர்ச்சு
னன் இவர்கட் கெவ்வளவு? ஆனால் அந்த அர்ச்சு
னன் தேவாமிசையிற் றோன்றியவனாகியும், வில்வித்
தையில் அதிக சாதுரிய முள்ளவனாகியும், அதற்குத்
தகுந்த மந்திரோப தேசங்களைப் பெற்றவனாகியும்,
அதிக தபோபலத்தையும் பெற்றிருக்கிறவனாகியு மிரு
ப்பதால்; அவுணர் தொடுத்த கணைகள் வருகிறநேரப்
பைக்கண்டு கிஞ்சித்தேனுமஞ்சாமல், தன்வில்லிற்கழு
கிறகு பூண்டுமின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற திவ்
விய கணைகளை யெடுத்துத் தொடுத்து மந்திரோபதே
சஞ் செய்து விட்டான். அதனால் அந்தக் கணைகள்
ஒவ்வொன்றனேகமாகப்பெருகிப், பர்வதத்தைமூடிய
பனியைப்போல் வந்து, அவுணர் கணைகளெல்லாஞ்
சூரியனை நாடிய பனியைப்போல் நீங்கக்கண்ட துண்
டங்களாக நடுவேதுபாதியிற் கண்டித்துச், சாரதிகளை
யுந் தேரிற் கட்டிய சிங்கங்களையும் இரத்தமயமாக்கி
விட்டதுகள், பின்னும் அவ்வசுரர்கடுஞ்சினமடைந்து
சோனைமாரிபோல் ஏககாலத்தில் யாவரும் ஒருமுகூர்
த்தகாலஞ் சரமாரிபெய்தனர். இந்தச் சரமாரியால்
விண்ணுமண்ணுமே மறைந்தனவென்றால், ஒற்றைத்
தேர் வீரன்மேல்வந்த கணைகளை நீரே அளவிட்டுக்
கொள்ளும். அர்ச்சுனனும் நிவாதகவசருஞ் செய்யும்
போரைக்காண விருப்பங்கொண்டுவந்து அந்தரத்தில்
நின்ற தேவர்களனைவருந் தாங்கள் நிற்க விடமில்லா
மல் எங்கும் பாணமயமாய் நிறைந்திருக்கிறதையும்,
அர்ச்சுனனை மூடிய கணைகளையுங் கண்டு திடுக்கிட்ட
வராகி மனக்கலக்கமுற்று. ஓ! ஓ! வந்தெதிர்த் திருக்
கிறவர்கள் முக்கோடி யவுணர்கள், அவர்களோ? ஒவ்
வொருவர் திரிலோகங்களையுந் தகிக்கத்தக்கவர்கள்.
அவர்களோ டெதிர்த்தவனோ? ஒருவன் அவனும்
நரன் அவன் ஒருகையால்தொடுஞ்சரங்கள் மூன்று
கோடி அவுணர்விடுத்த அளவற்றகணைகளை யென்ன
செய்யும்? நமது தேவராஜன் இதுவரைக்குமிருந்தது
போ லிராமல் இந்த நரனால் வெற்றிபெறலாமென்று
கருதி இவனைப் போருக்கனுப்பிவித்தனன். புலிக்கூட்
டங்களி லகப்பட்ட மானைப்போல் நரன் மத்தியிலகப்
பட்டுக்கொண்டான். அவுணவீரர் விடுத்திருக்குஞ்சர
மாரியால் நரனிருக்கிறவிடமே தெரியவில்லை இனி
என்ன செய்வோமென்று மனவருத்தமுற்று, மேல்
நடக்குங் காரியங்களையு மறிவோமென்று பார்த்துக்
கொண் டிருந்தார்கள்.

அப்போது அர்ச்சுனன் கிஞ்சித்தேனும் அஞ்
சாமல், தன்காண்டீபத்தில் திவ்யகணைகளைக் கணக்கி
ல்லாம லெடுத்துத் தொடுத்து, தன்மேலும் - குதி
ரைமேலும்-சாரதிமேலும் - தேரின்மேலும்வந்தகணை
களை யறுத்துவிட்டு, பின்னுந் திவ்யகணைகளை யெடு
த்து மாரிபோல் தூவி, அவரவர்கள் இரதத்தைக்கிஞ்
சித்தேனு மசையாம லிருக்கச் சாக்கூடுகட்டி, அவர்
கள் நாட்டிய வெற்றிக்கொடியை யறுத்து, குத்துக்
காலைவெட்டி, கொடிக்கம்பத்தை முறித்து, தேரிற்கட்
டிய சிங்கங்களைக் கொன்று, சாரதிகளை யதமாக்கி,
மகுடங்களைப் பிளந்து, வாகுவலயங்களைத் தள்ளி,
வில்லைவெட்டி, நாணியையறுத்து அவரவர்களுடைய
மார்பில்தைக்க ஆயிரமாயிரம் பாணங்களை விட்டுத்
தேவதத்தமென்கிற சங்கத்தையெடுத்து வாயில்வை
த்து, பம்-பம்-பம் - என்றூதினான். தேவர்கள் புகழ்
ந்தனர். அசுரர்கள்விடுத்த கணைக்கஞ்சி நடுங்கியிரு
ந்த மாதலி நடுக்க நீங்கி, அர்ச்சுனனுடைய கரவேக
சரவேக பராக்கிரமத்துக்கு மகிழ்ந்து உடல்பூரித்து,
அதிகபயபக்தியோடு ரதசாரத்தியஞ் செய்துவந்தான்
சித்திரசேனன் மனச்சஞ்சல நீங்கினன். அர்ச்சுனன்
பாணத்தினு லவகோலப்பட்ட அவுணர்கள் சங்க

த்தொனியைக் கேட்டமாத்திரத்தில் நெருப்பில் நெய்யைவிட்டதுபோல்எரிந்து, அக்கினிப்பொறி பறக்கக்கண்ணை உருட்டிவிழித்துப் பற்களைக்கடித்து, கரங்களோடு கரங்கள்தட்டி, மகா ஆக்ரோஷத்தோடு தங்களுக் குதவியாகவந்திருக்கிற தேர்களிலேறி, வில்லையெடுத்து நிறுத்தி வளைத்து டங்காரவோசை யெழுப்பி, அண்டம்பிளக்கக் கொக்கரித்து மேலிட்டார்கள் தனிவீரனாகிய அர்ச்சுனன் அவுணர்கள்மீட்டும் வேறு தேர்களிலேறி மேலிட்டுவந்ததைக் கண்டு தக்ஷணந் தன் அம்புப்புட்டிலிற் கரத்தைவைத்து, கமலாசனக் கடவுளின் பெயரால்விளங்கும் பிர்மாஸ்திரத்தை எடுத்துக் காண்டீபத்திற்றொடுத்து, அதற்குத் தூபதீபநைவேதித்திய முதலியவைகளை மனதாற்செய்துவிட்டான், அந்தப் பிரமாஸ்திரங் குபீலென்றந்தரத்திலெழும்பி, தன் மகத்துவத்தால் அஷ்டதிக்குப்பாலகரையும்-உருத்திர கணங்களையும்-அவரவ ராயுதங்களோடு உண்டாக்கி, வடவாக்கினி நடுங்கிப்பதுங்கத் தீப்பொறிகளைச் சிதறி, நான்கு முகத்தோடு பிரகாசித்து அவுணர்களுள்ளந் தடுமாறவந்து, அருச்சுனனுக்கு முந்திவந் தமர்செய்த ஒருகோடி அவுணர்களையும் வளைந்து; அழியாத கவசத்தை அழித்து, மகர குண்டல ஆகேயூர கடககங்கண முதலிய ஆபரணங்களை யதிர்த்து, வில்லை முறித்து, நாணியைத் தறித்து, அவ்வொருகோடி அவுணராஜர்களின் தலைகளை அறுத்துவிட்டுத் திருப்பாற்கடலில் ஸ்நானஞ்செய்து முன்போல் அம்புபுட்டிலில் வந்துசேர்ந்தது

அப்பிரமாஸ்திரத்தால் அர்ச்சுனனுக்கு முந்தி நின்று போர்கொடுத்த ஒருகோடி யவுணருந் தேர்களோடு நாசமாகவே, மற்ற இரண்டுகோடி யவுணருங் கண்டு; ஓ! ஓ! ஒரு நரனால் அளக்கரிய ஆற்றலைப் பெற்ற நமது சகோதரர்களில் ஒருகோடி ஜெனம்மடிந்து விட்டார்கள் இனி நாம் சும்மாயிருப்பதிற் பயனில்லையென்று கருதி வீராவேசங்கொண்டு, இறந்த சேனைகளையுஞ் சேனாதிபதிகளையும் ஒருகோடி யவுணர்களையும் எழுப்பிக்கொண்டு, உகாந்த காலத்தில் ஊழிமேகங்கள் வெளிப்பட்டு ஒருமலையைக் கவிந்தது போல அர்ச்சுனனை வளைத்துக்கொண்டு, தங்கள் தங்கள் கையிலிருக்கும் ஆயுதங்களையும் பாணங்களையும் மழைபோற் சொரிந்தார்கள். தேவர்கள் நடுக்கமுற்றனர். மாதலி அச்சமுற்றனன். மகாபராக்கிரமசாலியாகிய அர்ச்சுனன் அதராமல், பெதராமல், சஞ்சலப்படாமல், இவரோ நமக்கிடெனச் சினந்து, காற்றாடி போற் சுழலுங் கணக்கற்ற கணைகளை ஒவ்வொருவர் மீதும் இலக்குபார்த்துத்தொடுத்து, அவுணர்கள் விடுத்த ஆயுதங்களையும் பாணங்களையும் பொடிப்பொடியாக்கி, யார்யார் எங்கெந்தத் திக்கிலிருந்தார்களோ? அவரவர்களுடலை யெல்லாஞ்சல்லடைக் கண்கள்போலத் துளைத்து, சேனைகளை யெல்லாம் வளைத்துக்கொண்டு, கால்வேறு - கைவேறு - தலைவேறு - தொடைவேறு-இடைவேறு - முடிவேறு - இப்படி வேறுவேறாகச்சின்னாபின்னஞ்செய்து உதிரக்கட லுண்டாக்கினன் அவ்வவுணர்களுடைய உதிரக்கடலால் உவர்க்கடல் சிவந்தநிறமாயிற்றென்றால், இறந்தசேனையின் தொகையை நீரே யளவிட்டுக்கொள்ளும். இவ்வாறு அர்ச்சுனன் தன்னையெதிர்த்த அவுணர்களைக் காலாக்கினி உருத்திரனைப்போல் நாசப்படுத்துவதைக்கண்ட அவுணராஜர்கள் கடுகடுத்து, சபாசு! சபாசு! இவன்நரனாகையிருந்தாலும் வில்வித்தையில் அதிகதிறமுள்ளவனாக இருக்கிறானென்று கிஞ்சித் தச்சமுற்று, மீட்டும் இறந்தவர்களை எழுப்பிக்கொண்டு ஆர்ப்பரித்துக் கவிந்து சாவருஷம் பொழிந்தார்கள் அர்ச்சுனன் அதுகண்டு அதிகசினங்கொண்டு, வறுத்தபயறு முளைக்கிறது போல நம்மா லிறந்தவர்களெல்லாம் மறுபடியும் பிழைக்கிறார்கள் இனி இவர்களை இந்த அஸ்திரங்களினால் வதைக்கக் கூடாதென்று அவைகளை நிறுத்தி, லோககர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணாஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்து மானசபூஜை செய்துவிட்டான் இந்நாராயணாஸ்திரத்தை லேசான அரசர்கள் தொடுத்தாலும் அதுவீண்போகாமற் பல பல விநோதங்களோடு சென்று எதிரியை நாசப்படுத்துமென்றால், தனக்கு மைத்துனராகிய திருமாற் படையைத் தானே எடுத்து விடுவானாகில் அந்நாராயணாஸ்திரம் வெளிப்பட்ட பெருமையும் - அதனிடத்திலுண்டான விநோதமும் - என்னாற் சொல்லத்தக்கதல்லவாயினும், கூடியமட்டும் ஒருவாறாகச்சொல்லுகிறேன் கேளும்.

ஓ மகாராஜனே! அர்ச்சுனன்தொடுத்த நாராயணாஸ்திரமானது அவனெடுக்கும்போது வாமனரூபம்போலச்சிறியதாக இருந்தாலும், வில்லில்தொடுத்துவிட்டபின்பு அண்டரண்ட பிரமாண்டமெல்லாம் ஓரடியால் அளக்கவளர்ந்த நெடுமாலைப்போல் அந்தரவெளியெல்லாம் பரவி, இந்திரன் - அக்கினி - யமன்- நிருதி - வருணன் - வாயு - குபேரன்-ஈசானன் அஷ்டவசுக்கள் - உருத்திர கணங்கள் - முப்பத்துமுக்கோடி தேவர்கள் முதலானவரையும் அவரவர்க ளாயுதங்களோடு உண்டாக்கி, ஒருபக்கம் பர்வதங்கள்-ஒருபக்க மின்னல்கள் - ஒருபக்கம் இடிகள் - ஒருபக்க மழைகள் - ஒருபக்க மிருள்கள் - ஒருபக்கந் தீக்கள்- இப்படியாக உண்டாக்கி, கோடிசூரியப்பிரகாசம்போலப் பிரகாசித்துக்கொண்டு, அவுணர்சேனைகளிற் பாய்ந்து, அச்சேனைகளை யெல்லாம் நாசப்படுத்தி, அவுணர்களையும் வளைத்துக்கொண்டு, அவர்களுடைய அழியாத கவசத்தையெல்லாம் பொடிப்பொடியாக்கி, மஹா உக்கிரத்தோடு அவர்கள்மகுடங்களோடுகூடிய தலைகளை யற்றுவிழச்செய்து, திருப்பாற்கடலில் ஸ்நானஞ் செய்துவந்து முன்போல் அம்புப்புட்டிலி லிருக்கது. அதுகண்டமற்ற அவுணராஜர்கள் நாராயணாஸ்திரத்தால் மடிந்த அவுணருக்குஞ் சேனைகளுக்கும்

மறுபடியு முயிருண்டாக்கித் தலைகூட்டி, முன்போல்
யாவரையு மெழுப்பிக்கொண்டு, இந்திரனால் நெடு
நாள் தவஞ்செய்து பிரமனிடத்திற் பெற்ற கவசம்
பொடிப்பொடியாயிற்று. இனிநம்மையுங் கொல்லுவா
னென்று அச்சமுற்றவராகி யிருந்தாலும் அவுணர்க
ளாதலாற் கடுஞ்சினமடைந்து மஹா உக்கிரத்தோடு
வந்து வளைத்துக்கொண்டு தாங்கள் பெற்றிருக்கிற
தேவாஸ்திரங்களை எல்லாம் யெடுத்து மந்திரோப
தேசஞ்செய்துவிட்டார்கள். அந்த அந்த அஸ்திரங்க
ளெல்லாம் அந்தரவெளியை அடைந்து மந்திரரூப
மாய் மஹாமகிமையோடும்வந்தன. அதை அர்ச்சுனன்
கண்டு, ககூஷணங் தன்வில்லில் மஹேந்திராஸ்திரத்
தை எடுத்துத் தொடுத்துத் தூபதீப நைவேத்திய
முதலானவைகள் மனதாற்செய்து மந்திரத்து விட்
டான். அந்த மஹேந்திராஸ்திரம் அந்தரத்திலெழு
ம்பி அண்டமெல்லாம்பரவி, யார் யார் எந்தெந்த அஸ்
திரங்களை விட்டார்களோ? அந்தந்த அஸ்திரங்களு
க்கு அந்தந்த அஸ்திரமாகி, ஒருநொடியில் அவுணர்
விட்ட அஸ்திரங்களை யதமாக்கினதுமன்றி, அவுணர்
களையும் வளைந்துகொண்டு, அவர்கள் கொண்டிருக்
கும் மமதையை நாசமாக்கிச் சித்திரப்பிரதிமெய்போ
லப்பிரமிக்கச்செய்து, மறுபடியும் அர்ச்சுனன் அம்
புப்புட்டிலில் வந்துசேர்ந்தது.

அதுகண்ட அவுணர்கள்கவங்கி மனநடுங்கி, ஓ!
ஓ! இந்திரனை நாம் மனிதனென் றெண்ணி இகழ்ந்
தோம். இவனுக்கிருக்கிற வல்லமையும்-திவ்யாஸ்திரங்
களும் - அவற்றிற்குத்தக்க கரவேக சரவேகமும்யார்க்
கிருக்கின்றது? இனி இந்த மகானுபாவனை நமது
மாயையால் வெல்லவேண்டு மென்றுகருதி, தங்கள்
தங்கள் வில்லில் மேகாஸ்திரத்தைத் தொடுத்து விட்
டார்கள். அர்ச்சுனன் அக்கினியாஸ்திரத்தால் அவை
களை அதமாக்கி, உடனே பின்னுஞ்சில பாணங்களைத்
தொடுத்து அவுணர் சரீரங்களைத் துளைத்து விட்
டான். அவுணர்களெல்லாந் தத்திக்கெட்டுத் தடுமா
றித் திப்பிரமை கொண்டு, அவனோடு பூமியில்நின்று
போர்செய்வதற்கு அஞ்சி, குபீலென் றந்தரத்தி லெ
ழும்பி மேகத்தில் மறைந்து, தங்கள் தங்கள் வில்லில்
அளவற்ற கணைகளைத் தொடுத்ததுமன்றித்தங்கட்கரி
திற் கிடைத்திருந்த வாயுவாஸ்திரங்களை யெடுத்துத்
தொடுத்து விட்டார்கள். அர்ச்சுனன் அவுணர்கள்
விட்ட அஸ்திரங்க ளத்தனையையுந் தனதுசிலகணைக
ளாற் கண்டதுண்டங்களாகக் கண்டித்துவிட்டு, பர்வ
தாஸ்திரத்தை எடுத்து வில்லில்தொடுத்து மந்திரித்
துவிட்டான். அந்தஅஸ்திரம் அநேக பர்வதங்களையு
ண்டாக்கிக் காற்றையடக்கி, அவுணர்விட்டவாயுவாஸ்
திரத்தை நாசப்படுத்திவந்து அர்ச்சுனனைச் சேர்ந்
தது. அதனை யவ்வவுணர்கண்டு கடுஞ்சினமடைந்து,
ஓ! ஓ! இந்திரன் தேவர்களால் அனுப்பப்பட்டவ
னாதலால் தேவாஸ்திரங்கள் இவன் முன்னிலையிற்
பயன்படவில்லை. இனி மாயாஸ்திரத்தால் வெற்றிபெ
றவேண்டுமென்று கருதி, அண்டாண்டபிரமாண்டங்
களி லிருக்கிற தேவர்களை யெல்லாம் அரைநொடியில்
மயக்கிக் கட்டியுருட்டிப் பெரும்புறக்கடலிற்போடுஞ்
சக்தியையுடைய மாயாஸ்திரத்தை எடுத்து வில்லிற்
பூட்டிப் பூசித்து மந்திரோபதேசஞ் செய்து விடுத்
தார்கள். அந்த மாயாஸ்திரம் அந்தரத்தி லெழும்பி,
ஒருநொடியில் ஒருவர்முகம் ஒருவர்க்குத் தெரியாம
லிருக்க இருளையுண்டாக்கி, ஒருபக்கம் இடி-ஒருபக்
கம்-மின்னல்-ஒருபக்கங்-காற்று - ஒருபக்கம் மழை-
ஒருபக்கம் பர்வதம்-இன்னுஞ் சொல்வதற்கரிய அஸ்
திரங்களை யுண்டாக்கி, எங்குந்தானாகி, அர்ச்சுனன்
விடுக்குங்கணை களையெல்லாம் நாசப்படுத்திக்கொண்டு
மகாமகிமையோடு நெருங்கிற்று.

கேளும் மகாராஜனே! அவுணர்விடுத்த மாயா
ஸ்திரங் கிட்டநெருங்க நெருங்கத் தேரிற்கட்டியகுதி
ரைகள் சோர்ந்து அசைவற்று நின்றன. மாதலி கட்
குடியன்போல் உறக்கங்கொண்டவனாகிச் சாரத்தியஞ்
செய்வதிற் கிஞ்சித்துச் சோர்வடைந்தான். சித்திர
சேனன்மயங்கினன். இதைக்கண்ட அர்ச்சுனன் அண்
டகடாகம் வெடித்திடக் கடகடத்த கர்ச்சனை கொண்
டிடிக்குமிடிபோல் அட்டகாசஞ்செய்து. மாதலியை
ஒரு அறை அறைந்து, அவன் மயக்கமறச் சிலமந்தி
ரோபதேசஞ் செய்து, குதிரைகளைத்தேற்றித், ககூஷ
ணங் தன்வில்லில் ஞானாஸ்திரத்தை எடுத்துத் தொ
டுத்து மந்திரோப தேசஞ்செய்து உக்கிரத்தோடு
விடுத்தான். அந்த ஞானாஸ்திரம் வில்லிலிருந்து வெ
ளிப்பட்ட மாத்திரத்திற் குதிரைகள் தெளிந்தன.
சாரதியுஞ் சித்திரசேனனுந் தெளிந்தார்கள். ஞானா
ஸ்திரம் வெளிப்படவே மாயாஸ்திரந் தன்வலிமை
குன்றி அசத்தியர்செய்த தருமம்போலத் தேய்ந்து
மாய்ந்துவிட்டது, அர்ச்சுனனுஞ் சாரதியுஞ் சித்திர
சேனனும், அறம்பொருள்பெற்று விளங்குஞ் சிறப்பு
ற்ற நல்லறிவாளருள்ளம்போல் மாயையில் நின்று நீங்
கிமகிழ்ந்தனர். சூது - வாது - அக்கிரமம் - கொலை
களவு - கள் - காமம் - இவைகட்குப் பாத்திரராகிய
அவுணர்களெல்லாம் போர்த்தொழிலை மறந்தவராகிச்
சோர்ந்துவிழுந்து, பின்பு தெளிந்து, கிஞ்சித் தறிவு
டையவர்களாய்த் தங்கள் தங்க ளிரதங்களில் வந்
தேறி நடத்தி, அஞ்சனமலைபோ லிருக்கும் அர்ச்சு
னன்மீதும், மாதலிமீதும், தண்டு - சூலம் - வாள்-
வேல்-சத்தி - முதலிய ஆயுதங்களை எடுத்தெறிந்து,
மணலைவாரி இறைத்ததுபோலக் கணைகளையுந் தூவி
னர். அர்ச்சுனன் தன்காண்டீபத்தில் அளவற்றகணை
களைத்தொடுத்து, அவுணர்விடுத்த ஆயுதங்களையுங்
கணைகளையுந் தவிடுபொடியாக்கி, முள்ளம்பு - அர்த்த
சந்திரபாணம் - நாராசமுதலிய கணைகளை எடுத்துத்
தொடுத்தான். இவன் கணையெடுக்கிறதும் - தொடு
க்கிறதும் - அந்தரத்தில் நின்று பார்த்திருக்குந்

தேவர்களுக்குந் தெரியாதென்றால், அர்ச்சுனனுடைய கரவேகசரவேகத்தை நீரே மதித்துக்கொள்ளும் அக்கணைகள் அவுணரை வளைத்துக்கொண்டு, அவ்வவர்களுடைய வில்லைமுறித்து மார்பைப்பிளந்து சல்லடைக்கண்கள்போலத் துளைத்துவிட்டன

அதனா லவுணர்கள் வெய்யலில் அகப்பட்டுக்கொண்ட புழுவைப்போற் பதைத்தருகின்றது, சுத்தவீரராகையால் முதுகாட்டி யோடாமல் அர்ச்சுனன் எதிரிற்சென்று, ஆயுதங்களையும் வில்லையுஞ் சுமந்த சித்திரப்பிரதிமைப்போலசைவற்று நிற்பர். கணைதொடுக்க வீராவேசங்கொண்டு வில்லைத்தூக்குவர். வில்லெடுக்கவுஞ் சக்தியற்று விழிப்பர் இவ்வாறு அவுணர் கைகளிளைத்ததைக்கண்ட அர்ச்சுனன் தன் வில்லில் அளவற்ற கணைகளைத்தொடுத்து, ஒவ்வொன்று கோடி கோடியாக வளரும் மந்திரத்தை உபதேசித்துவிட்டனன். அக்கணைகள் கல்வி கேள்வியிற் பயின்று சிறந்த குணத்தையுடையவர்களுக்குக் கொடுத்த பொருளைப்போல் வளர்ந்து, ஒன்று கோடியாகி அசுரரைத் துளைக்கத் தலைப்பட்டன. தேவர்கோமான் குமாரனாகிய அர்ச்சுனன்விட்ட பாணங்களினால் அவுணர்கள் மிகவும் நொந்து வீராவேசங்கொண்டு, அடா அர்ச்சுனா! எங்களை இலேசாகநினைத்துப் போருக்கு வந்து, உன்கரவேக சரவேகத்தால் எங்கள்சேனைகளை யதமாக்கி, அழியாத கவசத்தைப்பெற்ற எங்களையும் வளைத்து, கவசத்தைப் பிளந்து சித்திரவதை செய்தனை. இனி நீ சொர்க்கமத்திய பாதாளமென்னு முப்புவனத்தில் எங்கொளித்தாலும் உன்னைவிடாமற் பின்றொடர்ந்து, உன்னுயிரை எங்கள் பசிக் கிரையாக்குகிறோம் பாரென்றுமேல்விழுந்து வந்தார்கள். உடனே அர்ச்சுனன் தன் காண்டீபத்திற் கூர்மைதங்கிய வேலுக்கொப்பாகிய சிற்சில கணைகளைத்தூண்டித், தன்னை மதிக்காமல் அடாவென்று கூறியவாயி லுதிரங்கக்கச்செய்து, பின்னுங் கோடையிடிக் கொப்பாகிய சிலகணைகளையேவி, அவரவர்களுடைய கரங்களையும்-சிரங்களையும்-கால்களையும்-அவர்கள் விட்ட வேல்களையும்-அவர்கள் பிடித்த வாள்களையுந் துண்டித்து, யாவரையும் வெட்டித்தள்ளிச் சங்கத்தொனிசெய்தான். அச்சங்கொலி யடங்குமுன் மூன்றுகோடி அவுணரும் மறுபடியும் உயிர்பெற்றுவந்து போர்புரிந்தனர். பின்னும் அர்ச்சுனன் அவர்களைவெட்டினன். இப்படி அர்ச்சுனன் வெட்டவெட்ட அவுணர்கள் மீட்டுமீட்டுமுயிர்பெற்றுவர, அர்ச்சுனன் கைசலித்து, ஓ! ஓ! இந்த அவுணர் இறந்திறந்து உயிர்பெற்றால், நாம் இவர்களையெல்லாங் கொன்று எந்தக்காலத்தில் வெற்றியடைகிறது? நமது பிதாவாகிய சொர்க்காதிபதியென்னுந் தேவேந்திரனுக்கு யெவ்வாறு மனக்கவலையை நீக்கிவைக்கிறது? மற்றத்தேவர்கள் முனிவர்கள் முதலியபேர்களுடைய சிந்தாகுலங்களை யெவ்வாறு சிதைப்பது? என்று யேக்கங் கொள்ளுவதானான்.

அர்ச்சுனன் அசரீரியால் நிவாதகவசர் நிலைமையுணர்ந்து பாசுபதாஸ்திரப் பிரயோகஞ் செய்தல்.

அத்தருணத்தில் அசரீரி-ஓ விஜயப்பிரதாபா! ஓ அர்ச்சுனா! என்று கூவிச் சொல்லுகிறாள்: ஓ மஹாநுபாவா! இவர்களோடு நீடூழிகாலம் போர் புரிந்தாலும், இவர்களை வெற்றியடைகிறது அருமை. ஏனென்றால் - இவர்கள் யமனைக்குறித்தும்-பிரமனைக்குறித்தும்-அநேகநாள் அருமையான தவத்தைச் செய்தவர்கள். திவ்வியாஸ்திரங்களைப் பெற்றவர்கள். இவர்களை நூறுநூறாக வெட்டியெறிந்தாலும் மறுபடியும் ஒன்றாகக்கூடி யுயிர்பெறுவார்கள். அவ்வளவு வரப்பிரசாதமுள்ளவர்களாகிய இவர்களை வெற்றியடைய ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்: அஃதென்னவெனில்-இவர்களோடு கடும்போர்புரிந்து, இவர்கள் வாயுங்கையுமொன்றாகயிருக்கும்படிசெய்து, அந்தவேளையிற் பாசுபதாஸ்திரத்தை எடுத்துத் தொடுத்தால் இவர்கள் மாளுவார்களென்று கூறினாள். அதுகேட்ட அர்ச்சுனன் மகிழ்வுற்று, மாதலியைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ மாதலி! நான் கடும்போர் செய்கிறேன். அத்தருணத்தில் நீ தேரை முன்னே செலுத்துகிறதுபோலக் காட்டி உடனே பின்னிடைச் செய்யென்றுகூறி, அவுணர்களை வளைந்துகொண்டான். அவுணர்களும் மகா உக்கிரத்தோடு அர்ச்சுனனை வளைந்துகொண்டு, தங்கள் கையிலிருக்கிற வில்லில் அளக்கரிய பாணங்களைத் தொடுத்தார்கள். இருதிறத்தாரும் ஒருமுகூர்த்தஞ் சரவருஷம் பொழிந்தார்கள். எந்தத் திசையை நோக்கினபோதிலும் அந்தத் திசையெல்லாம் அவுணர் விடுத்தபாணமும் விசையன் விடுத்த பாணமுமாகத் தானிருந்ததென்றால், சரவருஷம் பொழிந்ததிறத்தை நீரே மதித்துக்கொள்ளும். இவ்வாறு கடும்போர் நடக்கிற தருணத்தில் தேவசாரதியாகிய மாதலி தன் சாதுரியத்தால் தேரைக் குலாலன் சக்கரம்போற் சுழலவிட்டு, அப்பாற் பின்னுக்கு நடத்தினான். இதனைக் கண்ட அவுணர்கள் பூரணசந்திரனைக்கண்ட சமுத்திரம்போலப் பொங்கி, நரன் முதுகுகாட்டிப் பின்னிட்டனனென்று கொக்கரித்து யாவருஞ் சிரித்து, இவ்வளவு வல்லமைசாலி நம்மோடு இந்நேரங் கடும்போர் புரிந்தது ஆச்சரியந்தானென்று யாவரும் ஆர்ப்பரித்துக் கைகொட்டி, வாயுங் கையும் ஒன்றாகும்படி மூக்கிற் கரத்தைவைத்தார்கள். அர்ச்சுனன் அதுகண்டு, இதுதான் தருணமென்று தக்ஷணம் அம்புப் புட்டிலிற் கரத்தைவைத்து, கயிலாசபதி கொடுத்த திவ்விய பாசுபதாஸ்திரத்தை எடுத்து வில்லிற் றொடுத்து, தூபதீப நைவேத்திய முதலியவைகளை மனதாற் செய்து தொழுது விட்டனன்.

கேளும் மகாராஜனே! பல்லாயிரங்கோடி அண்டங்களுக்கும் அவற்றிலுள்ள சராசரங்களுக்குந் தலைவனாகிய பரமன் வாளி வில்லினின்றும் வெளிப்பட்ட மாத்திரத்தில் அந்தரத்திற்றாவி, அநேகம் பிரம்மாஸ்திரம்-அநேகம் நாராயணாஸ்திரம்-அநேகம் இந்திராஸ்திரம்-அநேகம் சந்திராஸ்திரம்-அநேகம் சூரியாஸ்திரம்-அநேகம் வருணாஸ்திரம்-அநேகம் வாயுவாஸ்திரம் - அநேகம் இடியாஸ்திரம்-அநேகம் குபேராஸ்திரம்-அநேகம் கருடாஸ்திரம்-அநேகம் காந்தருவாஸ்திரம்-இன்னுமிவ்வாறான அஸ்திரங்களை அநேகமுண்டாக்கித், திக்கெட்டுந் தத்தளிக்க உக்கிரத்தோடு கர்ச்சித்து, அவுணர்களை வளைந்துகொண்டு யாவரையுங் கால்வேறு கைவேறாகத் துண்டித்து, அவரவர்களணிந்த மகரகுண்டல ஆரகேயூர கடககங்கணங்களைத் தவிடுபொடியாக்கி, மகுடங்களோடுகூடிய சிரங்களைக் கண்டித்து, வானநதியில் ஸ்நானஞ்செய்து முன்போல் அர்ச்சுனனுடைய அம்புப்புட்டிலில் வந்திருந்தது. அர்ச்சுனன்விட்ட பாசுபதாஸ்திரத்தால் அவுணர்களெல்லாம் மடிந்து, தாங்கள் இறந்தாலும் பிறக்க வரங்கொடுத்த யமனிடத்துச் சென்று உமது வரம் பாழாயிற்றேயென்று முறையிட யேகுவதுவதுபோல் அவன் புரத்தை அடைந்தனர்கள். அர்ச்சுனன் செய்த யுத்தத்தைக்காண அந்தரத்தில் வந்திருந்த தேவர்களெல்லாம் அவன்விட்ட பாசுபதாஸ்திரத்தால் அவுணர்களெல்லாம் யமலோகத்தையடைந்ததைக்கண்டு, இருவினைப் பந்தங்களில் நின்று கனவருத்தமுற்றவர்க்குப் பரமபதங் கிடைத்தாலவர்கள் எவ்வளவு மகிழ்வடைவரோ ? அவ்வளவு மகிழ்வடைந்து, ஓவென்று கெக்கலி கொட்டி, ஜெயாவிஜெயபவாவென்று கற்பகமலர்களையெடுத்து மாரிபோல் அர்ச்சுனன்மீது வருஷித்து, ஓ பாண்டுபுத்திரா ! ஓ சந்திரகுலாதித்தா ! ஓ சத்துருசங்காரா ! ஓ விஜயப்பிரதாபா ! ஓ சங்கு சக்கர கதா கட்ககோதண்டதாரனாகிய திருமால் மனதிற்குகந்த மைத்துனா ! ஓ கருமபூபதிக்குச் சகோதரா ! ஓ சுபத்திராதேவி மனோகரா ! ஓ பார்த்திபா ! ஓ பற்குனா ! ஓ கிரீடி ! ஓ திக்குவிஜயா ! ஓ காண்டவவனதகனா ! ஓ தேவர்க்காதாரா ! ஓ அசுராந்தகா ! என்று பலவாறு துதித்து, இன்றல்லோ நாம் பிழைத்தோம் இனிநமக்குச் சத்துரு வில்லையென்று கூறிப் பரமானந்த மடைந்தனர். இங்கே அசுரர்கள் சிரந்துணிந்து பூமியில் விழுந்தமாத்திரத்தில், அவரவர்கள் உடலிலிருந்து உதிரப்பிரவாகம் உண்டாகிப் பூமியிற்பெருகி, சமர்க்களத்தி லிருக்கும் இரதங்களையும்-யானைகளையும்-குதிரைகளையும்-காலாள்களையும்-அடித்துக்கொண்டு போய்க் கருங்கடலிற் பாய்ந்து செங்கடலாக்கியது. தேவர்கள் வாழ்த்தொலியைக்கேட்ட முக்கோடி யவுணர்களின் மனைவிகள் மனங்கலங்கித், தங்கள் தங்கள் மேலுப்பரிகையில் ஏறிப் போர்க்களத்தைநோக்கினர். எக்காலத்தும் எந்தவிடத்தும் நமக்கழிவில்லையென்று மனக்களிப்புற்ற அம்மாதர் கண்களுக்கு அர்ச்சுனன் இரதமொன்று தவிர மற்றொன்றுந் தோன்றாம லிருக்கிறதைப் பார்த்து, இடிவிழுந்த மரம்போலேங்கி, உப்பரிகையை விட்டிறங்கி யாவரும் ஒன்றாகக்கூடி, அரண்மனையைவிட்டு நகர்ப்புறத்திலிருக்குஞ் சமர்க்களத்தில் வந்து, தங்கள் பிராணநாயகர் மடிந்ததைக்கண்டு, ஓவென்றலறிப் பூமியில் விழுந்து பலவாறு புலம்பி, இனி வருத்தப்படுவதிற் பயனில்லையென்று மனந்தேறி, யாவருந் தங்கள் தங்கள் நாயகன் பிரேதத்தோடு தீயில்விழுந் திறந்தனர்கள். இப்பால் மேல்நடந்தனவற்றையுங் கூறுகிறேன் கேளுமென்று ஜெனமேஜெயனைப்பார்த்து வைசம்பாயனர்சொல்லத்தொடங்கினார்.

நிவாதகவசர்வதைச் சருக்கம் - முற்றிற்று.

நாலாவது

காலகேயர்வதைச் சருக்கம்.

மீனாமைகோலநெடு நரசிங்கமாகிநிலம் விரகாலளந்தகுறளா
யானாதுசீறமழு வல்வில்லுவெல்லுமுனை யலமுற்றசெங்கையவராய்
வானாடர்வந்துதொழ மண்ணாடர்பாவரையு மடிவிக்கவந்தவடிவாய்
நானாவிதங்கொள்பரி யாளாகி நின்றருளு நாராயணாயநமவே.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! அர்ச்சுனன் மூன்றுகோடி அவுணராகிய நிவாதகவசரைக்கொன்றுஞ் சினமடங்காமல், மஹா உக்கிரத்தோடு மாதலியை நோக்கிச் சொல்லுகிறான் : ஓ மாதலீ ! இன்னுமிந்த அவுணர்களைப்போற் சில அவுணர்கள் அந்தரலோகத்தில் எந்தவிடத்திலாவது ஒளித்திருப்பார்கள். அவர்களுடைய வேரைக் களையவேண்டும். ஆதலால் தேரை அந்தரலோகத்திற் செலுத்தென்றுகூற, மாதலி அர்ச்சுனன் கருத்தின்படி இரதத்தை அந்தரலோகத்திற் செலுத்தி வந்தான். அர்ச்சுனன் தனது கண்ணுக் கெட்டினவரைக்கும் பார்த்துக் கொண்டு வருகிறபோது, பொன்மயமான ஒருநகரங் கண்ணுக்குத் தோன்றிற்று. அர்ச்சுனன் மாதலியைத் தேரை நிறுத்தும்படி சொல்ல, அப்படியே நிறுத்திய மாதலியைநோக்கி, ஓ மாதலீ! சொர்ன்னமயமாக இதோ ஒருநகரந் தோன்றுகின்றது. இதின் வரலாறென்ன

வென்று வினவினன் மாதலி அர்ச்சுனனை வணங்கிச் சொல்லுகிறான்: ஓ மஹானுபாவா! திதியென்றும் அதிதியென்றும் இரண்டு மாதருண்டு. இவருள் திதியென்பவள் முப்பத்து முக்கோடி தேவர்களைப் பெற்றாள். அதிதியென்பவள் அந்தத் தேவர்களுக்குப் பகைவராகிய அசுரரைப்பெற்றாள். அந்த அசுரருள் காலகையென்றொரு மாதுண்டு. அந்த மாது புலோமையென்னும் அசுரனை மணந்து, நெடுநாள் இருவரும் தவம்புரிந்து அறுபதினாயிரம் புத்திரர்களைப்பெற்றார்கள் அப்புத்திரபாக்கியத்தைப்பெற்ற சாலகை புலோமை என்கிற இருவரும் தங்கள் புத்திரர்க்குப் பகைவராகிய தேவர்களால் ஒருயிடையூறும் வராமலிருக்க ஆலோசித்து, கமலாசனக் கடவுளைக் குறித்து அநேக ஊழிகாலந் தவஞ்செய்து, தேவராலும் மற்ற மூவராலும் பின்னும் யாவராலுந் தங்கள் புத்திரர்களுக்கு இடையூறு வராமலிருக்கவும், திவ்வியாஸ்திரங்கள் கிடைக்கவும், நினைத்த விடத்துக்குச் செல்லத்தக்கதாக ஒரு சொர்ன்ன நகரமும் வேண்டுமென்று வரங்கேட்டுக்கொண்டு, மக்களைப் பாதுகாத்துப், பின்பு அவர்களைத் தக்க வயதிற் பிரமனாற் பெறப்பட்ட சொர்ன்னபுரியிற் குடியேற்றுவித்தார்கள்.

அப்பால் அந்த அறுபதினாயிரம் பெயர்களும் அந்த நகரத்திற் குடியேறித், தன் தாய்பெயரைத் தாங்கள் வகித்துக் காலகேயரென்ற விளங்கித், தாய் தந்தையராற் சம்பாதித்துக்கொண்ட வரமும் திவ்யாஸ்திரங்களும் போதாமற் பின்னும் அதிக அருமையான தவஞ்செய்து, கமலாசனக் கடவுளாற் சொல்வதற்கு அருமையான திவ்யாஸ்திரங்களையும் அதிகபலத்தையும் பெற்றுக் கொண்டு, சொர்காதிபதியாகிய இந்திரனை யெதிர்த்துப் பலபல இமிசை செய்து, தேவர்களை ஒரு நாலுக்குஞ் சரட்டுக்குங்கூட ஆகவொட்டாமல் எக்காலகதும் அவர்களை மடக்கிப் பிடித்து அடிக்கின்றவர்களானார்கள். இவர்கள் கோபாக்கினியைக்கண்டே வடவாக்கினி யோடி கடலிலொளித்ததென்றால், அவருடைய திடச் சித்தத்தையும் பராக்கிரமத்தையும் யாவரால் சொல்லக்கூடும்? அவுணர்களைப்போலக் கறுத்த தேகத்தை யடைந்தவரல்ல; மகா சொர்ன்ன நிறம்போன்ற தேகத்தையுடையவர்கள். சந்திர சூரியர்போற் பிரகாசிக்கின்ற குண்டலங்களைக் காதிலேயுடையவர்கள். உலகிலுள்ள சீவர்களைக் கொள்ளைகொள்ளும் யமனோடு போரிட்டு எப்போதுந் தாங்களிருக்குந் திசையை நோக்காமலிருக்கச் செய்பவர்கள். தோன்றிய மின்னல் உடனே நாணி மறையும்படியான வொளியையுடைய ஆயுதங்களைக் கையிலுடையவர்கள். அவர்கள் கண்களிலிருந்து வெளிப்படுந் தீப்பொரியைக்காணில், விஷாக்கினியும் அஞ்சி ஒடுங்கும். காலகேயரென்கிற பெயரைக் கேட்ட அஷ்டதிக்குப் பாலகருந் தலையெடுக்காரென்றால், அவர்கள் பெருமையை யாவரால் மதித்துச் சொல்லக்கூடும்? இவர்கள் செய்கிற அக்கிரமமென்னவெனில்; தேவர்களுக் கிடுக்கண் செய்கிறதோடு வேதாகம விதிப்படி நின்று மூன்று வேளையும் முத்தீ வளர்த்திச் சூரியோதயத்திலும் அஸ்தமானத்திலுங் கிரமப்படி சூரியனுக்கு அர்க்கியபாத்தியங்கொடுக்கும் வேத வேதியரைத் தங்களுக் கிரையாகக் கொள்பவர்கள். மஹா பாவிகள் முற்காலத்திற் கயிலாசபதியாகிய சாம்பவ மூர்த்திக்கு நேர்ப்பட்ட முப்புராதிகளைப் போலச் சொர்ன்ன நகரத்திலிருந்து, அவர்களைவிட எண்மடங்கதிகமான அக்கிரமத்தைச் செய்பவர்கள். ஒருவனைப் போலவே இந்த அறுபதினாயிரம் பெயர்களுஞ் சமமாகப் போர்செய்பவர்கள். மகா பராக்கிரமசாலிகள் என்று கூறக்கேட்ட அர்ச்சுனன் மகிழ்வுற்றுச் சொல்லுகிறான்:

அருச்சுனன் காண்டீபக் குணத்தொனி காட்டக் காலகேயர் யுத்தசன்னத்தராய் வருதல்

ஓ மாதலி! நிவாதகவசத்தராகிய முக்கோடி அவுணர்கள்மேல் எதிர்த்துப் போரிட்டு வெற்றிகொண்டது அருமையல்ல. அவர்களால் தேவர்களுக்குமாத்திர மிடையூறுண்டாயிற்று. இவர்களோ? தேவர்களுக்கு இடையூறுசெய்கிறதுமன்றி, தெய்வீகத்தன்மையிற் சிறந்த வைதீகப் பிராமணர்களையும் வதைத்து வருகிறதினால், இவர்களைத் தான் முன்னங்கொல்லவேண்டும். இவர்களிருக்கிறது எனக்குத் தெரியாமற் போயிற்று. என் பிதாவாகிய இந்திரனுங் கூறவில்லை. தற்காலத்தில் நிவாதகவசரை அதஞ் செய்ததில் தேவர்களுக்குக் கிஞ்சித்து நலமுண்டாயிற்றேயன்றிப் பெரும்பயனடையவில்லை. இந்த காலகேயரை அதமாக்கினால் தேவர்களேயன்றி, மற்ற யாவரும் பெரும்பயனடைவார்கள். ஆகலால் இந்தச் சொர்ன்னநகரத்தில் இருக்கிற காலகேயர் அறுபதினாயிரவரையும் அதமாக்கி ஜெயசங்கம் பூரித்தபின்புதான் சொர்க்கலோகஞ் செல்லுவேன். நீ தடைசெய்யாமல் தேரை அந்தரத்திற் செலுத்தி, அந்தத் தாராத்மாக்களிருக்கிற நகரத்தருகிற் கொண்டுபோய்விடென்று அதிகவுக்கிரத்தோடுகூற, மாதலி காலகேயருடைய பராக்கிரமத்தை யறிந்தவனாதலாற் கிஞ்சித்தஞ்சினவனை இருந்தபோதிலும், நிவாதகவசர் நாசமானதை மனதில் மதித்து மகிழ்வுற்று, இந்தக் காலகேயருக்குங் காலமுடிவாயிற்றென்று கருதித் தேரை அந்தரத்திற் செலுத்திக், காலகேயரிருக்கிற சொர்ன்ன நகரத்தருகிற் கொண்டுபோய்நிறுத்தினான் விஜயப்பிரதாபனான அர்ச்சுனன் தான்வந்த சேதி அவுணர்களறிய ஆயிரங்கல பாரமுள்ள தன் காண்டீபத்தை எடுத்து நிறுத்தி வளைத்து டங்கார ஓசை எழுப்பினான்.

அந்த ஓசையைக்கேட்ட சொர்ன்னபுரியிலுள்ளவர்களிற்சிலர் மரணமடைந்தார்கள். சிலர் மரண மூர்

ச்சையடைந்தார்கள். சிலர் திகைத்தார்கள் சிலபிர்ம்மித்துச் சித்திரப்பிரதிமைப்போல் அசைவின்றியிருந்தார்கள். சிலர் தாமரையிலைச் சலம்போலத் தத்தளித்தார்கள். சிலர் இந்த நாணொலியேதென்று ஒருவரையொருவர் வினவினார்கள். பலர் நிவாதகவசர்மேல் போருக்கெழுந்த நரன் நமது நகரத்தின்மேலும் போருக்கு வந்தானோவென் றையமுற்று நடுங்கினார்கள். இப்படி நகரமுழுதும் அவகோலப்பட்டுக்கலங்கிற்று. நாணொலியைக்கேட்ட காலகேயர் திடுக்கிட்டவராகி ஒருவரை ஒருவர் பார்த்து, ஓ! ஓ! நமது நகரத்தின்மேற் சொர்க்காதி புவனங்களிலுள்ள தேவர்கள் போர்க்கெழார்கள். பிரம்மா-விஷ்ணு-உருத்திரன்-என்கிற மூவரும் நம்மேற் போருக்குவரக் காரணமில்லை பின்னையார் நமது நகரத்தின்மேல் அஞ்சாநெஞ்சுபடைத்துப் போருக்கெழுவர்? யாரோ பூலோகாதிபதிகளிலொருவன் இந்திரலோகம் வந்ததாகவும், அவனை இந்திரன் நிவாதகவசர்மேற் போருக்கனுப்பிவித்ததாகவும், கேள்வி. அந்த நரன் உண்மையாக நிவாதகவசர்மேற் போருக்குச் சென்றால், அவன் மீண்டுவரப் போகிறதில்லை ஏதோவொரு உளவினாற் சூதுமார்க்கங்கொண்டு அந்த நிவாதகவசர்களை வெற்றிபெற்று, அவர்களைப்போல் நம்மையும் வெற்றியடையலாமென்று மமதைகொண்டு வந்ததுபோற் காண்கிறது. எல்லாம் நகர்ப்புறத்துச்சென்று நோக்கினால் தெரியுமென்று கருதினவராகித், தக்ஷணங் கவசமணிந்து. மகரகுண்டல ஆரகேயூர கடககங்கண முதலானவைகளைப் பூண்டு, அம்புப்புட்டிலை முதுகிற்றூங்கி, வில்-வாள்-கதை-சூலம் முதலிய ஆயுதங்களைக் கரத்திலேந்திப் போர்க்கோலங்கொண்டு, தங்கள்சேனாபதிகளை எச்சரித்து நால்வகைச் சேனைகளோடு வரும்படிகட்டளையிட்டு, தாங்கள் இரதமேறி நகர்ப்புறத்துக்கு வந்தார்கள். சேனாபதிகள் தங்கள் தங்கள் கட்டளைக் குட்பட்டிருக்கிற சேனைகளோடு போர்க்கோலங்கொண்டு ரதாரூடராகித், தங்கள் யஜமான்களிருக்கிற விடங்களில்வந்து நிறைந்தார்கள். காலகேயர் தங்கள் சேனாபதிகளை நோக்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ சேனாதிபதிகளே! சற்றுநேரத்திற்கு முன்னே ஒரு ஓசையுண்டானதை நீங்களுங் கேட்டீரன்றோ? அந்தவோசை மேகத்தொனியென்றும், சமுத்திரகோஷ்டமென்றும், முருகவேள் சாரிவிடு மயிலினோசை யென்றும், அல்லது யாரேனும் நம்மேற் போருக்குவந்து, வந்தசேதி தெரிவிக்கச்செய்த வில்நாணொலியென்றுந் தெரியவில்லை. ஆகலால் நீங்கள் நாற்றிசையுஞ்சென்று பார்த்துவரத் தூதுவரை அனுப்புங்களென்றுகூற, சேனாபதிகள் தூதுவரையனுப்ப, அத்தூதுவர் நாற்றிசையிலுஞ்சென்று, ஒருதிசையில் வந்திருக்கிற ஒற்றைத்தேர் வீரனைக்கண்டு ஓடோடியும்வந்து, காயகேயரை வணங்கிச் சொல்லுகிறார்கள்.

ஓ ஸ்வாமிகளே! யாரோ ஒரு தேர்க்காரன் வந்திருக்கிறான். அத்தேரையுஞ் சாரதியையும் நோக்கினால் இந்திரனுடைய தேரைப்போலும், அவனுடைய சாரதியைப்போலுமிருக்கின்றது. தேரிலிருப்பவனை நோக்கினால் அவ்விந்திரனைப்போலவே இருக்கிறான். அவன்தான் ஓர் பெரியவில்லை யேந்திக்கொண்டு நிற்பதால், முன்புகேட்ட விற்குணத்தொனி அவனுடையதாக விருக்கலாமென்று கூற; உடனே யாவருந்திரண்டு அர்ச்சுனனிருக்கிற திசையில்வந்து, அர்ச்சுனனைப் பார்த்து அட்டகாசஞ்செய்து, ஒருவரை ஒருவர்நோக்கி, ஓ! ஓ! வந்திருக்கிறவன் ஒருவன். இவன் இந்திரனென்று மதிப்போமாகில் அவனுடல்முழுதுங் கண்கள் இருக்கும். இவனுடலிற் கண்களைக்காணோம் இயமனென்றுகொள்வோமாகிற் கறுத்த தேகமும்பெருக்ககதையுமிவனிடத்திலில்லை அங்க யமனும் நம்மோடுபோருக்குவரான். அசுரர்குலகாலனான சுப்பிரமண்யனென்று கருதுவோமாகில, இவனுக்கு இரண்டுகரம் ஒருதலை யிருக்கின்றதேயன்றி, ஆறுதலையும் பன்னிருகரமுமில்லை. மற்ற எந்தவீரன் நம்மீது போருக்குவந்தவனென்று கருதி அர்ச்சுனனை நெருங்கினார்கள். வந்தகாலகேயருடைய வடிவத்தைக்கண்ட அர்ச்சுனன் கடுஞ்சினமடைந்து, ஓ! ஓ! இந்த அசுரரைநோக்கினால் அழகில் மாரவேளையொத்திருக்கிறார்கள். இவர்களுடையரூபசவுந்தரியங்கள் தேவர்களுக்குமில்லை. இவர்களைக் கொல்லும்படியாக இந்திரனும் விடை கொடுக்கவில்லை. ஐயையோ! இதென்ன பாவமென்று கிஞ்சித்து மனவருத்தமுற்று, இந்தக் காலகேயர் பிறருக்கிடையூறு செய்கிறதினாலும்-வேதவேதியர்களையெல்லாங் கொலைசெய்கிறதினாலும்-துஷ்டநிக்கிரகஞ் செய்கிறதென்று மனுசாஸ்திர முறையிடுகின்றதினாலும்-முன்னம் நாம் இவர்களைக்கொன்றுவிட்டுச் சொற்கலோகஞ்செல்கிறதென்று சபதஞ்செய்தமையாலும்-இவர்களைக் கொல்லுகிறதே உத்தமமென்றுகருதித், தன்காண்டீபத்தை மீட்டுங் குணத்தொனி செய்து, அஷ்டதிக்குந் தத்தளிக்கக் கொக்கரித்தான்.

காண்டீபனுக்கும் காலகேயர்க்கும் யுத்தம்.

அதுகண்ட காலகேயர் கடுஞ்சினமடைந்து, தங்கள் சேனைகளை நாற்றிசையும் வந்து வளையக் கட்டளையிட்டு, தங்கள் இரதங்களை முந்திவிட்டு, அறுபதினாயிரம் பேர்களுந் தங்கள் தங்கள் வில்லைவளைத்து நாணேறிட்டு டங்கார ஓசையெழுப்பிச், சிலபாணங்களை யெடுத்துத் தொடுத்துவிட்டு அர்ச்சுனனைப் பார்த்துச்சொல்லுகிறார்கள்; ஆரடா! அடா நரா! நீயென்ன? உன்வல்லமையெவ்வளவு? ஒருமண்டலாதிபதியாகியநீ எந்தவல்லபத்தைக்கொண்டு இந்திரன் வார்த்தையைக்கேட்டுக் கிஞ்சித்தேனு மஞ்சாமல் எங்கள்மீது போருக்கு வந்தனை? உன்னை அனுப்பிவித்த

இந்திரனும் - இந்திரனுக்குத் துணையாகவந்த திக்குப்பாலகரும்-உருத்திரகணங்களும் - வசுக்களும்-மற்றத்தேவர்களும்-எங்களிலொருவனைக் கண்டவுடன் புலியைக்கண்ட மானைப்போலச் சந்திலும் பொந்திலும் நுழைந்து ஓடி உயிர்பிழைப்பா ரென்றால், நீ யெங்களுடன் போர்புரியத் தக்கவனோ? எங்கள் பெயரைக் கேட்ட தேவரெல்லாம் நடுக்கங்கொண்டு சோர்வடைவார்கள். நீ அஞ்சாமல் எங்கள் நகரத்துக்கு வந்தமையால் திடச்சித்த முடையவனென்று சொல்வதற்குச் சந்தேகமில்லை ஆயினும் நீ யொருவன் எங்களை யெவ்வாறு வெல்லுவையென்று வீரவார்த்தைகூறினார்கள். இவையனைத்துங் கேட்ட அர்ச்சுனன் குறுநகைகொண்டு சொல்லுகிறான். ஓ காலகேயரே! நீங்கள் மஹாபாவிகளென்றும், நாள்தோறுந் தேவராதியர்களுக்கு இடையூறுசெய் துவருகிறீர்களென்றுங் கேள்விப்பட்டு, உங்களைக்கொன்று உங்களுயிரை யமனிடத்தி லொப்பிவிக்கவந்தேன். முன்னம் நிவாதகவசரைக்கொன்றேன். உங்களையும் அரைமாத்திரையிற் கொல்லுகிறேன் பாருங்களென்றுகூறித், தன்வில்லிற் பாணங்களைத் தொடுத்துவிட்டு அவுணர் விட்ட பாணங்களை வெட்டித்தள்ளிப், பின்னுஞ் சிலபாணங்களைக் காலகேயர்மேல் விடுத்தான். அர்ச்சுனன்கூறிய வார்த்தையைக்கேட்ட காலகேயர் காலாக்கினி உருத்திரனைப்போற் சீறி, அண்டங்கள் பிளக்கக் கொக்கரித்து, தங்கள் தங்கள் வில்லில் அளவற்ற பாணங்களைத்தொடுத்து மழைபோற் சொரிந்தார்கள். சேனைகளும்பலபல ஆயுதங்களை எடுத்தெறிந் தார்ப்பரித்தார்கள். சேனைபதிகள் தங்கள்வில்லில் அளவற்றகணைகளைத் தொடுத்து அட்டகாசஞ் செய்தார்கள்.

இவையனைத்தையும் அர்ச்சுனன்கண்டு, தன்வில்லிற் சிலவயிரவாளிகளை யெடுத்துத் தொடுத்து, ஒருவாளி பத்து - நூறு - ஆயிரம் - பதினாயிரமாக வளரும் மந்திரத்தைஉபதேசித்துவிட்டு, அவுணர்விடுத்த கணைகளை யெல்லாம் நடுவது பாதியிற் கண்டித்தெறிந்து, ஓரிலைவேல் முகக்கணை-ஈரிலைவேல் முகக்கணை-மூவிலைமேல் முகக்கணை - கமலமுகக்கணை - அர்த்தசந்திரக்கணை - முள்ளம்பு - நாராசம் - இவைமுதலியவைகளையு மெடுத்து மந்திரோபதேசஞ் செய்துவிட்டான் அக்கணைகள் அந்தரமெல்லாம்பரவி, அவுணர் சேனையிற்கலந்து, யானைகளைப்பிளந்து, குதிரைகளை வெட்டித், தேர்களைச் சின்னபின்னமாகக்கண்டித்துக் காலாள்களை யதமாக்கிச், சேனைபதிகளை வளைந்துகொண்டு வில்லைமுறித்துக், கவசத்தைப் பிளந்து, மகுடத்தை யுடைத்து, வாகுவலயத்தைத் தள்ளிக், கொடிகளையறுத்து, மார்புகளைப் பொத்தலாக்கி விட்டன. சேனைகளுஞ் சேனைபதிகளும்நிலைகலங்கி ஒன்றாந் தோன்றுமற் பிரமைகொண்டு நின்று போர்செய்வதற்கஞ்சினவராகித், தங்கள் யஜமான்களின் முகத்தை நோக்குவர். கணைகளாலறுப்புண்டு விழுவர். தொடைமுறிந்து மைநாகபர்வதங் கடலிற் சஞ்சரிப்பதுபோல் உதிரவெள்ளத்திற் புரளுவர். முள்ளம்புதைத் துருவப்பட்டவர்களெல்லாம் வெய்யலிலகப்பட்ட புழுவைப்போலப் பதைத் துருகி விழுவர். இப்படி சேனைகள் அவகோலப்பட்டதைக்கண்ட அறுபதினாயிரமவுணரும் உகாந்தகாலத்து மேகங்களைப்போலக் கர்ச்சித்து, அடா நரா! வருத்தமென்பதை அறியாத எங்கள் சேனைகளைக் கனவருத்தத்துக் குள்ளாக்கினை. உன்னைச் சித்திரவதை செய்கிறோம் பாரென்றுகூறி, மாதலிமீதும் - குதிரைகள்மீதும்-அர்ச்சுனன்மீதும் - சரமாரிபொழிந்து அட்டகாசஞ் செய்தார்கள்.

அர்ச்சுனன் அவுணர் கணைகளையெல்லாம் அதமாக்கி, அஷ்டதிக்குப்பாலகரு மஷ்டவசுக்களுங் கொடுத்த திவ்வியாஸ்திரங்களை எடுத்து வில்லில் தொடுத்துக், தூபதீப நைவேத்திய முதலானவைகளை மனதாற் செய்துவிட்டான். அம்மாத்திரத்தில் அதுகள் அந்தரத்திலெழும்பிக் கோடை இடிகளைப்போலார்த்து, நெருப்பைவாரிக் கொட்டிக்கொண்டு திக்குத்திசைகள் தத்தளிக்கும்படியாக வாக்கிரமித்து, அவ்வவுணர்கள்மீது ஒருபக்கம் மின்னல் - ஒருபக்கங்காற்று-ஒருபக்கம்மழை-ஒருபக்கம் பலபல ஆயுதங்களைச் சொரிந்துகொண்டு, அவுணர்களையும் அவுணர்சேனைகளையும் வளைத்துக்கொண்டு ரதங்களைப் பிளந்து, குதிரைகளைக்கொன்று, சாரதிகளைவெட்டிக், குத்துக்காலை நறுக்கிக், கொடியைத் துண்டித்து, வில்லைமுறித்து, நாணியை அறுத்து, கவசத்தைப் பிளந்து, ஒருநொடியிற் சேனைகளையும் - சேனாதிபதிகளையும் - அதமாக்கி, அவுணர்களைச் சல்லடைக் கண்கள்போலத் துளைத்துவிட்டன. அர்ச்சுனன் யெய்த பாணத்தினால் அவுணர்கள் பூமியினின்று போர்செய்யச் சக்தியற்றவராகிக் குபீலென்று அந்தரத்திலெழும்பி மேகத்தில் மறைந்து, தங்கள் மாய்கையால் இருளையுண்டாக்கி, அண்டகடாகம் வெடித்திடக் கடுகடுத்த கர்ச்சனைசெய்து, வேல் - வாள்-சூலம்-சத்தி-தோமரம்-பிண்டிபாலம்- சக்கரம்-அக்கினியாஸ்திரம்-வாயுவாஸ்திரம்-குபேராஸ்திரம்-இடியாஸ்திர முதலியவைகளை மாரிபோற்றாவி அட்டகாசஞ் செய்தார்கள். அர்ச்சுனன் அம்மோகாஸ்திரத்தால் இருளைப்போக்கி, அசுரர்கள் விடப்பட்ட அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் நடுவதுபாதியிற் கண்டித்து, க - ம - ஈ - தூ - மத - கோடி என்று சொல்லும்படியாக வளருங் கணைகளைத்தொடுத்து, அறுபதினாயிர மவுணர்களும் நிலைதளர்ந் துருகத் துளைத்து விட்டான். இவ்வாறு அர்ச்சுனன் செய்துவருகிற அமர்திறத்தைக் காலகேயர் கண்டு வெகுண்டு, இனி யிவன் நேரில்நின்று அமர்புரிவமாகில் அரைமாத்திரையிற் கொல்வானாதலால் இவனை வஞ்சனையாற் கொல்ல வேண்டுமென்று கருதி, ஓடிப்போனவர்போல் தங்கள் நகரத்தோடு மறைந்துவிட்டார்கள். அதை அர்ச்சுனன் பார்த்து, ஓ! ஓ!

அவுணர் புறங்காட்டினரென்று பத்துத் திசைகளையு நோக்கிநிற்கும்போது, அவுணர்கள் திரண்டுமறைந்து நின்று மாயாஸ்திரமுதலிய அஸ்திரங்களை அளவற்றனவாகச் சொரிந்தார்கள்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வாறு காவேக சரவேகத்தினுல் வரும் அஸ்திரங்களுக்கு அர்ச்சுனன் பிரதி அஸ்திரம்விட்டு அறுத்துத்தள்ளி, மாயாஸ்திரத்துக்கு ஞானஸ்திரத்தை விடுத்துப் பாழ்படுத்தி, அண்டாண்ட பிர்மாண்டமெல்லாம் நிறையப் பின்னும்பல கணைமாரி பொழிந்துஞ் சினமடங்காமல், மீட்டும் அஷ்டதிக்குப் பாலகரும் அஷ்டவசுக்களுங் கொடுத்த அஸ்திரங்களோடு முள்ளம்பு நாராசமுதலியவைகளையும் அளவில்லாமல் தொடுத்துச் சங்கத் தொனிசெய்தான் இதனுல் எந்த திக்கினுமிருந்த அசுரருக்கும் பிரமைதோன்றி, ஒரு தேர்வீரனுகிய வில்லாளி அறுபதினுயிரம் பெயராகிய நம்மைக் கைகாலாட வொட்டாமற்செய்ததுமன்றிக், கண்ணுக்குத் தோன்றுமல் மறைந்து நாம் பொழிந்த அஸ்திர வருஷத்தையும் நாசப்படுத்தி, நம்மையுஞ் சித்திரவதை செய்கிறுன். வீரனென்றுல் இவனே வீரனென்று மதித்து, யாவரும் ஒன்றுகத்திரண்டு பூமியில் வந்து எதிர்நின்று, தங்கள் தங்கள் கையிலிருக்கும் வில்லில் திவ்யாஸ்திரங்களையுங் காலதண்டம்-சூலம - சக்கிரமுதலிய படைகளையும் ஏவினுர்கள். அர்ச்சுனன் அவைகளெல்லாவற்றையும் நாசமாக்கி, அவர்கள் முன்போலோடிப்போகாதிருக்கச் சரக்கூடிட்டுக் கணைமாரி பெய்தான். அக்கணைகளால் அவுணர்கள் நிலைகலங்கி கைசோர்ந்த மெய்சோர்ந்து, ஓ! ஓ! ஒருமானிடனுல் நமது வீரங்குலைந்து அவகோலப்படக் காலம் நேரிட்டது. இதென்ன காலவித்தியாசமென்று மனதுக்குள் மதித்து, யாவரும் வீராவேசங்கொண்டு திரண்டு ஒரேமுகமாகமேலிட்டு, முள்ளம்பு - முகக்கணை-முத்தலைச்சூல முதலியவற்றைச் சோனைமாரிபோலச்சொரிந்து, தாங்கள் அருமையான தவத்தாற்பெற்ற காலதண்டம் - வேல்-மந்திரவாள்-முதலியவை யெடுத்தெறிந் தார்ப்பறித்தார்கள். அர்ச்சுனன் அவுணர்விடுத்த கணைகளையும்-ஆயுதங்களையும் நாசப்படுத்தித், திவ்யாஸ்திரங்களை யெடுத்துத் தொடுத்து அவரவர்களுடைய தேரைப் பொடியாக்கிச், சாரதிகளைக்கொன்று, வில்லைமுறித்துக், கவசத்தைப் பிளந்து, யாவரையும் உதிரங் கக்கும்படி நாராசங்களால் துளைத்துவிட்டான்.

அப்பால் அவுணரெல்லாம் நாராசத்தாலுண்டாகிய உபத்திரவத்தை எவ்வளவும் நினைக்காமல், காலாக்கினிருத்திரரைப்போலச் சீறிக் கோபச்சிரிப்பு சிரித்து, பக்கங்களில் தமக்கு உதவியாக வந்திருக்கும் க்ஷேமத்தேர்களிலேறிக்கொண்டு, வில்லெடுத்து வளைத்து நாணேறிட்டு டங்கார ஓசையெழுப்பி அஷ்டதிக்குந் தத்தளிக்கக் கொக்கரித்து, அளவற்ற கணைகளை யெடுத்து வில்லில் தொடுத்து, யுகாந்தகாலத்து மேகங்கள்மழைபொழிவதுபோலச் சரவருஷம் பொழிந்து, சிங்கநாத அட்டகாசத்தோடு சுற்றிலும் வந்து வளைத்துக்கொண்டு, பின்னும் மணலைவாரி இறைத்தாற்போலப் பற்பலவிதமாகிய சரமாரி பெய்தார்கள். அர்ச்சுனனும் - காலகேயரும் - போர்செய்வதைப் பார்த்திருக்கிற தேவர்களனைவரும் பிரமைகொண்டவர்களாகி; ஓ! ஓ! அர்ச்சுனன் இருக்கிறவிடம் நமக்ககப்படவில்லையே, இவன் அவுணர்கள் விடுத்த கணைகளை எவ்வாறுவெட்டி இந்த மஹாபாதகரை வெற்றியடையப் போகிறுனென்று யேக்கங்கொண்டு, அர்ச்சுனன் இரதத்தையேபார்த்திருந்தார்கள். அர்ச்சுனனோ? அவ்வவுணருக்குச் சற்றேனும் அஞ்சாமல், அதராமல், பெதராமல், சஞ்சலப்படாமல், மாதலியைக் குலாலன் சக்கரம்போலத் தேரை நடத்த எச்சரித்துக், தன்காண்டீபத்தில் அளவற்ற திவ்யக்கணைகளை மந்திரோபதேசஞ்செய்துமாரிபோற் சொரிந்துவிட்டுப், பின்னுஞ்சிலகணைகளைப் பிரசண்டமாருதம்போற் பறக்கத் தொடுத்துவிட்டான். முன்விடுத்த கணைகள் அவுணர்கள்விடுத்த கணைகளையெல்லாம் நடுவதுபாதியிற் கண்டித்துக், தேரை யுடைத்துக், குடைகளையறுத்துக், தேரிற்கட்டியபாளிகளைக் கொன்று, சாரதியையு மதமாக்கப் பின்விடுத்த கணைகள் அவ்வவுணர்களை வளைந்துகொண்டு மகுடத்தை உடைத்து, வில்லைமுறித்துக், கவசத்தைப் பிளந்து, யாவரையுஞ் சல்லடைக் கண்கள்போலத் துளைத்துவிட்டன. மஹாபராக்கிரமசாலிகளாகிய அவுணர்கள் பின்னுமதிக உக்கிரங்கொண்டு, இனி இந்த நரனை யமலோகத்திற் கனுப்பிவிக்கிறதே நமதாண்மையென்று ஒருவர்க்கொருவர் வீராவேசங்கொண்டு சபதங்கள்கூறி, மகா உக்கிரத்தோடு சிங்கங்கள் பாய்ந்துவருதல்போல உடைவாளையுங் கேடையத்தையுங் கைக்கொண்டு, அறுபதினுயிரம்பேர்களும் ஒன்றுபடக்கூட்டிக் கொக்கரித்து வந்தார்கள்.

அருச்சுனன் பாசுபதாஸ்திரப் பிரயோகஞ் செய்தல்.

அப்படி வந்தவர்களைக்கண்ட அர்ச்சுனன் குஞ்சிரிப்புகொண்டு, அவரவாகள் கையிலிருக்கிற கேடையங்களையுங் கத்திகளையும் பொடிப்பொடியாகப் போகும்படி அர்த்தசந்திர பாணங்களை யேவி, அவர்கள் நிற்பதற்குஞ் சக்தியற்றவராகக்கணைமாரிகளையும்பெய்தான். இப்படிக்குச் சற்றுஞ்சளையாமற் போரிடுகின்றதை அவுணர்கண்டு மனம்பொங்கிக் கைகால்களையுதறிக்கொண்டு, இடையிலிறுக்கிக்கட்டியிருக்கிற கச்சையில் வரிந்துகட்டியிருக்கிற கதாயுதத்தைக் கரத்திலேந்திக், கரகரவென்று சுழற்றி அர்ச்சுனன்மீ தெறிந்தார்ப்பரித்து, மறுபடியும் இரதத்திலேறிக் கவசம் பூண்டு, வில்லையெடுத்து வளைத்து நாணேற்றி டங்

கார ஓசையெழுப்பி, அளவற்ற கணைகளையுந் தூவினார்கள் அர்ச்சுனன் தன்மேல்வருங் கதைகளையும்-கணைகளையும் - சரவருஷத்தால் தடுத்துப், பின்னும் அளவற்ற கணைகளை மாரிபோற் றாவினான். அதனால் அவுணர் நிலைகலங்கிரதத்தில் நிற்பதற்குஞ் சக்தியற்றவராகியும், வீராவேசங்கொண்டு கொக்கரித்து மறுபடியு மத்தேரிலிருந்தே வில்லைவளைத்துப்பாணங்களைத் தொடுத்தனர். உடனே அர்ச்சுனன் மறுபாணங்களா லவ்வவுணர் ஏறிய இரதங்களைப் பொடிப்பொடி யாக்கிச், சின்னாபின்னமாக அவர்களையும்நோகச்செய்தான். இப்படி அவுணர்களும் அர்ச்சுனனுங் கணப்பொழுதேனு மோயாமற் போர்புரிந்தனர். இவ்விருவரும் அமர்புரிந்தனரென்று சொல்வதற்கு மாத்திரம் நாவெழுமே யன்றி, இவ்விருதிறத்தாரென்று சொல்வதற்கு யாவர்க்கும் நாவெழாது. இவ்விதமாக இருதிறவருங் காடு-மலை-வனம்-வனாந்தரம்-கடல்-அந்தரலோகம் - அண்டம் - என்று சொல்லும்படியான இவையனைத்தினுஞ் சுத்திச்சுத்திப் போர்புரிந்தனர். இவ்வாறு போர்புரிகிறபோது அர்ச்சுனன் கைமிஞ்சி, அவுணர்களையெல்லாந் தன் கணைகளால் ஒன்றுந் தோன்றவொட்டாமற் பிரமிக்கச்செய்து, இனி இவர்களை உயிரோடுவைக்கலாகாதென்றுகருதித்தக்ஷணம் அம்புப்புட்டிலில் கரத்தைவைத்துப், பாசுபதாஸ்திரத்தை எடுத்து வில்லில் தொடுத்துத், தூபதீபபூசை நைவேத்திய மாதியை மனதாற்செய்து தொழுது விட்டனன்.

கேளும் மகாராஜனே! அர்ச்சுனன் வில்லிலிருந்து வெளிப்பட்ட பாசுபதாஸ்திரமானது மூன்றுபிரிவான தலையை யுடையது. ஆறு தோளை யுடையது. தலைகள் தோறும் விளங்குங்கண்களில் வடவாக்கினியு நடுங்கிப் பதுங்கத் தீப்பொறி சிந்துகின்றது. விஷாக்கினிக் கொப்பானது முற்காலத்தில் இந்திரன் மலைகளின் சிறகரிய எடுத்த வச்சிராயுதத்துக் கொப்பாகிய தென்று உவமை கூறுவதல்லாமல், அக்கணைக்குவமையான தொன்றுமில்லை. அந்தப் பரமன் வாளியானது அந்தரமெல்லாம் பரவி, அநேக திவ்யாஸ்திரங்களை யுண்டாக்கி, அவுணர்களை வளைத்துக்கொண்டு, அவர்கள் மகரகுண்டல ஆரகேயூர கடககங்கணங்களையும் - மகுடத்தையும் - கவசத்தையும் - பொடிப்பொடியாக்கிக்; கைவேறு - கால்வேறு, தொடைவேறு-தோள்வேறாகத் துண்டித்து, மஹாமேருவின் சிகரம் போன்றிருக்கின்ற சிரங்களையறுத்துப் பூமியிற்றள்ளி, அவுணருயிரைத் தென்றிசைத் தலைவனாகிய யமனிடத்திற் செலுத்தி, வானநதியில் ஸ்நானஞ்செய்து முன்போல் அர்ச்சுனன் அம்புப்புட்டிலில் வந்திருந்தது. அவுணர்கள் நாசமாகவே அவர்கள் வாசஞ்செய்த பொன்னகரமும் மாயமாகிக், தன்னைக் கொடுத்தவனாகிய கமலாசனக் கடவுளிடத்துச் சென்றொடுங்கியது. அவுணர்கள் சிரம் பூமியில் விழுந்த மாத்திரத்தில் அவர்களுடைய உடலிலிருந்து வெளிப்படும் உதிரமானது ஓர் பெருங்கடல்போற் பெருகிற்று. காளியும் - கூளியுங்-களித்தன ஓரிகளும்-நாய்களும்-அவுணர்களின் சதையைத் தின்று சலித்தன சூரியனுஞ் சுரர்களுங்கண்டு மகிழ்ந்து பலவாறு புகழ்ந்தனர்.

அர்ச்சுனனை இலேசாக மதித்திருந்த மாதலி குதிரைக்கயிற்றைத் தேரிற்கட்டி எழுந்துநின்று, இரண்டு கரங்களையுஞ் சிரமேற் குவித்து அர்ச்சுனனைப் பார்த்து, ஓ விஜயப்பிரதாபா! ஓ தனஞ்சயா! ஓ ஆபத்பாந்தவா! ஓ திருமால் மைத்துனா! ஓ தேவேந்திரன் புத்திரா! ஓ மஹாராஜனே! முற்காலத்தில் இராவணனைச் சம்மாரஞ் செய்யவந்த தசரதராமனுக்குச் சாரத்தியஞ்செய்யத் தேவராஜன் எனக்குக் கட்டளையிட்டார். தைவீகத் தன்மையையுடைய அந்த ராமமூர்த்திக்குச் சாரத்தியஞ் செய்ததே என்மனதுக்குக் கனவருத்தமா யிருந்தது. தற்காலத்திலு மவ்விந்திரன் உமக்குச் சாரத்தியஞ் செய்யக் கட்டளையிட்டனர், அப்படி யிட்டபோது என்மனம் உம்மையலட்சியமாக எண்ணியிருந்தது. இப்போது வந்தெதிர்த்த நிவாதகவசரையுங் காலகேயரையு மதமாக்கிய உமது பராக்கிரமத்தைக் கண்டமாத்திரத்தில் என்னுள்ளந் தனக்குத்தானே பொங்கி உண்மையை வெளியிட்டது. ஓ ஸ்ரீராமமூர்த்தியினாலு மதிக்கப்படும் விஜயப்பிரதாபா! என் பிழையைப் பொறுத்துக் காத்தருள வேண்டுமென்று பலவாறு புகழ்ந்து பணிந்தான். தேவர்கள் ஓவென்று கெக்கலிகொட்டி, நமது துயரம் இன்று நீங்கிற்று. நமக்கினிமேற் பயமில்லை, விஜயனென்கிற பெயர் இந்த மஹாநுபாவனுக்குத் தகுந்தகுமென்று புகழ்ந்து பல ஆசிகள் கூறிக், தெய்வ கற்பகப்பூமாரி சொரிந்தார்கள். அப்பால் அர்ச்சுனன் அவ்வவுணர்மேற் கொண்டிருந்த கோபந்தணிந்து, காண்டீபத்தில் ஏற்பட்டிருந்த நாணைத் தளர்த்திச் சிறிதுநேரம் இளைப்பாறி இருந்தான்.

காலகேயர்வதைச் சருக்கம் - முற்றிற்று.

ஐந்தாவது

அருச்சுனன் தேவேந்திரபோகச் சருக்கம்.

கண்ணன்துதி.

பற்றறுப்பவர் பற்றியபற்றினை பதத்தின், குற்றமற்றவர் கூடியவின்பத்தைக் குறித்துக்
கற்றகல்வியாற் காண்பதிற்காணொணாக் கருத்தை, முற்றுமாயனை யென்கொலோயாமொழி வதுவே.

ஓ ஜெனமேஜெயமஹாராஜனே! இப்பால் சித்திரசேனன் தேரைவிட்டிறங்கிச், சொற்கலோகத்துச் சென்று இந்திரனைக்கண்டு வணங்கி, அர்ச்சுனனும் - நிவாதகவசரும் - போர் புரிந்த திறத்தையும்,

பின்பு அந்தரலோகம் வந்ததும், வந்தவிடத்திற் காலகேயர் நகரந்தோன்றி அவர்களையெதிர்த் தமர்புரிந்ததும், முடிவில் அந்நிவாத கவசரையும் - காலகேயரையும்-மூன்றுகோடி அறுபதினாயிரமென்னுங் கணக்கில் ஒருவனையேனும் ஒளித்துங்கூட யிராமல் கொன்றதையு மாதியோடந்தமாக எடுத்துக் கூறினன். அதகேட்ட இந்தி. ன் மகிழ்வாகிய கடலிலாழ்ந்து தன்னை மறந்தவனாகிப், பின்புதெளிந்து, முப்பத்துமுக்கோடி தேவர்கள்-நாற்பத் தெண்ணாயிர முனிவர்கள்-அஷ்டவசுக்கள் - திக்குக்காவலர்கள்-உருத்திர ணங்கள்-மற்றுமுள்ள அரம்பாஸ்திரீகள் யாவரும் வெளிப்பட்டு, அந்தரலோகத்தைக்கடந்து, அர்ச்சுனன் வருகிற வழியைப்பார்த் தெதிர்கொண்டு வந்தான். அர்ச்சுனன் மாதலியை எச்சரித்து இரதத்தைச் சொற்கலோகத்துக்குச் செலுத்தக் கட்டளையிட்ட, மாதலி தேரையந்தரத்திலெழுப்பி நடத்த, இந்திரனும் நெருங்கினன் அர்ச்சுனன் தேரைநிறுத்தி இந்திரனைவணங்க, இந்திரன் புத்திரனை மார்புறத்தழுவிப் பல ஆசிகள் கூறிப் புகழ்ந்துரைத்துத், தனதிரத்தை அவனிரதத்தோடு நெருங்கவிட்டுப், பின்பு இருவருஞ் சொற்கலோகத்தை நோக்கி நடந்தார்கள். இவ்வாறு சொற்காதிபதியாகிய இந்திரனும் மண்டலாதிபதியாகிய அர்ச்சுனனும் நெருங்கிச்செல்கிறபோது, அந்தரதுந்துமி திந்திந்திமியென-சங்கொலி முழவொலி பம் பம் பம்மென-இடக்கை-உடுக்கை-உறுமி-தம்பட்டம்-பம்பைபேரிகை-மத்தளம்-முரசு முதலாகிய வாத்தியங்களை முழக்கி, யாவருமொன்றாகத் திரண்டு மங்கல ஓசையோடுசென்று சொற்கலோகத்தருகில் வந்தார்கள். இந்திரன் தூதர்களை யழைத்துச் சொல்லுகிறான் : ஓ தூதர்களே ! என் பட்டத்துக்குரிய ஐராவதத்தை அலங்கரித்துக்கொண்டு வரும்படி பாகனுக்குச்சொல்லுங்களென்றுகூற, தூதுவர்கள் போய்ப் பாகனுக்கறிவிக்க, அப்பாகன் ஐராவத்தை அலங்கரித்துக்கொண்டு விரைவில் வந்தான். இந்திரன் தேவர்களையுமற்ற முனிவர் முதலானவர்களையு நோக்கிச் சொல்லுகிறான் :

ஓ அந்தரலோக வாசிகளே ! எப்போதும் நமக்கிடையூறு விளைத்துத் துன்பத்தைச் செய்துவந்த நிவாதகவசர்களையும், முப்புராதிகள்போலக் கொடுமை செய்து வந்த மஹாபராக்கிரமசாலிகளாகிய காலகேயரையும் நாசப்படுத்தி, நமக்குப் பெருவாழ்வளித்த இந்த மஹாநு பாவனைத் திருவோலக்கத்தோடு நமதரண்மனைக் கழைத்துப்போகவேண்டும். வெள்ளை யானையும் வந்திருக்கின்றது. அந்த வெள்ளையானையின்பேரி லவனை யேற்றித் திருவோலக்கஞ்செய்ய எனக்கு விருப்பமாக இருக்கின்றது. ஆதலால் உங்கள் கருத்தென்னவென்றுவினவ, தேவர்கள் மகிழ்ந்து, ஓ மஹாராஜனே ! தேவர்க்கரசனாகிய உம்மை எக்காலத்தும் புறங்கண்டுவந்த அசுரரை வெற்றியடைந்தமையால், இந்த மஹாநுபாவனைச் சொற்காதிபதியென்றே கூறவேண்டும். அப்படி கூறுவதல்லாமலுஞ் சொற்காதிபதியாகிய உமக்குரியவையெல்லாம் இந்த மகாநுபாவனுக் குரியன. ஆகையால் தங்கள் கருத்தின்படியே எங்களுக்குஞ் சம்மதிதானென்றுகூற, இந்திரன் தன்னருகிலிருக்கிற அர்ச்சுனனை அழைத்து அயிராவதத்தில் வைத்துத், தான் சுவேத அஸ்வத்திலேறி யருகில் நின்றான். அர்ச்சுனன் அயிராவதத்தி லேறினமாத்திரத்தில், சப்தரிஷிகளு மிருமருங்குநெருங்கி வேதமந்திரங்களைக் கூறிப் பல ஆசிகள் வழங்கினர். தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் அருகிலிருந்து வாழ்த்தினர் சூரியன-சந்திரன்-செவ்வாய்-புதன்-வெள்ளி-சனி-ராகு-கேதுவாகிய நவக்கிரகங்களுா், உருத்திரகணங்களும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும், அஷ்டவசுக்களும், கின்னரர்-கிம்புருடர்-கருடர்-காந்தருவர்-சித்தர்-வித்தியாதரர்-தேவமாதர் -அப்சரஸ்திரீகள்-முதலாகிய அந்தரலோக வாசிகளெல்லாம் வந்து சூழ்ந்து, அக்ஷதைகளையுங் கற்பகப்பூவையுஞ் சொரிந்து, ஜெயாவிஜைபவாவென்று பல ஆசிகள் கூறினர். மேனகையும் ஊர்வசியு நடிக்க, திலோர்த்தமையும் அரம்பையும் பாட, சகல வாத்தியங்களும் அண்டங்களதிரமுழங்க, யாவருமனக்களிப்புடன் அர்ச்சுனனைச் சூழ்ந்துவர, பாகனை எச்சரிக்க, பாகன் ஐராவதத்தை எச்சரித்தனன். புண்ணியசொரூபமாகிய ஐராவதம் பரமனைக் கண்ணாரக்கண்டு அப்பரமன் திருவுருவத்தோடு தன்னுருவங்கலக்க ஆலிங்கனஞ் செய்துகொண்ட அர்ச்சுனனைச் சுமக்கப்பட்டதே நமக்குமேலான தவப்பயனென்று கருதி, இரண்டு கண்களிலும் ஆனந்தநீர் ததும்ப அதிக மகிழ்வோடு அர்ச்சுனனை யசையாமலிருக்கச்சுமந்து, பூரணகர்ப்பவதிநடப்பதுபோல் நடந்து, சொற்கலோக வீதிகளிற் பிரவேசித்துத் திருவோலக்கம் வந்தது.

அருச்சுனனை அலக்ஷியஞ்செய்த யக்ஷன் பின்பு அடங்கித் துதிசெய்தல்.

கேளும் மஹாராஜனே ! வெள்ளை யானையின் பேரில் திருவோலக்கம் வரும் அர்ச்சுனனைக் கண்ட தேவரும் - தேவமாதரும்-பரமாநந்தத்தை யடைந்தவராகிப் பலவாறு புகழ்ந்துவந்தார்களென்று சொல்வதேயல்லாமல், அவர்கள் புகழ்ந்துரைத்ததை இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலுஞ் சொல்லத் தக்கதல்ல. அவ்வாறு திருவோலக்கம் வருகிற தருணத்திற் கல்வி கேள்வியிலான்று மிகவுஞ் சிறப்புற்ற யக்ஷரிலொருவன் இந்திரனை நெருங்கிவணங்கிச் சொல்லுகிறான் : ஓ தேவராஜனே! உலகங்களுக்கெல்லாந் தாழ்ந்த மண்ணுலகாதிபதியாகிய ஒரு நரனுக்கு இவ்வளவு சிறப்புச்செய்தல் தகுதியாவென்று வினவினன். அதைக்கேட்ட இந்திரன் கடுஞ்சினமடைந்து,

இரண்டுகண்களிலுங் கோபத்தீச்சொலிக்க உருட்டி
விழித்துச் சொல்லுகிறான் ஓ யக்ஷகா ! உன்வுருவத்
தைநோக்கினால்மாத்திரந் தேவரி லொருவ னென்
றெண்ணத்தக்கதாக யிருக்கின்றதேயன்றி, உன்புத்
தியை நோக்கினால் தாழ்ந்த உலகத்திலிருக்கிற மானி
டருக்குண்டாகிய புத்தியைவிடத்தாழ்ந்ததாக இருக்
கின்றது ஏனென்றால் நரனானவன் என்கண்போ
லிருக்கிற காண்டாவனத்தைத்தகிப்பனோ? அதற்காக
நான்போர்செய்தால் என்னையும் என்சேனைகளையும்
புறங்கண்டதுமன்றி, என்னாலேவப்பட்ட மேகங்கள்
பொழிந்தநீரை அக்காண்டாவனத்தில் விழவொட்டா
மற் சரக்கூடிட்டு மேகங்களைப் பங்கப்படுத்துவனோ?
கைலாசபதியாகிய சாம்பவமூர்த்தியோடு விற்போர்
மாத்திரமல்ல, கட்டிப்புரண் டுருளும்படியாகிய மற்
போரும் புரிவனோ? ஒருவராலுங் காணக்கூடாதபரம
னைக்கண்டு, பரமன் திருமேனியுந் தன்மேனியும் பொ
ருந்த ஆலிங்கனஞ்செய்வனோ? பெறுதற்கரிய பாசுப
தாஸ்திரமாத்திரமல்ல, சகலதேவாஸ்திரமும் பெறு
வனோ? அக்கினி பகவானிடத்தில் அழியாததேரும்-
அறுதநாணியும், ஒடியாதவில்லும்பெறுவனோ? சொர்
க்கலோகத்தில் வந்து என்னாற் சுமக்கப்படாதிருந்த பிர
மன்கொடுத்த மகுடத்தைத் தாங்குவனோ? என்னா
லும் மூவராலும்வெல்லக்கூடாதமுக்கோடி அவுணர்க
ளாகிய நிவாதகவசரையும், அறுபதினாயிரம் பெயரா
கியகாலகேயரையும் எதிர்த்து, அவர்கள்பெற்ற திவ்ய
வரங்களையும் நாசமாக்கி, யாவரையுந் தென்றிசைக்
கடவுளாகிய யமனிடத் தொப்புவித்து, எனக்கும்
அந்தரலோக வாசிகளாகிய யாவர்க்கும் பெருவாழ்
வளிப்பனோ? இவற்றையெல்லாங் கேட்டுச், சிலவற்
றைக்கண்ணாரக்கண்டும், அஞ்சா நெஞ்சுபடைத்து
என்னருகில்வந்து, சகலசுலைகளையுங் கற்றுணர்ந்த
நாவால் இந்த மஹாநுபாவனை நரனென்று குறித்து
யிகழ்ந்தனை இனி இந்தப்புருஷோத்தமனைக்குறித்து
ஒன்றும் வசனிக்காமலிருப்பதே உனக் கழகென்று
கூறிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

ஓ யக்ஷா ! பூமிபாரம் நீக்க ஆதிகடவுளாகியதிரு
மால் அவதாரஞ்செய்ததுபோல், நமதுதுயரமும்அப்
பூமிபாரமும் நீங்க அவனே மற்றொன்றான இந்தத்தி
ருவுருவங் கொண்டானென்று கூற, இந்திரன் வழங்
கிய சொற்களைக்கேட்ட யக்ஷன் அர்ச்சுனன் பராக்கி
ரமத்திற்குந் தபோபலத்திற்கு மகிழ்ந்தவனாகி, ஒன்
றுஞ் சொல்லாமல்மவுனமாக இருந்துவிட்டான். இந்
திரன் தன்புத்திரனாகிய அர்ச்சுனனைச்சிறப்பான திரு
வோலக்கத்தோடு வீதியைவலம்வரக் கொண்டுவந்து,
தன் னரண்மனைக்கழைத்துச் சென்று, கொலுமண்
டபத்திலிருக்குங் கோடிசூரியப் பிரகாரமாகிய சிங்கா
தனத்திலிருத்திச் சிறப்புசெய்தான். மற்ற முனிவருந்
தேவர்களும் இந்திரனுக்குரிய மரியாதைகளை அர்ச்சு
னனுக்குச் செய்தனர். அர்ச்சுனன் தனக்குச் சிறப்பு
செய்தவருக்கெல்லாந் தானுஞ்சிறப்புசெய்து மகிழ்ச்சி
யோடிருந்தனன். கேளும்மஹாராஜனே! அந்தரலோ
கவாசிகளாகிய தேவர்க ளனைவருந் தாங்களரிதிற்
பெற்ற திவ்பாஸ்திரங்களை அர்ச்சுனனுக்குக் கொடுத்
தும், திவ்யமந்திரங்களை உபதேசித்தும் மகிழ்வுற்றார்
கள் இந்திரன்சித்திரசேனனால் நிவாதகவசர்போரை
யுங் காலகேயர் போரையுங் கேட்டதுமன்றித், தன்
சாரதியாகியமாதலியாலும் அர்ச்சுனன்செய்தபோர்த்
திறத்தைக்கேட்டு, மிகவுமகிழ்ந்து தன்னை மறந்தவ
னாகி, அர்ச்சுனனைப் பலவாறு புகழ்ந்து தன் மனதிற்
குள்தானே மதித்துக்கொண்டான். தேவசிங்காதனத்
திலிருந்த அர்ச்சுனன் எழுந்து தன்பிதாவாகிய இந்தி
ரனை வணங்கிச் சொல்லுகிறான். ஓ ஐயா! தமியேன்
என்சகோதரர்களைப்பிரிந்து நெடுநாளாயிற்று. நான்
தவத்துக்குவந்ததும், நாடிவந்த பொருளை யடைந்த
தும், என் சகோதரர்களுக்குத்தெரியாது. என் தமயர்
தம்பிமார்கள் என் பேரிற் கருத்தைச் செலுத்திவருத்
தமுற் றிருப்பார்கள். அவர்கள் வருத்தம் நீங்கவும்-
என்மனமகிழ்வுறவும் விடைகொடுத்தால், யான் என்
சகோதரர்களி னிடத்துக்குச் செல்லுகிறேனென்று
கூறி விடைகேட்டனன்.

அருச்சுனன்பரதசாத்திரம் பயிறல்.

இந்திரன் இப்படி வணங்கிக்கூறி விடைகேட்ட
விஜயப்பேர்படைத்த மைந்தனை முகத்தோடு முகம்
வைத்து ஒத்திக்கொண்டு, தனது மார்புறத் தழுவிச்
சொல்லுகிறான், அப்பா புத்திரசிகாமணி! எனக்குச்
செய்த உபகாரத்துக்கு உன்னை இந்த உலகத்தை
விட்டுப் போகவொட்டக்கூடாது, நீ தமயன்தம்பிமார்
களைப்பார்க்க ஆவல்கொண்டிருக்கின்றமையால், அந்த
ஆசையையுங் கெடுக்கொணாது. இதுவரைக்கும் எங்க
ளுக்கு உபகாரஞ்செய்தனை. இனி உனக்கு நடக்கவே
ண்டியதற்கு ஒருபொருள் வேண்டி யிருக்கின்றது.
அது ஒருநா ளிரண்டுநாளிற் சம்பாதிக்கப்பட்டதல்ல.
சிலநாளிருந்து சம்பாதித்துக்கொள்ளவேண்டும். அகு
தென்னெனில் துரோணாசாரியார் கட்டளைப்படி பன்
னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து ஒருவருஷம் அக்
ஞாதவாசமுஞ் செய்யவேண்டி யிருக்கின்றது. அக்
ஞாதவாசத்துக்கு நீங்கள் ஐவரும் வேறுவேறு ரூபந்
தரிக்க வேண்டியிருக்கின்றது அந்தரூபத்தில்உனக்கு
ஊர்வசிபாற் பேடிரூபம் வந்திருக்கின்றதே, அந்த
உருவத்தை நீயடையப்போகிறாய். அதற்குத் தகுந்த
செய்கை இருக்கவேண்டு மல்லவா ? அந்த ரூபத்துக்
குத்தகுந்தசெய்கை பரதநூல் அந்நூலைக்கற்று அத
னைப்பிறருக்குக் கற்பிக்கவேண்டும். ஆதலால் உனக்
குப் பேடிரூபம்வரச் சாபமிட்டு, நினைத்தபோது வர
வும் நீங்கவும் வரங்கொடுத்த ஊர்வசியு மதிக்கும்படி
யாக; நீ சிலநாளிருந்து என்னிடத்தி லிருக்கிற நார
தர் தும்புருவராலே அந்தப்பரதசாஸ்திரத்தைக்கற்க

வேண்டும், உன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமா கச்சொல்ல உன் தமயர் தம்பியரிடத்துக்கு உரோம சன்மரை அனுப்பிவிக்கிறேனென்று கூறித், தூது வரால் நாரதர் தும்புருவை அழைப்பித்து, அர்ச்சு னனுக்குப்பாதசாஸ்திரத்தைத் தெளிவுறக்கற்பியுங்க ளென்றுகட்டளையிட்டு, காட்டிற்சஞ்சரித்துத் துன்ப முற்ற அர்ச்சுனன்மகிழ்வுற ஐயாயிரம்போகமாதரைக் கொடுத்து, ஒருதிவ்ய அரண்மனையுங் கொடுத்தான். அர்ச்சுனன் இந்திரனளித்த போகமாதரைத் தடுக் காம லேற்றுக்கொண்டவனுகிச், கருத்தில் அன்னை கள்போல் மதித்து; மேனுக்கு லீலாவினோதையைப் போல் அபிநயித்து; முனிவர் கற்பிக்கும் பாதநூலிற் கருத்தைச்செலுத்தி, இரவும்பகலும் அந்த நூலின் கருத்தையும் அதற்குத் தகுந்த நாட்டியத்தையுங் கற்றுவந்தான். இந்திரன் தன்சபையிலிருக்கிற உரோ மசன்மரை அழைத்துச் சொல்லுகின்றான்.

ஓ முனிநாதா! ஐம்பூதமிருந்து உடலைப் பயனு றச்செய்வதுபோல், ஐவரும் ஒன்றாயிருந்து பயனுற்றி ருந்தார்கள். திரிதராஷ்டிரன் புத்திரனாகிய துரியோ தனனால், ஐவரும் நாடு நகரத்தைவிட்டுப் பாரியாகி வனவாசஞ்செய்ய வந்தார்கள். வந்தவிடத்தில் வேத வியாசர்வந்து ஐவரைக் கண்டு, அவர்கள்கூறிய துன்ப மொழியைக்கேட்டுச் சத்துருசங்காரஞ் செய்ய ஐவ ருள் அர்ச்சுனனைத் தவத்துக்கனுப்பினர், அர்ச்சுனன் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம்பெற்று, நமது துன் பமெல்லாம் நீங்கச்சொர்க்கலோகம் வந்து, நிவாதகவச ரையும்-காலகேயரையும்-அதமாக்கி, எனக்குச்சொற் காதி பத்தியத்தைக் கொடுத்தான். வருத்தமுற்ற அர்ச்சுனன் சிலநாளிங்கிருந்து சுகத்தை அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. ஆதலால் நீர் மண்ணுலகத் திற்சென்று, வனத்திலிருக்குந் தருமராஜன்முதலான நால்வரையுங்கண்டு, அர்ச்சுனன் தவத்துக்குச் சென் றது முதல் நிவாதகவச காலகேயரை யதமாக்கித் தேவசிங்காதனத்தி லிருக்கிற பரியந்தம் நடந்தசரித் திரத்தை விபரமாக எடுத்தோதி, அவர்களுடனிருந் சிலநாளிரும். நான் அர்ச்சுனனை அழைத்துவந்து தரு மராஜனிடத்து ஒப்பிவிக்கிறேன். நீர் மண்ணுலகத் திற்குச் செல்லுமென்றுகூற, உரோமசன்மர் மனம கிழ்ந்து விடைபெற்று, அர்ச்சுனராஜனிடத்துக்கு வந்து, அவன்செய்த வந்தனை வழிப்பாட்டையேற் றுப் பல ஆசிகள்கூறி விடைபெற்று; மண்ணுலகத் திற்கு வருவதானார். இங்கேதருமராஜன் முதலான நால்வரும், ஒப்பில்லாத பாஞ்சாலியுமிருக்கின்ற இயல் பைச் சொல்லுகிறேன் கேளும்.

அருச்சுனன் தேவேந்திரபோகச் சருக்கம் - முற்றிற்று.

ஆறாவது,

உரோமசமுனிச் சருக்கம்.

கண்ணன்துதி.

சீதரனை வெண்சங்கந் திகிரிகரந் தரித்தானைப்
பூதரனைப் பூதகியைப் பொருந்தியுயிர் மாற்றினனை
வேதரனை வேதாந்த வேதியனை வெற்பருண்மின்
சோதரனை யாதரவாற் சொற்றவரே கற்றவரே.

ஓ மகாராஜனே! அர்ச்சுனன் இந்திரலோகத்தி லிருந்து பரதசாஸ்திரங் கற்றுக்கொண்டு மகிழ்வுற்றி ருக்கிறான். இங்கே தருமராஜன் முதலான நால்வரும் மாதுசிரோமணியாகிய பாஞ்சாலியும், அர்ச்சுனன் தவவேடங்கொண்டு தங்களைவிட்டுப் பிரிந்தநாள்மு தல் மனம்வேறுபட்டு; நம்மைவிட்டுத் தவத்துக்குச் சென்ற அர்ச்சுனன்கொடிய வெப்பமாற்காட்டிற் சென் றானோ? அல்லது வனம் வனாந்திரங்களைக் கடந்து வெள்ளியங்கிரிக்கே சென்றானோ? அங்கு மெய்-வாய் கண்-மூக்கு-செவி-இவ்வழியாகிய ஐம்புலனையுமடக்கி யரியதவஞ் செய்கிறானோ? ஒருவேளை பஞ்சாக்கினிமத் தியில் நின்று சாம்பவமூர்த்தியின் திருவடிகளைத்தியா னிக்கின்றானோ? சொற்காதி புவனத்துள்ளோர்க்கும் அருமையான சாம்பவமூர்த்தி அவனுக்கு அன்பு கூர்ந் தாண்டனரோ? என்னமோ? யாதொன்றுந் தெரியவில்லையே என்று யெண்ணி ஏக்கங்கொண்டு, அன்றுமுதற் பண்டுபலாதிகளின்மேற் கருத்தைச்செ லுத்தாமல், தூக்கமின்றி, அர்ச்சுனா! அர்ச்சுனா! வென்று புலம்பிக்கொண் டிருந்தார்கள் அத்தருணத் திற்காவிகாம்பர தண்டு கமண்டலதாரியாகிய உரோம சன்மர் மண்ணுலகத்தைநோக்கி, ஐவரிருக்கிற காமிய வன மடைந்தார். நெடுந்தூரத்தில் வரும் உரோம சன்மரை ஐவர்கண்டு திடுக்கென்றெழுந்து, யாரோ ஒரு மஹாத்மாவருகிறார். அவரைக்கண்டு தரிசித்தால் நமக்குண்டாகிய துன்பத்துக்கு ஒருவழியுண்டாகும். என்று கருதினவர்களாய் யாவரும் எதிர் சென்று, உரோமசன்மருக்குச் சாஷ்டாங்கமாகத் தெண்ட னிட்டு அழைத்துவந்து. தருப்பாசனமளித்து இருக் கச்சொல்லி, சோடசோபசாரஞ்செய் துவணங்கிஎழுந் தெதிர்நின்று, ஓ மாதவா! ஓ தவசிரேஷ்ட சிலாக்

கிய மகாநுபாவா! நாங்கள்செய்த தவப்பயனோ? இந்தவனத்திற்குரிய மகத்துவமோ? மற்றயாதுகாரணத்தினாலோ தற்செயலாய்த் தேவரீர்வந்து அடியேங்கட்கு அடிகளுடைய தரிசனங் கடாக்ஷித்தது. ஓ சுவாமி! நாங்கள் நாடுநகரத்தை இழந்ததுமன்றி உயிர்க்குயிராகிய எங்கள் சகோதரனி லொருவனை யிழந்து கனவருத்தமுற் றிருக்கிற தருணத்தில்வாடிய பயிருக்கு மழையுண்டானதுபோலத் தரிசனங் கொடுத்தருளினீர் ஓ மகாத்மாவே! நாங்கள்செய்தபாக்கியமே பாக்கியமென்று பலவாறு துதித்து நின்றனர். அதற்கு உரோமசன்மர் மனமகிழ்ந்து, ஐவரையும் வருத்தப்பட வேண்டாமென்று ஆதரித்து, நல்லவர்களுக்கு எப்போதும் நன்மையுண்டாகுமென்று வாழ்த்திப் பல ஆசிகள்கூறித், தருமன் முதலான நால்வரையு மிருக்கும்படி கட்டளையிட்டு, மாதுசிரோமணியைப் பார்த்து, ஓ அம்மணி! நீயுமிரு தாயேயென்று இனியவார்த்தைசொல்லித் தருமராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார்:

ஓ மஹா மண்டலேஸ்பரனை தருமநந்தனை! நான் இந்திரலோகத்தி லிருக்கிறவன். என்பேர்உரோமசன்மனென்று சொல்லுவார்கள். உங்களிடத்துக்கு என்னைச் சொற்காதிபதியாகிய இந்திரன் அனுப்பினன். நான்வந்ததற்குக் காரணமென்னெனில், உன் சகோதரனுடைய சரித்திரத்தைச் சொல்லவந்தேன். அதனைக் கேளுங்களென்றுகூறிச் சொல்லுகிறார் ஓ மஹானுபாவா! உன் சகோதரனாகிய அர்ச்சுனன் வியாச பகவானிடத்தில் மந்திரோபதேசம் பெற்றுத் தவவேடங்கொண்டு உங்களைவிட்டுப் பிரிந்த பின்பு, காடு-மலை-வனம் - வனாந்தரங்களைக் கடந்து வெள்ளியங்கிரியிற் சென்று, அவ்வெள்ளியங்கிரியின் தென்பக்கத்தில் தவநிலையொன் றியற்றிப். பஞ்சாக்கினிமத்தியில் நின்று, பரமனைக்குறித்துச் சாகுமுதலியவையும் நீக்கி ஐந்துவருஷகாலம் அருமையான தவஞ்செய்தான். இந்திரன் அவன் தவநிலையறிய மேனகை அரம்பை-ஊர்வசி - திலோத்தமை - என்கிற நான்கு மாதரை யனுப்பிச் சோதித்துப், பின்பு தானேபிராமணரூபமாகவந்து சித்தங்கலங்கச் சிலவசனம்வசனித்தும், அர்ச்சுனன் கலங்காச் சிந்தையை வகித்திருப்பதைக்கண்டு வாழ்த்திப் போயினன். பின்பு நாரதர் அர்ச்சுனன் தவஞ்செய்தலை துரியோதன னுக்குத் தெரிவிக்க, அத்துரியோதனன் அர்ச்சுனனைக்கொல்ல மூகனென்னு மசுரனைப் பன்றியாகச் செல்லென்று கூறினன். மூகனென்னும் அசுரன்பன்றியாகி அர்ச்சுனன் தவநிலைக்கு வருகிற தருணத்தில், பாதரக்ஷகராகிய பரமன் அர்ச்சுனனைக் காப்பாற்ற அன்புபெருகி வேடவுருபந்தரித்து, அப்பன்றியைத்தேடி அதையெய்தார். அர்ச்சுனனுஞ் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தி, அப்பன்றியால் தனது தவத்துக்கழிவுவாராமலிருக்கத் தன்வில்லைவளைத்து ஒருபாணம் எய்தான். இந்த இரண்டு பாணமும்பட்டு அம்மூகாசுரனென்னும் பன்றியிறந்தது. வேடுவனாகிய பரமன் அர்ச்சுனனோடு துர்ப்பாஷைகூற, அர்ச்சுனன் சிவத்தைத்தியானித்து வேடுவனோடு தவநிலையி லிருந்தபடியே போர்புரிந்து, பரமசிவமாகிய வேடுவனணிந்த மயிற்பீலி முடியைத் தள்ளினன். அதற்குப் பரமன் மகிழ்ந்து; கோபமுற்றவரைப்போலச் சிலகணைகளைத் தொடுத்தார். அர்ச்சுனன் அக்கணைகளைக்கண்டதுண்டமாகக் கண்டித்துச் சரவருஷம் பொழிந்தான். அதுகண்ட பரமேஸ்வரி திடுக்கிட்டும், அர்ச்சுனன் கரவேக சரவேகத்துக்கு மகிழ்ந்தனள். தேவர்கள் களிப்புற்றனர். வேடுவனாகிய ஐயனு மகிழ்ந்து, அவன் ஓயாமல்விடவருங் கணைகளை நோக்கினர். அவைகளெல்லாம் அவர் புறத்தில் விழுந்தன. பின்புவேடர்பிரான் அர்ச்சுனன் சித்தவிர்த்தியின் வலுவை அறியச்சிலகணைகள் விட்டு அவன்மார்டைத் துளைத்தார். அதனால் அர்ச்சுனன் மனந்தளர்ந்து, தன் இருதயத்திருத்திய பரமசிவனிடத்து முறையமிட்டு, மடித்தகாலைப் பூமியில் வைத்துக் கடவுளைக்குறித்துப் புலம்பி ஒரு மாத்தடியில் நின்றான். பார்வதிதேவி பரமசிவனுக்குக் கிருபை வரும்படி வேண்ட. பரமன் கிருபைகூர்ந்து முன்போல் அர்ச்சுனன் பலமடையக் கடாக்ஷித்தார். உடனே அர்ச்சுனன் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தி மீட்டும்வந்து அவ்வேடுவராஜனோடு விற்போர்புரிந்தனன். அவ்வேடராஜன் வில்நாணியை அறுத்துவிட்டார். உடனே அர்ச்சுனன் சினங்கொண்டு, நாணியறுந்த காண்டீபத்தைக் கதையாகக்கொண்டு, பரமனாகிய வேடுவத்தலைவன் முடியில் மோதினன். அந்த அடி திரிலோகங்களிலுள்ள சகலஜீவான்மாக்களுந் தாமாயிருப்பதையறிவித்தவாறுபோல எவ்வுயிர்க்கும் பட்டது அக்காலத்து நீங்களுஞ்சகித்து விபப்புற்றிருப்பீர்கள். இவ்வுலகத்தினர் அறிவித்தாலறியத்தக்க கிஞ்சிக்ஞரானபடியினாலே அதன்வரலாற்றையுணர்ந்திலர்.

ஓ மஹாநுபாவா! படைத்தாலும் இவ்வகைப்பட்ட சகோதரனைப் படைக்கவேண்டும். இப்படியாக இருவரும் விற்போர்புரிந்தபின் மற்போர் செய்யத் தனித்து, ஒருவரையொருவர் கட்டிப்புரண்டு, முடிவில் அச்சிவவேடுவன் தனதுகாற் பெருவிரலா லவனையெத்தி யந்தரத்தி லெறிந்தார். அப்போது பூமியில் விழுந்தால் அவனுக்குவருத்தமில்லாதிருக்கப் பார்வதி கேட்டுக்கொள்ள, வேடுவராஜன் அவ்வாறே கிருபை புரிய, பூமியில்விழுந்த அர்ச்சுனன் மறுபடியும் போர்புரிய யத்தனித்து வேடுவனைப் பார்த்தான். அப்போது வேடுவனும் - வேடுவச்சியும் - மற்றவேடுவச்சேனையும் மாயமாக மறையவே, அர்ச்சுனன் தியங்கி மயங்கிப் பிரமித்துநின்றான் அத்தருணத்திற் கைலாசபதி ரிஷபவாகனரூடராய் பார்வதியோடு தரிசனமாகி, அர்ச்சுனனை ஆலிங்கனஞ் செய்து வாழ்த்திப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்து, வில் - நாணி - வச்

சிரமுடி-முதலியவைவயுங்கொடுத்தார் பரமனோடுவந்த தேவர்களனைவருந் தங்கள் தங்கள் பெயரால் விளங்கும் பல அஸ்திரங்களைக் கொடுத்தார்கள் பரமன் அர்ச்சுனனை வாழ்த்தி வந்த தேவகணங்களோடு கயிலைக்கெழுந்தருளினர் பின்பு இந்திரன் அர்ச்சுனனைச் சொர்க்கலோகத்துக் கழைத்துக்கொண்டுபோய் மகுடாபிஷேகஞ்செய்து, கிரீடியென்றுநாமதேயமளித்து, தனக்கு இடையூறுண்டாக்குங் காலகேய நிவாதகவசர்மேற் போருக்கனுப்பி வித்தான். அளக்கரிய ஆற்றலைப்பெற்ற அவ்வவுணரோடு தானொருவனே யெதிர்த்து வெற்றிபெற்று, இந்திரனுக்கு இனியென்றும் அவுணர்பயமில்லாத பெருஞ் செல்வமளித்து, இப்போது அவனை வழிபட்டுத் தொழும்படியான பரிசனங்களெல்லாந் தன்னைவழிபட்டுத் தொழும்படியாக இந்திராசனத்தி லிருக்கிறான். இந்தச்சேதி உங்களுக்குத்தெரிவிக்க என்னை இந்திர னனுப்பிவித்தான். அவன் அர்ச்சுனனை உங்களிடத்திற் கொண்டுவந்து விடுகிறபரியந்தம் என்னை யுங்களிடத்திருக்கக் கட்டளையிட்டானென்றுகூறினர். உரோமசன்மர் வழங்கிய சொற்களைத் திரௌபதிமுதலிய ஐவருங் கேட்டமாத்திரத்தில், உடல்முழுது முரோமாஞ்சிதம் பூப்ப அவர்கள்கொண்ட களிப்பை என்னென்று சொல்லுவேன்? எழுந்தாடுவார். துள்ளுவார். பேரானந்தமடைந்தவர்போல இன்பமேலிட்டுப் பேச்சின்றியிருப்பர் உரோமசன்மரைப் பலதரம் புகழ்வர். துதிப்பர். இவ்வாறு அளவற்ற மகிழ்வடைந்தவராகி, உரோமசன்மரை மிகவும் பூசைசெய்து வாழ்த்தித் துதித்து வணங்கினர். உரோமசன்மர் மகிழ்வுற்று அவர்களோடிருந்தனர்.

நளச்சக்கிரவர்த்திகதை.

கேளும் மஹாராஜனே! தருமராஜன் முதலான நால்வருந் துரோபதையும் உரோமசன்மருடைய கிருபாநோக்க முற்றிருக்கிற நாளில் ஒருநாள் தருமராஜன் நாடு நகரமுதலியவற்றைச் சூதிலிழந்ததையும் வனம்வந்ததையும் நினைத்து, மனவருத்தமுற் றிருந்தார். உரோமசன்மர் தருமராஜனது முகவாட்டத்தைக்கண்டு, ஓ தருமபூபதி! சூரியனைக்கண்டதாமரைமலர்போல் மலர்ச்சியாக இருக்கும் உமது முகமானது இப்போது வாட்டமுற் றிருக்கின்றதை நோக்கினால் மனதிலேதோ கிஞ்சித்து வருத்தமுற்றிருக்கிறதாகத் தோன்றுகிறது அஃதென்னென்று வினவத் தருமராஜனவரைவணங்கிச் சொல்லுகிறார். ஓ ஸ்வாமி! என்னொருவனால் என்சகோதரரும் பாஞ்சாலியுஞ் சுகமென்பதை யறியாதவராகிக் கனவருத்த மடைந்து வருகிறார்கள். அவர்கள் கருத்தின்படி இந்திரப்பிரஸ்தத்தில்தானே யிருக்காமல் அத்தினபுரத்துக்குவந்து, பெரியதந்தையின் வாக்கியத்தைப் பரிபாலனம்பண்ணவேண்டிச் சகுனியோடு சூதாடி, நகரத்தைத் தோற்றுப் பாரியாகி. வனத்துக்கு வந்துவிட்டேன். இதனை நினைக்கும்போதெல்லாம் என்மனம் அனலிடு மெழுகுபோல் உருகிப்போகின்றதென்றுகூற, உரோமசன்மர் குறுநகைகொண்டு சொல்லுகிறார். ஓ தருமநந்தனா! நன்மையுந்தீமையும் நம்மால் வருகிறதென்று நீர் நினைக்கவேண்டாம். பிராரத்துவத்தினாலுங் காலவித்தியாசத்தினாலும் நடக்கும். ஆகலால் நீரதற்காக மனவருத்த முறுகிறது தகுதியல்லவென்று கூற, தருமன் வணங்கிச் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி! தாங்கள் சொல்வது உண்மைதான். ஆகிலும் விளக்கைப்பிடித்துக்கொண்டு கிணற்றில்விழுந்தவர்போலச் சூதென்று தெரிந்திருந்தும் நான் சூதாடி, நாடு நகர முதலியவற்றை யிழந்தேன். அதனை நினைக்கில் என்மனமே என்னை நகைக்கிறதென்று கூற, உரோமசன்மர் சிரித்துச் சொல்லுகிறார். ஓ தருமநந்தனா! நீர் சகலசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந் திருப்பதன்றிப், பெரியோர்களுடைய கேள்விகளென்னு மமுதத்தினால் எக்காலத்துங் குறைவுபடாமல் நிறைந்திருக்கிற சித்தத்தையுடையவர். உமக்குச் சூதாடினது பெருங்குற்றமாகத்தோன்றினது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது; ஏனென்றால் சூதினால் வாழ்வையிழந்து விடுகிறது உலகத்திற் சகசமாக இருக்கின்றது. அதற்குத் திருஷ்டாந்தஞ் சந்திரகுலத்திலகனான நளனேபோதுமான சாக்ஷியாக இருக்கிறான். அந்த நளன் சரித்திரத்தை இதுகாறும்நீர் கேட்டிலையோவென்றார். அதற்குத் தருமன் வணங்கி, ஓ ஸ்வாமி! நளன் என்பவனது சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாக இதுகாறுங் கேட்டதில்லை, அவனும் என்போற் சூதில் வாழ்விழந்தவனாகச் சொல்லப்பட் டிருக்கிறபடியால், அந்தச் சரித்திரத்தை விபரமாக எடுத் துரைக்க வேண்டுமென்று வினவ, உரோமசன்மர் சொல்லுகிறார்

கேளும் தருமநந்தனா! முன்னொருபோது தேவர்களும் அசுரர்களுங்கூடித் திருப்பாற்கடல் கடைந்தபோ துண்டாகிய விஷத்தை எடுத்துப் புசித்துக்கண்டமட்டி லிருக்கும்படி செய்துகொண்ட சந்திரசடாதர சாம்பவமூர்த்திக்கும், கல்வி கேள்வி லான்று கற்றோர்களில் மிகவுஞ்சிறப்புற்ற ஆயிரநாவையுடைய ஆதிசேஷனுக்கும், இசைப்பதற் கருமையான பெருமையையுடைய நிடதமலை யென்றொரு மலையுண்டு. அந்தமலையின்காரணத்தால் அதைச்சூழ்ந்தநாட்டுக்கு நிடதநாடென்றுபெயர். அந்தநாடு உலகிலுள்ளபாண்டியநாடு - சோழநாடு - குடநாடு - முதலியவைகளோடு தானுமொரு நாடென்று பெயர்கொண் டிருப்பதேயன்றி, அதற்கிணையாக வொரு நாடுமில்லை, பெருமையையுடைய பொன்னாட்டுக்கு மேலானசிறப்பையும், நீர்வளம் - நிலவளம் - குடிவளம் - முதலிய எல்லாவளங்களையுமுடைத்தானது. அந்நாட்டிலுள்ள குடிகளின் சிறப்பை யாவரா லளவிட்டுச் சொல்லக்கூடும். தருமசிந்தையை யுடையவர்கள் - கனவிலுந் தீமையை நினைக்காதவர்கள் தவசிரேஷ்ட சிகாமணி

கள்-யாவராலும் புகழ்ந்துரைக்குஞ் சிலாக்கியபாக்கியவான்கள் - நன்னெறியை யுடையவர்கள்-ஆகிய இவர்கண்முதலாயினோர்களைப் பெற்று விளங்கும்படியான சிறப்புற்ற அங்கிடநாட்டுக்கு ஒருநகரமுண்டு அந்நகரம் அளவற்ற மாடமாளிகைகூடகோபுரங்களோடு, கடலைச் சூழ்ந்திருக்கிற சக்கரவாளகிரிபோல் அகழியைப் பக்கங்களிற்கொண்ட மதில்களைப்பெற்று விளங்கும். அந்நகரத்தின் உன்னதத்தைக்கண்ட விந்தபருவத மிறுமாப்படைந்து நிமிர்ந்தகாலத்தில், சூரியனானவன் தான் செல்லுங்கதிக்கு இந்த நகரத்தின் தலைவாசற்படியின் கபாடங்களைத் திறக்குஞ் சமையத்தைப் பார்த்திருப்பானெனில், அந்த நகரத்தின் அகலநிகளத்தை ஒருவரால் மதிக்கக்கூடியதோ? அந்நகரிலுள்ளவர்களின் சிறப்பை என்னொரு நாவாற் சொல்லத்தக்கதல்ல அவர்களுடைய பெருமையினளவைக் கல்வி கேள்வியிலான்ற உமதறிவால் மதிக்களவிட்டுக்கொள்ளும் அந்நகரஞ் சொற்க மத்திய பாதாளலோகங்களிலிருக்கிற நகரங்களைத் தன் வளப்பத்தினால் வென்று, அந்த மூன்றுலோகங்களிலுஞ் சஞ்சரிப்பவர்கள் நிரந்தரந் தன்னைவிட்டு நீங்காமலிருக்க மங்கலவோசையையும் வேத கோஷத்தையுஞ் சதாகாலமும் பெற்றிருக்கின்றது

ஓ பாண்டவச்சிரேஷ்டனே! அந்நகரத்துக்கு ஒரு அரசனுண்டு அவ்வரசன் சந்திரவமிசபரம்பரையிற்றோன்றி, சக்ரவாளகிரி பரியந்தந் தன்னாணையைச் செலுத்தி, சத்துருவை நாசஞ்செய்து, மித்துருவைப் பரிபாலித்து, நல்லொழுக்கத்தினின்றோர்க்கெல்லாம் யாதொரு குறைவும் வாராமல் வேண்டியவற்றையுதவி, தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையும் பாதுகாக்குந் தயாநிதி. இளமுலை மங்கையர் காதல்கொள்ளத்தக்க மாரனுக்குஞ் சிறந்த அழகினையுடையவன். போருக்கு உருத்திர மூர்த்தியையுந் திருமாலினையுமொத்தவன். செல்வத்திலுயர்ந்த குபேரனானவன் இந்த அரசனது செல்வத்தைநோக்கி வடதிசைமுடிவிற் செல்லத்தக்கவனாயினன். அருளுடைமை யென்பது இந்த அரசன் முகத்திலுதித்துப் பிரபஞ்சத்திற் பரவிற்றென்றால்; அந்த அரசனது அருளின் லட்சணத்தையாவராலுரைக்கக்கூடும்? அவ்வகைப்பட்ட அருளுடைமை - அறிவுடைமை-பொறை யுடைமை-அன்புடைமை - ஒழுக்கமுடைமை-வலியுடைமை-வெற்றியுடைமை-முதலியவற்றைப்பெற்று, சக்கரவர்த்திகளென்று பெயர் பெற்றிருக்கும் எழுவருள் தானுமொருவனாகி, நளச்சக்கரவர்த்தியென்னு மியற்பெயர் வகித்து, அம்மாவிந்த நகரத்திலிருந்து, மண்டலேஸ்வரர்களெல்லாம் மணிமகுடந்தேய வணங்கு மஹாமண்டலேஸ்வரனாக இனிது வீற்றிருக்குமரசன். இவ்வித மேலான மகுத்துவங்களை யெல்லாம் மதாணி முதலிய ஆபரணங்களாக வகித்து விளங்கு மவ்வரசன் உகைங்களையெல்லாம் பாதுகாத்துச் செங்கோல் நடாத்தி வந்தான். ஆனால் அந்த அரசனுக்கு விவாகமில்லை. விவாகமில்லாமலிருந்தாலும் யௌவன தசைக்குரிய காமாதி துர்க்குணங்களைக் கல்விற்சிறந்த நல்லறிவால அடக்கி, அந்த யௌவனதசையை யடைந்தகாலத்தும் வேதாகமவிதியினும் - மனுசாஸ்திர நீதியினும்- வழுவாமல் அரசு செலுத்தி வந்தான். அம்மஹாமண்டலேஸ்வரனாகிய நளன் விவாகஞ் செய்துகொள்ள மனமுள்ளவனாக இருந்தபோதிலுந் தனக்கொன்று வேண்டுமென்று ஒருவரைக் கேட்பதைவிட நமக்கிழிவு வேறொன்று மில்லையென்றும், நமதரசுரிமைக்கும் இல்லறத்திற்குந் தகுந்த நற்குணநற்செய்கையையுஞ் சுந்தரத்தையுமுடைய கன்னிகை கிடைப்ப தருமையென்றும் நினைத்துக், கடவுளைத் தியானித்துக் கொண்டிருப்பான்.

இப்படி அரசுசெலுத்தி வருகிறநாளில் ஒருநாள் தன் சிங்காரவனத்துக்குத் கன்னந்தனியாய்ச்செல்ல விருப்பங்கொண்டு, தன்குதிரையைக் கொண்டுவரத் தூதுவர்க்குக் கட்டளையிட்டான். தூதுவர் ரவுத்தனுக்கு அரசனிட்ட கட்டளையைத் தெரிவித்தார்கள். ரவுத்தன் சொர்க்கலோகத்திலிருக்கிற சுவேத அசுவத்துக்கும் அதிக லக்ஷணத்தைப் பெற்று வாயுவேகத்துக்கும் - மனோவேகத்துக்கும்-அதிகமாகச் செல்லும் வேகத்தையுடைய அஸ்வத்தை அலங்கிரதஞ் செய்து சேணமிட்டு, அரசன் சமுகத்திற் கொண்டுவந்தான். உடனே நளனெழுந்து அவ்வஸ்வத்தினருகில் வந்து, கடிவாளத்தைக் கரத்திற் பிடித்துத் தாவியேறினான். ஏறினமாத்திரத்தில் நல்லஜாதி குதிரையாதலாற் சூரியன் தேரிற்கட்டிய பச்சைக்குதிரைகளைப்பார்த்து, உலகத்தையெல்லாம் ஒருபுஜத்திற்றாங்கு மகா மண்டலேஸ்வரனாகிய நளச்சக்கிரவர்த்தியை நானொருவன் தாங்குகிறேன். நீங்களெழுவரும் அந்தரத்தில் வருகிற ஒரு சூரியனைத்தாங்குகிறீர்கள். என்னொருவன் பலத்திற்கு உங்களெழுவர்பலமெம்மாத்திரமென்று பழித்துச் சிரிப்பதுபோல் தனது மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற பற்கள் விளங்கக் கனைத்தது. அரசன் குதிரையின்மீது ஏறினமாத்திரத்திற் சில ஏவலாளிகள்வந்து, திருவடிகளுக்குத தோற்ற கமலங்களுந் தளிர்களும் வாசமாக இருக்கின்ற வனத்துக்கு அரசன் செல்கின்றமையால் திருவடிக்குப் பகையாகிய கமலமுதலியவற்றாலொரு யிடையூறும் வாராதிருக்கக் கழற் காப்பணியாகிய பொன்னிறம் போன்ற சோடுகளை அரசன் பாதத்திற் பூட்டினர். கட்டியக்காரர் எச்சரிக்கை செய்தனர். பாடகர் புகழ்ந்துரைத்தனர். அடைகாய்-வெள்ளிலை-முதலியவைகளை அரிவையர்கொண்டு சூழ்ந்தார்கள். பூரணச்சந்திரனைப்போல விளங்கும் வெண் பட்டுக்குடைபிடித்தனர். இவ்விதகோலத்துடன் நளராஜன் மனக்களிப்போடு அஸ்வத்தைநடத்திச் சிங்காரவனத்திற்சென்று, அவ்வனத்திலிருக்கும் விநோதங்களை

யெல்லாம் பார்வையிட்டுக்கொண்டு, திருப்பாற்கடல் போல் இருக்கின்ற ஓர் தடாகத்தருகில்வந்து, அந்தத் தடாகத்திலிருக்குங் கமலங்களையும்-அக்கமலங்கடோறும் விளையாடித்திரியும் அன்னங்களையும் - பார்வையிட்டுக்கொண்டிருக்கிறவேளையில்; தடாகத்தில விளையாடித்திரியும் அன்னங்களுள் தெய்வலோக அன்னங்கட்கு மாசாகிய ஓர் சேவலன்ன மதன் பெட்டையன்னத்தோடு தாமரைமலரைப் பஞ்சணையாகக்கொண்டு கூடிக்கலந்து, கலவியினால் மெய்சோர்ந்து அக்கமலமலரிற் சயனித்துக்கொண்டிருந்தது.

அதுகண்ட நளராஜன் அன்னத்தைக்கைப்பற்ற விருப்பங்கொண்டு, அஸ்வத்தைவிட்டிறங்கித் தன்னருகி லிருக்கிறவர்களால் அன்னத்தைப் பிடித்துவரக் கட்டளையிடுமுன் அன்னத்தைப் பிடித்துவந்து அவன் கையி லொப்பிவித்தார்கள். அரசன் பொன்னிறமான அன்னத்தின் சுந்தரத்தைக்கண்டு மகிழ்ந்திருக்கிறபோது, மானிடர்கைப்பட்டறியாத அவ்வரசவன்னம் உள்ளம் நடுங்கி விடவிடத்து, அரசன் கரகமலத்தில்தானே சோர்ந்து விழுந்தது. அதைக் கருணைக் கடலாகிய நளராஜன்கண்டு, அன்னமடைந்த கொடிய துன்பத்தைவிட எண்மனங் கதிகமான துன்பத்தை யடைந்து, தன் கண்களிலிருந்து அருவிபோல் நீர் சொரிந்து, ஓ' ஓ! நாம் விளையாட்டுக்குப் பிடித்தோம் அது வினையாக முடிந்ததே: ஐயோ! இதற்கென்ன செய்வோமென்று கனவருத்தப்பட்டான், அரசன் கண்களிலிருந்து வந்தஜலமே அவ்வன்னத்தின் சோர்வை நீக்குஞ்சலமாகஇருந்ததென்றால், அரசன் தயாள உள்ளத்தை என்னென்று சொல்லலாம்? அரசன் கண்ணீர் தன்மேற்பட்ட மாத்திரத்தில் அன்னங்களை நீங்கி எழுந்தது. அதை அரசன்பார்த்து, ஓ அன்னமே! இவ்வுலகிலுள்ள அன்னம்போல வெண்மையாக இராமல் பொன்னிறமாக இருந்தமையால் உன்னைப்பிடித்தெடுத்துப் பார்க்கும்படி விருப்பங்கொண்டேன். அவ்வாறே பார்த்து ஆசைதீர்ந்தேன். இனி உன் கருத்துக்கிசைந்த விடத்துக்குச் செல்லென்று விட்டுவிட்டான். அரசன் விடைபெற்ற அன்னம் முன்போலத் தடாகத்திலிருக்குத் கமலமலரி லிறங்கி நல்வினை தீவினைப்பந்தங்களி லலைப்புண்டு கனவருத்த முற்றவர்க்குப் பரமபதங்கிடைத்தால் அவர்களடையும் இன்பமெவ்வகைத்தோ? அவ்வகைத்தான இன்பத்தை யடைந்ததாகி, ஓ! ஓ! இந்த அரசன் தருமசிந்தையை யுடையவன். கொலை செய்தலைக் கனவிலும் நினைக்காதவன். நம்மைப்பிடித்தும் நமக்கொரு இடையூறு நினைக்காமல் நாமடைந்த வருத்தத்தைக் கண்டு தானும் வருத்தமுற்று நம்மைவிட்டுவிட்டபடியால், கருணைக்கடலென்றே இந்த அரசனை மதிக்கவேண்டும். என்று கருதினதாய், இந்த அரசனுக்கு நாம் வருத்தமுண்டாக்கினோம். அவ்வருத்தம் நீங்கச் சிலமொழி கூறவேண்டும். அம்மொழிக்கிசைவானாகில் அதற்குத்தகுந்த முயற்சியும் நாமே எடுத்துக் கொள்ளவேண்டும். என்று தனக்குள் மகிழ்ந்து, மீட்டும் தானே அரசன் கரகமலத்தில் வந்திரங்கிற்று. அதுகண்ட அரசன் மகிழ்வுற்று, மகாவிசுவாச சித்தத்தோடு தன் ஒரு கரத்திலேந்தி, மற்றொருகரத்தால் அதனுடலைத் தடவிக்கொடுத்து, அங்கிருக்கும் ஓர் சந்திரகாந்த மண்டபத்தில் வந்து, அதன்மத்தியிலுள்ள ஓர் மணிமேடையில் தன்னந்தனியே யிருந்தான். அப்போது அன்னமானது அரசனைப் பார்த்துச் சொல்லுகின்றது.

ஓ வண்டினங்கள் பசிநோயடங்கி மகிழ்வுறத் தேனைத்துளிக்கும் முல்லை - அசோகு - நீலம்-மாம்பூ-கமலமென்கிற ஐந்துபூவாளிக்குந் தலைவனாகிய மாரனும் நாணத்தகும் அழகினையும்வெற்றியையுமுடைய மஹாமண்டலேஸ்வரா! நல்லவழியில்நின்று எல்லோரும் பயன்பட நூலையுண்டாக்கிய மகாத்துமாக்கள் அரசர்க்குக்கூறிய மநுசாஸ்திரத்தில், வேட்டஞ்செய்யக்கருதிவந்த அரசன் என்னகொலை செய்தபோதிலுந் தோஷமில்லையென்றுமுறையிடுகின்றது அப்படி முறையிட்டும், நீ மூன்றுவித வேட்டத்தி லொரு வேட்டமாகிய சிங்காரவனம் பார்ப்பதைக் கருதிவந்தனை. வந்தவிடத்தில் என்னைப்பிடித்துங் கொலைசெய்யாமல் விடுத்தனை. இந்த ஒரு செய்கையினாலேயே உன்னை உலகிலுள்ள அரசர்க்கு ளுயர்ந்தவனென்றுங் கருணைக்கடலென்றுங் கூறவேண்டுமென்றுகூறிப், பின்னுஞ் சொல்லுகின்றது. ஓ மகாராஜனே! என்னைப் பிடித்து என்னழகைக்கண்டு மகிழ்வுறக் கருதிய உன் கருத்துக்கு நான் வருத்தத்தை யுண்டாக்கினேனன்றி, நீ கருதியபடி மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அந்தவருத்தம் நீங்கச் சிலமொழி கூறுகிறேன் கிருபைகூர்ந்து கேட்கவேண்டுமென்றுவேண்டிச்சொல்லுகின்றது. ஓ அரசனே! உலகிலுள்ளவர்கள் கிளியை வாங்கிவந்து அதனைப் பாதுகாத்துத் தங்கள் வாய்மொழியை அதற்குக் கற்பித்து அந்தமொழியை அக்கிளி சொல்லுமாகில் மகிழ்வடைவார்கள். நான் கிளியல்ல. பேசும் பழக்கமில்லாத அன்னம். எனக்கொருவரும் அக்கிளிக்குக் கற்பிப்பதுபோற் கற்பிக்கவில்லை. ஆதலால் என் சுதாவில் நான் பேசும்மொழி எவ்வாறிருந்தபோதிலும் மனம்பொறுத்து, கிளிமொழியைப் போல இதுவுமொரு சொல்லென்று அங்கீகரித்து, கருத்தை வேறொருவிடத்திற் செலுத்தாமற் கேட்கவேண்டுமென்று வியப்புறச்சொல்லுகின்றது: கேளும் மஹாராஜனே! சிறப்புற்ற விதற்பதேச மென்றொரு தேசமுண்டு. அதிற் குண்டினபுரமென்னும் ஓர் நகருண்டு. அந்நகரத்தில் வீமராஜாவென்னும் அரசனுக்கு எல்லாப்பாக்கிய மிருந்தும் புத்திரபாக்கியமில்லை. அதினாலவன் இராஜபோகத்தில் வெறுப்புற்று, தன்னரசுரிமையை மந்திரிகள் வசத்தி லொப்பிவித்துத், தானுந் தன்மனைவியுந் துறவறவேடங்கொண்டு வனம்

புகுந்து, அனேக மாதவமுனிவர்களின்சேர்வைகண்டு, முடிவில் தமனமுனிவரிடத்துக்குச்சென்று, அவரது நற்றுணை நற்செய்கையையுஞ் சாபானுக்கிரகசாமர்த்தியத்தையுஞ் சீர்தூக்கி, இவர் மிகவுஞ் சிறந்தவராயிருப்பதாலிவரால் நமது மனக்குறையைத் தீர்த்துக்கொள்ளலாமென்று கருதி, அவர் மகிழும்படியாகப் இருவரும் பணிவிடைசெய்து வந்தார்கள்.

இவர்கள் நெடுநாள் பணிவிடைசெய்து வருகிறதையறிந்த அந்தத் தவசிரேஷ்ட சிகாமணியாகிய தமனமுனியானவர் ஒருநாள் இருவரையும் அருகிலழைத்து, நீங்கள் யார்? வலியவந்து எனக்குப் பணிவிடை செய்யவேண்டிய காரணமென்ன? அதனையானறியும்படியாகச் சொல்லவேண்டுமென்று வினவ, உடனே வீமராஜன் வணங்கி ஓ சுவாமி! நான் வித்தர்ப்பதேசாதிபதி என்பெயர் வீமன். நானெடுநாள் புத்திரபாக்கியமில்லாதிருக்கிறேன். அப்பாக்கியம் எங்கட் குண்டாகக் கிருபைபுரியவேண்டுமென்றுகூற, அவ்வீமராஜன் மனைவியும் பணிந்து வேண்டினள். அதற்குத் தமனமுனி மகிழ்ந்து, வீமன் களிப்புற ஓர் சற்குணமுள்ள ஒருபுத்திரனும் வீமன்மனைவி களிப்புற ஒரு புத்திரியுமுண்டாகக் கிருபைபாலித்தனர். அந்தவரத்தைப் பெற்றுக்கொண்ட இருவரும் அவரைவணங்கி விடைபெற்றுத் தமது நகரம் வந்துசேர்ந்தார்கள். பின்பு வீமன் முன்போல அரசுரிமையைப்பெற்று, தானுந் தன்மனைவியுங் கூடிக்குலாவி வாழ்கிற காலத்தில்; தமனமுனி கட்டளைப்படி முன்னம் ஒரு புத்திரனையும் 'பின்பு ஒரு புத்திரியையும் பெற்று, முனிவருடைய பெயரைக் குமாரத்திக்கிட்கித் தமயந்தி என்றழைத்து, மிகுந்த அன்போடு வளர்த்து வந்தார்கள். இருவருள் அந்தத் தமயந்திக்கு இன்னு மணஞ்செய்யவில்லை. நீரும் மணமில்லாதிருக்கின்றீர் நீங்களிருவருங் குணத்திலும் அழகினுமொத்திருக்கின்றீர்களென்று என்கருத்துக்குத் தோன்றினமையால், உங்களிருவரையுங் கூடும்படி செய்யக் கருதினேன் அந்த மாதுசிரோமணியின் சுந்தரத்தைத் தேவராலும் ஆதிசேடனாலுஞ் சொல்லக்கூடாதென்றால், பறவைச்சாதியுள் ஓர் அன்னமாகிய நான் என்னென்று கூறுவேன்? ஆகிலும் என்னாற்கூடியமட்டுஞ் சொல்லுகிறேன் கேளும்: ஓ மஹாராஜனே! சொற்க மத்திய பாதாளமென்னும் முப்புவனத்திலுள்ள மாதர்களின் அழகெல்லாந் திரண்டு ஒருவடிவங் கொண்டது போல விளங்குஞ் சுந்தரத்தையுடையவள்.

அஃதங்ஙனமாகில், அவளது கேசாதிபாதங்கட்குள்ள சிறப்புக்களைக் கேட்கவும் வேண்டுமோ? கறுப்பில் நீர்கொண்ட மேகத்தையும், நெருக்கத்திற் சைவலத்தையும், நீட்சியிற் கொன்றைக்காயையும்-பளபளப்பிற் கருமணலையும் நாணச்செய்யுங் குழலையுடையவள். பார்ப்பவர் கண்களைக் கிரகிக்குந் தன்மையையுடைத்தாகி, சிவந்தநிறமும் - திலதப்பொட்டும் - பொன்னிறமும் பெற்றுவிளங்கும் ஒரு சந்திரப்பிறையுண்டாகி யிருக்குமாகில், அதற்கொப்பாகிய நெற்றியையுடையவள். மாரனும் ரதியுந் தங்கள் கரத்திற் பிடித்த வில்லைத் தமது குடையாகிய சந்திரனிடத்து வைத்தாற்போல விளங்கும் புருவத்தையுடையவள். கண்களாகிய கடலுக்கு அணையிட்டாற்போல விளங்கிங் குமிழம்பூவையும் எள்மலரையும்வென்ற நாசியையுடையவள். ஆலத்தைப்போற் கறுத்து, பாலைப்போல் வெளுத்து, பிறழுவதிற் கயலையும் - ஊடுருவப்பாய்தலில் வேலையும்-ஆடவருடைய ஆவியை வெட்டிவாதிப்பதில் வாளையும - கொலைபுரிதலில் யமனையும் வெற்றிகொள்ளும் இரண்டு நேத்திரங்களையுமுடையவள். கண்ணாடியைப்போல் விளங்குங் கன்னத்தையும், குமுதமலர்போல் விளங்கும் இதழையும், பவளக்கிண்ணத்தில் முத்துங்களை நிரைநிரையாக வைத்தாற்போலவிளங்கும் பல் வரிசைகளையும், கமுகையொத்த கண்டத்தையும், குயிலைச் நாணச்செய்யுந் தொனியையும், வேயை நிகர்த்த தோளையும், கல்லெனத்திரண்டு பருத்த தனத்தையும், தனமாகிய தாமரைமலர்களுக் குண்டாகிய கொடியைப்போல விளங்கும் உரோமவரையையும் ஆற்றுநீர்ச் சுழியையொத்த உந்தியையும், ஆடவர்கள் அவா எவ்வளவோ அவ்வளவும் உவமையாகக்கொண்ட அல்குலையும், வாழைஸ்தம்பங்களையொத்த தொடைகளையும், சினைவராலை நிகர்த்த கணுக்கால்களையும், காமன் புத்தகத்தையொத்த பாதங்களையுமுடையவள் அத்தமயந்தி.

அந்த மாதுசிரோமணியின் முகத்தை நிகர்க்க மேற்றிசையிலுதயமாகிவருஞ் சந்திரனைப் பிரமன் நாள்தோறும் புதிதாகச்செய்தும், சந்திரன் அவளது வதனத்துக் கொப்பாகாதிருத்தலைநோக்கி அப்பிரமன் வருத்தமுறுவனெனில், அந்த மாதின சுந்தரத்தை என்னாற் கூறத்தக்கதோ? அந்த மாதின்முன்கைக்கு நாணிய காந்தள்கள் வனத்திற்சென்று இதழ்களைப் பூமியிலுகுத்தன. அவளது இடையைக் கண்ட மின்னல் நாணத்தினால் வெளிப்பட்டு நிற்கமாட்டாமல் தோன்றி மறைகின்றது. கல்வியில் வாணியையும், கற்பில் அருந்ததியையும், குணத்தில் இலக்குமியையும் நிகர்த்தவள். அந்த மாதுசிரோமணியின் ரூபசவுந்தரியமும் உமது ரூபசவுந்தரியமும் ஒத்திருப்பதினால், உமக்கவளே மனைவியாகவேண்டுமென்று கருதினேன். ஆனால் அந்த மாதின் அழகைக்கண்டு இந்திரன் முதலான தேவர்களும் விருப்பங்கொண் டிருக்கிறார்களென்றால், மண்ணுலகாதிபர்க்கு அவள் வாய்ப்பதரிதாகயிருக்குமே: அதைப்பற்றித் தான் கொஞ்சம் ஆலோசிக்கிறேனென்று கூற; அன்னங் கூறியவற்றைக் கேட்ட நளன் அனலிடு மெழுகுபோல் மனமது உருகி, அவ்வன்னத்தைப் பார்த்து, ஓ அன்னமே! எனக்கும் பெரியவர் என் குடும்பத்திலில்லை. உலகத்திலுள்ள அரசரனைவரும் என்னுக்கினைக் குட்பட்ட

வர்களையன்றி, உடம்படாதபேர் ஒருவருமில்லை. நீ யெடுத்துக் கூறிய மாதுசிரோமணியைப் பெற்ற அரசன் என்வாக்கியத்தைத் தடுக்கிறவனல்ல. நானும் எனக்கொன்று வேண்டுமென்று கேட்கிறவனுமல்ல. ஆதலால் நீயே இருவரையுங் கூட்டிவைக்கவேண்டும். இவ்வளவு உபகாரம் நீயெனக்குச் செய்வையாகில், தாய்தந்தையரைவிட என்மனங் கதிகமான பெருமையடைவதுமன்றி; சந்திர சூரியருக்கிற பரியந்தம் பெரும் புகழைப் பெற்றிருப்பாயென்று கூறினன். அதற்கு அன்னமகிழ்ந்து சொல்லுகின்றது.

ஓ மகாராஜனே! உன்மனதின்படி அந்த மாதுசிரோமணியைக் கூட்டிவைப்பதற்கு எவ்வகைப்பட்ட தேவர்கள் தடை நேரிட்டபோதிலும், அத்தனையும் விலக்கி உனக்கே மனைவியாகச் செய்விக்கிறேனென்று நான் வாயாற்சொல்வதிற் பயனில்லை. என்கையாலன்றோ தெரிவிக்கவேண்டும். ஆதலால் - இதோ நான் அந்த மாதுசிரோமணி யிடத்துச் சென்று, அவள் மனதை உன்பால் திருப்பி, அவளுள்ளமாகிய மனக்கோட்டையில் உன்னை இனிது வீற்றிருக்கச் செய்து வருகிறேன். பறவையாயிற்றே யென்று ஐயமுறாமலும், காமத்தின் வழியிற் கருத்தைச் செலுத்தாமலு மிருவென்றுகூறி, அரசனிடத்து விடைபெற்று, கருமையாகிய அந்தரவெளியெல்லாம் பொன்மயமாகத் தன்னினத்தோடு சிறகைவிரித்துப் பறந்து, விதர்ப்பதேசத்தை நோக்கிச்சென்று குண்டலிபுர மடைந்து, தமயந்தி யிருக்கிற கன்னிகாமாடத்தை நெருங்கிற்று.

அத்தருணத்திற் சவுந்தரியத்தி லுயர்ந்த தமயந்தியானவள் தன் தாதிமார்களோடு சந்திரகாந்தக் கல்லினுற் கக்கப்படுஞ் ஜலத்தினல் வெகுவாய் வளர்ந்து புஷ்பிக்கும் முல்லைமல்லிகை இருவாக்ஷி முதலிய புஷ்பவகைச் செடிகளையுடைய சிங்காரவனத்துக்கு மலர்கொய்து விளையாட வந்தனள். அப்படி வந்ததை அன்னங்கண்டு, ஓ! ஓ! தேடிப்போன மருந்து காலிலகப்பட்டதுபோல் நாம் நாடிவந்த கன்னிகை மலர்கொய்து விளையாடச் சிங்காரவனத்துக்கு வந்தனள். இந்தவேளை காலமுமிடமும் ஒத்திருக்கின்றது. நாம் நாடிவந்த கருத்தும் நிறைவேறுமென்றுகருதி, நக்ஷத்திரங்களின் மத்தியிற் பிரகாசிக்குஞ் சந்திரனையொப்பத் தாதிகள் மத்தியில் விளங்குந் தமயந்தியை வலஞ்செய்வதுபோல் வட்டமிட்டு அன்னங்களெல்லா மிறங்கின. அவ்வாறிறங்கினவைகள் தாமரைத் தடாகத்திலிறங்காமல் தமயந்தின் கண்ணுக்குங் கைக்கும் எட்டும்படியாக அங்கிருக்கு மணல்மேட்டிலிறங்கிச் சிங்காரமாக நடந்தன. அன்னங்க ளிறங்கியதினு லவைகளின் சிறகினின்றுண்டாகிய காற்றின்கடுமைக்கிடைவருந்தி கனவருத்தமுற்ற தாதியர் மத்தியிலிருக்குந் தமயந்தி அன்னத்தைக்கண்டு மகிழ்வுற்று, தன் கரகமலத்துக்கு எட்டுமென்று கருதி, தானணிந்திருக்குஞ் சிலம்பு முதலிய ஆபரண ஒலியை அடக்கிமெல்லென நடந்து அவ்வன்னங்களி னருகிற்சென்றாள். பக்கங்களிலிருக்குந் தாதியர்கள் கண்டு, ஓ! ஓ! நமது மாதுசிரோமணி அன்னத்தின்மேற் கருத்துகொண்டு பிடிக்கச் செல்லுகிறாள். ஆகாயத்திற் சஞ்சரிக்கும் அன்னங் கைக்கெட்டுமோ? ஆ! ஆ! இதென்ன ஆச்சரியமென்று கைகொட்டிச் சிரித்தனர். தாதியர் நகைப்பதைக்கண்ட தமயந்தி சினங்கொண்டு, அன்னத்தைப் பிடித்துக்கொடுக்கச் சக்தியற்றவராகியிருந்துவிட்டதுமன்றி நாம் பிடிக்கச்சென்றால் அன்னம் பறந்துபோகக் கைகொட்டிச் சிரிக்கிறீர்களாவென்று கோபித்துக்கூறி, அன்னத்தைநாடிப் பின்னுஞ் சென்றாள். தாதிகள் பயந்து ஒன்றும் பேசாமல் நின்றுவிட்டனர். அன்னம் இதுதான் தருணமென்று கைக்கெட்டுவதுபோல் அபிநயித்துக்கொண்டே தமயந்தியை நெடுந்தூரம் அழைத்துக்கொண்டு, நிறையப்பூத்திருக்கும் ஒரு புஷ்பப் புதலுங்சட் புகுந்து, தன்னை விரும்பிவந்த தமயந்தியை நோக்கிச் சொல்லுகின்றது:

ஓ மாதுசிரோமணி! நானோ? ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பறவைகளின் இனத்தி லொன்றாகிய அன்னம். அந்த அன்னத்திலும் இந்த மண்ணுலகத்திலிருக்கின்ற வெள்ளையன்னத்தி னினமல்ல. பொன்னுலகத்திலிருக்கிற பொன்னன்னத்தினினம். நீ என்னைப் பார்த்த மாத்திரத்திற் பிடித்துக்கொள்ளலாமென்றெண்ணங்கொண்டு, அனிச்சமும் அன்னத்தின் தூவியுமிட்டு மிதிக்கினுங் கடுமைதாளாது கண்ணிப்போகத்தக்க மிருதுவாகிய பாதம்வருந்த இவ்வளவு தூரம் வந்தனை. நீயார்? உன்பெயரென்ன? இவைகளை யெனக்கு விபரமாகச் சொல்லென்று வினவ, கிளிகளின் வார்த்தையையும், நாகணவாய்ப் பக்ஷிகளின் வார்த்தையையுங் கேட்டதேயன்றி, மற்றப் பறவைகளின் வார்த்தையைக் கேட்டறியாத தமயந்தி ஆச்சரியத்தையும் அதிக மகிழ்வையுங்கொண்டு சொல்லுகிறாள்: ஓ அன்னமே! நான் விதர்ப்ப தேசாதிபதியாகிய வீமராஜன் புத்திரி. என்பெயர் தமயந்தி. மலர்கொய்து விளையாடும்படி இந்தச் சிங்காரவனத்திற்கு வந்தேன். வந்தவிடத்தில் உன்னைக் கண்டு, உன்னை என்கரத்தில் வைத்து விளையாடிமகிழ உன்னை இவ்வளவுதூரந் தொடர்ந்துவந்தேன். ஆதலாற் சிலநேரம் என்மனங் களிப்புற என்கரத்தில் வந்திருவென்றுகூற, அன்னங் குறுநகைகொண்டு சொல்லுகின்றது: ஓ மாதுசிரோமணி! நானெப்போதும் விண்ணுலகத்திற் கமலாசனக் கடவுளாகிய திசைமுகன்கரத்தும், மண்ணுலகத்தில் மகாமண்டலேஸ்பரனாகிய நளச்சக்கிரவர்த்தியின் கரத்து மிருப்பதேயன்றி; மற்றவர்க் கைக் கரிதாக இருப்பேன். ஆதலால் என்னை உன்கரத்தில் வரவழைப்பது தகுதியல்லவென்றுகூற, அவ்வாக்கியத்தைக் கேட்ட தமயந்தி கமலாசனக் கடவுளுக் கொப்பாக விளங்கும் அவ்வளவு மாட்சிமையையடைந்த அரசன் மண்ணுலகத்திலு மிருக்கின்றானாவென்று மனதில் மதித்து, முகமலர்ச்சியோடு அன்னத்தை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஒ அன்னமே! மணணுலகச் சுகத்துக்கு மேலானது இந்திரபோகம். இந்திரபோகத்திலுஞ் சிறந்தது சத்தியலோகம், சத்திய லோகாதிபதியாகிய திசைமுகன் காத்திலிருக்கிற நீ, மண்ணுலகாதிபதியாகிய நளச்சககிரவர்த்தியின் காத்திலுமிருக்கிறதென்று கூறினதையுரைத்து நாக்கினல், திசைமுகன்பெருமைக்கு அந்த அரசன் ஒத்திருக்கிறதாகவும், அவ்வரசனது பெருமையை நீ நன்ருக அறிந்திருக்கிறதாகவும் விளங்குகின்றவதாகலால் தயைசெய்து அவ்வரசன்பெருமையைக் கிஞ்சித்தெடுத்துக் கூறென்றுவினவினள். அதற்கு அன்னம் நகைத்துச் சொல்லுகின்றது ஓ மாதரசே! முப்பத்துமுக்கோடி தேவர்கள் புடைசூழக் கொலுவிருக்கும் இந்திரன்சபையிலிருக்கிறவர்களும், வேதவேதியர்களும், மண்டலாதிபதிகளாக இருந்து புண்ணியவசத்தாற் சத்தியலோகத்திலிருக்கிற மனுமாந்தாதிகளும், பிரமனும், நளனென்கிறபெயரைக்கேட்டமாத்திரத்தில் மகிழ்வார்களென்ருல், மண்ணுலகத்தில் மகிழாதவர்கள் யார்? என்று கூறிப் பினனுஞ் சொல்லுகின்றது வெற்றிமாலே புனைந்து மகுடாதிபதிகளாகி இந்திரபோகத்திலுஞ் சிறந்தபோகத்தை வகித்து விளங்கும் அரசர்களெல்லாங் குடங்கையைத் தலேயணையாகக்கொண்டு, தாங்கள் கொண்டுவந்த திரையைக் கட்டுவதற்குச் சமயம் வாய்க்காமல் அந்த நளராஜனது அரண்மனேத் தலேவாய்தலின் புறத்தில் படுத்திருப்பார்கள். அழகிற் சிறந்தோனுகிய சாம்பவமூர்த்தியையும், அவர்கண்ணெரிபட்டிறந்த மாரனேயும். இந்திரன் குமாரனுகிய சயந்தனேயும், உலகத்தைப் பாதுகாத்துவருந் திருமாலேயும் பார்த்திருக்கிறேன் இவர்களிலொருவரையேனும நளச்சக்கிரவர்த்திக் கிணேயாக உரைப்பதற்கு என்னுவெழவில்லே. ஏனென்ருல்-அந்தநளனதுபெருமையையாவரால் உரைக்கக்கூடும்? நான் அந்தநளராஜன் சமுகங் காணும்பொருட்டு, விண்புவி பாதாள லோக முதலியவைகளில் எங்குசென்ருலும் அங்கங்குள்ளவர்களால் எனக்கிடையூறு வராதிருக்கப் பிரமனேக்குறித்துத் தவஞ்செய்து, அப்பிரமன் வரந்தரப் பெற்று, அச்சமின்றிப் பூமிக்குவரவும் போகவுமாக இருக்கின்றேன். இந்த ஒருதிருஷ்டாந்தமே நளன் சிறப்புக்குப் போதுமான சாக்ஷியாக இருக்கின்றதென்று கூறிப், பின்னுஞ் சொல்லுகின்றது.

ஒருநாள் என் குழுவினரோடு இந்திரலோகஞ் சென்றேன். இந்திரன் என்னேநோக்கி, மண்ணுலகாதிபதியாகிய நளனது பெருமை யெவ்வகைப்பட்டதென்று வினவ, யான் அந்தநளனது அழகையும் அவன்கொடுக்குங் கொடையையும் - பகைவரை யதமாக்குங் கூர்மை பொருந்திய அவன் வேலின் திறத்தையும்-அவன் சம்பத்தையும் - நற்குண நற்செய்கைகளேயும் எடுத்தோதினேன். அதை இந்திரனருகிலிருந்த புலோமிசைகேட்டு, ஆசைப்பெருக்கத்தால் இரண்டுகனமும் பூரித்து, ஓ! ஓ! விழுமிய உடலமெங்குங்கண்களேப் பெற்றவனேக் கணவனுகப் பெற்றது நமது விதிவசமென்றெண்ணி நளராஜனது பெருமையை நினைத்துக் கண்களில் ஆனந்தநீர் துளித்தனள். அதனே நோக்கிய இந்திரன் நாணமுற்ருன். இந்தச் செய்தி சொர்க்கமெங்கும்பரவி எங்கனும் பெருவார்த்தையாக இருக்கின்றது. மற்ருெருநாள் வைகுந்தத்திற்குச்சென்றேன் மகாலட்சுமிசமேதனுகியதிருமால் என்னேப்பார்த்துநளன்சீரை உரையென்றுவினவினர். நான் நளனது வளப்பத்தையெல்லாமெடுத்துரைத்து அவனது திருவடிக்குப் பதுமமலரிணே யாகாதென்றெடுத்தோதினேன். இந்த வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் திருமாலுந்திக்கமலம் நாணி, நளனேப் படைத்த பிரமனேச் சிறச்சாலேயி லிடுவதுபோலத் தனக்குள் ஐக்கியப்படுத்திக்கொண்டு மூடிக்கொண்டது. அப்போது நளன் சீரைக்கேட்டுப் புளகாங்கிதமுற்ற இலக்குமி தக்ஷணந் தன்காமவெறிமாறத் திருமாலேப் புணர்ந்துகொண்டாளென்ருல்-அந்த நளன் அழகையும்பெருமையையும் என்ஞெருநாவாற்சொலலத்தக்கதோ? அந்தமகாராஜனது சீரையுஞ்சிறப்பையும் எடுத்துரைப்பதற்கு இரண்டாயிரம் நாவைப் படைத்த ஆதிசேடன் தான் வல்லவன். அவ்வளவு மாட்சிமையுற்ற மகாராஜன் மகாமண்டலேஸ்வரனுக இருந்தும், இன்னும் விவாகஞ் செய்துகொள்ளாமலிருக்கிருன்.

ஓமாதரசீ! இந்த நளனது பெருமையையும் விவாகமில்லாமலிருப்பதையும் இந்திரன் யோசித்து, இந்தமகானுபாவனுக்கு இசைந்தமனேவி மண்ணுலகத்தில் யாரிருக்கின்ருர்களென்று சந்தேகங்கொண்டு, தன்பரிசனத்தோடு பிரமன் சமுகத்துக்குவந்து, பிரமனேவணங்கிப் பூலோகாதிபதியாகிய நளச்சக்கிரவர்த்திக்குத் தகுந்த மனேவியாரென்றுவினவினன். அதற்குப் பிரமன்மகிழ்வுற்று, உன்பெயரை எடுத்தோதினன்போலுமிருந்தது. நானெடுந்தூரத்திலிருந்தமையாலும், பிரமனேக்காணவருபவருடைய ரதவோசையினுலும், என்செவியில் நன்ருகக்கேட்கவில்லே. பிரமன்கூறினது உன்பெபராகவே யிருக்குமாகில் அந்த நளராஜனுக்கு நீ மனேவியாதலுக்குச் சந்தேகமில்லே. நளராஜனுக்குநீ மனேவியானுல், அதைநோக்கிய உன் உற்ருர்பெற்ருர் தாய்தந்தையர் யாவரும் மகாசந்தோஷத்துடன் உன்னே வாழ்த்தி முன்பு நல்லதவஞ்செய்திருந்தாளென்று புகழ்வார்கள். என்றுகூறி அவள் முகக்குறிபைநோக்கிற்று. அப்போதுநளன்சிறப்பைக் கேட்டமாத்திரத்தில் தமயந்திகாதல்மீறி, உடலமெங்கும்புளகம்போர்ப்பமெய்மறந்து, சித்திரப்பிரதிமெய்போலசைவின்றி முகமலர்ச்சியோடுநிற்பதை அன்னங் கண்டுமகிழ்ந்து, பின்னுங் கூறுகின்றது: ஓ மாதசிரோமணீ! நீயோ? ராஜகன்னிகை. பறவைகளிலொன்ருகிய நான் எவ்வளவும் அச்சமில்லாமல் உன்னே நளராஜனுக்கு மனேவியாக எடுத்துரைத்து விட்டேன்.

அதனால் நேரிடுங் குற்றத்திற்கு என்னை நீ எவ்வாறு தண்டித்துக் கொள்ளவேண்டுமோ? அவ்வாறு தண்டித்துக்கொள். நான் தடைகூறவில்லை. அல்லது அந்த நளராஜனைக்குறித்துப் பேச உனக்கு மனமுண்டாயிருந்தாற்பேசு. அதற்காக என்னகட்டளை யிடுகிறையோ அக்கட்டளைக்கும் பாத்தியப் படுகிறேனென்று கூறிற்று. அன்னங் கூறியவற்றைக் கேட்ட தமயந்தி மகிழ்ந்து அதைநோக்கிச் சொல்லுகிறாள்:

ஓ அன்னமே! நீ எந்தத்திக்கிலிருந்துபறந்துவந்தனையோ? எவ்வளவு வருத்தத்தையும் பசியையுங் கொண்டிருக்கின்றனையோ? அதனைத் தெரிந்துகொள்ளாமல்; இந்தச் சோலையிலுள்ள தடாகத்தி லிறங்கி, பசி-களை-தாகம்-இதுகள் - தணியக்கருதிவந்த உன்னைப்பிடித்துவிளையாடக்கருதி, நெடுந்தூரந் தூரத்திக்கொண்டுவந்து உனக்குக் கனவருத்தத்தைக் கொடுத்தேன். அது என்பிழை அப்பிழையையுமறந்து நான் சுகமுறத்தகுந்த சிலவசனங்கள் கூறினை. ஆதலால் உன்னைக் குற்றவாளியாக நினைத்தல் தகுதியல்ல. உனக்கு நானேகுற்றவாளி உன்கருத்துக்குத்தக்கபடி என்னைத் தண்டித்துக்கொள்வது தகுதி. அப்படி தண்டிக்காமல் என்னைமன்னித்ததற்காக மிகவும்மகிழ்வடைந்தேன் நீ நிடததேசாதிபதியின் சீரை எடுத்துரைத்து உன்கருத்தென்னவென்றுவினவினை. அதனைக்குறித் தெனக்கொன்றுந் தோன்ற வில்லையாயினும், என்கருத்துக் கிசைந்தனவற்றைச் சில கூறுகிறேன்கேள் சோடசகலைகளோடு விளங்குஞ் சந்திரன் விண்ணிற் சஞ்சரிப்பதேயன்றி, மண்ணுலகத்தில் நின்று கண்களிக்க நோக்குபவர்க்குப் பரிசித்துமகிழக் கைக்குங் கிட்டுவனோ? அதுபோல் நெடுந்தூரத்திலிருக்கும் நிடததேசாதிபதியின் சீரைத் தாதியர்களாலும்-தேர்ப்பாகர்களாலும் - என்பிதாவின் சமுகத்திலிருக்கும் பெரியோர்களாலும் - புகழ்ந்துரைப்போர்களாலும் முன்னங் கேட்டதைவிட, இப்போது உன்னால் எண்மடங் கதிகமாகக்கேட்டுக் களிப்புற்றேன், என்மனங்களிப்புற்றதுபோல் மெய்-வாய்-கண்-மூக்கு செவி-ஆகியஐம்புலன்களுக்கும் அக்களிப்புதோற்றுவதெப்படி? மேலும் உலகிலுள்ள கன்னியர்களிற் கணவன்வேண்டுமென்று வலியக்கூறுபவரில்லை. ஆதலால் அதனைக்குறித்து யாதேனு முரைப்பதற்கு நாவெழாம லிருக்கிறேனென்றுகூற, அன்னஞ்சொல்லுகின்றது. ஓ மாதுசிரோமணி! உலகிலடைவதற்கு அருமையானது பேரின்பவீடு அந்தப்பேரின்ப வீட்டையும், மகத்துக்கள் மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-வழியாகிய ஐம்புலன்களையும் அடக்கி ஐயமில்லாமல் அடைகின்றார்கள். மண்ணுலகத்தி லுள்ள பொருளை அம்மண்ணுலகத்தா ரடைவ தருமையோ? உன் கருத்து நளன்மேல விருப்பமுற்றிருந்தால் தெரிவி. அதற்குத் தகுந்த முயற்சிசெய்கிறே னென்றுகூற, அன்னம் வழங்கிய சொற்களைக் கேட்ட தமயந்திகுறுநகைகொண்டு சொல்லுகிறாள்.

ஓ அன்னமே! நானிலத்துற்ற பொருளை நன்றாகத் தெரிவிக்குங் கண்ணாடியைப்போல் உள்ளக்கிளர்ச்சியைத் தெரிவிக்க என்முகமொன்றிருக்க, என்னாற்சொல்லுஞ் சொல் யாதுளதென்று கூறினள். அதனை யவ்வன்னங் கேட்டுச் சொல்லுகின்றது. ஓ மாதுசிரோமணி! உன்வார்த்தையையும் உன்முகமலர்ச்சியையுங் கண்டவெனக்கு, முன்னமேயுன் கருத்து நளராஜனிடத்து விருப்புற் றிருக்கின்றதென்று விளங்கிற்று. அதனை நம்புகிறது தகுதியல்ல ஆதலால் உன்கருத்தை வெளிப்படையாகத் தெரிவி அதனால் ஒருகுற்றமு மில்லையென்றுகூற, தமயந்தி உள்ளமகிழ்ந்து நாணமீதூறத்தலை வணங்கிப், பெருவிரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு சொல்லுகின்றாள் ஓ அன்னமே! நீ தெய்வலோகத்து அன்னம். நானிம் மண்ணுலகத்திலிருக்கு மனிதர்சாதி அம்மனிதசாதியிலும் பெண்பால். என்கருத்தைச்சோதிக்க நீ கருதியிருக்கிறாயென்றுவிளங்குகின்றது ஆதலால் உள்ளத்திலிருக்குங் கருத்தை வெளியிடத்தான் வேண்டுமென்று சொல்லுகின்றாள். ஓ அன்னமே! நீயெடுத்துரைத்த நிடததேசாதிபதி என்னை மாலையிடுவானென்று கருதியே நான் இதுவரைக்கும் இந்தவுடலைச் சுமந்தேனென்றுகூற, அதுகேட்ட அன்னம்மகா சந்தோஷத்தோடுஞ் சொல்லுகின்றது: ஓமாதுசிரோமணி! கடல்சூழ்ந்த நெடியவுலகத்தி லிருந்து சகல அரசர்களும் வணங்கச் செங்கோல் செலுத்தி யாவராலு மதிக்கப்பெற்ற சக்ரேஸ்வரனாகிய நளமகாராஜன்சமுகத்திற்சென்று, ஒருராஜகன்னிகை உன்மேல் ஆசையுற் றிருக்கிறாளென்று சொல்லுகிறேன். அப்படிசொல்லி அந்தமகாராஜன் கருத்தை உன்பால் திருப்பின பின்பு, தாய்தந்தையர் சுவாதீனத்திலிருக்கிற வுன்னை அத்தாய்தந்தையர் மற்றொருவர்க்குக் கொடுத்து விடுவாராகில், அந்தமகாராஜனுக்கு நான் கூறியவாக்குப் பழுதாகும், அப்படி என்வாக்குப் பழுதாகிப் பொய்த்தால், அப்பாற் சொர்க்கலோகம் என்னைத் தாங்குமோ தாங்காதாதலால், அதற்குத் தகுதியான மொழியைக் கூறுவாயாகில் அதற்குத்தக்க முயற்சிசெய்ய நான் காத்திருக்கிறே னென்றுகூற, தமயந்தி சொல்லுகிறாள்:

ஓ அன்னமே! குமுத மலருக்குச் சந்திரனுந் தாமரைமலருக்குச் சூரியனுமே யல்லாமல், வேறொரு தலைவரில்லை. அதுபோல நானும் நிடத தேசாதிபதியைத்தான் கணவனாகக் கொண்டிருக்கிறேன். ஆனால் என்தாய்தந்தையர் என்னை மற்றொருவர்க்கு மணஞ்செய்து கொடுப்பாரென்கிற வாக்கியத்தை நீக்கு. ஏனென்றால்-மாதாபிதாவின் கருத்தின்படி புத்திரன் நடக்கவேண்டும். பெண்கள் கருத்தின்படி மாதாபிதா நடக்கவேண்டும். ஆதலால் என் கருத்தி லிருக்கிறவன் நிடததேசாதிபதிதான். அந்த அரசனையன்றி மாதரைமயக்கும் மாரன்வந்தாலும் மயங்காமல், என்

கையிலிருக்கும் மணமாலையை நளனுக்கேசூட்டுவேன். என் தாய் தந்தையர் அந்த விதியைத்தள்ளி என்னை மற்றொருவர்க்கு மணம் புரிவிக்கக் கருதுவாராகில், உடனே அக்கினிப் பிரவேசமாகி என்னாவியைவிட்டு உனக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தைநிறைவேற்றுவேன். இனி என்னால் தடையில்லை. உன் கருத்தின் படி நானின்றேனென்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறாள்: ஓ அன்னமே! நிடததேசாதிபதியின்பால் என் கருத்தைச் செலுத்திவிட்டேன். இனிமற்றொரு புருடனைக் கனவிலுங் கருதேன். என் கருத்து மகிழ அம்மகாராஜனைக் கூட்டுவிப்பது நின் கிருபை. என்னையும் அந்த மகாராஜனையும் நீ கூட்டிவைக்காமற் கைவிடுவையாகில், என்னுயிர் அக்கினிக்கிரையாகும். அதனால் உனக்குப் பெண்பாவஞ்சேரும். ஆதலாற் பாபரகிதமாகிய நீ என்னுயிரினுஞ் சிறந்த நிடததேசாதிபதியினகன்றமார்பை என்முலைமுகட்டி லழுந்தும்படி செய்விப்பது மேலான உதவி. இந்த உதவிக்கு மறு உதவி யான் செய்வேனென்று வாயாற் சொல்வது பெருங்குற்றம். ஏனெனில் உதவிக்கு மறுவுதவிசெய்கிறோமென்று நினைக்கும் நினைப்பு உதவி செய்தவர்க்குடனே யிடையூறவாக் கருதினதுபோலாகுமென்று மனுசாஸ்திர முறையிடுகின்றதாதலால், நானதைப்பற்றி பதறியொன்றுஞ்சொல்லமாட்டேன். நீ மாத்திரந் தயைசெய்து உலகத்தையெல்லாம் ஒரு வெண்பட்டுக் குடையில் நிகழ்த்திப் பாதுகாத்து வரும் நிடததேசாதிபதியின் கருத்தை யென்பால் திருப்புவது நின்கடமையென்று கூறிப், பின்னுஞ் சொல்லுகிறாள்.

ஓ அன்னமே! நீ சகலகலைகளையுங் கற்றுணர்ந் திருப்பதோடு, சொர்க்கமத்திய பாதாளமென்னு முப்புவனத்தி லிருக்குஞ் சிறந்தோரிடத்தும் நேசித்திருக்கின்றனை. ஆகலால உனக்குச் சகலமுந் தெரிந்திருக்கும். ஆகிலும் யான் சொல்லுஞ் சிலவசனத்தைக் கேட்டு அவ்வாறு நடப்பது உத்தமமாதலால், என் சிற்றறிவுக் கிசைந்ததைச் சொல்லுகிறேன் கேள். இராஜச்முகத்துக்குத் தூதாகச் செல்பவர்கள் தாங்கள் நாடியராஜன் தனக்குட்பட்ட அரசர்களிடத்துப் பகுதியைப் பெற்றுக்கொள்ளும் போதும், வித்துவான்கள் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டிருக்கும் போதும், ஒரு ஸ்திரீயினிடத்துக் கருத்தை வைத்திருக்கும்போதும், முக்கியமான காரியத்தை யோசிக்கும்போதும், தாங்கள் வந்தகாரியத்தைக் கூறாமல்; அதனை மற்றொருவர்கேட்டு விகாதந் தேடாம லிருக்கின்ற நற்சமயம் எப்போது வாய்க்குமோ? அப்போது தயாராகவிருந்து அடுத்து காரியத்தை எடுத்துக் கூற வேண்டும். அப்படி கூறினாலுந் தாம் சொல்லி வருகின்ற வசனமானது ஒழுங்கும்-சங்கதிதொடர்பும் - பிறழாது, தாம் சொல்லிவந்த காரியத்தின் மேல் இராஜாவினுடைய மனங்கோணாது வரவர விருப்பம் ஜெனிக்கும்படி உண்டாக்கிவைக்கின்ற சாமர்த்தியத் தையுடைய தூதுதான் சிறந்ததென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நீ அம்சமென்னும் பெயரைப் படைத்ததற் கேற்றபடி என்பக்ஷத்திலும் என்னம் சமமாகவிருந்து, காலம் - இடம் - தன்மை இவையறிந்து, நான்கொண்டிருக்குங் கருத்தை முடிப்பதற்கு இன்பமுண்டாக எடுத்துரைத்து, எவ்விதத்திலேனும் என்னை ஆதாவுபடுத்தென்று தமயந்தி கூறினள் இவ்வளவு சங்கதியைக்கேட்ட அன்னம் அளவற்ற சந்தோஷமடைந்து, இனிபயமில்லை. இதுதான் நல்லசமயம். இப்போது உண்மையை எடுத்துரைப்பதே சகஜியமென்று கருதிச் சொல்லுகின்றது:

ஓ மாதுசிரோமணி! அந்த நளமகாராசன் உன்னுடைய நற்குண நற்செய்கைகளையும்-ரூபலாவண்ய சௌந்தரியங்களையும் - சொல்லத்தக்கவர்களாற் பலதரங்கேட்டுக் காதல்மேற்கொண்டு, கனவிலும் நனவிலும் அனவரதமும் உன்பெயரை மறவாதவனாகிப், புலிபோலவந்து பாயுந் தென்றலுக்கும்-அழலையுண்டாக்குஞ் சந்திரனுக்கும் - மன்மதனுடைய பேரிகை வாத்தியமாகிய சமுத்திர இரைச்சலுக்கும்-மாவிளந்தோப்பிலுள்ள குயிலொலிக்கும் - மாரவேளுக்கும் - அஞ்சாமல், அவைகள் மிஞ்சாம லிருக்கவேண்டியதற்கு மாறாக உடல்மெலிந்து, உன்வடிவச் சிறப்பைக் கேட்டுக்கேட்டு உன்னை நேரிற்கண்டு வசனிக்கிறது போல் வசனித்தும், உன்னுடன் விளையாடுதல்போல் விளையாடியும், உன்னுடன் பிணக்கங் கொண்டது போலப் பிணங்கியும், மனதிரங்கியும், உன்மீது கனமோகமாய் - மனவேகமாய் - தினசோகமாய்-புன்றாகமாய்-ஏக்கமே தூக்கமா யிரங்கிவாடுகிறான். யார் யார் என்னென்ன கூறினும் அந்தச்சொல்லைக் கேட்காமல், தமயந்தி நம்மை மணம் புரிவாளோ? இலட்சுமிக் கொப்பாகிய அந்த மாதின் தனங்களிரண்டும் நமது மார்புறவழுந்துமோ? நமது மனம்போல் அந்த மாதின் மனம் நம்மை நாடியிருக்குமோ? நம்மை ஒரு பொருளாக மதிப்பாளோ? அவள் உள்ளக் கருத்தென்னோ? என்று பலவாறு நினைத்துச் சோர்வுற்றிருக்கிறான். அந்த மகாராஜன் நின்மேற் கொண்டிருக்குங் காதலுக்களவில்லை அதனை யெடுத்துரைப்பவர் இவ்வுலகிலில்லை. ஆதலால் உன் மனவுறுதியை அறிந்துகொண்டு போகவந்தேன் நீ அந்த மகாராஜன் கொண்டிருக்கிற காதலுக்கும் எண்மடங்கதிகமான காதலைக் கொண்டிருக்கிறாய். இதோ யான் சென்று அரசனைக்கண்டு, இங்கு நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் எடுத்தோதுகிறேன். நீ நின் காதியோடிருவென்றுகூறி விடைபெற்று, நளராஜனிடத்துக்குச் செல்லக் குபீலென்று அந்தரத்திற் பறந்து மறைந்துவிட்டது. தமயந்தி அன்னஞ்சென்ற திசையிற் கண்ணையுங் கருத்தையுஞ் செலுத்திப் சித்திரப்பிரதிமைபோல் நின்றுவிட்டாள்.

இப்பால அன்னம் விரைவாகப் பறந்து நிடதேசத்தையடைந்து அரசனைக்கண்டு, அவன் காத்திலிறங்கிச் சொல்லுகின்றது : மின்னலைப் பழிக்கும் வேலாயுதத்தையுடைய அரசனே ! நற்குண செய்கையையுடையவர் ஒருபொருளை விரும்பினால் அப்பொருள் உடனே கிடைக்குமாகில், அவைகளோடு மகாமண்டலேஸ்வரனையு மிருக்கிற நீ நினைத்த பொருள் உனக்குக் கிடைப்பதும் அரிதாக இருக்குமோ? நான் நின்கிருபைபெற்று விதற்பதேசஞ்சென்று குண்டலிபுரத்தை அடைந்து, தமயந்தியைக்கண்டு நின்புகழை எடுத்தோதி, அவள் கருத்தை உன்பால் திருப்பிவித்தேன். இனித் தேவர் அல்லது மாதரை மயக்கும் மாரன்தான் வந்தபோதிலும், அந்த மாதுசிரோமணியின்கருத்து நின்பாலிருக்குமேயன்றி அவர்பால்திரும்பாது. அவ்வளவு உறுதிசெய்து வந்தேன். நாளைச் சுயம்வரஞ் சாட்டுவார்கள். நீ சென்று மணமாலை புனைந்துகொள்ளென்றுகூறி, அரசனிடத்து விடைபெற்றுத் தனது கருத்துங் கிசைந்தவிடத்திற் சென்றது. இங்கிவ்வாறாக-அங்கு முன்னம் விளையாட்டிற் பிரிந்த தாதியர்கள் தங்கள் தலைவியைக்காணாமற் பூஞ்சோலையிற் றேடிவருகிறபோது, அசைவின்றிச் சித்திரப்பிரதிமைபோலிருக்குந் தமயந்தியைக்கண்டு அஞ்சிக் கையை நெரித்துக்கொண்டு, அவளருகில்வந்து உடல்முழுதுந் தடவி, ஓ! ஓ! மாதுசிரோமணி தன்னந்தனியே வந்தமையாற் கிஞ்சித்துப் பாய்ந்தது போற்றோன்றுகின்றதென்று கருதி, திருஷ்டி ஆலாத்தி முதலியவைசுத்தி, குலதேவதை - இஷ்டதேவதை-வனதேவதை-இவர்களைப் பிரார்த்தித்துத் திருநீறிட்டு, எங்களாதீனத்தைச் செந்தாமரைமலரென்று விரும்பிவந்த இலட்சுமியே ! நீ அணிந்திருக்கும் ஆபரணங்களின் பாரம்பொறாமல் உடல்சோர்ந்தனையோ? சூடிய மலர்மாலையில் வந்துவிழும் வண்டுகளை ஓட்டி ஓட்டிக் கைகள் சோர்ந்தனவோ ? என்று பலவாறு கூறித் தமயந்தியை அழைத்துவந்து, கன்னியாமாடத்திலிருக்குஞ் சந்திரகாந்த மண்டபத்திற் சேர்த்தனர். தமயந்தி அன்னங்கூறிய நளச்சக்கிரவர்த்தியின் மேல் மிகுந்த காதல்கொண்டு, அந்த மகாராஜன் புஜமாகிய தறியினிடத்துக் கனத்துப் புளகித்துப் பாரிக்குந்தனமாகிய யானையைப் புணைப்ப நேரிடுங் காலமென்றென் றேக்கங்கொண்டு, கமலமலரோடு மற்றொரு கமலமலர் வைக்கதுபோல் முககமலத்தில் கரகமலத்தைவைத்து, பரிமளமிகுந்த நறுமலர் மாலை புனைந்த நீண்ட அளகஞ்சோரஞ் சயினித்து, வொன்றும் பேசாமல் ஸ்மரணையின்றி யிருந்தனள்.

அதைத் தாதிகள் கண்டு, ஓ ! ஓ ! இதென்ன மாயம்? நம்மோடு விளையாடித் திரிந்த மாதுக்கு அகஸ்மாத்தாய்ச் சோர்வு வரவேண்டிய காரணமென்னவென்று அச்சங்கொண்டவராகி, சோர்வு நீக்கத்தகு முபசாரங்களைச் செய்தனர். சூரியனு மேற்றிசைக் கடலிலாழ்ந்தான். சந்திரனுதயமாயினன். உடனே தமயந்தி சிறிது சோர்வுநீங்கினவளாய், புலிபோற் பாய்ந்துவருந்தென்றலானும்-அழல்போற் காய்கின்ற சந்திரனானும்-மலரம்புகளைவீசு மன்மதனானும் வருத்தமுற்று, ஓ தென்றலே ! இனிமையாகிய தமிழைப்பெற்று விளங்குஞ் சந்தனசைலத்திற் பிறந்து உலகமெல்லாஞ் சுகத்தையடைய வரும்படியாகிய நீ, என்னைமாத்திரம் வருத்துகின்றகாரணமென்னவென்றும் ; சந்திரனைப்பார்த்து, ஓ மதியமே ! நீ பிறக்கும்போது அமுதத்தோடு பிறந்தாய். ஒரு கலைபெற்ற காலத்து லோககர்த்தாவாகிய பரமன் முடியிற்பொருந்தினை. பின்பு கலைகளதிகரிக்குந்தோறும் யாவராலுந் தண்சுடரென்று சொல்லும்படியான பெயாகொண்டனை இவ்வளவு மாட்சிமையுற்ற நீ எனக்குங் குளிர்ச்சியைத்தாராமல் வெம்மையைத் தருவதைநோக்கினால், பிறந்தவிடத்தில் விஷத்தோடுபழகி, ஒருகலையுற்றபோது வளர்ந்த இடமாகிய பாமனது நெற்றித்தீக்கண்ணோடு நேசித்து, சோடசகலையும் பெற்று விளங்கினகாலத்து விஷாக்கினியையுடைய பாம்பின் வாயிற்பட்டு மிருந்தமையால், செயற்கை வாசனைகொண்டு வெய்யோனையினையோவென்றும் ; மாரனை நோக்கி, அடாமாரா ! நான் உனக்கு ஒருகுற்றமுஞ் செய்யாதிருக்க என்மேற் படையெடுத்தனை. இதென்ன கொடுமை ? எனக்கிருக்குஞ் சடையைப் பரமன் சடையென்றும், பசலையால் வெளுத்த என்னுடலைத் திருநீறணிந்த சாம்பவமூர்த்தியின் திருவுருவென்றும், சாந்தணிந்த என் கண்டத்தைப் பரமன் காளகண்டமென்றும் நினைத்து வந்தனையோ ? ஐஐயோ !! நான் பெண்பால், என்மேல் வீணாகப் போருக்கெழாதேயென்றும் புலம்பித் ; தன்னை மறந்து சோர்ந்து விட்டாள்.

அதுகண்ட தாதியர் பனிநீரைத் தெளித்து, சந்தனத்தை வாரிப்பூசி, ஆலவட்ட முதலியவற்றாற் காற்றுவரவிசிச் சோர்வை யகற்றினர் தமயந்தி கிஞ்சித்துக் களைநீங்கிக் கண்விழித்துப்பார்த்து, அடிதாதியர்களே ! சந்திரனுடைய அழலால் வேகும் என தேகத்தைப் பாதுகாப்பதுபோல் அபிநயித்து, அந்தத் தீ அதிகரிக்க நெய்யை விடுவதுபோல் வெப்பமாகிய பனிநீரைரிங் கலவைச்சாந்தையுய் என்மேற் றெளிக்கிறீர்கள் என்மேலுண்டாகிய அன்பு இதுதானோவெறு சொல்லி, ஓவென்றலறிக் கைசோர்ந்து மெய்சோர்ந்துவிட்டாள். உடனே தாதியர்கள் யாவரும் ஒன்றாகக்கூடிச் சுற்றிலும் உட்கார்ந்து, தமயந்தியின தலையையெடுத்து மடியின்மீது வைத்துக்கொண்டு முற்றும் நோக்கி, ஒருவரையொருவர்பார்த்து, ஓ! ஓ! சந்திரனுடைய அழற்சியால் உடலமெங்குங் கண்ணிப்போனதுமன்றி முத்தாரமும் வெந்துவிட்டது. நாம் தெளித்த பன்னீர் முத்துக்களின்மேற் பட்டமாத்திரத்தில் வெண்சுண்ணம்போல் நீற்றுப்போயின. குளிர்ச்சியைக் கொடுக்குங் கலவைச்சாந்து அக்கினிக்கு

மும்பாயிற்று. சொல் தடுமாறிற்று. கைகால் அசைவற்றன நாசியிற் கைவைத்துப் பார்த்தாற் சுவாசமிருக்கிறதுபோலும் இல்வாததுபோலு மிருக்கின்றது ஐயையோ!! இனி நாம் என்செய்கிறது இது காமக்குறியாக இருக்கின்றமையால் நமதுயஜமானியாகிய வீமராஜன் மனைவிக்குத் தெரிவிக்கவேண்டுமென்று பேசிக்கொண்டவராகி, அன்றிராத்திரிமுழுவதும் உபசாரங்களைச் செய்துவந்தார்கள். பெண்பாவிடத்துத் தீமைபுரியுந் திங்களைத் தண்டிப்பதற்கு ஒரரசன் வந்தாற்போற் சூரியனுதயமானான். தமயந்தி சோர்பு நீக்கி நளனது திருவுருவத்தை மனக்கோட்டையில்வைத்து, அவனோடு வசனிக்கிறதுங் களிக்கிறதும் ஊடுகிறதுமாக இருந்தாளேயன்றி, தாதியர் செய்யு முபசாரங்களையும் மற்ற விளையாட்டுகளையுங் கருத்தில் மதிக்காதவளாகி யிருந்தாள்;

அதனைத் தாதியர்கள்கண்டு, இன்றையதினமும் நாம்சும்மாயிருப்போமாகில் இன்றைய விரவில் மாதுபடும் வருத்தத்துக்கு உபசாரஞ்செய்ய நம்மால் முடியாதென்று கருதினவராகி, வீமராஜன் மனைவியிடத்துச்சென்று வணங்கி தமயந்திபடும் வருத்தத்தை எடுத்துரைத்தனர். அதை வீமராஜன் மனைவி கேட்டு நமதுபுத்திரி பக்குவகாலத்தை யடைந்தன ளென்று கருதி, தன்கணவனிடத்துச் சென்று சொல்லுகிறாள். ஓ பிராணநாயகா! நமது புத்திரி பக்குவகாலத்தை யடைந்தனள். இனிநாம் சும்மா இருப்போமாகிற் கெடுதிநேரிடும் மணஞ் செய்வதற்குத் தகுதியான முயற்சியைத் தேடுமென்றுகூறினள். மனைவிகூறிய வாக்கியத்தைக்கேட்ட வீமன் மனக்களிப்பற்று, தன் கொலு மண்டபத்திற்குவந்து மந்திரிகளை நோக்கிச் சொல்லுகிறான்: ஓ மந்திரிகளே! நமதுகுமாரத்திக்கு மணஞ்செய்யவேண்டும் நகரத்தை நன்றாக அலங்கரிக்க முரசுமுன்னிலையில் யாவருக்குந் தெரிவித்து, தேவர்களும் வியப்புறக் கல்யாணமண்டப மொன்றியற்றி, மன்னர்மன்னர்களுக்கும் - முனிவர்களுக்கும்- குடிகளுக்கும் தகுந்த ஆசனங்களிட்டு, சுயம்வரஞ் சாட்டி, திருமுகமுன்னிலையிற் சகல தேசாதிபதிகளுக்குந் தெரிவியுங்களென்று கட்டளையிட்டனன். மந்திரிகள் தங்கள் கட்டளைக்குட்பட்டவரால் நகரமுழுவதுங் கல்யாணமுரசறைவித்து, தேவர்களும் வியப்புறக்கல்யாணமண்டபமொன்றிபற்றி, அதில் அரசர்களுக்கும் முனிவர்களுக்குங் குடிகளுக்குந்தகுந்த ஆசனங்களிட்டு, சுயம்வரஞ்சாட்டி, கல்யாண வோலை எழுதி ஏழுநாளில் யாவரும் வருகிறதென்று அதிற் குறித்து, அத்திருமுகத்தைத் தூதுவர்கையிற் கொடுத்துத் தேசதேசத்துக் கனுப்பினார்கள்.

உடனே தூதுவர்கள் அத்திருமுகத்தைச் சகல தேசாதி பதிகளுக்குங் கொடுத்து, சக்கிரேஸ்வரனாகிய நளராஜனுக்குங்கொடுத்துப்போயினர். சகலதேசாதிபதிகளுந் திருமுகத்தைக் கண்டமாத்திரத்தில் தங்கள் தங்கள் பரிஜனத்தோடு குண்டலிபுரத்தை வந்தடைந்தார்கள். வீமன் வந்தராஜர்களுக்கெல்லாந் தகுந்த மரியாதைசெய்து விடுதிகள்விட்டு உபசரித்து வந்தான் நகரிலுள்ளவர்கள் மாடமாளிகை கூடகோபுரங்களைப் புதுக்கி வெண்சாந்துபூசி, வீதிகடோறுந் தோரணங்கட்டி, முத்துப் பந்தரிட்டு, பூரண கும்பங்கள் நிறுத்தி, வாசற்படிகடோறும் வாழை கமுகம்பாளை-இளநீர்-முதலியவற்றை நாட்டி, புஷ்பமாலைகளுந்தூக்கி, சந்தனத்தாற் றரைமெழுகி விசித்ரமான கோலமிட்டு, தாங்களும் ஸ்நானஞ்செய்து வஸ்திராபரணங்களினு லலங்காரஞ் செய்துகொண்டு, மனக்களிப்புடன் யாவருஞ் சுபசோபன மங்களம் பாடிக்கொண்டிருந்தனர். நிடதேசாதிபதியாகிய நளராஜன் மணவோலையைக் கண்டமாத்திரத்தில் மாரனெய்த பாணங்களை அதமாக்க மணங்கோலங்கொள்ளக் கருதி மந்திரிகளை நோக்கி, விதற்பதேசத் தரசன் குமாரத்தியின் சுயம்வரத்துக்குச் செல்லவேண்டுமாதலாற் சகலரும் பிரயாண மாகுங்களென்றுகூறி, சபையைவிட்டு அந்தப்புரத்துக்குச் சென்று, ஸ்நானஞ் செய்து பூசைமுடித்து, பலவகை பதார்த்தங்களோடு அமுதுண்டு தாம்பூலந்தரித்து, மகரகுண்டல ஆர கேயூர கடககங்கணமகுடமுதலியவற்றை அணிந்து, கவசந்தரித்து, அம்புப்புட்டிலை முதுகிற்றூங்கி, வில்லைக் கரத்திலேந்தி, உடைவாள்முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, தூதுவர்களை அழைத்துத் தனது தேரை அலங்கரித்துக்கொண்டு வரும்படி பாகனுக்குரையுங்களென்று கூறினன்.

அவ்வாறே தூதுவர்பாகனுக்கு அரசன் கட்டளையைத் தெரிவித்தனர். பாகன் தேரையலங்காரஞ் செய்து ஒருநொடியிற் கொண்டுவந்தான். உடனே அரசன்தேரேறி நகர்ப்புறத்துவந்தான். மந்திரிகள்- தண்டத் தலைவர் - வியூகத்தலைவர் - அணித்தலைவர்- படைத்தலைவர் - முதலானவர்கள் தங்கள் தங்கள் சேனைகளோடு அரசனுக்கு முன்னமேதானே நகர்ப்புறத்துவந்திருந்தனர். அரசன் அவர்களோடு கலந்து, பேரிகை-டங்கா-டமாரம்-காளம் - எக்காளம் - பேய்க்காளம்-துத்தாரி - சின்னமுதலிய வாத்திய ஓசைகள் கடலைப்போல் ஒலிக்கக் களிப்புடனே தன்தேரைச் செலுத்தி, காடு-மலை-வனம்-வனாந்திரங்களையெல்லாங் கடந்து விதற்ப தேசமடைந்து, குண்டலிபுரத்துக்கு வந்தான் சகல அரசர்கட்குமேலான சக்கரவர்த்திவருதலைவீமன்கண்டெதிர்சென்று உபசாரஞ்செய்தனன் நளன் நகர்ப்புறத்திற்றானே தன் சேனைசமுத்திரத்துடனே யிருந்தான் ஒரு கமலமலரை அநேகம் வண்டுகள் நெருங்கிச் சூழ்வதுபோலக் குண்டலிபுரத்தை மற்ற நகரத்தரசர்களெல்லாம் நெருங்கிச் சூழ்ந்தனர். கேளும் தருமராஜனே! மாதுசிரோமணியாகிய தமயந்தியென்னும் ஒருகன்னி நிமித்தியமாக உலகிலுள்ள அரசர்களெல்லாந் திரண்டு குண்டலிபுரத்தில் வந்தி

ருந்தமையை யாழ் வல்லோராகிய நாரத முனிவர் கண்டு, உடனே சொற்கலோகத்துச் சென்றார். அவரைச் சொற்காதிபதியாகிய இந்திரன்கண்டு எழுந்தெதிர்சென்று அழைத்துவந்து, ஒரு பொற்பீடத்திலிருத்திச் சோடசோபசாரஞ்செய்து பலவாறு புகழ்ந்து சொல்லுகிறான்: ஓ முனிநாதா! சொற்கமத்திய பாதாளமென்னு முப்புவனசஞ்சாரியாகிய தேவரீரை அடியேன் செய்த மாதவப்பேற்றால் இன்றிங்குவரக் காணப் பெற்றேன் தாங்களிவடம் வந்த காரணமென்ன? ஏதாவததிசயமான சமாச்சாரங்களுண்டாவென்று வினவினன். நாரதர் இந்திரனுக்குப் பல ஆசிகள் கூறிச் சொல்லுகிறார்

ஓ தேவராஜனே! பூலோகத்தில் விதர்ப்பதேசத்தரசனாகிய வீமனுக்குத் தமனமுனி கிருபையினால் ஒரு புத்திரி பிறந்தாள். அவள் பருவகாலமடைந்தனள். அவளுடைய ரூபசவுந்தரியங்களை ஒருவராலுரைக்கத்தக்கதல்ல உரைக்கவென்றால் இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷன்தானுரைக்க வேண்டும். அவ்வளவு சுந்தரத்தை யுடையவளுக்கு விவாகமாம் அதற்காகச் சகல தேசாதிபதிகளும் விதற்பதேசத்தில்வந்து சூழ்ந்திருக்கிறார்கள். அந்தத் தமயந்திக்கொப்பானவர் இந்தச் சொற்கலோகத்து மாத்திரமல்ல: பாதாளலோகத்திலுமில்லை. அவள்கருத்தோ? நிடததேசாதிபதியாகிய நளச்சக்கிரவர்த்தியின் மேற் காதல்கொண் டிருக்கிறது. இந்த அதிசயத்தை உனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று இங்குவந்தேன் இனி விடைகொடென்று சொல்லி விடைபெற்றுத் தமது கருத்துக்கிசைந்தவிடத்துக்குச்சென்றார். இந்திரன் தமயந்தியின் வனப்பை நாரதராற் கேள்விப்பட்டமாத்திரத்தில் ஆசையாகிய கடலுள் மூழ்கி, கீழ்த்திசைக் கடவுளாகிய தானும்-தென்றிசைக்கடவுளாகிய யமனும்-வடமேற்றிசைக் கடவுளாகிய வாய்வு பகவானும்-தென்கீழ்த்திசைத் தலைவனாகிய அக்கினி பகவானும் - இந்நால்வருமாகத் தத்தம் பரிசனத்தோடு விதர்ப்பதேசத்துக்குத் திலகம்போலொளிருங் குண்டலிபுரம்வந்து சேர்ந்தார்கள். மற்ற அந்தரலோகவாசிகளும்வந்து நெருங்கினர். திருப்பாற்கடலினுதித்த அமுதத்தை யுண்ட இந்திரன் - அக்கினி யமன்-வாயு - இத்தேவர்களே தமயந்தியின் இதழமுதத்துக்கு இச்சைகொண்டு வந்தனரென்றால், மண்ணுலகத்திலிருக்கும் மன்னர் மன்னவர்கள் தமயந்திக்காக மடலூர்வதற்கு நாணுவரோ? ஒருக்காலும் நாணமாட்டார்கள். சகல தேசாதிபதிகளுஞ் சகல தேவர்களும் வந்து நெருங்கிய குண்டலிபுரமானது, திருமாலுங் கிருப்பிடமாகிய வைகுந்தம்போலிருந்தன வென்றால், அந்நகரத்தின் மாட்சிமையை நீரே மதித்துக்கொள்ளும்.

இவ்வாறு விண்ணுலகாதிபதிகளும் மண்ணுலகாதிபதிகளும் நெருங்கியிருக்கும்போது, சக்கிரேஸ்வரனாகிய நளன் தேவர்கள் வரவைக்கண்டு அவர்களைத் தரிசிப்பதற்குச் சென்றான். இந்திரன் முதலான நாற்றிசைக் காவலர்களும் நளன் உருவத்தை நோக்கி மகிழ்ந்தவர்களாகி, தங்கள் கண்களாகிய வண்டுகளை நளன்முகமாகிய கமலத்திலிருக்கும்படி செலுத்தினர். நளன் அவர்கள் அருகிற்சென்று நாற்றிசைக் காவலர்களையுங் கைகுவித்து வணங்கிநின்றனன். அதற்கு நால்வருமகிழ்ந்து பல ஆசிகள்கூறி, தங்களுடன் சமமாக ஒருசிங்காதன மளித்து இருக்கச்சொல்லி, அவருள் இந்திரனானவன் நளராஜனோடு இதனைச்சொல்லுவதானான். ஓ மஹாமண்டலேஸ்வரா! இதோ நிற்கிறவர் தென்றிசைக் கடவுள். அவர் பின்பக்கத்திருப்பவர் வடமேற்றிசைக் கடவுள். என்னருகிலிருக்கிறவர் அக்கினிபகவான். நான் இந்திரன். நாங்கள் நால்வரும் ஒரு காரியார்த்தமாக மண்ணுலகத்துக்கு வந்தோம். அக்காரியம் உன்னால்தான் நிறைவேற வேண்டுமென்று கூறினன், இந்திரன் வழங்கியசொற்களைக்கேட்ட நளன் உள்ளம்பூரித்து, ஓ! ஓ! சொற்காதிபதிகளாகிய இந்த நால்வர்க்குங் கிடைத்தற்கருமையான பதார்த்த மொன்றுமில்லை அப்படியிருக்க இவர்கள் ஒரு பதார்த்தத்தை நாடியிருக்கின்றோமென்றும், அப்பதார்த்தத்தை நம்மாலடையவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்கள். நாமோ? மண்ணுலகத்திலிருப்பவன். நம்மால் அந்தப்பொருளை அவர்களடைகிற தெவ்வண்ணம்? அப்பொருளின்னதென்றுங் கூறவில்லை குறிப்பறிந் தீவதே கொடையென்று மனுசாஸ்திரத்திற் கூறுகின்றது. இவர்கள் மனக்குறிப்பு நமக்குத் தோன்றவில்லை. இவர்கள் காதலித்த பொருளின்னதென்று நமக்குத் தோற்றுமாகில் அப்பொருளைக் கொடுப்பதுவுமன்றி, என்னுயிரையுங் கொடுப்பேன். ஒருவர் ஒருபொருளை நாடித் தங்கள் கருத்தும் முகமும் நாண மற்றொருவரிடத்துச் சென்று கேட்பதே அரிது. அப்படிகேட்டுங் கொடாதவரையல்லவோ பாபியரென்று நூல்கள் முறையிடுகின்றன. அதுபற்றியல்லவா நம்முன்னோர்கள் கேட்போனுரைப்பதற்கு முன்னமே நாடிவந்த பொருளை நாரத்தோடுஞ் தத்தஞ் செய்கிறார்கள்.

மேலும்-ஐந்துகற்பகவிருக்ஷத்தின் செல்வத்தையுந் தேவாமுதத்தையும் பெற்ற இந்திரனே நம்மை நாடி ஒருபொருள் கேட்டால், அவர்களிப்புற அளித்தல் நமக்கு மேலான சிறப்பு. அந்த மஹாராஜன் ஒருபொருளை நாடிவந்தேனென்று கூறினனேயன்றி, இன்ன பொருளென்று கூறவில்லை. இதற்கு நான் என்னசெய்வேன்? என்று பலவாறு தனக்குள் யோசித் திந்திரனைப் பார்த்துச் சொல்லுகிறான். சொர்க்க மத்திய பாதலமென்னு மூவுலகிற்குங் கர்த்தனே! நான்செய்தபூஜாபலமோ? எங்கள் முன்னோர்செய்த பூஜாபலமோ? சொற்கலோகத்தைவிட்டு மண்ணுலக

த்துக்கு வந்து எங்கட்புலனுக்குத் தோற்றி என்னுலொரு காரிய முடித்துக்கொள்ள வேண்டுமென்று கூறினீர். அக்காரிய மின்னதென்று விளங்கத் திருவுளங்கனிந்து கூறினால், தங்கள் அடிமையாகிய நான் தடையின்றி அக்காரியத்துக்குத் தகுந்த முயற்சி செய்கிறேனென்று கூறினன் அதற்கு இந்திரன் மகிழ்ந்து சொல்லுகிறான்: ஓ சொர்க்கமத்திய பாதாளமென்னு முப்புவனத்திலும் வெற்றிகொண்ட மாரனை வென்ற தீரனே! நாங்கள் நால்வருந் தமயந்தியின் வனப்பைக் கேட்டு மோகங்கொண்டு மண்ணுலகத்துக்கு வந்தனம். காமனுந் தன் வில்லைவளைத்து மலர் வாளிதொடுத்து எங்களுயிரை வாட்டுகிறான். அத்துன்பம் நீங்க நீ மாதுசிரோன்மணியாகிய அத்தமயந்தியினிடத்திற்சென்று, என் பெயரையும் என்சிறப்பையும் எடுத்தோதி, எனக்கு மணமாலை சூட்ட இசைவி என்மேல் மோகங்கொள்ளாமல் நீக்கிவிடுவாளாகில், அக்கினிபகவான் அல்லது வாயு - யமன் - இவர்களி லொருவர்க்காவது பொருத்திவையென்று கூறினன்.

இந்திரன் வாக்கியத்தைக்கேட்ட நளன் அனலிடு மெழுகுபோல மனமது உருகி, ஒன்றுந்தோன்றுமல் சித்திரப் பிரதிமெய்போல் நின்று, பின்பு சிறிது தெளிந்து, ஆ! ஆ! நாம் தமயந்தியின்மேல் மனப்பூர்த்தியாகக் கருத்தைச் செலுத்தியிருக்கிற செய்தி இந்த இந்திரனுக்குத் தெரியாததல்ல. நாமோ? அதிக காதல்கொண்டதுமன்றி மாரனால் அவகோலப்பட்டுமிருக்கிறோம் எல்லாமறிந்த தேவராஜன் நம்மை அப்பெண்பாலிடத்திலேயே தூதாகச்செல்லவேண்டுமென்று வேண்டுகிறான். அந்த மாது சவுந்தரியத்தில் மிகுந்தவளென்றும், அவளைத் தேவர்களுங் காதலித்திருக்கிறார்களென்றும் அன்னஞ் சொன்னது இன்றுண்மையாயிற்று. இனி நாம் இந்திரன் வாக்கியத்தைத் தடுப்போமாகில் வாக்குப்பிழை நேரிடும். இந்திரன் கருத்தின்படி தூதுசெல்வதே தகுதியென்று மனதை வுறுதி செய்துகொண்டு, இந்திரனை வணங்கிச் சொல்லுகிறான்: ஓ தேவராஜனே! என்னுள்ள நிலையைக் கண்டிருந்துந் தமயந்தியினிடத்துக் தூதாகச்செல்லவேண்டுமென்று தாங்கள் கூறினது எனக்கு அதிக ஆச்சரியமாக இருக்கின்றது. உலகத்தில் யார் யார்க்கு எங்கெங்க வேலை யிடவேண்டியதோ? அங்கந்த வேலையை அவரவர்களுக்கிடவேண்டும். அதனை நீக்கி என்னை ஒருபெண்பா லிடத்தில் தூதாகச் செல்லென்று கட்டளையிட்டீர்கள். நீங்களோ? தேவர்கள். நானோ? மண்ணுலகத்தி லிருக்கிறவன். தங்களுக்குத் தெரியாத நீதி ஒன்றில்லை. நீங்களே தூது செல்லென்றால் நான் மறுக்க வல்லவனல்லன். நான் அக்கன்னி காவலைக்கடந் தெவ்வாறு செல்லுவேனென்று கேட்க, இந்திரன் சொல்லுகிறான்

ஓ மஹாராஜனே! நாங்கள் நாடிவந்த கன்னிகை உன்மேல் அதிக காதல் கொண்டிருக்கின்றமையால், உன்வாக்கியத்தைத் தடுக்காம லிணங்குவாளென்று கருதி உன்னைத் தூதுசெலுத்தக் கருதினோம் நீ எங்கள் வாக்கியத்தைத் தடுக்காமல் தூதுசென்று அந்த மாதைப் பொருத்துவிப்பையாகில், சந்திர சூரியரிருக்கிறபரியந்தம் உனக்குச்சிறப்புண்டாயிருக்கும். கன்னிகாவலைக் கடக்கும்படி உன் திருவுருவத்தை ஒருவர் காணாமலிருக்க மஹாவிநோதமான ஒரு அஞ்சனந் தருகிறோம் அதனைப்பெற்றுத் தமயந்தியினிடத்துச் சென்றவுடன் அந்த அஞ்சனத்தைத் துடைத்துவிடு. அவளுக்கு உனது உருத்தோன்றும். ஆகலால் இப்போதேபோய் நீ தமயந்தியினிடத்திற் பேசவேண்டியவற்றைப்பேசி, எங்களில் யாருக்காவதொருவர்க்குப் பொருத்திவிட்டு வாவென்றுகூறி, உருத்தெரியாதிருக்க அஞ்சனமளித்தனன். நளன் இந்திரன் கருத்துக்கிசைந்து விடைபெற்று, உருமாறு மஞ்சனத்தை நெற்றியிலணிந்து, குண்டலிபுரமடைந்து, வீதிகளையெல்லாங் கடந்து தமயந்தி யிருக்குங் கன்னியாமாடத்துத் தலைவாசற்படியிற் புக்கினன். கன்னிகாவலாளர்கள் ஆளரவத்தைக் கேட்டு, யாரோ வந்தாற்போலிருக்கின்றது: ஆளைக்காணோம் இதென்ன ஆச்சரியம? என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் பேசிக்கொள்வதை நளன்கேட்டு, தலையை இறங்கி நாணமீதூற அக்காவலைக் கடந்து உட்புறத்துச் செல்லும்போது, அங்கங்குள்ள தடாகங்களையும் - அத்தடாகத்தில் விளையாடும் மாதர்களையும் - சோலைகளையும்- அச்சோலையில மலர்கொய்து விளையாடு மங்கையர்களையும்-இன்னுமுண்டான பல அதிசயங்களையும் பார்த்துக்கொண்டு சென்றான்.

அப்படி செல்கின்றபோது செண்டு விளையாடு மாதர்கள் தங்கள் கையிலிருக்குஞ் செண்டைத்தனக்கெதிரிலிருக்கும் மாதர்களிடந் தெரிந்தனர். அச்செண்டு செல்லுங்கதிதப்பி நளன் மார்பிற் பட்டுப் பூமியில் விழுந்தது. அதைச் செண்டெறிந்த மாதர்கள் கண்டு, ஓ! ஓ! நாமெறிந்த செண்டு அந்தரத்திற்சென்று தடைப்பட்டதுபோல மீண்டு பூமியில் விழவேண்டிய தென்னவென் றையுற்று, ஒருவரையொருவர் பார்த்து மயங்கிநின்றனர். இதனைக்கண்ட நளன் யாதொன்றும் வசனியாமல் தலையை யிறங்கிக்கொண்டே தமயந்தியிருக்கும் மாளிகைக்குச் சென்றான். நளன்மீது காதல்கொண்ட தமயந்தி ஆசைப்பெருக்கத்தினால் நளன் பெயரை யெடுத்தோதிக்கொண்டே யிருக்கிறவளாதலால், அந்தமாது களிப்புறத் தாதியர்கள் இதோ வந்தான் நளனென்று அடிக்கடி எடுத்துரைப்பர். அப்படி உரைப்பதினால் அங்குள்ள கிளிகள் அவ்வார்த்தையைக் கற்றுக்கொண்டு, எந்தவேளையும் அந்த வசனத்தையே சொல்லிக்கொண் டிருக்கும். நளன் வந்தபோதும் இதோ நளன் வந்தானென்று கிளிகள் சொல்லின. அதை நளன் கேட்டுத் திடுக்கிட்டு, ஓ! ஓ! கிளிகள் நம்மை யறிந்துகொண்டது. இனியென்ன செய்கிற

தென்று மனவருத்தமுற்றுச் சற்றுநேரம் நின்றான். அச்சமயத்தில் நளன்மேற் காதல்கொண்ட தமயந்திக்கு மகிழ்வுண்டாகச் சில தாதியர்கள் நளனைப்போல் ஒரு படமெழுதிவந்து, இதோ நளன் வந்தான் பாரென்று சொல்லுகிறதையும், தமயந்தி ஆவலுடன் அப்படத்தைப்பற்றி அணைகிறதையும், படமென்று கருத்துக்குத் தோன்றின மாத்திரத்தில் அத்தாதியரை வெறுத்துக்கொள்வதையும் நளன் கண்டு களிப்புற்று, அன்னங்கூறியதும் அன்னத்தின் வாக்கின்படி ஒத்திருக்குஞ் சுந்தரத்தையுங்கண்டு, இவள்தான் தமயந்தியென்று தெளிந்து, அவளது ரூபசவுந்தரியத்தைப் புகழ்ந்து, மனக்களிப்புடனே தானணிந்த அஞ்சனத்தைக் கையாற் றுடைத்தனன்.

அஞ்சனங் கலைந்தவுடன் நளனது திருவுருவந் தோன்றிற்று. அங்குள்ள தாதியருந் தமயந்தியுங் கண்டு உருவெளித் தோற்றமென்று கருதினவராகி, பின்பு தெளிந்து, யாரிக் கன்னிகாவலைக்கடந்து வருபவரென்று ஐயுற்றுத் திடுக்கிட்டு, இரங்கின தலையை நிமிராமல் நளன் பாதவடிவத்தைக்கண்டு, இந்த புருஷன்யார்? தேவனாகில் மண்ணுலகத்தி லிருக்கும் பொருளை விரும்பிவரான் பாதம் நிலந்தோயாது. பாதாளத்தி லிருப்பவனாகில் எல்லா வுலகத்திலுஞ் சிறந்தது பாதாளம் அதிலில்லாத பொருள் மண்ணுலகத்திலில்லை. மண்ணுலகத்தி லிருப்பவனானாற் கன்னிக்காவலைக்கடந்து வருவதரிது. ஆதலால் வந்த புருஷன் யாரென்று தமக்குள் யோசித்துக்கொண்டிருக்கும்போது, தமயந்தி தாதியை எச்சரித்து, வந்தவன் யாவனென் றறிமின்களென்று ஆக்யாபித்தாள் அருகிலிருக்குந் தாதியர்கள் நளனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்: ஓ புருஷோத்தமா? உன்னைப் பார்த்தால் உருக்கொடு விளங்கும் மாரவேளைப் போலிருக்கின்றாய் அதிக காவலையுடைய இந்தக் கன்னியாமாடத்துக் கெப்படி வந்தனை? காவலாளர்கள் உன்னைக் காண்பாராகில் நீ கனவருத்தத்திற் குள்ளாகுவையே: இவ்வகைப்பட்ட கடினகாவலைக் கடந்து இந்து வரவேண்டிய காரண மென்ன? நீயார்? உன் பெபரியாது? உனக் கிங்கு ஆகவேண்டுங் காரிய மென்னவென்று வினவினர். அதற்கு நளன் சொல்லுகிறான்; ஓ தாதிகளே! நான் நிடததேசாதிபதி. என் பெயர் நளன். இங்கு வந்ததற்குக் காரணமென்னவெனில், இந்திரன் - வாயு - அக்கினி- இயமன்-இந்நால்வரும் உமது யஜமானியாகிய தமயந்தியின்மேற் காதல் கொண்டு, என்னைத் தூதாக அனுப்பி வித்தார்கள். தேவர்கள் கொடுத்த அஞ்சனத்தாற் காவலர்கள் கண்ணுக்குத் தோன்றாம லிவடம் வந்தேனென்று கூறினன்.

இந்த வாக்கியத்தைக்கேட்ட மாத்திரத்தில் உருவெளித் தோற்றத்தைக் கண்டு மகிழுங் கருத்தையுடைய தமயந்தி உருவத்தோடு விளங்கும் நளன் நேரில்வந்து வசனித்தலைக் கேட்டுப் பரமானந்தமடைந்து, தலையை நிமிர்ந்து நளராஜனை முற்று நோக்கி, அன்னங் கூறியதற்கும் நளனிருக்குஞ் சுந்தரத்துக்கு மொத்திருக்தலையெண்ணி, கணகளால் நளனது அழகிலுண்டாகிய நலத்தைக் கிரகித்து, தான் கொண்ட காமநோயைத் தணித்து, நாணமீதுறத் தலையை வணங்கி, தாதியோடு பேசுதல் போலப் பேசத்தொடங்கி: ஓ! மஹாராஜனே! இந்திரன் முதலான நால்வருந் தூது அனுப்பிய கருத்தென்னவென்று வினவினள். அதற்கு நளன் சொல்லுகிறான். ஓ மாதுசிரோமணி! உன்னுடைய ரூபசவுந்தரியத்தைக்கேட்டு நின்போகத்தை விரும்பினவராகி இந்த மண்ணுலகத்தில் வந்தார்கள். அந்நால்வருள் இந்திரனெனபவன் பெருமையை என்னொரு நாவாற் சொல்லத்தக்கதல்ல வாயினும், என்னாற் கூடியமட்டுஞ் சொல்லுகிறேன் கேள். அந்த இந்திரன் அசுரர் குலகாலன். பர்வதங்களின் சிறகை அரிந்த வச்சிராயுதன். அக்கினிமுதலான எழுதிசைக் காவலர்களுக்கும் - இந்த மண்ணுலகத்துக்குப்-பாதாளத்துக்குந் தலைவனாகி, சொற்கத்துள்ள முப்பத்து முக்கோடி தேவர்கள்-நாற்பத் தெண்ணாயிர முனிவர்கள்-கின்னரர்-கிம்புருடர் - கருடர் - காந்தருவர்-சித்தர்-வித்தியாசரர்-முதலான சகலரும் வணங்கும் பாதகமலத்தை யுடையவன். போகத்திலுயர்ந்தவன். மஹாபராக்கிரமசாலி. சாபானுக்கிரக சாமர்த்தியன். திருப்பாற்கடலில் அமுதத்துடனுற்பவித்த அயிராவதத்தைப் பெற்றவன்- சுவேதாஸ்வங்களை யுடையவன். தேவாமிர்த கலசத்தையுடையவன். சங்கநிதி - பதுமநிதி - கற்பக விருக்ஷம் - காமதேனு - இவை முதலிய சிறந்த பொருள்களை யுடையவன். அளக்கரிய புகழைப் படைத்தவன்.

மேலும் அந்த மஹாராஜன் புலோமிசை-அரம்பை-ஊர்வசி-முதலானவர்களைக் காதல் கொள்ளாமல் நின்மேற் காதல் கொண்டானென்றால், உன் தவப் பயனேபயன். நீ மானிட ஜன்மமாக இருந்துந் தேவர்களெல்லாம் உனக்குப் பணிவிடை செய்யும்படி எதிர்பார்த் திருக்கிறார்களென்றால், உன் சிறப்பேசிறப்பு. நீ மனமகிழ்ந்து இந்திரனுக்கு மணமாலை புனையக் கருத்துவை. சொல்ப ஆயுளையுடைய மண்டலத்தரசரை மணந்து கொள்வதிற் பயனில்லை. நீடூழிகாலஞ் சுகத்தைத் தருவதாகிய தேவபோகத்தை யனுபவித்தற் கிச்சைகொள்ளென்று கூறினன். இவ்வாறுகூறிய நளன் வாக்கியத்தைக்கேட்ட தமயந்தி அனலிடு மெழுகுபோல மனமது உருகி, இருசெவியிலுங் கரத்தைவைத்து மூடிக்கொண்டு, இஷ்ட தேவதையைத் துதித்துச் சொல்லுகின்றாள். ஓ மகாராஜனே! மண்ணுலகத்தாருக்கு விண்ணுலகத்தார் தாய் தந்தையரென்று வேத முறையிடுகின்றது. அந்த வேதங்களை நன்றாகக் கற்றுணர்ந்து அந்நெறியினின்ற இந்திரன் காமத்தால் மதிமயங்கி என்னை விரும்பி உன்னைத் தூதனுப்பினானும், எல்லாந்தெரிந்த நீர் மறக்காமல் இங்

திரன் கருத்துக்கிசைந்திர். அதனை யுய்த்துநோக்கி
னல் தேவவாக்கியத்தைத் தடுக்கங் கூடாதென்கிற
விதியை அநுசரித்து வந்தவராகத் தோன்றுகின்றது.
என்கருத்தை வெளியிடுகிறேன் கேளும் தேவரல்ல
மற்ற மும்மூர்த்திகளேயாயினும் வேதவிதிக்குப்பிரகு
வார்களாகில் எள்ளளவேனும் அவர்களை மதிக்கவிதி
யில்லை ஆகலால் இந்திரன்கூறிய கர்னகடூரமானவாக்
கிய மிங்குசெல்லாது. மேலும் உத்தமஸ்திரீகளின் லக்ஷ
ணமெனனவெனில், ஒருவனைக்கணவனாக நினைத்துப்
பின்பு மற்றொருவனை நினைக்கார்கள் ஆதலால் நான்
ஒருவனைக் கணவனாக என்கருத்திற் குறித்திருக்கி
றேன். அவனுக்கு மணமாலை சூட்டுகிறதேயன்றி மற்
றொருவருக்கு மணமாலை யிடேன், இனி இந்திரனைக்
குறித் திங்கு பேசவேண்டியதில்லை. என்று கூறக்
கேட்ட நளன் தமயந்தியின் மனவுறுதிக்கு மகிழ்ந்த
வனாகிச் சொல்லுகிறான்.

ஓ மாதுசிரோமணி! இந்திரன் கருத்துக் கிசை
யாவிடினும், மற்ற வாயு - அக்கினி-இயமனாகியமூவர்
களுள் உனக் கிஷ்டமானவருக்கு மணமாலை சூட்
டென்று கூறினன் அதற்குத் தமயந்தி சொல்லுகி
றாள். மகாராஜனே ! இந்திரன் கருக்துக்கிசையாத
நான் மற்ற மூவர்கருத்துக் கிசைவனோ ? அவர்க
ளென்ன தேவர்களல்லவா ? போகம் - ஆயுள் - புகழ்
செல்வம்-ஆகிய இந்நான்கு பொருளும் அற்பம் கற்
பொன்றிருக்குமாகில் மேற்குறித்தநான்குந் தனக்குத்
தானே வந்தடையும். அவ்வளவு சிறப்புற்ற கற்புடை
மையை நீக்கிச் சொற்பபொருள்களுக் கிச்சைகொள்
பவர் யார் ? ஒருவருமில்லை. கற்புடைமையிற் கருத்
தைச் செலுத்தியமாதர் கருதிய புருஷனுக்கு மாலை
யிடுவரே யன்றி, மற்றவர்க்கு மாலையிடார்கள். ஒரு
வேளை கருதிய புருஷன் கைக்குக் கிட்டாமற் போ
னல், அக்கினியில் விழுந்திறப்பரென்று கூறினள்.
அதை நளன்கேட்டு உள்ளம்பூரித்துச்சொல்லுகிறான்
ஓ மாதுசிரோமணி ! நீ கூறிய வாக்கியத்தை யுய்த்து
நோக்கினல் இந்திரன் முதலான நால்வரை மணம்
புரியேனென்றும் கருதியபுருஷனுக்கே மாலையிடுவே
னென்றும், கருதிய புருஷன் கைக்குக் கிட்டாதகா
லத்தில் நெருப்பில்விழுந் திறப்பேனென்றும் அர்த்த
மாகின்றது. நெருப்பில் விழுந் திறந்தால் அக்கினியை
மணந்தது போலாகும். அல்லது நீரில் விழுந்திறந்
தால் வருணனை மணந்ததுபோலாகும். இதற்கென்ன
சொல்லுகிறாய் ? அப்போது நீ கூறியவாக்கியம் பழு
தாகின்றதே யென்று வேடிக்கையார்த்த மாகவும்,
ஆக்ஷேபனை யாகவும் வினவினன்.

இந்த வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்தில்
தமயந்தி மதிமயங்கி, உத்திரவுகொடுக்கச் சக்தியற்ற
வளாகி, ஓ ! ஓ. இந்த மஹாராஜன் நம்மேல் விருப்
புற்றவனாக இருப்பானாகில், நமது வாக்கியத்தை
ஆக்ஷேபிப்பனோ? அன்னம் நம்மைக் குறித்து விசே
ஷித்துரைக்கவில்லை போலுந் தோன்று கின்றது
ஐயோ ! நளமகாராஜனே என்னுயிரென்று நினைத்தி
ருக்குமெனதுயிர்சோர அவரே இச்சொல்லைச் சொல்
லத் துணிந்தமையால் உயிரைப் பருகும் யமதூத
ரென்பவ ரிவரேயென் றேங்கிமனந்தளர்கின்றபோது
இருவர்க்குந் தூதாகச்சென்ற அன்னம் அவ்வேளை
யில் அந்த யிடத்துக்குவந்து, மனவருத்தப்படுகிற
தமயந்தியைப்பார்த்து, ஓ அம்மணி! தூதாகவந்தால்
அந்தவிதிக்கு மாறுபடாமல் நடக்கவேண்டுவது தகுதி
யாதலால் மஹாராஜன் தாட்சண்ணிய மின்றிச் சில
வார்த்தைகளைக் கண்டிப்பாகப் பேசினன் அதைக்
குறித்து அரசனுக்கு நம்மிடத்தி லன்பில்லை யென்று
மதிக்கலாமா ? நீ வருத்தப்படாதேயம்மாவென்றுகூறி
அரசனைப்பார்த்து, ஓ மஹாராஜனே ! மஹாபண்டி
தரெல்லாம் உமது !சொல்லுக்கு விடை கொடுக்கா
ரென்றால், பெண்பாலாகிய தமயந்தி விடைகொடுப்ப
ளோ? நீர் வந்த தூதுக்கிசைந்தபடி பேசினீர். அப்ப
டிபேசினவர் இங்கு நடந்த விருத்தாந்தத்தை மாத்தி
ரம் உமது யஜமான்களுக்குச் சொல்வதே நலமன்றி,
இவள்சொல்லிற் சொற்குற்றம் பிடித்துப் பரிக்ஷிப்
பது தகுதியல்லவென்று கூறிற்று. அதுகேட்ட அர
சன் மனமகிழ்ந்து, தான்வந்த தூதுபொருந்தாமைக்கு
மனவருத்தமுற்று, தமயந்தியின் மனவுறுதிக்கு மகி
ழ்ச்சியடைந்து, முன்போல் அஞ்சனமிட்டுக் கன்னி
காவலைக்கடந்து, இந்திரன் முதலான நால்வரிருக்கிற
இடத்துக்கு வந்தனன்.

இந்திரன் முதலான நால்வரும் நளனைத் தூது
விட்டபின்பு தாங்கள் வண்டுருபமாகி அவன்பின்னாக
வேசென்று, நளனுந் தமயந்தியும் பேசியவற்றையெல்
லாங் கேட்டுக்கொண்டு, அவனுக்கு முன்னதாகவந்து
தங்கள் பழைய உருக்கொண்டு ஒன்றுமுணராதவர்
போல நளனது வரவைப் பார்த்திருந்தார்கள். நளன்
நால்வருக்கும் நமஸ்காரஞ்செய்து, தமயந்தி கூறிய
வற்றையும் அவள்கருத்தையுந் தெரிவித்தான். இந்தி
ரன் முதலான நால்வரு மகிழ்ந்து, இந்திரன் பலபல
அஸ்திரங்கள் கொடுத்து, அந்தந்த அஸ்திரங்களுக்
குத் தகுந்த மந்திரங்களை யுபதேசித்துநளனை வாழ்த்
தினன். அக்கினிபகவான் நளனை ஆசீர்வதித்து, அன
லின்றி அடிசி லமைய மந்திரோபதேசஞ் செய்து,
அந்த அடிசிலுக்கு நளபாகமென்று பெயர்வரக் கட
வதென்று வரங்கொடுத்தான். வாயுபகவான் நளனை
வாழ்த்தி அஸ்வமந்திரத்தை யுபதேசித்தான். யமன்
நளனுக்குப் பல ஆசிகள்கூறித் தன்கையி லிருக்குங்
கதைக்கு ஒப்பாகிய ஒருகதை யளித்தான். இந்நால்
வர்கொடுத்த பரிசைப்பெற்று நளன் தனது விடுதி
வீட்டுக்குவந் தினிது வீற்றிருந்தான். கேளும் தரும
நந்தனா ! அன்றையதினங் கழிந்தபின்பு மறுநாள்
ஆயிரங் கரங்களையுடைய சூரியன்கருங்கடல்முகட்டி
லுதயமானவுடன், விதர்ப்பதேசத்துக் கரசனாகிய

வீமன் தன் மந்திரிமார்களைநோக்கி, ஓ மந்திரிமார்களே! இன்றையதினம் நமது குமாரத்திக்கு மணம் புரியவேண்டியதாகையால்; முரசு முன்னிலையிற்சகல அரசர்களையும் கல்யாண மண்டபம்வந்து சேரும்படி கட்டளையிடுங்களென்று கூறினன். மந்திரிமார்கள் முரசுமுன்னிலையிற்சகல அரசர்களுக்கு மறிவித்தனர். சகல அரசர்களும் இந்திரன் முதலாகிய நால்வருங் கல்யாணமண்டபம்வந்து சேர்ந்து, அங்கிட்டிருக்குஞ் சிங்காதனத்தி லினிதுவீற்றிருந்தார்கள் ஏகசக்கிராதிபதியாகிய நளராஜன் தன்பரிசனங்களை நிறுத்தி, சிலரோடு வெளிப்பட்டு வெண் பட்டுக்குடைகவிய நவமன்மதன்போல்நடந்துநகரத்தையடைந்து, கல்யாணமண்டபம்வந்து அங்கிட்டிருக்கும் கோடி சூரியப்பிரகாசமாகிய சிங்காதனத்தி லினிது வீற்றிருந்தான்.

இப்பால் வீமராஜன் தன்குமாரத்தியை அலங்கரித்துக்கொண்டுவரும்படி தாதியர்களுக்குக் கட்டளையிட்டான். தாதியர் தமயந்திக்கு ஸ்நானஞ் செய்வித்து ஈரம்புலர்த்தி, வெண்பட்டாடை யணிந்து, கரியகுழலைவாரிச் சடையிட்டு, மல்லிகை முல்லைமுதலிய மாலைகளைப் புனைந்து, சகல ஆபரணங்களுமணிந்து, கலவைச்சாந்துபூசி. மகாலட்சுமியும் நாணத்தகுந்த அழகினையுடைய தமயந்தியை அலங்காரஞ் செய்து, கல்யாணமண்டபத்துக்கழைத்துவந்தார்கள். தமயந்தி தன்பிதாவாகிய வீமராஜனை வணங்கி நின்றனள். பிதா தன்புத்திரியின் முகக்குறியை அறிந்து, லோககர்த்தாவாகிய திருமாலைத் தியானித்தான். திருமாலுள்ளங்கனிந்து பிரமனைநோக்கி, ஓ புத்திரசிகாமணியே! நின்மனைவியாகிய சரஸ்வதியைத் தமயந்திக்குத் தாதியாக இருந்து வந்த அரசர்களின் பெயரை எடுத்தோதிவரக் கட்டளையிடென்றுகூறினர். பிரமன் தன்மனைவியாகிய சரஸ்வதிக்குக் கட்டளையிட்டனன் சரஸ்வதி ஒரு மானிட ஸ்திரீபோல்வந்து தமயந்தியின்கரத்தைப் பற்றிக்கொண்டு, அரசர் குழாமிருக்குமிடத்துக்குச்சென்று, அங்குவந்திருக்கும் மன்னர் மன்னர்களைச் சுட்டிக்காட்டி, அவரவர்கள் பெயரையும்-சிறப்பையும்-தேசத்தையும்-எடுத்தோதி, நளனுருக்கொண்டிருக்கிற இந்திரன் முதலானவர்களைக் குறித்துத் தனித்தனியே சுட்டிக்காட்டி, அவர்கள் விண்ணவரென்று விளங்கச் சிலேடைமொழிகளால் தெரிவித்து, நிடததேசாதிபதியாகியநளராஜனிடத்து வந்து அவனைக் குறித்துக் காட்டிச் சொல்லுகிறாள். ஓ அம்மணி! இதோ இருக்கும் அரசன் வெற்றியிற் குமாரசுவாமியையும், அழகில் மாரனையும், காத்தலில் திருமாலையுமொத்தவன். இவன்தான் நிடததேசாதிபதியென்று கூறினள்.

இப்படிகூறிய தாதியாகிய சரஸ்வதியின் வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் தலையை நிமிர்ந்து நளனைப்பார்த்தாள். அப்போது தாதிகாட்டிய நளனோடு ஐந்து நளனிருத்தலைக்கண்டு, அவருள் நால்வர்க்குக் கண்ணிமைக்காம லிருத்தலையுமாலைகள் வாடாதிருப்பதையுங் கண்டு, இவர்கள் தேவரென்று தெளிந்து, வாடியமாலையுங் கண்ணிமைத்தலையுமுடைய நளனையே நளனாக உணர்ந்து, தன்கையிலிருக்கும் பரிமளமிகுந்த நறுமலர் மாலையை யெடுத்துக் குமாரசுவாமிபோல விளங்கும் நளராஜன் கழுத்திற்சூட்டிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றாள். அங்கவேளையில் அந்தரதுந்துமி முழங்கிற்று. அப்சரஸ்திரீகள் மங்களம் பாடினர். தேவர்களெல்லாங் கற்பகப்பூவை மாரிபோல்தூவிப் பல ஆசிகள் கூறினர். கல்யாண மண்டபத்தில் பேரிகை-டங்கா-டமாரம்-காளம் - எக்காளம்-பேய்க்காளம்-சின்னம் - துத்தாரி - முதலிய வாத்தியகோஷமும், அரசர்களின் கோஷமும் அண்டரண்டங்கள் அதிரமுழங்கிற்று கேளும் தருமநந்தன! பாலசுப்பிரமண்ணியரிடத்துத் தெய்வயானை யிருந்ததுபோல நளராஜனிடத்துத் தமயந்தி சேர்ந்தமாத்திரத்திற் கல்யாணமண்டபத்தி லிருந்த ஐம்பத்தாறு தேசத் தரசர்களெல்லாம் முகம் வேறுபட்டுச் சினங்கொண்டு, நளனைப் புறங்கண்டவர்க்கே தமயந்தியுரியவளென்றுகூவிக்கொண்டியாவரும் ஒருமிக்கத்திரண்டு போர்க் கெழுந்தனர். அதனை நளன்கண்டு குறுநகைகொண்டு, வீமராஜனிடத்துத் தமயந்தியை ஒப்பிவித்துப் பாதுகாக்கச்சொல்லி, தான் தன் இரதகஜதுரகபதாதிகளோடு போர்க்கோலங் கொண்டு, தன்னை எதிர்த்த அரசர்களோடு மேலிட்டு வில்லைவளைத்து, நாணி எறிட்டு டங்காரவோசை யெழுப்பி, சேனைமாரிபோற் கணைகளைத்தூவி, யார்யார் என்னென்ன கணைகளைத் தொடுத்தார்களோ? அதற்குப் பதிலாகவும் - மாறாகவும் - அவ்வக் கணைகளைவிட் டறுத்து, தேரையுடைத்து, குதிரைகளைக் கொன்று, யானைகளைப்பிளந்து, காலாள்களை யதமாக்கி, அரசர்களைக் கைகாலாடவொட்டாமல் நாராசங்களைத் தொடுத்து அட்டகாசஞ் செய்தான்.

அவனோடு அரசர்களெல்லாம் எதிர்நின்று போர்செய்யச்சக்தியற்றவராகி, முதுகுகாட்டித் தங்கள்தங்கள் நகரத்துக்குச்சென்றனர். இந்திரன் முதலாகிய நால்வரும் மற்ற தேவர்களுந் தத்த மிருப்பிடத்துக்குச் சென்றனர். இங்கே நளன் தன்னை எதிர்த்த அரசர்களை வெற்றிகொண்டு ஜெயசங்கம்பூரித்து, தனது சேனைகளோடு அரண்மனைக்குத் திரும்பினன் உடனேவீமன் எதிர்சென்று, நளனை அழைத்து வந்து ஸ்நானஞ் செய்வித்து, நல்ல சுபமுகூர்த்தத்திற் கல்யாண மண்டபத்தில் தன் குமாரத்தியைக் கொண்டுவந்து நளனோடு உட்காரவைத்து. வேதவேதியர்களாற் கல்யாணச் சடங்கைக் குறைவின்றி நிறைவேற்றி. மங்கலத்தை நளன்கையா லணிவித்து, சகல வாத்தியங்களுமுழங்க ஆசீர்வதித்து, நாடு - நகரம்-ஆடை-ஆபரணம்-தாதியர் முதலியவைகளைச் சீதனங்

கொடுத்து, வேதவேதியர்க்கும் மற்ற வித்வஜனங்கள் முதலானவர்களுக்கும் உள்ளம்பூரிக்கத் தானஞ் செய்து, இரவலர் முதலானோருக்கு இருகையாலும் ஓயாமற் சொர்ணமாரிபெய்து, மகளையும் மருமகனையும் அரண்மனைக் கழைத்துப்போய் மணவிருந் தளித்து மகிழ்வுற்றனன். நளனுந் தமயந்தியும் ஆறாத காதல் கொண்டு, ரதியு மதனும்போலக் கூடிக்கலந்து சுகத்தை அனுபவித்து, சிலநாள் விதர்ப்பதேசத்தில்தானே யிருந்து, பின்பு வீமராஜனிடத்து விடைபெற்றுத் தானுந் தன்மனைவியு மிரதமேறி, தன் நால்வகைச் சேனையுந் தொடர்ந்துவரத் தன்னகரத்துக்குட்சென்று, அந்நகரை வலமாகவந்து அரண்மனைக்குட் புகுந்து குடிகள் முதலான யாவர்க்கும் விருந் தளித்து, தானுந் தன்மனைவியுமாக வின்பத்தை அடைந்திருந்தான்.

கேளுந் தருமநந்தன! சத்தியத்தினாற் சக்கரம் நடாத்திவரும் நளன் இவ்வாறு சுகித்திருக்கிற காலத்திற் கல்யாண மண்டபத்துக்கு வந்திருந்த இந்திரன் முதலான நால்வருஞ் சொர்க்கலோகஞ் செல்லும்போது, சனிபகவான் அந்நால்வர்க்கெதிராக அரையிலிருக்கும் ஆடைசோர்வதையு மறியாமல் அதிகவிரைவாக ஓடிவந்தான். அவனை இந்திரன் முதலான நால்வருங்கண்டு, ஓ சனிபகவானே! இவ்வளவு வேகமாக எங்கு செல்கிறாயென்று வினவினர். சனிபகவான் சொல்லுகிறான்: ஓ சொர்க்காதிபதிகளே! பூலோகத்தில் விதர்ப்பதேசத் தரசனாகிய வீமராஜன் தமனமுனிவரத்தால் ஒரு கன்னிகையைப் பெற்றானாம் அக்கன்னி மிகுந்த சுந்தரத்தை யுடையவளாம் அவளுக்கு இன்று கலியாணஞ்செய்ய நிச்சயித்து சுயம்வரஞ் சாட்டியிருக்கிறானாம் அதற்காக நானிவ்வளவு வேகத்தோடு செல்கிறேனென்றுகூற, இந்திரன் முதலான நால்வருஞ் சிரித்துச் சொல்லுகிறார்கள் ஓ சனீஸ்வரா! வீமன புத்திரிக்குச் சுயம்வரமென்று கேள்விப்பட்டு தான் நாங்களும் உன்போலக் காதல் கொண்டு சென்றோம். ஆனால் அவள் நளராஜன்மேற் காதல் கொண்டவளாகி எங்களை நீக்கி நளனுக்கு மணமாலையைச் சூட்டினள். அதுகண்டு அரசர்களெதிர்த்துப் போர்புரிந்து புறங்காட்டித் தத்தம் பதிக்குச் சென்றனர் நாங்களும் வந்துவிட்டோம். நீயேன் செல்லுகிறீர்? வாருமென்றழைத்தனர். சனிபகவான் அதிககோபங்கொண்டு, நான் காதல்கொண்ட தமயந்தியை மணந்த நளனையும் அந்தத் தமயந்தியையுங் கனவருத்தத்துக் குள்ளாக்காமல் விடேனென்று சபதங்கூறி, நிடததேசமடைந்து, மாவிந்த நகரத்திற் புகுந்து, அந்நகரத்தி லிருப்பவர்கள் ஒழுக்கத்தைக் கண்டு வியந்து அரண்மனைக்குட் சென்றான்.

அங்கே நளனிருக்கும் நெறியும் அவன் நடாத்தும் அரசுரிமையையுங் கண்டு கனவருத்தமுற்று, இந்த மஹாராஜனை நாம் பிடிப்பது எவ்வாறு? இவனது நற்குணநற்செய்கையை அறியாமல் தேவராஜன் முன் சபதங் கூறிவிட்டோம். இந்திரன் சமுகத்தில் இனி எப்படி நிற்கிறதென்று பலவாறு துன்பமுற்று, அங்கிருக்கும் ஒருதான்றிமரத்தில் ஏறிச் சமயம்பார்த்துக்கொண்டிருந்தான் நளன் மநுசாஸ்திரவிதிபிசகாமற் செங்கோல் செலுத்தித் தமயந்தியினோடு கூடிக்கலந்து, ஒரு புத்திரனையும் புத்திரியையும் பெற்றான் இதுவரைக்கும் ஒழுக்கத்திற் சிறிதுந்தவிர்ந்தவனல்ல. ஒழுக்கத்தில் நின்றும் நீங்காத நளன் ஒருநாள் காலலம்பும்போது, புறங்காலில் எள்ளளவிடம் நனையாமலிருந்தது. சனிபகவான் அதுகண்டு, இதுதான் தருணமென்று நனையாதிருந்த புறங்காலில்வந்தடைந்தான். சனிபகவான் பாதத்தில்வந்து சேர்ந்தமாத்திரத்தில் தருமசிந்தையையுடைய நளன் குணமாறுபட்டு, வேட்டையாடக் கருத்துகொண்டு வேட்டையாடியும், முன்னம் நடக்காமல் நீக்கிய சில கொடிய நீதியைத் தழுவியும் அரசுசெய்து வந்தான். செல்வஞ்சிறிது குன்றிற்று ஒளி நாளுக்குநாள் மழுங்கிற்று. நளனது நடத்தையைக்கண்ட குடிகளும்-மற்ற அரசர்களும் - ஆச்சரியத்தையடைந்து, எண்ணாததுமெண்ணித் தங்களுக்குள் வருத்தமுற் றிருந்தனர் அப்போது சனிபகவான் இந்த நளனைப் பராரியாக்கக்கருதி, நளனுக்குப் பகுதிகட்டும் அரசரிலொருவனாகிய புஷ்கரராஜனிடத்துச் சென்று, அவனைத் தேற்றித் தன்வசமாக்கி, ஓ அரசனே! நீயிப்போதே சொக்கட்டானென்கிற சூதில் வல்லவனென்று கொடிபோட்டுக்கொண்டு மாவிந்தநகரம் வந்து சேர்ந்து நளனோடு பந்தயம் வைத்தாடு. அந்த நளனுடைய நாடு நகர முதலியவற்றை உனக்குச் சுவாதீனப் படுத்துகிறேன். என்று வாக்குத்தத்தஞ்செய்து கொடுத்து அவனை வரும்படி திட்டஞ்செய்ய, அப்புஷ்கரன் சனிபகவான் உத்தரவையுறுதியாகக்கொண்டு, தன் தேரிற் சூதுக்கொடிபோட்டு மாவிந்த நகரத்துக்குவந்து தன் வரவைத் தெரிவித்தான்.

அதனை யுணர்ந்த நளன் புஷ்கரனை வரும்படி கட்டளையிட்டு, வந்த புஷ்கரனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து உட்காரவைத்து, நீர் சூதுக்கொடி பிடித்தகாரணமென்னவென்று வினவினன். புஷ்கரன் சொல்லுகிறான்: ஓ மகாராஜனே? சூதாடுபவரிலென்னைப்போல வல்லவர் நெடிய கடல்சூழ்ந்த இந்த பூமண்டலத்தி லொருவருமில்லை ஆதலால் அதனையே ஒருவிருதாகப் பிடித்திருக்கிறேன. யாராவதென்றனை வெல்பவரிருந்தால் இந்த விருதையும் இத்துடன் என் நாடுநகர முதலிய எல்லாவற்றையுங் கொடுத்துவிடுகிறேன். தோற்பாராகில் அவர்களைப் பராரியாக்கிக் காட்டிற்றுரத்திவிடுவேன். இதுதான் என் கருத்தென்றுகூற, நளன் குறுநகைகொண்டு சொல்லுகிறான்: ஓ புஷ்கரா! இந்தச் சூதுக்கொடி பிடித்துக்கொண்டு எத்தனை அரசரை வஞ்சித்தாய்? நல்லது நம்மோடு ஒரு ஆட்டம் ஆடுகிறாயாவென்று வலிய வினவினன். அவ்வினாவுக்குப் புஷ்கரன் மகிழ்ந்து,

அந்த வாக்கியத்தை உறுதிப்படுத்தக் கருதிச் சொல்லுகிறான் · ஓ மஹாராஜனே ! நீர் மஹாயோக்கியர் உமக்கு இந்தச் சூதாடத் தெரியாது. நீரேன் வீணாகப் பெருமை யிழக்கின்றீர் ? வேண்டாம் என்று கூறியும் நளன் கடுஞ்சினமடைந்து, அடா புஷகரா ! சூதாடுவதில் நீ வல்லவனென்றும், அந்த வல்லமை என்னிடத்திலில்லையென்று மதித்தனை. சபாசு ! நல்லது ஒரு ஆட்டம் ஆடு. நான் தோற்றால் என் நாடு நகரத்தைக் கொடுத்துவிடுகிறேன். நீ தோற்பையாகில் அந்தக் கொடியைப் பறித்துக்கொள்வதுமன்றி, உன் நாடு நகர முதலியவற்றையும் பறித்துக்கொள்ளுவேனென்று கூறினன். நளன் வாக்கியத்தைக்கேட்ட புஷ்கரன் சிரித்து, நல்லது உமது கருத்தின்படி சூதாடுவோம் வாருமென்றுகூறி, சூதப்பலகையை விரித்துக் காய்களை வைக்கு முறையுடன் வைத்தான்.

கேட்டீரோ தருமநந்தனா ! இந்த விபரீத காரியத்தை அந்நளனுடைய மந்திரிமார்கண்டு மனவருத்தமுற்று, அவர்கள் அரசனுக்கும் பலநீதிகளெடுத்தோதியுஞ் சனியின் மகத்துவத்தால் அரசன் மீறினன் அதைக்கண்ட யாவரும் பெட்டியிற் பாம்படங்குவதுபோல அடங்கிவிட்டார்கள். நளன் எதிர்ப்பந்தயமாகத் தன்நகரத்தை வைத்தாடினான். சனி பகவான் புஷ்கரன் பக்கமிருந்து நளனைத் தோற்கும்படி செய்தான். நளன் பின்னும் ஒரு ஆட்டம் ஆடி நாட்டையந் தோற்றுவிட்டான். இப்படி ஒவ்வொரு ஆட்டத்திற்கு உம்மைப்போல் ஒவ்வொருவகைப் பொருளை வைத்தாடி, தானுந் தன்மனைவியும் புத்திரருந்தவிர மற்றெல்லாவற்றையுந் தோற்றுப் புஷ்கரனிடத் தொப்புவித்து, பின்பு ஒன்றுமற்ற பராரியாகிக் கட்டியவுடையோடு நகரத்தைவிட்டு உங்களைப்போல வனத்துக்கு வந்துவிட்டான். கேட்டீரோ தருமநந்தனா! நீரொருவன்றான் வலியச்சூதாடி வருத்தத்துக்குள்ளானேனென் றேக்கங் கொண்டீரோ ? இந்த நளனுக்கு வந்த வருத்தத்தைக் கேட்டிலீரோ? இந்த நளன் சக்ரேஸ்பரனா இருந்துங் காலத்துக்குத் தக்க புத்தியை யடைந்தானே அன்றி, சுயபுத்தியை வகித்திருந்தானா ? என்று கூறத் தருமராஜன் தான் கொண்ட வருத்தத்தை நீக்கி, உரோமசன்மரை வணங்கிச் சொல்லுகிறார்: ஓ மாதவசிரோமணி ! ஓ எனது துன்பசாகரத்துக் கொரு தோணியாகவந்த மஹாநுபாவா ! நளன் சரித்திரத்தைக் கேட்கவே பின்னும் பின்னு மின்னுங் கேட்கவேண்டுமென்று என்மனம் விரும்புகின்றது ஆகலால் மற்றதையும் விளங்கவுரைக்கவேண்டுமென்று வேண்ட உரோமசன்மர் சந்தோஷித்துச் சொல்லுகிறார்.

கேளும் தருமநந்தனா! காட்டிற்சென்ற நளனுடைய மனஞ் சற்றும் வருந்தாமல், மணமகன் மனம்போல் முகமலர்ந்திருக்கிறது. அன்றியுந் தனக்கு நேர்ந்த விபத்தைக்குறித்து எள்ளளவேனும் வருத்தமடையாமல், தானுந் தன்மனைவியும்புத்திரருமாகக் காட்டிற் சென்றான். அனிச்சமலரையும் அன்னத்தின் தூவியையும் நெரிஞ்சிப்பழம்போல் நினைக்குந் தமயந்தியின் பாதங்கள் காட்டிலுள்ள வெம்பரல்களாற் கண்ணியும், தேகம் வெய்யிலாற் குண்ணியும், பசிபால் வாடியும், தாகத்தாற் களைக்கும், அவளது முகஞ்சிறிதும் வாடாமல், எல்லாம் விதிப்பயனென்று கருதி, நாயகனுடைய வருத்தத்தைக் கண்டுமாத்திர மனந்தளாமல் உள்ளம் நடுங்கி அவனுக்குப் பின் சென்றாள். நளன் சிலதூரங் காட்டிற்சென்று, அங்கு தோன்றும் விதற்பதேசத்திற்குச் செல்லும்வழியைக் கண்டு தமயந்தியை நோக்கி, ஓ மாதுசிரோமணி ! இவ்வழி உன் தந்தையூருக்குச் செல்லும்வழி யாதலால், இந்தவழியாக நீயும் உன்புத்திரருமாகச்சென்று உன் பிதாவினிடத் திருங்கள். நானனுபவிக்க வேண்டியவற்றை யனுபவித்து வந்து சேருகிறேனென்றான். இந்த வாக்கியம் நன்றாகச் செவியிற்படுமுன் தமயந்தி சோர்ந்து விழுந்து எழுந்து நின்று வணங்கிச் சொல்லுகின்றாள் : ஓ பிராணநாயகா ! உத்தமஸ்திரீகள் நாயகனைவிட்டுப் பிரிந்திருப்பதைக் கேட்டிருக்கின்றீர்களா ? அப்படியிருக்க-என்னை என் பிதாவினிடஞ் சேரக் கட்டளையிடுவது என்மேல்வைத்த அன்புடைமையோ,? அல்லது என்னைக் காப்பாற்றுஞ் சுமைபாலுமக்குத் தலைநோவுகின்றதோ ? அவ்வகைப்பட்ட கட்டளையிடாமல் அடியேனைமாத்திரம் பிரியாமலிருக்கும்படி வேண்டுகிறேனென்றாள்.

அவ்வாக்கியத்தைக்கேட்ட நளன் அனலிடு மெழுகுபோல மனமது உருகி, சற்றுநேரஞ் சோர்வுற்றுப் பின்பு தெளிந்து நிற்கின்ற தருணத்தில் ஒரு வேதியன் கண்ணுக்குத் தோன்றினன். அவ்வேதியனை யருகி லழைத்துப் புத்திரர்களை அவன் வசத்திலொப்பி வைத்து, இவர்களை வீமராஜனிடத் தொப்பிவித்துவிடென்றுகூறி அவனிடத்து விடைபெற்று, தானுந் தமயந்தியுமாகச்சேர்ந்து காட்டிற்சென்று, காய்கனிகளை யருந்திப் பசிநோயைத் தவிர்த்துக் கொடிய வனத்திற் சஞ்சரித்துக்கொண்டு வருகிறநாளில்; ஒரு நாள் சனிபகவான் இந்த இருவருக்கும் ஒரு உடையாக இருக்கக் காணவேண்டுமென்கிற விருப்பத்தைக் கொண்டு, (அட்டமச்சனியன் புட்டத்துத் துகிலைக் கொண்டுபோவான்.) என்கிற பழமொழியைத் திருஷ்டாந்தப்படுத்தத் தன்மாயையாற் சில அன்னங்களை உண்டாக்கி, இருவர் வரும் வழியில் மேய்ந்து திரியும்படி கட்டளையிட்டான். அவ்வன்னங்களை நளனுந் தமயந்தியும் பார்த்து, முன்னங் கூட்டுவித்த அன்னம் போலிருக்கிறதுகளென்று யோசித்து நிற்கும்போது; தமயந்தி ஓர் அன்னத்தைப் பிடித்துக்கொடுமென்று தன் கணவனை வேண்டினள். நளன் தானணிந்த வஸ்திரத்தை யவிழ்த்து வலைபிட்டதுபோல அன்னங்கள் மேல் விசறினள். அன்னங்கள் தங்கள் மேல் விழுந்த

வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டு அந்தரத்திற்பறந்து துலைவிற்சென்று சில சொல்லுகின்றன.

ஓ நளராஜனே! நீங்களிருவரும் ஒரு ஆடை புனைந்திருக்க எங்கள் யஜமானாகிய சனிபகவான் எங்களைப்பற்ற எறிந்தனை. யாங்கள் அதனை எடுத்துக்கொண்டு பறந்துவந்துவிட்டோம் இனி இந்த ஆடையுனக்குக் கிடைக்காதென்றுகூறி மாயமாக மறைந்துவிட்டன. நளன் இச்செய்கை சனிபகவானது செய்கையென்றுணர்ந்துகொண்டு, தன் மனைவியுடையிற் பாதியுடையைத் தான் போர்த்துக்கொண்டு சரியாக நடந்து, அவ்வனத்தைக் கடந்து மற்றொருவனத்திற் சென்று, அன்றுபகல்முழுதுங் காடெல்லாம்அலைந்து காய்கனிகளைத்தின்று பசியைத் தணித்துக்கொண்டு, சூரியன் அஸ்தமித்தவுடன் அக்காட்டிலிருக்கும் ஒரு பாழ் மண்டபத்தில வந்து, அன்றிரவுப் பொழுதைத் துலைக்க அந்த விடத்தில்தானே பருக்கைக் கல்லுகளைப் பஞ்சணையாகக்கொண்டு சயனித்தனர். கேட்டீரோ தருமநந்தனா! இவ்வாறு நளனுந் தமயந்தியும் பாழ்மண்டபத்திற் சயனித்து நித்திரைகொள்ளும் போது, சனிபகவான்கண்டு இவர்களைப் பிரிக்கவேண்டுமென்று கருதினன் சனிபகவா னினைத்தமாத்திரத்தில் நடுச்சாமத்தில் நளன் நித்திரை தெளிந்து, வெம்பரலில் நித்திரைசெய்யு மனைவியைக்கண்டு பலவாறு புலம்பி, இந்த மாது நம்மைவிட்டுப் பிரிவதரிது. நித்திரை செய்யும்போது பிரிவோமாகில் விடிந்தவுடன் நம்மனைவி நாம்காட்டியவழியாகச் சென்று தன்தந்தைபா லிருந்து கிஞ்சித்துச் சுகமுற்றிருப்பள். என்றுகருதிப் பிரியத்துணிந்து, இருவர்க்கு மொருவஸ்திரமாதலால் அவ்வஸ்திரத்தைக்கிழிப்பதற்குக்கருவியில்லாமல் மயங்கி, அங்கு சுற்றிலும் பார்க்கும்போது சனிபகவான் ஒருகத்தியாக இருந்தான்.

அதனை நளன்கண்டு, அக்கத்தியால் ஆடையை வகிர்ந்து கட்டிக்கொண்டு, தமயந்தியின் திருவுருவத்தையும் அவளிருந்த செல்வத்தையும்நினைத்து, வெம்பரலிற் படுத்து நித்திரைசெய்வதைக்கண்டு அனலிடுமெழுகுபோல் மனமது உருகி எழுந்திருப்பான், உட்காருவான். கண்ணீர்விட்டுப் புலம்புவான். துணிந்து விரைவிலெழுந்து நடப்பான். வருவான். தமயந்தியை முற்றும்நோக்குவான். ஆகாயவாணியைப்பிரார்த்தித்து இம்மாது உன்னடைக்கலமென்று கூறுவான். தேவர்களைத் துதிப்பான். இவ்வாறு பலதுன்பமுற்றுப் பிரிவுறாத கருத்தையுடையநளன், சனியன்மகத்துவத்தால் மனைவியை நடுக்காட்டில் நடுச்சாமத்தில் விட்டுப் பிரிந்து நெடுந்தூரஞ் சென்றான். அங்கச் சனிபன் மகத்துவத்தால் ஒருமூங்கிற்புதற் நெருப்புப்பட்டு வேகின்றது. அதனை நளன்கண்டு அவ்விடத்திற் சென்றபோது, அந்தப் புகலில் ஒரு நாகம் ஓவென்று புலம்பி, ஓ நளராஜனே! ஓ மஹாமண்டலேஸ்வரா! தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாதுகாக்குந் தயாநிதீ! என்னுயிர்க் கிடையூறு வராமலிருக்கக் காப்பாற்ற வேண்டுமென்று பலவாறு துதித்தது. அதை அருட்கடலாகிய நளன்கண்டு, தக்ஷணம் அங்கிருக்கும் மங்களில் ஒருமரத்தின் கொம்பைக் கொண்டு பாம்பை நெருப்பில்நின்றுமெடுத்து வெளியில்விட்டான் நெருப்பைவிட்டு நீங்கி உயிர்பிழைத்த நாகமானது உடனே நளனது காற்பெருவிரலிற் கடித்தது. கடித்தமாத்திரத்தில் விஷாக்கினியால் நளனது திருவுருவங் கரியமுகில்போற் கறுத்துப்போயிற்று.

அதனை நளன்கண்டு மனவருத்தமுற்று நாகத்தைநோக்கி, ஓ நாகமே! நான்செய்தவுதவிக்கு நீ நல்லவுதவிசெய்தனை. இப்படிசெய்ய உனக்கு விருப்பமிருந்தால் நானென்ன செய்வேனென்று கூறினன். அதற்கு நாகஞ் சொல்லுகின்றது. ஓ மகாராஜனே! நீ மகாமண்டலேஸ்பரன். ஏதோ ஒரு காலகதியால்காட்டுக்கு வந்துவிட்டனை. உன்னை யாராவது கண்டால் உனக்கே ஒரு நாணமுண்டாகும். ஆதலால் உன்னுருபிறர்க்குத் தெரியாதிருக்க ன்விஷாக்கினியால் தேகவொளியை மாற்றினேன். நீ உன் சுயரூபந்தரிக்க எண்ணி என்னை யெப்போது நினைக்கின்றாயோ? அப்போதுவந்து கடித்த விஷத்தை வாங்கிக்கொண்டு பழையவுருவம் உனக்குண்டாகும்படிசெய்கிறேன். நீ உன்கருத்துக்கிசைந்த விடத்துக்குச் செல்லென்று கூறித்தான் சிலதூரஞ் சென்று, சனிபகவான் மகத்துவத்தால் தோன்றிய நாகமாதலால் மாயமாகமறைந்துவிட்டது. உடனேநளன் உருவேறுபட்டு, காடு-மலை வனம்-வனாந்திரம் - நாடு நகர முதலியவற்றிற் சஞ்சரித்து, முடிவில் அயோத்தியா புரத்துக்குச்சென்று, அந்நகரத்துக்குத் தலைவனாகிய ரிதுபன்ன மஹாராஜனிடத்துச் சென்று, தேர்ப்பாகனாகவும் அடிசிற்றொழிலபுரிபவனாகவுமிருந்து காலத்தைக்கழித்துவந்தான்.

கேளும் தருமநந்தனா! நடுக்காட்டில் நடுச்சாமத்தில் பாழ்மண்டபத்திற் சயனித்திருக்குந் தமயந்தி தன்னித்திரையிலுங் கணவனைப்பிரியாமலிருப்பவளாதலால், காந்தள் மலர்போன்ற விரல்களையும் பொன்னாற்செய்த வளையல்களையுமுடைய முன்கையாற்கணவனைத் தழுவினள். கணவன் கைக்குக் கிட்டாமையாற் கை பூமியில் விழுந்தது. தமயந்தி திடுக்கிட்டு விழித்துச் சுற்றிலுந் தடவிப் பார்த்தாள். எங்குந் தனது நாயகன் பரிசந் தோன்றாமையைக் கண்டு, ஓவென்றலறி எழுந்து மண்டபமுழுதுந் தேடினள். அப்படிதேடியுங் கணவனில்லாமையைக்கண்டு, வெளியிற் சென்றானோவெனறு மண்டபத்து நாலுதிசையிலும்வந்து தேடிப்பார்த்தாள். அந்நாற்றிசையினுங் கணவனில்லை, என்செய்வாள்? உடனே இரண்டுகரத்தையு நெரித்தும், அக்கரத்தால் முகத்திலும்-வயிற்றிலும்-வாயிலு மறைந்துகொண்டும், பூமியில் விழுந்து புரண்டு முட்டிக்கொண் டழுதும், காட்டிற்கண்டபடி

ஓடிப்பார்த்துப் புலம்பியும், கனவருத்த மடைந்து சோர்ந்து பூமியில்விழுந்தும், மறுபடியுமெழுந்து ஓவென்றரற்றி வயிற்றி லடித்துக்கொண்டும், இவ்வாறு பலவிதமாய் அன்றாத்திரி முழுதும் புலம்பிச் சூரியோதயமானவுடன் மீட்டுமக்காட்டிற் சென்று தேடியும், கூவியும், முறையோ முறையோவென்று தெய்வத்தைநோக்கிப் புலம்பியும், அவ்வனத்திற் சஞ்சரிக்கும் விலங்கினத்தையும் பறவைகளி னினத்தையுங் கண்டுபயந்தவளாக இருந்தாலுங் கணவன்மேலிருக்குமாசையால் அச்சமின்றி அம்மிருகங்களி னிடத்துச் சென்று, ஓ விலங்கினங்களே ! ஓ பறவைக் கூட்டங்களே! என் கணவனைக் கண்டிருந்தாற் சொல்லுங்களென்று வினவிப் புலம்பிக் கொண்டே செல்லும் போது, எள்ளளவேனுங் கிருபையில்லாத சனிபகவான் தமயந்திக்குப் பின்னுந் துன்பத்தைச் செய்யக் கருதி, தன் மாயையால் ஒருபெரிய நாகத்தினை யுண்டாக்கி அனுப்பி வித்தனன்.

அந்தப் பெரும்பாம்பானது தமயந்தியைப்பற்றி விழுங்கத் தலைப்பட்டது. பெரும்பாம்பின் வாயிற்பட்ட தமயந்தியின் துன்பத்தை என்னொரு நாவாற் சொல்லத்தக்கதல்ல. அவள்படுந் துன்பத்துக் களவு கல்வி கேள்வியிலான்ற உமதுமனத்தா லளவிட்டுக் கொள்ளும். அவ்வளவு துன்பத்தை யடைந்து, ஓவென்றலறி, தனது நாயகனைக்கூவி, தெய்வத்தைத் துதித்து, தேகமெல்லாம் நடுங்கி, வெயர்வு நீர்ததும்பி வாய்குழறி, நெஞ் சுலர்ந்து; கைசோர்ந்து, மெய்சோர்ந்து விழுகிறதருணத்தில்; சனிபகவான் மகத்துவத்தால் ஒருவேடன் வில்லம்புமுதலிய ஆயுதங்களோடு தோன்றி, தமயந்தியை விழுங்கின பாம்பைக் கண்டதுண்டமாகக் கண்டித்து விட்டான். தமயந்தி பாம்பின்வாய் நின்றுந் தப்பிப் பிழைத்து வெளியில் வந்துநின்று, பாம்பால்நேரிட்ட துன்பத்தை நீக்கிக் கணவனை நினைத்துப் புலம்பிக்கொண்டு செல்லுகிறாள். அப்போது பாம்பைக்கண்டித்த வேடன் தமயந்தியின் திருவுருவத்தைக் கண்டு காதல்கொண்டு, தமயந்தியி னருகிற்சென்று கர்நகடூரமானசிலவசனங்களை வழங்கினன் தமயந்தி அச்சொற்களைக் கேளாதவள் போலத் தன்கணவன்மீது கருத்தை வைத்துத் தெய்வத்தை நினைத்துப் புலம்பிச்சென்றாள். வேடன் மிஞ்சித் தமயந்தியைமடக்கி அணைக்கநெருங்கினன். பதிவிரதா சிரோமணியாகிய தமயந்திக்கு அதிகசினமுண்டாகித் தன்விழியால் நோக்கினள். அப்படி தமயந்தி பார்த்தமாத்திரத்திற் சாம்பவமூர்த்தியின் நெற்றிக் கண்ணுக்கு எதிர்ப்பட்டு உடலை யிழந்த மாரனைப் போல், அத்தமயந்தின்கண்ணுக்கு எதிர்ப்பட்டவேடனுடலஞ் சாம்பராகிப் பூமியில்விழுந்தது.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! இப்படி சொன்னமாத்திரத்தில் தருமன் முதலானவருங் கற்புக்கரசாகிய பாஞ்சாலியுந் தங்களை மறந்தவர்களாகிப் பின்பு தெளிந்து, இருகண்களும் ஆனந்தக் கண்ணீர்சொரிய இரண்டு கரங்களையுங் கூப்பி உரோமசன்மரை வணங்கிச் சொல்லுகிறார்கள் ஓ முனிநாதா ! உமது திருவாக்கினாற் கேட்டுக்கொண்டு வரும் நளனது சரித்திரமே சரித்திரம் மற்றவை எல்லாம் எங்கள் காதுக்குப்புறம்பானவையாம் ஆகலால் அந்த நளனுடையமற்றச் சரித்திரத்தையும் விளங்க வுரைக்கவேண்டு மென்று கூறலும் உரோமசன்மர் சொல்லுகிறார்: கேளும்தருமநந்தன ! வேடன் எரிந்துவிழுந்த மாத்திரத்தில் தமயந்தி தன்னந்தனியே நடந்து, காடு மலை-வனம்-வனாந்திர முதலியவற்றைக் கடந்து வரும் போது சேதிபதேசத்துக்குச் செல்லும் வழிதோன்றிற்று. அவ்வழியாகச் செல்லும்போது சிலவணிகர் பலசாக்குகளை மாட்டின்மேற் போட்டுக்கொண்டு அவ்வழியிற் சென்றார்கள். அவர்களைத் துணையாகக் கொண்டு, அவர்க ளிறங்கின சோலையில் தானுமொரு பக்கததில் நோருந்திக்களைநீங்கியிருந்து, அந்தவனத்திலிருக்கும் முனிவரைக் கண்டு வணங்கி, அவர்களாற் பல ஆசிகள்பெற்று, அவர்களாலும் வணிகராலுஞ் சேதிபதேசத்துவழிகேட்டுக்கொண்டு, அவ்வழியாகச் சென்று சேதிபதேசமடைந்தாள். அச்சேதிபதேசமடைந்தவள் நகரத்துட்புகுந்து ராஜவீதியிற் செல்லும்போது, தமயந்தியின் தாய்க்குத் தமக்கையினுடைய புத்திரன் அந்நகரத்துக்கு அரசனாயிருக்கிறவன் அந்த அரசனுடைய தாய் வீதியிற் புலம்பிச் செல்லுந் தமயந்தியைப் பார்த்து, தன் தாதிகளால் தமயந்தியை அழைப்பித்து அருகி லுட்காரவைத்து, அவள் துன்பநீங்கப்பல இனியவசனங்கூறி, ஓ பெண் பாவாய் ! உன்தேயமென்ன ? உன்நகர மெது ? நீயெந்தச்சாதி ? நீ வருத்தமுடனிந்த நகரத்துக்கு வரவேண்டிய காரணமென்ன? இவற்றையெல்லாமெனக்குத் தெரியச் சொல்லென்று வினவினள். தமயந்தி உண்மையை வெளிப்படுத்தாமல் ஒரு போக்காகச் சொல்லக்கருதிச் சொல்லுகிறாள்: ஓ அம்மணி . என் கணவரும் நானும் வனத்துக்குவந்துவிட்டோம். வந்தவிடத்தில் என்கணவர் என்னைவிட்டும் பிரிந்துவிட்டார். அவரைத் தேடிக்கொண்டு, காடு - மலை-வனம்-வனாந்திரத்தைக் கடந்து இந்நகரத்துக்கு வந்தேனென்று கூறினள். இவ்வார்த்தையை அந்தமாது கேட்டு. சொற் குறியினால் இராஜ கன்னிகையென்றுணர்ந்துகொண்டவளாகி, தன் மருமகளாகிய சுனந்தையி னிடத்திற் சென்று தமயந்தியைக் காண்பித்து இந்தமாதின் கணவன் கண்ணுக்குப் புலப்படுகிறவரைக்கும் நீ இந்தமாதைப் பாதுகாத்துவாவென்று கட்டளை யிட்டாள். சுனந்தைதன் சகோதரிபோலப் பாவித்துத் தமயந்தியைப் பாதுகாத்துவந்தாள். தமயந்தி கணவனைப் பிரிந்தவளாதலாற் சிறையிருப்பவர் போல் இருந்து, பிராணாதாரத்துக்குமாத்திரம் ஒருவேளை ஜலபானஞ் செய்துகொண்டு உயிரைப் பாது

காத்து கணவன்மேற் கருத்தைச்செலுத்தி நாள்தோதோறும் வருத்தமுற்று சிலநாளிருந்தாள்.

கேளும் தருமநந்தன! தமயந்தியும் நளனும் நகரத்தைவிட்டுக் காட்டுக்கு வரும்போது வழியிலொரு பிராமணனைக் கண்டு அவனிடத்துத் தமது புத்திரர்களை ஒப்புவித்து அப்புத்திரர்கட்கு முதாதையாகிய வீமராஜனிடத்து விடுமென்று சொல்லிவிடுத்து நளனுந் தமயந்தியும்வனத்தைநோக்கிச்சென்றார்களன்றோ? அப்பால் அவ்வேதியன் நளனுடைய மக்களைக் கட்டளைப்படி அழைத்துக்கொண்டு விதற்பதேசத்துக்குச் சென்று, குண்டினபுரத்தி லினிது வீற்றிருந்து செங்கோல் செலுத்தும் வீமராஜன் சமுகங்கண்டு மக்களை ஒப்பிவித்துச் சொல்லுகிறான்: ஓ மஹாராஜனே! இந்த மக்களிருவரும் உமது புத்திரியாகிய தமயந்தியின் புத்திரர் நளன் புட்கரராஜனோடு சூதாடித் தன் நாடுநகர முதலியவற்றைத் தோற்றுத் தன்மனைவியோடு காட்டிற்குச் சென்றார். நான் அவர்களுக் கெதிர்ப்பட்டேன் அவர்கள் இந்த மக்களை உம்மிடத்திலொப்பிவிக்கக் கட்டளையிட்டார்கள். நான் அக்கட்டளைப்படி ஒம்பிவித்து விட்டேனென்றுகூறி விடைபெற்றுத் தன்கருத்துக்கிசைந்த விடத்துக்குச் சென்றான். வீமன் மக்களை வாரித்தழுவி முத்தமிட்டு, நளன்காட்டிற்சென்றதைக்கேட்ட மாத்திரத்தில் அனலிடு மெழுகுபோல மனமது வுருகிக் கனவருத்தமுற்றவனாகி, மகளையும் மருமகளையும் எவ்வாறு காண்போமென்றுகருதிப் பலவாறுசிந்தித்து ஏக்கங்கொண்டு இரவும் பகலுந் தூக்கமின்றி அரசுரிமையிலுங் கருத்தைச் செலுத்தாமல், எவ்வேளையும் இருவரையும் நினைத்து வருத்தப்பட்டு, பின்பு ஒருவாறுதேறித் தூதுவர்களால் இருவரையுங்கண்டு பிடிக்கவேண்டுமென்று கருதி, ஒருநாள் கொலுமண்டபத்தில் வந்து தன்மந்திரிமார்களாற் கைசாஸ்திரத்தில் தேர்ந்த பிராமணரிற் சிறந்த ஒரு பிராமணனை அழைப்பித்து, அவ்வேதியனுக்கு வந்தனை வழிபாடு செய்து சொல்லுகிறான்.

ஓ ஸ்வாமி! தமியேன் நெடுநாள் புத்திரனிலலாமல் மனவருத்தமுற்றுத் தமனமுனிவரிடத் தருமையான பணிவிடைசெய்து, அவர் கிருபையினால் ஒரு புத்திரியையும் ஒரு புத்திரனையும்பெற்றேன். அவ்விருவருள் புத்திரியை என்னையொத்த அரசரெல்லாம் வணங்கும் வீரகண்டாமணியை அணிந்த பாதத்தையுடைய நளனுக்கு மணம்புரிவித்தேன். நளன் புட்கரனோடு சூதாடி நாடுநகரமுதலியவற்றைத் தோற்றுக் காட்டிற் சென்றான். என்மகளும் அவ்வரசன் பின்றுடர்ந்துசென்றாள். அவ்விருவரையும் என்கண்களாற் காணுநாளெந்நாளென்று ஏக்கங்கொண்டிருக்கும்என் கருத்துமகிழ முன்னம் என்மகளைக் கண்டுபிடித்து அழைத்துவந்தால், என்னுடைய செல்வமெல்லாம் உம்முடைய செல்வமாக யிருக்குமென்றுகூற; வேதியன் மகிழ்ந்து அரசன் கருத்துக்கிசைந்து சொல்லுகிறான்: ஓ மஹாராஜனே! உமதுகருத்தின்படி உமது குமாரத்தியைக் கண்டு பிடித்துச் சிலநாளில் அழைத்துவருகிறேனென்றுகூறி விடைபெற்று. நாடு-நகரம்-காடு-மலை-வனம் - வனந்திரங்களிற் சென்று, அங்கங்கிருக்கும் மாதர்களின் கைக் குறிகளைப் பார்த்துக்கொண்டு சேதிபதேசமடைந்து, அத்தேசத்துக்குத் தலைவனாகிய சுவாகுவின் சமுகத்துக்குவந்து, அவன் அனுமதியின்மேல் அந்தப்புரத்துக்குச் சென்று, அங்குள்ள ராஜஸ்திரீகளின் கைகளிருக்குங் குறிகளைப் பார்த்து, அக்குறிகளுக்குள்ள நன்மைதீமைகளையெல்லாம் எடுத்துக் கூறிக்கொண்டுவரும்போது சித்திரப் பிரதிமெய்போல அருகில்நிற்குந் தமயந்தியைக்கண்டு, ஓ அம்மணி! எதோ உன்கையைக் காட்டென்றுதன் கரத்தை நீட்டினன். உடனே தமயந்திதன் கரத்தை நீட்டிக்காட்டினள் தமயந்தியின் கைக்குறிகளைமுன்னமேகண்டு தெளிந்திருக்கிற வேதியன் தமயந்தியின் கரத்தைப் பார்த்தமாத்திரத்தில், ஓ! ஓ! இந்தக்கை விதற்பதேசத்துக்குத் தலைவனாகிய வீமராஜன் புத்திரியின் கரம்போ லிருக்கின்றதென்றுபுலம்பி, யாவருங் காண ஓலமிட்டு ஏக்கங்கொண்டு பூமியில்விழுந்தான்.

அப்போது பிராமணன் வாக்கியத்தைக் கேட்ட தமயந்தியுந் தன்னை மறந்து, அதிக துன்பத்தோடு அவ்வேதியன் பாதத்தில் விழுந்து புலம்பிச் சோர்ந்தாள். இவளுடைய அவகோலத்தைக் கண்ட சுனந்தையுஞ்சோர்ந்தாள் தாதியர்கள் இந்த அவகோலத்தைக் கண்டமாத்திரத்தில் அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன் கேட்டுத் திடுக்கிட்டோடியும் வந்து பார்த்துத் தானுஞ் சோர்ந்து, பின்பு வொருவாறு தெளிந்து, சோர்ந்திருக்கிறவர்களைத் தேற்றி அப்பிராமணனைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஐயா! இந்த மாது எங்கள்குலமாதென்று நானெவ்வளவுந் தெரிந்திலேன் இன்று உம்மால் என்குல மடந்தையரிலும் எனக்குப் பெரியதாயின் குமாரத்தி யென்றுதெரிந்து கொண்டேன். இந்தமாது சிரோமணிக்கு இவ்வளவு துன்பம் வந்தகாரண மென்னவென்று வினவினன். வேதியன் நளனது சரித்திரத்தை யெல்லாஞ் சொல்லித் தான்வந்த காரியத்தையுங் கூறினான். அரசன் மனந்தேறி, விதிவலியை ஒருவரால் விலக்கக்கூடாதென்று சொல்லித் தமயந்தியைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ அம்மணீ! ஓ எங்கள்குலவிளக்கே! என்னால்வந்த அபசாரங்களைப்பொறுத்தாக்ஷி நான் உன்னையறியாமற் பணிவிடைப் பெண்களைப் போலப் பாவித்துவந்தேன். இன்னாரென்று விளங்கினால் நான் அப்படி நினைக்கேன். என்று துணிவுகூறி, இனியவசனங்களால் துன்பத்தை நீக்கி, வேதியனுக்கு வேண்டியமட்டும் நல்ல பரிசுகொடுத்து, தமயந்தியைத் தேரிலேற்றி வீமராஜனிடத்துக் கனுப்பிவிட்டான். தமயந்தி வீமராஜனிடத்துவந்து; ஓவென்று புலம்பிப்

பாதகதில் விழுந்து நமஸ்காரஞ்செய்தாள் வீமனும் வீமன்மனைவியும மகளை வாரித்தழுவிப் புலம்பி, தங்கள் கண்ணீரால் புத்திரியின் மேனியிலிருக்கும் புழுதியைப் போக்கினரென்றால், அவர்கள் பட்டதுயரததை நீரே மதித்துக் கொள்ளுமென்று சொல்லுகிறார்.

கேளுந் தருமநந்தன! வீமராஜன் தன் புத்திரியைப்பார்த்து, ஓ அம்மணி! இவ்விடத்தி லிருந்து உங்கள் நகரத்துக்குச் சென்றபின் நடந்த தென்னவென்று வினவ, தமயந்திநடந்தனவற்றை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லி, நெஞ்சுலர்ந்து வாய்குழறி இரண்டுகண்ணிலும் அருவிபோல் நீர்சோரவிழுந்து புலம்பினள் அவை யனைத்தையும் வீமன் கேட்டு வருத்தமுற்று, புத்திரியைத்தேற்றி, ஓ அம்மணி! சிலநாளில் உன்கணவனைக் காணும்படி செய்விக்கிறேன் நீ இதுமுதற் கவலையற்றிருவென்று உறுதிகூறி அந்தப்புரத்துக் கனுப்பிவிட்டு, தான் கொலுமண்டபத்துக்குவந்து, முன்ன மனுப்பிவித்த வேதியனை யழைத்து, அவனுக்கு வந்தனைவழிபாடுசெய்து ஓஸ்வாமி! என்கருத்து மகிழ்வுற என்புத்திரியைக் கொண்டுவந்துஎன் கண்களுக்குக்காட்டிக்கண்ணீரை மாற்றினீர் அதுபோல இவ்வேளை நீர் சென்று, என் மருமகனையுங் கொண்டுவந்து கண்களுக்குக் காட்டுவீராகி லென்னுயிர் தரிக்கும். உமக்கும் பெருமைகிடைக்கும் என்று பலவாறு புகழ்ந்து கூறினன் வேதியன் அரசன் கருத்துக்கிசைந்து விடைபெற்று நளனைத் தேடச்சென்றனன். தமயந்தி அந்தப்புரத்துக்குச் சென்று மக்களைக்கண்டு வாரியெடுத்துத் தழுவிமுத்தமிட்டுப் பலவாறு புலம்பி, ஜலம் ஒன்று தவிர மற்ற உண்டி ஆடை ஆபரணங்களைக் கண்ணினாலும் நோக்காமலிருந்து காலத்தைக் கழித்துவந்தாள். வேதியன் நாடுநகரமுதலியவற்றிற் சென்று, நெடியகடல்சூழ்ந்த பெரும்புவியையாளு மரசருள் காதலியைக்காரிருளிற் கானகத்தில் விட்டகலு மன்னவருளரோ வென்று இந்த வாக்கியத்தையே எடுத்து மிக உரத்தசப்தமாகச் சொல்லிக்கொண்டு எங்குஞ் சுற்றினவனாய், நவரத்தினங்களை யழுத்திய குத்துக்கால் கொடுங்கை சிகரங்களோடுகூடிய ஒற்றையாழியையுடைய சூரியன் தேரைத்தடுக்குங் கோடிசூரியப் பிரகாசமாகிய மாணிக்கங்களையும் நீலரத்தினங்களையு மழுத்திய மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்த அயோத்தியாபுரியைச்சேர்ந்து, அந்நகரத்துக்குத்தலைவனாகிய ரிதுபன்னராஜன் சமுகத்துக்குவந்தான்.

அப்படி வந்தவேதியனை அரசன்கண்டு எதிர் சென்றழைத்துவந்து, வந்தனை வழிபாடுசெய்து ஒரு ஆசனத்திலிருத்தி உபசாரஞ் செய்தான். வேதியன் பல ஆசிகள்வழங்கிச் சொல்லுகிறான்: ஓ மஹாராஜனே! கடல்சூழ்ந்த நெடிய உலகத்தையெல்லாந் தன்னொரு வெண்பட்டுக் குடைநீழலிற் பாதுகாத்துவரும் மஹாமண்டலேஸ்பரனாகிய நளன் காலகதியால் நாடுநகர முதலியவற்றைப் புஷ்கரராஜனுக்குச் சூதினாற் றோற்றுப் பராரியாகித் தானுந்தன்மனைவியுமாகக்காட்டில் வந்துவிட்டான். வந்த விடத்தில் தன்னை நம்பி வந்த தமயந்தியை நடுகாட்டில் நடுச்சாமத்தில் நித்திரைசெய்யும்போது பிரிந்து தன்னந்தனியே போய்விட்டான். இதனையுய்த்து நோக்கினால் அவன் கற்ற கல்வி கேள்வி முதலானவை எல்லாம் பாழாயிற்றேயன்றிப் பயன்படவில்லை. இந்தநளன்செய்த குற்றம்போல யாவர்செய்தனர்? ஒருவருமில்லை. நளன் சக்ரேஸ்வரனென்று பெயர்பெற்றும் பெருங்குற்றம் பெண்பாலிடதுப் புரிந்தனனென் றிழிவாக எடுத்துரைத்தான். இவையனைத்தையும் ரிதுபன்னன் கேட்டு ஆச்சரியமுற்றிருக்கிற தருணத்தில், அருகிலிருக்கும் நளனாகிய சாரதி இடியைக்கேட்ட நாகம்போல் ஏங்கி மனந்தளர்ந்து வேதியனைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஓ பிராமணோத்தமா! நீர் சகலகலைகளையும் வேதாகமங்களையும் ஐயந்திரி பில்லாமற் கற்றுணர்ந்து, கேள்வியினுமான்றவராக இருக்கிறீர் நீரே ஒருசக்கிரவர்த்தியை முன்பின்யோசிக்காமல் இராஜசபையில் நிந்திக்கலாமா? நான் சொல்லுகிறதைக்கேளும்.

கடல்சூழ்ந்த உலகத்தையாளு மன்னவர்களெல்லாரும் இருபுறமும்வந்துவணங்க வெள்ளையானையின் பிடரியி லினிதுவீற்றிருந்து வெண்பட்டுக்குடைகவிய மஹா பண்டிதர்களெல்லாம் புகழ்ந்துரைக்க அளக்கரிய பராக்கிரமத்தோடு செல்லுஞ் சக்கிரேஸ்வரருக்குங் கெடுதிகாலம் வந்துவிட்டால், சகலபெருமையுமிழந்து தம்மனைவியையும் பகைவரிடமாக்கிக் கெடுவரென்றால்; விதிவலிதோ? மதிவலிதோ? நீர் அதனை யோசிக்காமல் விதிவலியிற் கட்டுண்ட நளனை நிந்திப்பது தகுதியல்லவென்றுகூற, வேதியன்கேட்டு நளராஜனிவன்தானென்கிறநிச்சயத்தால் உள்ளம்நடுங்கியும் நளனைக்கண்டோமே யென்கிற கருத்தால் உள்ளம் பூரித்தவனாய், எதிர்த்து விடைகொடுத்த நளனாகிய சாரதிக்கு விடைகொடுக்காமற் கவுரவத்தோடு அவ்வரசனிடத்து விடைபெற்று விதற்பதேச மடைந்து, தமயந்திக்கு ரிதுபன்னராஜன் சபையில் நடந்தனவற்றைக்கூறினான். அதுகேட்ட தமயந்தி தானுஞ் சந்தேகித்தவளாய், பின்பு இருவரும்யோசித்து, நளன் வருவதற்காக ஒரு மணவோலை யெழுதிக்கொண்டு, வேதியன் முன்போல அயோத்தியாபுரிக்கு வந்து ரிதுபன்னராஜனைக்கண்டு மணவோலையைவைத்தான். அரசன் மணவோலையின் கருத்தை அறிந்துகொண்டு வேதியனைப் பார்த்துச் சொல்லுகிறான்: ஓ பிராமணோத்தமா! வீமராஜன் புத்திரியாகிய தமயந்தி உலகத்தை யெல்லாம் ஆளுஞ் சக்ரேஸ்வரனாகிய நளராஜனுக்கு மணமாலை புனைந்தாள். அவள் மறுபடியும் ஒருநாயகனை இச்சிப்பது தகுதியா? அவளிச்சித்தாலும் அவளுடையபிதா மணவோலை எப்படி அனுப்பிவிப்பான்? இதென்ன ஆச்சரியமென்று வினவ வேதியன் சொல்லுகிறான்:

ஓ அரசனே! நாயகனைப் பிரிந்த தமயந்தி பரமனை நோக்கித் தவஞ்செய்து கன்னிகைப்பருவமடைந்தாள். வீமன் சுயம்வரஞ்சாட்டி மணவோலையனுப்பினன். இதுகுற்றமல்ல. நாளையதினம் மணமாதலால் நீங்கள் வரவேண்டுமென்றுரைத்து விடைபெற்றுப் போயினன். அரசனும் அரசன் சபையிலிருக்கிறவர்களும் மணவோலையைப் பார்த்தமாத்திரத்தில் நெடுந்தூரத்திலிருக்கும் விதர்ப்பதேசத்துக்கு நாளைக்குள் செல்வதரிதென் றொருவர்முகத்தையொருவர் பார்த்திருக்கும்போது, அச்சபையிலிருக்குஞ் சாரதியாகிய நளன் சொல்லுகிறான்: ஓ அரசனே! உமக்கு விதர்ப்பதேசத்துக்குச் செல்லங் கருத்திருந்தாற் பிரயாணங்கொள்ளும் நாளையுதயத்திற்கு உம்மை விதர்ப்பதேசத்துக் கழைத்துப் போகிறேனென்றுகூற, அரசன் கேட்டு மகிழ்ந்து, நாள்தோறுஞ் சாரதியின் திறத்தைப் பார்த்திருக்கிறவனாதலால் நளனாகிய சாரதி சொல்லை நம்பிப் பிரயாணப்பட்டான். நளனாகிய சாரதி அவ்வரசனேறும் முழுரதத்தை முருக்கம்பூப்போல் அலங்கரித்து, நான்கு குதிரைகளைப்பூட்டி, வாயுபகவானுபதேசித்த மந்திரத்தை அஸ்வங்களின் காதுகளிலுபதேசித்துக் கொண்டு வந்தான். ரிதுபன்னராஜன் ஸ்நானஞ்செய்து பூசைமுடித்துண்டு, கலவைச்சாந்துபூசி தாம்பூலமணிந்து, பரிமளமிகுந்த நறுமலர்மாலை புனைந்து, ஆடையாபரணாலங்கிர்தனாகி வந்து தேரின்மேலேறினன். நளனாகிய சாரதி அரசனை எச்சரித்துச் சாக்கிரதையாகத் தயிரியத்தோடிருமென்று கூறித், தான் குதிரைகளை எச்சரித்து இரதத்தை விட்டான்.

கேளும் கருமகந்தனே! நளராஜன்விடும் இரதத்தின் வேகத்தை என்னொரு நாவால் சொல்லத்தக்கதல்லவாயினும், என்னாவுக்கிசைந்த மாத்திரம் எடுத்துச் சொல்லுகிறேன். அந்தத் தேர் மாரனது தேராகிய தென்றற்காற்றோ? கஜேந்திரனோலமிட் டழைக்கும்போதுவந்த திருமாலின் வேகமோ? தனது நாயகிக்குண்டான ஆத்திரத்தோடுங் கூடிய நளனது மனோவேகமோ? இவற்றிலெதுவோ நீரே மதித்துக் கொள்ளும் அந்த ரதத்தின் வேகத்தைக் கண்ட மேகம் மலையின் குகைக்குளொடுங்கிற்று. ஆதிசேடன் முடி நலிவுற்றது. அஷ்டகுல பர்வதங்கள் நடுங்கின. திக்குக்கஜங்கள் தத்தளித்தன. ஒருநொடியில் லக்ஷத்திருபத்தையாயிரம் யோசனை செல்லுஞ் சூரியனுடைய குதிரைகள் வெட்கின. இவ்வாறு ரதத்தை யோட்டிச் சூரியோதயமாகுகிறவேளையில், மாடமாளிகை கூடகோபுரங்களோடு கூடிய குண்டினபுரத்துக்கு வந்தான். தூதுவர்கள் ரிதுபர்ன்னராஜன் வரவை வீமராஜனுக்குரைத்தார்கள். வீமன் அவ்வரசனை எதிர்சென்று அழைத்துவந்து தன் கொலுமண்டபத்தி லிருக்கவைத்து; தகுந்த மரியாதைசெய்து சொல்லுகிறான்: ஓ மஹாராஜனே! தற்காலத்தில் தாங்கள் இவ்விடம் வந்தகாரணமென்னவென்று வினவினன் ரிதுபன்னன் கேட்டுத் திடுக்கிட்டு, ஓ! ஓ! இதென்ன முழுமோசமாக இருக்கின்றது? சுயம்வரஞ்சாட்டி மணவோலை யனுப்பிய துண்மையாக இருக்குமாகில், நம்மையொத்த அரசர்கள் வந்திருப்பார்கள். அரசர்களுமில்லை. இந்த அரசனும் நம்மை இவ்வாறு வினவினன். இது என்னமோ ஒரு மோசமாக இருக்கின்றதென்று பலவாறு தனக்குள் யோசித்துக்கொண்டு, கேட்ட அரசனுக்கு மறுவுத்திரவு சொல்ல நாவெழாமல், ஒரு போக்காகச் சொல்லுகிறான்: ஓ மகாராஜனே! உமது சேவை பார்க்க விருப்பங்கொண்டு வந்தேனென்று கூறினன்.

அதுகேட்ட வீமன் மகிழ்ந்து, ஒரு விடுதிவிட்டு அங்கிருக்கும்படி விடைகொடுத்தனன். ரிதுபர்னன் அரசன்விட்ட விடுதியிற்சென்று பலவாறு யோசித்துக்கொண்டிருந்தான். நளன் குதிரைகளின் களையை நீக்கி, தேர்நிலையில் தேரை நிறுத்திவிட்டு, தன் அரசனிருக்கிற இடத்தில் தானும் வந்திருந்தான். மணவோலையைக் காட்டிய வேதியன் தமயந்தியினிடத்துக்குவந்து, ஓ அம்மணி! உமது கணவனை அழைத்து வந்தேன். உமது கணவன் ரிதுபன்ன ராஜனோடு நமது நகரத்தி லொருவிடுதியி லிருக்கிறான். என்று கூறக்கேட்ட தமயந்தி சிந்தித்து மகிழ்ந்தவளாகி, பிதாவினிடத்துச்சென்று வணங்கிச் சொல்லுகிறாள்; ஓ ஐயா! தாங்கள் ஒரு வேதியனைவிட்டு என் கணவனைத் தேடிக் கண்டுபிடிக்க அனுப்பினீர்கள். அவ்வேதியன் அயோத்தியாபுரியரசன் சமுகத்திற்சென்று என் கணவனை நிந்தித்துக் கூறினன் அதை யவ்வரசன் சாரதி கேட்டு, அந்த நிந்தனைக்கு முகம் வேறுபட்டு எதிர்மொழி தந்தனன். அவ்வேதியன் அந்தச்சாரதி இவ்விடத்துக்கு வருமாறு எனக்கு விவரமென்று கூறி, ஒரு மணவோலைகாட்டி அவ்வரசனையுஞ் சாரதியையும் நமது நகரத்துக் கழைத்து வந்தனன். அந்தச் சாரதி என் கணவனாகிய நிடததேசாதிபதிதானோ? அல்லவோ? அதனைத் தாங்கள் சிலரா லறிந்து கொள்ளவேண்டுமென்று கூறினள். வீமன் கேட்டுத் திடுக்கிட்டு, ஓ அம்மணி! இந்தச் சங்கதிதெரியாமல் என்னிடத்துக்கு வந்த ரிதுபன்னராஜனை நீரேது இங்குவந்ததென்று வினவினேன். இந்தக்காரியத்தை எனக்கு முன்னமே தெரிவித்திருந்தால் ரிதுபன்னன் மகிழ இனியவசனங் கூறுவேன். மிஞ்சிப்போனதற்கு வருத்தப்படுவதிற் பயனில்லை. நீ அந்தச் சாரதியைச் சோதிக்கச் சொல்லுகின்றனையே: உன் கணவன் செய்கையைக் கூறென்று வினவினன். தமயந்தி சொல்லுகிறாள்.

ஓ ஐயா! அந்த ரிதுபன்னராஜனுடைய சாரதி உண்மையாக நிடததேசாதிபதியாக இருப்பானாகில், அறுசுவையோடு பல பதார்த்தமும் அமுதுபடியுங் கொடுத்தால், நெருப்பு-ஜலம்-விறகு-இவை முதலிய

வையில்லாமற் சமையல் செய்வான். அவ்வடிசில்
தேவாமுதத்துக்கு மினிப்பாக இருக்கும். அதனைமுன்
னஞ் சோதித்துக் கொள்ளுமென்றனள் வீமன் அக்
கருத்துக்கிசைந்து, தனது ஏவலாளர்கள் கையில்
அமுதுபடி முதலானவைகளை ரிதுபன்னனுக்குக்
கொடுத்தனுப்பிவித்து, சில தூதுவர்களை யழைத்துச்
சொல்லுகிறான்: ஓ தூதுவர்களே! நீங்கள் ரிதுபன்ன
ராஜனிருக்கும் விடுதிக்குட்சென்று பதிவிருந்து, அங்
கு வந்திருக்குந் தேர்ச்சாரதி சமையற் செய்வதைப்
பார்த்திருந்து, கண்ட அதிசயத்தைவந்து சொல்லுங்
களென்று கூறினன். தூதுவர் அவ்விடுதியிற்சென்று
பதிவிருந்தனர். ஏவலாளர்கள் அமுதுபடி முதலியவை
களை ரிதுபன்னன் சாரதியின்கையிற் கொடுத்தார்கள்.
சாரதி அவற்றைப் பெற்றுக்கொண்டு, நீரின்றி-நெருப்
பின்றி-விறகின்றி-அடிசிற்சமைத்து, அரசனுக்கிட்டு
தானும் புசித்தனன். தூதுவர்களிந்த ஆச்சரியத்
தைக்கண்டு வீமராஜனுக்குத் தெரிவித்தனர். அதனை
வீமன்கேட்டு மகிழ்ந்து குமாரத்தியோடு கூறினன்.
தமயந்தி கிஞ்சித்து ஐயந்தீர்ந்து பின்னுஞ் சொல்லு
கிறாள்: ஓ ஐயா! என்புத்திரனை அனுப்பிவியும்.
அதனாலென்ன விளையுமோ அதனையு மறியலாமென்
றுகூற, வீமராஜன் சிலதாதியரை அழைத்து, நள
ராஜன் புத்திரனை அவர்களோடு கூட்டி அனுப்பி
னன். தாதியர் புத்திரனைக்கொண்டு சாரதியிருக்கும்
விடுதிக்குட் சென்றனர். கேட்டீரோ தருமராஜனே!
"தொடர்ந்த மும்மலமுருக்கிவெம் பவக்கடற்றலை
யக், கடந்துளோர்களுங் கடப்பரோ மக்கண்மேற்கா
தல்." என்றபடி சாரதியாகிய நளச்சக்கரவர்த்தி தன்
புத்திரனைப் பார்த்த மாத்திரத்திற் புத்திரசோகம்
பெரிதாதலால் முன்பின் யோசிக்காமல், புத்திரனை
வாரித்தழுவி முத்தமிட்டு, இரண்டு கண்ணிலும் நீர்
சோரக் கதறினன். அதைத் தாதியர்கள்கண்டு சொல்
லுகிறார்கள். ஆர்கானும்சாரதி! எங்கள் யஜமானியா
கிய தமயந்தியின் குமாரனைக்கண்டு ஓடிவந் தெடுத்
துத் தழுவிமுத்தமிட்டு அழுகிறாய். நீயோ? ஓரச
னுக்குத் தேர்ச்சாரதி. புத்திரனோ? அவ்வரசனைப்
போலொத்த அனேக அரசர்கட்குச் சக்ரேஸ்வர
னாகிய நளராஜபுத்திரன். உனக்கும் அந்தப் புத்திர
னுக்குஞ் சம்பந்தமென்னவென்று உல்லங்கனமாகப்
பேசினர்.

அதை அரசனாகிய சாரதிகேட்டுத் திடுக்கிட்டு,
அடடா!' புத்திரசோபத்தால் நம்மை நாமே வெளிப்
படுத்திக்கொண்டோம் தாதியரோமேலிட்டுச் சுடாத
துபோலச் சொல்லாமற் சுட்டார்கள். என்றுணர்ந்து
தழுவியபுத்திரனைப் பூமியில்விட்டுத் தாதியரை நோக்
கிச்சொல்லுகிறான். ஓ தாதியரே! நானெடுந் தூரத்தி
லிருக்கிறவன். சீவனார்த்தமாக ரிதுபன்ன ராஜனிடத்
திற் சாரதியாக இருக்கிறேன். எனக்கொரு புத்திர
னும் ஒருபுத்திரியுமிருக்கிறார்கள். அவர்களைப்பார்த்து
நெடுநாளாயிற்று. அவர்களைப்போல இப்புத்திரன்
இருந்தமையால் ஆசை வெட்கமறியா தென்கிறது
போலவாரியெடுத்தனன். அதற்காக நீங்களென்னை
நிந்திக்கிறீர்கள் இது உங்களுக்குத் தகுதியல்ல
வென்று கூறினன் தாதிகள் புத்திரனை யெடுத்துக்
கொண்டு வீமராஜனிடஞ்சென்று, சாதிமைந்தனை
எடுத்தணைத்துத் துன்பமுற்றதைக் கூறினர் வீமரா
ஜன் தன்னருகிலிருக்கும் ஒருவேதியனை யழைத்து,
ஓ பிராமணோத்தமா! நீசென்று சாரதியின் மனோபா
வத்தையறிந்து உண்மையைக்கண்டு தெளிந்துவா
வென் றனுப்பினன். பிராமணன் சாரதியிருக்கிற
விடத்துக்குச் சென்று, சாரதின்றிருவுருவத்தைமுற்
றுநோக்கி, ஓ! ஓ! இந்தச் சாரதியின் லட்சணத்தை
நோக்கினால் அரசருடையலட்சணம்போல் இருக்கின்
றது. தேக ஒளியைப்பார்த்தாற் சாரதிபோலுமிருக்
கின்றதென்று ஐயங்கொண்டு அருகிற்சென்று சொல்
லுகிறான்: ஓ சாரதி! நீயார்! உன்பெயரென்ன? நீ
இந்தரிதுபன்னராஜ னிடத்தில் வந்து எத்தனைநா
ளாயிற்று? இதுகளை எனக்குவிளங்கவுரைக்கவேண்டு
மென்றான் சாரதியாகிய நளன் குறுநகைகொண்டு
சொல்லுகிறான்.

ஓ பிராமணோத்தமா! நான் நிடத தேசத்திற்
பிறந்தவன். அந்தநாடு நல்ல செழிப்பானதால் என்
தேகம் இராஜதேகம்போல இருக்கின்றது. நான் நள
சாரத்தியன். நளன் சூதிற்றோற்றன் நாடிழந்து காட்டிற்
சென்றமாத்திரத்தில், நானும் வெளிப்பட்டு இந்த
ரிதுபர்னனிடத்துச் சாரதியாக இருக்கிறேனென்று
தன்னை மறைத்துக்கூற, வேதியன் யாதொன்றும் வச
னிக்காமல் வீமராஜனிடத்துவந்து நடந்தனவற்றைச்
சொல்லினன், வீமராஜன் மனவருத்தமுற்று, சாரதி
யின்வரலாற்றை ரிதுபர்னராஜனிடத்தாவது சென்று
தெரிந்து வாவென்று மீட்டு மவ்வேதியனை அனுப்பி
னன். வேதியன்சென்று ரிதுபன்னனைக்கண்டு, உமது
சாரதியின் வரலாற்றை நன்றாகத்தெரிந்து கொண்டு
யதார்த்தத்தை அரசனுக்குக் கிஞ்சித்துத் தெரிவியு
மென்று கூறிப்போயினன். ரிதுபர்னன் முன்னமே
கலவரப்பட் டிருக்கிறவனாதலால், வேதியன்சொல்லிப்
போயினபின்பு தன் சாரதியை அழைத்து, ஓ சாரதி!
நாம் வேதியன் வாக்கைநம்பி நெடுந்தூரமாகிய இந்ந
கரத்துக்கு வந்துவிட்டோம் வந்தவிடத்தில் மணத்
தை விரும்பிவந்த நமது கருத்துமகிழ அதற்குத்
தகுதியாகியசெய்கை இங்குநடக்கவில்லை. உன்னிடத்
தில் வீமராஜன் சந்தேகங்கொண்டு தூதர்களாலும்
மற்றவர்களாலுஞ்சோதிக்கிறான். இதென்ன காரணம்
எனக்கும் உன்மேற் சந்தேகமாகத்தா னிருக்கின்
றது. ஏனென்றால்-நானோ? சமரதவீரன் என்னைத்
தனிவீரனாகிய நளச்சக்கிர வர்த்திக்குரிய முழுரதத்
திலேற்றி, அந் நளனைப்போலத் தேரை நடத்திவந்
தாய். அதனால் உன்வரவாற்றைக் கண்டுதெளிய விரு
ப்புற்றேன். என்கருத்துமகிழ உன் வரலாற்றை ஒளிக்
காமற் சொல்லென்றுவினவ, அரசன்கூறியவாக்கியத்

தைக்கேட்ட நளன் - ஓ! ஓ! இனிநாம் மறைப்பதிற் பயனில்லையென்று உண்மையைவெளிப்படுத்த விரும்பிச்சொல்லுகிறான்.

ஓ மஹாராஜனே! நான் விதர்ப்ப தேசாதிபதியின் குமாரத்தியை மணந்து என்நகரத்துக்குச் சென்றபின், ஒருநாள் அந்திக்கடன் முடிக்கும்போது காலலம்பினேன். அக்காற்புறத்தில் எள்ளளவு நனையாமலிருந்தது. அது மூலமாகச் சனிபகவான் என்னைப்பற்றிப் பலவித இம்சைக் குள்ளாக்கினன். அதனால் எனக்குப் பகுதிகட்டும் புஷ்கரனுக்குச் சூது முன்னிலையில் என் நாடுநகர முதலியவற்றைத் தோற்றுப் பராரியாகி, கட்டினவுடையோடு நானும் என் மனைவியும் புத்திரருமாகக் காட்டில்வந்து, புத்திரரை ஒருவேதியர் முன்னிலையில் வீமராஜனிடத் தொப்புவித்து, நானும் என்மனைவியுமாகக் காட்டிற் சஞ்சரித்து வந்தோம். அப்போது சனியின் மகத்துவத்தாலென்முன்சில அன்னங்கள் தோன்றின. அவ்வன்னங்களை என் மனைவியானவள் பிடித்துக் கொடுவென்று வேண்டினள். நான் என்னுடைய வஸ்திரத்தையே வலையாகப் பாவித்துவிசிறி எறிந்தேன் அன்னங்கள் அவ்வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு அந்தரத்திற்றாவி, நாங்கள் சனியின் மகத்துவத்தால் வந்தவர்கள். இவ்வஸ்திர முமக்குக் கிடைக்க மாட்டாதென்று கூறி மறைந்துவிட்டன. அதனால் நான் மனவருத்தமுற்று, மனைவியின் உடையிற் பாதியணிந்து சிலதூரஞ்சென்று, அன்றிராப்பொழுதைத் தொலைக்க அங்கிருந்த ஒருபாழ்மண்டபத்தில் வந்து படுத்தேன். சனியின் மகத்துவத்தால் என் மனைவியைப் பிரிய நடுச்சாமத்தில் ஓர் கருத்துதோன்றிற்று. தக்ஷணம் அகஸ்மாத்தா யங்குகிடந்த ஒருகத்தியால் என் மனைவியினுடையிற் பாதி துண்டித்துக்கொண்டு, மனைவியை அங்ஙனே விட்டுப்பிரிந்து வருகிறபோது, வழியில் ஒருமூங்கிற் புதலுள் தீப்பட்டெரிந்தது. அதனைப் பார்க்க அருகிற்சென்றபோது அத்தீயி லொருபாம்பிருந்து புலம்பிற்று. அதனை எடுத்துவிட்டேன். அப்பாம்பு என்னைக்கடித்து என்னுருவத்தைக் கெடுத்து இந்தரூபமாக்கிற்று.

பின்பு உம்மிடத்தில் வந்துசேர்ந்து காலங்கழித்துவந்தேன். வீமராஜன் தன்மகளையும் - என்னையும்-கண்டுபிடிக்கப் பிராமணனை யேவினன். பிராமணன் முன்னம் என்மனைவியைக் கண்டுபிடித்து வீமராஜனிடத் தொப்புவித்து, என்னைக்கண்டு பிடிக்க என்னை இராஜசபைதோறும் நிந்தித்து, உமதுசபையிலும்வந்து நிந்தித்தான். எனக்கு மனம்பொறுக்காமல்மறுமொழிகொடுத்தேன். அந்தவேதியன் என்னை இந்நகரத்துக்கு வரும்படிசெய்ய உமக்குப் பொய் மணவோலைகாட்டி உம்மை இவ்விடத்துக்கு வரும்படிசெய்தான். உம்முடன்நானும் முழூதமேறி இங்குவந்தேன். வந்தவிடத்தில் என்னை இன்னானென்று அறிந்துகொள்ள என்மனைவியும்வீமராஜனுஞ் சிலயேதுக்களால் தூதரைக்கொண்டும் இன்னுஞ் சிலரைக்கொண்டுஞ் சோதித்தார்கள். அவர்களுக்கு நான்உண்மையை வெளிப்படுத்தாம லிருந்தேன். தற்காலத்தில் நீரே என்னை அழைத்து உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டமையால், உண்மையை வெளிப்படுத்தினேன். நான்தான் நளன். என்றுகூறிய வாக்கியத்தைக் கேட்ட ரிதுபன்னன் பிரமித்துச் சித்திரப் பிரதிமைபோற் சற்றுநேரம் அசைவின்றியிருந்து, பின்பு தெளிந்து, ஓ! ஓ! மோசம்வந்தது. மஹாமண்டலேஸ்பரனென் றுணராமல் நாம் ஏவலாளாக இதுவரைக்கு மிந்த மஹாநுபாவனை வைத்திருந்தோமே: இந்த அபசாரத்துக் கென்செய்கிறதென்றேங்கி மனந்தளர்ந்து, தக்ஷணம்விழுந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட் டெழுந்துநின்று, இருகையைக் கூப்பிப்பலவாறுதுதித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். நளன் அவ்வரசனைத் தேற்றிச் சொல்லுகிறான்.

ஓ மஹாராஜனே! உலகத்தில் மக்களுக்குப் பிதாக்கள் எவரெனில், இன்பமாகப் பெற்றோன்-இடர்தனைத்தீர்த்தோன் - எந்தவிதத்திலாவது அன்னமிட்டுப் பாதுகாத்து வந்தோன் - ஓதிவித்தோன்-உபதேசித்தோனாகிய இவ்வைவருமாம். ஆதலால்-என்னை இதுவரைக்கும் அன்னமிட்டுப் பாதுகாத்துவந்தீர். உமக்கு நானென்னவேலை செய்தபோதிலு மதனாலெனக்கொரு இழிவில்லை. உமக்குமொரு குறைவில்லை. இதற்காக நீர்மனவருத்தப்படாதேயும் இன்னமொரு முகூர்த்தத்தில் நான் வெளிப்படுவேன். அதுவரைக்குமென்னை வெளிப்படுத்தா திருக்க வேண்டுமென்று கூறி, இருவருஞ் சமமாக உட்கார்ந்துகொண்டு வசனித் திருக்கும்போது, ஒருதான்றிமரம் இவ்விருவருக்கு மெதிரிலிருந்தது. அதனை ரிதுபன்னராஜன் கண்டு நளனைப்பார்த்துச் சொல்லுகிறான்: ஓ மகா மண்டலேஸ்வரா? இதோ தோன்றுகின்ற மரத்திலிருக்கும் இலை-பூ - பிஞ்சு-காய் - கனி-இவைகளித்தனையென் றெண்ணிவிட் டிங்கிருந்தபடியே சொல்லுகிறேன்: நீர்போய் பார்த்துக்கொள்ளுமென்றுகூறி, அவ்விலை - பூ - பிஞ்சு - காய் - கனி - இத்தனையென்றுரைத்தான். நிடததேசாதிபதி அதனை அறிய அத்தான்றிமரத் தடியிற்சென்று யெண்ணி, கணக்குச் சரிப்பட்டதற்காக அகமகிழ்ந்து திரும்பிவருகிற தருணத்தில், சனிபகவான் சுயரூபத்தோடு தோன்றி நளனது திருவடியிற்பணிந்து சொல்லுகிறான்: ஓ மகா மண்டலேஸ்வரா! ஓ தருமதயாளா! ஓ சத்திய சொரூபா! அபயமபயம். நான்செய்த குற்றங்களனைத்தும் பொறுத்து இரக்ஷிக்கவேண்டுமென்று பலவாறு துதித்தான்.

நளராஜன் சனிபகவானைக் கண்டமாத்திரத்திற் கடுஞ்சினமடைந்து, சபிக்கக் கருத்துகொண்டவனாய்

இருந்தபோதிலும் அடைக்கலமென்பவரைப் பாதுகாக்குந் தயாநிதி யாகையால் தனக்குத் தோன்றிய கோபத்தை நீக்கிச் சனிபகவானை ஆதரித்து, ஓ சனிபகவானே! யார் யார் என்னென்ன அனுபவிக்கவேண்டுமோ? அதனையெல்லாம் அனுபவிக்கத்தானே வேண்டும். அதற்காகக் கடிந்து கொள்வதிற் பயனில்லை. ஆதலால் உன்னைநான்வெறுக்கவேண்டியதில்லை. என்றுகூறச் சனிபகவான் சொல்லுகிறான்: ஓ மகாராஜனே! என்னாற் பெருந்துயரத்தை அனுபவித்தாய். இனி உன் நாடுநகாமுதலிய எண்வகைச் செல்வமும் உன்னையடைய உன் பகைமருந்து புஷ்கரனை இளைக்கச் செய்கிறதுமன்றி, உனது சரித்திரத்தைக் கேட்டோர் - படித்தோர் - படித்தோரின் பெயரை எடுத்தோதினோர் - இவர்களிடத்து நானணுகுகிறதில்லை. இதுசததியம் சத்தியம். என்சொல்லை நம்பு. ஒருவேளைச் சாதகபலத்தாற் சேரநேரிட்டால் என் கடூரத்தைக் காட்டாமற் பாதுகாத்து வருவேனென்று உறுதிகூறி, அரசனிடத்து விடைபெற்றுத்தன்னிருப்பிடத்துக்குச் செல்லாமல் அத்தான்றி மரத்தில் தானே யிருந்தான். அரசன் ரிதுபன்னராஜ னிடத்துவந்து, நான் கணக்கிட்டதற்குச் சரியாக இருக்கின்றது. ஆதலால் நீர் இந்தவித்தையை யெனக்குக்கற்பியுமென்றுவினவினன். ரிதுபன்னன்மகிழ்ந்து, ஓ மகாராஜனே! அஸ்வஹிலை மந்திரத்தை எனக்குபதேசித்தாலிதனை யுமக்குத் தெரிவிக்கிறே னென்றுகூற, நளன் அஸ்வஹிலை மந்திரத்தை யுபதேசஞ் செய்துவிட்டு, அந்த வித்தையை அவனிடத்தினின்றுங் கற்றுக்கொண்டு இருவரும் இனிது வீற்றிருக்கும்போது, இதற்குமுன் வீமராஜனாலே ஏவப்பட்ட தூதுவர்கள் அப்போதப்போது நடக்குஞ் சேதிகளைத் தெரிவித்து வந்தவர்களாதலா லிந்தச்சேதியையுந் தமயந்திக்குத் தெரிவித்தார்கள்.

உடனே தமயந்தி ஒரு தனித்தவிடத்தில்வந்து, தன் தாதியர்களால் தேர்ப்பாகனை அழைத்துவரக் கட்டளையிட்டாள். தாதியர்கள் நளராஜனிடத்து வந்துவணங்கி, ஓ ஐயா! எங்கள் யஜமானி உங்களை யழைத்துவரக் கட்டளையிட்டாள். ஆதலால் தயைசெய்து வரவேண்டுமென்றுகூற, அரசன் அக்கருத்துக்கிசைந்து, தாதியரோடு சென்று தமயந்தியிருக்கிற விடத்துக்குவந்தான். தமயந்தி கறுகறுத்த தேகத்தோடு விளங்கும் அரசனைக்கண்டு ஓவென்றலறிப் புலம்பி, அரசன் திருவடியில் விழுந்தழுதாள். அரசன் தமயந்தியின் தேகம் வாடித் தளர்ந்து மாசடைந்திருக்கிறதை நோக்கின மாத்திரத்தில், அன்புடைமையை யடைத்துவைப்பதற் கொரு அறையுமில்லையென்று பெரியோர்கள் கூறிய வாக்கியத்துக் கொப்பாக மனந்தளர்வுற்று, இரண்டுகண்களிலும் அருவிபோல் நீர்சோரநின்று, விழுந்தமாதை எடுத்து நிறுத்தினான். அப்போது தமயந்தி சொல்லுகிறாள். ஓ மஹாரா மண்டலேஸ்வரா! ஏதோவொரு காலவேறுபாவினால் அரசு - நாடு - நகரம் - வீரம் - முதலியவையிழந்தாலும், உமது தேகவொளி ஏன் மழுங்கிற்று? அதனை அடியாட்குத் தெரிவிக்க வேண்டுமென்று பணிவுடனே வினவினள். அதற்கு நளன் சொல்லுகிறான் ஓ மாதரசே! எனக்கொரு பாம்பின்மூலமாக இந்த உருவுகிடைத்தது. இப்போது அப்பாம்பை நினைத்தால் அதுவந்து இந்த உருவத்தை வாங்கிக் கொண்டு சுயரூபத்தைக் கொடுக்கும். இதற்காக நான் வருத்தப்படவில்லை. விதிவசியா லுன்னை விட்டுப்பிரிந்தால் நீ மறுமணஞ் செய்துகொள்ள விரும்பிச் சிவனைநோக்கித் தவஞ்செய்து கன்னிப்பருவமடைந்து ஒரு மணவோலை யனுப்பிவித்தனையே: இதென்னவென்று வினவத் தமயந்தி கேட்டுச் சொல்லுகிறாள். ஓ மஹாராஜனே! நான் உண்மையாக மணம்புரிந்துகொள்ள விரும்பினவளல்ல. உம்மைக் காணுதற்காகச்செய்த பொய் மணவோலை. இதனைக்குறித்துக் கோபித்துக் கொள்ளாமல் மன்னித்து, தங்கள் சுயரூபத்தை விரைவில் அடியாட்குத் தெரிவிக்கவேண்டுமென்று கூறினள்.

அதற்கு நளன் மகிழ்ந்து, தன்னைக்கடித்த நாகத்தைநினைத்தான். நாகந் தக்ஷணம்வந்து நளனைக் கடித்து விஷத்தை வாங்கிக்கொண்டு சுயரூபத்தைக் கொடுத்துப்போய்விட்டது. நளன் பாலசுப்பிரமணியரைப்போலத் தன் சுயரூபத்தைக் கொண்டான். தமயந்தி அந்த ரூபத்தைப் பார்த்த மாத்திரத்தில் தக்ஷம் வருத்தத்தையெல்லாம்நீக்கி, முப்பொழுதும் அமுதருந்தி இனிது வீற்றிருக்குங் கன்னிகையின் உருவத்தைப்போலப் பூரித்துப் பிரகாசித்தாள். இந்தச்சேதியைத் தாதியர்கள் வீமராஜனுக்குத்தெரிவித்தனர். வீமராஜன்கேட்டு மகிழ்ந்துஓடோடியும்வந்து, மகளையும் மருமகனையும் பார்த்து உடல்பூரித்து, பேரின்பக்கடலி லாழ்ந்தவர்போல மகிழ்வாகிய கடலில்மூழ்கி, நளனைப் பலவாறுதுதித்தான். ரிதுபன்னனிச்சேதியறிந்து நளனைக்கண்டு காடாலிங்கனஞ்செய்துமகிழ்ந்தான். நகரத்திலுள்ளவர்களு முணர்ந்து வந்து பார்த்து மகிழ்ந்து வணங்கினர். அந்தரலோகவாசிகளாகிய இந்திரன்முதலான தேவர்களும் வந்து பலஆசிகள்கூறி, இந்தத் தமயந்தி அருந்ததியினுஞ் சிறந்த கற்புடையவள். இவளுக்கு யாதொரு தீங்கும் வராமல் நாங்கள் பாதுகாத்துவந்தோம். இவள்மீது ஐயங் கொள்ளாமல் முன்போற் சுகித்திருவென்று நளனுக்குரைத்துப்போயினர் நளன் ஐயந்நீங்கி மனைவியை ஆதரித்து, மக்களைத்தழுவி முத்தமிட்டு, ரிதுபன்னராஜனைப் பலவாறுபுகழ்ந்து, வேறொரு சாரதியை யமைத்து அவ்வரசனை அனுப்பிவிட்டான். ரிதுபன்னனுந் தன்னகரஞ்சென் றினிது வீற்றிருந்தான். வீமன் முதலான நகருளார் யாவரும் மேலான மகிழ்வுற்றனர்.

இப்பால் நளன் தன்மனைவியோடு சிலநாளங்கிருந்து வீமராஜனிடத்து விடைபெற்று, தன் புத்திரரையு மனைவியையு மழைத்துக்கொண்டு இரதமேறி, சில இரதகஜதுரக பதாதிகளோடு பிரயாணப்பட்டு, நாடு-நகரம் - காடு - மலை-வனம்-வனாந்திரங்களைக்கடந்து, தன் தேசமாகிய நிடததேசத்துக்குவந்து, நகர்ப்புறத்திலிருந்து, சில தூதுவர்களைவிட்டுப் போர்புரியக்கருத்திருந்தாற்போர்செய்யவா. அல்லது முன்போலச் சூதாடக் கருத்திருந்தாற் சூதாடென்று புட்கரனைக் கேட்டுவரச்சொல்ல, அப்புட்கரன் சூதாடுவதற்கே இசைந்ததைத்தூதுவர்களாலறிந்துகொண்டு,தானுந்தன்மனைவியுமாகநகரத்துட்புகுந்து, இராஜசபைக்குவந்து புஷ்கரனைக்கண்டு, என் மனைவியைப் பந்தயமாகவைத்துச் சூதாடுகிறேன். நான்தோற்றால்என் மனைவியை விட்டுவிட்டுச் செல்கிறேன். நீதோற்றால் என்நாடுநகர முதலியவற்றோடு உன் நாடுநகர முதலியவற்றையும் எனக் கொப்புவித்துப் போவென்று பேசி, சூதுப்பலகைவிரித்து சூதாடிக்கெலித்து, தன் நாடுநகர முதலியவைகளோடு அந்தப்புஷ்கரனுடைய நாடுமுதலியவற்றையுங் கிரகித்துக் கொண்டு, அவனைக் கர்வபங்கஞ்செய்த பின்பு மீட்டும் அவனுடைய நாடுநகர முதலியவற்றைக் கொடுத்துப் பகுதிகட்டிவரக் கட்டளையிட்டனுப்பிவிட்டு, தான் சிங்காசனாதிபதியாகி, புத்திரர்களையு மற்றுமுள்ள நால்வகைச் சேனைகளையும் ஆதரித்து, முன்போல் மநுசாஸ்திர விதிபிசகாமற் சக்கிரநடாத்தி அரசுசெய்து வந்தான். கேட்டீரோ தருமநந்தன! சக்கிரவர்த்திகளாகிய எழுவருள் தானுமொருவனாக இருந்த நளனடைந்த துன்பத்தைவிட நீயடைந்த துன்பமென்ன? காலகதியை ஒருவரால் தடுக்கொணாதாகையால் நீமனம்வருந்தாமலிருவென்றுகூறினர் உரோமசமுனிவர். தருமன் முதலாகிய நால்வரும் பாஞ்சாலியும்எழுந்து, அவ்வுரோமசன்மருக்குச் சோடசோப சாரஞ்செய்து வணங்கிப் பலவாறு புகழ்ந்தினிது வீற்றிருந்தார்கள். கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! மேல்நடந்தவற்றையுங் கூறுகிறேன் கேளும்.

நாரதமுனிவரால் தருமராஜன்தீர்த்த மகத்துவங்கேட்டுத் தீர்த்த யாத்திரை செல்லுதல்.

ஓ ஜெனமேஜெயமஹாராஜனே ! தருமன்முதலாயுள்ள நால்வரும்-பாஞ்சாலியும்-உரோமசன்மரும்-இனிது வீற்றிருக்கின்ற தருணத்தில் யாழ்வல்லோனாகிய நாரதர்வந்தார். அவரைக்கண்ட ஐவரும் எழுந்து எதிர்சென் றழைத்துவந்து, ஓராசனத்திருத்திச் சோடசோபசாரஞ் செய்து பலவாறு புகழ்ந்து நின்றார்கள். நாரதர் பலஆசிகள்கூறி அவர்களை இருக்கச்சொல்லி யோகக்ஷேமங்களைக் கேட்டுக்கொண் டிருக்கும்போது, தருமராஜன் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி கடல்சூழ்ந்த நெடிய உலகத்திலிருக்கிற திவ்யநதிகளில் ஸ்நானஞ் செய்தோர்க்கு வரும்பயன் பலவாறென்று பலபெயர்களாற் பலவிதமாகக் கேள்வியுற்றனம். அதனால் நான் தெளிவுறாமல் தங்கள் திருவாக்கினாற் கேட்டால் என்மனந் திர்ப்தியடையுமென்று கருதியிருந்தேன். கும்பிடப் போன தெய்வங் குறுக்கேவந்ததுபோற் காட்டிலிருக்கு மெங்கள்கண்களுக்கு முன் செய்த பூஜாபலத்தால் தரிசன மானீர்கள். ஆதலால் அடியேன் மனங்களிப்புறத் தீர்த்த மகிமையை யெடுத்துரைக்கவேண்டுமென்று வினவினர். அதற்கு நாரதர் அன்புகூர்ந்து சொல்லுகிறார்: ஓ தருமநந்தன! தனியரசுசெலுத்திய உங்கள் மூதாதையாகிய சந்தனுமகாராஜன் தன் மனைவியாகிய கங்கைக்கரையில் அனேகம் யாகங்களைச்செய்துவந்தார். அக்காலத்தில் தவசிரேஷ்ட சிகாமணியாகிய புலத்தியர்வந்தார். அவருக்குச் சோடசோப சாரஞ்செய்து வணங்கித்தீர்த்த மகத்துவத்தைக் கேட்டார். புலத்தியர் அதின் மகத்துவங்களை யோதினர். அவ்வாறு உமக்குச்சொல்லுகிறேன் கேளுமென்று சொல்லுகிறார். கேளும்தருமநந்தன ! தேவர் - மக்கள்-விலங்கு-புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம்-என்னும் எழுவகைத்தோற்றத்துளுயர்ந்தது மக்கள்யாக்கை. அந்த மக்களுள் கூன் - குருடு-செவிடு-ஊமை-மூடம் - முதலிய பழுதில்லாமலிருப்பது அரிது. அதிலுங் கல்வியுடைமை அரிது, அதிலும் நற்குண நற்செய்கை யிருப்பது அருமை. அதிலும் பொருளுடைமை யிருப்பதருமை. அதிலுந் தானதருமத்தைச் செய்வது அருமை. ஆதலால் மேற்கூறியவற்றிற் சில துடைத்தாகிச் சிலதடையாத மக்களுக்கு நன்மையை விளக்க, மூர்த்தி-தலம்-தீர்த்தம்-என்று மூன்றுண்டாகி யிருக்கின்றன.

மேலும்-ஐம்புலன்களின் வழியாக அறிவைச்செலுத்தாமலடக்கி, துர்விஷயத்திற் பிரவேசிக்காமல், உலகத்தின்கணுள்ள சற்போகபாக்கியங்களை அடைந்து, இல்லறவியலைத்தழுவி, பொறாமை-பேராசை-கடுஞ்சொல்-சினம் - என்பனவற்றை நீக்கி, நன்மை வந்தகாலத்தில் மகிழ்ந்துந் தீமைவந்தகாலத்தில் வருத்தமுற்றுமிராமல், சித்தசாந்த சீலத்தோடு சத்தியத்தைமறக்காமல், கடவுளிடத்துக் கருத்தைச் செலுத்தியிருக்கிறவ னெவனோ? அவன் எவ்வருணத்தானாயினும் அவனுக்கு வேதங்களினால் வெளிப்பட்டிருக்கிற எல்லாயாகத்தின் பலனுண்டாகி, உலகில் யாவர்க்குஞ்சிறந்தோனாகி யிருப்பான். மேற்கூறிய புனிதமாகிய ஒழுக்கமுடைமை முதலியவற்றைத் தழுவாமலிருப்பவர்கள் தங்கள் குற்றம்நீங்க, அஜமேதம்-அஸ்வமேதம் - சொர்ணதானம் - கோதானம் - பூதானம் முதலியதுகளைச்செய்து, தீர்த்தம் - மூர்த்தி - தலம்-என்கிற மூன்றின்மேல் விருப்பமுற்று, விதியுடன்தீர்த்தத்தில் ஸ்நானம் புரிந்தும், மூர்த்தியைத் தரிசித்

தும், தலத்தில் வாசஞ்செய்தும், குற்றத்தை நீக்கிக்கொள்வர். அப்படி தீர்த்தமுதலியவற்றையுஞ் சொர்வதான முதலியவற்றையும் விரும்பாமலிருப்பார்களாயில், அவர்களை வறுமைப்பேய் பிடித்து அரைக்கணமேனுஞ் சுகத்தில் வையாமல் இகபரசவுக்கியத்தைக் கெடுத்துவரும். அளவற்ற திரவியங்களைச்செலவிட்டு அநேகம் யாகங்களைச்செய்து பெறும்பேறெல்லாவற்றையும் ஒவ்வொரு நதியேகொடுக்குமென்றால், அந்நதியின் சிறப்பை யாவராலுரைக்கக்கூடும்? அவ்வளவு சிறப்புற்ற தீர்த்த மகத்துவத்தைக்கேட்டுப் புனிதமுற்ற வீஷ்மரைப்போல் நீயும்என்றால்அந்தத்தீர்த்த மகத்துவத்தைக் கேட்க விரும்பினை அப்படியே உன்மனங் களிப்பையடையச் சொல்லுகிறேன்கேள்.

ஓ தருமநந்தனா ! உலகத்திலுள்ள நதிகளின் பெயரை என்னொருநாவாற் சொல்லத்தக்கதல்ல. புலத்தியர் தம்வாக்கினால் மூன்றுகோடி தீர்த்தமிருக்கின்றதென்று ஒரு போக்காக ஒரு கணக்கிட்டுக் கூறினர். அவற்றுள் என்னுவிற்கிசைந்த நதிகளின் மகத்துவத்தைச் சொல்லுகிறேன். அகத்தியவடதீர்த்தம்-அகலியை தீர்த்தம் - அத்தினிதீர்த்தம்-அபிசா தீர்த்தம்-அயிராவேக தீர்த்தம் - அரங்கத்துவார தீர்த்தம்-அக்கினிதாரை தீர்த்தம்-ஆரண்ய தீர்த்தம்-இந்திரசந்தன தீர்த்தம்-உத்தரசிந்து தீர்த்தம்-உத்தரவேதி தீர்த்தம் - கங்கை தீர்த்தம் - கன்னிதீர்த்தம்-கபிலைதீர்த்தம் - கயாதீர்த்தம் - கம்ப தீர்த்தம்- கால தீர்த்தம் - காவேரி தீர்த்தம் - குமாரதாரை தீர்த்தம் - குமார தீர்த்தம் - குருதீர்த்தம் - குமரி தீர்த்தம் - கேதார தீர்த்தம் - கோபி தீர்த்தம்-கோமதி தீர்த்தம் - கோதாவரி தீர்த்தம் - கௌசிக தீர்த்தம்-கௌரிதீர்த்தம் - சக்கரதீர்த்தம் - சங்கினி தீர்த்தம்-சந்நிததீர்த்தம் - சம்பிராமதீர்த்தம் - சம்பவதீர்த்தம்-சம்பகதீர்த்தம் - சம்பு தீர்த்தம் - சம்புகணேஸ்வர தீர்த்தம் - சரவணபவதீர்த்தம்-சவுநகதீர்த்தம்-சரஸ்வதிதீர்த்தம் - சரகாம பரிதீர்த்தம் - சரயுதீர்த்தம் - சாப்பியதீர்த்தம் - சாளக்கிராமதீர்த்தம் - சாலோகி தீர்த்தம் - சிமந்த பஞ்சகதீர்த்தம் - சுரகதீர்த்தம்-தசரத தீர்த்தம் - தண்டகாரண்ய தீர்த்தம் - ததீசி தீர்த்தம் - தக்ஷசிந்துதீர்த்தம் - தருமாரண்யதீர்த்தம் - தாமரைபரணி தீர்த்தம்-தாரக தீர்த்தம்-துங்கபத்திரி தீர்த்தம் - தூமவதி தீர்த்தம் - தூருவாசதீர்த்தம் - தேவதிடதீர்த்தம் - தேவிகை தீர்த்தம் - தேவிச்சிறவைதீர்த்தம் - தைவததீர்த்தம்- நசிரதீர்த்தம்-நமிசகுண்ட தீர்த்தம் - நமதைதீர்த்தம் - நாபகைதீர்த்தம்- நாரததீர்த்தம் - நிமிடதீர்த்தம் - பங்குனதீர்த்தம் - பதரிகை தீர்த்தம் - பரததீர்த்தம் - பரிதிதீர்த்தம் - பிரனுதகைதீர்த்தம் - பிரபாதைதீர்த்தம் - பிரயாகை தீர்த்தம் - பிலவாதிதீர்த்தம் - பிரமயானியதி தீர்த்தம்-புஷ்கரதீர்த்தம் - பெண்ணைதீர்த்தம்-பொற்றாமரைதீர்த்தம் - மகாகாளதீர்த்தம் - மகேஸ்வரதீர்த்தம் - மணிநாததீர்த்தம் - மவுந்திரேயதீர்த்தம் - மாத்துரு தீர்த்தம் - மானிட தீர்த்தம்-பமுனைதீர்த்தம்-யாதிபததீர்த்தம் - உருத்திரகோடி தீர்த்தம் - உருத்திரதீர்த்தம்-லகுத்தான தீர்த்தம் - வன்மீகதீர்த்தம்-வாகினி தீர்த்தம் - வாசிட்டதீர்த்தம் - வாமன தீர்த்தம்-விந்தாரக தீர்த்தம் - வியாசதீர்த்தம் - வைதரணி தீர்த்தம்-ஜானகிதீர்த்தம் - என்றிவைபோல்வன இன்னுமனேகமுள.

இந்நதிகளில் ஸ்நானஞ் செய்தபேர்கள் அடையும்பேறுக்கு அளவில்லை யாயினும், என்னாற் கூடிய மட்டும் எடுத்துரைக்கிறேன்கேள். சங்கநிதி பதுமநிதி சிந்தாமணி-முதலிய செல்வப்பொருள்களை யடைவர். புத்திரபாக்கியத்தை யடைவர். தேவர்களாகவும், பிர்ம்மஞானங்களாகவும், விஷ்ணு பத்தர்களாகவும், சிவபத்தர்களாகவும், மிக்க அன்புபொருந்தி விளங்குவர். நல்வினை தீவினைகளாகிய இருவினைப் பாசங்களிற்கட்டுண்டு, ஆணவம் - மாயை-காமியம்-என்னு முக்கதையினால் மொத்துண்டு, வறுமைப்பேய்க்குள்ளாகி, நகர் நாய்போற் சஞ்சரிக்கும் பாவிகளானவர் ஸ்நானஞ் செய்தால்: சாந்தி - விசாரம் - சந்தோடம்-சாதுசங்கமென்னும் நால்வகைப் பொருளையடைந்து, பரமாசாரியை அடுத்து மெய்ப்பொருளை யடைந்து, சச்சிதானந்த தேசோமயத்திற் சொக்கித் தேகவாசனையையற்ற மகத்துக்களாவர். இல்லற தருமத்தினது லக்ஷணத்தையின்னதென்று நோக்காத அசேதனர் இந்த நதிகளிலொன்றில் ஸ்நானஞ் செய்வாகளாகில், இல்லற தருமத்துக்குண்டாகிய பயனைத் தட்சணமடைவர். இத்தீர்த்த ஸ்நான மகிமைகளைப் பலபலவாக எடுத்துரைப்பதிற் பயனில்லை. வேதத்திலும் - ஆகமத்திலும் - மற்றுமுள்ள நூல்களிலுங் கூறப்பட்ட பரமார்த்தமாகிய நன்மைகளை யடைவிக்கிறதுமன்றி, மண்மயமாகிய நீரைத் தெளியவிக்குந் தேற்றுவித்தின் தன்மைபோற் சுத்தமூடராகி யவரையுஞ் சகலகலை வல்லவராகத் தெளிவித்து, வேதமோதலாகிய பிரமயாகம் - ஓமம் வளர்த்தலாகிய தெய்வயாகம்-பலியீதலாகிய பூதயாகம் - தருப்பண முடித்தலாகிய பிதுர்யாகம்-இரப்போர்க்குணவு முதலியவை யீதலாகிய மாநுடயாகம்-ஆகிய விவ்வைவிதயாகத்தின் பயன்களைத்தரும்.

மேலும், அக்கினிஷ்டோமம் - அத்தியக்கினிஷ்டோமம்-உகத்தியம் - சோடசி - வாசபேயம் - அதிராத்திரம்-அப்தோரியாமம் - அக்கினியாதேயம்-அக்கினிகோத்திரம் - தரிசபூர்ணமாசம் - சாதுர்மாசியம் நிருடபசுபந்தம் - ஆக்கிரயணம் -சௌத்திராமணி-அட்டகை - பார்வணம் - சிரார்த்தம் - சிராவணி-ஆக்கிர காயணி - சைத்திரி - ஆசுவயுசி - என்னுமிவைகளோடு, அறத்தாலீட்டியபொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்கெனப்பணிந்து தம்முள்ளுவந்தீதலாகிய தலைப்படுதானம், ஆதுலர்-அந்

கயினர் - யாதர் - முதலாய பிறர் சிறுமையைப்பற்றி மனமிரங்கி யீவதாகிய இடைப்படுதானம், புகழ்-ஆர்வம் - கைமாறு - அச்சம் - தாக்ஷிண்ணியம் - காரணம்-கடைப்பாடு - இவற்றைப் பற்றி யீவதாகிய கடைப்படுதானம், கோதானம் - பூதானம் - சொர்னதானம்-அஸ்வமேததானம் - அஜமேததானம் - கோமேததானம் - நரமேததானம் - ஆதுலர்க்குச் சாலை-ஓதுவார்க்குணவு-அறுசமயத்தார்க்குண்டி - பசுவுக்கு வாயுறை - சிறைச்சோறு - ஐயம் - தின்பண்டநல்கல் அறவைச்சோறு - மகப்பெறுவித்தல் - மகவுவளர்த்தல் - மகப்பால்வார்த்தல் - அறவைப்பிணஞ் சுடுதல் - அறவைத்தூரியம் - சுண்ணம் - நோய்மருந்து-வண்ணார் - நாவிதர் - கண்ணாடி - காதோலை - கண்மருந்து - தலைக்கெண்ணெய் - பெண் போகம்-பிறர்துயர்காத்தல் - தண்ணீர்ப்பந்தல் - மடம் - தடம்-சோலை - ஆவுரிஞ்சுதறி - விலங்கிற் குணவு - ஏறுவிடுத்தல் - விலைகொடுத்துயிர்காத்தல் - கன்னிகாதானம் - இவற்றையெல்லாஞ் செய்தவர்க்கு என்னபலன் கிடைக்குமோ? அந்தப்பலனையுங் கொடுக்கும். ஆனால் - ஓ தருமநந்தனா! இதுவரைக்குஞ் சொல்லிய நதிகள் கொஞ்சம். இன்னமும் அளவிறந்த நதிகளிருக்கின்றன. அந்நதிகளின் பெருமையை யாவரால் அளவிட்டுச்சொல்லப்படும்? நதிகளின் நாமத்தையும்-மகத்துவத்தையும் - சொல்லிய பேரையாவது, அல்லது கேட்டபேரையாவது, யார் கண்ணாற்கண்டார்களோ? அவர்கள் இக்கடம்சூழ்ந்த நெடிய வுலகத்திலுள்ள திவ்யநதிக ளெல்லாவற்றையுந் தோய்ந்தவரடையும் பயனை யடைவரென்று நாரதமுனிவர்கூற, தருமராஜன் முதலாகிய நால்வரும் - பாஞ்சாலியும்-உரோமசன்மரும்-மற்ற வேதியர்குழாமும் பரமானந்தத்தை யடைந்தவராகி, நாரதருக்குச் சோடசோபசாரஞ்செய்து பலதரம்பணிந்து புகழ்ந்தார்கள். நாரதர் தருமன் முதலாகிய யாவர்க்கும் பல ஆசிகள் வழங்கி விடைபெற்று, தமதிருப்பிடத்தைநோக்கிச்சென்றருளினார்.

ஓ மகாராஜனே! அப்பால் தருமராஜன் எழுந்து உரோமசன்மரை வணங்கிச்சொல்லுகிறார். ஓசுவாமி! மானிடசெனன மெடுத்ததற்குப் பயன் பலதருமத்தைச் செய்யவேண்டும். தருமத்துக்குக் காரணம்பொருள். அப்பொருளை அடையாத நான் கடைத்தேறம்பொருட்டு யாழ்வல்லோனாகிய நாரதபகவான் திருவாய்மலர்ந்தருளிய திவ்ய தீர்த்தத்திலாவது ஸ்நானஞ் செய்யவேண்டுமென்று விருப்புற்றேன். அவ்விருப்பம் நிறைவேற எளியேன்மீது கிருபைகூர்ந்து தீர்த்தயாத்திரை செய்துவர எழுந்தருளவேண்டுமென்றுகூற; உரோமசன்மர் மகிழ்வுற்றுச் சொல்லுகிறார்: ஓ தருமநந்தனா! நான் வந்தகாரணம் உம்மைத் தீர்த்தயாத்திரை செய்விக்கத்தான். நீர் நளன் சரித்திரத்தைக் கேட்டமையால் அதனைச் சொல்லி முடித்தேன். அத்தருணத்தில் நாரதபகவான் வந்தார். அவரால் நீர் தீர்த்தமகத்துவத்தைக் கேட்டீர். இனிதவறாது நாம் தீர்த்த யாத்திரைசெய்து கந்தமாதனம்போய்ச் சேருகிறகாலத்தில், உமது சகோதரனாகிய அர்ச்சுனனை இந்திரன் கொண்டுவந்து விடுவான். ஆதலால் வாருமென்று கூறி எழுந்தனர். தருமராஜன் தம்பியாதியரோடு உரோமசன்மரைத் துணைகொண்டு தீர்த்தயாத்திரை செல்லுகின்றார்.

அகஸ்தியமுனிவர் சரித்திரம்.

இவ்வாறு உரோமசன்மரோடு தருமன் முதலானவர்களெல்லாம் பின் செல்லும்போது, எதிரில் ஒரு சோலை தோன்றிற்று. தருமராஜன் உரோமசன்மரை வணங்கி, ஓ சுவாமி! எதிரிலிருக்கும்வனம் யாருடையது? அதனைத் தேவரீர் திருவாய்மலர்ந் தருளவேண்டுமென்று வினவ, உரோமசன்மர் அகத்தியரிருந்த வனமென்றுகூற, தருமராசன் அகத்தியரிவ்வனத்திலிருந்த காரணமென்னென்று வினவ, உரோசன்மர் சொல்லுகிறார். கேளும் தருமநந்தனா! அங்குஷ்டப்பிரமாணமுள்ள அகத்தியமுனியானவர் பூர்வகாலத்திலேபிரமசரியத்தை மேற்கொண்டு, இல்லறவியலைத் தழுவாமல் தவம்இயற்றித் தீர்த்தயாத்திரை செய்துவருகிறபோது, அவ்வகத்தியருடைய பிதுர்த்தேவர்கள் தங்கள்வமிசத்திற்பிறந்த அவர் சந்ததி விளக்காதிருந்த குற்றத்தினால் தென்றிசைக் கடவுளின் ஆக்கினைக்குள்ளாகி, ஒருவனத்தி லொரு ஆலமரத்தில் வௌவால்கள்போல அதோமுகமாகத் தொங்கினர். அக்காலத்தில் அகத்தியர் அவர்களைக்கண்டு, இப்படியும் ஒருதவமுண்டாவென்றையுற்று, அவர்களிடத்திற்சென்று வணங்கி, ஓ ஸ்வாமிகளே! நீங்கள் அதோமுகமாக இருந்து தவஞ்செய்ய வேண்டிய காரணமென்ன? இவ்வாறு தவஞ்செய்யச்சொல்லி எந்நூலிற் கூறியிருக்கின்றது? என்றுவினவப் பிதுர்க்கள் சொல்லுகிறார்கள். ஓ தவசி! நாங்கள் அதோமுகமாக இருப்பதுதவமல்ல; யமதண்டனை. யமதண்டனை எங்களுக்கு வந்ததற்குக் காரணம் (கோடாலிக்காம்பு குலத்துக்குக்கேடு) என்றாற்போல, எங்கள் குலத்தில் எங்கள் வமிசத்தில் அகத்தியனென்றொருவன்பிறந்திருக்கிறான். அவன் இல்லறத்தைத்தழுவிச் சந்ததி விளக்காமற் பிரமசரியத்தை மேற்கொண்டு திரிகிறான். அந்தக்குற்றத்தினால் யமன் எங்களுக்கு இந்தத் தண்டனை விதித்தானென்றுகூற, இதைக் கேட்ட அகத்தியர் உள்ளம்நடுங்கி வாய்குழறி, நெஞ்சுலரப் பலதரம் பணிந்து எழுந்து நின்று சொல்லுகிறார். ஓஸ்வாமிகளே! சினங்கொள்ளாதே யுங்கள் அகத்தியனென்கிற பிதுர்த்துரோகிநான்தான். இல்லறத்தி லதிக பயனில்லையென்று கருதிப் பிரமசரியத்தை மேற்கொண்டேன். இனி இல்லறத்தைத்தழுவி ஒரு கன்னிகையை மணந்து சந்ததி விளக்குகிறேன்.

நீங்கள் முன்போலப் புண்ணியலோகத்தை யடையுங்களென்று கூற, பிதுர்க்கள் அவரைவாழ்த்திப் புண்ணியலோக மடைந்தார்கள்.

அப்பால் அகத்தியர் இல்லறத்தின்மேல் விருப்பமுற்றவராகி, வனத்திற்சஞ்சரிப்பதைவிட்டு நாடுநகரங்களிற் சஞ்சரித்து, தமது கருத்துக்கிசைந்த கன்னிகையைத் தேடிக்கொண்டு வருவதாயினர். அக்காலத்தில் விதற்பதேசத்தரசன் யாக முன்னிலையில் லோபா முத்திரையென்னும் ஒருகுமாரத்தியைப் பெற்றுவளர்த்துவந்தான். அச்சேதி யிவர்க்குத்தெரிந்து விதற்பதேசத் தரசனைக்கண்டார். அவ்வரசன் அகஸ்தியர்க்குச் சோடசோபசாரஞ்செய் தழைத்துவந்து, ஒரு ஆசனத்தி லிருத்திப் பலவாறுபுகழ்ந்து, தேவரீர் இங்குவந்த காரண மென்னென்று வினவ அகஸ்தியர் சொல்லுகிறார். ஓ மகாராஜனே! நீர் யாகமுன்னிலையிற் பெற்றிருக்கிற உன் குமாரத்தியை யெனக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படி கேழ்க்க வந்தேனென் றுரைத்தார். அதுகேட்ட அரசன் மனமகிழ்ந்து, தக்ஷணம் மந்திரிகளாற் கல்யாணமண்டபமியற்றுவித்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் குமாரத்தியை அலங்கரித்துக் கொண்டுவரச்சொல்லி, வேதவேதியர்கள் பல ஆசிகள்கூற அக்கினிசாக்ஷியாகக் கன்னிகா தானஞ்செய்து கொடுத்தான். அகத்தியர் லோபாமுத்திரையுடன் அரசனிடத்துவிடைபெற்று, ஒருவனத்தில் வந்து பன்னகசாலையியற்றி, மனைவி பணிவிடைசெய்யத் தான் தவத்திலிருந்தார். ஒருநாள் தன் மனைவியின்மேற் காதல்கொண்டு காமப் பார்வை பார்த்தார். லோபாமுத்திரையாகிய ராசகன்னிகை அப்பார்வையின்குறிப்பையுணர்ந்து, அருகில் நெருங்கி வந்தனைசெய்து, ஓஸ்வாமி! தாங்கள்பார்த்த பார்வையின்குறிப்பு அடியேனுக்கு விளங்கிற்று. அக்குறிக்கிசைந்த செய்கைக்குத் தகுந்த இடம் பொருளேவ லிருந்தால் மாத்திரம் அதுசிறக்கும். இல்லாவிடில் மிருகப்புணர்ச்சி யாகுமென்று கூறினள்.

அதுகேட்ட அகஸ்தியர் சொல்லுகிறார்: ஓமாதரசே! புணர்ச்சியி னின்பத்துக்கு உதவியானவை இன்னவைகளென்று உன் புத்தியில் தோன்றினதுபோல் என்புத்திக்குத்தெளிவாக இன்னதென்றுவிளங்க உரைப்பாயாகில், அதற்குத்தகுந்தமுயற்சிசெய்கிறேனென்றுகூற, கற்புக்கரசாகிய லோபாமுத்திரை சொல்லுகிறாள்: ஓஸ்வாமி! சகலகலைகளையு முணர்ந்து அருமையாகிய தவபாக்கியத்தைப் பெற்றிருக்கிற தங்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை. தாங்களே என்கருத்தை வெளியிடுகிறதென்று கூறினமையாற் சொல்லுகிறேன். இடமாகிய பரிமளமிகுந்த நறுமலர் சோலையின் மத்தியில், தென்றற்காற்றுவரும்படியான சாளரங்களையுடைய சந்திரகாந்தக்கல்லினு லியற்றப்பட்ட ஒரு மாளிகை இருக்கவேண்டும். ஏவலாக நமதுகருத்தறிந்து செய்யு மறிவாளர்களாகிய தொழிலாளர்க ளிருக்கவேண்டும். பொருளாகிய ஆடையாபரணாலங்கிர்தமாகி, நல்ல வாசனைத்திரவியங்களையணிந்து, அம்சதூளிகாமஞ்சத்திற்சயனித்து, ரதியுமதனும்போலக் கூடிக்குலாவிப் புணர்தல்வேண்டும். இதுபெண்போகம் இப்போகத்திற்கு முக்கிய காரணமாகவிருக்கின்றது பொருள். இப்பொரு ளொன்றிருந்தால் மேற்கூறிய மற்ற இரண்டும் எளிதிலடையும். தவசித்தி தங்களுக் குண்டாயிருக்கிறதாதலால், தாங்கள் வேண்டுமென்று சித்தத்தில் நினைத்தால் அப்பொருள் தக்ஷணங் கிடைக்கும். இடம்பொருள் ஏவல் படைத்தபின் என்னைக்கூடக் கருதுவது இருவருக்கு மின்பமாக விருக்குமென்று கூறிய மனைவி வாக்கியத்தைக்கேட்ட அகத்தியர் சற்றுலோசித்து, இச்சிறிய வின்பத்துக்காக நமது தவ மகிமையாற் பொருளை நினைப்பது தகுதியல்ல. அதனால் அருமையாய்ச்செய்த தவத்துக்குக் கிஞ்சித்துக் குறைவு வருகின்றது. மண்டலத்தரசர் முன்னிலையிற் பொருளைப் பெறவேண்டுமென்று கருதி, மனைவியிடத்து விடைபெற்றுத் தன்னந்தனியே வெளிப்பட்டுக் கிருதபவராசனிடத்துச் சென்றார்.

கிருதபவன் அகஸ்தியர் வரவைக்கண்ட மாத்திரத்திற் பரமானந்தமடைந்தவனாகி, எதிர்சென்றழைத்துவந்து ஒரு பொற்பீடத்திலிருத்தி, சோடசோபசாரமுஞ் செய்து, இரண்டுகரத்தையுங் கூப்பிச்சிரமேல்வைத்து, ஓஸ்வாமி! ஓ தவசிரேஷ்ட சிகாமணிகள் புகழத்தகுந்தமாதவா! எங்கள்முன்னோர்செய்த மாதவமோ? இந்த நகரஞ்செய்த பூஜாபலமோ? யான்செய்த நன்மையோ? மற்ற யாதினாலோ அறியேன் தாங்களிவிடம் வரப்பெற்ற சிலாக்கியம் அடியேனைநாடிவந்தகருத்தை வெளியிட்டால் என்னாற்செய்யத் தகுந்ததைத் தக்ஷண முடித்தனுப்பிவிக்கிறேனென்றுகூற, அகத்தியர்வணங்கிய அரசனுக்குப் பல ஆசிகள்வழங்கிச்சொல்லுகிறார்: ஓமஹாராஜனே! எனக்குக்கிஞ்சித்துப் பொருளுதவிவேண்டியிருக்கின்றது. உன் பொக்கிஷத்திலிருக்கிற பொருளில் உன் மனவர்த்தி முதலாகிய செலவுக்கும், இரதகஜ துரகபதாதி முதலிய ஏவலாள்களின் செலவுக்கும், ஒரு வருஷத்திற்கு வேண்டியபொருளைக் கைப்பற்றிக் கொண்டு, மற்றதிரவியத்தை எனக்குக்கொடுவென் றுவினவினர். அரசன் தக்ஷணந் தன் மந்திரிகளை அழைத்து, ஒருவருஷத்தியசெலவுக்குவேண்டிய பொருள்போக மிகுந்த திரவியத்தைக் கொண்டு வரச்சொல்லி அனுப்புவித்தான். உடனே மந்திரிகள் கணக்கிட்டு, ஒருவருஷத்திய செலவுக்கே கிஞ்சித்துப்பொருள் குறைவுற்றதைக்கண்டு அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் பொருளிருப்பை அகத்தியர்க்குத்தெரிவித்தான் அகத்தியர் மனமகிழ்ந்து, ஓ ராஜசிகாமணி! உனக்குப் பொருள்போதாது. என்னுடன்வா. எனக்குப் பொருள்கிடைக்கிறவிடத்தி லுனக்கும்பொருள் சம

பாதித்துக்கொடுக்கிறேனென்றுகூறி, அரசனை அழைத்துக்கொண்டு வதுவாதிப ராஜனிடத்துக்குச் சென்றார். அகத்தியர் - இருதபவன் - என்னுமிவர்கள் வரவைக்கண்ட அரசன் எதிர்வந்து அழைத்துப்போய் ஆசனத்திலிருக்கவைத்து, தகுந்தபடி பூசித்து வந்த காரணமென்னென்று வினவினன். அகத்தியர் பல ஆசிகள்கூறி, தாம் கருதிவந்த காரணத்தைக் கூறினர். அரசர் மந்திரிகளாற் பொருளிருப்பையுணர்ந்து, இருதபவராஜன் கூறினதுபோற் கூறினன். அகத்தியர் இருதபவனோடு வதுவாதிப மஹாராஜனையும் அழைத்துக்கொண்டு திராவிட மஹாராஜனிடத்துச் சென்றார். அந்த அரசன் மூவர்க்குந் தகுந்த மரியாதை செய்து, அகத்தியரைத் துதித்து வந்தவரலாற்றை வினவினன். அகத்தியர் தாம் நாடிவந்த கருத்தை வெளியிட, திராவிடபூபதி தன்பொருளைக் கணக்கிட்டுப் பொருட்குறைவைத் தெரிவித்தனன். அகத்தியர் அந்த அரசனையும் அழைத்துக்கொண்டு, ஆக நால்வரும் வில்வலன் வனத்துக்கு வந்தனர்.

வில்வலன் வாதாபிசரித்திரம்.

கேளும் கருமகந்தனே! காசிபர்க்கும் மாயையென்று பெயர்வகித்த அசுரஸ்திரீக்கும்பிறந்த, சூரபன்மன் - சிங்கமுகாசுரன் - தாருகாசுரன் - அசமுகி - என்னும் நால்வருள், அசமுகிவயிற்றிற் பிறந்த வில்வலன் - வாதாபி - இருவரும் பிரமனைநோக்கித் தவஞ்செய்து, பெரியோர்களுக்கு உபசாரத்தோடு அன்னமிட்டு அவர்களைக் கொல்லாமற் கொன்று புசிக்கவேண்டுமென்று வரம் பெற்றவர்களாய், ஒருவனத்தில் ஆச்சிரமமியற்றிக்கொண்டு, அங்குவரும் பெரியோர்களுக்குத் தன் சகோதரனாகிய வாதாபியை ஆடாக்கி அறுத்துச் சமயல்செய்து, உபசாரத்தோடு அன்னமிட்டு, பின்பு ஒரிடத்திலிருந்து வாதாபி என்று வில்வலன் அழைக்கிறது தக்ஷணம் வாதாபி பெரியோர்களுடைய வயிற்றைக் கீறிக்கொண்டு வெளியில் வந்துவிடுகிறது. பெரியோர்கள் உடனே மரணமடைவார்கள். வில்வலன் வாதாபி இருவரும் பெரியோரைப் புசித்துவிடுகிறது. இப்படிநடக்கும் துராத்மாக்களாகிய வில்வலன் வாதாபியிருக்கும் வனத்திற்கு அகத்தியர் வந்தமாத்திரத்தில் வில்வலன் தன் சுயரூபத்தை மறைத்துத் தவமுனிபோல் வேடங்கொண்டு, அகஸ்தியர் திருவடியில் வந்துவணங்கிப் பலவாறு துதித்து, ஒஸ்வாமி! நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பாற இங்கு சற்றுநேரமிருங்கள். வந்தவர்களுக்கு அன்னமிடுகிறது எனக்கொரு 'விரதமாதலால், அவ்விரதம் நிறைவேற யானளிக்கும் அன்னத்தைப் புசித்து என்னைக் கிரதார்த்தனாக்க வேண்டுமென்று வேண்டினான். அகத்தியர் வில்வலனாகிய அம்மாமுனியின் வாக்கியத்தைக்கேட்டமாத்திரத்தில் உள்ளமகிழ்ந்து, அந்த வில்வலன் கருத்துக்கிசைந்து, அவனுடன் சென்று ஒரு ஆசனத்திலிருந்தார். அகத்தியரோடுவந்த மூன்றரசர்களும் ஆகத்தியரைவணங்கி வில்வலன் சூதைத்தெரிவித்தனர். அகத்தியர்கேட்டுச் சிரக்கம்பஞ்செய்து குஞ்சிரிப்புகொண்டு, ஓ அரசர்களே! நீங்கள்மூவரும் இவனிடம்அன்னத்தைப்புசிக்காதிருங்கள். நான் புசிக்கிறேன் ஏதாவதுகெடுதி நேரிடுமாகில் தக்ஷணம் அவர்களுக்கேகெடுதியைச்செய்கிறேன். நீங்கள் அஞ்சவேண்டாமென்றுகூறினர். அரசர்கள் வணங்கி வாய்பொத்தி ஒரு இடத்திலிருந்தனர்.

இப்பால் வில்வலன் தன் சகோதரனை ஆடாக்கிக்கொன்று சமயல்செய்து, அகத்தியரிடத்துக்குவந்து வணங்கிப்போசனஞ்செய்ய அழைத்தான் அகத்தியர் எழுந்து போசனச்சாலையிற் சென்றார். வில்வலன் பலவகை பதார்த்தத்தோடு அன்னமிட்டான். அகத்தியர் போசனஞ்செய்துமற்றொரு இடத்தில்வந்து உட்கார்ந்து இளைப்பாறியிருக்கும்போது, வில்வலன்மறைவான ஒரு இடத்திற் சென்று வாதாபி என்று வழக்கப்படி விளித்தனன். வாதாபி அகத்தியர் வயிற்றைக்கிண்டி எழுந்திருந்தான். அகத்தியர் அதுகண்டு தக்ஷணஞ் சிவத்தைத் தியானித்து, வாதாபி சீர்ணபி என்று தன்கரத்தை வயிற்றின்மீது தடவினர். வாதாபி தக்ஷணம் மரணமடைந்து சீர்ணமானான். இவையனைத்தையும் அந்தரத்தி லிருந்து பார்ப்பவர்களாகிய தேவர்கள் கண்டு மகிழ்வடைந்து பலவாறு புகழ்ந்து, அந்தரதுந்துபி முழங்கக் கற்பகப் பூமாரி சொரிந்து ஆனந்தக்கூத்தாடினர். வில்வலன் தான் விளித்தமாத்திரத்திற் சகோதரன் வராதிருப்பதைக்கண்டு மனநடுங்கி, ஓ! ஓ! சாம்பவமூர்த்திக் கொப்பாகிய அகத்தியரால் வாதாபி மரணமடைந்தானென்று நிச்சயித்துக்கொண்டு, நாம் சும்மாயிருப்போமாகில் இனி அரைமாத்திரையில் நமக்குங் கெடுதிவருமென்றெண்ணி அச்சமுற்று அதனால் நெஞ்சுலர்ந்துமொழிதடுமாறித்தேகம்நடுக்குற ஓடோடியும்வந்து, அகத்தியர்க்கு நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறான், ஒஸ்வாமி! தவத்தினாலும் வல்லமையினாலுஞ் சிவத்தை யொத்திருக்குந் தங்கள் மகிமையை அறியாமற் சிறியேன்செய்த பெரும்பிழையைப் பொறுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும். உமது திருவடியே புகலிடமென்று அடியற்றபனைபோல் விழுந்து வேண்டிக்கொண்டான். அருட்கடலாகிய அகத்தியர் தமதடியில் விழுந்து வேண்டும் வில்வலனை யாதரித்து, அடா துராத்துமாவே! இறந்துபோனவாதாபி வரப்போகிறதில்லை. நீ பிழைத்திருக்க விருப்பமிருந்தால் நாம் நாடிவந்த கருத்துக்கிசைய நடப்பையாகில் நீ செய்த குற்றத்தை மன்னிக்கிறேனென்று கூற, வில்வலன் வணங்கிச்சொல்லுகிறான் ஓஸ்வாமி! தாங்கள் நாடிவந்தகருத்தை வெளியிட்டால் தக்ஷணம் அக்கருத்தை நிறைவேற்றுகிறேன், ஆதலால் தேவரீர் கிருபைசெய்து திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கூற, அகத்தியர் சொல்லுகிறார்.

அடா துராத்துமாவே! எனக்கும் என்னுடன் வந்த மூவர்க்கும் வேண்டிய பொருள் கொடுப்பையாயில் உன்னை மன்னிக்கிறேன். எனக்கு அறுபதினுயிர மணங்குபொன்னும், என்னுடன் வந்த அரசர்களுக்குத் தனித்தனி முப்பதினுயிர மணங்கு பொன்னுங் கொடுவென்று வினவினர், வில்வலன் அக்கருத்துக்கிசைந்து, தக்ஷணம் பொக்கிஷத்தைத் திறந்து, அகத்தியர் கூறியபடி மூன்றராசருக்குந் தனித்தனி முப்பதினுயிர மணங்குபொன்னும், அகத்தியர்க்கு அறுபதினுயிர மணங்குபொன்னுங் கொடுத்து, தன்னிடத்திலிருக்கின்ற பசுக்கூட்டங்களை நான்கு பிரிவாக்கி நாலவர்க்குமளித்து, பொற்குவைகள் அவர்களிடத்திற்சேர்க்க ஒவ்வொரு திவ்யரதத்தையுங் கொடுத்தான். அகத்தியரும் மற்றமூன்றராசர்களும் பொருளைப்பெற்றுத் தங்கள் தங்க ளிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களில் அகத்தியர் லோபாமுத்திரையினிடத்துத் தாம் கொண்டுவந்த திரவியத்தையும் பசுக்களையுங் கொடுத்து, ஓ மாதரசே! இதோ உன் கருத்துக்கிசைந்தபடி ஈய்ந்தேன். இனி உன்கருத்துக்கிசைந்தபடி பொருளைச் செலவழித்துக் கொண்டு சுகத்தை அனுபவித்துக்கொள்ளென்றுகூறினர். லோபாமுத்திரை அப்பொருளைத் தன் வசமாக்கிக் கொண்டு, அந்தவனத்தில் தானே தேவர்கள் வியப்புற ஒரு மாளிகையியற்றி, இல்லறத்துக்குத் தகுந்தவையெல்லாஞ் சேகரித்துக்கொண்டு தன் கணவனுகிய அகத்தியரை வணங்கிச் சொல்லுகிறுள் ஒஸ்வாமி! அடியேன் கருத்து மகிழும்படி இடம்பொருளேவல்களை அளித்தீர்கள். இனி தங்கள் கருத்து மகிழ்வெய்துமாறு பணிவிடைசெய்யவிருப்புற்றுத் தங்கள் கிருபைக் கெதிர்பார்த்திருக்கிறே னென்றுகூற, அகத்தியர் அன்றுமுதல் மனைவியினிடத்துக் காதலுற்றவராகிக் கூடிக்கலந்து, இல்லறத்துக்குத்தகுந்த தருமத்தை அனுசரித்து வாழ்ந்துவருகிற காலத்தில், ஒருநாள் அகத்தியர் மனைவியைநோக்கிச் சொல்லுகிறுர் ஓ மாதரசே! உன்மனங்களிப்புற என்னுற்பெறவேண்டிய தெதுவோ? அதனைக் கேட்டுக்கொள்ளென்று வினவினர். லோபாமுத்திரை மகிழ்வுகொண்டு வணங்கிச் சொல்லுகிறுள்.

ஓ ஸ்வாமி! பெண்களுக்கழகானது சந்ததிவிளக்குதலே யாதலால், பிதுரர் - தேவர் - விருந்தினர்-சுற்றத்தார் -, ஆதாரமானவராலே துறக்கப்பட்டவர் - தன்னிடத்தில் வந்திரக்கப்பட்டவர் - தரித்திரர்-பிரமசாரியர் - வானப்பிரஸ்தர் - சன்னுசிகள் - ஆகிய இவர்களுக்கு உபசாரஞ்செய்து இல்லற தருமத்தை நடத்த, நமக்குப்பின்பு ஒரு புத்திரன்வேண்டும். ஆதலால் ஒரு புத்திரனைப் பாலியுமென்று கூற, அகத்தியர் அக்கருத்துக்கிசைந்து. லோபாமுத்திரையைக் கூடி ஒரு புத்திரனை யளித்தார். லோபாமுத்திரை புத்திரனைப் பெறறு வளர்த்து வந்தனள். அகத்தியர் அப்புத்திரனுக்கு வேதாகமபுராண முதலியவற்றைக் கற்பித்து, திரிதசியென்று நாமமிட்டு, சகலமந்திரோபதேசமுஞ்செய்து நல்வழியிலிருக்கக் கட்டளையிட்டனர். திரிதசியென்பர் தந்தையைவிட எண்மணங்கதிகமாகித் தவத்திலுயர்ந்து, ஒருகன்னிகையை மணந்து சன்னுதனென்னும் ஒருபுத்திரனை யளித்தார். அகத்தியர் கிரகஸ்தனுகிப் புத்ரபவுத்திர பாக்கியத்தை அடைந்ததைக்கண்ட பிதுர்த்தேவர் அதுமுதல் தென்றிசைக் கடவுளின் ஆக்கினைக்குள்ளாகாமல், அந்த யமன் தங்களைக் கண்டவுடன் துதித்துவணங்கும்படியான பெருமையைவகித்துச் சுகித்திருந்தனர். அகத்தியர் லோபாமுத்திரை பணிவிடை செய்யத் தமது கருத்துக் கிசைந்த விடங்களில் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவர் கிரகஸ்தனுகஇருக்கும்போது வசித்திருந்த வனம் இதுவென்றுகூற, தருமராஜன் வணங்கிச் சொல்லுகிறுர். ஒஸ்வாமி! அகத்தியர் மகத்துவத்தைக் கேட்கக் கேட்கச் செவிக்கு விருப்பமாக இருக்கின்றது. இன்னும் அவருடைய சரித்திரத்தைச் சொல்லவேணடுமென்றுகூற. உரோமசன்மர் மகாசந்தோஷத்தோடுஞ் சொல்லுகிறுர்.

தேவேந்திரன் சரித்திரம்.

கேளும் தருமநந்தன! அகத்தியருடைய பெருமையை என்னெரு நாவாற் சொல்லத்தகுந்ததல்ல. ஆயினும் என்னுற் கூடியமட்டுஞ் சொல்லுகிறேன். முற்காலத்தில் ஒருநாள் இந்திரன் கொலுவிருக்கும்போது பிரகஸ்பதி பகவான் வந்தார். இந்திரன் சபையில் நடிக்கு மாதர்களின் இசைரதத்தையும் நடனத்தின் அபிநய ரசத்தையுமாந்தி மகிழ்வாகிய கடலில் மூழ்கியிருந்தமையால், வந்த பிரகஸ்பதிபகவானுக்கு மனவருத்தமுண்டாகி அந்தர்த்தானமாக மறைந்துவிட்டார். பிரகஸ்பதிபகவான் மறையவே இந்திரன் போகம் உடனே குன்றிப்போயிற்று. இந்திரனது கண்டு, குருவைப்பணியாத குற்றத்தை வகித்தமையால் நமக்கிவ்வளவு குற்றம் நேரிட்டதென்று கருதி, இக்குற்றத்தை ஒருவித உபாயத்தால் நீக்கிக்கொள்ளுமாறு பிரமனிடத்துச்சென்று வணங்கிக் குருமறைந்துவிட்டதைச் சொன்னுன். பிரமன் துவட்டாவின் புத்திரனுகிய விச்சுவவுருவனென்பவன் தவமகிமையால் முத்தலையுற்றுப் பிரமபட்டத்திற்குக் காத்துக்கொண்டிருக்கிறதை யோசித்து, ஓ தேவராஜனே! உமது குருவருகிறபரியந்தம் இந்த விச்சுவவுருவனைக் குருவாகவைத்துக் கொள்ளென்றுகூறிக் கூட்டியனுப்பிவித்தான். இந்திரன் விச்சுவவுருவனைக் குருவாகக் கொண்டு தன்னகரத்துக்குச்சென்று, ஒருநாள் குருவாகிய விச்சுவவுருவனை வணங்கி ஒரு யாகஞ்செய்யச் சொன்னுன். விச்சுவவுருவன் அசுரனுதலால் தேவர் நாஸ்தி என்று கருத்தில் மதித்து, வாயிலொருவிதமாக மந்திரங்கூறி யாகத்தை நிறைவேற்றி வந்

தான். இந்திரன் அந்தக்ரூதை அறிந்து, தக்ஷணந் தன்கையிலிருக்கும் வச்சிரப்படையால் விச்சுவவுருவனது மூச்சிரத்தையு மிற்றுவிழ வீசினன். தவத்தினுயர்ந்த விச்சுவவுருவனது சிரங்கள் மூன்றும் மூன்று பக்ஷிகளாகிப் பறந்துபோய்விட்டன. விச்சுவவுருவன் மரணமடைந்தான்

அப்பால் அசுரனாகிய விச்சுவரூபன் குருவாக இருந்தமையால் தேவராஜனுக்குப் பிரமஹத்தி பற்றிற்று. இந்திரன் தன்னியற்கையறிவு மாறுபட்டுப் பித்துப்பிடித்தவர்போ லாயினன். தேவர்களதுகண்டு, உலகத்துக்கு நன்மையை விளைவிக்கும்பொருட்டு நமதரசன் செய்த செய்கையால் நமது அரசனுக்கே இடையூறுண்டாயிற்று இந்தப்பழியை நாலுபங்காகப் பங்கிட்டு, மாதர்க்கும்-நீருக்கும்-மரத்துக்கும் - பூமிக்கும் கொடுத்துவிட வேண்டுமென்று கருதி, அந்நால்வகையாரையும் அழைத்து, இந்திரனைப் பற்றிய பிரமஹத்தியை நாலு பங்காக்கிக் கொடுத்தார்கள். அந்நால்வரும் அப்பங்குகளைப் பெற்றுக்கொண்டு சொல்லுகிறார்கள்: ஓ தேவர்களே ! குற்றமொன்றுஞ் செய்யாத எங்களுக்குப் பழியைக் கொடுத்தீர்கள். இப்பழியைச்சுமந்த எங்களுக்குப் பயனென்ன? பழி தீரும் வகையென்ன ? என்று வினவவுந் தேவர்கள்கேட்டுவியந்து, முதலாவது-கருத்தரித்தவுடன் கூடாத விலக்கினத்தைப்போல விருக்கும் மாதர்களுக்குக்கருவுயிர்க்கு மாதத்திலுங் கணவரைப் புல்லும்படி ஒரு நன்மையும், அவர்களைப்பற்றிய பழி பூப்பாகக் கழியக்கடவதென்றும்; இரண்டாவதுவெட்டினால்மறுபடியுந் துளிர்க்காத மரங்களுக்குத்துளிர்க்கும்படி ஒரு நலமும், பழிபிசினாகக் கழிவதென்றும்; மூன்றாவது-வெட்டின வாய்மூடாத பூமிக்கு வாய்மூட ஒரு நலமும், பழி உவர்மண்ணாகி நீங்கவும்; நான்காவது-இறைக்கச் சுரக்காதநீர் சுரக்கும்படி ஒருநலமும், பழிநுரையாகக்கழியக் கடவதென்றும் வரங்கொடுத் தனுப்பிவிட்டார்கள். இந்திரன் தன்னைப்பற்றிய பிரமஹத்தி நீங்கி மாசொழிந்த யணியைப்போலப் பிரகாசித்தினிது வீற்றிருந்தான்.

பின்பு விச்சுவவுருவ னிறந்தது எங்கனும்பெருவார்த்தையாக வழங்குகிறபோது, விச்சுவவுருவனுக்குப் பிதாவாகிய துவட்டாவென்னும் அசுரன் கேள்விப்பட்டு அதிக சினங்கொண்டு, இந்திரனைக்கொல்ல ஒருயாகஞ்செய்தான். அந்த யாகத்தில் விருத்திராசுர னென்றொரு அசுரன்பிறந்தான். அவனைத் துவட்டாகண்டு மகிழ்ந்து, இந்திரனை நாசப்படுத்தி வாவென் றனுப்பினன். விருத்திராசுரன் ஒருநொடிக்கொருவிதமாக மேன்மேலும் வளர்ந்து, வில்-அம்பு-இருப்புலக்கை - பிண்டி - பாலம் - பெருத்த கத்தி-தண்டு-சூலம்முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அசுரர்சேனைகள் பின்வர மஹா மேருவைப்போல் விளங்கு மொரு ரதத்திலேறிப் பொன்னுலகமடைந்து சங்கத்தொனிசெய்தான். அதனை இந்திரனறிந்து, தக்ஷணந் தனது நால்வகைச் சேனையோ டவனை யெதிர்த்து; அசுரசேனைகளை யதமாக்கி, விருத்திராசுரனைப் பலவித ஆயுதத்தாலும்போராடி, முடிவில் தன் வச்சிரப் படையையெடுத்து வெட்டினன். அந்த வச்சிரம் பஞ்சுப்பொதியில்விழும் வாளைப்போல விருத்திராசுரனுடலி லிறங்காமற் பயனற்றவுடனே, விருத்திராசுரன் தன் கையிலிருக்குங் கதையை யெடுத்துப் புலோமிசையின் முலைக்குவடமூழ்ந்தக் குழைந்து போகும் மிருதுவாகிய தோளில் மோதினன். இந்திரன் காலதண்டத்தினால் மொத்துண்ட பாபிகள்போல ஸ்மரணைதப்பிவிழுந்து, சற்றுநேரஞ் சென்றபின்பு தெளிந்து, நமது வச்சிரப்படை இந்த அசுரனை வெற்றியடையாதென்று முதுகிட்டோடினன். விருத்திராசுரன் தன்னரசாகப் பொன்னுலகத்தும் மற்ற இடத்தும் ஆண்மைசெலுத்தி வந்தனன்.

அப்பால் இந்திரன் தன் பரிசனத்தோடு பிரமனிடத்திற்சென்று, விருத்திராசுரனால் வந்த குறைகளை எடுத்துக் கூறினன். அப்பிரமன் இக்குறைக்கொரு வழிகாண்போம் வாவென் றழைத்துக்கொண்டு வைகுண்டம்போனான். இந்திரனும் பிரமனும் மற்றத்தேவர்களுந் திருமாலைவணங்கி, விருத்திராசுரனுடைய துர்ச்செய்கையை எடுத்தோதினர். திருமால் மகிழ்ந்து இந்திரனை அழைத்துச் சொல்லுகிறார்: ஓ தேவராஜனே ! உன் கையிலிருக்கும் வயிரப்படை கூர்மழுங்கி யிருக்கின்றமையால், விருத்திராசுரனை வெற்றியடைய மாட்டாமற் போய்விட்டது. ஆதியில் திருப்பாற்கடல் கடைகிறகாலத்தில் தேவரும் அசுரரும் ஆயுதங்களோடு வந்தனர். ஆயுதமிருந்தால் அனர்த்தம் நேரிடுமென்று கருதி, அந்த இருவர் படைகளை நாம் அக்கடற்கரையி லிருந்த ததீசிமஹா முனிவரிடத்து ஒப்பிவித்துப் போயினோம். அத்தவசி தவத்துக்கிடையூறு வராமலிருக்க அந்த ஆயுதங்களைத் தன் தவசித்தியால் உட்கொண்டு, முதுகெலும்பிற் கோத்து வைத்துக்கொண்டார். அந்தமுனிவரையடுத்து அவர் முதுகெலும்பை வச்சிரப்படையாக்கிக் கொண்டு போருக்குச் செல்லுவையாகில், விருத்திராசுரனை வெற்றியடைவா யென்றனர். இந்திரன் அந்தவாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் வணங்கி விடைபெற்று, ததீசி ஆச்சிரமத்துக்குச்சென்று, தவசிரேஷ்ட சிகாமணியாகிய அத்ததீசி மஹாமுனிவரை வணங்கி, உம்மாற் சொர்க்கமத்திய பாதாளமென்னுமுப்புவனமும் இடையூறுகளினின்று நீங்கிச் சுகத்தை யடைவதாக இருக்கின்றது அடியேன்மீது கிருபைகூர்ந்து நான் கேட்கும்பொருளை இல்லையென்று கூறாமற் கொடுக்கவேண்டும். என்று முறையிடலும் அருட்கடலாகிய ததீசிமஹாமுனிவர் ஆச்சரியமுற்று, இந்திரனுக்குப் பல ஆசிகள்கூறிச் சொல்லுகிறார்.

ஓ தேவராஜனே! என்றாற் பெறப்பட்ட ஒரு உதவியால் மூன்றுலோகமுஞ் சுகமடைகிறதாக இருந்தால், அந்த உதவியைத் தடையின்றிச் செய்யக்காத்திருக்கின்றேன். ஆதலால் அத்தன்மைத்தான உதவியை நீர்கூறுமென்றுகூற, இந்திரன் முனிவருடைய தயாளத்தைக் கண்டு, ஓ! ஓ! இந்த மஹாமுனிவருடைய முதுகெலும்பு நமக்கு வேண்டும். அதனைக்கேட்டால் அவர்காயத்துக்கு அழிவுவரும். இவரை நோக்கும்போது சாக்ஷாத் பிரமஸ்வரூபமாக இருக்கிறார். ஆனபடியால் அதனை எவ்வாறுகேட்கிறதென்று அச்சமுற்று, தனக்கும் உலகிலுள்ளவர்க்கும் நேரிட்டிருக்குந் துன்பமிகுதியின் பொருள்விளங்க ஒரு போக்காகச் சொல்லுகிறான். ஓஸ்வாமி! அடியேன் நாடிவந்த பொருள் தங்கள் முதுகு எலும்பிலிருக்கின்றது. அது கிடைக்குமாகில் அதனை வச்சிரப்படையாக்கி, திரிபுவனங்களிலுள்ளோர்க் கிடையூறு செய்துவரும் விருத்திராசுரனைக் கொன்று நன்மையடைகிறேனென்று கூற; அதற்கவர்-ஓ தேவராஜனே! காயமெடுத்தால் எந்த விதத்திலாவது பிறர்க்குப் பயன்படுத்தலே நலமென்று நூல்கள் முறையிடுகின்றமையால், நாய்க்கும் பேய்க்கும் - வறுமைக்கும்-பிணிக்கும்-பசிக்கும்-காலனுக்கும்பங்காகிய இவ்வுடலை முப்புவனத்துக்குந்தலைவனாகிய உமக்குங் கொடுத்தேன். அதனாலடையும் பயனையடைந்து கொள்ளுமென்றுகூறி, தட்சணஞ் சமாதி தீக்ஷைவகித்து, சதாசிவத்தின் பதயுகத்திலடைந்துவிட்டார். அதுகண்ட இந்திரன் மகிழ்ந்து, தேவதச்சனால் முதுகெலும்பை வயிரப்படையாக்கிக் கொண்டு, முன்போல் விருத்திராசுரனோ டெதிர்த்துப் போர்புரிந்து, முடிவில் தன் வயிரப்படையைக் கரத்திலெடுத்தான். அதை விருத்திராசுரன் கண்டு, தவசிரேஷ்ட சிகாமணியாகிய ததீசி முதுகெலும்பினாலாகியஇந்தவச்சிரப்படை நம்மைக் கொல்லுமென்று கருதிஅச்சமுற்று, முத்துக்களைக் கொழிக்குங் கருங் கடலிற்பாய்ந் தொளித்துவிட்டான்.

இவ்வாறு அவன்கடலின்கணொளித்ததை இந்திரன்கண்டு மனவருத்தமுற்று, ஓ! ஓ! இந்த அசுரனை இந்தக்காலத்திற் கொல்லாவிட்டால் மற்ற எந்தக்காலத்திலுங்கொல்லக்கூடாத வல்லமையை அடைவானென்றுகருதி, சகலபுவனகர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினிடத்துக்குச்சென்று, அவர் திருவடியில் வணங்கிப் பலவாறு துதித்து, தானும் விருத்திராசுரனும் போர்புரிந்ததையும் அவன் முதுகிட்டுக் கடலிலொளித்ததையும் எடுத்துரைத்து, ஒளித்துக் கொண்டஅசுரனை இக்காலத்திலேயே நாசமாக்க ஒரு தந்திரங் கூறவேண்டுமென்று வேண்டினன். அதற்குத் திருமால்மகிழ்ந்து சொல்லுகிறார். ஓ தேவராஜனே! கடலில் நீர் வறண்டாலல்லது அந்த அசுரன் கண்ணுக்குத் தோற்றான். அக்கடல்நீரைப் பானஞ் செய்யவல்லவர் அகத்தியரன்றி மற்றொருவருமில்லை. நீங்களெல்லாம் அகத்தியரிடஞ் சென்று முறையிட்டால், அருட்கடலாகிய அகத்தியர் கடல்நீரைப்பானஞ்செய்வர். அப்போது உன் பகைவன் கண்ணுக்குத் தோன்றுவ னென்றார்: இந்திரன் திருமாலைவணங்கி விடைபெற்றுப் பொதியமலைக்குவந்து, அகத்தியரைக்கண்டு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து பலவாறு துதித்துச் சொல்லுகிறான்: ஓ தவசிரேஷ்டசிகாமணி! முப்புவனத்துக்கும்பெருங்குற்றஞ்செய்துவருங்கொடியவிருத்திராசுரனை அதமாக்க முனிசிரேஷ்டராகிய ததீசிமஹா முனிவருடைய முதுகெலும்பை வச்சிரப்படை யாக்கிக்கொண்டு போர்செய்தேன். அந்த அவுணன் என்கையிலிருக்கும் வயிரப்படையைக்கண்டுபயந்து கடலிலொளித்துக்கொண்டான். அவனை இக்காலத்தில் தானே கொல்லவேண்டும். அவன் இந்தக்காலத்தில் தப்பித்துக்கொண்டால் அவனை மற்ற எந்தக்காலத்திலுங் கொல்லக்கூடாத வல்லமைபெற்றுக் கொள்ளுவான். ஆதலால் தாங்கள் தயைசெய்து கடல்நீரை வற்றச்செய்ய வேண்டுமென்று வேண்ட, அகத்தியர் இந்திரனுக்குப் பல ஆசிகள்கூறி, தக்ஷணம் எழுந்து கடலருகில்வந்து விஷ்ணுவை இருதயகமலத்தில் நிறுத்தி, பரப்பிரம்ம ஸ்வரூப மந்திரத்தை யுச்சரித்துக் கையேந்தினார். கடல் நீரெல்லாந் திரண்டு ஒரு உளுந்துருவமாகி அகத்தியர் கரத்தில் அமர்ந்தது. அகத்தியர் அச்சலத்தைப் பானஞ் செய்துவிட்டார். கடல்வறண்டு விட்டது.

பின்புஇந்திரன் மகிழ்ந்து வச்சிரப்படையைக் கரத்திலேந்திக்கடலுட்சென்றான். அவன்வரவைவிருத்திராசுரன் கண்டு மனநடுங்கி, இனி ஒளித்திருப்பதிற்பயனில்லையென்றுகருதித் தக்ஷணந்தன் உடைவாளைக் கரத்திலேந்தி, பால சுப்பிரமண்ணியர் மேல் எதிர்த்துவந்த சூரபன்மனைப்போலச் சீறிவந்தான். இப்படி வாளாயுதத்தோடு வருவதை இந்திரன்கண்டு சினங்கொண்டு,திக்குத்திசைகள்தத்தளிக்கக்கற்சித்து தன்கையிலிருக்கும் வச்சிரத்தை வீசினன். வச்சிரப்படைசென்று விருத்திராசுரனைக் கொன்றுவிட்டது. உடனேஇந்திரன் மகிழ்வடைந்து அகத்தியரிடத்துச் சென்று வணங்கிச் சொல்லுகிறான்: ஓஸ்வாமி! அடியேனும் மற்ற முப்புவனத்திலுள்ளவருஞ் சுகமடையும்பொருட்டுக் கடல்நீரைப் பானஞ்செய்து விட்டீர்கள். மறுபடியுங் கடல்நிறைய ஜலத்தை யுண்டாக்க வேண்டுமென்று துதித்தான். அகத்தியர் சொல்லுகிறார்: ஓ தேவராஜனே! நான் புசித்தநீர் உதராக்கினியால் வறண்டுபோயிற்று. இனி அந்நீர் வராதென்று கூறினர். அதுகேட்டஇந்திரன் தக்ஷணங்கமலாசனக் கடவுளிடத்துக்கு வந்து வணங்கி, விருத்திராசுரனை வெற்றிபடைந்ததைக்கூறி, கடல் முன்போல ஜலநிறைய அகத்தியரை வினவியதையும் அவர் தன்னால் முடியாதென்று கூறினதையுஞ் சொல்லி, கடல் முன்போலச்சலநிறைவதற்குக் காரணமென்னவென்றுவின

வினன். பிரமன்கேட்டுச் சொல்லுகிறான்: ஓ தேவராஜனே! அநந்திபராற்கடல் நிறையாவிட்டால்இனி யாவராற்கடல் முன்போல்நிறையப்போகின்றது! மண்ணுலகத்திற் சகரச்சக்கரவர்த்தி அரசாட்சி செலுத்தி வருகிறான். அவன்சந்ததியில் ஒரு புத்திரன் பிறக்கப் போகிறான். அவனால் தான்கடல்முன்போற் சலநிறையுமென்றுகூற, இந்திரனது கேட்டு நிராசையையுடைய சித்தத்தைப்பெற்றவனாகி, தனது நகரத்துக்குச்சென்று முன்போலத் தன்னரசு செலுத்திவந்தான். வறண்டுபோயின கடல் முன்போல் ஜலநிறைந்தகதையைச் சொல்லுகிறேன் கேளும்.

சகரச்சக்கிரவர்த்தி சரித்திரம்.

கேளும் தருமநந்தனா! கடல்சூழ்ந்த நெடியவுலகத்தில் மிகவுஞ்சிறப்புற்ற கோசலமென்றொரு தேசமுண்டு. அத்தேசத்தில் அயோத்தியாபுரியென்றொரு நகருளது. அந்த நகரத்திற் சூரியகுல திலகனான சகரமகாராஜன் ஏகசக்கிராதிபதியாகி இருந்து அரசு செலுத்தி வருகிறகாலத்தில், அவ்வரசனுக்குப் புத்திரபாக்கிய மொன்றுதவிர மற்றப் பாக்கியங்களெல்லாம் அதிகரித்திருந்தன. அரசன் அப்புத்திரபாக்கியமில்லாமையாற் கனவருத்தமுற்று தன்னரசாட்சியை மந்திரிகளிடத் தொப்புவித்து, தானுந் தன் மனைவிய ரிருவருமாகக் காட்டிற்சென்று, பரமனை நினைத்து அருமையிலும் அருமையாகிய கொடிய தவத்தை நெடுநாள் செய்துவந்தனன். அத்தவத்திற்குச் சாம்பவமூர்த்தி மகிழ்ந்து அவ்வரசன் கட்புலனுக்குத் தோன்றினர். உடனே சகரன் நமஸ்காரஞ்செய்து பலவாறு துதித்து, ஓ ஸ்வாமி! அடியேன் மனக்களிப்புறப் புத்திரபாக்கியத்தைக் கொடுத்தருள வேண்டுமென்று வினவ, சாம்பவமூர்த்தி மகிழ்ந்து ஒரு புத்திரனைப் பாலித்தனர். சகரன் மறுபடியும்வணங்கி, ஓஸ்வாமி! அடியேனுக்கு இரண்டு மனைவியர். ஒரு மனைவிக்குப் புத்திரனளித்தால் மற்றொருத்திக்கு மனவருத்தமுண்டாகும். அவளுக்கும் புத்திரபாக்கியத்தைக் கொடுக்கவேண்டுமென்று வினவ, சாம்பவமூர்த்தி சிரித்துச் சொல்லுகிறார்: ஓ சகரச்சக்கிரவர்த்தீ! மற்றொருமனைவிக்கும் புத்திரபாக்கியத்தைக் கொடுத்தனம். ஆனால் அந்த மனைவிக்கு அறுபதினாயிரம் புத்திரர் உண்டாவார்கள். அவர்கள் துன்மார்க்கராகித் தேவர்களுக் கிடுக்கண்செய்து முடிவில் ஒரு முனிவருடைய கோபத்தீயினால் ஏககாலத்தில் மடிந்து விடுவார்களென்று கூறி, முதற்கொடுத்த பிள்ளையின் வழியி லொருபுத்திரன் பிறப்பான். அவனால் உனது குலத்துக்குப் பெருங்கீர்த்தி வருகிறதுமன்றி, வறண்டுகிடக்கிற கடல்நிறையப் புண்ணியதீர்த்தமாகிய கங்காநதிவருமென்று கூறி மறைந்துவிட்டனர்.

அப்பாற் சகரன் தன் நகரத்துக்குவந்து முன்போல்அரசாண்டு, சாம்பவமூர்த்தி வரப்பிரசாதப்படி மூத்தமனைவியினிடத்து ஒருபுத்திரனையும் இளையாளிடத்து அறுபதினாயிரம் புத்திரர்களையும் பெற்று மகிழ்ந்து, அப்புத்திரர்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தான். அதிற்பின்னவர்கள் சகலகலைக்கியானராகி, வில் முதலிய ஆயுதப் பயிற்சியிலுஞ்சிறந்து, வாலைப்பருவமடைந்திருக்கிற அக்காலத்திற்றானே துர்விஷயத்திற்கருத்தைச்செலுத்தி, தேவர்களுக்கெல்லாம்இடுக்கண்செய்துவந்தார்கள். முன்னவனாகியபுத்திரனோவெனில், நல்ல புத்தியைவகித்து யாவர்க்கும் நலத்தை உண்டாக்கி வந்தான். சகரமகாராஜன் எல்லாப் புத்திரர்களுக்கும் விவாகமுடித்து, இளவரசுபட்டத்தை மூத்தாள் பெற்ற சுகுணபுத்திரனுக்குக் கட்டி மகிழ்வுடன் அரசு செலுத்திவந்தான். அச்சுகுணபுத்திரன் தந்தையைவிட எண்மணங்கதிகமாகக் குடிகளைப் பாதுகாத்து, இளவரசு பட்டத்துக்குரிய செய்கையை நடத்தி, தன் மனைவியோடு கூடித் தன்னைப்போல ஒரு சுகுணபுத்திரனைப்பெற்றான். அதுகண்ட சகரச்சக்கிரவர்த்தி சந்ததி உண்டாயிற்றென்று மகிழ்ந்து, அஸ்வமேதயாகத்தைச் செய்யவேண்டுமென்றுகருதி, அந்தயாகத்துக்குத் தகுந்த குதிரையை அழைப்பித்து, வேத வேதியர்கள் நெருங்க யாகக்குண்டம் புதுக்கி யாகதீக்ஷை வகித்து, குதிரையைப் பூசித்துப் பூமியைவலம்வரத் தன்புத்திரர்களனைவரையும்அதன் பின்னனுப்பினன். புத்திரர்கள் பூப் பிரதக்ஷணமாக அஸ்வத்தை நடத்திக் கொண்டு வருகிறபோது, தேவதூதர்கள் சகரச்சக்கரவர்த்தி அஸ்வமேதயாகஞ் செய்யக்கருதி அஸ்வத்தைப் பூமிப்பிரதக்ஷணஞ் செய்ய அனுப்பிவித்ததை இந்திரனுக்குத் தெரிவித்தனர். இந்திரன் அந்தச் சகரருடனே நேர்நின்றுபோர்செய்வதற்கஞ்சி, மாயையால் வெற்றியடைய வேண்டுமென்றுகருதி, அந்த அஸ்வம் ஈசானதிசைக் கடலருகில் வருகிறபோது அதனை அத்திசையின் பாதலத்தில் தவஞ்செய்திருக்குங் கபிலமுனிவர்வனத்தில் ஒருமாயையாற் கொண்டுவந்து விட்டுப்போயினன்.

பின்பு அறுபதினாயிரம்பெயர்களும் அஸ்வத்தைக்காணாமல் ஈசானதிசையிற்பூமியைவெட்டிக்கொண்டு பாதலத்திற் செல்லும்போது, கபிலமுனிவர் வனந் தோன்றிற்று. அவ்வனத்தில் அக்குதிரை யிருக்கக்கண்டு, அதைக்குறித்து அவரை யொன்றுங்கேட்டறிந்துகொள்ளாமல், மமதையினால் அவ்வறுபதினாயிரவரும் அட்டகாசஞ் செய்து அம்முனிவர்மேலெதிர்த்தார்கள். அதை யம்முனிவர் கண்டு, நாம் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க நம்மேற் பெருங் கூட்டமாகப் போருக் கெழுந்தனர். இவர்கள் யாராயிருந்தபோதிலும் நமக்கென்னவென்று தக்ஷணங் கோபத்தீசொலிக்கக்கண்ணால் நோக்கினார், அப்படி நோக்கினமாத்திரத்திற் பரமன் கண்ணுக்கு நேர் எதிர்ப்பட்ட மாரனைப்போல், அவ்வறுபதினாயிரச்சகரர்களும் மூத்தாள் குமாரனும்நீறாயினார்கள். இந்திரன்மகிழ்வடைந்தான்.

இந்தச்சேதி சகரச்சக்கரவர்த்தியறிந்து, யாகதீக்ஷைவகித்தபடி ஓடோடியும்வந்து கபிலரைவணங்கித்துதித்து, தான் யாகஞ் செய்யத்துணிந்ததும் அந்த அஸ்வம் வந்திருக்கிறதையும் எடுத்துரைத்தான். கபிலர் மகிழ்ந்து சொல்லுகிறார்: ஓ சக்கரவர்த்தி! உமது குதிரை நமதுவனத்தில் வந்திருக்கிறது எனக்குத் தெரியாது. அவர்களும் என்னை வினவினவரல்லர். நாமும் முன்பின் யோசிக்காமல் உமதுபுத்திரரைக் கொன்றுவிட்டோம். மிஞ்சிப்போனதற்கு வருத்தப்படுவதிற் பயனில்லை. உமது அஸ்வத்தைக் கண்டுபிடித்துக்கொண்டுபோய்யாகத்தை நிறைவேற்றிக் கொள்ளுமென்று விடைகொடுத்தனர். சக்கரவர்த்தியாகிய சகரன் அஸ்வத்தைக் கொண்டுவந்து யாகத்தைக் கிரமப்படி நிறைவேற்றி, தானதருமங்களைச்செய்து முன்போல் அரசுசெலுத்தி, தன் மூத்தமனைவியிடமாகப்பெற்ற குமாரனுக்குப் பிறந்த மைந்தனுக்குப் பட்டத்தைக் கட்டி, அவனுக்குச் சகரர் அறுபதினாயிரவர் மடிந்ததை எடுத்துரைத்து, அவர்கள் நற்கதி அடையும்படி நடவென்றுகூறித் தான் சொற்கலோகமடைந்தான்.

அந்த மைந்தன் மகுடாபிஷேகனாகி ஒரு கன்னிகையை மணந்து, திலீபன் என்று ஒரு புத்திரனைப் பெற்றுஅரசுசெய்து, பிதுரர்களை நல்ல கதியிலேற்றுவிக்கும் பொருட்டுத் தான் நல்வழியில் நடந்து, தன் கால முடிவானதைக்கண்டு தன் புத்திரனாகிய திலீபனுக்குப் பட்டங்கட்டி, பிதுரர் புண்ணியலோக மடையாதிருப்பதை உரைத்து வனத்துக்குச்சென்று தவஞ்செய்து சொற்கலோகமடைந்தான். திலீபன் மகுடாபிஷேகனாகி ஒரு கன்னிகையை மணந்து ஒருகுமாரனைப்பெற்று அரசுசெய்து, பிதுரர்களுக்கு நன்மையுண்டாகத் தன்னாற் கூடியமட்டும் நன்முயற்சியிலிருந்து, கால முடிவானதைக்கண்டு தன் புத்திரனுக்கும் பட்டங்கட்டி, பிதுராருடையவரலாற்றைக்கூறி, அவர்கள் சுகமடைய நடவென்று கட்டளையிட்டுத் தானுஞ் சொற்கலோகஞ்சென்றான். அந்தஇராஜகுமாரன் மகுடாபிஷேகனாகி ஒருகன்னியை மணந்து பகீரதனைப் பெற்று, தன் பட்டத்தை அப்புத்திரனுக்குக் கட்டி, பிதுரர் வரலாற்றைக்கூறிச் சொற்கலோகமடைந்தான் பகிரதன் தந்தை வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு, தன்னரசை மந்திரிகளிடத்தொப்பிவித்து, வசிஷ்டமஹாமுனிவரை வணங்கிப் பிரமனைநோக்கித் தவஞ்செய்ய மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு, தவவேடங்கொண்டு வனத்திற்சென்று, பதினாயிரம் வருஷந் தவஞ்செய்தனன். அவனுக்குப் பிரமன் தரிசனமாகித்தவஞ்செய்யுங்காரண மென்னென்று வினவினன். பகிரதன்வணங்கி, ஓ ஸ்வாமி! எங்கள் முன்னோர்கள் கபிலருடைய கோபத்தீயினால் நீறாகிவிட்டனர். அவர்கள் புண்ணியலோக மடையும்படி கிருபைகூற வேண்டுமென்றுவேண்ட, பிரமன் சொல்லுகிறான்.

ஓ பகீரதா! உங்கள் முன்னோர்கள்நல்லகதியடையவேண்டுமென்றால் ஆகாயத்திலிருக்கிற கங்கை பூமியிற் பெருகவேண்டும். அப்போது அக்கங்கையில் உங்கள் முன்னோர்களின் அஸ்திகள் நனையும். அதினால் உங்கள் முன்னோர்கள் புண்ணியலோகமடைவர். அக்கங்கை பூமியில் வந்தாற் பூமிபொறுக்காது. அதனைப் பொறுப்பவர் சந்திரசடாதர சாம்பவமூர்த்தியல்லது மற்றொருவர் பொறுக்கமாட்டார்கள். நீ அந்தச் சாம்பவமூர்த்தியை நினைத்துத் தவஞ்செய்யென்றுகூறி மறைந்துவிட்டான். பகீரதன் பிரமன் கட்டளைப்படி சாம்பவமூர்த்தியை நோக்கிப் பதினாயிரவருஷந் தவஞ்செய்ய, சாம்பவமூர்த்தி மகிழ்ந்து பிர்மகணங்களோடு பார்வதிசமேதராக அவன்கண்ணுக்குத் தோன்றினர் பகீரதன்பணிந்து பலவாறு புகழ்ந்து, தனதுபிதுரர் புண்ணியலோகத்தை யடையக்கருதிப் பிரமனைநோக்கித் தவஞ்செய்ததையும், அதற்குப் பிரமன்வந்து கூறியதையுஞ் சொல்லித் துதித்தான். சாம்பவமூர்த்தி மகிழ்ந்து, கங்கையைநோக்கித் தவஞ்செய்யென்றுகூறி மறைந்துவிட்டனர். பகீரதன் கங்கையைக்குறித்து ஐயாயிரம் வருஷந் தவஞ்செய்ய, கங்கை ஒரு கன்னிகையைப்போலத் திருவுருவுகொண்டு பகீரதன் கண்ணுக்குத் தோன்ற, அவன் பலவாறுதுதித்துஎங்கள்முன்னோர்சுகமடையத் தாங்கள் பூமியின்கண் வரவேண்டுமென்று வினவ, கங்கை சொல்லுகிறாள்: ஓ பகீரதா! நான் பூமியில் வருவனாகிற் பூமாதேவி பொறுக்கமாட்டாள். என்னைப் பொறுப்பவர் சாம்பவமூர்த்தி ஒருவரல்லாமல் மற்றவர் பொறுக்கமாட்டார்கள். அவர் கடாக்ஷமுண்டானால் வருகிறேனென்று கூறி மறைந்துவிட்டாள். பகீரதன் பின்னும் பரமனைக்குறித்து ஐயாயிரவருஷந் தவஞ்செய்தான். பரமன் திருவுளங்கனிந்து முப்பத்துமுக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரமுனிவர், பிரமகணம், உருத்திரகணம், பிரம்மா, விஷ்ணு, முதலானவர் புடைசூழப் பிரத்தியக்ஷமாயினர்.

உடனே பகீரதன்பணிந்து, என் முன்னோர்கள் சுகமடையக் கங்கையை அழைப்பியுமென்று துதித்தனன். சாம்பவமூர்த்திமகிழ்ந்து கங்கையை அழைத்த மாத்திரத்தில், கங்கை அண்டங்களைப் பிளந்துகொண்டு மஹாமேரு முதலியவைகளை யெல்லாம் வேரோடுகிளப்பி அவைகள்கீழ் மேலாக உருளும்படி மஹாவிசையோடு வந்தனள். சந்திரசடாதர சாம்பவமூர்த்தி அக்கங்கையைத் தமது முடியில் தாங்கி, பத்தனாகிய பகீரதன் கருத்து மகிழ்வுறச் சொல்லுகிறார்: ஓ பகீரதா! நீ முன்னங்கருதியபடி கங்கைவரும்படி செய்தேன். உங்கள் மூதாதைகளிறந்த இடத்துக்குச் செல்லென்றுகூறினர். பகீரதன் தன் மூதாதைகளிறந்த கபிலர்வனமோ, கங்கையும் பகீரதனைப் பின்பற்றித் தொடர்ந்து, கபிலர்வனத்திலிறந்த சகர அறுபதினாயிரவருடைய அஸ்திகளை நனைத்துவிட்-

டு, அகஸ்தியரால் வறண்டகடலை நிரப்பிவிட்டனள். பகீரதன் பிதுரர்கள் பாபாகிதராகிப் புண்ணியலோக மடைந்து அப்பகீரதனைப் புகழ்ந்தார்கள். கங்கையும் பகீரதனைப்புகழ்ந்து, உன்னால் நான் இப்பூமிக்கு வந்தமையால் உன்பெயர் எனக்கிருக்கவேண்டுமென்றுகூறி பகீரதியென்று அழையென்றனள். பகீரதன் அக்கங்கையின் கருத்தின்படி பகீரதியென்று மூன்றுதாம் அழைத்தனன். அன்றுமுதற் பகீரதியென்று கங்கையானவள் மற்றொருநாமம்பெற்றாள். அகத்தியர் உண்டகடல்மறுபடியும் முன்போல நீரை அடைந்தது. ஓ அரசனே! கடல்நீரையெல்லாந் தன் சடாக்கினிக்கிரையாக்கிகொண்ட மகத்துவின்சிறப்பை மதிக்கத் தக்கதோ! என்று உரோமசன்மர் கூறத் தருமராஜன் வணங்கிச் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி! அகத்தியர் மகத்துவத்தைக் கேட்கக்கேட்க இனிப்பாக இருக்கின்றது. இன்னும் அவரது சரித்திரத்தைச் சொல்ல வேண்டுமென்று கூற உரோமசன்மர் சொல்லுகிறார்.

விந்தபருவத சரித்திரம்.

கேளும் தருமநந்தன! யாழ்வல்லோனாகிய நாரத மஹாமுனிவர் மஹாமேரு விடத்துக்குச் சென்றார். மஹாமேரு நாரதர் வரவைக்கண்டு, ஒரு பிராமணரூபந்தரித்து எதிர்வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பலவாறு புகழ்ந்து நின்றது. நாரதர் பல ஆசிகள்கூறிச் சொல்லுகிறார்: ஓ மஹாமேருவே! நீ மலையாயிருந்தாலும் உன்னை நவக்கிரகங்களும் வலம்வருகிறார்கள். இதன்றித் தேவர்களுந் தவசிரேஷ்ட சிகாமணிகளுஞ்சதாகாலமும்உன்னைவிட்டகலாமலிருக்கிறார்கள். பிர்ம்மா - விஷ்ணு-உருத்திரன்-முதலானவரும் நின்னையடைகிறார்கள். சாம்பவமூர்த்தி உன்னை வில்லாக்கிக் கையிலேந்தியல்லவா திரிபுரத்தை வெற்றிகொண்டனர்? என்று பலவாறு புகழ்ந்தனர். மகாமேரு களித்துவணங்கிச் சொல்லுகின்றது: ஓஸ்வாமி! என்னைப்போ லுயர்ந்தும் பருத்தும் சிறப்புற்றமலை ஒன்றுளதோ? கண்டிருந்தாற் கூறுங்களென்று வினவ, நாரதர் - ஓ! ஓ! இந்த மஹாமேரு நாம் புகழ்ந்ததில் அதிகமமதை யடைந்ததாகிவிட்டது. இதன் மதத்தை அடக்க யுக்திசெய்ய வேண்டுமென்று தமக்குள்யோசித்துக்கொண்டு சொல்லுகிறார்: ஓமஹாமேருவே! நான் முன்னங்கூறியதே சரியாகையால் உன்னைப் புகழும்படியிருந்தது. நீயேயுலகிற் பெருத்துமுயர்ந்து மிருக்கிறாயென்றுகூறி விடைபெற்று, தக்ஷணம் விந்தகிரியிடத்துவந்தார். விந்தம் ஒரு பிராமணவேடங்கொண்டு நாரதரைவணங்கி, ஓஸ்வாமி! தாங்கள் என்னிடத்திற்கு வரப்பெற்ற காரணமென்னென்று வினவிற்று. நாரதர் பல ஆசிகள் கூறிச்சொல்லுகிறார்

ஓ விந்தமே! நான் மஹாமேருவிடத்துக்குச்சென்றேன். அம்மலை ஒருபிராமண உருவமெடுத்துவந்து வணங்கிற்று. நான் பல ஆசிகள்கூறிப் புகழ்ந்தேன். மஹாமேரு உடனே மமதைகொண்டதாகி, என்னைவிட உயர்ந்தவரில்லையென்று கூறிற்று. இச்சேதியை உனக்குத்தெரிவிக்க வந்தேமென்றுகூறித் தமது கருத்துக்கிசைந்த விடத்துக்குச்சென்றார். விந்தத்தனக்குட் சினங்கொண்டு, சூரியபகவானிடத்துச்சென்று, ஓஸ்வாமி! மஹாமேரு வென்னைவிட வுயர்ந்தவரில்லையென்றும், சிறப்பிலுயர்ந்தவன் தானென்றும், தன்னைத்தானே சிறப்பித்துக்கொண்டிருக்கிற காரணமென்னவென்று வினவ; சூரியபகவான் சொல்லுகிறார். ஓ விந்தமே! என்னுடனே ஒன்பது நவக்கிரகங்கள் தன்னை வலஞ்செய்கிறபடியினாலும், மூவர்களும்-தேவர்களும்-முனிவர்களும்-நீங்காமல் அதனிற் சஞ்சரிப்பதினாலும், பரமன் கரத்திற்கிசைந்த வில்லானதாலும், அதிகச் சிறப்புற்றது. உயர்வில் அதற்குமிஞ்சினதில்லை. என்று சூரியன் கூறலும் விந்தங்கேட்டு அதிக சினங்கொண்டுவந்து வளர்ந்து, அம்மகமேருநாண அண்டகடாகங்களைப்பிளந்துருவி, நவக்கிரகங்கள் மற்றத்தேவர்கள் வீதியையடைத்துப் பெருத்தது. அதுகண்ட தேவர்கள் நடுக்கமுற்று இந்திரனிடத்து முறையிட்டனர். இந்திரன் அதிக இறுமாப்பைக்கொண்டு வளர்ந்த விந்தத்தையடக்க கும்பமுனியல்லது மற்றவரால் முடியாதென்றுகருதி, தக்ஷணந் தேவர் கூட்டத்தோடு பொதியமலைக்குச் சென்று, அகத்தியரைக்கண்டு வணங்கிப் பலவாறு புகழ்ந்து, விந்தம் இறுமாப்படைந்ததைக் கூறினன்.

அதுகேட்ட அகத்தியர் மனமிரங்கி, தக்ஷணந் தானுந் தன்மனைவி லோபாமுத்திரையும் விந்தகிரிக்கு உத்தரதிசையிலிருந்து வருபவர்போல் வந்தனர். அதனை விந்தங்கண்டு, தவசிகாமணியாகிய அகத்தியரைக்கான ஒரு வேதியருருவந்தரித்து வந்து நமஸ்காரஞ்செய்து, பலவாறு புகழ்ந்து, தாங்கள் இங்கு வந்த காரணமென்னென்று வினவியது. அதற்கு அகத்தியர் சொல்லுகிறார்: ஓ விந்தமே! நாம் பொதியமலைக்குச்செல்லவந்தோம். நீ அண்டமுகடளாவி யிருக்கின்றனை. இதென்னவென்று யோசித் திருக்கும்போது நீயும்வந்துவிட்டனை. ஆதலால் எனக்கு வழிவிடென்று கூறலும் விந்தங்கேட்டு, அங்குஷ்டப் பிரமாணமாகிய அகத்தியர்செல்லத் தன் சொரூபத்தையடக்கிப் பூமிமட்டமாயாகிச் சொல்லுகின்றது: ஓ ஸ்வாமி! அடியேன்புனிதமாகும்படி தங்கள் திருவடியை என்மேல்வைத்து நடவுமென்று வேண்டிற்று. அகத்தியர்மகிழ்ந்து, அவ்விந்தமேல் நடந்து கடந்து விந்தத்தைநோக்கிச் சொல்லுகிறார்: ஓவிந்தமே! நாம் பொதியந்துக்குச் சென்று வருமளவும் இப்படியாகவே இருவென்று கூறிப்போயினர். விந்தம் முனிவர் கட்டளைப்படி பூமிக்குச்சரியாகவே யிருந்துவிட்டது. தேவர்களும் நவக்கிரகங்களுங் களிப்புற்றனர் ஓ தருமநந்தன! அகத்தியர்பிரதாபத்தையும் மகிமையை

யும் யாவரா லுரைக்கக்கூடும்? என்றுகூறி அகத்தியர் ஆச்சிரமத்தைக்கடந்து சிலதூரஞ் சென்றார்கள். அங்கு கவுசிகநதி தோன்றிற்று. அதில்உரோமசன்மர் முதலான வேதியர் குழாமும், தருமராஜன் - வீமன் - நகுலன் - சகாதேவன் - பாஞ்சாலி-இவர்களும் ஸ்நானஞ்செய்து கந்தமூலங்களைப் புசித்தனர். இவர்களில் தருமஸ்வரூபியாகிய தருமராஜன் உரோமசன்மரை வணங்கிச் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி ! இதோவிருக்கிற ஆச்சிரமம் யாருடையது? அதனை எனக்கு விளங்க வுரைக்கவேண்டுமென்றுகூற, உரோமசன்மர் சொல்லுகிறார். ஓ தருமநந்தன! இந்த ஆச்சிரமங் கலைக்கோட்டு மஹாமுனிவ ரிருந்தது. அவரது சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளும்.

கலைக்கோட்டுமுனிவர் சரித்திரம்.

ஐயா தருமநந்தன ! காசிப முனிவருடைய புத்திரர் விபாண்டகமுனிவர், அவர் அருமையிலும் அருமையாகிய தவத்தைச்செய்து தீர்த்த யாத்திரை செய்யக்கருதி, மண்டலத்திலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து வருகிறபோது, திவ்யநதிகளிலொன்றாகிய ஒரு நதியைக்கண்டு அதில் ஸ்நானஞ்செய்ய, அந்நதியில் ஒரு அரம்பை ஸ்திரீவந்து ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தாள். விபாண்டகமுனிவரானவர் அவளது உருவத்தைக்கண்டு காமவெறி கொண்டு தத்தளித்ததனால், அந்நதியில் அவர் விந்து கலிதமாகிவிழ, அதுகண்ட விபாண்டகர்தேறி அந்நதியில் ஸ்நானஞ்செய்து கரையேறினர். ஒருமான் வந்து அந்நதியில்நீரை அருந்த, விபாண்டக முனிவர் விட்ட விந்துநீரின்மூலமாக மான்வயிற்றி லடைந்து கருவாகி, ஒருமுகூர்த்தத்தில் அம்மான் வயிற்றினின்றுங் காவிகாம்பர தண்டுகமண்டல தாரியாகத் தலையிலொருகொம்புடனே ஒருபுத்திரன் வெளிப்பட்டான். அதுகண்ட மான் தன்னிடத்தினின்றும் பிறந்தது மானிடமா யிருத்தலால் அச்சிசுவின்மேல் விருப்பமுறாமற் பயந்தோடிப் போய்விட்டது. ஞானத்தோடுவிளங்கும் விபாண்டகமுனிவருடைய விந்தாதலால் அப்புத்திரன் பிறந்தவுடன் எழுந்து, அந்நதிக்கரையிலிருக்குந் தன் பிதாவைக்கண்டு பணிய, விபாண்டகமுனிவர் கண்டுமகிழ்ந்து, புத்திரனைவாரித் தழுவிப் பலஆசிகள்கூறி, சகலகலைக்ஞானமுந் தனக்குத்தானே விளங்கும்படி கிருபாநோக்கம்வைத்து, கலைக்கோட்டுடன்பிறந்தமையால் கலைக்கோட்டு மஹாமுனியென்று பெயரிட்டு, பலபல மந்திரோபதேசஞ் செய்து, நல்லகதியையடைய நல்லமுயற்சியிலிருவென்று கூறிப் போய்விட்டனர்.

கலைக்கோட்டு மஹாமுனிவர் அன்றுமுதல் தவத்திலிருந்தனர். ஆனால் அந்தக் கலைக்கோட்டு மஹாமுனிவர் இப்பிரபஞ்சத்தின் செய்கை எள்ளளவேனு மறியாதவராகி, சுத்தவைதிகத் தன்மையிற் சிறந்தவராயும் - ஆண் - பெண் - என்கிறபேதங்களை யுணராதவராகியு மிருந்தனர். தவத்திலேயோ? அவரைவிட உயர்ந்தவரில்லை. அநேகங் கற்பகாலம் அவர்க்கொரு நொடிப்பொழுதாக இருக்குமென்றால், அவர்பெருமையை யாவரா லுரைக்கக்கூடும்! அவ்வளவு சிறப்பினைவகித்த முனிவரானவர் தவஞ்செய்திருக்கிறகாலத்தில், அங்கதேசத்துக்கு அதிபனாகிய ரோமபாதனென்னும் அரசன் தன்னரசுசெல்லு மிடங்களிலிருக்கிற பிராமணர்களை அலக்ஷியமாக எண்ணி அரசுசெலுத்திவந்தான். அக்காலத்தில் ஒரு பிராமண முனிவரால் அவ்வரசனுக்குச் சாபம்நேரிட்டு, அவன் நாடெல்லா மழையில்லாமற் சகல உயிர்களும் பசிநோய்க்குள்ளாகிக் கனவருத்த முற்றன. அரசனதுகண்டு வருத்தமடைந்து, தன் குருவை அழைப்பித்து வந்தனைவழிபாடுசெய்து, மழையுண்டாவதற்கு ஒரு ஏது சொல்ல வேண்டுமென்று வினவினன். அதற்கு அக்குருவானவர் சிறந்த தவத்தினையுடைய கலைக்கோட்டு மகாமுனிவர் நின்னாட்டுக்குவந்தால் மழைபெய்யுமென்றுகூற, அரசன் அப்படியே கலைக்கோட்டுமகாமுனிவரை யாவரழைத்து வருகிறார்களோ? அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறேனென்று முரசமுன்னிலையில் தன்னகர முழுவதுந் தெரிவித்தான்.

அதுதெரிந்த அந்நகரத்தி லிருக்குங் கணிகை மாதர்களில் இருவர்வெளிப்பட்டுஅரசனிடத்துவந்து, நாங்களழைத்து வருகிறோமென்றுகூறித் தாம்பூலம் பெற்று வெளிப்பட்டு, நாடு - நகரம் - காடு-மலை-வனம்-வனாந்திரங்களைக் கடந்து, கலைக்கோட்டு மகாமுனிவரிருக்கிற ஆச்சிரமத்திற்கு ஒரு யோசனை தூரத்தில் மற்றொரு ஆச்சிரமமியற்றி, இரண்டு கணிகையருங் காவிகாம்பர தண்டுகமண்டலதாரியாகித் தவவேடங்கொண்டு, அங்கிருந்து கலைக்கோட்டு மகாமுனிவரிருக்கிற இடத்துக்குச்சென்றார்கள். கணிகையர்களாகிய பொய்த்தவ வேடரைக்கண்ட கலைக்கோட்டு மகாமுனிவர் - ஓ ! ஓ ! இவர்கள்மகாமுனிவர்கள். நமக்கு ஒருகொம்பு சிரசிலிருந்தால், இவ்விருவருக்கும் இரண் டிரண்டுகொம்பு மார்பி லிருக்கின்றதென்று எண்ணி, எதிர்வந்து அழைத்துப்போய் ஆசனத்திலிருத்திச் சோடசோப சாரஞ்செய்து புகழ்ந்தனர். வேடங்கொண்டகணிகையர்இருவரும் முனிவர்களைப்போல அபிநயித்து, அவ்வேடத்திற் கேற்ற சிலவார்த்தைகளைப்பேசி விடைபெற்று வந்து, இவ்வாறே ஒருதரம் இரண்டு தரஞ்சென்று அவர் மனோபாவத்தையறிந்து கொண்டு, இவர் சுத்த வைதிகத்தன்மையிற் சிறந்திருக்கிறார், ஆதலால் இவரை நமது நாட்டுக்கு அழைத்துப்போக வேண்டுமென்று துணிவுகொண்டு; ஒருநாள் கலைக்கோட்டா ரிடத்துக்குவந்து வந்தனைசெய்து ஒஸ்வாமி! நாங்கள் அனேகந்தரந் தங்களாசிரமத்துக்கு வந்தோம். தாங்கள் ஒருதரமாவது

எங்கள் ஆச்சிரமத்துக்கு வராதிருப்பது தகுதியல்ல, எங்கள்மேற் கிருபைகூர்ந்து ஏழையேங்கள் புனிதமாகும்படி எங்களாச்சிரமத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று வினவ, கலைக்கோட்டார் அவர்கள்கருத்துக்கிசைந்து அவ்வாச்சிரமத்துக்குவர, அவர்கள் கலைக்கோட்டாருக்குச் சோடசோப சாரஞ்செய்து, காட்டிலுள்ள கனிகளைப்புசிக்கும் அவருக்கு நாட்டிலுள்ள மாதுரியக் கனிகளைக் கொடுத்துப் புசிக்கச் செய்தார்கள். கலைக்கோட்டார் அக்கனிகளைப் புசித்து அதிக மதுரமாக இருப்பதைக்கண்டு, இக்கனிகளேது? இவை எங்கிருக்கின்றவைகள்! என்றுவினவினர். அதுகேட்ட கணிகையர் பார்த்து, இதுதான் தருணமென்று கருதினவராகிச் சொல்லுகிறார்கள்.

ஓஸ்வாமி! இக்கனிகளின்மேல் தங்கள்கருத்துச் சென்றமையால் அக்கனிகளிருக்குமிடத்துக்குச்செல்லுவோம் வாருமென்று இரண்டுகணிகைமாதரும் அவரை அழைத்துக்கொண்டு, காடு-மலை-வனம் - வனாந்திரங்களைக்கடந்து அங்கதேசம்வந்து சேர்ந்தார்கள். கலைக்கோட்டாருடைய திருவடி அங்க தேசத்திற் பொருந்தின மாத்திரத்திற் பிராமணமுனிவன் சாபத்தால் மழையில்லாமற் பாலைவனம்போலிருந்த அங்கதேசம் மாதமும்மாரி பெய்துவரும் நாட்டைப்போலச்செழிக்கச் சப்தமேகங்களுஞ் சோனைமாரிபோலப் பொழிந்தன. மழைபெய்யவே அரசன் தானனுப்பிய கணிகைமாதர் கலைக்கோட்டாரை அழைத்து வந்தனரென்றுணர்ந்து, தக்ஷணந் தன் பரிசனத்தோடு வெளிப்பட்டுக்கணிகைமாதரிருக்கும் இடத்துக்கு வந்து, கலைக்கோட்டாரைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, அவரிரண்டு பாதத்தையும் விடாமற்பற்றிக்கொண்டு, ஓ ஸ்வாமி! அடியேன் செய்த மாதவப்பேறோ? எங்கள் முன்னோர்செய்த நலமோ? இந்நாடு செய்த சுகிர்தமோ? தேவரீர் இங்கு வந்தீர். தாங்கள் இங்குவந்ததற்குக் காரணம் இந்த இரண்டு கணிகைமாதர்கள் தான். இவர்கள் எனக்கும் என்னாட்டிலுள்ளவருக்கும் நேரிட்ட பசிவருத்தம் நீங்குதற்கேதுவாகிய மழைபொழியத் தங்களையடைந் தழைத்துவந்தனர். எங்கள் துன்பநீங்கும்பொருட் டிம்மாதர்கள் பொய்த்தவ வேடங்கொண்டு மெய்த்தவ சிகாமணியாகிய தங்களை ஏதோஒருவிதஉபாயஞ்செய்திருக்கின்றனர். அதற்காகத் தாங்கள்சினங்கொள்ளாமல், அடைக்கலமென்று புகுந்த தமியேன்மேற் கிருபைகூர்ந்து, எனக்கும் அம்மாதருக்கும் நலமுண்டாக இந்நகரத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று வேண்டினான்.

அதுகேட்ட அருட்கடலாகிய கலைக்கோட்டுமகாமுனிவர் சினங்கொள்ளாமல், வந்து வணங்கிய அரசனுக்குப்பலஆசிகள்கூறி, பொய்த்தவவேடங்கொண்ட இரண்டு கணிகையரையு மாதரித்து, அரசன் கொண்டுவந்த இரதத்திலேறி நகரத்துக்குவந்து சிலநாளிருந்து, பின்பு அரசன் அனுமதியினால் அவ்விரண்டு கணிகையரையுந் தனக்குமனைவியராகக்கொண்டு, உடனே அரசனிடத்துவிடைபெற்று அவ்விரண்டுமனைவியரோடு இந்தவனத்திற் சிலநாள் வாழ்ந்திருந்தனர். என்று உரோமசன்மர் கூறியதைத் தருமராஜன் கேட்டு மகிழ்வடைந்து, அங்குள்ள நதியில் ஸ்நானஞ்செய்து, தம்பியரும்-மனைவியும்-வேதவேதியருந் தன்னைச் சூழ்ந்துவர உரோமசன்மரோடு பிரயாணப்பட்டுச் சிலதூரஞ்சென்று, பரசிராமர் ஆச்சிரமத்தருகில் வந்தார் அப்போதத்தருமராஜன் உரோமசன்மரைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓசுவாமி! இவ்வனம் யாருடையது? அவருடைய நாமத்தைக் கூறினால் நாம் சென்றுதொழலாம். ஆதலால் தேவரீர் தயைசெய்து கூறுமென்று வினவ, உரோமசன்மர் சொல்லுகிறார்: ஓதருமநந்தனா! இந்தவனம் பரசிராமர் ஆச்சிரமம். அவரைக்கண்டுதரிசிக்கவேண்டுமென்று நீர்விரும்புகிறபடியால், இதுபூர்வபக்ஷமாகையால் இந்நதியில் ஸ்நானஞ்செய்ய நாளையுதயத்துக்கு இவ்விடம் வருவார். இன்றையப்பொழுதை இங்கிருந்து கழிப்போமென்றுகூற, அப்படியே ஆகுகவென்று தருமன்முதலாயினோர் அப்பரசிராமர் ஆச்சிரமத்தருகிலிருந்தார்கள். சூரியன் அஸ்தமித்தான்.

பரசிராமர் சரித்திரம்.

இப்பால் தருமராஜன் உரோமசன்மரைவணங்கி, ஓஸ்வாமி! இன்றையப்பொழுது வீணாகக் கழியாமலிருக்க இவ்வனத்தின் முனிவருடைய சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்றுவினவ, உரோமசன்மர் சொல்லுகிறார்: கேளும் தருமநந்தனா - பிருகுமுனியென்பவர் பிரமசரியத்தை மேற்கொண்டு நெடுநாள் தவமியற்றிச் சாபானுக்கிரக சாமர்த்திய முள்ளவராகியிருந்தனர். அக்காலத்தில் ஒரு ராஜனுக்கு இரண்டு குமாரத்திகளிருந்தனர். அவ்விருவரில் மூத்தாளைத் தான் மணந்து வனத்தில்வந்து, மனைவி பணிவிடைசெய்யத் தான் தவத்திலிருந்தார். அனேககாலந் தவத்திலிருக்கிற பிருகுமுனியானவர் தனக்கு மனஞ்சலியாமற் பணிவிடைசெய்துவரும் மனைவியின் மேற்களிப்புற்றுச் சொல்லுகிறார்: ஓ மாதே! நீ என்னாற் பெறவேண்டிய தெதுவோ? அதனைப் பெற்றுக்கொள்ளென்று கூறலும், மனைவிமகிழ்ந்து வணங்கிச் சொல்லுகிறாள்: ஓ சுவாமி! எனக்குங் காசிராஜனை மணந்த என்சகோதரிக்கும் புத்திரபாக்கியமில்லை. தாங்கள் தயைசெய்து புத்திரபாக்கியத்தை யளிக்கவேண்டுமென்றுவினவ, முனிவர்மகிழ்ந்து சொல்லுகிறார். ஓ மாதே! உன் கருத்தின்படி வரங்கொடுத்தேன். பூரணைசோமவாரத்தில் அதோ இருக்கும் நதியில் ஸ்நானஞ்செய்து, உன் தங்கைமுருக்கமரத்தையும் நீ அரசமரத்தையுந்தழுவுங்கள். நீ ஒருபிராமணப்புத்தி

ரனையும் உன்தங்கை இராஜபுத்திரனையும் பெறுவீர்களென்று கூறினர்.

பின்பு பிருகுமுனிமனைவி தங்கையை அழைப்பித்துக்கொண்டு, தன்கணவன்கூறிய சோமவாரத்தில் இருவரும்நதியில்ஸ்நானஞ்செய்து, பிருகுமுனிகூறியபடி தழுவாமல் அரசன்மனைவி அரசமரத்தையும் பிருகுமுனிமனைவி முருக்கமரத்தையுந் தழுவி, அப்பால் யோசிக்கும்போது மாம் மாறுபட்டதைக்கண்டு இரண்டு மாதர்களுமனவருத்தமுற்று முனிவரிடத்துவந்து, தாங்களிருவரும் மரத்தை மாறுபாடாகத் தழுவியதைக்கூறினர். முனிவர் குறுநகைகொண்டு சொல்லுகிறார். ஓ மாதரசே! நாம் கூறியபடி தழுவாமல் மாறுபட்டுத் தழுவினமையால், இராஜமனைவிக்கு வேதியனும் உனக்கு அரசனும் உண்டாவாரென்று கூற, இருவரும் மனவருத்தமுற்றுப் பலவாறு துதித்து, ஓ ஸ்வாமி! உலகம் பழிக்குமாதலால் திருவுளங்கனிந்து யார் யார்க்கு எந்தக்குலபுத்திர னுண்டாக வேண்டுமோ? அந்தக் குலபுத்திரனுண்டாகும்படி கிருபை செயவேண்டுமென்றுவேண்ட, முனிவர்மகிழ்ந்துஇராஜகன்னிகை இராஜபுத்திரனையும் நீ பிராமணபுத்திரனையும் பெறக்கடவதென்று வரங்கொடுத்தனர். அம்முனிவர் கட்டளைப்படி காசிராஜன் மனைவி ஒரு ராஜபுத்திரனைப்பெற்றாள். அப்புத்திரன் கவுசிகராஜனென்று பெயர்கொண்டு மகுடாபிஷேகனாகி அரசாண்டு, வேட்டைக்குவந்து வேட்டையாடி வசிஷ்டர் ஆசிரமமடைந்து, அந்த வசிஷ்டமுனிவர் கட்டளையினால் அன்னமிட்ட காமதேனுவைப்பிடிக்கப்போய்ப் பங்கப்பட்டு, தவமகிமையே பெரிதென்றெண்ணித் தவசியாகி விஸ்வாமித்திர ரென்று பெயர்வகித்து, சாபானுக்கிரக சாமர்த்திய முள்ளவராயிருக்கிறார்.

இங்கே முனிவர்மனைவி ஒருபுத்திரனைப்பெற்று ஜமதக்கினியென்று பெயரிட்டு வளர்த்து வந்தாள். பிருகு தன்புத்திரனாகிய ஜமதக்கினிக்கு நாலுவேதம்-ஆறுசாஸ்திரம்-அறுபத்துநாலு கலைக்கியானமுதலியவற்றைக் கற்பித்துத் தவத்துக்கு உபயோகமாகிய மந்திரங்களை உபதேசித்தனர். ஜமதக்கினி தவவேடங்கொண்டு, இந்த வனத்தில்வந்து தவம்புரிந்து, ரேணுகையென்னும் ராஜபுத்திரியை மணந்து கூடிக்கலந்து வாழ்ந்துவந்தனர் அவ்விரேணுகாதேவி தன்னுவன் - அனுவன் - விச்சுவாவசு - இராமன்-என்னு நான்கு புத்திரர்களைப் பெற்றாள். அவர்களில் இராமனென்னும் பெயரையுடையபுத்திரன் தமயன்மார்களைவிடமேலாய் வேதாகம கலைக்கியானங்களை யுணர்ந்து, முற்செய்கையால் அரசர்க்குரிய தனுர்வேதங்களையும் பயின்று, தவசிரேஷ்ட சிகாமணிகளுக்கும் அருமையாகிய சாம்பவமூர்த்தியை நோக்கித் தவத்திலிருந்து, அச்சாம்பவ மூர்த்தியின் அனுக்கிரகத்தாற் பரசு என்னும் ஆயுதம்பெற்று, பரசிராமனென்று யாவரும் புகழ இனிது வீற்றிருந்தார். புத்திரபாக்கியத்தைப் பெற்ற இரேணுகை தன் கணவனாகிய ஜமதக்கினிக்குச் சதாகாலமும் பணிவிடைசெய்துவந்தனள். ஒருநாள் பூசைக்குச் சலந்திரட்டிவர நதிக்குச்சென்றாள். அங்கொரு காந்தருவபுருஷன் அந்நதிக்குநேராக அந்தரத்திற்செல்ல, அவன்சாயல் அந்நதியில் தோன்ற, ரேணுகை அந்தச்சாயலைப்பார்த்து அவனது அழகைக்கண்டு மனதில் மதித்து வியந்து சலந்திரட்டினாள்.

ஓ தருமநந்தன! பூர்வசன்மத்தில் ஒருவனுக்கு மனைவியாக இருந்து மற்றொருசனனத்தில் வேறொருவருக்கு மனைவியாக இருப்பவள், பூர்வ பிராரத்துவ சம்பந்தத்தால் பூர்வஜன்மப் புருஷனை வேறொருவடிவமாக இருக்கக்கண்டு மனதில் மதித்து வியந்தாலுங் கற்புக்கழிவுவருமென்று கற்புசாஸ்திர முறையிடுகின்றமையால், ஜன்மவாசனையுமில்லாத ரேணுகை ஒரு புருஷனைவியந்து சலந்திரட்டினாற் சலங்குடத்திற்றிரளுமோ? சலந்திரளாதிருக்கிறதைக் கண்ட அம்மாது மனவருத்தமுற்று, உடனே தன்கணவனிடத்துச்சென்றுசித்திரப்பிரதிமைப்போல் அசைவற்றுநின்றனள். திரிகாலத்தையு மறிந்த ஜமதக்கினிமுனிவர் மனைவியின் கருத்தையறிந்துகொண்டவராகி, தக்ஷணந் தன்னருகிலிருந்த மூன்றுகுமாரர்களை அழைத்து, இந்த மாதினை வெட்டிவிடுங்களென்று கூறினர். மூன்று புத்திரரும் அன்னையைக் கொல்வதற் கஞ்சினவராகிப் பின்னிடைந்தனர். ஜமதக்கினி சினங்கொண்டு மூவரையும்நோக்கி, அடாபாபிகளே! பிதாவாகியஎன்சொல்லை நீங்கள் மறுத்தமையால் நீங்கள் மூவரும் பிராமணத்தன்மையழிந்து, நீங்கள் படித்த வேதாகமங்களெல்லாமறந்து, வேடுவராகி வில்லம்பு முதலியவற்றையேந்தி, மிருகவதைசெய்து அதனது மாமிசத்தைப் புசித்துக்கொண்டு நீச்சத்துவ மெய்தக்கடவீர்களென்று சபித்துவிட்டார். மூவருந் தந்தைசாபப்படியாயினர். ஜமதக்கினி பின்புநாலாவதுபுத்திரனாகிய பரசிராமரை அழைத்து, இம்மாதைக்கொலைசெய்து வாவென்று கட்டளையிட்டனர். பரசிராமர் தந்தை வாக்கியத்தை வேதவாக்கியமாகக்கொண்டு, தாயினைத் தலைவிலைழைத்துப்போய் உடைவாளால் வெட்டி எறிந்துவிட்டுத் தந்தையிடத்துவந்து வணங்கி நின்றனர்.

அதைச் சமதக்கினிகண்டு, மனமகிழ்ந்து,வணங்கிய மைந்தனை வாரித்தழுவி, அப்பா புத்திரசிகாமணியே! என் வாக்கியத்தைத் தடுக்காமல் தாயைக் கொலைசெய்தனை. நீ சத்திய சொரூபியென்பது இதனால் விளங்குகின்றது. உனக்கு என்ன வேண்டியது கேள் தருகிறேனென்றுகூற, பரசிராமர் மறுபடியும் வணங்கிச்சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி! என்தமயன்மார் மூவருந் தங்கள் சாபத்தினால் நீச்சராயினர். அவர்கள் முன்போல்மாதவசிரேஷ்டராகவும், கற்புக்கழிவுவந்து இறந்த என் மாதா முன்போற் கற்புடைமைபெற்று உயிர்பெறவும், தாயைக் கொலைசெய்தபாவம் என்னையணுகாமற்பறக்கவுங் கிருபைசெய்யவேண்டுமென்று

வினவினன். ஜமதக்கினிமகிழ்ந்து, பரசிராமர் கருத்தின்படி நீச்சராயின மூன்றுகுமாரரை முன்போலாக்கி, ரேணுகையையெழுப்பி, பரசிராமரடைந்த பாவத்தையகற்றி முன்போல் வாழ்ந்திருந்தனர். பரசிராமர் வேறொரு வனத்திற்சென்று தவநிலையியற்றித் தவஞ்செய்திருந்தனர். கேளும் தருமநந்தனா! அக்காலத்தில் கார்த்தவீரியார்ச்சுனன் என்றொரு அரசனுண்டாகி உலகத்தை யாண்டுவந்தனன். அந்த அரசன் முனிவர்களிருக்கிற ஆச்சிரமங்களில் வந்து, எள்ளளவேனும் இரக்கமில்லாமல் வனங்களை அழிக்கிறதும், அதைக்குறித்துவந்த முனிவரையும் முனிவருடைய சிஷரையும் அதமாக்குகிறதுமாக இருப்பான். அந்தக்கார்த்தவீரியார்ச்சுனன் ஒருகால் தன்சேனைகளோடுவேட்டைக்குவந்து வேட்டையாடி, ஜமதக்கினி ஆச்சிரமத்துக்குவந்து அந்தஆச்சிரமத்தை அதமாக்க, ஜமதக்கினியின் புத்திரர்மூவரும் வந்தெதிர்த்துக் கார்த்தவீரியார்ச்சுனனைத் தடுத்தனர்.

அதனாற் கார்த்தவீரியார்ச்சுனன் அளக்கரியஆற்றலையுடையவனாகி அந்தமூவர்கள்மேல் எதிர்த்தனன். அதையங்கிருக்கிற முனிவர் குழாங்கண்டு, அயலிலிருக்கும் வனத்தில் தவஞ்செய்திருக்கும் பரசிராமருக்குத் தெரிவிக்க, அவர் கடுஞ்சினமடைந்து வந்து கார்த்த வீரியார்ச்சுனனை எதிர்த்து, அவனுடைய இரதகஜதுரக பதாதிகளையெல்லாம் அதமாக்கி, அவனையும் வெட்டி யெறிந்தார். அவ்வர்ச்சுனனுடைய நால்வகைச் சேனைகள் சுறுவளியி லகப்பட்ட மயிலிறகுபோற் பயந்தோடி நகரமடைந்தார்கள். நகரியிலுள்ளவர்கள் பெரிய சபையொன்று கூடி, கார்த்த வீரியார்ச்சுனன் புத்திரனுக்கு மகுடாபிஷேகஞ் செய்கிறதென்று ஒரு ஏற்பாடுசெய்து, அப்புத்திரனை யழைத்து நல்ல சுபமுகூர்த்தத்தில் மங்கள ஸ்நானஞ்செய்வித்து, வேதவேதியர்கள் பல ஆசிகள்கூற மகுடாபிஷேகஞ் செய்து, சகலருந் தகுந்த மரியாதை செய்தனர். கார்த்தவீரியார்ச்சுனன் புத்திரன் மகுடாபிஷேகனாகி அரசுசெலுத்தி, தன் தந்தையைக் கொன்றவனின்னானென் றுணர்ந்துகொண்டு, எவ்விதத்திலும் அவன் றந்தையைக் கொல்லுகிறேனென்று கங்கணங்கட்டிக்கொண்டு, நேராகச்சென்று கொல்வதற்குச் சக்தியில்லாதவனாகிப் பரசிராமரில்லாத சமயம் பார்த்துச்சென்று, கரவடமாகிஜமதக்கினியைவெட்டியெறிந்துவிட்டான். அதை ரேணுகை அறிந்து ஓவென்றலறி மார்பிலடித் தழுதாள். அங்கிருக்கிற முனிவர் குழாமுஞ் சிஷருமறிந்து, அருகிலொருவனத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கிற பரசிராமருக்குத் தெரிவித்தனர்:

அக் கொடுமையைக் கேட்டமாத்திரத்திற் பரசுராமர் காலாக்கினி உருத்திரனைப்போலச்சிறிவிரைவில் வந்து, தந்தை களேபரத்தைக்கண்டு துக்கிக்காமல் தாயை நோக்கி, ஓ அம்மணி! நீவருத்தப்படாதிரு. நீஎன்கண்காண இப்போது எழுதரம்மார்பிலடித்துக்கொண்டு அழுதமையால், சூரியகுலம்எழுதலைமுறையில்லாம லிருக்க என்பரசுக்கிரையாக்கி, சூரியகுலத்தரசரையெல்லாம் நாசப்படுத்துகிறேனென்று சபதங்கூறி, உடனே தந்தை களேபரத்தை யடக்கஞ்செய்து, செய்யவேண்டிய பிதுர்க்கடனைநிறைவேற்றி, பின்பு போர்க்கோலங் கொண்டு வெளிப்பட்டுச்சூரியகுலத்தரசரோடு எதிர்த்து நாசப்படுத்தி, கார்த்தவீரியார்ச்சுனன் புதல்வன்மேல் எதிர்த்து அவனைத் தனது மந்திராஸ்திரத்துக்கு இரையாக்கி, அவனுடைய புத்திரமித்திரர் முதலியோரையும் நாசமாக்கி, அச்சூரிய வமிசத்தி லெங்கேனுங் கருவிருந்தாலும் அதனையும் விளங்கவொட்டாமற்செய்து, பெரிய ஓர் உதிரவாறுண்டாக்கி, அந்த ஆற்றில் தந்தைக்குச் செய்யவேண்டிய மற்றைக்கடனையு நிறைவேற்றி, வீரகங்கணத்தோடு சூரியகுலத்தரசர்களின்பூமியையெல்லாங் காசிபரிடத் தொப்பிவித்து, தான் முன்போலத் தவ வேடங்கொண்டு மகேந்திரகிரிக்குச் சென்று, அங்கு தவநிலையொன்றியற்றித் தவத்தி லிருக்கிறார். அவர் சூரியோதயமானவுடன் இந்நதியில் ஸ்நானஞ் செய்ய வருவார். என்று கூறினவுடன் சூரியனுமுதயமானான். பரசிராமரும் வந்தனர். அவரைத்தருமராஜன்கண்டு தம்பிமாரோடு எதிர்சென்றுவணங்கித்தன் பெயரை எடுத்தோதினர். பரசிராமர் தருமராஜனையும் அவன் சகோதரரையுங் கிருபாநோக்கம் பெருக நோக்கிப் பலஆசிகள்கூறிச் சொல்லுகிறார்.

ஓ தருமநந்தனா! நீ சத்தியசந்தனன். உன்னாற் பலதருமங்களும் நிறைவேறும். தருமதேவதை நாலு பாதத்தோடு நடக்குமாதலால் உனக்கு யார் யார் என்னென்ன குற்றஞ்செய்தபோதிலும் உனக்கொரு அழிவில்லை. நீ இன்னுஞ்சிலநாளில் உலகாதிபதியாகியிருப்பாயென்று வாழ்த்தி, தாம் நாடிவந்த நதியில் ஸ்நானஞ்செய்து தமதிருப்பிடஞ் சென்றார். தருமராஜன் தம்பியரோடு அங்குள்ள நதியில் ஸ்நானஞ்செய்து அங்கு சிலநாளிருந்து, பின்புகோதாவிரி நதிக்குச்சென்று அந்நதியில் ஸ்நானஞ்செய்து, அந்நதிக்கரையில் யாகசாலையொன்றியற்றி, அந்த யாகசாலையிற் சகலமுனிவர்களும் வேதமந்திரங்கூறயாகஞ்செய்தனர். அத்தருணத்தில் துவாரகைக் கதிபனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பஞ்சவராகிய தன்மைத்துனரைப்பார்க்க விருப்புற்று, தான் தன்சகோதரனாகிய சாத்தகியையும் பரிசனங்களிற்சிலரையும் அழைத்துக்கொண்டு இரதமேறிவந்து, கோதாவிரிக்கரை யணுகித் தருமராஜனைக்கண்டு வணங்கினார். தருமராஜன் காடாலிங்கனஞ் செய்தனன். வீமன் - நகுலன்-சகாதேவன் - பாஞ்சாலி - இவர்கள் விழுந்து வணங்கினர். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ் சாத்தகியும் மகிழ்ந்தவராகி, பின்பு அப்பாண்டவர்களுந் தாங்களும் ஒருவரையொருவராலிங்கனஞ்செய்து சந்தோஷங்கொண்டாடி

னர். தருமராஜன் கிருஷ்ணமூர்த்தி சாத்தகிஇவ்விருவரோடு சிலநேரம் நல்வசனம் வசனித்து, பின்பு ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியையுஞ் சாத்தகியையுந் துவாரகா நகர்க் கனுப்பிவிட்டு, தான் தன் சகோதரர்களோடு அக்கோதாவிரிநதியைக்கடந்து, சையாதிமஹாராஜன் யாகஞ்செய்த பூஞ்சோலைக்குவந்துசேர்ந்து, தன்னுடன்வருகிற உரோமசன்மரைப்பார்த்து வணங்கிச் சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி! இந்தவனம் யாருடையது? இதில் யாகவேதிகை முதலியவை யிருக்கவேண்டிய காரணமென்ன? இதனை அடியேற்கு விளங்க வுரைக்க வேண்டுமென்றுவினவ, உரோமசன்மர் மகா சந்தோஷத்துடன் சொல்லுகிறார்.

சவுநகமுனி சரித்திரம்.

கேளும் தருமநந்தன! பிருகு முனியினுடைய புத்திரராகிய சவுநகமுனி இவ்வனத்தில் அனேகநாள் தவஞ்செய்தனர். நெடுங்காலந்தவத்திலிருந்தமையாற் சவுநகரைப் புற்றுமூடிற்று. அக்காலத்திற் சையாதி மஹாராஜன் வேட்டைக்குவந்து அவ்வனத்திலிறங்கினன். அந்த அரசனுடன்வந்த தன் குமாரத்தி சுகன்னிகை அவ்வனத்தின்விநோதங்களைப்பார்க்க வெளிப்பட்டு, சவுநகர் கண்ணொளி பிரகாசிக்கின்ற புற்றினிடத்துவந்து, இதென்ன ஒளியென் றையுற்று, அங்கிருக்குந் துரும்பிலிரண்டு துரும்பெடுத்து இரண்டொளியின்வழியிற் குத்தினள். அந்தத்துரும்பு புற்றில் தவஞ்செய்திருக்கிற சவுநகர் கண்ணிற்குக் கிஞ்சித்து வருத்தமுண்டாக்கிற்று. சவுநகர் சினங்கொண்டு, அரசன் இராசகன்னிகை-மந்திரிகள்-இவர்கள் தவிர மற்ற நால்வகைச் சேனைக்குங் கண்தெரியாமலிருக்கச் சபித்தனர். அரசனதையறிந்து முற்றுஞ்சோதித்து, தன் குமாரத்தியாற் குற்றம்நேரிட்டதென்றுணர்ந்து, புற்றினிடத்துவந்துபலவாறுபுகழ்ந்து முனிவரைக்கண்டு வணங்கி, என் குமாரத்தியால்வந்த குற்றத்தை மன்னித்துஅந்தக் கன்னிகையை மணந்து என்னை யாதரிக்கவேண்டுமென்றுகூறினன். அதைக்கேட்ட சவுநகர் கோபமாறி, சேனைகளுக்குக் கண்தெரிய வரங்கொடுத்து, சுகன்னியைமணந்து, அரசனுக்கு விடைகொடுத்துத் தான் தவத்திலிருந்தார். சுகன்னிகை புருஷனுக்குப் பணிசெய்து வந்தாள்.

அப்படிபணிவிடைசெய்து வருகிறகாலத்திலொருநாள் சலந்திரட்டி வரப்போனாள். அத்தருணத்தில் அஸ்வனிதேவர்கள் சுகன்னியைக்கண்டு அவளைச்சோதிக்கஎண்ணி, ஓ மாதுசிரோமணி! உன்புருஷன்யார்? இந்தவனத்தில் நீயிருக்கவேண்டிய காரணமென்னென்றுவினவினர். அதற்குச்சுகன்னிகை-ஓ அதிதிகளே! என்கணவன் சவுநகமுனி. அவர்க்குச் சலந்திரட்டி வருகிறேனென்றுகூறினள். அதற்கு அஸ்வனிதேவர் கள்சிரித்து; ஓ மாதே! நீயோரூபவதியாகவும் இராஜ கன்னிகையாகவு மிருக்கிறாய். உனக்குக் கிழவன் கணவனாயிருப்பதினுனக்கு வரும்பய னென்ன வென்று வினவ, இந்தக்கடூரவாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்தில் மறுமொழி கொடாமல் தன்கணவனிடத்துவந்து வழியில் நடந்தவைகளைக்கூற, சவுநகர் ஞானதிருஷ்டியால் இன்னாரென் றறிந்து கொண்டவராகி மனைவியைநோக்கி, ஓ பெண்கள் சிகாமணி! உன்னுடன் தாறுமாறாக வசனித்தவரிடத்துச் சென்று, உங்கள் கருத்தின்படி இணங்குகிறேன் உங்களிலொருவரேற் படுங்களென்று கூறு. அதன்மேலவர்கள் என்னிடத்திற்கு வருவார்கள். ஆதலால் விரைவிற் செல்லென்று கூறினர். சுகன்னிகை அஸ்வனி தேவர்களிடத்துக்கு வந்து, ஓ அதிதிகளே! உங்கள் கருத்தின்படி நடக்கிறேன் உங்களிலொருவ ரேற்படுங்களென்றுகூற, அஸ்வனிதேவர்கள் நீகூறுவதிற்பயனில்லை. உன்கணவனோடு யோசித்துக்கொண்டு கருத்துமகிழும்படி நடக்கிறோமென்று கூறி, இருவருஞ் சவுநகரிடத்துக்கு வந்து அவரை அழைத்துக்கொண்டு, சுகன்னிகையோடு ஒருசுனையிற்சென்று மூவருமூழ்கி, சுகன்னிகை கண்ணுக்கு அவ்வஸ்வனிதேவ ரிருவருஞ் சவுநகரும் ஓரேவித வாலிபரைப்போல் நின்று சுகன்னிகையை நோக்கி, ஓபெண்கள் சிகாமணியே! எங்களில் யார்மேல் உனக்கிஷ்ட மிருக்கின்றதோ? அவர்களைத் தொடுவென்று கூறினர். சுகன்னிகை தன் கணவனை மனதில் நினைத்து ஒரு வாலிபனைத் தொட்டனள். தொட்டவாலிபன் கணவனாகஇருந்தமையால் அஸ்வனி தேவர்கள் மகிழ்வடைந்து, தங்கள் சுயரூபத்தோடு விளங்கிச் சுகன்னிகையைப் பலவாறுபுகழ்ந்து, சவுநகரைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்.

ஓ சவுநகமுனிவரே! நீர் தவசி. இராஜகன்னிகையை நீர்மணந்திருக்கிறீர். நாங்கள் அக்கன்னிகையின் நற்குணநற்செய்கைகளைக் கண்டறிந்து உமக்கு யௌவனதிசை கொடுத்தோம் நீர்இன்றுமுதல் அக்கன்னிகைக்குஇன்பம்பெருக நடப்பது உமது கடமையென்றுகூறினர். சவுநகர் மகிழ்ந்து சொல்லுகிறார். ஓ ஸ்வாமிகளே! முதுமைப்பருவமடைந்த எனக்கு வாலிபத்தைக்கொடுத்தமையால், யாகத்திலுங்களுக்கு அவிர்ப்பாகங்கொடுக்கிறேனென்று வாக்குத் தத்தஞ்செய்து பணிந்துவிடைபெற்று, இந்த ஆச்சிரமத்துக்கு வந்து தன்மனைவியோடு கூடிக் கலந்துவாழ்ந்து சுகத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார். சையாதிமகாராஜன் தன்மருமகனாகிய சவுநகமுனிவரைப் பார்க்கத்தன்பரிசனத்தோடு வனத்துக்குவந்து மருமகனைக் கண்டு வணங்கி, சவுநகரடைந்திருக்கிற வாலைப்பருவத்தைப் பார்த்து வியப்படைந்து, வாலைப்பருவ மடைந்ததற்குக் காரணமென்னவென்றுவினவினன். சவுநகர் அஸ்வனிதேவர்களால் வாலைப்பருவ மடைந்ததை யெடுத்தோதினர். அரசன் மகிழ்வடைந்தவனாகிச் சொல்லுகிறான். ஓஸ்வாமி! அடியேன் நெடுநாள் மகுடாபிஷே

ருகி இம்மைப்பய னெவ்வளவோ அவ்வளவையுமடைந்தேன். இனிமறுமைப் பயனைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அப்பயன் எனக்குச் சித்திக்கும்படி திருவுளங் களித்தருள வேண்டுமென்று வினவ சவுநகர் மகிழ்ந்து சொல்லுகிறார்.

ஓ மஹாராஜனே! உனக்கு மறுமைப்பயன் கிடைக்கவேண்டு மென்றால், யாகங்களைச் செய்யவேண்டும் யாகங்களுக்குத் தகுந்தபதார்த்தங்களைச் சேர்ப்பையாகில் யாகஞ்செய்து மறுமைப்பயனை அடையும்படி செய்விக்கிறேனென்றுகூற, அரசன் அக்கருத்துக்கிசைந்து, யாகத்துக்கு வேண்டியபதார்த்தங்களையெல்லாம் நகரத்திலிருந்து அழைப்பித்துக் கொண்டு அந்தயாகவேதிகைகளை யியற்றிச் சவுநகரையே குருவாகக்கொண்டு, சிலமுனிவர்கள் புடைசூழ்ந்து வேதமந்திரங்களைக்கூறத் தானுந் தன்மனைவியும் யாகதீக்ஷைவகித்து. சவுநகர் முன்னிலையில் அந்தயாகத்தை வேதாகமவிதிப்படி நடத்தினன். சவுநகர் யாக அவிர்ப்பாகத்தை அஸ்வநிதேவர்களுக்குக் கொடுக்கிறேனென்று வாக்குதத்தஞ் செய்தபடி அஸ்வனிதேவர்களை நினைக்க, உடனே அவர்கள்வரவும் யாகத்தைப் பூர்த்திசெய்து அவர்கட்கு அவிற்பாகங் கொடுக்கயத்தனித்தார் இந்திரன் இக்கருத்துணர்ந்து யாகஅவிர்ப்பாகத்துக்கு நாமுரியவனா யிருக்க அஸ்வநி தேவர்களுக்கு இந்த சவுநகர் கொடுப்பது அக்கிரமமென்று கருதி, தக்ஷணந் தன் வச்சிரப்படையையே நதிச்சவுநகரை அதமாக்க எண்ணினன். இந்திரன் கோட்பாட்டை திவ்வியாக்கினியாகிய சவுநகரறிந்து ஒரு மந்திரத்தை உச்சரித்தார் அந்த மந்திரசாலத்தால் இந்திரனுடைய கரம் ஸ்தம்பித்து அசைவற்றுக் காட்டுக் கொம்புபோலாயிற்று. மறுபடியுஞ்சவுநகர் அதிகசினங்கொண்டு, இந்த இந்திரனுக்கு இவ்வளவு இறுமாப்பாவென்று கோபித்து, அவனை நாசப்படுத்தத்தாஞ் செய்துகொண்டிருக்கும் யாகத்தில் வேறொருமந்திரத்தை யுச்சரித்து யாகஞ்செய்தார்.

அந்த யாகத்தில் அக்கினிக்கொழுந்துபோலத் தலைமயிரும், பிறையை இரண்டு துண்டாக்கிவைத்தாற்போல் விளங்குங் கோரப்பல்லையும்பெற்று, காத்திரமான தேகத்தோடும் உடைவாளோடும் ஓர் அசுரன் வெளிப்பட்டனன். அந்த அசுரனை சவுநகர்பார்த்து, ஓ பூதமே! இறுமாப்படைந்திருக்கிற இந்திரனை நாசப்படுத்திவாவென்றுகட்டளையிட்டனர். பூதம்வெளிப்பட்டது. இந்திரன் அச்சேதியறிந்து, கைகால்கள் உதற லெடுத்துக்கொண்டு முறையோ முறையோ வென்று ஓலமிட்டு, ஓ சவுநகமுனீந்திரா! அடைக்கலம். அடைக்கலம் அடியேன்பிழையைப்பொறுத்து இத்தருணங் காப்பாற்றுவது உமது கடமையென்று புலம்பினன். கருணைக் கடலாகியுஞ் சாபானுக்கிரக சாமர்த்திய முள்ளவராகியுமிருக்கிற சவுநகர்கேட்டு மனமிரங்கி, தாம் அனுப்பிய அசுரன் யாகத்திலடங்க மற்றொருமந்திர முச்சரித்து, அவ்வசுரனை யாகருண்டத்திற் போகச்செய்து, இந்திரனுக்குக் கைகால்கள் முன்போலாகும்படிக்குத் திருவுளங்கனிந்தார். இந்திரன் கைகால்களையுதறிக்கொண்டெழுந்து, சவுநகரிடத்துக்குவந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுப் பலவாறுபுகழ்ந்து சொல்லுகிறான்: ஓஸ்வாமி! உமது மகிமையை அறியாமல் துர்ச்செய்கையைமேற்கொண்டேன். என்னைமன்னித்துத் தங்கள் கருத்தின்படி அஸ்வனிதேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொடுத்து மனக்களிப்பெய்துமென்று கூற, சவுநகர்யாகத்தைப் பூர்த்திசெய்து, அஸ்வனி தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து, சையாதிமஹாராஜனைப் புனிதனாக்கிமறுமைப்பயனை உதவினர். இப்படி உரோமசன்மர் அந்த சையாதிமகாராஜன் யாகஞ்செய்த விடமிதுவென்றும் சவுநகர்வாழ்ந்திருந்தசோலை யிதுவென்றுங்கூற, தருமராஜன் வீமன்முதலானவர்கேட்டு மகிழ்வடைந்து, அந்நதியையுஞ் சோலையையுங்கடந்து யமுனாநதியை அடைந்து, அந்நதியில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, அதையுங்கடந்து வடதிசைநோக்கிச்செல்லும்போது அங்கொரு நெருங்கிய சோலைதோன்றிற்று. தருமராஜன் அந்தச் சோலையைக்கண்டு இது யாருடைய வனமென்றுவினவ, உரோமசன்மர் சொல்லுகிறார்.

அஸ்வமஹாராஜன் சரித்திரம்.

கேளும் தருமநந்தனா! முன்னொருகாலத்தில் அஸ்வ மஹாராஜ னென்றொரு அரசனிருந்தான். இவன் ஆறுசாஸ்திரம் நாலுவேதம் அறுபத்துநாலு கலைக்கியான முதலியவற்றை யோதியுணர்ந்து, தரும தேவதை நாலுபாதத்திலும் நடக்கச் செங்கோல்செலுத்தி அரசாண்டிருந்தான். அவனுக்குப் புத்திரர் பாக்கியமில்லை, அதனால் மனவருத்தமுற்றுப் புத்திர பாக்கியத்தைப் பெறவேண்டுமென்றுகருதி, தன்னரசைமந்திரிகளிடத் தொப்பிவித்து, தானுந்தன்மனைவியுமாய்மரவுரிதரித்துக்காட்டிற்சென்று, அங்குள்ள பெரியோர்களைத்தரிசித்துப் பிருகுமுனிவரைக்கண்டு வந்தனைசெய்து, மிகுந்த ஆவலோடு எதிர்நின்று பலவாறுபுகழ்ந்தனன். தவசிரேஷ்ட சிகாமணியாகியபிருகுமுனி அரசன் முகம்வாடி யிருப்பதை யுணர்ந்து கொண்டு சொல்லுகிறார். ஓ மகாராஜனே! நீயோர் மண்டலேஸ்பரன். நீ காட்டுக்கு மரவுரிதரித்து வரவேண்டியதென்ன? உன்முகம் வாட்டமுற் றிருக்க வேண்டியதென்ன? என்றுவினவலும் அரசன் புத்திர பாக்கிய மில்லாதிருக்கிறதைஎடுத்தோதினன். அதைப் பிருகுமுனிகேட்டுச் சொல்லுகிறார். ஓ மகாராஜனே! உனக்குப் புத்திரபாக்கியம் வேண்டியதாக இருந்தால் யாகத்தைச்செய். அதன் மூலமாக உனக்குப் புத்திரனுண்டாவானென்று கூற, அரசன் மகிழ்ந்து, தக்ஷணந் தன்னகரத்துக்குத் தெரிவித்து யாகத்துக்கு வேண்டிய பதார்த்தங்களை அழைப்பித்து, யாகவேதி

தையியற்றி, தானுந் தன்மனைவியும் யாகதீக்ஷை வகித்து, பிருகுமுனியைக் குருவாகக்கொண்டு சிலமுனிவர்களையுஞ் சேர்த்துக்கொண்டு ஏழுநாள்பரியந்தம் யாகத்தை நிறைவேற்றி, பிர்மா - விஷ்ணு - உருத்திரன் முதலான தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து, யாகத்தாற் கிடைத்த சலத்தைக் கலயத்திலேந்தித் தருப்பையால்மூடிவிட்டு அன்றிரவில் யாவருஞ் சயனித்தனர்.

அரசன் நித்திரைசெய்திருக்கும்போது தாகமெடுத்தது, அரசன் ஒருவரோடுஞ் சொல்லாமல், யாகமுன்னிலையில் வந்திருக்கிற கலயத்திலிருக்குஞ் சலத்தையெல்லாம் அருந்தினன். சூரியனுதயமானவுடன் யாவருமெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு யாகசாலைக்கு வந்தார்கள். பிருகுமுனி கலயத்தில்நீரில்லாமலிருக்கிறதைக்கண்டு, அரசனையழைத்து இதில் நீரில்லாமலிருப்பதற்குக்காரண மென்னவென்று வினவினர். அரசன் நடுங்கிச் சொல்லுகிறான் ஓஸ்வாமி! இரவிலடியேனுக்குத் தாகமுண்டாயிற்று. அத்தாகமடங்க அந்நீரை நான் அருந்திவிட்டேன் என்றுகூறினன். முனிவர்கேட்டு மனவருத்தமுற்றுச் சொல்லுகிறார். ஓ மஹாராஜனே! அருமையாக யாகத்தைச் செய்து அந்தயாக முன்னிலையிற் பெற்ற சலத்தைப் புசித்துவிட்டனையே அந்நீர்தான் புத்திரன். உன்வயிற்றில் புத்திரனுண்டாகி யிருக்கிறதே: இதற்கென்னசெய்கிறது மேலும் அந்தப் புத்திரன் பத்துமாதத்தில் வெளிப்படுகிறவனல்ல. நூறுவருஷங் கர்ப்பத்திலிருந்து பின்பு வெளிப்படுவான். அதுவரைக்கும் உனக்குக்கனவருத்தம்நேரிடுவதுமன்றி, அப்புத்திரன் வெளிப்படும்போது உன்வயிற்றைக்கண்டு வெளிப்படுவான். அக்காலத்தில் உனக்கழிவு வருமேயென்று மிகுந்த வருத்தப்பட்டார். அரசன் சொல்லுகிறான். ஓ ஸ்வாமி! அடியேன் வருத்தப்படுகிறதும் மரணமடைகிறதும் எனக்கோர் பெரிதல்ல, புத்திரனில்லாதிருக்கிறதேபெரியவருத்தமாதலால், புத்திரனுண்டானால் அதுவே மேலானபயன் நான் இவ்வுலகத்திலடையவேண்டிய பயனையெல்லாம் அடைந்துவிட்டேன். இனியானடையப்போகிறது மறுமைப்பயன்தான். ஆதலால் மறுமைப்பயனைக் கொடுக்கும் புத்திரனுண்டானாற் போதுமென்றுகூறினன். அதற்குப் பிருகுமுனிமகிழ்ந்து, அரசனுக்குப் பல ஆசிகள்கூறி விடைகொடுத்தனர்.

பின்பு அரசனானவன்தன்பரிசனத்தோடு நகரம் வந்துசேர்ந்து அரசுசெலுத்தி, நூறுவருஷகாலங்கருவைச் சுமந்து வருத்தமுற்று, பின்பு ஒருபுத்திரனைப் பெற்றான். அப்புத்திரன் வெளிப்படும்போது வயிற்றைக் கீண்டுகொண்டு வெளிப்பட்டமையால், புத்திரன் முகதரிசினமானவுடன் அரசன் சொற்கலோகமடைந்தான். சொற்கலோகத்திலிருக்கின்ற அரம்பாஸ்திரீகள் அந்தப்புத்திரனையெடுத்து, தேவாமிர்தமூட்டி வளர்த்து வந்தார்கள். அந்தப் புத்திரன் நாளொரு மேனியும் பொழுதொரு வருணமுமாக வளர்ந்துவந்தான். இறந்துபோன அஸ்வமஹாராஜனுடைய மந்திரிமார் முதலான யாவருங்கூடி அப்புத்திரனுக்கு மாந்தாதா வென்று நாமமிட்டு, சகலகலைக்கியானமும் விளங்க நூல்களைக்கற்பித்து, வில்முதலிய ஆயுதப்பயிற்சியுஞ்செய்வித்தார்கள். மாந்தாதாவாலைப் பருவமடைந்துமகுடாபிஷேகனாகி, நீதிதவறாமற்செங்கோல்நடாத்திக் குடிகளைப்பாதுகாத்துவந்தான். ஒரு காலத்தில் மழையில்லாமல் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. அதுகண்டு மாந்தாதா மேகத்துக்கதிபனாகிய இந்திரனோடெதிர்த்துப் போரிட்டு மழைபெய்யும்படிசெய்து, சிலகாலஞ் சென்றபின்பு இந்த இடத்தில் யாகசாலையியற்றி அநேகம் யாகங்களைச் செய்தான். அதுதானிதுவென்று உரோமசன்மர் கூறினர். தருமராஜன்கேட்டு மகிழ்வுற்றுச் சகோதரர்களோடு அங்குள்ளநதியில் ஸ்நானஞ்செய்து, அவ்விடத்தை விட்டு சரஸ்வதிநதிக்குவந்தார். அங்கொரு ஆச்சிரமந் தோன்றிற்று. அதனைக்கண்ட தருமராஜன் உரோமசன்மருக்கு வந்தனைசெய்து சொல்லுகிறார்: ஓ ஸ்வாமி இந்தவனம்ஆருடையது? இதனதுசரித்திரமென்னவென்று வினவ, உரோமசன்மர் சொல்லுகிறார்.

சோமமஹாராஜன் சரித்திரம்.

கேளும் தருமநந்தனா! முற்காலத்திற் சோமமஹாராஜனென்றொரு அரசனுண்டு, அந்த அரசன் மகுடாபிஷேகனாகி நூறுகன்னிகைகளை மணந்துஇன்பத்தோடு வாழ்ந்து வருகிற காலத்தில், அவனுக்கு முதல் மனைவியினிடத்து குஷ்டநோயுடனே விளங்கும் ஒருமூடப் புத்திரன் பிறந்தான். மற்றதொண்ணூற்றொன்பது மனைவிகளும் புத்திரபாக்கிய மில்லாதவராகி யிருந்தார்கள். அதனால் அரசனுக்கு மனவருத்தமுண்டாகி, தன் அரசைமந்திரிகளிடத்து ஒப்பிவித்து, தன்மனைவிகளோடு வெளிப்பட்டு ஒரு முனிவரிடத்துச் சென்று வணங்கித் தன்மனக்குறையைச்சொல்லிக்கொள்ள, அம்முனிவர்கேட்டு, உன்னுடைய மனக்குறையை நீக்க நீ விரும்பியபடி வேதமுறைப்பிரகாரம் நான் சொல்லுகின்றதை நீயும்உன்னுடைய பத்தினிகளும் மற்றைச்செனங்களுந்தவறுதல் செய்யாமலும் - யாதொரு மனவருத்தங் கொள்ளாமலும் - ரோதனம் புரியாமலும் - மனோகிடத்துடனே செய்வீர்களாவென்று கேட்க, அதற்கு அவ்வரசனும் அவனுடைய ஸ்திரீகளும் வித்தியாசமில்லாமற் செய்கிறோமென்று ஏகமனதாகச்சொல்ல, அம்முனிவர் அவ்வரசனைநோக்கி, உன்னுடைய மூத்தமனைவியிடத் துண்டாகிய குஷ்டநோய் கொண்டிருக்கும் மூடப் பிள்ளையை உன்கரத்தின்கணுள்ள கூர்மை பொருந்திய வாளாயுதத்தினாலே வகிர்ந்து யாககுண்டத்திற் போட்டுத் தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொ

டுப்பித்தால், உன்னுடைய நூறு பத்தினிகளுக்கும் நூறுபிள்ளைகளுண்டாகு மென்றார். உடனே அவ்வரசன் யாகஞ்செய்வதற்கு வேண்டிய பதார்த்தங்களை வருவித்து யாகத்தீவளர்த்தி, அதில் தன்னுடைய முடப்பிள்ளையை முனிவர் கூறியபடி யறுத்துப்போட்டுக் கிரமப்பிரகாரம் யாகஞ் செய்கையில்; அதிலிருந்து ஓர் சுவர்னபாத்திரம் உண்டாகி, அதினிடத்தில் மிக்க வெண்மைபொருந்திய சாத மிருக்கக்கண்டு, அதையெடுத்து அவ்வரசனுடைய நூறு பத்தினிகளுக்கும் பங்கிட்டுத்தர, அதை அவர்கள் வாங்கிப் புசித்தார்கள். அதுவே அந்த ஸ்திரீகளுக்குக் கெர்ப்பமாயிற்று. சிலகாலஞ் சென்றபிறகு அம்முனிவர் சிசுஹத்திதோஷஞ்செய்வித்ததினால் நரகலோகஞ்சேர்ந்தார். இதரசெனங்கள் என்ன இந்த அரசன் நூறு ஸ்திரீகளைக் கலியாணஞ்செய்துந்தொண்ணூற்றொன்பது ஸ்திரீகளுக்குப் புத்திரர்களில்லாமல், ஒருபெண்சாதி யிடத்தில் மாத்திரங் கடவுட்செயலாற் கிடைத்த குஷ்டத்தோடுங்கூடிய ஓர் முடப் பிள்ளையையேனும் வைத்துக்காக்காமல், எப்படி மனந்துணிந்து கொன்று யாகஞ்செய்தானென்று பழிபேசிக்கொண்டிருந்தார்கள்.

அதுநிற்க - அந்த நூறுஸ்திரீகளுங் கருப்பமுற்றநாள்தொடர்ந்து பத்தாமாசத்தில் நூறு பிள்ளைகளைப்பெற்றார்கள். இந்தச்சேதி அரசன் கேள்விப்பட்டு மிகுந்தசந்தோஷமடைந்து, அந்த நூறு குழந்தைகளையும் நாளொருமேனியாய்ப் பொழுதொருவடிவமாய் ஒன்றினொன்றுங் குறைவில்லாமலும்-பேதமில்லாமலும் - சோர்வில்லாமலும் - மகா சாக்கிரதையாய்வளர்த்து, சகலவித்தையையுங் கற்றுக்கொடுத்து நெடுநாளரசையாண்டான். காலமுடிவிற் பிள்ளைப்பழி நிவர்த்தியாக நரகலோகந் தெரிசித்துக்கொண்டிருக்க, நீதியாய் அரசைச்செலுத்தி னதினாற்பின்பு சொர்க்கலோகம்போகப் பிரமதேவன் கட்டளையாயிற்று. அந்தக் கட்டளையின்படி அவ்வரசன் நரகலோகத்தைத் தெரிசித்து வரும்போது, தனக்குப் புத்திரபாக்கியந் தருவித்தவராகிய முனிவர் நரகவேதனையி லுழன்று கொண்டிருப்பதைக்கண்டு, யாதுகாரணத்தினால் இந்தச்சங்கட நேரிட்டதென்று வினவ, அதற்கு அம்முனிவர்-உனக்கு நற்பிள்ளைக ளில்லாக்குறையை என்னுடன் முறையிட்டுக் கொண்டதற்கு நான் செவிகொடுத்துக் கேட்டுச் சும்மாயிராமல் உன்பிள்ளையை யறுத்து யாகஞ் செய்யச்சொன்ன தோஷத்திற்காக எனக்கு நரகமும், என்வாய்ச் சொல்லின்படி நீ நடந்துகொண்ட தோஷ நிவாரணத்திற்காக இந்த நரகலோகத்தைக் கொஞ்சந் தெரிசித்துச் சுவர்க்கலோகத்திற்கு நீ போகவுமாயிற்று. ஆயினும்-எனக்கிந்த நரகவாதனை நீங்கவேண்டுமென்று மனதிருந்தால் உன்னாலேயே நிவாரண மாகலாமென்று வருந்திக்கேழ்க்க, அந்த சோமகமகாராஜன் தனக்கு அம்முனிவர்செய்த நன்றியை யுற்றுணர்ந்து நல்லதென்று சொல்லி, யமதர்ம ராஜனிடத்திற்குப்போய், அம்முனிவர் தனக்குச்செய்த சகாயத்தையெல்லாங் கிரமமாய்ச் சொல்லி, அச்சகாய முன்னிலையில் அவருக்குநேரிட்ட பாபத்திற்கீடாய் நரகவேதனையைப் படும்படியாய் நேரிட்டது. அதற்கு நான்செய்த புண்ணியப் பலன்களிலே பாதி அவர்க்காகத் தத்தம்பண்ணுகிறேன். அவருக்குச் சுவர்க்கலோகங் கிடைக்கச்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கேட்க, யமதர்மராஜன் நன்றிவகித்த அவ்வரசனுடைய நற்குண நற்செய்கைகளைக்கண்டு சந்தோஷப்பட்டு, அப்படியே கொடுத்தே னென்று சொல்ல, உடனே அம்முனிவரும் அவ்வரசனும் மனமகிழ்ந்து இருவரும் ஒன்றாகச் சுவர்க்கலோக மடைந்தார்கள். அந்த முனிவருடைய ஆசிரமம் இதுதானென்று தருமராஜனுக்கு உரோமசன்மர் காண்பித்தார்.

சிபிச்சக்கிரவர்த்தி சரித்திரம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! அப்பாற்சிலதூரஞ் சென்றபோது ஒரு ஆசிரமந்தோன்ற, இஃது ஆருடையதென்று தருமன்கேட்க, உரோமசன்மர் சொல்லுகின்றார்: ஓ உதிஷ்டிரமகாராஜனே! பூர்வத்திற் பிரமதேவன் யாகஞ்செய்த இடம் இது. இந்தஇடத்திலிருக்கின்ற தீர்த்தமானது வெகு சிறப்பைப்பெற்றது. எப்படியென்னில் - முன்னாற் பரதனென்னப்பட்ட ஓர் அரசன் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஆகாயத்தைப் பார்த்தான். மேலேழுலோகமும் அவன் கண்களுக்குக் காணப்பட்டபடியால் அவன் அநேக அதிசயமடைந்தான். ஆகையால் நீங்களும் இந்தத் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வீர்களாகில், உங்களுக்கும் அதிசயங்களைத் தோற்றுவிக்கும். என்று உரோமசன்மர்சொல்லவும், அப்படியே தருமராஜனும் - அவருடைய தம்பிமார்களும்-திரௌபதிதேவியும்-பிராமணர்களும் - ஸ்நானஞ் செய்து, மேலேழு உலகத்தின் வளப்பங்களைக் கண்டு, பின்னுஞ் சுவர்க்கலோகத்திற்கு மேலாகிய உலகத்திலே பாண்டுமகாராஜனையுந் தரிசித்து, அதற்குமேல் தேவேந்திரனுடைய பட்டணத்தையுங்கண்டு, அதில் அருச்சுனன் மகாசந்தோஷ சாம்பிராச்சியத்துடன் வீற்றிருக்கின்றதையும் பார்த்து, உள்ளங்களித்து, உடலம்பூரித்து கரையேறிவந்து அப்பாற்போகப் புறப்பட்டார்கள்:

அப்போதவ் வழியில் சரஸ்வதிநதியைக் காண்பித்தார். அந்தநதிக்கு அநேகந்துறைகளுண்டு. அவற்றிலொரு துறையிலிறங்கியாவரும்ஸ்நானஞ்செய்து தர்ப்பணங்கள் பண்ணி அவ்விடம்விட்டு வடதிசை நோக்கிப் போகையில், தருமராஜனைப் பார்த்து உரோமசன்மர் சொல்லுகிறார்: இதுபூர்வத்தில்தக்ஷப்பிரஜாபதியின் யாகசாலை. அன்றியும் உங்கள் குலத்

தில் நகுஷனென்னப்பட்டவன் தேவேந்திரபட்டம் பெறுதற்கு யாகஞ்செய்தசாலை. இது குருக்ஷேத்திர பூமிக்கு வடக்கு. இதன் எல்லைமுடிவு அதோ இருக்கின்றது. அந்த எல்லைமுடிவில் தெரிகின்றதே: அது உங்கள் குலத்தி லுதித் திருந்த யயாதிமகாராஜன் செய்த யாகசாலை. அதற்கருகி லிருப்பது பூர்வத்தில் நரநாராயணர்கள் தபசுசெய்த சாலை. என்றிவ்வாறு உரோமசன்மர் சொல்லிக் காண்பித்துக் கொண்டுபோகையில், சிலதூரத்திற்கப்பாற் பிர்மவேதியென்கிற தீர்த்தத்தைக்காண்பித்து, இது தெய்வப்பிறப்பை யபேக்ஷித்த மாந்தர்கள் இந்தத் தீர்த்தத்தில் முழுகித் தேகத்தை விடுவார்களாகில், தேவர்களாவார்கள். அந்நதி சிந்துமாநதியெனப் பேர்பெற்றது. அதனுடைய கரைத்துறையில் ஜமதக்கினிமகாரிஷியினுடைய குமாரன் திரிநேத்ரதாரியாகிய பரமேஸ்வரனைக் குறித்து அருந்தவஞ்செய்து, மழுவாயுதத்தையும் பரசிராமனென்கிற பேரையும்பெற்றான். அதோ காண்கின்ற வனம் வசிஷ்டருடைய ஆசிரமம். அதற்கு அப்பாற் காணப்படுகிற சோலை சிபிச்சக்கிரவர்த்தி தவம்புரிந்த இடம். என்று உரோமசன்மர் சொல்லக்கேட்ட தருமன்சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டு, சிபிச்சக்கிரவர்த்தியின் வரலாற்றைக் கடாக்ஷித்தருள வேண்டுமென்று கேட்க, உரோமசன்மர் சொல்லத் தொடங்கினர்.

ஓ தருமபூபதி! சிபியென்னப்பட்டவர் மிகுந்த சத்தியப் பிரதாபத்துடன் நெடுநாள் ராச்சிய பரிபாலனஞ்செய்து, பின்பு இவ்வனம்புகுந்து அநேககாலமாகத் தபசுசெய்து வருகையில், அவருடையமனதைச் சோதிக்கத் தேவேந்திரன் வேடனாகவும், அக்கினி தேவன் புறாவாகவும்வேடம்பூண்டு, அவ்வேடன்கைப் பாணத்தினால் அப்புறாகாயம்பட்டு உடலம் வருத்தமுற்று ஆபத்து சம்பவித்ததாகத் தோற்றி, சிபியினிடத்தே பறந்து அலறிஎழும்பிவந்து, சரணம்: சரணம்: என்றுமுறையிட்டது. புறாவைச்சிபியானவர் சீக்கிரத்தில் தன்னிருகையாலு மெடுத்தேந்தி, நீ பயப்படாதே. உன்னையார்வந்து பற்றவந்தாலும் என் பிராணனுள்ள பரியந்தம் உன்னைப் பாதுகாக்க உறுதியாக விருப்பேன். என்று அபயஸ்தங்கொடுத்துத் தம்மிடத்திலே வைத்துக்கொண்டார். வேடனாகிய தேவேந்திரன் தலையில்மயிலிறகும் உடலில் தழையாடையுங் கட்டிக்கொண்டு, அம்பறாத்தூணீரமும் வில்லும் கையுமாக படபடப்பான பசியுடனே சிபிக்கெதிரில் ஓடோடியும்வந்துநின்றுசொல்லுகிறான்: ஓ அரசனே! அந்தப் பக்ஷியைக் கொடுத்துவிடும். என் பெண்சாதி பிள்ளைகள் யாதொரு ஆகாரமுமில்லாமற் பசித்திருக்கிறார்கள். அவர்களுக்குஅதுதான் ஆதாரமாகவேண்டுமென்று கேட்டான். சிபியானவர் வேடனைப்பார்த்து ஓ வேடராஜனே! உலகத்தில் ஓர் ஆத்மாவைக் காப்பாற்ற யாவருந் தங்கள் பிராணனையாவது பிராணனுக் கொப்பாகிய பெண்சாதியையாவது கொடுத்துவிடுவார்களேயன்றி, அடைக்கலமென்போரைக் காட்டிக் கொடார்கள். இப்புறா என்னைச்சரணாகதி என்கிறதாய் வந்தடைந்திருக்க, அதைக்கொடுத்து விடென்று கேட்டாற் கொடுப்பேனோ! கொடேன். உன்பெண்சாதி பிள்ளைகளுக்குப் பசியாற்றல் செய்ய நவநவமாய்வேண்டிய மாம்சங்களைக் கொடுக்கிறேன். வேண்டுமானால் வாங்கிக்கொள்ளுக வென்றுகூறினர்.

அம்மொழிகளைக்கேட்ட வேடுவன்சிபியைப்பார்த்து ஐயா! நீர் எவ்வகைப்பட்ட இறைச்சிகளைக்கொடுப்பீரானாலும் அப்புறாவினுடைய மாம்சருசி அவைகளுக்கிருக்காது. ஆதலால் உம்மைச் சரணமடைந்த ஜீவனைவிடமாட்டாத நீர்உம்முடையதேகத்திலிருந்து அப்பக்ஷிக்குரிய அவ்வளவு தசையை யறுத்துக்கொடுத்தால்மாத்திரம் நான் வாங்கிக்கொள்ளச் சம்மதிப்பேனென்று சொல்லினான். அதுகேட்ட சிபியானவர் மனமகிழ்ந்து, உடனேவாளைக்கொண்டு தன்னுடைய தேகத்திற் கொஞ்சந்தோலையும் எலும்பையும் அறுத்தெடுத்து, அதை நிறைகோலாக்கி, அந்தத் தராசைத்தன்னுடைய இடதுகையில் தூக்கிப்பிடித்து, ஒரு தட்டில் அப்புறாவைவைத்து, மற்றொருதட்டிற் சரியிடையாக இரத்தம் பெருக்கெடுத்தோடத் தன்தேகத்திலுள்ள மாம்சங்களையெல்லாம் அரிந்து வைத்துஞ் சரிகாணாமையால், சிபி அவ்வேடனைப்பார்த்து, ஓ வேடராஜனே! நான் என்னுடைய சிதைவுண்ட எலும்புக்கூடுடன் அந்தத்தட்டில் நிற்கின்றேன். நீ தராசைத் தாங்கென்றார். அப்படியே அவ்வேடன் தாங்கி நிறுத்தி நிறுக்கும்போது சரியிடைகாணவே, சிபியானவர் வேடுவனைப்பார்த்து, இப்போது நீயும் உன்னுடைய பெண்சாதி பிள்ளைகளும் பசிதீரப் புசியுங்களென்று வருத்தமில்லாமல் மகாதைரியத்துடன் சொன்னார். அப்படிச்சொல்லுகின்றதை வேடுவனாகிய இந்திரன்கண்டு மிகுந்த சந்தோஷங்கொண்டு, அதி சீக்கிரத்தில் தான் வேடுவரூபத்தைப் போக்கித் தேவேந்திரனாகவும் புறா அக்கினிவடிவமாகவும் பிரத்தியக்ஷமாகி, சிபிக்குப்பழையபடி சரீர முண்டாகச்செய்து, அவர் கோரியவரத்தையெல்லாங்கொடுத்து அவரவர் ஸ்தானங்களை நோக்கிப்போனார்கள். ஆகையால் இந்தச்சோலை சிபிச்சக்கிரவர்த்தி தவம்புரிந்த யாகசாலையாகுமென்று உரோமசன்மர் கூறினர்.

அஷ்டகோணமகாரிஷியின் சரித்திரம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! அவ்வைவரோடும் அப்பாற்சிலதூரஞ்சென்ற உரோமசன்மர் தருமனைப்பார்த்து, ஓ தருமநந்தனா! இதோ காண்கின்றஆசிரமம் அஷ்டகோணமகாரிஷியும் ஸ்வேதகேது வென்பவருங்கூடி இருந்து தவம்பண்ண இடமென்றுகூறினர். அதுகேட்டதருமராஜன் உரோமசன்மரைநோக்கி, அவர்களுடைய சரித்திரம் எப்ப

டிப்பட்டதோ? அதைக்கொஞ்சந் தெளியச்சொல்ல வேண்டுமென்றுவினவ, உரோமசன்மர்சொல்லத்தொடங்கினார். இப்பூமண்டலமெங்குங் கொண்டாடும்படியான அநேகபக்தரென்னும் நாமம்புனைந்த பிர்மரிஷியானவர் நெடுநாள் தவமிருந்து, பிறகு சுசாதுயெனப் பேர்கொண்ட பிராமணப் பெண்ணைக் கலியாணஞ்செய்து, அப்பிராமணப் பெண்ணுடன் காமநூலிற் கூறியபடிவாசமுடன்நேசித்துக்கூடியிருந்தார். பின்பு அந்த அம்மாள்கருப்பமுற்று நெடுநாளாகியும் பிரசவிக்காம லிருக்கையில், அம்மாதினுடைய பதியாகிய அநேகபக்தர் பிள்ளை ஆசையினால் கணக்கில்லாப்பிராமணப்பிள்ளைகளுக்கு இராவும்பகலும் இடைவிடாமல் வேதாகம சாஸ்திரங்களைப் போதிக்கும்போது; அப்பிள்ளைகளிலொருவன் நித்திரைமயக்கத்தாற் கண்ணைமூட, அவனைப்பார்த்து அடாபயலே! நித்திரைசெய்கிறாயோவென்று அதட்டிக்கேட்க, சுசாதுவினுடைய கருப்பத்துள் நெடுநாளாக விருந்த பிள்ளையானது கருப்பத்தி லிருந்தபடியே பிதாகோபமாகச்சொன்ன சப்தத்தைக்கேட்டு, ஓ பிதாவே! அறுபதுநாழிகையிலும் ஏமாறாமல் வித்தையைக்கற்பித்துக் கொடுத்துவந்தாலும் ஒருபோதாவது நித்திரைஏமாரிக்கைசெய்யாது விடுமோ? என்று சிசுசொல்லக்கேட்ட பிதாவானவருக்கு அக்கணமேகோபம்மிகவுமுண்டு, வேதவித்தைக்கு நீ இடையூறு சொல்லவந்தபடியால் நீ பூபதனமாம்போது அஷ்ட கோணத்துடனேகூட முடவனாகப் பிறக்கக்கடவையென்று சபித்தார்.

அன்றுபோய் மறுநாள் அவர் பெண்சாதியானவள் புருஷனைநோக்கி, ஸ்திரீகளுக்குப் பிரசவகாலம் நேரிடப் பத்துநாளைக்கு முன்னதாகக் காயமருந்துகளைப் புருஷர்கள் சேகரித்து வைத்திருக்கின்றது வழக்கமாமே ஆகையால் தேவரீர் அவ்வௌஷதங்களைக் கிரமமாகச் சேகரித்து வைக்கவேண்டு மென்று சொல்ல, நல்லதென்று பெண்சாதியை வீட்டி லிருக்கச்சொல்லி, மிதிலாபுரிக்குரிய அரசனானவன் யாகஞ்செய்த சாலையிடமாய் அநேக பக்தர்போனார். அவ்விடத்தில் வந்திகரென்னப்பட்ட ஓர் பிராமணருக்கும் அநேக பக்த ரென்னப்பட்ட இப்பிராமணருக்குஞ் சாஸ்திரதர்க்கஞ்சம்பவித்து, வந்திகரென்பவருடைய கேள்விக்கு அநேகபக்தர் சமாதானங்கூற வகையற்றுப் பின்னிட்டு, அந்தமனஸ்தாபத்தாற் சமுத்திரத்திலே கடுந்தவஞ் செய்யச் சென்றாரே யொழிய; தன்பெண்சாதியின் பிரசவகாலத்திற் குபயோகமாகும்பொருட்டுச் சேகரஞ் செய்யப்போன காயச்சாமானைச் சப்பாதித்து வீடுவந்து சேர்ந்தவரல்லர். இவ்விதசமயத்தில் அவருடையபெண்சாதி கருப்பவாதையுடன் சுபமுகூர்த்தத்திலே ஓர் புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரன் பிதாவாக்கிபப்படியே எட்டுக்கோணலாகப் பிறந்தான். அவனைத் தாயானவள் கிஞ்சித்துச் சந்தோஷமுங் கிஞ்சித்துத் துக்கமுமாய் வளர்த்துக்கொண்டும், அதோடுங்கூட காயமருந்து கொண்டு வரப்போன புருஷன்வரவு மாயமானதைச் சிந்தித்துக்கொண்டு மிருக்கும்போது, இச்சுசாதுவினுடைய தமக்கையைத் தானவரென்னப்பட்ட முனிவர் கலியாணஞ்செய்து அந்தவனத்தில் ஒரு ஆசிரமத்திலிருந்தார். அவளிடத்திற் சுகேதுவென்னும் பிள்ளையொன் றுண்டாயிற்று.

அப்போது சுசாது ஆனவள் அஷ்டகோணப் பிள்ளையை எடுத்துக்கொண்டு தமக்கை வீடுபோய்ச் சேர, இந்த அஷ்டகோணப் பிள்ளையானது தனது பெரியதாயாருடைய புருஷனாகிய தானவரென்பவரைத் தனதுதகப்பனாராகவெண்ணிக்கொண்டு, அவரிடத்தில் அவருடைய குமாரனாகிய சுகேதுவென்பவனுந்தானும் வேதமுதலிய சகல சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்திருக்கையில், ஓர் நாள் தானவரென்பவரைத்தன் தகப்பனாரல்லவென்று நிதானித்துத் தாயாரைக்கண்டு எனது பிதாவெங்கே என்றுகேட்க, அதற்குத் தாயாரானவள் கேளாய் குழந்தாய்! உனது தகப்பன் மிதிலாபுரியென்னும் பட்டணத்திற்குப்போனவிடத்திலே வந்திகன் என்னும் பேர்கொண்ட ஓர் பிராமணனுடன் சாஸ்திரவிதியில் வாக்குவாதஞ்செய்து தோற்றுச் சமுத்திரத்திற்போய்த்தபசுசெய்கிறாரென்றுசொன்னாள். அதைக் கேட்டவுடனே அஷ்டகோணப்பிள்ளையானது மிதிலாபுரியைநோக்கிப்போய் அப்பட்டணத்துராஜனிடத்தில்நெருங்கி, தன் தகப்பனைச்செயித்த வந்திகரென்பவரை அழைத்து வரவும் அவரும் என்தகப்பனாரும் எந்தச்சாஸ்திரத்தில் வாக்குவாதஞ்செய்தார்கள் அதை நானறியச்செய்யவும் வேண்டியதென்றுகேட்க, அவ்வரசனும் அந்தச் சிறுபிள்ளையைப்பார்த்துச் சந்தோஷித்து வந்திகர் என்பவரை வரவழைத்தான். வந்திகரானவர் அஷ்டகோணப் பிள்ளையைப்பார்த்துப் புன்னகைகொண்டு, அப்பா! இன்னசாஸ்திரத் தர்க்கத்தினால் உனதுதகப்பனைத் தோற்கச்செய்தேன் என்றார். அதுகேட்ட அஷ்டகோணப்பிள்ளை அப்படியா வெகுசந்தோஷமாச்சுது என்று சிரகம்பிதஞ்செய்து, ஆனால் இந்த சாஸ்திரமுமக்குப் பரிச்சியமுண்டாவென்று ஓர் சாஸ்திரப்பேரைச்சொல்லி, அதில் நீரும்நானும் தருக்கஞ்செய்வோமாவென்று அப்பிள்ளைகேட்க, அப்படியே தருக்கஞ்செய்வோமென்று அவர்சம்மதிக்க, அவ்வரசனுடைய சபையிற்றானே இவர்களிருவருந் தருக்கஞ் செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்போது அத்தருக்கமுடிவில் வந்திகர் என்பவர் அந்தப் பிள்ளையினுடைய ஆக்ஷேபத்திற்குச்சமாதானஞ் சொல்ல வல்லமையில்லாமற் போனபடியால். அஷ்டகோணப் பிள்ளையானது வெற்றி யடைந்தது, உடனே ஜெயஸ்தம்பம் நாட்டித் தனது தகப்பனாரிருக்கின்ற சமுத்திரம்போய் அவரைக் கண்டு தரிசித்து, கைகூப்பி வணங்கித் தீர்க்கதெண்டஞ்சமர்ப்

பித்து, வந்திகன் என்கிறபிராமணனைத்தான் ஜெயித்த வயணத்தை யெல்லாஞ் சொல்லிற்று. அனேகபந்த ரென்னப்பட்ட அத்தகப்பனானவர் அந்தப்பிள்ளையினுடைய சாமர்த்தியத்திற்கு மிகவுஞ் சந்தோஷமாகி, அப்பிள்ளையைத் தழுவிக்கொண்டு தமது ஆசிர்மம் வந்து சுசாது என்கின்ற அவருடைய பெண்சாதியின் துக்கத்தைமாற்றி, ஒருவர்க்கொருவர் பிரியாமலிருந்தார்கள். ஆகையால் அஷ்டகோணமஹாமுனி தபஞ்செய்த ஆசிர்மம் இதுவென்றுசொல்லி அப்புறம்போகையில், மற்றோராசிர்மங் காணப்பட்டது. அதைக்காட்டி இந்த ஆசிர்மத்தில்தான் பாரத்துவாசரிஷியினுடைய குமாரன்காமவாஞ்சையினாலேஇறந்துபோனான் என்று உரோமசன்மர் சொல்லி, பின்னையும் அவனுடைய பூர்வோத்திரத்தைச் சொல்லுகிறார்.

துல்யவக்கிரன் சரித்திரம்.

கேளும் தருமநந்தனா ! பாரத்துவாச முனிவரானவர் துல்யவக்கிரனென்றொரு பிள்ளையைப்பெற்றார் ஹிரப்பமுனிவரென்பவர் இரண்டுபிள்ளைகளைப்பெற்றார். இவ்விரண்டு முனிவரும் இணைபிரியாச்சிநேகிதர்களாக விருந்து அம்மூன்றுபிள்ளைகளுக்கும் வித்தைகளைச்சொல்லிவித்தார்கள். ஹிரப்பருடைய இரண்டுபிள்ளைகளுக்குச் சகல வித்தைகளுஞ் சம்பூர்ணமாக வந்தன. பாரத்துவாசருடைய பிள்ளைக்கு ஓர் அக்ஷரக்கியானமும் வரவில்லை. அந்தப்பிள்ளையாகியதுல்யவக்கிரன் காட்டினிடம்போய்த் தனக்கு வித்தை வரவேண்டுமென்று தபசு செய்யும்போது, வானவர் கோமானாகிய தேவேந்திரன் அவனுக்குப்பிரத்தியக்ஷமாகி வித்தை வரவேண்டுமாகில் ஓர் குருவினிடத்திற்போய்ப் பிரயாசைபட்டுப் படித்து வரப்பண்ணிக்கொள் என்று சொல்லி மறைந்தான் திரும்பவுந் துல்யவக்கிரன் தவஞ்செய்துகொண் டிருக்கையில் தேவேந்திரன் விருத்தப் பிராமண வடிவமாக மறுபடியுந் தோன்றி, கங்கையிலோடுகின்ற பிரவாகத்தை மண்ணைவெட்டிப்போட்டுத்தடுத்து அணைகட்டென்றான். அதுகேட்ட இந்தத்துல்யவக்கிரன்நகைத்து. ஒருவராலுந் தடுக்கக்கூடாத பிரவாகத்தை மண்ணினாலணைகட் டென்கிறீர். நீரோ தேவேந்திரன். ஆனால் என் கோரிக்கையை மோசஞ் செய்ய இந்தப் பிராமணவேடம் பூண்டு வந்தீர். ஆகிலும் உம்முடைய உண்மையான சரீரத்தைக்காட்டுமென்றுதுல்யவக்கிரன்கேட்க அப்படியே தேவேந்திரன் தனது நிஜரூபத்தைக் காண்பிக்க, அவனுக்குத் துல்யவக்கிரன் சாஷ்டாங்கதெண்டனிட்டு வித்தை வரும்படி வரந்தரவேண்டுமென்று கேட்டான்.

அதற்கு இந்திரன் சொல்லுகிறான்: அப்பா சிறுவனே ! வித்தையானது ஓர் ஆசான் முன்னிலையில் உனக்கு வரவேண்டுமேயொழிய மற்றப்படி வராதென்றான். நீர் வேண்டுமானால் வித்தை யொன்றுதானா வராது நீரே குருவாயிருந்து அக்ஷராக்கியானனுக்கிரகம் பண்ணுமென்று தடுத்துத் தடுத்துச் சொல்ல, அப்போது இந்திரனுக்குச் சந்தோஷம்பிறந்து, உனக்குச் சகலவித்தைகளும் வரக்கடவதென்றுசொல்லி மறைந்துபோய்விட்டான். உடனே துல்யவக்கிரனுக்கு எல்லாவித்தைகளும் வந்தன. அதன்பேரில் தன்னுடைய தகப்பனாராகிய பாரத்துவாச ரிடத்திற்குப் போய்த் தெண்டனிட்டுத் தான் வரத்தினாற் பெற்ற வித்தைகளின் வயணங்களைப் பெருமையாகச்சொல்ல தகப்பன்கேட்டு இவனுக்கு வித்தியா கெர்வமிருக்கிறதாகையால் இவனைத் தெளிவுறச் செய்யவேண்டுமென்றுகருதிக் கீதவித்தையைச் சொல்லிவைத்தார். அதையும் அவன்செவ்வையாகக் கற்றுக்கொண்டான் இப்படியிருக்கத் துல்யவக்கிரனானவன் தன்னுடைய தகப்பனாருக்குப் பிராணசிநேகராகவிருந்த ஹிரப்பரென்பவருடைய ஆசிர்மத்துக்குப்போய், அங்கு அவருடைய இரண்டு குமாரர்களிற் பராவசு என்பவருடைய பெண்சாதி திவ்ய சௌந்தரியவதியா யிருக்கக் கண்டு மோகங்கொண்டான்.

அவளோ மேகங்களை அந்தரத்திலகற்றி, கூந்தற்பனைகளை வனங்களிற்றுரத்தி, கரியமணல்களை நதிகளிற்படுத்தி, இருட்கூட்டத்தைப் புதர்களிற்போக்கி, சைவலங்களைச் சிந்துவில்விடுத்து, சூரியனுடைய பிரபையை மாற்றுவேனென்று தாவிய ஊழிமாலையினுங் கறுத்து, பனிநீர்தோய்ந்து சிக்கற்றவார்குழலும் இளம்பிறைபோன்ற திருநுதலும், மன்மதனுடைய கருப்பு வில்லைப் பொருவும் புருவங்களும், அந்தமன்மத னழகுபார்க்குங் கண்ணாடிக் கிணையாகிய கன்னங்களும், அவன்கணைகளும் வாரிதி நஞ்சுமஞ்சும்படியான வெற்றிவேற்கிணையாகிய நெடியவிழிகளும், எள்ளிளமலரைப்பழித்த நாசியும், முல்லை முகையைக் கடிந்ததந்தபந்திகளும், உரிசையில்முந்துஞ்செந்தேன் சிந்து மொழிகளும், ஒள்ளிய வலம்புரிச்சங்குக்கிசைந்தகழுத்தும், கொவ்வையினுஞ்செவ்வையாய்ச் சிவந்த அதரங்களும், செவ்விளநீருட னெதிர்த்தமராடி வென்று அவைகளைக் கீழ்ப்படுத்தி, விலையுண்டு - அடியுண்டு-உள்ளங்கையிற் றாக்குண்டு-குலையுண்டு-இடியுண்டு-கண்ணீர்ததும்ப வெட்டுண்டலைச் செய்வித்த குசங்க ளென்னும் ஸ்தன்னியங்களும்; நெடியவேலை வென்ற சுஸ்தங்களாகிய அஸ்தங்களும், மதனராஜனுடைய ரொக்கப்பெட்டிக்குத் திறவுகோல்போன்று வானகம்புகழும் வானகங்களும், நெடுமால் பள்ளிகொண்டவடவால்போன்ற உதரமும், மல்லிகை மலரினுமழகிய உந்தியும், சந்தேகமாகிய இடையும். ஆடவர்களுடைய ஆசையின் பிரமாணம் எவ்வளவோ அவ்வளவாகி அரவினுஞ்சிறந்தோங்கிய அல்குலும் காமுகராகிய மதயானைகளைக் கட்டும்படியாகிய இரண்டு பசுங்கதலித்தொடைகளும், நண்டுபோன்ற முழந்தாட்களும், சினைவிராலையொத்த கெண்டைக்கால்களும்;

தாசிலுஞ் சிறந்தகணைக்கால்களும், கூர்மத்தின் முன்கைச்செயித்த புறங்கால்களும், செம்பஞ்சும் முது பஞ்சு மிருதுவாகிய பாதங்களும் பொருந்தி யிருக்கின்ற இத்தியாதி லக்ஷணத்தையுடையவள்.

இப்படிப்பட்டவள் அவ்வாசிரமத்தில் வீற்றிருக்கக்கண்ட அந்தத் துல்யவக்கிரனானவன் மயங்கி தயங்கி காமாந்தகாரியாக வியங்கிஇருக்கையில், ஒருநாள் அந்தச் சற்குணமுடைய பொற்கொடியானவள் நற்குடங்கொண்டு தீர்த்தக்கரைக்குப் போகும்போது, மேற்கூறிய துல்யவக்கிரனானவன் அந்தப் பெண்ணரசியின் பின்தொடர்ந்து அடர்ந்து, மன்மதபாணத்தினாலே என்பிராணன்வாடுதென்றும், உன்னைத்தேடுதென்றும், சித்தம் நாடுதென்றும், காமாக்கினி நீடுதென்றும், உன்னிடத்தில் எனக்குமிகுந்த ஆசைவாதிக்கிறவிந்நேரமே சையோகிக்க வேண்டுமென்றுஞ்சொல்லி அவளுடைய கையைப்பற்றப்போகையில், அந்த மஹா கற்புடையவள்பார்த்துத் தன்னைத் தப்புவித்துக்கொள்ள யோசனைசெய்து, அவன்தன்னை அடாததுசெய்யத் தொடாதபடிக்கு இன்றையத் தினம் போகட்டும் நாளையத்தினமாகட்டுமென்று நல்வசனங்களாலே மாற்றிப்போய், தன் மாமனாராகிய ஹிரப்பியரானவர் நேமத்துடனே ஹோமம் பண்ணுகையில்அவரை அவள் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, அந்தத்துல்ய வக்கிரன்செய்த அக்கிரமங்களைச்சொல்லிக்கொண்டனள். அவைகளைக் கேட்டமாத்திரத்தில் அவருக்குக் கோபம்பிறந்து, ஒரு மந்திரத்தினாலே அந்தஹோமத்தி லாகுதியிடவும் அந்தஹோம அக்கினியிலேமிகுந்த அகோரதந்தங்களுடனே ஓர் இராக்ஷசனும் ஓர் இராக்ஷசியும்உற்பவமாகிவர, அவர்களை அம்முனிவர் பார்த்து, நீங்களிக்கணமே சென்று பாரத்துவாசன் பிள்ளையாகிய துல்யவக்கிரனைக் கொல்லுங்கள் என்று ஆக்ஞயாபித்தனுப்ப, அவர்கள் அவ்விடைபெற்றுத் தடையின்றிப்போய் அந்த அக்கிரமமிகுந்த வக்கிரனைக்கொன்று மென்று தின்று போட்டு வந்து, மீளவும் அந்த ஹோமாக்கினியிலே விழுந்து மறைந்து போனார்கள். பின்பு அந்தப் பழிவசனத்தையும் பிள்ளையிறந்துபோனதையுங் கேள்விப்பட்ட தகப்பனாராகிய பாத்துவாசர் தமது பிராணனைவிட்டுப் பரலோக மடைந்தார். அந்தயிடந்தா னிதுவென்றுசொன்னஉரோமசன்மர் பின்னுஞ்சொல்லுகிறார்.

பிருகுத்துய்ம ராஜன்கதை.

ஓ தருமபூபதி! அந்தஹிரப்பியரும் அவருடைய இரண்டு புத்திரர்களும் ஆசிரமத்திருக்கையில் இராச்சியபரிபாலனஞ்செய்து வரும்படியான பிருகுத்துய்மனென்னப்பட்ட மஹாராஜாவானவன் தானொரு யாகஞ்செய்யவேண்டி, ஹிரப்பிய ரிடத்திற்குவந்து தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து, அவரைப்பார்த்து அந்த யாகத்தை நிறைவேற்றுவதற்கு உம்முடைய பிள்ளைகளிருவரையுந் தயவுசெய்து அனுப்பவேண்டுமென்று வணங்கிக்கேட்டான். ஹிரப்பியர் சம்மதியாகித் தமதிரண்டு பிள்ளைகளையும்அவ்வரசனுடனே கூட்டியனுப்ப, அவர்கள்போய் அரசனுக்கு வீரதீக்ஷைகொடுத்துத் தாங்கள் ஆசிரியர்களாக ஏற்பட்டு ஒருவருஷ பரியந்தம் இடைவிடாது யாகத்தைச் செய்துவந்தார்கள். அவர்களுடைய தகப்பனாராகிய ஹிரப்பியரானவர், என்ன நமது பிள்ளைகள்போய் நெடுநாளாகியுந் திரும்பி வராம லிருக்கின்றார்களே: நாமாவதுபோய் அவர்களைப் பார்த்தழைத்துக்கொண்டு வருவோமென்றுகருதி, தமது ஆசிரமத்தைவிட்டுப் புறப்பட்டு அவ்வரசனுடைய நாட்டைநாடித் தேடி வருகையில்; பாகஞ்செய்விக்கிற தமது பிள்ளைகளிருவரில் மூத்த பிள்ளையானவன் தருப்பைவேண்டிக் காட்டைநோக்கிப்போய்த் தருப்பைகளைச் சேகரிக்கும்போது, அவ்விடந் தேடிக்கொண்டுவருந் தன்பிதாவை மனுஷனென்று குறியாமற் புலியென்று கிலிகொண்டு ஒருதருப்பையை மந்திரித்து எறிந்துவிட்டான். அந்தத் தருப்பையே ஓர் ஆயுதமாகவந்து ஹிரப்பிய ருடலிற்பட்டுருவிற்று. அவர் அக்கணமே இஷ்டதெய்வத்தினாமத்தை அலறிக்கூப்பிட்டுப் பூமிமீது வீழ்ந்திறந்தார்.

அப்பால் அச்சப்தத்தைக்கேட்ட பிள்ளையானவன் சற்று நிதானித்து, ஐயோ !! புலியென்றெண்ணியல்லாவா தருப்பையைமந்திரப்பிரயோகஞ்செய்தது! அந்தத்தருப்பை ஓர் மனிதனைக் கொன்றுவிட்டது போலிருக்கின்றதே: அதனாற்றான் மனுஷனுடையகூக்குரற்சப்தமாக விருக்கின்றது. ஆனதாற் போய்பார்ப்போமென்று வந்துபார்க்கு மிடத்தில் அம்மந்திரத் தருப்பையினா லிறந்தவன் தன்னுடைய தகப்பனென்றுகண்டு, ஓவென்றலறியழுது பெருமூச்செறிந்து, அந்தத்துக்கத்துடனே அந்தச்சாவின் சமாசாரத்தைத்தம்பியுடன் சொல்லுவோ மென்று பட்டணத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அப்போது பிர்மஹத்தியானது அவனை அப்புறமிப்புறம் அசையவொட்டாமலிருத்தித் தகைந்தது. அதற்கு அவன் மிகவும் பயந்து, கண்களைக்கெட்டியாக மூடிக்கொண்டு இருந்துவிட்டான். ஆனால் அவனுடைய தம்பியானவன் நெடுநேரம் வரையில் தமயன் வாராமையினாலே தானுந் தமயனைப் போய்க்கண்டு அழைத்து வருவோமென்று காட்டினிடம்போகையில், பெருங்காற்றினாலடிப்பட்டு வேரற்றுவிழுந்த மரம்போல் இறந்துவிழுந்திருக்கின்ற தகப்பனைக்கண்டு மிகவுந் துக்கப்பட்டு, பக்கத்திற் கண்ணைமூடிக் கிடக்கின்றதமயனையும் பார்த்து, தட்டிஎழுப்பி விவரமெல்லாங் கேட்டறிந்து, தகப்பனாரை அவ்விடத்தில் தானே தகனஞ்செய்துப்போட்டுத் தமயனைப்பார்த்து, நீஅரசனிடத்திற்குப் போய் யாகசாலையினுடைய அலுவலைப் பார்த்துக்கொண்டிரு. நீதகப்பனைக் கொன்றதினால் உன்னைத் தொடர்ந்திருக்கின்றபிர்மஹத்தியையும் அதனாலுனத்

குண்டான பாபத்தையும் நான் விமோசனமாக்கி வருகிறேனென்றுசொல்லி அனுப்பி, அந்தப்பிர்மஹத்தியைத் தானேற்றுக்கொண்டு, பூமியிலிருக்கின்ற புண்ணிய தீர்த்தங்களாடி, தேவதாபூசைகளையுந் தரிசனங்களையுஞ்செய்து, அதனால் தினைதினை பிதாவைக் கொன்ற தோஷத்தையும் அதனாலுண்டான பிர்மஹத்திதோஷத்தையும் நிவர்த்திபண்ணிப் புண்ணியதேகியாகி, மறுபடியுந் தன்தமயன்யாகஞ்செய்து வைக்கின்ற அந்த அரசனுடைய யாகசாலையை நாடிப் போனான்.

அங்கால் தன்னை நாடிவருகின்ற தம்பியைப் பார்த்தவுடனே தமயனுக்குப் பொறாமை ஜெனித்து, பிருகுத்தும்மனென்னப்பட்ட அரசனைநோக்கி, இவன் பிர்மஹத்திசூழ்ந்தவன். இவன் இந்த யாகசாலைக்குவரத்தகுந்த யோக்கியனல்லன். ஆகையால் இவனைப் புறம்பாக்க வேண்டியதே சரியென்றான். இதைக்கேட்டுக்கொண்டுவந்த தம்பியானவன் உடனே அவ்வரசனிடத்தில் நெருங்கி, ஓ அரசனே! பிர்மஹத்தியைத் தனக்குத் தெரியாமல் வரப்பண்ணிக் கொண்டவன் இவனேயென்று தன்தமயனைச் சுட்டிக்காட்டி, அந்த ஹத்தியை நான் ஏற்றுக்கொண்டு பூமிப்பிரதக்ஷணம்வந்து புண்ணியநதிகளில் ஸ்நானம்பண்ணி தேவதாபூசைகளைச்செய்து புனிதனாகிஇவனையுஞ் சுகப்படுத்தவந்தேன். அதற்கு இவன் சந்தோஷப்படாமல் வீணாக என்பேரிற் பொறாமைகொண்டு உம்முடனேயே சொல்லுகிறானே! இதுதர்மமா? இதுஉமக்குச் சரியாகவிருந்தால் நான் செலவுவாங்கிக் கொள்ளுகிறேனென்றுசொன்னான். இதுகளைக்கேட்டஅந்த அரசன் அவ்விருவருள் தம்பியிடத்திற் சந்தோஷப்பட்டு, தமயனுந் தம்பியும் வேற்றுமையின்றி யொற்றுமையா யிருக்கும்படியாகச்செய்து, அவ்விருவர்களைக்கொண்டே தானெண்ணிய யாகத்தை நிறைவேற்றிவந்தான். அப்படி நிறைவேற்றிவருகையில் தேவர்கள் எல்லாரும்வந்து அவிர்ப்பாகங்களைப் பங்குபடி வாங்கிச்சாப்பிட்டுச் சந்தோஷமடைந்து, அவ்வரசனுக்கு வேண்டிய வரத்தைக்கொடுத்து, அப்பிராமணபிள்ளைகளைப்பார்த்து உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள் தருகிறோமென்று தேவர்கள் சொன்னார்கள்.

அப்போது தமயனுந் தம்பியுந் தேவர்களை நோக்கி, எங்களா லிறந்துபோன எங்கள் பிதாவையும் - அந்தப்பிதாவினா லிறந்துபோன துல்யவக்கிரனையும் - அந்த வக்கிர னிறந்தானென்று உயிர்விட்ட பாரத்துவாசரையும் பிழைப்பிக்கத்தக்க வரத்தைக் கடாக்ஷிக்க வேண்டுமென்றுகேட்க, தேவர்கள் அப்படியே அவர்கள் எழுந்து வரக்கடவர்களென்று அநுக்கிரகம்பண்ணினார்கள். அக்ஷணத்தில்தானே ஹிரம்பியரும் பாரத்துவாசரும் வக்கிரனும்வந்து தேவர்களுக்குத் தீர்க்கதெண்டஞ்செய்தார்கள். அவர்களைத் தேவர்கள் ஆசீர்வதித்தார்கள். அப்போது - வக்கிரனானவன் தேவர்களைப்பார்த்து, ஹிரப்பியர் என்னைக் கொல்லவும் நான் சாகவும் நேரிட்டது எந்தவிதத்தினாலென்றும், அந்த ஹிரப்பியர் ஒரு மானிடனிடத்தில் வாசித்துக்கொண்டவர். நான் தேவேந்திரனை நோக்கி நெடுநாள் தபஞ்செய்து அவருடைய வரப்பிரசாதத்தினாற் சகல வித்தையும் வாசித்துக்கொண்டவன். நான்அவருக்கும் மீசுரப்பட்டவனாக இருக்கவேண்டுமே: அப்படிக்கில்லாமல் அவர் மீசுரப்பட்டகாரியம் எப்படியென்று வினவினான். அதற்குத்தேவர்கள் ஓ வக்கிரா! ஆசிரியனிடத்திற் கிரமமாக வாசித்தவர்களும்எப்போதுந் திறமைசாலிகளாகத் தானிருப்பார்கள். மற்றப்படி வரப்பிரசாதத்தினால் வாசித்தவர்கள் அவர்களுக் கீடாக மாட்டார்களென்றுசொல்லிப்போய்விட்டார்கள். பின்பு பிருகுத்தும்மனென்னப்பட்ட அரசனானவன் தான்கோரிய யாகத்தை முடித்த ஆசாரியர்க ளிருவருக்கும் - அவர்களுடைய பிதாவாகிய ஹிரப்பியருக்கும் - வக்கிரனுக்கும்- அவனுக்குப் பிதாவாகிய பாரத்துவாசருக்கும்-வேண்டிய நிதிகளைக்கொடுத்துச் சாஷ்டாங்க தெண்டஞ்செய்தான். அவர்களும் அவைகளை வாங்கிக்கொண்டு ஆசிகூறி, அவனிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு தத்தம் ஆசிர்மம் வந்துசேர்ந்து நெடுங்காலந் தபத்தி லிருந்தார்கள். அவர்களுடைய ஆசிர்மங்க ளிவைகளென்று உரோமசன்மர் சொன்னார்.

உரோமசமுனிச் சருக்கம் - முற்றிற்று.

ஏழாவது

வீமன் மந்தாரபுஷ்ப யாத்திரைச் சருக்கம்.

கண்ணன் துதி.

எண்டோளா னிதயத்தி லிருப்பவனச் சுதனன்கு
திண்டோளா னிதயத்திற் செறிந்திருப்போன் சிவனுமாற்
பண்டோதி யுணர்ந்திரண்டாய்ப் பகர்சமய வாதிகளைக்
கொண்டோதே னவரையுமோர் பொருளாயுட் கொள்ளேனால்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜனே! இவையனைத்துங்கேட்ட தருமராஜன் சந்தோஷப்பட்டு, அவிடத்திலுள்ளதீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து, ரிஷிகளெல்லார்க்குந்தெண்டனிட்டு ஆசிர்வாதம்

பெற்று, கங்காநதிக்கரையில் வந்து ஸ்நானஞ்செய்து தர்ப்பணங்கொடுத்து, அதற்குமேலும் உரோமசன்மர் காண்பிக்கப்பட்ட எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பிறகு இந்திரகீலசயிலமென்னப்பட்ட பர்வதச்சாரலுக்குப்போனார். அங்கே அந்தப்பர்வதத்தினுடைய உன்னத முதலானதையுங் கண்டு அதிலுள்ள சுனைகளில் ஸ்நானஞ்செய்து அப்பாற்போகையில், உரோமசன்மர் தருமனைப்பார்த்து, ஓ மகாராஜனே! உம்முடையதம்பி அருச்சுனன்தபசுசெய்த ஸ்தானம் இதுவென்று சொன்னார். அப்படிச்சொல்லவே யாவரும் உதிரசம்பந்தத்தினாலும் பிராதுர்வாஞ்சையினாலும்- அவ்விடத்திலேயே அருச்சுனனைப்பிரத்தியக்ஷமாகக்கண்டவர்கள்போல ஆநந்தப்பட்டு, தசாங்கரென்னப்பட்ட ரிஷிபாசீர்மம் போனார்கள். அங்கிருந்ததீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்தது மல்லாமல் ரிஷிகளாலும் ஆசீர்வதிக்கப்பெற்று அப்பாற் போகையில், இதுதான் தேவர்கள் அமிர்தங்கடைந்த மந்தரகிரி என்றுகாட்டி வணங்கச்செய்து, கங்காநதிதளும்பி அருவிசொரியப்பட்ட காந்தர்ப்பமென்னு மலையிதுவென்றுகாண்பித்து, அந்தப்பர்வதச்சாரலில் தவஞ்செய்கின்ற ரிஷிகளெல்லாரையுங் கண்டு தரிசிக்கச்செய்து, தருமராஜனைப் பார்த்து உரோமசன்மர் பின்னுஞ் சொல்லுவதாயினர்.

கேளும் தருமநந்தனா! இவ்விடத்திற்கு நூறுயோசனை தூரத்தில்என்னையாண்டருளிய பரமசிவன் எழுந்தருளி யிருக்கப்பட்ட கிரி இருக்கின்றது. அதோவாகையுடன் தோகைமயிலின்மீது எழுந்தருளாநின்ற சுப்பிரமணியருடைய ஸ்தலம். அந்தக் காந்தர்ப்பகிரியிலே ஓர் ஆண்டுவரையில் தவஞ்செய்துகொண்டிருப்போம் வாருமென்று உரோமசன்மர் சொல்லக்கேட்ட தருமன் சந்தோஷப்பட்டு, அப்படியே செய்வோமென்று இணங்கித் தானுந் தம்பிமார்களும் பிராமணர்களும் அவிடத்திற்போய்த்தங்கி, காய்கிழங்குகளைப் பக்ஷணம்பண்ணிக்கொண்டு தவத்திலிருந்தார்கள். ஓர் நாள் மேகவாகனனாகியதேவேந்திரனுடைய சிரத்திலிருந்து புஷ்பமொன்றுநழுகி அக்கினிகுமாரத்தியாகிய திரௌபதிதேவி முன்பாகவந்து விழுந்தது. அதைக்கண் டெடுத்தவள் வாயுபுத்திரனாகிய வீமராஜனைப்பார்த்து, இந்தப் புஷ்பம் பிரமதேவனிடத்தில் வாசமாக யிருக்கப்பட்டதோ? சூரியபகவான் கையிலிருக்கின்ற மந்தாரபுஷ்பமோ திருப்பாற்கடலில் விற்றிருக்கின்ற ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் பிறந்த மலரோ? ஒன்றுந்தெரியவில்லை. இதின்மணம் எங்கும்வியாபித்திருக்கின்றது. என்றுசொல்லி, இதுபோலொத்த புஷ்ப மொன்றைத் தனக்குச்சம்பாதித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டாள்.

அதுகேட்ட வாயுகுமாரனாகிய வீமன் சந்தோஷமாய்ச் சம்மதித்து, அப்புஷ்பத்தை வாங்கிக்கொண்டு உரோமசன்மருடைய பாதத்தில்வைத்துதீர்க்க தெண்டஞ்செய்து, இந்தப் புஷ்பத்தைப்போலொன்றைச் சம்பாதிக்க வேண்டியதற்கு இடம் எவ்விடமோ? அவ்விடத்தைத் தேவரீர் தெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்டான். அதற்கு உரோமசன்மர்- ஓ வீமராஜனே! இவ்விதபுஷ்பங் குபேரனுடையபட்டணமாகிய அளகாபுரியிலுந் தேவேந்திரனுடையபட்டணமாகிய அமராபதியிலுஞ்சம்பாதிக்கலாம். ஆனால் முன்னொருகால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஒருஸ்திரீயினிமித்தந் தேவலோகத்திற்குப்போய் ஒரு புஷ்பங்கொண்டுவர, அவர்பட்டபாடு மெத்தவுண்டு. அவருக்கே அப்படியானபோது, உனக்கு அதிலும் வெகுபிரயாசமிருக்கலாமென்று சொன்னார். வீமன் உடனே அவருக்கு மறுபடியுந் தெண்டனிட்டுத் தன்கையிற்கதையும் வில்லுமெடுத்துக்கொண்டு, திரௌபதிதேவிபாற் செலவு பெற்றவனாய், மும்மதம் பெருகித் தான்போனவழியே சம்மதமாக நடக்கும் யானையைப்போல அளகாபுரியை நோக்கி நடந்தான்.

இவ்வாறு தனிமையாக அளகாபுரியை நோக்கி ஒரே நெட்டாகச் செல்லுகையில், மகமேருவைப்போல் விளங்காநின்ற அவனுடைய சரீரத்திற்குத்தகுந்த தாஷ்டீகமான கைவீச்சு கால்வீச்சுகளினாலுண்டாகின்ற காற்றுகளினாலே வழிநடையிலுள்ள பர்வதங்கள் மராமரங்கள் முதலிய யாவும் வேர்களற்று விழவும், உகாந்த காலத்துப் பெருங்காற்றென்று சங்கங்கள் புலங்களில் முத்துக்களை ஈனவும், அந்தமுத்துக்களினுடைய ஒளியானது சந்திரோதயம்போற் பிரகாசிக்கவும், அப்பிரகாசத்தைக் கண்டு ஆம்பற்புஷ்பங்கள் மலரவும், இவ்விதத் தன்மையோடுங் கூடிய குருநாட்டுவளமைக் கதிபதியாகிய வீமராஜன் நடக்கிற விசை பின்னும் எப்படி யிருந்ததென்றால் ஸ்ரீராமருடைய தூதனாகிய அனுமான் இலங்காபுரிக்குத் தூதுபோகும்போது அவ்விடத்துள்ள அரசர் குலத்தை அதஞ்செய்ததுபோல், வீமனுடையநடைவழியிலிடையி லகப்பட்ட வேடர்கள் இராக்ஷசர்கள் பக்ஷிசாலங்கள் - மிர்கசாலங்கள் - விருக்ஷ சாலங்கள்-பர்வதசாலங்கள் - இவைகளெல்லாஞ் சுருண்டு, புரண்டு, திரண்டு, உருண்டுபோகும்படி நடந்து, காஞ்சனவனத்தைக்கடந்து, வடமேற்றிசையிற் குலைகுலையாய்க்காய்த்திருக்கின்ற கதலிவனத்தைக் கடக்கும்போது, அக்கதலிவனத்தைக் காத்திருக்கின்ற இராக்ஷதர்களெல்லோரும் வீமனைவந்து சூழ்ந்துகொண்டு அப்புறம் இப்புறம் போகவொட்டாமல் மடக்கிக்கொண்டார்கள். அவர்கள் எல்லோரையும் வீமசேனன் அதாகதப்படுத்தி ரத்தாறோடும்படிச் செய்தான். அதைக் கண்டிருந்த நாகலோகத்தாரும் தேவலோகத்தாரும் பயந்து கண்களை மூடிக்கொண்டார்கள். அத்திசைக் காவலனாகிய தன்றந்தையுந் திப்ரமைகொண்டவனாய், பின்பு தன்றனயனென் றுணர்ந்து சிறிதுதேறிக் கவலையொழித்திருந்தனன்.

வீமசேனன் அனுமானோடுவாதித்துப் பின்பு சிநேகித்து விஸ்வரூபந் தரிசித்தல்.

பின்னும் வீமன் வடதிசையாகப் போகையில், அங்குள்ள வனங்களும்-ஜெனங்களும்-மலைகளும்-பூமியும்-சமுத்திரமும்-யானைகளும் - அந்தத் திசைக்காவலர்களும் - கிடுகிடாயமான மாகும்படியாய் நடக்கின்ற அதிர்த்தலைப் பர்வதாகிர்தி புஜத்தோடுங்கூடிய ஆஞ்சனேயன்கேட்டு, முன்ன மிலங்காபுரிக்குப் போகக் கடலைக் கடக்கவேண்டியதற்கு உபய பாதங்களையுந் தோள்களையு நீட்சிசெய்துகொண்டுபோய் இராவணனுடைய நகரத்தையெரித்த நீண்டவாலுடனும், ஸ்ரீராமமூர்த்தியின் நேத்திரத்திற்கு மாத்திரங் காணப்படுங் காத்திரமாகியமகர குண்டலங்களிரண்டுடனும் பிரகாசிக்கத் தக்கதாய், ஓர் உன்னதமாகிய பர்வதத்தின்பேரில் மற்றொரு பெரியபர்வதந் தோன்றினாலெப்படியோ? அப்படி விளங்கி யிருந்தான். விந்தகிரிக்குச் சமதியாகிய தோட்களையுடைய வீமசேனன் ஆரவாரத்தோடு ஆர்ப்பரித்துக் கொண்டேவந்த அனுமனைக்கண்டு, இவனும்வாயுபுத்திரனாகிய அனுமானின் மாய்கையால் நமக்குச் சகோதரனாகவேண்டு மென்று கருதி, உடனே பயங்கொண்டு நயங்கொண்டு ஒடுங்கி நின்றான். அப்படி நடுங்கி ஒடுங்கி நின்ற வீமசேனனை ஆஞ்சனேயன் பார்த்துக் கோபித்துச்சொல்லுகிறான்: இவ்விடத்தில் தேவர்கள் முதலியயாவர்களும் மற்றை வீராதிவீரர்களும் வரப் பயப்படுகிறதானால், நீயோ மனிதன் எப்படி அஞ்சாமற் கெஞ்சாமல் வந்தாய் என்று அதட்டி உதட்டியாகக்கேட்டு மறுத்தான்.

அதற்கு வீமன்-ஓவானரவீரனே ! என் என்னைத்தடுக்கிறாய்என்றான். உடனே அனுமானுக்குக் கோபம்பிறந்து வீமனைப்பார்த்து, உன்கையில் வில்லுங் கதையும் இருக்கின்றதென்கிற ஆண்மையினாலல்லவோ இந்தச்சேவகம் பேசுகிறாய் உன்னை நீ அறியாத மனிதனானாலும் என்னையேனும் நீ அறியச்செய்கிறேன் உன்பிரதாபத்தையும் பார்ப்போம், இதோ குறுக்கே கிடக்கின்ற என்வாலைமாத்திரஞ் சற்றப்பாலெடுத்துப் போடுவையேயானால் உன்னை வீரனென்று சொல்லப்படுமென்று அனுமன் கூற, அதற்கு வீமசேனன் - ஓ வானரமே ! இராகவருக்குத்தூதராகக்கடலைக்கடந்து இலங்காபுரியை யடர்ந்து, அப்பட்டணத்தைத் தீயவிட்டு, இராக்கதரை மரியவிட்டு, சீதாபிராட்டியைக் கண்ணினாற் கண்டுவந்த என்தமயனாராகிய அனுமந்தரைப்பார்க்கிலும் நீ தொட்டகுரங்கோ அவருடைய வாலிலும் உன்வால் பெரியதோ என்று அலக்ஷியமாகச் சொல்ல, அனுமன் நகைத்துச் சொல்லுகிறான்: ஓ நரனே ! உன்னைப்போல நானாகிய ஸ்ரீராமமூர்த்தியைச் சுமந்து சுமந்து தோள்கள் தேய்ந்து சொல்பபலத்துடன் கிடக்கின்ற அனுமனையா எனக்குச்சமானமாகவும் அதிகமாகவும் பேசினாய். ஆ ! ஆ ! நன்றாயிருக்கின்றது. நீ அவனை மதித்தபோதே உன்பண்டவாளமும் இப்பேர்ப்பட்டதென்று வெளிப்பட்டது. என்று ஏனைய குரங்குகளும் கொப்புறவாகப் பேசிவருகின்ற அனுமனைப்பார்த்து வீமராஜன் சொல்லுகிறான்: ஓ மற்கடகமே ! அரக்கர்குலத்திற் கதிபனாகிய இராவணனைச்சூரனுடைய இலங்கா த்வீபத்தை வாலினாற் சுட்டெரித்த மகா வீராதி வீரனாகிய அனுமனை நீ அவர்குலத்தனாகியிருந்தும் இப்படிகேவலம் இகழ்வாகப்பேசுகிறது ஞாயமோ? என்று நகைத்து அதட்டிக்கேட்டான்.

இப்படிக்கு ஒருவர்க்கொருவர்வாதுபேசி அனுமன்றானே அனுமந்தனை இகழவும், அந்த அனுமந்தனையே இந்தவீமன் புகழவும், அச்சமயத்தில் நல்லது அனுமனையும் ஸ்ரீராமனையும் தூஷணையின்றிப்பூஷணமாகப்பேசிவருகின்றனையே: நீயார் நீ இங்குவந்தகாரியமென்ன என்று வீமனைப்பார்த்து அனுமன் வினவினன். அதற்கு வீமன் சொல்லத்தொடங்கி, ஓ வானரவீரனே ! மகா நீதியுடன் அரசுசெலுத்தப்பட்ட தருமராஜனுக்கு நான் தம்பி அருச்சுனனுக்குத் தமயன். என்பேர் வீமன். வாயுவினுடைய புத்திரன் என்றான். அதுகேட்ட அனுமன் வீமனைப்பார்த்து, ஸ்ரீராமமூர்த்தியினுடைய பிரதாபமுதலானதையெல்லாஞ் சொன்னையே; நீ யாவராற் சொல்லக்கேள்விப்பட்டாயென்றான். அதற்கு வீமன் பாரத்துவாசரிஷி சொல்லக் கேள்விப்பட்டேனென்றான். நல்லது உன்னுடைய விர்த்தாந்தத்தைச் சொன்னையே. என்னுடைய விர்த்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். என்று அனுமன் வீமனைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ வீமராஜனே ! வாயுபகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிள்ளையாகப்பிறந்து, சுக்கிரீவனுக்கு மந்திரியாகி, ஸ்ரீராமமூர்த்திக்கு மெய்யடிமைப்பட்டு, ஸ்ரீசீதாதேவியைக் காண நெடுங்கடலைக்கடந்து, இலங்கா த்வீபத்திற்குப் போய்ச் சீதாலக்ஷ்மியைத் தரிசித்து, அநேக ராக்ஷசர்களை நாசப்படுத்தி, அவ்வூரைக் கொளுத்தி, திரும்பவும் ஸ்ரீராமமூர்த்தியைத் தரிசித்து, இந்நேரம் வரையிலும் அவருடைய நாமத்தை ஸ்மரிக்கப்பட்ட அனுமனானவன் நான்தானென்றான்.

இப்படி கூறக்கேட்ட வீமன்தன் இரண்டுசெவிகளிலுந் தேவாமிர்தத்தை நிறையச் சொரிந்தது போல் மனங் குளிர்ந்து, தேகம்புளகித்து, அநேக ஜெனனங்களிலே செய்த தபோபலன்களெல்லாம்இப்போது பலித்ததென்று குதித்துக் குதித்து, ஆஞ்சனேயனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டான். இப்படித் தெண்டனிட்ட தம்பியாகிய வீமனைத் தமயனாகிய அனுமான் வாரியெடுத்து மார்புறக் கட்டியணைத்து, உச்சியை முகந்து, சகோதர

வாஞ்சைத் தயையுடனே அவனைப்பார்த்து, அப்பா வீமா ! நீ சிறபிள்ளையாச்சுதே: உன்னுடைய கால்கள் சிவந்துபோகும்படி ஒண்டியாய் இங்குவந்த காரிய மென்னவென்று கேட்டான். வீமன் சொல்லுகிறான்: ஓ அண்ணா! எங்கள் ஞாதியாகிய துரியோதனனும் அவனுடன் கூடிய துன்மார்க்கர்களுஞ் சகுனி மாமனை எடுத்துவிட்டு மாயச்சூதாடச்செய்து, அதனால் எங்களைத்தோற்கப்பண்ணி, எங்கள் செல்வங்களையும் நகரங்களையும் பிடுங்கிக்கொண்டு,வனவாசமிருக்கச்சொல்லிக் கெடுவுவைத்துத் துரத்திவிட்டபடியால்; நாங்கள் நாட்டைவிட்டுக் காட்டினிடஞ் சஞ்சாரஞ்செய்யவந்தோம். அங்கு ஆகாயத்தினின்று மந்தாரப்புஷ்பமொன்று திரௌபதிதேவி முன்பாகவிழக்கண்டு, அதைப்போன்ற புஷ்பத்தைச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டுமென்று அவள் என்னைக்கேட்டுக் கொண்டமையால், அந்த மாதிரிப்புஷ்பம் அமராபதியில் அல்லது அளகாபுரியில் அகப்படுமென்று உரோமசன்மரிஷி யுரைத்த பிரகாரம், இவ்வழியாக நான் வந்தேனென்று கூறினன்.

அதுகேட்டதும் அவ்வீமனுக்குத் தமயனாகிய அனுமந்தன் ஆச்சரியமாகி, அப்படியா ? தம்பிவீமா! அந்தப்புஷ்பம் உரோமசன்மர் சொன்னப்பிரகாரமே, அளகாபுரியிற் குபேரனுடைய வீட்டுப்புறக்கடையில் அவன் வீட்டார் விளையாடப்பட்ட மஞ்சன வாவிக் கரையிலே புஷ்பித்திருக்கின்றது. அது தேவர்களுக்குங் கிடைப்பது அருமை. அந்தவிடத்தில் அசுரர்களும், இயக்கர்களும், கின்னரர்களும், பச்சாதாபம் பூததயையில்லாத பாமரசெனங்களும், காவலாள்களாயிருப்பார்கள். எப்படிப்பட்ட வீரர்களும் அவ்விடஞ் செல்ல அஞ்சுவார்கள். ஆனல் உன்னிடத்தில் வாய்மையும் - தூய்மையும் - அறிவும்-பொறுமையும்-ஞானமும் - நற்றபோபலமும் - நற்குணமும் - நற்செய்கையு மிருக்கின்றபடியால், உனக்கு அந்தப்புஷ்பங் கிடைப்பதுபிரயாசமாயிராது. என்று அனுமான்சொல்லக்கேட்ட வீமன் - ஓ அண்ணா! உம்முடைய கிருபாகடாக்ஷமும், எங்கள் தமயன் தருமராஜனுடைய தபோபலமும், என்னுடைய தோள்பலமும் இருக்கின்றவரையில், தேவர்களும் - இராக்ஷதர்களும் - மும்மூர்த்திகளே முதலான யாவர்களும் அவ்விடத்தில் வந் தென்னேடெதிர்த்தாலும், அவர்களைச்செயித்து அந்த மந்தார புஷ்பத்தைக் கொண்டு வருவேன். எனக்கூறக்கேட்ட அனுமன் சந்தோஷப்பட்டு, இன்னும் என்னலாகவேண்டியதைக்கேள்தருகிறேனென, வீமன் களங்கமில்லாத உள்ளத்தோடு உங்கள்வாக்கு விசேஷமே எனக்கு வெகு பாக்கியமாயிற்று. ஆனல் இந்தப் பதின்மூன்று வருஷமுங் காடேகதியாய்ச் சஞ்சரித்து, அதற்குமேல் நாடேபதியாய் வசித்துச் சத்துருக்களைச் செயிக்கின்ற பக்ஷத்தில், அத்தருணத்தில் தாங்கள் தடையின்றிவந்து தம்பியாகிய அருச்சுனனுடைய தேர்மீது சிறப்புடனிருந்துவீற்றிருந்தால் மாத்திரம், நாங்கள் ஜயமடைவதற்கு யாதோ ரனுமானமிராது. ஆகையால் இந்த வரமொன்றைமாத்திரந் தாங்கள்தயைபுரிந் தருள்வீரென்றான்.

அதுகேட்ட அனுமான்-நல்லது வீமா ! அப்படியே தம்பி அருச்சுனனுடைய இரதத்திற்கு அக்காலையில் துவஜமாகவந்துயிருப்பேன். இவ்வரங்கொடுத்தேன். மேலென்னவேண்டுந் தெரிவியென்றான். அதன்பேரில்வீமன் அவனைப்பணிந்தெழுந்து, ஓ அண்ணா! ஸ்ரீராமமூர்த்தி பின்சென்று இராக்கதர்களை நாசஞ்செய்தகாலையில் தாங்கள் எடுத்த விஸ்வரூபத்தைச் சற்று என்மீது கடாக்ஷித்துக் காட்டவேண்டு மென்றும்வண்டினன். அனுமானனவன் வீமனைப்பார்த்து, நல்லது நான்விஸ்வரூபத்தைக் காண்பிக்கிறேன். நீ பயப்படாமற்பார் என்று அந்த நிமிஷத்தில்தானே ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் மஹாபெலிச் சக்கிரவர்த்தியிடத்தில் மூன்றடிமண் தானங்கேட்கும்போது எவ்விதப் பெருமையாக விஸ்வரூபத்தை எடுத்தாரோ? அவ்விதப்பெருமையாக விஸ்வரூபத்தை எடுத்தான். அப்போதவன்பாதம்வரையில் பூமியெல்லாமறையவும் அவன் இடுப்புவரையில் ஆகாயமெல்லாம்நிறையவும், அவன்தேகமும் சிரசும் அண்டமுகடுவரையில் அளாவவும், அவனுடைய வாலானது மந்தரகிரி உன்னத உயரத்திற் பூர்வம் அமிர்தங்கடைந்த வாசுகி பேழையிட்டுக்கொண்டிருந்ததுபோலிருக்கவும், ஆதித்தியாதி நவக்கிரகமுந் தாரகாகணமும் பிரதக்ஷணஞ்செய்து வரும்படியான மஹாமேருகிரியொப்பாகப் பெருத்து நிமிர்ந்து வளர்ந்து விஸ்வரூபத்தைக் காட்டினன். அதை விண்ணுலகத்தி லிருக்கின்ற தேவர்களும், மண்ணுலகத்தி லிருக்கின்ற நாகர்களும், குவலயத்திலிருக்கின்ற சகல செனங்களும் கண்டு நடுங்கிக் கண்களை விழிக்காம லிருந்தார்கள்.

அப்போது வீமன் அவனுடைய பாதத்தைமாத்திரங் கண்டு, மற்ற அவயவங்களைக்காணத் திப்பிரமைகொண்டு, இரண்டு கரங்களையும் உச்சிமேற்கூப்பி அவன்பாதத்தில்விழுந்து, போதும்:போதும்: அண்ணா ஆஞ்சனேயக் கடவுளே ! தங்களுடைய இவ்விதப் பெருமையோடுங் கூடிய இந்த ஸ்தூலதேகத்தை யடக்கிப் பழயபடி சூட்சுமதேகத்தை நான்பார்த்து மகிழக் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அனுமன் தயையுடன் தத்பூர்வ தேகத்தைக் காட்டினன். உடனே வீமன்சாஷ்டாங்கமாக அனுமந்தனுக்குத் தீர்க்க தெண்டஞ்செய்து, தேவரீருடைய மகத்துவத்தை யறியாமல் முன்னம் நான் பேசியபிழையைப் பொறுத்து அருள்செய்ய வேண்டிய தென்று மிகவும் பிரார்த்தித்தான். ஆஞ்சனேயக் கடவுளானவனும் சம்பூர்ணகடாக்ஷத்துடனேவீமனைப்பார்த்து, தம்பி ! நீயும் - உன் தமயன் தருமநந்தனனும்- உன்னுடைய தம்பியர் மூவரும்-திரௌபதிதேவி முத

லானவர்களும் - உங்களுடைய சத்துருக்களை யெல்லாம் அதஞ்செய்து வெகுகாலம் வரையிலும் இதமெய்திஇராச்சியம்ஆண்டு, முடிவில் நம்பெருமானுடைய பாதத்தில் வந்து சேரக்கடவீர்களென்று ஆசீர்வாதஞ்செய்தான். அந்தஆசீர்வாதத்தைப்பெற்ற வீமன் குபேரனுடைய பட்டணத்திற்போகின்ற மார்க்கமுதலானதை அவ்வநுமானிடத்தில் வகைவிபரமாகக் கேட்டுக்கொண்டு, ஓர் நாழிகையளவில் வித்தியாதாருடைய காடுபோய்ச் சக்கரநாகம் என்னப்பட்ட மலையைக்கண்டு, அம்மலைச்சருவில் தபசு பண்ணப்பட்ட பெரியோர்களைத் தரிசித்து, திவாகரப்பர்வத மார்க்கமாகவந்தான்.

புண்டரீகன் வதை

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! அவ்விடத்தில்புண்டரீகன்என்றொரு இராக்ஷசன் உளன். அவன் அஞ்சன மேகம்போன்ற நிறமும்-வஞ்சனையே குடிகொண்டிருக்கும் உரமும் - செந்தீப்போலொத்த சுருட்டைத்தலைமயிரும் - சூரியமண்டலமளாவிய சிரசும் - மஹாபர்வதங்களி லிருக்கின்ற குகையொத்த வாயும் - மூன்றாம்பிறை நிகர்த்த கோரதந்தங்களும்- பன்னிருகாத வழிதூரம் பரந்ததோள்களும் - இருநூறுகாதவழி தூரத்தை நொடியிற் கடக்குங் கால்களும்-ஏறுடையானாகிய பரமேஸ்வர கணங்களோடு யுத்தத்திற்செயிக்கும்பலமும் - திசைகளெட்டையுஞ் செயித்துத் திரைகள்வாங்குந் திறனுங் கூடியவன். இப்படிப்பட்ட பராக்கிரமம் பொருந்திய அவன்கண்களில் நெருப்புப்பொறிகள்பறக்கும்படியான பார்வையுடன் வீமனைப்பார்த்து, சப்தமேகங்களும் நடுங்கத்தக்கதாகச் சிரித்து, பற்களை நெறநெறவென்று கடித்து, அடா மானிடப்பயலே ! இந்தவழியே இந்திராதிதேவர்கள் முதலாகிய மற்றையாவர்களும் வரப் பயப்பட்டுக்கொண்டிருக்க, நீ சொல்பமனிதன் அஞ்சாமல் மனந்தொஞ்சாமல்வந்தாயல்லவா? இப்போது எனக்கு நீ ஆகாரமாகப் போகிறாய். அது இருக்கட்டும். இங்குமுன்னே நீ வந்தகாரியத்தைச் சொல்லென்றான்.

அதற்கு வாயுபுத்திரனாகிய வீமன்புஜங்கள் குலுங்கும்படி நகைத்து, இங்கு உன் பிராணனை வாட்டவந்தேனேயன்றி உன்னிடத்தில் வேறுகாரியமாக வரவில்லையென்றான். அங்ஙனே புண்டரீகனுக்குக்கோபம் பிறந்து வீமன்பேரிற் சாய்ந்தான்: அவன்பேரில் வீமன்பாய்ந்தான். அதற்குமேல்ஒருவரோடொருவர் மலையும்மலையும் எதிர்த்தாற்போல நெடுநேரம் இளையாமற் சளையாமல் மல்யுத்தமுதலிய நல்யுத்தஞ் செய்தார்கள். அப்போது ஆகாயத்திலிருந்து அசரீரி - ஓ வீமராஜனே ! இந்தராக்ஷசன் எதுமுகாந்திரத்தினுஞ் சாகான். அவனைச்சாகச்செய்யவேண்டுமானால், ஓர் ரிஷிசாபம் அவனுக்கிருக்கிறது. அந்தச் சாபப்படி தோமரத்தை அவன்பேரிற் பிரயோகம் பண்ணினால் உடனே இறந்துபோவானென்றுசொல்லிற்று வீமராஜன் உடனே தன் கதையினாலே அந்த ராக்ஷசனுடைய தோள்மேல் அடித்தான். அந்த அடியாலே பூர்வம் வாயுதேவன் மந்தரகிரியைப் பேர்த்துவந்து திருப்பாற் கடலிற்போட விழுந்ததுபோலப் புண்டரீகன் பூமிமீது விழவும், அவன்பிராணன் யமனுக்கு ஆஹுதியாகப்போயது. அவனுடலமானது நாய்களுக்கும் பேய்களுக்குந் திர்ப்திகரமான விருந்தாயது அதன் பின்பு வீமன் சந்திரசயிலத்தையுங்கடந்து அளகாபுரியில் நடந்து, அந்நகரத்துத் தென்பாரிசத்தில் மலைபோல நின்றுக்கொண்டு பார்த்து, மந்தார புஷ்பவனமிருக்கிறதைக்கண்டு சமீபத்திற் சென்றான்.

குபேரன்புஷ்பவனக் காவலாளர்கதை.

அந்தப் புஷ்பவனத்தைக்காக்கின்றவர்கள் விசாலமான மார்பகங்களும், ஆகாசபரியந்த மளாவியதோள்களும், வாய்களில் அகோர தந்தங்களும், நெருப்பைக் கக்குகின்ற கண்களும், இருட்டைத் தானே திரட்டிவைத்த கறுத்ததேகங்களும், பெலத்துவாரங்களைப்பார்க்கிலும் பெரியவாய்களும், முதுகில் முகங்களும், மார்பில் மூக்குகளும், செம்பட்ட மயிர்களோடுங்கூடிய சிரங்களும், ஆயிரமாயிரங்கரங்களும், ஆயிரமாயிரங் கால்களும், ஆயிரமாயிரங் கண்களும், ஆயிரமாயிரங் காதுகளுமா யிருப்பதல்லாமல்; ஒருநாழிகையிற் பதினாலுலகத்தையு மதஞ்செய்யும் பலத்தையுடையவர்களும், திருப்பாற்கடலைக் கடையும்போது கூடயிருந்த அசுரர்களெல்லாம் இளைத்தோடும்போதுங்கூட ஓடிப்பிழைத்து அன்றுமுதல் இன்றையவரையில் நீண்ட ஆயுளோடுங்கூடி யிருக்கப்பட்டவர்களும், வகைதப்பிப் பகைநேரிட்ட காலத்துந் தர்மநினையாமல் அதர்மத்துடன் உறவாடி குடிகெடுக்கின்றவர்களும், அநேககாலந் தவசுசெய்து-அநேக வரங்களைப்பெற்று - அநேகவேதங்களைக் கற்று-அநேக ஜாலங்களையுற்றுச் செய்யவல்லவர்களு மானவர்கள். கூர்மைபொருந்திய வாள்கள் - வேல்கள் - சூலங்கள் சக்கரங்கள் - முதலிய ஆயுதங்களைத் தரித்து, விழித்தகண் விழித்தபடியே நிமை கொட்டாமற் காத்திருக்கின்ற இவ்வெண்ணிறந்தஇராக்கதர்களும்-இராக்கதவீரர்களும் - வீமனைப்பார்த்து, அங்கே யாரோ ஒருமனிதன்பயப்படாமல் வந்தானென்றுபோய் அவனைச் சூழ்ந்துகொண்டு, நன்றாய் அண்ணாந்து பார்த்து, தங்கட்பந்துக்குக் கதாயுதனாகவந்த காலனாகிய வீமன்இவன்தானென்று எண்ணாமல் அலக்ஷியஞ்செய்து, சூலங்களாலே குத்துவோமென்றும், பாசங்களாலே கட்டுவோமென்றும், கரங்களினாலே நசுக்குவோமென்றும், கால்களினாலே பிசுக்குவோமென்றும், தசையார நசிப்போமென்றும், பசியாரப் புசிப்போ

மென்றும், இவ்விதக் கொடூரமாகிய பற்பலவித வசனங்களை வசனித்துக்கொண்டே, அடா நரனே ! இந்திராதிதேவர்களுங்கூடக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாத இந்தப் புஷ்பவனத்தினிடத்துவந்த நீ, உன் பிராணனை இழந்துபோகாதற்கு முன்னமே விபரத்தைச் சொல்லென்று ஆக்கிரமித்துக் கேட்டார்கள். அதற்கு மறுமொழி கூறுமலே குறுநகைசெய்து, மாரவேளை நெற்றிக்கண்ணினுற் பஸ்மீகரித்தசடாமகுடதாரியாகிய ஈஸ்வரனைப்போ லிருந்து, ஒன்றுக்கும் அஞ்சாமல் - வெற்றிக்குந் துஞ்சாமல் - மறுமொழி சொல்லத் தொடங்கினன்.

ஓ இராக்ஷசக் கிருமிகளே ! யான் இவன்வந்த காரியம் இதோ இருக்கின்ற மந்தாரப் புஷ்பத்தைப் பறித்து, உங்களையெல்லாம்வறுத்து, உங்கள் உயிரை இயமன்அருந்தும்படிவிருந்துசெய்விக்கவென்று அறிமிங்கள். வேறொன்றற்கல்ல. அப்படிவந்த என்னைக் கேவல மனிதனென்றல்லவா இகழ்கின்றீர்கள் பூர்வந் நீதண்டாதவொருகோதண்டங் கையிலேந்தி உங்கள் குலத்தை அழித்துக் கொன்று குவித்த ஸ்ரீராமமூர்த்தியை மனிஷனென்றே நன்று யறிந்திருக்கின்ற நீங்கள், என்னை இகழ்வாகப் பேசுவ தேனென்றான். அதுகேட்ட உடனே இராக்கதர்கள் எல்லோரும் இரைந்து பொங்கி ஆர்ப்பரித்து, வால்கில்லியர் முதலிய படைவீரர்களோடு ஏககாலத்தில் வீமனை நெருங்கி, அவன்பேரில் அநேக ஆயுதங்களை எறிய, அவைகளை வீமசேனன் தன்கைத் தண்டாயுதத்தினுலேளத்தித் தட்டிப் பொடிசெய்தும், சிலரை யடித்தும், சிலரைவாரி ஆகாயத்தி லெறிந்தும், சிலரைக் கையினுற் பிசைந்தும், சிலரைக் காலினுல் தேய்த்தும், சிலரை வாளினுற் சிதைத்துக்கொன்றுங் குவிக்கையில்; பின்னும் நூறுயிரம்இராக்ஷதர்கள்சகலஆயுதபாணிகளாக வந்து எதிர்க்க, வீமன் கெதையைப் போட்டுவிட்டு, வில்லைக்கையிலேந்தி, அஷ்டதிக்கஜங்களு மூர்ச்சையாகும்படி குணத்தொனிசெய்து, ஆதிசேஷனும் பயந்து விஷத்தைக் கக்கும்படியான பாணங்களைச் சொரிந்தான். அப்பாணங்கள் அவர்கள்மேற் பட்டதனுல், ஸ்ரீராமபாணத்திற்குக் கரனென்னப்பட்ட இராக்கதனுடைய ஜெனங்களெவ்வாறு மாண்டார்களோ அவ்வாறு மாண்டார்கள். மேலும் அவ்விராக்கதக் கூட்டங்கள் சூலாயுதமுதலிய நாலாயுதங்களை வீமன்பேரிற் பிரயோகம் பண்ணினுர்கள். அவைகளை யெல்லாம் வீமன்தட்டி வெட்டி, அவர்களை யெல்லாங்கண்டதுண்டமாக்கி, சிங்கங் கர்ச்சனை செய்ததுபோற் சிரித்துநின்றுன். இவைகளையெல்லாம் பார்த்திருந்த சாரனுேடி, இயக்கர்பிரானுகிய குபேரனிடத்தில்வந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, எழுந்து கைகட்டி வாய்புதைத்து, ஓ ஆண்டவனே ! யாரோ ஒரு நரன் வந்து புஷ்பவனத்தி னிடத்திற் காவலாக விருக்கின்ற இன்னுரை இன்னுரை அவர்களுடைய அனேகஞ் சேனைகளோடு கொன்று குப்பற் குப்பலாகக் குவித்து யானை - குதிரை - முதலிய கூட்டங்களையும் அதஞ் செய்து, இடி ஏறு சிங்கத்தை நிகர்த்து நிற்கின்றுன். என்று சமாச்சாரஞ் சொன்னுர்கள்.

குபேரனு லனுப்பப்பட்ட சங்கோடணன் வீமனு லபஜயப்பட்டோடி முறையிடுதல்.

அந்தச் சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டகுபேரனுனவன் தன்னருகிலிருக்கின்ற படைவீரர்களில் முன்னாயகனுக விருக்குஞ் சங்கோடனைப் பார்த்து, நீ உன்னுடைய திரண்ட சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தநரனைக் கொன்றுபோடாமற் பிடித்த பிடியிற்றுனே அவனைப் பின்கட்டுகட்டி என் முன் கொண்டுவாவென்று கட்டளை யிட்டான். அந்தக் கட்டளையை அவன்குனிந்த ஆசாரத்துடன் சிரமீது வைத்துக்கொண்டு, சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ் செய்து விடைபெற்று, அவனுடைய சேனுசமுத்திரங்களைப் பின்பற்றி வரும்படி உத்தரவுசெய்து, வீமனுக் கெதிர்வந்து அவனை நகமுகமுஞ் சூழ்ந்துகொண்டு, அனேகமனேகம் விதமான பாணங்களைப் பிரயோகஞ் செய்தான். அவைகளை வீமன் சின்னபின்னமாகச் சிதறவடித்துப் போடவும், பின்னும் அந்தச் சேனைநாயகன் முதலாயினேர் வேண்டிய பாணங்களைச் சரமாரியாகப் பொழிந்தார்கள். அவைகளை யெல்லாம் வீமன் தன்கைப்பாணத்தால் அறுத்தெறிந்து அத்தனைபேரையுங் கொன்று, தன்னடையாள மிருக்கும்படி அப்படைத் தலைவனுகிய சங்கோடணனுடைய மார்புக் கெதாயுதத்தால் ஓர் அடி அடிக்கவும்; அவ்வோரடிக்குச் சங்கோடணன் இடிக்குப் பயந்த நாகம்போற் பயந்து நடுநடுங்கி ஒடுங்கி, குபேரனிடம் ஓடிப்போய்த் தெண்டனிட்டு, சுவாமி ! தாங்கள் கட்டளை யிட்டபடியே புஷ்பவனத்தினிடம் இருக்கின்றவனைக் கேவலம் மனிதனென் றெண்ணி நெருங்கி யுத்தஞ் செய்தோம். செய்த யுத்தம் இலேசானதல்ல. அப்படிச்செய்தும் அவன் எம்மைப் பின்னிட்டு முதுகுகாட்டி ஓடோடும்படி அதோகதப் படுத்திக்கொண்டு வருகின்றபடியினுலே, அவன் மனிதனன்று. ஆகையால் இந்நேரம் அவனுக்கு நவநிதிகளைத் திரைகளாகக் கொண்டுபோய்க் கொடுத்து நல்லவார்த்தை பேசி அவனைச் சந்தோஷமா யனுப்பினுல்மாத்திரம், நாம் இன்னுஞ் சிலகாலந் தப்பிப்பிழைத்து உயிரோடிருப்போம். இல்லையாகில் அவன் நம்முடைய பட்டணத்தை யெல்லாஞ் சூறையாடி எல்லாவற்றையுங் கொள்ளைகொண்டு, நம்மை எல்லோரையும் நாசப்படுத்திச் சத்தியமாய் வெற்றிகொள்ளும்படியானவீரதீரனுக்கும். என்று சங்கோடணன் ஆசார உபசாரத்துடன் சொன்னுன்.

குபேரன் தன்குமாரனாகிய உருத்திரசேனனால் வீமனைச் சமாதானப் படுத்துதல்.

இதைக் கேள்விப்பட்ட குபேரனுக்கு ஆச்சரிய மிருந்து, அப்படிக்கொத்த நரனொருவனு மிருக்கின்றானா அவனுடைய சமாச்சாரத்தை இன்னும் நன்றாயறியவேண்டும். என்று தனக்குள் கருதினானவனாய், தன்னுடைய குமாரனாகிய உருத்திர சேனனைப்பார்த்து, நீபோய் அந்த மனிதனுடைய சவிஸ்தாரத்தை யறிந்துவாவென்று உத்திரவு கொடுத்தான். அவன் அந்த உத்தரவைச் சிரசாகவகித்து வணங்கி விடை பெற்றுக்கொண்டு, புஷ்பவனத்தி னிடத்து மகாபராக்கிரமத்துட னிருக்கின்ற வீமனைக்கண்டு, நீர்யார் இங்குவந்த காரியமென்னஎன்வீணாக இவ்விடத்துப் பிரசைகளை நாசப்படுத்துகிறீர் இந்த வனத்தினிடத்தில் வண்டுகளும்வந்து மொய்க்கக்கூடாதே: இவ்வித வனத்தில் நீர் வந்தகாரிய மின்னதென்றும், நீர் இன்னாரென்றுஞ் சொல்லும். அதன்பேரில் உமக்காகவேண்டியகாரியத்தை நான் முடித்துக் கொடுக்கிறேனெனச் சொல்ல, அதுகேட்ட வீமராஜன் உத்தரஞ் சொல்லுகிறான். முன்னொருபோதுஇந்த அளகாபுரிக் கதிபனுடைய பிள்ளைகள் ஓர் சாபத்தினாலே மருதவிருக்ஷமாக, அப்போதவர்களைச் சாப நிவர்த்திசெய்த ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு மைத்துனனாகிய தர்மராஜாவினுடைய தம்பி நான். வாயுகுமாரன். குந்திபுத்திரன். என்பேர் வீமசேனன். திரௌபதிதேவிக்கு மந்தாரபுஷ்பம் வேண்டியதைப்பற்றி இங்குவந்தேன். என்றவுடனே உருத்திரசேனன் சந்தோஷ மாச்சுதென்று தக்ஷணமே வீமனுக்கு வேண்டியவரையில் மந்தார புஷ்பங்களை யளித்து, இனிய வசனங்கூறிப் போய்வாருமென்று செலவுகொடுத்து, பிதாவாகிய குபேரனிடத்திற்குப்போய் நடந்த சமாச்சாரத்தை யெல்லாஞ் சொன்னான், அந்தச் சமாச்சாரங்கேட்ட குபேரன் மிகவுஞ் சந்தோஷங்கொண் டிருந்தான். வீமன் அந்தமஞ்சனவாவிக்கரையில்ஸ்நானஞ்செய்து தீர்த்தபானமும்பண்ணிச் சற்றிளைப்பாறி யிருக்கும் போது, நடந்தவர்த்தமானத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஜெனமேஜெய மஹாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

தருமராஜன் கடோற்கஜனோடு சென்று வீமசேனனைக்கண் டழைத்து வருதல்.

ஓ மகாராஜனே! வீமசேனன் அளகாபுரியிற் குபேரனுடைய புஷ்பவனத்திற்குப் போனதைத்தருமரந்தனரறியாமல், வீமன் போன வயணமென்னவென்று திரௌபதிதேவியைக்கேட்டார். திரௌபதி தேவியானவள் ஆகாயத்தினின்று மந்தார புஷ்பம் விழுந்ததும், அப்புஷ்பத்தைப்போற் சிலபுஷ்பந் தனக்கு வேண்டுமென்று வீமனுடன் சொன்னதும், அதற்கு வீமன் தனிமையாகக் குபேரனுடையபட்டணத்திற்குப் போனதும் விபரமாகச் சொன்னாள். இதைக் கேட்டமாத்திரத்தில் இடிக்கொடிபெற்ற தேவேந்திரனுடைய குமாரனாகிய அர்ச்சுனன் தன்னைப் பிரிந்து தவசுக்குப்போனதுமுதலிதுவரையில் வராதிருப்பதினால், அவனை எப்படி காணப்போகிறேனென்று தவித்துக்கொண் டிருக்கிற தருமராஜனுக்குப் புண்ணிற் கோலிட்டதுபோல் மனதில் மிகுந்த வியாகூலம் வந்து நேரிட்டு, அதிதீவரத்தில் இடும்பிக்கு மகனாகவும் இடும்பா சுரனுக்கு மருமகனாகவுங் காட்டில்தானே வாசஞ்செய்துகொண் டிருக்கிற கடோற்கஜனைத் தன்மனதிலே நினைத்தார். அந்நினைப்பைத் தெரிந்துகொண்ட கடோற்கஜனானவன் தனது ரதத்தின்பேரிலேறிவந்து, ஜேஷ்டபிதாவாகிய தர்மராஜனுக்குசாஷ்டாங்க தெண்டனிட்டு, என்ன கட்டளை என்றான். தருமன் அவனைத் தழுவி மார்புட னணைத்து, அப்பாமகனே! உன்தாயாராகிய திரௌபதை சொல்லைக் கேட்டு, உன்தகப்பன் வீமசேனன் என்னுடன் ஒன்றுஞ் சொல்லாமல் தனிமையாகக் குபேரனுடைய பட்டணம் போனானும், அவன்போன இடத்தில் அவனுக்கு ஓரபாயமும் வராததற்கு முன்னமே, நாம் போய் அவனைக்கண்ணினாலேபார்க்கவேண்டும். என்று சொல்லி நகுல சகாதேவ ரிருவரையும் பார்த்து, நாங்கள் போய்வருமளவும் பிராமணர்கள் - பிராமணஸ்திரீகள்-தௌமியாசாரியர்-உரோமசன்மர் - திரௌபதைமுதலான நீங்களும் இந்தப் பன்னகசாலையிற்றானே யிருங்கள். என்று திட்டஞ்சொல்லி, கடோற்கஜன்கொண்டுவந்த தேரின்மே லவனுடனேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாகப்போனார், அஃதெப்படி இருந்த தென்றால்-வாயுவேகம் பின்னிடும்படியாகவுஞ் சூரியனுடையதேருக்குச் சமதியாகவும் ஆகாசகெங்கை பரியந்தந்தேரை நடாத்திச் சென்று, நான்குநாழிகைக்குள் குபேரனுடைய திரண்ட சேனைகளைக் கொன்று இரத்தயாறோடப் பிணங்களைமலைகளைப்போலக்குவித்துச்சோலையினிடத் திளைப்பாறும் வீமனைக்கண்டார்.

அப்படி கண்டமாத்திரத்தில் தேரைத் தாழ்த்தி வீமனிடம் வந்துபார்த்து, தருமன் தன்மனதி லிருந்த துயரநீங்கிச் சந்தோஷமடைந்தார், கடோற்கஜனானவன் தன்தகப்பனுக்குத் தீர்க்கதெண்டஞ் செய்தான். அவனுக்கு வீமன் ஆசீர்வாதஞ்செய்து, தமயனாகிய தருமராஜனுக்கு மும்முறை பிரதக்ஷண நமஸ்காரம் புரிந்து, அநேக மந்தார புஷ்பங்களைப் பாதத்திலர்ச்சித்து, சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டு எழுந்து கைகட்டி வாய்புதைத்து, மகா உபசாரமாக அவரெதிரில் நின்றான். அவனைப்பார்த்து ஒருபோதுந்

கோபித்துப் பேசத்தெரியாத தருமநந்தனர் சொல்லுகிறார். அப்பா வீமசேனா! என்னுடைய அநுமதியில்லாமல் ஸ்திரீபுத்திகேட்டு இந்தப்புஷ்பத்தை ஒரு பொருட்டாக எண்ணி இங்குவந்து இத்தனைகோடி செனங்களைக் கொன்று இந்தப்புஷ்பத்தைப் பெற்றையல்லவா? என்னைத்தமயனாகவுடைய நீ என்சொற்படி நடக்காமல் உனக்குச் சம்மதமானபடி நடப்பாயேயானால், உனக்கு இளையவர்களாகிய தம்பிமார்மூவரும் உனக்குக் கீழ்ப்பட்டுநடக்கப்போகிறது எப்படி? அதைத் தெரிந்து கொள்ளப்பா வென்று சொல்லி, பின்பு தானுங் கடோற்கஜனும் அந்த மஞ்சனவாவிக்கரையில் ஸ்நானஞ் செய்து, புஷ்ப வனத்தைவிட்டுத் தருமனும் வீமனுங் கடோர்க்கஜனுமாக ரதமேறி, திரௌபதிதேவி முதலானவர்களிருக்கிற பன்னகசாலையிடம் வந்திறங்கி, உரோமசன்மருடைய உபயபாதங்களில் மந்தார புஷ்பத்தைச் சொரிந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு, திரௌபதிக்குச் சந்தோஷம் வரும்படி மந்தாரபுஷ்பங்களைக் கொடுத்து, கடோர்க்கஜனைக் கானகம்போயிருக்கச் செலவளித்து, உரோமசன்மரிடத்திற் பார்வதிசமேதராகிய பரமசிவனுடைய சரித்திரங்களைச் சிரவணானந்தமாகக்கேட்டுச் சந்தோஷச்சித்தராயிருந்தார்.

வீமன் மந்தாரபுஷ்ப யாத்திரைச்சருக்கம் - முற்றிற்று.

எட்டாவது,

சடாசுரன் வதைச் சருக்கம்.

கண்ணன் துதி.

தாரார் கொன்றைத் தண்சடை யானுந் தலமீன்ற
நீரார் போதிற் கண்டுயில் வானு நிகழ்கின்ற
சீரார் பற்பல தேவரு மானோன் திருமேனிக்
காரார் வண்ணங் கருதுவர் கருவைக் கருதாரே.

கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! தருமனுந் தம்பியர் மூவருந் திரௌபதிதேவியும் பிராமணர்களும் அவ்வனத்திலிருந்து உரோமசன்மரால் அநேகம் புண்ணியக்கதைகளைச் சந்தோஷமாகக் கேட்டுக்கொண்டு வருகையில், அக்கானகத்தில் இடைவிடாது தவஞ்செய்யும்படியான ரிஷிகளும் - பிராமணர்களும்- கூட்டமாகத் தருமராஜனிடம் வந்து, ஓ தருமநந்தனா இந்த ஆரண்ணியத்தில் வாசஞ்செய்யும் யானைகள்-புலிகள்-சிங்கங்கள்-யாளிகள் - முதலான துஷ்டமிருகங்கள் எங்களைச் செய்யும்படியான தொந்தரவினால், எங்களுடைய செபதபங்களுக்கு மிகவும் விக்கினம் வந்து நேரிடுகின்றது. ஆகையால்-நீர் அம்மிருகங்களையெல்லாம் அதஞ்செய்து எங்களை ரக்ஷிக்கவேண்டியதென்று கேட்டுக்கொள்ள, அதற்கு நல்லது உங்களிஷ்டப்படியே செய்கிறேனென்று தருமராஜன்சொல்ல, வீமன் அதுகேட்டுவந்து தமயனுக்குத் தெண்டனிட்டுக் கைகட்டிநிற்க, அவனைத் தருமன்பார்த்து, தம்பிவீமா! நீ இந்தக் காட்டிலுள்ள துஷ்டமிருகங்களையெல்லாம் நிமைநேரத்தில்தானே அதோகதப்படுத்தி, ரிஷிகள்முதலிய பிராமணர்கள் சந்தோஷமாகயிருக்கச்செய்துவா வென்று கட்டளையிட்டார். அந்தக்கட்டளையைப்பெற்றுக்கொண்டுவீமன்போயினான்

இங்கு தருமராஜன்முதலியவர்கள் சத்காலக்ஷேபத்தோடிருக்கிறதருணத்தில், ஓர் இராக்கதன் மைநாகபர்வதம்போன்ற தேகமும் பிலத்துவாரம் போன்றவாயும் அகோரமான தந்தங்களும் அக்கினிச்சுவாலையொத்தகண்களும் சிவந்த அரக்குகம்பியையொத்த செம்பட்ட மயிர்களும் உடையவனாய், பாபமேரூபமாகவும் தேவர்களுடனே சர்வதா யுத்தஞ்செய்கிறதே தொழிலாகவுங் கொண்டிருக்கிற ஜடாசுரனானவன் பிராமணரூபங் கொண்டு, பாண்டவர்களிருக்கின்ற பர்ணகசாலைக்குவந்து, ஓர் நொடியில் மாயமந்திரத்தினாலே யாருடையகண்ணுக்குந்தன்னைத் தெரியவொட்டாமல், பின்வருங்கெடுதியையுநினையாமல், பர்ணகசாலையிலிருக்கிற திரௌபதிதேவியைப் பிடித்து எடுத்துக்கொண்டு ககனமார்க்கமாகப் போனான். அப்படிப்போகையில் மகா பதிவிரதையாகிய திரௌபதிதேவியானவள் அபயம் அபயமென்று கூக்குரலிட, அதைக்கேட்ட நகுலசகாதேவரிருவர்களும் வில்லம்பைக் கையிலெடுத்துக்கொண்டு ஓடி மறித்து, அடா பாதகா! நீ பிராமண வேடத்துடன்வந்து பிறருடைய ஸ்திரீயை வஞ்சித்துத் திருடிக்கொண்டு போகிறது எந்தபலத்தைக் கொண்டோசொல்லடா? பூர்வத்தில் ஸ்ரீராமருடைய மனைவி சீதாதேவியை உங்கள் குலத்துதித்திருந்த ராவணன் வஞ்சித்தெடுத்துக்கொண்டு போனதினால் அவனும் அவனுடைய வம்சமும் நாசமானதையறிந்தும் நீமறந்தைபோ? என்றுகேட்டு வில்லில் நாணேறிட்டுக் குணத்தொனி செய்து பாணப்பிரயோகஞ் செய்தார்கள்.

அந்த இராக்கதன் அந்தப்பாணங்களை ஒருபொருட்டாக வெண்ணாமல் ஆகாயமார்க்கமாகப் போய்க்கொண்டிருக்கும்போது, முன் நம் ரிஷிகள் - பிராம

ணர் இவர்கள்நிமித்தமாக மிருகங்களைக் கொல்லப் போன வீமராஜன் அக்காட்டிலிருந்த துஷ்ட மிருகங் களையெல்லாங்கொன்று, ரிஷிகள் முதலானவர்களுக் குச் சவுக்கியத்தை யுண்டுபண்ணி, அவர்களால் ஆசீர் வாதம்பெற்றுப் பர்னகசாலையை நோக்கி வருகின்ற தருணத்தில்: ஆகாயவீதியில் அவ்விராக்கதன் தோ ளின்பேரில் திரௌபதிதேவி முறையமிட்டுச் சொல் லுகிறதையும் நகுலசகாதேவாள் பூமியின்க ணிருந்து அவ்விராக்கதன்பேரிற் பாணங்களைப் பிரயோகஞ்செ ய்கிறதையும் வீமன்கண்டு மிகவுநகைத்து, தோள்க ளைத்தட்டி, கண்களில் நெருப்புப்பொறி பறக்கப் பிர ளயகாலத்துப் பெருங்காற்றைப்போற் பரந்தோடி, ஓர் மராமரத்தைப் பிடுங்கிக் கையி லேந்திக்கொண்டு, அடா இராக்கதா ! இடும்பாசுரனை-பகாசுரனை-புண்ட ரீகனை-இன்னும் அநேக இராக்கதர்களையுங் கொன்று இயமனுக்கு விருந்திட்டேன். அடா பிள்ளாய் ! இப் போது உன்னையு மந்த இயமனுக்கு விருந்துண்ணச் செய்கிறேன்பார். என்று அம்மராமரத்தைக் கரகர வென்று சுழற்றி அவன்பேரி லெறிய, அதுபோய் ஜடாசுரன்மேல்விழுந்து நல்ல அடியைக்கொடுக்கவும்; அந்த அடியைப் பட்டுக்கொண்ட ஜடாசுரனனவன் பூமியிடம்வந்து திரௌபதி தேவியைப்போட்டுவிட்டு உடனே உன்னதமாகிய ஓர் மலையைப்பிடுங்கி வீமன் பேரிலெறிந்து ஹா ஹா வென்று கர்ச்சித்தான்.

அப்படி கர்ச்சிக்கவும் அந்தமலையை வீமனனவ ன்கையினுல் தட்டிப்பொடிசெய்து நிமிர்ந்து பார்க்கை யில், மறுபடியும் ஜடாசுரன் ஆகாயமார்க்கமாயெழும் பினன். வீமன் அவனைத் தொடர்ந்து அந்தரத்தில் எழும்பி, அவன்தோளைத்தன் தோளுடனுறச்செய்து கையினுலிறுக்கி, காலினுற்பின்னி, அங்கிருந்து அந்த இராக்கதனைப் பூமியிற் காயம்பட அதிக வேகமாகத் தள்ளி, அவன்மேலேறி, பூர்வத்தில்மகா மேருகிரி யைப் பேர்த்தெடுக்கப்போய் ராவணேச்சுரன் நசுங்கி அகப்பட்டதுபோல் அவனவயவங்களெல்லாம் நசுங் கிப்போகும்படி துவைத்து, அவன்முகம் முதுகின்பக் கம்வரும்படி கழுத்தைமுறுக்கிக்காலினுலுதைத்தான் அதுகளையெல்லாஞ் சமாளித்துக் கொண்ட அந்த இராக்கதன் வீமனையடித்து இழுத்துப் பூமியிற்படத் தள்ளினன். உடனே வீமன் எழுந்திருந்து, முன்னம் கம்சனென்பவன்விட்ட மதயானையினுடைய இரண்டு தந்தங்களைக் கிருஷ்ணபகவானனவர் பிடித்து நாசஞ் செய்ததுபோற் சடாசுரனுடைய கோரப்பற்களிரண் டையும் பிடுங்கி யெறிந்தான். ஜடாசுரன் உடனே நில வில்லா இராக்காலம்போலக் கறேலென் றிருக்கப்பட் டமேகம்போல் மின்னலில்லா இடியை நிகாப்பவந்து, வீமன் மார்பகத்தின்பேரிற் பெருமலையிற் பேரிடிவி ழுந்த தன்மைபோல் இரண்டு கைகளினுலும் ஓங்கிக் குத்தினன். இவ்விதமாக இவ்விருவரும் அநேக நேர மாக மல்யுத்தம் முதலிய பல்யுத்தங்கள் செய்கையில், ஜடாசுரனை வீமன் ஓடுக்கிப்பிடித்து, கைகால்களைக் குண்டுகட்டாகச் செய்து, தனது முழங்கால்களால் அமுக்கிப்பிடித் தெடுத்துக் கரகரவென்று சுழற்றிக் ககனமார்க்கமாக வெறிந்தான்.

ஓ மகா ராஜனே ! அது எத்தன்மையை யொத்திருந்த தென்னில் ஸ்ரீராமானவர்சுக்ரீவன்முத லானபடைத்தலைவர்கள் ஆச்சரியப்படத்துந்துபி என் னும் பேர்கொண்ட எலும்புமலையைக் காலினுலெத்தி யெடுத்தெரிய அது ஆகாயம்போய்ப் பூமியில்வந்து விழுந்து எவ்வாறுதுகளாயினதோ ? அதுபோலஜடா சுரனனவன் பூமியில் விழுந்து சின்னபின்னப்பட்டு இயமலோகம்போய்ச் சேர்ந்தான். அதைப் பார்த்திரு ந்த பெரியோர்களெல்லாரும், அடாதகாரியஞ்செய்த சடாசுரன் படாதபாடுபட் டிறந்தானென்று சந்தோ ஷித்தார்கள். கேதுக்கிரகத்தால் பீடிக்கப்பட்ட சந்தி ரன் போலவும்-புலியினிடத்திலகப்பட்ட மான்போல வும் - விஷங்களையடக்கி அமிர்தங்களைப் பொழியப்ப ட்டகண்களையுடைய திரௌபதிதேவியானவள் ஜடா சுரன்கையில் நின்றுந்தப்பிப்பிழைத்து. வீமநகுலசகா தேவாளுடன் கலந்து நடந்து பன்னகசாலையில் வந்து, தருமராஜனுக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டு, சென்ற சேதியையெல்லாஞ் சொன்னள். அதுகேட்டதருமன் மிகவும் வருத்தமாகி, மகா உற்சாகமாகவுஞ் சந்தோஷ ப்பட்டு, பிறகு உரோமசன்மருந் தம்பிமார்களும் பிரா மணர்களும் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு ஸ்தபதிநா ராயணரென்கிற ரிஷிவசித்திருக்கின்ற ஆசிரமம்போய் அவரைத்தரிசித்து, அவருடைய ஆசீர்வாதம்பெற்று, அப்பாற் போகையில் அஷ்டகோண மகாரிஷியின் ஆசிரமத்தைக்கண்டு அவரைத்தரிசிக்க, அவர் இவர் களை வாவழைத்துப்போய்த்தன்னிடத்தில் நெடுநாள் வரையில்வைத்திருந்தார். அப்போது அவரால்அநேக புண்ணியக் கதைகளைக் கேட்டிருந்தார்கள். அதுவ ரையில் ஒன்பது வருஷகாலமாகக் காட்டிற்காலத்தை கழித்துவந்தார்கள். பின்பு பத்தாம்வருஷத்தில்நடந்த வர்த்தமானங்களைச் சொல்லுகிறேன் கேளும் ஜென மேஜெயமகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல் லத் தொடங்கினர்.

சடாசுரன் வதைச் சருக்கம்

முற்றிற்று.

ஒன்பதாவது,

வீமன் பாரிசாதபுஷ்பயாத்திரைச் சருக்கம்.

கண்ணன் துதி.

மண்ணா டின்பம் வானிடை யின்ப மதியாதோர்
கண்ணா டென்றுங் கண்டு களிக்கும் பொருளாவ
தொண்ணா டென்னி லைம்படை தாங்கு மெழில்வீறிப்
பெண்ணா டெய்து மஞ்சன வண்ணம் பெறுமன்றே.

ஓ மகாராஜனே! பாண்டவர்கள் இவ்விதமாக அஷ்டகோண மஹாரிஷியினுடைய வனத்தில் வாசம் பண்ணிக்கொண்டு வரும்போது, அவிடத்திற் பொருந்திய மிருகங்களியாவு மருண்டு வெருண்டு நாடவும், மலைப்பாம்புகள் அரண்டு புரண்டுவாடவும், நுரைகள் திரண்டு-திரைகளெழுந்து-திவலை பொழிந்து - விரைவிலிரைந்துபாயும் ஓர் நதியானது புதிதாகிய வெள்ளத்தாற் பெருக்கெடுத்தோடவும், குயில்கள்பாடவும் மயில்களாடவுமாக யிருக்கின்ற சிங்காரங்களை நோக்கினர், திரௌபதாதேவியும் சிலபிராமண ஸ்திரீகளும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அந்த நதியினிடத்திற் சென்றுஸ்நானஞ்செய்கையில், மிகுந்த பராகநிறைந்த தகுந்தசுகந்த பரிமளமிகுந்த ஓர் பாரிஜாத புட்பமிதந்து வரக்கண்ட திரௌபதாதேவியானவள் தனது கரங்களாற் றடுத்தெடுத்துக்கொண்டுவந்து, வீமசேனமஹாராஜனை யடுத்துக் கரத்திற் கொடுத்து வணங்கி, முன்னெனக்குக் கொண்டுவந்தளித்த புஷ்பத்தைப்பார்க்கிலும் உயர்ந்த நிறமும்மணமுங் குணமுமுண்டாகிய இந்தப்புஷ்பம், எந்தநிலையில் எந்தமலையில் எந்தநதியில் எந்தப்பதியி லிருந்தாலும் இல்லையென்னாது, இப்போதே எந்தனுக்கு ஈதல்வேண்டுமென்றிரந்துகேட்டாள். அப்படிகேட்டதிரௌபதையைநோக்கி, ஓ அழற்கடவுள் அளித்த அணங்கே! அமராபதியிலும் அளகா புரியிலும் அலங்காரமாக நிறைந்து சிறந்திருக்கின்ற இந்தமலரை அதிசீக்கிரத்திற் கொண்டுவந்து தருவேன். அலரிவிழுமுன் வருவேன். இந்த ஜாதிமலரைக்கொண்டு வராவிடிற்சத்துருக்களாகிய துரியோதனாதிகளைப்படைமுகத்தில் வென்று என் சபதத்தை யெப்படி நிறைவேற்றுவேன்? என்று பற்பல உறுதிவார்த்தைகளைச்சொல்லிப் பாஞ்சாலியை அவிடத்தில்நிறுத்தி, வீமசேனமஹாராஜன் தன்தமயனாகிய தருமராஜனுக்கும் தம்பிமார்களுக்கும் தௌமியா சாரியருக்கும் மற்றையாருக்குஞ் சொல்லாமல், தனிமையாக வாளும் கதையும் வில்லும் அம்பறாத்தூணியும் ஆகிய யிவைகளையே தனக்குத்துணைகளாகக் கொண்டு, இடும்பாசுரன் பதைக்கச்சிதைத்த யிரண்டுதோளும் அசையும்விசையில் இருபக்கத்திலுமுள்ள மலைமரமுதலியனவும் வேர்பறிந்தாடவும், கார்சுழன் றோடவும், தனது வேகம் பின்செல்ல, மனதின்மோகம் முன்செல்ல, விரைமலர்வந்த நதியின் கரைமேல்நடந்து நெடுந்தூரஞ் சென்று, சந்திராதித்தர் முதலிய நவக்கோள்களியாவும் வலம்வராநின்ற இரத்தினகிரிச் சாரலோரமாக வருகிறான்

அப்படி வருகையில், முத்து - பவளம் - கோமேதகம்-புஷ்பராகம்-நீலம் - மரகதம் - மாணிக்கம் - வச்சிரம் - வைடூரியம - பொற்சன்னம் - இயானைத் தந்த முதலியவைகளை யடித்தலைத்து வாரிக்கொண்டு வராநின்ற கான்யாறும், வரைச்சுனையும், பளிக்குப்பாறைகளும், சந்திரகாந்தக் கல்மேடைகளும், கின்னரர்-கிம்புருடர்-கருடர் - காந்தருவர் - யக்ஷர் - சித்தர் - வித்தியாதரர் முதலியபேர்களும், இவர்களுக்குரிய மாதர்களும், சரிகமபதநிச வென்னுஞ் சுரமுல்யமும் பேதமில்லாமற்பாடி ஆடியும்-கலவியமளியில் ஊடியும் - உடனே கூடியும் விளையாடியு மிருக்கின்ற விந்தையும், மும்மதமிகுந்த கைமலைகளெல்லாம் பெண்யானைகளுடன் கலந்து சுனைச்சலத்தை நாடிவந்து ஒன்றுக்கொன்று அருந்தி தாகவிடாய் தீர்த்து மாதவத்தினோர்க்குக் கமண்டலத்திற் பரிசுத்தமாகிய கங்கையை நிறைத்துக்கொண்டுவந்து கொடுத்து வலம்வந்து பணிந்து கோடசைத்துச் செல்கின்ற யானைகளின் சிந்தையும், கர்ப்பகமாயிருக்கின்றபெண்குரங்குக்கு ஆண்குரங்கு மூங்கில் நுனியிற்கட்டியிருக்கிற தேனைக்கொண்டுவந்து நல்லகிழங்குகளைச் சுட்டுவைத்துச் சிறுகச்சிறுக ஊட்டிவைக்கும் உரிமையும், வேர்ப்பலாப்பழத்தை விரைந்துண்ணத் தலைகவிழ்ந்து தின்னுங் குரங்கின் சிரத்தில் அதற்குமேலாக விருக்குங் கனியற்றுவிழத் தலைபுதைந்தமையைப் பார்த்த உரியபெண்குரங்கானது அதின்வால் பிடித்திழுத்து வழிகாட்டிவரும் அருமையும், புலி - கரடி - சிங்கம் - சார்த்தூல முதலானவையெல்லாம் இருந்தத்தானத்தில் இரைபுசிக்கும் பெருமையும், நல்லோரனுபவிக்கும் இருமையும், மற்றெல்லாவதிசயங்களையுங் கண்டான்கண்டதுண்டமாகப் புண்டரீகனென்னும் இராட்சசனைக் கொன்ற வீமசேனன். இப்படிகண்டவாயுபுத்திரனானவன் நன்று நன்றென்று கொண்டாடிக்கொண்டு அப்பாற் போகையில், வடதிசைக் கதிபனுடைய பட்டினமும் அதைச் சூழ்ந்தயர்ந்தமதிலும் அம்மதிலாழ்ந்தகன்ற

அகழும் சிகர கோபுரமும் காவலினால் நெருங்கிய நான்கு வாயில்களுந் தோன்றப்பார்த்து, மேற்குவாயிலிற்சென்று நின்று, தனது பாரியசேயரிச் சங்கத்தை வாயிற்சேர்த்து ஊழிக்காலத் தொலிபோற் பம் பம் மென் றாதினன்.

அந்தத் தொனியானது பட்டினத்திலுண்டாகிய மஹாஜனங்களுடைய காதுகளிற்சென்று, முன்வந்து வெகுபேரை முடித்துவிட்டுச் சென்றவன் இன்னும் இருப்பவரை யமலோகம் ஓட்டவந்தானென்று இசைப்பதுபோ லிருந்தபடியால் யாவருங் கலகலத்து நடு நடுங்கி யொடுங்கி யிருந்து, பின்பெழுந்து விழுந்து, இப்படி தட்டுக்கெட்டுத் தடுமாறித் தங்களாற்றுழுந் தகவினையுடைய சேனாபதியி னிடத்திற்போய்ச் சொல்லித் துதித்தார்கள். பதைபதைத்தார்கள். அது கேட்ட சேனாபதி உடனே யாவருக்கும் பயந்தீர உறுதிகூறி, இரதகஜதுரக பதாதிகளுடனே சுத்தவீரர்களோடு சகலமேளவாத்திய முழங்க ஆரவாரித்து வந்து, ஆரடா நரன்! ஆரடா நரன்! என்று உறக்கக் கூவித் தருமனுக் கிளையோனை வளைத்துக் கொண்டார்கள். அவனது உருவத்தைக்கண்டார்கள். ஓட்டங்கொண்டார்கள் அதிலொரு வித்தியாதரன் நல்ல வல்லமையுடைய வீரன். அதிசூரன். மஹாதீரன். அப்பேர்ப்பட்டவன் தயிரியத்துடன் நெருங்கி, சிரமுதற் காலளவும் பார்த்துச் சந்தேகமுற்று, சுப்பிரமணியக் கடவுளோ? அப்படியானல்வேலெங்கே தண்டைக்காலெங்கே அல்லது விஷ்ணுவோ அவரானல் சங்குசக்கர கதாகட்க கோதண்டம் பீதாம்பரம் துளபமாலை இவை யிருக்கவேண்டுமே: அல்லவென்றால் இந்திரனோ அவனானல் வச்சிராயுத மெங்கே ஆயிரங் கண்ணெங்கே என்று இப்படி பற்பலவிதமா யோசித்துப்பார்த்து, அப்பாவென்று அலறிக்கீழேவிழுந்து புரண்டு உருண்டு எழுந்து, மீட்டும் ஓடி வாடி யாடி நாடி ஒன்றுந் தோன்றாமல் உலர்ந்த மரம்போல் நின்றான். அப்படி நின்றதை மற்றயாவருங் கண்டுவந்து அவனைத் தேற்றி என்னவென்று வினவும்போது, இவன் முன்னொருவிசைவந்துவெகுபேரைக்கொன்று உயிரைக் கவர்ந்துபோன தென்றிசைப்பாலன். வட திசைக்கிப்போது மறுபடியும் வந்தானென்றுசொல் லிக்களைத்தான். இளைத்தான். திரும்பியோடி சேனைக் கதிபதிகளுடன் சொன்னான். அவர்க ளெல்லோருந் தங்கட்கெல்லாம் பெரியதலைவனாகிய மணிமாலனுடன் உரைத்தார்கள்.

குபேரன் சேனாபதிகள் வதை.

அந்தக் கேட்டவுடனே கண்களிரண்டுஞ்சுழன்றுதிருகி மறுகிச் சிவக்கக் கோபங்கொண்டு, நறநற வென்று பல்லைக்கடித்து; நிலத்தில்ஓங்கியடித்து, பாரிப வில்லைக் கரத்திற் பிடித்து, யுத்த சன்னத்தனாக வெளியே புறப்பட்டு, மற்றைய வீரர்களை நோக்கிக் கலகலவென்று நகைத்து, ஆ! ஆ! இதென்னஆச்சரியம்? ஈரேழு பதினான்கு லோகத்திற்கும் இயானை முதல் எறும்பீறாகவுள்ள எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதங்களாகிய ஆன்மகோடிகளுக்கும் ஆதாரபூதமாயிருக்குங் கைலாசபதியாகிய பசுபதிக்கு உற்ற துணைவனென்றும், யக்ஷகுல இராஜசிரேஷ்டனென்றும், நவநிதிக் கோனென்றும் புகழ்பெற்றிராநின்ற குபேர மஹாராஜனுடைய பட்டினத்திலே: ஒருமானிடனாகிய சிறுவனோ இப்பேர்ப்பட்டதுன்பம்விளைக்கின்றவன் பளா! பளா! வெகுநேர்த்தி! யானைசிக்கிக்கொள்ளும்படியாகச் சிலந்திப்பூச்சி நூல்வலைகட்டியதைப்போ லாயிற்றென்று வெகுளி மேற்கொண்டு, இவன் எவ்வளவு மனுஷன்? எவ்வளவு புருஷன் எவ்வளவுவீரன் எவ்வளவு சூரனென் றெண்ணி நமது யஜமானிடத்திற் சொல்வது அழகல்ல இவனைக்கொன்றுபோட்டு ஜயத்தைத் தெரிவிப்பது நமது வெற்றிக்கியல்பென்று யோசித்து, திடச்சித்தத்துடனே படையெடுத்து, சதுரங்கச்சேனைகளும் அவ்வவர்கள் சேனாதிபதிகளோடு யுத்தசன்னத்தராய் வரும்படி உத்தரவுசெய்தான். தக்ஷணஞ் சாலேந்திரன்முதலிய எண்ணாயிரஞ் சேனாதிபதிகளும், அவ்வவர்களுடைய அளவிறந்த சேனைகளும், பேரி பங்கா உறுமி தவுண்டை மல்லரி கொம்பு குழல் முரசு காகள முதலிய வாத்தியங்களோடு, குடைகொடி பீலிக்குஞ்சமுதலிய விருதுகளும் நெருங்க; ஈட்டி எறியீட்டி வாங்குசாங்கு வச்சிராயுதம் குந்தம் சூலம் வேலாயுதம் தோமரம் இருப்புலக்கை வச்சிரதண்டம் இவைமுதலிய திவ்வியாஸ்திரங்களுடனே, கடலேழுங் கரைபுரண்டு வருவனபோல் அதிர்த்திடித்து முழங்கிவந்து; வீமசேனனை நாற்புறத்தும் வளைந்துகொண்டார்கள்.

இப்படி எண்ணாயிரஞ் சேனாபதிகளும் அவ்வவர்களுடைய ரதகஜதுரக பதாதிகளுஞ் சேர்ந்து சூழ்ந்துகொள்ளவுங்கீசகாரி நடுவில்நின்றது எப்படியிருந்ததென்றால் சேனைகள்யாவும் பாற்சமுத்திரம் கவிந்திருப்பதுபோலும், குந்திபுதல்வன் அச்சமுத்திரத்தைக் கடையும்படி மஹா விஷ்ணுவினால் நாட்டிவைத்த மந்தரகிரியைப்போலவும் நடுவில் நின்றான். அக்காலையில் சேனைகளெல்லாம் ஒருமுகமாகநின்று, சுடர் நாடிய கதிரோனைப் பனி மூடியதுபோலும் - விளக்கை விட்டிற்பூச்சிகள் மொய்த்ததுபோலும் விடமுடைய நாகத்தைத் திடங்கூறித் தேரைகள் வளைத்ததுபோலும் ஒரு சிங்கத்தைப் பலயானைகள் சூழ்ந்ததுபோலும் கதாயுதனைப் பதாதிகளுடன் வந்துயுத்தந் தொடுத்துக் கொண்டார்கள். அதுகாலையிற் குந்திபுதல்வன் சந்தோஷத்துடன் மந்தர மனைய வில்லை அந்தரம்வரையி லுயர்த்தி, கந்தர முழக்கமுங் கலங்க நாணியேற்றி, சுந்தரமாகப் பிடித்தவந் தெதிரில் நின்றான். அதைக்கண்டசாலேந்திரன் சமீபத்தில்

நெருங்கி, தங்கள் சேனைகளைக் கையமர்த்தி, இடும்
பன் வயிரிக் கெதிரிற்போய் நின்று, நீயார் ? இவிடத்
திற் றனித்துவருந் தயிரியமுனக் கென்னமாயுண்டா
யிற்று ? சங்கர நண்பனுடைய தனிநகரமென்று பய
மில்லாமல் வந்த நீ சீக்கிரஞ்சொல்லு உன்பிராணன்
போகுமுன்னமே நீயிருக்குமூருக்குச்செல்லு. இவி...
த்திற்றானே எங்களாயுதங்களா லிறக்கவேண்டுமானால்
நில்லு. என்றுசொல்லும் வார்த்தையைக்கேட்ட பகா
சுர மர்த்தனன் கலீரென்று நகைத்து, முன்னிவடத்
தில் வந்து மந்தாரபுட்பம் வாங்கிப்போன வீமசேன
னென் றறியீர்களா ? இத்தனை சீக்கிரத்தில் மறந்து
விட்டீர்களா? ஆனாலிப்போது பாரிசாத புட்பத்தை
நாடிவந்தேன். தந்தாலாச்சுது இல்லாவிட்டால் என்
றென்றைக்கும் என்பேர் கியாபக மிருக்கும்படியாக
இயற்றுவேனென்றுசொல்லினான். அதுகேட்டசாலே
ந்திரன் கடுகடுத்துச்சினந்து, பூமியிலிருக்கிற அல்ப
மனிதர்களோ இந்தப்புஷ்பத்தைமுடிப்பவர்கள்? எங்
கள் புஜபல பராக்கிரமத்தை யழிப்பவர்கள் ? அட
டா !! தன்பலமும் எதிரிபலமும் பார்க்காமற் பேசு
கிறா யெனனடா ? நீ எங்களிடத்தி னின்றுந் தப்பிப்
பிழைத்துப் போகிறவனாகிற் புட்பங் கொடுப்போம்
நீயுமெடுத்துக்கொண்டு போவாய் ! எங்களாயுதத்திற்
கெம்மாத்திரம் ? இப்போ திறக்கப்போகிற நீ குள்ள
நரிபோல் மருட்டுகிறாயென்ன? நல்லதடா உன்னைவிட்
டோமாவென் றதட்டி யுறுக்கி, தன் சேனைகளையெல்
லாம்நோக்கி, சீக்கிரத்திலிந்த ஏழை மானிடனுடைய
பிராணனை யகற்றுங்களென்று உத்தரவுசெய்தான்.

அவ்வுத்திரவானவுடனே யாவரும் நானாவிதமா
கிய ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். அந்தச்
சமயத்தில் வாயுமைந்தன் கோபங்கொண்டு, மறமுந்
திறமும் வரமுஞ் சிரமுமுடைய பாணங்களை யெடுத்
துக் குணத்திற்றொடுத்து; ஆகர்ணபரியந்த மிழுத்து
விடுத்தான். அவர்கள் தொட்ட அம்பும் பலபராக்
கிரமத் தென்பும் அழிந்து விழுந்து ஒழிந்தார்கள்.
தங்கள் சேனைகளில் உதிரவெள்ளம் வழிந்தோடக்
கண்டவித்தியாதரர் மனஸ்தாபமுங்கோபமுங்கொண்
டெதிரில்வந்துநின் றறைகூவி, இலக்கமற்ற கணைகளை
யேவி, மழைத் திவலைகள்போற்றாவி, அடாபாவி!
எங்களுக்கென்று யெங்கிருந்து வந்தாயடாயென்று
மேவி, நாலுபக்கங்களிலுந் தாவி, இன்றழியப்போ
கின்ற துன்னாவி யெனக்கோபித்து அடர்ந்து வந்தார்
கள். அப்படி வந்தவர்களை யெல்லாந் தொடர்ந்து
வந்ததீவினைபோற்படர்ந்துவந் தெரிக்கும் விடந்திணி
ந்த ஆசுகங்களைவிடுத்து, அவர்கள் தொட்ட கணை
களையும் அவர்களையுந் தடுத்துப் படுத்தான் வீமசே
னன். அதைக்கண்ட சாரணர்கூடி, நமக்கும் எதிரி
யென்றொருவ னிருக்கிறானென்றுநாடி,வீரப்பாடல்
களைப்பாடி, இரதகஜ துரக பதாதிகட்கும் நயமுண்
டாகும்படி மடங்கற் கோடியோனை வளைத்து, இது
வரையிலுமிளைத்து இறந்து போனவர்களைப்போலெ
ங்களையெண்ணாதே. இதோ, பார் உன்கண்ணாலே யுன்
தேக மண்மேலேயென்றுசொல்லி, வீமனுடையமெய்
முழுதுங்கெல்லி, சல்லடைக்கண் ணாக்கும்படியாய்ப்
புல்லி, வில்லினிடத்திருந்து கொல்லனுலைக்களத்திற்
காய்ந்து சிவந்து விஷத்திற்றோய்ந்து சத்துருக்களி
னுயிர்களையெல்லா மேய்ந்து சகல நிர்வாகமும் ஆய்
ந்து வீரப்பட்டங் கழுகிறகு பூண்டிருக்கிற கருடாஸ்
திரம் - மாயாஸ்திரம் - இடியாஸ்திரம் - விருக்ஷாஸ்
திரம் - பர்வதாஸ்திரம் - கமலாஸ்திரம் - பிறைமுகக்
கணையே முதலிய கங்கபத்திரங்களைப் பாண்டுபுத்திர
னுடைய அங்கத்திலழுத்திஇகழ்ந்தார்கள். தங்களைத்
தாங்களே புகழ்ந்தார்கள்.

சிங்கக்கொடியோ னதுகண்டு, உகாந்தகாலத்திங்
கட்சடையோ னெனவெகுண்டு, அங்கங் கிருந்தவர்க
ளெங்கெங்குமோடிப் பொங்கிப்புகழ்ந்தவர்கள் மங்கு
தலில்வாடியோடும்படியாக அயிந்திராஸ்திரங்களினாற்
சாடவும்; யாவரும் வருந்தி, மறுபடியுங் கூடிப்பொரு
ந்தி, இரதங்களைவிட்டு நிலத்திலிறங்கி, கதைகளைக்
கையிலெடுத்து வீமசேனனைத் தடுத்து, எங்கேயுன்
வல்லப மிதிற்றெரியப்போகுதென்று இரைந்தார்கள்.
இயாவரும்விரைந்தார்கள். இதைநோக்கிய வாயுகுமா
ரன் திரிபுர தகனனென்ன நகைத்து, யாவருந் திகைத்
துப் போகும்படி தன் கரத்திலிருந்தவில்லை நாணி
தளர்த்தித் தோளில் மாட்டிக்கொண்டு, யாளிமொயம்
பினன் றாளி யெழும்படியாய்க் கூளிகணின்றுகொண்
டாட வாளிகொண்ட வலதுகரத்திற் றண்டாயுதத்
தைப் பிடித்துக்கொண்டு எதிரிலேவந்து கோடிபே
ருக் கொருவனாகநின்று, ஓடி வாருங்களென்று விறவி
றெனச் சுழற்றினான். அவர்களும நான்கு திசையிலு
மோங்கிக்கதையைக்கரகரவென்று வீசியடித்தார்கள்.
வீமசேனனும் அதைத்தட்டிவிட்டு அவர்களைக்கிட்டி
யெட்டி நீட்டிமாட்டினான். சிலர்கள் அம்புகளைப்பொ
ழிந்தார்கள். சிலர்கள் எறிவலயம் - கைவேல்-சொரு
கீட்டி-எஃகம் - இவைகளைக் கொண்டெறிந்தார்கள்.
அவைகள் வீமனுடைய கதைவேகத்தினால் அடிபட்டு
முறியவும், வெடிபட்டுப் பிறியவும், கதைகளுடன்
கதைதாக்கும்போ துண்டாகுங் கனலும், பாணங்களி
லிருந்துதிரும் அனலும், சக்கரங்களோடு சக்கரங்க
ணெருங்கவெழும்புகையும், கோபமேலிட்டுண்டாகும்
பகையும், இவர்கள்கண்களினின்றெழும்பும்கோபாக்கி
னியும், கருத்தினின்றெழும்பிமின்னுந்தாபாக்கினியும்-
நவகண்டங்களிலுநிறைந்து - அண்டங்களிலுறைந்து-
கடல்நீருஞ் சுவற வறண்டு போகும்படியாய் ஆகவே;
சாரணர்கூட்டமுழுமையு மோய்ந்து மாய்ந்துசாய்ந்து
அவிந்தார்கள்.

உடனே யக்ஷகுலசிரேஷ்டர்களெல்லோரும் நெ
ருங்கிவந்து, கரத்திலுஞ் சிரத்திலும் உரத்திலுங்கணை
களாற் றளைத்தார்கள். வீமசேனனை வளைத்தார்கள்.

அநதச் சமயத்திற் பிரசண்ட மாருதம்போ லெதிர்த்து, அவர்கள் தொட்ட பாணங்களையெல்லா முதிர்த்து, மத்தியிற்போய்க் குயவன்றிகிரிபோற் சுழன்று, யாவருமுயிர்கழன்றுபோகும்படி மோதினன் கீசகாரியானவன். அந்த அடியினுற் கரமுறிந்து - சிரமுடைந்து - உரமழிந்து - உதிரம் வழிந்தோடவும், பேய்களாடவும், கழுகு பருந்துகள் கூடவும், சேனைகளும் வீரர்களுந் தலையறுபட்டுபின் ருடவும்; இப்படியிருக்கின்ற சமயததில் இதைப்பார்த்த இராட்சதரும்-பிழைத்தோடி நின்ற யக்ஷாளும் - நால்வகைச்சேனைகளில் இறந்தவர்போக இருந்தவர்களைக் கூட்டிவந்து கதாபாணியை வளைத்துக்கொள்ள, பகாதிகளொரு பக்கம் ஹதாஹதஞ்செய்கிறோம் பாரென்று நாநுவிதமாகிய கத்தி-கடாரி - ஈட்டி-பாங்கு-சாங்கு-முதலிய ஆயுதங்களினுல் வருத்தினுர்கள். அஸ்திரசஸ்திரங்களினுல் அநேகங்கோடிபேர்க ளூாத்தி லழுத்தினுர்கள். கெதை - கவுண்டு - கலப்பை-முதலியவைகளினுல் வெகுபேர் பொருத்தினுர்கள். இவைகளை யெல்லாமொறுததுப் பூமியிற் பொறுத்திருந்த மகாமேருவைப்போன்ற வாயுகுமாரன் நகைத்து, பதினையிரமான்கூட்டமத்தியில் அகப்பட்ட வேங்கையைப்போல் ஆக்ரமித்து, பராக்கிரமத்துடன் மலைமிசைவீசும்வாயுபோலும் நிலமிசை பொங்கும் நெடுந்திரைபோலுஞ் சீற்றங்கொண்டு திரும்பிச் சுழன்று, மாற்றலரெல்லா மண்ணிலுழன்று, கையுமெய்யுங் காலுந்தறிந்து, ஐயகோவென்றங் கலறியே இறக்கக்-கெதையினுற்புடைத்துக் கதிவழிசேர்த்தான்.

மணிமாலன் வதை.

காற்றினுற் பறக்கும் பூளைப்பூப்போற், கருதலரிற் சிலர் கதறியோடி, அளகாபுரியி லமர்ந்தசேனுபதி, மணிமாலன்வீர மணியணிப் பதத்தில், வீழ்ந்து வெதும்பி மெலிந்து நலிந்து, கண்ணீர்சோரக் கால்தள்ளாட, செந்நீர்பெருக ஸ்திரமொழிகுளர, வாக்கும் நாக்கும் மனமுந்துடிக்க, நையுமவரைக் கையினுலணைத்து; நில்லுமென்றுரைத்துச் சொல்லுமென்று கேட்க, தேவரீரனுப்பிய திரண்டசேனைகளில், மண்ணுற்றுவந்தவம் மானிடனெருவன், எண்ணற்றபேரை இறக்கவிடுத்து, தானிங்குவந்த சங்கதியுரைத்து, தானையுள்ளதுவுந் தாங்களுமிருக்குந், தலைவர்களியாவருஞ் சேர்ந்தொரு தரமாய்ச், சீக்கிரம் வாவெனச்செப்பியனுப்பினுன். சீவராசிகளைக் கொல்லும் யமனே, இங்குருவாகி இப்புவிக்கண்வந்தானென்றுசொல்லி விழுந்தார்கள். இந்த வசனத்தைக்கேட்ட மணிமாலன் உடல்பதைத்து ஒங்காரமிட்டு, இதுவரையினும் நாம் பிழைத்த பிழைப்பெல்லாம் ஒருமனிதனுல் அவமானமாகுங்காலமா இதுவென்று கண்சிவந்து, பக்கத்திருக்கும் பலசாலிகளை நோக்கி, சகலவிருதுஞ்சம்பிரமக் கோலமும், ஆயுதவகைகளும் அங்கையிற்ருங்கி, தங்களுக்குத் தாங்களே பொப்பென்றுசொல்லி, சட்டவார்த்தைகள் சாற்றும் நீங்கள், சமயத்திலொரு மசகமவ்வளவு மனிதனைச் சிதைத்தெறிந்து வந்து செய்தி சொல்லாமற் சிங்கத்தைக்கண்டு திரண்டோடிவந்த யானையைப்போ லிருக்கின்றீர்கள்.

ஆ ! ஆ! சேனுதிபதிகளே! உங்கள் திறங்களெல்லாந் தெரிந்தேனென்று சினந்து, கேயூரமணிமகுடகுண்டலாதிகளைத் தாங்கி, வீரகண்டையார்த்து, வீரப்பட்டங்கட்டி, வாகுப்பட்டையணிந்து, உடைவாள்-படைவாள் - உறுவேல்-எறிவேல்-வில்லு - அம்பறுத்தூணி - கதை - சக்கரம் - எறிவளையம் - இவைமுதலிய ஆயுதங்களுங்கட்டிக்கொண்டு, யுததப்பிரசண்டகோலனுகவும் - வீரப்பிரதாப லோலனுகவும் - இயானையைக்கொண்டு வரச்சொல்லி, அதன்மேல்ஆரோகணித்துக்கொண்டு, பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர் - இயானைத்தலைவர் - சேனைத்தலைவர் - படைத்தலைவர் - அணித்தலைவர் - குடைத்தலைவர்-கொடித்தலைவர்-ஆயுதத்தலைவர்-இவர்கள் யாவருஞ்சூழ, சகலமேளவாத்தியங்களு முழங்க, பட்டுவான்கள்-கட்டியர்-வந்தியர்-புகழ்வோர்-இவர்கள் நெருங்கிவாப் பிரயாணப்பட்டகாலத்தில்; மணிமாலனேறும் இயானையானது சோனுமேகம்போல் மதம்பொழிந்து, உரலடிபெயர்த்து நிழலைக்கருவி, பாகனையெடுத்துப் பந்துபோலெறிந்து, தறியைப்பெயர்த்துச் சங்கிலியை அறுத்து, நிகளத்தை முறித்து நிலத்தை யுதைத்து, நெடுநீரைக்கலக்கி நிசாசரைவிலக்கி, மேகத்தைப்பிழிந்து தாகத்துக்கருந்தி, கிம்புரிக்கோடோங்கக் கிளர்கத்திகட்டி, விரப்பட்டமும்-விபூதிரேகையும்-சிந்தூரத்திலகமும்-திகழ்பொற்கும்பமும் நான்கு காலுக்கும் வீரவெண்டையமும்-கர்னகவரியும் - கந்துகச்செருக்கும்-இருபுறந்தீர்க ளிலங்குபெட்டியும் வாலுக்குக் கத்தியும் - வாயினுக்குலக்கையும் உடைத்தானதாய் மதர்த்துஇறுமாந்தவரையுஞ்சீறிக்கொண்டுவர, மண்ணுலகமும் விண்ணுலகம் எண்ணங்கொள்ளும்படியாகவந்து, புண்டரீகனைக்கொன்ற தண்டதரனைக்கண்டு, வடவாமுகாக்கினியையும் விழுங்கிஏப்பமிடத்தக்கவல்லவர்களாகிய நீங்களெல்லோரும் இந்தமனிதனை யின்னமும்உயிரோடு வைத்திருக்கின்றீர்களாவென்று தன் சேனைகளைப் பார்த்துக்கோபித்து, இனியேனுமென் முன்சென்று அஞ்சாமல் எஞ்சாமல் துஞ்சாமல் மிஞ்சிவந்த மனிதனை மிதித்துத் துவைத்து மிர்த்தியுவுக்காகாரமாக்குங்க ளென்று பெருங்கூச்சலிட் டுரைத்தான். இந்தமணிமாலனுடைய கூச்சலையும் அவனது உள்ளக்காச்சலையும் சேனுசமுத்திரத்தின் பெருக்கத்தையுங்கண்ட வீமசேனன் கைகொட்டி நகைத்து, திசாதிசைகளுந் திகைக்க ஒருபேரொலிசெய்தான்.

அந்தவோசையைக்கேட்ட மணிமாலனேறிவந்த யானைபயந்து, சேனையின் பின்போனதைக் கண்ட அச்சேனை வீரர்களெல்லோருஞ் சேனுதிபதி நம்மை

முன்சென்று யுத்தம் பண்ணச்சொல்லித் தான்பின்பலமாக வந்தாரென்று நினைத்து ஆர்ப்பரித்து பற்பல ஆயுதங்களும் பாணங்களும் அஸ்திரங்களும் சஸ்திரங்களும் அம்புகளும் வளைதடியேமுதலிய கொம்புகளும் விடுத்தும் அடித்துந் தொடுத்தார்கள். அப்போது கைலாசபதியினுடைய திவ்ய கழலிணையைப் பூசிக்கும் மார்க்கண்டேயர் தம்மைத் தாவிவந்த யமனைக்கண்டு சுவாமியின் பின்புறத்தில் ஒதுங்கிப்பதுங்கியபோது காலபாசத்தைக் காலன் வீசி யிழுக்கும் வரையிலு மிருந்து பின்பெழுந்து உதைத்தருளிய கண்ணுதல்போல், கடோற்கஜன் தந்தையானவன்சற்றிருந்து கனன்றெழுந்து, கொழுந்துவிட்டுப் பனைத்திருந்த மராமரத்தைச் சல்லிவேர் ஆணிவேர் புறவேர் யாவுங்கழன்று வரும்படியாய் மடமடவென்றுபிடுங்கி, நடநடவென்று பற்கடித்து, வந்தசேனைகள் யாவும் விடவிடென்று நடுங்கியொடுங்கி ஓடும்படியாய் விறுவிறென்று சுழற்றிச்சாடினன். அந்த அடியினல் அவர்கள் தெறித்துவிட்ட ஆயுதங்களெல்லாம் வொழிந்து, தாங்களும் உடனுடன் உயிருமிழந்து அழிந்தார்கள். நான்கு திசையினும் பிணமலையும் உதிர அலையுமாக விளங்கக்கண்ட மணிமாலன் திப்பிரமைகொண்டு திரும்புவது அழகல்லவென்று வெட்கத்துக்கஞ்சி, கைமிஞ்சிவீசும் வீமன் எஞ்சும்படி அஞ்சு தேவதாஸ்திரங்களை விடுத்தான். அதைவீமன் பஞ்சாகப்பறக்க அடித்தான் மறுபடியும் மணிமாலன் நூறுபாணங்களைத் தொடுத்தான். அவைகளையும் வீமன்மடித்துக் கெடுத்தான். மீட்டு மவன் ஆயிரங் கணைகளை யெய்தான். அவைகளை இவன் தூளியாகச் செய்தான். மணிமாலன் கோடிவச்சிர தண்டங்களை யேற்றினன். தண்டதரன் அவைகளை மாற்றினன். நண்ணலன் நாகாஸ்திரங் கோடாகோடிகொண்டு மோதினன். நரேசனேரடியா லூதினன். கருதலன் சூலாயுதங் கொண்டு துளைத்தான். காலின்மகன் கரத்தினலதை வளைத்தான். மணிமாலன் விண்ணெலாம் பகழியென விதிர்த்தான். அண்ணலதையெல்லாம் மண்ணி லுதிர்த்தான். மணிமாலன் அக்கினிக்கணையால் வீமசேனன் வீசிய மராமரத்தை அகைத்தான். வீமசேனன் அங்கையில் வில்லையெடுத்துப் பிடித்து நிறுத்தி நாணியேற்றி மணிமாலனை நோக்கி நகைத்தான்.

இந்தப்படிக்கு இருவருடைய வில்லுஞ் சுழல மனமுமழல நெடுநேரம் யுத்தஞ்செய்தார்கள். அந்தச் சமையத்தில் மணிமாலன் பர்வதாஸ்திரந் தொடுத்து வீமன் வில்லையொடிக்க விடுத்தபோது, அவன் தனது கடுத்த வில்லை இடதுகரத்திற் பிடித்துக்கொண்டு, வலது கரத்திற் கெதையை யெடுத்து யெதிரேறிவந்து. பூமியி லோர் காலூன்றி, இயானையின்மத்தகத்திலோர்கால் நாட்டி, மிகப் பருத்தோங்கி வீங்கிய மணிமாலன் தோளின் பேரிலும் மார்பினிடத்திலு மோரடியடிக்கவே; அவன் துடிதுடித்துப் படிமிசைவீழ்ந்து, எலும்புகளெல்லாம் பொடிப் பொடியாக நொறுங்கி, நரம்புக ளறுந்து, இந்திரியங்கள் கலங்கி, மந்திரி தந்திரிமார்கள் நழுவ இடிவிழுந்த அரவமென யேங்கி, சற்றுநேரம் பிராணமூர்ச்சையாகத் தூங்கி, உடனே சோபநீங்கி, வீரர்களெல்லா மிகழுவார்களே யென்று குறுகுறுத்து, இவனை வெல்லும் வகையைக் காணேமேயென்று கறுகறுத்து; வஞ்சனையாற் கொல்லவேண்டுமென் றுன்னி, வானத்தில் மாயையினுற் றுன்னி மறைந்தான் இப்படி மறையவே மணிமாலனைவாயுகுமாரன் வனமெல்லாந்தேடி. பிணமலையெல்லாம் நாடி நிற்குங்காலையில்; உலகமெல்லாமிருண்டது. அதுபார்த்து மாயாஸ்திரமறைந்து தொடுத்தானென்றறிந்து, சூரியாஸ்திரம்விடுத் ததனை நீக்கிப் பிரகாசிக்கச்செய்தான். உடனே மணிமாலன் அங்கிருந்தபடியே அக்கினியாஸ்திரம் விடுத்து நெருப்புமழைமயமாக்கினன் அதை வீமன்வருணஸ்திரம் விடுத்து வெப்பத்தைத் தவிர்த்தான். வாய்வாஸ்திரந் தொடுத்துச் சூறவளியைக்காட்டினன். நாகாஸ்திரம் விடுத்து அவ்வளியை யோட்டினன். பர்வதாஸ்திரம் யெடுத்துவிடுத்தான். இடியாஸ்திரம் விடுத்துக்கெடுத்தான் நாகாஸ்திரமெய்து தூற்றினன், கருடாஸ்திரம்பெய்து மாற்றினன். இப்படி அநேகமாகிய பாணங்களை மணிமாலன்றொடுக்கவும், அவைகளுக்குச்சத் துருவாகிய அஸ்திரங்களை வீமசேனன் விடுத்து யுத்தஞ்செய்துவந்தான். இந்தப்படி இலக்குமணனும் இந்திரசித்தும் யுத்தஞ்செய்த தன்மைபோல் மாயாயுத்தம் பண்ணிய மணிமாலன் மேல் வாயுபுத்திரன்நாராயணமந்திரத்தை யுச்சரித்து திவ்யாஸ்திரமொன்றை யேவினன்.

அதனல் மாயைகளெல்லாமற்றுப்போகவும்மணிமாலன் சூலாயுதமொன்றை யெடுத்துத் துதித்து மந்திரித்து யேவினன். அதை வீமசேனன் கண்டுபிர்மாஸ்திரத்தைப் பூசித்துவிடுத்துத் தாவினன். அந்த பிர்மாஸ்திரமுஞ் சூலமுந் திக்குகளெல்லாஞ் சிதையப்புதையயுத்தஞ்செய்து போராடிப் பிர்மாஸ்திரத்தினுற் சூலம்பொடியாகிவிழவும், உடனே வீமன்கிருஷ்ணமூர்த்தி தனக்குபதேசித்திருந்த பாசுபதாஸ்திரமந்திரத்தை யோருருத்திராஸ்திரத்திற் பிரயோகஞ் செய்து வணங்கி விடவே; அது புறப்பட்டு அண்டரண்ட பிர்மாண்ட பகிரங்களெல்லாங் கரிய, எல்லா மெரிய, யாவும்பொரிய, மிகவும் பெரிய காலாக்கினி ரூபங்கொண்டு மணிமாலன்மேற் செல்லும்போது; அநேகமாயுதங்களை விடுத்துத் தடுத்துப் பார்த்துந் தடைபடாமல் வருவதைநோக்கிய மணிமாலன் வாடியோட, அவனைவிடாது பின்றொடர்ந்து அவன் பிராணனை வாங்கிச் சமுத்திர ஸ்நானஞ்செய்து வீமசேனனிடத்தில் வந்து சேர்ந்தது. உடனே மணிமாலன் ஓர் பெரியமலை வேரறுந்துவிழுந் தன்மைபோலும், சூற்கொண்ட மேகந்தவறிப் பூமியிற் சரிந்து விழுந்த தன்மைபோலு மிறந்து விழுந்தான். இதைக்கண்ட

சேனைகளிலுஞ் சேனாதிபரிலும் பிழைத்திருந்தவர்கள்
வீமனைவாழ்த்திப் போற்றி, கரத்தைச் சிரத்திற்கூப்பி
எமக் குயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமனே ! இனி
உன்னுடையது இந்த அளகாபுரியென்று சொல்லிக்
கொண்டு, திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமே
அளகாபுரிக்கு ஓடினார்கள். அப்பாற்சற்றுநேரமிருந்து
பார்த்துக் கதாயுதன் ஒருவரும் யுத்தத்துக்கு வராம
லிருப்பதைக்கண்டு சந்தோஷங்கொண்டு, தன்கையி
லிருக்குஞ் சேயரிச் சங்கத்தை வாயில்வைத் தூதி,
ஒருவருந் தனக்கு நிகரில்லாம லுலகநடுங்க உச்சாகத்
துட னுலாவிச் செயஞ்செயமென்று குலாவிக்கொண்
டிருந்தான்.

தருமராஜன் வீமனைத்தேடி விசனப்படுதல்.

இவ்விடத்தில் தருமராஜனுந் தௌமியாசாரிய
ரும் பன்னீராயிரம் பிராமணக் கூட்டங்களும் உரோ
மசன்ம மகாரிஷியும் மற்றெல்லோருஞ் சேர்ந்திருந்து
தருமசாஸ்திரமுதலிய நூல்களைப்பேசிக்கொண்டிருக்
கும்போது, தருமராஜன் சுயேச்சையாய்த் தன்பக்க
த்திற் றிரும்பிப்பார்க்க, அப்போ தெப்போது நீங்கா
திருக்குந் தம்பியைக் காணாதேங்கி எங்கேயென்று
வினவ, பக்கத்திலிருந்த பாஞ்சாலி தீர்க்க தெண்டன்
செய்தெழுந்து நின்று ஐயா! இன்றையத்தினம்பெரு
க்கெடுத்துவந்த அந்நதியில் ஸ்நானஞ் செய்யப்போ
னேன். அவ்விடத்திற் பாரிசாதபுட்ப மிதந்துவரக்
கண்டு, அதனையான் கொண்டுவந்து அவர்கையிற்
கொடுத்து, இந்தப் புட்பத்தின்பேரி லெனக்கிச்சை
யிருக்கின்றதென்று விருப்பிவருந்தினேன். ஓ திருந்
திழையே! இதோகொண்டுவந்தேனென்று அளகாபு
ரிக்குச் சென்றனரென்றாள். அதைக்கேட்டவுடனே
இரண்டு செவிவழியிலும் பிரிவாற்றாமை யென்னும்
விஷங்களேறி, தலைமயக்குற்றுத் தளர்ந்து தலத்திற்
சாய்ந்தார். உடனே அவரைத் தம்பிமாருந் திரௌப
தியும் பெரியோர்களுஞ் சமீபித்துத்தூக்கி, மார்போ
டணைத்துச் சாந்தாற்றிகளினால் விசிறியுபசரிக்கவே;
சற்றுநேரந்தரித்து மூர்ச்சைநீங்கி யெழுந்து, உரோ
மச மகாமுனி பாதங்களில் விழுந்து, மிகுந்த விசாரத்
துடன் தேம்பி, ஐயனே! அழலிற்பிறந்த இவள்நிமித்
தம் நாடுநகரமியானைசேனை செல்வஞ்சீர்முதலியாவற்
றும் விடுத்து. காட்டில் வாசம்பண்ணிக்கொண்டு கால
ங்கழித்து; எப்போது நல்லகாலம் வருமென்று பெரி
யோர்களுடைய ஆசீர்வசனங்களை விரும்பிக்கொண்
டிருக்கிறேன்.

இதல்லாமல்-அரவகேதனன்செய்த பொல்லாங்
கினால், அவன் அவன்தம்பிமார் என்னு நூறுபேரை
யுங்கொன்றபிற்பாடு கையினாற்றண்ணீரள்ளிப் பானம்
பண்ணுவதேயன்றி, அதுவரையிலுங் கதையினாற்
சலத்திலடித்து மேலெழுந் திவலைகளை நாவினாற் புசி
த்துவருவேனென்று சபதங்கூறி, பத்துவருடம்வரை
யிலுங் காலங்கழித்து வந்துவிட்டான் வீமசேனன்.
நானித்தனை யவமானமடைந்தும் அவனைப்பற்றி உயிர்
வைத்திருக்கின்றேன். அவனோ ? எங்களை இதுவரை
யிலுங் காப்பாற்றிக்கொண்டு நேரிட்ட துன்பங்களி
யாவையுநீக்கி ரக்ஷித்துவந்த உத்தமன். அவனொருவ
னில்லாவிட்டால் மற்றென்னா லென்னாகும் (தம்பியு
டையவன் தரியலர்க்கஞ்சான்) என்னுந் தன்மையினா
லவனைக்கொண்டு கடல்சூழ்ந்த உலகமென்னும்பூவை
ப்பறித்து, இத்திரௌபதியினுடைய குழலைமுடித்து,
தலைவாயலில் செயபேரியடித்து, இடையூறுசெய்தோ
ரை யினிதுமுடித்து, பெரியவெற்றிக்கொடியை அஸ்
தினாபுரத்தின் கோட்டைமதில்மேல்விரித்துப்பிடித்து
வாழ்வென்னும் பெருக்கத்திற் றம்பிமார்களுடன்பொ
ருந்தியிருக்க வெண்ணின யெண்ணத்தை விருதாவா
க்கினா னிந்தப்பூவை. இதன்றியு முன்னொருதரமிப்ப
டித்தானொரு புட்பநிமித்தமனுப்பியபோது, எனக்கு
ப்பின்னிட்டுத்தெரிந்து மெத்தவருத்தப்பட்டு, பெரி
யவர்களன்பினாலுந் தெய்வானு கூலத்தினாலு நானே
போய்க்கண்டு அழைத்துவந்தேன். பின்பு அவனையும்
வைத்துக்கொண்டு இந்தபாவைபோன்றவளுக்கு எத்
தனை விதத்திலேயோ புத்திசொன்னேன். என்தம்பி
யோ இளங்கன்று பயமறியாதென்பதுபோ லெதுவுந்
தனக்கிணையில்லையென் றிருப்பவன். அவனைப்பிடா
ரன் பெட்டியிலடக்கி வைத்திருக்குங் கொடியவிட
முடைய நல்லபாம்பைப்போல் மந்திரித்துவைத்திருப்
பவன் யான். இன்று ஏமாறிப்போனேன்.

அந்தோ ! குபேரனென்ன இலேசானவனா? கயி
லாசபதியினுடைய தோழன். சனக்கட்டும் - பணக்க
ட்டும் - உடையவன். அவ்விடத்திலேதாகிலுமொருகு
றைவு என்தம்பிக்கு நேரிடுமாகில், க்ஷணப்போதிவ்
விடத்தி லியாருமிருக்கோம். உடனே இறப்போம்.
இதென்னகாலம் என்னுடைய விதியோ தெய்வகதி
யோ என்தம்பிக்குப் புன்மதியோ இனியான் கேட்ப
தென்னகதியோ ஆனாலு மென்போ லனியாயமான
பேர்க ளியாரு மிரார்கள். ஒருதம்பி தவஞ்செய்து
வருவேனென்று வியாசாருள்பெற்றுப் போயினான்.
அவனோ தமயனை நீங்கிய கியாபக மில்லாமற் றனித்
துத் தெய்வலோகத்திற் சகலபாக்கியங்களையு மனுப
வித்துக்கொண் டிருந்துவிட்டான். இத்தம்பி குபேர
னுலகம் போய்விட்டான். மற்றிருதம்பிகளறியாதவர்க
ளாயென்னுடன் வருந்தியிருக்கின்றார்கள். அப்படியா
னாலும் அர்ச்சுனன் தேவர்காரியங்களி லிருக்கின்றா
னென்று சிந்தைமகிழ்ந்தேன். இவன் போனகாரியம்
விறுதாவேயன்றி வேறில்லை. தெய்வமே! என்னையே
னிப்படிவைத்து இந்தத் துன்பவார்த்தைகளைக்கேட்
கவும் நோக்கவுஞ்செய்தாய் என்றுசொல்லி மகாமன
வருத்தத்தோடுஞ்சோர்வுற்றார்உதிஷ்டிரனனவர். பக்
கத்தி லிருக்குந் தம்பிமா ரிருவருந் துயர்கூற, பாவ

கன்பெற்ற பாஞ்சாலிமாதுந் துன்பூற, பெரியோரியாவரும் அவாருகிலணுகித் தேற்றி, துயர்மாற்றி, களையாற்றி, ஆசிர்வசனங்களினால் வாழ்த்தினார்கள். உடனே சிறிதுதேறி எழுந்த தருமராஜன் அப்பெரியோர்களைப்பார்த்து, ஓ சுவாமிகளே ! உங்களாதரவேயன்றி வேறுதுணையில்லையென்றுசொல்லி, உரோமச மாமுனியினுடைய பாதத்தில்விழுந்து பதறிக்கதறியழுதார்.

தருமராஜன் உரோமசன்மராற்றேறி நகுல சகாதேவர்-திரௌபதி-இவர்களோடு கடோற்கஜன் தேரேறிச்சென்று வீமனைக் காணுதல்.

உடனே இவருடைய துயரம்போகும்படி உரோமசமாமுனிவரானவர் சற்றுநேரம்நிதானித்து, ஓ தருமநந்தனா ! நீரேன் அதைரியப்படுகிறீர்? பயப்படவேண்டாம். குபேரலோகத்தி லுமது தம்பி வீமசேனன் வெகுகோடி படைகளை வெட்டிமறுத்து வெதுப்பிப் பூழியாக்கிவிட்டான். இதைக்கேட்ட குபேரனுடைய பெரியசேனாதிபதி மணிமாலன்வந்து, மாயாயுத்தமுதலிய வஞ்சனைகளைச்செய்து வீமசேனனாலிறந்துபோனான். இனியொருவரு மெதிர்த்துவருவதற்கில்லாமற் சங்கத்வனி செய்துகொண் டிதுவரையிலுஞ் சுகமாகவிருக்கின்றான். தப்பிப்போன படைகளிற் சிலர் அளகாபுரிக்குப்போ யிருக்கின்றார்கள். குபேரனிடத்திற் சொன்னா லினியென்னநடக்குமோ தெரியாது. ஆகையால் நீர்விசனத்தைமாற்றி, தம்பிமார்களையுந் திரௌபதியையுந் துன்பப்படவொட்டாம லாற்றி, இதற்கு நடக்கவேண்டிய கருமங்களை யோசிக்கக்கடவதென்று உரோமசமஹாமுனிவர் சொன்னார். அப்படி சொல்லக்கேட்ட தருமராஜன் களித்தெழுந்து, இந்த யுத்தங்களையும் வெகுபேரிறந்துபோன சேதிகளையுங் குபேரன்கேட்டுக் கோபித்துவந்துஎன்தம்பியை வளைத்துக்கொள்ளுவதற்கு முன்னமே, நானவ்விடத்திற்குப்போகவேண்டுஞ் சுவாமீ ! இதற்கெப்படி என்னையனே ! இவ்வாபத்து நீங்கும்படியா யெனக்கோருபாயஞ்சொல்ல வேண்டுமையா வென்று தருமராஜன்கேட்க, உரோமசன்மர் சொல்லுகிறார். கேளுந் தருமராஜனே ! இடும்பிகுமாரனாகிய கடோற்கஜ னிவ்விடம் வரும்படிநினைப்பீராகில், அவனாலுமதெண்ணநிறைவேறுமென்று சொல்ல, அதுகேட்டவுடனே தருமராஜன் கடோற்கஜனை நினைத்தார்.

அப்படி நினைத்தவுடனே கடோற்கஜனானவன் பேய்கள் கட்டியிருக்கு மிரதத்துடனே வந்து, தன் பெரிய தந்தை பாதங்களிலும் - சிறிய தந்தையர் பாதங்களிலும் - பெரியதாயார் பாதங்களிலும்-பெரியோர் திருவடிகளிலும் பணிந்து, யாவரானு மாசிபெற்று நின்றான். அப்படிநின்ற குமாரனைத் தருமராஜனணைத்து, அப்பா ! உன் தந்தை என்னிடத்திற்சொல்லாமல் உன் தாய் வார்த்தையினாற் பாரிசாதமலர்கொண்டுவரும் படியாய்க் குபேரலோகத்திற்கு மறுபடியும்போயிருக்கிறான் அவ்விடத்திற்கொடியயுத்தம் நடந்திருக்கின்றதாக உரோமசன்ம மகாமுனிவர் சொன்னார். இனிக்குபேரன் கேட்டா லெப்படியாமோவென்று அவர்சொல்லவும் எனக்குக் குலையுடன் தலையு நடுக்கமுற்றன. ஆதலால் நீயெமைக்கூட்டிப்போயுன்றந்தையைக் காட்டி வரவேண்டுமென்றுகூறவும், இரதத்திற்கட்டிய கூளிகள் மீறவும், தருமராஜன்-நகுல சகாதேவர் - திரௌபதி - உரோமசன்மர் - முதலாயினோ றேறவும். இரத மாகாயவீதியிற் பாறவும், நிலத்திலுற்றோர்க்குக் காதலத்தைக் குவித்து வணங்கி நிமிர்ந்தார்கள். குபேரனுடைய பட்டணத்தின் மேற்கு வாசலிற்போ யிறங்கினார்கள். அவிடத்திற் சிங்கார வனமும்-திருமதிலும்-மணிமேடையும் - மலரோடையு மிகுந்திருப்பதைக் கண்டு பேரானந்தங்கொண்டு, வீமசேனனைக் காணும்படி உள்ளே நுழைந்து போக; அங்கே இரத்தவெள்ளந் தோய்ந்து நானாமுகத்திலுங் காய்ந்து வீரப் பிரதாபர்களுடன் யானைகளுஞ் சேனைகளு மாய்ந்து பலவாறாய்க் கிடக்கக்கண்ட மெய்விரத னடுங்கிக்குழைந்து, அப்பாற்றேறிச் செல்லும்போது ஜெயப் பிரதாபத்தோடும் இன்னு மெதிர்க்கவருபவருளரோ வென்று சமர்க்கு விழைந்துநிற்கும் வீமசேனன்கண் டோடிவந்து, தமயன்பாதங்களிற் பற்பலமலர்தூவிப் பணிந்தெழுந்து, வாய்புதைத்துக் கைகட்டிவணக்கமிணக்க மடக்கமொடுக்கத்துடனிற்க, தம்பிமார்களுந் திரௌபதியுந் தனையனும் வீமசேனனைத்தழுவி வணங்கி நின்றார்கள்.

தருமராஜன் வீமசேனனுக்குப் புத்திகூறுதல்.

அந்தவேளையில் வீமசேனனுடைய முகத்தைப் பாராமற் பூமியைப்பார்த்தவண்ணமே அவ்வறத்தின் மைந்தன் வீமனைக்கூவி, அப்பா ? உன்னை நம்பியிருக்குமென்னை இப்படிச் சதிசெய்யலாமா? முன்னொருதரஞ் சொல்லாமல் வந்த உன்னை வெகுவாகிய நீதி சொல்லித் தருமங்கூறி, என் விசனங்களுஞ் சத்துருக்களுடைய வெண்ணமும் நாங்காலங்கழித்து வரும் வண்ணமுந் தெரிவித்துத் திருத்தியிருக்கவும்; என்னுடன்சொல்லாமல் திரௌபதி வார்த்தையைக் கேட்டுச் சிறுபிள்ளைபோ லிப்படி வரலாமா ? நேரிட்டிருக்கு நமது துன்பமெல்லா முனக்குத்தெரியாமலிருக்கலாமா ! நல்லது குபேரமஹாராஜ னென்பவன் யார்? அவனை இன்னானென்றும், இன்னாருக்குச்சினேகனென்றும், அவனுடைய பலமுந் துணையுந்தெரிந்துகொண்டையா! நீங்க வறியாதவனை ஆறுகொண்டு போமென்கிற மொழி மறந்தையா! அல்லதுஎன்றம்பி

யாகிய பார்த்திபனிவ்விடத்திலில்லாத வேளையென்று நீயறிந்திருந்தும் இப்படி செய்வது உனக்கழகா! தான்தொழுந் தெய்வமானாலும் பொய்ச்சத்தியஞ்செய்தாற் சகிக்குமா? நமது வீட்டிலேற்றிய விளக்கானாலு முத்தமிடப்போகுமா? பெற்ற தாயானாலுங் குற்றமெத்தனை பொறுப்பாள்? முன்னொருக்கால்வந்து வெகுபேரை முடித்ததுமல்லாமல் இப்போதும்வந்து இவ்வளவுகோடி சேனையி னுயிரை யமலோக மேற்றினையே: குபேரன் உத்தமகுணவானா யிருந்தபோதிலும் இதுகளைக்கேட்டு வெகுளி மேற்கொண்டுவந்துன்னை வளைத்துக்கொண்டால், அப்போ தென்செய்குவாய்! மறந்திருந்தேன் பிராணனே வாவென்றால் வருமா! நமதுகாலத்தையோசித்து யாவரையு முறவாக்கிக்கொண்டால் நலம். விரோதஞ் செய்துகொண்டால் நமது பகைவருக் கனுகூலம்.

தம்பி வீமசேனா! இதுகளையெல்லாம் யோசிக்காமற் சிறுபிள்ளைகட்டுஞ் சிற்றாடையெனச்செய்தாய் உனக்கு நானெத்தனை விதத்திற் சொன்னாலுங் கேட்காவிட்டால் நானென்னசெய்வேன்? அவனவனுக்காய்ப் புத்திவர வேண்டுமே யல்லது வேறல்ல. என் பேச்சைக்கேளாதிப்படி நடப்பையாகி லுனக்குந்தம்பிமார்க ளிருக்கின்றார்கள். அவர்க ளுன்பேச்சைக் கேட்பார்களா? (முன்னளந்த நாழி பின்னளக்கும்.) என்னுமொழியை யோசிக்கவில்லையே: தம்பீ! ஒரூரிலொருகிழவன் தான் முன்னஞ் சம்பாதித்து வைத்திருந்த பொருளைத் தானுமுண்ணாமல், பந்துக்களுக்குங்கொடாமல், தானதருமமுஞ்செய்யாமல், தன்பிள்ளையினிடத்தி லொப்பிவைத்தான். அந்தப்பிள்ளை சம்பாதியாத கிழவனுக்குத் தெண்டச்சோறு போடவேண்டிய தேனென்று அவன்கொடுத்த திரவியங்களைக் கெட்டிப்படுத்த அவனையே புறக்கடைக்குக் காவலாகப்போட்டு, அவனுக்கு ஓரோட்டிலே கஞ்சிவார்த்து வந்தான். அதை இவன் பிள்ளைபார்த்து, ஒருநாளோட்டையெடுத்து ஒளித்து வைத்தான். கிழவன் ஓட்டைக்காணாமல் மகனடிப்பானேயென் றழும்போது, மகன்வந்து நித்தமொரு ஓடா உனக்குடைப்பதென் றடித்தான். அதைக்கண்டு சமீபத்திருந்த பேரனானவன் அப்பா! ஐயாவை யேனடிக்கிறாயென்றான். இந்தக் கிழவன் நித்தமும் ஓட்டைப் போக்கடிக்கிறபடியினா லடிக்கிறேனென்றான். இதோ யிருக்கிறது ஓடு. நான்தா னெடுத்துவைத்தேன். என்றுகொண்டுவந்தபோது நீயேன்டா யெடுத் தொளித்தாயென்று கேட்க, அவன் தன் தந்தையைநோக்கி, உனக்கொருவோடு நானெங்கே சம்பாதிப்பேன்? நாளைக்கு வேண்டுமே. அதற்காக வெடுத் திப்போதே வைத்துக் கொண்டேனென்றான். அப்பிள்ளைமொழியைக் கேட்டு வெட்கி, நாளைக்கு நமக்கு மிதுதானே கெதியென்றுஅன்றுமுதல் தன் தந்தையையுபசரித்து வைத்திருந்தான். என்று முதியோர்கள் சொல்லுவார்கள்.

அதுபோல நீயெனக் கடங்கி நடந்தாலல்லவா உன் தம்பிமா ருனக்கடங்கி நடப்பார்கள். மேலும் உன் றம்பியாகிய விஜயன் சின்னவனானாலும் ஈஸ்வரனைக் குறித்துத் தவமியற்றிப் பாசுபதாஸ்திரம் பெற்றுக்கொண்டு, தேவர்களுக் குதவியாகக் காலகேய நிவாதகவசாளைக்கொன்று ஜயம்பெற்று,வெள்ளையானையின் மேலேறிப் பவனிவந்து, தேவர்கள்மகிழக் கிரீடம்பெற்று இந்திரனுடனுண்டு, கற்பகப்பூங்காவினிழலி லிந்திராசனத்தி லமர்ந்திருக்கின்றானும். இந்திரன் முதலிய தேவர்களுங் கண்மணிபோற்றழுவி யிருக்கின்றார்களாம். அவனப்படி தேவர்சகாயனாயிருக்க, நீ யிவடத்தில்வந்து குபேரனுடைய பகையைப் பெற்றாய். இவனைப்பற்றி ஈஸ்வரன் பகைவரும். அப்பால் நமக்கென்னயிருக்கின்றது? இந்தமகாராஜன் வடதிசைக்கதிபன். செல்வமுடையவன். இவனைவணங்கித் தவமிருந்தாலும் நமக்குவேண்டியவுதவி யெல்லாஞ் செய்வன். ஈஸ்வரனுடைய அன்பு நமக்குண்டாம்: என்று பலபலவான புத்திகளையெல்லாம் யெடுத்தோதிக்கொண்டிருந்தார் தருமநந்தனர்.

சேனாதிபதிகள்மாண்டதைக்கேட்ட குபேரன் யுத்தசன்னத்தனாக, அவனையவன் பிள்ளையாகிய உருத்திரசேனனடக்குதல்.

அப்போது வீமனா லடிபட்டுக் களைத்தோர்களிலொருவன்களைநீங்கியு மெழுந்திருக்கப்பயந்து, ஆமைபோற் பதுங்கிப் பிணக்குவைகளி லொளித்திருந்தவன் சற்றே தலைநீட்டிப்பார்த்து, தருமராஜன் வீமசேனனுக்கு இப்படிக்கெல்லாஞ்சொல்லி இறந்தவர்களைக்குறித்து விசனப்பட்டுக் குபேரனை யனேகமாகஸ்தவுத்தியஞ் செய்ததைகேட்டிருந்து, இனிநமக்குப் பயமில்லை. இந்த உத்தமர் மெத்த இரக்கமுடையவர். என்றெழுந்து ஓடிப்போய் குபேர மஹாராஜாவினுடைய காலில்விழுந்து புரண்டழுது, ஐயா! புட்பவனத்திற்குக் காவலாயிருந்த ஆயிரங்கோடி கின்னரர்களும் - யக்ஷகர்களும் - சாலேந்திரன் முதலிய எண்ணாயிரஞ் சேனாதிபதிகளும் - பெரிய சேனாதிபதியாகிய மணிமாலனும் - மற்றயாவரும் ஒருமானிடனால் மடிந்தார்களென்று சொல்லவே; கண்களில் அக்கினியும்புகையுங் கப்பிக்கொண்டுவர நிலத்திலறைந்து, ஆ! ஆ! என்சேனாதிபதி மணிமாலனு மிறந்தானென்று நானுமுயிருடனிருந்து கேட்டேனல்லவா! இது வெகுநேர்த்தி! வெகுநேர்த்தி! நானிவ்வளகாபுரிக் கிறைவனாயிருந்து, பூமியிலிருக்கு மற்பமனிதனால்என் சேனையுஞ் சேனாதிபதிகளு மிறந்தார்களென்று கேள்விப்பட்டேனல்லவா? இனிஎன்செல்வத்தையும் அவனைவந்துகைக்கொள்ளுவான். இனிஎன்னயிருக்கிறது

இது என்னகாலம் பளா! பளா! காற்றி லடிபட்டுப் போம் பஞ்சு ஒரு மந்தரகிரியைக் கசக்கி விட்டதென்று சொல்லுங்கதையாச்சுது என் வீரம். ஓ பரம சிவமே! ஒரு இலேசாகிய மானிடனோடு நானுஞ் சரியாய்நின்றெதிர்த்து யுத்தஞ் செய்யும்படியாக உமக்குத் திருவுள மிருந்ததோ என்று உடல்பதறி, சந்திர சூரியர் திக்குப்பாலகர் முதலிய தேவர்களானால் இந்நேரம் நானெதிர்ப்பதற்குத்தடையில்லை. சொல்பமனிதனையெவ்வா றெதிர்ப்பது ஆனால் வியாதி அல்பமென்றும் விஷஞ் சொல்பமென்றும் உன்னக் கூடுமா உடனே அவிழ்தம் பலமாகக்கொள்ளவேண்டுமல்லவா நல்லது: இப்போதுமென்ன ஓ அசுராள் கின்னராள்-காந்தருவாள்-வித்தியாதராள்-சாரணாள்-முதலிய என் மித்திரர்களே! இந்நிமிடத்தில் யாவரும் யானைசேனை பரிவாரங்களுடன் பயணமாகுங்கள். இதோ நானும் வந்தேன். என்று யுத்தகோலங்கொண்டு புறப்பட்டு விமானங்கொண்டுவரச் சொன்னான் யக்ஷராஜன்.

அதைக்கேட்ட குபேரனுடைய பிள்ளை உருத்திரசேனனோடிவந்து பாதங்களிற்பணிந்து, ஐயா! அவனை மானிடனென் றெண்ணவேண்டாம் மானிடனானால் நமது பட்டினத்தில் வந்து இப்படி உயிரைக் கொள்ளைகொள்ளுவ துண்டோ இதினுடைய பூர்வோத்திரம் யான் விசாரித்துக் கேட்டபடி சொல்லுகிறேன்கேளும். அஃதென்னவென்றால் பூமிதேவியார் பூபாரம் பொறுக்கமாட்டாமற் கயிலாசபதியினிடத்தில்வந்து முறையிட, அவரப்பாரத்தை இன்னுஞ் சிலநாளையிற் றீர்த்துவைப்போமென்றுசொல்லி நாராயணனாகிய கடவுளையும் ஐந்து இந்திரரையும் பூமியிற் கிருஷ்ணமூர்த்தியாகவும் பாண்டவர்களாகவு மேற்படுத்தி, நமக்கெல்லாஞ் சகாயமாகப் பிறப்பித்திருக்கின்றார். அந்தப் பாண்டவர்களில் வீமசேனன் வாயுவின் புத்திரனாகப் பிறந்த மிகுந்த பலசாலி, அவன் தானிவ்விடத்தில்வந்திருக்கின்றவன். இவன்தம்பி அர்ச்சுனன் பரமேஸ்வரனைக்குறித்துத் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்று, தெய்வலோகம்போய்இந்திரனுக்கு நெடுநாட் பகையாகிய காலகேய நிவாதகவசர்களைச்செயித்து, தெய்வலோகத்தில் தேவேந்திர போகத்தை யநுபவித்துக்கொண்டு இன்னுமங்கிருக்கின்றான். தேவர்களுக்குபகாரியாகிய இவர்களை மானிடரென்றிகழ்பாகச் சொல்லப்படாது. ரூபத்தில்மாத்திரம் நீறால்மூடப்பட்ட நெருப்பைப்போ லிருப்பார்கள். யுத்தத்திற் பிரவேசித்தா லிவர்களைச் செயிப்ப தேவர்களுக்குமரிது. இவர்களுக்குரிய துணை கிருஷ்ண பகவான். மேலுஞ் சங்கரபக்தாள். ஆனபடியினாலே மாபலியினிடத்திற்குத் தானம்வாங்கச்சென்ற வாமனவுரு மானிடமேயன்றி வேறோ அன்றியும் இராவணனைக்கொன்ற இராமவுரு மானிடமேயன்றி வேறோ உருமாத்திர மானிடமேசெய்கையோ தேவர்செய்கையிலுஞ் சிறந்தது. ஆகையால் இவர்கள் தேவர்களுக்கும் பூமிதேவிக்கும் உபகாரியா யவதரித் திருக்கின்றவர்கள். அப்படியானாலும் உமது சேனாதிபதிகளைக் கொன்றதனாற் கோபமேலிட் டிருக்கின்றது.

அதுகாரண மென்னவென்றால் உலகத்திற் சமமாகிய பெலவான்கள் எழுபேர் பிறந்தார்கள். அவர்களுக்கு நிகராக ஒருவரையு மொப்புசொல்லக்கூடாது. அவர்களுக்கு நஸ்வானரு ளெப்படியென்றால், அவரவர்கள் செய்யும் அதர்மங்களை அவரவர்கள் பெலத்தையுந் தவத்தையுங் குறைக்கும். இதில் எவனொருவன் முந்தி யொருவனைக் கொல்லுகின்றானோ அவனுடையபெல மிவனைச் சேரக்கடவதென் றருள்புரிந்திருக்கிறபடியால், இந்த வீமன் இடும்பனைக் கொன்று அவனுடைய பெலத்தையும் - பகாசுரனைக் கொன்று அவனுடைய பெலத்தையும் - சராசந்தனைக்கொன்று அவனுடைய பெலத்தையும் - மணிமாலனைக்கொன்று அவனுடைய பெலத்தையும் பெற்றுக் கொண்டான். இனிகிசகனொருவன் துரியோதனனொருவ னிருக்கின்றார்கள். ஆகையால்தேவரீர்கோபங்கொள்ளக்கூடாது. அல்லவென்று யுத்தஞ்செய்தாலும், யக்ஷசிரேஷ்டன் நரனுடன் யுத்தஞ்செய்தானென்று வசனிப்பார்கள். வென்றாலுந் தோற்றாலும் வசையல்லாமலிசையில்லை. இப்படி நினைப்பதிற் பசையில்லை. இப்படியெல்லாங் காட்டி யுத்தத்தை நிறுத்திவிடவேண்டு மென்று புத்திரன் வணங்கிச் சொல்லியுங்கேளாமல், ஓ பிள்ளாய்! என்சேனைகளுஞ் சேனாபதிகளும் போனாலும் போகட்டும். என்னுயிர்க்குயிராகிய மணிமாலனையும் பறிகொடுத் திங்கிருப்பேனோ கொன்றவனைக் கொல்லாமல் விடுவேனோ என்று இதழ்துடிக்க புருவந்துடிக்க விழிதுடிக்க மீசைதுடிக்க வெயர்வு பொடிக்கப் புட்பகத்திலேறி, படைகளெல்லாம் நடக்கக்கூறி, சினக்குறிப் போடுஞ் சீறி, இந்நிமிடத்திற் றாறிவிடுகிறேன்பாரென்று சுற்றிலும் அநேகவிமானங்கள்சூழ, முற்றிலும் யானை சேனைகள் நெருங்க, பேரி-பாங்கா தவண்டை மல்லரி மேளம் இவைகள் யாவுமுழங்க, சேனாபதிகளுந் தானாபதிகளுந்திரண்டு சமுத்திர மடியோடு புரண்டுவருவதுபோற் றனக்கு முன்னும் பின்னும்வரப் புறப்பட்டான் அளகாபுரிக்கிறைவன்.

அப்படிவந்த குபேரனையும் அவனோடு வந்த படையையும் பலவருணக் குடையையும்சேனைகளின் நடையையுங்கண்ட கருணைக்கடலாகிய முரசக்கொடியையுடையோன் இருகரங்களையுஞ் சிரத்திற்குவித்து எதிர்நோக்கிச் சென்று, தம்பிமார்களுந் தானுந்தீர்க்க தெண்டமாக விழுந்து எழுந்து, இவ்வளவு வம்புக்கிடஞ்செய்த வீமசேனனைப்பார்த்துவெறுத்து, குபேர மஹாராஜனுடைய திருவுருவத்தைக் குறித்து வணங்கி ஸ்துதிக்கத்தொடங்கினர். "அனகனே யமலனே யளகைவேந்தனே, தனதனே சங்கரன்றன்சகாயனே, புனிதனே குபேரனே புலத்தியன் குலச், செனகனே

செல்வனே தேவதேவனே. வெறுப்பதோ விளைந்தது
மிகைய தாயினு, மறப்பதோ வென்மொழி மாறகொ
ண்டெதிர், செறுப்பதோ விளையவர் செய்ததீமைகள்,
பொறுப்பதே பெருப்புகழ்புனித மூர்த்தியே ஓ அன
கனே ! ஓ அமலனே ! ஓ அளகைக்கிறையாகிய குபே
ரனே ! ஓ சிவனன்பனே! ஓ பரிசுத்தனே! ஓ நிதிக்
கோனே! ஓ புலத்திய பிர்மானுடைய குலத்துதித்த
புத்திரனே ! ஓ திருவுடையவனே ! ஓ தேவர்களுக்
குத் தேவனே ! எளியேங்களால் வெறுத்துக்கொள்
ளும் பொல்லாங்குகள் மிகவிளைந்தாலுந் தேவரீரவை
களை மாற்றத் தக்கதே: என்னுடைய அடைக்கலவார்
த்தைக்குப் பகைகொண்டு கொல்ல நினைப்பதோ?
ஏழைகள் செய்த தீங்குக ளெல்லாவற்றையுஞ் சகிப்
தே மேலோர்களுக்குப் பெரும்புகழ். ஓ சுத்தமூர்த்தி
யே ! என்று போற்றி வாழ்த்தி ஏற்றித் துதித்தார்.
இப்படி துதித்த அறத்தின் மைந்தனை இருநிதிக்கிழ
வன் நோக்கி, கோபதாபங்களாறி, விமானம் விட்டிற
ங்கி, குதளைத்தா ருடையவனை அதிக சந்தோஷத்து
டன் மார்புற இறுகத்தழுவி, அய்யா மகாராஜனே!
சத்தியமும் குணமும் நிறையும் நிதானமும்புத்திநுட்
பமும் பொறுமையும் உம்மிடத்திற் குடியாக இருக்
கக்கண்டேன். உம்மாலே சந்திரகுலந் தழைக்கும்.
உலகமும் பிழைக்கும். தருமமுஞ் செழிக்கும். தென்
றிசைக்கோனுடைய புத்திரனை உம்மைக் காணப்
பெற்றேன். இனி என்னுடைய செல்வமும் அவைக
ணிறைந்த அரண்மனை முதலிய நகரமும் மற்றயாவும்
உம்முடைய சொந்தம். நீர் வேறு யான்வேறாக இனி
மேல் நினைக்கவேண்டியதில்லை, ஆகையால் நீர் மற்ற
வர்களோடு என்னுடைய அளகாபுரி பட்டினத்திற்
குள்ளாக வந்து. அரண்மனைமண்டப முதலியயாவுங்
கண்டு, யான் கீர்த்திபெற மகிழ்கூறிகொண்டு போகவே
ண்டுமென்று தழுவி, விமானத்தி லியாவரையு மேற்
றிக்கொண்டு போவதாயினன்.

குபேரன் தருமனுதியரை யழைத்துப்போய் விருந்தளித் துபசரித்தல.

அப்படி போகும்போது அனகேசன் வீமசேன
னைப்பார்த்து, அப்பா என் தம்பீ! உன்னுடைய செல்
வம் நிறைந்த நகரத்திற்குவந்து வேண்டியதைப்பெற்
றுக்கொண்டு போகாமல், அனேகம் வீரர்களையுஞ்
சேனாபதிகளையு மடித்துவிட்டனையே: நான்கொண்
டுவந்த கோபாக்கினியையெல்லாந் தருமராஜனென்னு
மேகமல்லவாஆற்றிக்குளிரச்செய்தது ஆகிலும்உன்னை
வெறுக்கவேண்டிய தில்லை. வினைப்பய னிப்படி முடி
யும்படியாக விருந்தது. போகட்டும். இனிமேலும்
நீங்களும் யாமும் பிதுர்வாற்சல்லியமாக இருப்போம்
என்று பேசிக்கொண்டு அளகாபுரியிற்சென்று அனே
கங்கோடி யக்ஷர் வீதிகள் முதலிய சாலைகள்சோலை
கள் மேடைகள் உப்பரிகைகள் தடாகங்கள் கூபவாவி
கள் திருமஞ்சனச்சாலைகள் கொலுக்கூடங்கள்சேனைச்
சாலைகள் யானைக்கொட்டாரங்கள் குதிரைப்பந்திகள்
விமானநிரைகள் ஆயுதச்சாலைகள் கச்சபநிதி கற்பநிதி
நந்தநிதி நீலநிதி பதுமநிதி மகாநிதி மகாபதுமநிதி
முகுந்தநிதி பொன்மலைகள் வெள்ளி மலைகள் நவரத்
தினக் கேணிகள் தனக்குவைகள் இவைகள் முதலா
கிய எல்லாவதிசயங்களையுங் காண்பித்து, திரௌபதி
தேவியைத் தன்னுடைய பெண்சாதியினிடத்திற் கனு
ப்பினன். அந்தத் தேவியை இந்தத்தேவி நமஸ்கா
ரஞ்செய்துகொண்ட வுடனே வாரியெடுத் தணைத்து,
மாலை சந்தனம் மஞ்சள் குங்குமம் சீரை பட்டுபட்டா
வளி திவ்யமணிமாலை நவமணிமாலை இதுகளெல்லாங்
கொடுத்து, அமிர்தபோசனமுஞ் செய்வித்து, தாம்பூ
லம் பஞ்சவிடயங்களுடனளித்து உபசரித்திருந்தாள்.

கின்னரர் பிரானும் நன்னயமுடனே மன்னவர்
தமக்கு நன்னதியால் நீராட்ட ஆடி, பொன்மயமான
இலைக்கலத்திற்கன்னியர் போஜனங்கொண்டுவந்துண்
பிக்க உண்டு, சந்தன தாம்பூல புஷ்பமுத லுபசாரங்
களுங் கொண்டு, சகல சம்பிரமத்தோடு மன்னிப்பொ
லிந்திருக்குங்காலையில்: தனபதியானவன் தருமபூபதி
யை நோக்கி, இன்றெனக்குநல்லகாலம். நீங்கள்வந்து
இவ்விடத்திலிருந்து உலாவிப்போகப் பெற்றதும்,
இனிமேலும் உங்களுடைய படைவலிமையுதவியென
க்குற்றதும், இதுவே மகாபாக்கியம். இதுவே மிகவும்
யோக்கியம். என்று சிலாக்கியத்துடன் குபேரன்கொ
ண்டாடும்போது, உதிஷ்டிர னுபசரித்து, உங்களு
டைய பாதங்களுக்கடிமையாகிய எங்களிடத்தில்தாங்
கள்அன்புவைக்கப்பெற்ற எங்கள் பாக்கியத்தை வாக்கி
னாற்சொல்லத்தக்கதோ! என்று உபசாரமாக இருவ
ரும் நெடுநேரம்வார்த்தையாடிக்கொண் டிருந்தார்கள்
அந்தச்சமயத்திற் குபேரனுடைய பிள்ளை உருத்திர
சேனன்வந்து, தருமராஜனையும்வீமசேனனையுங்கண்டு
சந்தோஷமடைந்து, வெகுநேரம் ஒருவரோ டொரு
வர் பேசிக்குலாவிக்கொண் டிருந்தபோது: உருத்திர
சேனன் தெய்வலோகத்திலிருக்கும் அர்ச்சுனனுடைய
வீரப்பிரதாபமும், மேலாகிய இன்பத்தை யடைந்து
தேவர் சகாயனென்று பேர்பெற்றிருப்பதும், நாளை
க்கே இந்திரனுமவனும் பூலோகத்திற்கு வரப்போகிற
சேதிகளையுஞ் சொல்லி; பாண்டுபூபதியுங் குந்திதே
வியுஞ் செய்த தவமேதவமென்று புகழ்ந்திருந்தான்.
அப்போது திரௌபதாதேவிவந்து குபேரனுடைய
பாதங்களில் நமஸ்கரித்தாள். நரர்பிரான் இருகர
ங்களினாலேயும் பற்றியெடுத்து உபசரித்து, அம்மணி!
உம்மைத் துரியோதனன் சபையில் நிறுத்தித் துகில்
களையச்சொன்னகாலையில்விரிந்தஇக்குழலும்அன்னே
னுடைய உயிருமுடிக்கத்தக்கபலசாலியெவனென்றால்

என் சேனாதிபதிகளான எண்ணாயிரம் வீரர்களையும், இவ்வெண்ணாயிர வாக்குந் தலைவனாகிய மணிமாலனையும்வென்று அதமாக்கிக் கொன்ற வீரப்பிரதாப வீமசேனமஹாராஜ னொருவன்தான். அவர் இதோ யிருக்கின்றார். உமக்கொரு குறைவுமில்லை என்று மங்களாசனஞ்சொல்லி, அணிமணிப் பணிகளோடு பட்டுத் துணிவகைகளுங் கொடுத்து, கடோற்கஜனுக்கு இராக்ஷசாளணியுங் கடகக்கண வீரப்பட்ட விருதுகளெல்லா மளித்தான்.

குபேரன் தன்பரிசனத்தோடுவந்து பாண்டவரை வழிவிடுதல்.

அப்போது வீமசேனனெழுந்து, நரவாகனனுடைய கழலிற்பணிந்து, ஓ தனவானாகிய கனவானே! நானறியாதவனாகியசிறியேன். தமதுகுணாதிசயத்தைக் குறியேனாகிய வறியேன். இப்படிப்பட்ட வெறியேன் செய்த குற்றங்களை மனம்பொறுத்து இரக்ஷிக்கக் கடவது. “நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்றோர்சினம்” என்பதுபோல என்மீதுள்ள சகலகோபமும் இப்போதே மாறிவிட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. இனி யுங்களை யொருக்காலு மறக்கமாட்டேன். என்று துதிக்க, அவனைக்குபேரன் எடுத்து யிறுகவணைத்து, ஒன்றுக்கு நீ யோசிக்கவேண்டியதில்லை. கொன்றவனுங் கொல்லுவித்தவனும் வேறுகளிருக்க, உன்பேரிற் கோபங்கொள்ள வேண்டியதேன்? நீங்கள் அப்படிக்கொத்தவர்களல்ல உன்னை நானினைத்து வருத்தங் கொள்ளுவனாகில், எய்தவனிருக்க அம்பை நொந்தவனைப்போ லாவேனென் றுபசரித்து, தேவசாஸ்திரங்கள் முதலிய திவ்யாஸ்திரங்களும் - அதற்குத்தகுந்த மந்திரங்களும்-மற்றுமுள்ள முஷ்டியாதி பலகஷ்டநிலையுங் கற்றுக்கொடுத்து, வணங்கிய நகுல சகாதேவர்களுக்கும் வேதமொழியால் வாழ்த்தி, யாவருந்தன்னிடத்தி னின்றும் விடைபெற்றுப் பயணப்படும்போது தானுங் குமாரனுந் தகுந்த சேனைகளுடன் கூடவேவந்து, தமது பட்டினத்தின் தெற்குக்கோபுரவாயில்வரைக்கு மிருக்கிற வேடிக்கைகளையுங்காட்டி யுபசரித்து, நானொருவ னிவ்விடத்திலிருக்கிறே னென்னுங் கியாபக முக்கியமாக இருக்கவேண்டும். என்னாலாகத்தக்க காரியங்களைத் தெரிவிக்கவேண்டும். என்றுசொல்லி விடைகொடுத்தனுப்பினன் அளகாபுரிக் கிறைவனாகிய குபேரமகாராஜன்

அப்பால் தருமராஜன் அக்குபேரனை வீமசேனனுடன்தாழ்ந்து பூமியில்வீழ்ந்துவணங்கி, கடோற்கஜனுடைய இரதத்தில் யாவருமேறிக்கொண்டு, ஆகாயமார்க்கமாக வருகிறபோது தம்பிமார்களுந் தையலுமிகமகிழ வானமளாவிய மலைவளம்-நதிவளம்-வனவளமியாவுங் காண்பித்துக்கொண்டு, நந்திசேனருடைய ஆசிரமத்திலிறங்கி, சந்தியாவந்தனமுடித்துக்கொண்டு அம்மகாரிஷியினுடைய பாதங்களில் யாவரோடும்பணிந்தார். பணிந்துநின்ற யெல்லோருக்கும் அம்முனிவர் வேதமந்திரசாகைகளால் ஆசீர்வதித்து, ஓ புண்ணிய நாதா! என்னசமாச்சாரமென்று வினாவினர். அதற்கு முரசக்கொடி முதல்வன் - சுவாமி ! சுயோதனாதிகளால் வருந்திப் பன்னிரண்டுவருடம் வனவாசம் பண்ணும்படிவந்து வருத்தமுற்று, இப்போது பத்தாவது வருட நடந்தேறி வருகின்றது. இப்படியிருக்க- இத்தம்பி வீமசேனன் அத்திரௌபதியினுடைய வார்த்தையைக்கேட்டு, முன்னொருதரங் குபேரலோகத்திற்குப்போய் மந்தாரைமலர் கொண்டுவந்தான். அப்போது நான் வருந்திபயந்து ஏதேதோ புத்திமதிகளைச்சொல்லியிருந்தேன். இப்போதுமறுபடியும் அந்தப்பாஞ்சாலி பாரிசாதமலரை விரும்பிக்கேட்டதாக என்னிடத்திலுஞ் சொல்லாமல், நிதிக்கிழவன் பதிக்குப்போ யளவிறந்த சேனைகளையுஞ் சேனாபதிகளையுமதமாக்கியதல்லாமல், அவனுடைய பிராணபதமாகிய பெரியசேனாபதி மணிமாலனையுங் கொன்றான். அச்சேதிகேட்டுக் குபேரன்கோபங்கொண் டெழுவதற்கு முன்னமே இத்தம்பியின் குழந்தையாகிய கடோற்கஜனைத்துணையாகக்கொண்டு, அங்குபோயிவனைக்கண்டு, குபேரனை வணங்கிநின்று, அவனுடைய வுபசாரமரியாதையாகிய சிநேகத்தைக்கொண்டு வாராநின்றேன். அப்படிவரும்போது யான்செய்த தவப்பயனாய்த் தேவரீராச்சிரமங்கண் டிறங்கினேன். என்று சொல்லக் கேட்ட அவ்வுத்தமரானவர் வீமசேனனை நோக்கி இதனைச்சொல்லுகிறார்.

அப்பா ! நல்லோர்கள் ஒருகாரியத்தை முடிக்கயத்தனித்து வீரகங்கணங்கட்டினால், திரேக வருத்தமும் - பசியும் - நித்திரையும் நினைக்காதிருப்பதோடு, எவர்களுடைய பொல்லாங்கு இடையில் வந்தாலும் அவைகளையும் - அவைகளாலுண்டாகும் அவமரியாதையையும் - தங்களுடைய அருமையையும் எண்ணிப் பார்க்கமாட்டார்கள். இதன்றியிலும் - ஆரியக்கூத்தானாலுங் காரியமே கண்ணென்பரறிஞர். இவைகளையெல்லாநினைத்து, நீங்கள் கொண்டிருக்கும விரதத்தை முடித்து, சபதத்தை நிறைவேற்றுகிற வரையிலும் அதற்குவேண்டியதான பலங்களைத்தேடவேண்டும். தருமங்களை அநுசரிக்கவேண்டும். அதைவிட்டு நல்லோர்களுடைய பகையைத் தேடிக்கொள்ளக்கூடாது. தமயன் வார்த்தையைத் தட்டிநடக்கலாகாது என்று வெகுவாகிய நீதிகளைக் கூறிவாழ்த்தினர் பின்புதருமநந்தனர் கடோற்கஜனுக்குத் தான் குபேரனாற்பெற்ற அணிமுடி முதலிய ஆபரணங்களோடு, அளவற்ற சின்னங்களுங்கொடுத்து ஆசீர்வதித்தனர். அவன் அவ்வாசீர்வாதத்தோடு விடையும் பெற்றவனாய், தந்தையர் பாதத்திலுந் தாயார்பாதத்திலும் பெரியோர்பாதத்திலும் வணங்கி ஆசிபெற்று,

சகலசத்துருக்களையுஞ் செயஞ்செய்யும்படியாகத் தந்தையின் முதல்வன்றந்த சற்குண வாக்கியங்களையுங் கொண்டு, இடும்பவனம் போய்ச்சேர்ந்திருந்தான். பாண்டவர்களும்-மற்றையரும்இவ்விடத்திலிருந்தார்கள்.

வீமன் பாரிசாதபுஷ்ப யாத்திரைச் சருக்கம் - முற்றிற்று.

அருச்சுனன் வனமீட்சிச் சருக்கம்.

கண்ணன் துதி.

நாலிதழிடையி லிருந்தவீரியனும் நாலிரண்டிதழிருந் தவனுந்
தோலுலாமீரைந் திதழிருப்பவனுந் துவாதசகோணம்வை கினனுந்
தாலமூலத்திற் சோடசவிதழ்மேற் றரித்திரண் டிதழ்பொருந் தினனு
மேலுமாயிரப்பொற் கமலம்வைகினனு மெவனவனிருபதம் விழைவாம்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே ! இப்படியாகப் பாண்டவர்கள் நால்வரும்பாஞ்சாலியும் பன்னீராயிரம் பிராமணர்களோடுந் தௌமியா சாரியரோடும் பற்பல வனங்களிலும் ஆச்சிரமங்களிலுமுள்ள திவ்விய தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்துகொண்டு, உரோமசன்மரால் நல்ல காலக்ஷேபஞ் செய்துகொண் டிருந்தார்கள். அர்ச்சுனனானவன் கைலாயகிரிக்குச் சென்று தவசுசெய்து, ஈஸ்வரனுடைய கிருபாவினோதவிளையாட்டிற்குப்பாத்திரனாகிப் பாசுபதாஸ்திரம் பெற்று, தேவர்பகைகளைத் தீர்த்திருந்தானென்று முன்னமே சொல்லியிருக்கின்றேனல்லவா? இப்படியிருக்க தேவேந்திரன் தனக்கு எங்கெங்கே யிடத்திற் சல்லியமுண்டோ! அவைகளையெல்லாம் இவனைக்கொண்டு முடித்துக் கொண்டவனாய், அட்டதிக்குகளிலுந் துட்டனிக்கிரக னிவ்வர்ச்சுனனேயென்று பட்டவர்த்தனர் முதலாயினோர் புகழ, ஓர்வீரப்பட்டத்தை விதிப்படிஅவன்நெற்றியிற்கட்டி, கட்டுவர்க்கங்களும் பட்டுவர்க்கங்களுங்கொடுத்து இந்திரன் இட்டமுற்றிருக்குங்காலையில்; இவனுடைய வீரமும் உதாரமும் உலகத்தில் நிறைந்திருப்பதுபோல் தெய்வமுத்தாரமுஞ் சுகந்தபரிமளக் கற்பகப்பூவாரமும் இவன்மார்பிற் பொருந்தியிருக்கக்கண்ட ரம்பாஸ்திரீக ளெல்லோரும் அப்போதைக்கப்போது நெருங்கி, விஜயனுடைய அழகையெடுத்துப் பேசி, மண்டலஞ்செய்த புண்ணியம் விண்டலஞ் செய்யவில்லையே: புண்டரீகன்முதலண்டருங்கண்டு களிக்குஞ்சுந்தரத்தைக் கொண்டவனண்டையி லிருக்க விரதமிழைத்த பெண்டுகளெத்தனை தவ மிழைத்தவர்களோ ! என்று கொண்டாடி, நமதிந்திரனுக்குஞ் சண்டையெல்லாமொழித்து அமுதமுண் டிருக்கச்செய்த நமது இஷ்டதெய்வ மிவனேயெனவாழ்த்தி, ஆலாத்திமுதலிய உபசாரங்களெல்லாஞ் செய்து ஆசிர்வதித்தார்கள்.

அப்படி யிருக்கிறநாளில் ஓர்நாள் காண்டீபன் மகிக்ஷியுடனெழுந்து,ஆகண்டலனிடத்தில்வந்துபணிந்து, ஐயா ! ஆரணியத்தில் என்தமயனையுந் தம்பிமார்களையும் பன்னீராயிரம் பிராமணர்களையுந் தௌமியா சாரியையும் விட்டுவந்து நெடுநாளாய்விட்டது. நான் பூலோகத்திற்குப்போக இச்சைகொண்டு இங்குவந்தே னென்றான், உடனே வலாரியுஞ் சந்தோஷித்து, தானுங் கூடக்கொண்டுபோய் விட்டுவரவேண்டுமென்றிஷ்டங்கொண்டு, மாதலியையழைத்து இரதங்கொண்டு வரச்சொன்னான் இதற்குள்ளாக அர்ச்சுனன் இந்திரன்மனைவியைச்சந்தோஷத்துடன் சென்று நமஸ்கரித்தான். அந்த அம்மன் மகாவிசுவாசத்தோடும் வாழ்த்தி, சத்துருக்களைச் செயஞ்செய்து நல்லோர் பெரியோர்களுடைய நன்மைகளைப் பெறக்கடவையென் றுபசரித்தனுப்பினாள். அக்காலத்திற் சகலதேவர்களுஞ் செயமங்களங்கூற, தேவதாஸ்திரீகள்புட்பமலரிறைக்க, தேவதுந்துமி முழங்க, வேதகோஷ்டம் வழங்க, தானதரும முதலியவைகளெல்லாந் தங்கள் தங்களிஷ்டப்படி அவரவர்கள் கொடுக்க, சமுத்திரமுழக்கம்போ லமராபதிமகாகளிப்படைந்திருந்தது. அச்சமயத்திற் பதினாயிரங்குதிரைபூண்ட தேரைமாதலிகொண்டுவந்துநிறுத்தினான். மேகவாகனன் அந்தத்தேரின்பேரிற் பற்குனனை யேற்றி, தான் நான்குகொம்பினையுடைய அயிராவதத்திலேறிப் புறப்பட்டான். சகலதேவர்களும் விமானநிரைகளிலேறி அர்ச்சுன னிரதத்தைச் சூழ்ந்தார்கள். இப்படி யாவரும் பொருந்திவந்து ஆகாயத்தினின்றுகொண்டு, சுவேதவாகனனை மாத்திரம் இரதத்துடன் தருமராஜனிருக்கும் நந்திசேனர் வனத்திற்கு அனுப்பிவித்தார்கள். அப்படியே அனுமக்கொடியோன் பகற்காலத்தை யளக்குஞ் சூரியபகவா

லேப்போற் கோடி சூரியப் பிரகாசமாக விளங்கிக் கொண்டு யாவரும்பிரமிக்கும்படியாக வந்திறங்கினன்.

இந்திரன் தருமனுதியரைக் கண்டு குலாவி உரோமசன்மரை யழைத் துக்கொண்டு போதல்.

அப்போது தருமராஜன் முதல் யாவருங்கண் டெதிரெழுந்தோடி வரக்கண்ட ஆண்டொழின்மைந் தன் சயந்தனத்தை விட்டிறங்கி, உதிஷ்டிரனுடைய பாதங்களிற்பணிந்தான். அவரவனை இருகரங்களினுலும் வாரியெடுத்து மார்போடணைத்து, முகத்தோடு முகம்வைத்து, தோளோடு தோளணைத்து, உடல்பூரித்து, கண்களிகூர்ந்து, காணுது கண்டவர்களைப் போலவும் நித்தியமிடியோன் நிதிப்புதையல் பெற்றது போலவும்-உளங்களித் துபசரித்து வாழ்த்தினர். உடனே வீமசேன மஹாராஜனுடைய தாள்களில் வணங்கவும், அவன் தோள்களிலெடுத்தணைத்து உச்சிமோந் துபசரித்துப் புகழ்ந்து மகிழ்ந்தான். நகுல சகாதேவ ரிரண்டுபேரும் மண்மீதுவீழ்ந்துபணிந்தார்கள். அவர்களைக் கேசவற்றேழன் கிருபையுடனணைத்து ஆசீர்வதித்தான். திரௌபதிவந்து வணங்கிநிற்க, அதுகண்டு சிவபெருமானருளால் உன்சிந்தைத் துயரம் நீங்கக்கடவதென்றுன். தௌமியாசாரியருக்கும் உரோமசன்மருக்கும் பன்னீராயிரம் பிராமணர்களுக்குந்தீர்க்கதெண்டனிட்டான். யாவரும்வேதகோஷஞ்சொல்லி ஆசீர்வதித்தார்கள். நந்திசேனருடைய திருவடியை நாடிப் பணிந்தான். அவரும் உன் அண்ணன் தம்பிகளுடன் சத்துருசெயஞ்செய்து கூடி வாழக்கடவதென்றுர். இப்படி யிருக்கிறசமயத்திற் சுரேந்திரனும் அமரர்களும் பூமியிலிறங்கினர்கள். அவர்களைக்கண்டு உதிஷ்டிர ரெதிரோடிப் பணியும்போது. கோபதியெடுத்து மார்போடணைத்து, ஓ பூபதி! உம்முடைய தர்மமே தர்மம். உமது பாக்கியமேபாக்கியம். என்று புகழ்ந்து தேவர்களுடன் மகிழும்போது, முரசுயர்த்தோன் - ஐயா! யான் மஹாபாவியானவன். என்னை இப்படி புகழவேண்டாமென்று சொல்லினர். அச்சொல்லைக்கேட்ட புருகூதன் சொல்லுகிறுன்.

ஓ தருமராஜனே! உமது தம்பி என்னரசாக்ஷியை நிலைக்கச்செய்து, இந்திரலோகங் குடியேற்றினனென்பது யாவருக்குந் தெரிந்திருக்கின்றது. வீமசேனன் குபேர லோகத்திற்குப்போய்த் தன்னையெதிர்த்துவந்த பலசேனைகளி னுயிரையுஞ் சேனுநாயகனுகிய மணிமால னுயிரையுங் கொள்ளை யிட்டதுங் கேட்டேன். இப்பேர்ப்பட்ட பலசாலிகள் உமது சமீபத்திலிருக்க, நரடுநகரங்களை யெல்லாஞ் சொக்கட்டானி லாடித் தோற்றதுமல்லாமல், அவமரியாதையாகிற பேச்சுங்கேட்டு, உத்தமஸ்திரீயை மயிரைப்பிடித்திழுத்துவந்து சபையில்நிறுத்தி ஆடைகளையச்சொன்னபோதுந் தம்பிமார்களை மீறவொட்டாமல் அடக்கிக்கொண்டு, நீரும் பொறுத்திருந்தீரன்றே? உம்முடைய பொறுமையும் புண்ணியநிலைப்புந் துரியோதனுதிகளை வறுவையாகச் சுற்றிக்கொண்டு நாளையே யழியப்போகிறுர்கள். சகலபுவன ராஜசிரேஷ்டராக நீரே தம்பிமாருடனிருந்து வாழ்வைப் பெறப்போகிறீர். அப்போது நாங்களேவந்து காணப்போகிறேம், நீரேன் விசனப்படுகிறீர்? வேதங்களாலு முணரக்கூடாத உண்மைப்பொருளா யுள்ளவா உமது தம்பிசெய்த தவத்திற் கெதிர்வந்து, வேடுவரூபத்துடன் வில்யுத்தமும் மல்யுத்தமுஞ்செய்து வாதுபுரிந்து, வில்லடியும்பட்டு, மேலாகிய பாசுபதாஸ்திரமுங் கொடுத்தருளினர். அப்படி கொடுக்கப்பெற்ற உத்தமனைத் தம்பியாகப்பெற்ற உமக்குஞ் சத்துருக்களுண்டா? உங்களையடுத்த எங்களுடைய பகைவரெல்லாம் நாசமாகிறபோது உங்களுக் கென்னதாக்ஷி! ஆ! ஆ! ஈதல்லவோ கண்காட்சி? இதோ ஆச்சுது: சமுத்திரந் தாண்டிவிட்டீர்கள். இன்னுஞ் சிறகால்வாய் தாண்ட இரண்டுவருட மிருக்கிறது. நல்லகாலம் வருகின்றது. பார்வதாதேவியாரும்-பரமேஸ்வரனும் - விஷ்ணுவும்-பிரமாவும்-இன்னுஞ் சகலமானபேர்களுந் திவ்வியாஸ்திரங்கள் கொடுத்ததலலாமலும், ஜெயம் ஜெயமென்றே வாழ்த்தினர்கள். இந்தம்மாளுக்கும் விரித்தகுழல் முடித்துச் சத்துருவினுயிர் முடிக்குங்காலம் இதோ வந்தது. லோகத்திலே இப்படி தவம்பண்ணி ஈசனைக் கண்டு அஸ்திரம்பெற்று, அதைக் காலகேய நிவாத கவசாள்பேரிற் பிரயோகித்துக் கைபழகித்தேறினவர்களை யானிதுவரையிலும் பார்த்தறியேன். இப்போது உம்முடையதம்பி அர்ச்சுனனு லறிந்தேன். என்று சொல்லிய பொன்னகர்க்கிறைவனை மன்னவர்க்கிறைவன் மகாபத்திவிசுவாசத்துடன் பலமுறை துதித்து வணங்கி, எல்லாமுங்களுடைய ஆசீர்வசனபாக்கியமேயென்று புகழ்ந்தார். அதுகாலையில் மருதநிலத்திறைவன் தீர்த்தயாத்திரைசெய்து வைக்கும்படி யனுப்பிய உரோமசன்மரை யழைத்துக்கொண்டு, யாவரையுமிவடத்தி லிருக்கும்படி மங்களாசனஞ் சொல்லிச்செலவு பெற்றுக்கொண்டு வானுலகமுற்றுன். இவர்களுமகிழ்ந்துபோற்றித்துதித்துக் கானகத்திலிருந்தார்கள்.

அருச்சுனன் தான்போய்வந்த சேதியைத் தருமனுதியர்க்குரைத்தல்.

அப்போது மெய்விரதன் அருச்சுனனுகிய தம்மைப்பார்த்து, என் அப்பனே! உன்பாக்கியமேபாக்கியம். உன்னேடுபசுபதியாகிய பரஞ்சோதிவந்துவிளையாடப்பெற்ற உன்தவத்தை என் அகக்கண்குளிரவும் மற்றியாவருங்கேட்டு மகிழவும், ஒன்றையும் விடாமற் சொல்லவேண்டுமென்று வருந்தி வினவ, சுரேந்திரன்

மைந்தன் சொல்லுகிறான். என் அண்ணாவே! நானுங்களை விட்டகன்று, காடு-மேடு-மலை-வனம் வனாந்திர முதலானவைகளைக் கடந்துபோய் இமோத்கிரிச்சாரலில் தவச்சாலை பேற்படுத்திக்கொண்டு, பூருவாக்கினி தக்ஷணாக்கினி வாருணாக்கினி உத்தராக்கினி சூரியாக்கினி என்னும் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து சிலநாள் வரையில் அருமையான தவஞ்செய்துகொண் டிருந்தேன். துரியோதனன் மனதுக்கிசைந்த மூகனென்று சொல்லும் ஒருராக்ஷசனானவன் பன்றிரூபமா யென்னைக் கொல்லவந் திருந்தான். அது எனக்குத் தெரியாது. பாரசக்தியாருடைய பணிப்பெண்க ளவ்விடத்தி லிருந்த வஞ்சனைக்கண்டு அஞ்சனாக்ஷியினிடத்திற்சொல்ல, அவராற் சிவபெருமானறிந்து அபிராம வேடரூபங்கொண்டு, சிவகாமியுடன் குன்றுதோருடல் செய்பவனைக் குருத்துக் குழந்தையாக்கி மடியிற் கட்டி. அநேகம் நாய்கள் சூழக் காட்டைவளைத்துப் பறைகள்முழக்கி, மறைகளை வேடப்பாஷைபாகப் பேசிக்கொண்டுவந்தார். அச்சந்தடியைக் கண்டு பன்றி என்மேற்றாவ, யான் பாணப்பிரயோகஞ்செய்ய, அபிராமவேடருங் கணைதொடுக்க, இறந்துவிழுந்த பன்றியைக் கிட்டிநோக்கி என்பேரில்வீண்வழக்கிட்டு, நான் துரத்திவந்த பன்றியை நீயேனடா அடித்தாயென்று யுத்தஞ்செய்து, என்வில் நாணியை யறுத்தார். உடனே எனக்குக் கோபம்வந்து ஓங்கித்தலையிலடித்தேன் அவ்வடியானது என்தலையிற்றானே விழுந்ததுபோலிளைத்து நின்றேன். அப்பா உன்னை விடுகிறதில்லையென்று வந்து என்னுடன் மல்யுத்தஞ்செய்துஎன்னை வாரி ஆகாயத்திற் சுழற்றியெறியவும், சங்கரசம்போவென்று பூமியில்வந்து விழுந்து, சற்றுநேரந்தரித்து எழுந்து வேடர்பிரானை வாரி யெறிவதற்குப் பார்த்தேன்.

அப்போ தவ்வேடுவர் மாயமாய்மறைந்து, ஆகாயத்தில் வெள்விடையின்மீது ஐந்து முகமும் சிவந்த சடையும், புலித்தோலுடையும் சூலப்படையும் அரவாபரணமும் அம்புலிச்சடையும் கரியினுரியும் கபாலக்கரமும் முப்புரிநூலும் கொன்றைகூவிளம் அறுகு எருக்கு இவைமுதலிய பத்திரபுஷ்பங்களும் திரிபுண்டரமும் திரிநேத்திரமு மிலங்கும்படியாய், பச்சைக் கொடியைப் பாகம்வகித்து, நாராயணன் பிரமன் ஆகண்டலன் விநாயகர் சுப்பிரமண்யர் வீரபத்திரர் இன்னுமுண்டான சகல தேவர்களுடனே பிரசன்னமாகி, தேவபூரி தேவசங்கம் தேவமுரசு தேவதுந்துமி முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, ஜெயஜெயவென்று புஷ்பமாரி வருஷிக்கத் தரிசனந்தந்தனர். உடனே நான் எழுந்தோடிவிழுந்து வணங்கி, அரனேபோற்றி யாதிபேபோற்றி ஆரணமறிபா வமலனே போற்றி என்று துதித்துக் கண்ணீர்சோரக் கால்தள்ளாடி நின்றேன். நின்றவென்னை மெலனணைத்து, சந்தோஷத்துடன் தானவன் பன்றியாப் வந்தவாறுரைத்து, பாசுபதாஸ்திரமளித்து, மந்திரோபதேசஞ்செய் துமுஷ்டிலையுங் கற்பித்தனர். உமைபவளுஞ் சத்திபளித்துச் சத்துருஜெயஞ் செய்பக்கடவை என்ன, பிர்மா விஷ்ணு முதலிய யாவரும் அநேகமாயுதங்களும் அஸ்திரங்களும் கணைகளுங் கொடுத்தார்கள். நான் அவர்களை வணங்கிவாங்கிவாழ்த்தியிருந்தேன். தேவர்களுடனே சிற்பாநாதன் சங்கரியோடுதன் சாரலுங் கெழுந்தருளினர். அக்கால்தேவேந்திரன் தன் விமானத்தின்மீது ஏறும்படிசொல்லி, தேகந்தவமிழைத்து இளைத்திருக்கின்றபடியால் தெய்வலோகம்வந்திருந்து பின்பிங்கு வரலாமென்று அழைக்க, அப்படியே சென்றேன். யாவரையுங்கண்டேன். வெய்யிலிலுங் காற்றிலும் பனியிலுமிருந்து வருந்தியிழைத்த தவத்தினாலுற்ற ஆயாசமெல்லாந் தணிந்தேன். அதுகாலையில் இந்திரன் வந்து என்னையிரந்து, சத்துருக்களைக் கொன்று இந்திரலோகத்தை நிலைநிறுத்திவையென்றுகேட்க, நல்லதென்று காலகேயரையும் நிவாதகவசத்தார்களையுங் கொன்று, தேவதத்தமென்னுஞ் சங்கமும் எட்டுத்திசையுங் கிரணம் வீசுங் கிரீடமும் பெற்றுக் கொலுவிலிருக்கும்போது, இந்திரன் மகிழ்ந்து அமுதபோசனமூட்ட வுண்டு, இந்திராணியு மகிழ்ந் துபசரிக்கச் சில நாள் வாழ்ந்தேன்.

அப்படி யிருக்க என்மீது ஊர்வசி மோகங்கொண்டுவர, நான் தாயென்றுவிலக்க, அப்போதவள் என்னைப் பேடிரூபமாகச் சபித்தாள். உடனே தேவராஜனறிந்து அச்சாபத்தை விலக்கிவிடும்படி அந்த ஊர்வசியை யழைத்தார். அவள்வந்து சாபத்தைமாற்றும்போது, அப்பேடியுருவத்தை நான் எப்போது நினைக்கின்றேனோ அப்போது வரவும், மற்றவேளையில் நீங்கவுஞ்செய்து, இஃதுனக்குதவுங்காலமுண்டென்று சொன்னாள். அப்படியே யான் பெற்றுக்கொண்டு, தேவரீரைவிட்டுப் பிரிந்து நெடுநாளாகையாற்பூமியில் தங்களைப் பார்க்கவேண்டுமென்று இங்குவந்தேன். இதுவரையிலும் நான்போய்வந்த வர்த்தமானம். என்றுசொல்லி நமஸ்கரித்த தம்பியைத் தருமராஜனணைத்துப் புளகமுற்று, இவ்வளவுபாக்கியம் யான்செய்யாமற்போனேன். ஆனாலுன்னைக் கண்டேன் ஈஸ்வரனோடு தழுவியதேகமிது. அவரால்வாரி எறியப்பட்ட சரீரமிது. அவருடைய பாதங்களிற்வழுழுத சிரமிது அவரைவில்லினால் மோதியடித்த கரங்களிது. என்றவ்வங்கங்கள்தோறு முத்தமிட, மகிழ்ச்சியுடன் மற்ற யாவருங் களித்திருந்தார்கள்.

அருச்சுனன் வனமீட்சிச் சருக்கம்

முற்றிற்று.

நகுஷன் சாபவிமோசனச் சருக்கம்.

கண்ணன் துதி.

தாயாகி யுற்பவகா ரணனாகித் தமராகிச் சாட்சியாகி
மாயாவிப் பிரபஞ்ச மயக்கறுக்குங் குருவாகி வானோராகி
நீயாகி நானாகி யவனாகி யகம்புறமாய் நிமிர்ந்தமூர்த்தி
தேயாநல் லருள்பொழியுந் திருவடியென் கருவடியத் தெரிசித்தேனே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! கைலாசபதியைத் தரிசித்துப் பாசுபதாஸ்திரமும் பலவரங்களையும்பெற்றுத் தேவேந்திரபோக மனுபவித்து வந்து தருமனாகிய சகோதரரோடுங் கலந்துகொண்ட சவ்யசாசியை மஹாநுக்களெல்லோரும் வந்துகண்டு, ஈஸ்வரனுடைய திவ்யகுணங்களையும் தெய்வலோக மகத்துவங்களையும் நித்தநித்தம் நவ நவமாகக்கேட்டுக்கொண் டிருக்குங்காலையில்; வீமசேனன் மெள்ள வெழுந்து, தருமனுக்கும் மற்ற யாவருக்குந் தெரியாமல்வனங்களிற்சென்று, யானை முதலான மிருகங்களையெல்லாமருட்டி வெருட்டி யோட்டியும், மலைப்பாம்புகளைப் பிடித்துத் தலைகீழாக ஆட்டியும், மரங்களையும் மலைகளையும்பிடுங்கி மாறிமாறிநாட்டியும் விளையாடிக்கொண்டு வருவான். அப்படியிருக்கு நாளில், ஒருநாளோர் மலைப்பாம்பானது மிகுந்த நீளத்தையும்-உயர்ந்த கனத்தையும்-திணிந்த படத்தையும்-சுவாலையாகிய விடத்தையும் - மிகுந்த அடத்தையு முடைய தாயோடிவந்து, அவனைக் கால்முதல் தலைவரைக்கும் இறுக்கிப் பந்தித்துக்கொண்டது. அஃது எப்படி இருந்ததென்றால் - மந்தரகிரியை வாசுகியானவன் ஆயிரஞ்சுற்றுறச் சூழ்ந்ததுபோ லிருந்தது. அதுகாலையில் வீமசேனன்பயந்து நடுங்கி யொடுங்கி, பெருமூச்சுடன் களைத்து இளைத்து, தேககாந்தியும் புத்தியினலமும்போய், பதினாயிரம் யானையின் பெலமுங் குன்றி, அந்தப்பாம்பின் பிணிப்பை விடுவித்துக்கொள்ளச் சக்தியில்லாமல் தன்னுடைய புஜபெலபராக்கிரமங்களையெல்லாம் எண்ணி, இடும்பன்-பகாசுரன்-ஜராசந்தன்-புண்டரீகன் - மணிமாலன் - இவர்களுடைய வல்லபங்களையும் அவர்களை வெகு சொல்பமாகக்கொன்ற தன்னுடைய ஆண்மிக்கையையும்யோசித்து, சரிதான்: இது நமக்கு முடிவுகாலம். (ஜெயமிருக்கின்றவரையிலும் பயமில்லை) என்று பழமொழி யொன்று சொல்லுவார்கள். அது சரியாய்விட்டது.

இஃதல்லாமலும் (மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்.) என்பார்களாகையால், நமக்கு அபஜெயகாலமோ? அல்லது நமதுதமயன் தன்னைவிட்டு நீங்காதிருக்கச்சொல்லிய வார்த்தையைக்கடந்துவந்த தீவினை மேலிட்டதோ! மற்றியாதோ! இப்போது நல்வினை போய்விட்டதென்று வருந்தி, ஆனாலும் உயிர்போம்போதுந் தயிரியம்விடலாகாதென்று பெரியோருரைத்திருக்கின்றார்களே: அந்த உறுதியைக் கொண்டு கூடியவரையிலும் பார்ப்போமென்றுகருதி, தன்தேகம் பூரிக்கும்படியாய் வாயுவைக் கும்பித்துப் பார்த்தான். அப்போதும் பிணிப்பு தளரத்தக்கதா யில்லை. போகட்டும்: நயமொழியினால் ஜெயமுண்டென்று ஒரு வாக்கியமிருக்கின்றதால், அதையாகிலும் நடத்தியறிவோமென்று கருதி, கேதுவினா லகப்பட்டு ஒளியிழந்து வருந்துஞ் சந்திரன்போலுருகி, ஓ ஐயா நாகராஜேந்திரா! ஓ ஐயா யோகபோகேந்திரா! இவ்வுலகத்தில் துஷ்டகண்டகனென்று பேர்பெற்று இறுமாந்து ஒருவரும் நிகரில்லாமல் மதத்துத்திரியும் யான், இன்றுஉம்மிடத்தி லகப்பட்டு வருந்தி யிருக்குங்காலம் வாய்த்தது. இத்தேகமோ? என்றென்றைக்கும் அனித்தியமேயொழிய நித்தியமன்று. நாய் - நரி - எறும்பு-பருந்து-கழுகு - இவைகளினாகாரத்திற்காய் வளரும் புழுக்கூடு. அப்படி விறுதாவிற்போகிற ஓர்பொருள், உமக்கு இரையாகிறது எனக்கு மெத்தலாபம். ஆகிலும் நான்சிறியேன். அறியாமற் கேட்டபோதிலுங் கோபங்கொள்ளாமற்சொல்லவேண்டும். அஃதென்னவெனில் - ஓ உத்தமனே! நீரார்? தேவர்கள் முதலியபேர்கள் என்பொருட்டாகச் செய்ததீங்கோ? சத்துருக்கள்செய்த வஞ்சகமோ? உங்களுக்கும் எங்களுக்கும் பூர்வப்பகையோ? அல்லது என்னுடைய விதியோ? தெய்வஞ்செய்யுஞ்சதியோ? நான்யாதொன்றுமறியேன். உமக்கு நானொரு பொல்லாங்குஞ் செய்யவில்லையே: யாதொரு பகையு மில்லையே: என்மறமுந் திறமு மெல்லாம் எங்கேபோ யொளித்தவோ? என்று வருந்தவும், அவனைநோக்கி மலைப்பாம்பானது சீறி, அடா! என்னிடத்திலகப்பட்டு இறந்துபோகப்போகிற நீ இத்தனை பரிதாபப் படுகிறாய். என்னையாரென்று கேட்கிறாய். நல்லது: உன்னுடையஆசையையும் எண்ணத்தையும் அறிந்து வெல்லவேண்டும். நீயார்? அதனையெனக்கு முன்னஞ் சொல்லென்று பாம்புவினவ, கதாபாணி சொல்லுகிறான்.

நாகம் வீமன்வரலாற்றைக்கேட்டறிந்து, பாண்டவருக்குந் தனக்குமுள்ளபகை காட்டிப் பயமுறுத்துதல்.

ஓ-விஷ்ணுவுக்குப் பாயாகவும், பரமசிவனுக்கு ஆபரணமாகவும், பூமிக்கு ஆதாரமாகவு மிராநின்ற உத்தமகுலத்துதித்த கர்த்தனே! கேளும். சந்திரவமி

சத்திரனுதித்த பாண்டுபூபதியினுடைய புத்திரர்களிற் சிரேஷ்டராகிய தருமராஜனுக்கு இளைய வீமசேனன். யான்வாயுவி னமிசைபெற்றபுத்திரன். துரியோதனாதிகளால் நாடுநகர மியாவுமிழந்து காடேகதியாய் வந்திருக்கின்றோம். என்று சொல்லக்கேட்ட நகுஷனாகிய நாகங்கலகலவென்று நகைத்து, சிரத்தைபசைத்து, நாக்கைநீட்டி, விஷத்தைக்கோபத்துடன் கக்கி, விசனத்தினால் விக்கி, அடடா!! தேடிப்போன மருந்து காலிலகப்பட்டாற்போ லாச்சுது. என்னெண்ணம் வாய்ச்சுது. அடாவீமா! அவனெங்கே உனக்கிளைய வர்ச்சுனன்! அவனைத்தான் நானென்ன விட்டேனோ! என்றிறுக்கியுறுக்கி, பூர்வத்தில் உன் தந்தையாகிய வாயுதேவன் என் தந்தையாகிய ஆதிசேடனை மகமேருவில் வளைத்துக்கொண்டு நெடுநாள் யுத்தஞ்செய்து அவமானப்படுத்தி இருக்கின்றான். விஜயன் காண்டவவன தகனஞ்செய்யும்போது எங்கள் கூட்டத்தாரைக் கும்புகும்பாய் நெருப்பில் வெதுப்பிவிட்டான். அல்லாமலும் என்னுடைய பந்துவாகிய தக்ஷகன் பெண்சாதியைத் தலையறுத்துக்கொன்று, அச்சுவசேனனென்னும் பிள்ளையை வாலறுத்து வருத்தினான். உங்கள் வமிசத்தலைவனாகிய சந்திரன் முன்காலத்திலே எங்கள் பெரியவர்கள் அமுதமுண்ண மாறுவேடங்கொண்டு வந்தபோது உளவு சொன்னதின் பேரில், அவர்களுடைய தலையைச் சொட்டையாக விஷ்ணு அடித்திருக்கின்ற பகைநாளதுவரையில் உமிழ்தலுண்ணலென்று உலகத்திருக்கின்றமையால்; அந்தக்குலத்தில் யாருதித்தாலும் எங்களுக்குப்பகைவரேயன்றி வேறில்லை. நாங்கள் விடோம்.

மேலும்-துரியோதனன் எங்களுக்கு நெருங்கிய சிநேகன். அவனுக்குவேண்டிய துணையும் உதவியுஞ் செய்வோம். அது எதினாலென்றால் - சிலநாளைக்கு முன்னே எங்களை வருந்தி ஒருவரங் கேட்டுக்கொண்டான். அது என்னவென்றால்-தன் முடியினுஞ் ஜெயமாகிய கொடியினும் நீங்களிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அன்றுமுதலின்றையவரைக்கும் அரவக் கொடியோனெனப் பெயர்கொண்டிருக்கின்றான். ஆகையால் அவனுக்குநீங்கள் பகைவரானதினாலும், இத்தனைவிதப் பெரும்பகை உங்களுக்கும் எங்களுக்கும்நேரிட்டிருக்கின்றதினாலும், முன்னம்உன்னை விழுங்கிவிட்டு, அர்ச்சுனனிருக்கு மிடத்திற்கும் இதோபோகிறேன். அவனையும் விழுங்கி என் பகை தீர்ப்பேனென்று சொல்லிற்று. இப்படி பெரும்பாம்பு சொல்லக்கேட்ட இடும்பிநாயகன் என்செய்வான்? ஐயோ! (கிணறுவெட்டப்போய் பூதம்புறப்பட்டது.) என்னுங்கதையாகமுடிந்ததே: (குளிசங்கட்டக்குட்டியிரட்டித்தது) என்னுங்கொள்கையாய நேரிட்டதே: (என்னைநீக்கிக் கொண்டுபோன பேய்எண்ணையேந்திக் கொண்டுவந்தது.) என்னுமியல்பாய்வாய்ச்சுதே: என்றேங்கி, ஏது! ஏது! இனிநாம் பிழைப்போமென்னும் இச்சை வைக்கவேண்டியதில்லை. ஓ தெய்வமே! நான் பாண்டுபூபதிக்கு வாயுதேவ னனுக்கிரகத்தாற்பிறந்து வளர்ந்து, இப்போதிக் கடுங்கோபங் கொண்ட விடநாகத்திற்கு இரையாகவோ இருந்தேன்! ஓ நீலமேகச் சாமளவண்ணா! ஓகயிலாசபதியாகிய முக்கண்ணா! ஓ என் அண்ணாவே! என்று திடத்துடன் உயிராசையை நிராசைசெய்து, ஐம்புலன்வழியில் அறிவுசெல்லாதபடி அந்தக் கரணத்தையடக்கி, தகேதத்தியான பரனைப் பரமசிவன் பதத்திலின்புற்று, சமாதி நிஷ்டையைப் பெற்றவனைப்போலத் தத்துவங்களெல்லாம் அடங்கியிருந்தான்.

வீமனைக்காணாமல் வருந்தித்தேடியதருமன் அவனுக்குண்டான வாபத்தைக்கண்டு நாகத்தைத் துதித்தல்.

இவ்விடத்திலிவ னிவ்வாறிருக்க, அவ்விடத்தில் தருமராஜன் அர்ச்சுனனுடைய வெற்றிலாபங்களைக் கேட்டு, தம்பி வீமசேனா! உன்தம்பி அனுமக்கொடியோன்பெற்ற பெருங்கீர்த்தியைப் பார்த்தையா வென்று சொல்லிக்கொண்டே அவனைநோக்கத் தன்பக்கத்தில் திரும்பினார். விருகோதரனைக் கண்டிலர். உடனே அருகிருந்த மற்றையவரைநோக்கி, என்தம்பி எங்கேபோனானென் றெழுந்து கேட்கும்போது, அவர்கள் இப்படி வனத்திற்கு இப்போதுதான் சென்றானென்றார்கள். உடனே அவனடிச்சுவட்டைப்பற்றித் தொடர்ந்து, அடர்ந்து படர்ந்திருக்குங் காட்டில் நுழைந்து, அந்தணர்முதலியோரும் பின்தொடர்ந்துவர நான்குமுகத்திலுந்தேடி, எங்குங்காணாமல் வாடி, தம்பி வீமா? வீமா! என்று கூவிக்கூவி மேவிவரும்போது; ஆவிபோம்படியாகிய நிலையில் ஆழியிலமிழ்ந்த மந்தரம்போல் மதிமுகமாத்திரந் தோன்றப்பர்வதாகிர்தியாக இருக்கக்கண்டு, பயந்து அயர்ந்து நடுநடுங்கி, வாய்வெருவி, கண்ணீரருவிபோலோடச் சமீபித்து உற்றுநோக்கி, அவனைச் சூழ்ந்துகொண்டிருக்கிற புஜங்கராஜனைக்கண்டு, தம்பிக்குப் பிராணனிருக்கின்றதோ போய்விட்டதோ வென்று தெரிந்துகொண்டு, தீர்க்கதெண்டமாக விழுந்து, முறையோமுறையோவென்றழுது, ஓபழுதிலாக்குலத்திற்பிறந்த பாக்கியவானே! இவனோடு உமக்குவேண்டிய இரைகளைச்சொன்னால் உடனே அநேகங் கோடியாகக் கொண்டுவந்து கொடுக்கும் பெலசாலியாக்கும், நித்தியம் நீர்இருந்தயிடத்திலிருந்து அருந்தலாம். உமக்கு இவனூழியனாக இன்றுமுதல் விட்டுவிடுகிறேன். இவனுக்கெவ்வளவு தேகம்! இவனைப் புசிப்பதினால் உமக்கு இவனூழியனாக இன்றுமுதல் விட்டுவிடுகிறேன். இவனுக்கெவ்வளவுதேகம்! இவனைப்புசிப்பதனால் உமக்குப்பசி எப்படி தணியும்! உமது கடைவாய்க்கும் பத்தாதே: எங்கள் தாய்தந்தை இவனை வெகுதவமிருந்து பெற்றுவளர்க்க, எனக்குதவியாக இங்குற்றிருக்கின்றான். இன்று செத்தானேயாகில் எனக்கென்ன வா

ழ்வு? என்ன இன்பம்! ஒன்றுமில்லை. எங்களையும் நீர் விழுங்கிவிட்டுப் பசியை யாற்றிக்கொள்ளும். ஓ ஏந்தலேயென் றிரந்துநின்றார்.

இவ்வாறிரந்துநின்ற உதிஷ்டிரரை அந்நாகமானது கோபமுடனே நோக்கி, நான்புசிக்கப் பிடித்திருக்கும் இவனைக்குறித்து இத்தனைப் பரிதலுறுஞ் சுத்தமான நீயார்! அதனை முன்னம் எனக்குச்சொல்லவேண்டுமென்று கேட்டஅரவைநோக்கி இதனைச் சொல்லுகிறார் ஐயா! சந்திரவம்சோத்தாரகன் பாண்டுபூபதி. குந்திதேவி-மாத்திராதேவி - இவ்விருவரும் அவர்மனைவியர். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் ஐவரில் யான்மூத்தவன். என்பெயர் தருமன். நீர்பிணித்திருப்பவன் வீமசேனன். இவனுக்கிளையவன் அர்ச்சுன நகுல சகாதேவர்கள். நாங்கள் துரியோதனனுடைய பொறாமை வஞ்சகத்தால் உங்களைப்போலொத்த பெரியோர்களே தஞ்சமென்று காட்டில் வந்திருக்கின்றோம். என்று சகலமுந் தெரிவிக்கவே, இதைக் கேட்ட பாம்பானது கண்ணீர்சொரிந்தழுது, குழந்தாய் தருமபூபதி! என்னுடைய கதியைக்கேளும் சந்திரகுலத்திற் பிறந்த தோன்றல் ஆயுமஹாராஜன். அவனுடைய மைந்தன் நான். என்பெயர் நகுஷன். யான் நான்குவேதம்-ஆறுசாஸ்திரம் - பதினெண்புராணம்-முப்பத்திரண்டு உபநிடதம்-இருபத்தெட்டாகமம் அறுபத்தினான்கு கலைக்கியானம் இவைமுதலிய கிரந்தங்கள் யாவுங் கற்றுணர்ந்து, உலகமெல்லாம் ஒருகுடைநீழலி லாண்டவன். சகல வரசரும்வணங்க, சத்துருக்க ளென்றும் பகையில்லா திணங்க, நூறு அசுவமேதமுஞ் செய்து, விக்கினமின்றி தேவர்களுக்குப் பூரணாகுதி கொடுத்து, கலகம் - பயம் - அசுசி-பொய் - பொறாமை - லோபம் - இவைக ளில்லாமல், அமரர்கள் வாழ்த்த அமராபதிக்கு வந்து தேவராஜனானேன். அப்படிதேவேந்திரனாகித் தேவபோகத்தையெல்லாங் குறைவற வனுபவித்திருக்குங் காலையில், ஜென்மாந்திர வினையினால் அகஸ்தியர் சபிக்க, இவ்வல்பகதியை யடையலானேன். வெகுகாலமாகத்தேடிக்கொண்ட பெரும்புகழாகிய பதத்தை ஓர்சொல்ப போகத்தைக் கருதி நிமிஷத்திலிழந்தேன்.

ஓ தருமபூபதி! நான் என்ன செய்வேன்! பின்பு அச்சாபத்தினால் வருந்திவிழுந்து, அகஸ்தியருடைய பதத்தைப்பற்றி, சுவாமி! அடியேற் கருள்புரிகவென்றிரந்தேன். அப்போது என்பேரில் இரக்கமுற்ற அந்தக் கருணாநிதியானவர் அருள்புரிந்தது - என்னவெனில் - நான்கூறிய சாபம் பொய்மையல்ல, மெய்மையே: நீ இந்தப்பதத்தை யிழந்து பாம்பின்வடிவமாய்க் கானகத்திற் சென்று, பாரியவுடலுடன் பருவதச்சாரலிற் பொருந்தி, யானை - யாளி - சிங்கம் - சரபசார்த்தூல முதலிய எவைகள்வந்தாலும், எவ்வளவு பெலமுற்றிருந்தாலும், உன்பெலத்திற்கு அடங்கி யொடுங்கிப்போக நீயவைகளை விழுங்கி, காட்டிற்றானே காலங்கழித்துவரும் நாளையில்; உன்குலத்திற் பிறந்த உதிஷ்டிரன் தன்தாயாதியர் உபத்திரவத்தினாற் கானகம் வரும்போது, அவன் தம்பியைநீபிடிப்பாய். அப்போதவன்வந்து உனக்குப் பிரியவசனஞ் சொல்லுவன். அப்போதவ் வுத்தமனால் தருமசந்தேக மென்னுமொழிகள் உன்காதாரக் கேட்பாய், அதனால் இந்தச்சாபம் உடனே நீங்குமென் றுரைத்தனர். அதைக்கேட்டுக்கொண்டு இந்தவனத்தில் அன்று வந்துவிழுந்து வருந்தி, தெய்வமே! எப்போது என்குறையை நீக்குவையென்றெண்ணிக்கொண்டிருக்குங்காலையில், இந்த உத்தமன் வந்தான் உடனே நமக்குச் சித்தியாகுங் காலமென்று பற்றினேன். உம்முடைய தரிசனமுங் கண்டேன். சாபவிமோசன காலமென்று சந்தோஷங் கொண்டேன் ஆகையால் என்னையும் இரட்சித்து, உன்தம்பி தன்னையும் பெறக்கடவை யென்று சொன்னவையைக்கேட்ட மன்னவனானவன் - அண்ணலே! உமதுகால்வழியில்வந்த அல்பனாகிய நான் என்னசொல்லப்போகிறேன்! எனக்கென்னதெரியும்! நானென்ன தருமங்களை யறிந்தேன்! என்னசந்தேக நிவர்த்திசொல்லுவேன்! ஆகிலும் ஆபத்பாந்துவானவ னொருவனிருக்கின்றான். ஆகலால் உமது சந்தேகத்தைக்கேளுமையா வென்று உதிஷ்டிரன் சொல்ல, நகுஷராஜன் கேட்கின்றான்.

நாகன் தருமசந்தேகங் கேட்கத் தருமன் விடைதரல்.

இந்தப் பூமியிலுதித்த பேர்களில் உயர்ந்தஜனனமுள்ளோர்யாரென்று நகுஷன்கேட்க, மானிடஜனனரென்று தருமன் மறுமொழி சொல்ல; அதிலும் உயர்ந்தவர் யாரென, பிராமணனென்றுசொல்ல; அவனுக்கு என்னகுண மிருக்கவேண்டுமென்ன, சத்தியம் சவுசம்-நன்னெறி-பொறுமை-தவம்-ஜெபம் - இவைகளிற் குறைவில்லாமல் இருப்பதே நற்குணமென்று சொல்ல; அவன் என்னபொருள்களைப் பெறவேண்டுமென்ன, இன்பம்-துன்பம்-மோகம்-உலோபம் இவைகளைநீக்கி நடப்பதே யவன்பெறவேண்டிய பொருளென்ன; இந்தக்குணங்களிலும் பொருள்களிலுங் குறைவுபடுமாகில் அவனை என்னென்றுசொல்லுவதென்ன, ஒன்றுகுறைந்தாலும் பிராமணதத்துவம்போய்ச் சூத்திரதத்துவம் வருமென்ன; இந்தக் குணங்களும் நற்பொருளுஞ் சூத்திரனிடத் துறுமாகிற பிராமணனென்றுசொல்லலாமோவென, அதற்கு முரசக்கொடியோன் சொல்லுகின்றார்: ஓ ஏந்தலே! பூர்வத்தில் இந்தப் பூமியிற்பிறந்த மானிடர்களில் வருணக்கட்டுப்பாடில்லாமற் சங்கரமாக மயங்கியிருக்கையில், சூரியவமிசத்தில் மநுவென்பவன் பிறந்து, வேதவிதியை யநுசரித்து, மநுவிக்பானமென் றோர்விதியை விதித்திருக்கின்றான். அவ்விதியிற் சொல்லியிருக்கின்றது யாதெ

னில், ஒழுக்கம்-சத்தியம்-சவுசம்-நற்குணம் - கிருபை தர்மம்-இந்தக்குணங்களெல்லாஞ் சூத்திரனிடத்திலு முண்டாயிருக்கலாம் அப்படியிருந்தால் அவனைச் சற்சூத்திரனென்று சொல்லுவதேயல்லாமல், பிராமணனென்று சொல்லத்தக்கதல்லவென்று சொல்லியிருக்கின்றது. என்று தருமனுரைக்கக்கேட்ட நாகன் சந்தோஷமடைந்து, ஓ புண்ணியசாலி! இப்போது நீர் சொன்னகுணங்களியாவுமுடைய சூத்திரன் மோக்ஷமடையக்கூடுமோவென்றவினவ, தருமநந்தனன்சொல்லுகிறார்: அப்படி யமைந்திருந்தால் இவனுக்குப்பதவியுண்டு; மோக்ஷமில்லை யென்றார்.

பின்பு நாகம் பதவியானது என்னென்றுகேட்க, இந்திரபதவி-குபேரபதவி - சந்திரபதவி - யமபதவி என்றுசொல்லப்பட்ட இப்படிப்பட்ட பதவிகள் இப்பதவிகளை அவரவர்கள்செய்யும் நற்கருமங்களுக்குத் தக்கவாகப் பெறுவார்கள். மோக்ஷமென்றாலோ! சூத்திரன் மேற்சொன்ன குணங்களிலொன்றுமாறுமலிருந்தானாகில், வைசியகன்மத்தில் வந்து, அதிலுஞ் சிறந்திருப்பானாகில், க்ஷத்திரியனாகவந்து, அதிலுஞ் சிறந்திருந்தாற் பிராமணக்கருமத்திற் சிறந்து, அதிலுஞ் சிறந்திருந்தால் மோக்ஷமடைவான். இந்தக்கருமங்களில் ஏதுகளிலாவது பாபலோப சம்பந்தங்கள் ஏதாகிலும் நேரிடுமாகில், பழயகதிக்குந் தாழ்வாகிய புன்கதியிற் கொண்டுபோய் விடும். ஆகையால் நற்குணமுடைய சூத்திரனுக்கு மோக்ஷ மிப்படிவருமென்றார். பிராமணனுடையகுணங் குறையுமாகிற் சூத்திரனாவானென்றீரே, அவனுக்குக்கதி யென்னென்றுவினவ அந்தச் சூத்திரகன்மங்களொழிந்து, நல்லொழுக்கநன்னடைக்கைகளைச்செய்து படியேறி; பழய பிராமணக்குலத்தின் கன்மங்களைச் செய்து மோக்ஷமடைவான். தவறிவிட்டாலோ! இழிவாகிய யோனிகளிற் பிறந்து, அளவிலாதவனுபவங்களை அனுபவிக்கவேண்டியதே: அதெப்படியென்றால் உயர்ந்த உப்பரிகை-அல்லது கோபுரம் அல்லதுமரம் அல்லதுமலை-இவைகளிலேறினவர்கள் ஜாக்கிரதையாகப் பூமியைப்பார்த்து நடந்தால், காயம்படாமலுங் குறைவில்லாமலும் உச்சிவரையில் ஏறலாம். மத்தியில் வழுவினாலும் நழுவினாலுந் தவறினாலுங் கவிழ்ந்துபார்த்தாலும் பூமியிற் கொண்டுவந்து விடும். விட்டதுமல்லாமற் கைகால் முறிந்து இக்காயமும் பலகாயப்படுமல்லவா ஆதலால் மேலேறவேண்டுமோனாலும் அப்படியே: இதுபோல வென் றறியும் என்றார்.

நாகன் வீமனைவிடுத்துத் தருமனையுமவனையும் வாழ்த்தி விடைபெற்றுச் சொற்கலோக மடைதல்.

இவ்வாறான காரியங்களை நாகங்கேட்கவே அதற்கு மிகுந்தசந்தோஷம்வந்து, தான் பூண்டிருந்ததேகத்தினால் வருந்திய வீமசேனனை விட்டுவிட்டு, திவ்விய தேவதேகத்தைப் பெற்று, தருமராஜனையும் வீமசேனனையும் மார்போடணைத்து இறுகத்தழுவி, உச்சியைமோந்து முத்தமிட்டு, ஓ சற்குணவான்களே! ஒருகுலத்தி லொருபிள்ளைபிறந்தால் அவனால் மூவேழுதலைமுறையுங் கரையேறுவார்களென்று முன்னோர் மொழிந்திருக்கின்றார்கள். மேலுந் தாய்வமிசம் - தந்தைவமிசம் - மாமனார் வமிசம்-என்று சொல்லப்பட்ட எல்லாவமிசங்களிலேயும் பொல்லாங்கை யடையமாட்டார்கள். அவர் யாரென்றால் - பழிச்சொல்லில்லாத குணநிறைந்த பிள்ளைகளைப்பெற்றவர்கள். ஆகையால் சந்திரவமிசம் என்னதவத்தை யுடையதென்று யான் சொல்லுவேன்! உலகமதிக்கும் உத்தமனாகிய நீர் ஒருவன் பிறந்திருந்தபடியினால், சகல யாகமுஞ் செய்து இந்திரபதவிபெற்று, பின்பு அதுவுமற்று மலைப்பாம்பாயிருந்த என்னைக் கரையேறவைத்தீர். ஓ என்குலமணியே! ஓ என்கண்மணியே! என்று வாழ்த்தி உடல்பூரித்து. வீமனைநோக்கி, அப்பா! நானிறுக்கிப் பிடித்ததினால் உன்தேகம் வருந்தியதோ! பயப்படாதே. இன்றுமுதல் யான்பாம்பாக இருந்த பெலமும் உன்னைச்சோக்கடவது. சத்துருக்களாகிய யாவரும் உன்னாலழியக்கடவது. என்று ஆசீர்வதித்துக் குவளைத்தாரனைப்பார்த்து, நம்முடைய வமிசத்தில் இதுவரையிலுந் தாயாதிவிரோதஞ் சத்துருபகையில்லாமல் யாவர்களும் அரசுபுரிந்து வந்தார்கள். இப்போதுதறிதலையன் சுயோதனன் தலைப்பட்டு இப்படி அனியாயங்களைச்செய்துவந்தான். அல்லாமலுங்குடும்ப ரக்ஷகியாகியகுலமகளைச்சபையில் அவமானஞ்செய்துவைத்தான். நீங்கள்கொண்ட சபதக்கருத்தின் வண்ணம் அவன் யாருடனேயும் உங்கள் கையினால் மாண்டுபோவான். நீங்களொன்றுக்கும் பயப்படவேண்டாம் என்று உபசாரஞ்சொல்லி, அனேகம் ராஜநீதிகளுந் தருமங்களு முரைத்து, படை-குடி-கூழ்-அமைச்சு-என்று சொல்லப்பட்ட இவைகளின் விபரங்களுஞ் சொல்லி விடைபெற்றுக்கொண்டு. தெய்வலோகத்திற்குச் சென்றனன் நகுஷமஹாராஜன்.

அப்பால் தருமபுத்திரமஹாராஜன் வீமசேனனையும் பிராமணர்களையு மழைத்துக்கொண்டுவந்து, வனத்திலிருந்த தவமியர் முதலிய எல்லோரையுங்கண்டு நமஸ்கரித்து, ஓ மகான்களே! என்னை விட்டுச் சற்றுநேரம்நீங்கினன் வீமசேனன். இவனின்றுபிழைத்து வந்தது குந்தியம்மன் கர்ப்பத்திலிருந்து இப்போதுதான் பிறந்ததுபோலென் றெண்ணுங்கள். என்றுசொல்லவும், அவர்கள் அஃதென்னவென்று அதிசயத்தோடுகேட்க, தருமன் நடந்தவிர்த்தாந்தங்களனைத்தையுஞ்சொல்லி, ஆனாலின்று நான்பெற்ற சந்தோஷம் அர்ச்சுனன்பெற்ற இன்பச் சரித்திரத்தைக் கேட்டபலனாயிருந்தது. அஃதென்னவெனில் எங்கள் சந்திரவமிச சிகாமணியாய் தேவேந்திரப்பட்டம்

பொறுத்திருந்த நகுஷ மஹாராஜனைக்கண்டு தரிசித்தேன். என்றுசொல்லவும் யாவருமகிழ்ந்து புகழ்ந்து, எல்லாங்கண்ணனுடைய அருளுங் கண்ணுதலுடைய கிருபையுமென்று சந்தோஷித் திருந்தார்கள்.

நகுஷன் சாபவிமோசனச் சருக்கம் - முற்றிற்று.

பன்னிரண்டாவது,

மார்க்கண்டேயமுனிச் சருக்கம்.

கண்ணன் துதி.

அண்ட முட்டையி னகத்தினும் புறத்தினு மாகிக்
கண்ட வன்பர்கள் கண்ணினு நெஞ்சினுங் கலந்தோன்
பண்டை வேதங்கள் பழிச்சியு மறியொணுப பழையோன்
முண்ட காசன ஞதியா மூவர்கண் முதல்வன்.

கேளுஞ் சந்திரகுலோத் துங்கனே! பாண்டவர்கள் பத்துவருடம் வனவாசஞ்செய்து பதினொன்றும் வருடம் நடந்துவருங் காலையில், வானமெல்லாமிருண்டு - குளிர்காற்று மிகுந்து - குமுறலும் இடிப்பெருக்கமுமிகுந்து-நாலுபக்கங்களிலேயு மின்னி-இந்திரதனுசுஞ் சிறந்து - இந்திரகோபப் பூச்சியு மலிந்து-சூரியசந்திர காந்திகளு மறைந்து - இருள்கள் செறிந்து - மாங்களுமுறிந்து - மலைகளுஞ் சரிந்து-செடிகளுமொடிந்து-கொடிகளு மறுந்து-குணங்களு நிறைந்து-கான்யாறுகளும் மலையருவிகளும் வழிந்து பெருக்கெடுத்தோடவும், மயில்கள் வனங்களி லாடவும், தாமரைமலர்கள் குவியவும், குயில்க ளொலிக்கவும், அன்னங்களொதுங்கவும், வானரங்கள் மலைச்சார்பிற் பதுங்கவும், சோனைமாரியாகிய விடாமழை பொழியவுங் கார்காலம்நேரிட்டது. அப்போது எவ்விடங்களிலேயும் வெள்ளப்பெருக்கமாகச் சிவேலென்னும் நிறங்கூடி, நுரைகளும் அலைகளும்பெருகி, விருக்ஷசாலங்களையும் மிருகக்கூட்டங்களையு மடித்துக் கொண்டு வாராநின்ற நதிப்பெருக்கத்தின் இரைச்சலினுற் சிங்கங்களுடைய கெர்ச்சிக்குங்கூச்சலும் யானையடங்கியிருக்கும்ஒச்சலும்-புலியின் பேரொலியும் - காட்டுமாடுகளின்முழக்கமும் - மான்கள் முதலியவைகளின் குமாளமும்-காட்டு முருக்கு செங்காந்தள் முதலியவை புட்பித்திருக்கும் அலங்காரங்களும்-வானநதி மலையிலிருந் திழிந்துவருந் தன்மைபோல் மலைப்பாம்புகளூர்ந்து சஞ்சரிக்குமாக்ஷியும் - மலைபடுதிரவிய முதலியவைகளை மணத்துடனடித் திழுத்துக் கொண்டு வருஞ்செழுமையும்-ஆகிய இவையனைத்தையும் பாண்டவர்முதலிய பலருங்கண்டு, மழைவிட்ட போது மலைவளங்களையுஞ் சுற்றிப்பார்த்து, மிகுந்த சந்தோஷத்துடன் சாஸ்வதி தீர்த்தம்போய்ச்சேர்ந்து அந்நதியில் ஸ்நானஞ்செய்துசங்கல்பத்தோடு தற்பணமுமுடித்துக்கொண்டு, அவ்விடத்திலிருக்குந் தவசிரேஷ்டராகிய முனிநாதர்கட்கெல்லாந்தெண்டஞ்செய்து அவர்களாசீர்வாதமும்பெற்றுக்கொண்டு, அங்கங்கிருக்குந் தேவாலய தரிசனத்தோடு அவ்வவ்விடங்களில் நடத்தவேண்டிய நன்னெறிகளை யெல்லாம் வேதவிதிப்பிரகாரம் நடத்தி, பெரியோருட னுறவாகக்கலந்து சிலநாள்கழித்து வருகையில்; முன்னிருந்த காமிய வனம் போக வேண்டுமென்று கருதினவர்களாய்த் தௌமியாசாரியர் முதலிய பலரோடுஞ்சென்று, அவ்விடத்தில் தாங்கள் தங்கியிருந்த பர்னசாலைகளுந் திரௌபதி தேவியார் சில ஸ்திரீகளுடனிருந்த தனிமனையும்புதுக்கிக்கொண்டு, முன்ன மவிடத்திலிருந்த பெரியோர்களெல்லாம் வந்து சூழ்ந்து தழுவி இடையிற் பிரிந்திருந்தவுயிர் மீட்டு மினிதோடிவந்து தேகத்திற் பொருந்திய தன்மைபோற் சந்தோஷமுறும்படியாய்க் கூடிக்குலாவ, தாங்களுமவ்வாறே கூடிக்குலாவி, ஒருவரோடொருவர் இதுவரையினும் நடந்த அதிசயமியாவுங் கேட்டுங் கூறியும் மகிழ்ஷியுற் றிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் தற்செயலாய் துவாரகாபுரிவாசர்-பாண்டவநேசர் - ஜெகம் நிவாசராகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் சத்தியபாமை லோலாக இரதத்தின்மீதில்வர, அதுகண்ட பாண்டவர்கள்முதலிய யாவரும் யெதிர்கொண்டு பூசித்து, சகலவுபசார சந்தோஷத்துடன் அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி, சத்தியபாமையைப் பாஞ்சாலியிருக்குந் தனிமனைக்கனுப்பி, தாங்க ளொருவருக்கொருவர் முகமன்கூறிச் சம்பாஷித்துக்கொண்டு இனிது வீற்றிருந்தார்கள். அப்போது தருமபுத்திரானவர் அக்கண்ணனுக்குப் பார்த்தன் தவசுசெய்யப் போனதும், பரமசிவன் உமையுடன் வேடுவரூபங்கொண்டு வந்து திருவிளையாடல் புரிந்து அர்ச்சுனனுக்குத் தீங்குசெய்ய வந்திருந்த மூகாசுர

னென்பவனைக்கொன்று கொடுவழக்கிட்டு வாரியெறிந்துமகிழ்ந்து சகலதேவர்களுஞ் சந்தோஷிக்கப் பாசுபதாஸ்திரமும் முஷ்டியிலே மந்திரமுங்கொடுத்ததும், அக்காற்பற்பல ஆயுதங்கள் கிடைத்ததும், தேவேந்திரன் வந்து தன்னிரதத்தி லேற்றிக்கொண்டுபோயுபசரித்துத் தவமியற்றிய விடாய்தீர அமிர்தபோசனமூட்டிக் காலகேய நிவாத கவசரென்னுஞ் சத்துருக்களைக்காட்டிமடிவித்துத் தேவதத்தங்கொடுத்துக் கிரீடமுந்தரித்துபசாரஞ்செய்துஆசீர்வதித்ததும், சிலநாள் அர்ச்சுனன் இந்திரப்பட்டஞ்செலுத்தி மறுபடியும் இந்திரனுக்குப் பொன்னுலகத்தைச் சுதந்தரமாக்கிவைத்து வந்ததும், அவன் வருகிற வரையிலுந் தாங்கள் விசனப்படாம லிருக்கும்படியாக அவ்விந்திரன் உரோமசமுனிவரென்னு மகானுபாவனை யனுப்பிவைத்துச் சகலபுண்ணிய சரித்திரங்களும்-புண்ணிய தீர்த்த மகத்துவங்களும்-அவரால் தாங்கள் கேட்கவும் ஸ்நானஞ் செய்யவுஞ் செய்வித்ததும், அதனால் தங்கள்காலம் வெகுசுளுவில் அகற்றும்படியா யிருந்ததும், அம்முனிவராற் பரசிராமர் தரிசனம்பெற்றதும், அப்பாற்கிரீடி தங்களிடத்தில்வந் துற்றதும், அருச்சுன னீங்கிப்போனபிற்பாடு தாங்களிருந்த விடத்தில் நடந்தவிந்தைகளும், வீமசேனன் குபேரனுலகத்திற் கிரண்டுதரம்போன வயணமும், அவன் அநுமார் தரிசனம் அளகையாளி தரிசனம்பெற்ற வரலாறும், திரௌபதியைக் கொண்டுபோன ஜடாசுரனை வீமன் வதைத்து மீட்டதும், அவ்வீமனால் நகுஷன் சாபம் விலகியதும், ஆகிய யாவையுஞ்சொல்ல; இவையனைத்துங்கேட்ட ஜனார்த்தனனாகிய பகவான் சந்தோஷமடைந்து, தன் மைத்துனனாகிய விஜயனைப்பார்த்து மகிழ்ந்திருந்தார்

பாண்டவரைக்காண மார்க்கண்டேய முனிவர் வருதல்.

அக்காலையில் வையகத்திலுற்ற சிவனடியார்களுக்கு ஜெயமும்-வானவர்முதல் மற்றியாவருக்கும் பயமும்-வரமிருந்து பெற்ற தாய்தந்தையர்க்கு நயமுஞ் செய்துவைக்க மகேஸ்வரனுடைய மலரடியை வருந்தி விரும்பிப் பூசைபுரிந்து, மறலியை மண்ணில்விழமாய்த்து, மறுபடி யருள்புரியப் பார்த்து என்றும் பதினாறுவயதென்று ஈசன்விளம்ப யேற்று, சகலசாஸ்திர புராணங்களையுங் கற்றுச் சந்தோஷமுற்ற மார்க்கண்டேயரானவர்; அநேக மகாமுனிவர் நெருங்க, தண்டுகமண்டல விபூதி உருத்திராக்ஷத் தாழ்வடங்க ளிலங்க, ஜடாமகுடந் துலங்க, கிருபாசமுத்திர மோங்கப் பாண்டவரிருக்கும் வனத்திற்குவந்தார். அவரைக் கண்டவுடனே பாண்டவர் திடுக்கென்றெழுந்து எதிர்சென்று, தாயைக்கண்டசேயைப்போலும்-மழையைக்கண்ட பயிரைப்போலும்-புயலைக் கண்ட மயிலைப்போலுமனமகிழ்ந்து, ஏகாங்கத்திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து, தகுந்தமிகுந்த உபசாரத்துடன் அழைத்து ஆசனமமைத்து அதின்மேலெழுந்தருளச்செய்து, அவருக்கும் அவருடன் கூடவந்த முனீஸ்வரர்கள் ரிஷீஸ்வரர்கள் முதலிய யாவருக்கும் அர்க்கியபாத்திய ஆசமனீய அட்சதை தூபதீப அலங்காரங்கள் யாவுஞ்செய்து பணிந்தெழுந்தனர். அப்படி பணிந்தெழுந்த பாண்டவர்களுக்கு அம்முனிவர் அளவற்ற ஆசிகள்வழங்கி, பெருங்கோஷ்டியாயுள்ளமற்றெல்லோரையும்நெருங்கியிருக்கக் கட்டளையிட்டு, பிற்பாடு தருமராஜனை நோக்கி, ஓமகாராஜனே ! நீங்கள் செல்வமாகிய குலத்திற்பிறந்துஞ் சகலவளங்களையும்விட்டு வருந்தி, கானகத்திற் றவமியற்றிக் காய்கிழங்குபச்சிலைகளைத்தின்று, வெய்யில்-பனி - காற்று - மழை - இவைகளில் வருந்தும் எங்களைப்போல் நீங்களும் வருந்தியிருக்கின்றீர்களென்று கேள்விப்பட்டு, உங்களையுந் திரௌபதாதேவியாகிய உத்தமகுணத்திற்சிறந்த உங்கள்பத்தினியையும் பார்க்க அபேட்சித்துவந்தேன்.

ஓ தருமநந்தனா ! எவ்வளவு உயர்ந்த குலத்திலுந் தனத்திலும் ஜனத்திலும் உறுதிகொண்ட மனத்திலுங் கனத்திலும் மற்றனைத்திலுஞ் சிறந்திருந்தாலும், வினைப்பயனை வெல்லுவதற்கு வேதன் முதலிய மற்றியாவராலு முடிவதரிது. அதை யனுபவித்தே தீரவேண்டும். கோடி பசுக்கூட்டங்களிலொரு சிறிய கன்றைக் கொண்டுபோய் விட்டால் அதுதன் தாயைநாடிச் சேருமாறுபோல், இவ்வுலகத்தின்கண்ணடங்கிய ஆத்மகோடிகளில் எவன் எந்த வினையைச் செய்தானோ? அந்தவினை அவனைத்தேடிப்பிடித்துக் கொள்ளுமாகையால், உங்களுக்கு விசனம்வேண்டியதில்லை. இன்னுங் கொஞ்சநாள் கழித்துவிட வேண்டியது இஃதல்லாமலும், சர்வலோகசரண்யன் - சாமளநாதன்-ஆபத்பாந்தவன்-ஆதிமத்தியாந்தரகிதன்-ஜனார்த்தனன் - பக்தவற்சலன் - பரமதயாளன் - பரமபுருஷோத்தமன்-என்று சொல்லும்படியான திவ்விய மங்களத் திருநாமங்களைப்பெற்ற இந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி உங்கள் அகங்கை நெல்லிக் கனிபோல் அமையக் கிடைத்திருக்கையில், உங்களுக்கு நாளுங் கோளும்நமனும் வினையுஞ் சத்துருவு முண்டென்று சொல்லத்தக்கதோ? எவர்களாலுஞ் செய்கிறதற்கு அருமையாகிய காரியங்களை யெல்லாஞ்செய்ய வல்லபமுடைய அந்நாதனே! உங்களுக்குரிய மைத்துனன். எங்களுக்கோ? அறிதற்கரியசித்தினன். இவனைப்பெற்றிருக்கும் உங்களுக்கு என்ன தாட்சி? இதல்லாமலும் இவ்வர்ச்சுனனோ ? பஞ்சாக்கினிமத்தியினின்று அரிய தவத்தினைச் செய்து, தவத்தினாலும் சகத்தினாலும் மறைகளினாலும் மற்ற முறைகளினாலுங் காண்பதற் கருமையாகிய காலகாலனைக் கண்ணுறக் கண்டு, விண்ணவர் மகிழ்ந்து அண்ணலைப் புகழ்ந்து

வேண்டிக்கொள்ள அத்தாண்டவமூர்த்தியுடன்விளையாடி முடிமேலடித்து, மற்கட்டித் தழுவி விழுந்துபுரண்டு பேரானந்த மடைந்து, பாசுபதாஸ்திர முதலியபடைகளைப் பெற்றிருக்கின்றான். அவனோர் தம்பியாக உமக்குக் கிட்டியிருக்கப் பகைவரென்பதேது? ஓ மண்ணுலகெல்லாம்வாழ்ந்த மகுடாபிஷேகங்கொண்டு வாழ்வைப்பெறப்போகின்ற வள்ளலே! உமக்கு வஞ்சகமிழைத்தோர் மடிந்தழிவார்கள். நீங்கள் மகிழ்ச்சிபெறுவீர்கள் ஆகலால் நீங்கள் பல்லாண்டு பல்லாண்டாய் வாழிவாழி யென்று மார்க்கண்டேயர் ஆசீர்வசனமாகச் சொல்லினார்.

அதுகேட்ட உதிஷ்டிர னெழுந்து தாழ்ந்து வணங்கி, சுவாமி! நீருண்ட காளமேகம்போன்ற வண்ணனாகிய கண்ணனருளுந் தேவரீருடைய கிருபையுமிருக்க, எங்களுக்குத் தாட்சியொன்றுமில்லை, ஏதோ ஈதெல்லாம் ஒருகாலகதி. இதற்கு ஒருவரைநோகத் தக்கதேயில்லை. எனக்கு ஒருவரும் விரோதி யென்பதில்லை. துரியோதனன் எங்கள் நாடுநகர முதலியபாவுங் கைக்கொண்டாலும், ஸ்திரீயைச்சபையி லவமானப்படுத்தினா னென்னும் விசனத்தைத் தம்பிகள் சகிக்கமாட்டாம லிருக்கிறார்கள், எனக்கு அவனளவில் மெத்த சந்தோஷ முண்டா யிருக்கின்றது. அஃதேதெனன்றால் நான் பட்டினத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்தால் இங்ஙனம்பெற்ற பெருமையும் உத்தமர்கள் தரிசனமுந் தேவரீருடைய கிருபாநோக்கமும் நான்பெறக் கூடுமோ! ஈதெல்லாஞ் சுயோதனனுடையதருமமென்று நினைத்திருக்கின்றேன். ஆனால் தம்பிகளுக்கு இந்தக் கருத்தைக் காட்டமாட்டேன். என்னை அவர்கள் மெத்த நிந்திப்பார்கள். நடக்குங் காரியம் எந்தவிதத்திலேனு நடக்கும். பழுத்தபழங் கொம்பி லிராதென்று தம்பிமா ரறியமாட்டார்கள். அதிபாவியாளாக விருந்தாலும் என்னை இதுவரையினும் பூசித்து என்வார்த்தையைத் தட்டாமல் வருகின்றார்கள். அதுவும் உங்களுடைய ஆசீர்வாதத்தின் பலனேயன்றி வேறன்று இன்று உங்களைக் காணப் பெற்ற எங்களைப்போற்பாக்கியவான்கள் எங்குமில்லை. ஆதலால் ஓ ஐயனே! தேவரீர் ஏதாகினு மொருதரும சரித்திரந் திருவாய் மலர்ந் தருளவேண்டுமென்றுதோத்திரஞ்செய்து கேட்டுக்கொண்டார் தருமபுத்திரர். அப்படி கேட்டுக்கொண்ட தருமராஜனை மார்க்கண்டேயர் இருக்கும்படியாக உத்தரஞ் செய்தருளினர்.

நாரதமுனிவர் வருதல்.

அதுகாலையில் தவுமியாசாரியர் மார்க்கண்டேயரை வணங்கிநோக்கி: சுவாமி! தேவரீர் கருணாலயனாற் கடாக்ஷம்பெற்ற பிற்பாடு எத்தனை பிரமப்பிரளயம் பார்த்திருப்பீர்? வடபத்திர சாயியாகியகடவுளுடன் கூட எத்தனைவிசை மகிட்சியடைந்திருப்பீர்? அவைகளை யெல்லா மடியேங்கள் கேட்டுக் கடைத்தேறக் கருணைபுரிந் தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது நாரதமகாமுனிவர் வீணையும் - மாலையும்-பொன்னம்பரமும் - முப்புரிநூலும் - திருவெண்ணீறும்-திலகமுமிலகும்படிவர, அவரைக்கண்டுமகிழ்ந்து யாவரும் விழுந்து பாதங்களிற் றொழுதார்கள். உடனே யாவர்களுக்கும் பூர்ணாசீர் வாதமாக வாழ்த்தி முரசக்கொடியோனை நோக்கி, ஓ தருமநந்தனா! என தவமே தவம். சாக்ஷாத்காரமாகிய பரமசிவனை அன்பென்னும் அகத்திலடக்கிய ஐயனும் ஆதிமூலப்பொருளுமாகிய பரந்தாமனோடு, மற்ற அரியமாதவரும் ஏககாலத்தி லிவ்விடத் திருக்கப் பெற்றேன். அதேதெனன்றால்-ஒருநாள் துவாரகைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பார்க்கக்கருதி அரண்மனையிற் சென்றேன். அவர் அவ்விடத்திலில்லை. அப்பால் ஊரெங்குந்தேடினேன். எங்குமில்லை. எவர்களெங்கயிடத்திற் சொன்னார்களோ? அந்த யிடங்களெல்லாம் பார்த்துக் காலோய்ந்து வரும்போது, அவர் ஒருவீட்டில் விளையாடிக்கொண் டிருக்கக்கண்டு, நடந்துவந்த திரிந்து அலுத்த வருத்தமெல்லாம்போகப் பேசிக்கொண்டிருந்து சிலவுபெற்றுப் போகும்போது, எனக்கெதிரிலே வருகின்றார். அங்கேயிருந்தீரே இங்கெப்படிவந்தீரென்றேன். இங்குதா னிருக்கின்றேனென்றார். அங்கேயுமவரை விட்டுவரும்போது மற்றோரிடத்தில என்னைப்போல மற்றொரு நாரதரும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் பேசிக்கொண்டுபோகப் பார்த்தேன். ஐயையோ!! நம்மைக்கூட வேறாகச்செய்து விட்டதுபோ லிருக்கின்றதேயென்று ஓடிவணங்கி உத்தமனுடைய திருநாமங்களைப்பாடி, சர்வேஸ்வரனா யெங்குந்தானாயிருக்கு மிரக்ஷக னிவரேயென்று மதித்துங்களித்தேன். அப்பேர்ப்பட்ட திருவுருவும் இந்த மார்க்கண்டேயரும் உமக்குத் தரிசன மானபோதே இனி குறைவில்லையென்றுசொல்லி, மார்க்கண்டேயரை நோக்கி, ஓ மகானுபாவரே! தேவதேவனாகிய பரமசிவனுடைய கிருபையென்னுங் கடலிற் குளித்தெழுந்த நீர், இந்த தருமராஜனுக்கு வேண்டிய தருமங்களைச்சொல்லிக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும். சந்திரன்குளிர்ச்சியாகக் காய்ந்தாலுஞ் சூரியனையே லோகத்தார் நாடுவார்கள். அதுபோல மகாரிஷிகளால் எத்தனைகதை கேட்டிருந்தாலுந் தேவரீரிடத்திற் கேட்கத் தருமராஜன்விரும்புவார். என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையும் பணிந்தெழுந்து, நாரதமகாமுனிவர் தமது கருத்துக்கிசைந்த விடத்திற்போயினர்.

மார்க்கண்டேயரைத் தருமராஜன்வருணமுறைகேட்க அதற்கவர்சொல்லுதல.

அவர் போனபிற்பாடு மார்க்கண்டேயர் குந்திபுதல்வனை நோக்கி, ஓ மகாராஜனே! உமக்குச் சங்

தேக மிருக்கின்றவைகளைக் கேளுங் தோன்றினமாத்திரஞ் சொல்லுகிறே னென்றார் அதுகாலையில் உதிட்டிரர் சுவாமிபாக்கியமென்று இரண்டுகரத்தையுஞ் சிரத்திலிருத்திக்கேட்கின்றார் சுவாமி! பிராமணர்செய்யவேண்டியமுறைமையையும், க்ஷத்திரியர்நடக்கவேண்டிய திறமையையுஞ் சொல்ல வேண்டுமென்று வினவ, சோடச யெதினையுடைய சுந்திரன் சொல்லுகின்றார். கேளும் அரசனே ! எந்தவுருணத்திற் சரீரமெடுத்தாலும் இறந்துபோம். மறுபடி யுற்பவிக்கும். இது ஸ்தூலபூத சம்பந்தமான தேகத்தின் சுவாபிகம். இந்தத் தேகம் எத்தனை விதமாக மாறினாலும் இருவினைப் பற்றுமாத்திர மாறாது. நல்வினைகட்குத் தகுந்த நலன்களையுந் தீவினைகட்குத் தகுந்த பலன்களையும் அநுபவித்துத் தீரவேண்டும். இதன்றியிலுங் கன்மத்தினாற் சாதியேயன்றிஜன்மத்தினாற்சாதியில்லை. நீர் சொல்லிய நன்னெறி நல்லநடக்கையுடையவ னெவனோ? அவனே நல்லஜனனம். அவனே பிரமக்கியானமுடைய பிராமணன். அவனுக்கே மோட்சம் உயர்ந்தோ ரென்பவர் நெறிவழுவியிருப்பார்களாகில்அவர்களே பாவிகள். அவர்கள் அடையுங்கதிதான் நரகம். இவ்வுலகமுறைமை நாலுபங்காகத் தருமசாஸ்திரங்களில் வகுக்கப்பட் டிருக்கின்றன. அவைகளில் ஒருவன் மிகுதியாகிய திரவியசம்பத்தைப் படைத்துந் தானுமுண்ணாமல், தானதருமமுஞ்செய்யாமல், பந்துக்களுக்குமீயாமல், வித்துவான்களுக்குங் கொடுத்து மேலாகிய புகழைப் பெறாமல், தேவாலயம் விஷ்ணுவாலயங்களுக்கு முதவாமல், பெட்டியிலிட்டுப் புதைத்து, உன்னையெடுத்தால் அறுத்துத் தின்னுவேனென்று ஒட்டிட்டுக்கொண் டிருக்கின்றவன் யாவராலும் லோபியென்று எப்படி பேர்வகித்துக்கொண்டானோ? அப்படியே பரலோகத்திலும் அவன் சுகமடையப் போகிறதில்லை. மேலும் இவ்விடத்திற்பொருள்களைச் சேகரித்துத் தானும் புசித்து, வேண்டியவர்களுக்கும் இல்லை யென்னாது கொடுத்து, சீலம்-விரதம்-ஆசாரம் ஸ்நானம்-சந்தி-ஜெபம்-தபம்-நோன்பு தெய்வபூசை-இவைமுதலியவைகளுஞ் செய்து, சரீரமும் வருந்தி, யாவராலும் புகழைக்கொண் டிருப்பவ னெவனோ? அவன் அவ்விடத்திலும் இத்தன்மையவாகிய போக பாக்கியங்களைக் குறைவிலாது அனுபவிப்பன். அன்றியுப், அன்னதானம்-வித்தியாதானம்-கன்னிகாதானம் யாகம்-இவைமுதலினசெய்து, நல்லவாகனாதிகளையும் போகங்களையும் அனுபவிப்பவர்கள்; சத்திய லோகத்திலும் இப்படியே நிறைந்த செல்வந்தரா யிருப்பார்கள். இப்போது சொல்லியநன்மைகளில் யாதொன்றுமில்லாமல், பொய்-கொலை-களவு-கள்-காமம் - முதலானவைகளிற் சிறந்து, வெகுளிவிசத்துற்பாஷைகளும் பேசி, இகத்தில் யாவராலும் என்ன மேன்மையைப் பெறுவார்களோ? அவர்கள் பரத்திலுந் துற்கதி துற்சோபம் - துர்வியாதி இவைகளில் இருந்து வருந்தி யறிபவர்களென்றறியும் ஓ தருமநந்தனா! இதற்குச் சாட்சி நீரேதான். எப்படியென்றால் உமக்குத் துன்பஞ்செய்த துரியோதனை யுலகமென்ன சொல்லுகின்றது! மனம்பொறாத் திருந்தவும்மை யென்னவென்று கொண்டாடுகிறார்கள் ! நாளைக்கே உமதுசத்துரு குடும்பத்துடன்அழியப்போகின்றான் நீரே இவ்வுலகமெல்லாம் அரசுபுரிந்து ஆளப்போகின்றீர். அதற்கு ஓர் திருஷ்டாந்த முமக்குச் சொல்லுகிறேன் கேளும்

அயராஜன் சரித்திரம்.

ஓ மகாராஜனே ! இந்தப்பூமியை முன்னாண்ட அரசர்களில் அயனென்றொரு ராஜாவுண்டு. அவனுடைய குமாரன் துந்தூறவென்னப் பட்டன். அவன் வேட்டைக்குப்போய், காட்டிலுள்ளகரடி-புலி-முயல் கடமை-மான்-கலை-காட்டுப்பன்றி-யானை - பட்சி யினங்கள் இவைகளையெல்லாம் அடித்தும், பிடித்தும், அழித்தும், வலைகள்கட்டியும், கண்ணிகள்வைத்தும், படுகுழி வெட்டியும், இப்படிப் பலபல விதமாக வேட்டையாடி சந்தோஷித்து வரும்போது; பராரையையுடைய மராமரத்தி நீழலிற் சகலவேத சாஸ்திர புராண பண்டிதராகிய ஒரு ரிஷீஸ்வரன் புள்ளிபொருந்திக் கொம்புகாதுகளுடனிருந்த மான்தோலைச் சரீரமுழுதும் போர்த்துக்கொண்டு நிஷ்டையிலிருந்தார். அப்படியிருக்கும்போது அத்துந்து வென்பவன் ஒற்றைமா னிருக்கின்றதென்று உன்னி, தன்பாணத்தினால் உருக அடித்தான். உடனே அசைவற்றிருந்த அம்முனிவன்நிஷ்டைகலைந்து கிருஷ்ணாவென்றுகூவியிறந்துவிழ. அதைக்கண்ட ராஜகுமாரன் வெருண்டு, ஐயையோ !! ஆரோ மகாநுபாவரிவரொன்றுசமீபித்து வந்துபார்த்து, வில்லையும் அம்பையும் பூமியிலெறிந்து மகாதுக்கத்தோடும் பூமியில் விழுந்துபுரண்டு உருண்டு பதறிக் கதறிப் புத்தி சிதறி, உடலுதறலெடுத்து மூர்ச்சைபோய்ச் சற்றுநேரத்தில் தெளிந்தெழுந்து, அந்தோ ! பிரமஹத்திக்கு ஆளாயினோமே யென்று துக்கமுற்று. மந்திரிகள் பிரதானிகள் சேனைகள் யானைகள் முதலானவைகளை விட்டுத் தன்னகரத்தைநாடி, கால்வேகங்கொண்டோடி, தந்தையின் பாதத்திற் போய் விழுந்தழுதான். அயமகாராஜன் பிள்ளைவருந்தி வியர்த்துவிழுந்து அழுவதைக்கண்டு அவனையெடுத்து அணைத்து யென்னகுழந்தா யென்று கேட்க, அவன் தன்னால்நேரிட்ட தோஷத்தைச்சொல்ல, அதுகேட்ட அவ்வரசனுங் கூடவேவந்து, ரிஷியிறந்து கிடக்கும் இடத்தைவந்துபார்த்து, தெய்வமே யென்றேங்கித் தியங்கி மயங்கி, ஐயோ ! இதுவரையிலும் நான் செய்துவந்திருந்த நீதிநெறி யாவும் போய்விட்டதே: இனி பிரமஹத்தி யுடையவனென்னும் பேர்நேரிட்டதே: என்று புலம்பும்போது பரியாரி தலைமாட்டி லிருந்தழுந் தன்மைபோற் கண்ட புத்திரன் இனிப்பிராணனை விட்டுவிட வேண்டியதே

யென்றெண்ணங்கொள்ள, அக்குறிப்பை இறைவனறிந்து, புத்திரனைக்கையிற்பிடித்துக்கொண்டு, அப்பா இனிப்பட்டினம் போகலாகாது. காட்டிலேசென்று புலிமுதலியமிருகங்களுக்கு இரையாவதேநலமென்று இருவரும் முகம்விட்டவாறே நெடுந்தூரஞ் சென்று, காடுகள் மேடுகள் கடந்துபோவதானார்கள்.

அவ்வாறு போனவர்கள் தாக்கரென்னு மகாமுனீஸ்வரன் தவஞ்செய்துகொண் டிருக்குஞ் சூழலைக் கண்டோடி, அவரை இருவரும் பிரதக்ஷணம் வந்து வணங்கிக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நிற்க, அவர்களைத் தாக்கரென்னும் உத்தமர் கண்விழித்துப் பார்த்து, ஓ! ஓ! அரசனே! வாரும். உட்காரும். நான் உம்மைப்பூஜித்து உபசரிப்பதற்கு நீர்மகாயோக்கியர். நீதிநிறை குன்றாத சத்தியவான். என்று சொல்லக்கேட்ட அரசன் கண்ணீர்பொழிந்து, ஐயோ ! நான்மகாபாவி. பிரமஹத்தி தோஷமுடைய துரோகி. தேவரீரைக்கண்டு நமஸ்கரித்து அத்தோஷத்தை நிவாரணஞ் செய்துகொள்ளலாமென்று வந்த என்குறையையறிந்ததனாலன்றோ சுவாமிகளிவ்வாறு என்னை இழியாதிழித்துச்சொல்லிய வசனம் ? ஆ ! ஆ! தெய்வமே! என்று உடல்நடுங்கி வாய்மொழிபதறி நாவுலர்ந்து தடுமாறுகையில், அதை முனிவர்கண்டு, இவன் மிகவும் பயங்கொண்டு வந்தவனென்றுதெரிந்துகொண்டு, நல்லது பயப்படவேண்டாம். உமக்குநேரிட்ட துன்பத்தைச் சொல்லும். என்றுகேட்க நடந்தவிர்த்தாந்தங்களை அவன்சொல்ல, அது எந்தயிடத்திலென்று கேட்டறிந்து கொண்டு, தன்னுடைய குமாரன் சாந்தமகாரிஷியையழைத்து, இவர்களுடன் கூடப்போனால் ஒருமகாரிஷியைக்காட்டுவார்கள். அவரை நீயெழுப்பி இவர்களுக்கு ஆசியும் வாங்கிக்கொடுத்து வாபோவென்று உத்தரவுசெய்தார். அவ்வுத்தரவைச்சாந்தரிஷி சிரசாகவகித்து, இவர்களையழைத்துக்கொண்டுபோய் அந்தயிடத்திற் சாய்ந்துகிடக்கிற மகாத்துமாவைக் கண்டு, வேதமந்திரங்களினு லெழுப்பிப் பழயபடிநிஷ்டையி லிருக்கச் செய்தபோது, இவர்களிலரசன் அவரைப் பணிந்து வாழ்த்தி, சுவாமி! என் புத்திரன் துஷ்டனல்ல. பெரியோர்களுக்கு உபகாரி. வேட்டையாடவந்துதெரியாமையினால் அபராதியாயினான். அவ்வபராதத்தைத் தேவரீர் மன்னிக்கவேண்டுமென்றிரந்தான். அதுகாலையில் அந்த உத்தமர் அவ்வரசனைப் பார்த்து, ஐயா ! உமது பிள்ளையால் எனக்குண்டான குறைவு யாதொன்றுமில்லை. கயிலாசபதியி னுடைய கட்டளைப்படி நடந்தது. ஆதலால் நீர் மகாராஜனாக இருக்கக்கடவதென்று வாழ்த்தினர். அவ்வாழ்த்தலைப்பெற்ற அரசன் அவரிடத்தினின்றும் விடைபெற்றுக்கொண்டு, சாந்தமகாரிஷியுடன் சேர்ந்துவந்து தாக்கருடைய திருவடிகளிற் பணிந்து, ஓ ஆண்டவனே ! ஓ எத்தனைஜனனமெடுத்தாலுந் தீராத அத்தியைத் தீர்த்துவைத்த தெய்வமே! தேவரீரனுக்கிரகத்தால் யாங்கள் பிழைத்தோம். ஆனால் ஒருசந்தேகமிருக்கின்றது. அதைத் தாங்கள் தயவுசெய்தாற்சொல்லுகிறேனென்ன, சொல்லுமென்றுமுனிவர்கேட்க, அய மகாராஜன் வணங்கி, என் இறையே ! பாணம்பட்டு இறந்துபோன பாக்கியவானைப் பிள்ளையினு லெழுப்பிவரும்படி உத்தரவுசெய்து, எங்களையும் பவித்திராக்கிய வல்லமை எதினால் நேரிட்டது. அதனைத்தேவரீர் தயைசெய்யவேண்டு மென்ன, தாக்கமகாரிஷி மகாசந்தோஷத்தோடுஞ் சொல்லுகிறார்.

கேளும் அரசனே ! கிருபையும்-சத்தியமும்-தவமும் பற்றில்லாமையும் பொருந்தி, வேத விதியின் வண்ணநன்னெறிகளைநடாத்துநடையும் நித்தியகருமஅனுஷ்டானங்களும் யாவரிடத்தும் இன்சொல்லும்-எவாகள்மனமும் எவைகள் மனமும் வருந்தாதிருத்தலும் ஆகிய ஒழுக்கங்களை வகித்து, நல்ல உத்தமஸ்திரீயுடன் கூடி, இல்லறவாழ்க்கையை இயல்பாக நடத்தி வருகின்றவனெவனோ? அவனுக்கு இதுமாத்திரமல்ல: இன்னும் எப்பேர்ப்பட்ட பெரிய காரியங்களும் அதிசொற்பத்தில் முடியுமென்று வேதவிதியில் விளம்பியிருக்கின்றது. இதல்லாமலும், பூர்வத்தில் இந்தவனத்தின்கண் பெரியோர்கள் சுத்தசீலராகத் தவஞ் செய்துகொண்டு வந்தார்கள். அப்போது பரமேஸ்வரரெழுந்தருளி யாவருக்கு மருள்புரிந்து, தவத்தினுறுதியையும் பெரியோர்களுடைய அன்பையும் நோக்கி, இங்கவனத்தில் யாவத்துமான சீவராசிகளும் பசி-நோய்-மூப்பு-துற்சொற்பனம்-துற்பயங்கரம்-துர்வியாதி-துர்மரணம் - இவைகளில்லா திருக்கும்படியாயநுக்கிரகஞ்செய்து, ஒருவேளை தப்பி விதிவசத்தால் மரணம்நேரிட்டதாகில் உடனே எழுப்பிவிடும்படியாக அப்பெரியோர்களுக்கும் எனக்கும் வேதமந்திரம் அருள்புரிந் திருக்கின்றார். அந்தசோமசுந்தரக் கடவுளினுடைய கிருபையினால் இப்போது அகஸ்மாத்தாயிறந்த மகாநுபாவர் பிழைத்ததேயன்றி, நம்மாலாகத்தக்க தொன்றுமில்லை. என்றுசொன்ன தாக்கமகாரிஷியினுடைய சரணங்களில் அவ்வயனென்னுஞ்சூரிய வமிசத்தரசனுந் துந்துவென்னுங்குமாரனும் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு, சேனசமுத்திரத்திற் கலந்து, சம்பிரம சந்தோஷத்துடன் பட்டினஞ்சேர்ந்து, முன்னிருந்த நன்னெறியிலும் மேலாகியவிதியையனுஷ்டித்து வாழ்ந்திருந்தார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட செய்கையும் நீதிநெறியுங் களங்கமற்ற மனதுமுடையவர்கள் பிராமணரென்று சொல்லப்படும். அந்த உத்தமர்களுடைய மகத்துவங்களை யெடுத்துச் சொல்ல என்தரமல்லவென்று மேலுஞ் சொல்லுகின்றார்.

அத்திரிமகாரிஷி சரித்திரம்.

ஓ உதிஷ்டிர மகாராஜனே ! அரசராகிய க்ஷத்திரியர்களுடைய நன்னெறி-ஒழுக்கம் - இவைமுதலிய

நீதிகளையுங் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளும். அதிரியென்றொரு பிராமணன் வேதங்களை யெல்லாங் குற்றமறக்கற்றுச் சுத்தபவித்திரனாகி, உத்தமத்தரும பத்தினியுடன்சித்தசலேலனைகவெற்றிமிகுந்த அனேகம் பிள்ளைகளைப்பெற்று மகிழ்ந்து வாழ்ந்துற்றிருக்கு நாளையில், பக்திசெறிந்து புத்திநிறைந்த அப்பத்தினியானவள் கற்பில் அருந்ததியும் இவளிடத்திலடித்துப் பழகவேண்டுமென்று சொல்லும் நன்மார்க்கத்தோடு புருடனுக்கு உபசரித்து, ஒருமொழியு மறுத்துச் சொல்லாமற் பணிவிடைபுரிந்து வருவள். அப்படி வருபவளாகிய அத்தேவியை அப்பிராமணனேக்கி, பெண்ணே! எத்தனைகாலம் இவ்வாழ்க்கையின்முறைமையாயுற்றாலும் பற்றுவிடாது மோகமாறாது. மோக்ஷத்தை விரும்புமவர்கள் தவமிருந்துவருந்த வேண்டியதாகையால், இதுவரையிலும் பெற்ற பிள்ளைகள் போக இன்னுஞ்சில சுதரை நீ பெறவேண்டியிருக்கின்றது. அவர்களைப்பெற்றவுடனேநான் தவஞ்செய்ப வனம்போக நாடியிருக்கிறேன். ஆகலால்உன்னுடைய கருத்தென்ன? இவ்விடத்திற்பிள்ளைகளுக்குத் துணையாகவிருக்கின்றையோ? அல்லதுஎனக்கு உபசாரஞ்செய்யக் கூடவருகின்றையோ? என்று கேட்கவே அவரை அம்மாது நமஸ்கரித்து, சுவாமி! தருமதேவதையே ஒருருவாக வெழுந்தருளியதென்று சொல்லுந் தேவரீரையே நித்தியபூசை-நித்தியவிரதம்-நித்தியநோன்பு - என்று சொல்லும்படியான இவைகளால் வரும் பயனை நம்பித் தமது திருவடித் துணையைப் புணையாகப்பற்றிக் கரையேறக் காத்திருக்கின்ற அடியாள், இந்த வைபகவாழ்வையுங் கிஞ்சித்போகத்தையுங் காதலரையு மாதரவென்று நம்பித் தேவரை விடத்தக்கதல்ல. யாரும் மாதர்கருக்குழியில் அறுகுநுனிப்பனிபோலமைந்து பத்துமாதமுஞ் சென்று பூமியில் வரும்படிசெய்யுங் கடவுள் ஒருவருண்டல்லவா! அவ்வையன் பெருமையை யாவரறிகுவார்! எவரையும்உய்யச்செய்வது தெய்வச்செயலே: இதற் கையமில்லை. ஆகலால் யானதுகளுக்குப் பிணையல்ல. அவைகளெனக்குத் துணையல்ல. அணியும் பணியும் அணையும் துணையும் தேவரீர்பொற்பாதகமலமேயன்றிவேறில்லை.

அன்றியும் கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, தனக்குற்ற நாயகனை உண்டி முதலிய வகைகளினு லுபசரித்து, தங்க ளிருவரிடத்தும் நீங்காநன்மை யமைந்த புகழைக் காப்பாற்றி, முன்சொல்லிய நற்குண நற்செய்கைகளிலும் மறதியில்லாம லிருப்பவளே பெண்ணென்று நீதிகூறியிருக்க அப்பெண்க ளாயினோர் பர்த்தாவை விட்டுப் பிரியக்கூடுமோ! ஆதலால் தேவரீருடன் யானுந் தவசுக்கு வரத்தக்கவளே. ஆகிலும் உலகத்தோடொத்து வாழ வேண்டுமென்றும், அப்படியல்லாதவர்கள் பலகற்றிருந்தாலும் பிரையோசனமில்லை யென்றுங் கூறுகின்றமையால், தேவரீர் தபசுக்குப்போக யானுங்கூடவந்துவிட்டால் இவ்விடத்திற் பிள்ளைகள் வருந்தி துன்பப்படுவார்கள். அப்போது யாவரும் நம்மை நிந்திப்பார்கள். இப்பேர்ப்பட்ட உத்தமனே தவசுக்குப்போய் விட்டபோது நமக்கென்ன யிருக்கின்றதென்று உலகமும்நாடும் நாம்அப்படிச்செய்யாமல், பாசபந்தங்களிலாழ்ந்தவர்களைப்போற் காட்டிப் பணங்கள்சேகரித்து இந்தப் பிள்ளைகளுக்கு ஆதாரமாக வைத்துவிட்டுப் போவதே உத்தமமென்று நினைக்கின்றேன் ஆனல் தேவரீர் எங்கே பணஞ்சம்பாதிப்பதென்று யோசிக்க வேண்டாம். தாங்கள் நினைத்தால் கடவுளருளினல் வேண்டியதிரவியம்வரும். அதெப்படியென்னில் தயிரியமகாராஜன் அசுவமேதமென்னும் யாகஞ்செய்கின்ருன். அந்தராஜனிடத்தில் சென்று திருவாய்மலர்ந்தருளுவீராகில் வேண்டிய திரவியங் கொடுப்பான். அவைகளைப் பிள்ளைகளிடத்தில் வைத்துவிட்டு நாமிருவரும் போகலாமென்று சொல்ல, அம்மொழி தனக்குஞ் சம்மதமாகக்கொண்டு, தயிரியமகாராஜனுடைய யாகசாலைக்குச் சென்றனர். இவரைக் கண்டவுடனே ராஜனெதிர்கொண் டோடிவந்து வணங்கி, உபசாரத்துட னழைத்துப்போய் உயர்ந்த ஆசனத்திலிருத்தி, அறுகு-மலர்-அக்ஷதை - சந்தனம் சுத்தோதகங்களினல் அபிஷேகஞ்செய்து, ஆடையாபரணதிகளால் அலங்கரித்து, தூபதீப உபசாரமுஞ் செய்து துதித்தான்.

அவனுக்கு உடனே இந்தமகாரிஷியானவர் வேதமந்திரங்களா லாசீர்வாதஞ் சொல்லி, சதமகனும் பிரமதேவனும் துளபமாலையணிந்த ஸ்ரீஹரியும் வில்வஜடாமகுடதாரியாகிய சிவபெருமானும் மற்றத்தேவர்களும் ஒருருவாகக்கூடித் தேவதா சரீரமாகப்பெற்ற மகாராஜனாகிய உம்மிடத்திற்குக் கொஞ்சம் பொருளவாக்கொண்டு வந்தேனென்று தோத்திரஞ்செய்தார். அந்தவசனங்களை யாகத்தின் பொருட்டு வந்திருந்த மகாமுனிவர்கள் ரிஷீஸ்வரர்க ளெல்லோருங்கேட்டுச் சகிக்கமாட்டாமல், அருவருப்புங் கர்னகடோரமுமாகி வெறுத்துக்கொள்ள, அந்தச்சமயத்திற் சூரியனைப் போலும் விளங்கிக்கொண் டிருந்த கௌதமர் அவ்வத்திரி முனிவரைப்பார்த்துப் பிரளயகாலாக்கினி உருத்திரனைப்போற் கோபங்கொண்டு, இவ்வரசன் செல்வத்திற் சிறந்துபூமியைப்புரந்தாலும் மனிதனேயன்றி வேறல்ல. அப்படியாகிய அரசனைக் கயிலாசபதியென்றும், விஷ்ணுவென்றும், பிரமனென்றும், இப்படியெல்லாந் துதிக்கவும் மதிக்கவும் எந்தவேதத்திற்சொல்லியிருக்கின்றது! பொருளாசை கொண்டுவந்தாய் அதற்குத்தக்க நியாயங்களைப்பேசி இதங்கள் சொல்லிப்பெறவேண்டுமேயன்றி, இப்படியும் நரஸ்துதி சொல்லுவார்க ளுண்டோ! இதுவரையிலுங் கேட்டறியேன். நீர் சொன்னபடி சகலதேவர்களு மிவனுனல், நாமெல்

லோரும் இவனைக்குறித்தே தவஞ்செய்து தொழுது வேண்டிய வரங்களைப்பெறலாமே நம்மையேன் இவன் பூசித்து விசுவாசிக்கவேண்டியது ! என்று பற்பலவாறாகப் பேசியபோது எல்லோரும் ஒரேமுகமாய் வார்த்தையாடினார்கள். அதைக்கேட்ட அத்திரிமகாரிஷியானவர் சிறிதுநிதானித்து, இப்போதுபான்சொன்னது சரிதான். வேதவாக்கியமே யப்படி சொல்லுகின்றது நீர் (பிரதிபதேவிஷ்ணு) என்னும் வாக்கியமறந்து பேசுகிறீர். அதை யுணராதவர் என்னைச் சங்கிக்கத்தகாதென்று சொல்லவும், அதைக்கேட்ட கௌதமரெழுந்து, நீரே தாரதம்மிய முணராமற் பேசியிருக்க, அதை மறுபடியும் ஸ்திரப்படுத்துகிறீரா! என்று இரண்டுபேரும் பெருவழக்கிட்டு, ஆராகிலும் ஒரு பெரியோரிடத்திற் சொல்லிக்கொள்ளுவோம் வாருமென்றெழுந்து, சகலகூட்டத்தாரையும் இராஜனையுமழைத்துக்கொண்டு, பூர்வத்திற் கல்லாலின்கீழ் எழுந்தருளிய பரமசிவனிடத்தில் மௌனோபதேசம் பெற்ற நால்வர்களிற் சனர்க்குமாரரென்பவரிடத்திற் சென்று சொல்லி நின்றார்கள். அவர் இவர்களுடைய வசனத்தைக்கேட்டுயோசித்து, இருகிறவர்களையும் இருக்கச்செய்து, மனோமயக்கந் தீரும்படி இதனைச் சொல்லுகிறார்.

கேளுங்கள் மகாரிஷிகளே ! இந்தப்பூமியில்வாழ்கின்ற ஜனங்களுக்குக் கண்ணும், கருத்தும், பிராணாதாரமும், காவலும், நீதியும், நெறியும், இன்பமும் கதியும். இராஜனாலாகவேண்டியதே: தேவாலயம், விஷ்ணுவாலயம், தீர்த்தம், திருநாள், இவையாவும் அரசனாலாகத்தக்கதே: மாசமும்மாரியும், பயிர்விளைதலும், மகாரிஷிகளுடைய ஜெபங்கள்யாவும், மன்னவனுடைய உதவியினாலாகவேண்டியதே: யாகம்-ஓமம் பிதுர் கர்மம்-சோபனம்-மங்களம்-கல்யாணம் - இவையாவுக்கும் ஏந்தலே துணை, வருணாச்சிரமந் தப்பாமல் நடப்பதும், வந்தனமரியாதையும், ஸ்திரீகளுடைய பதிவிரதா தன்மமும், வேந்தனாலன்றி வேறல்ல. ஆகையால் துஷ்டஜன நிக்கிரகஞ் சிஷ்டஜனபரிபாலனமென்னு முறைமையை வகிப்பதினாலும், மன்னுயிரெல்லாந் தன்னுயிர்போலோம்புதலினாலும், கடவுளர்க்குச்சரியான பெருமையும் அருமையு முடையவன் அரசனென்று சனர்க்குமாரர்சொல்லி, அத்திரிமகாரிஷிசொல்லிய வாக்கியம் வேதவாக்கியமேயென்று விளம்பினர். அதைக்கேட்ட மகானுக்களெல்லாஞ் சனர்க்குமாருடைய பாதங்களில்விழுந்துபணிந்துவாழ்த்தி உபசார விதிகளெல்லாம் நடத்தி, பிற்பாடு அத்திரிமகாரிஷியைக் கௌதமரும் மற்றப் பெரியோர்களும் பார்த்து, நாங்களிப்படி கேட்டோமென்று கோபஞ் செய்யலாகாது. இன்றுஉம்மால் எங்களுக்குச்சந்தேக நிவர்த்தியாய்விட்டது. என்றுபோற்றிப் புகழ்ந்துதயிரியமகாராஜனுடனே யாகசாலைக்குவந்து, யாகத்தை ஆரம்பஞ்செய்து, தேவர்களுக்குப்பூரணாகுதியுங்கொடுத்து, அரசனை யாவரும் வாழ்த்திச் சகலதிரவியமும் ஆடையாபரணங்களும் பெற்றார்கள். பின்பு அரசன் இந்த அத்திரிமகாரிஷியைப்பணிந்து, சுவாமீ! கருணைக்கடலாகிய தேவரீர்க்கு அல்பனாகிய யானென்ன உபகாரஞ் செய்யப்போகிறேனென்று வேண்டிய திரவியங்களும் - பட்டுபட்டாவளியும் அணிமணிப்பணியுங் கொடுத்து அனுப்பிவைக்க, அவைகளையெல்லாம் அத்தமகாரிஷி வாங்கிக்கொண்டுவந்து மனைவியினிடத்திற் கொடுக்க, மனைவியார் பிள்ளைகளுக்கு ஆஸ்தி ஜாஸ்தியாகவைத்துவிட்டு, அவர்களைக் கிரகாச்சிரமதருமத்திலிருத்தி, பதியுஞ் சதியுங் சதியைக் கருதித்துதியைப்புரிந்து கயிலாசபதியின் திருவடித் தியானபரராகத் தவமிழைக்கப்போனார்கள். ஆகையால் ஓ தருமபூபதி! நீதிநெறிதுன்றாது அரசாக்ஷிசெய்யும் புவனசக்கிரேஸ்வரன் முக்கடவுளராலுந் துதிக்கப்பட்ட முதல்வனென்றும், பூலோக தெய்வமென்றுஞ்சொன்னோம். இன்னுஞ் சொல்லுகின்றோம் கேளும்.

தர்க்கமுனிவர் சரித்திரம்.

ஓ பொறுமையுடைய புண்ணியவானே ! பாரதிகீதையென்னும் ஒருகதையுண்டு அது என்னவென்றால் தர்க்க முனியென்பவர் வேதசாஸ்திரங்களெல்லாம் பயனுடன்தேர்ந்து, எவர்களும்நினைத்தற்கருமையாகிய தவத்தைப் புரியும்போது. ஆகாயவாணிபிரசன்னமாகவந்து உமக்குவேண்டியதென்னை வினவுமென்ன, அவர் அவ்வன்னையைநோக்கி, என்னதானஞ் செய்தால் மேலானபதத்தைப் பெறுவார்களென்று மகாரிஷிகேட்டார் அதற்கு ஆகாயவாணி சொல்லுகின்றாள். நல்லசாதுவாய், விஸ்தாரம் பால்கொடுக்கத்தக்கதாய், சுத்தவெள்ளையாயிருக்கின்ற கன்றோடுகூடியபசுவை அதற்குத்தகுந்த பால் கறக்குஞ் சொம்பு-தம்பு - அணைகயிறு - இவைகளுடன் கொண்டுவந்து, அந்தப்பசுவைக் குளிப்பாட்டி, மஞ்சள்பூசி, குங்குமமிட்டு, அக்ஷதைசாத்தி, நாலுபாதக் குளம்பினுஞ் சொர்னம் வைத்து, சதுர்வேத பண்டிதனாகியும் அவாவற்ற சாதுவாகியு மிருக்கின்ற ஓர் வைதீகப் பிராமணனுக்குத் தானஞ்செய்தவர்கள்; தங்களுக்குரிய குடும்பத்துடன் தெய்வலோகபோகத்தை அளவிறந்தகாலம் அநுபவிப்பார்கள். இதன்றியும் - சுத்தவெள்ளையாகிய எருதைத் தானஞ் செய்தபேர்கள், முன்சொன்ன பலனிலும் பத்துபங்கு அதிகமாகிய போகத்தை யனுபவிப்பார்கள். ரசிததானஞ் செய்தவர்கள், சந்திரபதவிபெற்றுவாழ்வார்கள். பொன்தானம் பண்ணினவர்கள், குபேரபதவி யனுபவிப்பார்கள் கன்னிகாதானஞ் செய்தவர்கள், தம்பதிசமேதராய்க் கற்பகத்தரு நிழலிலிருந்து சகலபோகங்களையும் நீங்காமற் பெறுவார்கள். யாகாதிகளைச் செய்து தேவர்களுக்கு அக்கினிமுகத்தில் அவிர்ப்பாகங்களைக் கொடுக்கிறவர்கள், மேலாகிய சத்தியலோகத்தில் நித்தியராக

இருப்பார்கள். தேவர்களும் அவர்களை விட்டு நீங்கா திருப்பார்கள். பூதானஞ் செய்பவர்கள், வருணபதவி யைப் பெறுவார்கள். வஸ்திரதானம்-வித்தியாதானம் இவைகளைச் செய்பவர்கள், சூரியபதவியைப் பெறு வார்கள்.

இப்போது சொல்லிவந்த தானங்களினுந் தவங் களினுஞ் சிறந்த தொன்றுண்டு. அதுயாதெனில்-வா க்குமனமுமொத்து, பிரயாசையும் வெற்றியும்பெற்று ஒரு அசுவமேத யாகஞ்செய்து, மோகம் - லோபம்- கோபம் கலகமில்லாமல், தேவர்களுக்குப் பிரீதியாக ஆகுதி கொடுத்தபேர்கள்; பரமபத மடைவார்கள் இப்படி நூறுயாகஞ் செய்து, அவிர்ப்பாகங் கொடுக் கும்போதும் யாகஞ்செய்ய ஆரம்பிக்கும்போதும்எந்த இஷ்டத்தைக் குறித்துச் சங்கல்பம் பண்ணிக்கொ ண்டு ஆகுதி கொடுக்கின்றார்களோ! அந்தப் பலனைப் பெறுவார்கள். ஆதலாற் சிலபேர்கள் தேவேந்திரபட் டமும் பெற்றிருக்கின்றார்கள். அப்படியல்லாமற் பர மபதமே விரும்பி யடைந்தபேர்கள்வைவச்சு மநுமுத லான பெரியோர்கள். என்று தானங்களினுடைய பெருமையும் யாகங்களினுடைய அருமையும் பதவி களின் இன்பமும் எல்லாவற்றையுமெடுத்துச்சொல்லி ஓ முனிவனே! தானத்தின் பெருமையும் அத்தானத் தாலுண்டாகும் பதவியு மிவ்வகைத்தானபோதினும், (பாத்திரமறிந்து பிட்சையிடு, கோத்திரந் தெரிந்து பெண்ணைகொடு.) என்னும் பழமொழியும் யோசிக்கக் கடவை. என்று தெரிவித்து அடங்கினர். ஆதலால் அவனியை யாளுமரசன் இவ்வருமையான தானங்க ளையும் யாகத்தையும் வகித்தலால், அரசன் யாவரா லுஞ் சிறந்தவனாகின்றான். என்று மார்க்கண்டேய முனிவர் கூறினர்.

மனுராஜன் சரித்திரம்.

ஓ ஜெனமேஜெயமகாராஜனே! இவ்வாறுகூறிய மார்க்கண்டேய முனிவரைக்குவளைத்தாரான்வணங்கி ஓ குவலயத்திற் பதினாறுவயது கொண்டருளிய கோ முனியே! மநு வென்பவருடைய சரித்திரமகத்துவத் தைக் கேட்க விரும்பினேன். அதனைத் தேவரீர் திரு வாய்மலர்ந்தருள வேண்டுமென்று மலரடிபரவலு மார் க்கண்டேயர் சொல்லுகின்றார். ஓ முன்னவர்பெருமை யை யுன்னிக்கேட்கும் மன்னவர்பிரானே! கேளும்: சூரியபகவானுக்குஞ் சாயாதேவியாருக்கும் பிறந்தபிள் ளைகள்மூவர். பெண்களிருவர். இவர்களில்ஒருபிள்ளை சநிபகவான், ஒருவன் யமன். மூத்தபிள்ளை மநு. இம் மநுவென்பவர் பதினாயிரம்வருடந் தவஞ்செய்துபுநித ருபனாகயிருந்து, நாலுயிரம்வருடம் இராச்சியபரிபா லனஞ்செய்து, மறுபடியுந் தவத்தை நினைத்துப் போ கும்போது ஒருதடாகத்தைக்கண்டு அதிலிறங்கி ஸ்நா னஞ்செய்து, நித்தியகரும விதிகளை முடித்துக்கொள் ளக் கரையிலிருக்கையில்; ஒருசிறியமீன் ஜலத்தை விட்டுநீங்கி இவருக்கெதிரிற் குதித்துப் பதைத்தது. அதையவர் ஆச்சரியமாகப் பார்க்கையில், அந்தமச்ச மானது மநுராஜனுக்குச் சந்தோஷமும் இரக்கமும் வரும்படியாக ஒருவார்த்தை சொல்லியது. ஓ மன்ன வனே! பொடி மீனெல்லாம் பெருமீனுக்கு இரையெ ன்று சொல்லியபடியே, என்னை இந்தக்குளத்திலுற்ற ஜெந்துக்களெல்லாந் தின்றுவிடக் காத்திருக்கின்றன. இப்போது என்னைப் பிடிக்கவந்த ஒருபெரியமீனின் பயத்தாற் கரையில் தாவிவிழுந்தேன். ஆகையால் என்னை எடுத்துப்போய் எங்கேயாகினும் ஓரிடத்தில் விட்டால் நான் பிழைப்பேன். இல்லாவிட்டால் இறந் துபோவேன், என்னை இப்போது காத்து இரக்ஷிப்பீ ராகில் உமக்கும் ஒருகாலத்திற் பதிலுபகாரம் என்னாற் கிடைக்கும். ஆனால் நான் சலசரமாகிய அல்பஜெந்து வென்று என்னை நினைக்கவேண்டாம். (அறுகின் கட் டையும் நல்ல ஆபத்துக்குதவும்.) என்கிறமொழியை யுன்னிஎனக்குச்சகாயம்பண்ணுமென்று சொல்லிற்று இப்படிசொன்ன மச்சத்தின் வாக்கியத்தை அரசன் இச்சையாகக்கேட்டு, இருகரத்தையுங் குவித்துச் சல த்துட னெடுத்துக் கொண்டுபோய் ஒரு கூபத்தில் விடுத்து, அதற்கடுத்த வனத்தில் தவஞ்செய்துகொ ண்டு, நித்திய மொருதரம் வந்து மீனைப்பார்த்துப்பே சிப்போவர்.

அப்படி போகும்படியான அரசனை மச்சம்நோ க்கி, எனக்குஇந்தக்கிணறு இடம்போதாது. ஆதலால் வேறொரு விசாலமான இடத்தில் என்னைக் கொண்டு போய் விடுமென்றுசொல்ல, அப்படியே சம்மதித்து எடுத்துப்போய் ஒரு தாவில்விட்டு, நிதம்வந்து பார் த்துப்போவர். அப்போது ஒருநாள் தாவு நிறைந்தி ருக்க, அதுகண்ட அரசன் மச்சத்தை நோக்கி, ஓ மச் சமே! என்ன உன்னுடைய கதியென்று கேட்டனர். அதற்குமச்சமானது இதுவுமிடம்போதா தாகையால் வேறொரு இடத்தில்விடுமென்ன, அப்படியே கங்கை யிற்கொண்டுபோய்விட்டு வழக்கப்படி பார்த்துவரும் நாளையில். ஒருநாள் அக்கங்கை இருகரையும் ஒன்று கப்பொருந்தி யிருந்தது. அக்கா லரசனம்மீனைப்பார் த்து, என்னஉன்கதியென்றுகேட்டனர் அதற்கு மச் சம் ஐஜயா! நானென்னசெய்வேன்! இவ்விடமும்எனக் குப்போதாது. ஆதலால் வேறேயிடத்திற் கொண்டு போய்விடுமென்ன, அப்படியே கொண்டுபோய் இந்த லவணசமுத்திரத்தில் விட்டனர். அப்போது அந்த மீனானது ஓமநுவே! எனக்காக மெத்தவும் பிரயா சையெடுத்துக்கொண்டீர். இப்பவும் உமக்குபகாரமாக ஒன்று சொல்லுகிறேன்கேளும். இந்த ஏழுசமுத்தி ரமும் பொங்கிப் பதினாலுலோகமும் ஆத்மகோடிக ளுடன் அழியப்போகின்றன. அதற்குமுன்னடி மரத் தினால் ஒரு ஓடம்பண்ணிக்கொண்டு, அதிற்சாப்பிடத் தக்க வஸ்துக்களும்நிரம்பச்சேகரித்து, சப்தரிஷிகளு டன் நீரும்வந்து இந்தக்கடற்கரையி லிருந்தால்; உமக்

காற்றல் செய்வேனென்று சொல்லித்துள்ளி மூழ்கிப்
போய்விட்டது. அதைக்கண்ட மநுவாசனைவர் சந்
தோஷமடைந்து திரும்பிவந்து, சிலநாளையி லோடஞ்
செய்து, அதில் மச்சஞ் சொல்லியபடி புசித்தற்குவே
ண்டியவைகளை யமைத்துக்கொண்டு, சப்த ரிஷிகளை
யுங்கண்டு வணங்கி ஓரிடத்தி லேற்றினவராய், இல
வண சமுத்திரத்தருகிற்சென்று அந்த மீனைநினைக்க;
உடனே அம்மச்சம் அலைமீது பறந்துவந்து, ஓடத்தி
னணிமுகத்தில் தொங்கிய கயிற்றை வாயிற் கவ்விக்
கொண்டு சமுத்திரமத்தியிற் கொண்டுபோயது

அந்தக்காலத்திற் சப்தமேகங்களும் ஒன்றாகக்
கூடி இடித்துமின்னி ஆர்ப்பரித்து, திசையானைகளின்
துதிக்கைப்பிரமாணம் ஒரு முகூர்த்தகால மழைபொ
ழியவும், அதனால் எழுகடலும் வொன்றாகி; குலகிரிக
ளெல்லா மூழ்கி, மகமேருவி னுச்சியிலும் வெள்ளம்
பரவி, சந்திர சூரியரு மறைந்து, இருள் நிறைந்து,
ஆத்மகோடிகளும் இறந்துபோக நேரிட்டது. அப்
போது மச்சமானது அம்மிகுதிவெள்ளத்தில் இந்த
வோடத்தைக் கவிழவொட்டாமல், பக்குவமாக எவ்வ
ளவு தண்ணீ ருயர்ந்தாலுங் குன்றுபருவதங்களிற்
சென்றாலுங் குறைவில்லாமற் காத்துவருகையில்; அ
நேகங்காலநீங்கிக் கடல்களெல்லாம் பிரிந்து, அஷ்ட
குலாசலங்களுமேற்பட்டு, சந்திரசூரியரும் பழயகதி
யின்படிவந்து பிரகாசித்தனர். பூமி முதலியவைக
ளெல்லாஞ் சலம்வறண் டுலர்ந்து, கழுவியுலர்த்தியது
போலிருந்தன. அக்காலையில் மச்சமானது அந்த ஓட
த்தை யிழுத்துவந்து, ஒரு மலையில் மாட்டிக் கட்டி
விட்டு, தண்ணீரில் மறைந்து தலையைநீட்டு, ஓ மநு
வேயென்று கூவியழைத்து, மிகமகிழ்ச்சியுடன் அம்மநு
வோடிருக்குஞ் சப்தரிஷிகளைப்பார்த்து ஒருவசனஞ்
சொல்லியது. அஃதென்னையெனில்-இப்போது உலக
மழிந்து, மழைபொழிந்து, கடலேழுமெழுந்து, குல
கிரியுமழிந்து, மகமேருசிகரமும் வழிந்தோடநேரிட்ட
இந்தக்காலத்தை யறிந்தீர்களல்லவா ? இது வொரு
மநுவந்தரமென்றுபேர். இந்தமனுவழிந்தால் ஒரு அ
ந்தரம். அப்படி இவரழியாமல் இரண்டு மனுவந்தரங்
காத்தேன். இந்த இரண்டுக்குந் தப்பிப்பிழைத்தான்
இந்த மநுமகாராஜன். ஓ சப்தரிஷிகளே! உங்கள் நிமி
த்தம் நான் மீனாகவந்து உங்களையுங் காத்தேன். உங்
களுக்குப் பின்துணையாக இந்த நீதிபரனையும் இர
க்ஷித்தேன். நானே ? இத்தனைப் பிரளயத்திலுஞ்
செழித்ததாமரைக்கமலத்தில் நிஷ்டையிலிருந்து விழி
த்த பிரமனென்றறியுங்கள். என்று மீனுரு வகன்று
மறைந்து போயினர் சகல சராசரங்களையுஞ் சிருஷ்
டிக்குந் தொழில்படைத்த இரண்ய கருப்பனவர்.

பின்பு சப்தரிஷிகளும் மநுராஜனும் அவரை வந்
தித்துச் சிந்தித்துப் பணிந்து வாழ்த்தி, ஓடம்விட்டிற
ங்கி, நெடுநாள் தவம்புரிந்து கண்ணைவிழித்துநோக்க,
அப்போது பூமிசுத்தமாய் ஒரு புற்பூபாதி செந்துக்க
ளும் இல்லாதிருக்கக்கண்டு, மநுவும் ரிஷிகளுமும்மூர்
த்திகளிடத்திற் போய்வணங்க, அவர்கள் மநுராஜனை
மகாமகிழ்ச்சியோடு நோக்கி, ஓ அரசனே ! நீர் மகா
தவத்திற் சிறந்தவர். இப்போதும் அநேககாலந் தவஞ்
செய்திருக்கின்றீர். உமக்குச் சப்தரிஷிகளும்உதவியா
யிருக்கிறார்கள். ஆகையால் இவ்வுலகத்தை யேர்ப்படு
த்திக் துரைத்தனஞ் செய்யக்கடவீர். என்று உத்த
ரங்கொடுக்கவும் அம்மநுவானவர் அவர்களின் பொற்
றாளை வணங்கிப்பூசித்து, சப்தரிஷிகளோடும் வந்து
பிரமனத்தி னருளினால் உலகத்துயிரையேர்ப்படுத்தி,
சகலமரியாதையுடன் மநுநீதியு மியற்றி நெடுநாள் அ
ரசுசெலுத்தி வாழ்ந்தார். ஓ தருமபூபதீ! முன் யுகாந்
தரத்திற் பிறந்து இரண்டு மநுவந்தரங்கழித்து இற
வாதிருந்து மெய்யைப் பெற்ற ஐயனாகையால், இந்த
மநுவினுடைய நாமத்தை யுச்சரித்தவர்கள்-சொன்ன
வர்கள் - கேட்டவர்கள் ஆகிய யாவர்களுக்குந் துன்ப
நீங்கி, இகத்தில் இன்பமுற்றுப் பரத்திற் குடும்பத்
துடன் நெடுநாள் வரையிலுஞ் சுகபோகத்தை யநுப
விப்பார்கள். இதன்றியும்-இவ்வுலகத்திலே எதொரு
காரியமும் ஆத்மலாபமாகத் தொடங்கும்போது சங்
கல்பஞ்சொல்லிக்கொள்பவர்கள் (வைவச்சுதே-மன்
வந்தரே) என்று சகலகாரியங்களுஞ் சித்தியாகும்
படியாய் இந்த சித்திபுருடரைச் சிந்திக்கத்தக்கது.
என்று மார்க்கண்டேயருரைத்த வாக்கியங்களைத் தரு
மன் முதலிய யாவருங்கேட்டு மகிழ்ச்சியுற்றுவணங்கி,
சுவாமி! மன்வந்தரத்தின் வகையைக்கட்டளையிட்டீர்.
திருதார்த்தரானேம். ஊழியென்பதும், சகல ஆத்ம
கோடிகளழிதலும், மறுபடி யுற்பத்தியுந் தெரிவிக்க
வேண்டுமென்னுள்ளத் தெளிவேயென்று இரந்த முர
சக்கொடி முதல்வனை நோக்கி, மிருகண்டேய புத்திரர்
அகமகிழ்வுடன் சொல்லுகின்றார்.

பிரபஞ்சலயோற்பவம்.

கேளும் பூபாலனே! கிரேதாயுகம்-திரேதாயுகம்-
துவாபரயுகம்-கலியுகம் - இந்த நாலுங் கூடியது மகா
யுகம். இந்த மகாயுகம் இரண்டாயிரங் கூடினாற் பிரம
தேவனுக் கொருநாள் அந்தவொருநாளில் பாதியிரவு.
பாதிபகல். ஒருபகலுக்கு ஆயிரஞ் சதுர்யுகம். இதிலே
பதினாலு தேவேந்திரபட்டம் அறிந்துபோம். பிரம
தேவனுக்குப் பகற்பொழுது நீங்கும் அப்பால் ஆயி
ரஞ் சதுர்யுகம் இராப்பொழுதாகும். அந்தவேளையில்
பிரமதேவர் ஒரு தாமரைமலரிற்போய் நித்திரைசெய்
வார். அந்தவேளையிற் சப்தமேகங்களும் ஒன்றாகச்
சேர்ந்து, இடிகுமுறலுடன் உலகநடுங்கப் பொழியும்.
அச்சலப்பெருக்கம் மகமேருவினுச்சியைநாடும். உட
னே யெங்கு மிருள்மூடும். இவ்வாறு சலப்பிரளயத்
தாற் பூமியிலுற்ற சராசரங்களெல்லா மழிந்துவொன்
றாந் தோன்றாமல் எங்கும் ஏகாரணவமாய் நிரம்பியிரு
க்குங் காலத்தைத்தான், கற்பமென்று சொல்லப்படும்

இப்பிரளைய கற்பமொன்றில் எல்லாமழிந்து நானொருவன் அந்த மகமேருசிகரத்தைப்பற்றிக்கொண்டு அலையிலலைந்து கவலையிருந்து வருந்தியிருந்தேன் அப்படியிருக்கும்போது, இந்த வுலகம் விரிந்ததைப்போலொத்த ஒரு ஆலிலையின்மீது ஓர் சிறிய குருத்தாங்குழந்தை மல்லார்ந்து திரையில் மிகந்து என்னருகில் வரக்கண்டு, மனங்களித்து ஆனந்தங்கொண்டு, கோதரவாகிய காலத்தினுற்ற நெடுந்துணைபோற் பார்க்குங் காலையில், ஓ மார்க்கண்டேயரே! என் விசாரப்படுகிறீர்? என்வாயிற்புகுந்து வயிற்றிற் சுகமுற்றிருக்கலாம் வாருமென்றழைக்கவும்; யான் மனத்துணிவுடன் சென்றேன். அந்தவயிற்றிற் பதினைன்குலோகமுங் கண்டேன். சந்திரசூரியர்-வசுக்கள்-திசைப்பாலர்-ஏகாதசருத்திராள்-தேவர்கள்-இவர்கள் முதலான யாவர்களையும், மற்றெல்லா உயிர்வகைகளையுங்கண்டு, தொகையிறந்த நாள் அவர் கர்ப்பத்திலிருந்தேன். பின்பு-அவருக்கே மனமிரக்கம்வந்து தன்வாயைத் திறந்து வாவென்றழைக்க, யானவ்வாயிலிருந்துவந்து குறுகியிருக்கும் வெள்ளத்திற் குதித்தேன் எனக்கு நிலையில்லாமல் ஆலிலையைப்பற்றிக்கொண்டு நீந்தி இந்தச் சிறுகுழந்தையின் முகத்தைநோக்கி, வெள்ளத்தில் முழுகிப்போகிற என்னை அன்னைபோல் வந்து ஆதரித்தஐயனே! தேவரீர் ஆர்? உம்முடைய பூர்வோத்திரமென்னை? அதையெனக் கருள்புரியவேண்டுமென்றிரந்தேன்.

அதுகாலையில் அந்தக் குழந்தை நகைத்து, ஐயா மார்க்கண்டேய முனியே! என்னை இரட்சகனென்றும் வைகுந்த வாசனென்றுஞ் சொல்லுவார்கள். இது பிரளையகாலமாகையால் நீர் மெத்தவும் வருந்தித் துயரப்படப் போகிறீரென்று உன்னி, உம்மிடத்திருந்த கிருபையினால் இரக்ஷிக்கவேண்டி வந்தோம். இனிமேலும் எத்தனை யுகப்பிரளையம் வந்தபோதிலும் நீரெங்கேயிருக்கவேண்டுமென்று நினைக்கின்றீரோ? அந்தயிடத்திற் சுகத்துடனிருக்கும்படி யருள் புரிந்தோம். இன்னுஞ் சிலநாளையில் உலகமும் - கடலும்-மலைகளும்-மற்றியாவு முண்டாம். ஆதலால் நீர் இவ்விடத்தில்தானே யிருமென்றுசொல்ல, அதுகேட்டயான் நடுங்கி, சுவாமி! தேவரீருடைய கர்ப்பத்தில் யானுற்றிருக்கும்போது ஒன்றாகிய அகண்டப்பரப்பும், இரண்டு சந்திரசூரியரும், மும்மூர்த்திகளும், நான்குவேதங்களும், ஐந்துபூதங்களும், ஆறுமதமும், எழுகடலும், எட்டுமலையும், ஒன்பதுகிரகமும், பத்துத்திசையும், பதினோருருத்திரரும், பன்னிரண்டு ஆதித்தரும், அனந்தசாஸ்திர ஆகமாதிகளை எல்லாங்கண்டேன். குறைகளெல்லாம் விண்டேன். அவைகளெல்லாம் இனி யுலகில்வந் தெப்படியுண்டாகும்? பிரமனென்பவர் நித்திரைபோவதென்ன? அவர் நித்திரை கொள்ளுங்காற் பிரபஞ்சமெல்லாம் அழிவுறலென்ன? சலமும் இருளாய்த் தயங்குவதென்ன? சலமுந் தேவர் திருவயிற்றி லுறங்குவதென்ன? இதென்ன சகாயம்? இதென்னமாயம்? இதென்ன உபாசஞ் சொல்லவேண்டுஞ் சுவாமியென்று தொழுதேன் ஓ தருமநந்தனா! அதற்கு அந்தச் சர்வலோக சரண்யனுஞ் சர்வஜீவதயாபரனுமாகிய குழந்தைரூபங்கொண்ட பகவான் சொல்லுகிறார் ஓ மார்க்கண்டேயரே! பிரளயமாகின்ற நகரத்திற் பிரபஞ்சத்தைக் கர்ப்பத்திலடக்கிக் காக்குந்தன்மையால், எனக்கு நாராயணனென்று மூலநாமம் வந்தது. இதன்றியும்-பிரமனாகயிருந்து சிருஷ்டிசெய்தும், விஷ்ணுவாகயிருந்து இரட்சித்தும், உருத்திரனாகயிருந்து சங்கரித்தும், இந்தப் பூமியே பாதமாகவும், ஆகாயமேசிரமாகவும், இந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் எனக்கு அவயவமாகவும், மேலுலகங்களெல்லாம் முகமாகவும், சந்திரசூரியர் கண்ணாகவுங்கொண்டு, இத்திவ்யதேகம் பெற்ற விராட்டாகி உலகமெல்லாம் என்னை நீங்காமலும்-நான் அவைகளை நீங்காமலும் கர்ப்பத்தில் வைத்துக் கொண்டிருந்து காப்பேன்.

இதன்றியும்-பலம் நிறைந்த ஆதிவராகமாக ரூபீகரித்து, பாதலத்திற்சென்று பதுங்கியிருக்கும் பாவசம்பவரைக்கொன்று, தேவர் முதலிய யாவரையுமிரக்ஷிப்பேன். பாற்கடல்கடைந்து அமுதமெடுத்துத் தேவர்களுக்கு அளித்து, அவர்கட்கு நரை-திரை-மூப்பு-பசி-நோய்-இவைகளில்லாமற் காத்தபோது; ஆதிகூர்மமாக இருந்து மந்தரகிரியைத் தாங்கினேன். ஆயிரம் பணாமகுடமுடைய ஆதிசேடனாக இந்தப் பூமியைச்சுமப்பேன். இப்போதுவந்த இந்தப் பிரளயமும், எல்லா உயிர்களினொடுக்கமும், இனிவறழ்தலும், சூரிய சந்திரர்காய்தலும், பாவத்மான உயிர்கள் மீட்டும்பிறத்தலும், எல்லாம் என்னுடைய விளையாட்டென் றறியக்கடவை. இதல்லாமலும்-துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனஞ் செய்யும்படியாகவும், தருமங்கள் கெடாதிருக்கவும், அத்தருமதானம் - பரவுபகாரம் - பெரியோர் விசுவாசம்-புராணகாலக்ஷேபம்-இவைமுதலிய சற்புண்ணியங்கள் விர்த்தியாகவும், யுகந்தோறும் பிறந்து வருபவன் யான். கிரேதாயுகத்தில் வெள்ளைரூபமும், திரேதாயுகத்திற் சிவப்பு ரூபமும், துவாபரயுகத்தில் நீலரூபமும், கலியுகத்திற் பச்சைரூபமுமாகப்பிறந்து ; தருமதேவதை ஸ்வரூபமாய் விளங்கி இருப்பேன். இதல்லாமலும் - இந்தப் பிரமதேவனை என்னுடைய திருநாபியிலிருந்து தோன்றும்படியாகச் செய்து, இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கச் செய்வேன். அவனுறங்கும் இராக்காலம் வருகையில், சகலபுவன சராசரங்களையுங் கர்ப்பத்தில் வைத்துக் கொண்டு, இந்த ஜலப்பிரளயத்தி லுழலுவேன் இவைகளெல்லாந் தேவர்களாலும்-முனிவர்களாலும்-மற்றியாவர்களாலு மறியக் கூடா. நம்முடைய மகா மாயையை யாவராலும் அளவிடக் கூடாது. நீர். நமக்குரிய பத்தராயும் ரிஷி துல்யருமாகிய

வாற்றால், உம்மிடத்தில்மனங்கலந்து இந்தத்தேவ ரகசியங்களைச் சொன்னோம். இப்போது பிரமதேவனுறங்குமிடம்போய்ப் பாருமென்று சொல்லி என்னை அந்த இடத்திற் கனுப்பினர்.

உடனே நான்போய்ப்பார்த்தேன். அவர்இன்னு முறக்கம் நீங்காதிருக்கக்கண்டு, சிலநா ளவ்விடத்தில் தானே யிருந்தேன். அப்போது நித்திரை நீங்கியெழுந்திருந்தார். நித்திரைசெய்து எழுந்திருக்கு மொருராத்திரிக்கு ஆயிரஞ் சதுர்யுகமாயின, உடனே வெள்ளங்களெல்லாம்வடிந்து, சூரியசந்திரோதயமாகி, நக்ஷத்திரங்களும் நவக்கிரகங்களும் முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத் தெண்ணாயிரம் ஜீவராசிகளும் தாபரசங்கமங்களுமுண்டாக, சிருஷ்டிதிதி சங்காரமுதலிய தொழில்களுங் குறைவிலாது நடந்துவந்தன. இந்தப்பிரளயம் நான் கயிலாசபதியைப் பூஜித்து எமனைவென்ற முதற்காலத்திற்கண்டபிரளயம். இப்பால் நடந்த பிரளயத்திற்குக் கணக்கில்லை. இவைகளெல்லாம் நாமறிவோம். கேளுங் குந்திபுதல்வனே ! இவ்வுலகத்தில் முதல் மநுவந்தரப்பிரளயம். அப்பாற் பிரமப்பிரளயம், அப்பாற் சர்வசம்மாரப் பிரளயமென்று சொல்லத்தக்கது. இனிமேலும் இப்பேர்ப்பட்ட பிரளயமெத்தனைவருமோ? அத்தனைக்கும் வடபத்திரசாயியாகிய மகாகடவுளின் கர்ப்பமே காவலாக இருக்கும். அப்படிக்கிருக்கும்படியான திருவிளையாட்டை மேற்கொண் டருளிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே இங்கு ஸ்ரீகிருஷ்ணபகவானாகத்திருவவதாரஞ்செய்து உங்களுக்கு மைத்துனனென்னும் பந்துவிஷய சம்பந்தமாக உடம்பட்டிருக்கும்போது, உமக்குச் சரியாக யான் ஆரைச்சொல்லப்போகிறேனென்று மார்க்கண்டேயர் சொல்லியருளினர்.

கலிகால முறைமை.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே ! இவையனைத்தையுந் தருமராஜன் கேட்டு, அவரருகில் ஏதுமறியாதவரைப்போற் புன்னகைகொண் டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய முகத்தையு நோக்கி, மனதில் தியானித்து, மார்க்கண்டேயருடையபாதங்களிற்பணிந்து, சுவாமி ! தேவரீர் அநேகயுகங்களையும் ஜலப்பிரளயங்களையுங் கண்ட உத்தமராகையால், பெரியோர்கள் சாஸ்திரபுராண நீதியாய் இனிவருங் கலியுகத்தில் வருணாச்சிரமமுஞ் சகலதருமங்களுங் குன்றிப்போமென்றுசொல்லி இருக்கின்றார்களே: அதினுடைய விபரங்களையுஞ் சொல்லவேண்டுமென்றுகேட்க மார்க்கண்டேயர் சொல்லுகிறார். கேளும் முழுமதிவட்டக் குடையினையுடைய முதல்வனே ! தருமதேவதையென்று சொல்லப்பட்டது பரிசுத்தமாகிய வெள்ளை எருதின்ரூபமாக, நாலுகாலும்-இரண்டுகொம்பும்-உயர்ந்த முசிப்பும் - பூமியிற்படியும்வாலுமுள்ளதா யிருக்கும். இது முதல்யுகத்தில் நாலுபாதத்துடனும், இரண்டாம்யுகத்தில் மூன்றுபாதத்துடனும், மூன்றாம்யுகத்தில் இரண்டுபாதத்துடனும், கடையுகத்தில் ஒருபாதத்துடனு நடக்கும். அதென்னவென்றால்-யுகந்தோறும் பஞ்சிட்டுப் பாரமேற்றுந் தன்மைபோற் கொஞ்சங் கொஞ்சமாகப் பாவமேலிட்டுவந்து, இந்தக் கலியுகத்திற் பிடிக்கும். அதெப்படியெனில், பிராமணாள் உதயஸ்நானம்-செபம்-காயத்திரி-அவுபாசம் - ஓமம் - கருமம்-தவம்-வேதாத்தியயனம்-சுசி-ஆசாரம்-நியமம்-தேவதாபத்தி-இவைகள்முதலிய யாவும்விட்டு, பொருளவாக்கொண்டு, தம்மை வணங்குமிடத்திற்குத் தாம் போய் வணங்கி யாசித்துக் காலத்தை வீணாகக் கழிப்பார்கள் அவர்கள்முகத்திற்பிரமதேஜசிராது வாக்குப் பலிதமிராதுயாவருமதியார்கள். வந்தனைகளுடன் துதியார்கள். மமதாங்கார மேலிட்டுத் திரிவார்கள்.

இதனால் க்ஷத்திரியர் நித்தியஸ்நான செபங்களையும், நீதியாகிய விக்கியானங்களையும், தருமதானாதிகளையும், தேவதார்ச்சனை-காலநீதி விசாரணை - சாதுக்கள் தரிசனம் இவைமுதலியவைகளையும் நீங்கி திரவியத்தி லாசை யதிகங்கொண்டு, தன்னுயிர்போல் மன்னுயிரை நோக்குவது விடுத்து, உயிரைக் கைக்கொள்ளும் யமனைப்போற் கடுகடுத்து, அன்னிய ஸ்திரீகளிணைசைகொண்டு, பெரியோர்களுக்கு உபகார முபசாரமில்லாமல், யாகாதிகளை நடத்தித் தேவர்களுக்குஅவிர்ப்பாக மீயாமல். கொடுங்கோல்செலுத்திக் குறைவார்கள். இதனால் மாதமும்மாரிபொழிதலும், குடிகளினுடைய வளங்களுங் குறைபடும். பயிர்கள் பாழாகும். துற்சோபம்-துற்பயங்கரம்-துர்மரணம் - துர்வியாதி-இவைகள்மேலிட்டு, உலகத்தி லுற்றோர்கள் கொலைகளவு-கள்-காமம்-பொய்-இவைகளிற் பயின்று, குடிகேடராகத்திரிவார்கள். அதனால் மானுக்கள் தவமும் யாகமுஞ் செய்வதற்கில்லாமற் பயமுடையவர்களாய், மிருக உபத்திரவங்களுமேலிட்டு மெலிந்துவாடித் திரிவார்கள். உலகத்திற்பொய்யும், பொல்லாங்காகியபகையும், கெடுநினைப்பும், அசத்தியமும் பெருகும். பிறருடமை-பிறர்பொருள்-பிறர்தாரம்-இவைகளைக் கவர்தலேமேலாகும். மனிதர்-மரங்கள்-விலங்குகள்-பக்ஷிகள் இவைமுதலியவைகட்கு வலிகுறையும் பூமியிலுண்டாகுங் கிழங்குமுதற் சகல வஸ்துக்களுக்கும் ருசிகெட்டுப்போம், ஜலம் வெப்பங்கொண்டுப்பாகும்பூத்தல் காய்த்தல்-பழுத்தல்-இவை யாவுங் குறையும். பாலுள்ள மாடுகள்முதலியதும் வறண்டுபோம். சகலமான பேர்களுக்கும்வியாகூலமுந் துன்பமுநிறையும் மேலாகியகுலத்தோர்தாழ்வாகிய அற்பத் தொழிலைச் செய்தும், அற்பகுலத்தோர் மேலாகியதொழிலைச்செய்தும் பிழைப்பார்கள். தெய்வதூஷணை யுண்டாகும். விர

தம் நோன்பு பிதுர்கன்மம் இவைகளெல்லாம் பொய்யென்றிகழ்வார்கள். ஏதோ ஜன்மாந்திர தவத்தையுடைய புண்ணியர்கள் ஒருவேளை இவைகளையெல்லா மநுஷ்டித்துவந்தால், மற்றையர்கள் கூடிப்பழிப்பார்கள்.

பின்னுஞ்சிலர் பிரமனுதியர் அர்ச்சாவதாரங்களை நிந்தித்து, தெய்வமெங்கே! தருமத்தின் பலனெங்கே! பிதுர்த்தேவதை யெங்கே! என்றுகேட்டிகழ்வார்கள். ஆகாரம் நித்திரை மைதுனம் இம்மூன்றேயுள்ளதன்றி, வேறொன்றுமில்லையென்யார்கள். தானதருமம் பரவுபகாரம் தயைசாந்தம் பொறுமைபண்பு சீவகாருண்யம் இவைகளையெல்லாம் நீங்குவார்கள். பெரியோர்களுடைய படாலயம் கோவில் குளம் தீர்த்தம் திருநாள் இவைகளெல்லாவற்றையுங் கெடுப்பார்கள். செய்பவர்களையுந் தடுப்பார்கள். அண்ணன் தம்பிசுற்றம் தாய்தந்தை ஆசான் இவர்கள் முதலிய பேர்களையும் விலக்கிக் கலக்கிவிடுவார்கள். பரஸ்திரீ பிள்ளைக்குச் சகலசன்மமும்பாக்கியமுஞ்செய்து, குலஸ்திரீபிள்ளையைக் கோமணுண்டி யாக்கிவிடுவார்கள். அக்கினிசாக்ஷியாகவும், ஆதிப்பிராமணுள்-பந்துக்கள்-சால்-கரகம்-அரசாணிக்கால்-இவைகள் சாக்ஷியாகவும் பிரமாணஞ்செய்து, வேதமந்திரங்களை வேதியரோடோதித்தாலிக்கட்டிப் பாணிக்கிரகணஞ்செய்தமனைவி மனம்நொந்து குழைந்துவாட, பரஸ்திரீகளைக்கூடிப் பூரித்துமகிழ்ச்சியுறுவார்கள். தருமசொத்து - பிராமணருடைமை-சிவசொத்து-விஷ்ணுசொத்து- இவைமுதலியவைகளை யெல்லாந் தருமஸ்வரூபியெனக்காட்டி அபகரிப்பார்கள் பிறர்பொருளை அறத்தின்வழி செலவழிப்பார்கள். தம்பொருளைத்தாழப்புதைப்பார்கள் மதுமாம்ச பக்ஷணஞ்செய்வார்கள். புருடரை ஸ்திரீகள் மதியார்கள். பிள்ளைகள் தந்தை தாயைத் துதியார்கள். ஆசாரியரைச் சதிசெய்வார்கள். ஆசாரியருஞ் சிஷ்யரை வஞ்சிப்பார்கள். இப்படி பலவிதங்களாகசகலமுங்குறுகி, இந்தயுகமுடிவிற் புருடர்வயது பதினாறாகவும், ஸ்திரீகள்வயது பன்னிரண்டாகவும், எழுவயதிற் புதல்வனையும் புதல்வியையும் பெறுவார்கள். இப்போதிருக்கிற ரூபங்குறைந்து குள்ளமாவார்கள். மெத்தவுந் தரித்திரப்படுவார்கள் ஈனர்கள்மேலிடுவார்கள் எல்லா மதஸ்தருக்கும் ஓரேகடவுளென்றும் நாமெல்லா மவருக்குரியவர்களென்றும். சமயபேதஞ் சாதிபேதமில்லையென்றுஞ் சகலத்தையு மாற்றுவார்கள் தாழ்வு உயர்வுயென்பதில்லாமல், ஈனர்வேதசாஸ்திர புராணஞ்சொல்லவும், மேலோர் அதைக்கேட்கவுநேரிடும் ஸ்திரீகள் பதிவிரதையென் றெண்ணப்படாமற்போகும். அநேகர் குரூபிகளா யங்கவீனராய்ப் போவார்கள்.

இப்படி வருணசங்கரமாக முறைமைமாறிப்போகுங்காலத்தில், சர்வரக்ஷகனுகிய விஷ்ணுதேவர் அவதரித்து, ஈனர்களைமாட்டி, பிராமணர்களை நிலைக்கநாட்டி, காயத்திரி மந்திர ஜெப மோம யாகங்களெல்லாஞ்செய்துவைத்து, சகலசாதியாரையும் வருணுச்சிரமந் தப்பாமல் நடக்கும்படியாக்கி, தருமதேவதை ஒருபாதத்தில் நடப்பதை நீக்கி நாலுபாதங்களில் நடக்கவுஞ்செய்து, கோயில்-குளம்-தீர்த்தம்-திருநாள் இவையாவுந்தொடரப்பண்ணி உலகத்தைச் சுகப்படுத்திவைப்பார் அதுமுதலாகக் கிரேதாயுகம்பிறந்து, தர்மதேவதையுஞ் சந்தோஷத்துடன் நடக்கும் மாதமும்மாரிபொழியும். மநுவிக்யானமுடையமன்னவர்களும் மறையவர்களுந் தானம் தருமம் உபகாரம்முதலியவைகளைநடத்தி, சத்தியத்தைவகிப்பார்கள். ஸ்திரீகள் நல்லநடத்தையுடையவராவர். ஆயுசுவிர்த்தியாகும் தான்யமலிவும் விளைவும்பெருகும். சுவர்க்கலோக விர்த்தியும் நரகலோகப்பாழும் யாகாதிதருமங்களும் தேவர்களின்களிப்பும் அவிர்ப்பாகச்சிறப்பும் அரசர்நீதியுமோங்கி, யாவரும் நித்தியமங்களமாகவாழ்வார்கள். ஆகையால், பிராமணுலே ராஜநீதி மழை மன்னுயிர்தழைத்தல் ஆயுள்விர்த்தி தபம் ஜெபம் ஓமம் யாகம் வேதமந்திரம் தேவதாபூஜை ஆசீர்வாதம் இவையனைத்து மேன்மேல்வளருமென்றறியக்கடவீர். பிர்மா விஷ்ணு பரமேஸ்வரன் தேவேந்திரன் முதலியதேவர்களுக்கு மேலானவர்கள் பிராமணர்கள். இவர்களாலே எவர்களுக்கும் பூஜாவிதி முதலியவைகளை நடத்தல்வேண்டும். இதுவேதங்களிற் கூறியிருக்கும்விதி. இந்தப்பிரகாரம் யாரொருத்தர் அந்தப் பிராமணர்களுடைய மகத்துவங்களைக்கேட்டு வருகின்றார்களோ! அவர்களுக்குச் சகலதுன்பமும் நோயுஞ் சத்துருபீடையு மகன்று நித்தியராவார்கள். என்றுசொன்ன உத்தமரைத் தருமபுத்திரர் பணிந்து ஓ சித்தசனை யெரித்தருளிய நெற்றிக் கண்ணனிடத்திற் பக்திசெலுத்திய சத்வகுணமுடைய கர்த்தனே! இன்னும் பிராமணர்களுடைய பெருமையைச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்லுகிறுர்.

பரிச்சித்துராஜன் சரித்திரம்.

கேளும் அரசனே! அயோத்தியாபுரியையாண்ட சூரியகுலதிலகனுகிய பரிச்சித்தென்றொருராஜனிருந்தான். அவன் ஒருநாள் சகலபடைகளோடும் வேட்டைமார்க்கம்போய்ச் சகல மிருகங்களையுங் கொன்று விளையாடி யுலாவித்தனியாய்த் திரியும்போது, சூரியன் உச்சியில்வந்தான். கடும்பகலாகையால் அரசனுக்குத்தாகம்நேரிட்டு, ஓர் தடாகத்தை நாடியோடி வாடியமன்னவன் தானுடிய வேட்டையால் வந்த வெப்பவருத்தந்தீர அத்தடாகத் திறங்கப்போகையில், அந்தக்குளத்தின்கரையில் ஒருஸ்திரீ நிற்கக்கண்டு விசனங்கொண்டு, யாரோ! எவரோ! அமராபதிமாதோ! அளகாபுரி மங்கையோ! நீருறைமானே! வரைவளர்

தேனோ, நாகலோக நங்கையோ, யக்ஷகந்திருவரரிவையோ, அல்லது மன்மதன்விடுத்த தெரிவையே, என்று நைந்து நொந்தவனாய், கரும்வண்டைப்போன்ற விழியும், பூச்செண்டைப்போன்ற முலையும், கூற்கொண்டல் போன்றகுழலும், கற்கண்டைப்போன்ற மொழியும், வாழைத்தண்டைப்போன்ற தொடையும் பெண்யானைக் கன்றைப்போன்ற நடையும், பாதம் வரையிற்றாழ்ந்த ஜடையும், என்னைநோக்கும் அருள் விழிக்கடையும், சிவந்த விதமாகிய செங்கிடையும் - காமன் படையும் - அவனது குடையு முகமாகக்கொண்டு நின்றுபார்க்கும் மாதரசியாரோ, மாமலைமேலுலாவும் மயிலோ, மாமரச்சோலையிற் குலாவுங்குயிலோ, வாள்விழியிரண்டும் அயிலோ, அல்லது மருண்டு புரளுங் கயலோ, மலர்மேலுற்ற அன்னமோ, வடிவஞ் சொலிக்குஞ் சொன்னமோ, என்று மயங்கிச் சமீபத்திற்சென்று வார்த்தையாடும்போது, அந்த நங்கையானவள் சொல்லுகின்றாள்.

கேளும் அரசனே! நான் ஆயுதமகாராஜனுடைய பெண். என்பேர் சோபனை. உம்முடன்கூடிவிளையாடி வாழ்வதற்கு உன்னிவந்தேன். ஆனாலொரு வரங் கொடுக்கவேண்டும் அஃதென்னவென்றால்-உம்மைக் கலந்து நான் வாழும்போது என்னைச்சடலத்தில்விடாது யெத்தனைநாள் வைத்திருந்தாலும் இருந்து மருவுவேன். தண்ணீரில் யெப்போ திறங்கவைப்பீரோ, அப்போதும்மை விட்டுப்பிரிவேன். என்று சொல்லிய அப்பூவையின் மொழியைக்கேட்டுச்சம்மதித்து, இருவரும் அந்தக்காட்டிற் காந்திருவர் விவாகமாகக் கலந்து, தேகத்திலுண்டாகும் வியர்வையைத் தென்றற்காற்றினாற் புலர்த்தி, இருவரும் ரதமேறிப் படைகளுடன் கலந்து, கடலென மேளமார்ப்ப அவ்வடவிகள் நீங்கி, அயோத்தியாபுரியிலோங்கி, மாரனும் இரதியும் போலும்-மாலுந்திருவும்போலும் - பாலுநீரும்போலும்-பாடலும் பொருளும் போலுஞ் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். இப்படி யொருவரையொருவர் பிரியாமல் ஒருமையாக மருவும்போது வசந்தகாலம் நேரிட, அப்போது சுகந்தபரிமளமேலிட்ட ஓர் சந்தனச் சோலையில் அச்சோபனையும் ராஜனும் புகுந்து, அங்கிருந்த தடாகத்தில் வந்திருந்த ஸ்திரீகளுடன் கலந்து தாம் முன்சொன்ன வார்த்தையை மறந்திறங்கி இருவரும் மற்றியாவரும் விளையாடினார்கள். அப்போது ஸ்திரீகளெல்லாருமிருக்க அரசன் சோபனையைக் காணாமலேங்கித்திகைத்து, குளமுழுமையுந் தடவிப்பார்த்து, அந்தச்சலமியாவையும் ஒருநொடியி லிறைப்பித்து சேற்றுக்களையும் வாரிக் கரைமீதேற்றித்தேடினன். அப்படியுங்காணாமல் யெப்படிப் போவாளென்றுநெடுநேரஞ் சிந்தைசெய்து, இவ்விடத்தில் தவளைகள் தானே யிருக்கின்றதன்றி வேறொன்றினையுங் காணோமே; ஆகையால்இந்தத்தவளைகளைவிழுங்கிவிட்டதென்றுபெண்ணின்மயலால்மதிமயங்கியேதோன்றுந் தோன்றாதவனாகி, (அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்) என்பதுபோல் அவைகளையெல்லாங்கொல்லச் சொன்னான்.

இன்னமும் ஒருவன் ஒருகுடும்பத்தில் புகழ்பெற்றாலும் இகழ்வுற்றாலும் அவனைச்சார்ந்த குலத்தாருக்கெல்லாம் ஆகுமல்லவாவென் றெண்ணி, ஊர்களிலும் நாடுகளிலுமிருக்குங் குளங்கள்-நதிகள்-குட்டைகள்-ஆறுகள்-மடுக்கள்-வாவிகள்-கூபங்கள் - தரவுகள் கயங்கள்-ஓடைகள்-கழனிகள்-பள்ளங்கள் - படுகுழிகள் இவைகளிலிருக்குந் தவளைகளையெல்லாமுங் கொல்லச்சொல்லிச் சேனைகளுக்கு உத்தரஞ்செய்தான். அப்படியே யெல்லாவற்றையுங் கொன்று குவித்தார்கள். அந்தச் சமயத்திற் சாதிமானஞ் சமயமானஞ்சங்கிரமருக்கும் உண்டென்று சொல்லுந் தன்மையினால் இந்தத் தவளைகள் இறந்துபோவதைக்கண்டு தரியாதிரங்கிய இவைகளுக் கரசனாகிய மண்டூகநாதனென்பவன் பிராமணவேடங்கொண்டு வந்துநின்று, அரசனைக்கண்டு சிறப்புடன் வாழ்த்தி, ஐயோ! சூரியகுலத்திலுதித்த மன்னவர்கள் ஒன்றைத்துயருறக் கொல்லார்கள் தங்கள் பிராணனையாகிலுங்கொடுத்து ஆபத்துவந்தகாலத்து இரட்சிப்பார்கள். அப்படிப்பட்ட குலத்தில் தோன்றி வெகுவாகிய அல்பவுயிர்களைக் கொல்லத் துணிந்தவாறு சொல்லவேண்டுமென, கேளுமையா பிராமணனே! என்னுயிர்க்குயிராகியமனையாளுடன் ஓர் தடாகத்திலிறங்கி விளையாடும்போது அவளைக்காணோம் சலத்தையும் இறைத்துப் பார்த்தேன். இந்தத்தவளைகளன்றி வேறொன்றையுங்காணேன். ஆதலால் தவளைகள்தான் அவளை மோசம் பண்ணி விட்டனவென்று கோபங்கொண்டு கொல்லலுற்றேன் என்று சொல்லக்கேட்ட பிராமணரூபன் சொல்லுகின்றான்

ஓ அரசனே! ஸ்திரீகளுடைய மனது தங்களுக்கிச்சையிருந்தால் எத்தனைபேர் தடுத்தாலுங் கேளார்கள் இச்சையில்லாவிட்டால் ஈசன்சொன்னாலுமிணங்கார்கள். இஃதுனக்குத் தெரிந்திருந்தும், சாஸ்திரங்களெல்லாங் கற்றுணர்ந்தும், இப்படிபழியும்பாவமுஞ் சுமக்கலாமா? அல்லது நமக் கீடில்லாத சொல்பஜெந்துக்களைக் கொன்றதினால் நீங்கிப்போனபெண் வருவாளா? இதென்ன அநியாயம்? போகட்டும்: இப்போதும் என்பெண்ணுக் கென்னவகை சொல்லுகிறீர்? நான்நெடுநாளாய்ப் பிள்ளையில்லாமல் வருந்தித்தவத்தினாற்பெற்று வளர்த்துவந்த அச்கோபனை யென்னும் பெண்ணானவள் கன்னிதடாக தீரத்தி லுலாவிக்கொண்டிருக்கக்கண்டு நீரழைத்துவந்துவிட்டதாய்க் கேழ்விப்பட்டு ஊரெல்லாந் தேடிக்கொண்டுவந்தேன். ஆதலால் என்பெண்ணைக் கொண்டுவாருமென்று கேழ்க்கவே அரசன் பயந்து, இதென்னபாபம்? இனி என்ன விளையுமோ? எதாய்முடியுமோ அப்பெண்நான் அரசன் குமாரத்தி யென்றாளே: அந்தோ! தவளை

களைக் கொன்றபாவமும், பிராமணனிடுஞ் சாபமும் நமக்கு ஒன்றாய் நேரிடுங்காலமோ விதுவென்று எங்கித்தியங்கி, மாறுத்தரஞ்சொல்லவு மனமெழாதிருக்க அவனை அப்பிராமண உருவநோக்கி; ஓ அரசனே, பயப்படாதிர் அந்தப் பெண்ணானவள் உம்முடன்கலக்கப்பேசும்போது யென்னை நீரிலிறங்கவொட்டாமல் வைத்திருமென்று சொல்லியிருக்க, அம்மெல்லியல் மொழியை மறந்து நீரிலிறங்கி விளையாடித் துறந்து மிகவும் வாடுகின்றீர். எங்குந் தேடுகின்றீர். வேறொன்று நாடவேண்டியதில்லை. நான் பிராமணனல்லேன். தவளைகளுக்கெல்லாம் அரசன் என்பேர்தான் ஆயுதன் நீர்மொழிதப்பவும் நீரில் முழுகிப்போகிய பெண் என்குமரி அவள்பேர் சோபனை என்று சொல்லவும் இராஜன் நகைத்துச் சிரக்கம்பஞ்செய்து, நீரும் உம்முடைய பெண்ணும் அஞ்சலசித்தனாகிய என்னைச் சஞ்சலசித்தனாக்கிவிட்டீர்கள். ஆ! ஆ! இது மெத்தக் கெட்டி, ஐயாவே எங்கேயும்முடையபெண்ணை யென் கண்ணிற்காட்டி யென்விசனத்தை யோட்டிவையும் இல்லாவிட்டால் என்பிராணனுக் கழிவுவருமையனே யென் றிரங்கினன்.

உடனே அப்பிராமணரூபனாகிய ஆயுதராஜன் பெண்ணைத் தருவிக்கவும், மங்கையானவள் வந்து தந்தையைப் பணிந்து, மகாராஜனுடைய அகங்கையைப் பிணைந்து நின்றனள். அப்படி நிற்கக்கண்ட வேந்தன் வெகுகாலம்விட்டு நீங்கிய உயிர்வந்து உடலில் உற்றமைபோற்களித்து நிற்கையில், தந்தையானவன் பெண்ணைநோக்கி, அம்மா! மறப்படாத இரவிகுலோத்துங்கனை வையகம் பழிக்கப் பாவமேற்றி வைத்தாய், உன்னாலேவெகு தவளைகள் மாண்டன. ஆகையால் இந்தப்பாவம் உனக்கேயொழிய தோன்றலுக்கில்லை அதனால் உன்வயிற்றிற்பிறக்கும் பிள்ளைகளெல்லாங் கொடிய பாவ துஷ்டாளாய்ப் பிறக்கக்கடவவென்று சபித்து, இனிமேலும் பயமில்லாமல் வாழ்வைப் பெறலாமென்றுகன்னியின்கையைப்பிடித்து மன்னவன்கரத்திலமைத்துக் கையடைகொடுத்துவிடுத்து, அடித்துக்கிடந்த தவளைகளையெல்லாம் எடுத்துக்குளத்தில் விடுத்து, கடவுளினுடைய அருளினால் அவைகளெல்லாம் பிழைக்கத்தான்மறைந்து, பழயபடி தான்குளத்திற்புகுந்து வாழ்ந்துகொண்டிருந்தான் ஆயுதனனவன். இப்பால் பொறையும்நிறையுமுடைய இறையும் இறைவியுங் கூடிக்கலந்து அரண்மனைசேர்ந்து வாழ்ந்திருக்கும் நாளையில், இந்தச்சோபனையானவள் கர்ப்பவதியாக விருந்து ஒருபிள்ளையைப் பெற்றாள். பிறகொருபிள்ளையைப் பெற்றாள். அரசன் இவர்களுக்குப்பேர் ஜலன் - நலன் - என்று நாமதேயம் புரிந்து, ஆறுகருமமுங் கிரமமாகச்செய்து. இராஜநீதிமுறை-வில்-வாள் - வேல் - கதை - யானை - குதிரை - தேர் இவை முதலாகிய யெல்லாக் கல்வியுங் கற்பிக்க அவையனைத்துங் கற்று விளங்கிய பிள்ளைகளில்மூத்த பிள்ளையாகிய ஜலனுக்குப் பட்டங்கட்டி, முத்திரைமோதிரமுஞ் செங்கோலுங் கொடுத்து, இராஜநீதிகளெல்லாஞ்சொல்லி, மந்திரி-பிரதானி-சேனாபதி-முதலியபேர்களுக்கும் புத்திமதிகளைச் சொல்லிவிட்டு, பரிச்சித்து மகாராஜன் தபசுசெய்யக் காட்டுக்குப் போய்விட்டான்.

ஜலன் - நலன் - என்னு மிவர்கள் சரித்திரம்.

ஓ தருமராஜனே! இப்பால் இந்தப் புத்திரன் நாட்டையாண்டு வரும்போது, ஒருநாள் காட்டிலிருக்கும் மிருக உபத்திரவங்களைக்கேட்டு, வேட்டையாட வீட்டைவிட்டுச் சகலசேனைக் கூட்டத்துடன் அசுவங்களைப் பூட்டிவந்த இரதத்தின்மீதில் தாஷ்டியுடனேறி, மேட்டிமையாகக் கோட்டினையுடைய குஞ்சரங்கள் சூழப்போய்க் காட்டைவளைத்துக்கலைத்து மிருகங்களை வெருட்டிவதைக்கும்போது, ஒரு மானானது பாய்ந்து வேகத்துடனோடக்கண்ட வேந்தன் அதிககோபத்துடன் அதையடிக்கவேண்டிச் சாரதியை நோக்கி இரதத்தை முடுக்கிவிடுகவென்று மொழிய, அதுகேட்ட சூதனானவன் சுவாமி! நமது தேரிற்கட்டிய குதிரைகளெல்லாங் காலைமுதற்கொண்டு திரிந்தபடியாற் கால்களோய்ந்து வியர்வைபாய்ந்து விலாழிபெருகிக் கருகிப்போயிருக்கின்றன. இனி இதுகளோடாது. தேவரீருக்கு மானையடிக்க மனமிருக்கின்றமையால் உறுதிமொழி பொன்று சொல்லுகிறேன் அது என்னவெனில்-நமக்கெதிரில் வாமதேவ மகாரிஷியினுடைய ஆச்சிரமந் தெரிகின்றது அங்கேபோவோமாகில் அவரிடத்தில் நல்ல அசுவங்களிருக்கின்றன. அவைகளை இதிற்போட்டுக்கொண்டு வாயுவேகம் மனோவேகத்துடன் நடத்தி மகனைக்கொன்று உமது மனமகிழ்ச்சி யுறலாமென்று வலவன் சொல்ல, அதுகேட்ட அரசன் அந்த மகானுபாவருடைய ஆச்சிரமத்துக்குத் தேரைநடத்திப் போய் இறங்கி, அவரெதிரிலேசென்று வணங்கியெழுந்துநின்று, சுவாமி! தேவரீருடைய குதிரைகளைச் சற்றுநேரத்திற்கு இரவலாகக்கொடுத்தால் இந்தரதத்திற் பூட்டிக்கொண்டு நான் நாடியமானை அடித்தபிற்பாடு தேவரீர் குதிரைகளைக் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன். அதுவரையில் என் குதிரைகளையும் இங்கேதானே கட்டிவைத்துப் போகிறேனென்று கேட்டான்

அதைக்கேட்ட வாமதேவர் மன்னவனைநோக்கி, நீங்கள் மகாராஜர்கள். செல்வவந்தாள். நாங்களேழைகள். உங்களுக்கு ஒருபொருள் கொடுத்தால் திரும்பவுங் கொடுக்கமாட்டீர்கள். நாங்களும் உங்களைக்கேட்கப்படாது. கேட்டால் மனவருத்தமுங் கோபமும் வரும். என்று சொல்லக்கேட்ட அரசன்-சுவாமி! பிராமணருடைய சொத்துகள் அற்பமானாலும் ஆசைவை

க்கப்படாதென்று பெரியோர்களாலுஞ் சுருதி வசனங்களினாலுங் கேட்டும் உணர்ந்து மிருக்கும் யாகங்கள் அப்படி வைத்திருப்பதில்லை. (ரிஷிப்பண்டம் இராத்தங்காது,) என்னும்பழமொழிபோல உடனே அனுப்பி வைத்து விட்டு மறுகாரியம் நோக்குவேன். இதற்குச் சந்தேகமில்லை. என்று உறுதிவசனஞ் சொல்லிக் குதிரையைவாங்கி இரதத்திற்பூட்டிக்கொண்டு வனத்திற் சென்று, மானைக்கண்டு அதையடித்துங் கொன்று, சந்தோஷத்துடன் திரும்பி வாமதேவரிஷியின் வனத்தைவிட்டு வேறுமார்க்கமாகப் பட்டினம்போய்ச் சேர்ந்தான். இப்படியிருக்க-சிலநாள் தரித்து வாமதேவரானவர் தன்னுடைய சிஷனையேவிக் குதிரைகளைவாங்கிவரச்சொன்னார். அப்படியே அந்தப் பிராமணப்பிள்ளையானவர் அயோத்தியாபுரிக்குவந்து, சிங்காசனத்திலிருக்கும் ஜலமகாராஜனைக்கண்டு ஆசீர்வதிக்க, அரசன் நீயாரென்றுகேட்டான். உடனே இந்தசிஷனானவன் நீர்சிலநாளைக்கு முன் காட்டுக்கு வேட்டையாடவந்தபோது உம்முடைய குதிரைகளிளைத்தபடியால் வாமதேவமகாரிஷியினிடத்திற்குதிரைகள் வாங்கிக்கொண்டுவந்து உடனே கொடுக்கிறதாகச்சொல்லி இதுவரையிலுங் கொடுத்தனுப்ப வில்லையே: அரசன் பலவிதக் கியாபகத்தினால் மறந்து விட்டாற்போலுமிருக்கின்றது. நீபோய் எச்சரித்து வாங்கிவாவென்று என்னை அனுப்பிவைத்தாரென்று சொல்லினன்.

அதைக்கேட்டவுடனேஜலன்கலகலவென்றுநகைத்து, ஓய் பிராமணனே! நான் கொடுத்தவன்றான். அவர்வாங்கினவர்தான். நீர்பெற்றுப் போகிறவர்தான். போங்காணும் போம்; என்று நகைத்தான். அதைக் கேட்டு அந்தச்சிஷனானவன்போய் ஆசாரியரிடத்தில் நடந்த வர்த்தமானங்களைச்சொல்ல, உடனே அவருக்குக் கோபம்வந்து, சில பிராமணர்கள் தம்மைப் புடைசூழவந்து அயோத்தியா நகரத்திற் புகுந்து, அரசபுரியுஞ் ஜலனிடத்து அடைந்து, ஓ செல்வந்தனே! நீரென்பரிகளை என்னசொல்லிவாங்கிவந்தீர்? நானென்ன சொல்லிக்கொடுத்தேன்! அவற்றை மறந்துபென்னை யேளனஞ்சொல்லி அனுப்பிவைத்தீராமே! ஆ! ஆ! சீமானே! என்குதிரைகளை ஏதொருதடையுங் கூறாமற்றாரும். என்றுகேட்கும்போது ராஜனானவன் சொல்லுகிறான். நான் உம்முடைய குதிரைகளைக்கொடுக்கமாட்டேன். என்னுடைய இரண்டு குதிரைகளையுந் தருவேன். இன்னும் வேண்டிய குதிரைகளுங் கொடுக்கிறேன். திரவியங்களுந்தருகிறேன். நீர் உம்முடைய தபோவனத்திற்குப்போம் இனி இந்தக்குதிரைகளின்மீது ஆசைவைக்கவேண்டாம். நிராசைபண்ணிக்கொண்டு நல்ல மனதுடனே யெழுந்துபோம். என்றுசொல்லவே வாமதேவருக்குக்கோபம்வந்து, வேந்தனே! அன்று நீபரவசஞ் சொல்லிக்கொண்டுவந்து, (கையிலகப்பட்டபொருளுக்குக்கணக்கில்லை.)என்னும் பழமொழிபோல் இப்படி சொல்லத்தகாது. மேலும் பிராமணர்களுடைய சொத்துக்களையும்- அடைக்கலம்வைத்த பொருள்களையும் - அபகரிக்க ஆசையுற்றவர்கள் பாவமாகிய நரகத்திலழுந்துவார்கள். பசிக்குப் பனம்பழத்தை யுண்டாற் பின்னர்படும்பாட்டைப்படுவோமென் றன்னாநீர். நரகமென்பதை நாளைக்குப் பார்த்துக்கொள்ளுவோ மென்று மறைநீதிதப்பி நினைப்பீராகில், என்குதிரைகள் இரண்டும் இனிஉமக்குதவாது. இப்போதே நல்லமனதுடன் கொடுத்துவிடுமென்று கேட்டனர்.

அதற்கவ்வரசன்புன்னகைசெய்து,ஓவேதியரே! கேடாகிய நரகத்திற்குப்போக யிருக்கும் நான் கொடுப்பேனா? சுகங்கெட்டால் விரதலாபம். விரதங்கெட்டாற் சுகலாபம். இரண்டுங்கெட்டால் என்னவுண்டென்று இறைவன்சொல்ல, மறைமுனி சொல்லுகிறார்: வீணாகஎன்பிராணனுக்கு ஆனிதேடிக் கொள்ளுகிறீர்? வேண்டாம். குதிரைகளைக் கொடுமென்றுமீட்டும் பற்பல இன்சொற்களாற் கேட்டனர். அப்போது இராஜனுக்குக் கோபம்பிறந்து, கண்கள் சுழலச் சமீபத்திலிருந்த ஒரு வீரனை நோக்கி, உன்சூலாயுதத்தால் இந்தக காட்டு மனிதனைக் குத்திக்கொன்று விடென்று கோபித்துச்சொன்னான். உடனே அந்த வீரன் பலபராக்கிரமத்துடன் பற்கடித்துச் சூலத்தையோங்கிச் சமீபத்தில்வர, அவன்வருமுன்னமேநெற்றிக்கண்ணை மறைத்து வந்த உருத்திரனைப்போன்ற வாமதேவா வெகுண்டுமனவருத்தமுற்றுங்காலையில், அநேகம்பேர் ராக்ஷதசிரேஷ்டாள் பிண்டி-பாலம் - சூலம்-வேல்-கதை-தோமரம் - இவைகளுடன் உலகம்நடுங்க அங்குற்றவர்யாவருமொடுங்கவந்து, ஜலனென்னும் இறைவனையுஞ் சூலம்பற்றிவந்த வீரனையும் வாரிப்பிடித்துக் கிழித்தெறிந்து போய்விட்டார்கள். மகாத்மாவுந் திரும்பித் தானிருக்கும் வனம்வந்து சேர்ந்தனர். இப்பா லிவ்விடத்திருந்த அமைச்சர் - சேனாபதியர்- முதலிய பேர்களுந் தம்பியுமளவற்றதுக்கமுற்று, மிகுந்தவிசனத்துடன் அண்ணலைக் கொண்டுபோய் ஈமத்தில்வைத்துச் செய்யுங் கருமங்களெல்லாஞ் செய்து முடித்து, பத்துநாளுஞ் சூதகமிருந்து, அந்தியகருமமுந்தீர்த்துக் கொண்டு புனிதராகி, உலகத்திற்கு இறைவன் வேண்டியபடியால் இறந்தவனுக்கு இளையவனாகிய நலனுக்குப் பட்டாபிஷேகங் கட்டிவைத்தார். அந்நலன் யாவரும்வணங்க மகாமேன்மையோடும் வாழ்ந்துகொண்டு வந்தான்.

கேட்டீரோ தருமநந்தனரே! இந்த நலனென்னுமிராஜன் அரசாண்டுவருகையில், ஓர்சிறந்த ராஜகுமாரத்தியை விவாகஞ்செய்து துன்முகனென்னுமோர் புதல்வனைப் பெற்று வளர்த்து வந்தான். சிலநாள் சென்றபிற்பாடு ஒருநாள் வாமதேவ மகாரிஷிவந்து நலனைநோக்கி, உன் தமையன் வாங்கிக்கொண்டுவந்த என்குதிரைகளை நீயாவது நன்மையாய்க் கொடுத்துவிடுவென்று கேட்க, அவனுக்குக் கோபம்வந்து, என்

தயனை மாறுபாடாகிய வஞ்சமாயையினுற் கொன்றுபோட்டு ஓடிப்போன வுன்னை அன்றுமுதலின்றளவுந் தேடிக்கொண்டிருந்தேன். உன் பொல்லாதகாலங் கூட்டிவந்துவிட்டது. உன்னை உயிருடன் விடமாட்டேனென்று சாரதியைநோக்கி இரதங்கொண்டுவரச்சொல்லி, வில்லைக்கையிலெடுத்துத் தன் பல்லைக்கடித்துப் பிடித்துப் பாணத்தைத் தொடுத்துவிட்டான். அதிவேகங்கொண்ட அப்பிறைமுகப்பாணம் புறப்படுவதற்கு முன்னமே, இந்தமுனிவர் - அப்பாநலனே ! நீ தொடுக்கும்பாணம் உன் மூத்தபிள்ளையாகிய துன்முகனைக் கொல்லக்கடவதென்று சொல்ல, உடனே பிள்ளையிறந்தான். பாணபட்டென்று வெளிப்பட்ட சத்தங்கேட்டவுடனே அந்தப்புறத்திலிருந்த ராஜஸ்திரீகளெல்லாம் அலறியோடி வந்தார்கள். அதைக்கண்ட அரசனுனவன் இன்னமென்ன நஷ்டம் வந்தாலுந் துஷ்டனுகிய உன்னைக் கொல்லாமல் விடுவதில்லையென்று மீட்டும்வில்லையிழுக்கவும், அதைக்கண்டபுண்ணியமூர்த்திநகைத்து, உன்னுடையவில்லும் இரண்டு கரமும் உயர்ந்து ஸ்தம்பிக்கத் தக்கதென்று சொல்லினர். இப்படிசொல்லவும்அவனுடையவில்லும் அவ்வில்லைத்தாங்கிய கரங்களும் ஏற்றக்கோல்போல் மேலெழும்பி அசைவற்றுநிற்க; அதுகண்ட ராஜஸ்திரீகளெல்லாம் அருகில்வந்து, வாமதேவர் மலரடியில்வீழ்ந்து அழுது துன்புற்று, சுவாமி! எங்கள்பேரில் இரக்கம் வைத்துக் கோபத்தைத் தணிக்கவேண்டுமென் றிரந்து கேட்டுக்கொண்டனர்.

உடனே அவர்கிருபையுடையவராக, இரங்கி ஸ்தம்பித்தகரங்களும் வில்லும் வளையும்படியாக உத்தரஞ்சொல்ல, அவைகளப்படியேஆக, அரசன் பூமியில் விழுந்து புரண்டழுது; நான் பாவசம்பந்தத்தினுல் இந்தக் கோபங் கொண்டேன். தேவரீர் மனஸ்தாபமில்லாமல் என்பிள்ளையைக் காப்பாற்றி என்னையும் இரக்ஷிக்க வேண்டுமென்று பரிந்து உபசாரத்துடன் வருந்திநிற்க, அம்பன்னவனைக்கண்ட திருந்திய சிந்தையையுடைய அருந்தவத்தினேன் இறந்துபோகிய பிள்ளையை மறுபடியும்பிழைக்கச்செய்ய உடனே அவன் தாய்மார்களும் மந்திரி-பிரதானி-முதலிய பேர்களும் வந்துவணங்கித்துதிக்க, அவர்களையப்முனிவர் ஆசீர்வதித்து மீட்டும் அரசனைநோக்கி, இனி உன் பிள்ளை துன்முகனுல் பழியும் பாவமுமில்லாமல் அரசாக்ஷிநடக்கும். யாதொன்றற்குங் குறைவில்லை என்று ஆசிசொல்லவுங்கேட்ட அரசனுகிய நலன் சந்தோஷமடைந்து; தன் தமயன்வாங்கிவந்த இரண்டு குதிரைகளையுங் கொடுத்து, வேண்டியஉபசாரத்துடன் பணிந்து மங்களாசனம் பெற்றுக்கொண்டு, அயோத்தியாபுரி பட்டினத்திற் சுகத்துடன் அரசுபுரிந்து வாழ்ந்துகொண்டிருந்தான். இப்பால் வாமதேவ மகாரிஷியானவர் தன் குதிரைகளை வாங்கிக்கொண்டு வனம் போய்ச்சேர்ந்திருந்தார். ஆகையால் - கேளுந் தருமபூபதி ! பிராமணர் முறைமைதப்பாதுற்றிருந்தால், அவர்கள்மகத்துவமும்பெருமையும் ஒருவராலும்அளவிட்டுச் சொல்லக் கூடாது. என்று மார்க்கண்டேயர் சொல்ல, அதுகேட்டு மனமகிழ்ந்த தருமராஜன்வணங்கி, சுவாமி ! தேவரீர் யாவரினும் பெரியவரென்று யாங்களெல்லாஞ் சந்தோஷ மடைந்திருக்கின்றேம். அப்படி இருந்த போதிலுந் தேவரீரைவிடப் பெரியவர்கள் உலகத்திலிருக்கின்றார்களா! இல்லையா! அந்தச்சந்தேகந் தெளிவிக்கவேண்டுமென்று கேட்க மார்க்கண்டேயர் சொல்லுகிறார்.

இந்திரதுாய்மராஜன் சரித்திரம்.

ஓ தருமநந்தனு ! ஆதியிற் சந்திரவமிசத்தையாண்டு, உலகத்திற் பற்பல கீர்த்திகளைச் சம்பாதித்து, யாகாதிகளைச்செய்து பெருமையடைந்து, தேவவிமானமூர்ந்து, தேவலோகத்தில் நித்தியனுகத் தேவேந்திரனுடனே சரியாசனத்திலிருந்து, சகல போகங்களையும் அனுபவித்து சந்தோஷமுற்றிருந்த இந்திரதுாய்மனென்னும் ஒருராஜன் தெய்வலோகத்தில் நெடுநாள் வாழ்ந்திருக்கையில்; நூறு அசுவமேதயாகஞ் செய்து தேவேந்திர பட்டத்திற்கு வந்த இந்திரா, தேவவருடத்தில் ஒவ்வொருவரும் நூறுவயது வரையில் இருந்து இறந்து போனவர்கள் அநேகருண்டு. அப்படியிருக்க-இவன்மாத்திரம் இறக்காமல், முன்பு இரண்டு மநுவந்தரஞ் சொன்னேனே: அந்த மநுவந்தரம் எத்தனையோவந்தது. அவைகளுக்கெல்லாமிவன் தப்பிப் பிழைத்திருக்கையில் தேவாகள்கூடி, பூமியில் உம்முடைய பேரழிந்துவிட்டது. மறுபடியும் பூமியிற்பிறந்து பேருண்டாக்கிப் பிரபலப்படுத்துமென்று தள்ளிவிட்டார்கள். ஓ தருமநந்தனு ! ஒவ்வொருவனும் பூமியிலே அழியாதிருக்கும்படி செய்த நற்செய்கையாலுண்டாகிய பேருள்ளவரைக்குந் தெய்வபதவி பொருந்தியிருப்பார்கள். ஆதலால் தன்பேர் விளங்கும்படியாக, சாவடி - சத்திரம் - தடாகம்-குளம்-கோவில்-அல்லது நற்குணமுடைய பிள்ளைகள் - இவைகளிலேதாகிலுமிருக்கவேண்டும். இப்பால் தேவர்களால் தள்ளப்பட்ட அவ்விந்திர துாய்மனென்னும் ராஜன் பூமியில்வந்து திரிந்து, என்னைக்கண்டு வணங்கித் தன் சங்கதிகளெல்லாஞ்சொல்லி, என்பேர் உலகத்திலிருக்கிறதா அழிந்து போய்விட்டதா சொல்லுமென்றுகேட்டான். அதற்குநான்சிவபெருமானுடைய கிருபையினுல் யமனைச்சாதித்து என்றம்பதினுறுவயதென்று பெற்ற நாள்முதல் அந்தராசன் என்னைக் கேட்ட நாள்வரையிற் கணக்குப்பார்த்து, நூற்றெண்பத்தேழு பிர்மாயுசுநடந்து, இப்போதிருக்கிற பிர்மாவுக்குவயது எழுபத்தாருச்சுது. இன்னும் இருபத்துநாலுவயது இருக்கப்போகிறுன் இந்தப்பிரமன். ஆதலால் இதற்குள்ளாக நீர்துரைத்தனஞ்செய் திருக்கவி

லை. இதற்கு முன்னுதாக இருக்கவேண்டுமென்று நான் சொல்லினேன்.

அதைக்கேட்ட அந்த அரசன் உம்மைவிடப் பெரியவருண்டோவென்றுகேட்க, இமோத் பர்வதத்தில் ஒருகோட்டான் தவம்பண்ணிக்கொண்டிருக்கிறதென்று எனக்குக்கேள்வி; அதைக்கேட்டால் தெரியுமென்றேன். நீருங்கூடவரவேண்டுமென்று அழைத்தான். நல்லதென்று செல்லும்போது இந்திரதுய்மனாகியராஜன் ஒரு வெள்ளைக்குதிரையாய் வடிவமெடுத்து, என்னை ஏற்றிக்கொண்டுபோய் அந்த மலைச்சாரலில் விடுத்து, குகைக்குள்ளே தவசுசெய்துகொண்டிருக்கிற கோட்டானைக்கண்டுபணிந்து, தான் வந்த வர்த்தமானங்களைச் சொல்லினன். அதைக்கேட்டு அந்தக்கோட்டான் நகைத்து, நானொரு அற்பாயசு உடையவன் என்னைநீர் கேட்கவந்தீர் நான் இதுவரையினும் இருநூற்றிருபத்தாறு பிர்மாயுசு கண்டேன் இதற்குள் இல்லை. நீ ராச்சியபரிபாலனஞ் செய்து இதற்கு முன்னிருந்தா லிருக்கவேண்டும். ஆனாலும் என்னினும் மூத்தவர் சாஸ்வதிதீரத்தில் தவமிருக்கின்றார். அவர்பேர் குரண்டதேவர். அவரைக்கேட்டறியுங்களென்று சொல்லிய கோட்டானையுங்கூட வேற்றிக் கொண்டு, அந்த இடத்திற்போ யவரை யழைத்தனன். அந்தக் கொக்கானது வெளியேவர, இந்திரதுய்மன் அதைநோக்கிவணங்கித் தன்னுடைய சங்கதிகளைச் சொல்லினன். அதுகேட்ட குரண்டம் ஓ அரசனே! நான் இருநூற்றைப்பது பிர்மாயுசு அறிவேன். இதற்குள்ளாக உம்முடைய பேரைக்காணோம். இன்னுமுன்னாக இருக்கவேண்டுமோ யென்னமோவென்னக்கேட்ட இறைவன் ஆச்சரியமுற்று, ஐயா குரண்டதேவா! உங்களைவிட இன்னும் பெரியவர்களுண்டோவென்று கேட்டனன் அப்படி கேட்கவும் அதற்கு அந்தக் கொக்கு சொல்லுகின்றது மெத்தப்பெரியவர் கோபஞ்சகத்தில் தவமிழைக்கிறார். அவர்பெயர் கூர்மதேவர். ஆதலா லவரிடத்திற்குப் போங்களென்று சொல்லவு மக்குரண்டத்தையுந் தன் முதுகிலேற்றிக்கொண்டு அவ்விடத்திற்குப்போய் அவரை யழைத்தனன்

உடனே அந்தக் கூர்மமானது வெளிவந்து, ராஜனுடைய வாய்மையைக்கேட்டு, இரக்கமுடன் கிருபைகூர்ந்து, கண்களில் ஜலம்பெருகப் பெருமூச்சுவிட்டு, ஓய் ராஜனே! நீர் நீதியுடன் துரைத்தனஞ் செய்யும்போது எனக்கொரு சத்துருவினால் அபாயம்நேரிட்டது. அக்காலத்தில் தருமதேவதையாகிய இந்திரதுய்மன் துரைத்தனத்திலும் இப்படி துன்பம் வந்ததல்லவா? என்று நானினைத்தேன். உடனே உமது ஆக்ஞாசக்கரம் வந்து என் சத்துருவையகற்றி என்னைக்காப்பாற்றிவிட்டது அதையெக்காலத்தினும் மறக்கமாட்டேன். என்று சொல்லி உம்முடன்கூடவந்திருப்பவர்களில் இவராரென்றுகேட்க, அரசன் ஓகூர்மதேவா! இவர் கறைகண்டருக்குக் காலகாலனென்னும் பேர்தந்த மார்க்கண்டேயரென்று சொல்ல, அக்கூர்மதேவர் - ஐயாமார்க்கண்டேயரே! நீர்பரமேஸ்வரனுடைய கிருபைபெற்ற இளங்கன்றானபோதிலும், புத்தியுள்ளவனே பெரியவன். ஆகையால் நானிருக்குமிடத்திற்கு வருத்தமெடுத்துக்கொண்டுவர நான் செய்ததவம் எப்படிப்பட்டதோ அறியேன். என்று உபசரித்து, ஓஅரசனே! இதோயிருப்பவர் ஆரென்று கேட்டறிந்துகொண்டு, ஐயா கோட்டானே! என்னுடைய பாக்கியமேபாக்கியம். யான் இருந்தவிடத்திலிருந்து உங்களைக்காணப்பெற்றேன் என்றுபசரித்தான பின்பு மற்றொருவரையும் இவராரென்றுகேட்டு, குரண்டதேவரென் றறிந்து துதிசெய்து, ஆனால் நீங்களெல்லாஞ் சிறுபிள்ளைகளானபோதிலுந் தவசிரோமணிகள். எனக்குமெத்த இளையவர்கள். என்று சொல்லக்கேட்ட இறைவன் தேவரீருக்கு வயதென்னவென்றுவினவ, அப்பா இராஜகுமாரனே! நான் முந்நூற்றறுபத்தொரு பிர்மாயுசு தான்கண்டேனென்று சொல்லி, கேளுங்கள் உத்தமர்களே! இந்த ராஜனை நீங்கள் அறியமாட்டீர்கள்போலும். ஆயினும் நானறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் யாவருங்கேளுங்கள்.

ஓ நண்பர்களே! இந்தமன்னவன் துரைத்தனஞ் செய்யும்போது நடத்திய நீதிநெறிகளைச்சொல்ல யென்தரமல்ல இப்புனிதன் யாகாதி கிருதிகளைச்செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகம் ஊட்டிவைத்ததையும் அளவிடமாட்டேன். சோடசமகாதானங்களைச்செய்த தொகைகளையும் அதினதுவகைகளையுஞ்சொல்ல வெனக்குக்களைவிளையும். ஆயாசம் உண்டாகும். நான் தள்ளாதவனாகையால் உபாயமாகச்சொல்லுகிறேன். நிதானமாய்க்கேளுங்கள். இந்நித்திய கோதானஞ்செய்த சத்தியவந்தனன் ஆளும்நாளையில் உத்தமப்பிராமணர்களுக்குக் கொடுக்கும் பசுக்கள்மிதித்த குளப்படிப் பள்ளமிது. அதோயிருக்கும் வெள்ளம் அப்பசுக்களைத் தானங்கொடுக்கும்போது வார்க்குந் தீர்த்தஞ் சேர்ந்த வெள்ளந்தான். அவ்வெள்ளத்தினின்றும் பிரிந்து கோபஞ்சகமென்னும்பெயரினையுடைய இந்தமடு மகா முக்கியமுடையது. ஆனதால் நானிதிலிருந்து பரமேஸ்வரனைக் குறித்துத் தவமிழைக்கிறேன். என்று கூர்மதேவர் கூறியவனைத்துங் கேட்ட நாங்கள் ஆனந்தங்கொள்ளவே, உடனே தேவர்கள் தேவவிமானங்களுடன் புட்பமாரி பொழிந்துவந்து, கோபஞ்சகதீர்த்தக்கரையில் இறங்கி இருந்த அரசனைநோக்கி, இந்தப்புகழ்குன்றாமல் இன்னும் விர்த்தியாகும்படியாய் உம்மை அனுப்பிவைத்தோம். இப்போது கேட்டவர்களும் இந்தக்காலமன்றி யெந்த யுகாந்தரங்களிலேயும் அழியார்கள். இவர்கள்உள்ளமட்டும் உமதுகீர்த்தியுங் குறையாது. நீருந்தேவபதவி பிரியாமலிருக்கலாம். ஆதலால்நீர் வாருமென்று தேவதூதருந்தேவர்களும்அழைக்க, அதுகேட்ட அரசன்மகிழ்ந்து சொல்லுகிறான்.

ஓ பண்ணவர்களே! சற்றுநேரமிருங்கள். இவர்களையென்காரிய நிமித்தமாக அழைத்துவந்து இவ்விடத்தில் விட்டுப்போகிறது நன்மையல்ல. அவரவர்களை யதாஸ்தானஞ்சேர்த்து வருகின்றேன். என்று ஆமையினிடத்தில் விடைபெற்றுக் குதிரைரூபமாகி, அவர்களை முன்போல வெடுத்துக்கொண்டு, குரண்டத்தைசரஸ்வதிதீர்த்தக்கரையில்விடுத்து, கோட்டானை இமவத் பருவதத்திலவிடுத்து, யென்னையுங் கொண்டுவந்துவிட்டு நமஸ்கரித்து ஆசிபெற்றுக் கொண்டு, இந்திரவிமானத்திலேறிப் பொன்னுலகமுற்றஅந்நாள் முதல் இதுவரையிலும் எத்தனை தேவேந்திரரிறந்து பிறந்திருப்பார்கள் இதுவரையிலுங்கூட அழிவில்லாமற் சகலசம்பிரமங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான் இந்திரதூய்மனென்னும் இராஜன். ஆகலால் எத்தனை நல்வினைகளைச்செய்தாலும் அந்தவினைகள் பூமியிற் கெடாமலிருக்கிற வரையில் தெய்வலோக பதவியுண்டு. அவைகளழிந்துபோனால் மறுபடியும்பூமியில்வந்து பிறக்கவேண்டியதே. அதற்காகத்தான் இவ்வுலகத்தில் யாவருஞ் சத்திரம் - கோவில்-குளம்-சாலை-சோலை-மடாலயம்-நாடு - நகரங்களெல்லாஞ் செய்கிறதும்; பிள்ளைகள் வேண்டுமென்று தவமிழைப்பதும், இவன் பிள்ளை இன்னானென்று சொல்லுவதற்குத் திதிப்பிரயோசனஞ் செய்வதென்றுவைத்து நாமதேயங்களைச் சொல்லுகின்றதுமென்றறிந்து கொள்ளும் எல்லாஞ் சொல்லுகிறார்களாவென்றால்? சந்ததி முழுமைக்குமென்று நீரிறைக்கவேண்டியது. இப்படியெல்லாங் கூறியிருக்கின்றது வேதவிதி, ஓ தருமநந்தனா! தவத்திற்சிறந்து ஆயுளிற்பெரியவர்களாயிருப்பவர்களையெல்லா மறிந்துகொண்டீரல்லவா? என்று கேட்ட மார்க்கண்டேய முனிவரைத் தருமபூபதிவணங்கி, சுவாமி! தங்கள்கிருபையினாலறிந்துகொண்டேனென்றுசொல்லி மற்றொன்று கேட்கலாயினர்.

துந்துமாரமகாராஜன் சரித்திரம்.

ஓ என்னாண்டவனே! சூரிய வமிசத்திற்பிறந்து, சகலவேதநீதியுந்தெரிந்து, கோபமென்பவைகளை யகற்றி, லோபமாதிகளை நீங்கித்துரைத்தனஞ்செய்துவந்த இட்சுவாகு மகாராஜனுடைய வமிசத்திற்பிறந்த ஒருவனுக்குத்துந்துமாரனென்று ராக்ஷசப்பெயர் வரவேண்டியதுஎன்னகாரணம்? அதனை யெனக்குச்சந்தேக நிவர்த்தியாகச்சொல்லவேண்டுமென்றுகேட்கவு மார்க்கண்டேயர்சொல்லுகிறார். கேளும்இறைவனே! இந்தப்பூமியில்உதங்கமகாரிஷியென்பர் பரிசுத்தசாத்மீக சீலசம்பன்னராகத் தவமிழைத்து வருங்காலையில், சங்குசக்ர கதாகட்க கோதண்ட பாணியாய்த் துளபமாலை கவுஸ்துவாபரண முதலியவை யிலங்கக் கருடவாகனரூடராய்ப்பரமபதநாதன் பிரசன்னமாக, அதுகண்ட உதங்கரெதிரெழுந்துபணிந்து, சுவாமி! சமுத்திரத்தினலைபோலும் ஊசலைப்போலும் இறந்தும் பிறந்து முழலும் வருத்தத்தை நீக்கித் தேவரீருடைய திருவடி நீழல்தந்து இரக்ஷிக்கவேண்டுமென்றுகேட்க, அந்த உதங்கரிஷியை யவர்நோக்கி, இனிமேல் உமக்கு இறத்தலில்லை நித்தியராக இருந்து நம்மைத் துதித்துக்கொண்டிருக்கக் கடவீர் உம்மால் ஒரு உபகாரம் உலகத்திற்குந் தேவர்களுக்கும் ஆகவேண்டியிருக்கிறது. என்று மறுமொழியுரைத்துப் பரவாசுதேவன் பரமபதத்திற்குச் சென்றனர். அதுகேட்டு மகிழ்ந்த அம்மகாரிஷி அவ்வனத்திற்றானே தவம்புரிந்துகொண்டு சிலகாலிருக்கின்ற நாளையில், சூரியகுலத்தரசரில் இட்சுவாகுமகாராஜனிருந்தான். அவன்புத்திரன் யதுமகாராஜன். அவன்சுதன் - காகுத்தன் - அவன் மகன்-பிரசேனன். அவன்பிள்ளை-பிருது அவன் மதலை - புத்ரீகன். அவன்கான்முளை - மறதிகன் - அவன் குழவி-ஆசு, அவன்சிசு-சாபத்திரன். அவன் சேய்-பிருகுதச்சுவன் அவன்மகவு-குவலையாச்சுவன் அவன் மகிழ்வு- இருபத்தோராயிரம் பிள்ளைகள்.

இந்த யிருபத்தோராயிரம் பிள்ளைகள் மிகுந்த திரத்தினையுடையவர்களாக இருக்கவும், குவலையாச்சுவனே துரைத்தனம் பண்ணிக்கொண்டுவந்தான். அந்நாளையில் உதங்கமகாரிஷியென்பவர் அவனிடத்தில் வர, அதுகண்ட அரசன் உபசார நமஸ்காரங்களெல்லாஞ்செய்து, சுவாமி! இந்த வுலகத்தாசையை விடுத்துக் காட்டுக்குப்போய்த் தவமிழைக்க நினைத்திருக்கின்றேன். ஆதலால் எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று சொல்ல, அதுகேட்ட உதங்கமகாரிஷியானவர், ஓ வேந்தே! நீதிகுன்றாமல் யாகங்களைச் செய்து வேதவிதிப்பிரகாரம் மநுக்களை இரக்ஷித்து வருகிற ராஜனடையும் பலனைத் தவமிழைப்பவர்கள் பெறமாட்டார்கள். ஆகையால் நீர் அரசுபுரிவதே தருமம் இதைவிட மேலானது வேறொன்றுமில்லை. மேலும் உம்மிடத்தில் ஒரு லோகோபகாரமாக காரியத்தைப்பற்றி வந்தேன். அது என்னவென்றால், ஸ்ரீமந்நாராயணன் பாற்கடலில் ஆயிரம்பணாமகுடமுடைய ஆதிசேடன்மீது கியான நித்திரை செய்யுங்காலையில், அவருடைய சுவாசததிலிருந்து இரண்டு ராக்ஷசாள் பிறந்தார்கள். அவர்கள் மதுகயிடவரென்னும் பேருடையவர்கள். இவர்கள் யமனும் நடுங்கி யாவத்துமாகிய உயிரும் நடுங்கி யொடுங்கும்படியாக உலகமெங்கும் யுத்தஞ்செய்து, பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனிடத்தில் வந்து பலபலவித உபத்திரவங்களைப் பண்ணுகையில், மகாவிஷ்ணுவுக்குக் கோபம் பிறந்து, பஞ்சாயுதத்துடனெதிர்த்து யுத்தஞ்செய்தும், அவர்களைக் கொல்லக்கூடாமலிளைத்து, தன்பெலமுந் தனக்குத் தெரியாமல்நின்று மயங்கி, இவர்களை உபாயத்தினாற் கொல்லவேண்டுமென்றுகருதி, இதனைச் சொல்லுவதாயினார்.

ஓ பெலவான்களே! உங்கள் திறத்திற்கு நானிளைத்துப் போய்விட்டேன். இப்போது எனக்கு உங்

கள்மீது மிகுந்த சந்தோஷ முண்டாச்சுது. உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் தருகின்றேனென்று சொல்ல, அதையவர்கள் கேட்டுக் கலீரென நகைத்து, பளா! பளா! வெகுநேர்த்தி! (துட்டுப் போடாதவர்களுக்கு இரட்டைப்பங்கு (என்பது போல் நீ பட்டபாட்டை யோசிக்காமல், எங்களுக்கு வரமா கொடுக்கப்போகிறாய்! போதும்: போதும் இன்னும் ஸ்ரீஹரியுன்னைத் தேவனென்று யாவருங் கொண்டாடுகிறார்கள் உனக்குச் சக்தியில்லாதபடியால் வேண்டிய வரங்களைக்கேள் நாங்கள் தருகிறோமென்று சொன்னார்கள். அப்படிசொல்லிய இருவரையுமவின்டுநோக்கி, சொல்தப்பா திருப்பீர்களாகில் உங்களை நான் வரங்கேட்பேன். நீங்கள் வேளைக்கொருபேச்சுப் பேசுகின்றவர்களாகச்சே யெவ்வாறு கேட்பதென்றனர். உடனே அவ்விருவர்க்குங் கோபம்பிறந்து, நீ தான்சொல்தவறுகிறவன். மோசக்காரன். நாங்களொருக்காலுந் தவறமாட்டோம். என்றவுடனே விஷ்ணு சொல்லுகிறார்: ஆனால் நான் எனக்கு வேண்டியவரத்தைக் கேட்கின்றேன். அஃதியாதெனில் நீங்களிருவரும் என்னால் இறந்துபோக வரங்கொடுக்க வேண்டுமென்ன, அதற்கவர்கள் நகைத்து, நீ சூதனானபடியால்இப்படிப்பட்டவரத்தைக்கேட்டாய். அப்படியே கொடுத்தோம். ஆனால் தண்ணீரில்லாதவிடத்தில் எங்களைக் கொல்லென்றுசொல்லினர். உடனே தம்முடைய இரண்டுதொடையினு மிருக்கும் உதிரத்தையும் நீரையுமொதுக்கிவைதது, அந்த யிரண்டுபேரையுந்தொடைச்சந்தி லிறுக்கிக் கொன்றுவிட்டார்.

உடனே அவர்களுடைய குமாரனாகிய துந்துவென்பவன் இந்தச் செய்திகளைக்கேட்டு, பிரமாவைக் குறித்து அரிய தவஞ்செய்தான். உடனே பிரமன்பிரசன்னமாகவே யெழுந்து விழுந்துவணங்கி, விஷ்ணுவைக்கொல்ல வரங்கேட்டான். அதற்குப் பிர்மாசொல்லுகின்றதாவது: நீ மெத்தபெலசாலியாகுக ஆனாலும் இன்னுஞ்சிலகாலங் என்னிடத்திற்பெற்ற இவ்வரத்தைப் பெலப்படுத்திக்கொண்டு அப்பால் விஷ்ணுவிடத்திற்சென்று யுத்தஞ்செய்பக்கடவை. என்று சொல்லக்கேட்ட அவன் எப்படி வரக்கைப்பெலப்படுத்துகின்றதென்று கேட்க, சமுத்திரக்கரையோரத்திற் படுத்துக்கொண்டு சிலநாளைக்கு நித்திரை செய்தால், ஒருவருஷத்துக்கொரு சுவாசம் புறப்படும் அதனாற் பெலமுண்டாமென்று சொல்லிப்போனார் உடனேயவன் கடற்கரையில்வந்துபடுத்துக்கொண்டு நித்திரைபோகிறான். அப்போதவனுக்குச் சுவாசம்புறப்படும்போது. மலைமாமுதலிய யாவத்தும் வாடையுந்தென்றலு மடிக்க மடிந்துவிழுந் தன்மைபோ லிருந்தன. அந்தமூச்சில் அகப்பட்டுக்கொண்டஎன்னுடைய ஆச்சிரமமும் நானுங்குடிசையும் ஊசலாடா நின்றோம். அந்தவனங்களுடையவளங்களெல்லாம் அழிந்துபோய்விட்டன பெரியோாகளெல்லாம்வாடி யோடிப்போனார்கள். நான்மாத்திரம் உலர்ந்த சருகானேன். தேவர்கள் வருந்துகின்றார்கள். ஆகையால் எங்களைப்போலொத்தவர்களுக்கு ஒருஆபத்து வருமாகில் உலகத்தைபாளும் அரசன்தானே துணையாகவிருந்து காப்பாற்றவேண்டும்? உமக்கு வேண்டிய பெலங்களும் எங்கள் தபோபலங்களுங் கொடுக்கின்றோம் நீர்தபவுசெய்து படையெடுத்துப் புறப்படும் உம்மால் அவன் அபஜெயப்படுவானென்று சொல்லினர்.

அதைக்கேட்டகுவலயாச்சுவன் தனதுரதகஜதுரகபதாதியோடும் இருபத்தோராயிரம் பிள்ளைகளோடும்இரதாரூடனாகப்புறப்பட்டான். சகலதேவர்களும் பெரியோர்களும் வாழ்த்தினார்கள். அப்படியே சமுத்திரக்கரையில் வந்துபார்த்து, தூங்குகிற துந்துவென்பவனை யெழுப்பச்சொல்லித் தன்பிள்ளைகளுக்குக்காவுசெய்தான். உடனே இருபத்தோராயிரம் பிள்ளைகளும், பிண்டிபாலம் உலக்கை வச்சிரதண்டம் கொழுமழு முசலம் சூலம் வேல் இவைகளைக்கொண்டு குத்தியும், அடித்தும், இடித்தும், துவைத்தும், இப்படி பலவிதமாகத் துன்பப்படுத்தும்போது; அவனுடைய தீவினைவசத்தாற் கும்பகர்ணன் நித்திரைதெளிந்தது போலெழுந்தான். அவனுடைய சுவாசத்தினால் அப்போது வந்த யானைசேனைப்படைகளும் இரதமுதலியவும் எதுகைமோனை விட்டபாட்டைப்போல் ஒட்டங்கொள்வதாயின. அந்தவேளையில் அரசனும் அவன்பிள்ளைகளும், சேனைகளும், சிறந்த வித்துவான்களால் திருத்தப்பட்டுக் கற்பனையலங்காரங்கொண்ட கவியைப்போல் விளங்குகொண்டு யுத்தஞ்செய்தார்கள். அப்போது துந்துவானவன்சோம்பல்நீங்கியெழுந்து, காலாக்கினிபொழிங் கண்ணையுருட்டி விழித்து நெடுநேரம்போராடி, சேனைகளெல்லாம் இளைக்கவும் இருபத்தோராயிரம் ராஜபுத்திராள் களைக்கவுஞ்செய்தான். அக்காலவனை அரசனெதிர்க்கவும், தானுமவனையெதிர்த்து, இருவருஞ் சூலம் வேல் முதலியவற்றால் ஒருவருக்கொருவர்சோனைப்பெய்தலைப்போலும் சித்திரைத்தீக்காச்சலைப்போலும்யுத்தஞ்செய்தார்கள்

அந்தவேளையில் அரக்கன் சூலாயுதமெடுத்து விடுத்துக் கெடுத்தேனுலகத்தை யென்று கடுகடுத்தான் அதற்கு அரசன் பஞ்சாக்ஷர மந்திரத்தை யுச்சரித்து வச்சிரதண்டம்பிரையோகஞ்செய்யவும், அவுணன் சூலம்பொடியாயது அதுகண்ட அரக்கன்தண்டாயுதத்தினாற் சாடினான். இராஜனும் ஒருபிரம்மாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்தான். அந்த அஸ்திரமானது தண்டாயுதத்தையுந் தகர்த்துத் துந்துவென்பவனுடைய சரீரத்தை இரண்டு துண்டாக்கியது. அதைக்கண்ட தேவர்கள் பலவாறு அரசனைக்கொண்டாடிப் புஷ்பவருஷந் தூற்றினர் ரிஷீஸ்வரர்கள்-தவசிகள் - முதலிய யாவரும் மங்களாசனஞ் சொல்லி வாழ்த்தினர். பின்பு அத்தேவர்களும்மற்றைபர்களும்

உதங்கமகாரிஷியுடன் கூடிக் குவலயாச்சுவ மகாராச
னைப்பார்த்து, ஓ புண்ணியவானே ! எவர்களாலுஞ்
செயிக்கக்கூடாத துந்துவென்னும் அரக்கனைக் கொ
ன்று எங்களுக்கின்று சவுக்கியங் கொடுத்தபடியால்
இன்றமுதற்கொண்டு உன்னையாவருந் துந்துமாரனெ
ன்றழைக்கக்கடவது. உலகமுள்ளமட்டும் இந்தப்பே
ரே உனக்கு வழங்கக்கடவதுஎன்று இன்னுமவனுக்கு
வேண்டிய மந்திரார்த்தங்களுஞ் சொல்லி, உனக்கு
வேண்டுவனவாகிய வரங்களைக்கேள் தருகின்றோமெ
ன்றனர். அவர்களை அரசன் தீர்க்கதெண்டமாகப்பணி
ந்து, சுவாமிகாள் ! தங்களாசிர்வாதத்தினாற் சகலமும்
பெற்றிருக்கின்றேன். ஆனால் ஒருவரமுண்டு. அதா
வது எனக்கும் என்கால்வழியில்வருபவர்க்கும் எக்கா
லத்திலும் பிராமணவிஸ்வாசமும் பகவத்பத்தியுமிருக்
கவேண்டும் அப்பிராமணாதிகள் பொருட்டில் எங்க
ளுக்குச் சகலவெற்றியும் உண்டாகும்படியாய் அநுக்
கிரகஞ்செய்யவேண்டுமென்று வருந்திய பூபதிக்கு
அப்படியே வரங்கொடுத்து, வேதமந்திரங்களினால்
திவ்யாஸ்திரங்கொடுத்துப் புகழ்ந்து போயினர்கள்.
மகாரிஷிகளெல்லாம் வனம்புக்கினர்கள் இப்பால் உத
ங்கமகாமுனிவர் அரசனை அயோத்தியிற் கொண்டு
வந்துவிடுத்து, புத்திரவர்க்கத்துடன் வாழ்ந்திருக்க
வருளளித்து, தானுஞ்செலவுபெற்றுக்கொண்டுதவச்
சூழலுக்குப்போயினர். இந்தச்சூரியவம்சத்து ராஜ
னுக்குமுன்பேர் குவலயசுவன். இந்தத் துந்துவென்
னும் அரக்கனைக்கொன்ற ஜெயத்தினால் துந்துமாரா
ஜனென்று பேர்வாய்த்ததென்று மார்க்கண்டேயமகா
முனிவர் தருமராஜனுக்குச்சொல்ல, தம்பிமாரும்வேத
புங்கவரும் சுத்தநிட்கள ஸ்வரூபராகிப் பக்தவச்சல
பரமாத்மாவாய் விளங்காநின்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
யோடுங்கேட்டு மகிழ்ந்திருந்தார்கள்.

கௌசிகன் சரித்திரம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! இப்
பால் தருமபுத்திரர் மார்க்கண்டேயரை வணங்கி,
சுவாமி! இந்தப்பாஞ்சாலியை விவாகஞ்செய்துகொ
ண்டநாள்முதல் இதுவரையிலும் எங்களைந்துபேருக்
கும் காலமறிந்தும், சமயமறிந்தும், தருணமறிந்தும்,
உண்பனதின்பன வற்றிலும் புனைத லணிதல் முத
லெவைகளிலும் குறைவிலாதியற்றி; யாங்கள் மனமகிழ்ச்சிகொள்ளத்தக்கதாய் நன்மார்க்கமாக நடந்து
வருகின்றாள். ஆகையால் உலகத்தில் இந்தத்திரௌ
பதைக்குமிஞ்சின ஸ்திரீகளுமில்லையென்று அடியேன்
நினைத்திருக்கின்றேன். இப்படிப்பட்ட விசுவாசத்
தோடு இவளிருக்கின்ற காரணமும், உலகத்திற் பெ
ண்களைப் பெற்றவர்கள் ஒருவனுக்குப் பாணிக்கிரக
ணம் பண்ணிக் கொடுத்தவுடனே அந்த ஸ்திரீயான
வள் புருஷனுக் குரியவளேயன்றித் தாய்தந்தையர்க
ளுக் குரிமையில்லாமற்போவதும், பிள்ளைகளைப்பெறு
கின்ற வருத்தம இன்னாருடையதென்றும், நீயகரு
மங்களையுடைய ஸ்திரீகள் எங்ஙகதி புகுவார்களோ?
அதையும், எனக்குச் சந்தேகந்தீரச் சொல்லவேண்டு
மென்று துதித்துக்கேட்ட உதிஷ்டிரனை நோக்கிமார்க்
கண்டேயர் சொல்லுகின்றார். ஓ அரசனே ! ஸ்திரீக
ளுக்கு மூன்று காவலுண்டு. அஃதென்னவெனில் பெ
ற்றுவளர்த்துக் காத்தல் தாய்தந்தையின் கடமை.
ஒருவனுக்குக் கொடுத்து விட்டாற் காப்ப தவன்
கடமை அப்பாற் புத்திரன்கடமை. இப்படியிருக்க
ஒரு ஸ்திரீ புருஷனிடத்திற் கிட்டி வாழ்விலுற்றால்,
கற்பு, அன்பு, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, நற்
குண நற்செய்கை, புத்திரப்பேறு, விருந்தோம்பல்,
இவைகளெல்லா முடைத்தாயும்; நாயகனைதெய்வம்
விரதம், பலன், நோன்பு முதலியவென் றுன்னிப்
போற்றி நடந்துவந்தும், இல்லற வாழ்க்கைக்கோர்
இன்றியமையாத் துணையாயிருந்துகொண்டும் வாழ்
வுற்றவளெவளோ ? அவளே இல்லறக்கிழத்தி, இவ்
வில்லறம் ஏனைய அறத்துங்கெல்லாந் துணையாகை
யாலும், நாயகனும் நாயகியும் அதற்குரியவ ராகையா
லும், அந்த நாயகனே இந்த ஸ்திரீக்குச் சகலசுபமும்
பலனுமென்றறிவீர்.

இதல்லாமல் தந்தையானவன் புண்ணியவசத்தி
னாற் பொருளைத்தேடி, பிள்ளைவேண்டுமென்று தவம்
தானம், விரதம், நோன்பு இவை முதலியவைகளைச்
செய்து, மூர்த்தி தலம் தீர்த்தம் இவைகளைத் தரி
த்து, நல்லோர் பெரியோர்களை நாடி, ஓர் புத்திரன்
பிறந்தபிற்பாடு அவனுக்குப் புத்திரோச்சவம், ஜாத
கன்மம், நாமகன்மம், அன்னப்பிராசனம், சவளம்,
உபநயனம், அக்ஷராப்பியாசம் இவைகளெல்லாந் தன்
கடமையாகச்செய்தாலும் ; தாயார் பத்துமாதமுஞ்
சுமந்துபெற்று வருத்தமுற்று அமுதமூட்டி வளர்த்
தாலும், இருவருக்கும் இந்த வருத்தஞ் சரியென் றறி
யக்கடவீர். இப்படி பிறந்த பிள்ளையானவன் உலகந்
துதிக்கக் கல்வியைக்கற்று, நல்ல பண்பிற்சிறந்து, யா
வரும் இவனைப்பெற்ற தாயுந்தந்தையு மென்னதவ
மிழைத்தார்களோவென்று புகழும்படியாகச் சிறந்து,
தன் மனையாளுடன் இல்லறதருமத்திற்குரிய ஒழுங்
கின்படி மருவி, தன் தாய்தந்தையரைப்போற்றி, அவர்
கள் கிரியாணத்திற்குரிய கடன்முறைகள் யாவு மிய
ற்றி, நீர்க்கடன்தீர்த்து, நிலைபெற்று வாழ்பவனெவ
னோ ? அவன்றான் சற்புத்திரன். அவனால் ஏழு ஜன
னங்களிலுந் தந்தைதாய்க்குப் பழியில்லையென் றறி
யக்கடவீர். பெண்ணாகப்பிறந்தால் தன் பதிவிரதா
நிலையைக் காப்பாற்றி, உண்டிமுதலியவற்றாற் புரு
ஷனை யுபசரித்து, நல்ல புகழைப் பெற்று, உலக
மகிழ வாழ்வதே தனக்கும் தன்னையீன்ற தந்தை
தாய்களுக்கும்பிரயோசன மென்றறியும் புருடனிலெ
ந்தவிரதங்களுமின்றி ஈனவிருத்திகளைச்செய்துகன்மம்
நீங்கி நடப்பவன், பாவகதியை அடைவான் அதைவி
ட்டுமேலாகிய உத்தமர்களையும் புராண சித்தாந்தங்

களையுங் கேட்டுக் கன்மம்வழுவாது செய்துவருபவன் கதியைப் பெறுவான் ஓ தருமநந்தனா! இதற்குத்திருஷ்டாந்தமாக ஒரு பிராமண சிரேஷ்டனாகிய கௌசிகனுடைய சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேளுமென்று மார்க்கண்டேயர் சொல்லத் தொடங்கினார்.

ஓ முரசத்துவஜனே! விசிட்டபுரமென்னும் பட்டணத்திற் கௌசிகனென்றொரு பிராமணன் வேதாப்பியாசம்பெற்றுச் சன்மார்க்கத்தையடையவேண்டி, வசிஷ்டர் ஆச்சிரமத்திற்குச்சென்று நெடுநாள்பாடங் கேட்டு வருகையில்; ஒருநாள் வெப்பத்தினால் வருந்தி ஒருமரத்தின் நீழலில் வந்துநின்றான். அப்படி நிற்கவும் அந்த விருக்ஷத்தின்மீதிருந்த ஒரு கொக்கானது எச்சமிட, அது இவன் தலையிற்பட, உடனே கோபம் வந்து கண்களைச் சிவக்கவிழித்து மேல்நோக்கினான். அந்தக்குரண்டமானது வெந்து சாம்பராகப்போயது அதனால் இந்தப்பிராமணன் தன்னைத்தானே புகழ்ந்து, நமக்குமிஞ்சிய பெரியோர்களுமுண்டோவென்று நினைத்து, தவச்சிரேஷ்டனாய்விட்டோமென்னும் ஆங்காரம் படைத்து, நாள்தோறுந் தனக்குள்ள வழக்கப்படி அந்த ஊர்ப்பிராமணரிருக்கும் அக்ராரத்துட்புகுந்து அன்னம்வாங்கி யுண்பவன், ஒரு வீட்டினுட்போய் (பவதி பிக்ஷாந்தேகி.) என்றிரந்தான். அதைக்கேட்ட அவ்வீட்டு உத்தமியானவள் தன் புருடனுக்குச் செய்யவேண்டிய உபசாரத்தில் மிகுந்த அன்பும் பத்தியும் பொருந்தினவளாகி, அவன் அன்னமுண்டு வாய்பூசிச் சயனத்திற்குச் சென்றவுடனே அந்தப் புண்ணியவதி அவன் கால்கரங்களை யழுத்தி வருடிக்கொண்டிருந்து, அவன் நித்திரைபோனபிற்பாடு இந்தப் பிராமணனுக்கு அன்னமெடுத்து வந்தாள்.

அதைக்கண்ட பிராமணன் கோபங்கொண்டு, நான் பிட்சைக்குவந்துகேட்டு எத்தனை நாழிகையாய் விட்டது. இதுவரையிலும் உண்டென்றும் இல்லையென்றுஞ் சொல்லாமல் என்னைக் காக்கவைத்தாயல்லவா ? அதிதிக்கு உபசாரம் பண்ணுகிறதைப்பார்க்கிலும் புருஷனுக்குப் பத்தி செலுத்துவது பெரிதோ ? என்று கண்களைப் புரட்டிப் பார்த்துக் கோபித்தான். அப்போதந்த ஸ்திரீயானவள் நகைத்து, கொக்கென்று என்னைப் பார்க்கின்றையோ ? ஓபிராமணனே ! நீ அறியாதவன். உனக்குத் தருமத்தின்வழி தெரியாது. சொன்னாலுங்கிரகிக்கமாட்டாய். இன்னும் நீ அத்தருமத்தை யுணர்ந்து பக்குவப்படவேண்டி யிருக்கின்றது. இதற்குள்ளே அவசரப்பட்டுவிட்டாய் அதுஉன்னைக் கெடுக்கும்படியாக வந்து உன்தலைமீ திருக்கின்றது. இதற்குச் சாஸ்திர விசாரணையுந் தக்க வருபோகமுஞ் சாதுசங்கப் பழக்கமும் உறவேண்டும். நான் ஏன் இப்படி சொல்லுவதென்றால்-எனக்கு விதித்திருப்பது தன்னைக் காத்தலுந் தலைவனைப் பூசித்தலும் நற்குணமும் நற்செய்கையு மென்றும், விரதம் - நோன்பு - தவம் - இவை முதலிய யாவும் புருடனென்றும் வேதத்திற்சொல்லி யிருக்கின்றமையால், என்னாயகனுடைய பணிவிடைகளில் யானிருக்கும் போது, சாக்ஷாத் மூர்த்தியாகிய கயிலாசபதி வந்தாலும் எனக்கு நிமித்தமில்லை. இப்படியிருக்க-நீ தெரியாத தன்மையாற் கோபங்கொள்ளுவது அழகல்லவென்றனள். என்றுசொல்லவே அவ்வந்தணன் பயந்து நடுங்கி, வனத்தில் நமக்குத் தெரியும்படி நடந்த கொக்கின் சங்கதியை இவ்விடத்தி லிருந்துசொன்ன இந்தப் பாக்யசாலிபோலும் விரதசீலி யாரிருக்கிறார்களென்று மூன்றுதரம்வலம்வந்து பாதங்களில்வீழ்ந்து, தாயே! எனக்கு நல்லுணர்வு வரத்தக்க தருமத்தைக் கட்டளையிடவேண்டுமென் றிரந்தனன். அப்படி யிரந்த அந்தணனுக்கு அவ்வுத்தமகுணவதி உள்ளமகிழ்ந்து சொல்லுகின்றாள்.

ஓ வேதியனே! மிதுலாபுரியில் தருமவியாதனென்னும் ஒரு வேடனிருக்கின்றான். அவனிடத்திற் சென்றால்உனக்குத்தருமசந்தேகங்களும் நீங்கியும்விளங்குமென்று சொல்லினள். அதற்கவன் ; தாயே ! என்னுடைய ஜன்மாந்திர தவமாக்களுந் தாங்கள் இப்படி உருக்கொண்டு சொல்லும்படி நேரிட்டது. நான் தெரியாமற் கோபங்கொண்டதை க்ஷமிக்க வேண்டும். என்று நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு, அம்மாதுசிரோமணிசொன்னபடி மிதுலாபுரிக்குச்சென்று தருமவியாதனென்னும் வேடனை விசாரித்தான். அப்போது அவன்கடைவீதியி லிருப்பானென்று சிலர் சொல்ல, அதைக்கேட்டுவந்து பார்க்கும்போது அந்த வேடன் கடைவீதியில் மாமிசங்களை யறுக்கிறதும் வெட்டுகிறதுங் கொத்துகிறதுமாக இருக்கக்கண்டு, இந்தப்பிராமணன் மனவருத்தமுற்று, என்ன பாவம்? இப்பேர்ப்பட்ட ஈனத்தொழிலைச் செய்பவனிடத்தில் அனுப்பிவைத்தாளே அந்தவுத்தமியென்றுநினைத்து, மீட்டும் - நல்லது: ஒன்றை நாடிவந்தால் அதினது உண்மையை யறிந்து போக வேண்டும். (எந்தப் புற்றில் எந்தப்பாம்பிருக்கிறதோ?) என்பார்கள். இதன்றியுங் கமலஞ்சேற்றிலும், முத்துசிப்பியிலும், அக்கினிகோலிலும் உண்டாவதன்றி, புநுகுமுதலிய வஸ்துக்களும் அற்பமானவிடத்தில் உற்பத்தியாகின்றன. குணம்பெரிதேயன்றிக் குலம்பெரிதல்ல. என்று நினைத்துக்கொண்டு அவ்வேடன் சமீபத்தில் நெருங்காமல் தூரமாக வொரு திண்ணையின்மீது போயிருந்தான். அப்படியிருக்கக்கண்ட அந்த வேடனெழுந்து, தன் வேலைகளெல்ல ம் முடிந்தபிற்பாடு துட்டுகளைச் சேகரித்துக்கொண்டு, கைகால்களைச்சுத்திபண்ணி, இந்தப் பிராமணன்இருக்கும் இடத்திற்குவந்து தீர்க்கதெண்டஞ் செய்து, சுவாமி ! இன்ன அகரத்திலிருக்கும் இன்னவுத்தமிசொல்லி அனுப்ப வந்தவரல்லவா நீரென்று அவ்வேடனவன் கேட்டான்.

அதைக்கேட்ட கௌசிகன் ஆச்சரியமும் வருத்தமுமடைந்து, இதென்னவிநோதம்! இப்பேர்ப்பட்ட

உத்தமர்களை நாம் எப்படி சிறுகநினைப்பது ? இதெல்லாம் ஈஸ்வரச் செயலேயன்றி வேறல்ல. என்று உன்னி நிற்கும்போது வேடன் அந்தணனைப்பார்த்து, ஓ சுவாமி ! நீர் விசிஷ்டாசாரந் தெரிந்துகொள்ள வேண்டிவந்தவர். நான் புன்தொழிலையுடைய வேடன். அவ்வாசாரத்தைக் குறித்து என்னென்ன தெரியும்? என்று சொல்லவே வந்த பிராமணன் மதிமருண்டு, இவன் அகம்புறமிரண்டுந் தெரியும்படியாகிய மகா ஞானியா யிருந்தும், நமக்கென்ன தெரியுமென்றே சொல்லுகின்றான். நாம் யாதொன்றுந் தெரியாதவனா யிருந்தும், தவசிரேஷ்டராகிய வசிஷ்டமகா முனிவருடைய சார்பிலிருந்த மகுத்துவத்தாற் கொக்கையெரித்தபோதே, எல்லாந் தெரிந்ததாய் ஆங்காரங்கொண்டோம். ஆ! ஆ! என்ன பேதைமை? என்று உன்னும்போது அந்தத் தருமவியாதக் கிராதன் இவனைப்பார்த்து, வாருமென்று தன்வீட்டுக்குஅழைத்துப்போய் ஒரு ஆசனங்கொடுத்து அதிலிருக்கச்செய்து, இவர் எப்படியும் பிராமணகுலத்திற் பிறந்த தருமதேவதை ஸ்வரூபமாய் விளங்கப்பட்டவர். இவருடைய மனதிலிருக்குஞ் சந்தேகங்களைத் தீர்த்துவிட்டு வேண்டிய நூல்களும் அவைகளின் பிரயோசனமும் அறியும்படி செய்யவேண்டுமென்று வேடன் நினைக்கும்போது, இந்தப்பிராமணன் தருமவியாதனை நோக்கி, நீர் தேவதாஸ்வரூபமாய் விளங்குகின்றீர். உம்மிடத்தில் இருக்கும் நெறிகள் யாவும் பார்க்க எனக்கு மெத்த சந்தோஷமாச்சுது. ஆனால் இப்படிப்பட்ட நீர் இந்தஈனத்தொழிலிலிருந்து வாணிபஞ்செய்கிறதற்கு எப்படி சம்மதமாயது ? யாவத்துமான பாவங்களிலும் பெரிது கொலை. பஞ்சமா பாதகத்திலும் முன்னணியிலிருக்கின்ற அல்பத்தொழிலை நீர் அனுஷ்டிப்பது அழகல்லவென்று சொல்லினன்.

அதைக்கேட்ட தருமவியாதன் - ஐயா கௌசிகரே! கேளும்: பிராமணர்கள் சாந்தம்-பொறுமை-ஒழுக்கம்-ஆசாரம்-ஜெபம் - விரதம் - தவம் - இவைமுதலிய கருமங்களை அனுஷ்டிக்க வேண்டியது. அரசர்கள் ஜெபம்-தவம் -விரதம்-நீதி - இரக்கம்-தன்னுயிர்போல் மன்னுயிர்காத்தல் - விகிதர்களைக் காப்பாற்றுதல் - அகிதர்களைத் தண்டித்தல் - இவைமுதலியதுகளை நடத்தவேண்டியது. வைசியர் உழுது பயிர் செய்தல் - பசுகாத்தல் - பொருளீட்டல் - தருமம்புரிதல்-இறைவழியினிற்றல் - பெரியோரைப் பூசித்தல்- இவைகளைச் செய்யவேண்டியது. சூத்திரர் இந்த மூவருக்கும் ஏவற்றொழில் புரிந்து ஆணைகடவாதிருக்கவேண்டியது இப்படியிருக்க, நாங்கள் வேடர் குலம். பட்சி-மிருகம் - இவைமுதலியவற்றைக் கொன்று மாமிசங்களைவிற்றுச் சீவனஞ்செய்யவேண்டியது எங்கள்குலதர்மம். இப்படி அவரவர்கள் குலத்தொழிலை நடத்தாவிட்டால், இந்தமிதுலாபுரி ஆளப்பட்ட சத்தியசந்தனாகிய ஜனகமகாராஜன் தன் பிள்ளையானபோதிலுந் தண்டனைசெய்வார். அதினால் நான் என்ஜாதி ஆசார முறைமைப்படிக்குக் கொன்று கொண்டு வருகிறவர்களிடத்தில் விலைகொடுத்து வாங்கி விற்று, வந்தலாபங்களில் தேவாலயங்கள் - விஷ்ணுவாலயங்கள்-பெரியோர்கள்-பிராமணர்கள்- அதிதிகள் சுற்றத்தார்-வேலைக்காரர்கள்-அண்ணன்-தம்பி-பெண்சாதி-பிள்ளைகள் இவர்களுக்கெல்லாங்கொடுத்து, என் தாய்தந்தையருக்கு முபசரித் தூட்டி, மிகுந்ததை யான் புசிக்காநின்றேன்.

இதன்றியும்-எனது தாய்தந்தையரைப்பூசாவிதி முறைமைப்படி நித்தியமும் பாதபூசைபுரிந்து, சத்திய சவுசம் நித்தியஜெப நியமந்தப்பாமல், பொறுமையுஞ் சாந்தமும் உடைத்தாய், கிருபை, நற்குணம், சீவகாருண்யம், இவைகளை வகித்து; அன்னியதாரமிச்சியாமலும், பிறர்பொருள்கவராமலும், துஷ்டயிஷ்டஞ் செய்யாமலும், தெய்வதூஷணை, பெரியோர் தூஷணை, வேதாகமபுராணதூஷணை இவையில்லாமலும் பெரியோர்கள் விதித்திருக்கும் விரதம் நோன்பு, நன்னடக்கை இவைகளை அநுசரித்து; பொய்க் கருமங்களிற் பிடிவாதமில்லாமல், மெய்க்கருமங்களில் உறுதிகொண்டு, மனம் அடங்கியபேர்களுக்கு வேதநீதியின் அநுபோகங்களைத் தெரிந்தமாத்திரஞ் சொல்லி, என்றும் நல்லகாலமாகக்கழித்து, எவர்கள் மனமுந் திடுக்கிடச்செய்யாமல், இந்த யீனகுலத்திற் பிறந்தும் எவர்களுக்கும் பாததூளிபோன்றவனாக யிருக்கின்றேன். இவைகளை உம்முடன் சொன்னதைப்போல் இதராளுக்குச் சொல்லமாட்டேன். இஃதல்லாலுந் தன் குலாச்சாரதருமந்தப்பாமல் நடக்கிறதே உத்தமம். எந்த ஜெந்துக்களிடத்திலேயும் பூர்த்தியான இரக்கம் வைத்து நடக்கிறவன் இகலோகத்திலும் பரலோகத்திலுஞ் சவுக்கியம் பெறுவான். உள்ளும் புறம்பும் ஒத்தநடக்கையும் நினைப்பும் உடையவன் உத்தமன். சத்தியசவுசம் உடையவனெவனோ ? அவனே சுசியானவன். பேராசைநீக்கி; கோபம், லோபம், மோகம், இவைகளைவிடுத்து; புத்தி சிதறவொட்டாமல் தருமவழியிலேநின்று, ஒருவன் செய்த தீங்கினைப்பொறுத்து, உடனே அதைமறந்து, துஷ்டவுறவை விலக்கி, வீண்காலம் போகவொட்டாமல் நல்விஷயத்தைப்பெற்று, பிறன்பழிகூறல்-குடிதோஷ முரைத்தல்-இவைகளை அகற்றி, பெரியோரையும் உகைத்தையுந் தழுவி நடக்கும் நெறியைவிடாமலும், பிரமசாரி-கிரகஸ்தன்-வானப்பிரஸ்தன்-சந்நியாசி-இந்த நான்காச்சிரமத்தில் எதைப்பற்றினாலும் அதின்வழியில் உறுதியாகநின்று சாதித்தல் வேண்டும்.

இப்படி அநேகமாகிய நன்மார்க்கங்களை அநுஷ்டிப்பதெல்லாம் நல்லநடக்கை. இவைகளைத்தப்பி நடத்தல் தீயநடக்கை. நல்லவழிகளால் மேலான மோக்ஷமுண்டு. தீயவைகளால் நகரமுண்டு. எப்போதும் அந்தக்கரணஞ் சுத்தியா யிருக்க வேண்டும் இதுகளை

யெல்லாம் வழுவாமல் நீர் நடத்துவீராகிற் பிறருக்குக் கியானோபதேசஞ் செய்யும்படியாகிய ஆசாரியத்துவமுண்டாவதன்றி, மேலான மோட்சத்துக்கும் விதைபோலுமாகுவீர் மேலும் ஜீவஹிம்சையைக் குறித்துச் சிலது சொல்லுகின்றேன் கேளும். அதாவது - வேதவேதியர்களெல்லாம் எத்தனை பசுக்களை யாகத்தில் வதைக்கின்றார்கள். அரசர்களெல்லாம் வேட்டைமார்க்கத்தில் எத்தனை ஜீவனைமாய்க்கின்றார்கள். யுத்தகளத்திற் கண்ட கண்டதுண்ட துண்டமாகஎத்தனைகோடி சதுரங்கச்சேனைகள் இறக்கின்றன. பூர்வத்தில் அரசர்களில் வெகுபேர் தினம் ஒன்றுக்கு இரண்டாயிரம் பசுவரையிலும் வதைத்து யாகம்பண்ணி இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் நற்கதியேயன்றிதுற்கதி கிடைத்ததில்லை. இவ்வுலகத்தில் வெகுபேர் ஜீவஹிம்சை செய்கின்றதில்லையென்று வாக்கினாற் சொல்லுகின்றார்கள். அவர்கள் நடக்கிறபோதும் படுக்கிறபோதும் மண்வெட்டிகொண்டுவெட்டும்போதும்கோவில் குளம் ஏரிதுறவு கிணறு இவைகளெல்லாஞ் செய்யும்போதும், அநேகங்கோடி ஜீவன்கள் மாய்ந்துபோகின்றன தங்களுக்குத் தெரிந்திருந்துங் கொல்லுவதில்லையென்று சொல்லுவது மயக்கமேயன்றி தெளிவல்ல.

ஓ கௌசிகரே ! பிரமதேவனாற் சிருஷ்டியாகும்போது இன்னயின்ன ஜெந்துக்கள் இன்னார் இன்னாரால்இவ்விதமாய் இவ்வேளையில்இப்படியாவதென்று நேமித்தபடி நடக்கயிருக்கின்றபோது, இவர்களேன் நான்சொல்லுவ தில்லையெனனும் மொழிகூறுவது? ஆனால் இவர்களால் ஒன்றைக்கொல்லவும்பிறப்பிக்கவுங்கூடுமாயிருந்தால், இந்தமொழி சொல்லலாம். இவர்கள்கதியே இவர்கட்குத் தெரியாதிருக்கும்போது, மற்றொரு ஜெந்துவின் கதியைப்பேசவேண்டியதில்லை யாவுங்கடவுள் சித்தமென்று மனப்பூர்த்தியாயிருக்கவேண்டியது மேலும் எவனொருவன் தன்குலாச்சாரதருமந்தப்பாமல் நடக்கின்றானோ? அதுவேகொல்லாவிரதம் அதுவே ஒருவராலும் அளவிட்டுச் சொல்லாவிரதம் இவைகளைத்தப்பி நடந்தவர்க ளெல்லாம் விரதத்தைப் பூண்டவரல்லர் பின்னையும் பூர்வஜென்மத்திலேசெய்த நல்வினை தீவினைகளினாலே இந்தஜனனம் வந்தது இந்தஜன்மத்திலும் ஜாக்கிரதைப்படாமற் கர்மங்களைச்செய்து பொய்யாம் புழுக்குரம்பையைமெய்யென்று கருதி, நான்செய்தேன் நான்போனேன் என்னுடையது என்சம்பாதனை என்றுசொல்லிக்கொண்டு இந்தச்சரீரத்தைப் பாதுகாத்தலினால், எத்தனை காலங்களானும் இது நழுவிப்போய் மோசப்படுத்தும். மறுபடியும் வேறுபுதுவஸ்திரந்தரிப்பதுபோல் தேகம் வரும் அதோடு விபாதி துன்பம் சுகம்துக்கம் பாலியம் யௌவனம் கௌமாரம் விருதாப்பியம்இவைமுதலியவைகள்வந்து திரும்பவும் இறந்துபோம் இதில் நல்வினையைச்செய்திருந்தால் தேவாமிசை ஆவார்கள். நல்வினையுந்தீவினையுஞ் செய்திருந்தால் மானிடராவார்கள். சுத்ததீவினைகளையே செய்திருந்தால் தாபரசங்கமங்களில் பிறந்து, இப்படியாக வருந்தப்பட்டு இறக்கிறதும்பிறக்கிறதும் இதுவே ஓயாதவேலையாய் முடியும்: கறையேறவொட்டாது.

ஆகையால் உடலைவெறுத்து, அதற்குள்ள பாசபந்தங்களையும் அகற்றிநிலைபெற்று, பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, நிராசையாகவிருந்து கடவுளைக்கியானத்தில் நிறுத்தினபேர்கள்; பிறவிப்பெருங்கடல் நீந்துவார்கள் இதல்லாமலும் பூதம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம்ஐந்து, பொறி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, இவைகள் ஆத்மதத்துவம் இதுகள் கூடியதே ஒருதேகம் எல்லாத்தேகத்திலும் மானிடதேகம் உத்தமமென்றுசொல்லப்பட்டது. அது எப்படியென்றால் இது நன்மைதீமை என்று அறியப்படுங்காலம் எதுவோ? அப்போதுதான் இது நல்லஜனனம். அறியாதவரையிலும் மிருகத்திற்கும் இதற்கும் பேதமில்லை. கருமமும்விடாது பிறப்பும் இறப்பும் நீங்காது ஆகையாற் புலன்வழியில் அறிவு செல்லாமல் ஞானவழியிலே அறிவைநடத்தி, தன்னை அறிந்து, தலைவனையு நோக்கிக்கண்டு கலந்தகாலையில்; அன்றைக்குக்கிடைக்கும் மேலாகிய பெரும்பதவியென்னு மோட்சம் என்று சொல்லக்கேட்ட கௌசிகன் பிரமானந்தத்தை அடைந்து ஆனந்தபாஷ்பம் பெருகநின்றான். அதைக்கண்ட தருமவியாதன் தன்னுள்ளே அறிந்து, அவ்வந்தணனுடைய பக்குவநெறிகண்டு அவ்விடம் விட்டு உள்ளறையுள் அழைத்துக்கொண்டுபோய் ஆசனங்கொடுத்து இருக்கச்செய்து, இதனை நடத்துவதாயினன்.

அஃதென்னவென்றால் தன் தாய்தந்தையரை மெல்லிய ஆசனத்தில்வைத்து ஊசலில் அமைத்து, நித்தியபூசையை நியதிப்படிசெய்து துதித்து, வலமிடமாகப்பிரதட்சணம்வந்துநமஸ்கரித்து, தன்பத்தினி ஜலம் புட்பம்-சந்தனம்-அட்சதை-இவைமுதலியவை கொண்டுவர அவைகளினால் ஸ்நானஞ்செய்துவைத்து பாதங்களில் மலர்களால் அர்ச்சித்து, சந்தனாட்சதைகள் அணிந்து, புருஷனோடு பத்தினியுமாய் வணங்கிக்கொண்டு, நேத்தியாகிய மாமிசவகைகளும் பழவகைகளும் அன்னமுதற் பற்பல கச்சாயவகைகளும் உபசரித்தூட்டி. கரங்காற் சுத்திசெய்து, தாம்பூலங்கொடுத்து, பழயபடி ஊசலில்யேற்றி உபசரித்து. இன்னும் உங்களுக்கு வேண்டிய விதங்களைக் கட்டளையிடவேண்டுமென்று வேண்டினன். அப்படிவேண்டிய பிள்ளையை அவர்கள்நோக்கி, அப்பா ! எங்களுக்கொருதாட்சியும் இல்லை உன்னைப்போலொத்த நற்குணம் நிறைந்த பிள்ளையைப்பெற்ற எங்களுக்கு ஏழுஜன்மங்கள் ஒருவேளையிருந்தாலும். அந்தக்காலங்களிலேயுந் தீயவைகள் நீங்கி மேலாகிய பதவியைப் பெறுவோம்.

ஆனால் நீயும்உன்பத்தினியுந் தீர்க்காயுவாய் நிலைபெற்ற தருமங்களைச்செய்து புகழைப்பெற்று வாழ்வதே எங்களுக்கு வேண்டியதென்று உரைக்க உடனே அவர்கட்கு இந்தப்பிராமணரைக்காட்டி, பதிவிரதையினால் அனுப்பவந்த மகாநுபாவரென்றுசொல்லினான் அதைக்கேட்ட அவ்விருத்தரிருவரும் இறங்கி நமஸ்கரித்து, சுவாமி ! எத்தனைவிதவிரதநோன்புகள்செய்து தவமிருந்தாலும், தாய்தந்தையரைப் பூசித்து மனைவாழ்க்கையிலிருந்து வாழ்வதற்கு மிஞ்சினபலன்கள் எதுவுமில்லை. என்று அவர்கள் சொல்லி ஊசலினிடத்துமிட்டுமமைந்தார்கள்.

இப்பால் தருமவியாதன் பிராமணரை நோக்கி, கேளும் ஐயனே ! பூமியிற்பிறந்தபேர்கள் புண்ணியத்தையும் மோக்ஷத்தையும் பெறுவதற்கு அநேக நதிகளில் ஸ்நானஞ்செய்தும், தேவாலயங்களைத் தொழுதும், பிரதக்ஷணம்பண்ணியும், விரதமிருந்தும் நோன்பிழைத்தும், ஓமங்கள் யாகங்கள் தவங்கள் இவைகளைச் செய்தும், சோடச மகாதானங்கள் வழங்கியும், வெகு வருத்தப்படுவார்கள். அதுகளினால் யாதொரு பிரயோசனமுமில்லை. சூக்ஷமத்தில் விதித்திருக்கின்ற தருமங்களைக்கேளும், சத்தியமேமதில். பொறுமையே அகழி. சத்வகுணமே ரதகஜதுரகபதாதிகள். தவவே ஆயுதம். சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கிற தானமேகோட்டைவாயிலும் உறுப்புக்களும். தேவதாபத்தியே மந்திரிகள். இன்சொல்லுகளே கவசம். நல்லொழுக்கமே இரதம் இப்படியாகக் கொண்டு. காமக்குரோத லோபமோக மதமாச்சரிய மென்னும் பகைகளை வேரறுத்து, ஆத்மதத்துவமாகிய கடவுளைக்கண்டு சிங்காசனமேறி யிருந்து பட்டஞ்செலுத்தவேண்டியது பிரமசாரிவிரதம் வெகுவருத்தப்பட்டுச்செய்கின்றார்கள். அஃதுசுத்தப்பொய். தன்தாரமன்றிப் பரதாரத்தை விரும்பா திருப்பவனெவனோ ? அவன் பிரமாசாரிஒருவர்பொருளுக்கு ஆசைவையாதிருப்பவனெவனோ ? அவன் சோடசதானஞ்செய்த கிரகஸ்தன். சத்தியவசனந் தப்பாமல் நடப்பவனெவனோ? அவன் யாகங்களைச் செய்து பலன்பெறுகின்றவானப்பிரஸ்தன். நன்மைதீமை இரண்டையுஞ்சரியாகப்பார்ப்பவனெவனோ? அவன் சுத்தக்கியானியாகிய சன்னியாசியென்றறியும்.

ஓ அந்தண சிகாமணி ! இன்னுங்கேளும்: சிலர் துறவறமென்று சொல்லுவார்கள் அதிற்கொஞ்சமுந் தப்பாமல் நெருப்பாறும் மயிர்ப்பாலமுமாக நடக்கவேண்டும். தப்பினாலோ ? அதோகதியிற் கொண்டுவந்துவிடும். இல்லறதருமமோ ? தெரிந்துந் தெரியாமலுஞ் செய்தபாபலோபங்களெல்லாந் தான்நம்பி நடத்துஞ் செய்கைகளாலும், கொடுக்கும் உபகாரங்களினாலும் நல்லபலனைத்தரும். ஆபத்தினின்றுங் காப்பாத்தும். அதனால் இல்லறமே பெரிதென்று எல்லா நூல்களினாலும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மற்றமூன்று விரதத்தை யுடையபேர்களுக்கும், பிதுர்களுக்கும், தரித்திரருக்கும், அவத்திலிரந்தோர்க்கும், அதிதியருக்கும், சுற்றத்தாருக்கும், இல்வாழ்வானென்பவனே துணை. அதற்குத்தகுந்த மனையாள் வாய்க்கவேண்டும். அப்பேர்ப்பட்ட ஸ்திரீ வாய்ப்பாளாகில், அவளுக்குப் பிரமன்-விஷ்ணு-உருத்திரன் - இந்திரன்-முதலிய யாவரும் நிகரல்ல. தன்புருஷனே சகலமுமென்று அனிஷ்டப்படி உபசரித்தலே அவளுக்கு விரதம். அப்பேர்ப்பட்ட ஸ்திரீயினோடு தன் தாயையுந் தந்தையையுங்காத்து இரக்ஷிப்பதே அவனுக்குவிரதம் இந்தப் பிள்ளையைப் பெற்ற உத்தமனுத்தமி யெவர்களோ ? அவர்களுடையதே தவமென்று சொல்லும்படியாகிய வாக்கியம் உலகத்திலுண்டாவதே அத்தாய் தந்தையர்களுக்கு நலமும், குலமும், கலமும், மோக்ஷமுமாம். இதல்லாமலும்-குபேர சம்பத்தோடுங்கூடி இல்வாழ்க்கையைச் செய்வதானாலும், நற்குணம் - நற்செய்கை-பெருமை-புகழ்-இவையில்லாத பெண்சாதிகிடைத்திருக்கில் என்னலாபம் ? மேற்சொல்லிய துற்குணமில்லாமல் நற்குணஞ் செறிந்திருக்கும் ஸ்திரீ வாய்த்திருந்தால், மேலாகிய பதந்தின்படியி லேற்றிவைக்கும். இல்லாவிட்டால் துற்கதியிற் சேர்க்கும். ஆகையால் எந்தவிரதத்திலேயும் இல்லறவிரதமே பெரிதென்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

ஓ பிராமணரே ! நீர் உம்முடைய தாயுந்தந்தையுவெருத்தப்படும்படியாகச்செய்து, அவர்களுடைய அனுமதியில்லாமல் வெளிப்பட்டு எத்தனை தவமுஞ் ஜபமுஞ் செய்யக்கற்றாலும், அவர்கள் படுந்துன்பம் உம்மையும் அவைகளையும் ஈடேற்றாது. ஆகையால்-இப்போது நான்சொல்லிய நெறியின் வண்ணமும் அநுபோகத்தின்படிக்கு மிகுந்தபொருந்தி வாழ்வைப் பெறக்கடவீர். என்றுசொல்லியவேடனைக் கௌசிகன் நோக்கி, ஐயா ! நீர் இவ்வளவு சாஸ்திரவிசாரணையுஞ் செய்து, தாய்தந்தையரைப்பூசித்து, நன்னெறிப்படி நடந்து வருமியற்கை உமக்கு எப்படிவந்தது ? ஜன்மாந்தர தவத்தினாலல்லவோ வந்தது ? அந்த ஜன்மாந்தரத்தில் நிரம்பியதவம் இவ்வளவு நற்குண நற்செய்கைகளை நல்கியும், குலத்தில் மாத்திரம் இன்னு மேலாகிய குலத்தைத்தராமல், இந்த வேடுவகுலத்திற் பிறக்கச்செய்ததென்னகாரணமோவென்று கௌசிகன்கேட்க, அதற்குத் தருமவியாதன் சொல்லுகின்றான். ஓ ஐயரே ! நீர் கேட்டது நல்லஞாயம். விவேகமுடையவர்களுக்குப் புத்தியின்சூக்ஷ மிப்படியிருக்கவேண்டும். எனக்குமெத்தச் சந்தோஷமாய்விட்டது. கேளும் சுவாமி! நான் பூர்வத்தில் உத்தமகுலத்தினுதித்தபிராமணன். தநுசாஸ்திரங் கற்றுக்கொண்டிருந்தேன். ஒரு ராஜபுத்திரனுக்கும் எனக்குஞ் சிநேகம் நேரிட்டு, அவனுடன் பிரியாத்துணையா யிருக்கும்போது, வேட்டைக்கு என்னையும் அழைத்துக்கொ

ண்டு போனான். நான் ஓரிடத்திற் சென்று தனித்து வேட்டையாடும் போது, அவ்விடத்தில் ஒரு பெரியவர் மான்தோலைப் போர்த்துக்கொண்டு தவத்திலிருந்தார். நான் தெரியாமலடித்தேன். உடனே சிவாவென்றுசொல்லி விழுந்தார். அதுகண்ட நான் ஓடிப்பார்த்து, பாணத்தை மெள்ளப்பிடுங்கிவிட்டு உபசரித்து, தண்ணீர் கொண்டுவந்துதவினேன். உடனே களை நீங்கி எழுந்தார். அப்போது ஓர் காயமாறு மூலிகை நான்கொண்டுவந்து, பாணம் பட்ட காயத்தில் வைத்துப் பாதத்தில்விழுந்து, சுவாமி! தங்களை மானென்றுன்னி அடித்தேன். மனதறிந்துசெய்த குற்றமல்ல ஆனதால் தேவரீர் க்ஷமிக்கவேண்டும் என்று கேட்கவும் அவர்க்குக் கோபம்வந்து, நல்ல வேதோத்தமனை இருந்தும் உனக்கேன் இந்தக்கேடென்றுசீறி, நீ வேடுவனாகக் கடவதென்றார்.

அந்தவேளையிற் கண்ணீர்சொரிந்து கதறியழுது தொழுதேன். அதைக்கண்டு மனமிரங்கி, நீ அப்படி கிராதகனாகப் பிறந்தாலும் வேதமுதலிய நன்னெறி நூல்களைக்கற்று, கியானஸ்வரூபியாகி, எவர்களுக்குஞ் சந்தேக நிவர்த்தியாக உலகநடக்கைகளை நடந்து காட்டிக்கொண்டு, நல்லமனைவியுடன் இல்லறதருமத்திருந்து பெருமையுற்று, மேலானவிரதமிழைத்துப் பழய பிராமணனாகக் கடவையென்று சாபத்தீர்வு கூறினார். அச்சாபத்தீர்வோடு மவரைப்பணிந்து விடைபெற்று வந்துவிட்டேன். உடனே அந்தச்சாபம் எனக்கு நேரிடவே, அந்தரூபத்துடன் வேடுவகுலத் தொழிலைப் புரியாநின்றேன். இதுவிட்டு நீங்கினால் பழயகதியைப் பெறுவேன். என்றுசொல்லக்கேட்ட கௌசிகன் சந்தோஷமடைந்து, அவனுக்குச் சகலவித மரியாதை - உபசாரம் - வந்தனை - வழிபாடுகள் யாவும் இயற்றி விடைபெற்றுக்கொண்டு மகா பதிவிரதையாகிய பிராமணஸ்திரீயி னிடத்தில் வந்துவணங்கி, தாயே! நானுமது பிள்ளை. உம்மாற் கடைத்தேறினேன். சகல தன்மமுந் தெரிந்து கொண்டேன். என்று சொல்லி நமஸ்கரித்தான் பின்புஅவ்வம்மன் கௌசிகனை நோக்கி, அப்பா! இல்லறத்திற்கு மேலாகிய அறமில்லை. ஆகையால்-நீபோய் நல்லமனையாளை விவாகம் பண்ணிக்கொண்டு வாழக்கடவையென்று ஆசீர்வதித் தனுப்பினள். உடனே அம்மாதுசிரோமணி யிடத்தினின்றும் விடைபெற்று நீங்கிப்போய்த் தன்மரபில் விசாரித்து, நற்குணவதியாகிய உத்தமியைக் கலியாணஞ்செய்துகொண்டு, தாய்தந்தையரைத் தருமவியாதனைப்போற் போற்றிப் பூசித்து, அளவற்ற விசுவாசத்தோடும் நேசித்து வாழ்ந்துவந்தான் கௌசிகனென்னும் பிராமணசிரேஷ்டன். ஆகையால் உத்தமியாகிய பத்தினியை உடையவர்களுக்கே இல்லறதருமம். உங்களுடைய இஷ்டப்படி நடந்துவரும் இந்தத்திரௌபதா தேவியினாற் சகலஜயமும்-நயமும்-நற்கதியும்-பதியும்-பெறுவீர்களென்று மார்க்கண்டேயர் தருமராஜன் முதலிய யாவருங்கேட்கச் சொல்லினர்.

ஸ்ரீகுமாரசுவாமி சரித்திரம்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜனே! இவ்வண்ணம் மார்க்கண்டேயர் சொல்லிவந்த சரித்திரங்களைக்கேட்ட தருமராஜன்முதல் யாவருஞ் சந்தோஷமடைந்துவணங்கி, குமாரசுவாமியாருடைய உற்பவங் கேட்க விருப்பங்கொண்டோமென்று துதித்துச்சொல்ல, மார்க்கண்டேயர் சொல்லுகின்றார். கேளுஞ் சந்திரகுலதிலகனே! திங்களையுங்கங்கையையும் அணிந்து பொங்கரவபூஷணம் பூண்ட சங்கர சயம்புவானவர், கிருபையே வடிவமாயோங்கிய கயிலாசத்திற் பார்வதி தேவியாருடன் கொலுவாக எழுந்தருளி யிருக்குங் காலையில்; தேவேந்திரனும் அமரர்களும் ரிஷீஸ்வரர்களும்வந்துவணங்கி, தங்களுடையமனவருத்தங்களைத் தீர்த்து இரக்ஷிக்கவேண்டுமென்று அசுரர்களுடைய உபத்திரவங்களைச் சொன்னார்கள். அவைகளைக்கேட்டருளிய கண்ணுதலுக்குக் கோபஞ்ஜனித்து, தேகமுழுமையும்பொங்கி, வீரியப்பொறி துளியாகச்சிதறிப் பாரியவுலகத்தை நீறுநீறாகப் புரிந்தது. அப்போது நேரிலிருந்த தேவர் யாவருங் கலங்கிப் பாரில்விழுந்து பயந்து, சுவாமி! இந்த வருத்தமாத்திரம் இப்போது நீங்கி யாங்கள் பிழைத்திருந்தால், அசுரர்கள் செய்யுந் துன்பத்திற்கு அப்பாற்பார்த்துக்கொள்ளலாமென்று அபயம் புகுந்தார்கள். உடனே கருணாநிதி இரங்கி, சமீபத்திலிருக்கும் அக்கினி தேவனை அவ்வீரியப் பொறியைப் பரிக்கும்படிகட்டளைசெய்தார். அக்கினி தேவன் அந்தப்படியே பொறிகளைத்தாங்கி, அதினுடைய வெப்பத்தை யாற்றமாட்டாது தியங்கி, எல்லா வஸ்துவையும் எரிக்கும்படியாகிய என்னைச் சுடுகின்ற இப்பெருநெருப்பை நானெப்படி சகிப்பேனென்று விசனமுற்றிருந்தான்.

இப்படிச் சிலநாள் சென்றபிறகு வச்சிரபாணிமுதலியயாவரும் அசுரருடைய வருத்தங்களைச் சகிக்கமாட்டாமல் துயரங்கொண் டிருக்கும்நாளையில், இந்திரனும் சப்தரிஷிகளுங்கூடி சத்துருஜெய சாந்தியென்றொரு யாகஞ்செய்யும்படி யோசித்துத் துவக்கினர். அக்காலையிற் சகலதேவர்களும்மற்றியாவர்களும் நெருங்கியிருந்துயாகம்நடாத்தி, சப்தரிஷிகளுடைய பத்தினிமார்கைகளினால் அவிர்ப்பாகம் அக்கினிதேவனுக்குத் திர்ப்தி செய்துவைக்கும்போது, அவ்வக்கினிதேவன் அந்த ரிஷிபத்தினிகளுடைய சுந்தரங்களை நோக்கி நொந்து, அக்காலத்திலவர்கள் கையைத்தொடப் பயந்திருந்து, பூரணாகுதிநிறைவேறியவுடனே விடைபெற்றுக்கொண்டு ஒரு பூங்காவனத்திற்போயிருந்து மன்மத விரகத்தினால் வாடிமெலிந்து வருந்தி யிருந்தான். அக்குறிப்பை மனைவியாகிய சுவாகாதேவி அறிந்துகொண்டு, சப்தரிஷிகளின் பத்தினிகளில் ஒருத்தியைப்போல் உருவ மெடுத்துவந்து, அவனெதிரில்

மறைதலும் - காணப்படலும் - இப்படியாக இருந்து மயலூட்டினள், அதைக்கண்ட அக்கினிதேவன் அதிவேகமாகஎழுந்து எதிர்நோக்கி, ஏது இவ்வளவுதூரந் தயைபுரிந்து வந்ததென்று வினவினன். அதற்கு அந்த ஸ்திரீயானவள் சொல்லுகின்றாள். ஓ அனற்கடவுளே! யாகத்தில் அவிர்ப்பாகங் கொடுக்கும்போது உம்மைக்கண்டோம். மோகங்கொண்டோம். ஆகையால் உம்மைக்கூடிக் காமந்தீர்த்துங் கொள்ளவேண்டியான்வந்தேன். மற்றஸ்திரீகளும் வருவார்கள். நீர் இவ்விடம்விட்டு நீங்காதிரும் என்று சொல்லினவளாய், உடனே அவ்வக்கினிபகவானிடத்தில்தோய்ந்து விளையாடி அவனுடைய நெடியமோகத்தைத் தீர்த்து மகிட்சிகொண்டு விடைபெற்றுச்சென்று, அந்தவனத்திற்குப் பக்கத்திலிருக்கும் ஓர் நதியினிடத்தில் அந்த வீரியத்தைக் கொண்டுபோய் விடுத்து ஸ்நானஞ்செய்து, மீட்டும்வேறொரு ரிஷிபத்தினிபோல் உருவமெடுத்து வந்து கலந்திருந்தாள்.

இந்தப்பிரகாரம் ஆறு ரிஷிபத்தினிகளைப்போலவும் வந்துகூடி, ஆறுதாமும் வீரியத்தைக் கொண்டுபோய் அந்தக்கங்கையில்விடுத்து, ஏழாவது வசிஷ்டருடைய பத்தினி அருந்ததியைப்போல் வடிவமெடுக்கப் பார்த்தாள். அப்போது அந்தச் சுவாகா தேவிக்குக் கூடாமையால் வருத்தமுற்று, முதல்வந்த ஸ்திரீயைப்போலவே வந்தாள். அதைக்கண்ட அக்கினிதேவன்-என்ன நீதானே மறுபடியும் வந்தாய்? அருந்ததி யெங்கேயென்றான். உடனே யவள் நகைத்துப் பாதகமலங்களில் வணங்கி, தன்னுடைய நிஜஉருவத்தைக் காட்டிநின்றாள். அப்படி நின்றவளைக்கண்டு அக்கினிதேவன் வெட்கமுற்று, நாம் சப்தரிஷிகளுடைய பத்தினிமார்களின்பேரில் மோகங்கொண்டசெய்திகேட்டு நமது பத்தினியே மாறுவேடம்பூண்டு வந்தாளோ? என்னமோ? இதற்கெப்படியென்று அக்கினிபகவான் பயந்திருக்கையில், சுவாகாதேவி அக்கினியைநோக்கி, என்னைக்கண்டவுடனே அருந்ததி யெங்கேயென்றும் மறுபடியும் நீதானே வந்தாயென்றும் - இப்படி கேட்ட மதிமயக்கம் என்னவென்றாள் உடனே அக்கினிதேவன் பொய்சொல்லாவிரதம் பூண்டோன் ஆகையால், உண்மையைச்சொன்னான். தானும்அஃதறிந்து, வேடங்கொண்டுவந்து கூடிய விதங்களைச் சொல்லி, சப்தரிஷிகள் பத்தினிகளின்பேரில் உத்தமராகிய நீர் இப்படி சத்தியந்தப்பி வித்திபாசம் நினைக்கப்படுமோவென்றுஞ்சொன்னாள். அதைக்கேட்டுநாணமுற்றான். உடனே சுவாகாதேவி அவன் கொண்ட எண்ணத்திற்கு மனம்வருந்தி உபசாரஞ்செய்து,நாயகனையழைத்துக் கொண்டு தன்மனையிற்போய் மருவி வாழ்ந்திருந்தாள். இப்பால் உலகத்தில் அக்கினிதேவனுடனே சப்தரிஷிகளுடையபாரியர்களில் அருந்ததிதவிர மற்றையர்களெல்லாங் கூடினார்களென்னும் மொழி வழங்கக்கேட்ட மகாரிஷிகள்வருந்தி, பழியானசொல் நேரிட்டதே யென்று தங்கள் தங்கள் பத்தினிகளை நிந்தித்து வெறுத்து, உங்கட்கு நேரிட்டிருக்கின்ற இழிச்சொல்லைப் போக்கி வாருங்களென்று நீக்கிவிட்டார்கள்.

உடனே அந்தஸ்திரீகள் ஆறுபேருஞ் சரவணப்பொய்கை ஓரத்தில் வந்து பரமேஸ்வரனைக் குறித்துத்தவம் இழைத்து, எங்கட்கு நேரிட்டிருக்கும் பழிச்சொல் நீங்கும்படியாய்த் தேவரீரே காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்று போற்றித் துதித்திருந்தார்கள். இஃதிப்படியிருக்க - சுவாகாதேவியினாற் கங்கையில் விடப்பட்ட சிவனுடைய வீரியத்தைக் கங்காதேவி சகிக்கமாட்டாமற் சரவணப்புற்களினால்நிறையப்பட்டிருந்த ஓர் பொய்கையிற் கொண்டுவந்து விடவும், உடனே ஆறுபிள்ளையாகி, திவ்யதேசோமயமாக விளங்கி யிருப்பதைக் கயிலாசபதி திருவுள்ளத்தில் அறிந்து, பார்வதியாரை அழைத்துக்கொண்டு உல்லாசமாக அந்தப்பொய்கைக்குபோயினர். அப்போது அம்மனுடைய திருப்பாதங்களில் அணிந்திருந்த சிலம்புகள் ஒன்றோடு ஒன்றுதாக்கி ஒன்பது பொடிகள் உதிர,அவைகளிலிருந்து நவவீரர்கள்பிறக்க, அதைக் கண்டுமகிழுஞ்சுந்தரியைநோக்கி இவராரென்று பரமசிவன்வினவ, இவர்கள் எனதுகாற்சிலம்புகளினின்றும் பிறந்தார்களென்றுஉமையவள்சொல்ல,அதைக்கேட்டு இவர்களும் நமதுபிள்ளைகள்தான்என்று மகிழ்ச்சியுடனழைத்துக் கொண்டு சரவணப்பொய்கை ஓரத்திற் போய்நின்று வேடிக்கைபார்த்திருக்கும்போது, உமையவளுடைய திருக்கண்களால் ஆறுகுழந்தைகள் அந்தப்பொய்கையில் மிதக்கக்கண்டு, அதிசீக்கிரத்தில் அக்குழந்தைகளை அன்போடு சென்று வாரி அணைத்தெடுத்தனள் அவ்வாறெடுக்கவும் ஆறும் ஒன்றாகக் கூட, அவ்வுருவைப் பரமேஸ்வரரிடத்திற் கொண்டு வந்துகாண்பித்தனள். அதைககண்டசம்பு சந்தோஷமடைந்து, இதுவும் உன்குழந்தைதான். ஆனால் அமரர்சிறைமீட்கவும் அசுரர்குலம் மாய்க்கவுங் கொண்ட கோலமிதுவென்றுஉரைத்தனர். அதைக்கேட்ட என் தாய் சந்தோஷங்கொண்டு, இந்தப்பிள்ளைக்குப் பால் கொடுக்கவேண்டுமேயென்றாலோசித்து அவ்விடத்தில் தவம் இழைத்திருந்த ரிஷிபத்தினிகள் அறுவரையும் அழைத்து அருள்அளித்து, உங்கள் அரும்பழிதீர்ந்து பெரும்பதவியை யடையும்படி இந்தப் பிள்ளைக்குப் பால்கொடுத்து வளர்க்கக்கடவீர்களென்று உரைத்துக்கொடுத்து, கயிலாசபதியும் அம்மனுந் தங்கள் வெள்ளிமாடத்திற்கு எழுந்தருளினார்கள்.

இப்பால் அச்சண்முகக்குழந்தையை இந்தஆறு பேர்களும் மிகுந்த அன்புடன் வளர்த்து வரும்நாள்களில், பிள்ளைசெழித்து வளர்ந்து நவவீரர்களுடன் கூடி விளையாடிக்கொண்டு கந்தமாதனகிரி வந்துசேர்ந்து, திக்குயானைகளைப்பிடிக்கின்றதும்-ஒன்றோடொன்றுமுட்டவிடுகின்றதும் மேற்கடலைக்கீழ்க்கடலுடன்

கலக்கச்செய்கின்றதும் - இந்திரலோகத்திற் புகுந்து
கற்பகக்காவினை யழிக்கின்றதும்மலைகளைப்பிடுங்கிமாறி
நாட்டுகின்றதும் இப்படியெல்லாஞ் செய்தற்கரியன
வாகிய வேலைகளைச் சிறியவிளையாட்டாகச் செய்து
அவனுறைந்துவருங் காலையில், இந்த அதிசயங்களை
யும் அண்டாண்டங்கள் கிடுகிடுத்துப்பயங்கொள்ளுந்
துயரங்களையுங் கண்ட தேவர்கள் முதல் யாவருந்
தேவேந்திரனிடத்திற்சென்று, ஐயா (சனைப்பன்வீட்
டுக்கோழி தானே தாள்களில் தளைமாட்டிக்கொண்
டது) என்னுந் தன்மைபோற் சப்தரிஷிகளைக்கொண்
டுயாகஞ்செய்யச் சொன்னீரே: அந்தயாகத்தில் வந்த
ரிஷிபத்தினிகள் பேரில் இச்சைகொண்டு சேர்ந்த அக்
கினிதேவனுடைய வீரியத்தினாற் பிறந்த ஒருபுத்திர
னானவன், ஆறுமுகமும்-பன்னிரண்டுதோளும் - இர
ண்டுதோளும்-ஒன்பதுபேர் வீரர்கள் அவனுக்கு ஆளு
மாக அமைந்து, உலகத்தையெல்லா மழிக்கின்றார்கள்
இனிச்சிலநாளில் அண்டம் புரண்டுபோகும் ஆதலால்
நாம் துண்டத்தனமாகிய அரக்கரைச் சாதிப்பதற்கு
முன்னமே, நமக்குவந்திருக்கும் இந்தகெண்டாதிகெ
ண்டத்தைத்தப்பித்துக்கொண்டால் உண்டாகும் நம
க்குவாழ்வு இல்லாவிட்டால் உடனேவருந் தாழ்வு.
இன்று உரைக்கக்கேட்ட இந்திரனானவன் ஆயிரங்
கண்ணுங் கொதிக்கவெழுந்து, வெள்ளையானையின்
பேரில்ஆரோகணித்துக்கொண்டு, வச்சிராயுதத்தோடு
வில்லும் அஸ்திரங்களுங்கொண்டு, திக்குப் பாலகர்
அஷ்டவசுக்கள் அமரர்-சித்தர்-கருடர் - காந்தருவர்-
கின்னரர் - யக்ஷரென்று சொல்லும் முப்பத்து முக்
கோடி தேவர்களோடு இரதகஜதுரகபதாதிகளு நெரு
ங்கச்சென்று, சப்த மாதர்களுடனேயும் வளைத்து
யுத்தஞ்செய்யத் தொடங்கினான்.

அதுகாலையிற் சண்முகக்கடவுளோடு விளையாடி
வரும் நவவீரரும் ஒன்றாகச்சேர்ந்து, தேவர்முதல்
யாவரையும்அவர்களேவிய ஆயுதங்களையும்அழித்துப்
புறமுதுகிட் டோடும்படி முடிக்கிவிடவும், அதனை
லொருவரும் நிலைகொள்ள மாட்டாமலோடி இந்திர
னைநோக்கி, ஏதேது ? இனிப்பிழைப்பதற்கு இடமில்
லையென்று சொல்லினர். அதைக்கேட்டு இந்திரன்பல்
லைக்கடித்து, வில்லைப்பிடித்து, மெல்ல அடுத்துச்சிற்
சில அஸ்திரங்களைத் தொடுத்தான். அவைகளை யெ
ல்லாம் மத்தியில்தானே அற்றுவிழும்படி முத்துக்கு
மாரசுவாமி அருள்புரியக்கண்டு மீட்டும் அனேகவித
அஸ்திரங்களும், எறிவலையம் முசுண்டி பிண்டிபாலம்
இவைமுதலிய யாவும்விடுத்துக் கடுகடுத்து நின்றுவச்
சிராயுதத்தையும்உந்தினான். அதுவரும்போதுபாரிலு
ள்ள மலைகளெல்லாம் டழமையைநினைந்து உருகவும்,
பலபல விருக்ஷங்களெல்லாங்கருகவும், தீப்பொறிகள்
பெருகவுமாகவந்தது. அப்படிவருகின்ற வச்சிராயுத
த்தைத்தனது வலதுபுஜத்தில் தாங்கினார் வடிவேலர்.
அப்பால் அவ்வச்சிராயுதம் இவருடைய தோள்களி
லுருவமாட்டாமல் திரும்ப, அதைப்பார்த்தது தியங்
கிமயங்கி நிற்கின்றதேவநாதனுடைய சிரத்திலும்உரத்
திலும் இருப்புலக்கைகொண்டு சாடும்படியாகச் சிவ
சண்முகக்கடவுள் தனதுதிரண்டதோளை நோக்கினார்
அதிலிருந்து கோடிவீரர்கள் உற்பவமாகிக்கூடி, ஆகா
யமும்பூமியும் ஒன்றாகநின்றுசுவாமியைவணங்கி, திட
வீரபராக்கிரமத்துட னெருங்கி, விடாதீர்கள்: பிடி
யுங்கள் அடியுங்கள் என்றுபேரொலி பிறப்பித்தனர்
அதைக்கேட்ட இந்திரன் பின்னிடும்போது இந்தவீ
ரர்கள் தொடர்ந்து ஓடி அடித்தார்கள்.

அப்போது பிராண மூர்ச்சைகொண்டு பூமியில்
விழுந்துபுரண்ட புரந்தரனைத் தேவர்கள் சேர்ந்து
வந்து களையாற்றித்தேற்ற, உடனே இந்திரன் தெளி
ந்து எழுந்துவந்து நிற்குஞ் சமயத்தில் தேவகுருவா
னவர் வந்து அமராபதியோனைக்கண்டு, ஓ இறையே!
மறந்துபோனீரோ ? மதிமயக்க முற்றீரோ இவரை
யாரென்றுன்னி யுத்தஞ்செய்தீர் முன்னம் முக்கண்
ணனை முனிவருடன் சென்றுவணங்கி முறைகூறிய
போது, இன்னுஞ்சிவநாளையில்உங்களிடையூறைத்தீர்
க்கும் இறைவன்வருவானென்று இசைத்திருந்தமொ
ழிப்படிவந்த நம்மீசனிவனென் றுன்னுது எதிர்த்தீர்.
போம் போம் பயித்தியக்காரரே யென்று புகன்று,
பிரகஸ்பதியானவர் சப்தரிஷிகளோடுதேவர்களுஞ் சசி
மணாளனுந்தம்மை நெருங்கிவர அழைத்துக்கொண்டு
போய்ச் சரவணப்பொய்கையிற் பிறந்த சரவணனைத்
பவனிடத்திற் கொண்டுவந்து விட்டனர். உடனேயா
வருஞ்சரணஞ் சரணமென்று துதித்து, வைகாசிமா
தம் விசாகநக்ஷத்திரத்திற் பிறந்தபடியால் விசாகப்
பெருமானே என்றுவணங்கி, இப்படி அநேக நாமங்க
ளைச்சொல்லி வழிபட்டு அடைக்கல மடைக்கலமென்
றார்கள். இந்திரனுந்தேவரீரைப் பெருநெருப்பென்று
தெரியாமற் சிந்தை நைந்தேன், தகுவர்களால் மிக
நொந்தேன். என்னைக் காத்தருளல்வேண்டுங் கயிலை
நாயகரின் கன்றேயென்று பூமியில் தீர்க்கதண்டமாய்
வீழ்ந்து, அவரது பொன்னடியே நன்முடியாகக்கொ
ண்டு வணங்கினான். அப்படி வணங்கிய புரந்தரனை
ஆதரித்து, நீரிப்புங்கவர்களுடன் இங்குதங்கிஇருமெ
ன்று அருள்புரிந்தனர். அவ்வருள்வாக்கியங் கேட்ட
யாவருந் துயர்கூர்ந்து கண்ணீர்சொரிய, அதைக்கண்
டருளிய ஸ்காந்தமூர்த்தி என்ன உங்களுடைய வரு
த்தமென்று வினவினர். உடனே அவர்கள் மீட்டும்
பணிந்தெழுந்து, கசியபப்பிரமாவுக்குப் பிறந்தவர்கள்
மூன்றுபிள்ளைகள், அவர்கள் சூரபன்மன் யாளிமுகா
சுரன் சிங்கமுகாசுரன் சூரபன்மனுடையபிள்ளைபானு
கோபன். இவர்கள் முதலிய அசுரர்களால் நாங்கள்
பட்டதுன்பஞ் சிறிதல்ல இந்திராணியைச் சிறைபிடி
த்துத் தேவஸ்திரீகளுடன்கைப்பற்றினர். என்றுஅவ்
வரலாறுகள் யாவுஞ் சொல்லக்கேட்டருளிய சுப்பிரம
ணியக்கடவுள் அவர்களைப்பரிந்துநோக்கி, ஓ விண்ண

வர்களே பயப்படாதீர்கள். யாம் உமக்குற்ற துணையாகின்றேமென்று அருள்வழங்கினர்.

உடனே யாவருமகிழ்ந்து பூமாரிசொரிந்து, கயிலாசபதியினிடத்திற் சென்று துதித்துப் பணிந்தார்கள் சிவபெருமான் செவ்வேளை அழைத்து, நீ இவ்வேளைத் தெவ்வரைக்கொன்று இந்தத்தேவரைக் காக்கக் கடவதென்று அருளளித்து, சிவபெருமானும் உமையவளும மகிழ்ச்சியிலோங்கி வாழ்த்தினார்கள். தேவர்களுங்களித்துத் தேவர்சேனாபதிப்பட்டமிவர்க்குக்கட்டத்திட்டஞ் செய்யவேண்டுமென் றரனை இரக்க, உடனே ஷண்முகக்கடவுளும் சம்மதமாக, இந்திரனாதியோர் தெய்வத்தச்சனால் ஆலயம்-மேடை-அணிமுகப்புச்சாலை இவையாவும் இயற்றுவித்து, தெய்வலோகத்திலிருந்து கற்பகப்பூமாலை இரத்தின கிரீடம்-இரத்னகவசம் வீரகண்டை சகலாபரணம் பீதாம்பரம் இவையாவுங் கொணர்வித்து, பரமேஸ்வரனும் பார்வதியாரு மகிழ்ச்சியுறச் சகலமுனிவரும் சகலரிஷிகளும் சகலதேவர்களும் நிறைந்துநின்று ஸ்நானஞ் செய்துவைத்து, திருவெண்ணீற்றுக் காப்பணிந்து, அலங்காரத்துடன் நல்ல முகூர்த்தத்திற் சேனாபதி பட்டங் கட்டினார்கள் தேவதுந்துமி-வீணை - இவை முதலியயாவுமுழங்க, திவ்யாஸ்திரப்படைகளுந் தியங்க கடவுளர் கடப்பமாலைமுதலிய புட்பங்கள் குமாரனுக்குத்தரித்து, மங்களமாக வாழ்த்தினார்கள். பராசத்தியாரானவர் ஞானசத்தியென்னும் வேலாயுதமுந் திவ்யக்கணைகளுங் கொடுத்து ஆசிகூறி விடுத்தார். அப்பாற் சண்முகதேவர் சகலவீரர்களுடன்யுத்தகோலங்கொண்டு, தாய் தந்தையரைவலம்வந்து பணிந்து, நவவீரர்களுஞ் சூழ்ந்துவரப் பிரயாணமாகி, அக்கினி பகவானே இரதமாகவும் வாயுதேவனே சாரதியாகவும் மனோவேகமே குதிரையாகவுமுடைய தேரின் பேரி லெழுந்தருளி, தேவகணங்கள் பூதகணங்கள் ஜெயஜெயவென்று நெருங்கிச் சகல மேளவாத்தியங்களுமுழங்கவரும்போது, வழியில் மலைவடிவமாக ஒருவராலும் அழிவில்லாமலிருக்கும் கிரவுஞ்சமென்னும் மலையைக்கண்டு, தனது கரத்திலிருக்கும் ஞானசத்தியைக் கைபழகுமாறுபோல அதன்மீது பிரையோகஞ்செய்தனர்.


உடனே அச்சத்தி ஈரேழுபதினான்குலோகமும்-இடர்முதலியதிருடர்களும்-எரிந்துவருந்துந் தன்மையைக்காட்டி, அதிஉருவாக விருந்த தாருகனைக் கொன்று மீண்டது உடனே உதிரவெள்ளம்புரண்டு இவர்கள்போகும்வழியை அடைத்துவிட்டபோது, குமாரதேவர் இஃதென்னவென்று விசாரிக்குமளவில் இறைவனே ! நிறைவுற்ற தவத்தினர்களையும் முறையாகிய யாகங்களையும் துறையாகிய உலகங்களையுங் குறையாகச்செய்த, கொடிய பாவியாகிய தாருகனென்றொரு சூரனிறந்தான். இனி எங்கள் சங்கடம்விட்டதென்று சாற்றி, மலர்களைவாரி மாரிபோல்தூற்றி மகிழ்ந்தார்கள். அந்தவேளையில் அசுரனை முடிப்பதற்கு முதற்பலியென்று எல்லோரும்புகழ யாவருமகிழ வழிகொண்டு நடந்து, திருச்செந்தூரிற் போயிறங்கி, திரண்ட வீரர்களுடன் தேவர்சேனாபதி சிந்தைமகிழ்ந் திருந்தனர். அப்போது தேவகுருவானவர்வந்து தீர்க்கமங்களஜெயங்கூறித்திருவருள் பெற்றிருக்க, அவரையென்னுருத்துயர்களைய ஆறுமுகங்கொண்ட ஐயன்நோக்கி சூரபன்மனென்பவன் யாண்டுளன்? அவனதுசேனைகளின்பெருக்கம்யாது அதைத் தெரியப்படுத்தவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளிய செங்கதிர்வேற்செல்வனைத் தேவகுருவானவர்பணிந்து, எங்கள்பவக்கொழுந்தைப் பறிக்கவந்த சிவக்கொழுந்தே என்று துதித்து, அச்சூரபன்மனுடைய செல்வம் சிறப்பு படை ஊக்கம்வலி - வரங்கள் - பட்டினம் - புத்திரர் குடும்பம்-கோபம் - உற்பவம் - இவையாவுஞ் சொல்லினர் இவையனைத்து மென்னையன் கேட்டுச் சிறுநகைகொண்டு, வீரவாகுதேவரை யழைத்துச் சூரபன்மனிடத்தில் தூதுவிடுக்க, அவர்போய்ப்பேசித் தன்னாற்கூடியவரையிலுந் தருமங்களையுஞ் சுவாமி அவதாரத்தின் சரித்திரங்களையுஞ் சொல்ல, அதைக்கேளாது வெகுண்டசூரனைத் தூறிப்பேசிக் காவலாளையெல்லா மடித்து வந்து, காங்கேயரிடத்திற் போய் வந்த காரியங்களைச் சொல்லி யுத்தத்துக்கே சம்மதித் திருக்கின்றானென்று கூறினர். உடனே அவன்மீது தமது படையெடுத்துச்சென்று பிரபலயுத்தங்கள்செய்யும்போது, மாயாவிசித்திர வல்லமைகளுடன் அவன்பிள்ளையாகிய பானுகோபன்முதலிய அசுரர்கள் செய்த யுத்தத்தின்திறத்தை என்னொருநாவாற் சொல்லிமுடிவதோ?

ஓ தருமராஜனே ! குமாரசுவாமியும் நவவீரர்களுஞ்சகலகணங்களும் ஒருங்காகச் சேர்ந்து யாவரையுங் கண்டதுண்டமாகப் படுத்தி, கரம்வேறு - சிரம்வேறு-உரம்வேறு-கால்வேறு - தோள்வேறு - உடல்வேறு - குடல்வேறு - இந்தப்பிரகாரம் பதைக்கச் சதைத்துச் சிதைத்துப் புதைத்து, வதைத்துக் கொன்றுவென்று, யாவருமழிந்து உதிரவெள்ளம் வழியப் போர்செய்யும்போது அவ்வவுணர்கள் அநேககோடிமாயாஸ்திரங்களோடு மலைகளு மரங்களும் பொழிய, அவைகளெல்லாம் பொடியாக என்னையன் மடித்தும் அடித்தும் ஜெயங்கொள்ள, அதுகண்ட அசுரர்பயங்கொள்ள, சூரன்மாத்திர மடங்காது யெதிர்துள்ள, அவன்சேனைகளின் தலைகளெல்லாங் கொள்ளைகொள்ளச் செவ்வேளானவர் தேவதாஸ்திரங்கள் விடுத்து மடித்தபோது, தமது தந்தையாகிய ஈஸ்வரனாற்கொடுத்திருந்த இந்திரஞாலத் தேரேறி எதிர்வந்தான் சூரபன்மன். அவனுடன் அசுரகுலகாலன் ஆறுமுகனென்னும்பாலன் எதிர்த்துப் போர்புரிந்து, அநேக மாயைகளினால் வருந்தி மறுபடியும் பொருந்திப் பஞ்சாக்ஷரமே துணையாகக்கொண்டு அந்தச்சூரனை வெல்





[43] சைநதவனை அவமானப்படுத்தல.



னும்போது, அவன்சகலபலங்களும்-சகலசேனைகளும்-தனக்குற்ற துணைவர்களும் - ஆகிய யாவும்போய் மடியவே மனமடிந்து, மாயவேட மாராமாமெனவுருக்கொண்டு-மான் மருகனுடைய ஞானசத்தியினாற் பிளப்புண்டு-மயிலுஞ் சேவலுமெனு மவடிவாக, அதுகண்டுமெந்திரவிபூதியினால் வாகனமாகவும் பதாகையாகவுங்கொண்டருளிய மயிலேறுஞ் சேவகனை மாயாவாரணத்துவஜனைக்கண்ட வானவர்கள்முதலிய ரிஷிகளும் - சந்திரசூரியர்களும் - திசைப்பாலரும்-வசுக்களும்-உருத்திரகணங்களும் - மற்றயாவரும் நெருங்கி, அடிகளிலிறைஞ்சி மலர்மாரிபொழிந்து வாத்திய முழக்கஞ்செய்ய, மனமகிழ்ச்சியுடன் திரும்பிவந்து மயேஸ்வரியையும் பரமேஸ்வரரையும் வணங்கிநின்றனர்.

அப்படிவணங்கிநின்ற பிள்ளையை மடிமீதிருத்தி, மற்றவீரர்களையும்வாழ்த்திமகிழ்ந்தார்கள். அப்போது தேவேந்திரன் தேவர்களோடு சோமஸ்கந்தமூர்த்தமாயெழுந்தருளியிருக்கின்ற இறைவர்களைத் தீர்க்கதெண்டஞ்செய்து, ஓஉமாபதீ! எளியேங்கள் துன்பம்நீக்கி இன்பம்அளித்த சுப்பிரமண்யக்கடவுளுக்கு ஒப்பாகிய என்குமாரத்தியை விவாகம்பண்ணிக்கொடுத்து, என் மருமகனென்றும் - தேவர்சேனாபதித் தலைவனென்றும்-பேர்பெறும்படி அருள்புரிய வேண்டுமென்று நமஸ்கரித்து இந்திரனிறக்க, அதற்கவனிஷ்டப்படியே சுபமுகூர்த்தம் நேமித்து, சகல கூட்டங்களுடனே பிரகஸ்பதியுஞ் சப்தரிஷிகளுஞ் சடங்குகள் செய்யத் தெய்வயானையைத் திருமணஞ்செய்து வைத்தனர். பின்பு சண்முகதேவர் தெய்வயானையின் சமேதராய்ச் சகலசம்பிரம வைபவமோங்கச் சந்தோஷித்திருந்தார், அந்தக்காலையிற் பரமேஸ்வரன் யாவர்களையும்நோக்கி. என்னைத் துதித்துப்போற்றி வணங்கிப் பெறும் பலன்கள் யாவுங் கொடுப்பதற் குரித்தாகிய கடவுள் நமதுகுமாரசுவாமி யாகையால், எனது பூரணவுருவிற்றோன்றிய இப்புனிதமூர்த்தியைப் போற்றி யாவரும் பெறவேண்டிய யாவு முறலாமென்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே பராசத்தியாரும் அருளளித்துக் கிருபையுடன் வாழ்த்தி மகிழ்ந்தனர். அந்தச்சமயத்தில் அக்கினிதேவனும் சுவாகாதேவியும் வந்து எதிரில்நின்று, கடவுளே ! எங்களுக்கு அருள்புரியவேண்டுமென் றிரக்க, அவர்களி னுள்ளக்குறிப்பறிந்து அருளளித்தனர். சப்தரிஷிகளும் வந்து தோத்தரித்தார்கள். அவர்களுக்கு மனோபயம்அகற்றி மகிழ்வுறச் செய்தனர். கங்காதேவிவந்து கண்டு மகிழ்ந்திருக்கப் பார்த்து, அம்மணீ ! யாம் உம்மாற் காங்கேயனென்னும் நாமம் பெற்றனமென் றுகருதிச்சொல்ல, அதைக் கேட்டுக் களித்தனள்.

பின்பு ஆறுபேர் ரிஷிபத்தினிகள் வந்து எதிரில் நின்று பூர்வத்தில்நடந்த வர்த்தமானங்களை யெல்லாஞ்சொல்லி, எங்கள் நாயகராலும் உலகத்தாராலும் நிந்திக்கப்பட்ட எங்கள் குறைதீரத் தவமிழைத்துத் தேவரீரை வளர்த்தனம். ஆதலால் இரக்ஷிக்க வேண்டியதென்று துதித்தார்கள். அவர்களைநோக்கிச் சந்திரனுடைய பத்தினிகள் இருபத்தேழு பேர்களில் மூன்றாவது தேவி அபிசித்தென்பவள் தவசுபுரிந்து மோக்ஷமடைந் திருக்கின்றாளாகையால், சந்திரனுக்கு அசுவனிமுதல் இருபத்தாறுபேர்கள் இப்போதிருக்கின்றார்கள். இதுமுதல் அந்த மோக்ஷமடைந்த நக்ஷத்திரத்திற்குப்பதிலாகக் கிருத்திகையெனப் பெயர்கொண்டு, நீங்களறுவருமங்கிருந்து யாவராலும் பெருமையுறத்தக்கது உங்களையுலகத்தில்யாரொருவர் அனுஷ்டித்து விரதம் பத்தியாகச்செய்து, உபவாசம்- அல்லது மாவு - அல்லது பழவர்க்கம் - இவைபுசித்து நோற்பார்களாகில், அவர்களுக்கு வேண்டிய பொருள்களுஞ் சத்துரு ஜெயங்களுமுண்டாம். பழிபாவமும் நீங்கச்செய்வோம். இதன்றியினுங் கார்த்திகேயனென்றொரு நாமமும் பெற்றோமென்று அவர்களுடைய துன்பம்அகற்றி, அவர்களைச்சந்திரனுடைய இன்பப் பதவியிலமைத்தார். தான்பிறந்த விசாகநக்ஷத்திரத்தினுஞ் சூரனைக்கொன்ற சஷ்டியினும் விரதமிருந்து தவமிழைப்பவர்களுக்கு, வேண்டிய இஷ்டலாபங்களும் இகபரசவுக்கியங்களு முண்டாமென்றார்.

அப்பாற் சப்தமாதர்கள் வந்துபணிந்து எங்களுக்கு அருளளிக்கவேண்டும் இறைவனேயென்றேத்தினார்கள். அவர்களைநோக்கி நீங்கள் பூமியின்கண் சிறுபாலர்களுக்கு வரும் நோய்முதலிய பீடைகள் யாவும் நிவாரணஞ்செய்து, அவர்களாற் பூசை பொங்கல் உபசாரமெல்லாம் பெற்று நித்தியமாக இருக்கக் கடவீர்களென்று அநுக்கிரகஞ் செய்தனர். அதன்பின்பு அரம்பை-ஊர்வசி-மேனகை-திலோத்தமை - முதலிய அப்சரஸ்திரீகள் ஆடல்பாடல் செய்யவும், துந்துபி-பேரி-பாங்கா-முரசு - இவைமுதலிய வாத்தியங்களெல்லா முழங்கவு மெழுந்தருளி, திருச்செந்தூரினில் தெய்வயானையுட னமர்ந்து, பின்பு திருப்பரங்குன்றம் - திருவாவினன்குடி - திருவேரகம் - சோலைமலை- குன்றுதோறாடல்-இவைமுதலாகிய பிரதான ஸ்தலங்களினு மெழுந்தருளி, தினைப்புனத்திலுற்ற வள்ளியம்மனை மணந்து, ஆறுசமயத்தில் ஓர்சமயக்கடவுளாயமர்ந்தருளினர். இவ்வாறு அஞ்சு முகங்கொண்டு அகிலங்களை யெல்லாங் காய்ந்த அவுணர்களைச் சங்கரிக்க ஆறுமுகங்கொண் டெழுந்தருளித் தேவர்களாதியோர் சிறைதீர்த்த குமாரசுவாமியினுடைய சரித்திரத்தைக் கேட்டோர் - படித்தோர் - எழுதினோர்- ஒருவருக்குத் தெரியும்படி யுணர்த்தியபேர்கள் இவர்களுக்கெல்லாந் தீர்க்காயுசுங் குறைவிலாச் செல்வமும் நோயற்றவாழ்வும் புத்திரபாக்கியங்களு முண்டாகும். சகலவிடையூறுகளு நீங்குமென்று மார்க்கண்டேயர் தருமராஜனுக்குச்சொல்ல, யாவருங்கேட்டு மகிழ்ந்து எழுந்து, அம்மகாநுபாவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தினார்கள்.

ஸ்ரீகிருஷ்ணதேவர் சத்தியபாமையோடு துவாரகைக் கெழுந்தருளல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இந்தப்பிரகாரம் மார்க்கண்டேயர் தருமராஜனுக்குப் பலவிதநீதிகளையும் - சரித்திரங்களையும் - குமாரசுவாமியினுற்பவச் செயலையுஞ் சொல்லிக்கொண்டு வரும்போது, கிருஷ்ணமூர்த்தியுடன்வந்த சத்தியபாமை திரௌபதா தேவியினிடத்திற் சென்றுற் றிருந்தனரென்று முன்சொல்லி யிருக்கின்றோ மன்றோ? அவ்விடத்தில்நடந்த அதிசயங்களைக் கேளும். திரௌபதி சத்தியபாமையைக்கண்டவுடனே உபசரித்தழைத்து ஆசனங்கொடுத்து வார்த்தை யாடிக்கொண்டு வரும்போது, பலபத்திரர் - தேவகி தேவியார் - ரோகணி தேவியார் - சுபத்திரை-அபிமன்னு - இன்னுமுள்ள பந்துக்களெல்லோருடைய க்ஷேமங்களையும் விசாரித்துக்கொண்டு மனங்கலந்து பேசிவந்தனள். அக்காலையிற் சத்தியபாமை திரௌபதியை நோக்கி, அண்ணி! இவ்வுலகத்தில் ஒரு ஸ்திரீயானவள் தன்புருஷனுடைய மனோபீஷ்டப்படி நடந்து திர்ப்திசெய்வது வெகுவருத்தமாக இருக்கின்றது. எத்தனைவித வுபசார மரியாதைகளைச்செய்தாலும், அவர்கள் கோபிக்கின்றார்கள். தூறுகின்றார்கள். வேறொரு ஸ்திரீயினிடத்தில் இச்சைவைக்கின்றார்கள். அல்லது தன்பத்தினியை நீக்கி விடுகின்றார்கள். தண்டிக்கின்றார்கள். கடுமொழிகூறுகின்றார்கள். தங்களைத்தாங்களே நொந்துகொள்ளுகின்றார்கள். இப்படிப் பற்பல விதங்களாக இருக்கின்றன. அப்படியிருக்கத் தேவரீர் ஐந்துபுருஷரை வசப்படுத்தி, அவர்கள் எந்நேரமும் பிரியம் விடாமலும் — மற்றஸ்திரீகளை நாடாமலும்—கோபமில்லாமலும்-மனங்களிக்கச்செய்து வைத்திருக்குந் திறம் யாதோ? இதென்ன உபாயமோ? தந்திரமோ? அல்லது மந்திரமோ? அவுஷதத்தின் பலமோ? மூலிகையின் திறமோ! குணவிசேடமோ! குறியின் நிதானமோ? பற்பல சாஸ்திரத்திற் சொல்லிய பக்குவமோ? இதுகளின் முறைமை எனக்குத் தெரியப்படுத்தவேண்டியது. ஏனென்றால் - இந்த ஸ்ரீகிருஷ்ணரானவரை எத்தனை விதத்தில் வசப்படுத்தினாலும், என்பக்ஷத்திலிருக்கவில்லை. எங்கெங்குந் திரிந்துகொண்டிருக்கின்றார். ஆகையால் நீர் தயவுசெய்தால் இவரை என்னைவிட்டு நீங்காதிருக்கச்செய்து, நானும் பாங்காக இருப்பேன். உமக்குஞ் சுகிர்தமுண்டு. அவருக்குந் தேகசவுக்கியமுண்டு. இல்லாவிட்டால் நான் மெத்த வருத்தத்தில் நையும்படியா யிருக்கின்றேன். என்று சொல்லிக்கேட்ட சத்தியபாமையை நோக்கி ஐவர்க்குரியாள் சொல்லுகின்றாள்.

கேளும் சத்தியபாமா! இவ்வுலகத்தி லுதிக்குஞ் செந்துக்களிலெல்லாம் ஸ்திரீஜெனனம் மகாபாவங்களையுடையது ஆனால் - இந்த ஸ்திரீஜனனத்துக்கு மேலாகிய புண்ணியஜனனமும் இல்லை. அதெப்படியெனில் - அக்கினிசாட்சியாய் விவாகம் பண்ணிக்கொண்டநாயகனே தெய்வமென்றும், அவனுக்கேவிரதம்-நோன்பு-புகல்-பூசனை—இவைமுதலியன வென்றுமெண்ணி, காலமறிந்து உண்டி உபசாரங்களுந் தந்து, தடுத்துரைக்காமல், அவர் மனோபீஷ்டமாக நடந்து வருவார்களாகில்; இதைவிட வேறு புண்ணியங்களில்லை. இதற்கு மாறுபட்டு நடப்பதெல்லாம் பாவங்களாகும். ஆகையால் உம்முடைய புண்ணிய தேகத்தின் தன்மையையும் பாக்கியவசத்தையும் நினைத்தவர்கள்-கேட்டவர்கள்-கண்டவர்கள்—இந்தயாவருக்கும்,புனிதசவுக்கியங்கள்கிடைக்கும். அதுபற்றி உம்மைத்தரிசிக்கும்படி வெகுபே ரெண்ணியிருப்பார்கள் நானும் அப்படியே நினைந்தேன். உம்முடைய நிலைமையை யோசிக்குமிடத்தில் உம்மைத்தரிசிக்கவும் - பேசவும்-பழகவும் யோக்கியதையைக் காணோம். அதென்னவென்றால் - தேவர்களும் ரிஷிகளுந் தேடியுங் காணக்கூடாத திருவடிகளையுடைய ஜகநிவாசனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாக அவதரித்து உம்முடன்கூடி விளையாடி மோகங்கொண்டிருக்கப் பெற்றிருந்தும், புத்திச்சபலமாயினீர். இந்தஅம்மாள் யாரென்று எவர்களாகிலும் விசாரிப்பார்கள். ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பத்தினியென்று சொல்லும் வாக்கியமே உமக்குவெகு பாக்கியம். அதுவே யுலகத்திற்கும் யோக்கியசிலாக்கியம். அப்படியிருக்க-பதிவிரதா பத்தியென்பது எவ்வளவும் நினைக்காமல், பொருளாசையுங் காமத்தையும் விரும்பிய அல்ப ஸ்திரீகளைப்போ லெண்ணங்கொண்டு, மந்திரமும் மருந்தும் விரும்பினீர். இப்படி பலவித உபாயங்களினால் புருஷரைக்கைவசப்படுத்தநினைக்கும் பூவைமார்களைப் பெண்ணிற் சிறந்தாளென்றெண்ணத்தகாது. புன்மையாகிய வேசிதாசியென்று விளம்பவேண்டியது. இந்தத் துற்குணங்களையுடைய பெண்களுக்கு நீங்காத நரகமும் — நோயும்-தரித்திரமும்-குடிகொண்டிருக்கும்.

ஒ சத்தியபாமா! பாண்டவர்கள் என்னிடத்திலிருக்கும் விசுவாசத்தின்நன்மையைக் கொஞ்சங் கேளும். இந்த ஐந்துநாயகர்களும் ஐந்து கர்த்தர்களென்றும், இவர்களைவிட வேறு தெய்வமில்லையென்றும், நோன்பு-விரதம் - தீர்த்தம் — திருநாள் - யாவுமிவர்களென்றும் நினைத்து, இவர்களுக்கு மனதுகளிக்க நடந்து வணங்குவதே வரம்பெற்ற செல்வமென்று நான் கருதி, திரிகரண சுத்தியாகப் பந்திசெலுத்தி வருகின்றேன் அதனால் அவர்கள் பரஸ்திரீகளை விரும்பத்தக்க தில்லை. ஒருவேளை காமம் யாரையும் விடாது. எப்பேர்ப்பட்ட உத்தமர்களின்மனத்தையுங் கலைக்கும். ஆகையால் இவர்களப்படியே இச்சித்து வேறு பெண்களைப் புணர்ந்தாலும், நானுங்கூட வநுகூலமாக இருந்து, வந்த ஸ்திரீகளை விசாரித்து, தே

கத்தின் திறமறிந்து நல்லவஸ்திர பூஷணங்களா லலங்கரித்து அனுப்பிவைப்பேன். அந்த மாதர்களுக்குக் கொடுக்கும்படியாகிய வெகுமதிகளையும் ஐவர் மனங் குளிரக் கொடுத்தனுப்புவேன் இதன்றியும்-கோடைக்காலம் — மழைக்காலம் - முன்பனி - பின்பனி-இப்பேர்ப்பட்ட காலமறிந்து, இவர்களுக்குத் தகுந்த போஜனாதிகள்-வஸ்திரங்கள் - படுக்கைவீடுகள் - மேடைகள் - உப்பரிகைகள் - சாலைகள் - சோலைகள் - இவைகளில் எந்தெந்தக் காலத்தில் ஏதேது வேண்டுமென்று நினைக்கின்றார்களோ? அததை அந்தந்தக் காலத்தில்நினைக்குமுன்னமேதெரிந்துகொண்டு அமைத்து விடுவேன். எத்தனைபேர் சுயம்பாகிகள் வேலைக்கார ரிருந்தாலும், என் கண்ணாற்பார்த்துக் கரங்களாலெடுத் துபசரித்துத் திர்ப்தியடையச் செய்வேன். அவர்களுடைய கோபம்-சந்தோஷம்-தயாளம்-வீரம்-பொறாமை - இவைகளின் குறிப்பறிந்து நடந்து கொள்ளுவேன் மேலுங் கொலுவுக்கும் பவனிக்கும் பராராஜ கண்டனத்திற்கும் புறப்படுங் காலமறிந்து, அந்தக் காலத்திற்குத் தகுந்த ஆபரணங்கள் வஸ்திரங்கள் அட்சதை முதலிய பொட்டுகள் ஆயுத விதங்கள் வாகனாதிகள் இவைமுதலியயாவும் அலங்கரித்து வைப்பேன். பசுநிரைகள் யானைவரிசைகள் குதிரைக்கூட்டங்கள் பதாதியினங்கள் இரதவகைகள் இவையாவும் விசாரித்து, எவைகளைக்குறைக்க வேண்டுவனவோ! எவைகளை யதிகரிக்கவேண்டுவனவோ? அவற்றையறிந்து அந்தப் பிரகாரஞ் செய்து வைப்பேன். இவைகளைக்காக்குந்தொழிலாளர்களுக்குச் சம்பளமுதலிய வெகுமதிகளும், விசாரணை தெண்டனை-கண்டனை இவையெல்லாம் நானேநடத்தி, எதினுங்குற்றமில்லாமலுங் குறைவில்லாமலுஞ்செய்வேன். சிவாலயம் விஷ்ணுவாலய முதலாகியதையும், தருமங்கள்தானங்கள்முதலாகியதையும், அன்னசத்திரங்கள் மடாலயங்கள் முதலாகியதையும் அப்போதைக் கப்போது விசாரித்து, உலகினுள்ளோர்களெல்லாம் பாண்டவர்களுடையதுரைத்தனமேதுரைத்தனம்: மற்ற அரசர்களுடைய துரைத்தனமெல்லாம் அரைத்தனமென்று கீர்த்திகொண்டாடச் செய்வேன்.

மேலும் எக்காலத்திலும் பட்டினத்துள்ளோர்களெல்லாம் நித்தியமங்களமாக இருக்கச்செய்வதன்றி, அரண்மனை வாயிலிடத்தில் முழங்குகின்ற ஜயபேரிகைமுதலாகிய யாவும், கொடி குடை மகர தோரணம் இவை முதலியவைகளெல்லாமும், அந்தந்தக் காலமறிந்து அலங்கரித்திருக்கச்செய்வேன். மேலும் அவைகளையெல்லாம் அப்போதைக்கப்போது சிதல்களினாலேனும் மற்றெவைகளினாலேனும் பழுதுபோகவொட்டாமற்காத்து, ஆயுதங்களுக் கெல்லாந் தயில பூசைசெய்து துருவுபற்றாமற்பண்ணி, சித்திரச்சாலை திருவிழாச்சாலை மயிலாடுங்கூடம் குயில்கூவு மாடம் அன்னம்உலாவு மாளிகை ஆடவர்வசிக்கு மரண்மனை இவைகளையெல்லாம் புதுக்கிக்கொண்டும் வருவேன். சிலகாலங்களில் ஊழியக்காரர்களைப்போல் வருத்தமாகிய வேலைகளைச் செய்வேன் மந்திரியைப்போற் சில யுத்திகளையுந் தெரிவிப்பேன். நீதிகளைப் பேசுவேன். சிநேகிதரைப்போல் மருவியிருப்பேன். நான் என்புருஷர்களிடத்திற்கு வரும்போது நல்லவஸ்திரங்களும் ஆபரணங்களும் அணிந்து, சந்தனப்-புநுகு-சவ்வாது முதலியவைகளைப்பூசி, சகலஅலங்காரங்களுடன் வருவேன். வெளியேபுறப்படவேண்டியிருந்தாலும்-அரண்மனையி லிருந்தாலும் - நாலுபேர்களைப்போல நானும் ஒருத்தியாக இருப்பேன். அது ஏனென்றால்-வெளியே வருகிறபோது நான் சகலவித ஆபரணங்களும் வஸ்திரங்களும் அலங்கரித்து வருவதைப் பரபுருஷர்கள் பார்ப்பார்களேயொழிய, எனது நாயகர்கள் பார்ப்பதில்லை. அதினால் எனக்குப்பாபமும் பழிச்சொல்லுமேயன்றி வேறில்லை. இதல்லாமலும் பாண்டவர்களுக்கு என்னை அல்லாமல் இன்னும்வேண்டிய ஸ்திரீகள் இருக்கின்றார்கள். அவர்களில் நான் மூத்தவளாகையாற் காலமறிந்து மனையிற்படுக்கச்செய்து, வேண்டிய பூஷணாலங்கிரதங்களுங் குறைவில்லாமற் கொடுத்து, அவர்கள் என்பேரில் மிகுந்த ஆசைகொண்டு நீங்காதிருக்க நடத்திவருவேன். மறுதேசத்து அரசர்கள் கொண்டுவருங் கப்பங்களைக் கணக்கின்படி அறிந்து வாங்கி அவைகளைக் கெட்டிச்செய்து வேண்டியவரிசைகள் அவர்களுக்குநடத்தஐவர்நினைத்தால், அந்தப் பிரகாரங்கொடுத்து அனுப்பிவைப்பேன். பாண்டவர்களுக்கு வேண்டிய கிரீடமுதலிய சகல ஆபரணங்களுஞ்சேகரித்து வைப்பேன். இன்னாது வேண்டியது: இவைகள் இல்லை: என்னும்படியானமொழி அவர்கள் காதுக்குப் புகவொட்டாமற் செய்வேன்.

இதன்றியிலும் தருமராஜனுடனே பதினாயிரம் பேர் பிராமணர்கள் சமபோஜனஞ் செய்து வருவார்கள். நித்தியம் அவர்களுக்குப்பத்தியும்-அன்பும்-பண்பும்-நிறைந்து, உபசாரங்களும் நடத்தி வருவேன். மாமியாராகிய குந்திஅம்மனையும்-இன்னுமுள்ள பெரியோர்களையும் - இஷ்டதெய்வம்போற் பூசித்து, மரியாதைகளிலும் பணிவிடைகளிலுங்குன்றாமல் நடந்து வருவேன். அதிதிகள்-விருந்தினர் - சுற்றத்தார் இவர் முதலானவர்கட்கெல்லாந் தக்கபடி உபசரித்து வருவேன். பிதிர்த்தினம் - பஞ்சபருவம்-விரதநாள்-என்னும் விசேஷநாள்களில், செய்யவேண்டிய சிறப்புக்களையெல்லாம் லோபமில்லாமல் என்னாயகர்கள் சந்தோஷிக்கும்படி செய்துவருவேன். இப்படியாகப் பலவிதகாரியங்களும் நடத்தி, பெருமையையுங் கீர்த்தியையும் பாண்டவர்களுக்கு ஆஸ்தியாகச் சம்பாத்தியஞ்செய்து சேகரித்து வைத்துவரும் நன்னடத்தைகளைக்கண்டு அவர்கள் என்னிடத்தில் அன்புசெலுத்திக்கொண்டு வருகின்றார்கள். இதையன்றி வேறொரு விதமுமில்லை. உம்முடையபுத்தி இப்படி நினைத்திருக்

குமென்று என்புத்தியிற்படாமற் போய்விட்டது. நீர் நினைத்த தல்லாமலும் என்னையும் அப்பேர்ப்பட்ட செய்கையை உடையவளாய்க் கருதிக்கேட்டது வெகு யோக்கியமாய் இருக்கின்றதென்று திரௌபதாதேவி சொல்ல, அதைக்கேட்டசத்தியபாமா மெத்தவருத்த முற்று, அண்ணி! யான் சிற்றறிவினாற் கேட்டேன். உத்தமியாகிய நீர் சித்தம்பொறுத்து அருளவேண்டு மென்று எத்தனையோகோடி வணக்கம்புரிந்து நின்றனள். அவளைத்திரௌபதி நோக்கி, இனிமேலும்நான் சொல்லிவந்த பிரகாரம் ஒன்றாகிலுங் குன்றாமற் செய்து வருவையாகில், தண்டாமரைத்தாள் அண்ணலாகிய புண்டரீகாட்சன்கொண்ட மோகத்தை என்னண்டையில் தானே சொல்லிக் கொண்டாடப் போகிறாயென்றாள். அந்த வசனத்தைச் சத்தியபாமாகேட்டு, அண்ணி! இவ்வுலகத்திலுள்ள கல்லெல்லாம் ஒருமாணிக்கக்கல்லுக் கொப்பாமோ? பெண்ணெல்லாம் உம்மைப்போற் பெண்ணாகுமோ? என்றுசொல்லித் துதிக்க, பின்பிருவரும் மகிழ்ந்து சந்தோஷித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்படி யிருக்கையிற் பாண்டவர்களிடத்தில் அந்தகிருஷ்ணமூர்த்தியாவருக்கொழுவிடைபெற்றுக் கொண்டு, மார்க்கண்டேய ரிடத்திலுஞ் செலவுபெற்று,இன்றுநல்லகாலம். உம்மால்திவ்யசரித்திரங்களெல்லாங்கேட்டேன் என்று அவரைப்புகழ்ந்து அந்தப்புரஞ்சென்று, சத்திய பாமையைப் பிரயாணப் படுத்தி, திரௌபதாதேவியிடத்தில் உத்தரவுபெற்றுக் கொண்டு, வெளியேவந்து தமது ரதத்திலேறி நடக்கும்போது சத்தியபாமாவின் முகத்தைநோக்கி, பெண்ணே! இதுவரையில்நீயுந்திரௌபதியும் என்னபேசிக்கொண் டிருந்தீர்களென்று கேட்டனர். அதற்கு ஒன்றுமில்லையென்று சத்தியபாமா சொல்ல, ஒன்றும் பேசாமல் வாயைமூடிக்கொண்டா யிருந்தீர்கள்! நீங்கள் புருஷனுக்கு மருந்துவைத்து வசப்படுத்திக்கொள்ளப்பேசிய வார்த்தையை நான் அறியப்படாதோ? என்று கிருஷ்ணமூர்த்திசொல்லவே சத்தியபாமாவெட்கமுற்றுத் தலைகவிழ்ந்துகொள்ள, உடனே சத்தியபாமையைத் தன் மடிமீதிற்சேர்த்து, ஒளிக்காமல் உண்மையைச்சொல் லென்றபோது நடந்த விர்த்தாந்தங்களில் ஒன்றொழியாமற் சொல்ல, அதைக்கேட்ட கண்ணன் திரௌபதை சொல்லியவார்த்தை யனைத்தும் ஞாயமே: என்றுசொல்லித் தன்மனதிற்குறித்து வைத்துக்கொண்டு, மற்ற அதிசயமொழிகளினாற் சத்தியபாமையைச் சந்தோஷப்படுத்தித் துவாரகாபுரி போய்ச் சேர்ந்தார்

ஸ்ரீராமமூர்த்தி சரித்திரம்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! ஸ்ரீகுமாரதேவர் சரித்திரங்கேட்ட தருமபுத்திரர்மகாஆனந்தசித்தராய் மார்க்கண்டேய மகாமுனிவரைத் தீர்க்கதண்டமாய்ப் பணிந்தெழுந்து, சுவாமி! சூரபன்மனாதிகளைச் சங்கரித்துத் தேவர்களைக் காக்கும்பொருட்டுச் சிவாம்சையிலுண்டான சரவணபவன் சரித்திரத்தைக்கேட்டுச் சன்மசாபல்ய மடைந்தேன். இராவணாதிகளைச்சங்கரித்து இமையவர் துயர் தீர்க்கும்படி விஷ்ணுவினமிசையாலுண்டான ஸ்ரீராமமூர்த்திசரித்திரத்தைச் சாங்கோபாங்கமாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, மார்க்கண்டேயர் சொல்லத்தொடங்கினர். கேளும் உதிட்டிரனே! முப்பத்துமுக்கோடி தேவர்களும் - நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும் - நித்யஸ்நானஞ்செய்து தத்துவக்கியானத்தைப் பெறக்கருதவும், இவ்வுலகத்தாருக்குப்பெருமையும் அருமையும் நிறைந்த தாயைப்போ லிரட்சிக்குந் தன்மையைச் சகலவளங்களுட னுதவவும், பாபவிமோசன பவித்திரமுடன் பிரகாசிக்குஞ் சரையுமாநதி வளைந்த கோசலதேசஞ் சூழ்ந்தது அயோத்திமாநகரம். அந்நகரத்தைச் சூரியன் முதற் பரம்பரமாய்த்துரைத்தனஞ் செய்துவந்த அரசர்களுடைய திருநாமங்களெல்லாங் கேள்வியுற் றிருக்கின்றீர். ஓதருமநந்தன! அந்த வமிசததில் அயனென்னுமிராஜனுடைய புத்திரன் தசரதமஹாராஜன். அந்த மகாராஜன் இவ்வுலகத்திற் சத்துருவென்பவரின்றி, நித்திய மங்களாகாரமாய்ப் பத்தினிமார் மூவருடன் உத்தமமா யுலகத்தைச் சித்தசனெனப் புரந்துவர, அவ்வெற்றி மிகுந்த மன்னவனுக்குப் புத்திர னில்லாமையினால் மெத்த வருத்தமுற்று, ஆசாரியராகிய வசிஷ்டரைநோக்கியழுது, அவர் மலரடியைத்தொழுது, இரவிகுலம் பழுதுபடலாச்சே: இனிஇவ்வுலகினரென்னைப் பேசுவது மலடனென்னும் பேச்சே: புத்திரப்பேறுடையோர்களுக்குமுன் எனக்கது மகாயிழிவாச்சே: இன்னான்மக னின்னானென்று சொல்வதற்கில்லையே: இனிஎனக்கு மோட்சமென்பதுமகாதொல்லையே: என்னசெய்வேன்? ஐயோ! கும்பியென்னு நரகத்திற்கிலக்கானேனே: நல்லகுமாரரைப்பெறத்தக்கதவம் பண்ணாமற்போனேனே: என்று வருந்துவதைக்கேட்ட வசிஷ்டர் அரசனைப்பார்த்து, ஓமகாராஜனே! கலைக்கோட்டு மகாரிஷியினால் யாகஞ்செய்தால்மக்களைப்பெறலாமென்றுசொல்ல, அதின்படியரசன் யாகத்தைச்செய்து பூரணாகுதிகொடுக்க, அக்காலையில்ஒருபூதம்பொற்கிண்ணத்திற் பாய்சங்கொண்டுவர, அதைக்கண்டு வாங்கிச் சரிபாகமாகப் பகுந்து ஒருபாகத்தைக் கௌசலைக்கும்-மற்றொருபாகத்தைக் கைகேசிக்கும் அளிக்க, அதைக்கண்டு முகம்வாடி நின்ற சுபத்திரைக்கு அவ்விரண்டிலும் பாதியேற்றுக் கொடுக்க, அம்மூவரும் நமஸ்கரித்து வாங்கிப் புசித்துக் கர்ப்பவதிகளாகி, மூத்த கோசலை கர்ப்பத்தில் ஸ்ரீராமரும், கைகேசியினிடத்திற் பரதனும், சுமித்திரைவயிற்றில் இலக்ஷ்மணனுஞ் சத்துருக்கனுஞ் சுபமுகூர்த்தத்தில் நான்கு வேதங்களைப்போற் பிறந்தனர். அப்புத்திரரை அரசன்கண்டு களித்து, ஜாத

ன்ம முதலிய சட்கருமங்களு நடத்தி வளர்த்திவர, அந்தப்பிள்ளைகள் நால்வருஞ் சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல் விர்த்தியடைந்து வளர்ந்துவந்தனர்.

அக்காலையில் வசிஷ்ட மஹாமுனியாற் சகலவேதாகமங்களும் தனுர்வேத சாத்திரங்களும் யானைகுதிரை இரத முதலியவைகள் செலுத்தலும் நடத்தலும் ஆகிய யிவைகளோடு, சாந்தம்-பொறுமை-நற்குணம்-தருமம்-தயை-வீரப்ரதாபம்-ஊக்கம் - இவைகளெல்லாமும் ஒப்புவமையில்வாமல்விளங்கக்கற்றனர் அதைக்கண்ட தசரதமஹாராஜன் பரமானந்தமுற்றிருக்குநாளையில், ஒருநாள்விசுவாமித்திரர்வந்து தசரதமஹாராஜனைக்காண, அவரெழுந்து நமஸ்கரித்துவணங்க, இரப்பவர்போற் கௌசிகர் இருகரத்தையும்விரித்து, ஓ சர்வசம்மாரகுரனையழித்துத் தேவேந்திரப்பட்டம் நிலைக்கச்செய்ததன்யனே! எனக்கொரு வரங்கொடுக்கவேண்டும். அதாவது என்னுடையயாகம் நிறைவேற உன்னுடைய பிள்ளைகளில் நீலமேகச்சாமளவர்னனாகிய ஸ்ரீராமனைத்தருதலே என்றுசொன்ன அம்மாத்திரத்தி லரசன் உடல்பதறி உயிரை யமன் கேட்கும்போது அவர்கள் அடையும்துன்பம்போல் அயர்ந்து பூமியில்விழுந்து அழுது அம்முனிவர் திருவடிகளிற்றொழுது சுவாமி! அறியாதகுழந்தை. என்னாசைதீரவந்த அமுதம் என்னிருமைப்பே றளிக்குந் தவம்என் கருத்தை நிறைவேற்றவந்தகனிப்பேறு. அவனுக்குத் தானவருடன் சண்டைசெய்யத் தெரியாது தநுர்வேதமுதலிய மந்திரங்களும்வராது. தமது திருவடிக்கடிமை யானிருக்கும்போது அவனை விரும்பத்தகாது. இராக்கதமாயையோ? பெருஞ்சூது, அவர்களை நானேயழித்து நாசப்படுத்தி யாகத்தை நிறைவேற்றுவேன். என்று சொல்லக்கேட்டமுனிவன் முனிந்து, தீக்கொழுந்தனைய சடைகள்விரிந்துஈரேழுலகமுங்கரிந்து இடியுங்காலமிதுவெனமுறிந்து யெழுந்த தன்மையைச் சமீபத்திலிருந்த வசிஷ்டரானவருணர்ந்து, அரசனைத்தேற்றி, உன் குமாரனுக்கு இது நல்லகாலம். இசைந்தனுப்பாவிட்டால் இவர்கொண்டது கோபக்கோலம் அது ஈசனுண்ட மகா ஆலகாலம் அதனால் இமைப்போதிலழியு மிஞ்ஞாலம். ஆனதால்இவருடன் கூட்டியனுப்புவதே இணையற்ற கீர்த்தியுண்டாம்நெடுங்காலம் என்று மொழியும் வார்த்தையைக் கேட்ட அரசன் கௌசிகருடைய இணையடிகளைச் சிரத்திற்பூண்டு இறைஞ்சி மூத்தபிள்ளையையும் இலக்குமணனையுங் கையடைகொடுத்துக்காப்பதுன் கடனென்று விடுத்தான்.

அப்பால் விசுவாமித்திரன் மகிழ்ந்து, தசரதமஹாராஜனைப்புகழ்ந்துபிள்ளைகளிருவரையும் அழைத்துக் கொண்டுபோய் ராக்ஷசமாயையும் அவர்கள் செய்யும் அக்கிரமத்தையுஞ் சொல்லி, மந்திரார்த்தங்களும் உபதேசித்து, அவ்விருவரையுந் தனதிரண்டு பக்கத்திலுங் காவல்வைத்து யாகத்தைச் செய்தனர், அப்போது தாடகைவந்து மலைமரமுதலியவற்றை லெறிந்து யாகத்தையழிக்க, ஸ்ரீராமர் பெண்ணென்றுன்னி இளைக்க, அதைக்கண்டகௌசிகர் தருமஞ்சொல்லக்கேட்டு, விண்ணின்றிழிவு மேகம்போற்றாண்ணென்றுபூமியில்விழக் கணைதொடுத்துத் தாடகையைக் கொன்றார். உடனே அவள் பிள்ளைகளாகிய சுவாகு-மாரீசன் இவ்விருவரும்வந்து வளைந்து, கொடுமையாகிய யுத்தங்களைச்செய்தார்கள். அவர்கள்பேரிலுந்திவ்யாஸ்திரங்களைத்தொடுத்து, வெகுபேர் ராக்கதரையழித்து. உதிரவெள்ளமாகச் சுவாகுவைக் கொன்று, மாரீசன் றலைக்குங் கணைபிடித்தனர். அதைக்கண்டு மயங்கி அவன்மறைந்து கடலிடத் தொளித்தனன். உடனே கௌசிகர்யாகத்தை நிறைவேற்றி அவிர்ப்பாகங்கொடுத்து இவர்களிருவரையும் அழைத்துக்கொண்டுபோகும்போதுவழியிற்கருங்கல்லாய்க்கிடந்தவுருபெண்ணாய்வரக்கண்டு, இதென்னவென்றி ராமர்வினவினர். அதற்குக்கௌசிகர் இம்மாது கௌதமர் பாரியாகிய அகலிகை, இவளை இந்திரன்கூடிக் கௌதமர் சாபத்தால் ஆயிரங்கண்ணுற்றான். இவள்கல்லானாள். என்றுசொல்லக்கேட்ட ராமர்கருணைகூர்ந்து அழைத்துக்கொண்டுபோய் கௌதமரிடத்தி லொப்பிவைக்க, உடனே கௌசிகர் அவரையழைத்துக்கொண்டு மிதுலாபுரிக்குச்சென்று சபாமண்டபத்திலிருந்த சனகன் முதலியவேந்தர் யாவருங்களிக்கக் குலமுறைகளெல்லாஞ் சொல்லி, இவனது கரத்தின் றிறத்தைத் தாடகை சுவாகுபேரிற்கண்டேன். காலின்றிறத்தைக்கௌதமர் பாரியாளாகிய அகலிகையை யளவிற்கண்டேன். இன்று உன்னுடைய வில்லைக்காணவும் வந்தேனென்று சொல்லினர். அதைக்கேட்ட சகலருஞ்சந்தோஷமுற்றார்கள். சதானந்தரும் உள்ளமகிழ்ந்தார். சனகராஜன் அப்படியே நேரிடுமாகிலென்னுடைய தவப்பயனென்று மகிழ்ந்து வில்லைக்கொண்டுவந்து சபையிற்போடவும், ஸ்ரீராமர் முகத்தை விசுவாமித்திரர் நாடவும், அவரவ் வில்லைவளைத்துப்பேரொலி யுலகத்தை மூடவும், அதுகண்ட சுபமங்கிலிகள் மங்களசோபனம் பாடவும், உடனே பாங்கிமார்கள் சீதையினிடத்திலோடவும், அவர்களலங்கரித் தழைத்துவந்தவுடன் அச்சீதாபிராட்டியாருக்குஞ் ஸ்ரீராமருக்குங் கலியாணங் கைகூடவும், வெகுசனங்களும்பிராமணர்களும் புகழ்ந்து பாடவும், வந்திருந்த தந்தைவருக்கத்தாருந் தாய்வருக்கத்தாருஞ் சந்தோஷத்துடன் கொண்டாட மற்றத் தம்பிமார்களுக்கும் விவாகஞ்செய்துகொண்டு, ஜனகமஹாராஜ னிடத்தில் விடைபெற்றுச் சதுரங்கசேனைகளுஞ்சூழ வரும்போது; வழியிற்பரசுராமர்வந்து தடுத்துச் சிற்சிலவார்த்தைகளைப் பேச, அப்போது ஸ்ரீராமர் பயப்படாமல் எதிர்நின்று அவரை வென்று ஓட்டிவிட்டு, அவருடைய வில்லை வருணனிடத்தி லொப்பிவைத்துயாவரோடும் அயோத்தியாபுரி வந்தனர்.

பின்பு அங்குள்ள யாவரும் விசுவாமித்திரரை நமஸ்கரிக்க, அவர் எல்லோருக்கும் ஆசீர்வதித்துப் போக, அதற்கப்பால் மணவாளக் கோலமுடைய பரதனுஞ் சத்துருக்கனும் பாட்டனாகிய கேகயனிடத்திற்குப் போகும்படி யனுப்பிவைத்து, அப்பட்டினத்தில் ஸ்ரீராமரும் இலக்குமணருமிருக்குநாளையில் ஒரு நாள் தசரதச்சக்கரவர்த்தி வசிஷ்டர் முதலிய பெரியோர்களுடனிருந்து, இதுவரையிலும் யான்சுமந்திருந்த இந்தப் பூபாரத்தைச் சிரேஷ்ட புத்திரனாகும் ஸ்ரீராமனிடத்தில் ஒப்பிவைத்து யான் காட்டுக்குப் போய்த் தவஞ்செய்யக் கருதினேனென்று சொல்ல, அதைக்கேட்ட பெரியோர்களெல்லாஞ் சந்தோஷித்துப் பிரமானந்த முற்று நல்லகாரிய மென்றார்கள் உடனே முகூர்த்தநாள் நேமித்து, சகலசாமக்கிரியையும் புண்ணிய தீர்த்தங்களுஞ்சேகரிக்கச்செய்து, நாடு நகரமும் அலங்கரிக்கும்படி பறையறைவித்து, பட்டினமியாவும் புகழ்கொண்டாட மறுநாட்காலமே ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகமென்று விகிதப்படுத்தி, அன்றிராத்திரி யாவருந் தங்கள்தங்க ளிடத்திற்குச் சென்றார்கள். அரசனும் அரண்மனைக்குட் போனான் சபையில்நடந்த சமாச்சாரங்களை யெல்லாங் கேட்டிருந்த மந்தரையானவள் கேகயன் பாவையாகிய கைகேசியினிடத்திற்குச் சென்று, அம்மா! என்னசும்மா இருக்கின்றாய்? உன்புருஷனாகிய தசரதமஹாராஜன் கௌசலையின் பேச்சைக்கேட்டு அவள்மனங்கோணாமல் ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்ட நாளைக்கே நாள்நேமித்துக்கொண்டார். நீ ஏதுந்தெரியாமல் நித்திரை போகின்றாய். என்றவள் விம்மிச்சொல்லுமுன் கைகேசியானவளெழுந்து புளகித்து, அவளுக்கு முத்தாரங் கொடுத்தாள். அதைமந்தரைகடுகடுத்துவிலக்கி ஆ! ஆ! இதென்ன அநியாயம்? ராமனுக்குப் பட்டமானால் உன்பிள்ளை பரதன்போய் அவனுக்கு ஊழியனாக ஏவற்றொழில்செய்து பிழைக்கவும், நீ கௌசலாதேவிக்குப் பணிப்பெண்ணாகவும். உன்மருமகள் கோசலை மருமகளாகிய சீதைக்கு வேலைசெய்யவும், உன்தகப்பன் வணக்கிப்பயந்து ராமனுக்குப் பகுதிகட்டவும், பின்பு நாமியாவரும் அந்தராமனுடைய அபராத ஆக்கினைக் குட்படவும், உன்னுடையமனிதர் மக்கள்வந்தால் நீ கௌசலையைவணங்கி அன்னவஸ்திரமுதலிய திரவியங்கள் வாங்கிக்கொடுக்கவும், தன்னைப் பணிவாரைத் தான்பணிந் தேத்தவும், உன்னை நம்பியிருந்த நான் உலைந்தழுது வாடவும், ஏதொரு சுதந்தரமுமுனக்கில்லாமல் எல்லா மூத்த பெண்சாதி வசத்திலொப்பிவித்து, பிண்டமுந் துண்டமுங் கண்டதன்றி வேறொன்று மில்லையென்று அரசனுன்னை யடக்கிவிட்டானே:

ஐயோ கைகா! நீ பிறந்தசீரும் உன்சிறந்தபேரும் உன்றந்தையினாரும் உன் இச்சையின்படி யநுபவித்த செல்வமும் போய்க் கௌசலைவிட்டுத் தாதிக்குத் தாதியாய்ப் போகுங்காலமாய் நேரிட்டதே. சூரியனுக்குமுன் சந்திரன்போலும், சந்திரனுக்குநேர் மின்மினிபோலு மன்றி; உன்பிள்ளையை ராமனுக்கு நேராய்ச் சொல்லத்தகாதே பரதனோ? மெத்த அறியாதவன். கபடு சூதுவஞ்சமொன்றுந்தெரியாதவன். உன்னுடைய மனம்போற் களங்கமற்றவன். அதெப்படியென்னில் கலியாணப்பிள்ளையும் பெண்ணும் வீட்டுக்குவந்து பெரியோரைப்பணிந்து ஆசீர்வசனம் பெறுவதற்கு முன்னமே அரசன் கௌசலையுரைத்த நலக்கண மந்திரத்தை மனதில் வைத்துக்கொண்டு, வஞ்சக நினைப்புடன் வழியிற்றானே பாட்டன்வீட்டுக்குப் போய்வாவென்று அனுப்பிவிட்டு, தன் பட்டத்தை இந்த ராமனுக்குக் கட்ட நினைத்தான். என்னகெட்ட நினைப்பு பார்த்தையா? இனி பேசுவதென்பதுவார்த்தையா! இன்ன முன்மனதிற்குத் தெரியவில்லையா மறுமொழி எனக்கொன்றுஞ் சொல்லையா! அழகிய சிங்காதனத்தில் ஸ்ரீராம னிருக்க, சுமித்திரையின் பிள்ளை இலக்ஷுமணனுங் கூடயிருக்க, உன்பிள்ளை பரதன் காலிபிடித்துக்கொண்டிருக்க நேரிட்டகாலத்தைக் குறித்து நானென்னசெய்வேன். என்று மார்பிலடித்துக்கொண்டு வாய்விட்டழுதாள் மந்தரையானவள். இந்த வார்த்தையைக்கேட்ட கைகேசி மெத்தவும் வியாகூலமுற்று மயங்கி, நீ சொன்ன வசனங்களெல்லா முண்மையே: நானென்னசெய்வேன்! எனக்கொரு உபாயஞ் சொல்லுவையாகில் அந்தப்படிநடப்பேனென்ற கைகேசியின் மனதை யறிந்துகொண்டு, நமக்கு வசப்பட்டாளென் றுணர்ந்து கூனிசொல்லுகின்றாள். அம்மா! பூர்வத்தில் தசரதமகாராஜன் உனக்கு இரண்டுவரங் கொடுத்திருக்கின்றா ரல்லவா! அதற்கு இது நல்லசமயம்வந்து வாய்த்தது. சொன்னசொல்லைக் கடக்கவறியாத அரசனிடத்தில் முன்கொடுத்தவரமிரண்டையுந் தரவேண்டுமென்றுகேட்டு உன்குமாரனாகியபரதன் நாடாள ஒருவரமும், ஸ்ரீராமன் பட்டம்நீங்கிக் காடாள ஒருவரமும்பெற்றுக்கொள்ளுவையாகில், நமக்கெதிரொருவருமில்லை நாடு நகர முதலியசெல்வமியாவும் நம்முடையதேயென்று மந்தரைசொல்ல, அப்புத்தியைக்கேட்டு மனமகிழ்ந்தகைகேசியானவள் தலைமயிர்களெல்லாம்விரிந்து புரளவும், வஸ்திரஞ்சோர்ந்துகழலவும், பரிமளகெந்த புட்பமெல்லாம் பக்கத்திற்சிதறியிருக்கவுமாயினள்.

இப்படி அலங்கோலமாக இருக்கின்ற கைகேசியினிடத்திற்கு ஒன்றுமறியாத அரசன் ஆசையுடனேவந்து, உன்குமாரனுக்குப் பட்டாபிஷேகம் நாளையென்றுசொல்லிப் பார்க்கும்போது, மிகுந்தவிசனத்துடன் புலம்பிக்கொண் டிருக்குந் தேவியை யெடுத்துமார்போடணைத்து, இந்த மனோதுக்கம் உனக்கு வந்ததிதம்யாது! ஓ மயிலனைய மாதே! உனக்கிங் குற்றது ரைப்பாய் என்று விரும்பிவருந்தித் திருந்திழையைக் கேட்க, அதற்குச் சிற்சிலவசனங்களை வெடிப்பாகவும்

வெறுப்பாகவும்பேசி, மனங்குழையும்படியாகவுமேசி, எத்தனைவிதச் சமாதானஞ் சொன்னபோதிலுங் கேளாமல், இரண்டுவரம் எனக்குக் கொடுத்திருப்பதை இப்போதெனக்குத் தரவேண்டுமென்று கேட்டனள். அவ்வாறு கேட்டமனைவியை அரசன்பரிந்து நோக்கி, அன்றுசொல்லிய வாக்கியத்தை அழித்துப்பேச மாட்டேன். அப்படியே தந்தேன் பெற்றுக்கொள். விரைவில் எழுந்திரு முகத்தை யலங்கரித்துக் கொண்டு உன்பிள்ளையாகிய ராமனுடைய பட்டாபிஷேகத்திற்கு வாவென்று அரசனழைக்கவும், அதைக்கேட்டகைகேசிநகைத்து, இப்போதே கொடுத்தாலொழியவரேனென் றாடினள். அதற்கரசனிசைந்து, பெண்ணே! அப்படியே தருகிறேன்கேளென்றுகூற, நீர்கொடுத்த இரண்டுவரத்தில் ஒருவரம் பரதனுடாளவும், மற்றொருவரம் ராமன்காடாளவுங்கொடுமென்று சொல்லினள். அவ்வாக்கியம் இருப்பு நாராசம்போல் அரசன்காதுகளில்நுழைந்து, வேடனது கைப்பாணம்பட்டுவெருண்டு மருண்டு விழுந்த பிணைமான்போற் பூமியில்விழுந்து மூர்ச்சைபோனான். மறுபடிதேறி எழுந்து, பெண்ணே கைகா! எனக்கு உயிர்ப்பிச்சைதரவேண்டும். உன்மகனுகியபரதனுடாளட்டும். ஸ்ரீராமன் மாத்திரம் வனத்திற்போகாம லிவிடத்தி லிருக்கட்டும். என்றுஅரசன்சொல்ல, அதைக்கேளாது அவள் நில்ல, பின்பு இன்னும் எத்தனை விதத்திற் சொல்லியுங் கேளாமையால் முத்திரை மோதிரத்தைக் கழற்றிக் கைகேசிக்கு முன் எறிந்து விட்டு, அடா குழந்தாய்! அடாராமா! அடாராமா! என்று பூமியில்விழுந்து தன்னைத்தான் மறந்தான் தசரதமஹாராஜன். இவிடத்தி லிப்படியிருக்க, மறுநாட்காலமே வசிஷ்டர் முதலிய மந்திரிமார்களும் மன்னவர்களுங் கொலுச்சபையில்வந்து நிறைந்து, மங்களவாத்திய முழக்க மன்னர்மண்டலீகருடன் ஸ்ரீராமனுக்குப்பட்டாபிஷேகமென்றுயாவரும் உள்ளக்களிப்புட னிருக்குங்காலையில், அந்தப்புரத்தில் நடந்த சங்கதியாவு மறிந்துகொண்ட ஸ்ரீராமர்மனமகிழ்வுடன் தசரதச்சக்கரவர்த்தியினிடத்திற்கு வரும்போது, அவ் வந்தப்புரவாசலில்நின்ற கைகேசியைநோக்கித் திர்க்கதெண்டனிட்டுப்பணிந்தனர். அதைக்கண்ட தாயாகியகைகேசி ஸ்ரீராமரைப் பார்த்து, அப்பாராமா! உன்றந்தை இப்போது உன்னுடன் பேசத்தக்கவரல்லர். நீயின்னிமிடம் பிரயாணமாகிப் பதினன்குவருஷங் காட்டிற்றிரிந்துவரக்கடவை. உன்றம்பிபரதன் இந்த நாட்டையாளக்கடவானென் றுரைத்தனள்.

கேட்டீரோ தருமபுத்திரரே! அம் மொழியைக் கேட்ட ஸ்ரீராமர் மனமகிழ்ந்து, அம்மணி! என்பாக்கியமேபாக்கியம். இதைவிடவுமுண்டோ சிலாக்கியம்? என்று அநேக முறைமையாகப்பணிந்து, என்னரசன் சொல்லாமற்போனனுந் தேவரீர்கட்டளையைத் தள்ளி நடக்க வென்றராமோ? தாயே! நீர் சொல்லிய வாக்கியமே வேதவாக்கிய சிலாக்கியமன்றிவேறில்லை. இதுவேபிரயாணமாகப் போய்வருகின்றேனென்று அகமகிழ்ச்சியோடு வணங்கி, அடிக்கடி மண்மீதில் வீழ்ந்து தாழ்ந்து விடைபெற்றுக்கொண்டு, தந்தை இருக்கும் அந்தப்புரத்திற்குப் போகாமல் தன் சொந்தகிரகத்துக்குவந்து, கேயூர மணிகுண்டல கிரீட முதலியயாவையுங்களைந்து, அச்சிற்றன்னையால் அனுப்பிவைத்த மரவுரியுங் காவிவஸ்திரமுந் தரித்துக்கொண்டு, காடே காணியாகஷியாகப் புறப்பட்டனர். அப்போது தேவர்களெல்லாம் புகழ்ந்து பாரிசாத மலர்களைப்பொழிந்து, எங்கள் குறைபகற்றுமேந்தலேஎன்று வாழ்த்தினர்கள். அதுகாலையில ஸ்ரீராமர் பட்டாபிஷேகக் கோலநீங்கிச் சடைமுடி மாவுரியுடன் வருந்தன்மையைக்கண்டவசிஷ்டர்முதலானமகாரிஷிகளும்-பலமன்னவர்களும்-மற்றையர்களும் வாடிக்கலங்கி, ஏதொன்றுந்தோன்றுமல் ஏங்கிஇருக்க, அதைக்கண்ட ராமசுவாமியானவர் வசிஷ்டரை வணங்கி, தாயாகிய கௌசலையையுந் தொழுது, அந்தம்மாளும் அழுது விடைதரநீங்கிச் சீதையினிடத்திற்குவர, அவ்வம்மன் கண்டு கலங்கிக் கூடவரும்படியாகிய கொள்கையோடுற, அதைபறிந்தழைத்துக்கொண்டு சுமித்திரையைக்கண்டிறைஞ்ச, அக்காலிவ்வார்த்தைகளைச்சொல்லக் கேட்டதம்பி இலக்குமணர் கோபங்கொள்ள, அதைமாற்றியவரையுமழைத்துக்கொண்டு, தாங்கள்மூவரும் புறப்பட்டு அயோத்தியை நீங்கினர். அப்போது உயிரிழந்த உடல்போலியாவருந் துயர்கொள்ளக்கண்ட கோதண்டராமர் அவர்களை நிறுத்திவிட்டு, தாங்கள் மூவருமாய் மூன்றுயோசனை தூரஞ்சென்று கங்கையைக்கடந்து, குகப்பெருமானுடைய உறவுகொண்டு, அப்பாற் சித்திரகூடம் போய்ச்சேர்ந்து, அங்கு சிவனடியார் திருமா லடியார் முதலிய பெரியோர்கள் வந்து ஆசீர்வதிக்க அவர்களுக்கு வணங்கி யுபசரித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறிம்மூவர்களும் வனநோக்கிச்சென்ற செய்தியைத் தசரதமகாராஜன் மந்திரியென்னுஞ் சுமந்திரன் சொல்லக்கேட்டு, ஆ! ஆ! மகனே! என்றுகூவி ஆவியகன்றுன். உடனேவசிஷ்டர் திருமுக மனுப்பக்கண்ட பரதசத்துருக்கா ளிரண்டுபேரு மயோத்தியாபுரியில்வந்து அரண்மனையிற்புகுந்து, அரசனிறந்தமையும் அண்ணன் அகன்றமையுமுணர்ந்து, தங்கள் தாய்முகம்பார்க்க வயிறெரிந்து, தந்தைக்குச்செய்யுங்கருமவிதிகளெல்லாம்புரிந்து; ஐயோ! என்னைப் பழிக்காளாக்கி விட்டாயே தாயே என்று கண்ணீர் சொரிந்து, கௌசலைத் தாயைப் பரிந்து, சபதங்களநேகமாகப் புரிந்து, இனிமேல் என் தமயனைப்பிரிந்து இகத்தில் இமைப்போதும் உயிர்வைத்திருக்கேனென்றிரைந்து, என் அண்ணனைப்போல் யானுங் காட்டுக்குச்செல்கின்றேனென்று விரைந்து தவவேடங்கொண்டுபுறப்பட்டனன். தம்பி சத்துருக்கனும் அதுவே கோலங்கொண்டு வந்து நின்றனன். தாய்மார்மூவரும்-வசிஷ்டர்முதலிய முனிவரும்-மற்ற

மந்திரி பிரதானிகளும்-ரதகஜதுரக பதாதிகளும்-நகரீத்திலுள்ள ஜனங்களியாவரும் - கடல்நெருங்கி வருவதுபோல் வந்து நெருங்கி நின்றார்கள்.

உடனே பரதராஜனனவன் அவர்க ளனைவரோடும் பிரயாணமாகி, அண்ணன் திருவடிநாட்டிய இடங்களிற்றன்னுடைய திருமுடிசூட்டி, கண்ணீராறுகப் பெருகும்படியாய்க் கங்கைக் கரைபோய்ச் சேர்ந்து, அக்குகுகனைக்கண்டு வார்த்தையாடி, பின்பு ஓடத்திலேறிச்சென்றுசித்திரகூடம்போய் ஸ்ரீராமரைக் கண்டான். கண்டமாத்திரத்திற் பரதன் தாயைக்கண்ட சேயைப்போலும் - பசுவைநோக்கிய கன்றைப்போலும்-கதறி முறையிட்டலறி, தந்தை இறந்த சங்கதியைத் தமயனேடுகூடித் தாயாகிய சீதையின் சரணங்களிற்பணிய, பணிந்த பரதனை வாரி எடுத்து மார்போடணைத்த ஸ்ரீராமரும் இலக்குமணனும் வெகுவாகிய விசனங்கொண்டு விம்மினர்கள். அக்காலையில் வசிஷ்டரு மற்றமுள்ள மஹாமுனிவர்களும் அவர்கள் துயர நீங்கத் தருமஞ்சொல்லி ஸ்நானஞ்செய்வித்து, அவிடத்தில் நடத்தவேண்டிய கருமங்களெல்லா முடித்தார்கள். பின்பு ஸ்ரீராமர் பரதனைநோக்கி, தம்பி! நான் மாதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்படியாய் வனத்திற் பதினன்குவருடங் கழித்து, பதினைந்தாவதுவருடமுதலிற் நசமினன்றைக்கிவருகிறேன். அதுவரையிலும் நீ தாய்மார்கள் மனதின்படி நிறைமுறை தவருமனடந்து நீதிசெலுத்தி, மந்திரியர்-சேனதிபர்-ஆசாரியர்-முதலியயாவருமகிழத் துரைத்தனஞ் செய்யக்கடவை என்று கட்டளையிட்ட சீதாபிராமனுடைய திருவடிகளிற் பரதன் பணிந்து, அண்ணலே! தேவரீருடைய திருவடியுந் தாயாருடைய திருவடியுஞ்செல்லும் வனங்களிற் கல்லும் புல்லும் நீக்கிக்கொண்டு வருகினறேன். அல்லும்பகலும விழித்துக் காவலிருக்கினறேன். சொல்லும் ஏவற்றொழில்களைச் செய்துவருகின்றேன். என் அண்ணாவே! என்று அலறி அழும் பரதனை இராமர் எடுத்தணைத்து, அப்பா! தாய்தந்தையர் கூறியவாக்கியந் தப்பி நடப்பது நமக்கு யோக்கியமல்லவே: தம்பி! என்போலொத்த பிள்ளைபிறந்து மாதாபிதாவை வையகத்தார் பழிக்கச் செய்து நானரசுபுரிவது அழகல்ல. தருமமல்ல. நமது குலமுறைக் கடுத்ததல்ல. என்வார்த்தையை நீ தள்ளி நடப்பது இயற்கையல்ல. ஆகையாற் பதினன்கு வருடமும் பதினன்குநாளாய் நினைத்து அரசுசெய்திருப்பையாகில், நான் பதினன்கு நாழிகையாகக் கழித்து வருவேன். என்றுசொல்லிய வாக்கியங்கேட்ட பரதன் முகம்வாடி, ஸ்ரீராமருடைய பாதுகையைநாடிக் கண்களிலொத்திக்கொண்டு, இதையாகிலுங் கருணைபுரிந்தாற் சிங்காசனத்தி லேற்றிப் பூசைபுரிந்திருந்து, எப்போது டேந்துவரு மரசாட்சியைத் தப்பாமலொப்பிவைத்து, நானிப்போதிருக்குங் கோலத்துடன் தேவரீர்வரு மப்போதுவரையினு முப்போதுண்ணாமலிருப்பேன். தேவரீர் வருங்கால மெனக்குச் சொன்னபடி வராதிருந்தால், அக்கினியி லிறப்பேன். என்றுசொல்லிய தம்பிக்குப் பாதுகைமகுடஞ்சூட்டியனுப்ப, உடனே விடைபெற்றுக்கொண்டு, யாவரோடும் உயிர் நீங்கிய உடல்போலும்-சூரியன் நீங்கிய வானம்போலும்-துன்பமுடன் திரும்பி, அயோத்தியாபுரிக்கு வந்து சேர்ந்தான் பரதமஹாராஜன்.

இவ்வாறு அயோத்திக்குவந்த பரதராஜன்நந்திக்கிராமத்திற் சிங்காசனமேற்படுத்தி, அதின்மேரிற் பாதுகையை யமைத்து, சடைமுடிமரவுரியுடன் ஸ்ரீராமமந்திரத்தைச் செபித்து, சிந்தைதளராமற் றென்றிசையைநாடி, ஸ்ரீராமரைவிட்டுப்பிரிந்தநாளை எண்ணிக்கொண்டிருந்தான. சத்துருக்கனும் அவனுடன் கூடவேயிருந்தான். கேளுந் தருமநந்தன! இங்கே ஸ்ரீராமர் முன்னுஞ் சீதாதேவியார் மத்தியிலும் இலக்ஷுமணர் பின்னுமாக நடந்து, மகானுக்களை யெல்லாம் நமஸ்கரித்து அவர்களாசீர்வாதம் பெற்றுக்கொண்டு, யாளி-சிங்கம் - யானை - கரடி - முதலிய மிருகங்கள் சஞ்சரிக்கும்வனங்களிற்செல்லுவதாயினர். அப்போது வடவாமுகாக்கினி குடியிருக்குங் கண்களும், அதினுடைய கொழுந்து தாவிப்படருந் தன்மைபோன்ற சடைமயிரும், மலைபெயர்ந்து வரும்படியாகிய நடையும், வானமளாவிய முடியும். சப்தமேக முழக்கம் போன்ற குரலும், சமுத்திரத்தை யுறிஞ்சிக்குடிக்கும் வாயும், தேவர்களும் ரிஷிகளுந் தியங்கி நிஷ்டைகொண்டிருக்குங் காதுகளும், ஆகியவித் திடகாத்திர தேகமுடைய விராதனென்னு மிராக்ஷசன்வந்து; திடுக்கிடச் சீதாதேவியை எடுத்துத் தோளிலேற்றிக்கொண்டு ஆகாயவீதியிற் சென்றான். அப்படிசெல்லும்போது தாயார் துயரமுற்றுக் கூச்சலிட்டலறக் கண்ட ஸ்ரீராமரும் இலக்குமணரும் பயப்படாதேயென்றுஉறுதிகூறித் திவ்யாஸ்திரங்களைத் தொடுக்கவும், அதைக்கண்ட விராதனிலத்திலிறங்கி இவர்க ளிருவரையும் வாரியெடுக்கவும், இவர்களு மவன் தோளிலேறிக்கொண்டு வாளையுருவியோங்கி வெட்டியகாலையில் அவனிரண்டு புஜமுமற்றுப் பூமியில்விழவும், ஸ்ரீராமருஞ்சீதையம்மனும் இளையபெருமாளும் நிலத்திற்றிடங்கொண் டிருக்கும்போது; தேவவிமானத்துடன் அனேக ஸ்தவுத்தியங்களைச்சொல்லிப்பணிந்து சென்றான் விராதன். தேவர்கள் அடங்கா மகிட்சியுடன் புட்பமாரி பொழிந்தார்கள். அப்பால் மூவரும் நெடுந்தூரஞ்சென்று, அங்கே விரதம் - ஓமம்-யாகம்-தவம்-செபம் - சாஸ்திரப்பழக்க மியாவுமுணர்ந்து பிரபஞ்சத்தின் வாழ்க்கையைப் பொய்யென் றிகழ்ந்து மெய்யை நாடிக்கொண் டிருக்குஞ் சரபங்கருடைய ஆச்சிரமத்திற்குவந்து, அந்த மஹாரிஷியே முதலிய மாதவத்தினர்க்கெல்லாம் நமஸ்காரஞ்செய்து, அவர்களாசீர்வசனமும் பெற்றுக்கொண்டு, ராக்ஷதரால் வருந்தும் அந்தஉத்தமர்களுடைய துன்பநீங்க அபய

ஸ்தங்கொடுத்து, மூவருமவிடத்தி லிருந்த கோதாவிரி தீர்த்தத்தில் வந்து, இளையோனு லிடும்படியாகிய பர்ணகசாலையிற் சீதாதேவியும் ஸ்ரீராமரு மெழுந்தருளியிருக்க இளையபெருமாள்கந்தமூல பலவர்க்கங்கொண்டுவந்துபசரித்துக் கொடுத்துத் கலைவாய்தலிற் காத்திருந்தார். அந்தநாளையில் இராவணனென்பவன் சீதாபிராட்டியாரை எடுத்துக்கொண்டுபோனான். என்று சொல்லக்கேட்ட தருமராஜன் வருந்தி நமஸ்கரித்து. சுவாமி! இராவண னுற்பவமும்-அவன் வந்து எடுத்துப்போன விபரமும் முறையாகச் சொல்லவேண்டுமென்று கேட்க, மார்க்கண்டேயர் சொல்லத் தொடங்கினார்.

ஓ தருமநந்தனா! பிரமதேவனுடைய குமாரன் புலத்தியப்பிரமன். அவன்குபேரனென்னும் பிள்ளையைப் பெற்றான், அந்தப் பிள்ளையானவன் அநேகந் தவங்களைச்செய்து அளவில்லாநிதியும் - அளகையம்பதியும் - ஈஸ்வரனன்பும் - ஈரேழுபதினான்கு லோகமும் நொடியி னுலவிவரும் புட்பகவிமானமும்பெற்று இலங்காபுரியில் மதிப்பில்லாமல் வாழ்வுற் றிருக்குநாளையில், பெற்ற தகப்பனாகிய புலத்தியருக்குப் பிள்ளையாகியவிக்குபேரன்பேரில் விருப்பில்லாமல்வெறுப்புடன் சலிப்பாய்க் கோபங்கொண்டு, (மாதாபிதாமனநோவ வாழ்வானதுரு ஒருநாளும்.) என்னும் பழமொழிபோல் மனத்தினினைத்து, இவனுக்குச்சத்துருவுண்டாகக் கடவதென்று தனது சரீரத்தில் இடது பாகத்தைநோக்கினர் அப்படிநோக்கவும்அந்தஇடத்திலிருந்து தேககாத்திரமும் க்ஷாத்திரமுந் தோத்திரமுங்கொண்டு ஒருசற்பாத்திரனாகிய புத்திரன்பிறந்து நமஸ்கரித்து நிற்க, அவனைக்கண்டு மகிழ்ந்து விச்சிரவாகுவென்று பேரிட்டு, சகலநன்னெறிகளும் அனுக்கிரகஞ்செய்து தபசுக்கனுப்பினார் அவ்விச்சிரவாகு வணங்கிச்சென்று ஒரு ஆச்சிரமமியற்றிக்கொண்டு, அதிலனேககாலந்தவஞ்செய்திருந்தார். இந்தச்சங்கதிகளை எல்லாம் இலங்கையி லிருக்குங் குபேரன் கேள்விப்பட்டு, நமது தந்தையின் இடதுபக்கத்திற் பிறந்த இவரு நமக்குத் தந்தைதானென்று சிந்தித்து, நமக்குச்சத்துருவாகப்பிறந்த விரோதத்தைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென் றுன்னி, அவருடைய ஆச்சிரமத்திற்கு வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, ஐயனே! உமக்கு நான் பிள்ளையேயன்றிவேறல்ல. பெற்றோர் இகழ்ந்தால் பிறரும்பழிப்பார்களென்னுந் தன்மைபோல் என்னைக் கைவிடாமல் இரக்ஷிக்கவேண்டுமென்று வணங்கித் துதிக்க, அக்குபேரனுடைய நன்மார்க்கத்தைக்கண்டு மனமகிழ்ந்து இரக்கமுற்று, சாந்ததயை யுடையவராய் ஆசீர்வதிக்கருளினார். அதுமுதற்கொண்டு குபேரனானவன் நித்தியமும் அவரிடத்திற்குப் போகிறதும் வணங்குவதுமாகி, விச்சிரவாகுவின் அன்பு தன்னிடத்திற் பூரணமாகும்படி நடந்துவந்தான். இப்படி இருக்கு நாள்களில் ஒருநாள்மஹாலட்சுமிக்கு மேலாகியசவுந்தரியங்களையுடையமூன்று இராக்கத ஸ்திரீகளை அழைத்துக்கொண்டுபோய் விச்சிரவாகுவின் பாதங்களில்வணங்கி அத்தனே! சித்தசன்மயங்கும் உத்தமராகிய இந்தப்பெண்களைத்தேவரீர் பணிவிடைக்குரித்தாய்க் கொண்டுவந்தேன். அங்கீகரிக்கவேண்டும் என்றுதுதிக்கவும் அவர் சம்மதித்துச்சந்தோஷங்கொண்டுமதிக்க, அதுகண்டகுபேரன் அங்கவர்களைவிட்டு இலங்கைக்குப் போய்விட்டான்.

அப்பால் அந்த ஸ்திரீகள் மூன்றுபேரும் நித்தியநியம உபசாரப்பணிவிடைகளிற் குறைவுவாராமல் பத்தியாய் முத்திநிலையை நாடிய முனிவர்கள்நெறியையேற்றிருக்கு மவ்வுத்தமருக்குகந்த தொண்டுபுரிந்துவந்தார்கள். அந்த விச்சிரவாகுவின் தவம்நிறைவேறியபோது இந்த ஸ்திரீகளைநோக்கி, ஓ என்னிடத்தில் பேரன்புவைத்து இரவும்பகலுங்காத்து ஊழியம்பண்ணிக்கொண்டுவந்த உண்மையாகிய வாலிபப்பெண்களே! உங்களிடத்தி லெனக்கு மிகுந்த உற்சாகஞ்செனித்திருக்கின்றபடியால் நீங்கள் கேட்கும்வரங்களைத் தடையில்லாமற் றருவேனென்ன, அதற்கவர்கள் சந்தோஷமடைந்து வணங்கி, சுவாமி! எங்களுக்குக்கர்ப்பதானஞ் செய்யவேண்டுமென் றிரந்தார்கள். அப்படியே நல்லதென்று மூத்தவளாகிய புற்கடை என்பவளுடனே கலந்து, அவள்கருப்பத்தில் தசக்கிரீபனும் கும்பகருணனும் உதிக்கச்செய்து, இரண்டாவது பெண்ணாகியமாலி என்பவளுடன்கூடி விபீஷணனைப்பெறச்செய்து, மூன்றாவது வாகை என்பவளுடன் புணர்ந்து பசாகரனைப்புரட்டும்மோசகா னென்பவனையும்—மறுபடியுஞ்சேர்ந்து ஆலகாலவிடத்தைத் திரட்டியுருவாக்கிய சூர்ப்பனகை என்னும் பெண்ணையும் பெறச்செய்து இந்தப்பிள்ளைகள் நால்வரும் பெண்ணொன்றும் ஆகவைந்துபேரையும் அதிக மகிழ்வாய்ப் பாராட்டி, பிள்ளைகள் நால்வருக்கும் வேதவிதிப்பிரகாரஞ் சாதகன்மம் நாமகன்மம் உபநயனம் இவைமுதலியன செய்து, நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்குகலைக்கியானம் தனுர்வேதமுதலிய வெல்லாங் கற்பித்து, பிரமதேவரைக்குறித்துத் தவசுசெய்யும்படி விடுத்தார் அப்படியே நாலுபுத்திரரும் ஆயிரம் வருடம்வரையிற் றவம்புரியுங்காலையில், அதுகாறும் பிரமதேவர் பிரசன்னமாகாம லிருக்கக்கண்டு கோபங்கொண்டு, மனவயிரத்துடன் பெரி வனாகிய தசக்கிரீபன் ஒருதலையை வாளினாலறுத்து ஓமாக்கினியிலிட்டு அவிகொடுக்க, அப்போதும் பிரமதேவர் வாராமையால் ஆயிரம்வருடத்திற் கொருதலையாக அறுத்து ஒன்பதினாயிரம்வருடத்திற்கு ஓமஞ்செய்து, பத்தாவது தலையையும் அறுக்கப்போகின்றசமையத்திற் பிரமதேவர் பிரசன்னமாகவந்துகரமமைத்து, அறுத்துப்போட்ட ஒன்பதுசிரமும்உண்டாகச்செய்து, அவனுடையதிடதயிரியத்தைநோக்கிக் களித்து இதனைப் பேசுவதாயினார்.

அப்பா தசக்ரீவனே ! இதுகாறும்நீசெய்துவந்த இந்தத் தவத்திற்குமெச்சினேன் உன்னுடைய தலைகள் எத்தனைதரம் அறுபட்டாலும் உடனேமுளைக்கக்கடவது எந்ததேவர்களாலும் உனக்கு இடையூறில்லாமலும், எந்த ஆயுதங்களாலுஞ் சாவில்லாமல்மூன்றரைக்கோடி ஆயுளும்—வமிசவிர்த்தியும் - இலங்கைராச்சியபட்டாபிஷேகமும் உண்டாகக்கடவதென்றுகூறி பின்னுமவன் விரும்பிக்கேட்டவரங்களெல்லாவற்றையுங் கொடுத்து ஆலிங்கனஞ்செய்து மகிழ்ந்து கும்பகருணனை நெருங்கி, உனக்குவேண்டிய வரமென்னவென்றுகேட்டனர். அதற்கவன் நித்தியதத்துவங்கேட்கத் திறக்கும் வாயிலிருந்து நித்திரைதத்துவமென்றுமொழிமாறிவரவும், அப்படியே உனக்குக் குறைவில்லாமற் கொடுத்தேன் கொடுத்தேனென்றுகூறி விபீஷணனைப்பார்த்து, உனக்குவேண்டியவரங்களைச் சொல்லென்றனர். அதற்கவன் சொல்லுகிறான் ஓசுவாமி பாபரகிதமாய் புண்ணியச்சகிதமாய், பெரியோர்கள் உத்தமனென்றுன்னவும், தீங்கில்லாச் சிந்தை துன்னவும், தயையுந்தாக்ஷண்யமும் அருளல்வேண்டும். என்று போற்றிச்சாற்றவும் அன்னவாகனத்தோர்க்கு ஆசைபெருகி, அப்பாவிபீஷணா! நீ அசுரர் நடத்தையை நீக்கி, அமரர்சகாயநோக்கி, ஆனந்தவெள்ளந்தேக்கி, அசத்தியனென்பவைபோக்கி, அருணிறைந்தசத்தியவாக்கியாய் எக்காலத்திலும் அழிவில்லாமற் சிரஞ்சீவியாய் தேவர்சகாயனாய், தருமகுணவானாய், யாவருங் கொண்டாட விருக்கக்கடவையென றருள்புரிந்து; கரனிடத்திற்சென்று அவன்கேட்ட பிரபலவரங்களையுங்கொடுத்து, பிரமதேவர்சீக்கிரத்திற்சத்தியலோகம் போய்விட்டார். அப்பால் தசக்கிரீவனுந்தம்பிமார்களும் ராக்ஷசக்கும்புகளைச்சேகரித்துக்கொண்டு, பூரியருக்குப் புதுச்செல்வம்வந்த பொங்காரம்போற்பொங்கிப்புகழ்ந்து, இலங்கையின்பேரிற் படையெடுத்து வருவதாயினார்கள் அப்படிவருதலைக்கேட்ட இருநிதிக்கிழவன் எதிர்நிற்கமாட்டாம லிளைத்து அளகாபுரி போய்ச்சேரவும், இலங்கையைத் தசக்கிரீவன் கைக்கொண்டு ஏகபோகமாகயிருந்தான் அதைக்கண்டு பிலத்துவாரங்களிலிருந்த இராக்கதர்களெல்லாம் வந்து தெண்டனிட்டு இலங்கைக்குக் காவலாளராகவும் சேனாதிபதிகளாகவுமிருந்து பின்னும் அநேகமாயிரம் வெள்ளங்களாக நாளுக்குநாள் சமுத்திரப் பெருக்கம் போல்வந்து நெருங்கினார்கள். அப்படியாவதைத் தேவர்கள்கண்டு பயமடைந்து ஒடுங்கவும், தவம் தானம் யாகம் ஓமம் எதுவுமில்லாமலிருக்கவும் இராவணன் துரைத்தனஞ்செய்து, மண்டோதரியைக் கலியாணம் பண்ணிக்கொண்டுதம்பிமார்களுக்கும்விவாகம்நடத்தி, இராவணி—அதிகாயன்-அக்கன்-சலன் - பிலவந்தன்- என்னும் அநேகம் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு, வெகுவாகிய ஸ்திரீகளையுந் தேவமணம் - காந்தருவமணம்-பூதமணம்—இராக்கதமணம் - இப்படியாகச் செய்து, அவர்களிடத்திலும் புத்திரப்பேறுண்டாக லட்சம் புத்திரர்களைப் பெற்று, அப்பிள்ளைகளின் பலமும் தம்பிமார்களின் பலமும் சகோதரர்பலமும்சேனாசமுத்திரபலமும் பிரமதேவரின்வரமும் மற்றநலமுங்கூடினவனாய், தனது மகத்துவமகிழ்ச்சியினால் எவரையுமதியாமல் அக்ரமம் அநந்தை இவைமுதலியவைகள்மேலிட்டு தேவர்களை எல்லாங்கலங்கிச் சிறைபிடித்து, தேவேந்திரனை போடவிட் டடித்து, யாவருக்குந்திகிலுண்டாக நடத்திவருகின்றான்.

அப்போது தேவர்களெல்லாங்கூடி இவனுக்குத் தமையனாகிய குபேரனிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள் இதைக்கேள்வியுற்ற குபேரன் விசனமடைந்து ஐயோ ! நமது தம்பிமார்கள் சவுக்கியமாக இருந்தால் நமக்கழகு வருத்தமுற்றால் என்னலாபம்? தம்பியுடையவர் படைக்கஞ்சாரென்னுந் தன்மையாய் யான் சந்தோஷிப்பதற்கிடமில்லாமல், தேவர்களுக்கு விகிதராக இருப்பதைவிட்டு அகிதராக இருக்கின்றார்களே: என்று வருந்தி ஒருதூதனை யழைத்து, நீயின்னிமிடத்திற் தசக்ரீவனிடத்திற்சென்று. நமது வாழ்நாளுஞ்செல்லமும் நீடித்திருப்பதற்குப் பெரியோரைப்பணிதலும் - பொய்புறங் கூறாமையும் - இயாகாதிகிருதுக்களுஞ் செய்யவேண்டியது தெய்வ சகாயத்தைப் பெறவேண்டியது. என்றுசொல்லித் தேவர்களிடத்திற் கிருபை வைக்கும்படியாய்த் தெரிவித்துவாவென்று அனுப்பினன். அப்படியே சென்ற தூதனைத் தசக்கிரீவன்கண்டு, குபேரன் சொல்லியனுப்பிய வார்த்தையையுட்கொண்டு கண்கள்சிவந்து, தான்பரிசுத்தனும் யோக்கியனும் நான் அசுத்தனும் அயோக்கியனுமாக நினைத்தோ புத்திசொல்லி யனுப்பினான்? அப்பாதூதா ! கெட்டவனுக்கு எத்தனைப் படிப்பித்தாலுந் துட்டத்தனம்விடாதென்று அவருடையபுத்திக்கு எட்டாமற் போனதென்ன? கெட்டபால் நல்லபாலாமோ? செல்லாக்காசி செல்லுமோ? மேலோரறிவு கீழோருக்கு வருமோ ? இப்படிக்கு யெனக்குச் சொல்லியனுப்பியது செல்வத்தின் கர்வமோ ? தேவர்களைச் சகாயமாகக்கொண்ட வர்மமோ? இவ்வாறேளனமாகச் சொல்லியனுப்பியது தர்மமோ? என்று மடமட நடநடவென்று பல்லைக்கடித்து, அந்தத் தேவர்களையும் அவர்களைச் சகாயமாகக்கொண்ட புத்திமானாகிய குபேரனையும் இந்நிமிடத்திற் கண்டு வரவேண்டியது சுங்கமுங்கூழும் இருக்கவிருக்கத்தடிக்கும். இட்போது நகத்தாற் கிள்ளுவதை இனிக்கோடாலி கொண்டு வெட்டவரும். ஆகையாற் கேட்டபோதே மாட்டிவிடவேண்டும். தாட்டியுடன் யாவரும் வாருங்களென்று பற்பல படைகளுடன் சென்று, விற்படை வேற்படை முதலியவைகளைக் கொண்டு அளகாபுரியைவளைந்து, அமரர்முதலிய பேர்களைத் தளைந்து, குபேரனைப் புறங்கண்டு, புஷ்பக விமானத்தை கைக்

கொண்டு, அண்டமுகடுமுதல் மண்டலமும் எண்டிசையுநடுங்க, விண்டலமார்க்கமாய் அப்புட்பவிமானத்தைச் செலுத்திச் சண்டப்ரசண்டவேகமாகக்கொண்டுவருகிறான்.

அப்படி வருகையிற் பச்சைப்பசுங்கொடிப் பார்வதியாருடன் பவளமலையாகிய பரமேச்சுரக்கடவுள் எழுந்தருளிய கைலயங்கிரியின்சிகரத்தினேராய்வந்த புட்பகவிமானம் அசைவற்றுநின்றுபோக அதுகண்ட தசக்ரீவன் தன்தம்பியர் தனயர் மற்றுச் சேனாநாயகர் முதலாயினரோடும்பயந்து ஏதுந்தோன்றாமல் மயங்கித்தியங்கி வாடுங்காலையில்; சொல்லுதற்கரிய தவத்தைப்புரிந்து பவத்தையொழித்துச் சிவத்தையடைந்த நந்திகேசுரர்கண்டு, ஓய் தசக்ரீபனே ! திரிபுரசங்காரமூர்த்தியாகிய சித்விலாச சத்வகுண சிவபெருமானெழுந்தருளிய வேதண்டமாகையால், உன்னுடைய விமானஞ் செல்லாமல் நின்றுபோய்விட்டது. வந்தவழிதிரும்பிப்போகக்கடவாய். என்று சொல்லக்கேட்ட தசக்ரீபனுக்கு வினைவசத்தால் முன்பின்னெண்ணாமற் கோபம்வந்து, குரங்கு முகங்காட்டிச் சொல்லவந்த நீயாரென்றுகேட்டனன். அப்படிகேட்கவுஞ்சர்வசமயத்தலைமைப்பொருளாகியசாம்பசிவமூர்த்தியின் இனிய கிருபையைப்போன்ற நந்திதேவர் நகைத்து இராவணனைநோக்கி, என்னையோ குரங்குமுகனெனக்கூறினை? அடா அரக்கனே ! உன்வாக்கினாற்சொன்ன வானரங்களினால் உன்குடும்பமுதல் நீயும் இலங்காபுரியும் நாசமடையக் கடவதென்று சபித்தனர். அதைக்கேட்ட தசக்கிரீபன் சப்தமேகமும் இடிந்து தாரணியில்வீழ்ந்ததன்மைபோற் குதித்து, பளபளவென்று இருபது புசத்தையுந்தட்டிக்கொண்டு, ஒருகாலூன்றி ஒருகால் மடித்து மண்டியிட்டு, சூலப்படையாற் கயிலையங்கிரியைக் கெல்லி அடுத்து, தனதொருபதுதோளையு மடுத்து எடுத்தான். அமரர் - சித்தர் - அசுரர் விஞ்சையர்-இயக்கர் — யட்சகர் - காந்திருவர் - முனிவர்—முதலியோரோடு பார்வதியாருந்திடுக்கிடக்கண்ட தேவதேவன் இடதுகாற் பெருவிரலை யூன்றவும்இராவணன் மாசற்ற மலையின்கீழகப்பட்டு, மணிமுடிநெருங்க, அணியுர நொறுங்க, திணிபுயம் வருந்த, திருவும் - தேகமும் - சிறப்பும் - தீரமும் - திண்டோள் வலியுந் தவ . லியுஞ் சிதைந்து, தேய்ந்து, பேசுந்திறனின்றியழுது, நெடுநாளொடுங்கி வருந்தி யிருந்தான். அமரர்முதலிய யாவரும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அரனைப்புகழ்ந்துபாடிப் பணிந்தார்கள். இப்படி பலநாளடங்கிக்கிடந்து வருந்துநாளையில், மகதியாழ்கதிபனாகிய நாரதமஹா முனிவரானவர் மஹாதேவனைக் கண்டு வணங்கிக் கயிலைமலையை வலம்வரும்போது, நொந்து நைந்தழுது வாடிய இலங்கேசனைக்கண்டு, ஓ அறிவற்ற வெறியுற்றவனே ! அடா நன்னெறியற்றவனே ! எப்பொருட்கு மிறைவன் இறைவியுடன் வீற்றிருக்கும் இனிய கயிலையங்கிரியையும், ஈசனடிக்கு முடிசூடும் எம்பெருமானாகிய நந்திதேவரையும் இகழ்ந்து இக்கெதியடைந்தனை. இனித் தேறுவையோ? ஆகிலும் ஒரு உபாயஞ்சொல்லுகிறேன்கேள் இருக்குமுதலிய நான்குவேதங்களுள்ளுஞ் சாமவேதப்பிரியனாகிய சாம்பவமூர்த்தியைச் சார்வதாய்ப் பாடுவையாகில், பிழைப்பையென்று சொல்லி நாரதர்நீங்கினர்.

உடனே இராவணேச்சுரன் ஒருதலையையும்ஒருகரத்தையும் அறுத்து வீணையுநவாக்கி, சகலதேவர்களும் - சகலமுனிவர்களும் — சிவனடியார்களும் - புகழ்ந்து மகிழும்படியாய்ச் சாமவேத கானம் பொழிந்தான். அதுகாலையில் நந்திதேவருங்களிக்க, அமரர்முதலியோரும் பார்வதியாருடன் சொலிக்க, ஞானமுனிவர் முதலிய யாவரும் பிரமிக்க, சிவபிரான் அவ்விராவணனுக்குப் பிரசன்னமாகி உள்ளன்புடனுவந்து, அவன்கேட்ட வரமும் வாழ்நாளும் அஸ்திர சஸ்திர முதலியதுங் கொடுத்தனர். அவையனைத்தும் பெற்றபின் நந்திதேவர் முதலாகிய பலரையும்வணங்கிவிடைகொண்டு, இராவணனென்னும் கீர்த்தி எங்கும்பரிமளிக்கும்படியாய் இலங்காபுரத்தைச் சேர்ந்து வாழ்ந்திருந்தான். இப்படி சிலநாட் சென்றபிற்பாடு இராவணனனவன் கரதூஷணன்-திரிசிரன்-இவர்களையழைத்து, அடர்ந்த தண்டகவனத்திற்காவலாக இருக்கும்படி சிலபடைகளுடன் அனுப்பிவிட்டு, தம்பிமார் பிள்ளைகள் முதலிய யாவரையும் இலங்கையி லிருக்தும்படி நிறுத்தி, தான் புட்பக விமானத்தி லேறிக்கொண்டு, திசகெட்டிலிருக்குந் திக்குப்பாலகரையுந் திக்கு யானைகளையுஞ் செயித்து, ஒப்புவமையற்ற ஓர் முதல்வனாகி மற்றெல்லா வுலகங்களையும் வெற்றிகொள்ளும்படிசென்றான், இங்கே தனது வளமைதங்கிய இலங்கையிற் கும்பகருணன் பெருந்தூக்கத்தி லிருந்தான். புத்திரர்முதல் யாவரும் மலைச்சாரலிற்சென்று பசுபதிக்கடவுளைத்தொழுது, தவங்கள்-யாகங்கள்-விரதங்கள்-பூசைகள்-இவை முதலானவைகளெல்லாஞ் செய்து, அழகிய வில்லும்-திவ்பாஸ்திரமும்-திடவீரதைரியபராக்கிரமமும் பெற்று வரும்படியாய்ச் சென்றார்கள். இலங்கையிற் சிலராட்சசச் சேனையும் விபீஷணனும் இருந்த சமயத்தில், தேவேந்திரனனவன் தேவர்கள் தேவகணங்கள் முதலிய எல்லோருஞ் சூழவந்து இலங்கையை வளைத்துக்கொண்கி, அரக்கர்முதலிய படைகளையெல்லாம் நொறுக்கிஇறக்க அடித்து, ராட்சசஸ்திரீகளையுஞ் சிறைபிடித்துத் துன்பமுண்டாகும்படி சின்னபின்னமாய் முடித்து, இலங்கையைக் கொள்ளையடித்து தெய்வலோகம்போய்ச்சேர்ந்தான். அதனால் விபீஷணன்மாத்திரமிகவும் வருந்தி இருந்தான். அக்காலத்தில் திக்குவிசயத்திற்குப்போயிருந்த இராவணனும், தவஞ்செய்யப்போனபிள்ளைகள் முதலாகிய எல்லோரும் இலங்கையில்வந்து சேர்ந்தார்கள்.

உடனே விபீஷணன் தேவர்கள் நடத்திய அனியாயங்களையெல்லாம் இராவணனுடனே சொல்ல, அதைக்கேட்டமாத்திரத்தில் அவ்விராவணன் அனற்பொறிசொலிக்க நகைத்து, கையோடு கையறைந்து பெருமூச்சுவிட்டு, எயிறதின்றெழுந்து சேனைகளியாவும் க்ஷணத்திற் சேரவேண்டியதென்று தூதுபோக்கினான். உடனே பிரமதேவனெல்லெகுத்த உயிர்த்தொகையெல்லாம் ஓரிடத்திற் சேர்ந்ததைப்போற் கறுத்திருண்டதேகமுஞ்செப்பட்டமயிரும்செவ்வரக்கனைய கண்ணும் தேவர்நடுங்குங் கூச்சலுமுடைய ராட்சசர் கூட்செறிந்தார்கள். கும்பகருணனுந் தூக்கம்நீங்கிக் குலவரைப்போலெழுந்து, இந்தச்செய்தியைக் கேட்டுக்கொடுங்கோபங்கொண்டான் அந்தவேளையில்திணிந்து உயர்ந்து பூரித்துப் பாரித்ததோள்களையுடைய வேளிற்சிறந்த இராவணியானவன் சிவந்த பொற்சிகரம்போல் எழுந்து, காளவிடமெனக்கடுத்து, தேவேந்திரன்முதற் றேவர்களைக் கொல்லவும் வெல்லவுஞ் சேனைப்படையேன்? தேவரீரேன் சிறியதந்தையேன் யானொருவனிருக்க விடைதாருமென்று பற்பலவரக்கருடனெழுந்து, தெய்வலோகம்போய் அடர்ந்து உறுதியாகிய போர்புரியுங்காலையில்; அஷ்டவசுக்கள்முதல் திக்குப்பாலகர்கள் தேவர்கள்மற்றயாவர்களையும் பறக்கடித்தான். அப்படியடிக்கும்போது இந்திரனெதிர்த்துவந்த அரக்கரையெல்லாங் காய்ந்துசிந்து சிந்தாக்க, அச்சமயத்தில் இராவணியானவன் அவனை எதிர்த்து தேவர்கணமுதல்மூவர்கணங்களையும்அழித்து, தேவர்கள்முதல் யாவரும் புறமிட்டோட அடித்து, நாகாஸ்திரத்தால் தேவேந்திரனாதியோரைப் பிணைத்து தெய்வலோகத்தைக் கொள்ளையெடுத்து, வெகுபேரை மடித்து, அரம்பாஸ்திரீகளைச்சிறைபிடித்து, யாவரையும் இரதத்துடன்கட்டிக்கொண்டு சகலவாத்தியமுழங்க-சகலபடைகளு நெருங்க-இலங்காபுரிவந்து சேர்ந்து, தந்தையின் தாளிற்பணிந்து, சசிமணாளனைக் கொணர்ந்து கும்பகர்ணன் படுக்கைவீட்டின் கம்பத்திற்றளைந்துவைத்தான். அதைக்கண்ட இராவணேச்சுரன் இந்திரசெயித்தென்று இராவணியை அழைத்து இறுகத்தழுவியகாலையில், இவ்வுலகத்தைப்படைத்த பிரமதேவர் தேவர்கள் வருத்தப்படுவதைப்பார்க்கமாட்டாமல் இராவணனிடத்திற்குவந்து, உபசாரநயிச்சிகவார்த்தைகளைப்பேசி, மேகவாகனனாகிய தேவேந்திரனைக்கட்டவிழ்த்து விடச்செய்து ஆசீர்வதித்தேகினர். பின்பு தசக்கிரீபன் தனக்கு யாருநிகரில்லாமல் மூவுலகமுங்காவல்பூண்டு, தேவர்கள் எல்லாரும் ஊழியஞ்செய்ய தேவஸ்திரீகள் அடிமைபட்டுய்ய திக்குப்பாலகர் ஏவற்றொழில்புரிய வெள்ளைக்குடை நீழலிற் சிங்காசனத்தில் வீற்றிருந்து, சகல வளப்பங்களுடன் குறைவில்லாமல் இலங்காபுரியில் ஐம்பதுலட்சம்வருடம் நற்கருமம் நல்லதருமம் இவைமுதலானவைகளுக்கிடையூறாய் அரசுபுரிந்து வந்தான்.

இப்படி தவஞ்-செபம்-ஓமம்-யாகமுதலிய பெரியோர்களின் கிர்த்தியங்கள் நடக்கவொட்டாமல் அகிர்த்தியங்களைச்செய்து சகல தேவர்களுந் தன்னூழியஞ்செய்ய நடத்திவரும் அரக்கருடைய வருத்தஞ் சகிக்கமாட்டாமல், முனிவர்யாவரும் மகமேருவிற்சென்று பிரமதேவரைக்கண்டு வணங்கி நின்றார்கள். அவரவர்களைநோக்கி வந்தகாரியம் என்னவென்றுகேட்க. ஐயா மண்பொதுத் தந்தையாகிய தெய்வமே! தருமம்-தானம்-யாகம் அவிர்ப்பாகம்-தெய்வவணக்கம்-நல்லிணக்கம்-இவையாவையுங் கெடுத்து, தேவமாதர் பூமாதர்-இயாவரையுஞ் சிறைபிடித்து, அறத்தைக் கெடுத்து, எங்களை அவத்தில்விடுத்து அலையச்செய்தான் பணைத்த தோளினையுடைய இலங்கைக்கிறைவன். அயனால் அழிவதைப்பார்க்கிலும், ஐயா! உமதடியிணையே அடைக்கலமென்று அடைந்து அழிவதுமேலென்று வந்தோம் எங்களைக் காத்துத் தருமத்தையும் நிலைநிறுத்தக்கடவீர். என்றுமுறைகூறக்கேட்ட பவளம்போன்ற இதழும் படிகம்போன்ற மேனியுமுடைய சரஸ்வதியாருக்கு நாயகன் அபயமெனவந்த அம்முனிவர்கள்பயமகன்றுநலமெய்த ஓரதிசயமானசங்கதியை உரைக்கலுற்றார் கேளும் முனிவர்களே! முன்னமே இந்த அரக்கர்களுடைய பொல்லாங்கையுன்னி இவர்களை முடிக்கும்படியாய், க்ஷீராப்திநாயகனாகிய திருமால் பூலோகத்திற் சூரியவம்சத் தலைவனாகுந் தசரதனுக்குப் புத்திரனாகப் பிறந்திருக்கின்றார். தேவர்கள் முதல் யாவரும் நந்தீசருடைய சாபத்தின்வண்ணம் வானரசிரேஷ்டராயுதித்து, வனத்திலும் மலைகனிலும் வளர்ந்துவருகின்றார்கள். மந்தரையென்பவளைப் பூலோகத்தில் அவதரிக்கும்படி அனுப்பிவைத்தேன். அவள் கூனியென்னும் பெயர்கொண்டு கைகேயன் மகளிடத்தில் தாதியாக அமைந்திருக்கின்றாள். அவளுடைய போதனையால் ஸ்ரீராமர்நாயகியுடன் வனத்திற்குப்போகும்படியாய் நேரிடும். அந்தக்காலத்தில் இளைய பெருமாளுங் கூடப்போவார். இன்னுஞ் சிலநாளில் அரக்கனும் அவனுடைய புத்திர மித்திர சுற்றத்தார்களும் அழிவார்கள். உங்கள். தவமும்-அன்பும்-அறமும்-செழித்துப் பொழியும் பயப்படாதீர்கள். என்று தம்மையடைந்த முனிவர்களுக்குப் பிரமதேவர்சொல்ல, அவர்கள் அகமுமுகமுமலர்ந்து களிகூர்ந்து, துன்பம்நீங்கி இன்பம்அடைந்தவர்களாய்ச் சென்றார்கள். பிரமனுடைய வாக்கியப்படி சீதையின் பொருட்டால் இராவணன் குலத்தோடிறந்தான் என்று சொல்லியமார்க்கண்டேயரை யுதிஷ்டிரன் பணிந்து வணங்கி, ஸ்வாமி! சீதைபொருட்டால் இராவண்னிறந்த விதத்தைவிபரமாகச்சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, புரத்தையெரித்த புனிதனைப் பூசித்தவரத்தினாற் பதினாறுவயதுபெற்ற

பரமதயாளுவாகிய அம்மார்க்கண்டேயமுனிவர் சொல்லத்தொடங்கினார்,

கேளுந் தருமராஜனே! இராவணனுடைய தாயானவள் புற்கடை. இவளுடன் பிறந்த பெண்களில் மூன்றாவது வாகையென்பவள் வயிற்றில்கரனுஞ் சூர்ப்பனகையென்னும் பாவியும் பிறந்தார்களென்று முன்னஞ்சொல்லி யிருக்கின்றோமன்றோ? அந்தச்சூர்ப்பனகையானவள் திரிலோகசஞ்சாரியாகி கானகங்களிற் றிரிந்து முனிவர்கள்செய்யுந்தபஜெபமுதலியவைகளை அழித்து அறந்திறம்பி மறம் இழைத்து வருநாள்களில்; ஒருநாள் ஸ்ரீராமமூர்த்தி சீதாசமேதராய் எழுந்தருளி யிருக்கின்ற பஞ்சவடி தீரத்திற்குவந்து, ஸ்ரீகோதண்ட பாணியின் திவ்ய திருவுருவத்தைக்கண்டு திராக்காமநோய் மேற்கொண்டு, தியங்கி மயங்கி உயங்கி, விளர்த்துக் களைத்துத்தளர்ந்து, விழுந்து எழுந்து சுழன்று. கொழுந்துவிட்டெரியு மக்கொடியகாமத்தால் வருந்தி; தனது இராக்கதரூபத்தை மறைத்து, அரம்பாஸ்திரீகளைப் போலவேடந்தரித்து, மகா அலங்காரத்துடன் துலங்க நடந்து, இருகொங்கைகளுங் குலுங்க நகைத்து, ஆரியகுல வீரியனிடத்தில் அடைந்து வணங்கி யொடுங்கி யொதுங்கி, ஐயனே! இன்று யான்செய்த மாதவப்பலன் பெற்றேன். கைநிறைந்த பொன்னிலுங் கண்ணிறைந்த கணவனே போதுமென்பதைக் கையுற்றேன் என்று தனது மாயமோகினி நடத்தைகள் யாவற்றையும் பற்பலவாறாகக் காணப்படுத்தினாள். இவைகளை யெல்லாம் மாறாமற்கண்ட வீரகோதண்டபாணி அவளைநோக்கி, பெண்பாவாய் உன் எண்ணமெல்லாந் திண்ணமே: ஆனால் எனக்கோர் மனைவி யிருக்கின்றாள். தருமவிருத்தமாக ஒருறையிலிரண்டுவாள் நிறையலாகுமோ? உலகினர் பழிப்புக்கு உடன்படலாமோ? ஆகையால் அதோ இலக்குமணனென் றிருக்குங் குமாரப்பருவமுள்ள பிள்ளைக்குத் தருமபத்தினி இவ்விடத்தில் இல்லை. அவனிடம்போய்ச் சேருவையாகில் உனக்குத்தக்கபடி செய்யத்தக்கவன். என்று வழிவிடவும் பழியினையுடைய பாவி இளையவரிடத்தில் மேவி, மோகத்துயரினைக் கூவி, இருகரத்தையும் விரித்துத்தாவி, பஞ்சபாணனால்என்னாவி பதைபதைக்குதே: பாவி நெஞ்சமும்மைப்பரிந்தழைக்குதே: தாலிகட்டிக்கொண்டு பணிவிடைக்குத் தாவுசெய்யும். என்மேற்பரிந்து உங்கள்பட்சத்தை வையும் என்று பற்பலவிதத்தில் அவரை மயக்கம்பண்ணி நின்றாள். அதைக்கண்ட இளையபெருமாளானவர் அவள் அண்ணனிடத்திற்போய் பேசிவந்த வண்மையும் அவள் அரக்கியேயல்லது வேறல்லவென்னுந் திண்மையும் அறிந்துகொண்டு, பெருங்கோபங்கொண்டு, அரையிலிருக்கும்வாளை யுருவிக்கொண்டு, அவள்தலையிலிருக்குஞ் சுருட்டைமயிரைப் பிடித்திழுத்துத்தள்ளிக்கொண்டு மலைக்குகைபோலொத்த மூக்கையும்கறுத்த மணியினையுடைய தனத்தையும் செம்பட்டமயிரையுடைய கொண்டையையும் அறுக்கவும் அவள்மனம்வெறுத்து அண்டமுகடுநடுங்க உறத்து, அபயமபயமென்று காகுத்தனிடத்தில் ஒடிவந்து அலறிவிழுந்து இதனைச் சொல்லுகிறாள்.

சுவாமி! தேவரீரை அறியாமல் இளையவர் இப்படிசெய்தார். ஆகிலும் பெரிதல்ல. அடியேன்மீதில் ஏதோதப்பிதம் இருந்து தண்டித்தீர்கள். நான்மீட்டுஞ் சுதந்தரியாய் விட்டேன். என்னை அங்கீகரிக்க வேண்டும். கரும்புக்குக் கணுவிருந்தாலுங் கசக்குமா? என்றுசொல்லிச் சீதையும் பயந்துவாடத் திடுதிடுவெனச்சேரவருவதை வியர்த்தமுகத்தினையுடையவராய் இளையவர்கண்டு, உடைவாளை யுருவிக்கொண்டு, இன்னிமிடத்திலோடிப்பிழை. இவ்விடத்திலிருந்தால் இன்னும் பிழைவரும். என்று சொல்லக்கேட்ட அப்பாதகி சப்தமேகம்போல இரைந்து, தனிவனமெல்லாங் கரிந்து எரிந்து புகையவும், தாரைதாரையாய் உதிரம் பெருகவும் தம்பி அறுத்த மூக்கு-முலை-கொண்டை- இவைகளைக் கைக்கொண்டு கானிடத்திற் சென்று, கதறிப் பதறிப் பதறிக் கலங்கி அழுதாள். அவன்காற்மேற் றொழுதாள். அதைக்கண்ட கரனுடையகண்களிரண்டினுந் தங்கைமூக் கிரத்தங்குடிகொண்டதைப்போலச் சிவந்து மெய்மறந்து, பதினாலாயிரந்தேர் கரிமுதலிய படைக்கூட்டமும், திரிசிரன் - தூஷணன் முதலாயுள்ள துணைக்கூட்டமும், பேரிகை முதலிய வாத்தியங்களும், குடைகொடி முதலிய பலவிதச்சின்னங்களும் விளங்கப் பயணப்பட்டுப் புறப்பட்டு சூர்ப்பனகைவழிகாட்டவந்து, சதயமொழிகாட்டிக் காட்டில்வந்திருக்கும் ஸ்ரீராமமூர்த்தியைச் சூழ்ந்துகொண்டனன். உடனே அவர் தம்பியைநோக்கி, ஜானகியைச் சற்றுநேரங் காத்திருக்கக்கடவை இந்தச்சேனைகளை இதோஎமலோகம்ஏற்றித் தூற்றிவிட்டு வருகின்றேன். என்று விஜயகோதண்டத்தைக் கரத்தில் எடுத்துப் பிடித்து வளைந்து இழுத்து நாணிமாட்டி டங்காரஞ்செய்து. ஒங்காரமீட்டுவந்த சேனைகளையுந் திரிசிரன்- தூஷணன் - இவர்களையுங்கொன்று குவிக்க; இதைக்கரன்கண்டு வாகைவிற்கொண்டு கையோயாமற் செய்யும் போரினில், ஐயன் அவன் வில்லைமுறித்துத் தலையைத்தறித்து, ஒரு நிமிஷநேரத்தில் வனமெல்லாம் இரத்தமும் பிணமலைகளுப் -முண்டமும்- துண்டமும்- உருளும்படியாகச்செய்தனர். பின்புதம்பியினிடத்தில் வில்லைக் கொடுத்துக் கைகாற் சுத்திசெய்துகொண்டனர். பிணங்களைப் பைசாசுகள் உண்டு களிக்கும் விந்தையைச் சீதை இலக்குமணர்-ஸ்ரீராமர் - மூவருங்கண்டுமகிழ்ந்திருந்தார்கள். தேவர்கள் புட்பமாரிபொழிந்தார்கள். இவைகளைக்கண்ட சூர்ப்பனகை நடுநடுங்கிப் பயந்து ஒடுங்கி, இனி இவ்விடம்நின்றால் நமதுதலையும்போம். இன்னொரு முலையும்போம் என்று இலங்கையில் ஒடி, எங்கும் நின்றாடி, இரைந்துவாடி, இராவணனைநாடி, இருகாலையும் பிடித்துக்கொண்டு ஒப்ப

லைசொல்லிப் பாடி, ஓ இந்திரசித்தே! ஓ என்னருமை
மருமகனே! என்றுகூடி, ஆவிலைப்பிரிந்தகன்றுபோற்
கதறி ஓவென்றலறினள் அரக்கர்குலாந்தகியாகிய அச்
சூர்ப்பனகை.

இப்படி அலறியவளை இராவணன் பார்த்துப்
பதறி நான்குதிசையிலுங் கோபாக்கினிப் பொறிச்சி
தறி, அகட்டிலேங்கி அறைந்து, அஷ்டமாநாகமும்
அஷ்டகெஜங்களும் அலைந்து உலைந்து பெருமூச்சு
விட ஆங்காரமிட்டெழுந்து அதட்டி, ஆரடி உன்னை
அங்கயீனஞ் செய்தவன்? அயனு? அரியா? அரனு?
மற்றியார்? இவர்கள் மூவருங்கூடிச்செய்தவேலையோ!
கரன்முதலிய நமதுபடைகள் அவிடத்தி இல்லையோ
நான்பிழைத்தபிழைப்பு இன்று இப்படி ஆச்சே: என்
கீர்த்தி முதலிய வலிமை வீணைகப்போச்சே ஓ சூர்ப்ப
னகா! சீக்கிரஞ்சொல்லு சீக்கிரஞ்சொல்லு என்று கே
ட்கவும், அண்ணு! தேவர்கள்முதலிய 'திருமூர்த்திக
ளும் அல்ல அயோத்தியை யாளும் தசாதனுடைய
பாலரசம். இராமன் இலக்குமணனென்று இருவரு
ளர். இவருள் இராமன்பெண்சாதி சீதையென்பவள்
இவர்கள் மூவரும்ரிஷிவேஷங்களுடன் பஞ்சவடியில்
இருக்கக்கண்டேன். அரம்பாஸ்திரீகள் முதலிய யாவ
ரும் அந்தச் சீதையம்மாளுடைய அழகுக்கு நிகராக
மாட்டார்கள். அந்தம்மாளை வருணித்துச்சொல்ல ஆதி
சேடனுக்கும் நாவுபோதாது அப்பேர்ப்பட்ட கனநா
யகியானவள் திக்கெல்லாஞ் செயங்கொண்ட செல்வப்
பிரானகிய தேவரீருக்குக் கிடைத்திருந்தால் அதுவே
திருவென்று எண்ணி, எப்படியாகிலுங்கொண்டுவந்து
அண்ணனிடத்திற் சேர்த்து விடவேண்டு மென்று
உன்னி மெள்ள வசப்படுத்தப்போனேன். அவிடத்
திற் காவலிருந்த இளையவன் என்னைப்பிடித்து இப்
படி அங்க ஈனஞ்செய்து, உன் தமயனிடத்திற் சொல்
லிக்கொள்ளடி யென்று அனுப்பினன். நான் அழுது
பழுதுபட்ட மூக்குமுதலியவற்றைஎடுத்துக்கொண்டு
கரனிடத்திற்காட்டி முறையிட்டேன் அவன் கோப
த்துடன் சேனைகளியாவற்றையுஞ் சேகரித்து திரிசி
ரன் தூஷணன் முதலான இவர்களோடு வந்தவளை
ந்துகொடியயுத்தம்புரிந்தான். அந்தராமன்கொடியினி
லவளைப் படியினிற் புழுதிபோல் மடியச்செய்தான்
கெடிவீரப்பிரதாபனுகவும், இருக்கின்றன் அவர்களி
டத்தி லிருக்கின்ற பெண்ணரசியை, பெண்கள்பெரு
மாளை பெண்கள் மாணிக்கத்தை பேரெழிற் றிலகத்
தை, பெண்ணிற் பெருந்தகையை, நீர் போய்க்கண்
டால், அண்ணு! நான் அவிடக்திற்குப் போகத்தகும்
தகாதென்று தேவரீருக்கு நன்றுய்த் தெரியும் நானெ
ப்படிபோனுலும் போகட்டும் அந்த அணங்கரசியான
வள் உம்மிடத்தி லிருக்க ஒருநாள் பார்த்தாலும் போ
தும் அண்ணு! நான் இன்னமும் யென்னசொல்லப்
போகிறேன். என்றுசொல்லி ஓய்ந்தனள்.

இவ்வாறுசொல்லிய சூர்ப்பனகையின்வார்த்தை
யை இராவணன்உற்றுக்கேட்டு, அனலிற்காட்டியமெ
ழுகுபோலுருகி, ஆசைமேலிட்டு, ஐயோ சூர்ப்பனகா
நீசொல்லிய பெண்ணை நினைத்தால் என்னுடலெல்
லாம் உருகுதஉயிருக்குறுத்துநல்லதாகட்டும்உன்னை
இப்படி பங்கப்படுத்தியபகிதர்களை இக்ஷணமே இவி
டங்கொண்டு வருகிறேன். நீ இவிடத்திற்றனே யிரு
வென்றுசொல்லி, இலங்கையைவிட்டுப் புறப்பட்டுக்
கோகாணம்வந்தான் அவிடத்தில் தாடகை சம்மார
காலத்திலே ஸ்ரீராமருடைய பாணங்களுக்குத்தப்பிப்
பிராணனைக் தப்பவைத்துக்கொண்டு தபசுசெய்கிற
மாரீசன் பக்கலிற்போய் நின்றன். அந்தமாரீசனிவனை
க்கண்டு திக்கென்றெழுந்து, சாஷ்டாங்க தெண்ட
னிட்டு. ஏது இவ்வளவுதூரந் தயைசெய்தது சொல்ல
வேண்டுமென்றுகேட்கவும், தசரத குமாருள் இர
ண்டுபேர் சீதாதேவியோடு காட்டிலிருக்கின்றர்களாம்
நமது சூர்ப்பனகையைக் கொண்டை மூக்கு முதலா
யறுத்து, கரதூஷணன் முதலியபேர்களைக் கொன்று
இறுமாப் படைந்து இருக்கின்றர்களாம். அந்தச்
சீதை மெத்த அழகாயிருக்கின்றளாம். அவளை நான்
கைப்பற்றும்படியாய் அந்த இராமலட்சுமணுள் இரு
வருஞ் சீதையை விட்டுப்பிரிந்து போகும்படியாகிய
மாயதந்திரங்களை நீசெய்யவேண்டும் இது உன்னை
விடமற்றொருவரால் நடக்கமாட்டாது என் எண்ண
மும் நிறைவேற மாட்டாது எனக்கு இந்த உபகாரம்
நீ செய்யவேண்டும் என்று வேண்டியவரையிலும் உப
சரித்து மிகுதியுஞ் சொல்லவே, மாரீசன் நடுநடுங்கிச்
சொல்லுகிறன்· ஐயா! அவர்களுடைய திருஷ்டிக்கு
நீ நிகரல்ல. உன்னையும்-உன்பலத்தையும் - உன்குலத்
தையும்-உன்வரத்தையும்-பெரிதாக எண்ணி யிருக்கி
ன்றய். அவர்கள் பலத்துக்கு ஒருதிரணங்கூட சரிப்
படமாட்டாய் இதுவும் அல்லாமல், உன்னைச் செயி
த்த பலசாலிகளாகிய வீரர்களை எல்லாம் ஒவ்வொரு
கணைகளினுற் கொல்லத்தக்கவர்கள் வீராதிவீரர்கள்.

அவர்களை வஞ்சனை செய்வ தென்பது நடவாது.
தண்ணீருஞ் சாபமுந் தாழ்ந்தயிடத்திற் கல்லது, உய
ர்ந்தயிடத்திற்கு ஏறுது வஞ்சனையினுல் ஒருவேளை
பிரியச்செய்தாலும் உலகமாதாவாகிய வைதேகியை
நீ தொட்டு எடுக்கமாட்டாய் எடுத்துப் போனுலும்
உனக்குத்தக்க பொருளல்ல. நாய்க்குமுழுத்தேங்காய்
அகப்பட்டால் என்னசெய்யும்? எட்டாக் கனிக்குத்
தொறடு கட்டுகிறய் முடவன் கொம்புத்தேனுக் கிச்
சை கொண்டதைப்போல் எண்ணுகிறய். (அக்கிரமம்
ஆரையும்விடாது) என்னும் பழமொழியைநீயுன்னிப்
பார் என்வார்த்தையைத் தள்ளி உன் எண்ணப்படி
செய்யத் துணிவையாகில், உன்புத்ர மித்ர களத்ராதி
களுடன், உன்கோட்டை-கொத்தளம்-தளம் - கனம்-
இனம்-முதலியவையெல்லாம் இழந்துபோய்விடுவாய்
இது முடியாத காரியம். ஆதலா லிந்த யெண்ணத்

னை நீ விட்டுவிடு. என்று மாரீசன் அவர்களுடைய பராக்கிரமங்களை வெகுவாகச் சொன்னான்.

இவ்வளவு சொல்லியுங்கேளாமல் இராவணனுக்குக் கோபம்வந்து, கயிலையங்கிரியைப் பெயர்த்த தோளும்-திக்குக்கஜங்களை வென்ற மார்பும்-உடைய என்னை இந்த அல்பமனிதர்களுக்கு ஈடல்லவென்று சொல்லப்போமா? ஐம்பதுலட்சம் வருஷம் ஆயிசுண்டாய்ச் சகல தேவர்களையும் நான் செயித்தேனே அல்லாமல், என்னை ஒருவரும் வென்றவர்களில்லை. அப்படியிருக்க, அல்பமனிதர்களுக்கு இளைத்தவனாக வாய்புளித்ததோ மாங்காபுளித்ததோவென்று சொல்லிப்போட்டாய். இப்போதும் என்படைகளுடன் எழுந்து யுத்தஞ்செய்து அந்த இரண்டு மனிதர்களையுங்கொன்று அந்தச்சீதையை நான் கைப்பற்றிக்கொள்ளத் திறம் இருந்தும், நாள் செல்லுமென்று கருதிச் சகல மாயையினும் வல்லவனாதலால் உன்னைக்கொண்டு துறையாய்க் கைப்பற்றலாமென்று உன்னிடத்திற் சொன்னால், எனக்குப்புத்திசொல்லுகிறாயல்லவா? நல்லது; இப்போதும் நான் சொல்லிய வண்ணங்கேட்டு உனக்குத்தெரிந்த மாயைகளெல்லாஞ் செய்து அந்தப்பெண்ணை எனக்குக் கிடைக்கச்செய்யாவிட்டால், உன்னை யென்கைவாளுக்கு இரையாக்குவேன். இந்த மண்ணுலகத்தை விட்டுப் போக்குவேன் என்று சீறினான். அதைக்கேட்ட மாரீசன் சொல்லுகின்றான் ஓ இராவணா' கேளும். உன்னுடைய கையினாலிறந்தாற் கொடிய நரகங்கிடைக்கும். தாசரதிகைக்கணையால் இறந்தாற் சுவர்க்கங்கிடைக்கும். அதனாலே உன்கையில் இறப்பதைவிட, எனக்கு அதுமேல். இதோ நான்போய் இறந்து இடம்பண்ணிவைக்கிறேன். சீக்கிரத்திற் குடும்பத்துடன் வந்து சேர்க்கடவை யென்று சொல்லி, பொற்பிரகாசமாகிய மானுருக்கொண்டான். அதை இராவணன் மகிழ்ந்து உடன்கண்டான். அப்போதே மாரீசன் ஸ்ரீராமருடைய பர்னகசாலையினிடமே போய், சீதாதேவியார் கண்ணுக்கு எதிரில் இத்தேசங்களிற் கிடையாத சிங்காரநிறத்துடன் திரிந்து திரிந்து விளையாட, அதைக்கண்ட அம்மன் அற்புதம் அடைந்து, ஒருநாளும் நான் பார்த்தறியாத இந்தமானைப் பிடித்துக் கொடுமென்று மேல்விளையப்போகிற காரணங்கள் தெரியாமல் ஸ்ரீராமரைக்கேட்கவும், இரகுபதியானவர் தம்பியைப் பர்னகசாலைக்குக் காவலாக்கி, வில்லும் அம்பும் கைக்கொண்டு விரைவுடன் மானைத்தொடர்ந்து போனார். அப்படிபோகையில் தம்பி சில தருமநீதிகளையும் இராக்கதர் மாயைகளையுஞ் சொல்லித்தடுக்க, அதையுங்கேளாமற் காலைவிடுக்க, மானானது சமீபத்தில் வந்து அடிக்க. அந்தச் சந்தோஷத்தின்பேரில் தானும் அதனருகிலடுக்க, இப்படி நெடுந்தூரம்போயுங் கையில் அகப்படுந் தன்மைபோல் இளைத்துக்கூடியும், ஸ்ரீராமர் விரைந்துபோ யெட்டிப் பிடிக்க ஓடியும், இப்படி ஒரு யோசனைதூரங் கொண்டு போகையில் அவருக்குக் கைகால்களெல்லாம் வருந்தி, அதிகவெப்பிலால் அவருடைய திருமேனியுங் கருகியது.

அப்போது இராமரானவர் சிறித்து, இது உண்மையான மானல்ல. தம்பிசொல்லியபடி மாயமானே: என்று எண்ணி வில்லிற்றொடுத்திருந்த பாணத்தைவிட்டனர். அந்தப்பாணம் மானினுடைய மார்பிற் பட்டு உருவும்போது, ஓலக்ஷ்மணா வென்று கூவி இராக்ஷசரூபத்துடன் பூமியில் விழுந்து இறந்தது. இவைகளை ஸ்ரீராமர்கண்டு, விசுவாமித்திரர் யாகத்தில் அடிபட்டு ஓடிப்போன மாரீசனிவன். ஏதோ ஒருவஞ்சனைசெய்யக் கருதிவந்தான், இவன்கூவிய சப்தத்தாற் பர்னகசாலையில் ஒருவிந்தை உண்டாயிருக்குமென்று எண்ணிக்கொண்டு, அதிக விரைவுடன் ஐயன் நடந்து வருமுன்னமே சீதாபிராட்டியார் காதில் இலக்ஷ்மணாவென்று கூவிய கூச்சல்கேட்டு மைத்துனனை நோக்கி, ஐயா மைத்துனரே! அரக்கரால் ஏதோ அபாயம்வந்து உம்மைக்கூப்பிட்ட ஓசைகேட்டும், போகாமலும் பாராமலும் இருக்கலாமாவென்று சொல்ல; அதற்கு இலக்குமணர் சொல்லுகின்றார். என் தாயே! கேளும்: அரக்கராலும்-அரசராலும்-ஆகாயவாசிகளாலும்-மற்றெவர்களாலும்-எங்கள் அண்ணனுக்கு அபாயம் ஒருக்காலும் வராது. நான் முன்னமே யிது மாயமென்று சொல்லியபடி, மாரீசன் என்னு மான் அவருக்கு மயக்கமுண்டாகச்செய்த மாறுபாடான வஞ்சகமன்றி வேறல்ல. எங்கள் அண்ணனுடைய கூச்சலேயல்ல. இந்தப் பதினான்கு வுலகமும் அழிந்தாலும் எங்கள் அண்ணன் கலங்கத்தக்கவரல்லர். நீர் மயங்கவேண்டாம். இதோ வரப்போகின்றார். என்று அநேகவிதத்திற்றேறுதல்சொல்லியுஞ் சீதைக்கு மனதுவொப்பாமல் மெத்த விசனப்படவும், அதை இலக்குமணர் பார்த்து, அம்மா! அப்படி எங்கள் அண்ணனுக்கு அபாயம் வருங்காலத்தில்; ஆகாசவீதியில் தேவர்களும்-சந்திரசூரியர்களும்-நவக்கிரகங்களும் மற்றியாவும் நிலைபெற்றிருக்கமாட்டா. நீரேன் பிரமிக்கின்றீர்? என்று வணங்கிச் சொல்லக்கேட்டு ஜானகியம்மன் சொல்லுகின்றாள். ஆ! ஆ! நீர் சொல்வது (செத்தவனுடைமை யிருந்தவனுக்கு அடைக்கலம்.) என்னும் பழமொழிபோலவும், (மைத்துனனிறந்தால் மயிர்போச்சு கம்பிளியெனக்காச்சு.) என்பது போலவும் இருக்கின்றது. இவ்வளவு அபாயக்கூச்சல்கேட்டு மனந்தாளி யிருக்கின்றீர் அல்லவா? இலக்குமணரே! ஆனால் இதோ நான்போய் எரியுங்காட்டழலில் விழுந்து இறக்கிறேன். என்று எழுந்து நடக்க யத்தனித்தனள்.

அதை இளையபெருமாளானவர் கண்டு இரண்டு காதுகளையும் இருகாத்தால்மூடிக்கொண்டு, ஸ்ரீராமா! ராமா! என்றுபலமுறை ஸ்மரித்தவராய். மனம்விண்டு ஊழ்வினை யொருவரையும் விடாது-தாயே! உந்தன் இஷ்டப்படி இதோபோய் வருகின்றேன். நீர்பத்திர

மாய்ப் பன்னகசாலையில் இரும். என்று சொல்லிப் பல பல எண்ணங்களையும் யோசித்துக் காவலைவிடுத்து, ஏன் வந்தாயென்று தமயன்கேட்டடால் என்ன உத்தரஞ் சொல்லுவோமென்று யேங்கிநடந்தார் இளையபெருமாள். இவிடத்திற் சீதாதேவியார் ஸ்ரீராமரைக்குறித்தேங்கிப் பர்னகசாலையில் தனிமையாக இருக்குங்காலத்தில், இதுநல்லசமயமென்று இராவணன் விருத்தவதவேடம்பூண்டு பர்னகசாலையில்வர, அதைக்கண்ட ஜானகி எதிர்கொண்டோடி, மஹா ரிஷீஸ்வரரென்று அர்க்கிய பாத்தியம் அளித்து ஆசனங்கொடுத்து உபசரித்தனள். மாயவேடக்காரன் அவ்வாசனத்திலிருந்து, நீர் ஆர்? இவிடத்தில் தனிமையாய் இருக்க வந்த காரணமியாது? என்று வினவ வைதேகியார் சொல்லலுற்றார்: ஐயா! அயோத்தியாபுரி யாண்ட தசரதமகாராஜன் பாலர்களாகிய ஸ்ரீராமர்-இலக்ஷுமணர் இவ்விருவரும் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்யப் பதினான்குவருஷங் கானகம் வந்தார்கள். நான் கோதண்டபாணியின் தருமபத்தினி. என்பேர்சீதை. நான் இவிடம் இருக்கின்றேன். அவர்கள் ஒருமானைத் தொடர்ந்துபோயிருக்கின்றார்கள். இதோ வருவார்கள். என்று மொழியவே அக்கபடசன்னியாசி மிகவுமிரக்கங்கொண்டவனைப்போற் சீதையைப் பார்த்து, ஐயோ! உம்மைப்போலொத்த சௌந்தரியவதிக்கு இந்தக் காட்டி விருப்பஞ்சைக்குடிசையிலிருக்கவும், அல்பமனிதர்களுக்கு ஸ்திரீயாகவும், இளமைப்பருவகாலம் வீணாய்ப்போகவுஞ்செய்துவைத்தான் அல்லவா பிரமன்? உமக்குத்தகுந்த புஜபலதீர விஜய பராக்கிரம தசக்கிரீபனை ஏற்படுத்தாமற் போனான்: அப்படி கிடைத்தால்-அடடா!! என்ன பாக்கியம்! என்ன யோக்கியம்! என்ன சிலாக்கியம்! நன்மைவாக்கியம். இயாவும் அநுபவிக்கலாமே: என்றுசொல்லக்கேட்ட என்தாய் இடிவிழுந்த அரவம்போலேங்கி, இவனை ரிஷியென்றல்லவோ மரியாதைசெய்தோம். இந்தப் பாவி அரக்கனேயென்று மதித்துத் திடங்கொண்டு, அடா பதிதா! தண்டகாரண்ய வாசிகளுக்கு அபயஸ்தங்கொடுத்து அசுரர்குலத்தை அழிக்கவந்திருக்கும் ஆண்டவனை அறியாமல், மாண்டபிணமென இருந்து னசனித்தாய். சேண்டயங்குர் தேவர்கள் நகைக்க நீ ஈண்டிறப்பதற்குள்ளே ஓடிப்பிழையென உத்தரஞ்சொல்லித் தாயார் பர்னகசாலைக்குள்ளே போகவும், மாயரூபத்தைமறைத்துத் தன்னுடைய பேயாங் கோரரூபத்தைத் தெரியப்படுத்திப் பின்தொடர்ந்தான்.

அதைச் சீதைகண்டு தியக்கங்கொண்டு வாதைப்பட, உடனே அப்பாதகன் வலுவினிற்பிடித்துத் தன் தேரிலேற்றி ஆகாயவீதியாய்ச் செலுத்த, அக்காலையில் இரதத்தில் விழுந்து எழுந்து புரண்டு ஓவென்றலறி உடல்பதைத்து, ஓ வனதேவதையே! ஓ தெய்வமே, ஓ பூமிதேவியே. ஓ என்னம்மா வென்று அழுது அரற்றும் இந்த ஓசையைக்கேட்ட சடாயுவானவர் தனித்த மேகம்போல வந்து வளைத்து, மறநீதிகளும்-தருமசாஸ்திரங்களும்-ஸ்ரீராமருடைய புயவலிமையும்-அநேகமாகச் சொல்லியும் அரக்கன் கேளாமல் தேரைநடத்த, ஸ்ரீராமஜெயமென்றுகூறி றெக்கையால் மோதித் தேரைப்பொடிப்பொடியாக்கி, அவன்தேகமெல்லாங் கால் நகத்தாற் கிழித்துப் போர்புரிவதாயினர். அப்போது இராவணனுக்குக் கோபம்வந்து பரமசிவன் கொடுத்த வாளினால் உயிர்நிலைகேட்டு இறகினைவெட்டிப் பூமியிற்றள்ளி, புஜத்தின்மேல் ஜானகியைத்தாங்கி ஆகாய மார்க்கமாகப் போனான். அப்படிப்போகையில் அம்மன் அழுது அலறிப்புரண்டு சடாயுவைக்கூவி; சுவாமிவருமளவும் உயிருடன் இருந்து என்செய்தியை உரைப்பீரென்று சொல்லி இரைந்து போகும்போது, ஓர்மலையினுச்சியிற் சிலபேர் கூடியிருக்கக்கண்டு, தன்னாபரணங்களைக் கழற்றி, அழகிய கச்சிற்சுருட்டி அவிடத்திற்போட்டு, என்னாண்டவன் வந்தாற் கொடுங்களென்று அயர்ந்துசோர்ந்து அவசமுற்றிருந்தனள். இராவணன் இலங்காபுரிக்குப் புகுந்து, அசோகவனத்தில் அம்மனைவைத்து, அரக்கியர் காவல் அமைத்து, அநேக வசனங்களால் திருத்தி என் வசப்படுத்துங்கள் என்று சொல்லி, இராவணன் தன்னரண்மனைக்குட் புகுந்து அளவிடற்கரிய சந்தோஷமுற்றிருந்தனன்.

இப்பால் தமயனைத் தேடிக்கொண்டுபோன தம்பிக்கு ஸ்ரீராமர் எதிர்ப்படவும், ஸ்ரீராமருடைய பாதங்களில் தம்பியானவர் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்யவும் தம்பி! நீ யென்ன சீதையை ஒண்டியாய்விட்டு வந்துவிட்டாயென்று கேட்கவும், அண்ணனுக்கு நடந்த செய்திகளில் ஒன்றையும் விடாமற் சொல்லவும், அவையனைத்தும் ஸ்ரீராமர்கேட்டு, அந்தோ! சீதையை இழந்தோம் என்றுசொல்லி, மனதில் ஒன்றுந்தோன்றாமல் இரண்டு வீரர்களும் விரைவாக ஓடிவந்து சீதையைப்பார்க்க, அங்குகாணாதபடியால் பெருமூச்சுவிட்டு வியாகூலமுற்று, தம்பி நான் சொன்னபடி சரியாச்சுதென்று ஏங்கி பூமியிற்சார்ந்து விசாரத்துடன் மூர்ச்சைபோயினர். உடனே இலக்குமணர் தமயனைத்தேற்றி, தேவரீரே இப்படி விசனப்படப்போமா? அடியேனுக்கு உத்தரங்கொடுத்தால் எப்பேர்ப்பட்ட பலசாலியானாலும் அவனையுமுடித்து, எங்கள் தாயாரையுந் தேவரீரிடங் கொண்டுவந்துசேர்ப்பேன். என்ற தம்பி வாக்கியத்தைக்கேட்டுச் சிறுநகை நகைத்து, பிரளயகால உருத்திரனைப்போற் கண்கள்சிவந்து, அனற்பொறிமலியச் சினங்கொண்டு, தேவர்களும் பார்த்திருந்தார்களல்லவா? இந்த மூன்றுலோகத்தையும் இன்னிமிடத்தில் மாண்டுவிழச் செய்கின்றேன், பாரென்று கோதண்டத்தை வளைத்து நாணேற்றினர். உடனே இலக்குமணர் சமீபித்து, அண்ணா! ஒருவன் செய்த பெரும்பழிக்கு உலகமூன்றையும் பாழாக்க நினைப்பது தருமமல்லவே: என்தாயையெடுத்துப்போன

பாவியைக்கண்டு, அவனாவியைக்கொண்டு, தேவர்தேவியைப் பட்டுப்போ லிருக்கச்செய்வதே வீரம். அதுவே புருஷதருமம். என்று தம்பிசொல்லக் கேட்ட இரவிகுல புங்கவன்மனந்தேறி துணிவுகொண்டு, எல்லாம் ஊழின்படி நடக்குமல்லது வேறில்லை யென்று திடத்துடனெழுந்து சீதையைத்தேடி இருவரும் போகையில், அவ்விடத்தில் ஒரு ரதம்வந்து திரும்பிப் போயிருக்கும் வழியைப்பற்றிச் சிலது தூரஞ் செல்ல, அவ்வழியில் இறகு துணிந்து கிடக்கப்பட்ட சடாயுவைக்கண்டு தமதுகையிலெடுக்க, இன்னானெடுத்துப் போனானென்று பெயரைச் சொல்லுவதற்கு முன்னே அச்சடாயுவின் பிராணன் சுவர்க்கலோகம் போய்விட்டது. உடனே ஸ்ரீராமர் தான்கொண்ட துயரத்திலும் மேலான துயரமடைந்து, ஐயா! மருமகளுக்கு உபகாரமாக வந்து வாளினால் வெட்டுப்பட் டிறந்தையோ? ஓ எங்கள் சிறியதந்தையே என்று புலம்பிக் காஷ்டத்தில் ஏற்றித் தகனஞ்செய்து கருமக்கிரியைகள் யாவுமுடித்து, இருவருந் தென்றிசையைநோக்கிச் சீதையைத்தேடி வருவதானார்கள்.

அப்படிவரும்போது அவ்வழியிற் கவந்தன் என்னும் ஒரு இராக்கதன், தலை வயிற்றுக்குட்சென் றிருக்கத்தக்கவன். ஒருயோசனைதூரங் கைகளை நீட்டி அதற்குள் அகப்பட்ட செந்துக்க ளியாவையுந் தனக்குளிரையாய் வாயிற்றள்ளிகொண்டு அநேகநாளாய்ப் பிழைத்திருக்கின்றவன். அவன்கையில் இவ்விராம விலக்குமணரிருவரும் அகப்பட்டுக்கொள்ள, அவன் இவர்களைத் தன்வாயிற் றள்ளிக்கொள்ள, அதுகண்ட இவ்விரண்டு வீரர்களும் வாளையுருவிக்கொண்டு, திரண்டு பருத்திருக் பருத்திருக்கும் அக்கவந்தனுடைய புயத்தை வெட்டித் தள்ளினார்கள். உடனே அவன் தேவவிமானத்திற் றோன்றி இவர்களை வந்தித்து, பூர்வத்தில் நான் வித்தியாதரன். பிரமதேவர் சாபத்தினால் இந்தப் பாபதேகம் பெற்று வெகுநாளாய்த் துன்பமுற்றேன். தேவரீருடைய கிருபாநோக்கினாற் பாபந்துலைந்து பரிசுத்தனானேன். ஐயா! நீங்கள் சுகமாக வாழக்கடவீர்களென்று வாழ்த்தி வணங்கி, என்தாயாகிய சீதாதேவியாரைத் திருடிக்கொண்டுபோனவன் இலங்கைக்கதிபனான இராவணன். அவனைச்செயிப்பது எளிதல்ல. அநேகவரங்களையும் அரைக்கோடி ஆயுளும் பெற்றிருக்கின்றான். ஆகையால் இன்னுஞ்சிலதூரம் தெற்குநோக்கிற் செல்வீர்களாகிற் பம்பாநதியொன் றிருக்கின்றது. அவிடத்திற் கிட்கிந்தமென்றொரு மலையிருக்கின்றது. அந்தமலையில் வாலி சுக்ரீபரென்று அண்ணன்தம்பிகள் இருக்கின்றார்கள். இருவர்களில் ஒருவர்க்கொருவர் கொடியபகை நேரிட்டு, சுக்ரீபனென்பவன் முகமனென்னப்பட்ட மலையிலிருக்கின்றான். அவனுக்குமந்திரிமார்கள் வாயுதேவனுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிறந்த அனுமார்முதல் நால்வரிருக்கின்றார்கள். அவிடம் நீங்கள் போனால் அவர்கள் உங்களுக்கு மிகுந்த நண்பாய் ஏற்பட்டு எழுபதுவெள்ளம் வானரங்களுடனே சுக்கிரீபனும் படைத்துணையாக வந்து கூடுவான். அப்பால் நீங்கள் கடலைக்கடந்து இலங்கையை வளைந்து இராவணனைக்கொன்று வெற்றியைப் பெறுவதற்கு உதவியாவார்கள். தேவரீர் என்தாயாகிய சீதையைக்கொண்டு சுகமேவரலாம். என்று தொழுது வணங்கித் தனது யதாஸ்தானமாகிய வித்தியாதரர்லோகம்போய்ச் சேர்ந்தான். இப்பால் இவர்கள் இரண்டுபேர்களும் பம்பாநதிக்கரையில் வந்திறங்க, அவிடத்திலிருக்கும் பக்ஷிகள்-மிருகங்கள்-மலைகள்-வனங்கள் - புட்பங்கள் இவைகளைப்பார்த்த ஸ்ரீராமமூர்த்தி சீதாதேவியின் அவயவங்களுக்கு ஒப்புசொல்லிக்கொண்டு விசாரப்பட்டிருந்தனர்.

அக்காலையில் இவர்களைக்கண்ட சுக்கிரீபன் திகில்கொண்டு அனுமாரை யனுப்பிவைக்க, அவர்வந்து விருட்சத்தின்மீது இருந்து இவர்களுடைய திருவுருவத்தைப்பார்க்கும்போது, ஸ்ரீராமர்கண்டு குண்டலதாரியாகிய நீ யாரென்று வினவ, அதற்கு நான் வாயுவுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிறந்த அனுமானென்று சொல்லி அடியிணைவணங்கி வாய்புதைத்துக் கைகட்டி நிற்க, அதைக்கண்டு தங்களுடைய வரலாற்றை அவருக்குத் தெரிவிக்க, உடனே அவர்போய் சுக்கிரீபனை அழைத்துவந்து சரணம்புகச்செய்து இருவருக்கும் உறவுண்டாக்க, பின்பு இருவரும் ஸ்ரீராமரை வணங்கி அழைத்துக்கொண்டு தாங்களிருக்கும் மலையிற்போய் அலங்காரச்சாலையிற் எழுந்தருளச்செய்து, சுக்கிரீபன் தன்னுடைய தமயனுக்குந் தனக்கும் பெண்சாதியினால் நேரிட்ட பகையைச் சொல்லினன். அதைக்கேட்கவே இராமர் மெத்தவும் விசனமுற்று, அந்த வாலியைக்கொன்று உனக்கு கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டி வைககிறேனென்று அபயஸ்தங் கொடுத்தனர். அதைப்பெற்ற சுக்கிரீபனானவன் ராமரைநோக்கி சுவாமி! அடியேனுக்கு ஒருசந்தேகம். தேவரீர் வாலியைக்கொல்லுவது உண்மையாகில், வருஷத்திற்கொருதரம் ஏழுமராமரத்தை இழுத்துப்பார்த்துவிட்டுவிடுகிறதும், துந்துபியென்னும் இராக்ஷதன்எலும்பை நித்தியம் அசைத்துவிடுகிறதுமாய் இருக்கின்றான். அவைகளை அவன்செய்யும் வலிமைக்கு மேலாகத் தேவரீர் காட்டினால் என்மனந் திடங்கொள்ளும். என்று சுக்கிரீபன்சொல்ல, நல்லதென்று அந்த மராமரத்தி னடிவாரத்திற் போய நின்று, அது ஒரு சாபகாரணத்தாற் பாம்பின்மேல் முளைந்திருக்கும் மரமென்று அறிந்து, அதின் வாலை மிதிக்கவே ஏழுகோணலாயிருந்த அந்தபாம்பு ஒரே ஒழுங்கில் வரக்கண்டு, ஒருபாணத்தால் ஏழுமரமும் உருவபெய்து, பின்பு துந்துபியின் எலும்பையுங் கால்விரலால் உந்திவிட்டனர். அதைக்கண்ட வானர அரசனும் மற்றையர்களும் புகழ்ந்து மகிழ்ந்து வணங்கி, இவராலே வாலியைக் கொல்லப்படுமென்று நிச்சயங்கொ

ண்டு, மறுபடியுந் தாங்களிருக்கும் ஸ்தானத்திற்குவந்து, சிதாதேவியார் கழற்றி யெறிந்துபோன நகைமுட்டையைக் கொண்டுவந்து ஸ்ரீராமருக்கு எதிரில்வைத்து, சில நாளைக்குமுன்னே இராவணன் ஒரு அம்மனை யெடுத்துப் போகும்போது அந்த அம்மாள்போட்ட மூடடை இதுவென்று சொல்லினர்.

உடனே ஸ்ரீராமர் அம்மூட்டையைப் பிரித்து தலை நகைமுதற் பாதநகைவரைக்குஞ் சரியாக அமைந்திருக்ப்பார்த்து, உடனே தம்பியைநோக்கி, இது ஆருடைய உடமையென்று கோதண்டபாணி கேட்க, அதற்கவர்- அண்ணா! திருவடியிற்சூட்டும் நகைகள்மாத்திரம் தாயாருடையது. மற்ற ஆபரணம் ஆருடையதோ எனக்குத் தெரியாதென்று இளையபெருமாள் சொன்னார். கேட்டீரோ தருமநந்தனா! ஸ்ரீராமர்கேட்ட வினவுக்கு இலக்குமணர் தந்த விடையெப்படி யிருந்ததென்றால், தமயன் பத்தினி தாயாகையால் திருவடிதரிசனம் அன்றி மற்ற மேல்நோக்கம் இல்லையென்றும், கொழுந்தன் இருக்க வேண்டிய மரியாதை உபசாரம் இதுவென்று வேதமுறைமையினால் விளங்கக் காட்டியதைப்போலும் இருந்தது. அந்தவார்த்தையைக் கேட்டுஞ் சீதையின் திருவாபரணங்களைப் பார்த்தும் ஸ்ரீராமர் விசனப்படும்போது. சுக்கிரீபன் எழுந்து திருவடிகளில்விழுந்து, சுவாமி! தேவரீர் விசனப்படவேண்டாம். என்னிடத்தி லெழுபது வெள்ளம் வானரப்படைகள் இருக்கின்றன. ஒருநொடிப்போதினில் இலங்கையைக் கலங்கச்செய்து, இராவணனைச் சாவண்ணம்புரிந்து, தாயாரையுங் கொண்டுவந்துதமது திருவடிகளில் ஒப்பிவைக்கிறேன். என்று வானரமகிபன் சொல்லக்கேட்ட இராமர் மகிட்சியடைந்து புளகமுற்றவராய், இப்போது நடக்கவேண்டிய காரியமென்னவென்று கேட்க, வாலியைச் சம்மரிப்பதேயென்று சுக்கிரீபன சொல்ல, நல்லது நீ வாலியினிடத்திற் சென்று போர்புரியும்படி அழைத்துக்கொண்டு வரக்கடவையென்று அனுப்பி, தானுந்தம்பியுங் குற்றுச்செடி மறைவிற் கோதண்டபாணியாக நின்றார்: அதுகாலத்திற் சுக்கிரீவன் வாலியின் அரண்மனைக்குப்போய், சுத்தவீரப்பிரதாபம் உனக்கு இருப்பது நிசமாகில் இப்போது புறப்படு யுத்தத்துக்கென்று அறைகூவினன். அக்காலையில் வாலியின் தேகத்தில் நிறைந்திருக்கும் உதிரமனைத்தும் பொங்கி, கோபம்கொழுந்துவிட டோங்கி, இன்றைக்கு இவனைக் கொல்லுவதெனறு மனவுறுதியைத்தாங்கி, இருதோளும் வீங்கும்படி எழுந்து பளபளவென்று புசத்தைத் தட்டிக்கொண்டு யுத்தத்திற்குப் பயணப்படுகையில், தாரையென்பவள் ஓடிவந்து தன்புருஷனைத்தடுத்து ஆறுமாசத்திற் கொருதரம் வருகின்றவன் இப்போது தான் உன்னால் அடிபட்ட பச்சை உதிரம் இன்னுங் காயாதிருக்குமுன்னமே வந்து சண்டைக்கு அழைக்கின்றதை யோசிக்கவேண்டியது.

இதல்லாமலும் நானொரு சொப்பனங் கண்டேன். அயோத்தியை ஆளும் தசரதமகாராசனுடைய பிள்ளைகள் இராமலட்சுமணர் என்னும் சுத்தவீரர்கள் சீதாதேவியுடன் பஞ்சவடியில் வந்து இருக்கும்போது, இராவணன் மோசமாயைசெய்து ஜானகியைத் திருடிக்கொண்டுபோய் இலங்கையிற் சிறைவைக்கவும், அந்தம்மாளைத் தேடிக்கொண்டுவந்த அவ்விருவரையும் உங்கள்தம்பி அடுத்துச் சரணம் அடைந்து, ஏழு மாமரத்தையுந் துந்துபி எலும்பையும் பரிசைக்ஷபார்த்து, அவர்கள் பலத்தின்பேரில் இவ்வளவு சீக்கிரமாய்ச் சண்டைக்கு வந்து அழைக்கிறதாகவும் நானொரு சொப்பனங் கண்டேன். ஆகையால் இன்றுபோவதை நிறுத்தி நாளைக்குப்போகலாம். இன்றைக்கே போவீராகில் ஜெயங்கிடைக்கத்தக்கதாய் இருக்கவில்லை "வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந் துணைவலியுந் தூக்கிச்செயல்" என்று நீதிசொல்லியிருப்பதால், சாரணர்களைவிடுத்து எதிரிபலத்தையறிந்துகொண்டு யுத்தத்திற்குப்போவது இராஜதருமம் என்று தாரை சொல்லக்கேட்ட வாலியானவன் மகாகோபத்தோடும் உடைவாளையுருவிக்கொண்டு, அடிபாவி! குற்றமில்லாத சூரியவமிசத்திற்குக்குற்றஞ்சொன்னாய். ஒருக்காலுஞ் சூரியகுலத்தரசர்கள் வஞ்சகத்துக்கு உடம்படமாட்டார்கள். மகாயிரக்கமுள்ள குலம். ஒருபுறாவுக்காகத் தன்தேகத்தை அறுத்துத் துலையேற்றிய வமிசத்தையா பழிப்பாகச் சொன்னாய்? இந்நேரம் உன்னைவெட்டியெறிவேன். நீ பெண்ணாகையால் மனம்பொறுத்தேன். ஆனாலுந் தேவர்களுக்கு அமுதங்கடந்து கொடுத்த எனக்குச் சகாயப்படாமல்இவனுக்கு ஆர் சகாயப்படுவார்கள். அப்படிவந்தாலுந் தன்பெண்சாதியை அபகரித்து போன இராவணன் என் வால்மயிரில் தொங்கிக்கொண்டிருந்தவன். அவனை என் வீரப்பிரதாபங்களையும் யான் பெற்றிருக்கின்ற பெருவரங்களையுங் கேட்டறிந்திருக்கும் தான் என்னைக்கொண்டு செயித்துக் கொள்ளாமல், என்னிடத்தில் அடிபட்டு நான் போகக்கூடாமல் ஒரு ரிஷிசாபம் நேரிட்டிருக்கிற மலையில் ஒதுங்கிக்கிடக்கும் அல்பனாகிய சுக்ரீபனைக்கொண்டோ இவன் பகையை முடித்துக்கொள்ளக் காத்திருக்கிறான்? அவனா யென்னை செயிப்பவன்? மெலும் அந்தாமனுக்கும் எனக்கும் எந்தவிதத்திலும் ஒருவிதப்பகையுமில்லை. அவன் என் பேரில் சண்டைக்குவரக்கூடாது. அப்பேர்ப்பட்ட சகாயவலிமையையும்-சுக்ரீவன்கொண்ட மனவுறுதியையும்-இன்றைக்கே நான் பார்க்கவேண்டி யிருப்பதால் யுத்தத்திற்கென்று வெளிப்பட்ட யான் மறுபடியுந்திரும்பமாட்டேன். சுக்கிரீபனையும் அவனுக்குச் சகாயமாக வந்த அவர்களையும்முடித்துத்திரும்புவேன். வீட்டுக்குள் போவென்று அனுப்பிவைத்து, தம்பியின்பேரில் மூனை கொண்டுவந்து ஆர்ப்பரித்தான்.

அம்மாத் திரத்தி லிருவரும் நாலடி இரண்டடியில் திருகி, இருந்து - எழுந்து - பதுங்கி - தாவி -

மேனி - கூனி இடம் வலஞ்சுழன்று, ஒருவரையொருவர் கோடையிடிபோற்குத்தி, காலினால் எத்தி கரத்தினைப்பற்றி, கரகரவென்று சுழற்றி, ஆகாயவீதியில் வீசி, தலைகீழுங் கால்மேலுமாகச் சுழன்று, பூமியில் இலகுவுகொண்டு நின்று, சுக்ரீபன் வாலியின் மார்பில் இருகரத்தையுங் கொண்டு மோதவும், உடனே வாலி சுக்ரீபனைப்பிடித்துக் கரங்களினால் அடித்து, உடலையொடித்து உயிரை முடித்துவிட வேண்டுமென்று நாடினான். அவனுடைய மனதைக் கண்ட சுக்ரீபன் ஓடினான். ஸ்ரீராமமூர்த்தியின் திருவடிகளில் முடிசூடினான் சுவாமி ! என்னை இப்படி ஏவிவிட்டு என்னுடலில் உறையும் ஆவிவிட்டுப்போகும்டி பார்த்திருந்தது ஞாயமா? இஃதோ ருபாயமா என்னையனே! என்று அழுதுவருந்துஞ் சுக்ரீபனை இராமர்நோக்கி, அப்பா! நீங்களிருவருங் குபவன் திகிரிபோற் சுழலும்போது நான் பாணப்பிரயோகஞ் செய்தால், அது உனக்கே படுமோ அவனுக்கே படுமோ என்னுஞ் சந்தேகத்தினாலும், நீ யென்றும் அவனென்றுந் தெரியாமையாலும் மயங்கி யிருந்துவிட்டேன் வேசிமாதர் விஷசூரணப் பிரயோகம்போலானால் நான் என்னசெய்வேன் இனி அப்படி இரேன் இதோ இந்தப் புஷ்பத்தை நீ தலையில் முடித்துக்கொண்டு மறுபடியும் வாலியை அழைத்துப் போர்புரியக்கடவை எப்படியும் அவனைமாட்டிவிடுகிறேன் இதற்குச்சந்தேகமில்லைஎன்று ஒருபூவைச்சூடி அனுப்பியபோது சுக்ரீபன் ஓடி, அடா வாலி! எங்கும் ஓடாதேயென்று கூவியழைத்தான். அவ்வாறழைக்கவும் அவன்கோபந் தழைக்க ஓடிவந்து சமர் செய்யும்போது, தாசரதி தனது கோதண்டத்தில்தரித்திருந்த பாணத்தை ஆகர்ணபரியந்தம் யிழுத்துவிட்டு வாலியின் கண்ணிற்படாமல் இருந்தார் அக்காலையில் அந்தப்பாணமானது வாலியின்மார்பிற் கனிந்த வாழைப்பழத்தில் ஏறிய ஊசிபோல் நுழையும்போது தன்காலினாலும் வாலினாலுந் தடுத்துப்பிடித்து இழுத்துப்பார்த்தான் அதில் ஸ்ரீராமன்யென்று யெழுதியிருக்கும் முத்திரையை நோக்கி மூர்ச்சையாய்விழுந்து போயினன்.

உடனே ஸ்ரீராமரு மிலக்குமணரும் வெளியில்வந்து வாலியினிடத்தில்நிற்க, சுக்ரீபன்-அங்கதன்-அனுமார்-தாரை - முதலியபேர்கள் வாலியின்பேரில் விழுந்து, ஓவென்றுபதறிக்கதறி அழுதுஉபசரிக்கும்போது அவ்வாலி மூர்ச்சைதெளிந்து யெழுந்து, ஸ்ரீராமருடைய திருமுக மண்டலத்தை ஏறநோக்கிச் சொல்லுகின்றான்: இதுவென்ன ஆச்சரியம் ? சூரியவமிசத்திற்பிறந்த இராசனாகிய உனக்குச்சீதைபோய்விடவே, உன்னுடைய பொறுமையும்-சாந்தமும்-புகழும் - சீவகாருண்யமும் பேரறிவும் - தருமமும் - நற்குணமுங் கூடப்போய் விட்டனவோ (கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே.) என்றுசொல்லும் நீதிவாக்கியமுங்கெட்டதோ மநுவிங்கியான முதலிய நீதிசாஸ்திரத்தை மறந்தாயோ பாவம் பழிக்கஞ்சா தென்று துறந்தாயோ ? உன்னளவில் ஒருகுற்றமுஞ் செய்யாதிருக்க, என்னகுற்றத்தைக்கண்டிப்படி செய்தாய்! ஒருராட்சசன் உன் மனைவியை எடுத்துக்கொண்டு போயிருக்க, மலையில் வாசமாயிருக்குங் குரங்கரசனைக் கொல்லும்படி வேதமுறைமையிற் கூறி யிருக்கின்றதோகிருபையுள்ள சூரியவமிசத்திற்கு நீபிள்ளையாகப்பிறந்து பழியும் பாவத்தையும் நிறைத்து வைத்தாயே உன்குலத்தில் முன்னிருந்த கிருபையை எவர்கள் தாங்குவார்கள்! அப்பாராமா ! எனக்குப்பயந்து ஒளித்திருந்த ஒருபஞ்சையாகிய சுக்ரீபன் வார்த்தையைக்கேட்டு, பாரிய யோசனைசெய்யாமல், சிலகாரியங்களைச் சாதிக்கலாமென்று நினைத்து எண்ணித் துணியாக் காரியஞ் செய்தாய். உனது பத்தினியை எடுத்துப்போனஇராவணனை வெல்லவேண்டுமென்று ஒருவார்த்தை எனக்குச் சொன்னால், என்னுடையவால்மயிரே அவனையும் அவனிலங்கையையுங் கொண்டுவந்துவைக்குமே சீதாபிராட்டியாரை என்தோள்கொண்டுவந்து திருவடியிற் சேர்ப்பிக்குமே: அப்படியிருக்க என்னை வஞ்சித்து மறைவிலிருந்து கணைவிடும்படி உனக்கு எந்த ஆசான் சொல்லிக்கொடுத்தான் எள்ள விதியைக்கொண்டுஎய்தாம்! ஓ வீரனே! காலத்திற்குத் தகுந்த புத்திநேரிட்டதோ! என்று வெறுத்துக்கொள்ளும்வாலியை இளையபெருமாள் நோக்கிச் சொல்லுகின்றார். தம்பிக்குத் தாரமாயுற்ற பெண்ணைத்தான்பெற்றபெண்ணென்று உன்னைமல் அபகரித்த உன்னைக்கொல்லாமல்விட்டால் தருமவிருத்தமென்று கொன்றோம். எதிரில் நின்று அடித்தால் நீயிரங்கிவரநேரும் அப்படிவருவையாகிற் சுக்கிரீபனுக்கு நாங்கள் கொடுத்த கிஷ்கிந்தை நகரப்பட்டந்தப்பிப்போமே யென்று மறைந்திருக்கலானோம் என்று சொல்லக்கேட்ட வாலிசொல்லுகிறான்.

ஐயா! நான் கானகத்திலிருக்கும் மிருகம் அதிலேயுங் குரங்குச்சாதி. இதுகளுக்கு முறைமையுண்டோ நீங்கள்செய்தது தருமத்தின் துறைகண்டோ! எதிரிலே உங்களைநோக்கிச் சரணம்புகுந்தால் அனுக்கிரகஞ்செய்யக்கூடாது என்பது சூரியகுலநிறையோ ஆனாலும் பரதமஹாராசன் தண்டிக்க வேண்டுமேயொழிய, சந்நியாசியாகிய நீங்களார்! உங்களுக்குப்பாணமேது ! வில்லேது ! அரசின் முறையைச் சாந்த சொல்லேது ! என்று வாலி கேட்கும்போது ஸ்ரீராமர் தம்பியைக்கையமர்த்தி வாலியைப்பார்த்து, உனக்கும் நமக்கும் ஏதொரு பகையும்பழியும் இல்லை நான்கேட்பார் பேச்சைக்கேட்டு மனைவியைப் பிரிந்திருந்த விசனத்தால் மற்றொருவனுக்கும் இப்படித்தானே துன்பம் இருக்குமென்று பாணப் பிரையோகஞ் செய்துவிட்டேன். இது மிஞ்சிப்போனகாரியம் ஆனாற் பூர்வகர்மமும் வினைவசமும் இல்லாமல் இப்படி நடவாது. நீயுங்காயம்பட்ட வருத்தத்தினால் இப்படி துக்கப்ப-

வும் என்னைவிபகாரங்கேட்கவும், நீ சொல்லியஞாயங்கள் என்மார்பைத் துளைக்கவும ஆச்சுது இப்போது நான்விட்ட பாணத்தை வரவழைத்து விடுகின்றேன். உன்னையும்பிராமணனுடன் பிழைக்கச்செய்கின்றேன் உன்னுடைய மநோபாவம் இப்போது தெரியவந்தது. உன்தம்பியும் நீயும் வயிரங்களைவிட்டுச் சுகமாகவாழ்ந்திருங்கள். என்று ஸ்ரீராமர்சொல்லவும்வாலிகுறுநகைசெய்து, சுவாமி! எங்கள்சாதியிற் காயம்படக்கூடாது காயம்பட்டால் உயிருடனிருந்து வாழக்கூடாது. நீங்கள் முன் காயம் வாங்குவீர்கள் நாங்கள் வடுப்படாச்சாதி. வடுப்பட்டுப் பிராணனுடன் வாழமாட்டோம். மேலும் எத்தனைகாலம் இருந்தாலும் இறப்பது நிச்சயமே: இனியிருந்தாலும் இதுவரையிலும் அனுபவித்த இன்பநலமே இந்தப்பூமியின் ஆசை பொய்யே: பெண்டுபிள்ளைகள் பொய்யே எல்லாம் மாயாவிசித்திரமே அல்லது மற்றென்றல்ல தேவரீர் திரிமூர்த்தியும் ஒருமூர்த்தியாய் அவதரித்து அசுரர்குலம் வேரறுக்க வந்திருக்குங்கடவுள் உம்முடைய பாணத்தால் நானிறக்க எத்தனைநாள் தவஞ்செய்தால் எனக்குக் கிடைக்கும்! என்னுடையதவம் பலனானது. ஆதலால் என்னைக்குறித்து ஒன்றும் யோசிக்கவேண்டாம். இனிநடக்கவேண்டுங் காரியங்கட்கு யான்சொல்வதைக் கேளுமென்று சொல்லுகிறான்.

ஓ ஆதிமத்தியாந்த ரகிதனாகிய ஐயனே! தேவரீரைச் சில ஞாயமும் இகழ்வுமாசப் பேசிவிட்டேன். அவைகளையெல்லாம் பொறுத்த தேவரீருடைய திருவடி எனக்குக்கட்டளையிட வேண்டியது இதுவல்லாமல் என்தம்பி சுக்கிரீபன் அறியாதவன் என்பேரிற் காட்டியபகையை அவன்பேரிலுங் காட்டாமல், கிஷ்கிந்தைக்கு இராஜனாகப் பட்டங்கட்டி, அங்கதனை இளவரசனாக்கி இரட்சிக்கவேண்டும் என்றுவாழ்த்திச் சுக்கிரீபனையும் அங்கதனையும் அழைத்து, ஸ்ரீராமமூர்த்தியையி லொப்பிவைத்து; தன் பக்கத்தில் இருந்து அழுந் தாரையையநோக்கி, பெண்ணே! நான் அநேக ஜன்மங்களிற் செய்த தபோபலத்தினால் வைகுந்தவாசனாகிய ஸ்ரீகோதண்டபாணியின் திருவடிகளில் ஆக்கியமாயினேன். நீயேதொன்றுக்கும் விசாரப்படவேண்டாம். எனக்கு மோட்சங் கொடுத்த தெய்வம் உன்னை ரட்சிக்கும். என்றுசொல்லி அங்கதனை அழைத்து, அவன்கையில் தாரையை ஒப்பிவித்து, சோனைமேகம்போற் பொழியுங் கண்ணீரைத்துடைத்து, ஸ்ரீராமக்கடவுளை நோக்கி, சுவாமீ! தேவரீருடையபாணத்தைவரவழைத்துக்கொண்டு ஸ்ரீவைகுந்தங்கட்டளையிடவேண்டுந் தேவதேவனே யென்று சிந்தையில் தியானஞ் செய்தான். அப்படியே கிருபாநோக்கஞ் செய்யவே, தேவர்கள் பாரிஜாத புட்பங்களை வாரியிறைக்கவாலிபோய்வைகுந்தவாசக்கதி அடைந்தான் உடனே வானர வீரர்கள் சுக்கிரீபன் அனுமான் அங்கதன் தாரை இவர்கள் முதலிய பேர்களெல்லாம் பூமியிற்புரண்டு அழுது; அடங்கா விசனமுற்றுத் தேறி நம்விதிமுதலிய கடன்களியாவும் ஆற்றி, ஸ்ரீராமர் திருவடிகளிற் றீர்க்கதெண்டஞ்செய்தார்கள் உடனே ஸ்ரீராமர் தன் தம்பியை அழைத்து கிஷ்கிந்தைக்குப் போய் வாலிசொன்னவண்ணம் சுக்கிரீபனுக்குப்பட்டங்கட்டி, அங்கதனுக்கு இளவரசுபட்டங் கொடுத்து, யாவருந் தாரையின் உத்தரவின் வண்ணம் நடக்கும்படி திட்டஞ்செய்து வரக்கடவையென்று அனுப்பினர். அவருமப்படியே சென்று, சகலசம்பிரமத்துடன் பட்டங் கட்டிவைத்து வந்தார்.

அப்பால் இயாவர்களும் வந்து ஸ்ரீராமருடைய பாதங்களில்வீழ்ந்துவணங்கி, சுவாமி! வானரப்படைகளை அழைத்துவரத் தூதர்களை அனுப்பிவிட்டோம். வருவது மழைக்காலம் ஆகையால் இதையொழித்து வெய்யிற்காலம் வருகிறவரைக்குந் தயைசெய்யவேண்டுமென்று சரணம் புகுந்து கேட்க, அப்படியே ஆகட்டுமென்று சொல்ல, அதுகேட்டயாவருமவரை நமஸ்கரித்து விடைகொண்டுகிஷ்கிந்தையிற்போய் இருந்தார்கள். இப்பால் ஸ்ரீராமர் அம்மலைச்சார்பில்இலக்குமணராலுண்டாகிய ஓர் பர்னகசாலையி லிருந்து சீதாதேவி உருவத்தைக் குறித்து விசனம் அடைந்துகொண்டு, புரட்டாசி பாதமுதல் மார்கழிபாத வரைக்குங் காலங்கழித்த இருக்கும்போது; பேரிடிகள் மின்னல்கள் பெருமழைகள் பந்தாரங்கள் அளவில்லாத வெள்ளங்கள் இந்திர தனுசு வாதைக் காற்றுகள் இவைகளெல்லாம் நீங்கி, சூரியபகவானும் மகரராசியில் வந்து பிரவேசித்தான், உடனே ஸ்ரீராமர் மழைக்காலங்கள் நீங்கி வருகிறேனென்றுபோன சுக்ரீபன் வராமையால் தம்பியைநோக்கி, நீ சுக்ரீபனைக்கண்டு அழைத்துவா போவென்று அனுப்ப, அவர் அவ்வாறேசெல்ல, அவரைக் கண்டவுடனே சுக்ரீபன் முதல் யாவரும் ஓடிவந்து சாஷ்டாங்கமாகவணங்கி, நான்கு திசையிலும் இருந்துவரும் வானரப் படைகளைச் சேகரித்து வந்தார்கள். இப்படியிருக்க ஆஞ்சநேயர் ஸ்ரீராமமூர்த்தியை நமஸ்கரித்துச் சொல்லுகிறார்: சுவாமி! இந்தச் சேனைகள் இன்னுமுள்ளளவுங் கூடுமுன்னாக எனது தாயாரிருக்கும் இடத்தை முன்னந் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சொல்ல, ஸ்ரீராமருஞ் சுக்ரீபனும் யோசித்து, இதுஞாயமென்று கிழக்கு வடக்குமேற்கு இந்த மூன்று திசைகளுக்கும் அநேகம் வானரங்களை அனுப்பிவைத்து, தெற்குத்திசைக்கு அனுமார் அங்கதன் சாம்புவந்தன் முதலாகிய வானரவீரர்கள் அநேகம்பேரை அனுப்பிவைத்தார்கள். கிழக்கு முதலிய மூன்றுதிசைகளுக்கும் போன வானரங்கள் சீதை அம்மனைத் தேடிக் காணாமல், மகா வருத்தத்தோடும் வந்து தெரிவித்து வணங்கியிருந்தார்கள்.

இவர்களிவ்வாறாக - தனியே தெட்சணத் திசையிற்போன அனுமார் முதலாகிய வீரர்கள் பற்பலவிடங்களிலுந் தேடிக்கொண்டு போகையில், மிருக இரு

ளுடனே ஒரு பிலத்துவாரத்தைக் கண்டு, அதிலே வழிதெரியாமற் கால்களினல் வழிதேடித் தடவிக்கொண்டுபோக, அங்கே இரத்தின கசிதமாய் அநேக ங்கோடி சூரியப்பிரகாசமுடன் ஒருபட்டினங்காண, உடனே அதிற்புகுந்து தேடிப்பார்க்கையில், அங்கே விரிந்தசடையும்-சரிந்த உடையும்-உலர்ந்த சரீரமும் பெற்று, யோகஞ் செய்பவர்களைப்போல் அரைக்கண் பார்வையாய்க் கண்களை மூடிக்கொண்டு, சபரியென்னும் ஒரு மகாநாயகியார் தபசிலிருக்கக்கண்டு, சீதாதேவியார் இவர்தானே அல்லவோவென்று அநுமானங்கொண்டு, அவிடத்தில்நின்று ஸ்ரீராமாராமா வென்று கூவினர்கள். அந்த ஸ்ரீராமமந்திரம் கேட்டவுடனே அச்சபரி நாயகியார்க்கு இந்திரனிட்ட சாபம் நீங்க, உடனே விண்ணினின்றிழிந்த தேவ விமானத்தில் ஏறிக்கொண்டு ஸ்ரீராமகாரியஞ் ஜெயமாகக் கடவதென்றுசொல்லித்தேவலோகம்போயினர். இந்த ஆச்சரியத்தைக்கண்ட அநுமார்முதலிய யாவருஞ் சந்தோஷமுற்று, பின்பு அவிடம்விட்டு வெளிப்பட்டுத் தெற்கு நோக்கிச்சென்று, பட்டினங்கள்-நாடுகள்-நகர்கள்-மலைகள் - குகைகள் இவைமுதலிய யாவுந்தேடி, தென்சமுத்திரக்கரை வந்துசேர்ந்து, மாலிய வந்தமென்னும் கிரிமுதலிய இடங்களுந்தேடி, ஐயோ! தாயார் அகப்படவில்லையே நாமென்ன செய்வோம்? ஸ்ரீராமரிடத்திற்சென்று சீதையம்மனைக் காணேமென்று சொல்லுவதிலும், புண்ணியசாலியாகிய சடாயுவைப்போல் ஸ்ரீராமகாரியத்திற் பிராணனை விட்டுவிட்டாற் கதி அடையலாம். என்று அநுமார் முதல் யாவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைச் சடாயு தமயனாகிய சம்பாதிகேட்டு, நீங்கள் ஆர்? இவிடம் வரவேண்டிய காரியம்யாது? விசனப்படுவானேன்? என்தம்பியாகிய சடாயுவின்வார்த்தை இவ்விடத்தில் வரவேண்டிய காரணம் என்ன? என்று கேட்கவும் அநுமார் சொல்லுகின்றார். ஐயா! அயோத்திமா நகரம் ஆண்ட தசரதருடைய குமாரராகிய ஸ்ரீராமரும் இலக்குமணரும் சீதாதேவியோடு பிதுர் வாக்கியத்தாற் காட்டில்வந்திருக்க, ஒருராட்சதன் வஞ்சித்து வைதேகியைக் கொண்டுபோக, அதைக்கண்டு சடாயுவானவர் எதிர்த்து தாயைமீட்கும்படி தடுத்துப்போர் புரிய, அப்போரில் அவ்வரக்கன்வாளினற் சிறையறுபட்டிறக்க, அதை ஸ்ரீராமரும் இளையவருங்கண்டு அவருக்கு உத்தரிகிரிகைகளை நடத்த, பின்பு எங்களரசனாகிய சுக்ரீபனும் ஸ்ரீராமரும் நண்புபூண்டு ஜனகன் மாது இருக்கும் இடந்தேடிவர எங்களை அனுப்ப எவ்விடங்களிலுந் தேடியுங் காணமையால் நாங்கள் விசனமுற்றோமென்று சொல்லினர்.

இப்படி சொல்லக்கேட்ட சம்பாதி சடாயுவைக் குறித்துத்துன்பமுற்று, ஐயோ! என்தம்பி ஒரு அரக்கனல்மாள விருந்ததல்லவா வென்றழன்று, மீட்டும் ராமகாரியத்தி லிறந்ததே எங்கட்குமேலான மோட்சமென்று மனமகிழ்ந்து, ஐயா! வைதேகியாரைகிருடிக்கொண்டுபோனவன் இலங்கையிலிருக்கும் இராவணன். நேர்தெற்காகச் சமுத்திரத்தைத் தாண்டிப்போனல் அம்மனையும் அவனையும் அவனூரையுங் காணலாம். பலசாலிகளாயுள்ளபேர் கடலைத் தாண்டவேண்டும். என்றுசொல்லி, நீங்களெல்லோரும் ஸ்ரீராமமந்திரத்தைக் கூவிச்சொல்லுங்களென்று யோகத்திலிருந்து இருகாதிலும் இவர்கள்கூறிய மந்திரத்தை கேட்டுக்கொண்டே பிராணனைப்பிரிந்தார். அப்போ தவருடைய பிள்ளையாகிய சாம்புவந்தர் துயரப்பட, அத்துயரத்தை அநுமார் முதலியோர் அகற்றி, தாங்களுங் கூடயிருந்து அறக்காட் டருங்கடன் முடித்து, சமுத்திரத்தை ஆர்தாண்டுவது என்று யோசிக்கும்போது சாம்புவந்தர் அநுமாரைத்துதித்து, சுவாமியின் முத்திரைமோதிரங் கைக்கொண்ட மகாநுபாவர் நீரேயன்றி வேறல்லவென்று புகழ்ந்தனர். உடனே அநுமார் ஸ்ரீராமருடைய திருவடிகளை மனதிற் சிந்தித்து, ஸ்ரீராமஜெயமென்று கந்தமாதனத்தினின்றும் பந்துபோலெழுந்து, சிந்துவைக்கடந்து, இலங்கணியைவதைத்து, இலங்கையிற்குதித்து, அந்நகரத்திலுள்ள மாடங்கள் - கூடங்கள் - மண்டபங்கள்-மேடைகள்-சாலைகள்-சோலைகள் - ஆலயங்கள் - இராவணனுடைய அந்தப்புரங்கள் — சயனக்கிரகங்கள்-இவை யாவும் புகைபோல் நுழைந்து தேடி, அசோக வனத்திற் புகுந்து, அணில்போற்றாவி, அம்மன் இருக்கும் இடத்தில்மேவி, அவிடத்தில் நடக்கும் விதத்தையும்—இராவணனாகிய பாவியின் எண்ணத்தையும் அறிய வேண்டி மறைந்திருக்கையில்; ஓ தருமகந்தனே! சீதாதேவியாரை இராவணன் எடுத்துவந்து அசோக வனத்தில் வைத்தானென்று முன்னஞ் சொல்லியிருக்கின்றோமன்றோ? அங்கே யவனிரண்டாயிரம்பேர் இராட்சதஸ்திரீகளையும்-விபீஷணன் பெண்ணாகிய திரிச்சடையையும் காவலாக வைத்துப் பயங்காட்டும்படி சொல்லிப்போக, அவ்வண்ணம் அரக்கியர் கும்புகூடிக்கொண்டு, இராவண னிஷ்டப்படிநடந்தால ஈரேழு பதினன்குலோகமும் உனக்குப் பணிவிடை செய்யும் அப்படி நடவாவிட்டால் எங்கள் கையிலிருக்கும் ஆயுதங்களினல் ஏற்றுவோம். குற்றுவோம். கையிலானபடி கொல்லுவோம். கசகசவென்று மெல்லுவோம். எஃகுலக்கையைக்கொண்டு இடிப்போம். எலும்பை யெல்லாமொடித்து அடிப்போம். முறிப்போ மென்று பலவிதபயங்காட்டுவர். அத்தன்மைகளாலுண்டாகும் பயத்தை திரிச்சடைதேற்றுவள். இத்தேறுதல்களைக் கொண்டு என்தாய் இராமநாமமே அமிர்தவிருந்தாகவும், வேறு அன்னந்தண்ணீர் காய்கனிமுதலியயாவும் ஆலகால மருந்தாகவும்கொண்டு, இரவும்பகலும் நித்திரையில்லாமல், இருந்தவிடத்தை விட்டு எங்கும் பெயராமல், வெய்யல்-மழை-பனி-குளிர் - எதற்கும் அஞ்சாமல், இராமலட்சுமணர் எப்படியுஞ் சத்துருவைச் செயித்துத் தன்னை மீட்பார்களென்று கருதி

மனமஞ்சாமல், கணகளில் தாரைதாரையாய் நீர்பெருக்கி, தும்புமுதலிய புழுதிகள் தேகத்திற்படியச் சகித்து, இடைவிடாது பெருமூச்சு விட்டுக்கொண்டு, திரிச்சடைதவிர மற்ற அரக்கியர்முகத்தை எரெடுத்துப்பாராமல், வடக்குமுகமாய் முகம்வைத்துக்காலங் கழித்துவருவள். அத்தாயாரை அநுமார்கண்டு, இவளே லோகமாதாவென்று நிச்சயங்கொண் டிருக்கையில் சூரியன் அஸ்தங்கதனாய்ச் சந்திரன் உதயமானான்.

அந்தவேளையில் அநேகம் ஸ்திரீகளும் அரக்கர்களும் புடைசூழ்ந்துநெருங்கிவரச் சகல ஆடம்பரத்துடன் இராவணன் அசோகவனத்தில்வந்து, ஓ மாதரசீ! நான்பிரமனுடைய பேரனுக்குப்பிள்ளை. சாதியிற் பிரமகுலம். அநேகங்கோடி வேதங்களைச் சிக்கறுத்து ஆயிரமாயிரமாகச் செய்து ஓதிய பராக்கிரமன். கயிலையங்கிரியைப் பெயர்த்தெடுத்தவன். அரைக்கோடி ஆயுள்பெற்றவன். இந்திரன்முதலாகிய யாவரும்வந்து பணியப்பெற்ற திண்ணியன். நூறாயிரம்பிள்ளைகளைப் பெற்றவன். தீர வீர விசய பல பராக்கிரமசாலியாகிய தம்பிமார்களை உடையவன். அளவிறந்த சேனைகளுக்கு இறைவன். சமுத்திரமத்தியில் இலங்கை நகரமுடையவன். திக்குக்கசங்களை உதிரங்கக்கும்படி செய்தவன். தசக்கிரீபனென்னும் பிரதாப நாமத்தையுடையவன். இப்படிப்பட்ட யான் உன்னை விரும்பி வேறு ஸ்திரீகளையும் நினையாமல்விடுத்து, உன்னை யடுத்து வேண்டிக்கொண்டும்; உனதுமனம் இரும்பிலுங் கொடியதாய் இருக்கின்றதேயன்றி இளக இல்லையே: என்னளவில் அன்புவைத்தால் எல்லாபாக்கியமு முன்னுடையதே: கோடி பெண்களும் உனக்கடிமையே; என்பிராணனும் உனக்குத் தத்தமே: அந்த மானிடர் இந்தச் சமுத்திரத்தைத் தாண்டிவரமாட்டார்கள். வந்தாலுந் தப்பிப்பிழைக்கமாட்டார்கள். மும்மூர்த்திகளும் என்னைச்செயிக்கமாட்டார்கள். உன்னை ஒருக்காலும் மீட்கமாட்டார்கள். ஆகையால் என்னிடத்திற் கிருபாநோக்கம்வைத்து என்பிராணனை அடிமைகொள்ளுக என்று சாஷ்டாங்கமாகத் தெண்டஞ்செய்து எழுந்து கைகட்டிவாய்புதைத்து வணங்கிநின்று இரந்தான். இப்படி யிரந்த இராவணனை என்றாய் சிறிது நோக்காமல், தன்பிராணன்பேரில் ஆசை வைக்காமல், ஒருதுரும்பைப்பார்த்து, அடா இராவணத் துரும்பே! கயிலையைப் பெயர்த்தெடுத்ததும், அரைக்கோடி ஆயுள்பெற்றதும், பலசாலிகளாகிய இலட்சம் பிள்ளைகளையீன்றதும், தம்பிமார்கள் உற்றதும், அஷ்டதிக்குஞ் செயித்தேன் என்னும் அகங்காரமும், ஆயிரம்வேதம் வருமென்னும் வித்தியாகர்வமுங்கொண்டிருக்கிற நீ; உன்னுடைய பத்துத்தலையும்-இருபதுகையும்-புத்திரமித்திர களத்திராதிகளும் நாளையே நாசம் அடையப்போகின்றாய். பதிவிரதைகளுடைய வயிற்றெரிச்சல் உனது குலகோத்திரம் இயாவற்றையும் எரிக்கும். இபாகங்களிற் றெடுக்குஞ் சோமபானத்திற்கு நாய் இச்சை வைத்தால் நடக்குமோ? தேவர்களுக்கும் தண்டகாரண்ணியவாசிகளுக்கும் ஸ்ரீராமர் கொடுத்திருக்கும் அபயஸ்தம் உன்னைவிடுக்குமோ? உன்தலை பத்தும்-கரம் இருபதும் பூமியில் உருள, அவற்றை காக்கை-கழு-நரி-நாய்-பேய்-இவைகள்பிடுங்கித் தின்னக் காலஞ்சமீபித்ததுபோடா துரும்பே! அடா பதரே! என்றுசொல்லவும், இராவணன் கோபங்கொண்டு வாளையுருவிவெட்டவர கிட்டவிருந்த திரிச்சடைதடுக்க, சீதைபோனால் தன்னுயிரும் போமென்று இராவணன் நினைத்து இராக்கதஸ்திரீகளைநோக்கி, இன்னுந் தக்கபடி பயங்காட்டும்படி சைகைசெய்து தனது அரண்மனைக்குப் போய்

அப்பால் அரக்கியர் எல்லோருங்கூடி, அண்டரண்டங்களுக்கு அதிபதியாகிய தசக்கிரீபன் வந்து உன்னை ஒருபொருளாகநினைத்து நமஸ்கரித்துக் கேட்டால், நீசிறிது மனம் இளகாமல் இருக்கின்றாயல்லவா? அவரிடத்திலிருக்கின்ற ஸ்திரீகளினுடைய அழகுக்கு நீ எம்மாத்திரம்? அவரை இகழ்ந்து பேசியபடியால் நாங்களே உன்பிராணனை வாங்குகிறோம்பாரென்று கோபங்காட்டி, இப்போது நாங்கள்சொன்னபடிகேட்டு இராவணனைத்தழுவி வாழ்ந்தாற் சுகப்படுவை. இல்லாவிட்டாற் சூலத்துக்கு இரையாக்குவோம் என்றுசொல்லிய இராக்கதஸ்திரீகளினுடைய பேச்சைக் கேட்ட சீதா பிராட்டியார் அலட்சியமாக நினைத்து, அடி அரக்கிமார்களே! உங்களிஷ்டப்படி கொல்லுங்களென்றுசொல்ல, திரிச்சடையானவளவர்களைக்கையமர்த்தி அப்பாற்போகும்படிசெய்து சீதையைப்பார்த்து, அம்மா! எங்கள் தகப்பனாராகிய விபீஷணர் ஸ்ரீராமருடைய செய்திகளைச் சொல்லக்கேட்டேன். அதென்னவென்றால், மாயமானைத் துரத்திப் போனதும், அதுமடிந்ததும், ஓர்மாயக் கூச்சல்கேட்டு இலக்குமணரைத் தேவரீர் அனுப்பிவிட்டதும், ராவணன் மாறுவேடங்கொண்டு தங்களை எடுத்து வந்ததும், ஸ்ரீராமரும் இலக்குமணரும் பர்னகசாலையில் தேடி விசனப்பட்டுவரும்வழியில் உமக்காக ராவணனோடெதிர்த்திறந்த சடாயுவைக்கண்டு தகனஞ்செய்ததும், பின்பு சுக்கிரீபசிநேகமாய் வாலியைக்கொன்று அச்சுக்கிரீபனுக்குப் பட்டங்கட்டியதும் மழைக்கால நீங்கியவுடன் வானரப்படைகளோடு யாவரும் வரவிருக்கிறதும் இப்போது சுக்கிரீபனுக்கு மந்திரியாகிய அநுமார்முதலியபேரை நான்குதிசையிலும் போய்த் தேவரீரை தேடவிட்டிருக்கிறதுங் கேள்விப்பட்டேன் எனக்கும் ஒரு சொப்பனம் ஆச்சுது. ஸ்ரீராமதூதன் இவிடத்தில்வந்து உமக்கு நல்ல சமாச்சாரஞ் சொல்லக் கேட்கப்போகிறீர். பள்ளம் உள்ளயிடத்தில் தண்ணீர்நிற்கும் பதிவிரதைகளை இதராள் பாசம் வைத்தால் நாசப்படுவார்கள். நீர் கிலேசிக்கவேண்டாம். என்று திரிச்சடைகூறிய மொழியைக் கேட்டமாத்தி

ரத்திற் சீதாபிராட்டியார் பிராணனை பொழிக்க நினைத்த எண்ணத்தைவிட்டுச்சந்தோஷம் அடைந்திருக்க அச்சமயத்தில் அனுமாரானவர் தேகபுளகாங்கிதங்கொண்டு அரக்கியரெல்லாம்அயர்ந்து நித்திரைபோகும்படி அபிமந்திரித்து, தான் மெள்ள இரங்கிதாயாருக்கு எதிரில் வரும்போது ஸ்ரீராமா ராமாவென்று துதித்துவந்து தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்துவணங்கி அடக்க ஒடுக்கத்துடன் எழுந்து இருகரத்தையுங் கூப்பிநின்றார்.

அப்படி அஞ்சலியஸ்தராய் நின்ற அனுமாரை அன்னைநோக்கி நீயாரப்பா அரக்கர்மாயமோ? இராவணன்செய்யும் அனியாயமோ? அல்லது அன்பனே! அரிபரந்தாமனுடைய தூதனோ? எனக்குத் தெரியச் சொல்லென்று கேட்கவும், தாயாருடைய திடச்சித்தத்தைக்கண்டு களித்து தெண்டனிட்டு, தாயே! நான் ஸ்ரீராமருடைய தூதன். என்பேர் அனுமான். நான் குதிக்கும் வானரச்சேனைகள் உம்மைத் தேடிக்கொண்டுபோ யிருக்கிறார்கள். நான் தெட்சணதிசைக்கு வந்தேன் என்று சொல்லக்கேட்ட சீதாதேவியார்முக மலர்ந்து அப்பா ! ஸ்ரீராமரும் இளையபெருமாளுஞ் சுகமா யிருக்கின்றார்களா ? என்னைமறந்துபோனார்களா ? அல்லது மனதில்வைத்திருக்கின்றார்களா என்று வினவியதைக்கேட்ட அனுமார் பணிந்து தொழுது, அம்மா ! சுவாமி உம்முடைய வார்த்தையின்படிமாயமான் பின்சென்று அதைக்கொன்று திரும்புகையில், தம்பியைக்கண்டு பர்னகசாலையில் உம்மைக் காணாமல் வருத்தமுற்றுத் தேடிவர, வழியிற் சடாயுவைக்கண்டு சங்கதிதெரிந்து அவருக்குரிய கடனைமுடித்துக் கதியடையச்செய்து கவந்தனைமாட்டிப் பம்பாநதியோரத்தில் வந்திருந்து, எங்களரசன் சுக்கிரீபன் வந்து சரணம்புக அபயஸ்தங் கொடுத்து, தேவரீர்போட்ட நகைகளைக்கண்டு விசனங்கொண்டு, மறுநாள் வாலியைக் கொன்று சுக்ரீபனுக்குக் கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டி, அங்கதனை இளவரசாக்கி, எழுபதுவெள்ளம் வானரப்படைகளைக் கூட்டச்செய்து மழைக்காலத்தைக்கழித்துக்கொண்டு இப்போது உம்மைத் தேடும்படி சிலவானரவீரர்களைச் சேனைகளோடு அனுப்பிவைத்தனர். அவருள்யான் இத்தெற்குத்திசைக்கு வெகு வானரச்சேனையுடன் வந்து, அவிடத்தில்அவர்களைநிறுத்திவிட்டு நான்மாத்திரம் இவிடப்வந்து இலங்கை முழுமையுந் தேடி, இவ்வசோகவனத்தில் தேவரீரைக் கண்டேன். காசாம்பூவையொத்த திருமேனியையுடைய கருணையங்கடவுள்உர்மைக்காணும்வரையில் ஆவிவைத்திருப்பது அருமையா யிருக்கின்றார். என்று அனுமார்சொல்லியவனைத்துங்கேட்ட சீதாதேவியார்சிந்தைகளித்து, ஓஅனுமானே! ஸ்ரீராமருடைய சமாச்சாரங்களெல்லாம் இத் திரிசடையம்மன் சொல்லக் கேள்வியுற்றேன் ஆனாலும் ஒருபாவியானவன் தொட்டெடுத்துப் போனவன் நமக்குஉதவியாகமாட்டானென்று ஒருவேளை யிருந்தாலும், மோசஞ்செய்த பாவியை நாசஞ்செய்து வெற்றியைப்பெறுவது இராசதருமமென்று சொல்லக்கடவை நானிருக்குஞ் சுகதுக்கமுதலிய யாவும் நீபார்த்தபடியே சொல்லுவாய். அப்பால் அவர்சித்தம் எப்படியோ நான் அறியேன். என்று கண்ணீர் பெருகச் சொல்லுந் தாயார் வசனத்தை அனுமார்கேட்டுதீர்க்கதெண்டன்செய்தெழுந்து நின்று இதனைச் சொல்லுவதாயினர்,

அம்மா ! உம்மை யெப்போது காண்போ மென்றும், இருக்குமிடத்தை என்றுகேட்போ மென்றும், ஒருநாளை ஒருயுகமாகக் கழித்து வருகின்றார் ஸ்ரீராமபிரான் இப்போது நான்போய்ச்சொன்ன மாத்திரத்தில் எழுபதுவெள்ளம் வானரப்படையுடன்வந்து, எட்டுநாளையில் இந்தத்துஷ்டனையும் அவன் குடும்பமுதலிய யாவற்றையும் நீறுகச்செய்து தேவரீரை மீட்க நாங்கள்பார்க்கப் போகிறோம் தாயே ! இதோ உமக்குத்தமது திருவாழியை அடையாளமாகக் கொடுத்தாரென்று காட்டவும், என்தாய் இருகரங்களையு நீட்டிவாங்கிச் சிரத்தின்மீதுவைத்து கண்களில் ஒத்தி மார்பிலணைத்து மகிழ்ந்து அனுமாரைப் புகழ்ந்து ஓ குழந்தாய் ! ஓ அஞ்சனாதேவிக்கும் வாயுவுக்கும் புத்திரனாகியமாருதியே ! நீ எப்போதுஞ்சிரஞ்சீவியாய்ப் பல்லாண்டு பல்லாண்டு வாழக்கடவை ஓ என்றுயர் நீங்கிய தெய்வமே ! என்று மகிழ்ந்து ஆசீர்வதித்து, அனுமானே ! ஸ்ரீராமருக்கு என்னுடைய சூடாமணியை அடையாளமாகக் கொடுவென்று கொடுத்துஇதுவரையிலும் ஒன்பதுமாச மாச்சுது. இன்றுமுதல்முப்பதுநாளைக்குள்ளாக இவிடம்வந்து பாதகனாகியஇராவணனை மாய்த்து என்னையு மீட்டுக்கொண்டு போகாமற்போனால், என்னுவியை வைத்திரே னென்றுசொல்லுக என்று கூறியதைக்கேட்ட அனுமார் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, அம்மணி ! அதிசீக்கிரத்தில் ஸ்ரீராமமூர்த்தியை இவிடம் அழைத்துவந்து பகையைமுடித்து உமதுசிறையைவிடுத்துச் சந்தோஷம்பெறச்செய்கிறேன் எனக்கு உத்தாரந் தாருந் தாயேயென்று வணங்கி விடை பெற்றுக்கொண்டு அசோகவனத்தை அழிக்கத் தொடங்கினர். அக்காலத்தில் அநேகங்கோடி அரக்கரையும் பஞ்சசேனாதிபதிகளையும் அட்சயன்முதலாகிய பேர்களையுங்கொன்று செயங்கூறியகாலத்தில் அவரை இந்திரசித்து வந்தெதிர்த்துப் பிரமாஸ்திரத்தாற் கட்டிக் கொண்டுபோய் இராவணன்சமுகத்தில் விடுத்தான் அப்படிவிடுக்கவும் அனுமாரானவர் தனது வாலைச்சுருட்டி உயர்ந்த ஆசனமாக அமைத்து இருக்க, அதை இராவணன்கோபித்துப்பார்த்து ஆடா குரங்கேயென்று அவன் ஒரு மொழிகேட்க, ஸ்ரீராமருடையதூதன் நானடா அடா இராவணாவென்றுஆயிரம் அடாப் பட்டங்கூற. இராவணன் தனதிருபது கண்களுஞ் சிவந்து வாளையுருவி வெட்டவருவ தாயினன். அக்காலையில் விபீஷணன் தூதரைக் கொல்லலாகாதென்று விலக்கஉடனே இரா

வணன் அரக்கரைக்கூவி வாலில் துணிசுற்றித் தீக்கொளுத்தும்படி கட்டளையிட, அவர்களப்படியே செய்ய அப்போது அநுமார் தன்வாலைப் பற்றிய தீயினால் அசோகவனந்தவிர மற்ற இலங்கைப்பட்டின முழுவதும் எரித்துக் கரியாக்க, அதனால் இராவணன் முதலிய பேரும் அந்தரத்தில் ஒளிக்க, அங்குகாவலிருந்த அரக்கர் அரக்கியரியாவரும்இறக்க, மறுபடியும் இராக்ஷசத்தச்சனால் இராவணன் இலங்கையை ஏற்படுத்திக்கொண்டு குடிபுகுந்திருக்க. பின்பு விபீஷணன் முதலாகியபேர் அநேகநீதிகளைச்சொல்லிச் சீதையை விட்டுவிடும்படி பேச, அதற்குச்சிறிதுமனமொவ்வாது வெகுகோபங்கொண்டு வீற்றிருந்தான் இராவணன்.

இப்பால் அநுமார் சீதையிருக்குந் திசையை நோக்கிப் பணிந்து, ஸ்ரீராமஜெயமென்று கடலைத்தாண்டிக் கந்தமாதனத்தில்வந்து குதித்தார், அங்கிருந்த அங்கதன் சாம்புவந்தர் முதலியபேர்களும் ஜெயஞ்ஜெயமென்று அநுமாரைத் தருவிக்கொண்டு, சகலசெய்தியுங்கேட்டு மகிழ்ந்துமதுவனத்தில்வந்து நுழைந்து கொள்ளைகொண்டு, தெற்கேபோன தூதரைக் காணோமேயென்று விசனப்பட்டுக்கொண்டு இருக்கின்ற ஸ்ரீராமர் திருவடிகளுக் கெதிரில் விரைந்தோடி வந்து, வரும்போதே கண்டேன் கண்டேன் சீதையையென்று சொல்லிக்கொண்டுவந்து வணங்கி, சகலசமாச்சாரங்களையுங் கூறி சூடாமணியையுங் கரத்திற்கொடுத்தனர். அதைக்கண்டமாத்திரத்தில் ஸ்ரீராமர் அளவிறந்த சந்தோஷமடைந்துபுளகிக்க, இளையபெருமாள் இறுமாந்து தனது வில்லை நோக்க, சுக்ரீபன்முதலியபேர்கள் ஆனந்தக்கூத்தாட, அநுமாரை யாவரும் ஆலிங்கனஞ் செய்து கொள்ள, ஆகாயவாசிகள் புட்பமாரிசொரிய, அரம்பாஸ்திரீகள் சுபசோபனங்கள்பாட, அந்தச்சமயத்தில் நூறுகோடிவானரங்கள் புடைசூழ்ந்துவர நீலனென்னும்படைத்தலைவன் வந்து, ஸ்ரீராமர் இலக்குமணர் சுக்கிரீபன் இவர்கள் பாதங்களில்வீழ்ந்துவணங்கினான் இரண்டு சதகோடி வானரர் புடைசூழக் குமுதனென்னும் படைத்தலைவன்வந்துநமஸ்கரித்துநின்றான். அறுபதுகோடி வானரர் புடைசூழச் சாம்புவந்தனென்னும் படைத்தலைவன்வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றான். கவையன் கவையாக்கன் மயிந்தன் துமிந்தன் கேசரி இவர்கள் முதலாகிய படைத்தலைவர்கள் அளவிறந்த வானரப் படைகளுடனேவந்து வணங்கியிருந்தார்கள். இன்னும் வரப்பட்டசேனைகளையும்பதினெட்டு படைத்தலைவர்களையும் நோக்கி மகிழ்ந்து தென்முகமாகச் செல்லும்படி உத்தரவு செய்து, ஸ்ரீராமரும் இலக்குமணரும் புறப்பட்டார்கள். இந்தச் சேனைகள் பத்துயோசனை அகலத்தில் பத்துநாள்இரவும்பகலும் நடந்து தெற்குச்சமுத்திரக்கரையைச்சேரவும், ஸ்ரீராமர்சுக்கிரீபனை நோக்கி, அப்பாசுக்கிரீபா! நீசொன்ன தொகைக்குமேற்பட்டிருக்கும்போல் இருக்கின்றது சேனைகளென்றுசொல்ல. அதற்கவன் சுவாமி! இதுபிரமன் ஏற்படுத்திய தொகையெவ்வளவோ? அவ்வளவு இதின்மத்தியில் விர்த்திவாகியதெல்லாங்கூடியிருப்பவைகள் எண்ணற்கரியனவென்றான்.

அதைக்கேட்ட ஸ்ரீராமபிரான் மகிழ்ந்து, தென் சமுத்திரத்தைக் கண்டு, இதைத் தாண்டிப்போம் உபாயம் எப்படியென்று யோசித்திருந்தார். அந்தக் காலத்தில் விபீஷணன் இராவணனுக்கு அநேகந் தருமங்களைச்சொல்லி, சீதாபிராட்டியாரைக் கொண்டு போய்விட்டு ஸ்ரீராமரை வணங்கிக்கொண்டால்நமக்கு நலம். இல்லாவிட்டால் ஒரு குரங்கால்வந்த அவகேடு இப்படியிருக்க, இன்னும் எழுபதுவெள்ளங் குரங்குகளும் வந்தால் எப்படிமுடியுமோ? என்று சொல்லக் கேட்ட இராவணன் கோபங்கொண்டு, நீபயந்தால் ஓடிப்பிழை இப்படியென்னிடத்தில் வந்து அடிக்கடி சொல்லவேண்டாம் போவென்று வாளையுருவி வெட்டவந்தான். அப்படிவரவுங் கிட்டநின்ற விபீஷணன் அவனிடத்தினின்றுந்தப்புவித்துக்கொண்டு, நாலுமந்திரிமார்களுடன் ஆகாயவீதியாய்ப் புறப்பட்டு, ஸ்ரீராமமூர்த்தியின் பாதங்களில் வந்துவீழ்ந்து சரணம் அடைந்தான். உடனே ஸ்ரீராமமூர்த்தி அவனுக்கு அபயஸ்தங் கொடுத்து, இலங்காபுரி பட்டம் உன்னுடையதென்று அருள்புரிந்து ஆதரித்தனர் தேவர்கள் புட்பமாரி பொழிந்தனர். அப்பால் இராமர்முதல்யாவருங்கூடி, அவ்விபீஷணனால் இராவணனுடைய சம்பத்துகளையுஞ் சேனைப் பெருக்கங்களையுங்கேட்டு மகிழ்ந்தனர். அப்போது ஸ்ரீராமர் ஏழுநாள் சரசயனத்திருந்து வருணனைப்பிரார்த்திக்க, அவன்வராமையாற் (சிறுமை கண்டவர் பெருமைகண்டல்லது தேறார்.) என்கிற வாக்கியத்தை நினைத்து, விசயகோதண்டத்தைக்கொண்டு அக்கினியாஸ்திரந் தொடுத்தனர். உடனேவருணனவன் பொரிந்து கரிந்துஓடிவந்து இராமருடைய திருவடிகளில் வீழ்ந்து தாழ்ந்து வருந்தினன். அதைக்கண்ட இராமர் திருவணை கட்டுவதற்கு எப்படிவகையென்று கேட்க, அதற்குயான் முதுகு கொடுக்கிறேனென்று அவ்வருணனுடன்பட, ஸ்ரீராமருக்குச் சந்தோஷம்வந்து வானரங்களையேவி மலைகளைப் பிடுங்கிவரும்படி உத்தரவுசெய்ய, அப்படியே கோடிகோடி மலைகளைக் கொண்டுவந்துபோட, அவைகளை நளன்வாங்கி அடுக்கிப்பத்துயோசனை அகலமும் நூறுயோசனை நிகளமுமாய்த்திருவணையேர்ப்படுத்தி ஸ்ரீராமருடைய திருவடிகளில் நமஸ்கரித்துச்சொல்ல, அதைக்கேட்டஇராமர் சகலசேனைசயினியங்களுடன் சேதுபந்தனத்திற் சென்று இலங்கையை வளைக்க, உடனே கூடகோபுர மாடமாளிகைவனங்கள் முதலிய யாவற்றையும் வானரப்படைகள் அழித்து அட்டகாசப்பண்ணி அதஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

கேளும் உதிஷ்டிரரே! இந்தச் சங்கதிகளையெல்லாஞ் சுக்கிரீபன்கேட்டுச் சுகசாரணரை அழைத்து, நீங்கள்போய் உளவறிந்து வாருங்கோள் என்று அனுப்பினன். அவர்களவ்வாறேவந்து வானரப்படைகளில் வந்துபுகுந்த மாயத்தை விபீஷணன் கண்டு ஸ்ரீராமமூர்த்தியின் சன்னிதானத்தில் விண்ணப்பஞ் செய்ய, அவர்களிடத்தில் இராமர் அநேக நீதியைச்சொல்லி இராவணனுக்குத் தெரிவித்துப் பிழைக்கும் விதத்தைத் தேடிக்கொள்ளச் சொல்லுமினென்று அனுப்பினர். அவர்கள்போய் இராவணனிடத்திற் சொல்லவும், அதுகேட்ட அரக்கன் கலகலவென்றுநகைத்து, நரிக்கும்புகள் நாலுகோடி கூடிவந்தாலும் அரியாகிய சிங்கத்தை அசக்கலாமோ? இவர்களெல்லோரும் ஒரே காலத்தில் என்கையால் முடியப் பிரமன் எழுதியிருந்தானுக்களும். என்று வீரமேன்மைகளைப்பேசி உத்தரகோபுரத்தின்மீ தேறிக்கொண்டு, சுவேலமலையிலேறி இலங்கையையும் இராவணனையும் பார்த்துக்கொண்டிருக்கிற ஸ்ரீராமர்-இலக்குமணர்-சுக்கிரீபன், விபீஷணன் - இவர்களையும், மற்றுமுள்ள வானரப்படைகளையும் சாரணர்காட்ட இராவணன் பார்த்துக்கொண்டிருந்தான் அப்போது சூரியகுமாரனுகியசுக்கிரீபனுக்கு ஒரு வீராவேசம்வந்து கிளம்பி, கோடையிடியைப்போல வடக்குக் கோபுரத்தில் வேடிக்கைப் பார்த்து நின்ற இராவணன்மேற்போய்விழுந்து, இருவரும் கட்டிப்புரண்டு அகழியில்விழுந்து எழுந்து, கரகரவெனச் சுழன்று, இடசாரி வலசாரி கால்மாடு தலைமாடாகத் திரிந்து, இராவணன் தலையிலிருந்த இரத்தின கிரீடங்கள் பத்தையும் பறித்துக்கொண்டு, சுவேலமலையிற்குதித்து, ஸ்ரீராமருடைய பாதங்களில் வைத்து, இராவணன் தலையைக் கொண்டுவந்தேன் கடவுளேயென்று வணங்கிநின்ருன். இதைக்கண்டு யாவருஞ் சந்தோஷம் அடைந்தார்கள். ஸ்ரீராமர் சுக்கிரீபனைநோக்கி விசனப்பட்டு, இப்படி தனிமையிற் சொல்லலாகாதப்பா ! என்று சிலநீதிகளையும் இராஜ தர்மத்தையுஞ் சொல்லிக்கொண்டிருந்தார். அங்கே இராவணன் பத்து கிரீடத்தையும் போக்கடித்துக் கொண்டு, சுக்கிரீபன் கைக்குத்தாற் சரீரமுழுமையுநொந்து, இராஜமண்டபம் போயிருந்து, பலவான எண்ணத்தாற் பரிதாபித்துக் கொண்டிருந்தான்.

இப்பால் ஸ்ரீராமர் அங்கதனை அழைத்து நீராவணனிடத்திற்சென்று கண்டு, சீதையைக் கொண்டு வந்துவிட்டுச் சரணம் அடைகின்றையா? அல்லதுயுத்தத்திற்கு வருகின்றையா? என்று இரண்டிலொன்று இராஜமுறைமைப் பிரகாரங்கேட்டுவாவென் றனுப்பினர் அதற்கவன் நல்லதென்று நமஸ்கரித்துப் போய் இராவணனுக்கு எதிரில்நிற்க, அவன் நீயாரென்று கேட்க, நான் ஸ்ரீராமசுவாமியின் தூதன். உன்னைமுன்னெருபோது வாலிற்கட்டி யாட்டிய வாலியின் குமாரன். என்பேர் அங்கதன். நீவஞ்சித்து உலகமாதாவைத் திருடிக்கொண்டுவந்தனை. அந்த அம்மனைக் கொண்டுவந்து இராமரிடம்விடுத்துச் சரண் அடைந்தாற்பிழைப்பாய். இல்லாவிட்டால் இறப்பாய் உனக்கு நல்லகாலம் இருந்தால் என்னுடன் கூடவரலாம். பொல்லாதகாலம் இருந்தால் (கெடுமதி கண்ணுக்குத் தோற்ருது.) என்னும் பழமொழிபோல் யுத்தத்திற்கு வரலாம். எல்லாச் சேனைகளும்வந்து இலங்கையை வளைத்துக்கொண்டார்கள். ஆகலால் நீ என்னசொல்கிருயென்று கேட்கவந்தேன் என்றுசொல்லிய அங்கதனைப்பார்த்த இராவணன் அரக்கைப்போற் கண் சிவந்து, நடநடவென்று பல்லைக்கடித்து, அடா சிறுபிள்ளாய்! நான் கருதிக்கொண்டுவந்த சீதை திரும்பி வருவாள் என்று கனவிலும்நினைக்கவேண்டாம். யுத்தத்திற்குவரச் சித்தமாயிருக்கின்றேன். ஆனல் என்னிடத்திலிருக்கும் பலபாணங்களில் ஒரு பாணத்தாற் குரங்குகளையுங் குறுத்தமனிதர்களையும் கொன்றுவிட்டால், அப்பாலிருக்கும் பாணத்திற்கு ஆரும் இரையில்லையே என்றுலச்சைபட்டுக்கொண்டிருக்கின்றேன் மேலும் உன்தகப்பனுக்கும் எனக்கும் நெருங்கிய சிநேகமென்று நீயறிந்திருந்தும்,உன்தகப்பனைக்கொல்லச்சொல்லிய சுக்ரீபனையும்-அவன் பேச்சின்படி கொன்ற இராமனையும்-நீபகையாளியாய்க்கருதி, என்னிடத்திற்சேர்ந்து அவர்களைக் கொன்று பழிக்குப்பழி முடிக்காமல், அவர்களுக்கு அடிமைபோலிருப்பதுஞாயமா? இராஜநீதியா? இதுவீரமா? பிள்ளைபிறந்து பேரைக் கெடுத்தாயே: எனக்கு நீ பிள்ளைமரியாதை. உன்னை யான்பார்க்கவே மெத்தவிசனம் நேரிட்டது. இப்போதே சுக்ரீபனைக்கொன்று கிஷ்கிந்தைப்பட்டமுனக்குக்கட்டுகிறேன். நரர்களையுங்கொன்று சீதையை நான் கட்டிக்கொள்ளுகிறேன். என்று சிறிதுங் கூசாமற்கூறிய இராவணனை அங்கதனேக்கி, தனது தோள்களைத் தட்டி, அண்டங்குலுங்க நகைத்து அதட்டி, அடா இராவணு! அவிற்பாகத்துக்கு வைத்த நெய்யென்றறியாமல், அடுத்துவந்து நக்கும் நாய்போலொத்த நீயோ சிங்கக்குட்டிக்குப் பட்டங்கட்டுவது? நீகெட்டாய்! அடேபேயே! ஸ்ரீராமமூர்த்தியும் இலக்குமணரும் ஒரு கட்டாகவந்து வில்லைவளைத்துப் பாணம்பூட்டி உன் தலைக்குக் கணக்குவைத்திருக்கின்ருர்கள். அதைத் தப்பித்துக் கொள்ளடா சவுங்கலே என்று கூறினன்.

இப்படி அங்கதன் கூறவே இராவணனுக்குக் கோபம்வந்து, தன்னெதிரில் நிற்கும் நூறுயிரம்பேர் இராக்கதரைநோக்கி, இவனைக் கொல்லுங்கள் என்று உத்தரஞ்சொல்ல, அவர்களும்வந்து நெருங்க, அதைப்பார்த்து ஒவ்வொருவுதையும் - இடியும் - அடியும்- அறையும்-முறையாகக் கொடுத்துத் தரையில் வீழ்த்தி,ஒருவரையுந்தப்பவிடாமற் ஜாடாவாய்க்கொன்று இராக்கதனைப் பார்த்து, அடாதுரோகி ! தூதனைக்

கொல்லச்சொல்லிய உனக்கு இதோவந்தது வேதனையென்றுகூறி, ஸ்ரீராமரிடத்தில் வந்துபணிந்து சுவாமி! சீதையம்மனை விடுகிறதானால் தன்னுயிரை முன்னதாய்க்கொடுக்கிறேனென்று சண்டைக்குக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறான் இராவணனென்றுசொல்லினன் அதைக்கேட்ட இளையபெருமாளுக்கும் அநுமாருக்குஞ் சந்தோஷம் அதிகரிக்க ஆகாயவாசிகள் சுகப்பட்டோம் என்றுபூரிக்க, ஸ்ரீராமரும் இலக்குமணரும் வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து வானரப்படைகளைப்பார்த்து, இலங்கை மதிலையுங் கோட்டைகொம்மைகளையும் பெயர்த்தெரியுங்களென்று கட்டளையிட்டார்கள். அம்மாத்திரத்தில் வானரப்படைகள் சுற்றுமதிலைப்பெயர்த்து, அகழைத்தூற்று, இலங்கைக்குள் பிரவேசித்து, மாடமாளிகை கூடகோபுரங்களை இடித்துப்பொடியாக்கி, இராக்கதர்முதலியபேர்களைவதைத்து, பதைபதைக்கப் புதைத்து, ஆயுதங்களாலும் மரங்களினாலுஞ்சிதைத்து, காலினாலும் உதைத்துத் தூரத்தியடித்தனர். உடனே இராக்கதசேனைகள் பாதலநடுங்க மீதலங்குலுங்கப் பற்பலமுகத்திலும் பரவி, குரங்கினங்களைக் குப்பல்குப்பலாய்க் குவித்து, ஒட்டொழியாமல் அவித்து, ஒருவரையும் விடாமல் வளைந்துக்கவித்து வாட்டினார்கள். அதனால் வானரப்படைகள் ஓடோடியும்வந்து ஸ்ரீராமமூர்த்தியின் திருவடியில் வந்துவிழ, இதைக்கண்ட சுக்ரீபன் முதலாகிய வானரவீரர்களும் புறப்பட்டு, ஓடிவந்த வானரப்படைகளைச் சேர்த்துக்கொண்டுபோய் இராட்சசப்படைகளைக் கலங்கி அலமலக்க, அப்போது ஸ்ரீராமரும் பாணப்பிரயோகஞ்செய்ய, அதனாலநேகம் இராக்கதர் இரதகஜ துரகபதாதிகளோடும் இறந்து இரத்தவெள்ளங் கடலைப் பொருதும்படியாயது. இப்படியாக இலங்கைப்பட்டினங் கிடுகிடுவென்று நடுங்குஞ் செய்திகளைச் சாரணர்களோடி இராவணனுடனே சொன்னார்கள்.

அந்த வார்த்தையைக்கேட்ட அவுணன் அதிககோபங்கொண்டு, பத்துமுடியுந் திருத்தி, இருபது தோளும்பருத்து, அளவற்ற ஆயுதங்களைத் தாங்கி, கேயூர மணிமகுட குண்டலங்களணிந்து, வீரகண்டாமணியுந் தரித்து இரதமேறினான். இந்திரசித்தனும் இருநூறுவெள்ளஞ் சேனைகளுடன்கலந்து இரதமேறினான். இப்படி யிவ்விருவரும இரதாரூடராய் வரவும், கழுகுகளுங் காக்கைகளும் ஒன்றோடொன்றடித்து விழ்ந்தன. நாற்புறத்தும உதிரமாரிசொரிந்தது. இந்த அவசகுனத்தைக்கண்டுஞ் சிறிது மதிக்காமல் இருவரும் எண்ணிறந்த இராக்கதச் சேனைகளோடுமெதிர்த்துவர, இங்கே ஸ்ரீராமர்-இலக்குமணர்-சுக்கிரீபன்-அனுமார்-அங்கதன்-விபீஷணன்-சாம்புவந்தன் இவர் முதலாகியபேர் எழுபதுவெள்ளம் வானரப்படைகளுடன் எதிர்த்துவர, இருதிறச்சேனைகளும் [illegible]முகாளுங் கைகலந்து யுத்தஞ்செய்கையில், வானரவீரர்களெல்லாம் மலைகள்-மரங்கள்-குன்றுகள்-இவைகளை ஓயாமாரிபோல் வாரியிறைத்துச் சாயாமல்நின்றனர். இராக்கதர்களெல்லாம் யானை-குதிரை-இரதம்-விமானம்-புலி-கரடி-சிங்கம்-யாளி-கோவேறு கழுதை-கூளிகள்-நாய்முகப்பேய்கள்-நரிமுகப்பேய்கள் இவை முதலாகிய வாகனங்களில் ஏறிக்கொண்டு, வில்-வாள்-வேல்-சூலம்-பாசம்-கதை-சக்காம்-பிண்டி-பாலம்-எறியீட்டி-வாங்கு-சாங்கு-குடுதடி-குண்டாந் தடி - சுக்குமாந்தடி-முறுக்குத்தடி-கிலுக்குத்தடி-வளைதடி - இன்னும் பற்பல ஆயுதங்களைக்கொண்டு போர்புரிந்தனர். அப்போது ஆயுதங்களினால் மலை மர முதலியவைகள் அழியவும், மலைமரங்களினால் அஸ்திரசஸ்திர ஆயுதங்கள் ஒழியவும், அரக்கர் அநேகரிறக்கவும், வானரங்கள் வெகுபேர்பறக்கவும், உதிரவெள்ளங்கள் எங்கெங்குஞ்சிறக்கவும், இவ்விதமாகச் சிலநேரம்யுத்தஞ்செய்து இருபடைகளும் இளைப்பாறி, மறுபடியும் போர்தொடங்கினார்கள் இராவணன்வந்து ஸ்ரீராமரை வளைத்துக்கொண்டு இருபது கரங்கொண்டுபொழியும் பாணத்தாலும்-ஆயுதங்களினாலும் - பனியினால் மறையுஞ் சூரியனைப்போலானார் இராமமூர்த்தி. இந்திரசயித்து இலக்குமணரை வளைத்துக்கொண்டு பொருதினான். விருபாட்சன் சுக்ரீபனுடன் எதிர்த்தான். அங்கதன் அரக்கர்கூட்டத்தில் ஆண்புலிபோற்சீறி யேறினான். விபீஷணன் பிரகஸ்தனுடன்யுத்தஞ்செய்தான் இவ்விதமாக ஒருவருக்கொருவர் தொந்த யுத்தஞ் செய்தார்கள்.

இந்தயுத்தத்தில் இராவணன் ஸ்ரீராமருடன் நெடுநேரஞ் சண்டைசெய்து, தனது தேர் - குதிரை-கூளி-யாளி-சாரதி-கைவில்-பாணம் - கொடி - குடை-படை இவைமுதலிய யாவும் அழிந்து, இரத்தவெள்ளம் வழிந்து, உள்ளங்கழிந்து, தன்னோடுவந்த இருநூறுவெள்ளஞ் சேனைகளும் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் ஒழிந்து, தன்தேகமும் ராமபாணத்தால் துறந்துபோக; அதனால் லச்சைகொண்டு நாணமுற்றுப் பத்துத்தலையும் நிலநோக்க இரங்கிநின்ற தசக்கிரீபனைத் தாசரதிபார்த்து, ஜானகியைக் கொண்டுவந்துவிட்டு சரணம் அடைகின்றது நன்மையா ? அல்லது சண்டைசெய்வது நன்மையா ? முதல்நாள் யுத்தத்தில் தானே இப்பேர்ப்பட்ட கெதி அடைந்தாயே: ஐயோ ! இனியேனும் நன்று யோசித்துக்கொண்டு நாளைவா போவென்று சொல்ல, மறுவார்த்தை யொன்றுஞ் சொல்லாதவனாய்க் கால்நடையாக அரண்மனையைப்போய்ச்சேர்ந்தான் ராவணன். இளையபெருமாளுடன் யுத்தஞ்செய்த இந்திரசித்துவுஞ் சாரதி-குதிரை-தேர் - இவை முதலியவையோடு வில்லுமுதற் சொல்லும் அடங்கி, மிகுந்த பயமும் விசனமும் மேலிட்டு, பாதசாரியாகப் பட்டினம்போனான். விபீஷணனிடத்தில் யுத்தஞ்செய்த பிரகஸ்தன் குடை - கொடி - குதிரை - படை - இவைமுதல் தே

ருங் குமிங்கிப்போய் மகமேருவனைய தண்டாயுதத்தை விபீஷணன் மார்பில் எறிய, அவன் ஸ்ரீராமஜெயமென்று அத்தண்டாயுதத்தைத் தனதொருகரத்திற் பிடித்துக் காகரவெனச் சுழற்றித்திரிந்துமாறி அவன் மார்பில் விடுக்க, அதுபோய் வையகங்கலக்கும் வானத்திடிபோற் பிரகஸ்தனுடைய மார்பிற்படவே; அப்பிரகஸ்தன் வையம் ஆசையைமறுத்து யமலோகம் போய்ச் சேர்ந்தான் தேவர்களெல்லாம் விபீஷணனை வாழ்த்தி மலர்மாரிதூற்றி ஸ்ரீராமரை ஏற்றிப்போற்றினார்கள் இராக்கதப் படைகளெல்லாம் பயந்து அபர்ந்து ஓட்டமெடுத்து வாட்டமுடுத்து, இராவணனையடுத்து, உமதுதம்பி விபீஷணன் நமது சேனைகளைக் கெடுத்து, பிரகஸ்தனென்னு மந்திரியையும் படுத்தானென்று சிலசொற்கள் தொடுத்தார்கள்.

அதைக்கேட்ட இலங்கைவேந்தன் குலுங்கநகைத்து, அவ்விபீஷணனடுத்திருக்கின்ற அனைவரையும் அலமலங்க அடித்து வெற்றிகொள்ளும்படி தூமாக்ஷனென்பவனை விடுக்க, அவன் அளவற்ற அவுணர்களோடு ஆலகாலவிஷம்போல அடுத்து, அனித்தியகால யமன்மோற் காத்திற் சூலத்தை எடுத்துப் பிடித்து, வானரங்களையெல்லாம் அடித்து பிரமுகானை லட்சியம்பிடித்தான். அதை அனுமார்கண்டு, கண்கள் சிவக்கக் கோபங்கொண்டு வாடிய வானரச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு, மலைகள் மரங்களைப் பிடுங்கிக்கொண்டு இராக்கதர்பேரில் எறியவும், அவர்கள் பற்றிய படைகள் தறியவும், உடனே யாவரும் புறமுதுகிட்டு முறியவும், அதுகண்ட தூமாட்சன் அனுமாரை எதிர்த்துச்சாட, அனுமாருமவனோடு மல்யுத்தம்போட, மலையுடன்மலை எதிர்த்ததைப்போல் தலையுடன்தலை மோதியும், காத்தோடுகோம் பத்தியும், காலோடுகால் பிணைத்தும், கீழுமேலாக விழுந்தும், கிறுகிறெனச் சுழற்றி எறிந்தும். திக்குமுக்காலாடி விக்கி உதிரங்கக்கும்படி தூமாட்சன் மார்பில் அனுமார்குத்த, அவனாவி இயமலோகத்தைப்பற்ற, அரக்கர்சேனை அடங்கலுஞ்சுழன்று மடிய, சுகசாரணரோடி, தசக்ரீபன் அடியில் முடிசூடி, ஐயா ஃ நீர் இவிடம்வந்த பிற்பாடு வானரவீரர்கள் மேலிட்டு இராட்சசப்படைகளைமுடித்து, தூமாட்சனையுங் கொன்று, இலங்கைப்பட்டினத்தையும் இடித்து, இந்தக்கடலையுந் தூர்க்கின்றார்கள். என்று சொல்லக்கேட்ட இராவணன் இடிவிழுந்த மரம்போலெரிந்து, இவ்வளவு வானரங்களையும் இரண்டுநரர்களையும் எடுத்து விழுங்கி ஏப்பமிடும்படியாகிய என்தம்பி கும்பகர்ணனை இப்போதே எழுப்புங்கோளென்று இசைக்க உடனே அனேக இராக்கதர் கதைகளைக் கைக்கொண்டு இடித்து பேரி பாங்காசங்கநாதம் சிங்கநாதம் இவைமுதலியவாத்தியங்களைஎண்டிசையு மதிரும்படிமுழக்க, அவ்விடியினாலும்பேரோசையினாலும் புரண்டுபுரண்டு நித்திரை செய்தவன் ஏதோவொரு விதிவசத்தால்விழித்துக்கொண்டு, என்னகாரியமென்று கேட்டான். அதற்கவர்கள் விளைந்த தன்மைகளை விபரமாய்ச்சொல்லினார்கள்.

அதைக்கேட்ட மாத்திரத்தில்மகமேரு இரண்டு காலுங்கையு முளைத்து வருவதைப்போல் தமயனிடத்திற்குவந்து வணங்கி நிற்க, அவனை இராவணன் நோக்கி, அடாதம்பி ! இராமன் - இலக்குமணன் இரண்டுபேர் நரர்கள் சுக்கிரீபனைத் துணைகொண்டு வானரவெள்ளத்துடன்வந்து பிரகஸ்தன் முதலாகியபடைத்தலைவர்களையுங் கொன்று, சேனைகளையும் வென்று செயங்கூறி நின்றார்களாம். அவர்கள் முழுமையும் உன் சூலத்திற்கிரையாகவும், அமரர்முதலியவர்களின் சந்தோஷ மழியவும், வெற்றிபெற்று வரக்கடவை விண்ணவர்க் கெமனே என்று இராவணன் சொல்ல, அதுகேட்ட கும்பகர்ணனவனைப்பணிந்து, அண்ணா! மும்மூர்த்தியும் ஒருமூர்த்தமாகிய கடவுள் இராமன். அவனுடன்பகைத்து ஆரினிவாழ்வோர் ? அம்மனைக் கொண்டுபோய் அடிமலர்சேர்த்து அபயமென்றிரந்தால் அருள்பெறலாம். தப்பிவார்த்தையையுந் தள்ளினீர். முன்னந் துட்டப்புத்தியை இட்டமாய்கேட்டீர். அழியாத இலங்கைக்கு அழிவுதேடிக்கொண்டீர் என்றுசொல்லிய இளையவனை இராவணன் வெகுண்டு, எனக்கு நீதிசொல்லவா உன்னை எழுப்பினேன் விபீஷணனைபோல் நீயும்போய்ச்சேரு. போ: போ: எனக்கடிந்து புழுங்கினான். அந்தவேளையிற் கும்பகர்ணன் தமயனடிமலர்தொழுது, அடியேன்மீது ஆயாசம்வேண்டாமென்னண்ணாவே ! என்று சொல்லியுத்தகோலத்துடனே சூலந்தாங்கித் துரிதமாகச்சென்று, கோட்டைவாயலினின்றும் வெளிப்பட்டு இரதமேறி, இராக்கதப்படைகளுடன் சர்வசம்ஹாரகால உருத்திரனைப்போல் வருவதானான். அப்படிவருவதை ஸ்ரீராமர்கண்டு மகிழ்ந்து இவனாரென்று விபீஷணனைக்கேட்க, சுவாமி ! இவர் என்தமயன். இராவணனுக்குத் தம்பி. இவர்பேர் கும்பகர்ணன். இவருமனேகம் புத்திகளைச்சொல்ல, இராவணன் அவைகளைக்கேளாமற் கோபங்கொள்ள, அவனாலிறப்பதைவிடத் தேவரீரால் மடிவது மோட்சமென்று கருதிவருகின்றார். என்று சொல்லக்கேட்ட இராமர் விபீஷணனைப்பார்த்து அப்பாபுனிதனே! நீபோய் அந்தப்பாவியாக்கனுக்காயாவியழியாது நம்மைமேவிச் சுகப்படலாமென்று சொல்லி அழைத்துவாவென்ன, அவன் அப்படியேபோய் அழைக்க, ஐயோ ! நீ நல்லதவத்தையுடையவன் இம்மையில்தானே நன்மையைப் பெற்றாய். என் வினையெனக்கு உன்வினையுனக்கு ஸ்ரீராமரிடமே போய்ச் சேர்ந்து சுகப்படு என்றுசொல்லி வில்லை வளைத்துப் பல்லைக்கடித்து நாணியேற்றி. நறநறவென வருஷம்போற் கணைமாரிதூற்றி, குரங்குப்படைகளை உறங்க அடித்து, சிரக்குவியலும் - கரக்குவியலும் - காற்குவியலும் – மேற்குவியலுமாகச்செய்தான் கும்பகர்ணன்

அதுகாலையில், அங்கதன்-நீலன்-வசந்தன்-சாம்புவந்தன்-முதலிய படைவீரர்களெல்லாந் தொடை தட்டிக்கொண்டு, மலைகளைப்பிடுங்கிக் கும்பகர்ணன் மீதில் எறிந்து, நான்குதிக்குகளிலும்வளைந்து நமனும் உயிருலைந்து நடுங்கும்படிவீசி, நானாவித வார்த்தைகளினால் ஏசிப் போர்விளைத்தார்கள், சிலவானரவீரர்களோடிப் பாரியபருவதங்களையும் பருத்தமரங்களையும் வாரிக்கொண்டுவந்து அவன்மார்பில் எறிந்தும், கரங்களினாற் குத்தியும், கால்களினா லுதைத்தும்வால்களினால்வீசியும், இவ்வாறு சிதைத்துக் கையிளைத்து, இவன் காலகாலனோ! ஆலகாலமோ! என்று வருந்தி இருந்தார்கள். இதை ஆஞ்சநேயர்கண்டு ஒருபெரிய கிரியை அடிவேருடன் பிடுங்கிவந்து, கும்பகர்ணன் உரத்திலுஞ் சிரத்திலும்பட வெறிந்தார். அப்படி எறியவும் அண்டமுகடெல்லா மதிர்ந்துபோகும்படி விழுந்த அந்தமலை பொடிப்பொடியாய் உதிரவும், அதை யனுமார்கண்டு, இவனை வெல்ல நம்முடையவல்லமையல்ல. ஸ்ரீராமருடைய கோதண்டம் இவனைக்கொல்லக்காத்திருக்கிற தென்று படைத்தலைவர்களுடன்சொல்ல, இதைக்கேள்விப்பட்ட சுக்கிரீபன் வாயுவைப்போ லெழுந்து, அவன் இரதத்தில் விழுந்து கொழுந்துவிட் டெரியுங் கண்களுடை னவனைப்பிடித்தடித் துத்தள்ள, அந்தச் சுக்கிரீபனைக்கும்பகர்ணன்பிடித்து மெள்ளத்தேரிற்கட்டி இலங்காபுரிக்குத்திரும்ப வசந்தன் நீலன் முதலியோர் வந்துமறிக்க, அவ்வசந்தனையும் நீலனையுங் கசக்கித் திலகமாய்ச்சேர்த்து, தேகமுதலியதும் வியர்த்து, சங்கத்தொனி முழக்கி நடப்பதாயினன் கும்பகர்ணன். அப்போது வானரச்சேனைகள் கரங்களை நெரித்துக் கண்ணீராற் கையலம்பிக் கலங்கி நிற்கக்கண்ட இளையபெருமாள், கரத்திலிருந்த உரத்த வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து, கும்பகர்ணன் அப்பாற் செல்லாமல் அயர்ந்து நிற்க அநேகம்பாணங்களை அனுசந்தித்து, அவனுடையநெற்றியிற் பத்துபாணம் உருவிப்போகும்படி தொடுத்தனர். அதனால் அவன் மயங்கி மூர்ச்சையாய்ப் படுக்க, அந்தவேளையிற் சுக்கிரீபன் அவனுடைய மூக்கையுங் காதுகளையும் பிடுங்கிக்கொண்டுவந்து ஸ்ரீராமருடைய பாதங்களிற் பணிய, வானரசிரேஷ்டாளுடைய வருத்தமெல்லாந்தணிய அமரர்யாவரும் அணிமலர்களைச் சொரிந்தனர்.

இப்பாற் கும்பகர்ணன் மூர்ச்சைதெளிந் தெழுந்து, மூக்குங்காதுகளும் மூளியாயிருப்பதை அறிந்து தங்கைமூக்கைப்போல் என்னையுஞ்செய்த சமர்த்தர்களே! ஒருமூளிக்கிரண்டுமூளியாய் இலங்கையூருக்கு எப்படிபோவேன்? உங்கள்சாத்தாற்சாவேன் இதோ வருகின்றது கொடிய விஷக்கணை. என்றுசொல்லிக் கொண் டோடிவந்து இலக்குமணர்மீது விடுத்துச் சமர்புரிந்தான். அச்சமரில்இலக்குமணரால் அக்கணையோடு தானுமுறிந்து, இரதமும் அவ்விரதத்திற்பூட்டியகுதிரைகளும் அழிந்து, சாரதியும் ஒழிந்து, உதிரம் வழிந்து உலரவும்; மீட்டுங் தெழித்துப் பூமியிற்குதித்து, வானரச்சேனைகளை வாரியெறிந்து வாளுள்மடித்து, கரங்களாற்குத்தி, கால்களால் எத்தி, பாசங்களாற்கட்டி, தரையில்தேய்த்து, சவமாய்ச் சாய்த்து, போர்க்களமெல்லாம் புருஷதீரனாய் ஆர்க்கும் அடங்காமல் ஆரும் நிகரில்லாமல் உரைவினன். அப்போது வானர அரசனும் பதினெண் படைத்தலைவரும் விபீஷணனும் இளையமூர்த்தியும் ஸ்ரீராமரிடம் வந்து மனநொந்து, இந்தப்பாவியைக் கொல்லாமல் தேவா வேடிக்கை பார்ப்பது விஷப்பரிக்ஷைபோல் இருக்கின்றது. இன்னுஞ் சற்றுநேரத்தில் எம்மையும் உம்மையுமுடித்து, அம்மையையு மபகரிப்பான். இது உண்மை. என்று யாவரு முரைக்கும்போது திக்குப்பாலர்கள் தியங்கிமயங்கவும், இந்திராதி தேவர்களும் ரிஷிகளியாவரும் வெந்துயர்கொண்டு குலைகுலைந்து வாடவும், வானரப்படைகளு மற்றுள்ள வீரரு அலமரந்தோடவும், அண்டங்குலுங்கவும், அலைகடற் கலங்கவுமாக ஸ்ரீராமர் கரத்திற் பிடித்த வில்லைக் குணத்தொனி பண்ணி, யுத்தகளத்திற்சென்று நின்று அக்கும்பகர்ணனை யெதிர்த்தனர். அவரே நேரில்வந்தெதிர்க்கவுங் கும்பகர்ணனும் வில்லிற்குணமேற்றிப் பல்லைக்கடித்து அளவிறந்த அஸ்திரங்களை அபாரியாய்ச் சொரிந்தனன். உடனே அரக்கர் குலகாலன் அவைகளையெல்லாம் பொடியாய்ச் சிதைக்க, அரக்கனுஞ் சளையாதெதிர்க்க, இவ்வாறு இருவரு நெடுநேரம் யுத்தம்புரிந்து, இராக்கதன்வில்லை ஸ்ரீராமர் அழித்தனர். உடனே அவன் ஒரு தண்டாயுதத்தைச் சுழற்றிக் கொண்டல் வண்ணன்மேல்வீச, அதுஇரண்டுதுண்டமாய்ப்போக மீட்டுமவன் ஒரு சூலாயுதத்தை ஏற்ற, அதையுமவர் தூளாகமாற்ற அரக்கன் இரண்டு மலைகளைப் பிடுங்கி வேகங்கொண்டு எறிய: அம்மலைகளிரண்டும் அமலன் விடுங்கணையால்தறிய; அப்பா லக்கும்பகர்ணனனவன் யுத்தகளமெல்லாம் உலாவியுலாவி வானரங்களைவாரிப் பிடித்து வாயிற் போட்டுக்கொண்டு கசகசவென்று மென்றுதின்றும் கரங்களையுங் கால்களையும் வால்களையும்பற்றிக் கொன்றும், ஸ்ரீராமர்பேரிற் சில குரங்குகளைப் பிடித்துக் கரகரவென்றுசுழற்றி எறிந்தும், ஆதிசேடனுடைய படமுறியும்படி நடந்தும், இவ்வாறு மீறி அமர்செய்யுங் கும்பகர்ணனுடைய இரண்டுகால்களையும் ஸ்ரீராமர் இரண்டு அஸ்திரத்தால் அறுத்து விட்டனர்.

அதுகாலையில் தேகங்குழவியாகவும பூமி அம்மியாகவு மிருந்த அக்கும்பகர்ணனனவன் சற்றுஞ்சளையாமல், வானரப்படைகளை அரைத்துக் கடலிற்கரைத்து மானிடரையுங்கொல்வேனென்று நாக்கைநீட்டி, யுத்தகளத்திற் கிடக்கின்ற ஒருபெரியமலையை நக்கி வாயிற்சேர்த்து, நடமுடவென்றுகடித்து, சீனக்குழவில் உண்டைவைத் தூதுந் தன்மைபோலூதி, இரா

மர்-இலக்குமணர்-வானரச்சேனைகள் - படைத்தலைவர்கள்-இவர்கள் யாவரும்பட்டு மயங்கச்செய்தான். அவரவர்களுக்குக் காயம்படவும் ஸ்ரீராமர் இவனுடைய வீரத்தைக் கொண்டாடிப் புகழ்ந்து, ஒருராமபாணத்தை விட்டு அவன் தலையை வெட்டியெறிந்தனர். உடனே தேவர்கள வாழிபாடி ஆழிபோலிரைந்தனர். சாரணர்களோடித் தேவரீர் தம்பி கும்பகர்ணன் இறந்தானென்று இராவணனிடத்திற் சொல்லினர். அதைக்கேட்ட இராவணன் மூர்ச்சைபோய், எழுந்து-புரண்டுஅரண்டு-வெருண்டு-அழுது, இந்திரசித்தனைப்பார்த்து, அப்பா! நமக்குப் பழுதுவந்துவிட்டதே: நீ யிருந்தும் என்தம்பியை இப்போது யிழந்தேனே: என்று கண்ணீர் சோரவிட்ட இராவணனை இந்திரசித்துதேற்றி, ஐயா! அவ்விரண்டு பனிதரையும் பழிவாங்கிகொண்டு வருவேனல்லது, இதுமத்தியில் நான் வரமாட்டேன். என்றகூறி சேனைசயினியங்களுடன் புறப்படுமுன்னமே, இராவணன் பிள்ளைகள் வெகுபேரும்-கும்பகர்ணன் பிள்ளைகளிரண்டுபேரும்-யுத்தகளத்தில் வந்து, இலக்குமணர் முதலாகியபராக்கிரமர்களால் இறந்து அவிந்தார்கள். தூஷணன் முதலிய தம்பிமார்களும்-வச்சிரவேகனும்-பெருஞ் சேனைகளுடன் வந்து, சுக்ரீபன்-அங்கதன்-அனுமார் - இவர்களுடன் யுத்தஞ்செய்து இறந்தார்கள். இச்சம்பவத்தையும் இராவணன்கேட்டு, இறகு ஒடிந்தபட்சிபோலிருந்தான். இந்தச்சேதிகேட்ட இந்திரசித்தன் இரதகஜதுரகபதாதிகள்முதலியசகலஆடம்பரங்களுடன் நெருங்கவந்து, வில்லைக் குணத்தொனிசெய்து, இரவி முதற்கோள்களும் - இந்திரன் முதல் திக்குப்பாலர்களும் - விடவிடவென்று நடுங்க, விண்ணவர்களெல்லாம் ஒடுங்க, வேத வேதியரோடு ரிஷிகளெல்லாம் அடங்க, அனுமந்தன்-அங்கதன் - சுக்கிரீபன் - சாம்புவந்தன்-நீலன்-குமுதன்-குமுதாக்கன் — இவர்கள் எல்லோருஞ் சேர்ந்து யுத்தந்தொடங்க, நீங்களெல்லாம் படுங்களென்று விடங்களைப்போலச் சீறி, வெகுவாய் வார்த்தைகளைக் கூறி, நிராயுதருடன் யுத்தஞ்செய்வது நீதியன்றென்று, இலக்குமணன் என்னும் வில்லாளியுடன் சண்டைசெய்வேனென்று, யானை யாளியுடன் எதிர்க்க வந்ததுபோல்வந்து பராக்கிரமித்து நின்றான்.

அப்போது இளைய பெருமாளும் வில்லைக்கொண்டு நாணிபூட்டி இழுத்து டங்காரஞ்செய்தனர். உடனே இராவணி அளவற்ற பாணங்களை வாசாமகோசரமாக விடுத்து வானரங்களைச் சாடவும், இளையபெருமாளும் அவனோடுவந்த அவுணசேனைகளெல்லா மாளும்படி கோடிபாணங்களைப் போடவும், இருவருஞ்செய்யும் யுத்தங்களைத் தேவர்கள்பார்த்து சமயுத்தமென்று சந்தோஷப்படவும், இராவணிதேரிலிருந்துகொண்டு யாதொன்றுக்குஞ் சளையாமற் பாணங்களை எய்யவும், இளையவர் பூமியில்நிற்பது நன்றல்லவென்று அங்கதனானவன் தன்தோளிலேறிக்கொள்ளச்செய்யவும், பின்பவனிரதத்துடன் சுழன்று இடசாரி வலசாரியாக அங்கதன்தாவவும், வாயுவேகமும் எஞ்ச நமது இரதவேகத்தினு மிஞ்சி வருகின்றானென்று எவர்களும் அஞ்ச இராவணி ஒருகதையைச் சுழற்றி அங்கதன்மார்பி லெறியவும், இளையபெருமாள் அதைவெட்டிமுறிக்கவும், மறுபடியும் ஒருவர்பேரில் ஒருவர் ஓயாமற்கணைகளும் - அஸ்திரங்களும்-பாணங்களும்-பற்பல ஆயுதங்களும் உற்பவம்போல் எடுத்துவிடுத்துச்சமர்செய்தார்கள். அப்போது இராவணிவிடும் ஆயுதங்களையெல்லாம் இலக்குமணர் உராவிய பொடிபோல் உதிர்த்து, அவனுடைய இரதகஜதுரகபதாதிகள் எல்லாவற்றையும் இடியும்பொடிபோல் படியப்பண்ணினர் அக்கால் இராவணியொருவனுந் தேருடன்நின்று திகைத்துப்பகைத்து மாயையினாலே மறைந்துமேகலோகம்போய் ஒளித்துக்கொண்டனன். அதை விபீஷணன்கண்டு விசாரமடைந்து, இளையவரைநோக்கி, இந்தமகாபாதகன் ஓடி ஒளித்தானென்று எண்ணப்படாது. ஏதோ ஒருவஞ்சனை நெஞ்சில்நினைத்துமறைந்தான். மாயச்சூதுகள்செய்வான். என்றுரைத்த வாக்கியத்தைக்கேட்ட இலக்குமணர் அவன் எந்தலோகத்திலிருந்தாலும் இந்தமுகூர்த்தத்திற்கொல்லுகிறேனென்று வில்லையேந்தி அந்தரத்தில் அசையுங் கந்தரத்தைப்பார்க்க, இராவணி இளையபெருமாளைப்பார்த்து மேகத்தில் ஒளித்திருந்தபிரகாரம் பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய் தபிமந்திரிக்க, அவ்வஸ்திரமானது இராமர் இலக்குமணர்முதலாகிய வீரர்கள்—எழுபதுவெள்ளம் வானரசூரர்கள் ஆகிய வெல்லாருடைய தேகத்தினு மளவிறந்த கணைகளாகவந்து பட்டுருவி, எல்லாரும் பூமியிற்சோர்ந்து விழும்படியாகச்செய்தது.

இராவணி அந்தநிமிஷத்தில் நாகாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து, இலக்குமணரைக் குண்டுகட்டாகக்கட்டி உருட்டிப்புரட்டியெடுக்க அசைத்துப்பார்க்கும்சமயத்தில், இந்தக்கணைகளாற்கட்டுபடாமல் இருந்த விபீஷணன்மிகுந்த விசாரங்கொண்டு, ஐயோ! பழிக்கு ஆளானேனேயென்று பரதவித்து, அனுமார்விழுந்துகிடக்கும் இடத்திற்குவந்து, அவருக்கு முகூர்த்தநேரம் இருக்குங்களையைத்தீர்த்து எழுப்பிக்கொண்டுபோய் இராவணி இளையபெருமாளைப் பலங்கொண்டு எடுப்பதைக்காட்ட, அவர் உகாந்தகால உருத்திரனைப்போற்கோபமும் மனஸ்தாபமும் திடமுங்கொண்டு, குந்தியெழுந்து சுழன்றுவந்து விழுந்து, இந்திரசித்தைக் கழுத்து ஒடியும்படி உதைத்தார். அவ்வுதையினால் அவன் பதைபதைத்துக் கண்சுழன்று திடுக்கிட்டெழுந்து, இலங்கையிற்சென்று தன்தந்தையைக் கண்டு விஜயங்களைச்சொல்லிப்பாடவும், இராக்கதருடன் இராவணன் ஆடவும், சீதையைக்கொண்டுவந்து இராமர் லட்சுமணரைக்காட்டவும், அந்தம்மாள் அழுதுப் புலம்பிவாடவும், திரிச்சடைதேற்றி விசனங்களை

மாற்றி என்தந்தையிருக்குமளவுஞ் சிந்தனையில்லையென்றுபோற்றவும், இவிடத்தில் விபீஷணனானவன் சாம்புவந்தர்-சுக்கிரீபன்-அங்கதன்-இவர்கள் முதலியபேர்களை அந்த ராத்திரியிற்கண்டு, அவர்களெல்லாரும் மாயைதெளிந்து எழுந்திருக்கக்கொண்டு, அவர்களைக் கூட்டிவந்து ஸ்ரீராமர் இலக்குமணர்முதலியபேர்களும்பிழைக்கும்படியாக யோசித்தனன் அப்போது சாம்புவந்தரானவர் சல்லியகருணி சந்தானகருணிமுதலிய சஞ்சீவிகளிருக்கும் மலையினிடமும் வழியுஞ்சொல்ல, அதைக்கேட்ட அனுமார் உடனேபாய்ந்து, அம்மலையைப் பெயர்த்துக்கொண்டு போதுவிடியு முன் வந்துவைத்து, இவர்களுடைய தேகநாயங்களெல்லா மாறச்செய்து, மறுபடியுஞ்சஞ்சீவிமலையை அத்திசையைநோக்கி விட்டெறிந்தார் பின்பு நாகபாசத்தாற்பட்ட கட்டவிழாமல் இருக்கக்கண்டு பெருக்கத் துயரங்கொண்டிருக்குங்காலையில், பிரமன்முதலிய தேவர்களின் உதவியால் கருடபகவான்வந்து வட்டமிட்டுப் பறக்க, நாகாஸ்திரமுங் கட்டுவிட்டு இறக்க, உடனே ஸ்ரீராமர் முதலியபேர்கள் இராகு கேதுக்களினால் தொட்டுவிட்ட சூரியசந்திரரைப்போற் சிறக்க, அக்கால் இவர்களை யிறக்கச்செய்த இராவணியையும்-அவன் தந்தை இராவணனையும்-அரக்கர்களையும்-இப்போதே பறக்கச் செய்கின்றோமென்று குரங்குசேனைகளியாவும் உரக்கக்கூவி இலங்கையிற்சென்று கலங்கச்செய்து, இராக்கதரைக் கால்மாடு தலைமாடாய்-குப்பற் குப்பலாய் பிணமலையாய்க் குவிக்கத் தலைப்பட்டன.

அக்காலையிற் சாரணர்சென்று இராவணன் இடத்தில் முறையிட, உடனே அவன் இந்திரசித்தை, அழைத்து, அப்பா இராவணி!நமது மந்திரநாகபாசக் கட்டும் விட்டுப்போய், நமதுகுட்டுங் கெட்டுப்போய் இராக்கதச்சேனைகளியாவும் பட்டுப்போங்காலங் கிட்டவந்ததென்று சொல்லினன். அதைக்கேட்ட மாத்திரத்தில் அவன் அஷ்டதிசையுங் நடுங்க வட்டமாகிய தேறிமேலறி அட்டகாசம் பண்ணிவந்து, விபீஷணனை நோக்கி, அடா துஷ்டனே ! என்று சிலவார்த்தைகள் மொழிந்து சூலாயுதத்தை விடுக்கத் தொட்டெடுத்தான். அவனதைத் தொட்டெடுத்து விடுக்குமுன்னமே யிளையபெருமாளுடைய அஸ்திரத்தா லதுகெடவும்,விண்ணுமண்ணுங் குலுங்கச் சிலநேரம் வேறுவேறான யுத்தஞ்செய்து, மேல்மண்டலத்தில் ஒளிந்து நிகும்பலையாகஞ் செய்யப்புகுந்து, ரகசியமாக அதற்குரிய வேலைகளை நடத்த வாரம்பித்தான். அப்படி நடத்தும் வேலையைத் தெரிந்த விபீஷணன் ஸ்ரீராமருடனே சொல்ல, அவர் தம்பியை அழைத்து ஆலிங்கனஞ்செய்து சகல தருமங்களும் யுத்த முறைகளுங் கூறிவிடுக்க, அவர் உடனே கோபங்கொண்டு நிகும்பலையாகத்திற் சென்று, அனுமார் முதலிய பேர்களாலியாகத்தை அழித்து, அவன் தேகமுழுமையும் அஸ்திரத்தை அழுத்தினர். அதனால் அவ்விராவணி அதிக விசனவெகுளிகொண்டு தேரேறி, இன்று நமது பிராணத்தியாகம் இராமலட்சுமணர்களுக்குச் செய்வது நிச்சயமென்று தேறி, நீ எவ்வளவு ஒருபஞ்சை மனிதன் என்றுகூறி, இதோபார் என்வீரத்திற்பாணத்திறத்தினால் உன்னைத்தமபனாக்கி உன்தமயன் இராமனைத் தம்பியாக்குகிறேனென்றுசீறி, நூறுநூறு பிரங்கணைகளைவாரி மாரிபோற்பொழிந்தான். அவைகளை யெல்லாம் இலக்குமணர் இமைக்குமுன் தடுத்துக்கெடுத்துக் கடிகடுத்து, அடா இராவணி! உன்னையிக்கிமிடத்திற்படுத்து, இராவணனை உனக்குப்பிள்ளையாகக் கொடுத்து, உங்களிருவருக்கும் விபீஷணனை விடுத்துக் கருமஞ்செய்பத் தொடுத்து வைக்கிறேன் பாரடா பாதியுக்தத்தில் ஒளியுந் திருடாவென்று சப்தமேகமுந் தாரைவிடுந் தன்மைபோற் பாணங்களைத் தூற்றவும், இராவணியுங்கனைத்து இரதத்தில் இருந்து அம்புகளையேற்றவும், இலக்குமணர் அங்கதன் தோளிமேலறிக்கொண்டு, அரக்கன்விட்ட அஸ்திரங்களையெல்லாந் தன் பாணங்களால் அறித்தெறிந்து, பின்னுஞ் சிலகணைகளை விடுத்து அவன் உடம்பெங்குஞ் சல்லடைகண்ணாய்த் துளைத்தனர். இவ்வாறு இலக்குமணர் விடுக்குங் கணைகளினால் இராக்கதவீரர்களும் அவர்களுடைய இரதகஜ துரங்கள் முதலிய சேனைகளும் ஒன்றொழியாமல் இளைக்கவும், இராவணியின் கவசம்-வீரபட்டம்-கைவில்-தேர்-குதிரை-கூளி-சாரதி-இவையாவும் அழிந்தொழியவும், தான்விட்ட கணைகளெல்லாம் பொடிப்பொடியாய்ப் படியில்விழவுங்கண்டு; முடியிறங்கிக்கொண்டு பயந்து ஆகாயத்தில் ஒளித்து, இலங்கையிற்புகுந்து இராவணனைப் பணிந்து, அப்பா ! ஜானகியை விடுத்துச் சரணம் அடைவது நன்மை. என்னுடைய மாய்கை வல்லமையும் பிரமாஸ்திரம் நாகாஸ்திரமுதலிய இயாவுஞ் சூரியனைக்கண்ட பனிபோ லாய்விட்டன. நம்முடைய வீரம் பல்லில்லாதவர் செற்போ லாயது. நமது பராக்கிரமங் குடத்திலிட்ட விளக்காச்சுது. நம்முடைய பாணங்களெல்லாம் உவர்நிலத்தில் இட்ட விதையாய்ப்போயின. இனிமேல் என்னால் ஆவது ஒன்றுமில்லை. என்று முறையிட்டான்.

இப்படி முறையிட்டு விளம்பியமகனைக்கொன்றுதின்று விடத்தக்க கோபங்கொண்டு, அண்டர்களை வென்று நீலகண்டனைக்கண்டு எண்டிசையுஞ் சென்றுவென்று எமகண்டகன் என்று பேர்கொண்டிருக்குஞ் சண்டப்பிரசண்ட உத்தண்டனாகிய என்னிடத்திற் கோதண்டனைக்குறித்து இளைத்துச் சொல்லிய நீ என்குமாரன் அல்ல. நீ கெட்டாய்போ: என்று வாளையுருவி வெட்டவருவானை இராவணி நோக்கி, துட்டனாகிய இவனிடத்தில் இறப்பதிலும்பட்டாபிராமனால் மடிவது பாக்கியமென்று கருதி, சிறுமணிகள் கட்டிச் சப்திக்குந் தேரேறி, இலக்குமணருக்கு எதிரி

ல்வந்து நின்று. இருகண்களினுஞ்சலம்பொழிந்து இந்திராஸ்திரம்—சந்திராஸ்திரம்-வாயு வாஸ்திரம் - தேயு வாஸ்திரம் இவைமுதலியவைகளை வில்லிற்றொடுத்து விடுத்தான். அதைக்கண்ட இளையபெருமாளுக்குக் கோபம்வந்து இவன் எத்தனைதரம் ஓடி ஒளித்துவருபவன்! என்று அர்த்தசந்திரபாணத்தை அவன்மேற்றொடுத்து அவன்விடுத்த அஸ்திரங்களையும் அழித்து, அவன்கரத்தையும் அணிமுடிபொருந்திய சிரத்தையும் அறுத்துத்தள்ளினர். உடனேவானரப்படைகளும் அமரர்முதலிய யாவரும் எழுந்து துள்ளினர். அக்கால் அங்கதன் இலக்குமணரைச் சுமந்தவண்ணமே அந்தச்சிரத்தை எடுத்துக்கொண்டுபோய்ச்சுவாமியின் அடியிணையில்வைத்துப் பணிந்து நின்றுமகிழ்ச்சிகொள்ள, அரம்பாஸ்திரீகள் கற்பகமலரை வாரியிறைத்து மங்களம்பாட, இளையபெருமாளும் பெரியபெருமாளைப் பணிந்துபோற்ற, தம்பியை மார்புடன் தழுவிமகிழ்ந்து சந்தோஷங் கொண்டார் தாசாதி அந்தக்காலத்தில் அவிடம் இருந்தசாரணரோடி இராவணனிடத்தில் இராவணி இறந்தான்என்று கூறவும், அம்மாத்திரத்தில்ஆறுத்துயரங்கொண்டு, மாறுக்கண்ணீர் பொழிந்து, தேறுவிசனமுற்று சிங்காசனத்தில் இருந்து பூமியில்திட்டென்றுவிழுந்துமூர்ச்சைபோய் இனியுலகிலுள்ள பெண்டுகள்கூட சண்டைக்குவருவார்களே: அப்பாமகனே? இனிநான் என்ன செய்வேன்? தம்பிமார்சொல்லையுந் தள்ளி, வீண்பழிக்காளாய் விறுதாவிற் குடும்பங்களையுஞ் செல்வங்களையும் இழந்தேனே: இதோநானும் ஒழிந்து அழிந்து வருகின்றேன் ஓ என்புத்திபராக்கிரமே! என்று அழுது, பின்பு தேறித்துணிந்து திடங்கொண்டு சீதையிருக்கும் அசோகவனம்போய் இதனைநடத்துவதாயினன்.

ஓ சனகன் பெண்ணே! என்பட்டினமும் பிள்ளைகளும்-தம்பிமார்களும் - அளவிறந்த சேனைகளும்-மற்றியாவும் உன்பொருட்டினால் அழிந்து ஒழிந்தார்கள். நீ பிராணனுடன் இருக்கும்வரையிலும் அந்த மனிதர்கள் விடார்கள். ஆகையால் உன்னைக் கொன்றுவிட்டால் அப்பால் ஒன்றுமில்லை. என்று சொல்லி வாளையுருவிக்கொண்டு வெட்டவந்தான். அப்போது மாலியவான் என்னும்பாட்டன் ஓட்டமாயோடிவந்து, உலகங்களையெல்லாம் வெற்றிகொண்டு, கைலையங்கிரியை யெடுத்து, அஷ்டகஜங்களைச் செயித்து, அமரர்களை அடக்கி, உனக்கெதிர் ஒருவரும் இல்லையென்று வெற்றிபெற்ற வீரன் ஸ்திரீயின்பேரில் வாள்யெடுத்தான் என்றால்; உன்னுடைய புகழ்குன்றிப்போகாதா அப்பா! இதல்லாமலும், (ஓடம்வண்டியின்மீதுவண்டி ஓடமீது.) என்று சொல்லுவார்கள். அதுபோல இராமனையு மிலக்குமணனையும் வென்று ஜெயத்தைக்கொண்ட நீ இப்போது சீதையைவெட்டிவிட்டால், நாளை ஆர்முகத்தில் விழிப்பாய்? என்றுபேசவும் அக்குறிப்பையுணர்ந்து மகிழ்ந்து அரண்மனைக்குவந்து, ஒருராட்சசனை ஜனகனுக்கி மடல்விரியக்கட்டி, சீதைக்கு எதிர்கொண்டுபோய் நிறுத்தி, இதோ உன்தகப்பனைக் கொண்டுவந்தோம். நாளை பாதசத்துருக்களையுங் கட்டிக்கொண்டு வருவோம் இங்கே உன்னைக்கொண்டுபோக வந்திருக்கு மனிதர் இருவரையுங் கொல்லுவோம். உனக்கு ஆதரவு என்னயிருக்கிறது! என்னையன்றி வேறேதுணையார்? என்றுசொல்லவும் அந்த ஜனகவேடக்காரன் கண்ணீர்காட்டித் தளர்ந்து, அம்மா! உன்னைப்பெற்று இந்தக்கெதிகண்டேன். அரக்கன் இஷ்டப்படி பொருந்தியிருந்தால் நான் சவுக்கியப்படுவேன். உன்தாயார்முதலியபேருந் தளர்வுநீங்குவார்கள். என்றுசாற்றவுந் தந்தையென்றே விசனங்கொண்ட தாயானவள் இதுமாய்கையினாற்செய்ததென்று ரகசியமாய்த்திரிசடைசொல்லத்தேறினாள். இப்பால் இராவணன் மருத்துவனைச் சீதையாக்கி, இராமர் இலக்குமணருக்கு எதிர்க்கொண்டுபோய் ஆகாயத்தில் நிறுத்தி, தலைமயிரைப்பிடித்து ஆட்டி, இதோ பாருங்கள் ஜானகியைபென்றுகாட்டி, இவளாலேயல்லவா இவ்வளவு கலகம்விளைந்தது? இவளை வெட்டியெறிந்தால் நீங்கள் செயித்து என்னகாணப்போகின்றீர்கள்? என்றுசொல்லவும் அந்த மாயச்சீதையானவள் ஓ அனுமாரே! ஓ இராமரே! ஓ தம்பி இளையபெருமாளே! என்று அலறியழுதனள். அப்போது ஸ்ரீராமருக்கும் இலக்குமணருக்கும் ஒன்றுந்தோணாமல் மெய்மறந்திருந்தார்கள். அனுமார்முதலியபேரும் பெருங்கூச்சலிட்டு அழுது, இருந்தாளென்றவாயால் இறந்தாளென்று எப்படி சொல்லுவோந் தெய்வமே! நீதியில்லையோ! நிலையில்லையோ? என்று ஏங்கித் துன்புறவும் விபீஷணனறிந்து, இதுமாயவஞ்சனை நீங்கள் பயப்படவேண்டாம். தாயார் சுகமாயிருக்கின்றாள் என்று தேற்றவும், யாவரும் அகமகிழ்ந்து களிகூர்ந்திருந்தார்கள்.

இப்பால் இராவணன் மூலபலச்சேனை வரும்படி உத்தரவுசெய்ய, அவ்வண்ணம் ஆயிரம்வெள்ளஞ்சேனைகளும்வந்து எழுசமுத்திரம்போ லடர்ந்து நெருங்கி, ஸ்ரீராமர் இறங்கி இருக்குஞ் சுவெலாத்திரிவரைக்கும் நிறைந்து, ஆரவன்மனிதன்! ஆரவன் மனிதன்! என்று அண்டம் இடியக்கூவி, அகில புவனங்களையுந் தாவி, நாய்முகம்-நரிமுகம்-கரடி முகம்-புலிமுகம் இப்படிப்பலபல முகங்களும் விகாரரூபங்களும் உடைத்தாய், விளக்கை விட்டிற்பூச்சி வளைந்ததைப்போலும்-பாம்பைத்தேரைகள் சூழ்ந்ததைப்போலும் - சிங்கத்தைப் பலகோடியானைகள் கவிந்ததைப்போலும் - சூரியனைப் பனிமறைத்ததைப்போலும் வளைத்துக்கொண்டு சகலவித ஆயுதம்—அஸ்திரம்-சஸ்திரம் - அம்புகணை-வில்-வேல்-வாள்-கதை - முதலியதைக்கொண்டு மோதவும், வானரப்படைகள்காதவழி கடலைக்கடந்து

ஓடவும், சாம்புவந்தரும் அனுமாருந்தேற்றி அவர்கள் பயம் ஆற்றித்திருப்பவும், பெரும்புறக்கடலை உறிஞ்சிக்குடித்து எப்பமிட்டுவந்தெதிர்த்த அம்மூலபலச் சேனைகளையெல்லாம் ஸ்ரீராமரானவர் வளைத்து, விஜய கோதண்டத்தைக் கரத்திற்கொண்டு நாணியேற்றிக் குணத்தொனிகாட்டி, நான்குதிசைச் சேனைகளையும் பம்பரம்போலாட்டி, பூமிமுழுமையும் நிறைந்த இரத்தவெள்ளங்களிற்புரண்டழியமாட்டி, போக்கியசேனைகள்போக மிஞ்சிமேலிட்டுவரும்படைகளை மோகனாஸ்திரந்தொடுத்துக்கெடுத்து, அங்கும் ஸ்ரீராமன் இங்கும் ஸ்ரீராமன் மற்றெங்கும் ஸ்ரீராமனாக நின்று, நிலத்தோடு நிலமாக அத்தனைபேரையு மடித்து, யுத்தகளத்தை வெறுங்களமாக்கி, பூதப்பிரேத பைசாசகணங்கள் பிணங்களைத்தின்று கொழுத்துச் செயங்கொண்டாடச்செய்தனர். அதைக்கண்டசாரணர்போய் இராவணனிடத்திற்சொல்ல, அதைக்கேட்ட இராவணன் நகைத்து, தலைக்குக்கிரீடம்பத்துஞ்சூட்டி, மாலைஇருபதுந்தரித்து, குண்டலங்கள் அணிந்து, அரைப்பட்டிகைகட்டி. ஆடைதரித்து, வீரகண்டைவீக்கி, விதவிதமாகிய ஆயுதம் இயாவும்அமைத்து, சந்தனபுட்பசவ்வாதுகளணிந்து, யுத்தகோலம் ஒளிபெறக்கொண்டு, அந்தரத்தோர்கள் அலறிக்கதற, அநேகம்படைகொடு அரக்கர்நெருங்க, குடை-கொடி-குஞ்சம்-சாமரை-பிஞ்சம்-வீரவிருது-இவைமுதலாகியசின்னங்கள் விளங்க, டமாரம்-காகளம்-பூரி-கர்ணா-திருச்சின்னம்-உடுக்கை-பம்பை-உறுமி-தப்பட்டை - இவைமுதலிய வாத்தியங்கள் முழங்க, பாதலம்நடுங்க, பூதலம் ஒடுங்க பாவையர்வாழ்த்திப்பணிந்துபோற்ற, அண்டம் அளாவிய முண்டகக்கலசத்தேரினிலேறி, ஸ்ரீராமனை இன்றேயழித்து எழிற்சீதையை இயான்கண்டுகளித்துவாழ்ந்திருப்பேனென்று சென்றனன்.

அப்போது - எரிகொள்ளித்தேர்மேலெண்ணில விழ்ந்தன செந்நீர்மாரி சேர்ந்துபொழிந்தன. நரிகளும்நாய்களு நன்றாளையிட்டன. மாலைகள் கருகின மரங்களும்பட்டன. இவ்விதமாக இடர்ச்சகுனங்கள் கண்டுமெண்ணாது கைதவன் களித்து, வீணைக்கொடி மேல்விண்டலமளாவ, காண்போரெல்லாங் காலனென்றோட, வானவர்மகிழ்ந்து வண்மைகள்கூற, வீரியமாக மேவினான்சமரில். அவன்வரவுக்கு ஸ்ரீராமர் முதலியோர்சிந்தைகளித் தெதிர்ந்தனர். அப்போது தசகண்டன்தேர்மேற்கொண்டு தாசரதிபூமியில்நின்றுயுத்தஞ் செய்வது நன்றல்லவென்று அண்டர்நாயகன் கண்டு, இந்திரவிமானங் கொண்டுபோகும்படி மாதலியாகுஞ் சாரதிக்கு உத்தரவுசெய்ய அதிகவேகத்துடன் அவனுங் கொணர்ந்தான். அமரர்பூமாரி அன்புடன் பொழியக்கோதண்டபாணி மூதண்டம் அளாவிய அவ்விமானத்தில் ஏறிக்கொண்டு குரங்குப்படைகளும் பதினெட்டுப் படைத்தலைவர்களும் பக்கங்களிற் சூழ்ந்து நிற்க; இளையபெருமாளும் அங்கதன்மீதில் ஏறி எங்கும்உலாவிய அரக்கர்சேனைகளை அழித்துக்கொண்டுவர, ஸ்ரீராமரும் இராவணனுங் கண்கள் சிவந்து வில்லைவளைத்துக் குணத்தொனி காட்டி, குயவன் திகிரிபோற் குறைவரச் சுழன்று, இருவருங்கையோயாமற் சரங்களை எய்தனர். இராவணன் ஏவியவெல்லாக்கணைகளுங் கோதண்டராமன்விடும் பகழிகளாற் சுழற்காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அழிந்துபறக்க, காடுகள்-செடிகள் மலைகள் - பிலத்துவாரங்கள் - நதியோரங்கள்-கிரிச்சாரல்கள் என்னுமிவ்விடங்களி லிருந்து வந்த அரக்கரினமாகியவெவ்விடச்சேனைவெள்ளமியாவுங் கார்வண்ணன்கணையாற் குருதி இறக்க, அதைக்கண்ட இராவணன் இருபதுகண்களுஞ் சிவந்து அக்கினிப்பொறி பறக்கும்படி மூண்டு அளவிறந்தஅஸ்திரங்களை அம்புமாரியாய்ப் பம்பியமேகம்போல வெம்பிப்பொழிய, அக்கால் அகிலமுய்யவந்த ஸ்ரீராமர்தனது விஜயகோதண்ட மணிகள் கலகலவென்று சப்திக்கவளைத்துப் பலபலவென்று கணைகளைச் சொரிய, இப்படியாக இருதிறத்தாரும் ஒருவருக்கொருவர் ஒப்பில்லையென்று சொல்லும்படி மலைந்து, பரவையெண்டிசையும் பஞ்சபூதமும், எல்லாங்கலங்க எல்லாம் ஒடுங்க, இகத்தினிலுற்ற யின்னுயிர்யாவும், இரங்கிவேசாரியெண்டிக்குமோட, தேவர்கள் பயந்து சென்று மேலோட, திக்குப்பாலகர் தியங்கிவாட, திக்குக் கஜங்கள் குப்புற்றுவீழ, அஷ்டமாநாகமும்அணிமணிசிந்த இப்படியாகச் சகலப்பிராணிகளும் முக்கி, உதிரங்களைக்கக்கி, உடல்குலுங்கவிக்கி, உயரலைந்து சொக்கிச் சோரும்படியாய் ஆக்கிரமத்துடன் பராக்கிரமத்தைக் காட்டி யுத்தஞ்செய்தார்கள்.

அப்போது இராவணனானவன் இறந்துபோன யாவரும் பிழைக்கும்படி மாயமந்திரத்தை மறைந்து ஜெபிக்க, அக்குறிப்பை விபீஷணன் விளம்ப, அதை ஸ்ரீராமர் கேட்டுக் கியானாஸ்திரத்தை அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்ய, அதனால் வெய்யலில் விழுந்த புழுவைப்போலும், வெந்தீயில்விழுந்த பஞ்சைப்போலும் அம்மாயமந்திரமியாவு மடிய, தசக்கிரீவனுக்குக் கோபஞ்சனித்து ஒரு சூலாயுதத்தை எடுத்துப்பூசைசெய்துமிகுவேகத்துடன் காகுஸ்தன்பேரில் விட்டு முடுக்கவும், அதைத்தம்முடைய கைப்பாணங்களினால்வெட்டி மடிக்கவும்; மறுபடியும் ஒரு தண்டாயுதத்தைச்சுழற்றியெறியவும், அதையும்பொடியாக்கி அவனுடைய கவசத்தையும் வீரபட்டத்தையும் அறுத்தெறியவும், இராவணன்சகிக்கமாட்டாமல் மழுகொழு-சக்கரம்-முஷ்டிகரம்-வேல்-வாள் - முதலாகிய திவ்யாஸ்திரங்களையும், பலமாகிய ஆயுதங்களையும், வாரிவாரி ஆரியகுல வீரியன்மீது இறைத்தான். அவைகளையெல்லாந்தாசரதி கோடிபாணங்களினாற் குறைத்தார். இராவணன் தன்காலத்தைத்தானறிந்துகொண்டு ஒரு முத்தலைவேலைப் பத்தியுடன் பூரித்து, ஓம

விதர்களே! நீங்கள் மடிந்தீர்கள். ஐயோ! பாவம்: இந்தயிடமாஉங்களுக்கு விதித்திருந்தது? என்றுஎடுத்துவிடுத்தான். அந்தவேலானது கடுகடுத்துப் படபடத்து விடமெனக்கறுத்து, மேகமென யிடித்து, வெய்யலெனக்காய்ந்து, வடவாமுகாக்கினிபோற் சீறி, வாடைக்காற்றுடன் ஏழுகடலையும் தூறி, அண்டமுகடுவரையிலும் ஏறி, அஷ்டகஜம் அஷ்டதிசைப் பாலகரையும் பீறி, ஆருயிர்களை யெல்லாம் அதிரககலக்கி வருவதாயது. அதை அரக்கர்குலகாலன் கண்டு அநேகங்கோடி அஸ்திரங்களைவிடுக்கவும், அவைகளையெல்லாம்அவ்வேலானது முடிக்கவும், தேவர்கள்முதல் இயாவருங் கண்டு அழுங்சவும், பதிவிரதா ஸ்திரிகளுடையமனங்களெல்லாம்புழுங்கவும், அம்முத்தலைவேலானதுமேலெழுந்து ஸ்ரீராமருடையதிருமார்பில் உருவும்படி ஓங்காரமிட்டுக் சமீபித்துவர, அதைக்கண்டுதம்பிமார்முதலாகியபேரும் வெம்பி ஒதுங்கி ஒ'டுங்கிப் போக, இம்பரில் இறந்தோம்யென்று ஸ்ரீராமர்மயங்கி ஒன்றுந்தோன்றமல் ஓவென்று ஒருசப்தந்திறக்க, அந்தச் சப்தக்காற்றுபடவும் வேலானது பொடியாய் ஒடிய, அதைத்தசக்கிரீபன் கண்டு தழலெனக்கோபங்கொண்டு' ஒருமாயாஸ்திரத்தை எடுத்து மந்திரித்துப் பிரயோகஞ்செய்தான். அதையும் அரிபரந்தாமர் ஒருகணையால்அழித்து இராவணனை நோக்கி இதனைச் சொல்லுகிறுர்.

அடா அரக்கனே! உன் மாயையின்திறம் - விற்றிறம் - கைத்திறம் - கணைத்திறம் - வரப்பிரசாதத்திறம்-உன்னுடையபலத்திறம்யாவு.மறிந்தேன். இப்பவு நானொரு அஸ்திரம் விடுக்கின்றேன். அதைத் தப்பித்துக்கொள்ளுஞ் சக்தி உனக் குண்டோ? என்று ஒருபிரமாஸ்திரத்தை எடுத்து மந்திரவணக்கத்துடன் உந்திவிடவும், செந்துவர்வாயாள்சீதைகளிக்க, அரவந்தரத்தமரர் இயாவருமகிழ, அண்டங்களெல்லா மதிரவந்து இராவணன் பத்துத் தலைகளையும் அறுத்துத் தள்ளியது. அப்பால் அறுந்தசிரங்கள் அந்நேரமேமுளைக்க' அரிபரந்தாமன் திரும்பவுந் தறிக்க' திரும்பவுங்கிளைக்க, திரும்பவுமுறிக்க, இராமர்விபீஷணன்முகத்தைப்பார்க்க, அவன்உடனே அமுதமுண்டவன் என்றுவிளம்ப, அவ்வமுதஸ்தான நோக்கித்தசரதன்மதலைபிரமாஸ்திரத்தை அன்புடன் விடுக்க, அது உகாந்தகாலத்து உருத்திரன்போல்வந்து விழுந்து அமுதரலசத்தை மாற்றிச் சிரங்களைச்சிதைத்து' தேவர்கொண்டாடப்பாலாழியிற்போய்ப் படிந்துவந்து அம்பறுத்தூணியில் அடங்கியிருந்தது. இராவணன் இறந்து பூமியில் விழவே, ஆகாயவீதியில் அமரர்கள் யாவரும் - அரம்பா ஸ்திரீகளும் - வேத வேதியர்களும் - மிகுதவத்தோர்களும் - மற்றியாவரும் புகழ்ந்து' இசையுடன்மகிழ்ந்து, பொன்னும் பூவும் பொழிந்து வாழ்த்தி, மங்களம் லாலிவகையுடன்கூறி' அடங்காமகிட்சி அடைவுடன் கொண்டு கொண்டாடிடர். நம்பொழுது விடிந்தது சுகப்பட்டேனென்று இந்திரன் புளகமுற்று ஸ்ரீராமரைத் துதித்தான். அனுமார்முதலாகிய வானரவீரர்கள் இயாவருங்களித்தார்கள். அப்போது விபீஷணன் முகத்தளர்வுடனே இருக்க' ஸ்ரீராமரதுகண்டு, (தானுடாவிட்டாலுந் தன்சதையாடும்.) என்னும்வாக்கியம் இகத்தினில் வழங்கும். ஆதலால்-நீபோய் உன் தமயனை அடக்கஞ் செய்து வருகவென்று உத்தரவுசெய்தனர். உடனேவிபீஷணன்போய்விசனமுற்று' அப்பாற் றேறினவராய் அறக்காட் டருங்கடனை அன்புடன்செய்து, மற்ற அரக்க ரியாவருக்கும் அருங்கடன்முடித்து' ஆதிபாண்டரங்கன் அடியிணையில்வந்து தொழுதான். அப்போது இராமர் இளையபெருமாளைப்பார்த்து, தம்பி! இந்த விபீஷணனுக்கு இலங்கைபட்டாபிஷேகஞ் செய்துவரக்கடவையென்று கூறவும், அப்படியே என்று இருந்த அரக்கரையும் மந்திரிமார்களையும் வைத்துக்கொண்டு சம்பிரமத்துடனே பட்டாபிஷேகஞ்செய்துவைக்க, அதைப்பெற்று மனமகிழ்ந்து வந்து ஸ்ரீராமருடையமலரடியில் வணங்கி ஆசிபெற்றிருந்தான் விபீஷணன்.

அந்தவேளையில் அனுமார் - அங்கதன் - விபீஷணன் - முதலிய யாவருந் தாயாரிருக்கும் அசோக வனம் வந்து செயங்கூறிச் சோபனம்பாடினார்கள். ஆடினார்கள். குதித்தார்கள். கதித்தார்கள். இப்படி யாவரும் ஆனந்தபரவசராய்த் தாயார்பாதங்களிற்சரணஞ் செய்து' ஸ்ரீராமருடைய செயத்தைப் புகழ்ந்து' அம்மணீ! தேவரீர் ஸ்வாமியின் உத்தரவின்படி தரிசனத்திற்கு எழுந்தருளவேண்டும் என்று இறைஞ்சவும்' அந்தச் சொல்லைத் தேவாமிர்தம்போற் சீதாதேவி கேட்டு, அவ்விடம் விட்டெழுந்து திரிசடையுடனே சென்று ஸ்ரீராமர்பாதங்களில் வீழ்ந்து தெண்டனிட்டுச்சமீபத்தில்நிற்க, அதுகண்ட தேவதேவன் சீதையைப் பார்த்து, பெண்ணே! உன்னை அரக்கன் தொட்டு எடுத்துப்போய் பத்துமாதஞ் சிறையில் வைக்கவும், நீ பிராணனுட னிருந்து நம்மிடத்திற்கு வரவும், நாம் அங்கீகரிக்கவும்' உலகம்பழிக்கவும்' உள்ளார் நகைக்கவும்' அதனால் என்னுடல் நடுங்கி இலச்சைப் படவுமாகயிருக்குங் காரியங்களுக்கு உடம்பட்டு; யுத்தஞ் செய்தேனும் உன்னை மீட்கவந்தவர்கள் நாங்களல்ல. எங்கள் ஐயா சடாயுவைக்கொன்ற பழியைமுடித்துக் கொள்ள வந்துவெற்றிகொண்டோமன்றி' மறுவில்லாத சூரியகுலத்திற்கு வடுத் தேடிக்கொள்ள வந்தவர்களல்ல. ஆகையால் - நீ மாசற்றவள் என்னும் வகையைத்தெரிவித்தால்' உன்னை ஒப்புக் கொள்ளலாகும். என்றுசொல்லியஇறைவன்மொழியைக்கேட்டும், பக்கத்தில் ஒருவரும் ஒன்றுஞ்சொல்லாதிருப்பதைப் பார்த்த அம்மன் சொல்லுகின்றுள். சுவாமி - அரக்கன் வஞ்சித்து என்னை அபகரித்தான். அப்படி அபகரித்தவன் புத்திரமித்திர களத்திராதிகளோடு இறக்கக் கண்டபின் யான் என்சரீரத்தை விட்டுவிடுவதே தரும

ம். ஆனதால்-இப்போது தேவரீர்கைப்பாணத்தால் அ
வனிறக்கக்கண்டேன். இனிமேல்நான்பிறந்தகுலத்திற்
கும் பெருமை யுண்டாகும்படியாய் அக்கினிப்பிரவே
சம் ஆகிறேன். என்று நமஸ்கரித்துத் திரும்பி, அங்க
தன் - அனுமார் - சுக்கிரீபன் - விபீஷணன் - இவர்க
ள் யாவரையும் பார்த்து அருள்புரிந்து, இளைய பெ
ருமாளைநோக்கி, என் வினைவசத்தால் உம்மையும்இக
ழ்ந்து பேசினேன். அந்தக் குற்றத்தை மனதில் வைக்
காமல் அக்கினிவிர்த்தி பண்ணிக்கொடுக்க வேண்டும்.
என்று கேட்கவும் அண்ணனுடைய மனது அறிந்த
நல்ல தம்பியானவர் ஒரு நொடிப்பொழுதினில் அக்
கினி வளர்த்த, வைதேகியார் அந்த அக்கினியைப் பி
ரதட்சணம் பண்ணி, எனதுவாக்கினுலும் - மனத்தி
னுலும் - காயத்தினுலும் - குற்றங்களுண்டா யிருக்கு
மாகில், என்சரீரத்தைக்கொளுத்திச் சாம்பராக்கக் க
டவது. என்று இரகுகுல புங்கவனையும் இதயத்திற் சி
ந்தனை செய்து, செங்கால் அன்னமானது செந்தாம
ரைத் தடாகத்தில் இறங்குந் தன்மைபோல் அக்கினி
க்குழியிற் பாய்ந்தனள்.

அப்போது அந்த அக்கினிதேவன் தாயாரைக் க
ரத்திலேந்தி, ஸ்ரீராமமூர்த்தியைவணங்கி; சுவாமி ! உ
லகத்திலுள்ள யாவற்றையுஞ் சுடுகின்ற என்னை இந்த
க்கற்பின் சுவாலை சுடுகின்றது. என்று வைத்து வண
ங்கவும், அம்மகாலட்சுமியை ஸ்ரீராமரும் இலக்குமண
ருங் கண்டுமனமகிழ்ச்சி கொள்ள' இவ்வளவு பாடுபட்
டும் விருதாவாய் போய்விட்டதே என்று விசனப்பட்
ட வானரவீரர்கள் முதலியபேரும் புளகாங்கிதம் பூ
ப்ப' பிரமதேவன் இந்திரன் முதலிய தேவர்களும்
ரிஷீஸ்வரர்களும் ஸ்ரீராமரையும் இலக்குமணரையும்
வந்துகண்டு' இவர்களுடைய வீரப்பிரதாப முள்ள
தோள் களையும் வில்லுகளையும் வாழ்த்திப் புகழ்ந்து'
தாயாருடைய எண்ணமும் - மனவுறுதியும் - தீரமும்
- பதிவிரதா பக்தியுந் தெரிவித்து, தசரத தரிசன
முஞ் செய்துவைத்து' அயோத்தியா புரிக்குப் போய்
பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சீதா லட்சுமண
பரத சத்துருக்க அனுமச்சமேத ஸ்ரீ ராமச்சந்திரமூர்
த்தியாய் வாழக்கடவது என்று வாழ்த்தி' இன்ன
மும் உமக்கு வேண்டிய வரங்கள் ஏதாகிலும் உண்
டாகில் தருகின்றோம் என்றுசொல்லினர். அதைக்கே
ட்ட ஸ்ரீராமர் கேட்கின்றார்: ஓ மஹான்களே ! என்
னுடன்வந்த எழுபது வெள்ளம் வானரப் படைகளும்
பதினெட்டுவகைப் படைத்தலைவர்களுங் குறைவில்லா
மல் நிறைந்து இருக்கவேண்டுமென்று கேட்க' அப்ப
டியே அருள்புரிந்து வாழிபாடித் தங்கள்தங்கள் இட
ஞ்சேர்ந்தார்கள். மாதலியும் இந்திர விமானத்தைக்
கொண்டுபோனுன். இப்பால் ஸ்ரீராமர்ஜானகியைநோ
க்கி ஆலிங்கனஞ் செய்துகொண்டு: உன்னுடைய பதி
விரதாதருமம் இயாவர்களுக்குந் தெரியும் படியாகவு
ம் - ஆபத்துவந்தகாலத்திலும் என்னுடைய நாமத்
தையே உச்சரித்துக்கொண்டு இருந்த உன்னுடைய
புத்தியின் விசேஷந் தெரியும்படியாகவும்-இப்படி செ
ய்ததல்லாமல் வேறல்ல. நீயுங் கற்புடைய ஸ்திரீகளுக்
குக்கணவனேதெய்வமென்பதைநிலைநிற்சக்காட்டினை.
என்று மிருதுவசனங்களைப் பேசித் தம்பியுந் தானும்
படைகளும் வீரர்களும் அகமகிழ்ந்திருந்தார்கள்.

இப்படிக்குச் சீதாசமேதராக எழுந்தருளிய ஸ்ரீ
ராமமூர்த்தியை இயாவரும் நெருங்கிவந்து வணங்கி
நிற்க' அப்போது தாசரதி விபீஷணனைப் பார்த்து'
நான் அயோத்தியைவிட்டு வனம் வரும்போது என்த
ம்பி பரதனுக்குப் பதினுறு வருஷமுங் கழித்துத் தச
மியினன்று வருகிறேனென்று சொல்லியநாள் இன்று
வந்தபடியால்; நான்சென்று அவனைப் பார்க்கவேண்
டியது. என்றுசொல்லவும் விபீஷணன் புட்பகவிமான
த்தைக் கொண்டுவந்து வைத்தான். அதில் யாவர்க
ளும் ஏறிக்கொண்டு மந்திரத்தைச் செபித்தமாத்திர
ம்' க்ஷணப்பொழுதில் இலங்கைப்பட்டின முழுமையு
ஞ்சுற்றி' திருவணையையுந் தாண்டிச் செல்லுவதாய
து. அப்போது ஸ்ரீராமர் கிஷ்கிந்தை - சம்பாநதி - ச
டாயு இறந்த யிடம் - அகஸ்தியர் ஆசீர்மம் - பஞ்ச
வடி தீரம் - இவை யாவற்றையும் எல்லோர்க்குங் கா
ண்பித்துக்கொண்டு' பரத்துவாசருடைய ஆசிர்மத்தி
ல் இறங்கி' அவர்வேண்டு கோளினுற் போசனத்திற்கு
ஒப்புக்கொண் டிருந்தனர். அப்போது இராமர் அனு
மாரைக்கூவி' குகப்பெருமானையும்பரதசத்துருக்கரை
யுங்கண்டு என்வருதலைச் சொல்லி வரக்கடவையென்று
அனுப்ப' அவர் ஸ்ரீராம ஜெயமென்று அந்தரத்தில்
எழுந்து கங்கைக்கரையில் வந்து' ஓரிடத்தில் பந்துக்க
ளுடன் இருந்து ஸ்ரீராமரைக் காணேமே என்று கங்
கையில்ஓடத்தைக்கவிழ்க்கப்போகிறகுகப்பெருமானு
க்கு ஸ்ரீராமர் இதோ பரத்துவாசர் ஆசிர்மத்தில் வந்
தார் என்றுசொல்லி' சஞ்சீவிமருந்து உதவியதைப்
போற் குகப்பெருமானை நிலைநிறுத்தி விட்டு நந்திக்கி
ராமத்திற்கு வந்தார். அப்படிவரும்போது கௌசலை-
கைகேசி - சுமித்திரை - இவர்முதலிய பட்டினத்துச்
சனங்கள் எல்லோரும்விசனப்படஅக்கினிவளர்த்திமூ
ன்றுசுற்றில்விழ முயன்றிருக்கின்ற பரதனையுஞ் சத்
துருக்கனையுங் கண்டு' இதோ வந்தார் ஸ்ரீராமர் எ
ன்று வானத்திலிருந்து மழைபோற் குதித்து' அக்கி
னியையவித்து' அருள்மொழிகொடுத்து' ஐயா! உங்க
ளண்ணனுராகிய ஸ்ரீராமர் இலக்குமணரோடு சீதாச
மேதராய் இவ்வயோத்திநீங்கி ஆரணியஞ்சேர்ந்து' சூ
ர்ப்பனகையைமூக்குமுலையறுத்து' கரதூஷணரைக்கா
ய்ந்து' மாயமானைக்கொன்று' இராவணன்சீதையைக்
கொண்டுபோகக் கிஷ்கிந்தைக்கு வந்து' சுக்கிரீபனுக்
குப் பட்டந்தந்து வாலியைக்கொன்று' வானரவெள்ள
ங்களுடன் கடலைத்திருவணைகட்டி' இலங்கையிற்சென்
று; இராவணன்முதல் இயாவர்களையுங் கொன்று; இ
தோ சீதையம்மனுடன்பரத்துவாசர் ஆசிர்மத்தில்வந்

திருக்கின்றனர்.நான் இராமதூதன்,என்பேர் அனுமான். என்றுவிளம்பி எழுந்து கிளம்பி மீட்டும் பரத்துவாசர் ஆசிரமத்திற்கு வந்து, இயாவர்களுடனும் பந்தியிலிருந்து ஸ்ரீராமருடைய பரிகலம்வாங்கிப் புசித்து, தான் போய்வந்த சமாச்சாரங்களைச் சொல்லினர்.

அதுகேட்ட ஸ்ரீராமர் ரிஷிகள் முதலியபேர்களை நோக்கி, உங்கள் ஆசிர்வசனத்தினாலும் இந்த அனுமானுடைய பேருதவியாலும் இராவணசங்காரஞ் செய்தேன். என்று புகழ்ந்து வாழ்த்தவும் இயாவர்களும் மகிழ்ந்து ஆசிர்வதித்தார்கள். அன்று அவிடத்திலிருந்து, மறுநாட்காலமே யாவரும்புஷ்பகத்திலேறிக் கங்கைக்கரையில்வந்து, குகனை அழைத்துக்கொண்டு அயோத்தியாபுரி. பட்டணம்வந்து சேர்ந்தார்கள். பரதன் - சத்துருக்கன் - மந்திரிமார்கள் -பட்டினத்துச் சனங்கள் - கோசலதேசாதிபர் - கேகயதேசாதிபர் -இன்னுமுள்ள சகலராஜர்களும் வந்து காகுத்தனை நெருங்கிவணங்க,வசிஷ்டாதி மகாமுனிவர்களுக்கும்-தாய்மார்களுக்கும்-தானுந் தம்பியும் சீதையும் வணங்கி, சகலசெய்திகளையுஞ் சம்பிரமமாகப்பேசியிருந்து, எல்லோருக்கும் விடுதி அமைத்து யிருக்கச்செய்து, எழுபதுவெள்ளம் வானரச் சேனையும் படைத்தலைவர்களும் நிறைந்திருக்கும்படியாக விற்றிருந்தனர் ஸ்ரீராமசந்திரமூர்த்தி. அப்போது எந்தலோகமும் இந்தலோகத்திற்கு ஈடில்லை என்று எவர்களும் புகழும்படியாக அவ்வயோத்தியா புரியானது ஸ்ரீமந்நாராயணனுடைய கர்ப்பம்போல நலம்பெற யிருந்தது. வசிஷ்டர்முதலிய மகாமுனிவரரும் - தாய்மார்களும் - தம்பிமார்களும்-மந்திரிமார்சளும்-தந்திரிமார்களும்-மற்றுமுள்ள அளவற்ற பிரமுகாளும் ஒன்றாகக்கூடி, இம்மண்டல முழுமையும் - எண்டிசைப்பாலரும் - அண்டர்கள்யாவரும் - தொண்டர்கள்பலருங் கண்டுகண்களிக்க' ஸ்ரீராமசந்திரனுக்கு கவின் முடிசூட்ட இன்று நாள் நன்று என்றனர். உடனே ஸ்ரீராமர் தம்பியருடனே சடைமுடிகளைந்து, அம்புவியெங்கு மருமையாயுள்ள, புண்ணியதீர்த்தம் புனிதமால்மூழ்கி, வண்மை வேதியர் வாழ்த்தி யட்சதைகள், யெண்ணிலா தளிக்க யெவர்களுங்களிக்க, மந்த்ரவோமாக்கினி மறையுளிவளர்க்க, சுந்தரப்பணிகள் அலங்கவணிந்து' சீதாசமேதமாய்ச்சிபெறவெழுந்து' சிங்காசனத்தில்ஜெயமுடனிருக்க, எங்கோன்வசிஷ்டர் யெடுத்தணிமுடியை, திங்கள் மும்மாரி சீர்பெறவழங்க' தருமந்தழைக்க தானமோங்க, வேதம்வாழ்க வேதியர்வாழ்க' தேவாலயந்தினந்தோறும்வாழ்க, நித்தியமாக சத்தியமோங்கி, மன்னுயிரியாவையும் நின்னுயிர்போலக்' காத்திரட்சிக்கக்கடனுனக்கென்றே, தரித்தனர்வேதஞ் சாற்றினர் புலவர்.மங்கலவோசை மழையென முழக்கினர். விண்ணவர்பூமழை வியந்து பொழிந்தனர். அந்தரதுந்துமியாதிகளார்த்தன. இப்பால் - வரிசையாம் அரசர் வரி இறைகொடுக்க, மந்திரி மார்களும் மநுமுறைகூற, பகைவரின்றித்தொகையிலாச் செல்வம், நாளுக்குநாளபிவிர்த்தியதாகி, தாரணிபுகழ ஜானகிசமேதனாய்-பாத சத்துருக்கர் இலக்குமணருடனே' இயாவருங்களிக்க அயோத்தியை ஆண்டனன். காயாம்பூ வண்ணன் களங்கரகிதன். இரவிகுலோத்துங்கன் இராமச்சந்திரன். இச்சரித்திரத்தை இயம்பினோர் கேட்டோர்' நிச்சயமாக நினைத்துத் துதித்தோர், இயாவருங்களித்து இகத்தினில்வாழ்ந்து' பரத்தினற்பயனும் பண்புடனடைந்து, ஐயன்திருவடி யடைந்துவாழ்ந் திடுவார். ஓ வையகம்புரக்கு மாமதிகுலத்தோய் ! வாய்மொழி தவறா வள்ளலே ! என்று மார்கண்டேய மகாமுனிவர் வகுத்துரைத்தனர். இவையனைத்துங்கேட்ட பாண்டவர் - பாஞ்சாலி - தௌமியாசாரியர் - மற்றுமுள்ள பிராமணாள்யாவரும் அம்மார்க்கண்டேயரை அனந்தமுறைவணங்கித் துதிக்க, அவர்யாவருக்கும் ஆசிர்வதித்து விடைபெற்றுக் கொண்டு, தமது ஆசிரமத்திற்கெழுந்தருளினர்.

மார்க்கண்டேயமுனிச் சருக்கம் - முற்றிற்று.

பதின்மூன்றாவது.

———(சித்திர சேனன் சருக்கம்.)———

கண்ணன் துதி.

அவமாகியு முருவமாகியு மிரண்டலதா
யருவையாயரும் புருடனு யிவ்விரண்டலராய்த்
சகுவதாயத் தரிவுப்பவ னேற்பவன்றானுய்த்
தருவினவண்ணமா மொருவனைச் சரணடைகுதுமே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! பாண்டவர்கள் இவ்வாறு நல்லகாலக்ஷேபஞ் செய்துகொண்டு பெரியோர்களுடைய ஆசியும்பெற்று சவுக்கியம் அடைந்திருக்குங் காலையில், அஸ்தினபுரத்தி லிருந்துவந்த ஒருபிராமணன் தருமராஜனையுந் தம்பிமார்களையும்பார்த்து முகம்வியர்த்து, கண்ணீர்சொரிந்து விசனமுற்று, ஆ ! ஆ ! பஞ்சவர்களே ! உங்களையுந் தெய்வம் இப்படி சோதித்தல்லவா? என்று ஏங்கி' கொ

ஞ்சநேரஞ்சில பிரியவசனங்களைப் பேசிக்கொண்டிருந்து விடைபெற்றுக்கொண்டு போயினன். இப்படிபோனவன் திரிதராஷ்டிர மகாராஜனைக்கண்டு ஆசிர்வதித்து, ஓ அரசனே! உமது தம்பி பிள்ளைகள் ஐவரும்வனத்திலிருக்கின்றார்கள். வெய்யில் - மழை - காற்று - குளிரெல்லாம் அவர்கள்மேல் தாக்கிக்காலபோஜனமும் இல்லாமல் வருந்தியிருந்து' பனிரண்டு வருடத்திற் சென்றதுபோக நின்றதை ஒட்டிக்கொண்டு வருகிறார்களென்று சொல்லினன். அவன்சொல்லிய வார்த்தையைக்கேட்ட திரிதராஷ்டரன் வருத்தமடைந்து' பாண்டுபூபதியைக் கருத்தில்நினைத்து' தம்பி! உன்னைப்போல் என்னைக் கொண்டுபோகாமல் உலகத்தாள் வைத்து இந்தத் துன்பவார்த்தைகளை யெல்லாங் கேட்கச் செய்தனையோ? நான் வருத்தம்உற நோக்காத உனக்கு மனம் வெறுத்தோ? என்றுவாடி விதுரனை அழையுங்களென்று சொல்லினன். உடனே சாரணரோடி அழைக்க' அதுகேட்டுவந்து பணிந்துநின்ற தம்பியைத் தமயன் அருகிலிருத்தி' அப்பா விதுரா! நானென்ன சொல்வேன்? வனத்திற் பாண்டவர்கள் மிகுந்த வருத்தமுற் றிருக்கின்றார்க ளென்று கேட்டேன். அதுகேட்டதுமுதல் எனக்கு உயிர்தாளக்கூடவில்லையே. இன்னாட்டிலே அரண்மனைவீட்டிலேசகல போகங்களையும் அனுபவித்திருந்த என்தம்பி புத்திரர்கள்' காட்டிலே வருந்திக்கலங்க என்பாட்டிலே இருப்பது ஞாயமோ? இதென்னி தெய்வசகாயமோ? தம்பி! நாளைக் கணக்கிட்டிருக்கின்றார்களாமே: இன்னும் எத்தனை நாளிருக்கின்றது? அதனைச் சொல்லென்று கேட்டான், விதுரன் சொல்லுகின்றான். அண்ணா? ஆச்சு இன்னும் ஒருவருஷந்தானிருக்கும்போலிருக்கின்றது. அவர்கட்கு மற்றொரு வருத்தங்களுமில்லை. ஆனைப்போது மந்திரத்திற் சடங்கிய நாகம்போ லிருக்கின்றார்கள். என்று சொல்லக்கேட்ட கண்ணில்லாவரசன் நடுநடுங்கி' அப்பா! நாளாய்விட்டால் இவ்விடத்திற்குவந்து போர்புரிவார்களே: நமதுபசங்கள்முழுமையும் மடிவார்களே: என்பிள்ளைகளை யழைத்துப் பாண்டவர்க ளுங்களை நீறுக்குவரென்று கூறினாலும் என்னைச் சீறுகின்றார்களே: என்மனந் தேறவில்லையே: என்பிள்ளைகள் கோபம் ஆறவில்லையே; எனக்கொரு ஆறுதலைச் சொல்லவேண்டுமடா தம்பீ! என்று பரிதாபித்து வெருவினன். அப்படிவெருவிய அரசனைநோக்கி விதுரன்சொல்லுகிறான்.

ஐயனே! முன்ன மொருநாள் நாரதர்வந்து சிலமொழிகள் தந்துபோயினர். அவைகளை நினைத்தால் மனம் பகிரென்னும். அருச்சுனன் பரமேஸ்வரனைக் குறித்துத்தவஞ்செய்து' அவருடன்விளையாடிப் பாசுபதாஸ்திரம் பெற்று; காலகேய நிவாத கவசர்களைக் கொன்று' இந்திரலோகப் பட்டமுங் கிரீடமும்பெற்று மேன்மையுற்று' அநேக அஸ்திரங்களெல்லாம் மந்திர முஷ்டிலேயுடன்கற்றுப் பூலோகத்திலுற்றிருக்கின்றானென்றும்; வாயுபுத்திரன் குபேர லோகத்திற்குப் போய், அநேகம் யட்சகின்னர கிம்புருடர் முதலியபேர்களையும் மணிமாலனையுங் கொன்று வெற்றியடைந்து தனதனுடைய தனதைப்பெற்று' அநுமாராற்சிநேகமும் வரங்களுந் தரக்கொண்டு' அநேகம் இராக்கதரையெல்லாம் அநுவாதகச்செய்து பெரியோர்களுடைய ஆசிர்வசனம் பெற்றிருக்கின்றானென்றுங் கேள்வியுற்றேம். உம்முடைய பிள்ளைகளோ? ஒருவர்க் கடங்கினவரல்ல. என்னசெய்யலாம்? என்றுசொல்லிவாயடங்கினன்: அதுகேட்ட திரிதராஷ்டிரன் பின்னு நடுங்கி' ஆம்: ஆம்: நீ சொன்னது சரியே. ஐயோ! முன்னிருந்த பலபராக்கிரமம் போதாதென்றோ இன்னமும் இப்பேர்ப்பட்ட திறங்களெல்லாங் கைக்கொண் டிருக்கின்றார்கள்? இதல்லாமலும் முன்னொருநாள் உன்னைகழைத்து யான்யோசிக்கும்போது, பாண்டவர்கள் யனைக்கும் இவர்கள் தலைக்குங் கணக்குச் சரிப்பிடித்திருக்கின்றான் நமனென்று துணிந்து சொல்லி இருக்கின்றாய். இப்போது என்னசெய்யலாந் தம்பி! நான் வெம்பி உன்னை நம்பிக் கேட்பதற்கு உறுதிமொழிகூறக்கடவை (யன்றான். அதைக்கேட்ட விதுரனவன் - ஐயா! யானென்ன சொல்வேன்? தேவரீர் பிள்ளைகள் ஒழுங்கானவழிக்கு வரார்கள். நமக்கு மாத்திரம் பிள்ளைகளென்னும் பாதகரத்தால் மனஞ்சஞ்சலிக்கின்றது. இதனா லென்னலாபம்? தேவரீர் பிள்ளைகள் ஒருவர்சொல்வழியு நடப்பவர்களல்லர். தெய்வகித்தமும் இப்படியிருக்கின்றது. நாம் செய்வதென்னை? தயிரியம் விடாமலிருப்பதே தவமென்று கூறினன். இதனைக்கேட்டிருந்த ஒருதூதனோடிச் சுயோதனனிடத்திற் சொன்னான். உடனே அச்சுயோதனன் மாமனையுங் கர்னனையுந் தம்பியையும் அழைத்துக்கொண்டு, தந்தையிடம்வந்து பணிந்து இதனைச் சொல்லுகின்றான்.

விதுரனாற் பாண்டவர்வலிமைகேட்டுப் பயந்த திரிதராட்டிரனைத் துரியோதனன் தன்வலிமைகூறித் தேற்றுதல்.

ஐயா! பஞ்சபாண்டவர்களைக்குறித்து ஏதோ சிலவார்த்தைகள் தங்களிடத்தில் வந்து பேசியவர்கள்' தவத்திலும் - வரத்திலும்-உரத்திலும்-அவர்கள் இப்போது சிறந்ததாகச் சொன்னார்களாம். உங்களுக்கு என்னால் துயரம்வேண்டியதில்லை. நீரேன் விசனத்தினால்உருகிவருந்துகின்றீர? எனக்குப்பலமில்லையென்றும் - அவர்கள் சகலபலமு முடையவர்களென்றும்- உமக்குச் சொல்லுகின்றவர்கள் வார்த்தை எப்போது தெரியுமென்றால்மூன்றுங்கட் டவிழ்க்கும் போது தெரியும். ஹரிஹரப்பிர்ம்மாதிகள் அவர்களுக்கு மாத்திரம் உறவும், எனக்குப் பகையுமென்று நினைக்கவேண்டாம். மந்திரங்களுச்கு அவர்கள்- மாத்திரஞ் சுதந்த

ர்களென்றும், நான் பரதந்திரனென்றும் உன்னாதீர். எனக்குச் சமுத்திரஞ்சூழ்ந்த நாடிருக்கின்றது. அவர்களுக்குச் சருகுவிளைந்த காடிருக்கின்றது. நூறுபேர் யாங்கள் அண்ணன் தம்பிகள். அவர்கள் ஐந்துபேர். எங்களுக்குக் காலபோஜன சவுக்கியமுண்டு. அவர்களுக்கு அகாலபோஜன அவுக்கியமுண்டு. நாங்கள் சிங்கம். எங்களால் அவர்கள்படப்போகிறது பங்கம் பரசிராமனைச் செயித்துச் சிதேந்திரியரா யிருப்பவராகிய விஷ்மாச்சாரியரும், அங்கதேசாதிபதி யாகிய கர்னனும், தனுவலாசியராகிய துரோணரும், திரிலோக கண்டகனாகிய அசுவத்தாமாவும், சத்தியவசன உத்தமராகிய கிருபாச்சாரியரும், இவ்வுலகத்தரசர்களில் தேவரைக்கொல்லும் வல்லவர்களும், எண்ணற்ற இராக்ஷசசிரேஷ்டர்களும், எண்டிசையிலுற்ற பண்டலேஸ்வரரும், கணக்கிறந்த சேனைகளும், திவ்ய தேவாஸ்திரங்களும், வச்ரதேகமும், குன்றாதகவசமும், அரவத்துவசமும், இத்தியாதி பலங்களுமுடையயான் அவர்களுக் கஞ்சேன், என்பலமும் யானும் வெளிப்படுங் காலையில், அவர்பெற்றவரமும் உரமுங் கெடுங்கேட்டை நீர் கேள்விப்படப் போகின்றீர். கலைப்பார் கலைத்தாற் கல்லுங்கரையும். அதுபோற் பற்பல பேருடைய வார்த்தையைக்கேட்டு மயங்காதீர். இவ்விடத்தில் நம்முடைய அன்னங்களையும் வஸ்திரங்களையும் அநுபவித்து உண்டவிட்டுக் கிரண்டகம் நினைக்கும் அவர்களைப்போல், கடவுளும் பட்சபாதமா இருக்கமாட்டார். என்று உறுதிகூறிய செல்வக்குமாரனை இருகண்ணுமற்ற அரசன் இறுகத்தழுவி அணைத்து, அப்போதே பாண்டவர்களைச் செயித்த நயம்போல்அகமகிழ்ந்து முகமலர்ந்து' அடாயென்செல்வனே! அப்படியானால் உன்னிஷ்டப்படி சுகமாயிருக்கக் கடவையென்றுவிடைகொடுத்தனுப்பினன். உடனே அவனும் நமஸ்கரித்துச் சென்று, துஷ்டதுஷ்டாளான தாங்கள் நால்வருங்கூடி யோசிக்கத்தொடங்கினர்.

பாண்டவர்களை அவமானப்படுத்தவேண்டித் துரியோதனாதியர் ஆலோசித்தல்.

அஃதென்னவென்றால் - கேளும் சகுனிமாமா! ஓ கர்னமகாராஜனே ! தம்பீ துச்சாதனா ! இந்த விதுரனானவன் பாண்டவர்களிடத்திற் சென்றான் போலும். அவர்கள் இவன்காலிலுங் கையிலும் விழுந்து அழுது முறையிட்டதின் பேரில், அங்கிருந்து இங்குவந்து எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவது போலவும், அந்தமரத்திற் பேயுண்டென்று அருக்கல் செய்வது போலவும், நமதுஅரசனிடத்திற் பொய்யு மெய்யுமாகக் கலந்து புகட்டிவிட்டான். முன்னமே நொந்திருக்கும் எந்தையானவர் இந்த வசனங்களைக் கேட்டவுடனே' அதுவே திகிலாய் அவஸ்தையுற்றார். ஆகையால்-அவர் நமதுபிள்ளைகள்பலசாலிகளும் பாண்டவர்கள்பலயீனருமென்றுதெரிந்துகொள்ள, ஒன்றுசெய்யவேண்டுமென்று சிந்தைகொண்டேன். இதற்குத் தகுந்த யுக்தி பண்ணுவீர்களாகில் எனக்கு இந்த விசனம் நீங்கும். யானும் என்தந்தையுஞ் சேர்ந்து சேனைவேலைகளெல்லாம்முடித்துப்போடுவோம். என்று துரியோதனன் சொல்லக்கேட்ட கர்னன் சொல்லுகின்றான். கேளும் அரசனே ! தருமராஜனுடைய செல்வ முதலிய யாவும் நீர்பெற்று' இலட்சுமிகடாட்சத்தினாற்பெருமையுற் றிருக்கின்றீர். அவர்கள் காடேகெதியாய்முகம்வாடி, பழிதேடி, உருமாறி நிலங்கீறி, ஒடுங்கி யிருக்கின்றார்கள். நமது நகரத்திற்குச் சமீபத்திலும் வந்திருக்கின்றார்களாம். ஆகையால் நாளை குபேரசம்பத்தாகிய நீர் தம்பிமார் கூட்டத்துடன் அலங்கரித்துக்கொண்டு, நமது அந்தப்புர ஸ்திரீகள் யாவரும் அலங்கரித்துக் கொண்டு வரச்செய்து, அவர்களுக்குப் பணிப்பெண்களுங் கூடவே சேர்ந்துவரக் கட்டளையிட்டு, மன்மதனும் இரதியும் உங்கள் வடிவினையும் அலங்காரங்களையுங் கண்டு வருந்தும்படி கோடிசூரியப் பிரகாச உல்லாசங்களுடனே இரதகஜதுரக பதாதியர் யாருங் கொடி-குடை-குஞ்சம்-பிஞ்சமுதலிய சின்னங்களோடு பேரி-டங்கா-பூரி-மேளமுதலிய வாத்தியங்களு முழங்கிவரச் சென்று, பாண்டவரிருக்கும் வனத்திற்போ யிறங்கி, பலவித சித்திரான்னங்களும்-பலவிதபதார்த்தங்களும் - பலவித பலகாரங்களும் - பலவிதபாயசங்களும் - அமைத்துப்புசித்து' சந்தனம்-புஷ்பம் - பன்னீர் - புனுகு - சவ்வாது - முதலியவைகள் பூசி' பஞ்சவிடயத்தோடு பரிமளத் தாம்பூலவகைகள் கொண்டு, அளவற்ற அரம்பாஸ்திரீகள் நடுவில் தேவேந்திர போகம்போலும் - அநேக நட்சத்திரங்களின் நடுவில் ஒரு சந்திரன் பிரகாசிக்குந் தன்மைபோலும் - வெகுவாகிய பெண்சிங்கத்தின் மத்தியி லொரு ஆண்சிங்கம் உலாவுதல் போலும் - நீருங் குணவதிகளாகிய இராஜஸ்திரீகள் இத்தனைபேரும் யாமும் பவனி வருவோமாகில்' நம்மைக் கண்டவுடனே பாண்டவர்கள் உயிரைவிட் டிறந்துபோவார்கள்.

இதல்லாமலும்-திரௌபதி நல்ல வயதினை யுடைய பாலிய ஸ்திரீயாகையால்' உங்களுடைய ஸ்திரீகளையெல்லாம் பார்த்த வுடனே வயிறெரிந்து' பாண்டவர்கள் பேரிற்போய் விழுந்து' அடா பாவிகளே ! ஒவ்வொருவனுக் கிருக்கும் பெண்சாதிகள் உயர்ந்திருக்குஞ் சீருஞ் சிறப்பும் பார்த்தீர்களா? ஐந்து பேருக்கும் நானொருத்தி மனையாட்டியாக அமைந்தும்' நானிருக்கும் அலங்கோலங்களையுங் கண்டீர்களா ? உங்கள் பவிஷ் இவ்வளவுதானா? என்று கேட்பாள். அந்த வசனத்தினால் வரும் விசனத்தினாற் பாண்டு புத்திரனாகிய தருமராஜன் இறக்கவேண்டும். அல்லது அந்த வனத்தை விட்டுப் பறக்க வேண்டும்' இல்லாவிட்டாற் பாஞ்சாலி பாண்டவர்களைத் தூஷித்துவிட்டு உம்மிடத்தில் வந்து சரணம்புகுந்து, என்னையுங் காப்பாற்றுமென்று இரக்கவேண்டும். இந்த உபாயத்தால் எ

ந்த விதத்திலாவது பாண்டவர்கள் நமது கண்ணிலுஞ் சிந்தையிலும் இனிமேற் படார்கள். என்றுசொடையாளன் சொன்னவார்த்தையைக் கௌரவ முதல்வன்கேட்டு’ கர்னனைக்கட்டி அணைத்துக்கொண்டு’ ஆண்ணு! என்னென்னப்படிநன்னுய்ச்சொன்னீர். ஆ! ஆ! இது மகாநல்லயோசனை. சரிதான்: இப்படிசெய்வதற்கு நாம் அந்த வனத்திற்குப் போகவேண்டும். நமது இறையறிந்தால் அநுப்பமாட்டாரே: இதற்கெப்படி உபாயம்? என்று வினவும்போது சகுனிசொல்லுகின்றான். என்னருமை மருமகனே! நமது பசுக்கூட்டங்களை மேய்க்கும் ஆயனொருவனை அரசனிடத்தில் அனுப்பிவைத்து; காட்டிலிருக்கும் வேங்கைகள் கன்றுகளையும் பசுக்களையுங்கொன்று விடுகின்றன. இன்றுவரையிலும் இறந்து சென்றது இருபது. என்று புகன்றால் நாம் அவரருகில் நின்று’ வேட்டைபோக உத்தரம் பெற்றுக்கொள்ளுவோம். என்றுமாமன்கூறலும், சோமன் குலத்துதித்து நந்தியாவட்டத் தாமம்புனைந்தகோமான் குலுங்கநகைத்துக்கொண்டாடி’ ஓ சீமானே! இந்தமதியை எங்கேவைத்திருந்தீர்? என்று மகிழ்ந்தவனுய் உடனே தூதரையோட்டி ஆயருக்குத் தலைவனை அழைத்து வரச்செய்து’ அவனுக்குத் தக்கபடி போதனைசெய்து, திரிதராஷ்டிரனிடத்தில் நாளையுதயஞ் செல்லென்று உத்தரவுசெய்தான். அப்போது செங்கதிரோன் மேற்றிசையில் மறைந்துசென்று, இரவுகழிந்த பின்பு கீழ்த்திசையி லுதயமாயினன். அஃதெப்படி யிருந்ததென்றால்- பாண்டவரிடத்திற் சென்று துரியோதனனுடன் சிலபாவிகளுஞ்சேர்ந்து இந்த யோசனை செய்தார்களென்றுசொல்லிப்போய், சித்திரசேனனையுங்கண்டு படையுடன் வரச்சொல்லித்திட்டப்படுத்தி வைத்து’ தானும் மறுநாள் இந்தவேடிக்கையைப்பார்க்க வந்தவனைப்போ லிருந்தது.

துரியோதனுதியர் திருதராஷ்டிரனிடஞ் சென்று வேட்டைக்குப்போக உத்தரம் பெற்றுப் பிரயாணமாதல்.

அந்தவேளையில் அரவத்துவஜனெழுந்து நித்திய விதிகள்முடித்துக்கொண்டு’ மாமனும் அங்கர் பூமனுஞ் சூழ்ந்துவரத் தந்தையின் அரண்மனையிற் புகுந்து சென்று நமஸ்கரித்து ஆசிபெற்று நின்றான். அந்தவேளையிற் பசுக்காப்போன் வந்து ஆசாரமுகப்பிலிருந்து’ மிருகங்களினல் நேரிடும் உபத்திரங்களையும் பசுவின் நஷ்டத்தையுஞ் சொன்னன். அங்கிருக்கும் உயிர்ச்சேவகன்கேட்டு ஓடியிலோடி வந்து’ அரசனுடைய அடிமலரிணையை இறைஞ்சி வாய்புதைத்து நின்றுரைக்க’ அடிமலரிணையை இறைஞ்சி வாய் புதைத்து நின்றுரைக்க’ அம்மகாராஜன் கேட்டுச் சற்று நேரம்யோசித்து’ தன்னிடத்து வந்திருக்குங் கர்னனையுஞ் சகுனியையும் எச்சரித்து’ பாண்டவர்கள் அவிடம் வந்திருக்கின்றதாகக் கேள்வியுற்றேன். என் பிள்ளைகள் அவ்விடம்போனல் அவர்கள் இவர்களைப்பார்க்கும் போது வயிறெறிந்து. இவர்கள் மாத்திரம் இவ்வளவு சவுக்கியத்தை அநுபவிக்கிறதும் நான் வருத்தப்படுகிறதாவென்று’ துண்டகாரணகிய தண்டதரன்கண்டால் விடமாட்டான். ஆகையாற்சுயோதனன் முதலியபிள்ளைகள் தவிர மற்றயர்கள்போய் மிருகபயத்தை அகற்றி வாருங்களென்றான். அதைக்கேட்ட சகுனியானவன் சொல்லுகிறான். அத்தான்! என்ன நீங்களிப்படி உத்தரவு செய்கின்றீர்கள்? பாண்டவர்கள் எந்தவனத்தி லிருக்கின்றார்கள்? நாம் எந்த இடத்திற்குப்போகப் போகிறோம்? அவர்களிருக்குமிடத்திற் நமக்கென்ன காரியம்? கயிறுசுருட்டி விட்டதுபோற் போய் வரவேண்டியதேயன்றி வீணகிய காரியத்திற்குப் போகமாட்டார்கள் தங்கள் குழந்தைகள். மேலும்-(அரசில்லாப்படை வெல்லுமா? ஆளனில்லாப் பெண்ணுக்கு வாழ்வுண்டா?) என்று பெரியோர் சொல்லுவார்கள். அதுபோலஅரசருக்குரியது வேட்டையாடல்.நல்லது அப்படிசென்றாலும்’ பாண்டவர்கள் கண்டாலும்’ சபையிற்கூறிப்போன பதின்மூன்று வருடமுங் கழித்தல்லோ பேசவேண்டும்? இதினிடையிலொன்றுஞ் செய்யார்கள். அவர்கள் வெகுயோக்கியர்கள். சத்தியந்தப்பி நடக்கமாட்டார்கள். அதுபோகட்டும் நமக்கென்ன இவர்களிருக்கும் இடத்தில் வேலை? நாமேன் அங்குபோக வேண்டும்? என்றுசொல்லித் துரியோதனைப்பார்த்து’ அப்பா மருமகனே! இறைவர் சொல்லுவதுசிலருக்குக்குறைவாயிருந்தாலும்’ அதைத் தருமநீதியென்று ஒப்புக்கொள்ள வேண்டியதே? ஆனல்நமதுபசுக்கள் அவிடத்திலிருக்க வேண்டியதென்ன? அதுசரியன்று. இன்னும் அவைகளை அப்பாற்போகச்செய்து’ மிருகவேட்டையுமாடித் சீக்கிரம் வந்துவிடுங்களென்று சொன்னன். இப்படி சகுனியின் வார்த்தையைக்கேட்ட இராஜன் நீர் போகவில்லையோவென்றுகேட்க’ தம்பிகள்போகின்றார்களே நானென்னத்திற்கென்ன, அதுசரியல்ல’ நீருங் கூடப்போய்ப் பிள்ளைகளைச் சாக்கிரதையா யழைத்து வாருமென்று கட்டளை யிட்டான் திரிதராஷ்டிரன். அதைக்கேட்கவேயாவரும் நல்லதென்று வணங்கி, அப்பெரிய அரசனிடத்தில் உத்தரம் பெற்றுக்கொண்டு மகாசந்தோஷத்தோடுந் திரும்பினார்கள்.

இப்பால் யாவரும் இராஜசபையில் வந்து பறைசாத்துவோனை அழைத்து, வணக்கா முடியுடைய மகாராஜன் வேட்டைமார்க்கம் போகின்றார். யாவருஞ் சகல அலங்காரங்களுடன் புறப்படத் தக்கதென்று விளம்பவைத்தார்கள். கர்னன் சகுனி - துச்சாதனன் முதலிய தம்பிமார்கள் - இவர்கள்யாவரும்’ உயர்ந்த இரத்தினமுடிகளும் - கவசங்களும் - ஆயுதங்களுந் தரித்துக்கொண்டு’ சகலவித அலங்காரங்களுடனே புறப்பட்டார்கள். துரியோதன மகாராஜன் கேயூரம் - ம

ளிமகுடம் - குண்டலம் - மதாணி - வாகுவலயம் - வச்சிராங்கி - தம்பிப்பதக்கம் - மோகனமாலை - முத்துச்சரம் - இரத்தினக்கோவை - புத்துவிரல்களுக்கு மாதிரமயங்கு மோதிரங்கள் - பட்டை அரைஞாண் - விரகண்டை - அரைப்பட்டிகை - திவ்யாஸ்திரங்கள் - செந்தூரத்திலகம் - இவை முதலானவைகளோடு, சந்தனமுதலிய பரிமளவர்க்கங்களும் - நந்தியாவட்டமுதலிய கொந்தலர்மாலைகளும்-விந்தைவிந்தையாக அணிந்தெழுந்தான். இத்துரியோதனாதிகள் நூறுபேருடைய பத்தினிமார்களும், முத்துப்பணி - இரத்தினப்பணி - கொத்து சித்ரப்பணி - இவைமுதலியவைகள் குலுங்கப் பாதாதி கேசபரியந்தம் அணிந்து, அநேகம்பேர் பாங்கியருஞ்சூழ, பணிப்பெண்களதாழ, பாதலஸ்திரீகளுங் காதலுற்றேங்க, பல்லக்குகள் - இரதங்கள் - குதிரைகள் - பெண்யானைகள் - விமானங்கள் - இவைகளிலேறிப் புறப்பட்டார்கள். மறுதேசத்து அரசர்களும் வாகனாதிகளுடன் வந்தார்கள். அப்பால் விண்ணவர்களெல்லாங் கண்களிகூற, பெண்ணினங்களுடன் எண்ணங்கள் நிறைவேற, அண்ணலும் இரதத்திலேறி, பேரி - பாங்கா - முரசு - காகளம் - கொம்பு - காளு - பூரி - மத்தளம் - தாளம் - மேளம் - இவைமுதலான வாத்தியங்கள் முழங்க, குடை- கொடி - குஞ்சம்-பிஞ்சம்-மகரதோரணம்-கருடடால்- அனுமடால் - சிங்கடால் - வேங்கைடால் - வீரடால்- ஆலவட்டம் - தாலவட்டம் - இவைமுதலிய விருதுகள்விளங்க, அரவக்கொடி அண்டமளாவப் பிடிக்க, அகண்ட துந்துமி அசனியேறென இடிக்க, சமுத்திரம் புரண்டு தரணியில் திரண்டு வருவனபோல் வெளிவந்து, கட்டியர் - பட்டுவான்கள் - வந்தியர் - புகழ்வோர் - இவர்கள் யாவரும் பாடிக்கொண்டாட, சிலமங்கையர்நீராஞ்சனமெடுக்க, பலநங்கையர் பூரண கலசதீபம் பிடிக்க, சிலஅரிவையர் நிறைகுடமேந்திவர, பலதெரிவையர் சாமரைஇரட்டிவர, சிலவஞ்சியர் கயலிணைநீட்ட, பலகொஞ்சியர் கண்ணாடிகாட்ட, இவ்விதமான அஷ்டமங்கலவரிசைகள் நாற்புறங்களினும் புடைசூழ்ந்து வரும்படியாகிய போகயோக சம்பிரமத் துடனும் - நடனசங்கீத கோலாகலத்துடனும் - புறப்பட்டுக் காட்டுக்குவந்து, அன்று போதுபோமளவும் வேட்டையாடி மிருகங்களைக் கொன்று தின்று, கூடவந்த ஆயர்கட்கெல்லாம் வெகுமதி கொடுத்தனுப்பி, அன்றிராத்திரி அவிடத்திலிருந்து, மறுநாட்காலமே யாவரோடும் நித்தியவிரத முடித்துக்கொண்டு, பாண்டுபூபதி பரிந்துபெற்றெடுத்த - மன்னவரைவரும் மறையவருடனே - வணங்கியிருந்து மகத்தைப் புரிந்து - மகிழ்வுற்றிருக்கும் வனத்திற்குவந்து, மாதருந்தாமும் வரிசை வரிசையாய் - மானினம் போலும் மயிலினம் போலும் - வளைந்து வளைந்து வனமெலாந்திரியா நின்றனர். இவர்களையெல்லாம் பாண்டுபுத்திரர் பார்த்தும் பாராதிருந்தனர்.

துரியோதனன் அங்குஜலக்கிரீடைக்குவந்த கந்தருவராஜன் படைகளோடு தன்தமபியர்முதலியோரைவிடுத்துவம்புபோர்விளைத்தல்.

அந்தவேளையில் வந்த யாவரும் வியர்த்து வெதும்பி வெய்யலால் வதங்கினவர்களாய், தாப்பிலிருந்த தோப்பினைக்கண்டு, தண்ணீர்த் தடாகமுஞ் சந்தனச் சோலையும் நிறைந்து இளைப்பினைத் தீர்க்கும்படியான வளப்பமிருந்த இவ்வனத்தி லிறங்குவோ மென்றெண்ணி நடந்து, அரசர் - அமைச்சர்-அன்பினோர் ஸ்திரீகள் - ஆகிய இவர்கள் தங்குதற்கும்' இரதகஜதுரகபதாதிக ளிருப்பதற்கும், தகுந்த யிடம்பார்த்துக் கூடாரம் போடுங்களென்று தூதரை அனுப்ப; அந்தப்படியே சாரணர் விரைவாகப்போய்ப் பார்க்கும்போது, கோபக்கண்களும் - குந்தாயுதங்களும் - கூரியவேல்களும் - கொடிய சூலங்களுங் கொண்டு, கூட்டமாகக் காவலிருக்குங் கந்திருவச் சேனைகளைக்கண்டு, திரும்பி யோடிவந்து, ஐயா ! அந்தவனத்திற் கந்திருவராஜன் ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்கின்றுராம். ஒருவரும் வரக்கூடாதென்று காவலாளிகள் நிறைந் திருக்கின்றார்கள். என்றுசொல்லவே துரியோதனன் கோபங்கொண்டு' யாரான போதிலும் ஒட்டிவிட்டு இடத்தைக் கைவசப்படுத்துங்க ளென்று சில வீரர்களையுஞ் சாரணர்களையும் அனுப்பினான். அவர்களோடிவந்து, ஆரப்பாகாவலாளிகள்? சீக்கிரம் ஓடிப்போங்கள். ஜகத்ரக்ஷகனாகிய, வணங்காமுடியுடையோன் ராசஸ்திரீகளுடன் வந்திருக்கின்றார். அவர் இவ்விடத்தில் இன்றுபொருந்தி யிருப்பாராகையால், நீங்களெல்லோரும் அப்பாற்போக வேண்டியது. தாமிசஞ்செய்யாதீர்கள். தலைபோய்விடும். விரைவில் நீங்கிவிடுங்கள். என்று ஓங்கிச்சொன்ன வார்த்தையை அவர்கள் கேட்டு, போங்களடா தூங்கிவிழுகின்ற சாம்பற்பயல்களே! உங்களுக்கும் உங்களிறைவனுக்குஞ் சாங்காலஞ் சம்பவித்ததோ? ஏன்காணும் வழியிலிருக்குங் கோடாலியை வலுவிலெடுத்துக் காலிலிட்டுக்கொள்ளுகிறீர்கள்? ஏதுகாரணத்திற்காகத் தான்சாக மருந்துதேடுந் தன்மைபோல் தேடிக்கொள்ளுகின்றீர்கள்? ஓடிப்பிழையுங்கள்.என்று காந்திருவர் சொல்ல உடனேபோய் துரியோதன. ராஜனிடத்திற் சொன்னார்கள். அதைக்கேட்டு அவனுக்குக்கோபம்பிறந்து, பக்கத்தி லிருந்த படைவீரரை நோக்கி, தடுத்துச் சொல்வோர்களை நீக்கி, க்ஷணத்தில் யாவரும்போய் அக்கந்திருவச்சேனைகளை மடக்கியடித்துத் துரத்துங்களென்று ஆக்யாபித்தான். உடனே அவர்கள் உகாந்தமாருதத்தைப்போ லோடி, கந்திருவச்சேனைகளைநோக்கி; உங்களுயிர்க ளொழியுமுன்னகை வோடிப்பிழையுங்களென் றுஉறத்துச்சொல்லவும்' அவர்கள்

வர்களைப்பார்த்து, இது மானிடருக்குத்தகுந்தவனமல்ல. தேவரும் - யக்ஷ காந்திருவரும் - கடவுளர் மூவரும் - முனிவர்முதலிய மூதறிவோரும் - சத்தியவான்களுந் தனித்திருந்து சஞ்சரிக்குமிடம். இந்தயிடத்தில் எங்கள்இறையாகிய சித்திரசேனன் சிலஸ்திரிகளுடன் சேர்ந்து விளையாடிக்கொண் டிருக்கின்றார். நீங்கள்தெரியாமல் தூரிதப் படுகின்றீர்கள். யமதருமராஜன் உங்களை இவிடத்திற் கனுப்பினான் போலுமிருக்கின்றது. ஐயோ! நீங்கள் விரைவிற்போய் உங்களுடைய அறிவில்லா அரசனுக்குச் சொல்லுங்களென்றகற்றி விட்டார்கள்.

உடனேயெல்லாச்சேனைகளும் ஓடிவந்து அவர்களுரைத்த படியே தெரிவிக்க, அதைக்கேட்ட துரியோதனன் ஓங்காரங்கொண்டு, துசுவாசனன் தவிர மற்றத் தொண்ணூற்றெட்டு தம்பிமாரையும் இரதகஜதுரகபதாதிகளோடு சேர்த்து, அவ்விடத்தி லிடும்பு சொல்லியபேர்களெத்தனையோ? அத்தனைபேரையுஞ் சாய்த்துவரக் கடவதென்று அனுப்பினான். அப்படியேயவர்கள்சென்று, அவ்வவர்களும் அதிகபராக்கிரமத்தோடு விற்பிடித்து, பற்பல வார்த்தைகளைப் படித்து, அவ்விடத்திக் காவலிருந்த யாவரையு மடித்துப் போர்புரியும்போது, சிலரோடி சித்திரசேனனுடைய சேனாபதிகளிடத்திற் றெரிவித்தார்கள். அவர்கள் பெருங்கும்பு கூடிவந்து நாலுமுகத்திலும் வளைத்துக்கொண்டு, (கொட்டினால் தேள்-இல்லாவிட்டால் மண்தூள்.) என்னுந் தன்மையைக்கொண்ட அறிவிலாதவர்களே! என்று வில்லைவளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி செய்து' ஒருமுகப்பகழி - இருமுகப்பகழி - மும்முகப்பகழி - நான்முகப் பகழி - ஐமுகப்பகழி - இப்படியாகக் கணக்கிறந்த கணைகளைத் தொடுத்தார்கள். அப்போது இவர்களும் இளைக்காமல் - சளைக்காமல் - களைக்காமல் - ஒருமுகத்திற் காயிரமாயிரம் பாணமாகப் பலபல அஸ்திர சஸ்திரங்களை விடுத்துப் போர்புரியும்போது, கடுகடுத்துவந்த கந்திருவச் சேனைகளோங்கி, காலாள்களையும் - மேலாள்களையும் - வில்லாள்களையும் - மல்லாள்களையும் - சின்னபின்ன மாகும்படி சிதைத்து, தேருருள்களை யெல்லா மழித்து, தனுசைமுறித்து, சாரதிதலைகளையு மறுத்துப் பதை பதைக்க வதைத்தார்கள், அக்காலையிற் சேனைகளும் வீரர்களுந் தியங்கிமயங்கித் திகில்கொண்டுவாடியும்' அச்சேனை வீரர்களோடு வந்த தம்பிமார்களுந் தங்களுடைய சவுரியங்களெல்லா மடங்கித் தேகமுழுமையுஞ்செந்நீர்புரண்டோடியும், தேர்கள்முதலிய வாகனங்களெல்லாந்துகளாகிப்பறக்க நாடியும், அண்ணன் கண்ணெதிர்வந்துநின்றுகலங்கினார்கள். இதைக்கண்ட கௌரவமுதல்வன் நெருப்புப்பொறிபறக்கும்படி கரங்களைஎற்றி'நெட்டுயிர்ப்புடன் நெடுங்கோபத்தைச்செலுத்தி, நெடநெடவெனப்பல்லைக்கடித்து வில்லைப் பிடித்துவளைத்து, கடகடவெனத் தேரோடவும்-கிடுகிடுவெனப் பூமிகுலுங்கவும் - மடமடவென மரங்கள் முறியவுமாக, படபடவென வருவதானான்.

சகுனியுங் கர்னனுங் கந்தருவராஜனாற் கலங்கித் துரியோதனனைத் தனியே விட்டோடிப்போதல்.

அதைநோக்கிப் பக்கத்திருந்த அங்கர்கோமானும் - சகுனியும் - துர்ச்சாதனும் - பட்டவர்த்தனரும் - மன்னர் மண்டலீகரும் - படைவீரர் பலருநெருங்கிச் சுயோதனமகாராஜனைப் பார்த்து' நாங்களெல்லா மிருக்கத் தேவரீர் இந்த அல்பகாரியத்திற்குப் பிரவேசிக்க வேண்டுமோ? என்று ஆக்ரமித்து, அரசனைப்பின்னேக்கித் தாங்கள் முன்னேக்கிச் சென்று, பாரியவில்லை நிறுத்தி வணங்கி, பாதலத்துரகருமீதலத்தமரரும் பயந்துநடுங்கப் பலவான் திவ்வியப்படைகளையேவி, பார்நிறைந்து வளைந்த காந்திருவச்சேனைகளையுஞ் சேனாதிபதிகளையுங் கண்கலங்கச்செய்து, புண்களாகக்கொய்து, கரங்கள் - சிரங்கள் - உரங்கள் - வரங்கள் - முதலியயாவுந் தவறக் கடிய கொடியவிஷங்கொண்ட அம்புகளை யெங்கெங்குங் கிண்டச்சொரிந்து, கைவில்லும்போய்வாய்ச்சொல்லும்போய்க்கந்திருவர் யாவரும் நொந்து வருந்தக் கண்டகண்ட துண்டமாகக் கலக்கிவிட்டார்கள். அவர்களை விலக்கிவிட்டார்கள். அதனாற்கண்கெட்டோர் சிலர். புண்பட்டோர் சிலர். மண்கண்டோர்சிலர். விண்கொண்டோர் சிலர். என்றுசொல்லும்படியானவர்களாயினார்கள் அப்போது காடுகளெல்லாம்இரத்தவெள்ளமாகஓடவும், கண்டயிடங்களெல்லாந்தலைபோன முண்டங்கணின்றுடவுமாயின. உடனேகாய்ந்தகணைகளினால் மாய்ந்தவர்போக, மீந்தவர்களோடிக்கந்திருவராஜனிடத்திற் கலங்கித்தொழுதுஅழுதார்கள். அவர்களைக்காணவே சலக்கிரீடை சம்பிரமங்களைவிட்டு, தனது ஸ்திரீசெனங்களையெல்லாம் இரதத்திலேற்றிவைக்கும்படி சாரதிகளுக்கு உத்தரவுசெய்து, சிலகாவலாளிகளையும் அவ்விடத்தில் நிறுத்திவைத்துவிட்டு, தான் அலங்காரஞ் செய்துகொண்டு சயுந்தனமேறி, பதினாயிரம் பட்டவர்த்தனருஞ் சேனாநாயகருஞ் சூழ்ந்து இரதஞ்செலுத்திவரும்படியாகச் செய்து, இடிபேரி முதலியவை முழங்க வெளிப்பட்டு வனத்தில்வந்து ஆர்த்து, சேனைகளிறந்தும் - சேனாநாயகர் பறந்தும் - மண்டைகள் தொண்டைகள் திறந்துங் கிடப்பதைக் கண்ணிற்கண்டு எண்ணங்கொண்டு, தனுவேதியென்னும் வில்லைவளைத்துச் சரமாரியாகப் பொழிந்து, சாரணர் முதலிய காரணர்களுமழிந்து சீர்கெட்டு-அவர்களேறிவந்ததேர்கெட்டு - அவ்வவர்களுடைய பேர்கெட்டுப் போகும்படியாய்க் கரணையாடிக் கண்டித்துத் துண்டித்துத்துளைத்து, நான்குமுகத்திலும் வளைத்து, இடியும் பெருமழையுமெனத் துணிந்து வதைப்பதாயினன்.

மேலும் - குரண்டக் கூட்டத்தில் விழும் இராஜாளிபோலும், குஞ்சரப் பெருக்கத்திற் பாய்ந்த பஞ்சானனம்போலும் பறக்கவடித்தான் கந்திருவராஜன். அதைக்கண்டு துரியோதனன் தம்பிமார்களுஞ் சகுனியும்வந்து கூடி, அளவிலாதகணைகளைச் சாடி, மண்ணும் விண்ணும் ஒன்றாகும்படி மாட்டி, பம்பரம்போலாட்டி, கந்திருவ சேனைகளைக் கலைத்து அலைக்குங்காலையில்: இவர்கள் விட்டகணைகள் அந்தரமுதலாக நிறைந்து நிற்பதைச் சித்திரசேனன் கண்டு, அக்கணைகளழியும்படியாக வாய்வஸ்திரமெடுத்து வாரிவாரி யிரைத்து, வச்சிராயுதமுந் தொடுத்தான். சகுனி அவ்வச்சிராயுதத்தைத் தன்னாற் கூடியவரையினுந்தடுத்து, அப்பாற் சத்துவமின்றித் தேகமுழுமையுநொந்து மனம்வெந்து, தேருங் குதிரையு மழிந்து திரும்பினான். அந்தவேளையில் துச்சாதனன் முதலிய தம்பிகளுந் தங்கள் தேரில் அச்சாணி சக்கர முதலியவைகளழிந்து, வாயுலர்ந்து மதிமயங்கி வாடியகாலையில்; அதை நாடிய கர்னனானவன் ஓடிவந்துஅவர்களுக்கெதிரேசென்று, காந்தருவ ராஜன்மீது கணைகளும் பகழிகளுங் காலாக்னி சொரூபமாகப்பொழிந்து கண்சிவந்து, காந்தருவப் படைகளை யெல்லாங் கலக்கிக் கால்மாடுதலைமாடாகவிழ மாட்டினான். அக்காலையிற் கந்திருவர்கோன் கனன்று கர்னனைவளைத்துத் தனது வில்வளைக்க, இவனும் வில்வளைக்க, ஒருவரை யொருவர்பார்த்து முகம்வியர்த்துமீசைகள் துடித்து, வீரபாஷைகள்படித்து, இருவரும் வெகுளி மேற்கொண்டு, இடசாரி வலசாரியாய் இரதத்தை சுழலச்செய்து’ இந்திரக்கணை - மோகனக்கணை - இயமன்கணை-வருணக்கணை - வாயுக்கணை - தேயுக்கணை - மலரம்புகள் - மலையம்புகள் - மாயாஸ்திரம் - தீயாஸ்திரம் - இவை முதலிய யாவும் இருவரு மாறிமாறி விடுத்து’ சீறிசீறியடித்து, வானத்தவர்முதல் தானத்தவர்களும் வதங்கி-வெதும்பி - மயங்கி - தியங்கி-வாடவும்’ பேய்கள்நின்றாடவும், குறைத்தலை முண்டளோடவும்’ சேனைகள் வீடவும்’ பூமி மூடவும், கோபநீடவுமாக மன்னி இருவருந்துன்னி’ கர்னன் பிரமன் கணையைப் பூசித்துந்தவும், பரமன்கணையாற் பாழ்படுத்தினான் சித்திரசேனன். மறுபடியுங் கர்னன் ஆலகால விஷச்சுவாலையையுடைய நாகாஸ்திரம் விடுத்தான். அதைச் சித்திரசேனன் கருடாஸ்திரத்தினாற் பூமியிற்படுத்தான். அம்புளாயிரக்கோடி கர்னன் தொடுத்தான். அவைகளை வாயுக்கணையாற் கந்திருவன் அழித்தான். கர்னன் சூலப்படை யொன்று தொடுத்தான். கந்திருவன் அது நான்குபிளப்புற ஆழிவிடுத்தான். மருந்துக் கணையினால் மாட்டினான் கர்னன். அதைப் பருந்துக்கணையினாற் பாறச்செய்தான் கந்திருவன்.

இப்பால் கர்னன் இடியாஸ்திர மெடுத்து ஏவி, சித்திரசேனனுடைய தேரை பொடியாக வாக்கினான். உடனே கந்திருவன் வேறொரு தேரில் வீற்றிருந்து வெகுளிகொண்டு அம்புமாரிபொழிய,’ கர்னனானவன் அவைகள் யாவுமழியக் கமலாஸ்திரம் விடுத்து’ அக்கந்திருவன் கைப்பற்றியவில்லையும் நாணியையும் அறுத்தான். பின்பு சித்திரசேனன் வேறே வில்லெடுத்துக்கொண்டு நாரிபூட்டி வீரகேசரிபோல் வெளியில்வந்து’ அக்கினிக்கணைகளை அனேகமாகத்தொடுத்து’ அங்கர்கோன் கொடியையும் - அயமுடன் தேரையும் - அவனணிந் திருக்குங் கவசத்தையும் அழித்தான். உடனே கர்னன் வேறுதேரேறிவந்து சண்டப் பிரசண்ட வுத்தண்ட தூர்த்தண்ட மூர்த்தண்ட முடன் வாயுவாஸ்திரத்தை மந்திரித்து விட்டான். அந்த அஸ்திரஞ் சித்திரசேனனுடைய நெற்றியிற் கட்டிய வீரபட்டத்தை யறுத்தது. அதைக்கண்டு கச்சையங் கொடியோன் கலகலவென்று நகைத்தான். அதனால் மிகுந்த லச்சையுடையவனாய்க் காந்திருவன் கண்கள்சுழன்று மனமழன்று’ காலாக்கினி உருத்திராஸ்திரத்தைக் கருத்திற் றுதித்துக் கர்னன் பேரில் விடவும்’ அது அவனேறி யிருந்த இரதத்தின் அச்சு - மச்சு - குத்துக்கால் - கொடுங்கை - சிகரம் - ஆப்பாணி - சுள்ளாணி - கடையாணி அஞ்சூராணி - சக்கரம்-மேல்தட்டு - நாயகத்தட்டு - இவையாவும் நொடிப்போதி லிடித்துத் தள்ளி, அவனையும் பிடித்துத் தள்ளியதைப்போ லோங்கியடித்தது. அதனாற் கர்னன் மிகுந்த வருத்தமுற்றுப் பூமியிற் குதித்து’ தேகமுழுமையுந் துளையாய்க் களையாய்த் திரும்பிப் பார்த்தான்: அந்தவேளையிற் சித்திரசேனன் சோனைப்பேய்ச் சலைப்போல் தேவதாஸ்திரங்களைச் சொரிய’ அப்போது கர்னன் கரமுஞ்சிரமும் ஆடாமற்கலங்கிநிற்க’ அவ்வேளையில் விகர்னனானவனோடிவந்து தன்தேரை அந்தக் கர்னனுக்குதவி’ தான் வேறேதேரை நாடிப் போனான். அக்காற் கலைந்துபோன கந்திருவச்சேனைகளெல்லா மறுபடியும்வந்துகூடிக்கொண்டு’ காட்டை வளைந்து வேட்டை யாடுபவர்களைப் போலக் கர்னனையும் அவனோடுவந்த சேனைவீரர்களையுங் கரிகரியாயெரிக்கவும், சித்திரசேனனுங் கரவேக சரவேக உரவேகத்துடன் புரமூன் றெரித்தவன்போல் நகைத்து, ஆக்கர்னன்பேரிற் சந்தோஷங்கொண்டு’ நல்ல கைக்கார னிவனென்று கருத்திலுவந்து; கோடையிடியையொத்த கூரம்புகளை மெத்தக்கூட்டி விடுத்தான். அந்தவருத்தஞ் சகிக்கமாட்டாமல் தேரையோட்டிக்கொண்டு திரும்பினான் கர்னன். சித்திரசேனன் பத்தம்பேவி அவன்தேரைச் செலுத்துஞ் சாரதிதலையைத் தள்ளினான். உடனேகவசகுண்டலன் குதிரையின்கயிற்றைப் பிடித்துக் கடுகியடித்துத் தேரைமுடிக்கி யோடுங்காலையில்’ கற்றோரை யிகழுங் கல்லாக் கயவருக்குற்ற கடுந் தீவினையைப்போல் வழியிற் கடுஞ்சேற்றுப் பள்ளமொன்று நேரிட்டு’ அதில் தனது மனமுதலிய அந்தக்கரணங்களெல்லாந் தத்திக்கெட்டுத் தடுமாறிநிற்கு நிலைமையினால்தேருங் குதிரைகளுந்தானுமாக விழ்ந்து அமிழ்ந்தனன்.

சித்திரசேனன் துரியோதனாதியரையும் ஸ்திரீகளையும் தாமணிப்பிணையலாய்க் கட்டிக்கொண்டுபோக தப்பிய சிலரோடிவந்து தருமராஜனிடத்தில் முறையிடல்.

அந்தவேளையிற் காந்திருவராஜன் மீந்த சேனைகளைக் கொண்டு, துரியோதனாதிகள் முதலிய நான்குவகைச் சேனைகளையு மாய்த்துவரும்போது' எவர்களும் அவன் எதிரி னில்லாமல் ஒதுங்குகின்றவர்களும் பதுங்குகின்றவர்களுமாக இருக்கப்பார்த்து' கௌரவமுதல்வ னண்டையிற்சென்று கடுங்கணை தூண்டி, கார்பொழிவதுபோல்கன உதிரம்பொழியக் கரஞ்சிர முதலிய உடலெல்லாந் துளைத்து' இரதகஜ துரக சேனைகளையும் வளைத்து' கழுகுக்கும் - புழுவுக்கும் - காட்டுநாய்க்கும் - கூட்டப்பேய்க்கு மிரையாக்குங்காலையில்' வணங்காமுடியோன் வாய்பேசாம லுணங்கி நிற்க' அவனைப்பிடித்து மடனுடனிறுக்கி வரிந்துகட்டி, அவன் மாதர்களையும் அம்மாதர் பாங்கிமார்களையும் அவரவர்கள் வஸ்திரங்களினாலேயே வரிந்து வரிந்து வரிசையாய்ப்பிணைத்து' தம்பிமார்களையுமற்றச் சகுனிமுதலோரையுங் கொடிச்சீரையினாலுங்குதிரைக் கயிற்றாலுங் குழுவாகப்பிணித்து' தாமணிப்பிணையல் போற் சகலரையு மொருகூட்டா யிழுத்துக்கொண்டு' சங்கம் - பேரி - தாரை - பூரி - சின்னம் - கொம்பு - செயகாளம் - இவைமுதலிய வாத்தியங்களுங் கொடிகுடை முதலிய சின்னங்களு முழங்கி விளங்கும் படியாய்த் தேரைச்செலுத்தி, தனதுசேனைகளுங் காந்திருவஸ்திரிகளுங் களித்து மகிழ, நாட்டியப்பெண்களு நடனம்புரிய, பாட்டுவான்களும்புகழ்வோருங்கட்டியங்கூற' நந்தியாவட்டத் தாமனும் - துசுவாசனன் முதலிய தம்பிமார்களும்-மாமாசகுனியும் - மற்ற ஸ்திரீஜனங்களும் - ஓவென்றழுது அலற, ஒரே வோட்டமாக உத்திரதிசையை நாடிச்சென்றான் சித்திரசேனன். அந்தவேளையில் ஓடி. ஒதுங்கி அக்கட்டுச்குத் தப்பிக்கொண்டகாலாள்களுஞ் சிற்சிலமந்திரி தந்திரிகளும் மற்ற மன்னவரும் அச்சித்திர சேனனுடைய கண்ணுக்ககப்படாமல் மறைந்துவந்து, புத்திநிறைந்து-வெற்றிமிகுந்து - யுக்திசெறிந்து - சத்தியநிறைந்த குந்திதேவி புத்திரரிருக்கும் வனத்திற்குறுகி' தருமபுத்திரரை நோக்கி, முறையோ! முறையோ! என்றுஅழுதுதொழுது நொந்து, வெந்து நைந்து நின்றார்கள். அப்படிநின்றவர்களை உதிஷ்டிரர்பார்த்து, அவர்களுடைய ஆகமுழுவதுந் துளைபட்டிருக்கும் அலங்கோலத்தையும் அவர்கள்ஆவிகுன்றி அலைந்தோடிவந்த துன்பத்தையும்அறிந்துகொண்டகுவளைத்தாரோன் ஆகப்பதறி, அப்பா! நீங்களிங்கு என்னகாரியமாய் வந்தீர்களென்று வினவினர். அதற்கவர்கள் - ஐயா! (தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்.) என்னுந் தன்மையாய்' சகுனி - கர்னன் - இவர்கள்பேச்சைக்கேட்டுச் சந்திரகுலத்தோன்றல் தங்களை அவமானப்படுத்த வேண்டுமென்று வந்து' சித்திரசேனனுடனெதிர்த்துத் தாங்களே சிறுமையுற்றார்கள். தாங்களுந் தங்கள் ஸ்திரிகள் முதலியபேருந் தாமணிப் பிணையலாக அவன் கையிற் சிக்கிக்கொண்டார்கள். கொண்டு போய்விட்டான். யமனுக்குச் சிலரையொப்பிவைத்து விட்டனன். குளத்தைக்கலக்கிப் பருந்துக் கிரையிடுபவர்போ லிட்டுத் தானும் புறமுதுகிட்டுப் போய்விட்டான்கர்னன். சொல்வோர்சொன்னாலுங் கேட்போர்க்குமதிவேண்டுமென்பது பொய்யோ? ஐயோ! இந்நேரம் எந்தமலையில் - எந்தக்குகையில் - அவர்களைக் கொண்டுபோய்ச் சிறைசெய்தானோஅறியோம். ஓசருமபூபதி! உங்களை அவர்கள்செய்த அனியாயங்களைஇந்தவேளையி லுன்னலாகாது. நல்லோர்களுக்குப் பொறுமையே துணையென்று நாடெல்லாங் கொண்டாடுகின்றார்கள். சீரியர் கோபம் க்ஷணத்திற்றீரும். பூரியர்கோபம் அவர்கள் பிராணனுக்கானி. (கெடுவான்கேடுநினைப்பான்.) என்னும் பழமொழிக்குச் சரியாய்வந்துகெட்டான் துரியோதன மகாராஜன். இந்தவேளை அவர்களுடைய இஷ்டதெய்வம்போ லிரங்கி இரக்ஷித்தருளவேண்டும். சந்திர சூரிய ருள்ளநாள்வரைக்கும் உங்கள்செல்வமும் இந்தவுதவியும் நீடித்துநிற்குமென்று முறையிட்டார்கள்.

தருமராசன் துரியோதனாதியரை மீட்கும்படி வீமனுக்குரைக்க, அவன் தடுக்க, தான் சமாதானங் கூறியனுப்புதல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வாறு முறையிட்டுக் கூறியவனைத்துங் கேட்ட தருமநந்தனர் அவர்கள் முகத்தைநோக்கிக் கரமமைத்துக் கருணைசுரந்து, கண்களில் நீர்ததும்பக் கவலையுற்று' தன் சமீபத்திருந்த தம்பியாகிய வீமசேனனை நோக்கி, தம்பி! அந்தணர் - விருத்தர் - வியாதிக்காரர் - வித்துவான்கள் - ஸ்திரீகள் - தரித்திரர் - பாலியர்-படையிலிளைத்தோர் - அடைக்கலம் புகுந்தோர் - இவர்களையெல்லாம் உடனே காக்கும்படி தரும சாத்திரத்தில் விதித் திருக்கின்றது. ஆகையால் - நமது தம்பிமார்களைநீபோய்மீட்டுவரக்கடவை. என்றுசொல்லவும் அதுகேட்டவீமன்பூமியையுதைத்துக்கிளம்பிக்கடுங்கோபங்கொண்டு' அண்ணா! அடாது செய்தாற் படாது படுவரென்பது அசத்தியமல்லவே. மேலும்-ஒருதுஷ்டன் சுவாமிபத்தியைச் செலுத்திய ஒருவனை இடக்குச்செய்தான். அவனந்தவேளையில் இந்தத் துஷ்டனோடு பேசினாற் சுவாமியைத்தொழுங் காரியங் கெடுமென்று இரண்டு பொன்கொடுத் தனுப்பி விட்டான். பார்த்தான் துஷ்டன். இதுநல்ல உத்தியோகம். இப்படி வெகுபேரை நாம் துன்பஞ்செய்தால், ஆளொன்

னுக்கு இரண்டுபொன் தருவார்கள். இது நல்லசிவனம். என்று நினைத்து இன்னொருவனை அப்படியே இடச்சுச்செய்தான். அவனோ? அத்துஷ்டனை உடனேமண்டைகிழிய அடித்தான். துஷ்டனிறந்தான். ஆகையால்-அவன்நம்மைச் செய்த வஞ்சனைமுதலிய பொல்லாங்குகளை யெல்லாம் நான் கையிலாகாதவ னென்படியாற் சகித்து, யெனக்குச் சரியானவர்களும் - என்னிலுந் தாழ்ந்தவர்களும் - நகைக்க உடம்படுத் திருக்கின்றேன். இது என்றலைவிதி. அந்தக் காந்திருவராஜனு மப்படி யிருக்கத்தகுமோ? அவனுக் கென்னகாரியம்? அவன் காந்திருவராஜன் இவன்பூமிக்கிறைவன். இவன் அவனுடன் வம்புசெய்யப் போனல் விடுவானோ? போகட்டும்: நீர்தா னென்றுஞ் செய்யக்கூடா தென்றாலும், தெய்வம்பார்த்துச் செய்யும்வேலையைத் தடுப்பானேன்? நல்லது: அடைக்கலம் வந்தவர் முதலிய பேர்களைக் காப்பாற்ற வேதஞ்சொல்லிய தென்றீர். அந்தவேத மிவனுக்கு மாத்திரஞ் சொல்லியதோ? மற்ற யாவர்களுக்கும் உண்டோ? அண்ணாவே! பாம்புகளைக் கடிக்கவிட்டும், அன்னத்தில் விஷங்கலந்தூட்டியும், தண்ணீரிற் கட்டிப்போட்டும், அரக்கு வீடுகட்டி யதிலமைத்து நெருப்பை மூட்டியும், மோசச்சூதாடி நாடுநகரங்களை யெல்லாம் பறித்துக்கொண்டும், சபையிற் குலஸ்திரீயை மயிர்பிடித்துவந்து நிருத்தி வஸ்திரபங்கஞ் செய்தும், இழிவாகிய வார்த்தைகளைப்பேசியும், இப்படியாகிய அக்கிரமங்களைச் செய்யச்சொல்லி யெந்தவேதத்தி லிருக்கின்றது? என்று சொல்லிய வசனத்தைக் கேட்ட உதிஷ்டிரர் கலகலென்று நகைத்து, தம்பிவீமா! சபையினிடத்திற் சில அனியாயங்களைத் துரியோதனன் செய்தபோது நீ கோபங்கொண்டு, உங்கள் நூறுபேரையுங் கதையினுலடித்துக்கொன்று துச்சாதனனுடைய உதிரங்களை வாரிக்குடித்துத் தாகந்தீருகிற பரியந்தமுந் தண்ணீரள்ளிக் குடிக்கேனென்று சபதங்கூறி, நாளது வரையிலுங் கதையினு லெற்றித் திவலைகளைக் குடித்து வருகின்றாயே: அப்பா! இப்போது அந்தச் சித்திரசேனன் இவர்களையெல்லாஞ் சேர்த்துக்கொண்டுபோய் வெட்டி யெறிந்துவிட்டால், உன் சபதமெங்கே? என்தம்பியென்னும் பெயரெங்கே? ஆகையாலவர்களை மீட்டுவைத்தாயாகில் நாளைக்கு யுன்வாக்கியம் பொய்போகாமல் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஒறுத்தாரை யொன்றாக வையாரேவைப்பர், பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. என்றும், ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ். என்றும், திறனல்ல தற்பிறர் செய்யினுநோநொந், தறனல்ல செய்யாமை நன்று. என்றும் வேதம் விளம்புகின்ற நீதிக்குச் செய்யவேண்டிய மரியாதையின் பொருட்டேனும், தற்காலத்து அவர்கள் பொருட்டில் நாம் பொறைபுடைமையவகிக்கவேண்டியதல்லவா? ஆதலால்-என்சொல்லுக்குத் தடைசொல்லாமல் விரைவில் அவர்களை மீட்டுக்கொண்டுவா அதுவரையி லெனக்குச் சலபானஞ் செய்யவு மனஞ் சம்மதியாது. என்று சொல்லி விரைவுசெய்தனர்.

அருச்சுனன் வீமனகுல சகாதேவர்களோடு சென்று கந்தருவப்படைகளை வளைத்துச் சரக்கூடங் கட்டுதல்.

இந்தப்படி சொல்லியபேச்சு நிற்பதற்குமுன்னே வீமன்யெழுந்து நமஸ்கரித்து, அண்ணா! நிசந்தான்: இதோபோகின்றேன் என்றுவருமுன்னமே அருச்சுனன்வந்து, என் சின்னண்ணா! நமது தமயனுடைய வார்த்தைக்குத் தடுத்து பேசவேண்டாம். நானுங் கூடவருகின்றேன் வாரும். என்றழைத்து நகுல சகாதேவருட னிவர்கள் நால்வரு முரசக்கொடியோன்பாதத்தில் முடிசூட்டி உத்தரம் பெற்றுக்கொண்டு' அவடத்தில் வந்திருக்கு மிரதங்களிலேறி, வாயுவேகமனோவேகத்துடன் மண்டுளி யெழுந்து முன்செல்லும்படியாக வடதிசை நாடி வருவதானார்கள். அப்போதம்மண்டுளி செல்லுவது எப்படி யிருந்த தென்றால், கந்திருவர்கோனைக் கண்டு, தண்டதரனுங் காண்டீவக்கரனு மிதோ அண்டையில் வந்துவிட்டார்கள். பெண்டுகளுடன் துரியோதனனைக் கொண்டுபோய்விட்டு உன்மண்டலம்போகலாம். இல்லாவிட்டால், அண்டரும் நீயும் யெண்டிசைப்பாலகரும் அவிந்துவிடவேண்டும். கண்டதுசொன்னேன். என்றதுபோலிருந்தது. இவ்வாறு வீமார்ச்சுன நகுலசகாதேவர்கள்விண்டலமெங்குமுண்டலம்மாகும்படி வந்து வளைக்கவும், இவர்களைக்கண்ட காந்திருவச் சேனைகள் களித்து, மிகுந்தவேகத்துட னெலித்து' நமது அரசனல் அடிபட்டோடினவர்கள் திரும்பி வருகின்றார்களென்று நினைத்து, நிதானிக்காமல் அமோகமாகிய பாணவருஷங்களைப் பரப்பி, இவர்கள் வருகின்ற வழியை மறைத்தார்கள். அந்தவேளையில் நகுல சகாதேவர்கள் கணைகளை யிணையில்லாமற் பொழிந்து, அவர்கள் விட்ட பாணங்களெல்லாம் நடுவிலொடியும்படியாக வடித்து; அவர்களுடைய கொடியும் - சிரத்திலணிந்த முடியும் - முழங்கும்படியாகிய துடியும் - பூமியிற் யடியக்கண்டார்கள். அதுகண்ட காந்திருவர்வடவாமுகாக்கினிபோற் பொங்கி, வச்சிரதண்டம் - இந்திரக்கணை - வாயுக்கணை - தேயுக்கணை - இவைகளை வாரிவாரிசாரிசாரியாக மாரிபோலிறைக்கவும், வீமசேனனு மருச்சுனனுங் கண்டு, மின்னொளிப்படை - வெய்யவன்படை - வேதனர்படை - இவைகளை மேன்மேலுஞ்சொரிய, அவைகளினலவர்கள்விட்ட பாணங்கள் முதலிய யாவுமொடிந்து - மடிந்து - கரிந்து - பொரிந்து - உதிர்ந்து போகவும், சிலசேனைகளோடித் தங்கள் சேனதிபதிகளிடத்திற் சென்று தெரிவித்தார்கள். அந்த உத்தமர்களும் யோசிக்காமல் வந்து, சதமுக பத்திரமே முதலிய தனிக்கணைகளை யொவ்வொருவருக்குக் கோடி

யாக் உந்தினர்கள். அப்போது வீமசேனனுந் தம்பி
மார்களு மவர்கள்முந்திப்போ யவைகளையெல்லாமறு
த்துத் தறித்து அழித்தார்கள். அந்தவேளையி லருச்
சுனனுஞ் சேர்ந்து, அண்டங்களை யவிக்குந் தண்ட
ப்பிறைக்கணை - உருத்திரக்கணை - மருத்தின்கணை - சரு
டக்கணை - தசமுகக்கணை - சதமுகக்கணை - சகஸ்தி
ரமுகக்கணை - அயுத முகக்கணை, இப்படி யனேகங்
கோடா கோடியாக விடுத்தான். கைகளோயாமற் றெ
டுத்தான். அந்தக்கணைகளின் வெப்பங்களினுலும் - கு
ப்பல்சளினுலும் - திணிந்த கோபத்தினுலும் - மிகுந்
தவேகத்தினுலும் - அவைகள் துளைப்பதினுலும் - தா
ங்கள் களைப்பதினுலும் - நிலைபெறமாட்டாமல் முகம்
விட்டவாறே ஓடவும், கணைகள் ஓடவும், கந்திருவர்
வாடவும், அதுகண்ட தனஞ்செயன் அதிசீக்கிரமத்தி
லிவர்க ளாகாயமார்க்கத்தில் மறைந்து ஓடிப்போவா
ர்களென்றுதெரிந்து, வாசாம கோசரமாகிய அம்புக்
ளும் - கணைகளும் - அஸ்திரங்களும் - கோல்களும்
விடுத்து, திசைகள் முழுமையுங் கீழ்மேலுஞ் சரக்கூ
டங்கட்டி, இனி யெங்கேயிவர்க ளோடிப் பிழைப்ப
தென்று சொல்லி, கரும்பு ஆலையி லகப்பட்டதுபோற்
கசக்கி விடுகிறேனென்று தம்பி தமயனுடன் பேசிக்
கொண்டு நின்றான்.

சித்திரசேனன் அருச்சுனன்வரவந்து சமாதானஞ்செய்துகொள்ளுதல்.

அப்போது சிலகந்திருவர் அரசனிடத்திலோடி,
ஐயா சித்திரசேன மகாராஜனே! யாரோ நாலுவீரர்
கள் கொஞ்சம் வலுவலை யுடையவர்கள். எப்படியுந்
துரியோதனுதிகளை மீட்டுக்கொண்டு போவதல்லாம
ல் விடுகிறதில்லை யென்று பேசிக்கொண்டு, எங்களையெ
ல்லா மாட்டுகின்றார்களென்று சொல்லினர். அதுகேட்
ட சித்திரசேனன் நகைத்து, (அறுக்க மாட்டாதவ
னுக்கு அரிவாளைம்பது.) என்பதைப்போல் இந்தமா
னிடர் நமதுகையி லகப்பட்டு விடுவித்துக் கொள்ள
மாட்டாமல் விழித்துக்கொண் டிருப்பவர்களுக் கிந்த
கர்வமானுல், எனக்கெவ்வளவு வீரிய மிருக்கவேண்டு
ம்? விரலுரலானு லுரலெவ்வள வாகும்? அடா பயித்
தியக்காரர்களே! இரும்புண்டநீர் திரும்புமாகி லிவர்
களை யவர்கள் விடுவித்துக்கொண்டு போவார்கள். எ
ன்று சொல்லி ஆக்ரமித்து விஷம்போற் சீறி புறப்ப
டும்போது, அருச்சுனன்சட்டிய சரக்கூ டினுக் ககப்ப
டாது தப்பிய சில சேனுதிபதிகளோடி வந்து, ஐயா!
அந்நால்வரி லொருவன் கிழக்கு - தெற்கு - மேற்கு
வடக்கு - இந்த நாலுதிக்கிலும் வழியில்லாமல் அண்
டச் சுவர்போற் சரக்கூடங் கட்டிவிட்டு போனிலகப்
பட்ட புலிகளைப்போலும் - படுகுழியிலகப்பட்ட யா
னைகளைப்போலும் - நமது வீரருஞ் சூரருஞ் சேனை
கள்முதலியவைபோடும் வருந்த அடித்துக்கொல்லுகி
ரு னென்றார்கள். அதுகேட்ட சித்திரசேனன் - ஆ!
ஆ! அப்படியா? அவ்வளவு வல்லப மானிடருக் கு
ண்டா யிருக்கின்றதா? என்று உறுக்கி விழித்துப்பா
ர்க்கும்போது, உகாந்தகாலத்திடிபோ லொருபாணம்
வந்து சித்திரசேனனுடைய மார்பிற்பச் டுருவியது'
அப்போது அதை யிழுக்கிப்பிடித்துப் பார்த்தான்.
அக்கணையி லெழுதி யிருக்கின்றபெயலை ரநோக்கினன்,
விஜயகிரீட்டியென் றெழுதி யிருக்கக்கண்டான். உட
னே வெட்கிமனஸ்தாபங்கொண்டான். ஐயோ! இவன்
அண்டர்பிரானை ரக்ஷித்தவன். காளகண்டனை மண்
டைகளங்க அடித்தவன். தண்டதரனுக் கிளையவன்.
தேவேந்திரனுர்குப் புத்திரனுகிய தனஞ்செயன். எ
ன்றால் இனிவேறுபேச்சேன்? பெருமூச்சேன்? என்று
இரதத்தை விட்டிறங்கிப் பாதசாரியா யெல்லோருஞ்
சூழவந்து, அருச்சுனனுடைய யிருகரத்தையும் பற்றி
ஏந்தலே! இதென்ன அனியாயம்? நெருப்பையும் -
வஞ்சமான மனையாளையும் - துஷ்டரையும் - விரோதி
களையும் - அனியாயக் காரரையும் - அடிமைகளையும்
திருடரையும் - தீயவாழ்க்கையரையும் உடனுக்குடனே
அடக்கிவிட வேண்டுமென்று நீதிசொல்லியிருக்க, இந்
தப்பாவிக்குத் துணைபட்டு நீங்களேன் வந்தீர்கள்? இ
வர்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோக நானினை
த்தவனல்ல. இந்தத் துரியோதனன் உங்களைவரையு
ந் திரௌபதா தேவியையு மவமானப் படுத்தவேண்
டுமென்று ஆலோசித்து, நீங்களிருக்கும் வனத்திற்கு
வருகின்றதாக வறிந்து, தேவேந்திர னென்னை யழை
த்து, நீபோய் அந்தவனத்தி லிருந்து இப்படியாக
யெண்ணங் கொண்டுவரும் அரவக்கொடியோனைப் பி
டித்துக் கட்டிக்கொண்டு வரக்கடவையென் றனுப்ப
வந்தேன். அந்த உத்தரவின்படி யுங்களுக்குச் சகா
யஞ்செய்த யென்னை இப்படி வருத்தஞ் செய்யலா
மா? அவனையு மீட்கப்போமா? என்று பலவார்த்தை
களைப்பேசிய சித்திரசேனனை அருச்சுனன் மார்போ
டணைத்துநோக்கிச் சொல்லுகிறான்.

சித்திரசேனன் அருச்சுனன்சொல்லுக்கிசைந்துசென்று தருமராஜனைக்கண்டு சன்மானித்துத்துரியோதனாதிகளை ஒப்புவித்துச்செல்லுதல்.

ஓ காந்திருவ அரசனே! கேளும்: தன்மானமெ
ன்றும் பிறர்மானமென்றுஞ் சொல்வதுண் டல்லவா?
அன்றியும் - தொடையிலிருக்கும் புண்ணை வெளிக்குக்
காட்டலாமா? ஏதோ எங்களுக்குப் பற்பலதீங்குக
ளை யிவர்கள் செய்தபோதிலும், நாங்களும் அவர்க
ளும் போராடவேண்டுமேயொழிய? பிறத்தியாரால்
துன்பநேரிடப் பார்க்கலாமா? இந்தஅவமானம் இந்
தத் துரியோத னுதிகளுக் கல்லவே: என்னடா பாண்
டவர்களுக்குத் தாயாதிக ளிப்படி கட்டுப் பட்டார்க
ளென்றல்லோ உலகஞ்சொல்லும்? மேலும் - தர்மராஜ

னுடைய மனதை நீங்க ளறியமாட்டீர்களா? அவர் எ
துவந்தாலுந் தருமமே ஜெயமென் றிருக்கின்றவர். இ
தைக்கேட்டவுடனே என்சிறிய தமயனாராகிய இவ்வீ
மசேனமகாராஜனை நீபோய் மீட்டுவாவென்றார். இவர்
அவர்களாற் பட்ட வருத்தங்களைச் சொல்லிக் கொண்
டார். அதைக்கேட்டு வருத்தமுற்று, தம்பி வீமா!
நீபோய் துரியோதனன்முதலிய தம்பிமார்களையும் ஸ்
திரீகளையுமீட்டு வருவளவு நான்றாகத்திற்குச் சலம்புசி
யேனென்றுசபதங்கூறினார். அதை யான்கேட்டு, இ
தென்ன பாவவென்று அண்ணவையுந் தம்பிய ரிருவ
ரையு மழைத்துக்கொண்டு, உம்மைக்கண்டுபேசிஅவர்
களை மீட்டுக்கொண்டு போகலாமென்று வந்தேன். இ
ந்த சேனைகள் விஸ்தாரம் பாணங்களை முடுக்கி அடித்
தார்கள். தான்சாவ மருந்துண்பார்களா? ஆகையா
ல் நாமுஞ் சிலகணைகளை விடுதது, அவர்கள்விட்டதை
த்தடுத்து, உமக்குத்தெரியும்படி சரக்கூடங்கட்டினே
ன். இப்பவும் நீர்தயவுசெய்துவந்து யெங்கள் தமயனு
கிய தருமபூப்தியைப்பார்த்து வார்த்தையாடி வரலா
ம். ஆதலால் விரைவில் வாருமென்று உபசாரஞ் சொ
ல்லவே சித்திரசேனன் மகிழ்ந்து, சேனுசயினியங்களு
டன் தாமணிப்பிணையலாய்க் கட்டுபட்டிருக்கின்றதை
தவர்களையு மழைத்துக்கொண்டு திரும்பி, பாண்டவர்
முதல்வனிருக்கும் வனத்திற்கு இரதத்தின்மீதி லேறி
வந்து, முரசக்கொடியோன் பிராமணருட னிருப்ப
தைநோக்கி இரதத்தை விட்டிறங்கிக் கால்நடையாய்
வரவும், வீமார்ச்சுனுள் முன்னடிவந்து தங்களண்ணு
விடத்தி லிதோ வருகின்றவர்தான் சாந்திருவ ராஜ
னென்றுசொல்ல, அதுகேட்கவே அவர்திடுக்கென்றெ
ழுந்து யெதிர்கொண்டு போய்த் தழுவி முகமன்கூறி,
சந்தோஷத்துடன் அழைத்துவந்து ஆசனமளித்திரு
க்கச்செய்து, மிகுந்த வருத்தங் கொடுத்தே னென்று
சொல்லி, இவர்கள் நமது தம்பிமார்கள். இவர்களு
டைய தர்மபத்தினிகள் அந்தப்பெண்கள்' இவர்களைஇ
ப்படிகட்டும்படியாகிய கோபமுங்களுக்கு வந்ததென்
ன? மேலுநானிவிடத்தி லிருந்தேனே: என்னிடத்தில்
ஒருவார்த்தை சொல்லலாகாதா? போகட்டும்: தயவு
செய்து கட்டுகளையவிழ்த்துவிடுங்கள். என்றுகேட்கவு
ஞ்சித்திரசேனன் மிகுந்தபத்தியுட னிருந்து' தன்னை
இந்திரனனுப்பி வைத்ததும்' இந்தப் பாவியாகிய து
ரியோதனன் சிந்தையி லெண்ணி யெண்ணங்களையுஞ்
சொல்லினன். அதைக்கேட்ட குந்திதேவியி னுடை
ய புதல்வரில் முதல்வன் சிந்தித்து வந்தனை புரிந்து,
அந்த மகாராஜனுகிய தேவேந்திரனுடைய மொழிக்
கு நான் தடுத்துச் சொல்லப்போமா? கூடாது ஆ
னுலிவர்களை மீட்டுவருகிறபரியந்தம் தாகத்திற்குச் சல
ம்புசியேனென்று சபதங்கூறிக் கொண்டேன். அஃ
தோன் றிருக்கின்றபடியால் நானிவ்வளவுதூர மியோ
சித்தேன். இப்போது நீர்சுகமாகவே கொண்டுபோய்
இந்திரதேவனிடத்தி லொப்பிவித்துவிடும். அப்பாலெ
ன்றம்பி அர்ச்சுனனையனுப்பி, என்சபதத்தைத் தீர்
த்துக் கொள்ளும்படியால் அந்ததேவேந்திர மகாரா
ஜனிடத்தி லுத்தரம் பெற்றுக்கொள்ளுகிறே னென்று
சொல்லினர். அப்படி சொல்லிய சந்திரகுலத்தோன்
றலின் வார்த்தைகளை யெல்லாங் கேட்ட காந்திருவரா
ஜன் வியப்புற்று, அடடா!! ஆ! ஆ! என்ன ஆச்ச
ரியம்? இப்பேர்ப்பட்ட சவுரிய பராக்கிரமமுடையத
ம்பிமார்க ளிருக்கவும், இவர்யெவ்வளவு தாழ்மையும்
வணக்கமுமாகச் சொல்லுகின்றார்? இவர் சுத்த சாட்
குண்ய மூர்த்தியாகியசாம்பவமூர்த்திக்கொப்பானவர்
போலும். என்றுமெத்தவும்பயந்து யெழுந்து வந்தித்
து, பந்திக்குக் கொண்டுபோன துரியோதனுதிகள்
முதலிய யெல்லோர்களையு மவ்விடத்தில் விட்டுவிட்டு'
தருமராஜனிடத்திலும் வீமார்ச்சுன நகுலசகாதேவர்
க ளிடத்திலு முத்தரம் பெற்றுக்கொண்டு' தன்சேனை
களெல்லாம் நெருங்கிவர மிகவு முபசாரத்துடன் சில
தூரம்போய்த் தேரேறிக் கோண்டு' சித்திரசேனன்
போய்விட்டான்.

தருமராஜன் தம்பிமார்களால் துரியோத னுதியர் கட்டவிழ்ப்பித்துப் பரிதாபப்படுதல்.

அப்பால் தருமராஜன் கட்டுப்பட்டுத் தலைகவிழ்
ந்திருக்கும் அவர்களையெல்லாம் நோக்கி' கண்ணீர்
சோரவிட்டுக் கலங்கி' தன்தம்பிமார்களைப் பார்த்து,
அவர்கள் கட்டவிழ்த்து விடுங்களென்று கருணைபுரிந்
தனர். உடனே துரியோதனன் முதலிய தம்பிமார்க
ளை வீமசேன னெருங்கிக்கட்டுகளை யழிக்கும்போது'
உயிருடன் செத்த பிணத்தைப்போ லிருந்தார்கள்.
அருச்சுனன் - நகுலசகாதேவர் - இவர்கள் மூவருஞ்
சகுனிமுதலிய பேர்களையும் பாங்கிகள் முதலிய ராஜ
ஸ்திரீகளையும் அவிழ்த்து விட்டார்கள். தருமராஜன்
ஆடவாயுள்ளாரை யெல்லா மழைத்து இருக்கச்செய்
து' ஸ்திரீகளை யெல்லாந் திரௌபதியிருக்குமிடத்திற்
கனுப்பினர். பாஞ்சாலியம்மன் ஒரகத்திமார்களைக்
கண்டு விசனங்கொண்டு, ஐயோ! நீங்கள் உலகத்
தையாளு முயர்ந்தகுலத்திற் பிறந்தும், வணங்கா மு
முடியினையுடைய மன்னவன் முதலிய பேருக்கு வாழ்
க்கை புகுந்தும்' உங்கள் தலைவிதி இப்படி யிருந்த
தா? என்று கூறி விசனப்பட்டவளாய், அவரவர்கள்
தலைமயிர்களை யெல்லாஞ் சேர்த்து கட்டச்சொல்லி,
கந்தை கந்தையாய்ப் போயிருக்கின்ற வஸ்திரங்களை
யெல்லாந் திருத்து மானந்தெரியாமல் மறைக்கச்செ
ய்து, வாடியழுங் கண்ணீர்களைத் துடைத்துத் தண்
ணீர் கொடுத்து' சரீரத்தைச் சுத்திசெய்துகொள்ளப்
பண்ணி' வனத்தில் மகாரிஷிகள் முதலிய பேர்கள்
தனக்குக் கொடுத்துங் குபேரமகாராஜ னளித்துந்
தன்னிடத்தி லிருக்கும் வஸ்திரங்களையெல்லா மெடு
த்து' அவர்களுக் கெல்லாம் அன்போடு கொடுத்து

உபசரித்தனுப்பினன். அப்பால் அறக்கடவுள் துரியோதனனைப்பார்த்து, தம்பி! எதுகெட்டுப் போனாலு மேன்மக்களுடைய விவேகங் கெடாதென்று பெரியோர் சொல்லியிருக்க, களங்கமில்லாத குலத்திற்குக் களிம்புதேடிக் கொண்டனையே: எத்தனைபேர்களை நீவெட்டச் சொல்லவும்-கட்டச்சொல்லவும்-காவலில் வைக்கச்சொல்லவும்-விடவும்-ஆகியபெருமையையுடைத்தா யிருந்து, இப்போது மற்றொருவனாற் கட்டுப் பட்டாயே: ஐயோ! பேதையையுடைய ஸ்திரீகளைக் கொண்டுவந்து யேனிப்படிச் செய்தாய்? (கன்றுகள்கூடிக் களமடித்தால் வைக்கோலு மாகாது கூளமுமாகாது.) என்னும் பழமொழிபோலும், (நாற்றைக்கெடுத்தது குறுணி சோற்றைக்கெடுத்தது உமி.) என்பதுபோலும், நமது குலத்தின் பெருமையைத் துன்மார்க்கருடைய பேச்சைக் கேட்டு இவிடத்திற் கெடுத்துவிட்டாய். அவர்கள் (மந்தி தான்கெட்டதுமல்லாமல் தங்கிய வனமெல்லாங் கெடுத்தது.) என்பதுபோ லுன்னையும் ஸ்திரீகளையும் அவமானப் படுத்தி விட்டார்கள். எத்தனை செல்வம் அழகுஆபரணமிருந்தபோதிலும், புத்தியிருக்கவேண்டும். புத்தியுள்ளவனே பெரியவன். கட்டிகொடுக்கும் அன்னமுங் கற்றுக்கொடுக்குஞ் சொல்லும் யெத்தனை நாளைக்குத் துணையாகும்? தம்பி! நல்ல சாஸ்திரங்களெல்லாம் வாசித்துங் கேட்டு மிப்படி மதிமயங்கலாமா? விதியையு மதியாகுவெல்லலாகுமென்று மேலோர் சொல்லுகின்றார்களே: சாதுக்களுடைய நட்பைச் சம்பாதித் திருந்தாற் சகலகாரியங்களையும் வெல்லலாம். தீயர்களுடைய சிநேகமும் ஓர் துணையாகுமோ? அப்பா என்னிளவலே! (ஆற்றுக்குப்பார்ப்பான் துணையல்ல. கட்டுச்சோற்றுக்குப்பயிற்றங்காய்கறியல்ல.) என்பதை யறியாயோ? பசுவின்வாலைப்பற்றினாற் கரையேறலாமே யொழிய' எருமைவாலைப் பற்றினாலிறக்கத் தக்கதே யன்றோ? தம்பி! கட்டுக் காவலை விட்டு இரக்ஷியுங்களென்று வெகுபேர் நம்மை நாடிவந்து யாசிப்பதுபோய், நாமொருவ னிடத்திற் சென்று உபசரித்துக் கட்டவிழ்த்துக் கொள்ளும்படி நேரிட்டதல்லவா? ஐயோ! பூவிற்ற கடையிற் புல்லுவிற்குங் காலமா? தம்மைப் பணிவாரைத் தாம்பணியக் கூடுமா? புலிபசித்தாலும் புல்லைத்தின்னுமா? உன் தம்பியாகிய அர்ச்சுனன் தேவர்பகைகளைந்து இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து வந்திருக்க, வீணாய் ஈனத்தக் கந்திருவர்களைச் சட்டைசெய்து உன்னால் வணங்கும்படி யாச்சுதே:

தருமராஜன் சகுனியைவெறுத்துக்கொண் டறிவுறுத்தி, துரியோதனுதியரை உடன் கூட்டி யனுப்புவித்தல்.

... அப்பனே! நல்லது; உன்னையித் தீயகாரியங்களிலெல்லாந் தேற்றி, ஒன்றில்லாமற் களைகிறேனென்று சகல சவுரியங்களையும் நாட்டி, சிறுகுழந்தையாகிய உன்னைக் காட்டிற் காட்டிக்கொடுத்துப் போய்விட்ட கர்னமகாராஜனெங்கே? நமதுமாமா அவர்களுக்கும் இந்தக்கெதிநேரிட்டதோ? அப்பா! அயல்வீட்டாண்பிள்ளை ஆபத்துக் குதவுவானோ? குதிகுதியென்பவர்களெல்லாங்கூடக்குதிப்பார்களோ? அரகரவென்பவருக் கென்ன? அன்னம் படைப்பவர்களுக்கல்லவோதெரியும். குட்டிகுரைத்துத் தாயின்றலையிற் சுமத்தியதைப்போல் ஆய்விட்டதே; (கோடாலிககாம்பு தன் குலத்துக் கீனம்.) என்றாற்போற் குறைவிலாத குலத்திற்குக் குறைதேடிக்கொண்டாயே; (சிறுவரிட்ட வேளாண்மை வீடுவந்து சேராது.) என்பதுபோலும், (சிறுபெண்கட்டிய சிற்றாடை. (என்பதுபோலுஞ் செய்துவிட்டாயே: மேலும் உன்னுடைய தமயனாகிய வீமனுக்கும் - தம்பியாகிய அருச்சுனனுக்குமுள்ள பலாபலங்களுனக்குத் தெரிந்திருக்கின்றதல்லவா? அந்தபலாபலத்தைக் கொண்டு அவர்கள் அந்தக் கந்திருவர் கோனுடன் சண்டைசெய்யத் துணிந்தால், உங்களைமீட்பதரிதாகுமே; அப்படியில்லாம லவனை வணங்கி யுபசாரங்கள் சொன்னதின் பேரில், எவ்வளவு மரியாதையும் பயமுங்கொண்டு உங்களைவிட்டுப் போய்விட்டான்? நேரே நீ பார்த்தையே; குழந்தாய்! வணங்கியவில் தைக்கும். வணங்காவில் தைக்கமாட்டாது. அன்றியும் - தானென்றுநினைக்கத் தெய்வமொன்று நினைப்பது சகசமாதலால், சகலசனங்களையும் வைத்து சவரக்ஷணைசெய்யுந் தன்னியனாகிய வனக்க, எண்ணித் துணிவது கருமமென்னும் யோசனையே இருக்கவேண்டும். என்று பற்பலவித நீதி வசனங்களைச்சொல்லி, சகுனியைநோக்கி, மாமா! எல்லாம் தெரிந்த நீரும் இப்படியான ஆபத்தில் இறைவன் குழந்தையைக் கொண்டுவந்து விடலாமா? நீர்பார்க்க இவ்விளையோன் எந்த வீரருடன் யெந்த யுத்தத்தி லெதிர்த்துச் சண்டை செய்திருக்கின்றான்? அறியாப்பிள்ளை தெரியாத் தன்மையாற் குறியாமலொன்று நினைத்தானாகில், பிரியாம லிருக்கு நீங்கள் உறுதிசொல்லவேண்டிய தல்லவா? அப்படிசொல்லுவதன்றோ பெரியோர்கள் கடமை. (காலத்திரையஞ் சொல்லியபல்லி கழுநீர்ப் பானையில் விழும்.) என்பதுபோ லாச்சே; மாமா உம்முடைய பேச்சே. உமக்கென்ன போச்சே: எங்கள் மரபு யிப்படியாச்சே: (ஆர்குடி கெட்டாலென்ன? ஆண்டிகுடி தாதகுடி யானாலென்ன?) என்பதுபோற் செய்துவைத்தீரே; என்னடா தாதா ஆண்டியானாலென்றால், ஈஸ்வரன் கோயிற் றிருநாளாகையால் இதுவுமொரு கந்தாயமென்பதுபோ லிருக்கின்றதே: ஐயோ! தலைநோயுங் காய்ச்சலுந் தனக்குவந்தாற் றெரியும். பிறர்க்குவந்தா லென்தெரியும்? தான்தேடாப் பொன்னுக்கு மாற்றேது? உரையேது? செத்தவன்வீட்டிற் பாடுபட்டவரியாரோ? கண்ணிலெண்ணெய் பட்டாற் கரிக்கும். புருவத்திற்பட்டாற் கரிக்குமோ? மாமா! அல்லவரு நல்ல

வரோ: எழுதாப் பொறிக்கி யழுதாகத்தக்கதோ? எங்கள்கால மிப்படி யாகவும், தம்பிமனம் வேறாகப்போகவு மிருந்தபடியால்; எங்களுடைய குலமும்-கோத்திரமும் - பலமும் - நலமுமியாவுங் குன்றி, கேட்போர்களுக்கும் பார்ப்போர்களுக்கும்பழிப்புக்கிடமாய்விட்டது. போகட்டும்: நீரடித்து நீர்விலகுவதில்லை. (தானாடாவிட்டாலுஞ் சரீரமாடும்.) என்னுந் தன்மையாதலினால், எனக்கு நீங்கள் சிறப்பாகச் சவுக்கியமடைந்திருக்கின்றீர்களென்று கேட்கவு நோக்கவும் ஆசையுண்டாகி, பெருமைக்குக் காப்புகட்டிக்கொண்டு விருதுக்கு வேட்டை யாடுகின்றவனாக இருக்கின்றேன். என்னுடையமனந் தாளாம லிப்படியெல்லாஞ் சொல்லிவிட்டேன். இப்பவு முங்களுக்கு யென்பேரிற் கோபம்வேண்டாம். மாமா! தம்பிமார்களையும் ஸ்திரீகளையும் அழைத்துக் கொண்டுபோய் அஸ்தினாபுரஞ் சேர்த்துவிடும். இனிமேலு மிப்படி தனிமையில் வரவேண்டாம். ஒருவர்பேரிற் பகைசெலுத்தவும் வேண்டாம். குபேர சம்பத்தாகிய செல்வச் செருக்குடன் துரைத்தனஞ் செய்துகொண்டு, ஐயா அவர்களையுந் தாயார்முதலிய பேர்களையுஞ் சம்ரட்சணை செய்து, மேலோர்களுடைய புத்திமதிப் பிரகாரநின்று வாழ்வைப்பெற்று கீர்த்தியைப் பொருந்தக் கடவீர்கள். என்று சொல்லி யனுப்பிவைத்தார் எல்லாம் இறைவன்செயலென் றுள்ளபடி யுணர்ந்த உதிஷ்டிர மகாராஜனானவர்.

துரியோதனன் தயித்தியவனஞ்சேர்ந்து தருமராஜன்செய்தநன்றியைச்சகியாதுமனநோதலைச் சகுனிதேற்றுதல்.

இவைகளை யெல்லாங்கேட்ட கௌரவ முதல்வன் முதலா யாவரும் ஒருவார்த்தைகளும் பேசாமல் ஊமைகளைப்போ லுள்ளமாத்திரம் வேகும்படியாய்த் தலைகுனிந்தெழுந்து, நாங்கள் போய்வருகிறோமென்றுஞ் சொல்லாமல் நடந்து நெடுந்தூரஞ்சென்று, எதிரிலிருக்குந் தயித்தியவனத்தைக் கண்டார்கள். அந்தயிடத்திற் கூடார மடிக்கச்செய்து, அதில் யாவருங் கூடியிருந்து, ஸ்திரீகளையெல்லாம் வேறோரிடத்தி லிருக்கும்படியாக வமைத்துச் சிலயோசனை செய்தார்கள். அதென்னவென்றால் - இப்போதுநாம் பாண்டவர்களைப் பழிதேடிக் கொண்டோம். (பழித்தார் தலையிற் பாடுவரும்.) என்னு மொழி நமக்கேபலித்தது. சித்திரசேனனிடத்தில் யாவருமழிந்து வெட்டுப்பட்டதும் - நஷ்டப்பட்டதும் - கஷ்டப் பட்டதும் - வெட்கங்கெட்டதும் - பெரிதாகத் தோன்றவில்லை. அதேதென்றால் - இராஜாதி ராஜர்களுக்கு யுத்தஞ்செய்கின்றதும் - வெற்றிபெறுகின்றதும்-அபசெயமாகின்றது மியல்பானகாரியம். இதனா லொருவரும் பழிப்பதற் கிடமில்லை. இந்தப் பஞ்சபாண்டவர்கள் நம்மைமீட்டிக் கட்டவிழ்த்தார்களென்று, நம்மால் ஒருமொழி யவர்களுக்குப்பெருமையாகக் (காக்கைப் பொன்.) என்னுங் கீர்த்தியைப்போல் வந்திருக்கின்றபடியால்: என்னுயிருள்ளவரைக்கும் அவர்களுமற்றப் பேர்களுஞ் சொல்லுவார்கள். ஆ! தெய்வமே! இந்த யிழிவாகிய வார்த்தையைக்கேட்டு இவ்வுலகத்தி லியானுஞ் சீவனஞ்செய்துகொண்டுமனுஷத்தனமாக இருக்கத்தக்கதோ? ஓமாமா! ஓ தம்பிதுச்சாதனா!உதவியைப்பெற்றாலும் உயர்ந்தோர்களாற் பெறவேண்டும். அதனால் நமக்குப்பெருமையுண்டாகும். இவர்களோ? பஞ்சைகள். வயிற்றுக்கு அன்னமும் உடுக்க வஸ்திரமுமற்று, இருக்க யெள்ளத்தனையேனு மண் மனையொன்றுமில்லாமல், வனத்தில் மிருகங்களைப்போல் வாடுகின்றவர்கள். இவர்கள்வணங்காமுடியுடையஎன்னைக்காத்தார்களென்னும் வாக்கியங்கேட்டு, இந்தமண்ணிலியான் சிலாக்கியமானவாழ்வைப்பெற்றிருக்க' ஆ! ஆ! விதியே! ஐயோ! என்மதியே! என்னசதிசெய்தாய்? இனி யென்னகதி? ஓ அதிபதியே! ஓ நிதிபதியே! அண்ணா கர்ணா! நீ எங்கு எவ்வாறாயினையோ தெரியவில்லையே: என்று யேங்கி விசனப்படும்போது சகுனி துரியோதனனைநோக்கி, இறைவனே! நம்மை அவர்கள் மீட்டுவிட்டாலுந்தா னென்ன? ஏதோ உரிமையுள்ளவனைப்போல் தருமராஜன் சில அருமையாகிய நீதிகளைச்சொல்லிப் பெருமையடைந்த திறமையைப் பார்த்தனையா? ஆடு நனைகிறதென்று அழுததாங்கோனாய். அதுபோல் வெகு புத்திகளைச் சொல்லும் பாவனையாகத் தன்மனதிலிருந்த வருத்தங்களையெல்லாங்காட்டி, சுடாதுபோற் சுட்டான் தருமராஜன். ஆயினுமிருக்கட்டும். இப்போதா னென்ன முழுகிப்போய் விட்டது? கிணற்றின் சலத்தை வெள்ளங்கொண்டு போகவில்லை, அந்தக் கந்திருவ னெங்கே பிழைத்தான்? இவர்களெங்கேதப்பிவிட்டார்கள்? நல்லதாகட்டும். என்று நகைத்து, ஓ துரியோதனமஹாராஜனே! ஓ தம்பி என்னருமை மருமகனே! நீங்களேன் இப்படிநினைக்கின்றீர்கள்?இவர்கள்மீட்டார்களென்பதை நமது நாட்டார்கள் கேட்டால் நம்பமாட்டார்கள். (ஓஅம்மணமாயிருக்கின்ற தாதா! உன்னண்டையி லிருப்பவரையணைத்துப் போற்றலாகாதா?) என்றாப்போலிருக்கின்றதுஇவர்களுடையகதி. (பழையதுயிருந்தாற் போடும் உமக்குப் பசியில்லாமல் மருந்துதருவேன்.) என்கிற வசனம்போல்' இவர்கள்தங்கள் விதியையே தொலைத்துக்கொள்ள மாட்டாமற்றயங்கி யிருக்கின்றார்கள். இப்பேர்ப் பட்டவர்கள் நம்மைக் காப்பாத்தினார்களென்பது பொய்யாகும். நீங்களொன்றுக்கும் பயப்பட வேண்டாம். நானிருக்கின்றேன். இந்தவார்த்தைகளைத் திருப்பிக்கோர்த்து விடுகிறேன். சீக்கிரத்திலெழுந்து நகரத்திற்குவாருங்களென்று சொல்லி யழைத்தனன்.

கர்னன் துரியோதனனிடம்வந்துமீட்டும் போருக்குவிடைகேட்க,ஊருக்குப் போகவிடைதந்து தான் தனியே உள்ளறையிற்சென் றிருத்தல்.

அச்சமையத்திற் சூரியகுமாரனாகியதோன்ற லிரதத்னதச் செலுத்திக்கொண்டுவந் திறங்கி, துரியோதன்னிருக்குஞ்சாலையிற்போயவனைக் கட்டிக்கொண்டு மனவருத்தமுற்று, ஆ ! ஆ ! இதென்ன ? வகைமோசமோ ? மாயவஞ்சமோ? மற்றியாதோ அறியேன். நானுங் கந்திருவனும் யுத்தஞ்செய்து, அவனது தேரையும் - துவசத்தையும் - வீரப்பட்டத்தையும் - கவசத்தையும் - வில்லையும் அறுத்து, மார்பினுந்தோளினுஞ் சிலவயிரக்கணைகளை விடுத்து, அவன் முகமாறிப் போகும்படி அடித்தேன். அவன் யென்தேரையழித்தான். நமதுதம்பி விகர்னன் தன்தேரைக் கொடுத்தான். அதின்பேரிலேறி மீட்டும் போருக்கடுத்தேன். அங்கேயொரு பள்ளமும் - அதில் நிரம்பிய வெள்ளமும்- அள்ளலாகிய சேறுமிருந்து, என்னிரதச்சக்கரங்களுங் குதிரைக்கால்களும் அதிற்புதைந்துபோய் விட்டன. என்னாற் கூடியவரையிலும் பார்த்தேன். இறங்கிவந்து விடலாமென்றா லென்னையு மூழ்கவைக்குஞ் சேறுகையாற் றியங்கியிருந்தேன். இப்போது அந்நீருஞ் சேறும் உலர்ந்துபோகவும், குதிரைகளும் வீரத்துடனிழுக்கவும், நான் தத்தளித்துத் தேரை நடாத்திக் கொண்டிங்குவந்தேன். என்விதி யிப்படியாய் விட்டது. உங்கள் கெதியென்ன ? என்றுகேட்ட அங்கர்கோனுக்குத் துரியோதனன் தாங்கள் சித்திரசேனனாற் பட்ட பாங்கெல்லாஞ் சொல்லி, தருமராஜனேவலால் வீமார்ச்சுனர்கள் மீட்டுவிட்டதையும், தருமராஜன் தனக்குஞ் சகுனிக்குஞ் சொல்லிய நீதிகளையும், அவையனைத்தையுந் தலைகுனிந்த வண்ணந் தாங்களுயிரிழந்த உடல்போற் கேட்டிருந்ததையும், அப்பா லிங்குற்றதையும், தான் யெண்ணிய கருமங்களையுஞ் சொன்னான். அதைக்கேட்ட சவுரியன் சன்னீர்பொழிந்து ஆ ! ஆ ! நமதுபிழைப்பு நன்றாயிருந்தது. ஐயோ ! பழிப்புக்கிடமாச்சே:நல்லதுயெனக்கு விடைகொடும். நான்போய்ச் சித்திரசேனனைக் கட்டிக்கொண்டுவந்து உம்மெதிரில் விடுகிறேன். அப்போதுபாண்டவர்களும் தேவர்களு மும்மையிரந்து குறைதவிர்த்துக் கொள்ளும்படி இவிடத்தில் வந்து வணங்குவார்கள். என்றெழுந்து கோபாக்கினி பொழிந்து மொழிந்த பராயனியைத் துரியோதனன் பார்த்து, அண்ணா ! இனி யிவ்வாறேசிப்பதிற்பயனில்லை. (முதற்கோணல் முட்டக்கோணல்.) என்பதாகும். எனக்காக இந்தவருத்தம் நீங்கள்யெடுத்துக் கொள்ளுகிறதைவிட, யானொருமொழி கேட்கின்றேன். அதற்குவிடைதாரும். அதுயாதென்றால் - தேவரீர் நமது தம்பிமார் முதலிய பேர்களையும் ஸ்திரீகளையு மழைத்துக்கொண்டு பட்டினம்போய்ச் சேர்ந்து, துசுவாசனுக்குப் பட்டங்கட்டி, சகலவிசாரணையுந் தாமேபார்வையிட்டுக்கொண்டு, மாமாவைக் கைசோரவிடாமல்,மற்றத் தம்பிமார்களையும் அரவணைத்து, என் தாய்தந்தையர்களுக்கும் உறுதிகூறி யவர்களைச்சம்ரக்ஷணைசெய்து, இறந்தால் உத்துரிமைக் கடனியாவு நீரே முதற்பிள்ளையாக விருந்து முடித்து வாழ்வைப்பெறக்கடவீர். யானிந்தவனத்திற் பிராணனை விட்டுக்கொள்கிறேன். சித்திரசேனனிடத்தி லகப்பட்டுக்கொண்ட துரியோதனாதிகளைப் பாண்டவர்கள்மீட்டிப பிராணபிச்சைகொடுத்தார்களென்னு மொழியைஉலகஞ்சொல்லக்கேட்டு நானிருக்க மாட்டேன். என்வாக்கியத்தை எவருந் தடுக்காதீர்கள். விரைவிற் போங்கோள். என்றுவிலக்கிக் கூடாரத்தினுட்போய் உள்ளறையி லிருந்துகொண்டு, ராஜயோகத்தைச் செய்பவர்கள்போற் பேச்சுடன்மூச்சையுமடக்கி, ஒரேதியானமா யிருந்துவிட்டான் அரவக்கொடியோன். வெளியி லிருந்தோர்களெல்லாங்காச்சுமூச்சென்று கதறிப்பதறி யழுதார்கள். வாசற்காவலாள்கள் சுயோதனனுடைய ஆக்கினையின்படி யாரையும் உள்ளே விடாமல், பேசாதீர்களென்று அமட்டிக்கொண்டிருந்தார்கள்.

துரியோதனனைப் பாதலத்தரக்கரழைத்துப் போய்ச்சிலபரிவுகள் கூறிமிர்த்யுசஞ்சீவிமந்திர முபதேசித்தனுப்புதல்.

அந்தவேளையிற் பாதலத்திலிருந்த அரக்கரநேகம்பேருக்குப் பூமியில் நினைத்த அரவக்கொடியோனுடைய யெண்ணந்தெரிந்தபடியால், தங்களுக்குற்ற தேவதையாகிய ஒரு சத்தியை யழைத்து உற்றதுரைத்து, வெற்றியையுடைய திரிதராஷ்டிரன் முதற்புத்திரனை இவிடங் கொண்டுவாவென்று விடுத்தார்கள். அந்தப்படியே அச்சத்தி மாயையினா லொருவருக்குந் தெரியாமற் றுரியோதனனுக்கு மயக்க முண்டாகும்படிசெய்து எடுத்துக் கொண்டுபோய்’ பாதலத்தி லிருக்கு மிராட்ச்சர்களுக் கெதிரில்விட்டது: உடனே அவர்களிவனைப் பார்த்து, உபசார மரியாதைகள் செய்து ஆசனங்கொடுத்துச் சொல்லுகின்றார்கள். கேளுமையா துரியோதன ராஜனே ! இவிடத்தில் அரசுபுரிந்துகொண் டிருந்த இராட்சசராஜனும் நாங்களுந் தேவர்கள்பேரில் யுத்தஞ்செய்து வெற்றி கொள்ளுங் காலையில், சில அரக்கர்களும் ராட்சசராஜனுந்தேவர்களாலிறந்துபோய், நாங்கள் முறிந்துவந்து பரமசிவனைக்குறித்து எங்களிராஜனைச் சேனையுடனெழுப்பித் தரவேண்டு மென்று தவமிழைத்தோம். அக்காலையிற் கயிலாசபதியானவர் பிரசன்னமாகி,உங்கள் ராஜனுஞ் சில ராட்சசர்களும் பூலோகத்தில் திரிதராட்டிரன்-காந்தாரி-இவர்களுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்து ந்

மியை யாளுகின்றார்கள். இன்னுஞ்சிலர் சிந்து தேசாதிபதி - சகுனி - சர்னன் - சோமதத்தன் - பகதத்தன் - இப்படியாகப் பிறந்திருக்கின்றார்கள். இவர்களெல்லாஞ் சுயோதனனுக்கு மெத்தவும் உரிய சிநேகிதர்கள். இதல்லாமலும் இந்திரன்முதலேவர் பாண்டவர்களாகப் பிறந்திருக்கின்றார்கள். தேவர்களிற் சிலர் விஷ்மர்-துரோணர்-கிருபர்-இப்படி அவதரித்திருக்கின்றார்கள். இருந்தாலு மிவர்கள்மாத்திரம்உங்கள்ராஜனுக்கு ஒரு காரணத்தினல் துணையா யிருப்பார்கள். மற்றையதேவர்களெல்லாம் பாண்டவர்க்குச்சகாயமாவார்கள். என்றுசொல்லிஅந்தரத்தானமாயினர். ஆதலால் - ஓ துரியோதனராஜனே! நாங்கள் சொல்வதைக்கேளும். இன்னுஞ் சிலநாளில்உங்களுக்கும் பாண்டவர்களுக்குந்தாண்டவராஜன்புரியுஞ்சர்வசங்காரகாலம் போல்யுத்தம்நடக்கப்போகின்றது. அந்தக்காலத்தில் நாங்களும்உமக்குப்படைத்துணையாவோம்நீர்விசனப்படவேண்டாம். எல்லாப்படைகளு மிறந்து நீர்மாத்திரந் தனியே இருக்கும்படி நேரிட்டபோதிலும், அந்தவேளையி லிறந்துபோன யாவரையும் பிழைப்பூட்டிக் கொள்ளும்படியா யொருமந்திர முபதேசிக்கின்றோம். அம்மந்திரத்தை நீர் பெற்றுக் கொள்ளுமென்று மிர்த்தியு சஞ்சிவிமந்திரத்தை உபதேசித்து, சிலகணைகளுங்கொடுத்து, மேலுஞ் சொல்லுகின்றார்கள். இன்று நீங்கள் சித்திரசேனனைச் செயித்து வெற்றி பெறுவீர்கள். ஆனலொரு மோச நடந்திருக்கின்றது. அது என்னவென்றால் - கர்னனுடைய இரதத்தைப் புதைந்து போகும்படியாய்ச் செய்து உங்களுக்கு அவமானந் தேடினவன் தேவேந்திரன். அவன் மாயையினு லின்று உங்களுக்கு அபஜெயநேரிட்டது. இதல்லாமலும் இன்னுஞ்சிலநாளையிற்கர்னனுடைய கவசகுண்டலத்தைத் தானமாகக்கேட்டு வாங்கிக்கொள்ளுவா னிந்திரன். இதன்றியும்-வேண்டிய அகிதங்களை யுமக்கு மும்மைச் சார்ந்தவர்களுக்குஞ் செய்து, ஐவருக்கும் வேண்டிய இதங்களைச் செய்யப்போகின்றான். அப்படியெல்லா நடந்தபோதிலும், நீரொன்றுக்கும் பயப்படவேண்டிய தில்லை. நாங்க ளிருக்கின்றோம். நீரிந்த வனத்திற் பிராணனை விட்டுக்கொள்ளும்படி நினைத்தகாரிய மியாது? இப்போதென்ன அதிசயத்தைக்கண்டீர்? இன்னும் பின்னுலிருக்கின்றது தேருக்குள்ள சிங்காரம். ஆதலால் இதற்குள்ளாகஇப்படிமயங்காதீர். என்று பர்பல உறுதிமொழிகளைக்கூறி, யாங்கள் சொல்லிய தேவரரசியத்தை ஒருவருடனேயுஞ் சொல்லாதீர். மர்மமாக வைத்திருந்து நடக்கநடக்கப் பார்த்துக்கொள்ளும். என்றுவிடைகொடுத்து, இஷ்டசத்தியைநோக்கி' இவரை முன்னிருந்தயிடத்திற்கொண்டுபோய் வைத்துவாவென்று உத்தரஞ் சொல்லியநுப்ப, அப்பத்தராகிய நிருதர் சித்தப்படியே வைத்துவந்துரைத்தாள் சத்தியானவள்.

துரியோதன னனைவரோடு மத்தினபுரஞ்செல்ல, வீஷ்மராதியர்விளைந்ததுசொல்லி விவேகங்கூற, அதுகேட்டு வருந்துதல்.

இப்பால்-புவனகர்த்தனுகிய துரியோதனன் பூமியிற் சற்றுநேரமிருந்து மயக்கநீங்கி யெழுந்து, மாமனையும் அங்கர் பூபனையுந் தம்பிமார்களையும் மற்றப் பேர்களையுந் தேர்களி லேறச்சொல்லி, யாவருடனுஞ் சிந்தைமகிழ்ந்துபேசிக் கலந்துசந்தோஷமுற்று, அஸ்தினுபுரத்தை நோக்கிவந்து, சகல வாடம்பரங்களுடன் சபையிற்போய்ச்சேர்ந்து, தனதந்தையைக் கண்டு வேறொன்றுஞ்சொல்லாமல், வேட்டையாடிமாட்டைக் காப்பாற்றிய விதங்களைச் சொல்லினன். அதைக்கேட்டு மகிழ்ந்தான்திருதராஷ்டிரனனவன். அதுகாலையிற் பாட்டனுகிய வீஷ்மரானவர் பேரனைப்பார்த்து, அப்பா துரியோதனு! என்னநினைந்து யாதுசொல்லி யெவ்விடம்போனுய்? அவ்விடத்தில் நேரிட்ட அதிசயமென்ன? மாமன்சகுனியையும்மார்த்தாண்டன்சேய்கர்னனையுந்தம்பி துச்சாதனனையும்மனதில்நீங்காமற்றரித்திருக்கின்றனையே: வனத்திலிவர்கள் வல்லமைத்திறமும், நினைத்தவையெல்லா முடிக்கு மறமும், அறக்கடவுள்முதலேவருங் காட்டி லுறக்குமுற் றிருக்கு மிருப்பும், அவர்கள் உனக்குச்செய்த உதவியும், கந்திருவன் றிறமும், கதைவீமனுறமும், தனஞ்செயன் வின்மையும், தருமராஜ னன்மையும், எங்கள் வார்த்தையிற் கசப்பும், மாமன் - கர்னன்-இவர்கள் வசனத்தில் இனிப்பும்' இவையாவுநீயறிந்தாயல்லவா? ஆகையால், இனிமேற் சாமம் - தாமம் - பேதம் - தண்டமென்னு நான்கில், முதலுபாயத்தின்படி ஐவரையும் அழைத்து ஸ்நேகஞ்செய்துகொண்டு' இழிச்சொற்களை நீக்கிப் பெரியோர்களுக்கு வழிபட்டுக்கொண்டு பெருமையுங் கீர்த்தியும் பொருந்தி வாழ்வதே உத்தமமாகும். நீங்கள் சித்திரசேனனிடத்தி லகப்பட்டபோது உங்களை மீட்டுப் பிராணதாரைவார்த்துக் கட்டவித்து' விடத்தக்கவல்லமைசாலிகள் துஷ்டர்களாயிருந்தால், உங்களியாவருங் கட்டுகளுடன் வெட்டியடிக்க வெகுநேரஞ் செல்லுமோ? உன்னிஷ்டர்களாகிலு மதை யோசிக்கயில்லையோ? அப்பா! பாண்டவர்கள் மெத்தவு மனம்பொறுத்த உத்தமச் சத்தியவான்கள். நல்லோர் பெரியோர்மனநோகலாகாது. (தாயார்மனமெரிய வாழாளொருக்காலும்.) என்னு நீதிவசனஞ்சொல்லி யிருக்கின்றபடியால், இதுகளை யோசித்து, பாண்டவர்களை நேசித்து; இருதிறவரும் விசுவாசித்து வாழ்வதே நலம். என்று சொல்லியகங்காபுத்திரன்வார்த்தையைக்கேட்ட கர்னனும் - சகுனியும் - துஸ்வாசனனும் - துரியோதனனு மொருவரையொருவர் நோக்கி நகைத்தார்கள். அந்தவேளையிற் காங்கேயனுக்குக்

கோபம்வந்து, பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்த கொள்கைபோ லாச்சென் றெழுந்து அரண்மனைக்குப் போய்விட்டார். உடனே துரோணாச்சாரியார் மன்னவனைப்பார்த்து, அரசனே! இந்த வமிசத்திற்கு முதல்வனாகிய விரதசிலன் உங்களளவி லன்புவைத்து, உரியபாசத்தினால் நன்னெறிகளையும் நன்னீதிகளையுந் தெரிவித்து, நடந்த சேதிகளையுஞ் சொல்லிவந்தால்: இப்படி நகைக்கத்தக்கதோ? இனி நானிலமெல்லா நகைக்க விருக்கின்றதை நாமாத்திர நகைப்பது காரியமோ? கெடுவாய் கெட்டுப்போகாதே யென்றுகிட்டியிருப்பவர் சிலசட்டங்கள்சொன்னால், இன்னுங்கெடுவேன் பந்தயம்போடு என்பதுபோலு மிருக்கின்றதே. குற்றமில்லாதிருப்பதே சுற்றம். குறைவில்லாதிருப்பதே நிறை. ஆதலால் - ஒரு குளத்திலுற்ற பற்பல மலர்களைப்போ லுடன்பொருந்தி வாழ்வது வாழ்க்கை. உமக்கும்பெருமை. எமக்குஞ்சிறப்பு. எவர்க்குங்களிப்பு. மேலும்-அந்தப் பாண்டவர்களுடைய வரமுந் திறமுங் கேட்கக் கேட்க மகிழ்ச்சியும், உங்களைநோக்குங்காலையி லிகழ்ச்சியுமாக விருக்கின்றது. இதனால் உலகமென்னசொல்லும்? இன்னாரின்னா ரிருந்தும் இப்பேர்ப்பட்ட தீவினைவிளையப் பார்த்திருந்தார்களா வென்றுசொல்லி, எங்களையல்லவோபழிப்பார்கள்? இவைகளையெல்லாம் யோசித்து, பெரியோர்களை நேசித்துப் பூசித்து, ஆசிபெற்றுக் காசினியானக் கடவையென்று அநேகமாகிய தருமங்களைச் சொல்லியகன்றார். அவ்விடத்திலிருந்த மற்றயாவர்களுந் தங்கள்தங்க ளிடத்திற்குப் போய்விட்டார்கள். அரவக்கொடியோன் அழகியதுணைவர்களும், அங்கதேசாதிபனும், சௌபலராஜனுந் தன்னைச் சூழ்ந்துவர அரண்மனைக்குட் சென்றான்.

துரியோதன னிராஜசூயத்தாலிந்திரனையவமானஞ்செய்யக்கருத வீஷ்மாதியர்மாற்றி வேறுவிதத்தால் நடப்பித்தல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! (ஆயமூடர்க் குரைத்தபொரு ளாற்றில் வீழ்ந்த பொருளொக்கும்.) என்றாற்போல வீஷ்மருந் துரோணருங் கூறிய உண்மையில் ஓரணுவளவும் உள்ளத்தைச் செலுத்தாமல், அன்றிராத்திரி இவர்கள் நாலுபேரும்புசித்து ஒருமண்டபத்தி லிருந்துகொண்டு யோசித்தார்கள். அண்ணாகர்னமகாராஜனே! மாமா சகுனி! தம்பி துசுவாசனா! நாம்வனம்போய் வந்ததைக் குறித்துச் சபாமண்டபத்திலிருந்த கிழவன் என்னசொன்னான் கேட்டீர்களா? இவைக ளிவனுக்கெப்படி தெரியுமென்றான். பாண்டவர்கள் சொல்லியனுப்பியிருக்கவேண்டுமென்றான் துச்சாதனன். அதைக்கேட்டுத் துரியோதனன் சொல்லுகின்றான். நமக்கு நேரிட்டிருக்குமிந்தயிழிவாகிய விசனந்தீரவும்-பெருமைகிடைக்கவும்-ஒருகாரியம் உன்னியிருக்கின்றேன். அதென்னவெனில்- தேவேந்திரன் நம்மை அவமானப் படுத்தச் சொன்னானல்லவா? ஆகையால் - முன்புபாண்டவர்கள்செய்த இராஜசூயயாகத்தைநாம்செய்து, சகலஅரசர்களையும்வெற்றிகொண்டு, அவிர்ப்பாகங் கொடுக்கும்போது இந்திரனை அவமானப் படுத்த வேண்டுமென்றெண்ணினேன். அண்ணா கர்ணா! இதற்கென்ன சொல்லுகின்றீரென்றான். உடனேயவன்-ஆ! மெத்த நல்லகாரியம். இதுநல்லபுத்தி எனக்குச்சிலவுகொடுத்தாலீரேழு பதினான்கு லோகத்தையும் ஒருநொடியிற் சுற்றிக்கொண்டு வெற்றிபெற்று வருகிறேனென்றான். அப்போது மாமனுந் துச்சாதனனு மிதுவேசரியென்றார்கள். இந்நால்வரும் மறுநாட்காலமே நித்தியவிதிகளைமுடித்துக்கொண்டு, சபாமண்டபத்திற்சகலசம்பிரமத்துடனேசென்றிருந்து, தந்தையைவணங்கி, இந்தக்காரியங்களைச் சொன்னான் துரியோதனன். அதைக்கேட்ட திரிதராட்டிரன் - வீஷ்மர் - துரோணர் - கிருபர் - அசுவத்தாமன் - விதுரன் - இவர்களைநோக்கி, தம்பிசொல்லிய வசனத்தைக் கேட்டீர்களா? இதற்கென்ன சொல்லுகின்றீர்களென்றுஇறைவன்கேட்டான். அதற்கவரவர்கள் யோசித்து, அவருள் வீஷ்மருந் துரோணரு மிதனைச்சொன்னார்கள். இராஜசுயாகமொருநா ளிரண்டுநாளையில் முடிககின்றதல்ல. திக்குவிஜயஞ் செய்யவேண்டியது. திரவியக்குப்பல் சேர்க்கவேண்டியது. ஒக்கலுடன் பகையின்றிவாழவேண்டியது. ஒருவரும்பகைசெய்யா திருக்கவேண்டியது. அப்படியிருக்க-இப்போது அப்பாண்டவர்களுக்கும் நமக்கும்நடந்திருக்குங் காரியங்களில், பாண்டவர்கள்பட்சம்பாதியும் நமதுபட்சம்அதிற்பாதியுமாகஇருக்குமாகையால்: இப்போது அந்தவேலை வைத்துக்கொண்டால் நடப்பது பிரையாசம். ஆனாற் கர்னராஜன் உலகமெல்லாஞ் செயித்துவருவே னென்று சொல்லியிருப்பார். அந்தஉறுதிகொண்டு அரசன்இப்படிஉரைத்ததுபோலிருக்கின்றது. அதற்கென்ன? மாங்காய்புளிப்போவாய்புளிப்போவென்றுதமக்கிஷ்டமானபடிசொல்லலாம். சொன்னபடிவெல்லுதல்பிரமனாலுங்கூடாது ஆகையால்-அந்தயாகத்தின்பலனைத் தரத்தக்கமற்றொன்றைச்செய்தாற் செய்யலாமென்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட திருதராஷ்டிரன் ஏதேனுமொன்றையோசித்துச் சொல்லுங்களென்ன, அவர்களவ்வாறே யோசித்து, வயிணவ யாகமென் றொன்றிருக்கின்றது. அஃதவ்விராஜசூயயாகத்தின் பலனையெல்லாந்தரத்தக்கது. ஆனதால் அரசர்களுக்கெல்லாந் திருமுகமெழுதி யனுப்பிவிட்டு, அவிடத்தில் யாகத்தைச் செய்யத்தொடங்கினால், அவரவர்கள் வரிசையுடன் வருவார்கள். பெருமையுமுண்டு. என்று வீஷ்மருந் துரோணருஞ் சொல்ல, அதைக்கேட்ட அரசன் துரியோதனனுடனுரைக்க, அவனுஞ்சம்மதிக்க' உடனே அரசர்களுக்கு ஓலையனுப்பி, அவரவர்களு மரியாதை

யுடன் வந்துசேரவும் யாகசாலையேர்ப்படுத்தி' அநேகங்கோடி பிராமணர் முதலிய பேர்களுக்கு அன்னமும் - சொர்னமும்-இன்னமும் வேண்டிய பொருள்களெல்லா மளித்து, யாகம்நடத்தும்போது ஒருபிராமணனைப் பாண்டவர்களுக்குஞ் சொல்லியனுப்பி வைத்தார்கள். அப்பிராமணன் அவர்களிடத்திற் போய், ஐயா ! வயினவயாகத்திற்கு அழைத்துவரச் சொன்னான் உங்களையாவென்றியம்ப, அதைக்கேட்ட தருமராஜன் அவ்வந்தணனைப்பார்த்து, ஐயா! என்ஐயாமுதலியபெரியோர்கள் யாவர்க்கும் வந்தனைபுரிந்துவணங்கினேனென்று சொல்லும். மேலும் - வனத்திற் பதின்மூன்று வருடங் கழித்துப் புரத்திற்கு வருவதென்று மன்னவர் சபையிற்சொன்னமொழியைமாறி' இப்போது நான் வரக்கூடுமோ? ஆதலால் என்தம்பிமாரியாவருக்கும் என்னாசிர்வாதஞ் சொல்லும். என்றுகூறலும் அவ்வேதிய னவரிடத்தில் விடைபெற்று வரும்போது, அப்பிராமணனைத் தண்டதரன் வளைத்துக் கொண்டு, ஒய் ஐயரே? நீரவாளிடம்போய் இப்படி சொல்லும். குருக்ஷேத்திரமென்னுமியாகசாலையில், துரியோதனாதிகளென்னு நூறுபசுக்களை, திரௌபதியினுடையகோபாக்கினிமூட்டி, வீமசேனனுடையகதையினால்,சபதமென்னும்நெய்சொரிந்து,ஊழ்வினையென்னுங்காற்றருக்க, பாண்டவர் பகையென்னுஞ் சமித்திட்டு, கடுமொழியென்னு மந்திரம் புகன்று, திருதராட்டிரன் காந்தாரிமுதலிய சகல ஸ்திரீகளுடைய கண்ணீரென்னுந் தண்ணீரிறைந்து, யமனென்னுந் தேவனுக்கு அவிர்ப்பாகங்கொடுக்க யாகத்தைச் செய்வதற்கு நாள் நிமித்துக்கொண் டிருக்கின்றான் வீமசேனனென்றுசொல்லும். என்றுகூறிவிடுக்கவும், அந்தவேதியன்போய்ச் சபையிலிருக்கு மியாவருங்கேட்க, தருமராஜன் சொல்லிய தன்மையையும் - வீமசேனன் சொல்லியவன்மையையும்-அவர்கள் சொல்லியவண்ணமே சொன்னான். அதைக்கேட்ட திரிதராஷ்டிரன் இளைத்துக் களைத்தான். மற்றயாவருங் கலக்கங்கொண்டார்கள். துரியோதனன் அவைகளையொன்றும் யோசிக்காமல், மகாமனமகிக்ஷியுடன்யாகத்தைக்குறைவறநிறைவேற்றி, வேதப் பிராமணர்கள் - மஹாரிஷிகள்-முனீஸ்வரர்கள் - இவர்களி யாவருங் களிக்க வேண்டிய தானங்கொடுத்து, தேவர்களுக்கும் அவிர்ப்பாகமளித்து' சகலராஜர்களுஞ் சகலதேவர்களுங் கொண்டுவந்த வரிசைகளைப் பெற்று, அவரவர்களுக்குத்தக்க வெகுமதிகளைச் செய்து, அன்னதானமே முதலாகிய சோட மகாதானங்களெல்லா நடத்தி, பெரியோரியாரு மிந்தயாகத்தின் பெருமைபோ லெங்கும் கண்டதில்லையென்று கொண்டாடிச்சொல்லவும், அரசர்களியாவருந் தங்கள்புரசனரியாவருமகிக்ஷிகொண்டுவாழ்த்தவு, அந்தந்த தேசங்களினின்றும் வந்திருந்த இராஜர்களெல்லாந் தமது சொந்த நகரங்களுக்குப் போகவும், இவிடத்திலிருந்த யாவருடனும் வணங்காமுடிமன்னன் - கர்னன் -சகுனி-துசுவாசனன் - இவர்கள் நால்வருஞ் சாலசம்பிரமமேளவாத்திய நித்தியகலியாண மங்களமனோகரமகிக்ஷியுட னிருந்தார்கள்.

தருமராஜன் துர்ச்சொப்பனங்கண்டிடம் பெயர்க்க, வியாசர்வந்துமௌற்கல்ப மகாரிஷிசரிதங்கூறித்தேற்றிச் செல்லுதல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே ! துரியோதனன்செய லிவ்வாறாக - பாண்டவரைவரும் வனத்திற் காலங்கழித்துக்கொண் டிருக்குநாளையில், ஒருநாள் தருமபுத்திர மகாராஜ னிராத்திரிபதினைந்துநாழிவரையிலும் விழித்திருந்து மாதவர்களுடன் வார்த்தையாடி, அப்பால் நித்திரைசெய்துகொண் டிருக்கும்போது ஒருசொப்பனங் கண்டெழுந்து, தௌமியர்முதலி தம்பிமார்களையும் வரவழைத்து, ஓ அன்பர்களே ! இப்போது எனக்கொரு சொப்பனாவஸ்தையுண்டாகி, அதில் இந்தவனத்தி லிருக்கு மிருகங்களெல்லா மொன்றுகூடி வந்து, நீங்களிவிடம் வருமுன்னம் நாங்கள்சுகமாக இருந்தோம். இப்போது உங்களா லெங்களுக்கு வருத்தம் நேரிட்டது. நாங்கள் வெளியிற் புறப்படுலவக் கூடாமையா யிருக்கின்றது. வேறொரு வனத்திற்கு நீங்கள் நீங்கிப் போகவேண்டிய தென்று கேட்டதாகக்கண்டேன். உடனேயெழுந்தேன். உங்களிடத்திற் சொன்னேன். ஆகையால் இந்தவனத்தை விட்டு அப்பாற்போகநினைக்கின்றேனென்ன, தங்களிஷ்டப்படி செய்வதே கருமமென்றியாவருஞ்சொல்ல, உடனே யாவரோடு மெழுந்து காமியவனத்திற்றானே மற்றோரிடம் போய்ச் சேர்ந்து, வீமசேனனாற் கட்டப்பட்ட பன்னகசாலையி லிருந்து, காலக்கடனைமுடித்துக்கொண்டு, சூரியநமஸ்காரஞ்செய்து, அக்ஷயபாத்திரத்தில்வரும் அன்னங்களைப்பன்னீராயிரம் பிராமணர்களுடன் புசித்து மகிழ்ந்திருக்குஞ் சமயத்தில், வேதவியாசர் வந்தனர். அவரைக்கண்டவுடனே உதிஷ்டிரர் எழுந்துபோய்ப் பூமியில் விழுந்து தொழுதெழுந்து, அர்க்கிய பாத்தியமாசமனியமு நடத்தி, ஆசனமளித் தெழுந்தருளச் செய்தனர். அப்போ தம்முனிபுங்கவர்ஐவரைநோக்கி,அருச்சுனனுடைய தவத்தின்வரலாற்றைச்சாங்கோபாங்கமாகச்சொல்லக்கேட்டு சந்தோஷமுற்று, உங்களுக்கென்னதாக்ஷி? சர்வசாக்ஷியாகிய பரமசிவமே காமாக்ஷியுடன் வந்து காட்சிகொடுத்திருப்பதால், மோக்ஷமென்பதை யுங்களுக்குக்காணியாட்சியாகத் தேடிக்கொண்டீர்கள். இன்னுஞ் சிலநாளையி லுங்களுக்கு வருகின்றது அரசாக்ஷி. இந்த அன்னதானமென்னு மாட்சிமையைச் செய்துவருகின்றதே மிகச்செழிச்சி. என்று புகன்றபோது உதிட்டிரரெழுந்து வணங்கி, சுவாமி ! என்னையுந் தேவரீர்வாக்கினால் தானஞ் செய்பவனெ

ன்று உரைக்கலாகுமோ? நான் மகாபாவி. பட்டினத்
தி லிருக்கும்போது பிராமணர்கள் முதலிய பேர்களு
க்கு அன்னதானங்களுஞ் சொர்ன்னதானங்களும் நட
ந்துவந்தன. காட்டில் வந்தபிற்பாடு அட்சயபாத்திர
மென்னும் ஒட்டில் வரும் அமுதைதப்புசித்து உறங்கி
இருக்கின்றோம். இஃதோர் மாட்சிமையோ? என்று
ரைக்கக்கேட்ட வாதராயனர் சொல்லுகின்றார்.

ஒ மன்னவனே! கேளும்: ஒருமகாரிஷி மௌற்
கல்யரென்பவர். அவர் சாஸ்திரங்களினளவுந் தவநெ
றியின் முகிவுந்தானங்களின் றொகையுஞ் சம்பூரணமா
கத்தெரிந்து, தானங்களிற் சிறந்தது அன்னதான
மென் றுணர்ந்து, அந்தத் தானஞ்செய்வது ஒருவரி
டத்தில் யாசித்தும்-உத்தியோகவியாபாரங்கள் செய்
துசம்பாதித்தும் - ஒருவர் மனநோவத்தண்டனைகண்
டனை இயற்றியும்-இவற்றாற்பொருளைச்சேர்த்துச்செய்
வது மகாபாவங்களென் றுன்னினவராய்:மலைகளிலும்
வளங்கொண்ட கழனிகளிலு முதிர்ந்துகிடக்கும் நெற்
களைப் பொறுக்கிச் சேர்த்து, அமாவாசையினன்று அ
தையரிசியாக்கி அன்னஞ்செய்து, காட்டிலிருக்கும் இ
லைக்கறிகளையுங் கூட்டி நாலுபாகமாகப்பிரித்து, ஒரு
பாகம் ஔபாச அக்கினிக்கும், ஒருபங்கு பிதிர்த்தே
வர்களுக்கும், ஒரு கூறு அதிதிகளுக்கும், ஒருபிரிவு த
னக்குமாகக் கொண்டு: மறுநாள் தொடங்கி உதிர்ந்த
நெற்களைப் பொறுக்கிச்சேர்த்து, பௌரணையினன்று
அதைத்தண்டுலகமாகச்செய்து நாலுபங்கிட்டு, மேற்
கூறிய வண்ணங்கொடுத்துத் தானும் புசித்து, ஒரு
மாதத்திற் கிரண்டுதர மிப்படியுண்டுவாரா நிற்பர். இ
தைக்கண்ட துருவாசமஹாரிஷியானவர் அம்மௌற்
கல்ய மஹாரிஷியிடத்திற் சென்று, பசித்து வந்தே
னென்றுகூறினர். அதைக்கேட்டலுந் தான் பௌர
ணையினன்று பங்கிட்டுவைத்தபாகத்தில் அதிதியின்
கூறையெடுத்துக் கொடுக்க, அதையவர் வாங்கிப் புசி
த்து, வயிறு நிரம்ப இல்லையேயென்று சொல்லினர்
அப்படிசொல்லவுந் தன்னுடைய பாகத்தையும் விசு
வாசத்துடன் கொடுக்க, அதையும்வாங்கிப் புசித்துப்
போயினர். மறுதரம் அமாவாசியையினன்று வந்து
அன்னம் வேண்டுமென்றுகேட்க, உடனே பாதபூசை
செய்து, அதிதிகளுக்கு வைத்திருந்ததை இவரையு
மதிதியாகக் கருதியளிக்க, அதைவாங்கிப் புசித்தவர்
முன்போல வயிற்றுக்குப் பற்றாதென்று சொல்லவும்
அவருமுன்போல் அத்துருவாசமஹாரிஷிக்குச்சரண
ஞ்செய்து தன்னுடையபங்கைக்கொடுத்து, தான்தண்
ணீர் புசித்திருந்தார். இப்படி இருக்க - மறுதடைவை
யுந் துருவாசர் வந்துகேட்க, அவரப்படியே கொடுக்
க, ஐயா! மூன்றுபட்சமாக எனக்கு உம்முடையபங்
கையுங் கொடுத்துவிட்டீரே: உமக்குப்புசிப்பு எவ்வித
மென்று வினவினர். அதற்கவர் - சுவாமீ! தேவரீர்
பரிபூரணமாகக் கொண்டதே எனக்குத் திருப்தியெ
ன்றுசொல்லினர். அதுகேட்டலுந் துர்வாசமுனிவர்
சிந்தைமகிழ்ந்து, நீர் தேவவிமானம் பெறக்கடவதெ
ன்று செப்பிப்போயினர்.

இங்கேமறுபடியும் மௌற்கல்யமஹாரிஷி தனது
நியமப்படி நடத்திவருங் காலையில், தெய்வலோகத்தி
லிருந்து தேவவிமானம்வந்து, அதினின்றுஞ் சிலதூ
தரிறங்கி, ஐயா! இந்தவிமானத்தில் ஆரோகணித்துக்
கொள்ளும். உம்மை யழைத்துவரும்படி தேவேந்திர
னனுப்பிவைத்தார். என்றுசொல்லக்கேட்டமௌற்கல்
யமுனிவர் அவர்களைநோக்கி, ஒ தேவதூதர்களே! இ
விடத்திற் கவிடமிருக்கு மியல்பைச் சொல்லுங்களெ
ன்றார். அதற்கவர்கள்சொல்லுகின்றார்கள். ஒ முனிநா
தா! இவிடத்திற் றானதருமம் - பரவுபகாரம் - சீவகா
ருண்யம் - அன்னதானம் - இவைகள்முதலிய சற்கரு
மங்களைச் செய்தபேர்கள், எந்தவுத்தமர்கள்மன மெ
ப்படி மகிழ்ந்து களித்தார்களோ? அப்படியே அநே
கநாள் வரையிலு மவிடத்திற் சவுக்கிய மடைந்திருக்க
லாம். அந்தப் புண்ணியவச நீங்கிப் போய்விட்டால்,
மறுபடியும் பூமியில்வந்து பிறந்து, மேலாகிய சம்யத்
தைப் பெற்றுத் தானங்களைச் செய்து, தேவதேகத்
தைப்பெறலாமென்றார்கள். அதைக்கேட்டஇந்தமஹா
ரிஷியானவர் சொல்லுகிறார். அப்பா? உங்களுக்கும்உ
ங்களையனுப்பினவர்களுக்கும் ஒரு கும்பிடுபோடுகின்
றேன். நீங்கள் வந்தவழியே போங்கள். இப்படிப்
போகவு மறுபடிவரவும் என்தரமல்ல. நானிங்ஙனே
இருக்கின்றேன். என்று அவர்களை யனுப்பிவிட்டு, சி
லநாள் வரையிலு மேற்சொல்லிய வண்ணமே நடத்தி
வருங்காலையில், பக்தபராதீனன் - பரவாசுதேவன் - ப
ரமபுருஷோத்தமன் - பாஞ்சசன்யன் - பஞ்சாயுதன் -
பரமதயாளு - பக்தவற்சலன் - பங்கஜலோசனன்-பர
ந்தாமன் - பரசிராமன் - பாரவிமோச காரணன் - பர்
ண்டவர்களே உங்கள் சகாயன் - பாமபதநாதன்- அந்
தமௌற்கல்ய மஹாரிஷியினிடத்திற்கு வந்துதோன்
றினர். அந்த மஹாரிஷியானவர் உடனேயெழுந்து வ
ணங்கி' சுவாமீ! மலரயன்பொறி தலைபி லுாறுமல் வர
மளித்தல் வேண்டும். ஒ மாதவனே! ஒ ஸ்ரீதரனே!
ஒ துளபமாலையணி தோளனே! ஒ பங்கஜத் தாள
னே! என்று வணங்கலும், அம்மாதவத்தோனை மா
லானவர் விமானத்திலேற்றி வைகுந்தத் தமைத்து
என்றுமழியாச் சுகத்தில் வாழ்வுறச்செய்தார். ஒதரும
நந்தன! வையகமோம்பி வாழ்விற்சிறந்து, ஐயமே
முதலிய அறங்களைச்செய்தல்அருமையல்ல. மழைக்கா
லத்தில் மேகம் பொழிவது சுபாவம். வறண்டகாலத்
தின்றூறல் பொன்மாரியென்பார்கள். ஆகையால்-நீங்
களிந்தவனத்திற் பன்னீராயிரம் பிராமணர்களுக்கும்,
இன்னும்வருபவர்களுக்கும், அன்னமளித்திருக்குமிந்
தக்காலத்தின் மகிமையைச் சொல்ல என்னாற்கூடாது
கண்ணனுடைய அருளினல் உங்கட்குச் சகலமுங்கை
வல்லியமாகும், இன்னுஞ் சிலநாள் கழித்துப் பொன்
னுலகனைப்போல் மண்ணுளக்கடவீர். பயப்படாதீர்

கள்: என்று பற்பல வார்த்தைபுகன்று, அவர்களடிவணங்கித்தொழ ஆசிபுகன்று அகன்றார் வேதவியாசர். ஐவரும் வனத்தில் அருமறையவருடன், செய்யுஞ் சருமந்திறம்பலின்றி, வையகம்புகழ வாழ்ந்திருந்தார்கள்.

சித்திரசேனன் சருக்கம் - முற்றிற்று.

பதினான்காவது

சயிந்தவன் சருக்கம்.

கண்ணன் துதி.

கருங்கடலினிறத்தானைக் கமலமலர்முகத்தானைக் கருணையானைப்
பொருங்கடமாக்கோடொசித்த புண்ணியனைப் பூமானைப் புரியார்போனை
பிருங்கமலப்பிருந்தையுறுந் தோளானையைவருக்குப் பின்சென்றானைக்
கருங்கலினைப்பெண்ணுக்குங் கண்ணனிருதிருவடியைக் கருதுவோமே.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே ! பாண்டவர்கள் காமிகவனத்திற்றவம்புரியுங் கருணைநிறைந்த மாதவர்களைக்கண்டு வணங்கி யாசீர்வசனம் பெற்றுக்கொண்டிருக்குங் காலையில், ஒருநாள் தவசிகளெல்லாரும் வந்து தருமராஜனைக்கண்டு, ஓ தவத்திற்குச் சகாயனே ! நாங்கள்செய்யுந் தவச்சாலைகளெல்லாங் காட்டுப்பன்றிகளு மியானைகளும் வந்து நெருங்கிவிழுந்து அழித்துப் போடுகின்றன. அந்தமிருகங்களை வரவொட்டாமலும், அதனாலெங்களுக்குத் துன்பமில்லாமலுஞ்செய்யவேண்டுமென்றுகேட்க, அப்பெரியோர்களுக்கு உற்ற இடையூற்றைத் தவிர்க்கும்படிகருதி, தௌமியாச் சாரியரையும் - திரௌபதா தேவியையும் - பன்னீராயிரம் பிராமணரையும்-பன்னகசாலையில் வைத்துவிட்டு, தாங்களைவரும் வேட்டைக்குப் புறப்பட்டு, யோசனைதூர மிருகங்களினுபத்திரவ மில்லாமலிருக்கும்படி மிரட்டி யோட்டிக்கொண்டு போனார்கள். இவிடத்திற்சிலபிராமணர்கள்வனங்களிற்சென்று, மாவிலை - தருப்பை - புரசையிலை - சமித்து - இவைகள் கொண்டுவரவும், சிலர் ஸ்நானஞ்செய்து நித்திய செபமுடித்துக் கொள்ளவும், தங்கள் தங்கள் பத்தினிகளொடு போய்விட்டார்கள். திரௌபதாதேவி மாத்திரம் ஒன்றியாய்ப் பயமற்றுப் பன்னகசாலையிலிருந்தாள். தௌமியருஞ் சிலபிராமணர்களுஞ் சபாமண்டபம் போலியற்றிய ஓர்சாலையி லிருந்தார்கள்.

பாண்டவர்கள் வேட்டைக்குப்போய்த் திரௌபதி தனித்திருக்கும்போது சிந்துராஜன்கண்டுவந்து வசனித்தல்.

அந்தச் சமயத்திற் கௌடதேசத்து ராஜனுடைய கன்னிகையின் சுயம்வரத்திற்குப் போயிருந்த காசிதேசாதிபதி முதலிய சகல தேசதேசாதிபர்களுஞ் சிந்துதேசாதிபதியுந் தங்கள் தங்கள் இரதகஜதுரக பதாதிகளோடு பாண்டவர்களிருந்த வனத்தோரமாக, பேரி- பாங்கா - கொம்பு - தவுண்டை - முரசு- துடி - தாளம் - முழவு-டங்கா - இவை முதலிய வாத்தியங்கள் கணகணவென்று முழங்கத் திரும்பி வருகின்றார்கள், அவ்வோசையையுள்ளறையிலிருந்ததிரௌபதா தேவியானவள் கேட்டு, இதேது முழக்கம ? முன்னே அந்த வனத்தில்வந்த துரியோதன னிந்த வனத்திலும் வந்தானோ ? என்று சந்தேகங்கொண்டு வெளியேவந்து, தழைந்து மலர்ந்து புட்பங்களைச் சொரிந்துநிறைந்து நிழலைத் தந்து கொண்டிருக்கு மொரு கந்தவிருட்சத்தின் கிளையை இருகரத்தினாற் பிடித்துக்கொண்டு கண்ணோட்டிப் பார்த்திருக்கும் காலையில் வெகு கும்புகளுடனே வந்த சயிந்தவராஜன் திரௌபதியைக் கண்டு, மன்மதவிரகத்தினால் மோகங்கொண்டு, இந்தவனத்தில் இவ்வளவு காட்சியாக நின்று எதிரே தரிசனமாகின்றவிது என்ன ஆச்சரியமாக விருக்கின்றது. பூமிவரையிலுந் தோய்ந்து விரிந்த குழலும், காதுவரையிலும் பாய்ந்து அகன்றவிழியும், வள்ளையும் - முல்லையும் - அல்லியும் - எள்ளின்மலரையுமுடையகமலமுகமும், அழகியதேகமும், சிறுத்தஇடையும்' நகைத்த இதழுமாகத்தோன்றிய இப்பெண்ணியாரோ ? என்று ஏக்கங்கொண்டவனாய், தன்பக்கத்திலிருந்த யானைப்பாகனை நோக்கி, சீக்கிரஞ்சென்று அவ்விடத்தில் நின்ற தெரிவை இன்னாளென்று அறிந்தோடிவாவென் றனுப்பினான்.

அவன் உடனே வந்து, அம்மா ! நீரார் ? உம்முடைய பேர்யாது? ஊர்யாது? உமதுநாயகரெங்கே? தாய்தந்தையர் யார்? இத்தனிவனத் தொன்றியாயிருப்பதற்கேது யாதுகாரணம் ? இவற்றைத் தயைபுரிந்து சொல்லவேண்டும். என்று கேட்ட தூதனைத் திரௌபதிநோக்கி, அப்பா ! என்னைவிசாரித்து வரும்படியுன்னை யனுப்பிய வேந்தரியார் ? அவரூரும் - பேரும் - பதியும்-அவரெங்ஙனமிருந்து எவ்விடஞ் செல்கின்றாரோ ? அதனையு மெனக்குச் சொல்லக்கடவையென்று கேட்க, அதற்கவன் - தாயே ? சிலராஜர்

கள் கௌடதேசராஜன்கன்னிகையின் கலியாணததிற்குப்போய் வருகின்றார்கள். அதோ தேரி லிருக்கின்றவர் காசிதேசராஜன். அதோ விமானத்தி லிருக்கின்றவர் திரிகர்த்ததேசவாசன். அதோ குதிரைமி தாரோகணித் திருக்கின்றவர் கலிங்கதேசபோஜன். அதோசிவிகையூர்ந்திருப்பவர் அயோத்தியாபுரிநேசன். அதோ யானையின்பேரி லிருந்து உன்னை இன்னாரென்று அறிந்துவரச்சொல்லிய விசுவாசன்சிந்துதேசமகாராஜன். என்று சொல்லவுந் திரௌபதிகேட்டு, அப்பா! நான் பாஞ்சாலராஜன் கன்னிகை. பண்டவரை வருக்கும் பத்தினி. என்பேர் திரௌபதி. துரியோதனாதிகள் மாயச்சூதாடி வஞ்சித்தனுப்ப வனத்தில் வந்திருக்கின்றோம். என்மகிழ்நர் ஐவரும் வனத்தில் வேட்டையாடப்போயிருக்கின்றார்கள். என்று சொல்லவும், அதுகேட்டவன் ஓடிச்சென்று, சிந்துராஜனோடு அந்த வார்த்தைகளைச்சொன்னான். உடனே அவன் யானையைவிட் டிறங்கி, உயர்ந்த இரதத்திலேறிக்கொண்டு திரௌபதிதேவி யிற்கும் இடத்திற்கு வந்தான். அவனைத் திரௌபதி கண்டவுடனே இன்முகங்காட்டி, அண்ணா! வாருங்கள்; வாருங்கள்; என்று உபசரித்து ஆசனங்கொடுத்தாள். நான் அவசரமாகப்போக வேண்டுமென்றான். இதோ உமதுமைத்துனமார்வரப் போகின்றார்கள். இருந்து இளைப்பாறி கண்டு வார்த்தையாடிப்போகலாமேயென்றாள். அஃதிருக்கட்டும்-உன்னுடைய கதியென்ன? இப்படி காடெல்லாந்திரிந்து, முகங்கரிந்து, உடல்சரிந்து, உண்டியிழந்து வாடி வருந்தி யிருப்பானேனென்றான். ஏதோ கடவுளின் சித்தம் இப்படியிருந்தால் நாமென்னசெய்யலாம்? எப்போது எங்களுக்கு நல்லகாலம் வருமோவென்று எதிர்நோக்கிக்கொண் டிருக்கின்றோமென்றாள்.

சிந்துராஜன் திரௌபதியோடு அடாத வார்த்தையாடித் துராத்காரமாய்த் தன்தேர் மேற் கொண்டுபோதல்.

அதற்குச் சயிந்தவன் சொல்லுகிறான்: ஐயோ! இனி நல்லகாலங்கூட வருமென்று யெண்ணங்கொண்டிருக்கின்றீர்களோ? நித்திய தரித்திரனுக்கு ஆசையதிகம். (இராக்கண்ட சொப்பன மிடாப்போல் வீங்கியது,) என்கிற பழமொழிபோலுமிருக்கின்றது இயானைவாய்க் கரும்பு, பாம்பின்வாய்த் தேரையும், பெருமணலில்விட்ட நெய்யும், கமர்வெடிப்பிற் கவிழ்ந்த பாலும், யமன்கைக்கொண்ட உயிரும், அணைகடந்தவெள்ளமும், ஈரேழு பிறப்பினுள்ளு மொருபிறப்பி லொருவேளை திரும்பினாலும், என்மைத்துனனாகிய அரவக்கொடியோன் கைக்கொண்ட பொருள் இந்தப் பிறப்பிலும் மற்றெந்தப்பிறப்பிலுந் தலைகிழாகின்றுதவஞ் செய்தாலும் வரப்போகிறதில்லை. என்வீணாசைகொண்டுவெதும்பி, இந்தப் பஞ்சைகளைநம்பிப் பருவத்தைப் போக்கடித்துக் கொள்ளுகிறாய்? இவர்கள் பராக்கிரம சாலிகளானால், உன்னை வஸ்திரபங்கம் பண்ணியகாலத்திலும், இவர்கட்குவிலங்குபோட்டு வேலைசெய்யச்சொல்லுமென்று விதுரனிடத்திற் சொன்ன காலையினும், சும்மாயிருப்பார்களா? அப்படியிருந்த இந்தவிறுதாவிழலரை யுறுதியாகநம்பி யொடுங்கிவிட்டாயே: உனக்கென்ன தாட்சி? பற்பலஸ்திரிகளும் பலபல சேனையும் உன்னை அடிபணிந்துகேட்க, நீ சீருஞ்செல்வமுஞ் சிறப்பும்பெற்று, வையகங்களிக்க வாழ்ந்து மகிழலாம், என்றைக்கிருந்தாலு மிறப்பதுநிச்சயம். இளமையும் பருவமுமின்பமு முனமும், நாளைக்கு வாவென்றால் வரமாட்டா. கண்டதே காட்சி கொண்டதே கோலமென்றிருந்து அநுபவிக்க நினைக்காமல், இப்படி அவஸ்தைப்படுவானேன்? எனக்கு மிஞ்சிய இராஜருமில்லை. உனக்கதிகமாகும் அழகினையுடைய ஸ்திரீகள் ஒருவருமில்லை. எழுந்துவா போவோம். என்னுயிருன்னதே: என்றுபலமொழிக ளியம்பினான்.

இவையனைத்துங் கேட்ட பாஞ்சாலி நடுநடுங்கி, ஓ சுவாமி! ஓ கிருஷ்ணா! ஓ அரிவாசுதேவா! ஓ ஆபத்பாந்தவா! ஓ அனாதரட்சகா! என்றுகூவி, இருகரங்களினாலுங் காதுகளை மூடிக்கொண்டு, ஹரி! ஹரி! என்ன வார்த்தை சொன்னாய்? அண்ணா! சந்திரவமிசமென்னுஞ் சாகரத்திற்பூத்த நூற்றைந்து தாமரைக்குள் ஓர் பொற்றாமரைபோற் பிறந்த துச்சலையின் நாயகனென்றும், எனக்குத் தமயனென்று மெண்ணிமுறைதப்பாமல் உபசரித்தபாவமா நீர் இப்படிக்கெல்லாஞ் சொல்லியது? நீர் நினைத்தது தருமந்தானா? இனி யுமது முகநோக்கிப் பேசினாற் றருமதேவதைக்கு அடாது, அமாவாசியை விரதத்திற்குப் புசித்துப் போவென்றால், உங்களுக்கு இருக்கும் ஆஸ்திபாஸ்தியைச் சொல்லுமென்று கேட்ட அழிம்புப்போலு மிருக்கின்றதே நீர் சொல்லியசொல். என்று சொல்லி, இந்தச்சண்டாளனெதிரில் தனியேயிருப்பது அழகல்லவென்று கருதி, தௌமியாச்சாரிய ரிருக்குஞ் சாலையைநோக்கித் தனதுதாமரை மலர்போன்ற பாதத்தை யெடுத்து ஓரடி வைத்தாள். அப்படிவைக்கவுமவனுடனே தாவியெழுந்து, இருகரங்களினாலுந் தகைந்து, இராவணன் சீதாபிராட்டியாரை எடுத்தகன்ற தன்மைபோ லிரதத்திலேற்றி, துரிதமாய்க் குதிரையைத் தூண்டி விடுத்தான். அந்தத் துரோகியாகிய சிந்துராஜன் இப்படி வாரியெடுக்கும்போது திரௌபதியானவள் கோகோ வென்றுகூவி, அலறிப் பதைபதைத்து, துடிதுடித்து, நடுநடுங்கி, உடல்வியர்த்து, கண்ணீர்சொரிந்து, ஐயா தௌமியாச் சாரியரே! ஓ தருமபூபதியே! ஓ வீமசேன மகாராஜனே! ஓ விஜயபராக்கிரமனே! ஓ நகுலமகாராஜனே! ஓ சகாதேவ தன்யனே! ஓ வனத்திலிருக்கு மஹாரிஷிகளே! ஓ அடர்ந்து நெருங்கிய வனதேவதைகளே! ஓ மிருகராஜர்களே! ஓ பட்சிராஜர்களே! ஓ அம்மா பூமிதேவி! ஓ ஆபத்பாந்த

வா ! ஓ அனாதரட்சகா! என்று அலறிக்கதறிப் பதறி ஸ்வாசமடங்கிச் சேர்ந்தாள்.

இந்த ஓசையைக்கேட்ட தௌமியாச்சாரியரும் பிராமணரிற் சிலரும் அத்தேர்க்குப்பின்றொடர்ந்தோடி, அச்சிந்துராஜனுக்கு வெகுவாகிய தரும நீதிகளைச் சொல்லி, அப்பா ! வேண்டாம்: இப்படி அனியாயஞ் செய்த இராவணனுடைய பலமும்-குலமும்-நலமும்-கெட்டுப்போனதைக் கேட்டறியாயோ ? ஒருவர் பத்தினி யொருவருக்குத் தாயல்லவோ ? அப்படிகொண்டுபோகத் தக்கவன் பின்னாலே வேதையில்லாமற் பார்த்துக் கொண்டுபோகவேண்டியது. இதோவரப்போகின்றார்கள் பாண்டவர்கள். ஐயோ ! அவர்களுன்னை யமனண்டையிற் கொண்டுபோய் விட்டுவிடுவார்களே: இதற்குள்ளாகத் துள்ளிக்குதித்துத் தொப்பென்றுவிழுவானேன் ? உன் தலைப்புழு மாண்டுபோவ தறியாமற் றன்னையறியாச் சன்னதங்கொண் டாடுவானேன் ? இனியேனு மரியாதையுடன் விட்டுப்போட்டு, உன்னுயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடிப்பிழை. என்று அநேகமாகிய வார்த்தைகளைச் சொல்லியுஞ் சிந்துராஜன் அவைகளை யுணராமல், திரௌபதை மூர்ச்சைதெளிந்து கூவுஞ் சப்தங் கேட்கவொட்டாமற் பேரி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு, தனதுசேனைவெள்ளத்திற் கலந்து கீழ்த்திசையை நோக்கிச் சென்றான். இவனைத் தொடர்ந்தோடிய தௌமியரிளைத்துக்களைத்து, ஒரு விருட்சத்தடியில் வந்து சோர்ந் திருந்துவிட்டார். சிலபிராமணர்களும் ஓடியோடிப்பார்த்து வாடி நின்றார்கள்.

திரௌபதி தன்னைப் பாண்டவர் தேடிவருவதைக் கண்டு சிந்தைகளித்தல்.

இப்படி யிருக்குஞ் சமயத்திற் பாண்டவர்கள் வேட்டையாடி, மிருகங்களை யெல்லாந் தூரத்தொலையி லோட்டிவிட்டு, வெய்யலில்வருந்தித் தமது பர்னசாலையைநோக்கி வந்தார்கள். அப்படி வந்தவர்கள் தமது பர்னசாலைக்கருகில் தௌமியர் முதலிய பிராமணர்களைக்காணாமல் திரௌபதை இருக்கும் இடத்தை நோக்கினார்கள். அவிடத்திலு மொருவரையுங்காணாமையால் வருந்தி, இதென்ன மாயம் ? இதென்ன வஞ்சகம் ? இதென்னமோசம் ? என்று வாடிநாலுபுறமுந்தேடி நாடும்போது, வீமசேனனும் அருச்சுனனுஞ் சிலகுறிகிதானங்கண்டவர்களாய், இதோ இரதம் வந்து போயிருக்கின்றது. இதோ திரௌபதையினுடைய அடிபெயர்த்திருக்கின்றது. இதோ ஆரோவொருபுருஷனுடை அடிச்சுவடிருக்கின்றது. இந்தரதச்சக்கரமிப்போதுதான் ஓடி இருக்கின்றது. சீக்கிரஞ் சென்றாற்காணலாம். என்றுஇருவரும்வியர்க்கவருத்தமுற்று, வியாக்கிர வேகம்போல் பராக்கிரமத்துடன் வெகுதூரம் ஓடிச்சென்று, தௌமியரைக்கண்டு சங்கதிகேட்டுக்கொண்டு, தங்கள் காலிலுள்ள வேகமுழுமையுங்காட்டி ஓடுவதானார்கள். அப்போது தருமராஜனும் தௌமியரும்-பிராமணர்களும்-பின்னிட்டு மெதுவாகச் சென்றார்கள். நகுலசகாதேவ ரிருவரும் விசனமுடனிவர்களுக்குப் பிந்திச்சென்றார்கள். இப்படி வரிசைவரிசையாக இவர்களெல்லோருஞ்செல்லும்போது அதி வேகத்துடன் இரதத்தைத் துரத்திக்கொண்டோடுஞ் சேனைப்பெருக்கத்தை யெதிரிற் கண்டார்கள். விசனம்விண்டார்கள்.

இப்படி இதோ அண்டையிற் போகின்றார்களென்று ஆனந்தங்கொண்டு சென்றோர்களிற் றண்டதரனனவன் கைக்கொண்டிருந்த வில்லைவளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிசெய்து கணக்கிறந்த கணைகளை வாரிச் சாடிக்கொண்டு நாடவும், இரதமுதலிய சேனைகளோடவும், கிரீடி காண்டீபத்தை வளைத்துத் தொனிசெய்து, இரதத்திற் பூண்டிருக்குங் குதிரைகளின் காலுகளிலேயும்-பதாதிகள் பதங்களிலேயும்-கஜங்களினுரங்களிலேயும்-கடுஞ் சரங்களைச் சொரிந்தனன். அப்போது அவ்வவைகள் நடுநடுங்கிப் பதைபதைத்து, வெப்பகாலத்து வெய்யலிற் சவட்டு மணலி லகப்பட்டுக் கொண்ட பச்சைப் புழுவைப்போற் துடிதுடித்து, காலோய்ந்து கதிதடுமாறி, கண்ணீர்சோரச் செந்நீரோடக் கலக்கமுற்று மயக்கங்கொண்டு தியங்கின. அப்படி அவைகள்தியங்கியதையுங் காரிடிபோன்முழங்குங் கணைகளி னொலியையுங் கேட்டுக் கண்ணுற்றுப் பார்த்த பாஞ்சாலியானவள் சயிந்தவனைப் பார்த்துக் கனைத்து, அடா துரோகி ! அடா அழியும்பாவி ! இதோ வந்துவிட்டார்க ளுன்னண்டவன்மார் ! என்னைப்பார்த்த கண்ணும், என்னை யெண்ணிய நினைப்பும், என்னைப் பதறியெடுத்தகரமும், பருந்துக்கு விருந்தாகுமடா ! நாய்க்கு முழுத்தேங்காய் கிடைப்பதி லென்னலாபமடா ! நரியும் பரியாமென்பதை யறியாயடா ! உனக்கு வந்தது கேட்டா ! அடா நாசகாலா! இவர்களுக்கெதிரில்யமனு நாடானடா ! அவர்களைச் சற்றுநாடி உற்றுப்பாரடா ! நீயாரடா ! அடாபதராகிய திருடா ! பழிதேடியசுமடா ! என்று பலவாறாகப் பேசி, அந்தப்பதிதன் முகத்தைப் பார்க்கக்கூசி, பரிதிகண்ட பங்சஜமலர்போல் அரிவைமுக மலர்ந்து, அகமகிழ்ந்து, மிகக்களித்திருந்தாள்.

பாண்டவர்கள் சிந்துதேசராசனோடு அரசர்களையெல்லா முறியவடித் தோட்டுதல்.

இப்படி களித்திருக்குந் திரௌபதியை அப்பாதகன்பார்த்து, ஓ மஹாலட்சிமிபோன்ற வடிவிற்சிறந்த மங்கையே ! பருவமங்கையே ! என்வார்த்தையை

ச் சிறிதுகேள். (காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம்.) என்பதுபோலும், (பொரிமாவைமெச்சினன் பொக்கைவாயன்.) என்பதுபோலும், பூரியர் தஞ் செல்வம் சிரியதென்றுன்னுந் திறம்போலும் பாரியயோசனை யின்றி, வீரியமற்றகாரியமில்லாத ஏரிபோன்றவரைச்சிரியரென்று நம்பிப் பாரியாக யிருக்கு நீ, ஆரியமாகச் சொல்லுகின்றாய். இதோபார் ஒரேகணை. ஒரேவில். இதனை லவர்களுடைய உடலையுங்கிழித்து, உயிரையு மழித்து, உன்னையுஞ் செழித்த பதவியில் இருத்தி, உலகமெல்லாங் கொண்டாடச் செய்கின்றேன். என்று ஒருகாலைமண்டியிட்டுக்கொண்டு வாய்மடித்து, மலரயன்கணை - மாயவன்கணை - வாசவன்சரம் - வானவர்சரம் - மழையின்பாணம் - மதியின்பாணம்-வருணாஸ்திரம் - மாயாஸ்திரம் - என்று சொல்லும்படியான பகழிகளை மாரிபோலவாரிப் பிரசண்டமாருதம் போற் றாற்றினன். அவனோடு சேர்ந்துசெல்கின்ற மற்ற மன்னவர்களும் பின்னிடாமற் பாணப்பிரையோகஞ் செய்தார்கள். அந்தவேளையில் அருச்சுனன் ஆலகாலசுவாலாமாலினி யென்னும் அஸ்திரங்களை விடுத்து, அதற்கு உபகருவியாக அநேகம் பாணங்களையுந் தொடுத்தபோது, காசிதேசாதிபதி யானவன் தன்கரத்திற் பிடித்தவில்லுங் குதிரையும் வீரபட்டமும் போய், மேனிமுழுமையுஞ் செந்நீரோடப் புண்பட்டுத்தியக்கமுற்று, ஐயோ! இதென்ன அனியாயம்? கூத்துப்பார்க்கப் போனயிடத்திற் பேய் பிடித்துக்கொண்ட கொள்கைபோ லாச்சுதே: நமது பெருமையுங் கீர்த்தியும் வீணாகப்போச்சுதே: (எட்டியுடன் கூடி இலவுந்தீப்பட்டது.) என்னுமியற்கைநேரிட்டதே. என்று வாடியோடினன்.

அப்போது வீமசேனன் திரிகர்த்தனை வளைத்துக்கொண்டு தாக்க, அவனுஞ் சில அஸ்திரங்களை வரிசை வரிசையாய் - பந்திபந்தியாய் - அணியணியாய் கூட்டங் கூட்டமாய்க் குறித்துவிட, அவைகளை யெல்லாம் வாயுகுமாரன்முறிக்க, கமலகாண்டிகையென்னுங் கணைமழைகளைத் திரிகர்த்தன் சொரிந்து மனமெரிந்துபுகைந்து நிற்குங்காலையில், திரிமூர்த்தியும் ஒரு மூர்த்தமாகவந்து எதிருற்றபோதிலும்அதிலொருகர்த்தனையும் விடத்தக்கவனல்ல இத்திரிகர்த்தனென்று சொல்லத்தக்க அப்பாராக்ரமவீரனை இந்திரகுமாரனாகிய சுவேதவாகனனும் வாயுமகனாகிய இடும்பிகொழுநனுமொன்றாய்ச்சேர்ந்து தகைத்து, இடியாஸ்திரமநாகம்பரிக்கணை ஐஞ்ஞூறும் அவனிருபக்கத்திலுநெருங்கயிறைத்தார்கள். இவைகளையெல்லாந்திரிகர்த்தன் கட்டுக்கு யீடாகிய அஸ்திரங்களைவிடுத்துத் தடுத்து எதிர்த்தான். இப்படி இருதிறவரும் நெடுநேரம்போர்புரிந்து கணைமாரி சொரிந்துவரவும் பாண்டவவீரர் மிஞ்சி தசமுகக்கணை-சதமுகக்கணை - உருகம்பு-சொருகம்பு-இப்படி பலவிதக்கோல்களைத் தொடுத்து திரிகர்த்தன் தேரையும் - குதிரைகளையும் - சாரதி தலையையும் - கொடியையும் - சிகரமுடியையும் போக்கினார்கள். அந்தவேளையில் திரிகர்த்தன் மிகநொந்தவனாகிப் பூமியில் நின்று, தெய்வமே! வல்லவனாட்டிய பம்பரம் மணலிலும் ஆடுமென்பது மெய்யாச்சே: வல்லவனுக்கும்புல்லும் ஆயுதமாகுமென்னும் வசனஞ் சரிபோச்சே: நமதுவாய் மதத்தால் வகைமோசம் வரலாச்சுதே: நமதுவிணைசையால் வாணாளழியவாச்சுதே: என்ன வெதும்பிப்பதுங்கி மறைந்தான். அப்பாற் கடோற்கசன் தந்தையும் பற்குனனுங் கரவேக சரவேகங்களில்மாறுவற் காலனைப்போல்வருவதைக்கண்டமற்ற அரசரிருவருஞ்சிறிதுநிதானித்து, நீஞ்சத்தெரியாதவனை யாறுகொண்டு போமென்னு நீதி நினைவில்வந்து, நாம் எதிர்த்து யுத்தஞ்செய்தாலு மிவர்களைவெல்லப்போகிறதில்லை. ஆதலால்-நாமிவர்களால் அவமானப்படுவதைவிட அகன்றுபோதல் உத்தமமென்று கருதி, இரதத்தைச் செலுத்திக்கொண்டு எதிரிகள் கண்களுக் ககப்படாமற் போய்விட்டார்கள்.

சிந்துராஜன் பாண்டவர்களோடு போராட முடியாமல் திரௌபதியைநிலத்திலிறக்கிவிட்டுத் தேரைவிரைவிற்செலுத்திக்கொண் டோடுதல்.

இப்பால் நகுலசகாதேவர்கள் சேனைகளை யெல்லாம் வளைத்துக்கொண்டுகால்மாடு தலைமாடாகக் கருணையாடி வரும்போது, சில சேவகத்திறமுடைய சேனாபதிகள் - யானைத்தலைவர் - குதிரைத்தலைவர் - இரதத்தலைவர் - பதாதித்தலைவர் - என்னுமிவர்கள் அந்நகுலசகாதேவரைஎதிர்த்துக்கொண்டதை அருச்சுனன் கண்டு, மழைகளைப்போல் அழற்கணைகளை விடுத்து மாட்டினன். அந்தவேளையிற் சயிந்தவன் தேரின் மீது வீமசேனன் தாவிச்சென்று, கோடிபாணங்களைக் குபுகுபுவென்றுகுறிந்தெய்து கவிநெருங்க, அதைத் திரௌபதிகண்டு அடா முறைமை தப்பிய துருகமே! புலிதின்னு மாமிசத்திற்குப் பேராசைகொண்ட பூனை போன்ற பொய்யனே! அடா புரட்டனே! இதோ உங்கள் ஐயன் வந்துவிட்டார் பாரடா. இடும்பாசுரன் பகாசுரன் - புண்டரீகன் - சராசந்தன்-ஆகியயிவர்களை யெல்லாம் எமலோகத்திற் கனுப்பிய இறைவன். இனி உன்பிராணனையும் என்துன்பத்தையும்இமைப்போதில் நீக்கிவிடுவார். என்று சொல்லக்கேட்ட சயிந்தவன் பல்லைக்கடித்து இந்திரக்கணை - அங்காரகன்கணை-சந்திரக்கணை - அர்த்தசந்திரக்கணை - இவைகளைத்தூவினன். இதற்குள்ளாகத்தனஞ்செயன் அச்சேனைவீரர்களைச்சாடி அவர்களெல்லாம் இளைத்துத் திக்காலொருவராயோடிச் சிதறியபின்பு தானும் நகுலசகாதேவரும் வந்து சயிந்தவனைக்கண்டு விடாதே; விடாதே: என்று அடாமழைபோலும்-வடவாமுகாக்கினிபோலு

ம்-பல தொடைகளைப் படபடப்புடன் விடவும், அது கண்ட சயித்திரதன் ஆயிரங்கோடி யம்புகளைக் காயுங் கதிரோனை மூடும்பனிபோல விடுத்து, படாபஞ்சன மாகஅடித்தான். உடனே நால்வருந் தேவர் நாயகன் கணையை எடுத்துவிடுத்து, மண்ணும் விண்ணும் ஒன் ருகும்படி வளைந்து அடுத்தார்கள். அதைக்கண்ட சி ந்துதேசன் சந்தேகங்கொண்டு, ஆண்டையில் வந்த அரசருமீங்கிச் சேனைகளுங் குழுங்கிப்போயின. பக்கச் சொல் பதினயிரமென்னும் நீதிபோல நமக்கு உறுதி சொல்லுவா ரொருவருமில்லை. என்று யோசித்து திரௌபதியைத் தேரிலிருந்து நிலத்தில் விடுத்து, சாரதியைக் கண்காட்டினன். அவனுங் குதிரைகளை யோட்டினன் அப்போது வாயுவேக மனோவேகமாய் நெடுந்தூரங் காடேகெதியாய் வழிதுறையில்லாமல் ஓடி மறைந்தான் சயித்திரதன்.

தருமராஜன் பாஞ்சாலியைத்தேற்றி, வீமா ர்ச்சுனராற் சயிந்தவனை உயிரோடுபிடித் துவரச்செய்தல்.

இவிடத்திற் பூமியில்நின்ற பாஞ்சாலியை நால்வ ரும்வந்து சூழ்ந்து உபசரித்துப் பயமகற்றித்தேற்றி க்கொண் டிருக்கும்போது, பன்னீராயிரம்பிராமணரு ந் தௌமியாசாரியருந் தருமராஜனும் வந்துசேர்ந்து, திரௌபதாதேவியினுடைய மனவருத்தங்களை நீக்கி, அவன்வந்து எடுத்துப்போன விதத்தைக்கேட்கவும், பாண்டவர்பிராட்டி பலபலவென்று கண்ணீர்சொரிந் து, இந்தப்பாவியை நான் தமயனென்னு முறைமை யில் உபசரிக்கத்தகாத வார்த்தை மொழிந்தும், என் னைத் துராக்ரதமா எடுத்துவந்து உலகநகைக்கவும் ந மது சத்துருக்கள் ஒருங்கே பழிக்கவுஞ் செய்துவை த்தவனை, உயிருடன் விடுத்து இவனுற்றிருக்கின்றீர்க ளே; ஐயோ! இஃதென்னவீரமென்றுள். இந்தவசன த்தைக்கேட்டவீமசேனன் கதையைக் கரத்திற் பிடித் துவிறுவிறெனச்சுழற்றி, வாயுவேகத்திலும் பதின்மட ங்கதிகமாகப் பாய்ந்தான். அதைக்கண்டதருமராஜன் வீமனையழைத்துத் திரௌபதியைநோக்கி, ஓ மின்ன லையொத்தஅன்னமே! முன்னமே பிரமன்விதித்தவிதி இதுவென்று யெண்ணமல், இப்போதவனைக்கொல்லு ம்படி கூறுகின்றனையே: அப்படி கொன்று விட்டா ல் உன்னைத்தொட்டு எடுத்தகுற்றமுங் குறைபுநீங்கிப் பழிச்சொல்லுகளும்அற்றுப்போகுமா? சிறியோர்செ ய்த தீங்கைச் சகிப்பவர்கள்யெவர்களோ? அவர்களே தலைமையுடையோ ரென்று தருமஞ் சொல்லியிருக்க, நாமும் அவனைப்போல் முன்பின்யோசிக்காமற் செய் வது முறைமையோ? நல்லது; நாய்குரைத்து நத்த ம்பாழாகுமா? அந்தத்துஷ்டன்அக்கிரமத்தினலுன் னை எடுத்துவந்தபடியால், (அரசமரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் பிடித்தது.) என்னும் வாக்கி யம்போல் அவனுடைய நல்லாமனும், அவனைச்சேர்ந் த அரசருஞ் சேனையும், அழிந்தும் - பயந்தும் - பது ங்கியும் - ஒதுங்கியும் - ஓடிப்போனர்கள். இனைத்தோ டினவரை எதிர்க்கலாகாது தன்னுந் தருமமிருக்க, இ ப்படி அவசரப்படலாமா? என்று சொல்லி வீமசேன ன் முகத்தைநோக்கினர்.

அப்படி நோக்கும்போது தான்சொல்லிய தரு மங்களியாவும் அவனுக்குச் சம்மதமில்லாதிருப்பதை த் தானறிந்துகொண்டு, தம்பி! அச்சயிந்தவனே? ந மது நூற்றைந்து பேருக்கும் பின்பிறந்த அருமைத் தங்கைக்குப் புருஷன். நமக்கு மைத்துனன். வாழை யாடியும் வாழைக்கே நஷ்டம். முள்ளாடியும்வாழைக் கேசேதம். ஆகையால்-அவனைக்கொல்லாமற் பிடித்து வந்தால் இவிடத்திலிருக்கும் பெரியோர்களுக்கு முன் பாகவைத்துத் தருமங்கூறி, மரியாதைத் தாழ்வும் ப ரியாச வார்த்தையுமாகச் சிலவார்த்தைகளைப்பேசி அ னுப்பிவிடலாம். அது நமக்கு மேன்மை. அவனைக் கொன்றுவிட்டால்: நமது தங்கைவிதவையாவளே: அ வள் விதவையாயிருக்கப் பார்க்கும்போதெல்லாம் ந மக்கே துன்பமும் அடிமடி நெருப்புமாக முடியா தோ? அப்பா தம்பி? என்வார்த்தையைத் தள்ளாம ற் பிடித்துக்கொண்டு வரக்கடவை. என்று தருமநந் தனர் கூறி முடிவதற்கு முன்னமே வீமசேனன் கண் ணுக்கெட்டாமற் போய்விட்டான். அப்பால் விஜயனை நோக்கி, தம்பி! நீபோய்ச் சமீபத்திருந்து, உன் அ ண்ணனுடைய கோபாவேசத்தை யடக்கி, ஆளையுயி ருடன் கொண்டுவருதல் உன்கடமை. நானிவர்களை ய ழைத்துக்கொண்டு வனம்போய்ச் சேர்ந்திருக்கின்றே ன். சீக்கிரம் வாருங்கள். என்றுசொல்லி யனுப்பிவிட் டு, தௌமியர் - நகுல சகாதேவர் - திரௌபதி - ம ற்றப் பிராமணர்கள் - இவர்களோடு பிரயாணமாகி ந டந்து, தங்கள்பன்னகசாலையுள்ள காமியவனம்போய் ச் சேர்ந்திருந்தார் தருமராஜன்.

வீமார்ச்சுனுள் சயிந்தவனைப்பிடித்துத் தேரிற்கட்டிக்கொண்டு வருதல்.

இப்பால் வீமசேனன் தன்தமையன்சொன்ன ப க்கியமெவையுந் தன்காதிற்கேளாதவனாக மனவேக த் திலுமிஞ்சினவேகமாய் வந்து, வழிதுறையில்லாமல் வனத்தில் நுழைந்து, இரதச்சக்கரம் போயிருக்கின்ற தாரியைப்பற்றி வருகின்றான். அப்போது சயிந்தவா னெடுந்தூரம் வரையிலுந் திரும்பித் திரும்பிப் பார்த் துக்கொண்டு, பட்சிவேகத்திலும் அதிகவேகமாகச் சென்று, குதிரைகளுந் தானுஞ் சாரதியும் இளைத்து வருத்தமுற்றபடியாலும் - வீமன் முதலிய பேர்கள் வாராமையாலும் - இரதத்தை மெதுவாய் நடத்தச் செய்து, தானுஞ்சாய்ந்து, குதிரைகளும் ஓய்ந்து, உற ங்கிக்கொண்டு செல்கின்றான். அந்தச் சமயத்தில் த

ண்டதரன் இரண்டு பின்னடியும் பிடரியிற்பட வோடிக்கண்டான். தேரைக்கண்டவுடனே கடலுங்கலங்க-மலையுங்குலுங்க - காருஞ் சுழன்றோட - பாருங்கிழிந்தாட - ஓங்காரமிட்டு ஆரவாரஞ்செய்தான். இந்தப் பேரோசையாற் குதிரைகளுஞ் சாரதியு மருண்டு வெருண்டார்கள். சோர்ந்திருந்த சயிந்தவன் திடுக்கிட்டுத் திரும்பி நோக்கி, சாரதி நமன்வந்துவிட்டான். நடத்து தேரை. என்றுதானுஞ்சாரதியுமாக அதிகவிரைவில் முடுக்கவே, விமனும்,விரைந்துபறந்துவந்து சமீபத்தில் அடுக்கவே, பக்கத்திருந்த அடர்ந்த பாரியபுதரிற் படுக்கென்றுபாய்ந்து மண்ணைக் கவ்விக்கொண்டவனைப்போற் பதுங்கிப் பூமியுடன்பூமியாயிருந்தான் அப்போது விமசேனன் வந்து இரதத்தை மறித்துப் பார்க்க, அதிலவனைக் காணாமலிருந்தமையாற் சாரதியைநோக்கி, அடாசாரதி ! எங்கே சயிந்தவனென்றான். அதற்கவன்நடுங்கி, ஐயா ! நான் பார்க்கயில்லையேயென்று வாய்திறந்தான். உடனே பளீரென வறைந்தான். அச்சாரதி திடீரெனப் பாரினில் விழுந்து மரவட்டைபோற் சுருட்டிக் கொண்டான். வீமன் அவனை வாரிப்பிடித்து அரட்டிப் புரட்டிப் பொம்மையைப்போல் அசைத்தான். அந்தச்சாரதி வணக்கமுடன் பார்த்து, சுவாமி! நான் வெகுகுடும்பி. என்னைக்கொல்லவேண்டாம். உள்ளது சொல்லுகின்றேன் வள்ளலே! நீரிங்குநெருங்கி வரும்போது புறத்திலிருக்குங் காட்டிற்குதித்ததறிவேன். அதுஎந்தக்காடோ? எந்தயிடத்தி லிருக்கின்றாரோ? எனக்குத் தெரியாதென்று சொல்லி வணங்கினான்.

அவனப்படி சொல்லவே அவனை நிலத்திற்போட்டுவிட்டுக் காட்டில்நுழைந்து, கொத்துச்செடிகளும் படருங்கொடிகளும் - அடர்ந்தபுதரும்-தழைந்தசோலையுந் தப்பாமல், ஒவ்வொன்றாய் ஒவ்வோரடி கதையினால் அடித்து நொறுக்கி வரும்போது, அருச்சுனனும்வந்து அண்ணனைக்கண்டு, அகப்பட்டானோ வென்று மிகுகோபங்கொண்டு கேட்டனன். அப்படி கேட்கவும் விமன் இங்குதான் மறைந்தானென்று சொல்ல, உடனே இருவரு நுழைந்து காட்டை வேருடன் கெல்லிக்கொண்டு வரும்போது, ஒருபெரியபுதரைக்கண்ட விமன் கதாயுதத்தா லோங்கியடித்தனன். அவ்வடியா லந்தப்புதர் பொடியாய்ப்பறக்கவும், அதிலிருந்து அப்பா ! அப்பா! என்று இரண்டுமொழியுண்டாயடங்கிவிட்டது. உடனே வீமசேனன் உட்புகுந்து,அவன் தலைமயிரைப் பற்றிப் பறபறவென்று யிழுத்து வெளியில்வந்து, பாரிலோங்கிமோதி, பதத்தினாற் றுவைத்து, கரத்தினாலறைந்து, சிரத்தினிலுதைத்து,புயத்தினைநெரித்து, புறத்தினிலிடித்து, கண்விழி பிதுங்கக் கழுத்தினைப்பிடித்து, தலையுடன்கால் சேர்த்துச் சக்கரம்போலாக்கி, ஆயர்பாடியில் அமலனனந்தன் சகட்டினையுதைத்த தன்மைபோ லுருட்டி, தலைமயிர் பற்றித் தரையினில்மோத ஆக்கிரமித்தெடுத்தான்.

அப்படியெடுத்த அவசரநோக்கிய அருச்சுனன் அண்ணனைநெருங்கி வணங்கி, இவன் இப்போது இறந்தால் இசைநமக்கில்லை. இவனை உயிருடன் வைத்து உலகெலாநகைக்கச் சின்னப்படுத்த வேண்டுமென்று சிந்தைசெய் திருக்கின்றேன். அப்பால் தேவரீர்சித்தமெதுவோ ? அதுவேசிறியேன்பாக்கியம். என்று அருச்சுனனுரைத்துத் தேரினிற் கட்டுவோ மென்னவும், விமனுக்குக்கோபம் எழுகடல்போற் பொங்கவும், உடனே தன்பல்லைக்கடித்துப் பிசைந்து கசக்கிப் பாரில் விட்டெறிந்தான். அப்போ தச்சயிந்தவன் காற்றுநீங்கிய துருத்தியொத்து, போட்டகாலும் போட்டகையுமாய் - பொம்மைபோல்மெய்யுமாய் - பூமியிற்கிடக்க, அவனை அர்ச்சுனன்போ யெடுத்துக் களையாற்றி, தேரில்வைத்திருந்த தண்ணீர் கொடுத்துத்தேற்றி, தேறி எழுந்தவுடன் அவனை இரதக்காலுடன் இருபுயம் ஒடியச் சேர்த்துக்கட்டினன்.

அப்போது விமசேனனுடைய சிந்தை தாளாமல், ஓடிவந்து ஒரு உதை உதைத்து அரசிலைபோன்ற அக்கினிக்கணையில் அவன் தலைமயிரைஐந்துப்பிரிவாக அமைத்து, மற்றவை எல்லாந் தீயினாற் கருக்கி, ஐந்து பிரிவிலும் அலர்களையுந் தழைகளையுங் கட்டி, கருமண் - செம்மண் - வெண்மண் - பசுமண் - இவைகளைக்குழைத்து,கத்தரித்தோட்டத்துப் பொம்மைக்கிடுங் கோலம்போற்புள்ளியிட்டுப்பார்த்து கக்கடகக்கடவென்று நகைத்து, சாரதியைநோக்கி இரதத்தைத் திருப்பிவிடச் சொல்லி, அதில் தாங்களிருவருமேறி நாயசுத்தட்டி ஞர்க்கார்ந்து வரும்போது; நடந்த செய்திகளை யுன்னியுன்னி இரத்தம் பொங்கி, இருகரத்தையு நெருப்புப்பொறி பறக்கத் தேய்த்து ஓரறைகொடுத்தான். அவ்வறைகொம்மென்றுபடவும், அப்பாவென்று கொட்டாவி விடுபவர்களைப்போல் வாயைத் திறந்துகொண்டான் சயித்திரதன். அப்போது வீமசேனன் இந்திரியங்களெல்லாம் புலன்வழி சிதறவிருந்த சயிந்தவனைநோக்கி, அடா குருத்துரோகி ! உன்னை வதைத்துக் சதைத்துப் புதைத்துப் போடுவதற்கு நினைத்தேன். என்தம்பி யுனக்குப் பிராணபிச்சை கொடுத்தான், ஆகையால்-நீ பிழைக்கவேண்டு மானால் உனக்கொரு பேரிடுகின்றேன். அதை எவ்விடத்திலும் எப்போதுமறவாமற் சொல்லிக்கொண்டிருப்பையா?என்றுகேட்டான். ஐயோ! அதற்கவன்என்சொல்வான்?சொல்லாமற்போனால் உதைமேலுதை.அடிமேலடி. குத்துமேற்குத்து. மொத்துமேல்மொத்து. என்னசெய்வான் ? பாவம்; ஆண்டவனே ! நானிந்தப் பூமியிலுள்ள வரையிலும் நீங்கள் இட்டபேரைச் சொல்லிக்கொண் டிருப்பது மல்லாமல், என்பிள்ளைகளுக்குக்கூட அந்தப்பேரை நிலைநாட்டி வைக்கிறேனென்றான். அதைக்கேட்ட வீமசேனமஹாராஜன் சொல்லுகிறான். அடாமுறைதுறையற்ற மூடா. இன்று முதல் உனக்குப் பாண்டவ தாசனென்று பேரிட்டேன். எங்

கேசொல்லுபார்ப்போம்? எனவும்-உடனே பாண்டவ தாசன். பாண்டவதாசன். என்றுவழிமுழுவதுஞ்சொல்லிக்கொண்டு வந்தான்.

தருமராஜன் சயிந்தவன் கட்டவிழ்ப்பித்து வீமசேனனைச் சிலவினவ, அதற்கவன் விடைதரல்.

அப்படி அவன் சொல்லிக்கொண்டு வரும்போது இரதத்தை வேகமாகச் செலுத்திக்கொண்டுவனத்திற்குவந்து, தமயன் முதலிய யாவரு நெருங்கி யிருக்கக்கண்டு, இரதத்தைவிட்டு இறங்கி, இவனைநோக்கி வாயை மூடிக்கொள். தருமபுத்திர மகாராஜன் கேட்கும்போது உரக்கச்சொல். பத்திரம். என்று தனது கரத்தைநீட்டி விரலைக்காட்ட, அதையவன்கண்டு, இவன்கை யமன்சூலமோ? ஆலகாலவிஷமோ? வடவாமுகாக்கினியோ? என்று மதிமயக்கங்கொண்டு, என் இஷ்டதெய்வமே! உங்கள் சித்தத்தின்படியே சொல்லுகிறேனென் றுரைத்தனன். பின்பு சிந்துதேசனைத் தேரிலிருந்து இறக்கி, கட்டுடன்கொண்டுவந்து தருமபூபதிக்குமுன்னே நிறுத்தி, தாங்களிருவரும் அவரை நமஸ்கரித்துக்கொண்டு ஒருபுறத்தி லொதுங்கி இருந்தனர். அப்போது திரௌபதாதேவி இந்த துஷ்டாத்மனுடைய முகத்தைப்பார்த்து நகைத்து, மறுபடியுநோக்க வெட்கமுற்றுத்தலை கவிழ்ந்துகொண்டனள். அப்போது பிராமணர்களும் - தௌமியாச்சாரியரும் தவ சிரேஷ்டர்களும் - ரிஷிபத்தினிகளும் - பிராமணஸ்திரீகளும்நெருங்கியிருக்க, அந்தச்சமயத்தில்வீமசேனனைத் தருமராஜன் பார்த்து, தம்பிவீமசேனா! இவனை எங்கேகண்டாய்? எப்படி அகப்பட்டான்? என்று வினவும்போது வீமன் சங்கதிகளெல்லாஞ் சொல்லி, இவனுடைய பேரைக்கேட்டால் தங்களுக்கு எல்லாந் தெரியுமென்றான். என்னவே தருமநந்தனர் இதிலேதோ விந்தை இருக்கின்றதென் றுணர்ந்து, அப்பா சிந்துராஜனே! உன்பேரென்ன? என்றுவினவவும், அவன்வெகுபேர் கூடியிருக்கு மிடத்திற் சொல்லவெட்கப்பட்டு, மெள்ளப் பாண்டவ தாசனென்றான். தருமராஜனுக்குப் பின்பக்கமாக இருந்த வீமசேனன் உறுக்கிபார்த்து, இருகரத்தையுந் தேய்த்தான். அப்படிதேய்க்கவே தனதடிவயிறு குறியும்படியாக யெக்கி உரக்கக்கூவி, பாண்டவதாசன். பாண்டவதாசன். என்றுவாயோயாமற் சொன்னான். அதைக்கேட்ட அறக்கடவுளானவர் அடங்காதசந்தோஷமும் அவ்வளவுவிசனமுமுடையவரானார். மற்றையர்களெல்லாங் கல கல கலகலவென்று நகைத்தார்கள். தருமநந்தனர் சற்றுநேரம்போதுத்துத்தம்பியைநோக்கி, இவனைக்கட்டவிழ்த்துவிடக்கடவையென்றார். உடனே அவருத்தரவின்படிதண்டதரன் கட்டவித்துவிட்டனன்.

அதைக்கண்ட தருமராஜன் அந்தச் சயிந்தவனைச் சமீபத்தழைத்து நிறுத்தி, வீமசேனனைப்பார்த்து, இவனுக்குக் கண்ணைச்சுற்றி நாமமென்னவென்று கேட்டார். அண்ணா! திண்ணையிலிருக்குந் தாதனுக்குக் கண்ணைச்சுற்றி நாமமிருக்குமென்றார். ஆனால் இவனுடைய மீசைஎங்கே என்று வினவினர். மீசையையுடைய வீரனாகில் தாய் - தங்கை-என்னு முறைதப்பி நடப்பானா? இல்லாமையினால்தான் இந்தக்கெதியாயினானென்றான்: அப்பா! இவன் தலைமயிர் ஐந்துபிரிவாயிருக்கவேண்டிய தென்ன வென்றார்: குடும்பசவரக்ஷணைசெய்து குலத்துக்குப் பழிதேடாமற் புகழைத்தேடுகின்ற பிள்ளைகளுக்குச் சவளமென்னுங் குடுமிகலியாணஞ் செய்கின்றதுண்டு: இவன் குலத்தையுங் கோத்திரத்தையுங் கெடுக்கவந்த பாவியாகையால், அலையும்படியான ஐந்துகுடுமித்தலைய னாயினா னென்றான். அதுகேட்ட தருமபுத்திரர் மனமிளகி, இவ்வளவு வேலை இவனைச்செய்வதற்கு உன்மனம் இளைக்க இல்லையோ? என்றுகேட்கவும் வீமன்சொல்லுகிறான். அண்ணா! கைப்பெண்சாதி பிள்ளையானாலுஞ் செய்யுஞ் சடங்கைத் திட்டமாய்ச்செய்யவேண்டுமென்னு மொழிதப்பாமல் நடத்தினேனென்றான். இவ்வீமசேனனுடைய திடத்தையுங் கோப அடத்தையுங்கண்டு, உதிட்டிரர் மறுமொழிகேட்காமல், தம்பீ! இவன் சாம்பிரதாய குலத்திற் பிறந்தவன். சந்திரகுலத்திலுதித்த சகலராஜப்பிரபுடீசனாகிய சற்பக்கொடியோனுக்குமைத்துனன். சிந்துதேசாதிபதி. மகாபுத்திசாலி. இவனால் விளைந்த தொன்றுமில்லை. சொல்லுவார் பேச்சைக் கேட்டுக் கெட்டான். ஆகிலும் நீ இப்படி அவமானஞ் செய்யலாகாது. என்றுகூறிய அண்ணனை வீமசேனன் பார்த்து, நாங்க ளொருகாலத்திலும் ஒருவரை அவமானம் பண்ணுகிறதில்லை. தேவரீருடைய வார்த்தையையுந் தள்ளிநடப்ப தில்லை: ஆகையா லுத்தரவின்படி இவனை உயிருடன் கொண்டுவந்தேன். இவன்தேடிக்கொண்ட பழியும் பாவமு மிவனை அவமானப்படுத்தியது. தேவரீருடைய தருமமுஞ் சாந்தமு மிவன் பிராணனைக் காப்பாற்றி விட்டது. என்று வெகுண்டு விழித்தான்.

சயிந்தவனுக்குத் தருமராஜன் சிலதருமங் கூறிவிடுக்க, அவன்கைலாசபதியைவேண்டித்தவஞ்செய்து பாண்டவரை வெல்ல வரம்பெறுதல்.

அதைக்கண்ட தருமராஜன் அண்டையிலிருந்த தௌமியாச்சாரியரைப் பார்த்து, இந்தவண்டன்செய்ததுந் துண்டதனந்தான். அதனால் தண்ட தரனுக்குக் கோபமுண்டு, பண்டு மதனையெரித்தநிலகண்டனைப்போல் இவனை உண்டு இல்லையென்று கண்டுவிட

நிற்கின்றான். என்றுசொல்லிச் சைந்தவனை யழைத்து, அப்பாமைத்துனா! தாய்-தங்கை-தமர்-என்று நினைக்காமல் நிறைமுறைதப்பி நடந்த உனக்கும், இதக்காட்டிலிருக்கு மிருகங்களுக்கும் பேதமென்னயிருக்கின்றது? எடுப்பார் கைக்குழந்தைபோலவந்து இடியுண்டு ஏளனங்கொண்டாயே: இதுஉனக்கு அழகா? இகத்தில் அழியாப்பழி பூண்டாயே: இறைவனென்று உலகம் ஆண்டாயே: இது உனக்கு என்றென்றைக்கும் புண்தானே: என்று பற்பல நீதிவசனங்களைச் சொல்லி, நீ யின்னிமிடத்தில் ஆலஸ்யஞ்செய்யாமல் உன்னுடைய நகரம்போய்ச் சேரக்கடவை. உன்னைப்பார்க்கப்பார்க்க மற்றையருக்கு மாளாக்கோப மூளுகின்றது. என்று அனுப்பிவிடவுஞ் சயிந்தவன் மிகுந்த விசனத்துடன் கண்ணீர்சோரத் தலைகவிழ்ந்து, தன்சேனைகளிற் போய்ச்சேராமற் றனிவனத்திற்சென்று, அங்கே தயைசாந்தனென்னு மஹாரிஷி தவம்புரிந்திருக்கக்கண்டு, அவருடைய சரணங்களிற் றாழ்ந்து பணிந்து, தவஞ்செய்யு முறைமையுந் தகுதியாகிய மந்திரங்களும் பெற்றுக்கொண்டு, தனது ராஜகோலங்களை நீக்கிவிட்டு தருமராஜனே முதலிய பாண்டவர்களைத் தன்கையாற் கொல்லக்கருதி, ஆகாரநித்திரை முதலியவைகளை வெறுத்து, கைலையங்கிரிக் கடவுளைநோக்கிக்கடுந்தவஞ்செய்தான். இப்படியிவன் அருந்தவமிழைத்துவருங் காலையில், உமாமஹேஸ்வரர் விருஷபவாகனரூடராய்ப் பிரசன்னமாகிவர, அதுகண்டு எழுந்து பாதங்களில் விழுந்து, வெகுவாகத் துதித்துக் கண்ணீர் பெருகநின்றான். அப்படிநின்ற சைந்தவனைச் சாம்பவமூர்த்தி நாடி, நீநம்மைக்குறித்துத் தவமிழைத்த காரணமென்ன? உனக்கு வேண்டியதைக்கேள். என்று சொல்லிய சிவபெருமானைப்பணிந்து வாய்புதைத்துக் கைகட்டி, வணக்கத்துடனின்று வாழ்த்தி, ஓ எப்பொருட்குமிறைவனே! ஓ சுவாமி! பாரதயுத்தத்திற்பாண்டவர்களை நான்கொல்லும்படியாகிய வரமும், ஆயுத உரமும் எனக்கருள்புரிய வேண்டும் என்று கேட்டான் சிந்துதேசாதிபதி. அதையறிந்த பரமேஸ்வரன் சொல்லுகின்றார். ஓசைந்தவனே! பூர்வத்தில் அருச்சுனன் நம்மைநோக்கித் தவஞ்செய்ய, நாம்வெளிவந்தபோது உபசாரத்துடன் வணங்கி, ஐயனே! இனி நடக்கப்போகிற பாரதயுத்தத்தில் எங்கள் சத்துருக்களையெல்லா முடிக்கத் திவ்யாஸ்திரம் வேண்டுமென்று கேட்டான். அப்படியே சகலவரமும் அஸ்திரமுங்குறைவில்லாமகொடுத்துவிட்டேன். அவர்களை நீயெப்படி வெல்லுவை? உன்னாலாகாது. ஆனதால் அதைத்தள்ளி வேண்டியதைக் கேளென்றனர். அப்படிசொல்லவுஞ்சயிந்தவன் மீட்டும் பணிந்தெழுந்து, கர்த்தனே! அடியேனுக்கு வேறுவேண்டியதொன்றுமில்லை. அவர்களைச் செயிப்பதே யெனக்குத் தரவேண்டியவரம். என்றுசொல்லவும், நல்லது. நீயும் அருமையாகிய தவமிழைத்தபடியால்; பாரதயுத்தத்தில் அருச்சுனன்தவிர மற்ற நாலுபேரையும் ஒரு நாளிற் செயிக்கக்கடவை. என்று அநுக்கிரகஞ்செய்து கைலாசத்துக்கெழுந்தருளினார் சாம்பசிவமூர்த்தி. இப்பாற் சயிந்தவன அவரெழுந்தருளிய திசையைநோக்கி நமஸ்கரித்துக்கொண்டு, அங்குள்ள தவச்சிரேஷ்டர்களையும்பணிந்து ஆசிர்வசனம்பெற்று,பலநாட்சென்றபின் தனது நகரம்போய்ச் சேர்ந்து, இந்தப் பகையை விடாமற் பாராட்டிக்கொண்டிருந்தான்.

திரௌபதிக்கு நேர்ந்த சம்பவத்தைக்கருதி வருந்திய தருமனை மார்க்கண்டேய முனிவர்வந்துதேற்றிச் சாவித்திரி சரித்திரமுரைத்தல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வாறு பாண்டுவுக்கு முதற்புத்திரனாகிய தருமராஜன் சயிந்தவனுக்குச் சன்மார்க்கநெறி கூறி யனுப்பியபின்பு, தௌமியரோடுந் தம்பியரோடும் வசனிக்காமல், தமது தர்மபத்தினிக்குநேரிட்ட விபத்தைநினைந்து, ஐயோ! நாம்யெவ்வளவோமகிழ்ச்சியாய்ச் சாது சங்கப்பழக்கத்தோடு சதாநிஷ்டையி லிருந்துகொண்டு அனித்தியமாகிய இவ்வுலகவாழ்வை மறந்திருந்தும், நமது கன்மசம்பவம் இங்கேயும் விடாமற் குற்றமற்றகுணசாலியாகிய நமது திரௌபதியின் பக்கலிற்சென்று செருச்செய்கின்றதே. இப்போது சயிந்தவனால் நேரிட்ட அபகீர்த்தி சந்திரசூரிய ருள்ளவரைக்குந் தாழாதே. இதுபகைவர்செய்வித்த மாயமோ? பகவான்செய்வித்த நியாயமோ? என்று தனக்குள் தானேவருந்தினவரா யிருக்கின்ற சமயத்தில்’ தற்செயலாய் எண்டோன் மூர்த்தியைப் பூசித்து எமனைப் புறங்கண்ட மார்க்கண்டேயமகாமுனிவ ரெழுந்தருளினர். அவரைக்கண்ட உடனே தருமராஜன்முதலிய யாவரும் எழுந்து எதிர்கொண்டோடி, பேரானந்த முற்றவர்களாய்ப் பூமியிற்படிந்து பணிந்து’ மகா உபசாரத்துடன் அழைத்துவந்து மலராசனத்தி லிருத்தி’ அருக்கிய பாத்திய ஆசமன்ய அக்ஷதை சந்தனாதிகளுங் கொடுத்து’ தருமராஜனுக் தம்பிமாருந் திரௌபதையுமாய் நமஸ்கரித்தார்கள். உடனே அவர்களுக்கு மந்திர வாக்கியங்களினால் ஆசிர்வதித்து உட்காரும்படியுத்தாஞ்சொல்ல’ யாவருமிருந்து புகழ்ந்தார்கள். அதுகாலையில் தருமராஜன் மார்க்கண்டேயரை நோக்கி’ சைந்தவன் வந்து திரௌபதையை யெடுத்துக்கொண்டுபோனதும் - தாங்கள் தொடர்ந்து அவனையடித்து அவமானஞ்செய்ததும் - பாஞ்சாலிக்கு உலகம் பழிக்கும்படியாகிய வசனம் வந்ததையுஞ்சொல்லி’ விசனப்பட்டார். அதைக்கேட்ட மார்க்கண்டேயர் கிருபையுற்று, அவருடைய மனத்துய ராறும்படியாய் இதனைச் சொல்லத்தொடங்கினார். கேளுந் தருமராஜனே! துஷ்டராகியபேர்களை உடனேகண்டித்தல் த

ருமம். உங்களுடைய மைத்துனன் செயித்திரதனென்னு சும்மாய்விடாமல் அவமரியாதைசெய்தனுப்பிவைத்தபடியால், இனிமேல் அவனும் பிழைப்பான். அவனுக்கு நல்லபுத்தியும் வரும். உலகத்தி லுங்களுக்குங் கீர்த்தியுண்டு. ஏதோயிதனல் இந்தப் பாஞ்சாலிக்குப் பழிப்புவசன முண்டாமென்று நீங்கள் நினைக்கவேண்டாம். (உள்ளிய தெள்ளியராயினுமூழ்வினைப்பையநுழைந்துவிடும்.) என்னும் வாக்கியம் பெரியோருரைத்திருக்கின்றமையால், ஊழ் யாரையும்விடாது. மேலும் - கோசலநாட்டுக்கும் அயோத்தி நகரத்திற்கும் அதிபதியாகிய கோதண்டதீக்ஷா குருவின் பத்தினியை இராவணனெடுத்துப்போய் பத்துமாதம் வரையினுஞ்சிறையில்வைத்து, அவனுங் குடும்பமும் அழிந்த பிற்பாடு இட்டுக்கொண்டு வந்து பட்டத்திலிருந்த ஸ்ரீ ராமருடைய தேவியாகிய சீதையம்மனுக்கு நேரிட்ட விபத்தைச்சாங்கோபாங்கமாக உமக்கு நாம் சொல்லியிருக்கின்றோமல்லவா? அதிலச்சீதையாகிய சிந்தாமணிக்கு என்னதாட்சி வந்தது தருமராஜனே! ஆகையாலுலகத்தில் அபவாதமும் அக்கிரமமுந் துஷ்டர்களால் விளைவதுண்டு. அவைகளையுடனே விலக்கிப் பெருமை பெருவதே நமக்குக்காட்சி. அத்தன்மையாகிய ஸ்ரீராமரும் - சீதையும் - அந்தப்பாடு பட்டபோது, மற்றையர் படுவதை வசனிக்கவும் வேண்டுமோ? இந்தத்திரௌபதியை அவனெடுத்ததும், நீங்கள்வனத்திலிருந்துவருந்துவதும், வினையின் சம்பந்தமேயன்றி வேறன்று. ஐயா தருமசுரூபி! சேய்மிதித்துத்தாய் வருத்தமுறுமோ? உறாது. அதுபோற் சயிந்தவன் எடுத்துப் போனதினல் இந்த உத்தமிக்கு ஒருக்காலுங்குறைவுவராது. அவன் உயிருடன் செத்தபிணம்போல் வீமசேனனல் அவமானம் அடைந்துபோயினன். கற்புடைய திரௌபதையுங் காளமேக மறைத்து நீங்கிய கதிரவன்போலாயினள்.

என்றுசொல்லக்கேட்ட உதிஷ்டிரனெழுந்து அடியிணைவணங்கி, சுவாமி! நல்லொழுக்கம் உள்ள கற்புடைமனைவியாற் கணவனுக்கு விபத்திநீங்கிச் சம்பத்துண்டாகும் விதமும் உண்டோ? என்று கேட்கவும் மார்க்கண்டேயமுனிவர் மனதிரங்கி, ஒ ஐவருள் முதல்வனே! சாவித்திரி யென்னும் ஓர்மங்கையினற் சகலசுபமும் ஆயுசும்பெற்ற ஒரு அரசனுடைய சரித்திரத்தைக்கேளும். மாதமாதம் வானம் மும்மாரிவழங்கவும், மன்னியபயிர்கள் தழைக்கவும், துன்னிய உயிர்கள் பிழைக்கவும், மாதவர்தவங்கள்மருவவும், மறையவர் யாகங்கள் வளர்க்கவும், கோயில்கள் குளங்கள்செழிக்கவும், கொடுமைக ளனைத்துங் குறையவும், மனுநீதி குன்றாமல் அரசுபுரிந்துவந்த மந்திரதேசாதிபனென்னும் அசுபதிமகாராஜா வென்றொரு அரசனிருந்தான். அவன் மாளவியென்னுந் தேவியுடன்கூடிவாழுநாளில், சகலபாக்கியமும் நிறைந்திருந்தும் புத்திரபாக்கியம் இல்லாதிருப்பதினல் அவன் மனமகிழ்ச்சிகுறைந்து வருந்தினன். அக்காலையில் நாரத மகாமுனிவர் அவிடம் எழுந்தருள, அவரை யவன்கண்டு பாதபூசைசெய்து பணிந்து, பத்தினியுந் தானும் புத்திரனில்லாக் குறையைச்சொல்லிப் பாதவித்தனர். அவர்களுக்கு அம்முனிவர் ஆசீர்வதித்து, ஓ புனிதர்களே! நீங்கள் சாவித்திரியைச் சரணம் அடைந்து நோன்பிழைத்தால் உங்கள்மனங் களிப்புறும். என்று அதற்குரிய மந்திர உபதேசஞ்சொல்லி, அந்நோன் பிழைக்கும்மார்க்கமுந் தெரிவித்துப்போயினர். அப்பால் இவர்களந்த நெறியின்வண்ணம் நோன்பு நோற்று அன்புசெலுத்து நாளையில், அந்தச் சாவித்திரியார் பிரசன்னமாக, அதுகண்டு அவர்கள் பலவாருக வணங்கித் துதித்துப் பரவசமாகவும், அச்சாவித்திரிஉங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்களென்று சொல்லினள் அதற்கவர்கள் அப்பாரதியாரைப் பணிந்தெழுந்து, அம்மணி! எங்கட்குப் புத்திரவரம் வேண்டுமென்று பணிந்தனர். அதற்கச்சாவித்திரி உமக்கு ஒருபெண்ணுண்டாமென்று அருள்புரிய, அதைக்கேட்டு மீட்டும் பணிந்தெழுந்து, தாயே! பெண்சந்ததியில்மோட்சம் வருவதற்கும் இராச்சிய மாளுவதற்கும் யோக்கியப்படாதேயென்று வருந்திக் கேட்கவும், அந்தப்பெண்ணிஞற் சகலவைபவமும் பிள்ளைகளுமுண்டாம். என்றுவிளம்பிமறைந்துபோயினள். அப்பாலரசனும் அரசியும் அவ்வம்மனையே ஆன்மார்த்ததெய்வமாக வாழ்த்தித்தொழுது, வாழ்விற்சிறந்திருந்தனர்.

அந்நாளையில் மாளவியென்னும் இராஜபத்தினி கர்ப்பங்கொண்டு, பத்துமாதமுஞ் சென்று திவ்யதேஜோமயமாகிய பெண்ணைப்பெற்று, சாவித்திரி யென்று பெயருமிட்டு, சகல சிறப்புஞ்சீருஞ்செய்து, கணுவிலாக் கரும்பைப்போல் வளர்த்து, மங்கைப்பருவம் வந்தகாலத்தில் நங்கைக்கு இசைந்த நாயகன்வேண்டுமேயென்னு மேக்கமுடையவர்களாய், எங்குவாய்க்குமென்று அத்தந்தைதா யிருவரும் ஏங்கியிருந்தார்கள். அப்படியிருக்கையில் - ஓர்நாள் சடைமுடியும் மதியாழுந் தாங்கிய நாரதமகாமுனிவர் வர, அவர்களவரைக்கண்டு எதிர்கொண்டு சாஷ்டாங்க தெண்டனிட்டு, அருக்கியபாத்திய ஆசமன்யங் கொடுத்து, அந்தப்புரத்திற் கழைத்துவந்து சிங்காதனத்தில் எழுந்தருளச்செய்து, அரசன் ஒராசனத்திலிருக்க, மாளவி தேவிவந்து வணங்கி மலரடியைவாழ்த்தி, சுவாமி மதியாழ்முனியே! எனக்கு மலடியென்னும் வையகநிந்தையை நீக்கிய எந்தையே! என்று மனங்குழைந்து விசுவாசித்து நின்றனள். அக்காலையிற் காவியங் கண்ணியுடைய ஒவியம்போன்ற சாவித்திரிவந்து, தன் தாய்தந்தையரைப்பணிந்து, பின்பு தவமுனியினுடைய தாளிணையைப் போற்றவும், நாரதமுனிவர் அப்பெண்ணை அருட்பார்வையால் நோக்கி, வேளினையின்ற விமலனர் அருளால், வாழ்வினிலோங்கிவாழ்கவென்று வாழ்த்தினர். அப்போது அரசன் தன்பெண்ணை

த் தழுவி யெடுத்தணைத் தாச்சிங்காசனத்தில் இருத்திக் கொண்டு, நாரதரைப்பார்த்து' ஓ சுவாமீ! தேவரீர் கிருபையாற் சகல நலமும் நல்லெழிலும் உடைத்தாய் தவத்திற்பிறந்த இச்சாவித்திரிக்கு, தகுந்த நாயகன் வேண்டுமேயென்று சஞ்சலப்படுகின்றோம். ஆதலால்-தேவரீர் அவ்வெண்ணநிறைவேற அநுக்கிரகம் புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து கொண்டனன். அதற்கு நாரதர் சொல்லுகின்றார். ஓஅரசனே! (விதியுங்கணவனு நேர்படினுந் தன் தன் விதியின்பயனேபயன்.) என்று வேதவாக்கியமுள்ளதாதலால்' அவரவர்கள் வினையின்வண்ணம் நடக்கும். நீங்களொன்றும் யோசிக்கவேண்டாம். சர்வஜீவ தயாபரமூர்த்தியாகிய பசுபதியார் சாவித்திரியின் மனதிற் குறித்திருக்குந் தலைவனை ஏர்ப்படுத்தி யிருக்கின்றார். அவனுக்கே விவாகஞ்செய்து கொடுப்பது உத்தமம். என்று முனிசொல்லக் கேட்ட இறைவன்மகிழ்ந்து, குமாரத்தியின் முகத்தை நோக்கி' அம்மா! உன்மனதில் குறித்திருக்கின்ற நாயகனைச் சொல்லென்று கேட்டனன்.

அதற்கப்பெண் பருவமங்கை ஆதலினால் தலைகுனிந்து வெட்கமுற்று' சற்றுநேரந்தரித்துச்சிந்தையில் நினைத்ததைத் தந்தைதாயிடத்தில் விந்தையாகச் சொல்லுகின்றாள் ஐயா! நான் சிறுபெண்ணாகிய காலத்தில் உரிய தோழிமார்களுடன் பூங்காவனத்திற்போய் விளையாடும்போது, அழகும் இளமையும் ஆண்மிக்கையுமுள்ள ஒரு அரசன் குதிரையின்மேற் போகக்கண்டு' இவர்யாரென்று பாங்கியரை விசாரித்தேன். அப்போதவர்கள் சாலுவ தேசாதிபதியின் குமாரன் சத்தியவானென்றார்கள். அன்றே மனதில் அவரைவரித்தேன், என்று சொல்லவும் இராஜன் கேட்டு, மனைவியுந்தானும் மனமகிழ்ந்து, நாரதருடைய நளினமலர்போன்ற அடியிணையைப்போற்றி, அனந்தமுறை எத்திப்புகழ்ந்துபணிந்து, ஓகாசினி முழுவது மறிந்த காலத்திரயமுந் தெரிந்தஉத்தம சத்துவகுணனே! தேவரீர் என்சுதனி சொல்லிய சத்தியவானுடைய உத்தம குணாதிசயங்களைச் சொல்லவேண்டும். என்றுகேட்கவும் நாரதர்சொல்லுகின்றார். ஓமகாராஜனே! அந்த அரசனானவன் அழகிற் சிறந்தவன். ஆண்மையில் உயர்ந்தவன். சத்தியநெறியிற் றலைமை பூண்டவன். உத்தமகுணத்தில் ஓங்கிய வள்ளல். நற்றவந்தருமம் நாளும் வளர்ப்பவன். கண்களிரண்டுங் கங்குல்பாய்ந்திட்ட அன்னைபிதாவை அரன்எனத்தொழுபவன். சத்துருவிடத்திற் றரணிமுன்யாவும் பற்றறவிட்டுப் பதாதியாய்க்கானில், இன்னலுற்றிருக்கு மியல்பினனவன். இனியோர்வருடத் திறந்து போவான். என்றுசொல்லவும் இராஜனுக்கு விசாரம் வந்து' குமாரத்தியை நோக்கி' அம்மா! நாரத மகாமுனிவர் சொல்லிய வாக்கியத்தைக் கேள்வியுற்றையா? நீ அவனைமறந்து இன்னொரு புருடனை நிதானித்துக் கொள்ளுக. என்று இயம்பவும் அந்தமொழிக்கு அப்பெண் இணங்காமல், தன்முகத்தை ஒருவாறு சுளுக்கியிருக்கக்காட்டினள். அதுகண்ட தந்தையானவன் அப்பெண்ணைநோக்கி, அம்மா! உன் எண்ணத்தின் வண்ணங் கலியாணஞ் செய்ய அச்சத்தியவானுக்கு அல்பவாயுசாம். அவன் தாய்தந்தைய ரிருவருங் கண்ணில்லாதவர்களாம். தங்கள் இராசியத்தைச் சத்துருவினிடத்தில் ஒப்பி வைத்துவிட்டுப் பதாதிகளாய் அன்னபலாதிகளுக்கும் வருந்தி ஆரணியத்திற் கஷ்டதிசையாய் வாசஞ் செய்கின்றார்களாம். அவர்கள் குமாரனை நீ விரும்பியது அநியாயம். ஆதலால்-என் அம்மணீ! நீ வேறுபுருடனை விரும்பிக்கொள். என்று அரசன் கூற, அதற்கேற்றபடி அன்னையும் வருந்த, அதுகண்ட சாவித்திரியானவள் முகமலர்ந்து சொல்லுகின்றாள்.

ஐயா! பரமசிவனுக்கு ஒப்பாகியநாரதபகவான் முன்னிலையில் நீர் கேட்டபோது, நான் வெழ்க்கத்தைவிட்டு மனதில் நிச்சயித்திருந்த நாயகன் சத்தியவானென்று விளம்பினேன். அவ்வாக்கினால்வேறொரு புருடனை இனிவிளம்பக்கூடுமோ? அப்படிச்சொல்லுவேனாகில் - தாய்தந்தை முதலிய சுற்றத்தாருக்குப் பழியும் பூலோகத்தில் நிலைபெற்றிருக்கும் பதிவிரதா தருமங்களுக்குக் குறைவும்; அரசுசெலுத்திய மநுநீதிக்கு அழிவும், எக்காலத்திலும் நீங்காதஇகழ்வும்' என்னொருத்தியினால் உண்டாகியதென்று யாவரும் நிந்திப்பார்களே: அப்படி நிந்திக்க இருப்பதை பார்க்கிலும் இறப்பது உத்தமம். மேலும் - (கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருடன்.) என்னும் உலகமொழிக் கிணங்க மனங்குவிந்து நிச்சயித்த மகிழ்நனைவிட்டு, மற்றொருவரைச் சொப்பனத்திலும் நினையார்கள் உத்தமகுணமுடைய ஸ்திரீகள். ஆகையால் - அவர்கள் வருத்தமுற்று வனத்தில் இருந்தாலும், இன்னும்வரத்தக்க தீவினைகள் வந்தாலும், அந்தச்சத்தியவானே நாயகன். நானே அவருக்குப் பத்தினி. என்வினையின் வண்ணம் நடக்குமே யன்றி வேறல்ல. நீங்கள் ஏதொன்றும் யோசிக்காமல் விவாகஞ்செய்து கொடுத்து விடுங்கள். என்றுபிரகடனமாகச் சொல்லவும்' தந்தைகேட்டு மனநொந்து' தெய்வமேயென்று தியங்கி, நாரதர் பாதங்களிற் பணிந்து நைந்தனன். அப்படி நைந்து வருந்திய வேந்தனை நாரதர் எடுத்திருத்தி, உய்யும்படிசொல்லுகின்றார். ஓவையகம்புரக்கும் மன்னனே! மகாலட்சுமிக்கு ஒப்பாகிய இச்சாவித்திரியானவள் மகா பதிவிரதை. நற்குணம் நற்சிந்தையிற் சிறந்தவள். மேலும் ஜன்மாந்திரத்திற் சத்தியவானுக்கும் - புத்தியில் உயர்ந்த உன்பெண்ணுக்கும்-சம்பந்தம் உண்டாயிருப்பதனால்' இவளவன் விஷயத்தில் இவ்வளவு உறுதியாகப் பேசும்படி நேரிட்டிருக்கின்றது. எப்பொருட்டுக்கும்இறைவனாகிய ஈஸ்வாருடையதிருவுளச்செயல்எப்படியோ? அஃதுநாமறியோம். இந்த உத்தமியின் தபோபலத்தினால் அவனு

க்குத் தீர்க்காயுசு உண்டானாலும் ஆகலாம். நீர் சஞ்சலப்படாமல் எமது பெண்ணின் எண்ணத்திற் கொண்டவண்ணங் கலியாணம் முடித்து வைக்கக்கடவீர். என்றுசொல்லி நாரதமகாமுனிவர் விடைபெற்றுக் கொண்டு போயினர்.

இப்பால் அசுபதி அரசனும் - மாளவிதேவியும் - பந்துக்களும் - மந்திரி மார்களும் - பெரியோர்களும்- பற்பலநீதியுந் தருமமும் உலகவழக்கமும் எத்தனைவிதத்திற்சொல்லியும், ஒன்றுங்கேளாமலொரேமனதாய் இருக்கின்ற சாவித்திரியை அரசனானவன் பல்லக்கில் எடுப்பித்துக்கொண்டு, இரதகஜதுரக பதாதியும் மேற்கூறிய சகலரும் நெருங்கி வரும்படியாகப் பிரயாணமாகி, சாலுவதேசாதிபதி வந்திருக்குங் காட்டை விசாரித்துக்கொண்டு,அங்கேஇவர்கள்யாவரோடும்போய்அவர்களைக்கொண்டுஇரதம்விட்டிறங்கி, அவர்கள் முன்புசென்று நின்று, நான் மத்திரதேசத்தைஆளும்அசுபதி அரசனென்று தெரிவித்தனன். உடனே அச்சாலுவராஜன் அசுபதி ராஜனைக் கட்டியணைத்துக்கொண்டு, உபசாரவார்த்தைகள் பேசி ஆசனம் அளித்து, க்ஷேமலாபங்களை விசாரித்து, தனக்குநேரிட்ட பொல்லாங்குகளையும் - அதனாற் பத்தினிக்கும் புத்திரனுக்குமுள்ள வருத்தத்தையும் - ஒன்றேனும் விடாமற் சொல்லி, ஏது இவ்வளவு தூரம் என்பேரில்தயவுகொண்டு வந்தது என்றுவினவினன். அதற்கு அசுபதியரசன் சொல்லுகின்றான். ஐயா ! நெடுநாளாகத் தவஞ்செய்து பெற்ற சாவித்திரியென்னும் என்பெண்ணானவள், உம்முடைய குமாரனாகிய சத்தியவானைக் கலியாணஞ் செய்துகொள்ளக் கருதினாள். அதற்குயாங்கள் சந்தோஷமுற்று வந்தோம். என்று சொல்லியதைச் சாலுவராஜன்கேட்டு நகைத்து, உம்முடைய பெண்ணையகம் எம்முடைய குமாரனை வரிக்கப்பெற்றதே எங்கள் பெரியோர்கள்செய்தபாக்கியம். ஆகிலும்-எங்கள் செல்வங்களெல்லாம் பறந்து, சேனைகளியாவுமிறந்து, அரசாட்கியுந்துறந்து, ஆரணியத்தில் இருந்து, யான் கண்களிழந்து கலங்கித் தவிக்குங்காலத்தில், எங்கள் கான்முளைக்குங் கலியாணஞ் செய்ய வேண்டுமோ? என்று சாலுவராஜன் சொல்ல ·அசுபதிமகாராஜன் அச்சாலுவராஜனை நோக்கிச்சொல்லுகின்றான் ஐயா ! தேகமும் - இளமையும் - செல்வமும்-நிலையோ? இன்பமும் - துன்பமும் - என்றும் இராது. இளைத்தவர் கிளைப்பார். கிளைத்தவர் இளைப்பார். மேடுபள்ளமாம். பள்ளமேடாம். ஓடம்வண்டியில். வண்டியோடத்தில். செல்வமும் வறுமையுந் தெரிந்தோர்க்கில்லை. வருகுவது தானேவரும். செல்வம் வந்தவர்களையும் - அஃதின்றி வருந்தி நொந்தவர்களையும் - அனுபவத்திற்பார்த்துங் கேட்டு மிருப்பதன்றி’ சாஸ்திர விசாரணையினாலும் - சாதுசங்கப் பழக்கத்தினாலும்-உள்ளத்தையுள்ளபடி யறிந்திருக்கும் உமக்குச்சஞ்சலமே? என்று தேற்றிச் சத்தியவானைப் பார்த்தான்.

அப்போதவன் அவ்வரசனைநோக்கி, ஓமகாராஜனே ! தாய்தந்தையரைச்சம்ரட்சணை செய்வதே தருமமென்று நாளைக்கழித்து நாடத்திவரும் எந்தனுக்கு, சால்விலங்குபூட்டிக் கலங்கச்செய்யநினைப்பது நலமல்லவே: இந்தப் பருவமங்கையை நான் விவாகம் பண்ணிக் கொண்டால், இனி இவளுக்குவேண்டிய பக்குவ உபசாரங்களைச்செய்ய இதுகாலம் அல்லவே: பறப்போன் பயிரிழந்தகதையாய் முடியுமே: மேலும்-ஒருபெண்ணை விவாகஞ்செய்துகொடுக்க நினைக்குந் தந்தையர்கள், கல்விக்கியானம் உள்ள பிள்ளையைக்கருதுவார்கள். தாய்மார் நிரம்பிய பாக்கியவானைத்தேடுவார்கள். பந்துக்கள் பழமையாகிய உறவை நாடுவார்கள். பருவப்பெண்கள் கைநிறைந்த பொன்னினுங் கண்ணிறைந்த கணவனைக் கூடுவார்கள். இவைகள் ஒன்றினும் உதவி இல்லாத என்னைக்குறித்தது ஏதுகாரணமோ?என்றுகூறிய அப்புத்திரன்சொல்லை அசுபதிராஜன் ஆதரித்து, தாய்தந்தையர் - சுற்றத்தார்-நண்பினர் - இவைமுதலியோரி னியற்கையும், ஊழ்வினையின்றிறத்தையும், மற்றுமுள்ள உலகநடக்கையையும் எடுத்துக்காட்டி, அப்பா ! நீகானகத்திற்சென்று கனிகிழங்குவகைகளைக் கொண்டுவந்து தந்தைதாயாருக்கு ஊட்டிவைக்கும் வரையில், இவர்களிடத்தில் இருந்து கால் கரம் முதலியவைகளைப்பிடித்து உபசரித்து, மிருகபயம் இல்லாமற் காத்து, தேகவாதை முதலியவற்றைக் கழிக்கவிடுத்து, வஸ்திரங்களை மலினம்நீக்கி அலங்கரித்து, எப்போதுஞ்சமீபத்தில் துணையாயிருப்பதற்கு, இந்தப்பெண் உதவியாயிருக்கும். ஆதலால் இப்பெண்ணை நீ தர்மபத்தினியாகக்கொள்ளுக. உனக்கும் உனதுதாய்தந்தையர்க்கும் மகா உதவியாயிருப்பள். என்று சொல்லக்கேட்ட சத்தியவான் அதற்கிசைய, உடனே நல்லமுகூர்த்தம்நேமித்து, வேதபுங்கவர்கள் முன்னிலையிற் சகலசம்பிரமங்களுடன் கன்னிகாதானமாகச் செய்துகொடுத்து, நாடுநகரங்கள் - இயானை சேனைகள் - பாங்கர் பாங்கியர் - ஆடையாபரணங்கள் - முதலிய இயாவும் ஸ்திரீதனமாக அளித்து, மருகனையும் மற்றயரையுநோக்கி, நீங்கள் காட்டில் இருந்து வருந்துவானேன்? நாட்டுக்குவந்து விடுங்கோளென்றுவருந்தி அழைத்தனன். அப்படி யழைக்கவும் அவ்வரசனைச் சாலுவனோக்கி, ஐயா ! எங்களுக்கு நல்லகாலம் வந்தபோது நாட்டுக்குவருவதேயன்றி, இதன்மத்தியில் வரமாட்டோமென்று சொல்லினன். அப்பாலவன் தன் குமாரத்தியைநோக்கி, சில நீதிவசனங்களையும் பதிவிரதாமார்க்கங்களை யுங்கூறி, மகளையும் அம்மகளைப் பெற்றகாலத்தி லுண்டான மனமகிழ்ச்சியையும் அவ்வனத்தில் விட்டுவிட்டு, மருகனிடத்திலுஞ் சம்பந்திகளிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு, தன்மனைவி முதலிய மற்றயாவரோடும் மத்திரதேசம்வந்துசேர்ந்து வாழ்ந் திருந்தனர்.

இப்பாற் சாவித்திரியுஞ் சத்தியவானும் மகாவிசுவாச முடையவர்களாய், பாலும் நீரும் - மலரும்மண

மும்-நகமுஞ்சதையும்-சொல்லும்பொருளும்-எள்ளும்
எண்ணெயும்-கரும்பும் இரசமும்-உடலும்உயிரும்-
எவ்வாறு ஒன்றையொன்று சம்பந்தித்திருக்குமோ?
அவ்வாறு மனம்பொருந்தி மகிழ்விற்சிறந்து மருவிவா
ழுங்காலத்தில்: சாவித்திரி மூன்றுவது சாமத்தில் எ
ழுந்து, ஸ்நானமுதல் நித்தியவிதிகளை முடித்துக்
கொண்டு, தன்புருஷனை எழுப்பி, அவன் பாதங்களில்
புஷ்பங்களினால் அர்ச்சித்து, பிரதட்சணம் வந்து நம
ஸ்கரித்து, பண்டுபலாதிகள் கொண்டுவரும்படி வன
த்திற்கு அனுப்புவள். பின்பு மாமன்மாமியாரை நித்
திரைநீக்கி, அவர்களுடைய நித்திய கருமங்களுக்குத்
துணையாயிருந்து, அவர்கள் திருவடிகளிலும் மலர்
தூவிப்பணிந்து, வஸ்திரமுதலியவைகளை நித்தியஞ்
சுத்திசெய்து, இராத்திரி மிகுத்துவைதத கிழங்குகனி
முதலியவைகளை ஆகாரமாகக்கொடுத்து, தண்ணீர்அ
ருத்தி, அவர்களோடு தருமகதைகளைப் பேசிக்கொ
ண்டு, அவர்கள் கால்களையுங் கரங்களையும் பிடித்துக்
கொண் டிருக்கும்போது பத்துநாழிகைக்குமேல் நா
யகன்வருவன். உடனே கொண்டுவந்த பண்டுபலாதி
களை இருவருமாக மற்றிருவருக்கும் ஊட்டிவைத்து,
அப்பால் தன் காதலனுக்குங் களைதீரச்செய்து, அவ
ன் உண்டபின்பு தானும்புசித்து, அத்தையும் யாம
னும் உத்தமி இவளெனச் சத்தியவான்மே லிருக்குந்
தயையினும் பதின்மடங்கு அதிகமாகவைத்துப் பக
ராட்டவும்-இவள் காலிற்றைத்தமுள் தங்கள்கண்க
ளிற் றைத்ததைப்போல் அன்பும் பட்சமும் அதிகமா
கக்கொண்டு ஆதரிக்கவும்-கற்புக்கரசாகச் சொல்லும்
அருந்ததியே இவளென-அகமகிழ்ந்து இருக்கவும்
நடந்து வருவள்.

அந்நாளையில் தனக்கு நாரதமுனிவர் நவின்ற
வாக்கியத்தை மனதில் இருத்தி வருந்தும்படியான
இத்தையல் ஒவ்வொரு நாளாகக் கணக்கிட்டு, முந்நூ
ற்று ஐம்பத்தாறுநாள் சென்றுபோக இன்னும் நாலு
நாள் இருக்கின்றது நமது நாயகனுக்கு ஆயுளென்று
கருதி, மிகுந்த ஜாக்ரதையுடனே மாமன் மாமி உத
ரவின்பேரிற் கௌரிநோன்பு இழைக்கும்படி சிந்தி
த்து, வேதவிதிப்பிரகாரம் மூன்றுநாள் அன்னபான
முதலிய இயாவற்றையும் நீக்கி, நித்திரையைஅகற்றி,
மௌனங்கொண்டு பூசித்து, மூன்றுதினமுங் கழிந்த
பின்பு நான்காவதுநாள் உதயத்திற்குமுன் ஸ்நான
ஞ்செய்து, தன்கணவனைப் பணிந்துநோக்கி' தேவரீ
ருடன் யானுங் காட்டுக்குவருகின்றேன் தடைசொல்
லாமல் அழைத்துப்போக வேண்டுமென்று சொல்லி
னள். அதைக்கேட்ட சத்தியவான் திடுக்கிட்டு' தனக்
குப் பத்தினியின்மீதி லிருக்கும் உரிமையினால் அவ
ளைப் பரிந்துநோக்கி' பெண்ணே! சத்தியைப்பூசித்
து மூன்றுநாளாகச் சலபானமும் இல்லாது இருக்கு
ம் நீ' இன்று பாரணைசெய்தால் நாளைக்கு அழைத்துக்
கொண்டு போகிறேனென்று சொல்லினன். அப்படி
சொல்லிய நாயகனை சாவித்திரிநோக்கி' நாளை என்ப
து நம்முடைய நாளோ? நமனுடையநாளோ? அஃ
தின்னவிதமென நாமறியோம். அன்றியும்-கௌரிநோ
ன்பு நோற்பவர்கள் மூன்றுநாள் உபவாசம் இருந்து,
நான்காநாள் இராத்திரி தீபதரிசனஞ்செய்து, அப்
பாற் பாரணைசெய்யும்படி வேதவிதி யிருக்கின்றது. ஆ
கையால்-இன்று பகற்போதைக் கருக்கவேண்டி கா
ட்டுக்குவருகிறேன். என்று சொல்லக்கேட்ட சத்திய
வானனவன் என் தாய்தந்தையினுடைய உத்தரவி
ன்பேரில் வருகின்றதானால் வரலாம் என்றுசம்மதிக்க'
அதுகேட்ட சாவித்திரி அம்மாமன் மாமியாருடைய
பாதங்களிற் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு' அவர்
களுடைய ஆசிபெற்று வணக்கமுடனின்று' எனக்கு ஒ
ருவரந் தரவேண்டுமென்று கேட்டனள். அதற்கவர்
கள் புளகாங்கிதமுற்று, அம்மா! உனக்குவேண்டிய
வரத்தைக் கேளென்று சொல்ல' மீட்டும் பணிந்தெழு
ந்து' உங்கள்குமாரருடன் நானுங் காட்டுக்குப்போய்
வருகிறேனென்று சொல்லினள். அவ்வார்த்தையைக்
கேட்டலும் அவர்கள்புளகாங்கிதராய்ப்பூரித்து' நல்வி
னைவசத்தினால்உடம்பட்டு' புத்திரனை அழைத்து, அ
ப்பா! உன்பத்தினி மூன்றுநாளாய் உபவாசமாகயிருந்
தமையால்' பத்திரமாக அழைத்துக்கொண்டு போய்
வெகுசலிதியில்க்ஷேமகரங்களோடும் 'வரக்கடவீர்களெ
ன்று வாழ்த்தி அனுப்பிவைத்தார்கள்.

உடனே அந்த ஸ்திரீபுருஷர்யிருவருஞ் சந்தோ
ஷத்துடன் வனத்திற்குச்சென்று' அங்குள்ள மலைக
ளும்-அம்மலையருவிகளின் பெருக்கமும்-மரங்களின்
நெருக்கமும்-மலைத்தேன்களின் மிகுதியும்-காந்த
ள் முதலிய புட்பங்களின் மலர்ச்சியும்-வேடுவர்குறவர்
முதலாகிய பெண்களின் விளையாட்டும்-இயானைகளி
ன்கலிப்பும்-புலிமுதலியமிருகங்களின் ஒலிப்பும்-கா
ட்டுப்பன்றிகள் கொம்புகளினால் உழுதநிலங்களில்வே
டப்பிள்ளைகள் தினைகளைவிதைக்க முளைத்துக்காய்த்
துக் கிளிமுதலிய பட்சிகள் கதிர்களைக் கொய்துகொ
ண்டு போவதும்-குறிஞ்சிநிலப் பெண்கள் ஆயாலோ
ட்டும் ஓசையும்-அவர்கள்பேசிக்கொள்ளும் பாஷையு
ம்-காட்டெருமைகள் பசுக்கள் கும்புகும்பாய்க்கூடி
மேய்ந்து இறுமாந்து மலைப்பாறைகளிற் பிரீடச்செய்யு
ம் பால்களும்-இறால்கிழிந்து வழிந்துவருந் தேன்க
ளும்-மின்னலைப்போல தாவிவரும்மான்களும்-பெருக்
கெடுத்து ஓடிவரும் ஆறுகளும்-கொடிகள் செடிகளி
டத்திற் படர்ந்து மேற்கட்டியைப்போல் நெருங்கி
யிருக்குந் தூறுகளும்-புள்ளாங்குழலின்நாதமும்-
பூவைகளின் கீதமும்-குயிற்கூவுகிறதும்-மயிலாடுகி
றதும்-மலைப்பாம்புகள் புரண்டுகிடப்பதும்-மலர்கள்
செரிந்திருப்பதும்-காய்கனிகள் முதலிய இயாவும்
நிறைந்திருப்பதும்-ஆகிய அவ்வனத்தின் வளப்பங்க
ளையெல்லாஞ் சாவித்திரிக்குக்காண்பித்து, இருவருங்
கண்களித்து மனமகிழ்ந்துஅப்பாற்சென்று' இலைகள்-

காய்கள் - கனிகள்-நல்லநல்ல மணமுடைய மலர்கள்-இவைகளையெல்லாம் பறித்துக்கொடுத்துக்கொண்டே வரும்போது' சாவித்திரியானவள் புருஷனுடன் நிழல் செல்வதைப்போலும்-நாடாவினுடன் நூல்செல்வதைப்போலும்-உடலுடன் உடற்சாயை செல்வதைப்போலும் - பிரியாமல் தொடர்ந்து உலாவிவந்தனள்.

அப்போது சத்தியவான் பற்பலகனிகளையுடைய ஒரு விருட்சத்தைக்கண்டு' அதில் ஏறுவதற்கு விரும்பி, அதற்குத்தன்னால் முடியாமல் தன்துபத்தினியை நோக்கி' பெண்ணே! இப்போது என்கரங்களுங் கால்களுஞ்சோருகின்றன. சரீர முழுமையும் நடுக்கங்கொள்கின்றது. இடைசாய்ந்து போகின்றது. கண்கள் சுழன்று ஒளிமழுங்குகின்றது. சுவாசந்திணறுகின்றது. என்றுசொல்லிஒய்ந்துசாய்ந்தான். அப்படிசாய்ந்தகாதலனைச் சாவித்திரி தன் மடியின்மீது சிரத்தை நாட்டி, மற்ற உடல்முழுவதும் பூமியிற்படிய வஸ்திரத்தை விரித்துப் படுக்கவைத்துக்கொண்டு, பராசத்தியை உச்சரித்தவளாய் நான்குதிக்குநோக்கி ஏங்கியிருக்குஞ் சமயத்தில்: இயமதருமராஜனானவன் சிரத்தினில் முடியும்-செவியினிற் பிரகாசிக்குங் குண்டலமும் - வெண்டாமரை மலர்போன்ற கண்களும்-இருள்திரண்டதையொத்தஉடலும் - கரத்திற் சூலபாச தண்டாயுதமுங்கொண்டு' திவ்யகந்தகஸ்தூரி பரிமள மலர்மாலை இலங்க, அநேகம் எமபடர்கள் தொடர்ந்துவந்துவணங்கி விலங்க' எருமைக்கடாவாகனத்தைவிட்டிறங்கி, பதிவிரதையாகிய சாவித்திரியம்மனை நெருங்கி' அவ்வம்மனருகில்வர உடல்நடுங்கி, சற்றுநிதானித்து மெதுவாக வந்து, தன் அதிகாரத்தைச் செலுத்தும்படியாகநினைத்து, சத்தியவானுடைய பிராணனைக் காந்தம் இரும்பை இழுக்குந் தன்மைபோற் கைக்கொண்டு தன்வாகனத்திலேறிநடந்தான். அப்படி நடப்பதைக் கண்டடசாவித்திரி தன்மடியிலிருந்த களேபரத்தின் தலையைப் பூமியில்வைத்துவிட்டு எழுந்து, தலைவனையிழந்து தரணியிலிருப்பது பிணத்திற் கொப்பாகு மல்லவா வென்று சிந்தனைசெய்து, தன்கண்களுக்கு நேராகக் காணுகின்ற மகாபுருடனுடன்தொடர்ந்துபோயினள். அப்போது மறலியானவன் திரும்பிப்பார்த்து' நீர்யாரம்மாவென்று வினவினன். அதற்கவள்-சுவாமி! நான் சாவித்திரி யென்னும் பெயரினள். ஆனால்என்பிராணநாயகனுடைய பிராணனைக் கைக்கொண்டு போகின்ற நீர்ஆரையாவென்றுகேட்டனள். அதற்குநமனானவன் நகைத்து, பதிவிரதைகளின் மகத்துவத்திற்குச் சந்தோஷங்கொண்டு இதனைச் சொல்லுகிறான்.

அம்மா! நான் சம்ஹாரத்தொழில் செய்கிறஇயமன். உம்முடையபதிக்கு இன்று பதினைந்து நாழிகையுடன் ஆயுள் சரியாய்விட்டது. ஆயுள் முகிந்தால் எப்பேர்ப்பட்டவர்களையும் இறக்கக்காண்பதல்லாமல், இருக்கக்காண்பதில்லை. ஆனாற் பாபிகளாகிய பேர்களை என்னுடைய தூதர்கள் பந்தித்துக்கொண்டு வருவார்கள். புண்ணியசாலிகளை நான்வந்து கொண்டுபோவேன். ஆதலால் இந்தச் சத்தியவான் உத்தமனானகையாலும்' பத்தினியாகிய உமக்குநாயகனானகையாலும், நானே வந்து கைக்கொண்டேன். பூமியில் நாமரூபங்களாகத் தோற்றியதெல்லாம் அழிந்துபோமென்று தேவரீருக்குத் தெரிந்திருக்கும். மேலும் நான் தேவன். நீர் மானுடம். உம்முடைய நற்குண நற்சிந்தையினால் என்னைக் காணப்பெற்றீர். உமக்கு நிகராக உரைப்பதற்கு ஒருவருமில்லை. என்று கொண்டாடினவனாய்' நீரேன் கால்வருந்த வருகின்றீர்? இவ்விடத்திற்றானே நில்லும். நான்போகின்றேன். என்றுசொல்லிச்செல்லவும் இந்த அம்மனானவள் பின்றொடர்ந்து, ஐயா! நாங்களிருவரும் இகத்திலுடலு முயிருமாய் மிக உரிமையோடுங்கூடிப் பதி யென்றும் பாரியை யென்றும் பெயரில்மாத்திரம் இருபிரிவா யிருந்தயெங்களில், உடலைமாத்திரம் விட்டு உயிரைக்கொண்டு போவது ஞாயமல்லவே என்னையுங் கூடக்கொண்டுபோவது உத்தமம். இனி இவ்விடத்தில் யானிருந்து இழைக்குங் காரியம் யாது? என்புருஷப்பிரசாதமாகிய மஞ்சள்-குங்குமம்-மலர்மணம்-இவை முதலியவெல்லாம் போய், இனிக்கைம்பெண்ணென்று சொல்லும்படி இவ்வுலகத்திருப்பதிலென்னபயன்? என்று இயம்பக்கேட்ட இயமன் அவ்வம்மனைப்பார்த்து' அம்மணி! ஆயுள்முடியாமல் உம்மை அழைத்துக்கொண்டு போகஎனக்கதிகாரமில்லை. நீர் என்னைத்தொடராதீர். நில்லும்: நில்லும்; ஓ நல்லகுணமுடைய நாயகியாரே! உமக்குமது புருடன் தவிர வேறுவரங்கள் ஏதாகிலும் வேண்டியிருந்தாற் கேளுந் தருகிறேன். என்று கூறியமொழியை சாவித்திரிகேட்டு, ஆண்டவனே! என்மாமனாராகிய சாலுவராஜனும் மாமியாருக்குங் கண்கள்தெரியும் படியாகக் கடாட்சிக்க வேண்டுமென்றுகேட்க, அப்படியே கொடுத்தேன் என்றுசொல்லி மறலியானவன் நடந்தான். இந்தப் பெண்ணரசியுங் கூடத்தொடர்ந்தாள். அப்படிதொடர்ந்து வருவதை எமதருமராஜன்கண்டு, ஏனம்மா மிருகங்கள்நிறைந்தகாட்டில் ஒண்டியாக வருகின்றீர்? நீர்மெத்தவும் இளைத்திருக்கின்றீர். வியர்வை பெருக வருந்தி வருவானேன்? நின்றுவிடும். என்று கூறவும் அதைக்கேட்ட சாவித்திரிசொல்லுகிறாள்.

ஓ சூரிய பகவானுக்குஞ் சாயா தேவியாருக்குந் தோன்றியதோன்றலே! நாயகனில்லாத வாழ்வு நட்டமென்றும்-புருடனையிழந்த பூவை பின்னமென்றும்-எல்லோரும் பழிக்கவும், என்போலொத்த பெண்கள் இயாவருஞ் செழித்துக் களிக்கவும்' நான் கண்ணீர் சொரிந்து தத்தளிக்கவுஞ்செய்வது உமக்கழகல்ல. உயிர்போன்ற நாயகன் என்னை ஒருக்காலும் வஞ்சகஞ் செய்யார். உத்தமனே! நீர்தான் என்னைப் பிரித்துவிட்டுச்செல்லுகின்றீர். இது உமக்கு நீதியல்ல. என்னையும்யென்புருடனோடு அழைத்துக்கொண்டு போபிரா

கில்உமக்குக்கோடிபுண்ணியமுண்டு. என்றுஅடியிணைகளில் அலறிவிழுந்தழுதனள். அந்த உத்தமஸ்திரீயைமறலிநோக்கி' அம்மா! அணைகடந்த வெள்ளம்அழைத்தால் வருமோ? சிருஷ்டி திதி சம்ஹாரமென்னும்மூன்றுதொழிலும் மாறுமோ? தெரிந்தும்தெரியாமல்வருந்துகின்றீர். யான் முடிவறிந்து கைக்கொண்ட உன் காதலனுடைய ஆன்மா திரும்பமாட்டாது. என்னை நீர் வெறுத்துக்கொள்ள வேண்டாம். இவ்வுயிர் தவிர உமக்குவேண்டியவரமின்னுமேதாகிலுங்கேளுந் தருகிறோம். என்று சொல்லவுஞ் சாவித்திரிபணிந்தெழுந்து, ஆண்டவனே! என்மாமன் சாலுவராஜனுக்குப் பழையபடி இராச்சியசம்பிரமச் செல்வங்களெல்லாங் கிடைக்கும் படியாக அருள்புரிய வேண்டுமென்று வேண்டினள். அதற்கப்படியே கொடுத்தோமென்று சொல்லித் தென்திசைக்கோன் நடக்க, சாவித்திரி அவ்வியமனிடத்தில் இரண்டுவித வரம்பெற்ற இனிமையினால் இரக்கமுள்ளவரென்று தெரிந்து, அவரைமீட்டும் விடாமல் அடர்ந்து நெடுந்தூரம் வரையில் அவனைத்தொடர்ந்து போவதாயினள். அதுகண்டகாலமூர்த்தி தனது வாகனத்துடன் நின்று, தாயே! எனிப்படி வருந்திவருகின்றீர்? நானொரு உறுதி சொல்லுகின்றேன் கேளும். இப்பூமியில் தந்தையின் கருப்பத்தி லிரண்டுமாதமும், தாயின் கருப்பத்திற் பத்துமாதமுமிருந்து, இவ்வுலகத் துதயமாகின்றமானிடர்கட்கும் - மற்ற உயிர்களுக்கும்-ஜன்மிக்கும்போதே ஆயுளிவ்வளவென்று நிச்சயித்திருக்கும். அது என்னுடையகணக்கில் வந்துவிட்ட பிறகு நான் காலம்பார்த்திருந்து, எவர்களெப்படி துன்புற்ற போதிலுங் கொண்டுவந்து, அவரவர்கள் நன்மைதீமைக்குத்தக்கதாய் நடாத்துவேன். தேவர்களாலும் மற்றியாவர்களாலும் விதித்த விதியினைத்தள்ளி நடக்கக்கூடாது. இத்தேகம் வினையொழிந்தால் அரைநிமிஷமும் நிற்காதென்று மேலோர்கள்சொல்லுமொழியைநீர் கேள்வியுற்றது மில்லையோ? ஆகையால்-எவர்கட்கும் வந்தவேலைதீர்ந்தால் இங்கு என்னகாரியம்? நீரிதைமறந்து உமதுகாதலனைநாடுகின்றீர். நானும்நாடி, நீரும் நாடுகிறதிற் காரியமில்லை, என்னாலாவது ஒன்றுமில்லை, தேவரீர்மனதைத் திடஞ்செய்துகொண்டு திரும்பும், என்னை நீர்பின்பற்றிவருதல் உத்தமமல்ல' எனக்குச்செல்ல விடைதாருமென்றனன்.

அதுகேட்ட குணவதியானவள் தீர்க்க தெண்டஞ்செய்து, தெய்வமே! மலையினுயர்ச்சி மலைக்குத்தெரியாதென்பதுபோல, தேவரீருடைய வல்லமையைத் தேவரீர் தெரியாமற் பேசுகின்றீர், இயான் சிறியவளானாலும் அசுபதி மஹாராசனுடைய புத்திரி, சாவித்திரி என்னும் பெயரினையுடையவள், என் தந்தையிடத்திற்குநித்தியம் வரும்படியாகிய உத்தமர்களைப் பணிந்து, முத்தொழிலின் பிரதாபத் தன்மைகளைச்சற்று [illegible]கின்றேன், அவைகளிற் சாத்துவிககுணத்தைக்கொண்டு பிரமதேவர் இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கவும்' இராசதகுணத்தைக் கொண்டுமகாவிஷ்ணு தேவர் இரட்சிக்கவும்' தாமத குணத்தைக்கொண்டு தேவரீர்சம்ஹரிக்கவும் இருக்கின்றமையால், மற்றஇரண்டுகுணந் தேவரீரைவிட்டு நீங்கினதில்லை, ஆதலால்-உமக்குமேலாகிய தெய்வங்களுமில்லை, இந்த மூன்று தொழிலும் உம்மால்நடக்குமென்று உயர்ந்தோருரைக்க உணர்ந்திருக்கும் இயான், சம்பத்துமுதலியவற்றை விரும்பாமல் என் புருஷனுடன் என்னையுங்கொண்டுபோகும்படியாய் உம்மைச்சரணமடைந்தேன்; ஓ கருணைக்கடவுளே! உன்னிஷ்டப்படி நிறைவேற்ற வேண்டுமென்று வணங்கினள், அப்படி வணங்கிய கன்னியை அந்தகன் நோக்கி' தாயே! உம்மைக்கொண்டுபோகுங் காலம் இன்னும்பின்னால் இருக்கின்றது இப்போது கொண்டுபோவதற்கு என்னால் இல்லை, ஆதலால் - உமக்குவேண்டிய வரம் இன்னும் ஏதாகிலுமிருந்தாற் கேட்டுக்கொள்ளும், தடையில்லாமற் றருகிறேன், என்று கூறக் கேட்ட அப்பொன்னனையாள் அவனைப்போற்றிசெய்து, சுவாமி! என் தந்தைக்குச் சிந்தை குளிரும்படியாக நூறுமைந்தரைத் தந்தருளவேண்டுமென்று கேட்டனள், அதற்குமவன் தந்தேன்: தந்தேன்; என்றுமொழிந்து, இந்திர ஜாலத்தைப்போல் அந்தரத்தில்மறைந்து போயினன், அப்பாற் சாவித்திரியானவள் சிந்தைகலங்கி, வந்தவழி தெரியாமல் மயங்கி, தருமமூர்த்தி எந்தவழி மறைந்தார் என்று ஏங்கி, தென்திசையைநாடி, ஓட்டமும் நடையுமாக ஓடிவருவதாயினள். அதை அந்தகன் கண்டு மனந்தாளாமல், முன்ன மார்க்கண்டேயரால் தனக்கு நேரிட்டவிபத்தையாலோசித்து, தன்னுடையவாகனமுங் சாலெழாமல்நிற்பதைக்கண்டு, மகாபதிவிரதைகள் மனநொந்தால் ஏதாமோ? எப்படி விளையுமோ? என்று நைந்து, அச்சாவித்திரி கண்ணுக்குத்தோன்றினன், அப்படிதோன்றலும் அப்புண்ணியசாலி கண்டு தெண்டனிட்டு நிற்க, அவளைப்பார்த்து எமதருமராஜன்சொல்லுகின்றான்.

ஓ புண்ணியஸ்வரூபியே! இவ்வுலகத்தில் எத்தனைபேர் வைதாலும் வயிறெரிந்தாலும் பயப்படாத நான்' உமக்குப்பயப்பட்டேன், ஏனென்றால் - சற்புடையதேவியான நீர், சிங்கங்கள் - புலிகள்-யானைகள்-கரடிகள் செந்நாய்கள் - இவைகளோடு துட்டவேடரும் நிறைந்திருக்குங் காட்டில் ஒண்டியாய்வருவது ஞாயம் அல்ல உம்மை நான் விட்டுப்போவதுந் தருமமல்ல' மேலும் - நீர் கேட்டுக்கொண்ட வரங்கள் எல்லாங் கொடுத்தும, இன்னமும் என்னைத் தொடர்ந்து வருத்துவது முறைமை அன்று, தாயே! மலரைக்கசக்கி மணங்கொள்வார் உண்டோ! அதிக ஆசை அதிக நஷ்டம். இதையறியாமற் பேராசைகொண்டுஎன்பின்னால் வருவது தருமவிருத்தம். வீணாலோசனை வேண்டாம்' நில்லும். என்று சிறிது கடிந்து சொல்லவுஞ்சா

வித்திரி நமஸ்கரித்து, ஸ்வாமி! இப்போதுதான் என க்கு நல்லகாலம் பிறந்தது. என்பேரிற் கோபம் வரா தவரையிலும் நான்பிழைத்திருந்தேன், உமக்குக்கோ பம்வந்தபடியால் நானும் என்புருஷனுடன் கூடவந் து கூடிவாழ்வேன், என்ற வார்த்தையைக்கேட்ட நம ன் குலுங்க நகைத்து, என்னம்மணீ ! உன்னுடைய கருத்து என்னசொல்லென்று வினவினன், அதற்குச் சாவித்திரி அவனைத்தொழுதெழுந்து' ஐயா ! உத்த மர்களைக்கண்டு தெரிசித்தாற் சகலவினையுந் தீர்ந்து சௌக்கியத்தை அநுபவிப்பார்களென்று வேதபுரா ணாதிகள் முறையிடும்போது, எவர்களுக்குந் தரிசன மாகாத நீர் எனக்குத் தரிசனமானது மல்லாமல்,உம் முடன் வார்த்தையுமாடி வரமுங் கொடுத்திருக்கின்றீ ர், அப்படியிருக்க - நான் அமங்கலமாக இருந்தாற் பெரியோர்கள் சொல்லிய தருமநூல்களும் வேதபுரா ணங்களும் பூமியில் நிலைக்காதே: அவைகள் நிலைக்கும் படிசெய்து பெருமை அடைவதே புண்ணியம். ஒதே வதேவனே ! எனக்கு வேண்டிய வரங்கொடுத்தோம் என்று திருவாய் மலர்ந்தீர். தேவரீர் எனக்கு முன்பு கொடுத்தருளிய மூன்றுவரத்தைவிட இன்னமுமேலா கிய பாக்கியங்களைக் கொடுத்தாலும், பிரேதத்திற்குப் பூமாலையோடு பொன்னுபரணங்களைப் பூட்டிப் பார்ப் பதுபோல் இருக்குமே தவிர, என்ன பலனைக் கொ டுக்கும் ? ஓ இறைவனே ! என்புருஷனையுந் தயவு செ ய்து விடுப்பீராகில், நீர்கொடுத்த பாக்கியமெல்லாம் பிரயோசனப்படும். ஆனதால் - என்னுயகனும் நா னும் எப்போதும் எவ்வுலகத்திலும்பிரியாவிடையாய் இருக்கும்படி, எனக்கு மாங்கிலியப்பிட்சை அருள்புரி ந்து இரட்சிக்கவேண்டும். ஓ சிவகாருணியம் உடைய தெய்வமே ! என்று வாழ்த்தி எத்திப்பணிந்த பெண் ணரசியை எமதருமமூர்த்தி பார்த்துப்பூரித்து, அன லைக்கண்டமெழுகுபோல் உருகி, பருப்பதராசகுமாரி யான பராபரையே இவளென்று கருணைசுரந்து, இவர் களாற் பூலோகத்தில் தானதரும பரோகாரமுதலிய வை பெருகி' இல்லறந் துறவறமென்னு மிரண்டும்விள ங்கி விருத்தியாகுமென்று கருதி' அகத்தில் அன்பு கொண்டு' சாவித்திரியாரைப் பார்த்து இதனைச் சொ ல்லுகிறான்.

தாயே ! நீர் சிறந்த உத்தமி, ஆதலால் உமது எ ண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டீர். மெத்தவு மகி ழ்ந்தேன். இப்பவும்உம்முடையநாயகன் பிழைக்கவும் நானிலம் வாழ்த்தவும், சகலநலங்களையும் நீர் பெற்று வாழும்படியாகவும் வரம் அளித்தேன். இருவருங்கூ டி இசையுடன் வாழக்கடவது. என்றுசொல்லி ஆசீர் வதித்தேகினன். அதுகேட்டசாவித்திரியம்மன் அகம கிழ்ந்து சாஷ்டாங்க மாகத் தெண்டஞ் செய்து விடை பெற்றுக்கொண்டு திரும்பி, அதிக விரைவாகவந்து மு ன்னிருந்த இடத்தில் உருக்கார்ந்து' புருடனுடைய சிரத்தைபெடுத்து மடிமீது வைத்து முகத்தைப்பார் த்துக்கொண்டு இருக்கும்போது' அச்சத்தியவான் நி த்திரை நீங்கி எழுந்தவனைப்போல் எழுந்து தன்னு டைய ஸ்திரீயினது முகத்தைப் பார்த்து, ஓ பெ ண்ணே! நான் அயர்த்து நித்திரைசெய்து விட்டேன் நீயேன் எழுப்பாமற்போனாய் ? பொழுதும்போய் விட்டதே: தாய்தந்தை வருந்துவார்களே: ஓ அருந் ததிக்குச் சமானமாகிய பெண்ணே ! ஒருதிவ்யபுருஷ ன் என்னைக்கைக்கொண்டு போகவும், ஒருஸ்திரியான வள் பின்தொடர்ந்து பிரியவசனஞ்சொல்லி மீட்டுக் கொண்டுவரவும் சொப்பனங்கண்டு விழித்துக்கொண் டேன் இஃதென்ன குறிக்கோ தெரியவில்லையென்று சொல்லினன். அம்மொழியைக்கேட்டசாவித்திரியான வள் நாயகன் முகத்தைநோக்கி நகைத்து, நீர்கண்ட து கனவு அல்ல. நிசமாகிய காரியம்: நாளைக்கே உம் முடைய நகரஞ்சேர்ந்து இராசரீகஞ்செய்யப்போகின் றீர். குறைவு ஒன்றுமில்லை. எழுந்துவாருமென்றுசொ ல்லி அழைத்துக்கொண்டு இருவரும் வேகமாக நடந் துவரும்போது, இந்நேரம் அந்தமுதியோர் நம்மை த்தேடுவார்களே: இருவருக்குங் கண்கள்தெரியாதே: அவர்களை உபசரிக்க நம்மிருவரில் ஒருவராகிலும் அ விடத்தில் இராமல் வந்து விட்டோமே. பசியினால் வ ருந்துவார்களே: விடைநாயகனும் விடைஸ்திரீயும் ஆ தலால் வனங்களிற் சம்பிரம சந்தோஷமாக இருந்து விட்டார்களோ? நம்மை மறந்துவிட்டார்களோ? என் று நாடு வார்களே. இதுவரையிலுங் கட்டிக்காத்திரு ந்து நாம் பாடுபட்டதெல்லாம் இன்றுவீணாகப்போய் விட்டதே; பாழாகியநித்திரை பகையாய்நேரிட்டதே: என்று புலம்பிக்கொண்டு வருவதானார்கள்.


இவர்கள்செய லிவ்வாறாக-வனத்தில் இருந்த த ந்தைதாய் இருவரும் மனம்நொந்து வாடி, தாங்கள் இருக்குமிடத்தில் நிழல்சாய்வதைநாடி, ஐயோ ! பொ ழுதுபோய் விட்டதே: எம் புத்திரனையும் மருமகளை யும்இதுவரையிலும்வரக்காணோமே மிருகங்கங்களினாற் பயமுண்டோ? ஸ்திரீயையும் கூடக்கூட்டிக்கொண்டு போன விதத்தினால் அபாய முண்டோ ? யாதேனு மோர் மனவெறுப்பினால் அகன்றாரோ ? நாமிருவரும் வேடிக்கையாய் வாழ்வோம்என்றுசென்றாரோ?மரங்க ளிலேறி விழுந்து வருந்தினாரோ ? கனிமுதலிய கிழங் குகள் அகப்படாமற் பொருந்தினாரோ ? வழிதெரியா மல் மயங்கினாரோ ? வலைப்பாம்பு களினால் தியங்கினா ரோ ? மற்றெதினால் வருந்துகின்றாரோ ? இன்னும் வரக்காண்கிலோமே; எங்களுக்கு ஏதோ தற்செயலா ய்க் கண்கள் தெரிகின்றனவே? இதென்ன ஆச்சரியம்? என்று மயங்கி இருவருங் கூவிக்கொண்டு வழிதெரிந் து நடந்து, தங்கட்கெதிர் வருவோர்களைக் கண்டுகே ட்டு, இப்படியாக வருந்திவாடிவருஞ் சமயத்தில் மக னும் மருமகளும் வந்து சாஷ்டாங்கமாகத் தெண்ட னிட்டு, தாய்தந்தையர்க்குக் கண்கள் தெரிவதைக்க ண்டு சந்தோஷங் கொண்டார்கள். உடனே அத்தாப்

தந்தையர் மைந்தனையும் மருமகளையும் வாரி அணைத்து, மடிமீது இருத்திமுத்தமிட்டு, காலமேபோன நீங்கள் இதுவரையிலும் வராமலிருந்த காரணம் என்னவென்று கேட்டனர். அதற்குச் சாவித்திரி யானவள் சொல்லுகின்றாள். ஓ மாமா! ஓ மாமி! நான் அசுவதி மஹாராசனுக்கும் மாளவதேவியாருக்கும் வரத்திற் பிறந்து வளரும்போது, குதிரையின்மீது வந்த உங்கள்புத்திரனாகிய இச்சத்தியவானைக்கண்டு, இவரே நமக்கு நாயகனென்று எண்ணமுற் றிருந்தேன். அதுகாலையில் எங்கள் தந்தைதாய் இருவரும்விவாகஞ்செய்ய எத்தனித்தபோது, நாரதமஹாமுனி சாட்சியிற் சத்தியவானே நாயகன் என்றுசித்தமாகச் சொன்னேன். அப்போது நாரதபகவான் என் தந்தையைப் பார்த்து, இன்னும் ஒருவருஷம் இருக்கின்றது ஆந்தப்பிள்ளைக்கு ஆயுள். அப்பால் இறந்து போய்விடுவானென்று சொல்லினர். அப்படி சொல்லக்கேட்ட என் தந்தையுந்தாயும் என்னை வேறேபுருஷனை நேமித்துக்கொள்ளச் சொன்னார்கள், அதற்கு நான் சம்மதிக்காமல், அவரேநாயகன் நானேநாயகி என்று சொல்லினேன். அப்போது என்தாய்தந்தையர் கோபங்கொண்டு, பந்துக்களுடன்கானகத்திற்குவந்து, உங்களைச் சம்மதப்படுத்திக் கலியாணஞ் செய்துவைத்தார்கள்.

இப்படியிருக்க - அன்றுமுதல் இன்றையவரையிலும் முந்நூற்றைம்பத்தாறு நாளுங்கழிந்து, மூன்றுநாள் கௌரியைநோக்கி விரதம்இருந்து, இன்றுகடைசியாகிய நான்காவது நாளாகையால், உங்கள் உத்தரவின்பேரிற் காட்டுக்குப்போகிய கணவனுடன் கூடப்போய், என்புருஷனுடைய பிராணனை வாங்கிக் கொண்டு போகின்ற இயமதருமராசனைக் கண்டு வணங்கி, என்னையுங் கொண்டு போப் ஐயனே என்று வருந்தினேன். வருந்திய எனக்கு அவர் மூன்றுவரமுங் கொடுத்து, என்னுயகனுயிரையு மருளிச்செய்து, அப்பால் மறைந்துபோயினர். பின்புயான் அவர்சென்ற திக்குநோக்கித் தெண்டனிட்டுத்திரும்பி, என்கணவனுடன் கூடிவருவதற்குப் பொழுது போய்விட்டது. தேவரீர்கள் கோபங்கொள்ள வேண்டாம். என்று பணியும் மருமகளாகிய திருமகளை மார்போடணைத்து மகிழ்ந்தார்கள். அந்தக்காட்டில் வாசஞ்செய்யும் ரிஷிகள் ரிஷிபத்தினிமார் இயாவரும் அச்சாவித்திரி மகத்துவங்கேட்டு நடு நடுங்கி, அற்புதம்! அற்புதம்! என்று ஆச்சரியங்கொண்டு, இப்படியும் புண்ணியவதிகளுண்டோவென்று தங்களைத் தாங்களே இகழ்ந்து கொண்டார்கள். அக்காலையில் மாமனாரும் மாமியாரும் மருமகளுடைய மகத்துவங்களை நினைந்து நினைந்து உருகி, ஓ அம்மணி! ஓ மனோன்மணி! ஓ உருக்குமணி! ஓ தெய்வசிகாமணி! ஓ சிரோமணி! ஓ சிந்தாமணி! ஓ மாசிலாமணி! நீ எங்களுக்கு மருமகளாக வாய்த்தபோதே இனி ஏதொரு குறைவுமில்லை. எங்கட்கு கெட்டுப்போய்விட்ட கண்ணை வரும்படிசெய்த கேடுபடாத கண்மணியே! நீங்கிப்போனபாக்கியமும் ஓங்கச்செய்த சத்தியவாக்கியமே! என்று மகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தி, மஹாரிஷிகளுக்கு அன்னதானஞ்செய்து, மருமகளையும் பாரணைசெய்யச் சொல்லி, பேரானந்தமென்னும் பெருக்கத்தினால் அவ்விராப்பொழுதைக்கழித்து, விடியற்காலத்தி லெழுந்து நித்திபவிதி கருமங்களை முடித்துக் கொண்டனர். அப்போது பெரியோர்கள் முதலிய யாவர்களும் வந்து வந்து, சாவித்திரியினுடைய சரித்திரத்தைக் கேட்டு மனமகிழ்ந்து ஆசீர்வதித்து வாழ்த்தவும், அவர்களை இவர்கள் போற்றவும், அவ்வனங்களி லிருக்கும் மரங்களியாவும் மலர்ந்து மணங்கள் வீசவும், மிருகங்கள் முதலாகிய பட்சிகள் ஒன்றுக்கொன்று பகையில்லாமல் உலாவவும், தேவர்கள் புஷ்பமாரிதூவவும்' இத்தன்மையவாகிய சம்பிரமங்களை அனுபவித்துக் கொண்டு மகாசந்தோஷத்துடன் அவ்வனத்திற்றானே சிலநாள் வதிந்துகொண்டிருந்தார்கள்.

இப்படி இருக்கு நாளையிற் சாலுவதேசத்தைச் சண்டையிட்டுச் செயித்த சத்துருவானவன் இறந்துபோய், பட்டினத்திற்கு அரசனில்லாமையாற் பழையமந்திரிமார்கள் இயானையை அலங்கரித்துக்கொண்டு தங்களிராசனாகிய சாலுவதேசாதிபதியிருக்குங் காட்டிற்குவந்து' அவ்வரசனைக்கண்டு அடிவணங்கி, சத்துருவுக்கு நேர்ந்த சம்பவத்தைக்கூறி, உடனே அவ்வரசனை இயானையின்பேரி லெடுப்பித்துக்கொண்டு, இராசபத்தினி - புத்திரன் - சாவித்திரி - இவர்களை வாகனங்களிலேற்றி, இராஜசின்னங்களெல்லாம் புடைசூழ்ந்து வரும்படியாகக் கொண்டுபோய்ப் பட்டினப்பிரவேசஞ் செய்துவைத்து, அரண்மனையை அலங்கரிப்பித்துப் பட்டாபிஷேகமுஞ் செய்து, முன்போற் சிங்காசனத்திலிருந்து துரைத்தனஞ் செலுத்தும்படியாகச் செய்தார்கள். அந்தக்காலத்தில் அரசனும் அரசன்தேவியும், கஷ்டதிசையைநீக்கிய மருமகளை இஷ்டதெய்வம்போற் சிந்தித்து வந்தார்கள். இந்தச்சாவித்திரியினுடைய தந்தை அசுபதிராசன் நூறுபிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு, செல்வங்களிற் சிறந்து மகிழ்ந்துவாழ்ந்தனன். அக்காலத்தில் அரியதவத்திற் பிறந்த நமது பெண்ணரசியானவள் என்ன வருத்தமடைகின்றாளோ? ஏது நினைத்து அழுகின்றாளோ? என்று மனம்வருந்தி மந்திரியரை விசாரிக்குங் காலததில், சகலசெல்வமும் பெற்று அரசுபுரிந்து தங்கள் சுதேசத்தில் வாழ்கின்றார்களென்று சொல்லக்கேட்டு, அசுபதிராசன் ஆச்சரியங்கொண்டு' நால்வகைச்சேனையும் - மந்திரிமாரும் - புத்திரவர்க்கமும் - தனது பத்தினியுஞ் சூழ்ந்துவரப் பிரயாணமாகிவந்து, சாலுவதேசத்திற் சேர்ந்து, அரசனைக்கண்டு பிரியவசனங்களைப்பேசி, மருமகனும் மகளும் வந்து பாதங்களில் தொழவும் அவர்களை வாழ்த்தி அணைந்து, அந்தியாவரோடும் மனமகிழ்வுடனே இருந்தார்கள்.

துர்வாசருக்குஅமுதளித்தல்.



[59] இந்திரன்கர்னன்கவசகுண்டலம்கவருதல்.

அக்காலையிற் சாலுவராஜன் அசுபதி அரசனை நோக்கி, ஐயனே! இவ்வரசு உம்முடைய தவத்தினால் வந்த சாவித்திரி அளித்தது. இக்கண்கள் அந்த உத்தமியினால் கொடுக்கப்பட்டன. என்னுடைய புத்திரன் பிராணன் அந்தம்மாள் தயைசெய்து கொடுத்தபிச்சை உமக்குண்டான நூறுபுத்திரரும் அந்தமகா லட்சுமியினுடைய வரப்பிரசாதமே; இங்குள்ள செல்வமெல்லாம் அந்தப் பதிவிரதா சிரோன்மணியா லுண்டான காரியமே; என்றுநடந்தசரித்திரங்களையெல்லாஞ்சொல்லக்கேட்ட அசுபதிராஜனும் மாளவிதேவியும் அகமுமுகமுமலர்ந்தனர். மற்றயாவருங்களித்தார்கள். அசுபதிமகாராஜன் வேண்டிய வன்மைவரிசைகள் இயாவுங்கொடுத்து, இகபரமிரண்டிற்கும் இந்தப் பெண்ணினால் நலத்தைப் பெற்றோமென்று விருந்து போசனமுண்டு, தன்னகரத்திற்குப் போகப் பயணங்கொண்டு, புத்திரர்மருவக்சென்று பட்டினஞ் சேர்ந்து வாழ்ந்திருந்தான். இவிடத்திற் சாவித்திரியும் நாயகனுஞ் சுகத்தைப்பெற்று, மாமியுமாமனும் மகிழ்ச்சியுறப் புத்திர பாக்கியத்துடன் வாழ்ந்திருந்தார்கள், கேளும் தருமராஜனே! நல்லகுலத்திற் பிறந்தும்' கோபநீங்கியும், நற்குண நற்செய்கையிற் சிறந்தும், உலகம் பழிப்பதற்கு இடங்கொடாமலும், சத்தியவிரதங் கெடாமலும், நாயகனே கயிலைநாயக னென்றும்' தாய்விடுமுதல் அன்டை அயலிற் செல்ல இச்சைவையாமலும், தன்முன்தானையே தனக்குங் காவலாகக் கொண்டிருக்கும் உத்தமியாகிய ஒருபதிவிரதையினால், புருடனுக்கும் - மாமன் மாமிக்கும் - தாய்தந்தையர்க்கும்-அழியாச்செல்வம் உண்டாகும். ஆயுள்விருத்தியையும், சத்துருபீடை - துர்வியாதி - துர்மரணம்- துர்சோபம் - துர்பயங்கரம் - இயாவும் நீங்கும். அறமுமோங்கும். ஆதலால்-இந்தப்பாஞ்சாலி யென்னும் பதிவிரதையினால் உங்களுக்குச் சகல சுகமுங் கிடைக்கும். சத்துருஜெயமும் உண்டாம். பயப்படவேண்டாம். என்று வாழ்த்தி, அவர்கள்பணிய ஆசிர்வதித்து' தம்முடையசூழலுக்கு எழுந்தருளினர் மார்க்கண்டேய மகாமுனிவர்.

சயிந்தவன் சருக்கம் - முற்றிற்று.

பதினைந்தாவது

துருவாசமுனிச்சருக்கம்.

கண்ணன் துதி.

தன்னையொத்தா ரைமயிற்றெவ்வர் தனியூர்தன்னிற் றம்பியொடு
மின்னையொத்தா ளொடுநின்ற விற்சேவகனைக் கௌசலையாம்
அன்னையிழைத்த தவப்பயனை யகத்துட்கருதி யடிபணிந்தார்
பின்னையுலகி னொருநாளும் பிறவார்வினையி னிறவாரே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! தருமபூபதியும் - தம்பிமார்களும் திரௌபதி யம்மனும்- பன்னீராயிரம் பிராமணர்களும்-தௌமியாச்சாரியரும் - தவச்சிரேஷ்டர்களும் - தருமமேமுதலியவீதிகளைப் பேசிக்கொண்டு அந்தவனத்திற் சிறிதுநாளிருக்கையில், ஒருநாள் சடைமுடியும் - காவிகாம்பரமும்-முப்புரிநூலும் - உருத்திராட்சத் தாழ்வடமும் - விபூதிதூளிதமும் - கோபக்குறி குடியாகிய கண்களும் - வாழ்த்தலுஞ் சபித்தலு முக்கியநாவும் - திருவடிகளில் மிதியடியும்-இருடிகளிற் சிறந்த மேன்மையையும் உடைய துருவாச ரிஷியானவர், அநேக முனீஸ்வரர்கள் கூட்டமுடன் ஆபத்துக்காலங்களில் அலைந்து அயர்ந்து அவதியுற்று வருபவர்களைப்போல், மத்தியானம் பதினைந்து நாழிகைக்குமேற் பாண்டவர்கள் இருக்கும் வனத்திற்குவந்தார். அப்படிவரவும் அவர்களைக்கண்ட பஞ்சவர்கள் எதிர்கொண்டு, அருக்கிய பாத்திய ஆசமனியங்கொடுத்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ஆசனம் அளித்து, விசிறிகளினால் உபசரித்து, எங்கள் பெரியோர்கள் செய்த பூஜாபலத்தினால் இந்த உச்சிக்காலத்தில் தேவரீர்கள் எழுந்தருளப் பெற்றோம். என்று இருகரமுங்குவித்து இறைஞ்சி நின்றார்கள். இவ்வாறு இறைஞ்சி நிற்பொருள் இறையாகிய தருமபூபதியைத் தூர்வாசர்நோக்கி, எங்களுடைய இளைப்பு நீங்க போசனம் அளிக்கவேண்டுமென்று சொல்லினர். அதற்குத் தருமராஜன்முதல் யாவருங்களித்து, யாவருந் தடாகத்திற் சென்று நித்தியவிதி முடித்துக்கொண்டு வரலாமென்று வணங்கவும், அப்படியே அவர்கள் எல்லோரும் மத்தியானக் கடன்களை முடித்துக்கொள்ளச் சென்றார்கள்.

தமனுதியர் வருந்துவதையுணர்ந்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அங்ஙனமெழுந்தருளுதல்.

இப்பால் முரசக்கொடியோன் திரௌபதையை நோக்கி, இந்த மகாரிஷியானவர்வந்து புசிக்கவேண்டுமென்று நாம் எத்தனைகாலந் தவஞ்செய்தாலுங் கிடைக்கமாட்டார். இன்று நமக்கு நல்லகாலம்நேரிட்

து. ஆகையால் ஒருநொடிப்போதிற் பஞ்சகச்சாயபரமானமுடனே போசனந் திட்டஞ் செய்யவேண்டும். என்றுசொல்லத்திரௌபதி இருகரத்தையுநெரித்து, அடிவயிற்றைப் பிசைந்துகொண்டு, ஓ சந்திரகுலத் தேக்தலே! என்செய்வேன்? சூரியபகவானாகியதிரௌபதாதித்தன் நமக்கு அளித்த அக்ஷயபாத்திரம்பதினைந்து நாழிகையில் வேண்டிய புசிப்பைத் தாத்தக்கதே அன்றி, அப்பதினைந்து நாழிகைக்குமேல் உதவமாட்டாதென்று தங்களுக்குத் தெரிந்து இருந்துஞ் செலவுகொடுத்தீர்களே: இதற்கு அடியேனாற் செய்யலாவது என்னவென்று திரௌபதை தியங்கினள். அதுகேட்ட சத்தியகுண சற்சீலனாகிய இயமதருமராஜனுடைய பாலன் மயங்கி, பெண்ணே! நான் கியாபகமில்லாமற் சொல்லி விட்டேன். பெரியோர்களுடைய மனம் நொந்தால் ஏதாகவிளையுமோ? என்று ஏங்கியபோது வீமசேனன் தமயனைப்பணிந்து, அண்ணா! கந்தமூலபலாதிகளினால் திர்ப்தி செய்துவைத்து வணங்கிக்கொள்ளலா மெனறனன். அருச்சுனனும் நகுலனு மப்படி செய்வதே ஞாயமென்று சொல்லினர்.

அதைத் தருமராஜன்கேட்டு, அன்னமென்று வந்தபேர்களுக்குக் காயுங்கிழங்குங் கொடுப்பது தருமமல்லவே: (பெரியவீடென்று பிச்சைகேட்டாற் கரியை வழித்துக் கையிலிட்டான்.) என்னும் பழமொழிபோலாச்சே; என்னுடைய காலம் விருதாவாய்ப் போச்சே என்று நொந்து, அந்தோ! இந்நேரம் பூசைமுடித்துக்கொண்டு வருவார்களே: என்னசெய்வேன்? ஆசைகூறி மோசஞ்செய்த பாவியானேனே; துருவாசர் சாபத்தினால் நாசமடையுங் காலத்தைப் பெற்றேனே; உலகமுள்ளவரையினும் உலவாப்பழிக் காளாயினேனே: ஒன்றுக்கு முதவாமற்போனேனே; என்று வருந்தித் தௌமியர் பாதத்தில் விழுந்து தளர்ச்சியுற்றனர். உடனே சகாதேவனெடுத்து அணைத்து, அண்ணா! நமக்கு நேரிடும் பொல்லாங்கெல்லாங் காலத்திற்குத் தக்கபடியாகவருமேயல்லது, வேறல்ல. மலை வந்தாலுந் தலைதாங்க வேண்டுமென்பதுபோல் இளைக்காமல், ஆபத்பாந்தவன் - அநாதரட்சகன் - பக்தவச்சலன் - பரமதயாளுவாகிய ஜனார்த்தனன் இவிடம் வரும்படியாக நாமெல்லோருஞ் சிந்தித்தால், அந்தக் கிருஷ்ணமூர்த்திவந்து நமது துன்பத்தை இன்பமாகச் செய்வாரென்று சொல்லினன். அச்சொல் உட்கொண்ட மற்றயரும் பாஞ்சாலியுஞ் சிரத்திற் கரத்தைக் குவித்து, அவருடைய அளவற்ற திருநாமங்களைச் சொல்லித் துதிசெய்தனர். அப்போது பாண்டவர் சகாயனாகிய ஆண்டவன், துரியோதனனேவலால் துருவாசர் அகாலத்திற் பிட்சைகேட்டதும், அதற்கவர்களொத்துப் பின்செய்ய மாட்டாமற் றியங்குவதுமறிந்து, இவர்களைக் காண்டல் நிமித்தியமாகவருகின்றதைப்போல் தாண்டலாகிய குதிரைபூண்ட இரத்ததின்மீது வந்து' பாண்டவர்கள் முன்னின்றார்.

கிருஷ்ணமூர்த்தி துர்வாசமுனிவர் முதலியோர்க்கு அமுதவிருந்தளித்தல்.

அப்போது தேடிய மருந்து திருஷ்டிக் கெதிர்ப்பட்டதுபோல் வந்த சுவாமியைக்கண்டு, இயாவரும் வீழ்ந்துவணங்கி, அகாலத்திற் றுருவாசர் வந்ததும் - அவர்கேட்ட போசனத்திற்குத் தாங்கள்யோசிக்காது இசைந்ததும் - அட்சயபாத்திரத்தின் முறைமையையும்-மற்றயாவற்றையுஞ் சொன்னார்கள். அதைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவானானவர் தமக்குள்யோசித்துக்கொண்டு, பாஞ்சாலியை நோக்கி, அம்மா! திரௌபதாதித்தன் கொடுத்த அட்சய பாத்திரத்தில் ஒன்று அரை அன்னம் ஒட்டிக்கொண் டிருக்கிறதா பாருமென்று சொல்லினர். அண்ணா! சுத்தமாகக்கழுவிக் கவிழ்த்த பாத்திரத்தில் அன்ன மிருக்குமா? ஆகிலும் ஈஸ்வரச்செய லெப்படியோ? இயான் அறியேன். என்று சென்று ஆத்திரப்படாமற் பாத்திரத்தைப்பார்க்க, அதில் ஒருசாதம் ஒட்டிக்கொண்டு இருந்தது. அதைக்கண்ட திரௌபதி மகாசந்தோஷத்துடன் எடுத்துவந்து ஜகரட்சகன் இடத்திற் கொடுக்க, அவரதைக் கரத்தில்வாங்கி' நான்குவேதங்களுமணக்குந் திருநாவில் வைத்துக்கொண்டு சுவைத்தனர். ஓ அரசனே! அவர் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவாகிய கடவுளாகையாற் கொஞ்சங்கொஞ்சமாக அவ்வன்னத்தின் இரசம் அண்டரண்டங்களை வைத்திருக்கும் அவர்சருப்பத்திற்போய் விழுந்தவுடனே, சராசரமுதலிய என்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்களாகிய உயிர்களும் பிர்ம்மானந்த பரிபூரணமாகிக் களித்தன.

அக்கால் தடாகத்திற்குச் சென்ற துருவாசர் முதலிய சகலரிஷிகளும் ஸ்நானஞ்செய்து விபூதிஅணிந்து' நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு கரையிலிருந்து செபஞ்செய்யுங் காலையில்; அவரவர்களுந் தாய்முலைசுரந்து சேய்மிகவருந்துவதைப்போல் தேவாமர்தத்தைத் திர்ப்தியாகப்புசித்து' வாய்வழிகளிலேயும் மூக்கின்வழிகளிலேயுந் தேக்கிவழிய ஏப்பமிட்டுக்கொண்டு, வயிறு எடுக்கமாட்டாமல்' ஸ்ரீநாதனாகியபரந்தாமன் செய்த விருந்து இதுவென்று துருவாசர் உணர்ந்து, அவ்விடத்தினின்றுயாவரோடும்புறப்பட்டு வந்து, கருமபுத்திரயையும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையுங் கண்டார்உடனேஅவரையவர்கள்தெண்டனிட்டு'ஐயா முனிவரே! விரைவிற் போசனத்திற்கு வாருங்களென்று அழைத்தனர். அதற்குத் துருவாசர் பயந்து' ஓதருமபூபதியே! எனக்கொருவரங்கொடுக்கவேண்டும் அதென்னவென்றால்-விருந்தாகவந்து உம்மைக்கண்ட புண்ணியவசத்தினால் அமரர்கள்புசிக்கும் அமுதமே உண்டோம், குசேலனுடைய அவலைத்தின்று அண்டத்துயிர்க ளியாவுங் குளிரச்செய்த ஆதிமூலப் பொருளையும் இவிடத்திற் கண்கள்களிக்கக் கண்டோம். இந்

சஜகாட்சகளைத் துணையாகக்கொண்ட உமக்குத் துன்
பங்களுமுண்டோ? என்று வாழ்த்தி இதனைச்சொல்
லுவதாயினர்.

துர்வாசர் தான்வந்தவிதங்கூறி ஆசீர்வதித்துச்செல்ல, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுந் துவாரகைக்கெழுந்தருளல்.

ஓ தண்டதரனுக்குத் தமையனாகிய உத்தமனே!
அஸ்தினபுரத்தி லிருக்குந் துரியோதன னிடத்திற்கு
இந்தக் கூட்டத்தோடும் ஒருநாள் போயிருந்தேன். அ
வன் நம்மை மிகவும்பூசித்து, அறுசுவையுண்டிகள் அ
ன்புடன் படைத்தான். அதை நாங்கள் இயாவரும் பு
சித்து, சந்தனம் - மாலை - தாம்பூலம் - இவைகளைப்
பெற்றுச் சந்தோஷமடைந்து, உமக்குவேண்டியவரங்
கள்கொடுக்கிறோம் கேளுமென்றேன். அந்தப்பாவியா
னவன் வேறொன்றையும் விரும்பாமல், வனத்திலிருக்
கும் பாண்டவர்களிடத்திற்சென்று என்னிடத்திற் பு
சித்தவண்ணம் அவ்விடத்திலுஞ் சாப்பிடும்படி வரங்
கொடுமென்று கேட்டான். அப்படியே கொடுத்து உ
ம்மைவந்து கண்டோம். ஒருநாளும் உண்ணுதஅமி
ர்த முண்டோம். அந்தத் துரியோதனன் தன்
னுடைய செல்வ கொர்வத்தினல் உங்களை ஏழ்மையாக
எண்ணி, நீங்கள் நல்லபோசன மிடாவிட்டால் நாமத
னற் சபிப்போமென்றும், நீங்கள் கெட்டுப்போவீர்க
ளென்றும், தான் வாழலாமென்றுங் கருதி என்னைய
னுப்பினன். ஆனகயால்-அந்தத்துஷ்டனனவன் இன்
னுமிரண்டுவருடத்திற்குள்ளாகப் புத்திரமித்திரகளத்
திராதிகளுடன் உருண்டுபோய் விடுவான். நீங்கள்
திரண்ட செல்வத்தைப்பெற்று, தீனதயாளுவின் திரு
வடி அநுக்கிரகத்தினல் வாழக்கடவீர்கள். உங்களுக்
குவேண்டிய வரங்களைக்கேளுங்கள் தருகின்றேனென்
ருர். உடனே தருமராஜன் தாழ்ந்துவீழ்ந்து, ஓ சுவா
மிகளே! இன்னெருக்கால் ஆராகிலுந் தேவரீரை இப்
பேர்ப்பட்ட வரங்கேட்டாற் கொடுக்காம லிருக்கவும்,
என்னைக் கேட்டவர்களுக்கு எந்தவஸ்துவாகிலுமில்லை
யென்னமல் நான்கொடுக்கவும் அருள்செய்ய வேண்டு
மென்று இரக்கமுடன்கேட்க, அப்படியே கொடுத்தே
தேனென் றருள்புரிந்து, தன்னேடுவந்த தவமுனிவர்
முதலியபேர்களுடன் கிருஷ்ணமூர்த்தியி னிடத்திலும்
-பாண்டவர்க ளிடத்திலும் - செலவு பெற்றுக்கொண்
டு, திரௌபதியை ஆசீர்வதித்து வாழ்த்தி, மற்றத்
தௌமியர் முதலாயினேரையும் மனமகிழ்ந்து போற்
றிப் புகழ்ந்துகொண்டு, துருவாசர் போய்விட்டனர்.
அப்பால் ஸ்ரீகிருஷ்ணபகவான் செலவு பெற்றுக்கொ
ண்டு துவாரகைக்கு எழுந்தருளினர். பின்பு பாண்ட
வர்களும் - பிராமணர்களும் - அகமகிழ்ந்து, பகவா
னுடையகருணைப் பிரதாபத்தைப் பலவாறு புகழ்ந்து
பேசிக்கொண் டிருந்தார்கள்.

துருவாசமுனிச் சருக்கம்-முற்றிற்று.

பதினுராவது

இந்திரன் கர்னன் கவசகுண்டலங் கவர்ந்தசருக்கம்.

கண்ணன் துதி.

மிகுதியுஞ் சுலபமும் வெம்மை தன்மையும்
தகுதியு னைதுபல ரதிகஞ் சார்ந்திடாப்
பகுதியோர் மிகுதியிற் பற்றிலார்பெருந்
தொகுதியுள் ளுறப்படுந் துணை யெமக்கரோ.

ஓ சந்திரகுலத் துதித்த இந்திரனே! கிருஷ்ண
மூர்த்தி துவாரகையிலிருக்கும்நாளில், ஒருநாள் தே
வேந்திரனை நினைத்தனர். உடனே அவன்வந்துசாஷ்
டாங்க தெண்டனிட்டு அஞ்சலி அஸ்தனகநிற்க, அ
தைக் கண்ணன் கண்டு ஆசனமளித்து இருக்கச்செய்
து, ஓ ஆகண்டலதேவே! அருச்சனனுக்குங் கர்ன
னுக்கும் ஆதிமுதற்கொண்டு ஏர்ப்பட்டிருக்கும் பெ
ரும்பகைகளும், காண்டாவன தகனத்தில் தட்சகனு
டையபுத்திரனுகிய அசுவசேனனனவன் வாலறுபட்டு
த்தாயையும் பறிகொடுத்துமனம்வருந்திக்கர்னனிடத்
திற்போய்ச்சேர்ந்து காண்டீபனைக்கொன்றுபகையை
த்தீர்த்துக்கொள்ளுவேனென்று நாகாஸ்திரமாகவளர்
ந்து வருவதும், உமக்குத்தெரிந் திருக்கின்றதல்லவா?
அப்படிக்கிருந்தும் நீர் சும்மாயிருப்பது எப்படி? நா
ளை பொருகாலத்தில் கர்னனல் விஜயனுக்கு அபாய
நேரிடுமாகில், பாண்டவர்களில் மற்றநால்வரும் இறந்
து விடுவார்களே: அவர்கள் கூறிய சபதமுந் திரௌப
தை விரித்தகூந்தலும் முடியாற்போகுமே: இந்தப்ப
ழிகளெல்லாம் உம்மையும் நம்மையுஞ் சாருமே: இத
ற்குவேண்டிய யுத்திபுத்திகளை யோசித்துச் சொல்லு
ம்: என்று பகவான்கேட்க, வலாரிவணங்கி, சுவாமீ!
அடியேனல் ஆகத்தக்கதை ஆக்யாபித்தால் அவ்வண்
ணம் நடந்துகொள்ளுவேன். என்றுசொல்லிய சசிம
ணளனைச் சுவாமியார்பார்த்துச்சொல்லுகின்ருர்.

இந்திரனுக்குக் கன்னன் கர்னன்வரலாறு கூறிக் கவசகுண்டலங் கவரவனுப்புதல்.

சேளும் இந்திரனே! ஆதியில் வில்வித்தைபரிட்சைசெய்த காலத்திலும், வில்வளைத்த கலியாணகாலத்திலும், கந்திருவனிடத்தில் அகப்பட்டு மெலிந்த காலத்திலும், விஜயன்பேரில் நேரிட்ட பகைகளைப் பாம்பின்விடம்போற் பல்லில்வைத் திருக்கின்றான் கர்னன். அதுவுமல்லாமல் - எறியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் அச்சுவசேனன் என்னும் நாகாஸ்திரமுங் கைகூடியிருக்கின்றது. இதன்றியும் - இவனுடைய பூர்வோத்திரஞ் சொல்லுகிறேன் கேளும். ஓ வெள்ளைவாரணனே! ஆதியில் இவன் ஆயிரக்கவசன் என்கின்ற இராக்கதன். அதிகவரங்களினால்தேவர்கள் முதல் மாதவர்களையும் வேரறக்கொன்று வென்றுவருவான். அந்த வருத்தங்கண்ட பிரமன் முதலாகிய பேரும் ஆதிநாராயண மூர்த்தியினிடத்தில் முறையிட்டார்கள். அவர் நாராயணரிஷியாக நரனுடன் பூமியில்வந்து, அவனோடு ஒருவருடம் யுத்தஞ்செய்து, அப்போதவனைச் செயிக்கமாட்டாமல் இளைத்துத் தவஞ்செய்யச் சென்றனர். அப்போது நரனனவன் ஒருவருடஞ்சண்டைசெய்து, அப்பால் தானுங்களைத்துத் தவஞ்செய்யச்சென்றனன். பின்பு நாராயணரிஷி வந்து ஒரு வருஷம்வரையில் யுத்தஞ்செய்து களைத்து மீட்டுந்தவத்திற்குச்செல்ல, அதுகண்டு நரன் வந்து ஒருவருடகாலம் யுத்தஞ்செய்து வெல்லக்கூடாமல் களைக்க, இப்படியாக இந்த இருவரும் அந்தராக்கதனை விடாமல் மாறிமாறிப் போர்புரிந்து, வருஷத்திற்கு ஒருகவசம் அழித்துவந்தார்கள்.

இந்தப்படி அமர்புரிந்ததில் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது கவசம் அறுபட்டு, ஒருகவசம் இருக்கும்போது அரக்கன் இளைத்து ஓடவும், இவர்களுந்தொடர்ந்து போகையிற் சூரியனிடத்தில் அபயம்புகுந்து அபிக்கமாயினான். அந்த இராக்கதன்றான் இப்போது கர்ணனாகவந்து பிறந்து, மேற்கூறிய நரநாராயணரைப் பகைகொண்டு இருக்கின்றான். அந்த கவசகுண்டலம் இருக்கிறவரையிலும் அவன் இறக்கமாட்டான். அருச்சுனனுக்கு அபாயம்வரும். ஆகையால்-நீர் விருத்தப் பிராமண வேடங்கொண்டு, அக்கொடையாளி இடத்திற்சென்று அதைத் தானமாகக் கேட்டால், உடனே இரண்டையுந் தடையில்லாமற் கொடுத்துவிடுவான். அவனோ? இல்லையென்னுஞ்சொல்லைக் கல்லாதவன் அப்பால் நாகாஸ்திரத்திற்கு நானிருக்கிறேன். என்று சொல்லக்கேட்ட இந்திரன் எழுந்து வணங்கிக்கொண்டு, தேவரீர் சித்தத்தின்படி நடப்பேனென்று விடைபெற்றுச் சென்று, பிராமண வேடத்துடன் கர்னனுடைய அரண்மனைக்குப் போவதாயினான்.

சூரியபகவான் இந்திரன்வருங்காரியத்தைக் கர்னனுக்கு முன்னதாயச்சென்றுரைத்தும் பயன்படாது போதல்.

அப்படியவன் போவதற்கு முன்னமே சுவாமியும் அவ்விந்திரனும் பேசிக்கொண்டதைப் பார்த்திருந்த சூரியபகவான் விசனங்கொண்டு, நமதுபுத்திரனைக்கொல்ல இரண்டு பெரியமனிதர்களும் அந்த எண்ணங்கொண்டார்களல்லவா? அவரவர்கள் தமதுபானைசாயப் பார்ப்பார்களா? தான்சாவ மருந்துண்பார்களா? என்று நினைத்து' உடனே அச்சூரியபகவான் வேதியரூபங்கொண்டு கர்னனிடத்திற்சென்று, அவன்செய்த உபசாரபூசை முதலிய இயாவற்றும் பெற்றுக்கொண்டு, அவனுக்காசிர்வதித்து, அப்பா! அருச்சுனநிமித்தமாகத் தேவேந்திரன் கவசகுண்டலங் கேட்கவருகின்றான். நீ அவனுக்கு அந்த இரண்டையுங் கொடுக்காமல் நிறுத்துவையாகில் திரிலோகங்களும் உன்னைச் செயிக்கமாட்டாது. கொடுத்தாயாகில் நீ பார்த்தன் கைப்பாணத்தால் வீணே இறந்துவிடுவாய். ஆதலாற் கொடுக்காதே என்றுசொல்லி, நான்உன் தகப்பன் நீ என்பிள்ளை. என்று பிறந்த வரலாறுந்தெரிவித்து, தான் சூரியனென்று தனதுரூபத்தைக் காட்டினான். உடனே அங்கர்கோமான் புளகாங்கிதங் கொண்டு, புனித சலத்தினாலும் புட்பங்களினாலும் பூசித்துப் பிரதட்சணஞ்செய்து, ஏகாங்க - திரியாங்க - பஞ்சாங்க-அஷ்டாங்க - சாஷ்டாங்க நமஸ்காரங்கள் புரிந்து இதனைச்சொல்லுகின்றான்.


சுவாமி! என்பிராணனைக் கேட்டாலுங் கொடுத்து விடுவதேயென்று விரதங்கொண் டிருக்கும் அடியேனுக்கு, தேவரீர் இப்படிக்குக் கட்டளையிட லாகாது. இல்லையென்னுஞ்சொல் என் சத்துருவினிடத்திலும் வரக்கூடாது. உயிர்பெற்று இருந்தார் என்பட ஈந்தவர்களன்றி' ஈயாதிருந்தவர்க ளிறந்தவர்களே; மேலும் - ஈதலே அறமென்று வேதம் விளம்பாநின்றது. சகலபோகமுந் தியாகமும் யோகமுமுடையதேவேந்திரனே தேகியென்று என்னை இரந்துகேட்க வந்தால்' நானில்லையென்பதுவும் ஒருசொல்லோ? என்னுயிரும் - இவ்வுலகமும் - மற்றயாவும்போம். கீர்த்திமாத்திர மழியாமல் நிலைத்திருக்கும். ஐயா! இந்தப்பூதவுடலோ? நீர்மேற்குமிழி. இவ்வாழ்க்கையோ? நிலையில்லாத வான்மீன். இச்செல்வமோ? மாறிமாறியுருளுஞ் சகடம். முடிவிலித்தேகமோ? தாய்-தந்தை-பிணி - பேய் - நமன் - நாய் - நரி - புழு - காக்கை-கழுகு-பருந்து - இயமன் - இவைகளெல்லாந் தங்களு

பழம்பொருந்துதல்.





நச்சப்பொய்கை.



டையதென்று காத்துக்கொண்டிருக்க, சூத்திரமுடையபிரதிமெய்போல்நடமாடிவரும். இப்பொய்யானதேகத்தைமெய்யென்றுநம்பி விருதாவில் அழிவதைப்பார்க்கிலும்' கேட்டவர்களுக்கு இல்லையென்னாமல் அளிப்பதே களிப்பாம். ஆதலால்-கொடுப்ப தென்பதைத்தடுக்காதீர். தேவரீர் என்மீது கருணை வைத்துவந்தபடியால், எனக்கு ஒருவரமாத்திரங் கொடுத்தருள் வேண்டுமென்று வணங்கினான். அப்படிவணங்கியபுத்திரனைச் சூரியபகவான் கண்டு, மறுமொழி ஒன்றுஞ் சொல்லாமல், விதியை அனுஷ்டிக்கும்மகியென்று நினைத்து' புத்திரனுடைய உத்தமகுணத்திற்கு மெத்தவும் மகிழ்ந்து, இதனைச்சொல்லுகிறான்.

அப்பா தப்பாமொழியுடைய தன்யனே! தனக்குமிஞ்சித் தருமமென்றும் - சுவரைவைத்துக்கொண்டு சித்திரமெழுத வேண்டுமென்றும் - உட்சுவர் தீத்திப் புறச்சுவர் தீத்தலவேண்டுமென்றும்-இப்படி உலகமொழியுண்டு. இதுகளையோசித்து, உன்பிராணனுக்கு அழிவுவர ஒட்டாத கவசகுண்டலத்தைக் கொடுக்காமல் நிறுத்துவையாகில், திரிமூர்த்தியும் ஒருமூர்த்தமாக வந்தாலும் உனக்குப்பயமில்லை. மிஞ்சிக் கொடுத்து விடுவையாகில், உடனே இறந்தாயென்பதற்குச் சந்தேகமில்லை. (பெற்றமனம்பித்து பிள்ளைமனங்கல்லு,) என்பதை என்னிடத்திலும் உன்னிடத்திலுங் கண்டேன். என்றுசூரியபகவான்சொல்ல, இவையனைத்தையுங் கர்னன்கேட்டு, சுவாமி! தோற்றமாகிய நாமரூபங்களெல்லாம் நிலைத்துநிற்கத் தக்கதோ? தேவரீருக்குத் தோற்றாத காரியமுண்டோ? வினைப்பயனை வென்றவர்களைக் கண்டதுண்டோ? தேவரீர் என்காதில் இல்லையென்னுஞ் சொல்லைப் போடாதீர். இல்லையென்பாரிடத்திற் செல்வநில்லாது. வேண்டிய செல்வங்களைக் கொடுப்பதற்குத் துரியோதனமகாராஜன் காத்துக் கொண்டிருக்கின்றார். என்னுயிரையும் அவருக்கே கைமாறாகக்கொடுக்க விரும்பி யிருக்கின்றேன். சகலபோகங்களையு முடைய இந்திரனேவந்து இறப்பானாகில், இல்லையெனத் தக்கதோ? என்று கூறிய கச்சைக்கொடியோனைச் சூரியபகவான் பார்த்து உள்ளத்திற் களித்து, குழந்தாய்! உன்னுடையமனது இப்படியிருப்பதால், நான்சொல்லியும் இன்னுமெவர்கள் சொல்லியும் பிரயோசனமில்லை, ஆனாலும் - அந்த இந்திர னிதோ வரப்போகின்றான். அவனுக்கு உனிஷ்டப்படி கொடுத்தபிற்பாடு, அந்த இந்திரனிடத்தில் மீளாதவேல் ஒன்றிருக்கின்றது. அவ்வேலோ? சிருஷ்டி திதி சம்ஹார திரௌபவானுக்கிரகமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதியின்றருளியசிவசுப்பிரமணியக்கடவுள் கைக்கொண்டிருக்கின்ற சத்திவேலாயுதத்தின் அமிசைபெற்றுள்ளது. அதையாகிலும்வாங்கிக்கொள் அப்பால் உன்னுடைய இஷ்டம். என்றுஆசிர்வதித்து விசிவாசத்துடனே சூரிய பகவான் தன்கதியை நோக்கிப் போய்விட்டான்.

இந்திரன் அந்தணரூபியாய்க் கர்னனிடம் வந்து கவசகுண்டலம்வாங்கி, ஓர்சத்திவேலை அவனுக்குத்தந்து செல்லுதல்.

உடனே கர்னமகாராஜன் நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு, தானதருமங்க ளெல்லாஞ் செய்து; தேவப் பிராமணர்கள் - ரிஷிகள் - தரித்திரர்கள் - குருடர் - குட்டர் - செவிடர் - முடவர் - கூனர் - குள்ளர் - வியாதியோர் - இவர்கள் முதலாகியபேர்களுக்கும் அவ்வவர்கள்கருதியவற்றைக்கொடுத்து, இன்னும் யாராகிலு முண்டோவென்று விசாரித்து, தேவேந்திரன் எப்போதுவருவானென்று எதிர்பார்த்திருக்குங் காலத்தில், வில்லைப்போல் வளைந்த உடலும் - நடுநடுங்கிய கால்களும் - ஓய்ந்தநடையும் - கையிற்குடையும் - கங்கையின் நுரையைப்போல் நரையும் - கன்ன முதலியன சுருங்கியதிரையும் - கந்தையுடுத்திய அரையும் - காலிற்றொடுத்த மிதியடியும் - கையிற்பிடித்த மூங்கிற்றடியும் - மார்பில்முப்புரிநூலும் - இன்னுமுண்டான கோலத்தோடு ஒப்புவமை இல்லாத கிழவேடங் கொண்டு, அத்தினபுரவீதியிற் பதினைந்து நாழிகை வெய்யலில் நடக்கமாட்டாமற் புழுவைப்போற்பதைபதைத்துத் துடிதுடித்து, ஒட்டமும் நடையுமாகவருகின்றான்தேவேந்திரமகாராஜன். இப்படிவருகின்றதைக்கண்டவர்கள் எல்லோரும் அவனுக்குக் கைகொடுத்து உபசரித்து அழைத்துவரவும், மாயவேடத்துடன் வருந்திவந்த இந்திரன் கர்னமகாராஜனுடைய தானவாசலெங்கே? அரண்மனை யெங்கே? என்றுபலரையுங் கேட்டுக் கொண்டுவந்து, கோட்டை வாசலில் நுழைந்தான். அப்போது காவலாளிகள் தடுத்து, ஐயா! இன்றுதானங்கொடுத் தாய்விட்டது. நீர் போம்; போம்: நாளைக்குவாரும். என்று சொல்லவும் அதைக்கேட்ட ஆகண்டலவந்தணன் ஏக்கமுற்றவன்போல்நிற்க, அப்படிநிற்கின்றவனை இடையூறகற்றுங் கர்னன்கண்டு எதிர்கொண்டுவந்து, சாஷ்டாங்க தெண்டஞ் செய்து' சுவாமீ! என்பாக்கியமே பாக்கியம். இவ்வளவு பிரயாசையுடன் தேகம்வருந்த எனக்குத் தரிசனந்தந்தீர். என்று வணங்கிக்கைகொடுத்து அழைத்துப்போய் ஆசனத்தி லிருக்கச்செய்து, அருக்கியம் - பாத்தியம் - ஆசமனியம் - சந்தனம் - அட்சதை - தூபதீபம் - இவையாவுமளித்து, உபசாரத்துடன் வந்து நின்றான்.

அப்படி வந்தித்து நிற்கின்ற அதரித்திரனை அந்தணன் நோக்கி மங்களாசனங்கூறி, அப்பா! என்னுடைய ஆசைமுன்னுக்கு இழுக்க, கிழத்தனமாகிய தள்ளாண்மை பின்னுக்கு இழுக்க, கால்கள்வழுக்க, கனவருத்தப்பட்டு வருவதற்கு மத்தியானமாய் விட்டது. நானென்னசெய்வேன்? வாயிற்காவலாளர் வரேலென்கின்றார்கள். என்று சொல்லக்கேட்ட கச்சைக்

கொடியோன் குறுங்கைகைத்து, ஓ சுவாமிகளே! நீர் காலந்தப்பி வந்தோமென்று கவலைப் படவேண்டாம். உம்முடைய மனோபீஷ்டப்படிக்குக் கேளுந் தருகிறேன் என்று சொல்லவுந் தேவேந்திரனாகிய மறையோன் மகிழ்ந்து, கற்பகவிருட்சத்தைப்போற் கேட்டதைக் கொடுக்கமாட்டுவையா என்றான். அதுகேட்டகவசகுண்டலன் துடிதுடித்து, சுவாமி! எவர்கள் எதைக் கேட்கினும் இல்லையென்னமற் கொடுக்கும் படியாகத் துவஜங்கட்டியிருக்கிறேன். அப்படிக்கொடாமல்மாறுவனேயாகில், யுத்தமுகத்திற் புறமுதுகிட்டு ஓடிய பாவிபோல் துற்கதி அடையக்கடவேன். நீர் தடையில்லாமற்கேளும். ஓ புருஷசிலாக்கியனே! ஓ வேதவாக்கியனே! என்று கர்னன் சொல்லவும் வச்சிராயுதன்புகழ்ந்து, உன்னுடையதேகத்தோடு பிறந்திருக்குங்கவசகுண்டலத்தைக் கொடுவென்று கேட்டனன். உடனே கனகக்கொடியோன் அகமகிழ்ந்து கொடுக்க எத்தனித்தான். அக்காலையில் அசரீரிதேவதை உரக்கக்கூவி, ஓ மிகுகொடையாளனே! வந்தவன் இந்திரன். உபேந்திரனாகிய கிருஷ்ண பகவானுடைய போதனையால் அருச்சுனனுக்குச் சகாயமாக உன்னிடத்திற் கவசகுண்டலத்தைப் பெறும்படி பிராமண ரூபத்துடன் வந்திருக்கின்றான். இவ்விரண்டையுங் கொடுத்துவிடுவையாகிற் காண்டிபனுடைய கணையால் இறந்துபோவாய். ஆகையாற்கொடாதே; கொடாதே;என்று தடுத்தனள்.

அப்படி தடுத்துங் கர்னன்கேளாமல், கவசகுண்டலம் இரண்டையும் மாயப் பிராமணனிடத்திற் கொடுத்து, மலர்போன்ற பாதங்களில் வீழ்ந்து, ஐயனே! தேவரீர்வந்து இருகரத்தையும் நீட்டிக் கேட்டதற்கு இயான்கொடுத்தது ஒருபொருளோ? என்று பிரியவசனமுஞ் சொல்லினன் அதற்குத் தேவேந்திரன் புளகாங்கிதமுற்றுத் தன்னைமறந்து, இவனுடைய தவமே தவமென்று ஆசிகூறவும்; பாரிசாத புட்பங்களைத் தேவர்கள்வாரி மாரிபோல்தூறி, தேவதுந்துபி முதலிய வாத்தியங்களை முழக்கினர். வையகத்துள்ள யாவரும் வாழ்ந்தினர். அக்கால் ஐயமில்லா மனத்தோனாகிய சவுரியன் களித்துநிற்க, அப்போது தேவநாதன் தன்னுடைய யதாரூபத்தை எடுத்து எதிரில் நிற்க, அதுகண்டஈகையாளி அவனைஇறைஞ்சிப் போற்றினன். உடனே இந்திரன் அவனையெடுத்து அணைத்து, அப்பனே! உன்னுடைய கருணைசுரந்த மனத்தினுக்கு நான் இளைத்தேன். அருச்சுனன் நிமித்தத்திற் கவசகுண்டலம் வாங்கவந்தேன். அசரீரி தடுத்தும் அந்தமொழியைத் தடுத்துக்கொடுத்த அன்பனே! உனக்குக்கைமாறு இயான் செய்வதென்னவென்று தன்கையிலிருக்குஞ் சத்திவேலாயுதத்தை எடுத்துக்கொடுத்து, இதைக் கிரீடிதவிர மற்றப்பேர்கள் பேரிற் பிரையோகஞ் செய்வையாகில், உடனே தப்பாமற்கொல்லும்; என்று பல்லாண்டுகூறினன். உடனே கர்னன் நமஸ்கரித்து, இரண்டு கரங்களினாலும் அவ்வேலை வாங்கிக்கொண்டான். அப்பால் இந்திரன் கர்னனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு துவாரகைக்குப்போய், ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்திற் கவசகுண்டலத்தை வைத்தனன். அதுகண்ட பகவான் மனமகிழ்ந்து, இனிப்பாண்டவர்களுக்கு ஏதொருகுறைவும் இல்லையென்று சொல்லி, கர்னனுடைய உதாரத்தைக் கேட்டுப் புகழ்ந்தனர். பின்பு இந்திரன் கண்ணன் விடைகொடுக்கப் பெற்றுத் தெய்வலோகம்போய்ச் சேர்ந்தான். இப்பால் உலகத்தார்முதல் யாவருங் கர்னனைக் கொண்டாடினார்கள். பாண்டவர்களுக்கு இடதுகண்ணும் இடதுதோளுந் துடித்தன. இனிமேல் ஜெயம் பாண்டவர்களுடையதென்று வீஷ்மத் துரோணதியர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். ஓமகாராஜனே! இவ்வுலகத்தில், (இட்டோர் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்.) என்னும் வாக்கியப்படிக்கு இல்லை யென்னமற் கொடுத்தசூரியபுத்திரன் இன்னமும் புகழுடம்பு கொண்டு இருக்கின்றான. இருந்தும் இல்லையென்னும் லோபியர் உயிருடன் செத்தபிணமாக உழல்கின்றார்கள். ஆதலால் ஈகையை யுடைய தீரனே தீரன்.

இந்திரன் கர்னன் கவசகுண்டலங் கவர்ந்தசருக்கம்-முற்றிற்று.

பதினேழாவது

பழம்பொருந்து சருக்கம்.

கண்ணன் துதி.

மண்ணுடன் புனலுந்தேயு வாயுவா காயந்தன்னே
டெண்ணரு மிரவிதிங்க ளியமான னெனுமோரெட்டு
வண்ணமு மாகியெல்லா வடிவினுஞ் சிறந்துநின்ற
கண்ணரு ளுடையகோவைக் கருதினோர் பிறவிதீர்ந்தோர்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! பாண்டவர்கள் பன்னீராயிரம் பிராமணர்களோடுந் தவுமியா சாரியரை வணங்கிச் சத்காலக்ஷேபஞ்செய்து கொண்டு வனத்திற் சஞ்சரித்திருக்கும்போது, ஒருநாள் சாயங்காலவேளையில் அருச்சுனனுந் திரௌபதியும் உல்லாசமாக வனத்தின் அதிசயவேடிக்கையை

ப் பார்க்கும்படியாகவந்து, வெளியே பெரியோர்கள் தவஞ்செய்யும் நெருக்கமும் - விருட்சங்களின் மிகுதியும் - மலையருவிகளின் ஓசையும் - மிருகங்களின் ஆர்ப்பும் மலர்கள் நிறைந்த மணமும் - இன்னமும் பற்பலவித வளப்பங்களையுங்கண்டு களித்துவரும்போது அங்கே ஒரு நெல்லிமரத்தில் ஓர்கனியானது மிகுந்தபிரகாசத்துடன் பழுத்துகொம்பில் இருக்கக்கண்டு, அம்பிளைய கண்ணாளாகிய பாஞ்சாலி இதைஅறுத்துத்தாரும் என்று அநுமத் துவஜத்தோனைக் கேட்க, விஜயன் காண்டீபத்தை வளைத்துச்சரத்தைத் தொடுத்து அறுத்து உடனே கொடுத்தான். அதைக்கண்ட மாதவர்கள் எல்லோருங் கூட்டமாகக் கூடிக்கொண்டு கிரீடியைநோக்கி, அடடா !! என்ன காரியஞ்செய்தாய்? ஐயோ! பெரும்பழிதேடிக்கொண்டனையே: பெரியோருடைய சாபத்துக்கு அளாகினையே: இந்தப் பழத்தின் காரியம் என்னவென்று எங்களைக்கேட்சலாகாதா? பதறி அறுக்துக் கொடுத்தனையே: பாவத்திற்கு உடம்பட்டனையே: இனி யாங்கள் என்ன செய்வோம்? என்று ஏங்கி இரைந்து விசனப்படும் பெரியோர்களை அர்ச்சுனன் பார்த்து, முகமுந் தேகமும் வியர்த்து, பூமியில்விழுந்து நமஸ்கரித்து, சுவாமிகளே! என்பேரில் அபசாரம். தெரியாமல் அறுத்துவிட்டேன். தேவரீர்கள் மன்னிக்கவேண்டும். இந்தாரும் உங்கள் நெல்லியங்கனி. என்று பூமியில்வைத்துச் சாஷ்டாங்கமாக வணங்கினன்.

அருச்சுனன் ஆமலகக்கனிவரலாறுணர்ந்து தருமனிடஞ்சென்று முறையிட அவருந்தவித்தல்.

அப்படி வணங்கிய பற்குனனைப் பார்த்து அந்தப் பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். ஓ இராஜபுத்திரனே ! இந்தக்கனி எங்களுக்குச் சொந்தமல்ல. மித்திர மஹாரிஷீஸ்வரர் இந்தவனத்தில் தவஞ்செய்துகொண்டு இருப்பதினால், இந்த வனத்திற்கு மித்திரமஹாரிஷி வனம் என்றுபேர். இயாங்கள் எல்லோரும் அவருடைய அடிமைகளாகஇருக்கின்றோம். அந்த உத்தமர் நித்தியம் ஒருவேளை இவிடத்திற்குவந்து, இந்த ஆமலக விருட்சத்தின் அடியில் உளுக்கார்ந்து, சற்றுநேரம் யோகஞ்செய்து, பிற்பாடுஎங்களுக்குத் தவம் - தருமம் - நீதி - இவைமுதலிய இயாவுஞ் சொல்லிப்போவார். அவருக்கு ஆகாரமாக ஈஸ்வர ரனுக்கிரகத்தினால் இந்த நெல்லிமரம் இரண்டுவருடம் பிஞ்சாகி, இரண்டுவருடங் காயாகி, இரண்டுவருடஞ் செங்காயாகி, நான்கு வருடத்தில் இரசம்பெருகிக் கனியாகி, அந்த மஹாரிஷியினுடைய கரத்தில்வந்து இறங்கும். அந்தக்கனியைக் கைலாசபதிக்கு அற்பிதஞ்செய்து, தானுந் தன்னினமாகிய தவத்தினரும்புசித்துக் களித்து, மறுபடி பனிரண்டுவருடம் வரைக்குங்காத்திருப்பார். அந்த மாதவருக்கு நாளைக்காலமே உதவியாகும் கனியைக் கன்னிகையின் வார்த்தையைக்கேட்டு அறுத்து ஈந்தனையே: அந்தோ ! என்னசெய்யலாம்? என்றெல்லோரு மிரங்கக்கேட்ட இந்திரகுமாரன் இடிந்து இளைத்து, அக்கனியைக் கைக்கொண்டு தருமராஜனுக்கு எதிரில்வந்து, அவருடையபாதங்களில் விழுந்து அழுதுபயந்து இதனைச்சொல்லுவதாயினன்.

அண்ணா ! பாஞ்சாலி வார்த்தையைக் கேட்டு இந்தப்பழத்தை அறுத்துக் கொடுத்தேன். தவத்தைச் செய்யும் ரிஷிகளெல்லாம் மித்திர மஹாரிஷியினாற்சாபம்வருமென்றும், பனிரண்டு வருடத்திற்கு ஒருதாம் இந்தப்பழங் கிடைப்பதென்றுஞ் சொல்லுகின்றார்கள். இது நான் விவேகமில்லாமற் செய்தவேலை. (பெண்புத்தி கேட்டோர் பேதையாவார்.) என்னும் பழமொழியையும் பாராமற்செய்து பாபியானேன். என்னைக்கோபியாமல் இரட்சிக்கவேண்டும். என்றுவணங்கும் உதிஷ்டிரர் அண்டையில் நின்ற தண்டதரனைப் பார்த்து, அப்பா வீமா ! (பட்டிடமேபடும் கெட்டகுடியேகெடும்.) என்பது நமக்குப்பலித்தது. நாமென்ன செய்யலாம்? மோர் சுடுகிறதென்று ஊதிக்குடிக்குங்காலத்திலும், இந்தத்திரௌபதியினால்என்னஎன்ன பொல்லாங்குகள் நேரிடுகின்றன. இன்னும் என்னவிளையக் காத்திருக்கின்றதோ ? நானறியேன். (கற்பகத்தைச் சார்ந்தவர்க்குக் காஞ்சிரங்கா யீன்றதே, முற்பவத்திற்செய்தவினை.) என்னும் பழமொழிபோல், அனுபவிக்க வேண்டியதெல்லாம் அனுபவிப்போம். என்று உதிஷ்டிரன் விசனப்படும் போது, காண்டீபன் துதித்து, என்னால் ஒரு அபாயம் வந்தது என்னும் பெயர்வேண்டாம். பழத்தை அறுத்தவன் நான். ஆகையால் என்னையேசபிப்பார். ஒருக்காலும் உங்களைச் சபிக்கமாட்டார். எய்தவன் இருக்க ! அம்பைநோவாரெவருமில்லை. அவருடைய சாபத்திற்கு நானே ஈடாக இருக்கிறேன். என்றுகூறினன். அப்படிகூறிய வென்றி விசயனை தருமபுத்திரர் பார்த்து, தம்பி ! நீ சாபத்தினால் இறக்கவும், நாங்களெல்லோரும் பிழைக்கவுங் கூடுமோ ? இறந்தால் எல்லோரும் மாய்வதேகாரியம். இஃதல்லாமல் ஒருவர்போய்நால்வர்நிற்கிறதும் நால்வர்போய் ஒருவனிற்கிறதுந்தருமத்தின்உரிமைப்பாடல்லவென்றனர்.

பாண்டவர் கிருஷ்ணமூர்த்தியைத்தியானிக்க, அவரெழுந்தருளி அவர்களை ஆதரித்தல்.

இப்படியாகப் பாண்டவர் கலங்கியிருக்குஞ் சமயத்தில் அவருட் சகாதேவன் தருமனை எதிர்கொண்டு வணங்கி, அண்ணா ! பாண்டவர் சகாயனாகிய ஆண்டவன் - ஆபத்பாந்தவன் - என்று சொல்லும்படியாய் நம்மை மச்சார்ந்தவனாயிருக்கின்ற ஒருவன்மடிந்த

போது அல்லவோ? நாம் இறக்கவேண்டும். அவனிரு கரும்வரைக்கும் நமக்கொரு குறைவும்இல்லை. அந்தக் கருணாநிதி இவிடம் வரும்படி சிந்தித்தால் நமது ஆபத்து நீங்கும். என்று இளையவன் சொல்லக்கேட்ட இயாவருங்களித்து, ஏகமனத்தராய்ப் பக்தவத்ஸலனாகிய பகவான் இவிடம் எழுந்தருளிஇரட்சிக்கவேண்டுமென்று துதித்தார்கள் அக்காலையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் பாண்டவர்களைப் பார்க்கவருகிறவரைப்போற் சத்தியபாமை சமேதராய் இரதத்தில்எழுந்தருள, உடனே ஆபத்துக்குப் பாபமில்லை என்பதாய்த் தருமநந்தனன் முதலாகிய பேர்கள் சாஷ்டாங்கமாகத் தெண்டஞ்செய்து, நெல்லிக்கனியினால் நேரிட்ட குறையைச்சொல்லினார்கள். அதுகேட்ட கண்ணன்மனந் துடித்து, அடடா!! இதென்னகாரியம்?இப்படியுஞ்செய்யலாமா? ஈசனுடைய அடியார்மனம் எரிந்து புகைந்தால் விண்பேசமா? இந்தக்கனியைப் பொருந்த செய்ய என்னலாமா? ஓ தருமநந்தன! ஓ வீமசேன! என்று அலறி, அபயம் என்பவர்களுடன் தானுங்கூடி அவலிக்கத்தொடங்கினர். அதைக்கண்ட பஞ்சவர்முதலவன்-தஞ்சமையா அஞ்சனமேனியனே! எங்களைத்தளரவிடாதிர். என்று தோத்திரஞ் சொல்லினர், அச்சொல்லைக்கேட்ட மாயன் சற்றுநேரம் யோசித்து, இதனைச்சொல்லுவதாயினர்.

ஓ முரசத்துவசனே! உங்களிஷ்டப்படி முடிப்பதற்கு நான் தேவனல்ல. மந்திரதந்திரங்களில் வல்லவன் அல்ல, ஆனாற் பெரியோர் உரைத்த வேதமொழி ஒன்றுண்டு. அதாவது-(உற்றது பகர்ந்தால் அற்றதுபொருந்தும்.) என்பதுதான்.இதுஉண்மையானது. மந்திரங்கால் மதிமுக்கால் என்பதுபோல், அந்தமரத்தின்அடியிற்போய்நின்று, அவரவர்களுடையமனோநிச்சயத்தைச்சொல்லுங்கள். எப்படியும் பொருந்தும் (ஜனவாக்கியந்து கர்த்தவ்யம்.) என்பது பொய்யல்ல. என்றுரைத்து இவர்களை அழைத்துக்கொண்டு சென்று, அந்தமரத்தின் அடியிற்போய் நின்று, தன்கரத்திற் பழத்தை யெடுத்துக்கொண்டு, ஓ ஆகாயவாணி! ஓ பூமாதேவி! ஓ வனதேவதா! ஓ வேதமுதல்வனே! இந்தப்பாண்டவர்கள் சொல்லும் உண்மை வசனத்தினாற் பெரியோருக்கு அபசாரமாக அறுத்துவிட்ட பழமானது பொருந்தக்கடவது. என்று இயம்பித்தருமாஜன் கரத்திற்கொடுத்தனர். அதைபவர் வணக்கமுடன்வாங்கி, வழிபடுகடவுளைத் தியானஞ்செய்து நின்றனர். மற்றையரும் அவ்வாறே தியானசிந்தையராயிருந்தனர்.

தருமனந்தனனுரைத்த மனோநிச்சயம்.

அப்போது கிருஷ்ணமூர்த்தியுந்தனக்கிஷ்டதேவனாகிய சம்புவைத்தியானித்து, பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் பார்த்து எச்சரிக்க, முதலாவது - "வெல்லுகவறமு மெய்மையும்பொறையு மேகமேனியனும் வெல்லாமற், செல்லுகபாவம பொய்மொழி கோபந் தெயித்தியர்குலமெனத் தெளிவுற், றல்லும் வெம்பகலு மென்மனநிகழ மலங்கியாமன்னையை முன்னங், கொல்லுதல்புரிந்தோயென்றனன்" இவனாரெனில்-"முரசங் கோட்டியகொற்றவெங்கொடியோன்" இப்படியாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை-ஓ ஆதியில் வஞ்சகமாதாவாகிவந்தபூதகியைப்பாலைக்குடிப்பதுபோல வள்பிராணனைக் குடித்துக்கொல்லுந் தொழில்புரிந்த கோவேயென்றுகூவி, தருமமும்-சத்தியமும்-பொறுமையும்-நீலமேகவண்ணனாகிய நீரும்-நித்தியமாக என்னிடத்தில்நீங்காமல் நீடூழி நிலைபெற்று வாழத்தக்கதுவேயல்லாமல், பாவமும்-பொய்மொழியும்-கோபமும் இராக்கத குலங்களைப்போல் நசிந்துபோகக் கடவதென்று தெளிந்து, என்னுள்ளமானது இரவும் பகலும் இதுவேவேலையாகநடந்துகொண்டிருக்கின்றது. என்று முரசமெழுதிய வெற்றிக்கொடியினை யுடைய தருமராஜன் தனது உண்மை யுறுதியைக் கூறியவுடனே, அகங்கையிலிருந்த ஆமலகம் இரண்டுமுழம் உயர்ந்து நின்றது. அதைக்கண்டு யாவருஞ் சந்தோஷித்தார்கள்.

வீமசேனனுரைத்த மனோநிச்சயம்.

இப்பால் இரண்டாவது - "பிறர்மனையவரைப் பெற்றதாயெனவும் பிறர்பொருளெட்டியேயெனவும்' பிறர்வசையுரைத்தல் பெருமையன்றெனவும் பிறர்துயரென்றுடரெனவுமிறுதியேவரினுமென்மனக்கிடக்கையெம்பிரானிவையெனவுரைத்தான்" இவனாரெனில், "மறலியுமடியுமாறுமல்லியற்கை வலிமை கூர்வாயுவின்மைந்தன்." இப்படியாகஸ்ரீவேணுகோபாலனை-ஓஎன்கர்த்தனே யென்றுகூவி, அன்னியர்களுடைய தருமபத்தினிகளைக் காணில் என்னைப்பெற்ற தாயென்வும், பிறருடைய பொருள்களைக் காணில் எட்டிப்பழமெனவும் ஒருவரையொருவர் வசைமொழிந்து புறங்கூறுதல்பெருமையல்லவெனவும்' வேறொருவர் வருந்தும்படியாக நேரிடுந்துயரம் எனக்குவந்த துயரமெனவும், எனக்கு இறுதிவந்துபோங்கால நேரிடுஞ்சமயத்தும் என் மனத்தை விட்டு நீங்காதிருக்கும் இந்தத்திடத்தை நீரேயறிந்துகொள்ளும். என்று இயமனை மடியச்செய்யும் வலிமையுங் குற்றமற்ற இயல்பையுமுடைய வாயுவின் குமாரனாகிய வீமசேனன் சொல்லவே, அந்த நெல்லிக் கனியானது பின்னுமிரண்டுமுழம் உயர்ந்து நின்றது.

விஜயனுரைத்த மனோநிச்சயம்.

இப்பால் மூன்றாவது - "ஊனமேயான ஊனிடையிருக்கு முயிரினைத்துறந்து மொன்பூணு, மான மேபரப்ப தவனிமேலெவர்க்கும் வரிசையுந்தோற்ற

மூமாபு, ஞானமேயான திருவடியுடையாய் ஞாலமு ள்ளளவு நிற்றலினு, வினமேயுயிருக் கியற்கையாதனு லென்றனன்." இவனுரெனில் "விமனுக்கிளையோன்" இப்படியாக ஸ்ரீவாசுதேவனை ஓ மெய்ஞ்ஞான உருவா கிய திருவடிகளையுடைய விமலனே யென்று கூவி, மா மிசம் - இரத்தம் - சிழ் - நரம்பு - எலும்பு - தோல் - இவைகளாற்கூடி நீர்க்குமிழிபோல் அழியும் உடலிற் பொருந்திய ஆத்மாவைஇழந்தாகினும், ஒழுக்கமுடை மையும் - மதிப்பாகிய சத்திய மொழியும் - நல்லக் கு டிப்பிறப்பும் - பூலோகமுள்ளவரையினும் நிலைபெற்றி ருப்பதனுல், இவற்றைப் பொருளாய் பெறவேண்டும். அப்படி யவற்றைப்பெருமல் மனத்தேகமெடுத்து வி றுதாவில் இறப்பது ஆத்மாவுக்கு ஈனம். ஆகையாற் புருடராகச்சனனமெடுத்தவர்கள்மெய்ஞ்ஞான போத த்தை அறியவேண்டும். அல்லதுயுத்த சங்கிராம விர னுகவேண்டுமென்று என்னுடைய கடைப்பிடி. என் னையாவது - என்வில்லையாவது - என் தமயனையாவ து பழித்தவர்களையும், என்னேடு எதிர்த்தவர்களையு ம், கொன்று வெற்றித்துவஜம் நாட்டுவதே எனக்கு மேம்பாடாகிய கீர்த்தியென்று எண்ணங்கொண் டிரு க்கின்றது. என்னிதயம். என்று வீமசேனனுக் கிளைய பார்த்தன்சொல்லவே, அதுகாலையில் கனியானது பி ன்னும் இரண்டுமுழம் உயர்ந்தது.

நகுலனுரைத்த மனேநிச்சயம்.

இப்பால் நான்காவது - "குலமிகவுடையரெழின் மிகவுடையர் குறைவில்செல்வமுமிகவுடையர், நலமிக வுடைய ரென்னினுங்கல்வி ஞானமற்பமுமில்லாவரை, வலமிகுதிகிரிச் செங்கையாய்முருக்கின் மணமிலா மல ரெனமதிப்பேன், சலமிகுபுவியி லென்றனன்" இவனு ரெனில்-" வாகைத்தார்புனை தாரைமாவல்லான்." இ ப்படியாக ஸ்ரீபரந்தாமனை - ஓ பலமிகுந்தசக்கிராயுத த்தைத் தரித்சருளிய செந்தாமரைக்கையனே யென் றுகூவி, மேலாகிய குலத்திற் பிறந்தோர்களானுனு ம், நல்லழகுகளெல்லா முடையவர்களானுலும், அழி யாச்செல்வத்தைஅதிகம் பெற்றவர்களானுலும், சகல நலங்களையு முடையவர்களானுலும், கல்வியும் - அ தக் கல்விக்குத்தகுந்த கியானமும் - அற்பமேனு மில் லாதபேர்களைச் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தில் வா சனையற்ற முருக்கம்பூப்போல் மதிப்பதே யன்றி; அ வர்களைத் துதிக்கேன். என்று வேகத்தின்கதிமாறு த குதிரைக்கு வல்லவனுகிய வெற்றிமாலைபுனைந்த நகு லமகாராஜன் சொல்லவே, அந்தப்பழமானதுபின்னு மிரண்டுமுழம்உயர்ந்துநின்றது.

சகாதேவனுரைத்த மனேநிச்சயம்.

இப்பால் ஐந்தாவது - "ஒருமொழியன்னை வர ம்பிலாஞான முற்பவகாரணனென்றுங், தருமகேது ணவன் கருணையேதோழன் சாந்தமே நலனுறுதார, மரியதின்பொறையே மைந்தன்மற்றிந்த வறுவருமல் லதாருறவெண், டிருவளர்மார்பா வென்றனன்." இ வனுரெனில் - " ஒருநாற் றிண்ணியர்க்குந் திசைறிளவ ல்" இப்படியாக ஸ்ரீபக்தவச்சலனை - ஓ அஷ்டலட்சு மிகள் குடிகொண்டுவளருமழகியமணிமார்பாவென்று கூவி, சத்தியமேதாய். அளவுபடாத ஞானமே தந்தை. எந்நாளும் தருமமே சகோதரன். கிருபை யே தோழன். சாந்தகுணமே சகல நன்மையைத் தரு ந் தருமபத்தினி. அருமையாகத் திணிந்த பொறுமை யேபுத்திரன். இந்த ஆறுபேரும் எனக்கு உறவினர். ஆதலாற் குந்திமாதேவியும்-மாத்திராதேவியும்-பாண் டுராஜனும் - எனக்குத் தாய்தந்தை அன்று. தருமரா ஜன் - வீமசேனன் - அருச்சுனன் - நகுலன்-இவர்கள் சகோதரர் அன்று. இந்தக் கிருஷ்ணதேவர் எனக்கு த்தோழன் அன்று. சேயைஎன்பவள் பத்தினிஅன்று. விரசுகோத்திரனும் - சுதசேனனும் - எனக்குப் புத்தி ரர் அல்லர். என்று தருமராஜன் முதலியநால்வருக்கு மிளையோனுகிய சகாதேவன் இபாவருங்களிக்கத் தன் னுடைய இருதயகமலத்தில் இருந்ததை எடுத்துக் கூ றவே, அதுகாலையில் அந்தப்பழமானது பின்னும் இ ரண்டுமுழ முயர்ந்தது.

திரௌபதியுரைத்த மனேநிச்சயம்.

இப்பால்ஆறுவது - ,,ஐம்புலன்களும்போலவரு ம்பதிகளாகியு மின்னம்வேறொருவ: னெம்பெருங்கொ மூனுவதற்குருகு மிறைவனே யெனதபெரிதய' மப் புவிதனிற்பெண்பிறந்தரெவற்கு மாடவரிலாமையினல் லா; னம்புதற்குளதோவென்றனள்" இவளாரெனில் -"வசிட்டனல்லறமனைவியே யனையாள்" இப்படியாக ஸ்ரீஜனர்த்தனனை-ஓ என தருமையோர்ந்தஅண்ணலே யென்று கூவி, ஒன்றைவிட்டொன்று நீங்காத ஐம்புல ன்களைப்போல் பாண்டவர் ஐவரும் எனக்கு நாயகரா கியிருந்தும், இன்னமும் வேறொருவன் எனக்குப் புருடனுகும்படியாக விரும்புகின்றதஎன்னுடையபெ ரியமனம் ஆனுலும்-அழகியபூமியிற்புருஷர்களென்னு ம் பேரற்றிருக்குமாகிற் பெண்ணுகப் பிறந்தயாவரை யும் பதிவிரதைகளென்றுசொல்லலாம். புருஷர்களுள் ள வரையினும் பதிவிரதைகளென்றுநம்புவதற்கு இட மு முண்டோ? என்று வசிஷ்ட மகாரிஷியினுடைய தாழ்க்கைத் துணைநலத்திற் கமைந்த மனைவியாகியஅ ருந்ததிக்கு ஒப்பான பாஞ்சாலியானவள்சொல்லவே, மித்திர மகாரிஷிக்கு ஆகாரமாகிய நிறைந்தஇன்சுவை யினையுடைய தேவாமிர்தம்போன்ற நெல்லியங்கனிமு ன்னிருந்தநிலையினிடத்தில்ஒட்டிக்கொண்டது ஓமகா ராஜனே! பிரம்மாதி பஞ்சகர்த்தாக்களை யொத்த பா ண்டவர்களும்' வாணிபாதி பஞ்சசத்திகளை யொத்த பாஞ்சாலியுஞ் சொல்லியவாக்கியத்திற்கு, வாச்சியம் வேதமேயன்றி வேறன்று.

பாண்டவர்கள் தங்களிருக்கைவந்து சேர்ந்தபின்பு, கிருஷ்ணமூர்த்தி துவாரகைக் கெழுந்தருளல்.

அப்போது மகாலட்சுமியையுங்ஙவுஸ்துவாபரணத்தையுந் துளபத்தையு மணிந்த தருமார்பினையுடைய துவாரகாபுரி வாசன் இவைகளையெல்லாங் கேட்டு ஆச்சரியங்கொண்டு' கேட்டீர்களோபாண்டவர்களே! உண்மையுரைக்கில் உண்மைபலிக்கும்; நன்மைபகரில் நன்மையைத்தரும்: ஆதலால்-உற்றது உரைக்கில் அற்றது பொருந்துமென்று பெரியோர்கள் பேசியிருக்கும் வாசகத்தின் மகத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள். என்று சொல்லவே யாவருஞ் சந்தோஷங்கொண்டு வணங்கி' தாங்களிருக்கும் வனத்திற்குச் சென்றார்கள். அக்கால்தாமரைக்கமலத்தின் அரும்பைப்போலெழுந்து விரியாது குவிந்து விளங்கும் ஸ்தனங்களையுடைய ஆயர்மாதர்களின் மலர்போன்றகைகளிலணிந்த வளையல்களின் தழும்பு நீங்காத மரகத மலைபோன்ற ரூபசிங்காரமுடைய எமன் கிருஷ்ணபகவான் இளைத்து வருந்திய பாண்டவர்களின் துன்பங்களை இன்பமாகச்செய்து'பொங்கி யெழுந்தரங்கமுடைய பாற்கடலானது தனது நாயகனை விட்டுப் பிரியாதபடி உறையுந் தன்மைபோன்ற அகழ்சூழ்ந்த வளப்பந் தங்கிய துவாரகையை நோக்கிப்போகத் திரும்பினார். இங்ஙனம் ஐவர்களும் இறைவனை இறைஞ்சி இருந்தார்கள்.

இவ்வாறு கூறிய வைசம்பாயனமுனிவரைஜனமேஜெயமகாராஜன் வபுஷ்டாதேவியுடனெழுந்து வணங்கி' ஐயனே! பாஞ்சாலியானவள் புருஷர்களில்லாவிட்டால் ஸ்திரீகள் உத்தமிகளென்றும்' புருஷர்களிருந்தால் மத்திமர்களென்றுஞ் சொன்னதாகச்செலவுகொடுத்தீர்; அஃதென்னகாரணம்? என்றுஅரசன்கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்: ஓ இறைவனே கேளும்: எந்தெழின்மிக்காளினையாளிசைவல்லான்காந்தையர் கண்கவருங் காட்சியான்—வாய்ந்த' நயனுடையின்சொல்லான் கேளெனினுமாதர்க்' கயலார்மேலாகுமனம். என்றும் தந்தையாயினும் விழைவிற்றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்தராயினு மிகவும் வனப்புடையரெனிலவர்மேல்மடநல்லார்தம்' சிந்தை நடந்திடும்; என்றும் எழிலுடையோர் முகநோக்கி வழன்முகத்தி லிழுதென்ன மாதருள்ளங் குழையுமென யானுரைத்தல் குறிகொண்டாயிலைபோலும்' என்னும் எல்லாநீதிகளுஞ்சொல்லப்படுகின்றது. ஆகையால் - (பேதமைஎன்பது மாதர்க்கணிகலம்) என்றபடி சிந்தையானது சிறிதுநிலைக்காதபடி சஞ்சரிக்குந் தன்மையினால், மகளிர்க்கு மனந்தாவுமென்பது பற்றிப் பாஞ்சாலி அப்படி உரைத்தாள் அதைக்கேட்டுத் தனதுபத்தினிக்கு மிஞ்சினபேர்களில்லைஎன்றுயிருந்த தருமராஜனும் வெகுவாயோசித்து அந்தரகசியம் அரிபரந்தாமனறியத் தக்கதேயன்றி நம்மாலறியத் தக்கதல்லவென்று அஞ்சியிருந்தார்; ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ் சத்தியபாமையும் துவாரகை போய்ச் சேர்ந்தார்கள்.

பழம்பொருந்து சருக்கம் - முற்றிற்று.

பதினெட்டாவது

———(நச்சுப்பொய்கை சருக்கம்.)———

கண்ணன் துதி.

விசும்பினை யாதியாய் விரியும் பூதவித்
தசும்புள வாழ்க்கையிற் சார்வரோ கொலாம்
லசும்பிள முல்லையலர் மங்கை யாள்பவன்
பசும்புயல் வண்ணமே பரவும் பற்றினோர்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜனே! பாண்டவர்களைவரும் பாஞ்சாலியுந் தங்களுக்கு நேரிட்ட துன்பத்தையும் - பகவானால் நேரிட்ட இன்பத்தையும் - தங்கள் சம்பத்தையும் நினைந்து நினைந்து மகிழ்ந்து புகழ்ந்து, தாங்களிருந்த வனத்தை விட்டகன்று, கார்வளம்-நீர்வளம்-கந்தமூலபலாதிவளம் நிறைந்த விண்டுசித்தமகாரிஷியினுடையவனத்தில் வந்து, பனிரண்டாம் வருஷத்தை கழித்துக்கொண்டிருக்கையில், அத்தினபுரத்திரத்தில் இருக்கப்பட்டதுரியோதனன் - கர்னன் - சகுனி - துச்சாதனன் - என்னும் இந்தத் துஷ்டசதுஷ்டர்கள் கூடி, பாண்டவர்கள் பனிரண்டு வருஷமுங் கழித்தார்கள். இன்னுமொருவருஷம் அக்கியாதவாசம் போக்கி விட்டு, இவிடம் வந்து தங்களுடைய பகையை முடித்துக் கொள்ளுவார்கள். ஆகையால் - அக்கியாதவாசம் ஆகுமுன்னமே நாம் எதாகிலும் ஒருகலகஞ் செய்துவிடவேண்டும். அல்லது அவர்களைக் கொன்றுவிடவேண்டும் இதற்கு எவ்விதவுபாயந் தேடலாமென்று துஷ்டர் நால்வரும் யோசிக்கும்போது, மாமன் சகுனி மருமகனை நோக்கி, காமனைவென்ற காலமாமுனியைக் கடிதினி

ல் அழைத்தாற் காரியமாகும். என்று சொல்லவும் இது சரிதானென்று இவர்கள்பேசிக்கொண்டு, எதிரில் இருந்த காளமாமுனிவனை விடுத்து அக்காளமா முனியைக் கையோடழைத்துவாருமென் றுரைக்க, அம்முனிவன் அவ்வாய்ச்சொல் முடியுமுன்னே அழைத்துவந்தான். உடனே துரியோதனன் எழுந்து, அவருடைய அடிமலரிணைக்கு அர்க்யாதிகளளித்து, சாம்பிராணி தூபமுஞ் சாஷ்டாங்கதண்டமுஞ்செய்து, எந்தையே போற்றி, ஈசனேபோற்றி, சுந்தரவேடத் தோன்றலே போற்றி, பகைமேலிட்ட பாண்டவர்தம்மை, மாண்டிடச்செய் துவையகமுழுதும், தூண்டாச்சுடர்போல் துன்பமொன் றின்றியான், ஆண்டிடச்செய்வதுன் னருளேயாதலால், என்சிந்தையின்மருளைத்தீர்த்து இரட்சிக்கவேண்டுந் தேவனே! என்று துரியோதனன் போற்றவும், சகுனி - துச்சாதனன் - கர்னன் - இவர்கள் மூவரும் இருகரங் குவித்து, அரசன் எண்ணப்படியே அருள்செய்ய வேண்டுமையா முனிவர்பிரானே என்று வணங்கினர்.

துரியோதனாதிகள் கர்னமாமுனியைக்கொண்டு பாண்டவர்பொருட்டுமாரண ஓமஞ்செய்வித்தல்.

இவ்வாறு துரியோதனன் முதலிய துஷ்டசிரோமணிகள் நால்வரும் வணங்கிக்கேட்டலும், காளமாமுனிவர் கலங்கிப்பயந்து, இடிவிழும் பாம்புபோல்ஏங்கி இளைத்து, பாவிகளிடத்தில் பக்ஷமாய் வந்தோம் இவர்களால் நமக்கு இழிவுங் குறையும் - உலகப்பழிப்புகம் முயிரினிழப்பும், தவத்தின் பலன்களுஞ் சத்தியவிரதமும் - அழியுங்காலம் அடுத்ததென் றெண்ணி, அரவக்கொடியோய் ஐவர்மேற்கொடுமை, நீயர்கள் நினைப்பினுற் செய்பகினைப்பையேய், அரசும் வாழ்வும் ஆக்கமும் புகழும், புத்திரமித்திரரும்பொன் றுவதுண்மை. உன்வார்த்தையினல் உடம்பட்டு ஓமஞ்செய்து பூதத்தை அனுப்பினலும், பூதகியைக்கொன்ற பூதநாதனும் - புண்ணிய புருஷோத்தமனும் - பாண்டவர்சகாயனும்-ஆகிய கிருஷ்ணபகவான் அவர்களை ஆண்டிரட்சிப்பான். நீயும்நானும்மாண்டுபோவோம். இந்த எண்ணம் உனக்குவேண்டாம். சத்துருக்களைச் சண்டையில் வெல்வது சத்தியதருமம். அதனல் வெற்றியும் உண்டாம். மோசநினைப்புநாசம்விளைக்கும். ஆதிநாளையில் நீ அன்னத்தில் விஷத்தைக்கலந்து ஊட்டிவைத்தும், வசியைகாட்டிவைத்தும், மனையில் தீயை மூட்டிவைத்தும், இவைகட்கெல்லாந் தப்பிப்பிழைத்தவர், இன்னும் எதினல்இறப்பார்கள்? அப்பா! நீசுகப்பட்டு ஏகசக்கிராதிபதியாய்த்துரைத்தனஞ்செய்யவேண்டுமானல், நான் சொல்லும்வண்ணம் நில்லு. கனப்படுவாய். நல்லோர்க்குப் பொல்லாங்குநினையாதே; நாமே பிழைக்கவேண்டும்பிறர் கெடவேண்டுமென் றுஎண்ணுதே: நலமிலாத் துஷ்டரைச் சேராதே: நானிலம் பழிக்கநடவாதே. தாய்தந்தைவார்த்தையைத் தள்ளாதே. தானதருமங்களை மறவாதே. பெரியோர்தம்மை இகழாதே. பேதையர்பேச்சைக் கேளாதே. சத்தியந்தப்பி நடவாதே. தையலார் மோகங்கள் கொள்ளாதே. வஞ்சகவினைப்பு வையாதே. வாழ்நாள் வீணிற் போக்காதே. இத்தன்மையவாகிய நீதியை அனுசரித்தால், உனக்குச் செல்வம் நாளுக்குநாள் நிறைவாகும். குறையென்பது சிறிதுமிராது. ஆயுளுங் குறையாது. விஷப்பரிக்ஷ பார்ப்பவர்களைப்போல் மனது அறிந்து வசநாபியைப் புசிப்பார்களா? அரசனே! என்றுதபோமுனிசொல்லினர்.

இவையனைத்தையுந் துரியோதனன்கேட்டு, காளமாமுனியின் காலில்விழுந்து கண்ணீர்சொரிந்து, சுவாமி! என்வாக்கியத்தைத் தள்ளாமல் அவர்களைக் கொல்லவேண்டுமே யொழிய சமாதானங்கள்சிறிதுஞ் சொல்லவேண்டா மென்று வருந்தி அவர்வாயை யடக்கினன். மற்றயருஞ் சுற்றிலுஞ் சூழ்ந்துகொண்டு, ஒரேபிடிவாதமாய்ப் பிடித்தனர். என்னசெய்வார் முனிவர்? விநாசகால முடையோனுக்கு விபரீதபுத்தி விளையுமென்று மேலோர் உரைத்த விதியின்வண்ணம், வினைவசத்தால் அவரும் நல்லதென்று உடம்பட்டு யாகத்திற்கு வேண்டிய வஸ்துக்களெல்லாம் எடுப்பித்துக்கொண்டு, தாமிருக்கும் இடத்தைவிடுத்து, ஒருவருமில்லாமல் நாயும் - நரியும் - பேயும் - கழுகும் - பூதப்பிரேதமும் - கள்ளியும் - சுள்ளியும் - நெருங்கியிலிக்குஞ் சுடுகாட்டிற்போயிருந்து, அதர்வண வேதவிதியை அனுசரித்து மாரண ஓமஞ்செய்து, மாடு-ஆடு - பன்றி - யானை இவைமுதலிய பலிகள் கொடுத்து, அசாஸ்திர வஸ்துக்களும் - ஓம விறகுகளும் - விதிக்கு மாறுபாடாகியக் நெய்களும் விடுத்து ஆகாயவரையிலும் புகையெழும்படி ஓமஞ்செய்து, அளவற்ற குரூரமந்திரங்களை உச்சரித்து, ஒவ்வொன்றுக்கு சகஸ்திர அகப்பை நெய்வார்த்து, துஷ்டதேவதைகளையெல்லாங் கட்டிக் காவல்செய்து, பட்டப்பகற்போல் தீயைமூட்டிப் பூரணாகுதிவிட்டு வரும்போது, அந்த ஓமகுண்டத்திலிருந்து துரியோதனனுடைய பேராசையைப்போல் வளர்ந்து, அவனுடைய மனதைப் போற்கருத்து, செவ்வானத்திற் கொப்பாகியமயிரும்- வடவாமுகாக்கினிபோன்ற கண்ணும் - அகோரப்பல்லும் - பெரியகரமும் - சிறியகாலும் உடையதாய், விகாரத்தன்மைபொருந்தினதாய், தீர்க்கமும்பருமனுஞ் சிவேலெனுநிறமுமாக ஒருபெரும்பூதம்பிறந்து, ஓமகுண்டத்தை உதைத்து எழும்பிப் பூமியிற்குதித்தது. அதுகண்ட காளமாமுனிவர் பொம்மெனநடுங்கிப் பிரமைகொண்டு, அது தன்வயப்பட் டிருக்கும்படி வசிய மந்திரங்கள்கூறி, அப்பூதத்தைநோக்கி மந்திரவசத்தினல் வனுவேற்றிக்கொண்டு இருக்கின்றனர்.

யமதருமராஜன் பிரமசாரியுமானுமாகச்சென்றுபாண்டவரைக் கடும்பாலவனத்திற்கொண்டுபோய்விடுத்தல்.

ஐயா மகாராஜனே! இப்படி யிவர் இவிடத்தில் இருக்க, பாண்டவர்களுக்கு நேரிடும் நன்மையைச் சொல்லுகின்றோம் கேளும். இந்தக் காளமாமுனிவர் செய்யப்போகின்ற இயாகத்தை ஸ்ரீகிருஷ்ணபகவான் அறிந்து, யமதருமராஜனை நினைத்தனர். உடனே அந்த யமதருமராஜன் ஒருபிரமசாரிப்பிள்ளையைப்போல் வேடங்கொண்டு, பாண்டவர்கள் இருக்குங் காட்டில் ஓடிவந்து, அபயம் அபயமென்று அலறி அழுது அவர்களெதிரில் விழுந்தனன். அப்போதுஅவர்களும் ஓடிவந்து, அந்தப்பிள்ளையை அழைத்துப்போய் உளுக்காரச்செய்து, ஓ சிறுவனே! நீயேன் இப்படி அபயமிட்டு அழுகின்றாய்? என்றுகேட்க அந்தப்பிள்ளை சொல்லுகின்றான். ஓ அரசர்களே! நான் பிராமணப்பிள்ளை. எனக்கு உபனயனம் ஆகவில்லை. (ஜன்மனாஜாயதேசூத்திர, கன்மனாஜாயதேதுவிஜஹா, வேதபாடேன விபரஸ்யாத், பிர்மக்கியானேன பிராமணஹா.) என்னும் வாக்கியம்போல் நானிருக்க, என்னைச் சிலபிராமணர்கள் கண்டு நிந்தித்தார்கள். நான் ஒருபெரியவரை அடுத்து என்குறையைச்சொல்லிக்கொண்டேன் அந்தப்பெரியவர் உபநயனம் நான்செய்து வைக்கிறேன். நீ பயப்படாதே. ஆனால் அதற்கு ஒருமான்குட்டி நாலுகாலும் வெளுப்பாய், தேகம் பரிசுத்தமாய். பால்மறந்ததாய், தருப்பையைப் புசிக்குங்காலத்திற் பிடித்து அதினுடையதோல் கொண்டுவந்தால், முப்புரிநூலிற்கட்டி உபநயனம் முடிக்கலாமென்று சொல்லினர். இப்படி சொல்லக்கேட்ட ஒருவருஷகாலமாய் இந்த வனத்தில்வந்து ஒருவேடனைச் சிநேகித்து, அவனுடன்திரிந்து, அவ்வாறான ஓர்குட்டியைக் கண்டிபிடித்து, அந்தக் குட்டியின் தோலை அவ்வேடனைக் கொண் டுரித்துக் காயவைத்து, பின்பு அவன்கொடுக்கப் பெற்றுக்கொண்டு, இன்று அந்தக்கருமம் முடித்துக்கொள்ளக்கருதி நான் போகாநின்றேன். போகும்போது ஒருசலைமான் ஓடிவந்து, என் கையிலிருந்த தோலைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டது. ஓஐயமீர்! நான் இனி என்னசெய்வேன்? என்று ஏங்கி விசனப்பட்டான் அவ்வெமதருமப் பிரமசாரி.

அதுகேட்ட பாண்டவர்கள் மனதிரங்கி, ஐயா! பயப்படாதிர். நாங்கள் கொண்டு வருகின்றோம். என்று கரங்களில் வில்லும் பாணமும் எடுத்துக்கொண்டு, ஐவரும் அந்த மான்போனவழி எதுவென்று கேட்டுக்கொண்டுபோய் அந்தமானைக்கண்டு தொடர்ந்தார்கள். அந்தமான் இவர்களைக்கண்டு பயப்படாமல் நிற்கும். சற்றுநேரம் படுக்கும். பின்பு எழுந்து நோக்கும். இவர்கள் கையில் அகப்படுவதுபோற் றியங்கிற்கும். அப்பாற் காற்றினுங் கடியவேகமாய் ஓடும். சிலநேரம் அயர்ந்து இளைத்து இருக்கும். இப்படிக்கி இவர்களுக்கு மனவெறுப்பு வரவொட்டாமல், தானும் அகப்படாமல், பாண்டவர்களை நீண்டவனத்தில் நெடுந்தூரங் கொண்டுபோய் விட்டு மறைந்தது. அப்போது பாண்டவர்கள் பகல் பத்துநாழிகை வரையினும் ஓடி இளைத்துக் களைத்து, மான் அகப்படாமையால் வருந்தி, அந்தப் பிராமணப்பிள்ளைக்கு மான் தோலும் நேரிடாமையால் மனமெலிந்து, காடுகள் - மலைகள் - வனங்கள் - வனாந்திரங்களெல்லாந் தேடி, கடும் பாலைவனத்தை நாடி, தங்களுடைய காதுகள் கும்மென்று மூடி' கண்கள் இருண்டு' நாவறண்டு' நாபிவரையினும் உலர்ந்து' நடுக்கமேலிட்டு' அவர்கள் வருந்திய துன்பத்தை ஆயிரம் நாவினாலுஞ் சொல்லி முடியாது. தேகவிளைப்பும் - தாகவிடாய்ப்பும் - பிராமணப் பிள்ளைக்குத் தோல்கொண்டு வந்து தருகிறோமென்று கூறிவந்து அந்தமான் அகப்படாமற்போன உளைப்பும் - எல்லாம் ஒன்றுபடவே தருமராஜன் தளர்ந்து காலோய்ந்து' சந்தனவிருட்சத்தினீழிலில் விழுந்துவிட்டார். தம்பிமார்களுஞ் சோம்பிவெம்பி விழுந்தார்கள். சற்றுநேரந் தரித்துத் தருமராஜன் கண்ணைவிழித்துப்பார்த்து' சகாதேவனை அழைத்து இதனைச் சொல்லுகிறார்.

யமனாலுண்டானநச்சுப்பொய்கையால் வீமனாதியநால்வருமிறக்கதருமனுயிர்சோர்தல்.

அப்பா தம்பி! என்னுயிர்போகின்றது. கொஞ்சந் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால் இந்நேரம் மெத்த உதவியா யிருக்கும். என்று சொல்லவுஞ் சகாதேவன்கேட்டு' தன்னுடைய மெய் வருத்தத்தையும் பாராமல்' காலோய்வையும் நோக்காமல்' அவ்வனத்தில் நெடுந்தூரம்போய்த் தண்ணீர்தேடி வாடி வருந்தி' எங்குஞ் சலமகப்படாமல் திரும்பிவந்து' ஒருபெரிய குன்றின்மேலேறிநான்குதிக்கும் பார்த்தான். அப்போது மேற்குத்திசையில் ஒருபெரிய ஆலமரந் தழைத்திருக்கக் கண்டு' அவிடத்தில் தண்ணீ ரிருக்குமென்று உட்கொண்டு போய்ப் பார்க்கும்போது' ஓர் பெரிய தடாகமிருக்கக்கண்டு' கால்கரஞ் சுத்திசெய்துகொண்டு. இருகரங்களினாற் புனலைவாரி வாயினாற்பருகினான். உடனே தலைசுழற்றி மயக்கமுற்றுக் கரைமீது ஏற அங்கே தள்ளாடித் தடுமாற்றங் கொண்டு விழுந்து இறந்துபோனான். இதனை யறியாத முரசத்துவஜன் நகுலனைநோக்கி தம்பி! உன்தம்பி சகாதேவனை இதுவரையினுங் காணோம். எவ்விடத்திற் றண்ணீர் தேடுகின்றானோ? அல்லது வாடுகின்றானோ? ஒன்றுந் தெரியவில்லை. நீயாகிலும்போய் அவனை யழைத்துக்கொண்டு தண்ணீர் மொண்டுவரக் கடவாய்.

என்று அனுப்பவும் அவனுமப்படியேபோய்த் தேடிக் குன்றேறிக் குளத்தைக்கண்டு, அந்தத்தடாகத் தண்டையிற்போகும்போது தம்பியிழுந்துகிடப்பதை நோக்கி, ஐயோ! இஃதென்ன தலையயக்கமோ? அல்லது மிலத்தியக்கமோ? களையோ? என்றுன்னிவனாய், தானும் ஜலத்தைப்புசித்துத் தம்பிக்குங்கொடுத் தெழுப்பிக் கொண்டு தமயனுக்குங் கொண்டுபோவோமென்று கரங்களிற் கங்கையைவாரிப் பருகினான். உடனே கண்கள் சுழலமிட்டு, அங்கனே விழுந்து இறந்தான். தருமராஜன் நகுலனும் வரத் தாழ்க்கவே, இப்பாலொப்பாருமில்லாமற் சுப்ரதீபம்போல் நின்ற அருச்சுனனைப்பார்த்து, அப்பா பற்குனா! என்மெய்யோ? மெலிகின்றது. உயிரோ? சோர்கின்றது. தம்பிமாரிருவரிருவருஞ் சலிதியில் வரவில்லை. நீயாகிலும் போய் அவர்களையு மழைத்துக்கொண்டு நிமிஷத்திற் சலங்கொண்டுவா வென்றனர். உடனேயவன் முன்சென்றவரடிச்சுவடு தெரிந்து சென்று, குன்றேறிக்கண்டு குளத்தைச்சார்ந்து, தம்பிமாரிருவர் சாய்ந்ததனை யோர்ந்து, தண்ணீரள்ளித் தானுங்கொள்ள, யேற்றில் யானைசிக்கியவிதம்போல், பார்த்தனும் பூமியிற் படுத்திறந்திட்டான்.

இவிடத்தில் உதிஷ்டிரர் இளைப்பினால் வாடி, மூர்ச்சைபோகவு முன்னின்ற வீமன், அண்ணனை மடிமேல் அணைத்துச் சாத்தி, தண்ணீர்கொண்டுதருவேனென்று. சந்தனமரத்திற் சாயச்செய், ஓட்டமாயோடி உதகத்தைக்கண்டு, உயிரிறந்துகிடக்கும் உத்தமர் மூவரை, பார்த்தவுடனே தாகம்பறக்க, வேர்த்து விதிர்த்து விசாரத்தில் மூழ்கி, கண்ணீராறாய்க்கசிந்து பெருக கையாலசைத்துக் காரியமில்லையென, அறிந்தோனாகி ஐயோவிதற்கென், செய்வோம் சிவனே தேவர்தந்தேவனே! கானியாறெல்லாங் கடந்தோம் சிறிய, கால்வாய் தாண்டக் கதியற்றிறந்தோம். பாஞ்சாலி கூந்தலைப் பறக்கச்செய்தோம். பண்ணியசபதம் மண்ணிலுகுத்தோம். வீரமும் புகழும் வெட்டவெளி யாச்சே: தெய்வசகாயந் தெரிந்துபோச்சே: தீயோர்செய்கை செம்மையாச்சே; திருடர்க்கெல்லாந் திடமாய்ப்போச்சே; வினையே வலிமை வினையே உறுதி. வினையேயெல்லா விளைவுஞ்செய்யும். அண்ணனாவி அகன்றதோ உடைதோ? திண்ணெனப்போயிச்செய்தியைச் சொன்னால், ஆவியவர்க்கு ஆவென்றுபோமே; அண்ணன்பாற்போய் அறைவதைப்பார்க்கிலும், கண்களினீரைக் கறப்பதைபார்க்கிலும், தண்ணீர்குடித்துத் தம்பிமாருடனே, இறப்பதே சிறப்பது என்றுன்னி, இவர்களிறந்தது இந்தவிஷத்தால். தேவர்கள்செய்ததீங்கிதுவாமோ? சத்துருதன்னாற் சமைத்தசலமோ? வஞ்சகர்செய்த நஞ்சமிதுமோ? அண்ணன்றருமன் ஆயாசநீக்கி, அலறியெழுந்தடிச் சுவடினையறிந்து, ஓடிவரிலவ்வுத்தமன்னம்மை, நாடி யெழுப்புவார் நாவறண்டமையால், விஷஜலமென்று நிதானிக்காமல், வேஷ்டையாற் பருகினால் விளிந்துபோய்விடுவார். ஆசையாலவருக் கழிவிப்போமென, மணலைப்பரப்பிமாராஜராஜஸ்ரீ-அண்ணா அவர்கட்டு அடியேன் சரணம். விண்ணப்பமொன்று விளம்புவதி யாதெனில், தம்பிமார் மூவருந் தமியனுமிந்த, கஞ்சமலர்க்கய நஞ்சமருந்தி, கானகத்திடைநாள் கழிக்கவந்ததுபோய், காலனுக்குயிரைக் சழித்தோம் கழித்தோம். தேனலர் மாலைத் தேவனேதெரிதி. என்றிவையெழுதி இடும்பி நாயகனும், சென்றுநீர் புசித்துச் சீவன் பொன்றினன். ஒன்றியாய்த்தனித்த உத்தம உதிட்டிரன், நன்மையின்றிநால்வரும் பிரியவே, கண்ணீர் ததும்பிக் கால்களுந்தளர்ந்து, துக்கமேலிட்டு விக்கிச்சோர்ந்தனர்.

மாரணயாகத் துண்டானபூதம் பாண்டவ ரிறந்ததைநோக்கிக் காளமாமுனியை வதைத்தல்.

ஓமகுண்டத்தில் உதித்தபூதம், என்னைப்பிறப்பித்ததுயாதுகாரணம்? இயான்செய்யுந் தொழிலை இயம்பெனக்கேட்க, மாமுனிபயந்து வணங்கிப் பணிந்து, காட்டில்வாழ்குந்தி காளயரைவரை, நாட்டில் வாழ்துரியன் நனவின்படியே, அழித்துவருக ஆவேசு ஆவேசு, என்றுகூற எழுந்துபூதம், பாண்டவர் என்கண் பட்டாற்கொல்லுவேன். காண்டலிலாவிடிற் கடிதுமைக் கொல்வேன் என்றுபோற்றி ஈரேழுலகும், இடித்துமுழங்கி எரிவிழிகாட்டி, கரங்கால் விசையால் மாங்கள்முறிய, மண்ணும் விண்ணும் மாறிப்புரள, வனங்களிலுள்ள மாதவர்வாட சினங்கொண்டு வந்து தென்மேற்றிசையில், மூர்ச்சையாலிறந்த முரசத்துவசனை, சந்தனமரத்திற் றனிமுடிசாய்ந்து, கிடக்கநோக்கிக் கிட்டிப்புரட்டி, பொன்றினனென்று போய் நான்குபேரையும், கண்டுயிரிறந்த காட்சியைநோக்கி, காளமாமுனிமேற் கறுவிச்சினவி, காளமாவிடம்போற்கறுத்தெதிர்வந்து, குருடன் மகன்றன் கொடுமையைக் கேட்டு என்னையுண்டாக்கி இறந்தவர்பேரில், ஏவிப்பழியை எனக்குச் சுமத்தினை. உத்தவரைவரும் உயிரிழந்தவிந்தார். செத்தபேர்களைச்சிதைப்ப தெவ்வண்ணம்? பாவமும்பழியும் படரப்பெற்றீர். பாண்டவருமக்குப் பகையோவிகிதமோ? துஷ்டர்கள் வார்த்தை நஷ்டப்படுத்தும். தீயோருறவு நாய்போலாகும். தெரிந்துந் தெரியா திறந்திரையா. என்றுமொழிந்து எறிந்து சூலத்தால், காளமாமுனியின் கடுந்தலையறுத்து, தீயினில் எறிந்து க்ஷணத்தினில் மறைந்து, போயதுபூதம் பூமியும்வானும், பாவிக்கென்ன ஆவியிழந்தான், முனிவனென்று எங்குமுழங்க, துரியோதனன்முதல்நால்வருங்கேட்டு, வெளிக்குவராமல் வியசனமாயிருந்தார். பிர்மத்திதோஷமும் பிடித்ததிவர்களை. வீஷ்மர் துரோணர் கிருபர்விதுரனும், கேட்டு நகைத்துக் கிலேசமுற்றார்கள். பஞ்சவரைவருங் கொஞ்சநேரம்போய், பிழைத்தசெய்கையின் பெருமையைக்கேளும்.

தருமராசன் சகோதரரிறந்தது நோக்கித் தானுமிறக்கத்துணிந்தபோது, யமன் சரீரியாய்த்தடுத்தல்.

ஜெனமேஜெயனேனுந்திங்கள் மரபோய்? சந்தன மரத்திற் சாய்ந்த தருமன், கொத்தலர்வீசுங் குளுங்காற்றினாலும், ஜன்மாந்திரவினைத் தகைமையாலும், வழிபடுகடவுளின் வல்லமையாலும், தருமதேவதையின் தயவினாலும், போனவுயிர் தன்பொந்தியில் வரவும், கண்கள்திறந்து கைகாலாடி, புரண்டெழுந்திருந்து புலர்ந்த தாகத்தால், தண்ணீர் தண்ணீர் தம்பி தம்பி! என்றுதேடி ஏங்கிநடந்து, இறந்துகிடக்கும் இளையோரைநோக்கி, இவர்களிறந்தது இயாதுகாரணமோ? சத்துருக் களின்மேற் சண்டையிட்டோ? காலவிலங்காற் கலங்கியழிந்தோ? பசியினால் நொந்து பதைபதைத்தயர்ந்ததோ? வசையினாற்கலங்கி வாளாளிழந்தோ? தாகவிடாயாற் சலம்புசித் தயர்ந்தோ? பேய் பூதகணத்தாற் பிசகுவந்துற்றதோ? தெய்வச் செயலோ தீவினை வழியோ? ஜென்மாந்திரத்திற் செய்தபாவமோ? தவத்தினர்கோபமோ சாபவிசேடமோ? அவத்திலிறக்க அனியாயமேதோ? தாய்தந்தைசெய்த தகாத கர்மமோ? உத்தமர் மனது மெத்தவருந்தியோ? என்னமோ தெரியேன் ஈசனேயிவர்கள், பின்னமில்லாமற்பெருநிலத்தவிந்தார். என்றுசலங்கி இளையதம்பியரை, தளித்தனிபுரட்டித் தடவிப்பார்த்து, மயங்கியகாலையில் மருங்கிலிருந்த, மணலினெழுத்தை வாசித்ததழிந்து, விஷசலமிதனால் வீய்ந்தனர் நால்வர். என்றுணர்ந்தெழுந்து இனியென் செய்வேன்? துரியன்செய்த சூதிது தானோ? நினைப்பின் வண்ண நிறைவேற்றினானோ? என்னைப்பிரியா எம்பியர்மடிந்தார். இவர்களுயிரினுமென்னுயிர் சிறந்ததோ? தம்பியரிறக்க நாம்தரணியிலிருந்து, வருந்தி வாடுவதிலும் மாய்வதேபெரிதென, குளத்திலிறங்கிக் குடங்கையில்நீரை, அள்ளியபோது அசரீரிதடுத்து, பஞ்சவர் முதல்வனே நஞ்சிது அருந்தேல். இந்நால்வரும்என்மொழிதப்பி, இதனைப்புசித்து ஏங்கிஇறந்தார். என்றுகூற ஏங்கித்தருமனும், சென்றவருடனே யானுஞ்சேர்வேன். என்றலுமந்த யெழில் சரீரி, ஆறுவொருமொழி யறையக்கேளும். தரும சந்தேகச் சங்கைகளுண்டு. உம்மை நான்கேட்கஉத்தரஞ் சொல்லி, அப்பாற் சலத்தை அருந்துமென்ன, நல்லதென்று நகைத்தனர் தருமர்.

உதிஷ்டிரனால்சரீரிதருமசந்தேகம்வினவிச் சுயரூபங்காட்டி, இறந்தவருக்குயிர்தந் தியன்றதுரைத்தேகுதல்.

இப்பால் அசரீரியுமிழ்ந்து அறச்சேயை நோக்கி ஐயா! மேதினிதன்னில் விளக்குநூல்களில், யாதுபெரிது? அம்மா! வேதமேபெரிது. ஐயா! தருமங்களிற் சிறந்தது யாது? அம்மா! மனையாளுடன் கூடிவாழும் இல்லறதருமமே சிறந்தது. ஐயா! புட்பங்களிற் சிறந்தது யாது? அம்மா! சாதிமல்லிகையே சிறந்தது. ஐயா! முனீஸ்வரர் முதலிய பெரியோர்கள் தொழுங் கடவுள் எவன்? அம்மா! துளபமாலை யணிந்த முகுந்தனே பெரியோர்தொழுங் கடவுள். ஐயா! கிரகத்திற்குரிய பாக்கியம் யாது? அம்மா! குழந்தைகளே கிரகபாக்கியம். ஐயா! செவிக்கு இன்பம் யாது? அம்மா! அக்குழந்தைகள் மழலைச்சொல்லே செவிக்கின்பம். ஐயா! உலகத்தில் நிலைபெற்றுநிற்ப தியாது? அம்மா! சற்கீர்த்தியே நிலையெற்றுநிற்பது. ஐயா! கற்கவேண்டிய தியாது? அம்மா! சாகலிருக்குங்கல்வியே கற்கவேண்டியது. ஐயா! அற்பமென்ப தியாது? அம்மா! பிறரையாசித்தலே அற்பம். ஐயா! மெய்யுறுதி யென்பதியாது? அம்மா! சத்தியமே மெய்யுறுதி. ஐயா! நீக்கவேண்டுவதுயாது? அம்மா! பொய்யொன்றினையே நீக்கவேண்டுவது. ஐயா! விரதத்திற் சிறந்தது யாது? அம்மா! ஐம்பொறிசளினாற்குற்றம் வராமற் காப்பதே சிறந்தவிரதம். ஐயா! நோன்பிலுயர்ந்ததுயாது? அம்மா! கொல்லாமையேஎல்லாநோன்பிலு முயர்ந்தது. ஐயா! கடனென்பதுயாது? அம்மா! பிதுரர்க்குச் செய்யவேண்டுவதே கடன். ஐயா! கடவா திருத்தலென்பதுயாது? அம்மா? தாய் தந்தையர் சொல்லையேகடவாதிருத்தல். இந்தப்பிரகாரம் யமதருமராஜன் அசரீரியாய் அநேகஞ் சங்கைகளைக்கேட்கவும், தருமராஜன் துன்பமென்பதில்லாமல் இன்பங்கொண்டு அன்புடன்சொல்லவும், யமதருமராஜனுக்குச் சந்தோஷம் வந்து, தனது நிஜரூபத்துடனே எதிரில் நின்றான். உடனே உதிட்டிரன்கண்டு, தம்பிமாரிறந்ததையுந் தாகவிடாய்கொண்டதையு மறந்து சாஷ்டாங்கமாகச் தண்டஞ்செய்து, அனேக ஸ்தவுத்தியஞ்சொல்லினர். அப்படி துதித்தபுத்திரனை எடுத்து அணைத்துமுத்தமிட்டு, ஓ சத்தியவானே! உன்புத்திக்கு மெச்சினேன். யான்கேட்டகேள்விக்கும் நீசொல்லிய உத்தரவுக்கும் நானென்ன உதவி செய்யப்போகிறேன்? ஆனாலும் ஒருமந்திர முபதேசிக்கின்றேன். அதனை இறந்துபோன உன்தம்பிமார்களில் ஒருவன்காதில் ஓதுவையாகில், உடனே பிழைப்பான். என்றுசொல்லி உபதேசிக்கவும் அந்த மந்திரத்தை உதிஷ்டிரர் வணங்கிப் பெற்றுக்கொண்டு, நகுலமஹாராஜனுடைய காதில் ஓதினர்.

அதைக்கண்ட யமதருமராஜனவன் - ஓ தருமநந்தனா! திடகாத்திர பல்பராக்கிரமனாகிய வீமசேனனிருக்க, காலகேய நிவாதகவசர் குலவைரியாகிய அருச்சுனனிருக்க, அறியாதபிள்ளையாகிய நகுலனை எழுப்ப நினைத்ததற்குக் காரணம் என்ன? அம்முறையைச் சொல்லும். என்றகேட்கவுந் தருமராஜன்சொல்லுகின்றார். தெய்வமே! பாண்டுபூபதிக்குக் குந்தி

தேவியா ரென்றும் - மாத்திராதேவியா ரென்றும் - இரண்டு பாரியருண்டு. இத்தாய்மார்களிற் குந்திதேவியாருக்குச் சிரேஷ்டபுத்திரன் நானொருவ னிருக்கின்றேன். மாத்திரா தேவியாருக்குச் சிரேஷ்டபுத்திரன் நகுலனாகையால், அவனை யெழுப்ப நினைந்தேன். என்றுசொல்லவும் யமதருமராஜன் இதயங்களித்து, என்மகனே! உன்னுடைய நல்லகுணமே உனக்குத் துணையாகக்கடவது. என்று ஆசிசொல்லி, மற்றப் புத்திரர்களையும் அந்த மந்திரத்தைக்கொண்டே யெழுப்புவித்தனன். உடனே அவர்கள் உறக்க நீங்கினவர்போ லெழுந்து நமஸ்கரிக்க, அவர்களை யமதருமராஜன் தழுவிக்கொண்டு, நீங்க ளைந்துபேரும் நாளை நடக்கப்போகின்ற யுத்தத்தில் நித்தியராய் வெற்றிபெறக்கடவது. என்று வாழ்த்தி, வில்லும் - அம்பும் - மந்திரமுஷ்டிநிலையுங்காட்டிக்கொடுத்து, அவர்களை இருக்கச்செய்து ஓ குழந்தைகளே! நடந்த வர்த்தமானங்களைத் தெரிந்து கொண்டீர்களா? இதோ நான் சொல்லுகின்றேன் கேளுங்கள். அஃதென்னவென்றால் - துரியோதனன் - சகுனி - கர்னன் - துசுவாசன் - இவர்கணால்வருங்கூடி, துரியோதனன் மற்ற மூவரைப்பார்த்து, பாண்டவர்களுக்கு வனவாசந் தொலைந்தது. இனி அக்கியாதவாசம் இருக்கின்றது. இன்னுஞ் சிலநாளையில் அதையும் போக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். நாடுநகரங் கேழ்ப்பார்கள். இல்லையென்றால் நாமெல்லாம் இறக்க ஒருகைபார்ப்பார்கள். ஆகையால்-ஒருஉபாயஞ்செய்து கொன்றுவிடுவதே காரியமென்ன, அண்டையில்நின்ற மாமனும் மற்றையரும் ஆம்: ஆம். என்ன, பின்பு தங்களுக்குள் ஆலோசித்து, காளமா முனிவனைக்கொண்டு மாரண ஓமஞ்செய்து மடிப்பிக்கவேண்டுமென்று அந்த முனிவனை யழைத்துச்சொல்லி, வேண்டிய ஓமத்திரவியங்களும் பலிபாகங்களுங் கொடுத்து அனுப்பினர்.

அந்த முனிவனானவன் மசானபூமியிலிருந்து யாகம்வளர்த்தியபோது, அந்த அக்கினியிலிருந்து உக்கிரமாக ஒரு பூதம்பிறக்க, இவைகளை யெல்லாந் தெரிந்துகொண்ட யாம் அஃதம் முனிவனிடத்தினின்றும் வருமுன்னமே நீங்களிருக்கும் இடத்தில்வந்து' பிரமசாரியாக நின்று குறைகளைச்சொல்லி, அக்குறைதீர்க்க நீங்கள் வெளிப்பட்டபோது உங்களெதிரில் மானைத்தோன்றி, நெடுந்தூரம் உங்களை இழுத்துக்கொண்டுவந்து, எங்குந்தண்ணீரில்லாமற் செய்து, இந்தத்தடாகத்தை உண்டுபண்ணி, இதின்சலத்தை விஷமாக்கி, உங்களுக்குத் தாகவிடாய் ஏற்படுத்தி, இந்தச்சலத்தைப் புசிக்கச்செய்து, தம்பிமாரை இறக்கவைத்து, உன்னைவனத்தில் களைக்கச்செய்து; உங்களைவரையுங் கொல்ல உதித்தபூதம் வருமாகில் உங்கள் பிரேதசரீரத்தைப்பார்த்துப் பிணங்களென்று தள்ளிவிட்டுப் போகவும், தன்னைச்சூலத்தால் உங்களைக் கொல்லவனுப்பிய காளமாமுனிவனைக்கொன்று அக்கினியிற் காந்துபோகவுஞ் செய்வித்து, அப்பால் உன்னைப்பிழைக்கச்செய்து, நீ வந்து சலம்புசிக்கும்போது அசரீரியாக யிருந்து தடுத்து, அத்தடைக்கு மஞ்சா திறக்கின்ற உன்னைச் சில தருமசந்தேகங்களைக் கேட்டு, பின்பு உனக்கு எதிரில் நமது ரூபத்துடன் வந்து ஆசிர்வதித்தோம். நாம் யமதருமராஜன். உங்களிடத்திற் சத்தியமிருக்கின்றமையால் ஒரு காரியமுந் தாழ்வுவரப்போகிறதில்லை. சத்துரு நாசஞ்செய்து சபதமுடித்து வெற்றிகைப்பிடித்துமேதினியாள்வீர். இதுவரையிலும் பனிரண்டுவருஷம் வனத்திற்கழித்து விட்டீர்கள். இனி ஒருவருஷம் அக்கியாதவாசமிருக்கின்றது. ஒரு நகரத்திலுறைந்து ஒருவருக்குந்தெரியாமல் மாறுரூபமாய் மறைந்து காலங்கழிப்பதற்கு' நானொரு மந்திரஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள். என்றுசொல்லி அம்மந்திரத்தைத் தருமராஜனுக்கு உபதேசித்து, சகலதுன்பங்களு நீங்கி இன்பங்களைப் பெறக் கடவீர்களென்று வாழ்த்தி, ஐவரும் வணங்க மங்களாசனங்கூறி, யமதருமராஜன் மறைந்துபோயினான். இப்பாற் பாண்டவர்கள் பால்போன்ற அந்தத் தடாகசலத்திற் குளித்துப்பருகி, அத்தடாகத்தைவிட்டு நீங்கித் தாங்களிருக்கும் வனத்திற்குச் சாயங்காலம் வந்து, தௌமியர்முதலாகிய சாஸ்திரியர்களுக்குச் சரணஞ் செய்து, திரௌபதையின் முகத்தையும் நோக்கி, தாங்கள் புறப்பட்டதுமுதல் நடந்தசரித்திரங்களை ஒன்றொழியாசிலுரைத்து' நீலகண்டன் பாதங்களை நினைத்து' பிராமணர்முதல் யாவர்களும் பல்லாண்டுகூறமங்களமுகத்தராய் வாழ்ந்திருந்தார்கள்.

பாண்டவரைவீஷ்மாதியர்வந்து கண்டுபோதல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! அப்போது துரியோதனனாற் காளமாமுனி அழிந்தான் என்கிறமொழியும், பாண்டவர் பிழைத்தபரிசும்எங்கும்பரவ; அதைக்கேட்ட பாட்டன் வீஷ்மாச்சாரி-துரோணசாரி-கிருபாசாரி- அசுவத்தாமா - விதுரன்-பாஞ்சாலன் - இன்னுமுள்ள மேலோர் - அரசர் - அமைச்சர் - சேனாநாயகர்- முதலான யாவரும் ஐவர்வாழும் ஆரணியத்திற்கு வந்தனர், அவர்களை அவ்வைவரும் எதிர்கொண்டு தண்டமிட்டு' அவ்வர்கட்குச்செய்யவேண்டிய வணக்கமுதலிய உபசாரங்களை நடத்தி; ஆசனந்தந் திருக்கச்செய்தார்கள். அப்போது வீஷ்மாச்சாரியர் தருமராசனைப் பார்த்து' அப்பனே! உன்னுடைய தவமேதவம். வீமார்ச்சுனருடைய புண்ணியமே புண்ணியம் - யாங்களெல்லாம் மனிததேக மெடுத்தும் என்னலாபம்? உங்களைப்போ லனுபவிப்பதே மேலாகியலாபம். அத்தனே! இந்த அருச்சுனன் ஆதிபாண்டரங்கனைக்கண்டு' அவருடைய சடாமகுடங் குலுங்க அடித்து' பாசுபதமும் பெற்று' காலகேய நிவாதகவசர்களையும் இரணிய புரவாசிகளையுங் கொன்

று, இந்திரனுக்குப் பட்டமுங்கட்டி; இந்திராணிகளிக்க இந்திரபதவியுமாண்டு, தேவாமிர்தமுந் தெவிட்டப்புசித்து வந்ததும்; இந்த வீமசேனன் அளகாபுரிக்குச்சென்று, மணிமாலன் முதலிய பேர்களைக்கொன்று, குபேரனுடைய சன்மானம் பெற்று, ஆஞ்சனேயருடைய சினேகமுங்கொண்டு, நகுஷனென்னு மிந்திரன்சாபந் தீர்த்து, அவனாற்பல ஆசிர்வாதங்களும்பெற்று வந்ததும்' யாங்களெல்லாங் கேள்விப்பட்டு சந்தோஷமாயினோம். காளமாமுனிபூதத்தைஅனுப்பியதும், நீங்கள் வருந்தியதும், இயமதருமராஜனாற் பிழைத்ததும், துஷ்டருறவு பற்றிய காளமாமுனி இறந்ததுங் கேள்வியுற்று, மனது தாளாமல் உங்களைப் பார்க்கும்படியாக வந்தோம். என்று சொல்லவும் அதற்குத் தருமராஜன் சாஷ்டாங்க தண்டஞ்செய்து, ஐயா! தங்களைப்போலொத்த பெரியோர்களின் கிருபையினால் இதுவரையிலும்பிழைத்திருக்கின்றோம். இப்போது தேவரீர்களுடைய தரிசனமானபோது இனியொரு குறைவுமில்லை. யன்று உபசாரங்கூறவும் யாவர்களும் ஆசிர்வதித்து, பாண்டவர்களிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு அஸ்தினபுரம்போய்ச் சேர்ந்தார்கள். இப்பால் பாண்டவர்கள் திரௌபதியினிடத்தில் இருந்தபாங்கியரைக் கூட்டிப் பாஞ்சால இராஜனிடத்திலனுப்பிவிட்டு, மற்றப் பரிசனர்களையுந் தங்கட்கிசைந்தவிடஞ் செல்ல விடைகொடுத்து, பின்புதாங்கள் பன்னீராயிரம் பிராமணர்களும் தௌமியாசாரியருமுடைசூழத் திரௌபதா தேவியோடு வனத்தில் வாசஞ்செய்துகொண்டு, பக்தவச்சலனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைச் சதாகாலமுந் தியானித்திருந்தார்கள்.

நச்சுப்பொய்கைச் சருக்கத்தோடு,

ஆரண்யபர்வம் - முற்றிற்று.

ஸ்ரீகணேசாயநம:

விராடபர்வத்தின் அட்டவணை.

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
பாண்டவர் காந்துறை சருக்கம்.	க
தருமராஜன் சோகமுறத் தௌமியா சாரியருந் தம்பியருந் தேற்றுதல்.	உ
தருமராஜன் தம்பியரோ டாலோசிக்க அதற்கவர்கள் கூறுதல்.	ங
பாண்டவரும் பாஞ்சாலியும் பாங்கர் பாங்கியரோடுந் தௌமியாசாரியரோ டும் விராடபுரம் போதல்.	ச
தருமராஜன் தன்கொள்கையைக் கூறுதல்	ரு
வீமராஜன் தன்கொள்கைபைக் கூறுதல்	,,
அருச்சுனராஜன் தன்கொள்கையைக் கூறுதல்.	சு
நகுலராஜன் தன்கொள்கையைக்கூறுதல்	எ
சகாதேவராஜன் தன்கொள்கையைக் கூறுதல்.	அ
திரௌபதாதேவி தன்கொள்கையைக் கூறுதல்.	,,
திரௌபதாதேவிக்குத் தருமநந்தனர் சில தருமங்கூறுதல்.	கூ
தௌமியாசாரியர் பாண்டவர்கட்குச் சில நீதிகூறி, ஔபாசாக்கினி பெற்றுத் தவத்திற்கேகுதல்.	௰
பாண்டவர்கள் வில்முதலிய படைகளை வன்னிவிருக்கத்தடியிற் பதனஞ்செய்து வைத்தல்.	கங
பாண்டவரும் பாஞ்சாலியும் வேற்றுரு வமைதல்.	கச
தருமராஜன் கங்கபட்டரென்னுமந்தண சிரேஷ்டராய் விராடனுக்காசாரியத் தன்மை பூண்டிருத்தல்.	கரு
வீமார்ச்சினர் பலாயனனும் பிரகநளையு மாய் அட்டிற்றொழிலும் அருநடச்செய லு மேற்றிருத்தல்	,,
நகுலசகாதேவர் தாமக்கிரந்தியுந் தந்திர பாலனுமாய்க் குதிரைகளையும் பசுக்க ளையும் பாதுகாத்துவருதல்.	கசு
திரௌபதாதேவி விரதசாரணியாய் விராடன் மனைவியை யடுத்தல்.	கஎ
மற்போர்ச் சருக்கம்	கஅ
வெளியூர் மல்லனுக்கும் விராடனூர் மல்லருக்கும் யுத்தம்	ககூ
விராடன் தன் மல்லர்பட்டதை யெண்ணி வருந்த, கங்கபட்டர் பலாயனன் திறங் கூறி மகிழ்வித்தல்.	உ௰
வாசவனோடு பலாயனன் மற்போராடி வதைத்தல்.	உக
கீசகன்வதைச் சருக்கம்.	உஉ
கீசகன் விரதசாரணியைக்கண்டு மோ கித்தல்.	,,
கீசகனுக்கு விரதசாரணி புத்திகூறிக் கடிதல்	உங
கீசகன் விரதசாரணிக்குத் தன் பராக்கிர மங்கூறிப் பிரதாபித்தல்	உச
கீசகனுக்கு விரதசாரணி சில நீதியுந் தன்னால் நேரு முபாதியுங்கூறி நிந்தித் தல்	உரு
விரதசாரணி சுதர்க்கணையிடஞ் சென்று கீசகன் செயல்கூற, அவள் சமாதானஞ் செய்ய, அங்குமவன் வந்து பிடித்தல்	உசு
சுதர்க்கணை கீசகனைச்சினந்து கண்டிக்க அவனவட்குச் சில நயபயங் காட்டிக் கெஞ்சுதல்	உஎ
கீசகன் சுதர்க்கணையாற் கடிந்து துறத்தப் பட்டுத் தன் மாளிகைசென்று விரக நோயாற் றவிக்க, தாதிய ருபசரித்தல்	உஅ
கீசகன் மரணமூர்ச்சை யடையக்கண்ட தாதியர் சுதர்க்கணைபால் முறையிட்டு விரதசாரணியை யனுப்பும்படி பலாத் காரஞ் செய்தல்	உகூ
விரதசாரணியைக் கீசகனைக் கண்டுவரும் படி சுதர்க்கணை வருந்திப் பணிந்து கேட்டுக்கொள்ளுதல்	ஙO
விரதசாரணி கீசகனிடஞ்செல்ல, அவன் தொடக்கிட்டனுமோடி விராடன் சபையி லபயம் புகுதல்	ஙஉ
விராடன் சபையி லடைக்கலம் புகுந்த திரௌபதியையும் அவளைப் பிடிக்க நேர்ந்த கீசகனையுங் கண் டாக்ரமித்த வீமனைத் தருமரடக்குதல்	ஙரு
திரௌபதி இராஜசபையிலுள்ள விராட னோடும் பெரியோர்களோடுஞ் சில தருமங்கூறி முறையிட, அவர்கள் தேற்றுதல்.	ஙசு
திரௌபதியைத் தருமராஜன் கடிய, அக்குறிப்பறிந்து சபையைநீங்கிச் சுதர்க்கணையிடஞ்சென்று கூற, அவ ளுமற்றையரும் கேட்டவலித்தல்	ஙஅ
தருமநந்தனர் சில குறைபாடுகளைக் கூறி விராடனைக்கடிய, அவன் சபை கலை வித்து அந்தப்புரஞ் செல்லுதல்	ஙகூ
கீசகன் வாலாறு.	சO
திரௌபதி வீமசேனனை மடைப்பள்ளி	


சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
யிற் சென்று கண்டு தன் குறைகூறி வெறுத்துக்கொள்ளுதல்	சக
வீமன் திரௌபதியைத் தேற்றிக் கீசகனைக் கொல்வதற்கான ஓர் சூழ்ச்சியைச் சொல்லியனுப்புதல்	சஉ
பாஞ்சாலி வழக்கப்படி நந்தனவனத்திற்குச் செல்ல, அங்கே மீட்டுங் கீசகன் வந்து வேண்ட, அவனை வீமன் குறித்தவிடத்திற்கு வரச்சொல்லி மீளுதல்	சச
திரௌபதி வீமசேனனைக் கண்டு நடந்ததைக்கூற, அவனவட்குச் சில திட்டஞ் கூறி யனுப்புதல்	சஎ
திரௌபதியும் வீமசேனனுங் கீசகனுக்குக் குறித்தவிடஞ்சென்று, அவன் வரவுக் கெதிர்ப் பார்த்திருத்தல்	,,
கீசகன் விரதசாரணி வேடம்பூண்டிருந்த வீமனைக் கலவிக்குக் கெஞ்சுதல்	சஅ
வீமசேனனுக்குங் கீசகனுக்கும் யுத்தம்	சகூ
வீமன் கீசகனுடலைப் பேய்ப்பதிபோற் சிங்காரித்துத் திரௌபதிக்குக் காட்டிப் பின்பிருவரும் பட்டினம் போதல்	ருக
உபகீசகாளிரவிலடவிச் சந்தடிகேட்டையுற்றுவந்து, தமயனுக்கு நேர்ந்த சம்பவங் கண் டலறுதல்	ருஉ
உபகீசகாள் சுதர்க்கணையிடஞ்சென்று தமயன் செயல்கூற, அவளதுகேட்டு நடத்தவேண்டுவ துணர்த்தியனுப்புதல்	ருங
உபகீசகாள் தமயனைத் தகனஞ்செய்ய வரும்வழியில் விரதசாரணியைக் கண்டையுற்று முடுக்க, அவளலறிக் கூவுதல்	ருச
வீமசேனன் திரௌபதி கூச்சல்கேட்டோடிவந்து உபகீசகாள் நூற்றுமூவரையும் வதைத்தல்	,,
வீமசேனன் திரௌபதிக்கு ஜயைசரிதங்கூறித் தேற்றி, அருவருந் தமதிருக்கையை யடைதல்	ருரு
விராடனுஞ் சுதர்க்கணையுங் கீசகர்க்குரிய கடன்களைமுடித்து, திரௌபதியைத் தெய்வம்போற் போற்றிவருதல்	ருசூ
விராடராஜன் கீசகனிறத்தலைக் குறித்து வியசனப்பட, தருமபுத்திரர் தேற்றி ஆதாரணைக் கூறுதல்	ருஎ
தக்ஷணநிரை மீட்சிச் சருக்கம்.	ருஅ
துரியோதனன் பாண்டவரிருக்கை யறியத் தூதரையேவ, அவர்கள் சென்றுய்த் தவலித்து வருதல்	,,
கர்னன் பாண்டவரிருக்கை இவ்வாறிக்குமெனக் கூறுதல்	சூ0
துச்சாதனன் கர்னனுரையைமறுத்து, பாண்டவர் தமக்குட் பகைத்திறந்தனரெனல்	,,
துரோணாசாரியர் பாண்டவர் நிலைமை கூறித் துச்சாதனனுரையைக் கடிதல்	சூக
கிருபாசாரியர் பாண்டவர் பராக்கிரமங் கூறித் துரியோதனுதியர்க் கறிவுறுத்தல்	சூஉ
வீஷ்மாசாரியர் பாண்டவருள்ள நகரிவ் விதவியல்பை யுளதாமென வறிவித்தல்	சூங
கிருபாசாரியர் துரியோதனனைச் சொற்சோர்வுபட லாகாதெனக் கடிதல்	சூச
தூதர்கள் துரியோதனனுக்கு மச்சநாட்டுவளமும் அந்நாட்டில் நடந்ததுமுங் கூறுதல்	சூரு
துரியோதனன் தூதுவர்சொல்லைச் சன்மானித்துச் சபையாரை வினுதல்	,,
கர்னன் மச்சநாட்டிற் பாண்டவரைக் காணற்கேதுகூற, திரிகர்த்தன் தன் பூர்வபகைநாடி யங்குசெல்ல, துரியோதனன் யுத்தசன்னத்தனுதல்	சூசூ
திரிகர்த்தன் பசுநிரைகளை மடக்குவதைக்கண்ட கோபாலரவனேடெதிர்த் திளைத்தோடி விராடனுக்கறிவித்தல்	சூஎ
விராடராஜன் தன் தம்பிகளோடுந் தனயரோடும் போர்க்கோலங்கொண்டு பிரயாணமாதல்	சூஅ
கங்கபட்டர் விராடனுக்குப் பலாயனனுதிய மூவர் திறங்கூறித் தாங்களு முயுத்தகோலங்கொண் டுடன்செல்ல, உடனே யுத்தமூளுதல்	சூகூ
திரிகர்த்தனுல் விராடன்கட்டுபட, அதுகண்ட தனயாதியர் கங்கபட்டரிடமுறையிட, அவர் தம்பியரைச் செலுத்தித் தானுமேகல்	எஉ
பலாயனன் திரிகர்த்தனைவென்று தன் தேரிற்கட்டி, விராடராஜனையும் பசுநிரைகளையு மீட்குதல்.	எச
கங்கபட்டர்திரிகர்த்தனைக்கட்டவிழ்ப்பித்துவிடுத்தல்.	எரு
உத்தரநிரைமீட்சிச்சருக்கம்.	எசூ
கோபாலர் முறையிடக் கேட்டுத் தாயோடுவருந்தியஉத்தரன்கருத்தை	

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
விரதசாரணி பிரகநளைக்கறிவித்தல்	,,
விரதசாரணிபேடிகைய உத்தரனுக்குச் சாரதியா யமைவித்தல்.	எஅ
உத்தரகுமாரன்யுத்தகோலங்கொண்டு ரதமேறிச் சென்று உத்தரநிரையை யடைதல்.	அ0
குருசேனையைக்கண்டஞ்சிய உத்தரகுமாரனுக்கும் பிரகநளைக்கும்வாதம்.	அக
உத்தரகுமாரன் தேர்விட் டிழிந்தோடக்கண்ட கௌரவாதிய ராலோசித்தல்.	அரு
உத்தரகுமாரன் தன்னைவிட்டுவிடும்படி பிரகநளையை வேண்டுதல்.	அசு
பிரகநளை உத்தரகுமாரனை வலவனாக விசைப்பித்து, வன்னித்தருவருகிற் றேர்செலுப்பித்தல்.	அஎ
ஒற்றைத்தேருங் …ற்சகுனமுங் கண்ட துரோணரும் வீஷ்மரும் வருபவன் அருச்சுனனென் றறிந்து சுயோதனனுக் கறிவித்தல்.	அஅ
கர்னன்துரோணர்கூறியவற்றைக்கடிய துரியோதன னவனைத் தணித்தல்.	அகூ
பிரகநளை உத்தரகுமாரனை வன்னிமரத்தேறி ஆயுதமெடுவென, அவனங்கோ ரரவுகண்டஞ்ச, பின்பவனைத் தேற்றி இசைவித்தல்.	கூ0
உத்தரகுமாரன் பிரகநளையின் சொற்படி ஆயுதங்கண்ட தன்வரலாறுகேட்க, அதற்கவள் விடைதரல்.	கூக
உத்தரகுமாரன் பாண்டவர்க்குநேர்ந்த சம்பவங்கேட் டவரெங்குள்ளாரோவென்றுவருந்த, பிரகநளை உள்ளவாறை வெளிப்படுத்துதல்.	கூஉ
உத்தரகுமாரன் அருச்சுனன் பெயர்களு மவற்றின் வரலாறுங்கேட் டையந்தீர்ந்து ஆயுதமெடுத்துத்தால்.	கூந
அருச்சுனன் சுயரூபங்கொண்டு, இந்திராதியா லணிமணிக்கலனே டனுமக்கொடி படைத்துப் படைமுகம் போதல்.	கூரு
அருச்சுனன் வரவைக்கண்ட துரோணர் துரியோதனனுக் குணர்த்தி யறிவுறுத்தல்	கூஎ
துரியோதனன் துரோணர் கூறியதைக்கேட்டு வெறுத்துக்கொண்டு மற்றைபரா யுத்தத்திற் காயத்தப்படுத்துதல்	கூஅ
அஸ்வத்தாமன் தன் தந்தையை நிந்தித்த துரியோதனனைக் கடிந்து தூறுதல்	க00
கர்னன் துரோணரும் அஸ்வத்தாமனுங் கூறியவற்றைக் கேட்டு மறுத்துத் தன் பராக்கிரமங் கூறல்	க0க
கிருபாசாரியர் கர்னன் கருத்தைக் கண்டித்து உல்லங்கனஞ்செய்ய, அதற்கவனிந்தித்தல்	க0உ
வீஷ்மர் ஆசாரிய நிந்தைசெய்த துரியோதனனையுங் கர்னனையுங் கோபித்து, அவர்கள் பெருமையைக் கூறுதல்	க0ச
வீஷ்மர் ஆசாரியர் மூவரையும் அபராத மன்னிப்புகேட்டு வணங்க, அதற்கவர்களிணங்கி இனியாகவேண்டுவதுரைத்தல்	க0சு
அக்ஞாதவாசத் தவணையி லையுற்ற துரியோதனனை வீஷ்மர் தேற்றி யறிவுறுத்த, அவனதற்கொவ்வாது தன் கொள்கை கூறுதல்	க0எ
துரியோதனன் கருத்துணர்ந்த துரோணர் அவனைப் பசுமந்தைகளோடு பாதிசேனையுங் கூட்டிப் பட்டணமனுப்பி, தாங்களிங்ஙன் படைவகுத்திருத்தல்	க0அ
துரியோதனன் செல்கையுந்துரோணரியர் செய்கையுங்கண்ட அர்ச்சுனன் பெரியோர்க்கு வந்தனக்கணையேவ, அவர்களவனை வியந்து பயந்திருத்தல்	க0கூ
அர்ச்சுனன் அத்தினபுரிக்குச்செல்லுந் துரியோதனனைச் சேனையோடு மடக்கி, பசுநிரைகளை மீட்டுச் சரக்கூடிட்டு விராடநகரனுப்புதல்	ககஉ
மடக்கிய நிரைகள் மச்சநாடு செல்வதைக் கண் டையுற்ற வீஷ்மாதியர் துரியோதனனுக்குத் துணைபடுமுன், அர்ச்சுனனவனைக் கண்டிழித்துரைத்தல்	ககரு
கர்னனுக்கும் காண்டீபனுக்கும் யுத்தம்.	ககஅ
அர்ச்சுனனுக் கிளைத்துப் புறங்காட்டிப் போகுங் கர்னனை அஸ்வத்தாமன் கண்டேசுதல்	கஉசு
அருச்சுனன் தன்னெதிர்நிற்கும் படைக்கணுள்ள சத்துருமித்துருக்களை உத்தரனுக்குணர்த்தி யறிவுறுத்தல்.	கஉஎ
துரோணாச்சாரியருக்கும் அருச்சுன	

சருக்கங்களுமவற்றினுட்பிரிவுகளும்.	பக்கம்.
னுக்கும் உயுத்தம்	௧௩0
கிருபாசாரியருக்கும் அருச்சுனனுக்கும் உயுத்தம்	௧௩௪
வீஷ்மருக்கும் அருக்சுனனுக்கும் உயுத்தம்	௧௩௬
அருச்சுனன்செய்த யுத்தபாராக்கிரமச் சிறப்பு	௧௩௮
துரியோதனுதியர்மீட்டு மருச்சுனனேடுபொருது, அவனது மோகனுஸ்திரத்தால் மயங்கிச் சாய்ந்துபோதல்	௧௪௧
அருச்சுனனேவலா லுத்தாகுமாரன் தன் தங்கைக்குத் தாணிபர் தலையாடை பறித்துவருதல்	௧௪௩
மன்னர்யாரு மயக்கமாறி வீஷ்மராற் றலையாடைபோன தறிந்து, உடனே அத்தினபுரிக்குப் பிரயாணமாதல்	௧௪௫
அத்தினபுரிக்குச் செல்லுந் துரியோதனனை அருச்சுனன் அவமானஞ் செய்தனுப்புதல்	௧௪௬
அருச்சுன னத்தினபுரிக்கேகு மாசாரியர்க்கச்சந்திர வந்தனவிடைபெற்று மீண்டு, தானுத்தாரனேடு வசனித்திருத்தல்	,,
தக்ஷணநிரைமீட்டுவந்த விராடன் உத்தாகுமாரன் சேதிகேட்டு வருந்தி, பின் கங்கபட்டாலுங் காண்டீபன் துதாராலுந் தேறி, அமைச்சாதியரை யழைத்துவா விடுத்தல்	௧௪௮
விராடன் தன்குமாரன்வருமளவுங் கங்கபட்டரோடு வட்டாடலிற்புக, அதனலிருவர்க்கும் வாதாடல்மிக, விரதசாரணி தன்றலைவனுதவில் லடுவாடல்கண்டு வருந்தல்.	௧௫0
உத்தாகுமாரன் பட்டினமீண்டு கங்கபட்டருக்குநேர்ந்த கடுமையைக்கண்டு வருந்துதல்.	௧௫௧
உத்தாகுமாரன் தன் தாய்தந்தையரோடு கங்கபட்டாதியர் காவை வெளிப்படுத்துதல்.	௧௫௨
பாண்டவர் வெளிப்பாட்டுச் சருக்கம்.	௧௫௪
தருமநந்தனர் செற்றியிற்றழும்புகண்டுடன்றதம்பியரைச் சிலதருமவாய்மைகூறித் தணிவித்தல்.	௧௫௫
பாண்டவ ராயுதபாணியராய்ப் பழையகோலங்கொண்டு கொலுக்கூடம்வா விராடன் வரிசைவைத்து வணங்க, தருமாவனைச் சன்மானித்தல்:	௧௫௬
உத்தான் வேண்டுகோளின்படி உத்தரயை அபிமன்னனுவுக்காகச் சம்மதித்தபாண்டவர்கருத்தறிந்தவிராடன் பந்துக்களாதியாக்கோலைவிடுத்தல்.	௧௫௭
ஸ்ரீ கிருஷ்ணபகவான் பந்துக்களோடு அபிமன்னனையும் சுவேதனையுமழைத்துவருதல்	,,
பாஞ்சாலர் - குந்திபோசர் - இவர்கள் முதலாயினேரும், தௌமியாசாரியராதியரும் வருதல்.	௧௫௯
விராடன்தௌமியரால்முகூர்த்தநாள் கோரி, பாண்டவரை உபலாவியத்திருத்தி, மணவினைக்குரிய தொழில் யாவு முடித்தல்.	௧௬0
அபிமன்னன் உபலாவியத்தி லிருந்து விராட புரத்திற்கு மணக்கோலம் போதல்	௧௬௧
திருக்கலியாணச்சிறப்பு.	௧௬௨
ஸ்ரீதனச்சிறப்பு.	௧௬௩

விராடபர்வத்தின் அட்டவணை,

முற்றிற்று.



ஸ்ரீருக்மணீ சத்தியபாமாசமேத ஸ்ரீவேணுகோபால பரப்பிரம்மணேநம:

ஸ்ரீமஹாபாரதம்

நான்காவது,

விராடபர்வம்.

கண்ணன் துதி.

பஞ்சவர்க்குத் துணையான வரத்தினனைப் பாங்குறுபஞ் சாயுதமார் கரத்தினனைக்
குஞ்சரத்துக் கிடரகற்று மாழியானைக் குண்டலியிற் கண்படுபா லாழியானை
அஞ்சனமா வெனுமெழில்சேர் நடையுளானை அசுரையழித் தணிதுளபத் தொடையுளானைத்
தஞ்சமென்றார்க் கருள்செயுஞ்செங் தாளினனைச் சரணடைந்தார் தாரணியிற் றளர்விலாரே.

சூதபுராணிகர் வாக்கியம்.

ஓ சவுனகாதி முனிவர்களே ! இவ்வாறு ஆதிபஞ்சகத்தின் மூன்றும்பாகமாகிய ஆரண்யபர்வத்தைக் கூறிய வைசம்பாயன முனிவரை ஜெனமேஜபமகாராஜன் பணிந்தெழுந்து, சுவாமி! பாண்டவர்கள் பிதுர்வாக்கிய பரிபாலனம்பண்ணவேண்டி வனம்புகுந்து தௌமியாசாரியரோடும் பன்னீராயிரம்பிராமணர்களோடும்பாஞ்சாலிசமேதராய்ச் சூரியதேவனுற்கிடைத்தஅக்ஷய பாத்திரத்துண்டாகு மமுதத்தை அருந்தவர்க்களித்துத் தாங்கள் கந்தமூல பலாதிகளுண்டு காலங்கழித்துவரு நாளையில் வேதவியாசர் கட்டளையின்படி அருச்சுனன் தவநிலைகொண்டு கைலாசபதியிடத்திற் பாசுபதாஸ்திரம் வாங்கி இந்திரன் பகைகளைந்து தேவலோக பட்டாபிஷேகம்பெற்று வந்ததும், திரௌபதி வேண்டுகோளின்படி வீமசேனன் மந்தார பாரிசாதமலர்களுக்காக யாத்திரைசென்று ஆஞ்சநேயரைச்சிநேகங்கொண்டு புண்டரீகன் மணிமானுதியரைவென்று, குபேரனேடு சன்மானித்துச் சடாசுரனைச் சங்கரித்து நகுஷனுடைய சாபந்தீர்த்து வந்ததும், இதுகாறுந் தருமனுதியர் உரோமசமுனிவராலும் மார்க்கண்டேய முனிவராலுங் காலக்ஷேபங்கேட்டுக் காலங்கழித்ததும், சித்திரசேனனுற்கட்டுண்ட துரியோதனுதியரைப்பாண்டவர்மீட்டுவித்துத் திரௌபதியைக் கைக்கொண்ட சிந்துராஜனை அவமானப்படுத்தித் துரியோதனனுற்சபித்துவரும்படியேவிய துருவாசமுனிவரின் ஆசிபெற்றுக்கிருஷ்ணமூர்த்திசகாயத்தால் நெல்லிக்கனியாலுண்டானவாபத்தை நீக்கிக்கொண்டு யமதருமராஜ னனுக்கிரகத்தால் நாகக்கொடியோன் காளமாமுனிவனுற்செய்வித்த மாரணயாகத்தாலுண்டான விபத்தைக்கடந்ததும், இப்படிவனவாசத்திற்குரிய வருஷம் பன்னி ரண்டையுங்கழித்த சரிதங்களை அவ்வவற்றின் உபசரித்திரங்களோடுங் கேட்டு ஆனந்தித்தேன். இப்பால் நான்காம்பாகமாகிய விராடபர்வத்தையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

துதி.

நாள நாபனை நாரா யணன்றனைக், காள மாமுகிற் கண்டன்ன மெய்யனை
வாளை நேர்விழி மாமலர் மங்கையி, னீளு மன்பனை நெஞ்சு ணிறுத்துவாம்.

முதலாவது,

பாண்டவர்கரந்துறைசருக்கம்.

கேளும் ஜெனமேஜய மகாராஜனே ! அரவக்கொடிபடைத்த துரியோதன மஹாராஜன் கருத்தையும் அம்புலிகுலத் தோன்றலாகிய தங்கள் பெரிய தந்தை யுத்தரவையு நிறைவேற்ற வேண்டிப் பாண்ட

வர்கள் திரௌபதாதேவி சமேதராய் தௌமியாச்சாரியருடனும் பன்னீராயிரம் பிராமணருடனும் வனவாசம் புரிந்து, கானகத்துண்டான கந்தமூல பலாதிகளாலுங் கதிரவனளித்த அக்ஷயபாத்திர வமுதினாலுங் காலங்கழித்து, வெய்யில்-பனி-மழை-காற்று, இவைகளைச்சகித்து, இரவும் பகலும் இருடியர்களால் தர்மார்த்தகாமமோக்ஷத்திற்குரிய சத்காலக்ஷேபஞ்செய்துக்கொண்டு பன்னிரண்டுவருடம் பற்றறக்கழித்தபிற்பாடு, தருமநந்தனர் அக்ஞாதவாசஞ்செய்வதற்கு ஆலோசிக்கவேண்டுமென்று தாங்கள் தங்கியவனத்தைவிட்டு அப்பாற்போயிருந்து, தருமதேவதையைத் தொழுது, எந்தையே! நாங்கள் நினைத்தகாரியந் தடையில்லாமல் நிறைவேறும்படி நச்சுப்பொய்கையில் தேவரீர் வரங்கொடுத்த வண்ணம்இப்போதுகைகூடவேண்டுமென்றிரந்து,தங்களுடனிருந்த வேதவேதியரை நமஸ்கரித்து, ஓ பிரமக்யானமுள்ள மேலோர்களே! நீங்களித்தனைநாளு மெங்களுடன் பொருந்தி மெத்தவருந்தி வனவாசம் புரிந்து உபவாசமிருந்தீர்கள். இனிமேல் நாங்க ளொருவருடம் மறைந்திருக்கவேண்டியகாலம்நேரிட்டிருப்பதால், நீங்கள்யாவரும் ஆசிர்வதித்து எங்களுக்கு விடைகொடுத்தருளவேண்டுமென்று உபசரித்துக்கேட்டார். இவ்விதமாகக்கேட்ட முரசக்கொடி முதல்வனைப்பார்த்து வேதியர் விளம்புகின்றார்கள்.

தருமராஜன்சோகமுறத்தௌமியாசாரியருந் தபசியருந் தேற்றுதல்.

ஓ பாண்டவமுதல்வனே! நீங்களெண்ணியகாரியமெல்லாந் திண்ணமாய்க்கைகூடும். இனிமேல்பாதொரு தாழ்ச்சியுமில்லை. இன்னுஞ்சிலநாளையில் நீங்கள்வெளிப்பட்டுச் சத்ருசங்காரஞ் செய்து, சகல ராஜவைபவத்துடன் தாணியாளப்போகின்றீர்கள். என்றுமங்களவாழ்த்துதலுடன் ஆசிர்வதித்தார்கள். இப்படிக் காசிர்வதித்த மகாத்துமாக்களை நோக்கித் தருமராஜன் சொல்லுகின்றார். ஓ உத்தமர்களே! இப்போதெங்கட்கு நேரிட்டிருக்கிற ஆபத்துநீங்கி வெளிப்பட, யதாப்பிரகாரம் உங்களுடன் கலந்திருந்து, இக்காலம்போல் எக்காலமும் உலவாமகிழ்ச்சியைத் தரத்தக்க உசித வசனங்கள் பேசிக்கேசித்து விசுவாசித்திருக்கக்கூடுமோ கூடாதோ? நான்தேடிய புண்ணிய வசன மெப்படியோ? அஃது அடியேனு லறிந்துகொள்ளுந்தகைமையதன்று. என்று கண்ணீர்பெருக உள்ளமுருகிச் சோர்ந்தார். அப்படிச் சோர்ந்த தருமராஜனைத் தம்பிமாரனைத்து உபசரித்து, ஆயாசமாற்றித்தேற்றிப்போற்றினர்கள். அப்படித்தேற்றியுந் தேருமல் தியங்கிய சத்தியவானைத் தௌமியாச்சாரியர்கண்டு, ஓ உதிஷ்டிரமகாராஜனே! தைரிய விஜய சாந்த உதார தருமமுதலிய புகழ்ப் பிரதாபங்களிலும்-சத்திய விரத சவுச ஸம்பத்கர சாஸ்திர விசாரணைகளிலும், பிரபலநீதி நிறைந்த கருணையங்கடலாகிய நீர் தாமே விசாரப்பட்டால், மற்றியார்தான்சகிக்கக்கூடும்! ஓ நிருபனே! முத்தொழிலியற்றிடு மூவர்க்கானாலும், பொற்றலத்துற்ற தேவர்க்கானாலும், முற்றத்துறந்த முனிவர்க்கானாலும், கற்றுத்தேர்ந்த கவீச்சுரர்க்கானாலும், ஆபத்தென்பதுவராமற்போகாது. வந்தால் அதைஅநுபவிக்காம லாரையும் விடாது. இதற்குத்திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன்கேளும். தேவர்கட் கதிபதியாகிய தேவேந்திரன் சூட்சுமரூபமாய் ஒரு தாமரைத்தண்டினுள் ஒளித்து, வெகுகாலந்தவஞ்செய்திருந்து, பின்புதனக்கு நல்வினைப்பயன் நேரிட்டபோது வல்லவனுனன். உலகரக்ஷகனுன ஸ்ரீமந்நாராயணன் அதிதியின் கருப்பத்திலடங்கி, வாமனமூர்த்தியாய் வந்து மகாபலிச் சக்கிரவர்த்தியினிடத்தில் தானமாக மூவடிமண்கொண்டு, திரிவிக்கிரம அவதாரமாய் வானமளாவிச் சேவடியால் மூவுலகையுமளந்து, தன்சிந்தையி லெண்ணியவண்ண முடித்தருளினன். அக்கினிதேவனனவன் அவுரவமஹாமுனியின் மனையாளுடைய தொடையில் மறைந்து, நெடுநாளிருந்து, தீவினைதீர்ந்தபிற்பாடுவெளிப்பட்டான். சூரியபகவானனவன் பசுவின் வயிற்றிலொளித்து, பலபகல் கழித்து, பண்ணவர்முதலிய விண்ணவருங்கொண்டாட மீட்டும் பாரினுதயஞ்செய் தருளினன்.

இவ்விதமாக இன்னுமநேகரும் இப்படியே காலத்திற்குத்தக்க கோலங்கொண்டு, இஞ்ஞாலத்தில் வாழ்ந்து வாழ்நாளைக் கழித்தார்கள். ஆகையால், தீவினையாலெய்துகின்ற ஆபத்தானது யாவரையுந் திங்குட்படுத்தும். நீங்களும் அப்படியே அக்ஞாதவாசந் துலைத்து, விக்ஞான மேலிடநிலைத்து, முன்போலவே இராஜ்யபரிபாலனம்புரிய வருவீர்கள். என்று அன்புடனுரைத்த புரோகிதர்சொல்லை இன்புடன்கேட்டுமகிழ்ந்து, எங்கள்வினை இனிஎப்படியோவென்று தியங்கிமயங்கித்தேறிய தருமராஜனை மகா பலசாலியான வீமசேனன் பார்த்து, முகம்வேர்த்து, ஓ எங்களண்ணுவே! கதாபாணியாகிய நானும், காண்டீபதரனுகியவிஜயனும், நகுலசகாதேவரும்,உமதுகட்டளைக்குக் கீழ்ப்படிந்து இஷ்டப்படிநடந்துவரும்போது, இப்போதும் இனியெப்போதும் உமக்கென்ன குறையிருக்கின்றது? தேவரீர் உள்ளங்கலங்கவேண்டிய காரியமில்லை. இப்பவுஞ் சற்றே கடைக்கண் நோக்குவீராகில், இதுவரைக்கும் பற்பல துன்பங்களைச் செய்துவந்த பகையாளிகளை அடிவேரறுத்து, முடிசாயவீழ்த்தி, இப்படியாளுமன்னர் முடியால் வணங்கக்கெடிஸ்தலாதிப னென்னுங் கீர்த்தி உமக்குண்டாக்கிவைப்போம். சீக்கிரத்தில் உத்தாரங் கொடுத்தருளும். ஓ முத்தாரமணிந்த முதல்வனே! தேவரீரசாளும்வேலையை முன்னடி முடித்து விட்டு, மற்றவேலைகளைப் பின்னடிப் பார்க்கின்றோம். என்று துடித்தெழுந்துதை

த்த தம்பியைத் தர்மராஜன் கையமர்த்தி. அப்பனே ! எஃதெப்படியானாலுஞ் சத்தியநிலையைக் காத்து, தருமமுறையைப் பார்த்து, உத்தம கீர்த்தியைச் சேர்த்து, உண்மைக்குறியை நிறுத்தவேண்டும். ஆதலால் மெத்த நாளில்லை. இன்னுஞ் சற்றுநாளிருக்கின்றது இதற்குள் ஓ க்ஷாத்திரவான்களே ! நீங்கள் ஆத்திரப்படவேண்டாம். என்று தம்பிமார்களுடன் சாந்தமாய்ப் பேசிக்கொண்டு, இரண்டுநாழிகைவழிதூரஞ் சென்று, மேல் நடக்கவேண்டிய காரியத்தைக் குறித்துத் தௌமியாச்சாரியர்முதலிய பெரியோர்கள் முன்னிலையில் தம்பிமாரோடு ஆலோசனை செய்யத் தொடங்கினர்.

தருமராஜன் தம்பியரோடு ஆலோசிக்க அதற்கவர்கள் கூறுதல்.

கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே ! சகல கலைக்கியானங்களையும் ஐயந்திரிபு அறியாமையில்லாமற் கற்ற தருமராஜன் வையம்புகழு மஹாவீரர்களாகிய தம்பிமார்களை நோக்கி, ஓ என் சகோதரரே ! கல்லும் புல்லுநிறைந்த காடுமேடுஞ்செறிந்த கருங்கல்மலை யுயர்ந்த இடங்கள் தோறும், நமக்கிருப்பிடமாகப் பொருந்திப் பன்னிரண்டாண்டுபலருமறியக்கழித்தோம். இனி யொருவரு முணராமல் ஒருவருடந் தொலைக்கவேண்டி யிருப்பதால், நாம் மறைந்திருப்பதற்குத் தகுதியான இடம்யாதோ ! அதை முன்னே யோசியுங்கள். என்று விசுவாசமுள்ள தமையன்கூறவும் இந்திரன்மைந்தனான அருச்சுனன் எழுந்து, தாமரைக் கமலம்போன்ற அவர் தாள்மேற்பணிந்து, அண்ணா ! நமது குருதேசத்திற்குச் சமீபத்திற் பாஞ்சாலதேசம்-மச்சதேசம்-சாளவதேசம்-விதற்பதேசம்-பாகுலிகதேசம் - விதேகதேசம்-தசார்னதேசம் - சூரசேனதேசம் - கலிங்கதேசம்-மகததேசம்-இவைகளெல்லாம் மனோரம்மியமா யிருக்கின்றன. இத்தேசங்களுக்குள் மிச்சமாய்ச் சிறந்தது மச்சதேசம். அதேனெனில், நீதியு நெறியு நிறைந்து, நிலவளநீர்வளமுயர்ந்து, நிலையும்பொறையுமிகுந்து, நிலையாய்மும்மாரி பொழிந்து; தருமமுங் கருமமுந் தழைந்து, சகல நிதிகளுஞ் செறிந்து; பழுதற்ற குடிகளும் பரிந்து, படைகளுங் கடைகளுஞ்செழித்து இருப்பதல்லாமல், மநுநீதி வழியே அஷ்டதிக்களவும் ஆக்கியாச்சக்கரம் போக்கிச் செங்கோற்செலுத்தி, வேதவேள்வி வேதியர் பலரும், வானவர் விற்பனர் மாதவர் சிலரும், மாதுர்ஸ்தானம் போற்பொருந்தி வாழ்வைப்பெறும்படியாக விராடனென்னு மிராஜனுடைய ஆளுகைபெற்றது அந்தமச்சநாடு ஆதலால் இத்யாதி நன்மைகளுக்கிருப்பிடமான அப்பட்டணஞ் சேர்ந்து, நமதுருவமறைத்து, பயமில்லாமற் காலங்கழிப்பதே ஜெயமாகும். நமக்கொருநாளுந் தீங்கில்லை. ஓ எங்கள் நாதனே ! வேறொரு நாட்டை விரும்புவோமாகில், நமது காரியகாரணங்கள் ஒருவேளை வெளிப்பட்டாலும் வெளிப்படும்.

இதன்றியும் - துரியோதனனுடைய தூதர்களும், காரியஸ்தர்களும், மந்திரி சாமந்தர்களும், தினந்தோறும் போவதும் வருவதுமா யிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட நிர்ப்பந்தமான வருத்தம் நமக்கிந்த விராட நகரத்தி லிருக்க மாட்டாது. மேலும் அந்தப்பட்டணத்து மச்சராஜன் நமக்குப் பூர்வ சம்பந்தப் பொருத்தத்தினாலும், அவன்மெத்த குணசாலியானதினாலும்; நாம்காட்டில் அநுபவித்த கஷ்டத்தை அந்நாட்டில் ஆற்றிக்கொள்ளும்வகைக் கநுகூலித்திருப்பதினாலும், அஸ்தினபுரத்தைவிட்டு வனவாசஞ் செய்ய வரும்போது ஜோதிட நூலோருரைத்தஆரூடத்தினாலும், நாமிந்தப்பேச்சைப் பேசும்போது நல்ல சகுனங் கிடைத்ததினாலும், அடியேனுக்கிந்தநகரத்தின்மேல் ஆசையுண்டாகி, பரிசுத்த பவித்திர மகத்துவ சுகத்தைத்தருமென்றுதோன்றியதனால் என்புத்தியில் தோன்றியதைப் புகன்றேன். உத்தமர் கற்றவர் நற்றவர்பலரும் புகழ்ந்துபேசும் பொன்னுலகமும் பின்னிடும்படியானது அந்நகரத்தின் பெருமை அப்பால் தேவரீர் சித்த மெப்படியோ ? அதனை யறியேன் சிறியேன். என்று வணங்கி இதைவிட வேறோரிடமில்லை யென்றான். மற்றத் தம்பிமார்களும் இதுவே சரியென்றுசம்மதிகூறினர். இவ்வாறு அருச்சுனன்சொன்ன மொழியையும், அதுவே சரியென்றிணங்கிய மற்றத் தம்பியர் கருத்தையும், அருளுக்காதாரமான தருமராஜன்கேட்டுத் தீர்க்காலோசனை செய்து, தங்களைக்காணும்படிக்கு வனத்தில் வந்திருந்த அரசர்களுக்கு இச்சங்கதி தெரியாமலடக்கி, அவர்களையழைப்பித்து நோக்கி, ஓ இராஜர்களே ! இன்னமு மெங்களைப் பிடிக்கா நின்ற தீவினைகள் தீரும்வழியைப்பார்க்கின்றோம். நீங்களுங்கள் பட்டணம்போய்ச் சேருங்கள். என்று விடைகொடுத்தனுப்பிவிட்டு, பரதேசிகளான வனவாசிகளென்னும் பிராமணர்களைப்பார்த்து, ஓ சுவாமிகளே! இனியெக்காலம் உங்களை நாங்கள் காணப் போகின்றோம்? தேவரீர்களுடைய திவ்விய சகவாசத்தாற் சென்ற பன்னிரண்டுவருடமுங் கழித்தது பெரிதல்ல. நின்ற ஒருவருடங் கழிப்பது ஒருயுகமாகயிருக்குமாதலால், எளியேங்கள்மீது கிருபைவைத்து ஆசீர்வாதத்தோடும் விடைகொடுத்தருள வேண்டும். என்று இவ்விதமான இன்பவார்த்தைகளன்புடன்பேசி, அவர்கள் மனங்கனிந்துரைத்த வார்த்தையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, முக்காலும்வலம்வந்து முடியுறவணங்கி, எக்காலுமுங்கள்கிருபை எங்கள்மேல் இருக்கட்டுமென்று உபசரித்து, பிரியப்படாத பிரியத்துடன் அவ்வவர்களினிடத்திலும் அன்போடு விடைபெற்றுக்கொண்டு அப்பால் நடந்து போவதானார்கள்.

பாண்டவரும் பாஞ்சாலியும், பாங்கர் பாங்கியரோடுந் தௌமியாசாரியரோடும் விராடபுரம்போதல்.

கேட்டீரோ ஜெனமேஜயமகாராஜனே! இப்பாற் பாண்டவரைவரும் பாஞ்சாலியும் பலகலைக்கியானங்களையுணர்ந்த தௌமியாசாரியரும் பாங்கர் பாங்கியரும், அன்றிரவு முழுதும் நடந்து, சூரியோதயத்திற்கு முன்னதாகச் செல்வச்சிறப்போங்கிய விராடபுரஞ் சேரவேண்டுமென்றுதொலைத்தற்கரியதூரந் தொடர்ந்தடர்ந்து படர்ந்திருக்கின்ற காடுகள் மலைகள் முதலிய வெல்லாங் கடந்து, பருக்கைக்கற்களும் பாலைவனங்களுமுள்ள பலவிடங்களையுந்தாண்டி, வருக்கை - மா - தேக்கு-தெங்கு-இவைமுதலியன நிறைந்த சாலையும், வகுளம்–கோங்கு-மந்தாரை - கொன்றை–இவை முதலியனவளர்ந்த சோலையுங் குறுகி, அருவிகள் பெருகிய ஆறும் - குருவிகள் மருவிய தூரும் - எரியெதுவாய்நாடும் - பள்ளர்வாழும் வீடும் - பரந்தமணலார்ந்ததிட்டையும் - பதுமமலரார்ந்த குட்டையும் - பற்பலபாஷை வேந்தரும் - விற்பன விவேக சாந்தரும் - ஆகிய வளங்கள் மிக்க சந்திரவட்டக் குடையினையுடைய விராடராஜனது மச்சநாட்டெல்லையில் வந்தார்கள். அப்போது பச்சைப்புரவி பூட்டி, ஓராழி யச்சுத்தேரினை யோட்டி வருகின்ற சூரியனுங் கிழக்குத்திக்கிலெழுந்தான். அன்றிரவுமுழுது நடந்த பாண்டவரும் – பாஞ்சாலியும் - புரோகிதரும்–இனிமேல் தங்களெண்ணம் பலித்ததெனக் களித்து, மிதமற்ற மீன்கள் - முதலையினங்கள் - நீரானைகள்-நீர்க்குதிரைகள் பொருந்திய தடங்களையும், மிளிருற்ற சித்திரங்கள் சிங்காரவனங்கள்-நடைபாவிகள் நவமணிமண்டபங்கள் பொருந்திய இடங்களையும், பயிர்ப்பலங்கள் சூழ்ந்திருக்கின்ற நல்லநாட்டையும், காவலமிருக்குங் கோட்டையையும், கால்நடைநடக்கும் பாட்டையையும், மாடமாளிகை வாட்டையையும், மகரதோரணவாயற் பேட்டையையும், மேகமளாவிய சிகரிகளையும், மாகமளாவிய நகரிகளையுங்கண்டு களிகூர்ந்து, பாதலம்வரைக்கும் ஆழ்ந்துநிறைந்த ஒரு தாமரைத் தடாகத்திலிறங்கி, நித்தியவிதி முடித்து, அருக்கியங் கொடுதது சூரியநமஸ்காரஞ்செய்து, வழிநடந்த வருத்தந்தீர ஓர் மாத்தினிழலில் தங்கி, அருள்குடிகொண்ட தௌமியரைநோக்கி, இருகரங்குவித்திறைஞ்சி வாழ்த்தி, இதுவரையிலும் நிகரற்ற வாழ்வைப்பெற்ற நாங்கள் இனி நடக்க வேண்டிய முறைமையைக் கட்டளையிட்டருளுமென்று மேலான நூலாய்ந்த தருமராஜன் கேட்க, நாலாகிய வேதமுணர்ந்த தௌமியாச்சாரியர் சொல்லுகிறார்.

ஓ சந்திரகுலத்திந்திரனான தருமநந்தனா! நீங்களறியாத காரியம் நானென்ன சொல்லப் போகின்றேன்? ஆகிலுங் காட்டிற் காலங்கழித்தது பெரிதல்ல. நாட்டிலொருவருடம் மறைந்திருந்தொழிப்பதே பெரியகாரியம். ஆதலால், நீங்கள் உருவமறைந்துறையு நாளையில், உங்கள் சொரூபத்தினாலாவது - பேச்சினாலாவது-செய்கையினாலாவது-கொஞ்சமேனுந் தெரியுமாகில் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசஞ் செய்ய நேரிடும். ஆனதால் உங்களையொருவரும் அறியாதிருக்கும்படி மாறுவேடந்தாங்கி, வெவ்வேறு பேர்கொண்டு, குலச்சிறப்புற்ற விராடராஜனிடஞ் சென்று, உங்கள் லக்கத்திற்குரிய தொழில்செய்து, அத்தொழிலுக் கிணங்க நடந்து காலங்கழிப்பதைவிட வேறுவுறுதியில்லை. என்று வைதிகக்கருத்தான தௌமியர்சொல்ல, அவருடையவார்த்தையைக்கேட்ட தருமராஜன் மகிழ்ந்து, இவ்வாறுநடத்துகிறதைவிட இன்பம் வேறில்லையென்று ஒப்புக்கொண்டார். அவ்வாறு ஒப்பிய தமயன்பாதத்தில் தம்பியர் வீழ்ந்து, மதிமருண்டு மயங்கி, அண்ணா! நமது குலத்திற்கு முதலாகிய சந்திரனும், நம்மைப்பெற்ற பாண்டு பூபதியென்னு மிந்திரனும், உம்மையல்லது வேறில்லையென்று நாங்கள்வணங்கி வாழ்த்துகின்றோம். எங்கட்கு ஜேஷ்ட பிராதருவாய் விளங்கிய சுதந்தரரும், களங்கமில்லா மனத்தினரும், ராஜ பூஜா துரந்தரரும், கெடிஸ்தலாதிபரும், நிரந்தர காருண்யரும், காமக்குரோதாதிகளற்றவரும், தாமப்புனல் மேருவையொத்தவரும், ஆகிய தேவரீர் உமக்குக் கீழ்ப்பட்ட ராஜனிடத்திற்போ யிணங்கி, அவன் மனதின்படிவணங்கி வேலை செய்யத் தக்கதோ; ஐயா! ஓ பொய்யாமொழிப் புநிதராகிய தௌமியரே! ஐயையோ! இந்த அநியாயத்திற்கென்செய்வோம்? இவ்வுலகத்தைப்பணாமுடியால் தாங்கும் ஆதிசேடன் போலும் சப்தமேகம் வருஷிக்குந் தாரைபோலும் பொருளமுதம் பொழிந்து, கலைக்கியானமுதலிய வேதக்கருத்துங்கடந்து, சத்துருசெயம்புரிந்து, வெற்றிமாலைபுனைந்து, எத்திசையிலுமுள்ள கொற்றவர் பலரும்வந்துபணிந்துகொள்ள முற்றும் பெருமைபெற்று, அருமையுற்ற திருமுகமுடித்து, சம்ராட்டுமுதலிய சகலசிறப்பும்படைத்து, ஜகாட்சகனாகத் தனியரசு நடாத்தி யமதருமசொரூபியோ? ஏழையரிடத்திலடங்கி இளைத்தொதுங்கியிருப்பது, ஆஹா! வினைவலியே வலியென்று வாடி வாய்விட் டாற்றினர்கள்.

தருமராஜன் தன்கொள்கையைக் கூறுதல்.

இவ்விதத் துயரால் துன்பக்கடலுளாழ்ந்த தம்பிமார்களைத் தருமராசன் நோக்கி, ஓ என்னுள்ளத்திற் கொப்பான சகோதரர்களே! நீங்களென்னைக் குறித்து விசாரப்பட வேண்டாம். பின்னால் இப்படி வருமென்று முன்னடி நான் ஜாக்கிரதையாயிருக்கின்றேன். அஃதென்னவெனில், திக்குப்பாலகரி லொருவ

ராகிய தென்றிசைக்கடவுள் எனக்குப்பக்குவமாக அநுக்கிரகித்தருளிய மந்திரமொன்றுண்டு. அம்மந்திரவசத்தால் நான் வேதவேதாங்க முணர்ந்த வேதியனாகி, மச்சராஜனது உச்சிதச் சபைக்குட்புகுந்து, அவ்வரசன் முதலிய யாவரும் எனக்கெதிர்வந் திறைஞ்சவும்-நான் அவர்கட்கு ஆசீர்வசனஞ் சொல்லவும் - பெற்றிருக்கின்றேன். இதல்லாமலும் - அவ்வரசன் என்னை நோக்கி, உமக் கிருப்பிடம்யாது? 'உமது பெயரென்ன? நீரிவ்விடம் வந்ததற்குக் காரணமேது? என்றுகேட்பானாகில், நான்தருமராஜனை விட்டுப்பிரியா நண்பனானவன். அவர் பன்னிரண்டு வருடம் வனவாசஞ்செய்யப்போன நாளையில், நானுங்கூடப் போயிருந்தேன். இன்னுமொருவருடங் கழிப்பதற்காக இவ்விடம் வந்தேன். என்பெயர் கங்கபட்டன். என்றுரைப்பேன். இதன்றியும், பெரியோர்களா லியற்றிய அக்ஷரவிலக்ஷணம்-கணிதம்-சங்கிராம லக்ஷணம்-வேதம் - வேதாங்க - புராணம்-வியாகரணம் - நீதிசாஸ்திரம் - ஜோதிடசாஸ்திரம் - தருமசாஸ்திரம் — யோகசாஸ்திரம் - போகசாஸ்திரம் - மந்திரசாஸ்திரம் - சகுனசாஸ்திரம் - சிற்பசாஸ்திரம் - வைத்தியசாஸ்திரம் - சொரூபசாஸ்திரம் — இதிஹாசம்-காவியம் - அலங்காரம் - மதுரபாடனம் - நிருத்தம் - சத்தபிரமம் - வீணை - வேணு - மிர்தங்கம் - தாளம் - அஸ்திரபரீக்ஷை — சஸ்திரபரீக்ஷை - இரத்தினபரீக்ஷை - கனகபரீக்ஷை-இரதபரீக்ஷை - கஜபரீக்ஷை- அஸ்வபரீக்ஷை - ஆயுதபரீலக்ஷை பூமிபரீட்க்ஷை - மல்யுத்தம் - ஆக்ருஷ்ணம் - உச்சாடனம் - வித்துவேஷணம் - ஜாலாதிஜாலம் - மோகனம் — வசியம் - இரசவாதம் - மந்திரவாதம் - காந்தருவவாதம் - பைபீலவாதம்-தாதுவாதம்- காருடம் — நட்டம் — முட்டி - ஆகாயப்பிரவேசம்- பரகாயப்பிரவேசம் - அதிரிசியம் - இந்திரஜாலம - மகேந்திரஜாலம் - அக்கினிஸ்தம்பனம் - ஜலஸ்தம்பனம்-வாயுஸ்தம்பனம் - வாக்குஸ்தம்பனம் - சுக்கிலஸ்தம்பனம் — சுவாசஸ்தம்பனம் - சட்கஸ்தம்பனம் - அவஸ்தைப்பிரயோகம் - இவைமுதலிய கலைக்கியானங்க ளெல்லாமறிவேன். திக்கெட்டுங் கொண்டாடுஞ் சொக்கட்டாடும் பக்குவமும் எனக்குண்டு. ஓ விராடராஜனே! நீர்தயவுசெய்து உம்மிடத்தில் நானிருக்கச் செலவுகொடுப்பீராகில், ஒருநாளைப்போல் ஒருவருஷமும் இவ்விடம்விட்டு நீங்காமல் இன்புற்றிருப்பேன். என்றுரைத்து அந்தராஜன் பக்கத்திலிருந்து, அவன் கருத்துக்கிசைந்த தேசவர்த்தமானகாரிய காரணங்களைக் காலசமய மறிந்து பேசி, விநோதமான விந்தைகளை நிந்தையில்லாமற்சொல்லி, விதரணையான அரசாட்சிப் பெருமையுடன் நடத்தி, வேந்தனுள்ளங் களிக்கச்செய்து, சுற்றிலுஞ் சூழ்ந்த வெற்றிவீரர்களும் - கற்றவர்முதலிய நற்றவத்தர்களும் - தந்திரி மந்திரி சாமந்தர்களும் - உத்தமரிவரென்றுகொண்டாடும்படிக்கு மெத்தவுந்மேன்மையாகக்காலங்கழிப்பேன். ஓ சித்தசுத்திப்பெற்ற தம்பிமார்களே! என்று எழுலகத்திற்கோ ராழி செலுத்துங் குருகுலக் கோமானாகிய தருமராஜ னுரைத்தருளினர். அவருடைய பெருமிதவாக்கியத்தை வீமார்ச்சுனர் முதலிய தம்பியர்கேட்டு,நமது தமையனாருக்குஇந்தத்தொழில்தகுந்தருமென்று சந்தோஷமானார்கள்.

வீமராஜன் தன்கொள்கையைக் கூறுதல்,

அந்த வேளையிற் பொறுமையைப் பூஷணமாகப் பூண்ட தருமராஜன் வீமசேனனுடைய முகத்தைப்பார்த்து, கருணைவெள்ளங் கவிந்து, கனிந்துள்ளமுவந்து கருத்தினுற்பரிந்து, கண்ணீர்சொரிந்து, ஓ நினைத்தற்கரிய பலத்தையுடைய வாயுபுத்திரனே! நீ அரக்குமாளிகைவிட் டெழுந்தபோது உரக்கக்கூவிக் கொடும்பகைகொண்டுவந் தெதிர்த்த இடும்பனைக் கொன்றும், வேத்திரகீயத்தி லிருந்த வேதியர்களின் துன்ப மாற்றும்படிக்குப் பகாசுரனுயிரை வென்றும், கிம்பிராசுரனைக் கெடுத்தும், குபேரலோகம் புகுந்து பவுண்டரீகனுயிரும் - மணிமாலனுயிரும்-வாங்கி மந்தாரைமலர் பாரிசாதமலர் பறித்துவந்தும், சடாசுரனைத்தாக்கியும், இன்னுமிப்படி போருக் கெதிர்த்த பேர்களைப் போக்கியும், இரக்கமில்லாக் கொடியோனாகிய துரியோதனன் அன்னத்தில் விஷங்கலந் தூட்டி அநேகங் கொடிகளாற் கட்டி ஆற்றுப் பெருக்கத்திற் போட்டகாலையில் நாகலோகம் புகுந்து விஷாமிர்த முண்டிருந்த உன்னைநாங்கள் எழுநாள்வரையிலுந் தேடிப்பட்சிபோற்பறந்து பாதவித்தலைந்த துக்கத்தை எட்டாநாள் வந்து விலக்கியும், அவ்வணங்காமுடியோன் செய்த வெத்தனையோ வஞ்சனைகளினின்று நீங்கியும், உன்னைத்தனித்து செய்ததல்லாமல் எங்களையுங்கூடடிச்செய்த பற்பல ஆபத்துக் களினின்றும் நம்மைப்பெற்ற தாயான குந்திதேவியாருடன் எங்களையுங் காத்திரட்சித்த தாஷ்டீகவண்ணலே! நீ யொருவனுடைய நகரஞ்சேர்ந்து, அவனைக் காலமறிந்து தாழ்ந்து, அவனுக்கிசைவாகிய தொழில்புரிந்து, நாம் கடத்தவேண்டிய நாளைக்கழிக்கவறிவையோ? நீ ஒருவரிடத்திலடங்கி யேவற்பணிசெய் திருக்கும்படியாய்ப்பாவியான என்னிருகண் பார்க்கத்தக்கதோ? ஓ படுவினையே! என்று பாதவித்துப் பெருமூச்சுவிட்டு, அப்பாதம்பி! நமது காலபலனறிந்து வேளைக்குத்தகுந்த வேடம்புனைந்து நாளைப்போக்கத் துணிந்தபோதிலும், நீ ஒருவரைவணங்கி இதம்பேச அறியாயே: ராஜசமயந்தெரிந்து நலம்பெற உறவாடி, நேசவிசுவாசமுற நினைக்கமாட்டாயே: எந்தவேளையில் எத்தொழில் செய்யவேண்டியதோ? அந்தவேளையில் அந்தவேளை முடித்து அரசனை மனமகிழச்செய்யுமார்க்கங் கற்றிலையே: ஐயோ! பரிசுத்த குலத்தானாகிய விராடன் புகழவும், அவனைச் சேர்ந்த சபையார்மகிழவும், நாமிவ்விடத்தில் மறைந்திருப்பதை மற்றவர்களறியா திருக்கவும், அக்ஞாதவாச மகற்றவும்

வேண்டுமே: நீ எவ்விதமிருக்கப் போகின்றாய்? ஓ என்னிளவலே! என்று தளர்ந்து இமைகொட்டாமல் ஏக்கமுற்றிருந்தார்.

இவ்வண்ணந் தம்பியைக்குறித்துவெம்பிய அண்ணனைப் புகழ்ப்பிரதாப பூஷணமணிந்த புயவீமன்வணங்கி. ஓ அண்ணா! ஓ தந்தையிறந்ததளர்ச்சிதோன்றாமற் காத்த தமயனே! தித்திப்பு - புளிப்பு - உவர்ப்பு-துவர்ப்பு – கார்ப்பு – கைப்பு-இவ்வறுவகைருசியுடன், பலவிதக் கச்சாயங்கள் பலவிதப் பச்சடிகள் – பலவகைக் கறிகள் - பலவகை ரசங்கள் – பலவகைக் குழம்புகள்-பலவகைப் பாயசங்கள் முதலியவைகளோடு, புளியோதனம் - எள்ளோதனம் -- மிளகோதனம் - ததியோதனம் - பாலோதனம் – சர்க்கரைப்பொங்கல் - அக்காரவடிசில் – முதலிய பலவகைச்சித்திரான்னங்களும், பலவகைப் பலகாரங்களுந் திருத்தமாகச் செய்யக் கற்றிருக்கின்றேன். இந்தச் சுயம்பாகத்தொழிலால் இரத்தக்கறை நீங்காத வேலாயுதந்தாங்கிய விராடனும் மற்றவர்களுந் திருப்தியடைந்து, அமுதத்தை இகழ்ந்து, நான் செய்யும் பாகத்தைப் புகழ்ந்து, பாகசாஸ்திரங்கற்றபக்குவனென்றென்னை மகிழ்ந்து, யாவரும் உபசரிக்கும்படியா யிருந்து விருந்துமுதலியதும் புரிந்து, எந்தச்சமயத்தில் எதுவேண்டியதோ? அந்தச்சமயத்தில ஆச்சுதென்றளித்து, அடுப்புக்கு விறகுவேண்டிய போது மற்றொருவரைக் கேளாமல், ஆகாயமளாவிய விருக்ஷங்களைக்கோடாலிகொண்டும் பிளக்காமல், என்னிருகையினாற்றானே முறித்து எற்படுத்திக்கொள்வேன். ஒருவேளை மலையொத்த திண்புயனாகிய மச்சராஜன்மல்லர்களுடன் சண்டைசெய்ய விடுப்பானாகில், மற்போர்வல்லவரைச் சொற்பமாயழித்துப் பற்பலவிதப்பரிசும்பெற்றும், விற்பன விவேகிகள் மெச்சப் பேரெடுப்பேன். இன்னும், யாளி – சிங்கம் - புலி - கரடி - யானை முதலிய மிருகங்களைப் பிடித்து, இராசனுக்குமுன்னேவிடுத்து, மாச்சரியமூட்டி ஆச்சரியங்காட்டுவேன். உன்பெயரென்னவென்னிற் பலாயனனென்பேன். உன்நகரேதென்றால், தருமராஜன் கீர்த்தியைப் புகழ்ந்து பேசுகின்ற புண்ணியநகரமென்பேன். உன்குலகோத்திர மென்னவென்றால், அறபெருங் கடவுள் மைந்தனாகிய முரசகேதனருக்கு அடிமைசெய்யுமடியேன் அறிவிலாச்சூத்திரனென்பேன். என்று வாயு சேயனான வீமசேனன்சொன்னான். இவன்சொன்னசொல்லைச்சாந்தகுணத் தருமராஜன்கேட்டு, இருபுயமும் பெருமலைபோ லோங்கி, பசுவானது கன்றின்மேல்வைக்கும் பக்ஷத்திலும் லக்ஷம்பங் கதிகமாயக் கருணைகூர்ந்து, தம்பி! இந்தத்தொழில் உனக்குரியதுதான். என்றென்றைக்கும் அன்னத்திற்குக் கருப்பில்லை. இதுகாறுஞ் செய்துவந்த வனவாசத்திலும், நீ இவ்வஞ்ஞாதவாசத்தை வெறுப்பில்லாமல் நிறைவேற்றலாமென்று வியந்து கூறினர்.

அருச்சுனராஜன் தன்கொள்கையைக் கூறுதல்.

இப்பால் தருமபுத்திரர் தன்பக்கத்திற் சாய்ந்து நிற்கின்ற சவ்வியசாசியென்னும் பார்த்தனுடைய முகத்தைப்பார்த்து, சொல்லுதற்கரிய துயரங்கொண்டு, அப்பா அர்ச்சுனா! தேவர்களாலுஞ்செயிக்கப்படாதகாண்டாவனத்தையழித்து அக்கினிதேவனுக்கு அவியாயளித்துப் பசிதணித்தனை. மகமேருவுக் கப்பாலுஞ்சென்று விஜயம்பெற்று விஜயனென்றுபுகழ் ஸ்தம்பநாட்டி, அரசர்களளித்த திறைகளியாவற்றையுங் கொண்டு அடங்கா மறுமன்னரையும் வென்றுஜெயத்துடன்மீண்டாய். இதல்லாமலும், நான்குவேதமும் – நான்முகனும்- நாரணனும் - நாகலோகத்தினர் முதலிபேரு மறிதற்கரிதாகிய தேவாதி தேவனை, திரிநேத்திர தாரியை, ஆதிபாண்டரங்கனை, ஆதிமத்தியாந்தாகிதனை, சேற்கெண்டை போன்ற தடங்கண்வாய்ந்த ஜெகதீஸ்வரியுடனே விருஷபவாகனரூடரா யெழுந்தருளிவந்து தெரிசனந்தரப் பெற்று; உன்னிருவிழியும் உள்ளமுங் களித்து ஆனந்த பாஷ்பத்துடன் தொழுது பழுதுபடாத இன்பம்படைத்தனை. மூலகாரணனான அக்கண்ணுதலாற் பாசுபதமும்பெற்றாய். பிரமாவினாலும், அஷ்டவசுக்களினாலும், அஷ்டதிக்குப் பாலகராலும், துளபமாலை தரித்த நாரணனாலும், இந்திரனாலும், தேவர்களாலும், பற்பல மந்திரக்கணைகளைப் பெற்றாய். கற்பக நாட்டாருக்குநெடுநாட் பகைவராகிய காலகேய நிவாதகவசர்களை நொடியிற் பொடியாக முடித்தாய். மானாபரணமும் ஞானாபரணமுமணிந்த மகாபதிவிரதையான இந்திராணி உன்திராணியறிந்து, சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தை ஊட்டுவிக்க இன்பமாயுண்டு, தேவேந்திரனுடன் சிங்காதனமேறிச்சிறப்புற்றிருந்தாய். அரவக்கொடிபடைத்த துரியோதனனையும் - அவன்தம்பிமாரையும்- அவர்கட்குரிய தருமபத்தினிகளையும் - தாமணியாகக் கட்டிக்கொண்டு போன சிந்திரசேனனைக் கைப்பிடியாகக் கொண்டுவாவென்றுநான்சொன்னவாய்மூடுமுன்னேசென்று, அவனைத்திருப்பிக்கொண்டுவந்து என்முன்நிறுத்தி கட்டுப்பட்டயாவரையுங் கட்டவிழ்த்து விட்டாய் மேலும்-தேசுடையவரில்அக்கினிதேவன்போலும், தேசராஜர்களில் தேவேந்திரன்போலும், திசையானைகளில் சுப்பிரதிபம் போலும், ஜெயகீர்த்தியில் விடையோன்போலு மிருக்கின்றாய், ஓ அநுமத்துவஜமும், அழியாவில்லும், அக்ஷயதூணியும், அழகியதேரும்,சுவேதப்புரவியும்படைத்த சுந்தரனே! விசித்திர வில்லாளி யென்னும் விராடராஜனுடைய பதியிற்புகுந்து, உன்வேடமாறி, வித்வத்திலுயர்ந்த உன்னுள்ளமடங்கி, ஒருவருட மொடுங்கி, எத்தன்மையான சிற்றேவல் செய்வையோ? என் அத்தனே! என்றுபுத்திமருண்டுகண்ணீர் ததும்ப உண்ணீர் வெது

ம்பக்கரைந்து வருந்தினர். இவ்வாறு வருந்திய தரும
ராஜனது உள்ளத்தளர்ச்சியும் - பெருமிதமானதன்மன
க்கிளர்ச்சியும் - சற்று நிதானித்து ஆராய்ந்தெண்ணிய
சவ்வியசாசி, ஓ என் அண்ணு! என்னைக் குறித்து எண்
ணமுறுகிருக்கும்படியாய் அடியேன் ஒரு வாசகஞ் சொ
ல்லுகிறேன். தேவரீர் திருவுளமகிழக் கடவது. என்று
வணங்கிச் சுபத்திரை மணாளன் சொல்லத் தொடங்கி
ஞன்.

ஓ தருமகுணாலயமே! பூர்வம் யான் தெய்வலோ
கம் போயிருந்தபோது வன்னப்பெண்ணன ஊர்வசி
யின் எண்ணத்திற் கிசையாத என்னைப் பெண்தன்மை
யிலும் ஆண்தன்மையிலும் இழிந்த பேடித்தன்மையா
கச் சபித்தாள். அந்தச்சாபத்தால் தளர்ந்து வருந்திய
வாட்டத்தை ஆயிரநாட்டமுள்ள அயிராவதத்தன்அறி
ந்து, அந்த ஊர்வசியினிடத்திற் சென்று, அடிபாவி!
தேவர்கட் கனுகூலஞ்செய்த செஞ்சிலை வீவேகனைரச்ச
ப்பாவகாரியாகிய நீ இப்படிச் சபிக்கலாமா? ஆ! ஆ!
துரோகி! இப்போது நீ யிட்டசாபத்தை விலக்கி என்
சஞ்சலத்தைத் துலக்கிவிடடி. என்று வருந்திச் சொன்
னர். அவ்வார்த்தைகேட்ட ஊர்வசியானவள் நானிட்ட
சாபம் பழுதுபடாமல் இவர் வேண்டும்பொழுதுவந்து
ஒருவருட மிருக்கவும், வேண்டாமென்றபோது அகன்
றுபோகவுங் கடவதென்று பிரதிசாபங் கொடுத்திருக்
கின்றனள். அந்தநாளையில் வந்தசாபந் தந்தையானஇந்
திரன் உபகாரமென் றெண்ணிவந்தேன். இப்போதந்த
ஊர்வசியிட்ட சாபமானதுநாம்நாடியவழிக்குஉபயோக
ப்பட்டு, நன்மைசெய்கின்றதுபோ லாச்சுது. ஓ உதிரக்
கறை யோங்கிய வேல்தாங்கிய காவலனே! நானப்படி
யே பேடியுருவமெடுத்து, இம்மச்சராஜனிடத்தி லடுத்
து, பெண்களுக்குப் பரதநாட்டியம் படிப்பிக்கவல்ல
ளென்று பகர்ந்து, அவனருள்பெற்று ஆடரங்கச்சாலை
யிலிருப்பேன். உன்பெயரென்ன வென்றால், பிரகநளை
யென் றுரைப்பேன். நீ யிருந்த பட்டணமெது வென்
றால், தீயிற்பிறந்ததிரௌபதாதேவிக்குநடனத்தொழில்
நடாத்தினவளென்பேன். நீயேதிப்படி வந்தாயெனில்,
பாண்டவர்களுடன்பாஞ்சாலியும் வனவாசஞ் செய்யப்
போனநாளில் நானுங் கூடப்போயிருந்து, ஒருவருஷம்
அக்ஞானதவாசஞ் செய்வதற்காக உன்னிடத்தில் அ
டைந்தேனென் றிசைத்து, அவ்வரசனைச் சந்தோஷப்
படுத்துவதற்கு என்மனங் குவிந்திருக்கின்றதென்றுபற்
குநன் பகர்ந்தான். அவன்கருத்தையறிந்ததருமராஜன்
இவையுனக்குத் தக்கது தானென்று மகிழ்ந்து, பக்கத்
தில் நின்ற நகுலனைப் பார்த்துப் பாதவிக்கத் தொடங்
கினர்.

நகுலராஜன் தன்கொள்கையைக்கூறுதல்.

ஓ எந்நாளு மென்னைவிட்டு நீங்காத விளஞ்சிங்க
மே? நீயான் சொன்னப்படிகேட்டு நடக்கத்தக்கவனே
யல்லது, உன்சுயபுத்தியா யொன்றைத்தொடங்கிச்செ
ய்யும் வல்லவனலலவே: மெய்வருந்தும் வேலையிற் பிர
வேசக்கமாட்டாயே: வியர்வுண்டாகமேனிகசங்காயே:
முன்பின்னென்று முணாயே: அறியாச் சிறியவனன
நீசத்துருவின்கண்ணுக்குக்கிட்டாமல், மச்சராஜன்தேச
த்தில்உருமமாறிஒருவருடமிருந்து எவ்வாறு காலங்கழி
ப்பாய்? அப்பனே! ஓ அஸ்வாரூடராஜனே! என்றுதரு
மராஜன்கேட்கவும், சிவபெருமானுடன் விற்போரும்
மற்போரும்புரிந்த சிலைவிஜயன் தம்பியான நகுலராஜன்
அமலனன அண்ணலைப்பணிந்து, கமலமலர்போல் முக
மலர்ந்து, கருணைக் கண்ணுர்ந்த அண்ணுவென்றுகழற
த்தொடங்கினன். ஓ தருமப்பிரபுவாகிய தயாநிதியே!
தேவரீர் அடியேனுக்குப் படிப்பித்த சாஸ்திரங்களில்
அஸ்வசாஸ்திரத்தை முக்கியமா யறிந்தேன். பரிக்ஷை
யுந் தெரிந்தேன். அதனற் குதிரைகளின் குலமும்-குண
மும் - குரலும் - நலமும் -பலமும் — நன்மையும் - வன்
மையும் - திறலும் - தீதும்-தேசமும் - வாசமும்-சீரும்-
சிறப்பும் - சித்தமும் —உன்மத்தமும் - பேதமும்-அபே
தமும் - முகமும் — கண்களும் — சுழியும் - சுத்தமும் -
துலக்கமும் - விலக்கமும் - வருணமும் - ஆரோகணமு
ம் - அவரோகணமும் — வட்டமும் - கோணமும்- வளை
வும் - வையாளியும் - சிறுநடையும் - பெருநடையும் —
சிம்புட்கதியும் - பிணிகளும் - அவைகட்குக் கொடுக்கு
மருந்துகளும் - செவ்வையாகத் தெரிந்திருக்கின்றேன்.
ஆகையால் - அஸ்வசாஸ்திர அதிபதியென வேடம்பூ
ண்டு, மச்சகுலாதிபனிடஞ் சென்று, அவனுக்கிச்சை
யுண்டாகும்படிக் கிசைந்து, பச்சைப்புரவி தூண்டும்
பாகனிலு மேலாயிருப்பேன். அவர் என்னூரையும் -
என்பேரையும் - என்சீரையும் நான்வந்த வாறையுங்கே
ட்பாராகில், குருவாபிலுயர்ந்த தருமராஜனுடையநாட்
டிற் குதிரைநடாத்திவருங் குமரன்யான். என்பெயர்தா
மக்கிரந்தியென் றிசைத்து, அருமிக் குதிரைகளையுஞ்
சாளமாய்த் திருப்பிவிடுத்து, சமயத்திற்குத் தகுந்த
சவாரியுங்கொடுத்து, எஜமானைச் சந்தோஷப்படுத்தி,
ஆடையாபரணமுதலாகிய பரிசுகளும்பெற்று, குதிரை
த்தலைவர்கள் கொண்டாடும் படிக்குங் காலங்கழிப்பே
னென்றான். அந்தத்தம்பியின் வசனத்தைக்கேட்டதரு
மராஜன் மனக்களிப்படைந்து, காலத்திற்குத் தகுந்த
கோலமாய் நீ கொள்ளப்போகிறதொழில் மெத்தவும்
நன்றென்று உரைத்து, மன்மதனிலு முயர்ந்த வடிவ
மைந்த சகாதேவனை நோக்கிச் சொல்லத் தொடங்கி
னர்.


சகாதேவராஜன்தன்கொள்கையைக் கூறுதல்.

ஓ அதிபாலியனே! தந்தையான பாண்டுமகா ரா
ஜன் மார்பிலும் - குந்திதேவி மடியிலும்—விந்தகிரிபோ
ன்ற என்தோளிலும் வேற்றரசர்களின் தலையிலும்விளை

யாடிமிதித்து நடைபழகியுலாவிய என்மெல்லடிகள், செ
ம்பருக்கைக் கற்களுடன் சிவந்த தீப்பொறி கலந்தமலை
ச்சாரலிலும் வனங்களிலுந் திரிந்து பன்னிரண்டுவருஷ
ந்தொலைத்தும், இன்னுந்தீரவில்லை. ஐயோ! இதுநீமுன்
னஞ்செய்த தீவினையோ? ஓ கன்னெஞ்சனான அன்ன
வாகனனே! இவ்வறியாத பாலகனுக்கும் இவ்வளிபா
யவெழுத்தை அவருனந்தலையிற் பொறித்து வைத்தனை
யோ? கார்செறிந்து நீர்சொரிந்தபார்புரந்துதார்புனைந்த
பாண்டு ராஜனுக்குப் பிள்ளையாகப்பிறந்தும், அருளுற்ற
என்போல்வார்க்குத் தம்பியாகச் சிறந்தும், சாஸ்திர
கலைக்கியானங்களையுணர்ந்தும், சாதுசங்கப்பழக்கம்புண
ர்ந்தும், பழவினையொழியாது அநுபவித்தனையோ: ஓ
பாலனே! என்னிருகண் சிலனே! புத்தியிற் பிரகஸ்பதி
யுஞ் சுக்கிராச்சாரியு நிகரென்று சொல்லும்படியாய்மந்
திரசாஸ்திர முற்றும் நீதிநூல்முதலிய மற்றுங்கற்றுண
ர்ந்த வல்லோனே! நீ யெத்தொழில் செய்வாய்? எவ்
வாறு சிற்றேவல்புரிவாய்? எவர்க்குந் தெரியாதிருக்க
எந்தவேடமெடுப்பாய்? எப்படி நாளைக்கழிப்பாய்? அப்
பா என்னிளவலே! என்று கண்ணீர்சொரிந்து ஏங்கி
யிரைந்த தருமராஜனைத் திரிகாலமுந்தெரிந்த சகாதே
வன் வணங்கிப் பேசத் தொடங்கினான். ஓ வையகநாடு
ஞ்செய்யகோலாடும் ஐயனே! தருமதேவதைக் கொப்
பாகிய பசுவினங்களைச் சவாக்ஷணை செய்யுங் கோபால
வேடங்கொண்டு, விராடராஜ னிடத்திற்சென்று, பசுக்
கள்மேய்ப்போனாகி, அப்பசுக்களுக்கு நேரிடுங் கோ
மாரி - அடைப்பன் - தெறிப்பன் - வெக்கை - தொம்
பை - சூலை - இசிவு - வயிறுப்பல் - பொருமல் - செரு
மல் - இருமல் - வாய் அசைவுபோடாதிருத்தல் - முத
லிய நோய்களைப்போக்கி, புல்லுள்ள புலத்தில் மேய
வோட்டி, நீருள்ள இடத்தில் தண்ணீர்காட்டி, நிழலு
ள்ள தோப்பில் மந்தையைக்கூட்டி மடக்கி, ஆடிக்கறக்
கும்பசு - அதட்டிக்கறக்கும்பசு - அணைத்துக்கறக்கும்
பசு - பாடிக்கறக்கும்பசு - பழித்துக்கறக்கும்பசு - இவை
களைத்தெரிந்துக்கொண்டு, இப்பசுக்களின் தேசம் - வா
சம் - குணம் - மணம் - இவை முதலியதுகளையு முணர்
ந்து நடத்தவறிவேன். உன்பெய ரென்னவெனில், தந்
திரபால னென்பேன். நீ யாரிடத்தி லிருந்தனை யென்
ருல், பாண்டவர்களாகிய ஆண்டவமாரிடத்திற் பசுமே
ய்த்துக் காலங்கழித்தே னென்பேன். மேலும் - நந்த
கோபாலன் என்றன் மைத்துனனென் றுரைத்து, அவ்
வாசன் சிந்தைகளிகூறச் செல்வமோ டிருப்பே னென்
பதாய்ச் சகாதேவன் சாற்றினான். அந்தவார்த்தையை
க்கேட்ட தருமராஜன் மகாதேவ சம்போவென்று பெ
ருமூச்சுவிட்டு, நம்மெல்லோரிலுஞ் சிறந்த தொழில்
இவன் பெற்றானென் றிசைத்து, அவனைத்தனதிருகண்
ணிலு மொத்தி முத்தமிட்டு, கற்புக்கனியான பாஞ்சா
லியின் மதிமுகத்தை நோக்கி விதிர்விதிர்த்து விளம்பத்
தொடங்கினர்.

திரௌபதாதேவி தன்கொள்கையைக் கூறுதல்.

ஓ அழ்குக்காலயமான அன்னமே! ஓபிறவிச்செல்
வமுள்ள பேதையே! உனக்கு அனேகந்தாதியர் ஏவற்
பணிசெய்யத் துன்பமில்லாமல் இன்பமடைந்த தோ
கைமயிலான நீ, எத்தொழி லியற்றிக் காலங் கழிப்பை
யோ? ஓ இளம்பிடியே! என்றேங்கிச் சுவாசமேவிட்டி
ருந்த ஞானசம்பன்னனாகிய தருமராஜனது மனக்குறிப்
பறிந்து, பெண்ணிற் சிறந்த பெருந்தகைப் பாஞ்சாலி
யானவள் கண்ணீருகுத்துக் கழறத் தொடங்கினாள். ஓ
புண்ணியமனமுந் திண்ணிய புயமுமுள்ள வள்ளலே!
நான் வண்ணப்பெண் ணென்னும் வடிவங்கொண்டு,
மச்சராஜனுடைய மனைவியிடஞ் சென்று, ஆபரணஅல
ங்காரஞ்செய்யவும் - கண்ணுக்கு மைதீட்டவும் - ஸ்தன
த்திற்குத் தொய்யிலெழுதவும் - பலவகை மலரெடுத்
துதொடுக்கவும் - பன்னிறமுத் தங்களைக்கோர்க்கவும் -
கொண்டையிற் பூவேற்றி முடிக்கவும் - கொடியிடை
யிற் பலசேலையுடுக்கவும் - நெற்றியில் விபூதிரேகையிட
வும் - நிறமிக்க சிந்தூரத்திலதம் வைக்கவும் - சாந்துசந்
தனம் சவ்வாதுகூட்டவும். சகலவிதகதம்பப்பொடிதீட்
டவும், இன்னும் பலவிதமான சின்னங்களுஞ் செய்ய
அறிவேன். நீயிங்கு வந்தகாரிய மென்னவென்றுகேட்
டால், உம்மிடத்தில் ஒருவருட மிருந்து காலங்கழிக்க
வந்தேன் என்னைக் காதலித்தகணவர் ஜய விஜய ஜயந்த
ஜயசேன ஜயற்பாலரென்னும் ஐந்து காந்திருவர். அவர்
களைப் பகைத்துப்போராடும் வல்லவர்கள் எங்குமில்லை.
எப்பேர்ப்பட்டவர்களும் என்னைப்பார்த்துத் தப்பான
எண்ணங் கொள்ளப்போகாது. அப்படியே தாறுமா
றான நினைப்புக்கொண்டால், நூறுநூறுகூறாய் வேறு
வேறாகி மாய்வார்கள். இப்பேர்ப்பட்ட வல்லவர்கட்கு
இல்லாளான நீ வேலைசெய்ய வெளிப்படுவா னேனெ
ன்று கேட்டால், என்குலத்திற்குரிய நல்லொழுக்கமு
ம், நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பும், குறைவுபடா
மற் பிரதாபம்பெற்ற பாஞ்சாலிக்குப் பணிவிடைசெய்
து; மாஞ்சோலைக் குயில்போல் விசுவாசத்துடன் வாழ்
ந்தேன். அவ்விடம்விட் டிவ்விடம் வரும்படியான அவ
சியம் என்னவெனில், நல்வினைப்பயன் பெற்ற அம்மா
துசிரோமணிவல்வினைவசத்தால் வனவாசம்போனபோ
து, நானுங்கூடப் போயிருந்தேன். இப்போதப்பெண்
கொடி தன்கணவர்களோடு அக்ஞாத வாசஞ்செய்யப்
போயினள். நான் அந்தக் காட்டிலலைந்து விசனமடை
ந்து, உன்னாட்டிற்சிலபகல் கழித்து அவர்கள் வெளிப்
படும்போது நாம்போய்க் கூடிக் கொள்ளலாமென்று
யோசித்துவந்தேன். ஆதலால் - நீர் என்னைச்சேர்த்தா
தரிக்க இஷ்டமுள்ளதோ வென்று கேட்டு இன்பமொ
ழிபுகன்று, அவளன்புட னுரைக்க ஆசையோடிருந்து,
சமயோசித வசனங்கள் தக்கபடிபேசி, முன்னிருந்த



தாதியரெல்லாம் நாணப்பட என்வல்லமையைக் காட்டி, அந்தச்சீமாட்டி இச்சைபடும்படிக் கனிமலர்சூட்டி, நாளுக்கு நாள் பக்ஷமுண்டாக நடந்து அஞ்ஞாதவாசங் கழிப்பேன். என்று கற்புக்கொரு பொக்கிஷம்போன்ற காதலிசொல்ல, அற்புக்கு அருங்கடலாகிய தருமராஜன் கேட்டு, ஓ வெற்புக்கிணையான சொற்கட்டாங்கிய மின்னே! நீ சொன்ன நன்னயமொழியால் கற்பயனைப் பெறுவை. என்றுரைத்துச்சில தருமங்களைச் சொல்லத் தொடங்கினர்.

திரௌபதாதேவிக்குத் தருமநந்தனர் சிலதருமங்கூறுதல்.

ஓ அன்னநடையும்-மின்னலிடையும்-பின்னுசடையும் - வன்னவுடையு முடைய மடமானே! என் வார்த்தையைச் சிறிதுகேள் என் செந்தேனே! வேதியராயினோர் ஒழுக்கமும் - வேந்தராயினோர் தருமநீதியும்-மாதர்களாயினோர் கற்பும்வகித்திருக்கின்றன, அதனால் மாதமும்மாரிபொழிவதென்றும்; அம்மழையினால் கற்காடுகள் திருந்திப் புற்பூடுகள் பொருந்தி, செந்நெல்பயிர் நெருங்கிச் செகந்தழைத் தோங்குவதென்றும்; புண்ணியவான்க ளாயினோர் தவம்புரிவ தென்றும் பெரியோர் புகன்றிருக்கின்றார்கள். ஆதலால் -அந்த நீதியைக்கேட்டு நெறிமுறைவழுவாமல் நடக்கும் நிலைமையையுடையவள் நீயாகையால், உனக்கு விசேஷித்து என்ன சொல்லப்போகின்றேன்? ஒருகற்புள்ள மனையாளைக்கலியாணஞ்செய்துகொண்டீகணவனுக்கு, விற்பனவிவேக வேதசாஸ்திரங்களும் - பற்பலசுகுணம்பரவியபயனும். அன்பும் - இன்பமும் அழகும் - புகழும் - வெற்றியும்- புத்தியும் - மெய்வையும் - பெருமையும் - செல்வமும் - சீரும் - திடமும் - தீரமும் - குறைவறப் பெருகுமென்று மஹாவாக்கியங்களிற் குறித்திருக்கின்றன. பாதியாளென்பதே பாரியாளெனமருவிய மனைவியாவள். ஆதலால் - அம்மனையாள் (கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.) என்னுங்கருத்திற்கிணங்க நடக்கவேண்டியது. அவள் கணவன் கருத்திற்கு மாறுபடுவாளாகில், அம்மாறுபாடு அவள் புருஷனுடைய மெய்த்தவத்தையும் - செல்வத்தையும் - ஆயுள் முதலிய யாவற்றையும் அழித்து, மீளாநரகத்திற் காளாக்கி விடுமென்று இருக்கு வேதத்திற் சொல்லியிருக்கின்றது. பதிவிரதையுடன் கூடி, இல்லறதருமம் இயற்றி, நல்லமனதுடன்வாழ்வு கூர்ந்தபேருக்கு; கீர்த்தியும் பொருளுங் கிடைக்குமென்று உண்மைஞான முணர்ந்தோர் உரைத்திருக்கின்றார்கள். அதற்குத் திருஷ்டாந்த மென்னவென்றால் - மாதாவாகிய சீதாதேவியின் பதிவிரதா மகத்துவத்தால், இராமர் தேவர்முதலிய தண்டகாரண்ணியரிஷிகளுக்கு அபயங் கொடுத்து, இராவண கும்பகர்ணாதியரை வதைத்துப் பட்டாபிஷேகம்பெற்ற கீர்த்தியைப் பலதரமுங் கேட்டிருக்கின்றனே. ஓ நிதமும் அருந்ததி துதிக்கும் அன்னமே! இப்படிக் கெல்லா மிருந்த போதிலும், (காவல்தானே பாவையர்க்கழகு.) என்னுங் கருத்தின்படிக்கு, முதற்காவல் தந்தை. இரண்டாவதுகாவல் புருஷன். மூன்றாவதுகாவல் புத்திரன். இம்மூன்று காவலுக் குட்பட்டிருப்பவளே மகா பதிவிரதைதாம். அதுவேபெண்கட்கழகாகும். நாம் அஞ்ஞாதவாசம்பண்ணவேண்டிய இத்தருணத்தில், உனக்கு யாதொருகாவலு மில்லை. ஆனதால் நான் சொல்லவேண்டுவ தென்னெனில் - உன்புத்தியைப் பெருங்காவலாகக்கொண்டு, இஷ்டதெய்வத் துணையை யிடைவிடாமல் நம்பி, நிறையாகிய அழிவின்மையை முறையாய்நிறுவி, இக்காலத்தைக் கழிக்கவேண்டும். உன்னிடத்தே துஷ்டர்கள்கருதிக் கிட்டவந்தாலும், அம்மூடர்களை நீ பார்த்தபோதிலும், அவர்கள் கண்ணிக் கெட்டாமலகன்று, அந்தக் கொடுமையாளருடைய துற்புத்திக்கும் - உனது சத்துருவின் பார்வைக்கும் - அகப்படாதிருந்து, இராஜஸ்திரீக்கு விரோதம் வாராமல் நடந்து, ஓ பாஞ்சால கன்னிகையே! நமக்கு நற்காலம் வருகிறவரைக்கும் இத்தத்துற்காலத்தைத் தொலைத்துவிடவேண்டும். என்றுபகர்ந்த தருமராஜனுடைய சத்தியமொழியான தரும நீதிகளை உத்த குணசாலியாகிய பாஞ்சாலி வணங்கிக்கேட்டு, புத்திபுத்தியென்று பேசத் தொடங்கினாள். ஐயா பொய்யாவிரதப் புனிதமூர்த்தியே! தேவரீருரைத்த சிலாக்கிய வாக்கியத்தை ஜென்மாந்திர பாக்கியமென்றும், வேதமொழியென்றும், என் தலைமேற் கொண்டேன். தேவரீர்மொழிந்த தெவ்வண்ணமோ? அவ்வண்ணம் நடக்க அடியாளிருக்கின்றேன். எனக்காகச் சிந்தனை செய்யவேண்டாம் ஓசத்தியவத்துவின் தத்துவநிலையே என்று கைகூப்பி, அவர்சரண்மேற் றாழ்ந்தாள்.

தௌமியாசாரியர் பாண்டவர்கட்குச்சிலநீதி கூறிஔபாசாக்கினிபெற்றுத் தவத்திற்கேகுதல்.

இப்பால் தருமநந்தனர் தௌமியரைநோக்கி, சுவாமி! அடியேங்களிழைத்தவினை இப்படியாச்சுது. அரசாட்சிமுதற் பெருமையும் போச்சுது. தம்மைப்பணிவாரைத் தாம்பணியக் காலவாச்சுது. இனித்தேவரீரால் யெப்படி கட்டளையோ? அக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருந்து, தமதுகிருபையின்படி நடக்கக் காத்திருக் கின்றோம். ஓ பரமரகசியபதிதபாவனனே என்றுதருமராஜன்சாற்ற, தௌமியாச்சாரியார் சந்தோஷித்து, ஓ சத்தியசீலனே! நீங்கள் ஆறுபேரும் விராடரூபனையடுத்து, இதுகாறு மிருந்ததுபோல இச்சையின்படிக்குத் திரியாமல், ஒருவருக்குந் தெரியாமல், ஒருவரையொருவர் பிரியாமல், இப்போதிவ்விடத்தில்நிச்சயித்துக்கொண்ட

படி வேறுவேடம்பூண்டு, அவரவர்க்குரியதொழில்களை அலுப்பில்லாமலும் - அவசரப்படாமலும் - செய்யவேண்டும். அப்படி செய்கிற விஷயத்தில், ஒருவன் களங்கமறக்கற்ற கனவானானாலுந் தனக்கு மேற்பட்ட புத்தியோரிடத்தில் ஆலோசித்து நடக்கத்தக்கதென்று நீதிநூலிற் பேசியிருப்பதால், நீங்களுணராத நீதிநெறியில்லை. அப்படிக்குணர்ந்துதெளிந்தபோதிலும், நானறிந்திருப்பதையுங் கொஞ்சஞ்சொல்லுகிறேன். நீங்கள்யாவரும் வெறுப்பின்றி விருப்பமாய்க் கேட்டருளுங்கள். என்று விரத சிலாக்கிய வேதபுரோகிதன் விளம்பலுற்றனர். ஓ ஐவர்களே! ஜெகமுழுதும் ஒருகுடையிலாளுந்தீரனானாலும், திகாசந்தவரையிலும் ஒரு நொடியிற் ஜெயிக்கும் வீரனானாலும், ஒருவரிடத்திற்சேவகஞ்செய்யப் புகுந்தால், தீரமும் வீரமுமொடுங்கிச் சேவகஞ்செய்யவேண்டுமென்று பாவக நீதிசாஸ்திரத்திற் பகுத்திருக்கின்றது. ஆனதால் - நீங்களைவரும் மாறுருக்கொண்டு விராடனிடஞ்சென்று தொழில்புரியு நாளையில், உங்கள் பெருமையையும் புகழையும் பேசாமல் மறந்துவிடவேண்டும். பூர்வகாலத்தில் துளமணிபூண்ட ஆண்டவன் ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றுதற்காக, எத்தனை பாடோபட்டு அவதரித்துக் காரியசித்திகண்டு, கமலசம்பவன் முதலாகிய தேவர்களுக்கு அருள்செய் திருக்கின்றார். அதுபோல் நீங்களுங் காலங்கருதி, உங்கள் சிறப்பை மறந்து மச்சராஜனிடமருவி, ஏவலாளரினும்எளியராயிருந்து நாளைக்கழிப்பது நலமாகும். ஒருவனிடத்தில் ஊழியஞ்செய்வதும், அரசருக் கடிமையாவதும், வேறுவேஷங்கொண்டு வேலைக்கமர்வதும், கொடுமை: கொடுமை: இம்மூன்றில் - அரசனிடத்தில் உத்தியோகஞ்செய்கின்ற முறைமையும், ஏவற்றொழில் கேட்குந்திறமையும், அரசன்தயவைச் சம்பாதிக்கவேண்டியநன்மையும், கீர்த்திதேடுந் தன்மையும் உசிதவார்த்தைகளைச் சபைமெச்சப் பேசுமுசிதமும், நானுணர்ந்தபடிக் குசிதமாக விளம்புகின்றேன் கேளுங்கள்.

ஓ திங்கள் குலந்தழைக்கவந்தவர்களே! பகைவருடலிற் பாவிய உதிரமாமிசத்தை முனைத்தலையிற் சுமந்த வேலாயுதந் தரித்த ராஜனானவன் சபைக்கு வருமுன்னமே, தனக்குத் தகுந்த ஸ்தானத்தில் தான்வந்திருந்து, அரசன் வாக்கிலிருந்துவருஞ் சொல்லினுடைய் பொருள்நுட்ப மறிந்து, அந்தச சொல்லின் சூக்ஷத்திற்குத் தகுதியாகப் பதிலுத்தரங்கொடுத்து, மரிதையாயுடுத்து மனமகிழச்செய்தால்; அம்வாசனது பாக்கியங்களெல்லாம் அவனேபெறத்தக்க யோக்கியனாவான். உலககாவலனாகிய வேந்தனிடத்தில் நாம் வந்தடுத்த அந்நாள் முதலின்னாள்வரையிலும் வீணாய்த்துன்பப்பட்டோம். இதனால் என்னபலன் கண்டோம்? என்றுபலருமறியத் தூற்றி, மனவெறுப்போடொறுத்துக் கொள்ளுகின்ற அவசரப் புத்தியுடையவர்கள்; இனிமேல் இராஜனால் கிடைக்கப்போகிறபெருமை - புகழ்-ஐஸ்வரியம்-இவை முதலிய சம்மானத்தைப் போக்கடித்துக் கொண்டவர்களென்றுசொல்லலாம். மன்னன்மாளிகைக்குமேற்பட்டவீடும், அவன் சிறப்புக் கதிகமான சிறப்பும், அவன் நாகரீகத்திற்கதிகமாகிய நாரிகமும், அவனலங்காரத்திற்கு அதிகமான அலங்காரமும், அவனாபரணத்திற் குயர்ந்த ஆபரணமும், அவனது சுகந்த பரிமளத்திற்குமிகுந்த வாசனையும், அவன் வஸ்திரத்திற் குயர்ந்த வஸ்திரமும், அவன் சொல்லியநீதி பேதிக்கப் பேசுகின்றதுஷ்டவார்த்தையும், மதிப்பில்லாத மரியாதையும், வணக்கமற்ற இணக்கமுங் கூடாது. இவைகளொரு வேளை அதிகப்பட்டிருந்தால், நல்லபாம்பின விஷத்தை நாள்தோறும் அருந்துவதுபோல் நன்மையைக்களைந்து, உயிரழிக்குந் தீமையை விளைவிக்கும். பூபதிக்குரிய புத்திரரானாலும், அவர்களாசைக்குரிய மித்திரரானாலும் அவர்களன்புமேற்கொண்ட பௌத்திரரானாலும் இனவருக்கமானாலும், ஜனப்பெருக்கமானாலும், வெட்டிச்செயிக்கும் வீரமுள்ள சகோதரரானாலும், அரசனது ஆணைமீறிநீதிவழுவி நடக்கலாகாது. அப்படிநடப்பார்களாகில், அரசன் மிகுதியான கோபங்கொண்டு, மநுநெறிமுறைமைக்கு மாறாக உயிர்வதை செய்து விடுவான்.

ஓ பாண்டுபூபதிக்குரிய பாக்யசிலாக்யரே! மன்னர்களுக்கு மகிழ்ச்சியைத்தரு மைந்தர்களும், யுத்தமுனையில் வெற்றிபெறுஞ் சத்தியையுடைய சுத்த வீரர்களும், செய்யத்துணிந்து பிரவேசித்தயாதொருகாரியங்களில் எதாகிலுங் காரியத்தாழ்ச்சி நேரிட்டு அந்தச்சங்கதி அவ்விடத்தி லிருக்கின்ற மற்றப்பேருக்குத் தெரியுமாகில், அதை வெளியிற் பிரசித்தப் படுத்தப்படாது. திக்கு யானைகளையொத்த திறம்பெற்றவர்களானாலும், வேந்தனால் முடியாத காரியத்தை நானே முடிக்கிறேனென்று வீரியம் பேசப்படாது. இராஜன்நமக்கு மிகுநேச விசுவாசமா யிருக்கின்றானென்று அவனிடத்தில் தனக்கினிமையான காரியங்களைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறபக்ஷமானது, அந்தராஜனை அடுத்திருக்கிற சிலபேருக்குத் துன்பத்தை விளைக்குமாகில், அதுமகா கொடுமையென்றறிந்து, புத்திமான்கள் ஒருபோதும் பிரஸ்தாபத்திற் கொண்டுவரப்படார். தாங்கநினைத்தகாரியங்களில் யாதொரு பயனுமில்லாதிருக்குமாகில், வித்வச்சிரேஷ்ட மகத்துக்கள் கூட்டத்தில் அந்தப்பயனில்லாச் சொல்லைப் பகர்ந்து, பழிப்புக் கிடமாகிய இழிவடையப் போகாது. ஆலோசனையி லுயர்ந்த பேரறிவாளர்கள் ஏழையெளியோர் முதலிய யாவரானாலும்அவர்களைக் கடிந்து கறுவி, (வெட்டெனப் பேசேல்.) என்று மேலோருரைத்த நீதியை நினைத்துக் கோபங்கொள்ள மாட்டார்கள். வீரமுடையவேந்தனிடத்தில்உரிமையாயிருப்பவர்களைப் பகைத்து, தன்னருமைபெருமைகொ

டுமைமுதலிய ஆணவப்பேச்சால் விரோதமாகத் தூறிக் கடின வார்த்தைகள் சொல்லப்படாது. அப்படி விரோதிப்பார்களாகில் - எவராலு மாற்றப்படாத கூற்றுவனாற்செய்யுங் கொலைத்தொழிலாளருக்குநாள் விளக்குமென்று நன்றாயுணர்ந்து, யாவருக்கு நல்லவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது. தராதிபன் கொலுக்கொண்டிருக்குஞ்சபையில் தாராளமாய் எதிரில்நிற்கப்படாது. அரசனுக்குப் பின்புறத்திலு நிற்கப்படாது. சிங்காதனத்திலிருக்கும் வேந்தனுக்கு இருபக்கத்திலு நெருங்கி நின்று, அவனுடையகண்கள் யாரைப்பார்க்குமோஎன்றும், அக்கண்ணோக்கானது கருணைநோக்கோ கலகநோக்கோ வென்றுங் கண்டறிந்து, காலமுமிடமுங்கருதிநடக்கவேண்டும்.

மேலும் அரசனுடைய வாக்கிலிருந்து வருகிறவசனத்தைக்கண்சிமிட்டாமற்பார்த்து,காதுகொடுத்துக்கேட்டுளவர்களுக்கென்னசிலாக்கியமோ? ஏழைகளுக்கென்னபாக்கியமோ? எதிரிகளுக்கென்னவபாக்கியமோ?என்று யோசித்துக்கொள்ள வேண்டியது. அரசன் அரண்மனையிலுள்ள நன்மைதீமைகளைத்தானறிந்தாலும், ஒருவாற் கேள்விப்படடாலும், இராஜகாரியங்க ளெதுவானாலும், மற்றொருவருடன்சொல்லாமல் மறைக்கவேண்டும். உடனே அதைமறக்கவும்வேண்டும். அந்நியர்முதலியமன்னவர்களாற் சண்டைசச்சரவு பொல்லாங்காகிய கட்டுவார்த்தைகள்நேரிட்டுக் கேள்விப்பட்டால், அதைக்கெட்டியாய் விசாரித்துத் தீர்க்காலோசனை செய்து, உடனேதன் எசமானுக்குத் தெரியப்படுத்தி மேன்மையைப்பெற்று, அவ்வரசனுக்கு மெய்ப்படப்பொருந்தியிருப்பதுவே அழக்கழகாகிய அணியையுண்டாக்கும். ஐம்புலாதிகளை யடியோடறுத்து, ஆசை மூன்றையடிவேர்களைந்து, ஆரண்யத்தில் வாசஞ்செய்கின்ற அருந்தவத்தோர்களையுங்கலவைதிமிர்ந்த சலவையணிந்தகலசமுலையார்களின் கடைக்கண் மருட்டுமாகில்; பஞ்சேந்திரியங்களுடன் நாட்டில்வாழுகின்ற நம்மை விட்டுவிடத்தக்கதோ? ஆதலால் - இராஜஸ்திரீக ளிருக்குமிடத்தில் தனித்துப் போகப்படாது. அவர்களுடன் சரசவார்த்தைகள் பேசப்படாது. நாணம் - மடம் - அச்சம் -பயிர்ப்பு - என்னும் இந்நான்கு மமைந்த ஸ்திரிகளிடத்திலும், குள்ளனிடத்திலும், கள்ளனிடத்திலும்,சிறுபிள்ளை யிடத்திலும். ஈனசாதியி னிடத்திலும், சிநேகஞ்செய்ய லாகாது. சிநேகம்பண்ணினால், உடனே கலகநேர்ந்து, அவமரியாதைக்குள்ளாக்கி, உயிர்த் தண்டனைவரையிலுங்கொண்டுபோய் விட்டுவிடும்.

ஓ பரமபுருஷோத்தமரே! உலகமெல்லாந்தொழுதற்குரிய உயர்ந்தோராயினுஞ் சிங்காசனக் கொலுமுகநோக்கிச் சென்றால், அவ்வரசன் தனக்குமரியாதைசெய்திலனென்றும் - வாகனங் கொடுத்திலனென்றும் வசனித்திலனென்றும் - ஆசனமளித்திலனென்றும்.போஜனமருந்திலனென்றும் - வரிசை வண்மை மணிபணிப்பணி தந்திலனென்றும் - விசனமேற்கொண்டு குறைப்படலாகாது. ஒருவேளை அக்கொற்றவனாற்சகலவெகுமானமும் பெற்றால் உடல்பூரித்து, தன்னைத்தானேமறந்து மனமகிழ்ந்து கர்வங்கொள்ளப் படாது. அதிகசந்தோஷம் அதிகதுக்கந் தருமென்று சாஸ்திரஞ் சொல்லுகின்றமையால், அவ்வரசனா லப்போதே அவமானநேரிட்டாலும் நேரிடும். அதைக்குறித்து சிந்தைவாடப்போகாது. அரசனால் வந்த நன்மைதீமை யிரண்டுஞ்சமமாகக் கொண்டு சஞ்சலமில்லா திருந்தவர்கள், எல்லாமுணர்ந்த வல்லவர்களென்று இயம்பத் தக்கவராம். இராஜன் ஒருவர்மீது கோபங்கொண்டு அவன் செல்வங்களைக்கைக்கொள்ளக்கருதிய காரணத்தைத் தாங்களறிந்ததுண்டாகில். அந்தப்பேச்சை யாரிடத்தும் பேசலாகாது. அதைக்குறித் தரசனையு மேசலாகாது. கார்மேகங்கலந்துபொழிகின்ற மழையிலும், ஊர்வெந்து உலர்ந்துகரிந்துபோகக்காயும்வெயிலிலும், பைசாசு நித்திரைசெய்யும் பாதிராத்திரியிலும், கைசாய வீசிமோதுங் கடுங்காற்றிலும், வேந்தன் ஒருவேலையாக அனுப்புவானாகில், தன்னிடத்திற் சொல்லிய காரியமே கண்ணாகக்கொண்டு தான்போன அந்தக்காரியத்தை முடித்துவரவேண்டுமல்லது; வேறொன்றுநினைக்கப்படாது. இராஜகாரியம் நிறைவேறுகிறவரையிலும், சோகம் - சோம்பல் – தேகவருத்தம் – பசி - இளைப்பு - ஆயாசம் - தாகம் - மனஸ்தாபம் - நித்திரை - பெருமை - அருமை - சிறுமை - இவைமுதலிய ஒன்றையும்பொருளாய்க்கொள்ளாமல், மானத்தையும் மன்னன்சொன்ன நியானத்தையும் முக்கியமாகக் கருதி முடிவுபெற நடத்திவரல்வேண்டும். கொலுமுகத்தில் நின்ற வொருவனையழைத்துப் பகைவர்மே லனுப்பினால், அப்பகைவர் குடிகெடும்படி வென்று தங்களரசாட்சியைக் காக்கவேண்டும். அவ்வரசனைத் தங்கள் தங்கள் கண்மணிபோற் பார்க்கவேண்டும். எந்தவேளையும் அரசனைப் புகழ்ந்துபேசவேண்டுமல்லது, எப்போது மிகழ்ந்து பேசலாகாது.

ஓ அறமாதிபுருஷார்த்தங்களை ஆபரணமாகப்புனைந்த அருஞ்சிலரே! உற்றதுணையாய்க் கொற்றவனேசம்பெற்றிருந்தாலும், அரசனவனை உயிர்போல் வைத்திருந்தாலும், அவனது பொன்னை - பொருளை - பூமியை - நேமியை - கன்னற்கோற் கள்வரைப்போற் கைபற்றக்கருதலாகாது. கணக்குமுதலிய காரியங்களிலும் மறந்தும்வழுவலாகாது. ஒருவேளை இராஜன்சந்தோஷமடைந்து, பொன்னை - பொருளை - பூமியை - மாளிகையை- மனையைக் கொடுப்பானாகில், ஆசை அன்புடன் அவைகளைப் பெறத்தக்கது. மற்றொருபாய தந்திரங்களாற் கிரகிக்க நினைப்பது, ஆலகாலவிஷத்தை அமுதென்று நினைத்த ஆசைபோலாகுமென்று, அறிவிலுயர்ந்தோர்

போசம் போகாமற்கிடைத்தவரையிலுந் திருப்தியடை
ந்து சத்திய தர்மந் தவறுமலிருப்பார்கள். இதன்றியும்
(காற்றுள்ள போதே தூற்றிக்கொள். கரும்புள்ளபோ
தே நாற்றிக்கொள்) என்னும்பழமொழியை நினைந்து,
இந்தக்காலத்திற் சம்பாதிக்காமல்இனியெந்தக்காலத்தி
ற்சம்பாதிக்கப் போகிறேமென்று கைகொண்டவரைக்
குங் கொள்ளையடிப்பதற் குடம்படுவோர், கசடர் —அக
டர் - கயவர் - குயவர் - என்றுரைக்கப் படுவது மன்றி
முன்பின்னுள்ள முதலுமிழந்து, மூனையுமழிந்து, தே
சப்பிரஷ்டத்துவ மாவார்கள். கொலுக் கொண்டிரு
க்குங் கோவேந்தன் சபையில், பொய்-புரட்டு - பெரு
போசம் டம்பம் - ஜம்பம் - தும்மல் - விக்கல்-கக்கல்
ரெட்டை - சோம்பல் - கொட்டாவி - குறுகுறுத்தல்-
நிமிர்விடுத்தல் - இவை முதலாகிய துற்குணங்கள் வரக்
கூடாது. ஒருவேளை வருமாகில், அந்த இடத்தைவிட்டு
அப்பாற்போய்த் தீர்த்துக்கொண்டு வரவேண்டும். களி
ப்பாகச் செய்யுங் கயப்பாகிய வஸ்துக்களைக் கனவிலுங்
கருதப்படாது. அதையுட்கொண்டு காவலன்சமுகமேற
ப்படாது. (கண்ணாற்கண்டதும்பொய். காதாரகேட்ட
தும்பொய் தீரவிசாரிப்பதுவேமெய்.) இதுவுமுதியோர்
மொழியாதலால், யாதொரு காரியத்தையும்நாவடக்கா
மற் பதறிச் சொல்லப்படாது, அப்படிச் சொன்னவர்க
ளுக்குப் பெருந்துன்பத்தையும், மனுஷப்,பதரென்னும்
பெயரையும் வருவிக்கும். அரசனுல்நியமித்தகுற்றவாளி
முதலியகொலையாளருடன்கூடிக்கலந்துகுலாவலாகாது.
கூடினுல், இவனும் அந்தக்குற்றங்களுக்குரியவனுவான்.
அரசன்கையெடுத்தழைத்தால்ஆனந்தப்படாமல், அந்த
கன்அழைக்கவந்தபோதுஅவனைக்கண்டுநொந்தழுகின்ற
அறிவில்லா ருயிர்போலொடுங்கி யடங்கி, வாய்பொத்தி
வணங்கிவரவேண்டும். இராஜனு லழைக்க வரும்போது
பூமியதிரத் திடுதிடென்று நடந்து, அலட்சியமாய்ப்ப
தறி வரலாகாது. (அடக்கம் அமாருளுய்க்கும்,) என்னு
ம்வாக்கியத்திற் கிணங்கமருவிச் சுகம்பெற வேண்டும்.

ஓ சர்வஜன மனோரதாகிய சத்திய சீலர்களே!
வெற்றிவேலேந்திய வேந்தனிடத்திற் கட்டி காத்துப்
பொருந்தியிருப்பவர்கள், கொசுகுபோன்ற சிற்றறிவு
டையவ ராஞனும், அவர்களோ டெதிர்த்துப் பகைத்
துக்கொள்ளப்படாது. அவர்கள்பகையானது நல்லதரு
ணத்திற் கழுத்துக்குக் கத்தியாய்வந்து நேரும். இவ்வ
ரசனிடத்தில் வெகுவாகியசெல்வமும் - சுபமாகியஇன்
பமும் - பெறுகிறதற்காக வல்லவோ? எங்நோமுங்கோ
ள்குண்டிணி சொல்லி நயிச்சிகமாக நடந்துகொண்டா
னென்று அரசனைச் சூழ்ந்திருப்பவர்க ளியாவரும் இக
ழ்ச்சியாய்ப் பேசிக்கொள்ளும்படிக்கு இடங்கொடுத்து,
அரசனுற் பலவித வளங்கள் சுலபமாய்க் கிடைப்பதானு
லும், அறிவினையுடையோர் அவ்விதப் பழிச்சொல்லுக்
காசைவைக்கார்கள். இராஜன் கொண்டாடிப் புகழ்ந்த
போதிலும்பேரறிவாண்மையென்னும்பெருஞ்செல்வப்
பெரியோர்கள், வெகுபேர்நம்மைமெச்சவேண்டுமென்
றிச்சைகொண்டு, தன்னைத்தான்மறந்து, ஆணவத்தாற்
சிறந்து அகந்தைகொள்ளமாட்டார்கள். பரிசுத்தவான்
களாகியஉத்தமர்கள்உலககாவலனுகிய அரசனையும்-உப
தேசஞ்செய்தருளிய குருவையும் - வித்தியாப்பியாசம்
பண்ணிய உபாத்தியாயரையும் - முத்திபெறுதற்குப்
பெற்ற பிதாவையும் - பத்திசெலுத்துந் தெய்வத்தை
யுந் தந்தையெனச் சிந்தித்து, தினமுமேத்தித் தொழு
துவாழ்த்திப் போற்றுவார்கள். ஆதலால்-நீங்களைவரும்
இவ்வகையான உலகவியற்கைகளை மனதுட் கொண்டு,
விராடராஜனை யடுத்து, நாள்தோறுங் குற்றமற்ற ஏவற்
றொழிலை முடித்து. அகந்தையற்ற மனத்தினராய்ப்பெ
ருமைபொருந்தி, இன்சொல்விளைத்து, அக்ஞாதவாசம்
ஒருவருஷமுங் கழிப்பீர்களாகில்; அது உங்களிடத்தி
லுண்டாகிய நல்லநினைப்புக்குத் துணைக்காரணமா யிரு
க்கும். என்றுதௌமியாச்சாரியர் சொல்லவும். அப்
போது பர்வதாகிர்தியாகக் குவிந்த தோளினையுடைய
பாண்டவர்கள் ஜெயங்கொண்டதைப் பார்க்கிலு மே
லான விருப்பமுடையவர்களாய், பௌரோகிதருடைய
மனமகிழ இதனைச் சொல்லலுற்றார்கள். ஓவேதியர்பெ
ருமானே! காவலனிடத்தில்ஏவல்செய்யு முறைமைகளை
எங்களுக்கின்று கற்பித்தருளினீர். ஓ குறைவற்ற தவரா
ஜசிங்கமே! நீருரைத்த திவ்விய மொழிகளை வேதபாட
ங்கற்குஞ் சந்தைபோலுஞ் சிந்தையுட்கொண்டோம்.
இனிமேல் நாங்கள் மறைந்துறைந்து ஒருவருடந் தொ
லைக்கிறவரைக்குந் தேவரீர் தவவேடம்பூண்டு, மாதவர்
கள் வாழும்வனமடைந்து மருவத்தக்கதன்றோ? என்று
செந்தாமரை போன்ற அவரது திருவடியைத்தொழுது
போற்றி, இதுவரையிலும் பத்தியுடன் பூசைபண்ணிக்
கொண்டுவந்த நித்தியாக்கினியை நெறியோடளித்தார்
கள். அதனைத் தௌமியாச்சாரியர் அன்போடு கைப்ப
ற்றிக்கொண்டு, பாண்டவர் தம்மைப்பட்சமாய்நோக்கி,
அருண்மலர் முகத்தோடு ஆசீர்வதித்து, அவ்விடம்
விட்டு அப்பாலெழுந்து, மாசற்ற மாதவர் வாழ்வனம்
புகுந்து, தேசுற்ற தவத்திற் சீர்பெற்றிருந்தனர்,

பாண்டவர்கள் வில்முதலியபடைகளை வன்னிவிருக்கத்தடியிற் பதனஞ் செய்துவைத்தல்.

கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே ! இப்
பாற்பாண்டவர்கள் தங்களுக்குந் திரௌபதாதேவிக்
கும் பணிவிடைசெய்து வந்த பாங்கர் பாங்கியர்களைப்
பார்த்து, நாங்கள் ஒருவருட மொளித்திருக்குங் காலம்
நேரிட்டபடியால், அதுவரையிலும் நீங்க ளியாவரும்

விசனப்படாமல், மான்களுலாவும் வனஞ்சூழ்ந்த பாஞ்சாலதேசஞ் சேர்ந்திருங்கள். என்று அவர்களுக் காதரவு சொல்லி யனுப்பிவிட்டு, பெருமையிற்சிறந்த அப்பாண்டவர்கள் மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடன் சிலதூரம் போகையில், தருமாராஜன் தன் தம்பியர்களை நோக்கிச் சொல்லுகின்றார். ஓ என்னருமைச்சகோதரர்களே ! நாம் இந்த இராஜன் சார்பிற்சார்ந்துநமதுதொழில்களைநடத்துநாளில் நமதுகரத்தி லிருக்கும் ஆயுதங்களை ஒருவருமறியாமல் ஒளித்து வைப்போமாகில், நம்மைச்சத்துருக்கள் முதலாகிய யாவருங்கண்டுகொள்ள மாட்டார்களென்றார், அச்சொல்லைக்கேட்ட அருச்சுனன்வணங்கி, அண்ணாவே! தேவரீர் சொன்னது நியாயந்தானென்று வாய்விட்டேங்கி யிரைந்து, பெற்றதாயைப்பிரியுங் கன்றுபோலேங்கிப் பதைபதைத்து, தனது வெற்றிகொண்ட காண்டீபத்தையும் - அஸ்திரநிறைந்த அக்ஷயத் தூணியையும் - சஸ்திரமாகிய மற்ற ஆயுதங்களையுங் கஸ்தியுடன் கழற்றிக்கொடுத்தான். மாருதிமைந்தனாகிய வீமசேனனும் வாரிதிபோற் பொங்கி, சேருதற்கரிய கோபங்கொண் , சிந்தை சோர்வடைந்து, துன்பந்தாங்கி 'நைந்து, மேகங்கள் வெளுக்கச் சிதைக்கும் வில்லையும் - நாகங்கள் பதைக்கவதைக்குங் கதையையும் - மோகமும் மானமுமுடைய படையையுஞ் சோபத்துடன் அயர்ந்து மனமுருகிவைத்தான், நகுல சகாதேவரென்னுந் தம்பிய ரிருவருந் தலைவனாகிய தருமாராஜனுரை தவறாதவர்களாய், பல்லோருங் கவலைகொள்ளும்வில்லாயுதமும் - வேலாயுதமும் - வாளாயுதமும்- தோமாயுதமும் - சூலாயுதமும் - கேடகமும் - அம்பறாத் தூணியும் அவிழ்த்துக் கொடுத்தார்கள்.

இப்பால் ஒப்பில்லாச் சித்தசுத்தமுள்ள தருமாராஜன் தன்னுடைய ஆயுதங்களையுங் கூடவைத்துமொத்தமாகச்சேர்த்து, இவைகளையொருவரும் உணராதிருக்கும் 'இடந்தேடி வைக்கவேண்டுமென்று யோசித்து, செழுமையுடன் வளர்ந்து இருளுக் கிருப்பிடமாக வுயர்ந்து தழைந்து கவிந்திருந்த ஒரு வன்னிமரத் தோப்பின் வளப்பதைக்கண்டு, மகாசந்தோஷங் கொண்டு அதில் ஓர் மரப்பொந்தில் இவ்வாயுதங்களை வைத்து, பகைவர் முதலாகிய பலருக்குந் தோன்றாமலிருக்கவேண்டுமென்று மான்தோலால் மறைத்து, அவைகளைமூடிக் கட்டும்படிக்கு வீமசேனனுக்கு உத்தரவுசெய்து, அத்தருமசொரூபியாகிய தார்வேந்தன் தந்தையாகிய யமதருமாராஜன் திருவடியைச் சிந்தித்து வந்தித்து, சுவாமீ! எங்களுக்கு வெற்றியையும் வீரத்தையுங் கொடாநின்ற ஆயுதங்களனைத்தையும் இந்த வன்னிவிருட்சத்தில்வைத்திருக்கின்றோம். இவைகளை நானாவது நானாவது எடுக்கத்தக்கதேயன்றி, மற்றியார்வந் தெடுத்தாலும், இம்மாத்தின் கிளையை யடுத்தாலும், இவைகள் பெரும்பாம்புருவாய் ஆலாலவிடத்தைச் சுவாலா மாலிகையாய் வீசி, வெகுண்டு மேல்விழக்கடவதுகள். என்று பேசிக் கட்டுரையாகிய உறுதிமொழியால் நிடத்த வாத்தைப் பெற்று, அவ்வாத்தைப்பரீசிக்கவேண்டியவீமசேனனையழைத்து, நாம் பத்திரப்படுத்திய படைகளைப்போய்ப் பாரென் றுரைத்தார். அப்போதே வீமசேனன்போய் அந்தமாத்தின் கிளைமேற்சார்ந்து எட்டியெடுக்கக் கிட்டியபோது, அவ்வாயுதங்கள் உடனே பெரும்பாம்புருவாகி, மட்டுமிதமற்றகொடுவிடத்தைக்குபீரென்றுகக்கி, அழலால் தகித்துத்தூரத்துவதாபது. அதனைக்கண்ட வீமன் பெருச்சுமூச்சுவிட்டு, பொறிபுலன்கலங்கி, புகல்சொலிப் புலம்பி, பொன்போன்ற முகந்திரிந்து இரைந்தகலறனன். அச்செய்கையைக்கண்ட தருமாராஜன்முதலிய யாவருந் துதிக்கைபெற்றயானைபோல் துயர்நீங்கி மகிழ்ந்து, அவ்வன்னித்தருக் கெதிரே யாவரும்யாமளவேதத்தாற் றுதிசெய்யாநிற்பச் சத்தகன்னியருளொருத்தியாய்ச் சங்குசக்ராதிப் படைகளோ டெழுந்தருளிய ஓர் மகாகாளியின் திருவடிதொழுது, அவ்விடம்விட்டு நீங்கிச் சிலதூரத்திற் கப்பாலிருக்குஞ் செந்தாமரைப் பொய்கையைச் சேர்ந்து ஸ்நானம்பண்ணி, நீர்துவட்டி நெடுமயிராற்றி, வேதவிதிப்பிரகாரம் மத்தியானக்கடன்முடித்து. அவ்வவர்கள் தந்தையரின் பதத்துணையைச் சிரமேற்கொண்டு, அத்தந்தையர் வசிக்குந்திக்குநோக்கித் தெண்டனிட்டு, ஓதென்றிசைக்கடவுளாகிய யமதருமமூர்த்தியே! ஓ வடமேற்றிசைச் செல்வனாகிய வாயுபகவானே! ஓ கீழ்த்திசைத் தேவாகிய இந்திரமகாராஜனே! ஓ ஆகாய வாசிகளாகிய அஸ்வனிதேவர்களே! நீங்கள் நாங்களெடுக்கவேண்டிய வேடத்திற்குத் தகுந்தஉபகாணப் பொருள்களெல்லாம் உதவிசெய்து, சுஜாதிகப் பிரகாசமுந் தந்தருளவேண்டுமென்று வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே அத்தேவர்கள் தங்கள் தனயர்கட்கு அநுக்கிரகஞ் செய்தருளினார்கள்.

பாண்டவரும் பாஞ்சாலியும்
வேற்றுருவமைதல்.

கேட்டீரோ ஜெனமே ஜபமகாராஜனே! இப்பால் தருமபுத்திர மகாராஜன் ஒளிவிடுங்கிரண வுதயசூரியன் போற்சதுர்வேதசம்பன்னனுருவாய், தழைத்தபின்குடுமியும்,செழித்தமுப்புரிநூலும், கவித்தவெண்குடையும் பிடித்த தண்டுகமண்டலமும், விபுலப்பட்டஞ்சுவேஷ்டியுத்தரியமும், காதிற் குண்டலமும், கையிற் பவுத்திரமும், கண்டவர்மதிக்கும் புண்டரநுதலும், கண்ணிற் கடாட்ச வீட்சணயமும், காத்திற் ஜெபமாலையும், கனிவுறும் வாக்கிற் பனிமொழியாசியும் பெற்று: முனிவரிற் சிறந்த முகவிலாசமுமுடையவராயினர். மற்போர் வல்லவனாகிய வீமனானவன் மடைத்தொழிலாள ருருவமமைந்து; நுதற்கிசைந்த திலதவகையும், செவிக்கிசைந்த திருமணிநகையும்; பாகசாஸ்திரப்பேச்சும், சந்தன

பாளிதப்பூச்சும், தாழ்ந்தவிருகாவிச்சும், சரிகை ஷால்
வைப்போர்வையின்வேய்ச்சும் உடையவனாகி: சிருஷ்டி
கர்த்தாவினாலுஞ்செய்தற்கரிய நூதனவேடங் கொண்
டான். மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் போற்
றிவிரும்பும் பவளமலைபோன்ற பரமசிவமும் -அப்பவள
மலைமேற் படர்ந்த பச்சைப் பசுங்கொடிப் பார்வதியா
ரும் – ஆசைப்பெருக்கோடடுத்து முன்னின்று அருட்
பார்வையளிக்க, தன்னிலைதவறாத்தவத்திலிருந்து, உன்
னியகருவிக ளொருங்குடன்பெற்று, காட்சிகண்டரு
ளிய காண்டீப அருச்சுனன், கண்ணுதல் தன்னுடன்
கலந்து விளையாடிய, தன் திருமேனி தழைபிரகாசத்
தை, நீக்கிவாசனை நெருங்கலர்க் குழலும், கலகலவெ
ன்று கலித்த கைவளையும், உடலைமறைக்கும் உயரரைச்
சட்டையும், கருநிறக் குவளை கடுத்தகண்களும், உடுக்
கைக்கிணையா யுற்றசிற்றிடையும், உயர்ந்தசரிகையோங்
குபட்டுடையும், உலவுஞ்சொகுசாகிய பிடிநடையும்,
செந்தூரப் பொட்டணி செவ்விய நுதலும், தாளமுங்
கோலுஞ் சதங்கையு முடையனாய்; பேடியரிலுயர்ந்த
பேருருவமைந்தான். பின்னவரிருவரில் முன்னவனாகிய
நகுலராஜனானவன், தலைப்புறத்துங் காதின்புறத்துஞ்சு
ருள்செய்து கத்தரித்துவிட்ட மயிர்க்குச்சும், வன்னப்
பிச்சமும், முறுக்குமீசையும், கனகமயச்சுருணைகலந்து
கட்டியவண்டிற்பாகையும், நெற்றியிற் கோபியும், கஞ்சு
கக்கவசமும், கலகலவென்னுங் குதிரைச்சம்மட்டியும்,
கதிநடைபழக்குங்கயிறுங்கொண்டு; குதிரைகளினுடை
யகுணம் - குற்றம் - கோணம் - வட்டம் - வளைவு – மா
றல் - பிணிவரும்விதம் - பிணிதீர்க்குவிதம் -அவுஷதம்-
இவைகளனைத்து முணர்ந்த குதிரைப் பாகனைப்போற்
குறைவில்லாவடிவெடுத்தான். மகாவிற்பனவிவேக சகா
தேவனானவன் சிரசில் நிறைந்து பரந்தகொண்டையும்
வளர்ந்த தாடியுங் கிளர்ந்த மீசையும், செம்மண் வெண்
மண் திலகக்காப்பும், கருங்கம்பளமுங் கச்சப்பையும்,
கயிறுங்கோலுங் கன்றின்வாய்ப்பூட்டும், காதணிகுழை
யுந்தாதுகுதழையும், கந்தை வேஷ்டியும் பெருங்குரல்
தாஷ்டியு முடையவனாய்: பலகோடி பசுக்களைப் பாது
காக்கும் கோபாலனைப்போல் வடிவமானான். வேலாயுத
ம்போன்ற கண்ணினளாகிய பாஞ்சாலி தலைசீவிவகிர்ந்
து, கூந்தல்விட்டு முடிந்து, நெற்றிக்குச் சுட்டிகட்டி,
நீலவிழிக்குமைதீட்டி, இரத்தினப்பணிகள் பூட்டி, வாச
னைப்பொடிகூட்டி, அண்ணல் முதலிய ஐவருங் களிக்க,
வண்ணமகளுரு வாமெனச்சமைந்தாள்.

தருமராஜன் கங்கபட்டரென்னுமந்தண சிரேஷ்டராய் விராடனுக்காசாரியத் தன்மைபூண்டிருத்தல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வா
று இவர்களருவருந்தாங்கள்நிச்சயித்துக்கொண்டவண்
ணம்வெவ்வேறுவேடந்தாங், ஒருவரையொருவர் பார்
த்து உற்சாகமடைந்து. மச்சராஜனிடத்தி லொருவரு
டம் வாழலாமென்று இச்சைமேற்கொண்டு, அச்சமில்
லாதவர்களாயிருந்தார்கள். அப்போதுமறுவகன்ற. தரு
மராஜன் மனமகிழ்ந்து, பலவிதவுபாய வளப்பமும்பேசி
ஓ திறமுடைய வர்களே! ஊன்நாறும் வேலோங்கிய
விராடனிடத்தில் நான்போய்ச் சேர்ந்தபிற்பாடு, நீங்க
ளைவரும் முறையாகத் தனித்தனிவந்து சேருங்கள். நா
னவ்விடத்தி லிருப்பதால் என்னைநோக்கி வணங்கியிண
ங்கி போற்றுதற் கெளிதா யிருக்கும். என்று விளம்பிக்
கிளம்பிய அறக்கடமை நீங்காத அண்ணல் தன் தம்பி
மாரும் பாஞ்சாலியும் வாழ்த்திப் பாதவித்துவாட, தே
வர்முதலிய யாவருங்கொண்டாட. மாதவவேதியர் வடி
வங்கொண்டதற்கேற்பக் கங்கபட்டரென்னுந் திருநாம
மும் – இளஞ்சூரியன்போற் பிரகாசமும் - பாற்கடலை
போல் முப்புரிநூலும் - பரந்தமார்போ டுயர்ந்த தோ
ளும் - வெகுவுலாச - முகவிலாச - மந்தஹாச - சுகந்த
வாச மாலையு முடையவராய், விகடதடகாடகடவாரண
ம்போற்சென்று, மாட - கர்நாட - கன்னட - கிராட-
மலைநாடர் – முதலியோர் வந்திறைஞ்சு மணிக்கதவமை
ந்த வாசலிற்போய் நின்று, வெண்குடை நிழலில் நன்
குடன்பொருந்திய விராடராஜனுக் கறிவிக்கச் சொன்
னார். அவ்விடத்திற் காவலிருந்த தூதுவர் உடனே செ
ன்று, அரசனிடத்திற் றங்கள் வாய்மூடிக் கைக்கட்டி,
சுவாமி! பராக்: யாரோ வொரு பெரியவர் நமதுகொ
லுமுக வாசலில் வந்திருக்கின்றாரென்றார்கள். அவர்கள்
பேச்சைக்கேட்ட மச்சராஜன் உடனே எதிரோடிச்செ
ன்று, ஐம்புலனொடுங்கப் பணிந்து, முகமலர்ந்து, அகங்
கனிந்து, கரமிரண்டுங் குவித்துச் சிரத்திற் பொருத்தி,
கருத்தில் துதித்துச் சேவித்துநின்றான்.

உடனே கங்கபட்டர் மங்களானிபவந்து என்று
உபசாரஞ்சொல்லி, இடதுகையை வலதுகையுட னெடு
த்து இருக்குவேதசாகையினால் ஆசீர்வசன முரைத்தரு
ளினார். அந்தவிராடன் சபையிலிருந்த யாவரும் வந்த
வேதியர் பெருமானைக்கண்டு, விந்தையென் றுட்கொ
ண்டு தொழுதார்கள். அந்தவேளையிற் சந்திரவிம்ப பிர்ம
தேயசு சொலித்து மகாசோப்பியமா யிருந்த கங்கபட்
டரால மங்களாசனம்பெற்ற மகாராஜன் அவரை இச்
சைமேலானபட்சத்துட னழைத்துப்போய், வைதீகர்க
ளிருக்கவமைத்த ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி. அ
வருபய திருவடிக்கு அருக்கியம் - பாத்தியம் - ஆசமன்
னியம் - அபிஷேகம் -.வஸ்திரம் - புஷ்பம் - அரிச்சந்த
னம் - அக்ஷதை - தூபம் - தீபம்-நைவேத்தியம்-இவை
முதலிய உபசாரங்கள் யாவும்புரிந்து, பக்திசெலுத்திப்
பரிந்தேத்திப் போற்றி, வாய்பொத்தி நின்று, சுவாமி!
தேவரீர்யார்?எவ்விடமிருப்பது? இவ்விடத்திற்கெழுந்த
ருளியகாரணம்யாது? தங்களுடையநாமதேயமென்ன?

என்று கேட்டான்: அதற்குக் கங்கபட்ட சொல்லுகின்றார். ஓ அதிதீவிர பக்குவமுள்ள அரசனே! இந்தச் சக்கரவாளஞ் சூழ்ந்தபூமியை ஆக்கினைச்சக்கரஞ்செலுத்தியாளுந்தருமராஜருடன் பழகியிருந்தேன். அவர்வனவாசம்பண்ணிய நாளையிலுங் கனநேசம்பண்ணிக் கலந்து திரிந்தேன். என்னைவிட் டொருவருடம் பிரிந்திருக்க வேண்டி வந்ததால், நான்உம்மிடத்திற்சிலநாளொழிக்கலாமென்று வந்தேன். என்று வேள்வியினாலுங் கேள்வியினாலு மிக்கோனாகிய தக்கோனுரைக்க, மநுநீதி தவறாத மச்சராஜன்கேட்டு, மதியால்மகிழ்ந்து துதியாற்புகழ்ந்து பரவசமடைந்து, தெளிவாகிய அறிவும்- அன்பும் – ஆசையும் - உள்ளக்களிப்பும் - ஒளிகொண்டிலங்க, ஓ என் ஆண்டவனே! தேவரீர் இந்தப்பட்டணத்திற் கெழுந்தருளிய பிரயோசனமானது நான் ஏழேழுபிறப்பிலுந் தேடிக்கொண்ட நல்வினையின் நலமேயல்லது, வேறில்லை. ஆதலால் - நாதகீத வேத முனிவராகியதேவரீர், இவிடத்தி லெத்தனை நாளைக்கிருக்க இஷ்டமோ? அத்தனைநாளும் அதிபதியாயிருக்கலாம். என்று வித்தகவிராடன் புத்திமேற்கொண்டு சொல்லவும், கங்கபட்டரானவ ரவ்வாறே புநிதமாகிய சிங்காசனத் திருந்து, வேதியர்முதலிய பலமாதவரும் விராடர்முதலிய பல பூதாருந்தொழ பவளச்செபமாலை காத்திலுங் குவளைத் தொடைமாலை உரத்திலுந்தரித்த தருமராஜன் இருந்தருளினர்.

வீமார்ச்சுனர்பலாயனனும் பிரகநளையுமாய் அட்டிற்றொழிலும் அருநடச்செயலுமேற் றிருத்தல்.

பின்னுஞ் சிலநாள் சென்றபிற்பாடு விற்போருக்கும் மற்போருக்கும் இவன் தானென்னும் பலம்பொருந்திய கதாபாணியாகிய வீமனானவன் தான்தெளிந்த தேவாமிர்தத்திற் கொப்பாகச் சமையற்செய்யும் பக்குவத்தைக் குறித்தும், கல்வியின் திடத்தைக்குறித்துந் தெரிவிக்க, ஏகபோகத்திற் கொருவனாகிய விராடன் சபைக்குட்புகுந்து, நாகத்தினம்போல் நலம்பெற்றிருந்த தருமராஜன் திருவடியில் தண்டனிட்டு, இம்மண்டலத்தரசே! யான்மடைத்தொழிலுக்குரியவன். கூட்டுக்கறி – குழம்புக்கறி – குழைக்கறி – பொறிக்கறி – பச்சடி - கிச்சடி - இவைமுதலிய பலவகைக் கறிகளும், உண்டல் - தின்றல் - நக்கல் - பருகல் - என்னுமின்னுன் குணவுகளையும், அவ்வவற்றிற்குரிய அறுசுவை நிறைவோ டமைவுறச் சமைப்பேன். ஒருசமயத்தில் மல்லுகொடுப்பேன். ஒருசமயத்தில் வில்லுமெடுப்பேன். அல்லும்பகலும் நல்லவனாய்நடப்பேன். பலாயனனென்னும் பெயர்பெற்றேன். திரிபுவனத்தில் தேடிப்பார்க்கிலும் என்தொழிற்கிணை சொல்ல எத்தொழிலுமிராது. எனக்கிடானவர் எவருமில்லை. சமயபேதத்தால் தருமராஜனுக்கிளைய வீமனென்பவனை விட்டு, உம்மிடத்தி லொருவருட மிருக்கும்படியாய் உன்னிவந்தே னென்றான். இவ்வாறியம்பிய பலாயனன் பேரில் இஷ்டங்கொண்டுமுகமலர்ந்த விராடராஜன் அவன்தலைமேற்கைவைத்து, பொன்னாரமும் - பூவாரமும் - இரத்தினாபரணமும் - முத்தாரமும் - வச்சிர வாகுவலயமும் மரகத மதாணியும் - மெல்லிய வஸ்திரங்களும் - யானை குதிரை பல்லக்கு முதலியவாகனங்களும் பெருமையாகக் கொடுத்து, ஓசுயம்பாகி! அரசனிடத்தி லிருக்கின்ற உத்தியோகங்களிற் சிறந்தது தாய்போ லூட்டிவைக்குஞ்சுயம்பாகித்தொழில். ஆதலினால் - நீயின்றுமுதல்எனக்கும் என்சுற்றத்தமருக்கும் இணிமையுடன் உண்பிக்கும் உரிமையும், இங்குள்ள மடைத்தொழிலாளரனைவருக்குந்தலைமையாம் அதிகாரமும்உனக்குக்கொடுத்தோம். இந்தவேலையை உன் சொந்த வேலையாகப் பார்த்து, சிந்தை வேறுபடா திருக்கவேண்டும். என்றுசொல்லியனுப்பி, விந்தைதங்கும் புயத்தோனாகிய அவ்விராடன் மிகக்களித்திருந்தான்.

இப்படி வாயுபுத்திரன் சேர்ந்து மடைத்தொழிலிற்றலைமைபூண்டிருக்க, மறுநாட்காலையில் அறிவாலுயர்ந்த பிரகநளையென்னும் பேடியானவன் வட்ட வெண்குடையும் மணிமகுடமுந்தரித்த மச்சராஜனிருந்த உச்சிதசபையானதுசிறக்கும்படிசென்று, முப்புரிநூல்விப்பிரரான கங்கபட்டரென்னும் முதல்வன்பாதத்தில் ஒருக்களித்து வணங்கி, ஐயா! எண்டிசை கொண்டாடுங் காண்டீபதாரனான அருச்சுனனுடைய அரண்மனையிலிருக்கும்பேடியர் அநேகரில் நானொருபேடி. நாதப்பிரமம்- சத்தப்பிரமம் – ஒலி - ஒத்து தாளம் - மேளம் – இவை முதலியாவையுங் கலந்து, சுரம் சுதி - லயை - இவைகுறையாமற்பாடவும் ஆடவும், நடனசாஸ்திரப்பிரசங்கஞ் செய்யுஞ் சபைக்கு யோக்கியமாகப் பேதைப் பருவப் பெண்களுக்குப் பாதங்கற்பிக்கவுங் கற்றிருக்கின்றேன். பிரகநளையென்னும்பெயரினையுடையேன். உமது செல்வமாநகரிலிருந்து சிலநாள் கழிக்கும்பொருட்டு அடைந்தேன். என்னைநீர்ஆதரிப்பீர்களாகில், வேதமும்வேள்வியுமுள்ள மேதினியில் உம்முடைய மரபுவிருத்தியாம். என்று பேடிவாழ்த்தவும், அவள்வாழ்த்தியதைச் சாஸ்திரமுணர்ந்த விராடராஜன்கேட்டு, இத்தன்மை யான பேடி இக்கடல்சூழ்ந்த காசினியிற்கிடைப்பது அருமையென்று பெருமையாகப்பேசி, அளவற்றபொன்னுடைகள் - பொற்பூஷணங்கள் - பரதநாட்டியத் தொழிற்குரிய பலவகைக்கருவிகள் - சங்கீத சாஹித்யத்திற்குரிய பற்பல வாத்தியங்கள் - இன்னுமுண்டானவரிசை முதலிய வண்மைகளுங் கொடுத்து, இன்னு முனக்கு வேண்டு வனவெல்லாந் தருவேன். என் பெண்ணுக்குஉயிர்ப்பாங்கிபோற் கண்ணுக்குக்கண்ணாயிருந்து, பரதசாஸ்திரமுற்றிலும் பயிற்றுவிப்பா யென்று உத்தரகுமாரத்தி யிருக்கின்ற அந்தப் புரத்திற் கனுப்பு வித்தான்.

நகுலசகாதேவர் தாமக்கிரந்தியுந் தந்திரபாலனுமாய்க்குதிரைகளையும் பசுக்களையும்பாதுகாத்துவருதல்.


பின்னுஞ் சில நாள் சென்றபின்பு, அழகில் மன்மதனையும் அறிவிற் சுக்கிரனையும் பழிக்கச்செழித்தநகுலராஜன்போய், விராடனுடைய குதிரைச்சாலைக் கெதிராக நின்றான். அன்றுசாயங்காலவேளையில் மின்னலோங்கியவேல்தாங்கிய விராடராஜன் வன்னக்குதிரையேறி வையாளிவிட்டு வரும்பொழுது நகுலன் கடிவாளமும்-கம்பியும் - கயிறும் - கிலுகிலுக்கும் - கட்டையும்- ஜாட்டியும் - பிடித்து, பார்த்தபேரெல்லாம் அஸ்வசாஸ்திரந் தெரிந்த மூர்த்தண்ணியனென்று மதிக்கும்படியா யிருக்கவும்; அப்பரிவல்லவனை விராடராஜன் இச்சைமேற் கொண்டு உச்சாகப் பார்வையாகப் பார்த்துக் கையை நீட்டி, ஓ குதிரைச்சம்மட்டிகொண்டு நிற்கின்ற குதிரைப்பாகனே! நீ எங்கிருந்துவருகிறாய்? உன்பெயரென்ன? என்று கேட்டான். இவ்விதங்கேட்ட அஸ்வாரூடவாசனைக் குதிரைச்சேவகஞ்செய்யும் வேஷங்கொண்டகோமானானவன் குறுகி, தன் தொழிலுக்குத் தகுந்த மரியாதைசெய்து, அரசனே! பாண்டவ ரைவரில் நடுப்பிறந்தோனாகிய விஜயனுக் கிளையவன் நகுலனென்று பலதிசையிலு மொழிய வெற்றிபெற்றவ னொருவனுள னன்றோ? அவனது கீர்த்தியைச் சொல்ல வல்லவருமுண்டோ? அந்த நகுலராஜனுடைய குதிரைச் சாலைகளுக்குத் தலைவர்களில் எம்மையாகத் தாழ்ந்து வாழ்ந்தவன். தாமக்கிரந்தியென்னும் நாமம் புனைந்தவன். யானே? இமையவரும் இவுளியும் - இராஜர்களேறுங் குதிரையும் - இதுவிதுவென் றறிந்து, அவற்றின் மனமும்-வடிவமும் - சுழியும் - சுத்தமும் - நிறமும் - திறமும் - திடமும் - குணமும் - மணமும் - குலமும் - குரலும்-வேகமும் — கதியும் — தேசமும் - வீரமும் - ரோஷமும்-மறுவும் - பிறவுமுள்ள மாக்கமு மறிவேன். அவ்வக் குதிரைகளுக்குள்ள பிரோபிணிகளுந் தீர்ப்பேன். மேலுமவற்றை மண்டலம் - கோணம் - வளைவு - முன்னோட்டம்-பின்னோட்டம் - நேரோட்டம் - இவை முதலிய கதிகளின்வண்ணமோட்டுவேன். அவற்றை நரி - கரி - அரி-கிரி - வேங்கை - இவற்றி னடைபெறவுங்காட்டுவேன். தேருக்குப் பூட்டுங் குதிரையும் - போருக்குமூட்டும்புரவியும் பட்டாபிஷேகப் பரிகளும் - பார்வேட்டையாடு மரிகளும் - கலியாணவாசியும் - கடவுண்மகத் துரகமும்-இதுவிதுவென்றறிந்து, அவ்வவற்றின் வாயுவேகமனோவேக சாவேக சற்பவேக முதலியவை தெரிந்து வகுப்பேன். ஓ சத்துவகுண சாந்தனே! அண்டினோரையாதரிக்கும்பாண்டுமைந்தரைவரும்வனவாசம்பண்ணப்போனபின்பு, உண்டியு மிழந்தேன். உறுதியு மழிந்தேன். உமது கீர்த்தியைக்கேட்டு இவ்விடம் வந்தேன். என்னையாதரித்தருளும் உத்தமனே யென்றான்.

அந்தப்புரவித் தலைவனதுபொய்யா மொழியைக் கேட்ட மாத்திரத்தில், துன்னிநெருங்கிய மன்னவரியார்க்கும்-பொன்னுலகோர்க்கும் பூவுலகோர்க்கும் - புனிதஞானியர்க்கும் பூசுரர்தமக்கும் - விசுவாசநேச மெய்யறிவோர்க்கும் - உற்றகவலையை யொருங்குடன் தீர்க்கும் — வித்தகவிராடன் மெய்ப்புளகிதனாய், மந்திரிமார்கள்மகிழ்ந்துகொண்டாட, செந்திருகலைமகள் சேர்ந்துநின்றாட, பொன்னின்குடநிறைந்த தன்பொற் கோபுரவாசலில் வந்திறங்கி, முன்னர்தன்னைவந்தடுத்திருக்குஞ் சத்தியநெறிபெற்ற தருமராஜன் முதலியவருக்குக் கொடுத்த வெகுமானத்திலும் மூன்றுபங்கதிகமாகக் கொடுத்துச் சம்மானஞ்செய்து, தன்னுடைய குதிரை வல்லவருக்கெல்லாந் தலைவனென்னு முதன்மையுங் கொடுத்தான். இவ்வாறு அஸ்வங்களை அபிவிர்த்தியாக அளிக்கும்படிக் கமைந்த நகுலராஜனுக் கிளைய சகாதேவராஜன் பின்பொருநாள் நந்தகோபன் மைந்தன்போல் வேடங்கொண்டு, அசைந்தாடியசெவிகளுக் கிசையச்சூடிய பச்சிலையுடன், புள்ளாங்குழ லிசைபாடுந் தடியும், தொறட்டுக்கோலும், கன்றணைக்குங் கயிறும், மாடுகட்டுந் தும்பும், சிக்கக்கச்சமுந் தோள்மேற்கொண் டசைந்து; கீர்த்தி தழைத்த விராடராஜன்சபையைக் கிட்டினான். அவனைக்கண்ட அரசன்-ஓ கருங்கம்பளப் போர்வையுடைய கானவனே! நீயாரென்று கேட்டான். அப்போது தருமராஜனுடன் சமமாயிருந்த விராடராஜனைப் பணியாமற் பணிந்து, ஓமகாராஜனே! துரியோதனனுடன் சொக்கட்டானுடி இக்கட்டடைந்து நாட்டைவிடுத்துக் காட்டையடுத்து வனவாசம்பண்ணிய பாண்டவர்களில், நான் இளஞ்சிங்கமாகிய சகாதேவராஜனுடைய பசுக்களைப் பார்த்து மேய்த்துக் காத்துவந்த கோபாலனையா! என்பெயர் தந்திரபாலனென்றான். அவன்சொல்லைக் கேட்ட விராடராஜன் மகிழ்ந்து, அவனைத் தன்னருகி லழைத்து வேண்டிய வெகுமானங் கொடுத்து, நமது பசுமந்தைகளை உன்சொந்தம் போற் காப்பாற்றிக்கொண் டிருவென்று அனுப்பிவிட்டுச் சந்தோஷமுற் றிருந்தான்.

திரௌபதாதேவி விரதசாரணியாய் விராடன்மனைவியை யடுத்தல்.

இப்பால் ஓமாக்கினியில் உற்பவித்த திரௌபதாதேவி வண்ணப்பெண் வடிவாகிவந்து, மருமலர் மாலை வாசமேறிய திருமலர்வேலைத் தேசம்விரிப மச்சராஜனது தோளணைந்த சுதர்க்கணைவாழும் அந்தப்புரத்தை நாடி, அவ்விடத்திற் காவலிருக்கும் பாங்கியரை நோக்கி, யாரோவொருத்தி வந்திருக்கின்றாளென்று உங்கள் அரசிக்குச் சொல்லுங்களென்றாள். அவர்க ளவ்வாறே சென்று தங்க ளரசியை வணங்கி, எங்களையாளும் அம்மணி! தேன்நிறைந்த செந்தாமரை மலரிற் பிறந்த செந்திருவுந் தொருதற் குரியாளாகிய





[68] கீசகனையும்அவன தம்பிமார்களையும்பீமன்கொன்றது.

ஓர்பெண்பெருமாள், இடையசைய விசையாய்நடந்து, நமது தலைவாசலைக் கடந்துவந் திருக்கின்றாள். தாயே பங்கஜாக்ஷி! தேவரீர் கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கின்றோமென்று உபசரித்தார்கள். அந்தப் பாங்கியருரைத்ததைக்கேட்ட பாரமார்த்தியமுள்ள சுதர்க்கணையிருந்த பட்சமுள்ளவளாய், தட்சணமே யழைக்க சொன்னாள். அந்நேரமே சேடியர்கூடி, பாடிடு குயில் போலோடி, வாடிய மயில்போல்வாசலில் நின்றமங்கையைநாடி, ஓ நூதனமான மாதனமே! வாரும்: வாரும்: என்று அன்போடழைத்தார்கள். அவிடமிருந்த வண்ணப்பெண்ணானவள் மகா பாக்கியமென்று வந்தாள். அம்மாதின் துடியிடைப் பிடி நடைச் சுந்தரத்தைக் கண்ட சுதர்க்கணையானவள் திடீரென்றெழுந்து, செமூமுகமலர்ந்து, கைகொடுத்தணைத்து, பக்கத்திலிருத்தி குங்கும சந்தன கதம்ப தாம்பூல மஞ்சளாதிகளோடு சுகுணநிறைந்த புஷ்பவஸ்திரா பரணங்களாற் பூசித்து, அன்னையே! உமது தேச வாசம்யாது? எதுகாரணமிவ்வளவுதூரமெழுந்தருளியது. தமதுபெயரென்ன? அடியாள் அறியச்சொல்லுமென்று நயமாகக்கேட்டாள். அப்படிக்கேட்டசுதர்க்கணைக்கு உபசாரவார்த்தைசொல்லி, ஓ அருட்கண்ணிறைந்த ஆரணங்கே! பாண்டுபூபதியின் குமாரராகிய பஞ்சவர் இந்திரப்பிரஸ்த முதலிய எல்லாவற்றையுஞ்சகுனியாடிய சூதால்தோற்று, காடே வீடாகவும் - பட்சிமிருகங்களே பந்துவாகவும்- பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ண, அவர்கள்மருவியமான்விழிமடந்தையுங் கூடச் செல்ல, நானவளைப் பிரியாதிருந்தேன். இப்போதவர்கள்ஒருவருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டி மறைய, நான்பிரியலானேன். என் பேர் விரதசாரணி. சந்தனாதிகந்தகதம்பம் பூசுவதிலும், சேலைமாலை சேர்த்துக்கட்டுவதிலும், பூஷணாபரணங்கள் பூட்டுவதிலும், கூந்தல்வகிர்ந்து முடித்துப் பின்னுவதிலும், மார்புக்குத் தொய்யலெழுதி யலங்கரிப்பதிலும், விழிகளுக்கு மைதீட்டுவதிலும், மிகவல்லவளாய் யாவராலும் புகழ்பெற்றேன். உமக்கிச்சையானபடி அழகுண்டாக்கி மனமகிழச் செய்யவேண்டுமென்றெண்ணி வந்தேன். ஓ பெண்கள் சிந்தாமணியே! இன்னமொரு காரிய மியம்பக்கேளும். யான் என்தாய்வீட்டிற் சஞ்சரித்துலாவுங் கன்னிப் பருவத்தில்; ஜெய விஜய ஜயந்த ஜயசேன ஜயற்பாலரென்னும் ஐந்து காந்தருவரின் காவலிலடங்கிக்கற்புடையவளாயினேன். ஆதலால்என்னை மற்றமனிதர்கள் நோக்கப்படாது. நானுமற்ற மனிதர் வதனநோக்கி மகிழவுமாட்டேன். நீர் மாதவ முடைய மதியூகியென்று உமது மாளிகைநோக்கி வந்தேனென்றாள்.

இவ்வாறு கூறியவண்ணப்பெண் வசனத்தைக்கேட்ட சுதர்க்கணை திடுக்கிட்டுப் பயந்து, திடத்துடனயந்து, மகிழ்ச்சியாய்விரும்பி, புகழ்ச்சியாய்த் திரும்பி, ஓ பூதேவிபோன்ற சிதேவியே! தெய்வப்பெண் போல் வந்த உம்மைச் செவ்வையாகப் பார்த்துச் சிந்தைமகிழ்ந்தேன் இன்றுமுதல் நீர் என்னிருகண்ணாகவும்-எங்களோடு ஒப்பாகவும் – வண்ணப்பெண்ணாகவும் என்னுடனு முயிரு முமதுகாவலாய்க் காத்து, உற்றதாயாகிய நீர் பெற்ற தாயெனப்பார்த்து, புகழ்படவாழ்ந்து, நன்மொழி புகன்று, நலம்பெற நடத்துவது உமது கடன். அன்றியும் - எனக்கு யாதொரு குறைவு நேராதபடி இரட்சித்தருளும் என்னம்மணியென்று உபசரித்தாள். இவ்வாறுபசரித்த பூரண புத்திசாலியான சுதர்க்கணையைப் பாஞ்சாலி பார்த்து, அம்மா! அப்படியே யாகட்டும். என்று சொல்லி எந்தெந்த வேளைக் கெப்படிசெய்யவேண்டியதோ? அந்தந்த வேளைக்கான அலங்காரந் மைகளை வெறுப்பில்லாமல் விருப்பத்துடன் விதவிதமாகச்செய்து, நாளுக்குநாள் அதிகவிசுவாச முண்டாகும்படி நடந்துகொண்டாள். இந்தப்பிரகாரம் மைதீட்டிய வாள்போல்நீட்டிக்காட்டுங் கருங்கண்ணமைந்ததிரௌபதாதேவியுஞ் சந்திரகுல மைந்தராகிய பாண்டவர்களும் உருவமறைந்து, இராஜசின்னங்கள் யாவையுந்துறந்து, உல்லாசப் பேச்சுரைகள் மறந்து, அஞ்ஞாதவாசத்தொருவருடமுங் கழிக்கச் சிறந்துவருநாளையில்; மெய்ப்பயிர் விளைத்துப் பொய்க்களை களைந்து - தீவினை தீர்த்து நல்வினைசேர்ந்து - இராச்சிய பரிபாலனஞ்செய்துவராநின்றவிராடராஜனுடைய மச்சநாடானது, நித்திய ஜெபமங்களப் பெருஞ் செல்வமும் - மாதமும்மாரியும் - நன்செய் புன்செய்களும் – விஞ்சி விருத்தியாகி, இரததகஜதுரக பதாதிகளும் மிஞ்சி, நான்கு வருணத்தவருங்குலாவிக்கொஞ்சி, குருநாட்டுக்கொப்பாய்க்குறைவறவோங்கி, பூவாதமாமும் பூத்து, காயாதமாமுங் காய்த்து, பசுப்பாக்கியம் பாற்பாக்கிய மிகுத்து, சுபசோபனங்களுடன் சந்தோஷ சம்பிரமங்கள் நிரம்பி யிருந்தன.

பாண்டவர்கரந்துறைச் சருக்கம்.

முற்றிற்று.

இரண்டாவது,

மற்போர்ச்சருக்கம்.

கண்ணன் துதி.

புலியதனைப் பாயலாய்ச் சுருட்டிப்போய்ப் பாதலத்திற் புகுந்தபொற்க
ணவுண்ணுயிர் குடித்திமைப்பி னப்புவியை முன்போலுண் டாக்குமாறு
நவமுறுமொண் பிறைக்கோட்டுப் பன்றியுருக் கொண்டருளி நாகர்போற்றப்
பவமகற்றி யாட்கொண்டு பாம்பணைமேற் றுயில்கூரும் பரமனெங்கோவே.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! நித்திய கலியாண சுபசோபன வைபவரீங்காச் செல்வச்சிறப்போங்கிய விராடபுரத்திற் பாஞ்சாலியும் பாண்டவர்களும் போகபாக்கிய புநிதவினிமையிற் பூரணசந்திரன் போற் பிரகாசித்து, தாங்களறுவருங் களங்கரகிதராய்க் கலந்து, கூடுங்காலமறிந்துகூடி. பேசுங்கால மறிந்து பேசி, ஒருவர்கண்ணிற்படாமல்திரிந்து, ஒருவரையொருவர் பிரிந்துறுமற்பொருந்தித் தாழ்வற வாழுங்காலையில்: மச்சராஜனு மற்றையரும் யானை - புலி காடி - சிங்கம் - காட்டெருமை - கலைமான் – முதலியமிருகங்களுடன் மல்லரைச் சண்டைக்குவிட்டு, விதவிதவேடிக்கை இச்சையின்படி விளைத்து மகிழ்வுற்றிருந்தார்கள். அப்பேர்ப்பட்ட சமயத்தில் - வேலாயுதத்திற்குப் பாலசுப்பிர மணியரென்றும், சூலாயுதத்திற்குயமதருமராஜனென்றும். வில்லுக்கு இராமனென்றும், சொல்லுக்கு அகத்தியனென்றும், மல்லுக்குநானேமகாதேவனென்றும், தேசந்திரிந்து சிருற்ற - வாசவனென்னும் பேருற்ற - மல்லனொருவன் கொலுமுகவாசலில் வந்தான். அவன் எப்பேர்ப் பட்டவ னென்றால் - அண்ட முகட்டையளாவிய மெய்யான். எண்டிசைமட்டு மேந்திய கையான். வாகுவலயம் வளைந்த தோளான். வீரகண்டை புனைந்ததாளான். வாடைக்காற்றைமறிக்கும்வலத்தான். ஓடைக்களிற்றை யொடிக்கும் பலத்தான், சிவந்த மயிர்விரிந்த தலையான். தீரபராக்கிரமபுய மலையான். இப்படிப் பட்டவன் தன்னைப் புடைசூழ்ந்த நிழல் போல் ஆயிர மல்லர்களடுத்து வரும்படி சப்தமாப்பூட்டிய ஒற்றையாழித் தேரினையுடையசூரியன்போலஉன்னதத்தேரேறி, விருதுடால் - கொடி - குடை - ஜெயபேரி - டங்கா - பாங்கா - கொம்பு - தாரை - பூரி -வீரசின்னம் - எக்காளம் - இவைமுதலியபலசின்னங்களும் வாத்தியங்களும் விளங்கிப்பிரகாசிக்க, கடல்சூழ்ந்தஉலகத்தில் இவனுடன்சண்டைசெய்யத் தக்கவர்கள்யாருமில்லையென்று கட்டியக்காரர் எச்சரிக்கைசொல்ல, பட்டுவான்கள் கொண்டாடிக் கொக்கரிக்க, நவமணிப்பணிமகுடஞ்சொலிக்க, நாகாத்தினத் தனிப்பட்டயமிலங்க, நவமோகன மன்மதனிவனென்ன, புவனேசுரர் புந்தியில் மிகவுன்ன, இராஜசிங்காசனத்திற் கொலுக்கொண்டிருந்த விராடபூபதியின் சமுகத்திற்கு வந்தான். இவ்விதபடாடம்பத்துடன் வந்தவாசவனென்னும் அம்மல்லன் தேசபூஜிதராஜனைப் பணிந்து, ஓமகாராஜசிங்கமே! எழுகடல்வளைந்த வட்டாரத்தில் என்னுடனெதிர்த்து மல்லயுத்தம்பண்ணத்தக்கவல்லவரில்லை. நான் அநேகம் பட்டினங்களில் திரிந்து இராஜராஜர்களைக்கண்டு, என்சமர்த்தைக் காட்டிப் பொன்பூஷணவாகனதிவரிசைகள் பெற்றிருக்கின்றேன். இவ்விடத்திலுமதுமகாசபையை நோக்கிவந்தேன். என்வல்லமையைச் சொல்லுந் தரமல்லவென் றுரைத்தான். அந்த மல்லயுத்தத் தொழில் முறை தெரிந்த விராடராஜன் வந்தமல்லன் கூறியவார்த்தையைக் கேட்டு, தன்சபையிலிருந்த ஆஸ்தான மல்லர்களைநோக்கி, உதட்டைபிதுக்கித் தலையையசைத்து, புதிதாகவந்த மல்லனுக்குக் கொடுக்கத்தக்க பரிசுகள் கொடுத்து, நமது சபையில் நிர்வாகமுள்ளமல்லர்களில் லையல்லவா வென்று வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் மனம்புழுங்கி யிருந்தான்.

வெளியூர்மல்லனுக்கும் விராடனூர் மல்லருக்கும் யுத்தம்.

அந்தச் சமயத்தில் விராடனுடைய சொந்த மல்லர்களுக்கு மனம்பொறுமற் கோபாவேசங்கொண்டு, வந்தமல்லன் இவ்வளவு வரிசைபெற்றுப்போவுகம் - நாம் வல்லமை யல்லவர்களாக இங்குக் குந்தியிருக்கவும்-மானக்கேடும் மரியாதைத்தாழ்வு மாயிற்றேயென் றெழுந்து, காரிடிபோற்பேரொலிகாட்டி, காண்டீரவம்போல் ஓடியாய்நடந்து, ஆக்கிரமித்துப் பராக்கிரமம் பேசி, வியாக்ரமொத்துவெகுண் டெழுந்தேகி பதைத்துத்துடிதுடித்து, அதட்டிப் புயந்தட்டி, மீசையை மேலெழமுறுக்கி, விழிகள்சிவப்பேறவுருக்கி. புழுங்கிப்பற்கடித்து, புதுமல்லனை வளைத்து, இதுநல்ல சமையமென் றிரைத்து, எங்களுடன் சண்டைபோட வாவென்றுமறித்து, அவன்பெற்ற ஆடையாபரண வெகுமானங்களை யெல்லாம் ஒன்றையும் விடாமற்பறித்து, அரிய மற்போர்நூல்வகுத்தபடிக்கு விற்போர் வாட்போர்விதமெல்லாம் விளைத்து, வேந்தர்கள்முதலிய வெகுஜனங்காணப்பாய்ந்தெதிரோடிச் சண்டைசெய்தார்கள். இவ்வாறு ஒவ்வொருவனுந் தனித்தனிசென்று அவனோடு சண்டையண்ணும்போது, தானம்விட்டகலாமல் தத்தியும், தருக்கியொருவனையொருவன் மொத்தியும், உடலுடனுடல் சேரஒத்தியும், உரத்துடனுரஞ்சேரஎத்தியும், தாளுடன்

தாளடித்துத்தத்தியும், தலையுடன் தலைதாக்கிச் சுற்றியும், இடசாரி வலசாரியோடியும், இரைப்பெடுத்தொரு புறம்வாடியும், இடைக்குமுன்பாய்ந்து கூத்தாடியும், இடம்விட்டிடஞ்சாய்ந்து கூடியும், வச்சிரமுட்டியாலிடித்தும், வைரக்கையா லடித்தும், காலுடன் கால்கூட்டி மாட்டியும், கதாயுதந் தனைநீட்டிக்காட்டியும், கருங்கற்பாறையுடன் கருங்கற்பாறை யிடித்துக் கொள்ளுங் காட்சிபோல் மார்புமார்புங்கலங்கமோதி, வாரிவாரியெடுத்துவீசி, நேரோடி வாதுபுரிந்து போராடும்போது: பார்ப்பவர்கண்கள் பதறிக்கலங்க வேர்க்கவிதிர்க்க மல்லயுத்தஞ்செய்தார்கள். அக்காலையில் — வெளியூரிலிருந்துவந்த மல்லன்கையால் விராடனூரிலிருந்த மல்லர்களெல்லாம் எமலோகஞ் சேர்ந்தார்கள். இவ்விதமாகத் தன்னுறுதியைச் சோரவிடாமல் யுத்தஞ்செய்து, விராடபுரத்து மல்லர்களை வீரசொர்க்கத்திற் கனுப்பிய வாசவனென்னு மல்லனை விராடராஜன்நேச விசுவாசத்துடன்மெச்சி, ஆ! ஷபாஸ்! நீமெத்தவு நல்லவன். கைமுடக்கிக் குத்தவும் வல்லவன். என்று புகழ்ந்து, உயர்ந்த வஸ்திராபரணங்களுமீந்து, விருதுமுடி—குடை - கொடி இவைகளுடன்பற்பலமேன்மைச்சிறப்புகளுஞ் செய்துவிட்டு, போர்புரிந்திறந்தமல்லர்களைப்புதைக்கும்படிஉத்தரவு கொடுத்து, தானுஞ் சபையைவிட்டெழுந்து, அரண்மனைக்குட்போய் அன்றிரவு விடியுமளவும் நித்திரைபிடியாமல் மெத்தவும்வருந்தி, மறுநாட்காலையில் நித்தியவிதிமுடித்து இராஜ கொலுக்கூடத்திற்கு வந்து, தனக்குமுன் எழுந்தருளியிருந்த கங்கபட்டர் தாளில் வீழ்ந்து, அவராற்சுபமங்களாசீர்வசனம் பெற்று, மந்திரிசாமந்தர் முதலிய மன்னவர்களுடன் துன்னியிருந்தான்.

விராடன் தன்மல்லர்பட்டதையெண்ணி வருந்த, கங்கபட்டர் பலாயனன் திறங்கூறி மகிழ்வித்தல்.

அந்தவேளையில் வாசவனாகியமல்லன்வந்து பணிந்து, ஓ இராஜாதிராஜபோஜமகாராஜனே! ஒப்பூஜாதுரந்தாபுநிதமூர்த்தி; அடியேனுக்குச் செலவுகொடுத்தருளுமென்று கைதொழுதுநின்றான். அவனைக்கண்ட மச்சராஜன் நேற்றிறந்த தன்சொந்த மல்லர்களின் பரிதாபத்தைப் பாராட்டி: இவனைச் செயிப்பதற்குத் தகுந்தமல்லர்கள் நம்மிடத்தி லில்லாமையாலன்றோ?இவன் இவ்விடத்தி லுண்டான மல்லரையெல்லாம் வாரிப் போர்கொடுத்து, ஆருக்கும் பயங்காமுண்டாகப் பேரெடுத்து, ஊருக்கும் போகப்போகிறானென்று மனத்தாங்கலாகப்பேசினான். அந்தக்கருத்தை அண்டையிலிருந்தகங்கபட்டரறிந்து, ஓமாங்குயிர்கூவும்வளநாட்டிறைவாகிய மச்சராஜனே' கேளும் அரசனிடத்தில் வரிசைபெற்று உரிசைகண்ட வாசவனாகிய மல்லனை வெல்லவாவது கொல்லவாவதவேண்டுமானால்,பலாயனனென்று நமது மடைப்பள்ளியி லிருக்கிறானே. அவனேயவனை வெல்லத்தகுந்த மல்லன். அவனோ? மெத்தவுநல்லவன். மகாசமர்த்துள்ள வல்லவன். பூருவத்தில் தருமராஜனுடைய தம்பிவீமசேனனிடமா யிருக்கும்போது, வெகுபேர்மல்லர்களைவென்று, அப்பலாயனனென்னும் பேருங்கொண்டு, வெற்றிமாலையும் வெகுமதியும்பெற்றிருக்கின்றான். அஞ்சாநெஞ்சுற முற்றிருக்கின்றான். அசுரகுலகால னென்னும் பலசாலி. அவனாலிவனையடக்கிப் போடலாமென்று நினைக்கிறேன். என்று கங்கபட்டர் சொல்லியதை அரசன்கேட்டுமகிழ்ந்து, அப்படியானால் அந்த மடைத்தொழிலாளியை வருவியுங்களென்றான். உடனே தூதரையனுப்பி யழைத்துவரச் சொன்னார். அவ்வாறுபோ யழைத்தவர்களைப் பலாயனன் கண்டு, அடா தூதர்களே! அரசன் அழைத்த காரணமென்ன? முன்னமதனை யெனக்குச் சொல்லுங்களென்றுகேட்க, தூதர்கள் - ஐயா! யாரோவொரு மல்லன்வந்து நின்று, நமது சில்லரை மல்லரையெல்லாங்கொன்று, அரசனாற் பலவெகுமானங் கொண்டு, நமக்கெல்லாம் அவமானங் கண்டான். ஆனதால் - அவனோடு சண்டைபோடுவதற்கோ? அல்ல தும்மைக்கண்டு பேசுவதற்கோ? நாங்களறியோம். அன்றியும்-உம்மைக்குறித்துக் கங்கப்பட்டர் செம்மையாகச் சொல்லியிருக்கின்றார். ஆதனாலழைப்பித்ததுபோலு மிருக்கின்றதென்றார். அவர்கள் வார்த்தையைக் கேட்ட வீமசேனன் முகமலர்ந்து அகமகிழ்ந்து, இதோவந்தேன்: வந்தேன்: என்றுமகமேருவைச் சக்கிரவாளகிரி வளைந்ததுபோல இடுப்பிற் கச்சைவரிந்திறுக்கி, அண்டமுகட்டுக்கு முட்டுகொடுக்குந் தண்டமொன்று கையிற்கொண்டு, விஷாமிர்தம் புசித்ததிடகாத்திர தீர ஜெயசிம்மவீரன் சீக்கிரம்வந்து, சிங்காசனத்திருந்தகங்கபட்டரைத்தொழுது, ஸ்வாமி! பாராக்: என்றுசொல்லிநின்றான். அவ்வாறுநின்ற சுயம்பாகியைவிராடராஜன்கண்டு, நீ யிந்த மல்லனோடு யுத்தஞ்செய்யவல்லையோ? என்றான். ஐயா! ஏதோ உமது அனுக்கிரகத்தாலும், இதோ எழுந்தருளி யிருக்கும் பெரியோர்களின் ஆசீர்வசனத்தினாலும் போர்புரிய மாட்டுவேன். தேவரீர் காலதாமச மில்லாமற்கட்டளையிட்டருளும். இதோ ஒருநொடியில் இவனை ஸ்தானப்பிரஷ்டத்துவ மாக்கி ஸ்நானம்பண்ணி வருகிறேனென்றான். அந்தப் பாகசாஸ்திரப் பலாயனன்சொல்லை விராடராஜன்கேட்டு நகைமுகங்காட்டி, புதுமல்லனை யழைத்து, இவனுடன் யுத்தஞ்செய்வதற்கு உனக்கிஷ்டந்தானாவென்றான். ஆஹா! அதற்கென்னதடை? ஆனாலொன்று சொல்லுகிறேன் கேளும். நீர் நல்லபுண்ணிய பூபாலன். உமது சபையிலிருந்த மல்லர்களையெல்லாம் வீணாய்மடித்துவிட்டேன். இவனாகிலும் மல்லனென்னும் பேருக்கிருக்கட்டும். இவனுமிறந்து போவானாகில் எனக்குமெத்தமனஸ்தாபமா

யிருக்கும். உம்மைப்பற்றி யிவனை மருந்துபோல் வைத்துவிடுகிறேன். அந்தோ! அவனது வாழ்வினைப் பயனால் நமக்கு விருந்தாக வந்திருக்கின்றான்போலு மிருக்கிறது. நீங்களும் இவனுயிருக்கு உலைவைத் திருக்கின்றீர்கள். என்பேரிற் குற்றஞ்சொல்ல வேண்டாம். எமனுடனெதிர்த்தவயிரும், சிங்கத்தைப் பகைத்த யானையும், என்னுடன் போராடவந்தபேரும் பிழைக்கப் போகிறதேயில்லை. ஆகையால் - இவனின்றைக்கு இறந்துபோவான். இவனுக் காராவது பெண்டு - பிள்ளை - தந்தை- தாய் - அண்ணன் - தம்பி - மாமன் - மைத்துனன்-உற்றார் - உறவினர் - இவர்களில் யாரேனு முண்டானால். முன்னாடி சொல்லியனுப்பித் தலைமுழுகிப்போடப்பண்ணுங்கள். உங்களுக்குஞ் சம்மதமானால்என்னுடன்சண்டைக்குவரச் சொல்லுங்கள். என்று அண்டையசலைப் பார்த்துக் கண்ணுருட்டிக் கறுத்துவிழித்து, மீசைமுறுக்கித் திரித்து, மேனிகுலுங்கச் சிரித்து, அண்டமதிர ஆர்ப்பரித்து, கொண்டல்சிதறக்கொக்கரித்து, வீமனுக் கண்டையில்வந்தான். அவ்விடமிருந்தகங்கப்பட்டரொருவர்தவிர மற்றவர்கட் கெல்லாம் பயமுண்டாகி, பாலாயன விறந்துபோனா னென்று திண்ணமா யெண்ணங் கொண்டு, தியங்கி மயங்கித் தத்தளித்து நின்றுவிட்டார்கள்.

வாசவனோடு பலாயனன் மற்போராடி வதைத்தல்.

இவர்களிவ்வா றிருக்க, காமதகனனுக் கொப்பாகிய வீமன் தன்னண்டையிற் சண்டைக்குவந்த வீரமல்லனைக்கிட்டி, உதயகிரி அஸ்தகிரி இரண்டும் நெருங்கிப் போராடப் புகுந்ததைப்போற் பொருந்தி, இருவருந் தோளடித்து, பெருங்குரல் முழக்கி யிடித்து, பிரதாபப் பேச்சுகள் படித்து, காலாலுங்கையாலும்பின்னிப்போரிட்டுப் பிடித்தார்கள். ஒருவரை யொருவரடித்தார்கள். ஒருவர்காலை யொருவர் மிதித்தார்கள். ஒருவரையொருவருதைத்தார்கள். ஒருவரையொருவர் பற்றினார்கள், ஒருவரையொருவர்சுற்றினார்கள். ஒருவரையொருவரெறிந்தார்கள். ஒருவரை யொருவர் செறிந்தார்கள். ஒருவரைவிட் டொருவர் பிரிந்தார்கள். ஒருவருக்கொருவர் பின் பரிந்தார்கள். மார்புடன்மார்பழுந்த இறுக்கிக்கட்டியணைத்துச்சுற்றினார்கள். கையைமுடக்கிமார்புந்தோளுந் துளைபடக்குத்தினார்கள், கால்மேலாகியெழ எற்றினார்கள். கைகிழாகிவிழச் சுற்றினார்கள். புருவம் - வாய்- மூக்குகாது - இவை முதலிய உறுப்புக்களழியச் சிதைத்தார்கள். பொருப்பென்னும் புயங்களொடிய இடித்துப் பகைத்தார்கள். ஒருத்தரை யொருத்தர் துறத்தி நிறுத்திப் பிடித்தார்கள். ஒருத்தரை யொருத்தர் பழித்துத் தெழித்துக் கடித்தார்கள். ஓடி - வாடி - நாடி - தேடி - கூடி - பாடி - ஷடி-நிலையில் மீண்டார்கள். ஒதுங்கி - பதுங்கி - ஒடுங்கி - அடங்கி - பாய்ந்து-காய்ந்து- சாய்ந்து - வதங்கி வாடினார்கள். இத்தன்மையாக இருவரும் போர்புரிந்ததில், புதுமல்லன் கற்ற வித்தைகளையும் - சாகசங்களையும் - கைலாகவத்தையும் - வீமசேனன் கண்டுகொண்டு, இவ்வளவுதா னிவனிடத்தி லிருக்குமகிமையென்று தெரிந்து, எதிரிக்கிடங் கொடுத்து ஏழைபோல்நின்றான். உடனே யவனையெதிரிலிருந்தபுது மல்லன் இடீரெனப்பூமியிற் குனிந்து குபீரெனப் பாய்ந்து, தொடையிற்கைதுறுத்துத்தூக்கி, தொப்பென்று பூமியிற் குப்புறப் போட்டுத் தோள்மேலேறத் துணிந்தான். அப்போது இடும்பாசுரனையும் - பகாசுரனையும்- எற்றிக்குத்தி எமலோக மனுப்பி இவ்வுலகத்திற் பேருபகாரியெனப் பெயரெடுத்த வீமன் தன்னுடைய சாகசச்சமர்த்தினால் வீராவேசங்கொண்டு, அந்த மல்லன் கையினின்றும் நீங்கி, நிலத்திற் பாய்ந்து பதறி நிமிர்ந்துகுதித்து நிதானமாய்மதித்து, நேருக்குநேர்சென்று, ஒருகையைநீட்டி அவனுடலை நெருக்கிப்பிடித்து, மற்றொருகையால் கழுத்தைமடக்கி யொடித்து, நிலத்தினில் மோதி ஒரேயமுக்காக அமுக்கி, பழுத்த பலாப்பழம்போற் கொழுத்தகண்கள் பிதுங்கத்தக்கதாகக்கரசரணாதிகளையொடித்து, உயிரைமடித்து, வெறுப்பில்லாமல் வீசியெறிந்து, எங்கே இவன் பின்னால்வந்த மல்லரென்று புயங்கொட்டிப் பார்த்து, கண்கள்பொறியெழ விழித்து, முகம்வியர்த்து, ஆர்ப்பரித்து, வீறிட்டெழுந்தான். இவ்வாறடங்காத் திடங்கொண்டெழுந்த சுயம்பாகியை விராடன்கண்டு, ஒப்புச்சொல்லுவதற்கிடமில்லாமல் அப்பப்பாவென் றயர்ந்து, இப்பா லென்ன வாமோவென்று பயந்து, உடனே முகநயந்து, ஓ ஜெகமகிழுந் திடவானேயென்று புகழ்ந்து, தன்னிருகாத்தாலு மவனையணைத்து, பொன்னரிமாலைமுதலிய பூஷணங்கள் கொடுத்து, இனிமேலென்னுடைய போர்முகங்களுக்கு உன்னையன்றி யுற்றதுணை உளதோ உத்தம பராக்கிரமனேயென் றுபசரித்து, மன்னர்மதிக்கவானர் துதிக்கப் பன்னற்கரிய பலவரிசைகளளித்து, முன்னவனென்னப்பொருந்திய கங்கப்பட்டரைப் பூசித்து, சுவாமி! உம்மாலெனக்கிவ்வளவுபெருமை யுண்டாயிற்றென்று உவந்து வாழ்த்தி, பலாயனனைத் தன்னுடல்போலும்- தன்னுயிர்போலும் - தன்பொருள்போலும் - பக்கத்திலிருத்தி, இந்த அதிவீர பராக்கிரமனாகிய சுயம்பாகிக் கொப்பாக ஸ்ரீராமனைச் சொன்னாலும் என்காதுக்கினிமையாயிராது. ஆ! ஆ! என்னசாகசஞ்செய்தான்? என்னசமர் புரிந்தான்? என்று தினந்தினஞ்சந்தோஷமடைந்துசிறப்புற்றிருந்தான். இப்பாற் பாண்டுமக்கள் தத்தந் தொழில்களிற் குறைவின்றி அதிஜாக்கிரதையா யிருந்து, விராடராசன் நடத்தும் மரியாதைகளினால் அந்நியதேசத்தி லிருக்கின்றோமென்னும் வெறுப்பின்றி, விசனமற்ற சுகசனங்களுடன் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்து அரசாளுஞ் செல்வம்போற் சுகமுற்றிருந்தார்

கள். இப்படி யிருக்குங்காலையில் - இச்சங்கதிகளை இந்தப் பட்டினத்திற் கதிபதியாகிய மச்சாராஜனுக்கு மைத்துனரும் சுதக்ஷணாதேவிக்குத்தம்பியருமான கீசகர்கள் கேட்டுஆச்சரியப்பட்டு, தேசங்கள்தோறுஞ்சிறப்படைந்துவந்த வாசவனென்னும் பேருடைய மல்லனைத் தங்கள் வாசலிலிருந்த மடைத்தொழில் மல்லன் நாசகால நமன்போ லெதிர்த்துக் கொன்றுவிட்டதைக்குறித்துச் சந்தோஷங் கொண்டாடி, நேற்றிறந்தபழையமல்லனைக்குறித்து இரக்கமடைந்திருநதார்கள். அன்றுமுதலாகச் சுயம்பாகியாகிய பலாயனனைப் பார்க்குந்தோறும் அவ்வூரிலுள்ளார்க்கும் மற்றவர்களுக்கும் மகாபீதியும்-பயமும் - உண்டாகி, அவ்விராடராஜனுக்குங் கீசகாதியர்க்குங்கூட வயிற்றிற் பெருநெருப்புண்டாயிருந்தது.

மற்போர்ச் சருக்கம் முற்றிற்று.

மூன்றாவது,

கீசகன்வதைச்சருக்கம்.

கண்ணன் துதி.

அருமறையைக் கவர்ந்துவிரி மகரவா ரிதியினிற்சென் றன்றளித்த
பெருவலிகொள் சோமுகா சுரனுமத் தவனைமுன் பிறங்குமீனத்
திருவுருக்கொண் டறழாயத்தம் மறைவயயுல கிடைவிரித்துச் சீவர்தம்மைப்
பொருவிலரு ளிற்புரந்து புயங்கபீ தறிதுயில்கொள் புனிதபோற்றி.

கேட்டீரோ ஜெனமேஜெப மகாராஜனே! இவ்வாறு பஞ்சபாண்டவரும் - பாஞ்சாலியும் - வித்தியாசமின்றிப்பத்துமாதங்கழித்து, மற்றநாளுந்தொலைக்க வேண்டுமென்று ஒருநாள் ஒருயுகம்போற் போக்கி, யாதினுஞ் சோர்வடையாமலும் - தேகசுகம்பாராமலும்-தங்கள் வலிமையைப் பிறருக்குக்காட்டாமலும் - ஒருமார்க்கமாகக் காலங்கழித்தார்கள். அப்படி வருநாளையில் ஒருநாள் சுதாக்கணையுடன் பிறந்த நூற்று நாலுபேருக்கு மூத்தவனும், விராடராஜனுக்கு மைத்துனனும், அவன் படைக் கதிபதியுமாகி; காமனைப்பழிக்குங் காந்தியும் அளவிடப்படாத ஆண்மையுமுடைய கீசகராஜன் தன்சகோதரியான சுதக்ஷணாதேவியைப்பார்க்கவேண்டுமென்று வந்து, அந்தப்புரத்திற்புகுந்து, சிலம்புபுலம்பும் அவள் சேடியிற்பணிந்து, கன்னமதம் - கபோலமதம் - பீஜமதம் - என்னு மும்மதம்பொழியும் வாரணம்போற் றணிந்து சிலநேரம் வரையிலும் பேசியிருந்து, தன் தமக்கையாளிடத்திற் செலவுபெற்றுச்சிங்காரவனத்தின் வழியாய் வந்தான். அவன்வரும்போது பாண்டவர்களின்தேவியாகியவிரதசாரணியானவள் ஆடகலோகத் திறைவனாகிய தேவேந்திரனது நந்தவனத்திற்கொப்பாகிய அந்தப்புரத்தோட்டத்திற் சுகந்த பரிமளமிகுந்த புட்பங்கள் பறித்து, சோடச கலைகணிறைந்த மதிமுகம் வெயர்த்து, சொரூபவுலாசமுங் இந்திர தனுசை ஒத்த புருவவிலாசமும்பிரகாசிக்க, செந்தாமரை முகை போலும் - கூவிளங் கனிபோலும் - யானையின மத்தகம்போலும் - தென்னங் குரும்பையைப்போலும்—தங்கக் கிண்ணம்போலும் - மேருவைப்போலும் - பருத்துத்திரண்டகொங்கையைச் சுமக்கமாட்டாமற் றுவண்டாடும்நூலிழைபோன்ற இடையும், அன்னநடையும், வன்னவுடையும் உடையவளாய்; இவள் சாயல்கண்டு இளமயிலாட, குரலோசைகேட்டுக் குயிலிசைபாட, அளிமொழிக்கிடைந்து கிளியினம்வாட, அடிப்புறவடிக்கு ஆமையொளிக்க, பொன்னொளி பார்த்துமின்னல்நெளிக்க, இன்னெழில்பெற்ற கன்னிகைமானுள், பொன்னங்காவிற் பொலிந்தெதிர்ப் பட்டாள்.

கீசகன் விரதசாரணியையக்கண்டு மோகித்தல்.

அப்போது செயற்கையழகின்றி இயற்கையழகுள்ள அப்பாவையைக் கீசகன்கண்டு ஆசைமேற் கொண்டு, மோகசோகமூச்சு மேலிட்டு, காமன்கணையாற்கலக்கப்பட்டு, ஆ! ஆ! ஆ! இப்படிப்பட்ட பெண்ணை இதுவரையிலுங் கண்டிலேன். இவ்வுலக மயங்கவந்தமாயையோ? சும்மாயிருப்பவர்மேல் தொடுக்கு மோகனாஸ்திரமோ? திக்குப்பாலகருக்குச் சொக்குப்பொடியோ? பிரம்மாவமைத்த பெருவிசித்திரமோ? கம்மியன் செதுக்கிய கனகசித்திரமோ? அம்மா! ஈதொன்றுமறிகிலேன். ஏதொன்றுந்தெரிகிலேன். தெய்வப்பெண்ணோ? தேவரம்பையோ? கந்திருவர்மானோ? கனவிஞ்சையர் தேனோ? இவளாரோ? எவளோ? என்று ஐயங்கொண்டு, அவளண்டையில் வந்து, இருகண்ணிமைக்குந்தன்மையாற்றுணிந்து காமுகனாகி, சிந்தைவருந்திநைந்து. நினைந்து நினைந்து மையலால்வெந்து, வாடிவதங்கி, மானம்-மகிழ்ச்சி - பெருமை புகழ்ச்சி-இவையாவு மறந்து, ஐம்புலனும் புரண்டு, அறிவுமருண்டு, ஓ மோகப்பயிருக்காதாரமாகிய வித்தே! உன்மேற்கொண்டதாகத்தால்வருந்தும் என்னெதிரில் நீ நேரிட்டும், விரகசோகந்தீராச் சங்கட மென்னே? ஆ! ஆ! நேசப்பெண்ணரசே! உன் சரித்திரத்தை இன்னவிதமெனக் கேளாத் தரித்திரனாயிருக்கிறேன். நீ யாரோ ? எவ்விட மிருப்பதுவோ ? உன்னுபக னெங்கே? நீயென்னகாரியமாய்வந்தா யிங்

கே? உன்பெயரென்ன ? உன்மேல் மிகப்பரிவுற்ற என்பேரில் தயைபுரிந்து சொல்லாயோ? என்று பலவிதத்திலுங் கேட்டான். இப்படியெல்லாங் கேட்டதற்கோருத்தரமுஞ் சொல்லாமலிருந்த சித்திரப் பாவையைப்போன்ற செல்வியைக் கீசகன் மீட்டும்பார்த்து, ஓ பெண்ணரசி! நானுனக்கோர் பொருளாகத்தோன்றவில்லையோ ? என்சொல் உன்செவிற் கேறவில்லையோ ? நான் படுந்துயர் நீயறியாததோ ? உன்காதென்ன கருங்கல்லோ? உன்கருத்தென்ன மகாகடிதோ? உன்னினைவென்ன பெரும் இரும்போ? உன்னெஞ்சென்ன உருக்கெழுகோ? என்னுடன்வார்த்தையாடினால் உன்வாய்முத்து சிந்துமோ? ஆபத்து நீக்காவிட்டாற் பாபத்திற்கிடமல்லவோ? என்பேரிற் கோபத்தை வைக்காதே நான்கொண்ட சோபத்தைத் தீர்த்தருளும். ஓ சோலைக்கண்ணுறையும் வாலைப்பருவக்குயிலே! நான் ஆலைக்கண்ணுறையுஞ்சோலைக்கரும்பானேன். ஐயோ! என்மனமகிழ்ச்சற்றுவசனியாயோ? என்றுபலவாறுபிதற்றினவனாய், அவ்விரதசாரணி பக்கத்தில் தங்கிய பாங்கியரைநோக்கி இதனைப்பேசுவதாயினான்.

அடிதாதியரே ! இந்தப் பெண்பெருமாளாரடி? இவளுக்கென்ன பேரடி? இவளெந்தவூரடி? இதுவரையிலும் நானறியேனடி? நீங்களாரானாலுஞ் சொல்லுங்களடி? என்று கேட்டான். அவர்களவனுக்குப் பெயந்து, ஐயா! இந்தவண்ணமகள் உங்கள் தமக்கையாரிடத்திற் பத்துமாதமாய்வேலைக்கமர்ந் திருக்கின்றாளென்றார்கள். அந்தவாசகங்கேட்ட கீசகன் ஊழியஞ்செய்யவந்தவள் தானேயென்று இலேசாக நினைத்து, காமத்தீப் பெருக்காற்கருகியுருகி, நாணங்கொண்டொடுங்கிமுகங்கோணி முன்னின்றவிரதசாரணியின்பாதத்தில் வீழ்ந்து, ஓ என்னாவியே! நான் மகா பாவியே ! என்னைக் கொல்லுவது உன் ஆசை வசனாவியே! ஆதலால் வசந்தகாலவண்டைப்போல் உன்வாய்மலரிற் சுரக்குந் தேனையுண்டு, பிர்மானந்தங்கொண்டுமேன்மைபெற விரும்புகின்றேன். உனக்குண்டாகிய வழகும், அந்த வழகுக்கேற்ற பருவமும், அப்பருவத்துக்குரிய வுருவமும், அவ்வுருவத்திற் கிசைந்தகாந்தியும், அக்காந்திக்குத்தக்கசாந்தியுமுண்டாயிருந்தும்: உனக்குத்தகுந்த சொகுசுநாயகனில்லாமையால் உன்காலம் அநியாயமாயகன்றுபோகின்றதே. ஐயோ! ஓ அஞ்சுகமே! மிஞ்சிய மோகத்தாற் கெஞ்சுறு நானுனக்குக் கிரீட்டி. நீயான் கொஞ்சற்கிசைவாகியகண்ணாட்டி. அடி சிமாட்டி! இவ்வுலகின்கண் பெண்ணாகப்பிறந்தவர்கள் உன்னழகைக் கண்டு பின் தொடரவேண்டுமே. அலங்காரமென்பனவெல்லாம் உனதலங்காரத்தைக்கண்டு அலறவேண்டுமே; இவ்வளவு நிறைவுற்றிருக்குமுனக்கு மெனக்கும் என்னகுறைவு? நாம்பேசிக் குலாவிக் கூடுவதேயுறவு. உனக்கு வேண்டுவதானநவரத்தினாபரணங்களும் - கட்டுவர்க்கங்களும் - பட்டுவர்க்கங்களும் – பொன்பாத்திரங்களும் - இன்னுமுள்ள பொருள்களுந்தருகிறேன். எனக்கெவ்வளவு மோகங்கொடுத்தையோ அவ்வளவு போகங் கொடுக்கிறேன். நித்தியம் உன்னுத்தரவின்படி நடக்கிறேன். மற்றொருவர் முகத்தை நோக்கிலேன். சத்தியம்பண்ணித்தருகிறேன். சற்றேனு மனமிறங்கவேண்டுந் தையலே! என்று எத்தனையோகோடி யுபசாரவார்த்தைகள் சொன்னான்.

கீசகனுக்கு விரதசாரணி புத்தி கூறிக் கடிதல்.

அத்தனை மொழிகளுக்குமெள்ளனைத்தனைப்பேச்சும் பேசாமல், ஓர் மாத்தினோமாய்மறைந்திருந்து, ஆ கீசகா! பாவமாகிய மூட்டையும் - பழிப்பாகிய கேட்டையும் - பாசப்பெருங்கோட்டையும்-ஏன்கட்டித்துள்ளுகிறாய் ? ஏழைப்பெண் பாவத்தை ஏன்கொட்டிக் கொள்ளுகிறாய் ? இம்மைப்பயனை யேனொழிக்கிறாய்? மறுமைபயனையேனழிக்கிறாய்? இம்மை மறுமையிரண்டையும் யோசிக்கவில்லையோ ? ஏதோ விபரீதமாய் நினைத்த இந்த வீண்நினைப்பையின்னுமாற்றவில்லையோ? ஐயோ! இஃதுனக் கெந்நாளுந்தொல்லை. நற்குடிப் பிறப்பையும் போற்றிலை. நாடாத காரியங்களை நாடுகிறாய். வீணாகிய சொற்களைச் சொல்லுகிறாய். அந்தோ! இந்தப்பேச்சு உன்னுடனற்றுப்போகிறதா யிருக்கவில்லையே; அனேகமன்னரும் வெருவாகிய ஆத்மகோடிகளும் வந்தொதுங்குகின்ற சந்திரவட்டக்குடை நிழலையுடைய விராடராஜனது பெருமைக்கும் - அவனது புகழுக்கும் - அழிவுதேட ஏற்பட்டாய்போலுமிருக்கின்றதே. ஓ முடிவுகாலத்தைத் தேடிக்கொண்ட மூர்க்கனே! விவேகமற்றவெறியனே! மன்மதபாணமாகிய நெருப்புக்குப் பயந்து, மகா பதிவிரதைகளின்வயிற்றெரிச்சலாகியவடவாமுகாக்கினியில் வீழ்ந்து வாழ்நாளழிந்து மாளப்போகிறாய். அடபாவி! சிறந்த மரபிற் பிறந்தவர்கள் தங்களுடைய உடலழிந்தாலும், உடலிற்பொருந்திய உயிரொழிந்தாலும், பிறர்மனையையும் - பிறர்பொருளையும் -விரும்பமாட்டார்களே:வாய்புழுக்கவசைமொழிவசனிக்கார்களே: நொய்ய வுரையார்களே: நோவக்கண் பாரார்களே: அவர்களைத்தானன்றோ மிக்கோரென்றுதுதித்தும், தக்கோரென்று மதித்தும், சாஸ்திரங்களிற் பேசியிருப்பது ? நீ இழிந்த பிறப்புள்ள ஈனனாகையால் துற்பாஷைகளையேறக்குறையப் பேசினாய். அவைகளையெல்லாஞ் சதர்க்கணைப்பற்றி மனம்பொறுத்தேன். அந்தமட்டும் உன் துற்புத்தியை விலக்கி நற்புத்தியைத் துலக்கினால், தொல்லுலகி லின்னுஞ் சிலநாளிருந்து வாழ்வாய். இல்லாவிட்டால் எமலோகஞ்சேர்ந்து நரகத்துள்ளாழ்வாய் என்னைநீயாரென்று நினைத்தாய். தேவபுருஷர்களாகிய ஐவருடைய காவலிலிருக்கின்றவள். அந்தத்தேவர்களு

க்கு முனக்கு மிருக்கிற பேதத்தை யோசித்துப்பார். உனது நடத்தையை இதுவரையிலு மவர்க ளறியார் கள்போலுமிருக்கின்றது. அவர்களி லொருவனுகியவீர போஜனென்னு மேலோ னறிந்தானுகிற்கண்மூடித்திற ப்பதற்குமுன் உன்னுடல் மண்மூடிப்போய்விடும். உன் னுயிர் விண்ணுடுக்காய்விடும் அடாகாலாந்தகா! என்று காமவேதைகொண்ட கயவனுக் கெதிரில் நாமம்வேறு கொண்ட நாயகிபேசினள்.

கீசகன் விரதசாரணிக்குத் தன்பராக்கிர மங்கூறிப் பிரதாபித்தல்.

இவ்வளவு சொல்லியும் அந்த நாசகாலனுகிய கீசக னுக்கு ஆசைநோயதிகரித்து, சிறிதுங்கூசுதலற்று அவ் வண்ணப் பெண்ணைநோக்கி, உம்மைப்பார்த்த கண்ணு க்கு மற்றொரு பெண்ணைப்பார்க்க எனக் கெண்ணமில் லையே: ஓ என்னிரு கண்ணணியே! அதற்கிசைந் தன் மணியே! அம்மணியினொளியே! அவ்வொளியிடத்தின் வெளியே! இந்திரலோகத்திற் கொப்பாகச் சந்திரமண் டலத்திற் கப்பா லளாவிய என்மாளிகையைத்தருகிறே ன். அம்மாளிகைநிறைந்த சாளிகையைத் தருகிறேன். சகலவனுபவவதிகாரமுந்தருகிறேன். நானுமுமக் கேவ ல்செய்யவருகிறேன் என்னைநீர் நிஷ்டூரஞ்சொல்லாமல் என்னிஷ்ட தெய்வம்போ லாண்டருளும். ஓஆடகலோ கத் தமுதம்போன்ற ஆரணங்கே! உமதன்புள்ள கரு ணைப்பார்வையால் எனக்கு விபரீதத்தை விளைத்தகாமப் பேயை யோட்டிவிடும். என்கலக்க மயக்கத்தை மாற்றி விடும். நான் கடைத்தேறும்படி தேற்றிவிடும். கலவிய மளியிலேற்றிவிடும். உமது சிறுநகை நிலவினுல் என்புத் திமருண்ட மோகவிருளைப் பிரகாசிக்கப்பண்ணும். மன் மதன்கணை துளைத்த என்மார்பின் புண்ணுக்கு மதமே றிய ஸ்தனத்தா லொத்தனம் போடும். உமது கமலம் போன்ற கரங்க ளிரண்டாற் கட்டியிறுக்கும். என்னுள் ளுக்கு மருந்தாய் உம்மிதழமுதமூட்டும். உயிர்போமெ னக் குமதுறுதிமொழி சொல்லும். மதப்பயல்சண்டை க்கு வந்துமுன் னில்லும். என்னைத் தடுத்தாட் கொள் ளும், சரணஞ்சரணம். அபயமபயம். ஓ பெண்ணுயகச் செல்வமே! இவ்விதமாக வணங்குகிற வென்னை இன்ன னென் றறிந்துகொள்ளும். இந்திரன் முதல்யாவரையும் தந்திரத்திற் ஜெயிக்குஞ் சுதந்தரமுடையநான், திரிபுவ னஞ்சேர்ந் தெதிர்த்தாலும் அபஜயமடையமாட்டேன். இளமைப் பருவத்தில் மாரன். வளமைச்செல்வத்திற் குபேரன். கல்வியிற் சேடன். கலவியில் விசேடன். நன் மைக்குவந்தவன். நானுன் தன்மைக்குத் தகுந்தவன். இந்த மச்சதேசத்தில் நான்வைத்தது பிச்சை. இந்தநா ட்டரசனுன விராடனை மேன்மையா யெண்ணுதேயும். அவனென் தமக்கைப் புருஷனுகையாலும், சிங்காசன த்திலேறி யிருப்பதற்கு எனக்குச் சாவகாச மில்லாமை யாலும், இவனை இவிடத்திற்கு முடிசூட்டி நிலைநாட்டி ஆள்காட்டிபோல் வைத்திருக்கின்றேன். அவனுல் ஒன் றுமில்லை. எல்லாமென்னுலிருக்கின்றது என்பெயர்சொ ன்னுல் மராடமுதலிய கர்நாடகமு நடுங்கும், ஆதலால் நானவனை மதிப்பதுமில்லை. துதிப்பதுமில்லை. என்மகி மையை நீர் நன்றுய்விசாரிக்கவுமில்லை.

ஓ பெண்கள்பெருமாட்டி! உமக்கு எது வேண்டி யிருந்தாலும், நீரெப்படிநடத்த வேண்டுவதானுலும், உமது சொற்படிக்கெல்லா முடிக்கக் காத்திருக்கின்றே ன் என்பெண்சாதிமார்களும் உமக்கேவல் செய்யப்பா ர்த்திருக்கின்றேன். நீர்வண்ணப்பெண்ணென்னுஞ்சின னத்தொழிலைவிடுத்து, என்னையடுத்து மேன்மையாயிரு க்கலாம். நீ ரெனக்கு வசப்படுவீராகில், விருஷபத் துவ ஜாகியதிரிநேத்திரதாரியை, பார்வதிபங்கரை, என்பா மேட்டியான பரமசிவத்தைப்பூசித்துப் பிரமோற்சவம் பண்ணிவைக்கிறேன், யானிதுவரையிலும் பண்ணிய புண்ணியங்களை யுமக்கே தத்தஞ் செய்கிறேன். உடல்- பொருள் – ஆவி - மூன்றையு முமக்கே பொய்ப்பிக்கு றேன். உமதாசையால் மோசம்போகிறேன். நான்கொ ண்ட மோகலாகிரி தலைக்கேறிவிட்டது. இந்தக்காமமய க்கத்தைத் தணியாவிடில், என்னுடலுமுயிரு மொருங் கேபோய்விடும். அதனுலுமக்குப் பாவஞ்சம்பவிக்கும். ஓபருவரதியே! நான்மெத்தப் பெரியமனிதன். மகாமே ன்மையுற வாழ்ந்தேன். காமக்குழியில் கால்தவறி வீழ் ந்தேன், மோகக்கடலி லாழ்ந்தேன். ஆதாவற்றலைந்தே ன். ஆசைவலையா னுலைந்தேன். ஐயோ! அறிவுந் தொ லைந்தேன். நீர்என்னுயிர்க் குறுதியாகித்தெப்பம்போற் கைகொடுத்துக் கரையேற்றவேண்டும் ஓ கலாநிதியே! ஓ நிலாமதியே! ஓ ஜீவசஞ்சீவியே! ஓ தேவவரப் பிரசா தமே! ஓ கருணைப் பிரவாகமே! ஓ காந்திப்பிரவாகமே என்னையித்தருணங் கைவிடாமற் காப்பீராகில், உமக்கு மேலாகிய புண்ணியமுண்டு. இனிநானென்ன செய்வே ன்? உமதுசித்தமென்பாக்கியம். தருமத்தையெண்ணித் தயவுபண்ணி, இனி என்னை இரட்சிக்கவேண்டும். என் மனமோ? பதைபதைக்கின்றது. என்னுடலோ? துடிது டிக்கின்றது. என்பொறி புலன்களோ? கலங்குகின்றது. என்புத்தி மதிகளோ? விலங்குகிறது. நான்பிழைத்த பிழைப்போ? வீணுய்ப்போயிற்று. நான்உழைத்தஉழை ப்போ? பிறர்க்குநகைப்புண்டாயிற்று. உள்ளமுருகுது, உடல்கருகுது, உயிருமலையுது, உரையுங்குழறுது, ஆ! ஆ! பெண்தெய்வமே! உமதாவிந்தப்பாதம் எனக்கடை க்கல ஸ்தானம், உம்மை நம்பினேன், நம்பினேன், முக் காலும் நம்பினேன், என்று வெம்பிவீழ்ந்து, அந்த விர தசாரணியின் காலடிப் பொடியில் இவன்தலைமுடி படும் படியாய்த் தாழ்ந்து, கண்டபடி பிதற்றினன்,

கீசகனுக்கு விரதசாரணி சிலநீதியுந் தன்னால்நேருமுபாதியுங் கூறிநிந்தித்தல்.

அப்பொழுது வண்டுமொய்க்குங் கூந்தல் விரிந்த மாதரசி கைநெரித்து, முகத்திற் கடுமைகாட்டி, அடா கொலைப்பாதகா! அநாசார முடையவனே! உத்தமஜாதியிற் பிறந்தும், உயர்வாழ்க்கையி லிருந்தும், யோசிக்காமற் போனாயே: பாத்திரமில்லாத சூத்திர சாதியாகியும், ராஜஸ்திரீகளுக்குப் பணிவிடை செய்பவளாகியும், தாழ்ந்தநிசையி லிருக்கிற என்பேரிலாசைப்பட்டு மோசம்போய்ப்பேசுவதுஉனக்குநாசகாலமல்லவோ? அடா ஏழையாகிய எனக்குக் கொடுக்கிறேனென்ற செல்வங்களை உன்குலத்துக்குரிய பெண்களுக்குக் கொடுத்து, அக்கினி சாட்சியாகக் கலியாணஞ் செய்துகொண்டு கலந்துண்டு அழகாயிருக்கலாமே; அவர்கள் சுகத்தை விட்டுவிட்டு,வயிறுவளர்க்கவந்துமாறுவேஷங்கொண்டு, தலையும்பம்பை - உடையுங்கந்தை - இக்கோலமானஎன்னைவிரும்பியே னாசைகொண்டாய்? அடாவீணாசைகொண்ட வெம்பாதகா! ஓமகுண்டத் தமுதென்று உன்னாமற் கலங்குகிறாய். உயர்ந்த பொருளுக்குத் தளர்ந்தாசைப் படுகிறாய். அடா துன்மார்க்கனே! புத்திமானாகிய வொருவன் தான்மணம்புரிந்த மனவியைத் தனியேவிட்டு அந்நியஸ்திரீகளைநாடி, அவர்கள்காலடியில் வாடிக்கிடப்பது அழகல்லவே; அக்கினி சாட்சியாகச்செய்த சத்தியந் தப்பினவர்களுக்கு இம்மையில் வாழ்வுமாறும். மறுமையில் நரகமீறும். எப்பிறப்பிலும் பழியும் பாவமும் அபகீர்த்தியுமேறும். ஐயோ! நான் சொல்லுவதைக்கேள். மறுமாதர்மேல் மையல் கொள்ளுவது அநியாயம். அம்மையலால் விளைவது அபாயம் எந்தவேளையும் அச்சமும் - துன்பமும் - சேரும். இதுவோ தொல்லை இன்பமோ இல்லை. அன்றியும் பரஸ்திரீகள் தங்களைவிரும்பிய நாயகனுடைய சுகதுக்கத்திற்கு உரியராகமாட்டார்கள். அதேதெனனில் - தங்களைச் சேர்ந்த சோரநாயகனிறந்தால், அவனுக்குக் கருமக்கிரியை முதலாகியசிராத்தங்கள் செய்ய அதிகாரமில்லை. அவள்கருப்பங்கொண்டு பெற்றபிள்ளையுந் தந்தைவழிக் கிசைந்த கருமச்சடங்குகளைச் செய்யவொண்ணாது. அந்தப்பிள்ளையினால் வம்மிச விருத்தியுமாகாது, ஒருவேளை வம்மிசவிருத்தியானால் தந்தைகுலம் நசித்துப்போம். அபிமானத்தால் வந்த இந்தமைந்தன் தலையெடுத்துமேம்பாடடையான். இவனெவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும், எருமைச்சாணம் எக்கியத்திற்காகா தென்பதுபோலாம். குலத்திற்கொண்டவள் குரங்கானாலுங்குறைசொல்லுதற்கிடமிராது. வேத விதியும் - நீதிமுறையும் - பிசகாது. திதி முதலிய பிதுர்க்கடனுக்கும் அதிகாரியாவான்.

அடாமூடனே! இவைகளையெல்லாம் ஓதியுணர்ந்த கோத்திரத்தானாகிய நீ, ஜாதியிழிந்தவன்போல் அதர்மத்திற் குடன்படவேண்டாம். என்னைநாடுவதும், இஷ்டமாகத் தேடுவதும், உன்குலத்திற் குரிமையல்லவே; மூடவனுக்குக் கொம்புத்தேன் எட்டுமா? மூடனுக்கென் அன்புத்தான் கிட்டுமா? ஓ மூர்க்கனே! நானொருவிரதம்பற்றி இல்விடத்தில் வந்திருக்கின்றேன். என்பேர் விரதசாரணி. நீ தப்புநினைப்புக் கொள்ளாதே. சாகநினைத்துத் துள்ளாதே பூர்வஞ் சீதையை யெடுத்துப் போயச் சிறையில்வைத்து, உண்ணாமல் தின்னாமல்லாரம்பலமாகி, புத்திரமித்திர பௌத்திராதியுடன் நிர்மூலமாய்ப்போன இராவணன் சரித்திரத்தைக் கேட்டிலையோ? இந்நாட்டிலையோ? உனக்குமதேகதி. உருளவந்ததே தலைவிதி. நீ என்னசெய்வாய்? என்னைக் கலியாணம்பண்ணிக் கொண்டகாந்திருவர் ஐவர். அவர்கள்மகாபராக்கிரமசாலிகள். என்விஷயத்தில் தீங்குசெய்பவர்களுடைய தலைகள் பனங்காயைப்போல் உருண்டலைய. ஓங்கியவிற்பிடித்திருக்கின்றார்கள். இந்தரகசியத்தைநானுனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகிலும்விராடன் பத்தினியாகிய சுதர்க்கணையை யடுத்து அவளன்னம் புசித்து வருகின்றமையினால், நன்றி குன்றாமற் சொன்னேன். கெடுவாய் கேடுநினையாதே யென்றால் இன்னமுங்கெடுவேன் பந்தயமென்ன வென்பதுபோல் என்னைவிரும்பி மேலுமேலுஞ் சின்னவார்த்தை பேசுகிறாய். துற்புத்தியை விட்டுவிடு வாய்க்கடக்காப் பிடிபிடித்து மண்டையுடைந்து மடியாதே. என்னண்டையடைந்து துடியாதே என்னுடன் பேசுவதற்குத்தெய்வலோகத்தாருந் திடுக்கிடுவார்கள். அப்படியிருக்க நீ பயமில்லாமற் பேசினாய் அடபாவி! எனக்குரிய காந்திருவர்கள்இப்பொழுது இந்நகரத்திலிருக்கின்றார்கள் அவர்களுக்கு விரோதிகளில்லை. சிலசமயத்தில் விரோதியானவர்கள் ஆகாயத்திற் பதுங்கினாலும், அலைகடல்மூழ்கியொதுங்கினாலும், பாதலத்தில் மறைந்தாலும், பூதரத்திலுறைந்தாலும், திக்குப் பாலகருடைய பேருதவிபெற்றாலும், நவக்கிரகங்களின் நன்மையுற்றாலும், ஹரிஹராய்பிரமாதிகளானபோதிலும், அவர்களுயிரை யழிக்காமல் விடார்கள். ஆகையால்-நீ என்னிமித்தம் உன்னினத்தாருடன் மடியவேண்டாம். காமபாசத்தினாற் கொழுத்து எமபாசத்தை யிழுத்துக் கழுத்தில் மாட்டிக்கொள்ளக் கருதுவானேன்? அப்பாற் கண்ணீர்சொரிந்து கலங்குவானேன்? எரியும்நெருப்பைஎடுத்துமுடிவானேன்? கரியவிஷத்தைக் கண்டுகுடிப்பானேன்? தன்பலமும் எதிரிபலமும் எண்ணாமல் தவிக்கின்றனையே: அடா சண்டாளா! அப்பாலொத்திம் போடா! உன்மனதில் யென்னைப்பெருநெருப்பென்று நினையடா! என்னைக் கண்டால் அண்டக்கூடாத ஆலகாலமுமஞ்சுமடா! என்னைநினைத்தால் யமனுமொடுங்கி யடங்குவானடா! என்றுகெட்டியாய்க்கூவியெட்டிநடந்தாள்.

விரதசாரணி சுதர்க்கணையிடஞ்சென்று கீசகன்செயல்கூற, அவள்சமாதானஞ் செய்ய, அங்குமவன்வந்து பீடித்தல்.

இவ்வாறு அட்டதிக்கும் ஜபஸ்தம்ப நாட்டியபட்டாபிஷேகப் பாண்டவர் தேவியானவள் எசக்கேட்ட கீசகன் திடுக்கிட்டுச் சோர்ந்து, அவளை யடித்துப்பின் சென்று, கையால்தடுத்து முன்னின்று, ஆ! ஹா! என்னாசைக்கனியே! உமக்குரிய காந்திருவரால் என்னுயிர் போயினும் போகட்டும். என்னெண்ணங் கைகூடினாலுங்கூடட்டும் உமது கருணைப்பார்வை என்மேல் நீட்டும். நீர் வேண்டுமென்றுநினைத்தால் எம்மையுங்காத்து, உம்மையு மீத்துக்கொள்ளலாம். அப்பா லுமதுசித்தம் எனதுபாக்கியம். என்றுகீசகன்பேசினான். அக்காலையில் வடிவேற் கண்படைத்த வண்ணப் பெண்ணானவள் வாய்வறண்டு கோபங்கொண் , இனி நீயிந்தப் பாதகனுக்கெதிரில் நிற்கப்படாதென்று தூதுளங்கனிபோன்றவாயும் முத்துப்போன்ற பல்வரிசையுமுடைய சுதக்ஷணை தேவிக்கு எதிரோடி, நடுங்கிய தேகமும் ஒடுங்கிய யுயிருமாய் நாணமு மானமு நாவாட்சியுங்கொண்டு, குருச்சந்திரயோகத்திற் பொழியுமழைபோற்கண்ணீர்விட்டு, சித்திரப்பாவைபோல் அசைவற்றுத் திகைத்துத் திகைத்துத் தேம்பிநின்று, ஓ கடுங்கோபக் கண்ணினையுடையபட்டத் தியானைமேற் பவனிவரும் பார்த்திபன் பத்தினியாகிய தாயே! நமது பூந்தோட்டத்திற் புட்பம்பறித்துக்கொண்டு திரும்பிவரும்போதுவீரகண்டைதரித்த உமது தம்பியானவன் சொல்லாத வார்த்தைகளைப் பலவாகச்சொல்லி, பொல்லாத எண்ணங்கொண்டு தூரத்தினான். ஐயோ உம்மிடத்தில் நானூழியஞ் செய்யவரும்போது நான்கொண்டிருக்கும் விரதமும், எனக்குக்காந்திருவரைவரா லுண்டாயிருக்குங் காவலும், என்னையிச்சித்தவர்கட் குண்டாகும் இக்கட்டும், இன்னவிதமென்று உமக்குறுதியாகச்சொல்லி யிருந்தேனே; இப்போது வீணாய் வாணாளழிய வழிதேடிக்கொண்ட உமது சகோதரனுக்குப் புத்திமதிகள் போதித்து, சரசசல்லாபசாதலீலைகளைச் செய்யுந் தாசிகளை யழைத்துவந்து, அவன் தலைக்கேறிய காமத்தைத் தணித்துவையும். சத்தியந்தப்பாமற் புத்தியா யிருக்கச்செய்யும். உத்தமியாகியநீர்முன்சாக்கிரதைபடாமற்போனால், என்ஜாக்கிரதையில் நான் முந்தியிருப்பேன். அதனா லவனுயிர் சிந்திப்போய்விடும். இந்தச்சொல்லு யுண்மையால்நம்பும், என்பேரிற் குற்றமில்லை. முக்காலுஞ் சொன்னேன். சொன்னேன். சொன்னேன். என்று கூறினாள்.

இப்படி வையம்புகழுந் தையலுரைத்தசங்கதியைக்கேட்ட சுதர்க்கணையானவள் கையைநெரித்து, வயிற்றைப்பிசைந்து, சந்திரபிம்ப முகமலர்ச்சிதளர்ந்து, கேகயபட்சிபோற் கொஞ்சிப்பேசுகின்ற சொல்லுங்குழறி, மயிலுக் கொப்பான சாயலுமாறி, அன்னம் போன்ற நடையு மசந்து, கோடையிடியைக் கேட்ட பாம்பென வொடுங்கி, பசலைக்கொடிபோலவாடிவதங்கி, வெதும்பி விம்மி வியர்த்து, வண்ணமாமகளை யணைத்து, கண்ணீர் துடைத்து, அம்மா! வாரும்; கிருபைக்கண்பாரும். என்னருகிலுட்காரும். அவன்கெட்டான்கொடியதுஷ்டன். உம்மைத் தொட்டானா? அதற்காக நீர் பயப்படவேண்டாம். அந்தமட்டும் பாவிகையில் அகப்படாமல் தப்பிவந்து விட்டதே நான்செய்த பாக்கியம். என்று அருமை பாராட்டி, அந்த அழகியசீமாட்டி அவள்மனந்தேறும்படி சிலபேசிக்கொண் டிருந்தாள். அப்போதுமுன்னந் தூரத்திக்கொண்டு வந்த காமாட்டி யாகிய கீசகனானவன் பணிப்பெண்ணாகிய அம்மாலினியைப் பார்த்து, சுதர்க்கணையைப் பணிந்து, அம்மா! உம்மிடத்திற் பிரியமாய்ப்பணிசெய்பவந்திருக்கிற இந்தவண்ணப்பெண்ணால் என்னுயிர் போவது திண்ணம். எனக்குநேரிட்ட சோபத்தைநீக்கி, ஆபத்தைக்காத்து,உமதுகோபத்தை மாற்றவேண்டும். அன்னையே! நமது பூந்தோட்டத்தில் இவளைக்கண்டேன். மையல்கொண்டேன். மாஞ்சோலைக் குயில்கூவ, மன்மதன் கணைதூவ, அதனால் மனம் வேவ, இந்தச் சீதேவிகாலில் வீழ்ந்தேன். உடனேயென்னை ஆதரிக்காமல், சீச்சீமூதேவியென்று முகத்தாலடித்து விடவிடத்துப் பேசினாள். படபடத்தேசினாள். இவளுக்கு நாயகர் ஐந்து காந்தருவரென்றும், அவர்கள் அந்தகற் கந்தகரென்றுங் கேள்வி. அவ்வந்தகற் கந்தகர்க் கந்தகன் நானென்று உமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றதல்லவா? அப்படியே யிருக்கட்டும். நானொருவேளை அவர்களால். வீணாயழியப்போகின்ற தாயினும், நான் இவளுடன்கூடி இன்பமநுபவித்து, இவளுக்குச் சொந்தமான அக்கந்திருவர் கையால் இறந்துபோனாலுஞ் சுகிர்த முண்டு. ஐயை யோ!! இவளைச் சேராவிடில் எப்படியும் நான் யமலோகஞ்சேருவேன். நானிறந்தால் உமது புருஷனுடைய ராஜாங்க முழுவதும் பறக்கும். பகைஞர்கள் மேலிடுவார்கள். பார்த்தோருக்குக் கேலியாம். என்னுடன்பிறந்த உமது தாலிக்கு நித்தியகண்டஞ்சம்பவிக்கும். ஆகையால்-நீர் யிவளுக்குத் தெரியப்படச்சொல்லி என்னுடன் இணங்கிவாழச் செய்வீராகில், உமதுமங்கிலியந் தீர்க்கமங்கிலியமாம். நல்ல ,சல்வங்களை யநுபவிக்கலாம். இந்த விராடராஜனது அரசாக்ஷிக்குத் தாழ்ச்சிவாராது. நானிப்போது இவ் விரதசாரணிமேற் கொண்டிருக்கின்றமோகதாபத்திற்கு முடிவு என்னுயிரேயன்றிவேறில்லை. இவளைக்கண்டதுமுதல் யெனக்கு மற்றோர் விவகாரத்திலும் - மற்றோர் விநோதத்திலும் - எனதுமனஞ் சிறிதுஞ்செல்வதில்லை. ஆதலால் - நானின்னுஞ் சிலநாளைக் கிருக்கும்படியாகக் கிருபைசெய்தருளுஞ் சகோதரியே யென்று சுதர்க்கணை பாதத்தைத் தொழுதான்.

சுதர்க்கனைகீசகனைச்சினந்துகண்டிக்க, அவனவட்குச் சிலநயபயங்காட்டிக் கெஞ்சுதல்.

இவ்வாறு மிகுந்த வணக்கமாகப் பணிந்து வேண்டிக்கொண்டகீசகன் முகத்தை நெருப்பைப்போற்பார்த்து, அவனுக் கிடங்கொடாமல் அதட்டி, ஆமடாவென்று கறுவி, அடாதோஷி! என்னபேச்சுச்சொன்னாய்? அடாபாவி! ஹரி! ஹரி! என்று இரண்டுகாதையும்பொத்திக்கொண்டு, மானம் பெரிதென்று மதித்தவருக்குப் பிராணன் துரும்பென்று மதியூகிகளெண்ணுவார்கள். புத்தியினர்களோ? பிராணனைப் பொருளாக நினைத்து மானங்கெட வயிறுவளர்த்து, அப்பிராணனைச் சிலநாளில் இழந்துவிட்டு, மண்ணுள்ளவரைக்கும் வசையினிலழிந்து, விண்ணுள்ளவரைக்கு மிகுநரகிழிந்து, வேறுவேறுயோனியிற்பிறந்து, தாறுமாறாயலைந்து வீறழிந்து சங்கடப் படுவார்கள். ஐயோ! துரோகி! இந்தசைந்திரி, யானவள் என்னிடத்தில் வரும்பொழுது தனக்கு மானக்கேடு வாராமற் பெற்றதாய்போற் காப்பாற்றவேண்டுமென்றும். தன்னை யாரேனுஞ் சிந்தித்து நிந்திப்பாராகில் அந்திவண்ணனருளாற் றனக்கு நாயகராகிய கந்திருவரால் அநர்த்தம் விளையுமென்றும், தானொரு காரணத்தின் பொருட்டுச் சிலநாள் கழிக்க வேண்டுமென்றும், உனக்கு நானடைக்கலமென்றுஞ் சொன்னாள். நானு மவ்வாறே வாக்குத்தத்தம் பண்ணி, விராடராஜன் முதலிய வேந்தர்களாலும் மற்ற மாந்தர்களாலும் பொல்லாங்கு வாவொட்டாமல், பெண்பழி பெண்தோஷம் பேசவொட்டாமல், என்கருப்பத்தில் வைத்துக் காப்பதுபோல் இதுவரையிலுங் கண்ணுண்டாய்ப் பார்த்து வந்தேன். அடாதுரோகி! நீயென் கட்டுக்காவலையுமழித்து, என்பெயரையுங்கெடுத்து, எங்களை நடுத்தெருவில் விடுத்து, உனதுயிரை நமக்குக்கொடுத்து, விராடராஜனது செங்கோலையுங் கொடுங்கோலாக்கி, நிஷ்டூரத்தாற் கஷ்டப்படு மார்க்கத்தை இலேசாகத் தேடிக்கொண்டாய். அடாதீவினையாளா! ஈதுனக்கழகல்லவே; இஃதோ ரறிவல்லவே; என்சொல்லைநம்பிப் பேசாமற்போய்விடடா தம்பி! இந்தப் பெண்ணணங்குக்குக் கண்ணாகியகாந்திருவர்கள் கருடனுக்குங் காற்றுக்கும்மேலான வேகமுள்ளவர்களாம் வருணனுக்குந் தேவேந்திரனுக்கும் மேற்பட்டவல்லமையுள்ளவர்களாம். அக்கினியையுஞ்சூரியனையும்பழிக்குங் காந்தியுடையவர்களாம். அவர்களுடைய கோபாவேசத்திற்கு மூன்றுலோகமுந் தாங்கமாட்டாவாம். இந்தவிர்த்தாந்தங்களை நான்முன்னடியறிந்திருக்கின்றேன். நீ பிழைக்க மனதுள்ளவனாகில், இப்பெணமேற் கொண்ட மோகத்தைக் கனவிலு நினையாமல் மறந்துவிடு. மறவாவிடில் வீணே கெட்டழிந்து போவாய். ஆ! பழிகாரா! என்று சுதர்க்கனை கண்டித்துச் சொன்னாள்.

அம்மொழியைக் கேட்ட கீசகன் விந்தையாகச்சிரித்து, சிந்தைநொந் துருத்து, என்தந்தைக் கொப்பாகிய தமக்கையாரே! என் வல்லமை தெரிந்துந்தெரியாதவர்போற் பேசுகிறீர். அவ்வளவு பலவான்களாகியகாந்திருவர் பதினாயிரம்பேர் ஒன்றாகத் திரண்டுவரினும், என்னோ டெதிர்த்து என்னைப்பகைத்து வெல்வார்களோ? நானொருவருக்குப் பயந்தவனோ? அவர்களைப் பஞ்சுபோலடித்து. யமலோகநோக்கப் பறக்கவிடுத்து, இவளிதழைக்கடித்து, இன்பரசங்குடித்து, என்னெண்ணமுடித்து, உம்மெதிரில் நகைத்து உலாவி விளையாடப் போகின்ற என்னை: துன்பப்பட் டிறப்பாயென்று நீர் சொல்லியது என்னபேதை மதியோ? பெரியவளென்னப் பெயர்வைத்துக் கொண்டீரே: போம்: போம்: என்று நொடித்துப் பின்னுஞ் சொல்லுகிறான். நல்லதம்மா! அஃதப்படியே யிருக்கட்டும். நீர் பெண்ணாகப்பிறந்திருந்தும், எனக்குத் தமக்கை யென்னப்பேர்பெற்றிருந்தும், மனைவாழ்க்கையில் நன்றாய்ச்சிறந்தும், பெண்களுக்கு வேண்டிய பிரதான காரியங்களில் ஒன்றாயினுமுமக்குத் தெரியவில்லையே: உலகிலுள்ள பெண்களின் குணாதிசயத்தையும் அந்தரங்கரகசியத்தையும் நீரறியாமற்பேசினீரே; ஸ்திரீகளின் சுபாவகுண மென்னவெனில், கைநிறைந்த பொன்னிலுங் கண்ணிறைந்த கணவனேபோதுமென்றெண்ணுவார்கள். அன்றியும் - பெற்றவனானாலும், கூடப்பிறந்தவனானாலும், தான்பெற்ற பிள்ளையானாலும், சௌந்தரியமாயிருந்தால் முறைபாராட்டாமல் மோகங்கொள்ளுவார்கள். அழகிலும்-இனிய மொழியிலும் - பருவத்திலும் -உருவத்திலும் - சங்கீதசாகித்தியத்திலும் - எல்லாராலு மதிக்கத்தக்க நாயகன் வாய்த்திருந்தாலும், அம்மான்பிள்ளை அத்தைபிள்ளையாயிருந்தாலும், அப்படிப் பட்டவர்கள்மே லாசையைவிட்டு, அந்நிய புருஷர்கள்பேரி லிச்சைப்படுவது பெண்ணுருவாய்த் தோன்றிய பேதமையோருக்கியற்கையென்று பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். அஃதெப்படியென்றால் - " தந்தையாயினும் விழைவிற் றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்த ராயினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேன் மட நல்லார் தஞ், சிந்தை நடந்திடுமதனாற் செய்யமலர்க் கணைவேளிற் செவ்விவாய்ந்தோன், பைந்தொடியா ரினிதமருமகத்தினிடைத் தனிவருதல் பான்மையன்றே" என்றும்" எந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான், காந்தையர்கண்கவருங் காட்சியான் - வாய்ந்த, நயனுடையின் சொல்லான் கேளெளினு மாதர்க், கயலார் மே லாகுமனம்" என்று மிருப்பதால். ஸ்திரீகள் விவஸ்தை யற்றவர்களென்றும், ஸ்திரீகளை நம்பப்படாதென்றுஞ் செப்பியிருக்கின்றார்கள். மேலும் - " அத்திமலரு மருங்காக்கை வெண்ணிறமுங், கத்துபுனன் மீ

ன்பதமுங் கண்டாலும் - பித்தரே. கானுர்தெரியற்க
டவுளருங் காண்பரோ, மானுர்விழியார் மனம்.'' என்
னுந் தன்மையால், நீர் யிவளுக்கிப்போது நல்லபுத்திம
தியைப் போதித்து, என்னைக்கலந்து இன்புறச்செய்
விப்பது உமக்குரிய கடமையென்று கெஞ்சினன்.

கீசகன் சுதர்க்கணையாற்கடிந்து துறத்தப்ப டுத்தன்மாளிகைசென்றுவிரகநோயா ற்றவிக்க தாதியருபசரித்தல்.

இவ்வாறு கெஞ்சிய கீசகனைச் சுதர்க்கணைநோக்
கி, அடா பஞ்சமாபாதகா! கொஞ்சமேனும் நாணமி
ல்லாமல், பக்கத்திலிருக்கும் பாங்கிப் பெண்களையும்
பாராமல், என்னிடத்தில் இந்தப்பேச்சைப் பேசலாம்
பேசப்படாதென்றும் யோசிக்காமல், துணிந்துபேசி
னையன்றோ? நீயென்னகதி யடைவாயோ? எப்பாடு
படுவாயோ? சைரந்திரிமேற் கொண்ட மோகாக்கினி
யில் தனக்குத்தானே வீழ்ந்திறக்கின்ற விட்டிற்பூச்சி
போ லாவாயோ? யேமுன்னைச் சார்ந்தோரும் எவ்வா
றுவீர்களோ? பசிக்குப் பனம்பழந்தின்னப் பார்க்கா
தே: துஷ்டகாரியங்களைத் தொடங்கிக் கெட்டுப்போ
வார்கள் கோடாகோடியுண்டு. அடாமட்டி! என்னு
டன் பிறந்தவர்கள் நூற்றைந்துபே ரென்னுங் கணக்கு
இன்றைக்கொழிந்தது. குட்டாயிருந்த கட்டுந் தளர்ந்
தது. காவலழிந்தது. போங்கால மாச்சுது. சாங்காலம்
வாய்ச்சுது. இப்போது உன்னை யிழந்தவளாயினேன்.
இனி என்தலைவாசலை மிதிக்காதே. எனக்கெதிரில்நிற்
காதே. நீ செத்தாலும் நான் முகத்தில் விழியேன்.
ஆடாதப்பறைக்காறு! இங்கிமிடத்தி லப்பாற் போடா
வென்று அதட்டினள். அப்பொழுது பாவபுண்ணிய
மெண்ணிப் பாராத பாவியாகிய கீசகன் கோபமேலிட்
டுக் கொதித்து, சோபதாபத்துடன் தன்மாளிகைக்குப்
போனன். அப்படி போகும்போதே சுரமும் - குளி
ரும் - சோம்பலும் - ஏம்பலும் - தேம்பலும் - திகிலு
முடையவனுய், ஆ! ஆ! பணிப்பெண்ணுன பாதகி!
என்னைக்கெடுத்தாயே: பாம்பின்வாய்ப்பட்ட தேரை
யாக்கினையே: என்று பரிதாபமடைந்து, மூச்சுத்திண
றிப் பதைபதைத்தாள். அந்தவேளையில் மன்மதன் பிர
வேசித்து, இது நல்லதருண மென்று இடைக்கொள்
ளைக் காரனைப்போல் முல்லை - அசோகு - நீலோற்பலம் -
மாம்பூ - தாமரை - என்னும் பஞ்சபாணத்தை யெடு
த்து, கொஞ்சமேனும் நெஞ்சிரக்க மின்றித் தொடுத்
தான். அதனுற் கீசகன் சிந்தையழிந்து செயல்வேறு
பட்டு, தட்டுக்கெட்டுத் தலைதடுமாறி, மெத்தையின்மீது
பொத்தென விழ்ந்து, ஐயோ வென்னும் அவச்சொல்
மிகுந்து, அரண்டு புரண்டு அவஸ்தைப் படும்பொழுது;
தாதியர்கூடிச் சயித்தியோபசாரஞ் செய்தார்கள்.

அவர்கள் எத்தனைவித உபசாரம் பண்ணியும் அத்
தனையும் அவனுக்குவெறுப்பாயிருந்ததால், ஐயோ!
இந்தமலரணை வெதுப்புதே: வாசப்பன்னீர் கொதிக்கு
தே. சந்தனச்சேறு தணல்போல் தகிக்குதே: அடி
சிறுக்கிகளா! நீங்களெல்லோரும் பெண்ணுகையால்
ஒன்றுய்ச் சேர்ந்துகொண்டு என்னைப் புண்ணுக்கவோ?
அன்றி மண்ணுக்கவோ? பாலைநிலத்தின் நெருப்பை
மெத்தையென்று பரப்பிவைத்தீர்களே: சிற்றாலவட்
டம் - போலவட்டம் - பொன்னலை வட்டம் - பூவால
வட்டமென்று விதவிதமாய்ச் சொல்லி வீசுகின்றீர்க
ளே: இந்த ஆலவட்டக்காற்றும், சாளரத்திற் புகுந்து
பெரும்புலிப்போற் பாய்ந்து வருகின்ற தென்றலும்,
வாசுகிமுதலாகிய பாம்புகளின் விஷக்காற்றைப் போல்
என்னுடலையு முயிரையும் வாட்டுதே: ஓசைப்பட் டொ
லிப்பதென்ன கடலோ? அந்தக்கடலுக் கென்மேலெ
ன்ன அடலோ? இளஞ்சந்திரன் காயுதே: இதுதன்ன
வடவைத்தீயின் வாதையோ? கோடைக் காச்சலின்
சூரியவேதையோ? இந்தமாலைப்பொழுது வந்ததென்ன
காளவிஷக் கறுப்போ? மகாதேவனுடைய நெற்றிக்
கண்ணெருப்போ? இரவு மூடியெத்தனைகால மாச்சோ?
பொழுதுவிடியாம லிருக்கும்படியாய்ப் பெண்கள்கூறி
விட்ட சாபப் பேச்சோ? வண்ணப்பெண் முகச்சாயல்
வந்து பாயுதோ? மதிதானெழுந்து காயுதோ? நித்திரை
பிடியாதது சித்தப்பிரமையோ? நெடுமூச்செறிவது
மோகச் சிரமையோ? கண்ணெதிர்ப் படுவது கண்டவா
சனையோ? கருத்திற் செல்வது காமவேதனையோ? அல்
லதவள்கடைக்கண் சோதனையோ? அம்மம்மா!! அவள்
குரலோ? குயில்போற்கூவி யேசுவது. அவள் மொழி
யோ? கிளிபோற்றூறிப் பேசுவது. என்னைமோகப்பே
ய்ப்பிடித்துத் தலைசுற்றி யாட்டுதே: காமச்சோகபாசங்
காலனுருக் கோட்டுதே: அடிதோழிகளே! அங்கே
பேசுவதாரடி? பஞ்சவன்னக்கிளியோ? கொஞ்சும் பணி
ப்பெண்ணளியோ? அவ்விடத்தி லசைந்துநடப்பது
அன்னமோ? இவ்விடத்தி லிசைந்து கடப்பது விரத
சாரணியாகிய சொன்னமோ? என்று அன்றிரவு முழு
தும் அவன் பட்டபாடு மற்றியார் படுவார்கள்? ஓ ஜென
மேஜெய மகாராஜனே! இவ்விதமாக விபரீதம்விளைந்த
சமையத்தில், ஊழியப்பெண்க ளியாவருஞ் சேர்ந்து,
ஐயோ! ஈதென்ன அனியாயமென்று பயந்து சந்தன
பாளித குங்கும பங்கஜ பாகங்களைக் கலந்து அவன்
தேகத்தில் தெளித்து, தாமரைக்கொழுந்து - முத்துச்
சரம் - வாழைக்குருத்து - இவைமுதலிய சீதளவஸ்த்
துக்களினல் படுக்கைவிரித்துப் பக்குவம் பண்ணினர்
கள். அத்தனையு மவனுக்கு ஒத்துக்கொள்ளாமல்
மெத்தவருத்தப் பட்டு, ஐயோ! எரியுதே: மேனி
பொரியுதே; கண்ணீர் சொரியுதே, கைகால் கரியுதே;
கண்ணிருளுதே: கருத்துமருளுதே: கட்டுவிட்டுப்
போகுதே; தட்டுகெட்டுமாறுதே; நாவும் உலர்ந்துதே;
நாபியும் வறண்டுதே; செவியு மடைக்குதே: சிரசு

முடைக்குதே: என்று கதறிக்கொண் டிருக்கும்பொழுதே பேச்சடங்கிப் போயிற்று.

கீசகன் மரணமூர்ச்சை யடையக்கண்ட தாதியர்சுதர்க்கணைபால் முறையிட்டு விரதசாரணியை யனுப்பும்படி பலாத்காரஞ் செய்தல்.

அப்போது பக்கத்திலிருந்த பத்தினிமார்களும்பாங்கியரும்பார்த்து, ஆச்சுது. ஆச்சுது, பெருமூச்சு வாய்ச்சுது. பேச்சும்போச்சுது. பிழைமோசமாச்சுது. என்று காச்சுமூச்செனக் கதறி, இனிமேல் நாம்சும்மாவிருப்பது காரியமல்லவென்று பதறி, பாவிபடும்பாடு இவ்வண்ணமுடிந்ததேயென்று கண்ணீர்விட்டழுது, தெய்வத்தைத் தொழுது, இவனினைத்த நினைப்புப் பழுது, ஆதலால் இது சொற்பமாகப் போகத் தக்கதல்லவென்று பற்பலவாகப்பேசி, அப்பாலியாவருந்தங்கள்பேரிற் பழிசாராமல் எஜமானிக்கறிக்கையிட வேண்டுமென்று கால்பதறவோடி, இராஜபத்தினியாகிய சுதர்க்கணையைப்பணிந்து, ஓ குலக்கொடியே! தேவரீர் கோபித்துக் கொண்ட கடுமையினாற் கூசாமற் சென்ற கீசகராஜன் படுக்கைமேல் வீழ்ந்து, காமத்தீயாற் கருகி, மோகக்காற்றால் மொத்துண்டு, பித்தலும் பிதற்றலு முடையவராய்ச் சிந்தைவாடி, தியங்கிவருந்தி, தலையெடுக்க மாட்டாமல் தன்னைமறந்து, அரட்டலும் புரட்டலுங்கொண்டு அயர்ந்து போய்விட்டார். எங்களாற்கூடிய உபசாரமெல்லாஞ்செய்து பார்த்தோம், ஏதேது? தேறுவதாய்க் காணோம் காமக்கள லாடமூழ்கிப்போனார். இனிக்கரையேறுவாரென்று கனவிலும் நினைக்கவேண்டிய தில்லை. ஆனால் உடன்பிறப்பென்னுங் கருணைபெருகி, அதனால் உமதுள்ளமுருகி, ஜீவகாருண்யஞ்செய்ய இரங்குவீராகில்: இன்னுஞ் சிலநாளைக்குக் கீசகராஜ னிருப்பாரென்று ஒருவாறெண்ணலாம. அவருயிர்பெற்றால் மாத்திரந்தான் விராடநகர்ப் புரிசையும், நமது வாழ்க்கையாம் வரிசையும், குறைவுபடாமற் கண்டு மகிழலாம். எங்களைப்போன்ற ஏழைக்குடும்பங்களுங் காலங்கழிக்கலாம். அப்படிக்கில்லாவிட்டால், கீசகருக்கு நேரிட்டகெடுதி வெளிப்பட்டவுடனே பகைவர் மேலிடுவார்கள். நானாவித விரோதங்களும் விளையும். அதனால் நமது மச்சநாட்டின் வட்டமும், பச்சைக் கொடி நாட்டிய பட்டமும் போம். அப்பா லுங்களை யண்டிய நாங்கள் பிச்சையெடுத்துப் பிழைக்க நேரிடும் ஓ கொச்சைமொழிமானே! இனிமேல் விளைச்செய லெப்படியோ அறியோம். என்று கையைநெரித்துக் கண்ணீர்விடுத்து, சுதர்க்கணையின் கால்மேற் படுத்துக் கதறிப்பதறி யழுதார்கள்.

அப்படி கண்கலங்கிய பாங்கியரைச் சுதர்க்கணை பார்த்து, சங்கதி யென்னடியென்று கேட்டாள். அப்போது அவ்விடம்நின்ற தோழியர் - அம்மா! பின்னையொன்றுமில்லை. நம்மிடத்துவந்திருக்கும் கருங்குவளைக்கண்ணளாகிய வண்ணப்பெண்ணென்னும் நுண்ணிடையாளை எப்பாடுபட்டாகிலும் வசப்படுத்திக் கீசகரிடத்தில் அனுப்புவீராகில், அவர்கொண்டவெறியும் கடுங்காதற்குறியும் - தனக்குத்தானே தணிந்து போய்விடும். போனபிராணனு மீளும். அவர்மனைவியர்களு மங்கிலியத்தோ டிருப்பார்கள் இப்படிப்பட்ட ஆபத்தெப்பொழுதும் வந்ததில்லை. இப்போது நேரிட்ட இந்தத் தத்துக்குத் தப்பிப்பிழைக்கும்படி நீரே சாந்திசெய்ய வேண்டும். ஓ ஏந்திழையே! இந்த வேளை நீர் யிரங்காமற்போனால், இப்பவோ? இன்னுஞ் சற்றுநேரத்திலேயோ? பொழுதுவிடியுங் காலத்திலேயோ? கீசகருயிர் நாசமடைந்துபோம் ஊழியராகிய எங்கள்மேல் தோஷஞ் சொல்ல வேண்டாம். எங்களால்உபசரிக்க வேறு வழியுமில்லை. என்பதாய்ப் பாங்கியருரைத்த பசப்புவார்த்தையைச் சுதர்க்கணைகேட்டு, ஓ தோழிமார்களே! ஆசைப்பட்ட பாவியாவது வேறுபெண்கள்மே லாசைப்பட லாகாதா? ஐயோ! மோசம் வந்ததே: கந்திருவர் காவலிலடங்கிய தெய்வப்பெண்ணை நானெப்படி வசப்படுத்தி யனுப்புவது? அப்படிச்செய்வது நன்மையல்லவே; ஒருவேளை யனுப்பி வைத்தால், மோகாந்தகனாகிய பாவி மேல்விழுந்து தொந்தரை செய்வானாகில். இந்நாடும் நகரமும் - குலமுங் கோத்திரமும் - குடியும் படையும் - குன்றிபோய்விடுமே; நானென்னசெய்வேன்? ஓ என்சகிமாரே! கெடுவழியிற்பிரவேசிக்கலாகாதே; என் மனதிற்குச் சஞ்சலமென்னுந் தணலை மூட்டினீர்களே; என்று முகத்திலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, கலாபமயில்போ லசைந்து கலங்கினாள்.

அப்பொழுது வஞ்சனாகிய கீசகனுடையதாதிமார் இராஜவஞ்சியைநோக்கி, அம்மா! நீரேன் அஞ்சுகிறீர்? பெண்ணென்பவரெல்லாமொன்றே. நாமெல்லாம் ஸ்திரீயினமேயன்றி வேறல்ல மானமென்பது யாவருக்குமுண்டு. கீர்த்தி அபகீர்த்தி எவர்கட்குமுள்ளதே இந்த விஷயத்தைக் குறித்து உமக்கும் உம்முடைய நாயகனுக்கும் பொல்லாங்கு நேரிடுமாகில், எங்களுக்குத் துன்பமுந் துயருமில்லாமற் போமோ? நீங்கள்நன்மையாயிருந்தாலல்லவோ எங்களுக்குச் சவுக்கியமுண்டு. நாங்கள் கீசகர்பக்கத்தில் நீங்காம லிருக்கும்போது, வேறுவித்தியாசம் விளையுமென்று நினைக்கின்றீரா? அப்படி நினையாதீர்? எங்களுயிரைவிட்டாலும் விடுவோமே யொழிய, அபகீர்த்திக் காளாகமாட்டோம். அவருடைய அக்கிரமத்துக்கிடங் கொடுக்கமாட்டோம் எங்கள்பேச்சைநீர் சத்தியமாய்நம்பும். நாங்கள் செய்யப்போகிற தந்திரத்தைக்கேளும். இந்த விரதசாரணியை யழைத்துப் போய் அவர் முன்னே நிறுத்தி, இவளைச் சுற்றிலு நாங்கள் நின்றுகொண்டு, இதோ வந்தாள் வண்ண

மாதென்போம். இச்சொல் அவர்செவியில் விழுந்தவுடனே மோகினியைக்கண்ட முனிபோலெழுந்து, இவளுடைய கால்மேற் பணிந்து, கண்ணே - பெண்ணே - என்று புலம்பிக்கதறுவார். காமவேஷ்டையாற் பதறுவார். அண்டையி லிருக்கின்ற நாங்கள் இவரைத்தடுத்து, ஐயா! உமதுடம்புகசங்கி அசங்கியப்பட் டிருப்பதினால் ஸ்நானஞ்செய்து, சந்தனம் - புனுகு - சவ்வாது - பனிநீர் - சாந்து - கதம்பம் - கலவை இவைகளைத்திமிர்ந்து, போசனமுண்டு, தாம்பூலந்தரித்து, ஆபரணவலங்காரத்துடன் அடுத்த பழவர்க்கங்களும் - பட்டு பட்டாவளியும் - புட்பச்செண்டுங்கொண்டு இந்தப் பெண்ணுக்குக் கொடுத்து, உல்லாசப்படுத்திச் சல்லாபமாய்ப் பேசுமென்று அந்தவல்லாளன் புத்தியைமாற்றி, ஆசைப்பூமேலேற்றித்தேற்றி, உடனே இந்தச்சைரந்திரியை உம்மிடத்திற் கனுப்பிவிடுகிறோம். அம்மா! பெருநெருப்பை ஈ மொய்க்குமா? இரும்பைச் செல்லரிக்குமா? எவ்வளவும் வித்தியாச மெண்ணாதீர். என்று உறுதியாய்ச் சொன்னார்கள்.

இவ்வாறு ஸ்திரமாய்ப்பேசிய சேடியரைச் சுதர்க்கணைப்பார்த்து, ஆமடிபெண்களே! நீங்கள் சொல்லுவது பக்குவந்தான். இவ்வாறு நடந்தால் எவருக்குந் தோஷமில்லை ஒருவேளை கரைபுரண்டவெள்ளம் அணைகடந்துபோனா லெப்படி? நீங்கள்தா னென்ன செய்வீர்கள் ? நான் பாவியாய்ப் பழிகாரியாயவிடுவேனே: அன்றியும், கட்குடியன் - காமுகன் - பொய்யன் -பொறாமைக்காரன் - புறங்கூறுபவன் - கள்ளன் - ஊருடைமைக் குலைவைத்திருப்பவன் - வறியன் - மூடன் - முதலிய இவர்களுக்கு, சத்தியம் - சவுசம் - ஆசாரம் சாந்தம் - தண்மை – உண்மை ஆணை - ஆக்கினை - இவைகளி லொன்றுமிராதே: இப்படிப்பட்ட மூடர்கள் சற்றும் யோசிக்கமாட்டார்களே; மோகக்காற்றுங் காமத்தீயும் முடுகி வரும்பொழுதுகைகொண்டு மறிக்கப்போமோ? அஃது வேறொன்றாற்கட்டுப்படுமோ? என்றுதருமந்தவறாத சுதர்க்கணையானவள்சொல்லும்போது, அந்தக் கீசகனிடத்தி லிருந்துவேறு சிலதாதியரோடிவந்து, ஐயோ ! அப்பா! எப்படி? என்செய்வோம்? ஓ மைப்படிந்தகண்ணாளான மதனரதியே? உன்பேரிலாணைப்படிக்குக் கீசகர் முடியப்போகிறார். காலங்கிட்டி விட்டது. ஜாலம்பண்ணாமல் இந்தச்சைரந்திரியை யனுப்பிவிடும். ஆபத்திற்குப் பாவமில்லை. இத்தருணத்தில் நீரவரைக் காக்கவேண்டும், இந்தம்மாள்பேரில் அவர் கைப்படவொட்டாமற்செய்து, இவள் பதிவிரதா தன்மத்தைக் காப்பாற்றி, உங்கள் சத்தியத்தையுங் கீர்த்தியையுந்தழைக்கப் பார்க்கிறோம். இல்லாவிட்டால் அவர்கொண்டிருக்கிற மோகலாகிரி எம்மனோரால் தீர்க்கத் தகுந்ததாயில்லை. நாங்களுபசரிக்குந்தோறும் அவர்கொண்டிருக்கிறவிரகதாபாக்கினியானது அழலில்நெய்சொரிந்ததுபோல் அதிகரிக்கின்றது. ஆதலால் விரைவிற்கிருபை புரியுமென்று பல்லைக்காட்டிக் கெஞ்சினார்கள்.

விரதசாரணியைக் கீசகனைக்கண்டுவரும்படி சுதர்க்கணை வருந்திப்பணிந்து கேட்டுக்கொள்ளுதல்.

இவ்விதமாக அத்தாதியர்பட்டபரிதாபத்தைப்பார்த்த சுதர்க்கணையானவள் காலகதியாற் கருத்து மயங்கி, ஊழ்வினைவசத்தா லுணர்வுமழிந்து, அந்தோ! அடாபாவி கீசகா! பாசாவேசங்களாகிய ஐம்புலாதிகளின் சேட்டையறிந்து கேட்டை யொழிந்து தேறித்தெளிந்த பாக்கியவான்களின் வாக்கியங்களைக் கற்றும், யோக்கியமாகக் கேட்டும், இன்னுந்தெளியாமற்போயினையே: மன்மதவேதமார்க்கமகிமையும் பார்க்கிலையே: கேடுவரும்போது மதிகெட்டு வருமென்பதுபோல், நாசம்வரும்போது ஞானமும் உண்மையுங்கெட்டு, எல்லா நன்மையும் விட்டுப்போமே; மழைக்கா லிருட்டானாலு மந்தி கொம்புவிட்டுக் கொம்புபாயுமா? புலிபசித்தாலும் புல்லைத்தின்னுமோ? சிங்கஞ் சிறுத்தாலும் பங்கப்படுமோ? சிறுசிங்கமானாலும் யானைமாமிசமன்றி வேறுமாமிசந் தீண்டுமோ? என்றழுது, (தானாடாவிட்டாலுஞ் சதையாடும்.) என்னும் பழமொழிக்கிணங்கச் சகோதரபாசத்தால் வியாகூலப்பட்டு, நெஞ்சு புண்ணாய்க் கொட்டிய பஞ்சுபோற்படிந்து, கண்மாரிசொரிந்து, தன்னருகில் வந்த பணிப்பெண் கால்மேல்வணங்கி, ஓ பதிவிரதா சிரோமணீ! திருந்திய குலத்திற் பிறந்து அருந்ததியினுஞ் சிறந்த தேவரீர்சிறிது கடைக்கண்ணருள்செய்வீராகில், எங்கள் செங்கோலும் - வாழ்வும் - நீதியும்- நெறியும் - சீரும் - சிறப்பும் - குறைவுபடாது. தேவரீர் கிருபை செய்யாவிட்டால், எங்களரசுரிமை முதலியயாவும் அழிந்துபோய் விடும். எங்கள் தலைமே லிடிவிழுவதற்கு உமது வாய்மொழியைப் பார்த்துக்கொண் டிருக்கின்றது. நீர் ஆமென்றொப்புக் கொண்டால் நாங்கள் பிழைப்பதற் கிடமுண்டாம். நீரொத்துக்கொள்ளாவிடில் நாங்களடியோ டழிந்து போகும்படியாய் நேரிடும் ஓ பூரணச்செல்வியே! நான் பேசப்போகிற வசனத்தைப் பொறுமையுடன் கேட்டருளும். என்று விராடராஜன்பத்தினி சொல்லத் துணிந்தாள்.

ஓ என்னுயிர்க்குயிராகிய துணையே! எனக்குத்தம்பியென்று பிறந்த வம்பன் அறிவில்லாச் சிறுவனாகையால், மனவுறுதி யில்லாமல் மதனவெறியேறிப்போனானாம். மதிமயங்கிப் பிணமானானாம். இதுவரையினும் உயிரிருக்கிறதோ இல்லையோ வென்று தாதியரோடிவந்து சேதிசொன்னார்கள். மூவாசையொழிந்த முதியோர்களையும் பெண்ணாசை விடாது. பிரபஞ்ச மாயையென்பது இதுதான். நான் மகாபாவியாயினேன். நீரென்பேரிற் கோபியாதிரும். உமது விரதங் குறையாமல் தாதியர் மெத்தப் பிரயாசைப் படுவோமென்று எனக்குச் சத்தியவசனஞ் சொன்னார்கள். அப்படிச்சொன்ன

போதிலும், படாடம்பனை கீசகன் அடாத காரியமாக உம்மைநாடி யாசைப்பட்டது அநியாயம். ஆகிலும் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். ஆபத்துக் காலத்திற் கிரங்கி, அடியேன் முகத்தைப் பார்த்து, என்மனச்சஞ்சலத்தையும் அவன்படுகிற துன்பத்தையும்போக்குவகையை நீர் யோசிக்கவேண்டும். உமது கற்புக்கும் பழுது வாராமல், என்னையும் புநிதவதியாக்கி, அவனும் பிழைக்கும்படி கிருபைசெய்தருளும். நீ ரிவ்வளவு ஜீவகாருண்யம் வைத்து எங்களை ரட்சிப்பீராகில், உமது குலமும் - கோத்திரமும் - குணமும் - நீர் கொண்டிருக்கின்றநோன்பும் - குறைவுறாமல் மேன்மேலும் விருத்தியாகும். உலகுள்ள மட்டும் உமது மகுத்துவம் நிலைநிற்கும். எங்கள் நூற்றைந்து பேரையும் பெற்று வளர்த்த தாயென்று நாங்கள்கொண்டாடுவதுமன்றி, உலகத்தாரும்புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்துவார்கள். தினமுந் திருவிளக்கேற்றிவைத்து, எங்கள் குலதெய்வமென்று உம்மைக் கும்பிடுவேன். ஓ தீனரக்ஷகி! உமது பத்தினிதவத்திற்குப் பங்கம் வரும்படியாகப் பார்க்கமாட்டேன். நானும்மை நம்பினேன். எனக்கொருவருந் துணையில்லை. என்று சொல்லி, கெதியில்லாத அடியாளுக்கு உமதிரண்டு பாதமே கெதியென்று பணிந்து, இரண்டு காலையும்பிடித்துக்கொண்டு, அம்மா! துணிந்து நானொருயுத்தி நினைந்திருக்கின்றேன். அது உமது சித்தத்திற்கெப்படியிருக்குமோ தெரிகிலேன். சிறியாளாகிய என்மொழியைச் சிந்தையிற்கொண் டருளவேண்டும். அஃதென்னவென்றால் - நாசகால வழியைநாடி மோசம்போய்க் கிடக்கின்ற கீசகனிடத்திற்கு நீர்போய், வாசப்பூமாலையுந்தேனும் உன்தமக்கை வரிசை யனுப்பினாளென்று கொடுத்து வருவீராகில், என்னிஷ்டம் உம்மைவிட் டெப்பொழுது மகலாது. என்று அதிகவருத்தத்தோ டுரைத்தும், இந்த உத்தமியை யனுப்புவதற்குச் சற்று மனமில்லாதவளாய்க் கவலைகொண் டிருந்தாள்.

இத்தன்மையாகச் சொல்லிய விராடன்மனைவியைக் கற்புக்கணியாகிய பாஞ்சாலியானவள்நோக்கி, ஓ என்னை யாதரிக்கத் துணிந்த அன்னையே! உம்முடையதம்பியாகிய கீசகன் அற்ப விஷயத்திற் காசைப்பட்டுப் பூந்தோட்டத்தி லிருந்து என்னைத் தூக்கிக்கொண்டு வந்தபோது, நீர்கடுமையாகப் பேசிய வார்த்தையாற் கொல்லத்தக்க பகைகொண்டு போனான். அவனுடைய கருத்து உமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், அந்த இடத்திற்குப் போவென் றெவ்வாறு சொல்லுகிறீர்? அவனிடத்திற் கென்னை யனுப்ப நினைப்பது, உமது மேலானபுத்திக் கழகல்லவே; நானும்மிடத்தில் வந்தடுத்தபோது என்பேரி லொருவர் காதல்கொள்ளப் படாதென்றும், கொண்டால் உடனே உயிரிழக்க வேண்டுமென்றும் முன்னமே சொன்னேனே; அப்படியேகுறைவுவாராமற் காக்கிறேனென்றுவாக்களித்து, அதுமுதலிதுவரையிலுந் தளர்ச்சியின்றிக் காத்து, இப்பொழுது தந்தச் சண்டாளனிடத்திற் கனுப்புவதற்கு எப்படி யுமது மனமொப்பியதோ அறியேன். அப்படியே யாகட்டுமென்று உமது வார்த்தையைத் தள்ளாமற்போவேனாகில், அந்தவண்டன் என்னைக் கண்டவுடனே காதல்மீறிக்காமமேறிக் கைகலக்கத் துணிவானே; அப்போது நான் கண்கலக்கப் படுவேனே; அப்பால் விருதாவாய் அநர்த்தம் விளைந்துபோமே; மறந்துசெத்தேன் பிராணனே வாவென்றால் வாராதே: ஆதலினால் அவனிடத்திற் கென்னை யனுப்புவதை நிறுத்தி, வேறெந்த வேலைக்கனுப்பினாலும் உமது சொல்லுக்குத் தடைசொல்லேன். இந்தவேளையி லென்னை விலக்கிவிடும் என்னைப்போல் இன்னும்அநேகதாதியரிருக்கின்றார்கள். அந்தச்சௌந்தரியவதிகளிற் சிலரையனுப்புவது உத்தமமா யிருக்கும். என்மர்மத்தை யுமக்குச் சொன்னேன். அப்பால் உமதிஷ்டமென்று சைரந்திரி சொல்லினள். இவையனைத்துங் கேட்ட சுதர்க்கணை மீட்டும் வணங்கிச் சொல்லுகின்றாள் ஓ விதரணைசாலி! உம்மைக்கண்டு ஆசைப்பட்டு உயிரொழியும்படியா யுறக்கங்கொண்டு படாதபாடும் படுகிற பதிதனுக்கு மற்றொரு பெண்ணைக் கண்டுபேச இச்சையுண்டாமோ? அப்படியல்லவென் றனுப்பினாலும் உம்மேற்கொண்டமோகம் மற்றொருபெண்ணால் மாறுமோ? உமதுருவங் கண்டாலும், உமது இன்சொற் கேட்டாலும், இறக்கவழிபார்க்குங் கீசகன் எழுந்திருப்பானென்று சொல்லுகின்றார்களே: ஓ என்னிஷ்டமே! நீர்பட்ட கஷ்டத்தோடு என்கஷ்டமாய்ச்சென்று திரும்புவது மகாபாக்கியம். அதனால்நீர்நீடூழிவாழ்வீர். எங்களையு நிலைபெறச்செய்வீர். என்று போற்றினாள்.

விரதசாரணிகீசகனிடஞ்செல்ல, அவன் தொடக்கிட்டலும்ஓடி விராடன் சபையிலபயம்புகுதல்.

இவ்விதமாக வணங்கிப் போகத் தகாத காரியத்திற்குப் போகச்சொல்லிய சுதர்க்கணையைப் பேரறிவாலும் - பிசகாமொழியாலும் - பெருமைவாய்ந் துயர்ந்த பாஞ்சாலிபார்த்து, ஓ மேதினிபோற்று மாதரசே! நீர் கொடியபாதக னிமித்தமாகக் குரூரவார்த்தையைக் கூசாமற் சொன்னபடியால், உமது சொல்லைத் தள்ளக் கூடாத தாக்ஷண்யத்தின் பொருட்டுப் போகின்றேன். பின்னாலென்ன கெடுதி விளையுமோ ? அதைக்குறித்து நீயென்னைக் கேட்க வேண்டியதில்லை. ஓ அன்னமே; சொன்னேன். சொன்னேன். சொன்னேன். முக்காலுஞ்சொன்னேன், என்னை வெறுக்காதேயும். அப்பால் இக்காரியத்தில் இதுவரையுந் தழைத்து விளங்கிய சுற்றத்தாருக்கும் மற்றையோருக்கும் மெத்த வருத்த மேவிடும்போ லிருக்கின்றது. (விநாசகாலம் விபரீதகோலம்.) என்பதை யோசித்காமல், காலாது

குலத்திற்குத்தகுதியாய் நீருமிப்படி கட்டளையிட்டீர். அப்படியே நான்போய்வருகிறேன். என்று சொல்லி வினையின்பயனே பயனென்றெழுந்து, முத்துப்போற் கண்ணீரை முகஞ்சோரவிட்டு, வாசப்பூமாலையுந் தே னுங்கைக்கொண்டு, அந்தப்புர வாசலுக்கு வெளியே வந்து நின்று, தேவேந்திரன் – வாயுதேவன்-எமதரும ராஜன்-அஸ்வனி தேவர்கள் - இவ்வவைவரையுந் தியா னித்து, எஜமானியுத்தரவைக் கடக்கக் கூடாமையால் நாசகாலக் கீசகன் வாசஸ்தலத்தை நாடிப்போனாள். கேட்டீரோ ஜெனமே ஜெயமகாராஜனே! இந்தப்பாஞ் சாலி விரதசாரணியென்ன வேஷங்கொண்டு சுதர்க் கணையிடத்துக்கு வந்தபொழுது காந்திருவரைவர் தன க்குக்கணவரென்றும், மற்றவர்தன்னைத் தீண்டப்படா தென்றும், கண்ணேறிட்டுப்பார்த்தவர்கள் வெண்ணீ ருப்ப் போவார்களெனறும், ஒருதரத்திற்குப் பத்து தாமாகச் சொல்லியும். மகாபுத்திசாலியாகிய சுதக்ஷ ணாதேவி நீதிநெறிகெட்ட கீசகனிடத்திற்கு இந்தம் மானையனுப்பிய விதத்தையோசிக்கும்போது, ஆசானு பாகுவைப்பெற்ற அம்மச்சராஜன் மனைவியால் யாதொ ருதோஷமுமில்லை. ஜன்மாந்திர வினைவசத்தால் வந்த அநுபவத்தை யாருமநுபவித்தே யொழிக்க வேண்டு மன்றி, அநுபவியாமல் வெல்லவல்லவர்க ளியாருமில் லை. முன்னம் விமன்கையால் அழிந்தவர்கள்போக, இன்னுமிக் கீசகனு முடியவேண்டிய காரணமிருப்பதி னாற் பாஞ்சாலியைப்பார்த்து அவனுசைப்படவும், இவ ளவனிடத்திற் கனுப்பவும். சமயத்திற்குத்தக்கபடிதாதி யர் சொல்லவுநேரிட்டது. மேல்நடந்த விர்த்தாந்தத் தையுங்கேளும். இப்பாற் புட்பமாலையுந் தேனுங்கொ ண்டு சென்ற திரௌபதாதேவி முந்திநினைந்துவந்த ஐந்து தேவருடன், சூரியன்-குபேரன்-வருணன்-உருத் திரன்-மகாவிஷ்ணு-விநாயகன்-சண்முகன்-பிரமன் முத லானதேவர்களையும், உருத்திரை-மகாலட்சுமி-சரஸ்வதி இத்தியாதி தேவதைகளையுந் தனக்கு வந்து வழித்து ணையாக வரும்படி வருந்தித்துதித்து, சத்துருசங்கா ரஞ்செய்யும்படிக்கு வந்தித்து, வேடன்விசிய வலைக் குள் அகப்படப்போகின்ற மான்போற் கண்களிரண்டு மிரண்டு வெருண்டு, நான்குபுறமுந் தேங்கிப்பார்த்து இருட்டிலுண்டாகிய பயத்தினாலும்-நாணத்தினாலும், விதிர்விதிர்த்து மெய்சிலிர்த்து, இராஜவீதியாகப்போய் அந்தக்கீசக னரண்மனையிற் புகுந்து, தூக்கமும் ஊக்க மும்விட்டு மெய்மறந்து அன்னபானாதிகள் கசந்து அவ ஸ்தையாளுள்ளுடைந்து விரதசாரணியைப் போல் தனக்கெதிரில் உருவெளித்தோற்றங்கண்டு நாவறள வாய்பிதற்றிக்கொண்டு கண்டபடிக்கெல்லாம் புரண்டு ருண்டு கிடக்கின்ற பேயனைக்கண்டாள்.

அப்பொழுது மோகத்தாற் கிதைந்து மோசவுலை யிற்புதைந்து கிடக்கின்ற கீசகன் எப்படியிருக்கின்று னென்றால்-தனக்கு அகாலமிருத்துவாகப் பூங்காவில் நேரிட்ட மங்கையை நினைத்து, புன்சிரிப்பாகநகைத்து, இதோ என்பேரிற் பாசங்கொண்ட ஆசைப்பெண்வந் தாள். என்னுத்மாவை இரட்சிக்கும் அமுதசஞ்சீவிவந் தாள். ஜீவகாருணிவந்தாள். தேகபோஷகிவந்தாள். ஜீமூதமான அஞ்ஞான கேவலத்தைப்போக்கும் ஞான சொரூபிவந்தாள். சித்தசன் தொடுங்கணையை வெற்றி கொள்ள வந்தாள். ஆசைக்கடலுளமுழ்ந்திய நான் ஆத ரவாகப்பற்றி நீந்திக்கரைசேருவதற்கு அமுதகொங் கைக் குடங்கொண்டுவந்தாள். என்னை அடிமைகொண் டாளு மங்கைவந்தாள். இருநிதிப்பொக்கிஷச்செல்வி வந்தாள். பட்டாபிஷேகத்தேவி வந்தாள். என் சீமாட் டிவந்தாள். என் கண்ணாட்டிவந்தாள். என்று சாசசந் தோஷச் சைகைகாட்டித் தலையாட்டி, இன்றெனக்கு நல்லகாலம். என்னுடைய சிறுகுடிலில் நல்லவர்கள்திரு வடிபெயர்த்தருளப் பெற்றேன். ஓ சைரந்திரியாகிய தனமே! தேவரீர் செங்கமலப்பாதமுஞ் சிவக்க நடந்த தோ? அடிசேடிமார்களே! ஓடிவாருங்கள். ஓடிவாருங் கள். நான்பிறந்த பிறப்பு இன்றுதான் பயன்பட்டது. இதோ என்னெண்ணப்பெண் வந்தாள். இவர்வந்தெத் நேரமாகிறது? ஏதுங்கிநிற்கவேண்டிய காரணமென்ன? உபசாரஞ்செய்து உள்ளேயழையுங்கள். வாசங்கலந்த பனிநீர்கொண்டுவாருங்கள், ஸ்நானம்பண்ணி வையுங் கள். பத்தரைமாற்றுப் பசும்பொன்னினாற் சித்திரித்த உத்தரியப்பட் டுடுத்துங்கள். இந்திரவன்னப்பட்டு- மேகவன்னப்பட்டு-வெண்பட்டு - செம்பட்டு - இவைக ளாலமைத்திருக்கிற பாவாடை ரவிக்கையைக் கும்பிட் டுக்கொடுங்கள். முத்துமாலை - மோகனமாலை - ஆணிப் பொன்மாலை-அலர்ந்தபூமாலை–மாணிக்கமாலை- வச்சிரமா லை-மரகதமாலை-இம்மாலையா லலங்கரியுங்கள். புநுகு-சவ் வாது-கதம்பம்-கஸ்தூரி–பனிநீர் - அத்தர் – சந்தனாதி களைப் பூசுங்கள். மதுமாமிச பக்ஷணகச்சாயங்களும்– கனிவர்க்கங்களும் - இச்சையானமட்டுந் தின்னக்கொ டுங்கள். வழிநடந்துவந்த இளைப்பாற்றுங்கள். ஓ விரத சாரணியென்னு மின்னே! என்பேரிலன்பு வருவதற்கு இத்தனைகாலஞ் சென்றதோ? வாரும். வாரும். என் மஞ்சத்திலுட்காரும், வாடிப்போன என்முகத்தைப் பாரும். உம்மைநாடிவந்த என்மோகத்தைத்தீரும். இத னாலுமக் கதிகபுண்ணியஞ்சேரும். ஓ இன்பரசமே! ஓ இனியசுகமே! எனப்புலம்பி, மூடியகண்ணை விழித்துப் பாராமல் முறண்டிக்கொண் டிருக்கின்ற மூர்க்கனைப் பாஞ்சாலிபார்த்து, நம்மைக்கண்ணிற் காணுதபோதே கண்டபாவனையாகப் பேசிக்கலங்குகிற லோபியான வன், எதிரிற்கண்டால் என்னசெய்வானோ வென்று மனங்கலங்கிப் பெருமுச்செறிந்து, இந்தப்பாதிராத்தி ரியிலிவனைப்பார்ப்பதைப்பார்க்கிலும் பொழுதுவிடிந்த பின்பு காணலாமென்று அழகிய பூஞ்சோலைநெருங்கிய ஓர் தடாகத்திற் புகுந்தாள். அக்கால் ஒருகாவுள்ள தேரைக்கூட்டி, மின்னற்கொடி நாட்டி, பரிமாவே

ழூம் பூட்டி, படர்ந்த விருட்கூட்டங்களையோட்டி, உத
யகிரியினுச்சியினீட்டி, கதிர்க்கிரணங்களைக்காட்டி,முக்
காலும் அருக்கியமேற்குஞ்சூரியனை எக்காலுங்கொ
ண்டு வருவதுபோல் மெதுவாயவாராமல் - அக்காலையி
லவசரத்துடன்கிழக்குத்திசையில் அருணன் கொண்டு
வந்தான்.

இவ்வாறு முருக்கம் பூப்போன்ற சூரியோதயங்
கண்டவுடனே செருக்கியெழுந்த சேவலாதிப்பட்சிகள்
கண்விழித்து, தமிதலைக் கீசகன் பிதற்றிய சங்கதிகளைச்
சகிக்கமாட்டாமற் சங்கடப்பட்டுப் பாதவித்துத் தியங்
கித் திட்டுவதுபோல் ரெக்கைகளினால் வயிற்றிலடித்து
க்கொண்டுகூவிப் பறந்தனகள். தடாகமென்னும்பெண்
ணானவள் திரௌபதாதேவியின் சஞ்சலத்தைப் பார்க்க
மாட்டாமற் கண்களைச் சுருக்கிக்கண்ணீர்பெருக்கிக்கை
யைவிரிப்பதுபோல், கருங்குவளை முதலிய புட்பங்கள்
குவிந்துதாமரைமலர்கள் தேன்சொரிந்துவிரிந்தனகள்.
மகாபாவியாகிய கீசகனை யிகழ்ந்து பாடுவதுபோல்வண்
டோலமிட்டது. இத்தன்மையாகியகாலத்தில், தெங்கு-
மா - கோங்கு - பலா - கமுகு - இவை முதலிய மரங்க
ளோங்கும் வனஞ்சூழ்ந்த அப் பொய்கையினிடத்திற்
பாஞ்சாலி இழிந்து, கைகாலாதிகளைக்கழுவிக்கொண்டு,
நித்தியவிதிநிறைவேற்றி,சூரியனுக்குஅருக்கியம்விட்டு,
இருகரத்தையுங்கூப்பி நமஸ்காரமந்திரஞ்செபித்துவண
ங்கினள். அஃதெவ்வாறெனில - உலகெலாம் விளங்கு
மொருபெருஞ்சோதீ ! சர்வசாட்சி தனிப்பரம் பொரு
ளே ! பாவமும் புண்ணியமும் பரிக்கும்பருதியே! புத்
தியுஞ்சித்தியும் பொருத்துமாதபனே! சத்துருஜெயந்த
ருமித்திரவெயிலோய் ! உத்தமகுணமுஞ் சுத்தமும்வீ
டும், வித்தகக்கல்வியும் மேம்படுசெல்வமும், பத்திசெய்
வோர்கட் கித்தனைபேறும், பாலித்தருளும் பாபரகித
னே! எந்தையேபோற்றி இரவியேபோற்றி. சுந்தரச்
செங்கதிர்ச் சுடரேபோற்றி. ஆயிரக்கிரணத்த லரியே
போற்றி. இருள்வலியொழிக்கும். இனனேபோற்றி தி
னகரவெய்யோ தினமணிபோற்றி. பங்கயபதங்கப்
பரிதியேபோற்றி, பனிப்பகைபானுப் பகலோய் போ
ற்றி. மித்திரவிருச்சிக விண்மணிபோற்றி சித்திரபானு
திவாகரபோற்றி. அண்டயோனி அரியமா போற்றி
அருக்கனனலியருணனே போற்றி. சுதெக்ஷணாதேவி
யின் சொற்பிசகாமல், கீசகன்தன்பாற்கிட்டுமேழைக்கு
துன்பங்கெடுதி துயரமெய்தாமல், இன்பங்கொடுத்தா
ளென்றுமொளியே! உன்னைத் தொழுதேற்குறுகணில்
லாமல், இந்நகர்மன்னற் கிடர்விளையாமல், விராடன்தே
வி விசனமுறாமல், என் குலதெய்வமாயென்றுமிருந்து
தன்மங்காத்தருள் சத்தியமணியே! சரணஞ் சரணஞ்
சவிதாசரணம். சான்றோய் சரணம் தரணிசரணம். தரு
ணந்தருணமென்று பிரதக்ஷணதெண்டஞ்சமர்ப்பித்து.
பூமியைத்தொட்டு நெற்றியிற் பொட்டிட்டு, அப்பூமா
தேவி முதலியோரை வழிபட்டுசலம்புரோக்ஷித்து, சங்
கற்பஞ்சொல்லி, தற்சனிவைத்துச் சற்றுநேரமிருந்து
தக்கமந்திரத்தால் ஆசமன்ய முடித்துக்கொண்டு கரை
யேறி, காமவிகாரத்தாற் கன்றிவருந்திய கீசகனிருந்த
கெடுமனைகிட்டி, நமனையெதிர்ந்த உயிர்போல்மெலிந்து
ஐயா உம்முடைய தமக்கையார் தந்த பூவுந்தேனும்
இதுவென்று கொடுத்து, அவன் மாறுத்தாஞ்சொல்லு
மளவும் வேறோர் புறத்திலொதுங்கியிருந்தனள். அந்த
வேளையிற் கீசகன் கெதியெப்படியிருந்த தென்றால்-
ஆறாதமோக நெருப்பால் நீறாய்வெந்து வெதும்பி, தலை
விசிறி, நிலைதவறி, மதிபதறி, விதிகுறுகி, மேனிகருகி
மெலிந்து. ஊனுமுருகியுலர்ந்து, செந்தாமரைக்கொ
ழுந்தும்-இளவாழைக்குருத்தும் யானைத்தந்தப் பலகை
யும்-அனிச்சந்தளிரும்- அலர்ந்தமலரும் — அணையாகப்
பரப்பி அதன்மேற் படுத்திருந்தான். அஃதெப்படியிரு
ந்ததென்னில்-கட்டையுடன்முட்டை கலந்தடுக்கி, அத
ன்மேற் சுட்டெரிக்க நீட்டிவைத்த பிணம்போலத்து
லங்கினன். இதன்றியும், சந்தனம்-பாளிதம்-குங்குமம்
பனிநீர்-இவைகளைத் தெளிக்கின்றார்கள். அஃதெவ்வா
றிருந்ததென்னில்-சமயதீக்ஷைவிடுவித்துக் கலசச் சல
மிறைக்குங் காட்சிபோலிருந்தது. மேலும் அவனைச்
சுற்றிலும் வாசனைவத்திகளைத் தாதிப்பெண்கள் வைக்
கின்றார்கள். அஃதெவ்வண்ணமிருந்ததென்னில் - கரு
மக்கிரியை செய்வதற்குப் புத்திரனில்லாதவர்கள்பெண்
கள்கையில் தர்ப்பையளித்துக் கொள்ளிநாட்டுங் கொள்
ளைப்போலிருந்தது. இவ்வாறுசெய்த சயித்தியோபசா
ரத்தினாலுந் தணியாமல், ஐயையோ!! என்று ஓங்கியி
ரைந்து ஏங்கிய கீசகனுக்கு, பாங்கிலிருந்த பாங்கியர்
பலரும் ஆலவட்டம்—தாலவட்டம்-மயில்விசிறி - குயில்
விசிறி—குறுவேர்விசிறி-சிறுவேர்விசிறி-பட்டுவார்விசிறி
வெட்டிவேர் விசிறி-தந்தவிசிறி-சந்தவிசிறி—இவைகளா
லுபசரித்தார்கள் அவர்கள் வீசிய விசிறிக்காற்றினாற்
கூசி மெய்குலைந்து. ஓ தோழிகளே! ஈதென்ன ஊழித்
தீக்காற்றோ? அல்லது ஆழித்தீக்காற்றோ? என்னுயி
ரைக்கொள்ளையாடவந்தகூற்றோ? ஆஹா!! என்னான்மா
அயருகிறதே- என்று அவச்சத்தமிட்டான் அப்பொ
ழுதே அவ்விடமிருந்த பெண்கள் ஆத்திரப்பட்டு பூவா
ரம் பொன்னாரம்-புநகாரம்-சந்தனாரம- சந்திராரம்-முத்
தாரம்-என்னுமிவைகளை விஸ்தாரங்கொண் டுத்தாரஞ்
செய்தார்கள். அவைகளவன் சரீரத்திற்பட்டவுடனே
பள-பள-மள-மள-வென்று பொரிந்து. நீறு நெருப்பு
மாய் வெந்துபோவதினால் தளதளவென்று தக்காளிப்
பழம்போற் கொப்புளமெழும்பக் குப்புறப்படுத்தான்

இதன்றியும்-காமனாய் கலந்த கலக்கத்தாற் சந்
திரனைத் தூஷித்து, சமுத்திர கோஷத்தைக் கோபி
த்து, தென்றலைச் சீயென்றேசி, வரிச்சிறைக் குயிலை
இருபிறப்பென்று பேசி. கிள்ளைமொழியைக் கடிந்து,
கடகடவென்று புரண்டு, கிடைகொடுக்காமல். உடை
வுடுக்காமல், உணவெடுக்காமல், கன்னியைவிரும்பி, அ

ன்னிபனுப் வெம்பி, நான்குபுறமும் நன்ருய்ப்பார்த்து,
மெத்தைமேல் வீழ்ந்து தத்தளிக்கரநின்ருன். அப்போ
தப்பாதகன் ஜன்மாந்திரத்திற் செய்ததவங் கைகூடியது
போல், தாழ்ச்சியில்லாவண்ண மடந்தையைக் காட்சி
யாய் முன்னிற்கக்கண்டான். அவளைக் கண்டவுடனே
நாண்பண்ணிய புண்ணியம் பலித்ததென்று கக்கடநகை
த்து, பக்கமாய்ப்படுத்து, திக்கென்றெழுந்து, தீர்க்கமா
ய்வீழ்ந்து, சரணஞ்சரணம். இதுநல்ல தருணந் தருண
ம். என்மாதவம் வந்தது. என்வழித்துணை வந்தது. என்
னிஷ்டதெய்வம் வந்தது. நான் கும்பிடடதெய்வம் வந்
தது. என்பிராண சஞ்சீவிவந்தது. பேசப்பிரசம் பெரு
குங் குமுதமினோ வந்தது. என்னுகத்துயிர் வந்தது.
மோகவித்து வந்தது. போகமுத்துவந்தது. என்கண்ணி
ற்பாவை வந்தது. என்முன் வண்ணப்பூவை வந்தது. ஓ
ஆபத்திற்குதவு மணங்கே வாரும். ஓ தாகத்தைத் தணி
க்கும் தயாரசமே வாரும். என்னருகிலுட்காரும். வற
ண்டுபோன என் மண்டைக்குத்தொண்டைக்கும், சுரு
ண்டுபோன நாக்குக்கு மூக்குக்கும், பசையுண்டாம்படி
மதுரவார்த்தையைப் பொழியும். என்னை யிறுகக்கட்டிச்
சேரும், கைப்பாகிய என்வாய்க்குக் கனிவாய்முத்தந்தா
ரும். என்பவம் போக்கடிக்கவந்த பதமே! என்னைவிட்டு
ப்பிரியாதிருக்கவேண்டும் நிதமே. நானுமக்குச்சதமே.
என்று நிலத்திற் குப்புறற்றிருந்த தலையைநிமிர்ந்து, எக்க
ளிப்பிட்டெழுந்து, முன்பின்பாராமல்விரதசாரணியை
த்தொடடணைக்கக் கிட்டினுன். இப்படி மீளாநரகத்திற்
காளாகுங் கீசகன் காமவிகாரத்தினுற் பேய்போ லோடி
வருவதை விரதசாரணிகண்டு, ஆ! அடாசண்டாளா! அ
டாதுரோகி என்னைத்தொடாதே. என்னையொருவருந்தீ
ண்டப்படாதே. வீணுசைகொண்டு வாணுளை யொழிக்
காதே. நெருப்பிலழுந்திய புழுப்போற் சாகாதே. விளக்
கில்வீழும் விட்டிற்பூச்சிபோல் வேகாதே. மறுமாதர்மே
லாசைப்படாதே. மையல்மோகத்தால் நாசப்படாதே.
காமப்பேயாற் கண்கலங்காதே. என்று கடுஞ்சொற்க
ளாற் கண்டித்தாள். அவ்வாறுகண்டித்துந் தேருதவனு
ய், தேடியமருந்து சிக்கியதுபோற் கிடைத்த தேவியே!
என்னுவியே நான் மகாபாவியே. பெருகிய காமாக்கினி
யாலுருகி வாடுகிற நான், நூறுயிரம்பேர் தடுத்தாலும்
உன்னைவிடமாட்டேன். துறட்டுக்கேட்டாப்பழம் வாய்
க்கெட்டும்போது, அப்பழத்தைச் சுவைக்காமல் விட்டு
விடுகிற மூடனுண்டோ? ஓ தோகையே! என்று தூத்தி
னுன். அதனால் நீஞ்சாத் துன்பங்கொண்ட பஞ்சாலியா
னவள் பயந்து, உடல்வியர்த்து, கொலைவேடனைக்கண்ட
கலைமானைப்போற் சேலைகுலைய, மாலையலைய, கமலமுகம்
வாட, கண்ணீர்பெருகியோட, கருங்கூந்தலாட, கலைமா
ன்களோட, குடல்குலுங்க, குலைநடுங்க, துடியிடைமா
னுள் விடவிடென்ருேடினுன். அவ்வாருேடியபாஞ்சாலி
யானவள் நவமணியிழைத்தகதிர்முடிதரித்த விராட
ராஜன் கொலுவில் வந்து, தருமராஜன்முதலியயாவரும்
பார்க்கும்படியாய் அபயம் அபயமென்றலறி, வாடிய
கொடியபோல் வதங்கி விழ்ந்தழுதாள்.

விராடவன் சபையி லடைக்கலம் புகுந்த திரௌபதியையும் அவளைப்பிடிக் கநேர்ந்த கீசகனையுங்கண்டா க்ரமித்தவீமனைத் தருமரடக்குதல்.

கேட்டீரோ ஜெனமேஜெப மகாராஜனே! அந்த
விராட புத்திரர் கங்கப்பட்டர் வந்தநாள்முதல் உதயத்
திற் சபைசேரும்படியாய் வழக்கப்படுத்திய பிரகாரம்,
மகாஜனங்களுடன் கூடியிருந்த மனுகுலத்தோன்றலா
கிய மச்சராஜனும்-மந்திரிமார் முதலிய சாஸ்திரிகளும்
தேம்பியழுகின்ற தெரிவையைக்கண்டு, கவலைமேற்கொ
ண்டு கருத்துவேறுபட்டு ஒன்றுந்தோன்ரும லிருக்குஞ்
சமயத்தில்; காமப்பிணியாற் கலங்கிய கீசகன் சோமவத
னத் திரௌபதையைத் தொடர்ந்து பிடிக்கத்துணிந்து
அங்கெய்தினன். அந்தச் சமையத்தில் மகாலட்சுமி
போன்ற மாதாசியைப் பற்றுவதற்கு நீட்டிய கீசகன்
கையிரண்டும் அந்தப் பதிவிரதையின்மேற் படவொட்
டாமல், சூரியபகவா னநுக்கிரகத்தாற் சுழற்காற்றைப்
போல்தோன்றிய ஒரு கிங்காரனுனவன் அக்கேடுகாலக்
கீசகன் காத்தைப்பற்றி, கிறுகிறெனச் சுழற்றி விறுவி
றெனவிட் டெறிந்துபோனுன். அதனுற் கைவிச்சோடு
கடுகிய கீசகன் பெருமூச்செறிந்து பிரமித்து, மன்னர்
நகைக்கக் குப்புறவிழுந்து, பின்னுந்தேறிப் பிடிக்கவெ
ழுந்தான். பின்பு தானிருக்குமிடத்திற்குந் திரௌபதை
யிருக்கு மிடத்திற்கும் வெகுதூரமென்று கண்டு தலை
கவிழ்ந்து, உடல்குனிந்து வெட்கி, சந்தடிகாட்டாமல்
வந்தவழியோடிப்போனுன். அவ்விடத்தில் நடந்த அதி
சயத்தைக்கண்ட யாவருந் திக்கற்றவருக்குத் தெய்வ
மேகதியென்று சிந்தைநைந்துருகித் திகைத்திருந்தார்
கள். இப்பால் அச்சபையில் வந்து வீழ்ந்தழுத அவ்
வேழைப் பெண்ணின் அலங்கோலத்தையும், தொட்
டிழுக்க வந்த தன்மைத்துனனது தூக்கிரமத்தையும்,
அதனுல் தனக்கு நேரிட்ட நிந்தையையும் விராடராஜன்
யோசித்து; அவ்விடமிருந்த பெரியோர்களையும்-இராஜ
ராஜர்களையும்-மந்திரிபிரதானி முதலிய மதிவல்லோரை
ரையும் பார்த்து, ஓ விற்பத்தியுடையவர்களே! துற்புத்தி
யுடைய இக்கொடிய கீசகன் துறைதப்பி நடந்ததைப்
பார்த்தீர்களா? என்று ஆத்திரப்பட்டு, அவனுக்கு நற்
புத்திசொல்லி அவன் செய்தவேலைக்குத் தகுந்த தண்
டனைவிதிக்கத் தன்னுற் கூடாமையால், அக்கீசகனு

டைய திடதைரிய பராக்கிரம திக்குவிஜயபத்தைக்குறித்தும் பயந்து சிந்தித்திருந்தான். அந்தக்காலத்தில் இராஜசபையில்நின்ற விரதசாரணியானவள், ஐஐயோ!! இதென்ன அநியாயம்? ஓ தெய்வமே! தெய்வமே! என்று விசனப்பட்டாள். அப்பொழு தவ்விடத்தில் நிறைந்திருந்த வெகுஜனங்களுள் தானுமொருவனுக வந்திருந்த வீமசேனனுகிய பலாயனனென்பவன் மனவேஷ்டையடைந்து, அஞ்சிக்கெஞ்சிப் பஞ்சுபோற்பறந்து ஓடிவந்த பாஞ்சாலியையும் அவளைப் பிடிக்கவந்த கீசனையும் பார்த்து, பஞ்சேந்திரியமும் பதறத் துடிதுடித்து, ஆசாரவாசல் முகப்பிலிருக்கின்றபெருந்தருவைப் பிடுங்கியடித்துக் கீசகனையும் விராடனையும் ஒருமிக்க முடித்துவிடுவதற் கெண்ணினுன். அப்பொழுது தம்பியாகியவீமன் எங்கேபதறுகின்றுனேவென்று அதுவே நினைப்பாகப் பார்த்துக்கொண்டிருந்த தருமராஜன் அவனது கோபக்குறிப்பையும் எண்ணத்தையும் அறிந்துகொண்டு, அப்பா பாலனு! நீ மடைப்பள்ளிக் கெசமானுகையாற் காய்ந்தவிறகு எங்குண்டோ வென்று உயர்ந்த மரங்களைக் கண்ணேட்டமிடுகிறது போலுங் காண்கிறது. நீ இப்பொழுது பார்க்கிற விருட்சம் அவாசத்திற்கு விறகாக மாட்டாதே: இதைக்காயவைத்துக்கொள்ளலா மென்று கருதினுலும் இன்னும் இரண்டுமாதஞ் செல்லாமல் உலராதே: முக்கியமாய் விறகுவேண்டியதிருந்தால் தகுந்த மனிதருடன் காட்டுக்குப்போய், நீ நினைத்த மரங்களை வெட்டி உன்னிஷ்டப்படி முடித்துக்கொள்ளவேண்டுமே யன்றி; இவ்விராடராஜன் சபையில் விளைவாகின்ற மாத்தை அவசரப்பட்டழிக்கக்கூடாதே: மிகுந்த பலசாலியாகிய உனக்கு எதுவும் லட்சியமில்லை. ஆதலின்-இப்பட்டணத்திற்குப் புறம்பிற்சென்று, வேண்டு மரங்களை வேருடன்கெல்லி எளிதாக எரிக்கலாம். இங்கிருக்குந் தருவானது அநேகம் பட்சிகட் காதாரமாகியும், நமது வாழ்நாளுக் குதவியாயும், குளிர்ந்த நீழலைக்கொடுத்துக் கொலுமுகத்திற் கழகாயிருக்கின்றது. ஐயோ! இம்மாத்தைப் புத்திமான்கள் குறைக்க நினையார்கள், பச்சைமாத்தை வெட்டலாகாதென்று பெரியோராற் சொல்லப்பட்டிருக்கின்றது. என்ன ஆபத்து வந்தாலும் பாபத்திற்குப் பயப்பட வேண்டுமே: என்றுசொல்லித் தமதுகாலாற் பூமியைத்தேய்த்தார். அவர் இங்ஙே விறகின்மேலேற்றி வெளிப்படையாகச் சொல்லியவற்றின் பொருள், மரோபகாரியாகிய விராடனைக்கொல்லாமற் கீசகனைக் காட்டிற்கொண்டுபோய்க் கொல்லவேண்டுமெனக் குறிப்பால் விளக்கியதால், அதையறிந்துகொண்ட வீமசேனன் சிறிதுநிதானித்து, ஓ ஓ! இவரிந்துர் தடையானுரே யென்றுஉடலெங்கும் பதறியெழுந்த கோபவேகத்தையடக்கி, திரௌபதைக்கு நேர்ந்த விபத்தையெண்ணிச் சிறிதும் ஆற்றமாட்டாதவனுயிருந்தான்.

திரௌபதி இராஜசபையிலுள்ள விராடனேடும் பெரியோர்களோடுஞ் சிலதருமங்கள் கூறி முறையிட அவர்கள்தேற்றுதல்.

இவ்வாறு வீமசேனன்கொண்டிருக்கு மாற்றுமையையும் அவனையடக்கிய தருமபூபதியினுடைய கருத்தையுங் குறிப்பாயறிந்துகொண்ட பாஞ்சாலியானவள் தனக்கு நேரிலிருந்த விராடராஜனை நோக்கி, ஓ மகாராஜனே! நல்லொழுக்கத்தை முற்றிலும் ஒழுகவிட்ட கீசகன் துன்மார்க்கமாய் என்னைத் தொடர்ந்து தொட்டிழுக்க வந்தது நீதிதானே? சாஸ்திரங்களைப்படித்தும், சாதுஜனசங்கத்தை யடுத்தும், தன்னுயிர்போல் மன்னுயிர்காத்தும், பரதாரஞ்சோதரமெனப்பார்த்தும், பாவபுண்ணிய மின்னவென் றறிந்தும், அடைக்கலம் புகுந்தோரை யாதரித்தும்,தேவதா பக்திகள் ஆசாரிய பக்திகள் செலுத்தியும்,குலமுறை பிசகாமல் நடத்தியும்,ஏழைகள் மனது நோவாமலிரங்கியும், படை - குடி - கூழ் - அமைச்சு - நட்பு - அரண் - இவ்வாறினையுமுடையவனுகியுஞ் செங்கோல்செலுத்துஞ் சீமானுகிய நீர்; உமது மைத்துனனுடைய துற்புத்தியை விசாரித்து, எனது உள்ளக்கலக்கத்தை மாற்றி ஆறுதல் சொல்லி ஆதரியாதிருப்பது உமதாசாட்சிக் கழகாகுமோ! ஓ நீதிபரனே! நெறிமுறையறிந்த நிருபர்கள் தம்மை யண்டினேர்களைத் தம்மக்களைப்போற் காக்கவேண்டுமென்று தருமசாஸ்திரஞ் சொல்லியிருக்கின்றதல்லவோ? ஓ தயாநிதியே! வலியவனுகிய ஒருவன் எளியனை யடித்தாலும், ஒருவன் பொருளை யொருவன் அபகரித்தாலும், வம்புவார்த்தைகளை வழங்கினுலும், அவைகளை யரசன் விசாரித்துத் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனம் பண்ணவேண்டுவதுண்டோ? இல்லையோ? அவ்வாறு விசாரியாத கொடுங்கோல் மன்னன் இருந்தென்ன? ஓ உத்தமனே! உயர்ந்தோர் முதலிய சர்வசனங்களுந்துற்சோபம் - துற்பயங்காம் - துற்மரணம்-துற்வியாதி-இவைமுதலிய பீடைகளடையாமல், சற்சிநேகம் - சன்மார்க்கம் - சற்குணம்-சதாயு - முதலிய நன்மைகளைப் பெறும்படிக்கல்லவோ அரசனுக்குச் சிங்காசனப் மட்டாபிஷேகஞ் செய்வது? அவ்வாறு பட்டங் கட்டிக்கொண்ட அரசனுக்கினியாலல்லவோ வருணநான்கும் வரிசைதப்பா திருப்பது? பூர்வத்தில் ஒருபாதம் சந்தனக்குழம்பிலும் மற்றொருபாதம் அக்கினிப் பிழம்பிலும்நாட்டி அரசாட்சி புரிந்துவந்த சக்கரவர்த்திகளின் சரித்திரத்தைக் கேட்டறியீரோ! ஓ தருமாத்மாவே! உமது தேவியாருக்குப் பணிவிடைசெய்து பிழைக்கவந்த ஏழையாகிய வென்னை இக்காட்சிகண்ட கீசகனைத் தீரவிசாரியாமற் போவீராகில், எனக்கு வேறுகெதியேயில்லை. உமது திடத்தைத் தெரிந்துகொண்ட பாதகன் இனி யென்னை யெங்கும் பிழை

க்கவொட்டான். எல்லாந்தெரிந்த பெரியோருக்குச்சொல்லாலுணர்த்துவ தியாதொன்றுமில்லை. ஓ தோன்றலே இவ்வுலகத்தில் தவஞ்செய்வதும், யாகம்புரிவதும், தீர்த்தமாடுவதுந் தெய்வந்தொழுவதும் பெரிதல்ல. அபயம் என்றுவந்து அடைக்கலம் புகுந்தவர்களை யாதரிப்பதுவே தருமங்களெல்லாவற்றினுஞ் சிறந்ததென்று, சதுமறைப் புரோகிதர் பிர்மஸூத்திரத்திற் சாற்றி யிருக்கின்றனர்.

அதற்குத் திருஷ்டாந்தங்கேளும். முற்காலத்தில் ஒருநாள் பிர்மாவினுடைய சபைக்குத் தேவேந்திரன் போனான். அவனைக்கண்ட பிர்மதேவன் சந்தோஷித்து, ஓ இந்திரனே! சொர்க்கமத்திய பாதலத்தோர் நடத்துகின்ற தர்மாதர்மங்கள் உன்னுதீனமா யிருக்கிறபடியால், நீ தருமசூக்குமமறிந்து நடத்தவேண்டியதாயிருக்கிறது நீ அவ்வண்ணம் நடத்தாவிடில், இந்தப் பூலோகத்தார் செய்யும் பாபங்களிற் பேர்பாதியுன்னைப் பிடியாமற்போகாது. அப்படிப்பிடித்த பாபங்களை நீ நீக்கிக்கொள்ள வேண்டுமானால், பற்பல அதர்மஞ் செய்கிறவர்களை உடனே யழித்துவிட வேண்டுமென்றார். இப்படிப் பலவாறாகிய அதர்மஞ்செய்யும் பாவிகள் யாரென்று தேவேந்திரன்கேட்க, வேதவிதியும் நீதிவழியும் உலகநடையுந் தப்பி நடந்தவர்கள்தான் பாவிகள். இவர்களில் நன்றிகெட்டவர்கள், அடைக்கலம்புகுந்தோரை யாதரியாதவர்கள், இவர்களை மகாபாவிகளென்னப்படும் ஆதலின்- இக்கொடிய அதர்மிகளை வச்சிராயுதத்தால் மண்டை கிழியமோதி, பண்டுசெய்த பாபங்களைப்போக்கித் தருமத்திற்பிரவேசிக்கப் பண்ணுவையாகில், அவர்கள்செய்த புண்ணியங்களிற் பேர்பாதி யுனக்குண்டாம். நீ மூவுலகிற்கு முதற்பதியோனாகையால், இந்தத் தருமசூக்குமத்தை யுமக்குச் சாற்றினேனென்றார். அந்தச்சதுமுகன் மொழியைக்கேட்ட இந்திரன் பூலோகத்தில்வந்து துஷ்டர்களைச் சிக்ஷித்து, சிஷ்டர்களை ரக்ஷித்து, புண்ணியம் பெருகப் பொருந்திவாழ்ந் திருந்தான். என்றுபெரியோருரைக்கக் கேட்டிருக்கின்றேன். ஓ விராடராஜனே! உன் மனைவியாரிடத்தில் வந்துசேர்ந்த அந்நாள்முதலிந்நாள் வரையிலும் இத்தன்மையாகிய துன்பம் நானறியேன். இன்றென் பொல்லாவினையால் வல்லாண்மைக்காரக் கீசகன் இக்கொடிய எண்ணங்கொண்டான். அவன்தானப்படி நினைத்தாலும், ஜெகந்தாங்கிய நீரும் பேசாமலிருந்தது என்தீவினைதான். ஐயா! உம்மிடத்தி லிப்பேர்ப்பட்ட குணமிருக்குமாகில், அரசாட்சி யெவ்வாறு நடக்கும் உம்மையார் மதிப்பார்கள்? உம்மையார் துதிப்பார்கள்? உம்மையாரடுப்பார்கள்? வருந்திவந்தவர்களின் துன்பத்தை மாற்றிக் காக்கவேண்டியது உமது கடமையல்லவா? நீர் அவ்வாறு செய்யாமற்போனால், சாஸ்திரப்படிக்கு உமக்கு மோக்ஷங்கிட்டாதே. ஓங்கிய நரகமும் உம்மைவிட் டகலாதே. அதிலும் பேதைப்பெண்கள் - நாதனற்ற வர்கள்-முடவர்-ஊமர்-செவிடர்-குருடர்-பிணியாளர் தரித்திரர்- வசிகள்-இவர் முதலானோருக்குத்தாயுந் தந்தையும் இராசனாகையால், அவர்களைத் தன்பிராணனைப்போ லாதரிக்கவேண்டும். ஓ பழிக்குடம்படாதபார்த்திபனே! நான் அநாதையா யிருக்கிறேன். நீரென்னை நிராதாவு செய்யாமல் இரட்சிக்க வேண்டுமென்று சைரந்திரி சொன்னாள்.

இவ்வாறு சைரந்திரியாகிய விரதசாரணி மொழிந்ததை விராடராசனறிந்து, ஓ மங்கையே! நான் கீசகனை விசாரிக்கவில்லையென்று கிலேசப்படுகிறாய். உனக்குமவனுக்கும் நேரிட்ட நேசமும், நீயவன் வீட்டிற்குப்போன காரணமும், உன்னைத் துரத்திவந்த விசுவாசமும். இன்னதென்று எனக்குத் தெரியாமையால், ஒருதலைவழக்காகத் தண்டிப்பது உத்தமமல்ல. எதையுங்காரணகாரியந்தெரிந்துகொண்டு தீர்க்கவிசாரணை செய்யவேண்டியது ஆயினும் உனக்கு வந்ததீங்கு ஒருவாறாய் விலகிப்போனதினால், அம்மா! நீ இந்தவேளை மனம் பொறுத்துக்கொள், என்று வாய்குளிரப்பேசினான். அவனது இன்சொல்லைக்கேட்ட பாஞ்சாலியானவள் விராடராசனுக்குமனோதைரியமில்லையென் றுணர்ந்து, ஐயா! நீர் சத்தில்லாவசனஞ்சொன்னீர். நான் உற்றதுரைக்கிறேன் கேளும். அடியாளுக்குக் காந்திருவரைந்துபேர் கணவர்கள். புஜபலபராக்கிரமசாலிகள். ஒப்பற்றவர்கள். விற்பனவிவேகிகள் அவர்கட்குப் பகைவரில்லை. யாருக்காயினும் அழிவுகாலநேரிடில், அவர்களவர்கட்குச் சத்துருவாய்த்தோன்றி அழிவார்கள், அக்காந்திருவர் வருகின்ற தேரோசையும் அவர்கள் கைக்கொண்டிருக்கும் வில்லோசையும், எட்டுத்திக்குப்பாலகரையுந் திடுக்கிட்டு விழிக்கச் செய்வதுமன்றி, சக்கிரவாளமுடிமட்டும் உக்கிரமாக வுடைபட்டுத் தத்தளித்தாடப்பண்ணும். அவர்களை யண்டினோருக்கு வேண்டிய பாக்கியங்களுண்டாம். அப்பேர்ப்பட்டமகாபுருஷர்களைமாலையிட்டு மருவிவாழுமென்னை, இப்பேர்ப்பட்ட கேலிக்கிடமாக்கிவிட்ட கீசகனுக்கு நாசகாலங் கிட்டியதென்பதற்குச் சந்தேகமில்லை. ஐயோ! இரும்பை நசுக்கிபொடிக்குஞ் சம்மட்டியானது நெருப்புக்கும் படுவதுபோல், உம்மையெங்கே மாட்டிக் கொள்ளுகிறதோவென்னுந் துக்கத்தால் இவ்வளவுதாஞ் சொல்லியழுகிறேன், ஐயா மச்சராசனே! இத்தியாதி வல்லமைபெற்ற காந்திருவர்கட்கு மனைவியாகிய நீ என்தேவிக்கு வேலை செய்ய வருவானேனென்றால், வினைப்பயனைவெல்ல வல்லவரில்லாமையால் என் நாயகரைவருந் தீவினைவசத்தால் தங்களுருமாறி யிருக்கின்றார்கள். அவ்வாறிருந்தபோதிலும், (கடுகுசிறுத்தாலுங் காரம்போகாது.) என்பதுபோல் தங்கள் தீரவீரமாறினவர்களல்ல. இப்போதிவ்விடத்தில் நடந்திருக்கின்ற கலகத்தை அவர்களுமறிந்திருப்பார்கள். தடையின்றி எங்குஞ் சஞ்சரிக்கும் நெஞ்

சுரமுள்ளவர்கள். தமக்குத்தாமே சங்கதி தெரிந்துகொ
ள்ளுஞ் சக்தியுடையவர்கள். இந்நேரம் இவன் பிராண
னுக்கு முடிவுதேடி உலைவைத்திருப்பார்கள்.

ஆகிலும்-மன்னனும் வேந்தன் வாய்பேசாதிருந்
தால், பெண்ணாகிய நான் போவதெவ்வாறு? ஓ புநித
னே, நான் ஒருவரையும் நோகத்தக்கதில்லை. பூருவந்தே
டிக்கொண்ட வினையையே நோகவேண்டும். என்றுபொ
ருமி விம்மிப்புலம்பி, ஓ சபைநிறந்தபுண்ணியவான்களே
சத்திய தருமமென்றும்-அசத்தியதருமமென்றும்-இரண்
டுண்டு, அவ்விரண்டினுள் சத்தியதருமமே முக்கியம். இ
ச்சத்தியதருமம் எவ்விடத்தில் விளங்குகின்றதோ? அவ்
விடத்தில் மகாலட்சுமியுடன் மாயோனிருப்பார். அந்த
ஸ்ரீயப்பதியிருக்குமிடத்திற் கிளர்ச்சியுஞ் சத்துரு செய
முமுண்டாம். அசத்தியதருமம் எவ்விடத்தி லிருக்கின்ற
தோ? அவ்விடத்தில் மூதேவி குடிபுகுவாள். மூடருறவு
எய்தும். அன்றியும் - அவ்வசத்திய தருமமுடையோர்
கொடுநாகிற் காளாய்த் தளர்ச்சியுற்று, அல்லலும் அரு
ந்துயரு மடைவார்களெனச் சுருதி முறையிடுகின்றது.
ஆகையால்-ஆணைப்பெண்ணைப் பெற்ற நீங்களாயினுங்
கவனித்து, தருமத்தை யனுசரித்துப் பொதுவாய்ப்பே
சப்படாதோ? (அரசனெவ்வழி குடிகளவ்வழி.) என்னு
ம் வாக்கியத்தை நிலைநாட்டினீர்களே. நீதிநெறி யற்றீர்
களோ? ஐயா! இந்நிலத்தில் நான் பெண் கப்பிற
ந்த பெரும்பிழையாதோ தெய்வமே! என்று தளர்ந்து
வாடினாள். அவ்வழகியமாதின் தளர்ச்சியைச் சபையிலி
ருந்த சகலரும்பார்த்து, கீசகனையும் விராடனையும் நிந்தி
த்து, விரதசாரணியின் பதிவிரதாதருமத்தைச் சிந்தித்து,
பெண்ணிலக்கணம் பூரணமாக அமைந்திருக்கின்ற பெ
ருந்தன்மையைநிதானித்து, இந்த அம்மாள் நல்லகுடிப்
பிறப்பாகக் காண்கிறது. தேவபுருஷ சம்பந்தம்போலத்
தோன்றுகிறது. குணம்-மணம்-குரல்-வசனம்-இவற்றை
நோக்குங்கால், பதுமினிஸ்திரீயா யிருக்கின்றாள். இத்த
ன்மையளாகிய உத்தமிகள் நினைத்த காரியங்களெல்லா
ஞ் சித்தியாகாமற் போகா. இந்தப் புண்ணியசாலியை
லேசானப்பெண்களைப்போல் எண்ணப்படாது. கெட்ட
மதியுள்ள கீசகன் துஷ்டநினைப்பினால் தொடர்ந்த மூட
த்தனமானது, அவன் பிராணமுடிவுக்கோ? அல்லது யா
துகாரணத்திற்கோ? எதுந்தெரியவில்லை. பூர்வஞ் சீதா
தேவிக்கு ஸ்ரமம் நேரிட்டாப்போல் இந்த மாதுசிரோ
மணிக்கும் ஸ்ரமம் நேரிட்டதல்லவா? என்று தங்கள் ம
னத்தைத் தாங்களே தேற்றிக்கொண்டு, அம்மா சும்மா
விரும். விசனப்படாதீர். உமக்கு நல்லகாலம் இந்த விரா
டபுரத்தில் தானே வரப்போகின்றது. உமக்குக் கெடுதி
நினைக்கும் பாதகர்கள் விரைவிலழிந்து போவார்கள்.
நீர் யாதொன்று மஞ்சாதீர். என்று சொல்லி வாழ்த்தி
னார்கள்.

திரௌபதியைத்தருமராசன்கடிய, அக்கு
றிப்பறிந்துசபையைநீங்கிச்சுதர்க்கணை
யிடஞ்சென்றுகூற, அவளுமற்றை
யருங்கேட்டவலித்தல்.

அக்காலையில் இவற்றையெல்லாம்பார்த்து உள்ளே
மாச்சரியமும் வெளிக்கு ஆச்சரியமுங் கொண்டிருந்த
கங்கபட்டரானவர் அத்திரௌபதியைப்பார்த்து, ஓ சை
ரந்திரிப்பெயர்பெற்ற பெண்பாவாய்! பெண்களுக்குரிய
நாணமடமுதலிய நாற்குணங்களுமாறி, இராஜசபையே
றி, அத்துமீறிப் பேசுகின்றாய். நீ மிக அநியாயக்காரி.
தருமபதியாகிய விராடபூபதி மகாதயாநிதி, சத்தியவாக்
கியர். சாதுசங்கப் பழக்கமுள்ள யோக்கியர். சகலவித
சம்பத்துடைய பாக்கியர். சதுர்வேத மோர்ந்தவர். தநு
ர்வேதந் தேர்ந்தவர். மநுமுறைகற்றவர். மக்களைப்பெற்
வர். நடுநிலையாகவிசாரிப்பார். பக்ஷபாதமிராது நீயஞ்
சாதே அவசரப்படாதே. இந்த மச்சராசன் விசாரியாம
ற்போனாலும், உனக்குரிய காந்திருவர்கள் அவசியம் வி
சாரிப்பார்களென்று உன் சொல்லினாலேயே விளங்குகி
றது. நீ யிந்தச்சபையில் ஆத்திரப்படவேண்டாம். தற்
காலத்துள்ள யசமான் கட்டளையைப் பரிபாலிப்பதே
முக்கியதர்மம். சாந்தகுணமே தகுந்த பூஷணம், பெண்
ணாகப் பிறந்தோருக்கு அடக்கமிருக்கவேண்டும். ஆதா
வற்றவர்க்கு அரசனே தெய்வமென்று நம்பி வாயடங்கி
ஒடுங்கிப்போகவேண்டும். அல்லது தாங்க ளெவ்விடத்தி
ல் வேலைசெய்கிறார்களோ? அந்தவிடத்திற் சொல்லி அ
வர்கள் மூலமாக விசாரணைக்கு வரச்செய்யவேண்டும்.
அப்பொழுது உன்மனக்குறை எப்பொழுது மில்லாமல்
நீங்கும். இப்பொழுது நீ அந்தப்புறம் போய்ச்சேர். எ
ன்று கங்கபட்டருரைத்த கருத்தைத் தெரிந்துகொண்ட
மங்கையானவள் அங்கைகுவித்து, புத்தியென்று போற்
றி, சுதர்க்கணை யிடத்திற்போய்ப் பெருங்காற்றி லலைந்த
முருங்கைபோற் சுருங்கி ஒடுங்கிநின்றாள். இவ்வாறு ஓ
ய்ந்துநின்ற மாலினியை அரசன்பத்தினி பார்த்து, அம்
மா! கருங்குவளை நெருங்கிய கண்களும், வெண்டாமரை
போன்ற முகமும், சண்பகப்பூவனைய மூக்கும், முல்லை
யரும்பைப்பழிக்கும் பல்லும், அமுதமாகிய சொல்லும்
கொவ்வைக்கனிக் கொப்பா மிதழும், ஆகிய யிவைகளெ
ல்லாம், இராகுவினால் தீண்டப்பப்பட்ட சந்திரன்போற்
குறைந்து, வதங்கிய உடலும் வாடிய நடையுமாய் வ
ருவானேன்? கண்ணீர்சொரிவானேன்? போன இடத்தி
ல் பொல்லாங்குண்டோ? அப்படிக்கேதாகிலு முண்டா
னால் இப்பொழுதே சொல்லும். நானிராஜனிடஞ் சொ
ல்லித் தப்பாமல் தண்டிக்கிறே னென்று கேட்டாள்.
அப்படி அன்புடன் கேட்ட சுதர்க்கணையைத் திரௌ

பதாதேவி பார்த்து, அம்மா கைவிரலாற் கண்ணைக்குத்திவிட்டு யார்குத்தினார்கள்? குத்தியதற்கு காரணமென்ன? என்று கேட்பது ஆச்சரியத்தின்மே லாச்சரியம். ஆ ஆ! என் நிர்வாகமுதலிய யாவற்றையும் முன்னாடிச் சொல்லியிருந்த என்னை உமது தம்பியினிடத்திற் கனுப்பி வைத்து, பின்னாலொன்றுந் தெரியாதவள்போல் நடிதுடித்துப் பேசுகின்றீரல்லவா? ஆயினும் பெரிதல்ல. உமது வார்த்தையின் வண்ணம் புட்பமுந்தேனுங் கொண்டு போய்க்கொடுத்தேன். அந்தக்கீசகன் என்னைக் கண்டவுடனே எழுந்தோடிவந்து, என்கையிலிருந்த மாலையையும் மதுவையும் வாங்காமல், என்மேல்விழுந் தீர்ப்பதற்கெண்ணினான். நான் அந்தப் பாதகன்கையி லகப்படாமல தப்பியோடி, விராடராஜன் சபையிற்போய் விழுந்தேன். அப்பாலென்னைத் தொடர்ந்துவந்த பாவி எப்பாடுபட்டானோ நானறியேன். என்றுசொல்லி இருகண்களினு நீருகுத்துருகியழுதாள்.

இவ்வாறு உருகியழாநின்ற விரதசாரணியின் துக்கத்தையுஞ் சோபத்தையுஞ் சுதர்க்கணை நோக்கி, அம்மா அந்தப்படுபாவி என்தம்பியானாலும் மகாபதிவிரதையான உமதுசித்தத்தைச் சிதையப்பண்ணிய படியால், கடைகஷ்டனாகிய துஷ்டனானான். (தாய்க்காகாதபிள்ளை ஊர்க்காகாது.) என்பதுபோல், உனக்காகாதசாவான் எனக்குமாகாமற் போவான். உனக்கொருநாளுங் குறைவில்லை. ஓ பங்கமில்லாத தங்கமே காமி-வாமி-வெறியன்-முறியன்-வறியன்-சிறியன்இவர்களுக்குமட்டுமரியாதை கட்டுத்திட்டம், ஈனமானம், விதிவிலக்கு, விவேகமுதலியவுங் கிடையா. இவாள் நன்மையினால் வசமாகமாட்டார்கள். விர்த்தியாகவு மாட்டார்கள். அவர்களுக்குச் சவுக்கடியே தெய்வம். ஆதலின்-முறைகெட்ட மூடனாகிய கீசகனைக் கொல்லவேண்டு மென்னும் நினைப்பிருந்தாற் சொல்லும், விராடராசனுடன் கலந்துபேசி வேலையை முடிக்கச்செய்கிறேன். உமதெண்ணத்தை எனக்குணர்த்தும். என்று சுதர்க்கணை கேட்க, அம்மொழியைக் கேட்ட விரதசாரணியானவள்-அம்மா ஏதோ என்னுடைய கர்மானுபவம் இப்படியிருந்தது. இராசசபையி லிருந்தவர்கள் நகைப்பதற் கிடமுண்டாயிற்று. திக்கற்ற எனக்குத் தெய்வமிருக்கின்றது. (அடாதுசெய்பவர் படாதுபடுவர்) என்னும் பழமொழியுண்டு. அதுபழுதுபடாது என்விஷயத்தில் அபராதியாகிய கீசகன் கந்திருவரைவராற் கால்சாய்ந்துபோவான். எனக்குரிய நாயகர்கள் இன்றைக்கோ நாளைக்கோ வரப்போகின்றார்கள். அப்பொழுதிவன்செய்த அக்ரமமனைத்தும், இவன் தலையோடு போமோ? அல்லது இந்தத் தாணியோடு போமோ? நான்யாதொன்றுந் தெரியேன். ஓ அன்னையே நான் உம்மைவந்தடுத்து, உம்முடைய உப்புந்தண்ணீரும்புசித்து, ஒருகுறைவுமின்றிக் காலங் கழித்து வந்த என்னால், உமக்கு ஒருகுறைவும் இல்லாதிருக்கும்படி என்னிஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண் டிருக்கின்றேன். என்று வண்ணமகள் கூறினாள். அப்பெண்ணின் வார்த்தையைக்கேட்ட சுதர்க்கணையானவள் கண்ணீர்விடுத்து, அவள் கண்ணைத்துடைத்து, விம்மிமெலிந்து, நம்மிலொருவனாகிய தம்பி வெம்பி விழுங்காலம் வந்ததே, புத்திரமித்திராதியரை இழந்துபோக நேரிட்டதே என்று கலக்கமுற்று மிகவும் ஏக்கங்கொண்டிருந்தாள். இப்படி துக்கப்பட்ட சுதர்க்கணையாகிய வண்டுவிழியாளுக்குப் பண்டுதொட்டுத் தொண்டுபுரிந்து அண்டையில் நின்ற பெண்டுகளெல்லாம் ஒன்றுகூடி, மாலினியைக்கண்டு மதிமருட்கொண்டு, ஐயோ கண்டகனாகிய கீசகன் பண்டைவினையால் பொன்றுங்காலத்தைத் தேடிக்கொண்டானே அது பெருந்தீயைப்போல் மூண்டுவிட்டதே. விராடராசனுக்கும் விதண்டையான விபாகூலம் விளைந்ததே. இந்தமோசத்திற்கு நாம் தப்பிப்பிழைக்கும் வகை யெப்படியென்று கிலேசித்து எண்ணமிட்டுக்கொண் டிருந்தார்கள். இப்பாற் பாஞ்சாலியைப் பிடிக்கவந்த கீசகன் திரௌபதாதித்தன் அனுப்பிவைத்த கிங்கரனால் வீசிமோதியவீழ்ந்து, மிகவும் வேஷ்டியால் தாழ்ந்து, நாம்வாழ்ந்தவாழ் விதுலோவென்று மனமெலிவடைந்து, தாஷ்டீகந்தளர்ந்து, மோகச்சமுத்திரம் வடிந்து, திம்மை திரும்பிச் சிந்தைதெளிந்து, மபக்கமாறித் தன்மாளிகைபோய்ச் சேர்ந்தான்.

தருமநந்தனர் சிலகுறைபாடுகளைக்கூறி விராடனைக்கடிய, அவன்சபைகலைவித்து அந்தப்புரஞ்சேர்தல்.

இவனது நிலை இப்படியிருக்க-அச்சமில்லாதிருந்த மச்சராசன் கொச்சைமொழியாள் கேட்ட கேள்வியினால் நாணப்பட்டு, சபையிலுள்ளோர் பேசிய தன்விபகாரத் தாழ்வையும் கீசகன் தேடிக்கொண்ட நாசத்தையும் தன்மனதுட்கொண்டு, மைத்துனனைக் கொல்லுந்திறந்தனக்கில்லாமையாற் புல்லிவர் தங்களைப்போற் பொருமலுற்றிருந்தான். இத்தன்மையிலிருந்த விராடராசனைவேதவிதியும் நீதிவழியுந் தெரிந்த கங்கபட்டர் பார்த்து, "பூதலமாண்மையாற் புரக்குமன்னவர், தீதொழில் புரிஞரைத் தெண்டியாரெனி, னீதியுஞ் செல்வமு நிலைபெறுங்கொலோ, வேதிலர் தமரென விரண்டு பார்ப்பரோ." ஓ சாந்தகுணவேந்தனே ஆண்மையுடன் அரசாக்ஷி செய்யும் அரசர்கள் துட்டரைப் பிடித்துக் கொட்ட மடக்காவிடில், அப்பட்டினத்துச் செல்வமும்-ராசநீதியும்-நிலைபெறுவாம். புகழ்ப்பிரதாபமுங் கைகூடாது. செங்கோற்செலுத்துந் திறமை யுடையவர்கள் விபகாரதிசையிற் தன்னவன் பிறன் என்னும் பக்ஷபாதம் பார்க்கப்போகாது. வயிறு வளர்ப்பதற்கு வந்து உம்முடைய மனைவியையடுத்துக் குற்றேவல்செய்து சீவனம் பண்ணுகிற ஒரே

மைமேல், மச்சராசன் மச்சான் இச்சைவைச்சானென்பது வசையோ? அன்றி இசையோ? இதுபெரிய மனிதனுக்குள்ள நேயமா? ஒருபெண்ணைத் துரத்திவந்தது ஞாயமா? சுத்தவீரனாயிருப்பவன் கொடுமை நினைத்தது தர்மமா? நீர்சும்மா இருந்துவிட்டது மர்மமா? இது கீழ்மக்கள் செய்கையல்லவோ? அக்கீசகன் தன்னைவிடப் பிரபஞ்சமில்லையென்று உம்மை மதியாதிருக்கின்றான்: உமது துரைத்தனத்தில் இப்பேர்ப்பட்ட கெடுதியைச்செய்து கெலித்துப்போனான். இவனுக்கு எதிரொருவருமில்லை அப்பனிப் பெண்ணுக்குத் திக்கொருவருமில்லை. அப்படிக் கிருந்தபோதிலும், எல்லோருக்கும்பொதுவில் தெய்வமொன் றிருக்கின்றதல்லவா? பாவபுண்ணியங்களைப் பார்க்குந் தருமதேவதையானவள் சற்றேனுஞ் சகிக்கமாட்டாளே: அரசன் அன்றேகொல்லும். ஆனால் தெய்வமோ? நின்றுகொல்லும். உலகமாயை யொழித்த ஞானியையுந் தீவினைதொடராது விடாது. தருமத்திற்கு விரோதமான காரியம் எப்போதுங் கழுத்தறுப்பென்பது கதையிலுங் கேட்டறியீரோ? பெண்ணிச்சை யென்று சொல்லும் இது, சகல ஆத்மகோடிகளுக்குஞ் சகசமாயிருப்பது. அவ்வாறிருப்பினும், இலைமறைவோ? காய்மறைவோ? என்றிருந்து, தாராதாமறிந்து, காலமிடந்தெரிந்து, (காற்றடித்தது தாழைபூத்தது.) என்னுங் கற்பனைபோல் அநுபவிக்கவேண்டியது. அப்படிக்கில்லாமல், அதுவே உற்பனமாய்க் கண்டவிடத்திற் கண்ணுங்கருத்துஞ்செலுத்திப் பெண்டாசைகொண்டு பிதறித்தவிப்பது துன்பத்திலும் பெருந்துன்பமாய்ச்சேருமே. ஐயோ நீ இதுவரையிலும் பெற்ற மகிழ்ச்சியும் புகழ்ச்சியுங் கெட்டுப்போமே. இனி யிகழ்ச்சிக் கிடமாகுமே இறைவனே என்று தருமராசன் சாற்றினார்.

இப்பால் விராடராசன் இங்ஙனமுரைத்த கங்கபட்டர் வாக்கியமும்-விரதசாரணிக்கு நேரிட்ட அபாக்கியமும்-அதனால் தனக்குவந்த சிலாக்கியமும்-தன்னிருகாதைத்துளைத்து உருவிப்போனதினாற் களைத்து, புத்தியுமிளைத்து, சிங்காசனம்விட்டெழுந்து, திருமனைக்குட்புகுந்து, தியங்கித் திகைத்து, மயங்கிமலைத்து, பிரக்கினைதப்பி யிருந்தான். அந்தக் கொலுமுகத்தி லிருந்த வீமன் நெருப்பினும் அதிகமாகப்பொங்கி, பொறிசிதறக் கண்களையுருட்டி விழித்து, நறநறவென்று பல்லைக்கடித்து, கையை தேய்த்து முறுக்கிமோதி, முகத்தைச்சுளித்து விராடனைப்பழித்து, விண்ணுமண்ணும் வேகக் கலகலவென்று சிரித்து, குகைக்குட்புகுஞ்சிங்கம்போல் மடைப்பள்ளியிற் புகுந்தான். பின்பு தருமராஜனும் மற்றத்தம்பிமாருந் தங்கள் காலத்தை நினைந்து வருந்தி, தங்கள் தங்கள் இடம்போய்ச் சேர்ந்தார்கள். வெற்றிவேலேந்திய விராடராசன் படுக்கைபொருந்தாமற் புரண்டு, அழிவில்லா அரசுக்கு அனர்த்தம் வந்ததேயென்று பழிகாரக் கீசகனை வெறுத்துக் குறுகுறுத்து, தன் தீவினையையொறுத்து, இனிநாம் முடிபொறுத்திருப்பது எப்படியென்று எங்கியிருந்தான். மகாலட்சுமிக்கொப்பாகிய சுதக்ஷணாதேவியானவள் துன்பமடைந்து, எப்படி விளையுமோ? என்னநேரிடுமோ? நமதுசெல்வங்கள் எவ்வாறாமோ? என்று திகிலடைந்திருந்தாள். அந்த மச்சநாட்டில் மருவிய நான்குவருணங்களுந் தங்களுயிரின் மேலும் உடலின்மேலும் இச்சைவிட்டு அச்சமோ டிருந்தார்கள். ஓ அரசனே? இக்கொடிய செய்கைக்கு யார்தான் விசனப்படார்கள்? என்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது சந்திரகுலத்தோன்றலாகிய ஜெனமேஜெயமகாராஜன் மனஸ்தாபப்பட்டு, இதென்ன பாவமென்றேங்கி, பக்கத்திலிருந்த தக்கமனைவியான வபுஷ்டாதேவியுடனெழுந்துபணிந்து, சுவாமி, மகாபதிவிரதையாகிய பாஞ்சாலியம்மனானவள், அந்தத் துன்மார்க்கக் கீசகனைச் சபித்துத் தன் மகத்துவத்தை நிலைநாட்டி வரிசைபெறப்படாதோ? ஏன் சும்மாவிருந்தான்? மானங்கெடுங்காலத்திலில்லாத மகத்துவம் மற்றொருகாலத்தில் இருந்தென்ன? போயென்ன? அந்தக்கீசகன் எம்மாத்திர மனுஷன்? எவ்வளவு பலமுள்ளவன்? எந்தக்குலத்திற் பிறந்தவன்? சுதர்க்கணைக்கும் இவனுக்கும் சகோதர சம்பந்தம் எவ்வாறுண்டாயிற்று? இவனுக்குவிராடன் அடங்கியிருக்கவேண்டிய காரணமென்ன இந்த விபரங்களை யெல்லாம் எனக்கு அறிவிக்கவேண்டும் புண்ணியனே என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

கீசகன் வரலாறு.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே? பிர்ம சிருட்டியாலுண்டான பிரபஞ்சத்திற் பிராமண ஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தோர்களைச் சூதகுலத்தாரென்று சொல்லுவார்கள். அந்தச் சூதகுலம் க்ஷத்திரியகுலத்திற்குத் தாழ்ந்ததென்றும், வைசியருக்கு உயர்ந்ததென்றும் ஜாதிநூலிற் சொல்லியிருக்கின்றது. அப்படிக்கிருந்தபோதிலும், அதுமுதலிதுவரையிற் சூதகுலத்தில் க்ஷத்திரியர்கள் சம்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். க்ஷத்திரியகுலத்திற் சூதகுலத்தாருக்குச் சம்பந்தமில்லை. இந்தப் பரதகண்டத்திற் கேகயராஜனொருவனிருந்தான். அந்தக் கேகயராஜன் இராஜகன்னி யென்பவளை விவாகம்பண்ணிக்கொண்டு லோகப்பிரசித்தனாய் வாழ்ந்தான். அவனுக்கொரு பெண் பிறந்தாள். அந்தப் பெண்தான் இந்தச் சுதர்க்கணையென்பவள். இவள் பிறந்த பின்பு வேறு பிள்ளைகளில்லாமையால், இந்தச் சுதக்ஷணாதேவியைப் புஷ்பச்செடிபோல் அருமையாக வளர்த்து வந்தார்கள். இப்படியிருக்கையில், இவள் தந்தையாகிய கேக

யராஜன் ஆண்பிள்ளை பிறக்கவேண்டு மென்னும் ஆசையால் மாளவதேவியென்பவளை இரண்டாவது மணம் புரிந்து கொண்டான். அவள் கருப்பத்தில் நூற்று நாலு பிள்ளைகள்பிறந்தார்கள். அவர்களில் இந்தக் கீசகன்தான் மூத்தவன். சிங்கபலனென்றும் - பாணனென்றும் பேர்வாய்ந்தவன். மகாபலசாலி. இப்படியிருக்க-விராடராஜனுடைய முதற்பெண்சாதியாகிய சுரதையென்பவள், சதானீகன் - சங்கன் - வாரகன் - வாரககேது - என்னும் இந்நால்வரைப் பெற்றுவைத்து இறந்துபோனாள். பிற்பாடு இந்தச் சுதர்க்கணையைக் கலியாணஞ்செய்துகொண்டான். இவள்வயிற்றில் உத்தரன்-உத்தரை-என்னும் ஆணும் பெண்ணும் ஒருபேருய்ப் பிறந்தார்கள். இவ்விராடராஜனுக்கு அபிமான புத்திரனாக முதற்பிறந்த சுவேதனென்பவனொருவன். இவர்களியாவரும் குழந்தைகளானபடியாலும், விராடன் தம்பிமார்கள் பதின்மர் நிடந்தப் பினவர்களாகையாலும், விராடனுடைய மச்சதேசஞ் சகலவளங்களும் உள்ளதாகையாலும், சத்துருக்கள் அநேகரிருந்தார்கள். அதனுல் விராடன் சித்தங்கலங்கி, இந்தச் சுதர்க்கணைக்குத் தம்பியாகிய கீசகன் சத்துரு சங்காரனென்று கேள்விப்பட்டு, அவனைவருவித்துத் தனக்குதவியா யிருக்கும்படி கேட்டுக்கொண்டான். அதற்குடன்பட்ட கீசகன் உபகீசகர்களாகிய தன் தம்பிமார்களுடன் இந்தவிராடபுரத்தை யடுத்து, சேனுபதிப் பட்ட முடையவனுய்த் திக்கு விஜயம்புரிந்து, சகலராணிபாட்சிக்குந் தானே சுதந்திரனுனன்.

இப்பொழுது நான்சொன்ன கீசகர்கள் யாவரும் பூர்வசனனத்திற் காலகேயர்க ளென்னுங் காந்திருவர்கள். பாணனென்பவன் முதலாக அந்த நூற்றுநாலு பேர்களும் வாமகாரிகளாகவும் - காமகாரிகளாமவும் - சாமவேதியர் சாபம்பெற்றுப் பூமியிற் பிறந்தார்கள். பாணனென்னுஞ் சிங்கபல கீசகனுனவன் அஸ்திரசஸ்திரங்களுக்குரியசாஸ்திரங்களை அப்பியாசித்து, பதினுயிரம் யானைபலமுள்ளவனுப் பகைவரைக் கொன்று, பலரையும் வென்று விராடபுரத்தாசை நிலைநிறுத்தி வைத்தான். இவனைப் பகைத்தெதிர்த்த திரிகர்த்ததேசாதிபன் - தசாரண தேசராஜன் - கஜேருகதேசாதிபன் - மாளவதேசபோஜன் - யவனதேசராஜன் - புளிந்தநகர்த்தலைவன் - கோசலதேச முதல்வன் - அங்கராஜன்-வங்கதேசன் - கலிங்கராஜன் - தக்கணதே சாதிபன் - நிடததேசாதிபதி - இவர்கள் முதலானேர்களும், கிராதகுலத் தலைவர்களும் இவனுடன் போர்புரிந்து வெல்லமாட்டாமல்; தோழிந்து, வில்லொடிந்து, இனிச் சாகிற பரியந்தம் இவனுடன் சண்டைக்கு வருவதில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டு, ஊர்முகமா யோடிப்போனர்கள். அதனுலிவன் அநேகவெற்றி பெற்றவனுய், மதிமந்திரியொப்பப் புத்திகற்றவனுய், இத்தேச முழுவதுந் தனக்குச் சுவாதீனமாக்கிக்கொண்டு, தனக்கொருவரு நிகரில்லாமல் யதேச்சையாக விருக்கின்றுன். எல்லாமர்மங்களுந் தெரிந்தவனுகையால் இவனுக்கு விராடன் அடங்கியிருக்கின்றுன், இதனுலேதான் திரௌபதியைத் தூரத்திவந்த தூக்கிரதத்தைப்பற்றி யொன்றுங் கேளாமற்போனது அதன்றியும் - திரௌபதியம்மன் கீசகனைச் சபிக்கப்படாதாவென் றுவினவினீரே: அதற்குக்காரணஞ் சொல்லுகிறேன் கேளும். தனக்குரிய கணவர்கள் கண்குத்திப் பாம்புபோற் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கும்போது தான் சபிப்பது தருமமல்லவென்றும், சூரிய நமஸ்காரஞ்செய்த சுகிர்தத்தினுல் தனக்குத் துன்பமில்லாமற் போயிற்றென்றும், எப்படியும் வீமன் தப்பாமற் கொல்லுவானென்றுந் தைரியங்கொண்டு; சபிக்காமல் விடுத்தாள். ஓ வெண்கதிர் குலத்தோனுகிய வேந்தனே? நீர் கேட்ட சங்கதியைச்சந்தேகமறச்சொன்னேன். மேல்நடக்குங் கீசகனுடைய அழிவையுஞ்சொல்லுகின்றேன் கேளும். என்று வைசம்பாயனர் ஸ்ரீவேதவியாசரைச் சிந்தித்து வந்தித்துச் செப்பத்தொடங்கினர்.

திரௌபதிவீமசேனை மடைடபள்ளியிற் சென்று கண்டு தன் குறைகூறி வெறுத்துக் கொள்ளுதல்.

ஓ ஜெனமே ஜெயமகாராஜனே! இப்பால் மாதமொன்றுக் கொவ்வொருவராக மகாமேருவை வலம்வருகின்ற துவாதசாதித்தர்களில், அந்தமாசத்தி லுதயமான மித்துருவென்னுஞ்சூரியன் சதாதிரௌபதியம்மனுற் பூசிக்கப்பட்டவனுதலால்; திரௌபதாதித்தனென்று பேர் பெற்றுன். அவன்விரதசாணிக்கு விளைந்த வேஷ்டையைக்குறித்து அச்சூரியகுலத்தோனுகிய கீசகனை வெறுத்து, அவன் குலதர்மத்தை விட்டு வழுவினனென்னுங் கோபத்தினுல் விஸ்தாரமுள்ள தன்கிரணத்தைக் ஒன்றுபடக்கூட்டி, அஸ்தமான கிரியில் தேரோட்டி, மேற்றிசைசிவக்க நாற்றிசையுவக்கச் சாய்ந்து சமுத்திரத்தில் தோய்ந்தான். அக்கால் அங்கரிலுள்ளோர் யாவரும் அடிவயற்றில் வடவாக்முகாக்கினியைக் குடிவைத்துக் கொண்டு, பகீரொனத்திகிலடைந்து, நித்திரைவிட்டு, நினைவுங்கெட்டு, நெட்டுயிர்ப்பெறிந்து, உயிராசைதுறந்து உறக்கமற் றிருந்தார்கள். சுதக்ஷணுதேவியி னிடத்திலிருந்த திரௌபதாதேவியானவள் தீராத்துயரத்தினுற் சுந்தைவருந்தி, கண்கலங்கிக் கவலைகொண்டு, ஜெபதபஸ்நானபோஜனுதிகளுந்துறந்து, எண்ணுறு மெண்ணி, நமதுபுகழுக்குப் பழுதுவந்ததேயென்றுநெருப்பிலிட்ட மெழுகுபோல் நெஞ்சமுருகி, ஏக்கமேலிட்டு, தூக்கங் கொள்ளாமல், நடுராத்திரியில் வெளிப்பட்டு, தருமராஜனுடைய சரணுரவிந்தத்தைத் தியானித்து, காவலாளிகளின் கண்ணிற் படாமல் மடைப்பள்ளிக்குட் சென்று, வெண்பட்டுமெத்தைமேற் சயனித்து நித்திரைபிடியாம

லிருக்கின்ற பலாயனனைப் பார்த்து, ஓ வருஷகாலத்து விருஷபம்போன்ற மன்னனே என்மானங்கெடநினைத்த கீசகனைவாட்டாமல் மெய்மறந்து உறக்கங்கொள்கின்றீரோ? கவலையுள்ளவர்க்குக் கண்ணுறக்கம்வருமோ? நான் பட்டபாட்டைப் பார்த்திருந்த நீர் கொஞ்சமேனும் படபடப்பின்றி முற்றிலும் மறந்துவிட்டீரோ? நல்லது எழுந்திரும் எழுந்திரும்: என்றாள். இவள் வருவதற்குமுன்னமே எண்ணமிட்டுக் கண்ணைமூடிக்கொண்டு கலவாத்திலிருந்த வீமசேனன் திடுக்கென்றெழுந்து, ஓ பேதையே! நாம் ஓரினத்தாரென்று ஒருவருக்குந் தெரியக்கூடாதே. அதை யோசிக்காமல் நீ யிப்படியும் வாலாகுமோ வென்றான்.

அந்தச்சொல்லைப் பாஞ்சாலி பொறுக்கமாட்டாமற்பதைத்து, ஆ ஆ! நீர் சொல்வது நன்றா யிருக்கின்றது. நானெவ்வளவோ பாதவிப்போடு குறை சொல்லிக்கொள்ள வந்தால், வந்தகாரியத்தைப்பற்றி யோசிக்காமல் ஆரோ? எவரோ? ஏனோ? தானோ? என்பவனைப்போல் அலக்ஷியமாகப்பேசுகிறீர். வெகுநேர்த்தி வெகுநேர்த்தி! பாஞ்சால புத்திரியாகியும்-பாண்டவர்களுக்குப் பத்தினியாகியும்-இந்திரப்பிரஸ்தத்திலிருந்த என்னை அஸ்தினபுரத்திற் கழைத்துவந்து, நூறு துட்டரை வெளியிட்ட பட்டபுதேவியை எனக்கிட்டமான மாமியென்று அவள் கிட்டவைத்துப்போய், சொக்கட்டானடித் தோற்றுதிக்கெட்டுமுள்ள துராதுரைகள் நிறைந்த சபையில் துச்சாதனன் என்னை மற்கட்டி யிழுத்துவர, கர்னன்-துரியோதனன்-முதலிய பலரும் இகழ்ந்து துர்ப்பாஷைகள் வழங்க, அதனால் என் அங்கம் பங்கப்படும்போது வீஷ்மர்-துரோணர்-கிருபர்-விதுரர்-திரிதராஷ்டிரர் - இவர்கள் ஊமைபோ லிருக்க, நீங்களைவரும் ஐம்பொறி யடக்கியென்னும் ஆமைபோலிருக்க, ஆபத்பாந்தவனும் - ஆதிமத்தியாந்த ரகிதனும்-ஆதிமூலப்பொருளும்-அநந்த கல்யானகுணனும்-யதுகுலமுதல்வனுமாகிய ஜநார்த்தனன் சன்மானத்துடன் என்மானங் காத்தருளினர். நீங்கள் அந்நாளிலிருந்த தன்மைபோலவே இந்நாளிலும் இருக்கப்போகின்றீர்களென்று முன்சாக்கிரதை செய்ய முழுராத்திரியில் வந்தால், என்னையேன் வந்தாயென்று கடிகின்றீர். நான்பிறந்த அகத்திலும் புகுந்த அகத்திலும் அதிகசெல்வமாய் ஓராயிரஞ்சேடியர் புடைசூழ்ந்து ஊழியஞ்செய்ய வாழ்ந்திருந்தேன். உங்களுடைய வீரமில்லாத சாந்தத்தினால் இப்போது கற்களும் முற்களுமுள்ள கானகமெங்குந் திரிந்தலைந்து, கசங்கிவருந்தி, காய்கனியருந்தி, பனிரண்டுவருஷங்கழித்தேன். இதுபோதாமல் இன்னும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்வதற்கு உருமாறிப் பெயர் வேறுகொண்டு, என்னிருகையுங்கன்றி என்மெய்யொளியுங் குன்றச் சிற்றேவல்புரிந்து வருங்காலையில், கொடிய கீசகனானவன் இவ்வித அவதிப்படுத்தினான். பூமண்டலமுழுதும் புகழ்பெற விளங்கிய தருமராசனானவர் வைதிக வேடம்பூண்டு ஒருமார்க்கமா யிருக்கின்றார். திரிபுவனகண்டக ஜெயசிகாமணியாகிய விஜயன் பேடியுருவெடுத்து, நாடகத்தொழிலடுத்து, ஆடல்பாடல் தொடுத்து, மூடுமுக்காடிட்டிக்கொண் டிருக்கின்றார். நகுலசகாதேவர்க ளிருவரும் வெளியில் தத்தமக்கேற்ற தொழிலில் அமைந்திருக்கின்றார்கள். இவர்களிடத்திலெல்லாஞ் சொல்லிக் காரியமென்ன ஒருலாபமுமில்லை. எனக்குரிய ஐவரில் என்னெண்ணப்படி நிறைவேற்ற உம்மைவிட மற்றொருவரா லாவதில்லை. எனக்கு உற்றதுணை நீயே. வாயாற்கூறிய சபதத்தையும், மனத்தால் நினைத்த குரோதத்தையும், முன்பின்பாராமல் முடிக்கத்தக்க பலசாலி நீராகையால், உம்மிடத்தில் என்குறையை முறையிட்டுக் கொண்டேனென்றாள்.

வீமன் துரௌபதியைத் தேற்றிக்கீசகனைக்கொல்வதற்கான ஓர் சூழ்ச்சியைச்சொல்லியனுப்புதல்.

ஓ மகாராஜனே! இவ்வாறோதிய பாஞ்சாலியின் மொழியை வீமன்கேட்டு வெடுக்கென்றெழுந்து, காரணகாரியங்களை யோசித்து, "பொறையெனப் படுவ தாடவர் தமக்குப் பூணெனப் புகலினும் பொருந்தார், முறையறப்புரிந்தா லக்கணத்தவர்தம் முடித்தலை துணிப்பதே முழுப்பூ, ணறைமலர்க் குழலார் தமக்குமெய்யகலா நாணமே நலஞ்செய்பூ ணெனினு, நிறையுடைப் பெரும்பூ ணமளிவாய் நாண நிகழ்வுறு நிகழ்ச்சியே யன்றோ" ஓ மாதே! புருஷர்களுக்குரிய ஆபரணம் பொறுமை, ஆயினும்-நீதிவழுவிய நிர்மூடரைக் கணப்பொழுதாயினுந் தாமதியாமற் குப்புறத்தள்ளி யுதைத்து, தலைபிளக்கமிதித்து, கீர்த்தியை நிலைநாட்டுவதே சிறந்த ஆபரணமாம். கலனிறைந்த மங்கையருக்கு நலனிறைந்த ஆபரணம் நாணமென்பதுதான். ஸ்திரீபுருஷர்கள் கூடுங்காலத்திலும் அந்நாணம் நீங்காமற் சரசஞ்செய்து அநுபவிப்பதே, பொற்பூஷணங்களிற் சிறந்த நற்பூஷணமாகும். இப்படியிருக்க-எனக்குப் போதுமான பலமிருந்தும், என்கைக்குத்தக்க கதாயுத மிருந்தும், என் தம்பி தனஞ்செயனுக்குச் சாற்றற்கரிய சௌரிய பராக்கிரம மிருந்தும், அவன்கையில் திரிலோகத்தையும் வெல்லவல்ல காண்டீபமிருந்தும், என்னலாபம்? அஸ்தினபுரத்திற் சகுனியுடன் சூதாடித் தோற்ற பொழுதும் உன்னைத் துச்சாதனன் இழுத்துவந்த பொழுதும், இராஜசபையில் மானபங்கம் பண்ணிய பொழுதும், துரியோதனன் - கர்னன் - இவர்கள் வம்பு வார்த்தைகள் பிதற்றிய பொழுதும், ஆற்றக்கூடாமல் உடல்பதறி யெழுந்த எங்களை ஆத்திரப்பட வேண்டாமென்று அடக்கிய அ

ண்ணாவானவர், இப்பொழுதும் இந்த விராடன்சபையில் உன்னைத் துரத்திவந்த கீசகனைக்கொல்ல வெண்ணிய என்கோபக்குறி தெரிந்து, சவுக்ஞையாகப் பேசிச் சாடைகாட்டித் தடுத்துவிட்டார். இவர் என்றென்றைக்கும் இத்தன்மையாகவே இருந்தால், எங்கள் மானமுங் கெட்டு ஈனமும்பட்டுப்போவோ மென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால்-ஓ நல்லாய்! இப்படி எங்களைச் சமயத்தில் மீறவொட்டாமற் சங்கடப்படுத்திவருந் தருமராஜனாலுண்டாகிய மனஸ்தாபத்தையும்-துரியோதனாதியரால் விளைந்திருக்கின்ற கோபத்தையும் இந்தக் கீசகன்பேரிற் காட்டி, என் கீர்த்தியை நிலைநாட்டி, யானைமத்தகத்தைப்பிளக்குஞ் சிங்கம்போற் பாய்ந்து, அவனுடலை வாட்டிக் குடலைப்பிடுங்குகிறேன். இனிமேல் இவன் விஷயத்தில் யார் குறுக்கிட்டாலும் நானுடன்படப் போகிறதில்லை. இவனை உயிருடன் விடப்போகிறதுமில்லை. இவ்வுலகத்தில் அற்பர்களுடைய பெண்சாதிமார்களெல்லாரும் அதிக சௌக்கியமடைந் திருக்கும்போது, விற்பனர்களாகிய எங்கள் பத்தினியான நீ மெலிந்து விசனப்படவேண்டியவிதியென்ன? நல்லதாகட்டும். வல்லவருக்கு வாழ்க்கைப்பட்டும் இப்படி வருத்தப் படுகின்றோமே யென்று நீ சற்றும் மனமிளைக்க வேண்டாம்.

ஓ மாதரசி! முன்னாளில் தீவினைவசத்தால் அகஸ்தியருக்கு அன்புடைய பத்தினியாகிய லோபாமுத்திரையென்பவள் கணவனுக்குப்பணிவிடைசெய்து, ஆகாரம் நித்திரையின்றிநெடுநாள் கஷ்டப்பட்டு, பிற்பாடுநல்வினைப்பயத்தாற் சுபமுஞ் சுகமுங்கீர்த்தியும்பெற்றாள். இதன்றியும்-யயாதிமகாராஜன் புத்திரியாகிய சுகன்னியானவள் சவனமகாமுனிவருக்குச் சிசுருஷைசெய்து, சிலநாள் வருத்தப்பட்டு, பலநாளும் பாக்கியத்துடன் வாழ்ந்து, கண்ணியம்பெற்றுப் புண்ணியலோக முற்றாள். வீமராசன் மகளாகிய தமயந்தியானவள் பிள்ளைகளைப்பிரிந்து, புருஷனையுநீங்கித் தனியளாய்க் காட்டில் அலைந்து, கரும்பாம்பின் வாய்ப்பட்டு, வேடனால் வெளிப்பட்டு, சிறியதாயார் வீட்டிற்போய்ச் சேர்ந்து அங்கே குற்றேவல் செய்துகொண்டிருந்து, கொஞ்சநாளைக்குள் தாய்தந்தையையடுத்து, பின்பு தூதுவிடுத்துப் பிரிவுற்ற நாயகனைக் கண்டுகூடித் தன்சேயோடு மகிழ்ந்து சிறந்து வாழ்ந்திருந்தாள், இவ்வாறு எத்தனையோ கோடி இராஜஸ்திரீகள் படாதபாடும்பட்டுக் கற்புக்கோரிடையூறுமின்றிப் பதம்பெற் றிருந்தார்கள். ஆகையால்-தேவர்களானாலும் நல்வினைதீவினையை அநுபவித்தே தீர்க்கவேண்டும். இப்பொழுது நமக்குண்டாகிய துன்பம் இன்னும் முப்பது நாளைக்கு மேல் இன்பத்தை விளைக்கக் காத்திருக்கின்றது. (பட்டவர் பதத்திலிருப்பார்கள்.) என்னும் பழமொழி யறியாயோ? அப்படிக் கிருந்தபோதிலும் இந்தப்பகையை எந்தவிதத்திலுஞ் சீக்கிரத்தில் நானே முடிக்கிறேன். ஓ பாக்யவதியே! அஞ்சவேண்டாம். என்று வீமசேனன் சொல்லித் தேற்றினன். இவ்வார்த்தையைப் பாஞ்சாலிகேட்டு, ஐயா கதாபாணி! முரசக்கொடி முதல்வனாகிய தருமராஜன் உமது குறிப்பையறிந்து கோபமேலிட வொட்டாமல் தணித்தாரென்று மனக்குறை வேண்டாம். நம்முடைய பகையாளி நிச்சயித்த பன்னிரண்டு வருடமுங்கழித்து, ஒருவருடம் அக்ஞாதவாசஞ் செய்யும்படியாக இந்த விராடபுரத்திற்கு வந்து கொஞ்சநாளாயிற்று இன்னுஞ்சிலநாள் ஒருவரும் அறியாமலிருந்து காலம்போக்கவேண்டும். இதற்குள்ளாக நம்மை யாவரேனுங்கண்டாற் பகைவெல்ல வந்த நற்காலந் துற்காலமாம். பின்பு பழையபடி வனவாசம் பண்ணவரும். அதனால் உங்கள் சீருஞ்சிறப்புஞ் சபதமும் பலயீனப்படும். என்றுநினைத்து உம்மை அவசரப்படவொட்டாமல் அடக்கினார்.

இதல்லாமலும்-அவர் காலதேச வர்த்தமானந் தெரிந்த புத்திமானாகையால், உமது வெகுளியைக் கண்டவுடன் அடக்கவேண்டிய கடமைதான், அதனால் அவர் பேரில் தோஷமில்லை இந்தப்பஞ்சையாகிய கீசகன் என்னைக் கொஞ்சமாக நினைத்தான். அப்போதவனை நான் பார்த்து, அடாபாவகாரி! அடாதுரோகி! உனக்குக் கேடுகாலநேரிட்டது. எனக்குக்காந்திருவர் ஐந்துபேர் கணவர்கள். மிகுந்த திடவான்கள். சத்துருவை வீரசொர்க்கஞ்சேர்க்கும் விஷயத்தில் மகாவல்லவர்கள். மித்துருவானவர்களுக்கு உத்தமமுணமுள்ள நல்லவர்கள். எல்லாமறிந்தவர்கள். பொல்லாங் கொழிந்தவர்கள். எங்குமிருப்பவர்கள். நீ செய்ததீமைகள் அனைத்தையுந் தெரிந்துகொள்ளத்தக்க ஞானமுள்ளவர்கள். சொல்லாமற் சொல்லிக் கொல்லாமற் கொல்லத்தக்கவர்கள். நீயும் உன்குடும்பமும் நீறுபழியாதே: என்று பலநீதிகளையும், பழமையாய் நடந்திருக்கின்ற சிலசேதிகளையுஞ் சொன்னேன். அந்தக்கீசகன் நான் சொல்லியவற்றை அலட்சியஞ் செய்து, போ: போ: அவர்கள் எப்பேர்ப்பட்ட காந்திருவரானாலும் என் முன்னிற்பார்களோ? என்று எசித்துறத்திக்கொண்டு வந்தான். அந்தப்பதிதன் உமக்குமுன் எதிர்ப்படுவானாகில், என்ன பாடுபடான்? கருடனது நிழற்பட்ட பாம்புபோற் கெடுவான். .என்மனம்பற்றி எரிகிறது. அந்த நாசகால கீசகன் வந்தவழி போனவழி தெரியாமல் நொந்தழியும்படிக்கு நீர் பிரவேசிக்கவேண்டும். ஆனால் ஆத்திரப்படாதேயும். இன்னும் இரண்டொருநாள் காலதாமசஞ்செய்து இவனைமுடித்தால், விரதசாரணிக்கு அன்பர்களாகியகாந்திருவர் கீசகனைப்பிடித்துத் துடிதுடிக்க அடித்து முடித்துவிட்டார்களென்றுபேசிக் கொள்வார்கள். அப்போது உம்மேற் சந்தேகங் கொள்ளுவதற்கிடமிராது. ஆகையால் உமதுயுக்திக்கு இசைந்தபடி பார்த்துக்கொள்ளும். என்று திரௌபதிதை சொன்னாள்.

அந்தக் கற்புடையாள் வார்த்தையை வீமன்கேட்டு, ஓ பாஞ்சாலி! கீசகனைக்குறித்துக் கிஞ்சித்தேனும் நீ

போசிக்கவேண்டாம் அவனென்றைக்கு உன்னைத்தொடர்ந்தானோ? அன்றைக்கே அழிந்தானென்று நம்பு. உன்னிஷ்டமெப்படியோ? அப்படியே அவனுயிரை நஷ்டப்படுத்தி விடுகிறேன். ஆனால் இப்பொழுது விடியற்காலமாயிற்று. இனிநாம் அந்தக் காரியத்திற்குப் பிரவேசித்தால், அஞ்ஞாதவாச ரகசியம் வெளிப்பட்டுப் போய்விடும் தருமபுத்திரர் சித்தத்திற்கு மெத்தவருத்தஞ் சம்பவிக்கும் அன்னமே! நீ முன்னமே சொன்னவண்ணமே எண்ணித் துணிவது கருமமாதலால், இன்றிரவு முழுமையும் நாளைப்பகல் முப்பதுநாழிகையும் பொறுத்து, நாளை யிராத்திரியை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன். நீயந்தச் சுதர்க்கணை மாளிகைக்குப் போய்விடுவையாகில், அந்தத்துற்புத்தியுள்ள கீசகன் நாளைக்காலமே உன்னிடத்திற்கு வந்து, இறுமாந்து கெர்வங்கொண்டு, ஓ விரதசாரணி! இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? நானுன்னைத் துரத்திவந்தபோது என்னையார் கேட்டார்கள்? என்னையார் தடுத்தார்கள்? எனக்கும் எதிரில்லை. உனக்குந் திக்கில்லை. என்றுசொல்லி மகாதாராளமாய்க் கிட்டிப்பேசுவான். அவனை நீ பார்த்தவுடனே அன்புள்ளவளைப்போல் அரைக்கண் பார்வை நாட்டி, அதிமோகமுக நயஜாடைகாட்டி, ஆசைவிநய அபிநயம்புகட்டி, மோகவிஷத்தை அவன்முடிமே லேற்றி; உன் கற்புக்கு மாத்திரம் பழுதில்லாமல் அந்தக் கயவனுடன் கலந்துபேசி, விராடபுரத்திற்கு மேற்கிலிருக்கு மாஞ்சோலை சூழ்ந்த வசந்த மண்டபத்தில் நாளை இராத்திரி பத்துநாழிகைக்கு அவனை வரும்படியாகப் பக்குவப்படுத்திக்கொள். என்று யுத்திசொல்லித் திரௌபதியை அனுப்பிவிட்டு, தான் நெய்வார்த்த நெருப்பெனப்பொங்கி முகம்வேர்த்து, நித்திரைபிடிக்காமற் சித்தம்பிரமித்து, தான் குறித்த காலவளவைக்கருதி, பகலிரவென்று பாராமற் சுடச்சுட வேலை முடிப்பதற்கில்லையேயென்று மனக்கலக்கங்கொண்டு, படுக்கையில் மல்லாந் தெண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அவனாரெனில்-தருமராஜனுக்கிளைய சத்தியவிரதனும், கருமலைபோல் வளர்ந்த இருபுஜமுள்ளவனும், பதினாயிரம் யானைபலம் பெற்றவனுமாகிய வீமசேனன்.

பாஞ்சாலிவழக்கப்படி நந்தவனத்திற்குச் செல்ல, அங்கேமீடடுங் கீசகன்வந்து வேண்ட, அவனை வீமன் குறித்த விடத்திற்கு வரசொல்லி, மீளுதல்.

இத்தன்மையா யிருந்த வீமனிடத்தில் விடைகொண்டு சென்ற விரதசாரணியானவள் சுதர்க்கணை மாளிகைக்குப் போய், பொழுது விடியுமளவும் ஒருவிதமாய் முகஞ்சுளுக்கிக் கொண்டிருந்தாள். அப்படிக்கிருந்த பாஞ்சாலியின் மனோதுக்கத்தைப் பரிகரிப்பதுபோல் அவமுககமலமானதை மலரக்காட்டும்படியாக, ஒளியைக்கூட்டி இருளையோட்டி கதிர்க்கிரணங்களை நீட்டிக்கொண்டு சூரியன் உதயமாயினான். அழகிய உதயகிரியிலெழுந்த ஆதித்தனைக்கண்ட சைரந்திரியானவள் வழக்கப்படி காலைக்கடனை முடித்து, சுதக்ஷணாதேவிக்கு மலரெடுத்துத்தொடுத்துக் கொடுப்பதற்குப் பூஞ்சோலைக்குட் புகுந்தாள். அப்போது இராசஸ்திரீயாகிய சுதர்க்கணைமுன் தன்னை நிந்தித்த நிர்ப்பாக்கியத்தால் மனம் வருந்திப்போன கீசகன் தன் தமக்கையைச் சந்தித்து க்ஷமை கேட்டுக்கொண்டு வருவோமென்று நினைத்து, மந்தமாருதமுலாவிய நந்தவனத்தில் வந்தான். அவன் வந்தவழியிற் சந்திரவுதயம்போற் கொந்தலர் பறித்துக்கொண்டு நின்ற கோதையானவள் அவனைக்கண்ட மாத்திரத்தில் அந்தகனைக்கண்ட ஆன்மாவைப்போல் நடுங்கி, தெளிந்த சிதேந்திரியர்களைப்போல் உடனேதேறி, மனந்தளராமல், சங்கடப்படாமல், தள்ளாடி ஓடாமல், தவித்துவாடாமல் சற்றும் அச்சமில்லாமல், தலைகுனிந்து, தன் காற் புறவடியைப்பார்த்து, நிமிஷத்திற்கொருதரங் கீசகன் முகத்தைநோக்கி, சற்றே புன்சிரிப்பாக நகைத்து, அவனது துற்புத்தி படருவதற்குத் தானே கொழுகொம்பாகி, வீமனிடத்திற் பேசிக்கொண்ட சங்கேதப்படி நிறைவேற்ற வெண்ணினாள். அப்போதவ்விடத்திற் கற்புநிலை தவறுமற் பொற்பிரதிமெய் போலிருந்த மாலினியைப் பழிவழிக்குவந்த முழுமூடன் பார்த்து, சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் பெருகி, சந்திரகாந்தக்கல்லைப்போலுருகி, செல்வத்தைக்கண்ட தரித்திரன்போல் மகிழ்ந்து, கலவிதிபொருளிற் கற்பனையலங்கார கவிதை மேற்கொண்ட கனவான்போல் முகமலர்ந்து, விழிகுளிர்ந்து, அவள்கால்முதல் தலைவரைக்கும் யிமையாமற் பார்த்து, தன் அறிவுகெட்டு, அறபபுத்திமேலிட்டு, திக்குநோக்கிக் கும்பிட்டு, இதனைப் பேசுவதாயினான்.

ஓ விரதசாரணி! எனக்குப் பிராணதாரம் நீயன்றி வேறில்லை. நான் சொல்லப்போகின்றதை நன்றாய்க் கேள். இந்தப்பட்டினமும்-இந்நாட்டு வளப்பமும் விராடனுடைய வாழ்க்கையும் - என்தமக்கையாது மங்கிலியசூத்திரமும்-இதோ என் இடதுகையில் முடிவைத்திருக்கின்றேன். என்கையை விரித்துவிடுவேனாகில், அவைகளெல்லாந் துறுவாசர் சாபத்தாற் சமுத்திரம்போயழுந்திய தேவேந்திரன் செல்வம்போலாய்விடும். என்னை என்னமோவென் றெண்ணாதே. முன்னமே என் வல்லமை யாவுஞ் சொல்லியிருக்கின்றேன். உன்னைநான் துரத்திவந்தபொழுது யாரென்னைத் தடுத்தார்கள்? எவர்கள் என்னருகில் வந்தார்கள்? விராடராஜனாவது எனிப்படி செய்தாயென்று கேட்டானா? உனக்காகிலும் உதவி ஒத்தாசை செய்தானா? ஒன்றுமில்லை. ஆதலால் இன்னும் நான்

உனக்குச்சொல்ல வேண்டுமா? இந்தவேலை என்னையல்லாமல் இன்னொருவன் செய்திருப்பானுகில், இந்நேரம் அவனை எமலோகத்திற் புழுவாய்த்துடிக்கச் செய்வேன். எல்லோரும் என்காலிற் வீழ்வதினுற் சகலமுமெனுக்கே சொந்தமென்று உனக்குத் தெரியவில்லையா! இந்த விராடனுக்கு நான்கட்டிவைத்திருக்கின்ற பட்டத்தை இப்பொழுதே உனக்குக்கட்டி, உன்னைப் பெண்ணரசியாக்கிவைக்கிறேன். வேண்டுமானுற் பிரத்யெக்ஷமாகப்பார். இதன்றியும் - உன்னைக்காக்குங் கந்திருவ ருண்டென்று பேதைமதியால் நம்பிப் பெருமோசம் போயிருக்கின்ருய். என்னைப் பேசாதும்பேசிக் கருக்கின்ருய். வீண்கர்வங்கொண்டு செருக்கின்ருய். இப்பேர்ப்பட்ட தறியில் உதவிசெய்ய வாராதவர்களை உனக்கு உரியவர்களென்று எண்ணலாமா? அவர்கள் பண்டவாளத்தையும் பக்ஷத்தையுங் கண்டுகொண்ட நீ இனி வேறு பேசப்போமா! அற்ப கந்திருவர் பேச்சு அவலமாய்ப்போச்சு. நான் ஆருக்குமடங்காதவன். ஆர்படைக்குந் தோற்காதவன். என்னைக்குறித்து இன்னுமென்ன சொல்லப் போகின்ருய்? உன் எண்ணந்தானென்ன? அடி வண்ணமகளே! ஒருவேளை என்பேரிற் குற்றம் எத்தனையோ இருக்கலாம். சிறியோர்செய்த பிழையைப் பெரியோர் பொறுக்கவேண்டுமென்று புண்ணியவான்கள் பேசியிருக்கின்ருர்கள் அந்தவார்த்தைக்கு விக்கினமில்லாமல் மன்னித்து, என்னைரட்சித்து, பொறுமையுடன் ஆதரிப்பது உன்கிருபைக்குரிய கடன். என்று தன் இருகாத்தையுந் தலைமேற்குவித்துச்சேவித்து, உன்கல்மனம் இளகி என்கருத்துமுற்றக் கனிவாய்திறக்க வேண்டுமென்றுகாலில் வீழ்ந்தான்.

இவ்வாறு பாதவித்துக் காலில்வீழ்ந்த கடும்பாவியை மாலினிபார்த்து, முகநபத்துடன் முறுவலுங் காட்டி, நாம் நினைத்தகாரியம் இன்றைக்கு நிறைவேறுமென்று மாயச்சாயல்-மயக்கநோக்கம் - வஞ்சனைப்பேச்சு-இவைமுதலிய மார்க்கங்களினுல் வசனிக்கத தொடங்கினுள். வாரும் கீசகாசனே! நான் உம்மைத்தடுத்ததும் விரகதாபப்பட விடுத்ததும்-உமதுமனம் வருந்தப்பேசியதும்-என்னத்தினு லென்ருல், எனதுமேலான மரபினுலும்-நல்லொழுக்கத்தினுலும்-நான் கொண்டிருந்த விரதத்தினுலும்-உமது எண்ணத்தைப் பின்னப்படுத்தினேன். நீரொன்பேரில் ஆசைப்படுமுன்னமே நான் உம்மேற் பாசங்கொண்டிருந்தேன். அதல்லாமலும்-நீரென்மேல் வைத்த மோகம் நிலையானதுவோ? நெறியானதுவோ? வேறொரு பெண்ணைக்கண்டாற் பின்வாங்குமோ? மனதேங்குமோ? என்னமோ? ஆதலால் ஆண்பிள்ளைகளின் புத்தி சபலமாமேயென்று சோதிக்கு நிமித்தமாக, இஷ்டமில்லாதவள்போல அபிநயித்தேன். என் மெய்தொட்டிருந்த காந்திருவர் ஐவரும் என்னைக் கைவிட்டார் போலுந் காண்கிறது. இனிக்காரியமில்லை. என்மேற் காவலுமில்லை. ஓ வீரியவானே! நிராதரவான என்னைத் தாதாமறியத்தக்க நீர் அபேக்ஷித்தபொழுதே, நான் புனிதவதியானேன், என்னைப்பெண்டாள நினைத்த உமக்குச் சீக்கிரத்தில் மேலான பாக்கியமுண்டாம். என்னுல் உமக்குவிளைந்தவருத்தமும் இன்று கூண்டோடுபோய்விடும். பெண்களின்குண மறிந்திருந்தும் வீணே இத்தனைதூரம் பிரபலப்படுத்திவைத்தீர். நீர் காணுதுகண்டு கருதி மோகித்ததும், வீணுசைகொண்டு விருதாப்பழி சுமந்ததும், நான் நாணுதுநாணி நலிய வாதித்ததும், நீரென்னைப் பிடிக்கவந்ததும், நான் இராஜசபையி லோடிவிழுந்ததும், ஊர்நாடெல்லாஞ் சிரிக்க உடம்பெடுத்ததும், ஏதோ நம்மிருவருக்குங் காலவித்தியாசம். கடந்துபோய் விட்டது. போனதுபோகட்டும் இவ்வுலகத்தில் ஆலாலவிடத்தையும்-ஆவிபறிக்குமந்தகனையும் - யானை கவட்டையும்-வேங்கைப் புலியையும்-அறிவில்லா மூடரையும்-ஒருவாறு நம்பலாம். சேலைகட்டுமாதரை க்ஷணமும் நம்பப்படாது.

அஃதெவ்வாறெனில் - இந்திரன்முதலாகிய இமையோரேவந்து ஆடையாபரணந் தந்து ஆசைப்பட்டாலும், ஸ்திரீகள் தாங்கள்கொண்ட மையலை வெளிப்படுத்தாமல், ஆசையற்றவர்போல் முகத்தைச்சுளித்து, முடுக்காய்முறுக்கி, ஏன் என்னைப் பார்க்கின்ருய்? நானென்ன வேசியா தாசியா? உனக்குத்தங்கை தமக்கையில்லையா? எங்கள் வீட்டார்கண்டாற் சும்மா விடுவார்களா? என்று தலைகுனிந்து, கலகலவென்று கண்ணீர்சொரிந்து, சிறுநகைகாட்டி, குறுவியர்வு வழித்தெறிந்து, மாராப்புத்துணியைப் பத்துதாமிழுத்திழுத்துச் சொருகி, வாயைமூடிக் கையைநெரித்து, ஜாலமானமாய்க் காயக்கங்காட்டி, கால்கடுக்க நிற்பானேனென்று தனக்குத்தானே பேசிக்கொண்டு, அப்பாற் சிலதுதூரம்போய் இப்பால் வந்து எட்டிப்பார்த்து, ஒருபக்கத்தி லொதுங்கித் தலையை நீட்டிக்காட்டி, மறுபடியுமறைந்து, மறுபடியுங்கிட்டி, உறவுகொள்வதுபோற் கலந்து உடனே ஓடி, ஊடிக்கலந்து கூடித்திரிவர். இதுபெண்களின் கெட்டசுபாவம். இப்பேர்ப்பட்டவர்கள் மனதை எப்படி தெரிந்து கொள்ளலாமென்ருல்-அந்நியபெண்டுகளாவது-தாதிமார்முதலிய வேலைக்காரிகளாவது-குழந்தைகளாவது கிட்டநின்ருல், அவர்கள்பேரில் விழுந்தும், வல்லிக்கொடிபோல் துவண்டு வளைந்தெழுந்தும், பிள்ளையை அணைத்துக்கொஞ்சி முத்தாடியும், புஷ்பத்தைப் புன்சிரிப்போடு முகந்தும், பெருமையாக டம்பம்பேசியும், விறுதாவாய் ஒருவரையேசியும், சொற்பமானபேச்சுகளை ஓடியமாய்ச்சொல்லியுங் கூசுவார்கள். நாயகன் அவர்களைப் பார்த்தால் அவர்கள் நிலத்தை நோக்குவார்கள். நாயகன் அவர்களைப்பார்க்காதபோது தலையெடுத்துப் புருஷனை நன்ருய்ப்பார்த்து நாணி நகைப்பார்கள். இப்படி இன்னும் அநேகஜாலதந்திரங்களுண்டு. இந்தக்குறிப்புகளை யெல்லாம் வேறு

பாடில்லாமற் சரச நாயகன் தெரிந்து, மேளத்திற்குத்
தகுந்த தாளம்போட்டு எண்ணத்தை முடித்துக்கொ
ள்ளுவான். மற்றவன்கண்டாற் சங்கதியறியாமல், இதெ
ப்படிபோமோ? என்னமாமோ? என்று பயந்து ஓடிப்
போவான். ஆதலாற் பெண்கள்கொண்ட புருஷவிரகமா
னது லோபியர் பொருள்போல் அழுந்தியிருக்கும், ஆ
ண்பிள்ளைகள் கொண்ட மோகமானது கல்லாதான்கற்ற
கல்வியைப்போல் வெளியாய்ப்போம். இந்தக்காரியந்தெ
ரியாமல் அவசரப்பட்டவர்கள் பலனடையார்கள். நீரு
ம் அவ்வாறே ஆத்திரப் பட்டுவிட்டீர். இப்பொழுதுதா
னென்ன? உமது இஷ்டத்தை என்னிஷ்டப்படி முடிப்ப
தினாற் பாபமில்லை. உமக்குள்ள காமவெள்ளத்தைக்கட
ந்து கரையேறுவதற்கு வழிகாட்டுகிறேன். நீர் கள்ளமி
ல்லாமல் வாரும். எத்தனைவித சாகசங் கற்றிருந்தாலும்
உள்வீட்டிற் காணம்போடலாகாது. என் கணவராகிய
கந்திருவர்கள் ஒருவேளை இந்தச்சேதி தெரிந்து வந்துவி
ட்டால் உம்முயிரும்போம். என்தலை மயிரும்போம்.

அன்றியும்-நேற்று என்னைத்தூத்திய உம்மை இந்
நாட்டிலுள்ள பெண்களும் புருஷர்களும் இராஜன் முத
லிய அனைவரும் நன்று யறிந்தார்கள். லோகப்பிரசித்தி
யாச்சுது. அப்படியிருக்க-நாமிருவரும இன்றைக்கு உற
வாடுவதைப் பார்த்தால் மெத்தம் எளிதஞ்சொல்லிப்பழி
ப்பார்கள். உம்முடைய தமக்கையாகிய சுதர்க்கணைக்கு
த்தெரிந்தால் என்னைச்சுத்தமாய் நம்பமாட்டாள், இது
வரையிலும் நான் பிழைத்தபிழைப்பு பேய்பிழைப்பாய்
விடும். அநேக பொல்லாங்குகளும் விளையும் நல்லதல்ல.
ஓ சந்தனமணித்தோளனே! நீர் இன்றிரவிற் பத்துநாழி
கைக்குமேல் வருவீராகில், என்னிஷ்டப்படி முடியுமெ
ன்று பாஞ்சாலிசொன்னாள். அந்தத் தேன்மொழியான
து கீசகன் காதிற்புகுந்து அமுததாரைபோல் விரகாக்கி
னியை ஆற்றியபோது, வெளியெழும்பிப்போக வழிபா
ர்த்திருந்தபிராணன் நிலைத்து, இளைத்தவுடம்பும் பூரித்து
துன்பங்கள் நீங்கி, இன்பஞ் செழித்தேறத் தேகம்பாவ
சமடைந்து, மோகஞ்சிறந்து, ஓ மேகங்கண்டாடுமயிலே
இப்போதல்லவோ உன்சொல்லாகிய ஆபரணம் என்கா
திற் கணியாயிற்று. இந்தக்கர்ம பூமியில் உடலெடுத்தப
யன் இன்றுதான் லபித்தது, துற்பலனான நான் நற்பல
னுற்றேன், என்பாவங்கள்யாவும் பறந்தோடிப்போயின
நானிதுவரையிலும் பண்ணியபுண்ணியம் இன்று ஏடே
றியது. என்பாக்கியமே பாக்கியம். நான் பிழைப்பதற்
குத் துணைக்காரணமான உன்வாக்கியமே வாக்கியம். எ
ன்று வாய்புதைத்துக் கைகட்டி, மெய்யொடுங்கி வணங்
கிப்பணிந்து, ஓ என்னிஷ்டகாமியத்தை நிறைவேற்றிய
ஆவியே! பாவியாகிய நான் எவ்விடத்திற்கு வரும்படி
யாய்க் கட்டளையிட் டருளுகின்றீ ரென்று கேட்டான்.
வாரும் ரசிகனே! விராடராஜனது கோட்டைக்கு மேல
ண்டையி லிருக்கின்ற மாஞ்சோலையில், குயில்கள் கூவ
வும்-மயில்களாடவும்-கிளிகள் கொஞ்சவும்-அளிகள் மிஞ்
சவுமாகி, மகாவலங்காரமாகப் பளிங்குக்கற்களாற் கட்
டிய வசந்தமண்டபத்தில்வந்து சேரும். நீர் வருமுன்ன
மே நான் வந்திருக்கின்றேன். ஓ மல்லகள்பேரிலு மோட்
டுந் தேரினையுடைய வீரியனே! இப்பொழுது நான்சொ
ன்ன இடம் சந்தடியற்ற தனியிடமல்லவா? என்று விரத
சாரணி வினவினாள். அம்மொழியைக்கேட்ட கீசகன்-
ஆ! ஆ! என்கண்ணே! அதுவே யெனக்குந் தகுந்த இட
ம். தேவரீர் திருவாய்மலர்ந்த வண்ணஞ் சீக்கிரம் வருகி
றேன், உமது திருமேனி புழுதிபடிந்து அசுத்தமாயிருக்
கிறதென்று கூச்சம் வேண்டாம். உமக்கு நல்லநல்ல ஆ
பரணங்களும், விலையேறப்பெற்ற வஸ்திரங்களும், புநு
கு-சவ்வாது-கதம்பம் கஸ்தூரி-அத்தர்-பனிநீர்-இவைமு
தலிய பூச்சுவகைகளும், புட்பச்செண்டுகளும், பஞ்சகச்
சாய பரமான்னமும், பலகாரங்களும், பழவர்க்கங்களும்
பஞ்சவிடைய தாம்பூலங்களும் என்தலைமேற்சுமந்துகொ
ண்டு வருகிறேன். நீர் அவைகளை யங்கீகரித்து என்கோ
ரிக்கையை யீடேற்றவேண்டும். ஓ கோமளமே! ஓ என்
குலதெய்வமே! ஓ சித்தசன் கொலுக்கூடத்திற் கமைத்த
பொக்கிஷமே! என்பிராணனை உமக்கே ஒப்புவித்தேன்.
இதைவிட வேறே யுபசாரஞ்சொல்ல அறியேன். அடி
மைசிறியேன். என்னுயிருள்ளமட்டும் உம்மை நான் பிரி
யேன். மறுமாதரை நோக்கேன். என்பேரிற் கிருபைவை
க்கவேண்டும். என்று செலவு பெற்று கொண்டு, காளவி
டத்தை தாகத்திற்கு உட்கொள்ளக்கருதிய தரித்திரன்
போற் கீசகன் சென்று, இந்தச்சூரிய னெப்பொழுது
தொலைவானென்று அந்தகன்பாசந் தன்னைக் கலக்கவிரு
க்கும் அஸ்தமானத்தை நாடியிருந்தான்.

திரௌபதி வீமசேனனைக்கண்டு நடந்தவிதங்கூற, அவனவட்குச் சில திட்டங்கூறியனுப்புதல்.

இப்பாற் கொலைசெய்யுங் கூர்வேல் போன்ற கண்
ணாளாகிய பாஞ்சாலி சுதர்க்கணை மனைக்குப் போய்ப்
பூமாலைகளைத் தொடுத்தளித்து, பூசுவனவுங் கொடுத்
து, அவளுத்தரவின்பேரில் மடைப்பள்ளிக்குச் சென்
று, மதகரிவீமனைக்கண்டு, நாம் பேசிக்கொண்ட படிக்
கு அவனை இசையச் செய்துகொண்டேன். அப்பால்
தெய்வசெய லெப்படியோ என்றாள். அந்தத் திரௌ
பதியை வீமசேனன்பார்த்து, ஓ காதலி! நீயேன் கவலை
ப்படுகிறாய் ஒருவேளையந்த கீசகன்வாராமற் போவானாகி
ல்நான்போய்கொல்லுகிறேன். அஞ்ஞாதவாசத்தவனைக்
குறிவ்வூரார் அறிவார்களேயென்றுயோசிப்பையாகில்இ

ந்தவிராடபுரத்தி லுண்டாகிய ஆண்பெண் அடங்கலையுபகொன்று, துரியோதனாதியருக்குச் சேதிதெரியாமற் பண்ணுகிறேன். சிலவேளை துரியோதனனறிந்து பெரும்படைகொண்டு வந்து, அக்ஞாதவாசம் பூரணமாய் நிறைவேறாமற் குறைவுபட்டுக் கெட்டுப்போனபடியால் மறுபடியும் பன்னிரண்டுவருடம் வனவாசம் பண்ண வேண்டிய நிபந்தனைப்படிக்குப் போகவேண்டுமென்று புகன்றானாகில், அப்போதேயந்தத் துரியோதனனையும் அவனைச்சேர்ந்த மற்றவர்களையுங் கொன்றுபள்ளத்திற் புதைத்து, அஸ்தினாபுரம்-விராடபுரம்-உபலாவியமுதலி உலகுக்கெல்லாந் தர்மராஜனைப் பட்டங் கட்டிவைத்து, எல்லோருங் கொண்டாடவெங்கும் பிக்கியாதியா யிருப்பேன். சண்டிபுரண்டாற்காடுகொள்ளாதென்னுஞ் சங்கதியறியாயோ? சமுத்திரந் தடையாயிருப்பது கரையினாலேயா? சத்தியத்தினாலேயா? ஓபாஞ்சாலி! நீயாதொன்றுக்கும்பயப்படவேண்டாம்போ. என்றனுப்பினான். அவ்வாறே செலவுபெற்றுக்கொண்ட திரௌபதியானவள் வீமசேனனைப்பார்த்து, ஓகெடி வீரசிங்கமே! அங்கம் பங்கப்பட்டழியப்போகின்றகீசகன், என்சொல்லை நம்பி யெப்படியுந் தப்பாமல் வருவான். நீரின்று இரவில் அங்குசென்று, சாலஞ்செய்யாமல் - சந்தடிகாட்டாமல் -வேலையை முடிக்கவேண்டும். வேந்தனே! இப்படியாக இதனை நடத்திவிட்டால், சாந்தமூர்த்தியாகிய தருமராஜனுடைய சித்தங்களிக்கும். மற்றத் தம்பிமார்களுக்குஞ் சந்தோஷமுண்டாகும், சுதர்க்கணையும் மற்றஸ்திரீகளும் ஆதிமுதல் விரதசாரணி சொல்லிவந்தவசனம் நிசமானதென்பார்கள்.. உங்கள் யார்மீதுங் கலவரமில்லாமற் போய்விடும். இந்தச்சொல் வெளிப்படுமாகில், நமதெண்ணமெல்லாமழிந்துபோய்விடும். அன்றியும் - பதிவிரதையைக் கருதிய பாவியாகிய கீசகன் பாழாய்ப்போனான் பார்த்தீர்களா வென்று உலகிலுள்ள பதிவிரதைகள் இப்போது மகத்துவமாய்ச் சொல்லிக் கொள்ளும் வார்த்தைகளுங் கெட்டுப்போம். மேலும்-பாண்டவர்கள் அக்ஞாதவாசம் பண்ணும்போது, தவணை பொருவருஷங் கடப்பதற்கு முன்னதாய் வெளிப்பட்டு விட்டார்கள். சொற்சோர்வுபட்டார்கள். பஞ்சவர்பேச்சுப் பஞ்சுபோலாச்சு, என்று யாரும் நகைப்பதக்கிடமாய் விடும். நீங்காப்பழிச்சொல் நிலையாய் நிற்கும். ஆகையால் - நீர்மனம்பொறுத்து, அவசரப்படாமல், ஆடம்பரங்காட்டாமல், யாருமறியாமல், அடக்கமாய் முடிக்கவேண்டுமென்று கூறினாள். அந்தமொழியைக்கேட்ட பலாயனன் சிந்தைமகிழ்ந்து, நல்லதப்படியே யாகட்டும் நீமாத்திரம் பிறரறியாமல் விரைவாய் அவ்விடம்வந்துசேர். என்று தலைவர்யல் வரையிலும் வந்து விடைதந்து, இந்தச்சூரிய னெப்பொழுது அஸ்தமனமாவானென்பதாய்ச் சிந்தைவருந்தித்தியங்கியிருந்தான்.

திரௌபதியும் வீமசேனனுங் கீசகனுக்குக் குறித்தயிடஞ்சென்று அவன்வரவுக் கெதிர்பார்த்திருத்தல்.

இவ்விடத்தில் திரௌபதியானவள் சுதர்க்கணைக்குவேண்டிய சித்திரான்ன விதமும் - திவ்வியமணக்குழம்பும் - கச்சாயவர்க்கமும் - கதம்பப் பொரியலும் - ஆகிய அறுசுவையுண்டிகளையுஞ்சுயம்பாக வீமனிடத்தில் வாங்கிவந்து கொடுத்து, வழக்கப்படிக்கு வேடிக்கையாக விளையாடி, சந்தனாதிகந்தந் திமிர்ந்து, சிந்தைநோயற்ற செல்வியைப்போற் கபடமில்லாமல், யாருடனுங் கலந்துறவாடி, களங்கரகிதமாய்க் காலம் பார்த்திருந்தாள். அப்படியிருக்கும் போது - எட்டுத்திக்குங்கெட்டழிந்தோடிய இருளெல்லாந் திரளாகச்சேர்ந்து, தங்கள் பகையாகிய சூரியனை வெல்லவந்தயாறுபோற்சூழ்ந்துகொண்டன. அவ்விருளைக்கண்டு பாபத்திற்குப் பயந்தோடும் பாக்கியவான்களைப்போற் புண்ணியப்பொருளாகிய வெய்யோன்மேற்றிசைபுகுந்து அஸ்தமானகிரியை அணைந்தான். அக்காலத்தில்அளவிறந்த ஆசையை அடைத்துவைத்திருந்த கீசகனானவன் தான் மோசம் போவதறியாமல், வண்ணப்பெண்மேற் கொண்ட மதவிகாரத்தினால் வாசநீரில் தோய்ந்து, பூஜாவிதிமுடித்து, போஜனமுண்டு, இளைப்பாறவுஞ் சமயமில்லாமல், சந்தன - குங்கும - சிந்தூர - பாளித - கந்த - கதம்ப-மிகுந்த-சுகந்த - நிறைந்த - மகரந்த - மலர்மாலையும், நவமணிபதித்த அழகிய ஆபரணமும். சித்திரித் தெழுத்தினிற் பிரித்திரத்ன கொத்துமுத்து வைத்திழைத்த சரிகைகள் சுற்றியவஸ்திரமும், கொத்துச் சரப்பணியும், ரத்தினமுருகும், முத்திரைமோதிரம் - அஸ்தகடகம் - விசித்திரமகுடம் - சுத்த பவித்திரம் - இவை முதலிய-ஆபரணங்களு மணிந்து, வாசத்தாம்பூல முண்டு. திரௌபதாதேவிக்குப் பற்பல பண்டுபலாதிகளுங் கொண்டு, கறுத்த இருளிற் காலால்வழிதேடி. அந்தகனிருக்குந் திக்குநோக்கிச் செல்வதுபோல் அந்தமாலினி சொன்ன வார்த்தையை நிசமென்று நம்பி, அச்சுதர்க்கணைதம்பி மாஞ்சோலையி லிருக்கிற வசந்தனுக்கிசைந்த மண்டபத்தை நாடி ஓடிவந்தான். இவ்விதமாகவந்தகீசகனுடைய பிராணனென்னும் பனியைக் கெடுக்கப்புகுந்த சூரியன்போன்ற பாஞ்சாலியானவள் இரவுதோன்றியவுடனே விரைவில் ஸ்நாஞ்செய்து, நித்திய செபமுடித்து. சூரியன் முதலிய தேவர்களைத்தொழுது, அந்தப்புரம் விட்டுப் புறப்படடு, சத்துருக்களுயிரையுஞ் சமயல் வேலைகளையும் இம் என்பதற்குமுன் முடிக்காநின்ற செம்பொன்மலையை நிகர்த்ததோளும் - வீரகண்டை தாங்குந் தாளும் - உடைவாளு முடைய வீமசேனனிடத்திற்குப்போய் விரைவிற்புறப்படுமென்றாள். அவள் சொல்லைக்கேட்ட வீமசேனன் எந்த வேளையில் எந்த வேடமெடுக்க நினைத்தாலும் அவனிஷ்டப்படிக்கு

அமைய வரங்கொடுத்திருக்கும் எமதருமராஜனருளினுற் சகலாபரண அலங்காரச் சௌந்தரியப் பெண்ணுருவெடுத்து, கையில் அள்ளிக்கொள்ளத்தக்கதாய்க் கலந்த நள்ளிருளில் மெல்லச்சென்று, கீசகக்கள்ளன் வருவானே? வாரானே? என்றுகவலைகொண்டு, கனகமயவுசித சிகரமாடமுடைய பளிங்கு மண்டபத்தை அடுத்து, தெய்வப்பெண்ணுன திரௌபதாதேவியை அவ்விடத்திலொளித்து, வண்ணமகள்போலாகிய தன்னுருவத்தைத் தூணில் மறைத்து, கண்சிமிட்டாமற் காட்டுவழிமேல் நாட்டம் வைத்திருந்தான்.

கீசகன் விரதசாரணி வேடம்பூண்டிருந்த வீமனைக்கலவிக்குக் கொஞ்சுதல்.

அந்தவேளையிற் செத்தபிணமானதுமெத்தப்பணிபூண்டு வருவதுபோலும், எக்கியத்திற்கிசைந்த நெய்யை நக்கிப்புசிக்கவரும் நாய்போலும் வருகிற கீசகன், உயர்ந்த மாமரச்சோலையிற் சாந்திஞல் மெருகிட்ட தாவள்யமான வசந்தமண்டபத்தைக் கண்டு கெண்டையங் கண்ணாளிங்குவந்தாளோ. ஒன்றியாய்வரப்பயந்து நின்ருளோ? வந்து என்னைக்காணுமையாற் சென்ருளோ? மறைந்திருந்து மனஞ்சோதிக்கின்ருளோ? என்னமோ? அவளெண்ணம் அறியேன். வாசப்பூ மலர்மேவிமானே! ஓ என்னுசைக்கோளி மதுரத்தேனே! ஓ மன்மதன் படையைவாட்டவந்ததுணையே! ஓ மாதவத்தை அழிக்கு மலர்விழிக்கணையே! என்றுகூவிக்கொண்டுவந்த கீசகாசனை ஆஜானு பாகுவினையுடைய தண்டதாளுகிய வீமன்கண்டு, வெட்கங்கொண் டொதுங்கும் பெண்களைப்போல் அந்தத் தூண்மறைவி லொதுங்கித் தலையைநாட்டி, சங்கிரமிம்ப முகங்காட்டி, இன்னும் பற்பல அபிநயங்களால் அவனைப் பேய்போலாட்டினன். அப்போது அடங்கிக்கிடந்த காமத்தீயைத்தொடங்கச்செய்த சிமாட்டியை அந்தக்கீசகன்கண்ணுருவக்கண்டு பெண்ணுருவெனச் சிந்தையுட்கொண்டு, குனிந்து நேராக அத்தையல்கால் மேற்பணிந்து, என்னின்பக்கனியேவாராய். எனக்குன் இனியமுத்தந்தாராய். கும்மென்றிருக்கின்ற இவ்வனத்து, என்னையொருபொருளாய் மதித்து, என்பேரிலிஷ்டம் வகித்து, இத்தனைதூரந்தனித்து, கால்வருந்தத் தக்கதாக வரும்படி பொருத்திவைத்ததவம் யாருடையதோ? இத்தலம்புரிதவமோ? என்குலம்புரிதவமோ? ஓ வலம்புரிக் கழுத்தினையுடைய மாதே! அறியேன்: அறியேன் காலதாமசமாச்சுதென்று கோபங்கொள்ளவேண்டாம். ஓ! ஓ! பருவாதியே! காமவெறியேறிக் கருத்தழிந்துபோனநான் மானபிமானம் பாராமல் உம்மைத்துறந்திவந்து மனக்குறை விளைத்தேன். அப்பிழைபொறுத்து எளியேனை ஆண்டருள்வீர். என்று நலம்பொலிமணிமுடி நிலம்படவீழ்ந்து, மறுபடியுமெழுந்து, அன்னமே என்றுபுகழ்ந்து, செங்கையிரண்டையுஞ் சிரமேற்குவித்து, அவள் முகத்தைப் பார்த்து, ஓ செவ்விளநீரைப் பழித்துத்திரண்ட இரண்டுகொங்கைதாங்கிய மங்கையே? ஓ புனல்படிந்து புகைபாந்து புறுகளைந்து பூவணிந்து புள்ளுறைந்து பொங்குமங்குலைப் பொருத்தித்! கங்குலைத் திருத்தி முடித்தகுழற் பூங்கோதையே! ஓ குழலிசைக்கினிய மொழிபலபயிலும் பேதையே! உமக்குத் தீதுநினைத்த மகாபாவிநானுகையால் தேவரீர் திர்க்கவைரம் வையாமல், அதனுல் உமதுளம் நையாமல், இத்ததியிலென்னை யாட்கொள்ளவேண்டும்

இந்தக்கடுமையானகாட்டில். கொடிய கபவர்மனம் போற் கறுத்த இருட்டில், அடியேனிமித்தங் கலவியை நாடிவந்து காத்திருக்கின்ற உமக்கு நானென்ன உபசாரஞ் செய்யப்போகிறேன்? எவ்விதவுபகாரம் பண்ணுவேன்? நீர் கிருபைவைத்து நடத்தநினைத்த உதவிக்குப் பிரதியுதவி புரிய வகையறியேன்; நீரின்று கொடுக்கப் போகிற தனத்திற்கு நான் கோடிதனங்கொடுத்தாலும் ஈடாகாதே: ஓ என்னுசைக்கண்ணே! இனிமேல்நானென்னசெய்வேன்? ஆகிலும்பதிலுதவி செய்வதற்கு ஒரு வகையிருக்கின்றது அஃதென்னவெனில்-என்னுயிரை உமக்கு ஒப்புவிப்பதுதான் உயர்ந்தகைமாறு. இதைவிட வேறு விதியில்லை. இப்போதுந் தமக்குவேண்டிய வஸ்துக்களெல்லாம் இதோ கொண்டுவந்திருக்கின்றேன், தயையுடன் அங்கிகரித்துக்கொள்ளும். ஓ தருணி! தவறுதப்பிய என்னைத் தாங்கிக்கொள்ளும், என் சும்மாவிருக்கிறீர்? ஐயோ! பொழுது அநியாயமாய்ப் போகின்றதே: அநேக போஜனவஸ்துக்கள் ஆறியலண்டுபோகின்றதே; கிஞ்சுக வாய்திறந்து கொஞ்சம் பேசப்போகாதா ? ஓ பஞ்சவர்னக்கிளியே ; அஞ்சியயென்னை ஆதரிக்கப்படாதா? எஞ்சியவென்னை ஈடேற்றப்படாதா? தித்திப்பான உமதுபேச்சு என்செவிக்கேறுங் காலமாச்சு. ஓ தெய்வப்பெண்ணே! நீரிப்படி மர்மமா யிருந்தீராகில் மன்மதனுல் நொந்து வெந்துபோனநான் கடைத்தேறுங்கால மெதுவோ ? நீரெனக்கிசைந்து இவ்வளவுதூரங் கிட்டவந்திருந்தும் ஒட்டாமலெட்டியிருப்பது என்னபாவமோ: உத்தமஸ்திரீகட்குள்ளசுபாவமோ? எதுவும் உமது கருணைக்கெதிர் நிற்கமாட்டாதே: தழைந்திருக்குந் தோப்பில் தனித்திருக்குநாமிருவருங் கொஞ்சிவிளையாட வேண்டாமோ? ஆவிதுளங்கத் தாவித்துளைக்கும்பாவிமதன்கணையோபொல்லாது. என்னிஷ்ட தெய்வமும் அஷ்டைஸ்வரியமும் உம்மையன்றி வேறொன்றுமில்லை. உமது காலடியழகுக்கீடுபடாத என் பெண்சாதிமார்களின் தேகத்தையும், அவர்கள் மேலுண்டான மோகத்தையும் இன்று துறந்தேன். உமதாணை,என்கண்ணுணை,இன்றுமுதலென்றைக்குங் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன். இதுவேசத்

தியம். என்சொல்லே நித்தியம். உம்மை யிணங்காத நான் அநித்தியம். ஆ பத்தினீ! என்னைப் பற்றியெரிக்கும் காமாக்கினி வெதுப்பிக்கருக்கிக் கவிழ்க்கப் பார்க்கின்றது. இந்தத்தநியில் நீர் கைகொடுக்கவேண்டும். இனித்தாளமாட்டேன். இன்னுஞ்சற்றுநேரம்போனால் உம்மை நான் ஆளமாட்டேன். ஓ வாளாயுதக் கண் வாய்ந்த மநோரதமே! என்று அவளுக்கு நேர்சென்று நின்று, ஆ! ஆ? நீர் முந்திப்பேசலாகாதோ? பேசினால் உமதுவாய்முத்துச் சிந்திப்போமென்றோ? என்பேரிற் கோபமோ? அல்லதுமனஸ்தாபமோ? ஓபெண்ணரசே! என்று பலவாறாகிய பஞ்சைப்பாட்டுகளைப் பாடினான்.

வீமசேனனுக்குங் கீசகனுக்கும்யுத்தம்.

அவன் பிதற்றியமொழிகளைக்கொஞ்சநேரம்வரையிலுங் கேட்டிருந்த வீமசேனன் தன்முகத்தைக் கீசகனுக்குக் காட்டாமல் தூணில்மறைத்து, ஒருபக்கத்திற்கொருபக்கந்திரும்பி, அவனைப்பார்க்கப் பார்க்க மனமுறிந்து, ஆணவமலமுதலான அஞ்ஞானவிருள்மூடிய ஆசாரயீனர் வாசா கயிங்கரியஞ்சொல்லி ஊர்மெச்சப் பால்வார்த்துண்பதுபோல் உலகமெச்சச் செய்கின்ற படாடம்ப பூசாவிதியின் புன்பயனால் அப்பூசைசெய்பவரையும் அவர்கால்வழியையும் நாசமாக்க நகைக்குங் கடவுள்போல் நகைத்து? கோபாக்கினியாற் கீசகனைக் குறித்து வெறித்துப்பார்த்தான். அதுகாலையிற் கீசகராஜன் கௌரவமாய்ச் சிரித்து, ஓ வண்டுலாவு மலர்க்குழல்மாதே! என்மேலன்புவர இத்தனைநாழிகைசென்றதோ? இப்போதுதான் மனதிரங்கியதோ? இவ்வளவு தயவு போதுமென்று தன்னிருகரத்தினுந்தாவி, ஓ என் பிராணமோக்ஷகாரணி! என்று பாவிதழுவினான். அத்தூணில் மறைந்திருந்த வீமன் கீசகன்கைக்குச் சிக்காமல், யானைத்துதிக்கைபோன்ற தன்னிரு கையையும் அத்தூணுக்கிருபாலுநீட்டி, முறைவழுவித் துறைதப்பித் தழுவநீட்டிய கீசகன் கையிரண்டையும் பற்றிக்கொண்டு நெருக்கினான். நெருக்கவே கீசகன் செந்தேள்கொட்டித் திகைப்பதுபோல் துடித்து, உதட்டைமடித்து, ஈதென்னவாச்சரியம்? விபரீதமாய்த் தோணுதே: பெருமோசம்போற் காணுதே: நாமெண்ணிய வண்ணமகளானால் அவளுடைய உள்ளங்கைதாமரைப்புட்பம்போல் மிருதுவாயிருக்குமே; இந்தக்கை கல்லினுங் கடினமாகக்காணுதே: இந்தப்பிடி எமலோகத்திற்கிழுத்துக்கொண்டு போகவந்த காலதூதரால்கழுத்திற்கிடுங் கத்திரிக்கோல்போலு மிருக்கிறதே: இது ஆர் செய்தமாயமோ? அவள்தேடிய உபாயமோ! என்னைத் மாவுக் கபாயமோ? ஒருவேளை நம்மை நம்பவைத்து மோசம்பண்ணி யிருப்பாளா? எறவிட் டேணியைவாங்கும் புன்னெறியரைப்போல் நினைப்பாளா? நமதுதமக்கையினிடமாய் அண்டிப் பிழைக்கவந்த அநாதையானவள் வஞ்சனைவிரோத மனத்தில்வைப்பாளா? கொஞ்சமேனும் நன்றி நினையாளா? எனைச்செயும்வினைச்செயலெப்படியோ வறியேன். ஆகிலும் ஸ்திரீகளை நம்பலாகாதென்பது பெரியபேச்சு. அந்தச்சொல்லை யோசிக்குமிடத்தில் எல்லாப் பெண்களும் மோசமுள்ளவர்களாயிருப்பார்களா? சிலவேளை நாம்கொண்ட மோகசோபத்தினாற் புத்திமருண்டு சத்திமாறியதோ? நம்மை இவ்விடம் வரச்சொன்ன காதலி இவளோ? அல்லது இன்னுமெவளோ? இதை நன்றாய்ச் சோதித்தறிவோமென்று தனக்குள்ளே கலவரங்கொண்டு இதனைப்பேசுவதாயினான்.

அடி என்கையைப்பிடித்த தையலே! எனக்கு மைபலாகிரிமீறுதடி! நீசரசமாய்ப்பிடித்த என்கையைச் சற்றேவிட்டுவிடடி! நீபிடித்த பிடிப்புக் கிளையாதிருக்கிற என் பிராணவலுவைப்பாரடி! உன்பலத்திற்கென்பலம் ஒன்பதுபங்குபார்த்ததடி? உன்னை நான் அடிபிடி யென்பதாய்ப் பேசுகிறேனென்று நீ ஆயாசப்படாதே. காமசரசக் கலவிக்களிப்பாற் கசிந்துவருகிற கசிதஉசித வார்த்தையடி! அடி என்னிருகண்ணே! அடி என்காதலிப்பெண்ணே! என்று தன்கையைப்பிடுங்கினான். இவனெத்தனையோ பாரக்குக்காட்டி அசப்பில் தன்கையை யிழுத்தபோது ஜாக்கிரதையிலிருந்த வீமன் தான்பிடித்தபிடி விடாமல், வலதுகையை நீட்டி இடதுகையை யிழுத்து, இடதுகையைநீட்டி வலதுகையை யிழுத்து, நிலமத்திட்டுத் தயிர்கடையுந் தன்மைபோல் மாறிமாறி யிழுத்து வலித்து, தூணுடன் தேய்த்து, பின்பு சரேலென்று ஓர் பக்கமாயிழுத்து! அவனிருகரத்தையுஞ் சேர்த்துத் தன்னொருகரத்தாற் பற்றிக்கொண்டு, மற்றொருகரத்தினால் மொத்தியும், குத்தியும், கிள்ளியும், நிமிட்டியும், பிசைந்தும், பிரமிக்கச் செய்தவனாய்; இதுசரசக்குத்து. இதுகலவிக்கிள்ளு என்று சொல்லி ஒவ்வொரு கிள்ளுக்கு அள்ளுச்சதை துள்ளும்படியாகவும், ஒவ்வொரு குத்துக்கு உழக்குரத்தம் பீரிடும்படியாகவுஞ்செய்து, அவன்தேகத்தை வருத்தி அளவற்றதீமைகளைப் புரிவதானான். அப்போது கீசகன சகிக்கமாட்டாமல் வாய்விட்டிரைந்து, நாடாத்திசையுநாடி, வாடாதமுகமும்வாடி, எண்ணாத எண்ணமுமெண்ணி, குண்ணாதகுண்ணலுங் குண்ணி, தேகமெல்லாம்வியர்த்து, சூரசம்மாரச் சுப்பிரமண்யக் கடவுளோ? இராக்ஷசவைரியாகிய மகாவிஷ்ணுவோ? என்றுநிலவரம்விண்டு, கலவரங்கொண்டு, வகைதப்பி மாட்டிக்கொண்ட தன்கைகளைத் தன்னாற்கூடியமட்டுஞ்சாகசஞ்செய்து வாங்குவதானான். அப்போதந்த வீமசேனன்மின்னொளிபோல் விளங்கி, கீசகனுடைய இரண்டு கையில் ஒருகையை விட்டுவிட்டு, மற்றொருகையைப் பிடித்தபிடி தளராமலிறுக்கி, விறுறென்று சுழற்றி, விசைக்கயிற்றை இழுப்பதுபோல அவனுடைய தலைமயிரைப் பற்றியிழுத்து, நான்குதிசையிலுங் காகாவென்

றுசுழற்றி மேலேதூக்கிக் கீழேதாக்கி வீசினான். அப்போது கீசகன் பெருமூச்சுவிட்டெழுந்து, ஐயையோ!! ஆண்டவனே! பெண்ணென்றெண்ணிய எண்ணமபோச்சுதே; இப்போதிது பேயுருவாய்வந்து வாய்ச்சுதே: இனிப்பிழைக்கும்வழி யெப்படி? இந்தவேளையிற்பெதறியிளைப்போமாகில் வந்திருப்பவன் மனிதன். எப்படியும் நம்மை மாட்டுவான்போலிருக்கிறது. நாமிவனை முந்திமுடித்துவிட்டாற் பிந்தி அந்தப்பெண்ணுடன் கூடிப் பேசிக்கொள்ளலாம். இவனைப் பிராணனுடன் விடப்போகாது. என்று விரைந்தோடி வந்தான்,

ஓ மகாராஜனே! இந்தமட்டுங் கிரகசாரம் விட்டதென்று போகாமல் விரைந்தோடிவரவே, வந்தகீசகனை வீமன் மடக்கிப்பிடித்தான். அப்பிடிப்பைக் கீசகன் சடுக்கென்றுதட்டினான். தட்டிய கீசகன்தலையிற்குட்டினான். குட்டிய வீமனை முகத்தைப்பார்த்துக்குத்தினான் குத்திய கீசகன்மேற் கொதித்தெழுந்துகுதித்து அவன் மூக்கில் தாக்கினான். தாக்கிய வீமனைத் தடுத்துப் பிடித்தான். பிடித்த கீசகனைப்புரட்டிப் பூமியிற்சாய்த்தான். சாய்த்த வீமனைக் காலால்தளைந்தான். தளைந்த கீசகனைப் புரட்டியுதைத்துத் தள்ளினான். தள்ளிய வீமனுக்கிளையாமல் பின்னுங் கீசகனெழுந்து, முன்னம்பேசிய ஆணவமும்-நாணமும்-மானமும் - விடாமல் மற்போர் கொடுக்கவந்தான். அவ்வேளையில் வீமன் ஆக்கிரமித்தெழுந்து, எதிரியின்தோள்மேற் கோடையிடிபோல் இடித்தான். அவ்விடியைப் படியத்தாங்கிய கீசகன் இவனைமுடியப்பார்ப்பேனென்று விடியற்காலத்துக் காக்கைபோற்கதறி, அக்குத்துக்குப்பதிற்குத்துகுத்தினான். அவன்குத்திய குத்தை மகமேருவே டொத்ததோளில் தாங்கிய வீமசேனன் தத்தளிக்காமல், முகஞ்சுளித்துத் தன்கைவிரல்களை மடக்கி, அக்கீசகன் மார்புகிழியவும்-அவன்தலையெழுத்து அழியவும்-முதுகெலும்பு நொறுங்கவும்-பழுவெலும்பு முறியவும்-தலையோடுடைந்துஇரத்தந்ததும்பி வழியவுந் தாக்கினான். அந்தத்தாக்கு தலைமேற்கொண்ட கீசகன் ஆர்ப்பரித்துக்களைத்து, வீரங்கொண்டு சுழன்று, இருகையு முடக்கி இலகுவுகொண்டெழுந்தான். எழுந்தவன் கரமிரண்டுங் கொழுந்தெனவதங்கிவாடும்படிக்கு வீமன்தட்டிவிட்டு, குலத்திற்குப் பழுதுதேடிக்கொண்ட கீசகனைத்துன்னி, தன்காலால் அவன்காலைப்பின்னி. அப்பின்னலோடு சேர்த்துத் தூக்கியெடுத்துத் திரௌபதியை யழைத்து, தீரா மோகங்கொண்ட விகாரசுருபனைப் பாரென்று காட்டி, சுழற்காற்றிலகப்பட்ட துரும்பதுபோலுங் காற்றாடிபோலுங் கறகறெனச் சுழற்றிக்கொக்கரித்து,போர்ச்சிங்கம் போற் பூரித்துப் பூமியிலெறிந்தான். வீமசேனனால்எறியப்பட்டு வீழ்ந்த கீசகன் காமவின்பத்தைக் கட்டுடன் மறந்து, சோமகுலந் துலங்கப்பிறந்த பாண்டவர்களில் இவன் வீமசேனனென்று அறிந்து, துன்பநிறைந்து, ஐயையோ!! ஐயோ! இவனை யிந்தமட்டும் விட்டுவிட்டு என்னோட்டத்தை நீ பிடிக்கமாட்டாய் போடாபோவென்று ஓடலாமென்றால், இவன்நம்மைஎந்நாளைக்கும் பிராணனுடன் விடப்போகிறதில்லை. நாமிதுவரையிலும் பிழைத்த பிழைப்புக்குப் பழுதுவந்ததுபோம். நம்மையாருஞ் சட்டைபண்ணார்கள். பெட்டாகியகுட்டுக் கெட்டுப்போய்விடும். ஆகையால் இவனைஒருகைபார்ப்போம் நமக்கு நல்வினைப்பயன் கைகூடுமானால் இவனை நமனுலகஞ்சேர்ப்போம். ஆகாமற்போனால் இவனிடத்தில் நமதுஉயிரைத் தாரைவார்ப்போம். என்று எழுந்து விரைந்து கந்துபாய்ந்து, வீமன்தலைமயிரைப் பிடித்துக்கைவிரலிற் சுற்றி, கறகறவெனச் சுழற்றி, நிலக்கடையாகத் தள்ளி, தன்னிருகாலாற் புரட்டிப் புரட்டி உதைத்து, அவனுடலைத் தேய்த்து, மழுங்கிய கிரண்ட கற்றூண் போலாக்கி, உள்ளங்காலிரண்டும்இரத்தவெள்ளங்காணமிதித்து, அவன்தேகஞ்சிவக்கச்சீறி அறைந்தான். இவ்விதமாகக் கீழேவீழ்த்தி மோதிப்பிடித்து மாறியடித்து மொத்துகின்ற கீசகன்வசத்தில் வகைமோசமாய் மாட்டிக்கொண்ட வாயுகுமாரனைப் பாஞ்சாலிகண்டு பரதவித்து, ஐயையோ!! பாபம்பெரிதோ? புண்ணியஞ்சிறிதோ? சத்தியங்குறைவோ ? அசத்தியநிறைவோ ? ஓ தேவர்காள்? ஓ வனதேவதைகாள் ?' வீமராஜனுக்குப் பொல்லாங்கு நேரிட்டபிற்பாடு இம்மேதினியில்நானும் பிராணனுட னிருக்கவேண்டுமா? அவருக்கு முன்னே என் உயிரை மாய்த்துவிடுகிறேன். ஐயா முதலையைக் கொன்று மூரியானையைக்காத்த முதல்வனே! என்றழுதுபரதவித்தாள்.

அப்போது இந்தத் திரௌபதாதேவியின்வியசனவசனமானது வீமன்காதில் நுழைந்தது. அதனாலவனுக்கு வீரசன்னதமேறி, மேலாள கீழாளாகப் புரட்டி கீழாள் மேலாளாகக் கண்ணுருட்டி, ஓ பாஞ்சாலி! அஞ்சாதே; உயிர்விட மிஞ்சாதே: பதறாதே. இதோ நான் பிழைத்தேன். என்று தேக ஆயாசந்தீர்ந்து, பிராணனைத் திரணமாக மதித்து, நீருண்டு வேகங்கொண்டெழுந்த மேகம்போலிரைந்து, பூவைதோய்ந்து, குபீரெனப்பாய்ந்து, கீசகனைப்பற்றிக் கிறுகிறெனச்சுற்றிவானத்திலெறிந்தான். ஆகாயத்திற்போன கீசகனவன் வாயுவை ஸ்தம்பித்துக் கேசரிமார்க்கத்திற் கிளம்பி, விறுவிறெனச் சுழன்று, வீமன்றலைமேற்குதித்து, அவன்கழுத்தைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு தொங்கினான். அப்படிதொங்கிய கீசகனை வீமசேனனெடுத்துக்கொண்டு, அவனிருகாத்தையுந் தன்னொருகாத்திலடக்கி, ஆளையிழுத்துக் கீழேபோட்டு மடக்கி, வயிற்றைமிதித்து, வாயிலுமுதைத்து, பக்கப்பற்கள் பதினாறையும் உதிர்த்தான். வீமனிடித்த இடியினாற் கீசகன் வாய்கிழிந்து, கெடுநினைப்பழிந்து, பல்லெல்லாம் பதர்

போற் பறந்துபோயின. அப்படிபோகியும் அப்போதப் பொக்கைவாய்க்கீசகன் புறங்கொடுக்காமல் உரங்கொண்டோங்கி, மரங்களைப்பிடுங்கி வரிசைகள் தொடங்கினான். வீமனும் அவனைவிடாமல் தொடர்ந்து, வேண்டியமரங்களை வேருடன் களைந்து, விதம்விதமான போர் புரிந்து வீரவெறிகொண்டாடினான். இப்படி ஒருவரையொருவர் விடாமல், இடம்வலம வருதல் கெடாமல், இருவரும் அடிகள்படாமல், ஆயுதமென்பது எடாமல், அடிக்கடி முதுகு கொடாமல், சோபதாபந்தொடாமல், ருக்ஷாதி ருக்ஷமா யொட்டிநடத்திய யுத்தத்தையும், அவர்கள் மநோதிடத்தையும்-தேகாபிமானம்விட்டு அமர்புரிகின்ற திறத்தையும்-நாம் சொல்லத்தக்கதேயல்ல, ஓ வல்லவனாகிய ஜெனமே ஜயராஜனே? இவ்விதமாக இவர்களிருவருந் தங்கள் தங்களுடைய முழுப் பலங்களைக் காட்டி மாறுமற் போராடி வரும்போது, பொழுது விடியப்போகிறதே: நமது பூர்வோத்திரம் வெளிப்படுமே என்று வீமன் றுடித்து, இவனை விரைவில் முடித்துவிட வேண்டுமென்று நினைத்து, பங்கப்படாச் சிங்கமானது அற்பமிருகத்தை அமுக்குவதுபோல் அந்தக்கீசகனை அமுக்கி, காலிரண்டையும் மேலாகத்தூக்கி, கவ்வாயக்காய்ப் பூமியில்தாக்கி, அவன்மீதேறி அமுக்கி உட்கார்ந்து. மார்புந் தோளும் வயிறும் பிடரியும்வலிப்பெடுக்கக் குத்தினான். அவன் குத்தியகுத்தைச் சிங்கபலம்பெற்ற கீசகனானவன் திரஸ்கரித்து, அதையொரு வரவுசெலவில் வைக்காமற் காலால் வீமன்கழுத்தைமடக்கி, தன்னிருகையையுந் தரையில் தேய்த்து வாயுகுமாரன் தலையோடு நெரியத்தாக்கினான். அந்தக் கீசகன் அறைந்த அறையானது வீமன்தலைமேல் வீழ்ந்தகாலேயில் அரைநாழிகைவரையினும் அறிவுமயங்கி, நெருப்பில் நெய்விட்டதுபோற் கோபங்கொண் டோங்கி, கருப்பைக்குட் கட்டுபட்ட சிசுவைப்போற் கீசகனை அசையவொட்டாம லடக்கி, ஒரே அழுத்தாகஅழித்தி அவன் தலைமயிரைக் கெட்டியாய்ப் பிடித்து, வச்சிராயுதத்தால் மாட்டுவதுபோற் கையைமுடக்கி நகங்களை நீட்டி முட்டி அடிக்கொப்பாய் அவன் உச்சியிற்குட்டினான. அதனாற் கீசகன் தலைகிழிந்து, மலசலாதிகள்வழிந்து, கண்ணிரண்டுங் கழிந்து, காதில் உதிரம்பொழிந்து அந்தக்காண வாதனையாற் பதறி, அந்தகன் மாணவேதனையினாற் கதறி, ஆவிபழிந்து புவிமேற்சாய்ந்தான்.

வீமன்கீசகனுடலைப் பேய்ப்பதிபோற் சிங்காரித்துத் திரௌபதிக்குக் காட்டிப் பின்பிருவரும் பட்டினம் போதல்.

இப்படி அழிந்துசாய்ந்து மண்மேற்கிடந்த விராடன் மைத்துனனை வீமசேனன் அந்தமட்டில் விட்டுவிடாமல் வாரிப்பிடித்து, மார்பொடிய இடித்து, கையைமுறித்து, காலைக்குறைத்து, மெய்யைச்சுருக்கி கையாற்பிசைந்து, மாவிளக்குபோடுவதுபோல் மாமிசத்தைத்திரட்டி உண்டையாகவைத்து, அந்த உண்டையின்பேரில் மீசையுங் கண்களும் விரிந்தவாயும் பரந்த முகமு முடைய தலையைநாட்டி, தன்தலையையாட்டி, பணிப்பெண்ணுக்காகக் கொண்டுவந்த வஸ்திராபரண வலங்கார புட்பங்களையெல்லாஞ் சூட்டி, பண்டுபலாதி கச்சாயங்களை அதோடு வந்த தலைவாழையிலையிற்படையற்போட்டு, கந்த கதம்ப கஸ்தூரிகளைவாரி இறைத்து, இவ்வுலகத்துள்ள பூசாரிகள் பேயோட்டிப் பதிபோடச் சிங்காரிக்கும் பொம்மைமுகம்போ லமைத்து, இந்தவேடிக்கையைத் திரௌபதிக்குக் காண்பித்துக்காமப் பேயோட்டிக் காட்டுப் பூசைபோட்டுப் பேய்ப்பதிசிங்காரித்திருக்கின்றேன் பாரென்று சொல்லுவோ மென்பதாக நினைத்து. காயுங்கனியும் பூவுமாயிருந்த ஒரு பெரியமாத்தைப் பிடுங்கிக்கசக்கி, தீயெழத்தேய்த்து, பூபூவென்று நெருப்பெழவர்யினாலூதி, பக்கத்திலிருந்த காட்டைக் கொளுத்திவிட்டு எங்கும்ஜோதியாயெரியச் செய்து, திரௌபதியை யழைத்துவந்து, ஓ வெற்பெனத் திரண்ட சொற்கத்தைச்சுமந்த கற்பினிலுயர்ந்த பத்மினிப்பெண்ணே! உன் கால்மேல்வீழ்ந்த கடையனைப்பார். கயவனைப்பார். காமக்களிப்போடாடிய பேயனைப்பார், என்று காட்டினான். அதை வேலுஞ்சேலும் விழியாயமைந்து பாலுந்தேனும் மொழியாய்ச் சமைந்த அப்பங்கயப் பெண்பெருமாள் பார்த்து,தனதுவயிறும் வாயும் மனமும் பதறிக்கதறிய வாட்டமொழிந்து வீமசேனன்பேரில் நாட்டமாயிருந்தாள். கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே! அவரவர்தேடிய வினைப் பயன்களை அவரவரநுபவித்துத் தீரவேண்டு மல்லது இதுபலியாமல் விடாது. தாங்கள் ஒருகாரியத்தைப் பெற எண்ணினால் நினைத்தபடி முடியாது. எண்ணிய வண்ணம் எவர்களும் பெறவில்லை. எண்ண முன்னுக் குவராது. தெய்வபலமிருந் தொருவேளை முடிந்தால் முடியும் சிங்கபலம்பெற்ற கீசகன் பாஞ்சாலியினளவில் நினைத்த பொல்லாங்கானது நாமெல்லோரும் நாவாற் பேசப்படாத பாபகாரியமாதலால், அதனால் வந்த மிதமற்றபலனை உடனே அவன் அநுபவித்தான். அதைப் பற்றி நாம் பேசவேண்டும் அவசரமில்லை. இப்பால்வாயு சுதனாகிய வீமசேனன் அக்கினியிற்பிறந்த அணங்கை நோக்கி, உனக்குப்பகையான கீசகன் ஒருவகையாய் அழிந்துபோனான். உன்விஷயத்தில் இன்னும்யாராவது மன்மத கோலாகல மயக்கத்தைக்கொண்டார்களாகில், அவர்களு மிப்படியே அநுபவிப்பார்கள். நீ ஒன்றுக்கு மஞ்சாதே. இனிநாம் இவ்விடத்தி லிருக்கத்தகாது. பொழுதுவிடியுமுன் போய்விடவேண்டும். என்று இருவருங் காட்டைவிட்டுப் புறப்பட்டு மச்சநாட்டைநோக்கிவருகையில், வழியில் ஓர் தாமரைக்குளத்தி லிறங்கித் தேகபரிசுத்தஞ் செய்துகொண்டு. தீர்த்தமருந்தி,தெய்

வப் பிரார்த்தனையுடன் சுதர்க்கனை அரண்மனைக்குப்
போகும்படியாகத் திரௌபதியை அனுப்பிவித்து, வீம
சேனன் மடைப்பள்ளிக்குப்போய் மலரணைமேற் படுத்
து, நித்திரைவாசாமற் குத்துக்கா விட்டுக்கொண்டிருந்
தான்.

உபகீசகாளிரவிலடவிச்சந்தடிகேட்டுஜை யுற்றுவந்து, தமயனுக்கு நேர்ந்த சம்பவங்கண்டு அறுதல்,

---

இப்படியிருக்க-மடலவிழ்ந்து, இதழ்பரந்து, மலர்
விரிந்து, மதுநிறைந்து, மணமுறைந்து, தளிர்தழைந்து,
தலைசெறிந்து, கிளைமிகுந்து, மிகவுயர்ந்து, இருளடர்
ந்து. கொடிபடர்ந்து, காய்சொரிந்து, கனியுதிர்ந்து,கதி
ர்மதிநுழையாக் களிப்போடிருந்த அம்மாந்தோப்பில்'
வீமராஜனுங் கீசகராஜனும் பேசியவோசையும், கைக்
குத்தின் முழக்கமும், மண்டபத்திலுண்டான எதிரொ
லியும், மரங்களைப் பிடுங்கிமோட்டிய ஆர்ப்பும், சத்தடங்
கிய இருபது நாழிகைச் சமயமாதலால் விராடபுரமுத
லிய சுற்றுக்கிராமங்களிற் கேட்டன. கேட்டுஞ் சனங்
கள் அப்போது இராக்காலமானதினாலும். நித்திரை
மயக்கத்தாலும், எப்பொழுதும் யுத்தம் இல்லையென்றி
ருந்த மப்புப் புத்தியினாலும், காட்டின்கணெழும் ஓசை
யாயிருப்பதினால் விசாரிக்கவேண்டிய அவசிய மில்லா
மையினாலும், தாங்கள் வாழுநாட்டில் யாதொருகலவர
முமெண்ணாதவர்களாயயர்ந்து நித்திரைசெய்தார்கள்.
ஆனால் முன்னமே கலவரங்கொண்டிருந்த கீசகன் தம்
பிமார் இந்தப் பேரோசையைக்கேட்டு, படுக்கைவிட்
டெழுந்து, உப்பரிகைமே லேறிப்பார்த்து, அந்தச்சத்
தம் வருகிறவழியை யுற்றுக்கேட்டு, தங்கள் அண்ணன்
நினைந்த எண்ணமும்-வண்ணப்பெண் வகித்த வயிற்
றெரிச்சலும்-வாரார் பேசிக்கொண்டவலதும்-தங்களைச்
சந்தேகத்திற் கொண்டுவந்துவிட, அதனாற்சிறிது அச்
சப்பட்டு, கீசகன் படுக்கைவீட்டைப்பார்த்து, அவன்
அவ்விடத்தி லில்லாமையாற் பாங்கியர் முதலாகிய
பணிப்பெண்களைக்கேட்டனர். அவர்கள் இன்றிரவில்
பத்துநாழிகைக்குஸ்நானம்பண்ணிச் சர்வாலங்கார சம்
பிரமாய் மேனிமினுக்கி வெளியே போனானென்றுரை
க்க, அம்மொழிகேட்ட உபகீசகர்கள் பரதவித்து, சரி
தான: சரிதான். நமது சுதர்க்கனைக்குச் சாந்து சந்தன
திமலர்முதலியதும் புனைந்துவந்த தெய்வப் பெண்ணி
ன்மேல் இச்சைவைத்தமையால் அதுமுதல் அன்னத்
துவேஷங்கொண்டு, தனக்குரிய போகமாதரையும் வி
ண்டு, மன்மதன்கணையா லுடைந்து, பாகொத்தமொழி
யாளாகிய அப்பணிப்பெண்ணைத் தொடர்ந்தும்; தன்
னெண்ணம் பயன்படாமையாற் சோகமேலிட்டு தூக்க
முங்கெட்டுத் துயரமாயிருந்தவன், தான்கொண்ட விர
கவெப்பந் தணிவதற்காக மாமரச்சோலை வசந்தமண்ட
பத்திற்குப் போனவனாகவேண்டும். அந்தவேளையில்
வண்டருமலர்க் கொண்டையை யுடையசைரந்திரியா
னவள் ஏதோ ஒருகாரியார்த்தமாய் அவ்விடத்திற்குப்
போயிருக்கவேண்டும். பிரசண்டவேக மதயானைபோ
ன்ற கீசகன் அவளைக்கண்டு, எதடா நமக்குடம்படாத
வள் இவ்வளவுதூரம் வந்திருக்கிறாள்? இந்த இருட்டில்
தனித்து வருவதற்குக் காரணமென்ன? என்று சற்றே
னும் யோசனை பண்ணாமல், காமக்கலவியைக் கருதின
வனாகவேண்டும். இதற்குமுன்னாள் அவனைத்தூரத்திச்
சின்னாபின்னப்படுத்திய செயதியை அவளுக்குரியகாந்
திருவரைவர்கட்கு அவள்தெரிவித்திருநதவளாகவேண்
டும். அவர்கள் அவ்வாறே வசந்தமண்டபச் சோலையில்
வந்திருந்தவராகவேண்டும். இவனுடையபொல்லாவினை
வசத்தாற் போர்மூண் டிருக்கவேண்டும். என்று தங்க
ளுக்குள்ளே நிச்சயித்து இதனைப்பேசுவதானார்கள்.

ஓ சகோதரர்களே! இனி நாம் சும்மாவிருக்கலா
காது. சீக்கிரம்போய்ப் பார்ப்போம். அப்படி பார்க்கு
மிடத்தில் நிந்தைக்குடன்பட்ட நிஷ்டூரன் உயிரோடி
ருப்பானாகில், வந்திருக்குங் காந்திருவருடன் முந்திப்
போர்விளைத்து, அவர்களைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்
கண்கலக்கப் படுத்துவோம் ஒருவேளை கீசகன் நாசம
டைந் திருப்பானாகில், அவனைப் பறிகொடுத்து நாம்
உயிருடனிருந்து மானமில்லாமல் வாழ்வது மரியாதை
யல்ல. கூடப்பிறந்த தோஷத்திற்காக அந்தக்காந்திருவ
ருடன் போராடி, அவன் மடிந்த விடத்திலேயே நாமு
மடிந்துபோவோம். இதைவிட உறுதிவேறில்லை.என்று
தம்பியர் யாவரு மொன்றுய்க்கூடி, கண்ணிற்கனற்பொ
றியெழவிழித்து, கடகடவென்று பல்லைக் கடித்து, விட
விடவென்று வில்லைப்பிடித்து, மடமடவென்று பலவா
யுதங்களுங் கொண்டு, தடதடவென்று விரைந்துவந்து
கசந்தமனம்போற் கருகிய விருட்டில் வசந்தமண்டபத்
தைச் சேர்ந்து, சங்குச்சுண்ணந்தடவித் திங்களொளி
போற் பிரகாசிக்கும் அம்மண்டபத்திற் கொழுந்துவிட்
டெரியுங் கோடமுல் வெளிச்சத்தினால் அழிந்து-சிதைந்
து-அரைநது-திரைந்து-திரண்டு-உருண்டு- மொத்தாகா
ரமாயிருந்த மாமிசத் திப்பையின்பேரில் தமையனு
டைய தலைமாத்திரம் அழியாமலிருக்கக் கண்டு, திக்கெ
ன்று வயிறெரிந்து, திடீலென்று கீழேவீழ்ந்து, வாடிவ
தங்கி, வயிற்றைப்பிசைந்து, கைகளைநெரித்து, செய்வ
தென்னென்று வெம்பித் தேம்பி, விம்மிவிழித்து, மண்
டபத்தைச் சுற்றிப்பார்த்து, ஒருவரையுங் காணாமல்
வாய்விட்டழுது, முகத்திலுந் தலையிலு மோதிக்கொண்
டுபுலம்பி, அண்ணனுடைய கால்கைமுதலான அவைய
வங்களொன்றுங் காணாதவர்களாய்ப் பிண்டாகாரமா
யிருக்கும் பேருடலைக்கண்டு, ஓ! ஓ! ஓ! ஈதென்ன விந்
தை? இதுவரைக்கும் இகலற்று வாழ்ந்த எங்களுக்கு
நேரிட்டதே நிந்தை. அளவிறந்த பல பராக்கிரமங்க
ளுள்ள நமது ஜேஷ்டனை இப்படியாகக் கொன்றபே

ரெவர்களோ? இவனைக் கொல்லத்தக்க வல்லவருந் தொல்லுலகிலுளரோ? இவனைக்கொன்றவன் மானிடனல்ல. தேவப்பிறப்பா யிருக்கவேண்டும். வேறொரு பிறப்பில் விளைந்தவனாகில், கழுத்தைமுறித்து - வயிற்றைக்கிழித்து-கைகால்களை யொடித்துக் கசக்கி கோசபீசத்துடன் நையக்குத்தி மொத்தையாகச் செய்வானா! ஐயோ! தன்னிஷ்டப்படிக்கெல்லாம் வைச்சபதமிருக்கப் பிச்சைக்குப்போவானேன்? வசந்தப்பித் துர்மரணமடைவானேன். இருக்கட்டும். ஆனால்தானென்ன? அவனெப்பேர்ப்பட்ட தேவனாயிருந்தபோதிலும் இவன் வன்கையா லிறக்கமாட்டான். எதோ சூதுவிளைத்துத் தீதுசெய்துவிட்டார்கள். ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? ஐயோ! அந்தப் பெண்மோகத்தாலும் இவனதுதீவினைவசத்தாலும் வீணாய் மாண்டானே: என்று மார்பிலடித்துக்கொண்டு, மண்மேல்வீழ்ந்துபுரண்டு. மானம்போச்சுது. வையகத்தார் பழிக்கும்படிக்கு ஈனமாச்சுது. ஆஹா!! தெய்வமே! என்று கலங்கிக் கதறி இதனை யோசிப்பதாயினார்கள்.

உபகீசகாள் சுதர்க்கணையிடஞ் சென்று தமயன்செயல்கூற, அவளதுகேட்டு நடத்தவேண்டுவ துணர்த்தி யனுப்புதல்,

ஓ சகோதரர்களே! இவனிப்படி அழிந்ததைப் பிறரறியாமலடக்கம் பண்ணிவிடவேண்டும். பிறரறிந்தாற் பெருமோசம் வந்துவிடும், ஆனதால் நமதுசுதர்க்கணைக்குமாத்திரந் தெரிவித்து அவள் கருத்தின்வண்ணம் நடந்துகொள்வோமென்று நினைத்து, அவளிடத்திற்குச் சென்று தங்கள்தலையில் அடித்துமோதி வீழ்ந்து, அவள்பாதத்தில் தாழ்ந்து, ஓ மாதரசி! நாம்வாழ்ந்தவாழ்வு இன்றோடழிந்தது. நமது வண்ணப்பெண் மோகங்கொண்ட அண்ணன் விண்ணுலகேறினான். இனிமேல் நடத்துங் காரியங்களுக்கு நாங்கள் ஆலோசனை செய்யவந்தோம். என்று சொன்னார்கள். அச்சொல்லை அந்தச் சுதர்க்கணை கேட்டு, ஐயையோ!! தெய்வமே! என்று அலறி, தம்பிமாரைத் தழுவிநின்று, கொம்பிலாக் கொடிபோற் றுவண்டு, தரைமேலுருண்டு, தலையிலடித்துக்கொண்டு, பெருமூர்ச்சையடைந்து, பதறியெழுந்து, அடாபாவி! எங்களைத் தெருவில்விட்டாயே: வாழ்ந்த வாழ்வு இவ்வளவுதானா? உன்மேற்பாய்ந்து சாய்த்தது மன்மதபாணந்தானா? அதனாலேயா நீமரணமடைந்தாய்? ஐயோ! அப்பா! என்றுடல்தளர்ந்துஉயிருலைந்து ஊசலாடி, ஓ சகோதரர்களே! நானெவ்வளவோ சொல்லியும் பாவி கீசகன்கேளாமதபோய்க் கழிந்தான். அந்நிய ஸ்திரீகளினாசை ஆயுளழிக்குமென்று மோகநிவாரண நூலில் மொழிந்திருந்தும், அதைப் பலகாற் கண்டுங்கேட்டும், காலாந்திரத்தாற் கதிசேர்ந்தானே ஐயோ! அடா கீசகக்களிறே! என்று கண்ணீர்வடித்து, அவனது புஜபல காரியங்களைப்படித்து, ஒருவருமுணராம லொப்பனையிட்டழுது, கீசகனிறந்தா னென்னுங் கேள்வி பாராஜர்களுணர்ந்தாற் படையெடுத்துப் போர்கொடுத்து இப்பட்டணத்தை அபகரிப்பார்களே என் நாயகனுக்கு மெனக்கும் இந்நட்டத்தை வைத்தானே நடுக்கடல் துரும்பானோமே நடுத்தெருப்புழுதியானோமே: அடடா!! துட்டசாவானே! என்றுபட்டப்பகலில் தோன்றிய சந்திரன்போல் முகத்தொளி மழுங்கி, ஓ என்சகோதரர்களே! நானிந்த வார்த்தையை உங்களுடைய மைத்துனராகிய விராடராஜனுக்குப் பக்குவமாய்ச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சீக்கிரத்திற் சென்று, அண்டையயலா ரறியாமல் அடக்கம்பண்ணிப் போடுங்கள். பரப்பில்விடாதீர்கள். பழிப்புக்கிடம் பண்ணாதீர்கள். பதறாதீர்கள். என்னைப் பரதேசியாக்கிப் போடாதீர்கள். நமக்கு நான்குதிக்கிலும் பகைவர்களிருப்பதினாற் கீசகனுயிருட னிருக்கின்றானென்னுங் கெடியைக் காட்டி, அவனுக்குச்செய்யவேண்டிய உத்தரிமைக் கடன்களைத் தீர்த்துவிடுங்கள். என்றுஉறுதிகள்சொல்லி யனுப்பிவிட்டு, உள்ளநடுங்கி யொடுங்கி, வெள்ளம்போற் கண்ணீர்விடுத்து, பூமிமேற்படுத்து, ஓ தெய்வமே என்று தேம்பித்தொழுது, துக்கமற்றவள்போல் பக்கத்தி லிருப்பவர்கட்குத் தெரியாமல் விக்கியிருந்தாள்.

உபகீசகாள் தமயனைத் தகனஞ்செய்யவரும்வழியில் விரதசாரணியைக்கண்டுஐயுற்றுமுடிக்க, அவள் அலறிக் கூவுதல்.

இப்பால் அந்தச் சுதர்க்கணை சொன்னவண்ணம் அண்ணனைத்தகனஞ்செய்வதற் கெண்ணிய தம்பிமார் நூற்றுமூன்றுபெரும் பிரேதத்திற்கு வேண்டியசல்லா-சாதராஷால்வை-சந்தனக்கட்டைகள்-ஸ்நான திரவியங்கள்-இவைமுதலிய சகலமுங்கொண்டு, தமக்கையரண்மனையிலிருந்து சுருக்கிற் குறுக்குவழியாய் வருவதானார்கள். அப்போது வீமசேனனைவிட்டு வாராநின்றவண்ணப்பெண்ணைத் தாங்கள் கண்ணிற்கண்டு வழிமறித்து நின்று, அவள்பேரில் அடங்கா மனஸ்தாபங்கொண்டு, மனோதிடமுடைய தமையன் மாளுவதற்கு இவளே காரணமல்லது வேறில்லை. நாமெண்ணியபடி இவளே முடித்துவிட்டு எங்கேயோ போயிருந்து இப்போது வருகிறாள். இதற்கியாதொரு சந்தேகமுமில்லை. அவனிவள்மேல் வைத்த ஆசையும், இவளவனைக் கெடுத்தமோசமும், அடியோடு நாசமாகும்படியாய் இவளையு மவனுடன் சேர்த்துக்கொளுத்திவிடுவது உத்தமதர்மம். இம்மையிற் கலந்தெரிந்தால் அம்மையிலும் எம்மையிலும்

பிரியாவிடையாயிருப்பார்கள். ஆகையால்இவளைக்கூசாமற் பிடியுங்கள். என்று நான்குதிசையிலும் பாங்குநாய்போல்வளைந்து, மான்போல் மருண்டு செல்லும் பாஞ்சாலியைத் தாத்தினர்கள். அக்கால் வனவேடர்போன்ற உபகீசகர்களைக்கண்ட சைரந்திரியானவள் எப்பேச்சும் பேசாமல், அல்லலடைந்து ஆவிபதியக்கதறும் அன்னம்போற்பதறி, பொறி புலன்சிதறி. கைகாலுதறி விரைவிலோடி.ஆ! காந்திருவர்களே! எனக்குக்காவலாகிய தெய்வங்களே! பேய்களுலாவுங்காலமாகிய இவ்விரவில் யமதூதரைப்போற் சிலதுஷ்டர்களடுத்து என்னைப்பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தும்படிக்கு நிச்சயித்தார்கள். அதனாற் கொழுகொம்பில்லாக் கொடிபோல் துவளுகிறேன். என்னசெய்வார்களோவென்று வாடுகிறேன். இந்த வீணர்கையி லகப்படாம லோடுகிறேன். இப்பாவிகள் வசப்பட்டு ஆவியழியுந் துன்பத்தைப் பார்க்கிலும், என்னில் நானே என்னுயிரையொழித்துவிடுவது இன்பமென்று நாடுகிறேன். இந்தப்பஞ்சைகள் கையிலகப்பட்டுப் பாதவிக்குமுன்னே, அஞ்சேலஞ்சேலென்று நீங்களைந்துபேரு மோடிவாருங்கள். இந்த ஆபத்துவேளையில்வந் தென்னைக்காருங்கள். மல்லகளை மண்ணுகவாட்டும் உங்கள் புஜபலத்தைக் காட்டுங்கள். அந்தத் துன்மார்க்கனை முடித்ததுபோல் இந்தக்கயவர்களையும் வாட்டுங்கள். மனோவேகத்திலுங்கடுக வோடிவந்து இவர்களை யமலோகத்திற் கோட்டுங்கள். ஓ ஜய விஜய ஜயந்த ஜயசேன ஜயற்பலனென்னு நாமங்களை வாய்ந்த எனது நாயகர்களே! என்று அக்ஞாதவாச முதலில் நேமித்துக்கொண்ட சங்கேதப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டாள்.

வீமசேனன் திரௌபதி கூச்சல்கேட்டோடிவந்து, உபகீசகாள் நூற்று மூவரையும் வதைத்தல்.

அவள் கெட்டியாய்க்கூவிய ஓசையைமடைப்பள்ளியிலிருந்த வீமசேனன்கேட்டு, அதிவேகங்கொண்டெழுந்து ஏதோபிரமாதம் விளைந்ததென்று இடையிற் கச்சையையிறுக்கி வரிந்து, தொடையிலிரத்தந் துடிக்கப்பரிந்து, இதோவந்தோம்: இதோவந்தோம்: மனந்தளரேல். மனந்தளரேல். என்று பேரிடிபோலிரைச்சலிட்டுக் கொக்கரித்து, மகா எக்களிப்புடன் எதிரிலிருந்த மரங்களைப்பிடுங்கி, விறுவிறெனச் சுழற்றி, கையொடுகையறைந்து, காடுகலங்கக்குதித்து, வழியிலகப்பட்ட நீண்ட விருக்ஷங்களெல்லா மளமளவென்று நெறிந்துமுறிய மிதித்துக்கொண்டு வந்தான். அவனாரவாரிப்புண்டாகிய திசையையும்-மரங்கள் முறியும்விசையையும்-உபகீசகர்கள் பார்த்து, உடனேமுகம்வேர்த்து தங்களுக்குள் தயங்கி, தைரியமில்லாமல் மயங்கி, ஆ! தம்பிகளே! இவளிரைந்து கூவியபோது இதோவிரைந்துவந்தோமென்று ஒருபேரொலிகேட்டது. அவ்வோசையடங்குவதற்குமுன்னே பெருங்காற்று புறப்பட்டது. மரங்களியாவும் மடமடவென்றேருடுகிறது, பூமி கடகடவென்றேருடுகிறது. இவளுக்குரிய காந்திருவர் துணைவருகிறுப்போலு மிருக்கிறது. நமது தமயனையடித்து முடித்துவிட்டிப்பொழுதுதான் போகிறவர்கள் போலுங் காண்கிறது. நம்முடைய தமையனை இக்கேடு கண்டவர்கள் நம்மையெளிதில் விடார்கள்போலுந் தோன்றுகிறது. இனி என்செய்வோம்? என்றுபயந்து, உடல்பதறி நடுங்கி, கட்டழகமைந்த விரதசாரணியை விட்டுவிட்டோடிப்பிழைப்பதே மேலென்று யோசிக்குமுன்னமே; காலபாசச் சூலங்கொண்ட காலனைப்போலும்-ஆலகாலவநிலம்போலும்-வீமன்வந்துபுகுந்து விளாசுவதானன். அப்போது புத்தித்தாழ்வாற் பிராணனைப்போக்கடித்துக்கொண்ட கீசகன் தம்பிமார்கள் சுற்றியோடி விலகினர்கள். அவர்களை யவன்கொத்துப்போற் சேர்த்துவளைத்து, பத்துப்பேர்க் கோடியாயடித்து, ஒருவருந் தப்பிப் பிழைக்காதபடி யடித்து, அவரவரெலும்பையு மொடித்து மேலுலகி லேற்றினன். அந்த உபகீசகர்கள் சகோதர வார்ச்சல்லியந் தப்பாமலும்-தமையனைப் பிரியாமலும் - அவன்போனவழியே இவர்களும் போனர்கள். கேட்டீரோ ஜெனமே ஜய மகாராஜனே! “பண்ணிய வினைகளின் பயன லாதுதா, மெண்ணிய கருமமற் றியாவ செய்கினர். திண்ணிய கீசகர்செய்த தீங்கவர், புண்ணியமானதாற் புகல்வதென்கொலோ.’ ஆதலால்-யாவருக்கும் வினையின் வண்ணமுடியுமேயன்றி, தம்மிச்சையி லொன்றுமாவதில்லை. கீசகாள் செய்துகொண்ட புண்ணியங்கள் இப்படிக்கிருந்தால், அவைகட்கியார் என்னசெய்யலாம்? துவளுமிடையும்-சுவர்னப்பட்டுடையும்-அன்னநடையும் - அரம்பைத்தொடையும் - அருட்கட்கடையும் - அணிபூஞ்சடையும் - கற்புடைமையாங்கவின் சீருடைமையுமுள்ள விரதசாரணியின்மேல் விருப்பம்வைத்த கீசகனை வீமசேனனழித்தபோது, அவன் ஒருவருமறியாமல் உபாயத்திலொழிந்தான். இந்த உபகீசகர்களை மடித்தபோது, பொழுதுவிடியுஞ் சமயமாகையினுலும் விராடபுரத்தைச் சமீபித்தவிடமாகையினுலும்- அவர்களாலுண்டான பேரோசையினல் ஊராரறிந்து, உறக்கந்துறந்து, காற்றாய்ப்பறந்து, கலங்கிப்பயந்து, சரிதான்: சரிதான்; வண்ணமாதுமீதெண்ணங்கொண்ட திண்ணியனுகிய கீசகனை அந்த பெண்ணுக்கிசைந்த கந்திருவர் வந்து கொன்றூர்களாக்கும். அவனுக்காகப்பரிந்து அவன்தம்பிமார்கள் ஒன்றுகூடி வந்து சண்டை விளைத்துநிற்க, அந்நூற்றுமூன்றுபேரையும் வென்றூர்களாக்கும். ஆகிலுந் தேவஸ்திரீயைமனிதன் நாடுவதுதீங்கு. தேவர்களுடன் மனிதரெதிர்த்துச் சண்டைசெய்வது அத்தீங்கிலுந்தீங்கு. தன்பலமும் எதிரிபலமும் எண்ணுமற் சண்டையிட்ட கீசர்களில் ஒருவரும் பிழையாமல் விண்

னுலகுற்றார்போலும். என்று பட்டினத்திலுள்ளவர் யாவரும் பற்பலவிதங்களாகப் பயந்து பழித்துப் பேசிக்கொண்டார்கள்.

வீமசேனன்திரௌபதிக்கு ஜயைசரிதங்கூறித்தேற்றி, இருவருந் தமதிருக்கையை யடைதல்.

இவ்வாறு உலகநடுங்கி யொடுங்கும்படிக்கு அன்றிரவிற் கொடும்பாவியாகிய கீசகனைக் கொன்றதல்லாமல், உபகீசகர்களாகிய மற்றநூற்றுமூவரையும் ஒரேமூச்சிற்கொன்று, அங்குள்ள நாய் நரி-பேய் பிசாசம்-காக்கை-கழுகு-கூளி - காளி - இவைமுதலியவற்றிற்கு விருந்தாக்கிவிட்ட சுபம்பாகியாகிய வீமசேனனும் பாஞ்சாலியும் அவ்விடம்விட்டுத் திரும்பும்போது, வாயுகுமாரன் திரௌபதையை யணைத்து, ஒவண்டாரு மலர்க்கூந்தல்வாய்ந்த மாதே! கற்புடை மாதர்க்கெப்போதும் ஆபத்துநேரிடாது. ஒருவேளை தீவினைப்பயனால் நேரிட்டால், சூரியனைக்கண்ட பனிபோலகலும். மேலும் நற்குணநற்செய்கைகளையுடைய பதிவிரதைகள் தாங்களெப்படி நினைத்தாலுமுடியும். அதற்கொப்பாக ஒருகதைசொல்லுகிறேன்கேள். பூருவத்தில் இமயபர்வத ராஜகுமாரியான பவானியினிடத்திற்பணிவிடை பண்ணிக்கொண்டிருந்த ஜயை என்னும் பெயரினையுடைய தெய்வப்பெண்ணொருத்தி, இந்தப் பூலோகத்தில்வாழு மாதர்களுடைய இல்லறதர்ம மெப்படியோவென்று சந்தேகங்கொண்டுபார்வதியாரைக்கேட்டாள் அதற்கு அவ்வம்பிகையார் அந்தப்பெண்ணைப்பார்த்து, நான்சொல்லுவதினா லுனக்கனுபவமாகாது. நீபோய்ப் பூமியிற்பிறந்து, இல்லறதர்மத்தைக் காட்சிப் பிரமாணமாகக்கண்டநுபவித்துவரக் கடவாய். என்று சொல்லி அநுக்கிரகம் பண்ணினார். அவ்வாறே அந்தஜயையென்பவள் மண்ணிற்பிறந்து வளர்ந்து சிறந்துவருங் காலையில், தேவாதனென்றொரு முநிவன் தனக்குபசாரஞ் செய்வதற்கு உத்தமகுணசாலியான பத்தினியொருத்தி வேண்டுமென்று தேசமுழுமையுந் தேடித்திரிந்துவாடிவருந்தி வரும்போது, ஒரு சிற்றூரக்கிராமத்தி லிருந்த இந்தப் பெண்ணைக்கண்டு, கன்னிகை யென்றுணர்ந்து, இவளது பதிவிரதாகுணத்தைச் சோதிக்கவேண்டுமென்றெண்ணிப் பெரியராக்ஷஸ ரூபங்கொண்டு, கோரமாயெதிர்சென்று நின்று, அவளைப் பருந் தாய்ஞ்சும் பாவனைபோல் தூக்கிக்கொண்டு, மகா வாரணியத்திற்போய் நூறுயோசனை விசாலமுள்ளதாமரைத்தடாகக் கரைமேல்வைத்து, வெகுவித சந்தோஷ முண்டாக்கி, பற்பல கனி-தேன்-கிழங்குகளுங் கொடுத்து, உற்பலம்-தாமரை-மல்லிகை-முதலியபுட்பங்களுமளித்து,போகப் புணர்ச்சியின் பொருட்டுப் பேசுவனவெல்லாஞ் சரசமாய்ப்பேசி; தன்னுற்கூடியமட்டுந் திருத்தி, நயபயங் காட்டிப் பொருந்திப் பார்த்தான். அவளெந்தவிதத்திலு மபங்காமல் திடச்சித்தமாயிருந்து, கலவியமளிகைக் கலத்தலுக்குச் சம்மதியாமற் போனாள்.

அப்போது இராக்ஷஸ ரூபங்கொண்டவன் தன் கையிற் பிடித்திருந்த கோலால் அவளைக் கீழேதள்ளி, பலவந்தமாய் ஒருதலைக்காமப் புணர்ச்சிசெய்ய ஆரம்பித்தான். அவளதற்கு மஞ்சாமல், தன்னிருக்கைகளையுந் தலைமேற்குவித்து, ஓ தர்மதேவதையே! நானிதுவரையிலும் மனோவாக்குக் காயங்களினால் வழுவுதல் முதலிய பழுதுகளில்லாமற் கற்புடைமைகாத்து, ஒப்புவமை யில்லாதிருந்தேன். இப்போதிந்த இராக்கதன் கை யென்மேற் படுமுன்னமே அல்பமாகிய என்னுடலங் கருங்கல்லாய்ப் போகக்கடவதென்று கூவினாள். அவ்வாறுரக்கக் கூவினவளை அவ்விராக்ஷசன் அதட்டி வெருட்டிப் பயங்காட்டி, மீட்டும்மேல்விழுந்துதழுவப் போனான். அக்காலவள் கல்லாய்ச்சமைந்தாள். அவளுக்குநேரிட்ட அபாயத்தைக்கண்ட முநிவன் இராக்ஷஸரூபத்தைவிட்டுப் பழையவடிவெடுத்து, அவளுடல் கல்லாகியதைத் தடுத்து, தான் அதுவரையிலுந் தேடிய தபோமகிமையை அதனுக் கீடாகக்கொடுத்து, அவளைத் தன்வாழ்க்கைத்துணை நலத்திற்குரியமனைவியாக்கி விபகாரவிதிப்படி புணர்ந்து, கொக்கோகநூலிற் கூறிய வண்ணம் ஆலிங்கன முதலிய யாவுநடாத்தி, அநேக வரங்களு மளித்து, தன்னாச்சிரமமடுத்து, அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னு நாற்பயன்களையுந் திறம்பாமலடைந்து, இகத்தி லிவ்விருவரும்இல்லறவாழ்க்கையின் தன்மை யதென் றியாவருமறிய நாட்டிவைத்தார்கள். ஓ பாஞ்சாலச்செல்வீ! நல்லவர்களுக் கொருநாளும் பொல்லாங்கு வாராது. வந்தாலும் நிலைபாயிராது. பின்னால் நன்மையுண்டாகும். ஆதலால் எப்பேர்ப்பட்ட ஆபத்துகள்வந்தாலும் அதற்கஞ்சி விசனப்படலாகாது. இப்போதுனக்கு நேரிட்டகஷ்ட நிஷ்டூரங்களுக்காகத் துக்கப்படாதே. இன்னுஞ் சிலநாளைக்குள் நமக்கு நல்ல காலம் வரும். என்று நயந்துபேசிசுதர்க்கணையிடத்திற் கவளையனுப்பிவிட்டு. தானொரு தடாகத்திலிறங்கி ஸ்நானம்பண்ணி, நித்தியவிதி நிறைவேற்றிக்கொண்டு, வெளிபேபோய்வந்த செய்தி ஒருவருமுணரா திருக்கும் படியாய் மடைப்பள்ளிக்குப் போய்விட்டான். இந்தப் பிரகாரம் வீமசேனன்போக, திரௌபதியானவள் பொழுதுவிடிந்துபோயிற்றே யென்று பயந்து, ஒடுங்கியொதுங்கி, வாடிவதங்கி, நம்மை யார்பார்ப்பார்களோ என்ன நினைப்பார்களோ? என்னவென்றேசுவார்களோ நாம்போகிற வழியில் யாரேனுஞ் சந்திப்பார்களோ? ஏதோ? என்னமோ? என்று அச்சத்துடன்போய்ச் சுதக்ஷணை தேவியி னரண்மனைக்குள்புகுந்தாள். இவ்விதஞ் சொன்ன வைசம்பாயனரை ஜெனமேஜயராஜன் பரிந்துநோக்கி, ஓ சுவாமி! உபகீசகர்கள்கையி லகப்பட்ட

பாஞ்சாலியை வீமசேனன்வந்துவிடுவிக்காமற்போனல் உபகீசகாள் தங்கள் தமயனேடுசேர்த்துக் கொளுத்திப் போடுவார்களே. ஆ! ஆ! அந்த உத்தமிக்கு என்னவாபத்துவந்து நேர்ந்தது? என்று சொல்லிப் பரிதாபித்தான். அதுகேட்ட வைசம்பாயனர் சொல்லுகின்றார். ஓ மதிமாபுதித்த மன்னவர்பிரானே! கேளும்: ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய கடாட்ச வீட்சண்ணியத்தினுலும், தருமபுத்திர மகாராஜனுடைய சத்திய நித்திய தவத்தினுலும், பாஞ்சாலியினுடைய பத்தினி தனத்தினுலும், அப்பேர்ப்பட்ட பொல்லாங்கு நேரிடாது. ஒருவேளை நேரிட்டாலும், அவளுக்குத் தந்தையாகிய அக்கினிதேவன் தான்பெற்ற பெண்ணைத் தானேகொளுத்துவானு? தானேசுட்டெரிப்பானு? அப்படி நேரிடுங்காலையில் தருமதேவதையும் அதற்குச் சகாயப்படுமா? தர்மந்தலைகாக்காமற் போமா? ஓ சந்திரகுலாதிபனே! என்று சந்தேகந்தீர்ந்து மேல்நடந்த வர்த்தமானங்களையுஞ் சொல்லத் தொடங்கினர்.

விராடனுஞ் சுதர்க்கணையுங் கீசகர்க்குரியகடன்களைமுடித்து, திரௌபதியைத்தெய்வம்போல் போற்றிவருதல்.

இப்பால் ஜகத்தை மறைத்துப்போர்த்த கறுத்த விருட்டிரைக் களங்கத்தை இரவியானவனிந்திரதிசையினின்றுமெழுந்து இகல்கொடுவிலக்கி, நிலத்தைவிளக்கி, உதயகிரி முடிமேலேற்றிய மணிவிளக்கைப்போல் எட்டுத்திசையும் பிரகாசிக்கப் பிரபைவிட் டொளிகாட்டினன். உடனே அன்றிரவில்நடந்த யுத்தவிபரீதமுஞ் சத்தப்பிரதாபமும் விராடபுரமெங்கும் பரவி, ஆயிரங்கிரணனிலு மதிகமாய்விரிந்து, மச்சநாட்டுள்ள சனங்களெல்லாங் கோட்டைக்கு மேற்புறத்தடைந்து, வனத்தில் மாண்டுகிடக்கிற உபகீசகர்களையும், அவியாமலெரிகிற மாஞ்சோலையில் ஆயி மகம்பாயிக்குப் பூசைபோடச்செய்த பதியலங்காரம்போ லிருக்குங் கீசகன் தலையையுங்கண்டு விசனங்கொண்டு, பயந்து ஓட்டமாயோடிவந்து, விராடராஜனுக்குச் சொல்லி வெறுப்படைந்தார்கள். இதற்குமுன்னமே கீசகனழிந்த செய்தியைத் தன்பெண்சாதி சொல்லக்கேட்டுவருந்தி, ஐயையோ!! ஓ கன்னியன்னமே! இனி நானென்னசெய்வேன்? என் தோள்வலி போச்சுதே: என்று துடித்துக் கண்ணீர் வடித்துப் படுக்கைவிட்டெழப் பலமற்றவனுய்ப் பாதவித்துக்கொண்டிருந்த அப்பார்த்திபன் செவியில் உபகீசகர்களுமுயிரொழிந்தார்களென் றுரைத்தவுடனே, இடிமேலிடியும்- அடிமேலடியும்-எய்தியவாறுபோலிரங்கியிரைந்து, விரைந்தெழுந்து, கொலுச்சாவடியிற்கூடிய தூதர்களைக்கூவி, என்மைத்துனரிறந்த காரண காரியங் கண்டறிந்து வாருங்களென்றனுப்பினன். அப்படியே அவர்கள்போய்ப்பார்த்து, சிதைந்து வதைந்த கீசகரைக்கண்டு, ஆச்சரியமு மாச்சிரியமுமுள்ளவர்களாய்வந்து அரசன் திருமுகத்தைப் பார்த்து, ஓராஜாதி ராஜனே! பராக்; கீசகாஜனுடன் உபகீசகாஜரும் பறந்து உலக வாழ்க்கையைத் துறந்து மண்மேற்காந்து இறந்துபோனார்கள். அவர்கள்பேரு மிறந்துபோயிற்று, அந்தப்பிணங்க ளலங்கோலமாய்க் கிடப்பதை நோக்கி இந்தப் பட்டினத்துச் சனங்களெல்லோரும் பயங்கொண்டு வெளிவராமட்டாமல் வேசாறி வெம்புகின்றார்கள். இந்தவிபரீத மெல்லாஞ் சைரந்திரியென்னும் பெண்ணால் விளைந்ததன்றி, மற்றொருவராலுமல்ல. அந்தப்பாக்கியசாலி இன்னுஞ் சிலநாளிவ்விடத்தி லிருந்தால், இவ்வூரிலுள்ளோ ரியாவருஞ் சாகாமற் போகார்கள். ஓ தருமசீல தயாளுவாகிய தாரபதியே! இப்பால் தாங்களே யோசிக்கத்தக்கது. என்று சொல்லிச் சரணஞ்செய்தார்கள். அன்னவர்களுரைத்த மொழியை விராடராஜன் யோசித்து, மந்திரிகளுடன் கலந்து வார்த்தையாடி, ஓ என்மித்திரர்களே! நீங்களுங்கள் தந்திரயுத்தியினுலும்-மந்திரசித்தியினுலும்-அந்தக் கந்திருவரைக் கண்கலங்கப் பிடிப்பதற்கான உபாயந்தேடி, விற்படை வேற்படையோங்கிய வீரர்களை விடுத்து, மற்புயவலி மிகுத்த என்மைத்துனரை அற்பமாயெண்ணிச் சற்பனைசெய்து பிராணனை வாங்கிய துற்பலமுள்ள துட்டர்களைஎப்படியானுலுங் கைப்பிடியாகப் பிடித்து என்சொற்படிவிரைவில் வரச்சொல்லுங்களென்று பற்கடித்துப் பகர்ந்து, இறந்துபோன மைத்துனருக்குச் செய்யவேண்டியசுமவிதிக்கடன் முடித்து, இனியென்னமோசம் வருமோவென்று ஏக்கமேலிட்டுத் தூக்கம்பிடியாம லிருந்தான்.

இவன்செய லிவ்வாருக-நேற்றிரவில்நடந்த சங்கதிகளைப் பாண்டுமக்களைவரும் பாஞ்சாலியுந் தனித்தோரிடத்திற் சேர்ந்து கலந்து வார்த்தையாடி, அஞ்ஞாதவாசஞ் செய்யவந்த நமதவதிநாளாயிற்று. இன்னுமுள்ள கொஞ்சநாளுந் தொலைந்தால் வெறுப்பாயெடுத்த இவ்வேடத்தைவிடுத்து, விருப்பாம்பழைய வேடமெடுத்து, வெகுஜனங்களுங் காண வெளிப்பட்டுப் பேசவேண்டிய சேதிகளையெல்லாம் பேசிக்கொள்ளலாம். அதுவரையிலுஞ் சந்தடிபண்ணுதிருப்போமென்று பேசிக்கொண்டு, விற்பன விவேகிகளாகிய அவ்வேந்தர்கள் தங்கள் கற்பனைத்தொழிலிற் பக்குவமாகவிருந்துகாலங் கழித்து வந்தாகள். அதுமுதல் விராடராஜனும், சுதர்க்கணையும், புறம்பிலுண்டான சுற்றத்தாரும், மற்றையர்களும், அந்த விரதசாரணி யிடத்திலதிகமாய் நெருங்கவும்-வேடிக்கையாய்க் கொஞ்சவும்- விநோதமாய்க்குலாவவும்-போவாவென்று வாய்பேச்சுப்பேசவும் பயந்து, அவளாலாகவேண்டிய வேலைகளைத் தாங்களே செய்துகொண்டு, அம்மா! தாயே! நீர் சும்மாவிரும். என்றுபசரித்து, எங்களுக் குயிர்த்துணையாயிருந்த சகாகள் உகீ

ம்மேலாசைவைத்து மானமாதிகள்கெட்டு மாண்டார்கள். நீரெங்கள்பேரி லியாதொரு குற்றங்குறைவையாமல், கோபதாபஞ் செய்யாமல், உமக்குக் காவலாகிய காந்திருவரிடத்திற்சொல்லி எங்களை ரக்ஷிக்கும்படிபிராணபிக்ஷைதாரும். நீரெங்களுக்குப் பக்கத்துணையிருந்துகாரும். என்று உபசாரம்பண்ணி, பொன்னைப்போற்றுமாறுபோற் பூசித்துவந்தார்கள். அந்நகரிலுள்ள நான்குவருணத்தவருந் திரௌபதியம்மனைக்கண்டால் எதிர்சென்றோடித் தீர்க்கதெண்டனிட்டு, மரியாதையுடன் பாதபூசைபண்ணி, மஞ்சள் – குங்குமம்-கந்தம்-கதம்பம்-அக்ஷதை-இவைகளைச் சாத்தி, தூபதீபங்கொடுத்து வணங்கி, வாய்க்குற்றம் கைக்குற்றம் வரப்போகின்றதென்று வயிற்றில் வாள்கட்டிக் கொண்டவர்போற் பயங்காத்துடன் மதித்துக் துதித்துச் சன்மானம்புரிந்து, தெய்வோபசாரம் இராஜோபசாரம்போற் பல உபசாரங்களையுஞ் செய்துவந்தார்கள். பாஞ்சாலியும் இந்தப்பூனையந்தப் பாலைக்குடிக்குமா வென்பபோலவிளங்கி, ஒ ஐயமீர்! ஒ அம்மைமீர்! எனக்கென்ன தெரியும்? நானென்ன அறிவேன்? என்றுகூறிக்கொண்டு சுதர்க்கணைக் கிணையாய்ப் பொருந்தி அமர்ந்துவாழ்ந்திருந்தாள்.

விராடராஜன் கீசகனிறத்தலைக்குறித்துவியசனப்பட, தருமபுத்திரர்தேற்றி ஆதரணைகூறுதல்.

திரௌபதாதேவி இவ்வளவுபூசிதையோடுமிருக்க கீசகர் நூற்றுநால்வரும் ஈடழிந்து நாடொழிந்துகேடு கண்டதைக் குறித்து மச்சராஜன் பெருமூச்சுவிட்டுக் கிலேசமுற்று, இந்நாள்வரையிலும் இந்தராச்சியத்திற் கிடையூறு வாராமற்காத்துச் சேனாதிபதித்துவ விசாரணையுஞ்செய்து எனக்குத் திகிலுந்தீங்குமில்லாமல் தனதுசொந்தம்போற் பார்த்து வந்த என்மைத்துனன் மாண்டானே: அந்தோ! இனி நானெப்படிப் பகைவரைவெல்லுவேன்? இறைகேட்டனுப்பும் முறைமையுடைய வேந்தர்க்கு இல்லையென் றென்னமாய்ச் சொல்லுவேன்? எங்கும் விரோதிகளாய்ப் படைகொண்டு சண்டைசெய்ய வருவார்களே; அப்படி வருபவர்களுக்குப் பயிர்க்களைபறித்தி பாவனையாயிற்றே: கோட்டையைபிடித்த கொள்கைபோலாயிற்றே: என்னிடத்தில் வைத்த மதிப்புமுதலிய கௌரவமும் இன்றோடு ஒழிந்ததே நமது கீசகனுக்குச் சமானமானபலசாலியைச்சம்பாதித்துச் சேனாபதியாக்க வேண்டுமே; தெய்வமே! என்று மனக்கவலையுற்றிருந்தான். அந்தச் சமயத்தில் அவன்பக்கத்தி லிருந்த கங்கபட்டர் மச்சராஜன் மனதைத்தேற்றி, வாய்பிதற்றலைமாற்றி, ஐயா! துஷ்ட கீசகர்களுடைய நஷ்டத்தைப்பற்றிக் கஷ்டப்படுகின்றீர். அந்நியராஜ பயங்கரங்கொண் டச்சப்படுகின்றீர். நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். படுபாவியானகீசகன்பட்டதே உமதிஷ்ட தெய்வாநுக்கிரகமென் றெண்ணிக்கொள்ளும். இனியுமக்கு நல்லகாலம். அந்தக்கீசகனின்னு மிருப்பானாகில், சத்தியவாக்கியமும்-சகலபாக்கியமும் - யோக்கிய சிலாக்கியமும் – ஒன்றுமில்லாமற் பாழாய்ப்போய்விடும். இதுவரையிலும் உம்மைப்பிடித்திருந்த ஏழரைநாட்டுச் சனிவிட்டுப்போயிற்று. துட்டத்துரோகியை நினைத்துத் துன்பப்படாதீர். நமதுமடைப்பள்ளி மல்லனைவிட வேறுசேனாபதியும் வேண்டுமோ? இனியுமக்குப் பகைவரென்பாருமில்லை. உம்மைப் பகைத்துவந்து பிழைப்பாருமில்லை. உமதுசத்தியசவுசவாசாவிரதம் உற்றதுணையாயிருந்து, மேலானசம்பத்தை யுமக்குண்டாக்கி வைக்கும். நீர்சஞ்சலப்படவேண்டாம். ஒ சாந்தகுணனே! என்று தருமசொரூப னுரைத்துச் சமாதானப்படுத்தியபோது. விராடராஜன்வேதியர் பெருமானுரைத்த புத்தியைக்கேட்டு, மிகு மகிக்ஷி கொண்டு மேன்மையோடிருந்தான். அந்நியமாதர்மேல் வைத்த ஆசாபாசத்தால் மோசம்போய்த் தம்பிமார்களுடன் கீசகன் பட்டானென்று தேசாதேசமெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

கீசகன்வதைச் சருக்கம்-முற்றிற்று.

நான்காவது.

தக்ஷணநிரைமீட்சிச் சருக்கம்.

கண்ணன் துதி.

மந்திரஞ்சேர் சமதக்னி ரேணுகைபற் பரசிரா மப்பேர்பெற்று
மைந்தனெனத் தோன்றிமறை யோங்கிடர்செய் தறநெறியை மாய்த்தவேந்தன்
தொந்தமுறுங் குலமுழுது மறச்செருத்தம் மறையோர்க்குத் துணையாய்நின்று
சிந்தைமகிழ்ந் துலகாண்டு பாற்கடலுட் டுயின்றவனென் சிந்தையானே.

ஒ ஜெனமேஜய மகாராஜனே! பாண்டவர்கள் அஸ்தினபுரத்திற் சொக்கட்டானடித் தோற்றுத் திரௌபதியோடு பன்னிரண்டு வருஷம் வனவாசஞ் செய்யப் புகுந்து, காடாக்கினியோங்கிய காட்டிலும்-காளவிஷாக்கினி தங்கிய பாலைநிலத்திலும்-வடவா முகாக்கினிவந்துகுடிகொண்ட மலைச்சார்பிலும்-திருபுராக்கினிசிவந்த

பருக்கைக்கல் மேட்டிலும்-மதனுக்கினிமலர்ந்த மடுக்கரைகுளக்கரை நதிக்கரைகளிலுந் திரிந்து, மழை-பனி-காற்று-வெயில்-முதலாகிய வருத்தங்களையும்பொறுத்து அலைந்த சரித்திரத்தை முன்னமே சொன்னேன். பின்பவர்கள் ஒருவருஷ அஞ்ஞாதவாசங் கழிக்கவேண்டி உருமாறி விராடராஜனிடஞ் சென்று, தங்கள் தங்கள் புத்திசாதுரியத்திற்கேற்ற நாமமுந் தொழிலுங்கொண்டு, வாசவனென்னு மல்லனையுங் கீசகனென்னும்புல்லனையும் வதைத்துச் சகலரும்போற்றச் சிறந்திருந்த சரிதத்தைஇப்போது சொன்னேன். இனிப்பஞ்சவரைக்காட்டிலோட்டிவிட்டு, வீரகண்டைதாங்கிய தன்பாதத்திற் சத்துருவெல்லாம் மித்துருவாய்ப்பணிந்து கப்பணங் கட்டிவரப் பொற்பணி முடிபூண்டு, எப்புவனங்களுக்கும் ஏகசக்ராதிபதியாயிருந்து துரைத்தனஞ்செய்துவாநின்ற பாப இருதயம்படைத்த துரியோதனராஜன் அச்சமில்லாச் சேனைகளுடன் மச்சநாட்டைப்பகைத்து, இச்சையின்படிக்கும் பசுமந்தைகளைக் கொள்ளையிடலாமென்று கொச்சைமதியால் இலச்சைகெட்டுவந்த சண்டையைச் சொல்லுகிறேன் கேளும்.

துரியோதனன் பாண்டவரிருக்கைபறியத் தூதரையேவ, அவர்கள்சென்றுய்ந் தவலித்துவருதல்.

ஓ மகாராஜனே! மராடமன்னர் முதல்யாவரும் வணங்கும் விராடமன்னனிட மேவியிணங்கும் பாண்டவர்கள் அஞ்ஞாதவாசஞ்செய்து வருநாளையில், சகலவளமைகளும்பொருந்தி நிலைமைபெற்ற விருபுறத்திலும் அலையெறிந்தொதுக்கிய பொற்சனனங்களும் நவமணிக்குப்பைகளும் இராசிராசியாய்ப் புரண்டு பிரகாசித்திருக்கின்ற கங்கைவளமோங்கிய குருநாட்டுக்கதிபதியான துரியோதனராஜன் அஸ்தினபுரத்தை யாண்டுவருங் காலத்தில், ஒருநாள் வஞ்சச்சூதினுல் தோற்றுப்போன குந்திதேவியின் பிள்ளைகள் இன்னும்வனவாசஞ்செய்ய வேண்டியிருக்குமா? அல்லது அஞ்ஞாதவாசம்பண்ணப் போயிருப்பார்களா? அவர்கள் நாட்டைவிட் க் கர்ட்டுக்குப்போன நாளைக் கணககிட்டுப் பாருங்கள் சம்பிரதிகளே யென்றான். அவ்வாண்மனைக் கணக்கரில் பெரியராயசக்காரனெழுந்துவணங்கி, ஓ இராஜாதி ராஜபரமேஸ்பர ராஜமார்த்தாண்ட ராஜவுத்தண்ட ராஜகெம்பீர ராஜப்பிரபுடீக ராஜதுரந்தர ராஜராஜேஸ்வர வணங்காமுடிபொறுத்த துரியோதனமகாராஜனே! பராக்: ஆண்டவனுத்தாரப்படிக்குப் பாண்டவர்கள் வனவாசங் கழித்து அஞ்ஞாதவாச முக்கால்வாசியுந்தொலைத்துவிட்டார்களென்றான். அந்தமொழியைக் கேட்ட அரவகேதனன் சிந்தைவருந்தி, மிகவவசாத்தோடு அருகிலிறைந்திருந்த சாரணர்களையழைத்து, அடா தூதரே! பாண்டவருறைந்திருக்கும் பதியையும் அவர்கள்கொண்ட மாறுவேடத்தையுங் கண்டறிந்து நமக்குவெளிப்படுத்துவீர்களாகில், உங்களுக்குக் கோடி திரவியமும், குதிரை-யானை-தேர்- குடை-கொடி-பட்டு-பட்டாவளி-இரத்னபரணம்-சிவிகை-அருகுதிவட்டி -ஜெயபேரி-பங்காவாத்தியம்-கிராமம்—பூமி-முதலாகிய வெகுமதிகளுங் கொடுப்பேன். நான்குதிக்கும் நன்றாய்த்தேடிப்பார்த்துவாருங்களென்று சந்தன தாம்பூலங்கொடுத்து விடுத்தான்.

அரசன் சொல்லாசையை நம்பி அநேகதூதர்புறப்பட்டு, சபைமெச்சும்படி வெகுமதி பேறவேண்டுமென்னுஞ் சந்தோஷத்தால் வானமளாவியமதில் வளைந்த கோட்டைகளும். மாடமாளிகை கூடகோபுரமுள்ள பட்டினங்களும், கிறூர்க் கிராமங்களும், அக்கிராரங்களும், துருவங்களும், நதி-குளம்-ஏரி-தடாகம் - ஓடை-கயம்-கால்வாய்களும், வாழை-கமுகு-கரும்பு - தேங்கு-வருக்கை-இவைமுதலிய விருக்ஷ வளம்பெற்ற நாடுகளும், மேன்மைபொருந்திய வீடுகளும், வண்டோலஞ் செய்யும் பூங்காடுகளும், விண்டலமுயர்ந்த பர்வதங்களும், சுரை-புன்னை-தாழை-கரும்பனை-இவைமுதலியன வடர்ந்த மணல்மேடுள்ள கழிக்கரையும், பற்பல வழிக்கரையுந்தேடி: பாண்டவர்களின் காலடிச்சுவடுண்டோவென்று நாடி, நாலுதிக்கும் பிரிந்தவர்கள் கூடி, வேசாறிவாடி, நாமெல்லோரும் அதிர்ஷ்ட மற்றவர்களென்று தங்களைத்தாங்களே நொந்துகொண்டு அஸ்தினபுரத்திற்குவந்து சேர்ந்தார்கள். அப்போதுசூரியபுத்திரனுகிய கர்னன்-சௌபலராஜ குமாரனுகிய சகுனி பாத்துவாசதநயன் துரோணச்சாரி-சிவன் காதலன்அஸ்வத்தாமன் சாத்துவந்த மகாரிஷி சந்ததி கிருபாச்சாரி சந்தநு நந்தனன் வீஷ்மர்-பச்சை முதலிய ரத்னபரணமும் வெட்சிமாலையும் புனைந்த திரிகர்த்தன்-வியாசன்வழித்தோன்றல் விதுரன்-குருகுலாதிபதி திரிதராஷ்டிரன் - இன்னுமுள்ள பலதேசராஜரும் மந்திரி சாமந்தருந் தந்திரிசாருவருஞ் சூழ்ந்திருக்க, சந்திரனைவிட்டகலாத தாரகாகணம்போல் தம்பிமார் மொய்த்திருக்க, முடிமன்னர் முறைமையுடனிணங்கிக் கப்பணஞ் செலுத்திங்கால்மேல் வணங்க, முடியர்கூற, பட்டுவர்புகழ, துஷ்டர்கள்தாழ, கவிவாணர் துதிக்க, இசைவாண ரிசைக்க, மறையவர் ஆசீர்வதிக்க, பரதநாட்டியப் பாவையராட, சூதசங்கீதத் தோகையர்கூட, வெண்சாமரைபோட, வீரர்களெதிரோட, வெண்பட்டுக்குடை நிழற்ற, செம்பத்மாகத்தா லமைத்த வீரசிங்காசனத்தின்மீது மத்தியானச் சூரியன்போல் வேந்தனுன சுயோதனராஜன் வீற்றிருந்தான்.

அக்கால-வினைப்பயனுக்கேற்கவிதியைமதியாக்கிக் கொண்ட வேந்தனிருந்த கொலுமுகத்திற் பாண்டவர்களைத்தேடி இளைத்துவந்த தூதர்போய் நின்று தீர்க்க

தெண்டனிட்டு, ஓ நந்தியாவட்டமாலைபுனைந்தநாதனே கொன்றைமாலை யணிந்த பரமசிவனுக்கு வலதுகண்ணு கிய சூரியகிரணங்கள்பாயு மிடங்களினும், அந்தச் சரு வேஸ்வரனுக்கு இடதுகண்ணாகிய சந்திரப்பிரகாசம்ப ரவு மிடங்களினும், அவ்வாதி பாண்டரங்க னெற்றிக் கண்ணாகிய அக்கினிதேவன் பொருந்துமிடங்களினும், காலகண்டன் தாளருள்கண்ட காலனுடைய கரும்பா சஞ்செல்லு மிடங்களினும் புகுந்து; சோர்வில்லாமலா ராய்ந்து பார்த்தோம். எங்கும் பாண்டவரைக் காணு மற் பங்கப்பட் டிங்குவந்தோம். ஓ பார்த்திபனே! தங் கள் சமுகத்தில் நாங்க ளுண்மையாய்ச் சொல்லுகின் றோம். ஆண்டவனருளாற் பாண்டவர்மாண்டேபோயி னார்கள். இதற்குச்சந்தேகமில்லை. தேவரீரிடத்தில்யாங் கள் தவணை வைத்துக்கொண்டுபோன நாள்முதலிதுகா றுந் தேடித்தேடி, எங்கள்கால்கள்வாடி, விருதாவாய்க் காலம்போக்குவதிற் பிரயோசனமில்லையென்று தீர்மா னித்து; சீக்கிரஞ்சென்று மன்னர் பெருமானுக்கு முன் னுடிச் சொல்லிவிட்டால் இன்னும் வேண்டிய வுபாயந் தேடிக்கொள்ளுவாரென்று எண்ணிவந்து விட்டோம், தேவரீர் கட்டளையின்படி நடக்கக் காத்திருக்கின்றோ மென்று நமஸ்கரித்து, வாய்புதைத்துக் கைகட்டி, புத் திபுத்தியென்று விண்ணப்பம் பண்ணினார்கள்,

கர்னன் பாண்டரிருக்கை இவ்வாறு இக்குமெனக் கூறுதல்.

இப்பாற் பஞ்சபுஷ்ப பாணங்களையுங் கருப்பு வில் லையுமுடைய மன்மதனை யொத்த வடிவமைந்ததுரியோ தன ராஜன் சாரணருரைத்த லோபமொழியைக்கேட்டு காதிரண்டுங் கும்மென்றடையக் கதறி, உடல் பதறி, இருகாத்தையுமுதறி, தன்னருகிலிருந்த சாதுக்கள்முக த்தைநோக்கி, ஐயா பெரியோரே! இந்தத் தூதர்கள் அவனிமுழுதுந்தேடி யலைந்துவந்து உரைத்ததைக்கேட் டீர்களே, இனி நான் செய்யவேண்டிய காரியமின்ன தென் றியம்புங்கள். பாண்டுமக்களைவரும் பாஞ்சாலன் தையலுந் துவாதச வருடம் வனவாசம்பண்ணி, தேக மிளைத்துக் களைத்து ஆவியழிந்து போனார்களோ? அல் லது அஞ்ஞானவிருளைப் போக்கிச் சுஞ்ஞானச்சுடரெரி க்கச்செய்யுந் தவமுனிவர்களினால் மண்ணாசை பெண் ணாசை பொன்னாசைகளை விட்டு மனோதிடம் பெற்று, விஞ்ஞான விளக்கத்தால் வேதாந்தியானார்களோ? ஒரு வேளை யாருமறியாம லக்ஞாதவாசங் கழித்து, முடிவி லிவ்விடம்வந்து முளைப்பார்களோ? யாதுந் தெரியவில் லை. அதனையுங்களுள்ளத்திற் செவ்வையாக நிதானித்து யோசித்துச்சொல்லுங்கள். என்று கள்ளமனத்தோனு னகாந்தாரிபுதல்வன்கேட்க, சூரியன் புத்திரனாகிய கர் னன் சொல்லலுற்றான்.

ஓ அரவக்கொடி நிலவிய கௌரவகுல முதல்வனே! என் சொல்லுறுதியைக்கேளும். பாண்டவரைவரும் வ னவாசம்பண்ணிப் பன்னிரண்டுவருடத்தையுங்கழித்து காடுவிட்டகன்று, நாடுபற்றிச்சென்று, கூடுவிட்டுக்கூடு பாய்வதுபோல் மாறுவேடம்பூண்டு, பெயர்வேறுகொ ண்டு, குலம்வேறுகாட்டி, குணம்வேறுநாட்டி, நீதிநெ றிபிசகாமல்-ஆசாரம்வழுவாமல் - பழைமைச் செல்வம் பாராட்டாமல்-அடங்கி ஒடுங்கி, ஆயுதங்களை மறைத்து வைத்து, காலத்திற்குத் தக்க கோலமாக ஒவ்வொரு வேலையிலிருந்து, அக்ஞாதவாச வருடமுந் தொலைத்து அப்பால்வெளிப்பட்டு, ஆபரண மணிமாலைகள் பிரகாசி க்கு மார்பினை யுடையவராய்-ஆயுதபாணிகளாய் - இற மாந்திவ்விடம்வந்து, நாங்கள் முன்னஞ் சூதாடித்தோ ற்ற நாடுகொடுப்பையா? அல்லது போர்தொடுப்பையா என்று நம்மைக்கேட்பார்கள் இப்படி அவர்களுயிரு டன் வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. வேறாக நினைக்கவேண்டாம். ஓ இலங்கிய வலம்புரிமாலையைப் பார்த்து அரம்பைய ராசைகொண்டடரும் அலங்கார மார்பனே! என்சொல்லை நம்பும் என்று வீரப்பிரதாப ந்தெரிந்த மேலோனும், மந்திரசக்தி வரோதயனுமாகி ய அங்கதேசாதிபன் அறைந்தான்.

துச்சாதனன் கர்னனுரையை மறுத்து, பாண்டவர் தமக்குட் பகைத் திறந்தன ரெனல்.

இவ்வாறிசைத்த கர்னன்கருத்தைத் துச்சாதனன் கேட்டுத் துடித்து, மனங்கொதித்தெழுந்து, கண்ணுங் கருத்துங்காதும் புகையக்கனன்று, அண்ணன்கமலவடி யிற்பணிந்து, ஓ மலையிரண்டுதிரண்ட வயத்தோள் வள் ளலே! ஏழையாகியவென்சொல்லையுமிரங்கிக் கேட்டரு ளும். பாண்டவர்கள் நாட்டைவிடுத்துக் காட்டையடுத் தபோதே செத்தபிணத்தோ டொத்தபிணமானார்கள். மனுஷத்தனமுள்ள மானிகள் இந்நாள்வரையில் உயி ரோடிருந்து இனியிவ்விடம் வரப்போகிறார்களென்றெ ண்ணுகின்றீர்களா? ஐயோ! பாவம்; அவர்களப்போதே கெட்டு மண்ணில் மக்கிவிட்டார்கள். அவர்களைப் புதை த்த விடமும் புல்முளைத்தாயிற்று. ஐவர்கள்பேரு மறை ந்துபோயிற்று. அக்காரியங்களை நிதானிக்காமற் கர்ன ராஜன் இப்படி சொன்னது தப்பேயல்லாது வேறில்லை இதன்றியும்-அவர்களுயிருடனிருந்தாற் பாதாளபேத அஞ்சனம்போன்ற நம்முடைய தூதர்களின்கண்ணில கப்படாமற் போவார்களா? இதுவே நமக்குப் போது மான சாட்சியாயிருக்க, வேறுவேறெண்ணி விரிக்கவே ண்டியதென்ன? தேவரீர் கட்டளையிட்டருளுவீராகில், காட்டிற் கஷ்டப்பட்டுக் காலங்கழித்த ஐவர்கள் தாறு மாறாயிறந்ததற்குக் காரணஞ்சொல்லுகிறேன். அதைக் கவனித்தருளும்.

ஓ பாவலர்புகழுங் காவலர்க்கிறைவே! வாரேறிய மலைமுலையும், வாடியவல்லிக் கொடியிடையும், வாழைத்தொடையும், அன்னநடையும் வர்ணவுடையுமுடைய மங்கைமார்க்கெல்லாங் கடைப்பட்ட அந்தஸ்தினால்வறுமையடைந்த பாஞ்சாலியானவள் மர்மம்விட்டுத் தர்மராஜனை நோக்கி, ஐயோபாவி! அன்னமில்லாமல் நானமுகின்றேனே; ஆவியொழிகின்றேனே ஏழையெளியவர்க்குப் பெண்சாதியானவர்கள் எவ்வளவோ செல்வங்களை இன்பமா யனுபவிக்கின்றார்களே கோழையாகிய உங்களுக்குப் பெண்டாகிய நான் ஏழையாகிக் குக்கித் தவித்துக்கண்டார் சிரிக்கக் கலங்குகின்றேனே முகத்திற்கு மஞ்சளுண்டா? நெற்றிக்குக்குங்குமமுண்டா? கூந்தலுக்கு மாலைகளுண்டா? குட்சிக்குக் கஞ்சியுண்டா? அஞ்சலென்பவருண்டா? ஆதரிப்பவருண்டா? ஒஞ்சரித்துப்படுக்க வோலைப்பாயுண்டா! குந்தியிருக்கக் குடிசையுண்டா? வெளுத்தவாய்க்கு வெள்ளிலையுண்டா? ஆ? ஆ? தெய்வமே! சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை மேலென்பார்கள். நீங்கள்வேலும்-வில்லும்-வாளும்-பூரித்த தோளுமுடையவர்களாயிருந் தென்னபலன் பெற்றீர்கள்? எனக்கென்னநலம் வைத்தீர்கள்? நீங்களைவரும் ஆண்பிள்ளைகளிற் சேர்க்கைதானா? உங்களைப்போன்றவர்களைப் பார்க்கும்போது வெட்கமில்லையா? என்று நாள்தோறுஞ் சலித்துக்கொண்டு பேசி, வீணாய்வெறுத்து அவமதித்தேசி, முகங்கடுகடுத்துத் தினமுஞ் சண்டைதொடுத்தாள்.

அதனால் தர்மராஜன் குக்கல்வாய்ப்பட்ட முசல்போல் மனங்கூசி வருத்தமுற்ற நாளையில், தம்பிமார்நால்வருந் தமையனையடைந்து, வடவைக் கனல்போற் கொதித்துக் கோபித்து, அடா துரோகி! உன்னுடன் பிறந்து என்னபலன்பட்டோம். பெண்சாதிபிள்ளைகளை விட்டோம். நாடுநகரங்களைச்சூதாலிழந்துகெட்டோம். சகோதரர்களாகிய துரியோதனாதியரைப் பிரிந்தோம். உண்டுதின்று உறங்கும் பருவத்தில் உண்ணாமல் தின்னாமல் ஓட்டாண்டியானோம். ஒருவருக்கொரு காசுகொடுக்கச்சக்தியற்றோம். யுத்தமுனையில் வெற்றிபெறுதற்கும் வகையற்றோம். இனியுன்னிடத்திற் பொருந்தியிருப்பது தர்மமா? எங்களை யிப்படிக்கு எளிதஞ்செய்தது மர்மமா? பாண்டுவுக்குப் புத்திரராகப்பிறந்த கர்மமா? ஒரு பிரயோசனமு மில்லாமல் உனக்கு ஊழியஞ்செய்யஎங்களைமடக்கி வைத்துக்கொண்டாய். ஓ வேப்பம்வித்துக் கொப்பானவனே! என்று மரியாதைதப்பி யெதிர்த்துக் கொண்டார்கள். தன்னோடொருநாளு மாறுபட்டுப்பேசாத தம்பிமார்கள் வாயில்வந்தபடிபேசிய வருத்தத்தினாலும், திரௌபதிபடுத்துந் தொந்தரையினாலும், தனக்குள்ளிருக்குஞ் சில அசந்தர்ப்பங்களினாலும், அகாலபோசனத்தினாலும், காட்டுத்தீவெப்பத்தினாலும், மலைக்கானலினாலும், பனியினாலும், தன்னைப்பிடித்த சனியினாலும், சமானவாசர்கள் பழித்துச் சின்னத்தனஞ் செய்வதினாலும், பாபமும்பழியு மேலிட்டதினாலும் நம்பிடத்தில் வந்து முகத்தில் விழிக்கப் பவிஷில்லாததினாலும் தன்னாற்கூடியவரையிலுந் தாழ்ந்துகுழைந்து விசனக்கினியால்வெந்து, சஞ்சலத்துடன் சலித்து உயிர்விட்டான் தருமராஜன்.

என்றும் பிரியாமலிருந்த கருமாராஜனுயிர்பிரிந்தபோது, தம்பிமாருந் திரௌபதியுந் தழுவியழுது, அந்தோ! பழுதுவந்ததே என்று பாதவித்து, அண்ணனைப் பறிகொடுத்து மண்ணிலிருந் தென்னவாரிக்கொள்ளப் போகிறோம்? என்றைக்கிருந்தாலும் நமக்கு மிதுவே கெதியெனத்தேறி இறந்துபோனார்கள். அவ்விடமிருந்த கழுகு-பருந்து-காக்கை-இவைமுதலிய பட்சிகளும் மிருகங்களும் வயிறாரத்தின்று, கழித்துவிட்ட வெலும்புகள் மண்ணில்மக்கி மறைந்துபோயின. அவர்களைக் குறித் தின்னும்பேசுவது வீண். எனக்கநேகவிதங்களினால் திருஷ்டாந்தமாயிற்று. அண்ணா! நான்திண்ணமாய்ச் சொல்லுகிறேன், கருமானுலையிற் காய்ச்சித்துவைத்த இரும்பிலேறிய சலமானது திரும்பிவந்தாலும்வரும் காடேறியபாண்டவர்கள் இனி நாடேறப்போகிறதில்லை. என்சொல்லுக்கு எதிரெவர்பேசினாலும் அது ஈடேறப்போகிறது மில்லை. என்றுரைத்த அந்தத்துச்சாதனன் சொல்லைத் தேவர்கள் விரும்புந்திவ்யக்கியான இச்சாசுதந்தராகிய துரோணாசாரியார் கேட்டுப் பச்சாதாபப்பட்டு, பின்னகை விளைத்து, பாண்டவர் பக்ஷத்தில்வைத்த பக்ஷமும்-பண்பும்-அன்பும்-யாவருக்கும் பரிஷ்காரமாய்த் தெரியும்படிக்குச் சொல்லத் துணிந்தனர்.

துரோணாசாரியர் பாண்டவர் நிலைமை கூறித் துச்சாதனனுரையைக் கடிதல்.

ஓ ராஜாதிராஜனான சுயோதன மகாராஜனே! கேளும் உம்முடைய தம்பியாகிய துச்சாதனராசன்க்ஷாத்திரமாகச் சொன்ன ஆத்திர வார்த்தையையோசித்துப் பாரும். பாண்டவர்களை இலேசாகநினைக்கவேண்டாம். சிறுபிள்ளை யுடுத்த சிற்றாடைபோற் பேசாதீர்கள்: முன்பின் எண்ணிப் பாராமல் முழுமோசம் போகாதீர்கள். முறைதப்பான ஆலோசனை பண்ணாதீர்கள். பாண்டவர்களெத்தன்மையரென்றால், வேதமுறைவழுவாத வித்தகர்கள். விண்ணவர்கொண்டாடு மேன்மைபெற்றவர்கள். யாவருடைய நாவுக்கு மினிமையானவர்கள். எத்தலத்தவர்க்கு முதன்மையானவர்கள். மூவாசையற்ற முனிவராலுங் காணுதற்கருமையான கண்ணுதலாற்பெற்ற பாசுபதமுதலிய பாணவலிமையுடையவர்கள்மிகுந்தசுகந்த கற்பகமாலைபுனைந்தவர்கள். விற்பனவிவேகமுயர்ந்தவர்கள். எங்கும்விளங்கும் இளஞ்சூரியன்போற்

சுடையவர்கள். மந்திரஞானியர். எப்புவனமுமதிக்கும் ஒப்புவமையில்லாதவர் மருதமாத்தையுதைத்திரட்சித் தக் குருந்தமாத்திற் குதித்துவிளையாடிய பன்னகசய னனுகிய திருமாலைப் பாண்டவர் சகாயனென்றியாவ ருஞ் சொல்லும்படிக்குப்பெற்று இறுமாந்திருக்கும் பார்த்திபர் காலகேயர் நிவாதகவசர்களுடைய உரத் தையும்-வரத்தையும்-சிரத்தையும்-புரத்தையும்-போக்கி, தேவர்களிடரைநீக்கி, தேவேந்திரனுக் காதிக்கமுண் டாக்கி வைத்து அழியாக் கீர்த்தியைப்படைத்தோர். கடலினுமுயர்ந்த கண்ணரு ளுடையோர். அமுதினு மினிய அன்புடையோர். சற்றும் பிசகாச் சத்தியசம் பன்னர். வித்தக மறநூல் மேம்படு மன்னர். இத்தன் மைபராகிய அந்தவுத்தம வேந்தரைச் செத்தன ரென் பது தகுமோ? அத்தினபுரியில் உத்தமர்கூடிய சபை யிற்கூறிய உறுதிச்சபத முடிக்காமற் போவரோ? மத்தி மர்கூடி வசைபேசும்படியாய்ச்சாவரோ? பாண்டவரை மாண்டவரென்று மனப்பால் குடியாதீர்கள். அவர்கள் பகைவருக்குப் பாசகரென்று யோசிக்கவேண்டியது. தங்களுண்மையை நிலைநிறுத்தும்படி தவணைநாட்கழி த்து இன்னுஞ் சிலநாளையிலிவ்விடம்வந்து சேரப்போ கின்றார்கள். நாமெல்லோருங்கண்ணுற்காணப்போகின் றோம். தேனேங்கு மாலைதாங்கும் பூமானே! நான்சொ ல்லியதைச் செவ்வையாகத்தெரிந்து, உமதுள்ளத்தி லுறுதிகொள்ளுமென்றுதுரோணாச்சாரியர் சொன்னார்.

கிருபாசாரியர் பாண்டவர் பராக்கிரமங் கூறித் துரியோதனனுக்கியர்க் கறிவுறுத்தல்.

இப்பால் வில்லின்மறை வல்லவராகிய கிருபாச்சா ரியர் சொல்லத்தொடங்கினர். நல்லவிவேகசுகபோக முற்ற வேந்தனே! சத்தியம்விட்ட அசத்தியர்களுக்கு மிர்த்தியு கிட்டிவருமேயன்றி, சத்தியந்தொட்ட உத்த மர்கட்கு உரியகாரிய நிறைவேறுமுன் மிர்த்தியுஎட்டிப் பாராது. ஆதலால்-உண்மையுள்ள பாண்டவர்கள் மர ணமானர்களென்று அகாலமரணத்திற்கு இடமானவர் களேசொல்லுவார்கள். புத்திமான்கள் அவைகளையொரு போதும் ஒப்புக்கொள்ளார்கள். விம்முதலோடுஞ்செ ன்ற வேந்தர்கள் ஐவரும் நம்மிடத்தி லொப்புக்கொ ண்ட ஈராறுண்டு மெளிதிற்கழித்து, அக்ஞாதவாசங் குறித்து அவரவருருவ மறைத்து, எந்தநகரத்திலாவ தடுத்து, எடுத்தகாரிய முடிப்பதற்கும்-தொடுத்தவேலை நடத்துவதற்கும் காலங்கருதிக்காத்திருப்பார்கள் அவர் களைக்கண்டு பிடிப்பவர்களு முண்டோ? ஓமண்டலதரா ந்தரா! அவர்கள் மகாசூரர்கள். தருமமறைமுதலிய சாஸ் திரமறிந்த வீரர்கள். சாதுசங்கப் பழக்க முற்றதீரர்கள். தனகனக வஸ்துவாகன தர்மவிசாரணையிற் குபேரன் போன்றவர்கள். மகா தவம்பெற்றவர்கள். மேலான மதியுற்றவர்கள். ஒருமையும் பெருமையுமுறவாய்கலந்த வர்கள் அவ்வைவர்களில்தருமநந்தனர்சதாநிஷ்டைகூடி னர். அவரவறுத்தலும்பொறுமையும்அழுக்காறின்மையு ம்நற்குண நற்செய்கையும்:புறங்கூறாமையு முடையவர். தம்பிமாரிடத்தி லன்பு தவறாமல், அவர்களிஷ்டப்படி மாறுபடாது நடந்து, காலத்திற்குத்தகுந்த புத்தியுத்தி களை யெடுத்துக்காட்டி, அவர்களைத் தன்வசப்படுத்திக் கொண் டிருக்கத்தக்கவர். அந்தத் தம்பிமார்களோ? தமையன் சொல்லுக்கிரண்டில்லாமலிருந்து, அவராற் றியகோட்டைக் கடவாமல்நடந்து, தமையனைத் தந் தையாக உட்கொண்டு நிக்ஷைதேடா, திருப்பவர்கள். ஆதலால்-அவர்களுக் கொருபோதும் பொல்லாங்குநே ரிடாது. அப்பேர்ப்பட்ட அறிவாளிகள் மனவெறுப்பி னல் ஜேஷ்டனைத் தாறுமாறுகப்பேசி, அவருமிறக்கத் தாங்களும் இறந்தார்க ளென்பது மாச்சரியமன்றி ஆச் சரியமல்ல- அந்தநினைப்பை முற்றும்மறந்து, எப்படியு மிவ்விடம் வருவார்களென்னும் எண்ணம்வைத்து, அவ ர்கள்வந்துவிட்டால் அதற்கு என்செய்வோமென்று அச்சத்தோடிருக்க வேண்டும்.

ஓ மதிகுலவரசே! அவருள் அர்ச்சுனனேவென் றால்-அசகாயசூரன். அதிரதவீரன். மூன்றுலகையும் வெல்லுந்தீரன். சுந்தரத்திற் சொகுசுடையமாரன்,தேவ தாஸ்திரந்தெரிந்தகௌமாரன். வீமனெப்பேர்ப்பட்ட வனே வெனில்-ஊழிக்காலத்துயமன்போலயுத்தம்பண் ணத்தக்க சண்டப்பிரசண்ட தண்டதரன். சாந்தகுண தர்மராஜன் சண்டைசெய்யவந்தாலோ? திரிபுவனமுந் திக்கென் றெரிந்துபோம். வடவாமுகாக்கினியும்வாடிச் சாம்பராய்ப் போய்விடும். அவருடைய மகிமையை யா ருமறியார்கள். அறியத்தொடங்கினுலளவிறந்திருக்கும் ஓ அரவக்கொடியோனுய் விளங்கும் அரசனே! இளைய வரிருவர் எத்தன்மையரெனில் - இராமபாணத்திலுங் கொடிய அம்பினையுடையவர்கள். பாதன்போலும் இல க்குமணன் போலும் விரதங்காப்பவர்கள். பாஞ்சாலி யோ? பதிவிரதைகளுக்கெல்லாம் அதிதேவதை யான வள். சொல்லைக்கடந்து சொற்புகலாதவள். பல்லைத்திற ந்து பலுக்கறியாதவள். இல்லையென் றுரைத்தல்என்று மில்லாதவள். வல்லவர் தம்மால் மாறுகொள்ளாதவள். துடிப்பினை யுடையவள். தூற்றலிலாதவள். நற்குணநற் செய்கை வாய்ந்தவள். இப்பேர்ப்பட்ட எழிலுடைய மானுள் தருமராஜனுடனே வெறுத்துச் சண்டைபோ டலாயினளென்பது, தவறிலுந்தவறே இவர்கள் முக்கி யமாய் அக்கியாதவாசந் தொலைத்து இவ்விடம்வருவார் கள். உங்களெண்ணத்தைப் பார்த்தால் அனர்த்தம் விளை யுமென்பதற்குமுன் ஐயமில்லை. அவர்கள் வெளிப்படுவ தற்குமுன் எவ்வகையிலாவது கண்டுபிடித்து, சபையிற் பேசியிருக்கிறபடிக்கு மறுபடியும் வனவாசம் போகச் செய்வோமாகில் நாம் சுகப்படலாம். அப்படிசெய்யா

விடில், அர்ச்சுனன்கணை அதிக்கிரமித்துவந்து நம்மைக்
கொண்டுபோய் நமனாலயத்திற் சேர்க்கும். இஃதன்றி
யும்-வேதியருக்கு வேதமேகண்கள். க்ஷத்தியரிருக்குத்
தூதரேகண்கள், ஆகையால்-நீங்கள் சாரணரைவிடுத்து
முன்ஜாக்கிரதைப் படவேண்டியது. நமதுயுத்திக்குமே
லான யுத்தியையுடைய பாண்டவர்கள் ஆண்டவனரு
ளைப் பெற்றவர்கள். எவர் கண்ணுக்கும் அகப்படார்கள்
பகலளவு போனலொழிய இரவுவாராது. இரவளவுசெ
ன்றாலல்லது பகல்தோன்றாது. அதுபால்-உருவமறைந்
துறையும் பாண்டவர்கள் அக்ஞாதவாசங் கழித்து வெ
ளிப்படுவார்கள். நமது பலாபலத்தை நாமெண்ணி மெ
ச்சும்போது, எதிரிகளின் பலாபலத்தையு மெண்ணித்
துணியவேண்டியது. இப்படிக்கெல்லாம் யோசித்து ஒ
ன்றைச்செய்தால், என்றென்றைக்கும் பழுதுபடாது.
அதைவிட்டுத் துராலோசனை செய்வதினாற்பிரயோசன
மென்ன? என்று மதியிலுயர்ந்த கிருபாச்சாரியர் வகுத்
தார்.

வீஷ்மாசாரியர் பாண்டவருளநகர் இவ்விதவியல்பையுளதாமென அறிவித்தல்.

இந்தப்பிரகாரந் துரோணாசாரியருங் கிருபாச்சா
ரியரும் பேசிய விபரங்களைச் சபைநிறைந்த சகலருங்
கேட்டு, பெரியோர்களின் கருத்தைத் தங்கள் தங்கள்
புத்திக்கிசைந்தபடி யோசித்து, முடியப்போகிறகாரண
காரியங்களை நிதானித்து, வாய்மூடி மௌனம்போலி
ருந்தார்கள். அந்தவேளையிற் கௌரவகுலப் பிதாமகனா
கிய வீஷ்மர் துரியோதனனைப்பார்த்து, அப்பா திரித
ராஷ்டிரனுக்குச் சுபுத்திரனும் எனக்குப் பௌத்திரனு
மான சகோத்திரனே! நீ தூதர்களையனுப்பிப் பாண்ட
வர்களைத் தேடச்சொன்னது ஞாயமே அவர்கள் தேச
மெங்குந் தேடிப்பார்த்துத் திரும்பிவந்துரைத்தது அபா
யமே: அதற்காகக் கர்னராஜன்பேசியது நேயமே உன்
தம்பிதுச்சாதனன் அறைந்ததுனக் கநியாயமே துரோ
ணாச்சாரியருங் கிருபாச்சாரியருமொழிந்தது காயமே
நீயந்தப் பாண்டவர்களை யெப்படியுங் கைப்பிடியாகப்
பிடிக்கவேண்டுமென்றெண்ணுவ துபாயமே இதனாற்
காரியமில்லை. பாண்டவர்கள் பன்னிரண்டுவருஷம் வன
வாசஞ்செய்து அக்ஞாதவாச மோராண்டு தொலைப்ப
தற்குன்னி, தங்களுருவ மறைந்து, ஒருதேசத்திலுறை
ந்து, முக்காலே மூன்றுமா முக்காணிவருஷமுங் கழித்
துவிட்டார்கள். இப்போது நீங்கள் ஐவர்களைக்கண்டுபி
டிக்குமுன்மற்ற நிகாற்ற மாகாணிவருஷத்தையுமொ
ழித்துவிட்டு வெளிப்படுவார்கள். அப்பேர்ப்பட்ட அறி
வுடையோர்களைமரணமடைந்தாரென்றுபேசினவர்கள்
அந்தப் பாண்டவர்களால் மாணமடையத் தக்கவர்க
ளே: அத்தன்மையான அவசரப்பேச்சை எத்தன்மை
யோ னெடுத்திசைத்தாலும், புத்திமானாகிய நீயெவ்வ
ளவும் நம்பப்படாது. ஆனால்ஐவரிருக்குமிடத்தைநீங்க
ளறியவேண்டு மென்னும் முக்கிய முளதாகில், முந்
நூலாசிரியர்களால் அதற்கோ ருபாயமுண்டா யிருக்
கின்றது. அந்தக் குறிப்பின்வழியை நான்குறிக்கின்
றேன் நீங்கள் நிதானித்துக் கொள்ளுங்களென்று காங்
கேயர் சொல்லத்தொடங்கினர்.

அப்பா துரியோதனா! பிரமாதிதேவர்களே யன்றி
முனீஸ்வரர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் மதித்தற்
குரிய தருமராஜனும்-திரௌபதாதேவியும்- சகோதரர்
களும்-ஒன்றாய்ப் பொருந்தி வாழ்கின்ற நாடும் நகரமும்
மாதமும்மாரி வருஷிக்க வளங்கொண்டிருக்கும். காடு
காம்புள்ள மலைகளெல்லாந் தேன்வாரிகசிந்துகொண்
டிருக்கும். ஆறுகுளத்தி னலைகள்யாவும் நவரத்தினங்
களைக் கொழித்துக்கொண் டிருக்கும். கழனிகளிலூர்
ந்து தவழாநின்ற இப்பிகள் முத்துக்களை முறைமுறை
யே ஈன்றுகொண் டிருக்கும். கருங்கடற்கரைகளிற்சிவ
ந்த பவளக்கொடிகள்படர்ந்திருக்கும். காடுகள்தோறுந்
தேடுதற்கரிய பொருள்வளம் நிறைந்திருக்கும். பசுவி
னங்கள் வேளைக்குப் பத்துப்படி பால்கறக்கும். வெகு
சனங்கள் நடக்கும் வழிகளெங்குங் கரும்பாலை சிறக்
கும். எப்போது முப்போகந் தப்பாமல் விளையும். நித்
தியசுப மங்களமாயிருக்கும். அருந்ததியைப்போற் பதி
விரதையான ஸ்திரீகள் பொருந்தி யிருப்பார்கள். சோர
பயம்வாராது. சோரபயமிராது தெருக்கடோறுந் தரு
மக்கொடி நாட்டியிருக்கும் போர்முகத்தில் வெற்றி
கொள்ளும் ஜெயக்கொடி காட்டியிருக்கும். வண்டினம்
மதுவுண்டு மகரந்தந் தோய்ந்து காந்தாரம் பாடும். அந்
நகரப்பதியோர் அண்டினபேரை யாதரித்துக் கீர்த்திப்
பிரதாபம் பெற்று ஜீவகாருண்யரா யிருப்பார்கள். துற்
சோபம்-துற்பயங்கரம்- துற்மரணம்-துற்வியாதி-இவை
முதலியதேகபீடைவாரா. யோகமார்க்க நெறிதேடித்
தீவினையொழிந் திருப்பார்கள். பொதுச்சாலையிற கட்
டிய ஆராய்ச்சி மணி என்றுமசையாது அசையும்படி
யானஅக்கிரமங்களு மிராது. எளியவரென்றும் வலியவ
ரென்றும்பாராமல் யாவர்க்கும் நடுவுநிலைமையான நீதி
யொன்றாயிருக்கும். எவர்க்கு மறிவுகுறையாது. சகல
கலைக்கியானங்களுந் தவறாது. உடனுக்குடனே துஷ்ட
நிக்ரக சிஷ்டபரிபாலனம் நடந்தேறிவரும். ஆசாரபூசா
விதிக ளதிகமாயிருக்கும். தேவாலயம் - விஷ்ணுவால
யம் - மிகுதியாய்ச் சிறப்புற்றிருக்கும். பாபத்திற்குங்
கோபத்திற்கும் பயந்தடங்கி வாழ்வார்கள். புண்ணிய
த்திற்கும் பொறுமைக்கும் பொக்கிஷமா யிருப்பார்
கள். தைரியம் - கல்வி - ஞானம் - குணம் - பெருமை
மேன்மை - தபம் - செபம் - தானம் - நிதானம் - வெ
குமானம் - சன்மானம் - வேத மந்திரம் - வேள்வி ஒ

மம்-பூரணகும்பம்-புண்ணிய போசனம்-நவமணிமாளிகையாசு-இவைகளனைத்தும் எங்குஞ் சிறந்திருக்கும். சுபமங்கள கல்யாணமுரசம்- தியாகமுரசம்-வெற்றிமுரசம்-வலம்புரிச் சங்கங்களு மெங்கெங்கு முழங்கிக்கொண்டிருக்கும். காயாமரங் காய்க்கும். பூவாமரம் பூர்க்கும் கமலக்கருணைக் கண்ணனும் மகாலட்சுமியுடன் வாசமாயிருப்பார். இத்தன்மையாகியஉத்தமநகரமெதுவோ? அதுதான் புண்ணிய புருஷர்களிருக்கும் பதியென் றுணர்ந்துகொள்ளுக. இவைபெரியோர்கள் பேசிய வண்ணம் நானுமுண்மையாகச்சொன்னேன். இனிமேலுன்னுடைய வல்லமையினால் யோசித்து உறுதி செய்துகொள்ள வேணடியதென்று வீஷ்மர் விளம்பினர்.

கிருபாசாரியர் துரியோதனனைச் சொற்சோர்வுபடலாகாதெனக் கடிதல்.

இவ்வாறு வீஷ்மர்கூறிய வனைத்துங்கேட்ட கிருபாச்சாரியர் மனமகிழ்ந்து, வணங்காமுடி மன்னனை நோக்கி, ஒவில்லும் வேலுந்தாங்கிய வேந்தே! உமதெண்ணப்படி முடியும்வண்ணஞ் சுளுவாகிய சூட்சியை உங்கள்பாட்டனர் சொல்லிவிட்டபடியால், திண்ணிய தூதரைவிடுத்துத் தேடச்செய்வதற் கிதுவேநல்லஆதாரவென்றிசைத்து, மேலுஞ் சொல்லுகின்றார். அன்புடைமையை ஆபரணமாகவுடைய பாண்டவர்கள் இராஜசபையிற் சொக்கட்டானுடித் தோற்றநாளையில், என்போலொத்தவர்க ளேற்படுத்தியவாக்கியம் பழுதுபோகாமல், பன்னிரண்டுவருடங் காடுறைந்து ஒருவருடநாடுறைந்து காலங்கழிப்பதற்காகத் தங்கள் தங்கள்வடிவத்தை மறைத்திருப்பார்க ளென்பதற் கையமில்லை. பூருவமிந்த இராஜசபையி லுடன்பட்டுப்பேசின பேச்சின் படிக்குச் சொற்சோர்வுபடாமல், விபகாரப்பழுதுவாராதபடி தவணைநாளைத் தவிர்த்துக்கொண்டுமெய்வழி நிற்கின்றார்கள். ஆதலால் நீர்முன்னம் அவர்களைநோக்கி, ஓபாண்டவர்களே! இப்போது பெரியோர்கள் கூறிய இந்தப் பதின்மூன்றுவருடமுஞ் சென்றபிற்பாடு நீங்களிவ்விடம் வருவீர்களாகில், உங்கள்நாட்டையொப்பித்து விடுகிறேனென்று உறுதியுடன் எங்களுக்கு முன்பாக நீர்சொல்லியிருக்கின்றீ ரல்லவா? நீர் அப்போதுரைத்த வாக்கியத்தை இப்போதுதவறி யேதேதோ பேசுகின்றீர். இன்னும் பாண்டவர்களைக் கண்டுபிடித்துப் பின்னும் பன்னிரண்டுவருடங் காட்டிலோட்டிவிட வேண்டுமென்று மெத்தப் பிரயாசத்துடன் சித்தப்பிரமை யடைவது அநியாயமல்லவோ? ஐயோ! தலைபோங்காலநேரிட்டாலும், சரீரத்தைவிட் டுயிர்கெட்டாலும், உம்மைப்போலொத்த உத்தமன்சொல் நிலைதப்பிச் சோர்வடையலாமோ? அப்படி நிலைதவறுவீராகில, உமதராசாக்ஷி யென்னபிரயோசனத்தைப்பெறும்? உம்மையார்தான் மதிப்பார்கள்? ஆனால் எனக்கொன்றுதோன்றுகிறது. பாபங்களைந்து பாராளும்பார்த்திபரிடத்திற் சத்தியந்தப்பியகுணந் தோன்றுமாகில், அவர்களினராசாட்சி பாராஜர் பங்காய்விடும். அஷ்டலட்சுமியுமகன்று கஷ்டலட்சுமிகலந் துறவாடுவாளென்று வேதத்தில் விளம்பியமொழி யொன்றுண்டு. அதையுன்னுமிடத்தில், உம்முடைய செல்வமுழுமையுஞ் சத்தியவான்களாகிய ஐவர்களுடைய தென்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை. இதைநீர் செவ்வையா யோசித்துப்பாரும். உம்முடைய நாவை ஸ்திரமாகக் காரும்.

ஓ சந்திரகுலத்தோன்றலே! ஆதிகாலத்தில் நாங்களெல்லோரும் உம்முடன்கூடிக் குலாவியிருந்து பேசிய விதமென்னவெனில்-பாண்டவர்கள்வனவாசம்பண்ணி வந்தால், அவர்கள் நாட்டைக்கொடுத்து விடுவதென்னுந் தீர்மானமேயன்றி; வேறொன்றில்லை. இப்போதுமக்கிஷ்டமாகிய தம்பிமார்முதலிய பேர்களோடுநீருந் தாறுமாறாய்ப் பேசுவதுசரியல்ல. அறியாதவர்க்ள் அப்படிபேசினாலும், பெருமையு நிலைமையுமுடைய பெரியவனாகியநீர் பேசப்படாது. உங்கள் குணத்தைநிதானிக்குமிடத்தில் நீங்கள் நினைத்த கருத்தை நேரேயறிந்தோம். நீங்களொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்னு நெறியறியீரோ? நீங்களெண்ணிறந்த நாள் தேடினாலும் உங்கள் கண்ணுக்குப்பாண்டவாகப் படப்போகிறதில்லை. அவர்களைக்கண்டு பிடிக்குஞ்சாமர்த்தியமு முங்களிடத்திலில்லை. அப்படிக்கல்லவென்று காண்பதற் கெத்தனிப்பீர்களாகில், வீணானபழியும்மேலானவிழிவுங் குறைவுநேரிடுமே யல்லது, நிறைவேறாது. அவர்களெந்நாளு நன்னாளாகவே யநுபவிப்பார்கள். ஆச்சுது: அஞ்ஞாதவாசமும் பண்ணிவிட்டார்கள். நீர் கங்கணங்கட்டிக்கொண்டு இதுவரையிலுந் தேடவிட்டிருந்த தூதராற் பாண்டவரிருக்கும் ஸ்தானந்தெரிந்துகொள்ளாமற்போனீர். இனிமேல் தேடவிட்டென்னலாபங் காணப்போகின்றீர்? விருதா ஆலோசனையாற்பிரயோசனமில்லை. எதொரு காரியத்திற்கும் முன்ஜாக்கிரதை யென்பதிருக்கவேண்டும். பின்னெண்ணிப் பார்ப்பது பேதையர்பக்ஷம். தவணைநாட்கழியுங் காலையில் தடவிப்பார்க்கத்துணிவது மேன்மையோர் பக்ஷமல்ல. ஆயினும் பாகீரதிபெற்ற கோமுனியாகியபரிசுத்தஹிருதயரான வீஷ்மர்சொன்ன குறிப்பின்படிக்கு, தூய்மையும் வாய்மையும் பொருந்தியதேசம் எவ்விடமிருக்கிறதென்று அதையாகிலுந் தெரிந்துகொள்ளும். அப்பால் மற்றக்காரியம் யோசிக்கலாம். என்று பூர்வாசாரியராகிய கிருபாசாரியார் பேசிமுடித்தனர்.

தூதர்கள் துரியோதனனுக்கு மச்சநாட்டு வளமும், அந்நாட்டில்நடந்த விதமுங் கூறுதல்.

அப்போது அவரிடத்தில் நேச விசுவாசமுள்ள துரியோதனமகாராசன் மனம்வருந்தி, மாநிலமெல்லாந்

தேடித் திரிந்தலைந்துவந்த சாரணர்களை நோக்கி, நீங்கள் பார்த்த தேசத்தில் எங்கள் ஐயா அவர்களுரைத்த வார்த்தையின்படிக்கு அழகும் -வளமும்-அன்பும்-நோன்பும் - நேயமும் - நிலையும்-நீதியும்-நெறியும்-மானமும்-தியானமும்-வண்மையும்- பண்பும்-இசைந்திருக்கும்பட்டினமியாதோ? அதைத்தெரியச் சொல்லுங்களென்று கேட்டான். உடனேவேவுகார ரெல்லோருங்கூடி, அரவக்கொடிக் கதிபனுடைய அடிமேற்பணிந்து விளம்பினார்கள். ஓ சுவாமீ! பராக்:பெரிய முதாதை பேசியபடியே மாதமும்மாரியின் யோகமும், பூதலப்பயிர் பொருந்து முப்போகமும், ஆதுலர்க்களிக்கும் அன்னமுதலாகிய தியாகமும், மற்றச்சிறுஞ்சிறப்பும், திகழுநற் செல்வமும், அறம்பொருளின்ப ச்மம்பாடும், நிறைந்தரும் பசுக்கள் நெருக்கமும், பரிசுத்தப்பெருக்கமும், பாபச் சுருக்கமும், படையின் வருக்கமும், வாழை-கமுகு-தெங்கு-கரும்பு-இவை முதலியவைகள் வளம்படவிளைந்து, பார்ப்பவர் மனதையுங் கவர்ந்து, மேன்மேற்சிறந்த நாடுமச்சநாடல்லது மற்றநாடில்லை. வேறேமாற்றிச் சொல்லுவதற்கும் வகையில்லை. எங்குமாராய்ந்துணர்ந்தோம். அந்நாட்டின்மகிழ்ச்சியை நாங்களென்னென்று சொல்லுவோம்? ஓ எந்நாட்டுமிசைபெற்ற எந்தலே! நம்முடைய பிதாமகர் பேசியவார்த்தை பிசகன்று. அதுசத்தியமே: மேலும் அம்மச்சநாட்டில் மற்றோராச்சரியத்தைக் கேளும். யாரோவொரு பெண்ணனைவள் சைரந்திரியென்றும் - மாலினியென்றும் - பணிப்பெண்ணென்றும் - வண்ணமாமகளென்றும் பேர்கொண்டு, விராடராஜனுடைய மனைவியினிடத்தில்வந்துசேர்ந்திருக்கின்றாளாம். அவள்பேரிற் கீசகன் ஆசைகொண்டுதூர்த்தனானும் எவனோவொரு கிங்கான் குறுக்கேநுழைந்து, அவனைப் பிடித்தெறிந்து வீசினனும். சபையிலிருந்தவர்க ளேசினர்களாம். அந்தக்கீசகனையும் அவன் தம்பிமார்களையும் அன்றிரவில் மோசஞ்செய்து, பொழுது விடியுமுன்னமே சிலர்கொன்றுபோட்டார்களாம். இவ்விதமாகக் கொன்றவர்கள் யாரென்று விசாரிக்குமிடத்தில், மேற்கூறிய வண்ணமாமகளுக்கு மெய்க்காவலாக விண்ணுலகிற் சஞ்சரிக்குங் காந்திருவ ரைவரென்று மண்ணுலகெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். நாங்களதை நன்றாயோசிக்குங்காலத்தில், அந்தக்காந்திருவரைவரும் பாண்டவர்களென்று துணிவாய்ச்சொல்லுவோம். இதுவேநிச்சயம். என்று ஸ்திரமாகச் சொன்னார்கள்.

துரியோதனன் தூதுவர்சொல்லைச் சன்மானித்துச் சபையாரை வினவுதல்.

இப்பால் துரியோதனராசன் சாரணர்கள் கூறிய ஸ்திரவார்த்தையையும், வீஷ்மர் மனங்குவிந்துரைத்த சத்தியமொழியையுஞ் சேர்த்து, தன்கருத்துக்கிசையச் சீர்தூக்கிப் பார்த்து, காரணகாரியத்தை யோசித்து, தனது பூரணமனதோடு இதனைப் பேசத்தொடங்கினன். ஐயா கிருபைக்கடலாகிய பெரியோர்களே! கேளுங்கள்: கீசகன்-வீமசேனன்-சராசந்தன் - பகாசுரன்-மத்திராஜன்-பலதேவன்-இவர்யாவரும் இந்நான்முதலிய பேர்களாற் புகழத்தக்க தோள்வலிமையுள்ளவர்கள். பதினாயிரம் யானைபலம் படைத்தவர்கள். இவர்களில் ஒருவரையொருவர் கொல்லலாமேயன்றி மற்றொருவரால் மடியாரென்று பெரியோர்கள்பேசக்கேள்விப்பட்டிருக்கின்றேன். அப்படியிருக்க - காந்திருவர் வந்து கீசகர்களை மடித்தாரென்பதை யெப்படிநம்பலாம்? அந்தச்சைரந்திரி நிமித்தமாய்க் கீசகர்கள் சங்கரிக்கப்பட்டார்களென்பதை உன்னி யோசிக்குமளவில், அவள் சைரந்திரியல்லள்-துரோபதியென்றும், காந்திருவரல்லர்-பாண்டவரென்றும், அப்பாண்டவரில் வீமசேனனே கீசகர்களை நாசஞ்செய்தவனென்றும், இவர்கள் யாவரும் பெட்டியிற்பாம்புபோலடங்கி விராடபுரத்தி லிருக்கின்றார்க ளென்றுங் கெட்டியாய்ச்சொல்லுவதற்கு யாதொரு அட்டியுமில்லை. அதேனெனில்-வல்விரும்பெனத் திருந்திய புயவலிபொருந்திய யக்ஷர்கள்-அமரர்கள்-நாகர்கள்-அசுரர்கள்- இராக்கதர்கள்-காந்திருவர்கள்-முதலாகிய யாவரும் அந்தக்கீசகன் வல்லமைக்கு ஆற்றமாட்டாமல், கால்கைநடுங்கி யொடுங்கியிருந்தார்கள். இவர்களிலொர் பிரிவாகிய காந்திருவர் வந்து கொன்றார்களென்பது எனக்கு மிகவு மாச்சரியமா யிருக்கின்றது. தேன்றுளிக்கு முடியோனாகிய கீசகனை மடித்தவன் காமனுக்கொப்பாகிய வீமனென்று நினைப்பதற் கியாதுஞ் சந்தேகமில்லை. வண்டுமொய்க்குங் கொண்டைவினையுடைய வண்ணப்பெண் வடிவினாள் ஐவர்க்குரிய தேவியே: இதற்கையமென்பதில்லை. ஆகையால்-பாண்டவர்கள் விராடபுரத்தில் மறைந்திருக்கின்றார்கள். அஞ்ஞாதவாசத் தவணைகழிக்குநா ளின்னுமிருக்கிறபடியால் தாங்கள் வெளிப்படாமல், இரகசியமாய்ச்சிங்கபல கீசகனுயிரைத் தீர்த்துவிட்டார்கள். இதற்குமேல் நடக்கவேண்டிய யோசனையென்ன? இன்னதென்றுரையுங்கள். ஓ என்பொன்னனைய பெரியோர்களே! என்று ஜெயங்கொண்டாடும் புயங்கக்கொடியோன் கேட்க, சூரிய குமாரனாகிய கர்னன் ஓர்மொழி யுரைக்கலுற்றான்.

கர்னன்மச்சநாட்டிற்பாண்டவரைக்காணற்கேதுகூற, திரிகர்த்தன்தன்பூர்வபகைநாடியங்குசெல்ல, துரியோதனன் யுத்தசன்னத்தனாதல்.

ஓ மணங்காதலிக்கும் வணங்காமுடி மன்னனே! நீரெண்ணியதே நிசம். இன்னு மேன்தாமசம்? மேக

மண்டலமளாவிய தேர்விதங்களும், மும்மதம்பொழி
யானையினங்களும், குப்புற்றுலாவுங் குதிரைத்திரள்க
ளும், ஆலாலம்போன்ற காலாட்களும் இக்ஷணமேபுற
ப்பட்டு, மச்சநாட்டை வளைத்துப் போர்கொடுத்து,பசு
க்கணங்களைத் தடுத்து நமதூர்புகவிடுத்து, கண்மூடிக்
கண்திறப்பதற்குமுன்னமே கலகம்விளைத்து விடுவோம்
நாமெண்ணியவண்ணம் பாண்டவர்க ளிருப்பார்களா
கில், விராடராஜனுக்குப்பரிந்து நம்மேற் சண்டைக்கு
வருவார்கள், சும்மாவிருக்க மாட்டார்கள். அவர்களைக்
கண்டுபிடித்து நமக்குள்ள விபகாரஞ்செலுத்தலாம். அ
வர்களவ்விடத்தி லில்லாமற்போனால், அப்போதும்மட
க்கிய பசுமந்தைகளெல்ல நமக்கு அடைக்கலந்தானே
இதனாலிரண்டுவிதத்தினாலு நமக்கு லாபமிருக்கிறது
இதுவேபாங்கென்று அங்கதேசராஜன் சொல்ல, அங்கி
ருந்த அரசரியாவரும் பொங்கிப்பூரித்து, இதுவேயெல்
லோருக்குஞ் சம்மதமென்றிறைந்தார்கள். பெருமையு
டைய துரியோதன மகாராஜனும் இக்கருத்துக் கொத்
திருந்தான். அந்தவேளையில் திரிகர்த்த தேசாதிபனாகிய
சுசர்மா எழுந்து, கரத்தை சிரத்திற்குவித்துப் பணிந்து
ஓ கௌரவ குலாதிபனே! முன்னொருநாள்சேனாதிபதி
யாகிய கீசனுக்கும் எனக்கும் போர்விளைந்தது. அப்
போதவன் விராடன்முதலிய மன்னர்களுடன் வந்து
வளைந்து, என்னைப்பிடித்து இறுகப்பிணித்துத் தன்னக
ரத்திற் கொண்டுபோய்விட்டான். அவன்கையைவிட்டு
தப்பித்துவரப் பட்டபாடு தெய்வமறிந்தது. அந்தச்சத்
துருவை வெல்லுவதற்கென்னாற் கூடாமையால், அந்
நாள்முத லிந்நாள்வரையிலும் நன்னாள் நமக்கெப்போ
துவருமென்று நான் காத்திருக்கின்றேன். முன்னாள்
செய்த முழுவினைவசத்தால்,அவன் தன்னாற்கெட்டான்
காமாந்தகனாகிய கீசகன் வாசஞ்செய்த மச்சதேசத்திற்
குஎன்னைப் போகசசொல்லுவீராகில்,விராடன்முதலிய
வேந்தரையும்பிடித்துக்கட்டி, என்மனத்தில் வெந்து
கொண்டிருக்குங் குரோதத்தையுங் காட்டித்திட்டி,அந்
தவிராடன் மைத்துனனாகிய கீசகன் என்னைப்ப த்திய
அவமானத்தை இவன்பாற்படுத்தி, அவ்விடத்திலொளி
த்திருக்கும் பாண்டவரைப் பக்குவமாயறிந்து, மச்சரா
ஜன் வளப்பங்களைக் கைவசப்படுத்தி கீசகன்பலத்தால்
நமக்குக் கப்பணங்கட்டாதிருந்த செருவத்தையடக்கி,
பசுமந்தைகளையுமடக்கி அஸ்தினபுரம்வந்து சேருகிறே
ன்.என்றுதிரிகர்த்தன்சொல்லவும், இராஜாதிராஜன்நகை
த்து மகிழ்ந்து, இவன் படையிலுமொருவன் கொடை
யிலுமொருவனெனப் புகழ்ந்து, அண்ணா கர்ண! சுசர்
மாசொல்லியவாக்கியம் உமக்கெப்படி யிருக்கின்றதெ
ன்று கேட்டான். அடடா!! இப்போதே யப்படிசெய்
வது உத்தமமென்றான். அப்பொழுதே சேனையின்வங்
களைச் சேகரிக்கும்படி உத்தரவுசெய்து, சுசர்மாவுக்கு
வரிசைதளுந் தாம்பூலமரியாதையு நடத்தி, அண்டக
டாக மதிரும் வாத்தியங்களுடன் சண்டைக்கனுப்பின
ன் அவ்வாறு விடைகொண்டு திரும்பிய திரிகர்த்தனு
னவன் விந்தகிரிக் கொப்பான தேரேறி, பூலோகதே
வேந்திரன்போற் புறப்பட்டு சிறப்புப்பொருந்திய விரா
டபுரத்தின்மீது போர்புரியப் போயினன்.

இப்பால் நந்திபாவட்டமாலையணிந்த நராதிபன்
சபையிலுபர்ந்த சாதுக்களைநோக்கி,ஓ பெரியோர்களே
பூரணஞான புண்யசீலராகிய மூதாதை புகன்ற குறிப்
பிற்றினாலும், நமது தூதருரைத்தசொற்களினாலும்-என்
னுடைய நிச்சயத்தினாலும்-அந்தவிராடபுரத்திற் பாண்
டவரிருக்கின்றார்களென்பது பரிஷ்காரமாய்த் தெரிய
வந்தது. அதற்குக்காரண மென்னவெனில், கேகயராஜ
குமாரனாகிய கீசகனிறந்த காட்சியே சாட்சியாய்விட்
டது. இப்போது நம்மிடத்தினின்றும் விடைபெற்றுத்
தண்டெடுத்துப்போன திரிகர்த்தனவன் மச்சநாட்
டிற்புகுந்து மாட்டைமடக்குங்காலத்தில், எதிரிகள் சும்
மாவிருக்கமாட்டார்கள். எவ்விதத்திலேனும் அவர்கள்
மேல்விழுந்து போர்கொடுத்து மாட்டைத் திருப்பிக்
கொள்ளுவார்கள். அப்போது நம்மிடத்தினின்றுஞ்செ
ன்ற திரிகர்த்தன் அம்மச்ச நாட்டாருடைய ஆயுதங்க
ளாலடிபட்டு,முனைகெட்டு முறிபட்டு, பிடித்தபசுக்களை
விட்டு முதுகிட்டோடி வரும்படிநேரிடும், அப்படிநேர்
ந்தபிற்பாடு அவ்வருத்தத்தைக் கேட்டு, அதற்கேற்ற
படி நாம் படையெடுத்துப்போவது நன்மையா? அல்ல
து இப்பொழுதே செல்வது நன்மையா? இதனை நீங்கள்
யோசித்துக் கூறுங்களென்று வெற்றிபெற்ற துரியோ
தன மகாராஜன்கேட்க, புத்தியிற்சிறந்த கர்னராஜன்
மனம்பூரித்து, ஓ கொற்றவனே! வித்தக விராடராஜன்
தன்மைத்துனனாகிய கீசகனையனுப்பி, அடிக்கடி யுத்தம்
பண்ணச்சொல்லி நம்மைத் திடுக்கிடப் பண்ணிக்கொ
ண்டிருந்தா னன்றோ? அந்தவஞ்சநீச நாமவனைத்தண்
டிக்கவேவேண்டும். ஆதலால் உமது பெரியவர்களின்
அனுமதிகேட்டு, பெருஞ்சேனைப் படைகூட்டிப் புறப்
பட்டு போர்மாட்டென்று கவசகுண்டலன் கழற,அவ
ன்மொழியைத் துரியோதனன் சிவன்மொழியா யுட்
கொண்டு, பின்னும் பெரியோர்களைப் பார்த்து, நான்
நினைத்தநினைப்புக் கென்னசொல்லுகின்றீர்கள்?உங்கள்
கருத்தையு மொளியாமல் வெளியிடுங்களென்று வின
வினன். அப்போதங்கிருந்த விரதப்பொருளாகிய கிரு
பாச்சாரியரும்-மெய்த்தவவித்தக வீஷ்மரும்-வேதவித்
தாகிய துரோணாச் சாரியரும்-படையெடுத்துப் போக
வேண்டியதே முக்கியமென்றுசம்மதித்து, போதுபோ
னபிற்பாடு போவோமென் றுரைத்தார்கள். அந்தமொ
ழியைச் சற்பக்கொடியோன் கேட்டுச் சந்தோஷித்து
துச்சாதனனை யழைத்து, ஓ எனக்கு நற்றுணையாகிய
தம்பி! இரதகஜதுரக பதாதிகள்முதலிய சேனைகளைப்
பிரயாணபேரிகை அறைந்துபுறப்படச்செய்யென்றான்.
அவனப்படியே செய்வேனென்று போய்ப் பிரயாண

பேரி முழக்கிவைத்தான். உடனே புள்ளிப்படந் திருந்திய நாகக்கொடிபொருந்திய சுயோதனன் தம்பிமாராகிய அத்துச்சாதனனேடு தொண்ணூற்றென்பதுபேரும், சல்லியராஜன்- சௌபலராஜன்-சகுனிராஜன்.கர்னராஜன்--முதலாகிய ராஜர்களுங்கூடி, துரியோதனனுடைய துர்க்கிர்த்திய நினைவின்படிக்கி யுத்தகோலங் கொண்டிருந்தார்கள்.

திரிகர்த்தன் பசுநிரைகளை மடக்குவதைக் கண்டகோபாலரவனேடெதிர்த்திளைத் தோடி விராடனுக்கறிவித்தல்.

இவர்கள்செய்தி யிங்ஙனமாக—கொத்துச் சித்திரவேலை பதித்த ரதத்தைச்செலுத்தி மச்சநாட்டின்மேற்சென்ற திரிகர்த்த தேசாதிபனுடையசெய்தியாதாயிற்றெனில், ஓ மகாராஜனே! பெருமையிலுயர்ந்த பெரியோர் பேச்சைப் பொருளாகக்கொள்ளாத துரியோதனன் ஆக்யாபித்த வண்ணம் படைசேர்த்தெழுந்தவெட்சிமாலைபெற்ற அத்திரிகர்த்தனனவன்முரசவாத்தியம் பேரி-டங்கா பாங்கா-காகளம்-சங்கம்-தாரை - பூரி-வீரசின்னம்-தப்பட்டை இவைமுதலாகிய வாத்தியங்களைத் திக்கெட்டுஞ் செவிடுபடமுழக்கி, கத்தி கட்டாரி-கேடயம்-ஈட்டி-எறிவேல்-சூலம்-பிண்டிபாலம்-வாள்-முசலம் தோமரம்-குந்தம்-சக்ராயுதம்-மற்றுமுள்ள ஆயுதங்களெல்லாம் பளபளவென்று விளக்கொளிபோல் மின்னப் பிடித்தவர்களாய், கவசகுண்டலம் கிரீடம்-மதாணி-கடககங்கணம்-தோளணிப்பதக்கம்-இவைதுலங்கி யிலங்கும்வீரர்களையுந் திடகாத்திரதேக தீரர்களையுந் திசாதிசைகளிற் பாயவிட்டு, ஓரக்குரோணிப் படைகளுடன்மச்சதேசத்திற்குத் தெக்ஷண பாரிசத்தில்வந்து இறங்கிகட்டுக்காவ லில்லாமல் யதேச்சையாகத் தின்றுகொழுத்துக்கன்றுகளுடன் குழைத்துத் திரிகின்ற பசுமந்தைகளனைத்தையுமடக்கினன். அப்போதந்த மாடுகளெல்லாங்காதுகளைநெரித்து, கண்களையுருட்டி விழித்து,கடைப்பார்வைபார்த்து, தலையேறிட்டு, தங்களை மடக்கினவர்கள் அந்நியரென்றறிந்து, தங்கள் தங்கள் கன்றுகளுடன்பெயர்ந்து, கும்பலினின்று முறிந்து கும்மாளமிட்டு, நாலுபக்கமும் பிரிந்து அம்மாவென்றலரி, வீறிட்டதிர்ந்து அயர்ந்து பயந்து, செம்மான் பாய்வதுபோற்பாய்ந்து, சும்மா வொருமூலையிற் கொம்பசைத்துக் கூட்டமாய்ச் சாய்ந்து, வெருண்டுபதறிக்கதறி, கால்தவறிக் கலங்கித் திகைத்து, மயங்கித் தியங்கி யகன்றேடும்படிக்காயின, அப்பசுமந்தைகளைச் சுசர்மனுடைய சேனசயின்பங்கள் துரத்தித்துரத்தி, மறித்துப்பிரித்துஇருப்புக்கண்ணியால் தடுத்தார்கள். அந்தப் பசுமந்தைகளைக் காத்திருந்த காவலர்களும்-அதுகளை மேய்த்திருந்த கோவலர்களும்--ஆக்கிரமித்து அதிர்த்தெழுந்து, மூவுலகதிரும்படித்தாவி, மேவலர் சேனைமேல்விழுந்து, அஸ்திர-சஸ்திர-ஆயுதங்களாலும், குடுதடி -- குண்டாந்தடி-சுக்குமாந்தடி-வளைதடி-சிலுக்குத்தடி-முறுக்குத்தடி-பாணத்தடி-ஈட்டி எறியீட்டி--திருகீட்டி-சொருகீட்டி-உருகீட்டி-குத்தீட்டி-குறியீட்டி பாலா-பல்லயம்- பற்ஜீ-பட்டா-பாங்கு-சாங்கு-சத்தி-கட்டாரி-பிச்சுவா-கவண்உண்டைவில்--சுண்டுவில்-அம்புவில்-இத்தன்மையாகிய ஆயுதங்கள் பலவுங்கொண் டெதிர்ந்து. கோபமுதிர்ந்து பாய்ந்து, சினத்தாய்காய்ந்து, மாய்ந்து போகும்படியாய்ச் சிலரை வெட்டியும், பலரைக்குத்தியும், சிலரைஅடித்தும், சிலரை மடித்தும், சிற்சிலபேரை யுதைத்தும், சிற்சிலபேரை வதைத்தும், பற்பலரை மறித்தும், பற்பலரை முறித்தும், சிலரைத்துண்டித்தும்,சிலரைக்கண்டித்தும், சுற்றியபேர்களைக் குத்தியும், பற்றியபேர்களையெற்றியும், தங்கள் மாட்டையெல்லாந்திருப்பினர்கள்.

அப்போது திரிகர்த்தனைச் சேர்ந்த சேனைகள்சித்தம்பிரமித்து ஒருமுகமாகச் சாய்ந்து, கணக்குமிதமற்ற கடுங்கணைகளை நாலுமுகத்திலுந்தூண்டி, மும்மதயானைகளை முடுக்கிக் கோட்டை மதில்போற் குறுக்கிவகுத்து சிகரம்பெற்ற தேர்களைச்செலுத்தித் திசைகளிலோடிய நிரைகளைவளைத்து, குப்புற்றுப்பாயுங் குதிரையைவிடுத்துக் கூட்டமாகியசேனை நிலைகெட்டளியக் கடுகடுத்து, தன்சொந்த சேனைகளா லந்தச்சேனைகள் முறிந்துபோகச்செய்து, மறுபடியும் மந்தையைத் திருப்பிக்கொண்டுகட்டுக்காவலமைத்து, ஜெயஞ்ஜெயமெனச் சிங்கநாதமுழக்கி, அந்தப் பசுக்கூட்டங்களுக்காக மேலிட்டுவந்த கோபாலர்களையும் பூபாலர்களையும் வில்லெடுத்து வளைத்து, சரமாரி தொடுத்து, திசைமாற விடுத்து, விசனப்படும்படியாய் மாட்டி வாட்டினர்கள். அப்போது இடையர்களெல்லா முடைந்திடைந்து, கையிழந்தவரும்-காலிழந்தவரும்-மேலுளைந்தவரும் — கீழுளைந்தவரும் - முடிபோனவரும்-அடிபோனவரும் - முனைகெட்டபேரும்-நிலைவிட்டபேரும்-ஆனவர்களாய்,கண்ணீராறுகரையின்றிப் பெருகி, மாரிநீர் வழிவதுபோல் வழியவந்து,விராடபுரத்திற் புகுந்து முடிவேந்தனுடைய கொலுமுகத்திற்கு முனசென்று நின்று, ஓ சங்காழி முகுந்தனைப் போற் சிங்காசனத் திருந்தருளிய எங்கோனே! சுசர்மாவுடன் திரிகர்த்தர்களுங் குருசேனைசகிதராய்ச்சேர்ந்து தென்றிசையில் நிறைந்த பசுமந்தைகளைமடக்கினர்கள். அவர்களுடன் நாங்களும் பகைத்து, எங்களாற் கூடிய மட்டும் போரிட்டுப்பார்த்தோம். அவர்களைவெல்ல வல்லபமில்லாம லடிபட்டு வெம்பி வெதும்பி யோடிவந்துவிட்டோம். அறுபதினயிரம் பசுக்கள் அவர்வசப் பட்டதுகள். இன்னும் நாற்பதினயிரம் பசுக்களையுங் கைக்கொள்ளப் பார்க்கின்றூர்கள். ஓ நாதனே! தேவரீர்ஆல

சியம் பண்ணாமல் அமர்க்கெழவேண்டு மென்றார்கள். இவ்வாறு முல்லைநிலமாக்கள் மொழிந்ததைக்கேட்ட வல்லவன் நகைத்து, கண்ணிரண்டுங் கறுத்து, கையிரண்டுநெரித்து, பற்கடித்துச் சிரித்து, படைகள்தன்னைப்பொறுத்து, ஓ அமைச்சராகிய அறிஞர்களே! திரிகர்த்தனுடைய விசுவாசமோசத்தைக் கண்டீர்களா? சொப்பனத்திலும் நினைக்கப்படாத அற்பனாகிய இவன் எங்ளாற் கட்டுபட்டு நொந்து, கால்மேல்வீழ்ந்திரந்து, என்றென்றைக்கும் அடிமையென்று புகன்று, இழிவுபட்டுப் போனதை மறந்து, மூவர்முதலிய தேவராலும்வேறு நினைக்கப்படாத விராடபுரத்திற்கு இப்போதுவந்து, மிகுந்த சேனையுட னெதிர்த்துப் போர்கொடுத்துவெகு பேரைக்கெடுத்து, மாட்டையுமடக்கி யிருக்கின்றானல்லவா? நல்லதாகட்டும் ஓ சேனாதிபதிகளே! வீரப்பட்டம்பெற்ற நமது இரதகஜ துரக காலபலமுள்ள ஓ ரக்குரோணி சேனைகளையும் யுத்தசன்னாகப்படுத்துங்கள்என்று மெத்தமுழக்கமாய் வெடிபடச் சொன்னான்.

விராடராஜன் தன்தம்பிகளோடுந் தனயரோடும் போர்க்கோலங் கொண்டு பிரயாணமாதல்.

அந்தச்சொல் செவியிற் புகுமுன்னமே காதில் வில்லுங் கழுத்தில் மாலையுந்தரித்த அதிரதர் அநேகர் எட்டுத்திசையினு மட்டுப்படாத வாத்தியங்கள் முழங்கத் திரண்டதேரேறி, வெள்ளம்புரண்டுவருவதுபோல் வந்துமொய்த்தார்கள். இதன்றியும்-வெல்லும்படியான பலகாவலர்களெழுந்து, நவமணிகளாற் சிறந்தமுடியும்-சூரியன் நாணத்தக்க மாணிக்கப் பதக்கமும் - ஆணிப்பொன் மதாணியும்-நிறைவென்றோர் அணியுந் தும்பைமாலையும்-கேயூரமணிகுண்டல கண்டியும் - பிரதாபவில்லும்-சபதச்சொல்லும் பொங்கமாகக்கொண்டு, சிங்கம்போற் சென்று, பொன்னுலகை விட்டிழிந்த தேவேந்திர னென்னும்படியாய்த் திக்கஜங்களுக் கொப்பாகிய யானையின்மேலேறி, பெரும்புலியெனச்சீறிப் புறப்பட்டார்கள். எண்ணிய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற திண்ணிய திடபுயகாத்திரதீரர்கள் யாவரும் ஒன்றாகக்கூடி, விராடராஜன் வெளிப்படுமுன்னமே நாம்போய்த் திரிகர்த்தனையும் அவன் சேனைகளையும் வென்று, பசுக்கணங்களைக்கொண்டு விராடனுக் கெதிர்சென்று, நாங்கள்செயித்துவந்தோம். நீங்கள் போகவேண்டிய அவசரமில்லை. என்றுசொல்லி உயர்ந்த விருது பெறுவோமென்பதாக வாலோசித்தவர்களாய்; ஆணிவில்லைவளைத்து நாணுப்பூட்டி, அம்பறாத்தூணிமாட்டி, வாளும்-கேடகமும்-வல்லயமும்-பல்லவமுங்கொண்டு,பகைவர்பட்டார்கள்–முதுகிட்டார்கள்–அவர்கள் கெட்டார்கள்-என்றுகெறுவித்தெழுந்து, கட்டுக்கடங்காமல் அட்டாளதேசமுமுலாவிவரும் பட்டாளக்குதிரைகளின்மீதேறிவந்தார்கள். சேனாவீரர்கள்திரண்டு, திக்கென்றெறியச்செவ்விழிகாட்டிச் சீறிப்புகைந்து, செம்பொறி சிதறக்காய்ந்து, வீரகண்டையையாட்டி, வெதுப்பும் வெறுப்புங்காட்டி, ஆயுதங்களைப்பிடித்து, அரைக்ஷணமுந்தரியாமல் அடித்து, அலைபரந்தகடலேழும் அடியோடு பெயர்ந்த அந்நாளிந்நாளென்று அகிலசராசரமும் பேசிக்கொள்ளும்படியாய்ப் பேரோசைமுழக்கிப் பெருங்கும்புசேர்ந்தார்கள். இவ்விதமாகச் சதுரங்கசேனைகள்புறப்பட்ட வீராவேசத்தை விராடனுடைய முதற்பிள்ளை சுவேதனென்பவன் கேள்விப்பட்டு, நாமிருக்க நம்முடையதந்தைவருந்துவானேன்? என்று தனது பிராணனையும் எதிராளியையுந் துரும்பாகமதித்து, பம்பரம்போற்சுழலுஞ் செம்பொற்றேரேறி, வீரலட்சுமியை விவாகஞ்செய்வதற்கு விரும்பிருந்தீர புருஷனைப்போற் கூரம்புக்கூடுங் கார்முகக் கோடுங் கைக்கொண்டவனாய்க் குவலய நடுங்கக் கவலையோடடைந்தான்.

இரண்டாவது பிள்ளை சதானீகனென்பவன் சங்கதிகளறிந்து, முகச்சுளிப்புடன் வெளியேவந்து, அப்படியா? இந்நாள்வரையிலும் பின்னமில்லாத மச்சநாட்டிற் கொஞ்சமேனு மச்சமில்லாமற் பிரவேசித்து மாட்டைமடக்கிய லச்சைகெட்ட திரிகர்த்தனுடைய சேனைகளென்னுஞ் செய்கால் நிலத்தை என்வில்லம்புகொண்டுழுது, இரத்தநீர்பாய்ச்சி, அவர்கள் உயிராகிய விரையைவிதைத்து, அக்கிரமமென்னுங் களையைக்களைந்து, வெற்றிப்பயிர் விளைத்து, பூபாரப்பிணப்போர்கட்டி,எமனுக்கு மேல்வாரங்கொடுத்து, என்தந்தைக்குக் கீர்த்தியென்னு நிலவாரங் கொடுக்கிறேன். ஆ! ஆ! எதுமற்ற திரிகர்த்தன் இந்தவழிக்கா வந்தான்? என்று திடுக்கென்றெழுந்து, வில்வளைத்து நாணோசைதெறித்து.பங்கப்படாத சிங்கக்குட்டியானது தங்கக்கிரியில் தாவுந் தன்மைபோல் விசாலமானதேரேறி வீதியில்வந்தான்.மூன்றாவது பிள்ளை சங்கனென்பவன் சிங்கநாதஞ்செய்தெழுந்து, எங்கள் மாமனாகிய கீசகராஜ னிருக்கிறவரைக்குங் கொஞ்சங்கோப்பியமாயிருந்தது. அவனிறந்தபின்புமெத்தச்சாப்பியமாய்விட்டது. இனிமேற் பலரும் வசையாயேச, அந்த மொழியைக்கேட்டு நானுயிரோடிருந்து இன்பமனுபவிக்கமாட்டேன். இதோ வாளாயுதமெடுத்துப் புறப்படுகிறேன். வந்தவர் நொந்தழியக் கொந்தித்தள்ளுகிறேன். அவர்களை வெல்லாமலுங்கொல்லாமலும் போவேனாகில், என்னுயிரழிந்து பொன்னுலகம்போய்ச் சேருகிறேன். இதுவேசத்தியம். என்று சபதங்கூறிக் கவசமணிந்து.விரைவுடனோடி, திசையானைத்தினுந் திப்பிரமிக்கச்செல்லுந் தேரேறி, தன்னையொத்த தாபதிக்குமார்கள் மின்னுக்கிணையான ஆயுதந்தாங்கி வீராவேசங்கொண்டு வரத் தானும்பிரயாணமானான். நான்காவது பிள்ளை வாரககேதென்பவன்நான்கு

வேதமுந் தருமசாஸ்திரமும் தேர்ந்து, அறம்பொருளின்பம்வீடென்பனவற்றை யறிந்து, பொறுமைக்கவசம் பூண்டு, மன்னுயிரனைத்தையுந் தன்னுயிராய்ப் பரிந்து பாதுகாக்கும் பருவநாயகன். அவன் குலமன்னர் கூட்டமும்-பலமன்னரீட்டமும்- காலாட்படைகளும்-ரதகஜதுரங்கமும்-தன்னைச்சூழ்ந்து வரும்படியாகத் திட்டப்படுத்தி, தான் வேற்படை விற்படைமுதலியவைகளைக் கைக்கொண்டு, நமது மச்சதேசத்துத் தெக்ஷண திசையில் லட்சியம் வையாத அந்தத்திரிகர்த்தனை இக்ஷணமேபிக்ஷாபாதனுக்கி வீரசொற்கத்திலேற்றிவிட்டு வேறுவேலை பார்க்கிறேனென்று விசித்திரக் கவசம்பூண்டு, தேரேறிப் போரேறுபோற் புறப்பட்டான்.

இந்தப்பிரகாரம் நான்குபிள்ளைகளும் நால்வகைச்சேனைகளும் ஆரவாரித்தெழுந்து, சத்திரம்-சாமரம்-ஆலவட்டம்-கொடி-குடை-பீலிக்குஞ்சம்- மகாதோரணம் டால்வகைகள்-ஆகியயிவைகளோடு, படைமன்னரும்-வாத்திய கோஷமும்-பின்னுமுன்னும் பெரும்புறக்கடல்போற் பெருகிவர, சிங்கநாதம்-சங்கநாதம்-எங்குநாதமாய் முழங்க, தேர்நிரை யானைநிரைமுதலியபலமுறையுடன்சேர்ந்த திறத்தினை விராடராஜன் கண்குளிரக் கண்டு, பிள்ளைகள் நால்வருஞ் செல்வதைப் பார்த்து, ஐயோ! இந்நாள்வரைக்கும் என்னைவிட்டுப் பிரியாமலும்போர்முகமறியாமலுமிருந்த அறியாச்சிறுபிள்ளைகள் முன்பின் யோசியாமற்போக, நாமிவ்விட மிருப்பதுநியாயமோ? அவ்விடம் விளைவது என்ன அபாயமோ? என்றெண்ணித் தன் சகோதரர்களாகியசதானீகனையும் மதிராசுவனையும் அழைத்து, வாருங்கள் தம்பிமார்களே தெக்ஷண நிரைமீட்சிக்குப் போகின்ற நமதுபிள்ளைகளின்போர்த்திறத்தையும்-குருசேனையுடன்வந்த திரிகர்த்தனது போர்த்திறத்தையும்-நான் பார்க்கவேண்டியிருப்பதால், சீக்கிரத்தில் தேர்கொண்டுவாச்செய்யுங்களென்றான். தமையன் மொழிதவறாத தம்பியரிருவரும்இரதவலங்காரம் புரிந்து, திடவேகமுள்ள குதிரைகள்பூட்டி, மதிமோகனென்னுஞ் சாரதியுடன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அம்மாத்திரத்தில்விராடராஜன்பொன்தகடுவேய்ந்து நவரத்தினமிழைத்த அஸ்திரசஸ்திர திரஸ்காரவயவக் கவசந்தரித்து, அம்புப்புட்டிலும்-வரிநெருங்கிய வில்லும்—வாளும்-வேலும்-மகுடமும்-மகாகுண்டலமும்- வாகுவலயமும்—கச்சையும் - வீரகண்டையும்-விரற்சாடு கரச்சாடும்-மின்னுதற் பட்டமுந்தரித்து, தம்பிமார்களும்-இராஜகுமாரர்களும்-மகாப் பிரபல்யசேனைகளும் புடைசூழ, விருதுமேளவாத்தியங்கள்-வெண்சாமரைகள்-வெள்ளைக்குடைகள் - மயிற்பீலிகள் - முதலிய சின்னங்களைப்பலர் புடைதாங்கிவரப் புறப்பட்டு, சேனாதிபர்களும் படைவீரர்களுமுன்னோட, கட்டியரும் பட்டுவான்களும் புகழ்பாட, பருவக்கணிகைமங்கையரெதிர்நின்று பாதநாட்டியமாட, திருநீறணிந்த திரிநேத்திரதாரியாகிய உருத்திரமூர்த்தி இவனென்னச் சாதிக்கும்படியாய்ப்புறப்பட்டு வந்தான். அம்மன்னனைத்தொடர்ந்து வழிவிடப்போன தருமராஜனை வீமசேனன் - நகுலன் - சகாதேவன்-இவர் மூவரும்பார்த்து, இந்த விராடராஜனானவன் மாடுபிடிசண்டைக்கு நம்மைச்சகாயமாயழைக்காமற்போகின்றானே: இதென்ன காரணமென்று கண்ஜாடையிற் பேசிக்கொண்டார்கள்.

கங்கபட்டர் விராடனுக்குப் பலாயனனாகிய மூவர் திறங்கூறித்தாங்களுமுயுத்தகோலங் கொண் டுடன்செல்ல, உடனே யுத்த மூளுதல்.

இவ்வாறு சகோதரர்கள் பேசிக்கொண்ட கருத்தையறிந்த கங்கபட்டரானவர் மச்சராஜனைநோக்கி, நமதுமடைப்பள்ளியிலிருக்கின்ற பலாயனன் மல்லர்களை வென்றபோதே மகாபலசாலியென்று நீரறிந்தீரல்லவா அவன் மிஞ்சியமற்போரிலுங் கொஞ்சம் விற்போரிலும் பழகினவனாகத் தோன்றுகிறது. இதோ நிற்கின்ற தந்திரபாலனும்-தாமக்கிரந்தியும்- போர்புரிவார்கள்போலுமிருக்கிறது. இவர்கள் தருமராஜனிடத்தி லிருக்கும்போது கௌரவர்களுடன்கூடி ஆயுதபரீட்சையிற் பயின்றிருக்கின்றார்கள். சிலசமயத்திற் சண்டையிலுஞ் செயங்கொண்ட தாஷ்டீகர்கள். இவர்களை ரட்சிக்கும் நீர்சண்டைக்குப் போகும்போது, இவர்கள் உம்மைவிட்டுத் தனித்திருப்பது தருமமல்லவே: இம்மூவரையும் அம்மூவராகப்பாவித்துக் கூட்டிப்போவது நலமாகும். அப்போது நான்மாத்திரந்தனித்திருப்பதுநியாயமல்ல நீங்களியாவரு முன்னாடிச் செல்லுங்கள். நான்நடந்து பின்னாடிவருகிறேனென்று கங்கபட்டர்சொல்ல, அவரிசைத்தமொழியை யன்புடன்கேட்ட விராடன் சிந்தைகளித்து, இது என் தவப்பயனென்றுரைத்து, தம்பியாகிய சதானீகனையழைத்து, இந்த மகாஸ்வாமியாகியகங்கபட்டருக்கும் மற்ற ஆசாமிகளுக்குஞ் சிங்கமுகலலாடத்தேரும்—பங்கப்படாதவில்லும்-அம்பறாத்தூணியும்-தினிசுவாரி ஆபரணங்களும்—ஆயுதங்களுங் கொடுத்து, அதிசீக்கிரத்தி லுன்னுடன்கூட அழைத்துவாவென்று ஆக்யாபித்துப் போனான். இப்பால் தருமர்முதலியநால்வரும் அரசனுத்தாரப்படிக்குச் சகல வரிசையுஞ் சதானீகனாற்பெற்றுத் தடந்தேரேறி, எவர்களுக்கு முன்னுதாயிவர்கள் சென்று, விராடராஜன்தெற்குக்கோட்டைவாசல் தாண்டுமுன்னமே சேனையுடன் கலந்துபோனார்கள். அக்காலையிற் பொன்மலையையொத்த எண்ணாயிரந்தேர்களும் - மும்மதம் பொழியும் ஐயாயிரம் யானைகளும் - இம்மெனப் பறக்கும் இருபதினாயிரங் குதிரைகளும் - பொம்மென நெருங்கிய லக்ஷங் கால்

பலங்களும் - தம்பி மார்களும் - சாதுரியமுள்ள சூரர்களும்-மந்திரி தந்திரி மகுடவர்த்தனரும்-சுந்தரமைந்தருஞ் சுதந்திரவேந்தருமேவினர்கள் உடனேகொம்பு கொடிமுதலிய சின்னங்களோடு முரசுமுதலியவாத்திய கோஷ்டங்கள் எட்டுத்திக்குஞ் செவிடுபட்டுப்போக, தும்பு தூசிகள் அம்பரமட்டுமேக, செம்பரத்தம்பூப் போற் சிவந்த கண்களையுடைய படையைத் தூசியணியாகநிறுத்தி, தன்மாட்டைமடக்கிய சத்துரு சேனைகள்மேற் சென்று போர்தொடுக்கத் தொடங்கினன் விராடராஜன்.

இவ்வாறு விராடராஜன் கோபாக்கினியாற் பகைவருயிரைவாங்கச் செறிந்து-வெற்றிவேல்தாங்கித் திரிந்து-முகங்கரிந்து புரிந்த சண்டையைத் தேவேந்திரன் முதலிய தேவர்களும் பார்க்கச் சொற்னமயமான விமானமூர்ந்து சென்று, ஆகாயத்தி லிடமில்லையென்ன நெருங்கித்திரண்டு வேடிக்கை பார்த்திருக்கும் வேளையில்; இருதிறப்படைகளுங் கைகலந்து, யானையும்-யானையும், குதிரையும்-குதிரையும், தேரும்-தேரும், காலாளும்-காலாளுமாகக்கூடித் தொந்தயுத்தம் பண்ணினர்கள். அந்தயுத்தத்தில் யாரையாரழித்தார்கள்? யாரை யார் துவைத்தார்கள்? யாரையார் வதைத்தார்கள்? யாரை யார் சிதைத்தார்கள்? எவரையெவர் கொன்றார்கள்?எவரையெவர் வென்றார்கள்? எவரையெவர் பொருத்தினர்கள்? எவரையெவர் வருத்தினர்கள்? எவரையெவர் ஓட்டினர்கள்? எவரையெவர் மாட்டினர்கள்? ஐயா ஜனமேஜெயமகாராஜனே! அவற்றை இன்னவிதமென்று நானெப்படிசொல்லுவேன்? ஆனாலும் - வரிசையாகப் புகுந்து மாச்சரியத்துடன் உடலைவகிர்ந்து இரத்த வெள்ளம் புரண்டோடச் செய்தபடியால், போரின் பெருமையைப் புகழ்ந்துபேசவல்லவரில்லாமற் போனார்கள். இத்தன்மையான காலத்தில் நூறு நூறாயிரம் ரதங்கள் நீறுநீறாகியழிய, பலகதியிற்றேர்ந்த குதிரைகளிறந்து குவிய, கொம்புள்ள யானைக்கும்புகள்யாவு மொழிய, மாறுமாறாகிய மன்னருடல்களும் வேறுவேறாகிய வீரர்குடல்களுந் தாறுமாறாகிச்சிதைய, மலைநிகர்புஜபலமண்டலேஸ்வரர்கள் தலைபோயுருண்டு சங்கடமடைய, இதனைக்கண்ட யாவருமஞ்சி இன்சொல் லுரைக்க, திறங்காட்டிவந்த திரிகர்த்தன்சேனைகள் புறங்காட்டிநொந்து புலம்பியோடும்படியாக விராடன் சேனைகள் மேலிட்டுச் சாடியபொழுது; கோபமாயெழுந்த குருகுலச்சேனைகள் கூறுகூறாய் நிலைகெட்டோடினர்கள். வீறிட்டடர்ந்த விராடன்சேனைகளோ டெதிர்த்துப்போர்விளைத்த குருகுலச்சேனைகள் ஆற்றமாட்டாமலஞ்சிப் பயந்தோடுகின்ற அலங்கோலத்தைத் திரிகர்த்தன் தம்பியாகிய நிடனென்பவன்கண்டு முகம்வேர்த்து, அண்டகடாகம் பிளக்கும்படி ஆர்த்து, வில்லெடுத்து நாணிதொடுத்து, இருட்பாணங்களை விடுத்து, சூரியனுமஞ்சியொதுங்கத் தேரைச்செலுத்திப்போராடினன். இவன் நீரை வாரியமாரிபோல் வாரிப்பொழியும் வாளியின் வல்லமையால் விராடனது நால்வகைப்படையும் ரதிகர்களும் பின்னிடைந்து, ரதமுமுடைந்து, யானைகுதிரைகளு மழிந்து, மானுபாணமகிபருமொழிந்து போனார்கள். இப்படிக்கு விராடராஜனோடுவந்த தநுர்வேதசாஸ்திரிகளும் சுவேதனன்முதலாகிய பிள்ளைகள் நால்வரும்-சதானீகன் முதலாகிய தம்பியரும்-வெற்றிப்பயிர் விளைக்கும் வீரவேந்தரும்-விதரணசாலிகளாகிய பலமாந்தரும்--இசைகெட்டழிந்து திசைவிட்டோடும்படிக்குத் திரிகர்த்தன் தம்பியான நிடனென்பவன் மலைந்து ஜெயம்பெறுகின்ற நன்மையைத் திரும்பிப்பாராமலோடிய துரியோதனன் சேனைகள்கண்டு, முன்பு வருந்தியதோஷம்போக்கிப் புகழ்ந்து, வாடியபயிர் மழைகண்டவாறுபோற் புளகாங்கிதத்துடன் மகிழ்ந்து, கடல்முழக்கம்போ லிரைந்து, திரும்பி விரைந்தோடிப் புகுந்து, திரிகர்த்தன் தம்பியைக் கலந்து, நான்குபுறமும்பார்த்து, அணியணியாய்ப் பிரிந்து, வில்லினை இருகுதையும்பொருந்த வளைத்து, கொல்லெனப் பாணங்களைக் குவித்துச் சொரிந்தார்கள்.

அந்தத் தெப்பலினால் விராடன்சேனைகள் வெருண்டு-அரண்டு புரண்டு-மருண்டு, மேனியெல்லாம் புண்ணாகிவிலங்கி, கண்களிருண்டுங்கலங்கி, கருதாதெல்லாங் கருதிக்கசிந்துருகி, வியாகூலமடைந்து, அச்சமேலிட்டு, அமர்முனைவிட் டோடாநின்றனர். அப்போதவர்களை விராடனுடைய முதற்குமாரனாகிய சுவேதனன்கண்டு, கோபத்தாற் கொதித்து, மனம்பதைபதைத்து, ஓடாதிருங்களென்று கையமர்த்தி, திரிகர்த்தனையுங் குருசேனைகளையுஞ் சிதைத்துவிடுகிறேனென்று தேரைச்செலுத்திச் சென்று, வைரவில்லைவளைத்து நாணிதொடுத்துக் குணத்தொனி செய்து, அஸ்திரசஸ்திர முதலிய அளவற்றபாணங்களை யெய்து, மாறுபடாத யானைப் பெருக்கங்களையும் - கூறுபடாத குதிரைக் கூட்டங்களையும்-வேறுபடாத மிருதீரவீரர்களையும்-நீறுநீறாக நெரித்ததுமல்லாமல், மேலிட்டுவரும் வேந்தரையுமாட்டி, நூறிரதங்களை நொடியிற் பொடிபடக்காட்டி, மற்றோர்திசையில் வளைந்து போர்மூட்டி, சுற்றியபெருஞ்சேனைகளின் தலைகள் சுழலப் பேய்போலாட்டிப் பின்னிடவோட்டினான். இவனுக் கிளையவனாகிய சதானீகனென்பவன் மன்னவர்மதிக்க வயச்சிலைவளைத்து, பொன்னுருள்பூண்டதேர்மேல்வந்த மன்னர்முடிகளைத் தென்னங் குலைபோற் சிதறவுதிர்த்து, கன்னமத முதலியமும்மதம்பொழியும் யானைவீரர்களை முன்னும்பின்னு முடுக்கியதிர்த்து வாயுகதி மனோகதியுள்ள குதிரைவயவரைச் சின்னப்பட்டுப் பயந் தொதுங்கும்படியாகத் துன்பப்படுத்தி, பராக்கிரமத்திற் சிறப்புற்ற பதாதிகளையெல்லாம் உருத்துச்சினத்து, உறுக்கிச்சிரித்து, மகாஊத்துடன் முனைந்து ஒருதிசைபுகுந்தான். அவனுக்குத் தம்பியானசங்க

னென்பவன் முன்னவன்காட்டிய முடுக்கைப்பார்த்து, தானொருதிக்கிற்சென்று வன்னத்தேரோட்டி வரிச்சிலையீர்த்து, நவமணிபதித்த கிரீடம்பொறுத்தவெற்றிவீரக்கொற்றவரேறிய ஆயிரந்தேர்களை யடித்துக்குறைத்து, அச்சுமச்சகள் முறியநிறைத்து, அநேகரை மடித்து, பிணமலைகுவித்து, ஜெயசிங்கம்போல் தாக்கிச் சத்துருக்களை யமனிடத்திற்குப் போக்கினான். இவனுக்கிளையவனாகிய வாரககேதென்பவன் வாசமாலைகள் மணக்கத்தரித்து, பூசனுக்குரிய புகழுடனெதிர்த்து, பலம்பெற்ற சிலையைவளைத்து, பாணங்களால் உருவத்துளைத்து, யாவரும் பதறிக்கதறிச் சிதறிமுறியும்படிக்குச் செய்து, வேங்கைப்புலிக் கெதிர்ப்பட்ட மான்போலோடியபகைவர்யாருங் கெட்டொழியும்படி நிர்த்தூளியாக்கிவிட்டு, பூணணிப் புயமிரண்டுஞ் செழிக்கப் பொருந்தினான்.

இந்தப்பிரகாரம் பாற்கடலை மந்தரகிரியானது கலக்கிக் கடைந்தவாறுபோல் விராடராஜனுடைய நான்கு பிள்ளைகளும் நால்வகைச் சேனைகளோடுஎட்டுத்திக்கும் புகுந்து மிகுந்தபோராடியவேளையில், தந்தையானவிராடராஜன் அந்தப்புத்திரர்களின்சாமர்த்தியத்தைக்கண்டு உற்சாகங்கொண்டு, ஆலமரத்தின்விழுது அம்மரத்தைத் தாங்குமாறுபோல் தனக்குச் சகாயமாய் வந்துவளைந்த தன்மக்களைப் புகழ்ந்து மகிழ்ந்து, தளர்ச்சியில்லாமற் களித்து, ஜபமாலையு முடியுந்தரித்த தானும் வெகுண்டு எக்களித்து, விசித்திர வின்னாணேற்றி, விபரீத முழக்கங்காட்டி அச்சுடனமைந்த தேரோட்டி, சங்குகளீன்ற முத்தினங்கள் சந்திரனைப்போற் பிரகாசிக்கும் வயல்சூழ்ந்த வளநாட்டுக் கதிபனாகிய திரிகர்த்தன் தம்பியை வளைத்து, பத்துக்கணைகளைப் பாயத்தொடுத்து, அவன் விடுத்த பாணங்களை யழியக்கெடுத்து, அவனுடைய கொடி-குடை-தேர்-குதிரை-சாரதி-வில் வாள் -இவைகளையு மொழித்து, அவனுடன் கூடவந்த வீரர்களையுங் குறைத்து, நேருக்குநேர் தாராளமாய்நெருங்கி, அவன் மேல்மாறுவேக வடிக்கணைமுடுக்கி, சேனைவேறு-யானைவேறு-தேசராஜர் கூட்டமும் வேறுவேறாகிச் சிதறும்படிக்குத் தாறுமாறாக முறித்து, தனிப்படப்பிரித்து, பெரும்போர்விளைத்து நின்றான் அம்மச்ச தேசாதிபனானவன். அதனால் திரிகர்த்தன் தம்பியானவன் சிந்தைவருந்தி, தோளுந் துளைபட்டு, வாளுந் தறிபட்டு, சேனையுங்கெட்டு, செருமுகம்விட்டு, ஓடுகின்ற பதாதியருக்கோடிமுந்திப் புறங்கொடுத்தோடத் தலைப்பட்டான். இப்படி வெங்கொடுத்தோடப்புறப்பட்ட புன்மையைத் திறம்படைத்த விராடர்கோன்கண்டு, ஊழிக்காலத்தொருவனாகிய உருத்திரமூர்த்திபோ லுருத்தெழுந்து, வாடிப்போகின்ற குருசேனைகளைமறித்துத் தறித்துமடியச் சிதைத்து, ஒருவருந் தனக்கெதிர்ப்பட வொட்டாமல் வதைத்து, பிணக்குப்பையின்மீது சக்கரம்புதையத் தேர் விடுத்துச் சென்றான்.

இந்தவிதமாக விராடபூபதியால் நிலையழிந்துவிட்ட குருசேனையும்-திரிகர்த்தன் தம்பியும்-பலங்குறைந்து, படைமுறிந்து நொந்துபோனார்கள். அக்காலத்த யுத்தத்தில் இரத்தம்பெருகி ஆறுபோலோட, பிணங்கள் மலைகளெனக்குவிந்து கூறுபோற்கூட, காக்கையுங் கழுகுங் கலந்து விளையாட, நாயுநரியுஞ் சீறிப்போராட, பேயும் பூதமும் புகழ்ந்துகொண்டாட, எமபடாளுயிரை யிழுத்துக்கொண்டோட, கூளியும்பருந்தும்,விருந்துண்டாட, பைசாசகணங்கள் பாடிநின்றாட, அறுபட்ட தலைகளைப் பூமிதேவி யம்மானையாட, புயமுந்தலையும் பொருந்திப் புரள யாவரையும் பொடிப்பொடியாக்கி, ஒருகோடி சுடுசரங்களையும் அருகோடிய தேரையுந் தூண்டிச் செயங்கொண்டு வருகின்ற விராடராஜனது திடத்தைத் திரிகர்த்தன்கண்டு, வெகுண்டு கொதித்து வில்லைவளைத்து, புரண்டுபோன சேனைவெள்ளத்தைப் போகவொட்டாமல் திருப்பி, சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் பொங்கி, அட்டதிக்கயங்களும் அயர்ந்து நடுங்கி மதம்பொழியும்படியாய் நாணொலிசெய்து, வெற்றிப்பாடல்கள் பாடுகின்ற நால்வகைப் படைகளுடன் சேர்ந்து, மகமேருவைப்போன்ற இரத்தினத்தேர்மேலிருந்து, கடுவிட நாகக் கணைமழைகளை அமோகமாகப் பொழிந்து, விராடன்சேனைகள் யாவும் விருதிழந்து புறங்காட்டச்செய்து, திக்கெட்டுந் திடுக்கிட்டுத் திக்குமுக்காடி விக்கிட்டோடச் செருவிளைத்து, மதயானைக் கூட்டத்தில் வந்துபுகுந்த மடங்கலென்னுஞ் சிங்கத்தைப்போற் பாய்ந்து, தேரனீகத்தையும் - யானையினத்தையும்-குதிரைப்பந்தியையும்-காலாள்களையும் – பலதிசைகளிலும் பதறிச்சிதறப் போக்கிவிட்டு, சோர்வடையாத தோளாண்மைபூண்ட அச்சுசர்மாவானவன் எட்டுத்திசையினுஞ் சுற்றிச்சுற்றித் தும்சஞ்செய்வ தாயினான். அக்காலையில் விராடராஜன் பிள்ளைகள் வந்துமேல்விழுந்து, கொள்ளைகளான கொடுஞ்சமர் விளைத்தார்கள் அவர்களையெல்லாம் அத்திரிகர்த்தனானவ னாக்ரமித்து மடக்கிப் போராடி, அவர்கள் தங்கள் வெங்கணையாயுதமும் வில்லுமிழந்து-கரி பரி தேர் காலாளுங்குறைந்து-குடல்கலங்கி உடல்குமுங்கி-குலைகுலைந்து - தலைநடுங்கி-உயிரொடுங்கி-பெருமூச்செறிந்துஉடன்பட்டோருடன் திடங்கெட்டோடவும், தேகத்தில் தாங்கிய காயங்களுடன் சேனைகள் மருண்டேங்கவும், பசுக்காவரும் படைவீரரும் பறந்து பின்வாங்கவும் படாதபாடுபடுத்தி; மச்சராஜனுடைய பசுமந்தையைத் தன்னிச்சையின்படி கைகொண்டு நச்சரவக்கொடியை நாட்டி, நாம் வெற்றிகொண்டோமென்று ஜெயபேரி யடித்துச் சிந்தைமகிழ்ந்து, சிலதூரத்திற்கப்பாற் சேனைகளையும் பசுக்களையுஞ் சேர்த்துத் ஜெயத்திறம் பேசியிருந்தான்.

திரிகர்த்தனால் விராடன்கட்டுப்பட, அது கண்டதனையராகியர் கங்கபட்டரிடமுறையிட, அவர்தம்பியரைச்செலுத்தித் தானுமேகல்.

இவ்விதமாக வீரகண்டையுஞ் ஜெயவீரபட்டமும் பெற்று, விண்மணிமுடியிற் செங்கழுநீர்மாலையுங் காந்தைக் கோதையும் பொருந்தத் திருந்தியிருந்த பெருந்தகையான திரிகர்த்தராஜனை மச்சநாடன் கண்டு, மதிமுகம்வேர்த்து, தேருடனெதிர்த்து, சிலைவளைத்திழுத்து. முறுக்கு நாணியையிறுக்கி யேறிட்டு, ஐம்மலர்வாளி-ஐம்முகவாளி—ஐஞ்சிகைவாளி-ஐம்பூதவாளி - ஐம்பிறைக்கணை-ஐஞ்சிறைக்கணை-ஐந்திடிக்கணைஐங்கடுக்கணை முதலிய வேறுவேறு அஸ்திரங்களை விறுவிறெனவிடுத்து, திரிகர்த்தனேறிய தேரைமுறித்து,சாரதிதலையைத் தறித்து. கொடியைக்குறைத்து, குதிரையை வதைத்து வில்லைப்பிளந்து, நாணியைத் துணித்து, கவசத்தைப் பொடித்து, கருத்தைக்கலக்கி, அச்சமுண்டாகும் படிக்குப் பின்னுங்கொத்தாகிய பத்தம்பைஅவனுடையமார்பில் விடுத்தான். அந்தவிராடன்விட்ட கணைகளினால் வருந்திச்சினந்து நேர்புகுந்த சுசர்ம்மாவானவன் தேரழிந்து, சிலைமுறிந்து, சிரொழிந்து- பாதவித்து, பின்பு நெஞ்சுசாமுற்று, இந்தவிராடனை நானெளிதில்விடமாட்டேனென்று சேமத்தேரேறிச் சிலக்கணைகள் கொண்டுசென்று, நேர்நின்று ஆரவாரித்து, இருபதுபாணம் இடிபோல்தொடுத்து, அவனது தேரினுடைய அச்சு-மச்சு-குற்றுக்கால்-கொடுங்கை - கொடி-குடை-குதிரை-சாரதி-முதலியவெல்லாந் தூளுதூளாக்கி,மற்றக்கொடி குடை-ஆலவட்டம்-தாலவட்டம்—பீலிக்குஞ்சம். இவை முதலிய சின்னங்களையெல்லாம் பஞ்சுபோற் கொட்டிப் பறக்கவிரட்டி, அவனுடைய இடக்கை வில்லினைச்சடக்கெனத்தறித்து, துவசகவசாதிகளையு மழித்துக்கிழித்துச்சாடினான். அப்பொழுது தட்டுக்கெட்டுத் தடுமாறி வுலைந்து, கட்டுவிட்டுக் காவலழிந்து, நிலத்தில் நின்று மலர்த்திவிழித்த கண்களுடன் வாடிவருந்தினான் விராடராஜன். அப்பொழுது அவனுடன்வந்த சேனைகளழுது ஐயையோ!! நமதாசனுக்கும் வந்ததோபழுது? ஆ! ஹா! தெய்வமே! என்றுதொழுது, நாவறண்டு, நாணமேவிட்டு, யுத்தமுனைவிட்டுச் சித்தம்பிரமித்தோடும்படியாயின, இப்படியாவரையுஞ் சிதறவோட்டிய திரிகர்த்தன் பலம்பெற்ற வில்லாளியாகிய விராடன் கழுத்தில் வில்நாணியைமாட்டி, தனதுரதக்காலுடன்பூட்டி,ஜெயசங்கபேரிமுழக்கி, நால்வகைச் சேனையோடு சென்று, நான்குபுறத்தினுங் காவல்கொண்டடர்ந்து பசுமந்தைகள் தொடர்ந்துவரும்படியாக ஓட்டிக்கொண்டு,பணிக்கொடிதரித்த பார்த்திபனை நாடிப் போவதாயினான். அந்தஅபஜெயத்தைக்கண்ட விராடன்மைந்தரும்-பசுக்கூட்டங்களுக்குக் காவலாள ந்தரும் - படைத்துணைவந்தவேந்தரும்-பராக்கிரமவீர மாந்தரும்-தங்களாற்கூடியவரையினுநேர்ந்து, காலகதியையோர்ந்து மனநொந்து, நெடுந்தூரத்திலிருந்து யுத்தவிந்தையைப் பார்த்திருந்த கங்கபட்டரிருக்குமிடத்திற்குவந்து, அவர் கால்மேல் விழுந்து, ஓமகானுபாவரே! எங்கள் தந்தையையிழந்தோம். எந்தையாகிய அரசனைப் பிரிந்தோம். என்றேங்கியழுதார்கள்.

அந்தவேளையில் தருமராஜனான குருகுலக்கோமகன்பயப்படாதீர்களென்று அவர் படும் பரிதாபத்தை மாற்றி, தன்பக்கத்திலிருந்த பலாயனனாகிய தம்பியைக் கடைக்கண்ணாற் பார்த்தார். அவரது கண்ஜாடையைக் கண்ட வீமசேனன் ஊழித்தீயைப்போலெழுந்து,தன் உடலைமறந்து, யுகமுடிவில் தோன்றுஞ் சர்வசங்காரக்கடவுளாகிய உருத்திரமூர்த்திபோற் பேரோசைகொண்டு, தன்தந்தையான சண்டவேக வாயுதேவனானவன் உயர்ந்தமலைகளையும் உவரியலைகளையும் உலைத்துமோதிச்சிதைக்குமாறுபோல் திரிகர்த்தனுடைய தேர்முதலானவைகளை யெல்லாஞ் சின்னபின்னப்படுத்திஅவன்படைவீரர்களையுங்கொன்று பசுநிரைகளையும் விராடனையும் விடுவித்துக்கொண்டு திரும்புதற்கெண்ணினவனாய்: நிடுதிடெனச்சென்றான். இப்படியோசித்து எடுத்தடிவைக்குமுன்னமே எற்றக்கோல் தூரம்போய்விட்ட இளஞ்சிங்கத்தின் ஆத்திரக்குறிப்பைத் தருமராஜனறிந்து, ஓ! ஓ! ஓ! மோசம்வந்ததே என்றுவருந்தித் தம்பியைத்தனிப்பட வழைத்தணைத்து, அப்பா ஒப்பில்லாச் சுப்பிரதீபம்போன்ற உத்தமனே! உன்கருத்தை நானறிந்துகொண்டேன். என்கருத்தை நீகண்டுகொள்ளவில்லை. ஆத்திரப்படாதே. நமதடக்கம் விடாதே. இதுவரையிலுங் கழித்த வனவாசத்தைக் கெடுத்துப்போடாதே. இப்போது உதையமான சூரியன் அஸ்தமனமாகிறவரைக்கும் நாம் இன்னாரென்று எவர்களுமறியப்படாது ஒருவேளைச் சத்துருக்கள் நம்மைத் தெரிந்துகொண்டால், நாமிதுவரையிலும் பட்டபாடு பாழாகிப்போம். இதையுன் கருத்திலிருத்திச்சென்று, பெருஞ்சண்டைவிளைக்கும் வீமசேனனென்னும்பெயரை வெளிப்படுத்தாமல், வில்லும் பாணமுங்கொண்டு தேர்மேற்சென்று திரிகர்த்தனுக்குன் திறங்காட்டிநின்று, அவனைத்தேருடன்வென்று, நம் விராடராஜனை மீட்டிவிடுக. என்று வேண்டிய புத்தியுத்திகளைத் தருமராஜன் வீமனுக்குரைத்து, அவனுக்கு வீராவேச மேலிடாதிருக்கும்படி எமதர்மராஜனாகிய தன் தந்தையைப் பிரார்த்தித்துவிடுத்தார். அவ்வாறு அண்ணன் சொல்லுக்கடங்கிய வீமசேனன் கேயூரமணிகுண்டலமுதலிய பணிகள்பூண்டு,அம்பறுத்தூணிமுதலிய வாயுதசின்னங்கள் யாவுந் தரித்து, ஆகாயமளாவிய குன்றனையதேர்மேற் பாய்ந்து, வில்லை

வளைத்து நாணியேற்றி, வெற்றிபெற்ற சிங்கமானதுயானைமேல்தாவும் விருப்பைப்போலும் விண்ணளாவிவளர்ந்த அடவியைப்பற்றிக்கொண்டு வேகின்ற தீயைப்போலும்-மகா உக்கிரபராக்கிரம கோலாகலத்துடன் விரைந்துபோகின்றான். அந்த வீமன்செல்லும் வேடிக்கையைப் பார்க்கும்படிக்குத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் ஆகாயத்தினிறைந்து, அழகிய விமானத்தமர்ந்து பார்த்தார்கள்.

இப்பால் வீமனுக்குப் புத்திமதிவிளம்பி விடுத்த முரசக்கொடியோனாகிய தருமராஜன்மனந்தளாமலும் தம்பியை நம்பாமலும்-நகுல சகாதேவர்களாகிய தாமக்கிரந்தி தந்திரபாலர்களைப்பார்த்து. அப்பா தம்பிமார்களே! உங்களண்ணனாகிய வீமனை யனுப்பியிருக்கின்றேன். அவனோ? மிகுந்தஆத்திரமுடையவன். அவசரக்காரன். முன்கோபமுதல்வன். அவனொருவேளை சுசர்மன்பேரிற்பாய்ந்து சுடுசரந்தொடுத்துச்சமர்புரியும்வேளையில், அவனு லிவனுடைய வில்லும் பாணமு முறிந்துமேனிவருந்தி வம்புநேரிடுமாகில், இவன்தேரைவிட்டுக்கீழேகுதித்து, அம்புகள் பறக்குங் கும்பலிற்புகுந்து, விற்போர் விடுத்து மற்போர்கொடுத்து, மலைகளைமாங்கனைவாரணத்தேர்களை வாரியடித்து மாறுகொடுப்பான். அதனாலிவன் வீமனென்று வெளியாகி, பாண்டவரிவ்விடத்திலிருக்கின்றார்களென்று பகைவரறிந்துகொள்ளுவார்கள். அவர்களறிந்தால் மறுபடியும் நாம்வனவாசம் பண்ணவரும். நாமெண்ணிய வெண்ணம்ஒன்றும்நிறைவேறாமற்போய்விடும். உலகம்பழிக்க இடமுண்டாகும் என்று தம்பியரிருவர்க்குந் தனிக்கச்சொல்லி, நீங்களிரண்டுபேருங் கூடச்சென்றிருந்து வீமனைமிஞ்சவொட்டாமலடக்கி, திரிகர்த்தனைமடக்கி யுத்தந்தொடங்கி,பசுக்களையும் விராடனையும்விலக்கி, வேடிக்கை பார்ப்பவர் தலைகுலுக்கி வியக்கும்படியாய் அமர்முடித்து, ஜெயத்துடன் வருவதே பெருமையென்று உரைத்தனுப்புவித்தார். இளங்காளையரிருவரும் அவருடைய இதோபதேசத்தைச் சிரமேற்கொண்டு, அவ்வாறே முடிப்போமென்று அண்ணலைத்தொழுது விடைபெற்று, பொன்மயமான போர்த்தேரூர்ந்து நடத்தி, கல்லென்றிசைக்குங் கார்முகம்வணங்கி நூற்றிலொருவன் ஆயிரத்திலொருவனென்னு மதிரதவீரர் தலைகள் குதிரையின் காலிலும் யானையினடியிலு மகப்பட்டுருளும்படியாகச்சேனைகளை நடாத்திப் பாணப்பிரயோகம்பண்ணிக் கண்ணுக்கெட்டியதூரம் பறந்து ஓட்டமாயோடுகின்ற வாயுபுத்திரனாகிய வீமசேனன்மேல் நாட்டம்வைத்து நாடிச்சென்றவர்களாய்: திரிகர்த்தன் சேனைவெள்ளத்தை நீந்திப் போய்த் தேருடன்தேர்கலக்கப் போராடினார்கள். இங்கே தேவர்கள் புகழாநின்ற குருகுலச்செயபதியானதருமராஜன் மனந்தாமசிக்காமல், தம்பிமார்மூவரும்போயிருக்கின்றார்களே; தாழ்ச்சியென்னமோ? சண்டையாதோ? என்று தானெடுத்த வேடத்திற்குத்தக்க மரியாதையும் மகிமையுந் தப்பாமல், சம்மாரகாலத்திற்புரண்டெழுகின்ற சலநிதிபோற் குணக்கடலு மருட்கடலுங் குலவத் தேரேறி, அக்ஷதையிறைத்து, கட்டுகளெட்டுங் குச்சுப்பட்டுமுடைய வில்லைத் தொட்டெடுத்து,வாயுவேக மனோவேகத்துடன் வந்து தம்மைத் தம்பிமார் பார்க்கும்படிக்குச் சமர்முனையிற் கலந்தார்,

பலாயனன் திரிகர்த்தனைவென்றுதன்தேரிற் கட்டி,விராடராஜனையும் பசுநிரைகளையுமீட்குதல்.

இவருக்கு முன்சென்ற தம்பியரிருவரும் எப்புறத்துச்சேனைகளு மப்புறத்தி லகலாதபடி துப்பறவொழித்து, மன்னர்தம் உயிரை வானுலகேற்றிச் சின்ன பின்னஞ்செய்து வருவதானார்கள். இத்தம்பிமார்களின்செய்கையை வீமன்கண்டு மேலாகிய சந்தோஷங்கொண்டு பலம்பொருந்திய தனதுவில்லிற் சரங்களைப்பூட்டித்தலம்புரண்டோடத் தாக்கினான். அவ்வேளையில் திரிகர்த்தனானவன் இவர்களாரடா அப்பாவென்று சென்றதேரைத்திருப்பி யெதிர்நின்று. வீரலட்சுமிவிளையாடுகின்ற தனது வில்லைவளைத்து, பாணங்கள் பற்பலதிசையிலும் பறந்திடச் சொரிந்தான். அக்காலையில் அழிவில்லாப் பலம்படைத்த ஆண்சிங்கம்போன்ற வீமசேனன் தன் தேரைத் திரிகர்த்தன் தேருக் கெதிர்முடுக்கி, அயிந்திராஸ்திரங்களைவிட்டு மடக்கி, அவன்தொடுத்த கணைகள் யாவையுந்தறித்து, வில்லையுமுறித்து, நாணியுமறுத்து, சாரதிகுதிரைகளின் தலைகளையும் பறித்து, தேரையுமுடைத்துத் தியங்கச்செய்தான். அப்போது திரிகர்த்தனானவன் திடதைரிய தீரம்விடாமல் வேறுதேரேறி, மின்னென விளங்கும் வடிவேலையெடுத்து வீமன்பேரில் வீசினான். அந்த வேலாயுதமானது பூரணசந்திரனைப் பிடிக்கத்தாவிய செம்பாம்புபோற்புரண்டு திசாதிசையிலுந் தீப்பொறியிறைத்து வருவதை மாருதிகண்டு, மடமடவென்று பற்களைக் கடித்துநின்று, அதனைத் தனது பிரமாஸ்திரத்தால் ஒடித்தான். வேற்படைமுறிந்ததைச் சுசர்மன்கண்டு வெகுண்டு, வச்சிரக்கட்டுகளோடு முட்கட்டுகளுமுடைய ஓர்கதையைச் சுழற்றிக் காகரவென்றெறிந்தான். அது விறுவிறெனச் சுழன்றுவீமனைநோக்கிவர, அதைப்பார்த்து நெருப்புத்தலைபெற்ற இருப்புக்கணைகளைப் பத்தெடுத்துத் தனக்கு நேர்வருங்கதாயுதத்தை நிமிஷத்திற்பொடித்து அசைவற்றிருந்தான். அப்போது புலவர்கள் புகழும்படிக்குப் பொடிப்பொடியாயுதிர்ந்தழிந்த தன்கதாயுதத்தைத் திரிகர்த்தன்நோக்கி, வந்தவேளை யெந்தவேளையோ? என்று மனநொந்துவாடி வாளையுருவி, விண்டலத் துயர்ந்து மண்டலத்திற்பாய்ந்து வீசினான். அவ்வீரத்தை வீமன்பார்த்துமகிழ்ந்து,

நாகம்போற் சினந்து, மேகக்கணையொன்று போக்கி, அவன்தேகஞ் சோகங்கொள்ளும்படித் துளைத்துத்தாக்கி, அவனைச்சார்ந்த யானைசேனை பரிவாரங்களையுங் கலக்கி அப்பாலோட்டுவித்து, அச்சுசர்மாவையு மவன்கைப்பிடித்தவாளையு மலங்கோலமாக்கி, அவனையெங்கு நிலைக்கவொட்டாம லிலவம்பஞ்சுபோற்பறக்கவடித்து, அவன்தலைமயிரைப் பற்றியிழுத்தான் அக்காலையில் திரிகர்த்தராஜன் பொறிபுலன் மயங்கித் திக்குமுக்கிட்டு, தலையிறக்கத்துடன் தத்தளித்துத் தளர்வுற்றிருந்தன். அஃதெப்படி யிருந்ததெனில்-பாண்டவர் வனவாசம் பண்ணும்போது அவர்களைப் பங்கப்படுத்தவந்த துரியோதனன் சித்திரசேனனிடத்திற் சிக்கிப்புத்திரமித்திரபூவை மாருடன் தாமணிப்பிணியாகக் கண்டுண்டு பரதவித்த தன்மைபோல், யுத்தமுகத்தில் மற்றொருவரையும்வெற்றிபெற வொட்டாத சுத்தவீரத் திறமுற்றதிரிகர்த்ததேசராஜனென்னுஞ் சுசர்மாவானவன் சிங்கத்தினிடத்திற் சிக்கிக்கொண்ட மத்தகஜம்போல் வல்லமைகுறைந்து, வாயுகுமாரனாகிய வீமனிடத்தி லகப்பட்டுப்போனான். உடனே வீமசேனன் விராடபூபதியைக் கட்டவிழ்த்து, அவனைத் திரிகர்த்தன் தேரினின்று தன்தேரி லேற்றிக்கொண்டு, தான்பிடித்த சுசர்மாவின் தலைமயிரைச்சுற்றிப் பிடித்தபிடிவிடாமல் தன்தேர்மேலிழுத்து, இரத்தத்துளி பீரிட்டுச் சுற்றிலுந் தெறிக்கும்படியாய் மடலோடு மடல்சேர மணிக்கயிற்றினால் இறுக்கிக்கட்டி; அவனைத்தன் எதிரிலிருக்குங்குருசேனைகளுக்குக்காட்டி இன்னுஞ் சண்டைசெய்யச் சமர்த்துள்ளவர்க ளிருந்தால் வாருங்களென்று அவர்கள்மீது சாமாரிபொழிந்து கோபாவேசங்கொண்டு நின்றான். இப்படிநின்றவீமசேனனைச் சுசர்மாவின் சேனைகள்கண்டு பயங்கொண்டு புறங்காட்டி யோடிப்போனார்கள். அவ்வேளையிற் சர்வசம்மாரகால உருத்திரன்போலுருத்தெழுந்த வாயுகுமாரனை விராடராஜன்நோக்கி, ஈமதுபங்குத் தெய்வமோ இவ்வுருக்கொண்டெழுந்ததென்று மிகவு மகிழ்வடைந்தான். அப்போது பதினாயிரங் குதிரைவீரர்கள் பாய்ந்து கோபாலருடன் சேர்ந்து, திரிகர்த்தராஜன் கைக்கொண்ட பசுநிரைகளைத் திருப்பிக்கொண்டு, ஜெபம் ஜெபம் ஜெபம்: என்று ஜெபக்கொடிநாட்டி, சிறுபறைகொட்டி, பலவித வாத்தியங்களையு முழக்கிக்கொண்டு, தங்கள் எதாஸ்தானமாகிய மச்சதேசத்திற்குத்தென்புறத்திற் கலந்து முன்போலிருந்தார்கள். கங்கபட்டராகிய தருமராஜன் தனதுபக்ஷஞ் ஜபமென்றறிந்து, முந்தியிருக்கும் ஓர்கூடாரத்துக்குப்போய் ஒன்றும் அறியாதவர்போல் தாமிருக்கத்தக்க ஆசனத்தி லிருந்தருளினார்.

இப்பாற் சத்துருவாகிய திரிகர்த்தனை வென்று அவனைத் தேர்க்காலில் இறுகக்கட்டிக் கொணர்ந்தவீமசேனனும் விராடராஜனும் அத்தேரைநடத்திச்சென்று விராடராஜனுடைய தம்பியரோடுந் தனயரோடுஞ் சேனைகள்சூழத் தருமராஜனுக் கெதிரிற்போய்ப் பணிந்துநின்று, சுவாமி! தேவரீருடைய அநுக்கிரகத்தாற்இணையில்லாத கங்கபட்டர் அவர்களை யாசீர்வதித்து, அருகிலிருந்த ஆசனத்திலிருத்தினர். அப்போது கங்கபட்டரை விராடராஜன் பணிந்தெழுந்து, ஓ ஆண்டவனே! போர்முகத்தில் வீரர்களைப் பொருத்தியோட்டி, ஊர்முகத்தில் என்னைக்கொண்டு வந்துகாட்டி, உலையாப்புகழை நிலைநாட்டி, எனக்குக் குலதெய்வமாகத் தோன்றிப் பகைவர்கைப்பட்ட வென்னையும் பசுக்களைமீட்டிரட்சித்த பாலாயனனுடைய பேருதவிக்கு நானென்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்? அப்படிக்கல்லவென்று செய்தாலும், இவர்புரிந்த உதவிக்கீடாகாதே; இதற்கொத்த கைமாறுளவோவென்று யோசிக்குமிடத்தில், இப்புவியினுமெப்புவியினுமில்லை. அன்றியும்-இப்பிறப்பிலுமெப்பிறப்பிலுங்கூட இல்லை. என்றுரைத்துப் பலாயனனை மிகமகிழ்வோடு தன்மார்போ டணைத்துக்கொண்டு, என்மைத்துனனான கீசகனைப் பறிகொடுத்துக் கதியற்றிருந்தவென்னை நீங்களிவ்வேளையிலடுத்து, எதிரிகையிற்பட்ட சிறையைவிடுத்து, எனக் குயிர்கொடுத்தீர்கள். நீங்கள் இவ்வுதவி செய்யாவிடில் இந்நேரம் என்கதி யெப்படியாமோ? அதைநான்அறியேன்.ஆகையால்-என்னரசுரிமையும், என்பட்டினமும், என்செல்வமுதலாகிய யாவும்: என்னுயிரோடு உங்களுக்கே தத்தமாகக் கொடுத்தேன். உங்கள்பெருமைக்கும்-அருமைக்கும்–நீங்கள்செய்த நன்மைக்கும்–நான் தத்தம் பண்ணியபொருள்கள் தகுதியற்றனவா யிருப்பினும், பக்திசிரத்தையாகச் செய்கின்ற ஏழைப்பூசையை எப்பொருட்குமுரிய ஈசன் அங்கீகரித்துக் கொள்வதுபோல், தாங்களுந் தயைபுரிந்து ஒப்புக்கொள்ளவேண்டும். எப்பொழுது மென்னைவிட்டு நீங்காமலிருந் திரட்சிக்கவேண்டும். என்று பற்பலவிதமாக உபசாரவார்த்தைகளைச் சொல்லிப் பிரார்த்தித்தான். அவ்வரசன் மொழியைக் கேட்ட தருமராஜனும் மற்றத் தம்பியர்மூவருமகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

கங்கபட்டர் திரிகர்த்தனைக் கட்டவிழ்ப்பித்து விடுத்தல்.

பின்பு முரசக்கொடியுடைய முதல்வன் மச்சதேசாதிபனாகிய மன்னனைப்பார்த்து, ஐயா! பாண்டவர்களிடத்திற் பக்ஷமாயிருந்த நாங்களைவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல், உத்தமனாகிய உம்மிடத்தில் வந்தடைந்த அந்நாள்முத லின்னாள்வரையிலும் நன்னாளாகக்கழித்து, அன்ன வஸ்திராபரணங்களு மநுபவித்து, மகிழ்ச்சியுடன் வாழ்ந்தோம், நாங்கள் வெளிப்பட்டுப் போவதற்கு இன்னுஞ் சிலநாளிருக்கிறது. அப்படியே நாங்கள்போனாலும் உமக்கெந்நாளுங் குறைவில்லை.என்று உபசாரஞ்சொல்லி, ஓ பரிசுத்த இருதயம்படைத்த

பார்த்திபனே! நீரளித்த சகலசம்பத்தையும் நாங்கள் அநுபவித்ததைப்போல் ஆயிரம்பங்கதிகமாக ஆநந்தப் படும்படியாக உமதுதேரிற் கட்டுப்பட்டிருக்கின்ற திரி கர்த்தராஜனைக் கட்டவிழ்த்துவிட்டு, அவனை உபசரித் துச் சன்மான வெகுமானத்துடன் ஒருரதமுங்கொடுத் து அனுப்பவேண்டியதென்றார். இவ்வாறு மகா இரக்க மாகச் சொல்லிய தருமராஜனுடையகருணைமொழியை விராடராஜன் காதாரக்கேட்டு, மறுவாய் திறவாமல்தா னேயெழுந்துபோய்க் கட்டவிழ்த்துவிட்டு, ஆபரணவ ஸ்திராதிகளும் வழங்கி, அழகிய தேருமளித்து, ஓ திரி கர்த்தனே! முன்னொருநாள் நீயவமானம்பட்டிருக்கப் பின்னும்வந் தகப்பட்டமையால், மன்னர் முறைமைப் படிக்கு உன்னை வாளால்வெட்டவேண்டும். அப்படிவெ டவேண்டிய வெட்டை இந்த மகாநுபாவராகிய கங்க பட்டர்தப்புவித்தார். இவ்வாற் கிடைத்தது உனக்குப் பிராணபிச்சை இதையெப்போது மறவாமலிருவென்ற னுப்பினன். அத்திரிகர்த்தன் விராடனைப்பார்க்க வெட் கப்பட்டு, மெத்த விசனமுற்று, புத்திமயங்கிச் சித்தப் பிரமைகொண்டு, சுயோதனன் முதலாகிய கொற்றவர் நமக்குப் பின்னுதவிவந்து கைகொடுக்காமற் போ னார்களே: அவர்கள் முகத்தில் நாமெப்படிப்போய் விழிப்போம்? என்று மனமெலிந்து, ஒடியொதுங் கிப் பதுங்கியிருக்கின்ற தன் படையுடன் கலந்து, கங்கபட்ட ரென்பவரைக் கருணையில் தருமராஜனெ ன்றுபுகழ்ந்து, பிழைத்தது போதும்: போதும்: என்று போயினன். அப்பால்தருமநந்தனன் விராடனைப்பார் த்து, இப்பொழுதுபோன திரிகர்த்தன் ஒருவேளைமேற் படைகூட்டிக் கொண்டு வந்தாலும் வருவானென்று ரைக்க, அதைக்கேட்ட மதிகுலவேந்தனாகிய மச்சராஜ ன் ரதகஜதுரக பதாதிகளான நால்வகைப் படையை யும் பிள்ளைகள் மூவரையும்போரணிநிறுத்தி, மேற்படை வரு மார்க்கத்தில் வேவுகாரரை யனுப்பிவிட்டு, அன்றி ரவுமுழுமையு மவ்விடத்தில் முகாம்போட்டுக்கொண்டி ருந்தான். முன்பு திரிகர்த்தனுலடியுண்டு முறிபட்டோ டிய மூத்தபிள்ளையாகிய சுவேதன் முக்கண்ணனாகிய முதல்வனைப்பூசித்து, எக்காலத்துமெவர்களுக்கு மிளை யாமலிருக்கும் உரத்தை வரத்தினாற்பெறக் கருதித்தவ ஞ்செய்திருந்தான். அக்காற் சூரியனஸ்தமனமானான். அஃதெப்படி யிருந்ததென்றால்-வீமசேனன் திரிகர்த்த னைத் தேருடன்கட்டிய திறத்தைச் சமுத்திர நாதனான வருணன்கண்டு, இன்னும்பாண்டவர்களை வெளிப்பட வொட்டாமல் தடுத்திருக்கின்றான் சூரியனென்று கோ பங்கொண்டு, தன்மேனியைச் சிவக்கக்காட்டி மேற்றி சையிற் கொண்டுபோன விதம்போலிருந்தது-

தக்ஷணநிரைமீட்சிச் சருக்கம்-முற்றிற்று.

ஐந்தாவது.

உத்தர நிரைமீட்சிச் சருக்கம்.

கண்ணன் துதி.

அலையெறியும் பாற்கடலின் மத்தாகப் பொன்மலையை யமைத்துவானக்
கலைமதியை யடையாக்கி வாசுகிநா மத்தானைக் கயிறுப்பூட்டிப்
புலவர்குழாங் கடைபொழுதம் மலைகடலிலமுழ்ந்தாமற் புகழுமர்மை
நிலவுருக்கொண் டடிதாங்கி யமிர்தோங்கப் பகிர்ந்தருளு நெடியோய்போற்றி.

ஓ ஜெனமேஜய மகாராஜனே! ஒப்பற்ற சித்திரம ணித்தேரேறிக் குருசேனையுடன் கூடிவந்த திரிகர்த்த தேசாதிபனென்னுஞ் சுசர்மாவானவன்விராடபுரத்தின் தெக்ஷணபாரிசத்திற் சேர்ந்து, ஆதிசேடனாற் சுமக்கப் பட்ட இப்பூமி யதிரும்படிக்குப் பெரும்போர்தொடுத் து, விராடனுடைய மாட்டுமந்தைகளை மடக்கிப்பிடித் துச் செயம்படைத்துத் திரும்புங்காலையில்: பசுக்காவல ரடிபட்டோடி விராடராஜனுக் கறிவிக்க, அவ்வாசனுட னே ஓ ரக்குரோனிச்சேனையுடன் வந்து திரிகர்த்தனு டன் சண்டைபுரிந்து தேரிற்கட்டுபட்டு, சுயம்பாகியி னால் விடுபட்டு, மறுபடியுந் திரிகர்த்தனைப்பிடித்துத்தே ர்க்காலுடன் கட்டி அவமானப்படுத்தி, கங்கபட்டர் மொழியால் விடுத்து, அவன்கைக்கொண்ட மந்தை களைத்திருப்பிக்கொண்டவிதத்தைச் சொன்னேன். இப் பால் திரிகர்த்தராஜனுக்குப் பின்படையாகிவா யுத்தச ன்னத்தரா யிருந்ததுரியோதனனாகிய பெருஞ்சேனைகள் வந்து மச்சநகரத்தின் வடபாரிசத்திலடுத்து, அங்கி ருந்த மாட்டுமந்தையை மடக்கிப் பேடியினால் மானங் கெட்டுப் பசுநிரைகளைவிட் டோடிய சரிதையைப்பகரு கிறேன்கேளும். ஓ குவலயம்புகழுங் குருகுலக்கோமா னே! திரிகர்த்தாசன் தன்கைவசப்பட்ட மாட்டையும் விட்டுத் தானுங்கட்டுண்டு விடுபட்டுச் சேனையுடன்முது கிட்டுதிரும்பிவிட்ட செய்தியைத் துரியோதனன் சில தூதுவராற்கேட்டு, ஆக்கிரமித்து வியாக்கிரம்போலெ ழுந்து, இந்தச் சுசர்மாவானவன் நாம் சொல்லியனுப்பி யபடி பாண்டவர்கள்பதுங்கியிருக்கும் பருவத்தைப்பா ராமல், பசுநிரையை மடக்கினவன் பக்குவத்துடன்பட்

டினம்வந்துஞ் சேராமல், விருதாவேலைசெய்து விட்டானே யென்று வெம்பி, ஐயோ! ஆண்மிக்கை யுடையவனிவனென்று நம்பி வீண்மோசம் போனேமே அடா துச்சாதனனாகிய தம்பி! நமது நால்வகைப்படையுமெழும்படி விளம்பி, என் வெற்றிமுடியை விரைவிற்கொண்டுவா வென்று கிளம்பி, நாம் திக்கெட்டுஞ்செவிடுபடப் பேரிகைமுழக்கிக்கொண்டு பட்டப்பகலிற்புறப்படுவது பக்குவமல்லவென்று சொல்லி, விட்டெறிக்குங் கிரணங்களையுடைய வெய்யோன் உதயஞ்செய்யு முன்பாக அட்டகஜத்திற் கிணைபட்ட துட்டயானைகளைநடாத்திக் கட்டுக்காவலுடன் பட்டுப்படாச் சேனைகள் புடைசூழப்புறப்பட்டு, விராடபுரத்து உத்தரதிசையிற்சென்று, நவதானியங்கள் விளைந்திருக்கு நாடுகாடுகளை யழித்து, தனது நால்வகைச் சேனைகளையு நிறைத்து, ஊரிலுள்ளோரை யோடவிட்டடித்து, ஓடும்பேர்களை யோடாமல்மறித்து, செழித்துவளர்ந்த கருப்பங்கொல்லைகளைத் தீயிட்டுக்கொளுத்தி, நன்செய் புன்செய் பயிர்களைநாசப்படுத்தி, ஆழ்ந்த குளங்களனைத்தையுந் தூர்த்து, தடங்கள் மடங்களைச்சரியவிடித்து, ஆறு - கால்-ஏரி-அணைக்கரை - இவைகளை அழித்து. போராகக்குவித்த நெற்களைப்பொரிபறக்கக் கொளுத்தி, நாடுகாடாகக் காடுமேடாகக்கெடுத்து, மாடுகளைப்பிடித்து, அறம்பறந்தேங்கவும் - மறஞ் சிறந்தோங்கவும் - வில்லைவளைத்து அல்லல்விளைத்தான்.

கோபாலர் முறையிடக்கேட்டு தாயோடு வருந்திய உத்தரன்கருத்தை விரதசாரணி பிரகநளைக் கறிவித்தல்.

அக்காலையில் அந்த மங்கைகளுக்குக் காவலாயிருந்த நந்தகோபாலர் வந்தெதிர்த்துப் போர்புரிந்து சிந்தைநொந்து, திறனழிந்து ஊர்புகுந்து. இராஜமைந்தனாகிய உத்தரகுமாரனோடோலமிட்டழுதார்கள். அவர்களை அவ்வரசிளங்குமாரனோக்கி, உங்கட்குயென்னதுன்பநேரிட்டதென்றுகேட்டனன். அதற்கவர்கள் இராஜகுமாரனடிமேல் வீழ்ந்தெழுந்து. இருகையுங்குவித்து, ஓ இளஞ்சிங்கக்கன்றாகிய சுவாமி! பராக் தென்றிசையில் திரிகர்த்தன்வந்துபுகுந்து பசுமந்தையை மடக்கிய செய்தியறிந்து, அப்பசுக்குலங்களைமீட்கவேண்டிச்சேனைகளுடன் விராடபூபதி சென்றிருக்குஞ் சமையம்பார்த்து, அரவக்கொடியோனாகிய துரியோதனராஜன் பலம்பொருந்திய படைகளுடன்வடதிசையிற் கலந்து, பதாதிகளைப் பிரித்துவிட்டு, நாட்டிலுள்ள பலன்கள்யாவையுமழித்துஅதாகதஞ்செய்து,மாட்டையுங்கவர்ந்து, கூட்டமாயெதிர்ந்த எங்களையு மாட்டிப் பிளந்து விட்டான். ஓ சந்திரகுலேந்திரனே! நீர் இத்தருணத்தில் வீட்டிலிருப்பது தகுதியோ? என்று முறையிட்டார்கள். இவ்வண்ணம் உத்தரகுமாரனோடு வினையுரைப்போர் விளம்பியசொல்லை அக்குமாரனைப்பெற்ற சுதர்க்கணையானவளறிந்து, ஆ! இதென்ன விந்தை? யாரேனும் நாட்டில் அரசனில்லாதவேளைபார்த்துவந்து மாட்டை மடக்குவார்களோ? இஃதிராஜநீதிக் கேற்குமோ? பெண்பாலாகியநானென்செய்வேன்? என்றேங்கித்தன் பக்கத்திலிருந்த பாங்கியரைநோக்கி, அடி தாதியரே! இந்தவேளை தப்பித்துக் கொள்வதற் கெந்தவழியுங்காணோம். வந்திருக்குங் குருகுலச்சேனைகள் நம தந்தப்புரம்புகுந்து தொந்தரை செய்யு முன்னமே ஜாக்கிரதைப்படவேண்டும் அதற்கு என் சிந்தையிலொரு தந்திரந்தோன்றுகிறது அதைக்கேளுங்கள். எப்பேர்ப்பட்டவர்களும் பெண்கள்பேரிற் படையெடுக்க லாகாதென்று அரசநீதி யிருக்கின்றது. அதைப்பலரறியா விட்டாலுஞ்சிலராயினும் அறிந்திருப்பார்கள். பாவபுண்ணியம் பார்த்து நடப்பார்கள். ஆகையால் - நீங்கள் யாவரும் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டு, கோட்டை மதில்மேலேறிக் கூட்டங்காட்டி, நமது மச்சநாட்டுக்கோர் மறுவுறுதபடி கவனிப்பாய் வாருங்களென்று சொல்லினாள்.

அவளுரைத்த வார்த்தையைக்கேட்ட உத்தரகுமாரன் நெருப்பில்விழுந்தபுழுப்போல் துடித்துப்பெருமூச்சுவிட்டு, பெற்றதாயைவணங்கி. அம்மா! நானிருக்க நீயென்னசொன்னாய்? ஓ! ஓ! ஓ! நீயிப்போதுரைத்தமொழியானது மிகவு நன்றாயிருந்ததென்று வெகுண்டு நகைத்து, ஐஐயோ!! என்னைக்கொல்லமாட்டாமற் புல்லியமொழி சொல்லினையே. உனது வயிற்றிற் பிறந்து சகலகலைகளுமறிந்து செல்வச்சிறுவனாயிருந்து செழித்து அமுதருந்திய வென்னை, மன்னனுக்குப்பிறந்த மைந்தர்களிற் கடைசியிற் பிறந்த மகனென்னப்பூரித்து ஆதரித்துவந்த அன்னையாகிய நீ என்னையருமையாக இதுவரையில் வளர்த்தது; சத்துருக்களாற் பகை வந்து நேர்ந்தபோது பெண்கள் கூடிச்சண்டைசெய்து தாங்குவதற்குத் தானோ? இந்தஸ்திரீகளால் மச்சநாட்டுக்குவந்த வருத்தநீங்கிப் போமானால், நானுனக்குப் பிள்ளையென்றிருந்து பிரயோசனமென்ன? எனக்குவீரனென்னு மேம்பாடென்ன? நான் கற்றவித்தைகளினாற் பயனென்ன? நானொருவனிருக்கிறேனென்று சற்றுமதியாது பயனற்ற வார்த்தைகளைச் சொல்லினையே; தாயே! நானந்தச் சத்துருக்களைச்செயிக்கமாட்டேனென்றெண்ணினையாக்கும்.சத்திக்குஞ்சத்தசமுத்திரம்போற் படையெடுத்துவந்து நமதுபசுநிரைகளைக்கவர்ந்தபகைவருக்கெதிரில் நானொருவனுமுனைந்து, முழுப்போர்புரிந்து, இமைகொட்டுமுன்னேயிளைத்தோடவாட்டி, விஜயக்கொடிநாட்டி, ஜெயபேரியடித்து, யாவரும்புகழ்ந்து மெச்சும்படி திரும்பிவந்து உன்பொன்னடியைப் பூசிக்கின்றேனம்மா! ஆனால்-அந்தப் போர்முகத்திற் காலமறிந்து, சமயந்தெரிந்து, மனக்கருத்துணர்ந்து, முகக்

குறிப்போர்ந்து, எதிரியினெண்ணங்கண்டு,எனதுதேர் விடுக்கத் தக்கவனாகவும் - எனதுமனதுக்கொத்தவனாகவும் - ஓர் சாரதிகிடைப்பானாகில். யாரென்னை வெல்ல வல்லவர்கள்? அம்மணி! அப்படிப்பட்ட சாரதியொருவன் இல்லாக்குறையினால் நீயுரைத்தபேதைமைச்சொல்லுக்குப் பின்னிட்டுத்தவிக்கிறேன். இப்போதுவந்தெதிர்த்திராநின்ற கர்னராஜன் - வீஷ்மாசாரி - கிருபாச்சாரி - துரோணாச்சாரி - அரவக்கொடிபடைத்த துரியோதனன் - இவர்களியாவரும் புறங்கொடுத்தோடப் போராடி, அம்புலிக்குலத்தில் அவதரித்திராநின்ற மகாவீரசிகாமணியாகிய அருச்சுனன் கூடஅதிசயிக்கும்படியாகச் செயித்து, நமதுமாட்டு மந்தையைமீட்டுக் காட்டுக்கோட்டிவிட்டு, ஒருகடிகை நேரத்தில் இந்நாட்டில் வந்து அடிவைப்பேன். அம்மா! இதைக்குறித்து வேறொன்றும் யோசிக்கவேண்டாம். என்று உத்தரகுமாரன்சொல்ல, அதைக்கேட்ட சுதர்க்கனையானவள் அவனைக்கட்டி யணைத்து இதனைப் பேசுவதாயினள்.

என் அப்பனே! நீயிப்போதுரைத்ததெல்லாஞ்சரிதான். உன்னிஷ்டப்படி தேரைச்செலுத்தத்தக்கவல்லவனை நானெங்கேகண்டு தேடுவேன்? உனக்குச் சாரதி தேடுதற்கு முன்னமே எதிரிகள் வந்துகோட்டையைக் கைக்கொண்டு போவார்களே: என்றுசொல்லித்தாயும கனும்எக்கமுறுஞ் சமயத்தில், இக்கருத்தைப் பக்கத்தினின்று கேட்டிருந்த பணிப்பெண்ணானவள் உத்தரனுரைத்த உறுதிச்சொல்லையும் - அருச்சுனனைப் புகழ்ந்துபேசிய அன்பையும் - தன்சித்தத்திற்குறித்து, சற்று நிதானித்து, சித்திரவிற்கொண்டுசிவபெருமானைப்புடைத்துப் பாசுபதாஸ்திரம் பெற்ற தனஞ்சயனாகிய பேடியிருக்கும் நாடகசாலையிற் புகுந்தாள். அப்போதுமிக்க அவசரமாகவந்த விரதசாரணியின் அக்கறையையும்-முகக்குறிப்பையும் - பிரகநளையாகிய பேடிகண்டு ஓடிவந்து, தங்களுக்குள் அமைத்துக்கொண்ட சைகையினால் தனித்துச்சென்று, இத்தனைவிரைவோ டிங்குவந்தகாரியமென்னென்றான். அதற்கவள் - ஐயா ! சிலகோபாலர்கள்வந்து உத்தரகுமாரனைக்கண்டு, தெற்குத்திசையில் திரிகர்த்தனை யனுப்பிவிட்டுத் திரண்டசேனையுடன்வட திசையிற்புகுந்து மாடுமடக்கினான் துரியோதனனென்று கூறினார்கள். அந்தமொழியைக்கேட்டசுதக்ஷணாதேவி சிந்தைநொந்து, அருகிருந்த தாதியர்களையழைத்து, விராடராஜன் வருகிறபரியந்தங் கோட்டை மதிற்மேற் கூட்டங்காட்டி நாட்டைக் காருங்களென்றுநவின்றாள். அப்பேச்சைக்கேட்ட உத்தரகுமாரன்மனம்பொறாமல் மாதாவை வெறுத்து, தனது வீரப்பிரதாப வெற்றியைப்பேசி, தன் மனதுக்கிசைந்தவ:னிருப்பானாகில் தனஞ்சயனுங் கொண்டாடச் சண்டைபோடுவேன். பகைவரைச் சாடுவேன். க்ஷத்திரியத்திறத்தைச் [சாதிப்பேன். என்று சஞ்சலப்படுகின்றானென்று] சொன்னாள்.

அம்மொழிகேட்ட விவேகத்திறவானாகிய பேடி ஆத்திரப்படாமல், தாங்கள் கடத்தவேண்டிய அஞ்ஞாதவாசத்தவணைநாளைக் கணக்குப்பார்த்து, ஊர்வசியின்சாபமுற்ற ஒருவருடத்தொகையோடு காலபலமுங்கண்டறிந்துகொண்டு, வெளிப்படுங்காலம் இதுநாளென்றுமிகமகிழ்ச்சியுடன் திரௌபதியைப்பார்த்து, ஓபெண்ணாயகமே! இவ்வளவுதூரம் வந்து எங்காதிலேற்றிய வீரசமானது விருதாவாய்ப் போகாமல், எப்படியாவது சுதர்க்கனைக்கும் உத்தரனுக்குந் தெரியப்படுத்தி, சாரதித்தொழிலுக் கென்னையிசைவிப்பது உன்கடமை. என்று ஒருதரத்திற் கொன்பது தரமாகச்சொல்லி வேண்டினான்.

விரதசாரணி பேடியை உத்தரனுக்குச் சாரதியா யமைவித்தல்.

அவையனைத்துங்கேட்ட வண்ணப்பெண்பாவை அவ்வாறே செய்விக்கிறேனென்றுசொல்லி விடைபெற்று வந்து, நெருங்கித்திணிந்த தனமும் - சுருங்கிக்கனிந்தமனமும் — துவண்ட விடையும் — சிறந்த நடையுமுடைய உத்தரை குமாரத்திக்குச் சங்கதியாவுந் தெரிவித்து, அவளைத் தன்னோடழைத்துக்கொண்டு சென்று, விராடன்புத்திரனாகிய வீரகண்டைதரித்த அவ்வுத்தரகுமாரனைக்கண்டு, ஐயா! நானொரு நன்மைசொல்லுகிறேன். ஐயமில்லாமல் அங்கீகரியும். வையமுழுதுமும்மைவாழ்த்தும். பொய்யில்லாப்புகழணிபூணலாம். இப்போது நேரிட்டிருக்கின்ற துஷ்டரை வெல்லுவதற் குமக்கிஷ்டமிருந்தால், திருத்தமாகிய தேரைப் பொருத்தமாகச் செலுத்துஞ்சாரதியில்லையென்று சங்கடப்படவேண்டாம். இந்த உத்தரை நாயகியாருக்கு நடனத்தொழில் பயிற்றிவராநின்ற பிரகநளையென்னும்பேடிக்கொப்பாகிய சாரதி எப்புவியிலுமில்லை. அவளெப்படிப்பட்டவளென்றால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் தங்கையானசுபத்திராதேவியைத் திருமணமுடித்த அர்ச்சுனன் காண்டாவனத்தை யெரித்தகாலத்தில், அவனுக்கு அக்கினிதேவன்கொடுத்த அழிவில்லா இரதத்தைச் செலுத்தி, யாவருந்துதிக்கத்தேவருங்களிக்க அடுபோர்புரிந்து செயம்பெற்றிருக்கின்றாள். நான் பாண்டவர்க்குரிய பத்தினியிடத்திருந்த நாளையில், அந்தப்பேடியின்திறத்தை யறிவேன். மெத்த மகிமைபெற்றவள். வீரப்பிரதாபமுற்றவள். மிகவல்லவள். மேலுநல்லவள். என்பேச்சைநம்பியோசித்துப்பாரும். என்று விரதசாரணிசொல்லவும், உத்தரகுமாரனுக் குடன்பிறப்பாகிய உத்தரையானவள் அலர்ந்த செந்தாமரைக்கொப்பாகிய தமயன் முகத்தைத்தயவுடன்நோக்கி, ஓ அண்ணா! இந்தமாலினிசொன்ன வாக்கியம் ஒருக்காலும்பிசகாது. ஒருநாள் பாதசாஸ்திரத்தைக் குறித்து நானும் அந்தப்பேடியும்

பேசிக்கொண்டிருக்கும்போது, சாரதித்தொழிற்குரிய சாஸ்திரப்பேச்சும் வந்தது. அந்தவிஷயங்கள் யாவையுங் கிரமமாகப் பேடிபிரசங்கித்து, என்சித்தம் பிரமிக்கச்செய்து, வேர்விதந் திறமெல்லாந் தனக்குத் திட்டமாய்த் தெரியுமென்று தன்னுண்மையைச்செப்பியிருக்கின்றாள். அதனால் - அந்தப்பேடியை யொப்பு கொள்ளும்படியாக நானும் விரும்புகிறேன். என்றுதங்கைபேசவும், இவ்விருவர் பேச்சையுங்கேட்ட உத்தரகுமாரன் கலீரென நகைத்து, பளா! பளா! நல்ல வார்த்தைசொன்னீர்கள். கேடில்லாக் கீர்த்தியை யுடையவர்கள் பேடியையுஞ் சாரதியாகப் பெறுவார்களோ? ஆணும்பெண்ணுமல்லாத அலியைச் சாரதியாகக்கொண்டு போர்க்களத்திற்சென்று சத்துருக்களை வென்றுஜெயம்பெற்றாலும், அது நிலைநின்றுபுகழாமோ? என்பெருமைக்கழகாமோ? பேடிமுகத்தில்விழித்துவிட்டு ஒருவேலைக்குப் போனாலும் அக்காரியங் கெடுதலாவதன்றி, நமக்குண்டாகிய ஆண்மையும் - அறிவும் - புகழ்ச்சியும் - மகிழ்ச்சியும் - பொருளாகாமற் போய்விடுமே: அடடா!! இம்பேர்ப்பட்ட அலிகளது முகாலம்பனமும் பண்ணப்படாதே: அந்தோ! பேதமைப் புத்தியாற் பேசவந்தீர்களே: போங்கள்: போங்கள்: என்று பொருமியுரைத்தான்.

இப்படி அறியாதவன் கொண்ட ஆத்திரத்தைக் கண்ட சைரந்திரியென்னுந் திரௌபதா தேவியானவள் மீட்டுமவனைப் பார்த்து, ஓ விராடராஜ தனயனே! நான் சொன்னவளைப் பேடியென் றெண்ணிப் பேசாதீர். அவளுடைய காரிய மிப்போது தெரியாது. இனிமேல் தெரியப்போகின்றது. அப்பொழுது எனை நீரெப்பொழுதுங்கொண்டாடப்போகின்றீர். ஐயனே! அவளை வலவனாகக்கொண்டு ஜெயம்பெறப்போகிற மேன்மையும், நான்புகன்ற வாய்மையும், நீர் வசனித்த தாய்மையும், இன்னுஞ்சற்றுநேரத்தில் அறியப்போகின்றீர். வெகுகாலமாய் அவளுடன்கூடி ஓரிடத்திருந்து பழகியறிந்தவள் நானாகையால், இப்பேர்ப்பட்டவளென்று அவள்குணங்களையெல்லாம் எடுத்துச்சொல்லத் துணிந்தேன். இன்னுஞ் சொல்லுகிறேன் கேளும். உமக்குநல்லகாலமிருந்து அவ்வல்லவியைச் சாரதியாகக்கொண்டு யுத்தகளத்திற் புகுவீராகில், வீரமும் பிரபலவெற்றியும் பெற்று, பசுமந்தையையு மீட்டுக்கொண்டு, சுபகரமாய்த்திரும்பிவந்து உமது அன்னையாகியசுதர்க்கணையைத் தொழுதுமகிழ்வீர். அவளுக்குக் கைவாசியுண்டு. அந்தப்பேடியைவிட்டு நீர் வேறொரு சாரதியைக்கொண்டு போனாலும், போர்முனையில்இழிவாகிய அபஜெயமடைவதற்கு ஐயமேயில்லை. அன்றியும் - சாரதி யெப்பேர்ப்பட்டவனா யிருந்தாலுஞ் சாமர்த்தியனாயிருக்கின். உமக்கதனால் தாழ்ச்சியென்ன? (வல்லவனுக்குப் புல்லுமாயுதம்.) என்னும் வசனமறியீரோ? (மண்பூனையானாலும் எலிபிடிப்பதேகாரியம்.) என்பதைக் கருத்தில்வையும். நானுங்கட்கு விரோதியல்ல. உங்களுடைய சுகதுக்கங்களுக் குடன்பட்டவளே: ஓ இளங்களிறே! இனிநானுமக்குச் சொல்லவேண்டியதுயாதொன்றுமில்லை. என்று பணிப்பெண் ணியம்பினாள். உத்தரை குமாரத்தியும் அதற்கொத்துப் பேசினாள். இவற்றை யெல்லாங் கேட்ட இளஞ்சிங்கமானவன் சாரதித் தொழிற்குவேறுவழியில்லாமல் ஒருவாறு சம்மதித்து, ஓ வண்ணமாமகளே! மண்குதிரையை நம்பி யாற்றிலிறங்கும் வகையாயிருக்கிறதே: உன்சொல்லை நம்பினேன். அப்படியேயாகட்டும். தெய்வச்செயல் உள்ளபடியே நடக்கட்டும் அந்தப்பேடியையழையுங்கள்பார்ப்போமென்றான். இப்படி அவனுடம்பட்டமையைத் தெரிந்துகொண்ட பத்தரைமாற்றுப் பசும்பொன்னாகிய பணிப்பெண்ணும் உத்தரைகுமாரத்தியும் ஓடியாகவோடி, பேடியுருவந்தாங்கிய பெருந்தகையைக்கண்டு, அம்மா! வாடியமைந்தன் மனதைத்திருப்பினோம். கூடியவரையிலுடன்பட்டுஉன்னையழைக்கின்றான் ஆதலால் - நீர் வாருமென்றழைத்தனர்.

அச்சொல்லைக்கேட்ட மாத்திரத்திற் பிரகன்னளையானவள் இதோவந்தேன்: இதோவந்தேன்; என்றெழுந்து, வேகமாகநடந்து, கையிலணிந்தவளைகள் கலகலவென் றொலிக்க, கமலக்கண்ணிலங்கு மதிமுகஞ்ஜொலிக்க, ஒரேமூச்சில் வந்து இராஜகுமாரனைக்கண்டு உபசரித்து நின்றாள். இப்படியாகவந்த பேடியை இராஜபுத்திரன்பார்த்து, ஓ பேடி! அஸ்வங்களுடைய சுபாவமறிந்து, எசமானன் கருத்தும், காலசமயமுங்கண்டு, கைத்திறங்காட்டி, சமயோசிதமாகக்குதிரைகளைநடாத்திப் போர்முகத்தில்தேர்செலுத்துந்திறம் உனக்குண்டோ? என்று சிறுவன் கேட்டனன். அதற்கவனெதிரில் வணங்கிநின்ற பேடியானவள் - ஓ இளஞ்சியமே! கூலிக்குக்குற்றுகின்றவர்களைகேளிக்கையாடச்செய்வதுபோல், நாட்டியங் கற்பிக்கும் அலியாகிய பேதையை விற்பூட்டிப்பொருதும் போர்முனையில் தேர்விடச்செய்வதுதிறமோ? இராஜஇராஜர்க ளறியுந்தொழிலை நானறியத்தக்கவளோ? ஆகிலுமந்தச் சாரதித்தொழிலென்ன சாமானியமோ? ஓ அழகு - ஈகை - குணம் -புகழ்-மெய்மை- வண்மை - முதலிய யாவுமுள்ள மச்சராஜன் மகனே! ஆணும்பெண்ணுமல்லாத அறிவிலியானயான், உமதுள்ளக்குறிப்புங் குதிரைகளின் குணாதிசயங்களு முணர்ந்து தேர்விடத்தக்க திறமுடையவளாவேனோ? என்று சிரமசைத்து, கரநெரித்து, குறுநகைகொண்டு சொன்னாள். அவள் காட்டிய புன்னகையின்குறிப்பை மன்னன்மக னறிந்து, இவளிடத்தில் ஏதோ கொஞ்சம் வித்தையின் இறுமாப் பிருக்கின்றதென் றோர்ந்து, அடிபேடி! என்மனதொத்தசாரதிமாண்டுபோய்விட்டான். அதுமுதல் என்பராக்கிரமமும் ஓய்ந்துபோய்விட்டது. இனியெனக்குத்தக்கசாரதி யெப்படியகப்படுவானென் றேக்கமுற்றிருந்தேன். இப்போ துன்னுடையதிறமை

யும் - தெளிவும் - தெளிவும் - அநுபோகசாலிகள் சொல்லத் தெரிந்துகொண்டேன். தேர்விடுந் தொழிலுக்கு உன்னையே விரும்பி யிருக்கின்றேன். சுத்தவீரனை ராஜனெத்தனைபலசாலியாயிருந்தாலும். யுத்தஞ்செய்தல்-ஓய்ந்திருத்தல் - உடன்சென் றெதிர்த்தல்-திரும்பியோடல் - போர்மறுத்தல் - பிராணனிறத்தல் - முதலாகிய வினைகட்கெல்லாம், சமயம் — காலம் - இடம் -திடம் இவையறிந்து தேர்செலுத்துஞ் சாரதி தீர்க்காலோசனை செய்யாவிடுல், எசமானனுக்கு இன்பமென்ப தெவ்வளவுமிராது. அன்றியும் - அரசன் வெற்றிமாலையணிவதும், பெரும்புகழ் பெறுவதும், பெரியகாரியங்களை முடிப்பதும், எதிரிகளையோடவிட்டடிப்பதும், இவைகளியாவுஞ் சாரதியின் பேருதவியினு லுண்டாகத் தக்கனவேயன்றி; வேறில்லை. ஆதலால் - நான் விஸ்திரித்துச்சொல்லவேண்டுவதில்லை. நாமிப்போது செல்லுகின்ற போர்முகத்தில் தேர்செலுத்தும் உன் திறமையை நான் கண்டுகொண்டால், அளவுபடாத என்சம்பத்துகள்யாவும் உனக்கே சொந்தமென்று ஐயமில்லாமற் கைமேற்கொண்டு இவ்வையகம் வாழ்த்த மகிழ்வுற்றுய்யலாம். ஓ வாசனைதங்கிய கருங்குழ லோங்கிய பேடி! என்னைநீ வேறாகநினையாதே. உன்மனம்போல்நடந்து கொள்ளுவேன். நமது விராடபுரத்து வடதிசையில்வந்து வளைந்திருக்கின்ற சத்துருக்களோடெதிர்த்து, சண்டைவிளைத்துச் செயித்து, மாட்டுமந்தையை மடக்கிவருவோம், சீக்கிரம் தேர்கொண்டுவா போவென்று கட்டளையிட்டான்.

உத்தரகுமாரன் யுத்தகோலங்கொண்டு ரதமேறிச்சென்று உத்தர திசையடைதல்.

இவ்வாறு உத்தரனுரைத்ததைக்கேட்ட பிரகந்நளையானவ ளவனைப்பார்த்து, ஓஇளங்கேசரியே! நான்பல வகைச்சாதுரியமுள்ள இச்சாரதித் தொழிற்கு வல்லமையற்றவ ளாயினும், இராஜலக்ஷண மமைந்த உமது கருணைக்கண்ணின் கடாட்ச வீட்சண்ணியத்தினாலும், மேன்மைதங்கிய விராடபூபதியின் சத்திய நெறியினாலும் பொன்னாட்டினர்புகழ - இந்நாட்டினர் மகிழ-என்னாற் கூடியமட்டுந் தேர்விடுகிறேன். நீர் யாதொன்றுக்கும் மயங்காமல் யுத்தகோலங்கொள்ளும். என்றுபேடி கூறிய தீரமொழியை உத்தரகுமாரன் யோசித்து நிதானித்து, தேர்விடுந்திறம் இவளிடத்திலில்லாவிடில் நமதுபணிமாது இத்தனை துணிவாகப்பகர்வாளா? ஏதோ கொஞ்சம் பசையிருக்கிறது. இனி நமக்குப்பயமில்லை. என்று மனங்களிகூர்ந்து, யுத்தகோலச்சாலையில் நுழைந்து, குத்தினிச்சல்லடந்தொடுத்து, தட்டிவரிந்து. அரைப்பட்டிகைகட்டி, வச்சிரக் கவசம்-உருக்குக்கவசம்-இருப்புக்கவசம் - இவைகளைத்தரித்து, பாஜிபந்துங்கடகங்கணமுமணிந்து, வாகுவலயம்பூணைந்து, அங்கைமுடி - புறங்கைமுடி - விரற்சாடு - காச்சாடு - முன்கைப்பூண் - பின்கைப்பூண் - முழங்கைத் தோற்கட்டு-இருப்புச்சீரா - மார்புறை — இவைகளைப்பூண்டு, குண்டலம் பரித்து, திரிபுண்டரந்தரித்து, செந்தூரதிலகமிட்டு, முத்தாரம் - இரத்தினாரம் - மோகனாரம் - இவைமுதலியனவணிந்து, மாணிக்கப்பதக்கம் - வயிரப்பதக்கம்- தும்பிப் பதக்கம் - முத்திப்பதக்கம் - சரப்பணி - கண்டசரம் — உத்தரசஞ்சம் - மோகனமாலை - இவைமுதலிய ஆபரணங்களும், தொடுத்தமாலை — கோத்தமாலை—தும்பைமாலை - வெட்சிமாலை—முதலிய மலர்மாலைகளுந்தரித்து சாந்துசவ்வாது பூசி, நவமணிபதித்த ஜோதிமாமகுடஞ்சிரமேல்தாங்கி, வீரபட்டங்கட்டி, வாளும்வேலுமருங்கிற்சேர்த்து. உச்சிதமானபச்சைவில்லேந்தி, அம்பறாத்தூணி யழகுடனிறுக்கி, காலில் வீரகண்டாமணி தொடுத்து, போரலங்கிர்தம்யாவும் புகழ்பெறக்கொண்டுயுத்தசன்னத்தனாகத்தோன்றித் தலைவாசலிற்சென்று நின்றான்.

இத்தன்மையான யுத்தகோலங்கொண்ட உத்தரகுமாரனைப் பெற்றதாயாகிய சுதர்க்கணையானவள் கண்ணாரக்கண்டு, கருத்துளமகிழ்ந்து, ஒன்றுந்தோன்றாமல் உள்ளங்குளிர்ந்து, திருஷ்டிபடப்போகின்றதென்றுசிந்திக்கும்வேளையில் மைந்தனோடிவந்து சாஷ்டாங்கமாகப்பணிந்து வணங்கினான். சேயானவன் தொழுத காட்சியைத் தாயானவள் பார்த்து, ஆசையாகத்தழுவி முத்தமிட்டு, அன்பினாலுருகி, ஆநந்தம்பெருகி, அடா என் கண்மணியே! நீ தேர்மேற்சிறந்து, போர்முனைபுகுந்து, தீரசத்தியினருளால்வீரவேந்தரைவென்று, வெற்றிமேற்கொண்டு, பசுக்களுடன் மீண்டு பட்டினம் வரக்கடவாயென்றுவாழ்த்தினாள். இதற்குள்ளேபேடியானவள் நேர்பாய்ந்து, குதிரைப்பந்தியை யாராய்ந்து, சுழி-சுத்தம் - ஜாதி - குணம் - தேசம் - வாசம் - இராப்பிறவி- பகற்பிறவி - மானம்-வயிரம் - தீரம் - திடம் - ரோஷம்—வேதம் - இவைமுதலியவற்றிற் சிறந்த சுபகரமுள்ள குதிரைகளை நாடிப்பிடித்து, ரதத்திற்பூட்டி, அம்புமுதலிய ஆயுதவகைகளும்வைத்து, சுற்றிலும் பத்திபத்தியாகவெற்றிக்கொடிநாட்டி, ஆசாரவாசலிற் கொண்டுவந்து அத்தேரை நிறுத்தினாள். அந்தத் தருணத்தில் உத்தரன் தங்கையாகிய உத்தரைகுமாரத்திதன் தமயனுக்கு முத்து இரத்தினமுதலிய நவமணிகளாலமைத்தஆலஞ்சுற்றி, வெண்ணீறளித்து, விநோதமங்கள வாழ்த்தினாற் போற்றி, அருமையான என் அண்ணாவே! தேவரீர் யுத்தமுகத்திற்சென்று, சத்துருக்களைவென்று, அவர்கள் சிரத்திற்கட்டிய சித்திரவஸ்திர விருதுத்துணிகள் எல்லாவற்றையுங் கொண்டுவந்து எனக்குக் கொடும். நான் விளையாடும் பொம்மைகட்குக் கட்டவேண்டுமென்றாள். இளையவள் வார்த்தையைக்கேட்ட இராஜகு

மாரன் வளையாத தலையைவளைத்து, (அக்காடுவெட்டிப் பருத்திவிதைக்குந் தருணத்தில் அப்பாவெனக்கொரு துப்பட்டி தாரும்) என்னும் பழமொழியை ஒத்திருக்கின்றதேநமது தங்கைமொழியென்று, மாறுத்தாஞ்சொல்லமாட்டாமல் நகைத்துக்கொண் டிருந்தான். அவனுக்கருகிலிருந்த பேடியானவள் - ஆ! ஆ! ஆ! அம்மா! அவ்வாறே கொண்டுவருவதற் கட்டியென்ன? சாமர்த்தியமுள்ள உன்தமயனுக்கு இது ஒரு பெரிதோ! அவரவர்களுடைய நிலைத்தலைப் பெற்றநீண்முடியையெல்லா நேர்பட்டவரையிலுருட்டப்போகும்போது, அவரவர் தலைத்துணிகளைக் கொண்டு ஜெயம்பெற்றுவருவதும் அரிதோ. நீ சந்தேகப்படவேண்டாம். என்று உறுதியாகச்சொல்லி உத்தரனைநோக்கி, சகுனங்களெல்லாஞ்சரியாயிருக்கின்றன. இதுவேநல்ல வேளையாயிருப்பதால், இரதத்தின்மீதேறுமென்றாள். அவன் அப்படியேயாகட்டுமென்று, அன்னை முதலியபெரியோர் யாவரையும் வணங்கி விடைபெற்று, பொன்மலைபோன்ற தேரிற் பொருந்திப் போர்ச்சிங்கம்போற் பூரித்திருந்தான்.

அப்பொழுது சுதர்க்கணையானவள் தன்புத்திரனது முன்னழகையும் பின்னழகையும் பார்த்து, பொங்கிப்பெருமூச்சுவிட்டு, ஒருபக்ஷத்திற் பூரிப்பும் மற்றொரு பக்ஷத்தில் அறியாச்சிறுவன் யுத்தத்திற்குச் செல்லுகிறானே யென்கிற ஏக்கமுங் கொண்டவளாகி நின்றாள். அவ்வேளையில் அரண்மனைப்பெண்களியாவருங் கற்பூரதீப நீராஞ்சனமெடுத்து, தங்கள் தங்கள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்து, பேடியைவாழ்த்தி, எங்கள்பிள்ளை பத்திரம்: பத்திரம்: என்றுசொல்லிநின்றார்கள். பேடியும் அவர்களைப்பார்த்து, நாங்கள் போய்வருகிறோமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு, குதிரைகளின் கலினக்கயிற்றை இடதுகையாற் பிடித்துக் குறடாவை வலதுகரத்தில் தாங்கித்தேரின்மீது ஒருகால் ஊன்றுமுன்னமே; புரவிகள் கதி-கவனம் - தாவல் - என்று சொல்லப்பட்ட வேகத்தை யுடையனவாய்ப் பூமிகிடுகிடென் றதிரவும், தும்புகள் மேலெழுந்து ஆகாயத்தைக்கொள்ளவும், அதிவேகமாகச் சென்றதுகள். அந்த விராடபுரத்திலுள்ள பிரம - க்ஷத்திரிய - வைசிய-சூத்திராதிகளில் ஆண்களும் பெண்களும் அணியணியாக நின்று, எங்கள் இளவரசாகிய உத்தரகுமாரருக்கு மங்களமுண்டாகுகவென்று மனதாரவாழ்த்தி, தங்கள்தங்கள்வழிபடுகடவுளைத்தொழுது துதித்தார்கள். இப்படியிருக்க, கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னமேவானுறநிமிர்ந்து வளைந்த மதில்சூழ்ந்த இராஜவீதியையும் மற்றுமுள்ள பற்பல வீதிகளையுந்தாண்டி, ஒற்றைச்சக்கரமும் சப்தமாவென்னுங் குதிரையுமுடைய தேர்மேற் பிரகாசிக்குஞ் செங்கதிர்போற் சங்கிராமஜயவுத்தண்டனாகிய உத்தரகுமாரன் உத்தரதிசைக்கு வந்துவிட்டான்.

குருசேனையைக்கண்டஞ்சிய உத்தரகுமாரனுக்கும்பிரகநளைக்கும்வாது.

இந்தப்பிரகாரம் வடதிசையைநோக்கி அதிவேகமாக வருகின்ற இரதத்தில் இளஞ்சிங்கம் போன்றஅவ்வுத்தரகுமாரன் ஸ்ரீராமனைப்போலி நந்துகொண்டு அக்குபேரதிசையைநோக்கிக்குறிக்குங்காலையில், வானமெங்கு இடமறச்செறிந்து நிறைந்த நக்ஷத்திரங்கள் போலும்-அளவிடுதற்கரிய கடற்கரையின்கணுள்ள மணல் போலும் - திரண்டு வலிய துரியோதனன் சேனைகள் தன்கண்களுக்கெட்டியதூரம் வெகுவாய் விரிந்துநிறைந்திருப்பதைக்கண்டு, ஆ! ஹா! ஹா! அடி பேடி! பொறு: பொறு: பொறு: பொறு: அவசரப்படாதே. நீவிடுந்தேர் விறுவிறென்றோடுகிறது. ஐயோ! என்தலைதிறுகிறென்று சுற்றுகிறது. பூமி நெறநெறென்று நெரிகிறது. என்குலையோ? நடுங்குகிறது. குடல் குழம்புகிறது. எதிரினிற்குஞ் சேனைகளைப் பார்த்தாற் கெற்பங் கலங்குகிறது. அடிபாவீ! தேரைச் சற்றே நிறுத்தடி. நமக்கெதிராகிய படைகளைக் கண்ணுறப்பாரடி! யானையெத்தனை கோடியோ? குதிரையெத்தனை யெத்தனைகோடியோ? சேனையெத்தனை யெத்தனைகோடியோ? தேர்களெத்தனை யெத்தனைலக்ஷமோ? நாம் எப்படி கணக்கிடப்போகிறோம்? என்னசெய்வோம்? ஐஐயோ !! ஆ பேடி ! யோகிலும் பார்த்துச் சொல்லடி ! என்றேங்கி, உள்ளங்கலங்கி, கைகால்கள் நடுங்கி, கண்களிருண்டு, உடல்பதைத்து, உயிர்துடித்து நாவறண்டு, முடிசோர்ந்து, பிணம்போல் தேர்மேற் சாய்ந்துபோனான். இவ்வாறு பிதற்றி முருகக்கடவுளாகிய செவ்வேள்விட்ட வேலாயுதத்தாற் கிழிபட்டுவீழ்ந்த கிரவுஞ்ச கிரியைப் போற்சிறிதும் போர்முனைபுகுதற்குச் சக்தியில்லாதவனாய்த் தேர்மேற்சாய்ந்த உத்தரகுமாரனைப் பேடிபார்த்து, தன்னிருகையாலுமணைத்தெடுத்து நிறுத்தி, வேர்வைதுடைத்து, சோபந்தீரத் தாகமளித்து. ஆளைத்தேற்றி, அவன்முகத்தைநோக்கி, ஏனப்பா இப்படியானாயென்று அறிவாலுயர்ந்த பேடி சிலசொல்லத்தொடங்கினாள்.

ஓ வாளும்வேலுங்கொண்ட விராடன்மைந்தனே! நீ எதிர்நிற்கும் படையைப்பார்த்துப் பயந்தாயோ? ஏன்கலங்கிவீழ்ந்தாய்? இறுமாந்தெதிர்த்த பகைவரையெங்குமில்லாமல் அழித்து விடுவதொன்று. அல்லது நாமாவது யுத்தகளத்தில்மாள்வதொன்று. இதுவேசுத்தவீரருடையதுணிவு. வேறேயோசிக்கத்தக்க தொன்றுமிலது. இதைவிட யாதேனு முண்டாயிருக்குமாகில் அதையெனக்குச்சொல்லு. முற்றிலும்வளைந்த சத்துருக்களை வெற்றிபெற்று வருகிறேனென்று நீ உன் அன்னைமுதலிய யாவரிடத்திலும் உரைத்துவிட்டு, இப்போது உத்தரதிசையைநாடி இன்னுஞ் சற்றுநேர மாகவில்

லையே: இதற்குள் மறந்துபோனையோ? நல்லது: கைப்பிடித்த வில்லுவளைத்துக் கடுங்கணைதொடுத்துப் போர்செய்து அணுவத்தனையேனும் காயம்பட்டுத் திரும்புவையாகில, அப்பொழுது சிலர் உன்னைக்கிஞ்சித்துச்சூரத்துவமுள்ளவனென்றேனு மதிப்பார்கள். இல்லாவிடில் அதிக இலேசாக எண்ணுவார்கள். சற்று நேரத்திற்குமுன் நீ வீட்டிற்பேசிவந்த வீரவசனங்களை முற்றிலுமறந்து, இப்பொழுது முதுகிட்டோடும் இழிவை பேசிக்குமிடத்திற் குறைந்தபெண்டுகள்கூடக் குலுக்கெனநகைப்பார்களே: இப்படிப்பட்ட உடம்புமெடுக்கலாமோ? உன்னையார்தான் பூசித்துப் புகழ்வார்கள்? ஐயோ! அடா தம்பி! நீபுறப்படும்போது புலிபோற்கெற்சித்து, இதோபார்:சத்துருக்களையெல்லாம் அதஞ்செய்துநமது மாடுகளை மடக்கிக்கொண்டு வருகிறேனென்றுவால்ப்பதட்டமா யுளறினையே. அப்படி மகாவீரம்பேசிவெளிப்பட்ட நீஎதிராளிக ளிருக்குமிடத்தைமிதிக்கு முன்னமே உயிருலைந்து, உடல்நடுங்கி, திடனழிந்து, திகைத்து விட்டையே: உலக மென்னசொல்லும்? படையைப்பார்த்துப்பதறிக்கதறி யோடினனென்னும் பழிப்பிற்கிடமாமே: இத்தன்மையாகிய நிந்தைநேரிட்டபின்பு உயிரிருநதென்னலாபம்? மானங்கெட்டும்பிராணனைவைப்பது மரியாதையோ? நீயே யோசித்துப் பார். பயப்படாதே. தயிரியமாய்ரதத்தின்மீதுஉட்கார். அலைகடற் கொப்பாகிய பெருபடைகளை வென்றுவருவோம்.

அப்பா! இன்னொன்றுசொல்லுகிறேன்கேள். கருங்கற்றூணானது சுமக்காட்டாத பெரும்பளுவைத் தாங்கியபொழுதும், பிளந்து முறிந்துபோய்விடுமன்றி, தளர்ந்து வளைந்து தலைசாய மாட்டாது. அதுபோல் - அளவிடப்படாத யானைசேனையடுத்தாலுங் கூடியமட்டுஞ் சண்டைசெய்து, தளர்ந்தவிடத்து அந்தப்போர்க்களத்திலேயே உயிரை யொழித்து விடவேண்டியது. மெலிந்துவெருண்டு புறங்கொடுத்தோடுவது வேந்தர்க்குத் தகுதியல்ல. இப்படியாக விளம்பியிருக்குஞ் சாஸ்திரத்தை நீ விசாரித்ததில்லையோ? இப்பொழுது தானென்ன? ஒன்றுமுழுகிப்போகவில்லை. போர்முக நிலையுங்கார்முக முறையுங்கடுங்கணைத்தொகையுங்கற்றிருக்கின்றநீ, பெரியமலையைக் குறியாகக்கொண்டடிப்பதுபோற்பெருங்கும்பாகிய சேனைகளின்பேரில்மொத்தமாகப்பாணத்தூற்றிவிட்டால், கும்பலிற் கோவிந்தம் போடுவது போல் அம்புகள் போம்விழுந்து,இன்னாரினியாரென்று பாராமல் யாவரையுங்கொல்லும் உனக்குத்தகுந்தபடி யானுந்தேரைச் செலுத்துவேன். அப்போதுனக்குமேலான கீர்த்தியையும். வைத்தகுறிதப்பாமல்மாட்டுகிறான் விராடராஜன்மைந்தனென்று, கடல்சூழ்ந்த உலகக் காவலரும் - படைகளும் - உனக்கெதிர்வாராமல்ஒருமிக்கவொழிவார்கள். அப்பனே; நாமிப்படியாகஅடித்து, வேந்தர்யாவரையு முடித்து, அவர்கைக்கொண்ட பசுக்கூட்டங்களைப் பிடித்து, ஜெயபேரிகையடித்து, விராடபுரமீபோய்ச் சேருவோமாகில்; சந்திரவமிசத்தரசரனைவரும் பந்துவர்க்கத்தாரெல்லோரும் உன்னைப்புகழ்வார்கள். நெடுநாளைக்கு உன்கீர்த்திநிலைபெற்றிருக்கும். அவ்வாறின்றிப் புறங்காட்டியோடுவையாகில், உலகுள்ளளவுந் தீராதவசையடைவாய். வந்தபகைவரைவென்று திரும்புவோ மாகில், வையகமெல்லாங் கைகுவித்துப் போற்றுவதுமன்றி, உன் தந்தையுஞ் சிந்தைமகிழ்ந்து அளவில்லா ஆனந்தத்தை யடைவான். ஒருவேளை நமதெண்ண முன்னுக்குவாராமல் நாமிறந்துபோனால், உடனே புகழுடம்புபெற்று, வீரசொற்கமுற்று, அரம்பாஸ்திககளின் இளமுலைப்போகந்துய்த்து, கற்பகத்தருவினீழலில் வீற்றிருந்து வாழலாம். இரண்டு விதத்திலும் இன்பநமக்குண்டாம்

ஓ இளங்கன்றே! பேடியாயிருப்பவரைப்பேடியென்று பேசுவது பெருமையன்று. பெரும்போர்புரிவேனென்று வந்து, பேச்சுதடுமாறிச்சோர்ந்து. படையைக்கண்டு பயந்து, ஒடவழிபார்க்கும் ஒருவனையே பேடியென்று உயர்ந்தோருரைப்பார்கள். (சொற் சோர்வுபடேல். சோம்பித்திரியேல்) என்னும்வாக்கியங்களைவிற்போருடைய வேந்தர் மறவார்கள். கலகத்திற்சென்று, கல்நாட்டநின்று, உயிரழித்த வீரர்களினது கதையின்திறம் உணர்ந்திலையோ? என்று பற்பல வகையினாலும் உத்தரகுமாரனைத்தேற்றி, சலவரத்தைமாற்றி, கட்டுரையாகிய வீரதர்மங்களாற் கரைத்தாள் பேடியானவள், இப்படிக்கெல்லா மெடுத்துக் காட்டியும் பேடியின்கருத்திற் கிணங்காமல், தேரோடும் வீதியிற் சேருடுஞ் சிறப்பினையுடைய மச்சநாடன் மைந்தனாகிய உத்தரகுமாரன் விற்பிடிக்கவெருண்டு, பற்கடித்துமருண்டு, கண்ணீருகுத்து, கடைவாய்குழைத்து, புருவநெரித்து, நெற்றிவியர்த்துப்பொருமிச்சொல்லுகின்றான். அடிபேடி! சற்றேஉற்றுப்பாரடி! ஆ! குடிகேடி! உனக்குக்கண்ணில்லையோ? அவர்கள் சேனைக் கெண்ணில்லையோ? இப்படையோ டெதிர்ப்பதாரடி? அப்படியே திருப்பிப்போவது சீரடி. அப்பப்பா!! என்கெர்ப்பங் கலங்குகிறதே. குடைகளும் - நாற்படைகளும் - கருங்கடல்போற்றுலங்குகிறதே. பூமிமுழுதுஞ் சேனைக்காடாகப் பொங்கிநிறைகின்றதே: ஐயோ! சித்தம் பிரமிக்கிறதே. இந்தக்கும்பலில் நானொருவனுஞ் சென்று மீண்டுவருவேனென்பது விந்தைப்பேச்சே. பெற்றதந்தைக்கும் ஏச்சே. என்மதியுங்கெட்டுப்போச்சே; ஏதேது? இனிக்காரிய மில்லை.

அடிபேடி! நான்சண்டைக்குப்போனால் தப்பாமற்சாவேன். இதற்குச் சந்தேகமில்லை. ஆதலால்- சற்றே தயவுசெய்துஎன்கதியை இன்னதென்றறியடி! என்தந்தைதாய்க்கு நான் கடைக்குட்டிப் பிள்ளையடி! இனிப் பெறப்போகின்றோமா வளர்க்கப்போகின்றோமா வென்றுஎன்னைமிகச்செல்வமாக வளர்த்தார்களே: நானும்

என்போலியாகிய சிறுவர்களோடு சேர்ந்து உண்டைவிற் கையிற்பிடித்து விளையாடித் திரிந்துகொண் டிருந்தேனே: என்னைச் சண்டைமுகத்திற் கொண்டுபோகாதேயடி! யுத்தஞ்செய்யும்பருவமெனக்கின்னுமில்லையடி! நான் அறியாதபிள்ளையடி! எனக்கேனிந்தச் சள்ளையடி! ஆ! ஹா! இதென்னஅநியாயம்? கொடையாளியாகியகர்னன் - விஷ்மர் - துரோணச்சாரியர் கிருபாச்சாரியர் அஸ்வத்தாமர் - மற்றுமுள்ளவிரர் பலருஞ்சேர்ந்து முனைந்த இந்தப்போர்முகத்தில், நான் புகுந்து போராட அறிவேனே? போடிபோ: அடிபேடி! ஒருவேளைதெய்வச்செய லுள்ளபடி யாகிறதென்று மனோநிடங் கொண்டு சண்டை செய்வோமென் றெண்ணினாலும், தேர்கள் கோடி. யானைக ளதற்கிரட்டி. குதிரைகள் வெகுகோடி. பதாதியர் கோடா கோடி. இவையன்றியும்-பட்டவர்த்தனரென்ன? மகுடவர்த்தனரென்ன? அதிரதரென்ன? சமரதரென்ன? மகாரதரென்ன? அர்த்தரதரென்ன? இவர்களையெல்லாம் படைத்துணையாகக் கொண்டு வந்தநமது பசுமந்தைகளைக்கவர்ந்த வணங்காமுடியோனுக் கெதிரில், வணங்குமுடிபெற்றபேடியாகியஉன்னை உதவியாக நம்பிப்போய்ச் சண்டை தொடங்கலாமோ? அடிபேடி! காயபலமும்-தன்பலமும்-மாற்றான்பலமும்-துணைப்பலமும் - ஆகிய இவைகளை ஆராய்ந்துணராத அரசனது முயற்சிக ளனைத்தும் பயன்படாதென்றுபெரியோர் சொல்வார்கள் நானோ? மெத்தவுஞ் சிறியவன். அதிலுஞ் சொற்பபலமுள்ளவன். இத்தன்மையனாகிய வென்னை, அதிரதரிற் சிவந்து - பின்பலம் விரும்பாமற் போர்முகத்திற் புகுந்து - மதயானைக ளைப் பிளந்து-புஜபலபராக்ரம விக்ரமம்பெறும் போர்விஜய சிங்கம்போன்ற அருச்சுன மகாராஜனென் றென்னைமதித் திருக்கின்றனையோ? ஐயோ! பேதையே! அமிதவிஜயன்புரியும் போர்க்களத்தில் எழுந்து பறந்து போகாநின்ற பரமாஅணுவுக்குஈடாகுவேனே? இடிபாவி! என்டிவம்புசெய்கிறாய்?

அடிபேடி! யாரெப்படி யானாலும், விளைந்தபோர் எப்படிபோனாலும், உனக்கென்னநயநஷ்டங்கள்? என்னைத்தானே சாரும். நீயேன் வீணாதள்ளிவிழுகிறாய்? ராஜஸ்திரிகளுக்கு ஆடல்பாடல் கற்பித்துப் பத்தாளைக்கிருந்துவயிறுவளர்த்துப்போகின்ற உனக்கேன் இத்தனைவிம்பு? பிள்ளையருமை யறியாத பெருமுடிபோடி இப்பொழுதுதான் புதிதாக வில்வித்தையிற் கைப்பழகிவருகிற நான் நெடுநாளாகக்கற்ற வில்லாளருக் கெதிர்போய் வில்வளைப்பேனாகில், மானங்கெட்டு-ஈனம்பட்டு-மாள்வேனென்பதற்குச்சந்தேக மென்ன? ஐஐயோ!! உன்னால் என்னுவி ஒழியவந்திருக்கிறதே என்று கண்சிவந்து, கடுங்கோபங்கொண்டு, ஓ பிரகநளையென்னும் அலியே! எங்கள் பசுமந்தைகளை யெல்லாம் பகைவர் கொண்டுபோனாலும், மச்சநாடுமுழுவதும்நாங்கள் இழந்தாலும், குடி - படை - அமைச்சு - நிதி - நிக்ஷேபம்-இவைகள்முறைந்தொழிந்தாலும், முடிமுதற் செங்கோல்முறையழிந்தாலும், இதனால் வரும்பெரும்பழியெனக்கடுத்தாலும், எங்களைத் தெய்வம் நடுத்தெருவில்விடுத்தாலும், உனக்கொன்றுமில்லையல்லவா? என்னைத்தடுத்துரைக்கவேண்டிய அவசியம் உனக்கென்ன? நானிப்போதுசொல்லுகின்றசொற்படி வாயைமூடிக்கொண்டு, என்பேச்சுக் கெதிர்பேச்சு பேசாமல், அப்படி யிப்படி போகாமல், ஊரைப்பார்க்கத்தேரைத்திருப்பு. அடிமகராசி! உனக்குக்கோடி புண்ணியமுண்டு. தயைசெய்து என்தாய்முகத்தில் விழிக்கும்படி பண். உனக்குவேண்டியவையெல்லாந் தருகிறேன். நான்சொன்னசொல்மாறேன். சண்டைசெய்யப் போகிறேனென்று என்னுயிருள்ள வரையிலும் இனிப் பதறிக்கூறேன். என்றுகூகூவெனக் கதறிப்பேசிய சிறுவன்மொழியைக் காண்டீபதான்கேட்டு, அந்தோ! ஏது? இனிக்காரியமில்லை. இவன் கருத்தைப் பார்க்குமிடத்துத் தேரைவிட்டுக்குதித்துப் புறமிட்டோடுவான்போலும் இருக்கிறது என்றெண்ணி, மறுபடியும் மனவெறுப்பில்லாமல் மன்னவன்மகனை மகிழ்ந்து நோக்கி, இதனைச்சொல்லுகிறான்.

அப்பா க்ஷத்திரிய குலாதிபனே! இப்பொழுது நிரைநிரையாக வந்தடர்ந்த பெருஞ்சேனைகளை யொரு கணையால் மாளப்பண்ணி, திரிலோகத்திலும் ஏகச்சக்ராதிபத்தியமும் ஆக்கினைச்சக்கரமுஞ் செல்லும்படிசெய்து, உன்சிந்தைமகிழ நிமிஷத்தில் திரும்பிவந்து விடுவோம். நீயதொன்றுக்குப் பயப்படாதே. உன்னை நம்பிவந்த வென்னை நீதிடமாகநம்பு. இந்தப்பகைவருடையவாளாயுதம் - வேலாயுதம் - பாலாயுதம்-குந்தாயுதம்-சக்ராயுதம் - தோமாயுதம் - முதலிய ஆயுதங்களெல்லாம் நெல்லிற் பதர்போல் நெருப்பெழப் புடைத்துச் சேனை யானைகளைத்துடைத்துச் செயம்படைத்துமேன்மையாகத் திரும்புவதைவிட்டு. இதுவரையிலு முண்டாயிருந்த கீர்த்தியைப்போக்கி, விராடராஜன்பெற்ற பிரதாபத்தையும் பாழாக்கி, எதிரிகளுக்கஞ்சியோடினானென்னும் ஏளனமுண்டாக்கி, என்புகழையு மண்ணாக்கிப்போட நினைப்பது க்ஷத்திரிய புத்திரனுக்குத்தகுதியோ? உன்தாயாகிய சுதக்ஷணாதேவியும் உனக்கிளையாளாகிய உத்தரையும் - உன்பந்து மித்திரவர்க்கங்களும், உன்னிடம்வந்து வணங்கும் பணிப்பெண்களும்-பட்டினத்திலுண்டாகிய வெகுஜனங்களும் - நமதிளவரசனாகிய உத்தரகுமாரன் யுத்தத்திற்குப்போயிருக்கின்றான்: சத்துருவைவென்று அவர்கள் கைகொண்டபசுமந்தையைத் திருப்பிவருவான். என்று மேகத்துாரியைவிரும்பிய பயிர்போல் வாட்டமுற்றுவாய்திறந்து நீவரும்வழியைப் பார்த்திருப்பார்களே: அப்பேர்ப்பட்டவர்கட்கெ

திரில்நீயெப்படிபோய்விழிப்பாய்? என்னசொல் இசைப்பாய்? ஐயோ! இந்த அவமானத்தைப்பார்க்கிலும் நான்சொல்வது கசப்பா? நினைக்கநினைக்க வெனக்குவிசனம்விளைக்கிறதே: நான் பேடியானபோதிலும் இதுவரைக்குந் தேர்விடுத்த போர்முகத்தில் யார்பிழைத்தார்கள்? கண்டதுண்டம்படக் கொன்று கைகண்டதன்றி, சண்டைக்குப்பயந்தோடிய சங்கதியைப்பார்த்துமறியேன். கதைகளிற் கேட்டுமறியேன் என்னாற் பிசகுவந்ததுமில்லை. என்னைநம்பியபேருக்கிடர் தந்ததுமில்லை. இப்போதுமென்ன? இதழ்விரிந்த - மலர்செறிந்த - மணமுறைந்த — வரிநிறைந்த - தொடையணிந்த படைநிணிந்த- பலவான்கள் அடங்கலும் விறுவிறென்று தலைசுழன்று தந்நிலைதெரியாமல்தயங்கும்படி, இரதஞ்செலுத்துகின்றஎன் கைச்சாதுரியத்தினாற்செல்வமிகுந்த உங்கள்பசுமந்தையைத்திருப்பிக்கொள்ளுவோம். திடதைரியதீரச் சிந்தை சிதையாமல்வா. நான் விடப்போகின்ற தேர்ச் சாகசத்தைப்பார்.

அப்பா அரசிளங்காளையே! ஒருவேளை உனக்குச் சத்துருக்களாற் குற்றநேரிடுமாகில், உடனே உன்னுயிருக் கென்னுயிரைத் துணையாகக் கொடுக்கிறேன். நீஎன்னைநம்பித்தேரிலுட்கார். எத்தனையோகோடாகோடி சேனைகளென் றிதயங்கலங்காதே. இன்னு மெழுகடல்போற் படையெழுந் தெதிர்த்தாலும், பெரும்பொறைக்கடல்போற் பெயர்ந்து வந்தாலும், வாட்டுமென்று உறுதியாய் மனத்துணிவு பெறுவையாகில்; தேவர்கள் மகிழ்ந்துத்துதித்துச்செய்யும்ஆசிர்வசனமும். திரலட்சுமியின் கருணைகடாட்சமும், பூதலத்தோர்காதலித்துப்புகழும் புகழ்ச்சியும் உனக்குண்டா மென்பதற்கியாதொரு ஐயமுமில்லை. நீமோத்திரங் குருகுல நாயகன் போரைக் குறித்து வில்வளைத்துக் குணத்தொனியெழுப்பு. அத்தொனியெழுமுன்னமே நான் பெருங்காற்றிற் பறக்கு முருங்கைச்சருகுபோலடித்து;வற்சலமந்தையைக்கைப்பிடித்து, க்ஷணப்பொழுதில் உன்னை மச்சதேசத்திற் கொண்டுபோய்விட்டு மறுவேலை பார்க்கிறேன் இன்னுரைக்கொல்லவேண்டும். இவ்வாறு வெல்லவேண்டும். இப்படிக்குச் செய்யவேண்டும். என்னும்வருத்தம் உனக்கெவ்வளவும் வேண்டாம். நீயஞ்சாதே. நன்மை திமைக் குடன்பட்டு யென்னுடன்கூடிவா. என்று புத்தியிலுயர்ந்த பேடியானவள் மெத்தவு மனம்வருந்திச்சொன்னாள். இப்படிக்கெல்லாந் தன்னாற்கூடியமட்டும் உத்திரனுடையபுனைதைக்கதைத் துரைத்தும், பெண்யானைகள் போன்ற வெருமைகள் கடைபுரள விழுத்துக் கன்றைநினைத்துவழியப் பொழிகின்ற பாலானது காலில் விழ்ந்து சென்றுமேலாகிய நெற்பயிரிற்பாய, அப்பயிர் கற்பம்போற் றழைத்துக் கதிருடன்சாயும்வளம்பொருந்திய மச்சநாட்டுக் கதிபதியாகிய விராடகுமாரனுக்கு அவ்வார்த்தையத்தனையிலும் அணுவத்தனையேனுஞ்சித்தம்பொருந்தாமல் யுத்தவீரந் திருந்தாமல், மானம்போமென்ன வருந்தாமல், வேறொன்றுந் தோன்றாமல், புறமிட்டோட நாணாமல், புகழாபரணம் பூணாமல் போக்கின்பேரிலேயேநோக்க முள்ளவனாய்ப் பெருமூச்செறிந்து, பேச்சுந்தளர்ந்து பேடியைநோக்கிப்பேசத்தொடங்கினான்.

அடி மோசக்காரி! நான்எத்தனை விதத்திற்சொன்னாலும் எள்ளத்தனையுந் தெரிந்து கொள்ளச் சத்தியுனக்கில்லை உன்சுயவித்தியாற் றுணிவுபெறுவை யென்றாலோ? அதுவுமில்லை. சொற்புத்தியுஞ் சுயபுத்தியுமில்லாத்துஷ்டியைக்கொண்டு சண்டைக்கெப்படிபோகலாம்? இவ்விடத்தில்மேகம்போற்கவிந்த துரியோதனனுடையசேனைக்கெதிரில் யுத்தஞ்செய்யத் தெரியாதஎன்னைக் கொண்டுபோய்விட்டு,நீவெற்றிபெறலாமென்றெண்ணியோ? நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கலாமோ? அதற்குநான் ஆளல்லவே; என்னைப்பெற்றவனானாலும்- அவனைப்பெற்றஎன்பாட்டனானாலும், தநுர்வேதங்கற்ற சாதுரியரானாலும், இந்தப்படை வெல்லும் வல்லமையெவர்க்குண்டாயிருக்கும்? சொல்லடி பெருமூடி! அடி புத்திகெட்டபேதையே! உனக்கென்னதெரியும்? நீயென்னவறிவாய்? மறுமன்னர்க் குண்டாகிய உறுதியும், போர்மேற்செல்லுந் திறமும், காலபலமுதலியகாரியாகாரியங்களுந் தெரியாத கயவருக் கெனனசொன்னாலுங்கண்டறிய மாட்டார்கள், ஐயோ! ஈதென்னபாவம்? அடியேண்டி வீணே பழிசுமந்து கொள்ளுகிறாய்? வேண்டாமடிபாவி! நான்சொல்வதை இன்னுங்கேளடிலோபீ! படமுடைய பாம்புக்கொடிபடைத்தபார்த்திபனுடன்சத்தியவிரத சாதநெறிபெற்ற சாந்தரும், வெற்றிவேலேந்திய வேந்தரும், குற்றமற்ற தநுர்வேதங்கற்றவரும், முனைந்துசண்டைசெய்யப் போர்முகத்திற்கால்வைக்கமாட்டார்களே: நமனும்எட்டிப்பார்க்க நடுங்கிக்கண்கலங்குவானே; அப்பேர்ப்பட்ட அதிரதர்களுக்குமுன் விற்பிடிக்கவறியாச் சிறுவனாகிய வென்னைக் கொண்டு போய்விட்டுச் சண்டைபோடென்பது உனக்குத்தகுதியோ? அவர்கட் கெதிரில்நானெப்படிபோய் நிற்பேன்? என்னயுத்தம்பண்ணுவேன்? அல்லது: உன்பேச்சைநம்பி நானெதிர்த்தபோதிலும், தொலைதூரத்தி லிருந்து பாணம்விடுப்பேன். நான் ஒருகணைவிடுக்கு முன்னமே அவர்கள் ஓராயிரங்கணைதொடுப்பார்களே: அவர்களெய்யு மம்பினால் உன்னையும் மெய்யுங்கலங்கி முதற் பலியாய் நீ விழுவையே; உன்னைக்காக்கும் வல்லபம் எனக்கில்லையே: அப்பால் நான்செய்வ தென்ன? அடிதப்பறைக்கா! பிற்பாடு என்தேருஞ் சாரதியுங் குதிரையுமழிந்து, வில்லுந்துணிந்து, நானு மறந்துபோனால்: வெற்றியெவர்பக்ஷமாகும்? ஐயோ! ஒருவேளைத்தெய்வச்செயலால் தப்பிப் பிழைத்தாலும், துரிதக்கணையேவி தூரத்தியடிப்பார்களே. அதனால் துயருழந்து,

துன்பமுற்று, தேகமலக்கழிந்து, கால்நடுங்கி, கைநடுங்கி, கண்கலங்கி, புண்கள்பட்டு, கருத்தழிந்து, கீழ்விழுந்து, புரண்டெழுந்து, உள்ளங்கால் சிவக்க ஊரங்கெட்டோடி, மச்சநாட்டிற்போய்ச்சேர்ந்து வாடிவருந்துவது உனக்கிச்சையோ? அதனா லிகழ்ச்சியோ புகழ்ச்சியோ நிதானித்துப்பார். ஐயோ! இதைவிட நாமேறிவந்தரதமுறியாமல், வில்லழியாமல், குதிரைசாவாமல், நீயு மடிவுறாமல், காணுமடிபடாமல், ஒருகுறைவுமில்லாமல் உயிருடன் திரும்பி வீரங்கெடாதவர்போல் மீண்டு ஊர்புகுவது; பெருமையோ சிறுமையோ யோசித்துச்சொல். அடியென் உயிரழிக்கவந்த பேடி! இனியேனு மென்சொல்லைத் தடுக்காமற் றேரைத்திருப்படி! என்று பற்பலவிதமாகப்பேசி, மலையருவிபோற் கண்ணீருகுத்து உண்ணீருலர்ந்துள்ளமுருகி, கொடியபாவியாகியஇந்தப்பேடிநம்மைப்பிராணனுடன்விடமாட்டாள். இவள்குடிக்கேடி. என்றுயோசித்தவனாய், கைப்பிடித்தவில்லையும் அம்பறுத்தூணியையும் - மற்றக்கணைகளையுந் தேர்மேற்போட்டுவிட்டு, பின்புறமாய்ப் பூமியிற்பாய்ந்து, விராடபுரத்தைநோக்கி விரைவிலகன் றோடினான்.

உத்தரகுமாரன் தேர்விட்டிழிந் தோடக் கண்டகௌரவாதியராலோசித்தல்.

கேட்டீரோ ஜெனமேஜயமகாராஜனே! போர்முனையிற்சென்று வெல்லப் பூரணவாண்மை பெறாத விராடகுமாரன் தேர்விட்டிழிந்தோடுவதைக் கருணைக்கடற்கொருமுதலாகிய அருச்சுனன்கண்டு, பச்சாத்தாபப்பட்டு, குதிரைக் கடிவாளத்தைத்தேர்க்காலிற் கோர்த்துவிட்டு, நிலத்திற்குதித்து இளைத்தோடுகின்றஉத்தரகுமாரனைப் பின்றொடர்ந்தான். திரண்டகற் றூணையொத்த புஜபலஜெயசிங்க விஜயனானவன் உத்தர குமாரனுக்குப் பின்னோடியபோது, நந்தியாவட்ட மாலையணிந்த துரியோதன னுடைய படைமன்னர் பார்த்துச் சங்கதிதெரியாதவர்களாய் ஓவென்று சமுத்திரம்போ விரைந்து, தங்களிற்றாங்களே பொங்கிமகிழ்ந்து, கைகொட்டிக்கலீரென்று நகைத்தார்கள். அந்தவேளையிற்சிவந்தகண்களையுடைய வீஷ்மரும் - மற்றப்பெரியோர்களும் - தமதுவிவேகத்தால் நிதானித்து, இப்படிபேசுவதானார்கள். அஃதெப்படியெனில்-நமக்கெதிராகவந்து தேரைவிட்டோடுஞ் சிறுவனைத்தொடர்ந்து செல்லுஞ் சாரதியையோசிக்குமிடத்தில், விசாலமாக நீண்டவிழியும் - எறிநெற்றியும் - அஜானுபாகுவாகிய துணைக்கரமும்- வச்ரமலைபோன்ற மார்பும் - பச்சைவர்ணத் தாமரை மலரைபொத்த முகமும் - பருத்தவிடையும் - கனத்ததொடையும் - சிவந்தபதமும் - சிரித்த நகையுமுள்ளசிலைவிஜயனைப்போற் றோன்றுகிறது. ஆனால் -அணிந்திருக்குங்காதோலையினாலும், திணிந்திருக்கும் ஆபரணங்களினாலும், கலக்கலக்கும் வளையல்களினாலும், கட்டியிருக்கும் புடவையினாலும், பின்புறமுடித்தகொண்டையினாலும், முன்புறமைவிழிக் கெண்டையினாலும், பெண்ணுருவாய்க்காண்கிறது. ஆகையால் - பெண்ணுருவென்றும், ஆணுருவென்றும், பெண்ணும் ஆணுமல்லாத பேடியுருவென்றும்எப்படிபேசலாம்? ஈதன்றியும் - முத்துச்சாக்குடைகள் பத்திப் பத்தியாகச் சிறந்த விராடநகரத்தி லிருந்து இந்த ஒருதேரேபுறப்பட்டது. அந்தத்தேரிற்பொருந்தினவன் சிறுபிள்ளையாகத் தோன்றினான். அவன் நம்முடன் யுத்தஞ்செய்ய வெத்தனித்து விற்பிடித்து வந்தவன்போலுமிருக்கிறது. அவனுக்குத் தேர்விடுஞ்சாரதி ஆணென்றும் பெண்ணென்றுந்தெரியாமற் சந்தேகத்திற் கிடமுண்டாகிறது. அவர்களின்னாரென்றும் இன்னகாரணமாகவந்தார்களென்றும் எடுத்துரைப்பார் யாருமில்லை. இந்தசூக்ஷியையெவ்வாறறியலாம்? எப்படியுணரலாம்? அந்தோ! ஈதென்னசூதோ? இனி விளையப்போகிறதென்னவாதோ? என்று மனமறுகி, மறுபடியுந்தெளிந்து, உடனே ஆலோசனைச் சங்கங்கூடி, அவரவர்களும் நாடிஸ்திரமாய்ச் சொல்லலுற்றார்கள்.

திரிகர்த்த தேசவாசனான சுசன்மா வென்பவன்விராட நகரத்திற்குத்தெக்ஷணபாரிசத்தடைந்துபசுக்கூட்டங்களை யோட்டியகாலையில், விராடராஜன் துடித்து, மலைபோற்றிரண்டதனது தோண்மீறியெழுந்து வைரங்கொண்டு, பற்கடித்து விற்பிடித்து நால்வகைத் தானையுடனடந்து எதிரியையடர்ந்து, எவரையும்வென்று, பசுநிரையைக் கைக்கொண்டு, நாம்கேள்விப்பட்ட படிக்கிமண்ணுலகத்தோரும் விண்ணுலகத்தோருங்கொண்டாடும்படி ஜெயம் பெற்றவனாக வேண்டும். பாண்டுமைந்தரைவரும் இப்பதியிலிருப்பார்களென்பதற்குச்சந்தேகம் வேண்டுவதில்லை. மச்சராஜன் தெக்ஷண திசையிற் சண்டைக்குப்போகும்போது உத்தரகுமாரனென்னும் இளங்காளையைவிட்டு, மற்றப்பிள்ளைகளுட னுடன்பட்டு, அஞ்ஞாதவாசஞ்செய்வதற்கு மாறுவேஷத்துடன் அமர்ந்திருந்த தருமராஜன் - வீமன் - நகுலன் - சகாதேவன்- இவர்களனைவருந் தன்னுடன்வரச் சென்றவனாகவேண்டும். ஊர்வசி சாபம்பெற்ற பேடியுருவத்துடன் வெளிப்புறப்பட வெட்கப்பட்டு இராஜகன்னிகைக்குநாட்டியம் பழக்கிவரும் நபுஞ்சகனானவன், நரனாகவேண்டும். நாமெல்லோரு மிங்குதிரண்டு - சமுத்திரம்போற்புரண்டு - மச்சநாட்டின் வடதிசையடைந்து - வீட்டை நாட்டை வேகக்கொளுத்தி - மாட்டைக்கூட்டி மடக்கியவன்மையைத் தூதர்களோடித் துபருடன்சொல்ல, வில்வேளைப்போல் வீட்டிலிருந்து கேட்ட உத்தரகுமாரன் வியசனமடைந்து, கண்சிவப்பேறி, என்றந்தையாருந்தமையன்மாருமில்லாச்சமயம்பார்த்துவந்தார்களே: எனக்கொரு சாரதியுமில்லையே: என்று தயங்கிச்சோர்வடைந்தவனாக வேண்டும். இக்காரியங்களைக் கேள்விப்பட்ட அருச்சுன

ராஜன் எக்களிப்புடனெழுந்து, பயிர்க்கொல்லைக்குத்திருஷ்டி பரிகாரமாகச்செய்து வைத்திருக்கிற புல்லாடவனையொத்த உத்தரகுமாரனுக்குப் போர்க்கோலஞ்செய்து, தானே சாரத்தியம்பண்ணிச் சமைந்தவனுகவேண்டும். அந்தப்பேடிபேசியசாதுரியவசனச்சமர்த்தினுலும்- அச்சொல்லில் உறுதியுள்ள முடைமையினுலும் - தான் சிறுவனுயிருக்கின்ற தன்மையினுலும் · பின்முன்னெண்ணிப் பாராமல், எதிரியையுந் தன்னையு மெண்ணுமல், மானுபிமானத்தை மதியாமல், (இளங்கன்று பயமறியாது.) என்பதுபோல் தேர்மேலேறிப் போர்மேல்வந்ததாகத் தெரியவருகிறது. இதுவே நிச்சயம். இதற்குவேறு கநினைக்கவேண்டியதில்லை.

மேலும் - அந்தப் பேடிநடத்திய இரதத்தில்வந்த உத்தரகுமாரன் கங்குகரைகாணுத நமதுசேனைகளைப்பார்த்து, கருப்பமுமனமுங் கண்ணுங்கலங்கி, தானினைத்த சண்டைநினைப்பை மறந்து, தாய்தந்தைய ரிடத்திலுரைத்த தைரியத்தையுந்துறந்து, வாட்டத்துடனொட்டங்கொள்ளநினைத்தவனுகவேண்டும். அவன்மடமையைத்தெரிந்தசாரதிதான்சொல்லவேண்டிய கடமையையும் - இராஜநீதிமுறைமையையும் - இராஜமுறைமையையுந் தெளிவுறச் சொல்லித்தேற்ற, சிறிதுந் தேருதவனுய்த் தேர்விட்டிழிந்து உயிர்க்குறுதிதேடி ஊரைப்பார்த்தோடுகிறுன். அதிகபயங்கொண்டோடுகின்ற விராடகுமாரனைச் சாரதியாகிய பேடி நோக்கிப் பின்ருெடர்ந்தோடுகிருள். இதுதானிப்பொழுது நடந்திருக்கிற காரியமென்று ஆலோசனைச் சங்கமாகக்கூடியயாவருந் தங்கள்பேரறிவினுல் நிச்சயித்தார்கள். இவர்களிதானத்தைக்கேட்ட சுபோதனனும் அவன் மனதிற்கிசைந்த மன்னவர்களும் பயங்கொண்டு, இருதயத்திற் பசுமாத்தாணிபோற்பதித்து, காதில்நாராசமென்னநுழைத்து,என்னமோ? ஏதோ? என்னும் பிராந்தியாற்பதைத் தோடுகின்ற உத்தரகுமாரனைக் கண்சிமிட்டாமற் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

உத்தரகுமாரன் தன்னைவிட்டுவிடும்படி பிரகநளையைவேண்டுதல்.

இவர்களிப்படியிருக்க - ஊர்முகமாயோடிய உத்தரகுமாரனைப் பிடிக்கப்போன பேடியானவள் க்ஷணைப்பொழுதிலோடிச் சென்று, அவனெதிர்நின்று மறித்து, அவனுடைய முன்கையைத் தொட்டிழுப்பதற்கஞ்சினுள். அதேனெனில் -வீரப்பிரதாப மேன்மையில்லாதவேந்தனுனுலும், அவனுக்குத்தான் சாதித்தொழிற்கிசைந்த தன்மையினுல்; எசமானன் கையைத்தொடுவதுமரியாதையல்லவென்றிருந்தான். இப்பால்எமபாசம்போல் இருகாத்தையும் விரித்துத்தடுத்தெதிர்நின்ற பேடியைப் பிதிர்கலங்கிபோடுகின்ற உத்தரகுமாரன்கண்டு, மதிமயங்கித் திபங்கி வதங்கி, மதிமுகம்வாடி, எடி? அடிபேடி! ஓ! குடிகேடி! ஆ நிர்மூடி! இன்னுமென்னை விட்டு விடாயா? என்று பூனையைக்கண்ட கிளிபோலும், பூதத்தைப்பார்த்த உயிர்போலும் பயந்து, மெய்நடுங்கி பொடுங்கி யுளறிப்பேசினுன். அவனைப் பேடிவேடப் பிரதாபன்பிரியத்துடன்பார்த்து, ஒஇளவரசான இறைவனே! உன்னைத் துணையாக நம்பித் தேர்செலுத்தவந்த வென்னையோசிக்குமிடத்தில், வினையைத் துணையாக நம்பிய வினைர்களையொத்தேன். என்றுசொல்லிவெறுத்து, சற்றுநேரம் பொறுத்து, ஆ! ஹா! ஹா! ஓ அரசிளங்கன்றே! இப்படியுஞ் செய்யலாமாவென் றிசைத்தான். அவன் பேச்சைக்கேட்டுக் கலகலத்த உத்தரகுமாரன் அந்தப்பேடியின் முகத்தைப் பாராமல், நிலத்தைப் பார்த்து நெடுமூச்செறிந்து, திக்குமுக்காடித் திடுக்கிட்டோடி, கண்கள் கலகலவென்று நீர்சொரியவும் - கைகாள்விடவிடவென்று நடுங்கவும் - முத்துப்போல்வேர்வை முகத்திற்றுளிக்கவும் - எண்ணங்குலையவும் - இதயந்துடிக்கவும் - மல்லுந்தளறச் சொல்லுங்குளற வெருண்டு விம்மி இதனைச் சொல்லலுற்ருன்.

அடிசிமாட்டி! இவ்வுலக வாழ்க்கையை விரும்பிய உயிரானது நமனைக்கண்டு நடுக்கங்கொள்வதுபோல், உன்னைக்கண்டு ஒடுங்கிவிட்டேன். நான்சொல்லு நன்மையைக்கேள். பிள்ளையாகப்பிறந்த வந்நாண்முத லிந்நாள்வரையிலும் நான் தாய்தந்தையைவிட்டுப் பிரியாததநயன். நான் போர்க்கோலங்கொண்டுதேரேறிவரும்போது என்னைப்பெற்றசுதக்ஷணுதேவி என்முகநாடி, தன்முகம்வாடி, வாசற்படிவரைக்கும் வந்துவழிவிட்டாளே: அவளுடைய மனமும் வயிறும் எப்படி வருந்தியதோ? என்னநிலையடைந்ததோ? நானறியேன். அவளப்படி அவலமுற்றிருக்க, நானிவ்விடத்தில்வந்து எதிரிகளைக்கொன்று வென்று விஜயத்துடன் திரும்பாமற்போனுல், தாய் வயிறெரியச் சம்பிரமங் கொண்டாடுந் தறிதலையர்களில் நானொருபாவியல்லவோ? அடிசதிகாரி! நான்வந்த சந்தோஷமாறுமற் கொண்டுபோய் விராடநகரத்திற் சேர்த்துவிடுவையாகில், உனக்கு வெகுகோடி புண்ணிய முண்டு. கன்னியமுண்டு. சுகிர்தமுண்டு. சுபமுமுண்டு, என்தாய்தந்தையின் பக்ஷம் உன்பேரி லதிகமாயுண்டாகும். அவர்களுக்கு வெகுமானஞ்செய்யுமுன்னமே, யானை - தேர் - குதிரை-முதலிய இவைகளோடு அளவற்ற ஆடையாபரணங்களும்யான்கொடுக்கிறேன். அடிபேடி! உன்னைநான் கனவிலுமறவேன். நீயுநானுமுடலிரண்டுமுயிரொன்றெனமிகவுமொருமையாயிருப்போம். எக்காலமும் உன்பேர் விளங்கும்படியாக, இவ்வுலகிலுன் உபகாரச்செய்கையை ஸ்தாபித்து, என்னிஷ்டதெய்வமாக உன்னைக்கொண்டாடுவேன். நான்மாத்திரநகரம்போய்ச் சேர்வேனுகில், மன்னரையடக்கி மாட்டைமடக்கிப்பின்

னமில்லாச் செயம்பெற்றதுபோல் ஆவேனடி! அடி உத்தமி! ஏதோ என்மனங்கலவரப்படுகிறது. இன்னொருதரமென் தாயைப்பார்க்க இச்சைமேலிடுகிறது. மச்சநாடுபோய்த் திரும்பிவராமற் சண்டைக்கடியெடுத்துவைக்கமாட்டேன். அடியென் மண்டைகோலை கொண்டுவந்த கொடும்பாவி! கண்மூடித் திறக்குமுன்னம் பட்டினம்போய்ச்சேரடி! கலங்கவிடாதேயடி! கடவுள்முகத்தைப்பாரடி! என்மார்பையுந்தொட்டுத்தேறடி! ஐஐயோ! என்குலை துடிக்கின்றதே: என்குண்டிக்காய் வெடிக்கின்றதே; கரைந்துருகியவென்னைக் காரடி! அடிபேடி! நீயென்பங்கில் அஷ்டமத்துச் சனிபோல் எங்கிருந்து வந்தாயடி! நீ யாரடி? எனக்கென்ன நீ ஒட்டா? உறவா? ஒன்றுமில்லையே; ஆயினும் இந்தவேளை நீதானெனக்குத்தாயடி! இவ்வளவுசொல்லியும் உன்னிதயமென்ன இரும்போ? கருங்கல்லோ? சற்றேனுமிரங்காயடி! எனக்குமுனக்குமென்னபகையடி? எனக்கும் உனக்குஞ்ஜென்மப்பகை யேதேனுமுண்டோடி? சிறிது தாக்ஷண்யம் வையடி! எனக்குத் தைரியம்பொய்யடி! நீ யாதொரு நன்மை தீமையுஞ் சொல்லாமல் இடத்திற்கொண்டுபோய்ச் சேர்ப்பதே எனக்குச்செய்யு முபகாரமடி! ஓடிப்போமென்னைத் தடுக்காமல் விட்டுவிடுவதே உனக்குக்கோடிபுண்ணியமடி! என்று இவ்வாறுபற்பலவிதத்திலுங்கூறி, தப்பியோடுவதற்கு வழியில்லாமல் மிரளமிரளவிழித்து வெம்பினன்.

பிரகநளை உத்தரகுமாரனை வலவனாகவிசைப்பித்து, வன்னித்தருவருகிற்றேர்செலுத்துவித்தல்.

இப்படி வெம்பிய விராடபுத்திரனை விஜயன் பார்த்து மெத்தவிசனப்பட்டு, ஏதேது? இவனினித் திரும்பான். என்றெண்ணி, ஆகிலும் இப்போதிவனைவிடப்படாது. மற்றொருவிதத்தால் மனந்தேறச் செய்யவேண்டும். என்று நினைத்தவனாப் உத்தரகுமாரனைநோக்கி, ஓ விராடராஜ புத்திரனாகிய உத்தமனே! உனக்கு கீர்த்தியவாழ்வைத் தரவேண்டுமென்றெண்ணியிருந்த என்னெண்ணத்தைக் கெடுத்து, நீயுமயங்கிப்போய்விட்டாய். போனதுபோகட்டும். இனியாவது செவ்வைப்படும்படி உனது சித்தப்பிரமையைவிட்டுவிடு. நான்சொல்லப்போகிறவுறுதிமொழியைக் கேட்டு உன்மனதைத்தேற்றி யென்மனம்போல் இசைந்து வருவையாகில், மேலானதிறம்பெற்ற வில்வல்லவர்களிலுஞ் சிறந்தவனீயென்றுயாவருமதிக்க உன்னை முதன்மையாக்கி, இப்பொழுது நேரிட்டிருக்குஞ்சத்துருக்கள் வாடும்படியாய்மாட்டி, நமதுபசுமந்தைகளையெல்லாங் கூட்டி, பெருங்கீர்த்தியை நிலைநாட்டிவிராடபுரம்போய்ச்சேருவோம். இவ்வாறு ஜெயம் பெறுவதற்குமுன் மனந்தளர்ந்துவந்தவழியே திரும்பியோடுவதைக்கண்டால், என்னைப்போலொத்தவர்கள் என்னஞ்செய்வார்களோ? ஓவிராடராஜ புதல்வனே! பேடியென்றென்னைப் பிழைபட நினையாதே. நீயெப்போதுஜெயங்கொண்டு வருவாயென்று உன்வரவை யெதிர்பார்த்திருக்கும் உன்தாயும் - தந்தையும் - பந்துக்களும்-சந்தோஷத்துடன் உன்னைத்தழுவவும், அன்பினாலுருகிப்போனந்தக் கண்ணீர் பெருகிமுத்தந்தரவும், பொன்னுலகத்திற் கிணையாகிய உன்னுலகத்தார் யாவரும் என்னையும் உன்னையும் புகழ்ந்து மகிழ்ந்தாதரித்தெதிர்கொள்ளவும், மலையாகிய கீர்த்தியைவளர்த்து-நிலையாகிய வெற்றியை விளைத்து - ஒருநிமிஷத்திற்குநிமிஷம் செயம்பெறுகின்ற விஜயனென்றென்னைப் பலரும் நினைக்கவும், மந்தரகிரியாலலைவுபட்டபாற்கடல்போற்பகைவரதுசேனைக்கடலைப்படுபாழாக்கிக்கலக்கியடித்து, கருந்தூள் செந்தூளெழும்ப முடித்து, நீடூழிவாழ்வை உனக்கு நிலைபெறச்செய்வேன். ஓ மச்சகுலாதிபன்மாதவப்பேறே! நீ இச்சொல்லுக்கிணங்கி, சப்தயாவென்னும் பச்சைப்புரவித்தேர்க்கொப்பாகிய அச்சுவச்சிரத்தா லமைத்திட்டநமதுஉச்சிதத்தேர்மேலிருந்து, அச்சமில்லாமற் சாரதித்தொழிலாகிலுஞ் செய்வையாகில், முச்சகங்கொண்டாட முதன்மையைப் பெறலாம். இதற்காகிலும் உடன்பட்டுவருவையோ? வரமாட்டாயோ? என்றுபோருக்கு முதற்பதமான பேடியுருவான அர்ச்சுனன் கேட்டான்.

அவையனைத்துங் கேட்ட உத்தரகுமாரன் சற்றாழ்ந்து யோசித்து நிதானித்து, நாம் தனித்திவள் கையிற் சிக்கிக்கொண்டோம். காலகதி என்னமோ? அஃதின்னதென்று தெரியவில்லை. நாம்போர்செய்வோமென்று புறப்பட்டவேளை யெப்படிப்பட்டதோ? இன்று தயத்திலியார்முகத்தில் விழித்தோமோ? இந்தப்பேடிப்பாவிநமக்கெமன்போல் வந்து சேர்ந்தாள். இவள் நம்மை உயிருடன்விடாள்போலு மிருக்கிறது. எதிரியைப்பார்க்கப்பார்க்கப்பயமேலிட்டிருக்கிறது.(வாய்க்கொழுப்புச்சீலையில் வடிந்தது.) என்னுங் கதைபோல, என்வாய்ச் சொல்லேயெனக்கிடர்விளைத்து விட்டது. இனித் தெய்வச்செயலெப்படியோ தெரியாது. தாய்தந்தைதேடிய தவம் இதுதானோ? தர்மந்தலைகாக்குமென்பது பொய்யோ? இந்த நபுஞ்சகியானவள் ஜெயம்பெறுகிறவில்வல்லபத்தைத் தீரர்களைப்போற் பேசுகிறாள். பயமகன்று சாரதித் தொழிலாவதுபண்ணென்றுபகர்கின்றாள். இதற்குமாட்டேனென்று குதர்க்கம்பேசுவது தகுதியல்ல. நல்லது. உள்ளபடியாகிறது. நாமுங் கொஞ்சஞ்சாரதி சாஸ்திரம்பார்த்திருக்கின்றோம். ஆதலால் - தேர்விடுந்தொழிற் கிசைந்துகொண்டால், போர்முனை புகுந்த பேடியின் திறத்தைத் தெரிந்துகொண்டு, சமயத்திற்குத்தக்கபடி பார்த்துக் கொள்ளுவோம். என்று ஒருவாறுடன்பட்டு, நடு

க்கமுமேக்கமு நீங்கி, ஊக்கமேலிட்டுள்ளந்தேறி, திடுக்கிட முடுக்குஞ் சிங்கம்போற்சீறி, வீரப்பார்வைகாட்டி, அடி சிமாட்டி! உனக்கு மெனக்குமேதோவொரு சம்பந்த முண்டாயிருக்கிறது. அஃதின்னதென்று தெரியவில்லை. உன்னிஷ்டப்படியே ஒப்புக்கொண்டேன். என்னிடத்திற் றப்பொப்பிருந்தாலும், நீயேசகிக்கவேண்டுமென்று உத்தரகுமார னுரைத்தான். அதைக்கேட்ட அர்ச்சுனனானவன் சித்தமகிழ்ந்து திரும்பி, உத்தரனுந்தானும் ஒருமையுடனோடிவந்துதேர்மேலேறி, கடிவாளம் பிடித்துக் குதிரைகளை முடுக்கச் செய்து, அதிரதனாகிய தான் நாயகனாக வமர்ந்து, பூர்வபுண்யப் பிரயோசனப்பல னிப்போது கூடியதென்று களித்து, வில்லும்பாணமுங் கரத்திலேந்தி, வேந்தனான உத்தர குமாரனுக்குத் தயிரியஞ்சொல்லி, ஐயா விராடகுமாரனே! நமக்குநேர் வடக்காகிய உருத்திர பூமியிற் சாமுண்டிசந்நிதானத்திலிருக்கும் வன்னிமரத்திற்கு நேராக நமதுதேரைச் செலுத்தென்றான். அவன்சொல்லி யடங்குமுன்னமே சாரதியான உத்தரகுமாரன் என்னமோகாரணந் தெரியவில்லையென் றெண்ணி, பொன்மயத்தேரை வன்னிமரத்திசையி லோட்டினான்.

ஒற்றைத்தேருந் துற்சகுனமுங்கண்ட துரோணரும் விஷ்மரும் வருபவன் அருச்சுனனென்றறிந்து சுயோதனனுக் கறிவித்தல்.

இந்தச்சங்கதி யிவ்விடத்திலிப்படியிருக்க, நேராக வடதிசையை நாடிவந்த தேரானதுமாறி வடகிழக்கிற் போவதைத் துரியோதனன் முதலிய அரசர்களும் மற்றப்பெரியோர்களும் பார்த்து, நமதுபடையின்மீதுலக்ஷியம்வைத்து வருகின்றவன் அருச்சுனனல்லதுமற்றொருவனுமல்ல. அந்நியனென்னுஞ் சந்தேகம் வேண்டுவதில்லை. அவனைப் பேடியென்று மதித்தது நமதுபேதமைத்தனமே; என்றெண்ணிப் போர்முனைவிட்டோடி, புத்திமழுங்கி, பொறிபுலன் குன்றி, கண்கலங்கிக் கவலைகொண்டார்கள். உடனே அனர்த்தமான அவசகுனங்கள்விளைந்தன. இவற்றையெல்லாந் துரோணாச்சாரியர் கண்டு யோசித்து விசனப்பட்டு, அரவக்கொடிபடைத்த அண்ணலுக்குச் சொல்லுகின்றார். ஓ மகிமையுற்ற வணங்காமுடிபெற்றமகிபனே! யான்சொல்லுகிறதைக்கேள். வானமுழுதுமதிர்ந்து, திக்கெட்டுங் கம்பிதமெழுந்து, பகற்காலத்தில்நக்ஷத்திரமுதிர்ந்து, மேகம் இரத்தமழைபொழிந்து, பூமாலைகள்கரிந்து, புலால்நாற்றமிகுந்து, யானைகுதிரைகள் கண்ணீர்சொரிந்து, பருந்துங் காக்கையும் பறந்துமேல் விழ்ந்து, நாயும் நரியும் புரண்டுளையிட்டு, கழுகுங்கூளியுங் களித்துநிறைந்து, ஆயுதமுனைகளனற்புகைமலிய, சேனைகள் தியங்கித் திடுக்கிட்டலைய, பற்பல துர்ச்சகுனங்களுண்டாகியதையோசிக்குமிடத்தில்; சகுனசாஸ்திரப்படி இராஜனுக்குத் தீங்குமபஜயமும் விளையுமென்பதற்குச் சந்தேகமில்லை, சாஸ்திரந்தப்பென்றெண்ணாமல், நீ முன்ஜாக்கிரதைப்படவேண்டும். என்றுரைத்து, விஷ்மர் - கிருபாச்சாரியர்-முதலிய மேலோரைநோக்கிவிளம்புகின்றார். ஓ அதிரத மாரத சமரதத்தலைவர்களே! சமுத்திரம்போற் பரவியநமது தேர்வீரர்கட்கெதிரில், ஒற்றைத்தேர்செலுத்திவருவோன் உறுதியையுணர்ந்தீர்களா? அவன் நமது எண்ணிறந்தசேனைகளையுமொருகணையால் வெற்றிபெறத்தக்க வீரப்பிரதாபனல்லாவிடில், தானொருவனாய்த் தனித்துவருவானோ? ஆதலின்- நம்முடன் எதிர்ப்பவர்களில்லையென் றிறுமாந்து வாய்மதம் பேசிமகிழ்ந்து திரிவது தகுதியன்று. சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் படைகளை யணிவகுத்துக் காத்துக்கொள்வதே உத்தமம். ஓதெக்ஷணநிரைமீட்சிக்குச் சென்றதிரிகர்த்தனை இகழ்ந்தசாதுரியவான்களே! நமதுதேகமழிந்தாலும், பிராணனொழிந்தாலும், மானமழியாமலும், மடக்கியமாட்டை விடாமலும், தீரவீரத்திடங்காட்டிச் செயம்பெறுவதே திடவான்கட்குரிய கடனாம். என்றுரைத்து, அப்பொழுதே ரதகஜதுரக பதாதிகளை அணிவகுத்து, இடைக்கிடைபடைத்தலைவர்களை நிறுத்தி, அவர்கட்கு நடுவிற் பசுமந்தையைமடக்கிவைத்துக்கொண்டு, கட்டுக்காவல் திட்டப்படுத்தி, மட்டுப்படாத தநுர்வேத வரோதயனின்றார்.

இத்திறமோர்ந்த இராஜவீரர்களனைவரும் இனியிந்தப் பசுநிரையைக் கவர்வாருமுண்டோவென் றிரைந்துபேசிக்கொண் டிருந்தார்கள். அவ்வேளையில் தேவர்கள் கொண்டாடுஞ் சத்தியவிரத உத்தமனாகிய விஷ்மரின்முகக்குறிப்பைத் துரோணாச்சாரியாருணர்ந்து, தேவரீரெண்ணிய கருத்துக்குத் திருகில்லை. வருகிறவன் அருச்சுனனே. வாளாண்மை வில்லாண்மையிற் சிறந்த குருகுலச்சேனையை மதியாதவனாய் ஒன்றித்தேருடன் வெளிப்பட்டிருக்கிறான். இவன் வருகிற வகையை யோசிக்குமிடத்தில், சூரபன்மன்மேலெதிர்த்த சுப்பிரமணியக்கடவுள்போலிருக்கின்றது. இதில்யார்யார்மாள்வார்களோ? யார்யார் பிழைப்பார்களோ? என்ன அநர்த்தம் விளையுமோ?. அறியேனறியேன். என்றுசொல்லிய துரோணாச்சாரியரை அருச்சுனன்பேரில் உள்ளன்புடைய விஷ்மர் பார்த்து, ஓ வீரர்கள் மதிக்கும் வில்லாசிரியனே! நீர் முன்புபேசிய வசனத்தின்படி ஒற்றைத்தேரையும் ஒழுங்கற்ற சகுனத்தையுங்கண்டயான் என்ன யோசித்தேனென்றால், பாண்டவர்கள் அக்ஞாதவாசம் பண்ணவேண்டிய வொருவருடமுங் கழித்து வெளிப்பட் டிருப்பார்களா ? அல்லது மாடுபிடிசண்டையென்று மகிழ்ந்து கோபத்தினால் வெளிப்பட் டிருப்பார்களா?

ஒருவேளை காலவளவைக்கடந்து அவசரப்பட் டிருப்
பார்களானல், மேல்நடக்கவேண்டுவ தென்னவென்று
வேந்தர்சபையில் நியமித்த நிபந்தனையைச் சிந்தித்துப்
பார்த்தேனன்றி; வேறொன்று நினைக்கவில்லை. என்றிரு
வருங் கலந்துபேசிக்கொண்டு, துரியோதனனிடத்தில்
தாங்களெண்ணிய கருத்தைக் காட்டாமல் வேறுவித
மாய் விளம்பநினைத்து, வாரும் குருகுலசிந்தாமணியே!
அந்தப்பாண்டவர்க ளிதுவரையிலும் பொறுத் தநுப
விக்கக் கடவதான நாள்முழுவதும் போக்கி, எதிரியுட
னெதிர்த்துப் போர்புரியத்தக்க நாள் இன்றேயென்று
புறப்பட்டார்போலுங்காண்கிறது. என்று வீஷ்மர்புகல,
அம்மொழிபேசியவுடன் தநுவேத சம்பன்னரானவர்
தெவிட்டா வமிர்தமுண்ட தேவர்போற் களித்து ஒரு
வசனஞ் செப்புகின்றார். ஐயா மதிகுலவரோதய விர
தசிகாமணியே! இவ்விடமிருக்கும் நமது சேனையை
நாடி ஒருவில்லுடன் தேர்செலுத்திவரும் ஒருவன்றி
றத்தை யுன்னு மிடத்தி லெப்படியிருக்கிற தென்னில்,
ஒருபுருஷ சிங்கமானது வெகுகாலங் குகைக்குளடங்
கிப் பசிதாகத்தாலிளைத்து, நற்காலநேரிடுகிற வரையி
லும் வாட்டமுற்றிருந்து, காடகுஞ்சரக்கூட்டங்களைக்
கண்டுகளித்துத் தாவியெழுந்து தனித்துவருந் தன்மை
போலிருக்கிறது. கறைமிடற்றண்ணலாகிய பிறைமுடி
ப்பிஞ்ஞகனளித்த பாசுபதாஸ்திரம்பெற்ற பார்த்தனை
யெதிர்த்துப் போர்தொடங்கத்தக்க வில்வீரர்கள் எந்
தத் தொல்லுலகிலு மில்லை. வெயிலுக்கிணையாக மின்
மினி பிரகாசிக்குமோ? ஓ சகலகலைவல்லவரே! நீரே
யுங்கள் பேரனுக்குச் சொல்லுமென்று துரோணாச்சாரி
யர் சொல்லினர்.

கர்னன் துரோணர்கூறியவற்றைக் கடிய, துரியோதனன் அவனைத்தணித்தல்.

இச்சொல்லாகிய நாராசமானது கர்னன் காதில்
நுழைந்த மாத்திரத்தில், செயலுஞ் சிந்தையுந் திகைத்
துநொந்து, வாயுங்கண்ணும் வறண்டுபுகைந்து, வேசா
றியுள்ளம் வெந்து, வெகுளிமிகுந்து, வில்வேதந்தெரி
ந்த வேதியரைப் பார்த்து, இருகண்களுஞ்சிவந்து, ஆ!
ஆ! என்னசொன்னீரென்று கதறி, அங்கிருந்த மணி
மகுட மன்னரெல்லாங் கூசிமடங்கவும், தடவிகடகுஞ்
சர வீரர்கள் வாய்பேசாம லொடுங்கவும், சுற்றுமுற்ற
மற்றச்சேனைகள் குலைகுலைந்தேங்கவும், மிக்க இறுமாப்
புடன் ஒருத்தர்ஞ்சொன்னன். ஓ தநுவேதியரே! சதுர்
வேதமொழிந்த தன்ம முணர்ந்தீரா? அஃதென்னவெ
ன்றால் (நன்றிமறவேல்.) என்னுந்தன்மந்தான். அப்படி
யிருக்க, மகுடமன்னர்கள் வந்துவணங்கு மகா மண்ட
லேஸ்வானகிய சற்பக்கொடிதரித்த துரியோதனராஜன்
உம்மிடத்திற் பக்ஷம் வைத்து, இராஜவைபவ வலங்
கார அணிமணிப்பணியாடையும் - படையும் - வீரபட்
டமும் - பெருமையுங்கொடுத்து, சவுக்கியபோஜன சம்
பிரமத்துடன் சீர்பெறச் செய்து, உமதுகவியினல் வெ
ற்றிபெறலாமென்னு மாசையை மிகுதியும்வைத்திருக்
கின்றார். நானுமஃதுத்தமமென் றெண்ணியிருக்கின்
றேன். இப்பொழு துமதெண்ணத்தை நிதானிக்குங்
காலையில், எதிரிகளைக் கொண்டாடியவர்கள் புஜபலத்
தைப் புகழ்ந்து, அன்னமிட்ட ஆண்டவனுடைய ஆண்
மையைக்குறைத்துப்பேசி, உலகமிகழும்படிக்குச்செய்
ந்நன்றிகுன்றி, மாம் 'வைத்துவளர்த்தவற்குப் பலன்
கொடாமல் அண்டை வீட்டுக்காரன் அநுபவிக்கும்படி
யாகச்சாய்ந்த முடக்குத் தென்னமாம்போற் குறைந்த
மதியைக்கொண்டிருக்கின்றீர். தருணத்தில் தண்ணீர்
வார்த்து வளர்த்த கௌரவகுலமுதல்வனைவிட்டு, சொ
ல்வண்மையும் வில்வண்மையுமுள்ள பாண்டவாள் பே
ரிற் பக்ஷங்கொண்டீர். ஐவர்பேரில் அன்புமாசையும்
உமக்குண்டாயிருக்குமானல், அந்தப்பஞ்சைகட்கு நீர்
இளைத்ததாகப் புகழ்ந்துபேசவேண்டுமேயன்றி, மற்
றையர்களைக் குறைத்துப்பேசுவதி லுமக் கென்னலா
பம்? இதிலுமக்கு எவ்வளவேனு மேன்மைகிடைக்கு
மோ? எம்போலியரை வெல்லும்வல்லபம் அந்தப் புல்
லியருக்குண்டாயிருக்குமாகில், போர்க்களத் திறங்க
ண்ட எம்போலொத்த வீரர்கள் அவர்களைப் புகழாதி
ருப்பார்களோ? (கற்றாரைக்கற்றாரேகாமுறுவர்.) என்
பதுபோல் வீரரைவீரர் வியந்துரையாரோ?

ஓமணங்கமழு மாலைபுனைந்த தோளினையுடைய
மறையோனே! நீர் யிப்படிக்கெல்லாம் பூச்சிகாட்டர
தீர். இவ்வேளை நமக்கெதிரானவன் அசகாயசூரனகிய
விஜயனனாலும், அவனுக்கெதிர் நானொருவனுமுனைந்து,
வில்வளைத்தமர்புரிந்து, மண்ணுளவிரும்பிய அவனைவிண்
ணுளவிடுகிறேன். இதுவேசத்தியம். உலர்ந்தசரகு எரி
நெருப்பிற் கரிந்து வேகாதிருக்குமாகில், தேர்மேலே
றிப் போர்மேல்வருஞ் சிலைவிஜயனுங் கீர்த்திபெறுவா
னென் றுணரலாம். நீரேன் விருதாவிற் சொற்சோர்வு
படுகிறீர்? வேதியர்குலத்தாகிய நீரேன் வீண்பழி சும
க்கின்றீரென்றான். இப்படி கர்னன் சொன்னவார்த்தை
களைக் காதிற்கொண்ட சுயோதன ராஜன் - அண்ணு!
எதிரியைப்புகழ்ந்து பெருமையாகப் பேசுகிறவர்களெ
ல்லாம் பேசட்டும். நீரேன் அவசரப்படுகின்றீர். போர்
செய்யவருகிறவன் பார்த்தனயிருப்பானகில், நமக்கு
நல்லகாலமென்றே யெண்ணும். அதேதெனில் - அவர்
களொப்புக்கொண்டுபோன பன்னிரண்டுவருட வன
வாசத்திலும் ஒருவருட வக்ஞாதவாசத்திலும் நாட்கு
றைவிருக்கின்றது. அதைக் கண்டுபிடித்து மறுபடியும்
அவர்களை வனவாசம் பண்ணவனுப்பிவிடலாம். அப்ப
டிக்கல்லவென்றால், இந்த யுத்தத்தி லுயிரழிந்து போ
வார்களென் றுறுதியாய்ச்சொல்லிவிடும். தாக்ஷணிய
மாக முன்பின் பார்க்கவேண்டுவதில்லை. என்று களிப்பு
டன்சொல்ல, தாமரைமாலைதரித்த தநுவேதியரும் -
பனைமாலைதாங்கிய வீஷ்மர்முதலாகிய வேந்தரும் - சரி

தான்: சரிதான்: என்று சிரக்கம்பனஞ்செய்து, வாவாக் கண்டறிவோமென்றிருந்தார்கள்.

பிரகநளை உத்தரகுமாரனை வன்னிமரத்தேறி ஆயுதமெடுவென, அவனங்கோரராவுகண்டஞ்ச, பின்பவனைத்தேற்றி இசைவித்தல்.

இப்பால் உத்தரகுமாரனை உடன்படுத்திக்கொண்டுவந்த விஜயனவனைநோக்கி ஓ — ராஜகுமாரனே! எப்பேர்ப்பட்டவனானாலும் - எக்குலத்தானானாலும் - போர்முகவீரனென்று பேர்பெற்று யுத்தமுனை புகுந்தவன், முன்காயம் பெறாமல் முடிசாய்க்கப்படாது. பகைவனுக்கிளைத்தோடிவருங் காலையினும், புகழுண்டாகப் புறங்காட்டாது மார்பிற் காயம்வாங்கி வரவேண்டும். அப்படிவாத்தக்க வல்லமையில்லாதவன் தேகம், ஆறில்லா நாட்டையும் — அரணில்லாக் கோட்டையும் - தர்மபத்தினியில்லா வீட்டையும் - வள்ரீங்கியகாட்டையும்- பொறையில்லாவாசையும்-ஞானமில்லாக் கல்வியையும்- நன்மணமில்லா மலரையும் - மதியில்லா விசும்பையும்— மைந்தனில்லாச் செல்வத்தையு மொப்பாமென்று தனுவேதத்திற் கூறியிருக்கின்றது. என்று இராஜதருமங்களால் அவன் மனத்தைத்தேற்றி, பயங்கரத்தைமாற்றி, வீராவேசம் விளைத்து, ஆறுகோடிமாயாசத்தியாலு மாறுபடாத அரன்போன்ற வீபற்சானவன் வன்னிமாத்தைச் சேர்ந்தான். அப்போது பராசத்தி கோயிலும் பாலைநிலமுஞ் சிறந்தடர்ந்த வன்னிமாத்தோப்பில்வந்த உத்தரகுமாரன், கன்னிப்போரால் வந்த சந்நித்தோஷத்தாற் கண்விழிக்கமாட்டாதவர் போற்கலங்கி அசைவற்றிருந்தான். அப்படிக்கிருந்த சாரதியைப்பேடிபார்த்து, அப்பா! நீயென் சொல்தப்பாமல் இந்தமாத்திலேறி, வடபுறத்திற்பணைத்துப் பருத்த கிளையின்பொந்திற் சேமஞ் செய்திருக்கிற ஐவரது ஆயுதங்களையும் அம்பறாத்தூணியையு மெடுத்துவாவென்று கூறினான். அந்தப் பேடிமொழியால் தேறியமைந்தன் ஈதென்ன விந்தையென் றெண்ணி, உயர்ந்து தழைந்து விரிந்த வன்னிவிருக்ஷத்தைநோக்கி, ஐயோ! பூதப் பிரேதங்கட்குரிய பிணக்காட்டகத்தி லென்னை யநியாயமாகக் கொணடுவந்து நிறுத்தி, இந்தப்பெரிய மாத்திலேறென்பதென்னபேதைமை? அடிபேடி! ஒரேமட்டா யென்னுயிர்வாங்குதற்கோ? அடிபாவி! இந்தமரம் என்னிரண்டுகைகளுக்கும் அடங்காதே: அணைத்தேறுவோமென்றால் என்மார்பிடம்போதாதே: காலணைத் தேறும் வல்லமையுமில்லையே: உனக்குக்கொஞ்சமேனுஞ் ஜீவகாருண்ய மில்லையா? அடிநபுஞ்சகி! நானொரு யுத்திசொல்லுகிறேன்கேள். மச்சநாட்டை நோக்கிச் சற்றுதூரம் போவேனாகில், வேண்டிய வேலைக்கா ரகப்படுவார்கள். அவர்களா லாயுதமெடுப்பிக்கிறேன். இப்படிப்பட்ட மாமேறுகிறவாடிக்கை யெனக்கில்லை. கடன்வாங்கியிறைகொடுத்தவரும், மாமேறிக்கைவிடுத்தவரும், தலையெடுக்கப் போகிறதில்லையே: ஓ வீரமாகாளி! நானிந்தப் பாவிகையி லகப்பட்டுக்கொண்டு உன்சந்நிதானத்தில் வந்தேன். இயாவரு மிறந்தழியுமிடஞ் சேர்ந்துவிட்டேன். இனியென்னுயிராசை விட்டேன். ஆ! ஹா! கெட்டேன். என்றிருகண்ணினுங்கண்ணீர்விடுத்தேங்கினான்.

இவ்வாறிரங்கிப் பின்வாங்கியபாலனை யவன் பாங்கிலிருந்த அர்ச்சுனன் தன்கைகளாற்றாங்கி, மார்போடணைத்து, மகிழ்ச்சியாய்த்தழுவி, அவனுடலைத் தடவிக்கொடுத்து, உள்ளன்புகாட்டி, அப்பா! நீ அஞ்சாமலேறி ஆயுதமெடுப்பையாகில், அதனால் உனக்கதிகமங்களாகாமுண்டாம். ஆதலாற்றான் உன்கையா லெடுப்பிக்க யான்யெண்ணங்கொண்டேன். வேறாகநினையாதே. என்றுசொல்லி அவனைத்தேர்க்கொடுங்கைச்சிகாத்திலேற்றி, மாக்கிளையிற்றாண்டிப் போகும்படிக்கான உபாயமுஞ்சொல்லிப்போக்கினான். கேட்டீரோ ஜெனமேஜெய மஹாராஜனே! அந்தப் பேடிபேச்சுப் பிசாசமற் பின்னாற்பெற் றநுபவிக்கப்போகிற பெரும்பயனென்று காத்திருப்பதினால், மச்சகுமாரன் அச்சமில்லாமற் கிளைமேற்றாவி, ஆயுதங்களைப் பாண்டவர்கள் பதுக்கிவைத்தார்க ளென்னும்பேச்சு நிச்சயமோ வென்னமோ நிதானிப்போமென்று கிட்டி, கிருஷ்ணாசலத்தினாற் கட்டியிருந்த கட்டையவிழ்த்துப் பார்த்தான். அப்போது உச்சிதமான கிருஷ்ண சற்பமொன்று சிறித்தூாத்தியதைக்கண்டு, மதிமருண்டுமயங்கி, வருந்தித்தியங்கி, அடிவஞ்சகப்பேடி! சண்டைமுகத்திற்கு வரேனென்ற வென்னை உபாயமாய்க்கூட்டிவந்து வன்னிமாத்திலேற்றி, பாம்புக்கிரையாக்கவோ பார்த்தாய்? நான் பண்ணியபாவ மென்னமோ? உன்னைச்சாரதியாக வெண்ணிவந்த தோஷமோ? இன்னமுமென்னையென்னசெய்யப் போகிறாய் இந்தமட்டு மென்னை விட்டுவிடடி! எனக்குப்புத்திவந்ததடி! அடி சதிகாரி! என்றுமயங்கி இறங்கிவாத்திரும்பிய உத்தரனியற்கையைப் புத்திசாலியாகிய புண்ணியவிஜயன் கண்டு, இறங்காதே; இறங்காதே: என்று கையமர்த்தி, நீண்டபாம்பானது உன்னைப்பதறிக்கடியாது. அதற்குநீ பயப்படாதே. ஓ அதிகுணசாலியாகிய அரசகுமாரனே! உனக்குப் பொல்லாங்குவிளைக்கும்படியான பொறாமை யெனக்கில்லை. நீ விருதாவிற் கவலைப்படுகிறாய். இன்னுஞ் சற்றுநோத்தி லுனக்குமேலான சுபங் கிட்டப்போகின்றது. எப்போதுமென்சொல் லுனக்கொப்பில்லா வின்பத்தை யுண்டாக்கக் காத்திருக்கின்றது. உங்களுடைய ஆதாவிலிருக்கின்றயான் ஒருக்காலும் உனக்குக் கெடுதி செய்யக்கருதேன். இங்கினி நடக்கப்போகின்ற சிலகாரியங்களால் நீயேசந்தோஷிக்கப்போகின்றாய். என்று அவன் கருத்திலெழுந்த கலவாத்தைக் களைந்தான்.

உத்தரகுமாரன் பிரகநளையின் சொற்படி ஆயுதங்கண் டதன்வரலாறு கேட்க அதற்கவன் விடைதரல்.

இப்பால் அம்மரத்தின் மீதிருந்த ராஜகுமாரன் சிறிது மனந்தேறி, பிராணன் போனாலும் போகட்டும் இப்பேடி பரிந்து வருந்திச்சொன்ன பேச்சைப் பார்ப்போம். என்றுளந்தெளிந்து, பேடியிடத்திற் சிக்கிப் பேய்போ லலைவதிலும் பெரும்பாம்பின்வாய்ப்பட்டிறப்பது புண்ணியவசந்தானென்று துணிந்து, பாம்புருவாய்க்கண்ட படையின்பேரிற் கைவைத்துக் கலைத்தான். அப்போ தவனுக்கொரு பொல்லாங்குமில்லாதிருந்தது. அதையவன் பார்த்து, அடடா!! இதிலென்னமோ மகத்துவ மிருக்கிறது. என்று தனக்குத்தானே பூரித்து, பூமியில்நின்ற பேடியைநோக்கி, ஓ விஞ்ஞன நிஷ்டூரத்திற் காளான விந்தைக்காரி! இந்த மரப்பொந்தில் வைத்திருக்கும் ஆயுதங்களுடன் மலைப்பாம்பொன்று சுற்றிக்கொண் டிருக்கிறது. உன்னாலெனக் கென்ன தைரிய நேரிட்டாலும், (பாம்பென்றாற் படைநடுங்கும்.) என்னும் பழமொழியுண்டல்லவோ? அதனால் என்மனம் அளவுபடாமல் வருந்தி வாடுகின்றது. அப்படி யிருந்தபோதிலும், பாண்டவர்களின் படைக ளிவ்விடத்தில்வந்த வரலாறும், விஷாக்கினியுள்ள பாம்பொன்று சீறிக்கொண் டிருக்குந் தன்மையும், அவர்களிந்த வன்னிமரத்தி லொளித்து வைத்த காரணமும், இந்தரகசிய முனக்குத் தெரிந்த விதமும், எனக்கொளியாமல் விபரமாகச் சொல்லுவையானால்; நானிந்த வாயுதங்களை யெடுத்துக் கொண்டு கூடவந்து நீ சொன்னபடிகேட்டு நடப்பேன். இல்லாவிடில், இம்மரத்தைவிட் டிறங்க மாட்டேனென்று உத்தரகுமாரனுரைத்து அம்மரத்தி லட்டகாசஞ்செய்த மர்ந்திருந்தான். அந்த மைந்தனறைந்த வார்த்தைகளை அர்ச்சுனன்கேட்டு, சிந்தை பூரித்துச் சிரித்து மகிழ்ந்து தேர்த்தட்டின்மீதேறி நின்று, ஓ அடுத்தோரைக்காக்கும் அரசிளஞ்சிங்கமே! பாண்டவர்கட்குரிய படைகளை இந்தவன்னிமரத்தில் மறைத்து வைத்தபோது, இருவர்தவிர மற்றவர்கள் கண்ணுக்குப் பாம்புருவமாய்த் தோன்றக் கடவனவென்று தருமராஜனுரைத்த சத்தியவாக்கின்படிக்குச் சர்ப்பமாகத் தெரிவதைக் கண்டு சஞ்சலப்படாதே. அஃதொரு பெரிய வில்லென் றறிந்துகொள்ளக் கடவை.

அந்தவில்லின் பிரதாபமும் அது கிடைத்தமுறைமையும் எப்படிப்பட்டன வெனில் - சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மாவினிடத்தில் நூறாயிரவருடம், தக்ஷப்பிர்மாவினிடத்தில் பதினாயிரவருடம், தேவேந்திரனிடத்தில் லாயிரவருடம், சந்திரனிடத்தி லைஞ்ஞூறுவருடம், வருணனிடத்தில் நூறுவருடம், மற்றும் பலரிடத்தில் நெடுங்கால மிருந்து; இவர்கட்குண்டாகிய பகைகளைக் களைந்து பின்னும் வருணனிடத்தில் வந்துசேர்ந்து, பொன்னுமணியும் பூசையாகக்கொண்டு, சிலவருடஞ் சென்றபின்பு கடைசியில் அக்கினிதேவ னடுத்துக்கேட்க, அவனிடத்திலாசைவைத்தஅவ்வருணராஜன் அன்போடுகொடுத்துவிட்டார். இந்தவில்லினால் வெற்றி பெற்றுவரும் அக்கினிதேவன் காண்டாவனதகன காரணத்தினால் அருச்சுனராசனுக்குக் கொடுத்து, தனக்கு வேண்டிய காரியங்களை முடித்துக் கொண்டார். அது முதலிதுவரையிலும் அறுபத்தைந்து வருடமாக அருச்சுனராசன் கரத்திற்கிசைந்து, அநாவிர்தகண்டம் அனாவிர்தகண்ட முதலிய வெண்டிசையும் வென்று, ஜெயமாலைபூனைந்து, மனோபீஷ்டங்களைக்கொடுத்து, தேவர்களுரைத்தருளிய ஆசீர்வாதத்தினால் வெகுவித அதிசய வெற்றியைப்பெற்று, காண்டீபமென்னும் அசைவற்றிசைபெற்றிருக்கும் பேர்கொண்ட வில்லென் றறியக் கடவாய். இந்தவில்லுக் கொப்பாகிய வில் இந்திரவுலக முதலிய வெவ்வுலகத்தினுமில்லை. இந்திரநீலம்வைத் திழைத்த எழிலொளிபோற் பிரகாசிக்கும் அதனை நீ நன்றாய் நிதானித்துப் பார்க்கில், உனக்கே செவ்வையாய்த் தெரியும். அன்றியும் - பஞ்சபூதங்களினாலும், பண்ணவர்முதலிய பதினெண் கணங்களினாலும், எக்காலத்தும் பழுதுபடாத வியல்பு அதனிடத்துள்ளதால்; அதற்குக் காண்டீபமென்னும் பெயருண்டாயது. பூருவம் அருச்சுனனவன் சொற்கலோகத்தினுக்குற்ற துன்பத்தினை நீக்கும்பொருட்டுக் காலகேயநிவாதகவசர்களை வென்று யமபுரத்திற் கனுப்பிய திறமையும், இராஜசூய யாகத்திற்காக விஜயம்பெற்றுத் திரவியம் சேகரித்த முறைமையும், சித்திரசேனன் முதலிய காந்திருவரைக்கண்கலங்கச்செய்து துரியோதனனைக் குடும்பத்துடன் கட்டவிழ்த்து மீட்ட கருணையும், இக்காண்டீபத்தினாலென் றறியக்கடவை. இந்தமட்டு மிதுநிற்க, சத்தாகிய பாற்கடலைக் கடைந்த மத்தாகிய மந்திரகிரிபோன்று, கொத்தாகிய மற்றவாயுதங்களுடன் கலந்து விளங்குகின்ற வெவ்விய கதையானது வீமசேனனுக் குரியது. மற்றுமுள்ள வாயுதங்க ளியாவுந் தருமராஜ நகுலசகாதேவர்களுக் குரியனவாம். என்று அருச்சுனன் சொல்லவும், வெற்றிமேற்கொண்ட விராடகுமாரன் தன் மனங் கலக்கந்தெளிந்து, சகல படைகளையுங் கண்ணுற்கண்டு சொல்லுகின்றான்.

உத்தரகுமாரன் பாண்டவர்க்குநேர்ந்த சம்பவங்கேட்டவரெங்குள்ளாரோ வென்றுவருந்த, பிரகநளை உள்ளவாறை வெளிப்படுத்துதல்.

ஓ-கடையேனாகிய வெனக்கு இவற்றையெல்லாங் காண்பித் தென்னை யாளாக்கிவிட்ட காரிகையே! ஓ இஷ்டதெய்வம்போ லென்னைத் தடுத்தாட்கொண்ட

வேந்திழையே! மகாபுண்ணியவதியாகிய குந்திதேவி
யீன்ற மைந்தரைவருந் தங்கள் தங்க ளுயிர்போற்கரு
திய வாயுதங்களை யொருநாளும் பிரியார்களே: அப்
பேர்ப்பட்ட மகாபுருஷர்கள் இந்த வன்னிமரத்தில்
மறைத்துக் குறிப்பிட்டு வைக்கவேண்டிய அவசரமென்
னமோ ? இப்பொழுதவர்க ளெந்நாட்டி லிருக்கின்றார்
களோ? என்னகரத் துள்ளார்களோ ? எப்படியானார்
களோ ? அதையெனக் குணர்த்தவேண்டும் பாக்கிய
சாலி! என்று உத்தரன்கேட்க, வாசநிறைந்த மலர்
போற்சிறந்த வாள்விழியினையுடைய பேடியானவள்
முகநயந்து புன்னகைபுரிந்து, ஓ அன்புள்ள வரசனே !
பாண்டவரைவரும் நந்தியாவட்ட மாலையணிந்த நாரந்
தகனுடைய வஞ்சகத்திற்குள்ளாகிச் சொக்கட்டானடி,
அவ்வாட்டத்திற் றோல்வியடைந்து சோர்வடைந்தவ
ராகி, அத்தோல்விக்குப் பன்னிரண்டுவருடம் வனவாச
மும் ஒருவருட மஞ்ஞாதவாசமு மவன்போக்க அதற்கு
டன்பட்டுச் சென்று, காட்டிற்கழிக்கு நாட்களைகழி
த்து, நாட்டிலிருக்கு நாளைநினைத்து, யாவராலுந் தங்
களை இன்னாரென் றறியாதிருக்கும் படிக்குத் தங்களா
யுதங்களை இம்மரத்தில் மறைத்து வைத்து, வேடமாறி
வேற்றுருக்கொண்டு, எவரும் ஐயங்கொள்ளா திருக்
கும்படிக்கு அவரவர்க்குத் தக்கதொழிலை மேற்கொண்
டார்கள். இப்பொழுதவர்க ளெவ்விடத்தி லிருக்கின்
றார்களோ யெனக்குத் தெரியாது. என்று திங்கள்
குலஞ் சிறக்கப்பிறந்த சிலைவிஜயன்கூற, மறுவில்லா மச்
சகுமாரன் பெருந்தகைபேசிய வார்த்தையைக்கேட்டுப்
பெருமூச்செறிந்து, உடல் படபடத்து, உயிர்துடிதுடி
த்து, ஒரு வாக்கியம் புகன்றான். ஐயோ ! தெய்வமே !
சத்தியந்தப்பாத சாதுவானவர்கள் அசத்தியத் துஷ்ட
ராகிய சுயோதனனுக்கியரா லிப்பாடுபடத் தக்கவரோ?
தருமமவர்கட்குச் சகாயம் பண்ணாமற் போயிற்றோ?
கலிகாலமாயிற்றோ? பாவமேலிட்டதோ? நீதிவழுவிக்
கெட்டதோ? கொடியோர்களித்திருக்கப் பாண்டவர்
கள் துன்புற்றுத் தேம்பி வாடச்செய்தது தீவினையோ?
தவத்தைத் தஞ்சமென்றுகருதி இவ்வுலகிலுள்ளோர்
கள் கொண்டாடுகின்றார்களோ: அந்தோ! இனி யெப்
படி தருமத்தை நம்பலாம்? அசத்திய மேலிட்ட அக்
கிரமிகளுக்குத் துணைசெய்யுமாயின், சத்தியத்தை நம்
பிச் சங்கடப்படுவது தகுதியோ? ஓ என்பிரமைதீர்த்த
பிரகந்நளைப்பாவாய்! தருமமே சத்தியஞ் சத்தியமே நித்
தியமென் றிருந்த தருமராஜனும், தோள்வலியைத்
துணையாகக்கொண்ட வீமசேனனும், திறனுற்ற சிலை
பெற்ற விஜயசிகாமணியும், மற்ற இளையவரிருவரும்,
பெருமையாகவாழ்ந்த புண்ணியர்க ளன்றோ! அவர்
களுக்கு மித்தன்மைத்தான இடையூறுவரலாமா? வாச
மணக்கு மலர்க்குழலினையுடைய திரௌபதிமாதுடன்
எவ்விடத்திற் றுன்ப மநுபவிக்கின்றார்களோ ? எத்
தொழிற் செய்கின்றார்களோ ? என்று வருந்திப் பின்
னுஞ் சொல்லுகிறான்.

ஐயோ ! இவ்வுலகத்தி லொருவர் பற்பலயாகங்க
ள்செய்து சோடச மகாதானமும் பண்ணி மேலாகிய
வாழ்வநுபவித்துத் திரிபுவனத்துஞ் ஜெயம்பெற்றிருந்
தாலும், அவ்வாழ்வைக்கீழ்ப்படுத்தித் தாழ்வைமேற்ப
டுத்தி, நல்லாரைப் பொல்லாராக்கிப் பொல்லாரை நல்
லாராக்கி, விதவைகளை வீரர்களாக்கி, வீரர்களை வித
வைகளாக்கி, ஜாதியீனரை சிரேஷ்டராக்கிச் சிரேஷ்ட
ரைச் ஜாதியீனராக்கி, தனவான்களைத் தரித்திரராக்கித்
தரித்திரரைத் தனவான்களாக்கி, புநிதரைப்பிணியராக்
கிப் பிணியரைப் புநிதராக்கி, பொய்யரை மெய்யராக்கி
மெய்யரைப் பொய்யராக்கி, இவ்வாறு தலைகீழாகப்
பண்ணுவதோ ஊழ்வினைப்பயன் ? என்றுருகித் தன்
மனங்கருகி, கண்ணீர்பெருகியோடக் கசிந்து, பெரு
மூச்செறிந்து, ஓ தெய்வமே! பாண்டவர்கள் இப்
போது எங்கிருக்கின்றார்களோ ? நல்லவர்கட்குத் தீவி
னைவிளையுங்காரண மென்னமோ ? என்று உயிர்வேதை
யுட னேக்கங்கொண்ட உத்தரகுமாரனுடைய உண்
மையையும் உறுதியையும் அருச்சுனன் தெரிந்து
கொண்டு, உள்ளமகிழ்ந்து இதனை உரைக்கத் தொடங்
கினான். ஓ பள்ளநீர்க் கயங்கடோறும் பால்பெருகி
யோடு மச்சநாட்டிறையான மைந்தனே ! நிந்தையில்
லாப் பாண்டவர்களைக்குறித்து நைந்துவருந்தாதே.
அவர்களிப்போது, உன்னாட்டிலும்- நகரிலும்-படைவீ
ட்டிலு மிருக்கிறார்களேயொழிய; வேறெங்குமில்லை
யென்று சொன்னான். அவன்வார்த்தையைக் கேட்ட
உத்தரகுமாரன் சித்தம்பிரமித்து, அம்மம்மா எனது
நாட்டிலும் வீட்டிலு மெப்படி யிருக்கின்றார்கள் ?
ஐயோ !அந்தவிந்தையை யெனக்கு விபரமாகச்சொல்
லுந்தாயே ! என்று உத்தரன்கேட்க விஜயன்சொல்லு
கிறான். அப்பா ! முதன்மையான குலத்தையும் முடி
வில்லாத நலத்தையுமுடையவராய், விராடராஜனுக்கரு
காசனத்தி லிருந்து. திவ்வியமங்கள விக்கிரகமாய் விள
ங்கி, விவகாரதருமநீதிகளை விளம்பி, கங்கபட்ட ரெனப்
பெயர்பெற்ற கருணையாளர்தான் முரசக்கொடிபடை
த்த தருமராஜன். நாவிற்கினிய அறுசுவை பதார்த்தத்
துடன் அன்னஞ் சமைக்கும்படியாக உங்கள் மடைப்
பள்ளியி லிருககும் பலாயனனென்னுஞ் சுயம்பாகி
தான் வீமசேனன். எங்கும் பிரசித்தமாகிய குதிரைக்
கூட்டங்களுக் கெசமானனாகிய தாமக்கிரந்திதான் நகுல
ராஜன். உங்கள் பசுமந்தைகட்குத் தலைவனெனவந்த
தந்திரபாலனானவன் சகாதேவன். உ தாயாகிய சுதர்
க்கணையி னிடத்திற் பணிப்பெண்ணாயமைந்த விரதசார
ணியானவள் மகாலட்சுமிக் கிணையான திரௌபதா
தேவி. உன்தங்கையாகிய உத்தரைக்கு மத்தளதாள வி
தத்துடன் தித்திமிதாவென நர்த்தனம் பழக்கிக்கொண்
டிருந்த பிரகந்நளை யென்னும் பேர்கொண்ட பேடியா
கிய நான்தான் அருச்சுனன். அன்றியும் - உன் அம்மா
னன கீசகன் திரௌபதியின்மீது காதல்கொண்டு துன்
மார்க்க நினைத்தமையால், அவனை வசந்தமண்டபச்சோ
லையி லடித்து அவன் தம்பிமார்களையு முடித்து, காந்தி

ருவர்பேரிற் பழிவைத்தவன் வீமசேனனென்று தெரிந்துகொள். வீமன் கொன்றுபோட்டுக் காந்திருவர்பேரிற் பழிசுமத்தியதேனென்றால், நாங்கள் கழிக்கவந்த அக்ஞாதவாசத்திற் கிடையூறு வருமென் றஞ்சிதான் அவ்வாறு சுமத்திமறைத்தோம். இதுவரையில் நாங்களறுவரும் உனது மச்சநாட்டிற்றானே மந்திரத்தால் தடைபட்டிருந்த கிருஷ்ண சர்ப்பம்போ லடங்கியிருந்து, தவணைநாளைக் கழித்துவிட்டோம். நாங்களநுபவிக்கவேண்டிய பதின்மூன்றுவருஷங்களும் நேற்றோடு தீர்ந்துபோய் விட்டன. இனிமேலெங்கட் கியாதொருபயமுமில்லை என்று உண்மையை விளம்பினன்.

உத்தரகுமாரன் அருச்சுனன்பெயர்களுமவற்றின் வரலாறுங்கேட் டையந்தீர்ந்து ஆயுதமெடுத்துத்தரல்.

இவையனைத்துங் கேட்ட உத்தரகுமாரன் ஆச்சரியத்துடன் புகழ்ந்து, இதுநல்ல காலமா யிருப்பதால் இவ்வேளையி லின்னுஞ் சிலரகசியங்களை வெளியாக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பி, ஒரேமனதாய்த் துணிந்து, ஓ பெண்ணுருக்கொண்டு நிற்கும் பெருந்தகையே! தேவர்கள் கொண்டாடாநின்ற பேரழகும், சிவபெருமானளித்த அருளாண்மையும், சுத்த வீரர்கள் மெச்சுஞ் சிலைவிஜயத் திறமும், ஆகிய யிவைகளைப்பெற்ற தீரவீர அருச்சுனராஜன் நான்தானென நீர்சொன்ன பேச்சை நானம்பமாட்டேன். நீரேநானென்று ஸ்திரமாகச் சொல்லுவீராகில், உமக் கெத்தனைபெயர் கிடைத்திருக்கின்றது? அப்பெயர்கள் வந்ததற்குக் காரணமென்ன? நீர் அவற்றையெல்லாம் என்மனக்கலக்கந்திரச் சொல்லுவீராகில், நானுமக் கடிமையாவேனென்பதற் கியாதொரு தடையுமிராது. என்று உத்தரகுமாரனுரைக்க, சித்திரப்பாவைபோ லிருந்து கேட்ட விஜயன் சிந்தைகளித்துச் சொல்லத் தொடங்கினன். ஓ வெற்றிபெற்ற விராடராஜனளித்த உத்தரகுமாரனே! எனக்குக் கிடைத்திருக்கின்ற பெயர் பதினொன்று, அவையாவன, பற்குனன் - பார்த்தன்-கிரீடி-தனஞ்சயன் விஜயன்-சுவேதவாகனன் -வீபற்சு-சவ்வியசாசி - கிட்டினன் - அருச்சுனன் கிருட்டினன். இவ்வாறமைந்த வென்பெயரைப் பெரியோர் முதலிய யாரும் பெருமையாகக் கொண்டாடிப் பேசுவார்கள். இப்பெயர் வந்ததற்குக்காரணம் யாதெனில் பங்குனிபுத்தரத்திற் பிறந்தமையால் பற்குனனென்றும், என்னையீன்ற அன்னை பெயர் பிரதையாதலின் பிரதைசம்பந்தம் பார்த்தனென்றும், தேவலோகத்திற் புகுந்து தேவேந்திரன் கொடுத்த கிரீடம் புனைந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்தமையாற் கிரீடியென்றும், இராஜசூயயாகமியற்றிய வந்நாளில் உத்தரகுரு கண்டத்துச்சென்று தேவர்கள் - காந்திருவர்கள் முதலியபேர்களை வென்று எண்ணிறந்த தனக்குவையை மகமேரு போற் குவித்தமையின் தனஞ்சயனென்றும், திரிபுவனத்துமென்னைச் செயித்தவரின்றித் திசைமுற்றும் யாவனொருவனேவென்று விஜயங்கொண்டமையால் விஜயனென்றும், பரமசிவத்தின் வெள்ளிவிடைபோல் விளங்கும் நான்கு சுவேதப்புரவிகள் பூட்டிய தேரேறி நடாத்துகின்றமையாற் சுவேதவாகன னென்றும், என்னைக்கண்ட வேந்தர்யாவரும் பொன்-மண்-பெண்-என்னு மூவாசைகளைவிட்டுக் கண்ணைப் பிசைந்து கலங்கிப் பின்னிடவும் விண்ணைச்சேரவும் விடுக்குந் திறத்தால் வீபற்சென்றும், இடக்கைவலக்கை இரண்டினாலும் பாணந்தொடுக்குந் திறத்தாற் சவ்விய சாசி யென்றும், என்னையும் - என்வில்லையும் - என்தமயனையும் இகழ்ந்து பேசுகின்றவர்கள் மட்டறற்ற வல்லமைபெற்ற வானவராயினும் மன்னவராயினும் அவர்தலையை நட்டப்படுத்தி நாசஞ்செய்வே னென்று சபதங்கொண்டிருக்கின்றமையாற் கிட்டினனென்றும், பான் மரகதமணிபோற் பசப்புற்ற உடல்கொண் டிருத்தலால் அருச்சுனனென்றும். காண்டாவன தகனகாலையில் மாதவனும் யானும் வேற்றுமையின்றி மருவியவாற்றாற் கிருட்டினனென்றும், இத்தன்மையா யிசைந்த பதினொருபெயருங் கற்றவராலும் - சொற்றவராலும் - நற்றவராலும் தேவர்கள்முதலிய மற்றவராலும் எனக்கு வந்துற்றன.

ஐயா உத்தரகுமாரனே! பூர்வந் திரிபுரமுநீறெழச்சிரித்தருளிய சிவபெருமான் அநுக்கிரகஞ் செய்த திவ்யாஸ்திரங்களும், பிர்மா - விஷ்ணு - இந்திரன் – முதலிய தேவர்களளித்த கூரிய பாணங்களும் பெற்றிருக்கின்றேன். அவைகளை நாங்கள் அக்ஞாதவாசஞ் செய்ய எத்தனித்தபோது, இந்த வன்னிமரப் பொந்தில் வைத்திருக்கின்றோம். இப்போது உனக்குப் பாம்புருவமாகக் காணுகின்ற காண்டீபமும் - அக்ஷயதூணியும் - அக்கினிபகவானாற் கிடைத்தன. முப்பத்துமுக்கோடி தேவர்களுந் தேவேந்திரனுங் கொண்டாடிக் கொடுத்த தேவதத்தத்துடன் பதினாயிரங் குதிரை பூட்டிய இந்திரவிமானத்தை மாதலியோட்டிய காலையில், அதன்மே லாரோகணித்துத் தோயமா புரத்திற்சென்று, மூன்றுகோடி நிவாத கவசரைக்கொன்று ஜெயங்கொண்டு, தேவஸ்திரீகள் ஆலமெடுக்கவும் - புட்பமாரிபொழியவும் - புகழ்ந்து வாழ்த்தவும்–பிரதாபம் பெற்றேன். இரணியபுர வாசிகளாகிய அறுபதினாயிரம்பேர் காலகேயர்களையும் – அவர்கட்குதவியான பதினாயிரமரக்கரையும் - பாசுபதக் கணையால் மாய்த்து, யான் மந்தாரமாலைபுனைந்து வரிசைபெற்றுப் பூலோகத்திற்கு வந்த மேன்மையை நீ கேட்டறியாய்போலு மிருக்கிறது. நல்லது: ஓ உத்தரகுமாரனே! ஆயிரம் பேச்சென்னத்திற்கு? ஒருவார்த்தை சொல்லுகிறேன். அதனை நீ யோசிக்கத்தக்கது. சத்துருக்களையடிப்பதும்,

அவர்களுயிரைத் தாகத்திற்குக் குடிப்பதும், இவ்விரண்டும் எனக்கு அதிசொற்பமான வேலையன்றி: வருத்தமன்று. ஆதலால் - நான் அருச்சுனனென்பதற்குச் சந்தேகங் கொள்ளாதே: இதற்குத்திருஷ்டாந்தமாக இப்போது நமக்கு கோரியசேனைகளைக் கண்காணுமலோடவடிக்கின்றேன். கன்றுகளுடன் கலந்த பசுநிரைகளை மீட்கிறேன். நீ யினித்தாமதஞ் செய்யாமற் புறப்படென்று சொன்னான். அம்மொழிகேட்ட உத்தரன் ஒருவாறுதேறி மகிழ்சிறந்து, இனிநமக்குப் பயமில்லையென்று தானேறியிருந்த விருக்ஷத்தை விட்டிறங்கி, இரதத்தின்மீது இளஞ்சூரியனைப் பனிமூடியவாறுபோற் பேடியுருவமமைந்த பெருமானைவணங்கி, நெடுநாளாகத் தேடிய தேவைப்பணியும் அன்பர்போற் பணிந்து, துன்பமுந் துயருந் தொடாச்சுகசொரூபனுடைய திருவடியை சிரத்திலுங்கண்களிலும் முகத்திலுஞ் சேர்த்து முத்தமிட்டு தன்னைத்தான் மறந்து, தனக்குத்தானே திடுக்கிட்டுப் பயந்து, இனியவசனமொழிந்து நயந்து நின்றான்.

அக்காலையிற் பார்த்தனானவன் விரைவிற் றேர்விட்டிழிந்து, பிரியாப் பிரியத்துடன் முகமலர்ந்து, உத்தரகுமாரனை உடல்குழைய வணைத்து, ஐயனே! இன்னுமுனக்குப் பயமுண்டா யிருக்கின்றதோ? என்னளவிற் சந்தேக முண்டோ? நீ யேதொன்றுக்கும் அஞ்சாதே. இனி நீ தீதில்லாச் செயம்பெற்று வாழ்வாய். என்று உறுதிவார்த்தைக ளுரைத்துத் தேற்றினான். அதனாலுத்தரகுமாரன் களித்து முகமலர்ந்து, சிவந்த கைகளைச் சிரத்திற் குவித்து, கண்ணீர்பெருகக் கசிந்து உள்ளுருகி, ஓ பாற்கடல்போற் கீர்த்திபடைத்த பார்த்தமகாராஜனே! தேவரீ ரின்னாரென் றறியாமற் கன்னி யென்று ஏழைமதியாற் பிதற்றி, அபசாரங்களைப் பெரியமூட்டையாகக் கட்டிக்கொண்டேன். நான் மஹாபாவியாயினேன். சிறியேன் செய்த பிழையைப் பொறுத்து அருள்சுரந் தாளவேண்டும். ஓ அத்தனே! ஓ என்னிஷ்டமாகிய கர்த்தனே! என்று பற்பலவசனங்களினாற் பாதவித்துக்கூறி மேலுஞ் சொல்லுகின்றான். ஓ கருங்கடலகடுகிழிய ஒருங்குட னோடிக்கலக்குங் கங்கைநீர் வளம்பெருகிய குருநாட்டரசே! கேட்டருளும்: தேவரீர் திருவடிபெயர்த் தருளப்பெற்றுத் தங்கட்குச் சாரதித்தொழில் செய்ய எனக்குக்கிடைக்குமா? ஜன்மாந்திரப் புண்யபலன் எண்ணியவண்ணங் கைகூட்டுமா! என்று வெகுநாளாகக் கவலைகொண்டு மனங்கன்னியிருந்தேன். அண்ணலே! மெத்தப்பிரயாசப்பட்டுத் தான்கற்ற வித்தையைத் தானேபுகழ்ந்து பேசுகிறவர்களைப்போற் பேசப்படாதென் றிருந்தாலும், தமது கருணையானது என்னைப் பேசச்செய்கிறது. அருமையறியும் பெருமானிடத்திற் பேசப்போகின்றேனா? அரவாபரணம்பூண்ட ஆண்டவருக்கு வேதப் பரிதூண்டிய பிரமாவினால் விதித்திருக்கின்ற சாரதி நூல்களெல்லாம் பார்த்து, எல்லாவல்லமையினுங்கைதேர்ந் திருக்கின்றேன். ஓ கருணைகடாட்ச காண்டீபதரனே? அதனாலவ்வித்தையைத் தங்களுக்குபயோகப்படுத்திப் பேர்பெறவேண்டு மென்பதே யெனது வெகுநாளையகருத்து. என்று சொல்லிப்பணிந்த ராஜகுமாரனை அருச்சுனன் தழுவியணைத்து, ஓ என்னிதயத்திற் குவந்த இளஞ்சிங்கமே! நீயும்நானும் நெருங்கிய இஷ்டமானோம், இனி நெருப்புக்காற்றுஞ் சேர்ந்த பின்பு சத்துருவாகியகாடு நீறுபடாதிருக்கக்கூடாது. இன்னும் யோசனைக்கிடங்கொடாது விரைவிலேறி இம்மாத்தி லொளித்துவைத்திருக்கும் நமது காண்டீபமென்னும்வில்லும் - அக்ஷயதூணியுமும் - தேவதத்தமு மெடுத்துவா வென்று விஜயன் விளம்பினான். உடனே உத்தரகுமாரன் தடையில்லாமல் ஏறி, உத்தரவின்படி தேவதத்தமும் — காண்டீபமும் — அக்ஷயதூணியும் - எடுத்துக்கொண்டு, மற்றவாயுதங்களை முன்போல்வைத்து, மான்தோலாற் கட்டி மறைத்துவிட்டு, மாத்தைவிட்டிழிந்து, அருச்சுனராஜனைத் தொழுது கொடுத்து, தனக்குச் சாரதித்தொழில் கிடைத்த சந்தோஷத்தால் திடீரென்று தேரிற்குதித்து, குதிரைக் கடிவாளங்களைக் கையிற்கொண்டான்.

அருச்சுனன்சுயரூபங்கொண்டு, இந்திராதியராலணிமணிக்கலனோடனுமக்கொடி படைத்துப் படைமுகப்போதல்.

அப்பொழுது அருச்சுனராஜன் இந்திரன்முதலிய தேவர்களையும் ஊர்வசியையுஞ் சிந்தித்து, தந்தை - தாய் - தமையன் முதலான பேர்களையும் வந்தித்து; தர்மதேவதையையும் போற்றினான். அவ்வேளையில் விஜயனுக்குப் பாண்டுராஜன் பூருவந்தேடிய பாக்கியம் பலித்ததுபோற் பேடிரூபநீங்கி, ஆதிபுருஷ ரூபலாவண்ய வடிவமாயினான். ஆகாயத்திலுள்ள அமரரியாவரும் வாழ்த்தினார்கள். அருச்சுனன் நிஜரூபத்தோடுங் கண்ட உத்தரகுமாரன் பெண்மையை அவாவும் பேரெழிலாடவரை யொப்ப அவாவினான். கேட்டீரோ ஜெனமேஜெப மகாராஜனே! க்ஷணத்திற்குமுன்னம் இருள்மூடியவாறுபோற் பேடியாயிருந்த அருச்சுனன் இப்போது பச்சைமணியினது பிரகாசம் வீசிச் சொலிப்பதுபோற் றுலங்கியதன்மை யெவ்வாறிருந்ததென்னில் - இந்திரஜாலங் கற்றவர்கள் க்ஷணத்திற்குக்ஷணம் வெவ்வேறு ரூபங்காட்டுகின்ற விந்தைபோன் றிருந்தது. அருச்சுனனது தேககாந்தியைக்கண்ட உத்தரகுமாரன் மின்னலுக்கெதிரில் விழித்தவர்போற் கண்கூசிக் கவிழ்ந்து, இரண்டுகையினாலுஞ்சேர்த்திறுகத்தழுவி, ஓ என்னையனே! உமது மாசற்றதிருமேனிக்கு இம்மறுவந்தக்காரணம்யாதோ? என்று வணங்கிக்கேட்க விஜயன் சொல்லுகின்றான். ஓ இராஜசெல்வமே! முன்னொருபோது இந்திரனோடு சொர்க்கலோகம் போய் தேவர்க

ட்குப்பகையாகியகாலகேயநிவாதகவசர்களைச்செயித்து வெள்ளையானையின்பேரிற் பவனிவந்து, அமுதபோஜன முண்டு, அமரர் யாவரும் புடைசூழும்படியாக இந்திரா சனத்திலிருந்தேன். அப்படியிருந்தஎனக்குச்சந்தோஷ முண்டாக்கும்படி அத்தேவேந்திரன் நினைத்து, அர ம்பை – ஊர்வசி-மேனகை-திலோத்தமை-இவர்களால் நாட்டியமாடுவித்தார். அவர்களாடிய ஆட்டிலும் பாடிய பாட்டிலுஞ் சிறந்த முகநயமுள்ள ஊர்வசியை நான்மெ ச்சிச் சிரக்கம்பஞ்செய்தேன். அவணிருந்த தேவர்முத லிய யாவரும் ஊர்வசி இன்று செவ்வையாய் நடித்தன ளென்று கொண்டாடினர்கள். அன்றிரவில் எனக்கங்க மைத்த அரண்மனையிற்போயிருந்தேன். நடுராத்திரியில் அந்த ஊர்வசி என்னிடத்திற்கு வந்தாள். அவளையான் கண்டமாத்திரத்தில் எங்கள்பாட்டனுன புரூரவச்சக்கர வர்த்தியின்பத்தினியாதலால் மெத்தப்பயந்து, உடனே யெழுந்து அவள்பாதத்தில் விழுந்து நின்றேன். அதுக ண்ட ஊர்வசி கொழுந்துவிட்டெரியுஞ்சுடர்போற் கொ தித்து, நானெண்ணிவந்த எண்ணத்தைப் பின்னம்பண் ணியபடியால், மண்ணினில்வாழு மனுக்களில் நீ பேடி யாகுகவென்று சபித்துப் போயினள்.

அப்பாற் பொழுது விடிந்த பின்பு அவ்வுருவத் தோடு வெளியே வருவதற்கு வெட்கப்பட்டிருந்த என் னைத் தேவேந்திரன்கண்டு விசனமடைந்து, சங்கதியறி ந்துகொண்டு, ஊர்வசியினிடத்திற்குச் சென்று, அவளு க்குவேண்டிய உறுதிமொழிபுகன்று, எனக்கிட்ட சாப த்தை நிவாரணஞ் செய்யும்படி கேட்டுக் கொண்டார். அதற்கவளிரங்கி, அந்தச்சாபம் நானினைத்தபோது ஒரு வருஷம் என்னைத் தொடர்ந்திருக்கவும், நானினையாத போது என்னைவிட்டுநீங்கியிருக்கவும் அநுக்கிரகித்தாள் அந்த ஊர்வசியநுக்கிரகத்தால் உன்னுடைய விராடபுர த்தில் ஒருவருஷம்பேடியாயிருந்து அக்ஞாதவாசம்பண் ணும்படி நேரிட்டது. அப்பனே! எனக்குப் பேடியுரு வமைந்தவாலாறிது. என்று உத்தரகுமாரனுக்குரைத்து சந்தோஷிப்பித்த அர்ச்சுனன் பின்பு தன் தந்தையான இந்திரனையும் - வம்ஸநாயகனாகியசந்திரனையும் - திரௌ பதியைப் பெற்றவனாகிய அக்கினிதேவனையும் - சிந்தை யிற்றுதித்து, வந்தனைபுரிந்து, தனக்குவேண்டிய அணி மணிப் பணிகளைக்குறித்து விரும்பினான். அவ்வேளையில் தேவேந்திரனானவன் தன்மைந்தன் பழைய கோலத்தி னைக் கொள்ளப்போகிறானென்றுமகிழ்ந்து, கதிர்மணிக் குண்டலம் - கனககிரீடம் - நவமணியிழைத்த - ரத்னாப ரணம்-இவைமுதலிய பலபூஷணங்களுடன், ஒப்புவமை யில்லா முப்புரிநூலுங் கற்பகமாலையுங் கந்தமுந் தந் தான் அவற்றையெல்லாம் அன்போடும் பெற்றுக்கொ ண்டு, ஊர்வசியம்மனை உள்ளத்தில் நினைத்துப் பஞ்சாயு தனைப்போலும் – செஞ்சிலை மதனைப்போலும்-அஞ்சன மேனியின் அழகனுபமைந்து விளங்கிய அக்காண்டீப னென்னுங் காளையானவன் அக்கினிதேவனால் அநுமக் கொடியும் அஸ்வகதியும் வரும்படியாகச் செய்துக்கொ ண்டு, சகலாபரண பூஷிதனுப்ப் பூரணவலங்கிர்தத்துட னிருந்து, உத்தரகுமாரனைப்பார்த்து, அப்பா மச்சநாட் டாசே! நமதுதேரில்நாட்டியிருக்குஞ் சிங்கக்கொடியை மாற்றி, அண்டமுகடதிர ஆகாயமார்க்கமாய்வந்த அநு மக்கொடியைஅமைத்திடுகவென்றுசொன்னான். அவனு மவ்வாறேயமைத்து, தனது சிங்கக்கொடியை வன்னிம ரப்பொந்தில் மறைத்து வைத்தான். அஃதெப்படியிரு ந்ததென்றால்-அர்ச்சுனனுடைய அநுமக்கொடியை உத் தரகுமாரனுடைய சிங்கக்கொடியானதுகண்டு துவண்டு நாமிந்த அநுமக்கொடிக்குச்சரியாகமாட்டோம். இந்த அநுமாரானவர் இராம ராவண யுத்தத்திற் சங்கைதீர்த் திருக்கின்றவர். என்று தைரியம் விட்டுச் சந்துபார்த்து நுழைந்து ஒளித்துக்கொண்டதுபோ லிருந்தது.

இப்பால் அருச்சுன ராஜனும் உத்தரகுமாரனும் ஒருவரையொருவர்நோக்கிக்களித்து, அவ்விடத்திருந்த காளிகாதேவியைக் கைதொழுதெழுந்து, இரதமீதேறி, ஆகாயமளாவித் தழைத்த வன்னிமரத்தை வலம் வந்து தொழுது, விஜயகாண்டீபவில்லைநிறுத்தி, வாசமலர்மாலை சாத்திப் பூசைபுரிந்து, இருகுதையும்வளைய நாணேற்றி ஷ்டங்காரஞ் செய்தான். அக்குணத்தொனியினால் உல கெலாம்பெயரும் ஊழிக்காலம்போ லோசையெழுந்து, எங்கு நெருங்கிப் பொங்குங் கடல்போன்ற கௌரவச் சேனைகளெல்லாம் நின்ற நிலையில் நிலை தவறிப் போய், யானைவீரர்-அஸ்வதீரர் - அழகியதேரர் - அணிபடைக் காலாளர் - அதிரத மகாரத சமரத அர்த்தரதர் முதலிய யாவரும் பேரிடி முழக்கங் கேட்ட பெரும்பாம்பினம் போல் தலையெடுக்கமாட்டாமல் தட்டழிந்தார்கள். அக் காலையிற் கற்பகமாலையணிந்தமற்புயகோலாகல விற்பன விவேக விதரணசாலியான வீபற்சு, யாவருந் திடுக்கிட் டுக் கண்கலங்கும்படியாகத் தேவதத்தத்தையெடுத்துத் தனது செவ்வியவாயில்வைத் தூதினான். அவன் செய்த சங்கத்தொனியால் மகமேருமுதலாகியமலைகளும் அதிர் ந்து, கடலுங் கீழ்மேலாகக்குழம்பி, சப்தமேகமும் பிதி ர்ந்து, அஷ்டநாகமுஞ்சிதைந்து, நக்ஷத்திரங்களும் உதி ர்ந்து, அண்டமுகடுகளெல்லாம் விண்டு கடகடாயனமா யின. இவ்வித சங்கத்தொனியினாலும் வின்னாணோசை யாலுந் தேரிற்கட்டியபுரவிகள் பதைத்து, சாரதியாகிய உத்தரகுமாரனுஞ் சங்கடப்பட்டுத் தலைநட்டுக்கொண்டு கையிற்பிடித்த கடிவாளத்தையும்விட்டு, கண்பொறி கல ங்கச் செவிடுபட்டு, உணர்வுகெட்டு ஒடுங்கி வீழ்ந்தான். இவ்வாறு நடுங்கி யொடுங்கி நிலத்திற்சாய்ந்த உத்தரகு மாரனைக் காண்டாவனதகன காண்டீபன்கண்டு, தனது நீண்டகைகளா லெடுத்தணைத்து, ஆலவட்டங்களினு

லுஞ் சாமரைகளினாலும்விசி ஆயாசந்தணித்து, விபர்வு போக்கி, அயர்வுநீக்கி, பன்னீர்தெளித்து, வெந்நீரளித்து, விடாய்ப்பட்டிருந்த களையை யாற்றினான். அப்போது களைதீர்ந்தெழுந்து கண்விழித்துப் பார்த்த உத்தரகுமாரன் நடுக்கமுங்கவலையு நீங்காதவனாய், கும்மென்று காதடைபட்டு ஈனசுரமாகிப் பேசினான். அந்தப் பிள்ளையை அருச்சுனன் இரக்கமாகப் பார்த்து, ஓ பொருப்பைக் குடைந்து கடைந்து பொருந்திய புஜபூரிப்பைப் படைத்த விராடர்கோனளித்தபுனிதகுமாரனே! புகழ்கொள் விநோதனே! நான்செய்த சங்கத்தொனியினால் ஐம்புலாதிகளு மயங்கி அவசமடைந்த உன் பேதைத்தனம் யாதோவென்று கேட்டான்.

அக்கால் உத்தரகுமாரன் சிறிது தலையெடுத்துப் பார்த்து ஐயா! சப்தசமுத்திரங்களும்பொங்கி வழிந்து உலகமழியுஞ் சர்வ சம்ஹார ஊழிக்காலத் தோசையென்பது தேவரீர் முழக்கிய சங்கோசையைப்பார்க்கிலும் பெரிதா யிருக்குமோ? எல்லாவுலகினு மெழும் பற்பலவோசைகளியாவும் இப்போதிவ்விடத்தில் உமதுவில்லாலுண்டாகிய விபரீதவோசையைப்போல விந்தை விளக்கவல்லவோ? இத்தன்மையாகிய பேரோசையைக்கேட்ட தேவர்களிலுந் திக்குப்பாலர்களிலும் யார்தான்பயந்து மயங்காமற் போவார்கள்? யார்தான் திகிலடையமாட்டார்கள்? அப்படிக்கிருக்க, உமதுகால்மாட்டிலிருந்த நான்பயப்பட்டுவிழ்ந்தது பெரிதல்லவே. அந்தமட்டும் உயிர்தப்பிப்பிழைத்துத் தேவரீருடன் பேசப்புறப்பட்ட நான் மிகவுந் தைரியசாலியல்லவோ? முத்தொழில் நடாத்துகின்ற மூவருநடுங்கு முழக்கத்திற்குச் சித்தப் பிரமைகொண்டு தேறியவென்னை ஆதரித்தருளும். ஓ அருச்சுனராஜனே! இனி நானென்னசொல்லப்போகிறேன்? என்றிரங்கிய விராடராஜகுமாரனை அருச்சுனன் அன்புடனோக்கி, தோளுடன்மார்புதோயத்தழுவி மாதவமுனிவரால் தான்கற்ற மயக்கந்தீரு மந்திரத்தை உபதேசித்து, ஓ உத்தரகுமாரனே! உனக்குங் குதிரைகளுக்கும் இனியொருநாளும் பயமில்லை. ஈரேழுலகுங் குலுங்கினாலும், ஓரேழ்கடலுங் கலங்கினாலும், என்றென்றைக்குங் கவலையில்லா திருக்கலாம் இப்பொழுது விரைவில் தேர்செலுத்தென்று தனஞ்சயன்சொன்னான் அச்சொல்லைக்கேட்ட மச்சராஜன் மதலையானவன் தனக்கு அருச்சுனன்கிடைத்தஆசையினால் அன்புமேலிட்டு, கையிற் கடிவாளம் பிடித்து, உச்சவான்கதிர்த் தேரிற்பூட்டிய பச்சைமாவோரேழையும்மோட்டிய அருணனைப் போற் சவ்வியசாசியின் சுவேத வாம்பரிகளையொப்ப விளங்கிய குதிரையைப் படபடவென்றுசெலுத்தினான். அப்பொழுது பனியினால் மறைபப்பட்டு ஒளிமழுங்கி உடலொடுக்கியிருந்த சூரியனானவன் தனது ஆயிரங்கிரணங்களோடும் அலைகடன்முகட்டில் உதயமானதன்மைபோல், பேடியுருவால்மறைந்துபெருமைகுறைந்திருந்த அருச்சுனன் பேசுதற்கரிய தன் பின்னழகும் முன்னழகும் பிரகாசிக்கச்சிறந்தது. நெடுஞ்சிலையுங் கொடுங்கணையுங் கைப்பிடித்து, கௌரவ முதல்வன் சேனையிலுள்ள நிருபர்களியாவரும் நடுநடுங்கி நாவறண்டு கிடுகிடுத்துப் போகும்படியாக அவர்களுக்கு நேராகத்தோன்றினான்.

அருச்சுனன்வரவைக்கண்ட துரோணர் துரியோதனனுக்குணர்த்தி யறிவுறுத்தல்.

இவ்விதமாகிய அழகிய தேர்மேல் வந்த அநுமக்கொடிக்கதிபனை வீஷ்மர் முதலாகிய வீரர்கள் கண்டு, வேறுவேறெண்ணங் கொண்டு, விருதுமுதலிய வீரசின்னங்களெல்லாஞ் சோரநின்றார்கள். அவ்வேளையில்நான்மறைக் கொடிபடைத்த துரோணாச்சாரியார் பாம்புக்கொடியும் நந்தியாவர்த்த மாலையுமுடைய துரியோதன மஹாராஜனைப் பார்த்து, ஓ வணங்காமுடி பெற்ற மகிபனே! இதோநமக்கெதிரில் இசைபெற்றவிஜயன் சர்வசம்ஹாரகாலக் கடவுள்போற் சலனமில்லாமல் வருகின்றான்பார். அவனூர்ந்துவருகின்ற தேர்வேகத்தினால் இந்தப் பூமியைத்தாங்கும் பணாமகுடமுடைய ஆதிசேடன் என்னபாடு படுகின்றானோ? அந்தத்தேரிலிருக்கிற மகாபுருஷன் கைப்பிடித்திருக்கும் வில்லினது நாணோசையால் தேவலோகம் எப்படி தத்தளித்ததோ! அவன் போர்முகத்தில் முழக்குஞ் சங்கத்தைப்பூரித்த பேரொலியானது எட்டுத்திக்கையுஞ் செவிடுபடுத்தாமல் விட்டுவிடுமோ? ஒண்டித்தேரும்ஒற்றைவில்லுங்கொண்டு ஒன்றுக்கும் அஞ்சாமல் தனிமையாய்வருபவன் எப்படிப்பட்ட வீரனா யிருக்கவேண்டும்? இவ்விடத்தி லிருப்பவர்கள் இன்னாரின்னாரென்றறியாமலும் - நன்மைதீமைகளை நாடாமலும் - நம்மோடெதிர்த்துயுத்தஞ்செய்யவருகிறவன், அசகாயசூரனென்றுந் திடதைரிய தீரவீர பராக்கிரமமுள்ளவனென்றுந் தேர்ந்தாயோ? எப்போதும் யாதொரு காரியங்களையுஞ் செவ்வையாக நிதானித்து யோசிக்கவேண்டியதே. ஐயா துரியோதனராஜனே! ஜோதிப்பிரகாச குண்டலமும், சுடர்விடு கதிர்மணி மகுடமும், உதயகிரியிலெழுந்த சூரியன்போற் றுலங்கும்படியாக வருகிறவன் இந்திரன் மைந்தனென்பதற்குச் சந்தேகமில்லை அதற்குத் திருஷ்டாந்த மென்னவென்றால் - சந்திரனைப்பாதியாகப்பிளந்ததையொத்த கோரதந்தங்கள்பெற்ற கொடிய இராக்ஷசப்படைகளை அடியோடு மடியப்படுத்திய அநுமக்கொடிக்காட்சியே சாட்சியாக விருக்கின்றது.

அன்றியும் - அவன்வருகிற திறத்தை நோக்குமிடத்தில், வெற்றிபெற்ற வில்லைப்பற்றி ஈரேழுலகையும்

இன்றே வென்று செல்லுவேனென்று இறுமாப்படைந்து, யாவரையும் ஒருபொருளாக வெண்ணுமல், யானைகளைநோக்கித் தாவுகின்ற ஆண்சிங்கம்போல் வந்து விட்டான். மேல் நடக்கவேண்டியதென்ன? இனிச்சும்மாவிருப்பது காரியமல்ல. அவனே? இனி நமது சேனைகளை வீரியங்கெடச் செய்து, சூரியனுக் கெதிர்ப்பட்ட பனிபோ லோடப்பண்ணுவான். அல்லாமலும்-ஆழ்ந்தபோறிவுடைய அவ்வருச்சுனன் இங்குசூழ்ந்த நமக்கெதிரில் வந்து வெல்லவேண்டுமென்று வில்வளைத்தானுகில், இவ்விடத்தில் நிறைந்த பெருங்கும்பலில் அவனேடெதிர்த்துப் போராடத் தக்கபேர் யாரிருக்கின்ருர்கள்? ஒருவேளை அவனுக்குத்தப்பிஓடிப்பிழைப்போமென்ருலோ? அவன்கையிலிருக்கும் அஸ்திரவலிமையால், அதலசுதலபாதலம்போனாலும் அங்கும்வந்துபோர்புரிந்துகொல்லுவான். நாம் அறிந்த அருச்சுனனே அல்லது வேறல்ல. ஆகையால் நடுவென்று நினைக்கிறேன். நம்மோடவன் எதிர்ப்பதற்கு முன்னே அஸ்தினபுரத்திற்குப் போய்விடுவோமாகில், ஒருவருக்கும் ஒன்றுமில்லை. ஊர்சிரிக்கும் பழியுமில்லை யோசிக்கு மிடத்தில் வேறு வழியுமில்லை. அப்படிக்கல்லாமல் தானென்னுங்கருவத்தால் தலைகாட்டி நிற்போமாகில், என்றைக்கும் அவனைவெல்லும் வல்லப நமக்கில்லாதிருந்தாலும், இன்றைக்கு நிச்சயமாக நாமவனைச் செயிக்கமாட்டோம். அதேனென்ருல்-நாம் நாடுவிட்டுப்புறப்பட்டதுமுதல் மாடுமடக்கிய யீதுவரையில்நேரிட்டதுற்சகுனத்தினுலும், மனச்சோர்வினுலும், வெற்றிபெறுவது அரிது. ஆதலால் – நாமடக்கிய பசுக்கூட்டங்களை ஓட்டிக் கொண்டு, பட்டினம்போய்ச் சேருவோமாகில், நமக்கு லாபமுண்டு, நாம்பயந்து ஓடிவிட்டோமென்று யாரும்பழிபார்கள். அதற்கு ஓர் உபாயமுமுண்டு. அவ்வுபாயமென்னவெனில் குருகுலநாயகனுகியவீஷ்மரும்-கிருபாச்சாரியரும்-அஸ்வத்தாமா முதலியபலரும்-நானும் இங்ஙனநெருங்கிநின்று, எதிர்வருகின்ற தனஞ்செயனை மறித்து யுத்தஞ் செய்கின்ேரும். நீயும்-உனக்குரியசிலவேந்தரும்-வீரர்களும் - பாதிச்சேனைகளும்-மடக்கிய பசுக்கூட்டங்களோடு இவ்விடம்விட்டுப் பெயர்ந்து, அரவக்கொடிநாட்டிய தேரைத் திருப்பிக்கொண்டு தேசம்போய்ச் சேர்ந்துவிடு. அப்படிபோய்ச் சேர்ந்துவிடுவையாகில் துரியோதனராஜன் பெரும்படையுடன் வந்து விராடராஜனுடைய பசுமந்தைகளை மடக்கிக்கொண்டு போய்விட்டானென்று உன்னைப் பலருங் கொண்டாடுவார்கள். (ஆரியக்கூத்தாடினுலுங் காரியத்தின்மேற் கண்.) என்பதையோசிக்கவேண்டும். அப்பனே! நான் சொல்வது உனக்கு ஒப்போ? அல்லது தப்போ? நன்ருயோசித்துச் சொல்லென்று துரோணுச்சாரியர் கேட்டார். அவருரைத்தசொற்சுசகத்தையுணராத துரியோதனன் பதைத்துச் சொல்லுகிருன்.

துரியோதனன் துரோணர்கூறியதைக்கேட்டு வெறுத்துக்கொண்டு மற்றயரை யுத்தத்திற் காயத்தப்படுத்துதல்.

வாரும் சதுர்வேதபாராயணராகிய தநுவேதியரே! பாண்டுபுத்திரர்கள் எங்கள்மாமனிடத்திற்சொக்கட்டாடித்தோற்று, நீர்வளனுற்றநாடும் - சீர்நலனுற்ற நகரும் - மற்றும் பற்பல செல்வங்களுஞ் சேனைகளும் இழந்து, பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமுமொழித்து, ஒருவருக்குந்தெரியாமலிருந்து வெளிப்படும்படியாக உங்களைப்போல் தேறித்தெளிந்த பெரியோர்களால் நிச்சயித்த நிபந்தனையை ஒத்துக்கொண்டகாலத்தில், மற்றொருவிதம் நிர்ணயம்பண்ணியிருந்ததை மறந்து பேசுகின்றீரோ? ஐயரே! ஐவரும் உருவமறைந்துகருவங்குறைந்து அஞ்ஞாதவாசத்திலிருக்கும்போது அவர்கள் இன்ன இடத்தில் இருக்கின்ருர்களென்று நாமறிந்தால், அன்றுமுதல் மீட்டும் பன்னிரண்டு வருடம் வனவாசம் பண்ணி ஒருவருடம் அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டுமென்று ஸ்தாபித்திருக்கிற மொழிப்படிக்குச் சத்தியந் தவருமற் போக்க வேண்டுமல்லவோ? அப்படியிருக்க, அந்த அஞ்ஞாதவாசத் தவணைநாள் அகல்வதற்குமுன்னே எப்படிவெளிப்படலாம் என்னுடைய நல்லகாலம் இப்போதுவருகிறவன் அருச்சுனனுக விருப்பானுகில், நமக்கு மேலான நியாயவழியைத்தருமல்லாமல், தாழ்வானதீமையைத்தரமாட்டாது ஓ தநுர்வேதியனே! மாறுபட்டுப் போராடும் பெருஞ்சமர் வல்லவராகிய பாண்டவர்கள் இந்தமச்சநாட்டிலிருந்தவாறு தெரியாமலா வந்தோம்? ஏதோ சிலகாரணங்களால் தெரிந்ததினுலும் விராடபுரத்தின்மீது நமக்கிருந்த வெகுநாளைப்பகையை முடித்துவிடவேண்டுமென்னும் எண்ணத்தினுலும் ஓரேமனதாய் முன்னுடித்திரிகர்த்தனை யனுப்பிவித்து, பின்னுடி நாமெல்லோரும் ஆலோசித்து, பஞ்சவர்களின்அஞ்ஞாதவாசத்தைக்கெடுத்துவிட வேண்டுமென்று தானே வந்தோம்? ஐயா துரோணரே! இப்படியெல்லா மிருக்க, அருச்சுனன்வந்தானென்றுஎன் அதைரியமாகப்பேசுகின்றீர்? ஐயோ நானேவந்து நமக்கெதிர்நின்று யுத்தஞ்செய்யத் தொடங்குவானுகில், நாம் அவனுடன் பகைத்துப் போர்புரிய வேண்டிய அவசரமில்லையே; விவகாரமென்கிற கயிற்றினுல் அவனையும், அவனுடைய சகோதரர்களையும், அவனுக்குச் சகாயமான பேர்களையுங் குண்டுக் கட்டாகக்கட்டி யுருட்டிவிடலாமே: அவனெவ்விதம் நம்மை வெல்லக்கூடும்? நாம் கைக்கொண்டமாடுகளை அவனெவ்வாறு கைப்பற்றக்கூடும்? அவன் கழிக்க வேண்டிய அஞ்ஞாதவருஷத்தவணையில் இன்னும் ஒருநாள் போக்கவேண்டியதாயிருக்கிறது. எங்கள்குலமுதல்வாகிய வீஷ்மருக்கு

இந்த வித்தியாசங்களெல்லாம் நன்றாய்த் தெரியவரும். அந்தமறைநூபாவரே இந்தவிவகாரத்தைக்கண்டறிந்து, மறுபடியும் பாண்டவர்கள் வனவாசம்பண்ணும்படிக்கு ஸ்தாபிக்கப் போகின்றார். இதற்குள் நீரேன் அத்திரப்படுகின்றீர்? உயுத்தத்திற் கிளைத்த உலோபரைப்போல் என்னை யாருக்கு ஓடிப்போவென்று உறுதிசொல்லவந்தீரே, என்னகாரணத்தால் இவ்வாறுகூறினீர்? நல்லது.

ஓ துரோணரே! நீர் சொல்லியவண்ணம் ஒண்டித்தேர்மேல் வருகின்றவன் தனஞ்சயனுகிச் சண்டைதொடுத்தாலும், அவனுக்குச் சகாயமாகத் திக்குப்பாலர்களடுத்தாலும், தேவர்கள் - கந்திருவர் - அரக்கர்-யக்ஷர்-இயக்கர்-அரசர்முதலியோர்கள்வந்து என்னுடன்போர்கொடுத்தாலும், நம்மை அசைக்கப்படாது. எப்படியும் நாமெண்ணிய எண்ணம் பழுதுபடாமல் மாட்டுமந்தையைமடக்கி நமதுவசம் பண்ணிக்கொண்டோம். நாமுந்துணிந்துவந்திருக்கின்றோம். ஆகையால் இவ்விடம்விட்டுப் பெயராமலிருந்து, ஒருகைபார்த்து வென்று, வருகிறவிரனைப் புறங்கண்டு, விபகார மேற்கொண்டு, ஜெயபேரிமுழக்கி என்தேசத்திற்குப் போவேனல்லது, திருடனைப்போற் பதுங்கி ஓடிப்போக மாட்டேன். ஓ நூலுணர்விற்பயின்ற நுண்ணியனே! இதுவரைக்குஞ் சத்துருக்கள்பேரில் யுத்தம் பண்ண வேண்டுமென்று சொல்லுமுன்னமே கண்கள்சிவந்து, கறுவிப்புகைந்து, நைதேர்ந்தகாரியவான்கள்போல் மேகமண்டலம் அளாவிய தேர்மேலேறி, ஆயுததீர ஆபார வீராவேசத்துடன் அடுத்து, வீரச்சேவகங்காட்டி, எட்டுத்திசையிலும் இசையை நாட்டிவந்த உங்களுடைய பகல்வேஷமெல்லாம் மெய்யென்றுநம்பியிருந்தேன். இப்போதுவெட்டவெளியாயிற்று. ஐயா! நமக்கெதிரோடிவரும் பகைவரைக் கண்டவுடன் வருந்தி மயங்கி வாடி, ஒருவர்முகத்தை யொருவர்பார்த்து நெடுமூச்சுவிட்டு, நீ நாட்டைநோக்கி ஓடிப்பிழை. நான் காட்டைப்பார்த்து நாடிப்பிழைக்கிறேன். என்று கண்கலக்கப் படுவதற்குத் தானோ இவ்வளவு பிரயாசமெடுத்துக்கொண்டு வந்தது? என்னத்திற்காக இவ்விடம் வந்தோம்? புறங்கொடுத்தோடுவதற்கா? இதை நீர் நன்றாய்த் தெளிந்து சீர்தூக்கிப்பாரும். ஓ தேசிகனே! விற்றிறமேன்மையடைத்த வேந்தர்களானால், இந்தவிஜயனுக்கெதிர்நின்றுமேன்மையடைத்துச் செயம்பெறுந்திறத்தை ஒருபொருளாகச்சிந்தையில் நினைக்கமாட்டார்கள். நீர் அத்திறத்தினுக்குரியரல்லாத அந்தணராதலால், அப்பப்பா!! அவன்மகாதீரனோ? வீரனோ? ஆவியைக்கொள்ளைகொள்வானே! எப்படிவெல்லப்போகின்றோம்! என்றுசொல்லித்தளருகின்றீர். உமதுசொல்லைக் கேட்டு மீதலத்தோரும்-பூதலத்தோரும்-கலகலவென்று கைகொட்டி நகைப்பார்கள். இனி உம்மைக்கண்ட கைம்பெண்களும் அலட்சியமாக நினைத்துப் பகைப்பார்கள். ஒகாயத்திரிதேர்ந்த கலைவேதியனே! மற்போரினிறைந்து விற்போரிற் சிறந்த வானவர்கோன் மகன் வருவதைப்பார்த்து விளைத்துக்கொள்ளாமல் மடங்கி, மாட்டையோட்டிக்கொண்டோடிதுங்கி மாநகர்க்குப் போவேனாகில், அதனாலெனக்கு வருவது வசையோ? இசையோ? அல்லது வருகிறவனைக் கண்டு பயமில்லாமல் எதிர்நின்றுபோர்புரிந்துவென்று ஜெயம் பெறுவது, புகழோ? இகழோ? சொல்லும் ஓ மித்துருவையிகழ்ந்து சத்துருவைப்புகழ்ந்துமகிழ்ந்து பாடாநின்ற நைச்சிகனே! எண்ணிறந்த கோடிகளாக இவ்விடத்திற்கூடிய நமது வீரப்படைகளெல்லாஞ் சேர்ந்து ஒருவனாகத் தனித்துவாரநின்ற வில்லாளியைச் செயிக்கமாட்டார்களென்றால், ஒற்றைத் தேரோட்டி வருகின்ற ஒருவன் இத்தனைபேர்களையும் எப்படிசெயிப்பான்? வருகிற சுத்தவீரன் தன்பிராணனைத் துரும்பாக மதிப்பவனென்றால், அத்தன்மையானபேர் நமதுசேனைகளிலில்லையோ? ஆகிலும்போர்செய்யப்புகுந்தபேருக்குப் பிராணன் பெரிதோ? கடல்சூழ்ந்த உலகத்திற் பெருமையும் மானமும்போனபிற்பாடு, சஞ்சாரப்பிரேதம்போற்பிராணனுடன் இருப்பதில் என்ன பிரயோசனம்?

ஆ புண்ணியபூசுரனே! இனிநான்பலவாறாகப்பேசுவதில் லாபமில்லை. ஓரேவசனஞ் சொல்லுகிறேன் கேளும். இதோவருகிற என்பகையாளியைக்கண்டு பயந்து அஸ்தினபுரத்திற்குப் போக மாட்டேன். எனக்குபகாரம்போற் சொல்லுகிறவர்களின் பேச்சையுங் கேட்கமாட்டேன். இது அவரவர்கள் புத்தியிற் கெட்டியாயிருக்கட்டும். ஆனால் இப்பொழுதுவருகிற அருச்சுனனுடைய சண்டைக்குப் பயந்தவர்கள், ஆவியைக்காக்க ஆசைப்பட்டவர்கள், பெண்சாதிபிள்ளைகள் மீதிலும்-மண் மனையாதிகளிலும்-நிதிநிக்ஷேபங்களிலும் பாசமுள்ளவர்கள். இவர்கள்யாவரும் நன்மையுடன் பட்டினம்போய்ச்சேரலாம். அப்படிப்போக மனதுடையோர்களுக்கு இயாதொரு தடையுமில்லை. போகின்றவர்கள் இவ்விடத்தில் வந்திருக்கும்படைகள் அடங்கலையுஞ் சாய்த்துக்கொண்டுபோனாலும்போகட்டும். என்னநிர்ஷ்டம்போகிறதில்லை ஒருவருக்கொருவர் துணையென்பதில்லை. அவரவர்களுடைய நல்வினை தீவினையே அவரவர்கட்குத் துணையாய் நிற்கும். ஓ அறிவினுயர்ந்த மறைவேதியரே! இதனை நீர் நன்றாயறிந் துட்கொள்ளும். என்று அடங்காக் கோபங்கொண்டு, துற்சாதனன் முதலாகிய தம்பிமார்களையுந் தார்வேந்தர்களையுநோக்கி, விருஷபமுக்காம்போற்கனைத்து, கனல்நெருப்பைச் சிந்தி, அதிகபடபடப்புடன் விரைந்து இதனைச்சொல்லுகின்றான். ஓ என்னன்பிற்குரியதம்பிமார்களே! ஓனக்கு வெற்றியைத்தரவந்த சம்பிரம வீராளாகிய வேந்தர்களே! இப்பிர்ம தேயசுடைய முதற்குலத்தோனாகியும் விற்குருவாகியு மிராநின்ற துரோணச்சாரியர் நன்னெறிகற்ற பெரியோராயி

ருந்து, சமயோசிதப் பேச்சைச் சாதுரியமாகப்பேசி, சாப்பாட்டுக்குச் சங்கடப்படமாட்டாமற் காலபோசனங்கொண்டு காலங்கழித்திருப்பதே காரியமென்று ஆரிய சித்தாந்தமுதலிய சாஸ்திரம் யாவும் படித்தவர். அன்றியும் - தனுர்வேதத்தி லுள்ளனவெல்லாந்தப்பாமலுணர்ந்து புத்திமான்களுக்குப் போதிக்கத்தெரிந்தவர். வாதித்தெதிராகின்ற சத்துருக்களைச் சேதிக்கச்சென்று யுத்தங்கண்டு வென்றுவருகின்ற வீரத்திறம் இவருடைய தொழிலன்றென்று நன்றாய்ப் பிரசித்தமானவர். ஆகையால் - இப்பேர்ப்பட்டவரை நீங்கள் நம்பியிராமல், வருகிற எதிரியென்னும் போர்யானையின் முனைபுகுந்து, தனிமுகச் சிங்கம்போற் சாதித்துவிடுங்கள். சண்டைபோடப்பயந்த வைதீகர்களெல்லோரும் அர்த்ததப்ப படைக்குப் பின்னாலேநின்று, நமக்குச் செயமுண்டாகும்படியாகச் செபம்பண்ணிக்கொண்டிருக்கட்டும். உங்கள்வேலையில் நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள். ஒருவருதவியைப் பார்க்கவேண்டாம். விரைவிற் படைகூட்டிப் போங்களென்றுரைத்தான்.

அவ்வத்தாமன் தன்தந்தையை நிந்தித்த துரியோதனனைக் கடிந்து தூறுதல்.

இப்படியாக துரியோதனன் சொன்ன சொல்லானது அங்ஙனமிருந்தபேர்களின் செவிகளில் நுழைவதற்கு முன்னமே துரோணாச்சாரியர் குமாரனான அஸ்வத்தாமன் கேட்டு, நெருப்பில் வீழ்ந்த புழுப்போற்றுடித்து, கண்கள்சிவந்து, பொறி பறந்து, புகைமலிந்து, பொருப்புக்கிணையானபுயம்படைத்தஅப்புயங்ககேதனனைப் பார்த்து, ஆ! ஆ! வணங்காமுடியுடைய மன்னனேயென்று கூவி, மத்தகஜம்போற்சீறி, அன்புக்கொருவராகிய வீஷ்மாச்சாரியரும் - கிருபாச்சாரியரும் - கர்னமகாராஜனும் - துற்சாசனன் முதலிய தம்பிமார்களும் - மன்னர்மண்டலீகரும் - மற்றுமுண்டான முடிமன்னரும் கண்ணிரண்டுமூடிக் காதிரண்டுமடைத்து உள்ளங்கலங்கி உடல்நடுங்கி உயிருமொடுங்கும்படிக்குச் சில வார்த்தைகள் சொல்லத்தொடங்கினான். ஓ கௌரவகுலாதிபனே! நாம் அஸ்தினாபுரத்தைவிட்டு வந்ததும், விராடராஜனுடைய பசுமந்தையை மடக்கிக் கொண்டதும், கூட்டமாகிய நால்வகைச்சேனைகளை வரிசைப்படுத்தி வைத்ததும், ஜெயம்பெறுவதற்கோ? அல்லது அபஜெயமடைவதற்கோ? நீர்சொல்லும். அப்படிக்கிருக்க - நீர் வீரலட்சுமி வாசமாயிருக்கும் வெற்றிவேல் பெற்ற துரோணாச்சாரியருடைய மனதுநொந்து நையும்படியாக வசைமொழிகளை வழங்கிவைத்தது தகுதியோ? ஓ கூறியவேலும் வில்லுங்கொண்ட கோமானே! நீர் பிள்ளையாகப் பிறந்தநாள் தொடங்கி இதுவரையிலும் யுத்தமென்பது செய்து எங்கே வெற்றியடைந்திருக்கின்றீர்? இந்தவிராடபுரத்திற்குவந்து பசுக்காவலாளரையடக்கிப் பசுமந்தைகளை மடக்கிவிட்டீர். இதுவொரு ஜெயம். முதலில் சுகமாயிருந்த பாண்டவர்களை யழைத்து மோசச்சூதாடிப் பூமி முதலிய செல்வங்களை அபகரித்துக்கொண்டு காட்டினுக் கோட்டிவிட்டீர். இதுவொரு ஜெயம். இதுதானே நீர் கண்காட்சியாகக் கண்டிருப்பது. இதைவிட வேறுசொல்ல போக்கியம் உண்டா? என்னமோ பெரிய யுத்தங்களெல்லாஞ் செய்து, சூரர்களைவென்று, வெற்றிமாலை பூண்டு, கோட்டை கொத்தளங்களை முற்றுகையிட்டதுபோல் மெத்தமெத்த இறுமாந்து பேசுகிறீர். இதென்ன கட்டுவார்த்தை? இந்த வீரம் ஒருதுட்டு பெறுதே; நமது திறத்தை நாமேயெடுத்துப் பேசிக்கொள்ளுகிறதா? இது நன்றாயிருக்கவில்லை போம்: போம்:

ஓ ராஜனே! இராஜசபையிலிருக்கும் பெரியோர்களுக்குக் கடமையென்னவென்றால் - காமாகார்களாகிய காவலருக்குக் காரியா காரியங்களைக் காட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்பதாக நீதிநூல் முறையிடுகின்றது. ஆதலால் - அந்த நீதிப்பழக்கத்தையும் உலகவழக்கத்தையும் அநுசரித்து, உமக்குச் சொல்லவேண்டிய தருமத்தைச் சொன்னாராக்கும். அவ்வாறிடித்துச் சொல்லுந் தருமவாக்கியம் உமக்குச் சம்மதமில்லாமற் போனால், அவருடைய சொல்லுக்குக் காதுகொடுக்காமல், வருகிற வீரனுக்கு யெதிரிற்போய் நின்று போர்புரியலாமே: அப்படிக்குப்போகிற உமது வீரத்திறத்தையார்தடுத்தவர்கள்? நீரென்ன சண்டைபோடாதவரா? இதுகாறும் நீர் புகுந்த போர்முகத்தில் எங்கேயாகிலும் அடிபட்டும் - புறங்கொடுத்தும் - ஓடியிருக்கின்றீரா? இல்லையே கையில் வில்லுங்கணையுமிருக்கச் சத்துருக்கள்கையில் அகப்பட்டுக்கொண்டு சண்டைபோட மாட்டாமற் கட்டுப்பட்டிருக்கின்றீரா? இல்லையே: இப்போதுதானென்ன நீர் தேரேறிப் புறப்படுவதுதான் தாமதம். துரியோதனமஹாராஜன் வில்வளைத்தானென்று கேட்டவுடனே போர்முகத்திலுள்ள அதிரதவீரர்கள் முதலியபேரும் அபஜயமடைந்து உயிர்தொலைவார்கள். அப்பேர்ப்பட்ட வாகைபெருஞ்சேவகனாகிய பூபதியைப்பார்த்து நீ மாட்டை யோட்டிக்கொண்டு ஊர்முகநோக்கி ஓடிப்போவென்று இந்த விருத்தவேதியர்சொல்லலாமா? ஐயோ! உத்தமனே! அவர்சொன்ன சொல்லானது நீர் யிதுவரையிலும் பெற்றிருந்த வீரத்திற்கு மிகவுங் குறைவாயிற்றே: அய்யா அய்யா சுத்தவீரனே! சமர்க்களத்திற் சகல விருதுகளோடு நின்று சத்துருக்களைமடக்கித் தனுர்வேதவிதிப்படி யுத்தஞ்செய்து வெற்றிபெறும் விதத்தை என்னென்று நினைத்திருக்கின்றீர்? சகோதரர்களிடத்திற் சூதாடிப் பூமியைப்பறித்து, ஜேஷ்டபிராதருவின் பெண்சாதியான திரௌபதா தேவியென்னுந் தாயைத் தலைமயிரைப்பிடித்திழுத்து, சபைநடுவே வஸ்திரத்தை உரிந்து மானக்கேடுண்டாக்கி,

காட்டுக்கு வழிகாட்டிவிட்ட கதைபோல் நினைத்தீரோ? அல்லது - உமது மாமனாகிய இச்சகுனி முதலியபேர்கள் வாய்கொண்டமட்டும் பேசிச்செயித்த வீரமென்றெண்ணினீரோ? ஐயோ! அப்படிச்செயித்த அனியாயச்செயமெல்லாங் கருமபூமியிற் பாபமென்னுங் காணியாட்சியைக் கொடுக்கத்தக்கது. இப்போது வந்திருக்கின்ற போரை அவ்வளவு எளிதென்று எண்ணுநீர் வருகின்றவன் தனஞ்செயன். அவனுக்கெதிரிலிருந்து வில்வளைத்துப் பாணந்தொடுத்து யுத்தம்பண்ணியே தீரவேண்டும். சூதாடித்தோற்ற அந்த நாளையிலிருந்த அருச்சுனன்தானே யென்று அலட்சியமாய் நினைக்காதீர். இந்தநாளையில் உங்களை யெளிதில் விடுவானென்று எண்ணங்கொள்ள வேண்டாம்.

உமதம்மானான சகுனிராஜன் உமக்காகப் பாடுபட்டுச் சம்பாதித்த தருமமானது, சீக்கிரத்தில் இரண்டுருண்டு வளர்ந்து இப்போதவந் தெதிர்ந்துகொண்டது, இதைக்குறித்து நீரொருவருக்குச் சொல்லவேண்டிய அவசாமில்லை. நீர் யாரையுந் துணைப்பற்ற வேண்டாம். நீரொருவரை விரும்பித் துணைவரக்கேட்பீராகில் யாருந்துணையாகமாட்டார்கள். அந்த ஆசையை விட்டுவிடும் சூதாடி உமக்குச் சந்தோஷமுண்டாகப் பண்ணினவர் இதோ உமக்கு நேராக நிற்கின்றூர். இப்போது நேரிடப்போகின்ற போர்முனைக்கெதிரில் அவரைப் போகச்செய்வது ஞாயம். ஆயுதபாணியாய் அவர் போர்மேற்புறப்படும் விதத்தைப்பாரும். நல்ல நல்ல ஆயுதங்கள் அவரிடத்தி லிருக்கிறது அவ்வாயுதங்கள் யாரொருத்தர் தன்னை எதிர்க்கிறூர்களோ? அவர்கள் குடித்தனத்தைக்கெடுத்துவிடும். அப்பேர்ப்பட்ட ஆயுதமிருக்க உமக்கென்னகுறைச்சல்? அத்தன்மையான ஆயுதம் எத்தன்மைப்பேருடையதென்றூல், பன்னிரண்டு-எட்டு-இரிக்கால் - தொகை-என்னுஞ் சிறந்தபேருள்ளதுகள். இவைகளினூல் கட்டு·வெட்டு-குத்து-பிரித்துவிடு-தனியே ஓட்டிவிடு, கீழேதள்ளி படுக்கவை என்று இப்படிக்கெல்லாஞ்சொல்லி விஜயனுக்கெதிராகி வெல்லுவார். அந்தப் பார்த்தனைவெல்லும்பராக்கிரமம் எங்களைப்போன்றவர்களா லில்லை. எங்களையல்லாமல் நாகலோகத்தார் முதலிய மூன்றுலோகத்தாரும் நானுக்கெதிர் நிற்கமாட்டார்கள். ஒருவரு நிகரில்லாதவனுய் வருகிற அருச்சுனனைக்கண்டு நான் வெல்லுகிறேனென்று வாய்வண்ணம் பேசுகிற வல்லவர்களுமுண்டு. ஆனூல் வாய்ச்சொற்சொல்லுவதற் கென்னபஞ்சமா? வருகிறவனைச் செயிக்கலா மென்பதென்ன கொஞ்சமா? ஓ மதி மாபிற் பிறந்தவனே! பெரியோனுகிய சிலையாரியனை அவமதித்துச் சொல்லத்தகாத சொல்லைச்சொல்லி வெல்லவல்லவனுகியவன் நீரானையால், இதோ நான் சொல்லுகிறேன் கேளும் இந்த மண்டலத்திலும் அந்தவிண்டலத்திலும் அருச்சுனனுக்கு ஒப்புச்சொல்வது தப்பு. அவனுக்கெதி ரொருவருமில்லை. அவனுடைய போர்முனையில் நீர்தானுவது, இன்னும் எப்பேர்ப்பட்டவர்களாவது, இட்டி எட்டிப்பார்த்துவந்தாலும் போதும். அதுவே அவனைச்செயித்த கீர்த்தியிலும் எண்மடங் கதிகமான பெருமையை யுண்டாக்கும். அவனுடைய போர்முகத்தில் நீர்நேர்முகமாகப் போய்வாமாட்டுவீரோ? உமது கண்ணிற்கண்டு கலங்காதிருப்பீரோ? ஓ நாகக்கொடியோனே! உம்மிடத்தில் விசுவாசம் வைத்த ஆசாரியர் எதிரி யிப்பேர்ப்பட்டவன் அவனோடு சண்டைசெய்ய வல்லவர் எண்டிசையிலு மில்லையென்று சொன்னூல், இந்தப்பேச்சுக்குத் தகாதவார்த்தைகளைப் பேசினீர். அருமையறியாத உம்முடைய யுத்தமுனையில் எங்களைப்போன்றவர்க ளிருக்கமாட்டோம், என்று பேசி, தன்தந்தையின் செயலை யெண்ணிவருந்தி, ஆ! பகவானே! இந்தத் திறமுறைதெரியாத துரியோதனராஜனிடத்தில் வீரத்தைவிட்டு நாணமுஞ்செட்டிருக்கிற இந்தத் துரோணுச்சாரியர் தனுமறைக் குருவாயிருந்தும், இவன் பேசிய ஈனவார்த்தைகளைக்கேட்டும், இன்னும் போகாமலிருக்கின்றூர். இவர் இவ்விடத்திலிருந்து சண்டையுஞ் செய்வார்போல் இருக்கின்றது. ஐயோ! அவமரியாதை நேரிட்டபோதே அந்த அரசனுடைய உறவை நீக்கிவிடவேண்டும் அல்லது பேசினவன் பிராணனை அறப்போக்கிவிடவேண்டும் இவ்விரண்டிலொன்றும் இல்லாதிருப்பது மனுஷத்தனமல்லவே: என்று அஸ்வத்தாமன் தன் தந்தையை நொந்துகொண்டு, மீட்டும் அரவக்கொடிக் கதிபனைப்பார்த்து, ஓ அரசனே! இப்போது நான் சொல்லுகிறதைக்கேளும். எல்லாவுயிரையுங் கவரும்படியான எமதருமாராஜனையும், கடல்நீரைவறட்டும் வடவா முகாக்கினியையும், உருத்திரமூர்த்தியின் கண்டத்தைக் கருக்கிய ஆலாலவிடத்தையும், மட்டுப்படாத எட்டுத்திக்கையும், அட்டமாகயத்தையும் ஒருநொடியில் மடிக்கப்பார்ப்போம், அல்லது செயிப்போம். தேவேந்திர குமாரனான சிலைவிஜயனை மாத்திரஞ் செயிக்கமாட்டோம். நீர் உமது சிந்தையில் இதை விந்தையாகக்கொண்டு, மனவுறுதியோடு நின்று, தெளிந்து பார்த்துக் கொள்ளுமென்று கூறினூன்.

கர்னன் துரோணரும் அஸ்வத்தாமனுங் கூறியவற்றைக் கேட்டு மறுத்துத் தன் பராக்கிரமங் கூறல்.

கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே! இந்தச் சொற்களையெல்லாந் துரியோதனராஜனுக்குச் சமீபத்தில்நின்ற கர்னராஜன் கேட்டு, நறநறவென்று பற்கடித்து, வெற்றிமிக்க வீரவேல்பெற்றபெரியோர்களை நோக்கிப் பேசத்தொடங்கினூன். ஓ பூலோகபுரந்தராகிய புநிதர்களே! விராடராஜனுடைய பசு மந்தை

களை மடக்கும்படியாய் நிதானித்து அஸ்தினபுரத்தை விட்டுப் புறப்பட்டநாம், வாசமாலைதரித்து வராநின்ற விஜயனென்னும் வில்லாளியை வியந்து புகழ்ந்துபேசுவது மேன்மையோ? குந்திதேவியின் மைந்தர்தொடுக்குங்கணைக்கஞ்சிப் பயப்படுகிறவர்கள் விருதாவில்இவ்வளவுதூரம் என்வரவேண்டும்? ஐயோ வீட்டிலிருக்கப்போகாதா அப்படியே வேலையினக்கிட்டு வந்தவர்கள் எதிரியைச்செயிக்கத்திறமில்லாவிட்டாலும்வாயைமூடிக்கொண்டு சும்மாவிருக்கலாகாதா? திறவான்களாகிய தீரர்களுக்குநேரில் வாய்க்குவந்தமட்டும் பிதற்றுவானேன்? இவ்வளவு காரியத்திற்குப் பெரியவர்களென்று பேர்வைத்துக்கொள்ளுவானேன்? தனக்குவெல்ல வல்லபமில்லாவிட்டால். தரணியிலுள்ளபேர்களெல்லோரும் வெல்லமாட்டார்களென்று தப்புந்தாறுமாய் வீண்பேசுப்பேசவேண்டிய வேலையென்ன? சுத்தவீரர்கள் மனமுறிய மெத்தவருத்தப்படுத்துவானேன்? இருளைக்கெடுத்துவந்த மத்தியானச் சூரியன்போன்ற நானொருவனுமெழுந்து, நெருப்புக்கொழுந்துபோல் வருகிறவிஜயனையடுத்து, அச்சமில்லாமல் நாணிதொடுத்து, அபாரமாகக் கணைகள்விடுத்து, என்னிச்சையின் படிக்குப் போர்கொடுத்து, அவனேறிவருந்தேரின் அச்சு-மச்சு-குத்துக்கால் முதலியவைகளையுமுறித்து, குதிரை நான்கையும் அறுத்து, காண்டீபத்தையும் அநுமக்கொடியையுங் குறைத்து வெற்றிபெறப்போகின்ற என்வீரத்தை; அருச்சுனனைக்கண்டு கொண்டாடுகின்றவர்கள் அவனுக்கச்சப்படுகின்றவர்கள்-யாவருமிருந்து சாக்ஷியாய்க்காணுங்கள். மேலும்-மண்டலத்தைக்கிறி, விண்டலத்தைப் பிறி, குண்டலமசையவருந்தேரோனாகிய தண்டதரன் தம்பியைக்கண்டவுடனே; எண்டிசையதிர மண்டலாகிர்தியாகிய வில்லைவளைத்து, வருணாஸ்திரப்பிரயோகஞ்செய்து வடவைத்தீவேகத்தை மாற்றுந் தன்மைபோல ஒருகணத்தில் அவன்பலத்தை மாற்றி, நீங்கள் யாவருங்கண்டு கண்களிக்கச் செய்கிறேன். அந்தவிநோதத்தை வேண்டுமானாற் பாருங்கள். இதல்லாமல்-அவன்வனவாசம்பண்ணிய பன்னிரண்டுவருடமும், அஞ்ஞாதவாசமான ஒருவருடமும், துருப்பிடித்து அழுக்கடைந்து மழுங்கிக்கிடந்த காண்டீபத்தையுங் கணைப்பெட்டியையுங் கைக்கொண்டு, நமக்கெதிரிற் கலங்காமல் வருகின்ற அவனுடைய திடத்தையுந் தீரத்தையுந் தேகத்தையுஞ்சின்னபின்னமாகும்படிச்சேதிக்கிறேன். நீங்களெல்லோருங்கூடிப் பார்க்கலாம்.

ஓ பெரியோர்களே! அர்ச்சுனனுக்கெதிரி அங்கர்கோனென்று இச்சகமுதலெங்கும் பிரசித்தமாகப்பேசிக்கொண்டிருக்க, நான் அவனை வெளியில் விடப்போகிறதில்லை. நானும் ஒருவில்லைப்பிடித்து மலைபோலெதிர்த்து மலைந்து, போர்த்திறந்தெரிந்த புண்ணியவான்களைப் போற் புகழ்பெறுகின்ற பிரதாபத்தைக் காணவாருங்கள். குளம்படியாற் கிளம்புமண்பொடிகள் விண்ணிலேயாமலெழவருங் குதிரைகள்பேரிலும், அக்குதிரைகள் பூட்டிய தேரின்பேரிலும், கோடிகோடி பாணங்களைச் செலுத்திக் கொல்லுவதல்லாமலும்; அவனது ஆஜானுபாகுவாகிய கரங்கள்தறிபடவும், கால்கள் முறிபடவும், விரிந்தமார்பு துளைபடவும், அணிந்தமுடியுடன் தலையறுபடவும், விரைந்துபோர்புரிந்து நான்வெற்றிகொள்ளப்போகின்ற விந்தையைப்பார்த்து நீங்கள்மகிழுங்கள். இவ்விடத்திலின்று நானுறுதியாகச் சொல்லுகிறதையாருஞாபகமாய்க் கேளுங்கள். நானிதுவரையில் நரபதியாகிய துரியோதனமகாராஜனிடத்தில் உண்டுவளர்ந்துவந்த செஞ்சோற்றுக்கடனும், கர்னன் - அருச்சுனன்-என்றுசொல்லப்படும் எங்களிருவரில்வல்லவர் யாரோவென்று சந்தேகங்கொண்டிருந்த சகலருக்குஞ் சந்தேகந்தீருஞ் சமயமும், இளமைப்பருவத்தில் தனுவேத பரீக்ஷை பார்த்தபோது அர்ச்சுனன் தலையையறுத்து அரங்கபூசை செய்கிறேனென்று அரசருக்குமுன்னே நான்கூறியிருந்த சபதவார்த்தை முடியுங்காலமும், பற்குனனை வெல்லும் வல்லவரில்லையென்று சிலைபாரியனும் அஸ்வத்தாமனும் பேசிய கூட்டுவார்த்தை கெட்டோடச் செய்யுந் தருணமும் இப்போதெனக்கு நேரிட்டிருப்பதினால்; என் பரமகுருவாகிய பரசுராமர் அற்புதமாகக் கற்பித்துவைத்த அஸ்திரவித்தைகளை நிலைபெறச்செய்து, அவருடைய திருவடிகளைத் துதிக்குங்காலங் கிடைத்திருக்கின்றதை மதிக்கும் விவேகிகளாகிய மன்னவர்களே பாருங்கள். பெருந்தேரிலோங்கி ஒருசிலைதாங்கிவருகிறவனைக் கண்டேங்கி மயங்குகின்ற ஒருகோடி நரபாலரும் என்சுற்றினிலிருந்து, அவனை நானொருவனே சென்றெதிர்த்து வெற்றிபெறும் வேடிக்கையை முற்றிலும் அறியுங்கள். என்று உருத்திரமூர்த்திக் கொப்பான வீஷ்மர் முதலியபேருக்கும் நன்றாய்க் கேட்கும்படியாகச் சொன்னான் அங்கதேசாதிபனான கர்னமகாராஜனானவன்.

கிருபாசாரியர் கர்னன்கருத்தைக் கண்டித்து உல்லங்கனஞ்செய்ய, அதற்கவனிந்தித்தல்.

கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே! இவ்வாறு கர்னராஜன்கூறிய வனைத்தையுங் கிருபாச்சாரியர்கேட்டு மனந்தாளாமல், ஆஹா! அங்கதேசத்தரசாகிய அறிஞனே! நெடியகடல்சூழ்ந்த உலகத்தை யாளுகின்ற அரசருக்கு, சாமம்-பேதம்·தானம்-தண்டம்-என்னுஞ் சதுர்வித உபாயமுண்டு. இந்நான்கில் நீதண்டமென்னும் உபாயத்தை அநுசரித்துச் சண்டைசெய்யக் கற்றிருக்கின்றாயன்றி, மற்ற மூன்று உபாயமும் அறியமாட்டாய்போலுமிருக்கின்றது. அவ்வுபாயமூன்றையும் அறிந்துகொள்ளத்தக்க சுயபுத்தி உனக்கில்லாவிடினும்,

தெரிந்தபெரியோர்கள் சொல்லுகின்ற சொற்புத்தியாகிலுங்கேட்டு நடக்கவேண்டும் தண்டமென்பதைத்தாமதகுணத்தோர் விரும்புவார்கள். சாத்வீககுண முள்ளவர்களுக்கு மற்றமூன்றுந் தகுதியுடையன வாகும். அஃதெவ்வாறெனில் - அரசனானவன் காரியத்தைக்கருதியோசியாமற் பகைவர்மேற் செல்லுதல், அப்பகைவரைத் துன்பமில்லாமல் நிலைக்கச்செய்வதாகும். மேலும்-தொழில்வல்லமையையும். தன்வல்லமையையும்-எதிரிவல்லமையையும்-துணைவல்லமையையும்-ஆராய்ந்து, தன்வல்லமை மேலிட்டிருக்குமாயின் தானெடுத்த காரியத்தை முடிக்கலாம். ஆகையால் - காரியாகாரியங்களெல்லாவற்றையுங்கருதி, பிற்பாடு சமராடப் புகுந்தபேர்களுக்கு எவ்வுலகத்தும் எக்காலத்தும் ஒப்பில்லாக்கீர்த்தியுண்டாக்குமென்று நீதிநூலோர் பேசியிருக்கின்றார்கள். அதுவுமல்லாமல் தன்பலமும் எதிரிபலாபலமும் அறிந்து வீரியமாக யுத்தஞ்செய்யக்கற்ற புத்திமான்களானபோதிலும், (பெரியாரைத் துணைக்கொள்) என்னும் நீதிவாக்கியப்பிரகாரந் தனக்குமேற்பட்ட அகண்ட அறிவாளர்களைக்கேட்டு, அவர்கள் புகன்ற புத்திவழி நடக்கவேண்டும். அப்படிக் கேளாது அரசன் உன்மத்தனாயிருப்பானாகில், அவனது சுகதுக்கத்திற்கொக்கப் பொருந்திப் பக்கமிருக்கும் எம்மைப்போன்ற பெரியோர்கள். அவனுக்கு இடித்துச்சொல்லவேண்டிய கடமை. ஒ திசையளவுநாறும் உதிரப்பசைவீசும் வேலேந்திய கர்னனே! வருகின்றதேர் ஒன்றென்றும், அத்தேர்மேல் வருகிறவன் தனியனென்றும், அவன் கைப்பிடித்த வில் ஒன்றென்றும், அவனெம்மாத்திரமென்றும் வெகுசுலபமா யெண்ணி ஆத்திரப்பட்டுச் சொன்னாயல்லவா? உன்னைப்போலொத்தவன் இவ்வாறுரைத்தால், மாற்றுயர்ந்த பொன்னைப்போன்று வருகின்றவன் உன்னை என்னென்று புகலவேண்டும்? அவனுன்னுவுக் கடங்கினவனா? இலேசானவனா? அந்தோ! இந்தப்பாராளுந் துரியோதனன் முதலாகிய பலபடைமன்னர் கூட்டங்களையும், வீஷ்மர்முதலாகிய பெரியோர்களையும், வீரியம்பேசுகின்ற உன்னையும் என்னையும் ஒருபொருளாய் நினைக்காமல் திரஸ்காரஞ் செய்யத்தக்கவனென்று உனக்குத் தெரியாதா? ஆண்சிங்கஞ்சீறி யானைக்கூட்டத்தின்மீதேறிப்பாயுந் தன்மைபோல் வருகின்றானே: அவனுக்கெதிர்நின்று போராடுபவர்களு முண்டோ? சிவபெருமானொருவரேசென்றுதிரிபுரமும் நீறாகக்கண்டு திரும்பினாரென்பதை இதுவரையிலும் நீ கேட்டிருக்கவில்லையோ? அப்படிப்பட்ட அமலனோடேயே அடல்பெற்று வந்தவன். நம்போலொத்தவர்களிடத்தில் ஒருவனுப்வந்து வெற்றியைப்பெறுவது அருமையோ?

ஓ செருமுகப்புலியே! சீர்படைத்த பாஞ்சாலராஜனுடைய பட்டினத்தில் திரௌபதாதேவிக்குத் திருக்கலியாண முகூர்த்தமென்று சுயவரஞ் சாட்டியபோது மச்சேந்திர லக்ஷியத்தை முடித்து, இச்சைவைத்துவந்த ராஜரெல்லோரையும் ஓடவிட்டடித்து, கச்சணிந்த பெருந்தனக் காரிகையையுங் காண்டீபத்தையுங் கைப்பிடித்து, ஜெயலக்ஷ்மி கலகலவென்று நடித்துவரக்கண்ட காளைவருகின்றான். அக்கால் அவனுடனெதிர்த்துப் போராடுந் திறனுற்றவர்கள் யாரிருந்தார்கள்? சிற்சிலர் வெளிப்பட்டுப் பட்டபாட்டை மறந்தாயோ? ஓ மாலைபுனைந்த மணிமுடிக்கர்னா! நீயந்தச் சுயம்வர காலத்தில் திரௌபதாதேவியைக் குறித்துப் போயிருந்த தில்லையோ? சகலராஜராலும் வளைக்கப்படாத வில்லை நீதாங்கி வளைக்கவில்லையோ? அக்கால் நீயடைந்த அவமானத்தையும், உன்னைப்போற்றுணிந்து வளைக்கச்சென்றவர் இளைத்தோடிய எளிதத்தையும், அங்ஙனமிருந்தோர் பேசிக்கொண்ட அவ்விந்தைப்பேச்சுகளையாவது வேடிக்கையாய்க் கேள்விப்படவில்லையோ? இதன்றியும்-கொடுமையாளராய்த்தொடர்ந்த யதுகுலத்தாரையெல்லாங் குமுக்கிச் செயங்கொண்டு, சுபத்திராதேவியை மணம் புணர்ந்துகொணர்ந்த காலத்திலும்; முப்பத்து முக்கோடி தேவர்கள் முதுகுகாட்டியோட ஓட்டி, அஷ்டவசுக்களுடன் அஷ்டதிக்குப்பாலரும் - சப்தசமுத்திரத்துடன் சப்தமேகங்களும்-சலிக்கக் கெலித்து, காண்டாவனத்தை அக்கினிதேவனுக்கு ஆகாரமாக ஊட்டிவைத்த காலத்திலும்; அளாவிர்தகண்ட முதலாகிய உத்தரகுருகண்டத்திலுற்றோரியாரும் முடிவணங்கித் தொழுது, கண்ணீர்விட்டழுது, எங்களுக்குப் பழுதுவாராமற் காரும். கடைக்கண்பாரும். என்று உபசாரத்துடன் அநேகதிரவியங்கள் குவிக்கப்பெற்ற காலத்திலும்; மாயாவரத்துடன் தோயமாபுரத்திலிருந்த காலகேயரையும், இரணியபுரவாசிகளாகிய நிவாதகவசர்களையுமடித்து அவர்களுடைய தோள்வலியும்-தாள்வலியும்-உருத்திரதேவனாற் படைத்த வரத்தின் வலியும் உபயோக மாகவொட்டாமலடித்து முடித்தநாளையிலும். அட்டதிக்கும் புகழ்பெற்ற சித்திரசேனனென்னுங் கந்திருவராஜனைக்கொட்டமடக்கி, நமதரசனாகிய துரியோதன மகாராஜனையும்-தம்பிமார்களையும்-தர்மபத்தினிகளையும்-கட்டவிழ்த்து மீட்டு, மானங்கெட்ட பிராணனைக் காப்பாற்றிவிட்ட காலத்திலும்; இதோவருகிற கட்டழகனாகிய கிருட்டினனுக்கு யார் துணையாயிருந்தவர்கள்? ஒருவருமில்லை. எந்தக்காலத்திலும் அவன்கைப்பிடித்த விஜயகாண்டீபமே துணையல்லது, அவனுக்கு வேறுதுணை கண்டதில்லையே: அப்படி எதாகிலுந் துணைநாடிப்போய்ச் செயித்திருப்பதுண்டானாற் பேசு.

ஓ கர்னராஜனே! உன்னுடைய குணாதிசயவழக்கமென்னவெனில் - இராஜர்முதலியபேர் கூடியசபையில் எனக்குமிஞ்சி யெவருமில்லையென்றும், புயவல்லமை எனக்கே பொருந்தியதென்றும், என்னுடன் போராடும் பகைவர் பூமியிலில்லையென்றும் பலவாறாகப் பேசுகிற

வழக்கம் நீ சொல்லியவண்ணம் எங்கேயாவது சோர்வ றமுடித்து வெற்றிகொண் டிருக்கின்றையா? நீ எந்தச் சத்துருக்கள்பேரிற் சண்டைக்குப்போனுய்? எவ்விடத்தினின்று கீர்த்திகொண்டுவந்தாய்? இந்த நாளுக்கு நோகப்போய் நிற்கத்தக்கதிற முனக்குண்டா? அப்படியிருந்தால், ஒரு அநுபவங்கொண்டா. அப்பா! நான் பேசுவதென்ன தப்பா? சிவபெருமானும்-செங்கண்மாலும்-பிரமதேவனும்-தேவேந்திரனும்-தேவர்களும்-மற்றுமுள்ளவர்களுங் கோலாகலமாய் வந்தெதிர்த்து யுத்தஞ் செய்வதற்கே கூடாத வல்லபனுன அந்தவல்லவன்வில் லைவளைத்தானுகில், அவனுடைய வீரியத்தைப்பழித்து, இங்கிருக்கும் அரசர்முதலிய ஆரியர்களுக் கெதிரில் உன்காரியத்தைக்காட்டிச் செயம்பெறப் போகிறுயோ? அல்லது எண்ணுமற்பேசி இழிவடையப்போகின்றையோ? இதுவரையில் உன்திறத்தை நாங்களுமிருந்து பார்த்ததுதானே: அடா அப்பனே! சிரேஷ்ட முனிவராகிய வீஷ்மரும்-வில்லக்குருவான துரோணுச்சாரியரும் சிவசுப்பிரமணியக் கடவுள்போன்ற அஸ்வத்தாமாவும்-நானும்-யேம் தேனிறைந்த வலம்புரி மாலையணிந்த துரியோதன மஹாராஜனும்-ஜகரட்சகராகிய தார்முடிவேந்தர்பலரும் ஒன்றுகச்சேர்ந்து, அழகிய தேரைச்செலுத்தி, வில்லம்புகள் தாங்கிமேலான யுத்தஞ்செய்தாலும்; அந்த அர்ச்சுனனை வெல்வது அரிதரிதென்று கருதிக்கையும் எங்கட்கெதிரில், நானொருவனும் போர்முனைபுகுந்து வெல்லுகிறேன். அவனைக்கொல்லுகிறேன். என் று நீசொல்லுகிறது, காலியியானவன் காதவழிநடப்பேனென்பதுபோலாம். நீ சொன்னசொற்படி முடிப்பையானுற் பனியானது சூரியனை விழுங்கிப்போடுமென்று சந்தேகமறப் பேசலாம். ஓ கொடைக்கரனே! நீர்வளமுள்ள குருநாட்டுக்கதிபனுகிய கௌரவகுல முதல்வன் உன்னிடத்தில் நேயம்வைத்திருந்தால், அவனுக்கு உறுதிவார்த்தைகளைச் சொல்லி, நீதிநெறிகுறையாமற் பாராளுமுறையைப் போதித்து, பக்கத்தில் மந்திரிபோலிருந்து தந்திரத்துட னடத்துவதைவிட்டு: பயன்படாத வார்த்தைகளைப்படித்து, அசத்தியத்தைச் சத்தியமென்று துடித்து, சண்டைமுகத்தி லவனையுமிழுத்து, இரண்டுபுறத்தும் இடியுண்டிளைத்த மருண்டுநிற்கவைத்து, அந்தச்சமயத்தில் நீ அப்பால் நீங்கிப்போவதற்காகவோ இவ்வளவுதூர நினைத்துச்சொல்லவந்தாய்? உத்தமனே! அந்தமட்டும் நீயறிந்ததுபோதும். இந்தமட்டும் உன்கடையைக்கட்டும். என்று சகல மேம்பாடுகளினும் மூவரையும் வெல்லுங் கிருபாச்சாரியர் சொல்லினர்.

இவ்வாறு கிருபாச்சாரியர் சொன்ன மொழியைக் கேட்ட கர்னராஜன் நெருப்பில்விட்ட நெய்போலுருகிப்புகைந்து, கண்ணிரண்டுஞ் சிவந்து, கடுங்கோபம் பிறந்து, குற்றமானமொழியை மெத்தப்பேசி, கிருபாச்சாரியருடைய முகத்தைப்பாராமல் மற்றவர்கள் பக்கமாய்த்திரும்பி, ஓமுடியரசர்களே! வாசங்குலாவு மாலைநிலாவும் வணங்காமுடி வேந்தனுடைய வளப்பங்களையும்-சகல சுபசந்தோஷ சவுக்கியங்களையும்-தாழ்ச்சியில்லாமல் தங்கள் தங்கள் பந்துவர்க்கங்களுடன் காலங்கருப்பு தோன்றுமல் அநுபவித்துச்சிறுமையின்றிப் பெருமையாய் அண்டிப்பிழைத்த பேர்கள் சண்டைமுகத்தில்வந்து நின்றுல், அன்னமிட்டாரை யிகழ்ந்து, கன்னமிட்ட சத்துருவைப்புகழ்ந்து, சித்தங்கனிந்து மகிழ்ந்து, தோள்வலியைத் துதித்து, தாள்வலியை மதித்துக் கொண்டாட நிற்பவர்களானுல்; நமக்குச் செயங்கிடைக்காமற் போமோ? இவ்வுலகத்தில் நன்னெறியில்லாமற் போமோ? மழைமாரி குறையுமோ? வாளறங் குன்றுமோ? ஆ? அகாலமே! வருகிற நாணவன் மிகவுந் திறவானென்று புகழ்ந்து பேசுவதினுல் இலாபமென்ன? அவன்பேரிலவர்களுக்கு அன்பிருக்குமாகில், அந்த அன்பு விருதாவாய்ப்போகாமல் ஒண்டியாய்வருகிற அவனுடன்போய்க் கூடிக்கொள்வது தகுதியாகும். அப்படிக்கில்லையென்றுல், அவரவர்களுடைய வீட்டுக்குப்போய்ப் பெண்சாதி பிள்ளைகள் முகத்தில் விழிக்கலாம். இதற்கு யாதொரு தடையுமில்லை. நேரேவருகிற பார்த்தனுகிய பஞ்சைக்கு நானே யெதிராகிறேன். அவனு என்னைச் செயிக்கிறவன்? அடடா!! பாதலமேழும் பூதலமேழும் பரந்த அகண்ட சக்கிரவாளப் பரப்புந்தப்பாமற் பெருமைபெறுஞ் சுப்பிரதீபக் கணைகளினுலவனைச் சிவனுக்கெதிரான மதனைப்போலாக்கி, திக்கு திக்காந்தத்திலுஞ் சொக்குப்பொடிபோல் தூற்றிவிடுகிறேன். அவர்களுக்குஞ் சேதிசொல்ல ஓலைவிடுகிறேன். தங்களுருக்குப்போய்ச் சுகமாய் உறங்கட்டும். என்று ஊத்துக்கொதித்து உரைத்துச் சிரித்தான்.

வீஷ்மர் ஆசாரிய நிந்தைசெய்த துரியோதனனையுங் கர்னனையுங்கோபித்து, அவர்கள் பெருமையைக் கூறுதல்.

கேட்டீரோ ஜெனமேஜய மகாராஜனே! இந்தப் பிரகாரங் கொடைக்காசாகியகர்னராஜன்பேசியபோது, சேமித்துவைத்த திரவியம்போலுற்ற சிலைநூல் முதலிய பலநூலுங்கற்ற வீஷ்மர் உன்மத்தனைபொத்த துரியோதனராஜனை யழைத்து, தராசு நிலைபோல் நடுவுநிலைமையாய்த் தெரிவிக்கத் துணிந்து, ஓ திங்கள்மரபிற் றேன்றிய என்சிந்தைக்கினிய சுயோதனனே! சிலையாரியனுகிய துரோணுச்சாரியருரைத்த தனைத்துஞ் சரிதான். மேன்மைமிகுந்த பெரியோர்கள் பேசவேண்டிய விதியும் அதுதான். சகலக்கியானமுந்தேர்ந்த அஸ்வத்தாமாவானவர் பரிந்தெழுந்து, வேண்டுமானபோது காரியாகாரியமெடுத்துக்காட்டிக் கண்டிக்கவேண்டிய கடமைதான்.

மலைபோல் நிலைபெற்ற கிருபாச்சாரியர்மடக்கித் தெரிய வைத்தது மனுநெறிமுறைதான். இப்போ நிலைபோலொளிரும் வேலேந்திய கர்னராஜன் தாரதாரமறியாமற் பேசியது தகுதியற்றதுதான். பெரியாரை நிந்தித்துப் பேசப்போகாது. பெரியோர்சிந்தைநொந்தால் வறுமைநிறையும். வாழ்நாள்குறையும். இது எவர்களுக்கும் எப்போதுந்தகாது. ஓ மல்லின்வலியும் வில்லின்வலியுந் தளர்வில்லாமல் வளருந் தடம்புயனே! ஓ அரவக்கொடியும் அணிமணிமுடியும் பொருத்த அரசரேறே! ஓ திரிதராட்டிர புத்திரனே! ஓ துரியோதன னென்னும் என்பௌத்திரனே! நீ நான் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். மெய்யறிவுள்ள மேலோர்செய்கை யெவ்விதமெனில், தங்களுக்குத் தற்கால நடந்துவருகிற திசாபலனும் - காலபலனும்-செய்கையேதுவும்-காரணகாரியங்களும்-செவ்வையாகநாடித் தீர்க்காலோசனைசெய்து, வெல்லத்தக்க வல்லமை தங்களுக்குண்டாகி யிருந்து துணிவுபற்றிய போதினும்; பகைவரை வெல்வது அருமையா யிருக்கிறதென்றும் அசாத்தியமென்றுஞ் சொல்லி ஆய்ந்துணர்ந்த அறிவாளரோடு ஆலோசிப்பாரல்லாமல், அஞ்சாது அலக்ஷியமாக எண்ணி அவசரப்படார்கள். தங்களால் ஆகிறகாரியமானாலும், என்னமோ போய்ப்பார்ப்போமென்பார்கள். இதுதான் மேம்பாடுடைய விவேகிகள் இலக்கணம். இப்படிக்கின்றி-முன்பின்னென்னாமல் வாய்க்குவந்தமட்டும் வல்லமைபேசி, எதிரியின்பலத்தை யெண்ணாமலேசி, காரியங்களிற் பிரவேசித்த காலத்தில் நாலுபேருஞ் சீ! சீ! யென்றுநகைக்க முகங்கூசி நாணிவந்தால்; சொன்ன சொல்லின்படி வெல்லாமற் பல்லைக்காட்டிப் பாதவித்து ஓடிவந்துவிட்டானென்று உலகமுள்ளவரையிலும் பெரியவசையாகப் பாடுவார்கள். அதனால் நல்லோர்கள் அடங்கியிருந்து, தாங்களெண்ணிய காரியபாவங்களில் தங்கள் கருத்து முற்றநேரிடுங்காலமறிந்து, தங்கள்வல்லமையைக்காட்டித் தளர்ச்சிபெறாமற்புகழுடன் மனக்கிளர்ச்சி பெறுவார்கள். அப்பேர்ப்பட்ட வீரர்களைக் கொண்டாட வேண்டியது. இதுதான் பெரியவர்களுக்கும் - சிறியவர்களுக்கும் - புத்திமான்களுக்கும்-புத்தியீனர்களுக்கும்-இருக்கின்றவித்தியாசம்.

ஈதிப்படியிருக்க-நாம்பூசிக்கப்பட்ட ஆசாரிய புருஷர்களோ? யுத்தநிலத்தில்வருஞ் சத்துருவைக்கண்டமாத்திரத்தில் வெற்றிபெற விரும்பிப் போர் முனைபுகுந்து, வில் வளைத்து, கூரிய கணைகளைச் செலுத்தி, கருக் குலையச் செருக் கலைபக் கால்மாடு தலைமாடாக்கி, எல்லா விதத்திலுஞ் செயம் பெறக்கற்ற திடவான்க ளானவர்கள். இத்தன்மைவாய்ந்த உத்தமர்களை யுத்தகளம்விட் டோடிப்போங்களென்றும், எனக்குப் பின்னிருந்து பாருங்களென்றும், அக்கியானகேவலைப்போற் பெண்டாட்டி பிள்ளைகளைச் சேர்ந்து பிழையுங்களென்றும், இப்படிக்கெல்லாஞ் சொல்லலாமோ? அன்றியும் - அவர்கள் முன்பாக நானே வீரமுள்ளவனென்றும், அருச்சுனனுக்கு வைரி நானேயென்றுஞ் சொல்லப்போமோ? மானமுள்ளவர்கள் இவ்வாறு வெளிப்படையாகப் பேசி வெளிப்படுவார்களோ? மானங்கெட்டவர்கள் எனக்கவன் பகையென்பார்கள். நாளைக்கு உறவாடும்வேலையி லிருப்பார்கள். ஒருபோது மெத்தநல்லவ னென்பார்கள். மற்றொருபோது, அப்பா! அவனா? மகாகெட்டவ னென்பார்கள். அவர்களுக்கு ஈனமான மில்லாமையாலும், நாணம் வெட்கம் நலிந்தமையாலும், களிம்புதுலக்கிய செம்புபோல்விளங்கி, முன்சொன்ன வார்த்தைக்குப் பின்சொன்னவார்த்தை மாறுதல்படுமே யென்னுமதியில்லாம லலைவார்கள். மானமுள்ளவர்கள் சொற்சோர்வுபடாமலிருந்து, மானக்கேடு வாராமற்காத்து, தங்கள் பிராணனைத் துரும்பாய்மதித்து, சத்துருநேரிட்டால் யுத்தமும்பண்ணி, வெற்றியும்பெற்று, வீரவாகையுற்றுத் தீரலட்சுமிக்கு இருப்பிடமாவார்கள். ஆதலால் - (பழம் புண்ணாளிபரிகாரி) என்பதுபோல்நான்குதுறையுமறிந்த அநுபவசாலியான பெரியோர்கள், இப்படிபோனால் இப்படிமுடியும்: இன்னதுசெய்தால் இன்னதுவரும்: என்று நம்போலியரைத் தடுத்துச் சொல்லவேண்டிய சம்பந்தமுண்டா யிருந்தபடியாற் சொன்னார்கள். வழியேபோகிறவர்கள் நமக்கு நற்புத்திசொல்ல வருவார்களா? அப்பா துரியோதனா! முதுமறையாளராகிய இவர்கள் மூவரும் மும்மூர்த்திகளுக் கொப்பானவர்கள். திரிகாலக்ஞானிகள். இத்தன்மையாகிய ஜீவன்முத்தரை இந்தக் கர்னனெதிர்த்து இழிவாகப்பேசுவதற்குத் தகுதியானவனோ? நல்லது: இப்போதுவருகின்ற அர்ச்சுனனுக்கு முன்னின்று போர்கொடுத்து வெல்லுந்திடமுள்ள ஆரியருள்ளத்தை வெம்பி வெதும்பி வெந்துபோகும்படியாய் விளைத்துவிட்டீர்களே. ஆ! ஆ! இப்படியும் பேசலாமா? ஐஐயோ!! இது கடவுளுக்கும் ஒப்புமா? என்று தன்கையொடு கையறைந்து. முகம் வாடி வதங்கி, தேர்விட்டிழிந்து, சூரியன்போற் புகழ்படைத்த அவ்வீஷ்மரானவர் துரோணாச்சாரியார் - கிருபாச்சாரியர் - அஸ்வத்தாமா - இவர்களிருக்கு மிடத்திற்குச் சென்று நின்றார். பிரதாபம்பெற்றபாட்டனார் தேர்விட்டிறங்கு முன்னமே துரியோதனன் பயந்து, தானுந் தேர்விட்டிறங்கி ஓடிவந்தான்.

அப்போது துரோணாசாரியர் முதலிய அம்மூவருக்குஞ் சிறிது சந்தோஷமுண்டாகும் படியாகத் துரியோதனனைப் பார்த்து வீஷ்மர் சொல்லுகின்றார். அப்பா துரியோதனா! இம்மூவரும் எப்பேர்ப்பட்டவர்களென்றால், தேவருங் கொண்டாடுகின்ற சிலைத்திற முடையவர்கள். நம்மைப் போன்றவர்களால் வணங்குவதற்கும், வழிபடுவதற்கும், பூசிப்பதற்கும், தருமநீதிகளையோசிப்பதற்கும் ,தானமாதிகளை யாசிப்பதற்கும்

நமக்கு நன்னெறிகளைப்பாய்ந்து நன்மார்க்கம் போதிப்பதற்கும், நமதுமனதைத் தக்கபடிக்கெல்லாஞ் சோதிப்பதற்கும், கிருபைக்கண் வைப்பதற்கும், ஆசிர்வசனஞ்செய்வதற்கும், உன்னத ஸ்தானத்திலிருந்து உயர்ந்த பூஜிதையாய்ப் பெருமைபெறத்தக்க பெரியோர்கள் இவர்களுடைய திருவடி நமதுமணிமுடிமேற் பதிக்கத்தக்கதன்றி, வேறல்ல. அப்படியிருக்க - இவர்களைக்கோபித்து அற்பமாகப்பேசி, அவமதிப்பாக ஏசி, அவர்களுடைய சிந்தைவருந்தித் திடுக்கிடச்செய்து, நாம் வீண்பழிசுமந்து வினைமூட்டை கட்டிக்கொள்ளுவதற்கு உரியோரல்லவே; அப்பா துரியோதனா! ஆ! ஆ! என்னகாரியஞ் செய்துவிட்டாய்? என்று பாரமார்த்திய தருமங்களைப்படித்து, இவ்வளவுதானா உன்னுடைய இராஜாங்கமென்று வெறுத்து, (பெற்றோர் அகடழித்தால் பிறரும் அகடழிப்பார்.) என்னும் பழமொழியை யோசித்திலையோ ஐயையோ!! இப்பெரியோரைப் பழித்த பேதைமையால், கண்டவர் நின்றவர் கொண்டது கொண்டபடி கொழிப்பார்கள். அண்டையபலனுஞ் சிரிப்பார்கள். சண்டையின் தன்மை உனக்கென்னதெரியும்? சாதுக்களின்சேதியை நீயெப்படி அறிவாய்? சாதுசங்கப்பழக்கம் எவ்வாறு உணர்வாய்? காரியத்தாழ்ச்சிசெய்து கலக்கப்படுத்திக் கலைத்துவிட அறிவாய். போ: போ: என்று கடுஞ்சொற்சொல்லி, ஆசாரியருடைய பாதங்களில் விழுந்து, கையு மெய்யுங் குவிய - மையுமன்பு நிறைய - வெற்றிக்குவித்தாகிய வேத வேதியரைப்பார்த்து வீஷ்மர் விளம்பலுற்றார்.

வீஷ்மர்ஆசாரியர்மூவரையும்அபராதமன்னிப்புகேட்டுவணங்க, அதற்கவர்களிணங்கி இனியாகவேண்டுவ துரைத்தல்.

ஓ ஆசாரியசுவாமிகளே! ஓ தநுவேத சதுர்வேதசம்பன்னர்களே! சரணம். சரணம். புல்லறிவுடையோரென்னசொன்னாலுங் கற்றறிவுள்ள உத்தமராகிய தங்களைப் போன்றவர்கள் அதைக்குற்றமாய்க் கொள்ளார்கள். மேலும் – தங்களையிகழ்ந்துபேசிய தறுகண்ணாளரை வதிலுக்குத்தாங்களிகழாமல், ஜீவகாருண்யத்தால் க்ஷமிக்கவேண்டியது. அதுவுமல்லாமல் - ஊழ்வினைப்பயத்தால் இகழ்ந்தவர்கள் மீளாநரகத்திற்கு ஆளாகாதபடி. ஜெகதீசனைக்குறித்து மந்திரஜெபார்ச்சனைசெய்து மன்னிப்புகேட்டு வரம்வாங்கி க்ஷமித்தலுஞ் சான்றோருக்குரிய கடனாகையால், ஓ பூரணகிருபாநோக்கமுள்ள புண்ணியர்களே! இந்தப்புத்தியில்லாதபேருக்குக் குற்றநேரிடாமற் சித்தமிரங்கித் திருவருள் பாலிக்கவேண்டும். பகைவர் நேரிட்டசமயத்தில் இப்பாதகர் பேசிய வீண்வீரப் பேச்சும் விருதாக்கை வீச்சும்பயன்படாது. காற்றுக்குப்பதர் கலங்கா திருக்குமா? ஓ கலங்காமணியாகிய காரணர்களே! அடிமைபுகுந்த எங்கள்பேரில் அன்புவைத்து ஆதரிக்கவேண்டும். இனி நான்சொல்லவேண்டிய உபசாரமென்னவிருக்கிறது? தநுவேதக்கடலுஞ் சதுர்வேதசாகரமும் உள்ளநிறையக்கொண்டிருக்கும் உத்தமர்கள் நீங்கள். குற்றமற்ற உங்களுக்கொப்பாக வேறொருவரைநினைக்கத் தக்கதோ? அதுநிற்க - மற்றொருகாரியம் குருகுலநாதனுக்கும் அவன்சேனைக்கும் ஏதாகிலும் ஒருதீங்குவருமாகில், அந்தப்பழியானது துரியோதனனுக்குரிமையாகிப்பிரியாதிருக்கின்ற தநுவேத சம்பன்னராகிய உங்களைச் சாராமல்விடாது. அப்போது மதிப்பிலுயர்ந்த உங்களை நாடெங்குந் தூற்றுவார்கள். மதிப்பற்றவர்களைக் குறித்து யாரும் பேசமாட்டார்கள். ஆதலால் - தங்கள்மனத்திற் பலவாறாகிய குற்றங்குறைகளிருந்தாலும், அவைகளைத் தீர்க்கவயிரமாகப் பாராட்டாமல், தங்களையடுத்த மன்னவனுக்கு எப்போதுங்கீர்த்தி யுண்டாகும்படியாகச் சகாயஞ்செய்யவேண்டும். மநுநெறிமுதலிய மற்ற நூல்களிலுஞ் சொல்லியிருக்குமுறை இதுவன்றோ? அப்பேர்ப்பட்ட சாஸ்திரங்களை முற்றுங்கற்றிருக்குங் கருத்தினையுடைய உங்கட்கிபாரலென்னகுறை நேரவல்லது? மற்றோர் விண்ணப்பம்; இந்தக் கர்னராஜன் கழறியவார்த்தைகள் களங்கமுள்ளன வென்று யோசிக்கவேண்டாம். அவனுடைய கருத்தை வேறுவிதமாகக் கண்டுகொண்டேன். அஃதென்னவெனில் - தானிப்படி பேசினால் உங்களுக்கு இன்னுமேலான வீரத்துவமுந் தீரத்துவமும் உண்டாய் அர்ச்சுனனைச் செயிப்பீர்களென்றும், துரியோதனன்பேரிற் கொண்டிருக்கின்ற உங்களன்பு வெளிப்படுமென்றும் புருஷபுத்தியாகச் சொன்னான். ஆதலால் - தாங்கள் மனம்பொறுத்துக் காத்தருளவேண்டும். இதோ நமக்கெதிரில் அதாகதஞ்செய்யக் கருதிவருகிற சுவேதவாகனனென்னுங் காளை சூரியபகவானுக்கொப்பாகக் காணுகிறான். அவனுக்கு முன்னே நாமும் நமதுசேனையும் பனிபோலாய் விடுவோம். இது பிரத்யக்ஷமாகத் தெரிந்திருந்தும், நீங்கள் மனவெறுப்படைவானேன்? அப்பால் தங்களுடைய சித்தமென்று அளவிடுதற்கரிய புகழ்ப்பிரதாபத்தையுடைய வீஷ்மர் வேண்டிக்கொண்டார்.

அப்போது துரியோதன ராஜனும் - கர்னராஜனும் - துரோணாச்சாரியர் முதலிய மூவரையும் பணிந்துபோற்றி, சுவாமிகளே! விளையப்போகின்ற தீங்கு இவ்வகையானதென்று தெரியாமல் ஏதேதோ பேசிவிட்டோம். எங்கள் பிழையைப்பொறுத் திரக்ஷிக்கவேண்டும். என்று மீட்டுஞ் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி வேண்டிக்கொண்டு, தங்களால் நேரிட்ட அவர்களின் மனக்குறையை மாற்றினார்கள். இந்தப்பிரகாரம் இவ்விருவரும் வேண்டிக்கொண்ட காலையில், சான்றோர்சினமாதலால் நீர்கிழியவெய்தவடுப்போலுடனே மாறி ஆசிர்வதித்து, பக்கத்திலுள்ள பலரையுநோக்கிச் சிலமொழி பகர்ந்தார்கள். ஓ கண்ணியவான்களே!

இதழ்விரிந்த வலம்புரிமாலையணிந்த குருகுலவேந்தனும் அங்கதேசராஜனும் எங்களைப்பேசிய சொல்லானது முடிவில்லாத துன்பத்தை விளைத்துவிட்டது. அந்துன்பமானது தேவர்கள் கைகூப்பிச் சிந்தித்துவந்திக்கப்பெற்ற விரதசீல வீஷ்மருடைய சாந்தவசனமென்னும் அமுததாரையால் தணிந்துபோயது இனிச்சிந்தனையில்லை. இப்பால் நம்முடையபேரிற்கோபங்கொண்டுவருகிற நாறுக்குத் தப்பிப் பிழைக்க வழியையும், மேல் நடக்க வேண்டியவகைமையும், துரியோதனராஜனுக்காகவேண்டிய உறுதியையும் யோசித்துச்சொல்லுங்கள். நாமெல்லோரும் படைகூடிநின்று வருகின்றவனை வளைத்துப் போர்புரியும்போது, அந்த அர்ச்சுனன் இந்தத் துரியோதனன்பேரிலும் - நாமடக்கிய பசுநிரையின் பேரிலும் - லட்சியம்வைத்து வருகின்றவனுகையால், எதிரில்நிற்கின்ற நம்மையெல்லாம் ஒருபுறமாயொதுக்கிவிட்டு, வணங்காமுடி மன்னனைத் தனித்து வளைத்து விஜயகாண்டீபக் கணையாற் றளைத்து, அடிநாளையப்பகையை ஆற்றுவான். அப்படியாற்றுவானுகில், அநேககோடி அஸ்வரதங்களும் திரளாகிய யானைசேனைகளும், வெகுவாகிய வேந்த வீரர்களும், நாமுங்கும்புகூடியிருந்து என்னபிரயோசனம்? துரியோதனன் அடிபட்டான். அர்ச்சுனன்கையிற் பிடிபட்டான். வில்லாளியர்முதலிய பல்லோரும் விழித்துப்பார்த்திருந்தார்கள். இந்த அனியாயத்தைப்பார்த்தீர்களாவென்னும் பழிப்பும் அவமதிப்பும் வருமல்லாமல், வேறு புகழுண்டோ? ஐயாவீஷ்மரே! நமது நேரில்வருகின்றவன் நீலமேனியையுடையவனுதலின், அர்ச்சுனனென்பதற்கு ஐயப்படவேண்டியதில்லை. ஆகையால் - அவனுடனெதிர்த்துச் சண்டைபோடுவதொன்று. அல்லது ஒருவருடம் அஞ்ஞாதவாசத் தவணைக்கு ஒருநாட்குறைவென்று துரியோதன மகாராஜன் எண்ணிச்சொன்ன பிரகாரம் வழக்கிட்டு, மறுபடியுங்காட்டுக் கோட்டிவிடுவதொன்று. இவ்விரண்டுகாரியத்தில் ஒன்றைநிச்சயித்து, தீர்மானதைச் செய்துவிடுங்கள். மிஞ்சிப்போனபிற்படுவிழிப்பதுகாரியமல்ல, என்று துரோணுச்சாரியர் சொல்ல, அந்தமொழியை வீஷ்மர்கேட்டு, துரியோதனனுடைய சிந்தைதெளியும்படி செப்பத் தொடங்கினர்

அஞ்ஞாதவாசத்தவணைப்பிழையுற்ற துரியோதனனை வீஷ்மர்தேற்றியறிவுறுத்த, அவனதற்கொவ்வாததன கொள்கைகூறுதல்.

அப்பா துரியோதனு! தப்பானகாரியத்திற் பிரவேசிக்காதே: நானுனக்குச் சொல்லுவதைக் கேள், அஞ்ஞாதவாசத் தவணைநாளைக் குறித்துப் பாண்டவர்கள்பேரில் வழக்கிட்டு மீட்டும் வனவாசத்திற் கனுப்பவல்லவர்கள், ஆண்டவனுற் படைத்த நமதுகுலமுதல்வனுன சந்திரனுடைய நிழல்படிந்த இத்திரிலோகங்களிலுங்கிடையார் அதேனப்படியென்றுல் - ஜகநீசனுடைய ஆக்கினைப்படி காலசக்கரஞ் சுழன்று வருகின்றதால், அநிலகப்பட்ட சூரிய சந்திரர்முதலாகிய நவக்கிரகங்களின் சாரத்தினுலும், தினசாரபேதத்தினுலும், சற்றேறக்குறைய ஐந்து வருஷத்திற் கொருதரம் அதிகமாசம் வருகின்ற கணிதப்படிக்கு யோசிக்குமிடத்தில்; இப்போது இரண்டுமாதமும் பன்னிரண்டுநாளும் உயர்ந்திருக்கின்றது. அந்த உபரிநாளைக் கூட்டி நேற்று உதயத்திற்கே பதின்மூன்று வருடமுங் கழித்துப் போட்டார்கள். இன்றையதினந் தவணைநாளுக்கு மேற்பட்ட நாளாகையால், நேர்புகுந்து போர்செய்யப் புறப்பட்டிருக்கின்றுன் விஜயன். நீயதை யோசியாமற் சொன்னுய். அடா என்பௌத்திரசிகாமணி! பாண்டவர்கள் எப்பொழுதுஞ் சொற்சோர்வுபடார்கள். வார்த்தைதப்பி வசனிக்க மாட்டார்கள். ஒருவர் தினையத்தனை நன்றிசெயினும் அதைப் பனையத்தனையாகக்கொண்டு, பிராணனுள்ளவரையிலு மறவாமற் புகழ்ந்துபேசத் தக்கவர்கள். ஒருவர்செய்த பல பொல்லாங்குகளையும் அருவிச்சலம்போல் அன்றேமறப்பார்கள். தீர்க்கவைரிகளல்லர். சத்திய நெறியும் நித்தியவிதியுந்தப்பார்கள். வானவர்கொண்டாடும் ஞானமுள்ளவர்கள். வண்மை – உண்மை - திண்மை - இம்மூன்று முடையவர்கள். நல்லொழுக்கமும், அவ்வொழுக்கத்திற்குத் தக்க நடைப்பழக்கமு முடையோர். பொறுமையற்றவர்கள். அயலார் சொத்துக்கு ஆசைவைக்காதவர்கள். புறங்கூறுதவர்கள். அக்கிரமத்திற்கு உடன்படாதவர்கள். குலமுறை குன்றுதவர்கள். ஆகையால் - அவர்களொருநாளும் அபக்கியாதி பெறமாட்டார்கள். அபஜெயமுமடையார்கள்.

இப்பேர்ப்பட்ட இருதயசுத்தி யுள்ளவர்கள் ராஜசபையில் ஒப்புக்கொண்டுபோன தவணைநாள் கழிப்பதற்கு முன்னமே தாராளமாகச் சண்டைக்கு வருவார்களா? அவர்கள் சாஸ்திரங் கல்லாதவர்களா? கணிதநூலுணராதவர்களா? நல்லது: அப்படிதப்பி வருந்தன்மை பாண்டவர்களிடத்தி லுண்டாயிருக்குமாகில், அஸ்திநபுரத்தில் நீங்களாடிய தலையறுந்த ஆட்டத்திற்கும் - சொக்கட்டானிற் சாதித்த நாட்டத்திற்கும் - திரௌபதியைத் துகிலுரிந்த வாட்டத்திற்கும் - இராஜசபைகூடிய உங்கள் துஷ்டமார்க்கக்கூட்டத்திற்கும் உட்பட்டு, தடைக்கஞ்சிய சர்ப்பம்போலும் - கரைக்கடங்கிய கடல்போலும் - பொறுமையாயிருப்பார்களா? இதனுலாவது நீயே தெரிந்து கொள்ளவேண்டாமா? கழனியிற் றழைத்த கருப்பஞ்சோலையின் செழுமையைச் செந்நெற்பயிர் காட்டவும், செந்நெற்பயிரின் கொழுமையைப படப்பையில் வளர்ந்த கமுகஞ்சோலை நாட்டவும், கமுகஞ்சோலையின் வளமையை முடக்கின்றி யுபர்ந்த தென்னஞ் சோலை தெரிவிக்க

வும், தென்னஞ்சோலையின் சீர்மையை இன்னுமுள்ள சோலைகள் விளக்கவும், ஆகிய சிறப்புக்கள் தங்கு நிலவளத்தினையுடைய குருநாட்டுக்கதிபதியான குபேரனே! பன்னிரண்டுவருடம் வனவாசம் பண்ணிய பாண்டவர்கள் சந்திரனுடைய சாரகதியினால் அக்ஞாதவாசவருடமொன்றையும் நேற்றோடு தொலைத்துவிட்டார்கள். நீயதைக்குறித்துச் சந்தேகப்படவேண்டாம். பதின்மூன்றுவருடமும் போக்கிவந்தால் உங்கள் நாட்டை விட்டுவிடுகிறேனென்று நீ ஆதியிற்சொல்லியவண்ணம் பாண்டவர்களுக்குரிய பதியைக் கொடுத்து, அவர்களுடன் கலந்து சமாதானமாய்ப்போவது மிகவும்நல்லது. க்ஷத்திரிய தர்மத்திற்கும் உத்தமம். சத்தியவாக்குந் தப்பாது. ஆகலால் இந்தப்படி நடவென்று மனத்தழுக்கற்ற வீஷ்மர் சொல்லினர். இவ்வாறுகச்சொல்லிய குலகுருவாகிய பிதாமகனைத் துரியோதனமகாராஜன் நோக்கி, முகங்கருகி, மனங்குறுகி, உரைதளர்ந்து, ஏ எங்களையாவே! தேவரீர் சொன்னசொல் எனக்குச் சம்மதமில்லை. முன்னே நிச்சயித்தனுப்பிய பதின்மூன்று வருடமுங்கழிந்துபோனால்தான் என்ன? இன்னமும் ஒருமறை வனவாசம்பண்ணி வரும்படி ஓட்டிவிடுவனேயன்றி, நான் நாடுகொடுக்கப்போகிறதில்லை, நீங்களந்தக் கவலைநாளைக்கணக்குப்பார்க்க வேண்டுவதுமில்லை. இதோமின்னல் போற் பிரகாசிக்கும் வில்வேந்தர்களுக்கு முன்பாக விளம்புகின்றேன். சங்கினமீன்ற முத்துக்களால் அடைபடுமடை நீர் தடைபடாதோடுங் கழனிகள் சூழ்ந்த ஓர்நாடேனும்-நகரேனும் - ஐவர்க்களிக்கமாட்டேன். அதேனெனில் இனிநான் என்னகொடுத்து இணங்கினாலும் என்னிடத்திற் பிரியம்வையாமல், எந்நாளுஞ் சத்துருவா யிருப்பார்களன்றி எனக்கு மித்துருவாகார்கள். ஆகையால் நான் கொடுத்துப் பொல்லாங்கு பெறுவதைவிட, கொடாமல் விரோதப்படுவதே நன்மை அவர்கள் வேண்டுமானாற் சண்டைபண்ணி மூன்றுலோகத்தையும்வென்று தாமே ஆளட்டும். அவர்கள் செல்வஞ்செருக்கி வாழுங்காலத்தில், துரியோதனனாற் சுகப்பட்டோமென்று சொல்லிக்கொள்ளுவார்கள். மேலும்-இத்திரிலோகவாசிகளுமென்னைப்பார்த்து, ஆ! ஆ! துரியோதனனுடைய தீரமேதீரம். அவன்கொண்டதே வீரம். எந்தக்காரியமெப்படியானாலும்-எவர்களெவ்வாறு சொன்னாலும்-அதுகளுக்கெல்லாம் அசையாமலிருந்து ஒரேநிலையாக யுத்தம்புரிந்து, போர்முனையிலிறந்து பெருஞ்சுவர்க்கமுற்றானென்று எனக்கொரு கீர்த்தியுமுண்டாம். அனித்தியமாகிய இவ்வுலகவாழ்வை யொருபொருளாகவெண்ணி வாழவேண்டுபவர்கள் வாழட்டும். அக்கால் எனக்கு என்றுமழியாத அவ்வும்பர்வாழ்வு இருக்கவேயிருக்கின்றது. எனக்கு எதினாலுந் தாழ்ச்சியில்லை ஆதலால் யார் யாதுசொன்னபோதிலும், என் கட்டுப்பாட்டினை ஒருக்காலுங்கடவேன். என்றான் வணங்காமுடிவேந்தனாகிய துரியோதனன்.

துரியோதனன் கருத்துணர்ந்த துரோணர் அவனைப் பசுமந்தைகளோடுபாதி சேனையுங்கூட்டிப்பட்டணமனுப்பி, தாங்களிங்ஙன்படை வகுத் திருத்தல்.

இப்படி சுயோதனன் ஸ்திரமாகச்சொன்ன கருத்தையும்-வீஷ்மர் சொல்லிவந்த விதத்தையும் - காலநிதானத்தையும்-படைமன்னர்களுடைய எண்ணத்தையும்-வெற்றிமாலை பொறுத்த துரோணாச்சாரியாரறிந்து, ஒ பேரும்பிரதாபமும் பெருமையும் படைத்த கௌரவகுலச்சிங்கமே! பாண்டவர்களுக்கு நாடுகொடேனென்று நீபகர்ந்தது நிச்சயமானால், உனக்கு அவர்கள் ஓடுகொடுப்பார்களென்பது உண்மையே இனியொரு க்ஷணப்பொழுதும் நீ யிவ்விடத்தில் நிற்கப்போகாது. எங்களையும் ஸ்திரமாக நம்பாதே. இப்போது கைக்கொண்டிருக்கிற மாட்டையோட்டிக்கொண்டு, ஓட்டமுநடையுமாய் ஊர்போய்ச் சேருவையாகில், நீ வெற்றிபெற்றதுபோலாம் நமதுயுத்தியும் நிறைவேறும். இவ்விடத்திலிருந்து போர்புரிந்து ஜெயங்கொண்டு போகலாமென்றால், நாம் ஓட்டியமாட்டையுங் குருநாட்டையுமிழந்து, அனியாயமாக உயிரிழக்கவேண்டிவரும் ஆனதால் நம்முடைய சேனைகளை இரண்டுபிரிவாக்கி, ஒருபிரிவை ஆவினங்களுக்குக் காவலாக அழைத்துக்கொண்டு நீ அஸ்தினபுரம்போய்ச் சேர்வது உத்தமம். மற்றச்சேனைகளுடன் நாங்கள் கும்பலாகநின்று வருகின்ற தனஞ்சயனை உன்பேரில் வரவொட்டாமற்றடுத்து, எங்களாற்கூடியமட்டுஞ் சண்டைதொடுத்து, சமயம்பார்த்து நாங்களும் பட்டினம் வந்துவிடுகிறோம். (விரதங்கெட்டாலுஞ் சுகந்தக்கவேண்டும். சுகங்கெட்டாலும் விரதந்தக்கவேண்டும்) இரண்டுங்கெட்டால் என்னபலனுண்டாம்? இறைவனே! நாங்களெப்படியாகிலும் அடிபட்டு அவதிப்பட்டுத் தட்டுகெட்டுத்தடுமாறி வந்தாலும், விராடபுரத்திற்குப்போய் மாட்டுமந்தைகளை மடக்கிவந்தோமென்று பெருமைபாராட்டிப் பேசித்திரியலாம். இழிவென்பது நம்மையெட்டிப் பாராது. என்று தநுவேதசம்பன்னருரைத்தருளிய வார்த்தையை விரதமுனியாகிய வீஷ்மருங் கிருபாச்சாரியருங்கேட்டுச் சந்தோஷித்து, அந்தோ! இந்தயுத்தி யாவர்க்கு மேன்பாட்டை விளைவிக்குமென்று விளம்பி, இரத-கஜ-துரக பதாதிகளை இரண்டிரண்டு கூறுக்கி, ஒருகூறு துரியோதனமகாராஜனுக்கும்பசுமந்தைகட்குங் காவலாக அமைத்து,அஸ்தினபுரத்தைநோக்கிப்போகும்படியாகஅனுப்பிவித்தார்கள். பெரியோருரைத்த பேச்சின்படிக்கு உடன்பட்ட பிரதாபமுடிவேந்தன் அப்போதே புறப்பட்டு, அரவக்கொடி

நாட்டிய தேரிலமர்ந்து, ஆவினங்களையும் அநேக வீரப்படைகளையுந் தனக்குமுன்னாகவும் பின்னாகவு நடாத்தி, தானுந் தேரை விரைவிற் செலுத்திக்கொண்டு சந்தடி-செய்யாமற் போயினன்.

இப்பால்துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர்-வீஷ்மர்-அஸ்வத்தாமா-கர்னன்-இவர்கள் முதலிய யாவரும் ஒன்றுகூடி, இன்னனமின்ற மற்றச்சேனைக் கடல்போற் பெருக்கக்காட்டி, எங்குந்தாமாயிலகி நின்றார்கள். அஃதெப்படியென்றால்-எவ்வகைப்பட்ட திறமுடையோரும்இவர்களுக்குமுன்சென்றுநின்று யுத்தஞ்செய்வதுமெத்தவும் அருமையென்று இளைத்துவாடி ஓடிப்போகும்படியாக, சிலசேனைகளைப்பலசேனைளாகவும்-பலசேனைகளைச்சிலசேனைகளாகவும்-தோற்றும்படியமைத்துஉத்தரதிசைக்குக்கிருபாச்சாரியர்-தெக்ஷணதிசைக்குக்கர்னன்துசிப்படைக்குத்துச்சாதனன்-கூழைப்படைக்குவிகர்னன்-இவர்களை மெய்க்காவலாக நிறுத்தி, சேனைகளுக்குமத்தியிற் சகுனி-சயிந்தவன்-சோமதத்தன் - பாகுலீகன்-இவர்கள் முதலாகிய முதன்மையோரை யிருத்தி, புறமிடாப் புகழ்பெற்ற புண்ணியசீலனாகிய வீஷ்மரும்-மங்களம்பொங்கு மகிழ்ச்சிதங்கிய துரோணாச்சாரியரும்-சேனைகளின்முனைமுகத்தினுநடுநிலத்தினு முயற்சிவிடாமற் பொருந்தினார்கள். அப்போது வானமளாவிய குடைகளும் வாயொளிமின்னும்படைகளும் - வகைவகையான கொடிகளும் வளைதடிமுதலிய தடிகளும்-பாலாபல்லயங்களும்-மகாதோரணங்களும் நிறைத்து, முரசு-காளம்-எக்காளம் கொம்பு-பம்பை-தாரை-பூரி-வீரசின்னம் சங்கம்பேரி-மற்றுமுள்ள வாத்தியங்க ளெல்லாம்பூமி செவிடுபட முழக்கினார்கள். இத்தன்மையாக ஆர்ப்பரித்திருந்த இவர்கள் துணிபும்-சேனுசயினிபங்களைத்திருத்தி யமைத்த திறமும்-துரியோதனன் பசுமந்தையுடனிங்கிப் பட்டினம்போகின்ற ஒழுங்கும்-தேவேந்திரன் கண்டு, விட்டாற்றியாய் ஒருதேரில்வருகிற அருச்சுனனுக்கும்-கட்டாற்றலோ டாண்மைகொண்டு அங்ஙனநின்ற கௌரவர்களுக்கும்-இனி யிவ்விடத்தில் நடக்கப்போகின்ற யுத்தத்திறத்தைப் பார்ப்போமென்று, அக்கினி-யமன்.வருணன்-குபேரன்-பிர்மா-விஷ்ணு - உருத்திரன்-இவர்கண் முதலாகிய சகல தேவர்களுடனே அந்தரநிறை இந்திர விமானத்தின்மீது வந்துநின்றனர். அவ்வேளையிற் பரவாசுதேவ னனுக்கிரகஞ் செய்ய அவனுக்கிணைப் படிக்குச் சொர்க்கலோக வாசம் பெற்ற அஷ்டகன்-வசுபத்திரன்-வாருகன்-நகுஷன்-மாந்தாதா-சிபி-புரூரவன்-கார்த்தவீரியன்-பரதன் - பகீரதன்-சகரன்-தசரதன்-அரிச்சந்திரன்-பாண்டு இவர்கள் முதலாகி மகாராஜரும், விருது டால் மேளங்களுடன் அரிசந்தனநிதி கற்பகப்பூமாலை வாசங்கமகமவென்று பரிமளிக்க வந்து, விளங்கிய வேடிக்கை பார்த்திருந்தார்கள். அவர்களில் தனது மகன் வரவைக் கண்ட சந்திரகுலத்தோன்றலான பாண்டுமகாராஜன் மகிழ்ச்சிகொண்டு, இரண்டுதோளும் பூரித்து, திரண்ட உடலும் பாரித்து, இன்பமதுவுண்டு, தென்பு மேற்கொண்டு, காணுதுகண்டுகளித்தவர்போல் இந்திரனுக்கு அருகாசனத்திற்பொருந்தி யிருந்தான்.

துரியோதனன் செல்கையுந் துரோணாதியர் செய்கையுங்கண்ட அருச்சுனன் பெரியோர்க்குவந்தனக்கணையேவ, அவர்க ளவனைவியந்து பயந்திருத்தல்.

இந்தப்பிரகாரந் தேவேந்திரனும் மற்றத்தேவர்களும்வானத்தில் தானமில்லாமல் விமானத்திலிருந்துவேடிக்கைபார்க்கும்போது, தேனிறைந்த மாலைபுனைந்த குரியகுலத்தரசரும் - சந்திரகுலத்தரசரும்-சற்றும் எமாறாமல், விழித்தகண் விழித்தபடி பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது விஜயப்பிரதாப வீரகாண்டீபஅருச்சுனனானவன் பானுகோடி ஜொலித ஜோப்பியம்போல் தேர்செலுத்தி, அணிவகுத்திருக்குங் கௌரவச்சேனைக்கெதிரில் வெளிவந்தான். அப்படிவந்த காண்டீபனது தேரொலியென்னும் பேரொலியால் அஷ்டகிரிகளும்-அஷ்டகரிகளும்-அஷடநாகங்களும் - அஷ்டதிக்குகளும்-அஷ்டபாலர்களும்-அஷ்டவசுக்களும்-திடுக்கிட்டுத்திகைத்தார்கள். அந்தத்தேரிற்பூட்டிய குதிரைகளின் குரத்தெழுந்த துகட்படலங்களானது எண்டிசையுமொய்த்து, எழுகடலுந்தூற்று, சக்கரவாளச்சுற்றும் அண்டமுகடுமுற்றுங் கப்பிக்கொண்டதுகள். வேடிக்கைபார்க்கநின்ற தேவருமொடுங்கினார்கள். சக்ரவர்த்திகள் முதலிய யாவரும் பதுங்கினார்கள். சேனையும் சேனாபதிகளானவீரரும் ஒடுங்கினார்கள் தங்கள் தங்கள் ஜீவன் தப்பாதென்று தயங்குகின்ற கௌரவர்களுடைய நால்வகைச் சேனைகளின் திறத்தையும், அவைகளைச் சுற்றிநின்ற படைவீரர்களின் மறத்தையும் எளிதிற் றெரிந்துகொண்ட விஜயனானவன் தனக்குச் சாரதியான உத்தரகுமாரனைப் பார்த்து. அப்பா விராடபுரத்து வெற்றிச்சிங்கமே! எதிரிசேனைக ளிருக்கின்ற இறுமாப்பைப் பார்த்தையா? நீரோட்டமுள்ள நெடுங்கடல்போல் நிலைகொள்ளாதிருக்கின்றன. ஆகிலும் நமக்கொரு லக்ஷியமல்ல. இப்போதவர்கள் செய்திருக்கிற உபாயமான அபாயத்தை உனக்குநானெவ்வாறுரைப்பேன்? என்னுடையவெட்கம்என்வாயைமூடுகின்றது. நம்மையவர்கள்மோசம்பண்ணிவிட்டார்க ளந்தச்சங்கதியை உனக்குச்சொல்லாமல் வெல்லக்கூடாது? அஃதென்னவென்றால் காட்டுக்

பாண்டவர்களிற் பார்த்தனுனவன் தலைமாட்டுக்குத் திருவிளக்க வந்துவிட்டான். நீ நாட்டுக்கு நல்லதுரையானதால் நாம்கூட்டிய மாட்டுமந்தையை ஓட்டிக்கொண்டு உன் வீட்டுக்குப் போய்விடென்று வணங்காமுடி மன்னனுடைய மனத்தைத்திருத்தி, பாதிச்சேனையை அவனுக்குக்காவலாகப் பொருத்தி யனுப்பிவிட்டு, மீதிச்சேனையை நமக்கெதிர்நிறுத்திப் பேரணிவகுத்துப் போராட நினைத்துப் பெரியோர்கள் நிற்கின்றார்கள். இவர்களுடன் யுத்தஞ்செய்யத் தொடங்குவோமாகில், பசுக்கூட்டங்களோடு துரியோதனன் பட்டினம்போய்ச் சேர்ந்துவிடுவான். அப்பால் இவர்களைவென்று நாமடையப்போகின்ற லாபமென்ன? ஆகையால் - நமக்கு நேர்நிற்கின்ற பெரியோர்களுமறியாமல், அம்மன்னனுக் குரியோர்களு முறியாமல், நாம் செய்யப்போகின்ற வேலையின்னதென்று யாருங்குறியா திருக்கும்படியாய், தேரோட்டிக்கொண்டு போகாநின்ற அத்துரியோதனராஜனுக்குக்குறுக்கே நாம் போய்நின்று, மறித்துவருத்தி, நமதுமாட்டை மடக்கிக்கொள்ளுவது மதியூகராகிய மன்னவர்செய்யும்போர்த்திற உபாயமாக்கும்.

ஓ மைந்தனே ! நாம்மீட்கவந்த பசுமந்தைகள் அஸ்திநபுரம்போய்ச் சேர்ந்துவிட்டபின்பு, இவ்விடத்திலுள்ள பல்லோரையொழித்தும் வல்லோரையழித்தும் பிரயோசனமென்ன? ஆரியக்கூத் தாடினலுங்காரியத்திற் கண்ணிருக்கவேண்டியது ஆதலால் - முன்னுதாகப் பசுக்களைமடக்கி விராடபுரத்திற் கனுப்பிவிட்டு, அப்பாற் பெரியோர்முதலிய உரியோர்களுடன் சமாடித் துரியோதனனையுஞ் சுற்றவிட்டு, எவ்விதத்திலேனும் வெற்றிபெறுதற்குத் துரிதமாயிருக்கவேண்டும். ஒருவேளை நாம் துரியோதனனைத் தடுக்க நாடிப்போங்காலையில் இந்தப்பெரியோர்கள் மேல்விழுந்து போர்கொடுப்பார்களாகில், நாம் நேர்புகுந்து, கடுங்கணைப் பிரயோகங்காட்டிக் கலக்கி, கண்ணுக்குக் காணுமல் ஓடிப்போகும்படியாய் விலக்கி, காரியானு கூலங் காண்போம். இதைவிட வேறுயோசனையில்லை. என்றிசைத்து எக்களிப்போடெழுந்த பற்குனனை உத்தரகுமாரன் பணிந்து, மகாபாக்கியமென்று சித்தமகிழ்ந்து, சரிதான்: ஓ சுத்தனே ! இப்பேர்ப்பட்ட காலத்திலல்லவோ என்சாமார்த்தியத்தைத் தேவரீர் அறியவேண்டும். என்று குதிரையின் கடிவாளத்தைக் குறுக்கிப்பிடித்து, குலுக்கிவிடுத்து, சிகரக்குன்றம்போன்ற தேரைச் செண்டுபோலெழுப்பி, துரியோதனன் போனதிக்கைத் தொடாமல், பெரியோர்களுக்கு வலசாரிவருவதுபோற் சூழ்ச்சிகாட்டி மேலுக்குமேலாக மேற்றிசையைநோக்கி விரைவில் விட்டுவிட்டான். அக்காலையில் அநுமக்கொடியாடுந்தேரின் கணமர்ந்துவருகின்ற அர்ச்சுனராஜன் தெக்ஷணதிசையி லிருக்குஞ் சிலைக்குருவான துரோணச்சாரியருக்குக் குருபாதவணக்கம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றுகருதி, காண்டீபம்வளைத்து நாணேற்றி, சாணேனைசைகாட்டி, இரண்டுகணைகளை யெடுத்துப்போற்றிப் பணிந்து விடுத்தான் காமதகனனுகிய கண்ணுதலின் கடாட்சம் பெற்ற காண்டீபன பிமந்திரித்துவிட்ட அஸ்திர மிரண்டும் அந்தாம்புநந்து, ஆகாயக்கங்கையைக் கவர்ந்து, அங்கலர்ந்துவிரிந்த மலர்களைப் பறித்துவந்து, துரோணச்சாரியருடைய பொன்னடிமேற்பொழிந்துபூசித்துவரும்போதுபின்னும் இரண்டுபாணங்களைப் பிரயோகஞ்செய்தான். அவ்விரண்டுந் திரண்ட உருண்டைபோன்ற அண்டத்திற்பறந்து, அவற்றுள் ஒன்று பிரிந்துசென்று ஆசாரியரைச் சூழ்ந்து பிரதக்ஷணஞ் செய்து திருவடியிற் பணிந்தது. மற்றொன்று பதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து அஞ்ஞாதவாசமும் பண்ணித் துன்பந்தொலைத்துத் தேவரீருடைய அநுக்கிரகத்தால் இன்பம்பெற வெளிப்பட்டோம். என்னுடன்கூட எல்லோரும் க்ஷேமமாயிருக்கின்றார்கள். என்று சுபஞ்சொல்ல வந்ததுபோல் ஆசாரியருடைய செவியினிடத்தி லொதுங்கி ரீங்காரமிட்டு நின்றது. இந்தவிந்தையைக் கண்ட துரோணச்சாரியார் சிந்தை தளர்ந்து, திப்பிரமைகொண்டு, திபக்கமடைந்து ஒன்றுந்தோன்றாம லிருந்துவிட்டார்.

அவரத்தன்மையி லிருக்கும்போது பச்சிமதிசையிற்படர்ந்த அர்ச்சுனனுனவன் அங்கிருந்த குலமுதல்வனுகிய வீஷ்மரைக்கண்டு, அவரையுந் தொழும்படியாகக்கருதி, துரோணச்சாரியரைக் குறித்துத் தொடுத்தபிரகாரம் நான்குபாணம்விடுத்து, கங்கைநீராட்டிக் கர்ச்சித்து, பத்திர புஷ்பங்களினுல் அர்ச்சித்து, செவிகளுக்கு க்ஷேமசமாச்சாரமுந் தெரிவித்து, இதுபோலவே வடதிசையில் மேருவைப்போற் படைக்காவலிருக்கின்ற கிருபாச்சாரியருக்கும்நான்குபாணஞ் செலுத்தி வந்தனைவழிபாடுசெய்து, காதுகளிடத்துங் கணையொலிகாட்டி, தன்பேரில் அவர்கள் நெடுநாளாக வைத்திருந்த காதலை விருத்திசெய்து, அவரவர்கள் தம்மைத்தாம் மறக்கும்படியாகத் தலைமயக்கங்கொள்ள விடுத்து, இச்சமயத்தில் தன்னையவர்கள் தொடாதிருக்கவும் - தேடாதிருக்கவும் - மோகன முண்டாக்கி, செவ்வானத்திற் கலந்து மறைந்துசெல்கின்ற செங்கதிர்ச் செல்வனுடைய தேர்போல் தன்னுடையதேரைச் செந்துகளால் மறைத்து, அங்குநிறைந்த பெரியோர்களும் பிறமன்னர் முதலாகிய யாவரும் அறியா திருக்கும்படியாக அவர்கட்குப் பின்பக்கமாக ஓர்நெறிபற்றிப் போயினுன். இவ்வண்ணமாகப் பார்த்தனேறிய தேரை மூர்த்தண்யமாகத் திருப்பி முடுக்கி வேகமாய்விடுத்த உத்தரகுமாரன் திறத்தை வீஷ்மாச்சாரியர் - துரோணச்சாரியர் - கிருபாச்சாரியர் - அஸ்வத்தாமா - இவர்கள் முதலிய யாவரும் பார்த்து, பார்த்தனுக்குத் தகுந்த தேர்ப்பாகன் அகப்பட்டானென்று பட்சமாய்ப்பேசி, என்றுங் காணுத அதிசயம் இன்று கண்டவர்களைப்போல் ஆநந

தங்கொண்டு, ஆ! தெய்வமே! இந்நாள்வரையிலுக் தனுவேதங்கற்று - சம்பிரதாயமுற்று - மந்திரார்த்தங்களைப் பெற்று - மகாசமர்த்தா யிருந்த - சம்பிரமமாய்க் காலங்கழித்து வாழ்ந்த நாம், கதையிலுங்கேட்டில்லாத - கற்பனையிலுங் கண்டறியாத - அந்நியாதிசயமான அம்புகளையனுப்பி, கும்பலினின்ற நம்மைக்குறித்து அன்புபாராட்டினனே: என்று ஒருவரோடொருவர் கூடிக்கசிந்து, ஆ! ஹா! இந்தவல்லவனுக்கீடாகிய புருஷர்களுமுண்டோ? அடடா!! விஜயன் விட்டகணைகளில் ஒருகணையானது ஆகாயகங்கையை அள்ளிக்கொண்டுவந்து சளசளவெனப்பொழிந்து சரணங்களில் அபிஷேகம் பண்ணவும், மற்றொருபாணம் புஷபங்கள் பறித்துவந்து அர்ச்சனைசெய்யவும், மற்றொரு அஸ்திரம் வஸ்திரம்போல் வளைந்து வலஞ்சுற்றிவரவும். பின்னுமோரம்பு நிதிலாச் செய்தியைக் காதிற்போதிக்குந் திறம்போலிசையவும், இப்படிக் கெல்லாஞ்செய்த - பிரதாபம் வாய்ந்த - பெருமையேந்த - தனுமறைகள் முதலிய சாஸ்திரங்களாய்ந்த தனஞ்செயன்; இனிச் சண்டைமுகத்திற் றொடுக்குஞ் சரத்தைத் தடைசெய்யப்படித்த தாஷ்டிகர்களுமுண்டோ? இதன்றியும் - பெரும்பாரமேறினுந் தளர்ந்து வளையாத கற்றூணைப்போல் எத்தனைகோடி கொடிப்படைகள் தன்னைச்சுற்றினுஞ் சற்றுமிளையாதத்னஞ் செயனானவன் மெத்தவல்லமைகொண்டு, ஒருசாரதி துணையைக்கண்டு சண்டைபோடத் தலைப்பட் டிருக்கின்றான். இன்று இவனது போர்முகத்திற்கு நேர்முகமாகத்தேர் செலுத்தி நின்றுயார் செயிக்கப் போகின்றார்கள்? நாம் பிழைக்குமாறெப்படி? என்று யாவருந் திப்பிரமை கொண்டவர்களாய்த் திகைத்திருக்கும்போது, அவருள் துரோணர் துடி-துடித்து. ஐயா கங்கா புத்திரனே! இந்த அர்ச்சுனன் என்னிடத்திற் கற்காத கணைவித்தைகளெல்லாங் கற்றிருக்கின்றானே: ஆ! ஆ! என்னசமர்த்தன்? என்று கண்கலக்கப்பட்டுக் கழறியபோது, வீஷ்ம ரிதனைவிளம்பத் தொடங்கினர்.

ஐயா துரோணாச்சாரியரே! அநுமக்கொடிபடைத்த அருச்சுனராஜன் நமக்கு மரியாதை நடாத்திய மந்திராஸ்திரத்தையும், நம்முடையபேரி லெதிர்க்க நலியாமல்வருகிற மனோதிடத்தையும் நிதானிக்குமிடத்து, அவனைத் தொடர்ந்தெதிர்த்து அமராடிக்கெலிப்பதற்கு இயாவராற்கூடும்? அல்லாமலும் - பாஞ்சசன்யப் பாந்தாமனான ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பரமதயாள பாத்திரனாயிருப்பவன். தந்தையாகிய இந்திரனுடைய சொந்தக்கருணையையும், அவன் தந்திருகின்றபலமந்திரக்கணையையுந்துணையாகப்பற்றி, அன்புக்குந் தயைக்கும் இடமாயிருப்பவன் எற்றுவாகனமூர்த்தியாகிய கூற்றுதைத்தோனதுகடாட்ச விட்சண்ய முண்டாயிருப்பவன். இத்தியாதி நல்வினைப்பயனுற்ற நரனானவனைச் சற்றேனுஞ் ஜயம்பெறுகிற தன்யரில்லையே: நாமென்ன செய்யலாம்? நமதுசொல்லை உட்கொள்ளாமற் றள்ளிநடக்குந் துரியோதனன் துள்ளுநாளைபோற் றடித்து, அப்பாண்டவருடன் சொக்கட்டாடி அவர்களுடைய நாடுநகரத்தைப் பிடுங்கிக்கொண்டான். அதுவுமல்லாமல்-பட்டபுஸ்திரியாகிய பாஞ்சாலியம்மனைத்தலைமயிரைப்பற்றி யிழுத்துச் சபையேற்றுவித்து, வஸ்திரமுரிந்து, மானபங்கம்புரிந்து, பன்னிரண்டுவருடம்வனவாசம்பண்ணப்போக்கி அபாக்கியனானான். அவன் ஒருபோதுஞ் சிலாக்கியனாகமாட்டான். சத்தியவாக்கியனான தருமராஜனுக்கிளைய தம்பியினாற் கெடுவான். உயிர்விடுவான். இன்றைக்கிவனவமானப்படுவான். இதற்குச்சந்தேகமிராது. அஃதப்படி யிருக்க - அணிசேறுத்திச் சேனைக்குக் காவலாயிருந்த நம்மை ஆவலாய்ப் பூசைபண்ணிப்போய்விட்டானே. அவன்செய்த உபசாரத்திற்கு நாம் ஒரு ஆசீர்வசனஞ்சொல்ல வகையில்லாமற் போயினோம். இதனால் நமக்கெதிராகிவந்த மலைப்புயன்-சிலைக்கான்-வானவர்கோன்மைந்தன்-நந்தனந்தனனேயன்-ஆகிய இந்நரனுமனுக்குச் சரியாகாதவர்களாயினோம். நல்லது: நாமடக்கிய மாட்டுமந்தையை விடுவிக்க வந்தவன் படைமேல்விழுந்து அமராடவேண்டுமே. அப்படிக்கில்லாமல் நம்மையுமயக்கி, நமதுசேனையையும்விலக்கி, நான்குதிக்கையுங்கலக்கி, ஊரைநாடிப்போகின்ற துரியோதனனைவிடாமல் நாடிப்போனான்போலு மிருக்கின்றது. ஐயா! மற்றப்பேச்சுக்களை யுத்தமுனையிற் கலந்துபேசித் தெரிந்து கொள்ளுவோம். வெற்றிவீரவிஜயன் போனவழியைச் சுற்றிப்பாருங்கள். பிரசித்தனான துரியோதனனை உற்றுக்காருங்கள். யாவருஞ்சேர்ந்து வாருங்கள். சித்தப்பிரமைகொண்டு தியக்கப்படாதீர்கள். சிலை விஜயன்தேரைத் தெற்கு-மேற்கு-வடக்கு-இவைகளில் விட்டாலும், கிழக்கில் விடாதீர்கள். ஓசேனைமன்னர்களே! யாவருஞ்சாக்கிரதையாயிருங்கள். என்று யானை சேனை பரிவாரங்களுடனின்று, ஒன்றுந் தோன்றாமல் யோசித்துக்கொண்டு. ஒருவாறு உறக்கம்பிடித்திருந்தார். மற்றைபரும் பிறக்கம்படைத் தயர்ந்தார்கள்.

அருச்சுனன் அத்தினபுரிக்குச் செல்லுந் துரியோதனனைச் சேனையோடு மடக்கி, பசுநிரைகளைமீட்டுச் சரக்கூடிட்டு விராடநகரனுப்புதல்.

அத்தருணத்தில் உத்தர குமாரனானவன் அருச்சுனராஜனுடைய குறிப்பறிந்து, மடமடவென்று மண்ணுங்குலுக்க, விடவிடவென்று விண்ணுங்கலங்க, திடுதிடுவென்று திசைகள்நடுங்க, குடுகுடுவென்று குவடுகள் நடங்க, கடுமையாகவீசிய காற்றின் வேகத்தாற் கருங்கடலைக் கிழித்தோடுகின்ற கப்பலைப்போற் பார்ப்பவர்களெல்லா மயங்கும்படியாக மனோவேகத்தினு

மிஞ்சிய வேகங்காட்டி, கடகடபடபடதடதடவென்று தேரைச்செலுத்தி, துரியோதனராஜனுடன் ஒட்டமுநடையுமாய்ச்செல்லுகின்ற சேனைக்குமுன் தான்சென்று, ஜெயம்ஜெயம். என்று தடுத்துநின்றான். அப்போது அந்தப் பசுக்கூட்டங்களுக்குக் காவலாகப் போகின் ஆயர்களும்-கோபசபதங்கள் கூறும் வாயர்களும்-யுத்தஞ்செய்யவல்ல சேவர்களும்-ஆயுதபாணிகளாய் அதிர்த்துவந்தவனுடன் போர்புரிவதற்கு எதிர்த்து, வாளும் வேலும்பிடித்து விதிர்த்து, ஒடும்படைகளோடு உரக்கக் கொக்கரித்துக் கர்ச்சித்தார்கள். அதைகண்ட அர்ச்சுனன் ஏ! ஏ! ஹே! என்றிரைந்து, இருதோளும் பூரிக்க விரைந்து, காண்டீபத்தில் நாரிபிகிர்ந்து, காய்த்துத் துவைத்துக் கடைச்சற்பிடித்த கணைகளைத்தொடுத்து, ஆகர்ணபரியந்தம் இழுத்துவிடுத்தான் அச்சமயத்திற் கிரீடியின் தேரோடிவந்து கிட்டிவளைந்த கெடுதியைச் சடுதியிற்கண்ட துரியோதனன் சஞ்சலப்பட்டு, பெரியோர்கள் பேசியபேச்சு கேளாமற் பெருமோசமாச்சே; அவர்களங்கும் நாமிங்குமாகப் பிரிந்து இவனிடத்திலகப்பட்டோமே: என்று பெருமூச்சுவிட்டு, சற்றுநிதானித்து, சித்தம்பேதித்து, அவனைவிட்டு அப்பாலோடவுங்கூடாமல், திரும்பிப்போய் வீஷ்மர்முதலிய பேர்களுடன் கூடவுமுடியாமல், வாடிவதங்கி, மரத்தினீழலிலொதுங்கிமறைதலும் வெளிப்படுதலுமாகிப் பதுங்கிநின்றான், இவ்வாறு நீரகண்டனை துரியோதனன்மதின்மேற் பூனைபோற் சமயத்தைநோக்கி இளைத்துக்காட்டிய செய்கையையும், அவன்சேனைகள் சிலைவிஜயனால்வளைக்கப்பட்ட வகையையும் வீரகண்டைதரித்த விராடராஜகுமாரன் தெரிந்துகொண்டு, விஜயலட்சுமி யருளால் இன்று நமக்கு ஜெயமென்று முகமலர்ந்து, விந்தகிரி போலமைந்த தன்சொந்தரதத்தை வாரிதியிற்சுழன்ற மந்தரகிரிபோற்றிருப்பி, கா-கா-கா-கா-வென்று கர்க்கரத்தொனி காட்டி, விற்கரத்தனான விஜயனை நோக்கினான். அந்தவேளையில் அர்ச்சுனனானவன் பேரிடிமுழக்கம்போற் காண்டீப நாணொலிகாட்டி அட்டகாசஞ்செய்தான்.


அத்தொனியை வீஷ்மர் கிருபர்—துரோணர்·அஸ்வத்தாமா-கர்னன்·சகுனி·இவர்கள் முதலாயினோர் கேட்டுத்திடுக்கிட்டு, ஓ! ஓ! என்னமோ மோசம்வந்தது. நாணோசையுந் தனுவோசையுங் கேட்கிறது. சமர்புரிய வந்த குமாரனைக்காணோம். ஆரபாரதீரவீர மூர்த்தண்யமாகத் தேரூர்ந்துவந்த போர்வீரனெங்கே? ஈசானமூலையில் இடிக்கின்றாப்போ லிருக்கின்றது. ஆனால் இது மழைபிடியல்ல. மகரமச்சமுலாவுகின்ற கடலொலியுமல்ல. மாருதமுழக்கமுமல்ல. கொடிவீரசிங்கக் கிரீடியைக் கொண்ட காண்டீபக் கிண்கிணி நாணோசைபோற் காணுகிறது. கவனமாகக் காதுகொடுத்துக் கேளுங்கள் தீதணுகவொட்டாமற் றிசைகளைக்காருங்கள். சிந்தையும் எண்ணமுஞ் சிதறாமலுய்த் துணருங்கள். பார்த்திபன் கதியைப் பதறாமற் பாருங்கள். என்று வடகிழக்குமூலையிற் கண்வைத்து, ஏதேது? இதற்குள் அர்ச்சுனன் இவ்வளவுதூரங் கடந்துபோவானோ? இப்போதுதானே நாம் பார்த்தோம். மேற்குத்திக்கில் வெகுதூரம் போனானேயென்று ஒருவர்க்கொருவர் வாதுகொடுத்து, நான்குபக்கமுங் காதுகொடுத்திருந்தார்கள். அப்போது பசுமந்தையையும் பாம்புக்கொடிபடைத்த பார்த்திபனையுஞ் சேனைகளுடன் மடக்கியசெஞ்சிலைவீரச் சேவகனானவன் தனக்குத்தானே யோசிக்கத்தொடங்கினான். அஃதென்னவென்றால் — நாமின்னுஞ் சற்றுநேரந் தாழ்ந்துவருவோமாகில், மாட்டுமந்தைகளுடன் மன்னனுஞ் சேனையும் அஸ்தினாபுரத்தின் எல்லைபோ யணைவார்கள். அவர்களந்த எல்லையை மிதித்துவிட்டால், அப்பால் நாம் அபசெயமடைந்து திரும்பியதுபோலாம். பிராணன்வைத்திருக்கவேண்டிய பெருமையிராது ஏதோ தெய்வாநுகூலத்தினாலும், பெரியவர்களைப் பூசைபண்ணியபூஜாபலத்தினாலும், துரியோதனன் பசுமந்தையுடன் அகப்பட்டுக்கொண்டான். மேற்படையோ? சமீபத்திலிருக்கின்றது. நமது வில்லோசையைக் கேட்டவுடனே வீஷ்மராதியாயுள்ளவீரரிற் பல்லோரும்வந்து கவிந்துகொள்வார்கள். அப்பால் மிகுந்த பிரயாசத்துடன் பசுமந்தைகளை மீட்கவேண்டி வரும். ஆகையால் முன்னேமாட்டைமடக்கி மச்சநாட்டுக்கனுப்பிவிட்டு, அப்பால் வருகிறவர்களுடன் போராடுவது உத்தமம். என்றுன்னிக் காண்டீபத்தில் அனல்முகக்கணைகளைத் தொடுத்து, பொருப்புமுதற் பூமியெல்லாம் நெருப்புமழைபொழிவித்து, எக்களித்துக்கர்ச்சித்த சேனைகளையெல்லாந் திக்குமுக்காடச்செய்து, திசாதிசைகளனைத்துஞ் சின்னாபின்னப்படுத்திவிட்டான். அவனுடைய தீவிரத்தைத் தேவர்கள்கண்டு திக்கென்றொதுங்கி, அவ்வவர்களிருந்த யிடத்தைவிட்டுப் பக்கென்றெழுந்து, இனிக்காரியமில்லை. இந்தப்பூமியிற் பலிகொடுப்பதற் கெண்ணிச் சேனைகளைக் கூட்டிவந்தான் துரியோதனன். ஐயோ! பகவானே! இப்படியுங்கெடுவாருமுண்டோ? எவ்விதத்திலுஞ் சவ்வியசாசி பந்தித்து வென்றுவிடுவான். எவர்களையுஞ்சும்மாவிடான். என்றத்துரியோதனனை நிந்தித்து, சிலைவிஜயன் பராக்கிரமத்தைச் சிந்தித்துப்பார்த்திருந்தார்கள்.

அக்காலையில் விஜயனுடைய வில்லோசையும் - நாணோசையும்-தேவதத்தமுழக்கமும் - தேரோடுமொலியும்-குதிரைகள் அநுமானிக்கும்பழக்கமும்·சாரதியிரையும் வழக்கமும் - அநுமக்கொடி யாடுகின்ற படபடாகாரமும்-அஸ்திரங்களோடுகின்ற சிடசிடாகாரமும் - பேரராடு மிடங்கள்தோறும் புறப்படுமொலியும் வீரர்கள்மாருடும் வலியும்-ஆகியவிவைகளெல்லா மிகுந்து புவனமூன்றும் பயங்கொள்ள வயம்பெறுஞ் ஜெயசிங்கம் வருகிறவழியில், திரளாகக்கூடிய யானைக்கும்புகள்போல்துரி

யோதனனைச் சேர்ந்த சேனைகளும் வெற்றிவாளேந்திய வீரர்களும்பொங்கி, தங்களாற் கூடியமட்டும் போராடி, விஜயனுக் கெதிர்நிற்கமாட்டாமல் நாணிப் புறங்கொடுத்தோடினார்கள். அர்ச்சுனன்தொடுத்த அனல்முகக்கணைகள் கொதித்தெழுந்து, கோபித்துவிழுந்து, குதிரைகளைத் தறித்து, யானைகளை முறித்து, கொடிமுடி மன்னரைக் குறைத்துக்குலாவி யுலாவித் திரிந்துகொண்டிருந்தன. அக்கொடுமையைத் தேவேந்திரன் முதலிய தேவர்களும் மற்றுமுவர்களும்பார்த்து, கிரீடியைக்கொண்டாடி, ஒப்புச்சொல்லுவதற்கு உவமைதேடினார்கள் பின்னும் புகழ்ந்து ஆனந்தவெள்ளத்திற் குளித்து, ஆசைமேலிடக் களித்து ஆடினார்கள். அர்ச்சுனனேவிய அக்கினிபாணங்களின் பிரசண்ட வேககாற்றினாற் பாதலமுமீதலமுமைந்து, பூதலமும் பஞ்சுபஞ்சென்னப்பறந்தது. சுயோதனநியர்முதலிய யாவரும் நெஞ்சுலர்ந்து நாவறண்டு, நாபிவரையிலும் புகைந்து, நாடாதும் நாடி, இதென்ன அக்கினி நக்ஷத்திர உதயமோ? அல்லது ஆலாலஞ்சேகரித்த புதையலோ? வடவைத்தீயின் அம்பாரமோ? வன்னிக்காற்றின் வண்மையோ? என்று அவர்களன்று பட்டபாட்டை நானென்னென்று சொல்லுவேன்? நான்குவகை ரதிகரையும்-நால்வகைப்படையையும் சுயோதனநிபரையும்-உயிருடன்சுடும்போதுசும்மாவிருப்பாருமுண்டோ? ஐயா ஜெனமேஜயமஹாராஜனே! இந்தப்பிரகாரம் நரனேவிய அக்கினிபாணங்களாற் பலபடைவீரர்களெல்லாம் மண்ணோடுமண்ணாய்ப்படிந்து, பதறிப் பெதறிச் சிதறிப் பிரிந்து, பலர்மாய்ந்து, சிலர்தேய்ந்து, படையோய்ந்து போனார்கள். அந்தப்பக்குவத்தை உத்தரகுமாரனறிந்து, எதிரிகளின் காவற்கட்டுக்குட்பட்டிருந்த தங்களிடையரை நோக்கி, ஓ கோவலர்களே! உமக்கு யாதொரு தடையுமில்லை. உங்களோடெதிர்க்கப் படையுமில்லை. நீங்கள் உற்சாகத்துடன் வற்சலங்களையோட்டிக்கொண்டு ஊர்போய்ச் சேருங்கள், என்று உரக்கப்பேசி, இருகரங்களையும் வீசி ஏகுங்கள்: ஏகுங்கள்: என்று சொல்லினான்.

அப்போது தங்கள் ராஜகுமாரன்கூறிய இனியவார்த்தையைத் தனிமையாய்ச் சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்த சகல யாதவருங்கேட்டுச் சம்பிரமங் கொண்டாடி நமது இளஞ்சிங்கமே யுத்தஞ்செய்ய ஏற்பட்டுப் புறப்பட்டபடியாற் கௌரவகுலச் சேனைகளை எங்குமில்லாமற் சங்கரிப்பார். நாமுங்கெலிக்கலாம் என்று பொங்காரத்துடன் உங்காரமிட்டு, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, முனைகலந்து, கலகலென்று மணிமுழங்கப் பசுவடர்ந்துநின்ற இடமடைந்து, ஊவென்று வாய்குவித்து ஊதி, புல்லாங்குழலிசையையுஞ் சமிக்ஞையையும் வழக்கப்படி காட்டினார்கள். இடையர்களுடைய குறிப்போசையைக் கேட்ட காட்டுப்பசுக்களும்-நாட்டுப் பசுக்களும்-தலையெடுத்துப்பார்த்து, வாலெடுத்து, காதசைத்து, உடல்குலுக்கி, கொம்புகளைத் தாழ்த்தி, தங்களைக் கட்டியிருந்த மச்சநாட் டெல்லையைக் குறித்து, இடமாந்து நெறித்து, சேனைக்கும்புகளலையமுறித்து, அம்பாரமுழுதுந் தும்புகள்படியக் கம்பளத்தாயர் கலந்துபிலனைடையப் பம்பரமென்னச் சுழன்று, பாணினங் தாவுதல்போற் கும்மாளமிட்டுக்குதித்து, வண்டெனப்பறந்து, செண்டெனவெழுந்து, கண்டவர்கலங்க - மண்டலமயங்க- திசைதடுமாற-தினகரனோட-திரைகடல்வறள சேனைகள் உருள-அரைக்கணப்பொழுதில்-செந்தாள் கருந்தாள் வெண்டுளெழுந்து பறக்கும்படிக்குத் திரும்பியதுகள். அப்படி திரும்பிய பசுக்களைத் துரியோதனனும்-அனுடன் கலந்துவந்த தேசராஜவீரபூபாலர்களும்-கோபாபாலர்களும்பார்த்து, திக்குவேறில்லாமல் வருந்தி, மடக்கிவந்த மந்தைகளை விடப்படாதென்று மான்போர்வைபூண்டு வந்து, வல்லமையெல்லாங் காட்டி மனநொந்து, அப்பால் தங்களாலாகாமல், காய்ந்துருகிச்சடப்பட்டங்கிய நெய்போல் வாயடங்கி மடங்கினார்கள். மச்சராஜனுடைய கோபாலர் இச்சைமேற்கொண்டு தாவி, உருகியோசையடங்கிப்போன நெய்யில் ஒருதுளிப்பால் தெறித்ததைப்போற் சளசளவென்று உரத்துக்கூவி, எதிரி கைக்கொண்டுபோன எங்கள்மந்தையை மீட்சிபெற்றோமென்று எங்கும் பிரகாசிக்கமேவி, எந்நாளும்பெறக்கூடாத செயத்தை இந்நாளடைந்தோமென்று இறைவனைப்புகழ்ந்து, மந்தையை விடாமற் றொடர்ந்து வந்தார்கள். இவ்வாறு செயங் கொண்டாடிவருங் கோபாலர்களுடைய புல்லாங்குழற் றொனிபாலுங் கண்டத்தொனிபாலுங் கால் வீசியோடும் பசுக்களும், பசும்பொற்குடம்போன்றமடியையுடைய கபிலைகளும், பருவக்கன்றுகளுள்ள கோமளங்களும், சூற்கொண்ட சுரபிகளும், சூற்படாக்கடாரிகளும், இளமையானவிடைகளும், முதிர்ந்த விருஷபங்களும், கட்டுப்படாக் காளிகளும், கறுப்பு-வெளுப்பு-சிவபபு-கலப்பு-இவை முதலான பலவர்ணப் பசுக்களும், துரியோதனன் சென்றவிடந்தொடங்கி வீஷ்மர்-துரோணர்-முதலியோர்கள் அணிவகுத்துநின்ற நிலம்வரைக்குங் காலால் சிலரை யெறிந்து மிதித்தும், வாலாற்பலரை யடித்து மடித்தும், உடலாற் சிலரை யுராஞ்சியிடித்தும், ஊத்தாற்பலரை யொசிபத்தாக்கியும், கொம்பாற்சிலரைக் குத்திவீழ்த்தியும், கோலாகலமாய்ப் பலகும்பலைக் கலைத்தும், அம்புபோற் பறந்து நேருக்கு நேராய் நிரைநிரையாய்ப் பாய்ந்து போகாநின்றன.

இப்படிப் போகாநின்ற பசுமந்தைகளைப் பார்த்தன் பார்த்து, இம் மாடுகள் போகின்ற மார்க்கத்தில் வீஷ்மர் முதலாயினோர் படை வைத்துக்கொண் டிருக்கிறார்களே: ஒரு வேளை யிந்தப் பசு மந்தைகளை மடக்குவார்களே; நாம் இந்தப் பசு மந்தைகளுடன் கூடப்போய் மச்சநாட்டில்விட்டு வாலாமென்று நினைத்தால், வீபற்சுவந்தான். எங்களை மயங்க வைத்து மா



[88] உத்தரன் துரியோதனாதிகள் வஸ்திரத்தைஎடுத்துவருதல்.

ட்டை யோட்டிக்கொண்டு போய்விட்டான். சண்டை செய்து வெற்றிகொண்டு போனவனல்ல, என்று பல்லோரிடத்திலும் பழிப்பாய்ச் சொல்லிக் கொள்ளுவார்களே: மேலும் நாம்போய்த் திரும்பி வருவதற்கு முன்னே துரியோதனன் தப்பிப்பிழைத்தேனென்று அஸ்தினபுரத்திற்குப் போய்விடுவான்போலுந் தோன்றுகிறதே; ஐயோ! அவனைக்காணவும் அவனுடன் ஆவலாய்ப்பேசவும் அவசரப்பட்டு, பதின்மூன்றுவருடங் கழித்து ஓடிவந்தோமே: ஆகையால் - நாம் இவனைவிட்டுப் போகலாகாது இப்பசுமந்தைகட்குவேறுவகையான காவல்செய்ய வேண்டும். என்றெண்ணி, தனது விஜய காண்டீபத்திற் சோனமேகம் பொழிவதுபோற் பாணப்பிரயோகம் பண்ணி, பசுமந்தைக் கிருபாலும் அண்டச்சுவருக் கொப்பாகச் சாக்கூட வேலியமைத்து, அவ்வேலிக்கு மந்திரமென்னுங் கட்டுகளிட்டு, அக்கட்டுகட்குக் காவலாக வைரவனென்னு மகாபுருஷனை யமைத்தான். அந்தப்படியே அப்பசுமந்தைகள் யாதொரு ஆக்ஷேபனையுமில்லாமல், நிரந்தரமங்கள துரந்தர புரந்தரனாகிய விராடராஜனது மச்சநாட்டில் இதுவரையிலும் வசித்திருந்த வனங்களிற் போய்ச் சேர்ந்தன. எமன் கைக்கொண்டவுயிர் மீண்டவாறுபோற் பகைவரால் மடக்கிய பசுக்கணம் வந்ததை அந்நாட்டிலுள்ள பலரும் பார்த்து. ஜெயம்: ஜெயம்: என்றுசிந்தைமகிழ்ந்து, பத்திரமாகப்பசுமந்தையைப் பாதுகாத்துக்கொண் டிருந்தார்கள். இப்பால் பசுமந்தைகள் பாணப்பந்தலோடும் பலவிதக்காவல்களோடுஞ் சென்றதை வெகுதூரத்திற் றேர்களிலேறியிருந்த வில்லுக்குருவாகிய துரோணாச்சாரியர் - வீஷ்மர் - கிருபாச்சாரியர் - அஸ்வத்தாமா - கர்னன் - சகுனி - சாளவன் - விகர்னன் - துச்சாதனன் - முதலிய பேர்கள் பார்த்து, சரிதான்: நாம் ஆலோசனை பண்ணிப் பசுநிரைகளையும் பார்த்திபனையும் அஸ்தினபுரத்திற்கு முன்னாடி அனுப்பிவைத்த உளவை அர்ச்சுனன் எப்படியோ அறிந்துகொண்டு, இங்கிருந்த நம்மெல்லோருக்கும் இன்பமுண்டாகும் படியாய் அம்புகளைவிடுத்து அபசப்படுத்தி, சாதியுந்தானுந்தேரூர்ந்துசென்று, சமர்த்தாகவென்று, மாட்டையுஞ் சேனையையும் மமன்னனையு மடக்கிவிட்டான். நாம் எண்ணியவெண்ணங் கைகூடவில்லை. (பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்.) என்பதுபோல் அவனெண்ணியவண்ணம் இசைவாக்கிக்கொண்டான். யாவரேயாயினுந் தருமத்தின்வழி நிற்பார்களானால் அவர்களை யத்தருமமே தலைகாக்குமென்று பெரியோர்கள் சொல்லும் வாக்கியம் பிழைபடுமா? ஒற்றைத்தேருடன் ஒருதவியுமில்லாமல்வந்த இவனுக்கு நாமித்தனை பேரிருந்தும் என்ன பிரையோசனப்பட்டோம். இவ்விடத்திற் கூட்டமான நமக்கு இனியென்ன ஆட்டபாட்டமிருக்கின்றது. அவன் நம்முடனெதிர்த்தால், நாமெடுப்பது ஓட்டவாட்டமே; என்று ஒரேநாட்டமாய்மனநொந்து உறங்கினர்கள்.

மடக்கிய நிரைகள் மச்சநாடு செல்வதைக் கண்டுஐயுற்ற வீஷ்மாதியர் துரியோதனனுக்குத் துணைபடுமுன், அருச்சுனனவனைக்கண்டு இழித்துரைத்தல்.

இங்ஙனஞ் சிலைவிஜயனனவன் உருத்திராம்ஸமுண்டாய் அரைக்கணத்தில் நிரைக்கணத்தை மீட்டிச்சாக்கூடங்கட்டிப் பெருக்கவிடுக்க தன்மைப்படிக்கு வடகிழக்கு மூலையிலிருந்து தென்மேற்கு மூலையில் மாடுகள் போய்ச் சேர்ந்தவாறுணர்ந்து மனமகிழ்ந்து, வீஷ்மாதியோர் வினவிப்பிரமிக்கும்படி வெற்றிச்சங்குமுழக்கி, நல்லது: இராஜாதிராஜனெங்கே? அவனேறிச்சிறக்குந் தேரெங்கே? அத்தேரிற் பறக்கும் பாம்புக்கொடியெங்கே? என்று எட்டுத்திசையும் மட்டிட்டுப்பார்த்துவருவதானான். அப்போது ஆனினங்களை முன்னாக்கிச் சேனைக்கணங்களைப் பின்னாக்கி முடுக்காய்ச்சென்ற துரியோதனராஜன், அர்ச்சுனன் தெறித்தவிற்குணத்தினாலும்-வாய்வைத்து முழங்கிய சங்கு நாதத்தாலும்-அகிலமழல விடுத்த பாணக்குழாத்தாலும்-அருஞ்சமர்வீரர்படும் பெரும்பாட்டாலும்-நால்வகைச்சேனை கெடுங்கேட்டாலும் வெருண்டு, அலமருண்டு, புத்திபுரண்டு, கண்கலங்கி, ஒருபுறமொதுங்கி, நெறிமயங்கி யொடுங்கி நின்றுவிட்டான். இவ்விதமாகிய துரியோதனராஜனைச் சவ்வியசாசி கண்டு, கண்கள்சிவந்து, முகஞ்சுளித்து, பற்கடித்து, மீசைதுடித்து, வியர்வுபொடித்து, வெகுளிமேற்கொண்டு, எத்திசையிலும் பிரசித்தனான உத்தரகுமாரனைப்பார்த்து, ஓ வெற்றிபெற்ற வேலாயுதம்பற்றிய விராடகுமாரனே! நம்முடைய ரதத்தைக்கண்டு பயங்கொண்டு, தனதுபடைகளையும் பசுக்கூட்டங்களையும்விண்டு, தானுந் தலையிரக்கங் கொண்டு, இந்நிலத்தை விட்டகன்று, அதோ ஒருமரத்தினிழலில் ஐம்பொறியடக்கிய ஆமைபோலிருப்பவன் கௌரவ குலாதிபனான துரியோதனமகாராஜன். அவனண்டையில் நமதுதேரைக்கொண்டுபோய் நிறுத்துவையாகில், அல்பமிருகத்தைச் சொல்பமாயழிக்கும் ஆண்சிங்கம்போல் அவனுதிரத்தை என் பாணத்திற்கு ஆகுதி கொடுக்கிறேன். என்று நமடுகடித்து, உடலந்துடித்து, குறிப்பினாற்றெரியப்படுத்தினான். அர்ச்சுனனுரைத்த வார்த்தையைக் கருங்குவளைமலர்ந்துநிறைந்த வாவிசெறிந்த கழனிகள் சூழ்ந்த மச்சநாட்டிறைவன் மைந்தனான உத்தரகுமாரன்கேட்டு, மனோவேகமும் வாயுவேகமும் மட்டென் றுரைக்கத்தக்கதாகத் தன்தேரைவிடுத்து, துரியோதனனுடைய சேனையைத்தடுத்து, அவன் தேரையடுத்து, தன்தேர்க்குதிரைகளின் முன்னங்காலை அவன் தேர்க்குதிரைகளின் தலைமேலேற்றுவித்து அப்பாலிப்பா லசையவொட்டாமலழுத்தினான்.

அந்தவேளையிற் சந்தேகங்கொண்டு சலிப்பாயிருந்த வீஷ்மர் துரோணாச்சாரியர் முதலியமேன்மையோர் மாடுகள் திரும்பிவிட்ட மார்க்கத்தினலும், சங்கத்தொனி-வில்நாரித்தொனி-சாமாரித்தொனி - இவைகளைக் கேட்டதன்மையினலும், செவ்வையாய்க் காரியபாவந் தெரிந்துகொண்டு; ஓ! ஓ! மிஞ்சிப்போய்விட்டது. அஸ்தினபுரத்தைநோக்கி ஆனினங்களுடன்போன நமதாசனைப் போர்முகப்புலியான புருஷன் இதுவரையில் மடக்கிக்கொண்டிருப்பானே. இவ்விடத்திலிருந்த நம்மையேங்கவைத்துச் சிங்கமானது நரியடிதேடிச் செல்லு மாறுபோல் மேற்குமுகத்திற் போக்குக்காட்டி கிழக்குமுகம் வந்து கிட்டிவிட்டானே; இவன் எந்தவழி வந்தானே? அந்தரவாசிகளாகிய அமரர்கள் இவனுக்கு உளவா யிருப்பார்களோ? வணங்காமுடியோன்சென்ற மார்க்கம் இவனுக்கெப்படிதெரிந்ததோ? என்னமா யறிந்தானே? இத்தனைபேர்களின் கண்களுக்குந் தெரியாமல் இவனெப்படி அவனைத் தெரிந்துபோனன்? ஆ! ஆ! அவன்மனசுக்குத் தகுந்தாப்போற் சாரதியுங்குதிரையுஞ் சமைந்ததல்லவா? ஆகிறகாலத்தில் எல்லாம் அடுக்காய் அமையும். நல்வினையை யாவரும்புகழ்ந்தேற்றுவார்கள். ஆதலால் நாம் சும்மாவிருக்கப்போகாது. இந்நேரம் நமதுமன்னன் என்னகெதியானனே தெரியாது. இப்படியே நாமெல்லோரும் பிரியாதுசென்று, துரியோதனனுக்கு உபபலமாகநின்று, அபாயநேரிடாமல் அர்ச்சுனனை வென்று, மறுபடியும் விராடபுரத்தைத்திரும்பிப்பாராமல் ஊர்போய்ச் சேரவேண்டுமென்று உள்ளத் துறுதியாக்கிக்கொண்டு, தாங்களிருந்த இடத்தைவிட்டு நீங்கி, அங்குவகுத்திருந்த வச்சிரயூகம்-பத்மயூகம் அர்த்தசந்திரயூகம்-இவைமுதலிய யூகங்களைக் கலைத்து, மந்தமாருதமும்பிந்திப்போகும்படியாய் முந்தி, நால்வகைச் சேனைகளுடன் ஓடிவந்தார்கள். ஐயா ஜெனமேஜயமகாராஜனே! இவர்கள் எவ்வளவு வேகமாய்த் தேர்செலுத்தி வந்தாலும், நந்தனந்தனன் மைத்துனனுகிய இந்திரன்மைந்த னுந்திய சயந்தன்வேகத்திற் கிணையில்லையென் றியம்பத்தக்கதே. இப்பால் அவர்கள் துரியோதனனிடம்போய்ச் சேருமுன்னமே தான் தன் தேரை அத்துரியோதனனிடத்திற் றிருப்பியிருந்தானன்றோ? அப்போதவ்வரவக் கொடியோன் எப்படியிருந்தானென்றால், பெருக்கமானவெள்ளங் குறுகிச்சுருக்கமாயோடுஞ்சோர்வைப்போற் குதிரைகள் நடையோய்ந்து, சாரதியொரு புறஞ்சாய்ந்து, தானும் மாய்ந்தான் போலிருந்தான். அப்படியிருந்த மன்னனுக்கு நேர்நின்ற அர்ச்சுனனனவன், அவன் முகத்தைப்பார்த்துப் பேசவேண்டுமென்று ஆசைகொண்டு நோக்கினன்.

அப்போது சுயோதனனுடைய முகம் அர்ச்சுனனுக்குத் தெரியவொட்டாமல் அவன்தேரிலிருந்தசாரதியும் ரதத்திற்கட்டிய நான்கு அஸ்வங்களுந் தடையா யிருந்தமையால், திடீரென்று வடிக்கணையெடுத்து அபிமந்திரித்து விடுத்து, சாரதியையுங் குதிரைகளையும் போக்கி வெட்டாரவெளியாக்கி, இந்திரப்பிரஸ்தத்தில் இராஜபோகத்தி லிருந்த தங்களையழைத்துப்போய்ச், சூதனுகிய சகுனியைச்சேர்த்து இக்கட்டான சொக்கட்டானுடி வஞ்சகினைப்பினல் வாய்க்குவந்தபடிபேசித் தங்கள் ஐஸ்வரியமுதலியயாவும் ஒன்றொழியாமல் ஒருங்கே கைக்கொண்டு கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமில்லாது வனவாசம் பண்ணவிட்ட பஞ்சமாபாதகனுகிய பாம்புக்கொடியோனைச் சங்கடப்படாமல் தாராளமாய் எதிராகப்பார்த்து, சற்றேநகைத்தான். அதுகாலையில் துரியோதனனுடையசாரதியுங் குதிரைகளுந் தலைசாய்ந்துபோனதைக்கண்ட உத்தரகுமாரன் கைப்பிடித்த கடிவாளத்தை உலுக்கிப்பின்னுக்கிழுத்து, தன்தேரை முன்னுக்குமுடுக்கி, குதிரையை ஓாடியடித்தான். எக்காலத்திலும் அடிபடாத தன்குதிரைகள் உடம்புசிலிர்த்து, ஒவென்றிரைந்துகனைத்து, விரைந்து தடாரித்து, கைக்கடங்காமற் கால்மீறியெழுந்து, துரியோதன மகாராஜனுடைய தேர்த்தட்டின் மேல் அக்கால்வைத்தூன்றி நின்றன. கேட்டீரோஜெனமேஜய மகாராஜனே! இப்படி தேருந் தேரும் முட்டியபோது சிலைவிஜயன் தேரிற்கட்டிய அநுமத்துவஜமுந் துரியோதனன்தேரில் நாட்டிய அரவத்துவஜமுங்காற்றினலாடி, கடுகடுப்பாயூடி, ஒன்றினேடொன்று துன்னிப்பின்னிப்போராடுவதுபோலிருந்தன. அஃதெத்தன்மையா யிருந்ததெனில் அவ்விரண்டு துவசங்களும் படபடாகாரமாய் அடிபட்டிடிபட்டுரைபட்டுரிபட்டொடிபட் டுடைபட்டு, உடனேவிடுபட்டு, கோபமேலிட்டு, அண்டமுமகண்டமும் அதிரும்படிவாய் விட்டு, அநுமக் கொடியானது அரவக்கொடியைப் பார்த்து, ஓ பணிப்பதாகையே! என்தந்தையானவாயுதேவனுக்கும் உன்தந்தையான ஆதிசேஷனுக்கும் ஒருகாற் பலத்தைக்குறித்துப் பிரமாததர்க்கம் நேரிட்டு, நீசிறியவன் நான் பெரியவனென்று பேச்சுவிளைந்து, உன்றந்தையானவர் தன் திடத்தை யெவர்களுங் காணும்படியாய் மகமேருவின் அடிமுதல் முடிவரைக்கும் ஆயிரஞ்சுற்றாக வளைந்து, தன் வல்லமையைக்காட்டினர். அப்போது என்தகப்பனனவர் இரைந்து விரைந்து, தன்னாற்கூடியமட்டுஞ் சாதித்து, உனது தந்தையானசேடன் பெதறிக்கதறிச் சிதறிப்பதறிப்போகப் புரட்டி, அந்தமேருவின் சிகரத்தில் மூன்றுமுடியை வாரிக்கொண்டுபோய்ச் சமுத்திரகதியாக்கி, தன்னாண்மையை நிலைநாட்டி ஜெயங்கொண்டார். அன்று முதலின்றளவும் பாம்பினங்களுக்கும்-வாயுவினங்களுக்கும்-பகைவிளைந் திருக்கின்றது. அதுபற்றி-நானந்த வாயுதேவனுடைய மைந்தனுகையாற் பூர்வம்நடந்த பொல்லாங்கைப் பாராட்டி, உன்னை வெல்லாமலுங் கொல்லாமலும் விடுவதில்லை. என்று மேல்விழுந்து, துரியோதனன் பாம்புக்கொடியைப் படாதபாடும் படுத்தியதுபோ லிருந்தது.

அக்கால் அர்ச்சுனன் துவஜத்தில் ஆஞ்சநேயர்வந்து நிர்த்தனம்பண்ணினர். அவரெப்பேர்ப்பட்டவரெனில்-முன்பு காண்டாவனதகன நிமித்தம் அக்கினிதேவன் இந்த அநுமக்கொடியை அர்ச்சுனனுக்கு அளித்த காலத்தில். ஆஞ்சநேயர் அக்கொடியினின்றும் பிரசன்னமாகி அக்கினிதேவனைக்கண்டு. ஐயா! இராவண கும்பகர்ணனியரோடு மூலபலங்களையெல்லாமுடித்து, தாயாகிய சீதைக்குத் திருவாழிகொடுத்து, தந்தையரான ஸ்ரீராம லட்சுமணரையுந் தோளிலெடுத்து, அவர்களுடைய திருவடியை அடுத்து, பட்டாபிஷேக சம்பிரமப் பாக்கியங்களையும் பார்த்த கண்களால் இந்தப்பஞ்சையான போரையும் பார்க்கும்படிக்கமைந்ததோ வென்று பாதித்தனராக, அப்போது அக்கினிதேவன் அருட்கண்ணோக்கி, அப்பா மாருதிமைந்தனே! அடியேனிமித்தம் நீ அருச்சுனன்தேரில் அமர்ந்தருளல் வேண்டுமென்றறைய, அவ்வாறேநல்லதென்றமர்ந்தவர் அவ்வநுமார். ஆனதால்-துரியோதனனுடைய சேனைக்கடலைக்கலக்கிக்கடக்கவும், விஜயவீரியன் ஜெயம்படைக்கவும், உதயகிரியிலெழுந்த சூரியன்போற்கோபச்சுடர் விரித்து, கூசாமலெரித்து, கோரதந்தந் தெரித்து, குறுகுறுத்ததிர்த்து, அர்ச்சுனனுடைய தேர்க்கொடியாடையில் அநுமார்வந்து பிரசன்னமாய் நர்த்தனம்பண்ணினர். இப்பால் - வேடன்கையில் அகப்படாமல் விடுபட்டுபோன மிருகம் மீண்டும் அகப்பட்ட வாறுபோல் அர்ச்சுனன் கையிற் சிக்கிக்கொண்ட அரவக்கொடியோன் இடிமுழக்கங்கேட்ட உரகம்போலேங்கி, தானிருக்குநிலை தனக்குத்தெரியாமல் மயங்கி யொடுங்கினன். அர்ச்சுனன் அவனைப்பார்த்துச் சிலவார்த்தை சொல்லத்தொடங்கினன். ஓ வணங்காமுடிபெற்ற மன்னனே! நீ எங்கே ஓடுகின்றாய்? ஏன்வாடுகின்றாய்? ஓடவேண்டிய அவசரமென்ன? ஐயோ! உன்கையிற் பருத்தவில்லும்-பக்குவமான அஸ்திரங்களும்-போதுமான பலமுமிருக்க, புண்ணியவான்களாகிய பெரியோர்கள் பக்கத்துணையாக விருக்க, வேண்டியமட்டுந் தனங்களிருக்க, தம்பிமார்களும்-ஏவலாளிகளும்-எழுகடல்சூழ்ந்த பூமியும்-மாயச்சூதாடு மாமனும்-மகாபிரபலனாகிய கர்னனுமிருக்க, போர்முனையவந்து புறமிடநினைந்து வாயைத்திறவாமல் மயங்கிப் பேய்போலோடிப்போவது திறனே? நல்லகாரியம்: நீ இப்படியே அஸ்தினபுரம்போய்ச் சார்ந்தாலும், வீரபட்டமுஞ் சிந்தூரப்பொட்டுமிட்ட பட்டத்து யானைமீதேறிப் பவனிவரும் இராஜவீதியில், உன்னைப் பார்ப்பதற்கு ஓடிவாநின்ற பொற்பாவையைப் போன்ற கச்சணிந்த கனதனமாதர்களோடு கைம்பெண்களுங் கண்டு, இச்சகத்தையாண்ட துரியோதனராஜன் பித்தன் பித்தனென்று இகழ்ந்துபேசிச் சிரிப்பார்களே: இங்கே நீ வந்த காரியத்தை வழியாய்முடித்து வெற்றிகொண்டு போகாமல், விழலப்பனைப் போகலாமோ?

இதன்றியும் - சோடசகலைநிறைந்த மதியம்போலிலங்கிய சுவேதசத்திரமென்னும் வெள்ளைக்குடை பிடிக்க, இருபக்கத்திலும் பால்நுரைபோன்ற சாமரைவீச, வந்தியர்சூழ்ந்து வாழ்த்திப்புகழ, பரராஜர்வந்து பதமேற்பணிய, தவராஜரும்வந்து ஆசிர்வசிக்க, மகாசிறப்போடு சிந்தைகளித்துச் சிங்காதனமேறி மித்ரபுத்ர பந்துக்களுடன்கூடிவாழ்கின்ற வேந்தர்வேந்தனென்னும் லோகாதிபதியாகிய நீ சண்டைமுகத்தில் வந்து சாதிக்கவேண்டுவதைவிட்டுப் பெண்டுகள்போல ஓடுவது தீரத்துவமோ? நீ இப்போ தென்னிடத்தில் தனித்தகப்பட்டாய். உன்னையும் உன்சகோதரர்களையும் ஒருகணைப்போதில் என்கணைகளினாலே சல்லடைக் கண்களாகத் துளைத்து, அவற்றிற்கு இரையுமாக்கி விடுவேன். ஆனால் சிங்கக்கொடிக்கதிபனாகிய என்தமையன் உங்கள் நூற்றுவரையுங் கொல்வேனென்று இராஜசபையிற் சொல்லிய சபதம் வீணாய்ப்போமே யென்று உங்கள்வாணாளைவிடுத்தேன் பகற்பொழுதைவிளக்கிய பானு அஸ்தமிக்கிறவரைக்கும் பார்த்திருந்து அப்பாற் றன்னரசாய்வந்து உடுக்கூட்டங்களென்னு முறவினரோடு சஞ்சலமில்லாமற் பிரகாசிக்கவருஞ் சந்திரன்போல், எங்களைக் காட்டிலோட்டிவிட்டு நீங்கள் நாட்டிலிருந்து நல்லபாக்கியங்களை அநுபவித்துக் காலந்தப்பாமற் புசித்து ஆக்கினைச்சக்கரஞ்செலுத்தி அரசாக்ஷிசெய்து வந்தீர்கள். மறுபடியும் விடியற்காலத்தில் அந்தச் சந்திரனொளியைத் தவிர்த்துத்தானே பிரபுத்துவஞ் செய்யவந்த சூரியனைப்போல், இப்போது நாங்கள் வெளிப்பட்டோம். சங்கினங்கள் தவழ்ந்தண்ணிய வயல்சூழ்ந்த கங்கைவள நாடனாகிய வீமசேனமகாராஜன் கையினால், தாமசமின்றி நாளைக்கே உங்களைக்களப்பலி யூட்டிவைக்கப்போகின்றோம். மேலும்-வீமசேனனுடைய சபதந்தப்பினாலும் தப்பட்டும். இப்போது பாவியான உன்னைப்பார்த்துங் கொல்லாமல் விடலாகாதாதென்று ஓர்கடுங்கோபம் எனக்குண்டாயிருக்கின்றது. ஆனால் இரப்பவர்கள்-யுத்தத்தில் இளைத்தவர்கள் - புறங்கொடுத்தோடினவர்கள் - வில்லைப் போட்டுப் புல்லைக்கவ்வினவர்கள் - குழந்தைப்பருவமுடையவர்கள்-இளையவர்கள்-இயாவரும்புகழுங் கவிராஜர்கள்-தவராஜர்கள்-தூதுவர்கள்-நோயாளிகள்-விருத்தர்கள்-பிர்மக்கியானமுள்ள பிராமணர்கள்-ஸ்திரீகள்-இவர்களைக்கொல்லுவது மகாபாவமென்று பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். அந்தத்தருமம் என்னைப் பிசகவொட்டாமற் றடுக்கின்றது. அதனால் இப்போது இளைத்து ஓடிப்போகவிருக்குமுன்னைநானென்னசெய்வேன்? அவர்கள்கூறிய நீதிவாக்கியத்தை நினைத்து, நான் உன்னுயிரைத் தப்பவிட்டேன்.

அடாவஞ்சனே? பாவ புண்ணியத்தை எண்ணிப் பாராத நஞ்சனே! நீ யெண்ணிய எண்ணஞ் சித்திக்குமென் றிருந்தனையோ? வனவாசஞ்சென்ற பாண்டவ

கள் மறுபடியுந் திரும்பி வரமாட்டார்களென்று மதித்திருந்தனையோ? இனி நீ நோவவேண்டுவது உன்தலையின் விதியினையோ? ஐயோ! (வாழ்வாரைப் போலுந் தாழ்வார் - தாழ்வாரைப்போலும் வாழ்வார்.) இதைச்சற்றேனும் உன்மனத்தில் வைக்காமற் போனதென்ன? அடாபேயா! (சமர்த்திற்குண்டுபாயுமா?) எவருஞ்சதுராயிருக்கிறோமென் றெண்ணப்போகாது. தருமத்திற் கொருகாலும் பிசகுவாரது. தானென்னுங் கருவம் நிலைநில்லாது. ஐஐயோ!! அதுபொல்லாது. அடா சொல்லாதுபோகின்ற தூர்த்தனே! என்று இன்னும் பலவாறாக இழியக்குத்தினன். இவ்வாறிகழ்ந்து பேசியபோது துரியோதனராஜன் எதிர்ப்பேச்சு பேசாமற் சோபமேற்கொண்டு, ஆபத்துவேளை யிதுவென்று மனத்தாபத்துடனிருந்தான். அவன் இவ்விடத்தி லிவ்வாறிருக்கும்போது, இந்தமுகநோக்கித் திரும்பிய வேதக்கொடியுடைய துரோணாச்சாரியர் - கிருபாச்சாரியர்-அஸ்வத்தாமர்-வீஷ்மர் - கற்பகக்காவைப்போல் அற்புதமாகக் கொடுக்குங் கர்னராஜன்-சகுனி-சயிந்தவன்-விகர்னன்—துச்சாதனன்-சாளவன்-இவர்முதலிய சாமர்த்தியவான்களெல்லாஞ் சற்பக்கொடிபடைத்த மற்புய மகாராஜனுக்குத் துணைவந்து கூடினார்கள். அவ்வாறு வந்தவர்களில், துச்சாதனன்-விகர்னன்-முதலிய தம்பியரிற் சிலரும், முடிவேந்தர்களிற் பலரும், வெற்றிமாலையணிந்த சுத்த வீரர்களும், மாமனும், மைத்துனனும் உடல்பதறியோடிவந்து, மதயானைகள்போற் புகுந்து, நந்தியாவட்டமாலைதரித்த நாதிபனைத்தாங்கி ஆதரித்துத் தேற்றினார்கள். இதற்குள்ளாகக் காரோசை-கடலோசை-இடியோசை-எற்றோசை-முதலியவெல்லாம் ஒன்றுசேர்ந்து ஓரிடத்திற்கூடி முழங்கியவாறுபோல, தேர்களினோசை-குதிரைகளினோசை-நாணோசை-சங்கவோசை-தாரை பூரி முதலிய வாத்தியவோசை - சரங்களினோசை-ஆகிய விவைகளெங்குமுழங்கப் படையாளர்வந்து குவிந்தார்கள். சப்தசமுத்திரம்போ லிரைந்து ஆர்ப்பரித்து இருபக்கத்திலுங் கவிந்த இப்படைமன்னர்களைத் துரியோதனமகாராஜன் கண்டு, சற்றுத்திடங்கொண்டு, குனிந்த தலையை நிமிர்ந்துபார்த்தான்.

கர்னனுக்குங் காண்டீபனுக்கும் யுத்தம்.

இப்படி துரியோதனன் பார்த்தபோது, அப்பாரவையின்பரிபவத்தைக்கண்ட கர்னன்பச்சாதாபப்பட்டு, உடனே நறநறவென்று பல்லைக்கடித்து, வெம்பிக் கிளம்பி, வெதும்பிச்சீறி, கனைத்துச்சினத்து, திசாதிசைகளூர் திடுக்கிடத்திரும்பி, சடக்கெனத் தேரைத் தடதடவென்று முடுக்கி, மின்னுடன் மின்மினியும்-வேங்கையுடன் மானும்-சிங்கத்துடன் யானையும்-மலையுடன் மணற்குன்றும்-எதிர்ப்பச்செல்வதுபோல் விஜயன் தேருக்குநேர் சென்று நின்று, ஓ அர்ச்சுனா! என் முகமாகத்திரும்பு. வணங்காமுடி மன்னனாகிய துரியோதனனை வளைத்துத் தகுதியற்ற சொல்லாலிகழ்ந்து கண்டவாறு பேசுவது நியாயமல்ல. நாங்கள் யாவருமிருக்க நாதிபனை யெதிர்த்தது வீரமுமல்ல. நீ என் வீணாகக் கிடந்து மயங்குகின்றாய். இதோ நான் உனக்குமுன் வந்திருக்கின்றேன். என்னுடன்பகைத்துப் போர்புரிவதற்கு உனக்குத்திறமுண்டாயின், இங்கே திரும்பிப்பார். என்று போர்த்திறக்குறிப்பாற் புகன்று, அக்கினியிற் பொறியும் புகையுந் திக்கென்றெழுவதுபோல் மொழிந்தான். இவ்வண்ணமாக அங்கதேசாதிபன் சொன்னவார்த்தையை அருச்சுனன் கேட்டு குபீலென்று பொங்கியெழுந்த கோபாக்கினியானது கால்முதல் தலைவரைக்கும் உதிரத்தை முறித்துவிட்டதனால் முகங்கறுத்து, கும்பகாடக் குஞ்சரத்தை மடக்கியடக்கிய யாளியானது சிங்கத்தைக்கண்டு செறுத்துபாய்கின்ற செயல்போல் துரியோதனனை விட்டுவிட்டு, அறைகூவிவந்த விருந்தினனாகிய அங்கராஜனுக்குநேரே இரதத்தை முடுக்கியெதிர்த்தான். அப்போது அர்ச்சுனன்தேருங் கர்னன்தேருங் கிட்டிநெருங்கி ஒருவரோடொருவரெதிர்த்து யுத்தஞ்செய்யப் புகுந்தகாலையில், கர்னனைச்சேர்ந்த காவலர்களும்-ரதகஜதுரகபதாதிகளும்-கனைத்துக்கனன்று, சிங்கத்தைத் துரத்திவருஞ் செங்கன்றுகள்போற் பங்கப்படாத பற்குனனை வளைந்து பற்றினார்கள். இவர்களல்லாமலும், துரியோதனன் தம்பிமாராகிய சித்திராங்கதன்-விகர்னன்-சித்திரசேனன்—சங்கிராமசித்து-சித்திரவிரதன்-துன்முகன்-துர்ஜெயன் முதலாகியவர்களும் - கர்னனுக்கு உபதம்பிமாராகிய ராதைமக்களுங் கர்னனைப்பின்னாக்கி, தாங்கள் முனனாகி, கனகன வென்று காலாக்கினி கதித்தெழுந்த வாறுபோற் சேர்ந்து, விசித்திரமான வில்லைவளைத்துச் சரநாணேற்றி, தங்கள்தங் சற்குருவைப்போற்றி, உடலூடுருவிப் பாய்கின்ற உயர்வடிக்கணைகளைப் பப்பத்து-நூறுநூறு என்னும்படியாகத் தொடுத்து, திக்குத்திசையெங்கும் அக்கினிமயமாக்கி, அதிகவேகமுங் கோபமுங்கொண்டு யாவருக்கு மடங்காமனின்று அமராடினார்கள்.

அப்போது சுப்பிரமணியக் கடவுளை நிகர்த்த சுவேதவாகனனானவன் இவ்வளவு பேருக்கும் இவ்விடத்திலேயே மரணமென் றெண்ணி, திறமிகுந்த செஞ்சிலையைத் திடீலென்று வணங்கி, கட்டுப்படாத சரநாணோசை காட்டினான். அக்கால் எதிரிகளுக்குண்டாகிய இறுமாப்பெல்லா மழிந்து, தனித்தனி விழுந்து, சரீரமயர்ந்து, தங்கள் தேராகிய சயந்தனத்திற் சாய்ந்து, மறுபடியுந் தெளிந்தெழுந்து, கண்கள்சிவந்து, போரிற்புகுந்து, தேரிற் சிறந்து, சாணை பிடித்துத் தயிலதூபஞ்செய்த சரங்களை மாரிபோற் சொரிந்தார்கள். அப்பாண வருஷத்தைப் பார்த்த பார்த்தனானவன்

இவர்களை வெளிதில் விடலாகாதென் றெண்ணி, சோனமேகஞ் சொரிவதுபோல் நானாவித அஸ்திரங்களை விடுத்து, துரியோதனன் தம்பியரிற் சித்திராங்கதனுடைய வில்லையும் அவனேறிய இரதத்தையும் அழித்து, முடியையுங்குறைத்து, உடலையுஞ் சல்லடைக் கண்ணாக்கி; மதிமுகியான விகர்ணனைப்பார்த்து, பிறைமுகக் கணைகளினாற் பிளந்து, புறங்காட்டிப் போகக்கிளர்ந்து; சித்திரசேனனென்பவனை வளைந்து, அவனேறிவந்த தேரையுமழித்து, அவன்சேனையையு மொழித்து, இடியோசைகேட்டு இளைக்கும் பாம்பைப்போற் பூமியிற் புரளவிட்டு, அவனுடம்பெங்கும் புண்ணாக்கி; மேலிட்டுவந்த சங்கிராமஜித்தென்பவனைச் சலிக்கவடித்து, சரீரம் வலிக்கவிடுத்து? துன்முகனே டெதிர்த்துத் தாக்கிவிட்டு; துற்சயனைக் கெற்சனையோடு நோக்கி, அடா நச்சரவக்கொடியோனுடன்பிறந்த நாசகாலர்களே ! என்றுகூவி கலியத்தாக்கினான். அப்போது நால்வகைத்தானைகளும்-நானாவீரர்களும்-ரதகஜதுரகாதிகளும்-அதிரத மகாரத சமரதர்களும சூரியகிரணத்திற்குமுன் பனி நெருக்கம்போற்சூழ்ந்து, நாம் வாழ்ந்தவாழ்வு இம்மட்டோ வென்றுசோர்ந்து, நிலத்திலாழ்ந்து, சிலர் முன்னேங்கி, பலர்பின்வாங்கி, யாவரும் பலங்குறைந்து அயர்ந்து போனார்கள். இப்படி சேனைகளுஞ் சேனைவீராளு மயர்ந்துபோனதைக் கர்னராஜன்கண்டு கனகோபங்கொண்டு, காண்டீபன் எங்கே; எங்கே: என்று கடுகடுத்துவந்தான். அப்படிவந்தவனை அஸ்வத்தாமன் குறுக்கிட்டு, ஓ அங்கராஜனே! நீ யெந்த அருச்சுனனை யிகழ்ந்துபேசினையோ ? அந்தச் சங்கிராமவிஜயன் இவன்தான். இவனை யெவ்விதத்திலுமாட்டி, இவ்விடம்விட்டோட்டி, எங்கள்முன் நீ ஜெயமடைந்து வரவேண்டியது அபஜயத்திற் கிடங்கொடாதே. அப்பனே ! செவ்வையான ஆலோசனைசெய். உன்பேரில் வெகுநாளைய அடம்வைத்திருக்கின்றான். இந்தக்கிரீடி. நீ இராஜசபையிற் பேசிய சங்கதிகளையெல்லாஞ்சாக்கோவையாய்க் கோர்த்துவைத்திருப்பான். இதுகளினால் நீ தப்பிவருவது அருமை. ஜாக்கிரதை. ஜாக்கிரதை: என்று உசிதமாகச் சொன்னான்.

இவ்வாறு அஸ்வத்தாமன் சொன்னதைக் கேட்ட கர்னராஜன் மனந்தாளாமல், ஓய் அஸ்வத்தாமா ! நான் பிராமணசாதியிற் பிறந்திருந்தால் யுத்தஞ் செய்வதற்கு அஞ்சுவேன். அப்பேர்ப்பட்ட நைச்சிக இனத்திற் பிறவாமல் க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவனாகையால், க்ஷத்திரிய தருமத்தையநுசரித்துக் கையில்விற்பிடித்த நான் அமருக்கஞ்சுவேனென்று நினையாதே. இப்போதென்னுடன் எவரெதிர்த்தாலும், அவர்களுக்கு இந்தப் பூமியே சமாதியிடமாக அடக்கம்பண்ணித் திரும்புவேன். இதற்கு வேறுதிருகில்லை. என்பராக்கிரமத்தையும்,நான் செய்யப்போகின்ற யுத்தத்தின் அதிசயத்தையும், நீயே கண்ணாரக்கண்டு களிக்கப் போகின்றாய். என்று சொல்லி வெற்றிக்கொடியும் வாகைமாலையுஞ் சுற்றிலுங்கட்டித்தூக்கிய கொற்றத்தேரை நெருக்கி யுத்தத்திற்குக் குறுகினான். இவ்வாறிவனடுத்த சமயத்தில் இந்திரகுமாரனுடைய ரதமுங்கிட்டியது. அக்கர்னனுடைய ரதமும் அதோடுமுட்டியது. உடனே அவ்விருவர்தேரிலும் பூட்டியகுதிரைகள் கனைக்கவும், சாரதியிருவருஞ்சப்தித்திரையவும், தேர்ச்சக்கரங்கள் கிறிச்சிட்டொலிக்கவும், சிறுமணிச்சதங்கைகள் கணகணவென்றார்க்கவும், தீரர்களிருவரும் வில்லையெடுத்துப்பிடித்து நிறுந்திவளைத்து இழுத்து நாணிதொடுத்து, நாரிதெறித்து, டங்காரஞ்செய்து, பொன்மலைபோற் பிரகாசிக்கின்ற அவ்வில்லிலிருந்து விவவிறென்று விடுத்த வேககணைகளின் வீரத்திறத்தாற் சமுத்திரஞ்சுவறி, நிலைதடுமாறி,தளதளவென்று கொதித்துக் குறைந்தது. பூமியின்பரப்புப் புகையால் மறைந்தது. யுகமுடிவோவென்று உலகத்தோரிரைந்தனர். அஷ்டதிக்குக் காதாரமாகிய எட்டுக்கிரியும் எதிரொலிசெய்தன. திசையானைகள் திடுக்கிட்டு வாடின. அஷ்டமாநாகங்கள் அலறியஞ்சின. ஆகாயத்தில் வேடிக்கைப்பார்க்குந் தேவாதிதேவர்களும், பூபாலராகிய பேர்வேந்தர்பலரும், எப்புவனங்களிலும் இதைவிட அதிசயமில்லையென்று அற்புதமடைந்தார்கள். அன்றியும்-இருவருஞ்செய்த சங்கவொலிகள் திக்கெட்டுஞ் செவிடுபட முழங்கியதுகள். ஒருவரையொருவர் சீறிக்கூறும் வீரவார்த்தைகள் தாறுமாறான ஒலியோடார்த்தன. இவ்வாறு எண்ணற்கரிய தீரவீரபராக்கிரமத்தோடு தீவுகளைத்துந்திகைக்கும்படியாகச்சிங்கலலாடத்தேர்க்கிறையாகிய அங்கர்கோனானவன் ஆலாலவிஷத்திற் கொப்பாகிய அம்புகளைக் கும்பலாய்ப் பொழிந்து, அருச்சுனனுடைய-வில்-பாணம்-தேர் - குதிரை-சாரதி முதலியவெல்லாஞ் சிர்குலைப்பண்ணினான்.

இப்படி கர்னன்தொடுத்த அஸ்திரங்கள்கதித்துவருகின்றசெயலை அருச்சுனன், கண்டு, வாய்மடித்து சிரித்து, தனதடையாளம்பொறித்த அனலாஸ்திரங்களை அனந்தமாக எவி, கர்னன்விட்ட கணைகளத்தனையையும் ஒருநொடியிற் செத்தைபோலாக்கி வில்லில் மேகாஸ்திரந்தாக்கி வந்தித்து, மந்திரித்து, வள்ளலான கர்னன் பேரிற் கொள்ளை கொள்ளையாகக் கூசாமலிறைத்தான். இப்படி வெள்ளையானைமேற் பவனிவரும் வேந்தன்மகனுந்திய பாணங்கள் காரிடி-கடலிடி-நீரிடி நெருப்பிடிபோல் நெறிப்போடுவருதலைக் கர்னன் கண்டு, கடுகணைகள் கோடாகோடிகளைப் படபடெனத்தாக்கி, எதிரியுந்திய மேகாஸ்திரங்களைச் சிந்துசிந்தாக்கினான். இவ்வாறாக இருதிறத்தவர்களுந் திரண்டபகழிகளைப் பரபரவென்று செலுத்தி, தேரைக்கரகரவென்று சுழற்றி, செஞ்சிலைச் சதங்கைகள்குலுங்க அசைத்து, கொஞ்சமேனும் ஒருவரையொருவர் மிஞ்சவிடாமல் அடர்த்துப்போர்

கொடுத்து வரும்போது; கனகக்கொடையானாகிய கர்னன்கைமிஞ்சி, காய்த்துத் தோய்த்துக் கடைச்சற்பிடித்த பத்துபாணங்களை யெடுத்து உத்தாகுமாரன் பேரிலோச்சி, இரதத்தின்மீது இருபதுகணைகளை யெடுத்துச் செலுத்தி, குதிரைகள்மீது குறிபிசகாது நாற்பதுசரங்களைப்போக்கி, விஜயன்பேரில் நூறுகணைகளை விடுத்தான். அம்மாத்திரத்தி லக்கணைகள் அண்டச்சுவரின் அடியைப்பெயர்த்து, எண்டிசைமுழுதும் இடியப்பொடித்து, பாபாவென இரைந்து, சாசாவெனவிரைந்து, அண்டரெல்லாந் திப்பிரமைகொள்ள மண்டியெரிந்து வருவதைத் தனஞ்செயன் கண்டு; ஒருசதுர்முகக் கணைகொண்டு அவற்றையெல்லாம் பிளந்து பொடிப்படுத்தினான். அந்தவிபரீதத்தைப் பார்த்திருந்த அமரர்க ளியாவரும் போர்த்திறப் பார்த்தனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். இப்பாற் பற்குனன் வெகுண்டு வில்லையெடுத்து, கணைகளைப் பக்குவமாகத் தொடுத்து, கர்னன்மீதும்-அவன்தேரின்மீதும் குதிரைகளின்மீதும் - சாரதிமீதும் பிரயோகித்தான். அந்தக்கணைகளெல்லாம் ஏகமுகமாய்க் கூடி, இந்திரநாட்டைநாடி, சப்தமேகம்போ லெழுந்து இரைந்து, ரதகஜதுரகபதாதிகளை நாடித்தேடிவருகின்ற வேகத்தைக் கர்னராஜன்கண்டு, காலாக்கினி போன்ற பாணங்களைவிடுத்து, அவற்றையெல்லாம் அணுவினும் பரமாணுவாக்கிவிட்டான். அவனுண்மையைக் கண்டயாவருந் துதித்து, இவனுக்கெதிருண்டோ வென்றுமதித்தார்கள்.

உடனே இருவரும்பிரிந்து பின்னுமெதிர்ந்து, வாசாமகோசரமாய் வடிக்கணைகளைச்சொரிந்து அமர்புரிந்தார்கள். இருவர்விழிகள் எரியவும், இருவர்மனது பதறவும், குதிரையினங்கள் கதறவும், சேனைகளெங்குஞ் சிதறவும், கண்கள்கக்குங் கனலும்-தேர்ச்சக்கரங்கள் கக்குங்கனலும்-கணைகள்கக்குங்கனலும்-பொங்கிப் புகைந்தன. ஒருவரையொருவர் வெகுண்டுபுகன்ற உரையினின்றெழுந்த பெருங்கனல் விரிந்து எரிந்து நிறைந்தது. இருவர்தேரும் இடைந்து மிடைந்து இடைவிடாமலுழன்று, குயவன் திகிரிபோற்சுழன்று, பாதல பூதலமுழுவதும் பள்ளமாக்கி, மறுபடியுஞ் சேனைகளாலெழுந்தபுழுதிகளால் நிறைந்தது. இவ்விதமாகத்தொடர்ந்து தாறுமாறுப் வேறுவேறு பாணங்களை நூறுநூறாகத் தொடுத்துச் சண்டைகொடுத்து நின்றார்கள். அவ்வேளையில் அருச்சுனனானவன் அங்காசன்செய்தஅமர்த்திறத்தைக்கண்டு அதிககோபங்கொண்டு, ஆ! கர்னா! உனதுசாமர்த்தியமும், நீ செய்யுஞ்சண்டையும், நீ கற்றகல்வியும், இவ்வளவென் றறிந்துகொள்ளும் பொருட்டாகவே இதுவரையிலும் உன்னைப் பிராணனுடன் விட்டுவைத்திருந்தேன். இனிநான் தாமதிக்கமாட்டேன். பொறுமைக்கிடங்கொடுத்தால் அது வறுமைக்கிடமாகும். யிவ்விடத்திலுள்ள பெரியவர்களும் உரியவர்களும் அறியத்தக்கதாக ஒருகணையால் உன்னைவாட்டி, கீர்த்தியைநாட்டி, நானடையப்போகின்ற வெற்றியை நீயேநன்றாயோசித்துப்பார். என்று இரண்டு அர்த்தசந்திராஸ்திரங்களை விட்டு, அதிசீக்கிரத்திற் கர்னன்கைப்பிடித்த வில்லைக்கடுக்கென்றொடித்தான். அப்பொழுது கர்னன் கலீரென்று நகைத்து, மலைபிளந்ததுபோ லொடிந்த வில்லைவிட்டெறிந்து, கண்களையுருட்டி விழித்து, காரும்பாருங்கருகநோக்கி, தனதுகரத்தில் வேறுவிற்கொண்டு, பற்குனன்பேரிற் சிகைவிரிந்த செங்கதிர்வேலெடுத்துச் செலுத்தினான். இப்படி அங்கராஜன் எறிந்த வேலாயுதமானது அண்டங்களதிர வெளிப்பட்டு, சொர்ணநிறமாகச் சோபித்து, பூர்ணசந்திரனைப்பிடிக்கவருகின்ற இராகுக்கிரகம்போற் செஞ்சிலைவிஜயனை நோக்கிவந்தது. அந்த வேலாயுதங் கந்தமாதனமுங் கடலுங்கலங்கித் திரிபுவனமுந் திடுக்கிடவந்த விதத்தைச் சர்ப்பக்கொடி தரித்த கௌரவகுல துரியோதனனும் ரதகஜதுரகபதாதியுடன்கலந்த பல காவலர்களுங்கண்டு, ஓ! ஓ! ஓ! அருச்சுனனுடைய சௌரியம் யிப்போதல்லவோ தெரியப் போகின்றதென்று நிமையுட னிமைகொட்டாமற் கண்விழித்துப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்.

இப்படி எல்லோருநடுங்க எதிரேறிவந்த வேலாயுதத்தை அநுமக்கொடிக் கதிபனாகிய அருச்சுனன் பார்த்து, வலிதிருந்தி மணிபொருந்தி மலரணிந்துவிளங்குகின்ற வச்சிரக்கணையொன் றெடுத்து, அசைவற்ற வில்லிலமைத்து அபிமந்திரித்து ஆவேசங்கொண் டுந்தினான், அந்தக்கணையானது பந்துபோலெழுந்து, வந்துமேல்விழுந்து, அந்தவேலாயுதத்தை அரப்பொடியாக நூறி, அந்தப் பொடியை வணங்காமுடி மன்னன் முதலாகிய கௌரவச்சேனைகளின் கண்களிற்றூவியது. விழித்தகண்விழித்தபடி வேடிக்கைபார்த்திருந்த வேந்தர்களியாவருந் திகைத்து, யிதற்கோ யிந்தக்கொள்ளையென்று தலையிறங்கிக்கொண்டார்கள். அதைக்கண்ட தேவர்கள் அகங்களித்தாடினார்கள். அங்கதேசராஜனாகிய கர்னன் அருமையாய்ப்பெற்றிருந்த அவ்வேலாயுதம் அருச்சுனன்கணையால் அழிபட்டுப்போனதைக் கண்டுஞ் சற்றுந் தளராமல் மனோதிடங்கொண்டு, வைரவில்லொன்றெடுத்து, அதைத்தீர்க்கமாய் வாங்கிச் சிறுநாணோசைகாட்டி, சிலைவிஜயனுக்கு எதிரில்வந்து, அளவுபடாத அஸ்திரங்களை அமோகமாகச் செலுத்திப் போர்விளைத்தான். அச்சமயத்தில் இந்திரன் மைந்தனான தனுவேத சுந்தர தனஞ்செயன் மகாதேவனை வணங்கி அருச்சனைப் புரிந்து, சிறந்த பொற்கட்டமைந்த அஸ்திரங்களைத் தெரிந்தெடுத்து விடுத்து, சங்கமுங் குறித்து, சொர்ணமயமாய் விளங்குகின்ற அக்கர்னனுடைய தேரையும் - கவின்பெற்ற கச்சைக்கொடியையும் - நான்கு புரவியையும்- அப்புரவிகளைப் பாங்குற விடுக்குஞ் சாரதியையும் பொடித்து, அவனுடற் காப்பாகிய மணிக் கவசத்தையுந்

துணித்துவிடுத்து, வீரபட்டத்தையுந் தூளாக்கி, அவனைத் தலையிறக்கமாய்ப் பூமியினிற்கச்செய்தவனும்; மிகமகிழ்வுற்றுப்புகழ்பெற்ற அர்ச்சுனனவன் சிற்சிலவார்த்தைகள் சொல்லலுற்றான். ஐயா கர்ணா! இளமைதங்கிய ரிஷபம்போன்ற உன்னை நான் நெடுநாளாக அறிவேன். உன்யோக்கியம் எப்பேர்ப்பட்டதென்னில், புத்தியில்லாத புரவலர்சேர்ந்த புன்சபையில் என்னை வெற்றிகொள்ளத்தக்க சுத்தவீரர்கள் ஒருவருமில்லையென்றும், யுத்தத்தில் நான் அதிசமர்த்தனென்றும் விஸ்தாரம்பேசுவாய். நான் நிகரற்றவனென்பாய். இப்படிபுலம்பிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உன்பொல்லாதவேளை யுத்தநேரிட்டால், அற்ப பலம்பெற்ற அறிவில்லாரைப்போல் அயலிற் பதுங்குவாய் ஒருவேளை அடுத்துப் போர்கொடுக்கத் துணிந்து அனமட்டும் பார்ப்பாய். அடிபட்டு ஓட்டமெடுப்பாய். இக்குணம் உன்னுடன் கூடப்பிறந்திருக்க, வேறே வாவென்றால் வருமா?

ஐயா! எவர்களென்னகேட்டாலும் இல்லையென்னுமற் கொடுக்குந் தன்மை உன்னிடத்திலுண்டென்றும், ஓயாமலீயுங் கொடையாளியென்றும், இடையெழுவள்ளலி லொருவனென்றும் உன்னைப்போற்றிப் புகழ்கின்றார்கள். ஆனால்புத்தகளத்தில்வந்து ஒருதெப்பைபட்டவுடனே அப்பாவென்று புறங்காட்டியோடுகின்ற விஷயத்திலு நீ மிகவுங்கொடையாளிதான். நானும் உன்னை மதித்திருக்கின்றேன். ஓ வாய்மதம்பேசும் வள்ளலே! போர்முகத்திற் றேர்செலுத்திப் போர்புரிந்து புறமிடாதிருந்து பிராணனை விட்டுவிடுவையாகில், இகத்திலுள்ள எல்லோரும்புகழ்வார்கள். பரத்திலுள்ள தேவர்களும் எதிர்கொண்டு சென்று மகிழ்வார்கள். அரம்பாஸ்திரீகளின் போகமுமுண்டாம். வீரசுவர்க்கமடைவாய். இதற்குச் சம்மதியில்லாதபக்ஷத்தில் நீயடுத்திருக்கின்ற அரவக்கொடியோன் கொண்டாடும் படிக்குத் தப்புவார்த்தைகளைக் குளறி, உன்காலத்தைக்கழித்து, நமனுக்கு நாளைபொப்பிவிப்பது உத்தமம். இவ்விரண்டுமின்றி நானுமொரு நாயகவீரனென்று அமர்செய்யவந்து புகுந்து, பிறைமுகப்பகழி சொரிந்து போராடுகின்ற வீரபுருஷரெதிரிற் றேரேறிவந்து எதிர்த்தது மதியீனம். ஓ திறனற்றவனே! மேலும்-பாஞ்சாலராஜன் பண்ணிய யாகாக்கினியிற் பிறந்த திரௌபதாதேவியை அத்தினபுரியிற்கூடிய கொற்றவர் சபையிலேற்றி வஸ்திரபங்கஞ்செய்தகாலையில், பொறிபுலன்கலங்கி, கண்ணீர்தாரை தாரையாய்ச் சொரிந்து, மெய்சோர்ந்து, நடுநடுங்கி, மானந்தன்னதென்று மனம்வாதிக்கநின்று, தன்னுற் புடவையைத் தடுத்துக்கொள்ள மாட்டாமல் வஸ்திரத்தைக் கைவிட்டு, தேகாபிமான நீங்கி, ஓ ஹரிவாசுதேவா! ஸ்ரீகிருஷ்ணா! எனக்குரிய மானாபிமானமனைத்து முன்னுடையதென்றுவாழ்த்தி வணங்கிமரம்போல் நின்ற பாஞ்சாலியை: துஷ்டராகிய நீங்கள் பார்த்து நகைத்துப் பரிகாசவார்த்தை பகர்ந்தீர்களல்லவா? ஈனஜாதியோரும் இவ்விதசெய்கைக் குடன்படுவார்களா? அந்தவேளையில் எங்கள் தமயனாகிய தர்மராஜன்-அப்பா தம்பிமார்களே! இப்போதொன்று முழுகிப்போகவில்லை. இதுவரையிலும் நாம் தருமந்தப்பி நடந்தோமென்னும் பேருமில்லை பழிச்சொற்பெறுமற் சகித்திருங்கள். என்று அடிக்கடி யெங்கட்கு அறிவுறுத்தி, சுத்தசாந்தமே பத்தினியென்றும்-துய்யபொறுமையே தனயனென்றும்-தர்மஞ்சொல்லித் தடைபடுத்தினர். அவரோதிய மூலமந்திரத்தால் நாங்கள் மகாநாகம்போலடங்கித் தடைபட்டு, கன்மாநுபவப் பிரகாரங் காலங்கடத்தினோம்.

ஆ! ஹா! ஹா! வைதிக சாந்தஸ்தராகிய தருமராஜனது அருணிறைந்த கடைக்கண் கொஞ்சமசையுமாயினும், எங்களை நோக்காதிருக்கினும் போதுமே: இதுவரைக்குங் கர்னன்-துரியோதனன்-என்கிற பெயர்கள் இந்தக்காசினியோர் பேசிக்கொள்ளவுமிருக்குமோ? இவர்கட்குச் செல்வமுஞ்செருக்குமோ? தீரமும் பெருக்குமோ? ஆ! பாவி! அப்படிக்கு நாங்கள் ஒடுங்கியிருந்தும், அந்தச் சபையில் நீங்கள் நடந்த அநீதத்தால் வீமசேனன் வெகுண்டு மனநொந்து, துரியோதனன் முதலாகிய நூறுபேரையும் என்கதையால் நானே நொறுக்குகிறேனென்று சபதம் பேசி, இவர்களை முடிக்கிற பரியந்தந் தாகத்திற்குச்சலங் குடிக்க மாட்டேனென்று கூறினான். அந்தச் சொல்லைக்கேட்ட சமஸ்தமானபேருந் தலைகுலுக்கிச் சாய்த்தார்கள். அந்தவேளையில் நானுமெழுந்து, மின்னியகணையால் உன்னுயிர் போக்குகிறேன் என்று உறுதிவார்த்தை உரைத்திருக்கின்றேனே அது உனக்கு நன்றாய்த் தெரியவருமல்லவா? என்றைக்கிருந்தாலும் என்பாணத்திற்கு உன்தலை சொந்தமே; அஃதுனக்கிரவலே: இப்போதுமென்ன? ஒருமுழுக்கில் மண்ணெடுக்க வேண்டுமென்னும் அவசரமில்லை நீ இப்போதிருக்கின்ற கதியை யோசித்துப் பார். உனக்கு என்னுடன் சண்டைசெய்யத் தெரியுமாகில் தாராளமாய் வந்து போர்புரிந்து என்னைச்செயிக்கலாம் நான் உனக்கு யிந்தப்பூமியையிடம்பண்ணியிருக்கின்றேன். ஐயோ! பாவம்; நீ எங்கேபிறந்தாய்? எங்கேவளர்ந்தாய்? எங்கே யிருந்தாய்? அங்ஙனேயிருந்து காலங்கழிக்காமல் அரவக்கொடியோனைக் கெடுக்கயிங்கேபுகுந்தாய். ஓ அங்கதேசாதிபனே! நீ யின்னுஞ் சிலநாளைக்கு யிருக்கவேண்டுமென் றெண்ணினால், யிதோ நான் தொடுக்கப்போகின்ற யிந்துமுகாஸ்திரங்களினால் தப்பாமலுன்தலை தத்திவிழப்போகின்றது. அதை முன்னதாயுனக்கறியச்செய்தேன். எதோ நீ வீரனானால் யித்தத்துக்கு உன்னுயிரைத்தப்பிக்கொண்டோடிப்போ வென்று உறுக்கி யுரைத்தான். யிந்தப்பிரகாரம் அர்த்தநாரீஸ்வரம் பெற்ற அம்பிகையுடன் எங்கர்த்தாகிய பரமேஸ்வரர் மழவிடைமே லெழுந்தருளி

வரும்படிக்குத் தவயோகஞ்சாதித்த தனஞ்செயனானவன் சாற்றியபோது, அவனிசைத்த கடுமொழிகளெல்லாங் கலந்து பிலம்புகுந்து உறையுமாறுபோற் கர்னனுடைய காதிற்புகுந்து கலங்கச்செய்தன. அதனாற் கர்னனானவன் சூரியன்போற் கண்கள் சிவந்து, நெருப்புக் காற்று வீசுவதுபோல் நெட்டுயிர்ப்பெறிந்து, இரத்தினமிழைத்த கடககங்கணமுந் தோளணியுந்தாங்கிய இருபுயத்தையும் பளபளவென்றுதட்டி, இரண்டுகையையுங் கூப்பிக்கொட்டி, கக்கடக்கக் கடச்சிரித்து, காலுடன் சிரத்தை யசைத்து, திக்கென்றெரிய விழித்து, பக்கத்திற் குப்புறப்பாய்ந் தோடினான்.

யிவ்வாறோடிய கர்னன் மீட்டு மனந்துணிந்து, மலைபோற்றிணிந்த சேமத்தேரேறி, வச்சிரக்கவசம்-உச்சிதக்கவசம்-மணிக்கவசம்-மாழைக்கவசம் - இவைகளைப் பூண்டு, விசாலமான மார்பில் முப்புரிநூலும்-முத்தாரமும்-கொத்துச் சரப்பளியும்-பொன்மாலையும்-பூமாலையும் பொலிவுற்று மின்னும்படியாகத் தரித்து, கடலின் அலைபோற்றுலங்கிய நாரிமாட்டிய வில்லைப்பிடித்து, விசையாயிழுத்து, தடதடவென்று தேரைச்செலுத்தி, சற்றுநேரத்திற்கு முன்னே சண்டைபோட்டு யிளைத்தோடிவந்த அத்தடத்திற்போய்நின்று, மீசைமுனைக்கு மிகுமுறுக்கேற்றி, கண்டபேர்கலங்கக்கனைக்குங் கொண்டல் வாகனன் குமாரனான கிரீடியை அண்டையிற்கண்டு, அடா அர்ச்சுனா! எங்கே ஓடவழிபார்க்கின்றாய்? என்சண்டைபோடச் சக்தியில்லாமற் போகின்றாய்? யிதோ நான் வந்திருக்கின்றேன். யிப்போ திளைத்துப் போய்விடாமல் என்னைவளைத்துப் போர்புரிய வாடா. என்று யாவருமறியத் தானோடிய நிலைமையை மறைக்கத் தனஞ்செயனோடிய வாறுபோற்குறித்து அவனைமடக்கி, ஏண்டா என்னை யிழிவாகப்பேசினை? என்று தன்னாக்குக்குத் தழும்பேறும் படியாய்க் கோபங்கொண்டு கொடிதான சிலசொற்களைக் கொட்டுகிறான். அடாபஞ்சவரில் யிடைப்பட்ட பஞ்சையே! நீ யென்னடா கொஞ்சமேனும் அஞ்சாமல் மெத்தவுங்கற்ற சுத்தவீரன்போற் கருவங்கொண்டு மிஞ்சிப்பேசுகின்றாய்? தலையறுந்த ஆட்டமாய்த் தனக்குத்தானே சுழன்றாடுகின்றாய். யிவ்வூரிலுலகத்திலுள்ள பெரியோர்கள்-உரியோர்கள்-சிறியோர்கள்-வறியோர்கள் முதலாகிய யிவர்களியாவரும் உன்னைப்பார்த்து, யிவனும் ஒரு வீரன்தானென்று ஏளனஞ்செய்து சிரிக்கும் படிக்கு ஏமாந்துச்சூதாடி, நாட்டை-நகரத்தை-நலத்தை-பலத்தை-யின்னுமுள்ள யெல்லாவற்றையும் பங்காளிகள்கையில் ஒப்பிவித்துப்போட்டு, மானம்போனாலும் பிராணனிருந்தாற் போதுமென்று, யிருளுக்குப் பிறப்பிடமும் யிருப்பிடமுமாகிய வனத்திச்சென்று, கதியற்றிருந்து, கஞ்சிக்கலைந்து, வயிறுகட்டி, வாணாளோட்டி, யிப்படிக்கெல்லாங் காலங்கழிக்கக் கற்றாயன்றி, போர்முனைக்கண் ணேர்புகுந்து வில்லாளரான வல்லாளருடன் விதண்டைவிளைத்து வெற்றிபெறுகின்றவிதம் இன்னதென்றறிவாயோ? வீரப்பிரதாபம்பெற்ற விவேகிகளை உணர்வாயோ? நீயும் ஒருவில்வீரனென்று வீரபட்டங் கட்டிக்கொண்டு வில்லெடுத்துப்போர்கொடுக்க வந்தாயல்லவா? போதும்: போதும்:

அடா அர்ச்சுனா! அஸ்தினாபுரத்து ராஜகோஷ்டியில் வட்டாடித்தோற்று மரியாதைகெட்டதுமன்றி, உங்கள் நாட்டைப் பறித்துக்கொண்ட நரேந்திரனானவன் உங்கள் பெண்சாதியையும் மயிரைப்பற்றி யிழுத்து வந்து சபையிலேற்றி மானபங்கஞ் செய்வித்தானே அந்தக்காலத்தில் இல்லாதமுனையும் முடுக்கும் இந்தக்காலத்தில் எங்கடாயிருந்து எழுந்தது! என்னைக்காணவே கிளைத்தோடி வந்ததோ? அல்லது முளைத்தோடி வந்ததோ: மானமும் வல்லமையு மாறுதவன் நீதானோ? இதுபோகட்டும். கீழேகிடப்பவன் கீழேதானே கிடப்பான் என்பதுபோல், ஒருவேளை சூரத்துவம் இப்போது தான் வந்தாலும், என்னைச்செயித்து இசைபெறப் போகின்றவன் நீதானோ? விஜயசாண்டபம் எடுத்துவென்றிவாகை பெறுதற்கு வந்தாயோ? ஆ! பைத்தியக்காரா! இராஜராஜேஸ்வரனாகிய துரியோதன மஹாராஜன் சமுகத்திற் பேச்சுமூச்சுமில்லாமற் பதறிக்கிடந்த பாண்டவர்களிற் பின்னிட்டிருந்த நீ, என்னை மிரட்ட வந்தாயென்னடா? அடா பேதையே! இதோ யிப்போது நான் விடுக்கப்போகின்ற இரவியாஸ்திரங்களால் உன்னுயிர்வெளிப்பட்டு; உடல்முறிபட்டு, உன்போலொத்தவர்கள் நிந்திக்கத்தலைப்பட்டு, நீ நெடுநாளாய்த்தேடிச் சேகரித்த கீர்த்தியுங் கேடுபட்டு, நிஷ்டுரமாகிய வசை மேற்பட்டு, பொன்னாடுபோய்ச் சேரும்படியாய் நாளிட்டுவைத்த நன்னாள்வந்து ஒத்துக்கொண்டது. ஐயோ! இனியென்ன யிருக்கின்றது? தாய்-தமையன்-தம்பியர்கள்-தாரம்-தனயர்-இவர் முதலியபேர்களை ஒழித்துவிட்டுத் தனியே சண்டைக்குத் தலையிட்டு, இவ்விராடபுரத்தெல்லையிற் செத்துப்போக விருக்கின்ற உன்னைக்குற்றமான கொடுஞ்சொற் கூறுவானேன்? அப்படிப் பேசுவதினால் எனக்கென்னலாபம்? ஓ பார்த்தனே! சற்று நேரத்திற்கு முன்னே என்னைச்செயித்து ஓட்டிவிட்டதாய் இறுமாந்து, முன்னாலோசனை பின்னாலோசனை யெண்ணாமல், குறைகுடந் தளும்புவதுபோலும்-நொய்யரிசி கொதிபொறுக்காத் தன்மைபோலும்-சின்னப் பேச்சுகளைக் கொட்டிப் போட்டாய். உன்னுடனெதிர்ந்த என்கைவில்லும் நானேறிய தேரும் ஒழித்து, நானும் போர்முனையிற் றெழித்துப்போனதை இன்னவிதமென் றறியாமல், வெற்றி யடைந்தோமென்னும் உற்சாகங்கொண்டு உனக்கிச்சையானமட்டும் பேசினை யாக்கும்.

அப்பா அர்ச்சுனா! யானையைச் சிங்கம் பங்கப்படுத்துவது இயற்கை. அப்படிப்பட்ட சிங்கம் அந்தயானைக்கு ஏதோவொரு காரணமாகச் சற்றிடைந்துபோனால், அந்தயானை சந்தோஷப்பட்டுச் சிங்கத்தைப்பழித்துப்பேசுவதுந் திரமோ? இதுவுமொரு வீரமோ? நீயென்னமோ மெத்தத்தெரிந்தவனென்று பேசிக்கொள்ளுகின்றாய்களே; உனக்கென்னதெரியும்? வில்லானது எவ்வளவு துவண்டு வளைகிறதோ அவ்வளவும் வேகத்திற்கிடமென்று தோன்றவில்லையோ? ஆட்டுக்கடா பின்னுக்கிடைவது இன்னொரு ஆட்டின் தலையோட்டுக்குக் கேடென்றுணராயா? ஏதோ காரியத்தினாற் பின்னிட்டசிங்கமானது மறுபடியும் பிரவேசித்து மத்தகத்தைபிளந்து உதிரமூளையை நிரப்பப் புசிக்குமென்று சற்றேனும் நீ நினைக்காமற் போனதென்ன? நல்லது. யிப்போது நானுன்னைச் செய்யப்போகின்ற செய்கையினாலும், காரண காரியங்களினாலும், என்னை யின்னானென்றறியப்போகின்றாய். உன்னிடத்தில் விருதாவாகப் பேசுவதிற்பிரயோசன மொன்றுமில்லை, அடா அப்பிரையோசனா! என்று ஊரத்துத் தொனியிட்டதட்டி, கரத்திலிருக்கும் வில்லைநாட்டி, நாணிபூட்டி, வலுத்தகணைகளை வந்தித்துமாட்டி, வீரலக்ஷணங்காட்டி, மிகுந்தவிசையுடன் தகுந்த சரங்களை விறுவிறுவிறுவிறென்று பொழிந்தான். யிப்படிக்குச் சூரியகுமாரனான கர்னன்தொடுத்த சரங்களினாலும் அவன்தூறிப்பேசிய வீரியச் சொல்லினாலும் அர்ச்சுனன் மனம்பதைத்து, அனலாஸ்திரம்-புனலாஸ்திரம்-மினலாஸ்திரம்-மேகாஸ்திர முதலியவைகளை அபிமந்திரித்துப்போக்கி, பற்பலதேயமாந்தரும் - விற்பனமேய வேந்தரும்-வீரசேனைகளும்-யிருண்டுமருண்டு. யிளைத்துப் போகும்படியாக்கி, கர்னன்பேரிலுங் கனக்கமாட்டினான். யிவ்வாறு கும்புகும்பாய் உந்திய அம்பினங்களைக்கர்னன்கண்டு, எதிரெதிர் தடுக்கும்படிக்குக்கோடி அஸ்திரங்களைவிப் போராடிநின்று, மாறுடிய தங்கள் சேனையுட னவனவனைந்து, நூறுகிய வேந்தருடன் சேர்ந்து தளைந்து, எறுகிய கிரீடியை மொய்த்துக்கொண்டு ஈட்டி-கதை - வாள்-வேல்-சூலம்-பிண்டி - பாலம்-தோமரம்-கத்தி-கட்டாரி-வாங்கு - சாங்கு-முசண்டி-முனை-சக்கரம்-யிவைமுதலாகிய சஸ்திரங்களை எடுத்தெடுத்தெறிந்து மூடுபனிபோற் ஜாடினான். அக்காலையில் தனிச்சிங்கமென்ன நின்ற தனஞ்செயனானவன் செஞ்சுடர்க்கணையைத் தெரிந்து, சிரத்தையாயெடுத்துப் பரிந்து, பூசைகளநேகம்புரிந்து, காண்டீபநாரியில் வரிந்து கால்தலை தெரியாமற் சொரிந்தான்.

இந்தக் கணைகளெல்லாஞ்சேர்ந்து கர்னன் விட்ட சஸ்திரங்களையெல்லாந் தூஸ்திரமாக்கி, அவனைச் சூழ்ந்த கும்பலிற்போய்விழுந்து தும்புபறக்கச் சுட்டெரித்தன. அப்போது காவலர்முதலாகிய யாவருங்கடல்முகட்டெழுந்த கதிரவனைக்கண்ட பனிபடும்பாடு பட்டழிந்தார்கள். விண்படரு மேகம்போலடர்ந்த நான்குபடைகளிலும் புண்படாமற் போனவர்களில்லை. யிந்தப்பிரகாரங் கர்னனோடுவந்த சேனைகளெல்லாங் காமுறிந்து, கால்தறிந்து, சிரமெறிந்து, சிலைநெரிந்து சிதைந்தன. யிப்படியாகச்சேனைகளெல்லாஞ் சிதைந்தசேதத்தையும்-வதைந்தகேதத்தையும்-வன்சேற்றின் வருக்கத்தையும், உதிரவாற்றின் பெருக்கத்தையும்-பானுகுமாரனான கர்னன் பார்த்து, படபடத்துச் சினத்து, குருசேனையிற்கூடிய பலபடைமன்னரும் அன்புகூர்ந்து இன்புறும்படியாய் ஆசாரியரான பரசிராமரைப்பணிந்து, அழல் வாளிகோடி-அறல்வாளிகோடி - அரிவாளிகோடி யெடுத்து ஆகாயமெல்லா மறையும்படிக்குத்தொடுத்தான். அந்தக்கணைகளியாவுஞ் செந்தீயிறைத்து ஜெகமுற்றுநிறைத்து, விண்ணைக்கருக்கி மேகங்களைச்சுருக்கி, வேலைநீரை வெதுப்பி வெந்நோகக்குழப்பி, விண்டலமளாவிப் பிடித்துமேவிட்டுநின்ற மலையையிடித்து, பெருங்காற்றடித்துப்பொழியுஞ் சோனமேகம்போற் பரவிச்சற்றேனுந்தங்காமற் றிரிவதாயின. இப்படி பரவித்திரியும் அஸ்திரங்களைப் போர்முகவிஜய புருடசிலாக்கியன் கண்டு, தனக்குகைவந்த இந்துமுகாஸ்திரம் ஐந்து ஆய்ந்தெடுத்து, அபிமந்திரித்து, எதிரிவிட்ட பாணமுழுமையுஞ் சற்றுநேரத்திற்சிதறவடித்துப் பொய்யெனப்பிளந்து மெய்யெனப்பிளந்து மெய்யெனத் தழைந்து வெற்றிவீரப் பிரதாபத்துடன் வாக்கடவீரென்று விட்டான். அம்மாத்திரத்தில் அவ்வைந்தஸ்திரங்களு மவனுந்தியவண்ணம் வந்து, முந்தியகணைகளைப்பிளந்து, மேவலர்கண்டோடக் களைந்துநிற்குங்காலையில்; முப்புவனமுங் கொண்டாடக்கொடுக்குங் கொடையாளெங்கும் பெயர்பெற்றுக் கீர்த்திவிளங்கிய கொற்றவனாகிய கர்னனும்-எப்புவனமுங்கொண்டாடத்தொடுக்கும் படையாளெங்கும்பெயர் பெற்றுச் சீர்த்திவிளங்கிய நற்றவனாகியபார்த்தனும் ஒருவர்க்கொருவரெதிர்த்துப் போர்புரிந்தார்கள். இருவர்கணையும் பறிந்து, யிருவர் ரதமுஞ்செறிந்து, யிடைபட்ட சேனையுமுறிந்து, ஆகாயமும்பூமியுநிறைந்து, சூரியனொளியுங் குறைந்து, வேடிக்கைபார்த்திருந்த மூவருந்தேவருமறைந்து யிடம்பெயர்ந்தார்கள். வாயுதேவனும் உலகிலுலாவுதலொடுங்கி ஸ்தம்பித்துப்போனான்.

இப்படி யிவர்களிருவரும்பிரயோகஞ்செய்தபாணவேகத்தினால் வெகுபேர்மாண்டார்கள். அடிக்கடி அவசகுனங்களும் விபரீதங்களுமுண்டாய்த் திகிலும் விளைந்தது. யுத்தஞ்செய்கின்ற இருவர்கண்களுஞ் சுழன்று, இருவரெண்ணங்களுமழன்று, சிறப்பாய்வருந் தேருந்தேரும்-செறிப்பாய்வருங் குதிரையுங் குதிரையும்-பொதுப்பாய்வரும் பாகும் பாகும்-உறுப்பாய்வருங் கொடியுங்கொடியும் - ஒன்றோடொன் றாடுதாக்கி அநர்த்தமுண்டாக்கியபோது; கர்னன்களைத்து, இடம்.வலம்-வலம்-இடமாகத் தேரைத்திருப்பி, பெருநகை, பெரும்புவி

யெனப்புகுந்து, அடா அர்ச்சுனா! அக்ஞாதவாசஞ் செய்யப்போன ஒருவருஷத்தில் இன்னும் ஒருநாட் கழிக்கவேண்டியிருக்க, அதற்குள் அவசரமாய்வெளிப்பட்ட உன்னால் நீங்களைந்துபேரும் இனிய நுபவிக்கப்போகின்ற வனவாசத்துன்பமானது உங்கள் தலைமேலேறிக்கொண்டது. சபையிற்சொல்லிய சத்தியவசனத்துறுதி அதுவல்லவா. அதுதெரியாமல் என்னடா மெத்தத் தத்தித்சற்றித் தலைகீழாய் விழுகின்றாய் ? கற்ற வித்தையெல்லாங்காட்டுகின்றாய். குற்றமற்றவர்களைப்போற் கொண்டாடிநக்கிறாய். இதோ நான்விடப்போகின்ற சிலீமுகங்களினால் இறந்து போவாயாகில், (கூண்டோடு போற்று குளருங்காச்சலும்.) என்று கூறும் பழமொழிப்படிக்கு மற்றயனை மன்னித்துவிடப்படும். சிலவேளை என்கணைக்குத்தப்பிப் பாயாகில், இன்னும் பதின்மூன்றுவருடம் வனவாசம் பண்ணவேண்டும். இவ்வாறு அந்தந்த அக்ஞாதவாசந்தோறும் உங்களை யெப்படியாகிலுங் கண்டுபிடித்து, நீங்கள் காட்டுக்கு ஆட்சியாய்ப்பொருந்த நாங்கள் நாட்டுக்கு அரசாட்சியாயிருந்து எங்கள்காலத்தை இன்பமாய்க் கழிப்போம். உங்கள் காலத்தை உதவாமலொழிப்போம். நீங்கள் பண்ணுகின்ற இந்திரஜாலத்தைப் பசையறக் கரைப்போம். என்றுசிந்தைவெம்பி, தீப்பொறிபம்பிய எட்டுக்கம்பிக்கணைகளை யொன்றின்பின்னொன்றாகவுந்தி, நிரைநிரையாகச் சிந்தி, கும்பல்கும்பலாகக் கொளுவி, குப்பையுங் கூளமுமாகக்குவித்து, அர்ச்சுனனையும்-அவன்தேரிற்பூட்டிய அஸ்வங்களையும்-அவைகளை யோட்டுஞ் சாரதியையும் அலமலங்கப்படுத்தினான்.

அந்தக்கர்னன் சிந்தியகணைகளானது ஆகாசபாணம்போலிரைந்து, இராகுக்கிரகம்போல் விரைந்து, எங்கும் பரந்து எரிந்து வருகின்ற கோரத்தைப் பார்த்தன் பார்த்து, கண்ணுமனமும் வேகக்கறுத்து, விண்ணுமேகமும் வெடிக்கச்செறுத்து, வின்னாணியை விசைபடவீக்கி, வேகங்கொண் டொன்றுபட்டோடச் சரங்களைத் தாக்கி, பானுகுமாரன்விட்ட பாணமெட்டும் பாதிவழியில் நாணப்பட்டுப்போகப்படுத்தி, பரந்துநின்ற படையினுள்களை யெல்லாம் பட்டப்பகல்போல வெட்டவெளியாக்கிக் கிடத்தி, அடடா !! இந்தக்கர்னனை எதிரியாகக்கொண்டு நாமிவனுக்கு நேராகநின்று போராடுவதும், இவன் நம்மையடிப்பதும், நாம் இவனையடிப்பதும் பெருமையா யிருக்கவில்லை. பார்க்கின்றபேர்கள், இவனுஞ் சுத்தவீரன்தான். இவனால் அர்ச்சுனனும் அடிப்பட்டான். வெகுநேரஞ் சண்டைபோட்டான். என்று சொல்லுவதற்கு இடங்கொடுக்கிறது. ஆதலா-லிது நமக்குத்தகாது. இவனோடெதிர்த்து வெகுநேரமாகின்றது. என்றுநெற்றிவியர்த்து, புருவநெறித்து, சற்றுநகைத்து, முற்றப்பகைத்து. உச்சிதமானவச்சிராஸ்திரந்தொடுத்து; அவனுக்கு உடற்காப்பாகிய கவசத்தையும்-துவசத்தையும்-உடையையும்-பீறிக்கிழித்து, எங்கும்பெருந்துளைபோக்கி, உடலிலுதிரமயமாக்கி, அந்தமட்டும் விட்டுவிடாமற் பின்னும் இரண்டுகாளமேகக் கணையைத்தூக்கி, வீணாப்பிதற்றும் வாய்மேல் தாக்கி, கச்சக்கொடியைப் பிச்செறிந்தொடித்து, கண்ணிரண்டிலும் புண்படவடித்து, நவரத்தினமுடியைத் தவறக்கெடுத்து, நகுவாகுவலயநலங்கவிடுத்து, அவனது பாரியவில்லைப்பட்டாலெனமுறித்து, அவனைப் பார்க்கப்பார்க்கப் படீரென வெறித்து, அடங்கா வயிற்றெரிச்சலுடன் அனற்கணையனேகமிறைத்து, அவன் இருதோளையுந் தாளையும் அனேகந்துவாரம்படத் துளைத்து, பகைத்தெதிர்த்த பரிவாரங்களையும் வளைத்து, பஞ்சுபோற்கொட்டிக் குமுக்கிக்குவித்து, இப்படி யெவரையுங் குலைகுலைந்தோடப்பிடித்து க்ஷமித்து எதிரொருவரில்லாமல் எங்குந்தனித்தூடாடி வருகின்றான் தாடாளனான தனஞ்செயன். அவனை வக்ஷஸ்தலத்தில் மகாலட்சுமியை வைத்தருளிய மாயனும், அவரது திருநாபிக்கமலத்தெழுந்தருளியசேயனும், பக்ஷத்துடன் மகிழ்ந்து பரிந்தார்கள். தேவர்களும் மேன்மேலாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இப்பால் அங்கதேசாதிபன் அர்ச்சுனனாலடிபட்டு, தனக்கு உயிர்த்துணையான வில்லும் ஒடிபட்டு, ஜீவரத்தினத்தையிழந்த செந்தலைநாகம்போற் சிந்தைதளர்ந்து, பின்னுந் தைரியம்விடாமற் புந்திகிளர்ந்து, வேறு வில்லொன்றினையெடுத்துப் பிடித்து, மின்போற் பிரகாசிக்கின்ற நாரியிறுக்கி, திசாதிசைகளும் பிதிர சந்திரசூரியரும் அதிர, வானிறைந்த மோனமுனிவரும், ஞானமுனிவரும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், முக்குணமுத்தொழில் விளையாட்டுடைய மூவர்களும் போனந்தங் கொள்ளும்படியாய்; கொஞ்சநேரத்திற் குள்ளாகத் துரோணமேகம்பொழியுங் கொள்கைபோற் கொடிய விஷநெருப்புள்ளகாலாக்கினிகணைகளைக்கைகொண்ட மட்டுங் கட்டுகட்டாகமாட்டித் தொடுத்தான். இப்படியாகக் கர்னன் தொடுத்த கணைகளினால் அர்ச்சுனனுடைய தேரும்-நான்குகுதிரையும்-உத்தரகுமாரனான சாரதியும் அலங்கழிந்து கலக்கங்கொண்டார்கள். அதுவேளையில் எங்கும் புகழப்பங்கு வைத்திருக்கின்ற பற்குனனானவன் அமுதாகரனிமிடகரித் திருக்கின்ற அர்த்தசந்திர பாணத்தைக் காண்டீபத்திற்பூட்டிக் கடுகடுத் தெறிந்து, கர்னனால் விடப்பட்ட காலாக்கினி கணைகளை யெல்லாம் ஒன்றுபோனவழி ஒன்று போகவொட்டாமல் தடைத்துக் கிழித்து, ஒழித்துப் பழித்து, யிடியாஸ்திரங்களை முடியப்பரப்பி, வடுவில்லாக் கர்னன் பிடித்திருந்த வில்வளைவை நிமிர்த்தி மளமளவென்று நடுவறமுறித்தான். அப்போது துட்டரைக் கொட்ட மடக்கும் அங்கதேச பட்டாபிஷேகத்தைத் துரியோதனனாற் கட்டிக்கொண்ட கர்னராஜ

ன் தன்கையிலிருந்த வட்டவரிவில்லானது அர்ச்சுனனால் வெட்டுபட்டுப் போனபோதே அதுகெட்டதென்று விட்டெறிந்து போட்டு, எட்டுத்திக்குங் கெட்டயரும் படியாய் ஆர்ப்பரித்து, வச்சிரக்கட்டிட்ட மலைபோன்ற கதாயுதமெடுத்து விறுவிறெனச்சுழற்றி விட்டெறிந்தான். அதனால் குவலயநடுங்கிப் பின்வாங்க, அலைகடல் நிலைதவறி முன்னேறங்க, திசையானையெட்டுந் திடுக்கிட்டொதுங்க, சக்கரவாளகிரியுந் தலைதாழ்த்திப்பதுங்க வாயது. இப்படியாகக்கலக்கி எங்குமுலாவியுழக்கிவருகின்ற கதாயுதக்கடுமையைக்காண்டீபன்கண்டு, வயிரக்கணையொன்று மந்திரித்தெடுத்து, மலையுடன்மலை மலைவுறுமாறுபோற் கதாயுதம் வருவதைக்காட்டிக் காதபரியந்தம் இழுத்துமாட்டினான்.

அந்த வயிரக்கணையானது வெளிப்பட்டமாத்திரத்திற் கர்னன்விசிய கதையை வழிமறித்துக்கொண்டு, அனந்தங்கோடி சக்கைச்சக்கையா யுடைத்து, வெற்றிபெறுதற்கு விரும்பிவந்த அவன் சேனைகளின்பேரிலிறைத்து, அவர்களையுஞ் சின்னபின்ன மாக்கியது. அதனாற் சேனைகளுஞ்சேனை வேந்தர்களுஞ் சகிக்கமாட்டாமற் கவண்கல்லடியுண் டழிந்தவர்களைப்போற்கை-வாய்-சிரம்-உரம்-கால்-முதலிய உறுப்புகளெல்லாம் வருந்திமடங்கியோடினார்கள். இவ்வாறாகத் தன்படைமன்னர்களுஞ் சேனைகளும் அவ்விடத்திற் பொருந்திப் போர்கொடுக்கமாட்டாமல் மாறுபட்டோடினதையும், தானெடுத் தெறிந்த தண்டாயுதமானது உமியுந்தவிடும்போல் முறிந்துபறந்து சிதறிப்போனதையும், எதிரியாகிய இந்திரகுமாரனும்- அவனேறியதேரும்-அதிற்பூட்டியகுதிரையும்-அதையோட்டுஞ்சாரதியும் - அணுவத்தனையேனும் பழுதுபடாமலிருந்த அதிசயத்தையுங் கர்னன்கண்டு, பெருமூச்செறிந்து ஏக்கங்கொண்டு, ஏதொன்றுந் தோன்றாமல் இளைத்து நின்றுவிட்டான். அப்படியாக நின்ற அங்கராஜனைச் சங்கிராம விஜயன்பார்த்துச் சிரித்து, மற்றவீரர்களையுமடித்துச் சத்துப்போகமுடித்து, வெற்றிபெறப் படித்திருக்கின்ற பத்துக்கணைகளை ஆராய்ந்தெடுத்து, பற்பல பூசையும்பண்ணி, உபசாரத்துடன் வணங்கி அபிமந்திரித்துத் தெறித்தான். அந்தக்கணைகளானது பந்தபாசம்போற்பற்றி, எட்டுத்திக்கிலுஞ்சுற்றி, கர்னன் ஊர்ந்துவந்த கனகமயமான ரதமும் அந்தரதத்திற்பூட்டிய அதிவேகக் குதிரையும்-அக்குதிரையின் மனமும் எசமானுடையமனமு மறிந்து தக்கபடி தேர்செலுத்துஞ் சாரதியும் - ஒருக்ஷணத்திலழிய ஒழித்து, அக்கம்பக்கத்தில் நிற்கும் படைகளைக்கழித்து, அண்டகடாகம் வரையிலுஞ் செழித்து உலாவிக்கொண்டிருந்தன. அப்படிபிராநின்ற பாணங்களையுங் கலைமதிமுகங் கடுகடுத்துக் கறுத்துநிற்கின்ற காண்டீபனையுங் கர்னன்கண்டு, கனல்வீசக் காய்ந்து, தேர்விட்டிறங்கிப் பாய்ந்து, உதடுமடித்து, முகஞ்சுளித்து, கைவேல்-கதிர்வேல்-வடிவேல் – நெடுவேல் - முதலிய பலவேலாயுதங்களைப் போக்கி, பூமியில்நின்று செவ்வையான யுத்தஞ்செய்தான். இப்படி பூபதனாய் நான்குபுறம்பிலுந் திரும்பி வாங்கு வரிசைகள் விரும்பி வளைந்து விளையாடிவருகின்ற செங்கதிர்ச் சேயனைச் சிலைவிஜயன்பார்த்து, இனியிவனை இவ்விடத்தி லிருக்கச்செய்யலாகாதென்றெண்ணி, விருதுகட்டிய அம்பொன்றெடுத்து பிர்ம்மாஸ்திர மந்திரத்தை யுச்சரித்து, ஆசாரியவணக்கஞ் செய்து அரைக்ஷணத்திற் றாண்டினான்.

அந்தப் பிர்ம்மாஸ்திரம் புறப்பட்டுக் கர்னனெறிந்த வேலாயுதங்களையெல்லாம் அதாகதஞ்செய்து, அந்தக் கர்னனுடைய மார்புந் தோளும் புண்பட்டுத்துளைபட்டு மயிர்க்கால்தோறுங்கண்விட்டு இரத்தப் பிரவாகமாகத் தக்கதாய் வருத்தப்படுத்தியது. அதனாற் கர்னனுடைய தேகமுழுமையுஞ் சரங்கள் பாய்ந்து, அம்புப்பயிர்நட்ட செம்பொன்மலைபோல்வாய்ந்து, அனேகதுன்பத்தால் வருந்திக் கால்சாய்ந்து, எதிர்ந்து, போரிடுவதற்குவேறுவகையில்லாம லோய்ந்து, படுகுழியில் வீழ்ந்து பாதவிக்கும் யானைபோற் பாதவித்திருந்தான். அப்படிக்கிருந்த கர்னராஜனைச் சுவேதவாகனன்கண்டு, வேகத்தக்ககோபங்கொண்டு, இரக்கமென்பது எவ்வளவு மில்லாமல் மேலுமேலு மகிமைபெற்ற சரங்களை வாரிவாரிச் சொரிந்தான். இப்படி அர்ச்சுனனானவன் அஸ்தலாகவத்தால் அமோகமாகப்பொழிந்த அஸ்திரங்களியாவுங் காடாக்கினி போலெரிந்து, வாடாமல்லியெனவந்து விழுந்து, கர்னனது நெற்றியிற்கட்டியிருந்தவீரபட்டத்தைத் துட்டத்தனையாய்ப் பொடித்து, அந்தப் பட்டங்கட்டிய நெற்றியிற் பொட்டிட்டதுபோல் முத்திரையடித்து, அவனுடலெங்கும் ஊசிநுழைவதற் கிடமில்லாமலுருவி, அவனுயிரோடும்ஊடாடிப் போராடலை மருவின. அப்போது கர்னனானவன் யாதொன்றும் யோசிப்பதற் கிடமில்லாமல், பெருமைபெறக்கருதிய சகலவித சாமர்த்தியங்களையும் விட்டு, சண்டைமுனையுங் கெட்டு, தானும் புறமுதுகிட் டோடினான். அதுகாலையில் அர்ச்சுனன் தேரிலிருந்த உத்தரகுமாரன் பளபளவென்று இருகரமலரையுங் கொட்டி, கலகலவென்று கனநகையதுகொடு திட்டி, ஓ! ஓ! ஓ! என்றிரைந்து விரைந்து தேர்விட்டான். இங்ஙனம் அஞ்ஞான வஞ்சகத்தில் அனுதினமுங் கருத்தைப்பொத்திய துரியோதனனும்-அவன் தம்பிமார்களும்–குற்றத்திற்கு மெத்தத் திடஞ்சொல்லித் தேற்றுகின்ற சகுனிமாமனும்-மற்ற வித்வசிரேஷ்ட மேன்மையோர்களும்-அர்ச்சுனன்செய்த யுத்தமுகத்திற் புறங்கொடுத்தோடுகின்ற கர்னனைக்கண்டு, கவலைமேற்கொண்டு, ஐஐயோ !! இக்காலத்தி லிவ்வொருவனுக்கே நாமுடைவதானால், ஐவரு மொன்றுசேரில் இனியெக்காலத்திலும் நமக்குச்செயமில்லை. இப்போதிருக்கின்ற அரசாட்சியும் போய்விடும். என்று ஏங்கித்தளர்ந்தார்கள். சூரியனுக்கொப்பாகிய ஆரியர்க

ளான வீஷ்மாசாரியர்-கிருபாச்சாரியர்-துரோணாச்சாரியர்-முதலிய பெரியோர்களெல்லாம் முகமலர்ந்து, அகமகிழ்ந்து, புயம்பூரித்து, தேகம்பாரித்து, ஜெயமுஞ்செல்வமுந் தனஞ்செயனே பெறுவான். இவனே தீரனென்பதற்குத் தடையேதாகிலு முண்டோவென்று வாழ்த்தினார்கள்.

அருச்சுனனுக் கிளைத்துப் புறங்காட்டிப் போகுங் கர்னனை அஸ்வத்தாமன் கண்டேசுதல்.

அந்தவேளையில் அதிரதத்தலைவர்களில் யாருமெனக் கிணையாக மாட்டார்களென்று ஆவி பறியப் பறியப் பலகாலுங் கூறிகூறித்தேறிய அங்கதேசாதிபன்சங் கடப்பட்டு நொந்து, பின்காற் பிடரியிலடிபட ஓடுகின்றதை அழகியதேர்மேல் அமர்ந்திருந்த அஸ்வத்தாமா கண்டு வெருண்டு, மகா அவசரத்தோடுந் தன்தேரைமுடுக்கிச் சென்று, இந்தக்காலத்தில்தான் அந்தக் கொடையாளியைத் தடுத்துப் பேசவேண்டுமென்றுபோனான். இவன் தேரோடிவருகின்ற பேரோசையைக் கலவரங்கொண் டோடிவருகின்ற கர்னன் கேட்டு, திரும்பிப்பார்க்கச் சாவகாசமுந் திடதைரிய திரமு மில்லாதவனாய் அருச்சுனன் தாக்கி அடிக்கவருகின்றானோ வென்பதாய் மேன்மேலாகிய திகிலடைந்து, பின்னு முடுக்காய்ப் பதறிப் பூமிமேலிடறிப் பொத்துப்பொத்தென் றடிக்கடி தடுமாறிவிழுந்தோடினான் இவ்வாறிளைத்துப் பிராண பயங்கொண்டோடுகின்ற கர்னனை அதிவேகங்கொண்டு வந்த அஸ்வத்தாமாவளைத்துப் பேசுகின்றான். ஓ படையாளியானபாரமார்த்தியனே! நான் அஸ்வத்தாமன். இப்போது நீர் கண்பொறிகலங்கித் தலைகவிழ்ந்தோடும் வேளையில் என்னை அர்ச்சுனனென்று மதித்து ஆத்திரப்பட்டு ஓடவேண்டாம். நில்லும்: நில்லும்: ஐயோ! பாவம்: சற்றே நிதானித்துப் பாரும். இங்கேவாரும். கொஞ்சம் இளைப்பாறும். ஓ! ஓ! ஓ! இதென்ன கோலம்? ஐயோ! பொல்லாதகாலம். ஏனிவ்வாறோடுகின்றீர்? மண்களிற் புரண்டொதுங்கி, கண்களிற் சலங்கலங்கி, மார்பும்-தோளும்-காலும்-கையும்-நடுங்கிக்கொண்டு போவானேன்? எதிரிகள் வாயெடுக்கவொட்டாமல் வாயாடுகின்ற உமதுவசனம் ஒடுங்கிப்போவானேன்? ஓ காரியவானே! காரணஞ்சொல்லும். நாமெல்லோருங்கூடி மாடுமடக்கிய அந்தவிடத்திற் சற்றுநேரத்திற்கு முன்னே இதோ ஓடிவருவது ஒருதேரென்றும், அதன்மேல் வருகின்றவன் ஒண்டிக்காரனென்றும், அவன் கைப்பிடித்திருப்பது ஒருவில்லென்றும், அவனைச்செயிப்பதற்கு நம்மிலெவராலு மாகாதென்று நாங்கள் சொல்லியபோது; அவன் எனக் கெம்மாத்திரமென்று ஆணவமாய்ப் பேசி, நீங்க ளியாவரும் எனக்குப் பின்னின்று வேடிக்கை பாருங்களென்றேசி, வந்திப்பாகிய பலபடைகளுடன் சென்று, முந்திப்போய் நின்றுமுனைந்து போர்புரியப்போனாயே: அப்பா கர்ணா! நீ கைப்பிடித்திருந்த வில்லெங்கே? நீ ஜெயிப்பேனென்று சொன்ன சொல்லெங்கே? அங்கதேசராஜ பட்டாபிஷேகம்பெற்ற முடியெங்கே? ஆகாயமளாவிப் பறக்குங் கச்சைக்கொடியெங்கே? கூசாமலோடுங் குதிரையெங்கே? குணமறிந்தோட்டுஞ் சாரதியெங்கே? தந்திரச்சேனையெங்கே? மந்திர உச்சரிப்பெங்கே? வீரபட்டமெங்கே? விருதின் திட்டமெங்கே? மணிக்கவசமெங்கே? துணிக்கவசமெங்கே? எனக்குத்தயவுசெய்து சற்றேசொல்லப்பா!

ஓ வெல்லப்பாகினு மினிப்பாய்ச் சொல்லுஞ்சொற்களிற் சிறிதுஞ்சோர்வில்லாதவிற்சாதுரியனே! உனக்குத் துணைபட்டுத் துள்ளிக்குதித்த வேந்தன்தம்பியாகிய துற்சாதனனெங்கே? அவன் மச்சானெங்கே? அன்புள்ள மாமனெங்கே? ஆ! பச்சாதாபம் பார்க்காத பதிதனே! மாறுபட்டுவரும்பகையாளிகளைப் பேறுபெற்ற ஆயுதங்களினாற் கூறுகூறாக்கித்தாறுமாறாக வேறுலகாளவிட்டு வலம்புரி மாலைபணிந்த துரியோதனமகாராஜனை இந்த நிலம்புரக்கப் பட்டாபிஷேகம் பண்ணிப் பெருஞ்செல்வத் தமைக்கிறேனென்றும், அருச்சுனனுக்கு வைரி நானொருவன்தானென்றும் பெருமைபாராட்டி அருமையாகச் சொல்லிய நீ; அந்த அருச்சுனனா லடிபட்டு, பெருகிவழிகின்ற இரத்தவெள்ளத்தில் நீந்தி, விசனநீர்மாந்தி, இருகையேந்தி, நிலத்தில்வீழ்ந்து ஆழ்ந்தி, நிணச்சேற்றிலழுந்தி நெடுங்காற்புதைந்து ஓடவேண்டியதென்ன? ஓ உத்தமனே! எங்களைப்போன்றவர்கள் ஒருவனுடைய அன்னத்தைப்புசித்து, யுத்தநேரிட்டகாலத்தில் எசமானையிழந்து எதிரியைப்புகழ்ந்து, நன்றிகுன்றி மானங்கெட்டு நாணம்விட்டு நடக்கத்தக்கவர்கள். இதல்லாமலும்-தீரத்துடன் செயிக்கப்போகின்ற உன்னைப்போலொத்த வீரனுக்குப் பக்கத்திலிருந்து நச்சுநச்சென்று லச்சைகெடப்பேசி, ஜெயிப்பவர்களையுந்தடுத்து, அவர்களுக்குள்ள திடதைரியத்தையுங்கெடுத்து, நாங்களுங் குப்புறப்படுத்து, எதிரிட்டபகையை வெல்லாமலும்-வெல்லுகின்றபேர்கட்கு உற்சாகஞ்சொல்லாமலும்-காரியத்தாழ்ச்சிசெய்கின்றவர்கள். ஆதலாற்றான் எங்களை ஊரைப்பார்க்கப் போகச்சொன்னாய். அப்படிப்போக மனதில்லாதவர்கள் அர்ச்சுனனை யடித்து வெற்றிபெறப் போகின்ற என்னுடைய யுத்தவல்லபத்தைப்படித்து, எனக்குப் பின்னாலேநின்றுகண்டு சந்தோஷப் படுங்களென்றும் பேசினாய். போகட்டும்: எங்கள் கதிதான் அப்படிக்கானாலும், வாய்ப்பகட்டுரைத்த உன்கதியை யோசிக்குமிடத்தில் - போர்முனையைவிடுத்து, சாதுரியவான்களாகிய பாண்டவர்க

ளுக்குச் சந்தோஷங்கொடுத்து, உனக்கு அன்னமிட்டு ரக்ஷித்த துரியோதனராஜனுக்குத் துன்ப மூட்டையைக் கொடுத்து, நீவாயாற்பேசியிருந்த வரிசைபற்ற புகழையுங்கெடுத்து, நன்றிமறவாத வென்றிவீரனானாயே: ஆ! ஆ! வீரசுந்தரனே! ஆயினும்-இப்போது ஓடுகின்ற நீ ஒருவேளை திரும்பிவருவையாகில் உன்னைக்காப்பாற்றிய துரியோதனனுக்கு என்னசொல்லுவாய்? பெரியோர் முதலிய பிராமணருக்கு க்ஷாத்திரமில்லையென்றும், வைதிக சாந்தஸ்தமுடையவர்களென்றும், க்ஷாத்திரமுள்ள க்ஷத்திரியகுலாதிபன் நான்தானென்றும் மார்புதட்டிப்பேசினையே: ஓ தராதிபனே! ஓ எதுகாரியங்களையுமெண்ணித்துணியாமல் விண்ணணம் பேசுகின்ற வீணனே! இத்தருணத்திலேனும் நானிசைப்பதைக் கேட்பாயாக.

இவ்வுலகத்தில் மௌடீகர்களாயிருக்கின்றவர்கள் இருந்தயிடம்விட்டெழுந்திராமல் வாய்கொண்டமட்டும் வசனிப்பார்கள். சொல்லியவண்ணம் நடத்தமாட்டார்கள். விவேகிகளாயினோர் பலமுகத்திலுந் திரிந்தாராய்ந்து, தங்களுக்குச் சகலகாரியங்களுங் கைகூடியிருந்தும் வாயடங்கி, தன்பலமும்-எதிரிபலமும்-காலபலமுமறிந்து, சொல்லியவண்ணம் நடத்துவார்கள். இப்படிக்கெல்லாமில்லாவிடத்து அப்படி நடத்தலாமென்பது சிருஷ்டி கர்த்தாவாகிய திசைமுகனாலுங்கூடாது. நீயோ? கெடிஸ்தலாதிபனான கௌரவகுல முதல்வனால் தனம்-தானியம்-சம்பத்து-பசு-பத்தினி-புத்திரர் - மித்திரர்-இவைமுதலிய வெல்லாப்பாக்கியமும் படைத்து, பொக்கிஷப்பொருளைப் பூரியாகக்கொடுத்து, புகழுடம்பெடுத்துப் பூரித்திருக்கும் புஜபலவலிமையால் முன்பின் யோசிக்காமல் வம்புப்பேச்சுகளைப் பேசிவிட்டாய். மகானுக்களுக்கு மனம்ரோசிப் போயது. உன்பேச்சின்படி முடிப்பதற்கு உனக்கும் அசாத்தியமாயது. இன்னும் ஒரு சிங்கத்தைப் பதினாயிரம்பானைகள் வளைத்துக்கொண்டாலும், தங்கத்தைக் குப்பைமேடு மறைத்துக்கொண்டாலும், சிங்கத்திற்குந் தங்கத்திற்கும் பங்கம்வருமென்று உன்சிந்தையிலெண்ணாதே. என்று பலவிதமாயெடுத்துப்படித்து, தவடையிலுமிடித்ததுபோற்பேசினான். அப்போது சூராதி சூரனும் அஸ்திரசஸ்திர சாமர்த்தியனுமாகிய கர்னன் ஏதொன்றும் பேசாமல், எதிர்த்துவாயாடாமல், தலையெடுத்துப்பாராமல், சமயத்திற்குத் தக்கபடி சொல்லாமல், அர்ச்சுனனால் மடிந்த பிணமலைகளுக்குப் பின்னாலொதுங்கி. ஆமைபோற்பதுங்கி அகதிபோல் நின்றான். அவன்கதி யப்படியிருக்க, வாசத்தேன் மருவிக்குலவிய, வசனத்தார்மாலைநிலவிய, வீரதோள் பூரித்திலகிய, வில்வேதியர்மகனென மருவிய அஸ்வத்தாமாவென்னும் அதிரதமுதல்வன்; பின்னிட்டோடும் விதவைமுகத்தைப் பேணவுமாகாது விழிக்கவுமாகாது. விழித்துவசனிப்பது மிகுபாவம். என்று அவ்விடம் விட்டு நீங்கித் தனது தந்தைமுதலாகிய பெரியோர்களிருக்குஞ் சார்பிற்போய்ச் சார்ந்தான். இப்பால் அர்ச்சுனனிடத்தில் நடந்த அதிசயத்தைச் சொல்லுகிறேன் கேளும்.

அருச்சுனன்தன்னெதிர் நிற்கும் படைக்கணுள்ளசத்துருமித்துருக்களை உத்தரனுக்குணர்த்தியறிவுறுத்தல்.

ஓ ஜெனமேஜய மஹாராஜனே! பிற்பாடு விஜய வீர பராக்கிரமத்திற்சிறந்த கிரீடியானவன் பொற்சிகரங்கூடிய அனுமக்கொடியாகிய தேர்மீதிருந்து, கர்னன் ஓடும்போது கைகொட்டி நகைத்த உத்தரகுமாரனை ஆ! ஆ! வென்று அதட்டினான். அந்த அமட்டலைக்கேட்ட உத்தரகுமாரன் கெர்ப்பங்கலங்கி, சர்ப்பம்போல் வளைந்து ஒருவாறுவாடி, தாயூட்டிய செவ்வெண்ணெயுங் கழன்று, உறங்கியுழன்று, ஒடுங்கியழன்று, தேரிற்சாய்ந்தான். இவ்வாறிளைத்த விராடபுத்திரனைப் பாண்டுபுத்திரன் பார்த்துப் பச்சாத்தாபங்கொண்டு, மெத்தவும் பயந்துவிட்டானென்று தன்னுடைய சித்தத்திற்றேர்ந்து, மகிழ்ந்தமுகமும் - குளிர்ந்தபார்வையும் — கனிந்த சொல்லும்-கசிந்த அன்புமுள்ளவனாய்ச் சொல்லுகின்றான். ஓ மச்சகுலத்திற்கணிபாகியமணியே! இச்செகத்திற் பிரகாசிக்கின்ற இரவிமைந்தனான கர்னன் என்னுடனெதிர்ந்து அதிர்ந்துபோர் புரிந்து வெறுங்கைவீணன்போற் பின்னிட்டோடிப்போனான். அவனோடிவிட்டானென்று நாம் அலட்சியமாயிருக்கலாகாது. இராஜவீரர்கள் யுத்தத்தில் இளைத்து ஓட்டமெடுப்பதுமுண்டு மறுபடியுங் கிளைத்துவந்து போர்கொடுப்பது முண்டு. இதன்றி-அங்கர்கோனை அடித்துத் துரத்தியவாறு போற் பெருங்காடென்னக்கலந்து நமக்குநேரில் அடர்ந்து பெருமுழக்கமிட் டிருக்கின்ற சேனைகளுடன் அதிரதர்முதலாகிய வேந்தர்களையும் வென்று ஜெயம்பெற வேண்டியிருப்பதனால், இவ்விடத்திற் கூடியபேர்கள் இன்னாரின்னாரென்று நீதெரிந்து கொள்ளும்படிக்குச் சொல்லுகின்றேன்கேள்.

ஓ மாலையணிந்ததோள் வாட்படைமைந்தனே! இதோநமக்கு பெதிரிற் பரியதேரினில்வீற்றிருக்கும் வீரியர் நெய்தநிலக்கருப்பொருளாகியபனையைக் கொடியிலெழுதிப் படைத்திருக்கின்றவர். தெய்வத்தன்மை பெற்ற அஷ்டவசுக்களிற் கனிஷ்டரானவர். இவ்வுலக முதலாகிய எவ்வுலகுங்கொண்டாடாநின்ற எங்கள் குலத்தலைவர். இவரது தந்தையாகிய சந்தனு மஹாராஜனுக்குப் பரிமளகந்தியாருடைய போகநலங் கிடைக்கும்படியாய் விவாகம்பண்ணிவைத்தார். அந்த விவாகமுன்னிலையில் இவர் அனுபவிக்கவேண்டிய சகலவைபவ சம்பிரமங்களையுஞ் சிறுவபதிற் கைவிட்டு, இராஜபோக

மான விரதவழியில்நின்று, வீஷ்மரென்று பேர்கொண்டு, மெய்வழிகண்ட மேன்மையோர்களால் மேன்மைபெற்றவர். இவர் எந்தக்காலத்தில் இறக்கவேண்டுமென்றெண்ணுகின்றாரோ? அந்தக்காலத்தில் எமதர்மராஜன் இவரிடத்திற்கு வரவேண்டுமல்லது, மற்ற ஆத்மகோடிகள்போற்கருதி வரப்படாது. இப்பேர்ப்பட்ட மேலான வரத்தையும் ஆசீர்வசனத்தையுஞ் சந்தனுமகாராஜனுற் றந்தருளப்பெற்றவர். இவ்வுலகத்தில் இவரெத்தனை நாளைக்கிருந்தாலு மிருக்கலாம். இவர்தானையா எங்கள் மூதாதையாகிய பாட்டன்.

ஓ சத்துவகுணபுத்திநுட்பத்தாற் கற்றறிவுடைய உத்தரகுமாரனே! இந்தவீஷ்மருக்கு அண்டையில் நான்குவேதத்தையும் பொறித்த நான்மறைக்கொடிதரித்த சக்கரத்தேர்மே லமர்ந்திருக்குஞ் சுவாமியவர்கள், தேன்சாறுபாயு மாஞ்சோலைவீறு பாஞ்சாலதேசத்தையாளுந் துருபதராஜன்கொண்ட கர்வத்தைப் பங்கப்படுத்தினவர். அறுபத்துநான்கு கலைக்ஞானங்களும் ஐயந்திரிபில்லாமல் விருத்திப் பொருளுடன் ஆராய்ந் துணர்ந்தவர். தேவாஸ்திரங்கள் முற்றும் ஸ்திரம்பெறத்தேர்ந்தவர். சம்பிரதாயத்தனுவேத மோர்ந்தவர். திரவிய சம்பன்னர்களாகிய பக்குவர்களுக்கு சிலைத்திறந்தெரிவிக்கும் விற்குருவானவர். முடிதாங்கியதேவர்களும், படியோங்கிய முனீஸ்வரர்களும், பணியும்படியான பதம்பெற்றவர். உத்தம க்ஷத்திரியகுலத்தி லுற்றவர்போல் வெற்றிவாகைபடைத்த வீரப்பிரதாபர். மதாணிமுதலிய ஆபரணங்களையணிந்தவர். இவர்தானையா எங்களுக்கு விற்குருவாகிய துரோணச்சாரியார்.

ஓ மச்சநாட்டினர்க் குச்சிதப்பேறே! சங்கிராமவித்குருவான துரோணச்சாரியருக்குங் கங்காபுத்திரரான வீஷ்மாசாரியருக்கு நடுவில்வெள்ளைக்கொடியும்-பொன்னிறமுடியும்-வீரபட்டமும்-வேகப்புரவியும் பூட்டியமேகமளாவிய வெண்கலத்தேரோட்டி ஊக்கத்துடன் வந்திருக்குந் தீர்க்கமும், அமுதங்குலாவியமதிமுகமும், குமுதமலர்பசிறுநகையும், குலவியகுறுவியர்வும், பெருமிதவருள்விழியும், பற்பலமணிபாற் செய்த ஆபரண அலங்காரமும், பார்த்தவர்களைப் பாதுகாக்கும் பிரமதேயசும், பணைத்ததோளும், வீரகண்டைதரித்த தாளும், சௌந்தரியகாந்தியும், தவமும், ஜெபமும், வரமும், உரமும், பொறுமையும் உடையவர்; தனுவேதத்திலும்-மனுவேதத்திலும்-சமர்வேதத்திலும்-சதுர்வேதத்திலும்-நிபுணரானவர். இவர்தானையா இந்தக் குவலயமெல்லாங் கொண்டாடுங் குணநிதியாகிய கிருபாச்சாரியார்.

ஓ உத்தமகுணத்திற்சிறந்த உத்தரகுமாரனே! இந்தக் கிருபாச்சாரியருக் கண்டையில் நிற்கின்ற அழகிய தோளியானவர் பஞ்சபாணந்தரித்த மன்மதனென்று சிலர்பேச, வேலாயுதந்தரித்த பாலசுப்பிரமணியரென்று பலர்சொல்ல, சோடசகலைநிறைந்த சந்திரனென்று சிலர்துதிக்க, வச்சிராயுதந்தாங்கிய இந்திரனென்னப் பலர்மதிக்க, மூதண்டநடுங்குங் கோதண்டராமனென்று சிற்சிலர்கொண்டாட, பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்த பரசிராமனென்று பற்பலர்வந்திக்க, இப்படிக்கெப்புவனமுங் கொண்டாட ஒப்புவமையில்லாத தோற்றம்படைத்த புண்ணியன்; முப்புரமெரித்த எப்பொருட்குமிறைவான முக்கண்மூர்த்தியின் திருவருட்பயன்பெறற காளை. ஒருக்ஷணத்திற் றிரிபுவனத்தையுமழிக்கவல்ல குழகக்கன்றுபோன்ற அஸ்வத்தாமா எங்கள்குருவான துரோணச்சாரியருடைய குமாரன். இவர்தானையா எனக்குரிய அரியபாலிய மித்திரன்.

ஓ சாதுசங்க சற்சனர்மேய நேயனே! இப்போது நான் சொல்லிவந்த வித்தக வீஷ்மரும், இரண்டாசிரியரும், அஸ்வத்தாமாவும், என்னிடத்தில் அருமைபாராட்டி அன்புவைத் திருக்கின்றவர்கள். இவர்களுடைய குற்றமற்ற விற்றிறத்தைக் குறிக்க விண்ணவராலுமுடியாது. அப்படிக்கிருந்தபோதிலும், அவர்களுடன் போர்புரியவேண்டிய அவசியந் தற்காலத்திலில்லை. இன்னும் நாம்வெல்லவேண்டிய ஆசாமிகள் வேறிருக்கின்றார்கள். அவர்களை முன்பின்பாராமல் முதலறக்கொன்று வென்றிபெறுவது நமக்குமேலாகிய கீர்த்தியாம். இன்றுபூர்த்தியாகப் போர்புரிந்து புகழுறச்செய்வோமாகில், நல்லதிடத்தையும்-திறத்தையும்-அறத்தையும்-மகிமையையும்-நமக்கு விளைக்காமற்போகாது. ஆகையால்-நாம்வெல்லவேண்டிய மேவலரைச் சொல்லுகிறேன்கேள்.

ஓ உலகமதிக்கச் சிறப்புற்றோங்கிய உத்தமகுலப்பேறே! இதோ உனக்குநேராக நீலக்கொடியாடை பறக்குந் தேரிலிருப்பவன் வணங்காமுடிமன்னனை மயக்கி, அவனதுமதியைக் கயக்கி, தன்வசமாக இணக்கி, இந்திரப் பிரஸ்தத்திலிருந்த எம்மை வரவழைத்து வஞ்சகச் சூதாடச்செய்த கொடும்பாவி. அப்போது அத்துரியோதனனாகிய தன் மருமகனைக்கொண்டு மகாமன்னர்களும்-மாநகரச் சனங்களும்-ஒன்றுபடக் கூடியிருந்த மகாசபையில் எங்களைக் கண்கலங்கும்படியாயியற்றியகாதகன் காந்தாரதேசவீரன் சவுபலராஜகுமாரன். எங்கள் சமஸ்தானத்தைக கெடுக்கப்புகுந்த கறுப்பன். கபடமென்பனவற்றை யெல்லா மடைத்துவைத்த குடுக்கை. கடைவால் விஷங்கொண்ட செந்தேள். ஒருகாலத்தும் நம்பப்படாத உரகம். இவன்தானையா சகுனியென்பவன்.

ஓ சுதர்க்கணாதேவி தனயனே! அந்தச் சகுனிமாமனுக்குச்சமீபத்திற் குச்சிதமில்லாச்செச்சைக்கொடியோடு அச்சடித்தது போலுச்சிதவிற் பிடித்துப்பொற்சிகரத்தேரேறி விசித்திரப்பணி பூண்டிருப்பவன் நச்சரவக்கொடியோனுக்குக் கனிட்டன். இளவரசுபட்டங் கட்டிக்கொண்ட அனிட்டன். சர்வதந்திர உபாய

ன். சகலசுதந்தரநேயன். பழிபாவத்திற்கஞ்சாத துச்சாதனன். இவன்தானையா பாஞ்சாலிமயிரைப் பற்றியிழுத்துக் கன்னியர்களிருந்த சபைக்கேற்றிவைத்து வஸ்திரபங்கம்பண்ணிய புண்ணியவான்.

ஓ விவேகத்திற்சிறந்த விராடகுமாரனே! அதோ ஈசானதிசையிற் பன்றிக்கொடி பறக்கச் சண்டைத்தேரேறித் துச்சாதனனுக்கு அண்டையிலிருப்பவன் துரியோதனன் முதலாகிய நூறுபேருக்குமச்சான். இவர்கள் தங்கையாகிய துச்சளையைக் கலியாணஞ்செய்துகொண்டதோன்றல். சிந்துதேசராஜசயத்திரதன். இவன் எங்களாற்பெற்ற வெகுமானங்களையுஞ் சன்மானங்களையுமறந்து, நாங்கள் காட்டிலுறைந்து வேட்டைபோ யிருக்கும்போது முறைதுறைபாராமல் திரௌபதியை யெடுத்துப்போயினுன். அந்தச் சங்கதியைக் கேட்டுவந்த நாங்கள் ஓட்டமாகச்சென்று, இவனைக்கண்டுபிடித்து வாட்டப்படுத்தி, இவன் மயிர்முடியை ஐந்துசிகைவைத்தரிந்து, முகத்திற்புள்ளியிட்டு, பெரும் வேறிட்டு, தருமராஜனுக் கெதிரில் நிறுத்திக்கட்டவிழ்த்து, வெட்டவெளியில் வேணமட்டும் அவமானப்படுத்திவிட்டுத் துரத்தினோம்.

ஓ மச்சராஜன் மாதவப்பேறே! இப்பால் வாயுமூலைமடக்கில் வாலசூரியன்போற் பிரகாசித் திருக்கின்றவன் காந்தாரி திரிதராஷ்டிரனென்னுஞ் சேற்றிற்பூத்த பலதினுசு புஷ்பங்களிற்சிறந்த ஒருசெங்கழுநீர் புஷ்பத்தைபொப்பப் பிறந்திருக்கின்ற விகர்னன். இந்த நீதிமான் நெறிமுறை தவறுமலுன்னி, பாவபுண்ணியங்களெண்ணி, திரௌபதிகேட்ட கேள்விக்கு இராஜசபையில் நியாயஞ்சொல்லி, பாஞ்சாலிபட்ட சஞ்சலத்தைமாற்றித் தேற்றிவிட்ட தருமவான். இவனை இவ்வுலகத்திற் புகழாதவர்களில்லை.

ஓ புத்தியிற்சிறந்த புரவலரேறே! இதோ நமது தேருக்கெதிராக நட்சத்திரக் கூட்டம்போற் பற்பல தேர்களின்மேல்விளங்குகின்றபசங்கள், துரியோதனனுக்குத் தம்பிமார்கள் காலாந்தகனென்று கருதுவதற்குத் தடையில்லை. கொடிய துஷ்டாள். அதோ தத்தித்தாவனவாடுங் குதிரைகள் பூட்டிய ரதத்திலமர்ந்தவன் சோமதத்தன். இதோ தித்தித்தோமென நீளுஞ்சித்திரவில் வளைப்பவன் அசுவசேனன். அதோ தென்புறநிற்பவர்களியாவரும் தேசராஜபோஜர்கள்.

ஓ விராடராஜன்மைந்தனே! இப்போது நானுனக்குக்காட்டிய இவர்களையெல்லாம் எதிர்த்துச் சண்டைவிளைத்து, திக்காலொருவராய்க் குலைந்தோட வடித்து, மந்தாகிரியாகிய மத்தாலடிபட்டலைபட்ட பாற்கடல் போலுழக்கி, ஒரு கணப்போதில் உருமாறிச் சுழலவிட்டுக் கலக்குகின்றேன். நீ சற்றே மனங்கொண்டுகாண் என்று சொல்லி, தன்னுள்ளக்கருத்தையும் அவனுக்கு விள்ளும்படியாய் இவ்வாறுரைசித் துரைப்பதாயினுன்.

அஃதெவ்வாறெனில்-புத்தமுனையி லடிபட்டு ஓடிப்போன கர்னனைக்கண்டு உத்தரன் கைகொட்டி நகைத்ததனாலும், இனிமேல் வீஷ்மர் - துரோணர் - கிருபர் அஸ்வத்தாமா இவர்கள் நால்வருந் தன்னோடெதிர்த்துச் சண்டைவிளைத்து அடிபட்டுப் புறங்கொடுத்தோடப் போகின்றார்களென்பது தனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றபடியாலும், ஒருவேளை யப்படியோடும்போது இந்தச்சாரதி கைகொட்டிச் சிரிப்பானாகிற் குலமுதல்வனை வீஷ்மர் முதலாகிய பெரியோர்கள் தங்களிடத்தில் அன்புவைத்தவர்கள். அவர்களுக்குவந்த குறைவும் அவமானமுந் தனக்கு வந்ததுபோலாம். ஆதலால் அவர்களிடத்திற் பக்ஷமிச்சமான தான் அம்மச்சராஜ குமாரனுக்கு அச்சமுண்டாகப்பேசி, மற்ற சத்துருக்களையுந் தெரிவித்து, இச்சத்துருக்களை மாத்திரங் கண்டு நகைத்தால் அதனால் தாழ்ச்சி யொன்றுமில்லையென்று எண்ணிய தன் கருத்தை உத்தரனுக்குக்காட்டி, பெரியோர்கள் பேரிலிருக்கின்ற பட்சமும் - துரியோதனாதிய சென்னும் பகைவர்மே லிருக்கும் அபட்சமும்-வேறு வேறு விதமாகவும் வெளிப்படுத்தி, அப்பா உத்தரகுமாரா! இப்போது பரிசுத்தவான்களாகிய ஆசாரிய புருஷர்கள் பேரிலெதிர்த்துப் போராடவேண்டிய கருத்தை யொழித்து மற்றவர்கள் பேரில் யுத்தஞ் செய்யவேண்டியிருப்பதால், நமது தேரைச் செலுத்து ஒருக்ஷணத்திலவர்களை யெல்லாம் வென்று செயம் பெறலாம் என்று சிந்தை மகிழ்ச்சி கொண்டு செப்பினுன். இப்படிக்குச் சொல்லிய சுப்பிர தீபம்போன்ற அருச்சுனனது கருத்தை உத்தரகுமாரன் மிகுந்த நட்பமாயறிந்து, தானைத்தைக்குறித்து மிகபயந்திளைத்து, தன்னிடத்தில் அர்ச்சுனன் கலந்து பேசினுனென்று தன்னை மறந்துபோகாமற் ஜாக்கிரதையாய் மரியாதையுடன் அடங்கி; அர்ச்சுனனுரைத்துவாய்மூடு முன்னமேமனோவேகத்திலும்வாயுவேகத்திலுமிஞ்சும்படிக்கு அஸ்வங்களைமுடுக்கி மண்டலமதிர - எண்டிசை பிதிர - அண்டர்கள் ஒதுங்க மண்டர்கள் பதுங்க கடலேழுமதிர-கனமேழு முதிர கதிர்மதி வெருவ கல்லினமுருவ - கடகட தடதட படபட மடமட வென்றோட்டி, தடமகுடவரசர் படைகளையெல்லாஞ்சாய்த்து, மகா உக்கிரபாராக்கிரமத்துடன் சக்கரங்களின்றுங்கர்க்கத்தொனியெழும்படியாக விரைவுடன் ரதத்தைவிடுத்தான்.

துரோணாச்சாரியருக்கும் அருச்சுனனுக்கும் உயுத்தம்.

இந்தப்பிரகாரம் உத்தரகுமாரனுக்குத் தெளிவுண்டாகும்படியாய்த் தெரிவித்துப் போர்மேல் வருகின்ற தீரன்கருத்தையும்-அவனேறிய செம்பொற்றேரின் வேகத்தையும்- சேனைகளின் பேரிற் செல்கின்ற மர்மத்தையும்-ஆழ்ந்த கேள்விகளாலுயர்ந்த துரோணாச்சாரியர் கண்டு தன்னருள்கொண்டு, பெற்ற தந்தையாயினேன்

பிள்ளையை நாடிப் போவதுபோல் தன்னுடைய தேரைக் செலுத்திக்கொண்டு போய் அருக்சுனன் தேருக்கு நேர்சென்று நின்று மறித்து, அப்பா அருச்சுனா! நாங்களெல்லோரும் உனக்கு நேராக விருக்க, நீ யெங்களை விட்டுவிட்டு எங்கே போகின்றாய்? நீ யப்படி ஒதுங்கிப்போனாலும் நானுன்னை விடமாட்டேன். என்னுடன் யுத்தஞ்செய்யவா. என்று வில்வளைத்து நாணி கொடுத்து ஷ்டங்காரங் காட்டினார். இந்தப்படிக்கு வார்த்தையாடிச் சண்டை செய்யவந்த துரோணாச்சாரியைத் தருமராஜனுக்கிளைய தனஞ்செயன்கண்டு தேர்விட்டிழிந்து, அன்புகூர்ந்து சிந்தைமகிழ்ந்து, செந்தாமரைக் கமலம்போன்ற அவர் திருவடியிற்பணிந்து, கரங்குவித்துத் துதித்து, ஓ அந்தணர்க்கரசே! தேவரீரனுக்கிரகத்தாற் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அக்ஞாதவாசமுங் கழித்து வெளிப்பட்டோம். இனிமேல் தர்மா தர்மந்தெரிந்து நடப்பிக்கவேண்டிய கடமை தங்களைப்போன்ற பெரியோர்கள் தன்மை. அப்படிக்கிருக்க இயாதொரு காரியங்களும் இன்னதென்றறியாதவென்னை எல்லாந்தெரிந்தவனென்றாக்கி, இவனுக்கு மிஞ்சிய செஞ்சிலை வீரர்கள் இவ்வுலகத்தும் எவ்வுலகத்தும் இல்லையென்று துதித்து, பல்லோரும் புகழ நல்லோர்கள் கொண்டாடும்படியாய் வில்வேதமும் அஸ்திரசத்தியும்-சஸ்திரசத்தியும்-குற்றமறக் கற்பித்தருளிய சத்தியவுண்மைச் சம்பன்ன தேசிகனாகிய வேரீர்: என்னை மறித்து ஒருபொருளாக மதித்து யுத்தஞ்செய்யப் பகைத்துவரத்தக்கதோ? ஐயனே! அடியேன் பயமில்லாமல் வெளிவந்து, என்குருஸ்வாமியாகிய தங்களோடு உருத்து, என்கையில்விற்பிடித்து, நாணிதெறித்து, கணைகள் விடுத்து, தேவரீர்க்கீடாகப் பூசல்புரியத்தக்க விதரணையும் பெற்றிருக்கின்றேனோ? அவ்வளவு வித்தைகளை யான் கற்றிருக்கின்றேனோ? ஓ விற்குருவாகிய வேந்தனே! ஓ வேதியகுலசாந்தனே! அப்படிக்கல்லவென்று என்னறிவினத்தாலெதிர்த்து அடித்துப் போர்விளைத்து ஆசாரியராகிய தமது திருவடிக்குத் துரோகநினைப்பேனாகில், அது பஞ்சமா பாதகத்திலொன்றிய பெரும்பாவமல்லவோ? ஓ பாபரகித புண்ணியவானே! என்னுடைய வெண்ணமென்னவென்றால்-தேச ராஜவீரர்களுடன சேர்ந்து நால்வகைச் சேனைகளுடன் புகுந்து, விராடராஜனது மாட்டுமந்தைகளை மடக்கிய துரியோதன ராஜனையும் அவன் தம்பிகள் முதலாகிய பேர்களையும் வளைத்துக்கொண்டு, இடியுடனிடி-மின்னலுடன் மின்னல்-மேகத்துடன் மேகம்-எதிர்ந்து எரிந்து புகைந்தெழு மாறுபோற் போர்த்திறங்காட்டி யார்த்து தேவரீர் உபதேசித்தருளிய மந்திரக்கணைகளைத் தொடுத்து, அவர்களுயிரை வதைத்துக்கெடுத்து, எமலோகத்திற்குப்புகவிடுத்து இணையில்லாம விருப்பதல்லாமல்: தேவரீருடனேயும், கிருபாச்சாரியருடனேயும், தேவான் குமாரனும் என்சினேகனாகியு மிருக்கின்ற அஸ்வத்தாமாவுடனேயும், பாட்டனாராகிய வீஷ்மருடனேயுஞ் சண்டைப்போடப்படாது. அப்படிக்கொருவேளை சண்டைசெய்ய நேரிடுமாகில், அது தர்மமல்ல. தகுதியான தன்மையுமல்ல. எனக்குக் கொடிய பாவத்தைக் கூட்டிவைக்குமென்று என்றென்றைக்குஞ் சத்தியமாய் எண்ணியிருக்கின்றேன். ஆதலால் - ஓ முனிசிரேஷ்டரான மூதறிவோனே! என்பேரிற் கிருபைகூர்ந்து சற்றப்பாற்போகத் தயைபுரிய வேண்டுமென்று வணங்கிச் சொல்லினான்.

இப்படியாக அர்ச்சுனன்சொன்ன மொழியனைத்துங்கேட்ட துரோணாச்சாரியர் சற்றுநேரம் வரையிலும் புத்தியில் நிதானித்து, சம்மதியாகிய பேரன்புடன் நிம்மதியாயிருந்து, பின் எம்மதியுந் தோன்றாமல் நன்மதியோடாசீர்வதித்து, விண்மதிக்குலத்துவேந்தனான விஜயராஜனே! என்னிஷ்ட மெப்பேர்ப்பட்டதெனில் ஒருவனுக்கு யுத்தகளத்தில் உனக்காக உழைக்கிறேனென்று உறுதியாகச்சொல்லி அவனுடைய உப்புந்தண்ணீருமுண்டு, அவனுடைய நன்மைதீமைகளென்னுடையதென்று நான் சமயம் வந்தபோது அவனுக்குத் துரோகம் பண்ணாமல் உடன்படவேண்டுமென்பதுதான். இதுகாரியம் உனக்குத்தெரியாமலிராது. ஆதலால்-துரியோதன ராஜனுக்குச் செஞ்சோற்றுக்கடன் கழிக்கும்படியாய் அமர்தொடங்கி, படுகளத்திற் சிஷனென்றும் - பிள்ளையென்றும் - ஒப்பாரிபாராமற் கலகம் புரியத்தக்க காரணம் வந்து நேரிட்டிருக்கின்றது. ஆதலால் - நீ தேவேந்திரன் முதலிய தேவர்களையெல்லாம் வருத்தப்படுத்தித் திரிலோகத்தையும் பயமுறுத்தி நடுங்கப்பண்ணிக்கொண்டிருந்த காலகேய நிவாதகவசர்கள் மூன்றுகோடி அறுபதினாயிரம் பேர்களை ஒரு க்ஷணத்தில் மடித்து, ஜெயக்கொடிபிடித்து, சிவசுப்ரமணியக் கடவுள்போல் தேவசேனாபதி பட்டமுங்கிரீடியென்னும் பெயரும்பெற்றுச் சிறப்படைந்தாயென்று சில நாளைக்குமுன்னே கேட்டுச் சிந்தைமகிழ்ந்திருந்தேன். அந்தத்திறமை யெப்படிப்பட்டதோ? அம்முறைமையை எனக்குக் காண்பிக்கவேண்டுமென்று வருந்திக்கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு நீயுடன்படாவிட்டால், உனக்குக் கோபம் பிறக்கும்படியாய் நான் முன்னதாய் உன்னையடிக்கிறேன் பார். என்று மகமேருவனைய தமதுவில்லை இருகுதைகளும் பொருந்தவளைத்து, இந்துமுகாஸ்திரம்-இந்திர மோகாஸ்திரம் - கொந்தலர்ப்பகழிகள் - கூர்வாயம்புகள் - சதாகதிச்சரங்கள் சகஸ்திரமுக பாணங்கள்-இவை முதலியவைகளையெடுத்து வந்தித்து மந்திரித்து அநுசந்தித்து, செந்தாள் கருந்தாளெழும்ப மந்தரவரையனைய தேரை வலமிடமாகமாறிவிடுத்து, வானமும் பூமியும் மழைபோனிறையும்படி வாசாமகோசரமாக வாரிவாரி யிறைத்து, சாரதிகுதிரைகளைச் சற்றுந்தெரிய வொட்டாமல் மறைத்துத்தனுவேத சாகசமெல்லாங்காட்டினார். இப்படி தா

மேமிஞ்சிக்காட்டிய உத்தமகுணத் துரோணாச்சாரியைக் கொற்றவர் முதலியபலரும் மெத்தப்புகழ்ந்து, சித்தமுவந்து கொண்டாடி, இத்தினம் அர்ச்சுனன் இற்றனன். அற்றனன். செத்தனன். என்று சிறந்து கூத்தாடினார்கள். இதல்லாமல் - ஆகாய நிறைய வேடிக்கை பார்த்திருந்த தேவேந்திரனுந் தேவர்களும் பாண்டுமுதலாகிய பார்த்திபர்களும் பாதலித்து, ஆ! ஆ! ஆ! துரோணாச்சாரியர் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட விற்றிறங்காட்டிய வீரத்திறங் கண்டறியோம். ஐயோ! சிஷனாகிய விஜயனுடன் வேடிக்கையாய்ப் பேசிவிளைச் சண்டை விளைத்தாரே: என்று மேன்மேலும் பேசிக்கொண்டார்கள்.

இவ்வாறு பலம்பெற்ற பாணங்களைப்பொழிந்துயுத்தஞ்செய்கின்ற துரோணாச்சாரியைச் சுத்தவீரனான பார்த்தன்பார்த்து, சுவாமி! அடியேன் தேவரீருடைய அடிமைப்புத்திரனென்று முடிதாழ்த்தி வணங்கினேன். தேவரீர் என்னை மன்னிக்காமற் சன்னப் பின்னலாய்ச் சரவருஷம் வருஷித்துவிட்டீர். இனிமேல் தன்னைத்தான் தப்பித்துக்கொள்ள வேண்டியது தர்மமே. தாமறியாதகாரிய மொன்றில்லை என்பேரில் தப்பிதமுமில்லை. நீர் ஜாக்கிர்தையாயிரும். என்றுதனிப்புலிபோற் குமுறியிரைந்து புகுந்து விரைந்து தேரூர்ந்து, புகழெழுதிய பிரதாபவில்லைப் பிடித்துநிறுத்தி நாணிமாட்டி, ஷ்டங்காரங்காட்டி, நானாவிதமாகிய நாராசக்கணைகளைப் பூட்டி, நாராயணமந்திரமேற்றி, நான்கு குதிரையு நடுங்கமுடுக்கி, துரோணாச்சாரியர் தொடுத்த பாணங்களத்தனையுங் கொள்ளைப்போற் குனித்து எள்ளைப்போல் இடிந்துபோகச் செய்தான். அவனது பாணத்திறத்தைப் பார்த்த துரோணாச்சாரியரும் ஆசாரியபட்ச மறவாத அருச்சுனராஜனும்-ஒருவருக்கொருவர்குறுகி நேரிட்டு, புயமிரண்டும்பூரித்து மேலிட்டு, மலைபோன்றவில்லானது பிறைபோன்றுவளைய நாணிபிகிர்ந்து, ஆகர்ணபரியந்த மிழுத்து, வருஷகாலத்து மேகம்போற் கோடாகோடி சரங்களை ஒருவர்மீதொருவர் ஓயாமற் சொரிந்தார்கள். இப்படி கையோயாமற் பொழிந்த அதிரதத்தலைவர்களிற் பயமுகாகிய துரோணாச்சாரியரும்-நயமுகனாகிய காண்டீபனும்-படபடத்துவிட்ட பகழிகளானது சிடசிடத்தெழுந்து சிறிப்புகைந்து, தீப்பொறிமிகுந்து சினங்கொண்டு புகுந்து, கதிர்முனையிற் கடுவாயுவேகத்தைக் கலந்து, கலகலவென்று நேருக்குநேர் சென்று முனைந்து, ஒன்றினோடொன்று உருய்ந்து, ஒன்றினோடொன்று விராய்ந்து, ஒன்றையொன்றுபற்றி, ஒன்றையொன்று எற்றி, ஒன்றையொன்றகிழித்து, ஒன்றையொன்று அழித்து, ஒன்றுலொன்றுகலந்து, ஒன்றுலொன்று அலைந்து, இதுவுமதுவும் அதுவுமிதுவுமாகப் பிசறிக்கொண்டுபோய்ப் பிரித்துப்பேசக்கூடாம விருந்ததல்லாமல்; அருச்சுனன்பேரில் துரோணர் பாணமும் துரோணர்பேரில் அருச்சுனன் பாணமும் பட்டதில்லை.

அப்பால் வேதக்கொடியாடிய சூரியன் தேருக்கொப்பான தேர்மேலேறிய துரோணாச்சாரியரும் - அனுமக்கொடிசூடிய இந்திரவிமானத்திற் கொப்பாகிய இரதத்திலேறிய அருச்சுனராஜனும்-காகாவென்று தேரைச்சுழற்றி, சாசாவென்று மீட்டுஞ்சிலநேரஞ் சரமாரிபொழிந்து, துரோணாச்சாரியர் இந்திராஸ்திரம் எடுத்து மந்திரித்து விட்டார். அருச்சுனனுமற்றோரிந்திராஸ்திரம் விடுத்து அதைக்கெடுத்தான். துரோணர் அக்கினியாஸ்திர மெடுத்துத் தொடுத்தார். அர்ச்சுனன் வேறோ ரக்கினியாஸ்திரந்தொடுத்து அதைத்தடுத்தான். துரோணர் சூரியாஸ்திரம் வீசினார். அருச்சுனனுஞ் சூரியாஸ்திரஞ் செலுத்தி அதைத் துகளாகப்படுத்தி, சந்திராஸ்திர மொன்றெடுத்து உந்தினான். துரோணருஞ் சந்திராஸ்திரம்போக்கி அதைச் சிந்தி, வருணாஸ்திர மெடுத்துத்தாக்கினார். அருச்சுனன் அதை வருணாஸ்திரம்பூரித்து மாற்றினான். துரோணர் வாயுக்கணையொன்று தூவினார். அருச்சுனன் வேறோர் வாயுக்கணையேவி அதைக்குறைத்தான். இந்தப்பிரகார மேலுமேலுங் கருடாஸ்திரம்-நாகாஸ்திரம்–மேகாஸ்திரம்-பர்வதாஸ்திரம்-மோகாஸ்திரம்-விருக்ஷாஸ்திரம்–கமலாஸ்திரமுதலிய தேவதாஸ்திரங்களை வீசி, தெய்வலோகத்தார் மெய்ப்புளகுற்று வாழ்ந்தும்படிக்கு வெகுநேரந்திரிந்து, ஒருவரையொருவர் பிரிந்து, மறுபடியும் போர்புரியப்பரிந்து ஆர்ப்பரித்துப் பாணந் தொடுத்தார்கள். அதேனெனில்-நல்ல புத்திமான்களிடத்திற் கல்விமுதலியவற்றைப் பேசப்பேச ஆசைபிடிக்கு மாறுபோல், வீரனுடன் வீரனெதிர்ந்து போர்கொடுக்கக் கொடுக்க வீராவேசமேறுகின்ற விதத்தால் துரோணாச்சாரியர் பிராணபதமான விஜயனைப்புகழ்ந்து, ஓர் சூரியாஸ்திரமெடுத்துத் தொடுத்தார். அருச்சுனன் ஓர் மேகாஸ்திரம்விடுத்து அந்தச் சூரியக்கணையின் வெப்பத்தையொடுக்கி, காளகூடம்போற் கறுத்து மின்னல் இடியுடன் வெள்ளம் பொழியப் பண்ணினான். அந்தவிஜயனுடைய பாணத்தின் விந்தையைக்கண்ட துரோணாச்சாரியர் ஓர் வாயுவாஸ்திரத்தை மந்திரித்து விடுத்து, மேகாஸ்திரத்தைச் சிதறவடித்தார். ஆசாரியரேவிய வாயுக்கணை அனர்த்தம் பண்ணுவதை அர்ச்சுனன்கண்டு, வாயுபக்ஷணஞ் செய்கின்ற நாகாஸ்திரத்தைவிடுத்து நாசம்பண்ணினான். நரனுந்திய நாகாஸ்திரத்தைத் துரோணாச்சாரியர் பார்த்து நடுங்கி, ஓர் கருடாஸ்திரமுய்த்து அதனைக் கெடுத்தார் இக்கருடாஸ்திரக் கடுமையைக் காண்டீபன்கண்டு கலகலவென்று நகைத்து, நாராயணாஸ்திரத்தால் அதையடக்கி நன்மையுண்டாகச் செய்தான். இவ்வாறு கருடாஸ்திரத்தைக் காண்டீபனெடுக்கிய கதியைக்கண்ணுற்றதனுவேதியரும் அருச்சுனனும் பின்னும்வேறுவேறு சத்துரு மித்துருவான அஸ்திரங்களையெறிந்து, உத்தமமத்திம பந்திரமந்திர மார்க்கமுந்தெரிந்து, மனங்களிகூர்ந்து, மறுகாலுந்தேரூர்ந்து, வலமிடஞ்சுழ

ன்று, கர்க்கரத்தொனியுடன் கலகலவென்றுசப்தித்து, இருவர்தேரு நெருங்க, இருவர்வில்லுங் குனிய, இருவர்நாரியு மொலிக்க, இருவர்சண்டையுங் கலிக்க, பூமியும் பொருப்புங் கிடுகிடென்றதிர, தாரகணங்கள் பலபலென்றுதிர, உலகமதிக்கக் கலகம்விளைத்தார்கள். இவ்வாறிருவருமேவிய பாணங்களெல்லாஞ் சக்கிரவாளம்வளைந்த தடமெல்லாநிறைந்து, பேரோசை பிறந்து, அண்டச்சுவரடங்கலுமுட்டி, எட்டுத்திசைமட்டு மெட்டி, மட்டுப்படாமல் வாட்டிநின்றன. இதன்றியும்-முப்புரத்தை யெரித்தருளிய தற்பரனுதற்கண்ணிற்பிறந்த அக்கினிப்பொறிக் கிணையாகச்சிறந்த அந்தப்பாணக்கினியின் வெப்பத்தினால் மகாமுதலாகியமச்சங்களுக் காதாரமாகியகடலும், பரந்துவிரிந்தபாதாளத்தினீரும், மேலுலகடைந்த ஆகாயகங்கையும் வறண்டதென்று பேசுவதற்கு வாய்கூசாமற் சொல்லுவார்கள்.

இப்படி துரோணார்ச்சுனர்க ளிருவரு முனைந்தபோது, ஓட்டம்-கோணம்-வட்டம்-வளைவு-திருகல்-மாறல்-முன்செல்லுதல்-பின்செல்லுதல் - முதலாகிய தேரோட்டத்தை அவர்கள் சாரதிகள்காட்டுந்தன்மைகளினாற் பூமியிளந்து, ஆதிசேடனுடைய ஆயிரம்பணாமகுடங்களு முடைந்து, திசைகளுந்திக்குமுக்கிட்டசைந்து, மேருவுங்குலுங்க, ஈரேழுலகுமலங்க, காட்டிலுள்ள மிருகங்களுங்கலங்க, நாட்டிலுள்ள யாவருநடுங்க, வித்தெனப்பரவிய நக்ஷத்திரங்கள் கொத்துக்கொத்தாய் முத்துப்போலுதிர, இத்தன்மையான யுத்தஞ்செய்தார்களென்று இயாவருஞ்சொல்லுதற் கிடமில்லாமல், வல்லமையேறிய வில்லாளர்களும்-வல்லாளர்களும் - சொல்லாமலோடும்படிநேரிட்டது. அந்தவேளையில் துரோணாச்சாரியருடைய சேனைகளானது கடல்போலிரைந்து பூரித்துப்பொங்கி உருத்திர சன்னதங்கொண்டு, தேவேந்திரகுமாரனாகிய சிலைவீரனைவளைத்து, அவனதுதேர்ச் சக்கரங்களைத் துளைத்து, ஈட்டி-தோட்டி-துறட்டி-பாலா-பல்லயம்-தண்டாயுதம் சக்கராயுதம் - வேலாயுதம்-காலாயுதம்-வாளாயுதம்-சூலாயுதம்-மழுவாயுதம் எழுவாயுதம்-கொழுவாயுதம்-வச்ராயுதம்-பிச்சுவா-கட்டாரி-வளைதடி-குடுதடி-குண்டாந்தடி-பாணத்தடி - முறுக்குத்தடி-இருப்புத்தடி-கிலுக்குத்தடி-உக்குலக்கை -செக்குலக்கை இன்னும் பற்பலவாகிய அஸ்திர சஸ்திரங்களுங்கொண்டுமோதி அமராடியபோது, அந்தர வாசிகளாகிய தேவர்கள் ஆச்சரியங்கொண்டு, இப்படி யுத்தஞ்செய்கின்ற சேனைகளின் மாச்சரியங்கண்டு, இது என்னகாரணத்திற்கோ இப்பேர்ப்பட்ட விபரீதச்சண்டை யுண்டாயதென்று எக்கங்கொண்டு பார்த்திருந்தார்கள். அந்தவேளையிற் கலங்காக் கருத்தினனாகிய காண்டீபனும் குந்திமாதேவிக்கு நடுப்பிறந்தோனாகிய புத்திர சிகாமணியும்-நாராயணனுக்கொப்பாகியநரனும்-நான்முகனுக்கொப்பாகிய வாலும்-நானிலம்புகழுங்கோமானும் - வாவிலமகிழுஞ் சீமானுமாகிய அர்ச்சுனன் சற்று நகைத்து, இதுவுமொரு நிமித்தமென்று பார்த்து, மட்டுப்படாதனவாகியும் - எதிரிகளினால் வெட்டுப்படாதனவாகியும்-விளங்குகின்ற வெகுவாகிய வீரங்காட்டி வெங்கனலைக்கொப்பளிக்கும் அம்பினங்களைத் தனது வீரகாண்டீபத்தில் அநுசந்தித்து, ஒன்றின்மேலொன்றாகச் செலுத்தி, உவர்க்கடலாடெரியும் வடவையையொப்பக் குப்பென்றோங்கி வெகுளிமேற்கொண்டு விரைந்து முன்னின்றான். இவ்விதமாகச்சவ்வியசாசிதொட்ட அஸ்திரமடங்கலும் போய்விழுந்து, துரோணாச்சாரியருடைய நால்வகையான சேனைகளையும்-அச்சேனைகள் செலுத்திய ஆயுதங்களையும்-நலியப்படுத்திநாசமாக்கி, எங்குமுதிரவெள்ளமோடும்படி இயாவரையும் அதாகதஞ்செய்தன.

இத்தன்மையாக எள்ளத்தனைப்போதுந் தாங்காமற் சேனைகளையெல்லா மடிவித்தமுறைமையைத்துரோணாச்சாரியர்கண்டு, அர்ச்சுனன்தேருக்கு நேர்சென்றுநின்று, தன்படைகளுக்கு நேரிட்ட இடரை நீக்கும்படியாயோசித்து, நெறநெறென வில்லைவளைத்து, நீண்டபாணங்களை வேண்டியமட்டும் போக்கி, அர்ச்சுனன்செலுத்திய கணைகளத்தனையையு மண்ணாக்கி, பின்னும் ஈடுக்கிடாகப் பெருஞ்சரங்களேவினர். அச்சரங்கள் அருச்சுனனுடைய கணைக்கிடைபுகுந்து இடைக்கிடை நுழைந்து இரண்டிரண்டாகத் துணடுபண்ண, அதையப்பராக்கிரமவிஜயனோக்கி, படபடத்துப் பகையழிக்கும் நாராசக்கணைகளைப் பார்த்தும் பாராமலெடுத்து, வசவசவென்று மொய்த்துக்கொள்ளும்படிக்கு வாரிவாரிச்சொரிந்து நேரில்வந்த துரோணாச்சாரியையும்-அவராலுந்திய அஸ்திரங்களையும் - மாறிமாறித் தாறுமாறாகப்போக நூறுவிதமாகக் கண்டான். இந்தப்படி அருச்சுனன்மண்டலமுழுதும் பொழியுஞ் சோனைமேகம்போற் சோர்வில்லாமலடித்த துணிவையும்-அவனது வீரவில்வேகவிந்தையையும்-வண்டுகள் துன்றுந் தாமரை மாலையணிந்த துரோணாச்சாரியர் கண்டு, ஆ! ஆ! ஈதென்ன ஆச்சரியம்? இவன் செயலைச் சிந்தைசெய்யு மிடத்தில் மான்மழுசூலப் படைதரித்தருளிய மகாதேவன்கூட இவனுக்கெதிர்வந்து மலைந்து போராடமாட்டான்போலு மிருக்கின்றதே: அப்படியா ? இனி என்போலொத்தவன் என்னசெய்யப்போகிறேன் ? என்று கண்டுங் காணாதவர்போற் சற்றுநின்று தயங்கி, ஆதியில் இவனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்து வீஷ்மர்முதலாகிய வேந்தர்கட்கெதிரிற் பரிட்சித்து யாவரு மெச்சும்படியாய் லக்ஷயம்பெற்ற தனுசாஸ்திரங்களும் - மந்திரங்களும் - அஸ்திரங்களும் - ஆகிய விவைகளெல்லாம் அப்போதைக்கிப்போது ஒன்றுக்குப் பத்தாய் பத்துக்கு நூறாய் உயர்ந்திருக்கின்றனவே: இத்தன்மையான விற் றிறத்தினாலன்றோ முத்தலமும் புகழுங் கீர்த்தியைப் பெற்று

வைத்தவனு யிறுமாந்து, நம்மை யெங்குமில்லாமலடித்துச்செயித்தான். ஆதலால்-ஜெபவிஜயனென்னும்பேர் இவனுக்கேதக்கது. இனிவேறுபேர் கூறுவதற்கிடமில்லை. ஆனால்-நாம் ஒருகாரியஞ் செய்தால் உத்தமமாயிருக்கும். அஃதென்னவென்றால் - அந்த அர்ச்சுனனுக்கு நாம் தொண்டுசெய்து அவனண்டையிற் காத்திருந்து, அருமையான வில்வித்தையைக் கற்றுக்கொள்வதே நமக்கு நலம். என்று தன்னுட்டானே கருதி கவலையுற்றிருந்தனர். இவ்வாறான வெண்ணங்கொண்டு கவலித்த துரோணாச்சாரியருடைய நினைப்பு ஒரு முடிவுபெறுவதற்குமுன்னமே நாரணனுற்புகழு நானனவன், ஊரோடுயிர்களை வேரோடுகளைகின்ற உகாந்தகாலப் பேரொலி நாட்டி உருத்திடித்துப் பயங்காங்காட்டும் இடியாஸ்திரமுதலிய பர்வதாஸ்திரங்களை யேவினான். அவ்வஸ்திரங்களானது பளபளவென்றுவந்துவிழுந்து, ஆசாரியருடைய தேரை மளமளவென்று முறித்து, வேதக்கொடியை வெடுக்கென் றொடித்து, குதிரைநாலையும் குறுகக்குறைத்து, சாரதி தலையைச சரியத்தறித்து, கையிற்பிடித்த வில்லையுமுறித்து, வில்லில்மாட்டிய நாம்பையுமறுத்து, வேஷ்டையாக நடுக்கம்புரிந்து, வானுலகத்து வாய்விட்டிரைந்து, மண்ணுலகத்துத் திண்ணெனச் சார்ந்தது. அதனால் வேறுவில்லுந் தேருங்கொண்டு மாறுகணைதொடுக்கமாட்டாமல் வெட்கப்பட்டு, மூதறிவனைத்து மயங்கக் கிதநாத வேதவேதியான தநுவேத முனிவர் புறங்கொடுத்தோடினர்.

அஸ்வத்தாமனுக்கும் அருச்சுனனுக்கும் உயுத்தம்.

இந்தப்பிரகாரஞ் சமர்முனைவிட் டோடுகின்ற தந்தையான துரோணாச்சாரியையும் அர்ச்சுனன் தொடுத்த தனிப்பாணங்களின் கிளர்ச்சியையும் அஸ்வத்தாமா கண்டு சீற்றங்கொண்டு, வெதும்பிவெதும்பிக் கண்ணீர் ததும்பி, தனதுதேரைச் சடுதியிலுந்தி, தனஞ்செயனுக்குமுந்திச் சண்டைசெய்யத் தொடங்கினான். இவ்வாறு தநுவேதசாஸ்திரச் சாலைச் சினேகனும்-ஆரியகுமாரனும்-வீரியநாமனுமாகிய அஸ்வத்தாமாவானவன் அர்ச்சுனராஜனைத் தடுத்துப் போர்கொடுக்க வந்தது எத்தன்மையொத்திருந்ததென்னில், மேன்மேலாக நெருப்புப் பொறிவீசிய பெருந்தீக்கடவுளைப் பகைத்து, ஆலாலவிடத்தில் முளைத்த அருங்கனல்வந் தெதிர்ந்ததுபோலிருந்தது. இப்படியாக முனைந்த அஸ்வத்தாமன் அர்ச்சுனனுடைய தேரின்பேரில் ஐம்பது அஸ்திரங்களும், அஸ்வங்களின்மீது நூறுகணைகளும், சாரதிபேரில் இருநூறுசரங்களும், அநுமக்கொடிமேல் ஐந்நூறம்புகளும், பச்சைநிறப் பார்த்தன்பேரில் ஓராயிரம்பகழிகளும் முன்பின்பாராமற் பிரயோகம்பண்ணி; தனக்குப் பின்பலமொன்றுந்தேடாமற் பங்கப்படாத சிங்கக்குட்டிபோற் சீறிநின்றான். இப்படி யிந்த அஸ்வத்தாமன் கோர்த்த அம்புக்கும்புகளைப் பார்த்த தேவேந்திரன் முதலியதேவர்களெல்லா மார்த்து ஆச்சரியங்கொண்டு, ஆ!! சபாஷ் சபாஷ் என்று அதிசயப்பட்டார்கள். அப்போது ஜயவிஜய சௌரிய பராக்கிரம காண்டீபதாரனாகிய தனஞ்செயன் அண்டமுகடதிர வருகின்ற பிரசண்டக்கணைகளாகிய ஓராயிரத்தெண்ணூற்றைம்பது பாணங்களையும் ஒருநொடியில் நறுக்கென்று குறுக்காகவெட்டிக் குறுந்துளாக்கிவிட்டு, கூர்மையான இருபது சூரியாஸ்திரங்களைக் குறித்துக்கைப்பிடித்து, ஆரியமந்திரம் உச்சரித்துத் தொடுத்து, அஸ்வத்தாமன் ரதத்தினட்டிய சுவேதத்துவஜத்தை அடியோடுமாட்டிக் தீரப்பார்வை காட்டினின்றான். அதைக்கண்ட அஸ்வத்தாமன் கச்சிதமானவச்சிரவாளியைத் தட்சணமேகொண்டு பிரயோகம்பண்ணி, மெச்சிய மேன்மைக்கு உச்சிதமாகிய அர்ச்சுனராஜனது வீரபட்டத்தையறுத்து, ஒடியாதகாண்டீபத்திற் பூட்டிய அறுதநாணியைக் குதைநீக்கித் தளர்த்தி, அனந்தங்கோடி அம்புகளினால் ஆகாயம்பூமி யாவற்றுந் தெரியாமல் மறைத்து, அர்ச்சுனனுடைய தேரையுமூடினான். இத்தன்மையாகக் குருபுத்திரனடாத்தியயுத்தத்திறத்தை வெற்றிவீரப்பிரதாப விஜயன்கண்டு புன்சிரிப்புகொண்டு, ஓ அஸ்வத்தாமாவென்னுஞ் சிரஞ்சீவியே! என்னுடைய வின்னாணியைத் தளர்த்திவிட்டதினால் உனக்குப் போர்ச்சேவக னென்னும் புகழ்கிடைத்ததுண்டோ? போ: போ: இதுவீண்பைத்தியம். என்று தனது வீரதீர காண்டீப வின்னாணியிறுக்கி, கோரபாரசரங்களைக் குறையாமலிறைத்தான். அஸ்வத்தாமாவும் அதற்கீடாகிய அஸ்திரங்களை அபரிமிதமில்லாமல் அமோகமாய் நிறைத்தான். இப்படிக்கு எண்ணற்ற கணைகளை இருதிறத்தவருஞ்செப்பிடுவித்தைசெய்பவர்போல ஒப்புவமை யுரைப்பதற்கின்றி எப்புவனமு நடுங்க அப்புமாரியெனப் பொழிவதைச் செப்புதற்கரிய துரியோதனனுடைய சேனைகள்நோக்கி, தங்களுக்குச் செயகாலமென் றுட்கொண்டு, சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல் இரைந்துபொங்கி, ஆசாரியகுமாரன்செய்த அமர்த்தொழிலைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இவர்களிருவரும்விட்ட அஸ்திரங்களானது பாவி, எட்டுத்திசையும்-எட்டுக்கரியும்-எட்டுக்கிரியும் எட்டுப்பணியும்-நடுங்கிநலிவடைந்து வட்டப்புவியுடன் வானோருலகும் வறிதே நாணச்செய்தன.

இந்தப்படிக்கு ஒருவருக்கொருவ ரோயாமல், ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்—பதினாயிரம்-லக்ஷம்-கோடி-அற்புதம்-நிற்புதம், என்று சொல்லும்படியாகக் கங்குகரைகாணாமல் எங்குமிறைந்து கிடப்ப ஒருமுகூர்த்தபரியந்தம் கணைகளைக் காகா—பரபரவெனப் பொழிந்தகாலையில், தோள்வல்லமை யுடைய துரோணாச்சாரியருடைய தோன்றலது அம்பறாத்தூணி நிறைந்த அஸ்தி

ரங்களியாவும் வறண்டுபோய், சொற்பதரித்திரன்போற் சோர்வடைந்திருந்தான், அஃதெப்படியென்னில்-இம்மக்கள் மேன்மக்களாவார்களென்பது கனவிலுங்கிடையாது. ஒருவேளை தந்தையின்றெழுங்காலத் துன்னிவக்கதெதென்தவினையோ? அந்தச் சம்பந்தவினையினுல் நடுவதுபாதிமுதலிய நாட்களிற் செல்வகேரிடலாகும். அவ்வாறு நேரிட்டால் அதைப்பாதுகாத்து, தன்னிலுஞ்சிறந்த சாதுக்களுடன் சாவகாசஞ்செய்து விற்பனவிவேகம் விளங்கக் கற்பனையான கல்வியையறிந்து, அக்கல்வியிற் கழறிய கருத்தையுணர்ந்து, அந்தக் கருத்திற்கிணங்க அடங்கியிருந்து, முன்பின்னுள்ள உலகமுறைமையுந் தேர்ந்து, அடக்கம் வணக்கமுதலியவைகளை அணிகலனுய்ப் பூண்டொழுகி, இரக்கமுந் தயையும்பெற்றிருப்பவர்கட்குச் சம்பத்தென்பதெந்நாளுந் தவறடையாது. அப்படிக்கில்லாமற் பற்பல அநந்தைகள் விளைத்து, தலைகாற்றெரியாச் சன்னதமாடி யிளைத்து, பெரியாரைப்பணியாத பெருமைமுளைத்து, விஷமத்தாற்றிளைத்து, வெறும்பொய்யாற்களைத்து, விசனத்தாலுளைத்து வெதுப்புண்ணும் அறிவில்லாத அற்பர்க்கு; செல்வம் பகையென்பதற்குச் சந்தேகமில்லை. இதற்கிணங்க-இவ்வஸ்வத்தாமனும் அருமையாய்ச் சம்பாதித்த அஸ்திரங்களடங்கலும் வழிதுறையில்லாமல் வாரியிறைத்துப்போட்டு, கிடைத்திருந்த ஐஸ்வரியத்தைப் பிரயோசனப்படவொட்டாமற் போக்கடித்துக்கொண்ட வெறும் வீணரைப்போல் வதங்கிவாடி யிருந்தனன். இந்திரகுமாரனுகிய அர்ச்சுனனது அம்புறுத்தூணியானது, இரைக்கச் சுரக்கு மணற்கேணிபோல் எடுக்கவெடுக்கக் குறையாமல் அக்ஷயமாய் எப்போதும்போலிருந்தது. அஃதெப்படியென்னில் தப்பிதமில்லாமற் கற்கவேண்டிய ஆசு-மதுரம்-சித்திரம்-வித்தாரம்-என்னு நான்குகவிகளையும் ஆராய்ந்துதெளிந்த பூரணவித்துவான்களின் விவேகவிளைவினுல், கற்பனை அலங்காரங்கள் கணக்கற்றனவாய்க் காணச்சுரக்கும் பாவினவிர்த்திபோ லிருந்தது.

கிருபாசாரியருக்கும் அர்ச்சுனனுக்கும் உயுத்தம்.

கேட்டீரோ ஜெனமேஜயமகாராஜனே! இஃதிப்படிக்கிருக்க - குற்றமற்ற வெற்றிபெற்ற கொற்றவனைப்போல் தேரின்பேரி லசையாமலிருந்த சிங்கக்குருளைபோன்ற அஸ்வத்தாமனது செயலையறிந்தோ? அல்லது திறமாகியசிலைவிஜயனுடன் போர்புரிந்து ஜெயம்பெற நினைந்தோ? அல்லது மைத்துனராகிய துரோணரும்-மருமகனுகிய அஸ்வத்தாமாவும் இளைத்துப்போனர்களே: அப்படியே நாமும் இளைத்துப் போவோமென்ன முனைந்தோ? மற்றென்னமோ? செவந்தநிறமுந் திறமும்படைத்த கிருபாச்சாரியர் திடீரென்று தம்முடைய தேரைக் கடகடவென்று விடுத்து, கணைகளை வெகுவாய்த் தொடுத்து, தனஞ்செயனேடெதிர்த்துச் சண்டை விளைத்துத் தடுத்தார். அந்தவேளையிற் கடல்நிறங்கொண்ட காண்டீபனுனவன் சாரதியான உத்தரகுமாரனைப் பார்த்து, அப்பா புத்திமானே! அஸ்வத்தாமன் அம்புக்கூட்டிலுள்ள அஸ்திரங்களெல்லாவற்றையும் வாரியிறைத்து வறண்டிளைத்துப்போயினுன். அவனுக்குநேரிட்ட அவமானத்தை வெளிப்படுத்த லாகாதென்று அவனல்லம்மானுன கிருபாச்சாரியர் நம்முடனெதிர்த்துப் போர்புரிய வருகின்றுர். அவர்வருகின்ற அவசரத்தையும் ஆத்திரத்தையுஞ் சற்றுநிதானித்துப் பார். என்று தனது அருட்பார்வையாற்காட்டினுன். அந்தக்குறிப்பையறிந்துகொண்ட உத்தரகுமாரன் தன்தேர்ச்சக்கரங்களிற் கர்க்கரத்தொனிகாட்டி, மூட்கரமாகவோட்டி, பூர்வாச்சாரியருடைய தேருக்கெதிர்வந்து வளைத்தான். அதுகாலையில் அர்ச்சுனராஜன் காண்டீபத்து நாணியையிறுக்கி, மின்னலிடி முழக்கத்துடன் மன்னிப்பொழிகின்ற மேகமுநாணி வெட்கப்படும்படிக்குச் சரசரவென்னச் சரதாரைகளைச் சாய்த்தான். அதைக்கண்ட கிருபாச்சரியருங்கிட்டி, ரதத்துடன்ரதத்தை முட்டி, நாலாவித கோலாகல லீலாவினேதபாணங்களைக் கொட்டி, அவனுந்திய கணைகளைவெட்டி, அவனுக்கிளையாம லொட்டி யுத்தம்பண்ணினர். இவ்வாறிவ்விருவரும் போராடியவல்லமையை இவ்விதமென்று மதித்துச்சொல்ல வல்லவரெவ்விதத்திலுமில்லை. ஆனல்-வானத்தில் வேடிக்கைபார்த்திருந்த வானவரும் மாதவர் முதலாகிய பிதிர்தேவதைகளுஞ் சேணூரம் ஒதுங்கிச்சென்றுர்கள். பிரசண்டவாயுவுங் கலங்கி, பிரகாசிக்கு மகமேருவுங் குலுங்கி, எட்டுதிக்குஞ்செவிடுபட் டொடுங்கிப்போயின. அம்பாஞ்சுழன்று பம்பரம்போலோடியது. அக்கினிமிகுந்து அனற்பொறிமலிந்து வீசியது. அண்டகூடந்தொட்டு அகண்டமு நெக்குவிட்டுச்சாய்ந்தது. அஞ்சனமேகமும்விக்கி, அந்தாகதியாய்த்தொக்கி, அதனதுவாயைப் பெருக்கி, நீரிடிநெருப்பிடியைக் கக்கி, மலைக்குகைகளிலும் பிலத்துவாரங்களிலும் புகுந்து உக்கிபொடுங்கிப் போயது.

இப்படியாக விற்றிறங்காட்டிய விக்கிரமக் கிர்பாச்சாரியரும் பராக்கிரமப் பற்குனனுந் தங்களுக்குத்தெரிந்தசிலைத்திறங்களைக் கணைத்திறங்களைச் சீராட்டிப்பாராட்டி, முன்னேட்டம் பின்னேட்டமாகத் தேரையுந்தி, வெகுநேரம்வரையிலும் பகழிகள்நந்தி, ஒருவர்க்கொருவர்உ திரஞ்சிந்தி, உடலெல்லாஞ் சிந்துசிந்தாய்க்கொந்தி,உருக்குருக்குமுந்திப்போர்புரிந்தார்கள். அதுகாலையிற் கிரீடியானவன் கையிஞ்சி உருத்தி, நிருடிச்சரங்களைச் சரேலெனப்புகுத்தி, புட்பகவிமானம்போன்ற சக்கரத்தேரினையும்-வேதவெள்ளைக் கொடியையும்-சாரதிகுதிரையையும் - தத்திவீழத்தாக்கி, கிருபாச்சாரியருடைய உடல்முழுதுந் துளைபோக்கி, மறுபடியும் பாதமுதற் றலைவரைக்கும்-பாணங்கள் ஊடுருவிப் போகும்படிக்கு

நாணிவிக்கி டங்காரஞ்செய்தான். அனையகாலையிற் கிருபாச்சாரியர் மதிமயங்கித்தியங்கிக் கண்கலங்கி, மானந்துலங்கி மண்மேற்கரைந்தார். அந்தக் கிருபாச்சாரியருக்கு இரண்டுபக்கத்திலுங் கிரண்டமலைபோலிருந்த சக்கரரக்ஷகரிற் சந்திரகேது-சுஸேஷணன்-மணிமந்தன்-ஏமவான் இவர் முதலிய வெற்றிவீரவேந்த ரநேகர் ஆர்பரித்து அர்ச்சுனனை மடக்கி, ஜெயம்பெறுமல் விடமாட்டோமென்று ஸ்திரப்போர் விளைத்தார்கள், அவர்களை அர்ச்சுனன்பார்த்து, அதிகோபமாய் வேர்த்து, மறுகிக் கொதித்து, மாறிமாறி அவ்வீரக்கும்புகள்பேரில் நூறு நூறாயிரம் அம்புகளேவி, அன்னோருடைய ஆயுதங்களையும் - பாணங்களையும் - விற்களையும் - தேரையும் - சிகரத்தையும் - மற்றச்சின்னங்களையும் நொறுக்கிப் பறக்கவடித்து, மலையொத்த புயத்தைக்குறைத்து, இடையுந்தொடையும் இடையறத்தறித்து. கரமுங்காலும் புறம்படமுறித்து, தலைபச்சிதைத்துத் தாணிமேற் குவித்துத் தாவியகாலையில்; வீரத்தேரேறி திறம்விடாத விருத்தாகிய கிருபாச்சாரியர் மீட்டும் வெளிப்பட்டார். உடனே அவர் நூதனமாகப் பெற்றுவந்த வில்லையும் ரதத்தையும்-சாரதி குதிரையையும் அழித்து, அவருக்குப் பின்னுதவி வந்த மன்னவர் பலரையுஞ் சிந்தினான்.

இப்படி தன்னுதவியான மன்னரையுமடித்து, தன் தன்கையிலிருந்த வில்லையுமொடித்து, தானேறிவந்ததேரையும் பொடித்து, தானைகள் நான்குந் தவிடாயிடித்துச்சயம்படைத்திருக்குந்தனஞ்செயனைக்கிருபாச்சாரியர் கண்டு, தாளமாட்டாமல் வருந்தி, உடல்படபடத்து பூரித்து, பூமியிலுட்கார்ந்து பாய்ந்து, ஓ ரெறிவேலெடுத்துப் பூசைமுடித்துப் பற்குனன்மேல் விட்டெறிந்தார். அந்தவேலாயுதம் அதிர்ந்துவருகின்ற ஆர்ப்பாடத்தை அர்ச்சுனன்தெரிந்து, நகைமுகமாகச்சிரித்து, அக்கினியாஸ்திரந் தொடுத்து அவ்வேலாயுதத்தை வெட்டையாகித் வெண்கலப்பொடிபோ லுடைத்துத் தள்ளினான். அப்போது கிருபாச்சாரியர் தானெறிந்த வேலாயுதம்போன விதத்தையும், அதைமுறித்த அர்ச்சுனனது திறத்தையுங்கண்டு, மகாவுக்கிரத்துடன் ஆக்கிரமித்து வெகுண்டு, தனதுடல்மறந்து, சிறந்த ஓர் வாளாயுதமுங்கேடயமுங் கைக்கொண்டு ஓரேவீச்சாய் வீசிவிடக்கருதி விஜயனுடைய தேரிற்பாய்ந்தார். இப்படியாக எண்ணிப்பாய்ந்த பூர்வாச்சாரியைக் காண்டாவனமழித் காண்டீபன் கண்டு, வெந்திடச்செய்யும் இந்துமுகாஸ்திரச் சுந்தாக்கணைகளுந்தி, அவ்வாளாயுதத்தையும் பரிசையையும் நீறாகப்படுத்திப் பூளைப்பூப்போற் போக்கினான். அதனால் யுத்தமுனையில் வெற்றிபெறக்கற்றவீரம் பெற்ற கிருபாச்சாரியார் வேறுபோர் புரிவதற்கு விதியில்லாமல் சற்றுநேரம் வரைக்கும் அசைவற்றிருந்து, தன்னறிவைத்தானே நிதானித்து, தனக்கு முன்னே சண்டையிலிளைத்த தாஷ்டிகாளையும் யோசித்து, தீர்க்கண்பார்வையாய்க் கிரீடியைப்பார்த்துச் சிறுநகைவிளைத்து, திடீரென்றோடி, வீரகண்டாமணிகட்டிப் பிரகாசிக்கின்ற துரோணாச்சாரியர் புத்திரனான அஸ்வத்தாமனுடைய தேரின்மே லேறிக்கொண்டார்.

வீஷ்மருக்கும் அருச்சுனனுக்கும் யுத்தம்

இங்ஙனம் முனைவீரங்காட்டிப் போர்புரிந்த கிருபாச்சாரியர் பின்னிட்டோடி மருகனுடன் ரதத்திலிருந்த வன்மையை அவரைநம்பிப்போன சேனைகள் கண்டுவாடி, அர்ச்சுனன்பாணத்தால் அடிபட்டோடினார்கள். முன்னிட்டடுத்து யுத்தமுனையேறிய கிருபாச்சாரியர் இழிவுதேடிக்கொண்டு பின்முதுகுகொடுத்துப் போயினாரென்று பொற்சக்கரம்பூட்டிய தேர்மேலிருந்த போர்ச்சிங்க வீஷ்மர் புறப்பட்டு, மேகங்களை மின்னுடன் பிடித்துப் பிழிந்ததைப்போல் விளங்குஞ் செஞ்சிலை தாங்கியோங்கியசேவகத்திறங்காட்டி, போணிப்படைபுடைசூழ்ந்து வரும்படியாய்ப் பிரவேசித்து, பிரதாபனான சவ்வியசாசியை வளைத்து நாணொலிசெய்தார். அந்தகுருகுலக்கோமான் தெறித்த குணத்தொனி கேட்டமாத்திரத்திற்கரையுடைந்த ஏரிநீர்போலிருந்த சகுனி துச்சாதனன் முதலாகிய சங்கிராம வேந்தர்களெல்லாம் ஒன்றாகக்கூடி வீஷ்மருடைய ஆதரவின்பேரில் அர்ச்சுனனை நாடி அளவற்ற அம்புகளைத் தொடுத்தார்கள். அவ்வம்புக்கும்புகளைக்கண்ட நரனானவன் பம்பிய மேகம்போல் நச்சரவப்பாணங்களை யெடுத்து, அவர்கள் தூற்றிய அஸ்திரங்களையெல்லாம்நாலிரண்டாயொடித்து, நாரியோசையடித்து, தேவதத்தையுந் தொனியெழும்பப் பிடித்தான். அதனொலியால் யாவருமயங்கிமடங்கி நலியாலடங்கினார்கள். இப்பால்-சந்திரகுலத்திற்றிரனாகத் தோன்றிய தனஞ்செயன் தானேறிவந்த மந்தரமலைபோன்ற ரதத்தைத் தந்திரமாகச் செலுத்தும்படி சாரதியான உத்தரகுமாரனுக்குச் சாற்றினான். அவனப்படியே முடுக்கி, ஒருநொடிப்பொழுதிற் குலக்குரவன் கலக்கவருந்தலத்தில், அவரலக்கண்மிகப் பெலக்கும் வகைபோய்ச்ச்சார்ந்தான் இவ்விதமாகச் செவ்விசேர்ந்த மன்மதவடிவம்பெற்ற வாசவன்மதலை உலகமுடிவிலெழுகின்ற ஆலகாலம்போலும் - காலகாலன்போலும்-போர்முனையிற் கலந்ததைக் காங்கேயன் கண்டு களிக்குங்காலையில், வாளாயுத வல்லமைகற்ற இடபசேனன் வெறித்து, அர்ச்சுனனைக்குறித்து, கேதுராகுக் கிரகங்கள்போல் மறித்து, பலம்பொருந்திய பாணங்களைத் தெறித்து, கிரமமாகப்பிறித்து, தானும் நெறித்துநின்றான் இவ்வாறிடபசேனன்செய்த போரைப்பார்த்த நரனானவன் ஆங்காரங்கொண்டு, ஸ்தானசரங்களைப் பலமாகச்செலுத்தி யடித்து, அவனுடைய தேர்-சாரதி-குதிரைகள்-இவைமுதலிய யாவையும் ஒருகணப்போதிற் போக்கி மடித்து,

கைப்பிடித்த வில்லையுங் காணையாயொடித்து, ஓர்செங்கதிர்ச்சிலிமுகந்தெறித்து அவனது தேகந்தையுந் துளைத்தான். அந்த அடியினாற்களைத்த இடபசேனன் உடலெரிந்து, உயிர்கரிந்து, வீஷ்மருக்காகப் பரிந்துபுகுந்த பக்ஷம் போதுமென்று முனைகெட்டழிந்து, முதுகிட்டயர்ந்து முறைபட்டோடிப் போயினான்:

அவனோடுவதை நோக்கிய சிந்து தேசாதிபனெனலுஞ் சயிந்தவனும்-காந்தாரதேசாதிபனான சௌபலச்சகுனியும்-வெம்புமனத்தினாகி, துரியோதனன் தம்பியார்களோடும் மற்றுமுள்ள மன்னவர்களோடும் எதிர்த்து விதிர்விதிர்த்து, வெந்தழற்கணைமழைகளை வெகுவாகச்சிந்தினார்கள். அக்காலையில் மதத்த கெஜகேசரியாகிய மாதவிகொழுநன் நகைத்து, மனவேஷ்டையாய்ப்பகைத்து, புரத்தையெரித்தஉரத்தஅஸ்திரங்களையுந்தி, அவரவர்பிடித்திருக்கின்றவில்லையும்பாணங்களையுஞ்சிந்தி, கொடி நாணியுங்குறைத்து, குதிரையைச் சாரதியைத்தறித்து, குடையுடைத்தேரையு முறித்து, பின்னும் நூறுபெருங்கணைகளைத்தாக்கி, வீறுபட்டசேனைகள் - தாறுபட்டயானைகள் - கூறுபட்ட குதிரைகள் - மாறுபட்டரதங்கள் இவ்வாறுபட்டவென்று சொல்வதற்கிடமில்லாமல் வெவ்வேறுபட்டு நீறுபட்டெரிய நிமிஷத்திற் பொடித்து, சேறுபட்ட உதிரவெள்ளத்தின்மீது தேர்செலுத்தி எதிரொருவரில்லாமல் வருகின்றான். அப்படி வருகின்றவிஜயபராக்கிரமனைப் பருந்துபறக்கச்சிறந்த தேர்மேலிருந்த பிதாமகன்கண்டு, அப்பா பற்குனா! இதோ நான்காத்திருக்கின்றேன். என்னைவிட்டு அவ்வெளியவர்களோடு போராடுவதில் என்ன பிரயோசனம்? விரைவிலென்னோடும் ஒருகை பார்த்துச்செல் பார்ப்போமென்று கூவினர். அப்படிக்கெதிர்த்த வீஷ்மரை அர்ச்சுனன் வணங்கி ஒடுங்கி, ஐயா! தேவரீர்க்கு நானெம்மாத்திரம்? என்னை ஒரு பொருளாகக்கொண்டு சண்டை போடவுஞ் சம்மதியுண்டோ? ஆ! ஆண்டவனே! என்று நிர்மதியாய்நின்று, மேகம்போன்ற காண்டீபங்கொண்டு, மின்னற்கிணையாகிய நாணிபிகிர்ந்து, காணங்கலங்க நாணொலிசெய்து, தீரஜெயவாளி-வீரவயவாளி-மகேந்திரபாணம்-உகாந்தபாணம்-இவைமுதலியவற்றை வாரிவாரி வரிசையாய்ச் சொரிந்தான். வீஷ்மரும் உகாந்தகால உற்பாதகாலமழைபோல் வாகார்ந்தவாளிகளை வரிசை வரிசையாய்ப் பொழிந்தார். இவ்வாறு மலையுமலையு மெதிர்த்து மாறுடும் வாறுபோ லிருவருமெதிர்த்துப் போராடினார்கள். இவர்கள்புரிந்த கலகத்தினால் எழுசமுத்திரமும் எட்டுத்திக்குப்பாலரும்-ஒன்பது கிரகங்களும்-பத்துதிசையும் பதினோருருத்திரரும்-பன்னிரண்டு சூரியரும் பட்டபாடின்னதென்று பாவாணரும் பகர்வதற்கிடம்படவில்லை. அந்தரவாசிகளாகிய இந்திரன்முதலாகியதேவர்களும் வேடிக்கைப்பார்த்து வெருண்டு, அனேகயோசனைதூரம் அகன்றுபோய் நின்றார்கள். சந்திரசூரியர்களுங் கதிமாறினார்கள். இவர்களிருவரும் உதயமாகியொடுக்கமாகின்ற உதயகிரியும் அஸ்தமனகிரியும் ஒதுங்கி நடுங்கியதாகள். கடலுங்கொதித்து கனலுங்கதித்து ஊளசளவென் றிரைந்தன. எட்டுத்திசையானைகளுங் கட்டுக்கெட்டயர்ந்தன. இவ்வுலகமும் எவ்வுலகமும் ஏங்கித்தளர்ந்தன.

இவ்வாறு பிரமாத முண்டாகும்படியாய் இவர்களிருவரும் அமராடியகாலையில், வீஷ்மர்மிஞ்சி, பஞ்சபூதம்போன்ற அஞ்சுகணைகளைச் சாரதியான உத்தரகுமாரன்பேரிற் றொடுக்கினர். அந்தக்கணைகள் வருகின்ற நிருடியைக்காண்டீபன்கண்டு, ஓர்காலாக்கினிக்கணையையெடுத்துப்பாச்சி, பஞ்சுப்பொதியில் நெருப்புபற்றிய பான்மைபோலெரித்து, வஞ்சமறியா மனத்தோராகிய வீஷ்மருடைய நெஞ்சு திடுக்கிடும்படி அவர்கையிலிருந்த வில்லையுமொடித்துவிட்டான். இப்படிஒப்பாரில்லாத தன்போனான அர்ச்சுனனால் ஒடிபட்டவில்லை அப்பாலெறிந்து, இப்பாலொரு வில்லையெடுத்து மலைபோல்வளைத்து, புற்றிலிருந்து புறப்படுங் கிருஷ்ணசர்ப்பங்கள் பேரோசைகொண்டு புகுந்தவாறென்ன அஸ்திரமாரியைத் துஸ்தரமாகச்சொரிந்தார். இவ்வாறு வீஷ்மர் தாஷ்டீகமாய்ச் சாய்த்தகணைகள் யாவற்றையும் இணையில்லாத அர்ச்சுனன் திரணபரிகாயமாய்ப்போக்கி, கரணபரியந் தங்காண்டீபநாரியை ஊக்கி, அருணோதயம்போற் சில செஞ்சரங்களை மிஞ்சத்தாக்கி, அஞ்சிப்பயந்தோடச் சேனைகளைப் புடைத்து, அசையாக்கீர்த்திபடைத்து அமராடினான். அக்காலையில் எழுகடல்நீருஞ்சுண்ட, மலைமுதல்யாவுங்குன்ற, உலகிலுள்ளயாவரும் பதுங்க, ஊரிலுள்ளயாவரும் இதங்க. அஷ்டகஜமும் ரத்தங்கக்கிவதங்க, அமரர்களும் அக்கடையெக்கி யொதுங்க. பிரளயகாலத்திலுண்டாகா நின்ற பெருநெருப்பைப்போற் சரங்களிறைத்து, பிர்ம்மாதிகளுங்கண்டு கலங்கும்படியாய்ப் புலிங்கநிறைத்து, தகுதியான இவ்விருவருந் தேரைசெலுத்தி ஓரிடத்திலுந் தங்காமல் அண்டச்சுவரின் அடிவாரமட்டுந் திரிந்துகொண்டிருந்தார்கள், இவர்களேறிய தேரானது வாயுவேக மனோவேகமென்பதைக் கடந்து, வட்டமாகச்சுழன்று, ஒன்றுக்கொன்றுகிட்டநெருங்கியுராய்ந்து, ஒன்றையொன்று விட்டுப்பிரிந்து பாய்ந்து, நெடுந்தூரமோடி ஓய்ந்து, வலசாரி யிடசாரியாய்த்திரிந்து, சூரியன்றேருஞ் சுழலவிடுத்தது.

இதன்றியும், இந்திரன்மைந்தனான விஜயனுடைய வில்லும்-கங்காபுத்திரனான வீஷ்மருடைய வில்லும்-குலாலன்சக்கரம்போற் கூசாமற்சுழல, அச்சுழலினின்றும் வந்து வெளிப்படுங் கூரம்புமுதலாகியபாணங்கள் ஒன்றோடொன்று புரண்டு, முடிகளோடு முடிகள் தலைகளோடுதலைகள் இடிபட உடைபடச் சாடியபடியால்; தேரிற்கட்டியகுதிரைகள் பிடிபடாமற்கனைத்துக் கருளித்துக் களித்துப் பதிபட்டோடின. இருவர் சாரதிகளும் எக்களிப்பிட்டு இறைந்து விரைந்து பரி

களைத் தடுத்தனர். அர்ச்சுனனுடைய அனுமக்கொடியு
ம் வீஷ்மருடைய பனைமரக்கொடியும் ஆகாயமளாவி நீ
டிய வாயுதேவனுடன் போராடியாடின. வாள்வீரர் மு
தலாகிய மன்னவர்களெல்லாந் தோள்கள் பூரிக்கவும்,
நெற்றிவியர்க்கவும், மீசைதுடிக்கவும், ரோமஞ்சிலிர்க்க
வும், வாள்விழிசெவக்கவும், தீப்பொறிபறக்கவும், அஸ்
திரந்தொடுக்கும்விரல்கள் நெளிக்கவும், அமர்விற் பிடி
த்த கரங்கள் மொறைக்கவும், வீரகண்டை முழங்கவும்,
வெற்றிப்பட்ட மிலங்கவுமானார்கள். வேடிக்கைப்பார்த்
த வேந்தர்கள் கலங்கினர் மேலுலகத்தோர் வெதும்பி
யொதுங்கினர். நாகலோகத்தார் நலிந்துவிலங்கினர். நா
நிலத்தார் நடுங்கிக் குலுங்கினர். இவ்விதமாக இருவரு
ங்கலந்து ஒருவருக்கொருவர் ஈடுதாழ்த்தியில்லாமற் சம
ராடுகின்ற தன்மையினாலே, மதுசூதனன் மைத்துனனா
ன அர்ச்சுனன் ஓர் யுத்திசெய்து, கொற்றமுற்ற பத்து
க்கணைகளெடுத்துக் கொத்துக்கொத்தாகத் தொடுத்து,
வெற்றிப்பனைக்கொடி விறிய வீஷ்மர்தேரைத் தடுத்து
வில்லையுமுறித்தான். அவனால்முறிந்த வில்லையெறிந்து
வேறுவில்லை வீஷ்மரெடுப்பதற்கு முன்னே விஜயன்மு
னைந்து அட்டகாசம்பண்ணி, அர்த்தசந்திரபாணம்ஆயி
ரமாயிரமாக எய்து பாட்டனுடைய தேகத்தைக் கொ
ய்து, செல்லெரிப்பதுபோற் சல்லடைக்கண்ணாய்த் து
ளைத்துவிட்டான். முன்னமே செவந்திருந்த வீஷ்மரு
டைய திருமேனியானது ரெத்தத்தினாற் பசந்து, பா
ணந்துளைந்த வருத்தத்தினாற் களைத்து வருந்திவாடி, நி
லைதவறி நெடுமூச்செறிந்து, கரைபுரண்ட கருங்கடல்
போல் தேர்மேல்வீழ்ந்து அசைவற்றிருந்தார். அப்போ
து எஜமானிளைத்த சமயத்தையறிந்த தேர்ச்சாரதியான
வன் அர்ச்சுனனுடைய போர்முனைவிட்டுத் தேரைச்
செலுத்தி, நேர்முகமான திசையிற் கொண்டுபோய்நி
றுத்தி, அவரைச் சீர்பெறத்தேற்றி, அவிழ்தாதிகளூட்
டிக் களைதெளியச்செய்து அன்புபாராட்டினான். அந்த
வேளையிற் பகல்விளக்கான பரிதியினிரதமானது ஆகா
யத்தி னுச்சியையடுத்தது. அதுகாலையில் வீஷ்மர் மத்தி
யானக்கருமத்தை முடிக்கச்செல்பவர்போல் யுத்தமுனை
யை மறந்து மறைந்து போயினார். அவரிடைந்துசென்
ற செயலைக் கண்ட துரியோதனன் தம்பிமார்களும்-பு
த்திரர்களும்-சயந்தவனும்-சகுனியும்-இடபசேனன் மு
தலாகிய மற்றப்பேர்களுந் தங்கள்தங்கள் சதுரங்கப்ப
டைகளோடு தயங்கி மயங்கி, தங்களுக் குதவியாய்ப்பி
ன்புறநின்று தாங்குவா ரில்லாமைபால் தனித்தனியேங்
கி, பற்குனன் பாணத்தாற் பங்கப்பட்டு, நிற்பதற்கிட
மில்லாம லுழன்று மனமழன்று புறமிட்டோடினார்கள்.
ஐயா மகாராஜனே! இந்தவீஷ்மாசாரியர்-கிருபாசாரிய
ர்-அஸ்வத்தாமா-துரோணாசாரியர்-கர்னமகாராஜன் - ஆ
கியவிவர்கள் பராக்கிரம மெத்தன்மைப்பட்டது? இத்
தன்மையானபேர்களுக்கிளைக்காதவனுக்கு விஜயனென்
னும்பேர் ஒர்வியப்பானதோ?

அருச்சுனன்செய்த யுத்தபராக்கிரமச் சிறப்பு.

அந்தவேளையில் மந்தரபுயத்தோனாகிய அர்ச்சுன
ன் யுத்தமுகத்திற் பிரவேசித்து, விசித்திரசரங்களை வித
விதமாய்த் தொடுத்து, துன்னியசேனைகளைத் தாக்கி ம
ன்னரை வேறுவேறாகப்போக்கினான். இந்தப் பிரகார
மேலுமேலுங் கோடிகோடி கணைகளை வீக்கியகாலையில்,
நாலுமூலையிலுங் கோலாகலமாயிருந்த வணங்காமுடிதி
ருந்திய துரியோதன மஹாராஜன் படைகளானது தா
வரிக்கமாட்டாமற் பின்னிட்டுப்பறந்து, இரதங்கள் மு
ன்னிட்டு முறிந்து, கொடிமரங் கீழ்ச்சாய்ந்து, குதிரை
கள் காலோய்ந்து, தேரிற்கட்டிய சித்திரத்துகிலுங் கி
ழிந்து, திரிகிச்செல்லுஞ்சக்கரங்களு முடைந்து, அச்சு
கள்பிளந்து, மச்சுகள்சரிந்து, குற்றுக்காலுங் கொடுங்
கையும் வீழ்ந்து, போதிகையும் பீடிகையுந்தாழ்ந்து, சி
காமுதிர்ந்து சிதறிக்கழிந்து, திகழ்தட் டனைத்துஞ் சிந்
திச் சிதைந்து, வீறிய குடையுஞ் சுருங்கி, சாரதி குட
லுங் கலங்கி, வரிசைவிட்டுக் கிரிசைகெட்டு மா.ரொடிந்
துபோனது மல்லாமல்; வஞ்சமனத்தனான துரியோத
னனுடைய வெற்றிபெற்ற மத்தகஜ மனைத்தினுக்கும்
மத்தகக் கும்பம் பிளந்து, வித்தகத்தந்த முறிந்து, சுள
குபோன்ற காதுகளறுந்து, தும்பியாகிய கைகள்தறிந்
து, நான்குகாலுங் கமுகனைய வாலும்போய்வறண்டு, ந
ல்ல உடலுங் குடலும் ஒன்றாய்ப்புரண்டு, வட்டக்கட
லுலகில் மலையெட்டுந் தலைநட்டுப் பட்டுவிழுந்தவாறு
போல் ஒன்றொழியாமல் உயிர்கெட் டொழிந்தன. தெ
ய்வலோகத்தில் இந்திரசிங்காசன மேறிய கிரீடியானவ
ன் நிருடியாய்ச்சிந்தியசரோருகக்கணைகளால் துரியோ
தனனுடைய குதிரைக்கூட்டங்களியாவும் படைமுறிந்
து, பலங்குறைந்து, வால்தறிந்துகால்முறிந்து, கழுத்து
மயிருதிர்ந்து, கடிவாளக்கயிறு கழன்று, மார்புகிழிந்து,
மன்குளம்பழிந்து, தோல்மடிந்து, மேலொடிந்து, ஜப்
பையுமுகமுங் குப்புறவீழ்ந்து சரகெனச்சிதறின. நாகக்
கொடிபடைத்த நராதிபனுடைய பதாதிகளானது சிர
ஞ்சிதைந்திடைந்தன. கரந்தறிந்தழிந்தன. எலும்பொ
டிந்துடைந்தன. ஈரல்சரிந்துதிர்ந்தன. நாடியறுந்துழன்
றன நல்லுதிரம்பொழிந்தெழுந்தன. நெற்றியும் புருவ
மும் நிமிர்ந்துபிளந்தன புயமும் மார்பும் புண்ணாய்க்கி
ழிந்தன. குதமும் பதமுங் குறைந்துசுருங்கின. காலுங்
கரமுங் கறணையாய்வீழ்ந்தன. எவ்விடங்களிலும் பிணக்
குவிய லுயர்ந்தன. இனியொருவர் எதிர்த்துப் போர்
கொடுப்பார்க ளென்று கனவிலுநினைக்காதபடி சவ்விய
சாசிவிட்ட சரங்களினால் நால்வகைச்சேனைகளிற் றப்பி
ப்பிழைத்தவர்கள் இப்புவியிலில்லையென்றுசொல்ல மா
ண்டார்கள்.

இப்பால் - யுத்தஞ்செய்த விடத்தில் நெஞ்சுரம்
பொருந்த நஞ்சுபோலிருந்த நரனென்னுங் காலா

க்கினிக்கு எதிர்ப்பட்ட பூளைப்பூப்போல், துரியோதனன் சேனைகள் எதிர்ந்து-பொடிந்து-பொறிந்து - புகைந்து-பறந்து-புரண்டுபோய்விட்டன. மேலும் - சிரித்துப் புரமெரித்த சிவபெருமான்போ னின்ற செஞ்சிலை விஜயனுக்கெதிரில் திரிபுராதிகட் கொப்பாய்த் துரியோதனன் படைகள் பட்டார்கள். இன்னும்-அனுமக்கொடி படைத்த அர்ச்சுனராஜன் அனுசந்தானஞ்செய்த அஸ்திரங்களினால் ஆறுபட்டோடிய ரெத்த வெள்ளமானது சேறுபட்டுச் சிதைந்து செந்தூளாகியது. பின்னும்-அர்ச்சுனனுடன் மாறுகொண்டு மடிந்தபெயர்களின வல்லுடலானது நீறுபட்டு நெரிந்து ஊறுபட்டொழிந்தது அசைவில்லாமலெழுந்த விஜயன்கணைகளானது தங்களிஷ்டப்படிக்குச் சண்டைபோட்டு, திசையின் கடைசிவரைக்கும்போய் முட்டிப்பார்த்துத் திரும்பி. அப்பாலுந் தங்கள் விசையடங்காமற் பூமியைத்துளைத்து, அதுவும் போதுமென்றிராமற் சுழற்காற்றுடனுங் கலந்து சுரவைகுறையாமற் றிரிந்தன மேலும்-மாதவிகாதலனாகிய பார்த்தனேவிய வார்கணைகளானது திக்கெட்டுங்கிட்டி, திசைப்பாலகர்தலையிலுங்குட்டி, அஷ்டகஜங்களைத்தட்டி, அண்டச்சுவரையுமுட்டி, இன்னும் ஆராகிலும் பகைவருண்டோவென்று ஆராய்ந்துவிட்டன. இதன்றியும்-சிற்சில நெருப்புக்கணைகளானது பற்பல தேர்நிரைகளையும் யானைப் பெருக்கங்களையும்-குதிரைநெருக்கங்களையும்-கால்பல வருக்கங்களையுங் கசியக்கரைத்து, கண்ணுக்கிடு மைபோலரைத்து, கால்வாய்கொண்டோடுகின்ற ரெத்தங்களிற்கரைத்து, கடலிற் பெருங்காயங்கலத்தல்போற் கலக்கிவிட் டிரைந்ததுகள். வீபற்சுவினைத்த வினையால் கொற்றவர்களும் மற்றவர்களும் மெத்த வருந்திச் செத்ததல்லாமலும், தலைமேற்குவித்த காத்தினராய்-தறிந்துவீழ்ந்த சிரத்தினராய் - தைரியங்கெட்ட உரத்தினராய் தங்கள்தங்கள் வாய்விட்டரற்றினராய்ப் போய், அவர்க்குரிய பெரியபெரிய சந்திரவட்டக் குடைகளும், வெண்சாமரைகளும், பல்லக்குகளும், பல வாகனங்களும், பேரிகை - பூரி - தாளம் - மேளம் - தவிலடி - காளம் - கொம்பு - கொடி - முரசு - இவை முதலிய வாத்தியக்கருவிகளும், வில்லும்,பாணமும்,வேலும், வாளும் வெவ்வேறுபழிந்து: பூமியிற் குப்பையாய்ப்பொருந்திக் குவிந்ததுகள். இந்தப்பிரகாரஞ் சண்டைபுரிந்த இந்திரன்மைந்தன் அண்டச்சுவரையளாவிய சமுத்திரம்போ லிரைந்தெழுந்த துரியோதனனுடைய சேனைகளை மகாமச்சம்போற் குடைந்து வாட்டிவிட்டான். மேன்மேலுந்தெறித்த வெங்கனற்கணைகள் மிதமறப்படர்ந்து, வெளியெல்லாமடர்ந்து, காடெல்லாங்கடந்து, கடையுகாக்கினிபோ லெரிந்து, விரோதிகளைத்தொடர்ந்து, மேனியைப்பிளந்து, சேனையைச் சிதைத்து, ஊனினைப்புசித்து: உதிரங்குடித்து, தாராகணச்சுனைத் தரையினுதிர்த்து, தேவர்கணடுங்கச் செந்தியெரித்துச் சிரித்துக் களித்துத் திறம்பெற்று நின்றதுகள்.

இவ்வாறு மாடுபிடிசண்டை போடுவதற்காகப் புகுந்த வணங்காமுடியோன் முதலாகிய மன்னவர்கள் பேரிற் குறிப்பறிந்து நெறிப்பறிந்து கூசாமலேவியபாசுபதன் பாணங்கள் ஒவ்வொன்றும் எப்படியிருந்ததெனில், தசரதச் சக்கரவர்த்திதந்த மைந்தனை தாசரதியானவர் தர்ப்பசயனத்தி லிருந்து வருந்தியழைக்கும்போதுவாராதசமுத்திரராஜன்பேரில் வலுக்கொண்டுந்திய வன்னிக்கணைபோ லிருந்தது. ஆன் சர்ப்பக்கொடி நாட்டிய துரியோதனனுடன் பொருந்திப் போர்புரிந்த போர்வீரர்கள்பேரிற் புரந்தரா துரந்தான் போக்கிய புங்கவங்களானது எவ்வாறொத்தனவெனில், தீரம்பெறுஞ் சூரனையும் அவன் சேனைகளையுங் களைந்த சிவசுப்ரமணியக்கடவுளின் வேலாயுதமொத்திருந்தன. மேலும் - கருங்கடல்போற்கவிந்த கௌரவகுலமுதல்வன் சேனைகளியாவற்றையுங் கண்கலங்கப் புண்துலங்கக் கசக்கி வதக்கிக் கருக்கும்படிக்குக் கேசவற்றேழன்முடுக்கிய கிளைக்கணைகளானவைஎத்தன்மையொத்தனவெனின், எமதருமராஜனேவிவி சிய தண்டபாசத்திற்கிணையாயிருந்ததுகள். வேந்தர்கள் முடிமேற் கவித்த வெள்ளைக்குடைகள் காம்புமுறிந்து பூமியிற்கவிழ்ந்து காற்றினால்திமிர்ந்து கலந்துகிடப்பவை எவ்வாறிருந்தன வெனில், சுபத்திரை நாயகன் துரியோதனனுடைய படையைவென்று அடலுற்றுச்செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம்பெறவேண்டி சந்திரன்வந்து தலைகவிழ்ந்திருப்பதுபோ லிருந்தன. வெற்றி வீரமுள்ள வேந்தர்கள்கையிற் பற்றிய வலம்புரிச்சங்க முதலிய வெல்லாவற்றையும் அர்ச்சுனன் அம்பாலடித்துத் தள்ளுதல் எவ்வாறிருந்ததென்றால், ஏகச்சக்ராதிபனாகிய துரியோதனனது கீர்த்தியை வேரறக்களைந்த வாறுபோலிருந்தது. தேர்களிலும் இயானைகளிலும் பொருத்தியிருந்த பலநிறசுபட்டுக்கொடிகள் பார்த்தன்விட்ட பாணங்களால் அறுபட்டு முறிபட்டு தறிபட்டு மாலைமாலையாய் வீழ்வது எப்படிக்கிருந்ததென்றால், வெகுநிற மேகங்கள் விண்டலம்விட்டு நீங்கி மண்டலத்தில் ஒரே மொத்தமாய் விழாமல் தனித்தனி வரிசைவரிசையாய் விழுந்தவாறுபோன்றிருந்தது.

இதல்லாமலும்-மாசற்ற தேசுற்ற வளம்பெற்ற மனதுற்ற தருமராஜனுக் கிளவலாகிய தனஞ்செயனைவன் ஜெயலக்ஷுமியைக் கல்யாணம்பண்ணிக்கொள்வதற்குத் தனித்தனி யெடுத்துத் தொடுத்த சரக்குவையலானது தூசிப்படைச் சூரர்களின் வீரவில்லை வெடுக்கென்று முறியப்படுத்திய வேடிக்கை எவ்விதமிருந்ததெனில், ஜெனகராஜனுடையவில்லைச் சீதாபிராட்டியார்க்காகச் செங்கண்மால் வளைத்தொடித்த செயல்போன்றிருந்தது. இதன்றியும் - கரும்பைப்பரிந்தெடுத்துண்ணும் வாயும் - பனைக்கலையும்-விரித்தாதும் பொருந்திய

உடலையுள்ள திடகாத்திர கும்பகராடதடயானைகளின் பேரில்முழங்காநின்ற முரசவாத்தியங்களை நாலுந்திய நாராசப்பகழிக ளுடைத்தது எப்படிக் கிருந்ததென்றால், உயர்ந்தமலைமேலுற்றபெருங்கருங்கற்களைப் பேரிடிவிழுந்து பிளந்தவாறொத்தது. மேலும் வெற்றிப்போரிற் புகுந்த மத்தகசங்கள் வீரபட்டங்கட்டிய கும்பம் பிளப்புண்டு இரண்டு பக்கங்களிலும் ரெத்தம் புரண்டோடும்படியாகத் திரிகின்றது எத்தன்மை யொத்ததெனில், சித்திரைப்புயலடிக்குங்காலத்திற் சிவந்த வெள்ளம்பெருகிக் கறுத்தமலைமேற் கால்கொண்டு வழிந்த காட்சியை யொத்திருந்தது. இதல்லாமலும் - அர்ச்சுனன் அந்தயிடத்திற் போர்செய்ததிறம் எப்படியிருந்ததெனில், ஒருயாகஞ்செய்து தேவர்களுக்குப் பூரணாகுதிகொடுத்த செயல்போன் றிருந்தது. அஃதெவ்வாறெனில்-மாடுபிடிசண்டைவிளைந்த காடுகுடிகொண்டுபாந்த நிலமானதுவேள்விச்சாலையாகவும், வீராளெதிர்த்து போர் புரிந்த இடமானது ஓமகுண்டமாகவும், அவர்கள்பேரிற் பிரயோகம்பண்ணிய பாணாக்கினிகள் யாகாக்கினியாகவும், போர்மோகங் கொண்ட வீராளுடைய தேகமானது சமித்துக்களாகவும், அன்னோருடம்பிலிருந்துவழிந்த ரெத்தங்கள் நெய்யாகவும், போர்பொரவழைக்கும் வீரப்பேச்சுகள் வேதமந்திரங்களாகவும், இயாவருடைய உயிரும் அவிர்ப்பாகமாகவும், தேர்ச்சிகாங்கள் பூரண கலசங்களாவும், அபமேதம்-கபமேதம்-புருஷமேதம்-பசுமேதம் என்னும் யாகத்தை ஒருநாள் விரதத்தில் அவ்வுத்தமன் செய்ததை ஒத்திருந்தது. மேலும்-பிரமசிருஷ்டிக் குட்பட்ட ஆத்மகோடிகளின் கண்ணுக்குள் மணிபோன்ற கண்ணனைப்போல் அந்த யுத்தபூமியைச் சாரிவரும் அர்ச்சுனனைக்கண்டபாரிய தேர்வீராளெல்லோரும், இன்னுந் தங்களைநாடித் தனஞ்செயன் தேடிவருகின்றானென்று தளர்ச்சியடைந்தார்கள்.

இப்படியாகப் போர்விளைந்த யுத்தகளம் எப்படியிருந்ததென்றால்-பருந்துகளிருந்து விருந்துகளருந்த, கழுகுகள் குழுமிக் கொழுநிணங்கொள்ள, காக்கைகள் வீராள் கண்ணைப்பிடுங்க, ஆக்கைபைப்பேனுப் அடுத்துக்கடிக்க, பிணந்தின்னுங்கூளிக் கணங்கள்பறக்க, ஈரலைபூளையைக் குழிநரியிழுக்க, மிகுந்த ஓசையுள்ள பட்சிகளின் ரெக்கை நெருக்கத்தினால் வானமும்-மலையும்-மரங்களுமறைய, ஆறாகவும் - சேறாகவும் - மடுவாகவும்-ஓடையாகவும்-கபமாகவும் காலாகவும் - பெருகியோடிய உதிரங்களினற் கடலவளைந்த உலகஞ்செவக்க, பைசாசங்களும்-பூதகணங்களும்-பிணங்கி, மறுபடியும் இணங்கி, வாரகியைவணங்கி, கைகோர்த்து ஆடியும் பாடியும் ஓடியுமிருக்க; பாம்பாரம்-என்புமாலை-சூலகபாலம்-யாளிவாகனம் உடுக்கை-பம்பை இவைகளைக்கொண்டு திரிகின்ற காளிக்கூட்டமும், மணிமுடியணிந்த மயிடனைத் துணித்த கன்னிப்படையும், குத்துச்சண்டைவெட்டுச்சண்டையிற்றேறிய குறளி-கூளி பாரிடம்-இவைகளுங் கூடிக்குலாவிப் போர்க்களமுழுவதும் பொருமித்திரியவுமா யிருந்தது. அன்றியும்-ஒருபேய்ப்பெண்ணானவள் சண்டையிலுருண்ட தரியலர் தலைகளை, அண்டையிற் கிடக்கும் யானைத்தலைகளை, குப்பையாய்க்குவிந்த குதிரைத்தலைகளை, மலைப்பாம்புடல்களில் வரிசையாய்க்கோர்த்து, தாலியுருவுமுதலிய மங்கலசூத்திரமாய்க் கழுத்திற்றரித்து, உருவுகள் கோர்த்துக் கொண்டேனென்று பிரதாபம்பேசித் தன்னைமறந்துவந்து, சற்றேதவறி இரத்தத்தில் வீழ்ந்து ஆழ்ந்து சுழியிற்றாழ்ந்து, செத்தேனென்று முழுகியெழுந்துதெணறிக் கூச்சலிடும் போது; ஒரு பூதம் ஓடிவந்து எற்றக்கோல்போன்ற நீண்டகரத்தைக்காட்ட, அக்கரத்தைப்படித்துக் கரையேறுபவர்போல் அக்கரத்தைப்பிடித்துக் கரையேறி வந்து, இன்றைக்கொருதத்தென்று சந்தோஷிக்குஞ் சந்தடிப்பெருக்கமும்; அவ்வாறுபிழைத்த அப்பெண்பேயானது தன்னைக்கரைபேற்றிவிட்ட பூதத்தைப் பிடித்துக்கொண்டு, எப்போதுமது கைப்பிடித்தேனோ அப்போதே உமக்கு நான்பெண்சாதி. எனக்குநீரே புருஷன். இனிவேறு புருஷரை விரும்பேன். என்று பந்துஜனங்களுக்குச் சொல்லி, அவர்களனுமதியிற் கலியாணஞ்செய்துகொள்ளுகின்ற ஆரவாரமும்; அக்கலியாணத்தில் நிணமாமிசத்தை நிரம்பத்தின்று, மயங்கிவீழ்ந்து புரளுகின்ற வயிறுதாரிப் பேய்களின் கோடணையும்; அர்ச்சுனராஜனுடைய புகழ்ப்பிரதாபத்தைப்பாடி, அவனுக்கு நன்மையுண்டாகக் கடவதென்று வாழ்த்திக்கூடி, அவனுடைய காண்டீபத்தையும்-அக்ஷயதூணீரத்தையும்-தோத்திரஞ்செய்கின்ற பேரொலியும் எங்கு நிறைந்திருந்தன. இதன்றியும்-சோரி வெள்ளமானது வாரிபோலோட, அதில்மடிந்தயானைகள் அவ்வாரியிற் படிந்ததிமிங்கிலம்போலவும், அதில்வீழ்ந்த குதிரைப்பிணங்களதிமியென்னு மீன்போலவும், அதிலுலாவும் வாளாயுத முதலிய மற்றவாயுதங்க ளெல்லாம் பற்பல விதமச்சம் போலவும், அதிலோடுகின்ற தேர்கள் தேர்த்தட்டுகள் முதலியவை கடன்மேற்செல்கின்ற கப்பல்-கட்டுமரம்-தோணி-படகு இவைபோலவு மிருந்தன. பிணங்களாற்குவிந்தமேடானது எண்காற்பட்சிகளிருக்கும் பெருமலைபோன் றிருந்தது. மதயானைகள் கொம்பொடிந்து கூக்குரலிடும் ஓசையானது, வீரபுருஷாள் ஒருவருக்கொருவர் கூரியகணைபால் குத்திக்கொண்டிரையும் பேரோசையாலடங்கின. கடையாணி கழன்றோடுகின்ற சக்கரங்களும், தலையறுந்த முண்டமாடும் ஆட்டங்களும், பரதநாட்டிய ஸ்திரிகள் வெட்கமுறும்படியாயிருந்தன.

இந்தப்பிரகாரங் கற்பகப்பூமாலைபணிந்த பொற்பிரகாசப் பொன்னுலகிற் சிறந்த தேவேந்திரகுமாரனான பார்த்தன் ஆர்த்து 'அமருக்தரித்த போர்க்கள

த்தில், யாளிக்கும்-சிங்கத்திற்கும்-யானைக்கும் — புலிக்குநிகராகிய வேந்தர்முதலாகிய-வீரர்களை, கூளிக்கும் நாளிக்கும்-காக்கைக்கும்-கழுவுக்கும் - அளவில்லாத் தன்கைவாளிக்கும்-அவ்வூர்வாழுங் காளிக்கும் விருந்தாக்கி. தேவர்கள் கண்களிக்கும் படிக்கு விஜபலட்சுமியைத் திருமணங்கண்டருளினன். இந்த விரப்பிரதாப நிராகாண்டப யோகவைபோக நியாக மாயோக விஜயமகாராஜன் செலுத்திய வெந்தழற்கணைகளுக்கு இயாவரும் பஞ்சபோற்பறந்து அஞ்சி, பல்லைக்காட்டிக்கெஞ்சி எஞ்சிப்போனர்கள் சிலர் சண்டையைத் துறந்தார்கள். பலர் மண்டைகிழிந் திறந்தார்கள் சிலர் முகம்விட்டவாறே ஓடினர்கள். பலர் மூச்சுவிட்டுத்திணறி வாடினர்கள். இவ்வாறுனநிலையைச் சவ்வியசாசிகண்டு வெவ்விய நகையுடன் வெகுண்டு, ஆபத்தினை லோடுகின்றவர்களைப் பாபத்திற்குப்பயப்படாமற்றூத்தி, விடாதே: விடாதே; என்று வெருட்டுவதானன். இதுவுமல்லாமல், திரிதராஷ்டிரகுமாரனை துரியோதனன்-துச்சாதனன்-சிந்துராஜமைந்தன்-சௌபலராஜகுமாரன் - குந்திதேவி முதற்பிள்ளையான சூரியதனயன்-இவர்முதலாகிய வெற்றிவீரர்களியாவருந் திசைவிலங்கிமதி நலங்கி நிலைகலங்கி தலைகுலுங்கிப் போகும்படியாய்ச் செந்தீக்கணைகளை முன்னும்பின்னு முடுக்கி, தேர்செலுத்துஞ் சாரதியான உத்தரகுமாரனுந் தானுஞ் சற்றிளைப்பாறும்படியாய்க் கைப்பிடித்த காண்டீபத்தை நாணிதளர்த்தி, தோட்புறமாட்டிய அம்பறாத்தூணியை நீக்கி, விரற்சாடு-கரச்சாடு-முன்கைத்தோற்கட்டு-பின்கைத்தோற்கட்டு - இவைமுதலியகவசங்களைக்களைந்து இரதத்தின்மீது வைத்து, அஸ்வசஞ்சீவி மந்திரத்தாற் குதிரைகளைத்தேற்றி, சாரதியின் சலிப்பையுமாற்றி, தனதாசாரியர்களைப் போற்றி, இன்னமும் பகைவர் ஒன்றுகூடி வருவார்களாகில் மெத்தவும் நேர்த்தியென்று பூர்த்தியான தன்சரீரவருத்தந் தீர்த்து முகம்வேர்த்து நின்றான். அத்தருணத்தில் உத்தரகுமாரனுந்தேர்விட்டிழிந்து, குதிரைக் கடிவாளத்தைக் குத்துக்காலுடன்சேர்த்து, குதிரைநடாத்துங்கோலையுந் தேர்மேல்வைத்துக் கட்டி, குதிரைகளைத் தடவித்தட்டி, அர்ச்சுனராஜனைக்கிட்டி, மாடுபிடிசண்டை நடந்த மகத்துவத்தையும்-இனிமேல் நடக்கவேண்டிய மார்க்கத்தையும் பேசிக்கொண்டிருந்தான்.

துரியோதனுதியர் மீட்டுமருச்சுனனோடு பொருது, அவனதுமோகனுஸ்திரத்தால் மயங்கிச் சாய்ந்துபோதல்.

சேட்டீரோ ஜென்மேஜெய மகாராஜனே! இப்பால்-பகைநிறம்படைத்த பார்த்தனுடன் கொச்சைப் போர்புரிந்து லெச்சைக்கெட்டழிந்து அடிபட்டோடிய பேர்களின்செய லென்னவெனில், இவ்விதமாக ஓவ்வுதலில்லாச் செவ்வையதான சவ்வியசாசி பௌவமாம் படையில் அவ்வவர்மீதிற கௌவுமம்பாய்ந்து எவ்வமாகென்று விண்ணுணிமாட்டி முன்னுகப்பூட்டி இழுத்துவிட்டுச் சற்றிளைப்பாறி யிருக்கவும், துவ்வியபாணந் தெவ்வர்களுடைய கொவ்விய பிடரியைக் குறைத்தழித்தொழித்த கொடுமையைக் கௌரவக் குலமகன்கண்டு, செவ்வியகண்கள் செவ்வாக்கினுஞ்செவந்து, நாப்புரண்டுலர்ந்து, தீபபொறிமலிந்து, நாடாதுநாடி, வாடாதுவாடி, க்ஷாத்திரத்தால்முனைந்து, நான் இந்த நரனுடன் சண்டைவிளைத்து நலிந்து மெலிந்து தறிந்து முறிந்து இறந்துபோனலும் போகிறதேயல்லது, இவனல் என்படைகெட்டு இவ்வளவு அவமானப்பட்டு அஸ்தினபுரிமட்டும் போய்ச் சேரமாட்டேன். என்று நடநடவென்று பற்கடித்து, மடமடவென்று விற்பிடித்து, பளபளவென்று தோளடித்து, கிடுகிடுவென்று கெற்சித்து, தடதடவென்றோடித் தேரேறி, கடகடவென்றோடப் புரவிசெலுத்தி, படபடவென் றாவக்கொடிமீட, விடவிடவென் றமரர்த்தடம்விட, ஆணவப் பேயாட, அருவினை யூடாட, கொடமராட கர்ணுடர் முதலிய மன்னவர்சூழப் படாடம்பங்காட்டி வந்தான். இப்படிக்கு வாாநின்ற துரியோதன மகாராஜனைக் கர்னன் பார்த்து, கடுங்கோபங்கொண்டார்த்து, ஆ! தம்பி! நானுயிருடனிருக்கும்போது நீ சண்டைக்குப் போகவேண்டுமோ? நில்லு: நில்லு: என்று தடுத்து, தன்னுடையதேரை முன்னுதாய்விடுத்து, மன்னவன் ரதத்தைப் பின்னுறவமைத்தான். அன்னகாலையிற் பொன்னணிபூண்ட துரியோதனனுடைய தம்பிமார்களும் பூபாலர்முதலிய பேர்களும் மின்னெனவெழுந்து, கன்னனுடன் கலந்து முனைந்தார்கள். வீஷ்மர்துரோணுச்சாரியர்-கிருபாச்சாரியர்-அஸ்வத்தாமா-இவர்கள் நால்வருந் துரியோதனனுடைய மனோபாவமறிந்து, தவறு பேசுதல் தவிர்ந்து, போனவருட னேர்ந்து புகுந்தார்கள். அப்போது மகமேருவுக் கொப்பாகிய அத்தினபுரியென்னும் வெற்றியானைமீதேறிக்கொண்டு, அருச்சுனன்சண்டையை யிப்போது அமராடிப் பொடியாக்குவேன். இது எப்போதுந் தப்பாது. எங்கள் பெருமைக் கொப்பேது பாருங்கள். என்று விண்டலமுதலாகிய மேகங்களும்—எண்டிசைமுதலாகிய நாகங்களும்-மண்டலமுதலாகிய அண்டங்களும்-விண்டுநிர்ந்துபோ மென்னத்தக்கதாய் விளைந்திருக்கின்ற இப்போர்முகத்தில், இவனே வெற்றிபெறுவானென்று கொற்றவர் பலரும் மற்றவரெவருங் குறித்துக் கொண்டாடும்படியாய் விகர்னனென்னுங் காளை செண்டெனவெழுந்து திரண்ட சேனையுடன்வந்து கலந்தான்.

இதல்லாமலும்-பார்த்தன் பாணத்திற்குப் பயந்து, போர்க்களம்விட்டுப் பிரிந்து, பெண்டுபிள்ளைகள் மேற் பரிந்து, பின்னுமுன்னுமாக இரிந்துபோனமகு

டவர்த்தனர்பட்டவர்த்தனர்முதலியபேர்களுஞ் சேர்ந்து; எமதர்மராஜன்மேல் எதிர்க்கின்றஉயிர்வகைக்கூட்டம்போல் திரும்பினார்கள். கோபமீறிய குரோதமேறிய நான்குபடைகளும், அதிரதர்-மகாரதர்-சமரதர் அர்த்தரதர் முதலிய வீராதிவீரர்களும்பொருந்தி, பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-என்னுமிவ் வைம்பெரும்பூதமுங் கலங்கும்படியாய், ஆதிசேடனுடைய பணமகுடமுங் குலுங்கும்படியாய்த் துணிந்து, கிடைதரிபதிரத்துடன் இளைப்பாறிக்கொண்டு தனித்திருந்து சாரதியுடன் சண்டையின் திறத்தினைப் பேசிநின்ற தனஞ்செயச் சிங்கத்தைத் தட்டிபெழுப்பி வளைத்தார்கள். சத்றுகோத்திற்கு முன்னே தனஞ்செயனுற் பட்டபாடும், கெட்டகேடும், அஸ்திரத்துளைத்தநோயும், பச்சையுதிரமோடிவரும் புண்வாயுங் காயுமுன்னவே; ஆயும் அறிவினர் ஆயாசம்பாராமல் போர்புரியப்புகுந்து, நாற்றிசையிலும் பாவி நானுவிதமாகிய அஸ்திரசஸ்திர ஆயுதங்களை விஸ்தாரமாக விடுத்து அடுத்தார்கள். அவ்வவர் தொடுக்கும் அம்புக்கும்புகளை அர்ச்சுனன்கண்டு, இரதத்தின்மேற்கொண்டு, எதிர்வந்தபேர்கள் பிதிர்கலங்கிப் போகும்படிக்கு விஜயகாண்டீபம் வளைத்து நாணொலிவிளைத்து, முளைத்தமுழுமதிபோல் மதர்த்துநின்றான். இந்நாயகனுன நான் தேரேறுமுன்னமே வாரேறுதனச் சுதர்க்கணைமைந்தனுன உத்தரகுமாரனென்னுஞ்சாரதி களையாறிய குதிரைகளைத் தேரிற் பூட்டி, கலகலவென்று ஒலிக்குஞ் சதங்கைகள் கர்க்கரத்தொனியுடன் கலந்துமுழங்க முடுக்கினான். அர்ச்சுனராஜன் தேர் அசைந்தாடி யோடும்பொழுது மணி முடிதரித்த மன்னவர்பலருங் காரிடி-கீரிடி - நெருப்பிடி - பேரிடியென்ன நெடுநாணுைசைகாட்டி, அளவுபடாத அம்புகளைச் சொரிந்தார்கள். அதுவுமல்லாமல் அக்கினிபற்றி பெழுகின்ற கொழு-மழு தண்டாயுதம்-சூலம்-அங்குசம்-பாசம்-உலக்கை-சக்கராயுதம் தோமரம் ஈட்டி-வாங்கு-இவைமுதலிய ஆயுதங்களை முக்கண்மூர்த்திக் கொப்பான பற்குனன் பேரிலும், சாரதிமீதிலும், தேரின்பரப்பிலும், குதிரைகளுடம்பிலும் படும்படியாய்வீசி முடுக்கினார்கள்.

ஈதன்றியும்-இபானைமே லிருந்தவர்கள்-தேர்மேலமர்ந்தவர்கள்-குதிரைமேற் கொண்டவர்கள்-பூமிமேல் நின்றவர்கள்-ஆகியவிவர்கள் தங்கள் தங்களுக் கிஷ்டமானபடி முனைந்து, தனிப்படைகொண்டு ஜாடினார்கள். அப்போது பூண்டயங்குந் தேரிலிருந்த பாண்டுபுத்திரனுகிய பார்த்தன் எமந்தரிதுக் காலத்தில் மூடுபனியினுல் மறைக்கப்பட்ட சூரியனைபோலிருந்தான். அவ்விதமாகச் சற்றுநேரம் ஒளிமழுங்கி உருத்தெரியாமலிருந்து, உடனேயோசித்து விரைந்து, தனக்கெதிர்நேரிட்ட தரியலர்களையும்-அவர்களாற்றுக்கிய சாக்கணைகளையும்-சட்டை பண்ணுதவனுப் பட்டங்கட்டிய முடித்தலையாட்டி, பகபகநகைத்துப் பற்காட்டி, உடனுமுயிரும் பகைக்க நம்முடன் அடல் விளைக்கவந்த இக்கனைபேர்களும் படவதைத்து விடவேண்டுமென்று பதறிநினைத்து, மறுபடியும் பொறுத்து, விஜயகாண்டீபத்தை யெடுத்து நிறுத்தி வளைத்து நாணேற்றி, பூர்வத்தில் தனக்குத் தேவேந்திரன் கொடுத்திருந்த இந்திராஸ்திரத்தை யேந்தி மந்திரஞ்சொல்லிவணங்கி இந்திரத்திக்கினிலுந்தி, இயமதர்மராஜனுற் பெற்ற எமாஸ்திரத்தை யெடுத்துப்பூசித்துத் தென்றிசையிற் செலுத்தி, வருணாஸ்திரத்தை வணங்கி மேற்குத்திக்கில் முடுக்கி, குபேராஸ்திரத்தைக் கைக்கொண்டு கும்பிட்டுப் பணிந்து வடக்குத்திக்கில் விடுத்து, இந்திரன் முதலாயுள்ள அஷ்டதிக்குப்பாலர்களையுந் துதித்து, நான்குதிக்கிலும்பாங்குடநடந்து திரும்பி, நாணிதளர்த்திய காண்டீபத்தையும் அம்பறாத் தூணியையும் இரதத்தின்மேல் வைத்துப்போட்டு, அக்கால் நடக்கின்ற விந்தையான வேடிக்கைகளைப் பார்த்துக்கொண் டிருந்தான். இப்பிரகாரந் தருக்குடன் செருக்கிநின்ற தனஞ்செயனையும்-அவனுலேவிய சாயகங்களையும்-அந்தச்சாயகங்கள் தங்களைத்தடைப்படுத்துகின்ற தந்திரங்களையும்-அவன்கற்றிருக்கின்ற தநுவேதமந்திர சுதந்தரங்களையுந்துரியோதனன் படைவீரர்கள் தெரிந்துகொள்ள மாட்டாதவர்களாய், பண்டாட்டமாவதே கொண்டாட்டமென்னக் குறித்து, சபதமேகமெழுந்ததுபோற் கவிந்து, மின்னலிடியும் வீறிட்டவாறுபோல் முழங்கி விற்பிடித்து, கல்வருஷம் பொழியுங் காட்சிபோல் அஸ்திரங்களைச்சொரிந்து, வேணமட்டும்பரிந்து சலிப்பில்லாமற் பாடுபட்டார்கள்.

இவ்வாறு தம்மாற் கூடியவரையிலுந் தாட்சியில்லாமல் முடுக்கிப்பிரயோகித்தசரங்களையெல்லாம் அருச்சுனன்விட்டநான்கு தேவதாஸ்திரங்களும் அப்பாலிப்பாற்செல்லவொட்டாமல் முடக்கி, அவ்வர்ச்சுனன் பேரிற் போகவொட்டாமல் மடக்கி, அப்பாணங்களின் வேகத்தையும் அடக்கி, ஆவெனத்திறந்தவாயால் அமுக்கி, முறுக்கிவாரிபடித்து நொறுக்கி, தாறுமாறுப்-வேறுவேறுப்-கூறுகூறுப்-நீறுநீறுப்ச்செய்யுந் தன்மையை மந்தரமலைபோலுயர்ந்ததோளிணையுடைய வீஷ்மர் - துரோணுச்சாரியர் கிருபாச்சாரியர்-அஸ்வத்தாமா இவர் முதலிய சாந்தரும், துரியோதனராஜன் முதலாகிய வேந்தரும், மகாரதர்முதலாகிய மாந்தரும் பார்த்துத் தலைகவிழ்ந்து குனிந்து, மதிமயங்கி முனிந்து, மனந்தியங்கி நினைந்து, ஐயோ! இந்த அர்ச்சுனனுல் முன்னு? அடிபட்டு இடைந்தோமே: அந்தத்தெப்பலுடன் போய்விடாமல், திரும்பியெதிர்த்தும் வெல்லமாட்டாமல், இப்போது துரியோதனன் தொப்பலுக் குள்ளானேமே ஓ! ஓ! ஓ! வெகுநாளைக்கு நிலைநிற்கும்படியான அபகீர்த்தியை யடைந்தோமே இதுவரையிலும் நாம் பெற்றிருந்த சுபகீர்த்தியை யிழந்தோமோ வீணுகவேசாறி நொந்

தோமே: பூணாம்பெற்ற புரந்தரன்மைந்தன் செய்வனவற்றைச் செய்துபோட்டு மெய்வருத்தமில்லாமல் விலாசமுற்றிருக்கின்றனே நாம் இதற் கென்னசெய்வோம்? என்று வெட்கப்பட்டு வெந்துவெதும்பி யொதுங்கிப் போனார்கள். இப்பால் வானத்தினின்று வேடிக்கை கண்ட வானவர் மாதவர் முதலாயினோர் மகிழ்ச்சிமேற் கொண்டு, மாதவிகொழுநனை மகிழ்ந்து, மனதாரப் புகழ்ந்து, மலர்மழைபொழிந்து வாழ்த்தினார்கள். சரஸ்வதிநாயகனான சதுர்முகப்பிரமனானவர் சாக்ஷாத்காரமான சங்காழி முகுந்தனுடைய தனியருளென்று சந்தோஷங் கொண்டாடினார். அமராபதிக் கதிபனாகிய தேவேந்திரன் காலகேயரைச் செயித்து நமராயுளளித்த விஜயன் நவநீதசோரநாதன் மைத்துனனென்று நாடிப்புகழ்ந்தாடினான். அளகாபுரிக்கிறைவனானகுபேரன் சந்திரசேகர சடாதரனருளால் இந்திராதிப ரெவர்க்கும் முந்திய முதற்காரணமாகிவந் தவதரித மரகதநிறத்தனே அருச்சுனனுமனென் றானந்தங்கொண்டான். பாண்டுபூபதியானவன் மற்றப் பார்த்தியர்பலரோடுங் கலந்து, நமது காண்டீபன்வெகுண்டு தூண்டியசரத்தாற் செத்தழிந்தொழிந்தசேனையும் யானையும் இத்தனைகோடியென் றியம்பப்படாமையால் நல்லபுத்திரப்பேறு பெற்றனமென்று மெத்தவும்பேசி மேன்மையடைந்தனன். அமரர்-சித்தர்–அசுரர்-தைத்தியர்-கருடர்-கின்னரர்-கிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர் - விஞ்சையர்-பூதர்-பைசாசர்-அர்தார்-முனிவர்-உரகர் - ஆகாயவாசிகள்-போகபூமியர்-எகாதசருத்திரர்-துவாதசாதித்தர் -அட்டவசுக்கள்-இவர்கள் முதலாகிய பேர்களியாவரும், இந்தச் சவ்வியசாசியின் சாதுரியத்தைக் கண்களாற்கண்டு களித்துத் தங்களாலுந் தாங்கமாட்டாமல், ஓங்கிய மலைக்கண்ணுவப்புற் றிருந்தனர்.

இவ்வா றெல்லோருங் கொண்டாடிக்கொண் டிருக்கின்ற அந்தவேளையில் வீபற்சு என்னும் பெயர்பெற்ற விஜயன் மறுபடியும் வில்லையெடுத்து நாணிதொடுத்து, தானினைத்தகாரியஞ் சித்தியாகும்படி கருதி மோகனாஸ்திரம் பிடித்து, முசாவிதிகள் முடித்து, பிரணவமந்திரம் படித்து, பிரதாபராமன்போல விடுத்து, பெருங்கும்புகளெல்லாந் தும்புகளெழும்படியாய்ப் பெதறிவாடி ஓடி அவர்கள் படும்பாட்டையோகபுருஷன்போல்நாடிப் பார்த்துக்கொண் டிருந்தான். இங்ஙனநின் றெழுந்த மோகனாஸ்திர மானதுதியாகம் வாங்கச்சென்ற தெரிவைபோற்சென்று, பிராணத்தியாகம் பண்ணுவதற்குப் பின்வாங்காமல் முன்னேங்கி, மற்போர்விளைக்கும் பற்பல வீரர்களையும் விற்பன விவேகிகளையும் சொற்பனங் காண்பவர்போற் சோர்வுறச்செய்து மயக்கியபோது, சண்டைசெய்யவந்த திறமும் தாங்கள்புரிந்த மறமும் தேகநிறமும்-துறந்து மறந்து, மடிந்தவர்களைப்போற் பூமிமேற் படிந்துபோனார்கள். இதன்றியும் - தேர்மேலிருந்தவர்கள் தேரின்பேரிலும் யானைமேல் வந்தவர்கள் யானையின்பேரிலும். குதிரைமீதிவர்ந்தவர்கள்குதிரையின்பேரிலும், நிலத்தின்மேல் நின்றவர்கள் நிலத்தின்பேரிலும் இருந்ததிருந்தபடி பெருந்திகிலடைந்து; இந்தலோகம் - அந்தலோகம் - எந்தலோகமோ வென்று நிலைதவறித் தலையுதறிப் பொறிசிதறிப் பலன்பதறிச் சாய்த்து விட்டார்கள். அவர்கள் படும் பாட்டைப்பார்த்த பார்த்தனானவன் மனக்கிசைந்த சாரதியான உத்தாகுமாரனுடைய சித்திரமுகத்தைப் பரிந்துநோக்கி, பிரயோசனமற்ற ஓர் நகைபுரிந்தான் பிரயோசன மில்லாதநகை யாதென்னில் - இரும்புக்கு விழுகின்ற சம்மட்டியானது நெருப்புக்கும் விழுவதுபோல், துரியோதனாதியர் படப்போகின்ற அவமானத்தைத்துரோணர் முதலிய பெரியோர்களும் படப்போகின்றார்களே; என்று வெறுப்பினால் நகைத்த வெறுநகை யென்றுசொன்னோம்.

அருச்சுனனேவலா லுத்தரகுமாரன் தன்தங்கைக்குத் தரணிபர்தலையாடைபறித்துவருதல்.

இப்படி யாதொரு சந்துஷ்டியுமில்லாமல் வெறுப்பாய் நகைத்த தனஞ்செயனானவன் விராடகுமாரனைத் தழுவி, அப்பா உத்தாகுமாரனே ! உன்சகோதரியான உத்தரைசொல்லிய சங்கதி ஞாபகத்திலுண்டோ இல்லையோ ? மறந்துவிட்டாயோ ? ஜெயங்கொண்ட தன்மையால் மகிழ்ந்து விட்டாயோ ? என்றுகேட்டான். அவ்வசனங்கேட்ட உத்தாகுமாரன் கண்களிருண்டு, மனமருண்டு, சிந்தைகலங்கி, தீரம்விலங்கி, திடுக்கிட்டலமலங்கித் தியங்கி, ஒன்றுந்தோன்றாமல் மயங்கி, உறக்கமுந் துன்பமும் ஒருவாறடைந்து, இப்பேர்ப்பட்டமகாபுருஷனுடைய அருமைபெருமைதெரியாமல் நமதுதங்கை என்னசொன்னாளோ? எதுகாரணமோ? என்றுபெருமூச்செறிந்து, பற்குனனைப் பணிந்து, பயம்விட்டுத்துணிந்து, எனக்கிட்ட தெய்வமான எந்தலே ! அறியாதவளான சிறியாள் குறியாமற்பேசியகொடுமொழிகளேதேனுமுண்டாயின், அம்மொழியை என்னைப்பற்றிமன்னிக்கவேண்டும். என்று வாய்பொத்திக் கைகட்டி மனநடுங்கிச்சொன்னான். அவனது அடக்கம் - ஒடுக்கம் - நடுக்கம் - வணக்க முதலியவற்றைக் குறிப்பினா லுணர்ந்துகொண்ட நரனானவன் உத்தாகுமாரனுடைய முதுகைத்தட்டி, அப்பா குழந்தாய்! மற்றொன்றுமல்ல. நீ வாய்வறளாதே மனந்தளராதே. மதிபுரளாதே. ஓ வல்லவனே! இப்போது நாம் போக்கிய மோகனக்கணையால் அயர்ந்து எழுந்த யாவரும் இன்னுமொரு முகூர்த்தத்திற் குள்ளாக மயக்கநீங்கி யெழுந்திருப்பா

ர்கள். இதற்குமுன்னுகாய் நீ அவர்களிடத்திற்குப் போய், அவர்கள் சிரீடத்திற் சாம்பிரதாயமாய்க் கட்டிக்கொண்டிருக்கின்ற துஸ்கா வஸ்திரங்களேயும்-விருதுகருதித் தொடுக்த இரக்கச்சிலேகளேயும் - பக்குவமாய்ப் பரித்து வருவையாகில்; உன்தங்கை கேட்டுக்கொண்டவண்ணம் பொம்மைகட் கணிந்து விளேயாடக்கொடுக்கலாம். என்று புகன்ற அர்ச்சுனன் வார்த்தையை உத்தரன் பற்றுமாற்றுப் பசும்பொன்போற் சித்தமுவந்து தேர்ந்து, சிந்தைதெளிந்து, ஜெயமென்றெழுந்து சீக்கிரஞ் செல்லுவதானன்.

அப்படி செல்லவெழுந்த உத்தரகுமாரனைப் பராக்கிரமக்கொடியடைத்த பார்த்தனழைத்து, ஓ விராடபதிகுமாரனே! இராஜாதிராஜனுன துரியோதனமகாராஜனணிந்திருக்கும் வஸ்திரமானது கருத்தமணிகள் பொறுத்த நிறத்தையுடையது. அஸ்வத்தாமாவுந் துச்சாதனனுந் தரித்திருக்கும் வஸ்திரம் நீலமணிகளமுத்திய கோலத்தை யுடையது. கொடையாளனுகிய கர்னராஜனுடைய சிரோவஸ்திரமானது நான்குபுறமும் நவமணிபதித்து மாகதநிறத்தை மாற்றியிருப்பது மறுவேதமறிந்த தனுவேதிய ரிருவருந் தரித்த கலேயானது சுற்று முத்துவைத்துக் கோர்த்த குற்றமற்ற வெண்பட்டாற் சமைந்தது. இன்னுமுள்ள மன்னவர்துணிகள் பன்னிற வன்னமாயிருக்கும். அன்னவைகளில் உன்கண்ணுக்கிசைந்தனவெல்லாங் கழற்றிக் கட்டிக்கொண்டு வந்துவிடு அப்படிக்கு வரும்போதில் எங்களேயாவாவாகிய வீஷ்மரிடத்திற்குப் போகாதே. அவரது கலேவேஷ்டியானது மெத்தச்சிறந்திருக்கும் அதன்பேரி லாசைவைக்காதே. அவரிந்த மோகனுஸ்திர மயக்கத்தில் மூழ்கமாட்டார். நீ யொருவேளே அவரைகிட்டிப் போவையாகில், ஒரேவெட்டாய் வெட்டியெறிவார் ஆகையாலவரையெட்டிப்பாராதே. மற்றையர்களிடத்தில் தாராளமாகச் சென்று அவரவர்களுடைய தலேத்துணியைக் கைக்கொண்டு சல்தியில் வந்துவிடுக. கேளும் நீ கால்நடையாகச் செல்லாதே. அவர்கள் படும்பாட்டைக்கண்டு ஒன்றுஞ் சொல்லாதே. கண்மூடிக்கலங்கிக் கசங்கிக்கிடப்பவரைக்கொல்லாதே. அவர்களுன்னேக் கண்டுவிட்டால், ஐயோ! அதுபொல்லாதே: நீ யவ்விடங்களில் தாமிசப்பட்டு நில்லாதே. நமதுதேரைச் செலுத்திக் கொண்டுபோய்ச் சீக்கிரத்தில் வரக்கடவாய் என்று காண்டீபன்சொல்ல அந்தப்பிரகாரமே செய்வேனென்று இரதமூர்ந்து சென்று, அவரவர்கள் கால்மாடு தலேமாடாகவிழுந்து உறங்கியிருக்கின்ற கலகத்தைக்கண்டு, அவாளவாளுடைய தலேத்துணியைக் கவர்ந்து கொள்ளும்படிக்குப் பாய்ந்து பாய்ந்து பறிப்பதாயினன்.

அப்போது மாய்ந்தவர் போற் சாய்ந்துகிடக்கிற வேந்தர்களெல்லாம் விழி பைத் திறக்காமலிருந்தார்கள். சிலபேர்கள் விழித்தபார்வையுடன் விறைத்தாற்போலிருந்தார்கள். ஆவெனத்திறந்த வாயர்கள் சிலபேர்: ஒவென ஒலிக்கும்பேயர்கள் பலபேர். ஊவென லோசையிட் டுளறினேர் சிலபேர். ஏபெனவேங்கி யென்ன மிட்டோர் பலபேர். நாக்கைக்குழப்பி நவிந்தோர் சிலபேர். வாக்குக்குளறி வலிப்போர் பலபேர் கழுவாமற்பிடிக்க எழுவாயுதத்துடன் விழுவார் சிலபேர். விழுவாரையெல்லாம் விழிபாரக்கண்டு எழுவார் பலபேர். கால்தவறி மண்ணேக்கவ்வுவோர் சிலபேர். மேல்சுவ ரிரத்தவெள்ளத்துழலுவோர் பலபேர். இதன்றியும் கைகாலசைவது குறியாமலும், மெய்சாய்வதினேயறியாமலும் வாயில் ஈப்புகுவது தெரியாமலும், கோயில்தீப்படுவது தரியாமலும், பல்லேக்காட்டிப் பரதவித்து, வில்லேநாட்டி விலவிலத்து, பலவித ஜாலமாய், தலேவிரிகோலமாய், யாவரும் பதைபதைத்திருந்தார்கள். இப்படியா இருந்தபேர்களேப் பார்த்த உத்தரகுமாரன் ஜபமடைந்து, பையநடந்து, என்செய்வோமென்று அர்ச்சுனனன் சொன்ன சைகையைமறந்து, அவனது ஆதாவையும் போதாவையும் பூரணமாக நினேந்து, கையுங்காலுங் கடகடவென்று குலுங்கி நடுங்கி, மெய்யும்வாயும் படபடவென்று அலமலங்கியொடுங்கி, பேய்போற் பதறிமுடங்கி, பேய்மனம் பெதறியடங்கி, பின்னுமுன்னும் போகத்தொடங்கி, வீஷ்மரிருந்த நிலேயிற்போய்ப் பார்த்தான். அந்தமெய்விரத சிலராகிய வீஷ்மரானவர் கண்ணேயுருட்டிக்காட்டி விழித்து, வீரப்பார்வை நாட்டியிருந்தார். அவரைக் கண்டமாத்திரத்தில் ஒருதரம் வேர்த்து, பயங்காத்துடனுர்த்து, நான்குபுரமும்பார்த்து, சித்திரச்சிலேவிஜயனேச் சிந்தித்து, திடதீரத்துடன் கனேத்து, வந்தகாரியத்தை நினேத்து, வஸ்திரம் பறிக்கத்தனித்து, கிரீடியுரைத்த உத்தரத்திற்குத் துஸ்தரமாகிய துஷ்டத்தனஞ்செய்யப்படாதென்று மதித்து, வெற்றிவீரர்களின் பட்டுத்துணிகளில் ஒன்றையும் விட்டு விடாமற் றெட்டுப்பறித்துப் பெருமூட்டை கட்டி, தேர்மேலேற்றி, கார்போலிரைந்து செல்லுங்குதிரைகளே முடுக்கிக் கணப்போதில் வந்துசேர்ந்தான், இந்தப்படிக்கு அச்சமில்லாமற்சென்று மச்சராஜன் மைந்தன் கொண்டுவந்த துணிமூட்டையைப் பச்சமேனிப் பற்குணன்கண்டு, அவனேமிகவுங் கொண்டாடி மகிழ்ச்சியடைந்து புகழ்ச்சியாய்ப்பார்த்திருந்தான்.

மன்னர்யாரு மயக்கமாறி விஷ்மராற்றலேயாடைபோனதறிந்து உடனே அத்தினபுரிக்குப்பிரயாணமாதல்.

இப்பால் அர்ச்சுனன் கணேயால் அடிபட்டுநொந்து, மேனிமுழுதும் வேஷ்டையால் வெலிந்து, மோகனக்கணேயால் முனேகெட்டழிந்து, வில்முதலிய பாணம்பிளந்து, வெறுங்கையாய்த்தளர்ந்து முடிசாய்ந்துவிட்ட கெடிவீர வர்க்கமும்-படியாளு மன்னரும்-பார்த்திபன் படைகளுங் கொஞ்சங் கொஞ்சமாய் கலக்கம்

பிரிந்து, நஞ்சொழிந்த நாகம்போல் நெளிந்து, தங்கவொத தாங்களேயறிந்து, தலைக்கேறிய மயக்கந்தெளிந்து தந்நிந்நடுமாறிச்செறிந்து, மெத்தனவெழுந்து, பித்தர்போல் விழுந்து, செத்தவர்போற்கிடந்து, எக்காலு நீங்காத துக்கமும்-துயரமும் - வெட்கமும் - நாணமும்-விசனமு பேலிடும்படியாய், ஏதேது? இனி தலையெடுக்கப் போகிற தில்லையென்று சொல்லும்படிக் கிருந்தார்கள். இப்பேர்ப்பட்ட விசனத்தினுல் திப்பிரமைகொண்டிருந்தவர்கள், சுப்பிரதீபம் போன்ற அர்ச்சுனராஜனையெண்ணி மதிகது அற்புதமடைந்து, அவனுக்கெதிர்வரமாட்டாமற்றியங்கி, சிவனுக் கெதிர்செல்ல நாலுந்திரிபுராதிகளைப்போற் றிடமற்றவர்களாகி, திகிலடைந்த மனமுற்றவர்களாய், திறலழிந்த உரவற்றவர்களாய், வறண்டுபோன நெஞ்சும் நாக்கும்-சுருண்டுபோன ஈரலுங்குடலும், துன்பப்படாமற் சிறிதுஜலமுண்டு நனையச்செய்து கொண்டு, இணங்கினேரை இன்புடன் காக்குங் கருணைக்கடலாகிய கங்காபுத்திரரை நோக்கி, ஓ எங்கோனே! இதற்கென்னசெய்வோம்? மயக்கமெங்களைவிட்டு மாயவில்லையே. தியக்கமெங்களைவிட்டுத் தீயவில்லையே: என்று ஏங்கியபோது மதனுக்கிடங்கொடாத மகாவிரதவீஷ்மரென்ன செய்வார்? உடனே எப்புவனத்தும் ஒப்பில்லாத மற்புயவல்லவனுன சுயோதன பாக்கியவானுக்கெதிர்சென்று நின்று, ஓ யோக்கியவானே என்வாக்கியத்தை இனியேனுங்கேள். இப்போது யெல்லாருயிரையும் வல்லான்கைப் பம்பரம்போ லாட்டிவாட்டவந்த இவ்வர்ச்சுனனேடு பதைத்துப் பதறிப்போ யெதிர்த்துயுத்தம்பண்ணுவதற்கு, தேவர்களாலும் - அத்தேவர்களைப்பெற்ற மூவர்களாலும் ஆகாது. மற்றெவர்கட்கும் வெற்றிபெறுவிதக் காட்சியும், யுத்தஞ்செய்யுந் திடசூட்சியும் வாாது. ஈதிவ்வாறிருக்கின்றமையால், இனிமேல் யுத்தகளநாடி வெற்றிபோர் புரிவோமென்று என்றென்றைக்கும் எண்ணவேண்டாம். அப்பா துரியோதனு! நீயாவது-மற்றயாராவது - இனி ஒருவேளை கிரகசார சாமானியத்தாற் சண்டைபோடக் கருதுவீராகில், மெய்யாகவே பிராணன்பெற மாட்டீர்கள். அஃதென்னத்தினு லென்றுல்-அவனுந்தி மோகனுஸ்திரத்தால் நாமெல்லோரும் உயிர்சிந்தியவாறுபோலயர்ந்து தலைசாய்ந்து கிடந்த சமயத்தில், ஏதோ ஒரு நினைவுகொண்டு தன் சாரதியையனுப்பி, அவரவர் தலையை விரைவிற்கொண்டுவாவென்று விட்டால்; அந்தச் சொல்லுக் கிரண்டில்லாமல் இதுவரையில் நமது பிராணன் போயிருக்கலாம். இதற்குச் சாட்சியாதெனில்-சற்றுநோத்திற்கு முன்னே செத்தவர்போ லொடுங்கிக்கிடந்த நம்மைச் சுற்றிப்பார்த்து வரும்படியாய் உத்தாகுமாரனை யனுப்பினுன்போலும். அவன் நமதுதலையிலிருந்து தனக்குவேண்டியவற்றைச் சுற்றிக்கொண்டு போனுன். அதற்குத் திருஷ்டாந்தம் உங்களுங்கள் தலைதப்பியிருப்பதைத் தடவிப் பாருங்களென்றுர்.

அப்போது தங்கள் தங்கள் தலையைத் தடவிப்பார்த்தது மல்லாமல், ஒருவர் தலையை யொருவர் பார்த்து, உன்தலைதுணியெங்கே? என்தலைத்துணியெங்கே? என்று பெருங்கூச்சலிட்டு, ஐஐயோ!! தலைத்துணியைக் கொண்டுபோன சாதுரியனுக்கு நமது தலையைத் தறித்துக்கொண்டு போவது தாட்சியா ? ஓ! ஓ! ஓ! வெகு சுளுவில் முடித்துக்கொள்ளலாமே: அந்தமட்டும் நம்மைச் சும்மாவிட்டுப்போனது நமது பெண்சாதிமார்களின் மாங்கல்யபலமே; ஆ! ஆ! ஹா! என்ன ஆச்சரியம்? என்று மகிழ்ந்து வீஷ்மரைப் புகழ்ந்து தேவரீர் சொன்ன வார்த்தைக்குத் திருகில்லை யென்றுர்கள். அப்போது வீஷ்மர் இப்படியே யென்சொல்வழி நிற்பீர்களாகில், நாமெல்லோருஞ் சௌக்கியம் பெறலாம். அஃதெப்படியெனில்-கடல்நிறம்பெற்ற காண்டீபனுனவன் உயிர்ப்பிச்சை கொடுத்தானென்று உரக்கக்கூவி, அவனுக்கு மங்களகாமுண்டாகும்படிக்கு வாழ்த்தி, நம்முடைய படைமுழக்கத்தைத் தாழ்த்தி, அஸ்தினுபுரத்தை நோக்கிப்போவதே நேர்த்தியென்று சொன்னுர். இவ்விதமாக மாதவத்திலுயர்ந்த வரதன் கூறலும், உடனே மன்னன் முதலிய தம்பியர்பலரும், கர்னன் முதலிய நண்பினர் சிலருஞ் சத்தியஞ் சத்தியமென்று திரும்பி, பகீரதி புத்திரனுரைத்த புத்தியை விரும்பிப் போனுர்கள். அத்தருணத்தில் அரவக்கொடிக் கதிபனுன துரியோதனனுடைய சகோதரர்களின் விகர்னராஜனென்பவன் அத்தினபுரி யென்னும் பட்டத்து யானைமேலேறி, தன்தமையனை முன்னடத்தி, அவனை மறைத்துக்கொண்டு தான்பின்னுகப் போனுன். இரதகஜதுரக பதாதியர் முதலிய மன்ன மண்டலீகர் யாவரும் பெருங்காற்றிற் பறக்கின்ற இலவம்பஞ்சுபோற்றிசாதிசைகளை நோக்கிப் பறந்து, காதத்தைச் சிரத்திற்குவித்துச் செறிந்து, துரியோதனன்மீது மனமுறிந்து மெய்விரதன் தம்பியான விஜயனைப்புகழ்ந்து, உயிர்ப்பிச்சையளித்தான் உத்தமனென்று மகிழ்ந்து ஊர்முகநாடி யோடினுர்கள்.

அத்தினபுரிக்குச்செல்லுந்துரியோதனனை அருச்சுனன் அவமானஞ்செய்தனுப்புதல்.

இப்பால் - அர்ச்சுனன் தொடுத்த பாணங்களினுல் அழிந்தவரொழிய, ஓடியொளிந்த சேனைசயினியங்களுந் துரியோதன மகாராஜனுந் திரும்பிப் போவதை ஆண்மையாலுயர்ந்த அர்ச்சுனன் பார்த்து, அடிவயிறெரிய ஆர்ப்பரித்து வேர்த்து, தேவர்கள் முதலாயினேருந் திடுக்கிடும்படியாய் ஆர்த்து, அவனஞ்சும்படியான அவமானச்சொற்களையெல்லாங் கோர்த்து, ஓ கௌரவகுல முதல்வனே! ஓ கீர்த்திபடைத்த மூர்த்தண்ணியனே! ஓ கெடிஸ்தலாதிபனே!

ஓ வணங்காமுடி மன்னனே! ஓ அரவக்கொடியானே!
ஓ நந்தியாவட்ட மாலைதரித்த நரேந்திரனே! ஓ துரி
யோதனே மகாராஜனே! ஓ அவனியையாளும் நேய
னே ஓ அபத்தம்பேசும் வாயனே! மாயச் சூதாடக்
கற்ற வஞ்சகச்சகுனி மாமனிருக்க, மகாபதிவிரதைகளை
வஸ்திரமுரியக்கற்ற துச்சாதனத் தம்பியிருக்க, வாயா
டக்கற்ற தேர்ப்பாகன் வளர்ப்புப் பிள்ளையான கர்னனி
ருக்க, உனக்குப் போதுமான புத்தியிருக்க, சத்துருக்
களை வெல்லுஞ் சமர்த்திருக்க, சத்தியந்தவறி வாயடிப்
படிக்குஞ் சாதுரியமிருக்க, இத்தனை பலமும் அபலமா
கும்படியாய் என் ஓடுகிறாய்? பூர்வம் அரசர்கள் கூடிய
அஸ்தினாபுரத்து ராஜசபையில் இரத்தினமுடிபொறுத்த
உன் தலையாட, உன்காதிலணிந்த குழையாட, உன்வா
யிலடங்கிய நாவாட, சுட்டுரைபேசிவாதாடிச் சொக்க
ட்டாளுட்டத்தில் எங்களைச்செயித்துக் காட்டி லோட்
டிவிடக்கற்ற நீ; இப்போது சண்டைநேர்ந்த இவ்விட
த்தில் விற்றிறங்காட்டி வெற்றிபெறமாட்டாமல் தலைக
விழ்ந்து தலைத்துணியிழந்து உயிர்கொண்டுபோவது
பொல்லாது. இதைப்பார்க்கிலுஞ்சாவதுவேமேல் ஓ
காவலனே! யுத்தத்திற் செத்துப்போவது மெத்தவும்
புகழ்ச்சியல்லவோ? மானங்கெட்ட பிற்பாடு பிராணனி
ருக்கவேண்டுமோ? ஆ! மன்னனே! அரவக்கொடியு
ம் - அணிமணிமுடியும் - வெள்ளைக்குடையும் - வேண்
டியபடையும் - அரசசாத்தியமும் - சங்கத்தொனியும் -
எங்குமுழங்கிநெருங்க இந்த விராடபுரத்திற்குவந்து, சு
த்தவீரக் கர்த்தனைப்போற்பசுமந்தைகளை மடக்கினைய
ல்லவோ? நீ யோட்டிய மாட்டுமந்தையை எதிரிகளிட
த்தில் விட்டுப்போட்டு, நீ கூட்டிவந்த சேனைகளிலும்
பாதி மடியக்கொடுத்து, உயிரெழுந்த பிணம்போல் ஊ
ரைநோக்கிப் போகின்றனையே: இதுவுமொரு வீரந்
தானா?

இதல்லாமலும் - இப்போது நீபோய்ப் பட்டின
ஞ்சேர்ந்தவுடனே உன்னைக்கலந்த மங்கைமார்கள் என்
னசெய்தியென்று எதிர்நின்று கேட்டால், அந்த உரி
யவர்களுக்கு என்னசொல்லப்போகின்றாய்? ஐயோ!
அப்பா! பெரியதனம்படைத்த பேயா! அப்பேர்ப்ப
ட்ட பெண்களுக்கெதிரில் நாணுமல், தலைகோணுமல்,
மானம்விட்டு நடப்பாயோ? அடாபாவி! இப்போது
நீயாளும்பூமியையும் உன்னுயிரையுந் தீங்கில்லாமல்வா
ங்குவதற்கு என்தமயன் வீமசேனமகாராஜன் காத்தி
ருக்கின்றானென் றெண்ணி, இன்றைய தின முன்னைக்
கொன்று விடாமல் வென்றிமாத்திரங் கொண்டேன்.
இதன்றியும் - பொறுமையாக உன்பிராணனையும் விட்
டேன். இல்லாவிட்டால் - நீயும் உன்னைச்சார்ந்த படை
மன்னரும் எனக்கோர்லக்ஷயமோ? எப்போது மலக்ஷ
யமே: அது உனக்கு விலக்ஷணமாகத் தெரியுமல்லவா?
ஓ குலக்ஷயம்பண்ணப் பிறந்த கோமானே! என்று
வெகுண்டு நிந்தையானவார்த்தை புகன்று நிஷ்க

டூரம் பேசியகாலையில், இராஜாதிராஜன் அர்ச்சுனன்
சொன்ன மொழியைக்கேட்டுங் கோளாதசெவிடனைப்
போல் இருதோளும்வாடி, பூரிப்படங்கி, துன்ப இரு
ளால் மூடப்பட்டு, ஆமைபோலடங்கி ஊமைபோற்
போனான். அந்தச்சமயத்திற் பச்சைநிறம்பெற்ற பற்கு
னனானவன் வச்சிரகண்டவாளியொன் றேவி, விகர்ன
னேறிச்சென்ற வீரபட்டயானையை வெட்டி முடக்கி,
துரியோதனன் வெட்டவெளியாய்த்தெரிய மடக்கி,
மீட்டும் பாரியவில்லிற் கூரியமுனைப்பகழி யடுக்கி, அர
வக்கொடிதரித்த துரியோதனனுடைய வணங்காமுடி
யிற் பொறுத்த கிரீடத்தை யுடைத்து முடுக்கி, மொட்
டைத்தலையுடனிருந்த அத்துட்டனைப்பார்த்துப் பொட்
டென நகைத்தான். அதுகாலையில் துரியோதனனுடை
ய முகமானது சந்திரனைக்கண்ட கரோருகமலர்போற்
குவிந்து கரிந்து, பொறிந்து செறிந்த கண்கலக்கமுள்
ளவனாய், ஓட்டத்தின் பேரில் நாட்டம்வைத்துப் போயி
னான்.

அருச்சுனனத்தினபுரிக்கேகுமாசாரியர்க்
கச்சந்திர வந்தனவிடைபெற்றுமீண்டு
தானுத்தரனோடுவசனித்திருத்தல்

இந்தப்பிரகாரம் பொல்லாங்குக் கிருப்பிடமான
வஞ்சநெஞ்சனைச் சேர்ந்த பூபாலர்களுங் கோபாலர்க
ளும் யுத்தமுனைதொட்டுப்புறமுதுகிட்டுப்போராசை வி
ட்டுப் பேராசைகெட்டுப் போகுங்காலையில், கற்பகக்
காவைப்பொற் கருணையும் பிரக்யாதியும்பெற்று மகா
வாகை யுடைத்தாய்த் தேர்மீதிருந்த செஞ்சிலைவிஜயன்
மச்சகுலாதிபன் முகத்தைப்பார்த்து, ஓ சித்தசனுக்கொ
ப்பான உத்தாகுமாரனே! நமது மச்சதேசத்திலுள்ள
மாட்டைமடக்கி வெற்றிகொண்டு போகவந்த வேந்த
ன்முதலாகிய வீராளியாவரும் யுத்தம்பண்ணி, நம்மை
ச்செயிக்கச் சத்துவ மற்றவர்களாய்ச் செத்தவர்போக
மற்றவர்கள்மெத்தநொந்து, சிந்தைநைந்து, உயிர்மாத்
திரங்கொண் டோடுகின்றார்கள். நம்மிடகாரியஞ்செய
மாய்விட்டது. இந்தமட்டிலுமிவர்களைவிட்டுவிடாமல் இ
ன்னமு மேல்விழுந்துதொடர்ந்து துரத்திபடிப்போ
மா? அல்லதவர்கள் கெட்டார்கள் பஞ்சைகளென்று
விட்டு, பெரியமனசுபண்ணி விராடபுரத்திற்குப் போ
வோமா? இன்னுஞ் சற்றுநேரம் இவ்விடத்திற்றானே
யிருப்போமா? உன்கருத்தென்ன? அதனைவிரைவிற்றி
ருத்தமாய்ச் சொல்லுகவென்றுகேட்கவும் விராடகுமா
ரன் காண்டீபனை வணங்கி, ஓ வீரியவிஜய வெவ்வேல
வனே! சீரியமதிகுலச் செஞ்சேவகனே! அடியேனும
து திருவடிக்கடைக்கலம்: அடைக்கலம்: ஐயா! காரிய
ங்குறியாக் கடையேன் சிறியேன். பாரியயுத்தம் பண்
ணியானறியேன். பாரியயுத்தம் பண்ணியானறியேன்
ஆயினுமையா அவர்களெல்லோரும், செத்தபிணத்
தோடொத்த கணம்போல, தத்துவங்கெட்டுத் தளர்ந்

தோடினுர்கள். ஆனதால் - இனித்தோடுகின்றவர்கள் பேரிற் கணைதொடுப்பீராகில், தேவரீர் இதுவரையிலும் பெற்றிருந்தபுகழ்ச்சி இகழ்ச்சியாய்விடும். மேலும் இன்னும் ஆகவேண்டிய காரியம் பின்னிட்டிருப்பதால், அப்போதுபார்த்துக் கொள்ளலாம். நாமிப்போது விராடபுரம்போய்ச சேருவோம். ஓ பலஞ்சூரந்து பொங்குந தோளினையுடைய பார்த்திபனே! இது தான் எளியேனுடையகருத்து. அப்பால் தேவர்சித்தம் சிறியேன் பாக்கியம் என்று உத்தரகுமாரன் சொல்லினுன்

இவ்வாறு உத்தரகுமாரனுரைத்த உத்தரத்தைப் பார்த்தனுற்றுக்கேட்டு, உத்தரதிசையைவிட்டுத்திரும்பிக்களித்து, வின்னுணிதளர்த்தி, அம்பறுத்தூயும் விழ்த்துத் தேர்மேலிருத்தி, அப்பா இளஞ்சிங்கமே! இனித்தபேர்களைத் தொடரப்படா தென்னும் என்னெண்ணப்படிக்கே நீயுஞ்சொற்றனை. நம்மிருவர் மனசும் ஒருமையானதேபெருமை. நீயுத்தகோலங்கொண்டு புறப்படும்போது உன்னைப்பெற்றதாயான சுதேட்சணுதேவியானவள் மிகுந்த வியாகூலமடைந்திருந்தாள். விரைவிற்போய்ச் சேராவிட்டால் இன்னமும் எப்படியோ வென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். ஆகையால் - நாம் இவ்விடத்தில் வந்த சத்துருக்களைச்செயித்து, ஒன்பதுகோடிபசுக்கூட்டங்களையு மீட்டி வனத்திலனுப்பிவைத்த சங்கதிகளை நாமே ருசுவிற்போய்ச்சொல்லி, அவள் மனக்கவலையை ஆற்றல்வேண்டும். என்று தேவர்கள் மகிழ்த்துக் கொடுத்திருந்த தேவதத்தத்தையெடுத்து, உலகமயங்கும்படியாய்முழக்கினுன். அந்தச் சங்கத்தொனியைக் கேட்ட வீஷ்மாசாரியர் - துரோணுச்சாரியர் - கிருபாச்சாரியர் - அஸ்வத்தாமா - இவர்கள் முதலியபேர்களெல்லாம் பார்த்தன் பின்றொடர்ந்து ஆர்த்துவருகின்றுனே? அல்லது இன்னுமென்னமோ? எனனும் பயத்தால் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். அப்படிக்குப் பயந்து பார்க்கும்பேர்களை அர்ச்சுனனும்பார்த்து, தேர்விட்டிறங்கி, தகுதியுடைய பெரியோர்களைத் தலைவணங்கிப்பணிந்து, நானிம்மட்டும் போர்விட்டு விடைகொள்கிறேனென்னுங் குறிப்புகாட்டித் திரும்பி, மறுபடியுந்தேரேறி, மிகுந்த சந்தோஷத்துடன் உத்தரகுமாரன்விடுத்த இரதத்தின் மீதிற்சென்ருன்.

இப்பாற் கடல்சூழ்ந்த உலகைப்பரித்த அரவக்கொடிதரித்த துரியோதனமகாராஜன் அணிந்திருந்த அழகிய நவமணிமுடியும் - ஒளிவிடு மிரத்தினுபரணங்களும் - அதுலசங்கிராம ஜயவிஜயனது அஸ்திரங்களினல் அறுப்புண்டு, பிளப்புண்டு, தவறுண்டு, தவறுண்டு, தள்ளுணடு, கீழ்த்திசையிலுதித்த 'சூரியகிரணங்களால் மேற்றிசையிற் ருேன்றிய சந்திரன்போல் ஒளிமழுங்கி, இன்னமும் ஏதேதுசெய்ய வந்திருக்கின்ருனே? ஏதேதாய்முடிப்பானே? என்று ஏக்கங்கொண்டு, அட்டதிக்கும் பரவிய சேனைகளுடன பட்டம்பகலிற்பட்டினம்போகமாட்டாமல் வெட்கப்பட்டு, சகல ஆட்டபாட்டங்களுமடங்கி, அத்தினபுரியிலுள்ள யாவரும் நித்திரைசெ ன பிற்பாடு கோட்டைமதில்வளைந்த ராஜபாட்டையிற் புகுந்து, ஒட்டமுநடையுமாய் ஊர்போய்ச்சேர்ந்தான. பெரியோர்முதலிய உரியோர்களும் பாதிராத்திரியிற் பேய்போற் போனுர்கள். இவர்களிப்படியிருக்க - மாடுபிடிசண்டையை வென்று ஆடுகொடியுடன்றிரும்பிய அர்ச்சுனராஜன் மேடுபடும் பாலைநிலத்திற் காடுபடப்படர்ந்துநீடியவன்னிமரத்தைச்சார்ந்து, அம்மரப்பொந்தில் முன்னிருந்தவண்ணம் ஆபரணவலங்காரமுடியும் - அனுமக்கொடியும் - தேவதத்தமும் - வில்லும் - அம்பறுத்தூணியும் வைத்து, பழயபடி மான்றோலிட்டிறுக்கி, மச்சகுமாரனையுமிறக்கி, முச்சகங்கொண்டாடாநின்ற தனது முன்னழகையும் பின்னழகையுமாற்றி, இனிமேல் நடக்கவேண்டிய முறைமைகளையுந் திறமைகளையும் யோசித்து, பழயபடி பேடியுருவைநினைத்து, அவ்வழுவில்லாத வடிவமமைந்து, பொன்மயமான தேரில் உத்தரகுமாரனது சிங்கக்கொடியை நாட்டி, குதிரைக்கயிறுங் கோலுந்தாங்கிச் சாரதியாகிச் சயிந்தவமுந்தினுன்.

இப்படி தேர்முகத்திற் குந்தி யுந்திய முந்திய பேடியுருவைக்கண்ட உத்தரகுமாரன் கோவென்றழுது, ஓவென்றிரைந்து, ஐயா! பொய்யாமொழிப் பொறையன்சகோதரா! இப்போதுசொல்லு மெய்யானயென் மொழியைச் சற்றேதயவுசெய்து கேளும். இனிநான் செத்தாலுந் தேரேறமாட்டேன். இனிச் சற்றேனும் நாயகனு யிருக்கமாட்டேன். ஆ! ஆ! இதென்னகொடுமை? தேவரீருடைய காலடிப்புறத்தி லிருக்கத்தக்கவரிற் கடைப்பட்ட நாயேன், நடுநாயகத் தட்டிற்பொருந்து நலம்பெறுவேனே? ஆதெய்வமே! என்று சிந்தைசிந்தி நொந்துநைந்து தேம்பினுன். அத்தன்மையாய்க் கலங்கிய உத்தரகுமாரனைத் தேற்றி, அவனது விசனத்தை மாற்றி, பிரியவசனங்களினுற் பேடியாகிய கிரீடி பேசத்தொடங்கினுன். ஓ விராடன் தவத்தா லுதித்த வீரச்சிங்கமே! எனக்குமூத்தவர்களும் இளையவர்களுந் தங்களுடைய எதாரூபமெடுத்து வெளிபட்டார்களோ? இன்னும் வெளிப்படவில்லையோ? என்னை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்ருர்களோ? அது இன்னதென்று எனக்குத்தெரியவில்லை. அஃதப்படியிருக்க - நான் மாத்திரம் நிசரூபங்கொண்டு நடக்கலாமோ? தமயன் கருத்தைத்தள்ளி நடக்கப்போமோ? அப்படிக்குத் தப்பிநடந்தாற் பிற்படிக்குப் பாபம்பிடிக்காமல்விட்டுவிடுமோ? தருமவிருத்தனென்னுந் தாட்சிபெறுவே னல்லவோ? அப்பனே! உனக்குமெனக்கும் ஒருபேதமில்லை. உள்ளன் பென்பது ஒன்றுமேபோதும். என்வார்த்தை தள்ளாமல் இந்தத் தேரிலேறுக. என்றவனை யொருவாறுதேற்றி, அவனை அதிரதராஜனுகப் பொற்றி, விற்பாணங்களும் வீரகண்டையும் பூட்டி, குதிரைக்கயறு

ங் கோலுந்தாங்கித் தேரைச்செலுத்தி, சற்றேனுங்குந் த மனம்பெறாத உத்தரகுமாரனோடு மெத்தனவான வார்த்தையாடிக்கொண்டு, விராடபுரக்கோட்டைமதிலுக்கு வடமேற்காகச் சென்று, அங்குகுளிர்ச்சியும் பசுமையுங்கூடிக் குலாவுஞ் செழிச்சியாகிய சிங்காரத் தோப்பில்வந் திறங்கி, தேகவெப்பத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய சிந்தையைக்கொண்டிருந்து, ஒருவருக்கொருவர் பரிந்து, பாண்டவர்களாகிய தாங்கள் பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ணிய துன்பங்களையும், ஒருவருடம் அஞ்ஞாதவாசஞ் செய்வதற்காக வடிவமாறிய அயரங்களையும், அவன் தந்தையான விராடராஜனிடத்தில் தாங்கள் செய்துவந்ததொழில் விதங்களையும், அவ்வத்தொழிற்கேற்ற வேறுவேறாகிய மாறுபெயர் வைத்துக்கொண்ட மார்க்கங்களையும், அமுதாசம பொழிவதுபோல் உத்தரகுமாரனுடன் சொல்லிக்கொண்டிருந்தான் விஜயகாண்டீபதாரனாகிய அர்ச்சுனமகாராஜன்.

தக்ஷணநிரை மீட்டுவந்தவிராடன் உத்தரகுமாரன் சேதிகேட்டுவருந்தி, பின் கங்கபட்டராலுங்காண்டீபன்தூதராலுந்தேறி, அமைச்சராதியரையழைத்துவரவிடுத்தல்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இப்படி யிருவரும் ஆசோதைபெற்றிருக்கின்ற வேளையில், விராடபுரத்திலிருந்து சிலதூதர்களோடிவந்து க்ஷேமவிசாரணை செய்தார்கள். அந்தத்தூதர்களிடத்தில் அர்ச்சுனன் சொன்னதாவது-அப்பாசாரணர்களே! நீங்கள் விராடபூபதியைக்கண்டு, பேடி தேர்செலுத்தச்சென்ற உன்புத்திரனான உத்தரகுமாரன் எதிர்த்துவந்த மன்னருடன் அதித்துப்போர்புரிந்து, கோடிதோராளிகளை வென்று குப்புற்றுப் புறமிடக்கண்டு, நமது மந்தையை மீட்டுவிட்டானென்று சீக்கிரத்திற் சென்று சொல்லுங்கள். தாமதஞ்செய்யாதிர்கள். என்று அவர்களையனுப்பிவிட்டு, கங்காநதியாயுங் குருநாட்டுக் கதிபதியாகிய காண்டீபன் விராடகுமாரனுடன் வசனித்துக்கொண்டிருந்தான். இங்ஙனம் இவர்களிவ்வாறிருக்க - இதற்கு முன்னே தென்றிசைக்குப்போன விராடராஜன் திரிகர்த்தனைச் செயித்து, அன்றிரவுமுழுதும் அங்ஙன் மேற்படைவருமென்று கங்கபட்டர் முதலான பேர்களுடன் தூக்கமில்லாமற் சேனைகளுடன் காவலிருந்தனனன்றோ? அப்பால்மேற்படையொன்றும் வாராமையால், மறுநாட்சூரியோதயமானபின்பு பந்துவர்க்கங்களும்-மன்னரினங்களும்-மைந்தரானவரும்-மற்றப்பரிசனநிசேனைகளுந்தாம் தாமென்று சங்கிதமுழங்கவிராடபுரம்வந்து சேர்ந்தார்கள். அவர்களோடுஜபப்பிரதானத்துடன்மச்சநாடுவந்துசேர்ந்தவிராடராஜனை விஷமுமமுதுங்கலந்த வேற்கண்ணுளாகிய சுதேஷ்ணாதேவி இச்சைகொண்டு எதிர்சென்றுகண்டு, மச்சகுலாதிபனை வணங்கி, தேவரீர் தக்ஷணநிரைமீட்சிக்குப் போயிருந்த சமயத்தில் வீஷ்மாச்சாரியர் - கிருபாச்சாரியர் - துரோணாசாரியர் - அஸ்வத்தாமா - கர்னராஜன் - இவர்கள் முதலானவர்களோடு தம்பியருந் தானைவெள்ளங்களும் புடைசூழத் துரியோதனன் வந்து, நமதுவிராடபுரத்தின் வடதிசைபுகுந்து வளைந்து மாட்டுமந்தையை மடக்கினான். அந்தச்செய்திகேட்ட தங்கள் திருமகனாகிய உத்தரகுமாரன் நமது சித்திரப்பிரதிமைபோன்ற உத்தரகுமாரத்திக்கு நாட்டியங்காட்டி ஆட்டிவைத்திருந்த பேடியைத் தேர்செலுத்த வாக்யாபித்து, தான் யுத்தகோலங்கொண்டு வெற்றிபெறப் போயிருக்கின்றானென்று விளம்பினாள்.

இப்படி தனது மனைவிகூறிய சங்கதியைக்கேட்ட விராடன் உயிரொழிந்த உடம்புபோலொடுங்கி, உணர்வடங்கி உருகிவிழுந்தான். உடனே பக்கத்திலிருந்தபேர்கள் வாரியெடுத்து மார்போடணைத்து, சீதளசந்திரகாந்தக் கிண்ணங்களிற் பொருந்திய சுண்ணங்களையுஞ் சந்தனபாளித குங்குமக் குழம்புகளையும் பூசி, பனிநீர் தெளித்துச் சயித்தியோபசாரஞ் செய்து, சிற்றாலவட்டம் பேராலவட்ட முதலிய விசறிகளசைத்து விராடராஜனைத் தேற்றினார்கள். இப்படி எவ்விதவுபசாரங்கள் செய்யினுந் தேறாதவனைச் சோர்வடைகின்ற தோன்றலை நித்தியவிதிகூறு நின்மலனாகிய கங்கபட்டர்பார்த்து, ஓ மகாராஜனே! நீர் என்னத்திற்கிவ்வண்ணம் வருத்தப்படுகிறீர்? வாரேறுங்கனதனப்பேடியானவள் தேரூரும்படி.யாய்ச் சென்றிருப்பாளாகில், இன்னுஞ்சற்று நேரத்திற் சம்பிரமவெற்றிபெற்று உமதுமகன்வரப் போகின்றான். அவனைக்குறித்து நீர்சித்தங்கலங்கவேண்டாம். என்றுசொல்லித் தேற்றினர். இப்படிக்குச்சொல்லிய தருமப்பிரபுவின் வாக்கியத்தினால் விராடராஜன் நிறைந்த பாக்கியம் பெற்றவனைப்போல் தேறித்தெளிந்து சிறப்புற்றிருந்தான். பின்னுஞ் சற்றுநேரத்திற்குள் ஏதேதோ தன்மனத்துளுன்னினவனாய், ஓ கங்கபட்டரே! என்பாக்கியமெப்படியாமோ? உமதுவாக்கிய மெப்படிபோமோ? நானறியேன்; ஆகிலும் நால்வகைப் படையுங்கொண்டு நாமே எதிர்நோக்கிச் சென்று நம்மாலான உதவியுஞ் செய்தால், அவ்வறியாச்சிறுவனுக்கு அனுகூலமாயிருக்குமென்று என்மனம் நாடுகின்றதென்று விராடராஜன் விளம்பினான். இம்மொழிகேட்ட கங்கபட்டரானவர் அவ்வாசனைநோக்கி, ஐயோ! நீரிப்படி தனைப்படிவீராகிற்கனம்பெற்றுவருகின்ற உமது குமாரனுக்கு அவமானத்தைவிளைக்குமல்லது, வெகுமானத்தை விளைக்கமாட்டாது. ஆகையால் இன்னுங்கொஞ்சநேரம் நீர் செவ்வைடாக நிதானித்து,

சிலகாரியஸ்தரையனுப்பி எதிர்கொண்டழைத்துவரச் சொல்லுமென்றுகங்கப்பட்டர் சொல்லினர்.

அதற்குவிராடராஜன் உடன்பட்டிருக்குங் காலையில், நிறம்படைத்த துரியோதனன் – வீஷ்மர் – துரோணாசாரியர் - கிருபாசாரியர் - அஸ்வத்தாமா - கர்ணன்- இவர் முதலாகியபேர்கள் புறங்கொடுத்தோடிப் போயினரென்றும், அவர்களால் மடக்கப்பட்ட மாட்டுமந்தையனைத்தும் மச்சநாட்டைச் சார்ந்த காட்டுப்புறத்தில் வந்ததென்றும், ஒருதேரும் ஒருவில்லுங் கொண்டு முனைந்து யுத்தம் புரிந்து வெற்றிபெற்று வருகின்றார் உமது புத்திரசிகாமணியாகிய உத்தரகுமாரனென்றும், முன்னம் அர்ச்சுனனாற் சொல்லியனுப்பிய தூதரோடி வந்து தொழுதுரைத்தார்கள். அவர்களுரைத்த அமுதரசத்தைச் செவிவழியாகத தெவிட்ட வருந்தி, கொதிப்பாறிக்குளிர்ந்த குளத்து நீர்போலும் - குமுதநாதன்கிரணத்தையுண்ட சகோரம்போலும் - சோபதாபத் தியாமாறிச் சிந்தைகளித்து, இச்சேதிசொன்னவர்கட்கும் அவர்கள் பந்துசனங்கட்குஞ் சுகபோசனமுஞ் சுகந்தபரிமள சந்தனாதிகளும் பற்பல வெகுமானத்தோடு கொடுத்து, மந்திரிமார்களையும் மற்ற மன்னர்களையு நோக்கி, நீங்கள் யாவரும் ரத-கஜ-துரக-பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளுடன் பலவிருது சின்னங்களும் விநோதவாத்தியங்களுங்கொண்டு சென்று, ஜெயஜேஷ்டமுடைய என்சிறியகுமாரனைச் சீக்கிர மழைத்து வாருங்கள். வீதிகளெல்லாம் அலங்கரிக்கும்படியாய்ப் பறைசாற்றச்செய்யுங்கள். பந்தலடைத்து மகரதோரண முதலியவைகட்டுங்கள். என்று ஆக்கியாபித்தான். கேட்டீரோ ஜெனமேஜெப மகாராஜனே! இந்த விராடராஜன் கொண்ட சந்தோஷமெவ்வகைப்பட்டதெனில் - ஒருவன் மனைவியானவள் அயலாரிடத்திற்சோரத்துவஞ் செய்து பெற்றுக்கொண்டபிள்ளையைத் தனக்குப்பிறந்த பிள்ளையென்று உள்ளங்களித்து முத்தமிட்டு, மடிமேலுந் தோண்மேலும் வைத்துத் தாலாட்டி, கொஞ்சிக்குலாவி, ஆசைவைத்துருகுகின்ற அறிவில்லான் தன்மையையொத்திருக்கின்றது. இங்கேவிஜயபராக்கிரம விக்கிரமன் வெற்றிபெற்றிருக்க, அதனை விராடன் தெரிந்து கொள்ளாமல் உத்தரகுமாரன வெற்றி கொண்டானென்று உண்மையாய் நம்பி உடல் பூரித்திருந்தான். இவனுக்பாபித்த ஏவலைக்கொண்ட காரியஸ்தர்கள் வீதிகள்திருத்தி, புழுதிகளடக்கி, செம்பொற்கலசங்கள் பொருத்தி, வாழை-தாழை கரும்பு-கமுகு-பனை-பலா-தெங்கு-தேமா-கூந்தற்பனை-கோங்கு - இவைகளை நாட்டி, மாணிக்கத் தீபங்கள் வரிசையாய்வைத்து, கொடி-குடை- ஆலவட்டம்-தாலவட்டம் - மகரதோரணம்- மாமணித்தோரணம் இவைகளை வரிசைபடவமைத்து, எழுப்பரிகையுயர்ந்த மாடமாளிகை கூடகோபுரமுள்ள வீடுகளையெல்லா மலங்கரித்து, விதம்விதமாய்ச் சிங்காரித்தார்கள். மன்னர் மந்திரியர் முதலானபேர்கள் சகல விருது வாத்தியங்களோடு நால்வகைச் சேனைகளும் புடைசூழ உத்தரகுமாரனிருக்கும் உத்தரதிசையை நாடிச்சென்றார்கள்.

விராடன்தன்குமாரன்வருமளவுங் கங்கபட்டரோடு வட்டாடவிற்புக, அதனாலிருவர்க்கும்வாதாடல்மிக, விரதசாரணிதன்றலைவனுதலில்வடுவாடல் கண்டுவருந்தல்

இவ்விடத்தில் விராடராஜன் தர்மராஜனைப்பார்த்து, உம்முடைய ஆசீர்வசனவாக்கின்படிக்கு எனது உசிதகுமாரன் ஜெயப்பிரதானத்துடன் வருகிறவரையிலும் நாமிருவருஞ்[illegible]சொக்கட்டாடுவோமென்றான். அவருமப்படி ஆகுக[illegible]வென்றார். உடனே அங்குள்ளகாரியஸ்தர் பவளம்-நீலம்-மரகதம்-புஷ்பராகம்-இவைகளினாலாகிய காய்களை வச்சிரப்பாச்சிகை முதலியவைகளோடு கொண்டுவந்து வைத்தார்கள். உடனே இருவருங்கூடியாடினார்கள். அவ்வாட்டத்திற் கங்கபட்டர்வென்றார். தோற்றுவிட்ட மச்சராஜன் வெட்கி, ஐயா கங்கபட்டரே! இவ்வாட்டத்தில் நான்சற்ற ஜாக்கிரதையா யிருந்துவிட்டேன். மற்றோராட்ட மாடுவோம் வாரும். இந்த ஆட்டத்தில் என்மகனாகிய உத்தரகுமாரன்வெல்ல, அவனுக்கீடுபட மாட்டாமல் யுத்தமுனைகெட்டோடிய வெற்றிவீரர்களைப்போல் உம்மையான் ஓடவிட்டடிக்கின்றேன் பாரும். என்று பிரதாபமாகப்பேசினான். அவ்வாறுரைத்தவிராடராஜனைக் கங்கபட்டர் தடுத்து, ஓ மன்னர்மன்னனே! பேடியாகிய ரதசாரதியானவள் ஜயங்கொண்டு, வருகின்ற பெருமையைப் போல் உம்மை நான் ஜயங்கொள்வேனென்று பேசுவீராகில், அது எனக்குச்சம்மதியாகும். நீரப்படி சொல்லாமல் உத்தரன் செயித்ததைப்போலென்று தப்புரைசெப்புவதினால், அதற்கு நான் ஒருக்காலும் ஒப்பமாட்டேன். அதேனென்னில்-பிரகநளையென்னும் பேதையைப் பேடியென்றெண்ணாதீர். அவள் பூர்வங்காண்டாவனமழித்தகாளைக்குத் தேரூர்ந்து, தேவர்களுக்குப் பகையாகிய ராக்ஷசரை வென்று, தேவசகாய விஜயியென்று பேர்பூண்டு திக்குத் திகாந்தம்வரைக்கும் அதிசொற்பத்திறஜயங்கொண்டு திரண்டகீர்த்திபெற் றிருக்கின்றவள். ஆதலால் அவளை இலேசாகமதிக்காதீர். என்று கங்கபட்டர் சொல்லினர். உடனே மச்சராஜனுக்கு மிச்சமாகிய கோபம்பிறந்து, மனங்கறுத்து, மதியுஞ்சிறுத்து, கண்செவந்து, கனற்பொறி பறந்து, கங்கபட்டரைக் கனைத்துப்பார்த்து, ஓ பெரியவரே! இப்போ திங்ஙனம்வந்த தூதர்கள் என்குமாரனாகிய உத்தரன் பேடிதேர்விடச் சென்று, கோடாகோடி குருசேனைகளை நீடாதடித்து திமிரக்கெடுத்து, என்பிள்ளையொருவனுமே யாவரையு

ம்!' வென்று, பகைவர்மடங்கிய பசுமந்தைகளையுங் கைக்கொண்டு திரும்பிவருகின்ரு னென்று சொல்லப் பிரத்தியக்ஷத்திற் கேட்டிருந்தநீர்; ஒரு கூனனைக்கூடக்கொல்லவும் வெல்லவுமாட்டாத அதி சொற்பமான ஒருபேடியைக் கொண்டாடி ஸ்தாபித்துப் பேசுகின்றீர். ஈதென்ன பிடிவாதம்? ஈதெவர்கள் சொல்லுகின்ற 'பக்ஷபாதம்? ஓ பிர்மக்யான முணர்ந்த பேரறிவாளரே! இப்படி பேசாதீர் வாய்மூடும். என்று கடுகடுத்து மொழிந்தான். அந்தமொழியைக்கேட்ட தர்மராஜன் சிறுநகை நகைத்து, நான்சொன்னவார்த்தைபழுதல்ல. இன்னுஞ் சற்றுநேரத்தில் நீரறியப் போகின்றீரென்ருர்.

இதைக்கேட்ட விராடராஜன் மனந்தாளாது முகஞ்சுளித்து, ஓ விஸ்தாரங் கற்றிருக்கும் வேதமுனியே! இனியென்னத்தை யறிகிறது? கைப்புண்ணுக்குங் கண்ணாடிவேண்டுமோ? பேடிக்குங் கிரீடிக்கும் பேதமறியாதவர்நீர். கிரீடிபெற்றஜெயத்தோடு அக்கிரீடிக்குத்தேர் விடுத்த பேடியையுங்கூட்டிப் பேசினீர் இதனாலேயே உம்மை யேதுமறியாதவரென்று கண்டுகொண்டேன். ஆ! ஆ! போதும்: போதும்: இனியிப்படி வீண்வாது பேசாதீர்திதில்லாமன்னரானவர் ஏதேனுமோர்புன்மை புகன்ருலுமச்சபையிலுள்ளவர்கள் நன்மை நன்மையென்று நாளுஞ்சொல்லி ராஜனுக்கிதம்படப்பேசவேண்டுமல்லாமல், அவன்தயவுக்குக்காத்திருந்து ஜீவனஞ்செய்பவர்கள் மன்னன்கருத்துக்கு மறுத்துப்பேசுவதுமுண்டோ? காலசமயமறிந்து கலந்துகொள்ள வேண்டாமோ? நீர் நான்கு வேதங்களையு நன்ருயோதிய ஞானவானுயிருந்தும். இராஜர்களோடு பேசவேண்டிய விதிமுறை யறியாமல் விருதாவார்த்தை சொன்னீரென்றுரைத்தான். இப்படி வெறுத்து மமதைகொண்டுபேசிய மச்சராஜன்பேச்சுக்குக்கங்கப்பட்டர் இடங்கொடாமற்றடுத்து, ஓ விராடராஜனே! நீர் கொஞ்சநிதானியும். கொடையாளியான கர்னராஜனென்ன? படையாளியான வீஷ்மரென்ன? தநுர்வேத சம்பன்னரான துரோணச்சாரியரென்ன? வித்வமகத்துவமுடைய அசுவத்தாமாவென்ன? இவர்கள் முதலிய சுத்தவீரரை உண்டைவிற்பிடித்து விளையாடிக்கொண் டிருந்த உமதுபிள்ளை வெல்லவல்லனென்று நீர் சொல்லமாட்டுவீரோ? ஓ நிருபனே! நில்லும்: நில்லும். இதோ யெல்லாச்சங்கதியும் வந்துரைக்கப் போகின்ருர்கள். அப்போது என்சொல்லுக்கு நீர் மறுத்து மறுத்துக் கூறியவனைத்துமனத்தப்பென்றுஉமதுமதி உமக்கேஒப்புச்சொல்லும். இப்போது நானுமக் கென்ன சொன்னாலும் அது தப்பாகவே தோன்றும். இனிமெய்ப்படும்போது, நெருமையடைந்தது துப்பாத் திருமேனிபடைத்த பேடியே யென்றுணருவீர் என்று தர்மராஜன்பேசினர். இச்சொல்லைக்கேட்ட விராடராஜன் இருகண்ணிஞ்செவந்து, கோபச்சிரிப்பாகச் சிரித்து, ஒ! ஓ! ஒ! ஓ! ஐயா மெத்தமெத்தக்கற்ற லேகியரே! வில்லாண்மையிலுயர்ந்த என் குமாரன் சொல்லாண்மையிற் சிறந்த பகைவரையோட்டிப் பாரமார்த்தியமாய் வருகின்ற வீரப்பிரதாபத்தைப் பார்த்த தூதர்வந்து நேரிற்சொல்லக்கேட் டறிந்திருந்தும், எவ்வளவு மெண்ணிப்பாராமல் - எதிரியையுமறியாமல் - என்னையடுத்து ஜீவனஞ்செய்துவருகிற வியற்கையையுமோராமல், பலதாமுமென்னையலட்டி வாதுசெய்கிறீர் சொல்பமானபேடியைப் புகழ்ந்துபேவாசுகின்றநீர் என்பிள்ளையைக்கொண்டாடிப் பேசப்படாதோ? உமக்கு என் பிள்ளையின்பேரில் இவ்வளவு பொறுமையும், பேடியின் பேரில் அவ்வளவு அக்கறையும் உமக்குவந்தகாரணமென்ன? என்று கொல்லும் விடங்கொண்டெழுந்த நல்ல பாம்புபோற்சீறி, தன்கைமேலிருந்த பாச்சிகையைநிலத்தில்விட்டெறிந்து மகாகடூரநகை நகைத்தான். அவ்வாறு அதிககோபத்தால் வீசிய பாச்சிகையானது பூமிமேற்பட்டுத் தெறித்து, நேரிலிருந்த கங்கபட்டர்நெற்றியிலடித்து, குங்குமக்குழம்பாற் படிந்த திலகம்போற் குன்றிமணிபத்தனை இரத்தங் குபீரென்று கொப்பளித்தது.


அப்போது உத்தரகுமாரனது க்ஷேமத்தைக்குறித்து ராஜசபையில் என்னபேசிக்கொண்டார்களோ? அதனையறிந்துவா போவென்று சுதேக்ஷண தேவியினால் அனுப்பப்பட்ட பணிப்பெண்ணானவள் சபைகூடிய அவ்விடத்திற்குவந்து, சங்கதியாயும்விசாரித்துக்கொண்டிருக்கின்ருள். அச்சமயத்தில் தர்மராஜனெற்றியிலுண்டானதுளியிரத்தத்தைத்திரௌபதிகண்டு, நீர்வற்றியதடாகத்தாமரைமலர்போல்நிறங்குன்றி நெஞ்சம்வெருண்டுமருண்டு, கூசிகுலைந்து, அந்தத்தருமனுடைய வுதிரத்தொருதுளி பூமியில்வீழுமாகில் விராடராஜனென்னுந் தருவிற் றழைந்திருக்கின்ற பந்துக்களென்னும் பலகிளைகளும் - புத்திர பௌத்திராதிய ரென்னும் புட்பங்களும் - மித்திரர் முதலாகிய மென்காய்கனிகளும் - புகழ்ப்பிரதாபப்பெருமணச்சிறப்பும் - அழகும் வாழ்வும் அமைந்தமூலமும - தாங்களாறுபேரும் அக்ஞாதவாசஞ் செய்பதந்தடுத்து ஓதுங்கியிருந்தநீழலும் அன்றேகெடுமென்றே? அல்லது தனக்குரிய நாயகனென்னுநேயத்தினலோ? அல்லது இயாவருக்கேனும் இடையூறுண்டாகில் உபசாரஞ்செய்யவேண்டுவது எல்லோருக்கும் பொதுவெனபது பற்றியோ? அல்லது அர்ச்சுனன்முதலியபேர்கட்கு உத்தரஞ் சொல்லவேண்டு மென்பதைநத்தியோ? அல்லது பெரியவரென்னும்பத்தியோ? அந்தப் புண்ணிவதியின் சுபாவப்புத்தியோ? ஓ மகாராஜனே! அவள்கருத்து இன்னவிதமென்றெனக்குத் தெரியாது. உடனே கைகால் நடுங்கவோடி, கண்ணீர்துளித்தழுது. கடகடவென்றுஉடல்நடுங்கத்தொழிது, ஐயோ! பழுதுபடாதசத்தியதரும பூசானுக்கும் பழுதுநேரிட்டதே: என்றுவெகுநேரம்வரையிலும்ஒத்திபகைபெடுக்

காமல் தருமபத்தினிபோ லிருந்தாள். அப்படிக்கிருந்த வண்ணப்பெண்ணின் மரியாதையையும், அவளுடலின் துடிப்பையும், அவளாலிபடும் பரிதாபத்தையும் விராடன்பார்த்து விசனப்பட்டு இதென்ன வாச்சரியம்? இதுவரையிலு மில்லாதகோபம்நமக்கு இப்போதுநேரிட்டதென்னமாச்சரியம்? என்று எண்ணமுஞ் செயலும்வேருகி, ஐயோ! இதற்கென்செய்வோம்? எதுசொல்வோம்? என்று தன்னைத்தானேநொந்து, பின்னுலறியப்போகின்ற பெருமை தெரியாதவனுப், ஆ! ஆ! ஆ! கோபம் மகா சண்டாளமென்னும் வாக்கியத்திற்குநாமே இலக்காயினேமே: என்றுதானகொண்ட மனமகிழ்ச்சிகுறைந்து விழ்ந்தான். இந்த விராடராஜனுடைய மனோதுக்கத்தைக்கண்டு மனந்தாளாத ஆயிரங்கிரணக் கதிரோனுகிய சூரியன் அஸ்தமனகிரியை நோக்கி அடைவதாயினன்.

உத்தாகுமாரன் பட்டினமீண்டு கங்கபட்டருக்குநேர்ந்தகடுமையைக்கண்டு வருந்துதல்.

கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜனே! இப்பால் முன்னம் விராடராஜன் தன்பிள்ளையை யெதிர்கொண்டழைத்துவரும்படி ஆக்கியாபித்தவண்ணம் அமைச்சர் முதலாயினேர்போய்ச் சந்தித்தலும், உடனே உத்தாகுமாரன் அவ்வமைச்சர் முதலானவர்களோடு அனேக நகரமாக்கள் - அந்தணாளர் - மடைத்தொழிலர் - மருத்துவக்கலேஞர் - நிமித்திகப் புலவராதிய பரிவாரங்கள் புடைசூழ்ந்து நெருங்க, வீரவாத்திய மேளமுழங்க, விருது - டால்-கொடி - குடை-இவைகள் விதவிதமாய் விளங்க, பாலா - பல்லயம் - சவளக்கோல் - கத்தி-கட்டாரி - ஈட்டி - கேடயம் - இவைகள் மின்ன, எங்குஞ் சங்கத்தொனிபொங்கித்தழங்க, பட்டத்துயானைகளும்-ஆட்டக் குதிரைகளும் உன்னத்தேர்களும் - தன்னிய காலாள்களும் - இருபக்கமு நெருங்கிவர, தேவேந்திர லோகத்தி லிருந்தஜெயமுள்ள காளமேகந் தேர்மேலேறிப் பூலோகத்தில்வருவாறுபோற்பேடி தேர்செலுத்த, வண்டுமொய்க்கும்அம்மலர்க்காவைவிட்டுநீங்கி, வாகைமாலேதாங்கி, மணிபபுயமோங்கி, நீடிய கீர்த்தியோடு விராடபுர விதியில் பேவினன். இந்தப்பிரகாரஞ் சத்துருஜெயஞ் செய்துவருகின்ற உத்தாகுமாரனை வேதியர்களு மாதர்களுங்கண்டு, அன்புகொண்டு ஆலஞ்சுழற்றி - திருஷ்டிகழித்து - மங்களலாலி வாழ்த்தி - கொப்பிகள் முதலிய பாடலேப்பாடி ஆசீர்வதிக்க, பாத நாட்டிய ஸ்திரிகள் அபிநயங் காட்டி யாடித்துதிக்க, சட்டியர் புகழ, ஜெட்டியர்மகிழ, பட்டுவான்கள் போற்ற, சந்திரவட்டக்குடை நிழற்ற, வெண்சாமரைபோட, அட்டதிக்கும் கொண்டாட, இராஜசின்னங்களுடன் மகன்வருகிற மகிமையை விராடராஜன் கேள்விப்பட்டு, வரைபகவெறிந்த வள்ளிமணாளனைச் சிலமதனைச்செற்ற சிவபெருமா னெதிர்கொண்டு சென்று கண்டதுபோல் ஆநந்தங்கொண்டுசென்று கண்டு, தேர்மேலிருந்த சிறுவனைச் சீக்கிரந்தழுவி அணைத்தெடுத்து, தன்சித்தங்குளிரமுத்திகொடுத்துக்கீழேவிடுத்தான். உடனே உத்தாகுமாரன் அத்தந்தையைவணங்கி ஆசிபெற்று, பின்பத் தந்தைமுதலிய யாவரோடுந் தடதடவென்று கொலுமுகவாசற்சென்று, அங்குதனியா யெழுந்தருளியிருக்கின்ற வேதவித்தாகிய கங்கபட்டரை வணங்கித்துதித்து, அவருடைய திருவடிகளைச் சிரத்திலுங் கண்களிலும் பொருத்தி, பற்பல ராஜகூட்டங்களும் பார்க்க அவருடைய பொற்புயத்தைப் புகழ்ந்து, அற்புதக் கருணை முகத்தையு நோக்கினன்.

அப்போதவ் விற்பன விவேகியானவர் கடாட்சத்துடன் சொற்பலவாய் ஆசீர்வதித்தருளினர். அக்காலவர் நெற்றியிலிருந்த வடுவை உத்தரன்பார்த்து, உடனே முகம்வியர்த்து, அண்டாண்ட சராசரங்களுமதிரும்படியாய்க் கூவி, ஓ என்னுண்டவனே! விபூதிரேகை பிரகாசிக்கின்ற தமது லலாடஸ்தானத்தில் அபூர்வமான காயம்படுதற்குக்காரணம்யாது? இயாவன் வடுச்செய்தவன். என்று கார்முகங்கைக்கொண்டு கடுகடுத்துநின்றான். அங்ஙனநேர்முகமாய்நின்ற விராடராஜனடுங்கி, முன்னடந்த காரியங்களைப் பக்குவமாய்ப் பேசினன். அவ்வார்த்தைகூறிய தந்தையைச் சினந்து, தன்சிந்தைவருந்தி நொந்து, கைக்கொண்ட வில்லையொடித்து, பல்லைக் கறகறவென்று கடித்து. ஆ! ஆ! நல்லகாரியஞ் செய்தீர். போம்: போம்: என்று வெறுத்து, நீர் இந்த மஹானுபாவருடைய சொல்லை இகழ்ச்சிசெய்தேனென்றபோது, ஐயோ! என்னுடல் நடுங்குகிறதே; அதை நினைக்குந்தோறும் என்னுடலைவிட்டு உயிர்வெளியோடுகிறதே: இதனாலுண்டாகிய பயமானது என்னுரத்தைச் சாடுகின்றதே: அந்தோ! ஓ பிர்ம சிருஷ்டியினுலாகிய பெரும்பொறைக்கடலை ஆடையாயுடுத்த அவனியினிடத்திற் பாரியமணிமகுடப்பட்டந்தரித்த வீரியவேந்தர்க்கு வேந்தாகிய வேந்தே! இவருக் கொப்பாகியபேர் எப்பாரிலுமில்லையே: இவரையாரென்றுணர்ந்தீர்? ஓ பின்னமேற்கொண்டமன்னனே! என்னெதிரில் நீர்நிற்கச் சகியேன். சற்றப்பாற்போம். என்றதட்டிப்பூசுரனுகிய புண்ணியனைப்பணிந்து, அத்தனே! அன்புநீங்காப் பரிசுத்தனே! எங்களை யாண்டுகொள்ளுங் கர்த்தனே! (சிறியோர்செய்த தீமைகளனைத்தும் பெரியோராயிற் பொறுப்பதுகடனே.) என்று தாங்களே செலவுகொடுத்திருப்பதினுல், விவேகமற்ற என் தந்தையின்பேரில் தேவாள் கோபங்கொள்ளுவது ஞாயமன்று. என்று அக்கங்கபட்டருடைய அடியிற்றாழ்ந்து, மீட்டுந்தந்தையைநோக்கி (பெரியோர்கள்திருவுள்ளம்பேதித்தாலெப்பொருளும்பேதியாதோ)என்றுமேலோர்சொல்லியமெ



[97] பாண்டவாள சுயரூபமங்காளள ஸ்ரீகருஷ்ணமூா ததிவருதல.

ய்ம்மொழியைச் சிறிதும்யோசிக்காமற் பழிக்காளாயிவீர் என்றுகூறி அவ்விராடராஜனையும்வீழ்ந்திறைஞ்சச்செய்து, பின்னும் பின்னுந்தானிறைஞ்சி, கடுத்துப்பேசவறியாத தாக்ஷண்யபரராகிய தருமபுத்திர ரென்னும் மோனவானுடைய மகோதுக்கத்தை மாற்றிவிட்டான்.

உத்தரகுமாரன் தன்தாய்தந்தையரோடு கங்கபட்டாதியர்கரவை வெளிப்படுத்துதல்.

அப்போது தருமசுதனர் நீர்கிழியபெய்த வடுப்போலக் கடுப்பாறி, சாஸ்திரங்கற்று மாட்சிமைபெற்றுப்பெருமையுங் கருணையும் பொருளெனக்கொண்டதனது சித்தமகிழ்வோடு அவ்விராடராஜ குமாரனுக்குத்தகுந்த வாழ்த்துதல்வாழ்த்தி, உத்தரநிரை மீட்சிக்குப்புகுந்து வெற்றியடைந்துவந்த அவன்பெருமையைக் கொண்டாடினர். மச்சராஜனும் இச்சையுடனதனைக்கேட்டு மகிழ்ந்தான், மனங்கலந்த உரியோர் பலரும் - சினங்குலைந்த பெரியோர் சிலரும் - புடைநெருங்கிப் பூரித்தார்கள். இவர்களெல்லோருந் தன்னைப் புகழ்வதை உத்தரகுமாரன்கேட்டு, ஒன்றுஞ்சொல்லாமல்வெட்கி, தன்தந்தையைதனிபே யழைத்துக்கொண்டு அந்தப்புரம்போனான். அங்கே ஜெயங்கொண்டுவந்த மைந்தனைச் சுதர்க்கணைகண்டு, தவமிருந்துபெற்ற அப்பிள்ளையின்மீதுமுன்றபோதிருந்த பேராசையைவிட எண்மடங் கதிகமான இன்பமடைந்து, எடுத்தாள். முத்தங்கொடுத்தாள். கராஞ்சுற்றிநெரித்தாள். நமது கருப்பஞ்செய்த புண்ணியமென்று பூரித்தாள். இவ்விதமாக சோடசகலைகணிறைந்த சந்திரனெழுச்சிகண்ட சமுத்திரம்போல அத்தாய்தந்தையரும் அங்குள்ள மற்றையரும் புகழ்ச்சியாய்ப்பூசித்து மகிழ்ச்சியடைந்து, கங்குகரை காணமற் பொங்கிய பேரானந்த வெள்ளததில் மூழ்கி, பெருமையாகிய பள்ளத்திற்படிந்து, ஜெபமென்னுஞ் செய்தியாற்றேறியிருந்தார்கள். அச்சமயத்தில் உத்தரநிரை மீட்சிக்குச்சென்ற உத்தரகுமாரன் கௌரவச் சேனைகளைக் கண்டு பயங்கொண்டு புறங்கொடுத் தோடியபோது, அந்த ராஜகுமாரனைத்தேற்றி அவன் திகிலை மாற்றி சாரதித்தொழில் செய்யும்படிக்குத் தேர்மேலேற்றித் தனக்கெதிர்நின்று உத்தரிக்க மாட்டாமலோடிய துரியோதனுதியரை வென்ற அர்ச்சுனனனவன், இரதத்தின்மீது வைத்திருந்த எதிரிகளின் சிரவேஷ்டி மூட்டையை பேடிருபங்கொண்ட தன்தலைமேற் சுமந்துவந்து உத்தரகுமாரத்திகையிற் கொடுத்து, உத்தரகுமாரனைப்பெற்ற உத்தமியான சுதர்க்கணைக்கும் பின்பக்கத்திலொதுங்கி ஒடுங்கித் தலைவணங்கிநின்றான். அவனின்றகோலத்தைக்கண்ட உத்தரகுமாரன் கைநெரித்து, கலீரெனச்சிரித்து, தேம்பி விம்மித்திகைத்து, திகிலடைந்து, துக்கத்தினல் விக்கித் துயருழந்திருந்தான். அவன் குறிப்பையறிந்த அன்னையுந் தந்தையும் ஆசையுடன் தழுவி, அடா அப்பனே! ஐயனே! அதிசயமென்ன? நீ யிப்பேடியைக்கண்டு கைநெரித்துச்சிரித்த காரணமென்ன? உடனேதிகிலுந்தேம்பலுங்கொண்டு துயருழந்தகாரணமென்ன? அவற்றை யெங்கட்கையந்தீரச் சொல்லுகவென்று பலமுறையாகக் கேட்டார்கள்.

அப்போது உத்தரகுமாரன் ஆயாசந்தீர்ந்து, அடிவயிற்றிலிருந்துளிர்ந்தெழுந்த அக்கினித்தணல் நீங்கும் வழியைத் தேடி, அப்பேடிமுகத்தை நாடி, பேசாமல் வாய்மூடி, மீட்டும் பெருமூச்சுவிட்டு, நானென்னத்தைச்சொல்வேனென்று தந்தைதாய் இருவரையுந் தனித்தழைத்துச் சென்று, இனி நாம் பிழைக்கும்விதமெப்படி? எந்தகாலத்திற்குப்புகுந்தராகப்போகின்றோம்! இப்போது நீர்விளைத்துவிட்ட பழியானது எப்போதுநீங்கும்? சமுத்திரம்போற் புரண்டு, சதுரங்கமுந்திரண்டு நமது மந்தைமாடுகளை மிரண்டுபோகவந்து மடக்கிய கௌரவகுலாதிபர்கள்நொந்துபோகச்செய்த அடமும் அவர்கட்கு முந்தினச் சினந்து போர்புரிந்த மூர்த்தண்யதிடமும், மந்தைப்பசுக்களை மீட்டமாற்கமும், வீண்சண்டைக்கு வந்தபேர்கள் சோர்ந்துவிழும்படி மோகனாஸ்திரப்பிரயோகஞ்செய்து அவர்களணிந்திருந்த கலைத்துணிகளைப்பிடுங்கிமூட்டைகட்டிக்கொண்டுவந்தமொய்ம்பும், இவைகளியாவும்என்னாலானவல்லமையல்ல என்னலாகுமெனபதுமல்ல, எங்கள்முன்னுலொருவர்வென்றதுமல்ல. சொன்னாலுங்கட்கு நன்றாய்த்தோன்றும். ஓ என் அன்னாய்! ஓ என் அத்தா! அந்த வினோதத்தைச்சொல்லுகிறேன் சற்றுநிதானித்துக் கேளுங்கள். தேவரீர் தெக்ஷணநிரைமீட்சிக்குச்சென்றவேளைகண்டு சத்துருக்கள்மொய்த்து உத்தரதிசையி லொருமிக்கவந்து, பத்திரைமந்தைகளை மெத்தவருத்தப்படுத்திமடக்கினர்களென்று சித்தநொந்து ஒற்றரோடிவந் துரைத்தார்கள். நான் அவ்வார்த்தையைக்கேட்டு, இத்தாயைத்தொழுது, அம்மா! எனக்கொருசாரதிகிடைப்பானாகில் பழுதுவாராமற்செயிப்பேனென்று சொன்னேன். அக்கால் நமது உத்தரைக்குநாட்டியம்பழக்கிவருகிற பேடிமெத்தவும் உத்தமமானசாரதியென்றுபணிப்பெண்சொல்ல, அதுகேழ்க்கவும் அவளைச்சாரதியாயமைத்துக்கொண்டு தேரேறிச்சென்று, கடல்போற் கவிந்த சேனையைக்கண்டு, கண்கலங்கி மனம்விண்டு, தேர்விட்டிழிந்து ஊர்முகமாக ஓடிவருவதாயினேன். அப்படிபயந்தோடிவந்த என்னை ஊர்வசிசாபத்தாற் பேடியுருக் கொண்டிருந்த தனஞ்செயனென்னும் புருஷோத்தமன் விடாமறடுத்துப்பிடித்து, என்னைத் தனக்குச் சாரதியாக்கித்தேற்றி என்பயத்தைமாற்றி, தேர்மேலேற்றி, வன்னிமரத்தில் மறைத்துவைத்திருந்த விஜயகாண்டீப வெம்படை தாங்கி, அநுமக்கொடி நாட்டி, இயாவரு மெச்சும்படியாகிய அர்ச்சுன உருவமுங்காட்டி, தேவதத்த முழக்கி, அரவக்கொடிக் கதிபனுடைய சேனைகளிற் புகுந்தபோது

அவ்விடத்தில் நடந்த விந்தையை நான் சொல்லத்தாமோ? ஒகாதிபனே! சூரியனுக்கெதிர்ப்பட்டபனிபோலவும், சுடருக்கெதிராகிய இருள்போலவும், சிங்கத்திற்கெதிர்ப்பட்டயானைகள் போலவும், நெருப்புக்கெதிராகிய விட்டிற் பூச்சிபோலவும், இடிக்குநேரிட்ட பாம்புகள் போலவும், எமனுக்கெதிர்ப்பட்ட உயிர்கள் போலவும், சிவனுக்கெதிர்ப்பட்ட விமதன்போலவும், தீச்சுவுக் கெதிர்ப்பட்ட பயிர்க்கால்போலவும், அடங்கலும் அழிந்து ஒழிந்தார்கள்.

ஐயா! அப்போது நான்பயந்து இந்த அர்ச்சுனராஜனை விசாரிக்குமிடத்து, தேவரீரிடத்தில் உண்மைநண்பாய் உயிர்க்குயிராய் தர்மாதர்மமுதலியநீதிகளைத்தெரிவித்துக்கொண்டு கங்கபட்டரென் றிருக்குந் தயாளுவானவர், சந்திரகுலத்தோன்றலான தருமராஜனென்றும்; வாசமலரோடு பூசுதல்முதலாகிய புநுகுஞ் சாந்துஞ்சம்பங்கித்தயிலமுந் தரித்த கூந்தல்விரித்த வண்ணமகள், பாஞ்சாலராஜ கன்னிகையான திரௌபதா தேவியென்றும்; மல்லர்களைமாட்டிக் கீசகர்களை வாட்டிமடைப்பள்ளியிற்சமையற் கூட்டி நமக்கூட்டிவாராநின்ற வல்லமையாளன், வீமசேனராஜனென்றும்; குதிரைச்சேவகத்தி லமைந்தகோமான், நகுலராஜனென்றும்; பசுமந்தைகட் கெசமானுயிருந்த பாக்கியவான், சகாதேவராசனென்றும்; வேலாயுதம்பிடித்த வீரர்களை மடித்தபட்டத்தியானைபடைத்த இப்பாண்டவரைவரும் பாஞ்சாலியும் அக்ஞாதவாசந்தொலைப்பதற்காக இந்த மச்சநாட்டில் மறைந்திருந்து காலங்கழித்தனரென்றும்: நேற்றையவரையிலும் அவர்களுச் குண்டாகிய தவணைநாளைப்போக்கிவிட்டு இன்றுமுதல் வெளிப்பட வேண்டிய காரணமென்றுங்கேள்விபட்டேன். இனியிதைக்குறித்து நாம் யோசிக்கவேண்டியிருக்கின்றது. இதுவரையிலும் நம்மாலிவர்களுக்கு என்னகுற்றங் குறைகள் நேரிட்டிருக்கின்றனவோ? அவைகளில் ஏதொன்றும் மெனக்குத் தெரியவில்லை இப்போது பிரத்தியட்சமாய் வடுவில்லாததருமராஜனுக்கு நெற்றியில்வடுவுண்டாக்கிவைத்திருக்கின்றீர். ஐவருக்கும் அன்பாகிய பாஞ்சாலியை ஆசைப்பட்டணைத்து நேசமுறத் தொடர்ந்த கீசகன் முதலாகிய தம்பிமார்களும் நாசப்பட்டும் போனார்கள். இவ்விரண்டினாலேயேபெரியமோசம் வந்திருக்கின்றது. இவைகளை யெல்லாந் தக்கபடி யோசியுங்கள். உத்தரகுமாரன் சொன்னான்.

இம்மொழியனைத்துங்கேட்ட விராடராஜனுஞ்சுதர்க்கணையுந் தன் குமாரனைப் புதைத்திருந்த பொருள் குதித்து வெளிப்பட்டதுபோற்கண்டு, ஆ! ஆ! ஆ! அப்பாக தலனே! பாண்டவர்களா யிவர்கள்? பாஞ்சாலியா பணிப்பெண்? ஐயோ! ஆண்டவனே! என்னகாரியஞ் செய்துவிட்டோம்? என்னவிதமாய் மதி இழந்தோம்? என்று அங்ஙனேயயர்ந்து, நிலத்திற்சாய்ந்து, உயிருடன்மாய்ந்துமூர்ச்கையானார்கள். அப்போதுஉத்தரகுமாரன் அவர்களையணைத்து, சோபத்தையும் மனஸ்தாபத்தையுந் தணித்து, இனி துக்கப்படுவதிற் காரியமில்லை. சீக்கிரம் இதற்குவேண்டிய பரிகாரந்தேடுங்கள். எனக்கொன்று தோன்றுகிறது. அஃதென்னவெனில் - மன்மதனுக்கொப்பாகிய வடிவமும் - மயில்வாகனனுக்கொப்பாகியவெற்றியும் - மகாமந்திரவத்தியும் - உமா மகேஸ்வரரைப் பூசிக்கும் புத்தியும் - விருஷப குஞ்சர சிங்கவிராட்டின் சத்தியுமுள்ள பார்த்தனுகியபரந்தாமன்மைத்துனனுக்கு எனக்கிளைய உததரகுமாரத்தியைக்கொடுத்து, நம்முடன்கலந்து வாழச்செய்யுங்கருத்தைக்கடைப்பிடிப்போமாகில்; தெரிந்துந்தெரியாமற்செய்த தீமைகளியாவுஞ் சிதறிப்போம். இதனைத்தான் என்சிந்தையினினைத்தேனென்றான். இவ்வா றியம்பிய மைந்தன்வார்த்தையை மனமகிழ்ந்துகேட்டு, தந்தையுந்தாயுஞ் சிந்தைகளிகூர்ந்து, அப்பா மைந்தனே! உநதன் மனதின்படியே எங்கட்கு மவ்விச்சை மிச்சந்தான். என்றுசொல்லி அன்றிரவுவந்து விடியளவும் அச்சத்துட னொடுங்கி அசைவற்றிருந்தார்கள். உத்தரநிரைமீட்சிக்காகப் பார்த்தன்பண்ணிய சண்டையிற் செந்தூள்கருந்தூள் பறந்துபடிந்து மறைந்த தன்னொளியைச்சுத்தம்படக் கழுவிக்கொள்ளுவதற்குப் போனவனைபோல் உடனே சூரியனானவன் மேற்குச் சமுத்திரத்திற் போய்க் குளித்தான்.

இப்பாற் பெருமையி லுயர்ந்த பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராடனுடைய அரண்மனைவிட்டு நீங்கி, அம்மச்சநாட்டின் புறம்பில் தங்களாயுதங்களைச் சேமித்துவைத்திருக்கின்ற வன்னிவிருக்கச் சோலைக்கருகிற் சென்று, கூடுவிட்டுக் கூடுபாய்கிறவர்களைப்போல் தாங்கள் கொண்டிருந்த வடிவத்தைமாற்றி, பழபரூபங்கொண்டு, எமதர்மாராஜனைத் தோத்திரம் பண்ணிவணங்கி, மேற்றிசையடைந்த சூரியபகவான் கீழ்த்திசைக்குவருங்காலத்தை நோக்கிக்கொண் டிருந்தார்கள். அந்தவேளையிற் கோழிமுதலிய குருவிகளெல்லாந் துயிலொழிந்து, ஓ பாழியபுயம்படைத்த பாண்டவர்களே? நீங்கள் நீடூழி வாழி: வாழி: ஆழியினலையுடன் மாநிலநடுங்குவதாற் சூரியன்வரப்போகின்றான். என்று சொல்லுவதுபோற் கூவியதுகள். அதுகாலையில் மேற்றிசையில்மறைந்த வெய்யோன் மீட்டுங் கீட்டிசைக்குவரயத்தனித்து, பாண்டவர்களின் சங்கதி யெல்லாந் தெரிந்து கொண்டோம். இனி துரியோதனுதியகசளின் கருத்தையுமறிவோம். என்றுமகமேருவைச்சூழ்ந்துவந்தவனைப்போல் உதயகிரியில்வந்து, தனது கிரணக்கதிர்நீட்டி, தாமரைமலர்க்கரங்காட்டி, தண்மதிமுதலியதுட்டரையோட்டி, சத்திய நிலைபெற்ற தர்மராஜனது ஆக்ஞச் சக்கரத்தை நிலைக்குநாட்டியதுபோல் உதயகிரியினுச்சிமே லெழுந்தான்.

உத்தரைநிரைமீட்சிச்சருக்கம் - முற்றிற்று.

அறவது.

பாண்டவர்வெளிப்பாட்டுச் சருக்கம்.

கண்ணன்துதி.

வானையாதி பூதராசி தோறுலாய மாயனை
ஞானமாகி மறையினுச்சி கண்ணினின்ற கண்ணனை
மோனமார் முனிக்குழா ருணர்ந்தமுத்தி வித்தினை
யானுழன்ற பிறவிதீர விருபதங்க டுதிசெய்வாம்.

ஐயா ஜெனமேஜெப மகாராஜனே! விராடபுரம் விட்டு நீங்கிய பாண்டவர்களும் பாஞ்சாலியும் ஓர்மாஞ்சோலை சூழ்ந்த வனத்தூடமைந்த பூஞ்சேர்ந்த பொய்கையில் மூழ்கி, அருணோதய மானவுடனே ஜெப தப விதிகள்யாவற்றையு முடித்து, சூரிய நமஸ்காரஞ் செய்து, ஸ்ரீ வேதவியாசரையும் எமதர்மராஜனையுந் திக்கு நோக்கிப்பணிந்து, பாண்டவசகாயனது பாதபதும நினைந்து, பருதியினொளியினும் பழபயிடி வஞ்சிறந்து, வாயுகுமாரனான வீமசேனனும் - தேவேந்திர குமாரனான செஞ்சிலை விஜயனும் - ஆயுள்வேதியாளித்த நகுல சகாதேவரும் - தங்கள் குலத்திற்கும் குணத்திற்கும் நலத்திற்கும் நன்மைக்குந் தகுதியான முரசக்கொடிபடைத்த முன்னோனைத்தொழுது, அன்னோனருளிய ஆசிமேற் கொண்டு, பெரும்புகழ்ப் பிரகாசத்துட னவரைச் சார்ந்திருந்தார்கள்.

தருமநந்தனர்நெற்றியிற்றழும்புகண்டுடன்ற தமபியரைச் சிலதருமவாய்மைகூறித் தணிவித்தல்.

இவ்வாறிருக்குஞ் சமயத்தில் நிகாற்ற விற்றூங்கிய தனஞ்சயன் தருமராஜன் முகத்தைச் சந்தர்ஷ்டியாய்ப் பார்த்து, அவர்நெற்றியிற் செந்தூரத்திலதம்போற் செவந்த புண்ணைக்கண்டு, ஓ அண்ணா! தேவரீருடைய நெற்றியில் வடுவுக் கிடமானவாறு யாதென்று திடுக்கிடக்கேட்டனன். அதற்குத் தருமராஜன் சிறுநகைபுரிந்து, யாதொன்றுஞ் சொல்லாம லிருந்தனர். அப்போது மின்னலைப்பழிக்க மேனிபடைத்த பாஞ்சாலி, விராடராஜனுக் குந்தருமராஜனுக்கு முண்டான ஓர் வாக்குவாதத்தினால் வந்ததீது ஈதென்று சொல்லினள். அதுகேட்ட வந்நேரமே அர்ச்சுனனெழுந்து, இன்னமுந் தாமிசமாவென்று நெருப்புபோலெரிந்து, நெடுமூச்செறிந்து, அண்ணன்மேற் பரிந்து, ஐயோ! நான் பிரிந்துவந்த துன்பமிதுவோ? இப்போதே விராடபுரம் வேகக்கொளுத்தி மச்சநாடன்றலையை வாங்கிவைக்கிறேன். என்று நச்சரவம்போற்சீறி, வெட்சி மாலையணிந்த ஆகமுந்தேகமு மலறநடுங்கிப் பற்கடித்து, கையில் விற்பிடித்து, அவனுக்கிச்சையான குலத்தை இன்னிமிடத்திற் பச்சடிபண்ணுகிறேனென்று புறப்பட்டான். நெருப்புடன் காற்று நேசமானதுபோல் வீமனும்வெகுண்டு வீறிட்டெழுந்தான். நகுலசகாதேவரிருவரும் வியாகூலத்தோடு நடுங்கி, விராடராஜனுக்கின்று வினாசகாலமாவென்று மெய்மறந்து விட்டார்கள்.

இத்தன்மைவாய்ந்த தம்பிமார்களின் கடுங்கோபத்தைத் தருமராஜன்கண்டு, ஓ! ஓ! மோசமாச்சுதேயென்று பூசிதவார்த்தைகள்புகன்று, ஆ! நேசவிசுவாசிகளே! அப்பா ராஜகுலச் சிரேஷ்டர்களே! நிஷ்டூரம் வேண்டாம். "ஒன்றுதவிசெய்யினுமவ் வுதவிமறவாமற், பின்னையவர்செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர், நன்றிபலவாகவொரு நவைபுரிவரேனுங், கன்றிடுவதன்றிமுது கயவர்நினையாரே." என்றிருப்பதால் கொஞ்சந் தாசாவா யோசனை செய்யுங்கள். ஒருவருடைய ஆபத்காலத்தில் இன்னொருவர் உதவிசெய்தால், அவ்வுதவியை ஆயுசுள்ள வரைக்கு மறக்காமல், நன்றி குன்றாமையென்னும் நீதியையும் - தருமத்தையும்-நிறைந்துநாடி, அவ்வுதவி செய்தபேர்களால் என்னபிழைவந்தபோதிலும் அதைச்சகித்து, மனம்பொறுத்து, நன்றியிற்பிழையாமல் நன்மையைச்செய்பவர்க ளெந்நாளும் பெரியவரென்று நானிலம் புகழ்வதுண்டு. "நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றேமறப்பதுநன்று." என்று சாதுக்களும் சாஸ்திரங்களிற் பேசியிருக்கின்றார்கள். பற்பலநாளும் ஒருவன் நன்மைபுரிந்து, சொற்பமாக ஒருநாளிற் குற்றநேரிட்டால், அச்சொற்பக் குற்றத்திற்காக நன்றிகுன்றி மனங்கன்றி பொல்லாங்குசெய்ய நினைப்பது புகழல்ல. பூணல்ல. பொருளல்ல. அது புலமைகெட்ட கீழ்மக்கள் செய்கையாம். "எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றிகொன்ற மகற்கு." என்று வேதமுறையிடுகின்றது. ஓ புண்ணியகுலத்திற் பிறந்த புனிதர்களே! ஒருகாலொரு நன்றிசெய்தபேர்களை உள்ளத்தில்வைத்து, மறுகாலவர்களே செய்தபிழை நூறானாலுஞ் சான்றோராகிய பெரியோர் பொறுப்பர். கயவராகிய மூடர்களுக்குப் பலகாலும் பலநூறு நன்றிசெய்து, ஒருக்கா லொருதீதாமாகில் முன்செய்த பல நூறு நன்றிகளும் பாழாய்க் கெட்டுப்போம்.

ஆகையால் - காடாக்கினிமூண்டகாட்டிற் பனிரண்டுவருஷங் கஷ்டப்பட்டு, பதிமூன்றாவது வருஷத்தில் இந்த விராடராஜனுடைய நிழலிலிருந்து, இவனது உப்புந்தண்ணீருமுண்டு, நாம் எண்ணியவெண்ணம்

பின்னமில்லாமல் அக்ஞாதவாசங் கழித்தோம். எத்தேசத் தரசர்களிலும் இத்தேசத்தரசன் மெத்தவுஞ் சரசன். நாம் எங்கிருந்து அக்ஞாதவாசம் பண்ணலாமென்று முன்னம் நான் வினவியபோது, நீங்கள் விராடபுரத்திற்குமிஞ்சிய ராஜனுமில்லையென்றுசொன்னீர்கள் உங்கள் சொல்லைநம்பி இங்குவந் தடுத்தபோது, நமக்கிவன் ஊழியன் போலவும் - இவனதாசாட்சி நமதாசாட்சி போலவும் - காலங்கடத்தினேயல்லது; நாமிவனுக்குத் தாழ்ந்து நடுங்கி நடந்ததில்லை. நம்மையிவன் அதிகாரஞ்செய்ததுமில்லை. ஏதோ கோபபாபமென்னுங் கொள்கையாலும், நமது தீவினைவசத்தாலும், ஓர் சிறிய குற்ற நேரிட்டது. அதற்காக நாம் கடவுளை நோக்கி மன்னிப்புகேட்டு, இவனுக்கொரு பொல்லாங்குநேரிடாமற் காக்கவேண்டியகடமை நம்முடையதாயிருக்க, நீங்களவனைக் கோபித்தெழுவது குணமல்ல. "தம்மையிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், ;றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தா-லும்மை, எரிவாய்நிரையத்து வீழ்வர்கொலென்று, பரிதுவஉஞ் சான்றோர்கடன்." என்று மேலோர்கள் கூறியிருப்பதைச் சன்மானிக்கவேண்டியது. நம்மைத்தொழுது ரட்சித்த தோன்றலின்பேரிற்பழுது நினைப்பது மகாபாவம்; மகாபாவம்; பார்த்தனே! பதறாதே. என்று தர்மராஜன் தடுத்தார்.

பாண்டவராயுதபாணியராய் பழையகோலங்கொண்டுகொலுக்கூடம் வரவிராடன் வரிசைவைத்துவணங்க, தருமரவனைச்சன்மானித்தல்.

இப்படி சொன்னதின்பேரில் வீமார்ச்சுன ரிருவரும் - நகுல சகாதேவரும்-மூத்தவர் மொழிந்த முறையிற் பிறழாமல், மச்சராஜன்மேல் வைத்த கோபமாறி, தருமராஜ னுத்தரவின்படி வன்னிமரத்திலேறி, அவரவராயுதங் கைக்கொண்டு, அந்தப் பாலை நிலத்திலமர்ந்த கோலாகலி நீலிசடாதரி லீலாவதி சூலி கலாதரி யென்னுங் குண்டலி குமரி சாமுண்டியைப்பணிந்து, வன்னிமரத்தை வலம்வந்துவணங்கி, எங்கள்தாயினது கருப்பம்போல் ஆயுதங்களைக்காத்தளித்த தமனியத் தருவேயென்று சந்தோஷப்பேரிட்டுச் சம்பிரமங் கொண்டாடி, விராடராஜனுடைய கொலுமுகச் சாவடியிற் கூசாமற்புகுந்து, ஐந்து தேவேந்திரர்கள் ஒரு இந்திராணியுடன் வந்திருந்த வாறுபோற் சிங்கத்தவிசேறி இருந்தார்கள். அந்தவேளையிற் செந்தழல்வளர்க்கும் அந்தணர் - முனிவர் - மந்திரியர்-சாமந்தர் - தந்திரியர் - பிரதானிகர்-சுற்றத்தினர்-காப்பாளர்-நகராக்கள்-படைத்தலைவர்-இவுளிமறவர் -யானைவீரர் - சேனபதியர் - தூதர் - கருமாதிக்காரர் - நட்பாளர் - மடைத்தொழிலர்-மருத்துவக்கலைஞர் - நிமித்திகப்புலவர் - இவர் முதலியயாவருஞ் சேர்ந்துவந்து, குந்திதேவியார் தந்த மைந்தரைவருங் குருகுலம் விளங்கப் பிரகாசித் துதயமாகிய குமுத நண்பன்போற் சிங்காசனத்தி லிருக்கக்கண்டு, தங்களாற் ருங்கப்படாத சந்தோஷங்கொண்டு, விராடராஜனுக்கு விரைவிற் றெரிவித்தார்கள்.

அச்செய்திகேட்ட மச்சராஜன் இச்சைமேற் கொண்டு, ஐயோ! நாமென்செய்தோம்? இனியென் செய்வோம்? என்று மனவருத்தங்கொண்டு, சந்தனம் - தாம்பூலம் - புட்பம் - பனிநீர் - மஞ்சள் - குங்குமம் - வாசனைத் திரவியம் - தேங்காய் - வாழைக்கனி - மாங்கனி-பலாக்கனி - பற்பல அப்பங்கள் - பருப்புவர்க்கங்கள்-இவை முதலியவைகளைத் தட்டு தட்டா யெடுப்பித்துக் கொண்டு,பட்டுப்பட்டாவளிகள்-கட்டுக்கட்டாகியகட்டு வர்க்கங்கள் - தாபிதாக்கள் - முட்டுப்படாத முத்துமுதல் நவரத்தினங்கள் - இவை முதலானவைகளுங்கொண்டுவந்து காணிக்கைவைத்து, தானும்புத்திரனுந்தருமபத்தினியும் பாண்டவர்களின் பொன்னடியில் வீழ்ந்து, புழுதிபடப்புரண்டு, ஓ பூரணநிதியே! ஓ பொறுமைக்கரசே! எளியேங்கள்செய்த பிழையைப் பொறுத்தருளுமென்று துதித்து, பூமியைவிட்டெழுந்திராமலிருந்தார்கள். அம்மூவரையுந் தருமராஜன் வாரியெடுத்து, விராடனையும் உத்தரகுமாரனையு மார்போடணைத்து, அரசனைப் பக்கத்தில்வைத்து, ஆதிசேடன் முடிமேற்றாங்கிய இப்பூமியில் உம்மைப்போலியாரிருக்கின்றார்கள்? நீர் மெத்தவும் உத்தமர். புண்ணியசாலி. பொறுமைக்கு வேலிபோன்றவர். என்று புகழ்ந்து மகிழ்ந்தார்.

இவ்வாறு கொண்டாடிய குருகுலக் கோமானது குளிர்ந்த வாசகத்தால் மச்சகுலாதிப னெழுந்து, மறுபடியும் பணிந்து, ஓவேந்தாகியசாந்தமூர்த்தியே! தோத்திரமென்பது தம்மைப் போல்பவர்க்குத் தகுமல்லது, எங்கட்குத் தகாது. நாங்கள் அவ்வளவு பாத்திரமும், க்ஷேத்திரமும், கோத்திரமும் பெற்றவர்களல்ல ஆதலால் - அடியேன் மிகவும் பேயன். விவேகமற்ற சேயன். முன்கோபத்தாற் பதறிப்பேதிகின்றவாயன். அப்படிக் கிருந்தபோதிலும், தங்கட்கு நான்தருந்தநேயனெனப் பாராட்டி, என்னால் நேரிட்ட குற்றங்குறைகள்யாதிருந்தாலும் அவைகளைமன்னித்து ஓட்டி, தீர்க்கவைராட்டாமல், சிலகாலத்திற் சொல்லிக் காட்டாமல், ஓ பார்த்திபரேறே! தீனனுன வென்னை ஆண்டருள் செய்யவேண்டும். என்று வேண்டிக்கொண்டான். இந்தப் பிரகாரம்புகன் றடைக்கலம் புகுந்த விராடராஜனை வேந்தர்வேந்தாகிய தருமராஜன்பார்த்து, இரக்கமுள்ளவராய் இஷ்ட பூர்த்தியா யிதனைச் சொல்லத் தொடங்கினர்.

ஐயா விராடபூபதியே! உமது பட்டணத்தில் நாங்கள்வந்து சேர்ந்தபிற்பாடு துன்பமென்பவையில்

லாமல், எங்கட்குரிய தேசம்போலவே எங்கும் பிரக்கியாதி யுண்டாகும்படியால் வேற்றுமையின்றி வீற்றிருந்துவாழ்ந்தோம். உன்னுமிடத்தில் உம்மிலு முயர்ந்த உற்றாருமில்லை. பெற்றாருமில்லை. மற்றாருமில்லை. ஓ மாசற்றமாபோய்! உம்மைவிட எனக்கு வேறொரு உதவியுமில்லை. நாங்களிதுவரையிலுங் குறைவில்லாதநுபவித்து வந்த உமது பட்டினத்தின் பதவியைவிட வேறொருபதவியுமில்லை நீரும் . உமது சகோதரர்களும் - உமது புத்திர மித்திர பௌத்திராதியரும் - நால்வகைச் சேனைகளும் - ஆகியயாவரும் எனக்குப்படைத்துணைவந்தளென் பக்கத்தில்நிற்பீர்களாகில், தூரங்காரமாய் எங்களைவஞ்சித்த சத்துருக்களையும் - அவர்கட் குடன்பட்டு வந்த சேனைவேந்தர்களையும் - ஒரு நிமிஷத்தில் இயமலோகமேற்றிவைக்கிறேன். இது மெய்யென்று பறைசாற்றிவைக்கிறேன். இதனை யுமது கருத்தில் ஐயமற உட்கொள்ளும், என்று வையகம்வாழ்த்து மாயினுஞ்சொல்ல, அதனுல் மச்சராஜன் தேறிமனத்துயர்மாறிமகிழ, அது கண்டமாதொடு மகனுந் தீதகன்றுற்றார்கள்.

உத்தரன்வேண்டுகோளின்படி உத்தரையை அபிமன்னுவுக்காகச்சம்மதித்தபாண்டவர்கருத்தறிந்தவிராடன்பந்துக்களாதியர்க் கோலைவிடுத்தல்.

இப்பால் உத்தரகுமாரன்நமக்குஉறுதிதேடிக்கொள்ளுந் தருண மிதுதானென்று துணிந்து தந்தைதாயிருவரையு முன்னிட்டுக்கொண்டு தருமராயனைப் பணிந்து, வாய் பொத்தி னின்று, ஓ சமுத்திரத்தை ஆடையாகத்தரித்தருளிய இவ்வுலகிமுழுமையும் ஓர்வெள்ளைக்குடை நீழலில் அடக்கியாளும் விதானவேந்தே! யான் தமக்குத்தக்க பக்குவமாகப் பேசவறியாச் சிறியேனுகிலும். யான் செய்துகொள்ளும் விண்ணப்பத்திற்குத்தேவரீர் செவிகொடுத் தருளல்வேண்டும். இந்தவிராடபுரமும் இதனது பூவளம் பொருள் வளமுள்ளனயாவுந் தேவரீருடையதே: இயாங்களியாவரும் உங்களுடைய ஏவற்பணிவிடைக் கேற்றவர்களே. எங்கட்குசுதந்தரமான ஆறுவிதப் படைகளுந் தங்களுடையதே. ஈதல்லாமல்என்தங்கையாகிய உத்தரகுமாரத்தியும் அர்ச்சுனராஜற்குரியவளே. ஓ எங்களாண்டவராகிய பாண்டுநந்தனரே! இவ்வளவு தயவுசெய்து எங்களை யாண்டுகொள்ளவேண்டும். என்று வேண்டி விளம்பினன். இவ்விதமாக உத்தரகுமாரன் சொல்லக்கேட்ட விஜயகாண்டீபதரன் அவனைநோக்கி, ஆ! ஆ! ஹா! என்றுகையமர்த்தி, ஓ கல்வியின் சாரமும் - செல்வியின் அபாரமும்- கைப்படை வீரமும் - விற்பனவிவேகமும் - காமன்மயமும் - சேமன்ஜெயமும் - காரியசித்தியும்-கூரியபுத்தியுமுடைய காவலன்மகனே ! உன்தங்கையாகிய உத்தரகுமாரத்திக்கு நான்சிலகாலம் நாட்டியம்பழக்கி வைத்தபடியால், எனக்குப் பெண்மரியாதையாம். நீ இப்போது கொண்டநினைப்பை நீக்கிவிடு. அல்லது உன்னிஷ்டப்படிக்குத் தப்பாமல் உறவுகலக்கவேண்டுமானுல், உனக்கிளையவளாய் நன்னலம் நற்குணம் வாய்ந்திருக்கின்ற அவ்வுத்தரைப்பாவை பொன்னிலமுதலிய நன்னிலமன்னவர் புகழும் பெரும்பேர்படைத்த என்மைந்தன் வாளபிமன்னனுக்கு உரியவளாகுகவென்றான். இப்படிக்கு அற்புதமாய் விளம்பிய பற்குனன் மொழியைக் கேட்டமாத்திரத்தில் அவ்விடத்திருந்த சாஸ்திரசம் பன்னருடன் தருமராஜன் விராடராஜன் முதலியசகலமானபேரும் சபாஸ்து; சபாஸ்து: என்று சம்பிரமங்கொண்டாடினர்கள். உடனே விராடபூபதியானவன் கலியாண முரசவாத்திய முழக்கிவைத்து, பந்துமித்திராதியர்கட்கெல்லாம் பாண்டவர்கள்விராடபுரத்தி லிருக்கின்றார்களென்றும், அப்பாண்டவரில் நடுப்பிறந்தோன் பிள்ளையாகிய சிரஞ்சீவி அபிமன்னு குமாரனுக்கும் - எனதுபெண்ணுகிய சௌபாக்கியவதி உத்தரை குமாரத்திக்கும் - கலியாணநடக்கப்போகிறதென்றும் ஓலைகளெழுதி, தூதர் வசத்திலனுப்பி யறிக்கையிட்டான்.

ஸ்ரீகிருஷ்ணபகவான்பந்துக்களோடு அபிமன்னனையும் சுவேதனையி மழைத்து வருதல்.

ஓ ஜெனமேஜெய மகாராஜனே! ஈதிப்படியிருக்க-விராடராஜனுடைய முதற்குமாரன் சுவேதனென்பவன் கைலாசபதியைக் குறித்துத் தவஞ்செய்யப்போனனென்று முன்னமே சொல்லி யிருக்கின்றேனல்லவா? அந்தச் சுவேதனனவன் மனேபக்திமாறாமல் வைராக்கிய நிலையை வகித்து, மகாதேவனைக் குறித்துத் தவமிழைத்து, தாட்சி யில்லாத காட்சியும்பெற்று, எந்த ஆயுதம் பிடித்துப் போர்புரிந்தாலுந் திரிபுவனத்தையுஞ்செயிக்கும்படியான அருளுற்று, மற்றெவருந் தனக்கெதிரில்லாமல் யாவரையும் வெற்றிபெறும்படியானசித்தியைப் பற்றினன். அவன் பற்றியிருக்குஞ்சித்தியை முத்திக்கு வித்தாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியறிந்து, இனிமேல்நாம் குருக்ஷேத்திரத்திற் கூட்டி வைக்கப்போகின்ற யுத்தத்திற்கு இவனொருவ னிருக்கின்றான். இவனை விட்டுவிடுவது யுத்தமல்ல. எவ்விதத்திலு மிவனைக்கொண்டுபோகவேண்டும். என்று நினைத்து அவனிருந்த இடத்திற்குப் போய், பிரிந்துபோன உம்மைப்பார்க்க யித்தனைநாட் சென்றதென்று உபசரித்துப்பரிந்தழைத்துவந்து, தனக்குண்டாயிருந்த பகைவர்களையெல்லா அதனுற் போக்கிக்கொண்டு, துவாரகாபுரிக்கழைத்துப்போய்ச் சுரேசனுமெச்சும்படியானவிருந்துசெய்வித்து, அளவற்றவெகுமதியளித்து, கேளிக்கைமுதலாகிய சம்பிரமங்களிற்

காலதாமசம் பண்ணிக்கொண்டு, பாண்டவர்கள் வெளிப்பட்டசமாச்சாரம் இன்றைக்குவருமோ நாளைக்குவருமோ வென்று தமதிதயத்தில் எண்ணமுற்றிருந்தார். அச்சமயத்தில் தூதர்கள் ஓலைகொண்டுவந்து வணங்கினார்கள் அந்தச்சுருளையவிழ்த் ப்பலபத்திரருக் கெதிரிற்படித்துக்காட்டி, அண்ணா! நமது பாண்டவர்கள் அஞ்ஞாதவாச மகற்றி வெளிப்பட்டார்களாம். இதல்லாமலும்-உமது மருமகன் அபிமன்னனுக்குத் திருக்கலியாணம் நடக்கப்போகின்றதாம். என்றுசொல்லி. மகாவிருப்பத்துடன் நீருண்ட கருமேக நிறங்கொண்ட கோபாலனனவர் பலராமர்-சாத்தகி-கிருதபன்மன்-கிருதவீரியன்-இவர்களும், இவர்கள் குடும்பங்களும், வண்டுசெறிந்த மதுமாலையணிந்த சுருட்கருங்கொண்டைசிறந்த தங்கை சுபத்திராதேவியும், அயிலாயுதம்படைத்த முருகையனுக் கொப்பான அபிமன்னனும், கூரிய வேற்படைகொண்ட சுவேதனும், குடிப்பசட முதலியோருஞ்சூழ்ந்துவரும்படிக்குக் கூட்டிக்கொண்டு விராடபுரம்வந்து சேர்ந்தார்.

இந்தப்பிரகாரம் மேகவண்ணனான கண்ணனும் அவரண்ணனும் வருகின்றார்களென்று சோகநீங்கிச்சுகம்பெற்றிருந்த பாண்டவர்களும் விராடராஜனும் தூதுவராற் கேள்விப்பட்டு, அவ்வேதநாயகனைக் காணவேண்டுமென்று எதிர்கொண்டுசென்று கண்டு, இருவர் தேகமும் ஒன்றென்று சொல்லும்படியாய் ஒருவரையொருவர் இறுகத்தழுவி யணைத்து, ஆகாயமளாவிய சிகரகோபுரஞ்செறிந்த பேரவையி லழைத்துவந்து, பலராமர்-சாத்தகி-மற்ற யாதவகுமாரர்கள் முதலிய பேர்களுக்கும், அரலணைப்பள்ளி நீங்கிய ஆதிமத்தியாந்தரகிதனோடுவந்த பெரியோர்முதலிய உரியோர்யாவர்களுக்கும், தகுதியாகிய சன்மானமும் வெகுமானமுங் கொடுத்துப் பிரியவசனங்கள் பேசிக்கொண்டார்கள். மந்திரி பிரதானியர் சிலரும் - வந்த நல்யாதவர் பலரும் - மரியாதைகுறையாமல் வணங்கி நின்றார்கள். சுபத்திராதேவியும், யாதவஸ்திரீகளும், ஸ்ரீகிருஷ்ணருடைய அஷ்டபாரியர்களும், தேவகிதேவியாரும், உரோகிணிதேவியாரும், மற்றுமுள்ள தாய்மார்களுந் திரௌபதாதேவியிருந்த அந்தப்புரம் போய்ச்சேர்ந்து, சகலவித மரியாதையுடன் உபசாரமும்பெற்று, ஒருவரோடொருவர்தனதுகள் பாராட்டிச் சுபங்கொண்டாடி யிருந்தார்கள். இப்பால் அபிமன்னனெருங்கி, வெகுநாளாகப் பிரிந்திருந்த தந்தையரை வணங்கி பாஞ்சாலியைப் பணிந்து, மாஞ்சோலையிற் குயில் கூவும் வளனுடைய மச்சநாடனுக்கும் வந்தனந்தந்தான். அவர்களியாவரும் அவனை யாலிங்கனம்பண்ணி ஆசிர்வதித்து, ஆண்மிக்கையுடைய பாண்டவர்பக்கத்தில் இளஞ்சிங்கம் வீற்றிருக்குந் தன்மைபோல் இருக்கச்செய்தார்கள். அப்போது அந்தப் பிள்ளையைச் சபையிலிருந்த பெரியோர்கள் கண்டு, மிகவுமகிழ்ந்து, வியப்புடன் புகழ்ந்து, நயந்து வியந்து, பாண்டவர்கள் பூர்வஞ்செய்த புண்ணியநலமே இப்பிள்ளையாகப் பிறந்தபின்று கொள்ளைகொள்ளையாய்க் கொண்டாடிக்கொண் டிருந்தார்கள். அப்போது தருமசொரூபியாகிய உதிட்டிரர்தனதுவிடாத கடாக்ஷவீக்ஷண்யப் பார்வையால் வீரப்பிரதாபத் தோள்பூரித்த அபிமன்னனைநோக்கி, அவனோடு சில ஸ்திரமான வார்த்தைகளைப்பேசி, அதற்கவன் சொல்லுக்குச் சொல் சாஸ்திர யுக்தமாய்ச் சொல்லுந் துணிவைத் தேர்ந்து, ஆசைமேலிடச்சிறந்து அகமகிழ்ந் திருந்தார். இவ்விதமாகப் பெரியதந்தையினிடத்திற் பேசிய அபிமன்னனை மாமனாகப்போகிற விராடராஜனும், மைத்துனனாகிய உத்தரகுமாரனும், சுவேதனன்முதல் மற்றுள்ளோரும், சுதேக்ஷணாதேவியுங்கண்டு கண்களிகூர்ந்து, செவிகுளிர்ந்து, முகமலர்ந்து, அகமகிழ்ந்து, ஆனந்தங் கொண்டாடினார்கள்.

இப்படியாக விருக்கின்ற சமயத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய திருவருட்பயனால் விராடபுரம்வந்து சேர்ந்த சுவேதனென்பவன் தன்தந்தையான விராடனையும், சிறிய தந்தைமார்களையும், தருமராஜன் முதலிய பேர்களையும், தாயாகிய சுதர்க்கணையையும் பணிந்தான். இவர்களெல்லோரும் அவனையேந்தி முத்தமிட்டார்கள். அவருள் மச்சராஜன் இச்சைமேலிட்டெழுந்து, மைந்தன்பேரில் விழுந்து, ஆ! என் விவேகக்கொழுந்தே யென்று மார்போடணைத்து, புஜத்துடன் புஜமொத்தி, முகத்துடன் முகஞ்சேர்த்து, இருகாத்திலும் எடுத்துப் பிடித்து உச்சிமோர்ந்து, கருத்தினுற் களித்து, கண்ணருள் தழைத்துச்சிலமொழிபுகன்றான். அப்பா என்கண்மணியே! நீ இதுவரையி லெங்களைவிட்டு எந்தயிடத்தி லிருந்தாய்? தந்தவண்ணனுக்கிளைய நந்தகுமாரன் உன்னை யெங்கேகண்டார்? இவருடன்கூடி நீ எப்படிவந்தாய்? எவ்விடத்தில் நீங்களிருவருஞ் சந்தித்தீர்கள்? இது எனக்கு நல்லகாலம். ஆதலால் என்மனங்குளிரச் சொல்லுகவென்று கேட்டான். அதற்கச் சுவேதனருகிலிருந்த கடல்நிறவண்ணக் கண்ணன் சொல்லத்தொடங்கினர். ஓ விராடபூபதியே! உமது குமாரன் அருந்தவமிருந்து சிவனருள்பொருந்திப் பெருந்திறற்படைகளும் பெருமையும் பெற்றான். இத்தன்மையாகச்சித்திபெற்றிருக்கிறநிடத்தை யானறிந்து, இந்த உத்தமனையழைத்துக்கொண்டு துவாரகைக்குவந்து, எனக்கு அசாத்தியமா யிருந்த சத்துருக்களையெல்லாம் இவனொழித்துவிட்டு, இவனுக்கு விருந்துமுதலிய உபசாரங்களெல்லாஞ் செய்து என்னிடத்தில் வைத்துக்கொண்டிருந்தேன். அப்போது நீங்களெழுதியனுப்பிய ஓலையைக்காணவும், உடனே பிரயாணமாகி இம்மச்சநாட்டடைந்தோம். என்று கோபாலன் சொல்லவும், அச்சொற்கேட்ட விராடராஜன் பட்சமேலிட்டு, மகன்பக்கத்தி லிருந்து, தவம்புரியப் போனதுமுதல் வந்ததுவரையிலுஞ் சாங்கோபங்கமாய் க்ஷேமலாபங்க

ளை விசாரித்து, பகைவரென்னும் யானைகளைக் கொல்லுகின்ற சிங்கம்போன்ற பாண்டவருடன் மற்றப்பெரியோர் யாவரையும் பணிவித்து, சபாமண்டபத்திற்றுனே அவளைத்தழுவி யிருக்கித்தானு முடனிருந்தான். அக்கால் விராடராஜனுடைய மற்றயபிள்ளைகள்யாவருந் தமயனுன சுவேதனைச் சாஷ்டாங்கமாகத்தொழுது, அவனு லுபசரிக்கப்பட்டுக தருக்கியிருந்தார்கள் அன்னையாகிய சுதேஷ்ணுதேவியுந்தன்னைப்பணிந்த சுவேதனை வாழ்த்தி, பொன்னுக்கிணையாகிய தன்புத்திரியின் கண்ணுக்கினிமையான கணவனையும் பார்த்துக் களிப்போடிருந்தாள்.

பாஞ்சாலர்-குந்திபோசர்-இவர்கள் முதலாயினோரும், தௌமியாசாரியாரா தியரும் வருதல்.

அதுவேளையிற் பாஞ்சாலதேசராஜனும், சோமகாளும், அவர்கட்குரிய நால்வகைச் சேனைகளும், இளம் பஞ்ச பாண்டவர்களும், திர்ஷ்டத்துய்மன் முதலாகிய பேரும் வந்தார்கள். அவர்களைவிராடராஜனும் பாண்டவர்களும்எதிரேசென்றுகண்டு, ஒருவரையொருவர்தழுவிக்கொண்டு, தகுந்த மரியாதைகளுடன் புகழ்ந்துசபாமண்டபஞ்சேர்ந் திருந்தார்கள். இப்பாற் குந்திபோஜகுலராஜர்களும், மந்திர தேசாதிபர்களும், புத்திரவர்க்கங்களும், மித்திரவேந்தர்களும், பாண்டிநாட்டரசரும், சோழராஜ சிகாமணிகளும், சேரபூபதிகளும், மகததேசாதிபதிகளும், இன்னும் பலபல தேசத்திறைவர்களும் வன்னவன்ன வாகனமேறி வந்தார்கள். அன்னவர்க்கெல்லாம் பலவரிசைகளோடுபசரித்து ஆசனத்திலமர்த்தினார்கள். வந்தவேந்தர்கள் சிந்தையுவந்துபாண்டவர்களைப்பார்த்து, அந்தோ! நீங்கள் பன்னிரண்டுவருடம் காட்டில் வாசம்பண்ணும்படியாகி நாங்களுங்களைப் பிரிந்திருக்கும்படியாய் நேரிட்டதல்லவா? ஆ! ஆ! இஃதென்ன வினை? என்றுசொல்லி மனநொந்தார்கள். தம்மைக்குறித்து வெம்மை யடைகின்ற தாரதிபர்களைத் தருமராஜனேக்கி, ஓ சகலசாஸ்திரங்களுங்கற்ற சம்பன்னர்களே! மேல்வினை யெவரையு மீறவிடாது. மேதினியிற் பிறந்தோன வேதனுனாலும் வினைக்குப்புறம்பாய் மீளப்போகாது. ஆகையால் - நடந்துபோன காரியத்தைப்பற்றி விசனப்படுவதில் யாதொரு லாபமுமில்லை. இனிநடக்க வேண்டிய காரியங்களை நன்காராய வேண்டியது. என்று சாந்தமாகப்பேசிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

ஓ தாணீஸ்வரர்களே! தாமரைச்சேக்கையிற் படுத்த அம்ஸங்கள் அம்மலர்த்தேன்களால் நனைந்த இறகுகளை வானத்தில்விரித் துலரச்செய்கின்ற வண்மையும், தானத்தைப்பொழியுந் தந்தாவளத் திண்மையும், நீர்வள நிலவள நன்மையுமுடைய இந்த மச்சராஜன் வசந்தகாலமன்மதன்போன்றமகாராஜன். வெகுதேஜன். இவருடைய நாட்டிற்கு நாங்களெப்போது வந்தோமோ? அப்போதே காட்டிற்றிரிந்த வருத்தமும், எங்களை மாட்டிவருத்திய தீவினைப் பொருத்தமுங் கேட்டையடைந்து போய்விட்டன. இந்த அன்பருடைய பேருதவியால் துன்பமகன் றிருந்தோம். முன்பு நான்மாட்டிக்கொண்ட தெவ்வாறெனனில், சுரலயபேதங்களாகிய — ச ரி - க - ம - ப - த - நி — என்னுஞ் சப்தசுரதாதுடன்சேர்ந்த குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி-விளரி- தாரம் - இவை முதலிய எழிசைப்பாடலுக்கு விரும்பி வந்துருகிய அசுணப்பச்சிகளானது, பறைபடியோசை கேட்டுச் சிறையடியா தயர்ந்து ஒருவன்கைக்குள் மாட்டிக்கொள்ளுமாறுபோல்; விண்ணுக்கிறைவனென்னநீண்டு மண்ணுக்கொருவனென வாண்ட திரிதராட்டிரமகாராஜனென்னும் எமதுபெரியதந்தையின் வார்த்தையால் மயங்கி, துரியோதனன் - சகுனி - துஸ்வாசனன் - கர்னன் - இவர்கள் கூடியெண்ணிய வஞ்சனையில் மாட்டிக்கொண்டு வருந்தினேன். இனி நான் செய்யவேண்டிய காரிய மென்னை? நீங்களியாவரும் என்னைக்காக்குமபடிக்குக் கண்ணுக்கிமைபோற் கலந்திருக்கின்றீர்கள். உங்கள் சித்தம் என்பாக்கியம். என்று மெத்தவும் வருந்தியுரைத்த உத்தமன் சொல்லைக்கேட்ட கொற்றவர் பலருப் பதைபதைத்து, இப்போ திவ்விடத்திற்சேர்ந்திருக்கின்ற நாமெல்லோரும் இதுவே பயணமாகப் புறப்பட்டு, இன்றைக்கே சண்டைவிளைத்து, துரியோதனன் மண்டையோலைப் கிழித்து, அவனுக்குத் துணைவந்தவர்களைக் கொன்று கழித்து, ஜெபம்: ஜெபம்: என்னவென்றுவருவோம் வாருமென்று தருமநந்தனன் கருத்திற்குப் பொருத்தமாக வற்புறுத்திச் சொன்னார்கள்.

இன்னவாறு மன்னர் மன்னர்கள் பின்னருறுமல் முன்னிட்டுரைத்தமூர்த்தண்யமொழியை விராடர்கோன் கேட்டு மகிழ்ந்து, உங்களுடைய பூர்வத்தியானகிருபை கீர்த்தியிற்சிறந்த இப்பாண்டவபூபதிகளுக்குச் சீர்த்தியாக விருக்கும்போது, இன்றைக்கும-மற்றென்றென்றைக்கும் - என்னகுறை? என்றுபசாரங் கூறிச்சபையைவிட் டெழுந்து, யாவருக்குஞ் சாஷ்டாங்கமாக விழுந்து, கோபாலகிருஷ்ணனைச் சிந்தித்து, பூபாலவேந்தரைச் சந்தித்து, இருகரங்குவித்து வந்தித்து, தான்சிந்தித்திருந்ததைத் தெரிவித்துக் கொள்ளுவதானன். ஓ இந்நிலங்காக்கு மிறைவர்களே! இயான்கூறும் விண்ணப்பத்தைச் செவிகொடுத்துக்கேண்மிகள். மலைகள் மதித்துத் துதித்து வணங்கப்பூரித்த புயமும், நீதிசாஸ்திர நெறிமுறைப்பயனும், சொற்பொருணயனும், விற்பனவியனும், சௌந்தரியமும், கூர்வேல்தாங்குந் தைரியமுமுடைய பாண்டவ சுபுத்ரனென்னும் அபிமன்ன ராஜனுக்கும், என்தவக்கொழுந் தாகிய உத்தரையாட்குங் கலியாணவைபவங் கண்டருளியபிற்பாடு, வாளைகள்பாய-

கமுகம் பாளைகள்சாய - வனிதையரூடி-மகிழ்நருங்கூடி-நீடிவிளையாடும் வளநாடாகிய குருநாட்டைச் சண்டையிட்டுவாங்கப்புறப்படுவோம். அதுவரையில் நீ விரியாவருமனம்பொறுத்திருக்கக்கேட்டுக்கொள்ளு மென்னை மன்னிக்கவேண்டும். மேலும் - மாயனுக்கு மருமகனாக வாய்ந்தவா ளபிமன்னன் எனக்குமருமகனாகவாய்க்கின்றமையால் பற்பல தேசாதிபர்கள் யாவரும் ஏககாலத்தில் ஒரு மிக்கவரும் டிக்கு முற்பிறப்பிற் செய்த தவம் இப்பிறப்பிற் கைவல்லியமாயதென்று சிறப்புற்றிருக்கின்றேன். மாலைதாங்கிய வண்புயமோங்கிய மன்னவான் கள! சீக்கிரத்தில் முகூர்த்த நடக்கும்படிக்குச்செலவு கொடுத்தருளவேண்டும். என்று சந்தன பாளித புஷ்ப தாம்பூல பலாதிகள் யாவற்றையுங்கட்டுத் தட்டாய்வைத்து, முட்டுப்பாடில்லாமற் கைகட்டிக்கொண்டு விராடராஜன் கேட்டான். அதன்பேரிற் சகலத்திராளுஞ் சம்மதித்து, தருமராசனது தயைப்பார்வையையு நோக்கி, அவ்வாறு நடாத்துவதே அதிகஸ்ய அதிகபலமென்றார்கள். அப்போது அன்புக்கொருவித்தாகிய தருமாஜன் முதலான பாண்டவரும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் புஜங்கள் பூரித்து, அகமுமுகமுமலர்ந்து ஆசைமேவிட்டார்கள்.

இப்பாற் பாண்டவர்கள் அக்ஞாதவாசம் பண்ணப்புகுந்தகாலையிற் பிரிந்த தௌமியரும் பன்னீராயிரம் பிரமக்கியானிகளும் வந்தார்கள். அவர்களை ஐவர்களுங் கண்டு அன்புமேற்கொண்டு, ஓ சுவாமிகளே! யாங்கள் செய்யவேண்டி யிருந்த ஒருவருடத்தொண்டும் அகன்றது. என்றுபுகன்று சரண்மேற்பணிந்தார்கள். அவ்வாறு உபசரித்துத் தொழுத ஐவர்கட்கு மவர்களாசீர்வதித்தானபின்பு, திரௌபதாதேவி - வேதிகை - சுபத்திரை - இரேணுமதி-விஜயை - இவர்கள் முதலியபேரும் பணிந்தார்கள். அவர்களுக்கும் மங்களாசனஞ்சொல்லி, உடனே பணிந்தெழுந்த இளம்பஞ்ச பாண்டவர்கள் - வன்சகாதேயன் — அபிமன்னன் - நிர்மித்திரன் - செயக்ஷேத்திரன் - இவர்கள் முதலிய புத்திரரையும் வாழ்த்தி, எத்திக்கும்புகழும்படிகீர்த்திபெறுங்களென்றிசைதது, தருமநந்தனரைப் பார்த்து, ஓ தனிகரே! எம்மைவிட்டு நீங்கி அச்ஞாத வாசத்திற் கிசைந்த ஒருவருடம் வரையிலு நடந்தசங்கதியாவும் உரைத்தருள வேண்டுமென்று கேட்டார்கள். இப்படியாகக்கேட்ட தௌமியர் முதலிய மகானுக்களும் மன்னவர்களு மகிழ்வுறும்படியாய் நிறைவுறுஞ் செய்திகளைக் குறைவுறக்கூறினர் தருமநந்தனர். அவையனைத்துஞ் சொல்லக்கேட்டுச்சந்தோஷித்த முனீஸ்வரர்களையுந் தௌமியாச்சாரியையுந் தருமநந்தனரும் விராடராஜனும் பார்த்துக் கைகுவித்து, ஓ வேதவேதியர்களே! நமதுவாளபிமன்னனுக்கும் உத்தரை குமாரத்தி யாருக்கும் பாணிக்கிரகண முகூர்த்தம் நடக்கவேண்டிய படியால், இதற்குத்தகுந்த நன்னாள் நியமிக்க வேண்டுமென்று விளம்பினர்கள்.

விராடன்தௌமியரால்முகூர்த்தநாள்கோரி, பாண்டவரை உபலாவியத்திருத்தி, மணவினைக்குரிய தொழில்யாவு முடித்தல்

இவ்வாறு கேட்டுக்கொண்ட அவர்க ளெண்ணப்படி நக்ஷத்திரம் - இலக்கினம் - திதி - ஓரை -போகம்- காணம் - பொருத்தம் - ஆகியவிவைகளை யெல்லாந்திருத்தமாக விவாகச்சக்கர முதலிய தோடுஞ் சோதித்து, தாங்கள் கற்றுணர்ந்த தருமசாத்திரத் திறங்களெல்லாங்காட்டி, தகுதியானபலங்கணுட்டி, ஓர் முகுர்த்தநாள் வைத்தார்கள். அந்தக் கலியாணநாள்வரையிலும்பந்தர் முதலிய பல அலங்காரங்கள் பண்ணவேண்டி யிருப்பதால், விராடராஜனனவன்பாண்டவர்களையும் அவர்கட்குவேண்டியவர்களையும் உலாவியத்திற்கனுப்பிவைத்து, அவ்விடத்திற் சவுக்கியமா யிருக்கும்படிசெய்து, சகல சாமக்கிரியைகளும் உடையாதி உசிதங்களுங் கொடுத்து, ஒருநாளைப்போற் பலநாளுஞ் சலிப்பில்லாமல் விசாரணைசெய்து வந்தாள். இவ்வாறு பாண்டவர்கட்கு உபலாவியத்திலாகவேண்டுங் காரியங்களிற் றடையறநிறைவேற்றிவரும் விராடராசன் தனது நகரவலங்காரஞ்செய்யும்படியாய்ப் பேரி முழக்கிவைத்து, கருங்கடற்கலையுடுத்த காசினியையாளுங் காவலர்க்கெல்லாங்கலியாணவோலையுந் தூதும் ஒருமிக்கவிடுத்து, விராடபுர முழுவதும் விநோதமான பவளக்கால் நாட்டி, தவளவிட்டம் பூட்டி, மரகத வோலைகணீட்டி, வச்சிரப் பிரதிமெய்மாட்டி, மாணிக்கமலர்மாலை தூக்கி, முத்துக்கொத்து வடங்கள்வீக்கி, ஆணிப்பொன் ரேகையமைத்து, அற்புதக்காட்சிகள் சமைத்து, தொங்கொளிவட்டஞ் சுவரொளிவட்டங்களிருத்தி, தூங்காவிளக்குதோரணவிளக்குகள் பொருத்தி, வாழை - கமுகு - மாங்கனி - பலாக்கனி - தாழை - இளநீர் - சரக்கொன்றை - ஈந்து - பாளை-கரும்பு - கூந்தற்பனை - பற்பலமலர் - இரசிதக் குண்டுகள்- ஜாலர்க்கள் - சடைமாலைகள் - தமனியப்படங்கள்-நீலக்கண்ணுடிகள் - நிலைக்குங்கண்ணுடிகள் - முத்தினத் தூண்கள் - ரத்தினப்பூண்கள் - வேடிக்கை மான்கள் - விநோத ஆண்கள் - வாரணக்குதிரைகள் - வஸ்திரசித்திரங்கள் - தோரணநிரைகள் - சோடித்தவரைகள் - மேல் விதானங்கள் - விதவிதக் கொடிகள் - பலவிதக் குடைகள் - பைம்பொன மேடைகள் - வேதிகைச் சாலைகள்- மென்மலர்ச் சோலைகள் - கும்பக்குடங்கள் - குடமாடங்கள் - விம்பவேடங்கள் வெயில்மணிச்சிகரங்கள்-எண்டிசையண்டருங் கொண்டாடச்சமைத்து, சாந்து சந்தனத்தினுல் தரையெலாமெழுகி, முத்துச் சுன்னத்தால் மொக்கெலாமிட்டு, கலியாண மண்டபக்கலசந்திருத்தி, மணவறைநிறைய மாலை பொருத்தி, மதுரகநிறைந்த பூமாலை - மகிழ்ச்சிசிறந்தபொன்மாலை-வாடாப்பவளமலர்மாலை - தேடாப்படிகத் திரண்மாலை-ஆணிமுத்துமாலை-

இரத்னமாலை-அரிமரகதப் பசுமாலை- அரவின்மாணிக்க
மாலை-வச்சிரமாலை-பச்சிலைமாலை முதலிய மாலைகளையெல்
லாம் புகழ்கொண்ட பூவுலகோர்கண்டு கொண்டாடும்
படி சோடிப்பித்தான். இப்பாற் கலியாணவாசலிற் சா
ல்-கரகம்-முளைப்பாலிகை - தழல்வளர்க்கு மேடை-குட
விக்கு-அரசாணிக்கால்-மாவிலை-தருப்பை - அறுகு-மஞ்
சள்-குங்குமம்-சந்தனம் தாம்பூலம்-வாழைப்பழம்-தேங்
காய்-புட்பம்-வெல்லம் அக்ஷதை-சாம்பிராணி - சூடம்-
சமித்து-நெய்-பால்-தயிர்-நவதானியம்- பொரி - இவை
முதலியயாவு மமைத்து, நாளையுதயத்திற் பத்து நாழி
கைக்கு முகூர்த்தமென்று பாண்டவர்களுக்குத் தெரி
வித்து, தன்னாடுமுதலிய பன்னாட்டுக்கும் பறைசாற்று
வித்தான்.

அபிமன்னன் உபலாவியத்திலிருந்து விரா
டபுரத்திற்கு மணக்கோலம் போதல்.

இச்சங்கதியைக் கேட்டமாத்திரத்தில் தருமராஜ
ன் முதலியோர் பந்துவருக்கத்துடன் ஜெயமென்றெழு
ந்து, சிந்தைமகிழ்ந்து, சிவாலயம் விஷ்ணுவாலயங்களு
க்குச் சிறந்த பூசைகள்செய்வித்து, திங்கள்மரபிற்றோ
ன்றிய தங்கள்சிறுவனைத் திருமணக்கோலமாகக் கொ
ண்டுபோக வேண்டுமென்று தமக்குள் நினைந்து, பொ
ங்குந்தடத்துப் புனிதநன்னீரைத் தங்கக்குடத்திற்மு
மெடுத்துவந்து, சங்கையில்லாத சாஸ்திரம்பாராட்டி, ஓ
ங்கியபுதல்வனை யுவந்துநீராட்டி, வெண்டுகிலால் நீர்து
வட்டி, சிங்காசனத்திலேற்றி, சிகைசிவி வகிர்ந்து, சில
பணிபுனைந்து, தேமலரணிந்து, திரிபுண்ட்ரந்தீட்டி, தி
லகமுங்காட்டி, குண்டலமாட்டி, பச்சைக்கல் முருகிட்
டு, முத்தாரமுதலிய பத்தாரங்களோடு வித்தாரப்பதக்
கங்களுந் திருத்தி, திருமுடி பொருத்தி, தங்கச் சஞ்சந்
தரித்து, பாஜிபந்து-தோளணி-நாககங்கணம்-கடகங்க
ணம்-கணையாழி இவைகளைப்பூட்டி, அரைப்பட்டிகை-
அரைஞாண்-வீரகண்ட-முதலியவைகளும் வீக்கி, திவ்
வியவேஷ்டிகளால் அலங்கரித்து, உயரமுஞ் சுற்றும்
உன்னதமாகி எழுறுப்பும் பூமியிற்படிந்து - கிம்புரிப்பூ
ண் கொம்புகட்கிட்டு - முகபடாமதனை மொய்ம்புறச்
செறித்து-கவுட்குழிகன்ன மகரிகைபொறித்து - கும்ப
க்கலசங் கொடியுடனமைத்து - வெண்கவரி செங்கவரி
தூக்கி-ஒன்பதுவகை இரத்தின வவுதாவமைத்த அரச
க்களிறாகிய பட்டத்துயானைமேல் அபிமன்னனையேற்றி
அந்தணர்க்கும்-ஆதுலர்க்குந் தானங்கொடுத்து, முத்து
க்குச்சுடன் பவளமமைந்த சந்திரவட்டக்குடை கவிக்க
வெள்ளைக்கொடிகள் பிடிக்க, ஆலவட்டம்-சுருட்டி-பீலி
க்குஞ்சம் பவளச்சவளம்-விருதுடால்-கருடடால் - அரு
கு ஒருகு-மயிற்பீலி-வெண்சாமரம்-மேற்கட்டி - தோர
ணம்-இவைமுதலியன நெருங்க, இளம்பாண்டவரைவ
ரும் பஞ்சவர்ணக் குதிரையேறிப் பக்கத்திற்பிறங்க, ம
த்தகஜத்திலமர்ந்த மற்றப்பிள்ளைகள் சுற்றுநடக்க, பல்
லக்கிலேறிய பாத்திபர்முடுக்க, மல்லர்கள்சிலம்பு வரி
சை முன்கொடுக்க, மாதவர் வேதியர் வாணர்களடுக்க,
கீதநாதக் கிளரொலிதொடுக்க, நரகஜபேரி நடனமுன்
னடிக்க, நாகஜதுந்துமி சுரஜதியடுக்க, ஐந்துகருவியும்
முந்திமுன்னேங்க, பந்திபந்தியாய்ப் பந்துஜனந்தேங்க,
மத்தளதாள மேளமுழங்க, வித்தகசங்கநாதங்கழங்க,
நாட்டியமாதர்க ணடிக்க, நற்கீதமாதர்கள்படிக்க, கட்
டியக்காரர் மன்னர்களைச் சுட்டிக்காட்டிக்கொண்டாட,
பட்டுவான்கள் வேந்தர்களின் பிரதாபவிருதுகளை விண்
டாட, குலமுறைவந்திப்போர் தலை முறையடுக்க, நல
முறப்புகழ்வோர் நற்சீர்தொடுக்க, இந்திரவாத்தியந் து
ம்தும்தும்மென, இணையில்நாற்சேனை திம்திம்திம்மென
நந்தகோபாலருந் தந்தவண்ணனும், கொந்தலர்கூந்த
லார் வந்தவர்பலரும், தேரின்பேரிலும் வண்டிகள்பேரி
லுஞ் சென்றார்கள். திரௌபதாதிதேவி - சுபத்திராதே
வி-அஷ்டலட்சுமிகள்-ஆயமாதர்கள் ஆகியயாவரும் நவ
ரத்தினங்களினா லமைத்த சித்திரப்பல்லக்கிலேறிச் செ
ல்ல, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுங் கூடச்சென்றனர்.

இப்படியாக இவர்கள்வரவும், ஆரியர்களுஞ் சீரிய
ர்களும்பூமாரி-பொன்மாரி மணிமாரி - நவதானியமாரி-
இவைகளையக்ஷதையுடன் வாரிச்சொரிந்து வாழ்த்தினார்
கள். மங்கிலியப்பெண்கள் மகிழ்ந்து, மஞ்சள்-குங்கும
ம் தாம்பூலம்-தேங்காய்-வாழைக்கனி-மாங்கனி- தேங்க
னி-இவைகளை வருவார்போவாராகிய மங்கையரைப்பூ
சித்து விசுவாசித்துக் கொடுத்துப் போற்றினார்கள். த
ண்ணீர்-வெந்நீர்-ததிநீர்-இவைகளை, உண்ணீருண்ணீரெ
ன்று உபசரித்து வழியிளைப்பு மாற்றினார்கள். இவ்வா
றாகிய எக்களிப்புடன விவாகமுரசங்களுந் தியாகமுரச
ங்களு முழங்க, தோரணமடங்களிலும் வாரண-கூடங்
களிலும்-பூரணகல்சங்கள்நிறைய, பவளப்பட்டையு மு
த்துப்பட்டையும் பத்திப் பத்தியாய் அடித்திராநின்ற
சுவர்களுந்திண்ணை+ளுந் தெருவாசல்களும் பன்னீர்தெ
ளித்துக் கோலமிட்டுத்தீபமேற்றிவைத்து முத்தாலாத்
தி பவளாலத்தி நீராலாத்தியெடுத்து, கண்ணெச்சில் க
ழித்து மங்களம்-லாலி சுபசோபனப்பாடல்-வாழிப்பா
டல்-இவைகளைப்படித்து கையைச்சுழற்றி மடக்கிக் க
ளனத்தில் நெட்டையொடித்து இப்பேர்ப்பட்ட கண
வன் நமக்கிசையாமற் போனானே யென்று கன்னியர்க
லங்கிக் கவலைகொண்டு துடிக்கவும் கட்டியிளமாதர் கா
தல்கொண்டு நடிக்கவும், இவ்வாறாகப் பலவிதச் சிங்கா
ரவலங்களையுடைய விராடபுர வீதியிற் பவனிவருகின்
ற பரந்தாமன் மருமகனானவன் ஆடவருமகளிரு
மானந்தங் கொண்டாடிப் பணிந்துபுகழும்படியாய் வீதி
களெல்லாங் கடந்து விவாகமண்டபத்தின் முன்முகப்
பிற்கு வந்தான் இவ்வண்ணந் திருமணக்கோலங்கொ
ண்டு வந்த அபிமன்னனுக்குச் செவ்வண்ண மேனித்
திர்ஷ்டத்தூய்மனுந் திருமாலும் பெருமன்னர்குழுவுங்
கைகொடுக்க, மேகம்விட்டிழிய மின்னொளிபோற் பட்

99 B

டத்தயானை விட்டிழிந்து, அந்தணர் - அருந்தவர் - பாவலர் - பூவலர் - கோவலர் - இவர் முதலிய வெவ்வரையும் பணிந்து, குருசுவாமியார் - பெண் கொடுக்க வரு மாமியார் - இவரிருவரையும் போற்றி, அவர்களன்புற வளித்த அருண்மொழியும்பெற்று, சம்பிரமமாகச் சதிர் சாலையிலிருந்து, உம்பர்கொண்டாட உயர்பொன்னளித்து, ஓங்கியதரும தானம்புரிந்து, உற்றூர் பெற்றூர் கற்றூர் பரிந்து உடனிருந்து விருந்து அருந்தச்செறிந்து வருந்தி உபசாரவரிசை யளித்துவரும் வண்மையைக் கண்டு மகிழ்வுற்ற வாளபிமன்னனை முகூர்த்தமயமென்று தௌமியர் முதலிய முனீஸ்வரர்கள் வந்தழைத்தார்கள்.

திருக்கலியாணச் சிறப்பு.

உடனே கலியாணப்பிள்ளையானவன் இராஜ வைபவத்துடன் கைலாகுக்கொடுக்குங் காரியஸ்தர் பக்கத்தினெருங்க மணப்பந்தலில் வந்தான். அப்போதங்கிருந்த வேதவேதிய ரியாவருமெழுந்து, வேதநான்கு மொழிந்து, மன்மதனுந் தலைசாய்க்கும் வடிவமைந்த மால்மருகனை அறுகாற்பீடத்திலேற்றி, மந்திராக்ஷதையுடன் வாழ்த்தினர். மான்போலும் விழிப்படைத்த உத்தரகுமாரத்தியைத் தேன்போலுஞ் சொல்லமைந்த சேடியர் ரதிதேவியைப்போற் சிங்காரித்துச் சகலவித மேளசம்பிரமங்களோடுங் கூட்டிவந்து நாயகனுக்கு வலப்பாகம் வைத்து, திரையால் மறைத்து, நலங்குமுதலிய சடங்குகள்புரிந்தனர். பின்பு வானமாதர்வாழ்த்தொலிசெய்ய, அந்தணர்வேத மந்திரமோத, சந்திரக்குலத்திந்திரர் சேர, சுந்தரக்கனல் ஜோதியாய் வளர, நந்தகுலாதிபர் வந்தனைசொல்ல, கந்தனை கணேசனைக் கமலனைப் பூசித்து, இந்திராதிபரை யேற்றிவணங்கி, மாசுதீர்ப்போனல் மறைவிதி முடித்து, பிரமசாரி விரதங் களைந்து, ஸ்நானஞ் செய்வித்து சாதாரதரித்து, வைதிகச்சடங்கு மார்க்கங்காட்டி, கங்கணங்கட்டி, காலாழி மாட்டி, காத்திவூரத்த கதிர்வாள் அளித்து, கருணையாளர்க்குக் கனகமேற்கொடுத்து, மேற்பட்டுடையை விரித்து மேன்மூடி, விதிமுறை செவியி லவிதம்பட வுரைத்து, தேங்காய் - வாழைப்பழம் - குங்குமம் - புட்பம் - அக்ஷதை - மஞ்சள் - தாம்பூலம் - கண்ணாடி - சந்தனம் - திருமங்கிலியம் - இவைகளையெல்லாம் பொற்றும்பாளத்திலிட்டு, நற்றவர் முதலிய கற்றவர் பலரும் உற்றூர் பெற்றூர் உறவினரெவரும் இரு காத்தாலும் பரிசித்து இஷ்டதெய்வப் பிரார்த்தனையுடன் வாழ்த்தவும், தாய்தந்தை யிருவருந் தத்தம் பண்ணவும் மாப்பிள்ளை குருவைத் தந்தையை வாழ்த்தவும், செந்தீ நெய்யைச் சிதறுமற் கொட்டவும், திரைச் சீரையைத் தாழ்த்திச் சற்றேபிடிக்கவும், செனசமூகங்கள் ஜெபஜெய வென்னவும், பொன்னுலகத்தினோர் பொன்மாரிபொழியவும், மன்னுலகத்தினோர் மலர்மாரிசொரியவும், பங்கஜமுகமாதர் வாழ்த்தவும், அங்குஜவயமள்ளர் போற்றவும், எங்கணும் பருணிதர்களேற்றவும், திங்களும் பகலமருளுற்றவும், நாகஜதுந்துமி யொலிக்கவும், சுரஜதிதாளங் கலிக்கவும், சங்குமுழக்கந் தழைக்கவும், திங்கட்குலத்தார் செழிக்கவும், தம்மர்வீணையிசைக்கவும், சல்லரியாதிக ளசைக்கவும், புள்ளாங்குழலிசைபிடிக்கவும், புஷ்பாம்வகைமிகமுடிக்கவும், மற்றக் கருவிகளெல்லா மிசையவும், தாரை - பூரி - வீரி - சின்னம் - தடாரி - பம்பை - காளம் - முரசம் - முழவம் - சர்வாத்யம்- இதுகளியாவுங் கோஷிக்கவும், மறைவாணர்கலைவாணர் முதலியோர்கூடிச் சோமசூரியாக்கினி சாட்சியாகத்தாட்சியில்லாக் காட்சியுடன் கலியாணங் கண்டருளினர்கள்.

இப்பாற் பெண்ணும் பிள்ளையும் வலமிடமாகமாறியிருந்து, ஓமவிதிநடாத்தி, அக்கினியிற் பொரியிறைத்துப் பூரணாகுதிகொடுத்து, பிரதக்ஷணம்வந்துபணிந்து, மாலைமாற்றி, மறைவாணரைப்போற்றி, மாமுனிவரை யேத்தி, மங்களாசனங்கொண்டு, அப்பெண்ணும் பிள்ளையுஞ் சுண்டுவிரல்மாட்டிநின்று, நிறைகுடம் - வெண்சாமரம் - கண்ணாடி - இயானைக்குடாரி - மணிமுரசு-விளக்கு -விருதுக்கொடி - இணைக்கயல் -வன்னும் அஷ்டமங்கலங்களுங்கண்டு, அம்மிமிதித்து, அருந்ததியைத் தரிசித்துப்பூசித்து, அரசாணிக்காலையும் நைவேத்தியத்துடன் தொழுது, மற்றப்பேர்களையும்பணிந்து, திருவனையமாதரெடுத்துவாநின்ற திருவிளக்குத்துணையுடன் சிற்றறைக்குட்போந்தனர். இப்படி சிற்றறைசேர்ந்தவுடனே சிலபெண்களிருந்து வாழ்த்துதல் ஏசல்நடத்தி, பெண்பக்ஷத்திலும் பிள்ளைபக்ஷத்திலும் நிந்தாஸ்துதியாகப் பிரதாபம்பேசி, பிரபந்தம்படித்து, பாலும் பழமுங்கொடுத்து, மாப்பிள்ளையும் பெண்ணும் மருவியிருக்குஞ்சமயத்தில்; அத்தை - மாமி - மச்சினி - அம்மான்- மச்சான் - இவர் முதலியபேர்கள் இச்சையுடன் கொச்சைமொழி பேசிகொடிக்க, வெள்ளைச்சுருள்கள்மடித்து மணப்பெண்பிடிக்க, அதைமணப்பிள்ளைகடிக்க, மணப்பிள்ளை கூசாமற்கொடுக்க, அதைமணப்பெண் கோதிவந்தெடுக்க, இவ்வாறு ராஜவிவாகச் சடங்கின் வண்ணம் யாவுமுடித்து, மஞ்சனீர் வசந்தமாடி, மஹோற்சவங் கொண்டாடி, சந்தனம் - புட்பம் - தமனியப்பொடி - சுகந்தம் இவைகளை நிறைந்த பந்திச்செண்டுடனும் ஆந்துடனுமணிந்து, குந்திதேவியார் நந்தனாகியபாண்டவர்கட்கும் - மற்றவேந்தர்கட்கும் பிராமணஸ்திரீகள் ராசஸ்திரீகள் முதலிய யாவருக்குஞ் சம்பந்தத்தட்டுடன் மரியாதைத் தாம்பூலமும் வைத்து, இப்படி எம்மன்னருங்கண்டு சந்தோஷப்படும்படியாய்ச் சகலகாரியங்களுஞ் சம்பிரமமாய் நடந்தன.

ஸ்ரீதனச் சிறப்பு.


கேட்டீரோஜெனமேஜெயமகாராஜனே! இப்பால் விராடராஜனானவன் தன்குமாரத்திக்கு ஸ்ரீதனங்கொடுக்க யத்தனித்து, நவரத்தின கசிதப்பணிகள் - முகபடாம் - வீரதண்டை - தீரதண்டை - அவுதா - இவைகளுடன் சேர்ந்தயானைகள், தூராமுதலிய முத்துக்குச்சுகள் - கழுத்துக் குப்பிகள் - தமிச்சிப்பில்லைகள் - பாதசாவண்டையங்கள் - பின்கவரி - முன்கவரி - கல்லணை - இவைகளுடன் கூடிய குதிரைகள், பொன் - வெள்ளி - பட்டு - இவை முதலியவற்றாலாகிய பெரிய ரதங்கள், காவ்பலங்கள், தாதிகள், சேடிகள், தோழிகள், நல்ல ஆளடிமைகள், பால்பொழியும் பசுக்கள், மேலுபர்ந்த வீடுகள், வளப்பமுள்ளமாடுகள், இளப்பில்லாக்காடுகள், ஜோதிப்பிரகாசம்பெற்ற ஆபரணத்தினுசுகள், பலவித வஸ்திரப்பட்டுப்பட்டாவளிகள், தேவேந்தர் நாட்டிலும் பூவேந்தர் நாட்டிலும் அகப்படாத அருமையான வஸ்துக்கள், சித்திரப்பொம்மைகள், விசித்திரப் பஞ்சணைகள், பெட்டிபேழைகள், தங்கக்கட்டிகள். பஞ்சலோகப்பாத்திரங்கள், அவள்படித்தசாத்திரங்கள், இவைகள் முதலிய யாவும் பற்பலவாத்தியங்களுடன் ஸ்ரீதனமாகக்கொடுத்தான். அதைகண்ட ராஜராஜர்களெல்லாருஞ் சிரக்கம்பஞ்செய்தார்கள். இதன்றியும் - இந்தக் கலியாணத்துக்கு வந்த காசாம்பூவண்ணன்முதலாகியகாவலர்களுக்கும், குந்திதேவியின் புத்திரர்களான பாண்டவர்களுக்கும், விராடபுரத்திலுற்ற சகலருக்கும், வேறுவேறாய் அவரவர்களின் ஆசாரபூசாவிதி குலமுறைக்கடுத்தபடி விருந்து போசனமும் - வெகுமதிகளும் - சந்தன தாம்பூலங்களும் - தாட்சியில்லாமற் கொடுத்து மரியாதைசெய்து பூசித்தான். மகாவன்போடு நேசித்தான். வெகுநயமாக விசுவாசித்தான். இப்பால் விராடராஜனானவன் க்ஷத்திரியவிதிப்பிரகாரம் ஐந்துநாளும் ஓமஞ்செய்து, கங்கணவர்ச்சிதமுங் காட்டி, மங்களஸ்நானமும் ஆட்டி, நல்ல சுபமுகூர்த்தத்திற் கூட்டி, காப்புதானமுஞ்செய்தான். பின்புநற்பயன்சேர்ந்த நலம்போற்செறிந்தவிற்பனவிவேகளாகியபெண்ணும் பிள்ளையுஞ்சொற்பமுதாருமல், அற்பமேனும் ஒருவரை விட்டொருவர் பிரியாமல், கற்பனை யலங்காரம்போற் கலந்து வாழ்வுற்றார்கள்.

இக்கலியாணத்தில் மந்திரலோபங் கிரியாலோபமில்லாமல் வளர்த்திய ஓமாக்கினியாகத்தால் முப்பத்துமுக்கோடி தேவர்கள் — அஷ்டவசுக்கள் - திக்குப்பாலர்கள் - துவாதசாதித்தர்கள் - முதலாகிய தேவர்யாவருந் திருப்தியடைந்து களித்தார்கள். பூசித் தன்புடனளித்த பெரும்பொருட்குவையால் வேதவேதியசாதியரியாவரும் வெகுவாய்க்களித்தார்கள். கனிந்து நற்கவி சொல்லுங் கவிவாணர்களெல்லோருங் கனகக்கொடையாற் கலிநீங்கிக்களித்தார்கள். காசினிக்குரியகாவல்வேந்தர்கள் கலியாணச் சம்பிரமங் கண்டு களித்தார்கள். பூமியிலுள்ள பேர்களெல்லோரும் போசன சௌக்கியத்தாற் புகழ்ந்துகளித்தார்கள். தரித்திரர் யாசகர்முதலிய சகலருந்தனத்தாற் கனத்துக்களித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணதேவராகிய வெண்ணுண்டவனும் பாண்டவர் முதலிய மற்றியாவரும் உத்தரகுமாத்தியின் சற்குணத்தாற்களித்தார்கள். வரைபகவெறிந்தவள்ளிமணாளனையொத்த அபிமன்னன் உத்தரையின் சரசசல்லாப வுல்லாச இங்கிதக்கலவி யமளியிற் கலந்து களித்து வாழ்த்திருந்தான். மற்ற அரசர்கள் யாவரும் இஷ்டப்படி யிருந்து செலவுபெற்றுக்கொண்டு, தங்கள் தங்கள் பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள். பிள்ளையும், பெண்ணும், பாண்டவர்களும், திரௌபதாதேவியும், சுபத்திரையும், இன்னுமுள்ள ஆண்பாலார் பெண்பாலார்யாவரும், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியோடு உபலாவியுஞ்சேர்ந்து வீற்றிருந்தார்கள்.


பாண்டவர் வெளிப்பாட்டுச் சருக்கத்தோடு,

விராடபர்வம் - முற்றிற்று.

 அருச்சுனன் துரியோதனன் கண்ணனைபடைத்துணைவரபிரார்த்தித்தல்.



 பாண்டவர்கட்காக உலூகமுனிவர் தூதுபேசுதல.



ஸ்ரீராதாருக்மணி ஸமேத ஸ்ரீகிருஷ்ணபரப்பிரம்மணே நம;

ஸ்ரீ ம ஹா பா ர த ம்

ஐந்தாவது,

உத்தியோகபர்வம்.

கண்ணன் துதி.

மீனமாகியுங் கமடமதாகியும் மேருவை யெடுக்குந்தாள்
ஏனமாகியும் ஆளரியாகியும் என்னருங் குறளாயும்
கனல்வான்மழு தரித்தகோவாகியும் அரக்கரைக் கொலைசெய்த
வாளநாயக னாகியும் நின்றமால் மலரடி மறவேனே.

சூதபுராணிகர்வாக்கியம்.

[ஓ சவுனகாதிமுனிவர்களே! இவ்வாறு ஆதிபஞ்சகத்தில் நான்காம்பாகமாகிய விராடபர்வத்தைக்கூறிய வைசம்பாயன முனிவரை ஜெனமேஜய மகாராஜன் பணிந்தெழுந்து, சுவாமி! பாண்டவர்களுந் திரௌபதாதேவியும் தங்களுடைய சுந்தரவுருவமறைந்து, ஒருவருடம் விராடபுரத்திலுறைந்து, மல்லர்முதலிய கீசகனாதியரைமாய்த்து, மாடுமடக்கவந்த தென்றிசைச்சேனைகளைச் சாய்த்து, திரிகர்த்தனைச் செல்லவொட்டாமற்றடுத்து, தேரிற்கட்டப்பட்ட விராடனைவிடுத்துதிரிகர்த்தனையும் சேனைகளையும் விரட்டிஒட்டி, தென்றிசையில் ஜெயஸ்தம்பமும் நிலைநாட்டி, உத்தரகுமாரனும்பேடியும் உத்தரதிசைச்சென்று, உவரிபோலொலிக்குஞ் சேனைகளைக்கண்டு கலங்கிக் காலோட்டங்கொண்ட உத்தரனைக் காண்டீபன் தடுத்து, இராசநீதிகளை விண்டு இசைப்பித்து, வன்னிமரத்திருந்த ஆயுதங்களைக்கொண்டு யாவரும்பயந்தோடவடித்து, வஸ்திரங்களுமாடுகளுங் கைக்கொண்டுவந்து, மன்னரைவருங் கொலுவீற்றிருந்து, மச்சதேசாதிபனும் சுதர்க்கணையு மனமகிழ்ந்து, வையகத்தார் முதல்மன்னர் மண்டலீகர்களும்புகழ்ந்து, வாளபிமன்னுவுக்கு வைபவத்துடன் உத்தரையை மணந்து, வரிசையாகக்கொடுத்த உபலாவியத்திலிருந்து, மங்கையர்முதல் தங்குலச்சுற்றங்கள் யாவருங்கலந்து, சகலவாழ்விலுஞ் சிறந்தார்களென்று இதுகாறுங்கேட்டுமனமகிழ்ந்தேன். இப்பால் ஐந்தாம்பருவமாகிய உத்தியோகபருவத்தையும் கிருபைகூர்ந்துதிருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று ஜெனமேஜெயமகாராஜன் கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.]

அருமறைமுதல்வனை யாழிமாயனை, கருமுகில்வண்ணனைக் கமலக்கண்ணனை,
திருமகடலைவனைத் தேவதேவனை, இருபதமுளரிகளிறைஞ்சி யேத்துவாம்.

முதலாவது.

உலூகன்றூதுச்சருக்கம்.

எங்கும் விரிந்த கங்குல் அகற்றிமங்குதலில்லாப் பொங்கியகிரணத் திங்கள் குலத்தில் தங்கமாயுதித்த சிங்கமே கேளும்! பாண்டவர்கள்பதின்மூன்றுவருடமுமீங்கி, வன்னிமரத்தில் மறைத்துவைத்த ஆயுதங்களுந்தாங்கி, அவரவர்கள் புயாசலங்களும்வீங்கி, செல்வமும்மேலோங்கி, பலராமர் ஸ்ரீகிருஷ்ணர்சாத்தகி முதலாகியபாஞ்சாலன்இளம்பஞ்சபாண்டவர்பற்பல தேசபந்துஜனங்கள்தௌமியாச்சாரியர்முதலியவேதவிப்

பிராள் சமஸ்தமான பேர்களுப்பொருந்த அக்கியானம்விட்டுநீங்கிய சுக்கியான சூரியர்களைப்போல் உபலாவியத்திலிருந்த ஐவர்களைச்சகலஅரசர்களுநோக்கி வனவாசத்தில் நடந்தமசுத்துவங்களையுங் கேட்டு மகிழ்ந்து, இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு என்னயோசனைசெய்து இருக்கின்றீர்கள் எங்களுக்கு உத்தரவுகொடுத்தால் இப்போதே அஸ்தினபுரத்திலிருக்கும் துரியோதனன்முதலாகிய புத்திரமித்திரவருக்கத்தாரை முடித்துப்போட்டு தங்களுக்கே சகலசுபசந்தோஷங்களும் உண்டாகும்படியாகச்செய்து போடுகிறோமென்று சொல்லக்கேட்டு, தருமராஜன்புன்னகைசெய்து, இதுஞாயமே தாங்களெல்லோரும் என்பேரில் இருக்கும்பக்ஷத்தினால் சொல்லுகின்றீர்கள். ஆகிலும் (பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினோர் காடாள்வார்) என்னும்பழமொழிஇருப்பதினால்நாம் சற்றுயோசித்து ஒருதூதுபோக்கிஅறியவேண்டிஇருக்கிறது. மேலும் இஷ்டதெய்வம்போ லிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய இஷ்டப்படிநடப்பதே நமக்கு நஷ்டமில்லாத ஜெயமென்றுசொல்லி, தருமபுத்திரமஹாராஜன் ஸ்ரீகிருஷ்ணபகவானை நோக்கி இனி நடக்கவேண்டியதற்குத்தாமே யோசிக்கத்தக்கதென்று சொல்லவும், கோவர்த்தனமென்னுங் குடையினால் கல்வருஷத்தைத் தடைசெய்தருளிய ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுவதாயினர்.

கேளுங்கள் நமதுமுக்கியபாக்கியங்களுக்குஉரிய மன்னர் மண்டலீகர்களே! வணங்கா முடிபொறுத்த துரியோதன மஹாராஜனனவர் ஆதியிற்சூதாடிபாண்டவர்களுக்கு உரித்தாகியமண்மனைமுதலியபாக்கியங்களைப் பறித்துக்கொண்டதும் அல்லாமல், தருமபத்தினியாகிய பாஞ்சாலியையும் சபையில் மானபங்கஞ்செய்து பாண்டவர்களை பனிரண்டுவருடம்காடேகதியாகத்திரியச்செய்து நாடேபதியாகநீதிநடாத்திவந்த அரவகேதனனுடன் மறுபடியுஞ்சூதாடி, அவன்கைக்கொண்ட இராச்சியத்தை ஐவர்கை கொள்ளுவதுவே ஞாயம் அல்லாமல்,சேனைசைனியங்களுடன்எதிர்த்துவில்முதலிய அஸ்திர ஆயுதங்களினால் யுத்தம் புரிந்து வெற்றியடைந்து பட்டாபிஷேகபாக்கிய இராச்சியத்தைக் கைக்கொள்ளுவோம் என்றுநினைப்பது இராஜநீதியிற்கிடையாது. ஆனால்பூர்வம்சூதாடிய சபாமண்டபத்தில் வீஷ்மர்துரோணர்முதலிய பெரியோர்களுக்கு நேராகப்பனிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடம் அக்கியாதவாசமுஞ்செய்து பாண்டவர்கள்வெளிப்படுவார்களேயாகில் அவர்களுடைய இராச்சியங்களை அவர்களுக்கேகொடுத்து விடுகிறேனென்றுதுரியோதனன் சொல்லியவாக்கியம்ஒன்றுண்டு. அதனால் ஒருதூதுஅனுப்பி ஆதியிற்சொல்லிய உறுதியின்படிக்கு அவர்கருத்தை அறியத்தக்கதே கடமை என்று கண்ணன்சொல்லிய கட்டுரையைக்கேட்டு,அண்ணனாகிய வெள்ளைவண்ணப் பலராமர் சொல்லுகின்றார்.

மண்ணினை ஆளும் அன்னாலேகேளுப்! அழகிய சமுத்திரத்தை ஆடையாகத் தரித்தருளிய பூலோகத்தில்துரியோதனமகாராஜனுடைய சாமர்த்தியங்களையும் தருமபுத்திரமகாராஜன்முதலிய தம்பிமார்களின் வல்லமைகளையும்பற்பலதேசத்தரசர்களும்மற்புயவீரத்தலைவர்களும் அறியும்படியாக விருப்பமுள்ளபெருஞ்சூதாடிச்செயித்து,சகலபாக்கியங்களையும்கைக்கொண்டு பதின்மூன்றுவருடம் வினைக்கடந்துபோகும்படிசெய்த துரியோதனராஜனிடத்திற்கு மறுபடி தூதுஅனுப்பியும் யுத்தஞ்செய்தும் சூதினால் தோற்ற பூமியை லச்சையில்லாமல்வாங்க யோசிக்கும் யுத்தி கொடியதீயபுத்தி என்று காமபாலன்சொல்லவும்,சமீபத்தில் இருந்ததம்பியாகிய சாத்தகி சபையனையுறுக்கிக் கண்கறுக்கநோக்கி, பளா! பளா!! வெகுநேத்தி, இப்படியா நீர் எண்ணங்கொண்டது; உமதுதிருநாவினிடத்திலிருந்து பிறந்த வார்த்தையானது தேவரீருடைய திருமேனியின்வெளுப்பைப் பார்க்கிலும் மிகவும்வெளுத்தது என்றுபலபத்திரருடையமனம்வருந்தும்படியாகச் சொல்லவும்; அதுகேட்டு அடுத்தஅன்பர்களுடைய இடுக்கங்களையும் புயல்வண்ணனாகியஸ்ரீகிருஷ்ணதேவர்கரம் அமைத்து,யான்கூறியவசனயுத்தியிலும் அண்ணைஅவர்கள் பலராமர்சொல்லிய மொழியிலும் பிரயோசனமில்லை. இனிஎவர்களாகிலும்கட்டுரையாகிய யுத்திகளைச் சொல்லுங்களெனவும், ஆதிசேடனுடைய சிரோரத்தினப்பிரகாசங்களினால் உலகத்திலுள்ள இருள் கெடும்படியாகிய வளப்பங்கொண்ட பாஞ்சாலதேசத்திற்கு இறைவனாகும் துருபதேயமகாராஜன் சொல்லுகின்றான்.

ஓமன்னவர்களே! தருமநீதிப்பெருமைதவறாமல் செங்கோல்செலுத்தியும், நான்குவேதம ஆறுசாஸ்திரம் கலைக்கியானமுதலிய நன்னூல்களெல்லாந் தெரிந்துணர்ந்தும், உச்சமாகிய பேதாபேதங்கள் ஒன்றும் உணராதபரிசுத்த உள்ளமுடையவர்பலபத்திரராகையால் முன்பின் யோசிக்காமல் இந்த வார்த்தையைச் சொன்னார். அதற்காககுரூரத்துடன் கொடியவசனங்களினால் கோபிக்கவேண்டாம். சபைதனில் ஒருவர் சொல்லியவசனம் சம்மதியில்லாவிட்டால்உடனே அதைமறுத்து மறந்துவிடவேண்டியதே முறைமைஎன்றான் பாஞ்சாலராஜன். அப்போது மச்சதேசாதிபதி எழுந்து மாயோன்முதலாகிய மன்னவர்களைநோக்கி ஐயா! பாபத்தையும் கோபத்தையும் லோபத்தையும் ஆபத்தையும் பொருளாகக்கொண்ட அரவக்கொடியோன் மோசமாய்ச்சூதினால் கவர்ந்துகொண்ட பூமியை அபேக்ஷிக்கஇல்லை. பாஞ்சாலியை வஸ்திரபங்கஞ்செய்தகாலையில் அந்தச்சபையிலிருந்த பெரியோர்களுக்குமுன்பாக நாங்கள்கூறியசபதம்முடிக்கவேண்டியவிதத்தை யோசிக்கின்றோமென்று ஐவர்மொழிந்தால், அதைதீயபுத்தி என்று இந்தப்பலபத்திரர்சொல்லலாகுமா? யாவரும்பிழைக்கும்படியாகியநன்னீதி

யைச்சொல்லும் துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் ஒருதூதுபோக்கி அறியலாமென்றுசொல்லியதே இராஜமுறைமை அதுவேவேதவாக்கியத்திறமை. அந்தப்பிரகாரம் தூதுபோய் அவன்இசையாத கருத்தை அறிந்துகொண்டு இப்போதே சென்று யுத்தஞ்செய்தாலும் பெரிதன்றுஎன்று மச்சதேசாதிபதி சொல்லவும், துருபதேயமகாராஜன் காசாம்பூவண்ணனை நோக்கி, சுவாமி! இதோஇருக்கின்ற வேதவிப்பிர சிலாக்கிய விண்மணிபோன்ற உலூகமாமுனியாகிய பௌரோகிதர் சதுர்வித உபாயங்களுந்தெரிந்த பரிசுத்தர் இவரை இன்று தூது அனுப்ப நினைப்பீராகில் அதற்கு இவரேயோக்கியம் இதுவேஎங்கள்பாக்கியம். என்று உரைக்க, அந்தச்சபையிலுள்ள பற்பலமன்னவர்களின் மனப்பொருத்தத்தையும் உதிஷ்டிரன்முதல் உயர்ந்ததோளினையுடைய தம்பிமார்களின் சிந்தைஉறுதியையும் நடக்கவேண்டியகாரியங்களையும் கண்ணபிரான் நிதானித்து, சபையைநோக்கி களித்திருக்குந்தருமநந்தனனைப் பார்த்து, தோஷ மோச குற்றங்களைப் பூஷணமாகக்கொண்ட சுயோதனன்தனக்குப் படைத்துணைவரும்படியாகதிடவீரசாத்திரபராக்கிரமஆண்மிக்கையைஉடைய அரசர்களுக்குதூது அனுப்புமுன்னமே, உமக்குப் படைத்துணை வரும்படியாக முன் சாக்கிரதையுடன் தூதுஅனுப்பிவிட்டு; அப்பால்உமது கருத்தைச்சொல்லி மறுமொழிகேட்டு வரும்படியாகத் திருதராட்டிரனிடத்திற்கு உலூகமாமுனியை தூதுஅனுப்பும் என்றசொல்லி, முடிமகிபர்அடிபணியச் செலவு பெற்றுக்கொண்டு, அசோதைப்பிராட்டியார்கட்டிய உரலுடன்ஊர்ந்த உத்தமன்பலபத்திரர் சாத்தகி முதலிய பேர்களுடன் துவாரகை போய்ச் சேர்ந்தார்.

இப்பால் தருமராஜனை சபையிலிருந்த அரசர்களெல்லோரும்எழுந்து வணங்கிஐயா! இந்தஉலூகமாமுனியை அஸ்தினாபுரத்திற்குத்தூது அனுப்பி தங்களுக்கு இராச்சியம்வரும்படியாகிய விதங்களெல்லாம் பேசச்சொல்லி, அதற்குத்திரிதராட்டிரனும்துரியோதனனுஞ்சொல்லியனுப்பும் வார்த்தைகளைக்கேட்கும் போது உங்களுக்குப் பிரதிகூலமாயிருக்குமாகில்உடனே ஓலையும்தூதும் அனுப்பினால், யாங்களியாவரும் சதுரங்கசேனைகளுடன் ஆயுதபாணியாகப் படைத்துணைவருகிறோம். தேவரீருக்கு மாமனாராகிய பாஞ்சாலராஜனும்விராடபூபதியும் உங்களைவிட்டுநீங்கி இருக்கமாட்டார்கள். நாங்கள் அவ்வளவுபாக்கியஞ்செய்யாமற்போனாலும் உங்களுடைய சுகதுக்கமே எங்களுடையதாக எண்ணி இருக்கிறோம் ஆதலால் விடைதாரும் என்றுகேட்கவும், தருமராஜன் எழுந்து அவர்களைத் தழுவிக்கொண்டு சந்தோஷத்துடன் உத்தரவுகொடுக்கப்பெற்று, தங்கள்தங்கள் பட்டினம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு முரசத்துவசனானவன் தம்பிமார்கள் பாஞ்சாலன்விராடன் முதலியபேர்களோடுசபையிலினிதாகவிருந்து, ஸ்ரீகோபாலகிருஷ்ணனுடைய உத்தரவின்படிக்கு இவிடத்தில்வந்திருந்து போனமன்னவர்கள் தவிர, இங்குவராதிருந்த இறைவர்களுக்கெல்லாம் தங்களுடையயோகக்ஷேமங்களையும் படைத்துணைவந்து காக்கவேண்டுமென்று எழுதியதிருமுகங்களையுதூதர்களோடு அனுப்பிவிட்டு, உலூகமா முனிவரென்னும் பெரியோனை அழைத்து ஆசனத்திலிருக்கச் செய்து, ஐயனே! நீர் அஸ்தினாபுரம்போய் வீஷ்மாச்சாரியார்-துரோணாச்சாரியார்-கிருபாச்சாரியார்-அசுவத்தாமர் எந்தையாகியதிருதராட்டிரமகாராஜன்-விதுரமகாராஜன்-இவர்களுக்கெல்லாம் எங்களுடையவந்தனத்தை முதன்மையாகச்சொல்லி, மற்றப்பேர்களிடத்தில்நீர் போகும்தூதுக்குரியவார்த்தைகளை பேசிவரக்கடவீர் மெய்ம்மையையுடையவேதவேதியனே என்றுமொழிந்தான். அதுகாலத்திற்போதுமான தவங்களைச்செய்து பவங்களகற்றிசுபங்களுடன்மனவுறுதிபெற்றிருக்கும் தாணீகனாகிய துருபதேயமகாராஜனனவன் எதிரில் இளஞ் சூரியனைபபோல் பிரகாசித்திருக்கும் வேதபண்டிதனுடைய மலர்ந்த ஒளிமுகத்தைப் பார்த்து, நீலகண்டனுக் கொப்பாகிய உலூகமாமுனியே! நீர் தூதுசென்று பாண்டவர்கள் சிறப்புபெறும்படியாக அஸ்தினாபுரிக்கு அரசாகிய திரிதராட்டிரமகாராஜன் வீஷ்மர்-துரோணர்-கிருபர்-அஸ்வத்தாமர் -விதுரர்-முதலியவர்களின் அரண்மனைக்குச் சென்று, தனித்தனியாககண்டு சாஷ்டாங்கநமஸ்காரம்புகன்றார்களென்றுநவின்று, நாள்தோறும்பழகி, அவர்களிடத்தில் அதிகவிசுவாசநேசமாகி, வீஷ்மர்முதலிய மற்றவர்களுக்கெல்லாம் ஐவர்மீது அன்புவரும்படியாகநடந்துகொண்டு, வணங்காமுடியோனைக்கண்டு, உமதிஷ்டப்படிக்கு பதின்மூன்றுவருடம் காட்டிலும்நாட்டிலும் காலங்கழித்துவந்த காவலர்களுக்கு நீர்முன்பு இராசசபையில் சொன்ன வண்ணம் இனி நாடுகொடுப்பீரா இல்லையாவென்று அவனதுநினைப்பின்கருத்தை நிதானித்துணர்ந்து, தாமும் தகுந்தபடி தருமங்களைப்புகன்று (பக்கச்சொல் பதினாயிரமென்பதுபோல) அங்குள்ள பெரியோர்களாலும் பேசச்செய்து, கலங்கா மனத்தினராகிய தேவரீர் அவ்வவர்களுடைய காரியபாகங்களைகண்டறிந்துகொண்டு சீக்கிரமிவிடம்வந்து சேரவேண்டியதென்று இருகரங்குவித்து யாவரும் காலிற்பணிய அவர்களுக் கெல்லாம் ஆசீர்வதித்து, வாயுவேக மனோவேகமுடைய வண்பரிபூட்டிய விண்தொடுமிரதத்தில் ஆரோகணித்துக்கொண்டு உபலாவியத்தைவிட்டுப் புறப்பட்டார்.

பெண்களுடைய கண்களென்னும் வண்டுகள் மொய்க்கார்த மலர்மாலை அணிந்த உலூகமாமுனிவர் அஸ்தினாபுரிக்குச்செல்லுமுன்னமே, அஸ்தினாபுரியில் துரியோதனன் முதலாகிய தம்பிமார்களும், வீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களும், அசுவத்தாமா கர்னன் முதலிய படை மன்னர்களும், வீராதிவீரர்க

ரும், சூராதிசூரர்களும், மற்றியாவர்களும் விராடபுரத்தில் அர்ச்சுனன்கையில் அடிபட்டு, மடக்கியமாடுகளையும் உடுத்தியவிருதுவஸ்திரங்களையும் அவர்களுக்கு ஒப்பிவைத்துவிட்டு பகலில்வர வெட்கப்பட்டு, எல்லோரும் நித்திரைசெய்யும் அர்த்தராத்திரிவேளையில் பச்சைபுதிரம் பாயும்படியாகியபுண்கள்நோவும்பவிசும்பலமுங்குன்றிப்போகவும், தேகஞ்சாகவும் தங்கள் நிலையைத் தாங்களே நடவிக்கொண்டு தனித்தனியே அத்தினபுரத்தைச் சார்ந்து, நித்திரையிற் சோர்ந்து, அன்று இரவுவிடிந்தபின்பு யாவருஞ்சென்றுசபையில் நிறைந்து, தங்கள்முன்புவந்தவர்கள்முகங்களை பார்த்து வந்தனைபுரிந்து மூகம்வியர்த்து, அவருள் கள்ளமிருந்த உள்ளத்தினனாகிய துரியோதனனானவன் பெரியோருள்ளம்வருந்தவிள மடுவானாகி, பெரியவெள்ளம் நிறைந்த கடலென இரைந்த எள்ளுவிழுந்தால் எடுக்கொணாதிசைந்த அனேகவெள்ளஞ் சேனையும்வீரருஞ்சூழ விராடபுரப்போய், வேந்தரைவரும் பாஞ்சாலியுடனேபதுங்கியிருந்ததும், பேடியாய் அருச்சுனன் பேணியேவந்ததும், உருவந்தெரிந்ததும் யுத்தஞ்செய்ததும், பசுக்களைத் திருப்பிக்கொண்டு போனதும், இவைகளையெல்லாம் திரிதராட்டிரனுக்குங் காந்தாரிக்கும் நமஸ்கரித்துச்சொல்ல; அவ்விருவருங் கேட்டு பெருமூச்சுவிட்டுவெட்கப்பட்டு சபைக்குவராமலிருந்து, அப்பாலொருநாள் இராஜமண்டபத்திற்குவந்து உபலாவியத்திலிருக்கும் பாண்டவர்களினுடையதினச்செய்கைகளை அக்கம்பக்கத்தில் விசாரித்து வரும்படியாகத் தூதரைஅனுப்ப, அவர்கள் உடனேசென்று பாண்டவர்கள் வெளிப்பட்டதும், அபிமன்னுவுக்கு உத்தரையை சகலவிதசம்பிரம மங்களஜயத்துடன் விவாகம்நடத்தியதும், அவிடத்தில் வந்திருந்த அரசர்கள் இன்னாரின்னாரென்பதும் அவரவர்கள் அஸ்தினபுரத்தின்மீது படையெடுக்கக்கருதியவிதமும், தருமராஜன்முதலியபேர்கள் செய்யும் யோசனையும், துரியோதனமகாராஜன் சகலதேயத்தரசர்களையும் படைத்துணைக்கழைக்கத்தூது அனுப்புமுன்னமே நம்முடையதூது அனுப்பவேணுமென்றதும், உலூகமாமுனியை அத்தினபுரத்தினுக்குத் தூது அனுப்பிவிடச்சொல்லி கிருஷ்ணமூர்த்திதுவாரகைக்குப்போனதும் படைத்துணைவருவதற்கு தேசங்களில் தூதர்களையும் ஓலைகளையும்போக்கி இங்கே உலூகமகாமுனியைப்பயனப்படுத்தியதும் தெரிந்துகொண்டுவந்து, திரிதராட்டிரனுக்கும் துரியோதனனுக்குஞ் சொல்ல, அதைக்கேட்டு ராஜன்கொலுவுக்குவந்து, துச்சாதனன் - கர்ணன்-சகுனி-வீஷ்மர்-துரோணர்-கிருபர் - முதலான பெரியவர்களுக்குந்தெரியப்படுத்தவும் அதையாவருங் கேட்டு ஆலோசனைசெய்து, பாண்டவர்கள் படைத்துணை சேர்க்கும்போது நாம் ஆலசியமாயிருக்கலாகாது என்று திரிதராட்டிரனுக்குச்சொல்லி, இப்போதே வணங்காமுடி பொறுத்தமன்னன்வன் துவாரகைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய உதவியைப் படைத்துணையாகக் கொள்ளல் வேண்டுமென்றும் (ஆயிரங்கோடி நக்ஷத்திரமொன்றாய்ச் சேர்ந்தாலும் ஓர் சந்திரனாகமாட்டா) வென்றும் (பன்றிபலகுட்டி ஈனுவதினும் யானைக்கன்று ஒன்றுகிடைத்தால்பெருமையன்றோ) என்றும், நிச்சயித்துக்கொண்டுதேசதேசமெங்கும் செங்கோலும் ஆக்கினைச்சக்கரமுஞ்செலுத்தும் அரசர்களுக்குத்தூது அனுப்பிவிட்டு, உடலுமுயிரும் போலும் பாலுநீரும்போலும் ஆத்மகோடிகள் தோறும் அமைந்த பகவானிடத்திற்கு, இரதகஜதுரகபதாதிகளுடன் அரவகேதனனை அனுப்பிவைத்தார்கள்.

அப்படியே துரியோதனமகாராஜனும் துவாரகாபுரி வீதியில் வரும்போது அநேகங்கோடி அகண்டவீதிகளும் அவ்வீதிகளில்நிறைந்தமாடமாளிகைகளும் அவைகளைச்சூழ்ந்த பவழக்கால்களும், பூங்காவனங்களென்னும் முல்லைக்காடுகளும், அக்காடுகளில்நிறைந்தமயிற்குயிற்பேடுகளும், குளங்களில்நிறைந்த அன்னப்பேடுகளும், மலையிலமைந்த யானைக்கோடுகளும், சவுக்கடியென்னுமணிமேடைகளும்சகலவளமும்உற்பவிக்கும் கடைகளும், சங்கினங்கள் தவழுமடைகளும், சரஞ்சரமாகதொங்கும்பூந்தொடைகளும் ஸ்ரீமன்நாராயணன் ஸ்ரீகிருஷ்ணனாகஇவ்விடத்தில் அவதரித்திருக்குந்தன்மையைக்கேட்டு ஆதிசேடன்தனது ஆயிரம்பணமகுடமும்விரித்து சிரோரத்தினங்கள் பிரகாசிக்கும்படியாக மண்டலாகிருதியாய் வளைந்து கொண்டதைப்போலும் வானமளாவியிருக்காநின்றமதிலும்அதின் மேற்பொருந்திய சிகரகோபுரங்களும், மதிலுறுப்புக்களும், க்ஷீராப்திநாதன் நம்மைவிட்டுநீங்கி இங்ஙனம் அவதரித்திருக்கின்றானென்று உட்கொண்டு பாற்கடலானதுவந்து பாதலம்வரையில் ஆழ்ந்துவட்டமாகிய மதிலைச்சூழ்ந்து கருநிறங்கொண்டு இருப்பதையொத்த பலவிதபுட்பங்கள் நிறைந்தஅகழும், அவைகளுள் ஏறுந்துறைக்கும் இறங்குந்துறைக்கும் அமைந்திருக்கும் பளிங்குப்படிகளும், ஆகாயத்தையளாவிய அநேகங்கொடிகளும், அதின்மேல் அமைத்த சிகரமுடிகளும், அரவணைதுயின்ற எங்கள்பெருமான்ஐவர்க்குச் சகாயன் அவர்களுக்கேபடைத்துணையாகுவான் அல்லாமல் உனக்குத்துணையாகமாட்டான் நீயேன்விருதாவில்வருகின்றாய் திரும்பிப்போய்விடுமென்றுநகரமாகிய பெண்கைகளைநீட்டி ஆடிக்காட்டுந் தன்மையைப்போல் அசைந்தாடுங்கொடிகளின படபடப்பும் கண்டவனாய் கிருபைக்கு உற்பத்திஸ்தானமாகிய தாமரைக்கண்கள்நிறைந்த மஹாவிஷ்ணுவந்து அவதரித்திருக்கின்ற வடமதுராபுரியான ஸ்ரீவைகுந்தமாநகரம்போலும் மெய்ஞ்ஞானச்சுடர்விரிந்து அஞ்ஞான இருள்அவிந்து அழகியமாணிக்கத்தீபங்கள் மிகுந்து சோதிப்பிரகாசங்கலந்து விளங்கியவளங்களையுடைய துவாரகாபுரிவீதியில், சித்து அசித்துதெரியாத துரியோதனன்வருங் காரியங்களைத் தெரிந்துக்கொண்ட அரிபரந்தாமன் அருச்சுனனைவரும்படியாகத் தூது அனுப்பிவிட்டு, வாசற்காவலோரை நோக்கி புவனபூபதியாகிய துரியோதனராஜன்வந்தால் எனக்கு அறி

விக்க வேண்டுமென்று எண்ணுமனுந்தடைபண்ணும
னும் விட்டுவிடக் கடவீர்களென்று உத்தரவுசெய்து,
அரண்மனைக்குச்சென்று பவளத்தினாலும் பளிங்கினா
லும்ஏற்படுத்தியமண்டபத்தில்மரகதவாசலில் வயிரக்
கொலுசுகள்அசைந்தாடபிரளயகாலத்தில் மிதந்தசை
ந்தாடும் வடபத்திரசாயிபோலவும், பாற்கடலில் பரு
மணிச் சிகர ஆதிசேடன்மேற்கியானநித்திரைகொள்
ளும் பதுமநாபன்போலவும், அன்பருள்ளத் தமர்ந்த
அருளாழிவேந்தன்போலவும் சயனித்துகொண்டுசந்
திரகலையொடுக்கிச்சூரியகலைபோடும்படியாகக்காட்டி
அதிசுநித்திரைஎன்பதுதோன்ற அன்பெல்லாம் அரு
ர்ச்சுனனிடத்திலூன்ற அழகிய பிரதமைகள் கொலுசு
களைக்கொண்டசைக்கஐயனிருந்த அக்காலத்தில்அரவ
க்கொடியோன் தன்னுடன்கூடவந்த தளங்களைவெளி
யில்நிறுத்தித்தான் ஒண்டியாகவந்து ஒருவரையுங்கே
ளாமல் பவளக்கால்மண்டபம் எதிரில்தோன்று பள
பளப்பின் பிரகாச விந்தையினால் எதிர்நோக்கினன்
மிகுந்த நித்திரைகொள்வதுபோ லிருந்தமாயனை நா
மா எழுப்புகிறது? அவனாக எழுந்தபிற்பாடு பேசிப்
போகலாமென்றுநினைத்தவனாய்,திருவடிப்பக்கத்தில்
ஒருஉயர்ந்த ஆசனம் இருக்கக்கண்டு,இவன் எம்மாத்
திரப்பஞ்சை இவன்காலடிப்புறத்திலேயா நாமிருப்ப
தென்றுகோபங்கொண்டு, இவ்விடத்தில்இவனுக்காக
நாம் காத்திருக்கத்தகாது என்றுநினைத்து அந்தப்பீ
டத்தை இழுத்துக்கொண்டுவந்து சுவாமியின் திருமு
டிப்பக்கம் போட்டுக்கொண்டு உளுக்கார்ந்திருக்கும்
போது, இவனுடைய உள்ளத்தி லிருக்கும் கள்ளம்
அறிந்த கடவுள் இன்னம் வரவில்லையே பற்குனன் எ
ன்றஎண்ணங்கொண்டுஇருக்கையில்,திண்ணியனாகிய
கிரீடி துவாரகைக்கு நண்ணி இரதம்விட்டு இறங்கிப்
பள்ளியறைக்குட்சென்று பகவானைக்கண்டுதிருவடிப்
புறத்தில் மண்டியிட்டு இருந்து இருகரங்களினாலும்
இதழ்விரிந்தசெந்தாமரைக்கமலம்போன்றஸ்ரீபாதங்
களைத் தடவிப் பிடிக்கும்போது, நித்திரைக் கலைந்து
மேற்போர்வையாகியநவரத்தினபீதாம்பரத்தைநீக்கி
திருக்கண் மலர்ந்து நாற்புறத்தில் பார்வைநோக்கும்
போது அருச்சுனனிருக்கக்கண்டுஎப்போதுவந்தாய்
அருச்சுனா என்றுகேழ்க்கவும், இதுதான்வந்தபயனா
யென்றுசொல்லி சாஷ்டாங்கமாகச்சேவிக்கவும்திக்கு
விஜயங்களும் சத்துருகண்டனமும் மனோபீஷ்டமும்
உண்டாகக்கடவதென்று மங்கள ஆசிர்வசனஞ்சொல்
லி, மறுபடியும் மாயன் நித்திரைமயக்கம் நீங்காதவர்
போல்கண்களைமூடிக்கொண்டுஉடனே அருட்பார்வை
நிறைந்த அரவிந்தக்கண்கள் மலர்ந்து பற்குனனைப்
பார்த்து பக்கத்தில் உளுக்காருமென்று பகர்ந்தார்.

அவ்வுரையைச்சிரமேற்கொண்ட காண்டீபனெழுந்
து இருகரங்குவித்து ஓதேவதேவா! தேவதாசார்வ
பௌமா!சர்வலோகசகாயா!சுவாமிபராக்!எங்கள் அ
ண்ணாவாகிய அரவத்துவஜமகாராஜன் வந்திருக்கிறா
ரென்றுசொல்லவும் திடுக்கிட்டு திக்கென் றெழுந்து
எதோநான்பார்க்கவில்லையே அடடா!!இதுஆச்சரியம்
என்னைஇந்தத்தூக்கம் மோசஞ்செய்தது நானெம்மா
த்திரம்பஞ்சை பஞ்சாசத்கோடி பூமண்டலாதிபதி இ
விடத்தில்வந்து காத்துக்கொண்டிருக்கும்படியாகநே
ரிட்டதே இதுஎன்னபாவம், இந்தவாசற்காவலாளர்க
ளும் தெரிவிக்காமற்போனார்கள் என்றுமிகச்சிறிகோ
பங்கொண்டு எழுந்துநின்று, நந்தியாவர்த்த மாலைய
னைப்பார்த்து, ஓசந்திரகுலத்திந்திரனே!நமக்கும்உங்
களுக்கும்பேதமில்லாதிருக்க இங்குவந்த நீர் என்னை
எழுப்பிவிடலாகாதா, உபமைவிடவாயெனக்குநித்தி
ரை நீர்வந்ததே என்பாக்கியம் இந்தமாநகரஞ்செய்த
தேயோக்கியம். ஆகிலும்நான் அறியாமல் நடந்தது
அபசாரம். இதைப்பொறுத்தருளவேண்டுமென்றுஇ
றுகக்கட்டி ஆலிங்கனஞ்செய்துக்கொண்டு, எது அப
ரூபமாயிருக்கின்றது நீங்கள்இருவருஞ் சேர்ந்துவந்த
து ஆச்சரியம்! ஆச்சரியம்!! சேனைசையின்ய மேளவா
த்திய சத்திரசாமரமுதலிய சின்னங்களெங்கே என்று
அவன்மனதில்தன்னை இலேசாகநினைத்த தாமேஎடுத்
து துரியோதனன்மனதில் படும்படி அதிவினயங்க
ளாகச்சொல்லி என்னையொரு பொருளாக நினைத்து
இவ்வளவுதூரம் பிரயாசைகொண்டுவந்தது யாதுகார
ணமோவதை என்னிமித்தத்தில் காத்திருந்தோமெ
ன்று கோபங்கொள்ளாமல் தெளிவில்லாத யான்தெ
ரிந்துகொள்ளும்படியாகச் சொல்லுங்களென்றுகேட்
கவும், அப்போதுதுரியோதனன் அகமகிழ்ந்துமுக
மலர்ந்து நம்மிடத்தில்வெகுவிதஉபசாரத்தையும் பய
த்தையுங் கொண்டிருக்கின்றாரென்று மிகுந்தஇறுமா
ப்புடனே, ஐயா! நாளைநடக்கப்போகிற பாரதயுத்
தத்திற்கு உம்மைப் படைத்துணையாகக் கொண்டு
போகவந்தேன் என்றுசொன்னான்.

உடனே அருச்சுனன்வணங்கி ஆதீனதயாளுவா
கியதெய்வமே! எழ்மையாகிய எங்களுக்குப்படைத்து
ணைவேண்டி இங்குவந்தேனென்ன இருவர்மொழிக
ளையும் ஒருமொழியாகக்கேட்ட என்னையன் ஆபத்
பாந்தவாகிய சங்குசக்கரக்கையன்சுயோதனனைநோ
க்கி மெய்யன்பாகவிளம்புகிறார் வையகங்காக்குமைய
னே! துய்யனாகிய தருமராஜனுந்தம்பிமார்களும் வெ
ளிப்பட்டு விராடபுரத்தி லிருக்கக்கேட்டு யான்சென்
றபோது, என்னைஎதிர்கொண்டு கண்டு வார்த்தைக
ளாடி இருக்குங்காலையில் இனிமேல் எங்கள்சபதநட
க்கப்போகின்ற பாரதயுத்தத்திறகு தேவரீர் படைத்
துணையாகவேண்டுமென்று வினவுஞ்சமயத்தில் யாம்
தடுத்து, துரியோதனமகாராஜனும் படைத்துணைகே
ட்பாரல்லவா?எனக்குநீங்களிருவரும்இரண்டுபுஜமும்
இரண்டுகண்களுமாம் ஆசையால் ஒருவரைநீக்கி ஒரு
வருக்குப் படைத்துணைவரமாட்டேன் என்னை நீக்கி
விடவேண்டுமென்று மறுத்துச்சொல்லியும் பிடிவாத
மாக வாதித்தபோது ஒருயுக்திவார்த்தை சொல்லி
வந்தேன் அதென்னவென்றால் யான்நித்திரைசெய்து,

எழுந்திருக்குங்காலத்தில் எவர்கள் என்முகத்தில்முன்
விழிக்கின்றார்களோ அவர்களுக்குநான்படைத்துணை
யாவேனென்று உண்மையாகச்சொல்லி யிருந்தேன்.
அந்தப்படியே இன்று அர்ச்சுனன்வந்து முந்திமுகத்
தில்விழித்தான் ஆகையால்அவர்களுக்கே படைத்து
ணையன்றி உமக்குப் படைத்துணையாகக்கூடாதிது
என்தப்பிதமல்ல உம்முடைய அஜாக்கிரதை முன்வ
ந்தநீர் என்னையெழுப்பிவிடாமலும் சேவகரைக்கொ
ண்டுதெரிவிக்காமலும் கைதட்டிகனைத்துஜாக்கிரதை
செய்யாமலும் வேசாகிபனனக்குப் பிரபுத்தனங்கொ
டுத்து வீண்பொழுதுபோக்கிவிட்டீர். ஐயோஇனியா
ன் என்னசெய்வேன். ஆனால் என்னைப்படைத்துணை
விரும்புவதும்எனம் நானேயுத்தகளத்தில் ஆயுதம்
ஒன்றும்தொடேன். நிராயதனைகநானொருபுறமும்என்
தமையன்முதலியசகலரும் இன்னொருபுறமுமாகஇரு
ப்பார்கள் இதுசத்தியவசனம் உங்களிருவருக்குமிந்த
இரண்டுபக்ஷத்தில் யாவர்வேண்டியது அருச்சுனாஉங்
களெண்ணத்தைச் சொல்லுங்களென்றுகேட்க, விஜ
யன்பணிந்து தேவரீரைமாத்திரம்வேண்டினேனென்
றவிளம்பவும்சலசலவென்றுநகைத்து (கிளையும்பயிர்
முளையிற்றெரியும்) என்பதைக்கேட்ட தில்லையோகிரி
டி? ஆயுதமெடாத என்னைப்படைத்துணையாகஅபே
க்ஷித்ததையே என்றுனக்கு என்னகாரியம்நடக்கும்
இந்திரன்மதகப் என்றுகேட்கவும் இணையடிவணங்கி
சுவாமி? அடியனுடைய இரதத்திலிருந்து சாரத்தி
யஞ்செய்வீராகும் மண்ணுலகிலுள்ள மகாஜனங்களும்
விண்ணுலகிலுள்ள வித்தியாதரரும்கருடகின்னரகாந்
திருவர்யாவரும்களிக்க, அசுரஇராக்கதர் அடங்கலும்
வென்று ஒருமுகூர்த்தத்தில்சத்துருக்களின்மூலவேர்
களைந்து வஞ்சினமுடித்து வாழ்விற்சிறப்போம் அஞ்
சனமேனியாம் அண்ணாவேஎன்னவும் அப்பால் அம
லன் வஞ்சனைபுள்ள வணங்காமுடியோனை நோக்கி,
தனஞ்சயன் என்னைச்சாரதியாகக் கொண்டபடியால்
குதிரைகளைநடாத்தி இருப்பதேயன்றி எவர்களுடே
ரிலும் ஆயுதமெடுத்து அடிப்பதில்லை நான்சொல்லு
மொழியைநம்பு. இதல்லாமல் எங்கள்அண்ணன்தால
கேதனமுடையபலராமர் உமக்குச்சாக்ஷாத் மாமனு
ராகையால்அவரையுப, எங்கள்யதுவம்சத்தார்பலரை
யும், உமக்குத்துணைவர இருக்கும் எமதுபங்காளிக
ளாகிய கிருதவர்மனையும், கிருதவன்மனையும்ஒருஅக்
ரோணிசேனைகளையும், இன்னமிருக்கும் பலரையும்
படைத்துணையாகக்கொண்டுபோம் என்றுகாலத்திர
யம் உணர்ந்தகண்ணன் இன்சொற்கூறி விடைகொடு
க்க செலவுபெற்றுக்கொண்டு, பலபத்திரராகிய மாம
னைக்கண்டு வணங்கி, படைத்துணைவிரும்பி வந்ததும்
பார்த்தன்கேட்டதும் ஆயுதம் எடுப்பதில்லைஎன்று
தனக்குக்கிருஷ்ணன் இசைத்ததும்சொல்லி,அப்பால்
தாங்களும்தங்கள் தம்பிமுதலானசகலசேனையும் என
க்குத்துணையாகப்பெற வாக்களித்தனர் ஆகையால்
அவ்வாறேதாங்களும், கிருதவன்மனும், கிருதவீரிய

னும், அளவிறந்த சேனைகளும், யாதவகுமாரரும்,
படைத்துணைவாருங்களென்று பகர்ந்து செலவுபெற்
றுக்கொண்டு அஸ்தினபுரம் வந்துசேர்ந்தான்.

இவ்வண்ணந் தீர்மானித்துவந்த துரியன்அரசர்
சபையிற்புகுந்து,வீஷ்மர்முதலானோர்க்குப்படைத்து
ணைபெற்ற விதத்தைவிளம்ப, அவர்கள்கேட்டு மனம்
வருந்தி,(கடல்பெருகிநிற்கிலுங்கனை தீர்க்குநீராகுமா?
ஊற்றுச்சலங் கொஞ்சமேனும் உண்ணுநீராகும்)என்
கிறபழமொழி கேட்டதில்லையோ? அதுபோல்சேனை
ப்பெருக்கத்தில் பிரயோசனமில்லை கண்ணனொருவன்
கைவசப்படுவானுகில் அண்ணலேஉன்னையாவர்வெல்
லுவார்என்று பேசியிருக்கும்பொழுது,நகுலசகாதே
வர்களுக்குநல்லம்மானாகிய மத்திரதேசாதிபதிபாண்
டவர்களுக்குப் படைத்துணைவருகின்றார் என்றுதேச
தேசங்களுக்குச்சென்றதுரியோதனனுடைய தூதுவர்
கள்ஓடிவந்துஉரைக்க, அதைக்கேட்டுவீஷ்மர்முதலிய
மேலோர்களும் மன்னனைநோக்கி, இந்தச் சல்லியரா
ஜனையாவது வழிமடக்கிப் படைத்துணைகொண்டால்
பெரியசகாயமாகும்என்றுபுத்திவிளம்ப, இறைவனும்
இசைந்து நன்றுநன்றென்று நலம்பெறநடந்து, அஸ்
தினபுரிக்கு அடுத்தமேற்புறத்தில், கல்வியறியாக் கசு
டர்மனம்போல், கற்றறிவில்லாக் கயவர்இனம்போல்
செல்வமில்லார்சிந்தைக்கொப்பாய்; சத்தியநன்னெறி
வேறினோர்வாழ்வெனபெண்ணலங்கிட்டாபேதையர்
தாமென,தானந்தவஞ்செவந் தரியார்மனமென ஞான
மில்லார்கவிலுமொழியெனதெய்வநிந்தனைசெய்வோர்
கதியென, முள்ளுமுரடுங்கல்லுங்கரடும், புல்லும்பூடும்
பொருந்தாவழியும், நிழலிலாவெளியும் நெருப்புறும்
பாலையும், மழைத்துளியறியாமாநிலப்புழுதியும்இருக்
கும் அவ்வழியில் இறைவனுஞ்சேனையும் வெந்துவெ
தும்பி விடாய்ப்படவருவார் என்று அறிந்து இந்திர
னுலகென, பந்தர்அமைத்து பன்னீர்தெளித்துதென்
றலுக்கெதிர் சிங்காசனம்வகுத்து,மேற்கட்டிவிட்டுவி
தம்விதமாக, சாலர்கள்தூக்கி சாளரமமைத்துவாழை
கமுகுகள் வான்கரும்புடனே,தாழைஇளநீர் சரஞ்சர
மாக,பற்பலக்கனிகளும்பாயசவிதங்களும்வகைக்கொ
ருகிழங்கும்வாசனைமலர்களும்,பலவிதத்தண்ணீர்பன்
னீர்வகையும்,வாசனைப்பண்டமும் வரிசையாயூசலும்
தாதியர்சேடியர் சங்கீதம்பாட, திண்டுதிமாசுசித்திர
மேடை,பூசாவிதிகள்புரியுஞ்சாலை, போசனச்சாலைபுக
ழ்பெறஅமைத்து, கணக்கர்காரியஸ்தர்காவலர்இறை
ஞ்ச, சுக்குநீர்வென்னீர் சுத்தநீர்பன்னீர் கச்சாயவர்க்
கமும்காசாலட்டுப்,விதம்விதமாகியவிசிறிகளனேகமு
ம்,ஆலவட்டமும் அரிவையர்பிடித்தநிலைக்கண்ணுடியு
நிமிர்சாய்மரமும், படுக்கைமெத்தையும்பலவிதமலரு
ம், அறுசுவையன்னமும்அமுதெனச்சமைத்துசந்தன
புட்பந்தாம்பூலவிடயமும், வந்தவரெவர்க்கும்வழங்க
அமைத்து, மாமனார்வருகிறவழியிற்பாண்டவர், உப
சாரஞ்செய்யும் உயர்தண்ணீர்ப்பந்தல்என்றுவிளம்பி

எழுதியமைத்து,அவ்விடையில்மறைந்து அரவக்கொடி
யோன் இருக்கும்வேலையில்யானைமுன்சேனையின்தன்
னினம்நெருங்கிய சல்லியராஜனும், வெய்யலில்மிகுந்த
விடாய்ப்பட்டுவருந்தி, தண்ணீரென்றே தாகமிகுந்து
காலும்மேலுங் கனலாயெரிந்து, நாவிலறண்டு நாவு
முலர்ந்து, விடாய்ப்பட்டுவந்த வேலையிலிருந்த, காரி
யத்துதருங் கணிகைமாதரும், எதிர்கொண்டோடி
இறைஞ்சியழைத்து, ஆலவட்டத்தால் ஆயாசமாற்ற
தண்சுகபரிமள ஸ்நானமுஞ்செய்து, சந்திபூசைக்கு
சந்தனம் அக்ஷதை மந்திரசெபங்களும் வரிசையாய்
நடத்தி, பொன்வாழை இலையிற் போசனஞ் செய்து
சந்தனபுட்பங் தையலர்சாற்றி, தாம்பூலவிடயந்தகுதி
யாய்க்கொடுத்து, ஊசலிருத்தி ஊசலும்பாடி, சேனை
யர்க்கெல்லாம் தேவாமிர்தம்போல்,போசனமிடவும்
புசித்தவர்மகிழ்ந்து,மார்க்காயாசம்மகிழுடன்தீர, சங்
கீதம்வீணை தாளசுரங்கள் இங்கிதமாக இறைவனுங்
கேட்டு, அகமும்முகமும் அன்புமலர்ந்து, இவ்வளவு
சம்பிரமம் இன்றுயான்கண்டேன், தீயமாபாவிகள்
சிந்தைபோல்வறண்டு, பேய்குடியிருக்கும் பேயாக்
கானகம், இப்பெருவெளியில் இவ்விதமாகசம்பிரமம்
அமைத்த தருமவானெவர்கொலோ,பொருளெலாம்
நிறைந்த புண்ணியரெவர்கொலோ, அவரென் முன்
வந்தென் அரசுகேட்டாலும், உயிரினை விரும்பினும்
உவந்துயான் கொடுப்பேன், என்று பூரித்துளம்இறு
மாந்துரைக்க,இதுவேசமயம்என்றுமகிழ்ந்து, வணங்
காமுடியோன் வரவெதிர்கண்டு, சல்லியனோடி தழுவி
க்கொளலும், இருவருந்தழுவி இன்பமாயிருந்து இப்
பெரும்வெளியில் இதம்பெறவமைத்த ஒப்பில்லாத்
தண்ணீர்ப்பந்தலால் யானும, யானையும்சேனையும்யா
வரும்பிழைத்தோம், தேவரீர்செய்த சித்திரமியாது,
சொல்லும் யான்தருவேன் சொன்னசொல் மறுக்கே
ன், மன்னனே என்றுமொழிந்தசல்லியனை கரத்தோ
டுகரமும் கண்ணொடுகண்ணும், சிரத்தொடு சிரமும்,
சேரவணைத்துப் பாண்டவர்தமக்குப் படைத்துணை
யாக ஆண்டலகசேரல் அறிந்துயான் இங்கு, பந்தல்
அமைத்து வழிபார்த்திருந்தேன், எந்தையேபடைத்
துணை எனக்காகவேண்டும், என்று துரியோதனன்
இயம்பமகிழ்ந்து, நன்றுநன்று நானும் அப்படியே,
உமதுப்புநீரும் நானுண்டேனாதலால்,இப்பவேபடை
த்துணைக் கிசைந்தேனெனினும், பாண்டவரிருக்கும்பதி
க்குயானேகி, மீண்டுவருவேன் மெய்யெனச்சொல்லி,
விடைபெற்றுக்கொண்டு வேந்தனைவிடுத்து சேனையுந்
தானுஞ்சென்றனன் இப்பால் தருமராஜனுந்தம்பியர்
யாரும், எதிர்கொண்டுவந்து இறைஞ்சிப் பணிந்து,
சகலவுபசார சம்பிரமம்செய்து, சிங்காசனத்திலிரு
ந்துக்ஷேமங்கள் எங்கோன்வினவவும் யாவுமுரைத்து
இருக்குங்காலையில் இறையாஞ்சல்லியன்,அறன்மகன்
முதலிய அரசரைநோக்கி, படைத்துணைவந்த பாட்
டையில் துரியன், தருமன்போல் தண்ணீர்ப்பந்தல்
சமைத்துபசாரஞ் சகலர்க்குமுதவி, என்னைப்படை
த்துணையாக்கிக்கொண்டான்,மன்னனே வாக்குவழங்
கியான்வந்தனன், என்மேல் மனமகிழ்ந்து உடனே
விடைதாரும் என்றுவிளம்பச் சந்திரவமிசக் குலோத்
துங்கனாகிய தருமராசன்சல்லியனைப் பார்த்து, ஓ!!
மாமா அஷ்டலட்சுமிகள் அடுப்பதானாலும், அடுத்த
பாக்கியங்கள் விடுப்பதானாலும், ஆவியையொருகாற்
கொடுப்பதானாலும், அயலார்நமமைக்கெடுப்பதானா
லும், சத்தியவசனந் தப்பலாகாது சொன்ன சொற்
சோர்வு சொல்லலாகாது, அன்னமும்பாலும் அவன்
தரப்புசித்து, இன்னமும் ஒருவர்க் கிசையலாகாது,
உண்டவீட்டுக் கிரண்டகஞ்செய்தல், உத்தமர்தமக்கு
ஒருக்காலுந்தகாது, நீர்சொல்லிவந்த நீதிதப்பாது,
போவதேவுமக்குப் பெரும்புகழாகும்,எங்கட்குச்சத்
தியம் என்றைக்குந்துணையாம், அவர்க்குநீர் படைத்
துணை ஆனீரென்றுஎமக்கொருநாளும்இல்லைவிசாரம்
வார்த்தைகொடுத்த வலிமைதப்பாது, பார்த்திபனுக்
குப் படைத்துணைபோபபோம்,எங்கட்கோர்வரமீந்
திடவேண்டும், அஃதியாதெனில் அருச்சுனன் தன்
மேல் கொடுங்கோபங்கொண்டு கொலைசெய்வே னெ
ன்று, சபதம்புரிந்து தரித்தனன் கர்னன், சாரதித்
தொழிலில் சல்லியனுமகிருஷ்ணனும், வல்லவரென்று
மானிலந்துதிக்கும் அழகிலாநூல்கள் அறிந்த வல்ல
வர்கள், இருவரேஉவமை இருவரேசமமாம், பார்த்த
சாரதியாய் பகவான்அமைந்தார், வள்ளல்கன்னற்கு
வலவனாக உம்மைஅமைப்பான் ஒருவேளை துரியன்,
அப்படிநேர்ந்தால் அருச்சுனன்மீது தன்னருள்வை
த்துக் காப்பதுன்கடனாம், என்றுதருமன் இயம்பக்
கேட்டு, சல்லியன்நகைத்துச் சந்தோஷங் கொண்டு,
அஷ்டபாலரும் அபயமென்றோட, அசுரர்அக்கண்ட
த்தவர்களும்வாட, அமரர்கந்திருவர் அன்புகொண்டா
ட, அட்டதிக்கிலும், அட்டகிரியிலும் அட்டகஜங்கள்
அணிநெற்றிதன்னிலும் துட்டகண்டகன்சுவேதவாக
னனெனப் பட்டமுங்கொடியும்பதித்தபற்குணற்குத்
துணையாம் முரசத்துவஜனேகேளும், சாரதிவளப்புத்
தனையன் தனக்குத்தேர்விடமாட்டேன் தெய்வச்செ
யலால் நேரிடுமாகில்நீர்சொல்லும்வண்ணம்நடப்பது
சத்தியம் நம்புமென்சொல்லை, சத்தியசௌசத் தவசு
நீதியில் உத்தமராகும் உங்களைச்சூதில்,ஜெயித்துவஞ்
சித்த சுயோதனன்வாழ்வு, இரவிமுன்பனிபோல்எரி
ந்துபோகும், கேடுசெய்தோர்கள் கெட்டுப்போவார்
பாடுபட்டோர்கள்பதத்திலிருப்பார் ஆடவர்திலகனே
அரசுஞ்செல்வமும்பீடும்புகழும்பெறுவாய்சொன்னே
ன் ஆதியிற்சசியை அமரர்கோன்பிரிந்து நீதால்வருந்
தி செல்வமும்பெற்றான் அத்தன்மையைப்போல் அ
டவியில்நொந்தீர் வித்தகயுத்தத்தில் வெற்றிபெறுவீர்
என்றுசல்லியன் இதம்பெறவுரைக்கத்தருமனுஞ்சல்லி
யன் தன்முகம்நோக்கி தேவேந்திரனும்தேவியும் பிரி
ந்து வருந்தியகதையை வழங்கெனக்கேட்க, மத்திர
தேசாதிபதி சொல்லுகின்றார்.

இந்திரனைப்பிரமஹத்திதோஷந்தீண்டல்.

கேளும் பாண்டுபுத்திரசிகாமணியே! முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அஷ்டவசுக்களும், கின்னரர்-கிம்புருடர்-கருடர்-நாக்கிருவர்-முதலானவர்களோடு சப்தரிஷிகளும் கூடிநிறைந்தசபையில், தேவேந்திரன் அணிமுடிப்பணிபுடன்கற்பகமாலையிலங்க, கடவுள்மணிப்பிரகாசிக்கக் காந்திருவர் தாங்குங்குடைகவிக்க, அரம்பை-ஊர்வசி திலோத்தமை-மேனகைமுதலிய அறுபத்துநாலுகோடிமாதருங்கட்டியங்கூற கலாகேந்த அடைக்காய்கொடுக்கபடிக்கம்பிடிக்க, ஆலவட்டம்வீச, கூசாமரைபோட, பீலிக்குஞ்சந்தாங்க, சுருட்டியெடுக்க ஆலாத்திசுழற்றமங்களம்லாலிசங்கீதம்பாட இங்கிதபரதநாட்டியம்ஆடக் கொலுக்கொண்டிருக்குங் காலையில், தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் கொலுச்சபைக்குவரவும் "தையலார்மயலிற்பட்டோர் தமக்கொருசெயலுமுண்டோ" என்பதுபோல்ஸ்திரீகளுடைய மையலால் மயங்கி நாட்டியம்பார்த்திருந்த வச்சிராயுதன் வந்த குருவைப்பார்த்து மரியாதைசெய்யாமல்மறந்திருக்கவும் சற்றுநேரம்நின்று கோபங்கொண்டு திரும்பிப்போகியதேவகுருவானவர் தெய்வலோகத்தைவிட்டு மறைந்துபோகவும் "பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தாலெப்பொருளும்பேதியாதோ" என்பதுதோன்ற, தேவேந்திரனுக்குச் செல்வமுங்கல்வியும் சீருஞ்சிறப்பும்முககாந்தியும் நாளுக்குநாள்குறைந்தபோக விசனமடைந்து, இதுஎதால்விளைந்தது யென்றுநொந்து குருவை மரியாதைசெய்யாதகுறையென்றுணர்ந்து, இந்திரனுலகும்-சந்திரனுலகும்-இபக்கருலகும் யக்ஷருலகும்-அள்காபுரியும்-அமராபதியும் -பூமண்டலமும் -நாகமண்டலமும் தேடிக்காணமல் தியங்கி மயங்கி, சத்தியலோகத்தைச்சார்ந்து, பிரமனைநோக்கிப் பெருமூச்சுவிட்டு என்குருசுவாமியார் கோபித்துச்சென்றார் என்றுதன்னால் நடந்ததாழ்ச்சியுஞ்சொல்லி நித்தியசெபம்-ஓமம் இபாகம் - அவிர்ப்பாகம் - இவைகளெல்லாம் நின்றுபோய்விட்டதால் எங்குந்தேடிப்பார்த்தேன் என்குருவைக் காணேன். இதற்கொருவழி சொல்லும் எந்தையேயென்று வணங்கிப் பணிந்தான்.

அப்படிப்பணிந்த வச்சிராயுதனைப்பிரமன்நோக்கி அப்பா! ஆசானை இப்படி அவமதிக்கலாகாது உனது செல்வ கர்வத்தினால் உன்னைமறந்திருந்தா யென்று சொல்லி தன்மனதில் ஒருசூக்ஷியைநினைத்து இந்திரனைப்பார்த்து, உனக்குபிரகஸ்பதிபகவான்கிடைக்கிறவரைக்கும் துவஷ்டாவென்னும்ஒருபெரியவர்தனது வெகுளிமான்சத்தால் பெற்றபிள்ளையாகியவிஸ்வரூபனென்பவர்இருக்கின்றார். சேற்றில் செந்தாமரைபிறந்ததுபோல் அரக்கர்குலத்தில்பிறந்த தோஷமே அல்லதுவேதம்நான்குஞ்சாஸ்திரம்ஆறும் கலைஞானமறுபத்துநாலும் முப்பத்திரண்டுஉபநிடதமும் மற்றசித்தாந்தங்களும் செபம்தவம்ஓமம் யோகம் இவையெல்லாந்தெரிந்தஉத்தமர். அவரை ஆசாரியராககொண்டு சகலகாரியங்களையும் நடத்திக் கொள்ளென்று நான்முகன்சொல்ல, அந்தவார்த்தையை நம்பிப் பணிந்து விடைபெற்றுவந்து மூன்றுதலைபிள்ளையுடையவிசுவரூபனைக்கண்டு உபசாரமாகத்தொழுது எனக்குகுருவாக இருக்கவேண்டுமென்றுவருந்த (இராக்ஷசன்தேவகுருவாகிறதற்கு எத்தனைகாலம்தவம் பண்ணினாலுங் கிட்டாதாகையால் அப்பேர்பட்டவனிடத்தில் இந்திரன் வந்து அழைக்கவே தேடியபொருள் நாடிவந்ததைப்போல்சந்தோஷித்து) இதோவந்தேன் என்று தெய்வலோகத்திற்குப்போய் சிலநாள்இருந்து, தேவேந்திரன் ஒருபாகஞ்செய்ய எத்தனித்தபோதுகுருவாகிய விசுவருபன் தேவர்கள்பேரினால்கூச்சலிட்டுமந்திரஞ்சொல்லி அக்கினியில் அவிர்ப்பாகம்விடுத்தான். அப்போது-தங்கள்இனமாகிய இராக்ஷதருக்குஇந்த அவிர்ப்பாகப்பலன்சேர்ந்து திடவீரகாத்திரதைரியபலங்களுண்டாகும் படியாகவும், தேவதைகள் நசித்துப்போகும்படியாகவு மனதில்நினைத்து, வாய்மூனாமுனைப்புடன் மந்திரஞ்சொல்லிய கள்ளக்குறிப்பை சதமகன் அறிந்து கோபங்கொண்டு (தன்னினந் தன்னைக்காக்கும்வேலி பயிரைக்காக்கும்) என்னுமொழி தப்பாது செய்தானல்லவா இந்தச்சண்டாளக் குருக்களென்று, தன் கையிலிருக்கும் வச்சிராயுதத்தினால் அவன்தலையை வெட்டினான்.

அப்படி வெட்டினமாத்திரத்தில் அவன்பெற்றிருந்தவரத்தின்பலத்தினால் ஒருதலைஊர்க்குருவியாகியும் மற்றொருதலை சிச்சிலிப்பக்ஷியாகியும் இன்னொருதலைகாடையாகியும்பறந்தோடிப்போகவிசுவரூபனாகிய குருவைக்கொன்ற பிரமஹத்திவந்து கோபதியைப்பிடித்து வருத்தவும், அதனால்துன்பம் அடைந்த தேவராஜனைக்கண்டு தேவர்களெல்லாங்கலங்கிவாடி பூமியிலிராநின்ற மணல்-தண்ணீர்-மரங்கள்-ஸ்திரீகள் -இவைகளைப்பார்த்து இந்திரன்சுமந்த தோஷத்தை நீங்கள் ஏத்துக்கொள்ள வேண்டுமென்று இரங்கிச்சொல்லக்கேட்டு, இந்தநான்கும் தேவராஜனால் சுமக்கக்கூடாதஅத்தியை நாங்கள் எவ்விதந்தாங்குவோமென்றுகேட்க, பூமியில்சவர்மண்ணாகவும் - தண்ணீரில் நுரையாகவும்-மரங்களில் பிசினாகவும்-ஸ்திரீகளில்மாதவிடாயாகவும் - சுமந்துகொள்ளவேண்டியதென்று தேவர்கள்வேண்ட, நல்லது அப்படியே அழியாப்பெரும்பழியாகிய பிரமஹத்திதோஷத்தை நாங்கள் வாங்கிகொண்டால் அதனால்எங்களுக்குஎன்னலாபம் எப்படி அந்தப்பழியைத் தீர்த்துக் கொள்ளுவோம் என்று கேட்கும்போது அமரர்கள் சந்தோஷித்து, பூமியில்வெட்டியபள்ளம் தானாகத் தூர்ந்துபோகவும் சலங்கள்இறைக்கஇறைக்கசுரக்கவும், மரங்கள்வெட்டினால்துளிர்க்கவும், ஸ்திரீகள் கருப்பமாகிய புத்தமா

தம்வரைக்கும் கணவனைக்கலந்து வாழவுமாக அநுக்கிரகஞ் செய்யவும், அப்படியே அந்தப் பிரமஹத்தி தோஷத்தை நாலுபங்காகப் போக்கி தேவேந்திரன் இந்திரலோகத்தில் அமரர்களுடன் அரசுபுரிந்து வாழ்ந்திருந்தான் அந்நாளையில் விசுவரூபன் இறந்த செய்தியை துவஷ்டாவாகிய தாயோன்கேள்விபுற்று "கடந்தவளோர்க்குங்கடப்பரோமக்கண்மேற்சாதல" என்னும்வாய்மைக்கு நேராகமனம் வருந்தி, புத்திர சோக துக்கத்திலாழ்ந்து துன்பம்அடைந்து, நமது குமாரனைக்கொன்றஆகண்டலனைவென்றுபழிதீர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஒருபுத்திரகாமேஷ்டியாகஞ்செய்து,மந்திரலோபம்கிரியாலோபம்இல்லாமல் பூரணாகுதிகொடுக்குங்காலையில், சிவந்தநெருப்புக்கம் பிசள்போன்ற தலைமயிரும், வடவாமுகாக்கினிவந்து குடியிருக்கும் கண்களும், எழுகடலின் ஆழமும் இது தானென்று அளவுகாட்ட வந்தவாயும், எட்டுக்கிரியின் உயரத்தையும் பருமத்தையும் தெரிவிக்கவந்த தோள்களும், இருண்ட கறுப்பு இதுதான் என்னும் மேனியும்,திண்ணியயானைத்துதிக்கைகள்பலதிரண்டு வந்தகால்களும், சூலம்வாள்முதலிய ஆயுதங்களுஞ்சுமந்து, ஒருமகாபுருஷன் அந்தயாகாக்கினியி லிருந்து அண்டகடாகம்வரைக்கும் உயர்ந்து வளர்ந்தெழுந்து தன்தந்தைக்குச் சாஷ்டாங்க தண்டஞ்செய்துஎன்னை ஏற்படுத்தியகாரியம் யாதென்றுகேட்க, அந்த மைந்தனை துவஷ்டாநோக்கி விருத்திராசுரனென்று பேரிட்டழைத்து, உன்தமயனைக் கொன்ற இந்திரன் முதலிய தேவர்களையும்விழுங்கி அந்தத்தேவேந்திரப் பட்டத்தையும் மூவுலகத்தையும் நீயே ஆளுவையென்று ஆசிர்வசனஞ்செய்து அனுப்பிவைக்க, விருத்திராசுரன் தேவராஜனுக்குச் சத்துருவாகிக்கோபங்கொண்டு இரதமேறிவந்ததை இந்திரன்கேட்டு, தேவபடைகளுடன் வெள்ளையானையின்மேல் ஆரோகணித்துவந்து விருத்திராசுரனோடு சிற்சில்அஸ்திர சஸ்திரங்களைத் தொடுத்துப் போர்புரியும்போது, அவ்வசுரன் தேவப்படைகளைத் திரணமாகஎண்ணி இரதம்விட்டிறங்கி இந்திரனையும் அவன்ஏறிவந்த வெள்ளையானையையும் மற்றச் சேனையையும் வாரிவிழுங்கித் திரும்பிவரும் போது, அவ்வசுரனுக்குச் சோம்பலும் ஏப்பமும்தும்மலும் இருமலும் கோட்டாவியும்வந்து வாயைத்திறக்க அதனால் வெள்ளையானை தேவேந்திரன் தேவர் முதல்யாவரும் பூமியிலேகுப்புற்றுவிழுந்தார்கள் இப்பால் கக்கினவஸ்துவைக் காறியுமிழ்ந்தவன் போல விருத்திராசுரன் போய்விட்டான். இவர்களெல்லோருஞ்சாகாமல் சற்றுநேரம் ஆயாசந்தீர்ந்து எழுந்து பார்த்தார்கள். அதுஎப்படி இருந்ததென்றால் குமாரசுவாமியும் தாருகாசுரனும் யுத்தஞ்செய்கையில் கைலாயத்திலிருந்து வந்த இரண்டாயிரம் தேவகணங்களையும் பூதகணங்களையும் தாருகாசுரன் வாரிவாரி விழுங்க அதைச்சண்முகர் கண்டு நகைத்து வயிரக் கணைபைவிடுத்து அவன்வயிற்றைக்கிழிக்க அந்தவயிற்றிலிருந்து சாகாமல் அக்கணங்கள்குதித்து வந்தது போல் இருந்தது அப்பால் இந்திரன்முதல்யாவரும் களைதெளிந்து. இந்தஅசுரனைவெல்ல நம்மால்ஆகாது என்றமேருமலைச்சாரலிற்போய் சேர்ந்துஏக்கமுற்று இனிமேல் நமதுதேவகத்துவமும்இந்திரத்துவமும் நடவாது என்றுஒடுங்கி யிருக்குங்காலத்தில் விருத்திராசுரன் தனதுபுஜபலபராக்கிரமத்தினால்மூன்றுலோகமும் தானே அரசுபுரிந்து வந்தான். அதைக்கண்டு மகாரிஷீஸ்வரர்களெல்லாம் விருத்திராசுரனிடத்திற்குப்போய் அவனை ஆசிர்வதிக்கவும், அவன் எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஆசனங்கொடுக்கவும் அதன்மேலவர்களிருந்து ஓதுவஷ்டாவுடைய புத்திரகாமேஷ்டியாகத்திலுதித்த சற்புத்திரதீரனே! ஒவிருத்திராசுரனே! இன்றுமுதல் இந்திரன்முதலியதேவர்கள்பேரில் யுத்தஞ்செய்யாது இருப்பையாகில் உனக்கு மிகுந்தபலமும் சகலநலமுங்கைகூடும், யுத்தஞ்செய்யநினைத்தால் அபலமும்சபலமும் உண்டாய் மற்ற யாவுங் குறைந்துபோவதும் அன்றி நீயும் அழிந்து போகுங்காலமுப்நேரிடும். அந்தஉளவறிந்துசொல்ல வந்தோமென்று உணர்த்தவுங்கேட்டுப்யந்துஉடனே ரிஷிகளைவணங்கி, இனிஇந்திரன்பேரில் சண்டைக்கு வருவதில்லை. அவர்களுடைய இராச்சியத்தை அவர்களே ஆளும்படியாகச் செலவுகொடுத்தேன். நான் கொடுத்தவரம் தப்புவதில்லை. தேவதைகளின் திவ்வியாஸ்திரமுதலிய ஆயுதங்களினால் நான்சாகாமலிருக்கும்படியாகிய வரம் தாங்கள் தயவுசெய்யவேண்டும் என்றுகேட்க, அப்படியே வரங்கொடுத்து மகாரிஷிகள் விடைபெற்றுக்கொண்டுபோய் இந்திரனை அழைத்துவந்து எப்போதும்போல இந்திர லோகத்தில் இருத்திச் சுகம்பெற வாழ்த்தினார்கள்.

இப்படி சிலநாள்சென்றபிற்பாடு நாளுக்குநாள் விருத்ராசுரன்பலப்பட்டு மகாரிஷிகளோடுசொல்லிய வார்த்தையைமறந்து மாறுபட்டு, சகலபுவனமுந்தானேகைக்கொண்டுஆண்டு, யாவர்களையும்மதிக்காமல் எல்லோரையும் வருத்தி இந்திரன்மேலும் பகைத்து வருவதைக்கண்டு,இந்திரன்மனம்பொறுமல்பிரமாவினிடத்திற்சென்று, விசுவரூபனை குருவாக்கிக்கொண்டதுமுதல் இதுவரையிலும் நடந்த சங்கதிகளையும் இப்போது தான்படும் சங்கடங்களையும் விளம்பிவணங்கச் சதுமுகனனைவர்இந்திரனை அழைத்துக்கொண்டு பாற்கடற்சயனராகிய பரந்தாமனிடத்திற்குப் போய் இருவரும்பணிந்து தங்கள்குறைகளைச்சொல்ல, அம்மகாவிஷ்ணு இந்திரனைப்பார்த்து, ஒசுரர்பதி! சகல பலங்களையும் சகலவரங்களையும் உடைய விருத்திரனைக் கொல்லுவதற்கு உன்கையிலிருக்கும் வச்சிராயுதம் அதிக பழைசானபடியால் சத்துருக்களின் பிராணனை வாங்கமாட்டாது. மற்ற எந்தஆயுதத்திலும் அவன்மாளான். இனி வேறொருவச்சிரம் வேண்டும்

என்றுவிளம்பி, அப்புதிதாகிய வச்சிராயுதம்வேண்டியதற்கு ஒருபுத்திசொல்லுகிறோம் கேளும்இந்திரனே முன்னேயாம் பாற்கடல்கடையும்போது அமரர்அசுரர்யாவரும் கொண்டுவந்த ஆயுதக்கூட்டங்களைகண்டு கலகம்விளையும்என்று ததீசிமகாமுனிவர் வசத்தில் ஒப்பிவைத்து வரும்படியாகச் சொன்னேம் அப்படியே வைத்துவந்து அமுதங்கடைந்தார்கள் அசுரர்களுக்கு அமுதம அகப்படாமையால் வருந்தி கோபங்கொண்டு ஆயுதங்களைமறந்து போய்விட்டார்கள். தேவர்கள் அமுதம்புசித்த சந்தோஷத்தால் அவர்களும் மறந்துபோய்விட்டார்கள். அந்த ஆயுதங்களை யெல்லாம் வெகுகாலம்வைத்துக் காப்பாற்றிய ததீசிமகாமுனிவரானவர் ஒவ்வொன்றுய் எடுத்து விழுங்கிவிட்டார் அவைகளெல்லாம்அவருடையமுதுகெலும்பைப்பற்றித்திரண்டுஇருக்கின்றன. அந்தமுனிவரானவர் "அன்பிலாரெல்லாந்தமக்குரியர் அன்புடையார்-என்பும் உரியர்பிறர்க்கு" என்பதுபோலலோகோபகாரி ஆகையால், அவரிடத்தில்நீர் போய்க்கேட்டால்கொடுப்பார். அந்தஎலும்பைவாங்கி வச்சிராயுதம் பண்ணிக்கொண்டு, விருத்திராசுரன் சமுத்திரக்கரையோரத்தில்வரும் இரண்ணியவேளையில் எதிர்த்து,என்னை நினைத்து ஒருநிமிஷமேனும் விடுப்பாயாகில் அவன் இறப்பான் என்றுமால்சொல்லக்கேட்டு, அடிவணங்கிப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு,ததீசிமகாமுனிவரைக்கண்டு வணங்கி, எங்களையாண்டு இரக்ஷிக்கவேண்டுமென்று தன்குறையைச்சொல்லிஇருகரத்தையும் நீட்டிக்கொண்டு இரக்க, அந்தமகாமுனிவர் தேவேந்திரனை நோக்கிச்சொல்லுவார். "நாய்நமதென நரிநமதெனப் பிதா-தாய் நமதென நமன்றனதெனப்பிணி-பேய்நமதென மனமதிக்கும் பெற்றிபோல் - ஆய்நமதெனப்படும் யாக்கையாரதே" என்றுசொல்லி, நிலையில்லாத இந்தயாக்கைபலருக்கும் உபயோகப்படும்பொருட்டு அழிவதேஉத்தமம் என்றுயோகத்திலிருந்து ஆன்மாவைப்பிரிக்கவும், உடனே தேவதுந்துமி முழக்கத்துடன் சுயம்பிரகாசச்சோதி வானுலகத்திற் செல்லவும், இந்திரன் அந்தமகாமுனியினுடைய முதுகெலும்பை எடுத்து விசுவப்பிரமனிடத்திற்கொடுக்க அதை வச்சிராயுதமாகச் செய்து ஆசிர்வதித்துதனது கரத்தில் அளிக்கவும் வாங்கி, வைகுந்தநாதன் சொல்லியகாலம் வருகிறவரையில் காத்திருக்கவும்,ஒருநாள் விருத்திராசுரன் சமுத்திரக்கரை யோரத்தில் வரக்கண்டு, அமரர்களுடன் வெள்ளை வாரணமேறிவந்து எதிர்த்து யுத்தஞ்செய்து புதிதாகிய வச்சிராயுதத்தை பிரயோகஞ்செய்ய, அதற்கு விருத்திரன் ஈடுபடாமல் இளைத்துஓடிமிகவும்வாடி ஆழியில்மூழ்கிமறைந்தான் வச்சிராயுதமும் கூடவேதொடர்ந்து தேடிக்காணாமல் நாலிக்கியங்கவும், அதைக்கண்டுதேவர்கோன்மனம்வாடி பன்போதுத்தர்கை இடத்திற்சென்று வாரிதியில் அசுரன மறைந்துபோனதைச் சொல்ல, அதை மலரோன்கேட்டு வாசவனைநோக்கி ஸ்ரீமந்நாராயண மந்திரத்தோடு ஏன் பிரயோகிக்க இல்லை என்றுகோபித்து, நல்லதுமுக்குணமும்முத்தொழிலும்முப்பொருளுமாகிய மூலகாரணனென்னுமமுர்சற்பொருளுக்கு அடிமையாகிய அகஸ்தியரைக் கண்டு வணங்கினுல். உமதுகாரியங்களெல்லாம அநுகூலமாகுமென்றுவெண்டாமரையோன் விளம்பக்கேட்டு, அக்கணமேஅகஸ்தியரிடத்திற்கு வந்துவணங்கி அடிபணிந்து நிற்க, அவர்ஆசிர்வதித்து. ஓதேவேந்திர மகாராஜனே! நீர் இவ்வளவுதூரம் வந்தகாரணம் யாதுஎன்றுகுருமுனி கேட்க, வேலாவலயத்தில் விருத்திராசுரன் மறைந்து போனுன் தேவர்கள்முதலிய யாவரும் யானும்மெத்தவருத்தமுறுகின்றோம். அந்தஅசுரனைக் காண்பிக்கவேண்டும் கருணைக்கடலே என்றுதொழவும் நன்றென்று இசைந்து கயிலையங்கிரியில் எழுந்தருளிய கடவுளையும் அவரால்விளைந்த திரிபுரதகனக்கினி மன்மததகனக்கினி வடவாமுகாக்கினி இவைகளை மனதில் நிறுத்தி, கண்ணுதல்அருளினுல் கடலைக்கடுசளவாகக் கரத்தினில்ஏந்தி உட்கொண்டருளினர் அதுகாலத்தில் சமுத்திரம்நீர்வறண்டு அதனடுவிலுள்ள ஓர்மலைச்சிகரத்தில் விருத்திராசுரனிருந்து கண்களைமூடிக்கொண்டு யோகத்திலிருக்கக்கண்ட வச்சிராயுதம் அவனை மாய்த்துவிட, தேவர்கள் பாரிஜாதமலர்மாரி தூற்ற மாயவனைவாழ்த்திவந்த தேவேந்திரனை விண்ணுலகுள்ளோர் மண்ணுலகுள்ளோர் எல்லாம் வாழ்த்தித் துதிக்க, அக்காலத்தில்அவனை பிர்மஹத்தி தோஷம் பிடித்து, அழகுமுதலியசெல்வமும் இழந்து, நிதியையும்பதியையும்நீங்கி, தபோபலங்களும்வரப்பிரசாதங்களுங்குறைந்து, மனத்தில்பயங்கரமும்அச்சமும்உண்டாகளுபீகரித்துவரும் பிர்மஹத்தியை இந்திரன்நோக்கமாட்டாமல் ஓட்டமெடுத்துஈசானியதிசையிலிருக்கும் நிர்மானிடமென்னும் மலையிற்சேர்ந்து மிகுந்த துக்கத்துடன் அவன்இருக்க, தெய்வலோகத்திற்கு அரசன்இல்லாமல்ரிஷிகள்முதலியதேவர்கள்யாவரும் வருந்தி இந்திரனைக்கண்டு, எங்களைவிட்டுப் பிரிந்திருக்க எப்படிமனங்கொண்டீர். அரசில்லாநாடு காடென்பது அறிந்ததில்லையா? ஐயனே! வாரும் அரசுபுரியும். அடியேங்களைக்காருமென்று யாவரும் அழைக்க அந்தவார்த்தைக்கு அவன்உத்தரஞ்சொல்லாமல் ஊமைபோலிருந்து பிர்மஹத்தியைக்கண்டு மிகவும்நடுக்கமுற்றிருக்க, இந்திரனை அழைக்கவந்தரிஷிகள்முதல் தேவர்க ளெல்லோரும் ஒதேது இனிநமக்கு இவர் உதவமாட்டார் என்று ஆலோசித்து, ஆவைப்பிரிந்த கன்றுபோலவும்-தாயைப்பிரிந்த சேயைப்போலவும் மழையைப்பிரிந்த பயிரைப்போலவும்-உயிரைப் பிரிந்த உடலைப்போலவும்-துக்கமடைந்து, பட்டமில்லாதயரசு பாழென்றுணர்ந்து, கேளும் தருமபூபதியே! உங்கள்பாட்டனராகிய ஆயுமகாராஜாவின் புத்திரன் நகுஷமகாராஜன் நூறு அசுவமேதயாகஞ் செய்து

இந்திரபட்டத்துக்கு எதிர்பார்த்திருந்தார். அவரிடத்திற்குதேவர்கள் முதலியபேர்களெல்லோரும்வந்து உபசரித்து தேவராஜனை இருக்கவேண்டுமென்றும் எங்களுடைய தபோபலன்களை எல்லாம் உமக்குக் கொடுத்தோமென்றும் வாக்குதத்தஞ்செய்து பிரார்த்தித்து அழைத்துவந்து, சகலநலமுஞ்செல்வமும் அழகும்உண்டாக சிங்காதனத்திலேற்றி தேவக்கிரீடபட்டாபிஷேகமும் செய்துவைக்க, முப்பத்துமுக்கோடி தேவர்களும்நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும்-அமரர் சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர்-கின்னரர் -நிருதர்-கிம்புருடர்-காந்திருவர்-இயக்கர்-விஞ்சையர் - பூதர்-பைசாசர்-அந்தரர்-உரகர்-முனிவர் - ஆகாயவாசிகள் போகபூமியோர்-இவர்களெல்லோரும்வணங்க, அரம்பாஸ்திரீகள் யாவரும் பரதநாட்டியஞ்செய்ய, கற்பகபூங்காவனத்திலுறைந்து நகுஷன் அரசுசெலுத்திவருநாளையில் பழைய தேவேந்திரனைப் பிரிந்திருக்கும் இந்திராணி தன்னாயகன் செல்வமிழந்த தன்மையை நோக்கி மனஸ்தாபமடைந்து, அநேகம் ஸ்திரீகூட்டங்களுடன் வனங்களில்உலவி மயில்போல வருஞ்சாயலை நகுஷன்கண்டு "மோகத்திற்சோர்முடிவுமுண்டாங்கொலோ" என்பதுதோன்ற, இராவணன் அழியுங்காலம் சீதையை நாடினதுபோல அவள்மீது ஆசைகொண்டு சந்திரனைக் கண்டபேர்கள் தாரகைகளை நோக்காத தன்மைபோல் மற்றஸ்திரீகளின் பேரிலிருக்கும் ஆசையைவிடுத்து, தேவதூதரைநோக்கி இந்திராணியை அழைத்துவாருங்களென்று அனுப்பினான் இவர்கள்போய் புலோமிசையைப் பார்த்து வணங்கி இந்திரன் அழைத்துவரச்சொன்னாரென்று சொல்லக்கேட்டு, தேவகுருவினிடத்திற் சென்று திருவடிமலரைப்பணிந்து, ஐயா! என்னாயகன் உயிருடனிருக்க இப்போதுவந்த இந்திரன் என்னைவிரும்பி அழைக்கின்றதாக இவர்கள்சொல்லுகின்றார்களே இதற்கெப்படியென்று கண்ணீருதிர்க்கவும், அதுகண்டகுருவானவர் உன்பதிவிரதாதனத்திற்கு பழுதுவராமல்காக்கிறேன் நீர் கலக்கப்படவேண்டாம் அம்மா என்று தைரியஞ்சொல்லி, தூதரைநோக்கி அப்பா நகுஷமகாராஜன் மிகவும்புத்திசாலி ஆசையால்இந்திராணியை அழைப்பது ராஜநீதியல்லவென்று நான்சொன்னதாகச் சொல்லுங்களென்று அனுப்பவும். அதைக்கேட்டநகுஷன் மெத்தக் கோபங்கொண்டு கூடாது கைப்பிடியாகக் கொண்டுவரவேண்டியது என்று தூதரைமீட்டுமனுப்பவும் இந்திராணிபார்த்துமுரடனோடு எதிர்க்கலாகாது இதவசனத்தினால் ஜயிப்பதே யுக்தியானதால் ஐயா! எனக்கு விடைகொடும் நான்போய் வார்த்தைபேசி நகுஷனை மகிழச்செய்து வருகிறேன் என்றுபிரகஸ்பதியினிடத்தில்செலவுபெற்றுக்கொண்டு அரம்பாஸ்திரீகளுடன்கூடி, அரண்மனையைநாடி, வேங்கைப்புலிக்கு எதிரிற்செல்லும் பெண்மானைப் போல வெருண்டுமருண்டு நகுஷன்சபைக்குப் போகும்போது, ஆயுவின்குமாரன் இந்திராணியை என்றைக்குக் காண்பேனென்று இரவும்பகலும் ஏக்கங்கொண்டிருந்தவனுக்கு அவ்விந்திராணி வெளிப்படலும், கல்லாதான் கற்றகல்விபோலும் காணாதான்கண்டசெல்வம்போலும்கண்டு, சகலசாம்பிராச்சியம் பெற்றவனைப்போலாகிக் குறுநகைகொண்டு தேவர்கள்முகத்தைப் பார்க்க, அமரர்களெல்லாம் சுவாமீபராக்! தங்களிஷ்டப்படிக்கி சசிதேவிவந்துவிட்டாளென்று சாற்றவும் இந்திராணி அவன்சமீபத்தில் வந்துநின்று புதிய இந்திரனைக்கண்டு, என்னாயகன் உயிருடனிருக்க என்னை அழைப்பதுதருமமா? நீர் பெருமையடைந்த தேவபட்டம்பெற்றும் சிறுமையிற்சிந்தை செலுத்தப்போகுமா? இன்னமும் நன்னீதியுடன் நடப்பீராகில் அளவிறந்த கீர்த்தியைப்பெறுவீர் தகாதபோகத்தை விரும்பிச் சுகாதியோகத்தை அநேகம்பேர் இழந்து தாழ்ந்து அழிந்துபோனதன்மையைக் கேட்டறியீரா? நற்குலத்திற்பிறந்தும நற்றவங்களிழைத்தும் அற்பத்திற்கு ஆசைப்பட்டு ஆயுள்மாய்ப்பரோ? ஆயுவின்தவத்திலுதித்த அரசேசேகரும்! மலைகளின் சிறகையரிந்த வச்சிரபாணியானவர் விருத்திராசுரனென்னும் விறலோனைக்கொன்று பிர்மஹத்திதோஷம் பிடித்து அதைத்தவிர்த்துக்கொள்ளத் தவம்பண்ணப்போயிருக்கிறார். அந்தஇந்திரன் பழிதீர்த்துக்கொண்டுஇவிடத்திற்கு வாராதிருப்பாராகில் எங்களை எல்லாங்காத்து இரக்ஷிக்குங்கடமை உமக்கேயல்லது மற்றியாருக்கு உண்டாயிருக்கும் அப்படியிருக்க உமக்குநான்புறம்பல்லவே? என்னை இந்தச்சபையில் அழைத்தது உபகாரமா? தருமமா? என்று இந்திராணி சொல்லிய இனிய நயவசனங்களைக்கேட்டு நகுஷன்உடம்பு அடங்கா மகிழ்ச்சிகொண்டு, ஓபொன்னுலகிற்சிறந்த புலோமிசையே! பழையஇந்திரன் பிழைத்துவருவதும் வாராமற்போவதுந் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உம்முடைய உள்ளம்விரும்பி இருப்பதினால்அதுகளை விசாரித்துக்கொண்டு என்பேரில்கருணைகூர்ந்து என்றைக்குவரும்படியாக உத்தரவுசெய்கின்றீரோ, அன்றைக்கு உம்முடன் சல்லாபமாய்க் கூடவருகிறேன் என்று சகல உபசாரமுஞ்சொல்லி மரியாதைசெய்து செலவுகொடுக்க, இந்திராணி அச்செலவுபெற்றுக்கொண்டு இராகுவினால்விடுபட்ட சந்திரனைப்போல் சபையைவிட்டுத் திரும்பி, அரம்பாஸ்திரீகளின் கூட்டத்துடன் பிரகஸ்பதி பகவானிடத்தில்வந்துவணங்கிதான் போனதும் வசனித்ததும் அவன்சந்தோஷப்பட்டதுஞ்சொல்லி, குருவினுடைய ஆசீர்வசனமும் பெற்று, தன்புருஷனைநீங்கியிருக்கும் ஆர்த்தியரத்தினால்நிடதகிரிக்குப்போய் தேவேந்திரனைக்கண்டுதீர்க்கதெண்டஞ்செய்து, தேவர் கைக்கொண்டபாக்கியமெல்லாம் நகுஷன் கைக்கொண்டு ஆளுகின்றான் என்று அவனால் தனக்குவந்த விபத்துக்களெல்லாந் தெரியப்

படுத்தி விசனப்படும்போது இந்திரன் இந்திராணியைநோக்கி, செல்வமும் சிறப்பையும் அனுபவிக்கவொட்டாமல் உன்னையும்என்னையும்பிரித்துவிட்டது பிர்மஹத்திதோஷமே அன்றிவேறல்ல, அந்தத்தோஷம் ஏதோ என்னைப்பிரியாதிருக்கின்றது. இன்னம் சொஞ்சநாள் மனம்பொறுப்பையாகில் நான்தெய்வலோகம் வந்துசேருகின்றேன். நீபோவென்றுசசிதேவியை அனுப்பிவிட்டு, ஒதிருத்தமாய் தரித்திருக்குந்தினதயாளுவே! என்குறைதீர்த்தருளுங் கோவே! என் இவினையகற்றுந் தெய்வமே! கோவிந்தா! கோவிந்தா! என்று கூவிக்கொண்டு வைகுந்தமா நகரஞ்சேர்ந்து, அனந்தசயனனாகிய ஆதிபகவானுடைய அடியிணைமலரைத்தொழுது, உலகுபகாரியாகிய விருத்திரனைக்கொன்று பூலோகத்திற்கும் பொன்னுலகத்திற்கும் உபகாரஞ்செய்த உமது அமமையாகிய எனக்கு இந்தப்பிர்மஹத்தி நீங்காதிருக்கவும் என்செல்வம் என்பத்தினிமுதலிய அரசாக்ஷியாவும் இன்னொருவன்கைக்கொள்ளவும், நான்ஒன்றியாய் தரித்திரமடைந்து திரியவும்ஆயதே தேவரீர்கடாக்ஷம்இப்படியிருந்தால் நான் செய்வதென்னவென்று நின்று சிந்தித்துவந்திக்குங்காலையில், தேவதேவன் திருவாய் மலர்ந்து, ஓ மேகவாகனா! உன்னைவருத்தும் பிர்மஹத்திதோஷம் நீங்குவதற்கு இந்திராணி சமேதமாக இருந்து அயமேதமென்னும் ஒருயாகஞ் செய்வையாகில் தோஷமும்நீங்கி வாழ்வும்பெறுவாய் என்றுமகாவிஷ்ணு அருள்செய்ய, அப்படியேசிலதேவர்களுக்கும் ரிஷிகளுக்குந்தெரிவித்து இமோத்பர்வதச் சாரலில் இந்திராணியுடனிருந்து அந்தயாகத்தைமுடிக்க, அதனாலே பாபரகிதனாகிபயந்தீர்ந்து சகலதேவர்களுடனேயும் தெய்வலோகம் போய்ச்சேர்ந்தும், முன்போல சம்பத்தும் அழகும்பலமும் இந்திரபதமும் கூடிவராமல் பிர்மஹத்தி பிடித்த முகமென்று சொல்லும்படியாயிருப்பதினால் நகுஷனுடைய சுந்தரத் தன்மைக்கு இவன்ஈடுபடாமல் மனவிசாரம்பிடித்து, வெகுதுக்கத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் ஈசானதிசையிலிருக்கும் ஒருதடாகத்தில் நிறைந்ததாமரை நாளத்தினுட்புகுந்து தபசுசெய்துக் கொண்டிருந்தான். அப்படி இருக்குநாளில், தேவேந்திரன் இறந்துபோனானென்றும், இந்திராணிமுதலிய போகங்களையும் துறந்துபோனானென்றும், வெகுநாளாய்ச்சுமந்த ஸ்தூலதேகத்தை மறந்துபோனானென்றும், கண்களிற்காணாமல் பறந்துபோனானென்றும், இப்படி பற்பலவிதங்களாயாரும் பேசிக்கொள்ளும்வகையை இந்திராணி தேவிகேட்டு மனந்திடுக்கிட்டு, வாயுலர்ந்து, விசனமென்னும் வாரிதியிலாழ்ந்தி கலைவாணியின்இணையடி போற்றி விரகம்இழைக்க, அந்தத்தேவிஒருஸ்திரீரூபமாய் எதிரில்நின்று, சுரேந்திரன் மனைவியே கேளும்! உன்னுபகன் பிர்மஹத்தியின் பீடிதத்தினால் பெருமையும்புகழும் பிரகாசமுங்குறைந்து எவர்களுக்குந் தெரியாத ஈசானமூலையில் இருக்கும் ஒருபொய்கையுள் நிறைந்ததாமரை நாளமத்தியில் அணுரூபமாய்த் தவஞ்செய்கின்றான். நீயும் விசனத்தினால் இரக்கமுற்று வந்துசொன்னேன். என்பின்வாருவையாகில்இப்போதே காண்பிப்பேன் என்றுரைத்தவாக்கியங் கேட்டு மனங்குளிர்ந்து, அம்மணி! இதோவருகிறேனென்று தொடரவும் அழைத்துக்கொண்டுபோய் அந்தப்பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரைத்தண்டின் மத்தியில் உண்டாகிய சிறியதுவாரத்தில் புகைரூபமாகப் புகுந்துபோய்த் தேவேந்திரனைக்காட்டி அந்தத்தேவி மறைந்துபோகவும், இந்திராணி இந்திரனுடைய காலமேல்விழுந்துசதுவியழுது விசாரப்படவும் ஆச்சரியமுற்று; நானிருந்த இந்தஸ்தானத்தை நீஎப்படியறிந்துவந்தாய் உனக்குஎவர்கள் தெரிவித்தவர்கள் என்று இந்திரன்வினவ, தேவரீர் இறந்துபோனதாகவும் துறந்துபோனதாகவும் வெகுஜனங்கள் பற்பலவாறாகப் பேசிக்கொண்டிருப்பதைக்கேட்டுமனந்தாளாமல் கலைவாணியைக் கருதி விரகம் இழைக்க, அந்தஅம்மன் அழைத்துவந்தகாட்டி எனதுதுன்பத்தை நீக்கிச்சென்றாள் நான்இன்புற்று இவிடம்வந்தேனென்னவும், அதைக்கேட்டு மகிழ்ந்த நாயகனை மீட்டும்பார்த்து இந்திர பட்டாபிஷேகத்தைவிட்டு என் வந்துவிட்டீர் என்று சசிதேவிகேட்க சசிநாதன்சொல்லுகின்றான்.

வாராய்பெண்ணே! நாமிருவருங் கூடிச்செய்த அயமேதயாகத்தினால் விருத்திராசுரனைக்கொன்றபிர்மஹத்தி தோஷம் நீங்கியதென்று பேர்மாத்திரமேயொழிய, மயக்கமுந்தியக்கமும் மனத்துநடுக்கமும் என்னைவிட்டு நீங்கஇல்லை. அரசும்-வாழ்வும்-அழகும் பலமும்-ரிஷிகளுந் தேவர்களுங்கொடுத்த தபோபலமும-நகுஷனைச்சேர்ந்து அரசுபுரிகின்றான். அவைகள்யாவும் என்னிடத்திற்குவருமாகில் அப்போதுநான் தேவேந்திரனாகுவேன். இல்லாவிட்டால் என்கதி இவ்வளவுதான் என்றுசொல்ல, அவைகள் தேவர்குக்குக் கிடைக்கும்படியாகிய உபாயஞ்சொல்லும்நான் அப்படியேமுடிக்கிறேனென்று இந்திராணிவிளம்பக் கேட்டு, நல்லதுபெண்ணுபகமே! உன்பேரில்இச்சைகொண்டு தூதனுப்பினானென்று முன்சொல்லியிருக்கின்றையே அதையனுசரித்து, சப்தரிஷிகள் தாங்கும் இந்திரவிமானப் பல்லக்கில் நகுஷன் ஏறிவரப்பண்ணினால் அவனுடையதபோபலமெல்லாங்குறையும் என்னிடத்தில்வந்துநிறையும். இதுஉன்னால் வரவேண்டிய செல்வமென்றுஉரைத்து விடைகொடுத்துஎப்போதும்போற் றவஞ்செய்திருந்தான். இப்பால் இந்திராணி செலவுபெற்றுகொண்டுதெய்வலோகபோய்ச்சேர்ந்து தானேவலுவிற் தூதனையனுப்பிஇந்திராணி உமக்குக்கியாபகஞ்செய்யச்சொன்னாளென்று சொல்லவே, நான்பிழைத்தேன்பிழைத்தேன் எனச்சந்தோஷித்து மறவாமல் இவ்வளவு நயமை வைத்

திருந்தது எனதுபாக்கியமே, இதுவும் எனது நற்காலமே என்றுமகிழ்ந்த செய்தியைத் தெரிந்துக் கொண்ட, நால் இடைபுசாத ஸ்தனத்தையுடைய இந்திராணி நகுஷன் எதிரிற்போய் நின்று, இன்பமொழியும்-நல்லொழுக்கமும்-நன்னீதியும்-நற்கீர்த்தியும்-பரிசுத்த வாய்மையும் - அழகும்-உடையவர் தங்களைப் போல் எங்குமில்லையென்று இப்போதறிந்தேன். நீரன்றழைத்தபோதே எனக்கு இச்சையுண்டு ஆனால் ஸ்திரீ சனங்களாகப் பிறந்த பேர்களுக்கு லாசையுண்டு கொள்ளாமோகமிருந்தாலும் ஸ்திரீகள் புருஷரிடத்தில் அதைவாய்விட்டு விள்ளார்கள். இவ்வுலகத்தில் எனக்குப்பணிப்பெண்ணாகியபேர்களெல்லாரும் இன்பசுகத்தை அநுபவிக்கும்போது, நானொருத்திதானே துன்பத்தைஅநுபவிப்பது உம்மைவெறுக்க வேண்டியதில்லை (ஆரால்கெட்டாயென்றால் நோரால் கெட்டேன்) என்பதுபோலத் தானேவருஞ் சீதேவியை நானேகாலாலுதைத்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டேன். இந்திரன்வந்து விடுவாரென்று என்னைப் பார்த்தேன்,இதுவரையிலும் வரக்காணேன். ஆகிலும் இன்னங் கொஞ்சநாள் பார்க்கவேண்டும். அதுவரையிலும்என்னையான்சப்தரிஷிகள் சுமக்கும்பல்லக்கிலேறிப் பவனிவரும்வழக்கப்படியே, நீரும் அந்தத் தேவயானத்திலேறிப் பவனிவரும்படியாகவும் என்கண்களால்நோக்கவும் விருப்பமுற்றிருக்கின்றேன்என்று கபடமாகச் சொல்ல, அம்மொழியானது நகுஷனுடையகாதுகளில் தேவாமிர்தம் வாரிப்பொழிந்ததன்மையைப்போல் இருக்க ஆனந்தித்து, இன்னஞ் சிலநாளில் அப்படியேவருவேன் உமது அரண்மனைக்கு இப்போதுநீர் போமென்று இந்திராணியை அனுப்பிவிட்டு, மிகுந்த சந்தோஷத்துடன்புன்னகைகொண்டு சப்தரிஷிகளையும் வரவழைத்து, யான் இந்திரலோகச்சிறப்பையும் அரண்மனைவீதிகளையும் பார்க்கவேண்டியிருப்பதால் நீங்கள் தாங்கப்பட்ட பல்லக்கு கொண்டுவாருங்கள் என்று உத்தரவுசொல்ல, அப்படியே கொண்டுவந்துவைத்தார்கள் அந்தத்தேவயானத்தில் தானேறி, சிங்காரவீதி -தேவர்கள்வீதி - மண்டபவீதி - மலர்வாவிவீதி - தேவஸ்தலவீதி, சித்திரவீதி-கோபுரவீதி-அரம்பையர்வீதி-ஆவணவீதி-தேரோடும்வீதி-திரவியவீதி-போகமாநகரம்-புண்ணியநகரம்-மாதவநகரம்-மடாலயநகரம்-வீரமாநகரம்-வெற்றிமாநகரம்-காமதேனுசாலை-கற்பகச்சோலை - வெள்ளையானைச்சாலை-வெண்பரிச்சாலை-ஆயுதச்சாலை-அறஞ் செயுஞ்சாலை-இந்திராணிஅரண்மனை முதலியவிடங்களில் சப்தரிஷிகளும் தாங்க உலாவிவருகையில்,நகுஷனுக்குத் தபோபலம்-ஊக்கம்-தைரியம் -அழகு - இதுகளெல்லாம் நாளுக்குநாள் நசித்துப்போகவும், பழைய இந்திரன்செய்யும் தவத்தினால் சகலபலமும்நலமும் அவனுக்குவிர்த்தியாகிவரவும், இப்படிநடந்துவரும்நாளையில் ஒருநாள், அகஸ்தியமுனிவர் இவன்பெரியோர்களை வருத்தும் பிரபல அதிசயங்களையெல்லாங்கேள்வியுற்று, பொன்னுலகத்திற் பொருந்திய நகுஷனை நோக்கிவர உடனேயெழுந்து சாஷ்டாங்க தண்டனு செய்து, அர்க்யபாத்திய ஆசமன்னிய சந்தனபுஷ்பதாம்பூல தூபதீபஉபசாரங்களும் புரிந்து, உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளச்செய்து, அவருடைய ஆசீர்வசனமும்பெற்று,தனது அரியாசனத்திலிருந்து க்ஷத்திரியர் அறியக்கூடாத வேதரகசியமந்திரங்கள் சிலவற்றைப் பொருளுதவியினால் பிராமணரிடத்தில் கற்றுக்கொண்டுகர்வம் அடைந்திருந்த அந்நகுஷனானவன் அகஸ்தியரை இன்னாரென்று அறிந்தும் மறந்தவர்களும் கேட்கும்படியாக அந்தமந்திரத்தைச்சொல்லி இதற்குப் பொருளுரையும் குருமுனியேஎன்றுவினவ அவருக்குக்கோபம்வந்து, குலுங்கநகைத்து,உரைக்கூடாத பரமரகசிய மந்திரத்தை நீதெரிந்துக்கொண்டதல்லாமலும், பஞ்சையாகிய நீஎன்னைப் பயன்சொல்லச்சொல்லிப் பயமில்லாமலும் கேட்கததகுமா யென்று உருக்கிப் பார்க்கும்போது நகுஷன்மீறி, ஆத்மார்த்தமாக யாவர்களு மோக்ஷம்அடைவதற்கேவிதித்திருக்கும் மந்திரத்தை நான்கேட்கவுங் கற்கவுங் கூடாதென்று கற்றுணர்ந்தநீர்கியானமில்லாமற்சழறிய மொழிக்குக் கலகலவென்று நகைப்பதேயன்றி வேறொன்றையுங் காணேனென்று நிந்தித்து, சற்ப சற்ப சீக்கிரம் இவ்விடம்விட்டுப்போமென்று கொடியநாகப் பாம்புபோற்சீறிக் கூறக்கேட்டு, தடங்கடல் அடங்கலுங் குடங்கையிலொடுங்க அருந்தியஅகஸ்தியர்,வடவைக்கனல்போன்ற விஷங்களைக் கக்கும் அஷ்டமாநாகத்தினும் மேற்படச்சீறி,அடாபிரஷ்டா!முதியோரென்றுமதியாமல் முழுமையும் அவமானம்வரப் பேசினாய். சப்தரிஷிகளையுந் தாங்கும் தேவயானத்தைச் சப்தமுனிவர்களுந்தாங்க ஏறிநடத்தினாய். அன்னத்தின்நடைபோல் நடந்தகாக்கைதன்னடையுங்கெட்டு வருந்திய தன்மையை அறியாயா? சின்னத்தனமுடைய உனக்குப்பெரியதனம் பொறுக்குமா? குரங்கின்கைப் பூமாலையைப்போல் பெரியோர்களின்மனங்குறையச் செய்தனையே நிறையாத்தவஞ்செய்த நிஷ்டூரா என்று உடனேஎழுந்து, தமது இடதுகாலினால் நெற்றியிலுதைத்து, ஆறுக்கோபத்துடன் மறுபடியுஞ் சொல்லுகின்றார். அறிவில்லாத அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறில்லைஎன்பதுதோன்ற இனிநீ அடர்ந்த ஆரணியமலைச்சாரலில் உன்வாக்கில் வந்த சற்பவென்னு மொழிதப்பாமல் ஒப்பில்லாத மலைப்பாம்பாய் விழக்கடவையென்று சபித்தார். உடனேதேவர்கள் முதலியயாவரும் பயந்து நடுங்குங்காலையில், புதியதேவேந்திரன் நிலத்திற்புரண்டோழ்ந்து தனதுஉரமும் கரமும் சிரமும் திறமும் பதறிநடுங்க, உதறியொடுங்க, விரைந்தோடிவந்து, பொன்னாற்செய்தவீரகண்டைபொறுத்த புதியமலர்போன்றபொதிகைமுனியின் திருவடியைத் தனதுபூமுடியிற் சூட்டிக்கொண்டு அடியேன்தெரியாமல் அக்கியானத்தினாலும்

வினைச்செயலாலும் வருந்திவந்த செல்வங்களைவிடுத்து மலைப்பாம்பாகச் சாபம்பெற்றேன், எனக்குநேரிட்ட தீதாகிய தவக்குறைசாபம் விமோசனமாகுங்காலம் அருள்செய்யவேண்டுமெ விந்தகிரியின்கர்வம் அடக்கிய விமலனே என்று இருகரங்களையும் நீட்டி இரக்கவும், "எள்ளார் அறிவுடையார்" என்பதையும், "சிறுமை கண்டவர் பெருமைகண்டல்லது தேறார்" என்பதையும் கும்பசம்பவன் நினைத்து மனம்இரங்கி, தனதுதாளிற்றலைமுடிசூட்டிய நகுஷனைநோக்கி, கானகத்திலிருக்கும் கரடி-புலி-சிங்கம்-யானை முதலாகிய மிகுந்த பலத்தினையுடைய செந்துக்கள் உனக்குண்டாகுமஅரிதாகியபசிக்கு எளிதாகிய உணவாகக்கடவது என்று இயம்பி, இப்படிநீ மலைப்பாம்பாக வாழ்ந்திருக்குங்காலத்தில் திங்கள்குலமாகிய உங்கள்குலத்தில உதிக்கும் தங்கபோன்ற தருமராஜன் ஒருகாரணத்தினலவனத்தில்வந்து உன்னைப்பார்த்து வசனிக்கும்போது நெருங்கிய சாபம்நீங்கி சுவர்க்கம் அடையக் கடவை என்று அனுக்கிரகமாக அருள்செய்யவும். உடனே முனிகூறிய சாபத்தின்வண்ணம் மலைப்பாம்பாகி மலையடிவாரத்தில்விழுந்தான் அகஸ்தியர் பொதிகையிற் சேர்ந்தார்.

இப்பால் ரிஷிகளுந் தேவதைகளும் இந்திரனீவகிய எண்டிசைப் பாலரும்பழைய இந்திரனிருக்கும் இடந்தெரியாமல் தேவகுருவினிடத்தில்வந்துப் பணிந்து மயக்குங்காலையில், மேலான கற்பினையுடைய இந்திராணி தேவேந்திரன் தவஞ்செய்யும் இடத்தைக்காண்பிக்க, யாவரும் வேதவசனங்களினுற் போற்றிபுகழ்ந்து, தேவேந்திரனுடைய பொன்னடியில்வணங்குவோர்கள்வணங்கி, நகுஷன் சாபம் அடைந்ததைநவின்று, இனிமேலாகிலும் தேவரீர் தேவபட்டத்திற்கு வரலாமென்று திசைப்பாலரும் இந்திராணியும் தேவகுருவும் ஊற்றமுடன் அழைக்க தேவகுருவின் திருவடியைப்பணிந்து கண்ணீர்சொரிந்து தேவரீரைத்தெரியாமல் அவமதித்த என்தீவினையானது செய்யவேண்டிய வேலைகளை எல்லாஞ் சிராகச்செய்துமுடித்தது. இனிமேற்றுளமாட்டேன். சரணாகதியடைந்தேன் பிழைகளைப் பொறுப்பது சான்றோர்கடன் ஆதலால் என்னை ஆண்டு இரக்ஷியும் ஐயனேஎன்று போற்றவும் இந்திராணிமுதலிய யாவரும்வாழ்த்தவும், இரக்கங்கொண்டு இந்திரனுடைய இருகரத்தையும் தேவகுருபற்றி அமராபுரிக்கு அழைத்துச்சென்று மங்களஸ்நானமஆட்டி தேவசிங்காதனத்தில்வைத்துதிவ்வியகிரீடந்தரிக்க அரசுபுரிந்து வரும்போது, அவ்விந்திரனுக்கு ஒவ்வொருவேளை மதிமயக்கமும் மனத்தியக்கமுந்தோன்ற பிரகஸ்பதிபகவானுடைய பூவடிபணிந்து, சுவாமி! தேவரீர் கிருபைசெய்யாமல் என்தியக்கமும் மயக்கமுந் தீரமாட்டாது. "ஈசனுக்கிழைத்தகுற்றந் தேசிகனெண்ணித்தீர்க்கும்-தேசிகற்கிழைத்தகுற்றங் குரவனே தீர்ப்பதன்றிப்-பேசவ்தெய்வமேனு" என்னும் வாக்கியத்தின்படி, சர்வலோக நாயகராகியசாம்பசிவமூர்த்திக்கு ஒருகுற்றஞ்செய்தால் ஆசாரியரிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்டு தீர்த்துக்கொள்ளலாம், ஆசாரியருக்கு ஒருகுற்றஞ்செய்தால் அந்த ஈசன்முதல் மற்றி யாவர்களாலுந் தீர்க்கக்கூடாது. "அவனருளாலே அவன்றாள்வணங்கி" என்பதுபோல் ஆசாரியராலேயே தீர்த்துக்கொள்ளவேண்டும் ஆகையால், என்னைக் காப்பாறுமென்று வணங்கிய இந்திரனை பிரகஸ்பதி தேவர்பார்த்து, தன்னைஇகழ்ந்தமையால்வந்த பழியைத்தீர்க்கும் பொருட்டுத்தானே ஒருவழிதேடி, சில தேவதூதருடன் பூலோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் சகல புண்ணியதீர்த்தமதிவ்வியஸ்தலங்கள் யாவுங்கண்டு வணங்கிப்பணிந்துதென்றிசைக்கு வரும்போது கடம்பவனத்தில் வந்துநிற்கவும், கலக்கம் தியக்கப் மயக்கம்யாவுந் தனிந்து நல்லகியானம்தோன்றிய இந்திரன் குருவினிடத்திற்சொல்லவும் அவர் தூதரைவிடுத்துத் தேடிப்பார்க்கவும், ஒரு சிவலிங்கப்பெருமானும் பொய்கையும் இருக்கக்கண்டு இந்திரன் அவிடத்தில்நெருங்கி, புற்பூடு கற்காடு முதலானவைகளைக் களைந்து, திருக்குடைசாத்தி தெய்வலோகத்திற்குத் தூதரையேவி, காயதேனுவின் பால்-தயிர்-நெய்-கோசலம்-கோமயம்இவைகளோடுதூபம் தீபம்-நைவேத்தியம்-பொன்னுடை-இரத்தினபரணம் முதலான அபிஷேகதிரவியங்களையும்ஆடையாபரணதிகளையும் கொண்டுவரச் சொல்லி விசுவப்பிரமனைப் பார்த்து, அஷ்டகஜம்தாங்கும் இந்திரமணிவிமானம் அமைக்கவிடுத்து அர்ச்சனைசெய்யப் புஷ்பம்வேண்டுமேயென்று இருக்கும்போது, அந்தப்பொய்கைநிரம்பப் பொற்றாமரை மலராக நிறைந்திருக்கப் பறித்து, அந்தப்பொய்கைக்குப் பொற்றாமரைப் பொய்கையென்று பேரிட்டுப் புகழ்ந்துகொண்டு இருக்கும்போது தெய்வத்தச்சன் ஆகாயத்திலிருந்துஇறக்கியவிமானம் சாத்திப் பொய்கையில்மூழ்கி, தூதர் கொண்டுவந்த திருமஞ்சனத் திரவியங்களால் அபிஷேகஞ் செய்து, ஆடையாபரணந்தரித்து நிவேதனஞ்செய்து பொற்றாமரைமலரால் அர்ச்சனைபுரிந்து தூபதீபங்கள் ஆலாத்தி-குடை-கவரி-சுருட்டி - ஆலவட்டம் பூர்ணகும்ப முதலிய உபசாரமுஞ்செய்து கண்ணுங்கருத்துங்கனிந்து களிக்கத்துதிப்பானுசி "அடியேன்வினையை யவிப்பதற்கின் கருவாயுருவா யமைந்தெழுந்த,விடையாய் போற்றி வேதத்தின்வித்தேபோற்றி கடம்பநிழல் உடையாய்போற்றி உயிர்க்குயிரா யுறைந்தாய்போற்றி யுடுபதியார், சடையாய்போற்றி யைந்தெழுத்தாய்ச் சமைந்தாய்போற்றி தனிமுதலே என்று துதித்து, ஏகாங்கத்திரியாங்கபஞ்சாங்க அஷ்டாங்கங்களாற்பணிந்து ஆகமவிதிமுறை தப்பாது பூசித்து, மதிமயக்க நீங்கி, பிரகஸ்பதிமுதலானவர்கள் தன்னைச்சூழவிருத்திரனைக்கொன்ற சமுத்திரத்தருகில்வந்த விஷ்ணுவை

பூசித்து தினதயாளுவாகிய தெய்வமே! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! வைகுந்தவாசா! அடியேன் உன்னடைக்கலம் என்றுதொழுது, இந்திரலோகம் புகுந்து சிங்காசனத்தில் இருந்து, இமையவர்களும் -எண்டிசைப்பாலரும்-வசுக்களெண்மரும்-ஏகாதச ருத்திரரும்-பதினெண்கணங்களும் நெருங்க, தேவதுந்துபி முழங்க பாரிசாதமலர்தூவ கிரீடபட்டந் தரித்துக்கொண்டு ஐராணிசமேதனாக இமையவர் வேந்தனாகியிருந்து, அயன்-ஹரி-அரன்முதலிய யாவரும்ஆசிர்வதிக்க கட்டியங்கூற, கணிகையர்ஆட, பதியும்நிதியும் பலமும்பெற்று மதிதவறாமல் வாழ்விற் சிறந்தனன்.

ஏனும் எனது மருமகனாகிய தருமநந்தனனே! அகஸ்தியர்சாபத்தால் மலைப்பாம்பாகி வனத்திலுழன்ற நகுஷமகாராஜனும் உம்மைக்கண்ட நலத்தினால் சாபந்தொலைந்து திவ்யரூபம்பெற்றுசுவர்க்கலோகஞ் சார்ந்தசங்கதி உமக்குத்தெரியுமே ஓ சந்திரகுலோத்துங்கனே! மலைப்பாம்பாகியநகுஷனைப்போன்றவன் துரியோதனன் தேவேந்திரனே நீர் இந்திராணியே இந்தத் திரௌபதாதேவி சாட்சாத்காரபாகிய கடம்பவளக்கடவுள்-வைகுந்தநாதர்-மண்பொறுத் தந்தை தேவகுரு-ஆகிய இவர்கள்தான் உமக்குத்துணையாக இருக்கும் துவாரகாபுரிவாசன் இந்திரனுமிந்திராணியுமனுபவித்த வருத்தங்களெல்லாம்நீங்கள் அநுபவித்தீர்கள் அவர்கள் எப்படிபழிபாவங்களையும் சத்துருவையும்வென்று அமராபதியை ஆண்டார்களோஅப்படிபோல இன்னங்கொஞ்சம் நாளையில் நீங்களுஞ்சத்துருவைச்செயித்து உலகமெல்லாம் ஒருகுடை நீழலில் அரசுசெலுத்தப் போகின்றீர்கள் எனதுவார்த்தைக்குத்தவறுவராது என்றுமங்களாசனஞ்சொல்லி, சகலஅரசர்களும் பாண்டவர்களும்பாஞ்சாலிமுதலிய யாவர்களும் அடங்காமகிழ்ச்சி அடையும்படியாக விடைபெற்றுககொண்டு, சதுரங்கசேனைகளுஞ்சூழ சல்லியமகாராசன் இரதம் ஏறும்போது ஐவர்களும்பின்றொடர்ந்து வழிவிடுத்துத் திரும்புங்காலையில் முரசக்கொடியோன் ஓமாமா நான்கேட்டுக்கொண்டவாக்கியம் மறந்துவிடப் போகிறீரென்று உறுத்தியபோது ஒருக்காலும்மறவேன் உள்ளத்திற்பதித்தேன் உமது இஷ்டப்படிமுடிப்பேன் என்றமரியாதைசெய்துநிறுத்திவிட்டு அஸ்தினபுரம்போய்ச்சேர்ந்து அரவக்கொடியோன் முதலாகிய யாவர்களையுங்கண்டு வந்தனை வழிபாடுகள்பெற்று, வணங்காமுடியோனிடத்தில் படைத்துணையாக உற்றுவாழ்ந்திருந்தான் மத்திரதேசாதிபதியாகிய சல்லியமகாராஜன் ஐவர்முதல்வனும் அரசர்களும் உபலாவியத்தில் இருந்தார்கள். அந்தவேளையில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அருச்சுனனும் துவாரகையிலிருந்து இரதம்ஊர்ந்துஇன்பமுற்றுபாரதயுத்தத்திற்குத் தகுந்தயோசனை செய்யவந்தார்கள். எல்லோரும் எழுந்துஉபசரிக்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஓராசனத்திலமர்ந்தார். அப்போது இவரைப்படைத்துணை கேட்கப்போனதும், துரியோதனன் படைத்துணைவிரும்பி அவிடம்வந்ததும், அங்கேநடந்தசெய்திகளும், சுவாமிமொழிந்ததும் துணையாயமைந்ததும் இவையாவையு மறக்காமல் பற்குனன் தருமராஜனுக்குச் சொல்லக்கேட்டு உடல்பூரித்து மகிழ்ந்து இவிடத்தில் சல்லியராஜன் படைத்துணைவந்தவழியில்தனதுபேரால் ஒருதண்ணீர்ப்பந்தல் அமைத்துவஞ்சனையாக வழிமடக்கிச் சுயோதனன் படைத்துணைகொண்டதும், அம்மத்திரராஜன் தன்னிடத்தில்வந்து சொல்லிப்போன வசனங்களியாவையும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு தருமர் சொல்லக்கேட்டு, ஒருவருக்கொருவர் மகிழ்ந்து பேசிக்கொண்டு மேல்நடக்கவேண்டிய காரியங்களையும் முறைமைகளையும் யுத்திசெய்து இருந்தார்கள்.

இப்பால் உபலாவியம்விட்டுப் புறப்பட்ட உலூகமகாமுனியானவர்மலைகள்-செடிகள்-வனங்கள்-வனாந்திரங்கள்-காடுகள்-மேடுகள்-பாலைகள் -சோலைகள்-சாலைகள்-நாடுகள்-நகரங்கள்இயாவுங்கடந்து, அஸ்தினபுரத்திறகுவந்து வீஷ்மர்-துரோணர்-கிருபர்-அசுவத்தாமர்-விதுரர் முதலாகிய பெரியோர்களின் அரண்மனைக்குச்சென்று, சத்தியவாய்மை தப்பாதபாண்டவர்கள் சாஷ்டாங்க நமஸ்காரஞ் சொன்னார்கள், என்றுசொல்லித் தானுமவந்தித்து அவர்கள்தந்தவந்தனமுங்கொண்டு மரியாதையும் பெற்று, தான்கற்ற வேதசாஸ்திரம்-நீதிசாஸ்திரம்-தருமசாஸ்திரம்-கியானசாஸ்திரம்-இதுமுதலாகிவ நூல்களெல்லாம் எடுத்துக்காட்ட அந்தப் புத்திமான்கள்கேட்டு செவிநிரம்பிய தேவாமிர்தத்திலும் இனியசொற்களைக் கேட்ட இதுவே புண்ணியதினமென்றும் தேவரீருடைய திருவடியைத்தாங்க இந்நகரம் இன்றுசெய்தது பாக்கியமென்றும் தம்மைத்தரிசிக்கப்பெற்றதே நாங்கள்கண்கள்படைத்த இதற்கு லாபமென்றுஞ்சொல்லி, உடல்புளகமுற்று உபசாரஞ்செய்து, உதிட்டிரன் முதல் மற்றெல்லோர்களின் க்ஷேமங்களை விசாரித்துச்சிந்தைமகிழ்ந்துவந்த பௌரோகிதருக்குத் திடஞ்சொல்லியிருந்தகாலையில் ஒருநாள் மதுநிறைந்த மலர்மாலையும் முப்புரிநூலும் தனைழந்திலங்கிப் மார்பினனாகிய உலூகமகாமுனி திருதராட்டிரமகாராஜாவின்பெரிய சபைக்குச்சென்றார். அவரைக்கண்ட யாவரும் தண்டச்சமர்ப்பித்து, தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானைக்கண்ட தேவேந்திரன் முதலாகிய சபையார்செய்யும் உபசாரம்போல் எல்லோரும்வணங்கிப்பணிந்து மங்களாசனம்பெறவும், வணங்காமுடிபொறுத்த துரியோதனமகாராஜனும் எதிர்கொண்டுகண்டு இருபாதங்களிலும் தீர்க்கதண்டனிட்டு, நயமிருது வசனத்துடன் நவரத்தினகசித வீராசனத்தில் எழுந்தருளச்செய்து கண்ணில்லாதகாவலனுக்குசொல்ல அவனும்

இவருக்கு இருகரத்தையுங்குவித்து வணங்க, உலூகமாமுனிவர் அரசன்முதல் யாவர்களுக்கும் ஆசிர்வாதஞ்செய்து அக்ஷதைதூவினர். அப்போது விந்தகிரிக்கு ஒப்பாகி மேல்நிமிர்ந்ததோள்களையுடைய வீரதவீரிய வீஷ்மர்முதலியமேலோர்கள் உள்ளக்களிப்புடன் அவரை உவந்துநோக்கி தேவரீர்வந்தகாரியம் தெரிவிக்க வேண்டுமென்றுசெப்பவும், எட்டுக்கிரியுந்தியங்க விழித்து வட்டக்கிரியுமயங்க மிதித்து முட்டுக்கொடுக்க முழங்கி மதர்த்துக் கட்டுத்தறியை முறிக்குமதங்கொண்ட பட்டத்தியானையை உடைய திட்புபற்ற திருதராட்டிரனும் அவன்குமாரர்களும், கன்னனும் சகுனியுங்கொதிப்புமனத்தாற் குன்றும்படி பா+தூது வந்த உலூகமாமுனியானவர் தான்வந்த வரலாற்றை ஒழுங்காக விரித்துச் சொல்லுகின்றார்.

கேளுங்கள் குருகுலாதிபரே! பனிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடம் ஆரும் அறியாமல் அக்கியாதவாசமும்போக்கிய பாண்டுவின்மைந்தர் ஐவரும் வெளிப்பட்டு உபலாவியத்தில் வந்திருக்கின்றார்கள். ஆதியில் அநேகம் அரசர்களுங்காண மாயச்சூதாடி வென்ற இராச்சியத்தையனுபவிப்பது மரியாதையல்லவென்று கொடுத்துவிடாமல், நீங்கள்கைக்கொண்டு ஆண்டு அனுபவித்துவந்த அந்தவளம் நிறைந்தபூமியை பதின்மூன்றுவருடங் கழித்துவந்தால்கொடுத்து விடுகிறோமென்று முன்ன மொழிந்திருக்கின்றீர்களாம். அந்தச் சத்தியவாக்கின்படி இப்போது பாண்டவர்களுக்கு நாடுகொடுக்கின்றீர்களா? கொடுக்கமாட்டீர்களா? நாங்கள் இராச்சியங்கொடுக்கமாட்டோம் யுத்தமே சம்மதிதானென்று சொல்லுவீராகில், இந்திரப்பிரஸ்தத்திலிருந்து வாழ்ந்த ஐவரை விசுவாசவார்த்தைகள்சொல்லி அழைத்துவந்து வாய்பேச்சு பேசவொட்டாமல் மோசச்சூதாடி தேசத்தைக் கைக்கொண்ட நாசத்தைப்போல் மாயயுத்தஞ்செய்ய எண்ணாமல், எதிரில்இளைக்காமல் நின்றுமோதியுத்தஞ்செய்ய நினைப்பீராகில்வெளிப்படுங்கள். அப்படியே ஞாயமாயுத்தஞ்செய்தபோதிலும் நீங்கள் ஒருக்காலும் ஜயம பெறப்போகிறதில்லை. வீணாகிய எண்ணம்வேண்டாம் ஏரிகளிலுங் குளங்களிலும் அழகினையுடைய செங்காலன்னமுங் கருங்கான்மயில்களுங் கலந்துவிளையாட, கிளிநாடுங் குயில்பாடும் வளநாட்டையுடைய மன்னவர்களே! தமையன்தம்பிகள்வேற்றுமையில்லாமல் ஆதியிலிருந்த அன்புரிமையைப்போல் கலந்துவாழ்வீர்களாகில், பெருவாழ்வும் பெருந்தனமும் பெருநிதியும் பெரும்புகழும் பெருமையும் வரும். இவ்விதமா+ப் பொருந்தி வாழ்வுபெறுமதும், விருதாவாய்ப்பாண்டவர்களுடன் எதிர்த்து யுத்தம்பண்ணினால் நாம் அழிந்துபோவோமென்று நினையாமலும், எவ்விதத்திலும் வெற்றியடைவோமென்று கருதி எதிர்ப்பீர்களாகில் உங்களால் அவர்களை வெல்லுவதென்பது அரிது! அரிது! ஏனெனில், கண்கறுத்துமனங்கறுத்து கதையைத்தாங்கிய பலமுடைய வீமசேனனும், காண்டீபதாரியாகிய அருச்சுனனும், நகுலசகாதேவர்களும், யுத்தகளத்திற் புகுந்துவிட்டால்சத்துருவாகியநீங்கள் புத்திரமித்திரகளத்திராதிகளுடன் அழிந்துஅவிந்துபோவீர்கள். முனீஸ்பரர்கள் சொல்லும்வாக்கியம்மெய்யாகாமற்போமோ? ஐயா! ஒருக்காலும்பொய்யாகமாட்டாது. என்றிவ்வாறுஉலூகமாமுனிசொல்லவும் சந்தனகுங்கும பங்கந்தங்குஞ் செம்பொன் மேருவைத்திரட்டி இணையற்றுபார்த்த தூணையென வகுத்த பிரகாசம்பொருந்திய புயத்தையுடைய குருகுலத்தில் வருதவத்தில் அவதரித்து அரசுபெற்று வரிசையுற்ற பெருமைபெற்ற ஜயமிகுத்த சுயோதனராஜன் உலூகிதனைப்பார்த்து, இவிடத்தில் இதுவரையிலும் பூனைபோலிருந்து பெரும்புலிபோற் சொல்லிய உன்வாக்கியம் நாங்கள செய்யப்போகின்ற யுத்தத்தைப் பார்க்கிலும் மிகக்கொடியதாகயிருக்கின்றது. நல்லதுஐயரே! உமது வாக்கியத்தையும், எங்க ளிருதிறத்தாருடைய ஆண்மிக்கையின் சிலாக்கியத்தையும், தருமசான்களின் போக்கியத்தையும், தோள்வலியின்பராக்கிரமத்தையும், நாளை நடத்தப்போகிற யுத்தகளத்தில் பார்த்து அறியலாமென்று சொல்ல, கல்விமுதலாகிய சகலவித்தைகளையுங் கற்றும், அதினுடையஉண்மைக்கியானத்தையறிந்து நடக்குங்கருத்தில்லாததுரியோதனன்சொல்லிய மொழிகளையெல்லாங்கேட்ட தத்வக்கியானியாகிய விசயவில் விதுரமகாராசன் சொல்லுகின்றான்.

அப்பா! சூதினாற் கைக்கொண்ட நாட்டை மறுபடியுங்கொடுத்து விடுகிறேனென்று சொல்லியபடிக்குப் பாண்டவர்களுக்குக் கொடுக்காமல், புன்மைமேவிட்டுஅறிவில்லாமலிருக்கும் பலமூடர்களுடைய துற்போதனையைக் கேட்பாயாகில், ஸ்ரீமகாலக்ஷ்மி உன்னைவிட்டு நீங்கிப்போய்விடுவாள். நால்வகைச்சேனைகளும் பந்துக்களும் நாசமடைந்துபோகும். இதுநல்லதல்ல உடனேஉனக்கு அல்லல்வரும்என்றான். அந்தச்சமயத்தில் துரோணாசாரியார் நந்தியாவர்த்தந் தாபனை நோக்கி, அரசே! பனிரண்டுவருடங்காட்டிலும் ஒருவருட நாட்டிலுமிருந்து மீண்டுவருவீராகில் உங்கள் செல்வத்தை உங்களுக்குக்கொடுத்து விடுகிறேனென்று இராஜசபையில் ஸ்திரமாகச்சொல்லிய உமது சத்தியவசனம் தவறிப்போய், சேனையினியங்களைக்கொண்டு வீரப்பிரதாபத்துடன் பொறுத்தவாளாயுத யுத்தஞ்செய்ய நினைப்பது ஞாயமல்ல, உலகம் பழிக்கும் பெரும்பிழையாகும். அந்தப்பழிகளையும் ஒருவழியாகத்தள்ளிப் பாண்டவர்கள்பேரில் போர்புரிவோமாகில் விஜயனானவன் தனதுகாண்டீபத்தில் இருந்துவிடும் சரங்களினுடைய முனைவாய்களினால் இரத்தமாமிசச் சேறும் உயிரும் கக்கும்படியாகப் போக்கிவிடுவான். பெரிய அவமானமுஞ் செய்வான்

பின்பலம் வேண்டாமல் தன்பலம்வேண்டிய காண்டீபனாகிய தனஞ்சயனுக்கு எவரும்நிகரல்லவே என்று சொல்லவும், துரியோதனன் அதனைக்கேட்டு, உக்கிரமாகிய இத்தனைபேரும் எத்தனைவிதமாகச் சொன்னாலும் என்சித்தமிரங்கி எள்ளத்தனைநாடுங்கொடுப்பதென்பதேஇல்லை மண்டைகள்கிழியச் சண்டைகள்செய்து வென்றவர்களுக்கே இந்தராச்சியம் சொந்தமென்று இயம்பியபோது வீஷ்மர் ஏறநோக்கி இப்படிப்பட்ட கல்மனத்தனைக் கொன்று கசகசவென்று மென்று நின்றுவிடலாமாவென்று பல்லைக்கடித்து, பிறந்தபுத்திரனாகிய திருதராட்டிரனைப்பார்த்து, உன்குமாரனாகிய துரியோதனன் ஒருவர்சொல்லும்புத்திமதியிலும்வாரான் தன்சுயபுத்தியையும் உன்னிப்பாரான் சின்னமனிதர் வார்த்தையைக் கேட்டு, நமது திங்கள்மரபின் நீதி முறைமையைக்கைவிட்டுப் போட்டு, பதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து வாருங்களென்றுசொல்லிய உறுதிவாக்கியத்தின் வண்ணம் உன்புதல்வராகிய பாண்டவர்கள் காட்டைக்கழித்து நாட்டில்வந்து ஒருஉத்தமனைத் தூதாகஅனுப்பிநாட்டைக்கேட்டவிடத்திலும், ஐவருக்குநாடுங் கொடாமல் வெவ்வியவினைக்கு மேலாகும் போர்புரியவிரும்புவானாகில், மகமேருவுக் கொப்பாகிய காண்டீபங்கரத்திலேந்தி வந்து எதிர்க்கும்விஜயனுக்கு எதிரில் வில்வளைத்துச் சமர்செய்யும்வீரன் எவன் இருக்கின்றான் அவன் திருஷ்டிக்கு எதிர்நிற்பவர்கள் யாவருமில்லை எவர்கள் பலத்தைக்கண்டு இவன்இப்படித் துள்ளுகின்றான் ஊமைகண்டகனவுபோல்பேசுவதில் உபயோகமில்லை வாக்கினால் அளப்பதில் வருவதொன்றில்லை வெளிப்பட்டபாண்டவர்விடப்போகின்றதில்லை ஆகையால் காது கேளாதவரைப்போல்கேட்டுக்கொண்டு இருப்பதில் காரியமில்லை முன்னுக்குஇன்பமும் பின்னுக்குத்துன்பமும் ஆகியகாரியத்தையுங் கைப்பற்றலாமோ? (வாய்க்குஇனிப்பு வயிற்றுக்குக்கேடு) என்பதையறியாயா? இதனால் உனக்குவரும்புன்மை. கலகஞ்செய்வோர்க்கெல்லாம் நன்மைஆதலால்உன் புத்திரனுக்குத் தெரியப்படுத்தி ஆதியிற்சொல்லிய நீதிதப்பாமல் ஐவருக்கும்நாடுகொடுப்பதே நலமென்று மிகுந்த கோபங்கொண்டு சொல்லிவந்தனர் அப்போது பக்கத்திலிருந்த அங்கதேசாதிபதிபதைபதைத்து, வெகுளிமேற்கொண்டு, ஈரேழுலகிலும் எனக்கு எதிர் இல்லையென்று இருமாந்திருக்கும்வீரன்யானொருவனிருக்க, முன்பின் எண்ணிப்பாராமல் அர்ச்சுனனுக்கு எதிர்யாருமில்லையென்று அவனையே அதிகசிலாக்கியமாகப் பேசிவருகின்றீர் (பொக்கைவாயன் பொரிமாவைமெச்சினான்) என்னுங் கதைபோல மகிழ்ந்துபுகழுகின்றீர் உமது வல்லமைக்கும் நீர்கற்ற தனுர்வேதத்திற்கும் விஜயன் மேற்பட்டவனென்று விளம்பவேண்டியதேயன்றி, உலகத்தில் ஒருவரும் அவனுக்கு ஈடுபடமாட்டார்கள் என்றுநீர் எப்படிச் சொல்லுவீர் அதற்குஒருகதை சொல்லுகிறேன்கேளுமென்று கர்னன்சொல்லத் தொடங்கினான்.

வியாக்கிரயுத்திகதை

ஓவீஷ்மரே! ஒரு ஏழைக் குடித்தனக்காரன்காடு அடர்ந்த ஏரிக்கரையோரத்தில் ஏரைப்பூட்டி உழுதான் அந்தக்காட்டில் இருந்த வேங்கையொன்று உழுகின்ற மாட்டைப்பாய்ந்து பிடித்துக்கொண்டது அந்தக்குடியானவன் விசனம்அடைந்து கண்ணீர்சொரிய அதை அந்தவேங்கைநோக்கி ஏன் அழுகின்றாய் உழுகின்றவனே என்னலும், குடியானவன் ஐயா! எனக்கொருபெண்ணுண்டு. அந்தப்பெண் தனக்கு திடவீரதைரியசாலியாக ஒருநாயகன்வேண்டும் என்றுசொல்லியிருந்தது. நானும் அப்படிப்பட்டவனை எங்கள் பந்துக்களிலும் மற்ற உலகங்களிலுந் தேடிக்காணாமல் வருந்திஇருந்தேன் உம்மைக்கண்டு மகிழ்ந்தேன ஆனால் நீர் மிருகமாயிருப்பதினால் என்குலத்துக்கும் இவ்வுலகத்துக்கும் விரோதமாக இருக்குமேயென்று விசனப்படுகிறேன் என்றான். அந்த வார்த்தையைக் கேட்ட வேங்கையானது உள்ளமகிழ்ந்து(பெண்ணென்றால் பேயும்இரங்கும்) என்னும் வசனப்பிரகாரம் மயங்கி, யான் எப்படியிருந்தாலுங் குறைவில்லை, மேலும் வீரனென்னுந் தைரியசாலிகள் எந்தகுலத்திற் பிறந்தாலும் தோஷமில்லை என்னிடத்திற் கொலைத்தொழில்இல்லை உம்முடையகுமாரத்தியைக் கொடுத்தால் வேண்டிய செல்வங்கொடுப்பேன் என்றுசொல்லக் குடியானவன்கேட்டு, நான்வீட்டுக்குப்போய் மாட்டைவிட்டுவிட்டு வருகின்றேன் இவிடத்தில்தானே இருமென்றுசொல்லிச் சற்றுதூரம்சென்று ஒருநாழிகை மறைந்து இருந்து மறுபடியும்வந்து, ஓவியாக்கிரஉத்தியென்னும் வீரதீர மருமகனே! வீட்டுக்குபோய் என்குமாரத்தியிடத்திலும் உனது மாமியாரிடத்திலும் இந்தவார்த்தையைச் சொன்னேன். அவர்களும் எங்கள்பந்துக்களில் சிலரும் சந்தோஷமடைந்துஇப்போதே விவாகமுடிக்கவேண்டும் என்றார்கள் என் பெண்மாத்திரம் தேம்பித்தேம்பி அழுதாள் ஏனம்மா அழுகின்றாய் என்றுகேட்டேன். இந்நாட்டில்வாழும் நங்கையரைப்போல நல்லமானிடப் புருடனைத் தழுவாமல், காட்டில்வாழும் மிருகராஜ புருஷனைத் தழுவி முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவி விளையாடி வாழ்வதற்குப் பிறந்த பெரும்பாவியானேனே என்றாள் என்னகாரணத்தால் என்றேன் இருகரங்களில் நகங்களும் வாயிற் கோரதந்தங்களும் இருப்பதினால் எப்படித்தழுவுவேன் இதுகள்மாத்திரம் இல்லாவிட்டால் எனக்குக்கிடைத்த புருஷருடைய சுந்திரவீரத்திற்கு என்போலொத்த பெண்கள்ஏக்கங்கொள்ளவேண்டும் அல்லதுகைகால்கள்வீக்கங்கொள்ளவேண்டும் என்ன சிலாக்கியம் என்னுடையபாக்கியம் என்றாள் என்று குடியானவன்சொல்லவும், வேங்கைவருந்தி அன்பிற்.

சிறந்த மாமா! யான் நகங்களையும் பற்களையும் அடக்
கிக்கொண்டு தேகத்திற்படவொட்டாமல் உமதுகுமா
ரத்தியுடன் கொஞ்சிக்குள்ளி விளையாடுகிறேன் என்று
சொல்லக்கேட்டு, இதோபாரும் எங்கள்நகங்களைக்ஷவ
ரகன் வாங்கிப்போடுவதுபோலநீரும்வாங்கிப்போடும்
அப்போது குடித்தன முறைமைக்குத் தரித்திரமில்
லாத சவுக்கியமாம் என்று குடியானவன் சொல்லக்
கேட்டு அப்படியே செய்யுமென்று வேங்கைசொல்ல
வும் க்ஷவரகனை அழைத்து வருவேனென்றுபோய்
ஒருதச்சனை அழைத்துவந்து இருகாங்களிலும் இருக்
கும் கூர்மையாகிய நகங்களை அடியோடுநறுக்கிவிட்டு
வாயைக்காட்டென்சொல்லி கோரதந்தங்களையும் குறடு
கொண்டு பிடுங்கிவிட்டுப் போபோவென்று முகத்தில்
ஒருஅறைவிட்டான அந்த அறையைத்தாங்கிய வேங்
கையானது கோபித்து பெருவியாதிகொண்ட ஈயாத
லோபியினது விரல் குறைந்திருக்கும் அங்கைபோ
லொத்த தன்கூழைக் கரத்தால் ஓங்கிஓங்கி மோதும்
போது குடியானவன தாறுக்கோல்வாங்கி வீசினன்
அதனல் வேங்கையானது ஓட்டம்பிடித்து ஓடிப்பது
ங்கி வலிப்பெடுத்து மாய்ந்தது ஐயா வீஷ்மரே! இது
போலவே வீரமும்வில்லும்தவமுமுடைய ஸ்ரீராமனிடத்தில்
பறிகொடுத்து நகமிழந்த வேங்கைபோல் நலிவுற்றபர
சிராமனைத் திட்டியமரத்திற் கூர்பார்ப்பதுபோலஅவ
னிடத்திற்கற்ற அல்பவித்தையைக்கொண்டு அம்பை
யென்னும் பெண்ணுக்காப் பின்பு அவனையே பிறமு
துகிட்டோடச் செய்த சேவகத்தைமேற்கொண்டாய்
அல்லாமல் எந்தஇடத்தில் எந்தவீரர்களைவென்றுஜய
ம்பெற்றிருக்கின்றாய் உன்பண்டவாளம் இப்படி இரு
க்க, யாரையும் அலக்ஷியமாகத் தூறிச்சொல்லுவது
அநியாயம் உமக்கு இதுஞாயமல்லவென்று கண்கள்
சிவந்து கடுகடுத்து கன்னன்சொன்ன மொழியைக்
காங்கேயன்கேட்டுக் கடுங்கோபங்கொண்டு சொல்லு
வார்:

அடா கச்சைச்சொடியோனே! நானென்னயுத்
தஞ்செய்தேன் எங்கேவீரப்பிரதாபம்பெற்றேனை ஆளி
ல்லாக்காலத்தில் வீண்வார்த்தைகளைப்பேசி அகப்பட்
டுக்கொண்டு ஆரிடத்தில்விழித்தேன் நான் எவ்வளவு
அப்பா கர்ன்னா! நீபோசுத்தசாமார்த்தியன், ஒருவர்
துணைவேண்டாத வீரன் சொல்லியவீரந் தப்பாதவன்
வல்லன்மசாலி மெத்தவும்நல்லவன் வெவ்விபபுகையெ
ழும்பும் புத்திர காமேஷ்டியாக அக்கினியில துருப
தேய மகாராஜனுக்குப் புத்திரியாகப்பிறந்த தோகை
மயிலைப்போன்ற திரௌபதாதேவியின் சுயம்வரகால
த்தில் வில்வளைத்து மச்சேந்திரத்தை அறுத்து மாலை
சூட்டுவதற்கு வந்திருந்த மன்னவர்களெல்லாரும்மதி
மயங்கப் பயத்தைத் தரும்படியாகிய வில்லை எடுத்து
நிறுத்தி இழுத்துவளைத்து நாணிபூட்டி நாணமலிருந்
தவன் நீதானே அடா கவசகுண்டலா! சகலஅரசர்க
ளும் தலைகுனியும்படியாகப் பிராம்மண ரூபத்துடன்
வந்து வில்வளைத்து வன்மை நன்மை சலம் நிச்சலம்
என்னும் நானகுகுறியாகவைத்த மச்சேந்திரம்அறுந்
துவிழும்படியாக அம்பினலெய்துபாஞ்சாலமாலைசூட்
டக் கைப்பற்றிக் கொண்டுபோகும் கைவலிமையை
யுடைய விஜயனைப்பார்த்து ஐஐயோ! பெண்ணைக்கொ
ண்டு போகின்றானே பிராமமணன்! நமது குலத்தா
ராகிய இராஜர்களுக்கெல்லாம் மானமும்ஈனமும் வீர
முமவெட்கமும இல்லையா என்று இந்தத்துரியோத
னன் மனவாருத்தப்படுங் காலையில் தனுர்ப்பாணங்க
ளுடன் சென்று கிரீடியைத்தகைந்து யுத்தஞ்செய்து,
திரௌபதியை மீட்டுக்கொண்டுவந்த வீராதிவீரன் நீ
தானே வனவாசஞ்செய்யும் பாண்டவர்களை அவமா
னஞ்செய்ய நினைத்து மன்னர் மண்டலீகரும் நால்வ
கைச்சேனையும் இராஜஸ்திரீகளும் சுவேதக்ஷத்திரமு
டைய வணங்காமுடியோனும் நீயும்வனஞ்சுற்றிப்பார்
த்து சலக்கிரீடை பண்ணிவருவோம் என்றுபோன
நாளையில் காந்தருவனுக்கும் உங்களுக்குங் கலகம்நட
ந்து அவன் எல்லோரையும்பிடித்துப் பின்கட்டாகக்
கட்டிப் பிணையலாடிக்கொண்டுபோம்பொழுது தரு
மராஜனுடைய சரணங்களில்விழுந்து அழுது சிறை
நீக்கிவிடவேண்டும் தேவரீரென்று தூதவர்சொல்லக்
கேட்டு வீமராஜனையும் அருச்சுனராஜனையும் விடுத்து
மீட்டுவிட்டபோது அந்த இடத்தில் நீயல்லவோ முன்
னின்று வெற்றிபொருந்திய யுத்தஞ்செய்துமீட்டினாய்
அடாதாஷ்டகா! போனதெல்லாம் போக நேற்று
விராடபுரத்தில் ஒரு அக்குரோணிசேனைகளும்கோடி
தேர்களும் நாமுஞ்சென்று பசுக்களை ஓட்டிக்கொண்டு
வரும்போது உண்டைவிற்பிடித்துக்கொண்டு திரியும்
உத்தரகுமாரன் தேர்செலுத்த உத்தரதிசையில்வந்து
அந்த அக்குரோணிசேனைகளையும் கோடி இரதங்களை
யும் பாணங்களினல்மூடி, இராஜனையுங்கேடி பழிப்பா
கப்பாடி என்னையுந் துரோணர்முதலாகிய பேர்களை
யும் நாடியடித்து நீயும ஓடிஒளிக்கத் தடுத்து நாணுவித
பங்கஞ்செய்து நாமெல்லாம் தலைத்துணியும் பிடுங்கிக்
கொள்ளக் கொடுத்து மடக்கியபசுக்களையும் விடுத்து
வரும்படியாக மாட்டியது விஜயன் ஒருவனே அன்றி
இரண்டுபேரில்லை அப்போது அருச்சுனனைச்செயித்து
பசுக்களையுங்கொண்டு துரியோதனனையுஞ் செயம்பெ
றச்செய்து சகலசெல்வமுங் கொடுத்து அஸ்தினபுரத்
திற்சேர்த்த உத்தமவீரனும் பதினான்குலோகமும்ஒரு
வனென்றிருக்கும் தீரனும்நீதானே அப்பா! இப்பவும்
பசுமைநிறமும்வாசனையும் தேனூருவிய தளபமாலை
அணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவன் சாரத்தியஞ் செய்யக்
காண்டீபமும்கணையுங் கரத்திலேந்தி யுத்தஞ்செய்ய
வரும் சவ்வியசாசியை ஜயிப்பதற்குவேறொருவீரர்கன்
எக்காலும் இல்லை முக்காலுஞ்சொன்னேன் நீயொரு
பிராணிதான் மருந்தைப்போல் வெற்றி பெறுதற்குப்
பொருந்தி இருக்கின்றாய் நல்ல மரத்திற்பாயும் புல்லு
ளிபோல நல்லகுலத்தை நாசஞ்செய்யுங் கல்லுளியாக

சேர்ந்த கன்னா! இவ்விடத்திலிருக்கும் யாவரும் உயிருடனிருந்து உள்ளங்கைப் புண்போல் உனதுவல்லபத்தைப் பார்க்கத்தான் இருக்கின்றோம் என்று கங்கர்புத்திரன்சொல்ல, கர்னன் மறுமொழி கூறாமலும் இருந்தான்.

அச்சமயத்தில் துரியோதனன் கையோடு கைதட்டிக் கொட்டிக் கலகலவென்று குலுங்க நகைத்துக் கெட்டி கெட்டி அண்ணா கர்னா! இப்போதுவீஷ்மர் சொல்லும் வார்த்தையெல்லாம் பாண்டவர்கள்பேரிலிருக்கும் இஷ்டத்தினால் சொல்லும்வார்த்தைஎன்று பட்டப்பகற்போல் தெரியவருகின்றது துஷ்டப்பகையைப் போக்கவும இஷ்டனாகிய என்னைக் காக்கவும் அஷ்டதிசையும் அதரித்திரனென்று பேர்பெற்றவள்ளலே! அதைரியம்வேண்டாம் என்று தட்டிக்கொடுத்து, தூதாகவந்து எதிரிலிருந்த பிராம்மணனை நோக்கி வேலையில்லாமல் இந்த வீண்வார்த்தையைப்பேச வந்தீர் என்று அவமதித்து இங்கிருக்கும் நாடுகளெல்லாம் எங்களுடையது அங்கிருக்கும் காடுகளெல்லாம் அவர்களுடையது அரசர்முதலிய குடிப்படைகளெல்லாம் எங்களுடையது ஆரணியவாசமாகிய மிருகங்களெல்லாம் அவர்களுடையது தனதானிய போசன அநுபவம் எங்களுடையது சருகுகந்தமூல அனுபவம் அவர்களுடையது இந்தப்படி முன்னமே தெய்வம் முடித்துஇருக்கின்றது அதுதோன்றாமல், உம்மைத் தூதுஅனுப்பியது கொடியவறுமை என்றுதோணுகிறது. ஆகையால் நீர்சீக்கிரம்போய் ஐவருக்குந் தெரிவித்து ஆசைவிட்டு விடும்படியாகப்போதியும் என்று சற்பக்கொடியோன் சொல்லவும் சந்திரகுலசிகாமணியாகிய திரிதராட்டிர மகாராஜன் துரியோதனனைக்கடிந்து, சிறந்த பெரியோர்களும் நிறைந்த அரசர்களும் பொருந்திய பெரியசபையில் அழகுந்தகுதியும் அல்லாதசொற்களை நீசொல்லியது நன்மையோவென்று அதட்டி அடக்கி பாண்டவர்கள் பேரில் பக்ஷம்வைத்துப் பேசுகிறவனைப்போல் அன்புநிறைந்த உருவமாக எதிரில்இருக்கும் உலூகமாமுனியைப்பார்த்து, ஐயா! நீர்வந்துசொல்லிய வார்த்தைகளெல்லாம் மெய்யாகியசத்தியமே இருதிறவர்களும்மனம் ஒத்து வாழ்வைப்பெறாமல் அமர்செய்வார்களாகில் அழிவதுநிச்சயமே பிழைப்பார் ஒருவரும் இல்லை. அப்படியுத்தம் விளையாமற் செய்யவேண்டும் எங்கள் பிள்ளைகள் இருதிறத்தாரும் நிறைந்த செல்வத்துடன் சுகப்படும்படியாகிய காரியங்களை யாங்கள் யாவரும் ஆலோசித்துக்கொண்டு விவேகமே தேகமாகப்படைத்த உண்மையானவர்களை என்பிள்ளைகளிடத்திற்கு அனுப்பிவைக்கின்றேன் தேவரீர் உபலாவியத்திற்கு எழுந்தருளி குலமும்-பலமும்-நலமும் -தவமும் - வாழ்வும் பெற்றிருக்கும் பாண்டவர்கள் துரியோதனாதிகள்பேரில் கொண்டிருக்குங் கோபங்களும் மனஸ்தாபங்களும் சபையிற்கூறிய சபதங்களும் நீங்கும்படியாக, அநேக தருமஞாயம் குலமுறைமைமுதலிய நீதிகளினாற்றெரிவித்துப் புகழாகிய சகாயஞ்செய்யவேண்டும் பெரியோராகிய தேவரீரென்று நமஸ்கரித்துவெகுவித உபசாரமுஞ்செய்து தேவர்களும்தாவிவந்துஆசைகொண்டு மகிழும்படியாகச் சந்தனபுட்பமும்கந்தசதம்பமும் பீதாம்பரங்களும் நவரத்தினகசித ஆபரணங்களும் கொடுத்துத் தீர்க்கதண்டஞ்செய்துவிடைகொடுக்க, வீஷ்மர் துரோணர் விதுரர்முதலிய பேர்களும்வணங்கி, சுவாமீ! பெரிய அரசன்சொல்லியவண்ணமே நடத்தவேண்டும் போய்வாரும் என்றுசெலவுகொடுக்க ஆசிர்வதித்து, அஸ்தினபுரத்தை விடுத்து, காடு மலை யெல்லாங்கடந்து உபலாவியம்வந்து, தன்னைத்தூது அனுப்பியஅரசர்களும் ஸ்ரீகிருஷ்ணதேவரும்பொருந்தி இருக்கும் இராஜசபைக்கு நேராக வரும்போது யாவரும்வணங்கி உபசரித்த அவர்களுக்கெல்லாம் மங்களாசனஞ்சொல்லி உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து, மேற்சொல்லிக் கொண்டுவந்த தூதுவசனங்கள் யாவற்றையுஞ் சொன்னார். அதைக்கேட்டுப் பாண்டவர்சகாயன்முதலியபேர்களும்இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு இப்போதுயோசிக்கவேண்டியதென்ன ஒன்றுமில்லை இனிஅவர்கள் அனுப்பும் தூதினால்நேரிடுஞ் சங்கதிகளையும் உள்ளக்குறிப்பையும் வரவரத்தெரிந்து கொள்ளுவோம் என்று அஸ்தினபுரத்தின் சபையைநோக்கி இருந்தார்கள்.

உலூகன்தூதுச்சருக்கமுற்றிற்று.

இரண்டாவது,

சஞ்சயன்தூதுச்சருக்கம்

கண்ணன்துதி.

எக்கடலு மெக்கிரியு மெவ்வுலகு முலகிற், றக்கபலயோனிகள் சராசரமனைத்தும்
மிக்கவிதியால் விதிசெய் விதியினைவிதிக்குஞ், செங்கமல நாபிமுகில் சேவடிதுதிப்பாம்.

கேளும் ஆடவர்குலதிலகனாகிய ஜெனமேஜெய மகாராஜனே! உலூகமாமுனி அஸ்தினபுரத்தைவிட்டு நீங்கியவுடனே, நஞ்சமுடைய நாகத்தைக் கொடியாயுயர்த்த நராதிபனும், பகதத்தரும் வேலாயுதந் தாங்கிய பற்பல மன்னர்களும், சற்புருஷராகிய வீஷ்மாச்சாரியார்-விற்றிறமைகொண்ட துரோணாச்சாரி

யார்-தவத்திற்சிறந்த விதுரமகாராஜன்-இரவி புத்திர
ஞகிய கர்னன்-கிருபாச்சாரியார்-அசுவத்தாமர்-முத
லாகிய பேர்களும், திரிதராட்டிரனும் எதிரில்வருகர
ங்களையும் குவித்துவணங்கி வாழ்த்திநிற்கும் சேனை
யின்மத்தியில் இந்திரசபைக்கு மேலாகிய இராஜ
மண்டபத்தில் பொருந்திஇருந்து யுக்தியிலும் புத்தி
யிலும் கல்வியிலும் கியானத்திலும் இணையில்லாமல்
உயர்ந்த சத்தியவசன உத்தமனுகிய சஞ்சயனை வரவ
ழைத்துச் சபையினிடத்தில்இருத்தி என்றென்றைக்
கும் சண்டையில்லாமல் இருக்கவேண்டும்என்றஎண்
ணங்கொண்ட திரிதராட்டிரன் இயம்பலுற்றான்ஓசஞ்
சயனே! குருகுலத்தரசர்களுக்கு நேரிடும் காரியாகா
ரியங்களை அறிந்து சொல்லும்படியாகிய சுதந்தரமும்
மாட்சிமையும உடையவன் நீயாகையால் இருதிறத்த
வராகிய சுவரவர்களும் பாண்டவர்களும உனதுசொ
ல்லாகிய நீதிவசனத்தை ஒருக்காலுந் தள்ளமாட்டார்
கள். ஆதலால் கருமான் உலைக்களனுக்கு ஒப்பாகிய
மிகுந்த கோபங்கொண்ட என்தம்பி பிள்ளைகள்மாறு
பட்டுப் பேசுகின்ற வஞ்சினத்தைநீக்கி இருவர்களில்
ஒருவர் சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தை ஆளும்படி
யாக உனதுஉள்ளத்தில் நினைக்கவேண்டும் யுக்திக்கு
வித்தானவனே! அளவு சொல்லக்கூடாத கோபக்கரு
த்தினராகிய என்பிள்ளைகளுக்கு எத்தனை விதத்திற்
சொன்னலும் பாண்டவர்களுக்கு நாடுகொடுக்கச்சம்
மதியாமல் மூண்டு யுத்தஞ்செய்வதற்கு இசைந்திரு
க்கின்றார்கள். என்தம்பி புத்திரர்களோ அப்படியல்ல
நற்குணங்களிலும்-விற்றிறங்களிலும் -சத்தியங்களிலு
ம்-ஆண்மிக்கையிலும்-குளிர்ச்சியாகிய மிர்துவசனங்
களிலும்-நீதியிலும்-தருமதானங்களிலும் - தவங்களி
லும்-பொய்யில்லா மெய்விரதங்களிலும் - புகழிலும்
அருளிலும்-பொறுமையிலும்-நிறைந்த பூரண புத்தி
மான்கள் இப்பேர்ப்பட்டவர்களும் நமது பசகளைப்
போல இடம்அகன்ற போர்க்களத்தில் யுத்தஞ்செய்
யும்படியாகக் கருத்துகொண்டு இருப்பது நன்மை
யோ? சஞ்சயனே! பிறவிப்பிணியையும் பெருந்துக்க
த்தையும் அனித்தியவாழ்வையும் பாபமாகிய பொரு
ளையும் விளையச்செய்யும் இந்தக்கர்மபூமியின் ஆசை
யைவிடுத்து இவையெல்லா மறந்தமறப்பும் கியானப்
பிறப்பும் மோக்ஷவழிச்சிறப்பும்உண்டாகும்படியாக
விசாலம்பொருந்திய கானகத்தில்பாண்டவர்கள்இன்
புற்றிருந்து, நித்தியமாகுந் தவத்தைச் செய்யும்படி
யாக அன்புகொண்டிருக்கும் என்கருத்தையுஞ் சொ
ல்லி நீயுந்தெரியப்படுத்தக் கடவை என்று இருள்
அடர்ந்த தனதுபுத்திக்கு ஒப்பாகச்சொன்னன்.

இப்படி திரிதராட்டிரன்சொல்லிய வசனம்பார
பக்ஷம் என்றுதெரிந்தும் தடைசொல்லாமல் அரசனு
டைய கட்டளையைச் சிரத்தக்கொண்டு யாவரும் புக
ழப்புகழ்ந்து விடைகொடுக்கப் பெற்று; அஸ்தின
புரத்தைவிடுத்துக் காடுமேடுமலைகளெல்லாங்கடந்து,
ஐவர்வாழும் உபப்லாவியத்திற்குவந்து. அன்றையத்தி
னமே ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கும் திரு
மாளிகையிற்சென்று திரௌபதியும்பார்க்கனும்பவார்
த்தையாட மலரணையில்வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்
த்தியாகிய அமலனைக்கண்டு தீர்க்கதண்டமாகப்பணி
ந்து வணங்கித்துதித்து தான்வந்த சங்கதிகளில் சிற்
சில காரியங்களைப்பேசி, தருமபுத்திரமகாராஜன்முத
லிய தாரதியர்கள் கூடியிருக்குஞ் சபைக்கு நாளையத்
தினம்வந்து சகலகாரியங்களையும் சொல்லுகிறேனெ
ன்று தொழுது விடைபெற்றுக்கொண்டு அவர்களால்
நேமித்த ஓர்விடுதியிற் போயிருந்து சூரியன் உதயமா
குமுன்னம் எழுந்து நித்தியகருமம் ஸ்நானம் செபம்
தபம் இவைகளை முடித்துக்கொண்டு தருமராஜனு
டைய பெரியசபைக்குச் செல்லும்போது ஸ்ரீகிருஷ்
ணபகவானும் சாத்தகியும் துருபதேமகாராஜனும்
விராடபூபதியும் இன்னம்பற்பல பாஷை மன்னவர்க
ளும் சூழ்ந்துகொண்டிருக்க நடுநாயகமாக இருந்து,
தஞ்சமென்போரை அஞ்சலென்றளிக்கும் வஞ்சகம்
இல்லா நெஞ்சினனும் மெய்விரதனுகிய உதிட்டிர
னிடத்தில் விரைந்துசென்று கண்களும்மனமும் களி
க்கக்கண்டு, அறிவும் அறமும்புகழும் மிகுந்த தகுந்த
தம்பிமார்களாக விளங்கிய வீம அருச்சுன நகுலசகா
தேவர் நால்வரோடு அக்கினியில் உற்பவித்துக் கற்பு
க்கு அணியென இருந்தபாஞ்சாலியம்பின்பக்கத்தில்
சிறப்புடன்பொருந்த, முன்பக்கத்தில் நெறிப்புடன்
இருந்த அறத்தின்மைந்தனுடைய மலரடியைச் சிரத்
திற்சூடி வணங்கினன். இவ்வாறுவணங்கிய சஞ்சய
னைத் தருமராசன்நோக்கிகருணைகூர்ந்து, எழுந்திரும்
எழுந்திரும் என்றுசொல்லி இரத்தினகசிதமாகிய ஆ
சனங்கொடுப்பித்து, அந்த ஆசனத்தின்பேரில் உட்
காருமென்று சொல்லவும் சஞ்சயன் அகமகிழ்ந்து,
யாவர்களையும் வந்தித்துப் புகழ்ந்து, வணக்க ஒடுக்க
மாக ஆசனத்தில் அமர்ந்து சஞ்சயன் சொல்லு கின்
றன். பொய்யைச்சினந்து மெய்யைப்புரிந்து வைய
கங்காக்கும் ஐயனேகேளும்! பாதலத்திற்பொருந்தும்
ஆதிசேடன்முதலிய பாம்புகளின் விஷத்சுவாலைகளை
அடக்கி இவ்வுலகத்தில் யாவர்கட்கும் இன்பம் விளை
யும்படியாக அமுதகிரணங்களைப் பொழியும்சந்திரன்
பிரகாசித்தபோதிலும், தாமரை மலரானது சூரியகிர
ணங்களை விரும்பி முகமலருமல்லவா? அதுபோல
உலகமெல்லாம் ஒருகுடையில் ஆளும் திரிதராட்டிர
பூபதியினுடைய அருளுக்கும் அன்பிற்கும் உரியவ
னுகி நான் இருந்தபோதிலும், ஒளியும்சிறப்பும் உடை
ய உமது முகத்தைப்பார்த்து உயிர்வாழும் படியாக
என் சிந்தையானதுவந்த, நான்வந்தேன் என்றசொ
ல்லக்கேட்டு, சேறுநாறும் வயல்களெல்லாம் செங்க
ழுநீர் மணநாறுங் குருநாட்டுக்கு அதிபதியாகிய குந்
திபுதல்வன்சஞ்சயன்கூறியஉபசாரவார்த்தைக்கு புன்
னகைகொண்டு, அவனுடையமனம் மகிழும்படியாக



[105] வேதவியாசர்திருதராட்டிரன்முதலானவர்களுக்குவருங்காரியமுரைத்தல.

உள்ளன்புடன் இனியவார்த்தைகள்சொல்லி, சஞ்சயனே! பெருமை பெற்றிருக்கும் என்பெரியதந்தையாகிய திரிதராட்டிரமகாராஜனும் ஐயா அவர்கள் வீஷ்மாச்சாரியாரும் குருஸ்வாமியாராகியதுரோணாச்சாரியாரும்-கிருபாச்சாரியாரும்-கயிலாசபதியின் அருள் நிறைந்து பலஞ்சிறந்த அசுவத்தாமாவும்-பெரியகியானவரம்பெற்ற சதுரனாகிய சிறியதந்தை விதுரமகாராஜனும் இன்னும் உண்டாகிய பெரியோர்கள் யாவருஞ்சுகமாகயிருக்கின்றார்களா குணபூஷணனேயென்று கேட்கவும், தூதுவந்த சஞ்சயன் கரத்தைச் சிரத்திற் குவித்து.ஐயா! அவர்களெல்லோரும் க்ஷேமமாகயிருக்கின்றார்கள் உங்களுக்கு க்ஷேமமுண்டாகவாழ்த்தி ஆசிர்வதித்தார்கள் என்று சஞ்சயன்சொல்லத் தருமராஜன் மனமும் தேகமும்மறந்து புளகமுற்றுச்சொல்லுகின்றார்.

அப்பா! பூர்வம் இராஜசபையிற் பொருந்திய மகா ஜனங்களெல்லாரும் உடல்பதறி ஆச்சரியப்படும்படியாகத் தம்பியைநோக்கி, திரௌபதையைக்கைப்பிடியாக இழுத்துவந்து என்மடிமேல் வையென்று தனது சிவந்ததொடையை ஆனமாகக்காட்டியதுரியோதனமகாராஜனும்சுகமா? நேசமாகயிருந்துமோசச்சூதாடக் கற்றுணர்ந்த சகுனிமாமாவும்சுகமா? பரிசுத்தமுள்ள பாஞ்சாலி இடையிலுடுத்திய வஸ்திரத்தைத் தடையில்லாமற்பிடித்து உரிந்துசபையில்மான பங்கஞ்செய்த தம்பிதுச்சாதனனும் சுகமா? சுத்தவீரர்களை யுத்தஞ்செய்து வெல்வதற்குச் சத்தியில்லாமல் சிங்காரப்பேச்சினால் ஜெயிப்பேனென்றுகாலங்கழிக்கும் கர்னனும்சுகமா? மற்றப் புத்திரமித்திரர்களுஞ் சுகமா? பற்பலதேசத்து மன்னர்களுஞ்சுகமா? யானைத்தலைவர்-சேனைத்தலைவர்-படைத்தலைவர் - குடைத்தலைவர்-கொடித்தலைவர்-சேவகர்முதலிய யாவர்களுஞ் சுகமா? என்றுகேட்கும் தருமராஜனைச் சஞ்சயன்பார்த்துப், பொல்லாங்கென்பவை எல்லாம்நீங்கிய உள்ளமுடைய வள்ளலே! அவர்கள் இதுவரையிலும்சுகம் இல்லாதிருந்தாலும், தேவரீருடைய திருநாவினால் க்ஷேமம் விசாரித்தபடியால், இன்றுமுதல் நாளுக்குநாள் அபிவிர்த்தி ஆவார்கள் என்றுகூற, முரசகேதனன்மகிழ்ந்து சொல்லுகின்றார்:சஞ்சயனே! நாட்டைவிடுத்துக் காட்டையடுத்து நெடுநாளாகப் பிரிந்தஎங்களைப் பார்க்க எண்ணங்கொண்டுவந்ததோ? அல்லது திங்கள்மரபில் உதித்த எங்கள்குலத்தில்சநித்தஇறைவனாகும் திரிதராட்டிரமகாராஜன் சொற்படியேவந்ததோ? இவிடம்நீர் வந்ததற்கு யாதுகாரணம் விளம்புமென்றுகேட்க, சங்கினங்கள் வயிறுளைந்து பெறும் ஆணிமுத்துக்கள் நீரின்மடைகளை அடைக்கும்வயல்களால் வளப்பங்கொண்ட திருநாடென்னுங் குருநாட்டுக்கு அதிபதியாகியகோவே! உங்கள் பெரியதந்தையாகிய திரிதராட்டிர மகாராஜன்சொல்லி அனுப்பிய செய்தியைத் தெரிவிப்பதற்கு இவிடம்வந்தேன் ஆகையால் திருநாபிக்கமலமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரும் நீங்கள் ஐந்துபேரும் இந்தராஜசபையைநீங்கித் தனிமையிலிருந்து சங்கதிமுழுமையுங் கேட்டு யோசிப்பீர்களாகில் மிகவும்நன்றென்று சஞ்சயன் விளம்பத் தருமராஜன்நகைத்து, வாளாயுதம் வேலாயுதம்பிடித்து இவிடத்தில்வந்து நிறைந்திருக்கும் இராஜமன்னவர்கள் யாவரும் எங்கள்பிராணனும்-ஊக்கமும்-உற்சாகமும்-ஊற்றமும்-புகழுமாக இருக்கின்றவர்களேயொழிய வேறல்ல இவர்கள் அறியக்கூடாத இரகசியமொன்றுமில்லை இவர்களை அன்னியமாகவொருவனுமில்லை தாய்க்குஒளிக்கும் சூதுமில்லை ஆதலால்ஐசுவரியத்தை நித்தியமாக நம்பும் சாமார்த்தியமுடையசஞ்சயனே! இந்தச் சபையினிடத்தில் தடையில்லாமல் சொல்லுமென்று தருமராஜன்கூற, பாண்டவர்களின் கருத்தைத் தெரிந்துகொண்ட சஞ்சயனானவன் துளபமாலை அணிந்த மேகம்போன்ற திருமேனியையுடைய பகவானைப்புகழ்ந்து, சபைநிறைந்த மன்னவர்களை நோக்கித் தங்களுக்குத் தெரியாதகாரியம் ஒன்றுமில்லை. இராஜதந்திரத்தை அநுசரித்துதனிமையிற்சொல்லவேண்டுமென்று புகன்றதே அன்றிவேறல்ல அடியேன்பேரில்கோபஞ்செய்யாதிருக்கவேண்டுமென்று இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்து, விநய வந்தனத்துடன்வணங்கி, கடைந்த இடையினையுடைய புனக்கிளிபோன்ற திரௌபதாதேவியையும் பெருமையுடன் நோக்கித்தொழுது, ஐவர்களுடைய கருத்தையும் சிரமேற்கொண்டு முன்னம் என்கருத்தைச் சினவாமற் கேளுங்களெனச் சொல்லலுற்றான்.

மறுநீதிதவறாத மன்னரேகேளும்! நீங்கள் இந்தப்பூமியை ஆளவேண்டுமென்னும் ஆசையை விடுத்து, ஈஷணத்திரையங்களைக்கடந்த மகாரிஷிகளைப் போல் நல்லகதிகிடைக்கும்படியாகத் தவஞ்செய்வதே நன்மை பதின்மூன்றுவருடம் வனத்திற்கைபழகி வந்த நீங்கள் (பழம்புண்ணறி பரியாரி) என்பதைப்போல் மறுபடியும் காட்டுக்குப்போக பயப்படமாட்டீர்கள் சகலமந்திர தந்திரயந்திரங்களும் தெரிந்த சுந்தரரும் புண்ணியசீலராகிய நீங்கள் இப்போதுபவத்தையொழிக்கும் தவத்தைக் கருதிச்சென்றால் அதிசீக்கிரத்தில் ஆன்மலாபம்கைகூடிக் கதியும்பெறலாம்.ஜன்மாந்திரத்திற் றவஞ்செய்யாப் பாவிகள் இம்மையிற் றவஞ்செய்ய விரும்பினால், தவங்கெட்டுஅவமேலிட்டு நரகத்தில்விழுவார்கள். இதன்றியும் எல்லாப்பிறவியிலும் உத்தமமாகிய மானிடப்பிறப்புஅரிது அதனிலும் ஊமைசெவிடு குருடுமுடம் நோய் இவை நீங்கிப் பிறப்பது மிகவும்அரிது. கல்வியும்கியானமும் செல்வமும் நற்குணமும் உண்டாவது அதனிலும் அரிது. தானம் தருமம் தவம் இவைகள் கிட்டுவது அதிலும் அரிது. இவைகளெல்லாம் உண்டாகிய காலத்திலும் மோக்ஷம் அடைவது மகா அரியதென்று லோகர்

மஞ்சொல்லுகின்றது இந்தக்காரியங்களெல்லாம் ஒருருவாகத்திரண்டு, மாயாமயக்கம் அகன்று, தூஷணபூஷண திரஸ்காரங்களெல்லாம் சுத்தப்பிரமத்திற்கென்று பேரறிவுவிளங்கிய பெருந்தகையோர் தேவரீர் காலல்லதுவேறில்லை. அகந்தையும் ஆசையும் -அகப்பற்றும்-புறப்பற்றும்-மமதாங்காரமும-உள்ள சுயோதனன் உங்களுடனுடன்பட்டு வாழ்வதுமில்லை நாடுகொடுப்பதுமில்லை. பெறவேண்டுமென்னும் இச்சையும் உங்களுக்குஇல்லை. அநித்தியமாகிய ஆசாபாசத்தைவிடுத்து, நித்தியமாகிய பிரமரேச விசுவாசத்தைத்தொடுத்து, உண்மையாகிய ஊர்த்தகதியையடைவதே உத்தமம். மேலும் ஓதருமபூபதி! தேவரீர் பெரியதந்தைசொன்னதாவது, பராசம்காரிஷியினுடையசந்ததியிற்றோன்றிய தனக்குப்பிறந்த பிள்ளைகள் துரியோதனாதியர் நூறுபேர்கள் என்தம்பிபுத்திரர் ஐவர் இந்த நூற்றைந்துபிள்ளைகளில் பொய்யுஞ்சூதும்பொறாமையும்மிகுந்து, மண்ணாசைபெண்ணாசைபொன்னாசைகொண்டு, கியானசூனியராய்க் குலத்தின் பேரையும் புகழையுங்கெடுத்து, இனிப்பிறக்கும்பற்பல பிறவிக்கும் இடங்கொடுத்து, தந்தைமொழி தாய்மொழி குருமொழி வேதமொழி இவையெல்லாந்தள்ளிப்பாபமென்னும் மூட்டையைத்தேடிப் பரதவித்து, என் வார்த்தையைக் கேளாமல் அலையும் துரியோதனாதிகள்பேரில் வைத்திருந்த பட்சத்தைவிடுத்தேன். என் மூத்தபிள்ளையாகிய தருமநந்தனனைநம்பி அடுத்தேன் சராசரங்கள்தோறும் வியாபித்திருக்கும் சுகப்பிரமத்திற்கு ஒப்பாகியபிள்ளை அவன்ஒருவன்தான் அவன்தான் இந்தமண்ணும் பெண்ணும் பொன்னும் வாழ்வும் நிலையில்லாததென்று நிச்சயித்திருப்பவன் அவன்தான்நீதிமான் அவன்தான்கோமான் அவன்தான்பூமான் அவன்தான்சீமான் அவன்தான்புத்திமான் அவன்தான் சத்தியமே சத்தியமெனநிருக்கும் தருமனாகிய புத்திரசிகாமணி என்னுத்தரந் தள்ளமாட்டான். ஆதலால் "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே" என்றும "அகழ்தோறுந் தாங்கு நிலம்போலத்தம்மையிகழ்வார்பொறுத்தறலை" என்றும் "தம்மையிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றிமற், றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தால் உம்மை, எரிவாய்நரகத்து வீழ்வர்கொலென்று பரிவதூஉஞ்சான்றோர்கடன்" என்றுஞ்சொல்லிய நீதிவாக்கியங்களையும், கோபமும்பாவமும் சண்டாளமென்கிற சொல்லையுஞ்சொல்லி முன்புநடந்த நன்மைதின்மைகளையெல்லாம் ஈஸ்வரார்ப்பிதஞ்செய்து; அக்காலத்தில் கூறிய சபதங்களையும் இப்போதுசெய்யஎத்தனிக்கும் சண்டையையும்விடுவித்து, திருதராட்டிரன் பழியும் பாவமும் தழைக்கப் பாராரும்ஆசைவிளைக்கும்மண்ணைத்தையும், அறுசுவையுணவாதிகள்விரும்பி அனுபவிக்கும்போகத்தையும் ஆறுகப்பெருகும்சோகத்தைப் புல்விடுத்து, இந்தக்குருராஜனாகிய புத்திரனால் இருபத்தொருதலைமுறையும் கதிசேரப்பெற்றான்என்னும் பெரும்புகழ் எனக்கும்என்கால்வழிகட்கும்விட்டுநீங்காதிருப்பதற்கு நன்னெறிஓங்கியதவத்தை உறுதியாகச்செய்வது உத்தமம். இதுதான் குடும்பக்கோத்துக்குன்றாமல் இருக்கவேண்டுமென்னும் ஆசைகொண்ட உமதுதந்தை உரைத்தது என்று சஞ்சயன்சொல்லப்பொறுமையென்பது சிறுமைப்படாமல் சத்தியத்தை அனுசரிக்கும் மெய்ஞ்ஞான சிந்தையனாகும் தருமநந்தனன், பூதபெளஷிய வர்த்தமானந் தெரிந்துணர்ந்த சஞ்சயன் பன்னிச்சொல்லியவார்த்தையையுன்னி, அழகுறநகைத்து, ஓதெளிந்தசஞ்சயனே! இவ்வுலகத்து இராஜராஜர்களும் நகைக்கும்படியாக துரியோதனாதிகளால் நாங்களப்பட்ட அவமானநிந்தைகள்சக்ரவாளகிரிபோல வளர்ந்துவளர்ந்து நிலைத்திருக்க, அதனால் விளைந்த சபதங்கள் பெரும்புறக்கடல்போல் சூழ்ந்திருக்க, இவைகளைச்சாதியாமல் முத்தியடைய முயற்சிசெய்யவேண்டுமென்று என்பெரியதந்தை சொல்லியதைப்பார்க்கிலும் தமப்பிரபை-இமப்பிரபை-தூமப்பிரபை-வாலுகப்பிரபை-சாகரப்பிரபை-இரத்தப்பிரபை - அமுற்பிரபை-என்னும் வெப்பமாகிய ஏழுநரகத்திலும் தனித்தனிவீழ்ந்து அனுபவிப்பது மிகவும்நன்மையாம் சத்தியவசனந்தப்பினால்நித்தியநோன்புபலிக்குமா தாயைக்கொன்ற பழியிருக்கக் கோடிகோடியாய்த் தானம்பண்ணினால் மோக்ஷம் உண்டாகுமா? ஆசாரஈனமாகிய சண்டாளத்துவம் வகித்து விரதம்அனுஷ்டித்தால் தவங்கைக்கூடுமா? பழியையும் நிந்தையையும் சுமந்த நாங்கள் எத்தனைவிதமாய்த் தவஞ்செய்தாலும் நரகமேஅன்றிச் சுவர்க்கங்கிட்டாது ஓசஞ்சயனே ஒருசிறியகதையைச் சொல்லுகிறேன் கேளும்.

ஆற்றின்கரைமேல் ஐந்துபேர்நின்றார்கள் நிரம்பியவெள்ளத்தில் கரடியானது தலையைக் கால்சந்தில் வைத்துக்கொண்டு மிதந்துவருவதைக்கண்டு கம்பிளிமூட்டையென்று கருதினார்கள். அவருள்ஒருவன் நீந்திப்போய் அதைப்பற்றவும், நிராதரவாகவந்த கரடி அந்தமனிதனுடைய கழுத்தைக் கட்டிக்கொள்ளவும் இவனும்அதுவும் முழுகியெழுந்து வருந்தப் படும்போது கரையில்நின்ற நால்வரும் கம்பிளிமூட்டையைக் கைவிடுத்து நீவந்துவிடு என்றுசொல்ல கம்பிளிமூட்டையை நான் கைவிட்டுவிட்டேன் கம்பிளிமூட்டை என்னைக் கைவிடவில்லையென்று ஓங்கிக்கூவியுயிரினையிழந்தான். அதுபோல சபதத்தையும் யுத்தத்தையும் கைவிட்டு நாங்கள் தவஞ்செய்தாலும் அவைகள் எங்களைக் கைவிடாது. மேலும் எக்குலத்தாருக்கும் இணையற்ற மேலாகிய நற்குணம் நற்றவம் எங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டியது தந்தையின்கடமையே அந்தத் தந்தையின் தருமகுணவாக்கியத்தைத் தள்ளாமற்செய்வது எங்கள் முறைமையே ஆயினும் தரும சாம்பிரதாயமாகிய நற்குலத்திற்பிறந்த மன்ன

ரான்வர்கள் இராஜமுறைமைதவறி வேறொருகாரியங்களைக் குறிப்பார்களா? சஞ்சயனே! வீரப்பிரதாபத்தில சிறந்ததீரர்கள் கூறியசபதம் நிறைவேறும்படியாகச் சத்துருக்களுடன் எதிர்த்து புறமுதுகுகாட்டி ஓடாமல்நின்று ஜயங்கொண்டு வெற்றிமாலை சூடினால், இப்பூமியில்கல்லெழுதி நாட்டுவதுமன்றி வீரசொர்க்கமும் பெறுவார்கள். இப்பூமியாகியதலமுஞ்சலமும் உள்ளவரைக்கும் அவர்களினகுலமும் குணமும் கீர்த்தியுமநிலைக்கும். இதைவிட அறமாகியதவம் எவ்வுலகத்திலுமஇல்லை. முன்கூறிய சபதமும் சத்துருக்களும் முடியாதிருக்கத் தவஞ்செய்ய மனம்வாராது இப்படிக்குச் சுளுவாகியதவம் எங்களுக்கிருக்க, காட்டிலிருந்து கந்தமூலபலாதிகளைப் புசித்துண்டு காற்றிலுமவெய்யிலுமபனியிலும் குளிரிலும்வருந்தி மோட்சம்பெறும்படியாகப், பெரியதந்தை முதிர்ந்தவயதினால் தெரியாமற் சொன்னதுபோலும் இருக்கின்றது என்றிவ்வாறு கண்கள்சிவக்கக் கடுங்கோபத்துடன் தருமநந்தன்சொல்லிய வார்த்தையைச்சஞ்சயன்கேட்டுஐயா! பழம்பகையை மனதில் குடிவைத்துக்கொண்டு யுத்தம்புரிந்து சபதம்நிறைவேற்ற நினைப்பது, கற்றுணர்ந்த காவலராகும் புண்ணியமநன்னிய விவேகவான்களுக்கு முறைமையோ? அப்படியே யுத்தம்செய்தாலும் என்னபலன். அண்ணன் தம்பிகள் மாமன் மைத்துனர் புத்திரர் மித்திரர் சுற்றத்தார் மற்றதேசத்தார் யாவர்களையுங் கொன்று யமன்கையில் ஒப்பிவைப்பதிலும் வனங்களிலிருந்து தவங்களிழைத்துப்பவங்களொழிப்பது வசையோ? அதுதான் என்றும் அழியாத இசையோ? (முள்ளாடியும்வாழைக்கே நஷ்டம் வாழையாடியும் வாழைக்கேநஷ்டம்) தெரியாதபேர்களைத் தெரியச்செய்யலாம். தெளிந்தோர்களைத்தெருட்டுவது அருமை மேலும் திங்கள்மரபுக்கு வித்தாகியும், உங்களுச்செல்லாம் பாட்டனாகியுமிராநின்றவீஷ்மாச்சாரியார் உயர்ந்த வில்லக்குருவாகிய துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார் ஒருசாலை மாணாக்கரில் பால்பசிநேகராகிய குருபுத்திரர் அசுவத்தாமர் தந்தைக்குப் பிந்திவந்த தத்வக்கியானியாகியவிதுரமகாராஜன் முதலியபேர்கள் இந்தக்குலந் தழைக்கவேண்டுமென்னும் உத்தம நினைப்பினையுடைய பெரியோர்கள் இவர்களெல்லாரும் புவனபூபதியாகிய திரிதராட்டிர மகாராஜனுடைய செல்வநலத்தைக் குறித்துக்காவலராகக் கைவசப்பட்டிருக்கின்றவர்கள் மேலும்இவர்கள் திரிலோககண்டகரென்றும் உமக்குத் தெரிந்திருக்குமே? இப்பேர்ப்பட்ட முதியோரெல்லாரும் அழியும்படியாகப் பழிபூண்டு, உலகம் அதிர வெற்றிகொண்ட அன்றைக்கு அல்லவோ நீங்கள் ஒருகுடை நீழலில் உலகம் அடக்கி ஆளப்போகிறது. அவர்கள் அழியப்போகிறதும்இல்லை. நீங்கள் ஆளப்போகிறதும்இல்லை ஐயப்படுதற்கு அருந்திறலாகிய காரியங்களில் நீங்கள் துணிவது நன்மையன்று இத்தன்மையாகிய உத்தமர்களுடன் எதிர்த்து யுத்தஞ்செய்து கொல்லுவதற்கு உங்களுக்கு ஒருக்காலுமனந்துணியாது இரக்கமும் சிவகாருண்யமும் உள்ள வேந்தலே! தன்பலமும் எதிரியின்பலமும் யோசிக்க வேண்டிய தருமத்தை இங்குநினைக்கவேண்டும் ஒருவரைநெருங்கிய கோபாக்கினி மிகுந்தகண்களையுடைய வலிமையோரென்றும் மற்றொருவரைச் சாமர்த்தியம் இல்லாத அற்பரென்றும் இப்போது நினைப்பதிலும்சொல்லுவதிலும்என்ன லாபம் அவரவர் சேவகங்களை எதிர்த்து யுத்தஞ்செய்யும் அமர்க்களத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது. அன்றியும் சந்திரகுலத்திற் பிறந்த இருதிறத்தாரும் சிறியோர்கள் புத்திகேட்டு நிதானிக்காமல் போர்செய்ய நினைப்பீர்களாகில், மெலிவாகிய துன்பக்கடலில்மூழ்கிப்போய் விடுவீர்கள். நடுவுநிலைமையும் நன்மனமும் உடைய பெரியோர்களின் புத்தியைக்கேட்டில், அதனால் இன்பக்கடலுள்மூழ்கலாம். எனக்குத் தோன்றியதைச்சொன்னேன். அப்பால் உங்கள்சித்தமென்று சோபமில்லாத சஞ்சயன்கூறிய மாத்திரத்தில் சூரியனைக்கனிந்த கனியெனத்தாவிய நவ்வியாகரண பாண்டித்தியமுடைய ஆஞ்சநேயருக்குத் தம்பியாகிய வீமசேனமகாராசன் இனிநமதுதமையனாகும்முரசத்துவஜமகாராஜனுக்குப் பதிலாக நாமேநேரிற் பேசவேண்டியகடமை. இனிச்சும்மாயிருக்கலாகாதென்று இருவிழிகளும் செவ்வரக்கினு நிறக்கச்சிவந்து, ஒப்பற்ற யுகாந்தகாலத்தினில் மேகம் இடிக்குந்தன்மைபோல் முழங்கி, கொடிய கோபமேற்கொண்டு சொல்லுவதானான்.

ஓ சற்குணத்திலுஞ் சாதுர்யத்திலுஞ் சிறந்தவனே! எங்களுக்கும்எங்களைப்பகைவராக்கிய எதிராளிகளுக்கும் பொதுவாகயிருக்கும் நீ, ஒருதலைப்பக்ஷமாக அன்புகொண்டு பேசுவது உனக்குத்தகுதியோ? இது ஞாயமென்று ஆனால் அரசனெவ்வழியோ அவ்வழிகுடிகளென்னுந் தன்மையாய்ச் சொல்லுகின்றனை. அது நிற்க, பெரியோர்களுடன் யோசித்து என்பிள்ளைகள் கூடிவாழும்விதத்தைச்சொல்லிஅனுப்புகிறேனென்று அஸ்தினபுரத்திற்குத் தூதுவந்த உலூகமாமுனிவரிடத்தில் எங்கள் பெரிய தந்தைசொல்லி அனுப்பியிருக்க, அதைமறந்து இப்போதுநாட்டைத்துறந்துகாட்டிலிருந்து தவத்தைச்செய்து முத்திபெறும்படியாக எங்களுக்குப் புத்திசொல்லி அனுப்பிவைத்ததுஎன்ன காரணம் ஆதிசேஷன்சுமக்கும் அவனியை ஆளும் அரசர்கள் ஒன்றைச்சொல்லி மற்றொன்றை விரும்பி, அதில்வேறுபட்டபின்னை ஒன்றைச்சொல்லுவார்களோ ஆகிலும் பாண்டவர்களும் கௌரவர்களும்இடதுகண் வலதுகண் என்றுஎண்ணாமல், பிடரியிற் புத்தியுடைய கண்ணில்லாத அண்ணல் தகுதியும்பெருமையும் அல்லாத காரியங்களைச் சொல்லி அனுப்பினான். காவலரும் சேனைகளும் கடல்போற் கலந்து வெப்பமாகிய

யுத்தஞ்செய்யும் போர்களத்தில், என்கரந் தாங்கிய கதையினால் செய்யப்பட்ட அதிசயமாகியதவங்களைச் சொல்லுகின்றேன் கேளும். ஓஐயனே! எங்கள் தந்தை சொல்லியவண்ணம் நீவந்துசந்தோஷித்துச் சொல்லியது அரியதவம் அல்லவேயல்ல நான்செய்யப்போகின்றது பெரியதவம் அதென்னவென்றால் சத்துருக்களின் தேகத்திலிருந்து மாரிபோலப் பொழியும் உதிரச்சோரியில்மூழ்கி தலைஅறுந்தாடும் கவந்தமாகிய காட்டில் ஸ்தம்பித்திருந்து உள்ளத்தில் கொதித்துக்கொண்டிருக்கும் கொடிய தீவினைகளைக் களைந்துவிட்டால் அதுதான் தவங்களுக்கெல்லாம் தலையாகியமோக்ஷத்தைத் தருவதானதவம் இது எனக்குப் போதும் இந்தத்தவமும் அல்லாமல் பிரபலயாகமும் நடத்துகிறேன் கேளும் கடல்சூழ்ந்தஉலகத்தில் போர்க்களம் என்னும் யாகசாலையில் துரியோதனாதியரென்னும் நூறுபசுக்களை என்கதையாகிய யூபஸ்தம்பத்தில் அலைத்து, அவர்களின் வினைக்காத்துவிச எனது கோபாக்கினிமூட்டி, திரௌபதையின் சபதமென்னும் நெய்யைச்சொரிந்து பகையென்னும் சமித்தைச்சேர்த்து வீரம்என்னும் மூளியினால் வேதமந்திரமொழிந்து பாஞ்சாலி விரித்தகூந்தல் முடிக்க அவிர்ப்பாகங் கொடுத்து எங்கள் பெரியதந்தைக்கும் சந்திரகுலத்திற்கும் குறைவில்லாப்புகழ் நிறையும்படியாகஇராஜசூய யாகமும்செய்வேன். அதுவரையில் கதையினால் சலத்தில்அடித்து மேல்யெழும்பும் துளியைவாயினால் அருந்தி தாகவிடாய் தீருவதன்றிக் கரத்தினாற் சலம் வாரிப்பருகேன். அப்போதுதான் யான் சபதங்கூறிக்கட்டிய கங்கணத்தையும் அவிழ்த்துவிடுவேன்அக்ரகண்யமரியாதையும் அரசுரிமைக்குரியமுடியும் அறக்கடவுளாகிய எங்கள் அண்ணாவுக்குத்தரிப்பேன் என்று ஆங்காரங்கொண்டு ஒங்காரமிட்டு பற்பலமொழிகள்சொல்லிய மற்புயவீமனைத் தருமராஜன் கையமர்த்தி, மலர்மாலையும் மணிமகுடமும் தரித்த மன்னர்மன்னன்தூது அனுப்பவந்த சஞ்சயனே எனக்குத் தோன்றியது ஒன்றுசொல்லுகின்றேன் உனதுமனங் கொள்ளக்கடவை அதாவது துரியோதனன் மோசமாகப் பறித்துக்கொண்ட இராச்சியத்தை வாங்கவேண்டும் என்றும் வழியாய்க் கிடையாவிட்டால்யுத்தஞ் செய்து வெற்றியிற் கொள்ளுவோம் என்றும் எவ்விதத்திலும் ஜயங்கொள்ளும் வீரமுடையவர்களென்றும் வரங்கள்முதலியவை பெற்றோமென்றும் மிகுந்த சிறப்புக்களைத் தாங்கினோமென்றும், மகிழ்ச்சியடைந்து சொல்லவில்லை. வினைவசத்தால்ஈஸ்வரச்செயல்எப்படி நடக்குமோயாம் அறியோம் மாமாவாகிய சகுனியை எங்களுக்கு இணையாகிய எதிரியாக்கி,மாயசூதினால் வையகமுழுமையும் கைக்கொண்டதல்லாமல், சபையோர்நகைக்கத் தம்பிமார் உடல்பதைக்க எங்களை மதிக்காமல் தையல் திரௌபதையைஅவமானப்படுத்திய தாழ்ச்சியை யோசிக்குமிடத்தில் இந்தத்தேகமும் வைத்திருக்கவேண்டுமோ சஞ்சயனே!அப்போது எங்களுக்குக் குலமும் நலமும் மானாபிமானமும் திறமும்வீரமும் செல்வமும் கல்வியும் இல்லாமல் நாங்கள் சித்திரம்போலிருக்கவில்லை. ஓஉத்தமனே! சத்தியமும் தருமமும்குன்றலாகாது என்று அன்றுமனம் பொறுத்தயிருந்தோம் மன்னர்முன்கூறியவாக்கியப்படிக்குப் பதின்மூன்றுவருடமுங் கழித்தோம் நீதியின்படி தூதும்விடுத்தோம் பெரியதந்தை சொல்லியனுப்பிய வார்த்தையுங் கேட்டோம் இனிமேல்இராஜவீர முறைமைதப்பாமல் எங்கள்சபதங்களையும் மனத்திலுற்ற குற்றங்களையும் நீக்கிக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றோம் மானங்கெட்ட பிற்பாடு பிராணனிருந்தும் பிரயோசனம்என்ன, “குணமென்னுங் குன்றேறிநின்றார் வெகுளி, கணமேனுங்காத்தலரிது” என்று இருக்கும் நீதிக்குச்சரியாக நாங்கள் இதுகால்நடந்து வந்ததும், இனிநடக்கப்போகிறதும், நன்மையோ தீமையோ யோசித்துப்பார் அழகியமேனியிற் குணபூஷணமணிந்த ஓசஞ்சயனே! எந்தையாகிய பாண்டு இறந்த சிந்தைத்துபர்தீம விந்தையாகியவித்தைகளைக் கற்பித்துச் சொந்தமாக இரக்ஷித்த பெரியதந்தைக்கு இவையனைத்தையுஞ்சொல்லும் நாங்களோ வாளாயுதத்திற் கைபழகிய மாராஜாவின் மைந்தர்களுடனேயும் அவர்களுடன் சிநேகமாயிருந்து தருமங்களையும் சத்தியங்களையுங் கெடுத்துப் பாபத்தைச் சேர்க்கும் ஆபத்தைப்போன்ற சிலபாவிகளுடனேயும் யுத்தஞ் செய்து வெற்றியடைந்து எங்கள்பத்து செலுத்தவதேஅன்றி, வேதவேதியர் மூதாதையர் சிறியதந்தை அசுவத்தாமா முதலியவர்களிடத்தில்போர்புரியநினைக்கமாட்டோம். கல்வியின் அழகாந்தசஞ்சயனே!அரசர்களுக்கு இயல்பாவது சொன்னசொற் றப்பாமல் நீதிசெலுத்தித் தருமபரிபாலனஞ் செய்வதேயாம். ஆகையால் எங்கள்சபதங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வேலைகளில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கின்றோம் எங்கள் பெரியதந்தை உம்மிடத்திற் சொல்லியனுப்பிய வார்த்தையைத் தள்ளிவிட்டோமென்று கோபங்கொண்டு எங்கள்பேரில் இதுவரையிலும்வைத்திருந்த கிருபையும் கடாக்ஷமும் அவரிடத்திற் பொய்த்துப்போனாலும், நாங்கள்நம்பியிருக்கும்வழிபடுகடவுள் எங்களிடத்தில்வைத்த தயையும்அன்பும் ஒருக்காலும்தப்பாது. இதுகளையெல்லாம்நிச்சயமாக நீயுணர்ந்து கொள்ளென்று தருமசொரூபி சொல்லவும் ஒப்பில்லாத பைந்துளபமாலையணிந்த திருமார்பனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அந்தச்சபையிலிருந்த அரசர்களெல்லாரும் வெவ்வேறாகக் கொண்டிருந்த எண்ணங்களைவிடுத்துசந்தோஷத்தில்மூழ்கும்படியாக ஒருவாக்கியஞ் சொல்லுகின்றார்.

ஓசஞ்சயனே! வஞ்சகச்சூதாட! ஆசைகொண்டு பாண்டவர்களிடத்திற் பறித்தபூமியைத் துரியோ

தவன் கைப்பற்றிக் கொள்ளவேண்டியதே யொழிய
இந்தபேதையாகிய பாஞ்சாலியைமயிரைப்பற்றிஇழு
த்துவரச் சொல்லியும், வபிறூரநாறு பிள்ளைகளைப்பெ
ற்றும் மலடியாகிய பெரும்பாவியிலுங் கொடும்பாவி
போன்ற காந்தாரியிடத்தில் மாமிமாமியென்றுசென்
று கண்கலங்கினள்பயப்படாதேயென்று ஆதரிக்கா
மல், சொந்தமச்சினமார் சபைக்குப்போ இலச்சை
என்னடி என்றும் அடிபோடி. (கள்ளிக்காக்கை கற்
என்றால் மூக்கை முடிக்கொள்ளும் காயக்கி)என்றும்
சொல்லி, தாக்ஷணியமில்லாமல்கையைப்பிடித்துஇழு
த்துக்கொண்டு போவென்றுசொன்னதும் பெருமை
தானா? அந்தப்படுபாவி அவ்வாறேசபையில்இழுத்து
வந்ததும் தன்மந்திரிகளெல்லாரும் சரிப்போனபடி
பேசியதும்ஞாயமா? மேலும் அம்மா தனென்டருஷரா
கிய ஐவரெங்கே என்றுகேட்டால், சின்னமனிதரெல்
லாரும் கலகலவென்றுநகைக்க மன்னனுக்குத் துணை
வனாகிய கர்னன் இனிஉனக்கு அவர்கள்ஏன்என்றும்
இந்தச்சபையில் கண்ணுக்குரம்மியமாகிய புருடனைக்
கூடிக்கலந்து வாழடியென்றும் சொன்னது குலமைந்
தன் காதுக்குக்குளிர்ச்சிதானா? மேலும் உத்தமி புத்
திரனாகிய உலகாளும்இராஜன் அந்த மகாசபையில்
வஸ்திரத்தைஉரிந்து மானபங்கஞ் செய்யச்சொன்ன
தும், தனதொடைமேற் கொண்டுவந்து அவளைவைய
டாதம்பி யென்றதும், வம்சபாளுடைய மதிதானா?
கடவுள்சகாயத்தினாலும் பதிவிரதா தர்மத்தினாலும்
வளர்ந்த மாளாத வஸ்திரத்தைக்கண்டு திரிதராட்டி
ரன்வணங்கி,என்மருமகளே! இவர்களெல்லாரும்உன்
பிள்ளைகள் நீஎன்குலதெய்வம்கோபிக்கவேண்டாமெ
ன்று வேண்டிக்கொண்டு சூதினால்தோற்ற நாடுநகர
ங்களெல்லாங் கொடுத்தபோது,அதைஇந்தத்துரியன்
கூடாதென்றுதடுத்ததும்முறைமைதானா?மறுபடியும்
பாஞ்சாலி நாணத்தோடிருந்து சூதாடித் தெய்வ
அனுக்கிரகத்தினால் பாண்டவர்களையும் பார்முதல்
பாக்கியங்களையும் கெலித்துத் திருப்பியபோது இன்
னம் இவளோடு ஆடினால் மாமா நம்மையும் உம்மை
யும்கெலிப்பாள் என்றுசகுனி இடத்திலும்மற்றபேர்
களிடத்திலும் ஆலோசித்து, பன்னிரண்டுவருடம் வ
னவாசமென்றும் ஒருவருடம் அக்கியாத வாசமென்
றுஞ்சொல்லி அனுப்பிவிட்டதும்நீதிதானோ? இந்தப்
பதின்மூன்று வருடமுங்கழித்து அவர்கள்வந்தால்
நாடுகொடுத்து விடுகிறேன்என்றுசத்தியவசனஞ்சொ
ல்லி, இப்போது தூதுவிடுத்துக் கேட்டால் யுத்தத்தி
ற்குச் சித்தமாயிருக்கின்றேன் என்றுசொல்வதும்நன்
மைதானா? அதற்குத்தந்தையாகிய பெரியவர் பாண்
டவர் காட்டுக்குப்போய்த் தவஞ்செய்வதே தனக்குக்
கண்காட்சி என்றுசொல்லி யனுப்புவதும் முறைமை
தானோ? இதுகளெல்லாம் உத்தம குலத்திற்பிறந்த
போக்கியர்களாகிய அரசர்செய்யும் தருமநீதிக்குமா
ட்சிமையாமா? ஓசஞ்சயனே! மூளையிற்றானே கிள்ளி
எறிந்தால் பிற்பாடுவிளையவும் விளையாது கிளையவுங்
கிளையாது அந்தக்காலத்தில் தன்பிள்ளைகளை வயிரமா
கும்படி விட்டுவிட்டு, இந்தக்காலத்தில் வாய்ப்புளிப்
போ என்பதுபோலும் (கொக்கின்தலையில் வெண்
ணெயைவைத்தால் அதுஉருகிக் கண்ணில்விழும்அப்
போது பிடித்துக்கொள்ளலாம்) என்னும் தன்மை
போலும் இருக்கின்றது பெரிய அரசன் சொல்லிவர
விட்டவார்த்தை மேலும் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்த
பரிசுத்தவான்களாகிய பாண்டவர்களை மரியாதையு
டன் வரவழைத்து பசுவைப்புலிவாயில் தள்ளிக்கொ
டுக்குந் தன்மைபோலத் துரியோதனன் சகுனியிடத்
தில் காட்டிக்கொடுத்தபோது, தூய்மையும் விதரணை
யும் உடையபெரியோர்களும், பெரிய தந்தையாகிய
அரசனும், இப்பேர்ப்பட்ட இகழ்ச்சியெல்லாம்சபை
யில் நடக்கப்பார்த்து சிவனில்லாததேகம் போலவும்
சிங்குவையில்லாத ஊமைபோலவும் இருந்தார்களே
யொழிய. துரியோதனா உனக்கு இதுபுத்தியல்ல மரி
யாதையல்ல, தருமம்அல்ல, என்றுஒருவார்த்தைசொ
ன்னதும்உண்டோ சஞ்சயனே! சுத்தமுள்ள உத்தமர்
களானால் எவரையும் ஒருவிதமாகக்கொள்ளும் பட்ச
மில்லாமலும், கெடுநினைப்பு இல்லாமலும் இருதிறவர்
களும் பொதுமைஎன்று யெண்ணும்நீதியில்வல்லவர்
களுமாயிருந்து, இந்த அனியாயமும் அக்கிரமமும்
சந்திரகுலத்தில் நடக்கக்கூடாது என்று ஒருவார்த்
தையினால் நிறுத்திவிடக்கூடுமே அப்படிவிலக்காமலி
ருந்து இந்தத்தீங்கு விளைந்ததற்குக் காரணம்திரிதரா
ட்டிர மகாராஜனே அன்றி வேறொருவரை நோகத்
தக்கதுஇல்லை இதற்கு மூலஞ்சொல்லுகின்றேன் கே
ளும் சஞ்சயனே! காமம்-குரோதம்-உலோபம் -மோ
கம்-மதம்-மாச்சரியம் ஆகிய உட்பகை ஆறுங்கூடிய
துரியோதனனே கொடியபெரிய விருக்ஷம் அதற்குப்
பிராணனும் வாசனையும் சூரியகுமாரனாகிய கர்னன்
சப்திக்கும்படியாகிய கிளைகள் சகுனிகல்லின்மேல்
வழுதலை காய்க்குமாவென்றால் கொத்தாலாயிரம்கொ
டியாலாயிரம் என்னும்மைத்துனர்கள் அக்கிளைகளு
க்கு இலைகள் தம்பிமார்களோ பூவும்பிஞ்சும்காய்களு
மாம் எவர்களுக்கும் உபயோகமில்லாதகனி துச்சா
தனன் திரிதராட்டிரமகாராஜனே இந்தவிருட்சத்திற்
கு மூலமாகிய ஆணிவேர் இதல்லாமல் சத்தியம்பொ
றுமை சிவகாருண்ணிய முதலான நற்குணங்கள்வாய்
ந்த திவ்யவிருட்சம் தருமராஜன் அதற்குப் பிராண
னும் குணமுள்ளமணமும் வீமசேனனும் விஜயனும்
நகுலசகாதேவர் இருவரும்கிளைகள் ஒப்பில்லாதபூவும்
பிஞ்சும்காயும் உலோகோபகாரமாகிய கனியும் யான்
நெருங்கியபிராமணர்களும் வேதங்களும் இந்தவிருட்
சத்திற்குமூலமாகிய ஆணிவேர். ஐயாசஞ்சயனே! இத்
தன்மையவாகிய இரண்டுவிருக்ஷத்தில் அழிவு இல்லா
தது எது, அழிவது எது, உன்சிந்தையிற் றேர்ந்து

மனபூர்த்தியாய் நிதானித்துச் செப்பக்கடவை யென்று சொல்லி மேலும் விளம்புகிறார்.

கேளும் சஞ்சயனே! சத்துருக்களைத்தொலைத்து சபதமுடிக்கக் கோபங்கொண்டிருக்கும் வீமசேனனும் அருச்சுனனும் யுத்தத்திற்கு எதிர்த்தகாலையில், மண்ணாசைபிடித்த வாழ்வை மனங்கொண்டிருக்கும் வஞ்சகராகிய துரியோதனாதியரின்வல்லபங்களைநாம் காண்போம் என்பதுமுண்டோ? (அரசமரத்தைப் பிடித்தசனி அசன்கீழ்வசிக்கும் ஆனைமுகனையும் பிடித்தது) என்பதுபோல, துரியோதனாதிகள் நூறுபேரும் இவர்களுக்குச் சகாயமாகிய மன்னவர்களும் மாண்டுபோவதுநிச்சயம். வையகம்முழுமையும் பாண்டவர்கள் ஆண்டு அனுபவிப்பதுசத்தியம் விவேகம் நீங்கிய திரிதராட்டிரன் சொல்லிவிடுத்த கொடியதீமொழியை நீர்கேட்டுச் சம்மதித்து இவிடம்வந்து கூறியதை எங்கள் உயிருள்ளவரையிலும் மறக்கமாட்டோம என்று சர்வசிவதயாபரனாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்லவும் இந்தவாக்கியங்களை யெல்லாங் கேட்டு மனங்கலங்கிய சஞ்சயன் வேறுதருமங்களையும் யுத்திகளையும் சொல்லுதற்குப் புத்திதோன்றாமல் உடலயர்ந்து, ஊர்த்துவசுவாசங்கொண்டு, சற்றுநேரம் நின்று இத்தன்மையவாகிய எண்ணங்கொண்டிருக்குமிறைவர்களே! நான் இவ்வளவுதூரம்வந்தும், பெரிய அரசன் மொழிந்த வார்த்தைகளைப் புதிய அலங்காரமாகச்சொல்லியும், யாதொரு பிரயோசனமும் பெறாதவனாகி இருக்கின்றேன். தாங்கள் ஆதியோடந்தமாகச்சொல்லிய வசனங்கள் யாவற்றையும் பூமண்டலாதிபதியாகிய பெரியஅரசனுக்குப் போதிக்கவேண்டியிருப்பதால், நீங்கள்கொண்டிருக்குங் கோபங்களும் மனஸ்தாபங்களும் நீக்கவேண்டியது. அறமாதி புருஷார்த்தங்களை ஆபரணமாகப்புனைந்த, ஓ ஐவர்கள் முதலிய அரசர்களே! தங்கள்சமுகத்தில் இன்றுயான் இயம்பியமொழிகள் இகழ்ச்சியுடையவாயினும்,இனவசனமாயினும் அவறில்சொற்சோர்வு முதலியகுற்றங்கள் இருந்தாலும் கோபமில்லாமல்க்ஷமிக்கவேண்டியது என்று உபசாரஞ்சொல்லி விடைகொடுங்கள் என்றுவணங்கிய சஞ்சயனைநோக்கி, அந்தமன்னர்கள் சிற்சிலவார்த்தைகள் சொல்லத் துணியுங் காலையில், மேருகிரிச்சாரல் வரைக்கும் போர்புரிந்த திரதரனாகிய தானுகரனாகும் பாண்டுபுத்திரன்பார்த்து,மடைகளென்னும் வாயினால் கடகடவென்று வரும் சலங்களைக்கொண்டு மடமடவென்று வளரும் பயிர்களார்ந்த செய்கால் வளங்களையுடைய அரசர்களே! சற்று இருங்களென்று கையமர்த்தி சஞ்சயனைப் பார்த்து, ஐயா! எங்கள் தந்தையாகிய பாண்டுபூபதி மாண்டுபோகிய எழாண்டினில் ஆதரித்து, தனுர்வேதமுதலியகல்விகளும் வருவித்து, இளவரசு முடிதரித்து,சகல சுபசந்தோஷ வாழ்வைத்தந்து, சேவிப்பவனும்மதிக்கண்ணும் மகிழ்வுபெறக்கண்ட அவர், இப்போது அவைகளையெல்லாம்விடுத்து, எங்களுக்குத் தாழ்வைக்கொடுத்து, கொடுமையாகிய பயிரைத்தழையச்செய்தார் ஆகிலும் "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை" என்றபடி பிதாவினுடைய வார்த்தைக்கு மேலாகிய மந்திரங்கள் ஒன்றும் இல்லாமையால் அந்த மொழியைத்தப்பி நடக்கலாகாது நல்லகாரியமேசிலபிள்ளைகள் காடாண்டு தாழ்விற்பறக்கவும்,தந்தைசெய்யலாமென்று நன்மைநூலுணர்ந்த உத்தமர்கள் சொல்லி இருக்கின்றார்களோ சஞ்சயனே? இந்திரப்பிரஸ்தமென்னும் நகரையும், குருநாட்டையும், தகுதியாகியசெல்வங்களையும். நால்வகைச் சேனைகளையும், நாங்கள் விரும்பஇல்லை. பதின்மூன்றுவருடம் துக்கத்தையே சுகமாகக்கொண்டு காடுதிரிந்து கலங்கி கசங்கிவந்த எங்களை ஆசையையுடைய பெரியதந்தையாகும் அத்தன்கண்டு, நமதுபுத்திரர் மிகவும்வருந்தி வந்தார்களேயென்று உட்கொண்டு, எங்களுடைய அருமையெருமையாவும் தெரிந்த தன்மனத்திலேதோன்றியதைக் கொடுத்து, அப்பாநீங்கள் இதை வைத்துக்கொண்டு வாழ்வைப் பெறுங்களென்று சொன்னால், குலமும் நலமும் கொடிகொண்டு தழைக்கும். பெருமையும் உண்டாம். எங்கள்மனத்தில்விளைந்தகுறையுநீங்கும் இப்போது எங்கி உம்மை வரவிடுத்தற் கேதுவாகிய பிழையும் எப்போதும் இல்லாமல் நீங்கிவிடுமே இப்போதும் சிறப்பினையுடைய பெரியதந்தையின் வார்த்தையைத் தள்ளாமல் சிரசாகவகித்துக்கொண்டு, அவருக்கே கீர்த்தியுண்டாகும்படியாகஇராஜதருமமும் தப்பாமல் முயற்சி செய்துக்கொண்டு,நடந்துபோன காரியங்களை எல்லாம்நாடாமல்சிலவருடங்கழித்துக் கொண்டு வருகின்றோம். இதைநிறைந்த அன்பினையுடைய என்தந்தையினிடத்தில் சொல்லக்கடவை நீதியைப் பிரக்கியாதியாயுடைய சஞ்சயனே! "அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்" என்பதுதோன்ற இருக்கும் தகுதியைஉடைய பெரியதந்தைக்கும் தாயாகிய காந்தாரியம்மனுக்கும்,தவவிரதத்தில்உயர்ந்த பாட்டனாராகும் வீஷ்மாச் சாரியாருக்கும், காமம்-வெகுளி-மயக்கம்-அகற்றிய துரோணாச்சாரியார்-கிருபாச்சாரியார்-விதுரமகாராஜன் முதலிய பெரியோர்களுக்கும், திக்குநோக்கிப் பணிந்தோம்என்றுசொல்லும் மற்றவர்களுக்கு க்ஷேமம் விசாரித்தோமென்று சொல்லும் என்றுரைத்து, நரைதிரையையொட்டித் தேவாமிர்தத்தையும் தெவிட்டச்செய்யும் திவ்வியபோசனம் அளித்து. சுகந்தபரிமளசந்தனங்கொடுத்துமலர் மாலைகளும்அளித்து, அருமையாகிய பெருமையிற் சிறந்த பொற்கலையும் இரத்னபூஷணங்களும்புனைந்து கொள்ளும்படி ஈய்ந்துபோய் வாரும் சஞ்சயனே! என்று செலவுகொடுக்கவும் மற்றையர்களிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு வேகப்பரிபூட்டிய இரதம் ஏறி விரைவாகச்சென்று, சிறைவாயிற் சூரியன் செல்

னுகாலத்தில் நோக்குவதற்குக் கண்கள் பாக்கியஞ் செய்யவேண்டியதான சிலாக்கியமும் யோக்கியமும் உடைய அஸ்தினபுரத்திற்கு வந்துசேர்ந்தான் சஞ்சய முனிவன்.

இப்பால் சஞ்சயன் திரிதராட்டிரமகாராஜன் அரண்மனையுட்சென்று கண்டு வணங்கித் தூதுபோய் வந்த சங்கதிகளைச் சுருக்கமாகச் சொல்லத்தொடங்கி இந்திரப்பதத்திலுயர்ந்த இறைவனே! சேரும மூவர்களுந் தேவர்களும் மற்றயாவர்களும் கொண்டாடிப் புகழும்படியாகத் தருமபூபதிவாழும் துன்பம் நீங்கி இன்பம்ஓங்கிய உபலாவியம் சேர்ந்து தம்பிமார்கள் முதலிய தரணிபாலர்களும் சூழ்ந்திருக்கும் சபையிற்போய் அவர்களுடைய கருத்தெல்லாந் தெரிந்துகொண்டேன் ஆசைகொண்டு தேவரீர்சொல்லி யனுப்பிய தன்மையாவற்றையும், இகபரத்துக்கேதுவாகிய இப்பலவகைகளையும் பற்பலவித உறுதியாகப் புகன்றேன். அருள்நிறைந்து சுரக்கும் முகத்தையுடைய ஐயா! திருப்பிவந்தேன். யான் தமது சமூகத்தில் எவையென்று சொல்லப்போகின்றேன். எந்தமே! சிறப்பினையுடைய துரியோதனன்-சகுனி-துச்சாதனன் அங்கர்கோமான் இவர்கள் எல்லாரும் அவர்கள்நெஞ்சைவிட்டு நீங்காத பெரிய பகைஞராயிருந்தும், உன்பேரிலிருக்கும் நிஷ்டூர உறுதிவசனங்களை ஒருயுகாந்தரம் சொன்னாலும் முடிவுபடா. பலபலவார்த்தையேன் அவர்களுடைய மனவிருப்பப்பிரகாரம் இராஜமுறைமையிற்சொல்லிய நடுவுநிலையின்படி அவர்களுக்கு அரசாட்சி கொடுக்காமற் போவீர்களாகில், அகண்ட சாம்பிராச்சியமும்-உன்மக்களும்-ஒக்கலும்-செல்வமும்-சீரும் இன்னுஞ் சிலபகலில் வாயுகுமாரனாகிய வீமசேனனுடைய கதையால் மாண்டுபோம். ஐயா! அவ்விடத்தில் நடந்த காரியங்கள் அநேகமுண்டு அவைகளையெல்லாம் தேவரீருக்குமாத்திரம் உரைத்தால் பூரித்ததோள்களையுடைய புண்ணியர்களும் திண்ணியகல்வியர்களும் உன்புத்திரர்களும் மற்றமித்திரர்களும்கேட்பதற்கு இப்போது இவ்விடத்தில் இல்லாமையால், போதுவிடிந்தவுடனே நித்தியவிதி முடித்துக்கொண்டு, தீங்கில்லாததிருச்சபைக்குவந்து யாவருங்கேட்கச் சொல்லுகின்றேன் என்று திரிதராட்டிரனிடத்தில் சஞ்சயன் சிலவுபெற்றுக்கொண்டு விடுதிபோய்ச் சேர்ந்தான்.

இப்பால் உலகத்தை இருள்மூடுந் தன்மைபோல் தாவிசனாகிய திரிதராட்டிரனுக்கு மனச்சஞ்சலம் வந்ததோன்ற பெருமூச்சும் நெடுமூச்சும் உண்டாய் ஆலஹால விஷத்தைப் புசித்தவர்கள்போல் நடுநடுங்கி ஆருத்துபரத்தில் விழ்ந்து இரங்கி மயங்கித்தியங்கித் தாழ்ந்து ஒன்றுந்தோன்றாமல் நித்திரைஇன்றி இரட்டலும் புரட்டலும் அதிகரிக்க, கண்ணீர்சோர அழுவான். கையையூன்றி எழுவான். கால்நடுங்கிவிழுவான் கடவுளைஎன்று தொழுவான். இப்படிக்குப் பலபல துன்பம்அடைந்து சகிக்கமாட்டாமல் மந்திரயுக்தியிலும் தந்திரயுக்தியிலும் உயர்ந்த தம்பியாகிய விதுரமகாராஜனை அழைத்தோடி வாருங்களென்று உயிர்ச்சேவகரை அனுப்ப, அவர்கள் விரைந்தோடிவந்து வணங்கிச்சொல்லுமொழிகேட்டுச் செம்மலாகிய விதுரன் அர்த்தராத்திரியில் அண்ணனிடத்திற்கு வந்து, அணிமலர்போன்ற அடியில்வீழ்ந்து ஆசிர்வசனங்கொண்டு அருகிலிருக்கும் ஆசனத்தில்இருந்து மார்பையும் தோளையும் தடவிக்கொடுத்து வரண்டநாவுக்குப்பசையுண்டாகச் சர்க்கரைவற்கம் கொடுத்துத் திடப்படுத்தி ஆலவட்டங்களால் உபசரித்துப்பல ஆறுதல்சொல்லி என்னை அழைத்தகாரணம் யாது அண்ணாவே என்று வினவத் தம்பியைநோக்கி, மாட்சிமையுடையகல்வியிலும் கேள்வியிலும் சாஸ்திரக்கருத்து தப்பாமல்தெரிந்து நடக்கும் அப்பனே! மேலாகிய அறிவிற் சிறந்த சஞ்சயன் ஐவரிருக்கும் உபலாவியம் புகுந்து, யான் சொல்லிய வசனங்களெல்லாம் உரைத்து மறுமொழி கொண்டு இவ்விடம்வந்து அவர்கள்கூறிய சங்கதி அநேகங்களில் சிற்சிலகாரியங்களைத் தெரிவித்து நாளை உதயத்தில் வந்து மற்றவைகளையுஞ் சொல்லுகின்றேன் என்று விடைபெற்றுக்கொண்டு விடுதிக்குச்சென்றான் அதுமுதல் கண்ணுறக்கங்கொள்ளாமல் கலங்கிய எனக்கு எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் இந்த இராக்காலம் நான்குயுகமாக நிலைபெற்றிருக்குந் தன்மைகொண்டு நலியச்செய்கின்றது. ஆகையால் ஏதாகிலும் தருமங்களைச்சொல்லி இந்த இராப்பொழுதைப் போக்கடிப்பாயென்று இவ்விடத்திற்கு உன்னையான் அழைப்பித்தேனென்று இறைவன் இயம்பக்கேட்டு இளையதம்பியாகிய விதுரன் சொல்லுகின்றான். என் அண்ணாவே! சதுரங்கதளத்துடன் சாமர்த்தியமுமுள்ள ஓர் அரசன் சளையாமல் யுத்தஞ்செய்யத் துணிந்து வளைந்துகொண்டால், அவனைவெல்லுவதற்கு வல்லமைஇல்லாத சவுங்கலாகிய இராஜதீரர்களெவர்களோ அவர்களும் தான் சம்பாதிக்காமலே தந்தைமுதலிய பேர்கள் எச்சிற்கையாலுங் காக்கையைஓட்டாமல்சேசரித்து க்ஷேமத்தில்வைத்த திரண்ட திரவியங்களை, பந்துஜனபோஷகம் தானதருமம் பரவுபகாரம் செய்யாமல் தாங்களேபிரபுக்களென்று இறுமாந்தபொன்காத்த பூதம்போற் பார்த்திருந்து, அந்தப்பொருள் இழந்தபிற்பாடு தலைகவிழ்ந்து வாகனமிழந்து பூரியராகித்திரியும் பேதைபோன்ற லோபியரெவர்களோ அவர்களும் திருடவேண்டுமென்னுங் கியாபகமுடைய திருடர்களும் கலகமும் வஞ்சனையுஞ்செய்து சீவனஞ்செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகின்ற கர்மிகளும், பற்பலபாஷைகளையும் சாஸ்திரங்களையும் படித்துணரவேண்டிய ஆசைகொண்டவர்களும், நித்திய தரித்திரத்தில்ஆழ்ந்து வருந்தி நிலையாகியவாழ்வைப் பெறவேண்டுமென்னும் இச்சையை யுடையவர்களும் எந்தவேளையும் போகத்தைவிரும்பி காமாந்தகராய்த்

திரிபவர்களும், விபாதிக்காரர்களும், ஆகியதேவர்களெல்லாம் தாங்களெண்ணிய சவலையினால் நித்திரை அற்றிருப்பார்கள். இவர்களுக்குக் கண்ணுறக்கம்வராதிருப்பதுஞாயமே. பஞ்சாசத்கோடி பூமண்டலாதிபதியாகிய தேவரீர் கண்ணுறக்கங்கொள்ளாதிருப்பதற்குக் காரணமென்னவென்று வினவிய விதுரனை இராஜன்நோக்கி, நிறைந்த உயிருக்குயிராகிய தம்பியும் மதிமந்திரியும் தோழனுமாகிய தோன்றலே! கேளும் பலமும்பலமுமுடைய பாண்டவர்களால்நடக்கப்போகின்ற யுத்தத்தில் அபலமும்சபலமுமுடைய அரவகேதனன் முதலாகிய புத்திரமித்திர வருக்கங்கள் என்ன பாடுபடுவார்களோ, எந்தக்கேடு கெடுவார்களோவென்று என்சிந்தை நினைத்து பெருமூச்செறிந்து தியங்கி மயங்கித் திடுக்கிட்டெழுந்து நித்திரைவராமல் நெடுந்துயருழன்றேன் ஆகையால் என்னையுந்தேற்றியுத்தம் நேரிடாமலிருப்பதற்குத் தகுதியாகியபுத்தி யுபாயங்களையும் புகன்று அபாயம்நீக்கி ஆளவேணும்ஐயனேயென்று அரசனகூற அவ்வார்த்தையைக்கேட்ட விதுரனவன் சொல்லத் தொடங்கினன்.

ஓ அகண்ட பூமண்டலாதிபதியாகிய என்னண்ணலே! கேளும்காசினியாளும்காவலர்களுக்குஇரண்டு காரியமுண்டு. அதாவது, தாயாதிமுதலிய பந்துக்களுடன்வித்தியாசமின்றி ஒருமைமனத்தினராய்உடன் பொருந்திவாழ்வதே உலகமெய்க்கும்வாழ்வு. அப்படியில்லாமல் விரோதங்கொண்டு பகைத்துவாழ நினைப்பாராகில் மாறாததுயரம் ஆறாகப்பெருகும் இதுசத்தியவசனமாதலால், உன்புத்திரர் ஐவரைப் பகைத்துக் கொண்டபடியால் விளையப்போகின்ற சண்டையை விலக்க வல்லவர்களொருவருமில்லை அப்பகையைமுதலில் விளையும்போதே முளையிற் கிள்ளிவிடவேண்டும். அப்படி கிள்ளாமற்போனதினால் இவ்வளவாய் விளைந்துவிட்டது. ஆகிலும் ஐயா! சிருஷ்டிகர்த்தா வாகிய திசைமுகன் வரன்முறைப்படி விதித்தவிதியையேமதியும் அனுசரிக்கும் பாண்டுராஜாவின் புத்திரர்தங்களுக்கு விரியானநேரிடும் ஆபத்காலங்களிலும் தேவரீர் பேரில் வைத்திருந்த அன்பும்பத்தியும் விசுவாசமும் ஆசையும் தினயத்தனையேனு மறந்துமாறுபட்டு வேறாகநினைக்கமாட்டார்கள். ஆனால் இந்திரப்பிரஸ்தத்திலிருந்தவர்களை சபாமண்டபம்பார்த்துப்போகலாமென்று பெரியதந்தையாகிய நீர் திருமுகமெழுதி கையொப்பமிட்டு வரவழைத்த காலத்தில், உமதுபுத்திரன் மாயச்சூதாடி அவர்களுடைய உரிமையைக்கைக் கொண்டபோதும், உமது பிள்ளைகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் இழிவாகிய சொற்களைச் சொல்லியபோதும் தாமரை மலர்போன்ற முகத்தையும் சரமாகிய கமுகின்பாளைபோன்ற குழலையுமுடைய திருவுக்கோப்பாகும் திரௌபதையை மயிரைப்பற்றி இழுத்துவந்த காலத்திலும், வஸ்திரத்தை புரிந்து மானபங்கஞ்செய்த காலத்திலும், கரத்தைநீட்டித் தொடையைக்காட்டி இந்தத்தொடையின்மீதுகொண்டுவந்துவையடா தம்பியென்றுகூறிய காலத்திலும அவர்களுளமுமுடலுநொந்து வருந்தி உன்பேரில் வைத்திருந்த அன்பும் ஆசாபாசமுங்கொஞ்சங்கொஞ்சமாக நீங்கிப் போய்விட்டது அதைக்குறித்து நீர் ஆயாசப்படவேண்டாம் இவ்வுலகத்தில் உத்தமர் மத்திமர் அதமரென்று மூவருண்டு. அதாவது, "கற்பிளவோடொப்பர் கயவர்கடுஞ்சினத்திற், பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே விற்பிடித்த, நீர்கிழியவெய்த வடுப்போலுமாறுமே, சீரொழுகு சான்றோர்சினம்" என்றபடி அண்ணா! அதமராகும் கயவர்களுடைய கோபமபிளந்த கல்லைப்போலாகும். மறுபடியும் பொருந்தாது. மத்திமராகும் புத்தியினர்களுடைய கோபம் வெட்டுப்பட்ட பொனதுண்டு போலாகி மூசையில்வைத்து படிக்காரமிட்டு நக்கப் பொருந்து அதுபோல் இனனொருபுத்திமான் இடையிலிருந்து சமாதானஞ் செய்தால் கலந்திருப்பார்கள் மேன்பாட்டினையுஞ் சிறப்பினையும் கல்வித்திறத்தினையும் குலசாம்பிரதாயத்தையுமுடைய உத்தமர்களுக்குக் கோபம்வராதுவந்தாலும் தண்ணீரின்பேரில் பாணத்தைத்தொடுத்தால் வடுவாகிய காயமும் வேறுபாடாகிய பிரிவுமில்லாமல் ஒன்றாகயிருக்குந் தன்மைபோலாகும், அதுபோல ஐவர்கள் மேன்பாடுடைய சீரியர் ஆதலால், எப்பேர்ப்பட்ட குற்றங்களையும் உடனேமறக்கத் தக்கவர்கள்வீரவழகுநிறைந்த தோள்களையுடையவேந்தே! ஆண்மைக்கையிலும் விவேகத்திலும் கீர்த்தியிலும் நீதிஞாயங்களிலும் சத்தியத்திலும் இளையாமலுயர்ந்த பாண்டவராகிய நல்லபுத்திரர்களை இப்போதுவரவழைத்து, அவர்களுக்குரிய பூமியைக்கொடுக்கமனதுளதோசொல்லும் அப்படிச் செய்வீராகில் வீரகண்டா மணியைத் தரித்த அரசர்களாகிய ஐவரும் பெரிய தந்தையான உமது வார்த்தையைத் தள்ளமாட்டார்கள் சபையிற் சொல்லிய சபதங்களெல்லாவற்றையுங்கும்பதோஷத்தையும் பரராஜர்கள்பழித்த நிந்தையாகிய வழுஉச் சொல்லையும் மறந்து, உமது புத்திரர்களுடன் வித்தியாசமில்லாமல் பொருந்திவாழ்வார்கள் அதனாலிந்தச் சந்திரமரபு மேன்மேலாகத் தழைக்கும். இப்படிச் செய்யாமல் கொடிதாகிய யுத்தம் விளையும்படியாக எண்ணுவையாகில், கடல்வளைந்தகாசினியையெல்லாம் அந்தஐவரே ஒருகுடையில் ஆள்பவர்கள். இரணக்களத்திற்குப் பலியாக்கப் படுவோரெல்லாம் நினது புத்திரரும் பௌத்திரரும் மித்திரர்களுந்தான். இது உறுதியென்று நம்புவதற்கு ஒருக்காலுஞ் சந்தேகமில்லை ஒசிரேஷ்டனே! உயர்ந்ததபமும் சிறந்தபெருமையும் அரசர்முதற்சேனைகளின் கூட்டமும், உரிய பெரியவர்களின் நன்பும், செல்வப் பெருக்கமும், சூதினால்தாயத்தாரை வென்ற மமதையும், ஏகபோகமாக இராச்சியத்தை ஆளுவதும், நூறுபிள்ளைகளென்னுந்

தொகைமகிழ்ச்சியும், இவைகளெல்லாம் நித்தியமா
கிய பொருளென்று நினைவுகொள்ளாதே, ஐயோ! அ
னித்தியமே ஏனெனில் தூண்டின்முள்ளில் மாட்டிய
சொற்ப இரையைக்கருதி விழுங்கிய சலசரமாகு மீன்
களுக்கு நேரிடுந்துன்பந்தான், உனது புத்திரர்களுக்
கு வரப்போகிறது. இரையைக்கருதி உண்டுஇன்னம்
வாழலாமென்று வந்துவிழுந்து மாட்டிக்கொண்ட மீ
ன்களைக் கரையிலிருந்தவன் இழுத்துக்கொள்ளுவான்
அதுபோல் பாண்டவர்களைவஞ்சித்து வாயிற்போட்
டுக்கொண்ட பூமியை, நமதுசொந்தமாகக் கொண்டு
வெகுநாளிருந்து ஆண்டு அநுபவிக்கலா மென்னும்
ஆசைமேலிட்டிருப்பதினால், நாளைநடக்கும் யுத்தகள
மென்னுங் குளத்தில்,பரசொத்தபேக்ஷையாகியஇரை
களைக்கொண்ட உன்புத்திரன், விமார்ச்சுனன் கதை
யினாலும் விற்கணையினாலும தூக்கிப்பாக்கியில்லாமல்
மாட்டி இழுத்து வாட்டிவிடப்போகிறார்கள் மேட்டி
மையுடைய அண்ணலே! நீர் இதைநன்றா யோசிக்கக்
கடவது. மெய்யாகவும் ஸ்திரமாகவும் நடக்கப்போ
கிற இரகசியத்தை இன்றுசொல்லிவிட்டேன் மேலும்
வீஷ்மாச்சாரியார் முதலிய என்போலொத்தவர்களெ
ல்லாம் உன்புத்திரனுக் கெத்தனைவிதத்தில் வருந்திச்
சொன்னாலும் (கிழவன்பாடல் கின்னரிக்குச் சரிப்ப
டாது) என்பதுதோன்ற, காதுக்கு நாராசமாகவும்
நாவுக்குக் காஞ்சிரங்காயாகவும் இருக்கின்றது. லாப
லோபத்திற் குட்ன்பட்ட நண்பர்களைப்போலும்விரு
ம்பியிருக்கும் கர்னன்சகுனி துச்சாதனன் இவர்கள்
சொல்லும் வார்த்தைகள், தேன்பாகு மனப்பாகு
கற்கண்டுப்பாகு சீனிச்சருக்கரைப்பாகு இதுகளுக்கு
மேலாகிய மாதுரியமாயிருக்கின்றது. ஐயா! இதுநன்
மை இதுதீமை என்றுணராதசிறுபிள்ளையினிடத்தில்
ஏகச்சக்ராதிபத்தியத்தை விடுத்து, ஏதோருபலனுமி
ல்லாத யோகிஸ்வரனைப்போ லிருக்கின்றாய். அவனோ
அவனைச் சேர்ந்தவர்களோ, அழகிய ஆயுதங்களையும்
அரம்பாஸ்திரிகளையும் வைத்துப் படைக்கும்வகை
யுணராத நபும்சகர்களைப்போல், வழிதுறை இல்லா
மல் தங்கள்மனது வந்தபடிக்கு நடந்து செய்தற்கரி
யனவற்றைச் செய்யும் பெரியோர்களையும் எடுத்தெ
றிந்துபேசி (இளங்கன்றுபயமறியாது) என்பதுதோ
ன்ற, உமதுஉரியவார்த்தைக்கும் உடன்படாம லிருக்
கின்றார்கள். உன்புத்திரர்களைக் குறித்து நானென்ன
சொல்லுவேன். அவர்களுக்காக நீர்விசனப் படுவா
னேன். பெருமூச்சு விடுவானேன். நித்திரையற்றிருப்
பானேன். கமுகப்பாளைவிரிந்துஅதிற்பெருகியதேன்
கள்சொரிந்து பாயுங் குருநாட்டுக்கு நாயகமாகியஎங்
கோவே! இன்னமுங்கேளும் நீர்கொடுத்தகாண்டவப்
பிரஸ்தமென்னுங் காட்டைத் தெய்வானுகூலத்தால்
நாடுநகரங்களாக வேற்படுத்தி அரசுபுரிந்துபெருமை
பாராட்டிக்கொண்டிருந்த பாண்டவர்களை முன்பின்
னென்னாம லழைப்பித்து, சகுனியை எதிராக்கிசொ

க்கட்டாடைச் செய்தகேத்காது அதிலும் பந்தயம்
வைக்கச்சொன்னதுபழுதமேலும் இல்லைபுந்திரெள
பதையையும் வைத்துக்கெலித்தது ஐயையோ!! அனி
யாயமனியாயம் இப்படியாகச் சூதினால் ஜயங்கொ
ண்ட பூமியைக் கைப்பற்றினாலும் ஒருவிதத்திற்பெரி
தல்ல தேவர்கள்முதலிய யாவர்களும் துதிக்கும்படி
யாகிய பெருமையிற்சிறந்த பாண்டவர்களாகிய பிரபு
லரை, அற்பமாகிய துரும்பிலுந் துரும்பாக அவமதி
த்து, அந்தச்சபையிற்பேசிய புன்மொழிகளைப்புருஷ
மேருவாகிய தீரர்கள் பிராணபரியந்தம் மறப்பார்க
ளோ? சொல்லும்அண்ணா மேலும் "தீயினாற்சுட்ட
புண்ணுள்ளாறுமாறாதே, நாவினாற்சுட்டவடு" என்று
இயம்பிய நீதிக்கிணங்க,நெருப்பினாற்சுட்டபுண்ணும்
பாணமுதலிய ஆயுதங்களினால் துளையாகியபுண்ணும்
சல்லியகரணி முதலாகிய மருந்துக்களினால் உடனே
ஆறிப்போம். சொல்லினாற்பட்டபுண் என்றைக்கும்
ஆறாது. அதைஎவர்கள் நீக்கத்தக்கவர்கள் சர்வசங்க
ப்பரித்தியாகஞ்செய்த மகானுக்களையும் துளைக்கும்
அவர்களும் சகிக்கமாட்டார்கள்பாண்டவர்கள்மேன்
மையாகிய அறிஞராகையினால், அன்று அந்தச்சபை
யில் மனம்பொறுத்திருந்தார்கள். அவர்களல்லாமல்
தேவர்கள்முதலிய மற்றெவர்களானாலும், இந்தப்பா
விகள்செய்த பொல்லாங்கினால் தயைதருமம் சாந்த
மென்னும் பாசங்களைவிடுத்து அன்னேரமே நாசப்
படுத்திக் கோபந்தீருவார்களல்லவா? தேவரீரும்உரி
மை-அறிவு-ஒழுக்கம்-கிருபைக்குணம்-தெளிவுஇவை
களில்லாத தீயர்களைப்போல் கண்ணை மூடிக்கொண்
டிருந்தபடியால், இவ்வளவு அலங்கோலத்திற் கிடமு
ண்டாயிற்று. போனதுபோகட்டும் இப்பவும் பட்ச
பாரமில்லாமல் சமமாகநடத்தவேண்டுமென்னும் நடு
வுநிலைமையாகிய புத்தி உம்மிடத்தி லிருக்குமாகில்,
நமதுகுலத்திற் பிறந்தபிள்ளைகள் பிரவேசிக்கத்தகாத
பகைவழியிற் புகவொட்டாமல், பாண்டவர்களை அ
ழைத்து, உனது புத்திக்கிசைந்த இராச்சியத்தையும்
சேனைகளையுஞ் செல்வங்களையுங் கொடுத்துசமாதான
ஞ்செய்தாலொழிய, கௌரவர்கள் பிழைக்கமாட்டா
ர்கள். என்று பரிசுத்தவான்களிலுயர்ந்த விதுரமகா
ராஜன் விளம்பிய மொழிகளையெல்லாங் காதின்வழி
யாகஅருந்தி, எனது அருமைத்தம்பியே! நீசொன்ன
தெல்லாம்உண்மைதானென்று விசனந்தீர்ந்துசந்தோ
ஷித்து, மனங்குளிர்ந்து, மறைந்தசூரியன்உதயமான
வுடனே என்தம்பி பிள்ளைகளுக்கு நாடுநகரமுதலிய
பாக்கியமியாவுங் கொடுத்துவிடுகிறேன். இதற்கியா
தொரு தடையுமில்லை. இவ்வுலகிலிருக்குமனிதர்களும்
பற்பலதேசத் தரசர்களும் முத்தொழில்நடாத்துமூவ
ர்களும் துரியோதனனுதியாவர்களுங்கூடிவந்து அவர்
களுக்கு நாடுகொடுக்கக் கூடாதென்று தடைசெய்தா
லும், அவர்கள்வார்த்தையைத் தடைசெய்து கொடுக்
கிறேன் ஒருக்காலும் நான்சொன்னசொற் றவறேன்
சத்துருக்கள் பத்தினிகளின் தாலியையும் அவர்கள்

நகரக் காவலாகிய வேலியையும் களையவளையுஞ் சிலை யையுடைய தம்பி! நீபோய் வாவென்று விடைதரவுங் குணநிதியாகிய சுகவிதுரன் அணிபலமேவுந் தனது அகம்புகுந்தான்.

ஒஜென்மேஜைய மகாராஜனே! இவ்வாறு தருமஞ்சொல்லியதம்பி அரண்மனைக்குப் போனபிற்பாடு "புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயதன்றோ" என்பதற்கிணங்க, கற்காதஅற்ப புத்தியையுடையபேர்களுக்குக் கற்றுணர்ந்தமேலோர்கள் சொல்லிய ஞானப்பொருள் ஒருகாதில் நுழைந்து மற்றொரு காதின்வழியாய்ப்போய்விடுமென்பார்கள் அத்தன்மையைப்போல் கண்ணொளியற்ற குருடனுடைய கவலைமனமும் இருண்டு தன்மகனுடைய கல்மனம்போலிருந்தது. அவன்மனத்தைப்போல் இராத்திரியுமிருண்டு வளைந்து எமனைப்போல் நிறைந்தது. அதெப்படி என்றால் மேகங்களெல்லாந் தலையும், பிரகாசிக்கு மின்னலெல்லாம் சுருண்ட செம்பட்டமயிரும், மூன்றும்பிறையே கோரதந்தமும், சிற்சில மலைகளே பற்பலபுயங்களும், நட்சத்திரங்களே வக்ஷஸ்தல ஆபரணங்களும், கறுத்தஇருளே தேகசாத்திரமுமாகவுடைய இராக்காலமென்னும் இயமன்வாடைக்காற்றாகிய பாசந்தாங்கி, துரியோதனாதியர்கள் இறப்பதற்கு முகுர்த்தநாள் ஏற்படுத்திக்கொள்ளத்திரிதராட்டிரனைச் செலவுகேட்க வந்ததுபோலுமிருந்தது. இவ்வாறு அவனுக்குஅளவற்ற ஊழிக்காலமென்ன இடைவிடாமற் குழம்பி நெருங்கிய இருட்கூட்டமானது பின்றனவிற்றொன்றி கனவிற்கண்ட வாழ்க்கையைப்போல கன்றது உடனே "ஞானிதன்னனவிற்பட்டால் நலியிருட்பிறவி நீங்கும்" என்பதற்கேய், பரப்பிரமக்கடவுளின் வலக்கண்ணாகியநவவியாகரண் பாண்டித்வமுடைய சூரியபகவான் உதயமாகநினைத்தார். அவரெப்படி நினைத்தாரென்றால், விவேகசூனியரின் மனம்போலிருண்ட முன்னைநாள் நடுராத்திரியில் இளவலாகிய விதுரமகாராஜன் திரிதராட்டிரனுக்கு உபதேசித்த மந்திரவார்த்தைகளெல்லாம் ஏதாக முடியுதோ அதை அறியவேண்டுமென்று நினைத்து, சப்தமாவென்னும் பரிபூட்டிய இரதமேறி, உதயகிரியின் உச்சியில்வந்து விளங்கி, வண்மையுந்தண்மையும் உண்மையும்நிறைந்த மகானுபவர்களின்மனதிற் கொப்பாகப்பிரகாசித்து, அரண்மனைச் சாளரங்களிலும், மேல்வீடுமுதலாகிய சாலைசோலைபாதி இடங்களிலும் பிரகாசமுள்ளகிரணங்கள் நுழைந்து காயும்படியாக உதயமானர் அந்தக்கிரணங்கள் விரிந்துநுழைந்துகாய்ந்தது எப்படி இருந்ததென்றால் விதுரமகாராஜனுடைய விவேகத்தைகேட்டுத் திரிதராட்டிரன் ஐவருக்கு நாடுகொடுக்கிறதாகச்சொல்லிஇருக்கின்றான் அந்த அதிசயத்தையாவரும் எழுந்து பாருங்களென்று கிரணமாகிய கரங்களினால் கிட்டித்தட்டிஎழுப்பியதைப் போலுமிருந்தது. உடனே நகரில்வாழும் ஜனங்களெல்லோரும் முகமும் அகமும் மலர்ந்து மகிழ்ந்து எழுந்துவிழுந்து சூரியனைத்தொழுதார்கள். வீஷ்மாச்சாரியர்-துரோணாசாரியர்-கிருபாச்சாரியர் -அசுவத்தாமர்-அங்கதேசாதிபதி-துரியோதனன் - துச்சாதனன்-சகுனி மற்றத்தம்பிமார் முதலாகிய சகலரும், இரத்தந்தோய்ந்த வேலாயுதந்தாங்கிய இராஜபோஜரும், வேதபண்டித விப்பிரர்களும், ஜோதிடநூல்வல்லவர்களும், சகுனசாஸ்திரிகளும், மாசறக்கற்ற கவிவாணரும், மற்ற தேசதேசத்தலைவரும், தங்கள்தங்களுக்குரிய அணியாசனங்களிலும் வீற்றிருந்தார்கள் அந்தச்சமயத்தில் இராத்திரிமுழுமையும்நித்திரையற்றிருந்த திரிதராட்டிர மகிபதி சுத்தியாய்ப்பத்தியாய் நித்தியக்கடனை வெற்றிபெறமுடித்துக்கொண்டு குருகுலம் விளங்கக்கூடியிருக்கும் மதிமந்திரிமார்களும் துதிதந்திரியோர்களும்-பட்டவர்த்தனரும்-மகுடவர்த்தனரும்-மண்டலீகரும்-உரியபலநாட்டரசரும் பெரிய சூழுடக்கொண்டுவர, பரதகீத நாதநடனாட்டியங்களும்-பட்டுவான்களும்-கட்டியங்களும்-சதிர்சேர்ந்திருக்குஞ் சபையில்வந்து அவ்விடத்தி லிருப்பவர்களியாவரையும் விசாரித்து, விதிமுறைப்படி வந்தனம் மரியாதைஉபசாரம் யாவுஞ்செய்துமேலானமுனிவர்களால் அட்சதைமுதலிய ஆசீர்வசனங்களுந் தரப்பெற்று, அரியாசனத்தி லமர்ந்தான் பெரியஅரசன்.

அந்தவேளையில் சஞ்சயனெனவன் உதயத்திலெழுந்து திருமஞ்சனமாடி, திவ்வியமலரால் சூரியனை அருச்சித்து நமஸ்காரஞ்செய்து அணிமணிக்கலன்களணிந்து அழகியசபைக்கு நேராகவந்துநின்று, அரண்மனைக் காவலோரைக்கண்டு, கடைத்தலையில் தான் வந்து காத்திருப்பதைக் காவலனுக்கு அறிவியுமென்றான் அதைக்கேட்டுத் தூதர்போய்வணங்கிச்சொல்ல வரும்படியாக அரசன் உத்தரவுசெய்ததை அறிந்துக்கொண்டு சபைக்குட்சென்று, துரோணாச்சாரியர்முதலிய பிராமணர்களுக்கும் வீஷ்மாச்சாரியர் முதலிய பெரியவேந்தருக்கும் கைதொழுது, தருமசாஸ்திரமுணர்ந்து வெறுப்பும் விருப்பும்வெப்பமும் தட்பமுமில்லாத சஞ்சயனைகும் உத்தமகுணத்தோ னெனவர் இராஜனுக்குச் சமீபத்திலிருந்த ஓர்ஆசனத்திலிருக்கவும், கட்புலனற்ற காவலன்சிந்தித்து, ஆசையுடன் சஞ்சயனை அணைத்துப் பாண்டவர்களிடத்தில் தூதுபோய்வந்த கருத்துமுழுவதும் சபையில்நிறைந்தயாவருங்கேட்கப் பெரியோர்களுக்கு முன்பாகச்சொல்லும் என்றவுடனே சஞ்சயனெனவன் எல்லோர்க்கும் சந்தேகப்படும்படியாகச் சொல்முடிபு பொருண்முடிபு நானுமதும் காரியகாரணந் தோன்றுமதும் மனவெறுப்பினால் பொழிப்பாகச் சொல்லவும், அதைக்கேட்டு வெற்றியையுடைய திரிதராட்டிரன் சஞ்சயனைப்பார்த்து ஐயா, நீர்போனதுமுதல்வந்தவரையில்

அவர்கள்கூறியவசனத்தில் ஒருசொல்லாகிலும்சோர்வுபடாமல் பரம்பதமாக விரித்துச்சொல்ல வேண்டுமென்னவும்சஞ்சயன்சொல்லலுற்றான் அம்புலிமரபிற்குதித்து அப்பிகைசுதனென உதித்து அபபுவிஅரசுஞ்செலுத்தும் அரசன்முதலிய யாவருங்கேண்மின்! அஸ்தபுரத்தைவிடுத்து, அழகிய உபலாவியத்தையடுத்து ஸ்ரீகிருஷ்ணனிருந்த திருமாளிகைக்குச்சென்று சஞ்சயன் வந்திருக்கின்றேனென்று தெரிவிக்கும்படிவாசலிலிருந்த தூதனைச்செலுத்தினேன் உடனே அவர்வரச்சொல்லென்று கூறிய மறுமொழிகொண்டு அந்தப்புரத்திற்சென்று, அழகுகுலவிய இரத்னமணிகளாற்செய்த மஞ்சத்தில் ஆதிசேஷனுக்கு ஒப்பாக விளங்கும் திவ்ய பீதாம்பரத்தினாலாகிய பட்டுமெத்தை மலர்மெத்தை முதலானவைகள் பரப்பிய அணையின்மீது அருச்சுனனிருந்து அடியிணைசுமந்துவருட, உருக்குமணிதேவியார் இருகரத்தினாலு மயில்விசிறிகொண்டு உபசரிக்க, அக்கினியினுதித்த பாஞ்சாலி கவரிவீச இவர்கள் மூவரேயன்றிமற்றொருவருமின்றி சயனித்துக்கொண்டிருந்த அஞ்சனமேனியனாகிய இணையில்லாத எந்தலை உட்புலன்கள் ஐந்துந்தேறிய உத்தமர்களின் உள்ளத்திலூறும் உணர்வானவனை, உந்திபூத்தோனை,உவணகேதனனை,உத்திவிட்டிவன் வந்துதித்தமாயனை, உரகசயனனை, அளவற்றநாள் வருந்தித் தவப்பேறு பெறுவார்களைப்போல் எனது கண்ணுக்குக் காட்சியாகக்கண்டு, இதுவேநாம் பெறவேண்டிய முத்திவீடென்று தேவதேவனுடைய திருவடியில் சாஷ்டாங்கமாகப் பணிந்தவென்னை, அம்மூர்த்தி மனமகிட்சியுடன் பக்கத்திலழைத்து அணைத்தனர். நானுங் கைகட்டிக்கொண்டு நின்றேன். அப்போது இளமையும் அழகையும்இயல்பாகக்கொண்ட என்தாய்மார்களின் முகத்தைத்தமது தாமரைக்கண்ணினால் நோக்கினர். உடனே அவர்களிருவரும் அரக்காம்பலுக்கு ஒப்பாகியகரங்களினால் நவரத்தினங்களிழைத்து மாற்றுயர்ந்ததங்கத்தினாற்செய்து எங்கும் பொங்கும் ஒளியினாலுயர்ந்த சிங்காதனங் கொண்டுவந்து போட்டார்கள். அதன்பேரில்உளுந்நாராமல் கையைமாத்திரம் அந்த ஆசனத்தின்பேரில்வைத்துக்கொண்டு, சுவாமியின் பக்கத்திலிருந்து சூற்கொண்ட மேகப்போலும் காசாம்பூவைப்போலும மரகதமணியைப்போலும் விளங்கிய அக்கண்ணன்திருமேனியினழகையும் அருச்சுனனுடைய திடவீரகாத்திர சிலாக்கியஉருவத்தையும் கண்களிகூற நோக்கினேன் அவர்களுடைய கிருபாகுணத்தையும் சௌரிய பராக்கிரமத்திறத்தையும்என்னசொல்வேன் ஆக்கலும்அழித்தலும் தோற்றலுமறைதலும் முடைய சுதந்தரர்ஆன இவர்கள்திருஷ்டிக்கு லோகாலோகங்களும் நிலையில்லாமல் அழியும். இந்தப் புண்ணியவான்களைச் சிநேகித்தால் மூவுலகமும் ஆளலாம். மாறுபட்டுப்பகைத்தால் எதிர்த்தவர்களேயன்றி ஈரேழுலகமும் அழிந்துபோம் இப்பேர்ப்பட்ட மைத்துனனும் தமபியும் கைகாட்டும் வேலைகளைச்செய்யும்ஏவலாளாகயிருக்க தருமராஜனுக்குவேறேபடைத்துணையும் வேண்டுமோ. ஆண்மிக்கையற்றவரென்றுஞ்சொல்லப்போமோ. புவனா புவனமுழுமையும் தனக்கு வேண்டுமென்று நினைப்பாராகில் இப்போதே கிடைக்கும்படிச் செய்வார்கள் இந்தஇருவரும் இப்பேர்ப்பட்ட பலசாலிகளாயிருந்தும்காட்டைவிடுத்துக்காட்டிலுறைவானேனென்றால், பரிசுத்தமுள்ள நினைப்பும் ஒப்புவமை இல்லாதவருமாகையால் எதையும் விரும்பாமல் வெறுத்திருந்தாரென்று என்னெண்ணத்தில் பலபலவண்ணம் பண்ணிக்கொண்டிருக்கையில், கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்துக் கல்வருஷத்தைத் தடுத்துக் கோபாலரைக் காத்தருளியதேவாதிதேவனாகிய கண்ணன் என்னைப்பார்த்து, இப்போது இவிடத்திற்கு நீர்வந்தகாரியமென்னவென்றுகேட்க அடியேன் ஒளிக்காமல் சிற்சிலவார்த்தைகளாற்சுருக்கிச்சொன்னேன். அப்போது கேசவனாகிய ஸ்ரீகிருஷ்ணன் ஒருவாக்கியம் திருவாய் மலர்ந்தருளினார்.

அப்பா சஞ்சயனே! துரியோதனாதியர்க்கும் பாண்டவர்களுக்கும் நடக்கப்போகின்றயுத்தத்தைக் குறித்துத் திரிதராட்டிரமகாராஜன் விசனத்துடன் பயப்படுவாராகில் ஐவர்களுக்கும் இனிமையாகியவசனங்களைச்சொல்லிவிரித்த தலைமயிரைமுடிக்காமல்வசனமும் உலகப்பழிப்புங் கொண்டிருக்கும் பாஞ்சாலியின் மனத்துயரத்தையும் போக்கி, சூதாடிப்பறித்துக்கொண்ட நாடுநகரம் திரவியமுதலிய யாவையும்பாண்டவர் பெறும்படியாகக் கொடுத்து, அவர்களுக்கு இப்போது படைத்துணைவந்திருக்கும் பார்த்திபர்களையும் நன்மையுடன் சிநேகித்தால், கிரீடபதியாகிய பாண்டவர்கள் தங்கள் தம்பிமாராகிய துரியோதனாதியரும் சுகப்படவேண்டுமென்றெண்ணி தங்கள்சிந்தையிறந்றேன்றியமாத்திரம் நாடுநகரங் கொடுப்பார்கள். அதுவும்கௌரவர்கள் வஞ்சமில்லாமல் உரிமைப்பாடாக மரியாதையுடன் கீழ்ப்படிந்து நடப்பார்களாகில் கிடைக்கும் இல்லாவிட்டால் எப்போதுங்கலந்து வாழப்போகிறதில்லை. இது ஒருபக்ஷம் இப்படி நடத்துவதற்கு மனதொப்பாவிட்டால், யுத்தகளத்திலெதிர்த்து அவரவர்கள் புஜவலிமைக்குத்தகுந்தபடி சண்டைபண்ணி சத்துருநாசஞ் செய்து துன்பநீங்கி இன்பத்துடன் உலகாள்வதுஞாயம். இதுஒருபக்ஷம் இவ்விரண்டிலொன்றைத் தெரிந்து துணிந்து நடத்த அறியுங் குணமில்லாதவர்களைப் பெரியோரென்று சொல்லுவதிற் பிரயோசனமில்லை தெரிந்தோர்களும் தெரியவுரையாதிருப்பது என்னகாரணமோ சஞ்சயனே! நீவந்தகாரியத்தை நானறிந்து கொண்டேன். நாடுநகரம்விரும்பிப் பெருமைப்பெறவிருக்கும்அரசராகிய பாண்டவர்களைச் சகலசெல்வத்தையும் கூறிய சபதத்தையும் நாடியயுத்தத்தையும் விடுத்து, வீடுபெ

ஆந் தவத்தைச்செய்யக் காட்டையடையும்படியாகப் பெரியதந்தை விளம்பினாரென்றுசொல்வதற்கு நீஎடி வந்தது அது எத்தன்மையொத்ததென்றால் அடர்ந்த காடு முழுமையுந் தொடர்ந்து, புகையும் பொறியும் படர்ந்து, மேலோங்கியெரியும் காட்டாக்கினியை வாடைக்காற்றும் துணைப்பட்டுவந்துகலந்து அதைஅவிக்கத்துணிந்ததுபோலாகும். பாண்டவர்கள் மனம் வருந்தி அக்கினியாயெரிந்துக்கொண் டிருக்கும்வேளையில், உங்களைத் தவஞ்செய்யப் போகச்சொன்னானென்று நீசொல்லப்போகிற சொல்லாகிய வாடைக் காற்றுங் கூடவேகலந்து கொண்டால், உலகம் யாவுமொன்றாய் முழுகிப்போமே பெரியதந்தைவார்த்தையென்னும் பெருமையும் எகிறிப்போமேஇந்தமொழிகளையும் மநுநெறி முறைமைகளையும் யோசிக்குமிடத்தில், தங்கள் தங்களிச்சையின்படியாகவும்வணங்காமுடியோனுக்கு மறுத்துச்சொல்லக் கூடாத முகஸ்துதியாகவும் பாரபக்ஷமாகவும் நினைத்துச் சொல்லியதாக இருக்கின்றதே தவிர, காரியாகாரியந் தெரிந்து இப்படிபோனாலிப்படி நடக்கும் இப்படி விதைத்தாலிப்படிவிளையும் இதுதகுந் தகாதென்ப துணர்ந்து சொல்லி யனுப்பியதாகத் தோன்றவில்லையே இஃது பெரிய அரசனபுத்தியல்ல அல்பமதியையுடைய அறிவீனர் உரைத்தபுத்தியைக் கேட்டுச்சொல்லி யனுப்பிவைத்ததாக இருக்கின்றது. பரிசுத்தமாகிய சாஸ்திரங்கள் முழுமையுங் கற்றுணர்ந்தபுண்ணியராகும்பெரியோர்களின் யுத்தியைக்கேட்டு மொழிந்த வார்த்தையாயிருக்கவில்லை. தம்பிபிள்ளைகள் காட்டில் தவஞ்செய்யவும், தன்பிள்ளைகள் நாட்டில் அரசுபுரியவும் எந்தமதியைக்கொண்டு திரிதராட்டிரன்சொல்லியனுப்பிவைத்ததோ? இது அவர்மனதுக்கேதெரியவேண்டியது. எனக்கு இதுதகுந்தயோசனையாயிருக்கவில்லை சஞ்சயனே! நீவந்தகாரியத்தை நாளையத்தினம் உத்தமனாகிய தருமநந்தனனுடைய சபையிற்சொல்லியாவையும் அறிந்துக்கொள்ளென்று முகதிக்குவித்தாகு முதல்வனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் திருவாய் மலர்ந்தருளினாரென்று சஞ்சயன் சொல்லுவதற்கு முன்னமே பூபதியாகிய திரிதராட்டிரன் சஞ்சயனைநோக்கி, புஜபலவலியாற் கஜமெனவுயர்ந்த விருஷபவிராட்டாகிய விஜயன் ஒன்றுஞ்சொல்ல இல்லையோவென்று கேட்டான்.

அப்போது சஞ்சயன் அரசனைப்பார்த்து, ஐயா! தூயவனாகிய மாயவன் சொல்லியதைக் கேட்டிருந்த இந்திரகுமாரனாகிய நாயகன் அவியாதஅக்கினியைப் போல் வாள்விழிசிவந்து, மார்புந்தோளும்வலக்கண்ணுந்துடித்து, என்முகத்தை எறநோக்கி, ஆ! ஆ! சஞ்சயனே! பெரியோராகிய உத்தமர்களும் சிறியோராகிய மற்றையர்களும் நெருங்கிய இராஜசபையில்இந்த வார்த்தையை விஜயன் விளம்பினானென்று கலங்காமல் பயப்படாமல் ஒளிக்காமல் சொல்லக் கடவையென்று சிலசொன்னான். அஃதியாதெனில் பாபங்களென்னும் பயிரை விளையச்செய்யுந்தன்புத்திரராகிய துரியோதனாதியர் பேரில்வைத்தபட்சத்தினால்அப்புத்திரர்களோடுங்கூடி, குடும்பங்குலைக்கும் அல்பர்களுடைய புத்தியைத்தானும் விரும்பிக்கேட்டு, தருமத்தினுக்கு அடாதகருமத்தை மேற்கொண்டு, ஐவர்களையும் அனாதையாக்கி, அழகியவாளஞ்செறிந்தநாட்டில் ஒன்றாகிலுங் கொடுக்கமாட்டேன். பாண்டவர்கள் இராச்சிய அபேக்ஷையை விடுத்துத் தவம்புரிந்து மோக்ஷவீட்டையடுத்துக்கரையேற வேண்டுமென்றாஎங்கள் பெரியதந்தை பக்ஷமாக புத்திகள்சொல்லி அனுப்பிவைத்தது. ஓ! ஓ! சஞ்சயனே! குலகோத்திரத்துக்கும் தனக்கும் நன்மையுண்டாகத் தவஞ்செய்யச் சொல்லி அனுப்பிய வார்த்தையைச் சிரசாகக்கொண்டு நாங்கள் முன்பு சபையிற்கூறிய சபதத்தை விடுத்துத் தவஞ்செய்வோமாகில், திரிதராட்டிரன் தம்பிபிள்ளைகள் சொன்னசபதஞ் சோர்ந்துபோனார்களென்னும் பழியும்பாபமும் இவரையும் எமதுமரபையுஞ் சேருமே பெரியவயதினால் அதைமறந்தாரோ? சஞ்சயனே நாங்கள் வீரப்பிரதாபத்துடன் ஆபத்து வேளையில் கோபத்தினால் சபையில்விளம்பிய சத்திய வாக்கியத்தை லோகப்பிரசித்தமாக முடித்து, உதிரவெள்ளத்தில் மூழ்கி ஸ்நானஞ்செய்து, அரசர்கள்பழிக்கும்பழுதுகள்போக்கி, எங்கள்குலமாகியதிங்கள்குலமோங்க இந்த அங்கையிற்சங்கு சக்கிராதரதேவனும்ஹரிபரந்தாமனும் ஐவர்சகாயனுமாகிய அழகியமணவாளனுடைய அடிமலரைப்பணிந்து குற்றமகற்றிக்கொள்ளுவோம் அன்றியும் எங்களுக்குப் பொல்லாங்குசெய்து எக்காலத்திலும்அசையாதவசையை இசையாகக்கொண்ட துரோகிகளுடைய அழகார்ந்தமேனியை தெய்வீகமாகிய எமதுவிற்களில் தொடுத்துவிடுங் கணையினால் சின்னபின்னமாகப்பிளந்து இரத்தவெள்ளமொழுகவும், வெப்பமாகிய மூளைகள் அற்பவாயிற் பெருகவும்செய்த அப்பொழுது எங்கள்பெரிய தகப்பனார் சொன்னசொற்படி தவஞ்செய்யக் கானகம் புகுவதன்றி, இதற்குமுன் ஒருக்காலும் வனம்போக மாட்டோமென்று சொல்லும் சஞ்சயனே! நினைக்குந்தோறும் சத்துருக்களுடையமார்பும் பெரியதோளுங்காத்திரவுடலும் அவர்கள்செய்தகபடவஞ்சமும் என்கண்ணெதிர் தோன்றிக்கொண் டிருப்பதினால் அவர்களுடைய தேகத்தை ஒருநொடிப்போதில் எனது விஜய காண்டீபத்திலிருந்துவிடும் அளவிறந்த கணைகளினால் சல்லடைக்கண்களாக்கி, சூரியகிரணங்கள்சாளரங்கள் தோறும் பிரகாசிக்குந் தன்மைபோல் உதிரக்கம்பிகள் பீரீட்டடிக்கவும், வாய் செவி மூக்கு கண் இதுகளின்வழியாய்த் திரியும் இந்திரியங்கள் துந்துமந்திக்கவும், உயிர்கள்சிந்தவும், காக்கை கழுகுகள் கொந்தவும் செய்வேனல்லாமல் ஒருவரையும் உயிருடன்விட மாட்டேன். ஆ! ஆ!! சஞ்சயனே பஞ்சபூதகிரேஷ்டனாகிய வாயுகுமாரன் தனதுகரங்கொண்ட கதாயுதத்

தினால் துரியோதனாதியர் நூறுபேர்களுடைய மண்
டைகளுஞ் சிதைந்துசிந்தி மண்மேல்விழுந்து அழியும்
படிமோதி, பூதப்பிரேத பைசாசகணங்களோடுநாய்-
நரி-காக்கை-கழுகு-பருந்து முதலியவைகட்குவிருந்தி
ட்டாலொழிய எனகளுள்ளத்திற் கோபமென்று குடி
கொண்டெழுந்த சிவந்த யுகாந்தகாலாக்கினி தணிய
மாட்டாதே தெளிவிற்சிறந்த சஞ்சயனே! தேவாமிர்
தத்திலும் சிறந்தபோசனமுண்டு அப்சரஸ்திரீசாமஞ்ச
த்திற் சயனங்கொண்டுவாயுவேக மனோவேகமுடைய
தெய்வப்பரிமேலும் கன்னகபோல கடபதங்களையு
டைய இராஜகுஞ்சரத்தின்மேலும் நவரத்தினப் பணி
யார்ந்த திவ்யமணி இரதத்தின்மேலுமாரோகணித்து
உலாவிவரும் தருமசொரூபியாகிய என்தமயன் பாத
சாரியாய்நடக்கவும், மாயச்சூதாடி பாக்கியங்களையெ
ல்லாங் கைக்கொண்டு வனவாசம் பனிரெண்டு வருட
மென்று அனுப்பப்பனியிலும் வெயிலிலும் காற்றி
லும் மழையிலும்வருந்தி மேடுபள்ளங் கற்பாறைமுத
லிய இவைகளிற்படுத்து நித்திரைசெய்யவும் கந்தமூல
சருகாதிகளருந்தி வாழ்நாளை வீண்நாளாகக் கழிக்க
வும், தாங்கள்சுகத்தை அனுபவித்திருக்கவுஞ் செய்த
கீழ்மக்களுடைய உடல்கள் என்வில்லிலிருந்து வல்லி
யமபோல்வரும் காலாக்கினி ருத்திராஸ்திரத்தின் நெ
ருப்பினால் வெந்து-புகைந்து-வருந்தி-கரிந்து -பொரிந்
து-சரிந்து-மண்மேற் பொடிப்பொடியாகப்போம்படி
செய்து, தமயனென்னும் வாஞ்சை தரித்தேனென்று
சகலருமுணரக் காட்டுவதுமன்றி நாளை நடத்துகின்ற
யுத்தத்தில் சிதைகூடிய சிரம்-கரம்-கால்-களம் -உரம்-
இடை-குடல்-செவி-நாக்கு-மூக்கு - நவமிலாக்கண்கள்
மாமிசம்-உதிரம்-மயிர்-தோல்-எண்பு-நரம்பு- நிணம்-
சீழ்-நாற்றமாம் வெப்புநீர்-இப்படியாகக்கூடிய பகை
வருடலத்தைக் கண்டங்கண்டமாக வெட்டிக் கோடி
துண்டங்கண்டு சிரமெல்லாமுருட்டி நிலமெல்லாமபர
ப்பிப் பொடிப்பொடியாக்கி நாசஞ்செய்து, எங்களை
ப்போல் அவர்கள் மோசம்போய் அலையாமல், எல்
லாமிழந்து வனத்திலுழலாமல், நாங்கள்செய்த சபத
ங்களையும் கருதாமல். எங்களுக்கும் இகழ்ச்சியில்லா
மல்புகழ்ச்சிவரும்படியாய் அரம்பாஸ்திரீகளைதிர்ந்து
ஆசைவிசுவாசத்துடன் தமதுவாசந்தங்கு மூலைமேல
ணைந்து இராஜபோக வீரசொர்க்கத்தில் வாசமாகவை
த்து உபசரிக்கும் அந்தச்சுகத்தை இவர்களனுபவிக்
கும்படியாகக் கூசாமல் அனுப்பிவிட்டு, ஓசைக்கடல்
சூழ்ந்த உலகமுழுமையும் வாசத்தார்புனைந்த சத்திய
வாக்கியனாகிய தருமபூபதிக்குச் சாமிரமமாக இஷ்ட
முடனே யாவரும் தேவரும் போற்றப் பட்டமுங் கட்
டிப் பார்ப்பேனையா எங்கள் தந்தைவார்த்தைக்குபா
ங்கள் அடங்கி சபதமறந்து உலக ஆசையுந்துறந்து
இருந்தாலும் இராஜசபையிற் பயந்து வருந்தி வயிறு
எரிந்து மனங்குழைந்து திக்கற்றவனைப்போல் தியங்
கிய மின்போன்ற கண்களையுடைய பாஞ்சாலி அன்று
விளம்பியசாபம் இவர்கள் கோத்திரத்தையும் குலத்
தையும் புத்திரவருக்கத்தையும் விட்டு நீங்காதென்று
அழகியதோளினையுடைய ஐயனே! எங்கள் ஐயாவுக்
குச்சொல்லும இப்பேர்ப்பட்ட மனவைரமுடையநீங்
கள் போர்புரிந்து வெற்றிகொண்டு இராச்சியங் கைக்
கொள்ளாமல், பழமையாகிய நாடுநகரங்களை எங்களு
க்குக் கொடுவென்று யாசிப்பவர்களைப் போலேவுலூ
கமாமுனிவரைத் தூதனுப்பிக் கேட்கச் சொல்லுவா
னேன் என்றான் யாங்கள் புத்தியில்லாமையாலும் யுத்
தஞ்செய்யச் சத்தி யில்லாமையாலும் பயத்தினாலும்
கேட்டனுப்பவில்லை அவர்கள்நாடுகொடுக்கமாட்டார்
களென்றும், அதன்மூலமாய் வீரசொர்க்க மென்னும்
வீடுவிடுக்கமாட்டார்களென்றும் எங்களுக்கு முன்ன
மேதானே நன்றாய்த்தெரியும் நாங்கள் எத்தனைநாளை
க்குச் சும்மாயிருந்தாலும் அவர்களும் அத்தனை நாளை
க்குவிசனமற்றிருப்பார்களென்றுகருதி எங்களுடைய
நாட்டைக் கொடுவென்று நாமேதூண்டினால் அவர்
கள் தரமாட்டோமென்று தாண்டி விழுந்தெழுந்து
சண்டைக்குவருவார்கள். அப்போதுநாம் பூண்டுகொ
ண்ட சபதங்களெல்லாம் தீர்த்துக்கொண்டு புகழ்பெ
றலாமென்று மேலாகிய யுத்திசெய்து தூதுவிடுத்தோ
மேயன்றி வேறல்ல அதற்குளெங்கள் பெரியதந்தைஉம்
மிடத்திற்சொல்லி அனுப்பியவாக்கியங்களைக் கேட்ட
வுடனே முன்னிலும் விசேடித்த நூதனமாகிய பூமி
யும் பொன்னாபரணம் முதலியபொருள்களோடு சகல
விதநன்மையும், கோடாகோடியான பங்குங் குறைவி
ல்லாமல் மேலாகப் பெற்றவர்களைப் போலானோம்.
அந்தோ! எங்கள்கோறிக்கை நிறைவேறுங்காலம்கை
கூடியபடியால் பெரியதந்தைக்கு இந்தப்புத்திபிறந்து
வனத்திற் றவஞ்செய்யச்சொனனர். இந்தவிபரீதவார்
த்தைகளையுங்கேட்டு மனஞ்சகித்து வழிதெரிந்து எங்
களிடத்தில் நேராகவசனிக்கும்படிநாணமல்வீணாகத்
தூதுவந்த சஞ்சயனே! நாங்கள்சபையில் மொழிந்த
சபதங்கள் முடியுங்காலம் எதுவென்றிருந்த சந்தோ
ஷத்திற்கு இடையூறு விளையும்போலிருக்கின்றதென்
று என்மனது வருநதும்படியாக நினைத்திருந்தேன்.
அதை நீதெரிந்து கொள்ளும்படியாக இப்போது
சொல்லுகின்றேன் சேளும் எங்கள் பாட்டனாராகிய
வீஷ்மாச்சாரியார்-குருவாகிய துரோணாச்சாரியார்-
கிருபாச்சாரியார்-சிறியதந்தைவிதுரமகாராஜன் இவர்
களியாவரும் அந்தப்பக்ஷத்தி லிருக்கிறார்களே, அவர்
கள் ஒருகாலத்தில் இருதிறவர்களையும் சமாதானப்
படுத்தி நாடுநகரங்களைக் கொடுத்து நீங்கள் இவ்வித
மாக இருங்களென்று இயம்பினால் "மூத்தோர்சொல்
வார்த்தையமிர்தம்" என்னும் பழமொழிக்கு இணங்
கும்படியாகப் பெரியோர்கள் சொல்லும் வார்த்த
யைத் தள்ளாமல் கேட்கவேண்டுமே, அவர்களுடைய
வாக்கியத்தைக் கேட்டு யுத்தத்தை நிறுத்திவிட்டால்

நாங்கள் சபையிற்கூறிய சபதங்களெல்லாம் பிசகிப் போய்விடுமே சபதவசனம் பிசகினல் பழியும்பாவமும் வந்துவிளையுமே, என்று சஞ்சலங் கொண்டிருந்தேன் அந்தச்சஞ்சல விபாகூலம் இன்றளவில் நீங்கிவிட்டது அதென்னவென்ருல் வீஷ்மர்முதலிய பெரியோர்கள் சமாதானஞ்செய்ய விரும்பியிருந்தால் எங்கள் பெரியதந்தை இந்தவார்த்தையைச்சொல்லி உம்மை அனுப்பிவைக்கமாட்டார் அவர்கருத்துக்குப்பெரியோர்கள் உடன்படாமையால் காட்டுக்குப்போகச்சொல்லிக் கைகாட்டினரென்றும், நாடுகொடுப்பதில்லை சண்டைசெய்யச் சித்தமாயிருக்கின்ருர்களென்றும் ஸ்திரமாகத் தெரியவருகின்றது எங்களுக்குச்சந்தேகநிவிர்த்தி ஆச்சுது சஞ்சயனே! துரியோதனன் முதலிய நூறுபிள்ளைகளின் உயிர்கள் தேறித்தெளிந்தபெரியோர்களுடைய உள்ளங்கையில் அடங்கியிருந்தன அந்தப் பெரியோர்களின் வார்த்தையைக்கேட்டுவணங்கி நடந்தால் இன்னஞ் சிலநாளைக்குக் கூட்டங்குலையாமலிருப்பார்கள். உரியோராகிய பெரியோர்களின் வாக்கியத்தை எப்போதிழந்தார்களோ அப்போதிவர்கள் இவ்வுலகத்தாரல்ல யமலோகத்திலொருவர்முகத்தை ஒருவர்பார்க்காமல் வருந்தி வாழ்கின்றவர்கள் இதற்கு யாதொரு தடையுமில்லை எங்கள் பெரியதந்தையின் எண்ணம் கைக்குவராது நாமொன்று நினைத்தால் தெய்வந்தானொன்றுநினைக்கும் என்பதைமறந்த திரிதராட்டிரனும் மற்றயாவருங் கேட்க இவையனைத்துஞ் சொலலக்கடவை யென்று பராக்கிரமசாலியாகிய விஜயன் ஆக்ரமத்துடன் சொன்னன் இதுதான் அருச்சுனன் விளம்பியதென்று இராஜசபையினிடத்தில் சஞ்சயன் அஞ்சாமல் விளப்பினன்.

தேவரகசிய வாக்கியம்.

இவ்வாறுன வசனங்களைக்கேட்டு யாவரும்திகிலடைந்திருக்குஞ் சமயத்தில், விவேகத்திலுயர்ந்த வீஷ்மாச்சாரியார் இராஜாதிராஜனுகிய திரிதராட்டிரமகாராஜாவின் அழகிய முகத்தைப்பார்த்து, பக்கங்களிற்பொருந்திய துரோணுச்சாரி முதலிய பெரியோர்களியாவரும் சந்தோஷங்கொண்டு சஞ்சலம்விண்டேக்கம்நீங்கி ஊக்கமோங்கும்படியாக தேவரகசியவாக்கியமொன்றுசொல்லத் துணிந்தார். இந்தஉலகத்தை இதுகாறும் சிந்தைஇல்லாமல் விந்தையாய் அரசுபுரிந்துவந்து இப்போது மைந்தர் நூற்றுவரால் சிந்தைநொந்த அந்தகனுகிய என்மைந்தனே! கேளும் சத்தியலோகத்தில் நித்தியராகு மாதுரியவசன மகாமுனிவர்கள் சுற்றியிருக்கப் பொற்ருமரைத்தவிசில் வீற்றிருக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவர் தருமபத்தினியுடன் பொருந்தியிருக்குஞ் சமயத்தில், வேதபுங்கவராகிய தேவகுருவும் தேவேந்திரனும் தேவர்களும் வந்து நான்முகனைக்கணடு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அருகுற்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கையில் இரண்டுபேர் திவ்வியதேசோமயப்புருஷர்கள் அந்தச்சபைக்கு நேராகவந்து சிருஷ்டிகர்த்தாவுக்கு வணங்காமல் இறுமாந்து அப்பால் நடந்துபோகும் பெருமையைக்கண்டு, பிரகஸ்பதியினுடைய மனதில ஆச்சரியந்தோன்றப் பிரமனைநோக்கி, பரிசுத்தனே! நல்லவரென்பவரெல்லாம் உருவாகத்தோன்றியதையொத்த இந்தவல்லவர்கள் இவிடம்வந்து தேவரீரைமதியாமற் போகின்றகாரணம யாதோ? இவர்களியாரோ? அடியேனுக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்னவும் பிரமதேவர் நகைத்து. தேவகுருவை நோக்கி, இந்த மகானுபாவர்களை இதுவரையிலும்நீயறிந்ததில்லையோ பிரகஸ்பதியேகேளும் புராதன சராசரங்களாலேயும் ஸ்துதிக்கும் பெரும்புகழினையுடைய நரநாராயணரென்பவரிவர்கள்தான் தேவர்களுக்கும் சத்தியவசனஆசாரபரர்களாகிய தேவபத்தியுடையபுண்ணியவான்களுக்கும் இடையூறுகிய துன்பம்வருமாகில்க்ஷணத்தில்வந்து அவர்கள்பட்சத்திலிருந்து துன்பநீக்கி இன்பம் விளையச்செய்து புண்ணிய வெண்ணமுள்ள கண்ணியவான்களுக்குப் போதுமான துணையாயிருந்து, பாபசிந்தையுடைய பாபிகள் எண்ணியஎண்ணங்கள் கைகூடவொட்டாமல் அவர்களுடையபுத்திரமித்திரர்களைப் பாழாக்கி சதாகாலமும் லோகோபகாரஞ் செய்து இரட்சிக்கும் பழமையாகிய மூலகாரணர்களமேலும் நாமிருக்குஞ் சத்தியலோகம்விஷ்ணுலோகம்சிவலோகம் இந்தமூன்று லோகங்களுக்குந் தடையறப் போய்த்திரும்புவார்கள் தகுதியாகிய காரியங்கள் ஏதாகிலுமொன்று விளையுமாகில், அதைநீக்கும் பொருட்டுப் பொன்னுலகத்தினும் புகுந்து வருவார்கள். பூமியிலும் சத்தியவசன நித்தியவிரத பத்திமான்களாகிய புத்திமான்களிடத்தில் அவர்களுடைய விசுவாசநேச உத்தமபத்தினிமார்கள்வயிற்றின்வாயிலாக ராஜபுத்திரராகப்பிறந்து, வேதமுதலிய மநுநீதிகருமங்களை நிலைநிறுத்தி சிஷ்டாசாரத் தன்மையும் பழகித்திரும்பிவருவார்கள். ஆதிமூலமாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின்நினைப்பினுல் உற்பத்தியானவர்கள். இவர்களுடைய பெருமையும் பிரதாபமும் இவ்வளவென்று எடுத்துச்சொல்லுவதற்கு என்தரமல்லவென்று பிரமதேவர் சொல்லக்கேட்டு மகிழ்ந்து நமஸ்கரித்துவிடைபெற்றுக்கொணடு, தேவகுருவும் இந்திரனுந் தேவர்களுந் தெய்வலோகம் போய்ச் சேர்ந்திருக்கும் நாளையில், பூமியில்சில இராக்ஷதர்பிறந்து தவங்களிற்சிறந்த முனிபுங்கவர்களோடு தேவர்கள் முதலிய யாவர்களும் வருந்தும்படியாக உபத்திரவஞ் செய்துவருங் காலத்தில் தேவர்களுந் தேவேந்திரனுஞ் சேர்ந்து, ஆதியில் பிரமன்சொல்லிய வாக்கியத்தை நினைத்து, ஆபத்பாந்தவாய் அனுதரக்ஷகராய்விளங்கியநரநாராயணமூர்த்திகளை அரக்கரால் விளைந்த துன்பஞ் சகிக்கப்படவில்லை யென்று திக்குநோக்கித் தொழுது

அடைக்கலமென்று கூவியழுதபோது அந்த நரநாராயணமூர்த்திகளிருவரும் ஸ்ரீகிருஷ்ணதேவ ராகவும் அழகிய விஜய பராக்கிரம அருச்சுனனாகவும் இந்தப் பூமியி லவதரித்தார்கள்.

அப்பனே! அந்தக்காரணத்தினா லல்லவா வேதமுந்தேடிக் காணக்கூடாத செஞ்சடைக் கடவுளென்னுஞ் சிவபெருமானைச் சீக்கிரத்திற்றரிசிக்கத் தவஞ்செய்ததும் அவர்பிரசன்னமானதும் கட்டிப் புரண்டு விளையாடிக் கங்கையுந்திங்களும் மங்கையும் பொங்கரவும் அங்கமுங்கலங்கக் காண்டீபத்தினடியுண்டதும் கருணைசுரந்ததும் பாசுபதாஸ்திரம் பெற்றதும், காலகேய நிவாதகவச இராக்கதரை வென்றதும் இரணியபுரவாசிகளைக் கொன்றதும் இந்திரனுக்குப் பட்டாபிஷேகம்நின்றதும், சகலசுபசந்தோஷ வைபவங்களுந் தேவர்களுக்கு வரும்படியாகக் கண்டதும், அமுதபோஜனமுண்டதும் தெய்வலோகவரசு புரிந்ததும் இவனே அவன் அவனே இவனாகையாலல்லவோ இவ்வளவு மகத்துவங்களும் நடந்தது குழந்தாய்தொழுந்தகவினையுடையபலமும்-குணநலமும்-அழகும்பழகிய விற்றிறமையின் விற்பனமும்-ஆண்மிக்கையும் -பெருமையும்-பிரகாசமுங்-கீர்த்தியும்-நீதியும்-இராஜமுறைமையும்-உண்மையுமுடைய காண்டீபனுக்கு ஒப்பாகப் பெரும்புகழையும் பிரதாபவெற்றியையும் பெற்றவர்க ளெவர்களிருக்கிறார்கள். திரிபுரதகனனாகிய திரிநேத்திரதாரியை இணையாகச்சொன்னாற் சொல்லலாம் மற்றொருவரையுஞ் சமமாகச் சொல்லக்கூடாத விற்குணமேற்றும் வீராதிவீரனாகியபற்குணனைச் சதாரணமாகிய சத்துருவாக நினைத்து ஜயங்கொள்வோமென்றெண்ணி இருப்பது அவிவேகமேயன்றி, விவேகத்துடன் சேர்க்கத்தக்கதோ? இத்தன்மையாகியவீரதிர சூரபார காண்டீபமுடைய விஜயனுக்கு நானே எதிரியென்று சூரியன்பெற்றசவுரியன் நாள்தோறும் அஞ்சாமற்சொல்லிவரும் வஞ்சகவார்த்தையைக்கொஞ்சமேனும் நிசமென்று நம்பாதே சுயோதன அருச்சுனனே அஸ்திரசஸ்திர வலிமையில் மேலாகச்சிறந்தவன் கர்னனே குத்திர க்ஷுத்திரவார்த்தையில் காலாசப்பறந்தவன் இதை நானுணர்ந்து சொன்னதாகக் கொள்ளாதே திரிலோகத்தாரும் அறிந்ததேயன்றி வேறல்ல அப்பாஎனதுபேரனே! இந்தமொழியை நீஉட்கொண்டு யோசிப்பையாகில் இவ்வுலகத்திற்கு முதன்மையாகும் பெருமையே நீயேபெறுவாய் ஓ இராஜச்செல்வமே! விவேகசூனியனாகிய உன் மாமன் சகுனியும் கட்டிக்கொண்டு வாவென்றால் வேரறவெட்டிக்கொண்டு வரும் உன் தம்பி துச்சாதனனும்(என்னடா ஆண்டிதாதனானையென்றால் இதுவுமொருகந்தாயம்) என்பதையொத்த அங்கதேசராஜனாகிய கர்னனும், இந்தமூவருஞ் சொல்லிய உறுதிமொழியைத் தேனும் பாலும்போலக் கேட்டு அதற்கிணங்க நடக்கின்றாயல்லது, என்போலொத்தவர்கள் பொன்போல் நயமாகச்சொல்லிய ஞாயவசனங்களைத் தள்ளிப்புகைந்து எரிந்து அழியச்செய்யுங் கோபாக்கினியைத் தாபாக்கினியாகக்கொண்டு, சகலராச்சிய சம்பத்துமுதவிய பந்துமித்திரரைப் போக்கடித்துக்கொள்ள எதுவாயிருக்கிறாய். ஒருவர் (கட்டிக்கொடுத்த சோறுங் கற்றுக்கொடுத்த சொல்லும் நிலைநிற்காது) என்னு மூலகமொழியை மறந்துசிறந்த உன்னால் இந்தக்குருகுலத்துக்கு நேரிடுங் கொடிய பொல்லாங்கைக்குறித்து கடைசிமுடிவில் உரியோராகிய பெரியோர்களிருந்தும் தகும் தகாதெனச்சொல்லி அரசைநிறுத்தாமற்போனார்களென்று யாவரும் எங்களைநொந்து ஒறுத்துக்கொள்வார்களேயல்லது இந்தஅல்பரை எவரும் நினைத்துநோவமாட்டார்கள் பெருங்காற்றானபோது உயர்ந்தமரத்தை அலைத்துவருத்தி முறிப்பதன்றி தாழ்ந்தமரத்தைச் சாராது அதுபோல உலகத்திற்பிறக்கும் பழிச்சொல்லானது உயர்ந்த பெரியோர்களை அடுப்பதன்றி சிறியோர்களைத் தொடரமாட்டாது. ஆகையால் இன்றுமுதற்கொண்டு எங்களுடையவிவேகத்தினால் விளையும் நீதிவாய்ந்த தருமவசனங்களைக் கேட்டு உயிர்வாழும்படியாக ஓர் உறுதிகொண்டு எங்களை நம்புவையாகில் இந்தபஞ்சாசத்கோடி பூமண்டலமுழுதும் சுவேதக்ஷத்திர நீழலில் ஏகசக்கிராதிபதியாகத் தம்பிமார்களுடன் நீயே அரசாக்ஷி செய்யும்படியாய்க் கொடுக்கமாட்டுவோம்பரிசுத்தவான்களாகிய பாண்டவர்கள் பூர்வத்தில் இராஜசபையிற்கூறிய சபதங்களையும் திருப்பிவிடுவோம் இதற்கு யாதொரு தடையுமில்லைபால்யராஜனே! திங்கள்குலத்திலும்உங்களிடத்திலும் எனக்கு மிகுந்த ஆசை இருப்பதினால் சொன்னேன். இந்தவாக்கியங்களை உன்னுள்ளத்திற் சிந்திக்கக் கடவையென்று வீஷ்மாச்சாரியர் சொல்லவும், அந்தவார்த்தைகளைக் கர்னன்கேட்டுத் தலைசாய்த்து பக்கத்திலிருக்கும் பெரியோர்களுடைய சந்திரபிம்பமுகத்தை நோக்கிச் சொல்லுவான்.

அறிஞரே கேளுங்கள்! இந்தஉத்தமராகிய காங்கேயரென்னும் புத்திமான் எந்தவேளையிலும் என்னைச் சுட்டிச்சுட்டித் திட்டித்திட்டிக் கோபிக்கின்றார். ஐயோ! நானென்னசெய்வேன். இராஜனுள்ளம் இராஜதந்திரம்-காலம்-சமயம்-நோக்கம் - வீரம்-பெருமை புகழ்-கீர்த்தி-திடம்-தீரம்-இவைகளெல்லாந் தெரிந்த உத்தமராகும் இவருக்குத் தெரியாததொன்றுமில்லை இதழ்விரிந்த மலர்மாலையணிந்த மார்பினராகிய மன்னர்களின் மனோபீஷ்ட மெப்படியோ அப்படியே அநுசரித்துக் குழைந்துநடக்கும் என்னைப்போலொத்தவர்களுக்கு, இராஜகாரியத்தைத் தடுக்கவும் நடப்பிக்கவும் என்னசுதந்தர முண்டாயிருக்கும், இராஜசபையில் சமானமாக எங்களையிருத்தி வீரப்பட்டமுள்ளதீரரென்று தன்னைப்போல்பாவித்து சவரட்சனை செய்து ஆண்டுவரும் பட்சமுடைய பட்டாபிஷேக

பிரபுக்களின் தாமரை மலர்போன்ற பாதங்களிற்
பஞ்சபட்டாலும், சேவகத்தொழில்செய்யும் நாங்கள்
இருகண்களிலும் முள்பட்டதாக அனுசரித்துநடவா
மற்போவோமாகில், அவர்களையடுத்து நெடுநாளா
கச் சாப்பிட்ட அரிய செஞ்சோற்றுக்கடன் எவ்வித
த்திற்றீரும் நாங்கள் எந்தக்காலத்தில் நற்கதியைய
டைவோம. வணங்கா முடியோனுடைய மனதையறி
ந்த நாங்கள் யேதோ கோபமாகப்பேசினல்,இராச்சி
யமும்செல்வமும் எங்களாலழிந்துபோகிறதாகச்சொ
ல்லுகின்றீர். ஐயா வீஷ்மாச்சாரியரே! சிந்தினுலைறுந்
துபோகிறஷக்கு சேனைநாளைக்கிருக்குமோ? சீமானு
க்கு ஆகிறதுப அழிகிறதும் எங்களாலிருக்கிறதோ?
அந்தனே! இராஜமுறைமைகளில் இது தகுங்காரியம்
இது தகாத காரியமென்றுசொல்லி நடத்தவேண்டிய
கடமை உம்மைப்போலொத்த நாதர்களுடைய தாயி
ருக்க, இராஜர்களுடைய அன்பையுந்தயவையுஞ் சம்
பாதிக்கும் எங்களைப்போன்ற சேவகவீரர்கள்சமயம்
வாய்த்தபோது எப்படிப்பட்ட தீரர்களையுந் திரண
மாகமதித்து, எங்கள் திருஷ்டிக்குத் திரிமூர்த்தியும்
ஈடல்லவென்று மதித்து, அட்டகிரிகளையுந் துட்டகஜ
ங்களையும் விட்டெறிந்து விளையாடி, வானத்தை வில்
லாகவளைத்து மணலைக்கயிறுகத் திரித்து, சமுத்திரத்
தைச் சாப்பிட்டு எப்படியும் வல்லாளரென்று சொல்
லாலுரைக்குங்கடமை, எங்களுடையதாயிருக்க பரி
யாரி தலைமாட்டிலிருந் தழுவதுபோல தனிவழிக்குப்
பிடித்தகொள்ளி தலைமாட்டுக்கொள்ளியாய்ச் சமைந்
ததற்கிடாய்த் தங்களைப்போல் நாங்களும் இளைத்துச்
சொல்லுவது தருமமா? ஐயா! இராஜவிபகாரங்களுஞ்
சேவகர் செய்கைகளுந் தெரிந்த பெரியோராகிய தே
வரீர் எங்களை வெறுத்துச்சொல்லவும்ஞாயமுண்டோ
சாகத் துணிந்தபேர்க்குச் சமுத்திரத்தில் மூழ்கிப்
போய் விடுவோமென்னுந் துன்பமுந் தோன்றுமோ
தாஷ்டீகராகிய வீஷ்மாச்சாரியரே! புண்ணிற்கோலி
டுந் தன்மைபோல் எங்களை விடவிடப்பேசவேண்டா
மென்று உண்மையாகிய கட்டுரைகளை வெளிவிட்டுக்
கர்னன் சொன்ன உடனே, பரிசுத்தமனத்தினையுற்ற
வீஷ்மாச்சாரியார் பிரகாசமறற கண்களைப்பெற்றதிரி
தராட்டிரனுடைய முகத்தைநோக்கி இதனைச் சொல்
லுவதானர்.

அப்பா திரிதராட்டிரனே சேட்டையா! எப்படி
ப்பட்ட சத்துருக்களென்றாலும் ஒரேகணையினல்உட
ல்வேறு தலைவேறுகத் துண்டித்து விடுவேனென்று
இந்தக்கர்னன் தன்னைத்தானே மெச்சிக்கொண்டுதா
னேபுகழ்ந்து வாய்வளருஞ் சொல்லுகின்றதைக்கேட்
டிருக்கின்றேமல்லாமல, சைவஞத்தினல் யுத்தஞ்
செய்து வெற்றியைப்பெறக் கண்டறிந்ததில்லையே.
அதற்குச் சாட்சியாக இப்போதுசொல்லியவார்த்தை
யை யாவருங் கேட்டீர்களா சபைநிறைந்த தன்வியர்
களே? துருபதேயமகாராஜன் சுயம்வரம் நாட்டிவை
த்த பாஞ்சாலதேசத்தில் திரௌபதாதேவியின்விவா
கத்திற்குப் பற்பல தேசத்தரசர்களுஞ் சென்று நெரு
ங்கியிருந்த காலையில், திருஷ்டத்துய்மனல் நேமித்த
வில்வளைத்து மச்சேந்திரத்தை யறுத்துப் பிரகாசம்
பெற்ற துரியோதனமகாராஜனுக்குவெற்றியும்பெரு
மையுங் கொடுத்தான். அன்றியும்சித்திரசேனனென்
னுங் கந்திருவன் துரியோதனன்முதலிய யாவரையுங்
கட்டிக்கொண்டு போம்போது தான்போயெதிர்த்து
அனேக யுத்தங்களைச்செய்து அரவக் கொடியோனு
கிய அரசனைமீட்டுவந்தான். பின்னைடம் புயவலிமை
யையுடைய அருச்சுனன் பேடிரூபத்துடன்இணையில்
லாமல்வளைந்த விஜயசாண்டீபத்தைத்தாங்கி, வேகங்
கொண்ட குதிரைபூட்டிய இரதத்தைக் கைபழகாத
சிறுபிள்ளை உத்தரகுமாரன் செலுத்த ஆரோகணித்
து, ஒருதேர் ஒருவில் தானொருவனெனவந்த அவ்வி
ஜயன் அநேகங்கோடி இரதமுதலிய அதிரதர் மகார
தர் சமரதர்களை வீழ்த்தியபோது இரதகஜதுரகபதா
தியர் பின்னிட்டோட முன்னிட்டோடி யொளித்த
இந்தக் கர்னனையும் பின்னமுறத் துளைத்துப் பசுக்
கூட்டங்களைத் திருப்பிக்கொண்டு ஸ்திரமாக விடுத்த
மோகனஸ்திரத்தால் யாவரையும்மயங்கச்செய்துசில
வஸ்திரங்களையும் ஆபரணங்களையுங் கைக்கொண்டு,
அஸ்தினபுரம்வரைக்கும் இவனைப்புறமிதுகிட்டோட
அடித்து ஜயங்கொண்ட காலத்தில் அந்த அருச்சுன
னை வெற்றிகொண்டு அவன்கைக்கொண்ட ஆவினங்க
ளையு மீட்டுக்கொடுத்து, வணங்காமுடியையுடைய
மன்னவனுக்கு வலிமையும் புகழும் வரச்செய்தான்.
அடக்கமுடையவராயிருந்து யுத்தகாலம் நேரிடுகிறவ
ரையிலும்காத்திருக்கின்றதீரசூர சேவகத்திறமுடைய
வீராதிவீரராகிய பேர்கள் சத்துருக்கள்பேரில் படை
யெடுத்துக் செல்வதும் அவர்களைவெல்வதும் உலக
மெல்லாங் கொண்டாடப் புகழ்பெற்றுவருவதும் இ
யற்கையே. இத்தன்மையவாகிய திடவீரத்தில் வல்ல
வரானபேர்கள் தங்கள் திறத்தைவாக்கினற்சொல்ல
மாட்டார்கள். அப்படி சொல்லுவார்களாகில் உட
னே யவர்கள் வில்திறமைமுதலியசாமர்த்தியங்களும்
அழிந்துபோம். "அடக்கமமரருளுய்க்குமடங்காமை
யாரிருளுய்த்துவிடும்" என்பது நீதியன்றோ. இதன்
றியும் தான் பிறந்தவருஷமும் தனக்குக் கிடைத்திரு
க்குஞ் சம்பத்தும் குற்றமில்லாத யோககாலமும் புசி
க்கும் ஔஷதமும் குருவினுபதேசமும்நேரிட்ட அவ
மானமும் தான்செய்த தருமமும் ஸ்ரீபோகமும் கற்ற
கல்வியும் திடவீரசாமார்த்தியமும் மானமும்வயதின்
றொகையும் இவைகளையெல்லாம் ஒருவரறியும்படியா
கச் சொல்லக்கூடாது அப்படிக்குசொன்னர்களாகில்
அப்போதே அவைகளெல்லாமழிந்துபோம் மேலும்
ஜயிக்கத் திறமில்லாதமூடர்கள் படைமுகத்தில் ஜயி
ட்டேனென்று வாக்கில் வந்தவண்ணம் பிதற்றுவார்

கள் (குரைக்கின்றநாய் கடிக்கவறியாது)என்னும்பழமொழி என்னபொய்யா? "வற்றியவோலைகலகலக்குமெஞ்ஞான்றும், பச்சோலைக்கில்லையொலி" என்றும் "வெண்கலத்திலோசைமிகுமேவிரியசுபபொன்னென்கலத்தினுண்டோவொலி" என்றுஞ்சொல்லியபடிஜயம்பெறுவதற்கு முன்னமே ஜயிப்பேனென்று சொல்லுப்பிரதாபங்கள் மாசடையுமென்று மானமேற்கொண்ட மேலோர் சொல்லமாட்டார்கள். (நிறைகுடந்தளும்பாது குறைகுடமேதளும்பும்) என்றவாக்கியத்தின்படி வாசாகபிங்கரியஞ் சொல்லிக்கொண்டு காலங்கழிக்குங் கர்னனுடைய ஆதரவினால் சுவேதவாம்புரவிபூட்டிய தேரேறிவரும் ஆலகால விஷத்தையொத்த அழகியஅருச்சுனனை மதியாமல், அதிகசொல்பத்தில் வென்றுவிடலாமென்று சொப்பனம்போலெண்ணி, இந்தக்குற்றமாகிய துன்பங்கள்யாவற்றையும் விளைவித்துக்கொண்டான் துரியோதனன் அவனப்படிக்கு எண்ணங்கொண்டாலும் பொய்யில்லாத உள்ளமும்-பொறுமையும்-நற்குணமும்-பரிசுத்தமும் -நயவசனமும் உடையஐவர்களை, கோபமும்-துற்குணமும் அசுத்தமும்-அசத்தியமும்-கடூரவசனமும் -குற்றமும் பொருந்திய அயோக்கியராகுந் துரியோதனாதியர்களோ ஜெயிப்பவர்கள்? யாவருங்கற்றுணர்ந்த சாஸ்திரமுதலிய நீதிநெறியை யுத்தியினாற்றெரிந்து கொண்ட புத்திமானாகிய திரிதராட்டிரனென்னும்என்புத்திரனே! உனக்குச் சம்மதமாகத் தோன்றியநாட்டை பாண்டவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் மனமகிழ்ந்து அரசுபுரியும்படியாகச் செய்து மற்ற இராச்சிய முழுமையும் அழகிய வெள்ளைக்குடை நீழற்படுத்தி, உனதுபுத்திரர்களுடன் வாழ்வைப்பெறுதல் எனது மனத்திற்கு மிகுந்த துணிவாயிருக்கின்றது. இதற்கு யாதொருகுறைவுமில்லை. நான் நிறைந்தமனதாகச்சொன்னேனென்று சத்தியவிரதசிந்தையை நித்தியமாகஉடைய வீஷ்மாச்சாரியார் சொல்லவும் பக்கத்திலிருந்த யாவரும்தகுந்ததருமமும் இராஜமுறைமையும்சாற்றினர் வீஷ்மரென்று மகிழவும், தனுர்வேதபண்டிதராகிய துரோணாச்சாரியார் திரிதராட்டிரனை நோக்கிச் சொல்லுவார்.

அரசனே! பரதமகாராஜனுடைய மரபென்னும் பிரயோசனத்தை இன்றுநிலைநிறுத்தினர்விரதபூஷணராகிய காங்கேயர் ஆகையால் இந்தவசனம் எல்லா மேன்மைக்கு மேன்மையானது. இதைவிடவேறுநன்மையென்பதில்லை குலவியிருக்கும் கூட்டமாகிய பந்துக்களுடன் வேற்றுமையில்லாமற் பொருந்தி, பிறர் பழிக்க இடங்கொடாமல்வாழ்கின்ற வாழ்வைபோல் சுகம் இதுவரையினுய்நான் கண்ணாற்கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. இனிகாணப்போகிறதுமில்லை. வீஷ்மாச்சாரியார் தகுதியாகிய காரியங்களை யோசித்துச் சொன்னார். இன்றுமுதலாக உன்னுடைய குலமுந்தழைக்கும். புத்திரமித்திராதிமுதலியஉலகத்துயிரும் பிழைக்கும். உனதுசெல்வஞ் செழிக்கும். ஐயா! உன்னுடைய வழிபடுகடவுள் சொன்ன வாக்கியத்தைப்போல் இந்தமகானுபாவர் சொல்லிய தருமவசனத்தை வழித்துணையாகக்காப்பாற்றுவாயாகில், நன்மையென்பவைகள் யாவையும் பெறுவாய். இதன்றியும், அரசராகப் பிறந்தபேர்கள் சத்துருக்களிடத்தில் தங்களுக்குள்ள வீரியங்களையுஞ்சொல்லி, இல்லாத சௌரியங்களையும் இரவலாகக்கொண்டு எடுத்துப்பேசவேண்டியது. சகோதராள்முதலிய உள்ளிட்டாரிடத்தில் காரியங்களாகிய தொழில்களைக் குறித்துக் கலந்து பேசவேண்டியது. குடும்பத்திற்பிறந்த பெரியோர்களாவது-ஆசானாவது-மந்திரியாவது- அன்புநிறைந்த தோழனாவது-நடுவு நிலைமையாகப் பகுத்துச் சொல்லும் நீதிவாக்கியங்களைத் தருமதேவதை சொல்லிய சத்தியவாக்கியமென்று தனது விவேகத்தினால் ஆராய்ச்சிசெய்து அவ்வழி நடக்கவேண்டியது. இதுகளைச் செவ்வையாகவுன்னி உன்புத்திரரை நல்லவழியில்நடத்துவையாகில், நுண்மையறிவினும் நுட்பமுணர்ந்த அறிஞர்கள் கொண்டாடும்படியாக உன்னுடையகுலநலமானது வாழ்விற்சிறந்து தாழ்விலா தோங்கும். என்று துரோணாச்சாரியர் இனியவசனங்களினாற்பற்பலவாகச்சொல்லவும் இவ்விதமாகச் சொல்லிய பெரியோர்களை வணங்கித்துதித்து அவர்களுடன் கலந்து ஆலோசிக்காமல், அம்மேலோருரைதத வாக்கியங்களெல்லாம் ஆலகாலவிஷம்போல் கர்ன கடூரமாய்க் கேட்டு மனம்வருந்தி அவர்கள்பக்ஷத்தில் வைத்திருந்த குவிந்ததாமரை மலர்போன்ற முகத்தைச்சஞ்சயனுக்கு நேராகத் திருப்பிக்கொண்டு, ஓ சஞ்சயனே! சொல்லுவதற்கரிதாகியகுருகுலத்திற்பிறந்த துரியோதனன் முதலாகிய மன்னவரியாவரும்பகைமேற்கொண்டு எதிர்த்துப்போர் செய்யப்புகும் யுத்தகளத்தில் கானகந்திரிந்து கால்கைகளோய்ந்து அன்னபானாதிகளுக்கு அவதிப்பட்டு வதங்கியபாண்டவர்கள்உச்சாகத்துடன் எதிர்த்து யுத்தஞ்செய்வதற்கு வல்லமையுண்டோ? இளைத்த இவர்களுக்குச்சகாயம் எவர் வருவார்கள்? ஆருடைய துணையைநம்பி அமர்செய்யவருவார்கள்? ஐவர்களுக்கு நேரிட்டிருக்கும் பலாபலங்களைச் சொல்லும் சஞ்சயனே என்று திரிதராட்டிரன் கேட்கவும், அந்தவார்த்தைகளைக் கேட்டுச் சபையில் நிறைந்திருந்த சத்தியமுனிவர்களும் தேசதேசத் தரசர்களும் விசனமடைந்து, இராஜனுடையஊழ்வினைப்பயனுக்குத் தகுந்தபுத்தி இதுவென்று தங்கள் பிராணன்பேரில் வைத்திருந்த ஆசையை அன்றுவிடுத்து, இனிமடியுங்காலம் நேரிட்டதென்று மனம்வருந்தி இருந்தார்கள்.

இப்படியிருக்க அந்தச் சமயத்தில் திரிகாலமுந்தெரிந்த சஞ்சயன் மெலிந்துவருந்தி, ஐ ஐயோ!! சந்திரகுலத்திற் பிறந்த நமது அரசனுடைய தெளிவாகிய விவேகத்திற்கு என்னதாக்ஷியோ? வீஷ்மாச்சாரி

யார் துரோணர்முதலிய பெரியோர்களும் சொல்லிய தருமநீதிகளை உன்னி யுணராமற்போயினன். இதென்னகாலம்? ஏதேது இனியாவரும் பிழைப்பதற்கு ஏதுவையில்லையென்று பெருமூச்சுவிட்டு, விதையொன்றுபோடச் செடியொன்று முளைக்குமா? விடுபோபோவெனக் காடுவாவாவென இருக்கும் முதிர்ந்த வயதினையுடைய தகப்பன் இவ்வளவு அறிவினையுடையவனாதல் இவன்பெற்றபிள்ளைகளைப் பழித்தும்மனம் வருந்திநோவது நமக்குப்பெருமையன்று (தந்தையெவ்வழி அவ்வழி தனையர்) என்றும் (தவத்தளவேயாகுமாம் தான்பெற்றசெல்வம்) என்றும்உள்ளமுதியோர் வாக்கின்படி இவனுடைய கெடுநினைப்பும் பாபங்களுஞ்சேர்ந்து மைந்தரென்னுமுருவாகி வந்திருக்கிறார்கள் இவைகளுக்கெல்லாம் மூலமானவன் இந்தக்குருடனே என்று ஸ்திரமாகச் சிந்தையிற்கொண்டு சபையிலுள்ள யாவர்களும்ஆச்சரியப்படும்படியாகத் திரிதராட்டிரனை நோக்கிச் சஞ்சயன் சொல்லுகின்றான். குடும்பந் துலங்கச்செய்யுங் குருகுலக்கோவே கேளும்! தெய்வசகாயம்பெற்ற ஐவர்களுக்குப் பின்பலமும் வேண்டுமோ? அவர்களும் ஒருவரைப்படைத்துணை விரும்புவார்களோ? தென்றிசை யமனையும் குலகிரியையும் பந்துபோலெடுத்தெறிந்து விளையாடி மடிக்கும் இடும்பாசுரனை-பகாசுரனை - கிம்மிராசுரனை சகடாசுரனை-ஜராசந்தனை-இயக்கர் நடுங்கும் மணிமானை-கீசகனை-இறைப்போதினுக்குள் இடித்து மடித்துத் தேய்த்துக்கிழித்து மாய்த்து அழித்துச் சயங்கொண்ட வீரகண்டையொலிக்குங் காலினையுடைய சுதாயுதனுகும் வீமசேனனிருக்க, வெற்றியையுடைய பாண்டவர்களுக்குச் சத்தியாகியதுணையும் வேண்டுமோ? சொல்லும் ஐயனே! இஃதன்றியும் உலகமெல்லாம் வருந்தக் சாண்டவனமெரித்தும் மாக்ஷிமையையுடைய இராஜவருக்கங்களைவேரறுத்தும், உத்தரகுருகண்டத்தோரியாவரையும்வென்று உம்பர் மகிழச் செம்பொன்முதலிய திறைகொண்டும், பின்பலம் வேண்டாத வீரப்பிரதாபத்தையும்அனுமக்கொடியையும் அம்பொன்மகமேருவில் நாட்டி நின்மலநிஷ்களநிராமயனாகிய சங்கரசுயம்புவின் தரிசனங்கொண்டு பாசுபதாஸ்திரமும் பெற்று, காலகேய நிவாதகவசர்கள் மாய்ந்திடக்காய்ந்து, வீரவாகைவேய்ந்து, இந்திரன் முதலிய தேவர்களுக்குச் சுகமீய்ந்து, தேவாமிர்தம் புசித்துக்களித்து இணையில்லாக்கணைகள் பெற்ற வீரஷப விராட்டாகிய விஜயனிருக்கப் பாண்டவர்களுக்குப் பலமுண்டோவென்று நீர் நினைத்துக் கேட்டது எனக்கும் பழிப்பாக விருக்கின்றது. பார்த்திபனே! இன்னமுங்கேளும் பிள்ளையென்றுவந்த பூதகியுயிரை முலைப்பாலுடன்பருகியும், தேவேந்திரன் வஞ்சகத்தினால் வருஷிக்கச்செய்த கல்மாரியைக் கோவர்த்தனகிரியென்னுங் குடையினாற்றடுத்தும், ஆயர்களோடு ஆவினப்சளை இரக்ஷித்தும் மாமனாகிய கம்சனைக்கொன்றும் இந்திரப்பிரஸ்தத்தில்நடந்த இராசசூயயாகத்தில் சிசுபாலனைச் சிரச்சேதஞ்செய்தும், ஐவர்சகாயனென்று அஞ்சனமேனியையுடைய கண்ணனிருப்பது திண்ணமாய்த் தெரிந்திருந்தும், ஐவருடைய வல்லபங்களையும் படைத்துணைகளையும்விசாரிக்கும்புத்திமான்களுமுண்டோ? மேலும் "குணமென்னுங்குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனுங்காத்தலரிது" என்பதுபோல் சத்தியமும்-சாந்தமும்-பொறுமையும் -தருமமும்-வழுவாத, விரதசீல மெய்ஞ்ஞான நீதிபரனாகிய தருமநந்தனன் கோபித்து வில்வளைத்துப் பகைவர் மேலெதிர்க்குங் காலத்தில் திரிபுராந்தகனையும் வடவாமுகாக்கினியையும் ஒப்பாகிநிற்பான். நவரத்தின மழுத்திய அணிமுடிதரித்த அரசே! மற்றத்தம்பிமார்களுக்கு ஈடாகயெதிர்த்து நேர்நின்று போர்செய்பவர்கள் யாரிருக்கின்றார்கள்.

இவர்களெல்லா மிருக்க, இந்தச்சந்திர வம்சத்திற் பரமபரையாகப் பிறந்து அந்நாண்முத லிந்நாள் வரையில் நீதிசெலுத்திவந்த வேந்தர்களின் நிரவீரங்களிலும் தன்தந்தையாகிய விசயபராக்கிரமனுடைய சேவகத்திறங்களிலும், நூறுபங்கு உயர்ந்த திடகாத்ர ஜெயசிம்மக்குருளை போன்ற ஒரு அபிமன்னுவென்னும் அருச்சுனகுமாரனே, உன்னுடையபுத்ரமித்ரகளத்திராதிமுதலிய பதினொரு அக்குரோணிசேனைகளாகிய துரும்புக்குச் சூராவளிக்காற்றைப்போற்றோன்றிச் சுழற்றி மடக்கியடித்து முடிக்கத் தக்கவனென்று சத்தியமாக உன்சித்தத்திலுணர்வாய் இதன்றியும் நாகாதிபன்மைந்தனாகிய அருச்சுனனுக்கும்நாககன்னியாகிய உலூகிக்கும்பிறந்து சிறந்த திறவானாகிய அரவானென்பவன் போர்முகத்தில் நேர்புகுவானாகில், அவனுடனெதிர்ந்து அமர்செயமதிக்கும் அடல்வீரர்கள் சுவர்க்கமத்திய பாதலத்திலுமில்லை மேலும் எல்லாத்திறங்களிலும் எதிரில்லாத வீமசேனன் இடும்பியை மணந்துபுணர்ந்துபெற்ற திணிந்ததோள்களையுடைய காளையாகிய பாற்கடல்கலங்கக்கடைந்த மத்தாகிய மந்திரகிரியையொத்த கடோற்கஜனுக்குக் கீழ்த்திசையி லுதித்த சிவந்தசூரியனைக் கனியெனத்தாவிக்கவ்விய அநுமந்தனை ஒப்பாகச் சொன்னால் ஒருவேளையொக்கும் அவனே மாயவிசித்திரப் போரில் மகாவல்லபமுடையவன் அல்லாமலும் அக்கினியிற்பிறந்த பாஞ்சாலிபெற்ற இளம்பஞ்ச பாண்டவரென்னும் பிரிதிவந்தன்- சுருதிசன்மன்-சுதசேனன்-சதானீகன்-சுதகீர்த்தி-என்னும் ஐந்துபிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களுடையபலாபலங்களிலும்பதின்மடங்கு மேலாகிய கோலாகலப்பரிசுத்தராயிருக்கின்றார்கள். இன்னமுஞ் சொல்லுகின்றேன் இறையேகேளும்! ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியி னுடைய தம்பி சாத்தகியென்னும் சாமர்த்தியன் விஜயனிடத்தில்வில்வித்தை கற்றுக்கொண்ட வீராதிவீரன் போஜகுலத்தலைவரும்

மத்திமதேச மித்திருக் துணையானர்கள் அவரோடெதிர்த்து அமர்செய்ய நினைப்பவர்களியாரோ அறியேன் அரசே! யாகத்திற்பிறந்த திருஷ்டத் தூய்மன், துரோணாச்சாரியாருககு வைரி எதிர்த்துப்போர் செய்யும் சத்துருக்களுக்கு யமன் பாண்டவர்களுக்குத் தோள்வலித்துணையாகிய மைத்துனனும் விறறிறமைமைக் கற்றுணர்ந்த வேந்தர்களிலும் தேர்ந்த விவேகமுள்ள சத்தியகுணனாகிய துருபதேயனும், சிகண்டியும், உத்தமோசாவும், உதார்மனும், மற்றுமுள்ளோர்களும் தருமபுத்திரருக்குப் படைத்துணையானர்கள். விராடராஜனும அவன்புத்திரராகிய சதானிகன்-சங்கன்-சுவேதன்-வராககேது-உத்தரன்-முதலிய மித்திரவருக்கத்துடன், புஜபலபராக்கிரமத்திற்குத் தானொருவனன்றி வேறில்லையென்றெதிர்த்து யுதத்ஞ்செய்து பாண்டவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கச் சம்யந்தஞ்செய்து உற்றதுணையானன். பின்னும் பற்பலமகுடாதிவேந்தரும், சிற்சிலகுருநிலமாந்தரும், சேதிபதேசாதிபதி சிசுபாலனுடைய குமாரன் துஷ்டகேதுவும் சராசந்தனுடைய குலபுத்திரனாகிய சாதேவனும்சோமூராஜனும், பாண்டியனும், சேரராஜனும், இன்னுமநேக மன்னர்மன்னரும், அவர்களுக்கு படைத்துணை நெருங்கியிருக்கின்றார்கள். சுவேதக்குடையினையுடைய தோன்றலே! இத்தன்மையவாகப் படைத்துணைக் கொண்டு நெருங்கியிருக்கும் அரசர்களும்-யானைகளும் குதிரைகளும்-தேர்களும்-பதாதிகளும் - ஏழக்குரோணியென்றும், கணக்கர்-காரியஸ்தர்-படைவீரர் - சேனைத்தலைவர்-முதலிய இவர்கள் கோடாகோடி பேர்களென்றுந் தொகைசொல்லக்கேட்டு மகிழ்ந்து சத்தியத்தை நித்தியமென்று நம்பிய பாண்டுபுத்திரர்கள்உபலாவியத்தில் வீற்றிருக்கின்றார்கள். ஆதலால்அவர்கள் வனவாசஞ்செய்து வலிபற்றார்களென் றெண்ணமல், மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கட்டளையிடுங் காவலனேயென்று அஞ்சலியஸ்தனகைச் சஞ்சிதவினையற்ற சஞ்சயன் சொல்லக்கேட்டு, கட்புலனில்லாதகாந்தாரிகொழுநன் நெடுமூச்சும் பெருமூச்சும்விட்டு வியர்த்து வெளிப்பட்டுப்போகிற பிராணனை விடாமலிருத்தி இராஜசபையிலிருக்கும் எல்லோரையும் பார்தது கூவிச்சொல்லுகின்றான்.

ஓ அரசர்களே! கல்விபிற்றேர்ந்த வல்லவனாகிய சஞ்சயன் இப்போது சொல்லிக்கொண்டுவந்த பற்பல படைத்துணைவர்களின் பலாபலங்களெல்லாம் ஒருகாலத்தில் இளைத்துப்போமென்று நினைத்தாலும் நினைக்கலாம். அப்பப்பா!! கோபாக்கினிவிளைந்து தகிக்குங் கண்களையுடைய வீமசேனனென்பவன் இருப்புக்கட்டுகளார்ந்த நீண்டகதையைக் கைக்கொண்டு ரணக்களம் புகுவானாகில் யாவரும் மண்ணைக்கவ்விமடிவார்களன்றி மாபாமற்றிரும்பி வருவாருமுண்டோ?வாகைமாலையணிந்த மன்னர்களே! அந்தவீமனைப் பார்க்கக் கண்ணில்லாதவெனக்கு அவனைப்பார்த்தவர்கள் பயந்து பயந்துவந்து சொன்னதை, அம்மமமா!! என்ன சொல்லுவேன்? ஆகாயபரியந்த முயர்ந்து திணிந்த வச்சிரப் பொருப்புக் கிணையாகிய உச்சிதப்புயமென்னும் திருதிகுலவனநெறிந்து புகையும் நெருப்புக்கண்களென்னும் போர்மன்னரை எல்லாம் பொடிப்பொடியாகப்போக்கி நமனுக்குச் சமானமாக நாசஞ்செய்யத் தக்கவனென்றும், அவனுடனெதிர்த்துப் போர்புரிபவர்கள் எவருளரென்றுஞ் சொல்லக்கேட்டிருக்கும் என்மனந்துடிக்கிறதே நிட்பமாக வளர்த்த புட்பமபோன்ற தோள்களையுடைய என்மக்கள் வீமனுடனெதிர்த்துப் போர்விளைக்கமாட்டார்களே. மேலும் நாகப்பாம்பின் விடம்போல வேகந்தாங்கி வெகுநாளாக வைரங்கொண்டிருக்கும் வீமசேனன் வெகுண்டு போர்செய்யச் சீறியெழுந்து வருவானாகில்கொழுந்து போன்ற என்குழந்தைகளூற்றையும நீறுக்கிவிடுவானே அவனை நினைத்துப் பேசினல் எனக்குவயிறு கலக்குதே அப்பாமைந்தர்களே! அவனுடன்பகைத்துயுத்தஞ்செய்ய யார்நினைப்பார்கள். விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழும் விவேகிகளாயிருக்கின்றீர்களே. அவனை யென்னுள்ளத்தி லுன்னும்போது என்னுடல் நடுங்குதே. என்னீரல் கருகுதே. என்னிதயம் வேகுதே. என்னுவும்புலருதே. ஐ 'ஐயோ!! பிள்ளைகளே! பகையென்பதை மறந்து பிழைக்கும்விதத்தைத் தேறித்தெளிந்து சொல்லுங்களப்பா. தழைக்கும் புத்திமான்கள் சொல்லிய நீதியை உட்கொள்ளுங்களப்பா என்றுந் தருமத்தைக்கெடுக்கும் பாபத்தைத்தொடக்காதீர்கள் அருமையாகிய ஆசாரியர்பெரியோர் அன்னையர் தந்தையர் இவர்கள்சொல்லும் புத்தியை விடக்காதீர்கள். ஓமைந்தர்களே யென்று இவ்வாறு புத்திரவாஞ்சையினல் யெச்சனையோவிதத்திற் சொன்னன் வெற்றியையுடைய திரிதராட்டிரன் இத்தன்மையவாகப் பெற்றவனாகிய அத்தனுரைத்த புத்திமதிகளைச் சித்தத்திற் சற்றுநேரமாகிலும் வைத்திராமல் சுபுத்திரனாகிய துரியோதனன் தந்தையை நோக்கி, சிந்தை வருந்தி மெத்தவுங்கன்றுசீறி மனமடியாம லிறுமாந்து, இராஜசபையில் நிறைந்திருக்கும் எல்லோருமதிடுக்கிடும்படியாகச் சொல்லுகின்றன.

ஓ மன்னவர்களே! அங்கேமாண்டவரையொத்த பாண்டவர்களின் வல்லபங்களையும் அவர்களுக்குப் படைத்துணைவந்த மன்னவர்களின கீர்த்தியையும இந்த சஞ்சயன் சொல்லக்கேட்டு, தருமன் முதலிய பேர்களை சத்தியமுள்ள பிரபலரென்று தங்களுக்குத தாங்களே கொண்டாடிச் சந்தோஷங் கொண்டீர்களல்லாமல், எங்களுடைப சாமர்த்தியமும் எந்திரமந்திரதந்திர தபோபல சித்தியையும் எள்ளத்தனையுமெண

ணமற்போனீர்கள். கள்ளத்தன மனமுடையவரா
னீர்கள். திடவீரசிம்மம்போன்று படைவீராக என
க்குத் துணைவந்திருக்குந் தீரர்களுடைய திடத்தை
யுஞ் சிந்திக்காதவரானீர்கள். ஆகிலும்நான் சொல்லு
கிறேன் கேளுங்கள். சுவர்க்கமத்திய பாதாளங்கொ
ண்டாடாநின்ற பிரதாபசாலியாகிய பரசிராமரைப்
போலொத்தவர்புறமுதுகிட்டோடும்படியாகப்போர்
புரிந்து தின்னியகீர்த்தியாகியவெற்றியைக்கொண்ட
புண்ணியனுகும் எங்கள்பாட்டனுர் வீஷ்மாச்சாரியர்
புராந்தகனையும் நராந்தகனையுமொத்துப் போர்முக
த்தில் வில்வளைத்து சேர்புகுந்தாராகில், அவருக்கெ
திரில் ஈடாக எதிர்த்து நிற்பவர்கள் ஈரேழுலகத்தினு
மில்லை அப்பேர்ப்பட்ட வீரகேசரிக்கெதிராகக் காடு
மலையுங் கசங்கித்திரிந்து இளைத்துவருந்திய பாண்ட
வர்களோ எதிர்த்து நிற்கத்தக்கவர்கள். சோற்றிலிரு
க்குங் கல்லெடுக்கமாட்டாதவன் மூகவண்ணக்கல்லெ
டுப்பானென்ப தெவ்வண்ணம்? அன்றியும் அழகிய
தநுர்வேதத்தினுக்கும் புயவலிமைக்கும் ஒருவருநிக
ரில்லாத சதுர்வேத சம்பன்னராகிய துரோணுச்சாரி
யர் யுத்தஞ்செய்யத் தொடங்கும் போர்முனையினிட
த்தில், சர்வசங்கார கர்த்தனுகிய உருத்திரனும் யம
னும் எட்டிப்பார்ப்ப தருமையென்றால், ஒரு திரௌ
பதையின் காமத்திலகப்பட்டுழலுகின்ற ஐவர்களோ
என்னைவென்று வெற்றியடைகின்றவர்கள். வேந்தர்
களே! இயக்கர் முதலிய விண்டலத்தேவரும் இராஜர்
கள்முதலிய மண்டலத்தியாவரும் எல்லா விதங்களி
லும் வல்லாரிவரென்று புகழும்படியாகத்திகழும்கிரு
பாச்சாரியர், பகலிற் பிரகாசிக்குஞ் சூரியனைப் போ
லும்விளங்கி, உயர்ந்ததோள்கள் பாரிக்கவும் ஒப்பில்
லாச் சங்கம்பூரிக்கவும் விற்றெடுத்து, யுத்தகளத்தி
லடுத்து, சத்துருக்களைப்படுத்து என்பகையைக்கெடு
த்து வெற்றிக்கொடி பிடித்துவரும் வல்லமைத்திறத்
தையும் நீங்கள்மதிக்கயில்லையே. மேலும் பிறையணி
யுஞ் சடைமுடிகொண்ட பிற்ப்பிலியாகும் பெம்மானு
டைய தாதுவித்தாகிய சிலைத்திறமும் கலைத்திறமும்
சிரஞ்சிவியும் பெற்ற அசுவத்தாமர் கைக்கொண்டிரு
க்கும் வில்லுக்கொப்பாகிய வில்லையுடைய காவலர்
கள் மூவுலகத்திலுமில்லையே சொல்லுங்கள் அரசர்க
ளே! அறிவுவளர்ந்தோங்கி விஞ்ஞானம் விளையுமுள்ள
மும் வேறொருவரிணையில்லாத வீரமும் விரதவைராக்
கியமுங் கொண்ட பரசிராமனிடத்தில் வில்வித்தைக
ளைப் பூரணமாகக்கற்று தேகத்துடன் பிறந்த கவச
குண்டலத்தைத் தேவேந்திரனுக்குத் தியாகமாகக்
கொடுத்து, திரிலோகமும் புகழ்ந்து மகிழ்ந்துக்கொ
ண்ட வள்ளலாகியும், அருச்சுனனை விற்பரிக்ஷைகால
த்தில் அவமானப்படுத்தி அப்போது நேரிட்டபகை
யினுல் தாமரைமலர்போன்ற முகநிறைந்த தலையை
அறுத்து அரங்குபூசை செய்வேனென்று சகலவரசர்
களும் கடுங்கச் சபதங்கூறியும், காண்டவ வனத்தி
லிருந்து அருச்சுனனுடைய கணையினுற் கலங்கிச் சரி
ந்து எரிந்து வருந்தி அபயமெனவந்த நாகாஸ்திரத்
தை ஆதரித்துத் தாங்கியும், தோளாண்மையிலோங்
கியும் பதினுன்குலோகத்திலும் பாணவருஷங்களைப்
பொழியும் என்னன்ணனுகிய கர்னமகாராஜன் என்
னிடத்திலிருக்கப் பகைவரால்நேரிடும் பயமென்பது
ம் எட்டிப்பார்க்குமோ? கிட்டி விழிதிறந்து நோக்கு
மோ? ஆ! ஆ! அரசர்களே! சத்துருக்களின் தேகமா
கிய வயலைத் தன்கரத்திற் பிடித்த சிலையிற்றொடுக்குங்
கணைகளாகிய கொழுவினுலுழுது, மாமிசச் சேறுபடு
த்த இரத்தநீர்பாய்ச்சி, யுத்தவிதைவிதைத்துப் பூர்வம்
தன்மனதில் விளைந்திருக்கும் களைகளையகற்றி, கீர்த்
திப்பயிர் தழைக்கச்செய்து அவர்களுடையபிராணனை
மேல் வாரமாக நமக்குக்கொடுத்து, வெற்றியைக்குடி
வாரமாகக் கைக்கொண்டு உலாவத்தக்கஎன்மைத்து
னன் சிந்து தேசாதிபதியும், சப்ததீவிலும் ஒப்பற்ற
வெப்பமாகிய சுப்ரதிபத்திற் கொப்பாகிய பகதத்த
னும், அந்தஜவருக்கும் மிகுத்தவரென்று சொல்லும்
படிச் சுகமுற்று என்னிடத்திலிருப்பதை நீங்கள்கண்
டதில்லையோ? இவர்களிருவரும் போர்புரிய முனைந்
தால் இந்தஅண்டமும் அயனது சொந்த அண்டமும்
பகிரண்டபேரண்டமும் நமக்கு இதுஒருகண்டமென்
று பாழாகிப் புழுதியாய்ப்போய்விடுமே மேலும்புஜ
வுறுதிக்கும்-கஜமிகுதிக்கும்-போர்புரிவதற்கும்-தேர்
விடுவதற்கும்-கலைவலிமைக்கும் - சிலைவலிமைக்கும்-
விண்மணியனைய கண்மணியாகும் மத்திரதேசாதி
பதியாகிய என்மித்திரன், கூளிபோற்கூடிய பகைவ
ரை யாளிபோற்சீறி யடித்துக் கண்ணை நிமைகாக்குந்
தன்மைபோல் என்னைக்காக்க வந்திருக்கின்றுன்.இந்
திரனுக் கொப்பாகிய சோமதத்தனும்-பூரிசிரவனும்-
சாந்தாரராஜனும்-கிருதவன்மன் -கிருதவீரியன்-முத
லிய யாதவகுலத்தலைவரும் எனக்குப் படைத்துணை
யாகிச்சூழ்ந்து கொண்டிருக்கின்றுர்கள். இதன்றியும்
வீமார்ச்சுனர் முதலியபேர்களை வில்யுத்தத்தினுலும்
மல்யுத்தத்தினுலும் வென்று சொல்லுகிறேமென்று
விற்பிடித்து, வெற்றிமாலைதரித்து சங்காரருத்திரனை
ப்போல் ஒங்காரமிட்டு, சம்சத்தராகிய அறுபதினுயி
ரம் வெண்கல ரதக்காரர்கள்பாதலத்திலிருந்துபடை
த்துணைவர விருக்கின்றுர்கள் அளவுசொல்லுதற்கரு
மையாகிய தவத்தையும் பலத்தையுமுடைய அநேகங்
கோடி இராக்ஷசாள் என்னிடத்திலுண்டாகிய இஷ்ட
த்தினுல் துஷ்டநிக்ர பரிபாலனஞ்செய்யப் படைத்
துணை வரப்போகின்றுர்கள். இப்போது என்னேரு
யிருக்குந் தங்கள் பல உயிர்களைக் கொடுக்கும்படி
யாகச் சிநேகித்திருக்கும் தீவுகளிலுள்ள பேர்களும்
பூமியிலுள்ளபேர்களும் பாரதயுத்தந்தொடங்குங் கா
லங்கேட்டு, ஒருநாளைக்கு முன்னதாக இவிடம்வந்து
சேருவார்கள். இத்தன்மைபாக அளவற்ற சேனுசயி
னியங்களுடன் எனக்குத்துணையாக வருபவர்களெல்
லாரும் என்னுயிருக்குபிராகியபேர்கள் அவர்களிறந்

தால் நானிறப்பேன். நானிறந்தால் அவர்களிறப்பார்
கள். இந்தவுலக மழிந்தால் நாங்களெல்லோரும் அழி
வோம் உலகம் அழியப்போகிறதுமில்லை நாங்களியா
வரும ஒழியப்போகிற துமில்லை இதுஉண்மையே இனி
நான் பற்பலவாறாகச் சொல்லவேண்டியதில்லை.

என் தந்தையாகிய பராராஜபயங்கரனே! கேளும்
இதுவரையிலும படைத் லைக்குக்கூடிய தேர்யானை
குதிரை காலாள்வீரர்கள் முதலாகிய எல்லாஞ் சேர்த்
து பதினொரு அக்ரோணியென் றுகணிதநூல்தெரிந்த
பெரியோர்கள்தொகைசெய்தார்கள். இவ்வளவுசேனை
களும் வீராதிவீரர்களும் எனக்காகச்சேர்ந்திருப்பவர்
கள இவர்களுட னெதிர்த்துப் போர்புரியுந் தன்மை
யை யுடையவர்கள் ஒருவருமில்லை. அப்படிக்கு நேர்
நின்று சண்டைசெய்பவர்கள் யாவரேனும் இருப்பார்
களாகில் சொல்லுங்கள் ஒ நீங்காத விவேகநிறைந்த
நீதிமான்களே! சூற்கொண்ட மேகப்போன் றதிருமே
னியையுடைய கிருஷ்ணபகவான்பாண்டவர்களுக்குப்
படைத்துணையானனே, அவனுக்கு ஈடாரென் றுசொ
ல்வீர்கள் அப்படியே படைத்துணையானலும் நீராயுத
னுகித் தேர்செலுத்த வமைந்தானன்றி வேறல்ல அவ
னண்ணன் பலபத்திரர் கலப்பையாயுதத்துடன் என
க்குப் படைத்துணையானர். இவைகளெல்லாம்அந்தக்
கிருஷ்ணனுக்கு முன் நிலையில்லாமலழிந்து போகு
மென்று பயந்திருக்கின்றீர்க ளல்லவா? அப்படியே
மடிந்து போகுமாகில் நாமெல்லாரும் வீரரென்றும்
வேந்தரென்றும் ஏனிருக்கின்றேப்? ஐயோ! நாம்அனே
வரும் கால்கை குறைந்த சப்பாணி முடம்போலெண்
ணிக்கொண்டோ சஞ்சலித்து வாடுகின்றீர்கள் ஒ தை
ரியமற்ற மன்னவர்களே! இன்னமுங்கேளுங்கள் கதா
யுதத்தைக்கொண்டு யுத்தமுனையிற் கலந்து நின்றேனு
கில், இவ்வுலகத்திலுள்ள தேவர்களும்மூவர்களும்ஒன்
ருய்ச்சேர்ந்து வந்தெதிர்த்தாலும் ஒரு க்ஷணப்போ
தில் அவர்களியாவரையும் வதைத்து வீரசொர்க்கம்
அனுப்பிவிடுவேன். இவ்வளவு வலிமையை யுடைய
என்னை வீமசேனனே வெற்றிகொண்டு வெல்பவன்.
இதைநீங்கள் யோசிக்க இல்லையோ? அந்தோ! அந்
தோ! நானென்ன சொல்லப்போகிறேன்,மேலும்திட
வீர காத்திரதிண்ணியராகிய துச்சாதனன்-துன்முகன்
விகர்னன்-சுமத்தி-சித்திரசேனன்-சித்திரபானு இவர்
கள்முதலிய என்தம்பிமார்கள் மல்லைப்புரியுந் தோள்
வல்லமையும், சொல்லற்கரிய வாள்வல்லமையு முடை
யவர்கள் வடபத்திரசாயியாகிய மாயோன் பார்த்த
சாரதியாக வந்தாலும் அதைக்குறித்துமெச்சிசந்தோ
ஷப்படாமல் அருச்சுனனையும், மற்றப் பேர்களையும்
பிச்சிப்பிடுங்கி இலவப்பஞ்சுபோலே காற்றைற்றாற்றி
விடுவார்கள். வீமசேனனுடைய விதியைமாற்றுதற்கு
நானொருவனிருக்கின்றேன், இதல்லாமலும் என்பே
ரிலும் எதிர்த்து வரப்பட்டவ ரெவரையும் இனிப்பிற
வாமற் செய்வதுமன்றி, ஈட்டி-எறி-வலையம்-குண்டு-
குழல் முதலியவற்றைத் தடுக்கவும் இடித்து மின்னிவ
ரும ஏழுமேகங்களின் முழக்கத்தை விலக்கவும்,மேதி
னிகிழியப் பொழியுங் கல்வருஷங்களைக் கலக்கவும்,
ஓங்கிவீசிய யுகாந்தகாலச் சண்டமாருதத்தை யொடுக்
கவும், வேண்டியபோது விடுக்கவும் பேரிருளைப் பிர
காசிக்கச்செய்யவும் பிரகாசத்தைப் பேரிருளாக்கவும்
ஆகாயகங்கையைப் பூமியில் அமைப்பிக்கவும் அதன்
பேரில் யானை சேனை பரிவாரங்களெல்லாம்நடக்கவும்
எதிராளிகளின் சேனைப்படைகள் முழுகிப்போகும்
படியாக முடிக்கவும் வெப்பமாகிய பாலைநிலத்தில்மே
கம்பொழிந்த சலமானது சுவறிப்போகாமல் வரும்
படியாய் மடக்கவும் என்னுடைய சேனைகள் தாகமி
டாய்தீர்ந்து குளித்து முழுகி இளைப்பாறி நடக்கவுஞ்
செய்வதுமன்றி மண்டலமேலாகவும் விண்டலங்கீழா
கவும் மாற்றுவேன். சரபம்-சார்த்தூலம்-கண்ட பேர
ண்டம்-சிங்கம்-யானை-மலைப்பாம்புகள் முதலாகியமிரு
கங்களெல்லாம் நான் கைகாட்டியதொழில்களைச்செய்
துக்கொண்டு இனனமுன் வேலைசெய்யக் கட்டளை இட
வேண்டும் இறைவனே என்று இறைஞ்சிநிற்கவும்அப்
போது குறுங்காற்பூதம்-குடங்கைப்பூதம் - குடவயிற்
றுப்பூதம்-குழிக்கண்பூதம் - முதலாகிய பைசாசகண
பிர்மராக்ஷசர்களெல்லாம் சிரத்திற்கரத்தைக்குவித்து
என்ன உத்தரம் எந்தவேளையில் வருமோ வென்று
எதிர் காத்திருக்கும்படியாகியஸ்தம்பனம்-மோகனம்
உச்சாடன-ஆகரிஷணம்-தொட்டியம்-சல்லியம் - இந்
திரஜாலம்-மயேந்திரஜாலம்-கண்கட்டு- திசைக்கட்டு-
தேகக்கட்டு-விண்கட்டு-மண்கட்டு-மறைவுமை -மாயா
வித்தை முதலிய மந்திர எந்திர தந்திர சாகசங்களும்
முனிவர் சித்தர்முதலியபேர்கள் அநுக்கிரகஞ்செய்யக்
கற்றிருக்கிறேன். சலஸ்தம்பனம்வாயுஸ்தம்பனம்அக்
கினிஸ்தம்பனம் முதலான வித்தைகளோடு இவ்வுலக
த்தில் தற்செயலாய் மாய்ந்துபோன உயிரை மறுபடி
யும் வரவழைக்கும் அமிர்தசஞ்சீவி மந்திரங்களும் பெ
ற்றிருக்கிறேன் இத்தன்மையவாகிய உபாயங்க ளெல்
லாவற்றிலும் வல்லவனுகிய நான் படைத்துணைவந்த
பேர்களை நம்பிக்கொண்டிருக்கத் தக்கதுமுண்டோ.
தேவர்கள் அடைக்கலமென்பார்களாகில் அசுரர்களை
வென்று ஒருவாக்கியத்தினுல் அமரர்களைக் காக்குந்
திறத்தையுடைய என்னைத்துதித்துக் கொண்டாடிப்
புகழாமல் அற்பபலத்தையுடைய ஐவரைக்கொண்டா
டி விம்மிவிம்மி வாடுவது வேந்தர்களுக்குப் புகழல்ல
வே. இப்போது நான்சொல்லிவந்தகாரியங்களித்தனை
யும் உறுதியுடைய தல்லவென்று உங்கள் மனத்தில்
நினைப்பீர்களாகில் உண்மையாகிய வார்த்தைகளைச்
சொல்லுகின்றேன் கேளுங்க ளுத்தமர்களே! (பேறி
ளமையின்பம் பிணிமூப்புச் சாக்காடிவ் வாறுங்கருவி
லமைப்பு) என்றபடி தாய் தந்தையர்கூடிச் சுக்கில

சுரோணிதஞ் சம்பந்தப்படுங்காலத்தில் ஐந்து கோசமாக வாயுஉந்தியபோது தரித்த கருவுருவாகிய உடலுக்கு அவ்வாறுங் கருவிற்றனே அமைத்திருக்கின்றன் சிருஷ்டிகர்த்தனுகிய பிரமனென்று பெரியோர்களாற் றெரிந்துகொண்டிருக்கின்றேன். (அன்றெழுதியதை யழித்தெழுதப்போகிறதில்லை என்று) சொல்லும் பழமொழியுங் கேட்டிருக்கின்றேன். இதைவெவ்வேறு வாழ்ந்தவர்களுமில்லை யென்றுணர்ந் திருக்கின்றேன் அப்படி எவர்களாகிலும் இவ்வினையைத தவிர்ந்திருப்பவர்களுண்டாஞல் எனக்கு அதனைச் சொல்லுங்கள் ஆகையால் க்ஷத்திரியர்களுக்கு விதித்திருக்குமுறை நெறிப்படி யுத்தஞ்செய்வதேஞாயம். எங்களை வெற்றிகொண்டு பஞ்சாசதகோடி பூமண்டலமுழுதுந் தருமராஜன ஆண்டாலும், அல்லதுமாண்டாலுமங்கள் மிகுஜெயம் பெற்றாலும் அல்லது அபஜெயமுற்றாலும், ஆருக்கென்ன (பள்ளமிறைத்தவன் பங்குகொண்டுபோவான்) என்பதுபோல் சாகிறவரையிலும்யுத்தஞ்செய்து, ஜயித்தவர்களுடைய இராச்சியமென்று இராஜமுறைமை இருப்பதனுல் ஒருகை பார்த்துவிடுவேனல்லாமல் பாண்டுமைந்தரைப் பணிந்து இனிய வசனங் கூறித்தாழ்ந்து அவர்கள் பாதத்தைப் பிடிதுக்கொண்டு நித்திய தரிசனஞ்செய்து அற்பத்திற்கு அருமைகுலைந்து அரியபண்டத்திற் காசைகொண்டு வாழ்ந்திருக்கமாட்டேன் இதனுல் என்னுயிர்மாத்திரம் அழியுமேயன்றி என்புகழொழியமாட்டாது ஆகையால் என்னதுன்பங்கள்வந்தாலும் எதுகளழிந்தாலும் எவர்கள் மொழிந்தாலும்எவர்களொழிந்தாலும் யுத்தமென்னும் விரதத்தை என்னிதயம் ஒருக்காலும் விட்டுநீங்காது என்று இராஜாதிராஜனுகிய திரிதராட்டிரனையும் மற்ற அரசர்களையுநோக்கித்துரியோதனன் பலபலவார்த்தைகளைச் சலசலவென்று மொழிந்தான

அப்பால் மனத்திற்றுயரும் முகத்தில் வியர்வும் பெருமூச்சுங்கொண்ட தந்தையாகிய அரசன் மைந்தனைநோக்கி,ஐயாகுழந்தாய் அப்பாகண்மணியே!நான சொல்லுகின்ற கடைமுறை வார்த்தையாகிய கட்டுரையை உன்காது கொடுத்துக் கேட்கக்கடவைகாதலனே! இப்போது நீசொல்லிவந்த சகலவித பலாபலங்களையுங் கேட்டேன். ஆகிலும் இவைகளெல்லா வற்றிலு மிகச்சிறந்தவர்களாயுஞ் சொல்லுதற்கரிய பெரிய வல்லமையுந் தவங்களையும் உடையவர்களாகிய பாண்டவர்களுடன் யுத்தஞ்செய்யக் கருதி யுடன்படுவது, நம்மாற்சாதனை செய்யக்கூடாத காரியமென்று நீதியாய் நினைக்கக்கடவாய். ஏனெனில் தெய்வபலமும், யாகபலன்களும், திணிந்த தோள்வலிமையும் திவ்வியாஸ்திரத்திறமையும் சேனைப்பெருக்கமும்உறுதிமுதலியயாவும் ஐவர்களுக்கு அமைந்திருக்கின்றன உனக்கென்னிலோ இவிடத்திலிருக்கும் அரசர்களுடைய வலிமைத் துணையல்லாமல் மற்றொருதுணையுமில்லையே மகனே! அருச்சுனன் தவஞ்செய்த பலத்தினுல் ஆதிபாண்டரங்கனுடைய அருள்பெற்று தேவலோகம் போய்தேவர்கட்குப் பகைவராகிய காலகேயநிவாதகவசரைச்செயித்து, தேவாமிர்தபோசனங் கொண்டு தேவசிங்காசனத்திலிருந்து தேவர்சகாயனென்று பேருப்புகழும் கிரீடமும்பெற்று, பூலோகத்திற்கு வந்தவனுதலால் அந்தவிசயவீரனை இந்த அரசர்களைக்கொண்டு ஜயிக்க உன்னுற்கூடுமோ? பதினுயிரங்கோடிநட்சத்திரங்கள் கூடிப் பிரகாசித்தாலும் ஒருசூரியகிரணத்தினுல் ஒளிமழுங்கி உலகத்தாருக்குத் தோற்றுமற் பிரகாசமறைந்து போவதுபோல் விஜயனுகிற சூரியனுக்கெதிரில் இராஜர்களென்னும் நக்ஷத்திரங்களஒளிமாறி நிலைமாறி தலைமாறிப் பலபலவென்று உதிர்ந்து போவனவேயல்லது நிலைத்துநின்று நிலவெறிக்கமாட்டாவே மேலும் மருதமரத்தைக் காலினுலுந்திக்குபேரன் பிள்ளைகளின்குறையகற்றியஸ்ரீகிருஷ்ணபகவான் சாரதியாகி ரதஞ் செலுத்தும்படியாக இசைந்தமையால் மகிழ்ச்சிபொருந்திய அருச்சுனன் யுத்தகளம் புகுவானுகில் இரத்தமாமிசந் தோய்ந்த வேலாயுதத்தைத் தாங்கிய பற்பலமன்னர் கூட்டங்களும் வெலவெலவென்றுதைத்துக் கொண்டு குலைகுலைந்து அழிந்து போவார்களேயன்றி வேறல்ல. அவரவருடைய வல்லபங்கள் அவரவர்களுக்குத் துணையல்லது ஒருவருடையவல்லபம் ஒருவருக்குத் துணையென்று நம்பும் வம்பர்களுக்கு இகழ்வும் வசையும் வருவதல்லாமல் புகழுமிசையும் வரமாட்டா. ஆகையால் உன்னுடைய பெரியவல்லபங்களெல்லாம் பாண்டவர்களுக்கு ஒருலக்ஷியமாயிராது. இப்போது கூடியிருக்கும் வீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களுடைய உயிரிருக்கிறவரைக்கும் நீபலசாலிதான் உனக்குப் பயமில்லை. அவர்களுக்குப் பிற்பாடு நீதுன்பப்படுவா யென்பதற்குச் சந்தேகமில்லை ஆகையால் நீங்க ளிருதிறவரும் பகைநீங்கி இருப்பதற்காக ஒருயுத்தி சொல்லுகிறேன் கேள் அவிர்ப்பாகங்களைப்புசிக்கும் அமரர்களும்நமது புறஜனங்களும் சந்தோஷமடையும்படியாக இந்தராச்சியத்தை இருகூறுகப் பங்கிட்டுத்தருகிறேன். உன்னுடைய பாகத்தை யாவரும்புகழ்ந்து துதித்து மகிழும்படியாகவும் உன்னை யடுத்தவர்கள் இருகரத்தையுங் குவித்துவாழ்த்தி வணங்கிவாழ்ந்து கொண்டிருக்கும்படியாகவும் பற்றி சுவேதசக்ஷத்திர நீழலில் துரைத்தனஞ்செய்துசிறந்த சுகத்தைப் பெறக்கடவைஎன்று திரிதராட்டிரன் சொல்லவே, அவ்வார்த்தை செவிக்குட் புகுமுன்னமே சிந்தைவருந்தி மிகவுங் கோபங் கொண்டு துரியோதனன் சொல்லுகின்றுன்.

ஐயா! பூர்வத்தில் சூதாடித்தோற்று, இனிமேல் இராச்சியம்நமக்குவரப்போகிறதில்லையென்றுகைவிட்டுக் காடேகதியாய்க்கலந்திருந்தபாண்டவர்களைக் கருமேகத்தைபொத்த திருமேனிவாய்த்த கண்ணன்மறு

படியும் வரவழைத்து, நாட்டைநான்வாங்கித் தருகிறேனென்று உறுதிவார்த்தைகள் சொல்லி பந்துக்களாகிய சில படைத்துணைகளைச்சேர்த்துவிடுத்துநான் கொண்ட பூமியை மீட்டுக்கொடுக்க கருதி சலகம்செய்து இதுவேவேலையாக வேலையற்றுத் திரிகின்றான். அவன்செய்கின்ற தந்திரமநுஷ்யினால் நீர் மயங்கிப் பப்படுகின்றீர் நான்பயப்படேன் அவனெண்ணிய பெண்ணத்தின்படி நான் பூமியைக்கொடுத்து விடுவேனாகில், எனக்கிடாகிய மன்னர்களும் என்சத்துருக்களும் குலுங்கநகைப்பார்கள். தந்தை வாக்கியத்தைக் கேட்டுத் தருமமாய்க்கொடுத்ததல்ல ஐவருடைய பலத்தினுக்குப் பயந்து கொடுத்துவிட்டான் துரியோதனனென்று அவமதிப்பாய் நிந்திப்பார்கள் ஆதலால் என்னுயிருள்ள வரைக்கும் அல்பத்துரும்பளவு பூமியும் அவர்களுக்குக் கொடுக்கமாட்டேன். பாண்டவர்களுக்குப் பயந்து இளைத்தான் துரியோதனனென்று எழ்மையாகிய சொறகேட்டு உயிர்விரும்பி வாழமாட்டேன் திரிநேத்திரன்வந்து எதிர்த்துச் செயித்தாலும் செயிக்கலாமேயன்றி மற்றபேர்கள் போர்முகத்திலென்னைச் செயிக்கமாட்டார்கள் இத்தன்மையவாகியபுஜவலிமையையுடைய யென்னை உச்சாகப்படுத்தாமலும் உமதுபுத்தியில் நிதானிக்காமலும், புத்தியில்லாதபேதையர்மருட்டிய வார்த்தை மயக்கத்தால் கலங்கிச் சொல்லவந்திரையா அப்படி நீரொன்றுக்குங் கலங்க வேண்டாம் எந்தையே! திடகாத்திரவீரஅமோகவரங்கொண்டு உரங்கொண்டிருக்குஞ்சத்துருக்களானாலும் அவர்களை ஒருநொடிப்பொழுதில் வெல்லவல்ல வல்லமையிற் கைபழகி இருக்கின்றேன் ஆனால நீர்கொண்டிருக்கும் நடுக்கத்தை மாற்றுகிறதற்குக் கல்லாமற்போனேன். ஆகிலும் அதுவுந்தெரியும் அஃதெப்படியென்னில் உன்பிள்ளைகளின் புயவலிமையினால் எதிர்த்த சத்துருக்களெல்லாரு மிறந்து யமலோகமடைந்தார்களென்று எப்போது நீர்கேட்கின்றீரோ, அப்போது இந்தச்சந்தேகமும் பயமும் உமமைவிட்டு நீங்கிப்போம். அதுவரையிலும் உமதுமனந் தாளமாட்டாது ஆகிலும் கொஞ்சம் பொறுத்து இந்தக்காலத்தைத்தள்ளும் இப்போது நேரிட்டபோரைப் புரிவது தருமமேயன்றி இராச்சியம்பகுந்து கொடுப்பதில்எனக்குங் கீர்த்தியில்லை என்னிடத்தில்வாங்கிக்கொள்ளும் பாண்டவர்களுக்கும் பெருமையில்லை ஆதலால் பூமியைப் பிரித்துக் கொடுக்கிறே னென்னும் வார்த்தையை இன்னொருதரம் என்செவியிற்போடா திருக்கக் கோறுகிறேன், இதைமுற்றினு மறந்துவிடும் என்னையனே என்று துரியோதனன் படபடப்புடன்சொல்ல அவிடத்திலிருந்தபேர்களியாவரும் நடுநடுங்க, அந்த வேளையில் அரசன்வார்த்தைக்குக் குறுக்காகப் பாய்ந்து பக்கத்தில் இருந்த கர்னன் சொல்லுகின்றான்.

பெரிய அரசனேகேளும்! மண்ணாசை கொண்டலையும் பாண்டவர்களுடைய படைவலிமையைப் புகழ்ந்து எங்களுடைய புஜபலபராக்கிரம விற்றிறமையை யோசிக்காமலிகழ்ந்து இழிவாகப்பேசுகின்றீர். அப்படிப்பேசவேண்டாம். போர்புரியும்படியாக நினைப்பேனாகில் ஒரேசனையால் உவரிவளைந்தவுலகமுழுமையும் வேர்களைந்து வெந்நீர்வார்த்து விடுவேன். என்னிலுமுயர்ந்த வில்லாளிகளுண்டென்னும் எண்ணமுமக்குண்டோ மன்னவனே! வெப்பமாகியவடவாமுகக்கனலும், மேதினியெல்லாம் நிறைந்த வெக்கனலும், வேதநாசன் மதனையெரித்த விழிக்கனலும். வேறுபடாத திரிபுரமெரித்த நகைக்கனலும்சேர்ந்துஉருகிக்கலந்து மொய்த்த கூரம்பாகிய கணைகளைச்செலுத்தி ஒருகணத்திற்குள் சத்துருக்களைச் சாம்பராக்கும் வல்லபமுடைய என்முன்னே, தேறியபடைவல்லவர்களென்று போர்புரியவந்தால் அவர்களையும்மறுமன்னர்களையும் அவர்கள்துணையையும், இரதகஜமுதலியபடைகளையும் பின்பலம் வேண்டாமல் தன்னந்தனியனாகி விற்கொண்டுஜாடி உதிரவெள்ளங்களோடி காளிகள்கூடி கொண்டாடிப் புசித்துக் களிக்கங் கண்டங் கண்டமாய்க் கூறுபடுத்தி மாமிசஇரத்தங்களினாற் சேறுபடுத்தி கரமுஞ் சிரமுங்கலந்து விதைத்து கடல்சூழ்ந்த காசினி முழுவதும் உன்புத்திரருடைய வெள்ளைக்குடை நீழலில் விளங்கவைத்து, உன்னுடைய மன நடுக்கத்தையும் மற்றவர்களுடைய மதியொடுக்கத்தையும் பகைவரால்விளையு மடுக்கத்தையும் நொடிப்போதி லடக்கி அகற்றிவைக்கின்றேன் ஐயா! இப்போ தெனக்குச் செலவுகொடுமென்று பற்பலவிதமாகிய சாமார்த்தியங்களைப் பகர்ந்த அங்கதேசாதிபதியினுடைய வல்லபவார்த்தை முழுமையுங் கேட்டுத் திரிதராட்டிரன் சந்தோஷமுஞ் சந்தேகமுங்கொண்டு சொல்லுகின்றான்.

அப்பாகர்னா! முறியாதகாண்டீபமும் அருந்தூணியும் அக்ஷயத்தூணியும் இளையாத சுவேதவாம்புரவியும் அழியாத இரதமும் அநுமதுவஜமும் அக்கினிதேவனாற் கொடுக்கப் பெற்றவனென்றும் கங்கையுந் திங்களும் பொங்கரவுமங்கையும் அங்கத்திற் றரித்தருளிய சங்கரசுயம்புவானவ ரளித்த பாசுபதாஸ்திர முடையவனென்றும் தேவேந்திரனுடன் சமமாயிருந்து புத்தமுத போஜனமுண்டவ னென்றும், காலகேய நிவாதகவசர் முதலியபேர்களைக் குலத்தோடழிக்குங் கொடுங்கணை கொண்டவனென்றும், சகலதந்திரசுதந்தரமாயனாகிய கிருஷ்ணன் சாரதியாகித் தேர்செலுத்தக் காண்டவவனத்திற் போர்செலுத்தினவ னென்றும் இந்த மூன்றுலோகமும் புகழப் பேர்கொண்ட அருச்சுனனுடைய போர்முனையில் நானெதிர்த்துயுத்தஞ்செய்கிறேனென்று சொல்லத்தக்கவர்களு முண்டோ? எப்பிறப்பினுமில்லை. சொப்பனம்போல்இப்பிறப்பில் நீயொருவன் சொல்லுகின்றதைச் சாக்கிரத்தி

லிருந்துபார்க்குமெனக்குப்பெரிய ஆச்சரியமாயிருக்கின்றது. நல்லதப்பா! விராடபுரத்தில் நேற்றுநடந்த மாடுபிடி சண்டையில் நீயில்லையோ? இதுசேதி அறியமாட்டாயோ? அற்புதமற்புதம் தம்பி! அருச்சுனனை வெல்லுவேனென்று ஆர்சொல்ல வேண்டுமென்றால், அநேக கற்பகோடிகாலம் தவஞ்செய்து சர்வசங்கார காலருத்திரனுக்கொப்பாக ஏற்படப் போகின்றவனொருவனிருப்பானாகில் அவனுமொருவேளை ஆலோசித்துச் சொல்லவேண்டியதுதான் அதைவிட வேறொருவரையுங்காணோம் நாமிருக்கிறோமென்றாலோ (பரமிருக்குநாட்டில் வந்திறங்குங்காக்கை, ஊசென்றாலும் பறக்கும் ஆசென்றாலும்பறக்கும்) என்று சொல்லும் பழமொழியைப்போல், அருச்சுனனைபோர்செய்யவந்தானென்று கேட்ட உடனே யுத்தத்தையும் உடலையுமறந்து ஓடிப்போங் காக்கையைப் போன்ற நாம் வாக்கினால் வெல்லுவோமென்பது எப்படி இருக்குதென்றால் "உள்ளான்பதுங்கானும் ஒணான்றன் சர்வமும் ஓங்குபுகழ், வெள்ளான்கிரந்தமும் பார்ப்பான தமிழும் விழல்விழலே" என்றால் உள்ளான் குருவியானது பூமியசையுதோவென்று ஆட்டிப் பார்ப்பதும், ஆகாயமிடியப் போகுதென்று இருகாலையு மேலே நாட்டி மல்லாந்துபடுப்பதும், ஓணான் தலையாட்டலும் வெள்ளான் கிரந்தங்கற்றுப் பேசுவதும், பார்ப்பான் தமிழ்கற்றுப் பிரசங்கஞ்செய்வதும் விழலுக் கொப்பாம். அதுபோலவிஜயன்வெம்பிப்பதைத்து ஒருகணை விடுவானாகில் அம்புவியெல்லாமழியும். என்சொல்லைப் பழுதாக்காமல் புத்தியுட்கொண்டு பெருமையுடன் வாழக்கடவீர்கள் ஓ புத்திரர்களே! மைந்தர்களும் பந்துஜன நண்பர்களும் பரிவாரச் சேனைகளும் நூறு நூறாய்க் கூறுகூறாய்ச் சிதைந்து அழிந்துவிடும்படியாகப் பாண்டவருடனெதிர்த்து அமர்செய்ய வேண்டியதென்ன? அவர்கள்கையைக்கொண்டே அவர்கள்கண்ணைக் குத்துவதுபோல் முன்னே உங்களிடத்தில்சொக்கட்டாணடித்தோற்ற புவிமுழுமையும் முறையாகக் கொடுத்து எல்லாஉயிருந் தொழும்படியாக மித்திருடனிருந்து அரசாக்ஷிசெய்யுங்களப்பாவென்று, கட்புலனிழந்த காவலன்மொழிந்த சொல்லை மகமேருவைப்போல் கேட்டிருந்த வீஷ்மாச்சாரியார்சொல்லுகின்றார்.

ஓ அரசர்களே! ஆதிமுதற்கொண்டு இதுவரையிலும் பாண்டவர்களை இகழ்ந்து வெற்றியடைந்துவந்த இந்தவீரனுடைய திறத்தை எல்லோரும் அறிந்திருக்கின்றீர்கள் அல்லவாவென்று சொல்லிக் கர்னனைநோக்கி ஓ கைதேர்ந்தவனே! போனதெல்லாம் போகட்டும். இப்போதருச்சுனனுக்கு எதிர்முனைந்து யுத்தஞ்செய்யத் துணிந்து நிலைத்துநின்று உன்னுயிரைத் தப்பித்துக்கொண்டு வரமாட்டுவையோவென்றுருக்கிக்கேட்டு கலகலவென்று நகைத்து நகைத்துப் போபோ லைபயித்தியக்காரனே! (குறைவானவர்கள்கூவிக்கதறுவர் நிறைவானவர்கள்நிதானித்திருப்பர்) என்னுமொழிக்கொப்பாக யுத்தஞ்செய்யக் கையிலாகாதவர்கள்தான் வாக்கினாற் பிதற்றிக்கொண்டிருப்பார்கள், பூரணமாகச் சபிக்கத்தெரிந்த புண்ணியவான்கள் சமயம் வந்தபோது தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுவார்களன்றி நாவினால் ஒருக்காலும் நவிலமாட்டார்கள். அதுதான் வீரதருமமென்பது நீ சொல்லுவது அதர்மம் ஆகையால் பிறந்தவீட்டின் பெருமையை உடன்பிறந்த மூத்தோளிடத்தில் புகழ்ந்து சொல்வதைப்போல் உன்பண்டவாளந்தெரிந்த எங்கள்சபையிற்சொல்லாதே சந்தைகூடியவிடத்தில் உன்சாமர்த்தியத்தைப்பேசினால் சகலருங்கேட்டு சந்தோஷப்படுவார்கள் இந்தவார்த்தையைப் பேசலாம் இந்தவார்த்தையைப் பேசக்கூடாதென்று சிறிதும் உணராத நீ காலயிடமறிந்து சற்றுயோசித்துச் சொல்லக் கடவையென்று உலகமதிக்கும் புகழினையுடைய வீஷ்மாச்சாரியர் சொல்லக் குற்றங் குறையோடு குச்சிதமில்லா மனத்தோனாகிய அங்கதேசாதிபதி வடவாமுகாக்கினிபோற் பொங்கிக்கொதித்து மகிமையாதி சொண்டிருக்கின்ற திரிதராட்டிரனுக்குச் சொல்லுற்றான் அரசனேகேளும்! பாண்டவர்களுக்குந் துரியோதனாதியர்களுக்கும் யுத்தமவிளையப் போகுதென்று முன்னமே தேவதைகளெல்லாருங்கூடி வஞ்சனையாக யோசித்து நான்கற்ற மந்திரங்களையும் தேவாஸ்திரங்களையும் தருணத்திற் குதவாமற் போகும்படியாக என்னைச் சபித்திருக்கின்றார்கள். ஆகையினாலே இதுவரையிலும் அருச்சுனன் பிராணனுடன் பிழைத்திருக்கின்றான் அல்லாவிட்டால் அன்றே இறந்து நாமெல்லாரு மறந்து அவன்செத்தவிடம் புல்முளைத்துப் போயிருக்கும் ஆகிலும் என்னசாபம் நேரிட்டாலும் (யானைபடுத்தால் குதிரையத்தனை உயரமிருக்கமாட்டாதா? ஆகட்டும் ஒரேபாணத்தினால் காண்டீபனுடைய பிராணனை வாங்குகின்றது நிச்சயம். அபத்தமல்ல ஒருவேளை இவனென்ன வாங்கப் போகிறதென்று உமதுமனத்தில் சந்தேகமிருந்தால் பாண்டவர்களுக்கு இந்தராச்சியமுழுமையும் கொடுத்துவிட்டு, நூறுபிள்ளைகளையும் அவர்களையடுத்த பேர்களையும் எப்படிவிட வேண்டுமோ அப்படியே உமதுமனத்துக்கு ராஜியானபடி செய்யுமென்று கண்சிவந்து மிகுந்த கோபத்துடன் சபாமண்டபத்தை விட்டெழுந்து துரியோதனனை நோக்கிச் சொல்லுகிறான். அப்பா! கல்லுங் கரையும் படியான சொல்லுகளைக்கொண்டு சிலர் உன் தந்தையின்மனதைக் கரைத்திருக்கின்றார்கள். அதனால்உன் தந்தை அஞ்சிப்பேசுகின்றார். நீர் அவருடைய இஷ்டப்படி தயிக்காமல் நடப்பதுவே ஞாயம். அப்பால் தெய்வசகாயமெப்படி இருக்கின்றதோ பார்த்துக் கொள்ளுவோமென்று இரப்போர்களுக்கு இல்லையென்னாமற்கொடுக்கும் ஈகையாளன் தன்னுடையஅரண்மனைக்குப்போகவும், துரியோதனன் சகுனி துச்சா

சனன் தவிர மற்றப்பேர்களும் திரிதராட்டிரனும் கர்ணனிங்கிப்போனதற்கு விசனப்படாமல். திங்காகிய தடை நீங்கியதைப்போல் சந்தோஷங்கொண்டு சஞ்சயனை நோக்கி, என் தம்பிபுத்திரராகிய பாண்டவர்கள் எவர்களை எவர்கள் கொல்லுகிறதென்று சபதங்கொண்டிருக்கின்றார்கள் அதனை நீறிக்தமாத்திரஞ் சொல்லுமென்று கேட்கத், திரிதராட்டிரனைநோக்கிச்சஞ்சயன் சொல்லுகின்றான்.

ஐயனே! வீஷ்மரைச் சிகண்டியும், துரோணாச்சாரியரைத் திருஷ்டத்தூய்மனும், சல்லியராசனைத் தருமராஜனும், துரியோதனன் முதலாகிய நூற்றுவரை வீமசேனனும், கர்னன் சிந்துபதிமுதலிய இவர்களை அருச்சுனனும், மாமனாகிய சகுனியை நகுலனும்! சகுனிதந்தையாகிய சௌபலன் முதலிய குலத்துள்ளோரைச் சகாதேவனும், ஆயிரம்பேர்களாகிய உமதுபேரப் பிள்ளைகளுக்கும் பதினாயிரம் பேர்களாகிய இராஜகுமாரர்களுக்கும் அருச்சுன குமாரனாகிய அபிமன்னுவும், கிருதவன்மனைச் சாத்தகியும், ஆத்திமாலையைத் தரித்த அரன்வந்து தடுத்தாலும் கொல்லுவோமென்று சபதங் கூறிக்கொண்டிருக்கின்றார்கள் விராடனும் அவனுடைய புத்திரவருக்க முதலிய சேனைகளும் திருஷ்டத்தூய்மனுக்குத் துணையானார்கள், திரௌபதியினுடைய பிள்ளைகள் இளம்பஞ்ச பாண்டவரைவரும் சிகண்டிக்குத் துணையானார்கள். தேசதேசத்து இராஜர்களெல்லாரும் தங்கள் தங்களுக்குப் பகையாகிய பேர்களுடன் போர்புரியத் துணிந்திருக்கின்றார்கள். பாண்டவர்களுக்குந்திரௌபதைக்கும் பிறந்த இளம்பஞ்சபாண்டவர் தவிர, மற்ற உபபதிவிமார்களுடைய புத்திரர் எழுபேரிருக்கின்றார்கள் அவர்களோ ஏழுயுத்த சமுத்திரத்தையும் எளிதில் நீந்துகின்றவர்கள். அல்லாமலும் (செல்லுஞ் செல்லாததற்குச் செட்டியாரிருக்கின்றார்) என்னுங்கதையைப்போல், அரவானொருவனிருக்கின்றான் மகாமாயை வல்லபத்திற்சிறந்த கடோற்கசனென்பவன் கடலைப்போல் வருகின்ற இராக்ஷசப் படைகளுக்குத் தடையாகத் தானொருவனேயென்றிருக்கின்றான். உத்தமௌசன்-உதார்மனுவென்பவர்கள் அருச்சுனனுக்குச் சக்கரரக்ஷகரானார்கள். இந்தப்பிரகாரம் ஏற்படுத்திப் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள் பாண்டவர்களென்றுசொல்லி, ஓமன்னர் மன்னனே! இனிமேல் உமதுயுத்தியிற்றோன்றிய தன்மையைச்சொல்லுமென்றுகேட்க, அச்சபையில்நிறைந்திருக்கும்பேர்களிற் சிலர் சஞ்சயனைப்பார்த்து, நீர்சொல்லிவந்தபலவான்கள் நிச்சயித்துக்கொண்ட எதிரிகளெல்லாரும் சரிதான். ஆனால் தருமராஜன் சல்லியனைக்கொல்ல இருக்கின்றானென்றீர் அதுசரியல்ல. சல்லியபூபதிக்குத் தருமராஜனெம்மாத்திரமென்று சொல்லவே, அதைக்கேட்டிருந்த விவேகமுடைய சல்லியராஜன், ஓ நண்பர்களே! சகலவெப்பங்களைத் தவிப்பதும், சீவாதாரமாயிருப்பதும், பாவவினை பரிசுத்தமுடையதும்சங்காசலம் அந்தக்கங்காசலத்தினிடத்தில் நெருப்புப்பிறக்குமாகில், எதைக்கொண்டவிக்கலாம்? அச்சலத்தைப்போன்ற தருமராஜனாகிய கருணைவள்ளல்என்னைக்கொல்ல வெகுண்டுவருவாராகில் அவருடனெதிர்த்துப் போர்செய்யத் தக்கவர்கள் இந்தத்திரிபுவனங்களிலுமுண்டோ? அவருடைய தந்தையாகிய யமதருமராஜனைப்போற் சாமர்த்தியங் கொண்டிருக்குந் தவத்தினராகையால், தருமராஜன் என்னைக்கடிந்து ஜெயிப்பனென்று தாராளமாகச் சொல்லத் தகுமென்றான் சல்லியராஜன் அதைக்கேட்ட தேசதேசத்தரசர்களெல்லாரும் வாயை மூடிக்கொண்டார்கள்.

பின்பு திரிதராட்டிரன் சஞ்சயனைநோக்கி, அப்பா சஞ்சயனே! உனக்குப்பிரயாசை கொடுத்து இவ்வளவுதூரம் பன்னிப்பன்னிக்கேட்டதெல்லாம், என் பிள்ளைகள் நெரிந்துகொண்டேதாகிலும்ஒருவழியாக வருவார்களென்னு மிச்சையை உடையவனாய்க் கேட்டதேயல்லாமல் வேறல்ல. நான் எவ்விதயோசனைகள் செய்தபோதிலும், என்புத்திரர் வழிக்குவருகிறதாக இல்லை யோசிக்குமிடத்தில் பாண்டவர்களுக்கு ஜயமும், துரியோதனாதியருக்கு அபஜயமும் உண்டாமென்று தோற்றுகின்றது. மேலும் என்குமாரர்களுக்கு இறக்குங்காலம் நேரிட்டபடியால், இப்பேர்ப்பட்ட துற்புத்தியுந் துர்யோசனையும் சேர்ந்திருக்கின்றன. பிழைக்கும் பிள்ளைகளானால் பெரியோர்களுடைய நீதிவாக்கியங்களையும், தந்தையாகிய என்வசனத்தையுந் தள்ளுவார்களோ? இறந்து போவதற்கு இதுவே திருஷ்டாந்தமாக இருக்குதென்று மனவெறுப்புடன்சொல்லி நொந்த பெரிய மன்னனுடைய மனக்கருத்தை யறிந்துகொண்ட, இரக்க மனத்தினையுடையவிதுரராஜனெழுந்து, அண்ணாவேகேளும்உமக்குப்பக்ஷபாத மில்லாமல் இருதிற புத்திரர்களையுஞ் சமமாய் நடத்தவேண்டுமென்னும் இச்சையிருக்குமாகில் அடிக்கடிசபலிக்குஞ் சிந்தையைநீக்கி உறுதிப்படுத்திக்கொண்டு மறுபடியும் மாசற்ற இதயமுள்ள சஞ்சயனை உபலாவியத்திற் கனுப்பிப் பாண்டவர்களைக்கண்டு பெரியதகப்பனார்உங்களைப்பார்க்க அழைத்துவரச் சொன்னாரென்று இனியமொழிகள் சொல்லச்செய்வீராகில், இந்த வார்த்தையைக் கேட்டவுடனே அஞ்சலிஅஸ்தராகவந்துஉமதுபாதங்களில்வணங்குவார்கள். அப்படிக்குவந்தபிள்ளைகளை ஆதரித்துப் பிரியவசனங்களைப் பேசினால், மனமகிழ்ந்து, உடல் புளகமுற்று வருத்தம்நீங்கி இராஜசபையில் பூர்வத்தில் கூறிக்கொண்ட சபதமென்னும் கோபாக்கினிகளெல்லாம்ஆறிப்போய் உமக்குரியஅன்பராவார்கள் இவ்வளவு பக்குவம்பண்ணிக்கொள்ளும்படியாக உமதுமனந்துணியுமாகில் இப்போதேசெய்யலாம் இதைவிடவேறுவிதமாகியநலங்களென்றுங்காணேனென்று

விதுரராஜனாகிய தம்பிசொல்லக் கேட்ட வேந்தன் விவேகமுள்ள சஞ்சயனுடைய முகத்தைநோக்கி, வாசனைபார்ந்தமாலைகள் புனைந்தமார்பனே! நான்சொல்லியனுப்பிவைத்தால் என்தம்பிபிள்ளைகள் என்வார்த்தையைத் தள்ளாமல் இவிடத்திற்கு வருவார்களாவென்று ஆச்சரியத்துடன்கேட்ட அரசனைப்பார்த்து சஞ்சயன் சொல்லுகின்றான்.

ஐயா! குபேரசம்பத்தே கூடிவருவதானாலும் குவலயமெல்லாம் ஒருகுடையிலாள வந்தாலும், குன்றச்செய்யும் வறுமைநோய்கள் கூடினாலும், வாராத ஆபத்துகள்வந்தாலும் மடியுங்காலமே நேரிட்டாலும் இவிடத்திற்கவர்கள் ஒருக்காலும் வரமாட்டார்கள். ஆனால் சத்தியவிரதந்தப்பாத உத்தமர்களாகையால் தந்தை வார்த்தையைத் தப்பலாகாதெனனுந் தருமத்தை அநுசரித்து இப்போதுவந்தாலும் வருவார்கள் இத்தன்மைவாய்ந்த புத்திசாலிகளாகிய புத்திரரைவரையும் அழைத்துவரும்படி உத்தரவானால் சித்தங்களிக்க இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன் விடைகொடுமென்று சஞ்சயன்கேட்க இந்தவசனமானது துரியோதனனுடைய காதுகளில் நாராசம் போலேறவும் வடவாமுகாக்கினிபொங்கி எழுந்ததன்மைபோற் கோபங்கொண்டு கண்களினாற் றீப்பொறி இறைத்து சஞ்சயனானவன் முகமாறிப் போகும்படியாய்ப் பற்பல வார்த்தைகளைச்சொல்லி, அடா சஞ்சயனே! என்னிடத்திற் சூதாடித்தோற்றுக் காடேகதியாகப் போய்க் காலங்கழித்திருந்த பாண்டவரென்னும் பஞ்சைகளைப் பால்வெண்ணெய் தயிர் முதலியவைகளைத் திருடி அன்றுதின்றகண்ணனானவன் ஏதேதோ ஆசைகளைச்சொல்லி, இன்று அழைத்துவந்து சிலதந்திரஞ் செய்துக் கொண்டிருக்கிறான். நன்று! நன்று! அவனுடைய திறத்தையும் பாண்டவர்களின் றிறத்தையும் பாழாக்கவேண்டுமென்று எண்ணியிருக்குமெனக்கு விரோதமாக நீபோய் ஐவரை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறதும் இந்தத் திரிதராட்டிர மகாராசன் அவர்களுக்கு ராச்சியங் கொடுத்து விடுகிறதும் திரிலோகமுமறிந்த தீனராகிய பாண்டவர்கள் பெற்றுக்கொள்ளுகிறதும் சிறியதந்தையாகிய விதுரன் சந்தோஷப்படுகிறதும் நான் பயித்தியக்காரனைப் போற் பார்த்திருப்பதுமாக என்னைக் கொண்டே இந்தயோசனை செய்தீர்கள். அடடா!! இஃதென்ன வனியாயம் உனக்கும் விதுரமகாராஜனுக்கும் எவ்வளவு எளிமையாய்ப் போய்விட்டேன் பார்த்தையா? நல்லது தூரத்தாலோசனை செய்யாமல் அவசரப்பட்டீர்கள். இதுவரையில் என்சோறும் என்வஸ்திராபரணமுமாகிய சகலசெல்வத்தையும் குலைவற அநுபவித்து வருகிற நீங்களும் அந்தப்பக்ஷத்திலிருக்கின்றீர்களல்லவா? ஐயோ! உங்களை ஒருக்காலும் நம்பலாகாது. இப்பேர்ப்பட்ட பக்ஷபாதிகளாகிய நீங்கள் என்சபையைவிட்டெழுந்து இந்நிமிடம் பாண்டவர்களைச் சேரவேண்டியது இனியென்முகத் தெதிர்வரவேண்டியதில்லை போய்போமென்று புகன்று, இன்னமும் இந்தச்சபையில் பக்ஷபாதிகளாயிராநின்ற பேர்கள் எப்பேர்ப்பட்ட தகுதியையுடைய சுதந்தரராயிருந்தாலும் அவர்களுக்கெல்லாம இதுவே உத்தரவென்றுசொல்லி வெண்கலமென்று சொல்லுமிடத்தில் ஓட்டை ஓட்டையென்று சொல்லத்தக்க பேர்களைப்போலும் தலைமாட்டுக் கொள்ளியைப் போலும் இவிடத்திலிருந்துகொண்டு எந்நேரமும் தைரியமில்லாத வார்த்தைகளைப் பேசிச் சஞ்சலத்தையுண்டாக்கிக் கொண்டிருக்கும் பேதையர்முகத்திற் பெரியவள் வாசமாகயிருப்பாள். அப்பேர்ப்பட்டவர்களுடைய முகத்தில் நாம்விழிக்கலாகாது அவர்கள் நிழலும்நமது பேரிற்படலாகாது. அவர்கள் வார்த்தைகளையும்நமது காதுகேட்கலாகாது. அப்படி மருவிக்கேட்டுக் கொண்டிருப்போமாகில் நமக்குண்டாகிய செல்வமும்வீரமுங் குறைந்துபோகும். ஆகையால் இப்பேர்ப்பட்டவர்களெல்லாரும் பலசாலிகளாகிய பாண்டவர்களிடத்திற் போய்ச்சேருவதே மிகுந்தநன்மையாக இருக்கும் நீங்கள் என்னைவிட்டுப்போவதினாலெனக்கொரு குறைவுமில்லை என்னுயிர்த்துணைவனாகிய கர்னமகாராஜ னொருவனிருந்தாற் போதும். அவருடன்கூட மாமன் தம்பியர்கள் தேசத்தலைவர்கள்முதலாகியபற்பலபேர்கள் என்னிடத்தில் நண்புகொண்டிருக்கின்றார்கள். (கூனனைக்கொண்டு குழப்படிமாமி காணிக்குப்பிள்ளையுறும்) என்னும்பழமொழிபோல் இவர்களைக்கொண்டு எதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றிபெறுவேனேயன்றி, நான் சாகிறவரையிலுஞ் சமர்செய்யாமல் நிறுத்திப் பொறுத்துத் தரித்திருக்கமாட்டேன், ஒருவருக்கும் வணங்கிப்பயந்து இணங்கிஅடங்கிஉத்தரஞ்சொல்வேன். (தலைக்குமேலோடியவெள்ளஞ் சாணோடியுமென்னும் முழமோடியுமென்னும்) என்னும் பழமொழிபோல் நான்பயப்பட்டேன். அவரவர்களுக்கு எந்தெந்தப்படி இஷ்டமிருக்கின்றதோ அந்தந்தப்படிக்கு நடந்துக்கொள்ளலாம். அதற்கு யாதொருதடையுமில்லை. (கெட்டமாடு தேடுவாருமில்லை மேய்த்தகூலி கொடுப்பாருமில்லை) சம்பளமில்லாச்சேவகமும் கோபமில்லாத துரையும் ஏற்பட்டிருந்தால் வேலைநடக்குமா? மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவார்போலே நான் உங்களைநம்பியிருக்கவில்லை. (மண்ணானையானாலும் எலிபிடிப்பது லாபம்) என்பதுபோல் உருக்கியசெம்பிலும்ஒளிமிகுந்தகோபக்கண்களையுடைய உத்தமன் அங்கதேசாதிபதியாகிய எங்களண்ணன் கர்னமகாராஜனுடைய கரத்திற் பிடித்திருக்கும் வில்லானது, சத்துருக்கள்வந்தவளைத்துக்கொண்ட காலத்தில் அவர்களைவெதுப்பிநாசப்படுத்தி யெனக்கு வெற்றியைக் கொடுக்குந் துணையாயிருக்கின்றது. அதைநான் விபரித்துச் சொல்லவேண்டியதில்லை. என்பேரில் அன்புடையவர்களைப்

போலிருந்து இதுவரையில் கேழ்வரகரைத்தது போதும்போதும் அகனுமினென்றான் துரியோதனமகாராஜன்.

வினையையே துணையாகக்கருதிய வித்துவ வேந்தன் இப்படியாகச்சொல்லிய வார்த்தையைக் கேட்ட திரிதராட்டிரன் மனம்புகைந்தெரிய வெம்பி, விசனமடைந்து, வெவ்விய சோபங்களையும் தாபங்களையும் அடக்கிக்கொண்டு, விதுரனையும் சஞ்சயனையும் நோக்கி மதுமொழி சொல்லாநிருக்கும் படியாகத் தனது காத்திறைற்றடவியணைந்து கரமமைத்து, கண்ணீர்சொரிந்து, ஐயோ! என்னபாவம்? இந்தப்பாவி முன்பின் எண்ணுமல் வார்த்தைசொல்லுகின்றானே என்றேங்கி ஏதுந்தோற்றாமற் சற்றுநேரமிருந்து பெருமூச்சுவிட்டு, ஆ! ஆ! சிருஷ்டிகர்த்தாவாகிய தெய்வமே! இவன் இவ்வாறு அக்ரமித்திருப்பது பூமியில் மாண்டு விழவோ? அல்லது பூமியையாண்டுவாழவோ தெரியவில்லை. நீர் இவனதலைப் லெவ்விதமாயெழுதிஇருக்கின்றீரோ அறிகிலேன் விதியையநுசரிக்கு மதியென்பதற்குச் சரியான அறிவும் பிறந்திருக்கின்றதே அதைவிலக்கி நடத்திவைப்பதற்கு என்றாத்திலில்லையே(கண்ணைக்கெடுத்த தெய்வங் கோலைக்கொடுத்தது போல்) எனக்குமேலான புத்திரபாக்கியங் கிடைத்தும் உள்ளசரக்கைக் கப்பலிலேற்றி நடுக்கடலில் கவிழ்த்து வருந்திய ஒருவன்போல் அதைப்பகைவர்க்குப் பலிகொடுத்துத் துன்புறலாச்சே என்றுவாடி பிள்ளையை நாடி ஓதுரியோதனா! பாண்டவர்கள்பேரிற் பக்ஷமாய்ப் பேசுகிறதாய்ச் சொன்னையே அவர்களாலிவர்களுக்காக வேண்டியதென்ன இருக்கிறது அப்பா!இப்படிக்கெல்லாம் நல்லோராகிய நமக்கினியவர்களின் மனம்நோகப்பேசாதே (ஊருடன்பகைக்கில் வேருடன்கெடும்)என்னும் வேதவாக்கியத்தைமறந்தாயோ (சிறியோருடன்சேராதே செம்புக்குப் புளிவாராதே) என்றுசொல்லும் என்மொழியையோசிக்கஇல்லையோ (பெரியோரைத்துணைகொள்)என்பதைப்போக்கிவிட்டையோ? அப்பா!பெரியோர்கள் வருந்தப்பேசுவது புகழன்றென்றுசொல்லி இதுயார் செய்தபாவமோ யாரிட்டசாபமோவென்று தன்னைத்தானெநொந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் வீஷ்மரெழுந்து தன்வீட்டுக்குப்போனார் அவருடனே துரோணச்சாரியர்கிருபாச்சாரியர்-அசுவத்தாமர்-விதுரர் முதலாகியபெரியோர்களும் சிந்துதேசாதிபதி-மத்திரதேசாதிபதி-சகுனியாகியமாமன்-தொண்ணூற்றொன்பது தம்பிமார்கள் தேசாதூர் முதலானபேர்களும் சபையைவிட்டு நீங்கி இனியாவரும் எமதூதர் கைக்குள்ளடங்குங் காலஞ் சமீபித்ததென்றேங்கித் தங்கள் தங்களுடைய விடுதிகளிற்சார்ந்தார்கள். ஆலகாலத்தையொத்த துரியோதனன் அருமருந்தனைய சஞ்சயன் மூலவேராகிய திரிதராட்டிரன் இவர்கள் மூவருந்தான் சபையைவிட்டு நீங்காமல் இருந்தவர்கள்.

இப்பால் குளிர்ச்சி தங்கிய ஓர்வெள்ளைக்குடைநீழலில் அநேக உலகங்களை யாளும் திரிதராட்டிரமகாராஜன் ஒப்பில்லாத பிள்ளையையும் சிறந்த சஞ்சயனையும் அழைத்துக்கொண்டு பரிசுத்தமும் பதிவிரதாதனமுங்கொண்டு பிரகாசமுற்ற பொற்பிரதிமையையொத்த காந்தாரியம்மனிருக்கும் உயர்ந்த அரண்மனைக்குட்சென்றான் அந்தக்காலத்தில் காந்தாரிதேவியானவள் தன்கணவனை எதிர்கொண்டோடி பாதபூசை செய்து பத்திரமக்ஷதைசாத்தி வணங்கி சிங்காதனத்திற் சேர்பெறவமைத்துத் தீர்க்கதண்டஞ்செய்துஇருக்கும்போது துரியோதனன் தனதாயைப் பணிந்துக்கொள்ளவும் அவனைவாழ்த்தியெடுத்து மார்புறவணைத்துவிட சஞ்சயனுந் துரியோதனனும் அரசனுக்குச் சமீபத்திலிருந்தார்கள் அப்போது திரிதராட்டிரன் காந்தாரியைநோக்கி பெண்ணே! இன்றைபத்தினம் இராஜசபையிலிருந்த எல்லோர்களுங் கூடிப் பற்பல நீதிநெறிகளையும் தருமங்களையும் அற்புதமற்புதமாக எத்தனைவிதத்திலெடுத்துச் சொல்லியும் உன்புத்திரனாகிய சர்ப்பக்கொடியோன்விற்பிடித்துப்போர்செய்வதே பொருளெனக்கொண்டு பூரிப்படைந்திருக்கின்றான். விசாரிக்குங்காலத்தில் மேலாகிய தவத்தினாற் கொண்ட அஸ்திரசஸ்திரங்களின் திறத்தையும் மறத்தையும் அறத்தையும் பூரணமாகப்பெற்றிருக்கும் புகழினையுடைய பாண்டுவின் புத்திரர்களுடன் யுத்தஞ்செய்யத் துணிவது தகுதியல்லவென்றும் பொருந்திவாழ்வதுவே உத்தமமென்றும் நம்மிடத்தில் பத்தியையுடைய மன்னர்பலருஞ் சொன்னார்கள் நான்இந்தச் சிரேஷ்டபுத்திரனை நோக்கி, அப்பா! பகைதேடிக் கொள்ளவேண்டாம் வகையில்லாமல்வயிரமெனவிளையும் யுத்தத்தைநிறுத்திவிடுமகனே என்றுசொல்லியும் நமதுதந்தை நமக்கு விரோதஞ்சொல்லுவாரா என்றெண்ணமல் கர்ணனுடையவார்த்தையைக்கனகமலைபாக நம்பி, என்வாக்கியத்தை இகழ்ந்துவிட்டான் ஆகையால்நங்கையே! உன்னைக்கொண்டாகிலும்உன் புத்திரனுக்குத் தெரியச்சொல்லச் செய்து சீர்படுத்தலாமென்றெண்ணங்கொண்டு இவ்விடத்திற்கு அழைத்துவந்தேன் இப்போதும் பாண்டவர்களுக்கு விசேஷித்ததொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை. முன்னேயவர்கள் சூதாடித் தோற்றுப்போனபூமியை இப்போதுகொடுத்துவிட்டால் அவர்கள்கூறியசபதமும் மனஸ்தாபமும் மேற்கொண்ட கோபமும் மாறிப்போய்விடுவார்கள். நமது பெரியோர்களின் எண்ணமும் இப்படியே இருக்கின்றது. இதைவிட்டுத் தீமைபுத்தியையுடைய தீங்கினர் வாய்மையை ஸ்திரமென்று நினைத்துச் சமர்செய்யப்போகின்றானும். அப்படி சமர்செய்யத் தொடங்குவானுகில் ஜயாபஜயம் எப்படிமுடியுமோ தெரியவில்லை ஜெயமும் விபகாரமுட்சேற்றில் நட்டகம்பம் ஆதலால் உன்னுடைய புத்தியிற்றெளிவாகச் சிந்தித்து, அஸ்தினபுரி ராஜனாகிய இந்தத் துரியோதனனுக்குத் தெரியப்படுத்தக் கடவை

யென்று திரிதராட்டிரனாகிய நாயகன்கூற, தேவியானவள் அந்தவார்த்தையை மந்திரம்போற் கேட்டு வணங்கி எதிரிலிருந்த மைந்தனை நோக்கிச்சொல்லத் தொடங்கினாள்.

ஓ என்னருமைச் செல்வனே! (பெரியாரைப் பேண்) என்னும் வாக்கியத்தைக் கொண்டு பெரியோர் சிநேகத்தை விடுத்துப் புகழைப் பெறுயல், பெரியோர்சொல்லும் வார்த்தையைப் பிரையோசனமல்லவென்று இகழ்ந்து விடுவது சிறுமையோ அல்லது பெருமையோ? இவ்வுலகமன்றி மற்றெவ்வுலகத்திலும் இணையில்லாமற் சிறந்த என்மைந்தனே! உன் றந்தையானவர்களிந்து மிகுந்த ஆசையுடன் சொல்லுந் தன்மைப்பிரகாரம் நடந்து பெரும் வாழ்வைப் பெறக்கடவை யென்றுரைத்துவாழ்த்திய அன்பினையுடைபதாயைப்பணிந்து, அரவக்கொடியோன் - அம்மா ஐவர் சம்மதித்துச் சூதாடி இழந்த அவனியை இப்போது நான் கொடுத்துவிடுவேனாகில், அவர்களுடைய ஆண்மைத்திறத்தினுக் கஞ்சிக் கொடுத்துவிட்டதாய் வீரராகிய வேந்தர்கள் அவமதிப்பாய் நினைத்து நிந்திப்பார்கள்: அதனாலெனக்குக் குறைவுண்டாகும் இதுவரையிலும் பத்துத்திசையிலும் வெற்றிசெலுத்திச் சுற்றத்தாருடன் சுகவாழ்வைப்பெற்ற வணங்காமுடியோனாகிய யான்இப்போது பசபசவென்றுவிழித்து வசைகொண்டு இரைபெற்ற பாண்டவர்களுடைய பாதங்களில் வணங்கி இச்சகஞ்சொல்லி, என்சாணுடம்பு மொருசாணாகக்குன்றி வயிறுவளர்த்துக் கொண்டு உயிருடனிருந்து வாழேன் ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு அம்மணி! அழியும்பிராணனை அவத்தில் மாய்க்காமல் அமர்புரிந்திறப்பேன். அல்லவென்றால் என்னுடைய வெற்றியையும் பாண்டவர்களுடையயுத்தி சகாய சாமர்த்திய சத்தியையும் ஈரேழுலகமுங் கொண்டாடும் படியாகச் செயம்பெற்று, புவனசக்கிரேஸ்வரனென்னும் புகழ்கொண்டு இப்பூமியை யாள்வேன் அற்பபலங்கொண்ட ஐவர்கள் என்னுடனே நேர்த்துநின்று போர்புரியமாட்டார்கள். எதிர்நின்று வென்று ஜயங்கொள்ளும்படியாகிய முறைமை இதுவரையிலும் என்னிடத்தில் இருப்பதுமன்றி இன்னமுமுயர்ச்சிசெய்துக் கொண்டிருக்கிறேன். இதன்றியும் சொக்கட்டானை யுருட்டித்தங்கள் செல்வமுழுமையுந் திரட்டிக்கொடுக்கப் பெற்றுக்கொண்ட நான் அவர்களைக் காட்டில்விரட்டி விட்டிருக்க, மாண்டார்போல் வனமடைந்த பாண்டவர்கள் மீண்டுவந்து என்னை மருட்டிப் பூமியைப்பெறக்கருதினால் பேரிகைச்சத்தங் கேட்டிறந்த நரியைப்போற்பயந்து பூமியைக் கொடுக்கமாட்டுவேனோ? ஒருக்காலும் ஏமாறமாட்டேன் ஐவர்கள் பூச்சிகாட்டவந்ததும் அவர்கள் பொருட்டில் நம்மிடத்தில் இருக்கும்பலபேர்கள் எச்சுக் காட்டிவிருந்ததும், இவைகளையெல்லாம்யோசிக்காமல் என்தந்தை சபையினிடத்தில் என்னுடைய வல்லபத்தை இகழ்ந்துபேசியதுங்கேட்டுச், சகிக்காததோபத்தினாற்றந்தை வார்த்தையைத்தடுத்தேன். தாயே! வச்சிராயுதன் முதலாகியபேர்கள் வந்தாலும் லக்ஷியமில்லாமல் வெல்லுந் திறத்தினையுடைய என்சேனைகளையுத்தகளத்திற் கண்டவுடனே, பாண்டவர் மெத்தவருந்தி இறப்பார்கள் என்றிவ்வாறு பற்பலவித பராக்கிரமங்களைப் பவளம்போன்ற இதழினையுடைய காந்தாரியினிடத்திற் சொல்லிக்கொண்டு வராநின்ற மகனுடைய மனமுடிவில்லாவுரையைப் பெரிய மன்னவன் கேட்டு மயக்கமுற்று வாடி வருந்திப் பெருமூச்சுவிடுத்து, ஏதேது இனிகாரியமில்லையென்றெண்ணி, தெளிவினையுடைய சஞ்சயனைநோக்கி, புத்தியிற்சிறந்த உத்தமனே! பாண்டவர்களுடைய பலங்களையுங்குமாரர்களினுடைய தோளாண்மைகளையும் அதியோபாந்தமாகத் தெரிந்தவன் நீயாகையால் இந்தஇருதிறத்தாருமெதிர்த்து யுத்தஞ்செய்தால் எவர்கள்வெல்லுவார்கள்? எவர்கள்தோற்று இறப்பார்கள்? இதை யான் தெளிந்துக் கொள்ளும்படியாக உள்ளபடி சொல்லென்று திரிதராட்டிரன் கேட்கச் சஞ்சயன் சொல்லுகின்றான்.

அரசனேகேளும்! காலக்கியானந் தெரியாத மானிடனாகையால் இதையறிந்துசொல்லுந்திறம் எனக்கில்லை தேவரீர் தெரிந்துக்கொள்ள வேண்டுமாகில், அளவற்ற புகழ்பெற்ற மூலகாரணனாகியும் முக்காலமுணர்ந்த தவசிரேஷ்டனாகியும்இறப்பும்பிறப்புமற்ற இறையாகியும் வேதங்களைப்பெற்றவிமலனாகியும்விளங்காநின்ற ஸ்ரீவேதவியாசரைத் தாமசமில்லாமல் வந்தித்துச் சிந்திப்பீராகில், அவர்சிறந்துவந்து உமக்கு தெரிவிப்பாரென்று சஞ்சயன்சொல்ல, சரிதானென்றுட்கொண்டு சஞ்சலமகற்றி, அசைவற்ற தன்மையிலிருந்து வருந்தி நினைத்தபோது மின்னார்ந்த பொன்போலும் புரிவோடியசடையும் பூமுடியும் புலித்தோலுடையும் அசைந்தநடையும் மிதியடியும் அழகிய குடையும் கரத்திற்றடியும் முப்புரிநூல் விளங்கு மார்பும் விபூதிதூளிதமேனியும் பிரகாசிக்க விண்ணைவிட்டிறங்கிய சூரியனைப்போல்வந்து வேந்தனுக்கெதிர்நின்ற ஸ்ரீவேதவியாசரைத் திரிதராட்டிரன் காந்தாரி துரியோதனன் சஞ்சயன் இவர்கள் நால்வருங்கண்டு எதிர்க்கொண்டோடி சாஷ்டாங்க தண்டனிட்டு அருக்கியபாத்திய ஆசமனிய அட்சதைசந்தனாதி தூபதீபங்களுங் கொடுத்து ஆசனத்திலெழுந்தருளச்செய்து கலக்கமுற்றமனத்தினையுடைய காந்தாரிநாயகன்கண்ணீர்சோரவிட்டுத் தானெண்ணிய காரியங்களைக்குறித்துக்கேட்கவும் பெருமையிலுயர்ந்த ஸ்ரீவேதவியாசர் கேட்டுக் கலீரென நகைத்துத் திரிதராட்டிரனைப் பார்த்து, நாளை நடக்கப்போகிற சமரிலெதிர்க்கும் பிள்ளைகள் நூற்றைவரில் இறப்பவர்கள்யார் இருப்பவர்கள்யார் என்று கேட்டனை. இந்தக் கேள்விக்கு

விவேகத்திற்சிறந்த மேலானவர்கள்விளம்பியமொழியொன்றுண்டு அஃதென்னவென்றால் சத்தியதருமமுள்ள விடத்தில் ஜயமுண்டாம் அசத்தியம் அதர்மமுள்ளவிடத்தில் அபஜெயமுண்டாமென்று பழமொழி இருப்பதினால் நல்வினையை நட்பாகக்கொண்டும், நல்வினைக்குத்தக்க நல்லொழுக்கங்களுக்குத் துணையாகயிருந்தும் நடத்திய நல்லோரெவர்களோ, அவர்களுக்கு நலமும்-பலமும்-ஜபமும்-புகழ்ச்சியுமுண்டாம். இதைவிடுத்துத் தீவினையை நட்பாகப்பெற்றும், தீவினைக்குத் தக்க தீயகுணங்களுக்குத் துணைப்பட்டிருக்குந் தீயராகிய பேயர்களுக்குத்தீமையும்-துயரும்-இகழ்ச்சியும்-அபஜயமும்-எமபாதைப் பந்திப்பாகிய நரகவேதனை முதலிய துன்பங்களுமுண்டாகும். மேலும் உன்பிள்ளைகள் எழாமுத்திரத்திற்கொப்பாகியசேனை சயினியங்களைக் கொண்டு யுத்தஞ்செய்து வெற்றிபெறக்கருதி யுத்தபூமியில்வந்தாலும் இவர்கள்படையினிடத்தில் தானவவைரியென்னுந் திருமாலுக்கொப்பாகிய வீரர்களிருந்தாலும் தேவர்கள்மதித்து மகிழும்படியாகப் புகழ்ந்து யமதூதர் உயிருடன்விட்டு விடுவார்களோ? ஒருக்காலும் விடார்கள்.

இன்னமுங்கேளும் அரசனே! ஆனால் எமதநாத்தனுசிய கடவுளின் கருணைக்கண் எவர்களிடத்திற்றங்கி இருக்கின்றதோ; அவர்களுடையபுபத்தில்சேற்றெண்டையையொத்த கண்களையுடைய ஜயலட்சுமி சேர்ந்து வாழ்வாள். கிளைகள் தழைந்தசோலைக்கொப்பாகிய பந்துமித்ரபுத்ர சம்பத்துக்களுடன் சிறந்த செல்வத்தைப் பெற்றோங்கிய திரிதராட்டிர மகாராஜனே! இவைகளைச் செவ்வையா யோசிக்கக் கடவை. அஷ்டாக்ஷரப் பொருளாகிய மாதவன் - ஸ்ரீநாதன்-ஹரிவாசுதேவன்-முகில்வண்ணன்-முரஹரி-ஜநார்த்தனன்-பக்தபராதீனன்-பக்தவற்சலன்-பரமதயாளன் பரமபுருஷோத்தமன் என்னுந் திருநாமங்களிற் பல நாமங்களைக் கொண்ட பகவானுடைய பாதபங்கயங்களை யுள்ளத்திற்கொள்ளும் பரமபாகவதர்கள்பெறுதற் கருமையாகியபேறு பிரமாண்ட பேரண்டங்களினுமேலாகியது. ஆதலால் இத்தன்மைவாய்ந்த பரமரகசியத்தை நீங்கள் கைப்பற்றமற் போனீர்கள். இதற்குத் திருஷ்டாந்திரம் சத்தியசவுச ஆசாரசற்குணங்களிற்றழைத்த அந்தப்பாண்டவர்கள் தங்களுடைய நாதனென்றும், தங்கள் மைத்துனனென்றும், தங்கள் சகாயனென்றும், ஆபத்திலருள்புரியுமையனென்றும் திரிகரணசுத்தியாய்ச் சிந்தித்து அவர்நடந்துகாட்டி நடத்தும் நன்னெறிப்பிரகாரம் நடந்து வருகின்றார்கள் அதனாலவர்கள் எந்தக்காரியங்களிலும் வெற்றி பெற்று வருகிறார்கள். உனதுபுத்திரர் வெற்றிபெறுவார்களென்று எவர்கள்சொல்லுவார்கள் வேந்தனே புள்ளாங்குழலைப் பூரிக்குஞ் செம்பவள வாயனாகிய மாயன், சிந்திப்பவர்களுக்குச் சேயினிடத்திற்பொருந்திய தாயைப்பார்க்கிலும் பரிவுள்ளநேயனானவனென்று துணிவுகொண்டு, நீங்களும் நேசவிசுவாசத்துடன் அந்தக்கடவுளை நெஞ்சில்நினைப்பீர்களாகில்நினைத்தகாரியங்களெல்லாம் இனிமேற் கைகூடுமென்று வெருவாகிய வசனங்களைப் பரிசுத்தமுள்ள ஸ்ரீவேதவியாசர் சொல்லக் கேட்டிருந்ததிரிதராட்டிரன்முனிசிரேஷ்டனுடைய கருத்தைத் தெரிந்துக் கொண்டு வணங்கி என்னிஷ்டதெய்வமே! இவ்வுலகவாழ்வென்னும் மாயை வலைக்குட்சிக்கியுழன்று வருந்திமாய்தவியும் பெருமோசத்தைக் கண்டிருந்தும் படுகுழியில் வந்துவீழுமென்னைப் பாதுகாத்து யானுய்யும்பொருட்டு வேதவிதியாகிய தத்துவத்தை யெனக்கு விளம்பியருளிச்செய்யவேண்டும். சுவாமிகளால்சகலகாரியங்களையும் இப்போ தறிந்துங் கொண்டேன். போனநாட்போக இன்னுன் முதற்கொண்டேனும் மன்னுயிர்யாவையும்பெற்றளிக்கு மாதவனுடையமலரடியை மனத்தில்நிறுத்தி, அவனுக்கடிமையாகிய அரசுபுரிந்து வாழ்வேன். இதுவரையிலும் உலக அரசையே உற்றகதியென்று நம்பி அறிவழிந்தேன் என்று திரிதராட்டிரன் சொல்லித்துதிக்க இதைக் கேட்டிருந்த மாசுணக்கொடியோனாகிய துரியோதனன்சொல்லுகின்றான்.

இப்போது ஐயர் அவர்கள் எவனையோ விசுவாசித்து நடந்துகொண்டால் ஒருகுறைவுமில்லையென்று சொன்னார்களே; அவன் இவ்வுலகங்களை யெல்லாம் ஓரடியிலளந்த திருமாலானாலும், மற்றெவ்வுலகங்களையும் விழுங்கிக்கக்கின அரியானாலும், குழந்தையிற்றானே பூதகியின் பெருப்பாலுடன் அவள் பிராணனையுமுறிஞ்சிவிட்ட அவனானாலும், ஆத்மகோடிகளைச்சிருஷ்டித்த அயனுக்கும் அப்பனானாலும், பலவித ஆபரணங்களினாற் பிரகாசிக்கு மார்பினனாகிய அருச்சுனனுக்கு உறவாகி அந்த ஐவருள்ளத்திலும் பொருந்தியிருக்குந் தன்மையினால், அவனுக்கு இவ்வுலகத்திற்கோர் திலகம்போன்றயான், எள்ளத்தனைப்போதும் என்சிந்தையால் வந்திக்கமாட்டேனென்று வரையறுத்துக்கூறிய மைந்தன் வார்த்தையைக் கேட்டமன்னவன் எதிரிலிருந்த மாமுனியைநோக்கி, சுவாமி!, இவனென்னகாரணத்திற்கு உற்பத்தியானனோ? எல்லாருயிரையும் போக்கவந்தயமனோ? அல்லது இவன் பிள்ளையோ? பெரும்பூதமோ? என்குல கோத்திரத்தைக் கெடுக்கவந்த குறளியோ? துதிக்கும் புகழை அழிக்கவந்த துடைகாலனோ?. யானறியேன். இன்று முழுவதும் நான்சொல்லிய வார்த்தைக்கெல்லாமெதிர்த்து மாறுபாடாக மறுத்துச்சொல்லுவதேயன்றி, இப்பாவி கிஞ்சித்தும் இணங்கிவரஇல்லையே. இவனுக்குச் சாங்காலஞ்சமீபித்ததோ கடவுளே?(ஆங்காலம் பொய்யுமெய்யாம், போங்கால மெய்யும்பொய்யாம்) என்றுபுவியில் வழங்கும் பழமொழியும் என்னளவில் உண்மையாச்சே ஆகிலும் அநித்தியமாகிய உடலென்னும்பொய்யைமெய்யெனப் பேர்கூறி இருக்கும்

விதம் மிகவும் ஈன்ருகவே இருக்கின்றது. ஐயோ! மாயாமயக்கப் பிரபஞ்சவலையி லகப்பட்டுமனம் வருந்திமடியவேண்டிய தென்னேயென்ற மைந்தனை வேதவியாசர் திடங்கொண்டுநோக்கி, குற்றமில்லாத ஏன்குலந் தழைக்கப்பிறந்த உத்தமனே! உன்சிந்தையினிலேத்தவண்ணம் நடக்கக்கடவையென்று பற்பலவிதமாகிய வெறுப்புவார்த்தைகளைவிளம்பி புத்திரபாசப்பெரும்பிணிப்பதனல் மறுபடியுஞ் சிரேஷ்ட புத்திரனுடைய மனத்தை எவ்விதத்திலாகிலும் ஸ்திரம்பெறத்திருத்திப் பெரும்புகழ்மாண்பில் நிலைநிறுத்தவேண்டும் என்கிற எண்ணத்தோடு வியாசபகவான் சொல்லுகின்ருர். சேளும் அரசனே! நீஏதுக்கு வீணய் வருந்துகின்ருய் சரம்புபற்றிப்போனமனம் இனித்திரும்பாது. இவனுக்கேற்படுத்தி இருக்குந் தலைவிதிப்பிரகாரம் இவன்சத்துருக்களுக் கெதிரில் யுத்தஞ்செய்து இறக்குங் கொள்கையை உடையவனகவேயிருக்கின்ருன். இதுஉண்மைதான். இன்றுமுதல் நீஉலகரட்சகனுகிய உவணமூர்த்தியின் உபயதிருவடிகளை உள்ளத்திற் சிந்தித்துக்கொண்டு, நீர்க்குமிழிபோன்ற இவ்வுடல் இருக்கின்றவரையில் கால ஹேதுவாய்ப் பிறந்து வாதிக்கும். இச்சிறுவர்கள்மீதுவைத்த ஆசைப்பெருக்கினல் விருதாவாகிய பற்பல சிந்தையையும் பற்பலதுயரங்களையும் விடுத்துச், சதாகாலமும் நிர்விவகாரசித்தனுய் நன்னெறிநிலையில் நிற்கக் கடவையென்று வேதமுனிவன் விளம்பிய தண்ணமுதினுக்கொப்பாகிய மொழிகளைத் தன்செவியாரக் கேட்டு, இதுவே கடைப்பிடியென்று மனங்கொண்டு, விக்கியான வந்தனுகி சுக்கியான குரியனையொத்த வியாசருடைய பாதங்களில்வீழ்ந்து, சுவாமி! எந்தபாசபந்தநெறியைத்தொடர்ந்து எவர்கள் கெட்டழிந்தாலும் தேவரீருபதேசித்த திருமந்திரத்தைச்சிந்தனைசெய்து என்காலகதிக்குத் தகுந்த இச்சையைப் பெறுகின்றேன் இறைவனேஎன்று கரங்குவித்திறைஞ்சிய திரிதராட்டிரனுக்கு ஆசிர்வதித்துத், தட்சணமவானத்திற்ருேன்றிய மின்னலைப்போல் மறைமுனிவன்மறைந்துபோயினர்.

இப்படி வேதங்களை விரித்து விளப்பியருளிய ஸ்ரீவேதவியாசர் போயினபின்பு திக்குநோக்கித் தெண்டனிட்டுக்கொண்டு, தனக்குச்சமீபத்தில் நிற்காநின்ற புத்திரனைநோக்கி, இதுவரையில் யாங்கள்கூறியவனைத்தும் உள்ளத்திலிருத்தி நினைத்து, உன்மனதுக்கு இஷ்டமானபடி செய்யென்றுவிடைகொடுத்துவிட்டுச் சிவந்த சூரியனைப்போலொத்ததேகத்தையும் விவேகத்தையுமுடைய சஞ்சயனை விடுதிக்குப்போகும்படி அனுப்பிவிட்டுப்பலமணிகளினலும் நல்ப்பெறச்செய்த மாளிகை இடத்திற் காந்தாரியுடன் ஆகுங்காரியங்களை யோசித்துக் கொண்டிருந்தான் திரிதராட்டிரமகாராஜன் இதுகால் இருளில்லா மனத்தினையுடைய சஞ்சயன் தெளிவுற்ற பாண்டவர்களிடத்தில் தூதுபோய்வந்து உரைத்த பலவாக்கியங்களையுந்தெளிவில்லாத திரிதராட்டிரன்முதலாகியபேர்கள் அவைகளைத் தெரிந்துக்கொண்டதைக் குறித்துப் பேசிக்கொண்ட விதங்களியாவையும் விளம்பினேம். இப்பால் மயக்கமற்ற பாண்டவர்களிடத்தில் வார்த்தையாடி விடைபெற்றுக்கொண்டு சஞ்சயன் வந்தபின்பு அந்திவண்ணனுடைய அருளைக் கவசமாகக்கொண்டு அடல்புரியத்துணிந்து, ஹரிபரந்தாமனுடைய அடியிணையைப் பணிந்துவாழும் ஐவர்கள், உபலாவியத்திலிருந்த உத்தமர்களுடன் கலந்து இனிநடத்தாநின்ற செய்கைகளுஞ் சொல்லுகின்ருேம். கேளும் ஜெனமேஜெய மகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லுவதாயினர்.

சஞ்சயன் தூதுச்சருக்கம்முற்றிற்று

மூன்ருவது,

கிருஷ்ணசுவாமி தூதுச்சருக்கம்.

கண்ணன் துதி.

அரியதன் கலைவாண் மதியமுங் கொதிகொ ளாலமுந் தனதிடத் தடக்கி
யுரியவொன் கங்கா நதிக்கொரு பதியா யுயர்பெறு முயர்மகோ ததியிற்
பரியதின் சிலையோ டம்பெலா முகற்று பற்குணப் பொருப்பிடை பொழியுங்
கரியபைம் புயலைக் கைதொழு மவரே கருவ்லே திருவுடை யவரே.

திருநாட்டிற்சிறந்த குருநாட்டிற்பிறந்த ஜெனமேஜெய மகாராஜனே கேளும்! தம்பிமார் நால்வருடன் தருமபுத்திர மகாராஜன்பன்னிரண்டாண்டுவனவாசமும் ஓராண்டு அக்யாதவாசமுந்தொலைத்து உபலாவியமென்னும் பட்டணத்தில் வந்திருந்து, தன்னுடைய ஸ்ரீதன புரோகிதனுகிய உலூகமுனியை துரியோதன னிடத்திற்குத் தூதனுப்ப, அந்தத்துரியோதனன் தன்தந்தையாகிய திரிதராட்டிரன் முதலானவர்களோடுங் கலந்துபேசிக்கொண்டு, இன்னுஞ்சில தினத்தில் மேல்நடக்கவேண்டிய காரியங்கட்குச்சொல்லி யனுப்புகிறேமென்று உலூகமுனிவரையனுப்பிவிட்டுத் தங்களுடைய புரோகிதனுகிய சஞ்சயமுனி

வனை யழைத்து, நீர் உபலாவியத்துக்குச் சென்று பாண்டவர்களைக்கண்டு ஞானப்பிரசங்கம் பேசி தருமபுத்திராதியரை இன்னமும்வனவாசம்போகத்தக்கதாக இசைத்து வாருமென்றனுப்ப, அந்தப்படியே சஞ்சயன் பாண்டவர்களிடத்தில்வந்துஞானப்பிரசங்கஞ்செய்து, ஆக்கை-செல்வம்-ஆயுள் இவை முதலியவைகள் அனித்தியமாகையால் நித்தியமாகிய தவமிழைத்து முத்திபெறுவதே உறுதியாகிய உத்தமமென்றுரைக்க, அதைக்கேட்ட வீமசேனன் மெத்தவுங் கோபித்துச், சத்துருசங்காரஞ்செய்துநாங்கள்கூறிய பிரதிக்கினையை முடிப்பதே தவமென்று பேசியனுப்ப, இவ்வார்த்தையைக்கேட்ட சஞ்சயமுனிதிரும்பி அஸ்தினபுரம் போனபிற்பாடு, பாண்டவர்கள் மற்ற மன்னவர்களோடு இனிநடக்கவேண்டுங் காரியங்கட்கு ஆலோசிக்கத் தலைப்பட்டவர்களாய், சமாதானத்தாற் காரியங் கைக்கொள்வதான சாமமும்,பொருள் முதலியவற்றைக் கொடுத்துக் காரியவனுகூலம் பண்ணிக்கொள்வதான தானமும், வேறொருவராற் பகையை விளைத்துத் தான் சிநேகமாயிருந்து காரியசித்தி செய்துகொள்வதான பேதமும் நால்வகைச் சேனை கொண்டெதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றியுடன் வேண்டியவைகளைப் பெறுவதான தண்டமும் ஆகியஇந் நான்கும் இராஜர்களுக்குரிய உபாயமாகையால் இவ்விதமாகிய தந்திரயுத்தி புத்திமுதலாகிய நீதிமுறைமைகளில் வழுவாமற்பேசிச் சத்துருக்களை வசப்படுத்தி, ஆகவேண்டிய காரியங்களைக் காலத்துக் கேற்றவாயமைத்துக்கொண்டு வரத்தக்கவல்லவர் கோபால கிருஷ்ணரே யன்றி வேறொருவரில்லை யென்றுணர்ந்து, பரிமளம் பொருந்திய பரிசுத்தமாகிய குளிர்ச்சி கொண்ட அத்துளபமாலையனை மீட்டுந் துரியோதனனிடத்திற்குத் தூதுவிடுவதற் கெண்ணித் தருமபுத்திர மகாராஜன் கிருஷ்ணமூர்த்தியை நோக்கிச் சொல்லுவதானன்.

ஓதீனதயாளுவாய் ஜெகத்ரக்ஷகராய்த் தோன்றியதேவே! செவ்வையாகிய காரியங்களைச் சொல்லவந்தவரைப் போல்வந்து தீங்காகியவார்த்தையைச்சொல்லிய சஞ்சயமுனிக்கு நாம்செப்பிய வசனமும் உலூகமுனியை முன்னதாகத்தூதுவிடுத்த நமக்குத் துரியோதனன் அப்போது பேசியனுப்பிய வசனமும், தேவரீருடைய திருவுள்ளம்அறியுமே சுவாமி! அப்படி இருக்க கொடியவிஷத்தை வெகுவாகக்குடித்துஅந்த விஷந் தலைக்கேறி உடம்புமறந்து உறங்கிக்கிடக்கும் ஒருவனுக்கு சவுக்கியஞ் செய்யநினைத்து நல்லமருந்தும் மந்திரமுங் கடுகவிசாரித்துக் கொடுத்துநன்மை செய்யநினைக்காமல், சுற்றிலுமிருந்து வருந்திவாட்டமுற்று மயங்கித் துன்பப்பட்டுக் கொண்டிராநின்ற அவனுடைய அண்ணன்தம்பிமுதலிய பந்துக்களைப் போலத் தேவரீரும் அவ்விஷமுண்டவர்களைப் போலிருக்கும் எங்களுக்குவேண்டிய பக்குவங்களைச் செய்து இரக்ஷிக்காமல் ஏனோதானோ வென்று சும்மா இருப்பது ஞாயமோ? ஸர்வஜீவ ராசிகளின் மனத்திலுமிருந்து விளையாடுஞ்சோதியே! எதாகிலும்ஒருயுத்தியை எங்களுக்கு போதித்தருளவேண்டும் குருக்ஷேத்திரபூமியில் அரிதாகியயுத்தஞ்செய்யத்துரியோதனனாதியர் சம்மதிப்படுவார்களாகில் அதுநமக்கு மிகவு நல்லது. அதைவிட்டு நாம்யுத்தஞ் செய்வதற்குத்தயாராக இருக்கிறோமென்று முந்திச்சொல்லி யனுப்பி வைப்பது முறைமையல்லவே. ஆகையால் தேவரீர் பிரயாசை யெடுத்துக்கொண்டு திருவடிவருந்த அஸ்தினபுரத்திற்குப்போய்த் திரிதராட்டிரன் துரியோதனன் முதலிய பேர்களைக்கண்டு வார்த்தையாடி அவர்களுடைய கடைப்பிடிக் கருத்தையறிந்து ஐயப்படுத்தி வரவேண்டிய கடமை உம்முடையதென்றுகிருபாவெள்ளம் பெருகும்படியாகத் தருமராஜன்சொல்லிய வார்த்தையைக்கேட்ட வாணாசுரனுடைய வாணையும் புஜகிரி இரண்டாயிரத்தையும் அழித்த ஹரி பரந்தாமனானவர், வீமசேனன் அருச்சுனன் நகுல சகாதேவனென்னும் நால்வரையுங்கூடவைத்துக்கொண்டு, சாத்தகிமுதலிய பேர்களுஞ்சுற்றிலுமிருக்கவைத்து, யுத்தகளத்தில் வெற்றிபெற நாட்டும் முரசக்கொடியினையுடைய தருமராஜனே! நாளையொருகாலத்தில் நீங்களென்னை வீணாக நிந்திக்கவேண்டாம். அவர்களுடைய மனோநிச்சயத்தை வெளியிட்டுச் சொல்லுங்கள். நான்சொல்லுவதையுங் கேளுங்கள். அதென்னவெனில் வயல்களிடத்தில் தாமரைமலர்களுடன் வராலினங்கள் மருவிவிளையாடும் வளப்பங் கொண்ட குருநாட்டில் பாகப்பிரகாரம் பாதிவாங்கிக்கொண்டு அரசாக்ஷிசெய்து வாழ்ந்திருக்க நினைவோ? அல்லது பழையபடியே துன்பமுடையவர்களாய்த் தனமுஞ் சனமும்விடுத்து, அனமுமனமும்வெறுத்து, வனமே கதியாக அடுத்து இன்னமும்வாடித் திரியநினைவோ? அஃதன்றிப் பிழைப்பாரியாரோ வென்று சந்தேகப்படும்போர்முகத்தில் பகைமேற்கொண்டு, முனங் கோபித்தெழுந்துசபையிற்சொல்லியபிரதிக்கினையின்படியே துரியோதன னாதியரைக்கொன்று ஜெயம் பெறநினைவோ? ஐவராகிய உங்களில் ஒவ்வொருவருக்கு மிருக்கின்ற எண்ணமென்னவென்று திருமால் கேட்க அப்போது தருமசொரூபியாகிய உதிஷ்டிரராஜன் சொல்லுகின்றான்.

நந்தகோபாலன் களிக்கும் நாதனே கேளும்! வைராக்கிய மென்னுங் கொடிரமாகிய நெருப்பைவாசாமகோசரமாக் வளர்த்தி விடுவோமாகில், மூங்கில்களானது தனக்குத் தானே இழைத்து பற்றிக் கொண்டெரிந்து சுற்றிக் கொண்டிருக்குந் தன்னினத்தோடு அழிந்துபோகுந் தன்மையைப்போல், நாங்களிருதிறவரும் குற்றம் பொருந்திய யுத்தகளத்தில்

ஒரேதரமாய் மாண்டுபோவோம் ஆண்டவனே! (வா
றையாடியும் இலக்குச்சேதம் உள்ளாடியும் இலக்கு
ச்சேதம்) என்னும் பழமொழிபோல் எங்களிருதிற
த்தவருக்குங் கெடுதிவராமல், செவ்வல்லியுந் தாமரை
யும் பரிமளிக்கின்ற வயல்கள்சூழ்ந்த குருநாட்டிலே
நாங்கள் நாற்றைந்துபேரும் அந்தமலர்களைப்போல
ஒருமித்துக்கலந்து வாழும்படியாக எங்களுயிர்க்குயி
ராகிய தேவரீர்தூதுபோய் க்ஷாத்திரமின்றித் தாட்சி
யில்லாத க்ஷேத்திரஞ்சேர்ந்து வாழும்படியாய்ப்பொ
ருந்தச்செய்ப வேண்டியகடமை உம்முடையதென்று
தருமராஜன்சொல்லத் தாயென்றுவக்தபூதகியுயிரைக்
கொன்ற ஜனார்த்தனன் சொல்லுகின்றார்.


உய்த்தல காளும் மைத்துன பேளும்! பூர்வம்
சபாமண்டபத்தில்சூதாடி யாவையுந்தோற்றபிராபு
புண்ணியத்தைப் பொருளாகவைத்து மறுபடியுஞ்
சொக்கட்டானாடித் திரௌபதையும் நீங்களெவருஞ்
சுவாமி தயையினால் மீண்டபோது, அச்சபையிலிரு
ந்த அரசர்களுக்கும் பெரியோர்களுக்கும் எதிராக
உங்களைப்பார்த்துக் கலிரௌரவைத்து பன்னிரண்டு
வருடம வனவாசமும் ஒருவருடம் அக்கியாத வாச
மும்செய்து வருவீர்களாகில் உங்களுடைய பாகத்
தைக்கொடுத்து விடுகிறேனென்று, விதுரனையும் து
ரோணாச்சாரியையுங் கொண்டு அப்போது சொல்லி
வைத்த துரியோதனன் இப்போது சொன்னசொற்
றவறிப் போவானாகில், அவனைப் போர்முகத்தில்மா
ய்த்து உங்கள் சொந்தமாகிய பூமியைநீங்கள் பட்டங்
கட்டிக்கொண் டாள்வதற்கு யாதொருதடையுமில்லை
யே என்று ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் சொல்ல,
அதைக்கேட்டுத் தருமராஜன் சொல்லுகின்றார்.

கேளும் காசாம்பூ வண்ணமுள்ள கண்ணனே!
ஆசாரியர்களையும் சுற்றத்தாரையும் குருகுலத்திற்கு
ரிய அண்ணன் தம்பி பாட்டன் மாமன்மித்திரர் முத
லாகிய இத்தனைபேர்களையும் நேரில் நின்றுபோர்புரி
ந்து கொன்றுவென்று, சடலர்ண்டவையணிந்த பூமி
யைப்பிணந்தின்ற பூச்சிபோல் தனியாக இருந்துஅர
சாட்சிசெய்வதைப் பார்க்கிலும், கபடவஞ்சகங்கலந்த
மனமுடைய என்பெரியதந்தையார்சஞ்சயனிடத்திற்
சொல்லிய சஞ்சலமான சொற்படியே வனவாசஞ்செ
ய்து, காய்கனி கிழங்கு சருகுகளைப் புசித்து, இரவும்
பகலுங் காலங்கழிப்பது மிகவும்நன்றென்று தரும
பூபதிசொல்ல இந்தவார்த்தையைக்கேட்ட வேதனித்
தாகிய விபலன் சொல்லுகின்றார்.

கேளும் தருமநந்தனா! மெய்யே மெய்யாகக்கொ
ண்டு வையத்ங்காக்குமையனே! ஒருவரோடொருவர்
பகைத்து யுத்தஞ்செய்வது பாவமான காரியமெ
ன்று விடுத்துப் பலம்பொருந்திய தம்பிமார்களுடன்
வனத்தையடுத்து வாசஞ்செய்யப் போவீராகில், பா
ண்டவர்கள் தந்தையுரைத்த வார்த்தையைத் தப்பா
மற் பேர்னார்களென் றுசிலர்சொல்லுவார்நன்மிபெரும்
பாலரெல்லாம் தாயாதிகளுடன் யுத்தஞ்செய்து ஜய
முடித்துக் கொள்ளக் கையிலாகாமல்பயந்தோடிப்
போனார்களென்று பழிப்பார்களே. எசவார்களே.,
அதுபோக நீங்கள் சொல்லியசபதமும் பொய்த்துப்
போமே. அதனாற் பாபமும்வருமே. இதுவோ நீதி.
நிறைமதிகொண்ட இறைவே! உம்யோசனை மிகவும்
நன்று இருக்கின்றதென்று நெடியோனுரைக்க அதற்
குத் தருமராஜன் மறுமொழி சொல்லுகின்றார்.

சேனுலகத்தோர் துதிக்கும் வேணுகோபாலத்
தெய்வமே! தேவரீரே எங்கள்நிமித்தமாகத் துரியோ
தனனிடத்திற் றூதுசென்று அவனிடத்தில் எங்கள்
கருத்தையுங் காட்டிப்பேசினால், மகரந்தங்களை யூதி
வண்டுகள் பாடும் சோலைகள்சூழ்ந்த நாடும் எங்கள்
பாகமுங்கொடுப்பான். அப்படிக்குத் தேவரீர்போய்
பேசியுங் கொடாமற் போவானாகில், அதற்குமேல்
வெற்றிச்சங்கும் வலம்புரிச்சங்கும் தவளைச்சங்கும்
ஜயம் பெறுசங்கும் எங்குமுழங்க, வீரகாளமுப்வெற்
றிமுரசமும் கொய்க்குப்படியாக,செடிடகொடியஇடி
யினையுடையமதுரர் மனங்களிக் யுத்தஞ்செய்தானா
லும் தாயாதிபக்ஷத்திலுள்ள பூமியைப்பெற்றுக்கொ
ள்ளலாம் அப்போது நமக்கு அபகீர்த்தியும்பழிப்பு
மில்லையென்றுரைத்து மேலுஞ்சொல்லுகின்றார்.

ஐயா துஷ்டஜனநிக்கிரக சிஷ்டஜனபரிபாலகனு
கிய ஸ்ரீகிருஷ்ணபகவானே! கேட்டருளும்வெற்றிமுத
லாகிய சம்பிரமத்திற்கு முந்திநாட்டிய சர்பக்கொடி
யினையுடைய துரியோதனமகாராசனுளும் அஸ்தின
புரத்துக்குத் தேவரீரெழுந்தருளிச் சென்று, அவனை
க்கண்டு பள்ளர்களுடைய முற்றங்களிற் சங்கினங்க
ளுருகின்ற சல்வளம் பொருந்திய எங்களுக்குரிய
நாட்டைக்கேளும். அதைக்கொடுப்ப தில்லையென்று
மறுப்பானாகில், எங்களைந்துபேருக்கும் இந்திரப்பிர
ஸ்தம்-எமப்பிரஸ்தம்- அவந்தியாபுரி - வாரணாபுரி.
அஸ்தினாபுரி-என்னும் ஐந்தூரைக்கேளும் அவையுங்
கொடானாகில் ஐந்துமனையாகிலுங்கொடுமென்றுகே
ளும். அவையும் இல்லையென்றால், யுத்தத்துக்காவது
வருகிறையாவென்று சம்மதித்துவரும் சிந்தூரத்
திலதமெழுதிய குவலயா பீடமென்னும் யானையின்
கொம்பைப்பிடுங்கிக் கம்சனைக்கொன்ற வீரம்பொரு
ந்திய செந்தாமரைக்கண்ணனே! இதுதான் எனது
அபிப்பிராயமென்று ஐவருள் மூத்தவனாகிய தரும
ராஜன்சொல்ல, வீமசேனன்கேட்டு, முன்னமேகோ
பங் குழுஉக்கொண்டிருக்கு மனத்தினில் இன்னமுங்
கோபாக்கினி குடங்கொண்டுசொரிய,குற்றமற்ற நா
வாற் குரூரமான சொற்களை வசனித்துக் கொண்டு
விரைவி லெழுந்துவந்து, ஸ்ரீகிருஷ்ண தேவனைப்
பணிந்து, பூலோகமுழுதுந் திருநாபிக் கமலத்தாற்
பிறக்கச்செய்தவனே! பொற்றாமரையிலுதித்த மகா
லட்சுமியையுங் கௌஸ்துப வாபரணத்தையும் பொரு
ந்தவணிந்த திணிந்த வக்ஷஸ்தலனே! நப்பினைபேர்



[113] கண்ணன் அத்திநபுரிக்குத்தூதுபோதல்.

களுக்கு நேரிடுந் துன்பத்தை நீக்கிய இன்பவாரிதியே! பழிபாவமில்லாத பரிசுத்தகுணமுள்ள எங்களண்ணாவாகிய தருமபூபதியானவர், தன்மானம் பிறர்மானமென்பதைச் சற்றுமுணராமற் சொல்லும்வார்த்தைகட்கு நானென்ன செய்வேனென்று நடுநடுங்கி, மறுபடியுஞ் சொல்லுகின்றான்.

மதிமரபுதித்த அதிபதியாகிய அண்ணா! மூன்றுலட்சத் தறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரும், ஆறுலட்சத் தறுபத்தாறாயிரம் மகுடவர்த்தனரும், பதினெண் பூமிமன்னர் மண்டலீகரும், ஐம்பத்தாறு தேசத்து அரசவர்க்கமும், வீஷ்மாச்சாரியர்-துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர்-அசுவத்தாமர்-கர்னன்-சகுனி-சல்லியன்-அதிரதர்-சமரதர் முதலிய சமஸ்தபிரதானபேருந் நிறைந்திருந்த இராஜசபையில், விரித்தகூந்தலையும் பசிய வளையல்களையுமுடைய திரௌபதியை அபிமானபங்கம் பண்ணுவித்தகாலில், அந்தப்பெண்ணானவள் மெத்தவும் நாணமடைந்து, திக்கில்லாப்பாவியானேனே தெய்வமேயென்று தஞ்சமில்லாதவர்களைப்போல முறை இட்டபோது, சரிந்துடித்தெழுந்த வெங்களைப்பதறுதீர்கள். கோபியாதீர்கள். (ஆக்கப்பொறுத்தபசி ஆறுகிறமட்டும் பொறுதோ) என்றுசொல்லியடக்கி, குருகுலத்துக்கும் நமக்கும் பூலோகமுள்ளமட்டும் தீராப்பெரும் பழியை உண்டாக்கிவைத்தீர். அதுவுமல்லாமல்-கள்ளக்கவறு கொண்டு சூதாடிகெலித்துத் தீப்படுகின்றகாட்டில்நம்மை யோட்டிவிட அதற்குஞ் சம்மதித்துப் போவேமென்றீர். அப்படியே போய்த்திரிந்து பதின்மூன்று வருடங்கழித்துப் பிழைத்துவந்ததும், இன்னமும் பகையைமுடிக்க மனமில்லாதவராய்த்தூதனுப்பிப்பார்க்கவேணுமென்று இளைக்கின்றீர். ஆதலாலே துரியோதனன்செய்த கொடுமையைப் பார்க்கிலும் உம்முடைய கிருபைக்கு மிகவும்பயந்தேன் தருமபுத்திரரேயென்று பின்னுஞ் சொல்லுவான்.

ஓவைதிகசாந்தஸ்தமே உருவாகவளர்ந்த அண்ணா! உம்மைப்போலொத்த உண்மைப் பொருளையே வனவாசம் போகச்சொன்ன கண்ணற்ற திரிதராட்டிரனுடைய காதலனாகிய துரியோதனன் ஆண்டுவருகின்ற பூலோகமுழுமையும், இன்றைக்கேஒருகுடைக்கீழ் நீராளும்படியாகத் தருவேன். அதுவுமல்லாமல் முன்னே நம்முடைய ஆட்சியான நாட்டைக் கைக்கொண்டு நாம்வெறுத்துக் கெள்ளும்படியாக வனத்தில் விரட்டிவிட்ட அந்தத் துரியோதனனானவன், ஐயோ அநியாயமே! என்னரசாட்சியைத் தருமராஜன் அடித்துப் பிடுங்கிக்கொண்டானென்று தேவரீரை வெறுத்துக்கொள்ளாதபடிக்கு வீரசொர்க்கத்தை அவனாளும்படியாக இந்திரப்பதவியைக் கொடுக்கிறேன். என்வார்த்தையை அண்ணா நன்றாயோசியுங்களென்று சொல்லிப் பின்னும் ஸ்ரீகிருஷ்ணதேவரை நோக்கிச் சொல்லுகின்றான்.

ஓசுவாமி! எங்கள் அண்ணாவியார் துரியோதனனுடனே யுத்தஞ்செய்து பகையைமுடித்தார். அன்றுவிரித்துவிட்ட கூந்தலையும்புலம்பிக் கூறியசபதச்சொல்லையுமுடைய திரௌபதைக்கு, அவ்விரண்டும் இன்றுமுடித்துக்கொள்ளும் படியாகச் சாதித்து விட்டார். தம்பிமாராகிய நாங்கள் சபையிற்பேசிய சபதங்களையெல்லாம் தடையில்லாமல் முடிப்பித்தார் தெய்வத்தன்மை பொருந்திய கங்கையடங்குஞ் சடாமகுடத்தையுடைய உருத்திரதேவர் கையிலே பிரமகபாலங்கொண்டு இரப்பதைத் தவிர்த்தருளிய ஈசனே! உம்முடையமனைபதியப் பூலோகத்திலே நிலைநின்றுயர்ந்த கீர்த்திமானென்னும் தம்பேரைப் பிரசித்தமாக நிலைநாட்டி முடித்தார். இப்படிக்கு யாவர்முடிக்கப் போகின்றார்கள். இவருடனேபிறந்த நாங்களும் இவ்வாறான கீர்த்தியைப்பெற்றதுபோதும்போதும். இன்னம் எங்களைமுடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் தருமநந்தனரென்று பின்னுஞ் சொல்லுகின்றான்.

சுவாமி! யாவரும் போர்க்கோலங்கொண்டு வருகிற பெரியயுத்தகளத்திலே புகுந்து, துரியோதனனுடனே கூடிஎதிர்க்கும் அரசர்களுடையசரீரங்களெல்லாம் இரண்டுதுண்டாகும்படி போர்செய்து, பழைய உலகமுழுவதுமகைக்கொண்டு அரசாட்சி செய்யத்துணியாமல், பொறுமைமேற்கொண்டு, தருமத்தையுங் கிளையுறவையும்பாராட்டி, இன்னமுந் தூதுவிடுத்துத் துரியோதனனைவணங்கிபூமியையாசித்து அவன் கொடுக்கப்பெற்றுக்கொண்டு சவுக்கியமாககாலபோசனந்தப்பாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கவேயெண்ணுகின்றார் தருமபுத்திரமகாராஜர். ஐஐயோ!! குருகுலம் பட்டபாட்டையுங்கெட்டகேட்டையும் நானென்னசொல்லுவேனென்று விசனப்படும் வீமசேனனுடைய வார்த்தைகளைக் கேட்டபொறுமை நிறைந்த புண்ணியவானுகுந் தருமராஜன் பரிவாகச் சொல்லிய தம்பியைச்சற்றிருவென்றுமலர்போன்றகையினலமர்த்தி, ஓகுருகுல சிகாமணியாகியதம்பி! குற்றம்பார்க்குமிடத்திலே சுற்றமுண்டோ? ஒருகுலத்திலேபிறந்த அண்ணன் தம்பிமாருடனேகூடிவாழும் வாழ்வினைப்போல் வேறொரு உறுதியுண்டோ? பெரிதாகிய இப்பூமியைப்பெறுவது காரணமாகக்கருதிப் பகைத்தெதிர்ப்பது நம்மிருதிறவருக்கும் நஷ்டமல்லவோ? கெட்டவன்வீட்டில் சுருஷ்டியாருக்கெனில் உற்றார் பெற்றார் முதலாகிய புத்திரருக்கன்றி மற்றவர்க்கென்ன என்பதுபோல், நமதுகோபம் நமக்கே துன்பத்தை விளைவிக்கும். ஆகையால், ஒருகுலத்திற்பிறந்த உரிமையுள்ள நமது பெரியதந்தையின் பிள்ளைகளாகியதம்பிமார்கள் அறியாமையினாலே சபையிற்சொன்ன வார்த்தைகள் நமக்கு இழிவையுண்டாக்குமோ? நமக்குச் சம்பந்தமில்லாத அன்னியராற் சொல்லப்பட்டாலல்லவோ பேரிழிவாகுந் தம்பி. அதை யோசிக்குமிடத்தில் கண்களிற் கைவிரல் பட்டால் அந்தக்கையைத்

துலித்துவிடலாமோ? எப்போதும் (பொறுமைகட
லினும்பெரிது) என்னும்வாக்கியத்தை அனுசரித்துச்
சண்டையை நிறுத்திச் சமாதானமாய்ப் போவதே
தன்மை. ஆகையால் நம்மாற்கூடியமட்டு முயற்சிசெ
ய்து சந்தி சமாதானமுதலாகிய வழிகளெல்லாம்பார்
த்தாலும்ஒவ்விவராமற்போவானாகில்,பின்னால்யுத்
தத்தைக்குறித்து யோசிக்கவேண்டியது. அதைவிடு
த்து ஆரம்பசூர்த்துவமாய் முதலில் தப்பட்டைக்கா
ரன் பட்டானென்பதுபோல் யுத்தமென்றுபேசுவது
யுத்தமல்ல அப்பாவென்று கீர்த்தியைப் பூஷணமாக
தரித்தருளிய தரு புத்திரமகாராஜன் சொல்ல,அந்த
மொழியினாலும் வீமசேனனுக் கோபந்தணியாமல்
மனஸ்தாப மேற்கொண்டு தருமராஜனைப் பார்த்து,
எங்கோவே! துரியோதனனிடத்தக்குத் தூதுவிடுத்
து அவன் அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று
சத்தியமுள்ள தேவரீர் சித்தத்திற்கு இஷ்டமுண்டா
கில், துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் தேவர்
களும் முனிவர்களும் நான்குவேதங்களும் இன்னமுந்
தேடுகின்ற தமது திருவடிகள் சிவக்கநடந்து நமது
திருநாடு பெறுவதற்காகத் தூதுசெல்ல வேண்டாம்.
வாடுகின்ற திரௌபதியினுடைய பிரதிக்கினையும்என்
னுடைய பிரதிக்கினையும் வழுவிப்போகாமல் நிறை
வேறும்படியாக, துரியோதனனிடத்தில் நானேபோ
ய் வருகிறேன் என்னைத் தூதாக அனுப்பிவையும் அ
ண்ணாவென்றுகோபச்சிரிப்பாகநகைத்துஐயோ!மலை
யைகண்டதன்மையைப்போல்என்கரத்தில்வலுவேறி
இருக்குந் தண்டாயுதத்தினுடைய பிரபலங் கண்டும்,
அர்ச்சுனனுடைய காண்டீபத்தின் வலிமையை கண்
டும், நகுல சகாதேவர்களுடைய வல்லமை கண்டும்,
நமக்குச் சகாயமாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி துணைப்பட்
டிருக்கும் நிலைமைகண்டும் இந்தப்பாஞ்சாலி விரித்த
அளகபாரங்கண்டும் ஒருமாத்திரைப்பொழுதில் துரி
யோதனாதியரைச் சர்வசங்காரம் பண்ணி மகிட்சிய
டையாமல் பகையாளியின் குடையின்கீழொதுங்கிவா
ழும்படியாகவே எண்ணி இருக்கின்றீர் ஆ!ஆ! அண்
ணாவே என்று, வெப்பமாகிய தோள்களும் மீசையுந்
துடிக்க, நுட்பமாகிய மனமுங் கண்ணுங்கறுக்க, மே
லோங்கியெழுந்து பூமியிற்சூழ்ந்து, விழுவிறெனச்
சுழன்று, நறநறெனப் பற்கடித்து, மேகநடுங்கிப்பது
ங்க முழக்கி, கோபமெழுந்துற்றாழுங்கக் கலக்கிக் கூ
கூவெனக் கூறியவார்த்தையைக் கோபால கிருஷ்ண
தேவர் கிருபையுடன் பரிவுகூர்ந்து கேட்டு, அப்பா
வீமா! பூமியிலே முன்பிறந்த தமையன்மார் இராஜ
நீதி முறைமை சொன்னால் அதைக்கேளாமல்,பின்பி
றந்த தம்பியானபேர் பிழைசொல்லிமறுப்பார்களோ
அந்தோ! பெரும்பிழை வந்ததே அடடா!!கடியகோ
பத்தை க்ஷமிக்கக் கடவாயென்று திருவுளம் பற்ற,
வீமராஜன் சற்றேகோதிப்பாறி, கொடூர கடுவிஷம்
பெற்ற நல்லபாம்பைப்போல் பெருமூச்சு விட்டுக்
கொண்டிருந்தான்.

அப்படி இருக்கிறபோது இந்திர குமாரனாகிய
அர்ச்சுனனெழுந்து வணங்கி நின்று; இறந்த காலம்
நிகழ்காலம் எதிர்காலம் என்னு முக்காலங்களையுமு
ணர்ந்த ஸ்ரீகிருஷ்ண தேவருக்கும் தருமபுத்திரருக்
குஞ் சொல்லுவான், ஒ முற்றுமுணர்ந்த முதியோர்க
ளே! அந்தக் காலத்திலே துரியோதனன் பண்ணிய
அக்கிரமங்களையும் அவமதிப்பையும் பொறுத்தபொ
றுமைகளெல்லாம் போதாமல், இன்னமும் பொறுக்
கச்சொல்லி பொழுது விடியுமட்டுந் தருமத்தையே
சொல்லிக் கொண்டிருந்தால், இனி எந்தக்காலத்தில்
பகையைமுடித்து நாம் தலையெடுக்கப் போகிறது.
அப்போது தலையை விரித்துக்கொண்ட திரௌபதை
இனி எப்போது கூந்தலைமுடித்துக்கொள்ள விருக்கி
ன்றாள். தேவர்களானாலும், பழைய இராக்கதரானா
லும், இன்னமும் வலிமைபெற்ற எவர்களானாலும்,
எதிர்த்தவர்களுடைய சரமிற்பற்றிய பிராணனைத்தன
க்கு இரையென்று நினைத்திருக்கின்றது என்கையிலி
ருக்கும்பாணம் ஒமும்மூர்த்திக்கு முதல்வனாகியமுகு
ந்தனே! இத்தன்மையவாகிய என்னுடைய திறத்தை
யுந் திடத்தையுந் தெரிந்திருக்கும் தருமராஜனவர்
மேகந்தவழும் கமுகமரத்தில் வாளைப்பாயுஞ் சழ
னிகள்சூழ்ந்த குருநாட்டை என்ன நிமித்தியமாய்த்
துரியோதனனிடத்தில் வேண்டிப்பெறுவது ஐயோ!
பாண்டவர்சகாயனும் விஜயனும் இறந்தார்களென்று
எப்போது கேட்கின்றீரோ, அப்போதல்லவோ நம்
முடையநாட்டை இறந்து பெறவேண்டும் அண்ணா
தருமநந்தனா! ஒகோபால கிருஷ்ணமூர்த்தி! அக்கினி
யைப்போல தீண்டப்படாத பதிவிரதா மகத்துவமு
டைய திரௌபதியை இராஜசபையிலேதுகிலுரியடா
தம்பி துச்சாதனாவென்று துரியோதனன் சொன்ன
போது அவள் திக்கில்லாதவரைப்போலத் தியங்கிக்
கலங்கித் தாரைதாரையாய்க் கண்ணீர்சொரிந்து, ஒ
ஜெகத்ரக்ஷகா! ஒதீனபந்தோ! ஒஜெனார்த்தனா! ஒதீன
தயாளுவே!ஒநெடியோனே!ஒநீலமேனியனே!ஒநிரந்த
ரனே! ஒநின்மலனே! ஒநித்தியானந்தனே!நேசமுற்ற
தாசருக்கு விசுவாச மந்தஹாச நிர்மல சொரூபனே!
நிராதரமாகிய வெளியேனைத் தற்காலத்தில் வந்திரட்
சிக்கக் கடவையென்று தன்னந்தனியாய் நின்று தள
ர்ச்சியுற்றபோது, நாங்கள் ஐவருஞ்சீவனில்லாதஉட
லைப்போலே இராஜசபையிற் பார்த்துக் கொண்டிரு
ந்தகுற்றம் இனியேனும்விட்டுத் தீரவேண்டாமோ?
இன்னமும் இரந்து நாடுவேண்டுவதுமன்னறமாமோ
மண்ணுலகெல்லாம் வாழ்வுறவாழும்தண்ணளிசுரந்து
தருமநிறைந்த புண்ணியதேகப் புகழினையுடைய அ
ண்ணா! பொற்பிரகாசம் பொருந்தியசக்கிராயுதத்தை
யுடைய நமது ஸ்ரீகிருஷ்ணதேவர் நமக்காகத் தூது
போய் நாம்சொல்லிய வாக்கியங்களை யெல்லாம் தே
வாமிர்தத்தைப்போல்கலக்கித் துரியோதனனுடைய
காதுகளில் வார்த்தாலும், அவன்கேளான். அதே

னெனில் அளர்நிலத்தில் முளைவீசிய விதைகளை விதைத்தாலும் முளையாது. ஒருவேளை தப்புவிதைகள்முளைத்தாலும் விளையாது. படத்தையுடைய பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் கொடியவிஷத்தைத்தருமேயல்லாமல் குணமாகிய அமிர்தத்தைக்கொடாது. அன்றியும் சர்க்கரையை மணல்போற்பரப்பிப்பாலேரிப் பாய்ச்சித் தேன்மாரிபொழிந்து வேப்பம் வித்திடினும் அவ்வித்தினின்றும் முளைத்தமரமானது கசப்பேயல்லது இனிப்புறாது. அதுபோல் துரியோதனனுடைய ஊழ்வினைவலியினால் கெடுமதி சன்னுக்குத் தோற்றவில்லை கிருபாநிதியாகிய ஸ்ரீகிருஷ்ணசுவாமியையும் அவமதிப்பாய் பேசுவானேயல்லது. அவருக்கு ஞாயமாகிய உத்தரவுசொல்லமாட்டான் ஆகலால் தூதனுப்ப நினைப்பது அநியாயமென்று சொல்லிய அர்ச்சுனனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சற்று பொறுவென்று கையமைத்து, நகுலனைப்பார்த்து நீ யென்னசொல்லுகின்றாயென்று கேட்டருளினர்

உடனே அன்புடன் நகுலனெழுந்து, அரிவாசுதேவமூர்த்தியின் பாதங்களில்வணங்கி, தருமபுத்திரருக்குச் சாஷ்டாங்க தண்டஞ்செய்து, சூதினாலிழந்த சமுத்திரம்வளைந்த பூமியைபெருமைபொருந்திய பாண்டவர்கள் பெறுவார்களென்றுசொல்லுவதுபொய்யோ? ஐயா! இதுமெய்யே. தருமபுத்திரருடைய ஒப்பற்றசௌரிய பராக்கிரம சாமர்த்தியமே சொல்லிவெல்லாதோ - ஓகிருஷ்ணசுவாமி! தேவரீர்க்கொன்றுந்தெரியாதோ திருவாய் மலர்ந்தருளும் தேவனேயென்று ஆவலாய்ப்பின்னுஞ் சொல்லுகின்றான. ஓஅண்ணா! தீர்ப்பதற்கரிய பகையானது மேலிட்டிருக்க, கோவினங்களைக் காத்தருளிய கோபாலன் தூதுபோயுரைத்தாலும், குருநாட்டையும் அரசாட்சியையும் அந்தத் துரியோதனன் ஒருக்காலுங் கொடுக்கமாட்டான் சிறியேன்சொல்லும் வாக்கியத்தைச் செவ்வையாயோசிக்கவேண்டியது. ஓதரும பூபதியே! காற்றிலும் பனியிலும் வெய்யலிலும்மழையிலும்மலையிலும் அலைந்துதிரிந்து வருந்திவந்த பாண்டவர்கள், துரியோதனனிடத்தில நாட்டை இழந்தார்களென்றுசம்புத்திவாகிய இந்தப்பூமியை ஆளும் அரசர்களெல்லாரும் ஒன்றுகூடி நம்மை நகைத்துக் கேலிசெய்யாதபடிக்குத் துரியோதனனுடைய சேனைவலிமையையும் என்னுடைய புயவலிமையையும் தேவரீர்பார்க்கலாம் அண்ணா! முன்னம் அன்னம்போல் நடையையுடைய அரம்பாஸ்திரியை அசுரர்கள் அபகரித்துக் கொண்டுபோக, அப்போது அவள்பயந்துஅலறி அபயமிட்டு அடைக்கலம்வேண்ட, அதையறிந்து அந்தரவாசியாகிய இந்திரனுக்காக அந்த அசுரருடன் அமர்புரிந்து அரம்பையைமீட்டு அபயமளித்தான் நமது குலத்திலுதித்த முப்பத்தெட்டாவது பாட்டனாகிய புரூரச்சக்கிரவர்த்தி அப்படிக்கிருக்கஅன்னியஸ்திரீகளுக்கு வந்த ஆபத்துக்குதவும் அரசர்குலத்திற் பிறந்த நாம் குட்டிச்சுவர்போலிருந்து காணும்படிக்குத் துஷ்டனாகிய துச்சாசனன் திரௌபதியை எட்டிமயிர்பிடித்திழுத்துவந்துசபையில்விட்டு அபிமானபங்கஞ்செய்ய ஆக்யாபித்த அருளற்ற பாவியாகிய அரவக்கொடியோனிடத்தில் நமதுபூமியை யாசித்து, அவன்கொடுக்குங் குடைநீழலிலிருந்து அங்கம்வளர்த்தால்நம்மையுலகம் நங்கஞ்சொல்லாதோ? திங்கள்குலத்திற் பிறந்ததேவே! தேவரீர் தருமமும்பொறுமையும் தழைக்கும்படிக்கு யோசிக்கின்றீர். அவர்களிடத்திலும் இந்தநினைப்பிருக்குமாகில் இதுதருமந்தான். அப்படி இல்லாதிருக்க நீர்நினைப்பது அதர்மந்தான். அண்ணாவே! இன்னும் கேட்டருளும். வனவாசம் பன்னிரண்டுவருடமும் அக்யாதவாசம் ஒருவருடமுஞ் சத்தியமொழிதப்பாமல் சகித்துவந்தார்களே நமதுசிற்றப்பார் பிள்ளைகளாகிய அண்ணன் தம்பிகளென்றுகொஞ்சமேனு மிரக்கம் வையாமலும், நம்மைக் கூட்டிப்போய்த் தன்சொல்லின்படியே தாயாதிபாகந் தயைசெய்யாமலும், உலூகமாமுனிபோனதூதினாலுமனம் நையாமலும் போவானாகில், தானேயறிந்து கொள்ளாத ஒருவனுக்கு மற்றொருவர்போய்ச்சொன்னாலறிவானோ(தனக்குத்தானேகனியாதபழந் தடிகொண்டடித்தாற்கனியுமோ) அன்றியும் (கண்ணைக்காட்டவாராதவள் கையைப்பற்றி இழுக்கவருவாளோ?) என்று பற்பலவித பழமொழிச்சொல் புகல்கின்ற நகுலராஜனை அற்புதகுணமுடைய அரிவாசுதேவன் கையமைத்தருளி, சகாதேவனைப் பார்த்து, சௌரியத்தையுடைய வீமசேனன்சொன்னதும் வலிமையுடைய அர்ச்சுனன்சொன்னதும் மனோதிடங்கொண்ட நகுலன் சொன்னதுங் கேள்விப்பட்டோம். சொல்லுதற்கரிய அறிவையுங் கீர்த்தியையும்பராக்கிரமத்தையுமுடைய தோன்றலே! உன்கருத்தையுஞ் சொல்லென்றுகேட்ககரிய திருமேனியையுடைய கண்ணனைப்பார்த்துமனமுருகும்படி சகாதேவன் சொல்லுகின்றான்.

ஓ ஆதிநாராயணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரே! நீர் நினைத்தபடியே தூதுபோனாலென்ன? போகாமல் நின்றுவிட்டாலென்ன? துரியோதனன் பாண்டவர்களுக்குப் பூமிகொடுத்தாலென்ன? கொடாவிட்டாலென்ன? பூங்கொத்தையுடைய அளகபாரத்தை இந்தத் திரௌபதி முடித்தாலென்ன? முடியாமல் விரித்தாலென்ன, நீரெண்ணியிருக்குங் காரியங் கடைசியில் முடியப்போகிறவிதம் அடியேனுக்குத் தெரியுமே? வாசனையைவீசுகின்ற பசியதுளபமாலையை யணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணா! அன்று பூதகியினுடையவிஷப்பாலாகிய முலைப்பாலையுண்டு, சாபம்பெற்ற மருதமரத்தை யுதைத்து, உயர்ந்த ஜடாசுரன் விழும்படியாகவுந்தி, விந்தையாகிய கன்றால் விளாங்கனியெறிந்து விளையாடி, நந்தகோபாலன்அசோதை

பிராட்டியாரகமகிழ யாதவர் மனைகடோறும் புகுந்து வளர்ந்தருளிய புருஷோத்தமனாகிய ஸ்ரீகபடநாடகா இங்கே நீர்செய்கின்றமாயமும் ஞாயமும் ஒருவருக்குந் தெரியாமற்போயினும் எனக்குத்தெரியும் ஆகையால் சத்தியமாக உம்முடைய திருவுளத்துக்கு நினைப்பு எதுவோ அதுவே எனக்குக்கருத்தென்றான்.

தெய்வத்தை யொத்த சகாதேவன் சொன்ன அந்தமொழியைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவர் புன்சிரிப்புகொண்டு வலிமையையும் வைரத்தையுங்கொண்டிருக்கும் தருமராஜன்முதலிய பேர்கள்சொன்ன விதந்தான் சொல்லாமல் கொஞ்சமுபாயமாகவும்பக்குவமாகவும் சொல்லழுத்தமாகவும் பேசினான் இந்தச்சகாதேவன் இன்னமும் இவ்விடத்தில் இவனுடன்பேசினால் என்னென்ன ரகசியங்களை வெளிப்படையாக இழுத்துச் சொல்லுவானோதெரியாது. சாஸ்திர விசாரணையுள்ள புத்தியானதையால் கலந்து பேசுவதற்குத் தனிமையிற் கொண்டுபோய்இவனது உள்ளக்கருத்தைஅறிய வேண்டுமென்றெண்ணித் தருமன்முதல் நால்வரையும்நோக்கித் தம்பியாகிய சகாதேவன் உண்டுடுத்து விளையாடும் வயதுள்ள பாலனானதையால்மனம்வெறுப்பாகச் சொல்லுகின்றான். ஆதலால் அவனைத்தனிமையிற் கொண்டுபோய் தெரியப்படுத்தி அழைத்துக் கொண்டுவருகிறேன் தருமநந்தன சும்மாயிருந்தவனுக்குச் சுமைகொண்டுவந்து வைத்தீர்கள். அப்பா! (கொஞ்சத்திலிருக்கிறதா குரங்குமிளகுநீர்குடிப்பது) என்றுசொல்லி யெழுந்து, சகாதேவன்கையைப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய், நாகரத்தினத்தாலிழைக்கப் பட்டிருக்கிற ஒரு ஏகாந்தஸ்தானத்திலே போய் இருவருமிருந்து, சகாதேவனைப் பார்த்து, ஓ மைத்துனரே! நாலுபேரைக் கேட்ட தன்மையைபோல் உம்மையுங்கேட்டால் அவர்களுடன்கலந்துகொண்டு சொல்லாமல் என்னையிழுத்து வெளியிற்போட எத்தனை நாளாக எண்ணிக்கொண் டிருந்தீர். விவேகநிறைந்த புத்திமானே! இப்பவும் உம்முடைய இஷ்டப்படிக்குப் பாரதயுத்தம் நடக்காமலிருப்பதற்கும் யாவரும் பிழைப்பதற்கும் ஏதாகிலும்உபாயமுண்டானாற் சொல்லும் நாமிருவருங்கலந்து யோசித்துக்கொண்டு அந்தப்படி நிறைவேற்றி விடலாமென்றுசூத்திரதாரி கேட்க, சகாதேவனெழுந்து அவருடைய பாதகமலங்களிற் பணிந்து சொல்லுவான்.

ஸ்ரீ கிருஷ்ணதேவா! குள்ளநரியின் வாலைக்கொண்டோ சமுத்திரத்திலுள்ள ஆழம் பார்க்கப் போகின்றீர். சுவாமி! நீர்வேறு நான்வேறென்றெண்ணி என்னைப் புறம்பாகவிட்டுப் பேசாதீர். தேவரீர் சர்வதேசத்துஇராஜவர்க்கத்தையும் இராக்ஷதரையுங்குருக்ஷேத்திரத்திலே கூட்டிச் சாம்பராக்கிக் காற்றிற் றூற்றிவிட்டுப் பூமிபாரம் தீர்க்கும்படியாய்க் கருதியன்றோ ஸ்ரீராப்தியை விட்டுநீங்கித் தேவகிதேவியார் கர்ப்பத்தில் வந்தவதரித்திருக்கின்றீர். மேகமேனியையுடைய வேதவித்தகரே! பசுக்களைப் பரிபாலனஞ் செய்தருளியபாக்கியரே! ஸ்ரீ அரிகோவிந்தா! இது வேலையாக வந்திருக்கும் உம்மையல்லாமல்இந்தமாபாரதத்தைத் தீக்கவல்லவர் வேறே யாரிருக்கின்றார்களென்றுசகாதேவன்சொல்லப், பாண்டவர்கள் சகாயன் கேட்டு நகைத்து, நாமிருவரும் கலந்து பேசுவதென்றுபேசித்துக்கொண்ட பிற்பாடு நீர்இன்னமுங்கபடமாய்ப்பேசுவதுஞாயமன்று. உமதுகருத்தை வெளிப்படுத்தும் அப்பால் நான்சொல்லுகிறேனென்று காரியவாதியாகிய கண்ணனருள்கொண்டுரைக்க, கருணையே உருவாகவுடைய சகாதேவன்கண்ணீர் ததும்பநின்று அவரது கருத்தையுன்னி, ஓ காசாம்பூவண்ணா! நின்வாக்கினாலேயே வெளிப்படுத்த வேண்டுமென்னும் எண்ணமிருக்குமாகில் சொல்லுகிறேன்கேளும். சுவாமி! இப்போது இந்தப்பூமியைப் பட்டங்கட்டிக்கொண்டாளவேணுமென்று எண்ணங்கொண்டிருக்கிற துரியோதனராஜன் தருமராஜன் இவர்களிருவரையும் நாட்டைவிடுத்துக் காட்டிற்போகவிரட்டிப், பஞ்சாசதகோடி பூமண்டலத்தையும் கர்னனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து, கர்னனைக் கொல்லுகிறேனென்றுசபதங்கூறிப் பகைத்திருக்கின்ற அர்ச்சுனனை முன்னேகொன்றுவிட்டு, பிற்பாடு பஞ்சமித்திரர் பெரியோர் முதலிய வெகுபேர்களுடைய தலையைவாங்கக் கூந்தலைவிரித்துக்கொண்டிருக்கும் திரௌபதியினுடையஅக் கூந்தலைக் களைந்து மொட்டையாக்கிக் காலிலே விலங்கு பூட்டிவைத்து, எனக்கு நேரிலிருக்கும் உம்மையும் என்கையாரப் பிடித்துப் புயத்தோடுபுய நெருங்கக் கட்டுவனேயானால், இந்தமகாபாரத யுத்தம்விளையாமலிருக்கும்படி செய்யலாமென்றான்சகாதேவன்.

அந்த வார்த்தையை அரிவாசுதேவன் கேட்டுப் புன்னகையுடையவராய், பாம்புக்குத் தெரியும் பாம்பின் காலென்பதுபோல் அறிந்துகொண்டு, ஓ சகாதேவராஜனே! நல்லபுத்திசொன்னீர். சந்தோஷமானேன். ஆகிலும் தருமராஜனையும்துரியோதனனையும் காட்டிலோட்டிக்கர்னனுக்குநாட்டைப்பட்டங்கட்டி அர்ச்சுனனை வெட்டித் துரோபதையை மொட்டையடித்து விலங்கும் பூட்டிவைத்தால், பாரதயுத்தம் வாராதென்று நீர்முக்கியமாகச் சொல்லிய இவைகளெல்லாம் ஒருவேளை முடிந்தாலுமுடியும். அதுநிற்க என்னைக் கைப்பிடியாகப் பிடித்துக்கட்டி விடவேண்டுமென்று சொன்னீரே அதுஎவ்விதம்? என்னை எப்படி கட்டுவீரென்றுகமலக்கண்ணன்கேட்கச், சகாதேவன் சொல்லுகின்றான்.

சுவாமி! மலையினுயரத்தை மலையறியாது மற்றவரறிந்து சொல்வதுபோல், உம்முடையபெருமையுமக்குத்தெரியாது. உத்தமராகியபுத்திமான்கள் தானறிவார்கள். உந்திபூத்தோனே! உம்முடைய உருவத்

தை உண்மையாகக் காட்டினால் உமதடியார்க்குள்ளொருவனாகிய நான் கட்டுவேனென்று உறுத்திச் சொன்னான் சகாதேவன். அந்த மொழியை ஸ்ரீகிருஷ்ணதேவர் கேட்டு, அவ்வன்பனுடைய பக்திமனத்தை அறியும்படி நம்மைக் கட்டும் பிள்ளையென்று தமதிச்சையினாலாகிய பதினாயிரம் வடிவு கொண்டு, அவ்வந்தரங்க மண்டபமுழுமையுஞ் சுந்தரவங்கமுடையவரா யிருந்தார். அந்தக்காலத்தில் பரிசுத்த சித்தமுடைய சகாதேவனும் அந்தரூபங்களுக்குள் ஆதியாகிய உருவத்தை உண்மை ஞானத்தாலுணர்ந்து, உலகமுழுமையுந் தாவியளந்த உபயதிருவடிகளையுந் தன் கருத்தென்னுங் கயிற்றினாலே இறுகக்கட்டினான். அப்போது பதினாயிரம் வடிவிலே ஆதிமூலமாகிய வடிவை அற்றலாலுணர்ந்த நீதான் தேவனென்று சந்தோஷித்த தாமகொண்டருளிய எல்லாவுருவும் ஒரேயுருவாக்கிப் பிரத்தியக்ஷமாய் நின்றார். அவராரெனில் பூலோகத்திலியாவரும் போற்றித் தவம்புரிந்து தேடியுங் காணாத தாமரைமலர்போன்ற பாதங்களையுடைய சங்குசக்கரக் கையனாகிய வென்னையன்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மீட்டும் சகாதேவனைப்பார்த்து, பத்தியினாலும் புத்தியினாலும் என்னை இன்னானென்றறிந்து கட்டியமைந்தனே! உன்னைப்போலொத்த உண்மைஞானிக்கே நானுரியேன். என்னுடைய பாதத்தை இனி நீ கட்டவிழ்த்துவிட்டு விடக்கடவை. பெத்த உறுதியாகிய பாசக்கட்டையா இதுவென்று ஸ்ரீகிருஷ்ண தேவர்சொல்ல, சகாதேவன் சகஸ்திரநாமங்களினாலும் ஸ்தவுத்தியஞ்செய்து, சுவாமி! வண்மை பொருந்திய பாரதயுத்தத்திலே தேவரீர் திருவடிக்கு அடைக்கலமாகவந்து சேர்ந்த எங்களைவரையும், உம்முடைய கடாட்சத்தினாலே ரட்சணைசெய்ய வேண்டும் என்றுசொல்லிவணங்கி, இரண்டு செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் நமஸ்கரித்த சகாதேவனுக்கு ஐவரையுங் காக்கிறேனென்று நிச்சயஞ் சொல்லிக் கட்டு விடுவித்துக்கொண்டு, இன்று நாமிரண்டுபேரும் இவிடத்திற்பேசி நடத்திய சங்கதிகளொன்றும் அயலாரியச் சொல்லாதே யென்று மேல் நடக்கவேண்டிய காரியங்களையெல்லாங் கலந்து பேசிக்கொண்டு, அந்தச் சபையைவிட்டு நீங்கி, அறிவுடையோராகிய அவ்விரண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோரிருக்கிற சபைக்கு வந்தார்கள்.

அப்போது குற்றமற்ற குணத்தினையுடைய திரௌபதியானவள் மற்ற நாலுபேரைப் போலே சகாதேவராஜன் ஒப்புக்கொள்ள மாட்டார் நமக்காகவே பாடுபட்டுப்பேசி அளகமுடிக்கும் விதத்தை யோசித்து வருவாரென்று மிகவு மனமகிழ்ந்து, நெடிய அளகபாரஞ்சோர எதிரில்நின்ற பாஞ்சாலியின் கருத்தை புணர்ந்த கண்ணன் அவள் முகத்தைப் பார்த்து, ஓ திரௌபதா தேவியே! பாண்டவர்களில் இளையோனாகிய இந்தச்சகாதேவன் வேறுவிதமாகச் சொல்லுவானாக்களுமென்றெண்ணித் தனித்துப்போயோசித்தகாலத்தில், துரியோதனன்பால் தூதுபோகச் செய்வதே உத்தமமென்று இவர்கள் கருத்தைப் போலவே யெடுத்துச்சொன்னானென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்ல, இந்த மொழியைக்கேட்ட பாஞ்சாலி இடியோசைகேட்ட நாகம்போலேங்கி, இரைச்சலிட்டொடுங்கிப் பெருமூச்சுவிட்டு, ஓதெய்வமே! தாயாதிகளுடன் சண்டையிட்டுச் சபதத்தைமுடிக்க மனமில்லாமல் தூதுபோக்கி, பெருமைபொருந்திய பூமியைப் பெற்றுக்கொண்டு, அவர்களுடன் குலாவி வாழ்வதற்குத் தருமபுத்திரர் முதல் சகாதேவருக்கும் இஷ்டமிருக்குமென்று தேவரீர் சொல்லுவீராகில், பூவைமறந்து புழுகிபிறப்பாளும் அளகபாரத்தை வாரிமுடித்து எல்லஞ்சினந்தீருங் காலமெதுவோ வென்று மின்னலையொத்த திரௌபதையானவள் மாயவனுடைய மலரடிமேல் வீழ்ந்து, மண்ணிற்புரண்டுகண்ணீர்சோரவிட்டழுது இதனைச் சொல்லுவதாயினாள்.

முன்னொருபோது இரணியகசிபனானவன் ஆகாமியத்தால் ஆதிமூலப்பொருளாகிய தேவரீரையே வாயினாற் செபித்திருக்கும் தன்குமாரனைப் பார்த்து மிகவுங் கோபங்கொண்டு, இராக்ஷதவயிரியை நாவினாற் கூவி என்குலத்தை நாசம்பண்ணவந்த மோசக்காரனாகிய அடாபாலா! பிரகலாதா! இப்போது நீசொல்லுகின்ற பேரையுடையவன் எங்கே இருப்பானடாவென்றுகேட்ட தந்தையைநோக்கி, ஐயா! சங்காழியிற்றுயின்ற சங்குசக்கராதரனாகிய எம்பிரான் எங்குமிருப்பானென்று சொன்னவுடனே, அவனிலும்கொடியகனல்போற்சீறி, அடாபாவி! இந்தத்தூணிலிருப்பானோவென்று கேட்க கலீரென நகைத்துத் தூணிலுமிருப்பானென்றுசொல்ல, அவ்வாறே துரிதத்துடன் ஆங்காரங்கொண்டு ஓங்காரமிட்டு அறையும்படியாக அந்தத்தூணிலிருந்து உக்கிரநரசிங்க மூர்த்தியாயுதித்து, இரணியகசிபனைச் சங்காரம்பண்ணிப் பிரகலாதனைச் சன்மானஞ் செய்தருளிய இறைவனே! மற்றொருபோது பதினாயிரம்வருடம் முதலையினிடத்திலகப்பட்டு வருந்தி ஆதிமூலமே யென்று பெயரிட்டழைத்த மும்மதம் பொழியுங் கஜேந்திரனுக்குச்சமயமாக நீலமலைபோல நேரினின்று முதலையை அழித்து யானையைக் காத்தருளிய கஜேந்திரவரதா! கண்ணில்லான் பெற்ற துச்சாதனன் கற்றையாகிய என் அளகபாரத்தைப் பிடித்திழுத்து வந்து சபையில் நிறுத்தி, நஞ்சைப்போன்ற பல வார்த்தைகளைக் கொஞ்சமேனு மஞ்சாமற்பேசி அபிமானபங்கமாக வஸ்திரத்தையுரியும்போது, என்னருமைக் காவலராகிய பஞ்சபாண்டவரும் நெஞ்சுபொருந்திப் பார்த்திருந்தார்களேயொழிய வேறொன்றுஞ்செய்திலர். அக்கால் நானதாதுகலங்கித் தஞ்சமென்றழ, வெற்றிபொருந்தியசக்கராயுதத்தையுடைய கோவிந்தா! அன்றைக்கும் என

மானத்தைநீர் காப்பாத்தினீ ரல்லாமல் வேறேயார் வந்து காத்தவர்கள். ஐயனே! இன்றைக்கும் மற்றென்றைக்கும் நீரே துணை என்றுபுலம்பிப் பின்னுஞ் சொல்லுகின்றாள்.

ஓதேவே! இராஜசபையில் என்னை யழைத்து நிறுத்தி என்குல கோத்திரத்துக்கும் பழுதுண்டாகும் படியாகிய குற்றத்தைச் செய்த சற்பக்கொடியோனிடத்தில் தூது விடுத்து, அவன்கொடுக்க ஐந்தூர்பெற்று, சுத்த வீரர்களென்று பேர்வைத்துக் கொண்டு உயிர்வாழ்ந் திருக்க இப்பாண்டவர்கள் நினைப்பார்களேயானால், தீவினைப்பாவியாகிய நான் அன்றுவிரித்த கூந்தலை இனியென்று முடிக்கப்போகிறேன்? தீனர்களுடைய எண்ணத்தை முடிக்கும் எமது தெய்வமே! தெய்வமே! யென்றழுதாள். அவள் முகத்தைக்கண்ட அந்தச் சபையிலிருந்த யாவருங் கண் கலக்கப்பட்ட காலையில், சாத்தகி மூர்த்தண்யகோப முடையவராய்த் தருமராஜன் முதலியபேர்களை நோக்கி எழுந்து, ஐஐயோ!! இதென்ன அனியாயம் மூவுலகமுமதிக்கும் வீமசேனன்கையில் தண்டாயுதமிருந்தும், திசை பத்தும் இசைபெற்ற விஜயன்கையில் காண்டீபமென்னும் வில்லிருந்தும், பூவும் வண்டும் பொருந்திய அளகம் புழுதியிற்புரளும் படியாய் திரௌபதி புலம்பிப் பரதவித்துக் கொண்டிருந்தும், இன்னமும் நீங்களெல்லோரும் பார்த்துக்கொண் டிருக்கின்றீர்க ளல்லவா? சத்துருக்களிடத்திலே தாழ்ந்து வருந்தி அவன்கொடுக்கும் நாட்டைப் பெற்றுக்கொண்டு குறைவில்லாமற் புசித்து உயிர் வளர்ப்பதற்கு யோசிக்கின்ற உத்தமர்களே! க்ஷத்திரிய தருமநெறி இதுதானோ சொல்லுங்களையா? இதன்றியும் பிரசண்ட வேகமுடையமேகத்தினது பிரளயகாலத்து இடியைப்போன்ற சர்வலோக ஜயசிம்மனாகிய ஜராசந்தனுடைய தண்டனைக்குப் பயந்து, தன்னைக் காப்பதற்குக் காவலாகிய துவாரகையைக்கைக்கொண்டு, சகலவளப்பமுமுடைய வடமதுராபுரியை விட்டுவிட்டோடிய திலிந்த சாமர்த்திய முடைய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் சொற்புத்திடைக் கொண்டோ? அல்லது பிரகாசம் பொருந்திய தரும புத்திரருடைய சுயபுத்தியைக்கொண்டோ? துரியோதனனாகியருடைய துற்குண முள்ளதெல்லாம் பூர்வத்திற்றெரிந்திருந்தும் இன்னமும் அவனிடத்திற் றூது போக்கி நாடு கேட்கச்செய்வது, தெய்வமே! இதென்னமதியோ? இரணியகருப்ப னெழுதிய விதியோ? ஏதொன்றும் அறியேன் சிறியேனென்று மிகுந்த ஆறுமையோடு சாத்தகியானவர் தன்னைமறந்து சொல்லவே, பின்னபின்னலாகச் சடைபட்டிருக்குந் தலைமயிரையுடைய பாஞ்சாலி சபையில்விழுந்து, சஞ்சலத்திலாழ்ந்து பிரலாபித்துப் புலம்பும்போது, தருமபுத்திரர் முதலாகிய ஐவரையும் அருள் நிறைந்த தாமரைக் கண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பார்த்து, கற்புக்கு வித்தாகிய திரௌபதியை நோக்கிச் சொல்லுவதாயினர்.

என் றங்கையாகிய மங்கையே! நீகண்கலக்கப்படாதே காரியமொன்றும் முழுகிப்போகவில்லை(குடலறுபட்டகரி கூப்பிடுதூரபோடுமா?) குணவதியே! இப்போதும் தருமராஜன்முதலிய பேர்களின் எண்ணத்தின்படி, நான் தூதுபோய் வருகிறேன். நீ இதைக்குறித்து விசனப்படாதே. தடுக்காதே ஓ திரௌபதையே! பாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தவுடனே உன்னுடைய பில்லிய கூந்தல்மயிரையும் உன்னைப் பேரவையில் அவமானஞ் செய்தபேர்களுயிரையும் நானேமுடிக்கிறேன் இதல்லாமல் உன் கூந்தல்விரியும்போது அஸ்தினபுரியும் அரசருடைய சபையும் அறிந்ததேயன்றி மற்றியாவரும் அறியார்கள். இனிமேல் சத்துருக்களின அந்தப்புரத்தி லிருக்கும் ஸ்திரீகளுடைய கூந்தல் விரியப்போகிறதையும் அவர்கள்படும அலங்கோலத்தையும், இயாவரும் உலகமுள்ள வரையிலும் அறிந்துசொல்லி நகைக்கப்போகிறதை நாளையே காணப்போறாய் கரியகூந்தலையுடைய காரிகையே! இன்னமுங்கேள். சத்துருக்களுடைய தேகங்களென்னும் வயலிலே, உழுதற்குரிய கொழுவாயுதம் போன்ற வாளாயுதத்தினாலுழுது, வீரவரம்பு புதுக்கி நிணச்சேறுதிருத்தி, இரத்தநீர்பாய்ச்சிப் பிராணவித்தைவிதைத்து, வளர்ந்த அரசர்களுடைய குலமாகிய முதலை அறுத்து, கழுகுபருந்து காக்கை முதலானவைகளுக்குக் களப்பிச்சை தந்து, நமனுக்குக் கீர்த்தியென்னும் மேல்வாரங் கொடுத்துக், குடிவாரங் குவித்து, ஐவருடைய துயரசாகரத்தையும் உன்னளகபாரத்தையும் துரியோதனனாகிய பூமிபாரத்தையும் முடித்து விடுவதற்கு உன்குமாரனாகிய அபிமன்னனொருவனிருக்கின்றானாகையால். அம்மா சும்மா இருவென்றுரைத்துப் பெண்தன்மையிற் சிறந்த திரௌபதியினுடைய கண்களிலிருந்து மாரிபோற் பொழியுங் கலுழிவாரியைத் தம்முடைய கரங்களினால்துடைத்து தமது கண்களிலுங் கிருபைவெள்ளம்பெருகக்கொடிக் திரௌபதியினுடையமனம நப்பும்படியாகத்தேற்றி, அந்தப்புரத்தினுக் கனுப்பிவிட்டனர்.

கண்ணன் அத்தினபுரிக் கெழுந்தருளல்.

இப்பால்-பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூத வடிவமாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் தருமபூபதியைப் பார்த்து, ஓஅரசனே! கேளும் வியாதிக்காரர்-துறவிகள் - ஒருவருக்கும் அடங்காத துஷ்டர்கள்-கோபமுடையவர்கள்-சற்றுணராமூடர்கள் -சிறுபிள்ளைகள்-நீதியுணராதவர்கள்-பேதமையாகியஸ்திரீகள்-இவர்களைச் சபையிற்கூட்டி வைத்துக் கொண்டு ஒரு ஆலோசனையுஞ் செய்யக்கூடாது. அப்படிக்குத் தருமவிதியிருக்க, இந்தத் திரௌபதையைச்சபையில் வைத்துக்கொண்டு ரகசியம் பேசினதினால்நாமேதோ

சவுக்கியத்தைக் குறித்துப் பேசுகின்றேனென்று பெண்புத்தியினால் இவ்வளவுதூரம் விபரீத துயரத்தை விளைத்துவிட்டாள் ஓ தருமநந்தனா! நான் அந்தவேளையில் அவ்வளவு உபசார வார்த்தையாகச் சொல்லாவிட்டால் அந்தமனதுக்கு மெத்தவருத்தமுண்டாகும் ஆகையால் இத்தன்மையவாகிய உபசாரஞ்சொன்னேனென்று தருமராஜனுக்கு மனவருத்தம் வராமற் சாந்திசொல்லிக் கொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணசுவாமியினுடைய வசனதந்திரங்களைத் தருமராஜன் முதலியபாண்டவரெல்லாரும் நிவர்த்தித், தமக்குத்தாமே ஒப்பாகவிருக்கும் சுவாமி! காலதாமசம்பண்ணாமல் தேவரீர் தூது போகவேண்டுமென்று வேண்ட, அவர்கள் வேண்டுகோளின்படி வணங்காமுடிபொருந்த மன்னவனிடத்தில் தாம் தூதுபோகும்படியாய்ச் சர்வாபரணாலங்கார சந்தனசுகந்தைகள் தரித்துக்கொண்டு, தம்முடைய ஜனனநாளாகிய உரோகணி நக்ஷத்திரத்திற்குத் தாராபலமும் சந்திரபலமுமுள்ள ரேவதிநக்ஷத்திரத்தில் பிரயாண முகூர்த்தங் கொண்டு, தானதருமங்கள் செய்து, சமஸ்தமானபேர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, தெய்வவணக்கம் ஆசாரியவணக்கமுதலானவைகளைச் செய்து. நற்சகுன முதலியவுமபார்த்துத் தம்மனதின்வண்ணம் நடக்கும்படியாகிய நல்லவேளையில் விராடர் பாஞ்சாலர் முதலிய அரசர்களோடு பாண்டவர்கள் பின்றொடர்ந்து வழிகூட்டிவிடப்படியாக, மனோவேகத்திலும் வாயுவேகத்திலும் மிஞ்சிய வேகப்புரவிபூட்டி மகமேருக்கொப்பாகியிருக்கின்ற தேரின்பேலேறிக்கொண்டு, சல்லரி - மல்லரி- சங்கு-தம்பட்டம்-பம்பை-பேரிகை-முரசு -மத்தளம்-தாரை-முதலான வாத்தியங்கள்முழங்க, வெள்ளைக்குடை முதலிய பலவன்னக்குடைகள் கவிந்து நிழல்செய்துநெருங்க, இருபக்கங்களிலுஞ் சாமரைவீச, கணக்கிறந்த ரதகஜதுரகபதாதிகள்-பூமியையாளும் அரசர்கள்- பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர்-மன்னர்-மண்டலிகர்-மந்திரிகள்-சாமந்தர்-தந்திர சுதந்தரசேவகர் எண்டிசைப்பாலர்-இவர்கள் யாவருஞ்சூழ, கட்டியர்- பட்டுவான்கள்-புகழ்வோர்-வந்திப்போர் முதலியபேர்கள் முந்திக் கூடிக்கொண்டோட, பரதநாட்டியஸ்திரீகள் பிந்திப் பாடிக்கொண்டாட, ஆலவட்டம்-தாலவட்டம்-பீலிக்குஞ்சப்-மயிர்பீலி-மேற்கட்டிமகரதோரணங்கள்-குடைகள்-கொடிகள் - சவளக்கழி-பாலா- பல்லயம்-ஈட்டி-எறியீட்டி-வாள்-வேல்-முதலியவைகளெல்லாம் அளவற்றபேர் அளவற்றனவா யேந்திக்கொண்டு வீதிகளில்நெருங்கி வரும்படியாக, ஸ்ரீகிருஷ்ணதேவர் புறப்பட்டார்.

அதுகாலையில் தம்பியாகியசாத்தகியும் இரதமேறிச் சேனைநாயகராகப் புறப்பட்டுச் சேனைகளையெல்லாம் அணியணியாக நிறுத்தி, யானைத்தலைவர்-சேனைத்தலைவர்-கொடித்தலைவர்-குடைத்தலைவர்-குதிரைத்தலைவர்-இரதத்தலைவர்-அணித்தலைவர்-பணித்தலைவர் - படைத்தலைவர்-முடித்தலைவர் - வாத்தியத் தலைவர்-குசோத்தியத்தலைவர்-சேவகத்தலைவர் - பொக்கிசத்தலைவர்-நவரத்தினப் பூஷணத்தலைவர் - பட்டுபட்டாவளி பீதாம்பரமுதலிய வஸ்திரத்தலைவர்- அஸ்திரத்தலைவர் சஸ்திரத்தலைவர்-சாஸ்திரத்தலைவர்-மல்யுத்த முதலிய வாள்வீரத்தலைவர்-வில்யுத்தமுதலியவேல்வீரத்தலைவர் யாவருஞ்சூழ்ந்து வரிசைவரிசையாக வரும்படி நடத்திக்கொண்டுவர, அப்போது கார்கால் மேகம்போன்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னைவழி விடும்படியாக வருகிற யாவரையும் பார்த்து நில்லுங்கள் நில்லுங்களென்று சொல்லும்போது, தருமராஜன் சுவாமியைநோக்கி, ஓகருணைவாரிதியே! எல்லாந்தெரிந்த உமக்கு நான் விஸ்தரித்துச்சொல்லவேண்டியதில்லை. (இலைக்கு மண்ணாங்கட்டி ஆதரவு மண்ணாங்கட்டிக்கிலை ஆதரவு) என்றுரைக்குந் தன்மையைப்போல், ஒன்றுக்கொன்றுசரவாக முடித்துக்கொண்டுவரவேண்டியது. ஆனால் காற்றுமழையுங் கலந்தடித்தால் காற்றினால் இலைபறந்துபோமே மழையினால் மண்ணாங்கட்டி கரைந்துபோமேயென்று தேவரீர் திருவாய்மலர்ந்தால், அப்பால் நாம் செய்யத்தக்கதென்ன ஒன்றுமில்லை. எல்லாம் சிவன்செயலென்று நடத்தவேண்டியதே நன்மை ஆகையால் தேவரீர் அஸ்தினபுர போய்ப் பேசுமிடத்தில் தருமதேவதையும், வேதப்பிராமணர்களும் நீதியையுடைய வேந்தரும் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளும்படியாகப் பேசவேண்டியது எங்கள் பெரியதந்தை பாட்டனாராகிய வீஷ்மாச்சாரியர்-துரோணாச்சாரியர் கிருபாச்சாரியார்-அசுவத்தாமர்-முதலியயாவருக்கும் எங்களுடைய சாஷ்டாங்க நமஸ்காரஞ் சொல்லவேண்டியது. இரக்கமுநீதியுமுடைய சிறியதந்தை விதுரமகாராஜனுக்கும் பணிந்ததாகச்சொல்லி, தேவரீர் எங்கள்பேரில் வைத்திருக்கும் கடாட்ச வீக்ஷண்ணியத்தையுந் தெரிவித்து, எங்கள் தாயாகிய குந்தியம்மனுக்கும் எங்களுடைய சரணஞ்சொல்லி இதுவரையிலும் உன்பிள்ளைகள் உன்னுடைய புண்ணிய வசத்தினால்பிழைத் திருக்கின்றார்களென்று தெரிவித்து, அந்தஅம்மாளுடைய பேதைமனது பேதிக்காமலிருக்கும் படிக்குத் தேவரீர் திருவாக்கினால் உறுதி வாக்கியமுஞ் சொல்லிப் பிற்பாடு சபையினிடத்திற் பேசவேண்டிய பிரகாரங்களெல்லாம் பேசி, நன்மையான காரியங்களாக நடத்திக்கொண்டுசீக்கிரம்வரவேண்டியதென்று முரசக்கொடியினையுடைய முதல்வன்சொல்ல, வீமசேனன்வணங்கி, சுவாமி! எங்கள் ஐயாமுதலிய வெல்லோர்க்கும் என்வந்தனங்கூறி, எல்லோரையும் ஏககாலத்தில் ஒரேகூட்டமாப்பார்க்க என்றைக்குக்கிடைக்குமென்று ஏக்கங்கொண்டு தூக்கமில்லா திருக்கின்றான் வீமனென்று விளம்பும் மேகமேனியனே என்றான். உடனே அருச்சுனன் வணங்கி, சுவாமி! தேவரீரைக்கண்டவுடனே பற்பலவுபசாரங்கள் செய்து, எல்

லாந் தேவரீராலேயே முடியவேண்டியதென்றும் உமது இஷ்டப்படி நாடுநகரங்களெல்லாங் கொடுத்துவிடுகிறோமென்றுந் திரிதராட்டிர ராஜன் முதலிய சகலருஞ் சொல்லுவார்கள். அதுவாசா கயிங்கரியமேயன்றிவேறல்ல, தேவரீர் அதைநம்ப வேண்டாம் அவர்களிடத்தில் டங்டிங்கெனத் தாக்ஷண்யமில்லாமல் ஆம் அல்லவென்று இரண்டொருவார்த்தையாய்க்கேட்டுக்கொண்டு சீக்கிரமாய் வந்துவிடும் தீனதயாளுவேயென்னவும், நகுலசகாதேவர்களும்வணங்கி, ஆண்டவனே நாட்பட்டிருக்கவேண்டாம். போனதும் வந்ததுமா இருக்கவேண்டுமென்று புகல, திரௌபதை தீர்க்க தண்டஞ்செய்து வணங்கி மேகவண்ணமுடைய அண்ணா! நான் இதுவரையிலுங் காலங்கழித்ததுபெரிதல்ல இப்போது நீர்போய் வருகிறவரையிலும ஒருயிர்மகல்பமாய் நாளைக் கழித்துக் கொண்டிருப்பேனென்று நவிலவும், விராடன் பாஞ்சாலன் முதலியபேர்கள் அருகிற்கலந்து, ஓ ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி! எதுவந்தாலும் எதுபோனாலும் இவர்களுடைய சபதமாத்திரங்குறைவுபடாமல் நிறைவேறும் விதத்தை யோசிக்க வேண்டியதென்று உரைக்க, எல்லோருடைய வார்த்தையுங் கேட்ட இறைவன் சந்தோஷமடைந்து, நல்லதாகட்டும் உங்களிஷ்டப்படியே பேசிவருகிறேனென்று யாவரையுந்தேற்றி, ஸ்ரீகிருஷ்ணபகவான் தேரை நடத்தும்படி உத்தரவுசெய்ய, உடனே அவருக்குச்சமயாமிய தம்பி சாத்தகியானவர் தேர்முதலியசேனைகளைச் செல்லவிடுத்துத், தானும் அடுத்து முன்னும்பின்னும் பாராபரிபண்ணிக்கொண்டு சேனாநாயகராக நடக்கவும் தேவேந்திரன் முதலகியதேவர்களும் நாரதாதிமகாரிஷீஸ்வரர்களும் பார்த்து மனங்களிக்கவும், ஆதிசேடன் பணாமகுடங்கள்களிக்கவும், பூமிதேவி மகிழ்விற்குளித்து உடல்பூரித்து நமதுபொருட்டால் சுவாமி! அஸ்தினாபுரிக்குத் தூதுபோகின்றாராகையால் இனிமேல் நமது பாரநீங்குமென்று பரிந்து உபசரிக்கவும் சகலவளமுங்கொண்ட உபலாவியத்தைவிட்டு, அஸ்தினாபுரத்தைநோக்கி, நாட்டைக்கடந்து காட்டில்வரும்போது. நாரதர்-கண்ணுவர்-சமதக்கினி என்னுமிந்த மூவருந்தங்களுடன் அநேக உபரிஷிக்கூட்டங்கள் நெருங்கும்படியாக வந்து, ஜகநாதன் தூதுபோவதைப்பார்த்தார்கள். அவர்களைக்கண்டவுடனே ஸ்ரீகிருஷ்ணதேவர் தேரைவிட்டிறங்கி, அவர்களுக்கு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, வந்தகாரியமென்னவென்று கேட்டார். அதற்கு அந்தரிஷிகள் மூவரும் அவரைமனத்தினால்வணங்கி, தேவரீருடைய விஸ்வசொரூபதரிசனஞ் செய்யவேண்டிய இச்சை யுடையவர்களாயுந், தேவரகசியப்பிரகாரம் அஸ்தினாபுரத்துக்குத் தூதுபோய் அரவக்கொடியோனைக் கண்டு அவனிடத்தில் பேசப்போகிற அதிசயங்களைக் கூடயிருந்து பார்க்கவேண்டுமென்னும் அவாவுடையவர்களாயும் வந்தோமென்று இணங்கிச்சொல்லியபெரியோர்களைப்பார்த்து நீங்கள் அஸ்தினாபுரத்திற்கு வருவீர்களாகில் உங்களிச்சைகளியாவும் நிறைவேறுமென்று பரிபூரணமாக அருள்வாக்கியம் பகர்ந்த பரமபத நாதனைப் பணிந்து வாழ்த்தித், தேவரீர் முன்னதாகச் செல்லும் நாங்கள் பின்னாலே வருகின்றோமென்று விடைபெற்றுக் கொண்டுமூவரான அம்முனிவர்கள் மறைந்துபோனார்கள்

இவ்வகையாய் முனிவர்கள் சென்றபிற்பாடு ஸ்ரீகிருஷ்ணபகவான் தேரேறிக்கொண்டு, கல்லும்மலையுங் காடுமேடும், புல்லும்பூடும் புதருந்திடரும், பாலைநிலமும் பனிவரைச்சாரலும், வேலையைநிகர்த்த வெண்புனற்றடங்களும், காட்டெருமைப் பால் கட்டியாய்ப்பெருகி, ஓட்டங்கொண்டே உறையுமிடங்களும் சிங்கமுதலிய செழுமிருகங்கள் தங்கியே விளையாட்டயரும் வனங்களும், ஆக மளாவியவாகாய மரங்களும், மலையருவிகளும வடியாக்கான்யாறும், நீர்வளம்நெல்வளம் நிறைந்தநிலங்களும், வாளைகள்பாயும்வயல்பெறுதலங்களும், வெண்கிளி பசுங்கிளி விளர்புமைனாக்கள், வண்குயில் மயிலிவைவசிபூம் பொழில்களும், வானமுகமுகுவன் கரும்புடனே, காமைபினீர் கழைகருசோலையும், வெர்ப்பலாக்கனியை விபன்மந்திமீறவண்டார்க்குதேன்பருக வவனியுங்கடந்து, இரண்டுநாள்வரையில் வழியில் இருந்தீளைப்பாறி மூன்றாநாள் குருநாட்டெல்லையில்வந்து, அண்டகடாகத்தை அளக்கப்புகுந்த தன்மைபோன்ற உயரத்தையுடைய கோபுரங்களும் நாகலோகம்வரையிலும் ஆழ்ந்து மேகலோகம் வரையிலுமுயர்ந்து வளைந்திருக்கும் மதில்களும் அம்மதில்களைச்சூழ்ந்த அநேகஅகழ்களுமுடைய பெரிய செல்வமோங்கிய அத்தினபுரியை ஸ்ரீகிருஷ்ணதேவர் கண்டு நடக்கும்போது, அந்தமார்க்கத்திலே வரிசையாயிராநின்ற பசுமைபொருந்திய பாக்குமரங்களில் அதிற்பழுத்திருக்கும் பச்சைக்குலைகளும்விரிந்தபாளைகளும் தழைத்து விளங்கியது எப்படி இருந்ததென்றால் தாவியவேகத்தையுடைய குதிரைகட்டிய தேரின்பேரில் ஸ்ரீகிருஷ்ணதேவர் அஸ்தினாபுரத்துக்குத்தூது வருகின்றாரென்று பவளச்சரங்களும் மரகதமணிகளின் பந்திகளும் வெண்மையாகிய முத்துக் கோவைகளும் வரிசையாகத் தூக்கிய அலங்கார மண்டபம் அமைந்ததுபோலிருந்தன மேலும் பரிமளம்வீசும் அகில்விருட்சமும் சந்தனமரமும் பலாமரமும் மாமரமும் சண்பகமரமும் பச்சிலைமரமும்நெருங்கி விளங்கிக்கொண்டிருக்கும் சோலையில் தேவநாயகன் வந்திறங்கித் திருவடிபெயர்த்தருளியபோது, எதிர்கொண்டு உபசரிக்க வந்திருந்த பரதநாட்டிய மாதர்களைப் போன்ற மயில்கள் கண்ணனுடைய திருமேனியைக் கார்காலமேகமென்று கண்டு தோகையை விரித்துக் களிப்புடன் தொந்தோமென்று ஆடிக்கொண்டிருந்தன வண்டுகள் பாடிக்கொண்டிருந்தன.

இஃதன்றியும்-சுவாமிவரும் வழியில் இருபக்கங்களிலும் நிறைந்த நீர்களையுடைய அலர்ந்த செந்தாமரைப் பொய்கைகள் பொருந்தியதன்மை எப்படியிருந்ததென்றால், அமுதக்கிடமாகிய அஸ்தினாபுரியென்னும் கன்னிகையானவள் மகாலட்சுமிக்கு நாயகராகிய மகாவிஷ்ணு வருகின்றாரென்று, பற்பல நிறமுள்ளராதமும் மலர்ந்ததீபமும் பொற்சுண்ணங் கலந்த மஞ்சள்நீருடன் ஆலாத்தியெடுத்து அசைக்குமின்றதைப்போலுமிருந்தன. அப்பால் தூதுவரும்படியாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் ஆதிவராகரூபியாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பெயர்த்தநாளில், அந்தவழியாகவங்கெழுந்த பாதாளகெங்கைஅஸ்தினாபுரத்தின் பெரியமதிலை வளைந்துகொண்டதென்று சொல்லச்சிறந்து, ஆழ்ந்துவாழ்ந்திருக்கும் அகழியும், அடியானது பாதலத்தினும் முடியானது மீதலத்தினும்பொருந்தி, அளவிடக்கூடாததாகி, ஒப்புவமையில்லாமலுயர்ந்து, வளர்ந்துவளைந்து, நெடிய கடல்சூழ்ந்தசக்ரவாளகிரியை இந்தமதிலுக்குப் படியா யமைத்திருக்கின்றதென்று சொல்லும்படியாய், பற்பல பொறிகளையுங்கொண்டு விளங்கியமதிலும், பகற்காலத்தில் சூரியவெப்பம் பூமியிற் படவொட்டாமல் நிழலைச்செய்து, ஒற்றைச்சக்கரமுடைய சூரியனதுதேரைநடாத்தும் அருணனுக்குச் சகாயமாகப்படபடாகார சப்தத்தினால் சப்தமாவென்னுங்குதிரைகளைத்துரூசபோட்டி, வெற்றிவீரப் பிரதாபத்தைத் திசைகளினிடத்திற்காட்டி, வேகங்கொண்ட காற்றின் விசையினால் ஆகாயகங்கையில் நனைந்து அதினுடையஅலையைப்போலசைந்து, மேகமண்டலத்திற் புகுந்து, மின்னலைப்போல் பிரகாசித்து, அழகியமதில் முதலிய நகரங்களெல்லாம் நெருங்கி ஆடிக்கொண்டிருக்குங் கொடியாடைகளும்வகித்து, ஆதிசேடன்முதலாகிய பேர்களுக்கு மோகமாகிய நாகலோகமோ? ஐந்தரு வளர்ந்து இந்திரற்கமைந்த தெய்வலோகமோ? வளமெலாஞ்சூழ்ந்த அளகாபுரியோ? நித்தியமகிஷியையுடையசத்தியலோகமோ? இந்த அஸ்தினாபுரியென்றெண்ணும்படியாகிய பட்டணத்தில், மலைகளின் சிகரத்திலிருந்தெழுகின்ற கரியமேகங்களைப்போல், மாடமாளிகையிலிருந்தெழுகின்ற அகிற்புகை சந்தனப்புகையின்வாசனைகளும்அரசர்களுடையதேர்களும்யானைகளும்குதிரைகளும் சேனைகளும் எதிரெதிர்மயங்கிப், பின்னுமுன்னுங்காலெடுத்துவைப்பதற் கிடமில்லாமல்நெருங்கி இடியுண்டு, போமின்கள் போமின்களென்னுஞ் சொல்லினுடைய சத்தங்களே மிகுந்து புறப்போக மாட்டாமல் மயங்கிக்கொண்டிருக்கு மணிவீதிகளும், மலைபடுதிரவியமாகிய மாணிக்கம்-யானைத்தந்தம் -மிளகு-கோஷ்டம்-அகில்-சக்கோலம்-குங்குமம்- முதலாகியனவும், காடுபடு திரவியமாகிய சௌரிமான்மயிர்-மெழுக்கு-மலைத்தேன்-கூண்டுத்தேன்-அரக்கு-மயிற்பீலி கஸ்தூரிமுதலியனவும், நாடுபடுதிரவியமாகியநாணயவரிசல்-செந்நெல்-சிறுபயறு-கரும்பு-வாழை -செவ்வளநீர்-முதலியனவும், கடல்படுதிரவியமாகிய பவளம்-முத்து-சங்கு-உப்பு-ஒக்கோலை-முதலாகியனவும் விதம்விதமாகக்குவித்து வரிசைவரிசையாக வமைந்திருக்கின்ற கடைவீதிகளும்; எங்கும் நிரைநிரையாயமைத்திருக்கின்ற படைவீடுகளும்; காட்டிலிருக்கும் பற்பலவித மலரைப்பார்க்கிலும் சிறந்துமிகுந்த கூட்டங் கொண்டிருக்கின்ற சுத்தவீரர்களும், கடற்கரையின் வெள்ளைமணற்பரப்பைப் பார்க்கிலுங் குவிந்து நிறைந்த கிள்ளைக்கொப்பாகிப் பறக்கும் அச்சுத்தவீரருடைய குதிரைப்பந்திகளும்; இராக்காலத்திற் றோன்றும் நக்ஷத்திரங்களிலும்அதிகமாகிய அளர்கள யானையினங்களும், மேகத்தின் றளியினு மேற்பட்ட அவ்வீரர்களூர்ந்துதிரியுந் தேர்களும்; குற்றமில்லாத நான்குவேதமுமுணர்ந்த பிர்மக்ஞானமுடைய வேதவேதியர்களிருக்கும் அக்ராரவீதிகளும்; மாசற்றமணிகளாற்செய்த கிரீடம்பொறுத்த மன்னவரிருக்கும் அரண்மனைவீதிகளும்; பழுதில்லாத புத்தி யுத்திகளையுடைய மந்திரிமார்களிருக்குஞ் சுந்தரவீதிகளும், நித்தியதவமாகிய சத்தியங்களும் தருமமுஞ் சிறந்தவைசியர் வாழ்வுபெறும் மாணிக்கவீதிகளும்; மங்களசங்கமுழங்கக் கலியாணஞ்செய்கின்றகடிமணவாசல்களும் சிலம்போசை சப்திக்க நடனஞ்செய்கின்ற தேவாதர்களின்தெருக்களும்; வெற்றிமுரசு-வீரமுரசு-தியாகமுரசு-கல்யாணமுரசு-முழங்கிக்கொண்டிருக்கும் கொடிஸ்தலாதிபதிகளின் ஆசாரவாசல்களும்; மத்தளம் டோல் முதலாகிய வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருக்கும் பிர்ம்மாலய தேவாலயவீதிகளும்; தெருவாசலில் நிற்க இடம்பெறாமல் அரசர்களுடையகிரீடங்கள் ஒன்றோடொன்று ஊடுதாக்கி உராய்ந்துதிர்ந்தபுபரஞ்சிப்பொடிகளோடு இரத்தினராசிகளினிறைந்த ஆசாரவாசலின் படிகளமைந்த மகம்மேருவைப்போலிருக்கும் கொலுக்கூடமும்; சித்திரமேடை மணிமாளிகை முதலானவைகள் நிறைந்ததெருக்களும்; சூரியன் வந்து இளைப்பாறுதலுக்கு ஏற்பட்டதென்று சொல்லும்படியாக வுயர்ந்த கோபுரவாயில்களும்; சிங்காரத்தோப்புகள்-பளிங்குமேடைகள்-நீராழிமண்டபங்கள்-மணிவேதிகைகள்-பூரணகும்பங்கள் -மேற்கட்டிகள்-பூப்பந்தல்கள்-மணிப்பந்தல்கள்-இவைமுதலானவைகளை எப்போது மாறாதவைபவத்தைப் பெற்ற அஸ்தினாபுரத்தின் அலங்காரத்தைக்கண்டு கண்களிக்கப்பார்த்து, ஸ்ரீகிருஷ்ணசுவாமிமுதலிய யாவர்களுந் தெருக்குக் கோபுரவாசலில் திவ்யமணங் குடிகொண்டு குளிர்ச்சிபொருந்தி இருக்கும் செண்பகச் சோலையினிடத்தி லெழுந்தருளி யிருந்தார்கள்.

அந்தச்சோலையிலும் அஸ்தினாபுரத்தின் சாலையிலுள் காலையுமாலையுங் காவலாகயிருந்த தூதுவர்சுவாமிவரவைகண்டுவணங்கி, நந்தியாவட்டமாலையணிந்த துரியோதனன்சபையிற்சென்று பணிந்து கந்தரமிகு

நகைதந்தாராபராக். புரந்தரர்போற்று நிரந்தராபராக். மகிதலம்புரக்குந் திரிதராட்டிரன் மனைவியா லுதித்த கண்மணியேபராக். அகிலமுழுதும் ஆணைசெலுத்தி அணிமுடி வணங்காமுடிக்கரசே பராக். பாதலஞ்சுமக்குஞ் சேடனைத் துஜத்திற்சேர்த்திய சிரோமணியே பராக். திங்கள்குலத்திற் செழிவுற்றோங்கிச்செகதலம் புரக்குந் தெய்வமணியே பராக். துரியோதன னென்னு மறை ராஜாதிராஜ சிந்தாமணியே பராக். ஐயா! அன்று அநுமானைத்தூதாகவிடுத்து இலங்காபுரியை எரியூட்டுவித்தவர், இன்று பஞ்சபாண்டவர்க்குத்தூதாக இசைந்து நமது செண்பகச்சோலையில் வந்திறங்கி இருக்கின்றாரென்று சொன்னவுடனே, பகைகொண்ட பாவிகளாகியபேர்களுக்கு இடதுகண் இடதுதோள் துடிக்கவும், புண்ணியராகிய பெரியோர்களுக்கு வலதுகண் வலதுதோள் துடிக்கவுமாக இருந்தது. அந்தவேளையில் துரியோதனனெழுந்து, திரிதராட்டிரமகாராஜனுடைய அரண்மனைக்குட்சென்று, அவனைக்கண்டுவணங்கி, இராஜராஜேஸ்வரனே! பாண்டவர்கள் பக்ஷமாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தெற்குக் கோபுரவாசற் செண்பகவனத்தில் வந்துஇறங்கி இருப்பதாகத் தூதுவர் சொன்னார்களென்று விண்ணப்பம் பண்ணிக்கொள்ள, அந்தவார்த்தையைக்கேட்ட திரிதராட்டிரன் மனமகிழ்ந்து, வீஷ்மர்-துரோணர்-விதுரன்-முதலிய பேர்களுடன் ஆலோசித்து, துதிப்பதற்குந் தொழுவதற்குந் தரிசிப்பதற்கும் அரிதாகிய வேதநாராயணனென்னுந் தேவதேவன் நாமிருக்கும்பூமியை மிதிக்கப்பெற்றது, அற்புதம்! அற்புதம்! என்று கொண்டாடி, சிலர் இஃது நாம்செய்த தவமென்றும் சிலர்நமது நலஞ்செய்த தவமென்றும், சிலர்நமது குலஞ்செய்த தவமென்றும் சிலர்நமது குணஞ்செய்த தவமென்றும் எண்ணினவர்களாய் அவர்களிற் றிரிதராட்டிரன் அடங்காமகிழ்ச்சிகொண்டு, அண்டரண்டபகிரண்டங்களையுங் கர்ப்பத்தி லடக்கியருளிய அரிமுகுந்தன் நம்மிடத்திற்கு வருவாராகில், நமது பெரியோர்கள் சம்பாதித்து வைத்தகேயூரம்-மதாணி-குண்டலம்-கிரீடம்-புஜகீர்த்தி-வாகுமாலை-தும்பிப்பதக்கம்-தோட்டிதம்பதக்கம்-சகோரப்பதக்கம்-தனிமுத்துமாலை-மோகனாரம்-உத்தரசஞ்சம்-முதலிய ஆபரணங்களும்-குடை-கொடி-சாமரம்-இரதகஜதுரகபதாதிகளும்-வெகுமதியாகக் கொடுப்பேன். இதன்றியும் தாமரைக்கண்ணனுடைய மனதில் நினைத்திருக்கின்றபாவையுங் குறிப்பினாலுணர்ந்துகொடுத்து மனங்களிக்க வைப்பேனென்று, தன்னைமறந்து சந்தோஷங்கொண்டு சொல்லும் வார்த்தையை விதுரமகாராஜன் கேட்டுச் சொல்லுவான்.

அண்ணா! கல்மழையைத் தடுத்துக் கோவினங்களையுங் கோபாலரையுங் காத்தருளிய கர்த்தனுக்கு இப்போது சொல்லியவெகுமதி யெல்லாங் கொடுத்து, பாண்டவர்களுக்கு ஏதாகிலுங் கொடுவென்றுகேட்க வந்திருக்கும் அவர்காரியத்தைத் தடுத்துவிடநீர்நினைத்திருக்கின்றீரல்லவா? ஐயா! பதின்மூன்றுவருடங் காட்டிலும் நாட்டிலும் உழன்றுவருந்தி வந்தமைந்தர்களை ஆதரித்து, இருக்க இடங்கொடுக்க இளகாத மனத்தினையுடைய நீர், உலகமெல்லாமுண்ட ஒருவனுக்குச் சகலவெகுமதியுங் கொடுக்கிறேனென்று துணிந்துசொல்வது ஆச்சரியந்தான். அண்ணா! (வடித்த கஞ்சி வார்க்காத பெரியப்பன் வஸ்திரத்தைமன்னிக் கொண்டு மணமிடவந்தானென்னும்) பழமொழிக்குப் பிரயோசனந் தங்களிடத்திற் கண்டேனென்று சஞ்சலத்துடன் தம்பியாகிய விதுரன்சொல்ல, வீஷ்மர் நகைத்து, விந்தையாகிய மைந்தனே! அஷ்ட லட்சுமி வாசனாகிய ஆதிதேவன் உபலாவியத்திலிருந்து அஸ்தினாபுரிக்கு இவ்வளவு அவசரமாகவந்தது, நீர்சிறிது வெகுமதிகொடுப்பீர் அதைஎன்றைக்குப் பெறுவோமென்று ஓடிவந்ததாய்த் தோனுகிறது, அப்பா! பொன்னையும் பூமியையும் நவரத்தினக்குவியல்களையும்புகழையும் புத்திரமித்திராதிகளையு முடைய உன்னையும், ஒருதவியுமில்லாத என்னையும்படைத்தருளியபிர்மாவைத் தமது உந்திக்கமலத்தில் புத்திரனாகப் பெற்ற ஒப்பில்லாத ஒருவருக்கு நீயென்ன கொடுக்கப் போகிறாய். அவர் உன்னிடத்தில் கைநீட்டி யென்னவாங்கப்போகிறார். எந்தலே! இவைகளெல்லாம் உபயோகமில்லாதவார்த்தைகள். இந்தமட்டும் இதைநிறுத்திவிட்டு, வந்திருக்குங் கண்ணனுடைய மனதையறிந்து அவருக்கு மரியாதைசெய்து அனுப்பிவைக்கும் விதத்தை யோசிக்கக்கடவையென்று வீஷ்மர் சொல்ல, துரோணாச்சாரியர் திரிதராட்டிரனைப் பார்த்து, அரசனே! ஸ்ரீகிருஷ்ணதேவரே தூதாக வந்திருக்கின்றாரென்றபோது பாண்டவர்களுடையநன்னடத்தையும் அவர்களினது மனோநிடத்தையும் யோசிக்கவேண்டியதல்லாமலும், கிருஷ்ணசுவாமி சொல்லப் போகிற இராஜநீதிமுறைமை முதலிய திறமைகளையும் உன்னுடைய தீர்க்கபுத்தியினால் நிதானித்து, உன்புத்திரராகிய நூறுபேர்களுக்கும் யுக்திவிளைவித்து, உன்மனதுக்கிசைந்த நாட்டைப் பாண்டவராகிய மைந்தர்களுக்குக் கொடுத்தால் வாசுதேவனுடைய மனமகிழ்ந்து, கிருபைசுரந்து, சகலசம்பத்துடன் நீடூழிவாழும்படியாகிய காலமுங் கொடுப்பார். அவருடைய கடாக்ஷ வீக்ஷணியத்தால் தாக்ஷியில்லாமல் ஆக்ஷியாக அரசாட்சிசெய்து, காட்சியாக நீங்களுஞ் சுகப்படுவீர்கள் தேவர்கள்முதலியயாவரும் சந்தோஷமடைவார்கள். இதற்குமிஞ்சியயுக்தியும் புத்தியும் உறுதியும் வேறொன்றுமில்லையென்று துரோணாச்சாரியர்சொல்ல, பக்கத்திலிருந்து கேட்டிருந்த துரியோதனனுக்கு மிகுந்த கோபம்பிறந்து, கண்கள்சிவந்து, கலீரென நகைத்து, சபையிலிறைந்த காவலரெல்லாங்கேட்கும்படியாகத்

தன்னிஷ்ட சிரேஷ்டராகிய சகுனியையுங்கர்னனையும் பார்த்துச் சொல்லுகின்றான்.

துளவணிமாயனுகிய தூதன் பாண்டவர் பக்ஷத்திலிருந்து என் நகரந்தக்குள்ளே வருவானாகில், ஆ! ஆ! அவனுக்குநான் செய்யப்போகிற மரியாதைகள் கேளுதுண்டு. அதாவது கோட்டைவாசலிற் புகுந்தவுடனே கிங்கரர்முதலிய மல்லர்களை விடுத்துப் புஜக்கோடு புஜநெரியப் பின்கட்டாய்க்கட்டிக்காராக்கிரகத்திற் சேர்த்து, பிராணன்போகவொட்டாமற் கஞ்சியும் உப்புமாகக் கலக்கிவார்த்து, அவன்கால முடிந்தபிற்பாடும் அவன்தேகத்தைச் சிறைச்சாலையில் வைப்பேன் அதேதெனனில், துடையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டி விட்டிருக்குந் துஷ்டர்களைப்போன்ற கலகக்காரரைத் தண்டிக்கச்சொல்லித்தருமநீதியிற் சாற்றியிருப்பதினால், அவனைநான் விடமாட்டேன். விட்டால் குடிகெட்டுப்போம். ஐஐயோ!! காட்டிலே காய்கனிகிழங்குகளைத் தின்றுக்கொண்டிருந்த பாண்டவர்களை, நாட்டிலழைத்து வந்து அவர்களுக்கு இதயபேதம்பண்ணி, நானே தூதுபோய் நாடுவாங்கித் தருகிறேனென்றுசொல்லிவந்திருக்கின்றான் அந்தப்பேச்சைப் பாண்டவர்களாகிய பைபித்தியக்காரர்கள் நம்பி, இவன்ஒடுவாங்கி வருவதை யுணராமல் நாடுவாங்கி வருவானென்றும், ஐந்து வீடுவாங்கி வருவானென்றும் வழிபார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால், இவனை இங்கேதானே மாட்டிவிட்டால், இந்தச்சேதியைப் பாண்டவர்கள்கேட்டுப்பயந்து பறந்தோடிப்போய்க் காடுசேர்வார்கள். அவர்களுக்குப் படைத்துணையாக அடைந்தோரெல்லாரும் நடுநடுங்கி, எனக்குப்பிரிய வசனஞ்சொல்லி, என்காலில்வந்து விழுந்து, தங்கள் தங்கள் நாடுசென்றுசேர்வார்கள். என்றென்றைக்குங் கலகமென்பதில்லை என்னுடைய நல்லகாலமானது இவனை எங்கேயோஇருந்து இழுத்துக்கொண்டுவந்து விட்டது. இதுவே தகுதியாகியயோசனை. ஓமாமா! ஓஅண்ணு! என்று துரியோதனன்சொல்லிய சொல்லானது பெரியோர்கள் செவியிற் புகுதலும், நாராசம் எரிகிறதுபோல்நடுங்கி இருசெவியையுங் கரத்தால்மூடிக்கொண்டு, ஹரிஹரி!! இதென்ன விபரீதகாலம். கட்டுப்படாத ஒருவனைக் கட்டவும் சிறைப்படாத ஒருவனைச்சிறைப்படுத்தவும் நினைத்திருப்பதினால் நாங்கள் இனிபேசத்தக்க தொன்றுமில்லை. புத்திமானே! உன்விதி யெப்படியோ அப்படியே மதியும் அநுசரித்து நடக்கும். அப்பா துரியோதனு! எங்களுக்குக் கொஞ்சநெஞ்ச மிருந்த சந்தேகந்தீரப் பேசிவிட்டாயென்று சொல்லி, யாவருந் தலைகுனிந்துக்கொண்டார்கள். அந்தவேளையில் திரிதராட்டிரன் தன்பிள்ளையைநோக்கிப் பதைபதைத்துச் சொல்லுகின்றான்.

அடா புத்திரனே! வேதவிதிகளையும் தருமசாஸ்திரங்களையும் ராஜமுறைமையையும் அருக்கவோஎனக்குப்பிள்ளையாய்ப்பிறந்தாய். அடடா! ஒருவன்சொல்லிய வார்த்தையைச் சொல்லுதற்காகத் தூதுவந்தபேர்களை துன்பப்படுத்தலாகாதுகொல்லப் போகாதென்று எல்லா நூல்களிலுங் கூறியிருக்க, அவைகளை வாசித்துங் கேள்வியுற்றுந் தேறியிருக்க, நீதூதுவந்தவர்களைக் கொல்லவுங்கொடுமைசெய்யவும்நினைப்பையாகில், எதிராளியின்கருத்தை நீ யெப்படி யறிந்துகொள்வாய். உன்னிடத்தில் எவர்கள் தூதுசெல்லவருவார்கள். குழந்தாய்! காரியவாதியாகிய நீதூதுவாத்தக்கவர்களை எதிர்கொண்டழைத்துவந்து உபசாரஞ்செய்து நன்மையாகப் பேசுவையாகில், இருவருக்குங் குறைவில்லாமல் வந்தகாரியங்களைப் பேசி இன்பமுறச் செய்வார்கள். ஆகையால், இப்போது தூதுவருகின்றவன் கபடநாடக சூத்திரவதாரி. அவரை நீ எதிர்கொண்டுசென்றுவணங்கி,உன்தீவினையைப் போக்கடித்துக் கொள்ளச் சிந்திக்காமல்வாயில்வந்தவண்ணம் பிதற்றுகின்றாய். என்னடாபாவி! நான்குவேதங்களினாலேயும் காணக்கூடாதநாராயணனை மடையன்மடல் விரியக்கட்டிச் சிறையிற்போடவும்,உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் படியளக்கும் ஒருவனுக்கு உப்புந்தண்ணீரும் வார்த்து உலரவைக்கவும் உன்னாற்கூடுமோ? மதிகேடா! உனதுற்புத்தியினாலே இப்படிக்கெல்லாம் பேசினையல்லாமல், நற்புத்தியினால் உணர்ந்து பேசினவனல்ல. இப்போது அந்ததுராங்கார யோசனையைவிட்டுப் பெரியோர்சொல்லும்புத்தியைக்கேட்டு நடந்து நன்மைபெற விரும்பத்தக்கதேயல்லாமல், உனக்கிஷ்டமாகிய துஷ்ட நினைவின்படி நடப்பையாகில், குஷ்டமும் கஷ்டமும் அஷ்டதரித்திரமும்நேரிட்டு வருத்தஞ்செய்யப்பட்டும்போய் நஷ்டப்பட்டு பலவாறு கெட்டலைந்து போவாயடா துஷ்டமகனே என்று வெறுத்துக்கொண்டு, மந்திரி பிரதானிகளைப் பார்த்து பட்டணமெங்குந்திட்டவட்டமாய் சிங்காரிக்கச்சொல்லி,கண்ணாடிப்படமுதலிய மேற்கட்டிகளைச் சட்டமாயமைவித்து. மாணிக்கத்திபம்பிரகாசிக்கச்செய்துமகரதோரணம்-வாழைகமுகு தெங்கு-தாழைமலர்-தாமரைமலர்-பவளவடம்முத்துவடம்-ரசக்குண்டுகள்-தொங்கொளிவட்டம்-நிலைபொளிபட்டம்-நிலைக்கண்ணாடிகள்-இவைகளெல்லாங் கட்டி அலங்காரஞ்செய்வித்து, மாவிலை-தருப்பை -தேங்காய்-வாழைப்பழம்-சந்தனம்-புஷ்பம்-தாம்பூலம்-அக்ஷதையுடன் பூரணகும்ப வேதிகைகளமைவித்து, நமதுபுரத்திலிருக்குஞ் சனங்களெல்லோரும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரண அலங்காரங்களணிந்துசுசியாகவந்து தொழுமின்களென்று முரசறைவித்து,மத்தளதாள விதத்துடனொத்துத் தத்திமிதாவென நர்த்தனமிட்டுவரும் பரதநாட்டியமங்கையர்களாட, மிகுஞ்சுரத வீணைகளை எங்கெங்கு நிருத்திப்பாட, வாத்தியமுதலிய ஜெயமங்களபேரி முழக்கிவைத்து, வஸ்துவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் வந்திறங்கு தற்குத்த

குதியாகிய விடுதியேற்படுத்தி, அவருடன் கூடவந்த யாவர்களுக்குங் குறைவில்லாம லிருக்கும்படியாக குபேர சம்பத்தைப்போல சகல சாமான்முதலிய வஸ்துக்களும் அமைவித்து, சுயம்பாகிகளைவைத்துசமைப்பித்து, சந்தனபாளிதம் ஏற்படுத்திவைத்து, ஓமந்திரி பிரதானிகள் முதலாகிய மன்னர்களே! நீங்கள் பயணப்பட்டு, பிரயாணபேரி முழக்கி எனக்கு அதிக்கைபண்ணுவீர்களாகில், இரண்டுகண்ணுந் தெரியாத நான் எதிர்சென்று, மேகவண்ணனாகிய கண்ணனை உபசரித் தழைத்துக்கொண்டு வருகிறேனென்றுபெரிய அரசன்சொல்லக்கேட்டு, சமஸ்தமான பேருஞ் சம்மதிப்படாமல் தடுத்து, ஓராஜராஜேஸ்வரா! பெருமானை வைத்துக்கொண்டு திருநாள் செய்வதுபோல் தேவரீரை தகத்தினிடத்தில் பெருமையாக வைத்து நாங்களெதிர் கொண்டுபோய்க் கண்டுவணங்கி யழைத்துவருகிறோமென்று சொல்ல, இந்தவார்த்தைகளையெல்லாங் கேட்டிருந்த துரியோதனன் தந்தையின் பாதத்திற் சாஷ்டாங்கமாகப் பணிந்து இதனைச்சொல்லுகின்றான்.

சேரும் என்னையாவே! தேவரீருடைய சிந்தையின்படிக்கு நானே எதிர்கொண்டுபோய் சகலவைபவங்களுடன் ஸ்ரீகிருஷ்ணசுவாமியை அழைத்துவருகிறேன். என்பேரில் சோபம் பண்ணவேண்டாம். எங்கோவே யென்று தந்தையைவணங்கி, அமைச்சர் முதலிய அனைவரையும்பார்த்துத், தனது தந்தையிட்ட கட்டளைப்படி விரைவில் பட்டண வலங்காரஞ்செய்யும்படி திட்டஞ்செய்தான் துரியோதனமகாராசன். அப்படிச் சொன்னபோதே ஒட்டகத்தின்பேரில் பிரசித்த பேரிகைகட்டி, வீதி வீதியாய்க் கொட்டினார்கள். இப்படி திட்டஞ்செய்வதற்கு முன்னேதானே பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனாகிய கர்த்தன் வந்தாரென்று தானந்தருமமுதலிய சம்பிரமங்களுடன் ஆனந்தங்கொண்டு, அலங்காரஞ்செய்து பன்னீர்தெளித்து, சாந்தால் தரைமெழுகி, சந்தனத்தாற் கோலமிட்டு, கதம்பகஸ்தூரி கர்ப்பூர சுன்னங் கலந்திறைத்து, மகாலக்ஷிமியை அலங்கரித்து வைத்ததுபோல் அஸ்தினபுரிவீதியை அலங்கரித்து வைத்தார்கள். அதைத்துரியோதனமகாராஜன்கேட்டுமனமகிழ்ந்து, இரதகஜ துரகபதாதிகளுடன் பற்பலமன்னவர்களும் அரசனது அற்புத பட்டத்துக்குரிய யானைகளுங் குதிரைகளும் ரதங்களும்அலங்காரத்துடன் அழகிய தெருக்களில் இருபக்கங்களும் நெருங்கியிருக்க, பெரியாழ்-சகோட்டியாழ்-செங்கோட்டியாழ்-முகவீணை-சுரமண்டலி-முதலிய வாத்தியங்க ளெல்லாம் வகைவகையாய் முழங்க, பட்டுவான்கள் கட்டியம் பகர்ந்து துதிவழங்க, அரவக்கொடியோனாகிய துரியோதனன் அரவணைதுயின்ற அமலனை எதிர்கொண்டு அழைக்க எழுந்து வருங்காலையில், பொய்யுஞ் சூதும் பொறாமையுங் கொடுமையுஞ் செய்யும்பாலும் போல்நிறைந்த நெஞ்சினனாகிய வஞ்சகச் சகுனிமாமன் வயிற்றைப் பிசைந்துகொண் டோடிவந்து, வழியில்நேரிடுந் துற்சகுனம்போல் வணங்காமுடி மன்னனை வழிமறித்துத் தடுத்து, என்னருமை மருமகனாகிய அரசர்க்கரசனே! இதென்ன அநியாயம்? இதென்னஞாயம்? இதென்னமுறைமை? இதென்ன மரியாதை? இறைவனே! இன்னமுஞ் சின்னஞ்சிறுபிள்ளைத்தனமாகச் செய்கின்றீர். ஓயோகபோகதேவேந்திரா! மூவுலகமும்மதித்துத் துதிக்க வணங்காமுடிபொறுத்தமன்னர் மண்டலேஸ்வரா! ராஜாதிராஜராஜப் பிரதாபா! ராஜ உத்தண்ட ராஜமார்த்தாண்ட ராஜகோபால ராஜபூபால ராஜதுர்த்தன்ய ராஜமூர்த்தன்ய ஜயவிஜய சங்கிராம சார்வபூமா! சந்திரன் முதற்கொண்டு இன்னான்மகன் இன்னானென்றறியச் சிங்காதனத்திலிருந்து செங்கோற்பிடித்து நீதிசெலுத்திய மகுடாபிஷேகதுரந்தரா! புரந்தரா! சாம்பிரதாய பூமண்டலாதிபதியாகிய கோமானே! ஒருகுறுநிலமன்னனாகக் கோக்குலக்கிராமத்தி லிருந்து பட்டாபிஷேகமில்லாத ஒட்டுக் குடித்தனக்காரனாகியும், பஞ்சையாகியபாண்டவர்கள் கெஞ்சிக்கொண்டு தூதனுப்பவந்த கொஞ்ச மனிதனாகியுமிரானின்ற கிருஷ்ணனை, தேவரீர் எதிர்கொண்டுபோய் அழைத்துவரக் கூடுமா? உமது சிந்தையுமிப்படி தளருமா? கிங்கமர்ன துநரிக்குஎதிர்கொண்டு செல்லுமா? தீங்காகிய சிறியகாரியத்தைச் சிந்தித்தீர். இதுபெரிய அரசர்களுக்கு மரியாதையல்லவென்று அன்பினாற் சொல்லி நில்லுமென்றுநிறுத்தவே, துரியோதனனுடைய எண்ணத்துக்குச்சரிப்பட்டிருந்த மாமனுடைய வார்த்தையாகிய மணிமந்திர அவுஷதத்தை உட்கொண்டு, சபாமண்டபத்துக்குத் திரும்பிவந்து, தம்பிமார்முதலிய உரியோர்களை நோக்கி, நீங்கள்போய்ச் சக்கரதரனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவரை அழைத்துவாருங்களென்று அனுப்பிவிட்டுஅவருக்குவிடுதி அரண்மனையும் வேண்டிய வஸ்துக்களுந் திட்டஞ்செய்து வைக்கும்படி உத்தரவுசெய்து, யுத்த வலிமைபெற்ற ராஜவர்க்கங்களும் பந்துஜனங்களும் வணங்கிச் சூழ்ந்திருக்க நந்தியாவட்ட மாலையணிந்த புயாசலத்தையுடைய துரியோதனன் சிங்காதனத்திலிருந்தான். புஜனங்கள் யாவரும் இதென்ன விபரீதகாலமென்று மெய்மறந்து வருந்தினார்கள்.

விதுரன் கண்ணனுக்கு விருந்திடல்.

அந்தவேளையில் வீஷ்மாச்சாரியரும், துரோணாச்சாரியரும், அசுவத்தாமாவும், விதுரமகாராஜனும், கிருபாச்சாரியரும், வேதபண்டிதராகிய பெரியோர்களும், அரசர்களாகிய உரியோர்களும், அறுபது நாறாயிரம் மன்னர் மண்டலீகரும், நால்வகைச் சேனைகளும், பேரிபாங்காமுதலிய பஞ்சவாத்தியத் தொனிகளும், கணிகைமாதர்களாட்டமும், குடை கொடி

ஆலவட்டந் தாலவட்டமுதலிய கூட்டமும், அவரவர்களின் கண்கள்முதற் கரசரணதிகள் நெருக்கமும் நீங்காமலோங்கிய அஸ்தினாபுரத்தின் வீதியை விட்டு, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை இரண்டுயோசனை தூரம் எதிர்கொண்டுவந்துகண்டு, இருகண்களிக்கவுமிறைஞ்சிப் பணிந்து, இரண்டுபக்கத்திலுமொதுங்கி நெருங்கினர்கள். அப்படி நெருங்கி நின்ற யாவரையும், துளபமாலையணிந்த சுவாமியார் கிருபைப் பார்வையாகப் பார்த்து, அவரவர்களைத் தழுவிச் சந்தோஷமுற்று, தன்னுடன் கூடவந்த சேனைகளும் அஸ்தினாபுரத்திலிருந்துவந்த சேனைகளும் அரசர் முதலியயாவரும் புடைசூழ்ந்துவரச்சண்பகச்சோலையைவிட்டுப்பாதசாரியாய்ப் புறப்பட்டு, வீஷ்மர்—துரோணர்—விதுரர்-முதலிய் பேருங் கைலாகுகொடுக்க அஸ்தினாபுரத்தின் அரண்மனை வீதியில் வருமபோது, அவ்வீதி இருபக்கங்களிலுமிருக்கிற வீடுகளைப் பார்த்து, இதுயாருடையவீடு? இதுயாருடைய மாளிகை? இதுயாருடைய மாடம்? இதுயாருடைய அரண்மனை? இதுயாருடைய மந்திரம்? இதுயாருடையசுபக்கிரகம்? என்று கோபாலகிருஷ்ணர்கேட்கும்போது, பக்கங்களிலிருப்பவர்கள் பதறியோடிவந்து பகவானைப்பணிந்து, இதுஎன்னுடையவீடு இது என்னுடைய மாளிகை இது என்னுடைய அரண்மனை இது என்னுடைய மந்திரம். இது என்னுடைய சுபக்கிரகம் என்று சொல்லிய யாவரையும் பார்த்துப் புன்னகைகொண்டு, அப்படியா வெகுநேர்த்தி! வெகு சந்தோஷம்! என்றுவார்த்தையாடிக்கொண்டுவிதுரராஜனுடைய மனைக்குநேராகவரும்போது, இதுயாருடைய இருக்கையென்று பகவான் கேட்கப், கக்கத்திலிருந்த விதுரன் பாதங்களிற்பணிந்து, ஓ தேவா தேவா! தேவதா சார்வபூமா! இது தேவரீருடைய இருக்கையென்று சொல்லவும், அதைக்கேட்ட கண்ணனானவர் உள்ளி மகிழ்ந்து, இவ்வளவு பெரிய நகரத்தில் எனக்குமொரு வீடிருக்கின்றதல்லவா வென்று சந்தோஷித்து, ராஜாதி ராஜனாகிய துரியோதனன் ஏற்படுத்திய விடுதிக்குப் போகாமல், வீஷ்மர் துரோணர் முதலியபேருக்கு விடைகொடுத்தனுப்பி விட்டு, விதுரன் வளவிற்புகுந்தார்.

அந்தக் காலத்தில் விதுர மகாராஜன் பவானுடைய இரண்டு திருவடிகளையும் தன்முடிமேற் பொத்திக்கொண்டு ,, முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாசனப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்னநான்மறைச் சுருதியோ கருதிவெய்ப்பதற், கென்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடிலையா" ஓ சர்வஞ்ஞ மூர்த்தி! தேவரீர் திருவடிவைத்தருளும் படியாய் இந்தக் குடிசையானது என்ன தவஞ்செய்ததோ? எந்தவிரத மிழைத்ததோ? தேவரீர் பூர்வத்தில் திருக்கண் வளர்ந்தருளிய பழயபாற்கடலோ? சிரோரத்னம்பிரகாசிக்கும் ஆயிரம்பணமகுடப் பாயலாகிய ஆதிசேஷ சயனமோ? ஆலிலையோ? வேதமோ? நான்குவேதத்தின் ஆதியோ? அந்தமோ ஐயனே! இச்சிறுகுடிலுக்கு என்னநினைத்து எழுந்தருளியதோ? என்று இருகண்களிலும்நீர்சொரியவணங்கித்துதிக்கும் விதுரனை மார்போடெடுத் தணைத்து, ஓ விதுரராஜனே! உமதுவீட்டுக்கு விருந்துண்ணவந்தோமென்று சகலசீவாத்மாவோடுந்தாமொருசீவாத்மாவாயிருந்து விருந்து செய்தருளுந் திருமால் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு, மூன்றுவிதமாகிய புவனங்களையெல்லாமுண்டருளிய முதல்வராகி, மும்மையிலும் எம்மை அடிமையாகவுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் நமதுவிருந்துக்குவந்தாரேயென்று ஆச்சரியப்பட்டு தன்னிடத்துள்ளவர்க ளெல்லாமல் அயலாரகளிலுமிருந்து ஆறுநூறாயிரஞ் சமையற் காரரை யழைப்பித்து நோக்கிச், சுவாமியார் முதலிய எல்லாச்சேனைகளுக்கும் அறுசுவை பதார்த்தத்துடன் ஒரு நொடிப்போதில் அன்னமாகவேண்டுமென்று ஆக்யாபித்தான். அப்போது மாயவனாகிய மகாவிஷ்ணுவானவர், வீரஞானவிதுரனுடையஉள்ளன்புயாவருக்கும் வெளிப்படத்தமது சதுர்ப்புஜகோலதரிசனங்கொடுக்கவெண்டுமென்றுசந்தோஷங்கொண்டு, சமீபத்திலிருந்தவிதுரமகாராஜனைப்பார்த்து, சமையலாகிற வரைக்கும்நான்பசி தாளமாட்டேன். உமக்குச்செய்திருக்கும் போசனத்தை எனக்குப்போடுமென்றுகேட்க, உடனே தனக்குச்செய்திருந்ததுக்குநொய்க்கஞ்சியைக்கொண்டுவந்துவைக்கும்படிபரிசாரகர்கட்குத்திட்டஞ்செய்து, பாதோதகமுடைய பகவானுக்குக் கரகத்தில் ஜலத்தைக் கொடுத்தான். அந்த ஜலத்தினால் கரம் - சிரம் - கால்மேல் - சுத்திசெய்து, நித்தியவிதி முடித்துக்கொண்டு போசனத்துக்கு வந்தகாலையில், பொன்போன்ற வாழையிலையில் அக்கஞ்சியை விடுத்தார்கள். அதைக் கண்ணன்கரத்தால் வாரிப்புசிக்கப்போங்காலையில், விதுரராஜன் வீழ்ந்திறைஞ்சி, சுவாமி! திவ்விய அன்னமுதலாகிய சட்ருசி பதார்த்தங்களும் ஜாக்கிரதையாகிக் கொண்டிருக்க, தேவரீர் இந்தநொய்க்கஞ்சிக்கு எத்தனைநாள் ஏக்கமுற்றிருந்தீரோ? ஓஐயனே! என்னை யாவரும்பழிப்பார்களே. இது நன்மையல்லவே. ஓநாதனேயென்று அஞ்சலியஸ்தனாகவிதுரன்உபசாரஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இலையில் விடுத்த கஞ்சியானது ஒருபக்கம்வழிய, அதுவழியவொட்டாமல் ஒருகரத்தினால் இலையைத் தூக்கிப்பிடித்தார் பின்பு இன்னொரு பக்கத்திலோடும் போது, மற்றொரு கரத்தால் அந்தப் பக்கத்தையுந் தூக்கிப்பிடித்துக்கொண்டார். பின்னொருபக்கம்ஓடும்போது, இன்னொருகர மேற்படித்திக் கொண்டு பிடித்தார். இன்னொருபக்கம் நழுவும்போது, அந்தப் பக்கத்துக்கும் ஒருகர முண்டாக்கிக்கொண்டு, தலைகுனிந்துவாயினாலுறிஞ்சி, நாவினாற் சுவையறிந்து புசிக்குங்கடவுளானவர் விதுரனைப்பார்த்து, ஓ! ஓ! அரசனே! இதைத்தானே அல்பமானகஞ்சி என்றுஇழிவாகச்சொ

ல்ல வந்திர். அப்பனே! இன்றைக்குப் பருகும்படி
யாக நேரிட்ட இந்தக்கஞ்சி என்பிராணனுக்கு வந்த
தே. ஒவிதுரராஜனே! பூர்வத்தில்இரணியகசிபன்-இரா
வணன்-கும்பகர்ணன்-தந்தவக்திரன்-சிசுபாலன்-முத
லிய பலவான்களை யெல்லாம் முடித்துக்கொன்றபோ
து, என்தலையை வணக்காமல் என்னிருகரத்தினலுங்
கொன்றுபோட்டேன். உம்முடைய அன்பினல்வார்
த்த நாக்கு நொய்க்கஞ்சியை அடக்கி உட்கொள்ளுவ
தற்கு, நான்கு கரத்தைக்கொண்டு என்சிரம் வணங்கி
யும் பிடிக்கப் படஇல்லையே. இதைக்குடிக்கப்படஇல்
லையே. என்று ஸ்ரீகிருஷ்ணதேவர் பூரித்துப்புகழ்ந்து
மகிழ்ந்த காலத்தில், புத்தி புத்தியென்று புளகாங்கி
தமுற்றுப்,பூதசம்பந்தமாகியஜனனமரணவஸ்தையை
விட்டு நீங்கினவனைப்போல் விதுரமகாராஜன் மெய்ம
றந்து பரவசத்தனானன்.

உடனே போசன மாக்கவேதென்று சமையற்காரர்
சொல்லவே, பரிமளசுகந்த மிகுந்த தகுந்த குளிர்ந்
தஜலங்கொண்டு விதுரன்ஸ்நானஞ்செய்விக்க, சுவாமி
ஸ்நானஞ்செய்து, கஸ்தூரி அக்ஷதை யணிந்துக்கொ
ண்டு. வழிபடுகடவுளை வணங்கி, தம்பியாகியசாத்தகி
யுடனிருந்து, அநேக விதமாகிய கறியமுதுகளையும்
அன்னங்களையும் விருப்பத்துடன் புசித்து, சம்பிரம
மாக இளைப்பாறி, பச்சைக்கர்ப்பூரமுதலியமணமுள்
ளசந்தனாதிகள் பூசி, வாசனையுடைய மாலையணிந்து,
மாணிக்காதிகளைப் பதித்த ஆபரணந்தரித்து, தாம்பூ
லமணிந்து,இரத்தின சிங்காதனத்தில் வீற்றிருந்தார்;
பார்வதிபங்க ராகிய பரமேஸ்பர மூர்த்திக்குப் பிச்
சையிட்டுப்பிரமகபாலத்தைநிறைத்துப்பசியைநீக்கிய
பெரியபெருமாள். இத்தன்மையாகமார்க்காயாசந்தீர்
ந்து மகிட்சிகொண்டிக்க,விதுரனைவன்அவரைசாஷ்
டாங்கமாகவணங்கித்,திருப்பாற்கடலைக்கடைந்துதே
வர்களுக்கு அமுத மளித்த நாராயண மூர்த்தியும்
நமதுவீட்டுக்குவிருந்தாகவந்தாரேயென்றுமனமுருகி
சுவாமியின் திருவடிகள் திருமுகமண்டலம் திருக்கர
ங்களென்னுஞ் செந்தாமரைக் கமலங்களில் தனது க
ண்களென்னுங் கருவண்டை நாட்டிக் களிப்படைந்
து, இப்பிறப்பிற்கும் இனிவருவதானமறுபிறப்பிற்கு
ஞ்சூழற்குரிய துன்பங்க ளனைத்தையும் போக்கின
தல்லாமல், எப்பிறப்பிலும்பெற்றிராதபுகழைஇப்பிற
ப்பிற்பெற வழிதேடிக்கொண்டவனைப் அம்மேகவண்
ணனை மனத்தில் நினைத்து, கண்ணீர்பெருகமண்ணில்
விழுந்து பணிந்து, திண்ணென வெழுந்து, துள்ளிக்
குதித்து, அவரது துணைப்பதத்தைச் சிரத்திற் தரி
த்துக்கொண்டு, துன்பநீங்கி,இன்பமோங்கி, தத்துவா
மிர்தத்தை அள்ளிச் சாப்பிட்டவர்போல் சுவாமியி
னுடைய திருவழகைக் கண்களினற் கவர்ந்து பருகி,
இருகண்களும் இமையோடிமை மூடாம லசைவற்றி
ருந்து, அந்தபிர்ம்மானந்தத்தோடு மீட்டு மெழுந்து
சென்று, சுவாமியுடன் கூடவந்த வேல் வில் வாள்
முதலிய ஆயுதங்களை யுடைய வீரர்களும், மன்னர் ம
ண்டலீகர் மந்திரிமார்முதலிய பட்டவர்த்தனர்மகுட
வர்த்தனர் ஆகிய ஐம்பதுலக்ஷம் அரசர்களும், மற்று
முள்ள பேர்களும், சட்சுவை யோடுங்கூடியபோஜன
திகளையும் பழவர்க்கங்களையும் புசிக்கச்செய்தபோது
அவர்கள் தேவர்களுக்குங் கிடைக்காத தேவாமிர்தம்
புசித்தவர்களாகத் தெவிட்டவுண்டு, ஆபரணமுதலா
னசகலஅலங்காரமுஞ்செய்துகொண்டு,கிருஷ்ணபகவ
ரனைச் சுற்றிலும் நெருங்கி இருந்தார்கள். அந்தச்சம
யத்தில், உபயசாமரங்கள்வீச, சந்திர வட்டக்குடை
நிழற்ற, வாத்தியமுழங்க, மாணிக்கச்சிங்காசனத்தில்
ஸ்ரீகிருஷ்ணதேவர் எழுந்தருளி இருந்தார். அக்கால
த்தில்மெஞ்ஞானச் சட்டையணிந்தவிதுரமகாராஜனு
டைய வீட்டில் பரவாசுதேவன் அறுசுவையுண்டியை
அன்புடன் புசித்தாரென்று அகமலர்ந்த சூரியனென
வன் மேருமலைக்கப்புறத்தி லிருக்கும் அமுதத்தைப்
புசிக்கப் போனவனைப்போல் மேற்றிசைக் கடலில்
மூழ்கினன்.

அப்போதுமகாரிஷிகள்முதலியவேதப்பிராமண
ர்களெல்லோரும் வேதமந்திரமென்னும்வில்லினிடத்
தில் அனுஷ்டிப்பதற்குக் கரத்தில் வாரிய அருக்கிய
சலமென்னும் பாணத்தைத் தொடுத்து விட்டபடியா
ல், சூரியனைச் செல்ல வொட்டாமற்றடுக்கும்அரக்கர
ழிந்து அவர்களுடைய உதிரம பெருகி வழிந்ததைப்
போற்பிரகாசிக்குஞ் செவ்வானமும், அந்த அரக்கரு
டைய கால்கரங்கள் துண்டமாய்வீழ்ந்து கிடப்பதை
யொத்தபவளக் காடுகளும்,நீரமகளிருக்குப்பகற்கா
லத்தில்நிழலைச்செய்யச்செம்பட்டுக்குடைவெண்பட்டு
க்குடையென விரிந்தும் இராக்காலத்தில் அக்குடைக
ளைச் சுருக்கி விட்டதைப் போற் குவிந்துமிருக்கின்ற
வெண்டாமரை செந்தாமரை மலர்களும், மங்கலபே
ரி முதலாகிய வாத்தியச் சங்கமும், தங்கம்போன்ற
அழகினையுடைய மங்கையர்களின்மெய்யாகியமெய்வி
ளக்குப், மாணிக்கத் தீபமும், தடாகங்களி லிருக்கும்
தாமரை மலர்கள் குவிந்ததைக் கண்டு அஸ்தினபுரி
யென்னும் அணங்கு அநேகந் தாமரைக் கண்களைத்
திறந்து பார்ப்பதை யொத்த தீபப்பிரகாசமுமுடை
ய அப்பட்டணத்தில், விதுர மகாராஜனது அரண்
மனையில், ஆதிசேடனுடைய சிரோரத்தினப்பிரகாச
ம்போலும் ஆயிரம்பிரதிமெய்கள் ஆயிரந்தீபங்களைத்
தாங்கிக் கொண்டிருக்க, இரண்டாயிரஞ் சிங்கஞ்சுமந்
தஆசனத்தி லெழுந்தருளி இருந்த ஸ்ரீகிருஷ்ணபக
வானைப் புண்ணிய தேகத்தையுடைய விதுரமகாரா
ஜன் வணங்கிப்போற்றி, ஒபூரணானந்தப்பெருவாழ்வு
டைய புண்டரீ காக்ஷனே! திருப்பாற்கடலையுஞ்சேஷ
சயனத்தையும் விட்டு நீங்கி, வசுதேவர் மனைவியாகி
யதேவகி தேவியார்கர்ப்பத்தி லுதித்து, ஆயர்பாடி
யில் வளர்ந்து, உரலுடன் றவழ்ந்து, மருத மரத்தை
இடர்ந்து,காளிங்க நர்த்தனம்புரிந்து, காலிக்கன்றுக

ளுடன் பிரிந்து, கங்கா நதியானது பொருந்தப்பெற்ற திருவடிகள் வருந்தும் படியாய் இவ்விடத்துக்கு தேவரீர் தனித்தெழுந்தருளியகாரணத்தைத்திருவாய் மலர்ந்தருள வேண்டும். ஓ கருணையங் கடலாகிய தேவ தேவனே யென்றுகேட்க, அவனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நோக்கி, பூவிதழிற் பொருந்திய சிவந்ததேனை அருந்தும் வண்டுகள் இசைகொண்டு பாடும்படியாகிய பூமாலையணிந்த புயாசலபலபராக்கிரமமுடைய மகாமாதுர்யவசனே விதுரனே! பூர்வத்தில் இராஜசபையிலேற்பட்டுத்திக்கொண்ட தவணை நாளைக்கழிக்கச் சந்தோஷத்துடன் பன்னிரண்டு வருடங்காட்டிலேதிரிந்து, ஒருவருடம் அக்ஞாத வாசஞ்செய்து, இப்போது நாட்டிலே வந்திருக்கின்ற பாண்டவர்களுக்குக் குருநாட்டைக் கேட்கத் தூதுவந்தோமென்று சுவாமிசொல்ல, அந்தமொழியை விதுரராஜன் கேட்டமாத்திரத்தில் அதுவிஷயத்தில் தனக்கொரு விருப்பும் வெறுப்பும் இல்லாதவனாகச் சொல்லுகின்றான்.

ஓ மையினு நிறத்த மெய்யனே கேளும்! வலிய மனத்தினையுடைய துரியோதனன் முன்னோர்வழக்கத்தையும் முறைமைகளையும் அனுசரித்து, ஆதிபிற்றுன்சொல்லியிருந்த வாக்குந்தப்பாமல், தன்பிராணனுள்ளவரையில் தருமராஜனுக்கு நாடுமுதலிய பாகத்தைக் கொடுக்கப் போகிறதே இல்லை. ஆனால் ஐவருக்குரிய பாகத்தை அவ்வாறவகேதன்னிடத்திற் பெறுவதற்கு ஒரு உபாயமுண்டு. அஃதென்ன வென்றால் எட்டுத்திக்கும் இடிந்து சரிந்து போகும் படியாய்ப் பேரிகை பாங்கா முரசு முதலிய வாத்தியங்கள் சத்திக்க, இருதிறவரும் எதிர்ந்து யுத்தகளத்திற் புகுந்து அஸ்திர சஸ்திரங்களைச் சொரிந்து வெந்து வெதும்பி விழுந்தழியும் காலத்தில், அவனது திரேகந்தளைபட்டு மனம் நொந்து புத்திவந்து ஒருவேளை நாடுகொடுப்பானோ? அப்போதும்கோடானோ? நானறியேன். ஓ நாதனே! தேவரீருக்குத் தெரியாத மர்மம் என்னஇருக்கிறது. அதைஅடியேன்சொல்லுந் தரமோவென்று விதுரராஜன் சொல்லக்கேட்டு மகிழ்ந்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி விதுரனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

ஓ விதுரராஜனே! துரியோதனன் செய்த அனேக அக்கிரமங்களினால் வருந்தி இளைத்து வந்த பாண்டவர்கள், மனத்தில் குற்றங் குறைவைக்காமல்இங்கிதவார்த்தைகளைச் சொல்லித் தூதனுப்பி நாடுகேட்டால், நல்லகாலமென்று சந்தோஷங்கொண்டுநாடு கொடுப்பதேராஜதருமம். அதைமறுத்து நடந்தால், நாசகருமம். ஆதலால்-நாளையத்தினம் துரியோதனனுடைய சபையிற் போயிருந்து, வாளைகள்பாய இளங்கமுகின் பாளைவிரிந்து தேன்பொழிந்து பெருகும் வயல்கள்சூழ்ந்த குருநாட்டைப் பாண்டவர்களுக்குக் கொடுவென்று கேட்கிறேன். அப்போது கொடாமற்போனானேயாகில், உடனே அவனைச்சமரபூமியிலெதிர்த்து, அவன்தலை மூளையானது வாய்மூலமாய் வழியும்படி யுத்தஞ்செய்து முடிப்போம். உலோபிகளானபேர் (மயிலே மயிலேஒருஇறகுகொடுவென்றால் கொடுக்குமா? இருத்தி மிதித்துப் பிடுங்கினாலுண்டு.) என்பதுபோல் எத்தனை விதத்தில் இதமாகப்பேசிப் பதமாக வேண்டிக் கொண்டாலும், அவர்கள் சுத்த மூர்க்க சுபாவ குணமுடையோராதலால் ஒருகாசும் அதிலொட்டிய தூசுங்கொடுக்க மாட்டார்கள். மாறுமாறென்று தாறுமாறாக அடித்துச் சிதைத்து வதைத்துப் புதைக்குங்காலம நேரிட்டால், அப்போது கேட்டவைகளை யெல்லாந் தடையில்லாமற் கொடுப்பார்கள் இவ்விதமாக இருக்கின்றது உலகத்தினுடைய இயற்கையென்று விதுரராஜனுக்குச் சொல்லி, நல்லது எல்லாம் பொழுதுவிடிந்தால் பார்த்துக் கொள்ளுவோம் விடியுநேரமாச்சுது. விதுரராஜனே! நீர் சயனித்துக்கொள்ளப் போமென்று செலவு கொடுத்தனுப்பிவிட்டுத், தான் மாணிக்க மரகதத்தாற் செய்த சயனவீட்டில், இரத்தினக் கொலுசுகளினாலமைத்த ஊசலில் வாசனையுடையஅன்றலர்ந்தபுஷ்பங்களினால் நிறைந்த அமிச தூலிகாமஞ்சத்தின்பேரில், பொன்போலப் பிரகாசிக்குந் தோள்களுந் தாள்களும்பொருந்தத் திருக்கண் வளர்ந்தருளினார் சக்கராதரனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி.

அதுகாலையில் விதுரராஜனானவன்இராத்திரியெல்லாம் நித்திரையில்லாமல் கஸ்துசுற்றிக்கொண்டுகாவற்காரர்கள் பறை முழக்கிவரவும், உருவியகத்திகளுடன் உயிர்ச்சேவகர் காத்திருக்கவும், அடிக்கடிஜாக்கிரதை செய்துக் கொண்டிருந்தான். அந்தகாரமாகிய இராத்திரியானது ஒரு வேசையை யொத்திருந்தது. அஃதெப்படியென்றால் சந்திரனே முகமாகவும், மலர்ந்த செவ்வல்லிமலரே வாயாகவும், முல்லையரும்புகளே பற்களாகவும், சூரியன் மறைந்தபிற்பாடு மூகிழ்த்த தாமரை மொக்குகளே குவிந்த கைகளாகவும், வண்டினங்களின் ஆரவாரமே மொழிகளாகவுங் கொண்டு, துரியோதனன் மனமென்னும்அவ்விருளாகிய வேசையானவள், சர்வ வல்லமையுமுடைய லக்ஷுமி நாயகன் பாண்டவர் தூதாகவெழுந்தருளி இருக்கிறபடியால், பொழுது விடிவதற்கு முன்னமே இந்தச் சுவாமியாரைத துரியோதனனுக்கு வசப்படுத்திவிட வேண்டுமென்று வந்து வளைந்ததைப்போலிருந்தது. அப்படிக்கிருந்த இராத்திரியைச் சூரியன்பார்த்து, ஓ! ஓ! மோசம்வந்தது. துரியோதனனுடைய மனமென்னும் இருட்டாகிய பெண்ணானவள் சுவாமியாரை மயக்கி வசப்படுத்திக்கொள்ளுவாளாகில், தருமமுதலிய தவமுங்கெட்டுப் பூமிபாரமும் அதிகப்பட்டுப்போமென்றுகருதிக், கடுங்கோபத்துடன்கறுத்த அந்தகாரமாகிய திரையைக்கிழித்துக்கொண்டு, அண்டம்ஒருபக்கத்தில் விண்டதென்று சொல்லவும், எழுசமுத்திரமும் வறண்டு அதிலிருக்கும் வடவா முகாக்கினியானது பிரகாசித்ததென்று விள்ளவுமாசமுகஞ்

சிவந்து, அநேக கிரணங்களென்னுங் கரங்களை நீட்டி அவ்விருளென்னும் பொதுமகளை வெருட்டத், தான் உதயகிரியி னுச்சியினின்றும் விளங்கினன். அம்மேரைப் படிக் கிருந்ததெனில் சுவாமியினுடைய சக்கராயுதமானது, பாண்டவர்களிடத்தில் பகைகொண்டிருக்குஞ் சர்ப்பக்கொடியோனுகிய துரியோதனனிருந்த புராதனமாகிய அஸ்தினுபுரத்திலே, அகிலபுவனசராசரனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தனித்தூது வந்திருப்பது தெரிந்து, மகரமச்சங்கள் முதலிய ஜெந்துக்களையுடையசமுத்திரத்தைவிட்டுப் புறப்பட்டுசகீழ்த்திசையிற் பிரகாசிக்குந் தன்மையைப்போலும இருந்தது.


கண்ணன் துரியோதனன் சபைக்கெழுந்தருளல்.

அதுகாலத்தில் கங்காபுத்திரனாகியவீஷ்மாச்சாரியரும், துரோணாச்சாரியார்முதலாகியமகத்வமுடைய தலைவான்களும், திடவான்களென்னும்அரசர்முதலாகிய தனவான்களும், தருமநீதியுணர்ந்த மூன்றுலக்ஷத்தறுபத்தோராயிரம் கிருபர்களும், குற்றமற்ற பதினோக்குரோணி யாகிய சேனைத்தலைவர்களும், கூட்டமாகிய வெள்ளிய சாமரங்கள் மயிற்பீலி மயிற்குஞ்சம் ஆலவட்டம் தாலவட்டம் கைவாள் உடைவாள் கதிர்வேல் வளைதடி அஸ்திர சஸ்திரங்கள் வஸ்திரங்கள் களாஞ்சிகள் முதலிய சின்னங்களைக்கொண்டு நெருங்கி நிற்கும் பணிப்பெண்க ளனேகரும், சகலவேத சாஸ்திரபண்டித சாமார்த்தியமுடைய பிராமணக்கூட்டமும், கலைக்கியானங்களிற்கைபழகிய கருணையோர்களும், துரியோதனனுக்குத் தருதியாகிய தம்பிமார் தொண்ணூற் றென்பதுபேரும்வந்து நிறைந்து வளைந்து சூழ்ந்திருக்கக், கிரணக்கூட்டங்களை யுடைய பொன்னினற் சுவர்செய்து நாலுலக்ஷம் மரகதத்தூணிறுத்திக், கோமேதகத்தினற் போதிகை யமைத்துப், பவளத்தினல்உத்திரம் போட்டு, மாணிக்க வச்சிரங்களினற்றிராவியமைத்து வைடூரியத்தாற் பலகைதைத்து, முத்து வர்க்கங்களைப்பரப்பிச் சுதைதீற்றிச் சிகரங்கள் வைத்து,வெற்றிக்கொடி நாட்டி, மேகமண்டலபரியந்தம் அளாவிஇருக்கின்ற கொலு மண்டபத்தில்; பவளக்கால் நிறுத்தி ஆணிமுத்துக்களினற் பந்தலிட்டு, எங்குஞ் சிங்கமுகமாய்த் தங்கத்தினற் செய்தசிங்காசனத்தில், போக தேவேந்திரனைப்போல் துரியோதனமகாராஜன்கொலுவீற்றிருந்தான்.

அப்போது பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் மன்னர் மண்டலீகரும் எண்டிசை வேந்தரும் தனது பாதங்களில் வணங்கிய காலையில், வணங்காமுடிபொறுத்த மகாமண்டலேஸ்பரமன்னர்மன்னனுகிய துரியோதனன் அவர்களைப் பொன்னினற் செய்த ஆசனங்களி லிருக்கும்படி பூரணப்பார்வையாகிய அருட்கண்ணுட்டினன். அக்காலத்தில் அரசர்முதலிய யாவரும் அவரவர்களுக்கு குரிய ஆசனத்திற் பொருந்தி இருந்தார்கள். அந்தச் சமயத்தில் அந்தச் சபைநிறைந்த எல்லாருடைய முகங்களையும் துரியோதனன் பார்த்து, தன்னுடைய அசங்களிக்க வேர்த்து, ஒளின்போலும பிரகாசிக்கும்வேலாயுதங்களை ஏந்திய வேந்தர்களே! நமமுடன் பகைத்து யுத்தஞ்செய்ய நினைத்துக் கறுவிக்களைத்துப்படைகள்சேர்த்துக் கொண்டிருக்கிற பஞ்சபாண்டவர்களுடைய எவலாளாய்த் தூதுவருகின்ற கன்றுமேய்க்கும் கண்ணனுனவன், இன்று நம்முடைய கொலுக்கூடத்துக்கு வருகின்றானும். அப்படியே ஒருவேளை வருவானுகில், அவனுககு நீங்களெதிர்சென்றுவணங்கிவந்தனைவழிபாடுகள் செய்துபந்துமித்திர ரென்றும் பண்பிற்கலந்து உறவுகொண் டாடுவீராகில், உடனே உங்களுடைய நாடு நகர முதலிய ஊர்களை நெருப்பிட்டுக்கொளுத்துவதல்லாமலும், உங்களையும்பிடித்து விலங்கிட்டுச் சிறையில்வைத்து வருத்துவே னென்றுமிகவுஞ் சீறிக்கூறினன். அவனுடையகோபமொழியைக் கேட்டுக் கேரவேந்தரியாவரும் இதென்ன கொடுமையாகிய காலமென்று தலைகுனிந்திருந்தார்கள்.

இத்தன்மையவாகியவார்த்தைகளைச் சொல்லிஅரசர்க்கரசனுகிய துரியோதனன் அவை நிறைந்தஅரசர்களுடனிருக்குங்காலையில், வெள்ளை மேனியராகிய பலபத்திரருக்குப் பின்பிறந்த கறுப்பு மேனியையுடைய கண்ணனுனவர், இரவிற்குவிந்த செந்தாமரைமலர் பகலில் இரவியைக்கண்டு மலர்ந் ததைப்போயு நித்திரைநீங்கிப், பிரகரசம் பொருந்திய கண்கள்மலர்ந்து, உதயாதியி லெழுந்து, பன்னீர்கலந்த தண்ணீரில் ஸ்நானஞ்செய்து, நித்திய கருமவிதிகளை முடித்து, மணங்கொண்ட மலர்களைக் கொண்டு தேவாராதனைகளை நிறைவேற்றிச், சூரிய நமஸ்காரஞ் செய்து, அலங்காரச் சாலையில்வந்து, ஆடையாபரணதிகளோடு ஆரகேயூரமணி மகுடகுண்ட லாதிகளையுந் தரித்து, நெற்றியிற் கஸ்தூரித் திலகந்தீட்டிச், சாத்தகி முதலிய சகலமான பேர்களுந் தன்னைச் சூழ்ந்துவரத் தாவிநடக்கும் பரிபூட்டிய தேரேறிக் கொண்டு, கட்டுப்பாடு செய்துக் கொண்டிருக்குந் துரியோதனனுடைய சபைக்கு இசையை யுடைய புள்ளாங்குழலைக்கொண்ட எல்லா வல்லமையுங் கண்ட ஸ்ரீகிருஷ்ணதேவர் அடிமேலடி வைத்து எழுந்தருளிய காலத்தில்; வீஷ்மாச் சாரியரும் துரோணச் சாரியரும் அசுவத்தாமாவும் நீதியைப் பிர்க்யாதியாய்த் தரித்த விதுரராஜனும் மற்ற அரசர்களும் எதிர்கொண்டெழுந்து வந்து, சிவந்த திருவடியில் தொழுந் தன்மையுடன் விழுந்து வணங்கினர்கள்.

அப்போது கர்னமகாராஜன் பாராதவன்போற் றலையைக் கவிழ்ந்து கொண்டிருந்தான். சகுனி துரி



கீசகனை வலனுதைத்திட்டல்.

யோதனனுடைய கட்டளையினால் உள்ள மழன்று சுவாமியின் பாதங்களைக் கருத்திற் கருதிக் கொண்டிருந்தான் இவைகளையெல்லாந் தமதுள்ளத்திற்றெரிந்துக்கொண்டுவருகின்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு எதிரிலிருந்தவர்கள் பாதபூசை முதலியதும் பண்ணி, ஆசனமளிக்க, அந்த ஆசனத்தின்பேரில் துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவருஞ் சாத்தகியும் எழுந்தருளி இருந்தார்கள். அந்தவேளையில் முன்னே வழியிற்கண்டு பேசிப் பின்னாற் சபைக்கு வருகிறோமென்று சென்ற நாரதர்-கண்ணுவர்-ஜமதக்கினி இந்த மூன்றுரிஷிகளும் சுவாமியினுடைய திருஷ்டிக்குநேராக நின்று, அவருடைய அநுக்கிரகத்தினால் இராஜசபைக்கு வந்தார்கள். அவர்களை அங்கிருந்துகண்ட வேதப்பிராமணர்களெழுந்திருந்து; அர்க்யபாத்திய ஆசமனீய வஸ்திராபரண சந்தனகந்தத்தையோடு, புஷ்பதாம்பூலதூபதீபநைவேத்திய மந்திரங்களினாற் பூசித்து, வெவ்வேறு ஆசனங்களிற் பொருந்தச் செய்தார்கள் அவர்கள்மூவரும் அவ்வாறிருந்தபிற்பாடு, துரியோதனனானவன் கோவர்த்தனகிரியைக் குடையாக வெடுத்துக் கன்மாரியைத் தடுத்தருளிய காகாம்பூவண்ணன் எழுந்தருளியிருக்கும் இடத்தை நோக்காமல்,வேறொருதிசையில் முகந் திருப்பிக்கொண்டு, நேற்றைய பொழுது இந்த மகாநகரத்தில் வந்திருந்தும் எனக்கெதிரில்வராமல், நான் அமைத்துவைத்த விடுதியிலும் வந்திறங்காமல், என்னை இகழ்ந்ததன்மைபோல இந்த விதுரன்வீட்டிலேபோயிறங்கியகாரணமென்ன முன்னே இதனைச்சொல்லிப் பின்னே பேசவேண்டியதைப் பேசலாமென்று சர்ப்பக்கொடியோன் கேட்க அந்தவார்த்தைகளைக் கேட்டுப் புன்னகை யுடையவராய் ஸ்ரீகிருஷ்ணதேவர் அதற்கெதிருத்தரஞ் சொல்லுகின்றார்.

ஓ நந்தியாவட்டமாலையணிந்த நராதிபனே! கேளும் நீர்வேறென்றும் நான்வேறெனறும் நம்மிருவரிலொருபேதமுமில்லை. இது உமதுவீடு அது அவன்வீடு என்கிறபேதம் எள்ளத்தனையாகிலும் நானினைத்தாலல்லவோ சொல்லலாம். அப்படி நானென்றும் பேதநினைத்ததே இல்லை. எனது மனமகிழ்ச்சியாய் உமது அரண்மனைக்கு வரும்போது, மின்னலைப்போலப்பிரகாசிக்கும் வில்லையுடைய விதுரராஜன் எதிரில்வந்து வணங்கி எனக்கு விருந்துசொன்னான். அதைத் தள்ளக் கூடாமையாலும், யோசிக்குமிடத்தில் இன்னமொருகாரியமுண்டு. அதாவது பஞ்சவர்கள்சொல்லியனுப்பிய சொல்லைச்சொல்லவந்த ஒருதூதனாகிய யான் உம்முடையவீட்டில் வந்திறங்கி, நீர்உபசரித்திடும்படியாகிய இனிமையுள்ளஷட்ருசிகூடிய அன்னத்தைப்புசித்து, உம்மோடேதானே எதிருத்தரபாய் விபரீதங்களைப்பேசிவெறுக்க நினைப்பது தருமநீதியல்லவே, ஓ சர்ப்பக்கொடியைத்தரித்த துரியோதனனே விவேகத்தையுடைய மந்திரிகளாயிருந்து அரசாட்சியை அழித்தாலும், பெரியோர்கள்சொல்லும் புத்திவிசேஷங்களை மறுத்தாலும், ஒருவர்செய்த உபகாரத்தை மறந்தாலும், ஒருவருடைய வாழ்மனையிலுண்டு பின்பு அவருடன்பகைத்து யுத்தஞ்செய்ய நினைத்தாலும், சூரியர் சந்திரருள்ளவரைக்கும் இவர்கள்தான் கொடிய நரகவட்டத்திற் குமுங்கிக்கொண்டிருப்பவர்கள் என்று குளிர்ச்சிபொருந்திய பொற்றாமரை மலரிற் பிறந்தருளிய மகாலக்ஷிமிக்கு மணவாளனாகிய மாயோன் தருமங்களை யெடுத்துச்சொல்லவே, நாதனாகிய அக்கிருஷ்ணமூர்த்தியின் முகத்துக்கு நேராகத் தன்முகத்தைத்திருப்பி, இருநயனங்களுங்களிக்க அவர் திருமுகமண்டலத்தைநோக்கி, மிகவுங்குலுங்க நகைத்து, ஐயோபாவப்! ஐவருக்குத் தூதாகிவந்த அவசரத்தைச் சொல்லுமென்று ராஜாதிராஜனாகிய கொடியோன் கேட்டான்.

அப்போது வேதங்கள்மணக்குந் தாமரைமலராகிய திருநாபியையும் கீதங்களுடன் வண்டுகள் பாடுந் துளபமாலையையுமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியார்வேணுநாதஞ் செய்யுந்தமது திருவாயினை மலர்ந்தருளி, ஓ திரிதராட்டிர மகாராஜனுடையசெல்வக்குமாரனே உமது சகோதரராகிய பாண்டவர்கள் சூதாடியதினாலே ஐஸ்வரியமுதலாகிய அரசாட்சியைஇழந்தும், அக்கால் நீர்சொல்லிய வார்த்தைகள் வழுவாகக்காட்டிற்சென்று, யாதொரு ஆதரவுமற்ற அன்னியர்களென்று சொல்லும்படியாய் வருந்திநொந்து, வெய்யலும், வெப்பமும் மிகுத்துவிளங்குவ கானகத்திற் றிரிந்து, நீர் குறித்தனுப்பிய தவணைநாளைத் தீங்கில்லாமற்கழித்து, தெய்வச்செயலால் யாதொரு குறையுமின்றித் திரும்பிவந்த அவர்களுக்கு, சொற்றவறுதகுற்றமற்ற குருகுலத்திற் பிறந்த கோவாகியநீர், ஆதியிற்சொன்னபடி அவர்களுக்குரிய பூமியை நன்மையாகியசினேகத்துடன் கொடுக்கவேண்டிய தல்லாமலும் ஒருகுலத்திற்பிறந்த உரிமையை யுடையவர்களாதலின்,உமக்குள்ளசொந்தம் அவர்களுக்குமுண்டு. அவர்களுக்குள்ளசொந்தம் உமக்குமுண்டு. ஆகையால் ஒருவர்க்கொருவர் மனநோக்காடில்லாமற் சினேகித்து,அவர்களுக் குரிமையாயுள்ள நாட்டில் உமக்கிஷ்டமுள்ள சிலநாடுகொடுத்து அவர்களுடன்கூடி வாழ்வீரேயானால், நல்லசத்தியகுண நெறியுள்ள சற்பாத்திரனென்று சகலமன்னவரும் உம்மைச் சிநேகித்து நாள்தோறும்புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடி இருப்பார்கள். அப்படிச்செய்யாமல் மறுத்தீரேயானால்பழியும் பாவமும் ஒழியாமல் வளரும்படியாகப் பலரும்பழிப்பதற் கிடங்கொள்ளுமல்லாமல், தருமமுங்கீர்த்தியுஞ்செளரியமுஞ்சந்திரகுலத்தின்றன்மையும் தழைத்து விளங்கமாட்டாது. அது உமக்குநன்மையுமல்லஎன்று ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லவே, எதிரிலிருந்த துரியோதனமகாராஜன் படபடத்துக் கடுகடுத்துமிகவுஞ் சீறிச் சொல்லுகின்றான்.

கலகத்திற்கு முனையாகிய கண்ணனே! சேனும் ஆதிநாளையிற் சொக்கட்டாடிடத் தங்க ளுரிமைகளை யெல்லாமிழந்து எங்களைப்புகழ்ந்துமகிழ்ந்துகாட்டிற் குப்போய்விட்டபுனிதராகிய ஐவர்களுக்குஎன்னிடத் திற்றேற்ற அந்நாட்டையும் நகரத்தையும் உங்கட்கு வாங்கிக்கொடுத்து ஒருபாட்டை செய்து வைக்கிறே னென்று, சாட்டியில்லாப்பம்பரமாட்டத்தகுந்த நீர் சொல்லிய தந்திரவார்த்தைகளை நம்பி, உபலாவியத் தில் வந்திருக்கும் அந்தவம்பர்களைப்போலேயென்னை யும்லேசாக நினைத்துக்கொண்டு, உபாயப்பேச்சினால் ஏமாற்றலாமென்று எண்ணிவந்திருக்கின்றீர். உமது பேச்சைநம்பும் ஐவர்களைப்போலே நானும்பயித்திய க்காரனல்ல. உமதுதந்திரம் என்னிடத்திற் சாயாது, ஓமாயனே! அவர்கள் இன்னமுங் காடே கதியாய்த் திரிந்து காலங்கழிப்பதுவே நற்காரியம். அதைவிட்டு உமதுபேச்சை நம்பிப் பேராசை கொள்வது துற்கா ரியம். இதன்றியும் சகல மன்னர்களும் பழிப்பார்க ளென்று எனக்கொரு பூச்சிகாட்டவந்தீர். அடடா!! இந்தபூச்சிக்கு நான் பயப்படுவேனாகில் இன்னமெ த்தனை பூச்சிகள்புறப்படும். ஓபேய்ச்சிமுலையுண்டபெ ரும்பூச்சியே! கள்ளநரி மாட்டாகமிரட்டவந்த கோ பாலா! என்னை நீர் வெறுத்துக்கொண்டால்தானென் ன? இவ்வுலகிலுள்ள அரசர்களெல்லாருங் கறுத்துக் கொண்டால்தானென்ன? பற்பலவாறாக நினைத்தால் தானென்ன? எனக்குப்பின்னாற் போய்ச் சிரித்தால் தானென்ன? சத்தியவசனந்தப்பினானென்று சாற்றி னால்தானென்ன? அம்மாலையணிந்த மார்பினராகிய வஞ்சகநெஞ்சுடையபஞ்சபாண்டவர்கள் ஆயுதபாணி யராய் என்னுடனெதிர்த்து வெவ்விய யுத்தஞ்செய் தால்தானென்ன? இன்னும் இப்பேர்ப்பட்ட காரியங் களை எவர்கள்செய்தாலும் எவர்கள் வைதாலும் என் னென்ன உபாயம்பண்ணினாலும், உன்னுடைய என் னமும் பாண்டவர்களினிச்சையும் இன்றுமுதல லென் றென்றைக்கும் இல்லாதழியும்படியாய் எவ்விதத்தி லேனுமுடித்து வெற்றிபெறுவதேயல்லது, இந்தக்குரு பூமியிலே அவர்களுக்கு ஊசிநுனி இருக்கும் அவ்வளவு இ டமும் இனிகொடுக்கமாட்டேன். இவைகளுக் கெல் லாம் நானொருக்காலுங் கலங்கமாட்டேன் என்றுசப் தமேகங்களின்முழக்கத்தைப்போலிரைந்து கடுங்கோ பத்துடன் கண்ணில்லான் பிள்ளையாகிய துரியோத னன்சொல்ல, அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் நகை த்து, தமதுகிழ்க்கண்ணினாற் சபையிலிருக்கப் பட்ட சகலரையும் பார்த்து, ஒருமொழியுஞ் சொல்லாமல் ஊமைபோலிருக்கும் வீஷ்மர் முதலிய மேலோர்களை யும் நோக்கி, உங்களெல்லோருக்கும் இந்தத்துரியோ தனராஜன் சொல்லியவார்த்தை சம்மதந்தானோசொல் லுங்கள் குலமுறை தலைமுறையறிந்தபுத்திமான்களே யென்றுவினவி, பெரிய அரசனாகிய திரிதராட்டிரனை ப்பார்த்துச் சொல்லுவார்.

ஓ மகாராஜனே! இந்தப்பூமிக்குச் சுதந்தரபாலி ய பெரிய அரசன் நீராகையால், உமதுபிள்ளையின்வா ர்த்தையையும் என்வார்த்தையையும் நன்றாய்க் கேட் டீரே; இதற்குமறுமொழி நீர்தான் யோசித்துச் சொ ல்லவேண்டும் வேறொருவராற் சொல்லக் கூடாது. நல்லதென்று சொன்னாலும் அறநடவாது இதனால் கீர்த்திவந்தாலும் அபகீர்த்திவந்தாலும் உம்மைச்சா ருமேயல்லாமல் மற்றொருவரையுஞ்சாராது. மேலும் உமதுதம்பியாகியபாண்டுமகாராஜன் இந்தஐந்துபிள் ளைகளையுங் குந்திதேவியையுங் காட்டிலேவிட்டு இறந் துபோன க்ஷணம், அவர்களையழைப்பித்துத் தனுர் வேதமுதலிய யாவுங்கற்பித்து இளவரசுபட்டமும் ஆ ண்மிக்கையுங் கொடுத்து சம்ரக்ஷணைசெய்து ரக்ஷித்த பெரியதந்தையாகிய நீரே மறுபடியுங் காட்டுக்குப் போகும்படி சஞ்சயனிடத்தில்மனதொப்பிச்சொல்லி யனுப்பியது மகாஆச்சரியம். ஐயோ! உமது மனது இப்படி கறுக்குமென் றெவர்களுக்குந் தெரியாது. இதன்றியும் உமதுசிரேஷ்ட குமாரனாகிய துரியோத னன் பாண்டவர்களைப் படுத்திய பாடுகளையெல்லா முற்றுமறந்து விட்டீராக்கும். ஐயோபாவம்! பெரிய வயதானதையால் உமக்குக் கியாபகம் வரும்படியாய்ச் சிலசங்கதியைச் சொல்லுகிறேன் கேளும் ஐயா! நூற் றைந்து பிள்ளைகளுஞ் சிறுபிள்ளைகளாய் மருவி விளை யாடிக்கொண்டு வளர்ந்து வருங்காலத்தில், மித்திர பேத நினைப்பினால் துரியோதனன் வீமசேனனுக்கு அன்னத்தில் விஷமிட்டான். பாம்புகளைக் கொண்டு கடிப்பிக்கச்செய்தான். கங்கையில் வசிராட்டி வைத் தான். இன்னும் பற்பல தீங்குகளைச்செய்தும் அவன் மடியாததினால், ஐவரென்னுஞ் செடியை அடியோட ழித்துவிட வேண்டுமென்று கருதிக் கண்ணில்லாத உன்னைக்கொண்டு பாண்டவர் காசிப்பட்டணம்போ கும்படிச்செய்து, அரக்குமெழுக்கு அழிஞ்சிலினால் அரண்மனைகட்டிவைத்து, அதில் தாயையும்பிள்ளைக ளையுங் குடியேற்றி நெருப்பிட நினைத்தான். (நாமொ ன்றுநினைக்கத் தெய்வந்தானொன்று நினைத்தது) என் பதைப்போல் அந்தவீடுமெரிந்து இடிந்து அதிலிரு ந்த புரோசனனுங்கரிந்து மடிந்துபோக, இவர்கள் தப்பிப்பிழைத்து, இடும்பாசுரனையும் பகாசுரனையுங் கொன்று, வேத்திரகீயத்தில் பிராமணரூபத்துடனின் று, பாஞ்சால தேசஞ்சென்று, மச்சேந்திரத்தை யறு த்து வேந்தரைவென்று, பாஞ்சாலியை மணம்புரிந்து கொண்டு, உன்னுதவியினால் இந்திரப்பிரஸ்தத்திலிரு ந்து அரசுபுரிந்து, இராஜசூயயாகமுடித்து, உலகினுற் றோரேயன்றி மற்றோரும் கீர்த்திபடித்து வெற்றிக் கொடிபிடித்து ஜயபேரி அடித்துப்புகழ வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படிப்பட்டவர்களை மீட்டும் உமதுமூத்த கு மாரனாகிய இந்தத் துரியோதனராஜன் அவர்களை அஸ்தினாபுரத்துக்கு வரவழைத்து, மாயச்சூதினால்

மாநிலத்தைப் பிடுங்கிக்கொண்டு, திரௌபதா தேவியின் துகிலையுரிந்து, பன்னிரண்டுவருடம் அவர்களைக்காட்டுக் கனுப்பிவிட்டுத் தான் பந்துமித்திரர்களுடன் சிரானகுடைகவிக்கப் பாராண்டுவந்தான் அந்தபட்டிலும் விட்டுவிடாமல் அவர்களைக்கொல்லவேண்டுமென்று நினைத்துத் தூர்வாசருக்கு விருந்திட்டுமகிழ்ச்செய்து, வனத்திலிருக்கும் பாண்டவர்களிடத்தில் இந்தப்படிக்கு விருந்து புசிக்கவேண்டுமென்று வரம்பெற்றுக்கொண்டு அனுப்பிவைத்தான். காளமாமுனியைக்கொண்டு மாரணயாகஞ்செய்வித்து அதிலெழுந்த மகாப்பிரசண்ட பூதத்தைக்கண்டு ஐவர்களைப் பட்சித்து வாவென்றனுப்ப, அந்தப்பூதம் பிரேதமாகிய பாண்டவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து தன்னையனுப்பிய தவமுனிவனை வாயிற்போட்டுக்கொள்ள, அந்தபிரமஹத்திதோஷந்தன்னைச்சாரும்படி பண்ணிக்கொண்டான். ஆயிரம்வார்த்தை என்னத்திற்கு உலகிலுள்ள எல்லாவஞ்சனைகளையுமெல்லாதுரோகங்களையுங்கொண்டு தன்னாலானமட்டும்பாண்டவர்களிறப்பார்களென்று பார்த்துவிட்டான் பாண்டவர்கள் எதிலேயும் இறக்காமல், உம்முடைய கருணையினாலும் தெய்வவல்லமையினாலும் அவர்களுடைய சத்தியசவுச ஆசாரங்களினாலும், யாவர்களும் நன்னெறிக்கிடான நன்மையையுடைய விஜிதராசையினாலும், இத்தனைப் பொல்லாங்குக்கும்வித்தியாசமில்லாமற்றப்பிப் பிழைத்தார்கள். மேலும் இவர்களுக்கு உமதுபிள்ளை கூறிவிட்ட தவணைப்பிரகாரம் பன்னிரண்டுவருடமுங்காட்டிற்கழித்து, ஒருவருடம் அக்கியாதவாசமுந்தொலைத்து, நாட்டிலும்வந்து நம்மையடுத்துத் தூதுவிடுத்து ஒருநாடு கேட்டனுப்பினவர்களுக்குப் பட்டினாடாவது, அஞ்சப்பாதிக்குப் பாதியாவது உங்கள்மனதுக்குச் சம்மதியான மற்ற ஏதாவது;ஒரு ஊராவதுகொடுத்து, அவர்களையாதரித்துச் சந்தஷ்டிப்படுத்தினால், உங்களுடைய வம்சமும் புத்திர மித்திரகளத்திராதியரும் சுகப்பட்டுவாழ்வீர்கள். அல்லவென்று வலிமைபேசினால், சத்துருக்களின் ஆயுதக்காயத்தை ஆபரணமாகவணிந்தமார்பினையுடைய வீமசேனன் விஜயராஜன் முதலிய பேர்களால். கண்ணீர்ததும்பிக் கால்சாய்ந்தோடி வெந்துவெதும்பிவிரிந்துபோவீர்கள். அவர்களுக் கிடாகியபேர் யாருமில்லை. துரியோதனாதியர் சொன்னசொற் சோர்ந்தார்களாதலால், ஐவர்வந்துவிழுந்து அடித்துநாசப்படுத்தி அகண்டசாம்பிராச்சியமெல்லாங் கைக்கொண்டார்களென்று அவர்களுக்குப் பிரதிஷ்டையும்,உங்களுக்குஅப்பிரதிஷ்டையுமுண்டாகும். மேலும் நான் அவர்களுக்கும்உங்களுக்குஞ்சமமாகியபாத்தியஸ்தனாகையாலும் பாண்டவர்களின் வீரப்பிரதாப மெய்மை முதலிய கருமங்களை அறிந்திருக்கின்றவனாகையாலும், உங்களைச் செவ்வைப்படுத்தும்பொருட்டு இவ்வளவுதூரம் வந்து உங்களுக்குச் சொல்லவேண்டிய உறுதிமொழிகளையுஞ்சொன்னேம் அஃதேனெனில் இருதிறவர்களுடைய காரியங்கள்யாவும் பூர்த்தியாய் உமக்குத்தெரிந்திருந்தும், நடக்கப்போகிற செய்கைகளும் எண்ணங்களும் நீரநன்றாய் உணர்ந்திருந்தும், எங்கட்கு ஒருவார்த்தை முன்னாடிச்சொல்லலாகாதா? ஒருவாறு இருவரையும் ஒருமிக்கராஜிபண்ணி வைக்கலாகாதா? ஓ கிருஷ்ணாவென்று ஒருகாலத்தில் வெறுத்துக்கொள்வீர்கள். அன்றியும்தெரிந்துந் தெரியாமலிருப்பவர்களுக்கு அந்தச்சங்கதிதெரிந்த உரியவர்கள்முன்னாடி தெரிவிக்கவேண்டியது தருமநீதி அப்படிக்குத் தானறிந்தமாத்திரம் தெரிவிக்காவிட்டால், அவர்கள் கோத்திரசத்துருவென்றும் கொடிய பாவிகளென்றும் தருமசாஸ்திரங்களிற் குறித்திருக்கின்றமையால், பாடத்திற்கும் நரகத்திற்கும் பயந்து,நயந்து இவ்வளவு அக்கறையாகச் சொன்னேம்.

ஓசகலமுநன்குணர்ந்த சந்திரகுலோத்தாரணனே! இன்னமுஞ்சேளும் உமதுதம்பிபிள்ளைகள் உன்சொல்லைக் கடக்கவறியார்கள். இத்யாதி துன்பத்திலேயும் பெரியதந்தை மொழியென்று பேசினால் சத்தியமொழியாகத் தலைமேற்கொள்ளுகிறார்கள். உலோகாலோகமெல்லாம் வெற்றிகொண்டு இராஜசூயயாகமுஞ்செய்து, சந்திரகுலத்துக்குப் பெருமையும் புகழும் இந்திரன்போலொத்த உமக்குஅழகும் அருமையும் சம்பாதித்த சுதந்தராளாகிய பிள்ளைகளின் பேரில் சந்தோஷப்படாமல், பெருமையும் புகழையும் போக்கடிக்கும் பிள்ளைகளின்பேரில் இச்சைவைத்து அவர்களுக்குக் கொச்சைசெய்ய உமதுமனம் ஒப்பிஇருந்ததல்லவா? இப்போது இந்த இருதிறப் பிள்ளைகளையும் இரண்டு கண்களாகப்பார்த்து இஷ்டமுடன் நடப்பிப்பது திட்டமாகிய உமதுகடன். ஓபட்டத்திறையே! உம்முடைய குலத்திற்கு நஷ்டமில்லாமல்தாயாதிபாகத்தைத் தம்பிபிள்ளைகளுக்குக் கொடுத்து, தமதுபாகத்தை நூறு பிள்ளைகளுக்குங் கொடுத்து, இருவகுப்பினரும் சந்துஷ்டியாய்ப் பொருந்திவாழச்செய்வதைவிட மேலானபொருள் உமக்கு வேறொன்றுமில்லை. இப்பூமியில் இதைவிடஉமக்குண்டாவதானபுகழுமில்லை. இதைவிடுத்துஇந்தமண்ணாசைகொண்டு யுத்தம்பண்ணினால், யார்சாவார்களோ? யார்பிழைப்பார்களோ? தெரியாது. யார்செத்தாலும் ஆர்பிழைத்தாலும் துக்கமும் சுகமும்பெற்ற தந்தையாகியஉம்மைச்சாருமல்லாமல் மற்றொருவரைச் சாராது. உம்மிடத்தில் உற்றிருக்கும் வீராதிவீரராகிய அரசர்கள் யாவரும் நாளை விளையப்போகிற வினையமறியாமல் ஒச்சன்கைவாளுக்குள் அகப்பட்ட ஆட்டுக்குட்டி தன்றலைபோவதை யுணராமல் தழையைக்கண்டு சந்தோஷப்படுந் தன்மையைப்போல்மகிழ்ந்து, எமன்வந்தாலும் மற்றெவன்வந்தாலும் போய்விழுந்து பொருதுவென்று ஜயங்கொண்டு வருகிறோமென்று, இருந்த இடத்திலிருந்துக் கொண்டுவாய்ச்சளுவாய்வீரமாகப் பேசுவார்கள். அஃதெப்போது தெரியுமென்றால்

மூன்றுங்கட்டு அவிழ்க்கும்போது தெரியுமென்பது போல், சத்துருவைச் சமீபத்திற் காணும்போதுபறந்தும், தங்களைத் தாங்கள்மறந்தும் தொண்டை மண்டைகள்திறந்தும் இறந்துபோங்காலத்தில் உங்களுக்குத்தெரியும். இப்போது எவர்களுக்குந் தெரியாது. அப்பேர்ப்பட்ட வீரபராக்கிரமங்களை யுடைய சூரர்கள் பேச்சை நம்பிப், பாண்டவர்களைப் பகைகொண்டு மேதினியையும் செல்வத்தையும் விருதாவிலிழக்கப்போகிறீர்கள். (வாய்ப்புஷ்டியின் வார்த்தை கைப்புஷ்டிக்கு நிற்குமோ?) ஐயா! நான்சொல்லுமொழி நாராசம்போலிருந்தாலும், இனிக்கொஞ்ச நாளையிற் பஞ்சபாண்டவர்களுன் மிஞ்சியசக்தியைத் தஞ்சந் தஞ்சமென்று நீங்களே அஞ்சியறியப் போகிறீர்கள்.

ஓ மஞ்சினைப்பொருவு மன்னனே! உபலாவியத்தைவிட்டுப்புறப்பட்டு அஸ்தினபுரத்தை நோக்கிஉம்மிடத்துக்கு நான் தூதுவரும்போது, பாண்டவர்கள் பணிந்துசொல்லிய பட்சத்தைக்கேளும் ஐயா!எங்கள் பாட்டனார்வீஷ்மாச்சாரியாருக்கும்தனுர்வேதஆசாரியர்களுக்கும் நேசமுள்ள பெரியதந்தைக்கும் விதுரர் முதலிய பெரியோர்களுக்கும்சாஷ்டாங்கநமஸ்காரஞ் சொல்லி, சகோதரர் முதலிய உரியோர்களுக்கும்தகுந்த வந்தனை வழிபாடுகளைச்சாற்றி, மிகுந்தவருத்தமடைந்த எங்களுக்கு ஆதியிற் பிரித்துக்கொடுத்த அரசாக்ஷியைக் கொடுத்தாலுஞ்சரி, அல்லது அவர்களுக்குச் சம்மதமாகிய ஓர்நாடுகொடுத்தாலுஞ் சரி, அவர்கள் யாதுகொடுக்கச் சம்மதிக்கின்றார்களோ அதனையவர்கள் மனதொப்பிக் கொடுக்கப் பெற்றுக்கொண்டுவாரும். எப்போதும் நாங்கள் எங்கள் தந்தையினுடைய பட்சமான வார்த்தையைக் கடந்துநடவோம். ஒருவேளை இதுதான் சமயமென்று காட்டுக்குப்போகச்சொன்னால் அதுமாத்திரம் ஒப்பமாட்டோம். ஆனால் எதுவுங் கொடுப்பதில்லை யுத்தத்திற்குவருகிறோமென்று இசைவார்களாகில், ஆயிரத்தெட்டண்டமும் ஆளும்படியாகிய சந்தோஷம் எங்களுக்குண்டாகும். ஆனதால் உடனே அந்தயுத்தவார்த்தைகளை ஸ்திரப்படுத்திக்கொண்டு, வீரகண்டாமணிகளைத் தரித்திருக்கும் வேந்தர்கள்முன்னிலும் சாந்தர்களாகியமேலோர்கள்முன்னிலும் திரிதராட்டிரமகாராஜனுக்குத்தெரிவித்து, அவர்சொல்லும் வாக்கியங்களையும் கேட்டுக்கொண்டு, சகலருமறிய சாக்ஷிமுன்னிலையில் துரியோதனனாதியரிடத்தில் உறுதிபெற்றுக்கொண்டு, காலதாமசமில்லாமல் கடுகெனவாருங் கண்ணனே என்று விடை கொடுத்தனுப்பவந்த நான், என்னுள்ளே யிருந்த யாவற்றையும் எடுத்துச்சொன்னேன். இனிமேல் இதுகளை யெல்லாம்யோசித்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களையும் நிதானித்து, தாயாதிகளுடையபாகங்கொடுப்பதும் கொடுக்கக் கூடாதென்று மறுப்பதும், சண்டைக்குவருகிறதும் அந்தச்சண்டை இன்னதினத்திற்றொடங்குவதுந் தெரியப்படுத்துவீராகில் (பாப்பாத்தியம்மா மாடுவந்தது பார்த்துக்கொள்) என்னும் பழமொழிபோலே சீக்கிரஞ்சென்று, நான் தூதுபோய் வந்தசெய்தி இதுவென்று பாண்டவர்களுக்குத் தெரியச்செய்து விடுவேன். வீணாக வாழ்நாளைப் போக்கடித்துக்கொண்டிருப்பதில் லாபமென்ன சொல்லுங்களென்று சுவாமியார்கேட்க, இந்தவார்த்தைகளை யெல்லாங் கேட்டிருந்த திரிதராட்டிரமகாராஜன் பெருமூச்சுவிட்டுப் பிரலாபித்துத், தாமரைநாபியையுடைய சர்வலோக சரண்யனைநோக்கிச்சொல்லுவான்.

என்னருமை மருமகனே! நீஉரைத்த மொழிகளெல்லாம் நிசமேநிசமே. நானென்னசெய்வேன். எறிவார் கையிற் கொடுத்த கல்லைப்போல் என்னரசாட்சியைப் பகவானிடத்திற் கொடுத்துவிட்டு, நான் பரதவித்துப் பல்லைக்காட்டிக் கொண்டிருக்கிறேன். என் வசத்தில் நாடுநகர மிருக்குமாகில் என்றம்பிபிள்ளைகளுக்குக் கொஞ்சமேனும் வஞ்சனை செய்வேனோ? ஓ அஞ்சனவண்ணா! நீ நன்றாயோசிக்கக்கடவை. காசில்லாத வெறுங்கையை யுடையவன் முழம் போடுவது போல் எனக்கு ஐவருடன் விசுவாசநேசமா யிருக்கவேண்டுமென்றுஆசையிருக்கிறது. அப்படிக்கிருந்தாலும் என்வார்த்தையைப் பிள்ளைகள் எடுத்தெறிந்துவிடுகிறார்களே ஓகண்ணனே! இந்திரனுலகுக் கொப்பாகிய இந்தச்சந்திரவம்சம் தழைக்கும்படியாக யோசித்து, நீயேசந்திசெய்து வைக்கவேண்டியது. ஓதாமரைக்கண்ணா! நீதயைசெய்து எனக்குச்சொன்னசங்கதிகள் யாவற்றையுந் துரியோதனனுக்குத் தெரிவித்தால், உனதுவார்த்தையை ஒருக்காலுந் தள்ளான். உன்னிடத்தில் மிகுந்தஅன்புள்ளான். அவனுக்கு நீ சொல்லவும்-தண்டிக்கவும்-கண்டிக்கவும் - திட்டவும்-வெட்டவும்-பொருத்திவைக்கவும்-திருத்திவைக்கவும் சகலசுதந்தரமும் உனக்குண்டு. நீயேஇவ்விடத்துக்கு வந்தமட்டுக்கும் என்துன்பத்தைநீக்கி என்னைக்கடைத்தேறச்செய் கண்ணனே என்று திரிதராட்டிரன் சொல்லக்கேட்டு, தேவாதி தேவனாகிய சக்கராதரன் துரியோதனனைப்பார்த்து நீதிவசனங்கள் சொல்லத் தொடங்கினார்.

ஓ பேரும்பிரக்கியாதியுமுடைய பூமண்டலாதிபதியே! உத்தமராகிய பெரியோர்முதல்உன்றந்தையும் பேசிய வாக்கியங்களையெல்லாங் கேட்டீரல்லவா?இப்போது நான்சொல்லுவதையுங்கேளும் பிரதாபசாலியாகியவிஜயன்கயிலாசபதியாகிய பரமசிவத்தைக்குறித்துத் தவஞ்செய்து பாசுபாதாஸ்திரமுதலிய வரங்களையும்பெற்று, தேவேந்திரன் எதிர்கொண் டழைக்கத் தெய்வலோகத்திற்குப்போய் இந்திராணி யுபசரிக்கத் தெவிட்டாவமிர்தம் புசித்துக் காலகேயர் முதலிய வரக்கரைப் பாசுபதாஸ்திரத்தாற் காய்ந்து,



[118] கண்ணன் துரியோதனாதியவரைக்கண்டுபேசுதல்.

இந்திரலோகத்திற் கிரீடம்பெற்றுச் செயகீர்த்திகொண்ட அக்கினிபுத்திரனுடைய கெடிவீர பராக்கிரமங்களையும், வீமசேனனுடைய திடகாத்திர பராக்கிரமத்தையும், மற்றவர்களின் மனோதிடத்தையும் அறிந்திருக்கின்றீரல்லவா? அப்பேர்ப்பட்ட சாமர்த்தியவான்கள் இப்பேர்ப்பட்ட குலத்திற்பிறந்து, உமக்குச்சகோதரர்களுமாகி, அனாவற்றவர்கள் காட்டிலிருந்து கலங்கலக்சப்படவும், நீர்நாட்டிலிருந்து சவுக்கியநலத்தைப்பெறவும் இருப்பது ஞாயமன்று. பார்ப்பவர் கேட்பவர்களுக்கும் அழகன்று. மேலும் உங்களிருதிறவர்களில் நிறைவுக்குறைவு நேரிட்டால் ஒருவருக்கொருவர் சகித்துக்கொண்டு, கருமவிரோதமில்லாமற் பெரியோர்கள்சொல்லும் வாக்கியங்களைச்சிரமேற்கொண்டு, பழுதுவராமல் இருவரும் ஒருமைப்பட்டு வாழ்வீர்களாகில், உமதுசகோதரர்கள் முதலிய சுற்றத்தார்களும் புத்திரமித்திரர் முதலாகிய வெகுசனங்களும சுகமாகவிருந்து பிழைக்கலாம். பராராஜரும்பயந்தமதிப்பினையுடையவர்களாய்ப் புகழ்ந்துவாழ்வார்கள். இம்மைப்பயன் மறுமைப்பயன் இரண்டுக்கும் லாபமாயிருக்கும் சூரியர் சந்திரருள்ள வரைக்கும இகழ்ச்சியில்லாமற்புகழ்ச்சியுண்டாமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்ல, அதைக்கேட்டிருந்த திரிதராட்டிரன் சிந்தைகளித்து, மைந்தனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

அப்பா குழந்தாய்! நந்தநந்தன னுரைத்த இந்த வார்த்தை உன்னை விந்தையாகச் சுகப்படுத்தும். அதற்காகவே இந்தஅஸ்தினபுரத்தில் அரசர்சபைக்குவந்து, அப்படிவந்தபோதிலும் தான்வந்தகாரியத்தை ஆம் அல்லவென்று பார்த்துக்கொண்டு போகாமல், உன்னுடைய கோபதாபத்திற்கு முடன்பட்டு, இவ்வளவு புத்திமதிகளை இவரைப்போல் யார்சொல்லப் போகிறார்கள். ஆகையாற்பிள்ளாய்! இவருடையமொழியேவேதம். இவரே தருமஸ்வரூபி. இவரால் உன் குலமும் வாழ்வுந்தழைக்கும். குறைவில்லாப்பாக்கியமுஞ்செழிக்கும். இந்தகோபால கிருஷ்ணருடைய இஷ்டப்படிக்கு உனக்குத் தோன்றிய நாட்டைஐவர்களுக்குக் கொடுத்து, அவர்களும் நீங்களும் தாழ்வில்லாமல் வாழ்வதேவாழ்வு, அந்தப்படிச் செய்யாவிட்டால் இனிவருவதெல்லாந் தாழ்வு மேலும் தருமராஜன் உன்னிடத்தில் வைத்திருக்கும் பிரீதிவாச் சலயங்களைப்போல் என்னிடத்தில்லையே. அடாசுதனே! அப்பேர்ப் பட்ட அண்ணனை இழந்து, அன்னியர்களைப் புகழ்ந்து ஆபத்தாளாயெண்ணிக் கலந்துகொண்டிருப்பது காரியமல்லவே. (தன்னைப்பெற்ற தாய் தவிட்டுக்கலையப் பொன்னைச் சிலவழித்துப் பூரிகொடுத்தான்பிள்ளை) என்பதுபோல், பெருமைபெறும்படி பிறரைத்தழுவி அவர்களுக் குபசரிப்பதினால் ஆவதென்ன? அப்பனே! இப்பொழுது இக்கிருஷ்ணதேவரும் பெரியவர்களும் தந்தையாகிய நானும் சொல்லும் வார்த்தைகளைச் சோர்வுபடவொட்டாமற்பாண்டவர்களுடன் பக்ஷமாய்க்கலந்து வாழ்வையாகில்எங்களுக்கெல்லாம் பெருமையுஞ்சிறப்புமுண்டாம் நமது சொல்லைக்கடவாமல் நடந்தான் துரியோதனனென்று நாங்களெல்லாரும் புகழ்ந்து மகிழ்ந்துபூரிப்பையடைவோம், இதனறியும் இரண்டுகண்ணுந் தெரியாத என்னை இவ்வுலகுக்கு இறையாக்கிவைத்து, என்சொல்வழிநின்று என்னேவலைச்செய்து எதிர்த்த சத்துருக்களைக் கொய்து, சகலபெருமையும் நானடையச்செய்து, ஊழியனைப்போலடங்கி நடந்துவந்தான் என் தம்பியாகிய பாண்டுராஜன் அவனால்நிலைத்த ராச்சியமிது. ஆதலால் எல்லாம் அவனுடையசெல்வம். எல்லாம் அவனுடைய அரசாட்சி. எல்லாம்அவனுடைய பிள்ளைகள். எனக்கென்ன சொந்தமுண்டு மகனே! அந்தப்பாக்கியவானுடைய பிள்ளைகளை பரதேசிகளைப்போல் வேறுபடுத்தி, பதிநிதிமுதலிய பாக்கியங்கொடுக்காமற் பகைமேற்கொண்டுபேசினால்,ஐஐயோ பாவம்விளைந்துய்யுமே மன்னவர்நீதியுமாயுமே நமது குலமுறை குன்றுமே. நானிலமெல்லாம் நகைக்குமே கலகமுமிருக்குமே. அரசரிற் பகைவீங்குமே. அதனால் நமதுஉரிமையும் பெருமையும்நீங்குமே. வறுமையுஞ் சிறுமையுமோங்குமே வையகமுழுமையுமேங்குமே. மதலாய்! மேலும் இந்தக்கிருஷ்ணதேவர் நமது அருச்சுனனுக்கு இஷ்டரென்றும் உனக்குஅனிஷ்டரென்றும் நீ எண்ணியிருக்கின்றாயல்லவா? அப்பா! இவர் உங்களிருதிறவருக்கும் இரண்டுநேத்திரங்களேயன்றி வேறல்ல. நமது உரியசம்பந்தத்திற்கும் புறம்பல்ல. இவருடையஉறுதியும் உதவியுமேஉங்களுக்குத் துணையல்லது வேறுதுணையில்லையே. இந்தப்பகவானுடைய வசனத்தின்வண்ணம் ஐவருக்குரிய அரசைக் கொடுத்து, சண்டைமுதலிய சபதங்களையும்விடுத்து, சமத்துவமாகத் துரைத்தனஞ்செய்து, ஜகமெல்லாம்வாழ்த்த சுகம்பெறக் கடவீர்களென்று திரிதராட்டிராபூபதி துரியோதனனுக்குச்சொல்ல இவைகளைக் கேட்டிருந்த வீஷ்மாச்சாரியார் பட்சபாதமில்லாமல்நடுவுநிலைமையாகச் சொல்லிவந்த திரிதராட்டிரனைப் புகழ்ந்துஉள்ளமகிழ்ந்து, பேரனாகிய துரியோதனனென்னுங் குபேரனைத் தமதுதிருவருட்கண்ணால்நோக்கி, உன்னுடைய மனக்களங்க நீங்கும்படியாக நானுரைக்கும் வசனத்தையும் உன்னுடைய திடசித்தத்தோடு சேட்கக்கடவையென்று சொல்லுவதாயினர்.

அடாகுழந்தாய்! பரதகுலத்திற்பிறந்த ராஜாதிராஜனாகியநீபெரியோர்முதலியபந்துமித்திரர்கள்சொல்லும் வார்த்தைகளைத் தள்ளலாகாது. பாபத்தைமூட்டைகட்டலாகாது.பிராணனை அலட்சியமாகவெண்ணி யுத்தஞ்செய்ய நினைப்பது க்ஷத்திரிய தருமமானபோதிலும், சத்துருக்கள் பேரிலல்லாமல்சுற்றத்தார் பேரில் விரோத நினைக்கக்கூடாது. தன்னுயிரைப்போலே மன்னுயிரைக்காத்துத் தருமத்தை நிலைநிறுத்த வேண்டியது. பெருமையும் புகழும்பெற வேண்டிய

பதார்த்தத்தை யல்லாமற் சிறுமையும் இழிவையுந்த
ரத்தக்க பதார்த்தத்தைச் சேர்க்கலாகாது. தாழ்ந்த
பேர்களுடன் சிநேகமாகாது. தையலார்மோகந்தாங்
கலாகாது. நல்லவர்கள் நடுங்கச்செய்யலாகாது. நாவி
னுற்பதறிப்பேசலாகாது. இரக்கம்-தயை - சாந்தம்-
பொறுமை-இவைகளிருக்கவேண்டியது. இம்மைப்பய
னையும் மறுப்பயனையும் எண்ணிநடக்க வேண்டியது.
இத்தன்மையவாகிய பற்பலநீதிகளும் தருமங்களும்
உன்னிடத்திற் குடிகொண்டிருக்கவேண்டும். ஐயனே
நமது குலபுத்திரராகிய பாண்டவர்கள் அன்னியரல்
லவே. அவர்களுக்கு உன்னிஷ்டத்திற் றோன்றியராச்
சியங்கொடுத்துக் கீர்த்தியையுங் கௌரவத்தையும்
பெறவேண்டியது. இப்போது அப்பாண்டவருக்கு
நாட்டைக் கொடுத்தாற் பயந்து கொடுத்தான் துரி
யோதனனென்பதாய் உலகத்தார் பழிப்பார்க ளெ
ன்று நீநினைக்கப்போகிறாய். அந்த அவமானம் உன
க்குவேண்டாம். அதேதென்றால், அன்னியரிடத்தில்
அபகரித்துக்கொண்ட அரசாட்சியைமறுபடியுங்கொ
டுக்க நினைப்பையாகில, மன்னவரெல்லாருமுன்னைச்
சின்னதனமாகச் சொல்லுவார்கள். அதுமூலத்தினுன
க்குக் குறைவுண்டாகும். இப்போது நாங்கள்சொல்
லுவதினால் உனக்கு யாதொருதாட்சியுமில்லை. மாட்
சிமையுடைய மைந்தனே! அண்ணன்தம்பி தாயாதி
கள் ஒருவருக்கொருவர் ஏதோகொஞ்சம் முகத்திரு
ப்பாவிருந்து,(ரேடித்துநீர்விலகுமா?) என்பதுபோல்
மறுபடியுங் கூடிக்கொண்டார் புத்திமான்க ளென்று
சகலருஞ் சந்தோஷப்படுவார்கள். ஓமதலாய்! ஐவரா
கிய சகோதரர்களுடைய அரசைச்சூதாடி அனியாய
மாய்ப் பறித்துகொண்டான் துஷ்டனாகிய துரியோ
தனனென்று நிஷ்டுர வசனங்களினாற் பலருந் தூற்று
வதைப் பார்க்கிலும், நாங்கள்சொல்லும் நன்னெறி
யின்படி நீநடப்பது குறைவோ? நிறைவாகிய குறை
வற்ற கோவே! இந்தப்படி நீநடவாவிட்டால் இந்தப்
பாருள்ளவரையிலும், கடல்நீருள்ள வரையிலும்கருங்
காருள்ளவரையிலும், மாம்மேருள்ள வரையிலும், ப
ழிச்சொல்லும் பாவமும் கிளைகிளையாய் விளையுமே
யல்லது, மற்றொருலாபமு மில்லையே. அரவக்கொடி
யோனே! இந்தக்கிருஷ்ணதேவர் நமதுபட்டணத்து
க்குவரவும், இராஜசபையேறி யுன்னிடத்தி லிருந்து
பேசவும், நாமெல்லோரும் எத்தனைகாலம்தபசுசெய்
தாகிலுங் கிட்டாதே. அப்பேர்ப்பட்டவர் நம்மிடத்
திற்கலந்து, யாவருடைய புண்ணிய வசனத்தினாலே
யோவந்து உனக்குமிகுந்த தருமநீதிகளைச் சொன்
னார். அவருடையவாக்கியத்தை வேதமந்திர மாகக்
கொண்டு மேன்மையுறக்கடவை. இதுகிடைத்ததற்க
ருமையாகிய பொருள். இந்தமாநுபாவரை லேசாக
நினைக்கவேண்டாம். இவரேபுராணபுருஷர். இவரேநம்
மிடவர்களில் மகாபுத்தியும் யுத்தியும் ராஜதந்திரவெ
ற்றியுமுடைய உத்தமராகையால், இவருடையவாக்கி
யத்தைச் சிரமேற்கொண்டுநடப்பையாகில் ஊழிமலை

யுங் காலம்வரைக்கும் உன்கீர்த்திதொலையாது. இந்த
ப்படியின்மீது தீர்க்காயுசுடன் கொடியுடைய அரவக்
கொடியசைந்தாட வணங்காமுடிபொறுத்தமன்னனா
கவே நெடுங்காலம் வாழ்ந்திருப்பாய்அப்பாபார்த்தி
பனே! இனிமேலும் இந்தப் பகவானுடைய பக்குவ
மொழிகளைக் கேளென்று காங்கேயன்சொல்லப்,பக்
கத்திலிருந்த துரோணாச்சாரியர் வணங்காமகுடமன்
னனைநோக்கிச் சொல்லுகிறார்.

ஓமன்னவனே! பாண்டவர்தூதனாகவந்துஇவ்வி
டத்திற்கூடிப்பேசுகின்ற இவரை யாரென்றெண்ணியி
ருக்கின்றாய், இவர்தான் பரமபதநாதன். இவர்தான்
சங்குசக்ரகதாசட்கேகோதண்டதாரி இவர்தான்கோ
வர்த்தனகிரியைக் குடையாகத்தூக்கிஆயர்களுடைய
ஆபத்தைக்காத்த அரிபரந்தாமன். இப்படிப்பட்ட
வர் உங்கள்குலமாகிய திங்கள்குலஞ்செய்ததவத்தால்
அல்லவா இங்குவந்து இபாங்களெல்லாந் தரிசிக்க உ
னது சபைக்கெழுந்தருளினார். மேலும் இந்தக்குலத்
தின் முதியோரெல்லாம் ஜன்மாந்திரத்திற் செய்த
தபோபலத்தினால், உன்னுடைய கோபமொழிகளை
யெல்லாங்கேட்டுச் சகித்துக்கொண்டு குணமாகிய த
ருமமுறைமைகளையுங்கூறினார். உன்னொருவனால் உல
கஞ்சுகப்படவும் நாங்கள்கண்களித்துக்காணவும் இவ்வி
டத்திற்றிருவடி பெயர்த்தருளினாரல்லது. பாண்டவர்
களுக்கு நாடுபெறவேண்டி முக்கியமாய்வந்தவரல்லர்
இதைநீர் நன்றாகயோசிக்கத்தக்கது. ஆதியிற்காண்ட
வப்பிரஸ்தமென்னுங் காட்டை ஒருநொடிப்போதில்
இந்திரப்பிரஸ்தமாக யேர்ப்படுத்தி யெல்லாப் பாக்கி
யங்களும் பாண்டவர்களுக்கீய்ந்தஇறைவன்,அகண்ட
சாம்பிராச்சியமும் இப்போது அவர்கட்கு அளிக்க
வேண்டுமென்று நினைத்தால் அதற்குயாதொரு அட்
டியுமுண்டோ? அப்பனே! அப்படிநினைத்துவந்தவரா
ல்ல. நீங்களொருகுலத்திற் பிறந்தவர்கள் ஆகையால்
உரிமையாக விருப்பதழகென்று உரைக்கவும், நமது
புத்ரமித்ர களத்திராதிகள் முதலியயாவுஞ் சுகப்பட
வும் எண்ணியெழுந்தருளியதேயன்றிவேறல்ல இவை
களையெல்லாம் உன்சிந்தையுட்கொண்டு, சொந்தமாக
வந்த பகவான்சொல்லியவார்த்தையின்படிக்கும்உன்
தந்தையுரைத்த தருமத்தின் படிக்கும் காடுதிரிந்து
வந்த பாண்டவராகிய கனவான்களுக்கு நாடுகொடுத்
து, நாரணன்முதலாகிய நால்வருப்புகழுவிருக்கு மவ்
வைவர்களில் தருமராஜனும் வீமனுந்தழுவ வணங்கி
யும், மற்றவருன்னைப் பணிந்துவாழ்த்த இணங்கியும்
நாங்களியாவருங்கண்டு கண்களிக்கச் சௌபாக்கிய
சம்பன்னனாக வாழ்வைப் பொருந்தித் தாழ்வில்லா
மல் வாழக்கடவை துரியோதனாவென்று துரோணாச்
சாரியருஞ்சொல்லவே, இம்மொழிகளைக்கேட்டிருந்த
துரியோதனன் இடியைப்போலிரைந்து, நீங்களளக்க
வேண்டிய கல்விகளெல்லாம் இவ்வளவுதானோ? இன்
ன மேதாகிலுங் கொஞ்சங் குறை யிருக்கின்றதோ

வென்று குலுங்கநகைத்து, குரோதமுங் கோபமுங் குடிகொண்டெழும்பக் கொதித்து. மணிவண்ணனாகிய மாயனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓ கபடநாடகா! உன்னுடைய கற்பனையினாலும் உன் திரேககாந்தியினாலும், நஞ்சனையவஞ்சகநிறைந்த உன்னெஞ்சத்தினாலும், நீகொஞ்சமேனும் யோசிக்காமற்சொல்லிய நீதிசாஸ்திரங்களினாலும், இவிடத்திலிருப்போருடைய பக்கச்சொல்லின் பலத்தினாலும், என்னைமயக்கி மருட்டி நாடுபெற்றுக்கொண்டு போகவல்லவோ நாடிஓடிவந்தாய், அடடா நாரணனே!! நீ ஓடிவந்ததற்கு நான்நாடுகொடுத்தவன்றான். நீவாங்கினவன்றான். ஐயோபாவம்! பாண்டவர் நீவரும்வழியைப்பார்த்துக் கொண்டிருப்பார்களல்லவா? (சமுத்திரத்தின் அலையைப்போகிறதுமில்லை, தம்பி தர்ப்பணஞ்செய்து தலைமுழுகப்போகிறதுமில்லை, என்றும் (தமயனுக்குப் பெண்வாய்க்கப்போகிறதுமில்லை. தங்கச்சி சமியாணம் முடியப்போகிறதுமில்லை.) என்றும் சொல்லுகிறவாக்கியங்களை நீகேட்டதில்லையோ? இந்தமட்டும் போதும்போதும். எங்களவர்களெல்லாரும் மெத்தத்தெரிந்த பெரியோரென்னும் பேர்மாத்திரமே பொழியப்பின்னை பொன்றுமில்லை உன்னுடையவஞ்சனையும் சூதும் மாயவித்தையும் எனக்குத தெரியும் இவர்களறியமாட்டார்கள். நீஎல்லோரையும் மயக்குவாய். நான்உன்னை மயக்கும்படியாகிய உலகுக்கொருவன். வணங்காமுடியோன் நந்தியாவட்டமாலையன் அரவகேதனன். ராஜாதிராஜப் பிரதாபவீரன். செடிஸ்தலாதிபதியாகிய என்னை நீநன்குமதித்துப்பார்புன்குமரத்தின்கீழ் கன்றுகள்மேய்க்கும் புன்னியனே! நான் ஆளப்போகிறது அந்நாடாகியவிண்ணாடானாலும் ஐவர்வாழப்போகிறது இந்நாடாகியமண்ணாடானாலும், அவர்களைவணங்கிப் பணிந்து கைகுவித்தவாழேன், அவர்களுக்குநான்தாழேன். அணுவத்தனைநாடும் அவர்களுக்குக் கொடுக்கேன். என்பிராணனிருக்கிறவரையிலும் அவர்களை உயிருடன்விடுக்கேன். உங்களுடைய யுத்திபுத்திகளைக் கேட்டுநடக்கேன். ஒன்றுங்கொடுக்கேன். இதுதான்கடைசிவார்த்தை. நாளைநடக்கப்போகிற அமர்க்களத்தில் அவரவர்களுடைய பெருமையும் பிரதாபமும் வீரமும் திறமும் வெளிப்படவேபோகின்றது ஆகாயத்திலிருக்குந் தேவர்கள் வேடிக்கை பார்க்கவேபோகிறார்கள். இதற்குள்ளாக நீங்களெல்லோரும் என்மனமடிந்து போகிறீர்கள். திங்களைத்தரித்த சங்கரன் வந்துரைத்த போதிலும், பஞ்சவருடைய பங்கை கொடுக்கமாட்டேன். இதோ இங்குவந்திருக்கும் இந்தப் பெரியோர்களைப் போல் உம்மைமதித்து உமதுவார்த்தையை நம்பிக் கேட்கமாட்டேன். என்றந்தையே முதலாகிய உரிய பெரியோரெல்லாரும் என்னைவெறுத்தாலும், இந்தப் பிரபஞ்சமெல்லாம் என்னைப்பழித்தாலும், என்னைச் சார்ந்தவர்களெல்லாரும் மாண்டழிந்து போனாலும், பாண்டவர்கள் மறுபடியும் நாடுபெற்றதாய்ப்பட்டத்திலுமெழுதவொட்டேன், இல்லையென்றுஎன்னாக்கினாற்சொல்லிய வாக்கியத்தைமறுத்து, மீட்டும் உண்டென்று ஒருக்காலுஞ்சொல்லமாட்டேன். திடங்கொண்ட என்மனத்தினுறுதிஇதுவாக்களும். ஓகிருஷ்ணனே உன்னெண்ணத்தை இப்போதே மறந்து விடென்று சிறந்ததுரியோதனன் சொல்ல, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கேட்டு, திருமுகமண்டலத்தில் திவ்யகாந்தியுடையவராய்ப் புன்னகைகொண்டுமன்னரைநோக்க, அந்நேரத்திற் சபையில்வந்திருந்த முனிவர்மூவர்களில் ஜமதக்கினேயரென்பவர் நந்தியாவட்டக் தாரினையுடைய நாயகனைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

ஜமதக்கினிமுனிவர் நரநாராயணர் சரித்திர முரைத்தல்.

ஓராஜாதிராஜனே! இவ்வுலகத்தில் நரநாராயணர்களென்னுமிருவர் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னும் ஈஷணாத்திரையங்களில் வீழ்ந்துமயங்கி நிலையில்லாத தோற்பையாகிய பொய்யை மெய்யெனவிரும்பி விருதாவிலழிகின்ற விவேகசூனியரைபோலல்லாமல், உண்மைப்பொருளை நாடிய உத்தமரென்றுரைக்கும் படியாய் வேடம்பூண்டு, உலகுக்குச் சிஷ்டாசாரத் தன்மையைப்பழக்கிப் பாபத்தையொறுத்துப் புண்ணியத்தை நிலைநிறுத்தவேண்டி இருடிகளாகவந்து, கந்தச்சுவாமி விளையாடிக்கொண்டிருந்த கந்தமாதனச்சாரலில்யாகங்கள்செய்து, சகலசித்தியும் பெறும்படியாக மௌனவிரதம் அனுஷ்டித்துக் கொண்டு வருநாளையில், ஒருநாள் இடிகளையொத்துஇடிக்கும்படியானமொழிகளும்சக்ரவாளகிரியை சாய்க்கும் பலமும் தேவர்களை நிராயுதபாணியாக ஓடச்செய்யும் பிரதாபமும், வடவாமுகாக்கினியைப்புன்கள்செய்யும்பெரியகண்களும், இந்தப்பூமியைச்சுற்றிலும் செல்லும்படியாகிய வில்லும் அஸ்திரங்களும், தலையிற்புனைந்தமுடியும், ஜயவீரக்கொடியும், தானேறிய தேரும், பாபியென்னும் பேரும் தாங்கிய ஆண்மிக்கையையுடைய அரக்கனொருவன்வந்து, தவஞ்செய்வோர்களைக்கண்டு, ஆரடா இந்துதவம்புரியாநின்றவர்? உங்களுக்கு வில்லேன்? பாணமேன்? வீராதிவீரரைப்போலிருக்கின்ற நீங்கள் வெளியேவாருங்களடா. என்று மேகம்போலக் கெர்ச்சித்து மொழிந்து, அளவற்ற சரங்களை அவர்கள்மேற் பொழிந்தான். அவனைக்கண்ட புண்ணியசீலர்களிருவரும் இவனுடன்நாம்பொருதால் நமதுதவங்கெடுமென் றெண்ணி, அந்தராட்சதனுக்கு அநேகவுபசார வார்த்தைகளைச்சொல்லி, அப்பா! நாங்கள்தபசிகள். மிருகபயங்கரத்திற்காகவில்லும்பாணமும்வைத்திருக்கின்றோம். மற்றவேறொன்றுக்குமல்ல. மேலும்எங்களை நீஜெயித்ததாக விஜயஸ்தம்பம் நாட்டிக்கொண்டு, எங்கள்பேரிற் றயவுசெய்து அப்பாலே நீங்கிப்போவென்று அவர்கள் அடங்கிச்

சொல்லியும் அந்தவார்த்தைக்குஅவனெப்பாமற்குப் பல்குப்பலாகக் கணைகளைச் சொரிந்தபோது, நரனுக்குக் கோபம்வந்து வில்லைவளைத்து, ஆகர்ணபரியந்தமிழுத்து, அமோகமாகிய அஸ்திரங்களைப் பிரயோகித்து, அவனுடையவீரப்பட்டத்தையும் கவசத்தையும் அறுத்து, வில்லை இரண்டுதுண்டாய் முறித்து, மார்பினும்வயிற்றினும் தோளினும்தாளினும் மூழ்கித் தூளைக்கமுளையம்புகளையேவிச் சின்னபின்னப்படுத்தி,தேரையும் அவன்பேரையும் அழித்துச்சிதைத்து உதிரவெள்ளம்பெருகச் செய்து, உலகுக்குபகாரஞ்செய்தருளிய அந்த நரநாராயணரென்னும் இருவரும் இந்தயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவராகவும் அருச்சுனராகவும் ராஜகுலத்திலவதரித்து, உங்களிலொருவராயிருக்கின்றார்கள். அவர்களோ ஒன்றைக்காட்டி ஒன்றைமுடிப்பார்கள். அசாத்தியர்கள். அவர்களால்முடியாததொன்றுமில்லை. அவர்களை யாரொருத்தர் சிந்தித்துவந்தித்துத் தாசத்துவம் புகுகின்றார்களோ, அவர்களிடத்தில் மிகுந்த நேசமாயிருப்பார்கள். நிந்திப்பவர்களைத் தகுந்தபடி நாசஞ்செய்வார்கள். யுகந்தோறும்இவர்கள் பிறந்தாவிட்டாற் பாபம் இறக்கமாட்டாது. ஆகையாலிவர்கள் பிறந்தே தீரவேண்டும். இந்தத்துவாபரயுகத்தில் தருமத்தை நிலைநிறுத்தும்படியாய் இவர்கள் பிறந்திருக்கின்றார்கள். இனிபிறக்கப்போகிறகலியுகத்தில் தெய்வமில்லையென்றிகழ்ந்து நிந்தனை செய்து, தங்கள்தங்கள் சுயசமயத்தையும் சுயபூசையையும் விட்டு, இதரமதத்தையும் இதரதேவதையையும் பூசித்து அனுஷ்டிப்பார்கள். ஆசாரமுதலிய பூஜாவிதியாவுந் தவிர்த்துச் சுசிசுத்தமில்லாமல் வருணசங்கிரமமாகிய கடைப்பட்டோரெல்லோரும், கல்விசாஸ்திரங்களையும், ஜோசியநூல்களையும், சாமுத்திரிகா சாஸ்திரங்களையும், வயித்தியநூல்களையும்,வேதங்களையும்,வேதாந்தங்களையும், கற்றுக்கொண்டு, உயர்ந்தகுலத்தோர்போல ஸ்நானம்-பூசை-ஆசாரம்-சுசி-சுத்தம் -வைதிகம்-மான்யு-கௌரவம்- உடையவர்களாய், மற்றவர்களுடைய வீடுகள்தோறுசென்று மரியாதையும்உயர்ந்த ஆசனமும்பெறுவார்கள், முதன்மைக்குலத்தோராகிய பிராமணர் முதலாகியபேர்களும் கடைப்பட்டோரிடத்திற் கைகட்டிக்கொண்டு காத்திருந்து, வேதநூல் முதலிய கல்விக்கியானமுங் குறைந்து இழிவானவன் உபதேசஞ் சொல்லக்கேட்டு இன்பமடைந்து இச்சகம்பேசி, இன்னான் இன்னானென்றில்லாமல் முறைமைமாறி இரந்துண்பார்கள். நற்குலமெல்லாம் நடுங்கியொடுங்கும். துற்குலமெல்லாந் துளிர்த்துத்துலங்கும் (குப்பையுயருங் கோபுரந்தாழும்) என்பதைப்போலாகும் அப்படியொருவரை யொருவர் மதியாமற் கெட்டழிந்து போங்காலையில், இந்தப்பரம புருஷர்கள் திருவவதாரஞ்செய்து, துஷ்டசன நிக்கிரக சிஷ்டசனபரிபாலனம் பண்ணி, உலகத்தை வரிசைப்படுத்தி, வருணாச்சிரதருமம் வகுப்பார்கள். ஆகையால் அரசனே! உங்கள்பாட்டனாரும் ஆசாரியரிருவரும் பெரியதந்தை சிறியதந்தை இவர்களும் எம்போலியருஞ் சொல்லும்படியாகிய வசனங்களைக் கேட்டு, ஆயர்பாடியில் நேயராகிய கோபாலர்கள் வீடுதோறுந்தயிர் வெண்ணெய்களைத் தாவியுண்டு தையலார் சம்பிரமங்களை யனுபவித்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பணிந்து, அவருக்குச் சந்தோஷம்வரும்படியாய்த்தருமத்தை யனுசரித்துப், பாண்டவர்கட்கு நாட்டைக் கொடுத்து அவர்களுடன் பொருந்தியிருந்துவாழ்வையாகில், பேரும் பிரதிஷ்டையுமுண்டாய்ச் சுகம்பெறலாம். சுவாமியின் அருளும்பெறலாம். என்றஜமதக்கினி ரிஷீஸ்வரர்சொல்ல, அந்தவார்த்தையைத் துரியோதனராஜன் கேட்டுநகைத்து,இவர்களெல்லாருந்இதுவரையிற் சொன்னதெல்லாம் சமஸ்கிரதம்ஒன்றுந்தெரியவில்லை தேவரீர் தான்தாராளமாய் விளங்கச்சொன்னீர் சுவாமியென்று உபசரித்தான். அந்தவேளையிற் பக்கத்திலிருந்த கண்ணுவமகா ரிஷியானவர் மன்னவனைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

கண்ணுவ முனிவர் கருடன் சரித்திரமுரைத்தல்.

ஓ துரியோதனராஜனே! பெரியோர்கள் சொல்லைக்கேளாமல் அவமானமடைந்தவர்களின் சரித்திரத்தைச்சொல்லுகிறேன்கேள். முன்னொருபோது தேவேந்திரனுடையசாரதியாகிய மாதலியென்பவன் திவ்வியசுந்தரமோகனவடிவினையுடையஒருபெண்ணைபெற்றுவளர்த்து, இந்தப்பெண்ணுக்குத்தகுந்தபுருஷன் வேண்டுமென்று சூரியகிரணந்தாங்கும் இடங்களெல்லாம் தேடிப்பார்த்துவருகையில், ஒருநாள் பாதலந்திலிருந்த நாககுமாரனைக்கண்டு, அவன்சுந்தர வடிவைத் தன்சிந்தையிற்கொண்டு, அப்பா மிகுந்த அழகினையுடைய என்பெண்ணை யுனக்குக்கலியாணம்பண்ணிக்கொடுக்கிறேன் நீபெற்றுக் கொள்ளென்று சொல்ல, அந்தவார்த்தையை நாககுமாரன்கேட்டு, ஐயா! எங்களுக்குக்குலப்பகையாகி இருப்பவன்கருடன். அவன் என்தகப்பனையுந் தாயையுங் கொன்று தின்றுவிட்டு, என்னையுங் கொல்லுவேனென்று கறுவிக்கொண்டிருக்கின்றான். அவன் கண்ணிற்படாதகாலமெல்லாம் பிழைத்திருக்கின்றேன். எப்போதுஅவன்கண்ணிற் படுகின்றேனோ அப்போதே நானிறந்தவனான். ஐயா இப்படி மகாபலமாகிய பகைநேரிட்டு (நித்தியகண்டம் பூரணாயுசு) என்னும் பழமொழிபோல் வருந்தி ஏக்கங்கொண்டிருக்கின்ற நான், என்றைக்கிருந்தாலுங் கருடனால் இறந்துபோவோமென்று நன்றாய்த்தெரிந்திருந்தும், உமதுபெண்ணை விவாகஞ் செய்துக்கொண்டு நெடுநாள்கூடி வாழ்வதற்கில்லாமல் விட்டுவிடுவது பிரயோசனமில்லை. மேலும்நல்லபெண்

அகப்பட்டாற் போதுமென்னும் ஆசையுடன் எனக்கிருக்கும் விபத்தைச்சொல்லாமற் கலியாணமுடித்துக்கொண்டால், எனக்குப் பழியும்பாவமும் வந்துநேரிடும். ஆகையாலுற்றது சொன்னேனென் றுரைக்க, அந்தவார்த்தையைக்கேட்ட மாதலிக்கு மிகுந்த சந்தோஷம்வந்து, தன்னை மறந்தவனாக உடல்பூரித்து, இவன்மன்மதாகிர்த்தியாகிய வடிவிலும் கல்விக்கியானத்திலுஞ் சிறந்திருப்பதல்லாமல், உண்மைமொழியிலும் உயர்ந்திருக்கின்றான் இவனைச்சுகப்படுத்திநமது பெண்ணை இவனுக்கேகொடுக்க வேண்டுமென்று மகிழ்ந்து சொல்லுகின்றான்.

ஓநாகபாலனே! எங்கள் தேவராஜனுக்குச் சொல்லி உனக்கிருக்கும் கருடனுடைய பகைப்பயத்தை நீக்கித்தீர்க்காயுசாயிருக்கும்படிச் செய்விக்கிறேன்வாவென்று கூட அழைத்துக்கொண்டு தேவேந்திரனுடைய சபைக்குவருகையில் இவர்களுடைய பாக்கியவசத்தினால் ஸ்ரீ வைகுந்தவாசனாகிய செகத்ரக்ஷகன் தேவேந்திரனுடைய சபையில்வந் தெழுந்தருளியிருந்த திவ்யகோலத்தை இந்தமாதலியும்நாககுமாரனுங் கண்டுவணங்கிக், கரத்தைக்குவித்து, நாவிற்றுதித்து, இந்திரன்முதலாகிய பேர்களையும் பணிந்துகொண்டு, மாதலிதான்வந்த வரலாறுகளை இந்திரனிடத்திற் சொல்ல, அதைக்கேட்டஇந்திரனெழுந்து,மாயோன் மலரடியில்விழுந்து, சுவாமி! பக்தவர்சலனாகிய பரமதயாளுவே! என்சாரதியாகிய மாதலியின் கருத்தைக் கேளுமென்று மனுப்பண்ணிக் கொள்ள, அதைக்கேட்ட விஷ்ணுவானவர் சந்தோஷித்து நாககுமாரனைப் பார்த்து, இனிமேல்உனக்கு சிவபயமின்றித் தீர்க்காயுசாக விருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந் தருளித் தமது திருவைகுந்தத்திற் கெழுந்தருளினர்.உடனே மாதலியானவன் தேவராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டுபோய், தன்குமாரத்தியை நாககுமாரனுக்குத் தத்தஞ்செய்து, சகலவித அலங்காரசம்பிரமங்களுடன் விவாகமுடித்து. ஸ்ரீதன முதலாகியதுங் கொடுக்கப்பெற்றுக்கொண்டு, ஸ்திரீயும்புருஷனும்நாகலோகம்போய்ச் சேர்ந்து, குங்குமந்தங்கிய கொங்கைகுலுங்கி ஒழுங்க மங்களவங்கன இங்கிதகிரீடையிற்சிறந்து வாழ்ந்திருந்தார்கள் இவைகளையெல்லாங் கருடன் கேள்விப்பட்டுக் கடுங்கோபங்கொண்டு,கண்கள்சிவந்து நெருப்புப் பொறிகள் சிதறும்படியாக வந்து தேவேந்திரனைக்கண்டு சினந்துசொல்லுகிறான்

ஓஇந்திரனே! அதிதியினுடைய புத்திரன்நீ வினதையினுடைய புத்திரன்நான் நம்மிருவருக்குந்தந்தையானவர் கசியபப்பிர்மா. நாமிருவரும் அண்ணனுந் தம்பியுமா யிருக்கின்றோம். உனக்குவந்த நன்மை தீமை என்னுடையது. எனக்குவந்தநன்மை தீமைஉன்னுடையது இவைகளை எல்லாம்பாராட்டி அநேகங் கோடி ராட்சதரைக்கொன்று உன்பகை யெல்லாம் போக்கினேன். உனக்குச்சவுக்கிய முண்டாக்கினேன் அண்டாண்ட பகிரண்டங்களையும் கர்ப்பத்தில் வைத்திருக்கும் லோகநாயகராகிய தேவநாயகனை என்தோளிற்சுமக்கும் பராக்கிரமத்தை உடையவனாக இருக்கின்றேன்.இப்பேர்ப்பட்ட யென்னுறவைவிரும்பாமல் என்னையும் என்தாயையும் அடிமையாக்கிக் கொண்டுவருந்திய என்பகைவரினமாகிய பாம்புக்குமிகுந்த உதவியைச்செய்து, தீர்க்காயுசு வாங்கிக்கொடுத்தாயென்று கேள்விப்பட்டு வந்தேன் ஆனதினால் உன்னை என்சிறகினாலடித்துப் பிடித்துப், பிலத்துவாரத்திற் கொண்டுபோய்ப் போட்டுவிடுகிறேனென்றுசீறியெழும்பும்படியாகிய கருடனைப்பார்த்து, ஐயா! நானொன்றுஞ் சகாயம்பண்ணவில்லை. தேவாதி தேவராகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இவிடம்வந்திருந்தார். அவரைக்கண்டு வணங்கிக் கேட்டுக்கொண்ட நாகத்திற்கு அந்த ஆதிமத்தியாந்தரகிதனே அருள் புரிந்தாரென்று இந்திரன் சொல்லக்கேட்டு, அப்படியா நல்லதாகட்டுமென்று வைகுந்தத்திற்குப்போய்,லக்ஷ்மிநாராயணனைக்கண்டு வணங்காமனின்று, இன்று தேவரீர் நாககுமாரனுக்குத் தீர்க்காயுசுகொடுத்ததாய்க் கேள்விப்பட்டேன். அவன் எனக்கு நெடுநாட் பகையாயிருக்க, உமக்குநான் அடிமையாயிருக்க, என்சத்துருவுக்கு அருள்செய்த காரணமென்னவென்று முடுக்ககாகக்கேட்க, விஷ்ணு நகைத்துச் சொல்லுகின்றார்.

ஓகருடனே! நம்மைநாககுமாரன் இரந்துவேண்டினான். ஆதலால் அவன்மீது கடாட்சம்வைத்து அனுக்கிரகஞ்செய்தோமென்றுசாந்தமாகச்சொல்லவும் கருடன்கேளாமற் கோபித்துக்கொள்ளுவதை நோக்கி, இந்தக்கருடன் கர்வங்கொண் டிருக்கின்றானானதையால், அதையடக்க வேண்டுமென்று திருவுளங்கொண்டு, ஓகருடராஜனே! நீசொல்லுகின்றது ஞாயமே. ஆனால் அந்தநாககுமாரன் என்னைவணங்கிப்பணிந்து வருந்தியதால் நான்மனமிரக்கம்வைத்தேன். எப்போதும் எனக்குரியபக்தனாகியஉனக்குஉதவிசெய்யாமல் உன்பகையாளிக்கு வரமளித்தது தப்பிதமே. ஆனால் அவனிருக்கும் நாகலோகத்திற்குப்போய், அவனுக்குக்கொடுத்த வரங்களைத் திருப்பிவிடுவோம் வருகிறையாவென்று திருமால் அழைக்க, வருகிறேனென்று வந்துபணிந்த கருடன்மீது சருணையுடையவர் போற்காட்டி, என்னுடைய இரதத்தைக்கோண்டுவாச்சொல்லும் என்றுசொல்லக்கேட்டுப்பதைபதைத்து சுவாமி! என்தோளின்பேரில் எருந்தருளுமென்று மண்டியிட்டுப்புயங்கொடுக்க, மகாவிஷ்ணுவானவர்தமது திருவடியை ஒருதோளினிடத்தில்நாட்டவே, என்புகளெல்லாம் நெக்குவிட்டொடிந்து களைத்துபூமியில் மூற்சையாய்விழுந்து சோர்ந்த புள்ளரசை நோக்கி, ஏனப்பாவென்று இருகரத்தாலுந் தழுவியெடுத்து நிறுத்தியபோது, கண்ணீர் சோரவிட்டுப் புண்ணியனே! தேவரீருடைய எண்ணந் தெரியாமலினைத்தேன்

தேவரைத் துதிக்கத்தக்க எறும்புகடை யானை முதலிய எல்லோரும் பரமபாகவதரென்று இன்றுகண்டு கொண்டேன். விவேகசூனியத்தால் வெகுளியுற்றவென்னையும் நாகராஜனைப்போல் இரட்சித்தருள வேண்டியதென்று முறையிடவும், திருவடியைச் சிரத்தினுறுத்திய பக்தவச்சலனாகிய பரந்தாமன் கருடன்மீது கடாட்சம்வைத்து, எப்போதும்போலச் சகலபலங்களுமுண்டாகச்செய்து, சிறியதிருவடியென்று திவ்யநாமஞ்சூட்டி, வாகனமுங்கொடியுமாகக்கொண்டுரட்சித்தார். அந்தவிஷ்ணுவேஇந்தக்கிருஷ்ணமூர்த்தியாகவந்து அவதரித்தவர். கேளுந்துரியோதனா! ஆணவத்தாற் பெரியோர் வார்த்தையைத் தள்ளிநடந்து அவமானம் அடையத்தக்கவர்கள் அநேகம்பேருண்டு ஆகையால் நண்பராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரும் அன்பராகிய மற்றயாவரும் நாங்களாகிய மூவருஞ்சொல்லும் வார்த்தையைக்கேட்டு நடந்துவையாகில், புகழ்ச்சியும் மகிழ்ச்சியுமுண்டு. இல்லாவிட்டால் நெகிழ்ச்சியும் இகழ்ச்சியுமுண்டு. கடைசியில்உயிருமிழந்துபோகும்படியாகும். உத்தமனே!(சிரிக்கச்சொல்பவர்தீயர் அழச்சொல்பவர்அன்பர்) எனனும்பழமொழி அறியாயா? என்று கண்ணுவர்சொல்லி முடித்தவுடன் நாரதமகாமுனிவரானவர் நந்தியாவட்ட மாலையனைப்பார்த்துச் சொல்லுவதானார்.

நாரதமுனிவர் காலவமுனி சரித்திர முரைத்தல்.

அரசனே! இவ்வுலகத்திற் பூர்வஞ்செய்தபுண்ணியபாவபலத்தினால்ஏதுமில்லாதவர்கள்இறைவராவார்கள். எல்லாமுடையவர்கள் புல்லராவார்கள். சகலபலமுடைய வீரர்கள் அபலரிடத்தில் அகப்பட்டழிவார்கள். அபலர்சகலபலமுடைய வீரராகின்றார்கள். கீழ்மேலாம். மேல்கீழாம், நாடுகாடாம். காடுநாடாம், ஓடம்வண்டியாம். வண்டிஓடமாம். ஒருவருக்கும்ஒன்றும் சொந்தமில்லை ஆகையால் நமக்கே பலமிருக்கின்றது நாமேசெயிப்போமென்று நினைத்து அகந்தைகொண்டு, பெரியோருரைத்த மொழியை அலக்ஷியஞ் செய்வையாகில், ஒருநாளைக்கும் உருப்படப்போகிறதில்லை உத்தமனே! பதினாலுலகுந் துதிக்கும் பாட்டனாகிய வீஷ்மர் துரோணர் விதுரர்முதலிய பேர்களும், உன்னிடத்தில்வைத்தவிசுவாசத்தால் இவ்வளவுதூரந்தழுவிச் சொல்லுகின்றார்கள் அவர்களைப் பற்றி நாங்களும் ஆசையாகச்சொல்லுகின்றோம். இவைகளெல்லாந்தள்ளி உன்னிஷ்டப்படி நடப்பையாகில் உனக்குச் சுகம்வரப்போகிறதே இல்லை அல்லலில்மூழ்கி அவஸ்தைப்படுவாய். அதற்கொரு கதைசொல்லுகிறேன்கேள் ஓஅரவக்கொடியோனே! சூரியகுலதிலகனாகிய காதிமகாராஜாவின் குமாரன் விசுவாமித்திரரிடத்தில் காலவரென்னும் பிரமசாரியானவர் வேதப்பாட முதலிய வித்தையெல்லாங் கற்று, அவ்வித்தையை விற்று, மகாரிஷியென்று யாவரும்வணங்க வாழுநாளிலொருநாள் ஆசாரியரைவணங்கி விடைபெற்றுக்கொள்ள விசுவாமித்திரர் மனமகிழ்ந்து, குழந்தாய்! ஐயந்திரிபில்லாமல் அறியவேண்டியவைகளையெல்லாம அறிந்துகொண்டையாவென்று கேட்கத், தேவரீருடைய அடியிணையருளால் யாவுமுணர்ந்தேனென்றுகாலவர்சொல்லகௌசிகர்கேட்டுக்கண்களிகூர்ந்துபோய்வாருமென்றுவிடைகொடுக்க அவர்குருவைப்பணிந்துசுவாமி! குருதக்ஷிணை கொடுத்துப்போவது உத்தமம். இல்லாவிட்டால் என்னுடையமனம் மெத்தவருந்தும். ஆகையால் சுவாமிகள் தடைசொல்லாமல் தங்களுக்குச் சம்மதமானதை அடியேனுக்குக் கட்டளையிட வேண்டுமென்றுகேட்க, அதைக்கேட்டு விஸ்வாமித்திரர்சொல்லுகின்றார்.

ஓ காலவரே! உமது வணக்கமும்-ஒழுக்கமும்-அடக்கமும்-ஒடுக்கமும்-சாந்தமும்-அன்பும்- எனக்குப் போதுமான குருதக்ஷிணையாயிருக்க, வேறேதக்ஷிணையென்பதுமுண்டோ? நீரும் நாமும்இரண்டோ? ஒன்றேயன்றிவேறல்லவே நீர்சும்மா தபசுசெய்யப் போமென்று கௌசிகர்சொல்ல, அதைக்கேட்ட காலவர் கோபங்கொண்டு,நானென்னஎளியவனா? கையிலாகாதவனா? குருதக்ஷிணை கொடுக்காதபாவியருடையநரகத்திற் கேதுவாகும்படியாய்ச் செய்கின்றீர்கள். அப்படிக்குவேண்டாம். நீர்குருதக்ஷிணை வாங்கிக் கொள்ளும்படியாய்க் கேளும் நான்கொடுத்துவிட்டுப்போகிறேனென்றுசொல்லஇந்தவார்த்தையால்விசுவாமித்திரருக்குக் கோபம்வந்து, நான்சொல்லுகின்ற வர்னமும் நல்லசாதியுமுள்ளதாய் எண்ணூறுகுதிரைகுருதக்ஷிணையாகக்கொடுவென்று சொல்ல. நல்லதாகட்டும். அதினுடையநிறமும்சாதியும் எப்பேர்ப்பட்டதோ அதனைச்சொல்லுமென்று காலவர்கேட்க விசுவாமித்திரர் அவரைநோக்கி பாலினுஞ்சிறந்த வெள்ளையும் நீலநிறமுடையகாதும், அசுவசாஸ்திரத்தின்படி சுழிசுத்தசுபலட்சணமும், வாயுவேக மனோவேகத்திலும்மேலாகியகதியை யுடைத்தாயிருக்க வேண்டியதென்றுவிளம்ப, அப்படியேகொண்டு வருகிறேனென்றுமண்டலவிண்டலமெல்லாம் எண்டிசைகளுமோடித் தேடிவருகையில், எவ்விடத்திலுங் காணப்படாமையால் வாடிவிசாரமடைந்து, போசனமில்லாமற் பிரயாசமுற்றுவருந்தி,(ஐங்காதம்போனாலும்அறிமுகம்வேண்டும்.) என்பார்களே, அதுபோல இவ்விடத்தில் ஆரையுங்காணோமே. ஓதெய்வமேயென்று கூவியபோது, ஒருமலையினிடத்திலிருந்த பூர்வசிநேகிதனாகிய கருடபகவான்வந்து, நீர்ஆரையா இவ்விடத்தில்வருந்தியிருக்கின்றீரென்றுகேட்க, நான்காலவனென்றுசொல்லக்கேட்டு ஓடிவந்து, இளைப்பாற்றித் தழுவிக்கொண்டு என்னகாரியம் என்னுடைய அன்பரேயென்று கேட்க, ஒருவர்க் கொருவர் தழுவிக்கொண்டு பழமைபாராட்டித் தான்வந்த குருதட்சணையின் சங்கதியை

விளம்ப, அதை அந்தக்கருடன் கேட்டுத் தலைநடுக்குற்று, நானும் ஒருநாள் பகவானுடைய வார்த்தையை இரட்டித்தபோது, அவரது பெருமையைக் காட்டப்பயந்து வணங்கிப் புத்திபெற்றுக் கொண்டேன். அப்படியே நீரும் வருத்தம் வைத்துக்கொண்டீர். எப்போதும் உரியோராகிய பெரியோர்களின் வார்த்தையைக் கேளாமல் தடுத்து வந்தபாவம் இப்போது நீர் அனுபவிக்கின்றீரென்று இடருழ்ந்து, சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தில் அவ்விதக் குதிரைகளில்லையென்று சொல்லி, தெய்வலோகம்போய்ப் பார்த்துவருவோம் வாருமென்று அக்காலவரைத் தன்சிறகின்மேலேற்றிக்கொண்டு கேசரிமார்க்கமாகப்போகையில், காற்றின் வலுவினாலும் சூரியகிரணவெப்பத்தினாலும் மூர்ச்சையடைந்துசோர்ந்து சமுத்திரத்தில் வீழவும், அதைக் கண்டகருடன் தனதுகாலினால் உருப்ஞ்சியெடுத்துக் கொண்டுபோய்க் கந்தமாதனபர்வதத்தில் விட்டுத்திகிலையும்பயத்தையும் தெளிவிக்க, மூர்ச்சைதெளிந்தெழுந்த காவலரைநோக்கிப் போவோம் வாருமென்று புள்ளிறை அழைக்க, நான் குருவுக்குப் பொய்த்தாலும் குறைந்து இளைத்தாலும் ஆகாயத்துவழி எங்களப்பாணை வரமாட்டேனென்று சொல்ல, அப்பால் இருவரும் பூமியிலிறங்கிவந்து குதிரையைக்குறித்துச் சகலதீவுகளிலுந் தேடித்திரிகையில், ஓ துரியோதன ராஜனே! உங்கள் பிதாமகனாகிய யயாதிமகாராஜன் இந்த அஸ்தினாபுரத்தைப் பரிபாலனம்பண்ணிக்கொண்டு வருநாளையில், காலவரிஷியும் கருடபகவானும் அவரிடத்திற்குவந்து கண்டார்கள். உடனே அவர்களுக்குவந்தனை வழிபாடுகள்செய்து, இவ்விடத்திற்கு நீங்கள்வந்தகாரியமென்னவென்றுகேட்க, குருதக்ஷிணைக்காக சுபலக்ஷணமுள்ள எண்ணூறு குதிரைகள் சம்பாதிக்கும்படி வந்தோம். எங்குந்தேடி இளைத்தோம். எங்கள்களையைத்தீர்க்கும் உத்தமகுணமுள்ள உம்மிடத்தில் வந்தோமென்று சொல்லிய வாக்கியத்தைக்கேட்டு, யயாதிராஜன் துடிதுடித்துப்பதைபதைத்து, என்னிடத்தில் லக்ஷங்குதிரைகளிருக்கின்றன ஆனால் நீங்கள்தேடிவந்த லக்ஷணமுடையதல்ல. நானென்னசெய்வேன். ஒருவருடையகாரியங்களைநிறைவேற்றுஞ் சக்தியையுடையவனெவனோ, அவன்வந்தவர்களின் சங்கதியைவிசாரிக்கவேண்டும். அதைநிறைவேற்ற மாட்டாதவன் சங்கதிகேட்காமல் உபசரித்தனுப்பிவிட வேண்டுமென்று பெரியோர் நூல்வழிகளாற்கூறியிருந்தும், நான்பாபத்திற் குள்ளானேன் போகட்டும்ஐயா! மகம்மேருவைக்கேட்டவர்களுக்கு அந்தயினமாக அணுவாகிலும்கொடுத்தனுப்பவேண்டுமென்றிருப்பதால், குதிரையுங் குணமுள்ள ஸ்திரீயுஞ்சரியென்று தருமசாஸ்திரத்திற்சொல்லியிருக்கின்றது. ஆகையால், என்னிடத்தில்வந்து உங்கள்குறையைச்சொல்லி மனக்குறைவுடன்போகாமல், நிறைவாகிய சந்தோஷமனத்துடன் என்பெண்ணாகிய மாதவியென்னுங் கன்னிகையைத் தத்தப்பண்ணித் தருகிறேன் வாங்கிக்கொள் வேண்டுங்காலவரென்னும்மகானுபாவரேயென்று வணங்க அப்போதுகாலவர் சொல்லுகிறார்.

கேளும் ஓமகாராஜனே! குதிரைகளுக்காக நாடு காடுமேடெல்லாம் தேடிவாடி வரும்படியாகிய நான் அப்பெண்ணை எங்கே யிழுத்துக்கொண்டு திரிவேன். எனக்கு வேண்டாமென்று பிணங்கக் கருடபகவான் இணங்கும்படியாகப்பேசி, யயாதியின்மனதிற்குச்சந்தோஷம் வரும்படியாகச்செய்ய, உடனேஅந்த மாதவியென்னும்பெண்ணைக்காலவருக்குக் கன்னிகாதானமாகச்செய்து, போசனங்கொடுத்து நமஸ்கரித்து அனுப்பிவிட, உடனேகாலவரும் கருடனும்அந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டு, இவர்கள்மூன்றுபெரும் வையகமெல்லாம் ஐயமறத்திரிந்துதேடிவரும்போது அயோத்திமா நகரத்தையாளும் இட்சுவாகு மகாராஜாவினிடத்தில் இருநூறு குதிரைகளிருக்கக் கண்டு, நாமெப்படிபோய்க் கேட்கிறது? அந்தராஜன்பிராணபதமாய் வைத்திருக்கின்றானே, அதுநமக்கு எப்படி கிடைக்குமென்று ஆலோசித்துஎங்கும்போது, காலவருடையஸ்திரீயாகிய மாதவிசொல்லுகின்றாள். மகாரிஷியாகிய என்கணவனே! என்னுடையபால்யதசையில் ஒருபெரியவருக்குப் பணிவிடைசெய்துஒருமந்திரம்பெற்றிருக்கின்றேன் அதனுடையபலனென்னவென்றால நாயகனனுமதியிற் பிறரைப்புணர்ந்து பிள்ளைகளைப்பெற்று மறுபடியும்கன்னிகையாகிநிர்த்தோஷமுள்ள கற்புடைமனைவியாய்க் கணவனைச் சேரும்படி ஆசீர்வதித்திருக்கின்றார். ஆகையால்இந்தஅயோத்தியையாளும் இட்சுவாகுமகாராசன் தனக்குப்பிள்ளையில்லாமல்வருந்துகின்றானாம் அவனைத்தேவரீர்கண்டு பேசி, ஒருபிள்ளைபிறந்தால் லக்ஷணமுள்ள அந்தஇருநூறுகுதிரை கொடுக்கவேண்டுமென்றுசொல்லுறுதிபெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவைத்துஅவ்வாறு நடந்தபின்பு, குதிரைகளைவாங்கிக் கொள்ளுமென்று தேவிசொல்லக்கேட்டு, இருவருஞ்சிந்தைமகிழ்ந்துசம்மதித்து, இட்சுவாகுவினிடத்திற்போய் பேசிக்கொண்டு, யயாதிமகளாகிய மாதவியை அனுப்பிவைத்தார்கள் அவளிடத்தில் இக்ஷுவாகுகூடிப், பட்டத்துக்கு, ஒருபிள்ளை வசுமகாராஜனென்பவனைப் பெற்றுக்கொண்டு, இருநூறுகுதிரைகளையும் மாதவியையுங்கொடுத்து வணங்கினான். அப்பால்இந்த மாதவியானவள் முன்போற் கன்னிகையாய்க் காலவரைச் சேர்ந்து கலந்திருந்தாள். இதைக்கண்ட கருடனானவன் குதிரைதேடிக்கொடுக்குங் குளிகையுமக்குக் கிடைத்தபடியால், இந்தஉபாயப்படிக்கு மற்றை அறுநூறுகுதிரைகளுந் தேடிக்கொள்ளுமென்று செலவுபெற்றுக்கொண்டு, தன்னுடைய யதாஸ்தானத்திற்குப்போய்விட்டான்!

இவ்விடத்திற் காலவரும்மாதவியும் குதிரைகளைச் சம்பாதிக்கும்படி இராச்சியங்களிற் றிரியும்போது கங்கைநதிதீரமுள்ள காசிமா நகரத்தில் அரசாக்ஷி

செய்யும் தியோதரனென்னும் ராஜனிடத்தில் இதே மாதிரியாக இருநூறு குதிரையிருக்குதென்று கேள்விப்பட்டு அவரிடத்திற் பேசியபோது, எனக்கொரு பிள்ளைவேண்டும் தேவரீர் அருள்செய்தால் இருநூறு குதிரைகளையுங்கொடுத்து விடுகிறேன். அல்லாமலும் என்னுடைய பாக்கியமெல்லாந் தருகிறேனென்று சொல்லக்கேட்டு மகிழ்ந்து, மனைவியாகியமாதவியை விட்டு, ஒருபுத்திரன் பிறந்தபிற்பாடு மேற்கூறியஇருநூறு குதிரைகளையும் பெற்றுக்கொண்டார். மறுபடியும் மாதவி மகாபதிவிரதையாகிய கன்னிகைப்பருவம்பெற்று, நாயகனுந்தானும் இன்னும் நானூறுகுதிரைகள்வேண்டுமே இனியெங்கே அகப்படுமென்றுஅப்பால் நாடிப்போகையில, போஜராஜனுடைய சமுகத்திற்குப்போனார்கள். அவரிடத்திலும் இருநூறுகுதிரைகளிருக்ககண்டு, பிள்ளையில்லாமல்மனவருத்தப்படுந் தன்மையையுணர்ந்து, மாதவியை அவரிடத்தில் விடுத்து, சிபிக்கிர்த்தி வந்தனென்னும் ஒருபிள்ளையை பெற்றளித்துப் பழையபடி கன்னிகையாய்இருநூறு குதிரைகளையும் பெற்றுக்கொண்டு, ஆக அறுநூறு அசுவங்களுடன் வரும்போது, இன்னும் இருநூறு அசுவம்வேண்டுமே மாதவி! இனிநானென்ன செய்வேன்? என்காலமெல்லாம் குதிரை தேடுவதிலேயே போய்விட்டது. நான் பார்க்காதலோகமில்லை. எவ்விடத்திலும் இனிமேல் இத்தன்மைவாய்ந்த குதிரைகளில்லை. மேல்நடக்கவேண்டியதென்னவென்று நாயகன் நாயகியுடன் யோசிக்கும்போது,பழையசிநேகிதனாகிய கருடபகவான்வந்துகலந்துகொண்டான் அவனைக்கண்டு சங்கதியெல்லாம் சொல்லி, இன்னும் இருநூறுகுதிரைகள் வேண்டுமென்றார். அதைக்கருடன் கேட்டு, ஓய்காலவரே! நீர் பூலோகமெல்லாம் தேடித் திரிந்தீர். நான் மேலோகமெல்லாம் ஆராய்ந்துவிட்டேன். நாம்தேடிவந்த குதிரைகள் நாகலோகத்திலுமில்லை. ஆகையால் இப்போது அகப்பட்டஅறுநூறு குதிரைகளையும் ஓட்டிக்கொண்டுபோய் விசுவாமித்திரரிடத்தில்விட்டுநமஸ்கரித்துக்கொண்டால்,இன்னும் இருநூறு குதிரையெங்கேயென்று கேட்டால். அப்போதுவணங்கி, சுவாமிகளே ஒவ்வொரு பிள்ளைக்கு இருநூறுகுதிரை வாங்கினோமென்று உண்மையாய்ப் பேசி,அந்தத்தன்மையின்படிக்குத்தேவரீருக்கும்பிள்ளை இல்லாமையினால் இந்தமாதவியுடன்கூடி ஒருபுத்திரனைப் பெற்றுக்கொள்ளும். உமக்கும் புத்திரனுண்டாகின்றான். எனக்கும் எண்ணூறுகுதிரை கணக்குச் சரிப்படும் என்றுசொல்லி, குருதக்ஷிணையைச் சரிப்படுத்திவிட்டு, உமதுமனையாளுடன் தவத்தைச்செய்து வாழுமென்று கட்டியணைத்துக் கொண்டு சிநேகனை விட்டுநீங்கிக் கருடபகவான் போய்விட்டான்.

அப்படியே காலவரும் மாதவியும் அறுநூறு குதிரைகளையும் ஓட்டிக்கொண்டு, விசுவாமித்திரரிடத்திற்சென்று சாஷ்டாங்க தெண்டனிட்டு, நடந்த வர்த்தமானங்களையெல்லாஞ்சொல்லி, அறுநூறுகுதிரைகளையும் ஒப்பிவைத்து, மற்றஇருநூறுகுதிரைகளுக்கும்வகைமானஞ்சொல்ல, அந்தப்படிக்குவிசுவாமித்திரர் ஒப்புக்கொண்டு. மாதவியுடன்கலந்து ஒருபிள்ளையைப் பெற்றுக்கொண்டு, அந்தப்பிள்ளைக்குஅஷ்டகனென்றுபெயருமிட்டு, மாதவியையுங்காலவரையும்வாழ்த்தி ஆசிர்வதித்து, அப்பாகாலவனே! குருதக்ஷிணை வேண்டாமென்றுசொன்ன எனக்குக்கோபம் வரும்படியாய்ப்பேசி இவ்வளவுவருத்தம் அடைந்தாய். ஆதலால், இனிமேல் பெரியோர்களின் வார்த்தைக்கு மீறிப்பேசவேண்டாம். இன்றுமுதற் சிவத்தைப்பேணித் தவத்திலிருந்து பவத்தையொழித்து நலத்தைப்பெறுவாயென்றுவிடைகொடுக்க,ஆசாரியரிடத்தில் ஆசிர்வசனம்பெற்றுத், தாமும்தமதுபதிநியாகிய மாதவியும் அருமையாகியதவத்தில் அமர்ந்தார்கள். ஆகையால்,துரியோதனா! பெரியோர்கள்பேச்சைக்கேளாத பேதையர்கள் பேய்போல் விழித்து நாய்போற்பாடுபட்ட அநுபோகத்தைச் சொன்னோம். இதுகளையாகிலுந் தெளிந்துயோசித்துச்சுகப்படலாம் மேலும், சந்திரவம்சதிலகனாகிய உங்கள்பிதாமகன் யயாதியானவர், தன்னிடத்துவந்த அவர்களை நோக்கி, எங்குவந்தீர்களென்றுகேட்டதோஷம் இல்லையென்று சொல்லமாட்டாமல் தன்பெண்ணைக்கொடுத்தார். அந்தப்பெண்ணினாற் குதிரைகளும் கிடைத்தன. குமாரர்களும்உண்டாய்க் குருதக்ஷிணையுங் கூடியது. காலவரென்னும் மகாமுனியையும் உங்கள்பாட்டனையும் ஜெகமெல்லாங் கொண்டாடினார்கள்.இன்னமும் புகழ்கின்றார்கள். பெரியோரைப்பூசிக்கும் யயாதிராஜனுக்குப் பேரனாகிய நீர், இத்தனை உரியபெரியோர் சொல்லியும் நாடுகொடுப்பதில்லையென்றால்,உமக்குப்பேரும்புகழும்பெருமையும்எப்படிவரும்? பலவந்தருடன்பகைத்தால் பவுஷ்யம்போம்.ஐயம்வராது பெரியோர்வார்த்தையைப் பூசித்துக் கேட்பையாகிற் சுகப்படுவாய் துரியோதனாவென்று நாரதமுனிவர் சொன்னார்.

இப்படியாகச்சொல்லிவந்த ரிஷிகள் மூவரையுந் துரியோதனன்நோக்கி, கண்பொறிபறக்கக் கடுகடுத்து வெகுளிமேற்கொண்டு,ஓபெரியவாள்களே! கேளுங்கள். கிருஷ்ணன் கட்டிக்கொண்டுவந்தகட்டுகளெல்லாம் என்சமுகத்தில் சபைக்கட்டாக முடிந்ததேயல்லதுவேறல்ல அஃதிருக்கட்டும்இவ்வுலகத்தில்எவரேனுந் தங்கட்கு நேரிட்ட ஊழ்வினையைத் தன்னறிவு கொண்டு தள்ளிக்கொண்டவர்களுமுண்டோ? நீங்கள் கண்டிருக்கின்றீர்களோ? அப்படியுண்டானால் ஒருவரைக்காட்டுங்கள். இப்போது இருக்கிறபுத்தியைவிட வேறுபுத்தி யேறப்போகிறதுமில்லை. இதுமாறப்போகிறதுமில்லை வீணாகக்கிருஷ்ணன்பேச்சை கேட்டுவந்தசோஷைபோனீர்கள். ஐயோபாவம்! எங்களுக்குப் புத்தியில்லையோ பத்திமான்களே? தயைசெய்து புத்

திசொல்ல நீங்கள்மூவரும் வாங்களென்று உங்களை நாங்கள் வரிசைசெய்துவரவழைக்கவில்லையே அன்றெழுதிய அயன் அழித்தெழுதப்போகிறதில்லையென்று பெண்டுகள்சொல்லும்பழமொழியை நீங்கள் அறியாமல் வழுவித்தெரியாதவர்களானீர்களே, ஐஐயோ!! ஏன்இவ்வளவுபிரயாசையெடுத்துக்கொண்டீர்கள், ஈதெல்லாம் வீணாகியகொள்ளையே. நீங்கள் சொல்வது மிகவுமசள்ளையே. வீணாகப்பேசிய வெள்ளைவாய்க்கு வெற்றிலையுமில்லையேசுவாமிகளே! எங்களை ஏமாற்றிநாட்டைப்பறித்துக் காட்டிலுழன்ற பாண்டவருக்குக் கொடுக்க ஸ்ரீகிருஷ்ணதேவர் இருக்கின்றார். உலகத்தை ஆளுகிறதற்குப் பாண்டவர்கள்இருக்கின்றார்கள் உயிருடன்கொடுப்பதற்கு நானிருக்கின்றேன். உங்களுக்கென்னவந்தது? (எள்ளுதான் எண்ணெய்க்குலருகின்றது எலிப்புழுக்கையுமேன்உலருகிறது) என்னும் வசனத்தைப்போல் தாங்கள் நித்தியவிதி-சத்தியசவுசம்-ஆசாரம்-பூசை-செபம்-தபம்-இவைகளைவிட்டு, இவருடன் ஏன்இப்படித் திரிந்து வருந்திக் காலத்தை வீணிற்கழிக்கின்றீர்கள். வேண்டாம்பெரியோர்களே நீங்கள் தவஞ்செய்யும்இடத்திற்கு இப்பொழுதே தயவுசெய்து எழுந்தருளுங்கள். நீங்கள்யிருக்கும்இடத்திற்கு வேறுஆள் சம்பாதிக்கிறேனென்று துரியோதனன் தூறிச்சொல்ல,இதைக்கேட்ட மூன்றுரிஷிகளும் திடுக்கென்று சிங்காசனத்தைவிட்டெழுந்து, மிகுந்த கோபங்கொண்டு, முகஞ்சுளித்துக் கண்கள் சிவக்கப் பார்த்தார்கள்.

கிருஷ்ணன் கையேந்தி நின்று இரத்தல்.

அச்சமயத்தில் வீஷ்மாச்சாரியர் திடுக்கென்றெழுந்து, தீர்க்கதண்டஞ்சமர்ப்பித்து, ஓமகத்துக்களே இவனேசிறுபிள்ளை. தங்களுடையசொரூப சுவானுபவங்கள் இப்பேர்ப்பட்டதென்றுஇதுவரையிலும் அறியாதவன். ஏதோஎங்கள் தலையிலெழுத்து நாங்களனுபவிக்கிறோம். தங்களுக்கென்னவந்தது? இவ்வளவுதூரம் புத்திமதிசொல்லியும் வசத்திற்குவராத இவனால் இந்தக் குடும்பமெல்லாம் குன்றிப்போகக் காலம்வந்திருக்கின்றது அப்படியிருக்கத் தாங்கள் கோபங்கொண்டதை விடுத்துச் சாந்தமூர்த்திகளாய் இதை பொருவிஷயமாகச் சித்தத்தில்வையாமல்,எங்கள்நிமித்தத்தில் க்ஷமிக்கவேண்டுமென்று நயமதுரவசனஉபசாரங்களாற் சொல்லிப்பணிய, சான்றோர்சினமாகையால் உடனேகோபமாறி, ஆசனத்தில்அமர்ந்தார்கள் அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் மறுபடியும் வணங்காமுடிபெற்ற மன்னனைநோக்கி, வாரும் துரியோதன மகாராஜனே! பூமியிலே நற்குணங்களும்நற்செய்கைகளும்-நன்னடக்கைகளும்-சத்தியவசனமும்-தருமசிந்தையும் வகித்துத், தன்னுயிரைப்போல் மன்னுயிரைக்காக்கும் ஒருராஜனும், துர்க்குணமும்-துர்ச்செய்கையும்-துராச்சாரமும்-துர்த்தகுணமும் -அதருமமும்-அசத்தியமும்வகித்து, எமனைப்போல மன்னுயிரைவாட்டும்ஒருஅரசனும், ஒருவருக்கொருவர்சண்டைகள்நேரிட்டுப் போர்க்களத்தில்வந்து யுத்தஞ்செய்வார்களாகில், தருமகுணமும் நித்தியசத்திய வசனமுடைய அரசனுக்கு மகாவிஷ்ணுவின் சகாயமும் வீரலக்ஷுமிகடாக்ஷமும் உண்டாய் ஜயத்தைப் பெற்றுத் தரணியை ஆளுவான். மாளுங்காலத்தில் வீரசொர்க்கமும்பெறுவான். அதருமகுணமும் அசத்தியவசனமுமுடைய அரசனை அரிவாசுதேவனுடைய அருள்கிஞ்சித்துமில்லாமல், வீரலக்ஷுமியின் விஜயமுங்கெட்டு அவமானப்பட்டு, அபஜயமுற்று, அரசாக்ஷியை இழந்துமாள்வான் மீளாநரகத்திலுமுறுவான். இதுமுன்னோர்மொழிந்த நீதிசாஸ்திரங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் சொல்லிஇருக்கின்றது. நீரும் தெரிந்திருக்கின்றீர். ஆகையினால் எத்தனைவிதபலமும்நலமும் உமக்கிருந்தாலும் பாண்டவர்களுக்கு நீர்சமமாகப் போகிறதில்லை. உம்மைச்சார்ந்த நால்வகைச் சேனைகளையும் இராக்கதர்களையும் படைத்துணையாகவந்திருக்கும் பார்த்திபர்களையும் போர்க்களத்தில் மாளச்செய்து, பூமியைப் பெறுவோமென்னும் பூரிப்புபாண்டவர்களிடத்திலில்லை. ஒருவேளை சபையிற் சபதங்கூறியிருக்கின்றார்களென்று நினைப்பீராகில், உடனேசமாதானப் படுத்துவதற்கு நாங்களெல்லாரு மிருக்கின்றோம். சூதாடிப் பறித்துக்கொண்ட நாட்டைசூக்ஷத்திற் கொடுத்துவிடுவதேயன்றி அதிகங்கொடுக்க வேண்டுவதில்லை. அப்படியல்லவென்றால் பெரியோர்கள் சொல்லும் தருமநீதியின்படி ஐந்தூரெனுங் கொடுப்பதுஉத்தமம். அதுவுங் கூடாதென்றால், உம்முடைய இஷ்டத்திற்குத் தோன்றியதெவ்வளவோ அவ்வளவு கொடுத்தாலும் அதுவும்நமக்குச்சம்மதமே. அரசனே நான்தூதுவந்து வீணாகவிளைந்ததல்லாமற் பிரையோசனமில்லையென்று எனக்கொரு பேச்சுவராமலும், பெரியோர்கள்சொல்லிய பேச்சைத்தள்ளினான் துரியோதனனென்று உமக்கொரு ஏச்சுவராமலும்உமது மனதுக்கிசைந்ததை தயவுசெய்யுமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இருகரத்தையும் நீட்டி இரப்போரைப்போல் கேட்க, அதற்கிசையாத துரியோதனன் சொல்லுகின்றான்.

கேட்டீர்களோ சபையிலிருப்பவர்களே! இவ்வுலகவழக்கம் எவர்களுக்குஎவர்களிடத்தில் இஷ்டம்பிறக்குதோ அவர்களைச் சாமர்த்தியரென்று தனக்குத் தானேபுகழ்ந்து மகிழ்ந்துகொள்வதுண்டு. அதுஇப்போது தெரியவந்தது. தருமமுள்ளவன் ஜயம்பெறுவானென்றும், அதருமமுள்ளவன் அபஜெயப்படுவானென்றும் அன்பினாற் சொல்பவர்களுடைய வாக்கியம் போர்முகத்திற் பார்க்கவேண்டும். ஒப்புண்ணியர்களே! போனதெல்லாம் போகட்டும் தர்மமுள்ள

பாண்டவர் ஜயித்தால் அவர்களே அரசாளட்டும். அதர்மமுள்ள நான்ஜயித்தால் நானே ஆளுகிறேன். இதைவிட மறுமொழிவேறொன்றுமில்லையென்று இறைவன்சொல்ல, அதைக்கிருஷ்ணமூர்த்திகேட்டு, தம்பி! யாவரேனும் வீணாச்சண்டைசெய்து விருதாவிற்சாவானோ னென்றுசொல்லி, மகாபலியினிடத்தில் மூன்றுலோகத்தையுந்தானம்வாங்கும்போதுஒருகரத்தை நீட்டிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, பாண்டவர்களுக்காக இந்த பஞ்சையோத்தபூமியை பெறுவதற்கு இரண்டுகரத்தையும்நீட்டி இரந்து, அப்பா! பெரியமனது செய்து நாஸ்தியென்றுரையாமல், ஜாஸ்தியாயுங்கொடாமல், முன்பாத்தியமாகிய நாட்டைமாத்திரம் பாலித்தருளுமென்ன, அதைத் துரியோதனன்கேட்டுக் கொடுக்கமாட்டேனென்ன, ஐந்தூராகிலும் தயவுசெய்யுமென்று எழுந்து இருகரத்தினாலும்இரக்க, அந்தத்துரியோதனன்கண்டு, அம்மணமானவனுக்கு அரைக்கிரை அகப்பட்டாற்போதாதா? ஐயா! கிலேகெட்டுகாடேகதியாகத்திரிந்த ஐவர்களுக்கு இவ்விடத்திலொரு வீடுகொடுத்தாலும் போதுமே. கண்டோங்கண்டோமென்று கண்களிலொத்திக் கொள்ளுவார்களே. அவர்களும் வேண்டாமென்று சொல்லப்போகிறதில்லையே. வேணுமென்கிற உன்எண்ணத்தின்படி நான் கொடுக்கப்போகிறதுமில்லையே. நீரேன் கையைநீட்டிக்கொண்டு காத்திருக்கின்றீர். அதற்கென்ன? காரியவாதிகையையுநீட்டுவான். காலிலும்வீழ்வான். ஏன்வீணாய் உடம்பைஒடித்துக்கொள்ளுகிறீர் போம்போமென்றுகடிந்துரையாடினான் துரியோதனன்.

அதை ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்டு நகைத்து, குழந்தாய்! உன்வமிசத்தில் தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்குப் பரிமளகந்தியை பாரியாளாக்க, அவளுடைய பிள்ளைகளிருவருக்கும்இராச்சியத்தைக்கொடுத்து, தான் வீஷ்மம் பெற்றுக்கொண்ட மேலோனாகிய உனதுபாட்டன் வீஷ்மாசாரியர் இதோஉயிருடனிருக்கிறார். இப்பேர்ப்பட்ட தருமமுள்ளகுலத்தினுதித்த சிரேஷ்டனே! சகலசொந்தமுள்ளசிறியதந்தையாகிய பாண்டுவின்பிள்ளைகளுக்குப் பாதிராச்சியமும் கொடுப்பதில்லையென்றும், ஐந்தூருங் கொடுப்பதில்லையென்றும், ஒரேஉறுதிபாகப் பேசினால் உனக்கிந்நாடும் இந்தஅரசும் நடக்கமாட்டாதே ஒருகுலத்திற்பிறந்த பிள்ளைகளிரண்டுபேரும் ஒத்துவாழ்வதே உத்தமம் ஒவ்வாமல் பேதப்படுத்திக்கொண்டு அனுபவிப்பதுமத்திமம். ஒருவர்பங்கை ஒருவர்பறித்துக்கொண்டு துன்மார்க்கவழியில் வார்த்தைநழுவிப் பேசுவது அதர்மம். ஒருபங்காளி சவுக்கியமடைய ஒருபங்காளி துன்பப்படுவது அதர்மாதர்மம் இப்பேர்ப்பட்ட அதிசயங்களையெல்லாங் கண்ணினாற்காணும்படி ஈசன் நம்மையேற்படுத்தி யிருக்கின்றானென்று விசனப்பட்டு, இதுதருமத்திற் கொவ்வாத்காரியமேயன்றி வேறல்லவென்று ஸ்ரீநாதன்சொல்லிச்சலித்துக்கொள்ள, அதற்குத் துரியோதனன் சொல்லுகின்றான். ஓகிருஷ்ணரே! எத்தனைதரம் சொன்னாலும்உலகாளும் அரசருடையமெலுக்குகளை அறிந்துகொள்ளுவதற்கு உமக்கு அறிவுபோதாது. நீரென்னசெய்வீர் பாவம். மாட்டுடன்பழகிய புத்திமான் மனிதருடன் பழகுவதுவநத்தம். இன்னும் பழகிக்கொண்டு வாரும் போமென்று துரியோதனன்சொல்ல, இந்தவார்த்தையைக்கேட்ட வீஷ்மர்-துரோணர்-கிருபர் - திரிதராட்டிரர்-முதலாகிய பெரியோர்களெல்லாரும் கடகடவென்று நடுங்கச் சொல்லுகின்றார்கள்.

ஓதுரியோதனா! இச்சகத்தையெல்லாம்படைக்குந்திருவுந்தியையுடைய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியேஸ்ரீகிருஷ்ணதேவராய்வந்து நமக்குத்தரிசனந்தந்து, இருகரத்தாலிரந்து நாடுகேட்க, நீகொடாதென்று கூறுவது ஞாயமன்று. முன்பின்யோசித்து விளையப்போகிறவினையையும் ஓராமல், எம்போலியர் சொல்லிய வார்த்தைகளையுங் கேளாமல், ஒரேபிடிவாதமாய் என்னண்டையிலிருக்கும் வீரர்களைக்கொண்டு சண்டைபண்ணிப்பாண்டவரை அண்டவொட்டாமற் ஜயித்து நாடாள்வேனென்று சொன்னத்தையே சொல்லுகின்றாய். அப்பால் உன்னிஷ்டப்படி நடவென்று எல்லோரும் மிகுந்தவிசாரங்களுடன் ஓவென்றுகூவி இரைந்தார்கள் இவையெல்லாம் அண்டையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த துச்சாதனனானவன் துரியோதனனை வணங்கி, அண்ணா! இந்தக்கிருஷ்ணன் இவிடம்வந்திருக்குந் தந்திரமும், வீணாய் நமதுபெரியோர்கள் அவரைக்கண்டு திகைத்துமயங்கி யெண்ணிக்கொண்டிருக்கிற மந்திரமும்பார்த்தால், துராக்கிர்தமாய் உமது கையைப்பிடித்துக் கிருஷ்ணன் கைமேல்வைத்து, நாடுகொடுத்தான் நாடுகொடுத்தானென்று கூவிக்கையறைந்து, பாண்டவர்களையும் அழைத்து உமதுகாலில் விழச்செய்து, எல்லோரும் ஒரேமுகமாயிருந்து ஐவராகிய இவர்களைக் காப்பாத்துமென்று சொல்லுதற்காக எண்ணங்கொண்டிருக்கிறார்களென்றுநான்நினைக்கிறேன் அப்பால் (இவ்வளவுபெரியவன் கையைப்பிடித்திழுத்தால்எப்படிமாட்டேனென்னுவேன்) என்பதுபோல்முடியும். ஆகையால் இந்தவம்பாகியசபையைவிட்டெழுந்து அரண்மனைக்குப்போவது நன்மார்க்கமென்றெண்ணுகிறேன். ஓஅண்ணா! தேவரீர் சித்தம் என்பாக்கியமென்று துச்சாதனன் சொல்லவே, தட்சணத்தில் துரியோதனன் எழுந்தான். உடனே கர்னன்-சகுனி-துசுவாசனன்-முதலிய தன்மனதொத்த அரசர்களெல்லாரும் சிங்காசனத்தை விட்டிறங்கிச் சபையைவிட்டுநீங்கி அவரவர்கள் விடுதிக்குப் போயினார்கள்.

இப்பால் கன்றால்கனியுதிர்த்த காசாம்பூவண்ணன் திரிதராட்டிரனைநோக்கிச் சொல்லுகின்றார். ஜெகப்தியாகிய தீரனேகேளும்! இந்தத் துரியோதனனுல் உலகமழிந்து தானுமழிந்து போவதல்லாமலும், ஒந்து புத்திரமித்திரர்களையுங் குடும்பத்தையுந்தினைத்

குந் துடைகாலனை நீர்சிரேஷ்ட புத்திரனென்று பட்சம்விடாமல் எண்ணியிருப்பது மகாபாவம். பூர்வத்தில் கம்சனென்னப்பட்ட எங்கள் நல்லம்மான் எவர்கள்சொன்னாலுங் கேளாமல், தன்னறிவு கொண்டும் நடவாமல், தங்கள் தாய்தகப்பனை ஒடுக்கி எங்கள் தாய்தகப்பனை விலங்கிட்டுச் சிறையில்வைத்து, வெகுவாகிய அக்கிரமங்களைசெய்துக்கொண்டுவந்தான். அதை அவனுடையதகப்பன் சம்மதிக்கமாட்டாமல் என்னையழைத்து, மனோபீஷ்டத்தை உண்மையாகச் சொன்னான். அதற்குவேண்டிய யுத்திகளைச்செய்து அவனை முடித்துவிட்டுக் குலத்தைப்பெருமைபடுத்திநலத்தை விளைத்தோம் இந்தகாரியம் உலகமெல்லாந்தெரியும் அப்படிபோல சொல்லுக்கடங்காத பிள்ளையைத்தக்கபடி செய்துப்போட்டு, பாசகர்மங்களைப் பரிகரிக்க வேண்டியதேசரி மேலும் தனதுசரீரத்தில் ஒருகட்டியாகிய ரணமெழுந்தபோதே அதைத்திரணமாயெண்ணி அறுத்தெறிந்தால், அதுஒருநாளுபத்திரவங்கொடுத்துப் பலநாளுஞ் சந்தோஷத்தைச் கொடுக்கும். அப்படிச் செய்யாவிட்டாற்பலநாளுந்துன்பப்படுத்தும் அதுபோல நூறுபிள்ளைகளில் இவனொருவன் குறைந்தால் உமக்குப்பெரிதலல. நீர்மோட்சவீடு பெறுவதற்குங் குறைவில்லை (பலதிட்டுக்கொருமுழுக்கு)என்பதுபோலும் (பலநாளையதுக்கம் ஒருநாளையில்விலக்கும்) என்பதுபோலும் செய்துவிடுவதே நல்லஉறுதியென்றுசொல்லி, ஐயோ! குலத்தினலமுங் குணமுங் கெட்டுதேயென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் விசனப்படுவதைப் பிறவியந்தகன்கேட்டு, மிகுந்த துக்கத்தோடு பொம்மலும்-விம்மலும்-பொருமலும் - செருமலும்-பெருமூச்சும்உடையவனாய்துக்கித்து,துரியோதனனை அழைத்துவாவென்று ஒருதூதனையனுப்ப, அப்படியே தூதுவன்போய்ச் சொல்லக்கேட்டு, நமதுதந்தை அழைக்கிறபடியால் நமதுகருத்துக்கு விரோதமிராதென்று அதிசீக்கிரத்தில் அரசர்கூடியிருக்குஞ் சபைக்கு அரவக்கொடியோன் வந்து சிங்காசனத்திலமர்ந்தான். உடனே திரிதராட்டிரன் தெரிந்துகொண்டு, துரியோதனனைநோக்கிச் சொல்லுகின்றான். அப்பா துரியோதனா! பெரியோரெல்லாரும் பேசிக்கொண்டிருக்கையில் நீபேசாமலெழுந்துபோய்விட்டாயேஇதுவோ பெரியதனம். காரியமில்லாத கடையனுஞ்செய்யமாட்டானே என்கண்ணே! வந்தவருக்குப் பூரணமாகிய உத்தரஞ்சொல்லி, எல்லோருக்குஞ் சம்மதியாகும்படி நடத்திப்போவது சபைக்கு நாயகனாயிருப்பவன். செய்யும்நலம். அதனால் நமதுகுலமும் வாழ்நாளுந்தழைக்கும். ஆகையால் இன்னம் உனக்குநன்மையாகியபுத்தி என்றைக்கு வருமோவென்று கண்ணீர்விடுத்த தந்தையை நோக்கித், துரியோதனன் சொல்லுகின்றான்.


எந்தையே! தூதுவந்தவர்களின் சங்கதிதெரிந்துகொண்டு தகுமாகிய உத்தரஞ்சொன்னால், அதைக் கேளாமற் றடுத்துத் தடுத்துப்பேசினால் அதனாலெனக்குக் கோபம்வந்து எழுந்துபோய்விட்டேன். இனிமேலும் நான்சொல்லவேண்டிய வார்த்தையொன்றுமில்லையென்று சொன்ன துரியோதன மன்னனைப் பின்னைப்பிராட்டியின் நாயகனாகியமணிவண்ணன்மீட்டுங் கையேந்திநோக்கி அண்ணலே! பெரியமனசுபண்ணும். சகலஜெனங்களும் ஒருவனாற் சுகப்படுவது பெருமை. ஒருவனால் வெகுஜெனங்கள் கெட்டுப்போவது பெருமையல்ல. ஆகையால் இவையனைத்தையும் நீர் நிதானித்துயோசித்துக்கவனித்து,வருங்காரியம்போங்காரியந் தெரிந்துசொல்லுமென்றுமாயவன்சொல்ல பகுடாதிபதியாகிய துரியோதனன்கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, கண்கள்சிவந்துகனன்று,இந்தக்கர்மபூமியைநான்கொடுக்கவு ர், அதைப்பாண்டவர்பெறவும், நீர்நடுவேதூதுபேசவும், பெரியவாளெல்லாரும் எனக்குப்புத்திசொல்லவும்,இத்தனை விபரீதம்என்னத்திற்கு? ஒரேவார்த்தைஉரைக்கின்றேன். சுத்தவீரனானவன்யுத்தம்பண்ணி வெற்றிபெற்று இராச்சிய முற்றிலும் கட்டிக்கொள்ளுவதே காரியம். ஒருவனை ஒருவன்இரந்து, ஒருவன்கொடுக்க ஒருவன்பெறுவது அகாரியம். ஆகையால்நீர் பாண்டவரிடத்திற்கு போய், இந்தச்செய்தியை நான்சொன்னதாகச்சொல்லும். அவர்கள்வெகு சந்தோஷப்படுவார்கள். வீரமென்பதும் ஜெயமென்பதும் புகழென்பதும்உமக்குத்தெரியாது அவர்கள்சந்தோஷப்படும்போது நீருங்கூடச்சந்தோஷப்படும். ஓகிருஷ்ணா! இப்போதே எழுந்துபோமென்று துரியோதனன்சொல்ல, அந்தமொழியைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் சற்றுநிதானிப்பவர் போலிருந்து, ஓய் துரியோதனராஜனே! நீர்சொன்னகாரியமெல்லாம் சரிதான். ஆதியில் இந்தச்சபையில்நீர்சொல்லியிருந்த வார்த்தையைமறந்து, பதின்மூன்று வருடங் காலங்கழித்துவந்த பாண்டவர்களுக்குமனப்பூர்வமாக இராச்சியங்கொடுக்க மனதில்லாமல் எப்போ சொற்சோர்வுபட்டையோ, அப்போதே உன்பேச்சுநிதானமற்று அசைவுகொண்டிருக்கின்றது. ஆதலால் அரசே! யுத்தமேசரியென்று சொல்லுகின்ற வார்த்தையின்வண்ணம் அதிலாவது நிலையாக நிற்பையென்று நானெப்படி நம்புவது. அதற்காகிலும் சகலமானபேரும் அறியும்படியாய்க்குருக்ஷேத்திரத்திற்படைகூட்டிக்கொண்டுவந்து பாண்டவர்களுடன் யுத்தஞ் செய்வது நிச்சயமென்றுகைபோட்டுக்கொடுமென்று தமது கரத்தைநீட்டினார். கருணையங்கடலாகிய கண்ணன் அந்தவார்த்தையைச் சொல்லத்துரியோதனன் கேட்டு, செவ்வரக்கிலும் செம்புருக்கிலும்செம்முருக்கையிலும் செம்பவளத்திலும் மேலாகச்சிவந்து பொறிபறக்குங் கண்களையுடையவனாய்ச், சிங்காசனத்திலோங்கிஅறைந்து, யாவருந்திடுக்கிடக் கூவியிரைந்து படபடப்புடன் விரைந்து; மனங்குலைந்து, பலவான் தூஷணவார்த்தைகள் சொல்லத்தொடங்கினான்.

ஓய் தூதுவந்தமனிதனே! சுயகுலத்தை விட்டு இடையருக்குப் பிள்ளைபுகுந்து தாழ்ந்ததொழிலாகிய மாடுகள் கன்றுகளைமேய்த்துக், கோபால ஸ்திரீகளை யேய்த்து, அவர்கள்வீடுகளிற்கட்டியஉரிகள்தோறும் வெண்ணெயுந்தயிரும் வேண்டியமட்டுந் திருடியுண்டு அந்த இடைச்சியர் கண்டுபிடித்துக் கயிற்றினாற்கட்டி உரலுடன்சேர்த்தால் ஊர்ந்து உளுக்கார்ந்தழுது மானம் ஈனமில்லாமல் மதிகெட்டநீ, எல்லாக்குலங்களினுமுயர்ந்த மதிமரபினனாகிய என்னை உன்னைப் போல நினைத்துக் கைபோடச்சொல்லிக்கேட்டஉன் தயிரியமேதயிரியம். ஆ! ஆ! மாடுமேய்க்குங்கோல்கொண்ட உன்மரக்கைமீது, செங்கோல்தாங்கி இச்செகத்தையாளும் மன்மலர்க்கையோ அடிப்பது? திருட்டிற் பழகிய உன்கையில் திருட்டுநீக்கத்தெண்டிக்கும்என் கையோ அறைவது? முல்லைக்காட்டிற்பல்லைக்காட்டி புல்லைப்பிடுங்கும் உன்கையின்மீது, ஐவரைக்காட்டிச் செல்லக்கடுகவோட்டிப் பூட்டுஞ்சொல்லைநாட்டுவிக்குமென்கையோ போடுவது? ஓ! ஓ! உமது குலமும் உமது நலமும் மற்றயோக்கியமுதலியசிலாக்கியமெல்லாந் தெரிந்துகொண்டேன். அந்தமட்டும் நீர்மெத்தபுத்திசாலி. நல்லகாரியஞ்செய்தீர் சீக்கிரம்நடவும். பாண்டவர்களைக் குருக்ஷேத்திரம்வந்து சேரச்சொல்லும், நீருங்கூடயிருந்து சகலபலமுஞ்செய்யும். நான்பேச்சு தப்பிப் போவேனென்றல்லவோ கையடிக்கச்சொன்னீர்? நீர்மாத்திரம் சொல்தப்பாமல் வந்துசேரும். சுயோதனனாதியரென்னும் சிங்கங்கள்கற்சித்துக்கொண்டிருக்குதென்று சொல்லி ஐவரென்னும்யானைகளை அழைத்தோடிவாரும். அபலமதியினை யுடையவரே! நீர் சாம்பிரதாய இராஜனுமல்ல உமக்குப் பட்டாபிஷேகப்படி பவிஷுமில்லை. ஆகையால் இராஜமுறைமைமுதலிய மெனுக்குவை உமக்குத்தெரிமாமற்பேசினீர். நல்லஞாயம். ஓகிருஷ்ணா! வெகுபேர்கூடியசபையில்யாவரும் நகைக்கத்துரோபதையைத் துகிலுரிந்தபோது பார்த்திருந்த மானமில்லாத வீரர்களுக்கு என்னசூரத்தனம் ஏற்படுத்தினீர்? எவ்விதச் சேவகராக்கிவிட்டீர்? திருடர் சேவகராகும்போது சேவகர் திருடராவது ஞாயமல்லவோ? ஓசொற்சோர்வு படாதவரே! இதுவரையில் யான்சொல்லிய ஒரேஉறுதியானவார்த்தையைப் பலமுறைகேட்டும்என்னமதியைக் கொண்டு அடிக்கடிவிபகாரம் பேசவருகிறீர்? மாயவரே! குந்திதேவியானவள் ஐந்துபுருஷரைச் சேர்ந்து ஐந்துபிள்ளைகளைப்பெற்றாள். அவ்வைந்து பிள்ளைகளும் தாய்நடந்தமுறைமை தப்பாமல் திரௌபதியாகிய ஒருத்தியைப் பெண்டாகவைத்துக்கொண்டு திரிகிறார்கள். அவ்வாறேனுந்திரிந்து தக்கபடி பிழைக்கமாட்டாமல் உழலுகின்றபேயராகியபாபிகளை, எனக்கு அண்ணன்தம்பிகளென்றும் எனதுசிறியதகப்பன் புத்திரரென்றும் என்பங்குக்குரிய பங்காளிகளென்றுங்கூறி, அவர்களுக்குப் பாதிராச்சியங் கொடுத்து அவர்களுடன் கலந்து வாழும்படியாகப் புத்திசாலிகளும் புத்திகெட்டுப்போய்ச் சொல்லு வார்களாகில், இது எவர்க்குமேலாகிய ஆச்சரியமாயிராது? இவ்விஷயத்தில் நீர்பேசுங் காரியங்களெல்லாம் வித்தையாகவே யிருக்கின்றதென்றுசொன்னான் துரியோதனன்

விதுரன் வில்லையொடித்தல்

அந்தமொழியைக்கேட்ட இன்சொலார்க்கினிய எந்தையாகிய நெடியோன் புன்சிரிப்புகொண்டு ஓ புயங்ககேதனா! உமக்கெப்படி சம்மதமோ அப்படியே செய்யுமென்று இராஜ சபையைவிட்டுப் பொட்டெனவெழுந்து, தத்துவக் கியானியாகிய விதுரமகாராசன் வீட்டுக்கெழுந்தருளினார். உடனே சபையிலிருந்தபெரியோர்களெல்லா முகம்வெதும்பி, மனங்கனன்று, ஐயோ! இதென்ன விபரீதகாலம்? இவனறியாதவனைப்போல் தெரியாமற் கோபித்துக்கொண்டான் தெரிந்தபெரியோர்கள் கோபிப்பார்களா? எதுவந்தாலுஞ் சந்தோஷமா யெண்ணவேண்டியதே யன்றி வெகுளியை மேற்கொள்ளக் கூடாதேயென்று யாவரும் விசனப்பட, அந்தக்காலத்தில் துரியோதனமகாராஜனுக்குக் கோபம்வந்து, தான் அணிந்திருந்த நந்தியாவட்டமாலைகளெல்லாம் கறுகறுத்துலர்ந்து சருகவும், தேகமுழுமையும் வியர்வைபெருகவும், செம்பையுருக்கிய தன்மைபோலுஞ் செவ்வரக்குருகிய குணம்போலும் கண்கள்சிவந்து, நெருப்புப்பொறி சிதறவும் பக்கத்திலிருப்பவர்கள் பதறவும், வாய்மடித்துப்பற்கடித்து மீசைதுடிக்கப் பெருமூச்சுவிட்டு, சபையிலிருக்கும் வெகுபேர்களையும் நோக்கி கேட்டீர்களா அரசர்களே! இவனுடைய அயோக்கியத்தை அறிந்துதான் நான் எழுந்துபோய்விட்டேன். நீங்களெல்லாரும் என்னை மறுபடியும் வரவழைத்தது இந்த அவமரியாதையைப் பெறுதற்கென்று தோன்றுகிறது. ஆகிலும் பெரிதல்ல. (கோடாலிக்காம்பு குலத்துக்கீனம்) என்பதுபோல ஒருவனுக்குத் தூதாகவந்தவனை வழிமடக்கி விருந்துசெய்விக்கவும், உறவாடவும், இவனுக்கென்னகாரியம்? இவனாரவன்? இவனெப்படிச் செய்வானென்று சிறிய தந்தையாகிய விதுரனைப் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓ நன்றியற்ற விதுரனே! தன்னுண்மையினாலேயும் சவுந்தரியத்தினாலேயும் வசன சாதுரியத்தினாலேயும்மயக்கி, என்செல்வத்தைப் பிடுங்கிப் பாண்டவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று வந்தவேஷதாரி என்வீட்டிற் சாப்பிடாமல் உன் வீட்டுக்கு வந்தால், அவிடத்திற் சாப்பிடாமல் இவ்விடத்திற்கேன் வந்தீர் அதுமுறைமையல்லவே என்று திருப்பிவிடாமல் அவனுக்கும் அவன் சேனைகளுக்கும் திவ்விய போஜனஞ் செய்துவைத்த காரியமென்ன வென்று கேட்டு, மீட்டும் அருகிலிருப்பவர்களையும்நோக்கி என்றந்தையுடன் கூடப்பிறந்தோ னென்றிருக்குந் தோஷத்தினால் இவனுக்கும் இவனைச்சார்ந்த பேர்களுக்கும்



கண்ணன்விசவரூபம்.

அன்னவஸ்திரபூஷணாலங்கிர்த வாசனாதிகளெல்லாம் இவிடத்தில் நடந்துகொண்டுவர, அவ்விடத்திற் பட்சம்வைத்து, என்பகையாளியைத் தனக்கும் பகையாளியென்றெண்ணாமல் (மாமிமேற்கையும்வேலியோரத்திற்கண்ணும்) என்னும் பழமொழிபோல்என்னிடத்திற் சுகமனுபவித்துப் பாண்டவர்களிடத்திற் பல்லைக்கொடுக்கும் பட்சமுடையவனைப் முடத்தெங்கைப்போலிருக்கின்ற நன்றிகுன்றிய இந்தப்பாவியையோ சிக்குமிடத்தில், ஒருதாசியானவள் பத்துபணங் கொடுத்துவருந் தலைவனிடத்தி லிருக்கும்போது, மற்றொரு நாயகன்வந்து பதினைந்துபணந் தருகிறேனென்றால், பழயவனைவிடுத்துப்புதியவனைக் கூடிவாழ்வதும் தனையனுபவித்தவன் ஊர்ப்பிரயாணம் போனாற் பிரியாவிடை நாயகிபோற் பின்றொடர்ந்து; கண்ணீர் சோரவிட்டுத் தேம்பி வெம்பி வருந்திவழிவிட்டுவாடி நிற்கும்போது, இவளுக்குரியவன் தயிரியஞ்சொல்லி என்பிராணநேசியே! இன்னும் பத்துதினத்தில்வந்துவிடுகிறேன் நீபோவென்று சொல்லிவிட்டு அவன் போக, இவள் அவன்போனவழியைப் பார்த்துகொண்டு மயங்கியிருப்பவள்போல் அவன்தலை மறைகிற வரைக்கும் நிற்கும்போது, அதற்குமுன் வருஷத்தில் இவளைவிட்டுப்பிரிந்த ஒருநாயகன் அப்போதுவூரிலிருந்து வரக்கண்டு அவனைக் கட்டிக்கொண்டழ, அதற்கவன் ஏண்டிகண்ணே அழுகிறாயென்று கேட்கும்போது, நீங்கள் ஊருக்குப்போங்காலத்தில் வழிவிட்டுப்போனேனே, அன்றுமுதலின்றுவரையில் நித்தியம் இந்தஇடத்திற்குவந்து நீங்கள் அடிவைத்து நின்ற இடத்தை முடியினால்வணங்கித், தெய்வமே! எங்களிருவரையும்பிரித்த நீஎன்றைக்குக் கூட்டிவைப்பாயென்று இறைஞ்சிக் கொண்டிருக்கின்றேனென்ன, அந்தச் சொல்லை வந்தபேதைமகன்கேட்டுமயங்கிக்கையிலுள்ள சம்பாத்தியமெல்லாங்கொட்டிக்கொடுத்தான். இப்படிக்குத் தந்திரஉபாயத்துடன் சமயோச்சிதமாய்ச் சதிசெய்யத்தக்கது தாசிகளின் குலாசாரதருமம்ஆதலால் அத்தன்மையவாகிய நமது அரண்மனைத் தாசியின் வயிற்றிற்பிறந்த இந்தவிதுரனுக்கு(குலத்தளவேயாகுங்குணம் (என்பதுபோலச் சொந்தக்குணம்வருமல்லாமல் வேறுகுணம்வருமா? நாம்வெறுத்துப்பேசுவதில் தன்னவன் பிறனவனென்னுந் தாக்ஷண்யமுறுமா? மானமீனமில்லாதபேர்க்கு வம்சமென்ன சதமா? இனிக்காரியமில்லையென்று துரியோதனன் சொல்ல, சபையிலிருந்த யாவர்களும் வாயைமெல்ல, கொல்லத்தக்க கோபத்தோடு வில்லையுடைய விதுரனெழுந்து, குபீரென வியர்த்துவழிய இழிந்து இருகண்களுமெரிந்துஜொலிக்க, அக்கினிக்கொழுந்து கபகபவென்றெரிந்துபறக்கத், தன்னைத்தான்மறந்து வாய்திறந்து இதனைப் பேசுவதானான்.

அடாதுரியா! இந்த ராஜசபையிலே விசுவாசநேசர்களுக்கெதிரிலே இடக்கர்மொழியாகஇகழ்ந்துபேசியஇடும்பர்! இதோ உனதுநாக்கையும் அந்நாக்கை வெளிப்படுத்திய உன்வாக்கையுமிழுத்து எனதுகைவாளாற்போக்குகிறேன். உதிரம்பாயும்படியாக்குகிறேன். உன்தலையையுமுருட்டுகிறேன். துன்மார்க்கப்பயலே! இன்னமுமிருடனிருக்கின்றாயோ? ஓ! ஓ! துஷ்டாவென்று எதிர்நோக்கிஎழுந்து உறுக்கிவருமபோது, உடனேசிறிது சாந்தமுண்டாகித் தயைபிறந்து, அந்தோ! அடாபாவி! இந்தவசனத்தை என்சிந்தைவருந்த எப்படிசொன்னாயடா துரோகி! இன்னேரங் காக்கைகழுகுகளுக் கிரையாக்கிவிடுவேன். அடாகர்மி! சிறியதந்தையாயிருந்துந்தெரியாதபிள்ளைசொன்னவார்த்தையை க்ஷமிக்காமல் துரியோதனனுடைய தலையையறுத்தான் விதுரனென்று தேவர்கள் பழிப்பார்கள். மற்றயாவரும் நகைப்பார்கள். அதனாலென்னுடைய நன்னெறி நன்னடை நன்னலமெல்லாம் நலியுமென்றெண்ணி மனம்பொறுத்தேனே யல்லது, என்னை இகழ்ந்துபேசிய உன்னை ஒருபொருட்டாக நினைத்து நின்றவனல்ல. இதுவரையிலும் உயிருடன் வையேன். உன்காலம் நல்லதாச்சுது உலுத்தனே! மன்னர்க்குரிய சுற்றங்களைத்தழுவிவாழ்பவன்வேந்தன் ஆகையாலும், தூதாக எவர்கள்வந்தாலும் அவர்களை வரவழைத்து அந்தராஜரகசியமெல்லாந்தெரிந்துகொள்ளவேண்டிய அக்கரைக்காரன் நானாகையாலும், அந்தமுறைமையின்படிக்கு நானெதிர்கொண்டுபோய்ப் பிரார்த்தித் தழைத்துவந்து விருந்துஞ் செய்தேன். உறவாடினேன். அவருடன்கலந்துகொண்டு பாண்டவர்களுடைய எண்ணங்களெல்லாம் அறிந்துகொண்டேன். தூதுவந்தவருடையமனோபீஷ்டமுந்தெரிந்துகொண்டேன் இப்போதுதானென்ன? எப்படியுமென்தமயன் பிள்ளைகளாகியபாண்டவர்களிடம்போய்ச் சேர்ந்தால் என்னைச்சம்ரக்ஷணைசெய்யமாட்டார்களா அல்லது அவர்களுக்குப்படைத்துணையாய்ப்போவேனாகில் உலகத்துராஜர்களும் நீயும்வேண்டாமென்று என்னைத்தடுக்கக்கூடுமா? இல்லைஉன்தடைக்குப்பயப்படத்தக்கவனா? இவ்வுலகமுழுமையும்பாண்டவர்கள் வசம் ஒப்பிவைக்கச் சத்தியில்லாதவனா? அடாபுத்தியில்லாதவனே! நாம் அப்படிசெய்யலாகாது. நாமிருந்தும் தாயாதிகள் கலகப்படக்கூடாது. ஒருவிதசமரசமாய்ப் போகட்டுமென்று உன்னினதேயன்றி வேறல்ல. அப்படிஇருக்க இப்படி உன்மனம்போனபடி பேசினாயல்லவோ? நல்லதாகட்டும். உங்களிருவருக்கும் நாளைநடக்கப்போகிற யுத்தகளத்தில் தாசிப்பிள்ளையாகிய நான்உனக்குதவியாக விருந்துவெற்றிபெற யுத்தம் பண்ணபோகிறதில்லை. இந்தச்சபையறியசொல்லுகிறேன். இதுசத்தியம் சத்தியமென்றுசொல்லிச், சண்டைசெய்யாத என்னண்டையில் இந்தவில்லிருக்கலாகாது. இருந்தாலோ (பெற்றமனம்பித்து பிள்ளைமனங்கல்லு) என்னும் பழமொழிபோற் சமுசாரிப்பிள்ளையாகிய உனக்குபகாரஞ்செய்யச்செய்யும்ஆகையால் இதோமகாபாவிக்குத் துணையாகாதபடி நான்

வைத்திருந்த வில்லைவெட்டுகிறேன் பாருங்கள் சபையாரேயென்றுகூவித் தன்னுடையவில்லை உடைவாளினால் இரண்டுதுண்டாக வெட்டியெறிந்துபோட்டு, விதுரன்தனது அரண்மனைக்குச்சென்றான். இப்பால் சபையில் நிறைந்திருந்த அரசர்களெல்லாரும் சஞ்சலப்பட்டுத்தளர்ந்து, ஐயோ! தேவர்களிடத்திலுள்ளவிற்களிற்சிறந்தது பரமசிவனுடையபினாகமும் விஷ்ணுவினுடைய சாரங்கமும் ஆகிய இவ்விரண்டுமாம். இவ்விரண்டும் ராஜவம்சத்திற் பிரபலித்திராநின்ற அருச்சுனனிடத்திலொன்றும் விதுரனிடத்திலொன்றாய்வந்திருக்கின்றதென்று எண்ணிமகிழ்ந்திருந்தோம். அவ்விரண்டில் இன்றையதினத்தில் ஒன்றறுந்தது,மற்றொருவில்லைக் கைகொண்டிருக்கும் அருச்சுனன் தேர்மீதேறிப் போர்புரியவருவானாகில, அவன்வில்லுக் கெதிர்வில் யாரிடத்திலுமில்லையே. நமக்குயாதொருதிக்குமில்லையே இனியெப்படியென்று அங்ஙனே சிலர் யேங்கித்தூங்கினார்கள் அந்தவேளையில்வீஷ்மரானவர் துரியோதனனைநோக்கிச் சொல்லுகின்றார்.

அப்பா துரியோதனா! இதென்ன விபரீதகாலம் விளைவித்துக்கொண்டாய்? தருமசாஸ்திரம்-நீதிசாஸ்திர-இராஜதருமம் - இவையெல்லாம் பழுது டும்படி சிறியதந்தையின் சிந்தைவருந்தத் தீங்காகியமொழிகளைச் சொல்லித். திரிலோகமும் புகழும்படியாயிருந்த அவன்வில்லை அவனேவெட்டி யெறிந்து, தன்பிராணனிருக்கிறவரையில் உனக்குச் சகாயஞ்செய்கிறதில்லையென்று பவிருஷமுஞ்செய்து,தீராப்பெரும்பகையை மேற்கொண்டுபோம்படி செய்துகொண்டாய்,நமக்கிருக்குஞ் சத்துருக்களை நீசோதிக்கப்போகிறது தெரிந்தேயிருக்கிறது. நாங்களனைவரும் வேண்டியபடிஎன்னபாடுபட்டு யுத்தஞ்செய்தாலும், பள்ளமுள்ளஇடத்தில் தண்ணீர்சேருமாப்போற் பாபரகிதளாகியபாண்டவர்களிடத்தில் ஜயஞ்சேருமேயன்றி வேறல்ல ஆகையால் எங்களைத்தள்ளு மற்றயாவரைக் கொண்டு ஜெயம்பெற விருக்கின்றாய்? என்னதிடதயிரியத்தைக் கண்டு இப்படி தலைகுலுங்கப்பேசினாய்? ஐயோ!பெரியோர் சிறியோரென்றெண்ணாமற்பேசினையே.அந்தப் பாவம் சத்துருக்களுக்குமுன்னே தலைகவிழ்ந்துசகலவளமுடைய பூமியையுமிழந்து, போர்முகத்தில் விழுந்து போங்காலநேரிட்டதாய்த் தோன்றுகிறதே. (ஆராலேகெட்டாயென்றால் கோராலேகெட்டேன்) என்னும்பழமொழியை இங்கு உன்னிடத்திற் கண்டேன். "காலஸ்யகுடிலாகதி" என்பதுபோல் வினைவசத்தால் விபரீதம்விளைந்துவிட்டது. என்று பலவாறாகச்சொல்லி வெறுத்துக்கொண்டபிதாமகனைப்பார்த்துப் பேரனாகிய துரியோதனன் சொல்லுகின்றான்.

ஐயா இந்தவிதுரனையல்லது வேறுவில்லாளிகள் இவிடத்திலில்லையோ? பஞ்சாங்கம்போனால் அமாவாசியுங் கூடப்போய்விடுமோ? வாழ்க்கைப்படும் பெண்ணுக்குப் சிப்பொடிந்துவிட்டால் தாலிகட்டார்களோ ஓபாட்டனாரே! ஒருஊரிற்சாவற்கோழியும் கும்படிச்சட்டியும் வைத்துக்கொண்டு ஒருகைம்பெண் கிழவியிருந்தாள் அவளுக்கு ஏதோ அந்தஊரார் பேரிற் கோபம்வந்து ஆ!ஆ!அப்படியா!என்கோழியாற்பொழுதுவிடிகிறதும் கும்படிச்சட்டியாற் கஞ்சிகாய்ச்சிக்குடிக்கிறதுமாயிருக்க, என்னைபகைத்துக்கொள்ளுகிறீர்களா? நல்லதாகட்டும் இனிமேற்பொழுதுவிடிகிறதும் நீங்கள் போசனங்கண்டுபுசிக்கிறதும்எங்கேபார்ப்போம் உங்கள்வாயில் மண்ணைப்போட்டுவிடுகிறேனென்று அவ்விரண்டையும் எடுத்துக்கொண்டுபோய் தன்துணியால் மூடிவைத்துப் படுத்துக்கொண்டாள். நெருப்பு கனிந்துபற்றிக்கொண்டு சாவலுந்தானுமாகத்தானே வாயில்மண்ணைப் போட்டுக்கொண்டிறந்து போய்விட்டாளென்று பெரியோர் சொல்லுவார்கள். அவளைப்போல் இந்தவிதுரன் வில்லைமுறித்துவிட்டால், இந்தவில்லுக்கு அப்பனாகியவில்லையுடைய வீராள் என்னிடத்திலெத்தனைபேரிருக்கின்றார்கள் அவர்களை சொல்லுகிறேன்கேளும் மிகுதாதாவாகிய என்சகோதரன் கர்னமகாராஜன் விருதபெற்ற விற்பிடித்துவெளிவருவாராகில், பாண்டவரென்னுஞ் சருகுகள் பறந்தோடவடித்து என்பக்கத்திலிருக்கும் யாவர்களும்விஜயங்கள் பாடும்படிச்செய்வார். தேவரீரிருக்கின்றீர். துரோணர்-கிருபர்-அசுவத்தாமாமுதலாகியஅநேகங்கோடி யரசர்களிருக்கவே யிருக்கின்றார்கள். உங்கள் தயவினால் இத்தனைசுத்தவீர ரெல்லாமிருக்க, வழியே போகிற இடையனையழைத்துவந்து உறவாடிவிருந்து செய்து மேன்மை சம்பாதித்துக்கொண்ட வேசைமகன் வில்லையறுத்தாலென்ன? அவனை வெறுத்தாலென்ன? அவன்போனாலென்ன? உயிரோடிருந்தா லென்ன? ஒருவேளை பாண்டவர்கள்பக்ஷத்திற் சேர்ந்து நமதுபேரிற் சண்டைக்குவந்தால் தானென்ன?இதுகளுக்கெல்லாம் நான்பயப்படேன்என்றுவிளம்பிய துரியோதனனுக்கு அண்டையில்நின்றிருந்த அங்கதேசாதிபதியாகிய கர்னன் சொல்லுகின்றான்.

கேளும் சபையிலுள்ளவர்களே!அர்ச்சுனன் தலைக்குலக்ஷயம்வைத்திருக்கும் வீரன்நானொருவனிருக்க, விதுரன்கையில் வில்லைப்பெற்றாலென்ன? அற்றாலென்ன? அவனால்அர்ச்சுனனைஜெயிக்கக்கூடுமா? ஒருக்காலுமில்லை. இதோஎல்லோருமறியச்சொல்லுகிறேன் இளங்கன்றால்விளாங்கனிஎறிந்தஸ்ரீகிருஷ்ணன்வந்துதேர்விட்டாலும் இந்திரன்முதலாகியஎண்டிசைபாலர் சந்திரசூரியர்முதலியசகலரும் அவர்களுக்குப்படைத்துணைவந்துபாணம்தொட்டாலும், விஜயனைநானேவெல்லுவேன். என்னிடத்தில்வளர்ந்துவரும்நாகாஸ்திரத்தாற் கொல்லுவேன். இவ்விருதிறவர் படைகளிலேயெனக்குமிஞ்சிய வீரர்கள் ஒருவருமில்லையென்று துரியோதனனுடைய பாட்டனுக்கெதிரிற் சற்பகமுநாணக்கொடுக்குங் கர்னன்சொல்ல, வீஷ்மர் கேட்டு

மிருந்தகோபங்கொண்டு, அடாகர்ணா! தேவர்களாலுஞ் ஜயிக்கப்படாத காலகேயநிவாதகவசரை ஒருநொடியிற் பனிபோலாக்கி, இந்திரலோகப் பட்டாபிஷேகத்தாற் சூரியனைப்போற் பிரகாசித்துமேன்மையுற்ற கிரீடிக்கு நீயோஎதிராகிறவன்? சந்திரனுக்குமுன்சுக்கிரனீடுபடுவனோ? அப்படிபோல் அவன்முன்நீஒளிமழுங்கிப் போவாயல்லது, அவன்திருஷ்டிக் கெதிர்ப்படமாட்டாய். ஆனால்நீ வாய்வன்மைபேச்சில் வல்லவனேயன்றி வில்வன்மைப்போரில் வல்லவனல்ல உன்காலமெல்லா மிப்படியேகழித்துவிட்டாய் நீசொல்லவந்தது பேசுதும்போதும் வாயைமூடென்று வீஷ்மர்சொல்ல, கர்னன் சொல்லுகின்றான். ஓவீஷ்மாச்சாரியரே! இதுவரையிலும் இந்தமகாராஜனுடைய அன்னத்தையும் சொர்னத்தையும் ஆபரணத்தையும் வஸ்திரத்தையும் அனுபவித்து, சமயம்வந்தபோது சத்துருக்களின் தோளாண்மையைப் புகழ்ந்து பேசுகிற வீரந்தங்களைப்போல் நான் கற்கவேயில்லை. நீராகையால் இப்படி வியந்துபேசுகிறீர். நானப்படி வேலைக்கொருபேச்சு விதம்விதமாய்ப் பேசமாட்டேன். தண்டிற்போனால் இரண்டிலொன்றென்று சாதிப்பேன்என்னை நம்பியபேரை என்பிராணனிருக்குமளவும் எருமையின்வாலைப் பற்றி ஆற்றிலிரங்கிப் பிராணனிழப்பவனைப்போலக் கைவிடமாட்டேன் ஈரேழுபதினான்குலோகத்துள்ளவீரர்கள்என்பேரிலெதிர்த்தாலும் வெல்லுவேன் முத்தொழிற் காரணராகிய மூவரும் வந்தாலும் என்பாணத்திற்கு இடைந்துபோகும் படியாய்க்கொல்லுவேன். நாளை உமது சின்னகண்ணாலே பார்க்கவேபோகின்றீர். என்றுகர்னன்பகரவும், அதற்குக் காங்கேயர்நகைத்து, (கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்குள்தெரியும்.) என்பது பொய்யோ? ஐயோ! நாங்களே பார்க்கப்போகிறோம். அப்பா அங்கதேசாதிபதி! வீணாய் அவசரப்படாதேயென்று அதட்டிக்கூறி, இப்போதாகவேண்டிய தென்னவென்று நாரதர்முதலான ரிஷிகள்மூவருக்கும் நமஸ்கரித்து, அவர்களையதாஸ்தானத்திற் கெழுந்தருளுங்களென்று விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாமுந்தம்முடையஅரண்மனைக்குச்சென்றார். பின்பு துரியோதனன்தன்னைச்சார்ந்த சகலருக்குஞ் செலவுகொடுத்துத், தானுஞ் சபையைவிட்டெழுந்து அந்தப்புரத்திற்குப்போனான் திருத்துழாய் மாலைதரித்த தேவாதிதேவனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சாத்தகியும் சேனாசயினியங்களுடன் விதுரன்வீட்டுக்குச் சென்றார்களென்று முன்னமேசொல்லி யிருக்கின்றோமே, அவ்விடத்தில் நடந்த அதிசயங்களைக் கேளும் ஜனமேஜய மகாராஜனே! விதுரன் வீட்டுக்குச்சென்ற வேதநாராயணன் மாணிக்கச்சிங்காசனத்திற் கொலுக்கொண்டிருக்க, நாரதர் கண்ணுவர் சமதக்கினி முதலாகியபெரியோர்கள் வந்து கிருஷ்ணசுவாமியைக்கண்டு, தேவரீர் சபையைவிட்டெழுந்து வந்தபிற்பாடு மிதுகோபியும் வெகுபாபியும் மிடிவாதக்கார லோபியுமாகிய துரியோதனன் விதுரனை இழிதுறைவாகப் பேசினான் அந்தவிதுரன் கோபித்துத், தன்கையிலிருந்தவில்லைவெட்டிப்போட்டுவந்துவிட்டான். அப்பால் வீஷ்மருக்குங் கர்னனுக்கும் வெகுவாய்ப் பலவார்த்தைகள்வளர்ந்தன. அவருமவன்மேல் வெறுத்தெழுந்து அரண்மனைக்குப் போனார். மற்றியாவருஞ்சபைகலைந்து போனார்களென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு முனிவர் மூவரும் தங்கள்தங்கள் கதியைநோக்கிச் சென்றார்கள்.

இப்பால் வில்லை வெட்டிமுறித் தெறிந்த விதுரராஜன் தனது வீட்டுக்குவந்து, திரிலோக நாயகனுடைய சீர்பாதங்களில் வீழ்ந்து தெண்டனிட்டுக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நிற்க, அவனைமாயன் உளுக்காருமென்று உபசரித்துரைத்து, ஓ விதுரராஜனே! நானொரு ஆச்சரியங் கேள்விப்பட்டேன். அதாவது பூமண்டலாதிபர் புகழும்படியாகிய வில் உமது கையிலொன்றும் அருச்சுனன் கையிலொன்றும் இருந்தது. அதில் இன்று உமதுவில் குன்றிப்போனதாய் தெரியவந்தது. அஃதென்னகாரணம் சொல்லுமென்று சுவாமியாகிய சதுரன்கேட்கப், பூமியாளும் விதுரன் சொல்லுகின்றான. நேமியையுடையசுவாமியே! கேளும் பூமியை ஆளுகிறவன் காமியாயும் வாமியாயும் கோபியாயும்லோபியாயும் இருப்பானாகிற், கடவுள் அவனைக்கெடுத்துவிடுவார். காரியாகாரியந்தெரியாத ஒருகயவனுக்கு ஆகிறகாரியமிது அழிகிறகாரியமிது வென்று அருகிலிருக்கும் பெரியோர் உரியோர்மந்திரிமார் முதலாகியபேர்கள் புத்திமதிசொன்னால், அதனைக்கேட்கவேண்டும். கேளாதவனாயிருப்பானாகில் மீளாநரகத்திற் கிரையாவான். ஆகையால் இந்தத் துரியோதனனோ சாத்தியாசாத்தியந் தெரியாதவயித்தியனைப்போற்சாகிறதும் பிழைக்கிறதும்அறியான். சாஸ்திரப்படிக்கும்நடக்கான். சத்தியசவுசமுந்தேறான். பெரியோர் சிறியோரென்றறிந்து பேசான் இத்தன்மைவாய்ந்த பேதையாகிய துராத்மாவுக்குப் பிணைப்பட்டுத்துணைப்பட்டு போர்க்களத்திற்போய்விழுந்து போர்புரிந்து புரவலர்முதலிய சேனைகளைக் கொல்லுவதைப்பார்க்கிலும், யுத்தகளத்திற்குப் போகாமல் யாத்திரைபோவது உத்தமமென்றெண்ணிவில்லை வெட்டியெறிந்தேன். தீங்கினருக்குபகாரம் செய்யுஞ்செல்வருக்குத்தீங்குவரும். அதைவிடசெற்றுப் போவது மேலென்று பெரியோர்சொல்லும் உரியமொழியொன்றிருப்பதனால், மனம்வெறுத்து வந்தேன். மேலும் "செல்வம்வந்துற்றகாலை தெய்வமுந்தவமும் பேணார் சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார், வெல்வதே கருமமல்லால் வெம்பகைவலி தென்றோரார், வல்வினைவிளைவும்பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்" என்பதுபோல, ஓ கிருஷ்ணமூர்த்தியே! ஐஸ்வரியம் வந்தால் தெய்வத்தையும் தவத்தையும் கொஞ்சமேனும் தொழார்கள். பேசத்தக்க முறைமை யறிந்தும் பேசார்கள். பந்து ஜனங்களையும்

தோழமையாகிய பேர்களையும் கண்ணே றெடுத்துப் பாரார்கள். தாங்கள் வெல்லவேணுமென்று கருதுவதேயல்லாமல் எதிரியின்பலத்தையெண்ணார்கள் இதனால் விளையப்போகிற வினைமூட்டையையும் யோசிக்கார்கள். அவர்கள்யாரென்றால் இவ்வுலகத்தி லுள்ள சாம்பிரதாயமற்ற மனிதர்கள் இப்பேர்ப்பட்டமதாந்தகாரத்தை மகமேருவா யெண்ணியிருக்குமனிதர்களில் தலையானவன் இந்தத்துரியோதனன். அதேனெனில் நமதுகுல பந்துவிற்சிறந்த நாயகனாகிய நீர் இவ்விடத்திற் கெழுந்தருளப்பாக்கியம் பெற்றும் மனங் கலந்து பேசிவணங்கி, வாடியபயிருக்கு மழைபொழிவதுபோற் பாண்டவர்களுக்கு நாட்டைக் கொடுத்து ஒத்துவாழ்வோமென் றெண்ணாமல், என்னையுஞ் சின்னச்சொல்லாலேசிக் கோபமுஞ்சடினமுங்காட்டி முகங்கூசப்பேசுந் துரியோதனனென்னுங் கர்மியின்முகத்தில் விழிக்கலாகாதென்று மனங்கசந்து, அவனுடைய தலையைவெட்டுதற்குப்பதிலாக என்கைவில்லை வெட்டியெறிந்து போட்டேனென்று விதுரமகாராஜன் சொன்னான்

அதைக்கேட்ட அரிவாசுதேவன் துடிதுடித்துப் பதைபதைத்துத், துரியோதனனுஞ் சேனைகளும் நாளை குருக்ஷேத்திரத்தில் யுத்தத்திற்கு வரும்போது நீர் வரமாட்டீர் போலுமிருக்கின்றதே. அப்படிசெய்யலாகுமா? அவன்றான் அறியாதவன் தெரியாமற் சொன்னாலும் அருமையாகியவில்லை முறிக்கலாமா? யுத்தத்திற்கு வராமலிருக்கலாமா? இதுதருமமல்லவேயென்று சுவாமிசொல்ல, நான்செத்தாலும் வரப்போகிறதில்லையென்று விதுரராஜன் ஸ்திரமாகச் சொல்ல, அதைக்கண்ணன்கேட்டு, அப்படியா நீருஞ் சபதசத்தியந் தப்பாதவர் நாமென்னசெய்யலாம். துரியோதனனுடைய காலகதி இப்படி யாச்சுதென்று விசனப்பட்டு, விதுரனுடைய உள்ளத்துணிவை யறிந்துகொண்டு, ஐயோ! நெருப்பானது எவ்வளவுவிறகுகள்போட்டுக் கொளுத்தினாலும், நெய்யைச் சொரிந்தாலும், குங்கிலியகர்ப்பூரங்களைக் கட்டிகட்டியாய்க் கொட்டினாலும், காற்றுசகாயமில்லாதபோது சற்றுமெரியாது. அதுபோல் எத்தனைபலாபலங்கள் துரியோதனனுக்கிருந்தாலும், உமது சகாயம்ற்றபடியால் அவைகளொன்றும் உபயோகப்படமாட்டா. உமதுபுத்திரராகிய பாண்டவர்களுக்கு நல்லகாலமும்நாடும்கிடைத்ததென்று இன்றுநம்பினேன். அதுஉமது விற்செய்த சகாயம் ஆக்களும். மேலும் பெரியோர்சொல்லிய தருமங்களில் “அன்னையும்பிதாவுமுன்னறிதெய்வம்” என்றிருக்க உம்மைஅவமதித்துப்பேசினா னல்லவா? அவனுக்கேகேடுவரும். நீர்விசனப்படாதிர். விதுரரே! நான்இங்கு தூதுவரவும், நீர்நம்மை யழைத்து உபசரிக்கவும், அவனந்த ராஜசபையிலே உம்மை இழிவாகப்பேசவும், நீர் வெகுளிமேற்கொண்டு வில்லைவெட்டவும், இதுகளெல்லாம்என்னால்வந்ததல்லவோ? நான் வாராதிருந்தால் இவ்வளவுதுன்பம் உமக்கு வாராதே நான்பாவியானேன்விதுரரே! என்னை பற்றியனம்பொறுமென்று உபசரிக்க, அந்த வார்த்தையைக் கேட்டவுடனே விதுரனெழுந்துவிழுந்து தொழுது, சுவாமி! தேவரீரிப்படிச் சிந்தையில் நினைக்கவேண்டியதில்லை. அவன்கெட்டான் துஷ்டன் தமது எண்ணம் நிறைவேறவேண்டியதே என்னிஷ்டமென்றுவிதுரன்சுவாமியோடு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தான்.

கண்ணன்குந்திதேவியிடஞ் செல்லுதல்.

அப்போதுசுவாமி விதுரனைநோக்கிக் குந்திதேவியாகிய எங்கள் அத்தையிருக்குமிடத்திற்சென்று கண்டு, பாண்டவர்கள் பட்சமாகச் சொல்லவேண்டியவார்த்தைகளுஞ்சொல்லி நமஸ்காரமும்பகர்ந்துவருகிறேன் விடைதாரும் என்றுபுறப்பட்டுச், செந்தாமரைப்பாதங்கள் நோகநடந்து வருவதாயினார் இவ்வாறு கபடநாடக சூத்ராவதாரியாகிய கண்ணன்பெரியவரன்மனையிலிருக்கும் பாண்டு பூபதியினுடைய தருமபத்தினியாகிய குந்திதேவியென்னும் அத்தையாரிருக்கும் அந்தப்புரவாயிலுக்கு நேராகவருவதைக் குளிர்ச்சிபெற்ற பூரணசந்திர விம்பமுகத்தை யுடைய குந்திதேவியானவள்கண்டு, எதிரோடிவந்து, வாரும் வாரும்மருகனே என்றுவார்த்தையாட முகம்வாடித் தமதுமுகத்தைநாடிநிற்கானின்ற அத்தையினது அடியிணையில்வீழ்ந்து தெண்டஞ்சமர்ப்பிக்க, உடனேகுந்திதேவி அவரைவாரியெடுத்து, மார்போடணைத்து, உச்சிமோர்ந்து உபசரித்துவாழ்த்தி, நீருண்டு சூற்கொண்டமேகத்தைக்கண்டுநீலக்கலாபம்விரித்தாடுமயிலைப்போலமயிர்க்குச்செறியமகிழ்ந்து, தம்பி! நானொருத்தி இவிடமிருக்கின்றேன் யென்றும், என்னையொருபொருட்செய்தும் இவ்வளவுதூரம் வருவதற்குவழி தெரிந்ததோ? மனதுவந்ததோ? மகிழ்திருந்ததோ? மறவாதிருந்ததே யென்பாக்கிய மென்று அழைத்துப் போய் மணியாசனத்திலிருத்தி, அப்பா மருமகனே! யாவரும் க்ஷேமமா யிருக்கின்றார்களா? நீரிப்போது இந்த அஸ்தினாபுரத்திற்கு வந்தகாரிய மென்னவென்றுகேட்க, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நகைமுக முடையவராய் சொல்லுகிறார்.

கேளாய்மாமிநாட்டைவிட்டுநீங்கிக்காட்டிற்பனிரண்டுவருடமுங் கழித்து, உருத்தெரியாமல் நாட்டிலொருவருடமும்போக்கிமேட்டிமையாகவெளிப்பட்டதாஷ்டீகராகியபாண்டவர்கள் உமக்குச்சாஷ்டாங்க நமஸ்காரந் திக்குநோக்கிசெய்தார்கள். இன்னங்கொஞ்சநாளையில் உமதுகஞ்சமல ரடியிணையைக் கண்டு தரிசிக்க வருகின்றோமென்றுஞ் சொன்னார்கள் திரிதராட்டிரன் காந்தாரிமுதலாகியபெரியோர்களுக்கெல்லாஞ் சரணஞ்சொல்லி, இராஜசபைக்குப் போய் விபகாரப்படிக்குநாடுகொடுப்பீர்களாயில்லையாவென்றொருவார்த்தை கேட்டு, அவரவர்கள் கருத்தை யறிந்து

சொண்டுவாருமென்று ஐவரனுப்ப, அடியேன் அவர்
பொருட்டுத்தூதாகவந்து, துரியோதனன்முதலாகிய
அரசர்களுக்குச் சொல்லத்தக்கதஞ்சொல்லிப்,பேசத்
தக்கதும்பேசினேம்.உபவார்த்தைகளாப்பெரியோ
ர்களும் உரைத்தார்கள், அவைகள் எல்லாவற்றையுங்
கேட்டு,காலனுக்குக்கூட்டாளியாகியகண்ணில்லாதவ
னுடைய பாலன் வேலமுட்குத்துமிடமேனுங் கொடு
க்கேன். நால்வகைச் சேனையுடன்சண்டைக்கவாவே
னென்று உறுதிமொழிகூறியிருக்கின்றான் இருதிறவ
ரும்இப்படி வருத்தப்படுவதை திருத்தமாக்கிப் பொ
ருத்தவேண்டுமென்று யோசித்தாற் சரிப்படஇல்லை.
ஆகிலும் இன்னமொருதரஞ் சொல்லிப்பார்ப்போம்.
அதற்குமிணங்காமற்போவானுகில் நாமென்னசெய்ய
லாம்மாமி! அப்பாலிருப்ப தவ்வவர்கள் பண்டையே
ஆகையால், தெய்வச்செயலெப்படி முடியுமோ தெரி
யாது. இதன்றியும் இன்னொருகாரியம் தங்களோடு அ
ந்தரங்கமாய்ப் பேசவேண்டியிருப்பதால், உள்ளறை
யில் வாருங்களென்றழைத்துப் போய், கள்ளத்தன
மாயன் எள்ளத்தனையு மிதக்கமில்லாம, மெள்ளத்தன்
னெண்ணம் வெளிப்படுத்தலானர். மாமி! நானொரு
சமாசாரங் கேள்விப்பட்டுவந்தேன்.அதைச்சொல்லச்
சொன்னசொல்லுகிறேனென்று ஸ்ரீகிருஷ்ணர்கேட்க,
சுகமாய்ச் சொல்லப்பாவென்று குந்திதேவிசொல்லக்
கோபாலகிருஷ்ணர் சொல்லுகின்றார்.

ஓஅத்தாய்! நான் கேள்விப்பட்டுச் சொல்லுகிற
தைக்கியாபகமாகவும் உறுதியாகவுங்கேளும் நீர்உங்க
ள் தாய்வீட்டிற் கன்னிகாமாடத்திலிருந்த சிறுவயதி
ல் ஆரோஒருரிஷீஸ்வரர்வந்து விரதமிழைக்கஅவருக்
கு நீர்பணிவிடைசெய்ய, அந்தப்பெரியவர் சந்தோ
ஷித்து ஐந்துதேவதா மந்திரம் உபதேசம் பண்ணிப்
போக, அந்தஐந்துமந்திரத்தில் ஒருமந்திரத்தை நீர்
பரிக்ஷித்ததாகவும், அப்போதுசூரியபகவான்பிரசன்
னமாக நீர் கலங்கிக்கண்ணீர்விடவும், அப்பகவான்உ
மக்குத் தழைக்கச்சொல்லி உம்மிடத்திலொரு சற்புத்
திரன் பிறக்கும்படி சர்ப்பதானஞ்செய்யவும் தக்ஷண
மே குழந்தைபிறக்கவும், உடனே உலகப்பழிப்புகஞ்
சிப் பெட்டியில் வைத்துச் சிந்துநதியில் விட்டீராம்.
இதுஉண்மைதானு வென்றகேட்டகண்ணனைக்குந்தி
தேவிபார்த்து, இதைக்கொண்டு நீவந்தமற்ற காரியங்
களையுஞ் சொல்லப்பாவென்றுகேட்க. அப்பால்அந்த
நதியடித்துக்கொண்டுபோய் கங்காநதியில்விடவும்,தி
ரிதராட்டிரனுடைய சாரதியாகியசூதனும் அவன்பத்
தினி ராதையுங் கண்டெடுத்துவந்து அப்பிள்ளையை
வளர்க்கவும், அப்போதுஅசரீரிவாக்கியமாக இந்தப்
பிள்ளைக்குக் கர்னனென்றுபேரிடச் சொன்னதை அ
வர்கள்கேட்டு,அப்படியேபேரிட்டழைக்கஅவன்வள
ர்ந்து சகலசாஸ்திரமு முணர்ந்து பரசுராமரிடத்தில்
வில்வித்தையுங்கற்றுமேன்மையுற்றிருந்தானுக அதை
துரியோதனன்கண்டு சிநேகங்கொண்டு, அங்கதேசா
திபதியாக்கி,சுயம்வரத்திற்கலியாணமுஞ்செய்து,தன
துசகல வகண்டசாம்பிராச்சியமும் அக்கர்னன் வசத்
திலொப்பிவித்து, ஏகசக்ராதிபத்திய சேனுபதியென்
று ஏற்படுத்தி இருக்கின்றான் அந்தக்கர்னனைச் செ
யிக்கப்பட்டபேர் மண்ணிலுமில்லை விண்ணிலுமில்லை
அவனுக்கும் நமது அருச்சுனனுக்கும் பூர்வத்திலேயே
ஜன்மப்பகையாகி வகைமேற்பட்டிருக்கிறது இருதிற
வருமயுத்தஞ்செய்யத்தனித்திருக்கின்றார்கள்.ஆகை
யால் சீக்கிரம் கர்னனிடத்திற்சென்று அவனுடைய
ஜபந்தீரத்தாயென்றுதெரிவித்து, நீபாண்டவர்கள் ச
கோதரன்என்றுணர்த்தி, நீங்களறுபிள்ளைகளிருக்க
நானிப்படி அவதிப்படுவானேன்? அப்பா!நீஇப்போ
தே பாண்டவர்களிடத்தில்வந்துவிடு அவர்களுனக்கு
ப்பணிவிடைசெய்ய நீஅரசாக்ஷிசெய்யலாம். நாங்கள்
கண்களிக்கப்பார்ப்போமென்றுஇகவாகியவார்த்தை
களைப்பேசி அழைத்துவாரும்மாமி! ஒருவேளைஉமது
சொல்லைதடுப்பானுகில்அவன் அருச்சுனன்பேரில்விடு
வதற்கு அச்சுவசேனனென்னும் நாகாஸ்திரத்தைஅரு
மையாய்ப்பூசித்து வருகின்றான். அதுவோ காண்டவ
வனதகனத்தில் தன்தாயைக்கொன்றபழியையும்தன்
வாலறுப்புண்டபகையையும் தப்பாமல்முடிப்பேனெ
ன்றிருப்பதால், அந்தநாகாஸ்திரத்தை விஜயன்பே
ரில் ஒருதரம்விடுவதன்றி மறுகணைதொடுக்காதிருக்க
வரம்வாங்கிக்கொண்டு வாரும்என்று பக்தபராதீன
னுகியகிஷ்ணன்சொல்ல இந்தவசனங்களை யெல்லாங்
குந்திதேவிகேட்டு, உயிருடன்குன்றி, ஐயோ! உலக
மறியும்படி வந்ததே நமக்குங் கியாபகமில்லாமல் ம
றந்ததே. நமது மருமகனுக்கெப்படியோ தெரிந்து
தே. என்றுமனதிலெண்ணி இளைத்து, ஓ கோபாலா!
இந்தவார்த்தை முன்னதாயறிந்தால்உனதுஇஷ்டப்ப
டிபாண்டவரிடத்திற்சேரப்பண்ணுவேன்.இப்போது
உனக்கோஎனக்கோஎன்றிருக்கும் இந்தவேளையில்நா
ன்போய்ச்சொல்லுவதுஞாயமோ? இதுஉன்னுடைய
மாயமோ? அல்லதுஎன்ன அபாயமோ?(விடியற்காலை
யிற்கலியாணம்பிடியற்கஞ்சாதேதாப்பூலம்)என்னுந்த
ன்மைபோலிருக்கின்றதே நீநினைத்துக்கொண்டோடி
வந்து சொல்லுங்காரியம் நல்லது, அப்படியே கர்ன
னிடத்திற்சென்று, தாயென்று அவனுஞ்சந்தோஷிக்
கச்செய்து, நாகாஸ்திரத்தை ஒருதரம் விடுவையே
யொழிய இரண்டாவதுதரம் விடாதேயென்று வரங்
கேட்டால்,என்வார்த்தையைதள்ளாமற்கொடுப்பான்
அப்போது கர்னனுடைய பிராணனுக் கானிவருமல்
லவா? அதல்லாமல் அந்தவரத்தை நான் கேளாமற்
போவேனுகில்,அர்ச்சுனனிறப்பானல்லவா? இந்தஇர
ண்டுவிதத்திலேயும் எனக்குநஷ்டமே யல்லதுவேறில்
லையே (பிச்சைக்குப்பிச்சையும்போய் ஒருகாசுநாமமு
ம்போச்சு) என்னும்பழமொழியாச்சுதே(உழக்குநெ
ல்லுக்கு உழைக்கப்போய் பதக்குநெல்லை பன்றிதின்
றது) என்னும்பழமொழிவாய்ச்சுதே (கழுதைமப்பை
க்கண்டுகரைத்தமாவைவட்டிக்குவிட்டாள்) என்னுங்

கதைபோலாச்சுதே. இதென்னகாரணம் என்றுசந்தனமரங்களை யுக்திவராகின்றசிந்தாநிகூர்ந்தநாட்டில் வாழுங் குந்திபோஜன் தலைவன்பெண்ணாகிய இந்ததேவிமிகவருந்தினாள். அப்படிவருந்திய குந்திதேவியின்கருத்தை மருமகனாகிய மாயவனுணர்ந்து, மாமி! நீர் இப்போது யோசித்துச்சொன்ன காரியாகாரியங்களனைத்துஞ்சரியே. ஆனால் உன்மக்களாகிய பாண்டவர்கள் பிரிதிவி முதலிய பஞ்சபூதம் போலவும் அஞ்சுதலைப்பாம்பு போலவும்பொருந்தி இருக்கின்றவர்கள். அந்தஐந்து பூதத்தில் ஒருபூதங் குறைந்தால் உலகங்குறைந்துபோம். ஐந்துதலைப்பாம்பில் ஒருதலை இறந்தால் உடலுமிறக்கும். அதுபோல் ஐவர்களிலொருவரிறந்தால் மற்றநால்வரும் உடனே மடிவார்கள். நீர் அருமையாகப் பெற்றெடுத்து வளர்த்து, ஈ யெறும்பு கடிக்கவொட்டாமற் பாதுகாத்து, பக்ஷமுடனிரக்ஷித்த பாண்டவரைந்துபேரும் இறந்துவிடுகிறது பெரிதா? நீர் இன்னானென்றறியாமலும் எடுத்துவளர்க்காமலுமிருந்து, இப்போது பிள்ளையென்றுணர்ந்த இந்தக்கர்ண னொருவனிறப்பது பெரிதா? செவ்வையாயோசியும். நானேதோ அவசரப்படுத்தினேனென்று நானையொருகாலத்திற் பழிசொல்லப்போகிறீர், மாமி பத்தும்பதினைந்துக்குஞ் சம்மதியாயிருக்குமாகில் மனோதிடங்கொண்டு போய்வாரும். அப்பாலுமதிஷ்டமென்றுசொல்லிவிடைபெற்றுக்கொண்டுவிதுரனரண்மனைக்கெழுந்தருளிநித்தியவிதிகளோடு போஜனாதிகளையுமுடித்துக்கொண்டு திருக்கண்வளர்ந்தருளினார்.

துரியோதனன் கண்ணனுக்குப் படுகுழிசமைத்தல்

இப்பால் ஜகன்மோகனனாகியநாதனது மாயவசனவலைக்குளகப்பட்டகுந்திதேவியானவள் குலைகுலைந்து கொடியதுயரிலுழன்றுகலங்கிக்கணுறக்கங்கொள்ளாதிருந்தாள். பகற்போதையளக்குஞ் சூரியபகவான் மேற்றிசைப்பெண்ணின்நெற்றியிலிடப்பட்டசெந்தூரத்திலகம்போலபிரகாசித்து அஸ்தமானமாயினான் வேதபண்டிதர்முதலியபேர்கள் சந்தியாகாலவிதிமுடித்துத் தொழுதார்கள். அருணன் சூரியனுக்கிட்டமாற்றுயர்ந்தபொற்சிங்காசனம்போற்செவ்வானம் பரந்தது தாமரைப்புஷ்பமென்னுங் கன்னியர்கள்வண்டுகளாகிய புருஷருடன்ஊடிமுகங்குவியுந்தன்மைபோற் குவிந்தன அவ்வண்டனென்னும் நாயகர்களைக்கண்டு கடைக்கண்காட்டியழைத்து இதழ்த்தேனருந்தவின்பங்கொடுக்குந் தாசிகளைப்போற்குமுதம்ஆம்பல்முதலியமலர்கள்மலர்ந்தன தாமரைப்புட்பங்களிற்சஞ்சரித்த அவ்வண்டுகளானவை அக்குமுதமலரிடத்தும்ஆம்பலிடத்தும் குலமாதரைவிடுத்துவிலைமாதரையடுத்தவேசிக்கள்ளர்போலத்தங்கித்தேனைப்பருகியுள்ளுடைந்துகூவித்திரிந்தன. முல்லையரும்புவிரிந்ததைபோல் எல்லையில்லாத நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன இரவென்றும்யானையேறிப் புறப்படுமன்மதனுக்குவெள்ளைக்குடைவிரித்ததைப்போற்சந்திரனுதயமாயினான் அந்தவேளையில்தலைவருந்தலைவியரும்அமளிகளிற்கலந்துசரசசல்லாபத்தினாற் சோர்வுற்று நித்திரைபோனார்கள் இவ்வாறுசந்தடியடங்கிய நடுராத்திரியில் இந்திரனுக்கொப்பாகுஞ் சந்திரகுலத்தோன்றலாகிய துரியோதனன் அந்தரங்கமண்டபத்திற்குவந்து, தம்பிமார் தொண்ணூற்றொன்பதுபேரோடுமாமனாகியசகுனிகர்ணமகாராஜன் இவர்கள்சூழ்ந்திருக்கத் தானுமிருந்தவர்களைநோக்கி, காடேகதியென்றுபோய்விட்டபாண்டவர்களை நாடுவாங்கித் தருகிறேனென்று அழைத்துவந்து உபலாவியத்திலிருத்தித் தானே தூதாகவந்து தூர்ந்தகிணற்றைத் தூறுவாருவாற்போற் கலகம்விளைத்து, நமக்கெதிரியாகவும்விரூப்பாகவும் விதுரன்வீட்டில்வந்திறங்கிய அந்தக்கிருஷ்ணனை முடித்துவிட்டால், பலநாளையச்சநி ஒருநாளையிற்போச்சுதென்று பாலைவார்த்துத் தலைமூழ்கிவிடலாம். இவனிருக்குமளவும் ஆகவுமொட்டான. அழியவுங்கிட்டான். ஆதலால்நீங்களென்னசொல்லுகிறீர்கள் சொல்லுங்களென்றுதுரியோதனன்கேட்கத், தம்பியாகிய துச்சாதனனெழுந்து காலில்விழுந்துதேவரீருக்கு இந்தக்கியாபகந்தெய்வங் கொடுக்குமாவென்று பிரார்த்தித்திருந்தேன். என்னென்னப்படிக்குக் கேட்டதால்தயைசெய்து யான் சொல்வதைக் கேட்டருளுகவென்று சொல்லுவான்.

அண்ணாவே! தாங்கள்யோசித்ததுநன்றாகயிருக்கிறது. பலநாளுஞ்சிக்காமற் கலகஞ்செய்துகொல்லும் ஓர்பெரும்புலியானது வலைக்குளகப்பட்டாற் கொலைக்கஞ்சிப்பார்க்கலாமோ? என்கோவே! இந்த இராத்திரி விடியுமுன்னமே நால்வகைச்சேனைகளுடன் அவனைவளைந்துகொண்டு, நல்லபாம்பின்தலையை நசுக்குவதபோல் நறுக்கிப்போடுவதேகாரியம். அதுவேநமதுவீரியமென்று தம்பியாகிய துசுவாசனன் சொல்ல, அதுவேசரியென்று மற்றைத்தம்பியரும் ஒத்துக்கொள்ள இந்தநூறுபேர்களில்தர்மதேவதையையபோன்ற விகர்ணனானவன் பெரிய தமயனைநோக்கி, அண்ணா! இதுவரையிலும்வாழ்ந்த மூவகைக்குல மன்னவர்களிலேயும் தூதுவந்தபேரைக் கொன்றவர்களுமில்லை. கொல்லென்றுவிண்டவர்களுமில்லைநாம்கொல்லுவோமாகில் எவ்வுலகத்துக்கு மொவ்வாது பழிபாவங்களுக்காளாவோம். அன்றியும்கிழவர்கள் - குழந்தைகள் - வேதியர்கள் - வியாதிக்காரர்கள் - வித்துவான்கள் - ஸ்திரீகள் - தூதர்கள் - இப்பேர்ப் பட்டவர்கள் எவ்வளவு குற்றஞ்செய்தாலும் கொல்லக் கூடாதென்று இராஜதருமமிருக்கின்றது. மீறிச்செய்தாலேகுடும்பசமேதராய்நரகமென்னுங் காணியை நாமனுபவிக்க வரும். மேலும்பகைவரானாலும் நமதுவீட்டுக்குவந்தால் அவருக்கும்நமக்குமிருக்கும்விரோதங்களைமறந்து, புதிய உறவினர்போல மரியாதைசெய்துவந்திப்பது குலமுறைதவறுக்குலோத்துங்கர் குணமாம். அப்படிசெய்யா

மல் ஒன்றில் வஞ்சகர்கினைப்பீராகில், அதற்குமிஞ்சியபாவம் வேறிலலை. அப்படியல்லவென்று பழிபாவங்களுக்கும் பயப்படாமல் தூதரைக்கொல்ல நினைப்பீர்களாகில், காசாம்பூவண்ணனாகிய கண்ணன் ஒருவனிடத்திலேயுங் கட்டுப்படவுமாட்டார். வெட்டுப்படவுமாட்டார். இதனால் உங்கள்கூட்டங் கெட்டுப் போகும்படியான துஷ்டகாரியங்களை ஆலோசிக்கின்றீர்கள் வேண்டாம். இப்போது நீங்கள்நினைக் ம் படியான காரியம் ஒருவிதத்திலுமுடியாது. நான்சொல்வதை நன்றாய் யோசனைசெய்யுங்க ளென்று விகர்னன் சொல்ல, அதுகாலையில் துச்சாதன னெழுந்து, நல்ல பாம்பைபோற்சீறி, அடாவிகர்ணா! உனக்கென்னடா தெரியும்? பெரியோர் பேசுஞ் சங்கதிகளில் நாமேன் பிரவேசிக்க வேண்டுமென் றிராமற் குறுக்கே தடுத்துப்பேசத்தக்க அவ்வளவுகுணக்கியன் ஆய்விட்டையோ? அந்தமட்டும்வாயைமூடடாவென்று அடக்கித் துரியோதன மகாராஜனைப் பார்த்து வெறுத்துக்கொண்டு, அண்ணா! யாதேனு மோர்காரியத்தை ஆலோசிக்கவேண்டியிருந்தால் அறியாதபசகளை நீக்கிப் பெரியோர்களா யிருந்து பேசவேண்டுமென்று முதியோர் சொல்லுவார்கள். அதுபோல இவனென்ன மிகப்பாலியன் இராஜதந்திரமறியான் இப்போது தாங்கள் உத்தேசித்த கரியத்தைப் ற்றி நான்சொல்லும் புத்தியை நன்றாய்க் கேளுங்கள்.

அதாவது, அதிரதர் முதலாகிய சேனைகளை விதுரன் விட்டைச்சுற்றிக் காவலாகவைத்து, வைக்கோல் முதலிய செத்தைகளைச் சேர்த்துக் கொளுத்தி விட்டால், நமது விரோதிகளுக்குத் தூதாகவந்த கோபாலனும் அவனுக்குவிருந்துசெய்த விதுரனும் வெந்து கரிந்துளரிந்து போவார்கள். பார்ப்பவர்கள் கேட்பவர்களும், ஐயோ! தீப்பற்றிக்கொண்டதென்று சிந்திப்பார்கள். நமக்கொரு நிந்தனையுமில்லை. பாண்டவர்களிந்தவழியும்வாரார்கள். இதுஅழியாயோசனை அண்ணா! இக்காரியத்தைப் பொழுதுவிடிவதற்குமுன்னே முடித்துவிட வேண்டுமென்று துச்சாதனன்சொல்ல, இந்த யுத்தியைக்கேட்ட கர்னன் சொல்லுகிறான். இருளைவிலக்குஞ் சூரியனைப்போல் அக்கினிச் சுவாலையுடைய ஒருபாணத்தினால் அவ்விருவரையும் எரிப்பதற்கு நானொருவ னிருக்கும்போது, நெருப்பினாலேயா அவர்களைக் கொல்லுவது? ஜெயிக்கமாட்டாத திறத்தையுடையவன் செய்யவேண்டியயோசனையேயன்றி, நாம்நினைக்கத்தக்க தல்லவென்று கர்னன்சொல்ல, அதைக்கேட்டு விகர்னன்தவிர மற்றைத்தம்பிமார்களெல்லாரும் துரியோதனனைநோக்கி, அண்ணா! இப்போது நமதுபட்டணத்துக்குள் வந்தகபட்டுக்சொண்ட இந்தக்கிருஷ்னன் தந்திரவாதியாகையாற் பொழுதுவிடிந்தாற் பாண்டவர்களிடத்திற்போய்க் கூடிக்கொண்டு, யாதொருகாரியங்களும்ஆகவொட்டாமல்நமது எண்ணத்தைக் கெடுத்துவிடுவான். ஆகையால் எவ்விதங்களிலாவது பொழுதுவிடிவதற்கு முன்கொன்றுவிடுகிறதே காரியமென்று கூவிச்சொல்ல, அவைகளையெல்லாங் கேட்டிருந்த மாமன் சகுனியானவன்நகைத்து, இதுகளெல்லாஞ் சிறுபிள்ளைகளின் ஆலோசனையாக இருக்கின்றதேயொழிய, காரியத்தை முடிக்கும் பாரியவாலோசனையா யிருக்கவில்லை. அப்படி ஏதாகிலுஞ் செய்யவேணுமாகில், நான்சொல்லப் போகிற யுத்தியைக்கேட்டு வெல்லுங்களென்றான். அந்தயுத்தியென்னவென்று துரியோதனன்கேட்கச் சகுனிசொல்லத்தொடங்கினான்.

கேளும் என்னருமைமருமகனே! விகர்னன்சொன்னவாக்கியப்படி தூதரைக்கொல்லலாகாது துசுவாசனன் சொன்னபுத்தி நல்லபுத்தியானாலும் பூர்வாபூர்வமாகப் பெரியோர்கள்வாழ்ந்தவீட்டில்நெருப்பைப் போடலாகாது. போட்டாலும் அந்தநெருப்பினால் கிருஷ்ணனுக்கு ஒருகெடுதியும் வராது கர்னராஜன் சொன்னபடி கணைவிடுத்துகொல்ல நினைப்போமாகில், நாளைவரப்போகிறகலகம்இப்போதேவிளைந்து, நமது நாடு சுடுகாடாகிப்போம் ஆகையால் இதுகளெல்லாக்காரியமல்ல. ஒருகாரியஞ்செய்யும் நமது கொலுக்கூடத்தில் ஒருபடுகுழிவெட்டி. அதிலேராக்ஷதர்களையும் மல்லர்களையும் கிங்கரர்களையும்வைத்து, மூங்கிற் பத்தைகளினால்மூடி, மேலே ஒருசிங்காசனம் அமைத்து அதிலேகிருஷ்ணனை அழைத்து உளுக்காரச்செய்தாற் பத்தைமுறிந்து படுகுழியில்விழுவான். உடனேபிடித்து விலங்குபோட்டுச், சிறைச்சாலையில்வைத்துப், பிராணன் போகவொட்டாமல்தண்ணீர்வார்த்துக்கொண்டுவந்தால் பாண்டவர்களுக்கும் பகைநேரிடமாட்டாது. கலகமற்றுப்போம். உலகமும்பழிக்காதுஇது தூதனைச் செய்யவேண்டிய முறைமையென்றுமாமன் சொல்ல, மருமகன்கேட்டு ஆனந்தமடைந்து, ஓமாமா உங்கள்புத்தி எவருக்காகிலும் வருமா? நீங்கள்யோசித்தால் அதுவீண்போமா? என்றுமகிழ்ந்து புகழ்ந்து அந்நேரமே அனேகமல்லவா அழைப்பித்து மிகுந்த ஆழமும் அகலமுமுள்ளதாய் நிலவறை வெட்டச்செய்து அதிலேகிங்கரர்-ராக்ஷதர்மல்லர்கள்முதலியபேர்களை வாளாயுதம்-வேலாயுதம்-சூலாயுதம் - குந்தாயுதங்களுடன் வைத்து, அநேகங் கயிறுகளுடன் ப்பபரர்களையும் பதுக்கி, மூங்கிலைப்பிளந்து மேலாகமூடி நவரத்தினகசித சிங்காதனமமைத்து பக்கங்களில் முத்துமாலை-மாணிக்கமாலை-பூமாலை - பொன்மாலை -இவைகளைத் தூக்கித் தம்பிமார் முதலிய யாவருஞ் சந்தோஷிக்கும்படியாய், பிறவிப் பெருங்குழியில் விழுந்து பந்தபாசப் பிணிப்புற்றுப் பரமதயாநிதியே என்றுகூவிப் பரதவிக்கும்படியான பக்தஜனங்களை அப்படுகுழியினின்றுங் கரையேறி ரக்ஷிக்குங் கருணைக் கண்ணனாகிய அண்ணாலுக்கும் படுகுழி யமைத்தான் துரியோதனன்.

கண்ணன் விஸ்வரூபங்கொள்ளுதல்.

கேட்மரோஜெனமேஜெயமகாராஜனே! இவ்வாறு நஞ்சமுகருந்திக் கஞ்சனைக்கொன்ற அஞ்சனவண்ணனுக்குச்சிறிதேனும் எண்ணிக்கையின்றிவஞ்சனையை செய்தானேபஞ்சமாபாதகனென்றுபகைத்துப் பாரைக்கவிந்து கொண்டிருந்த இருளானது உடனேபறந்தோடிப்போயது. இரவில்நடந்த அதிசயங்களை எல்லோரும் பாருங்களென்று தனது கிரணக்கரத்தால் யாவரையுங்காய்ந்தெழுப்பிகொண்டு வருவான்போற் கிழக்குத்திசையிற் சூரிய னுதயமாயினன். மகானுக்கள் முதலிய ராஜாராஜர்களும் பிராதக்காலத்தில்ஸ்நானம் பூஜைமுதலிய நித்தியவிதிக் கருமங்களைமுடித்துகொண்டு வழக்கப்படி இராஜசபைக்கு வந்தார்கள். இராத்திரியெல்லாந் தூக்கமற்றிருந்த துரியோதனராஜனும் தம்பிமார்களும் சகுனிகர்னன்மந்திரிகள்சாமந்தர்கள் முதலியபேர்களும் சபையில்வந்துநிறைந்தார்கள். விதுரன்வீட்டில்திருக்கண்வளர்ந்தெழுந்தசுவாமியானவர் சாத்தகியுடன் நித்தியக்கடனை முடித்துக்கொண்டு சிங்காதனத்தில் வீற்றிருக்கும்போது, துரியோதனனுடைய உத்தரவின்பேரில் தூதவரோடி வந்து நிர்க்கதெண்டனிட்டு, சுவாமி! தூதுவந்த உங்களை எங்கள் ராஜாதிராஜனுகிய துரியோதனமகாராஜன் இராஜசபைக்கு அழைத்து வரச்சொன்னதால் அதிசீக்கிரமத்தில் வரவேண்டுமென்று சொல்ல, இதோவருகிறேனென்றெழுந்து, சேனைகளையெல்லாம் நிறுத்திவிட்டுச், சாத்தகிமாத்திரம் ரதமேறிவரத்தாமும் ரதமேறிக்கொண்டு, திரிதராட்டிரன் - வீஷ்மர் துரோணர்-கிருபர்-அசுவத்தாமர்- முதலாகிய பெரியோர்களும் உரியோர்களும் நிறைந்திருக்கும் சபைக்கெதிரில்வரும்போது, இதோ கிருஷ்ணபகவானுஞ் சாத்தகியும் வந்தார்களென்றுபோக தேவேந்திரனைப்போற் கொலுக்கொண்டிருக்கும் யோகபூவேந்தனுகிய துரியோதனனிடத்தில் தூதர்வந்துசொல்ல, துரியோதனன்கேட்டு கிருஷ்ணனைமாத்திரம் விடுங்களென்றுஆக்யாபிகக, அந்தப்படியேஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தூதர் வார்த்தையைக்கேட்டு, சாத்தகியைவெளியே நிறுத்தித், தம்மைஅழைப்பிக்கும வஞ்சகச் சங்கதியைத் தமக்குள்ளேயறிந்துகொண்டு சந்தோஷசித்தராய் தம்பிசாத்தகி! நான்வந்தகாரியம் இன்றைக்கு நிறைவேறுமென்றுகூறி, தேவாதிதேவனுகிச் சகல ஜீவாத்மாக்களுக்கும்பரமாத்மாவாகியஸ்ரீநாதன்கொலுக்கூடத்தில்வரவே, விஷமாகிய அரவக்கொடியோன் மிகுந்தஉபசாரத்துடன் லோகநாதனைப் பார்த்து வாரும் ஆசனத்திலிருமென்று கைகாட்டினன். வீஷ்மர்முதலிய பெரியோரெல்லாரும் எதடா அப்பா சுவாமிக்குஇவ்வளவுமரியாதைநடந்ததுநமக்கெல்லாம் நல்லகாலம்பிறந்தது. இனியொன்றுங்குறைவில்லைபாண்டவர்களும் செவ்வைப்படுவார்கள் துரியோதனன் புத்தியை ஆண்டவனேமயக்கி வழிக்குகொண்டுவந்ததாகவிருக்கின்றதேயென்றுசந்தோஷித்து ஸ்ரீகிருஷ்ணனுடையமுகத்தை யாவரும்பார்த்து கொண்டிருக்கையில், ஸ்ரீகிருஷ்ணர் துரியோதனனென்னும்நாசகாலன்யமைத்த ஆசனத்திலேறிஉட்காரும்படியாய்ஒருகாலையூன்றினர். உடனே பளபளவென்றுமுறிந்து சிங்காதனத்துடன் தேவாதிதேவன் நிலவறைக்குட் போகும்போது, ஸ்ரீபாதபங்கஜமிரண்டும் ஆதிசேடனுடைய முடிக்கப்பாலும் திருமுடி அண்டகோளகையினடிக்கப்பாலும்பொருந்தும்படிநின்றுவிஸ்வரூபங்கொள்ள, சந்திரசூரியர்இந்திரர்முதலியதேவர் ஸ்சப்தரிஷிகள்யாவருஞ் சிரத்திற் கரங்குவித்துத் தெண்டனிட்டுச் சிந்தித்துத்துள்ள நாகலோகத்தார் நடுங்கி நாங்களெப்படி பிழைப்போமென் றொடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வந்திக்க, அப்போது ஆகாயத்துக்கும் பூமிக்கும் ஒன்றாய் வளர்ந்த பகவான அனேகந்தலைகளும் வெகுவாகியகரங்களும் மிகுதியாகிய கால்களுமுடையவராய், படுகுழியிலிருக்கு மல்லரை-கிங்கரரை-ராட்சதரை-பப்பரரைத் தப்பில்லாமற் கொல்லத்தமது நெட்டைக்கால்களினல்நீட்டியுதைத்தும், குட்டைத் தாள்களினல் குமுங்கமிதித்தும், மட்டப்பதத்தினல் மாளவதைத்தும், கட்டைக்காலினற் சதைக்குழப்பியும், சிலரைத்துவைத்தும், சிலரைமிதித்தும், சிலரையெடுத்துச் சிதறவீசியும், சிலரையொடித்துப் பதறவீசியும், சிலரை நாகலோகத்தில்நசுங்கிவிழ உதைத்தும், சிலரை மாகலோகத்தில் மயங்கியெழவெறிந்தும், இவ்வாறு உதிரவெள்ளம் சபையிலோடி வரும்படியாகப்படுகுழிநிரம்பக்கால்களைவளர்த்திப் பருக்கச்செய்து குடையும்போது, சிலர்சிரமிழந்து நெரிந்தார்கள். சிலர்செவியழிந்துவிரிந்தார்கள் சிலர்கரமறுந்து உரிந்தார்கள். சிலர்கால்முறிந்துசரிந்தார்கள் சிலர்உடல்நொறுங்கிஉடைந்தார்கள் சிலர் ஊனழிந்து சிதைந்தார்கள். சிலர்படைநெரிந்து பிரிந்தார்கள். சிலர்பசியெழுந்து பறந்தார்கள். சுவாமியைக் கட்டவைத்திருந்த பாசக்கயிறுகளறுபட்டுத், தாங்கள்கட்டிக்கொண்ட பெண்சாதி பிள்ளைகளென்னும் பாசந் தங்களைக்கட்டக் கலங்கினவர்களாய்வருந்தி, வாளாயுதமுடைய வீரர்வாளாலும், வேலாயுதமுடையவீரர் வேலாலும், தண்டாயுதமுடைய வீரர் தண்டாலும், தடியாயுதமுடையவீரர் தடியாலும் இறக்கவும், வாயுவினல் மகமேருவின் சிகரப்போனது போல் வானத்திற்சிற்சிலவீரர் பறக்கவும் ராக்ஷதருடைய ஆயுதங்கட்டிய பாரித்த உடல்களெல்லாம் யானைக்காலிற்பட்ட சிறுதூறுகளைப்போல் நையவும்வச்சிராயுதத்தினல் ரெக்கையறுபட்ட மலைகள் போலக் கிங்கரர்களெல்லாம் சுவாமியின் காலுதையால் முறிபட்டுப் பறிபட்டு வீழவும், இவ்விதமாகப் படுகுழியிலுள்ளோரெல்லாம் பரதவித்துமாள உழக்கி, பற்பல காலால் பப்பரருடல்களை வாரியெறிந்தும் சிற்சில தாளால் கிங்கரர்குடல்களைச் சீறியணிந்தும், பற்பல காலால் இராக்கதரின் சிரத்தை வாரி பெறிந்தும்,

சிற்சில தாளால் மல்லர்களின் கரத்தைவாரி வீசியும் நிர்த்தனஞ் செய்யும்போது, அங்குள்ள எலும்புகளை வாரிவாரி இந்திரலோக முதலான இடங்களில்தமது காலால்வீசிவீசி இறைத்தது எப்படியிருந்ததென்றால் சுக்ரீபனுக்காகத் துந்துபி என்பவனுடையஎலும்பை ஸ்ரீராமமூர்த்தியின் காலாலுந்திய தன்மைபோலிருந்தது. அரசர்களிருந்த சபையெல்லாம் உதிரப்பெருக்கமும்-மூளைநெருக்கமும்-நிணவருக்கமும்- பிணவருக்கமாய்க் குவியச்செய்தது மல்லாமல், அகஸ்தியராற் பாதலத்தழுந்தும் விந்தகிரியைப்போலே எவரையும் மேலோங்கவொட்டாமல் அழுத்திப் பாற்கடலிற்சுழன்ற மத்தாகிய மந்தரகிரியைப்போற் படுகுழியினின்று சுழன்றுசுழன்று கூத்தாடி, ஆகாயத்தில்விரிந்த அனேககரங்கள்தோறும்வேலாயுதம்-சூலாயுதம்-குந்தாயுதம்-சக்கராயுதம்-தோமராயுதம் - எறியாயுதம்-ஈட்டி-வல்லயம்-சாங்கு-வாங்கு-கத்தி-கடாரி -இருப்புலக்கை-கதை-மழு-கொழு-கவன்-கண்டக்கோடாலி-வளைதடி-கொடுதடி-குண்டாந்தடி-சுக்குமாந்தடி -பாணுத்தடி-இவைகள்முதலிய ஆயுதங்களைப் பிடித்துச் சுழற்றி, உடுக்கைதரித்த கரங்களனந்தம் உறும்பிடித்த கரங்களனந்தம். பேரியடிக்குங் கரங்களனந்தம். தாரைபிடிக்குங் கரங்களனந்தம். தாளமத்தளமிறையுங் கரங்களனந்தம். குடமுழாபேரியறையுங் கரங்களனந்தம். சின்னம்பிடிக்குங் கரங்களனந்தம். ஜெயகாகளந்தாங்குங் கரங்களனந்தம். கொத்துமணிகளாட்டுங் கரங்களனந்தம். சிட்டிகைகள்போடுங் கரங்களனந்தம். கொம்புகள் முழக்குங் கரங்க ளனந்தம். பம்பை சங்கு முழக்குங் கரங்க ளனந்தம் புஷ்பம்-சந்தனம்-பாளிதம்-குங்குமம்-களபம் -கஸ்தூரி-சுதம்பப்பொடியணியுங் கரங்களனந்தம். முத்துமாலை மோகனமாலை-இரத்தினமாலை-வெற்றிமாலை - பதக்கமுதலியபற்பல ஆபரணங்களைத் திருத்திக்கொள்ளும் கரங்களனந்தம். சித்திரவஸ்திரம் பீதாம்பர முதலிய பற்பல பட்டுபட்டாவளிகளைத் தரித்துக் கொள்ளுங் கரங்களனந்தம். கைகளைசேர்த்துக் கொட்டிக்கொண்டு அவர்களைக் கறுவிக்காட்டுங் கரங்களனந்தம். எட்டுத்திக்குநிறைந்து இராஜசபையிலிருக்குந் துரியோதனன் முதலியபேர்களைச் சுட்டிக்காட்டுங்கரங்களனந்தம். திலகந்திட்டி வீரபட்டமணிந்து வாகைமாலை முதலானவைகளைச் சூடிக்கூட்டுங் கரங்களனந்தம் சமுத்திரத்தை அள்ளியிறைக்கும் பற்பலகரங்கள், மண்ணைவாரித்தூற்றுஞ் சிற்சிலகரங்கள். மரங்களைப் பிடுங்கியெறியும்பற்பலகரங்கள். மலைகளைவாரிஒன்றோடொன்று மோதிவீசும் சிற்சிலகரங்கள். கற்பகத்தருக்களின் புஷ்பங்களையுருவியிறைக்கும்பற்பலகரங்கள் சூரியசந்திர நக்ஷத்திரங்களை உள்ளங்கையிற்காட்டுஞ் சிற்சிலகரங்கள். மேகங்களையெல்லாம் வாரிப்பிடித்துப்பிழியும் பற்பலகரங்கள். திக்குயானைகளைச் சேர்த்து வாரியெடுக்கும் சிற்சிலகரங்கள். திசைக்காவலரையெல்லாம் நடுங்கப்பிடிக்கும் பற்பலகரங்கள். அமரர்களுக்கு அமுதம்பகரும் சிற்சிலகரங்கள் அஷ்டகுலாசலங்களைப்பறித்து நுனிவிரலில்வைத்துசுழற்றும் பற்பலகரங்கள். மகமேருவேமுதலிய அஷ்டகுலாசலங்களையும் வாரியெடுக்கததாவும் சிற்சிலகரங்கள்பாஞ்சசன்னியமுதலிய கோடிசங்குகளைப்பவளம்போன்ற திருவாயில்வைத்து நாதப்பிடிக்கும் பற்பலகரங்கள். வில்லைவளைத்து நாணிதொடுத்துக் குணத்தொனி விளக்கும் சிற்சிலகரங்கள். வீரகண்டாமணியைவிருதாகக் காலிற்றெடுக்கும் பற்பலகரங்கள். கடகசங்கணந் தோளணிமாலை கழற்றியெறியுஞ்சிற்சிலகரங்கள்வீணை புள்ளாங்குழல் பேரியாழ்முதலிய நாதசுரங்களைநாதிக்கச்செய்யும் பற்பலகரங்கள். மிர்தங்கம் மத்தளம் தாளமுதலியகருவிகளைக் கொட்டியடிக்கும்சிற்சிலகரங்கள். இவ்வாறுஉலகமெல்லாம் நிறைந்தகரங்கள் இத்தன்மையான விபரீதம்விளைத்துக்கொண்டிருக்கமேலண்டத்திற்குப்மேலாகபோன சிரங்களானவைஅதற்கப்பாலுள்ள பேரண்டத்திற்கு முட்டுக்கொடுத்ததைப்போல முட்டிக்கொண்டு, நாலண்டையுங் குனிந்து பார்த்துச் சிலசிரங்கள் சிரக்கம்பஞ்செய்யும் பலசிரங்கள் கலகலவென்றுநகைக்கும். சிலசிரங்கள் ஆகட்டுமென்றுசொல்லி அதட்டும். பலசிரங்கள்கோடையிடிபோற்குமுறிமிரட்டும். சிலவாய்கள்தேவலோகங்களைப் பார்த்துப்பேசும். பலவாய்கள் திரியோதனுதிகள் செய்தசவுரியங்களைக்கண்டுஏசும். சிலவாய்கள்சத்துருக்களைத்தூறும் பலவாய்கள் அக்கினிப்பொறிகளைப் பீறும் சிலகண்கள் சிவக்கவிழித்துஉறுக்கும் பலகண்கள் மின்னைவீசிப்பெருக்கும் சிலகண்கள் அஸ்தினுபுரத்துள்ள துரியோதனன்சகுனிதுச்சாதனன்கர்னன் முதலானவர்களைத் தேடிப்பார்க்கும், பலகண்கள்உபலாவியத்திலுள்ள தருமன் வீமன் அருச்சுனன் முதலானவர்களை நாடிக்கோர்க்கும் சிலகண்கள் பக்தாள் பேரில் அருட்பக்ஷம் வைத்துக்காக்கும் பலகண்கள் பாவிகள் இன்னுமுயிரோடிருக்கின்றார்களா வென்று நோக்கும். இப்படி பற்பலவிதமாகியகண்களினுலும் கரங்களினுலும்-சிரங்களினுலும்-உரங்களினுலும்கால்களினுலும்-வாய்களினுலும்-தோள்களினுலும் -தாள்களினுலும்-பிரளயகால நடுக்கம்போற் செய்யும் பிரமாதத்தை இந்திரன்முதலிய அண்டர்க ளெல்லாருங் கண்டு பயங்கொண்டு, கண்ணீர்சோரவிட்டு மூர்ச்சைபோய்த்தெளிந்தெழுந்து, நான்கு வேதங்களினுலும் ஸ்தவுத்தியஞ்செய்து, ஏகாங்கத்திரியாங்க பஞ்சாங்க சாஷ்டாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து தோத்திரித்தார்கள்: நாகலோகத்தினரெல்லாம் ஓ ஆரணனே! ஓநாரணனே! ஓபுவனங்களனைத்தையும் பெற்ற காரணனே! ஓகருணுகரனே! ஓகமலாசனி காதலனே! ஓபூரணனே! ஓபுண்ணியனே! ஓகஜேந்திர வரதனே! ஓகருணைக் கண்ணனே! ஓ லோகநாயகனே! கோபம் வேண்டாம் கோபம் வேண்டாமென்று ஓலமிட்டு நடுங்கினர்கள், மத்திய லோகத்துள்ள மன்னுயிர்களெல்

லாம் ஓமாதவா! ஓமதுசூதனா! ஓமன்னுயிரைப்பெற்று வளர்க்கு மங்களகுணசம்பன்னா! ஓஆபத்பாந்தவா! ஓஅனாதரக்ஷகா! ஓடவனகேதனா! ஓஉலகளந்தநாதா! ஓகமலக்கண்ணா! ஓகாசாம்பூவண்ணா! ஓ சங்குசக்கராயுதந் தரித்தருளியகண்ணா! ஓகாளமேகத்தையுங்கடலையுங் கறுக்கச்செய்யும்வண்ணா! ஓ எங்கள்சிதரனே! ஓபிதாம்பரனே! ஓபெருமானே! ஓமுகுந்தனே! ஓமுராரி! ஓவாசுதேவா! ஓவைகுந்தநாதனே! யென்றுவாழ்த்திப் பணிந்தார்கள். முன்னமே விஸ்வரூபதரிசனஞ்செய்யக்கருதி கிருஷ்ணமூர்த்தியினுடைய ஆக்ஞையினால் துரியோதனன்சபைக்குவந்திருந்து அவனுடைய துஷ்கிர்த்திய சிந்தையையறிந்து தக்கபடி தனித்தனி சில நீதிகளைத் திஷ்டாந்தமாக எடுத்தோதியுங்கேளாத அவன்சபையிலிருக்கச் சகியாது கண்ணனிடத்தில் விடைபெற்று அப்பாற்சென்றிருந்தமுனிவர் மூவரும், தங்கள் விழிகள்களிக்கத் தரிசித்துப் பிரம்மானந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் அளவற்ற வேதசாகைகளினால் ஸ்தவுத்தியஞ்செய்து கொண்டாடினார்கள்.

அக்காலத்தில்அந்தஇராஜசபையிலிருந்தவீஷ்மர் துரோணர்-கிருபர்-அசுவத்தாயர்-கர்னன்-திரிதராட்டிரன்-துரியோதனன்தவிரமற்றைப்பிள்ளைகள்சகுனி சிந்துபதிமுதலாகிய தேசத்தலைவர்கள் பதினெண்பாஷைத்தலைவர்கள் யாவருமெழுந்து,தீர்க்கதண்டமாக விழுந்து, நடுநடுங்கி, உடல்வியர்த்த, குடல்கலங்கி, கோவென்றலறிக்கூவி, அடாபாவியென்று துரியோதனனைத்தூற்றி, ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் புகழ்ந்து போற்றி, தத்வக்கியானசித்தமுடனே கர்த்தருடைய விஸ்வரூபத்தை நோக்கவும்பயந்து, இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்து, ஓசுவாமி! அடியேம் அக்கியானங்களினாற் றெரியாமற்செய்தஅபராதங்களைப்பொறுத்திரட்சிக்கவேண்டும்புண்ணியாவென்றுதண்டஞ்செய்து ஓஅருட்கண்ணா! ஓமணிவண்ணா!மன்னியும்மன்னியும் ஓவெண்ணெய் திருடிக் கூத்தாடிய கள்வனே! மன்னியும்மன்னியும். ஓமேசுகிறமுற்ற காமனைப்பெற்றவாமனா! மன்னியும்மன்னியும். ஓ வஸ்துரூபமாகிய வரதனே! மன்னியும்மன்னியும். ஓ! பதிதபாமரராகியநாங்கள்செய்தபாவத்தை மன்னியும்மன்னியும். ஓ! கெடுவதுதெரியாமல் விளைத்தகெடுதியை மன்னியும்மன்னியும் என்று லவாளுகப்புகழ்ந்துபேசியும்-பாடியும் ஆடியும் பாதங்களையுஞ் சிரங்களையும்பார்க்க ஏக்கமுற்றவர்களாய்ப் புலம்பிக்கொண்டிருக்க, இந்திரன்பிரமன்முதலாகிய முப்பத்துமுக்கோடிதேவர்களும்நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் பாரிசாதபுஷ்பங்களைக் கொண்டு சதசகஸ்திர நாமார்ச்சனைசாற்றித் தோத்திரஞ்செய்தார்கள். இதன்றியும் எழுவகைத் தோற்றம் நால்வகைப் பிறப்பென்று துன்னிய மன்னுயிர்த்தொகையாவும் கண்ணீர்ததும்பக் கசங்கிக்கலங்கிமதிமயங்கி ஏக்கும்போது, மும்மூர்த்தியும் ஒருமூர்த்தியாய்விளங்கியதேவதேவன் கொதியாழியசலம்போற் கோபமாறிக்குளிர்ந்து, கருணாசாந்த மூர்த்தியாய் விஸ்வரூபச் சொரூபத்தையடக்கிப், பழய வடிவினையுடையவராய்ப் பள்ளத்தினின்றுங் கரையேறி, மாபலியினிடத்தில் தானம்வாங்க மண்டலத்தையும் விண்டலத்தையும்அளந்து அடங்கிய வாமனனைப்போல் நிற்கக்கண்டு, எல்லோரும்வணங்கிவாழ்த்தவும் போற்றவுமாகியிருக்க அப்பேர்ப்பட்ட காலங்களிலேயும்துரியோதனன் சற்றுங்கலங்காமல் இறுமாந்து கொண்டு எனக்குப்பட்டமான நாள்முதல்இந்நாள்வரையினும் அனேக இந்திரசாலம் மகேந்திரசாலங்களெல்லாம் பார்த்தேன். எனக்கிது எம்மாத்திரம்போபோ இன்னுஞ்செவ்வையாசுக் கற்றுக்கொண்டுவாபோவென்று சொல்லி, சிங்காசனம்விட்டிறங்காமல்திடதயிரியத்துடனிறுமாந்திருந்தான் அப்பேர்ப்பட்டவனை ஸ்ரீகிருஷ்ணபகவான் உறுத்துப்பார்த்துச் சொல்லுகின்றார்

ஓய் துரியோதன மகாராஜனே! நல்ல காரியஞ்செய்தீர். நம்மைப்படுகுழியிற்றள்ளிக் கொல்லவல்லவோநினைத்தீர். உமதுநினைப்புக்குத்தெய்வஞ்சகாயம் பண்ணாமற்போய்விட்டது. எனதுபத்தினிமார்களின் மாங்கல்யபலமானது என்னைரட்சித்தது. இப்போது நமக்குவெகு சந்தோஷமாச்சுது சக்கிராபதியாகியநீர் அக்கிரமத்துக்குடன்பட்டபடியால், விக்கிரமத்துடன் உமது புத்ரமித்ர களத்ராதிகளையும் இன்றேகொன்று தென்றிசைப்பாலனிடத்தில் அனுப்பிவைப்பேன். அப்படிசெய்யாமல் மனம்பொறுத்தேன். அதேனென்று கேட்பீராகில், பூர்வம்நீரும் அருச்சுனனும் துவாரகைக்குவந்து நம்மைப் படைத்துணை கேட்டபோது ஆயுதமெடுக்கிறதில்லையென்று வாக்குதத்தஞ் செய்திருந்தபடியினாலேயும், சூதாமச் செயித்துத் துரோபதையைத் துகிலுரிந்த சபையில் உங்கள் நூறு பேரையும் நானேகொல்லுகிறேனென்றுவீமசேனன் சபதம்பண்ணிய வீரவசனம் தப்பிப்போகாமல்,தூதுவந்தநான் சகலபகையுமுடித்துவிட்டால் உமதுபகைவராகிய பாண்டவர்களுக்குப் பெருமையில்லையென்றும் இவைகளைஎல்லாம்எண்ணிப்பார்த்துஇன்றுஉம்மைமன்னித்துப்பிராணனுடன் விட்டுவைத்ததேயல்லாமல்வேறில்லை. நல்லது ஓய்துரியோதன மகாராஜனே! நீர் எனக்குப்பூமியிற்பள்ளம் வெட்டியபடியால் நான்உமக்கும் உமதுபுத்திரமித்திரர் யாவருக்கும் ஆகாயத்திற் பள்ளம்வெட்டியிருக்கின்றேன். உமக்குஅனுகூலமானவர்களுடனே அந்தப்பள்ளத்தில் அட்டியில்லாமல்விழப்போகிறீர்இதற்குயாதொருசந்தேகமுமில்லை.(முன்னளந்தநாழிபின்னளக்கும்)என்னும்பழமொழியாகிலும்கேட்டதில்லையோ? இந்தமொழியின் தாற்பரியமென்னவென்றால் அரிசிமுதலிய வஸ்துக்களை முன்னாலேஒருவருக்கொருவர் அளந்துகொடுத்திருந்தால் வாங்கினபேர்கள்பின்னாலே அளந்துகொடுப்பார்களாதலால், உலகத்திலொருவருக்கொருவர்

உதவுதல் வேண்டுமென்று சொல்லுவார்கள். அப்படியல்ல இந்தமொழிக்குப்பொருள்சொல்லுகிறேன். கேளும் பூர்வத்தில் நல்வினை தீவினைகளை எவ்வளவுஅளந்து தொகைசெய்து வைத்தார்களோ, அந்தஅளவின்படி பின்னுக்கு அனுபவிக்கும்படியாய் அந்தவினைகள் அளந்திருப்பதை நடத்துமென்று பொருள் கொள்ளும் பூர்வமென்றுசொல்லுவது முன்ஜனனமென்று சிலர்பேசுவார்கள். அப்படிஎண்ணவேண்டாம் நடந்ததெல்லாம் ஜன்மாந்திரமென்றும், பூர்வமென்றும், கதாப்தமென்றும்சொல்லப்படும், ஆகையால்இப்போது என்னைகுழிபிற்றள்ளப்பள்ளம்வெட்டியபடி, தெய்வம் உமக்கிதோ பின்னாலே பள்ளம்வெட்டி இருக்குதென்று தடையற யோசிக்கலாமென்று எல்லோருங்கேட்கும்படியாகசொல்லி, ஸ்ரீகிருஷ்ணபகவான்சபையைவிட்டெழுந்தருளியபோது, வீஷ்மர் துரோணராதி வெகுஜனங்களும் வந்தனஞ்செய்து அவர்முக நாடிப் பின்றொடர்ந்துவர, அவர்களெல்லாரையும் அவர்பார்த்துநகைத்து கண்டீர்களா சற்குணவான்களே! எந்தத்தலத்தில் எந்தகுலத்தில் இந்தமோசம்நடக்கும்? இவன் ஆகத்தக்கவனானால் இப்பேர்ப்பட்ட அனியாயத்திற்குடம் படமாட்டான். இவன் அழிந்துபோகிறவனாகையால் இந்தத்துன்மார்க்க புத்திபைநினைத்தான் நீங்களெல்லோரும் அறிந்திருங்கள். என்பேரிற் குற்றமில்லை நான்போய்வருகிறேன்நீங்களிவிடத்திற்றானே நில்லுங்களென்றுசொல்லிக். கர்னனுடைய கையைப் பிடித்துக்கொண்டு சிலதூரம்போய் இதனைச்சொல்லுவதானார்.

கண்ணன் கர்னனோடு சம்பாஷித்தல்.

ஓ அங்கதேசாதி பதியே! பார்த்தீரா? நானென்ன விரோதியா? இல்லை உனக்கும்அவர்களுக்குங் கலகமூட்டிவிட்டவனா? நீவேறு அவர்கள்வேறென்றுபார்க்கும்படியானவனா? ஒன்றுமில்லையே, பாண்டவர்கள்சொல்லிய சங்கதியைக்கேட்டு உற்றதுசொல்லவந்த தூதன்யான் என்னைப் படுகுழியிற்றள்ள நினைக்கலாமா? இந்தப்பாவம்வீண்போமா? தூதரைக்கொல்ல நினைத்ததோஷம் இந்தப்பூதலமுள்ளமட்டுக்கு நீங்காதிருப்பது மல்லாமல், அவன்செல்வமுமோங்கமாட்டாதே அவனுடையபுத்தியை நீர்தானேயோசியும் அவனுக்குஇன்னம் தகுந்த யுத்திகளைச் சொல்லும். நீர் இங்ஙனே நில்லுமென்றுசொல்லி நாலடி பெயர்த்து வைத்துப்போய், மறுபடியும் ஏதோஒரு நினைப்பு வந்தவரைப்போற்கர்னனையழைத்து, ஓகர்னராஜனே நீர்சாஸ்திர விசாரணையையுடையவர். நல்லபுத்திசாலி சாமர்த்தியர். விபகாரமுடையவர் மிகுகொடையாளி அங்கதேசாதிபதி எல்லாப்பாக்கியமும் உமக்கிருக்கின்றது. ஆனால் ஒருகுறைவு மாத்திரமுண்டு அதாவது, நீரின்னானென்றும் தாய்தந்தை இன்னாரென்றும் தெரிந்துகொள்ளாம லிருக்கின்றீர். உலகத்தாரெல்லாரும் சூதபுத்திரனென்று பச்சையாய்ச் சொல்லுகிறார்கள். நீரும்சபையினிடத்தில் யாராகிலும் இந்த இழிவுசொல்லைப் பேசினால் அப்போது குன்றிப்போகின்றீர். அதுநாயந்தான். எவ்வளவு அழகும் செல்வமும்தவமு மிருந்தாலும் குலதோஷம்வரலாகாது வந்தாலோ குணமோசம்போம். நானுமப்படியே யெண்ணியிருந்தேன். அப்பால் விசாரிக்குமிடத்தில் உமது உத்தமப்பிறப்பு முதலிய நன்மைகளெல்லாங் கேட்டு மேலாகிய பரமசந்தோஷமடைந்து, இந்தச்சந்தோஷ சமாச்சாரத்தை உமக்குச்சொல்லவேண்டு மென்றே இவ்வளவுதூரம்வந்தேன். மேலும் நானறிந்தும்உமக்குச் சொல்லாவிட்டால் என்னைத்தனை சிநேகத்துரோகி இவ்வுலகத்திலிரான். ஆதலாற் கொஞ்சங் கியாபகமாய்க்கேளும் குந்திபோஜமகாராஜாவின்குமாரத்தியாகியும் பாண்டுபூபதியின் பத்தினியாகியுமிராநின்ற குந்திதேவியம்மனானவள், தன்றந்தையிடத்திற்கன்னிகையா யிருக்கும்போது, தூறுவாசர் அருள்செய்த மந்திரம் ஐந்தில் ஒருமந்திரத்தைப் பரிக்ஷிக்க நினைத்துச் செபிக்க, அந்தமந்திரத்துக்கு அதிதேவதையாகிய சூரியபகவானறிந்துவந்து குந்தாதேவிக்கு அனுக்கிரகஞ்செய்ய, உடனே உம்மைப்பெற்றாள் அந்தச் சூரியனுடையவரத்தினாற் கன்னிகையாகவேயிருந்து, பின்பு பாண்டுராஜனைக் கல்யாணம்பண்ணிக்கொண்டு மூன்றுமந்திரங்களால் தருமராஜன் - வீமசேனன்-அருச்சுனன்-இந்தமூன்று பிள்ளைகளையும்பெற்றுக்கொண்டாள். பற்ற ஒருமந்திரத்தையும் தன்சக்களத்தியாயும் பாண்டுராஜனுக்குத்தவிதியை பாரியாளுமாகிய மத்திராதேவிக்கு அனுக்கிரகஞ்செய்து, திவ்யமானபிள்ளைகள் ஒருகர்ப்பம் ஒருபிறப்பாய் நகுலசகாதேவர்களைப் பெற்றுக்கொள்ளச்செய்தாள். கேளுங் கர்னமகாராஜனே! கன்னிகைப்பருவத்தில் முதற்பெற்ற பிள்ளையாகிய உம்மைவளர்க்கப் பாக்கியம் பண்ணாமல், உலகம்பழிக்குமே அரசன்பெண்ணாகிய இன்னாள்கல்யாணமில்லாமற்பிள்ளையைப் பெற்றாளென்று தேரையோர்ந்த இளநீரென்னும்பழிபோல்வருமே. தன்தகப்பனுடையநீதிக்கு குறைவுண்டாகுமேஎன்றேங்கி, உடனேஒருபெட்டியில்வைத்துஆற்றில்விட்டுவிட்டாள். மற்றக்காரியமெல்லாம்உமக்குத்தெரிந்தேயிருக்கின்றது. நானினிவிசேஷித்தொன்றுஞ்சொல்லவேண்டியதில்லை. ஆனால்பாண்டவர்களுக்குமூத்ததமயன் நீராகையால் இந்தராச்சியத்தைச்செயித்துக் கொண்டாலுஞ்சரியே, அல்லது விட்டாலுஞ்சரியே, இன்றுமுதல் உமதுதம்பிமார்கள் ஐவரும்வணங்க நீருமிணங்கிச் சகோதரவாஞ்சல்லியமேலிடும்படியாகப்பொருந்தி வாழ்வைப்பெறநான் கண்ணாற்கண்டு களிக்கவேண்டுமென்றுஆசைகொண்டுஇந்தமொழிகளைவிண்டேன்இரண்டாம்பேருக்குத்தெரியவேண்டாம் மனதுண்டானால்யோசித்து உடனேவந்துசேருகிறதுஉத்தமம் அப்பால்உமதிஷ்டம். என்பேரிற்கோபம்வேண்டாம்

என்றுசொல்லிய ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக்கர்னன் சொல்லுகிறான்

ஓ கிருஷ்ணதேவா! இன்றெனக்கு நல்லகாலம். என்குலகோத்திரமுதலிய யாவையுந்தேவரீர் வாக்கியத்தால்தெரிந்துகொண்டு தன்னியனுனேன்சுகமடைந்தேன். கிருதார்த்தனுனேன். கீர்த்திமானுனேன். ஆனுல் ஒருவார்த்தைகேளும். பாண்டவர்கள்என்தம்பிமார்களென்று இப்போதறிந்துகொண்டயான் அவர்களிடத்தில்வந்து சேர்ந்துவிட்டால், அடாபாவி நன்றிகுன்றினவனே என்று நாலுபேரும்பகைத்து நகைப்பார்களேயல்லதுதெரிந்தயோக்கியனென்றுஎன்னைச்சிந்திக்கப் போகிறதில்லை. உலகம்நிந்திக்கும். என்தம்பிமார்களுந் தேவரீரும் என்னைஎவ்வளவாகமதிப்பீர்கள். அதுமரியாதையல்ல மேலும் ஆற்றில் மிதந்துவந்த என்னையெடுத்துச் சூதனுயகன் வளர்த்துவந்தகாலத்தில், இன்னுன் இன்னஊர்-இன்னஜாதி- இன்னகுலம்-இன்னகோத்திரம்-என்றுஎதுவுமறியாமல்மனதுங்கூசாமல் என்னையாதரித்து அங்கதேசாதிபதியாக்கி, அஸ்தினபுரத்தின் செல்வங்களை யெல்லாம் என்வசத்திலொப்பிவைத்துத், தன்னுடனேகூட சரியாசனத்திலுமேற்றிச், சகலராஜர்களும் பணியும்படியாகச்செய்து, சிரேஷ்டபிராதாவைபார்க்கிலும் விசேஷமரியாதையுடையவனுய்ப் பேதமில்லாமல்,உடலிரண்டுஉயிரொன்றென்றுஉரைக்கும்படியாக,மலரும்மணமும்போல்வைத்திருந்த மகாராஜனுகிய துரியோதனபூபனுக்கும் பாண்டவர்களுக்கும் தற்காலப்பகைமேலிட்டு,உனக்கோ?எனக்கோ? இப்பவோ? அப்பவோ? வென்றிருக்கும்போது செய்நன்றிகுன்றிய தீயர்களைபோல்நான் என்தம்பிமார்களிடத்திற் கூடிக்கொள்வதுநியாயமா? நீரேசொல்லுமென்று கச்சைக்சொடியினுகிய கர்னன்சொல்ல, பக்ஷைத் திருமேனியையுடையகண்ணன் சொல்லுகிறார். ஐயாகர்னனே! நானறியக்கேட்டதையும் நான்சொல்லவேண்டிய கடமையையுஞ்சொன்னேன் அப்பால்உமது இஷ்டத்திற்கு சரியானபடி நடக்கலாமென்று விடைபெற்றுக் கொண்டு அஸ்வத்தாமன் அவ்விடத்திற்நிற்கக்கண்டுவாருமையா அஸ்வத்தாமரேயென்று கையைப்பிடித்தழைத்துக்கொண்டு நடந்துபோய் இதனைச் சொல்லுவார்.

கண்ணன் அஸ்வத்தாமனேடு சம்பாஷித்தல்.

ஓ குருபுத்திரரே! நான்கேட்டகாரியமும் - துரியோதனன்சொல்லிய உத்தரமும், எனக்குப் பள்ளம் பறித்ததும் இதுகளெல்லாம் உமக்குச்சம்மதமாயிருக்கிறதா?ஐயோ!அனியாயமாய் பதின்மூன்றுவருடம் நாட்டைவிட்டுக் காட்டில்வருந்திவந்த பாண்டவர்களுக்கு அவாளுடையநாட்டையுங்கொடாமல்,ஐந்துவீடுங் கொடுப்பதில்லையென்று சொன்னுல் அவர்களென்ன இவனைவிடப்போகிறவர்களோ? உமக்கென்ன தெரியாதோ? நாளைநடக்கப்போகிற கெடுதியை நாமெல்லோரும் அறியவேபோகின்றோம்.(பதறுதகாரியம்சிதறுது) என்னும்பழமொழி பொய்யோ? அது போகட்டும் இந்தத்துரியோதனனுக்கு இவ்வளவு கர்வமென்ன? உங்களையாவாகிய துரோணரைக்கூட ஆசாரியரென்றும் பாராமல், ஒவ்வொருசமயத்தில் எடுத்தெறிந்துபேசுகிறதாய் நான்கேள்விப் பட்டிருக்கிறேன். உம்மிடத்தில் மெத்தபபங்கராயிருக்கிறுனும் நீரெப்பேர்ப்பட்டவர் இந்தத்திரிலோகத்திலும்உமக்குமிஞ்சியபேர்க ளொருவருமில்லையா! உமக்கு அருச்சுனன்பேரிற்பக்ஷமுண்டு. நீங்களிருவரும் பள்ளிக்கூடத்துக்கூட்டாளியாகச்சேஉங்களிலொருவர்க்கொருவர் வைத்திருக்கும்பக்ஷத்தை நான்சொல்லவேண்டியதில்லை அதற்குஉங்கள் மனதேசாக்ஷி இன்னொருகாரியம் துரியோதனன் உம்மைவணங்கி வழிபட்டு நாளைநடக்கப்போகிற யுத்தத்திற்குச் சேனதிபதியாயிருக்கச்செய்வானென்று நானினைக்கிறேன். ஒருவேளை அப்படிநேரிடுமாகில்உங்கள்தகப்பனுருக்குச்சிஷராகிய பாண்டவர்கள் உமக்குஞ்சிஷர்களே அவசியம் பிதுராசாரமென்னுந் தன்மையைப்போற்பாண்டவர்களிடத்தில் உங்கள்தகப்பனுருக்கிருக்கும்பக்ஷம் உமக்குமிருக்கவேண்டும் நீர்பின்னையொரு உதவியுஞ்செய்யவேண்டாம் சேனதிபதி பட்டத்திற்கு மாத்திரம் ஒப்புக்கொள்ளாதிர். எவ்விதத்திலாகிலும் விலக்கிவிட்டுவிடும். பாண்டவர்களுக்கு உம்மாலாகிறஉபசாரமிதுவென்று வாயினுற் பேசிக்கொண்டுவந்து தமது வலக்கரத்தின் விரலிலிருக்குமுத்திரைமோதிரத்தை பெருவிரலாற்றளர்த்தி நிலத்தில்விழச்செய்தார். அப்போதே பூமியில்விழுந்த அந்தமோதிரத்தை அஸ்வத்தாமன்கண்டு இரங்கியெடுத்து, ஐயனே! இதோமோதிரங் கீழேவிழுந்ததென்றுகொடுக்க, அதை வாங்கக்கைநீட்டினவர்போல் மேல்நீட்டி ஆகாயத்தைப் பார்த்து, அஸ்வத்தாமரே! சூரியனைப்பரிவேடஞ்சூழ்ந்திருப்பதைப்பார்த்தீரா? உடனே மழைக்கேதுவாயிருக்கிறது. நானுஞ்சேனைகளும் பாண்டவர்க ளிருக்கும் உபலாவியம்போய்ச் சேருகிறவரைக்கும் மழையில்லாமலிருக்குமா வென்றுகேட்க, அஸ்வத்தாமனும் அந்தமோதிர மெடுத்தகையைநீட்டி ஆகாயத்தைக்காட்டி, ஆம் சூரியப்பரிவேடமே யென்றுசொல்ல, அப்பாற் பூமியைப்பார்த்துக் கையைக்காட்ட, அஸ்வத்தாமன் அவர்கையில் அம்மோதிரத்தை வைக்க வாங்கிக்கொண்டு நல்லது போய்வாருமென்றுவிடைபெற்றுக்கொண்டு தமதுஎண்ணங்கள்நிறைவேறியது போக இன்னுமென்ன இருக்கிறதென்றுஎண்ணிச்சந்தோஷமடைந்து தேவர்களெல்லாம் பூமாரிபொழிந்து போற்றும்படியாகச் சாத்தகி முதலிய சகலஜனங்களுடனேயும் விதுரன் வீட்டுக்குலந்து, மத்தியானபோஜனஞ்செய்து இளைப்பாறி இருந்தார்.

இப்பால் அஸ்வத்தாமன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு இராஜசபைக்குப் போகும்போது, அவிடத்திலிருந்த சகுனிமுதலாகிய பேர்கள் அஸ்வத்தாமன்செய்த குறிப்பைக் குற்றமாசப் போதனைசெய்து, துரியோதனனுடைய மனதைக் கலைத்துவிட்டார்கள் அப்போது வணங்காமுடியோன் மனம்பதைத்துச், சபையிலுள்ள யாவரையும்பார்த்து, கேட்டீர்களா? பகையாளியின் தூதனென்று வந்த அந்தபஞ்சையைப்பொருட்படுத்தி இந்த அஸ்வத்தாமன் அவன்பின்னேபோனதும், யாவருக்கும் போதிக்கும் ஆசாரியபுத்திரனாகிய இவனுக்கு அவன் போதித்ததும், அப்படியே இவன்உடன்பட்டுத் துரியோதனன் எனக்குச்சேனைபதிப்பட்டங்கட்டினாற்பாண்டவர்கள் பக்ஷத்திலிருந்து துரியோதனனைக் கெடுத்து விடுகிறேனென்றுசொன்னதும், அந்தக்கிருஷ்ணன் இவன்சொல்லை நம்பமாட்டாமற்சத்தியமபண்ணிக்கொடுவென்றுகேட்க அப்படியேஆகாயம்பூமியறிய பாண்டவர்களை ரக்ஷிக்கிறேனென்றுபாவசஞ்செய்து கொடுத்துவந்ததும், என்னஆச்சரியம்? இந்தமித்துருத்துரோகியை எப்படி நம்புவதென்று உரக்கக்கூவி, ஐயோ! என்னுடைய சொத்தைத் தின்னத்தக்க பேரெல்லாரு மிப்படியாயிருக்கவேணுமா? ஓதெய்வமே என்றுசிந்திக்க, அப்போது அந்தவசனத்தைக்கேட்டுக்கொண்டு சபைக்குவந்த அஸ்வத்தாமனைத்துரோணர்முதலிய யாவரும்நிந்திக்க, அஸ்வத்தாமன் சிந்தித்து, நாமொன்றும் பிரமாணம்பண்ணிக் கொடுக்கவில்லை. அவரும் பிரமாணங் கேட்கவுமில்லை. இப்படியிருக்க இப்பேர்ப்பட்ட அபரோதனை எப்படிவிளைந்ததென்றுயோசித்துச், சூரியப்பரிவேடங் காட்டியது ஆகாயத்தைக் காட்டினனென்றும், பூமியில்விழுந்த மோதிரத்தை யெடுத்தது பூமியைத்தொட்டுச் சத்தியஞ்செய்தானென்றும் ஸ்தாபித்து விட்டார்கள். இது சரிப்பட்டுப்போச்சுது இனிநாமெத்தனை விதமாகக் கற்ற உண்மைகளைச்சொன்னாலும் இந்தநாட்டார்கள் சற்றாகிலும்நம்பமாட்டார்கள். ஆ! ஆ! கிருஷ்ணா! உன்னெண்ணத்தில் வைத்துச்சொண்டு பண்ணிய சூதா இது? புண்ணியனே! உன்னெண்ண நிறைவேறிற்று? இந்த வையகமெல்லாம் என்னை வஞ்சகனென்றுரைக்கும்படியாகஒருபேர் மாட்டிவிட்டையேசபையிலிருந்த எல்லார்மனத்தையும் பம்பரம்போலாட்டிவிட்டையே. செந்தாமரை நாட்டமுடையவனே! நீரேஇப்படிமித்ரபேதஞ்செய்யக்கங்கணங்கட்டிக்கொண்டாற், பாண்டவர்களுக்குப் பகைவருமுண்டோ? ஓ ஆண்டவனே என்று வருந்திக்கொண்டிருந்தான்.

குந்திதேவி கர்னனிடஞ்செல்லுதல்

அப்பால் விதுரன் வீட்டிற்சென்ற சதாணாகிய கிருஷ்ணமூர்த்தியானவர் பகற்காலமெல்லாம் இளைப்பாறிக்கொண்டிருந்து, சாயங்காலம் தங்களத்தையாகிய குந்திதேவியின் அரண்மனைக்குச்சென்றார். இந்திரன்முதலிய எல்லாத்தேவர்களும் ஏத்திப்போற்றி, நமதுகர்த்தன் நமக்காகப் பொன்னடிபெயர்த்தருளி என்னபாடுபடுகின்றாரென்று தோத்திரஞ்செய்து வாழ்த்தினார்கள், அதுகாலத்தில் வசுதேவருடனே கூடப்பிறந்த நல்லத்தையாகிய குந்திதேவியம்மனானவள் எதிர்கொண்டு வந்துகண்டு மருமானைத்தழுவி வாழ்த்தவும், கோபாலகிருஷ்ணன்குந்திதேவியைப்போற்றி மாமி! கொடையாளியாகிய கர்னனிடத்திற்கு போய் வந்தீராவென்றுகேட்க, இன்னம் போகவில்லையென்று சொல்லக்கேட்டு, இதுநல்லதருணம் போய்வாருமென்று நடந்தகாரியங்களைச் சொல்லி, இனிநடக்கவேண்டிய காரியங்களையும் பேசிக்கொண்டு வாருமென்று பிரயாணங்கூட்டி யனுப்பிவிட, உடனேகுந்திதேவி மூத்தமகனைப்பார்த்துப் பேசவேண்டுமென்னும் ஆசைமேலிட்டு, நேசவிசுவாசமுள்ள கர்னமகாராஜனுடைய கொலுவாசலுக்குப் போகும்போது, வாசற்காவலாளர்கள் விரைந்தோடிச்சென்று, ஓராஜபூஜித மகாராஜராஜஸ்ரீயாகிய போஜனே! கேளும், வாசநீங்காத மாலையணிந்த தேசத்தரசர்கள் திறைகொண்டளக்கசிங்காசனத்திலிருந்துசெங்கோற்செலுத்துமெங்கோனாகிய பாண்டுபூபதியின் பட்டத்தரசிகுந்திமாதேவி நமதுகொலுக்கூடவாயலில் எழுந்தருளினாரென்று இறைஞ்சிக்கூற, அந்தவார்த்தையை அங்கதேசாதிபன்கேட்டு, எதிராகச்சென்று பிரதக்ஷணஞ்செய்து, சாஷ்டாங்கதெண்டனிட்டு பாதபூசைசெய்து மிகுந்த வார்ச்சல்லியத்துடனே அழைத்துக்கொண்டு போய் ஆசனமமைத்து அதன்மேலிருத்திப் பிர்மானந்தம் அடையவும், தாயாகிய குந்திதேவியும் குமாரனைப்பார்த்து, சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் சரீரம்பொங்கிச் சந்தோஷமடையவும், இவ்விதமாகஇருவருமகிழ்ந்து ஒருவரையொருவர்உற்றுநோக்கவும் கர்னமகாராஜன்கண்ணீர்சொரிந்து, அம்மா! ஜன்மாந்திரங்களிலே நான் நல்லதவங்களைச் செய்திருந்தபடியால் எனக்குத்தரிசனங்கொடுக்க இவிடத்திற்கெழுந்தருளினீர். என்பாக்கியமேபாக்கியம். தாயே! தேவரீர் இவ்வளவுதூரந் திருவடிவருந்த வரவிருந்த காரியமென்ன? அதனைக்கிருபைசெய்து திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று கர்னன்கேட்கக் குந்திதேவி சொல்லுகின்றாள்.

கேளும் குழந்தாய்! நீஎன்னுடையபிள்ளை நானுன்னைப்பெற்றதாய். அதெப்படியென்றால், தன்னந்தனிமையாகிய கன்னிகைப்பருவமாய் என்வீட்டிலிருக்கும்போது, ஒருமுனிவரானவர் என்னுடைய தந்தையாகிய குந்திபோஜமகாராஜனிடத்திற்குவந்து, வந்தஞ்தி மரியாதைகளைப்பெற்று ஆசீர்வதித்து, சாதுர்மாத விரதஞ்செய்ய வேண்டுமென்று சொல்ல, அதற்குடன்பட்டு, எனதுதந்தையானவர் அந்தப்பெரியவருக்குச்சகலவித ஊழியப்பணிவிடைகளுஞ் செய்யும்

படி எனக்குக்கட்டளையிட்டார். அந்தப்படிக்குமுதல் நாளைப்போற் பலநாளுஞ்சகலவித உபசாரங்களுஞ் செய்துக்கொண்டு வந்தேன் அப்போது அந்தமகா முனிவருக்கு என்பேரிற் கிருபைவந்து மகிழ்ந்து, ஐந்துதேவதைகள்பேரால் ஐந்துமந்திரம் உபதேசஞ் செய்து ஆசிர்வதித்துச்சென்றார். அப்பால்வாலையாகிய யௌவன முடையயான் எதுந்தோன்றாமல், அந்த மந்திரத்திலொன்றைப் பரிக்ஷிக்கும்படி எண்ணியுச்சரித்தேன். அந்தக்ஷணத்திற்றானே அந்த மந்திரத்துக் கதிதேவதையாகிய சூரியபகவான் தன்கிரணங்களைச் சுருக்கிப் பிரத்தியக்ஷமாகி, என்னைத் தருணியாக்கிக்கூடி, மீட்டும் எனக்கு அக்கன்னிமைப்பருவங் குறைவில்லாம லிருக்கும்படி வரங்களைப் பெருக்கி அனுக்கிரகஞ்செய்ய, உடனே எனதுகர்ப்பத்தில் நீவந்து உதயமாயினை மகனே! அந்தவேளையில் உன்னுடைய திருவுருவத்தையும் கவசகுண்டலத்தையுங்கண்டு களிகூர்ந்தயான், கன்னிகையாதலாற் கண்கலக்கமுற்று ஆளனில்லாமல் ஆண்பிள்ளைபெற்றாள் அரசனுடைய மகளென்று யாவருஞ்சொல்லிப் பழிப்பார்களே தந்தைமுதலிய பந்துக்களும் நிந்திப்பார்களே, குடிகேடியென்றென்னைக் குறித்துக் கோபிப்பார்களே, குணவதி இப்படியானாளென்று கூறுவார்களே, என்று குலைகுலைந்து, பற்பலவாறாக நினைந்து பழிக்கஞ்சினபாவியாகியயான், ஒருபெட்டகத்தி லுன்னைவைத்துஆற்றில்விட்டுவிட்டேன். அன்றுமுதலெனக் கொன்றுந் தெரியாது அப்பனே! இன்றறிந்துன்னைப் பார்க்க வந்தேன். என்கண்மணியே! உன்னைநானெடுக்கவும், மார்போடணைத்துப் பால்கொடுக்கவும், நீராட்டவும் தாலாட்டவும், சந்திரனைக்காட்டவும், சப்பாணிகொட்டவும், ஆபரணம்பூட்டவும், தத்தடியிட்டு நடந்து சிறுதேரோட்டவும், சக்கரைகைக்குங்கு தலைமொழி பகர்ந்து தாயே அம்மாவென்றுநீ அழைக்கவும், சீரந்தழைக்கவும் பாக்கியஞ்செய்யாத பாவியானுகினேன் அடாபாலனே! நானுனக்குத் தாயென்றும், நீயெனக்கு ஜேஷ்டகுமாரனென்றும், பாண்டவர்களுனக்குத் தம்பிகளென்றும், சந்தேகமில்லாம லுனக்குத் தெரிவிக்க வந்தேனென்று குந்திதேவியார் சிந்தைவருந்திச் சொல்லினாள்.

இந்த வார்த்தைகளையெல்லாம் குந்தியின்முதற் புத்திரனாகியகர்னன்கேட்டு, அம்மா! கோபஞ்செய்யாதீர். அடியேன் ஒருமொழிசொல்லுகிறேன். இதுவரையிலும் இல்லாததாய் இப்போது எங்கேயிருந்து வந்தார்கள். இதுகளெல்லாம்பப்பகம். தேவரீரை ஆளாக்கி இங்கு அனுப்பிவைத்த ஆளை நானறிவேன். மேலும் உமதுவாக்கியம் உண்மைதான். சந்தேகமில்லை. அப்படி இருந்தாலும் நானிப்போதுநம்பமாட்டேன் அதேனெனில் எவர்களானபோதிலுந் திரவிய சம்பன்னரா யிருப்பார்களாகில் அவர்களை, என்பிள்ளை என்தமயன்-என்தம்பி-என்மாமன்-என்தந்தை -என் பந்து-என்சொந்தம் என்றுசொல்லுவது இவ்வுலகமார்க்கம். ஆகையால் துரியோதனமகாராஜனுடைய சம்பத்தெல்லாம் என்பற்றாயிருக்கின்றது. அதனால் எனக்குத் தாயென்று வெகுபேர்வந்து, நான்பெற்றேன் நான்வளர்த்தே னென்றார்கள். அப்போது நான்விசனப்பட்டு "அன்னையெத்தனை யெத்தனையன்னையோ அப்பனெத்தனையெத்தனையப்பனோ" என்று மொழிந்த பெரியோர்களின் சொல்லுக்கிணங்க இருக்கின்றதே நமதுபிறப்பென்று நாணமுற்று, சூதகாயகனையும் அவரது மனைவியாராகிய இராதையம்மனையும் வணங்கிநோக்கி, என்வரலாறென்னவென்று கேட்டேன். அவர்கள்சொல்லியதாவது குழந்தாய்! பிள்ளை இல்லாமல் வருந்தியிருந்த யெங்களுக்குப் பிள்ளைகலிதீர்க்கும்படியாய்ப் பெருகிய ஆற்றிற் பெட்டியில் மிதந்துவந்த பெருமான்நீ உன்னைக் கண்டெடுத்து வந்து வளர்த்துப் பேரிடவேண்டுமென்று யோசிக்கும்போது, கர்னனென்று பெயரிடும்படி அசரீரிவாக்கியம்பிறந்தது. அப்படியே பெயர்இட்டு, எங்களாற்கூடியசிரீட்டுவந்தோம் அப்பனே! இது நீவந்தவரலாறென்று சொன்னார்கள். அதைக்கேட்டு மறுபடியும் அவர்களைப்பார்த்து. நல்லது நான்வந்த பெட்டியில் ஏதாகிலும் எழுதிஇருந்ததா? அல்லது வேறுபொருளேதாகிலும் இருந்ததா? அந்தப்பெட்டி எங்கேயென்றுகேட்டேன் அப்பா! அந்தப்பெட்டியில் உன்னுடைய திருவுருவமன்றி வேறொருபொருளுமில்லை அந்தப்பெட்டியு மிதோயிருக்கிறதென்று கொண்டுவந்து வைத்து, மகனே! இந்தப்பெட்டியைக் காப்பாற்றிய தன்மையைப்போல் உன்னையுங்கூடவைத்துக்காப்பாற்றவில்லையென்று சொன்னார்கள். அப்போதெனக்குப்பதினொன்றாம்வயதாகித் தனுர்வேதங்கற்றுத் துரியோதன மகாராசனுடைய சம்பத்தை யனுபவிக்குங்காலமாகையால், அந்தப்பெட்டியை எடுத்துவந்து எனது அரண்மனையிற் பூசைவீட்டில் வைத்துக்கொண்டு, நித்தியபூசை தூபதீபமும் கொடுத்துவந்த காலத்தில், ஒருநாள் என்னையாதரித்த அன்னையின் கர்ப்பம்போன்ற அந்தப்பெட்டியைத்திறந்துப ர்த்தேன் அதனிடத்திலொரு நாகவுரிப்பட்டை என்னும் ஒரு திவ்வியமான பட்டாடை நாலாகமடித்து விரித்திருந்தது. அது என்கண்ணுக்குத் தோற்றியபடியால் நானெடுத்துப் பூசித்து வைத்திருக்கின்றேன். அம்மா! அந்தக்காலத்தில் எனக்குத் தாயென்றுவந்த ஸ்திரீகளிடத்தில் இந்தப் பட்டுவஸ்திரத்தைக் கொடுத்து உடுத்திக்கொள்ளச் சொன்னேன். அவர்களும் உடுத்திக் கொள்ளும்படியாகக் கரத்தில் வாங்கி விரித்தவுடனே சிரத்தைத் திருப்பி உள்ளுடைந்து, உதிரம் வரண்டு அக்கினிக் கொழுந்தின் அனல் வந்துவீச, அரண்டு வெருண்டு அடித்துக்கொண்டு, மோதியும் விழுந்தும் உருண்டுபுரண்டும் ஓடிப்போய் விட்டார்கள். அம்மணி! என்னிடத்தில் தாயென்று வந்து பேய்போற் கதறிப் போவாரைக் கண்டு, அன்றுமுத

லின்றுவரையிலும்தாயென்றுவருவாரொருவருமில்லை என்று கர்னன்சொல்லக் குந்திதேவியார் கேட்டுக்குலுங்கநகைத்து, மீட்டு மவனைப்பார்த்து இதனைச்சொல்லுவதானள்.

அடா எனது புத்திரசிகா மணியே! உன்னைப் பெற்றநாளையில் உடுத்திக் கொண்டிருந்த பட்டுவஸ்திரத்தை உன்னுடம்புவருந்தாமற் பெட்டியில்வைத்துவிட்டேன் அந்தப்பட்டோ சுசி-ஆசாரம்-பக்தி-இவையெல்லாமுள்ளவர்க்குத் தோன்றுமல்லாமற் மற்றபேருக்குத் தோன்றுது. ஆகையால் எதோ அந்த வஸ்திரத்தை யெடுத்துவாவென்றியம்ப, அப்படியே பரிக்ஷிக்கவேண்டு மென்று கர்னனும் பக்ஷமுடன் தக்ஷணங்கொண்டுவந்துகொடுக்க, அதைவாங்கிச்சற்றுநேரம்யேங்கிச்,சூரியபகவானைச்சிந்தித்து, அந்நாகவுரிப்பட்டாடையைவிரித்து அரையிலுடுத்திக்கொள்ளவாடாமல்வதங்காமல்,ஒடாமல்ஒதுங்காமல்வெண்டாமரைபோல் விளங்கியமுகமும், பால்சுரந்து பசந்த தனமும், பக்ஷமும் இச்சையும் உடையவளா யிருந்த குந்திதேவியைக்கர்னன்கண்டுபிர்மானந்தங்கொண்டு அமுதமுண்டவனைப்போல அன்புநிறைந்து, அன்னையின்பாதத்தில்சாஷ்டாங்கமாசவிழுந்து, என்னை இன்னானென்று தெரியச்செய்த இறைவியேசரணமென்று இறைஞ்சிக் கர்னன்செய்தஉபசாரமும்தோத்திரமும் இன்னவிதமென்று எம்போலியரா லியம்பப் படலாமோ. அந்தக்காலையிற் குந்திதேவியானவள் தனது வாலைப்பருவத்திற்பெற்ற அக்கன்னிப் பிள்ளையைக்கட்டி தழுவிக்கொண்டு உச்சிமோர்ந்து உடனுடனணைந்து,தேகமெல்லாந்தடவிக்கொடுத்து வளர்த்தெடுக்கப்பாக்கியம்பண்ணுமற்போனேனே என்றுமனம்வருந்தும்போது மகாநுகியகர்னன் சொல்லுகின்றுன் கேளும்மாதரசி? தேவரீர் நல்லபூசை-விரதம்-நோன்பு-தவம்-பெரியோர்நேசம்-இவைமுதலிய பாக்கியமெல்லாம் பெற்றவராகையினல்,ஆறுபிள்ளைகளைப்பெற்று ஐந்துபிள்ளைகளை யெடுத்தவளர்த்துப் புத்திரவாஞ்சையை நீக்கிவிட்டீர். அடியேனைதேவரீருடைய கரத்திலிருந்து வளரவும், பாண்டவரைவரும் எனக்குத்தம்பிகளென்று பாரோர்மதிக்கவும் பாக்யஞ்செய்யாத பாவியானேன். அன்றியும் என்தாய் தந்தை-சகோதரர்-ஜாதி-குலம்-இவைகளின்தன்மை இன்னதென்று தாரணியோர் சொல்லிக்கொள்ளும் படியாகிய தவஞ் செய்யாத தரித்திரனனேன். இன்றெனக்குநல்லகாலமானதால் உம்மைக்கண்டு தரிசிக்கப்பெற்றேன்.என் மனக்குறைகளெல்லா மற்றேன் மேன்மையு முற்றேன் என்று தாயும் பிள்ளையுஞ் சந்தோஷத்துடன்வார்த்தையாடி மகிழ்வுற்றபோது, குந்திதேவி யானவள் கர்னனைப்பார்த்து, அப்பனே! இதுவரையிலும்உன் பிறப்பை நீயறியாதபடியால் துரியோதனனிடத்திலிருந்தாய் இப்போது இன்னனென்றறிந்து சொண்டமையாற் பாண்டவராகிய தம்பிமார் பணிவிடைசெய்யச் சிங்காசனத்தில் வீற்றிருந்து, தேசதேசராசர்கள் வந்து விசுவாசமாக பணியவும்,ஒப்புவனசக்கிரேஸ்வரா புண்ணியவானே! தருமபூபதிக்கு ஜேஷ்டசகோதரனை கர்னராஜமகாப்பிரபு! என்று தேவர்கள் முதலிய யாவர்களும் ஜெயங்கூறிக் கொண்டாடவுமாக, இனி நீ அஸ்தினபுரத்திலிருந்து அரசாளுகிறதைப் பார்க்கிலும் வேறுகியவைபவம் ஒன்றுமில்லையே. அப்படி செய்வதே கடனென்று குந்திதேவியாகிய தாய்சொல்ல, அதைக்கேட்டுக் கர்னனென்னும்சேய் சொல்லுகின்றான்.

கேளுமம்மாராஜபத்தினியேசூரியபகவானுடைய அனுக்கிரகத்தினல் என்னைப் பிள்ளையாகப் பெற்று, பிறர் பழிப்பார்களென்றஞ்சிப் பெட்டியிலிட்டுப் பெருக்காற்றில் விட்டுப், புத்திரப் பேராசையைநிராசைசெய்துக்கொண்டு, பெற்றதும அல்ல பெறுததும் அல்லவென்று என்னைமறந்துவிட்டீர். அம்மணி! உமதுகர்ப்பத்தி னலத்தினலேயோ, அல்லதுஎன்னைஉற்பவித்த சூரியபகவானுடையவலத்தினலேயோ, ஜன்மாந்திரத்தில் நான் தேடிக்கொண்ட தபோபலத்தினலேயோஉயிர்பிழைத்து ஆற்றில்மிதந்துவரும்யோது சூதனயகனும் ராதையும் என்னைஎடுத்து வளர்க்க அந்தச்செய்தியைத் திரிதராட்டிரமகாராஜன்கேட்டுத் தன்குலத்திற்குரியபிள்ளையாகச் சகலசெல்வத்துடன் போஷித்துவந்தான். (இத்தனைபெரியவன்கைதொட்டிழுத்தால் எப்படியாட்டோமென்பது.) என்னும் பழமொழிபோல், என்னைப்பிள்ளைக்கலிதீர்த்த பெருமானென்றெண்ணி வளர்த்த சூதனயகனும்ராதையுந் தடைசொல்லா திருந்தார்கள். நானும் தனிக்குழந்தையாதலினல அதிகசெல்வத்தில்வளர்ந்துவந்தேன். அப்பால் துரியோதனதியரும் பிறந்தார்கள். நான் பரசுராமரிடத்தில் தனுர்வேதமுதலானவைகளைக்கற்றேன். துரியோதனன் பாண்டவர்கள் முதலிய யாவரும் துரோணசாரியரிடத்தில் அவ்வில்வித்தை முதலானவைகளைக் கற்றுக்கொண்டு பரிக்ஷைபார்க்கும்போது, அர்ச்சுனனுக்கும் எனக்கும் பகைநேரிட்டுச் சபதங்கள் கூறியகாலத்தில், துரியோதனராஜன்என்னை உயிர்த் தோழனுகக்கொண்டு, அங்கதேசபட்டாபிஷேகந் தரித்துப், பொன்மாலையென்னும் பெண்ணைச் சுயம்வரத்திற் கல்யாணமுடித்துவைத்துத் தன்னுடன்கூடச் சரியாசனத்திலேற்றித் தம்பிமார்களும் சகலராஜர்களும்போற்றிச் சுற்றத்தார்முதலிய யாவரும் என்னைத்தொழும்படி யாகச்செய்து காணியாக்ஷி-அரசாக்ஷி-படையாக்ஷி முதலாகிய நிதிநிக்ஷேபங்களும் என்னிடத்திலொப்பிவைத்துப், பொற் பள்ளயத்தில் தன்னேடு கூடவிருந்துபுசிக்கும்படியாகப் பாராட்டிப், பேரும்-பிரபலமும்-புகழும் - பெருமையும் உண்டாக்கிப், பேதமிலலாமல் என்னைப்பாதுகாத்துவந்தான்.

இதல்லாமலும் இன்னமொரு விந்தையைக் கேளும். அன்னையாகியகுந்தியே! ஒருநாள் கெடிஸ்தலா

திபதியாகிய சுயோதன மகாராஜாவின்தர்மபத்தினியாகிய பானுமதியும்நானும், தனிமையாய் ஏகாந்தசாலையிற் சொக்கட்டாணடிக்கொண் டிருந்தோம் அந்தவேளையில் அத்துரியோதன மகாராஜன்வந்தான். அவன்வருவதைநேராகப்பார்த்த பானுமதியானவள் ஆட்டத்தைவிட்டெழுந்தாள் அரசன்வந்ததை நானறிந்துகொள்ளாமல், தோர்ப்புகெலிப்பு இரண்டும்பார்த்துவிட்டெழுந்திருவென்று அரையிற்சட்டியிருந்த மேகலாபரணத்தைப் பற்றினேன். அந்தப்பட்டத்தரசி அவசரப்பட்டுப் போம்போது, மேகலையறுந்து பலபலவென்றுதிர்ந்தது. அந்த அம்மனுடையஅரைவஸ்திரமுந் தளர்ந்தது. இந்த அலங்கோலத்தைப்பார்த்துக் கொண்டுவந்த அரசனனவன சற்றுஞ்சிந்தையிற் பேதம் பாராட்டாமல், அண்ணு! மேகலாபரணத்தைப் பொறுக்கி எடுக்கவா? அல்லதுகோர்க்கவா? என்றுகேட்ட துரியோதனனென்னும் இறைவனுகிய சாந்தமூர்த்திக்கு இப்போது வஞ்சகஞ்செய்து, உம்முடைய ஐந்துபிள்ளைகளிடத்தில்வந்து சேரச்சொல்லி நீரழைப்பதும், உமதுவார்த்தையைக் கேட்டு நான் வந்துவிடுவதும் ஞாயமா? தருமமா? அம்மணி! நீரே சொல்லும். இதன்றியும், க்ஷாத்திரமேலிட்டுப் பாண்டவர் சண்டைசெய்யக் காத்திருக்கும் போதாகிய இன்று, உமக்குஸ்ரீகிருஷ்ணன்சொல்லக்கேட்டுவந்து அழைக்கின்றீர். அன்றுமுதல்இன்றுவரையிலும்தாய் தந்தை தமர் குரு தெய்வம்போலிருந்து, சாதி குலம் கோத்திரம் க்ஷேத்திரம் இவைகளெல்லாம் உண்டாக்கி, எனக்கும் ஒருபெண்ணைப்பெண்டாக்கி, அன்னபானுதி ஆபரணங்களுங்கொடுத்துஆதரித்தமன்னனை இந்தவேளையிற் கைவிட்டு எப்படிவரலாந்தாயே "தந்தைசொன்மிக்க மந்திரமில்லைதாய்சொற்றுரந்தவாசகமில்லை" என்னும் நீதிக்கிணங்க உமது சொல்லைத்தள்ளாமல் வருவேனுகில், சந்திர சூரியருள்ளவரைக்கும் உலகம்பழிக்கும். நரகங்கிடைக்கும். நன்றிகுன்றிய பஞ்சமாபாதகரில் நான்முந்தி இருப்பேன். என்னைச் சுமந்து பெற்ற உமதுகர்ப்பத்திற்கு நிந்திப்பாகிய இழிவுவந்துநேரிடும். தெய்வமும் சகியாது. இதற்கு மேலாகிய பாவமும்பழியுமில்லை. அன்னையே! என்னை முன்னமே நம்பியிருக்கும் மன்னனுக்கு அவனிடத்திலுண்ட அன்னக்கடன் கழியும்படியாய் மன்னவருடனெதிர்த்து, அவர்களையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி இங்கிலந்துதிக்கப் பொன்னுலகத்திற் புகுவேனுகில், கன்னிகையாகிய உமது கர்ப்பத்திற்பிறந்தயான் கர்னன் என்கிற பெயருடையவனுவேன் மின்னலுக்கிணையாகிய இடையும், கண்ணுலுக்கிணையாகிய மொழியும், சொன்னத்திற் கொப்பாகிய வடிவும், அன்னத்திற் கொப்பாகிய நடையுமுடைய அன்னையே! இப்போது சொல்லவந்த சங்கதியைச் சிலநாட்களுக்கு முன்னே சொல்லுவீராகில், உமதுமனதுக்குஒப்பாக வந்துவிடுவேன். அப்போதில்லாமல்இப்போதுவந்தபடியால் என்மனது ஒப்பாது. ஒருவேளை தப்பாக வந்தாலும், பாண்டவர்களுக்குத் தமயன் உண்டவீட்டுக் கிரண்டகஞ் செய்பவனுனென்று தேவர்கள்முதல் யாவர்களுந் தூறுவார்கள். மன்னர் முதலியயாவரும் வசைகூறுவார்கள். ஓமாதாவே! இப்படி நடப்பதுசற்றுஞ் சரியல்லவே என்றுவாய்குளிர்ந்த வார்த்தைகளினுல்தேற்றிக், குந்திதேவியினென்னைத்தை மாற்றினுன் அந்தவார்த்தையைக் கேட்டமாத்திரத்திற் பகீரெனப்பதறி வாடிவருந்தி, மயங்கித்தியங்கிக் குலைகுலைந்து, கண்கலங்கிக் கோவென்றழுங் குந்திதேவியைப்பார்த்து, தானுமனந்தளர்ந்து, தாயைத தழுவிப்பணிந்து தைரியஞ்சொல்லிக் கண்ணீர் துடைத்துக் கவலையசற்றி, ஓகருணைசுரந்ததல்லீ! இதவெல்லாம்நமது செயலன்று. யாவும் பிரமத்தின்கட்டளையல்லது வேறில்லை போனதுபோக துந்தகிறைற்றைத் தூறுவாருபவரைப்போற் றுரிதப்படுத்திச், சேருக்குள்ள சிங்காரமுஞ்செய்து, தேவரீரை யென்னிடத்திற்குஅனுப்பிவைத்த தேவன் கருத்தென்னமோ? அதைத்தெரியச்சொல்லுந் தாயேயென்றுகேட்டதனயனைப்பார்த்துத் தாயாகிய குந்திதேவி சொல்லுகின்றுள்.

என்கான்முளையே! என்னிஷ்டப்படிக்கு உன்தம்பிமார்களுடன்கூடிவாழஎன்கண்களிக்க காணவேணுமென்று கருதிவந்தேன். அதற்குத்தரும விபகாரமும் நீதியுஞ்சொல்லி விலக்கி விட்டபடியால், காண்டவவனத்திற் பகைத்துவந்த அச்சுவசேனனென்னும் நாகாஸ்திரத்தை அருச்சுனனுக்காக வளர்க்கின்றுயென்றுகேள்விப்பட்டேன். அந்தக்கணையை அருச்சுனன் பேரில்எப்படியுந்தொடுக்கவேபோகிறுய் அப்படியே அருச்சுனன்பேறிற்பிரயோகஞ் செய்தபோதுதெய்வபலத்தினுல் தப்பிப்பிழைப்பானுகில் இரண்டாந்தரம் நாகாஸ்திரம்விடுவதில்லையென்றுஒருவரமும், இதன்றி அருச்சுனன்தவிர மற்றநால்வரும் போர்முகத்தில்நேரிடுவாராகில், அவர்களிடத்தில் பக்ஷமுய்த்து இச்சைவைத்து, வீரப்பிரதாபங் காட்டாமல் லகுவாகிய யுத்தஞ்செய்து, அவர்களுயிரைக் காக்கவேண்டியது உன்கடமையாக ஒருவரமும், இந்தஇரண்டுவரமுமெனக்குக் கொடுவென்று ஈன்றுள். கேட்க, கர்னமகாராஜன் முகமலர்ந்து சொல்லுகின்றுன். கேளாய்அம்மா! நாளைநடக்கப்போகிற ரணக்களத்தில் அருச்சுனனும் நானுமெதிர்த்துப் பற்பலயுத்தங்களும் பண்ணிப்பார்த்துக் கடைசியில் நாகாஸ்திரத்தை விடப்போகிறேன். அதுஎப்படியும் அவன்தலையைவாங்கிப்கிப்போடும். நீர் அப்போது மனங்கூசவேண்டாம். ஒருவேளை தலைபோகாமல் உயிர்பெறுவானுகில், திரும்பவும் நாகாஸ்திரந் தொடுக்கேன். அதேனெனில், நல்ல சுத்தவீரன்கரத்திலிருந்து புறப்படுங் கணைகள் சத்துருவைக் கொல்லாமல் விடா. ஒருவேளைலக்ஷயந் தப்பிப்போமாகில், மறுபடியுந் தொடுவது ராஜதர்மமும் - தனுர்வேததர்மமும்-வீரதர்மமும் - மேலாகிய

ஆண்மையுமல்ல, மேலும்மற்றநாலுதம்பிமார்களையும் என்கையினாற் கொல்லுகிறதில்லை. இதைஐய மில்லாமல் உமது மனதிற்கொள்ளும் அம்மாவென்று அங்கதேசாதிபதி இந்த இரண்டுவரமுங்கொடுத்துப் பூமிதேவியைப்போன்ற குந்திதேவியைப்பார்த்துபாண்டுபூபதியின்மாதேவி! நீர்வேண்டிய வரமிதுதானா? ஆனால் எனக்கிரண்டு வரந்தாருமென்று தொழுது அடிவணங்கிய குழந்தையை ஆதரித்தெடுத்து, அப்பாமகனே! என்னருந்தவக் கண்மணியே! உனக்குவேண்டியவரம் இன்னதென்றுரையடா என்செலவத்திற் சிறந்த செங்கரும்பே! என்று குந்திதேவியார் சொல்லப் புந்தியகிழ்ந்து கர்னன் கேட்கின்றான்.

என்னுயிரையும் மன்னுயிரையும் ஈன்றுவளர்க்கும்இறைவியே! கேளும் போர்க்களத்தில் அருச்சுனனும் நானும்எதிர்த்துச் சமர்புரியும்போது, அருச்சுனன்கையினால் நானிறந்து விடுவேனாகில், உடனே தேவரீரோடிவந்து எனமேல்விழுந்து, என்மகனே என்மகனே என்றலறி அழுது, உமதுமகனென்றுஉலகமறியச்செய்வது ஒருவரம். அப்பேர்ப்பட்ட முடிவுகாலம் எனக்கு நேரிடுகிறவரையிலும், நானுனக்கு மூத்தபிள்ளையென்றும், தேவரீர் தாயென்றும்,பாண்டவரெனக்குத் தம்பிகளென்றும், இம்மண்ணுலகிலொருவருக்குந் தெரிவிக்காமல் மனத்தில்வைக்கவேண்டியது ஒருவரம். ஒருவேளை வெளிப்படுமாகிற்பாண்டவர்கள்சண்டையை நிறுத்திவிட்டுச். சபதங்களையும்விட்டு, நாட்டை யெனக்குக்கொடுத்து, தாங்கள் காட்டை யநுபவிக்கும்படியாய்ப் போய்விடுவார்கள் அப்படியெனக்கு நாட்டைக் கொடுத்தாலும், அந்த நாட்டை என்தோழனாகிய துரியோதனனுக்குக்கொடுத்துவிடுவேன். ஆகையால்விரதமுங்கெட்டுச்சுகமும் விட்டுப்போவானேன்? அம்மா! இப்போது நாமிருவரும் பேசியமர்மம் வெளிப்படாமலிருக்கவேண்டியது. இந்த இரண்டுவரமு மெனக்குத் தாருந்தாயேயென்று இருகரத்தையும்நீட்டி இரந்துகேட்குங் கர்னனை நோக்கிக், கண்ணுமனமுங் கரைந்துவிரைந்து, உன்னெண்ணப்படிக்கு வரந்தந்தே னென்றுரைத்த தாயைப்பணிய, தாயுஞ் சேயைத்தழுவிச் சிந்தைகளித்துத் தேகந்தளிய, அடாகண்மணியே! இதுவரையிலும் பிரிந்திருந்த நம்மை இன்னாரென்று தெரிவித்துக்கூட்டியதெய்வம் மறுபடியும் பிரிக்கநினைத்தால், என்மனமெப்படி தாளுவேன்? வழிநடந்தெப்படி மீளுவேன்? ஆ! ஆ! குமாரனேயென்றுஅலறிய அன்னையை ஆதரித்துபசரித்து, அடிமலரிணையில் முடியுறவணங்கி விடைகொடுத்தனுப்பித் துடி துடிப்புடன அரண்மனைக்குட்போயினான் கர்னமகாராஜன்.

இப்பால் குந்திதேவியானவள் படபடவென்று வழிநடந்துவந்து, மன்னர்பெருமான் மனையிற்புகுந்து, மருமகனாகிய கிருஷ்ணன் எதிரோடிவந்து வணங்கச் சிந்தைமகிழ்ந்து, வாரியெடுத்துஉபசரித்துஉள்ளறையிற் போயிருந்து, கர்னனிடத்திற் சென்றதும் அவனைக்கண்டதும், சங்கதிவிண்டதும், அவன்நவின்றதும், அதற்குஅங்குநடந்ததும் ஆகியயாவற்றையும் குறைவில்லாமற் சொல்லக்கேட்டகிருஷ்ணன் தனதெண்ணமெல்லா மீடேறியதென்று இறுமாந்தெழுந்து, மாமி! நான்வந்து சிலநாளாய்விட்டது. என்னமோ ஏதோவென்று என்னை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். உன்பிள்ளைகளாகிய பாண்டவர்கள் ஆதலால் விரைவில்யான் அவர்களிடத்திற்குப் போகும்படியாய் உத்தரவுகொடும் உத்தமியாகிய அத்தையே யென்று கிருஷ்ணன்கேட்க, குந்திதேவி சொல்லுகின்றாள் மருமகனே! எங்கள்குடும்பத்தினுடைய காரியங்களையறிந்த நீயிருந்தும், என்பிள்ளைகள் சகலத்திலும் நிறுவாகசாலிகளாக யிருந்தும், நாட்டையும்நகரத்தையும் நலத்தையும் மானத்தையும் பங்காளிகள் கையிலொப்பிவைத்துப்போட்டு, காட்டையும், கலகத்தையும், அவமானத்தையும், கைக்கொண்டு காலம் போக்குவது காரியமல்லவென்று,நான்சொன்னதாய் என்பிள்ளைகட்குச் சொல்லும் மேலும் நீர்மேலெழுத்துபோல நிலையில்லாக் காயமென்னும் நிச்சயத்தைப் பெற்ற இந்தப்புல்லுடலைக் கல்லுலாக நினைத்துச், சபையிற்கூறிய சபதத்தை நிறைவேற்றும விருப்பது இராஜவீர தருமமல்லவென்றுசொல்லும் இதன்றியும் இந்தப்பாண்டவர்களைப் பெற்றுவளர்க்கத் தவம்பெற்றேனேயல்லது, பாரதயுத்தத்திற் பிராணனுக்கானியில்லாமற் காக்குங்கடமை யென்னுடையதல்ல. எல்லாந் தேவரீருடைய கடமையே. திருவுந்திறனும் உம்முடைய உடைமையே. என்மருமகனாகியகண்ணனே என்புத்திரரை உமது அடைக்கலமாக ஒப்பிவைத்திருக்கின்றேன். எனக்கு வேறொருதுணையுமில்லை.நீரே துணை உம்மையேநம்பினேன். என்று குந்திதேவியானவள் கோவென்றலறிக் கூறக்கேட்டு தீனதயாளுவாகிய திருமால் மாமியைப்பார்த்து, ஓமாமி! நீர்ஒன்றுக்குஞ் சிந்தனைப்படவேண்டாம். எல்லாமென்பொறுப்பேயல்லதுவேறில்லை. நீர்நல்லசேதி கேட்கப்போகிறீர். இவிடத்திற்றானே நில்லுமென்றுசொல்லிப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு விதுரன்வீட்டுக்குவந்து ஓவிதுரராஜனே! நான் உபலாவியத்திற்குப் போய் வருகிறேன் விடைதாருமென்றுசொல்ல, விதுரராஜனானவன் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இருகரத்தையுங்குவித்து அஞ்சலியஸ்தனாய் நின்றுசுவாமி! பாண்டவர்களையும் என்னையுங் காப்பாற்ற வேண்டிய கடன் தேவரீருடைய திருவடித்துணையல்லது வேறில்லை. ஆகிலும் ராஜசபையில் மோசஞ்செய்து சூதாடி நாட்டைப் பறித்துக்கொண்டு வாதாடிக் காட்டைக் கொடுத்ததுஷ்டனாகிய துரியன், இனி இஷ்டஜனபுத்திரருடன் ரணக்களத்திற் பட்டழியும்படியாகச்செய்து கெட்டியாகிய வெற்றியைப் பெறவேண்டுமென்று என்புத்திரராகிய ஐவருக்குத் தெரியப்படச் சொல்லித், தேவரீருங் கூடயிருந்து ஜெயஸ்தம்பம் நாட்டித்

திருமுடிசூட்டி வைக்கவேண்டியபாரந் தங்களுடைய
தென்று விதுரராஜன்விண்ணப்பஞ்செய்துக்கொள்ள
அதைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லுகின்றார்.

கேளும் விதுரராஜனே! செப்பிடு வித்தைபோல்
உமதுசொற்படியே நடக்கும். அப்படியேபார்ப்பீர்.
இப்படியேயில்லும்.துயரப்படாதீர் துரிதமாகச்செல
வுகொடும் விதுரராஜனேயென்று பயணம் பெற்றுக்
கொள்ள, உடனேயாவரும் பயணபேரிமுழக்கினார்க
ள். சாத்தகி முதலியசேனைகள் சமுத்திர கோஷ்டம்
போலச் சப்திக்கக் குடைகொடி முதலியசகலவிருது
க்களும் வாத்தியங்களுடன் இராஜவீதியில் நிறைந்து
நெருங்கும்படியாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இரதமேறி
வரும்போது, துஷ்டசதுஷ்டாள் நான்குபேர் தவிர
மற்றயாவரும்வாகனமேறிப் புறப்பட்டுவந்துசுவாமி
யாருடன் தெற்குவாசற்படி வரையிலும்போய்வழிவி
டுத்துவணங்க, அவிடத்தில் தமதுரதத்தை நிறுத்தி,
யாவரையும்நோக்கி வெகுதூரம் வந்துவிட்டீர்கள்நில்
லுங்கள் நில்லுங்களென்று எவரெவர்களுக்கு எந்தெ
ந்த மரியாதை செய்யவேண்டியதோ அந்தந்தமரியா
தை யுபசார வந்தனங்களைச்செய்து விடைபெற்றுக்
குக்கொண்டு சிலதூரம் போம்போது, சிற்சிலபேர்
கள் தனித்துவந்துபேசினார்கள். அவர்களுக்குத் தகு
ந்த வார்த்தைகளைச்சொல்லி அஸ்தினா புரத்திற்குப்
போகும்படியாய் உபசாரத்துட னிறுத்திவிட்டு அப்
பாற்போகையில், விதுரராஜன் ஓடிவந்துபணிந்து ஒ
ருமொழி சொல்லுகின்றான். சுவாமி ஸ்ரீகிருஷ்ணமூர்
த்தி! அந்தச்சபையில் துஷ்டனாகிய துரியன் அவமரி
யாதையாய் என்னை இகழ்ந்துபேசிய வசனத்தைஎன்
பிள்ளைகளாகிய ஐவரிடத்திற் சொல்லவேண்டாம். அ
தேனெனில், இந்தச் சொல்லைக் கேட்டவுடனே என்
பிள்ளைகளிப்போதேவந்து இவனைச்சேதித்துக் கத்தி
திக்கத்தனை சதையாகக்கழித்துவிடுவார்கள் அப்போ
து உலகமென்ன சொல்லுவரென்றால் ஏதோதெரிந்து
தெரியாமற் பிள்ளையானவன் ஒருவசனத்தைச் சொ
ன்னபோதிலும், ஒருபொல்லாங்கைச் செய்தபோதி
லும், தந்தையே முதலிய பெரியவர்கள் அப்போது
தண்டித்துக் கண்டித்துவிட்டு அப்பால் மறந்துபோ
வார்கள். அப்படியிருக்க, இந்தவிதுரன் ஒருகுடல்
வேற்றுமையானதினால்,வெகுண்டெழுந்து சொல்லிய
பேச்சை விஷம்போல் வைத்திருந்து,பாண்டவர்களு
க்குத் தெரிவித்து, துரியோதனனுடைய பிராணனை
வாங்கிவிடச்செய்தான். பார்த்தீர்களா? கண்ணில் வி
ரற்பட்டால் நாலுபேருக்குச்சொல்லிக் கலகஞ்செய்து
கையைத்தறித்துவிடுவார்களுமுண்டோ?என்றுபலவி
தபழிப்பு வசனங்களைப் பேசுவார்கள். என்னை யேசு
வார்கள். அந்தப்பழி நமக்குவருவானேன்?எப்படியு
ம் நடக்கவேண்டியகருமம் நடக்கப்போகிறது. ஆக
லால் தேவரீரொன்றுஞ் சொல்லவேண்டாம்என்றுவி
துரராஜன் விளம்பியபோது, அரிவாசுதேவன் மெத்
தவும் விசனமுடையவராய் விதுரராஜனைப் பார்த்துச்
சொல்லுகின்றார். ஓவிதுரராஜனே! (நன்றாந்தகிழவன்
வந்தால் உலர்ந்தவிறகு சேதமாம்.) என்பதுபோல்,
நானிவிடத்திற்குவரவும், உள்ளன்பினையுடையஉமது
வீட்டிலிறங்கவும், உமக்கு இப்பேர்ப்பட்ட சொல்லி
ழிவு வில்லழிவுவரவும் இருந்ததல்லவா? நல்லதுசுவா
மியிருக்கின்றார். விதுரரே! நீரொன்றுக்கும் விசனப்
படாதீர். இந்தச்சங்கதியைப் பாண்டவர்களுக்கு நா
னேன்சொல்லுகின்றேன், சொல்லமாட்டேன். நீர்
நில்லும் விதுரராஜரேயென்றுநோக்கிப்புறப்பட்டார்

இவ்வாறு முல்லைமாலையையுடைய முகுந்தன் இ
ரதகஜ துரகபதாதிகளுடன் சகலவாத்தியங்களு முழ
ங்கிக்கொண்டுவரப் பிரயாணமாகி, சாத்தகியுந் தமது
பக்கத்திற்றானே வரும்படியாகச்சென்று, மார்க்கத்
திற் பலமன்னவர்களாற் போஜனாதிமுதலிய சவுக்கி
யங்களையுங்கொண்டு, பண்டுபலாதிகளுமுண்டு, உப
லாவியம் வந்துநிற்க, தங்களைக்கண்டுபேச யத்தனித்
துவரும் பகவானை எதிர்கொண்டு பார்க்கும்படியாய்
வருகின்ற அப்பாண்டவர்களும் பற்பல அற்புதுசொ
ற்பெறு மற்புதமற்புய விற்பெறு நற்குணவிற்பன இ
ராஜர்களும், பிராண விசுவாசர்களும், மிகுந்தநேசர்க
ளும், மகாகவிராஜர்களும்,சற்குலபோஜர்களும்,பற்ப
ணிதாசர்களும், மந்தஹாசர்களும், நகரவாசர்களும்,
ஜேஜேயென்றுகூடிச் சம்பிரமங்கள்பேச, இங்கிதமங்
கையர் தங்கள்தனங்கள் குடங்கள்குலுங்க நடங்கள்
புரிந்தடி தத்திமிதாவென திமிதிமிதிமியென மத்தள
பேரிகை குமுகுமுகுமுவென, தாரைபூரி வீரசின்ன
பேரி சாகளங்களோசை சமுத்திரத்தோசையென்ன
அதிர்ந்திட, மகத்துவத்துடன் முன்னமெதிர்ந்திட,
கண்டமாரனைவருந் தெண்டன் தெண்டனென்றுசொ
லிக் கற்பகப்பூமாரிபொழிய, அற்புதர் பாமாலைமொ
ழிய, கலந்திருவர்சேனைகளுங் கைப்பிடித்துக்கொண்
டாடிக் கண்ணனைக் கண்ணினாற்கண்டு, யாவரும் வா
கனம்விட்டிறங்கி மகிழ்ந்துவரும்போது சுவாமியும்
இரதம்விட்டிழிந்து எதிர்நோக்கிவர, எல்லோரும் வ
ணங்கிப் பல்லோருமிணங்கி, நல்லோரையினிற் சகல
வைபவங்களுடன்நீராஞ்சனாதி கற்பூரதீபங்களினாலுப
சரித்து, உபலாவியராஜவீதியைப் பிரதக்ஷணஞ்செய்
துவைத்து,இராஜமண்டபத்திற் கழைத்துக்கொண்டு
போய் நவரத்னகசித சிங்காசனத்தி லெழுந்தருளச்
செய்து, அர்க்யபாத்ய ஆசமன்ய சந்தனாக்ஷதை தாம்
பூல புஷ்ப தூபதீப நைவேத்திய உபசாரங்கள் செய்
து வணங்கிநிற்கையில், சர்வலோக சரண்யன்சந்தோ
ஷித்து,சகலருமிருக்கும்படியாய் உபாசாரஞ்சொல்லி
அப்படியே யாவருமிருந்தபின்பு, உபலாவியம்விட்டு
அஸ்தினாபுரத்திற்குத் தூதுபோனதும், அவிடத்தில்
துஷ்டசதுஷ்டாள்தவிர மற்றப் பேரெல்லாரும் எழு
ந்து எதிர்வந்து கண்டுகளித்து மகிழ்ந்ததும், தாம்

விதுரன் மனையிலிறங்கியதும், மறுநாள் இராஜசபைக்
கெழுந்தருளியதும். நாரதர் கண்ணுவர் சமதக்கினி
இவர்கள்மூவருங்கூடவந்ததும் எல்லோருக்கும் வந்த
னைவழிபாடுகளைநீங்கள்சொன்னதாகச்சொல்லித்துரி
யோதனனுடைய கொலுக்கூடத்திற சென்றிருந்து
வந்த செய்தியைப் பேசியதும், அந்த வார்த்தைக்கு
அவனுடன்படாமற்போனதும்முனிவர்மூவர்களும்
உறுதியாகியசிலநீதிதருமங்களெல்லாமுரைத்ததும்
அவனந்த வார்த்தைகளைக் கேளாமற் சண்டைசெய்
து ஜெயித்தவர்கள்நாடாளுகிறதென்று சொன்னதும்
தனக்கு விருந்துசெய்த விதுரனை இகழ்ந்து வாய்க்க
டாத வார்த்தைபேசி ஏசியதும் அவனுடம்பு கூசி
வில்லை வெட்டியெறிந்து சீ சீ என்றிகழ்ந்து எழுந்து
போனதும். அன்றிராத்திரி நிலத்தைப்பறித்துப் படு
குழியாகச்சமைத்து உதயத்திற் றமமையழைப்பித்து
அந்தப்படுகுழில் வீழச்செய்ததும்,உடனே தமதுவிஸ்
வரூபத்தால் அவன்கருத்தை அதமாக்கி அசுவத்தா
மனுக்குச் சேனைபதிப்பட்டம் ஆகவொட்டாமல் தடு
த்துவிட்டதும். மற்றச் சங்கதிகளியாவும் மைத்துன
ராகிய பாண்டவர்க்கும் மற்றையர்க்கும் மனத்திர்ப்
தியாகும்படியாய்ப் பிண்டமாகத் திருவாய்மலர்ந்த
ருள, யாவரும் அதிகஆவலோடுங்கேட்டு ஆனந்தங்
கொண்டிருந்தார்கள். ஆனால், ஒஜெனமேஜெய மகா
ராஜனே! கர்ணனின்னனென்பதும், குந்திதேவியை
விட்டு அக்கர்ணனிடத்தில் வரம்வாங்கி வரச்செய்தும்,
குந்திதேவி அவனுக்குவரங்கொடுத்ததும், இந்தச்சங்
கதிகளைமாத்திரம் பாண்டவர்களுக்குத் தெரிவிக்கா
மல், மற்றச் செய்திகளை யெல்லாந் தெரிவித்தார் ஸ்ரீ
நிவாசனாகிய திருமாலென்று வைசம்பாயனர் சொல்
லவே, வபுஷ்டாதேவி நாயகனாகிய ஜெனமேஜெயம
காராஜன்கேட்டு மனமகிழ்ந்து, அவரைப் பிரமமாக
நினைத்துப்பூசித்து, வந்தனைவழிபாடுகள் செய்து. வ
ணங்கி, என்னைப்புனிதனாக்கிய புண்ணியனே! மேல்ந
டந்த விர்த்தாந்தத்தையுஞ் சொல்ல வேண்டுமென்று
இருகரத்தையுங் குவித்துக் கேட்க, வைசம்பானர்
சொல்லத் தொடங்கினார்.

கிருஷ்ணன் தூதுச்சருக்கம் முற்றிற்று.

நான்காவது,

அணிவகுப்புச் சருக்கம்.

கண்ணன் துதி.

படர்ந்தகானகர் திரிந்துமீண்டன்புடன் பணிந்தபஞ்சவர்க்காகக்
கடந்தஞானியர் கடவுளர்காண்கலாக் கழலிணைசிவப்பேறத்
தொடர்ந்தநான்மறை பின்செலப்பன்னக துவஜன்மாநகர்த்தூது
நடந்தநாயகன் கருமுகில்வண்ணமென் னயனம்விட்டகலாதே.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! அப்பால்
ஸ்ரீகிருஷ்ணபகவானனவர்பாண்டவர்களுடன்சபாம
ண்டபத்திலிருந்து சொல்லுகிறார். ஓ தருமராஜனே!
கேளும் நாமிவடம்விட்டுப் புறப்பட்டு அஸ்தினபுரத்
திற்குச்சென்று விதுரன் வீட்டிலிறங்கிப் போஜனங்
கொண்டு துரியோதனன் சபைக்குப்போனேன்.அவி
டத்திலிருந்தயாவரும் வந்தனைமுதலிய மரியாதைசெ
ய்ப ஆசனத்திருந்தேன். அதுகாலையில் நான்விதுரன்
வீட்டிலிறங்கினேனென்று துரியோதனன் சற்றுநே
ரங் கோபமாயிருந்து, மறுபடியும் என்னைப்பார்த்து
நீர்வந்தகாரிய மென்ன சொல்லுமென்று கேட்டான்.
அதற்கு நான்சொன்னதாவது பாண்டவர்கள் சூதா
டித் தோற்றநாளையில் பனிரண்டுவருடம் வனவாச
மும் ஒருவருடம் அக்ஞாத வாசமுங்கழித்துவந்தால்
அவர்கள்பூமி முதலியவற்றையுங் கொடுத்துவிடுகிறே
னென்று நீர் வாக்குதத்தஞ்செய்து அனுப்பிய வண்
ணம் பதின்மூன்று வருடமுங் கழித்துவந்து உபலா
வியத்திற் செழித்திருக்கின்ற பாண்டவர்கள் தங்களு
டைய யோகக்ஷேமாதிசயங்களை உங்கள் யாவர்களுக்
குந் தெரிவித்துத் தங்களுக்கு நீர்சொல்லியிருந்த சத்
திய வசனப்படி ராச்சியங் கொடுங்களென்று கேட்
கும்படியாக என்னைத்தூதனுப்பி வைத்தார்கள். நா
னும் உங்களைப் பார்க்க வேணுமென்னும் ஆசையை
யுடையவனாக இவிடத்திற்குவந்தேன். உங்களியாவ
ரையுங்கண்டேன். சந்தோஷங்கொண்டேன்.ஆதியிற்
சொல்லிய வார்த்தையின்படிக்கு ஐவர்களுக்கு அரசு
கொடுத்து வாழ்வதே உத்தமமென்றுகூறி, இதற்கு
நீர் என்னசொல்லுகிறீர் என்றுகேட்டேன். என்னு
டன் கூடவந்த மூன்றுரிஷிகளும் - வீஷ்மரும் - துரோ
ணரும்-கிருபரும்-விதுரன் முதலாகியபேரும் ஸ்ரீகிரு
ஷ்ணன் சொல்லுகிறதைக் கெட்டியாய் நம்பிப் பாண்
டவர்களை நேசித்துப் பக்ஷமுடன் வாழ்வதே நன்மை
யென்று சொல்லியும், பாபியாகிய துரிபோதனன்
கூடாதென்று தடுத்துப்பேச, மறுபடியும் அவனுக்
குத் தணியச்சொல்லி, அப்பா துரியோதனா! வீணாகிய
வம்புகள் விளைவித்துக் கொள்ளவேண்டாம். இனி
விளையப்போகிற விபரீதமெத்தவுண்டு. பாண்டவர்க
ளோ மிகுந்த பலவான்கள். எல்லாந்தெரிந்த இறை
வனாகிய நீர் ஒரேபிடிவாதமாகப் பேசவேண்டாம்,
அப்படிக்கு நாடுநகரங்கொடுக்க மனதில்லாவிட்டால்

ஐந்தூராகிலும் ஐந்துவீடாகிலுங் கொடும். விபகார விதிப்படிக்குக்கொடுக்க மனதுவராவிட்டாலும் அவர்களுக்குப் பிச்சையாகவேணுங் கொடுமென்று என்னுடைய இரண்டுகரங்களையும் ஏந்தி இரந்துகேட்டேன். அதற்கும் மனதிரங்கிக் கொடுக்காமற்றடுத்தான். நாளை நடக்கப்போகிறகதி இன்னதென்றுஞ் சொன்னேன். அதையும்யோசிக்காமல் எத்தனைபேர் எத்தனை சொன்னாலும்கேளாமல், அடிக்கவடிக்கபயந்து விசைகொள்ளுமென்னுந் தன்மைபோற் கோபமும்லோபமும் பிடிவாதமும் அதிகரித்து, போம்போம்உமக்கும் அவர்களுக்கும் வேலையில்லை. ஒருமொத்தைவெண்ணெய்க்குக் கோபாலஸ்திரீகளின் காலில்விழுந்துகூத்தாடுகிற நீர் இந்தப்பாண்டவர்களுக்கு நாடுவேண்டி இரப்பது பெரிதோ? இதென்ன அரிதோ? இந்தத்தந்திரமெல்லாம் நானறிவேன். இத்தனைப் பஞ்சைப்பாட்டென்னத்திற்கு? பாண்டவர்கள் பலவான்களென்றும், தெய்வபல முடையவர்களென்றும், சனக்கட்டிலையுடைய சரசிகளென்றுஞ்சொல்லியநீர்பிச்சைகொடுமென்றுங் கேட்கிறீர். இப்படிகேட்க அதென்ன வீரியம்? இதென்ன வெட்கமில்லாத காரியம்? வல்லமையுடையபேர்கள் மானமழியப் பிராணனுடனே ஒருவரையாசிப்பார்களோ? யாசிக்கமாட்டார்களே. இதெல்லாம் உன்னுடைய தீனத்துவமேயல்லது வேறில்லை. இப்பவும் நான்சொல்லுவதை நன்றாய்க்கேளும். சண்டைமுகத்தில் யுத்தஞ்செய்து வெற்றிபெறுகின்ற வீரரெவர்களோ, அவர்கள் இந்தஅஸ்தினபுரத்தை யாளுகிறதே யல்லாமல், என்னுயிருள்ளவரைக்கும் ஒருகடுகத்தனை மண்ணும் பாண்டவர்கண்ணுக்குக் காட்டேனென்று ஒரேநிர்ப்பாகச் சொல்லி விட்டான்.

இதுகளையெல்லாம் உடனிருந்துஅறிந்தஉங்கள் சிறியதந்தையாகியவிதுரமகாராஜன் (வாழ்வார்க்குச் ஸ்ரீதேவிவாக்கில்) என்பதுபோல இந்த மண்ணுக்குந் தன்னுயிருக்குப் சரிப்படுத்திக்கொண்டிருக்கின்றான் இந்தத்துரியன். ஆதலால் இவனுயிர் மாளவேணும் அப்பாற் பாண்டவர் பாராளவேணும். இல்லாவிட்டால் அரசாக்ஷிபெறுவது அருமையே. மேலும்அநேகம் பெரியோர்கள்முதற் சிறியோர்களு மிறப்பார்களே உலகம்பழிக்குமே என்றுயோசித்து யுத்தஞ்செய்யாம நிறுத்துவாராகில், அவர்கள் செய்துகொண்ட சபதத்தை எப்படி நிறைவேற்றிக் கொள்ளுவார்கள். இதுவரையிற் பட்டிருக்கும் அவமானத்தையும்பழிப்பையும்விட, இனிமேல்வரப்போகிற பழிப்பும் அவமானமும் பெரிதாகியதல்ல. இந்தத்தருணத்தில் யுத்தம்பண்ணிச் செயிக்காமல் விட்டு விடுவார்களாகில் இதுதான் பெரியஅவமானம் இதுதான்லோகநிந்தை இதுதான் இராசநீதிக்குப் பழுதாகிய காரியமென்று உங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். உங்கள் தாயாகிய குந்திதேவியாரும் சத்துருக்களால் விளைந்திருக்கும் பொல்லாங்கெல்லாமிருக்க, இராஜசபையில் விளம்பிய அவர்கள்சபதத்தை முடிக்காமல் ஈரேழு பதினான்கு லோகத்தையும் ஏகச் சக்கிராதிபதியாய் ஆண்டாலும், அதினால்யாதொரு பெருமையு மில்லை. புகழுமில்லை. இகழே எதிர்த்துக்கொண்டிருக்கும். ஆகையால் சீக்கிரம் சபதமுடித்துத் திரிலோகமுங்கொண்டாடும்படியாய் முடிதரித்துக்கொண்டு வாழக்கடவர்களென்று ஆசிர்வதித்ததாகச் சொல்லச்சொன்னார்கள், ஓபாண்டவர்களே! இவர்கள்கருத் திவ்வாறிருக்க என்எண்ணத்தையுங் கேளுங்கள். அவர்கள்உங்களைச் செய்திருக்கிற அனியாயங்களையோசிக்கும்போதெல்லாம் மண்-கல்-மரம்-முதலானதும் அழுமல்லாமல்வேறல்ல. அந்தமட்டும் நீங்கள்பொறுமையுடையவர்களே. ஆகிலும் எத்தனையென்று பொறுப்பது? பொறுக்குமிடத்திற் பொருப்பும்மூச்சுவிடுமே. ஓகண்ணியர்களே! (ஒருபுற்காசுக்குப்போன மானம் பலகோடி பொற்காசு கொடுத்தாலும் வாராது.) என்று பழமொழி கூறுவார்கள். அதுபோல்எப்படியும்அவமானம் வந்துவிட்டது. (உரலிற்றலை துறுத்துக்கொண்டவன் உலக்கைக்குப் பயந்தால்விடுமா?) ஆகையால் (துணிந்தபேர்களுக்குத் துக்கமில்லை.) என்பதுபோற் போர்புரிந்து அவர்களைப் போக்கடித்துஇனியேனும் சீர்பெறும்படியாய்த் தேசத்தைக் கைக்கொள்ளுவதுராஜநீரம் பலதேசத்து ராஜர்களும் சந்தோஷப்படுவார்கள். அல்லது தம்பிதமயன்பாட்டன்பூட்டனென்று பாராமற் படைமுகத்தி லொப்பாரியாவென்று சாதித்துப் பாக்கியம்பெற மனமில்லாவிட்டால் வனத்திற்சென்று தவத்தைக்கொண்டு சுகத்தைப்பெறுவது எல்லாவற்றிலும்மகத்துவமுடையது இவ்விரண்டில் எதைச்செய்ய யோசித்திருக்கின்றீர்கள்? உங்களெண்ணத்தைச் சொல்லுங்களென்றுமுகுந்தன்கேட்க அதற்குத்தகுந்தபடி தருமராஜர் நகைத்துச் சொல்லுகின்றார்!

ஆபத்பாந்தனாகிய அரியேகேளும், நாங்கள்யுத்தஞ் செய்வதற்குச் சர்வசித்தமா யிருக்கின்றோம். இதோநீர்பாருமென்றுசொல்லி, விராடராஜனுடைய இராயசம் சித்திரகதனென்பவனையழைத்துத் திருமுகமெழுதச்சொன்னார். அவ்வாறேயவனும் “எங்குமிருளறவொளிபரப்பிமுக்கண்ணனொரெழில்வேணிமிசைவைகிமா, னேகதியிருபத்தேழு மாதர்தோடோய்ந்தமிர்த மீய்ந்துரகர் விடமகற்றுந், திங்களின்மரபினனுயர்முரசகேதனன்றிகழ்தருமனெழுதுநிருபந்தேசதேசத்தர் மகராஜபோசத்தலைவர் சேர்ந்துவந்தெதிர்கொள்கமேற், குங்கியாம் நாடுவிட்டுக் காடடைந்து பதின்மூன்றாண்டு குன்றல்செய்து, கோமச்சனட்டனன்பிற்சுதன்மணங்கண்டுகூடி யுபலாவியத்திற் சங்குசக்ராயுதன்றூதினாற் றுரியோதனன் மனதறிந்தங்கள்பாற், சாற்றினேம் போர்க்குப் படைத்துணையெமக்காச் சயந்தரத்தாம வருகவே,’’ என்று எழுதி, எங்கணுங்கங்குலறும்படி கிரணங்கள்விரித்தும், திரி

நேத்திரதாரியாகிய சிவபெருமானுடையசிவந்தஜடாபாரத்திற் பொருந்தியிருந்தும் முயற்கறையென்னு மானைத்தன்னிடத்திற் கொண்டும், அசுவணிமுதலிய இருபத்தேழு ஸ்திரீகளின்தோள்களைத் தழுவியும், சமுத்திரங்கடைந்தகாலத்தில்தானே தானுகின்ற அமிர்தத்தைத்தேவர்களுக்கு ஆகாரமாகவளித்தும், ஆதிசேடன்முதலியபெரும்பாம்புகளின் விஷச்சுவாலையால் உலகம்வருந்தாமல் தனதுஅமிர்தகிரணங்களினால் ஆற்றல்செய்துமிராநின்ற சந்திரனுடைய குலத்திற் தோன்றியதானசூரன், உயர்ந்த முரசக்கொடியினையுடைய மானபரணன்,சத்தியவசனன், நித்தியவிரதன் உத்தமனெனத்திகழும் தருமபுத்திர மகாராஜன் எழுதிவிடுத்த திருமுகப்பத்திரம் இது இதனைப் பதினெண்பாஷைத் தேசத்துமன்னவர்களும், மகாராஜராகிய போஜகுலத்தலைவரும் ஒருங்குசேர்ந்துசந்தோஷித்து எதிர்கொண்டுவந்து காணக்கடவர். நாங்கள் சூதாடிநொந்து, நாடுநகரத்தைவிடுத்து, காடுகரம்பை அடுத்துப் பனிரண்டுவருஷம் வனவாசம், ஒருவருஷம்அக்யாதவாசம், ஆகப்பதின்மூன்று வருஷமும்போக்கி, மேன்மைபெற்ற ராஜனாகிய மச்சதேசாதிபதியின் சிநேகத்தினால் எங்கள்பிள்ளையாகிய அபிமன்னனுக்கு உத்தரையைக் கலியாணஞ் செய்வித்து, மிகுசம்பிரமத்துடன் உபலாவியஞ்சேர்ந்து, சங்குசக்கிராயுதமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவனைத் தூதுவிடுத்து, யுத்தத்திற்குடபட்ட துரியோதனனுடைய மனதறிந்துக்கொண்டு, உங்களுக்குத் தெரிவிக்கும்படியாக ஓலையுந் தூதமனுப்பினோம். ஆகையால் மேல்நடக்கப் போகிற யுத்தத்திற்காக எங்களுக்குப் படைத்துணைவந்து ஜயப்பெறச்செய்து, உங்கள் நகரங்களுக்காகக் கட்டவேண்டிய பகுதிப்பணங்களை இனமாக்கிக்கொண்டு நீடூழி வாழவேண்டியது. என்றுவாசித்தான் அதில் தருமராசன் கைச்சாத்துவைத்துச் சகலதேயங்கட்கு மனுப்பினர்.

பாண்டவர்க்குவந்த படைத்துணைகளின் விபரம்.

இந்தப்படிக்குக் கஷ்டதிசையினால் விடுத்த திருமுகங்களை சகலராஜர்களும்பார்த்து முகம்வியர்த்துஎட்டுத்திசையிலுமிருக்கும் துஷ்ட கண்டகர்களாகிய ஜயவீரப்பிரதாப சேனைத்தலைவர்களோடு அவரவர்களுடைய நால்வகைச்சேனைகளும் புடைசூழயுத்தகோலங்கொண்டு வருவதானார்கள் அவர்களாரென்றால் பாஞ்சாலராஜனும் அவன்பிள்ளைகள் துஷ்டத்துய்மன் சிகண்டி-சுமுத்திரன்-பிரியதரிசனன் - சித்திரகேது - சுகேது-துவசேனன்-உத்தமோசா-உதார்மனு - முதலிய இவர்களோடு நால்வகைச்சேனைகளும், விராடராஜனும் அவன்பிள்ளைகள் சுவேதன்-சதானீகன் - சங்கன்-வராககேது - உத்தரன்-முதலிய இவர்களோடு நால்வகைச்சேனைகளும், சேரன்-சோழன் - பாண்டியன்-என்னு மூன்றுபேரும், தங்கள் தங்களுடைய நால்வகைப் படையும், கேகயதேசாதிபரும், குந்திபோஜரும், பாண்டவர்கள் தனித்தனி கலியாணம் பண்ணிக்கொண்ட ஸ்திரீகளிடத்திற் பிறந்தபிள்ளைகளில், தருமராஜனுடையபிள்ளை தேவகனும், வீமனுடையபிள்ளை கடோற்கஜனும், அவன்பிள்ளை அஞ்சனவர்மனும், அர்ச்சுனனுடையபிள்ளை இராவானும்அபிமன்னுவும், நகுலனுடையபிள்ளை விஜயனும், நிர்மித்திரனும்,சகாதேவனுடையபிள்ளை விரசுகோத்திரனும் இதன்றியும் திரௌபதையினிடத்தில் ஒவ்வொருவருஷம் ஒவ்வொருவர்முறையிற் பெற்றுக்கொண்ட, பிரிதிவிந்தன்-சுரதசோமன்-சதானீகன்-சுரதகீர்த்தி-சுருகிசன்மன்-என்னும் இளம்பஞ்ச பாண்டவரைவரும் போஜசம்பந்தத் தலைவர்களாகிய போஜாள்-பாஞ்சாலாள்-சோமுகாள்-சிரஞ்சேயாள்-மார்ச்சாள்-மாகதாள்-திரிகாலவாசுதேவாள்-பவுண்டரவாசுதேவாள்-அரிவாசுதேவாள்-இவர்களும், இவர்களின்படைகளும், குந்திபோஜனுடைய பிள்ளைகளாகிய மந்தனும்,சுமந்தனும், அவர்களின்சேனையும் கீசகன்பிள்ளை பிரிதிபனும், காசிரராஜனும், அவன்பிள்ளை தூயகீர்த்தியும், மலயத்துவஜபாண்டியனும், இவன்பிள்ளை பிரிதீவுபாண்டியனும், சராசந்தன்பிள்ளை சகதேவனும், சிசுபாலன்பிள்ளை துஷ்டகேதுவும்,ஜெயசேனாள்-கிராதாள் அவுனாள்-ஆந்தராள்-புண்டரீகாள் - சோழபுருமித்திராள்-இவர்களும், இவர்களுடைய சேனைகளும் சீனர் சாவகர்-மத்திரர்-மாளவர்-தெலுங்கர்-கலிங்கர்-குலிங்கர்-பலிங்கர்-சோனகர்-கன்னடர்-மாகதர் -துருக்கர் குச்சரர்-ஒட்டர்-முதலாகிய பதினெட்டுப்பாஷைமன்னவரும், மகுடவர்த்தனர்-பட்டவர்த்தனர் -இளவரசர்-மன்னர்-மண்டலீகர்-மந்திரியர்-தந்திரியர்-சாமந்தர்-பூமந்தர்-இவர்களும், இவர்களுடையசேனைசயினியமுதலிய நானாவிதகோலாகலங்களுஞ் சேர்ந்து, சதுரங்கபலத்துடன் ஏழக்குரோணி சேனைகளும், ஆகிய சகலபடைத்துணைவர்களெல்லாம், சமுத்திரப்பெருக்கம்போலவும், தாரகாகணநெருக்கம்போலவும்அதிகரித்து, சப்தமேகமுழக்கம்போலவும்சங்கத்தொனிமுழக்கம்போலவும் பெருங்கூச்சலிட்டுத் தாரணியிடம் பொறுது தத்தளித்ததென்று சொல்லும்படியாய் உபலாவியம்வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள்.

அதுகாலையிற் பாண்டவரைவரும் ஸ்ரீகிருஷ்ணதேவரும் சாத்தகியும் வருகின்றவர்களை யெல்லாம் எதிர்கொண்டுபோய்க்கண்டு, எந்தெந்த அரசர்களுக்கு எத்தன்மையவாகிய மரியாதை வந்தனங்களைச் செய்யவேண்டியதோ, அந்தப்படிக்குத் தலைவான்களுக்கெல்லாம் மரியாதைசெய்து, அவர்களிடத்திற்றும்பெற்றுக் கொள்ளும் உபசார மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு, ஒருவருக்கொருவர் தழுவிப் பற்

பலவாறாக உபசரித்து, இராஜசபைக்கு எழைத்துவந்து சிங்காசனத்திலிருக்கச்செய்து,இராஜோபசாரமுதலியயாவும்நடத்தி, அவ்வவ்வரசர்களைநோக்கித்தருமராஜன்சொல்லுகின்றார். ஜெகத்திலுற்றுச் சுகத்தைபெற்று மகத்துவமுற்ற ஓமன்னரே! கேளுங்கள் பனிரண்டுவருடம் நாட்டைவிட்டுக் காட்டிற்றிரிந்து,ஒருவருடம் காட்டைவிட்டு நாட்டிற்பொருந்தி, விராடராஜனுடைய வீட்டிலொருவருடமிருந்து வெளிப்பட்டுத் துரியோதனனிடத்திற்கு உலூகமாமுனியைத்தூதுவிட்டதற்காக, மற்றொருதூது எங்களைக்காட்டுக்குபோகும்படி சொல்லச்சொல்லி எங்கள்பெரியதந்தைசஞ்சயனை அனுப்பிவைத்தார். அந்தச்சஞ்சயன் சொல்லிய வஞ்சனைமொழிகளை அஞ்சனவண்ணனும் யாங்களுங்கேட்டு, அதன்பின்பு எங்கள்பிராணனாகயிருக்கும் அக்கிருஷ்ணமூர்த்தியை வேண்டிக்கொண்டு தூதனுப்பிவைத்தோம். இந்தமகானுபாவர் போய் எத்தனைவிதத்திற் சொல்லியுங்கேளாமற் சுத்தவீரனைப்போல் யுத்தமேசெய்ய யத்தனித்திருக்கின்றேனென்றான், பாண்டவருக்கு எள்ளத்தனையாகிலும்நாடுகொடுக்கேனென்றும், அந்தகன் புத்திரனாகிய வித்தகன் சொன்னானும். நீங்களித்தனைபேரும் எனக்குற்றவர்களாயிருக்க, நானினிமேலெண்ணிப்பார்க்க வேண்டியதென்ன? மேலும் தம்பிமார்களுந் திரௌபதியுங்கூறிய சபதங்கள் தலைவிரித்துக்கொண்டிருக்க,அதையும் பாராட்டாமல் தருமத்தையெண்ணி, ஒருகுலத்திற்பிறந்த இருதிறவரும் பெருநலத்தைப் பெறவுக்கலந்து வாழ்வோமென்று நான்பேசச் சொல்லியும், அதற்கு அவனொவ்வாமல் யுத்தஞ்செய்வது உத்தமமென்று சொல்லியனுப்பிய படியால், உங்களுடைய உதவியெல்லாம் பெற்ற நான் செற்றவனைப்போலிருப்பதேனென்று யுத்தத்திற்குப் படைத்துணை வரும்படியாய் உங்களுக்கித்தனை வருத்தங்கொடுத்தேன். இந்தயுத்தம் பதினெட்டுநாளையிற் செய்துமுடிப்பதென்று ஒருநிர்ணயம் செய்துகொண்டோம். இவ்வளவுதைரியம் எங்களுக்குண்டாகும்படியாயேற்பட்டநீங்களெல்லோரும், இந்தச்சங்கதியைச் சித்தத்தில் வைத்து, சத்துருவைச்ஜெயித்து, சபதமென்னுங் குற்றத்தையகற்றி, எனக்குவெற்றிமுடிதரித்துவைக்கவேண்டிய உரிமை உங்களுடையதென்று தருமராஜன்சொல்ல, சந்திரனைச்சூழ்ந்த தாரகாகணங்கள் போலச்சபையில், நிறைந்திருந்த தாஷ்டிகரெல்லோரும் தருமநந்தனனைநோக்கி, எங்கள்பிராணனும் எங்கள்சேனைசயின்பங்கியாவும் உங்களுடைய தாகையால்எங்களைக்கொண்டு ஏதேது பெற்றுக்கொள்ள வேண்டுமோ அவைகளெல்லாந்தாராளமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். அதற்குயாதொரு தடையுமில்லை. வீரப்பிரதாபஜெயம் உமக்கே வரப்போகிறதென்று மன்னவரெல்லாரும் உபசாரவார்த்தைகள்சொல்ல, அவ்வார்த்தைகளினாற் சத்துருக்களைச்செயித்துச் சபதம்நிறைவேற்றிக் கொண்டவர்களைப்போலச்சந்தோஷமடைந்து, நமது ஏழக்குரோணி சேனைகளுக்குச் சேனாதிபதியாய் எவரை நியமிக்கலாமென்று தருமராஜன் கேட்க, சகல இராஜர்களும் நேசர்களும் விசுவாசமுடன் ஹரிவாசுதேவனைக் கேட்டார்கள். அந்த வார்த்தையைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நகைத்து, தனுர்வேதமுதலிய யுத்தத்திறந் தெரிந்த நீங்களே ஏர்ப்படுத்துங்களென்றுசொல்லி மேலுஞ்சொல்லுகின்றார்.

ஓ இராஜர்களே! இப்போது ஆயத்தமாயிருக்கிற ஏழக்குரோணி சேனைகட்கும் ஆரையேனும் ஒருவரை சேனாதிபதியாய்நான்நியமிப்பேனாகில்மற்றவர்களிற்சிலர் என்னைநியமிக்கஇல்லை என்னைஏர்ப்படுத்தஇல்லையென்று கோபஞ்செய்து கொள்ளுவார்களே ஆகையால், நீங்கள்எனக்கு இந்தவேலைவைக்கவேண்டாமென்று சொல்லிய சுவாமியைநோக்கி, தேவரீர் எவர்களை நிச்சயித்தபோதிலும் அவர்களை யஜமானாகக்கொண்டு வழிபடுகிறோமென்று மன்னவரெல்லாருஞ்சொல்ல மனமகிழ்ந்து விராடகுமாரனாகிய சுவேதனனை யழைத்து, ஓஇராஜர்களே! இவருடைய ஜெனன விர்த்தாந்தத்தைக் கேளுங்கள். மச்சதேசாதிபதியாகிய விராடராஜன் ஓர்நாள் வனவேட்டைக்குப் போனகாலத்தில், மிகுந்த குணவதியாகியும், பதிவிரதையாகியும். நற்றவற்றை யுற்றவளாகியு மிருந்து, பிராரத்துவவினையினால் விராடராஜனைச் சேரவேண்டுமென்று விரதமிழைத்துக்கொண்டிருந்த ஓர்வேடகன்னிகையினிடத்தில் அவ்வரசன் இந்தப் புத்திரனைப் பெற்றுக்கொண்டு மச்சதேசம்வந்து, இந்தப்பச்சைக்குழந்தையை இச்சையுடன் வளர்த்து வைத்திருந்து அக்ஷராப்பியாசம் தனுர்வேத முதலியயாவுங் கற்பித்து மகிழ்ந்து வாழ்ந்துவருநாளையில், ஓர்நாள் இந்தச்சுவேதனனானவர் தனிவேட்டைக்குச் சென்று தவஞ்செய்யும் முனீஸ்வரரைக்கண்டு, தானுந் தவம்புரியமனங்கொண்டு பெரியோர்களைவணங்கி அரியதவத்திலிருந்து, கைலாசபதியை நினைந்து சண்ணீர்சொரிந்தகாலத்தில், சிவபிரான் ரிஷபவாகனரூடராய்எழுந்தருளப் பணிந்து, சுரத்திற்பிடித்த வில்லினால் திரிலோகத்தையும் சாதிக்கும்படியான அருளைப் பூரணமாகப்பெற்ற புருஷோத்தமர். இவருக்கே சேனாதிபதிப் பட்டங் கட்ட வேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணன் சொல்ல, அதற்கு எல்லோருஞ் சம்மதிக்க, உடனே செந்திருமணாளராகிய திருமால் அச்சுவேதனனுக்கு சகலவித உபசார அபிஷேக ஓமாக்கினியுடனே சேனாபதிப் பட்டங்கட்டிப் பெரியயானையின் பிடரியிலேற்றி, முரசவாத்தியமுழங்கச்சகலவைபவங்களுடனே பட்டணப்பிரதக்ஷணஞ் செய்வித்து, எல்லாச்சேனைகளுக்கும் இவரே சேனாபதித் தலைவரென்று தெரிவித்தார். அப்பால் அங்கிருந்த அரசர்களுடன் யாவரும் விருந்துபோசனமுதலியதும் அருந்திச்சந்தனதாம்பூ

லிகிகளை வாங்கிக் கொண்டு, விந்தையாகிய வீரலக்ஷ்மியைச் சிந்தித்துவணங்கி, குருக்ஷேத்திர பூமிக்குப் பிரயாணமானார்கள். அந்தச்சமயத்தில் அர்ச்சுனன் குமாரர்களில் நாககன்னிகையின் பிள்ளையாகிய இராவானனவன் அவ்விடத்திற்பேசிக்கொண்டிருந்த சங்கதிகளையெல்லாந் தெரிந்துகொண்டு, சேனாதிபதியும்சேனைகளும் தேசத்தரசர்களும் குருக்ஷேத்திரபூமிக்குப் புறப்படப்போகிற காலத்தில் இராஜசபையிற் போய்நின்று, தந்தைமார்முதலிய சகலரையும்நோக்கி, விந்தகிரியைப்போன்ற தோளைக்குலுக்கி, மந்திர வடிவாளைக் கரத்திற்பிடித்துஐயோ! இந்தத்துரியோதனனாதியர்க்குள்ள சேனைகளைக் கொல்லப் பதினெட்டுநாளென்னத்திற்கு? அவரவர்கள் பட்டணத்தை விடுத்துப் பெண்சாதிபிள்ளைகளையும்விடுத்துவந்திருக்கின்றவர்கள்பதினெட்டுநாள்வரையிலும்வருத்தப்படுவானேன்? நீங்களெல்லாரும் இவிடத்திலிருக்கமனதிருந்தாலிருங்கள் இல்லாவிட்டால் அவரவர்களுடைய நகரத்திற்குப்போகச் சிலவு பெற்றுக்கொள்ளுங்கள். எனக்கு உத்தரவுகொடுங்கள். இன்றைக குள்ளாகத் துரியோதனனாதிய ரெல்லாரையுமுடித்து இந்தப்பூமியைத் தருமராஜனாகிய என்பெரியதந்தைக்குச் சொந்தமாக்குகிறேனென்று சிந்தைகொண்டுரைத்த இராவான் வசனத்தைப் பந்தமுற்றும் பந்தமுறுதவனைப் போலிராநின்ற பரவாசுதேவன்கேட்டு நகைத்து,நல்லது அப்படியேயாகட்டும். நாமெல்லாருங் குருக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்தபிற்பாடு உன்னிஷ்டப்படியாகிலும் அல்லது என்னிஷ்டப்படியாகிலும் யோசிப்போமென்று இராவானைத் தட்டிக்கொடுத்து முத்தமிட்டு, யாவரும்வியக்கச் சந்தோஷித்துப் புகழ்ந்து மகிழ்ந்தார். பின்புசகலரும் எழுந்துசுவாமியை நமஸ்கரித்துக்கொண்டு, சேனாசயினியங்களுடன் குருக்ஷேத்திரம் போகவேண்டிய முயற்சியி லிருந்தார்கள். இவர்கள்சரிதம் இவ்வாறாக, முன்பு தூதுபோனசுவாமியானவர் அஸ்தினாபுரத்தை விட்டு உபலாவியத்திற்கு வந்தபிற்பாடு, துரியோதனனிடத்தில் நடந்தசங்கதியைச் சொல்லுகிறோம் சேளுங்ஜெனமேஜெயராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

கௌரவர்க்குவந்த படைத்துணைகளின் விபரம்.

இப்பால் துரியோதனராஜன் தனக்குப்படைத்துணைவரும்படியாய்ச் சகலதேசத் தரசர்களுக்கும் திருமுகமெழுதி அதில் இப்போதெனக்குப் படைத்துணை வராநின்றயாவரும்சந்திரசூரியருள்ளவரையிலும் தங்கள்தங்களுடைய இராச்சியத்தில் வரியிறையில்லாமல் தமாலாய் அனுபவிக்கும்படி உத்தரவுசொல்லி இருக்கின்றோம். ஆகையால், முத்திரையிட்டிருக்கும் இந்தத் திருமுகத்தையே சாசனபத்திரிகையாய் வைத்துக்கொண்டு, மனப்பூர்வீகமாய்ச் சதுர்விதசேனைகள்சூழப் புத்ரமித்ராதிகளுடனே சீக்கிரம்வந்துசேரவேண்டியதென்னுங் கருத்தமைத்து அத்திருமுகத்தோடு தூதுவரைப்போக்கினான். அந்த ஓலைகண்டக்ஷணம் சமஸ்த இராஜாக்களும் வந்தார்கள். அவர்களின் விபரமென்னவென்றால் மத்திர தேசாதிபதியாகிய சல்லியனும், அவனுடைய உடன்பங்காளி கோத்திரப்பங்காளி தாயாதி முதலியபேர்களும் இரதகஜதுரசபதாதியுடன் வந்தார்கள். காந்தாரதேசாதிபதியாகிய சௌபலனும், அவனுடைய தாயாதிவருக்கத்தாரெல்லாரும், சகலபடைகளுடனும் வந்தார்கள். மகததேசாதிபதிகளாகிய சர்வதேவனும்,விந்தானும் விந்தனும் அவரவர்கள் சொந்தசேனையுடன் வந்தார்கள் அலம்புதனும், அவன்தம்பிகள் மாரசி - கிமிதிகுதன் என்னுமூவரும் அனேகங்கோடி இராக்ஷதப் படைகளோடும் வந்தார்கள். நரகாசுரன் பிள்ளையாகிய பகதத்தனும், நால்வகைப் படையும், கோடியானைக்கூட்டங்கள் நெருங்கவந்தார்கள். கௌசிதனும் காம்பிலீசனும், தெலுங்கதேசாதிபதியும்,போஜனும் கேகயராஜனும், திரிகர்த்தனும், கவுடிசித்தனும், மாளவதேசாதிபதியும், மராடராஜாதிபதியும் வளவனும் சோமனும், சோழபாண்டியரும, சூதநாயகன்பிள்ளைகளாகிய கர்னன்பங்காளிகள்சுசேஷணன்முதல்நூறுபிள்ளைகளும் சோமதத்தனும் அவன்பிள்ளைகள் பூரிசிரசு-சரன்பூரி-என்டவர்களும், அவிக்குதேசாதிபதிகள் விந்தன், அநுவிந்தன் என்பவரும், கலிங்கதேசாதிபதி கேதுமாலனும், அவன்தம்பிகள் அசுவத்தாமா சக்கிரதேவன்-என்பவரும், மாளுவராஜன் புளிந்தனென்பவனும், சவுராஷ்டக தேசாதிபதிகள் சவுபதி-சாலுவன்-என்பவரும், கேகயதேசாதிபதிகள் சுதர்மா-சுவர்மா என்பவரும், உக்ரசேனாள் - யாதவாள்-விருஷ்ணாள்-அந்தராள்-போஜாள் - இவர்களும், பலராமர்-கிருதவன்மா-கிருதவீரியன்-சாம்பன் - சாரணன்-பிரத்யுமன்-சாருதக்ஷணன்-வீடுரதன்-பானுவு -சிதன்-விபுருதி-பிருது-அக்குரூரன்-ஆருகன் -உக்ரசேனல்-உத்தவன்-இவர்களும், நவகோடி நாராயணாள் நிவாதகவசாள்-சாலகேயர்-பவுலயாள் - இவர்களும். விருஷ்ண-அந்தக-சாத்துவ-மாதவ-குகுர பப்பர-தேசாதிபதிகளாகிய உதரசித்தும், நீலனும், அங்கவங்க ஆரிய-சிங்சள-கொங்கண-குடார-கொங்க - மராட - ஒட்ட-தேசமுதலிய ஐம்பத்தாறுதேசத்தலைவர்களும் தங்கள்தங்கள் நால்வகைப்படைகளோடு மந்திரி தந்திரிமார்களும் புடைசூழும்படியாக வந்துநிறைந்தார்கள், பாதலத்திலிருந்த மாதலிவருக்கத்தார் சம்சத்தகாளென்னும் அறுபதினாயிரம் வெண்கலரதக்காரர்களும்வந்தார்கள் யாதவகுமாரர்களென்னும் இருநூறாயிரம் வெண்கலரதக்காரர்களும் வந்தார்கள். அநேகம் ராஜகுமாரர்கள் வெகுவாகிய பாலியசேனைகளுடனேவந்து குவிந்தார்கள். துரியோதனன் பிள்ளைகள் விகதத்தன் முதலியபேர்களும், அவன்தம்பிமார் துச்

சாதனன்முதலிய தொண்ணூற்றொன்பது பேர்களும் துச்சாதனன்பிள்ளை துச்சனி-இலக்கணகுமாரன்முதலியபேர்களும், வீஷ்மாச்சாரியரும், துரோணாச்சாரியரும், கிருபாச்சாரியரும், அசுவத்தாமாவும், கர்னனும், அவன்பிள்ளைகள்சித்திரசேனன்-சித்திரகீர்த்திசூரியவர்மன்-முதலிய பேர்களும், சிந்துதேசாதிபதிசயிந்தவனும் சகுனியும். இவன்பிள்ளைகள் உலூகன்சயிந்தன்முதலியபேர்களும், அஷ்டகுலாசலம் போன்றதேரிலேறி ஆயுதபாணிகளாய் அமைந்திருந்தார்கள். இத்தன்மையாகத் திரண்டசேனைகளின் மிகுதியானது லோகாலோகங்களெல்லாம் புரண்டுவந்தகடலைப்போலப் பெருகிவராலும, தனக்காகவந்த அச்சேனைகளைச் சம்பத்திற் சிறந்த துரியோதனன் கணக்கிடுபோது, பதினொருஅக்குரோணியென்று தொகைபடப் பேரானந்தங் கொண்டவனாயிருந்தான்.

இதல்லாமல் பந்துக்களில் மிகுந்தவர் படை சத்துருக்களாயிளைத்தவர் படை சவுக்கியமாய்வாழஉபகாரஞ் செய்யப்பட்டவர்களுடைய படை தீவுக்களிற் பெருக்கமாய் விசனமற்றிருக்கும்படைதற்காலத்திற் பொருள்கொடுத்து வைக்கும்படைதன்னுடையசொந்தப்படை என்னும் இவ்வாறு விதப்படைகளு நெருங்கி, மண்ணும்விண்ணும் ஒன்றாகக்கலக்கும்படியாய் ஆரவாரிக்குந் தன்மையைத் துரியோதனனும் மற்றயாவருங்கண்டு கண்களிகொண்டு, இந்தச் சேனைகளுக்குச் சேனாதிபதியாய் ஆரைநேமிக்கலாமென்றுயோசனைசெய்து, தங்கள் வம்சநாயகனைப் பரசிராமரிடத்திற் றனுர்வேதங்கற்று அவரையேஜெயித்துவெற்றிபெற்றிருக்கும் பெரியோராகிய வீஷ்மாச்சாரியாரையல்லது வேறில்லையென்று நிதானித்து, அவருடைய பாதங்களில்வணங்கி, ஐயா எங்கள்மூதாதையே! சேனைகளோ திரண்டுபுரண்டு வந்திருக்கின்றன அந்தச் சேனைகளுக்குத் தேவரீரே சேனாதிபதி யாகவேண்டுமென்று வருந்திக் கேட்டுக்கொண்டு, நல்லமுகூர்த்தத்திற் சேனாதிபதிப் பட்டமுங் கட்டிவைத்துப் பதினொரு அக்குரோணிச் சேனைகளையும் அவர்வசத்திலொப்பிவைத்து, அந்தச்சேனைகளைத் தரம்பிரிக்கும்படியாக அதற்குவேண்டிய திட்டவட்ட சட்டமுஞ் செய்தபோது, அதிரதர்- மகாரதர்-சமரதர் - அர்த்தரதர்-முதலிய பேர்களெல்லாரும் தங்கள் சேனாதிபதியாகிய வீஷ்மரைக்கண்டு வணங்கிக்கொண்டு, மகரகுண்டல ஆரசேயூர மணிக்கிரீட வாகுவலய வச்சிராங்கி முதலியதுங் கொண்டுவந்து உபசரித்துக் காணிக்கையாகக் கொடுக்க, அவைகளைவாங்கித் தரித்துக் கொண்டு பிரளயகால ருத்திரனைப்போலச் சேனாசயினியங்களின் மத்தியில் மகாமேருவைப்போலொத்த தேரின்மீதேறிநின்றார் கங்காபுத்திரராகிய வீஷ்மாச்சாரியார் மற்றச் சேனைகளெல்லாம் எழுசமுத்திரமும் வளர்ந்து நிறைந்ததைப்போலும், சுத்தவீராளுடைய ரதங்களெல்லாம் அஷ்டகுலாசலம்போலும், சூழ்ந்திருக்கும் யானைகளெல்லாம் அஷ்டகஜங்களைப் போலும், வளைந்துலாவுங் குதிரைகளெல்லாஞ்சுழன்றடிக்குங் காற்றைப்போலும் பிரகாசிக்கும்படியாய், தாரத்துவஜ நாட்டிய தேரேறி வீரத்துவஜமீட்டிய வீஷ்மாச்சாரியார் பாரியவில்லையும் பக்குவமாகிய வீரகோலத்தையும் உடையவராய் நிற்கக்கண்டு, எமதருமராஜனும் நடுநடுங்கி நாணமுற்றிருந்தான் சூரியமகவானும் ஆகாயத்திற்செல்ல நமக்கு வேறுகதி யில்லையேயென்று அஞ்சியிருந்தான். ஹரிஹரப்பிரமாதியரும் நடுக்கங் கொள்ளும்படியாய் துரோணாச்சாரியரும்; கிருபாச்சாரியரும், அசுவத்தாமாவும், கர்னராஜனும் மற்றுமுள்ள அரசர்களியாவருந்திடதயிரியங்களுடன் சேர்ந்து மனமொத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

துரியோதனன் சகாதேவனால்யுத்தத்திற்கு நாள்வைத்துக்கொள்ளுதல்.

அதுகாலையில் தேவர்கள் முதலியோர் சேனைகளின்பெருக்கத்தைநோக்கி,இவ்வுலகிலுள்ளமலைகளெல்லாம் யானைகளாகவும் செடிகொடி மரங்கள்முதலிய தோப்புகளெல்லாந் தேர்களாகவும், பூமிநிறைந்தபுற்பூடுகளெல்லாங் குதிரைகளாகவும், பிரமசிருஷ்டியில் வந்த உயிர்களெல்லாம் பதாதிகளாகவும், சப்தமேகம்-சப்தசமுத்திரம்-சப்ததீவுகள்-இவைகளின்முழக்கங்களெல்லாம் வாத்தியாதிகள்முழக்கமும்யானைசேனைகளின் முழக்கமுமாக அமைந்துவந்தனவோ? அல்லது ஆதிதேவனாற் சமைந்துவந்தனவோ? என்றுஆச்சரியங் கொள்ளும்படியாய், தாரககணக் கூட்டம்போலும் சலசராதிக ளீட்டம்போலும் பதினொரு அக்ரோணி சேனைகளுந்தங்கி இருக்கும்போது, வீஷ்மாச்சாரியார் துரியோதனனைப்பார்த்து சேனைகளோ பதினொரு அக்ரோணியாய்ச் சேர்ந்திருக்கின்றன அஸ்தினபுரமோ இடம்பெறுகிறதா யிருக்கவில்லை. ஆகையால், இந்தச்சேனைகளைக் குருக்ஷேத்திரத்திற்கு அனுப்பி விடும்படியாகிய முயற்சி யோசிக்கவேண்டும் அதாவது,(நாட்செய்வதுநல்லுற்றார்செய்யார்)என்ற பழமொழி சொல்லுமாப்போல்,சேனைகள் குருக்ஷேத்திரம்போய்ச் சேருகிறதற்கு ஓர் நல்லநாளும், ஆயுதங் கைக்கொண்டு யுத்தவாரம்பஞ் செய்வதற்குத் தகுந்த ஓர் முகூர்த்தநாளும் பார்த்துக் கொண்டால் உத்தமமென்று சொல்ல, அந்தமொழிகேட்ட துரியோதனன் உடனே தனதுபுரோகிதனை அழைக்கும்படி உத்தரவு செய்தான். அந்த வார்த்தையை வீஷ்மர் தடுத்து, இந்தப்புரோகிதருக்கெல்லாம் நாம் கேட்கிறநாள் வைக்கத் தெரியாது. இவர்கள் வைத்தாலுஞ் சரிப்படாது என்றுசொல்ல, அதைத் துரியோதனன்கேட்டுப் பின்னையார்நாள்வைக்குந் திறத்

திணையுடையவர்களென்று கேட்ச, வீஷ்மர் சொல்லுகின்ருர்.

தம்பி துரியோதனு! பாண்டவர்களிற் கடைபடு குமாரனுகிய சகாதேவன் சாஸ்திரதாரி. அவன் நாள் வைத்துக் கொடுப்பானுகிற் சொன்னகுறி தப்பாமல் முடிக்கலாமென்று காங்கேயன்சொல்லச், துரியோதனன்கேட்டு ஆச்சரியமடைந்துஇப்போது அவனை எப்படிகேட்கிறது? அவனெப்படிநமக்கு அகப்படுவான் அப்படியல்லவென்றுகண்டு கேட்டாலும தப்பில்லாமல் உண்மையாகச் சொல்லுவாஞ? அதற்செப்படியென்று வணங்காமுடியோன்சொல்ல, வீஷ்மர்சொல்லுகின்ருர். அப்பா துரியோதனு! நீங்கள்தான் பேராபேதகிணப்பீர்கள். அவர்கள் அப்படி ஒருக்காலும் நினைக்கமாட்டார்கள். நீமாத்திரம் நேரிறபோய்க்கேட்பையாகில், சந்திரசூரியர் பாறிநடந்தாலும் தங்களுடைய சத்தியவாய்ச்சொல் தப்பாத. அவ்வுத்தமர்களிற் சிறியனுகிய அவன் உனக்கு உண்மையைச் சொல்லுவான். அப்படியே இராவானையுங் களப்பலிக்கு ராஜிப்படுத்திக் கொண்டுவந்துவிட்டால், நமக்குயெல்லாக் காரியங்களும் ஜெயமாமென்று வீஷ்மர் சொல்லஅதற குடம்பட்டு, ஒருநாளிராத்திரியிற் பிரம்பினுற்செய்திருக்கும் சூத்திர அன்னப்பக்ஷிமீதேறிக்கொண்டுஉபலாவியத்திற்குச்சென்று, சகாதேவனுடைய அரண்மனையிற்போய் இறங்கி அவனைக்கண்டபோது, அந்தச் சகாதேவன் துரியோதனனென்னுந் தமயனைப்பார்த்துச் சந்தோஷங்கொண்டு, என் அண்ணு வாரும் இருமென்றுவணங்கி உபசரித்து, ஏதுஇவ்வளவுதூரம்வந்ததென்றுகேட்க, அப்போது அவனைபார்த்து, தம்பி சகாதேவனே! எங்களுக்கும்பாண்டவர்களுக்கும்பகை நேரிட்டிருக்கின்றபடியால் யுத்தஞ் செய்வதற்குப்படைகூட்டிவிட்டோம். அந்தப்படைகள் குருக்ஷேத்திரம்போய்ச்சேரவும், தருமராஜன் தலையற்றுவிழும்படியாய் ஆயுதமெடுக்கவும் நாள்வைத்துக் கொடுக்கும்படிக்கு உன்னைநாடிவந்தேனென்றுசொல்ல, அதைக் கேட்டு நகைத்து, அப்படியே நாள்வைத்துத் தருகிறேன் அண்ணுவென்றுசொல்லித் துரியோதனனுடைய காலபலமுதலியதும், திசாநாதன்-புத்திநாத-அந்தரநாதன்-இவர்களுடைய பலாபலத்தையும்ஜெயாபஜெயத்தையும் யோசித்து, சாஸ்திரங்களை எல்லாம் பார்த்து, அண்ணு! தேவரீருடைய இஷ்டப்படிக்குவெற்றிபெற வேண்டுமாகில், நாளைநன்றைக்குப் பூரணஅமாவாசையாகையால் அன்றிராத்திரி ஒன்பதுநாழிகைக்குமேல் குருக்ஷேத்திரத்திற் சேனைகள் போகும்படிக்கு முகூர்த்தங்கொண்டு, அப்போதே களப்பலியுங் கொடுத்துப் பராசத்தியைப்பூசித்து ஆயுதமெடுப்பீர்களாகில், தருமராஜன் தலைதப்பாது அற்றுவிழும். இதற்கு யாதொருசந்தேகமுமில்லை. அப்பால்தெய்வசித்தம் எப்படியோ நானறியேனென்று உபசரித்து வணங்கிப் போஜனஞ்செய்து போமென்றுபிரியவசனஞ்சொல்ல, அதைத் துரியோதனன்கேட்டு மதிமயங்காமல் மனமகிழ்ந்து, தம்பி! நல்லது நான்போய் வருகிறேன் சாயுங்காலந்தான் சாப்பிட்டு வந்தேனென்றுசொல்லி விடைபெற்றுக் கொண்டு வெளிப்பட்டான். இவ்வாறு சகாதேவனிடத்தினின்றும் விடைபெற்று வெளிப்பட்ட துரியோதனன் இராவானுடைய விடுதிக்குப் போயினன்.

துரியோதனன் இராவானைக் களப்பலிக்கு உடப்படுத்திக் கொள்ளுதல்

அவனை அங்கிருந்த இராவான்கண்டு எதிர்கொண்டு வந்து, அவனடியில்வீழ்ந்துபணிந்து, ஐயா! ஏது இவ்வளவுதூரம் தயைசெய்ததென்றுகேட்க, அப்பனே! ஐவர்களுக்குமெங்களுக்கும்பகைநேரிட்டுப்படைகள் சேர்ந்து யுத்தத்திற்கு ஆரம்பஞ்செய்யப் போகிறபடியால், எதிர்உரோமக்காரராகவும்பலசாலிகளாகவும் இருக்கிறபேரைப் பலிகொடுத்து ஆயுதமெடுத்தாற் செயமென்று பெரியோர் சொல்லுகின்ருர்கள். அதற்காகஉன்னைக்குறித்துப் பலிஇரத்தலுக்கு வந்தேனென்றுசொல்லவே, அந்தவசனத்தைக்கேட்டஇராவான் கலகலவென்றுநகைத்து, ஐயா! நீங்கள் பிறந்தநாள்முதல் இதுவரையிலும் சகலசம்பத்தையும் அனுபவித்ததுபோதுமென்று விடாமலும், இனிஇருப்பவர்கள் குழந்தைகளாச்சே அவர்கள் அனுபவிக்கட்டுமென்று எண்ணுமலும், மண்ணுசைபெண்ணுசைபொன்னுசை மாருமலும், பிள்ளைகளைக் கொன்ருனுலும் பின்னும் அனுபவிக்கவேணுமென்று எண்ணி ஆசைமேலிட்டு மனம்ரோசாமல், தேகங்கூசாமல், வாய்சோராமல்என்னைப்பலிக்கு வரும்படியாய் இரந்தீரல்லவா? ஐயோ! என்றைக்கிருந்தாலும் இத்தேகம் இறந்துபோகின்றதே இதற்கு இவ்வளவு அவா மேலிட்டிருக்கலாமா? நல்லகாரியம். அப்படியேஎன்னைக்கொன்றுநீரேஇந்த மண்ணைக் கட்டிக்கொண்டாலும், அதற்கு யாதொரு தடையில்லை. ஆனல் இந்தத்தேகம் அனித்திய தேகமாகையால் நீரேப்போது நாள்வைத்துக் கொண்டீர் சொல்லுமென்று இராவான்கேட்க, நாளைநன்றைக்கு நாள் வைத்துக் கொண்டேனென்று துரியோதனன் சொல்ல, அதைக்கேட்டு இராவான்சொல்லுகின்ருன் ஐயா! அதுவரையிலும் இந்தத்தேகமிருக்குமாகில் உண்மையாக உமக்குக் களப்பலிக்கு வருகிறேன். இதற்கு யாதொருசந்தேகமுமில்லை. இடபேர்ப்பட்டதனகனக சாம்பிராச்சியத்தை யனுபவித்த நீரேவந்து இரண்டுகையையும் நீட்டி இரந்தால், நானில்லையென்று சொல்லக்கூடுமோ? ஐயனே! உமது ஆசையடங்கச்சுகமாகப் பெற்றுக்கொள்ளுமென்று இராவான்சொல்ல அந்தச்சொல்லுறுதியை ஸ்திரமாகப்பெற்றுக்கொண்டுமனமகிழ்ந்து, நான்போய்வருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு, அஸ்தினுபுரத்திற்குப்போய், வீஷ்மர்முதலியபெரியோருக்குச்சொல்ல, அவர்கள்கேட்டு

அதிசயித்து, ஆ! ஆ! அவர்களுடைய மனமும்-குணமும்-சத்தியமும்-பரிசுத்தமும்-பசியாதாபமும் -உண்மையும்-என்னநன்மையாக யிருக்கின்றது பார்த்தீர்களா? சத்தியநெறி தப்பாதிருப்பவர்க ளாகையால் நித்தியவெற்றியை அவர்களே பெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லையென்று, யாவரும் தங்களுக்குத் தாங்களே அகமகிழ்ந்திருந்தார்கள்.

சகாதேவன் துரியோதனனுக்குநாள்வைத்துக் கொடுத்ததைக் கண்ணன் வெளிப்படுத்துதல்.

இவ்வாறு துரியோதனன் சகாதேவ னிடத்தில் வந்து நாள்வைத்துக்கொண்டதும், இராவானிடத்திற் களப்பலிஇரந்துபெற்றுக்கொண்டுபோனதும, ஒருவருக்குந்தெரியாமலிருந்தது. இப்படியிருக்க உபலாவியத்திலிருக்கும் பாண்டவர்களும், ஸ்ரீகிருஷ்ணபகவானும், அனேகங்கோடிஅரசர்களும். ஊழித்தீயும்வடவானலமும்காலகோடிவிஷமுங்கூட நேரிடுமாகிற்கலங்கிக்கரிந்துபோகும்படி யுத்தஞ்செய்து வெற்றிகொள்ளத்தக்க மற்றஉத்தமவீரர்க ளெல்லாரும், அன்றுபோய்மற்றுநாள் குருக்ஷேத்திரத்திற்குப் போகும்படியாக நிச்சயித்து, அக்காலையிற்சில ஏற்பாடுகளைஏற்படுத்தினர்கள், அஃதெப்படி என்னில், சேனதிபதியாகிய சுவேதனன்-வீமசேனன்-விஜயன்-அபிமன்னுசாத்தகி-துஷ்டத்தூய்மன்-இவ்வாறுபேரும் அதிரதத்தலைவராகவும், சிகண்டி-விராடன் .தருமராஜன்-பாஞ்சாலன்-இவர்கள்நாலுபேரும் மகாதத் தலைவராகவும், உத்தமோசா-உதார்மனு-நகுலன் - கடோர்க்கஜன் இவர்கள்நாலுபேரும் சமரதத்தலைவராகவும்சகாதேவன்-அஞ்சனவர்மன்-இளம்பஞ்ச பாண்டவர்கள் இன்னுமுள்ள ராஜகுமாரர்களியாவரும் அர்த்தரதத்தலைவராகவும், இந்தப்படிக்குத்தேவர் சேனதிபதியாகியகுமாரசுவாமியார் அணிவகுத்ததுபோற்சேனைகளை அணிஅணியாகவமைத்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினிடத்திற் சுவேதனன்வந்துசொல்ல, அதைக்கேட்டுப் பாண்டவர்களிடத்திற் சொல்லப்பா என்னிடத்திலேன் சொல்லுகின்று யென்றுசொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் சும்மாயிருந்தார். அந்தவேளையிற் பாண்டவர்கள் அந்தந்தச்சேனைகளின் பிறிவைப்பார்த்துமெத்தவுஞ் சந்தோஷமுடையவர்களாய்ச் சுவேதனனைப் புகழ்ந்து, மங்களாசனஞ்சொல்லி, உபலாவியத்திலிருந்து நல்லசுபகாலத்திற் குருக்ஷேத்திரத்திற்குச்சேனைகள் புறப்படும்படியா யோசிக்கும்போது, அவ்வூரிலுள்ள சகலஜனங்களும் தாங்கள் தாங்களிருக்கு மிடத்திற்றனே சம்பிரமங்களங் கொண்டாடிவாழ்த்தி, நிராஞ்சம் ஆலாத்தியெடுத்து, அன்னதான முதலிய சோடச மகாதானங்களுஞ்செய்து, சுபகரங்களும்மிகுஜயங்களும் ஐம்பூதம்போன்ற பாண்டவர்களுக்குவரக்கடவதென்று இஷ்டதெய்வங்களைப் பூசித்துவாழ்த்தவும், நவரத்தின திலை வாரித்தூற்றவும, மங்களம், லாலி-சோபனம் இவைகளைப்பாடவும், பரதநாட்டியமாடவும், கட்டியர் செட்டியாய்ப் புகழ்ந்து வாழ்த்தவும். பட்டுவான்கள் துதிகூறி ஏற்றிப் போற்றவும், அனேகம்பேரி-உடுமி-குடமுழா-முரசு-காகளஞ் - சின்னங்-கொம்பு-தவிலடி-தப்பட்டை-தவண்டை -மல்லரி-தாரை-பூரி-முதலாகிய வாத்தியங்களமுழங்கவும், செம்பொன்பூ-வெண்பொன்பூ-முதலாகிய சகல புஷ்பங்களையும்வாரி மாரிபோல் தேவர்க ளிறைக்கவும், நன்னிமித்தங்க ளுண்டாகும் படியாகிய நல்லவேளையும் நல்லலக்கினமும் கைகூடியவேளையில், தேவர்கள் முதலாகியயாவருஞ் ஜெயஞ்ஜெயமென் றுதிர்க்கமாய் வாழ்த்த, சகலசுப சந்தோஷத்து ன் குருக்ஷேத்திரபூமிக்குப் போகும்படியாக யத்தனித்துத, துவாரகாபுரிவாசகனுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து. சுவாமி! என்ன சும்மாயிருக்கின்றீர்? எழுந்தருளுமென்று தருமராஜன்சொன்ன காலத்தில், முகமலர்ச்சி இல்லாதவராய், நான்பின்னதாக வருகிறேன் நீங்களெல்லோரு முன்னதாகப் போங்களென்றுசொல்ல, அதைக்கேட்ட முரசக்கொடியையுடையதருமராஜன் பெருமூச்சுவிட்டுச் சொல்லுகின்றுர்.

ஓமுகுந்தனே! இதென்ன மோசமோ? என்மனதைச் சோதிக்கும் விசுவாசமோ? அந்தமட்டுபவெகுநேர்த்தி! வெகுநேர்த்தி! எழுந்திரு மெழுந்திருமென்று இரண்டுகரத்தையும் பற்றித் தூக்கும்போது, கண்ணிலு முகத்திலு நயத்தைக்காட்டாமற் சுளிப்பினைக்காட்டி, ஏன்சாணு மென்னைத் தொந்தரவுசெய்கிறீர்? (வீணனகாரியத்திற்குவாணுளழிவேனே?)என்னுந் தன்மைபோல் விருதாவாகிய காரியங்களை என்தலைமேற் போட்டுக்கொண்டு, படாதபாடும் பட்டு, நோய்க்குத்தகுந்த சிட்டிக்கை எல்லாம்போட்டு.உலகத்திற் (பெரியஎருமை பேர்பெற்றகதைபோற்) பாண்டவர் சகாயனென்றும் பார்த்தசாரதி யென்றும், நரநாராயணனென்றும், ஐவருக்குஒன்றுந்தெரியாது எல்லாக்கலகமும் இவனே செய்கிறனென்றும், குவலயமெல்லாம் என்னைக்குலைய, தகுந்தகாதவர்களை யெல்லாஞ் சிநேகித்து, எந்தக்காரிய மெப்படிமுடங்குதோ? எந்தவேலை யெப்படி மடங்குதோ? நமது எண்ணம் என்னமாய் முடியுதோ? மற்றவர் திண்ணம் ஏதாய் விளையுதோ என்று இரவும் பகலும் வயிற்றில் வாள்கட்டிக்கொண்டு, ஆகாரம்நித்திரையில்லாமல் அவதிப்பட்டு, ஐவர்பிழைத்தாற் போதும். அவர்கள்சபதம் நிறைவேறினுற் போதும். அணங்குவிரித்த கூந்தல் முடித்தாற போதும். என்று காரியத் தாக்ஷியாராமல் என் முழுமனதுடனே எல்லாக்காரியங்களையும் குறைவில்லாமல் நிறைவாய்ச்சீர்படுத்திக்கொண்டு வந்தால் என்னை உங்கள் குலதெய்வமாக நினைத்து, என்சொற்படி நின்று செவ்வைப்படாமல், என்னைச் சத்துருவாக்கி, அவரவர்கள் மித்

தாருவாக இருந்து லாபம்பெறப் போகின்றீர்களல்லவா? போகட்டும். என்னாலே நீங்கள் விரோதிக்கவேண்டாம். நீங்களும் அவர்களுஞ் சுகமாகயிருங்கள். (ஆயிரம்பட்டும் அபலை-சோயிறகட்டியுங்குறை) என்பது போலாச்சுது. நான் உங்களுக்குப் பயந்தவனல்ல உங்கள் வேலைக்காரனல்ல உங்கள் சேவகனல்ல உங்களாற் கிராமம்-பூமி நாடு-நகரம்-ஆடு-மாடு-வீடு-யானை தேர்-பரி-ஆபரணம்-அலங்காரம்-வஸ்திரம்இவைகள் பெறக்காத்திருப்பவனல்ல. என்னை நீங்கள் தடைப்படுத்தவும், போவென்னவும், வாவென்னவுங்கூடாது (புண்ணியத்திற் குழுவந்த மாட்டைப் பல்லைப்பிடித்து பருவம்பார்த்தான்) என்பதுபோல என்னைப்பரிக்ஷிக்கின்றீர்கள். அடாபோங்காணும் நன்றியற்றவர்களே! இப்பவும் குருக்ஷேத்திரத்திற்கு வாவென்றுகூப்பிடுகிறீர்கள். அவிடத்திற் கொண்டுபோய்கழுவுக்கேற்ற கோமட்டி யகப்பட்டானென்று விட்டுவிட்டு, (கொண்டானுங் கொடுத்தானும் ஒன்னு. இந்தக்கலியாணத்தைக் கூட்டிவைத்தவன்வாயிற் பிடிமண்ணு) என்னும பழமொழிபோல், நீங்களுந் துரியோதனனுநியரும் ஒன்றுப்க்கூடிக்கொண்டு, இந்தக்கிருஷ்ணன்தானடா நம்மிருவரையும கூடவொட்டாமற் கலகஞ்செய்துகொண்டே வந்தான். இவனைப்பிடியடா இவனையடியடா சிறைபில்செல்லடா. விரைவிற் கொல்லடாவென்றால், எனக்கார்துணை? அப்போதுங்களுக்கு எதிருமில்லை. எனக்குத்திக்குமில்லை. தெய்வமேனனறு உங்களாக்கினையினால் நானிறந்துவிட்டாலும், யுத்தமுகத்திலெனதுயிரைத் துறந்துவிட்டாலும் என்னைநம்பி என்காலைச்சுற்றிக் கொண்டிருக்கிற பெண்ஜாதிபிள்ளை குடும்பமெல்லாவற்றையும் ஆர் காப்பாற்றுவார்கள்? ஒருவேளை அன்னம்போட்டு ரக்ஷிக்கிறவர்கள் யாரிருக்கின்றார்கள்? இதெல்லாம் வீண்காரியம் (ப்ள்ளிக்கூடத்திற்குப் போனால் வாத்தியாரடிப்பார போகாவிட்டாலேனடிப்பார்?) அதுபோல் உங்களுடன்கூட வருவானேன்? அப்படிவந்து வருத்தப்படுவானேன்? (கரிப்புக்கு இருந்துபிழை, கலகத்திற்கு ஓடிப்பிழை.) என்பதுபோல் நான் எங்களூருக்குப் போய்விடுகிறது நன்மையாயிருக்கிறது. (எழுஊரிற் போய் இருந்துண்பதிலும், வாழும்ஊரிற்றாழ்ந்துகூழ் குடிப்பதுநன்று.) அதுபோகட்டும் ஒருதரம் பழகிவிட்டோமே லாடுலகாடு எதுவந்தாலும் அனுபவிப்போமென்றெண்ணினாலோ, (எரிமூட்டிய அடுப்பும் இல்லிப்பானை வெந்நீருமாய்முடிகிறது.) நீங்களெப்படியும் பலவான்கள். உங்களுக்கொரு குறைவுமில்லை. எனக்கென்ன அண்ணனா? தம்பியா? பங்கும் பங்காளிகளா? ஆரிருக்கின்றார்கள்? போனாலும் இருந்தாலும் நானொருவன்தான் ஆகையால், (காலம்போம் வார்த்தைநிற்கும்.) என்றிருப்பதால் நானித்தருணத்தில் ஒன்றுஞ்சொல்லக்கூடாது. கடவுள்கிருபையால் நீங்களிருகிறவர்களுங்கலந்துவாழ்ந்தால், நானுங்கண்குளிரப்பார்ப்பேனென்று பற்பல நிஷ்டூரங்களாகப் பேசிவரும் புண்ணியனுடைய மொழியைக் கண்யமுடைய பாண்டவர்களோடு புத்திரமித்திராள் யாவருங் கேட்டு மனங்கலங்கி மதிமயங்கிஇருக்கத் தருமராஜன் நெடுநேரம் யோசித்து, சுவாமி! தேவரீர்போகிறேனென்று சொல்லவும் மனந்துணிந்ததல்லவா? இது என்னுடைய வினைப்பயனென்று கண்ணீர்சோரவிட்டு நாங்கள் உம்மைப்பிரிந்தும் மண்ணில் வாழ்வைப்பெறுவதா? உம்மைவிலக்கி ஒருகாரியஞ்செய்வதா? எமது மனையில் யாங்களிடுந் தாபதியம் உம்மைவிட்டு அப்பாலொருவருக்கிடுவதா? ஓகோபாலா? என்னசொன்னீர் என்னசொன்னீர்? எனமனதைப் பேதித்துவிட்டீர். (பெருமாளில்லாமற் றிருநாள்நடக்குமா?) ஓ சுவாமி! சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்திரமெழுதவேண்டும்? என்ன எங்களுடைய நன்றியற்றதனம் என்ன நாங்கள் உள்ளுக்குள்ளே உறவாடுகிற முறை என்ன எங்களால்நேரிட்டகுறை? என்ன எதிரிகளாற்றங்களுக்குவந்த பொல்லாங்கு? தேவரீருக்கு இவ்வளவு மனஸ்தாபம் வந்தவிதம் யாதினாலோ, அதுஇப்பேர்ப்பட்டதென்று அடியேனுக்கு ஒன்றுந்தெரியவில்லையே. அவைகளையெல்லாந் தெரிவிக்கவேண்டும் தேவனேயென்று தீர்க்கதெண்டயாய் விழுந்த தருமராஜனைத் திடுக்கென்றெழுந்து, ஆ! ஆ! என்னகாரியஞ்செய்தீர்? எழுந்திருமெழுந்திருமென்று வாரியெடுத்து மார்போடணைத்து, உளுக்காரவைத்து உபசாரஞ்செய்து இப்படியுஞ் செய்யலாமா தருமராஜனே? இதென்ன அனியாயமென்றார். அப்போது தருமராஜன் இதெல்லாமிருக்கட்டும், என்தம்பிமார்கள் ஏதாகிலுந் தவறிநடந்தார்களா? நானேதாகிலுந் தப்பிப்போனேனா? அப்படி நாங்கள் தெரிந்துந் தெரியாமலுஞ் செய்திருந்தாலும் சீர்திருத்தவேண்டியகடமை உம்முடையதன்றிப் பின்னையாரிருக்கிறார்கள்? அப்படிவேறொன்றுங்காணேமே. ஏதாகிலும் உண்டானால் அந்தச்சங்கதியைவெளிவிடுமென்று தருமராஜன்சொல்ல, நானென்னசொல்வது? நான்கோனானா? குண்டிணியா (அம்மையார்மெழுகி மொக்கிட்டவிடத்தில்அறியாதவள்முன்தானையால் அழித்தாள்) என்பதுபோல் பெரியோர்கள்செய்யும் பெரிதாகிய காரியங்களைச் சிறியோர்களெல்லாஞ் சிதைத்து வருகின்றார்கள். அதைநான்சொல்லுவேனாகில் என்பேரில் எல்லோருக்குங் கொல்லத்தக்கபகைவருமென்றுகோபாலனசொல்லத் தருமராஜன்கேட்டு, அவ்வளவுஇரகசியமானகாரியத்தை நானறியப்போகாதா? அதுதானின்னதென்று தெரியட்டுமே, யாவரும் அறியட்டுமே யானையை முறத்தால் மூடுவதுபோல மறைக்க வேண்டியதில்லை. நீர்திருவாய் மலர்ந்தருளும் ஐயனேயென்று வையகம்புரக்குந் தருமராஜன்கேட்க, செய்யாளுரையுந் திருமார்பர் பொய்யாமொழியாய்ப் புகல்கின்றார்-

கேளும் தருமநந்தனு! துரியோதனன் முதலிய சத்துருக்களெல்லாம் அடியோடழியும்படியாய் முகூர்த்தம்வைத்து ஆயுதபூசை செய்ய வேண்டுமென்று நாமெண்ணியிருக்க, நமதுபகையாளியாகிய துரியோதனன் இவ்விடம்வந்து, தருமராஜன்தலை அற்றுவிழும்படியாகிய நாள் எனக்கு வைத்துக்கொடு நான் அந்தநாளையில் ஆயுதபூசை செய்கிறேனென்று கேட்க, அப்படியே உமதுதலைபோகும்படியாகிய ஸ்திரநாள் வைத்துக்கொடுத்தான் இந்தச்சகாதேவன் ஒருவரையொருவரறியாமல் உள்ளுக்குள்ளே இப்படி நடக்குமாகில், நான் ஊரைவளைத்துமென்ன? உறவுபிடித்துமென்ன? இன்னம் எந்தவேலைகளை எப்படிமுடித்தும் என்னபிரையோசனம்? (நிழலிலிருக்கும் பொருத்தம் வெய்யலிற்றெரியும் வருத்தம் (என்பதுபோல நான் பட்டபாடு எனக்குத்தெரியும். இதனால்தான் எனக்கு மெத்த மனவேஷ்டை யாச்சுதென்று மாயன்சொலத், தருமராஜன்கேட்டு தம்பியாகிய சகாதேவனையழைத்து, என்ன தம்பி? ஸ்வாமியார் சொல்லுகிறது சத்தியமா அசத்தியமா வென்றுகேட்க, சத்தியந்தான் தருமபூபதியாகிய அண்ணாவே! சந்திரகுலத் தோன்றலாகிய துரியோதனராஜன் வேத்திர வெகினமூர்ந்து நேற்றிராத்திரி என்னிடத்திற்குவந்தார். அவருக்கு மரியாதைசெய்து ஆசனமளித்து ஏதண்ணா!இவ்வளவுதூரம் வந்ததென்று கேட்டேன் பாண்டவர்களுக்கும் எனக்கும் யுத்தய்நேரிட்டுப் படைகூடியிருப்பதால், தருமராஜன் தலை போகும்படியாகிய நல்ல நாள் உன்னைக்கேட்டு வைத்துக்கொண்டு, நான் ஆயுதபூசைசெய்து ஆயுதமெடுக்க வேண்டுமென்று கேட்டார். அப்படியே நல்லதென்று, வாரம்-திதி-நாள்-ஓரை-சுத்தி-முதலியவும நன்மையாகக்கூடிய அமாவாசையினன்று ஆயுதமெடுத்துக் கொள்ளென்று நாள் வைத்துக்கொடுத்தேன். நாமே பகையாளிகளா யிருக்க அதனைநினைக்காமல் என்னையே நாள்வைத்துக் கொடுவென்று கேட்டபடியாற், சத்திபந்தப்பலாகாதென்று நாள்வைத்துக் கொடுத்தேனென்றான். அதைத் தருமராஜன்கேட்டு ஆ! ஆ! வென்று நகைத்து ஆனந்தங்கொண்டு, இதுவரையிலும் நீஎனக்குத்தம்பியல்ல இன்றுமுதலாக எனக்குநீ நல்லதம்பி யாயினை. ஓஎன்அப்பனே! சத்தியநெறிதப்பாத நித்தியனே! உன்சத்தியமே உன்னைக்காக்கக்கடவது. இனி எனக்கு இவ்வுலகம் வராவிட்டாலும் வந்தாலும்யார்போனாலும் யாரிருந்தாலும், நான்கூறியசபதம் சரிப்பட்டாலும் தப்பிப்போனாலும் எனக்குப்பெரிதல்ல. என் தம்பியினுடைய உண்மையொன்றுமே போதுமென் று பூரித்துப் புளகாங்கிதமுற்றுச்சிறியவனயிருந்தும் பெரியபொருளைக்கைக்கொண்ட சகாதேவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டு, கண்ணனைக்கண்ணினுலுற்றுப்பார்த்து, ஓ காசாம்பூவண்ணனே! உலகமுள்ளவரைக்கும் அழியாப்புகழ் கொண்டான் என் தம்பி என்றுசொல்லி என்தம்பிசகாதேவன்எனக்குச் செய்தசகாயம் மற்றத்தம்பிகள் முதலியயாவருஞ் செய்யமாட்டார்களென்று வியந்து, ஐயா! என்தம்பியினுடைய சத்தியத்தைக்குறித்து நீர்மெத்தவுஞ் சந்தோஷப்படவேண்டுமேயென்று தருமராஜன்சொல்ல அதைக்கேட்ட ஹரிமுகுந்தனுனவர் இரண்டு கையையுங்கொட்டிக் கலகலவென்று நகைத்துச் சொல்லுகின்றார்.

கேட்டீர்களா சபையிலுள்ளவர்களே! (உளவனில்லாமல் ஊரழியாது) என்பதுபோல இவரதுமதியில்லாம லிந்தச்சகாதேவன் இப்படிசெய்வானு? சரிதான் சரிதான் இனிப்பேசவேண்டியதில்லை. (குழந்தையினுடைய துடையைபுங்கிள்ளித் தொட்டிலையும் ஆட்டினுல் தூங்குவதெப்படி சொல்லுங்கள்.) இவர் பெரியவரென்று நான்சொன்னுல், ஏனடா இப்படி செய்தாய் புத்தியில்லாதவனே யென்று தண்டிக்காமல் அவனைக்கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டு மிகவும் புகழலாமா? இனிஇந்த அனியாயத்தை நான் யாருடன் சொல்லியாறுவேன். அரசர்களே!இப்போதுவீணுப் நாடுனொருவன் பழிக்காளானேன். இதுவரையிலும் பகைகளையவேணும் விதைவிளையவேணுமென்று நான்பட்டபாடு விழலுக்கிரைத்த நீராச்சே வெய்யலின் மஞ்சட்பூச்சாச்சே. விறுதாவாயெனக்குப்பேச்சாச்சே விபகாரங் கெட்டுப்போச்சே. என்று விசனப்பட்டு ஓய்தருமநந்தனரே! (அதிகாரிவீட்டில் திருடி தலையாரிவீட்டில் அடுக்கிவைத்தார்போல)உம்மிடத்திற் சொல்விக்கொண்டேன். இனிஎதுநடந்தாலும் வாய்பேசாம லிருக்கும்படியாகச் செய்துவிட்டீர் எனக்கென்ன கெட்டுப்போனது எனக்கென்ன ஆண்சிறைபும்பெண்சிறையுந் தலைவிரிகோலமாக அவதிப்படுவது ஒன்றுமில்லை. (அக்கரைக்காரருக் கில்லாதகாரியம் அயலாருக்கென்ன வந்தது வீரியம்) ஓ தருமநந்தனு! உமதுகருத்தை நானறிந்து கொண்டேன் இதுபோகட்டும். மேல்நடக்கவேண்டிய காரியங்களுக்கென்ன சொல்லுகிறீரென்று கேட்க, அந்த வார்த்தையை முரசக்கொடியினையுடைய முதல்வன் கேட்டு, இனிமேல்நடக்கவேண்டிய காரியங்கள் இன்னதென்று கட்டளையிட்டால், அடியேன் அந்தப்படி நடக்கக் காத்திருக்கிறேனென்று சொல்லப் பின்னை வேறொன்றுமில்லை. நாமும் சேனைகள் முதலியயாவர்களும் குருக்ஷேத்திரம் போய்ச்சேர்ந்து வீரமாகாளியைக் கொலுநிறுத்தி, அபிஷேகஅலங்கார தூபதீபத்துடன் பலிகொடுத்து, ஆயுதபூசையும் செய்து ஆயுதமெடுப்போமாகில், சத்துருக்களைஜெயித்து மித்துருக்களும் நாமும் வெற்றிபெறலாம். இதற்கு நாளையத்தினம் நாள் நேமித்திருக்கின்றேன் அந்தப்படி நடத்திப் பூசியுங்களென்று நாரணன்சொல்ல, யாவருஞ் சந்தோஷித்து, முக்கியமாகச் செய்யவேண்டிய ராஜதர்மமும் வீர்தர்மமுமிதுவே யென்று சொல்ல. உடனே முரசகேதனன் கேட்டுக் கண்ணனை நோக்கி

உமதிஷ்டப்படியே காட்டெருமைமுதலியயானை-குதிரை-ஒட்டை-பன்றி-கோழி-ஆடு-மான்- இவைகளெல்லாம் பலியிடுங்க ளென்றுசொல்ல, அதைக்கேட்டுஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்றார்.

இராவான் துரியோதனனுக்குக்களப்பலிக் குடம்பட்டதைக் கண்ணன் வெளிப்படுத்துதல்.

ஓதருமநந்தனா! இதெல்லாம் உலகத்திற்சுளுவாகிய பிரார்த்தனைமுதலிய காரியங்களுக்குச்சாதாரணமாய்ப் பலியிடுகிறதுண்டு. நாம்தொடங்கி இருக்கும் வேலையோ மலைபாண்டமாகிற வேலை இதன்றியும் துரியோதனனோ வெகுபேர் பெரியோர்களைச் சிநேகித்து, திவ்யமாகிய பலிகொடுத்து, பராசத்தி பூசைசெய்து, ஆயுதமெடுக்கும்படியாய் ஸ்திரநாள் நேமித்துக் கொண்டிருக்கின்றான். நாம்பூசைசெய்து ஆயுதமெடுக்கப் போகிற ஸ்திரவேளையினால், அவனுக்குச் செயங்குறைந்து நமக்கு ஜெயம்வரவேண்டும். ஆகையினால் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன் உமக்குத் தோன்றியதை யோசித்துச் சொல்லும் ஐவர் முதல்வனேயென்று சுவாமியார்சொல்ல, அதைக்கேட்ட தருமராஜன் நகைத்து, (நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பதுபோலிருக்கின்றதே) தேவரீரென்னைக் கேட்கிறயுக்தி இதுவெகு நன்றாயிருக்கிறது. சுவாமி! இப்படி அடிக்கடி என்னைச் சோதிக்கவேண்டாம் தேவரீருடைய சிந்தையின் வினைவெப்படியோ அப்படியே முடித்துவிடுமென்று தருமராஜன்சொல்ல ஸ்ரீகிருஷ்ணர் சொல்லுகின்றார். ஓதருமநந்தனா! நானென்ன நினைக்கிறேனென்றால், சத்தியசவுச ஆசாரவிபகாரமுள்ளவனாய், வீரப்பிரதாப அதிரதத்தலைவனாய், எதிருரோமக்காரனாய்இருக்கும்படியாகிய ஒருவனைப்பிடித்து, வீரமாகாளிக்குநரபலி யூட்டிவைத்துவிட்டால் எத்தனைபேர் எத்தனைசாஸ்திரம் பார்த்து நாள்வைத்துக் கொடுத்தாலும், எவ்வளவு பலியிட்டு பூசைசெய்து ஆயுதமெடுத்தாலும், அந்தத்துரியோதனனுடைய புத்ரமித்ராதியரை மீறவிடாமல் நாமே முடித்து வெற்றிபெறலாம். இதற்கு நானே முன்னிற்பேன். நீர்வேறாக யோசிக்கவேண்டியதில்லையென்று கோபாலன்சொல்லத், தருமராஜன் அந்த வார்த்தையைக்கேட்டு, சற்றுநேரம்யோசித்து,ஓசர்வக்ஞனாகிய கண்ணனே! தேவரீரிஷ்டப்படி நடத்திவையுமென்று சொல்ல கிருஷ்ணன் ஆரைக்கொண்டு நடத்துகிறது? (கடையில்விற்கிறபண்டமா? காசுகொடுத்துக்கொண்டோமா? வேலையைமுடித்துவென்றோமா? வீரமாகாளியைப் பூசித்தோமா?) என்றுபோகிறதற்கு இதுவோ மானிடவுயிரைச் சார்ந்தவேலை. அதிலேயுஞ்சாஸ்திரப்படிக்கு லக்ஷணம் அமைந்திருக்கின்ற வர்களருமை அப்படியுந் தேடிப்பார்த்தால்நம்முடையகூட்டத்தில் நாலத்திரண்டுபேரிருக்கின்றார்கள். அவர்களுக்கு மொவ்வொரு காரியநேரிட்டிருக்கிறது. அதென்னவென்றால் சல்லியனொருவ னிருக்கின்றான். அவனோ துரியோதனராஜனுக்குப் படைத்துணையாய்ப் போய்விட்டான். அருச்சுனனொருவ னிருக்கின்றான். அவனைப்பலியூட்டினாலோ பஞ்சபூதம்போன்ற ஐவரென்னும் பூண்டு அப்பொழுதேபற்றுப்போம். இராவனொருவ னிருக்கின்றான். அவனோதுரியோதன மகாராஜன்களப்பலிக்கு உடன்பட்டுவிட்டதாய்க்கேள்வி இனிவேறொருவருமில்லை (செல்லுஞ்செல்லாததற்குச் செட்டியாரிருக்கிறார்.) என்பதுபோல் நானொருவனிருக்கின்றேன். தருமநந்தனா! என்னைக் களப்பலியூட்டி உங்கள்சபதத்தையும் சத்துருக்களையுமுடித்து வெற்றிபெற்று அரசாட்சி செய்யுங்களென்று அமலனாகிய அரிவாசுதேவன்சொல்லவே, தருமராஜன்ஹரிஹரி என்று இரண்டுசெவியையும் பொத்திக்கொண்டு ஏக்கமுற்றவர்போல் நின்று பெருமூச்சுவிட்டு, இப்பேர்ப்பட்ட பெரும்பழியாகியசொற் கேட்பதற்கோ என்காதுக ளிருந்தனவென்று மனம்வருந்திச் சபையைநோக்கிச் சொல்லுகின்றார்.

ஓ அரசர்களே! இந்த விந்தையாகிய வார்த்தையைக்கேட்டீர்களா? நந்தநந்தனனைக் களப்பலிகொடுத்து நான் எழிற்கிரீடத்தை விடுத்துப் பழிக்கிரீடத்தை முடித்துக்கொண்டு ராஜாங்கஞ் செய்யவேண்டியதென்று நமதுநாரணன் சொல்லுகின்றார் அப்படி செய்து சத்துருக்களைச் செயித்து வெற்றிபெற்று நானெத்தனைநாளிருந்து வாழப்போகிறேன். இதைப் பார்க்கிலும் துரியோதனனே உலகத்தையாளும்படியாய் விட்டுவிட்டு நாங்களேந்துபேருங் காட்டுக்குப் போய்விடுவது மெத்த உத்தமமாயிருக்கின்றது நீங்களெல்லோருந் தங்கள் தங்கள் நாட்டுக்குப் போங்களென்று இருகரத்தையுங் குவித்து வந்தனைசெய்து மரியாதையுடன்சொல்லி, ஓ தபமிமார்களே எழுந்திருங்களென்றுகூறித், தானுமெழுந்தார் தருமராஜனானவர் அந்தவேளையில் இராவானெழுந்து, அறத்தின் மகன் காலில்விழுந்து,ஐயா! அவசரப்படவேண்டாம் உளுக்காருமென்றுசொல்லிச், சபையிலிருந்தயாவரையும்பணிந்துகொண்டு, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து, ஜெகரட்சகனாகிய தேவா! (காஞ்சிபுரத்திற் றிருடுவதற்குக் காவேரிப்பூம்பட்டினத்திற் கலிழ்ந்துபடுத்து மாரால்நகர்ந்துவந்த கதையைப்போல)வலைவீசிவந்தீரே ஓமாயவா! உமதுசிந்தையி லெண்ணியவண்ணம் நடக்கும்படியாகிய காலம் சேர்ந்திருக்கின்றபடியால் நீர்இந்த தந்திரமாத்திரமோசெய்வீர்? இன்னுமேதேதோ செய்யக் காத்திருக்கின்றீர் இறைவனே என்னைமுடிக்க இவ்வளவு யுக்திசெய்ய வேண்டுமோ? உமதிஷ்டத்தில்நினைந்தாற் பகைவனிருந்த இடத்திலிறக்கமாட்டானோ? ஈசனே! சும்மாயிருந்த ஐவர்மனத்துக்குத் துயரங்கொண்டுவந்து வைத்த தோன்றலாகிய உம்மையாரறிவார்கள்? என்னையும் என்னை ஈன்

ளோர்களேயும் அவர்க்குமுன்னோரையம் அம்முன்னோரையின்ற முன்னோரையும் நீயறிவாயன்றி,யென்போலிகளா லறியத்தக்கதோ? ஒபன்னகசயனா வென்று பணிந்து பாண்டவர்களைப்பார்த்து, என்றந்தையர்களே! நேற்றிராத்திரி துரியோதனமகாராஜன் என்னிடத்திற்குவந்தார். அவரை எதிர்கொண்டு சண்டுவணங்கி ஆசனத்திலிருத்தி ஏது இவ்வளவுதூரம் வந்ததென்றுகேட்டேன் அதற்கு அவர்சொன்னது. பாண்டவர்களுக்கும் எங்களுக்கும்பகைமேலிட்டிருப்பதனுற் களப்பலிக்கு நீவரவேண்டுமென்று இநகரத்தையும் நீட்டிஇரந்தார் போக தேவேந்திரனையொத்தகுரவகுலமுதல்வன் இச்சைமேற்கொண்டு பிச்சைதாவென்று லச்சையின்றி என்னை யிரக்கும்போது, நான்நாஸ்தியென்று சொல்லக்கூடுமோ? ஓஅரசர்களே! ஆகையால் இப்படியாக இரந்த என்பெரியதந்தைபைநோக்கி, எப்போது களப்பலியூட்ட நினைத்திருக்கின்றீரோ அப்போது அதுவரையிலும் இந்த அனித்தியதேகம் நிலைத்திருக்குமாகில் நீரேஒப்புக்கொள்ளுமென்று நான்ஒப்புக்கொண்டதுண்டு. இப்போதும்நான் தப்பிதமாகச் சொல்லமாட்டேன் ஒதுவலையாபீடமென்னுங் தந்தியைக்கொன்றவனே! நீர்முந்திக்கொள்ளுவதானுல் இதோ உமக்குச்சொந்தமாக இருக்கிறேன் இப்போதுமக்குச் சிந்தைக்கவி திடுக்கென்று விழுந்ததா? இனியுமக்கு நித்திரைபிடிக்குமா? ஒநந்தகோபாலனே! என்றுசொல்லியநாககன்னியின்புத்திரன்வார்த்தையைக்கேட்டு. இதென்ன அனியாயம்? நானென்று சொல்லப்போய்த் தானென்றாய் விளைந்தது அப்படியா இராவானே! துரியோதனன்வந்து உன்னைக் களப்பலிக்குக் கேட்டானு? அடடா!! தருமநந்தனரே! கேட்டீராசங்கதி? (கிணறுவெட்டப்போய் பூதம்பிறந்தகதையாச்சுது) இப்படியிருக்கிறதுஉலகம். நேற்று துரியோதனனுதியரைக்கொல்லப் பதினெட்டுகாளென்னத்திற்கு நீங்களெல்லா மிங்கிருந்து என்னையனுப்பினுல் இன்றைக்குள் நானொருவனேசென்று அதமாக்கி வருகிறேனென்று சொன்னவன், இன்றிப்படி ஆய்விட்டானு? ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? அவனவன் பிழைக்கும்வகை அவனவன் தேடிக்கொள்ளுகிருன் நாம்மாத்திரம் வீண்காலப்போக்கிக் கொண்டிருக்கிறோமென்றுசொல்ல, இந்த வசனத்தைத் தருமர்கேட்டு, இராவானையழைத்துத் தமதுசரீரத்தில் அணைத்திருகப்புல்லி, அப்பனே! என்னையனே! சாந்தமூர்த்தி! துரியோதனன் உன்னைக்களப்பலிக்குக்கேட்க அதற்கு ஒத்துக்கொண்ட என்னிருகண்ணே! சந்திரகுலத்தை விளக்கவந்த மணித்தீபமே! பிராணனைக் கேட்டவர்க்கும் பிறழாமற்கொடுக்க விசைந்ததாருவே! என்றுபலபலவிதமாய்ப்புகழ்ந்தமகிழ்ந்தார். அர்ச்சுனன் முதலியபெயரும் அகங்களித்திருந்தார்கள்.

கண்ணன் களப்பலி விதியுரைத்தல்.

அதுகாலையில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லுகின்ருர். ஏனையா? இவர்களெல்லாருமிப்படி ஒன்றுபட்டிருப்பார்களாகில் நான்மாத்திரம் வேலையற்றவனு(ஆற்றிற்போகிறசனத்தை அப்பாகுடி ஐயாகுடி என்பதுபோலிருக்கின்றதே) இதென்ன அனியாயமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தருமராஜனைத் தனியே அழைத்துப்போய், நடக்கவேண்டியகாரியமர்மங்களைக் கலந்துபேசி, இராவானைக்களப்பலிக்குவைத்துவிடும்படியாய்ச்சொல்ல, ஐயே! என்பிள்ளையைக்கொன்று களப்பலியூட்டிவைப்பது பெருமையோ? உயுத்தவாரம்பஞ்செய்யும்போதே புத்திரசோபத்தடனே யுத்தஞ்செய்யலாமோ சொல்லுங் கண்ணனே? என்தம்பி முதலியபேர்களின் மனமெப்படி துணியும்? நான்சற்றும் உடன்படமாட்டேன் என்று தருமராஜன் சொல்ல, அதற்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லுகின்ருர். தருமராஜனே! கேளும், களப்பலி யூட்டுவதென்ருல் தலையறுத்துவைப்பதா யோசித்து வருந்துகின்றீர். அப்படியல்ல இந்தப்பிள்ளையை ஸ்நானஞ்செய்வித்து அலங்காரப்படுத்தி அவன்கையிற்ருனே வாள்கொடுத்து முப்பத்திரண்டுஉறுப்புக்களிலேயும் கொஞ்சம் கொஞ்சம்அறுத்து, வீரமாகாளிக்கு நைவேத்தியம் வைக்கச்செய்வது களப்பலியே யல்லதுவேறில்லை. இந்தஇராவானுஞ் சுத்தவீரனுகநின்று யுத்தமுஞ் செய்வானென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர்சொல்லதருமராஜன் சித்தமகிழ்ந்துசுவாமி! எதிருரோமக்காரன் வேண்டுமென்னுஞ் சித்தாந்தமென்னவென்றுகேட்க ஸ்ரீகிருஷ்ணர் சொல்லுகின்ருர்.

ஒதருமநந்தனு! மாமிசம்அறுக்கும்போது அந்த இடத்திலுதிரம்வராமலும் கண்ணீரெழாமலு மிருக்கவேண்டிய மனேதிடத்தைப்பற்றி எதிருரோமக்காரரைத் தேடுவதென்றுசொல்ல, அப்படியாவென்றுஅகமகிழ்ந்து அருச்சுனன் முதலாகிய தம்பிமார்களுக்குந்தெரிவிக்க, அவர்கள்கேட்டுத்திருமாலுடைய மனதிற்கும் தேவரீருடையசித்தத்திற்கு மெப்படிசம்மதமோஅப்படியே எங்களுக்குஞ்சம்மதமென்று புத்திரவாஞ்சையை அகத்திலடக்கிச்சொல்ல அந்தக்குறிப்பை இராவானறிந்துகொண்டு, ஐயா! நீங்களொன்றுக்கும் யோசிக்கவேண்டாம். (காற்றிருந்தவர்கால்வாங்க, நேற்றிருந்தவரின்றில்லை, பார்த்திருந்தவர்பாழானர்)என்னும்பழமொழிகேட்டிருப்பீர்களல்லவா? ஆகாயத்தி லெறிந்தகல்லைப்போலும். காற்றையடைத்துவைத்த தோல்துருத்திபோலும் நெருப்பிற்காட்டிய மெழுக்கைப்போலும், வெய்யலில்வைத்த வெண்ணெய்போலும், பெருங்காற்றிற்ருன்றியகுமிழிபோலும், மாலிமையில்லாக் கப்பல்போலும், சூத்திரக்கயிறுடைய பொம்மைபோலும், வேகாப்பண்டத்தினிறைந்தசலம்போலும், நிமிஷமாத்திரமும் ஸ்திரமென்

றுசொல்லக்கூடாத பொய்யாகியதேகத்தை மெய்யென்றுநிச்சயித்து வெகுபேர்மறந்து மடிந்தார்கள். ஆகையால் அனித்தியத்தை நித்தியமென்று நினைத்து, (பாம்பின்வாயிலகப்பட்டதேரை அப்பாம்பினுடைய பல்நுனியிற்றெருங்கும் விஷத்துளியைப்பார்த்து ஈயென்றுகருதி, இதைப்பிடித்து நாம்புசித்துப் பசியாறி இருப்போமென்று எண்ணி அந்தவிஷத் துளியைத் தாவ, பாம்புவாழைப்பழம்போல் தேரையைப்பின்புறமாகவேபிடித்துவிழுங்கித் தன்பசிதணிவதுபோல) சாகிறவரையிலும் அவாநீங்காமையும்பிராணபயமும் யாவருக்குமிருக்கும் அப்படி இருந்தாலும் சமுத்திரத்தினலைபோலும், வண்டிற்சக்கரம்போலிம், ஊசலின் கயிறுபோலும், கீழதுமேலதாய் மேலதுகீழதாய்ப் போயும் வந்துகொண்டுமிருக்கும்பிற்றைச்சடலத்தை பெருமையாகநினைத்துமூடர்மயங்குவார்கள். நுண்ணறிவுடையோர் கொடிப்பது மகிழார்கள். உலூகியின் வயிற்றில் உங்களுக்கு நான்பிள்ளையாகப் பிறந்தும் என்னபலன்? தந்தையின் துயர்போக்கித் தர்ப்பணக் கிரியைமுதலிய கடனைத்தீர்ப்பவன் எவனானாலும்அவனுக்கே பிள்ளையென்னும்பெருஞ்செல்வப் பேர்தகும் இல்லாவிட்டால் இருந்தும் இல்லாமையாகிய இழிவைப் பெறத்தக்கதாக இருக்கும். அதோ நமதுகுலத்தில் வீஷ்மாச்சாரியர் தந்தையாகிய சந்தனுமகாராஜன் நிமித்தத்தில் விரதசீலனாகி மேன்மை பெற்றார். ஆதலால் நானும் என்சரீரம்வருந்தி என்னாலியன்ற உபகாரங்களைத் தந்தைமார்களின் பொருட்டுப் பராசக்திக்குத் திர்ப்திசெய்ய நினைக்கின்றேன். நீங்கள் தயவுசெய்து இந்தச்சிறியேனாலாகிய உதவியைஅங்கீகரிக்கவேண்டும் மேலும் எல்லாரும்உயிருடனிருந்து வாழவும், நான்மாத்திரம் இறந்துபோகவும் நேரிட்டதேயென்னும் பயம்எனக்கில்லை. அஃதேனெனில், இவ்வுலகத்திலுள்ள ஆத்மகோடிகளில்வெகுபேரைக்குருக்ஷேத்திர பூமியிற்கூடி வேலைமுடிப்பதற்கு தனக்குள்ள சகலவேலைகளையும்விட்டெழுந்து இதுவேவேலையாக வந்திருக்கின்ற இந்தவிமலன், என்கண்காண எல்லாரையு முடிப்பாரென்பது என்னுள்ளே தோன்றுகின்றமையால், முன்னேஇறப்பது பின்னே இறப்பதென்னும் பேதமும், அதனால்நேரிடும் பிராணபீதியும் என்மனதைவருத்தப்படுத்தஇல்லை. (பழுத்தஓலை முன்விழுந்தாற் குருத்தோலைபின்விழும்) என்னும்பான்மைபோல், கடைசியிற் கணக்கு பார்க்கும்போது சகடுமுழங்காலென்னுந் தன்மையாய்ச் சரிப்பட்டுப் போகும். ஐயா! (குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குலமன்னரே) என்னுந் தன்மையுமாகுமென்றஇராவான் வணங்கிச்சொல்ல, அர்ச்சுனன்முதலிய யாவருங்கேட்டு மனமகிழ்ந்திருந்தார்கள். அந்தச்சமயத்தில் இராவானானவன் பெரியதந்தைமுதல் இயாவரையும பணிந்து, தாய்மார்களுக்குந்தீர்க்கதண்டஞ்செய்துக் கொண்டு, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை வணங்கி, ஸ்வாமி! தேவரீருடைய எண்ணப்படி உடம்பட்ட எனக்கு ஒருவரங் கொடுக்கவேண்டும். அதாவது ஜெயவீரப் பிரதாப விஜயனுடைய பிள்ளையாகிய இராவான் களப்பலியா யிறந்தானென்னும் பெயரில்லாமற், யுத்தகளத்திற் சுத்தவீரனா யிறந்தானென்னுங் கீர்த்தியும், அப்பேர்ப்பட்ட வீரனிடத்திற் போர்புரிந்து இறக்கும்படியாகிய சத்துவமும் எனக்குக்கொடுக்கவேண்டுமென்று கேட்க, அப்படியே ஈசன அனுக்கிரகஞ் செய்வாரென்று அருள்புரிந்து யாவருமகிழும்படியாய்ப் பேசியிருந்து, தாங்கள் தாங்கள் இறங்கியிருக்கும் இடம்போய்ச்சேர்ந்து, போஜனாதிகளையும் புசித்திருந்தார்கள்.

கண்ணன் திதியைப் புரட்டல்.

அன்றுபோய் மற்றுநாட்காலமே எல்லோரும் எழுந்து சபைக்குவந்து சேர்ந்தபிற்பாடு, கண்ணனானவர் நெடுநேரம்வரைக்கும் வார்த்தையாடிக்கொண்டிருந்து, அப்பால் இன்றையதினம் அமாவாசி யாதலினால் யாவருந் திலதற்பணாதிகள் முடித்துப் போஜனஞ்செய்து, இருபதுநாழிகைக்குக் குருக்ஷேத்திரம் போய்ச் சேரவேண்டுமென்று சேனாதிபதியாகிய சுவேதனையழைத்து உத்தரவுசொல்ல அதைக் கேட்ட அரசர்களெல்லாரும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பார்த்து, இன்றைக்குச்சதுர்தசி நாளைக்குஅமாவாசியாகையால் நாளைக்கல்லவோ சேனைகள் குருக்ஷேத்திரம் போகவேண்டிய நாளென்றுசொல்லக், கண்ணனானவர்நகைத்து, ஐயோ! இன்றைக்குத்தான் அமாவாசியென்று ஸ்தாபித்தார். அப்போது அரசர்கள்முதலானவர்களோடு பாண்டவர்களும் பஞ்சாங்கமெடுத்து வரச்சொல்லிப் பார்த்தபோது, அதிலுமின்றைக் கென்றே இருக்கப்பார்த்து, பௌரோகிதரையுங்கேட்கும்போது, ஐயா! இன்றைக்கே அமாவாசியென்று அவர்களுஞ்சொல்ல, அவர்களும் அந்நகரத்திலுள்ளமற்றயாவரும் ஸ்நானசங்கற்பங்களைச் செய்துகொண்டு, திலதற்பணாதிகளைமுடித்துப் பிதிர்த்தேவதைகளைப் பூசித்து நைவேத்தியம் வைத்தபோது, அந்தப்பிதுர்த்தேவதைகளெல்லாரும்வந்து சாப்பிட்டார்கள். அந்தவேளையில் தேவர்களுக்குப் பிதுர்ப்பாகம்அகப்படாமையினால் இதென்னகாரணம்? பிதுர்க்களெல்லாரும் உண்டுகளித்திருக்க நமக்குப் பாகமகப்படாமற்போன வயணமென்னவென்று அத்தேவர்களெல்லோருங் கூட்டங்கூடிச், சூரியசந்திரரை அழைத்து, இன்றைக்குப் பிதுர்த்தினமென்றுபூலோகமெல்லாங் கொண்டாடிப் பூசிக்கின்றார்களே உங்களுக்குக் கிடைக்கவேண்டிய பிதுர்ப்பாகங் கிடைத்ததாவென்று தேவர்கள்கேட்க, அச்சொற்கேட்ட சந்திரசூரியரிரண்டுபேருந் திடுக்கிட்டு, நாளைக்கல்லவோ நாம் கூடவேண்டியகாலம்? நாமொன்றாய்ச்சம்பந்தப்பட்ட காலமல்லவோ அமாவாசி? அதற்கல்லவோபிதுர்த்தினமென்றபெயர்? நம்முடையகதிஇன்றுமுழுமையுஞ்

சென்றபிற்பாடல்லவோ நாளையகதியிற் கூடப்போகிறோம்? அப்போதல்லவோ பிதுர்ப்பாகம் நமக்குக்கிடைக்கும்? அப்படியிருக்க இன்றுகூடியதாய்க்கொண்டாடியவிதம் எங்களுக்குத் தெரியவில்லையேயென்று மற்றக் கிரகங்களைக்கேட்க, அதென்னமோ எங்களைத்தானம்விட்டுத் தானம்புரட்டி இருக்கிறது எங்களுக்குத் தெரியவில்லையென்றுசொல்ல, இப்போது நம்மெல்லோருக்குஞ் சந்தேகப்பட்டிருப்பதால் நமக்காகப் பூலோகத்திலவதரித்திருக்கும் புண்யனாகியகண்ணன் உபலாவியத்திலிருக்கின்றார். அவர்தான்இதற்குக்காரணம் போலுமிருக்கின்றது. அவரைப்போய்க்கேட்போமென்று அந்தரம்விடுத்துஇந்திரன்முதலிய சந்திரசூரியர் யாவருஞ் சேர்ந்துவந்து சுவாமியைத்தனித்துக்கண்டுவணங்கி,நாளையதினம்நாங்கள்கூடுஞ் சங்கமமாகஇருக்க இன்றைபதினமென்று தாங்களுந்தாவுசெய்ததாய் பேசிக்கொள்ளுகிறார்கள் ஆகையால் சந்தேகப்பட்டு உங்களைக்கேட்கும்படியாகவந்தோம் என்று ஒருவர்பின்னொருவர் நின்று சந்திரசூரியர் சொல்ல, ஸ்ரீகிருஷ்ணதேவர் அவர்களுடைய வசனத்தைக்கேட்டு, நல்லது அமாவாசி யெப்பவென்றுகேட்க, நாங்களிரண்டுபேருங் கூடியகாலம் அமாவாசி பிதுர்த்தினமென்றுசொல்ல, அதைக்கேட்ட பகவானவன்நகைத்து அவர்களைநோக்கி, இப்போதுநீங்கள் கூடிஇருக்கின்றீர்களா சொல்லுங்களென்று கேட்க, தேவரீரைக்கண்டு சந்தேகநிவிர்த்தி செய்துகொள்ளும்படியாக நாங்களிருவருங்கூடி வந்தோமென்று சொல்ல, நீங்கள்கூடியதினமே அமாவாசியாகையால் இப்போது கூடியிருக்கின்றீர்களே இதுவே அந்தப்பிதுர்க்காலந்தானென்றுசொல்ல, நாளையதினத்தை இன்றாக ஒப்புக்கொண்டால் எங்கள்கதியெப்படி சரிப்படுமென்றுகேட்க, இன்றுமுதற் பலநாட்களிலுஞ் சேர்ந்து ஒவ்வொருதினத்திற்கு மாத்திரைப்போது கதியாகச்சென்று சரிப்படுத்திக்கொள்ளுங்களென்று சக்கராயுதன்சொல்ல, அப்படியே மகாபாக்கியமென்று ஒப்புக்கொண்டு போய்விட்டார்கள். ஓஜெனமேஜய மகாராஜனே! அந்தக்குறைவுதான் நாளதுவரையிலும் அமாவாசி சரியாகவராமல், இன்னும்இரவும்பகலுமாகப் புரண்டுவருகின்றதென்று வைசம்பாயனர்சொல்ல; அதைக்கேட்டு மகாசந்தோஷமடைந்து, நாளையுங்கோளையும்புரட்டும் நாயகனாகிய நாரணனே பாண்டவர்களுக்கு நன்மைத்துணையாக அமைந்திருக்கும்போதுவேறுநடக்குங்காரியங்களுமுண்டோ (முன்னவனேமுன்னின்றால்முடியாதபொருளுளதோ என்னும் பெரியோர்கள் வாக்கியமென்ன பழுதாவதோ? ஓவேதவேதாந்த முதல்வனாகிய ஸ்வாமியென்று சிந்தனைசெய்து வந்தனைபுரிந்து மேல்நடந்த மற்றச்செய்கைகளைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று ஜெனமேஜயமகாராஜன் கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்.

பாண்டவர் குருக்ஷேத்திரஞ்சென்று வீரமாகாளியைப் பூசித்தல்.

இப்பால் ஸ்ரீகிருஷ்ணனானவர் சேனாதிபதியாகிய சுவேதனனையழைத்து, நமதுசேனைகளெல்லாம் இன்றைபதினங் குருக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்து, இராத்திரிக்கு வீரமாகாளிபூசைசெய்து ஆயுதமெடுத்து, நாளைக்குமுதல்நாள்யுத்தம் ஆரம்பிக்கும்படி நாள் நியமித்திருப்பதினால் அதிசிக்கிரமத்திற் பிரயாணப்படுமென்றுசொல்லவே, அப்போதே பிரயாணபேரி முழங்கச்செய்து, அளவிறந்தமுரசு பேரி-குடமுழா-தாந்தமி-டங்கா-பாங்கா-உறுமி-தவில்டி-தப்பட்டைதாரை பூரி-கற்னா-கொம்பு-முதலிய வாத்திய முழக்கமும், சேனைப்பெருக்கமும், இரதகஜ துரகபதாதிகளின்நெருக்கமும், அண்டமுகடுமுதல் எண்டிசையும்அதிரும்படியாய் மண்டலமும் புண்டரீகனுலகமும் பெருமைபடியாய்ப் புறப்பட்டார்கள் ஒருமையென்பது சிறுமையாற்குறையவும், இருமையென்னும் அஸ்திர சஸ்திர ஆயுதங்களிரண்டுமிறையவும், மூன்றுலோக முழங்கிவிழிக்கவும், நான்குநிலமும் நடுங்கிப் பயக்கவும், ஐந்துபூதங்களலறவும், ஆறுசமயமடங்கவும், ஏழுகடலுமிரைக்கவும், எட்டுகஜமுந்துடிக்கவும், ஒன்பதுகிரகங்களுலையவும், பத்துத்திசைகளும்பதறவும், பதினொரு உருத்திரர்பேசவும், பனிரண்டுசூரியர்மாறவும், பதின்மூன்று தமிழ்நாட்டரசர் சேனைகளுக்குப் படிபோடவும், பதினாலு உலகம்நடுங்கவும், பதினைந்துதிதியுமொடுங்கவும், புகழ்-வலி-வெற்றி-பெருமை-நல்வாழ் முதலிய பதினாறுபேறும் பாண்டவர் பெறவேண்டுமென்னும் பக்தியினால் பாதாலத்திலிருக்கும்நாகங்களினுடைய தலைநசுங்கி அதின்சிரசிலிருக்கின்ற நாகரத்னம் பிரகாசிக்கும்படி யுலாவுந் தொகை இறந்த யானைகளும், மகமேருவே முதலிய பர்வதங்களுக்கு அச்சுமச்சு முதலிய அங்கங்கள் அமைத்துக் குதிரைகள்கட்டி வருவனபோலொத்த கோடாகோடி தேர்களும் சூரத்தாற்றாளிப் படலங்களை எழுப்பி மேகக்கூட்டங்களும் குலிங்கிப்போகும்படியா யநுமானித்துத தாவிவரும் அளவற்ற குதிரைகளும், அத்தன்மையவாக எழும்பிய தும்புகளை யானைமதங்கள் உளைச்சேறுக்க அந்த உளைச்சேற்றை இரதங்களி னுருளைகளூர்ந்து வான்கருக்கைப் போலும் மண்வெட்டி இலையைப்போலும் காய்ந்துவரச்செய்ய அப்படியுலர்ந்து காய்ந்த களிமண்கட்டியைப் பரமஅணுவாக்கி ஆகாயத்தில் மறுபடியும் பறக்கச்செய்து அதனால் இமையா நாட்டத்தவரைக் கண்ணிமைத்துத் தியங்கும்படியாக்கி இமைக்கு நாட்டத் தவரென்று பேரிட்டழைத்துப் பெருங்கூச்சலிட்டுச்செல்லும்பலவாறான பதாதிகளும், அப்படித் தேவர்களுடைய கண்களில் வீழ்ந்ததும்பைத்துடைத்து விசனப்படாதீர்கள்நீங்கள் இமையாநாட்டத்தவர்கள்தாமென்றுபெயர்விளக்



[130] பாண்டவர்கள்வீரமாகாளிக்குபூஜைசெய்தல்

கித் தேவோபகாரஞ்செய்யும்படியாகிய பற்பலவிதவன்னக் கொடியாடைகளும், அக்கொடிகளின் வஸ்திரங்களைத் தாங்கியிருக்குஞ் சுவளக்கொடிகளும் கொம்புகளையும் பலவிதக் குடைகளையும் பிடித்து வராநின்ற படியாட்களும் அந்தநிழலில் வரும்படியாகியமுடிமன்னவரும் விரப்ரதாபக் கெடிமன்னவரும் முடியுடன் முடிகளுருங்க, புஜத்தோடு புஜங்கனெருங்க அடியுடனடிகண்மிதிக்க, ஆயுதங்களுட ஞயுதமிழைக்க ஆக்ரமித்து பராக்ரமத்துடன் வியாக்ரமம்போற் சிக்கிரம் வந்து பற்கடித்துச் சொற்படித்து வாய்மடித்து வாள்பிடித்துப் படபடவென்ன மீசைதுடித்துக் கடகடவெனன ஓசைஎடுத்து விற்பிடித்து மறகொடுத்து வீரங்களைப் பேசுமோசையும் காரங்களைப்பேசும ஆசையும், யானையின்முழக்கமும், தேர்களின் சக்கரத்தொனியும், குதிரைகளின அநுமானிப்பும், சேனைகளின் பெருங்கூச்சலும், இவைகளெல்லாம உலகம் செவிடுபடும்படியாய் முழங்கவந்து குருக்ஷேத்திரஞ்சேர்ந்து செங்கண்மாலே சிரசுஞ் சிவனுமாகவும், சேனாதிபதி சுவேதனனே அணிமுடியும் ஆபரண அலங்காரமாகவும் மற்றையவரசர்களே பலவித உறுப்புக்களாகவும் பாண்டவர்களே படைத்தேகமாகவு மிருந்து அந்தக் குருபூமியில் இந்தஎழக்குரோணிசேனைகளுந் தாங்களுமிருப்பதற்குப் பாசறை அமைக்கும்படியாகயோசித்துக் காண்டவவனத்தில் அருச்சுனனால் உயிருதவிபெற்ற மயனென்பவனை அடியார்க்கெளியவனாகிய நெடியோன் அருளினால்நினைக்க, அவன்வந்துஆதிநாரணனை வணங்கி, அடியேனை நினைத்தகாரிய மென்னவென்று கேட்க, இவிடத்தில்யாவரும் அவரவர்க ளந்தஸ்தின்படி இருப்பதற்காகிய படைவீடு வெகுதிட்டமாய் அழகியசட்டமாய் ஏற்படுத்தவேணுமென்று சொல்ல, அப்படியே மஹாபாக்கியமென்று தனதுமனத்தினாலன்றி கரத்திலிருக்கும் மாத்திரைக் கோலினாலும் தனதுகண்களினாலும் கோடுகளேர்ப்படுத்தி, நான்குபுறமதிற்கோயிலும்-நவரத்தினக்கோட்டைவாயிலும் ஆயுதச்சாலையும்-பூந்தருச்சோலையும்-புனிதஸ்நானஞ்செய்யும் இடமும்-பூசாவிதி முடித்துக்கொள்ளும்மடமும்-தேவதார்ச்சனைக்கூடமும்-திருவாபரண மாடமும்-அலங்காரம் செய்துகொள்ளும் அறையும்-அரசர்களிருக்குந் துறையும் -ஆலோசனைமண்டப முறையும்-அரிவையர் கூடுட நிரையும்-ஆனைகட்டுங் கொட்டாரமும்-ஆன்றோர்வசிக்கும் விட்டாரமும்-குதிரைகள் பந்திக்குஞ்சோலையும்-தேர்கள்நிறையுஞ்சாலையும்-பதாதிகளடங்கும் இடமும-ராஜஸ்திரீகளிருக்கும் அந்தப்புரமடமும்-சவுக்கடிமேடையு -சந்தனவாடையும்-சித்திரகூடமும்-அஸ்திரமாடமும் - சாதுசங்கச்சாலையும் - வேதவேள்விச்சோலையும்-ஓமசாந்தித்திட்டும் -கலியாணமண்டபக்கட்டும்-கனதனப் பெட்டிவைக்குங் கூடமும்-கவிவலோர் மிக்கிருக்கும் பீடமும்- ஆகிய இவைகளெல்லாம் ஏற்படுத்தினன்மயனானவன் அந்தஅலங்காரத்தைக் கோபாலனும் பூபாலரும்பார்த்து, நாவினாற்சொல்லத் தக்கதன்றென்று கலமுடன் மகிழ்ந்து அம்மயனைப்புகழ்ந்து நல்லவேளையிற் கிரகப்பிரவேசஞ்செய்து நியாகயோக யேகயோக இந்திரனை போற் கொலுக்கொண்டிருந்தார்கள்.

அன்றிராத்திரி ஒன்பது நாழிகைக்குமேல் ஸ்ரீகிருஷ்ணபகவான் தமதெண்ணம் நிறைவேறும்படியாய் ஆயுதச்சாலையில் ஆவாகனஞ்செய்திருக்கும் வீரமாகாளிக்குப் பூசைபோட வேண்டுமென்றுசகலவித அலங்காரத்துடன்சென்று, அபிஷேகதிரவியங்களாகிய சந்தனம்-கரும்பு-இளநீர்-பச்சைக்கர்ப்பூரம் -குங்குமம்-கதம்பம்-புனுகு-சவ்வாது-பன்னீர்-பால்-தேன்-தயிர் முதலியயாவுங்கொண்டு திருமஞ்சனமாட்டிதிவ்யவஸ்திராபரணமுதலிய திலகமுஞ்சூட்டி, மலர்ந்த மணமுறைந்த பராகமுந் தேனுநிறைந்த புட்பமாலையுஞ்சாத்தி கன்னல்-பயறு-காய்-கனி-கிழங்கு - வாழைக்கனி-வருக்கைக்கனி-மாங்கனி-தேங்காய்-தாம்பூலம் -கர்ப்பூரம்-சாம்பிராணி-தட்சணை-அரிசி-துவரை-அவரை-எள்-மொச்சை-கடலை-முழுவுளுந்து-அபினி-சாராயங்கள்-சடைக்கஞ்சா-புகையிலை-பாயசம்-சுகியன் - சுண்டல்-எள்ளுண்டை-மோதகம்-வடை-பணியாரம்-ரொட்டி -அன்னம்-கச்சாயம்-அறுசுவைக்கறி-கொழுக்கட்டை-இவைமுதலியவைகளோடு மாம்சத்தினுசும்மரக்கறிவகைகளும் அமைத்து இடை இடை இளநீர்-எலுமிச்சம்பழம்-பேரீச்சம்பழம்-வேர்ப்பலா -விளாம்பழம்-கிச்கிலிப்பழம்-இவைகளைவைத்து,விதம்விதமாகச் சர்க்கரை வெல்லத்தால் தரைமுன்மெழுகிப் பக்குவ நெய்யாற் பள்ளயமமைத்து யாகசாஸ்திர விதிப்படி ஓமம்வளர்த்தி, யாமளசாஸ்திர விதிப்படி உயிர்ப்பலி கொடுத்து சுடர்மணிவிளக்கு தூண்டாவிளக்கு முதலானவைகளோடு கர்ப்பூரஜோதிகாட்டி, இராவானை யழைத்து அபிஷேகஞ்செய்து சிவப்பு நிறங்கொண்ட செம்பட்டணிந்து செஞ்சந்தனமும் சிவப்புமாலையுந் தரித்து தேஜோன்மயமான திவ்யாபரணங்களினால் தேகமெல்லாமறைத்து வீரகண்டாமணிகட்டி விருதுத்துவஜம்நாட்டி, வாளாயுதத்தை மகாதேவி சந்நிதியில்வைத்துப் பூசிக்கும்படியாய் விட்டார்கள். அந்தப்படியே இராவானும் தீர்க்கதண்டமாகப் பணிந்து தூபதீபம்கொடுத்து நீர்மாற்றி,வாளாயுதத்தைவலது கரத்தாலெடுத்து, மண்டியிட்டு ஒங்காரங்கொண்டு, தனதுமுப்பத்திரண்டு உறுப்புக்களிலும் துண்டறுத்துப் பராசத்தியின்முன்வைத்து மனங்கோணாமல் உடல்வாடாமல், பிராணபயம்காடாமல் வாய்பேசாமல் தேகந்துடியாமல், உதிரம்வடியாமல் கண்ணீர்சோராமல், தண்ணீர்பாராமல் வாழ்நாள்தேடாமல், மண்ணாசைநீடாமல் சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டான் உடனே பாண்டவர்களும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் ஜலங்கொண்டு தெளித்து உபசாரஞ்செய்து தாகவிடாய்

தீர்த்து நீரும்பத்திரியும் விறையப்பூசி அந்தப்பாராசத்தியின் சாலையிற்றனே வளர்த்திவைத்தார்கள். அப்பால் மூர்ச்சை நீங்கியெழுந்த இராவானனவன் முன்பலத்திற்கு மூன்றுபங்கு பலங்குன்றிப்போய்ச் சுவாமியின் அருளினாற் கொஞ்சம் பலமுடையவனாக இருந்தான். பாண்டவர்களும நல்லவேளையில் ஆயுதமெடுத்துக்கொண்டு மிகுந்த சந்தோஷமுடையவர்களாய்ப் பொழுதெப்போது விடியும் பொழுதெப்போது விடியுமென்று சகலசேனைகளுடன் ராத்திரி முழுமையும் நித்திரையில்லாமல் மிகுந்த ஆத்திரத்துடன் சூரியோதயம் பார்த்திருந்தார்கள்.

வீஷ்மருக்கும் கர்னனுக்கும் வாது.

இப்பால் துரியோதனமகாராஜன் உபலாவியத்தில் நடந்தசங்கதியும் அமாவாசியைப் புரட்டியதும், இராவானைக் களப்பலி யூட்டியதுந் தெரிந்துகொண்டு மெத்தவும் விசனமுடையவனாய்த் தான்போய் நாள்வைத்துக்கொண்டு களப்பலிக்கு இராவானை உடன்படுத்திவந்ததையும் அதைக்கிருஷ்ணன் புறட்டிவிட்டதையும் வீஷ்மர்முதலிய உரியவர்களுக்குத் தெரியப்படுத்தித் தங்களுடைய பட்டத்துயானையைப்பலிகொடுக்கும்படியாய் அன்றையதினமே சித்தஞ்செய்துக்கொண்டு பாட்டனாகிய வீஷ்மருக்குச் சாஷ்டாங்கமாகத் தண்டஞ்செய்து, நமது சேனாசயினியங்களுடன் குருபூமிக்குப் போகும்படிப்பாய்ப் பிரயாணப்படவேண்டுமென்று மிகுந்த தயிரியத்துடன் சொல்லிப்போன துரியோதனனுடைய பேச்சைக்கேட்டு வீஷ்மரானவர் அணிவகுத்துத் தரமேற்படுத்தினர். அந்தத்தரத்தின் விபரம் யாதெனில், துரோணாச்சாரியார்-அசுவத்தாமர்-வீஷ்மர்-தாங்கள் மூவரும் அதிரதத்தலைவரென்றும், பூரிசிரன்-சோமதத்தன்-துன்மருடன் பகதத்தன்-இந்நாலுபேரும் மகாரதத்தலைவர்களென்றும், கிருதவன்மன்-துரியோதனன்-சகுனி - சல்லியன்-சயித்திரன்-திரிகர்த்தன்-இவர்கள் சமரதத்தலைவரென்றும், அங்கதேசாதிபதியாகிய கர்னன் - விஷசேனன்-துசுவாசனன் முதலாகியதொண்ணூற்றென்பது தம்பிமார்கள்-அவர்கள் அர்த்தரதரெனறும்,ஏற்படுத்தி வணங்காமுடியையுடைய மன்னவனிடத்திற் சொல்ல, அதைக்கேட்ட அரசனானவன அதிரதரிற் சிறந்த அங்கதேசாதிபதியை அர்த்தரதரி லேனபோட்டார். நமது ஐயாவென்று யோசிப்பதற்கு முன்னமே கர்னனானவன் இந்தச்சங்கதியைக்கேள்விப்பட்டு காச்சிய செம்பைப்போற் கண்சிவந்து கோபங்கொண்டு முகங்கறுத்து மீசைதுடிக்கவியர்வைபொடிக்கத் தோள்துடிக்க வாளையுருவிக்கொண்டு மண்ணும்விண்ணும் நடுங்கும்படியாகத் துரியோதனன்முதலியசகலராஜர்களுக் கெதிரில்வந்து வீஷ்மரைப்பார்த்து விற்பிடிக்கத்தெரியாத நீ அதிரதத்தலைவனாகிய என்னை அர்த்தரதரி லேற்படுத்தின யல்லவா? பளா! பளா! வெகுநேர்த்தி ஐயா! பெரியவனென்றும் உரியவனென்றுந் துரியோதனமகாராஜன் உனக்குச்சேனாதிபதிபட்டங்கட்ட அந்தப்பெரியதனத்தைச் சீர்ப்படுத்திச் சிறப்பாக்கிக்கொள்ள வகைதெரியாமற் சிறியதனமாக்கிக்கொண்டாயே சிமானே! நீதனுர்வேதத்தில்என்னென்ன சாஸ்திரங்கற்றிருக்கிறாய்? எந்தெந்தவீரத்திறந் தெரிந்திருக்கிறாய்? என்னசாகசமறிவாய்? என்ன தன்மை என்னிடத்திற் குறைவுண்டென்று அர்த்தரதரிற் போட்டாய்? நீஎன்ன அறிவாய்? கெடுநினைப்பினையுடைய வீஷ்மனே! இதோ உன்தலையை வாளினால் மாட்டிக் களப்பலியூட்டித் துரியோதனனுக்குஜெயஞ் சூட்டி வைக்கிறேனென்று வாளையோங்கி வீசிவரவும் அந்தவேளையில்வீஷ்மாச்சாரியரும் வாளையுருவிக்கொண்டு தேவர்கள் நடுங்கும்படி கடுங்கோபத்துடன்சிறி (துப்பற்றதோழனுக்கு ரெட்டைப்பங்கு)என்னுந்தன்மையைப்போல் உன்சுத்தவீரத்திற்கு அதிரதத்தலைவனென்னும் ஆண்மிக்கையும்வேண்டுமோ? அடாகர்னா இப்போதே உன்தலையைவெட்டித்தொலைப்பேனாகில புகழினையுடைய இந்தக்குருகுலம் விளங்கி இருதிறப் பிள்ளைகளுஞ் சுகப்பட்டுப் போவார்கள். அடாபாவி! இதோவெட்டினேன் வெட்டினேனென்று பலவாறுகத் திட்டிக்கொண்டுகிட்டவரவும் இதைக்கண்டஅரசர்களெல்லாரும் அஞ்சிநடுங்கி யெட்டிப்போகவும், வீரர்களெல்லாரும் வெருண்டொடுங்கவும், இவ்விரண்டுபேரு மெதிர்த்துக்கொண்டார்கள் இவ்விருவருங்கொண்ட பெருங்குரோதத்தைத் துரியோதனன் கண்டுதிகில்கொண்டு, இரண்டுபேருக்கும் நடுவில்வந்து நின்று பகைவர் நகைக்கும்படியாய் நீங்களிருவரு மெதிர்க்கலாகுமோ? ஓஐயா! ஓஅண்ணா! எங்களை இவ்விதஅவமானம் பண்ணுவதைப் பார்க்கிலும், எங்களைக் கொன்றுபோட்டு உஙகளெண்ணத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுவது உத்தமமென்று இருவருக்கு மத்தியினின்றுவிலக்கினான். அப்பொழுது காற்றினாற் கலங்கபடிபட்டு விலகிய காளமேகத்தைப்போலக் கண்கறுத்து இருவரும் விலகினின்றார்கள்.

அப்போதந்தச் சேனைகளிலிருந்த மன்னவரியாவரும் மனஸ்தாபமடைந்து வீஷ்மாச்சாரியானவர்கர்னனை அர்த்தரதத்தலைவரிற் போட்டதற்குக் காரணங் கேட்காமலும், அதைத் தெரிந்துகொள்ளாமலும் அவமரியாதையாசப்பேசி வாளையுருவி வெட்டுகிறேனென்று வந்தகர்னனை ஏனிவ்வாறு நடத்தினையென்று விசாரியாமலும், இருவரையும் சமாதானம் பண்ணிய முறைமையறியாத துரியோதனனைக் குறித்துப்பேசவேண்டிய தென்னவிருக்கின்றது? இனிஒன்றுங் காரியமில்லை. ஓம்பிரதானமென்று ஆயுதமெடுத்தபோதே என்னைவெட்டு உன்னைவெட்டென்றுவிளைந்தபடியால் இதுபோலவே போதுவிடியும் வரையிலுங் கலகம்விளையுமென்று பேசிக்கொண் டிருந்தார்கள். இப்பால்

விச்னத்துடனி
நமது பேரில்
ப் போய்விட்ட
ஜேயா இப்படி
ராமற் பாட்ட
யன்றித் தனக்
லவா? அடடா!
டி துடிப்புடனி
ாரியார்முதலிய
நிதிபதியே! அதி
ஜுனை அர்த்தரத
மன்ன சொல்லு
ல்லுகின்றார். அர
கிற மகாவீரர்க
ப் புறம்பாகிஇரு
டையிலிருக்கின்ற
ாட்டேன் இது
யன்று சொல்ல,
தலியபாவருங் கர்
அங்கதேசாதிபதி
யம் வஞ்சகமல்ல.
க்கு இப்படிசெய்த
நீங்களிருவருங்கல
நகாரியத்தைச் செ
ாயிருக்கும் ஜெ
ல் காரியமல்லவென்
ருஞ்சொல்ல, அந்த
ரெனநகைத்து,இவ
ர்து. (பாம்பின்கால்
ால்இவருடையவஞ்
துபேசும் தன்மை
ரிநுக்கும் இஷ்டத்
ல்லபாம்பின் விஷப்
டுமையை யுடைய
தோன்றுமற்சகல
கத்தோன்றினு
டவன்கண்ணு
பதுபோல், அவ
த்துகொண்டேயிரு
ன்றைக்குச்சாகின்
வமாய் ஆயுதமெடு
இசற்குமத்தியில்
ந்தாலுமோ மனக்
ரிய ஆயுதமெடுக்க
வனும். நான் பா
ரியோதனராஜனி
மற்றவேறென்றி
விட்டான்.

கௌரவர் குருக்ஷேத்திர மடைதல்.


இப்பால் வீஷ்மரானவர் சேனைகளைக் கூட்டிப், பிரையாணபேரி-வீரபேரி-ஜெயபேரி-முதலியவாத்திய முழங்கும்படியாகச் செய்து பயணப்படுத்தினார். அந்தவேளையில் துரியோதனன்-சகுனி-துசுவாசனன் இவர்கள்மூவரும் கர்னனுக்குவேண்டியதேறுதல்சொல்லி, மனவுறுதியை விட்டுவிடாதிர். இந்த வீஷ்மருடையமனது எங்களுக்குத்தெரிந்தே யிருக்கின்றது. நாங்களறிந்துகொள்ளாமலிருக்கவில்லை. பாண்டவர்களிடத்திற் பட்சம்வைத்து அவர்களே ஜெயிக்கவேணுமென்று பாடுபடுகிறார். நீர்ஒருபிராணி எங்களுக்காக உண்மையாய்ப் பாடுபடுகிறபடியால் உம்மை அர்த்தரதரிற்போட்டு அவமானஞ் செய்ய வேண்டுமென்றேசெய்தார். ஆகையால் (கைப்புண்ணுக்குக் கண்ணாடிவேண்டியதில்லை) பட்டப்பகற்போலெங்களுக்குத்தெரிகிறது. ஆகினும் (பந்திக்கு முந்தவேணும் படைக்குப்பிந்தவேணும்) என்னும்பழமொழிப்பிரகாரம் எங்களுடைய அதிர்ஷ்டமும் உபமுடையநல்லகாமும் அவ்வீஷ்மருக்குப் பொல்லாதகாலம்பிறப்பித்து உம்மை அர்த்தரதரிற் போடும்படியாகச் செய்தது. மெத்தநல்லகாரியம். முந்திமடியத்தக்க பேரெல்லாரும் மடிந்துபோகட்டும், வீரர்சூரர் முதலிய பேர்களெல்லாருங் கைகால்அசரட்டும். பிற்பாடு நாமிருக்கிறோம் பாண்டவர்களிருக்கின்றார்கள்பார்த்துக்கொள்ளுவோம் நீர்ஒன்றுக்கும் பயப்படவேண்டிய தில்லையென்று கர்னனைத்தேற்றி அழைத்துக்கொண்டுபோய் திருதராஷ்டிர மகாராஜனுடைய காலில் யாவரும் விழுந்து, குருக்ஷேத்திரத்திற்குப் படைகளை கூட்டிக்கொண்டு போகும்படி விடைகேட்டார்கள். அதற்குத் திரிதராஷ்டிரன் சந்தோஷமடைந்து, நமஸ்காரஞ்செய்த பிள்ளைகளையெல்லாம் வாரி மார்போடணைத்து ஆசீர்வதித்து, எனதுமைந்தர்களே! இதுவரையிலும் இந்தச்சந்திர வமிசத்திலில்லாத பகையைநீங்கள் தேடிக்கொண்டீர்கள். பாண்டவர்களோ மெத்தநயிச்சிகாள் அதற்குத்தக்கபடி வரங்கள்முதலிய பலமுந்தவமும் தெய்வகடாட்சமும் பெற்றிருக்கின்றார்கள். ஆகையினால் கால-இடம்-சமயம்-பலம் - படைத்துணைகளின்வீரம்-இவைமுதலிய யாவையும் அறிந்துகொண்டு சந்தற்பமெப்படி இருக்குதோ அந்தப்படிவழிவிட்டுப் பெரியோர்கள்சொல்லும் வார்த்தையைக்கேட்டு உரியோர்களைக் கைவிடாமல், தைரியம்விடாமல்காரியத்தாட்சிவாராமல் செயம்பெறக் கடவீர்களென்று சொல்லிக் கர்னனசகுனி முதலியபேர்களைப் பார்த்து குழந்தைகளே! என்பிள்ளைகளோ அறியாதவர்கள். இதுவரையிலும்யுத்தஞ்செய்ததுமில்லை. பெரும்போர் நடந்ததைப் பார்த்ததுமில்லை. ஏதோ ஆத்திரத்தால் க்ஷாத்திரங் கொண்டு போர்த்துணையாகிய உங்களை நம்பி யுத்தத்திற்கு வருகின்றார்கள். இவர்களைக் காப்

பாதிக் கொண்டுவந்து என்னிடத்திலொப்பிவைக்க வேண்டியகடமை உங்களுடையதென்று கையைப் பிடித்துக்கொண்டு வெகுவாகச்சொல்லி, இளையபிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்பார்த்து, (இளங்கன்று பயமறியாது) என்னுந் தன்மையாய்ப் போர்முகத்திற்போய் விழாதீர்கள். அணிவரிசையினின்று சத்துருக்களைவென்று அண்ணன் தம்பிகள் பெரியோர்கள் பந்துக்கள் இவர்கள்சொல்லும்வார்த்தையைக்கேட்டு அடங்கியிருந்து காரியசாதனம் பண்ணிக் கொண்டு வரக்கடவீர்களென்று ஆசீர்வதித்து, அப்பாதுரியோதனே! தம்பிமார்களையுந் தமயன்மார்களையும் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டு படைமுகத்திலின்று ஜெயங்கொண்டு வரும்படியாகச் சுகமாய்ப் போய்வாவென்று விடைகொடுத்தான். அப்பால்யாவரும் காந்தாரியாகிய தாயிடத்திற்சென்று காலில்விழுந்து, அம்மா யுத்தகளத்திற்குப் போய்வருகிறோமென்று செலவு கேட்க, உடனே அந்தஅம்மனானவள் பிள்ளைகளையும் மற்றப்பேர்களையும் உபசரித்து, மைந்தரே! உங்களுக்கு நான்விசேஷித்துச் சொல்லவேண்டியதில்லை. எல்லாக்காரியங்களு முங்களுக்குத்தெரியும் ஆகையால், சத்துருநாசப்படுத்தி வாருங்களென்று விடைகொடுத்தனுப்ப அவரவர்கள் யுத்தகோலங்கொண்ட திறத்துடன் ஆயுதபாணிகளாய் ராசஸ்திரீகள் முதலியபேர்களுடன் புறப்பட்டு அஸ்தினாபுரத்தின்சாலைவீதியில் வருவதானார்கள்.

அப்போது சொன்னசொற்றப்பிய தண்டைகளும், அறுதலியென்னு முண்டைகளும், தனமில்லாத மார்பர்களும்-இனமில்லாத கோபர்களும்-மயிரைவிரித்தமங்கையரும்-புகையுநெருப்பேந்து நங்கையரும்-விறகுசுமந்த தலையரும்-வீழ்ந்துவருந்து நிலையரும்-மின்னலும் இடியும் பிண்டித்தூறலும் பின்னியேவிழும் பெருங்காக்கை மாறலும், நாய்கள்குரைப்பும், பேய்கள்சிரிப்பும் பருந்துங்கழுகும் பறந்துவிழவும், குதிரையும்யானையுங் குன்னியழவும், ஆயுதம்புகையவும், மாலைகருகவும் சூறைக்கொள்ளிசுழன்றுவிழவும், சுமங்கலப்பெண்கள் சுற்றிஅழவும் சந்நியாசி தட்டான் தயிலமெதிராகவும் முன்னடிப்பார்ப்பான் முடிவிரித்தேகவும் இத்தன்மையவாகிய பற்பலதுற்சகுனங்களை முன்னேடிச் சகுனம்பார்ப்போர்கள் கண்டு மன்னவருடன்சொல்ல, நல்லதென்று திரும்பிக் கொலுவிற்போயிருந்து இராஜவீதியில் ஒருவரும் வராமற் கதவு மூடும்படி திட்டப்படுத்தி சதுர்வேதசம்பன்னரா யிருப்போர்க்குச் சாஸ்திரப்படி கோடிபசுக்கள் கோடாகோடி பொன்கள் அளவற்றவஸ்திரங்கள் அநேக ஆபரணங்கள் இவைமுதலிய சோடச தானங்களுங் கொடுத்து சந்தோஷத்துடன் தாகம்புசித்து தாம்பூலமணிந்து சகலசம்பிரமத்துடன் யுத்தபூமிக்கு நடக்கையில் மறுபடியுந் துற்சகுனங்காண அதைப்பாரா

ட்டாமல் இர,
சேனைகளும் வ
படை சக்கரப்
வித ஆயுதங்க
முதலியதோடு
வி-சஞ்சரக்கருவி
ளும், தேரோட
மனுஷர்களைப்
முதலியவைகள
த்திரகோஷ்ட மு
ங்கிக்கொண்டுவ
தம்பிமார்கள்-
கள்-சேனைகள்-
னோர் சுற்றிச்
ளாடும் பாரதா
ப்பட்டு குருக்ஷே
முதலியயாவும்
டன் சேனையின்
டிகள் வகைவகை
லவட்டங்கள் பி
சாமரைகள் மேற்
ரத்துடன் அமைச்
தியரிறங்க சேனை
நிறுத்திப்பிரித்து
க்க, உரகருடையப
ந்துஉதற, அதனு
சையிட்டுக்கதற இ
களும் வரம்புவரப்

அப்போது
நோக்கிஇனிமேல்
யாகப் பார்த்துக்கொ
எந்தெந்தச்சேனைக
யதோ அங்கங்கே
சூழநிறுத்தி, வீர
வேற்றி பட்டச்
த்துப் பாசறை
டா சிறியஜெ
எதிரிகளுக்குப்
இவ்வாறு இருதி
பெரும்புறக் கடல்
ங்குழல் முகவீணை
சிரோசைகளும்,
தொலித்து முழக்
தொனியும், வின்
சூலாயுதம் - சக்கி
தம் - ஈட்டி - மு
யும், அதிலிருந்த
ளும், அப்பொறி



னும் - துரோணாசாரியரும் - அசுவத்தாமாவும் - கர்ணராஜனும் - ஒருகைபார்த்து விடுகிறோமென்று முகம்வியாத்துக், கரத்தில் வில்லேந்திக்கொண்டு, உங்களைவரையும் உங்களுக்குத் துணைவந்திருக்கும் அரசர்களையும் மண்ணுலகத்தை விட்டுநீக்கி விண்ணுலகத்திற்கனுப்பி விடுகிறோமென்று வந்திருக்கின்றார்கள். உங்களுடைய வாயுருட்டும் கைப்புரட்டும் அவர்களறிந்தே இருக்கின்றார்கள். இனி உங்களுடைய பேச்சு இவ்விடமேகேலாது. உங்களைக்கொல்லாதுவிடப்போகிறதில்லை. ஏதாகிலுங்கொஞ்சம் வீரங்களுண்டானால் இப்போதே வாலாம் என்றும்: அப்படி யுத்தத்திற்கு வரச்சம்மதமில்லாவிட்டாற் பூர்வத்தில் மச்சராஜனாகிய விராடன் வீட்டிற் புரோகிதனாகியும் - சோறு சமைக்குஞ் சுயம்பா மடையனாகியும் - பரதநாட்டியங் கற்பிக்கும் பேடியாகியும் - குதிரைச் சேவகஞ்செய்யும் தாமக்கிரந்தியாகியும் - மாடுமேய்க்கும் தந்திர பாலனாகியும் - சொற்ப சீவனஞ்செய்து காலங்கழிக்கும்படியாயிருந்ததுபோல். இப்போதே திரும்பிப்போய் விடலாம்என்றும், இராசதருமங்களிருந்தால் தடைசொல்லாமற் சந்திபேசாமற் சண்டைக்குவரலாம்என்றும், அருச்சுனனைக்கொல்கிறேனென்று வெகுநாளாய் உருச்செபிப்பதைப்போற் சபதங்கூறிக் கொண்டிருந்த ஜெயவீரகர்னமகாராஜனானவர் வில்லைக்கையிலேந்தி, சபதச்சொல்லை நிறைவேற்றும்படியாய்க் குருக்ஷேத்திர எல்லையில் எப்போது விஜயன்வருவானென்று வழிபார்த்துக் கொண்டிருக்கின்றார் என்றும், இன்னும் சொல்லிச்செய்வது பெரியோர்கடமையாதலாற் சொன்னோம். இப்போது கிரீடிக்குத்தயிரிய மிருக்குமாகிற்சல்தியிற்புறப்படச்சொல்லும்என்றும், "மேலும் என்னைப்பகைத்தசத்துருக்களையெல்லாம் எரியுந்தணல்முன் சருகாய்க்கருக்கி யமலோகஞ் சேர்ப்பேனென்றுஇறுமாந்துசிங்கம்போற் கர்ச்சித்திருக்கும் எங்கள்தம்பியாகிய துசுவாசனராஜன், உங்கள் குலத்திற்குக் கோடாலியும் உங்கள்கூட்டத்திற்குச் சூறுவளியும் போலிருந்து சொல்லச்சொன்ன தென்னவென்றால், முன்னாலேமன்னர் கூடியிருந்தசபையில் உங்களுக்குரியகன்னியாகிய திரௌபதியை மயிரைப்பிடித் திழுத்துவந்து, மானபங்கமாகப்பேசி வஸ்திரபங்கமுஞ் செய்தநாளையில், என்னைக்கொன்று உதிரபானம் பண்ணுகிறவரையிலுங் கையினால் தீர்த்தபானம் பண்ணுகிறதில்லையென்று சபதம்பண்ணிக், காட்டுக்குப்போய் நாட்டுக்குவந்த கேட்டையுடைய வீமசேனன், ஓட்டமெடுப்பானா அல்லது யுத்தத்திற்கு வருவானாஎன்று, அன்றியும் இந்தநாட்டின் கண்' ஓரிடத்தில் ஓர் தாய் தந்தைக்குப்பிறந்து, மற்றோரிடத்தில் மற்றொரு தாய் தந்தைகளாகிய இடையர்வீட்டில் வளர்ந்து, திருட்டுப் பிழைப்பினால் மாறடியும் மத்தடியும்பட்டு, சாரத்துவ சோரத்துவத்திற் றன்னலானமட்டு வயிறு வளர்த்துக்கொண்டு பிழைக்கும் கிருஷ்ணன் அவ்வகைக்கான காரியங்களைத்தேடாமல், பிர்மாவேயென்று சும்மா இருப்பவர்களைத் தூண்டிவிட்டு, அவர்கட்காகத்தூதவேஷம்போட்டுக்கொண்டு' உங்களை யானையாக்குகிறேன்' எதிரிகளைப் பூனையாக்குகிறேனென்றுபொய்யும்புரட்டுபேசி, கபடும் வஞ்சனையுங்கலந்து கலகப்படுத்தி, அரசனுக்குக் குதிரைபிடிக்குஞ் சாரதியாகியும், சிசுஹத்தி - ஸ்திரீஹத்தி - கோஹத்தி - முதலியவைகளைச் செய்தும், காலிக்கன்றுகளைமேய்த்தும், கபடில்லாத ஆயர்களையேய்த்தும்' இத்தரணியெங்கணுந் தகல்பாசியாய்த்திரிகிற அவ்விடப்பயலை ஒர்ச்சினேகனாகச் சேரப்பிடித்துவைத்துக்கொண்டு பயங்காட்டுவதினால், நானவனுக்குப்பயந்து உங்களுக்கு நாடுகொடுப்பனோ என்றும்; அவனுக்கும் - அவனுடைய வஞ்சனையான மாயமருட்டுக்கும் - உங்களுக்கும் - பலகேடும் ஒருஓடுங்கொடுப்பேனேயல்லது, ஒருவீடுங்கொடுக்கமாட்டேன்என்றும், மேலும் (சப்பாணிக்கு நொண்டிசண்டப் பிரசண்டன். ஊமைக்குத் தெத்துவாயன் உற்பாதபிண்டம்.) என்னும் பழமொழிபோல், இந்தக்கிருஷ்ணனுக்குச்சரியாய்ச் சண்டனுக்கு மிண்டனான எங்களம்மான் சகுனிராஜனை யேற்படுத்தி வைத்திருக்கிறேன் என்றும்; இதன்றியும் - எங்களம்மானாகியசகுனியையும் சௌபலனையுங் கொல்லுகிறதாய்ச் சபதஞ்செய்த நகுலசகாதேவ ரென்னும் பயல்களைக் கொல்ல அவர்களே காத்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களையுஞ் சீக்கிரம்ஓடிவரச்சொல்லும் என்றும், மேலும் - நகரத்திலும் - நாட்டிலும் - கொலுக்கூடத்திலும் - நல்ல ரத்தங்களூறி ஸ்திரம்பெற்றிருந்த அரசர்களாகிய அப்பாண்டவர்களைச்சூதினால் தோற்கச்செய்து, அவர்கள் பெணசாதியையும் அவமானப்படுத்திக், காட்டிற் பனிரண்டுவருடம்வனவாசஞ் செய்யுங்களென்று ஓட்டிவிட்ட காலத்திலில்லாத வீரம், காட்டிற்சென்று காய்கனி கிழங்குகளைத் தின்று கற்பாறையிற்படுத்துக் கண்ணுறக்கம் விடுத்து நல்லரத்தங்களினுடைய சத்துப்போயிருக்கும் இந்தக்காலத்தில் உண்டாகி, பற்பல பவுரிஷங்களும் கோபமுங்கொண்டு பசித்தவன் பழங்கணக்கைப் பார்ப்பதுபோற் பழைய பகையைநினைத்து, அதற்காகக்கூறிய சபதங்களையு முடிக்கவேண்டுமென்று ஓடிவந்தார்களோ? இல்லை நான்நாடுகொடுப்பேன் அதைப் பெற்றுக் கொண்டு வாழலாமென்று நாடி வந்தார்களோ? அந்நாண மற்றவர்களுடைய செய்தியையறிந்துவாஎன்றும்; இப்படிக்கெல்லாஞ் சொல்லி, அவர்கள் எப்போதுசண்டைசெய்ய எண்ணங்கொண்டிருக்கின்றார்களோ அந்தக்காலத்தையும்அவர்கள்சொல்லுகின்ற இந்திரசாலத்தையும் அறிந்துகொண்டு, சீக்கிரம் வரக்கடவையென்று துரியோதன மகாராஜன் அனுப்பி வைத்தாரையா வென்று உலூகியென்பவன் சொல்ல, இவைகளையெல்லாங் கேட்டிருந்த பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினுடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து, இந்தக் கேள்விக்கெல்லாம் உத்தரந் தேவரீரே திருவாய்மலர்ந்தருள வேண்டுமெ

ன்று தருமராஜன்சொல்ல, 'மகாசந்தோஷத்துடன் நகைத்து, ஐயோ! நான் என்ன சொல்லப்போகிறேன்? என்னசொல்லியும் என்வயிறு வளர்ப்பதற்கான ஏது ஒன்றையுங் காணேமேயென்றுலூகியைப்பார்த்து, நான்சொல்லுகிறவண்ணம் உங்கள்ராஜனுக்கு நீபயப்படாமற் சொல்லக்கடவையென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லுவதானார்

கிருஷ்ணன் துரியோதனனுக்குச் சொல்லியனுப்புதல்.

அப்பா உலூகியே! பாண்டவர்கள் வனத்திலிருக்கும்போது அவர்களை அவமானப் படுத்தவேண்டுமென்று நினைத்து, உன்னுடைய தம்பிமார் முதலானவரோடு கர்னனுஞ் சகுனியும் உங்களுடைய பத்தினிமார்களும் கூடவரும்படியாய் அழைத்துக் கொண்டுவந்து வழியிற் சலக்கிரிடைபண்ண யத்தனித்தபோது, காந்தருவராஜனாகியசித்திரசேனன் கையிலகப்பட்டு, அவன் தாமணிப் பிணையலாய்ச் சேர்க்கத்தம்பிமாரெல்லாரும்ஒருவரிசைபெண்டுகளெல்லாருந் தலைமயிருடன்கலைகுலையும்படியாயொருவரிசை மாமாமுதலிய பேரோடேயும் மடலிறுகும்படியா யொருவரிசை-யிப்படியாகக் கட்டுபட்டுக்கொண்டு போகும்போது உன்னுடைய சேனைகள்முதலிய வீரர்களெல்லாருந் தருமராஜனிடத்தில் வந்து முறையிட்டழுத காலத்தில், சிவகாருண்யமுடைய தருமராஜன் இரக்கங்கொண்டு, (தொடைப்புண்ணை வெளிக்காட்டலாகாது.) என்னும் பழமொழிப்படிக்குத் தங்களுக்குள் என்ன விரோதமிருந்தாலும் புறத்தியாருக் கிடங்கொடுக்கலாகாதென்று தன்தம்பிமாராகிய வீமார்ச்சுனரை யழைத்து, தனது மரபிற்குக் குறைவுதராம லிருக்கும்படியாய் உன்னையும் உன்னுடைய புத்திரர் மித்திரர் பெண்டுகள் முதலிய பேர்களையும் மீட்டுக்கொண்டு வரக்கடவதாகவும், தன் தம்பிமார்களுக்குக் கோபந்தணியும்படியாகவும், உன்பேரிலன்புதழைக்கும்படியாகவுஞ் சொல்லி அனுப்பிவைத்ததின்மேல், சித்திரசேனன்கட்டிய சிறைநீக்கித் தருமராஜனுக் கெதிரிச் கொண்டுவந்துவிட, அவர்வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிஉங்களைஉயிருடன்மீட்டு அனுப்பியதெல்லாம் என்னத்திற்கென்றால்: சித்திரசேனனிடத்திற் சிறைபுகுந் துயிர்விடுவீர்களாகில், இராஜசபையில் தாங்கள் கூறிய சபதந் தப்பிப்போகுமென்று யோசித்து, அந்தச்சபதந் தப்பாமல் தாங்களே கொல்லும்படியாக உங்களைச் சிறைநீக்கிவிட் டிருக்கின்றார்களே யொழிய வேறல்ல இதனாற் பாண்டவர்களைவரும் சபதம்முடிப்பார்களென்று உங்களுக்குத் தெரியவில்லையா? அந்தச் சித்திரசேனனைச்செயித்த பாணத்தோடு உங்கள் சிறையைமிட்டவீமார்ச்சுனரிரு வருமிருக்கின்றார்கள் என்றும், நேற்றுவிராடபுரத்தில் உருமாறியிருந்தபாண்டவர்களை அறியும்படியாகவந்து உத்தர நிரைகொண்டகாலத்திற், பேடியாகிய விஜயன்அறியாத பிள்ளையாகிய உத்தரனைச் சாரதியாக வைத்துக்கொண்டு, தானொருவனாக ஒரேவில் - ஒரேதேர் - ஒரேஅம்பறாத்தூணி - இவைகளைக்கொண்டு வீஷ்மர்முதலிய ஆசாரியரைப் பாணங்களினால் வணங்கி, ஒருஅக்குரோணி சேனைகளையும் இளைத்தோடவென்று, கர்னனைப் புறமுதுகிட்டோடக்கண்டு கொடிதோளிகளு மழிந்துபோகப் போர்புரிந்து, வீஷ்மர்துரோணராதியபேரும் புறமுதுகிட் டோடச்செய்து, ஊரைநோக்கிஓடிக்கொண்டிருந்த வணங்காமுடியோனாகிய உன்னைத் துதித்து வணங்கச்செய்து, உன்னுடைய குதிரைமுதலிய சாரதியையுமாட்டி, அங்கமழியும்படியாகவும் எல்லோரும் நகைக்கும்படி யாகவும்பேசி, சிச்சியென்று யேசி, பாணங்களைவிசி' என்தமயன் வீமராஜன் கூறிய சபதத்திற்காக உன்தலையை விட்டுவைத்தேனென்றுசொல்லி, உன்தலையிலிருந்த கிரீடத்தையும் அத்தினகிரியென்னும் பட்டத்துயானையையும் வீழ்த்தி, மோகனாஸ்திரத்தைவிடுத்துயாவருநிலத்தில்மயங்கிவிழச்செய்து, தன்சாரதியைவிட்டு எல்லோருடைய தலைத்துணிகளைப்பிடுங்கிக்கொண்டு வரப்புரிந்து, பசுக்கூட்டங்களையெல்லாம் உடனேகொண்டுபோனவிசயனிருக்கும்போது சபதநிறைவேறாமற்போகுமா? இதுதெரியாதா? அறியாத சிறுபிள்ளைகளுக்கும் நேற்றுஅடித்தவனை இன்றைக்குத் தெரியுமே: நமதுஐயாவாகிய கண்ணில்லான் குழந்தைக்கு யேன்தெரியவில்லைஎன்றும், அன்றுதங்கள் பாட்டனாராகிய வீஷ்மரானவர்இதுஅர்ச்சுனன்கொடுத்தபிராணப் பிரதிஷ்டையென்று எல்லோரும் வாழ்த்துங்களென்றுசொல்ல, யாவரும் அப்படியேசொல்லி வாழ்த்திக்கொண்டு அஸ்தினாபுரத்திற்குப் பகலிற்போக வெட்கப்பட்டு, ராத்திரியிற்போய் நுழைந்த அவ்வரசன் முதலாகிய பேர்களுக்கு அன்றுஅடிபட்ட அந்தப்புண்களின்றுமிருக்குமே: காயாமற்பச்சை யுதிரம்வடியுமே: உடம்பிற்சிறிதுமிலச்சையில்லையே:ஐயோசொப்பனத்தில்வீமார்ச்சுனனைக் கண்டாலும் துரியோதனனிறந்துபோவானென்று உலகஞ்சொல்லுமே: இவனெங்கே யுத்தம்பண்ணி யிருக்கிறான்? எந்த யுத்தங்களைப் பார்த்திருக்கிறான்? அப்படியே இவன் சுத்தவீரனாகில் (பூசாரித்தனஞ்செய்யப்போன விடத்தில் விபசாரித்தனம் வாய்த்ததைப்போல்) தனுர்வேதங் கற்பிக்கவந்த துரோணாச்சாரியாகிய பிராமணரையும், வைதிகசாந்தமுடைய கிருபாச்சாரி முதலிய பேர்களையும், சுகபோகங்களை நீக்கிய பிர்மச்சாரியாகிய வீஷ்மரையும் திரிதண்ட சந்யாசியாகிய அசுவத்தாமனையும் வணங்கித் தழுவிக்கொண்டு' பாண்டவர்களைச்செயித்து எனக்குப் பட்டங்கட்டி வையுங்களென்று காலில்விழுந்து கிடக்குந் துரியோதனனுங்கு' யுத்தத்திற்கு வரச்சொல்லென்னுந் துணிவு எங்கிருந்துவந்தது என்றும், நாளையுதயத்திற்கேயுத்தஞ்செய்யக் சித்தங்கொண்டிருக்கிறார்கள் என்றும்' சொல்லியசபதங்களிலொ

ன்ருகிலுங் குறையாதுஎன்றும்: உங்கள்ராஜனுக்கு நீயேபோய்ச்சொல்லும்.

ஒஉலூகனே! திரிலோகமும் திரிமூர்த்தியும் சேர்ந்துவந்து துரியோதனனுக்குத் துணையானாலும், வீமார்ச்சுனர் கையினால் முடிந்துபோகிறது நிசம்நிசம் நிசமென்று நாம்சொல்லிய தாய்ச்சொல்லுமென்று ஸ்ரீகிருஷ்ணதேவர்செலவுகொடுக்க, தருமராஜன் அந்தத் தூதுவந்த உலூகனுக்கு வேண்டிய ஆடையாபரணங்களெல்லாங் கொடுத்து, சுவாமி சொல்லிய வசனத்தையும் துரியோதன விடத்திற் பயப்படாமற் சொல்லுமென்றுவிடைகொடுத்தனுப்பியபின்பு, ஸ்ரீகிருஷ்ணதேவரும் பாண்டவர்களும் சபையிற்பேசிக் கொண்டிருக்கும்போது, உருக்குமணித் தேவிக்குத் தமயனாகிய உருக்குமியென்னும் ராஜன் இரதத்திலேறி, அதிகவேகத்துடனேடிவந்து அர்ச்சுனனை நோக்கி, துரியோதனனாதியர்முதலாகிய பேர்களைச் செயிக்கத் திறமும் தைரியமும் உமக்கில்லாவிட்டால், என்னை வேண்டிக்கொண்டு படைத்துணைவிரும்புவீரேயாகில், ஒரு நொடிப்போதில் துரியோதனனாதியர் யாவரையுஞ்செயித்து, உங்களுடைய சப்தங்களும் நிறைவேறச் செய்து, தருமராஜனுக்குப் பட்டமுங் கட்டிவைத்து என் கண்ணாற்பார்த்து மகிழ்ந்துபோகிறேன். சீக்கிரஞ் சொல்லும்அர்ச்சுனவென்று, சபையிலிருக்கும் யாவருந்திடுக்கிடும் படியாகப்பேசினான், அந்தஉருக்குமியை அர்ச்சுனன்பார்த்து, கலகலவென்றுநகைத்து எங்கள் காலில்விழுந்து வேண்டிக் கேட்டாலும் எங்களுக்குமற்றொரு வீரர்களுதவிவேண்டியதில்லை. ஆனால் இப்பேர்ப்பட்ட சூரனை துரியோதனராஜன் வேண்டியழைக்கிறார். அவரிடத்திற் போய்ச் சேருவீராகில் மெத்தவு முக்கியமாய் வைத்துக்கொள்ளுவர். இதுநல்லசமயம். கோடைக்காலத்தில் விடாப்பட்டு வருபவனுக்குக் குளிர்ந்ததீர்த்த மகப்பட்டதைப்போல நீர் கிடைத்ததென்று குலுங்குவார். உமது பலுக்குக்கும் அவருடைய பிலுக்குக்கும். சரிப்பட்டிருக்கும். இப்போதே போமென்று அர்ச்சுனன்சொல்ல, மறுபேச்சுப்பேசாமல்உருக்குமிதன துபட்டணம்போய்ச்சேர்ந்தான். இப்பாற் பாண்டவர்கள் சேனாதிபதியாகிய சுவேதனனை யழைத்து திட்டப்படுத்தி, நாளை உதயத்தில் முதல்நாள் யுத்தமென்றுசர்வ சாக்கிரதையுடனே சந்தோஷங் கொண்டிருந்தார்கள், அப்பால் இந்தஉலூகனானவன் துரியோதனவிடத்திற்சென்று, இவிடத்தில் நடந்த சங்கதியாவற்றையும் அங்குள்ள சகலமானபேருங்கேட்கச்சொன்னான். 'அதைக்கேட்டுத்துரியோதனன் உடம்பு சவுக்காமல் உற்றாருடன் மகிழ்ந்து, நாளை யுதயத்திற்கு யுத்தமென்று சேனாதிபதிக்குச்சொல்லித், தானும்மற்றவர்களும் யுத்தகோலங் கொண் டிருந்தார்கள். இருதிறப் படைகளிலும் பேரி முதலிய வாத்தியங்களெல்லாஞ் சப்திக்கும் பெருக்கூச்சல் கடலிரைச்சலொடுங்கும்படியாய் முழங்கச், சூரியன் எப்போதுவருவான்? எப்போது உதிப்பான் எப்போதுஉதயமாவான்? என்று இருதிறப்படைகளும் நித்திரையற்றுவெற்றிபெற நினைத்துச், சுத்தவீரபராக்கிரம தளத்தைவரிசை வரிசையாக நிறுத்திச், சப்தசமுத்திரம்போல நிறைந்திருந்தார்கள்.

கேட்டீரோ ஜெனமேஜெய மகாராஜனே! இவ்வுலகத்திற் செங்கோல்செலுத்தும் வெண்குடைவேந்தற்கு உயிரும் - உடலுமாயிருப்பது, நட்பும் - படையுமாம். நட்பென்பது, அரசனுக்கு வினையிடத் துதவுவது. என்ருல் - அரசன்கேட்டினைத்தரும் தீநெறிகளிற் செல்லுங்கால் விலக்கி, ஏனைய நன்னெறிக்கண் செல்லாக்காற் செலுத்தி, தெய்வத்தாற் கேடுவந்தவிடத்து அது விலக்கப்படாமையால் அத்துன்பத்தை உடனிருந்தனுபவித்து, ஆக்கையொன்றே வேறன்றி உயிர் உடனே நீங்கும் உரிமையாய், ஓர் நூலின்பொருளைக் கற்குந்தோறும் கற்ருர்க்கின்பஞ் செய்தலைப்போலத், தம்முட்செய்த நட்புபயிலுந்தோறும் மகிழ்ச்சியுண்டாகக் கலந்திருப்பதே நட்பென்று சொல்லப்படும். படையென்பது, அரசனுக்கு ஆவதும் வெல்வதுமாய நன்மைக்கு உதவுவது. என்ருல் - யானைமுதலிய நால்வகையுறுப்பாலு நிறைந்து தன்னரசனுக்குத் தாழ்வுவாராமற் காக்கும் மானமும், போரின்கண்விஞ்சினை எதிர்த்துக்கொல்லும் ஆண்மையும், பகைவராற் கீழறுக்கப்படாத தேற்றமும், தமக்கெதிரிற் பல படை வருங்காலத்தும் விழுத்தகண்ணை இமையாதிருக்கின்ற வீறுப்பும், தமது வெய்யின்கண் ஊறுபடாத நாள்களை யெல்லாம் தன்னரசனுக்குப் பயன்படாது கழித்தநாளாகச் சினக்கும் செருக்கும் யான் அவரைக் கொல்லேனாயின் இன்னனாகுவனென்று கூறிய ஓர் வஞ்சினத்தைத் தப்பாது முடிக்கவல்ல திறமும், தம்மையாண்ட அரசன் தனக்குச் செய்த நன்றிகளை நினைந்து கண்களில் நீர் மல்கும் வகை போரிடைமடியப்பெறும்பெருமையும், ஆகிய இவையனைத்தும் உண்டாயிருப்பதே படையென்று சொல்லப்படும். இவ்வகைத்தான நட்பையும் படையையும் அரசன் தனது உயிர்க்குயிராகவும்-உடற் குடலாகவுங்கருதி ஆதரித்து, ஒருவினைக்கண் முயறல் வேண்டும். இவையின்றி, நட்பில் தீநட்பும் - கூடா நட்பும் - பேதையர்நட்பும் - புல்லறிவாளர் நட்பும் - பெறுதலிற் பயனென்னும்? இவற்றுள் தீநட்பென்பது, தீக்குணத்தாரோடு உளதாயநட்பு. என்ருல் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரைப் போலவும். பிறர்கேடு நோக்காது தன்சோர்வுநோக்கும் கள்வரைப்போலவும், நட்பளவு பாராது அதனல்வரும்பயனளவுபார்ப்போரும். அமர் வாராத போதெல்லாந் தாங்குவதுபோலிருந்து குலாவி அமர்வந்தபோது விட்டுநீங்குவோரும், தம்மால்முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரும், உளமுஞ் சொல்லுமொவ்வாது வேறுவேறாயிரு

ப்பாரும், தனியே மனைக்கணிருந்தலிடத்து நட்பச டிப் பலரோடு மன்றின்கண் இருந்தபோது பழிகூறு வாரும், ஆகிய இவர்கள் காதல்மிகுதியாற் பருகுவர் போன்றாராயினும்: அவரைச் சிறிதாயினும் நணுகுதலைப் பரிகரிக்க வேண்டும். கூடாநட்பென்பது, பகைமையால் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்கும் இடம் பெறுந்துணையும் புறத்தாற்கூடியொழுகுவார் நட்பு. என்றால் - நல்லனவாகிய பலநூல்களைக் கற்றவிடத்தும் அதனால் மனந்திருந்தி நட்பாத வில்லாது, கண்டபொழுது முகத்தாலினியவாகச்சிரித்து, எப்பொழுதும் மனத்தால் இன்னாதனசெய்யும் வஞ்சகரது சொல்வணக்கமும் - அவரதுதொழுகையும் - அவரழுதகண்ணீரும்-சொல்லாலும் கையாலும் கண்ணாலுந் தேற்றிப், பின்னர்தப்பாது கொல்கின்றவன் படையாகும். அவ்வஞ்சகர் தனக்கு நட்டாராயொழுகவேண்டுங்காலம் வந்தால், தானும் அவரோடுமுகத்தால் நட்புசெய்து, அகத்தால் அதனைவிட்டுப், பின் அதுவுந் தவிர்தல்வேண்டும். உள்ளொன்று புறமொன்றுதல் ஒருவருக்குத் தகாததாயினும், தீயார்மாட்டானால் தகுமென்பது நீதிநூலினது துணிவாதலாற் குற்றமன்று. பேதையர் நட்பென்பது, யாதுமறியாதார் நட்பு. என்றால், பழி - பாவம் - வறுமை - என்பனவற்றிற்கு நாணாமையும், செய்வன தவிர்வன அறியாமையும், குடிப்பிறப்பு - ஒழுக்கம் - கல்வி - முதலானவைகளைப் பேணாமையும், யாவரிடத்தும் முறிந்தசொல்லாடுஞ் செயலுடைமையும், ஆகாதஒழுக்கத்தின்கண் காதன்மையும், கேடுபயப்பன வற்றைக் கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுக்குந் தன்மையும், மனமொழி மெய்கள் அடங்குதற் கேதுவாய நூல்களையோதியும் - அவ்வடக்கத்தால்வரும் பயன்களையுணர்ந்தும் - அதனை அறியநுறப்பிறர்க்குரைத்தும் - தான் அவையடங்கி யொழுகாமையும், ஆகிய இப்பெற்றிகளை யுடையோர் நட்பைப் பேதையர்நட்பென்று சொல்லப்படும். புல்லறிவாளர்நட்பென்பது, அற்ப அறிவினையுடையார், நட்பு. என்றால் - தாம்சிற்றறிவினராகியிருந்தே தம்மைப்பேரறிவினராக மதிக்கும் புல்லிய அறிவினையுடையார், தமக்குறுதியாயவற்றை அறிவுடையார் கூறினும் கேளார். தாம் கல்லாத நூல்களையும் கற்றாராகவிரைத்துத், தம்புன்மையை வெளிப்படுத்துவர். தமக்கு நல்லுணர்ச்சியை யறிவிக்கப்புகும் ஆன்றோரை, அறிவிலாராகக்காட்டுவர். ஆதலால்-இத்தன்மையரோடு சிறிதும் நண்ணுதிருத்தல் வேண்டும். இவைபோலவே படையில், தீப்படையும்-கூடாப்படையும்- பேதையர்படையும்- புல்லறிவாளர் படையும்-இவ்வவனியகலம் அமைந்திருக்கினும் யாது பயன்? அரசனுக்கு ஓர் வினைக்கண் முன்னுறு துணையாய் இந்நட்பொன்றே இவ்வாறுயின், பின்னுறு துணையாய்மற்றைப்படையினியல்பு அதினும் பெருங்கேடாம். ஆனதால்-அதனை விரித்துரைக்கவேண்டாவாயிற்று. இவ்வித நட்பையும் படையையுமுடைய அரசனுக்குப் பகையென்பது பக்கத்திற்றானே படர்ந்தோங்கி நிற்குமென்பதற் கையமென்னை? அந்தோ! இருவர் தம்முட் பொருது வலியும் உயிருந் தொலைத்தற்கேதுவாகிய இப்பகை ஊழின்வயத்தாய் ஒருகால் தனக்குண்டாகி, மற்றொருவன் தனக்கு வெறுப்பனவற்றைச் செய்தானாயினும்; அவனோடு மாறுபடுதலைக் குறித்துத்தான் அவனுக்கு இன்னாதவற்றைச்செய்யாதிருப்பனாயின், அவனுக்குப் பகைவரும் உறவாவர். எல்லாச்செல்வமும் பலிக்கும். கொடைமுதலிய காரணங்களாற் புகழும் பெறுவன். பிறரோடுமாறுபடுதற்கண்மிகுதல் எனக்கு இனிதென்று இன்னாதன செய்வனாயின், உடனே தமரும் எதிலராவர். பகைமை வளரும். வலிதொலையும். பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உண்டாகும். ஆதலால்-ஓ அரசனே இருநிலம்புரக்கும் வேந்தர்க்கு மேற்கூறிய இருவகைத்துணையும் இனிதினெய்தாக்காலத்தும், பெருமை - அறிவு - முயற்சி - என்னு மூவகையாற்றல்களு முள்ளனாகி, தவத்திற்சிறந்த முனிவோரையும் - தமரிற்சிறந்த முதியோரையும் - தழுவிப்போற்றி யொழுகவல்லானாயின்: அவன் ஈட்டிவைத்த எல்லாப் பொருள்களும் விருத்தியடையும். அவனுக்குப் பகையாண்டுமில்லை. எல்லாவலியுஞ் சிறக்கும். அவர்களை அவமதித்துப்பகைப்பானுக்கு, அந்த நட்பும்-படையும்-நயக்கக்கூடி, அரணும் - பொருளும் - ஆரஅமையினும், அழிந்துவிடுவன். இப்பகை இரண்டற்கும் சான்று இத்துரியோதனனே சாலும். இதுகாலகதியென்றுணர்க.

அணிவகுப்புச்சருக்கத்தோடு.

உத்தியோகபர்வம் - முற்றிற்று.